இனமுழக்கம்

ஆசிரியர்:

சி. பி. சிற்றரசு

திராவிட முன்னேற்றக்கழகம் தமிழகத்தில் மிகக் குறுகிய காலத்தில் மாற்றார் கண்டு பொருமைப்படும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. சென்னை நகரசபையின் நிர்வாகப் பொறுப்பையும், தமிழகத்தில் பிரதிநிதிகளாக சட்டசபையில் பதினைந்து பேரையும் அது பெற்றிருக்கிறது. தமிழகத்து மக்களின் இதயங்களிலெல்லாம் திராவிட முன்னேற்றக்கழகத்தின் உறுதியான கொள்கைகள், புடம் போட்டெடுக்கப்பட்ட தங்க நிகர் கருத்துக்கள் பசுமரத் தாணிபோல் பதிந்திருக்கின்றன. இதற்குக் காரணம் தி. மு. கழகத்தின் தூய கொள்கைகளை மக்கள் மன்றத்தில் எடுத்துச்சொல்ல நாவன்மை மிக்கத் தலைவர்களும் அவர்கள் காட்டிய வழியில் செயல்படுவதில் ஆர்வமுள்ள தொண்டர்களுமேயாவார்கள். அந்த வழியில் தாய்க்குலத்திலிருந்து தி. மு. கழகத்திற்குக் கிடைத்த தொண்டர்களில் ஒருவர்தான் திருமதி. சத்தியவாணிமுத்து அவர்கள். பெரம்பூர் தொகுதி மக்கள் தங்களின் பிரதிநிதியாக சத்தியவாணிமுத்து அவர்களைச் சட்டசபைக்கு அனுப்பியதிலிருந்தே அவர் சேவையை நன்கு நாடறியும்! தெளிவான பேச்சு! திறமையான எழுத்து! சலியாத உழைப்பு இத்தனைக்கும் பெயர்தான் சத்தியவாணிமுத்து. அவரைத்தான் வீரமிக்க வேலு நாச்சியாராக தன் கை வண்ணத்தின் மூலம் இங்கே காட்டியிருக்கிறார் நமது ஓவியர்.

புரட்சி

சி.பி.சிற்றரசு

> சென்ற சில இதழ்களில் பிரெஞ்சு புரட்சியைப் பற்றி எழுதிக்கொண்டு வந்தோம். அதைப் படித்த வரலாற்றுச் சுவையுடைய சில நண்பர்கள் பிரெஞ்சு புரட்சித் தோன்றியதற்கு அடிப்படையான காரணங்கள் எவை, அன்றைய ஐரோப்பாவின் நிலை எப்படி இருந்தது என்ற கேள்வியைக் கேட்டு, புரட்சி கருவுற்றதன் காரணத்தை முறையாக விளக்கும்படி கேட்டிருக்கின்றார்கள். இந்த அறிய வரலாற்றை அடிக்கடி பத்திரிக்கையிலே படித்து விடுபவர்கள் போக, எஞ்சி நிற்பவர்களும், படிக்காமற் போனேமே என்று ஏங்கி நிற்கக் கூடிய தோழர்களும் நூல்வடிவமாகவாவது படிக்கத் தக்க வகையில் எழுத முனைந்திருக்கிறோம். இந்தத் தொடர்ச்சி முடிந்தவுடன் காவியக் கழகத்தார் இந்த அறிய நூலை நூல்வடிவில் வெளியிடுவார்கள். ஆகவே அடிப்படையிலிருந்து தொடங்குவோம்.

இருபதாம் நூற்றுண்டின் பொது விவகாரங்களை நாம் விவாதிக்கிறபோது உண்மையான, நேர்மையான அசைக்கமுடியாத அறிஞர் பெருமக்களின், அரசியல் தலைவர்களின், விஞ்ஞான வித்தகர்களின், அறிவால் கடைந்தெடுக்கப்பட்ட உண்மையான சமூக மாறுதலையும் தலை சிறந்த முன்னேற்றத்தையும் எதிர்ப்பார்க்கிறோம். அத்தகு சமூக மாறுதலும் முன்னேற்றமும் கிடைக்குமானல் கொஞ்சமும் தயங்காமல் எடுத்துக் கொள்ளத் துணிகிறோம். புதிய அமைப்பாயிருந்தாலும் அல்லது பழைய அமைப்பாயிருந்தாலும் எதுவாயிருந்தாலும் சரி அது மனிதவர்க்கத்திற்குச்செய்த நன்மைகளைக் கருதியே அதன் தராதரத்தை நிர்ணயிக்கிறோம். அது மக்களின் விருப்பங்[களை] நிறைவேற்றி அதை [சு]ந்தரமாகக் காப்பாற்றி அவர்களை மகிழ்ச்சியில், திளைக்கச் செய்திருக்கிறதா என்பதைக் கொண்டுதான் அதை அளந்து பார்க்க முடியும்! அதுவன்றி, ஆதாரமற்ற கடவுள் நிலையைத் திருப்பித் திருப்பிச் சொல்வதன் மூலம் எதையும் அளந்து பார்க்க முடியாது.

உதாரணத்திற்கு வேண்டுமானல், மன்னர்கள் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட அமைப்புகள் காலத்தைக் கருதி, மக்களின் மன எழுச்சியை எண்ணி மன்னர்கள் தவறே செய்யாதவர்கள் என்று அது வரையிலிருந்த அசைக்க முடியாத எண்ணத்தை மாற்றிக்கொண்டு, அந்த அமைப்புக்குள் மக்களுக்காக பயன்பட்டாலன்றி, இன்றைய இருபதாம் நூற்றுண்டின் வளர்ந்து வந்த அறிவு அந்த ஏற்பாடுகளைப்போற்றி ஏற்றுக்கொள்வதாயில்லை. மாமன்னர்களுக்கு மகேசனிடமிருந்துதான் ஆளும் அருட்பிரசாதம் கிடைத்ததென்று எவ்வளவுதான் சாதித்தாலும் குன்றமேறி கூக்குரலிட்டாலும், அதை ஒப்புக்கொள்ள இன்றைய மானிட வர்க்கம் தயாராக இல்லை.

ஒரு சமுகத்தின் நன்மைக்காக என்று நாம் சொல்லும் போது பொதுவாக உலக மக்கள் எல்லார்க்குமே என்று பொருள் கொள்ளத் தான் வேண்டும். ஏனெனில் வர்க்க பேதமற்ற சமூகத்தை உருவாக்க வேண்டுமென்று நாம் துடிதுடியாய்த் துடித்துக் கொண்டிருக்கும் போது யாருக்கு, எந்த வர்க்கத்தாருக்கு எந்த நாட்டாருக்கு என்ற கேள்விக்கே இடமில்லை.

மத சார்பற்ற நிலையும், முன்னேற்றமும் வேண்டுமென்று நாம் போராடும் போது இனம், மதம், பால் என்ற வேற்றுமைக்கு இடமே இல்லை. ஆகவேதான் எந்தச் சர்க்காராக இருந்தாலும் கூடுமானவரை எல்லாருடைய நன்மைக்காகவும், மேன்மைக்காகவும் பாடுபடவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அது செய்யும் முடிவைக் கண்டு நாம் வேறுபடவும் கூடும். அல்லது நாம் எதிர்பார்க்கும் முடிவே கிடைத்தாலும் கிடைக்கக்கூடும்.

ஆள்பவருக்கும் ஆளப்படுவோருக்கு மிடையே தாது செல்பவர்களால், ஆளப்படுவோரின் தேவைகள் எவை என்று எடுத்துச் சொல்லப் படலாம். இந்த அரசியல் இயந்திரத்தின்சுழலில் கண்டு பிடிக்கப்படும், மக்களுக்கு எது தேவை என்பதையும் அவைகளை நிறைவேற்றி வைக்கும் துணிகரமான ஏற்பாட்டையே நா[ம்] மக்களாட்சி என்று பொருள் கொள்கிறோம். அ[த்]தகு மக்களாட்சியை வலிவுள்[ள]தாக்க நம்மிலே சிலர் தயங்கக் கூடும்! ஆனல் இன்னும் சிலர் அதன் நல் வாழ்வுக்கு போராடவும் கூடும்.

இப்போதுதான் மிக [மோ]சமானமூலைக்குப்போகவிருந்த, அதிகப் பணத்தை விழுங்கிவிட்ட ஒரு பெரும்போரை நடத்தி முடித்தோம். வெற்றியும் கண்டு விட்டோம். ஆனல் ஐரோப்பிய வரலாற்றில் இரு நூற்றுண்டுகள் பின் நோக்கிப் போவோமானல். இன்று சமுகம் பெற்றிருக்கிற சகல உரிமைகளும் அன்று வெகுதூரம் சென்று நின்றிருக்கின்றன.

இப்போது நாம் மகிழ்ச்சியோடு அழைக்கிற சனநாயகம் என்பது பதினெட்டாவது நூற்றுண்டின் இடைக்கால மக்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. இப்போது நாம் அறிந்திருக்கிற இந்த உண்மைகள், அன்றுபகிரங்கமாகப் பேசப்பட்டால், அல்லது எழுதப்பட்டால், அரசாங்கக் கட்டளையை அவமதிக்கும் குற்றமாகக் கருதப்பட்டது.

ஐரோப்பாவின் மிகப்பெரும் பகுதிகள், ஆண்டவன் அருள் பெற்ற அரசர்கள் ஆள்வதுதான் சரி என்று ஒப்புக்கொண்டு, அதை ஆண்டவன் அருள் என்றே நம் முன்னோர்கள் அழைத்தார்கள். அதுவும் யாருடையதயவால்!

ஆளும் வர்க்கத்தாருக்கு வேண்டிய மிகக்கண்டிப்பானவர்கள், நிலச் சுவான்தார்கள், கணக்காயர்கள், மிக உயர்த்த பதவியிலிருந்தோர், இவர்கள் எல்லாம் அன்றைய போர்க்கால, போர்க்கள தளபதிகளின் வம்சாவழியினர். என்று கருதப்பட்டவர்கள் இவர்கள் துணை மன்னன் ஆளுகைக்கு அரண்போல் விளங்கியது.

கத்தோலிக்க மார்க்கத்தைத் தழுவாத எந்த நிலச்சுவான்தாரனும் அன்றில்லை. அதனுல் வட ஐரோப்பா முழுவதும் மறுமலர்ச்சியை விரும்பாமல் போய்விட்டது. ஆனல் பிரான்சு. ஸ்பெயின், இதாலி மற்றும் மத்திய ஐரோப்பாவின் தென்பகுதியில் இருந்த பிரபுக்கள், மதத்தலைவர்கள் மன்னர்கள் பக்கத்திலே நின்றுகொண்டு மக்களுடைய வேண்டுகோளை நிராகரித்து சவால் விட்டார்கள்.

இங்கிலாந்தில் பதினேழாவது நூற்றுண்டில் தோன்றிய மறுமலர்ச்சி எனும் ஒருபுரட்சியின் மூலம் பழைய ஏற்பாடுகள் தலைதெறிக்க ஓடிற்று. அரசியல் அதிகாரம் மன்னர்களிடத்திலிருந்தும், நீதி மன்றங்களிலுருந்தும் அதிகாரங்கள் மக்கள் மன்றத்திற்கு மாற்றப்பட்டதேயன்றி, அதில் மக்களுக்கு உண்மையான நியாயமான பிரதிநிதித்வம் இல்லை. ஆனல் மக்களுக்காகவே என்ற தன்மையில் மிக விரிவாக அமைக்கப்பட்டது. சில அடிப்படைக் கொள்கைகள், அதாவது மதத் துறையிலே கருத்து வேற்றுமை கொள்வதற்காகப் போராடியீ அவர்களுடைய நெடுநாளையப்போராட்டம் வெற்றி பெற்றது என்று சொல்லலாம்.

ஆனல் பிரான்சு பதினேழாவது நூற்றுண்டின் அரசியல் போரில் வேறு விதமாகப் போய்விட்டது. பழையபார்லிமெண்டும், ஸ்டேட் ஜெனரலும், நிலச்சுவான்தார்கள் கூட்டமும் பொதுமக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு, மன்னன் அடிக்கடி கேட்கும் பணத்தைத் தட்டாமல் கொடுக்கவேண்டுமென்ற ஒரு தந்திரமான ஏற்பாட்டை 1614 ல் செய்து விட்டது. இந்தப் புயல் 1789 வரையில் ஒய்ந்தபாடில்லை. இங்கிலாந்தில் லார்ட்டும்,ஸ்டாபோர்டும் செய்ததைப்போல்,பிரான்சில் ரிசிலும் மாசாரினும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மன்னர்கள் கை ஓங்கா வண்ணம் செய்தனர். பிரபுக்களும் மதத்தலைவர்களும், போர்த்தளபதிகளும் நேரடியான வரியிலிருந்துவிதிவிலக்குவேண்டுமென விரும்பினுர்கள். காரணம் மதத் தலைவர்கள் மக்கள் நல்வாழ்வுக்காக பூசை செய்கிருர்கள் என்றும். போர்த்தளபதிகள், மக்களைப் பாதுகாக்கிருர்கள் என்றும், நிலச்சுவான்தார்கள் மக்களை வாழ வைக்கிருர்கள் என்றும் சொன்னதுதான் காரணம். இந்த வஞ்சனையை அறியாத பாமர மக்கள், இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்ட காரணத்தால் பதினேழாவது பதினெட்டாவது நூற்றுண்டுகளில் அவர்கள் மேன்மக்கள் என்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டது. ஆகவேதான் அவர்கள் ஆளவும் அனுபவிக்கவும் பிறந்தார்கள் என்றும், அவர்கள் கேட்டபோது பணம் கொடுக்கவும், அதட்டிய போது அடங்கி நடக்கவும் பொதுமக்கள் கடமைப்பட்டிருக்கிருர்கள் என்ற நிலை உருவாயிற்று.

அந்தத் தலைக்கனமேறிய உணர்ச்சியாலே 1614 ல் மேன்மக்கள் என்று கருதிக் கொண்டிருந்த பிரபுக்கள், எங்களுக்கும் அவர்களுக்கும் சகோதரத்வம் இல்லை. ஏனெனில் நாங்கள் தோல் பதனிடுபவர்களுக்கோ, காலனி செய்பவர்களுக்கோ மக்களாகப் பிறக்கவில்லை. ஆகவே அவர்கள் எங்களையோ நாங்கள் அவர்களையோ சகோதரர்கள் என்று அழைக்கக்கூடாது. அவர்களுக்கும் எங்களுக்கும் இருக்கும் தொடர்பு ஒரு எசமானனுக்கும் அடிமைக்கும் இருக்கும் தொடர்புதான்! என்றுர்கள்.

1685 ல் மன்னராட்சியை ரத்து செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை புராடெஸ்டெண்டுகள் நான்டெஸ் என்பவன் தலைமையில் கூக்குரல் எழுப்பியபோது அதன் இறுக்கத்தில் அகப்பட்டுக்கொண்டவன் பதினுலாம் லூயி. அதன் விளைவாக புராடெஸ்டெண்டுகளில் பெரும்பாலோர் தொழும் உரிமையைப் பெற்றுர்கள். இந்த முறை, மன்னர்க்கெதிராக, அவர்தொழும் கத்தோலிக்க மார்க்கத்துக்கெதிராக கேலி செய்வதாக இருக்கின்றதென்ற காரணத்தால் நான்கு லட்சம் புராடெஸ்டெண்டுகள் நாடு கடத்தப்பட்டார்கள்.

வெளிவந்து விட்டது

அண்ணவைப் பற்றி எதிர்கட்சித் தலைவர்கள்

விலை 25 காசு.

வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் கழிவு உண்டு.

விபரங்களுக்கு:

மக்கள் மன்றம்

கோவூர் வைத்தியநாதமுதலி தெரு, சென்னை-2,

ஆசிரியர், "இனமுழக்கம்," சென்னை-2.

அன்புள்ளம் கொண்ட
கண்ணப்பா வள்ளியப்பன்
அவர்களுக்கு.

வயிரவன் வணக்கம்.

உங்களை நேரிலே கண்டதில்லை நான். "கழுகுமலைக் கன்னி" என்ற உங்களின் கதையை இனமுழக்கத்தில் இன்று படித்தேன். நல்ல நடை. விறு விறுப்பாக இருக்கிறது. சில இடங்களில் அறிஞர் அண்ணு அவர்களின் உவமையைப் போல் காட்டுகிறீர்கள். பெருமைக்காகவோ அல்லது புகழ்சிக்காகவோ எழுதவில்லை. உண்மையாகவே கூறுகிறேன்.

எல். வயிரவன்
தில்லைநகர் திருச்சி.

அன்புள்ள ஆசிரியருக்கு,

குழந்தையின் பால் வதனத்துடன், இனமுழக்கம் ஆண்டு மலரைக் கண்டேன்! — படித்துச் சுவைத்தேன்! அண்ணு பரிசுப் போட்டிக்கான படங்களை எங்கே சேகரித்தீர்கள்? எல்லாப் படங்களுமே அழகு ஓவியமாகத்தான் தென்படுகிறது! கவிஞர் கண்ணதாசன் அவர்களின் கவிதைகளிரண்டும் அழகாகக் கருத்துடையதாகயிருக்கிறது! வே. கபிலன் எழுதிய "தமிழே அமுதே" என்ற கட்டுரை அனைவரும் படித்துத் தெளிய வேண்டிய ஒன்று! கருணநிதி, கிரேக்க நாட்டுப் புலவனை நமக்குக் காட்டுகிருர்!

அப்பாதுரையாரின் மக்கள் விஞ்ஞானம் அருமை! பெரியாரின் வாசகம் இரத்தினச் சுருக்கமாக இருப்பினும், எழுச்சி கொள்ளச் செய்யத் தக்கது! இது போன்ற பல அறிஞர்கள் தலைவர்கள் கட்டுரைகளிருக்கின்றன! இனமுழக்கம் கடையில் வந்தவுடன் ஆகிவிட்டது! தேடியலைந்து வாங்குவதற்குள், பெரிய தொல்லையாகிப் போய் விட்டது! ஏன் அதிகமாக அடித்து வெளியிடக்கூடாதா

இரா. கலியாணசுந்தரம்
சென்னை-2

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். இனமுழக்கத்தின் வாசகர்களில் நானும்ஒருவன்! நெடுநாளையதினத்திலிருந்து விரும்பி படித்து வரும் கழக வாசகன் மலரைக்கண்டேன், முகர்ந்து பாராமலே சிறப்பையும் புன்னகைக்கும் ஒரு வருட குழந்தையையும் கண்ணுல் கண்டு களித்தேன் வாழ்க இனமுழக்கம்; நீடுழி வாழ்க.

இப்படிக்கு
நடனம்மணி

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2] ★ 9—9—60 ★ [இதழ் 2

எது வந்தாலென்ன, எது போனலென்ன?

இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன ? எது வந்தாலென்ன, எது போனல் என்ன, என்ற கிழட்டு வேதாந்தத்தை வெகு நாட்களாகவே பேசிக் கொண்டு வந்தது தென்னகம். சமுதாயத்திலே, கடவுள் தத்துவத்திலே, ஆத்திக நாத்திகக் கொள்கையிலே ஊன்றிப்போன அளவுக்கு. அரசியலிலே ஒரு அழுத்தமான பற்றில்லாமல், அதனல் ஏற்படுகிற நன்மை தீமைகளைப் பற்றி கவலைப்படாமல் ஏனேதானே என்றிருந்துவிட்ட நிலையின் துன்பத்தை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறது. தாய் நாட்டுப் பற்றும், மொழி வெறியும் வடக்கிலுள்ளவர்களுக்கு வளர்ந்திருக்கிற அளவுக்கு தென்னகத்தில் வளரவில்லை என்பதை ஒளிவு மறைவில்லாமல் கண்ணியத்தோடு ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். ஆனல் வெகுகாலத்திற்கு முன்பிருந்த தமிழர்கள் இப்படி இருந்தார்களா என்ருல் இல்லை. அவர்கள் அப்படி இருந்திருந்தால் இமயத்தில் புலிக்கொடி என்ற பேச்சுக்கோ - சாவகம், சிங்களம், புட்பகம் என்ற மண்ணில் தமிழரின் அடிச்சுவடுகள் பதிந்திருந்தன என்ற ஆதாரத்திற்கோ கொஞ்சமும் இடமில்லாமல் போயிருக்கும். முடி புனைந்தாண்ட மூவேந்தர்களின் வரலாறு உயிர் பெற்றிருக்காது.

சாகாவரம் பெற்ற சங்க இலக்கியங்கள் சில மறைந்ததுபோக, பல இன்னும் தமிழர் இல்லங்களில் பவனி வந்திருக்காது. உலகப் பொதுமறை ஒன்று ஞாலத்தின்கருத்தைக் கவர்ந்திருக்கிறது என்ற பேருண்மை பிறந்திருக்காது. 'இப்படி வாழ்ந்தனரா எம்மனேர்?' என்று வாயில் விரல் வைத்துக் கொண்டு, 'அப்படி வாழ்ந்தவர் இன்று ஏன் இப்படியாயினர்?' என்ற கேள்வியே இருபதாவது நூற்ருண்டில்தான் கேட்கிறது.

தமிழுக்கு வயதென்ன ?

தமிழ்ப் பேரறிஞர் திரு. இராசமாணிக்கனரைப் பார்த்து ஒரு வெளி நாட்டுக்காரர், 'தமிழுக்கு வயதென்ன?' என்று கேட்டாராம். அதற்கு இவர், 'கடவுளுக்கு வயதென்ன?' என்று கேட்டு, 'அதைக்கண்டுபிடிக்கமுடியுமானல் தமிழின் ஆயுளையும் கண்டு பிடிக்கலாம்' என்ருராம். கேட்டவர் திடுக்கிட்டுப் போனராம். அவ்வளவு முதுமை வாய்ந்த தமிழ் இன்னும் சீரிளமையோடு வீற்றிருப்பதைக் காண்கிறேம். இடையில் எத்தனை நூற்ருண்டுகள் உருண்டும் தமிழ் ஒன்றே பிறரால் பிரிக்க முடியாத - அழிக்க முடியாத தாயிருந்திருக்கிறது. அதைச் சட்டத்தின் மூலம் அழிக்க முன்வந்துவிட்டனர். நாமும் முன் வந்து விட்டோம். அதைத்தடுக்க சட்டங்கள் எவ்வளவு வலிவுற்றதாயினும், மனிதர்களுக்காக சட்டங்களே தவிர; சட்டங்களுக்காக மனிதர்கள் இல்லை என்பதை அரசியலாருக்குக் காட்டித் தீர வேண்டிய மகத்தான பொறுப்பு திராவிடருக்கு வந்து விட்டது.

கடவுள் வயது ?

என்ருே ஓர் நாள் கடவுளின் வயது எவ்வளவாக இருக்கும் என்று நாம் மேற்கொண்ட ஆராய்ச்சியில், இந்துமத இதிகாசங்களில் இந்திரன்வரையில்தான் வயது இவ்வளவு என்று தெரிகிறது. அதற்கு மேல் தெரியவில்லை. அதன் விபரத்தைப் படித்தால்; கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆக இந்த நான்கு யுகங்களும் சேர்ந்து ஒரு சதுர்யுகமாம். இப்படி இரண்டு சதுர்யுகங்கள் சேர்ந்து ஒரு மகாயுகம். இப்படி ஆயிரம் மகாயுகங்கள் சேர்ந்து எமனுக்கு ஒரு நாள். அப்படி பத்துக் கோடி நிற்புதங்கள் சேர்ந்தது எமன் ஆயுள். அப்படி பதினன்கு எமன்களுக்கு ஒரு இந்திரன் என்ற அளவோடு நின்று விடுகிறது. அதற்கு ஆண்டவன் ஆயுளைக் குறிக்க அவற்றில் ஆதாரமே கிடைக்கவில்லை என்பதைப் போல் தமிழின் ஆயுள் இவ்வளவென்று சொல்ல முடியவில்லை என்ருர் முதறிஞர்.

முதுமைவாய்ந்த மொழி என்பதற்காக அதைக்காப்பாற்ற நாம் வரிந்து கட்டிக் கொண்டு புறப்படா விட்டாலும் நாம் பேசுகின்ற மொழி, எழுதுகின்ற மொழி என்பதற்காகவாகிலும் தமிழர் தம் கடமையைச் செய்ய முன் வர வேண்டாமா ?

அவர்கள்?

செத்த மொழியில் சில சொற்களும், பாலி, பாரசீக, உருது மொழிகளில் சில சொற்களை பிச்சையெடுத்தும் ஒன்ருகச் சேர்த்து அதன் நெற்றியிலே 'இந்தி' என்று எழுதி விட்டு, இதுதான் ஆட்சி நடத்தும் அருகதையுள்ள மொழி என்று அயோக்கியத்தனமாக, அற்பத்தனமாக, சொல்லும் சௌண்டிகளுக்குச் சௌக்கடி கொடுக்கக் கிளம்பி விட்டது, தென்னகம். ஆனல் இங்கே சில தற்குறிகள், தாய் மொழியில் ஒழுங்காகக் கையெழுத்துப்போடத் தெரியாத தற்குறிகள், தாய் மொழிப் பற்றில்லாத தன்மான மற்றவர்கள், **இந்தி வந்தால் என்ன ?** என்று கேட்கிருர்கள். அவர்கள் பெற்ற கைக் கூலிக்கு இந்த வாதம் சரியாக இருக்கலாம், ஆனல் இந்த மானங்கெட்ட குழவியை ஈன்றெடுத்தாளே தாய். அவள் நிலை என்னவது? இந்தி வந்தாலென்ன ? எவ்வளவு கேவலமான எண்ணம்.

அவர்களைத் திருப்பி நாம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேம். இந்தி வந்தால் என்ன என்று கேட்கும் நண்பர்களே! உங்கள் வீட்டில் பாம்பு வந்தால் என்ன ? தேள் வந்தால் என்ன? திருடன் வந்தால் என்ன? என்று கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள். உடனே அடிக்கவேண்டும், ஓட ஓடவிரட்டவேண்டும்என்பீர்களா. அல்லது 'பாம்புதானே! கடித்துவிட்டுப்போகட்டும்; தேள் தானே கொட்டி விட்டுப் போகட்டும், திருடன்தானே! எதையாவது திருடிக்கொண்டு போகட்டும்' என்பீர்களா கொஞ்சம் சிந்தித்துப் பதில் சொல்லுங்கள்.

இந்தி வெறும் பிச்சைக்காரனைப் போல் தமிழகத்தில் நுழையவில்லை. செங்கோலேந்தி, சட்ட புத்தகத்தை ஒரு கையிலும், துப்பாக்கியை மற்ருேர் கையிலும் பிடித்துக் கொண்டு நுழைகிறது. நாம் மேலே குறிப்பிட்டிருப்பதைப் போல்; எது வந்தால் என்ன, எது போனலென்ன, என்றிருக்கப் போகின்றீர்களா, யார் ஆண்டால் என்ன, யார் மாண்டால் என்ன என்றிருக்கப் போகின்றீர்களா என்று நாடு கேட்கிறது. இதற்குத் தக்க விடை தரவல்லவர்கள் நாட்டிலுள்ள முதியவர்களை விட இளைஞர்களே. ஏனெனில் நாளை அவர்களுடையது. வாழ்ந்து வீழ்ந்துவிட்டவரின் வழித்தோன்றல்கள் அவர்கள். அவர்கள்வாழ்வை வழுக்கைப்படிகளாகக்கொள்ளாமல் உறுதியானபாறையின் மீதுநடக்கிறேம் என்று உறுதிகொள்ளவேண்டும். 'வருங்காலத்தை வகுக்க வல்ல இளைஞர்களே! முன் வாருங்கள்' என்று தன் இரு கரம் ஏந்தி அழைக்கிறது, தாயகத் திருநாடு.

பேச்சு எழுத்து

நாம் நெடுநாட்களாகவே பேசிக் கொண்டும், எழுதிக் கொண்டும் காலந்தள்ளுகிறேம் என்று நம்மிலே சில இளைஞர்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்கள். ஏன் கழகம் இன்னும் செயலிலே இறங்க வில்லை என்பது அவர்கள் கேள்விக்குக் காரணமாகின்றது. நாம் இது வரையில் செயலிலே இறங்க வில்லை என்பது அவர்கள் முடிவு. அவர்கள்பால் அனுதாபப்படுகிறேம். ஒன்று அவர்கள் நமது இயக்கம் நடத்திய போராட்டங்களை மறந்துவிட்டிருக்க வேண்டும். அல்லது அவர்கள் 1958 சனவரி 6-க்குப் பின் இயக்கத்துக்கு வந்தவர்களாயிருக்க வேண்டும். இரண்டும் இல்லை என்ருல், தோள்தினவெடுத்து நிற்கும் வீரமிக்க இளைஞர்களாயிருக்க வேண்டும். அவர்கள் எப்படி இருந்தாலும், பேச்சின் வன்மையை, எழுததின் வேகத்தை நாநிலத்துக்கும் காட்டி, எதிரிகள் நெஞ்சம் துடிக்கவும், நல்லோர் உள்ளங்கள் வாழ்த்தவும், பேச்சாலும் எழுத்தாலுமே ஒரு இயக்கத்தை வளர்க்க முடியுமா என்று ஐயுற்று நின்றேர்க்கு எடுத்துக் காட்டாகவும் நமது இயக்கத்தின் எழுத்தும் பேச்சும் அமைநதிருக்கிறது என்பதை எதிரிகளே கூட மறுக்க மாட்டார்கள். பேச்சால், எழுத்தால் என்ன நடக்கும் என்று இங்கு மாத்திரமல்ல உலக பல பகுதிகளில் கேட்கப்பட்ட கேள்விதான்! அதற்கு விடை, அந்தந்த நாட்டில் தோன்றிய மேதைகள் அவ்வப்போது தநதிருக்கிருர்கள். எமிலிஜோலாவின் எழுத்துக்கள் பிரான்சு நாட்டின் குடியரசுத் தலைவரையே மாற்றியிருக்கிறது. அவன் நீதி மன்றத்தில் ஆற்றிய பேச்சு இராணுவ நீதி மன்றம் தந்த தகாத தீர்ப்பைத் தகர்த்தெறிந்திருக்கிறது. ரூசோவின், வால்டேரின் எழுத்துக்கள் அரசியல் முறையை மாற்றியிருக்கின்றன. சர்ச்சிலின் பேச்சு, இட்லரை, முசோலினியை இடுகாட்டுக் கனுப்பியது. மார்டின்லூதரின் தர்க்க வாதம், ஒரு புதிய மதமான புராடெஸ்டெண்ட் மதத்தையே தோற்றுவித்தது. அந்தணியின் அமைதியும் ஆவேசமும், ஆணித்தரமும் கலந்த பேச்சால் புருடஸ் வாள் மேல்பாய்ந்து செத்தான். சொற்செல்வன் சிசிரோவை உலகம் இன்னும் மறக்கவில்லை. இப்படிப் பலர் தோன்றி மக்கள் கண்ணீர் வெள்ளத்தைத் தடுத்திருக்கிருர்கள். ஏன் இங்கேகூட சற்றேறப்ப இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமே உலகப் பொது மறைதந்த பொய்யாப் பொருந்தகை வள்ளுவன் **வில்லேர் உழவர் பகைக் கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை** என்று சொல்லின் வன்மையை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிச் சென்ருன். அவன் அன்று சொன்னது உண்மைதான் என்று சொல்லுமளவுக்கு நம் இயக்கம் நடத்திய போராட்டங்களின் மூலம் இயக்கத்தை வளர்த்ததை விட பேச்சின் மூலமும்தான் இயக்கத்தை வளர்த்தது என்ருல் மிகையாகாது,

ஆனல், இன்னமும் காலம் கனிய வில்லை என்று பேச்சையும் எழுத்தையுமே துணைக்கழைத்துக் கொண்டு இயக்கம் நடந்து கொண்டிருக்கப் போகின்றதா என்று கேட்கும் ஆர்வமிக்க நண்பர்களுக்கு, 'இல்லை' என்ற பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

செயலில் இறங்கவேண்டிய நாள் நம்மைநோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கின்றது. அந்த நாள் எது என்பதை உங்களுக்குக் கழகம் அறிவிக்க இருக்கிறது.

இதுவரை நீங்கள் பொதுக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும், சிறப்புச் சொற்பொழிவுகளிலும் கலந்து கொண்டு கைத்தட்டியதும், சிரித்ததும், சபாஷ் என்று ஆரவாரித்ததும், வெட்கம், வெட்கம், என்று ஆர்ப்பரித்ததெல்லாம் மறைந்து, இனி, எங்கு நோக்கினும், துக்கம் துக்கம் என்ற துயரச் செய்தியைக் கேட்கப் போகிறீர்கள். நாம் எதிர்த்துப் போராடப் போவது, இந்தி அபிமானிகளை அல்ல, இந்தி வெறியர்களை! என்பதை நீங்கள் மறந்து, விடக்கூடாது. ஏகாதிபத்தியம் எப்பக்கம் தலை நீட்டினலும் நசுக்குவோம் என்று நாத்தடிக்கப் பேசியவர்கள், இன்று அதே ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிள்ளைகளாக, தாசர்களாக மாறி விட்டவர்களை எதிர்த்துப் போராடப் போகிறேம் என்ற முடிவெடுத்துக் கொள்ளுங்கள். எங்கும் பிணக்காடாய், எத்திக்கிலும் இரத்தத்தேக்கமாய், எந்த மூலையிலும் எலும்புக் கூட்டமாய் இருக்கப் போகும் ஒரு சோகமிக்க சுதந்திரக் காட்சியைக் காணப் போகிறேம் என்ற முடிவிலிருங்கள். அதற்குள் சொல்ல வேண்டியவர்களிடத்தில் சொல்லி, செய்ய வேண்டியதைச் செய்துவைத்து விட்டுப் பயணத்திற்குத் தயாராகுங்கள் என்று சொல்ல விரும்புகிறேம்.

அன்பன்,

சி. பி. சிற்றரசு

என் சித்திக்கு ஆங்கிலம் தெரியாதுதான், இது எனக்குத் தெரியாததல்ல நன்றாகத் தெரியும். ஆனால் அந்த நேரத்தில் எனக்குப் பிடிபடவில்லை. இன்ஸ்பெக்டர் அந்தக் கேள்வியைக் கேட்டதும் என் உயிர் துடித்தது. பீரங்கி வாய்க்குள்ளிருந்த கடிதத்தை எடுத்துப் பார்க்கும்போதுதான் ரோசிலாந்துக்கு விபரமே தெரிந்திருக்கிறது. என்ன-என்று கேட்டாள். நான் நடந்ததைச் சொன்னேன். அவள் சிரித்தாள். "அந்தக் கடிதத்தை நான்தான் எழுதி வைத்தேன் நம்முடைய தொடர்பு இப்படித்தான் தொடங்கவேண்டும் என்பதைத் தங்களுக்குக் காண்பிக்கத்தான் இங்கே அழைத்து வந்தேன்" என்றாள். அவள் பேச்சில் களங்கமில்லை. சூதில்லை. கடிதத்தை நான் கையிலெடுக்கும் போதுதான் அவள் விபரத்தைப் புரிந்து கொண்டிருக்கிறாள்.

நான் இன்ஸ்பெக்டர் பக்கமாகத் திரும்பினேன். அவர் ஆழ்ந்த அனுதாபத்துடன் பேசினார்:

"துருவா, நீ விபரம் தெரிந்தவன். இன்று ஒரு பெண்ணின் இதயத்தைத் தூளாக்கிவிட்டாய். இனி ஒருபோதும் அந்தப் பெண் நிம்மதி பெறமாட்டாள். ஆனால் ஒன்று. நீ சந்தேகப்படும் வகையில் நான் ஏன் இங்கே வந்தேன் என்று நினைக்கலாம். நீயும், ரோசிலாந்தும் கோட்டைப்பக்கமாக வந்துகொண்டிருப்பதாக என் மகன் சொன்னான். உன்னைத் தடுத்து உன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக நான் ஓடிவந்தேன். ஆனால் விளைவு வேறு மாதிரியாக வந்துவிட்டது. பரவாயில்லை. வீட்டுக்கு ஓடிப்போய் உன் சித்தியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள். உன் நிலைமையைக் காட்டுவதற்காக நான்தான் உன் தந்தைக்கு ஆள் அனுப்பினேன். ஆனால் வீட்டில் அவர் இல்லை. அவருக்குப் பதிலாக உன் சித்தி இங்கே ஓடிவந்திருக்கிறாள். உன்னைத் திருத்த எவ்வளவு ஆவலோடு ஓடி வந்திருப்பாள்; உன் மீது எவ்வளவு பிரியம் இருந்தால் அவள் இங்கே துடிதுடித்து ஓடி வந்திருக்கவேண்டும்!"

இன்ஸ்பெக்டர் அன்பாகப் ...தை அப்போது தான் நான் முதன் முதலாகக் கேட்டேன். என் இதயம் வெடித்துவிடுவதுபோல் தெரிந்தது, சித்தி-என்று கத்தினேன். அந்தக் கோட்டை கிடுகிடுத்தது. என் அருகில் நின்ற ரோசிலாந்து தேம்பினாள். அவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நான் என் வீட்டுக்கு ஓடினேன். வெறிபிடித்தவனைப்போல் தலைவிரிகோலத்துடன் ஓடினேன். நான் அந்த ஊரில் கௌரவத்துடன்வாழ்ந்தவன். போலீஸ்காரர் மகனாக இருந்தாலும் என்னைக் கண்ணியமாக நடத்தாத பெரியவர்கள் அந்த ஊரில் இல்லை. ஆனால் அன்று நான் ஓடியது சிறுபிள்ளைத்தனமான செயலாக மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். அப்படி ஓடுவதைத் தவிர வேறு எனக்கு வழி தெரியவில்லை.

வீடுவந்து விட்டது. கதவைத் தட்டினேன். பலமாகத் தட்டினேன். உள்ளே தாழ் போடப் பட்டிருக்கிறது என்று தெரிந்த பின்னர் கதவை இடித்தேன். கொடுமை! கொடுமை! தாழம்பூ கட்டுப்போல் என் சித்தி பிணமாகத் தொங்கினார்கள். எனக்கு நம்பிக்கையில்லை. அவர்களது பாதங்களைத் தொட்டுப் பார்த்தேன். பனிக்கட்டிபோல் இருந்தன. கைகளைப் பிசைந்து பார்த்தேன். கரையில் பிடிங்கிப் போட்ட அல்லிக்கொடிபோல் துவண்டிருந்தன. இந்தக் காட்சியை என்னால் எப்படித் தாங்கிக் கொண்டிருக்கமுடியும்? கதறித் தீர்த்தேன். ஒப்பாரிவைக்கும் உரிமை பெண்களுக்கு மட்டும் தான் என்பதில்லை. தாங்கமுடியாதபோது உதிரும் சொற்கள்தானே ஒப்பாரி! நான் அன்று ஒப்பாரியே வைத்துவிட்டேன். இவ்வளவு பெரிய துக்கத்திற்குள் ஒரு பயம் வேறு ஒளிந்துகொண்டு என்னைக் கேலிசெய்த வண்ணமிருந்தது. திடீரென்று என் தந்தை வந்து விட்டால் என்னசெய்வது? அவரிடம் என்ன சொல்லி நான் தப்பித்துக் கொள்வது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சித்தியைப்போல் நானும் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர எனக்கு வேறுமார்க்கமே தெரியவில்லை. மனதைத் திடப்படுத்திக்கொண்டேன். தற்கொலை செய்துகொள்வது கோழைத்தனம் என்று பேசப் பட்டாலும் அந்தக் கட்டத்திற்கு மனிதன் வருவது துணிச்சலான செயல்தான். தற்கொலை செய்துகொள்வது கோழைத்தனமா இல்லையா என்பது அந்தக் காரியம் என்ன குறிக்கோளுடன் செய்யப்பட்டது என்பதைப் பொருத்தது. தற்கொலைகள் எல்லாமே கோழைத்தனமான செயல்கள் அல்ல. புருஷன் இறந்தபின் வாழப் பிடிக்காத மனைவி விஷம் குடித்து இறப்பது கோழைத்தனமாகுமா? நான் சாகத் துணிந்தபோது இப்படியெல்லாம் என்னை நானே கேட்டுக்கொண்டேன். வீட்டின் பின் பக்கமாகப் போய் பெரிய கயிறு ஒன்றைத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்து என் சித்திக்குப் பக்கத்திலேயே கட்டினேன். கடைசி முறையாக காலஞ்சென்ற என் தாயாரை நினைத்துக்கொண்டேன். என் வாழ்க்கையின் கடைசியென்று கருதிய அன்றைய சூழ்நிலையில் என்னை நம்பி என்னைக் காதலித்த எனது ரோசிலாந்தை மனதில் பதித்துக் கொண்டேன். என்னுடைய எதிர்காலத்தைப்பற்றி நான் என்னென்ன எண்ணியிருந்தேனோ அவற்றையெல்லாம் இடித்துத் தள்ளிவிட்டேன். அந்த நேரத்தில் எனக்கு எதிர்காலம் சாவைத் தவிர, நிம்மதியைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை. உலகத்தில், சாகப்போவதை முன் கூட்டியே விளம்பரப்படுத்திக்கொண்டு செத்தவன் சாக்ரட்டீஸ் ஒருவன் தான். அவனைத்தான் சிறந்த தியாகி என்று சொல்லவேண்டும். மற்ற தலைவர்களுக்கெல்லாம் சாவு எப்போது வருமென்று தெரியாமல் திடீரென்று இறந்தவர்கள். சாவை அனுபவித்து, சாவு எப்படி இருக்குமென்று முன் கூட்டியே அணு அணுவாக ஆராய்ந்து இறந்தவன் சாக்ரட்டீஸ் தானே! நான் சாமான்யன். நாட்டுக்காக எதுவும் செய்யாதவன்; என் வீட்டாருக்குத் தவிர மற்றவர்களுக்கு என்னைப் பற்றித் தெரியாது. அப்படிப்பட்ட எனக்கே சாகப்போகும் போது எப்படி இருந்தது தெரியுமா? சாதாரண காலத்தில் எதை எதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தோமோ, அவை அனைத்தும் சாகப்போகும் போது சக்கரையாகத் தெரிகின்றன. கண்ணில் எதுபட்டாலும் இனிமேல் இதை எப்போது பார்க்கப் போகிறோம் என்ற சபலம் தட்டுகிறது. அடுப்பங்கரையிலிருக்கும் காய்கறிக் கூடையிலிருந்து ஆடை அலங்காரப் பிரச்சனை வரை மனதை வாட்டத்தான் செய்கிறது. நான் ஒரு வழியாக எல்லாவற்றையும் நினைத்து நினைத்துப் பெருமூச்சுவிட்டு முடித்து சாவதற்குத் தயாராகி விட்டேன். கடைசியாக ஜன்னல் வழியாக வெளியில் பார்த்தேன். விளக்குப் போடும் நேரம் வந்து கொண்டிருந்தது. அந்த மங்கிய மாலை வேளையில் என் தந்தை உடுப்புடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். எப்போதும் அவர் வீட்டுக்கு வரும்போது என் சித்திவெந்நீர் போட்டு வைத்திருப்பார்கள். காபி தயாராக இருக்கும். யார் மீதும் பிரியத்தை வைப்பதைக் காட்டிலும், தன் மீது பிரியமாக இருப்பவர்கள் மீது அன்பாக இருப்பதுதான் சிறந்தது-முறியாதது என்று என் தந்தை அடிக்கடி கூறுவார். அதன்படியே சித்தியிடமும் நடந்து கொண்டார்.

அவரது செருப்புச் சத்தம் கேட்டது. சாகத் துணிந்த நான் நடுங்க ஆரம்பித்தேன். என் தந்தையின் கண்ணில் படாமல் தப்பித்து விடுவதே எனக்குச் சிறந்த வழியாகத் தெரிந்தது. ஏனெனில் என் தந்தை வீட்டுக்குள் வருமுன் செத்துவிட முடியாதல்லவா அதனால்! முகப்புக் கதவைத் தாளிட்டு விட்டு கொல்லைப் பக்கமாக ஓடிவிட்டேன், அதற்குப் பிறகு வீட்டில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. இரவோடு இரவாகச் சென்னைக்கு ஓடிவிட நினைத்தேன். போவதற்கு ரயிலுமில்லை, காருமில்லை. கடைசியில் ஒரு சபலம் - ரோசிலாந்தை இறுதியாகப் பார்த்துவிட்டுப் போகலாமென்று! அவளுடைய வீட்டுக்கு நடந்தேன். இதயத்திலே பெருஞ்சுமை—கண்களிலே இளமை வெறி! இருட்டு பேயாட்டம் போட்டுக்கொண்டிருந்தது. ரோசிலாந்தின் வீட்டைச் சுற்றி பயங்கரமான சூழ்நிலை! யாரைப் பார்த்தாலும் காங்கிரஸ்காரன் என்றல்லவா அதிகாரிகள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். நானும் அப்படிப்பட்ட நேரத்தில் தான் ரோசிலாந்தின் வீட்டை நெருங்கினேன். இரண்டு போலீஸ்காரர்கள் வாசலில் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். உள்ளே வெளிநாட்டு இசைக்கருவியின் போர்ப்பரணி இசை கேட்டுக்கொண்டிருந்தது. அந்த இசையொலியை எனது ரோசிலாந்துதான் இசைத்திருக்கவேண்டும்! அவளைத் தவிர அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள்! எனக்கொரு புதுத் தெம்பு வந்தது; சாகத் துணிந்த பிறகு, ஏன் பம்மிக்கொண்டே இருக்கவேண்டும். கொல்லைப் பக்கமாகப் போய், கண்ணாடித் துண்டுகள் பதித்த சுவரில் பற்றி ஏறினேன். குளுமையான நீல விளக்கொளியில் ரோசிலாந்து உட்கார்ந்து இசைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தந்தை அந்த வெளிச்சத்தில் துப்பாக்கியைத் துடைத்துவிட்டு புதிய தோட்டாக்களைப் போட முயற்சித்தார். எனக்கு பகீர் என்றது. ஏனெனில் அந்த அதிகாரிக்கு முன்கோபி என்ற பட்டம் வேறு உண்டு.

(தொடரும்)

வருந்துகிறோம்.

நமது இயக்கத்தின் பழம்பெரும் நண்பர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் 28 - 8 - 60 — ல் காலை திருப்பூரில் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு மிகமிக வருந்தி நமது ஆழ்ந்தஇரங்கலை அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நமது இயக்கத்தில் நீண்ட நாட்களாக பணிசெய்து இன்று L.I.C. பில்ட் ஆபீசராக வேலை பார்க்கும் மேட்டுப்பாளையம்நண்பர் சண்முகநாதன் அவர்களின்வாழ்க்கைத் துணைவியார் அவர்கள் சிறு குழந்தைகளையும் கணவரையும் விட்டுவிட்டு இயற்கை எய்தியதைக் கேட்டு ஆறாத் துயரடைவதோடு நமது ஆழ்ந்த துக்கத்தை அன்னாருக்கும் குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜோலாவின் கடிதங்கள்

சி. பி. சிற்றரசு

நீதிமன்றத்தில் ஜோலா!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அல்லது நீங்கள் ஏதாவதொரு சுட்டிக்காட்ட முடியாத காரணத்தால் பயந்து விடுவீர்களானல்' நாட்டின் பரிபாலனத்தை உயிர் கொடுத்தாயினும் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுவது தான் ஒரு உண்மையான குடியரசுவாதியின் கடமை என்று முடிவு கட்டி அதற்காகப் பரிதாபப்படுவேன்.

அருமை ஜூரர்களே! உங்கள் காருண்ய உள்ளத்தை நான் லஞ்சமாகக்கேட்கவில்லை. கடமையைக் கைவிடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

முன்பு எஸ்டரெஸியை விசாரிக்கும்போது நீங்கள் கடமையை மறந்து விட்டீர்கள் என்பதை இந்த பகிரங்க நீதி மன்றத்தில் சொல்ல வேண்டி வந்ததற்காக நான் உண்மையாகவே வருந்துகிறேன். ஒரு காலத்தில் ஜூரியாக இருந்த நானே, இன்று ஜூரர்களாக வீற்றிருக்கும் உங்கள் மேல் குற்றம் சுமத்த முன் வந்திருக்கிறேன் என்பதற்காக வெட்கப்படாதீர்கள். காலம் கடந்து விடவில்லை. இன்னமும் நீதியை நிலைநாட்டி நமது பொன்னாட்டின் பெருமையை நிலைநாட்ட நேரம் இருக்கிறது.

உண்மையான குற்றவாளி எஸ்டரெஸியை நீங்கள் விசாரித்ததற்கு சற்று முன்பு, யுத்த மந்திரி மான்ஷிர் மெலின், அவர்களிடம் இருந்து உங்களுக்கு ஒரு தாக்கீது வந்ததையும், அதில் நீங்களனைவரும் கொடியவன் எஸ்டரெஸியை விடுவிக்கும் விஷயத்தில் அதிகமாக அக்கறை செலுத்தவேண்டும் என்றும், ஆகவே அவன் விஷயத்தில் ஆழ்ந்து சிந்திக்காமல் சாதாரணமாக இருந்துவிட வேண்டும் என்றும் மேற்சொன்ன யுத்த மந்திரி மெலின் அவர்கள் அனுப்பிய தாக்கீதைப் பார்த்து பயந்து சும்மாயிருந்து விட்டீர்கள். எஸ்டரெஸிதான் உண்மையான குற்றவாளி என்பதற்கு பல ஆதாரங்கள் இருந்தும் நீங்களனைவரும் ஒரு யுத்த மந்திரிக்குப் பயந்து அநியாயத்தின் பலிபீடத்தில் இறந்து விட்ட சவம்போலிருந்து விட்டீர்கள் என்ற இந்த இரகசியத்தைப் பகிரங்க நீதிமன்றத்தில் தைரியமாக வெட்ட வெளிச்சம் ஆக்குகின்றேனே என்பதற்காக வருந்தாதீர்கள். வேதனையால் வெட்கப்படாதீர்கள். நடந்தது நடந்து விட்டது. இனியாகிலும் நியாயத்தின் பக்கம் உங்கள் காதுகளைத் திருப்புங்கள். யாருக்கும் அஞ்சாமல் வீற்றிருக்கவேண்டிய நீங்கள் சாதாரண கற்சிலைபோல் காட்சியளித்தீர்கள். அதற்காகக் கவலைப்படாதீர்கள். இனியாகிலும் உங்கள் கீர்த்திவரலாற்றினை வஞ்சனை வரிகளால் மறைக்கப் படாதிருக்குமாக.

அருமை நண்பர்களே! பல நாட்களுக்கு முன்பு பட்டாளத் தலைவர்களின் வன்மையால் புதைக்கப்பட்ட உண்மை எப்படி எனக்குத் தெரிந்து விட்டது என்பதையே ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டு ஆற்றமுடியாத கோபத்தால் வீற்றிருக்கின்றீர்கள். ஆறுதல் கொள்ளுங்கள். மனித வர்க்கம் குற்றமுடையது தான். அதற்காக நான் வருந்தவில்லை. ஆனால் அத்தகு குற்றங்களைத் திருத்தும் பெருமைக்குரிய பீடத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் நீங்கள், ஒரு இராணுவ மந்திரியால் சாதாரண மக்களாக்கப்பட்டு விட்டீர்களே என்பதை எண்ணி சஞ்சலப் படுகிறேன். இதோ என்னைப் பாருங்கள், என் களங்கமற்ற முகத்தைப் பாருங்கள், நீதியின் வெளிச்சத்தில் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடித்து உங்கள் முன் நிறுத்தி, கண்ணீரும் கம்பலையுமாகக் கடலின் நடுவே கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கண்ணிய புருஷனை விடுவித்து நாட்டின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தால் நிற்கும் இந்த ஏழையைப் பாருங்கள்.

உங்களுக்குத் தொல்லை தருவதற்காக என்னைப் பெரிதும் மன்னிக்க வேண்டும் சாட்சிகள் எவ்வளவு பயந்து போனாலும், ஒரு சிறிய சாட்சியத்தைக்கூட விடாமல் சேகரித்து இருக்கின்றேன். இதில் நீங்கள் பாரபட்சம் காட்டினால் நீதி நிச்சயம் வீழ்ந்து விடும் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. நான் டிரைபஸை மாத்திரம் காப்பாற்ற முன்வரவில்லை. உங்கள் நற்பெயருக்குக் கெடுதல் வரக்கூடாது என்ற கவலையால் முன் வந்திருக்கிறேன்.

நான் கொடுக்கும் இந்த ஆதாரங்கள் உண்மையைக் கண்டு பிடிக்க, உங்களுக்குப் போாதரவாக இருக்கும். எஸ்டரெஸியை காப்பாற்ற கனத்த குரலோடு முன்வந்த இராணுவ அமைச்சர் மெலின் அவர்கள் நான் இராணுவத்தையே குறை கூறுகிறேன் என்று தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது.

பல கொள்கைகளில், பல கட்சிகளில் அடங்கிய அனைவரையும் தன்னகத்தே கொண்டிருக்கும் தாயகத்தைக் காப்பாற்ற ரத்தம் சிந்தும் போர் வீரர்கள் அனைவருக்குமே நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், அதே நேரத்தில் அபிப்பாயங்கள் அவர்கள் வைத்திருக்கும் பீரங்கியின் வயிற்றிலே இருந்தாலும் வெளியே கொண்டுவர தயங்கமாட்டேன் என்பதை இராணுவ அமைச்சர் மெலின் அவர்களுக்கு எச்சரிக்கைச் செய்கின்றேன். இப்படி நான் செய்வதின் மூலம் என்னை நான் காப்பாற்றிக்கொள்கிறேன். என் தாய் நாட்டைக் காப்பாற்றும் பெருமைக்குரிய புதல்வனாகிறேன் என்ற நற்பெயருக்காக அல்ல. தாயகத்தின் தவறைத் திருத்தித் தரணிக்கு அதன் நற்பெயரை காட்ட வேண்டும் என்ற கடமையினால் தான்.

சரித்திரம் என்றாவது ஓர் நாள் நான் 'நேர்மையுடையவனா அல்லவா என்பதை தீர்மானித்தே தீரும். ஆனால் குடியரசைக் காப்பாற்ற முதல் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் பலம் பொருந்திய இராணுவம், குற்றமுள்ள எஸ்டரெஸியைக் காப்பாற்ற முனைந்தது. தன் கடமையை அறவே மறந்தது, 'எஸ்டரெஸி வாழ்க', 'யூதர்கள் ஒழிக' என்று எக்காளமிட்டுக் கொண்டிருக்கின்றது.

இது நமது நாட்டின் சமாதானத்திற்கு ஒரு நல்ல அறிகுறியா என்று எண்ணிப் பாருங்கள்.

எஸ்டரெஸி பின்பற்றுகிற யூத எதிர்ப்பு இயக்கம் வாழவும், டிரைபஸ் பிறந்த இனமான யூத இனம் ஒழியவும் ஒரு நாட்டின் இராணுவமே சூழ்ச்சி செய்யுமானல், நாடு யாரிடம் பாதுகாப்பைத் தேடுவது? இந்தக் களங்கத்தை யாரால் எந்த காலத்தில் மாற்ற முடியும்? ஆகவே, நீதி ஒன்றினால்தான் இந்தக் களங்கத்தை மாற்ற முடியும் என்பதை நீங்கள் திடமாக நம்ப வேண்டும்.

டிரைபஸின் சோகம் நிறைந்த வரலாற்றை நீங்கள் அனைவரும் உணர்ந்தவர்களே. நீங்கள் அனைவரும் நீதியின் இதயங்கள். நீங்கள் இப்போது என்ன சிந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் நானும் ஒரு காலத்தில் ஜூரியாக இருந்த அனுபவத்தால் ஒவ்வொரு மனிதனையும் காப்பாற்ற வேண்டியது உங்களுடைய நீங்காத கடமை. நீங்கள் உங்கள் சொந்த துன்பத்தை எண்ணுவதின் மூலந்தான் பிறருடைய துன்பத்தை அறிய முடியும். ஏனெனில் நீங்களும் மனிதர்கள். ஆகவே இந்த வழக்கை எந்த நுணுக்கமான ஆராய்ச்சியின் மூலம் முடிக்கலாம் என்ற முடிவிலே உட்காருங்கள்.

யாரோ ஒரு அடையாளம் தெரியாத அப்பாவி பூதத்தீவிலே இருக்கின்றான் என்று அலட்சியமாக இருந்துவிடாதீர்கள். அவனுக்கு இழைத்திருக்கும் அநீதியை எண்ணி நாடு வேறு பக்கம் திரும்பி கண்ணீர் வடிக்கிறது உங்கள் இருதயத் தூய்மையாக இந்த வழக்கை ஆராய்ச்சிசெய்து பாருங்கள். நாட்டின் உயிரையே அந்த உத்தமனிடத்தில் ஒப்படைத்திருந்தோம். அந்த நம்பிக்கைக்குரியவனைத்தான் இன்று நாயினும் கேடாய் நடத்திக் கொண்டிருக்கிறோம். காலம் தன் பயங்கரக் கைகளை நீட்டிக்கொண்டிருக்கின்றது. கொடியவர்களை அது கொல்லப்போவது உறுதி. அந்த பட்டியலில் நீதிமான்களாகிய நீங்கள் தயவு செய்து சேராதீர்கள்.

ஆகவே இந்தக் கறைபடிந்த வழக்கில் நல்லதையும் நேர்மையையும் செய்ய நினையுங்கள். இவ்வளவும் சொன்னதற்காக நீங்கள் என்னைத் தண்டிப்பீர்களாயின் நான் இன்னும் நல்லவனாய் விடுவேன். நான் உங்கள் பார்வைக்குக் கொடியவனாகத் தெரிகின்றேனா? இல்லை. நான் எந்த அரசியல் வேட்டைக்கும் அடிகோலுபவனல்ல. நான் ஒரு சுதந்திர எழுத்தாளன். உண்மை விரும்பி, நாட்டின் நேசன், நல்லவர்க்கு நண்பன், நீதியின் தூதுவன், நேர்மையின் பாதுகாவலன், பொல்லாங்குக்குப் பகைவன், எந்தச் சமூக வாழ்வுக்காக எவன் தன்னை ஒப்படைக்கிறானே, அவன் தான் நான். நான் ஓர் ஏழை. நான் ஓர் இத்தாலியனல்ல. சிலரிக் கார்டுகளைப் பார்ப்பதற்காக என்னுடைய 52-வது வயதில் இத்தாலிக்குச் சென்றிருக்கின்றேன். நான் என்னுடைய பாதுகாப்புக்காக உயிர் வாழவில்லை, உங்களை இந்தச் சிக்கலான மனப்போராட்டத்திலிருந்து விடுவிக்க முயற்சி எடுத்துக்கொண்டேன். ஒரு குற்றம் மற்றோர் குற்றத்தையே தலையிலடித்துவிட வேண்டும். என்னைத் தண்டிக்கலாம். ஆனால் நீதியைத் தேடுங்கள். அது ஒன்றே வரலாற்றில் உயர்வடையும் தன்மையுடையது. அந்த ஒரு பேருதவிக்காக என் உயிரையே வேண்டுமானாலும், மங்காத கீர்த்தி பெற்ற என் தாயகமாம் பிரெஞ்சு பூமிக்கே காணிக்கையாகத் தயங்காமல் தருகின்றேன். எப்படியும் நீதி வெளிச்சத்திற்கு வரவேண்டும். இரு[illegible] போன்ற இருதயம் கொ[illegible]னர்கள் ஒழியவேண்டும். அ[illegible] தாலான மாசற்ற கரங்க[illegible] நாட்டின் களங்கம் துடை[illegible] படவேண்டும்.

தூய எண்ணத்தின் [illegible]களே! துணிந்து முன் வா[illegible]கள்! நீதி நிரந்தரமான இ[illegible] பெருத் திறல் அல்ல நிச்[illegible] அது கிடைத்தே தீரும் [illegible] சொல்லிக்கொண்டு என் [illegible]னப்பத்தை இதோடு மு[illegible]றேன்.

(தொ[illegible]

காளையே, கிளம்பிவா!

★

நமதருமை காமராசர் நாக்கில்; நாளும்
நகர்வதெலாம் பேச்சல்ல; புழுதான்!
அவரடியைத் தொழுகின்ற அமைச்சர் நாக்கோ
அடிமையெனச் சாற்றிடவே அலையும்; இந்த
அலங்கார பொம்மைகளை ஆட்சி விட்டு
அகற்றிடவே, அரும்படையே! ஆர்த் தெழுந்து
கொடுவாளை எழுத்தாக்கு; கொள்கை யாக்கு!
கொடுமையினைக்களைந்திடவே களத்தைநோக்கு!

வடநாட்டு மாளிகையை வட்டமிட்டு; நாளும்
வெளவா லென்றே தொங்கும் வெத்துக்கூட்டம்
நடமாடும் பாதையிலே நாறும் பொருள்போல்
நாவடக்க மில்லாமல் நகர்த்தும்; வஞ்சக்
கரும்புள்ளிச் செம்புள்ளிக் கழுதைக் கூட்டம்
கனைக்கின்ற சத்தத்தின் கடைசி வோட்டம்
போதுமடா! புறப்படடா! பொறுமை விட்டுப்
புழுதியினைப் புதைத்திடவே கிளம்பி வாடா!

கருமேகக் கூட்டத்தின் ஆட்டம்; கொஞ்சம்
காற்றோட்டம் வந்தவுடன் கலைந்தே போகும்!
பொறுமையிலா நாகத்தின் ஓட்டம்; நெஞ்சைப்
பொடியாக்கும் இடிகேட்டுப் பிரிந்தே சாகும்!
கதர்க்குல்லாய்க் காரர்களின் வேகம்; கழகக்
காளையரின் கனல்கக்கும் பேச்சால் மாளும்!
இவையாவும் போதாது; இன்றே நீயும்
இறப்புக்கு இரையாக இசைந்து வா! வா!

'துடிக்கின்ற தோளெங்கே? தமிழனெங்கே? - நீரை
வடிக்கின்ற விழியெங்கே? வாழ்வு எங்கே?
கருங்கூட்டக் குரங்கெல்லாம் கிளம்பி வந்தும்
கிளம்பாத புலியெங்கே? களிறு எங்கே?
விலங்கோடு வெறியாட்டம் போடுகின்ற; வஞ்ச
விரிபாம்புக் கஞ்சாத வீரனெங்கே?' யென்று
புண்ணான தமிழன்னை புலம்பு கின்றாள்;
புவிகாக்கக் களம்நோக்கி இன்றே வா! வா!

வே. கபிலன்

9-9-60

புறப்படு மகனே

7

உருண்டோடியது

வைசாலி நாட்டு மன்னன் வேண்டுகோளை நிறைவேற்றுவதா இல்லையா என்ற விவாதத்தில் அவைக்களம் வேகமான விவாதத்தை நடத்தியது. அமைச்சர், தளபதி முதல் அவையிலிருந்தோர் அனைவரும் உதவி தரக்கூடாதென்ற கருத்தைத் தெரிவித்தனர். மன்னன், குருக்கள் ஆகிய இருவர் மட்டிலும் உதவி செய்யலாம் என்கின்றனர். இரப்பது இகழ்ச்சியில்லை என்ற பண்பாடுடைய வேதியர் அந்த அடிப்படையில் உதவி செய்யலாம் என்கின்றார். ஆனால் மன்னன் தமிழகம் பெற்றிருக்கும் வீரவரிகளை எடுத்துச் சொல்ல மறுநாள் அவைக்களத்தைக் கூட்டுகிறார்.

மன்னன் தமிழகம் பெற்ற வெற்றிகளைக் கீழ் வருமாறு எடுத்துச் சொல்கின்றார்.

மன்: அவையோர்களே! நமது தமிழகம் பெற்ற வெற்றிகள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரமல்ல இலட்சோப இலட்சவெற்றி முத்திரைகள்! நிலந்திருத்தருவிற் பாண்டியன் இமயத்தையும் கங்கைக் கரையையும் வென்று நம் பண்டைத் தமிழகத்தோடு சேர்த்து நிலப்பரப்பை பெரிதாக்கினானே, அந்நாள் முதற்கொண்டு இந் நாள் வரையிலே ஒழுங்காகப் பார்த்தால் மலைத்துப் போவோம்; மகிழ்ச்சியில் திளைத்துப் போவோம். சாவகத்தை வென்ற நெடியோனையும், கடாரத்தை வென்ற பாண்டிய சோழ மன்னர்களையும், வடிம்பலம்ப பாண்டியன், தாம் பெற்ற வெற்றிக்காக நடத்திய முந்நீர் விழாவையும், மோரியர்களைவென்ற இளஞ்சேட் சென்னியையும், இமயத்தில் தமிழ்க் கொடிச் சின்னத்தைப் பொறித்து அடைமொழி பெயர் பெற்ற இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும், சோழன் முதற் கரிகாலனையும், ஆரியப்படை கடந்து, தமது சின்னமாகிய மீன் கொடியைப் பொறித்து விட்டு வந்த ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனையும் நாம் நினைத்துப் பார்க்கையில் பாராண்ட தமிழ் மன்னர்களின் வீரத்தன்மைகள் ஓரளவுத் தெளிவாக-ஒளியாக எதிர்காலத்துக்கோர் கலங்கரை விளக்கமாக அமையும்.

சோழன் கரிகாலன், தம்மோடு போர் புரிவதற்கு யாரும் வராததால் அவனே வடதிசையை நோக்கிச் சென்றானும்! அங்குள்ளவர்களை வென்றானும். வென்று, வெற்றி மாலைச்சூடிவருகின்ற வழியிலே வச்சிரநாட்டு வேந்தன் முத்துப் பந்தலிட்டு வரவேற்றானும்! மகத மன்னன் பட்டி மண்டபங் கட்டி புகழ்ந்தேத்தி நின்றானும்! அவந்தி நாட்டு அரசன் தோரணங் கட்டி, திறையாகப் பல செலுத்தி அவன் பின் தொடர்ந்தானும்.

வடதிசை வேந்தர்களான ...கனும் விசயனும் தமிழ் வேந்தர்களை இகழ்ந்துரைத்தனர் என்ற செய்தியை, ஒற்றர் மூலமாக அறிந்த சேரன் செங்குட்டுவன் சீற்றங் கொண்டான்! வடதிசை நோக்கிப் படையெடுத்துப் போர் புரிந்து அம் மன்னர்களின் தலைகளிலே கல்லைச் சுமக்கச் செய்தான்! இது போன்ற எண்ணற்ற எழுச்சி மிக்க வெற்றிகள், தமிழகம் கண்டது. சிங்களம், புட்பகம் சாவகம் போன்ற நாடுகளையும் வெற்றியாலே வளைத்துக் கொண்ட தொன்மை மிக்க தமிழகம்தான் இது. சீனம், மிசரம், யவனம்போன்ற நாடுகளிலே புகழோடு கிடந்தவர் தாம் தமிழர்! அத்தகைய சிறப்புக்குப்பேர்பெற்ற நற்றமிழ் மன்னர்கள் வீற்றிருந்த நிலம்தான் இது. இவைபோன்ற எண்ணற்ற வீரவரிகளை உணர்த்தும் வரலாறுகள், இலக்கியங்கள் ஏராளம்! அவைகளை விளக்கி இன்றே சொல்வதென்பது முடியாத காரியம்.

மன்: நாம் ஒப்புதலை தெரிவிக்கவேண்டும் தூதுவனை அழைத்துவாருங்கள்.

தளபதி செல்கிறான். அங்கே தூதுவன் இல்லை. சுற்றிலும் தேடுகிறார்கள், லாயத்தில் குதிரைகளைக் கணக்கெடுக்கிறார்கள், இரண்டு குதிரைகளைக் காணவில்லை, ஒரு குதிரைக் காணமற் போயிருந்தால் தூதுவன் மேல் மாத்திரம் சந்தேகப் படலாம்; இரண்டு குதிரைகள் காணவில்லையென்கிற போது துணைசென்றவன் யார்? இப்போது அவைக் களத்திலிருந்து எழுந்து சென்ற வேதியனாக இருக்குமோஎன்று எண்ணி அவன் வீட்டுப் பக்கம் வந்தார்கள். அவன் உட்கார்ந்துஎதையோ படித்துக் கொண்டிருந்தான். தூதுவனோடு சென்றவன் யாராய் இருக்கக் கூடும் என்பதை அவ்வளவு விரைவில் மிகப் பெரிய இரணசிங்கன் கோட்டையில் கண்டு பிடிப்பது எளிதல்ல. அறுபது வினாடிகளில் அவ்வளவு பேரையும் ஒரே இடத்தில் சேர்த்துவிட எண்ணிய தளபதி அபாயச் சங்கை ஊதினான். ஏதோ நடந்து விட்டதென மன்னன் திடுக்கிட்டான். அமைச்சனும் அப்படியே. சங்கோசையைக் கேட்டதும் மக்கள் வழக்கமாகக் கூடும் சதுக்கத்தில் வந்து கூடினார்கள். தளபதி ஒவ்வொருவரையும் கவனித்துக்கொண்டு வருகிறான்.

தளபதி: தூதுவன், வேதியன் இருவருமே இல்லை.

அமைச்: இப்போது ஊதியது அபாயச் சங்கென்றும் அது ஊதியவுடனே இந்த சதுக்கத்தில் வந்து கூட வேண்டுமென்று தூதுவனுக்கு எப்படித்தெரியும்? வேதியரும் இல்லையே

தளபதி: கொஞ்ச நேரத்திற்கு முன் வீட்டுத் திண்ணையில் இருந்தாரே என்று சொல்லிக் கொண்டே தளபதி மீண்டும் போய்ப் பார்க்கின்றான்.

(தூதுவன்விடுதியில் வேதியன் இருக்கின்றான். வேதியன் வீட்டில் இருக்கவேண்டியவர்கள் யாரும் இல்லை)

தளபதி, முகம் சோர்ந்து வருகிறான்.

மன்: என்ன?

தளபதி: தூதுவன் இல்லை. வேதியன் உண்டு. அவன் குடும்பம் இல்லை.

அமைச்சர்: தவறாகப் பேசாதே.

தளபதி: இல்லை! இதுதான் உண்மை.

மன்: எங்கே அந்தக்காவல்காரக் களஞ்சியம்?

களஞ்சியம்: இதோ இருக்கின்றேன்.

தளபதி: களஞ்சியம்! உன் நெஞ்சைப் பிளந்துவிடுவேன். இரண்டு குதிரைகளும் அவற்றின் மேல் ஆட்களும் கோட்டை வாயிலை கடக்கும்போது நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?

களஞ்: நம்மவர்கள் தான் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

அமை: நினைப்புக்கெல்லாம் சம்பளம் கொடுப்பது இரண சிங்கன் கோட்டையிலல்ல. கொரட்டை விடுவதற்குக் கூலி கொடுப்பது வேறு கோட்டையிலே.

களஞ்: மந்திரவாதியைக் கேட்கலாம்.

தளபதி: ஓ நன்றாகக் கேட்கலாம். கூப்பிடு அவரை.

அமை: தளபதி! பைத்தியமா உமக்கு?

தளபதி: தயவு செய்து கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டுகிறேன்.

மன்: சரி நடக்கட்டும்.

மந்திரவாதி பூதப் பிடாரன் அழைக்கப் படுகிறான். அவனிடம் பேச வாய் எடுக்கிறான் களஞ்சியம்.

தளபதி: சட் நீ பேசாதே, நான் பேசுகிறேன். களஞ்சியம்! இந்தத் திங்கள் நீ இன்னும் சம்பளம் வாங்கவில்லையல்லவா?

களஞ்: இல்லை.

தளபதி ஒருபிடி மண்ணை வாரி மந்திரவாதி கையில் கொடுத்து, இதைப்பணமாக்கிக் களஞ்சியத்தின் கையில் கொடு.

(மந்திரவாதிக்கு ஒன்றும் புரியவில்லை. திருதிருவென விழிக்கிறான்.)

மந்திர: நெல்லப்பணம் போல் கள்ளப்பணம்செய்ய முடியுமே தவிர, மண்ணைப் பணமாக்க முடியுமா?

மன்: அந்த முயற்சியில் ஏதாவது ஈடுபட்டிருக்கின்றாயா?

மந்திர: ஐயோ... இல்லைங்கோ.

மன்: உம் செய்துவிடப் போகிறாய்? நல்லவர்கள் பொல்லாதவர்கள் எல்லோருமே சிறைக்கனுப்பப் படுவார்கள். பிறகு நல்ல சர்க்காரும் நடக்கும்; கள்ள சர்க்காரும் நடக்கும். எச்சரிக்கை.

களஞ்: மந்திரத்தால் ஒன்றும் ஆகாதென்றால் இவரை ஏன் இன்னும் கோட்டையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

தளபதி: அதிகப் பிரசிங்கி! அதை நீ கேட்க வேண்டியதில்லை. குதிரைகள் எங்கே என்பதற்குச் சமாதானமா இது. எலும்புகளை நொறுக்கிவிடுவேன். இன்னும் நீ இரண்டு நாட்களில் அவர்களையும், குதிரைகளையும் கண்டு பிடிக்காவிட்டால் குதிரைக் காலில் உன்னைக் கட்டி இரண்டு காத தூரம் விரட்டி விடுவேன். சாலையின் மேடு பள்ளங்கள் உன் சதையால் சரியாகப் போய் விடும்.

இந்த நேரத்தில் கடலோரமிருந்து மீனவர்கள் இருவர் கோட்டையிலிருந்து களவு போன இரண்டு குதிரைகளைப் பிடித்துக்கொண்டு ஒரு துணி மூட்டையோடு வருகின்றார்கள். குதிரைகளைக் கண்ட அமைச்சரும் மன்னரும், தளபதியும் குதிரைகள் நம்முடையவைதான் என்று பூரித்து, மூட்டையை அவிழ்க்கும்படிக் கூறினர்.

மீனவர்கள் முட்டையை அவிழ்க்க, அதிலிருந்தஆடைகள் தூதுவன் அணிந்தவை. காலணியும் அவன் அணிந்து கொண்டிருந்ததுதான். தற்செயலாகக் குதிரையின் பக்கத்திலே போனதளபதி, ஒரு குதிரையின் காலில் கட்டியிருந்த பட்டையத்தைக் கண்டான். அதைப் படிக்கத் தெரியாததால் பன்மொழிப் புலவரிடம் கொடுத்தான் தளபதி.

புலவர் அதைப் படித்துப் பார்த்து விட்டு, 'தூதுவன் இறந்துவிட்டான்' என்றார்.

"புயல் நுழைந்து விட்டது" என்றான் தளபதி.

"ஓய்ந்துவிட்டதே அந்தப் புயல் ஓயாக்கடலில் என்றார் புலவர். "ஓயவில்லை, இப்போது தான் தொடக்கம் என்று எண்ணுகிறேன்," என்றான் அமைச்சன்;" "ஒரே குழப்பம் என்றான் மன்னன். [சற்று நிதானித்து] நம்முடைய பதிலைத் தெரிந்து கொள்ளா முன்னர் ஏன் இந்த முடிவுக்குவந்தான் தூதுவன். சரிஅவன் நிலைதான் அது வென்றால், கூடப் போனவர்கள் யார்? அவர்களைக் கண்டுப் பிடித்தால் நிலைமைத் தெள்ளென விளங்கும். வேதியர் வீட்டில் யாருமில்லையென்கிறீர்களே, வேதியருக்கிருந்தது. ஒரே ஒரு பெண். அவள் பெயர்?

"அவள் பெயரா - தேவவல்லி!" என்று சொல்லிக் கொண்டே வருகின்றான் வேதியன், தளபதி முதல் அனைவரும் ஆச்சரியமுறுகின்றார்கள்.

மன்: இப்போது இருக்கின்றாளா வீட்டில்?

வேதியன்: ஆம்! அதோ கிணற்றில் தண்ணீர் சேந்துகின்றாளே அவள் தான்.

(எல்லோரும் அவளை உற்றுப் பார்க்கிறார்கள்)

மன்: நம் நாட்டு உயிர் ஒன்று பிற நாட்டில் பிணமானால், பிணத்தைக் கொடு, அதைப் பொசுக்க ஒருவண்டி விறகைக்கொடு என்று கேட்க மாட்டோம். பிணத்துக்குப் பிணத்தையே கேட்போம் பிற நாட்டாரிடம். இதே முறையை வைசாலி நாட்டு வேந்தன் கையாண்டால்?

அமைச்: இமயத்தில் மற்றோர் கொடி, நமக்கு எவனும் அடிமையில்லை. ஆகவே நாமும் யார்க்கும் அடிமையாக மாட்டோம். எடுத்தப் பணியை முடிக்க இச்சகம் பேசித் திரியும் நாடல்ல நம் நாடு. நெற்பயிர்களின் பக்கத்திலே களையும் முளைப்பதைப் போல் தமிழகத்தில் களை தோன்றிவிட்டதா என்றஞ்சுகிறேன்.

மன்: முளைக்கலாம், நெல்லுக்குத்தான் விதை விதைக்கிறோம். களைக்கு நாம் ஒன்றும் விதைப்பதில்லை. ஆனால் களை தானாகவே முளைத்து விடுகிறது. நெற்களஞ்சியத்தில் பெருங்காற்றடிக்கும் போது பதர்கள் சொல்லாமலே ஓடிப்போகும். அதே போல் அரசாங்கத்தில் ஏதாவது புயலடிக்கும் போது புல்லர்கள் ஓடி ஒளிவார்கள். அதன் அறிகுறி தான் இந்த தூதுவன் நிலை. தூதுவன் இவ்வளவு விரைவாக இந்த முடிவுக்கு வர வேண்டியதில்லை. நாம் வைசாலி நாட்டுக்கு உதவி தரக் கூடாது என்று காரசாரமாக விவாதித்துக் கொண்டிருக்கும் போதே ஒருவன் அவைக்களத்தை விட்டு நகர்ந்தான். கடைசியாக நாம் வந்த நல்ல முடிவை எண்ணி, தூதுவன் சாவுக்குக் காரணமாக இருந்தவன் கண்கலங்கக்கூடும். ஒரு வேளை நாம் உதவி தருவதில்லை என்ற முடிவுக்கே வந்ததாக இருந்தாலும், அதை வைசாலி நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டியதுதானே அவனுடைய வேலை. ஆகவே அவன் இறப்பு தற்செயலாகஏற்பட்டிருக்கக் கூடுமா என்று நான் ஐயுறுகிறேன். இல்லை, அவன் தற்கொலை செய்து கொள்ளவே துணிந்துவிட்டான் என்றால், அவனையனுப்பிய மன்னன், நீ வெற்றியோடு திரும்பாவிட்டால் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன், என்று சொல்லியிருப்பானோ-இல்லைஅவனை சாகடித்துத் தன் காரியங்களை சாதித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிற துரோகி எவனோ ஒருவன் தோன்றிவிட்டானோ? அதுதான் உண்மையாயிருக்கக் கூடும் என்று நினைக்கின்றேன். பெயர் சொல்லாமலே, அவனைக் கைது செய் என்று கட்டளையிட்டோம். அதற்குள் அவன் காற்றென பறந்து புகையென மறைந்து விட்டான். நாட்டுக்கு நாசகாலம் தோன்றி விட்டது.

அமைச்: மெத்த விழிப்பாயிருக்க வேண்டும். பிறந்த நாட்டின் பொற் காசுகளைப் பெற்றுக்கொண்டு வைசாலி நாட்டை வணங்கி வாழ்த்தி வயிறு பிழைக்கும் குணங்கெட்ட கோமாளியல்ல, இந்த அமைச்சன் என்பதை தாய்த்திருநாட்டின் ஆணையாகச் சொல்கின்றேன். தமிழகத்தின் இறந்த கால வரலாறுகள், அது காட்டிய தாராள சிந்தையே ஏராளமான பகைவர்களைத் தேடித் தந்திருக்கிறது. அதனால் பகைக்குப் பயந்து அது தன் ஈரக்கைகளை உலர்த்திக் கொண்டது மில்லை. ஈகையை மறந்தது மில்லை. ஆனால் இப்போது நடக்கும் நிகழ்ச்சிகள் நம் கற்பனைக்கே எட்டாமலிருக்கிறது.

தமிழகத்தில் சூதும் வாதும் வஞ்சனையும் பொய்யும் பொருமையும் பிறந்ததே இல்லை. நமது முன்னோர்கள் பகைவர்களைப் படைக் கலங்களோடு சந்தித்தார்கள். வெற்றி அல்லது வீரச்சாவு என்ற இரண்டிலொன்றையே கண்டார்கள். தமிழ்க் குருதி ஓடிய எந்த மன்னனும் போர் வந்த போது அவனுக்காக இறந்த முன்னோர்களின் கல்லறை மேல் ஆயுதங்களை வீசி எறிந்துவிட்டு எதிரிகளின் காலடியில் தஞ்சம் புகுந்து உயிர் பிச்சை எடுத்தான் என்ற சரித்திர வரலாறே இல்லை. ஆனால் இன்று எதிரிகளே நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. அவர்களின் நிழல்கள் நடமாடுகின்றன. நிழலோடு நம்மால் எப்படிப் போராட முடியும். அவைகள் ஆயுதங்கள் என்ற உருவில்தான் வருகின்றன என்பதுமில்லை. வெவ்வேறு உருவங்களிலே வருகின்றன. பருவப்பெண்களுக்கு வேண்டுமானால் பச்சைக் கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் வேற்றுமை தெரியாமல் போகலாம். பண்பட்ட அரசியல் தலைவர்களாகிய நமக்குத் தெரியவில்லை என்றால் நிலம் எனும் நல்லாள் நகுவாள். உங்களை ஈன்றெடுத்ததைக் காட்டிலும் ஒரு மரப்பொம்மையை ஈன்றெடுத்திருந்தாலும் குழந்தைகள் விளையாடவாவது பயன்பட்டிருக்கும் என்பாள், பாராண்டனர், ஏராண்டனர். ஏடாண்டனர், அலைகளையடக்கியாண்ட கடலாண்டனர். மண் மாதாவின் மணி வயிற்றிலிருந்து ஒளி தரும் கற்களை எடுத்தனர். தான் இழைத்தக் குற்றத்திற்காக தானே செத்துக் காட்டிய மாமன்னனும் நம்மவன்தான் என்று நல்லோர் நவின்றனர். அதை இன்று எண்ணவே நெஞ்சம் நடுங்குகின்றது. வெறும் வானில் வாள் சுற்றியவன் வீரனுவதில்லை. நம்மவர்கள் எதிரிகளின் நெஞ்சத்தில் வாள் சுற்றினர்கள். அந்த வீர மரபினர் நாம் என்ற எண்ணத்தோடு பணியாற்றுங்கள். அந்த நிலைமைகளுக்கும், இரணசிங்கன் கோட்டைக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் எண்ணக் கூடும். பஞ்சு காய்க்குள்ளிருக்கும் வரையில் பாதுகாப்பு. வெடித்து வெளிக் கிளம்பி விட்டால் சிறு காற்றே அதைத் திசை எட்டும் ஓட்டும். இதை நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ளுங்கள்! உணவில்லாமல் நாம் சில நாட்கள் இருக்கலாம். ஆனால் உடையில்லாமல் ஒரு கணமும் இருக்க முடியாது. அதே போல் நாம் பல நாட்கள் உயிர் வாழ முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால் வாழ்கின்ற நாட்கள் எவ்வளவு குறைவாக இருந்தாலும் ஒரு கணமேனும் மானம் இல்லாமல் வாழக்கூடாது. இதுதான் நம் மரபு. இதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஏதோ ஒரு தூதுவன் வந்தான், உருத்தெரியாமல் போனான், இதற்காக அமைச்சர் இவ்வளவு பேசுகின்றாரே என்று நீங்கள் கருதக் கூடாது. எதையும் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும். **'ஆகட்டும் பார்க்கலாம்'** என்பது அறிவிப்போடு வரும் ஆபத்து என்பதை இந்த நேரத்தில் நினைவூட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

நான் அமைச்சனாயிருப்பது எதற்காக? என் சொந்த வாழ்க்கையின் வெற்றித் தோல்விகளைக் கருதியல்ல, அது சாதாரண மனிதர்களுக்கிருக்க வேண்டிய கவலை. மக்களின் அவலக் குரலை, அழுகுரலைக் கேட்காதவன் எவனோ அவன் தான் அமைச்சன் என்று அழைப்பதற்குத் தகுதியுடையவனாகிறான். நான் என்னை

உங்கள் பார்வைக்கு-?

இனமுழக்க வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஆண்டு மலரில் வெளியான, 'புறப்படு மகனே!' என்னும் இன்பத் தொடரோவியத்தை இவ்விதழிலும் தந்திருக்கிறோம் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி.

வில் நாட்டைக் காக்க வேண்டுமென்று உறுதி பூண்டிருப்பதைப் போல் நீங்களும் உங்கள் திறமைக்கும் உறுதிக்கும் ஏற்றபடி பணியாற்றுங்கள்.

'தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி மெய் வருந்த கூலி தரும்,' என்றார் உலகப் பொதுமறை தந்த பொய்யாப் பெருந்தகை வள்ளுவர். ஆகவே எல்லாவற்றையும் தெய்வத்தின் மேல் போட்டு விட்டால் முயற்சிக் குன்றிப் போவதற்குக் காரணமாகும் என்பதுதான் அதன் கருத்து. ஆகவேஉங்கள்முயற்சியிலே நம்பிக்கை வையுங்கள். சலிப்படைந்து விடாதீர்கள். சலிப்படைகின்ற எவனுக்கும் எதிர்கால வாழ்க்கையே இல்லை. தொண்ணூராவது வயது வரையிலும் கூட வாழ்க்கையிலே செம்மைப் பெருத கிழவன்கூட சலிப்பு கொள்ளக்கூடாது. அதன் பிறகும் அவன் வாழ்க்கையிலே ஒளி தோன்றலாம். அந்த வாழ்க்கையை அவன் சுவைக்க முடியாதவனாகவும் இருக்கக்கூடும். அதுவேறு அதுவரை அவனிடமிருந்த சுறுசுறுப்பு மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக அமையலாமல்லவா. வாழ்க்கை ஒரு தொடர் சங்கிலி போன்றது.

சரி. நீங்கள் போகலாம். எதிர்ப்பார்த்தது கிடைத்து விட்டது,

என்று எதிரிலே வருகின்றவனைபார்க்கின்றான்; அமைச்சன். எல்லோரும் திரும்பிப் பார்க்கின்றார்கள்.

வந்தவன் ஒரு ஓலையை அமைச்சன் கையில் கொடுத்து 'ஒப்புக் கொண்டான்,' என்றான்.

'எத்தனை பேர்?' என்று கேட்டான், அமைச்சன்."தங்கள்விருப்பம்!"என்றான் வந்தவன்.

இளமுழக்கம்

நெஞ்சிலே நிறைந்தாள்

நாஞ்சில் கி. மனோகரன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அழுகை பலஹீனத்தின் குறி!

சிரிப்பு - நிறைவின் எதிரொலி- எனவே இளமை நிறைவின் நீரோட்டமாகும்!

ஒளி பொருந்திய கண்களோடு, துணிச்சலான உள்ளத்தோடு, விளைவுகளைப் பற்றித் துளி கவலையின்றி, நிமிர்ந்த தலையோடு. தூக்கிய, விரிந்த மார்போடு, துடிக்கின்ற மீசை ஆயிரங் கதை பேச, ஏறு நடை நடந்து, எதையும் சாதிப்பேன், என்றவார்த்தைகளை, உறையினின்றும் தடால் ஒலியோடு வெளிக்கிளப்பும் கூர் வாளைப்போல் வெளிப்படுத்தி, வெற்றி நடைபோடும் அந்த மாயத்திற்குப் பெயர்தான் இளமை.

மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இளமையின் பளிங்கு மண்டபத்தில் கவலைக் கோட்டான் களுக்கு வேலையில்லை!

ஆமாம் என் உள்ளத்தில் கவலைக்கு என்ன வேலை இருக்க முடியும்.

நான் இப்போது, பூந்தோட்டத்தின் நடுவே நிற்கிறேன் பூரிப்போடு! என் உள்ளத்தில் கள்வெறி! விளக்கப் பட முடியாத பரவச உணர்ச்சி!

முல்லையை முகர்ந்தேன்! அது முறுவலித்தது! இளமையே நீ வாழ்க என அரவணைத்தேன்! குளக்கரை சென்றேன்! செந்நெல் அடிதொடரும் மடைப்புனல்சிலிர்க்கத் தென்றல் வீசியது! நீராம் பல்என்னைக் கண்டு பல்லைக் காட்டியது! உறுதியெடுத்துக் கொண்டேன்,

சிரிக்கத் தெரிந்த சமுகம் வாழும்!

அழதரற்றும் சமுதாயம் சாகும்! ..இந்தத் தத்துவம் மனித வாழ்வைச்சுற்றி வளைக்கட்டும்! அந்தத் தத்துவ மாளிகையின் மன்னன் நான். எனக்கு அழத்தெரியாது! அதற்குப் பொருள் நான் வாழத் தெரிந்தவன் என்பதுதானே?

குளக்கரையின்படிக்கட்டுகளில் உட்கார்ந்து கொண்டு, காலை நீருக்குள் தொங்கவிட்டுக் கொண்டே, படைப்பின் ரகசியத்தை ருசித்துக் கொண்டிருந்தேன்!

எவ்வளவு மகிழ்ச்சி ஆரவாரத்தோடு தவளைகள் கத்த ஆரம்பித்தன;

சிலருக்கு அந்தக் குரல் பிடிக்காது! எனக்கு மட்டும் அது ஏன் பிடிக்க வேண்டும்!

தங்களது மகிழ்ச்சியை வெளியிடுவோர், இன்னின்ன வகைகளில் தான் வெளியிடவேண்டும் என்ற சட்டமில்லை. அப்படி ஒரு சட்டம் ஏற்பட்டால் உலகில் இன்பம் இருந்த இடம் தெரியாமல் உருவற்றுப் போய்விடும்!

குரலெழுப்பிக் கத்தி தங்களது மகிழ்ச்சியை வெளியிடுவோர் உண்டு!

அமைதியாக, நிறைவோடு, உதடுகளில்மட்டும் அந்த இன்பத்தைத் தேங்க வைத்து, கண்ணின் கடைக்கோடியினின்றும்.ஒரு சில முத்துக்களை உருட்டிவிட்டு, தங்களது மகிழ்ச்சியைக் காட்டுவோர் இல்லையா?

அருகிருப்போர் அருவருக்க, ஆனால் உள்ள முடையோர் மறுதலிக்காத முறையில் இன்பத்தை வெளிக் காட்டுவோரும் உண்டே,

ஆனந்தப் பள்ளு பாடி, ஆடி! மகிழ்ந்தோடித் தங்களின் இன்ப ஊற்றுக்களைத் திறந்து விடுவோரும் உண்டல்லவா?

ஊற்றெடுக்கும் கவிதைகள் மூலமாக கருத்திழக்கும் கட்டுரைகள் மூலமாக மன விகாரத்தை ஓவியமாக்கும் மனிதர்களும் இருக்கிறார்கள்!

செய்வகை தெரியாமல், பேசிட வார்த்தைகளும் கிடைக்காமல், மழலைக்கு மொழிகளில், தொடர்பற்றும், முறையற்றும் ஏதோஒரு வகை "உளறுதல்களை" பந்திப் பொருளாக்குவோரும், மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையிலே ஒரு வகைதானே?

அளவுகடந்த இன்பம் ஏற்படும் போது, அது பேரின்பமாக மாறிவிடுவதுண்டு! அங்கே [illegible] நிலை இடமில்லை! அமைதி - அந்த நிலை தொடர்ந்து விடுவதுண்டு!

சின்னஞ் சிறுகுழந்தைகளின் கன்னம் சிவக்க, விழுந்திடும் மழைத் துளிகள், தாய் உள்ளத்தின் மகிழ்ச்சியின் வெளியீடு!

ரோஜாக் கன்னஞ் சிவக்க, கரும்பு இதழ்கள், விழுப்புண் தாங்க எகிறிக் குதிக்கும் விளையாட்டுகள், மகிழ்ச்சியின் கோலாகலமான நர்த்தனமன்றோ?

மேகங்கள் குமுற, இடி தாளம் தட்ட, மின்னல் ஒளி வழங்க, கலாபம் விரிகிற தென்றல், இன்பத்தின் அடையாளந்தானே?

பேரிரைச்சலோடு பொங்கியெழும் பேரலைகள், உப்பரிகையிலே காட்சி யளிக்கும் முழுமதியின் தோற்றங் கண்டு இன்பப் பண் பாடுவதில்லையா?

கானஞ்சிந்தும் குயில், பூங்காவின் சூழ்நிலையில் ஒன்றி தன்னை மறந்த இன்பநிலைக்கு ஆதாரமன்றோ

மகிழ்ச்சிகள் அனைவருக்கும் ஒன்றே! வெளிப்படுத்துவதில் மட்டும் வேறுபாடு களிருக்கலாம்! அவைகள், சூழ் நிலை ஒட்டியும் மகிழ்ச்சியினாலே தாக்குண்டோரின் நிலைஒட்டியும் அமைவதாகும்

மகிழ்ச்சியை நான் வெளிக்காட்டுவதற்கும், மற்றையோருக்கும் மாறுபாடு இருக்கலாம்! இருக்கட்டும்!

தாய்ப் பாசத்திலிருந்து பொங்கியெழும் மகிழ்ச்சி, எங்கும் ஒரே தரத்தினதாக அமையும்-குடிசையிலும் சரியே கோமாளிகளின் அரண்மனை யிலும் சரியே ஒன்றுதான். தன்மை ஒன்றுதான் -- வெளிப்படுத்துவதில் வேறுபாடுகள் நிச்சயம் தென்படும்!

அசைந்தாடும் குதிரைகள், அழகு கொப்புளிக்கும் பொம்மைகள், அதிசயப் பொருட்கள் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் வாழ்வோரின் கற்பனையிலே கூட எட்டாத பொருள்கள், மாளிகை வாசிகளின் தாழ்வாரத்தில் மலிவுப் பொருட்களாகக் குவிந்து கிடக்கும்!

கிழிந்த பாய், உடைந்த பானைகள், கரடுமுரடான தரை, அதன் மேலே விரிக்கப்பட்டிருக்கும் கிழிந்த கந்தல் அதன்மேலே அவள் பெற்ற பிள்ளைக் கனியமுது! பாசம் சூழ்நிலையாலே பட்டுப் போவதில்லை. வறுமைத் தேள் அவளைக் கொட்டக்கூடும்! ஆனால் தாய்ப்பாசம் அந்தப் பொற் சித்திரத்தைப் பேணிக் காக்கும்!

குவிந்து கிடக்கின்ற பொன் மணிகள் மேல் தான் பெற்ற மரகதத்தைத்தூக்கிஉட்காரவைத்து, உயிர்ச் சத்துள்ள உணவுகளை உலகத்தின் எந்தச் சந்தையிலே இருந்தாலும், சரி, பெற்று, குழந்தைக்கு ஊட்டி, அது மகிழத்தான் மகிழும்தாய்-அவள் உள்ளத்திலே சுரக்கும் பாசம் தாய்ப் பாசம்!

தான் வாழ முடியாவிட்டாலும், தன் சதையறுத்து அதைப் பிழிந்து சாருக்கி மழலைக்கு அமுதாக ஊட்டி, அது பொக்கை வாய் திறந்து மகிழ, உச்சி மோந்து தான் மகிழ்ந்து கிழிந்த பாயிலே படுக்கவைத்து, கண் வளராய், என்று ஆராரோ பாடும் குடிசைக்குச் சொந்தக்காரியின் உள்ளத்திலேமகிழும் பாசம், தாய்ப்பாசம்.

தாய்ப்பாசம் எங்கும் ஒன்றே! தனிமையில்! மகிழ்ச்சி இரு சாருக்கும் ஒன்றே! காட்டுவதில் முறை மாற்றம் இருக்க வேண்டுமென்று பேசுவோர் முறைப்படுத்தப் பட்ட முட்டாள்தனத்தின் முன்னோடிகள்!

இன்பம் அனைவருக்கும்பொது! இங்கே பிரிவினைக்கிடமில்லை! சிலரின் கையடக்கத்திலே அது சிக்கிவிடும் போதுதானே சிக்கல் ஆரம்பமாகிறது

உலகச் சிக்கலுக்கே காரணம் இது தானே? சிலர் வாழ, பலர் பிழிந்தெடுக்கப் படுகிறார்கள்! அனைவருக்குமுரியவைகள்சிலரின் கையிலே தேக்கப்படு கின்றன! பலர் அழ, சிலர் சிரிக்கிறார்கள்! அனைத்தும் அந்தச் சிலரிடம் அகப்பட்டுக் கொள்ளும்போது, பாதிக்கபட்ட பலரின் இதயங்கள் குமுற ஆரம்பக்கின்றன! சந்தேகம்! ஆரம்பத்தில், சஞ்சலம் பிற்பாடு. சாடிடுவோம் என்ற சூளுரை இறுதியில். பகை வளர்க்கப்படுகிறது. புகை மூட்டி விடும் தொழிலில்தேர்ந்தவர்கள் அதிலே நிபுணத்துவம் பெறுகிறார்கள். இதயத்தில் கவலை குடியேறுகிறது!...மனிதன் கவலைக் கூடாகிறான்! இன்பம் தலை தெறிக்கஓடி விடுகிறது!

நான் விரும்பும் உலகம் இது வல்ல! கவலையற்ற உலகைக் காதலிக்கிறேன்! சிரிக்கத்தெரிந்த உலகம் எனக்குத் தேவை! அழுமூஞ்சி உலகம் அஸ்தமன சூரியனாகட்டும்.

மென்காற்று வீசியது! நினைவுலகில் விரைந்தேன். மேலேபார்த்தேன். விடை பெறுவதற்குத் தயாராகி, எனக்காகக் காத்துக் கொண்டிருந்தது திங்களெனுஞ் செல்வன்! போகவேண்டுமென்ற அவசரம் அவனுக்கு! என்றாலும் என் மோன நிலையைக் கலைக்க மனமில்லாமல், காத்திருந்தவனின் பெருந்தன்மையைப் பாராட்டினேன்!

சந்திரனும் என்னைப் போல் கவலை யற்றவன் கவலை புகமுடியாத உள்ளத்தில் பெருந் தன்மையும் இருக்கும் போலிருக்கிறது! கடமையைச் செய்கிற உள்ளத்தில் களிப்பிருக்கும்! களிப்பிருக்கும் இடத்தில் கவலை கால் வைக்காது!

வெண்மதியை எத்தனையோ பேர் திட்டுகிறார்கள்! நீ வராதே என் வேதனைத் தீயை வளர்க்காதே என்கிறார்கள்! வா; முழுமதியே நீ வா, என்று கணக்கற்றவர்கள் முகமன் கூறுகிறார்கள்.

போ என்று சொன்னதற்காகப் போய் விட்டதா? 'வா' என்று அழைத்த தனாலேயே வந்து விடவுமில்லையே; என் கடன் பணி செய்து கிடப்பதே, தூற்றலும், போற்றலும்என்னைப்பாதிக்காது; என்று கடமையைச் செய்கிறான். கவலையற்று உலவுகிறான், களிப்பு மேட்டில் நர்த்தனமாடுகிறான்!

நானும் அப்படித்தான்! என்னளவில்எனக்களிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுகிறேன்! அதிலே இன்பம் காணுகிறேன்.

கடமைகள் நடந்து முடியும் போது களிப்பு கரைபுரண்டு விடுகிறது. தனி மனிதன்ஒவ்வொருவனுக்கும் பலகடமை களிருக்கின்றன! சொந்த வாழ்வில் கட்டுண்டு கிடக்கும்கடமைகள், பொது வாழ்வில் பிணைப்புண்டு தவழும் கடமைகள்-எவைகளுக்குத் தனிச் சிறப்பு அளிப்பது என்ற பிரச்சினை சந்தர்ப்பங்களின் அழுத்தங்களில் முடிவு பெறுகிறது'

நாட்டு வாழ்வின் உயிருட்டத்திற்காக, சொந்த வாழ்வின் கடமைகள் ஒத்திப் போடவேண்டிய தேவை ஏற்பட்டால், அது நடந்தே தீரவேண்டும். இதிலே விவாதத்திற்கு இடமில்லை;

பொதுவாழ்வு என்ற திரை மறைவில் சொந்தவாழ்வில் சந்தித்துத் தீரவேண்டியகடமைகளை அலட்சியம் காரணமாக, பொறுப்பின்மை காரணமாகத் தள்ளிப் போடுவது தரக்குறைவிற்கும், தற்கொலைக் கொள்கைக்கும் ஆதாரமாகிவிடும்.

நாட்டின் நலம், தனிமனிதனின் நலம்: கவலையற்ற, உயிர் ஓட்டமுள்ள திடகாத்திரமானஒரு குடிமகன் நாட்டின் முதுகெலும்பு; தன்னுணர்வும் தன்மானவேட்கையும், தனித் தன்மைகளில் பற்றுணர்வும் குடிமகனை முழுமைப் படுத்திடும் நிரந்தர வுணர்ச்சிகள் அந்த உணச்சிகள் ஒளிவிட வேண்டும்; ஒழிந்துவிடக்கூடாது. ஒழிந்தழிய விடக் கூடாது. விரைந்து வளரும் உலகின் அனைத்துப் பகுதிகளும் வளமிக்க எண்ணங்களை உள்ளடக்கியதாக உருப்பெறல் வேண்டும்;

எங்கோ ஏற்படுகிற புண்ணின் வலி உடல் முழுமையும் பாவி நிற்றல்போல் எங்கோ ஏற்படுகிற கட்டி, சில நேரத்தில் மொத்தவுடம்பையே அழித்து உயிரைப் பறித்துக் கொள்ளல் போல் எந்த பகுதியாவது உலகில், உயிர் வாதை அனுபவித்தால், அது மொத்த உலகையே பாதித்துவிடக்கூடும்.

தெளிவு நிறைந்த சிந்தனையின் ஏணிப் பலகை வழியாக செழுமை தேங்கும் இலட்சிய மன்றம் ஏறிச் செல்லும் தனி மனிதன் உள்ளம். தளர்வுற்றதாக இருக்கக்கூடாது. உள்ளத்தை வைரமென்று சொன்னவர்கள், திட்பத்திற்காக மட்டுமல்ல சொன்னார்கள் உள்ளம் வைரமாக இருந்தால்தான் வாக்கினிலே ஒளியுண்டாகும்! ஒளிக் கற்றைகளைச் சிந்தும் அந்தவாக்குகள் கவலை புகாத உள்ளங்களுக்குக் கலங்கரை விளக்கம்!

எங்கு சுற்றி வந்தாலும், நாம் வந்து சேரவேண்டிய இடம்ஒன்றுதான். அதுதான் கவலைச் சேறு நிரம்பாத தெளிந்த இன்பப் பொய்கை! நீர் வேட்கை தணியும், நினைத்ததெல்லாம் நடக்கும் அங்கே கிடைக்கும்

கவலை, அரித்திடும் செல்! சிந்தனை, அளித்திடும் வளம்! அந்தவளத்தில் கவலை காலூன்றுமானால் மனிதன் குருடாகிறான்! குருடனுக்கு வாழ்வேது?

ஆகையினாலேமுடிவெடுப்போம், கவலையற்ற உலகை வடித்தெடுப்போம்! வாய்வலிக்கச் சத்தமிட்டேன் - 'களுக்'கென்றதோர் ஒலி! திரும்பிப் பார்த்தேன். நம்பவில்லை நான்-பெண் ஒருவள் நின்று கொண்டிருந்தாள்!

உருவம் என்னைக் கவரவில்லை —உள்ளம் எனக்குத் தெரியவில்லை.

அவள் அழகியா? எப்படி நான் பதில்சொல்வது? இந்த விவகாரங்களில் தான் முடிந்த முடிவுற்கிடமில்லாமல் போய் விடுகிறதே என்னைப் பொறுத்தவரை நான் முடிவுகூற முடியுமல்லவா! ஆம்!

அவள் அழகியல்ல! அப்படியானால் குருடியா? அப்படியும் சொல்வதற்கில்லை!

நான் கவிஞன் அல்ல? கவிஞர்களின் கவிதைகளைச் சுவைப்பவன்! கவிஞர்கள் தங்களது கற்பனை ஓடத்திலேற்றி எத்தனையோ அழகுப் பதுமைகளை சுற்றவைத்திருக்கின்றனர்! கண்களுக்காக காவியம் சமைத்தவன், அங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் பாமாலை சூட்டியவன், இடந்தவறியும், நேர்ந்தவறியும் கற்பனைப் பெருக்கைப் பெருவெள்ளமாக்கி, மனதிற்குத் திருப்தியைத் தேடிக் கொண்டோர், இவ்வகைக் கவிஞர்களின் கவிதைகளை நான்சுவைத்ததுண்டு! கருத்துக்களில். இதிலே சிலர் என்னை இழுக்கவில்லை-காரணம், அது என் உள்ளத்தைக் கவராது என்று கருதியதால் இருக்கலாம்!

கற்பனை நனவை மாந்த அழைத்தனர்! கவலை அண்டாத என் உள்ளத்திற்குஇது ஒரு நல்ல சந்தர்ப்பம். ருசித்திருக்கிறேன்!

என்னை எங்கிருந்தோ வந்து சந்தித் தவளை, மீண்டும் உற்று நோக்கினேன்! நிச்சயமாக என்னைக் கவரவில்லை.

யார் முதலிலே பேசுவது, அவளே பேசலாம் — துணிந்து சிரித்தவளாயிற்றே? அவளுக்கும் கவலையற்ற இதயம் இருந்திருக்கும் போலிருக்கிறது. நான் மௌனியாக உட்கார்ந்து கொண்டே அவளைக் கவனித்துக் கொண்டிருந்தேன்!

மெல்லென நகர்ந்தாள்—தைரியம் என் உடன் பிறப்பாயிற்றே!

போகிறாயா? ... கேட்டேன். பின்திரும்பினாள் — வாயேன் ... வார்த்தைகள் தெளிவாக இருந்தன! பேத உணர்ச்சி இடமில்லாமல் அங்கே திணறியது! பக்கத்திலே வந்தாள்!

நீ யார் என்று கேட்டேன்!

"எங்கிருந்தோ வந்தவள்"— பதில் கூறி நின்றாள். எங்கிருந்தோ வந்த நீ இங்கேன் வந்தாய் என்று கேட்டேன்

அனுமதி வாங்கித்தான் வர வேண்டுமென்று தெரியாது. தெரிந்திருந்தால் வந்திருக்கமாட்டேன்... அந்தப்பதிலிலே குறும்பு குறு நகை கொட்டிச் சிரித்தது" வியர்த்து விட்டேன். என்றாலும் அவளிடம் எதையோ இப்போது விரும்பிவிட்டேன்! என்ன! அது? எனக்கு இன்னும் புரியவில்லை.

உன் பெயர் — ? அன்பொழுகக் கேட்டேன். அல்ல... ஆசையோடு பதில் சொன்னாள்.

என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என் கேள்வி—

"நீங்கள் விரும்பாமலே உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன்!.....அவள் பதில்!

நான் விரும்பவில்லையா? திகைத்தேன்...கரங்களிலே கண் புதைத்த அந்தக் கன்னி, திடீரென்று ஓடி மறைந்தாள்.

அவள்அழகியல்ல!கவர்ந்திழுக்கும் கடைக்கண் அவளுக்கில்லை --முல்லை முறுவலுண்டு! ஆனால் மோகனப் புன் சிரிப்பில்லை! அவள் முகம் முழுமதியல்ல! எனவே என் உள்ளக் கடல் பொங்கவில்லை. என்றாலும் என் உள்ளம் அவளிடம் எதையோ எதிர்பார்த்தது!

கணநேரப் பேச்சில் அவளை நான் விரும்பினேன்! அவள் பேசவேண்டும், அதை நான் கேட்கவேண்டும்-கரும்பு நிகர்த்த அவள் குறும்பு எனக்கு இனிக்கும். அதை நான் விரும்பினேன்

(11-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கை ஒப்பந்தம்

அன்புடையீர், வணக்கம்.

எனக்கும், தோழியர் **இந்திரா**வுக்கும் 11—9—60 ஞாயிறு காலை 9 மணிக்கு, **திரு. சி. பி. சிற்றரசு** அவர்கள் தலைமையில், திருவனந்தபுரம் *V. J.* டவுன் ஹாலில் நடைபெறவிருக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்ற,

சென்னை,
25—8—60

தங்கள்,
கி. மனோகரன்.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்
மற்றும் முன்னணி வீரர்கள் வாழ்த்துரை வழங்குவர்.

இன்றைய வளர்ச்சி; நாளைய முதிர்ச்சி!

வே. சௌந்தரராசன்

இன்று நாகரீக உலகைச்சூழ்ந்திருக்கும் விதிகளில் அறநெறிகளும் நூற்றாண்டிற்குநூற்றாண்டு மாறிக்கொண்டே வருகிறது. தனி மனிதனின் அறநெறிகள் உள்ளத்தைப் பொறுத்தும் வெளிப்புற நிகழ்ச்சிகளை வைத்தும் நிர்ணயம் செய்யப்படுகின்றன. தனி மனிதனின் அறமுறை அவனிருக்கும் சமுதாயத்தையும் அரசு முறையையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. மகிழ்ச்சியை உள்ளத்தின் உயர்ந்த Mental decipline ஒழுக்கத்தால் பெறுவதே சிறந்த

அறியாமையும் ஆத்திரமும் அறிநெறிக்கு மாறானவை!

தாகும். வெறும் உடல் நுகர்ச்சிகளை இன்பம் என்றே சொல்லுவதற்கில்லை. அறம் ஓம்பி அடக்கம் காத்து நடப்பதில் தான் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. ஞானமும் (Wisdom) மகிழ்ச்சியும் ஒரே பொருளாகக் குறிக்கும் இரண்டு சொற்கள் எனக் கூறலாம். ஞானிகள் ஒழுக்க நெறியைத் தான் இன்பம் என்பார்கள். சாதாரண உடல் உணர்ச்சியை அல்ல, உணர்ச்சியின்பத்திற்காக வாழ்வது என்பது அறிவீனம், அது மனிதனை பலவீனப் படுத்தி விடுகிறது. உடலுணர்ச்சியால் வரும் இன்பத்தைப் பொருட் படுத்தாமலும், உடல் வலிவினால் உண்டாகும் குறை

மந்த புத்தியா? மிருகத் தன்மையா?

வைப்பொருட்படுத்தாமலும் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதே நிரந்தர இன்பத்திற்கு வழியாகும் என்று ஜீனோ என்னும் கிரேக்க அறிஞர் கூறினர். ஆத்மாவையும் உடலையும் ஆசை கட்டுப்படுத்துகிறது. மனிதனுக்குரியவை இரண்டே தான், ஒன்று அறிவு மற்றொன்று சிந்தனை நல்லவனுயிருப்பவனுக்கு ஒரு கேடும்வராது என்றார் சாக்ரடீஸ். ஆனால் மேற்கூறிய நெறிகளைப்பின்பற்றுவதென்பது அவ்வளவு எளிதல்ல. ஆயினும் அறமுறைகளைப் பற்றிய வழிகாட்டிகள் என்று கருதிஅவற்றை அறியலாம்.

தன்னைத் தானே பக்குவப் படுத்தி ஒரு உயர்ந்த நிலைக்குத் தகுதிப் படுத்தும் முயற்சிதான் நிலையான இன்பமாகும். பேராவலும், பொறுமையும் பெற்ற இன்பத்தைப் பறிக்கும் தகைமையன தன்னல மறுப்பு, தொண்டு, நேர்மைபோன்றபண்புகள்தான் உலக மக்களின் வாழ்க்கையை இன்றுள்ள அளவிலேனும் நம்பத் தகுந்ததாகவும் சுவைக்கத் தகுந்ததாகவும் ஆக்கியுள்ளன. நல்ல பயிற்சியினுல் ஞான நிலை அடைகிற ஒருமனிதன் தொல்லையற்ற நிலையை அடைகிறான்.

அறநெறிகளுக்கு நிலையான மதிப்பு இருக்கிறதென்றால் மாற்றத்திற்கு இடமில்லையென்று கருத முடியாது. ஒவ்வாரு அறநெறியும் கால வேகத்திற்குத் தகுந்தவாறு மாறுபடும். மரண தண்டனையை அமெரிக்காவில் குற்றவாளியின் உடலில் மின்சாரத்தைப் பாய்ச்சி நிறைவேற்றுகிறார்கள். மற்றநாடுகளில் தூக்கிலிடுகிறார்கள். அமெரிக்க முறை இதில் மிகவும் கொடூரமானது அதை நீக்கிவிட வேண்டும் என்றும் அங்கே சிலர் வற்புறுத்தி வருகிறார்கள். முன்பு திருடர்களின் கைவிரலை வெட்டுவது தர்மநியாயம் எனப்பட்டது. இன்று அது அனுமதிக்கப் படாது. யாரோ ஒரு சிலர் தங்களுக்குள் மட்டும் வைத்திருந்த நெறிகள் இன்று சமுதாயம் முற்றிலும் எல்லோராலும் அனுபவிக்கக் கூடிய முறைகளாக மாறியுள்ளன. ஒரு காலத்தில் சொத்து, சுகம் அனுபவிக்க ஒரு குறிப்பிட்ட ஒரு சாரார்தான் தகுதியுடையவர்கள் என்று கருதப்பட்டது. ரோமாபுரியில் அங்ஙனமே இரண்டு பிரிவுகள் பெட்ரீசியன் பிலெபியன் என்று இருந்தன. சார், காலத்து ருசியாவிலும் பதினான்காம்லூயிகாலத்துப்பிரெஞ்சு நாட்டிலும் இந் நிலைமை இருந்தது, இன்று அடியோடு அச்சிறப்பு முறைப் பிரிவினை மனப்பான்மை ஒழிந்து விட்டது. ஏன் அரசியலில் சமீப காலம்வரை வாக்குரிமை கூட ஒரு சிலருக்குத் தானிருந்தது. அதுவும் இன்று எல்லோருக்குமாக மாறி விட்டது. மன்னர்கள் வேடிக்கை பார்ப்பதற்காக, குற்றவாளிகளை வன விலங்குகளோடு போராடும்படி நேருக்குநேர் ஒரு அரங்கில் விட்டு குரூரமாய் மகிழ்ந்தார்கள். அது மன்னருக்கு உரிமை எனப் பட்டது. அரண்மனை நிருவாகத்தின் அறநெறி, ஆனால் இன்று அது கொலைக்குற்றமாகக் கருதப் படும். மன்னர் தாமாக யாரையும் தண்டித்து விடமுடியாது. பரம்பரைப் பழக்கம் என்ற அடிப்படையில் இன்று கற்பனையாகக் கூட எவ்வளவு பெரிய அதிகாரமன்றத்தாலும் அத்தகைய வேடிக்கைகளை நடத்த முடியாது. அறம் என்றால் அதன் பொருள் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே வருகிறதா? இன்றைய அமெரிக்காவில் வாழ்க்கைத்தரம் மிகுதி. தேவைக்கு மேல் ஒவ்வொரு குடிமகனுக்கும் வருமானம் வருகிறது குழந்தை, மனைவி, உறவினர்கள் என்ற நெருக்கடியோ மொழி ஆதிக்கம், சாதிப்பாகுபாடு என்ற எண்ணங்களோ இல்லை. அங்கே அவனது வாழ்க்கை வளமாக இருக்கிறது கல்வி கற்றோருக்கு பெரும்பாலும் வேலை வளர்ப்பு ஏற்பட வழி செய்யப்படுகிறது. எனவே அங்கு அறநெறிகளின் மதிப்பு மாறிக்கொண்டே வருகிறது. பொருளாதார வளர்ச்சி புதிய எண்ணங்களையும் புதிய விளைவுகளையும் ஏற்படுத்தும் போது அவை அறநெறிகளைப் பாதிக்காமலிருக்க முடியாது. எந்நிலையிலும் வாழ்க்கைதான் முக்கியமான அம்சம்! ஒவ்வொரு நாட்டிலும் அறநெறிகள் சிற்சில மாறுபட்டிருக்கலாம். வாழ்க்கை முறைகள் நம்பிக்கை, நியாய உணர்ச்சி எல்லாம் உருமாறிக் கொண்டே வருகின்றன. ஆனால் அடியோடு மாறிவிடுவதில்லை. விருப்பு, வெறுப்பு உணர்ச்சிகள் எல்லாம் ஒரு வரையறைக்குமேல் வளர்ந்து விட்டால் பிறகு அவற்றை மறைப்பது கடினம். அரசியல் அமைப்புகள், மன்றங்கள்எல்லாம் மாறலாம் அல்லது மறைக்கப்படலாம்; ஆனால் அந்த அளவிற்கு ஊறிப்போன மனப்பான்மையை மக்களிடத்திலிருந்து எளிதில் நீக்கிவிட முடியாது. நாசிகளின் நீதி நிருவாகம், பொது உறவு மன்றங்கள் இன்றைய ஜெர்மனியில் நேரடியாக இல்லை: ஆனால் அந்நாசிகளின் மனப்பான்மை அம்மன்றங்கள் பலகாலமாய் உண்டாக்கி வைத்த காரணத்தால் அம்மக்களிடத்திலுள்ள பழைய மனப்பான்மை எதோ ஓரளவிலேனும் இன்றும் இல்லாமற் போக முடியாது.

மேலும் ஒவ்வொரு மனிதனும் தனியாக நடந்து கொள்ளுவதிலும் தான் அடங்கியுள்ள சமுதாயத்தோடு நடந்து கொள்ளுவதிலும் வேறுபாடு இருக்கிறது. சமுதாயத்திற்குள் காட்டிக் கொள்ளும் நடைமுறைகள், நம்பிக்கைகள் மரியாதைகள், சிறப்புகள், எல்லாம் ஒருவரது தனி வாழ்க்கையிலும் அப்படியே இருப்பதாக நிகழ்ந்துவிட இடமில்லை. பொது மன்றங்களில் வீரமாய்ப் பேசுகிறவர் தனி வாழ்க்கையில் தன்மானம் இழக்கவேண்டிய நிலைவரும் போதுகூட வீர உணர்ச்சி ஏற்படாதவராய் இருக்கலாம். கொடை வளத்தை விளக்குகிறவர் உலோபியாக இருக்கலாம். பொறுமை போதிப்பவர் எளிதில் வெகுண்டெழும் ஈனராயிருக்கலாம். வீண் பெருமையும், பதவிக்கு என்று தற்காலிகப் பாவனை காட்டுகிறவர்களும் பலருண்டு. சமுதாயம் ஒவ்வொரு தனி மனிதனையும் பாதிக்கிறது. எவ்வளவு தான் பாதிக்கும்படி சமுதாயம் உருவாக்கப்பட்டாலும் தனி மனிதன் வாழ்க்கை நெறிகள் அதனின்றும் சற்றேனும் மாறுபட்டுத்தான் தீரும். இம் மாறுபாடு முரண்பாடாக அதாவது சமுதாயத்திற்கே தீங்கு விளைவிப்பதாகவோ அமைதியைக் கெடுப்பதாகவோஉருவாவதாயிருந்தால் அதை நீக்கவேண்டியது அவசியமாகும். சமுதாயமும் தன்னுடைய சக்தியைத் தனி மனிதன்மீது தவருகப் பயன் படுத்திவிட்டால் அறியாமைக்கு அல்லது ஆத்திரத்திற்கு இடங்கொடுத்து விட்ட இழுக்கு ஏற்படும். அதைத் தவிர்க்க முரண்பாடுகள் ஏற்பட வொட்டாமல் இயன்ற வரை ஒருவித நல்லுறவு, இணக்கம் என்ற தன்மையிற் செல்லவேண்டும். உலகம் மனிதனின் நலத்திற்காக என்று ஒரு திட்டத்தோடு, அல்லது முன்னேற்பாடோடு அமைந்திருக்க வில்லை. மனிதன் தனக்குவேண்டிய நலன்களைப் படிப்படியாகத் தானே முயன்று செய்து பிறகு முறைப்படுத்திக்கொள்ளுகிறான். இதனுல் பலரும் தத்தமது எண்ணம், செயல் ஆகியவற்றில் வேறுபடுவதும் முரண்படுவதும் இயல்பாகி விடுகிறது. மனித அலுவல்களில் நிலையான ஒரே கோட்பாடு இருப்பதாக யாரும் எண்ணுவதற்கில்லை. ஒவ்வொரு அலுவலும் அந்தந்தச் சூழ்நிலையைப் பொறுத்து இயங்குவதென்றே சொல்லலாம். எந்தச் சமுதாய அமைப்பும் ஒரே சக்தியினுல் மட்டும் கட்டுப்பட்டு இருக்கவில்லை. சமுதாய நடவடிக்கைகளில் பல அம்சங்கள் ஒன்று சேர்ந்து தான் ஒரு பழக்கம் அல்லது நெறி இருந்து வரும். ஒவ்வொரு மனிதனும் பழக்கத்திற்கு இலக்கானவன் பழக்கம் ஒருவருக்கொருவர் வேறுபடக் கூடும். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு செயல் பழக்கமாகும். தனி மனிதனைப் பொறுத்த அளவில் அப் பழக்கம் நல்ல பழக்கமாகவும் இருக்கலாம், கெட்ட பழக்கமாகவும் இருக்கலாம். ஒரு வகுப்பாரின் பழக்கம் உதாரணமாக திருமணம் நடத்துகிற முறைகள் போன்றவைகள் எல்லாம் குறிப்பிட்ட சமூகத்தாரின் பழக்கமாக இருக்கலாம். ஆனால் அப்பழக்கம் பொது சமுதாயத்திற்கு கெட்டவைகளாக இருக்கக்கூடாது. ஒரு வகுப்பார் பரம்பரையாக திருடிக் கொண்டே யிருக்கிறார்கள்: வழிப்பறி, கொள்ளை, முதலிய பழக்கங்களிலேயே ஈடுபட்டவர்கள் என்றாலும் சமுதாயம் இதைப் பழக்கம் என்றுவிட்டு வைக்காமல்மிகக் கடுமையாகத் தண்டித்தே தீரும். எனவே ஒரு தனி மனிதனின் கெட்ட பழக்கத்தை விட சமுதாயத்தில் அந்த ஒரு வகுப்பாரின் கெட்ட பழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டி வருகிறது, சமுதாய உணர்வு, சமுதாய உயர்வு, சமுதாயநலன் என்ற பொதுமைக் கருத்துக்களினுல் தான்

மக்களற்ற சமுதாயம் சூன்யத்தின் பிரதிபலிப்பே!

இன்றுள்ள சமதர்ம ஜனநாயக, பொதுவுடைமைக் கருத்துக்கள் எல்லாம் தோன்றின.

அரசிற்கும் சில கடமைகள் உண்டு. தனது குடிமக்களின் நலன்களைப் புறக்கணித்தால் அடங்கி நடந்த அக்குடி மக்கள் ஆர்த்தெழுவது அவர்களது உரிமையாகிறது. பணிவே பிறகு புரட்சியின் பெயரை அடைகிறது. இதற்கு அரசின் தவறுகள் தான் காரணம்.

ஒவ்வொருவரும் தங்களுக்குச் செய்துகொள்ளும் அறநெறிகளைச் சமுதாய நன்மையைக் கருதியும் செய்ய வேண்டும். பொது நன்மைக்காக உழைக்கும் நன்முயற்சியின் ஊடே தனிச் சிறப்பும், சான்றாண்மையும் வளர்த்துக் கொள்ளுதல் என்பதே முறை நம்மைக் கவனித்துக்கொள்ளுவதுபோல் சமுதாயத்தையும் மதித்து நடக்கவேண்டும். தனி மனிதன் கொள்கைகள் எல்லாம் சமுதாயத்தையும் பாதிக்காமலிருக்காது அறம் அல்லது தர்மம் என்பது எப்பொழுதும் தனித்து பண்பைத் தான் குறிக்கும். தனிமனிதனின் பண்புகளை வரையறுத்துவிட்டால் சமுதாயத்திற்கும் வரையறையேற்பட்டு விட்டதாகத் தான் பொருள்படும். தனிமனிதன் இல்லாமல் முசதயாம் இல்லை. சமுதாயத்தின் நோக்கம், அலுவல், தேவையெல்லாம் பல தனிமனிதர்களின் கூட்டுத்தேவை, வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பொறுத்தனவாகும். தன்னைத் தானே உணர்வது என்ற உயர்ந்த நிலையும் பிறர்க்குத் தொண்டாற்றுவது மூலம் தான் பெறுவது எளிது என்று சொல்லப்படும். நாம் நம்மையுணரவும் பிறர் தங்களை உணர்ந்து கொள்ள உதவும் என்று செயலாற்றுகிறோம். அதுதான் முறை, பிறரைப் பாதிக்காமல் ஆற்றுகிற நலன்கள் தமக்கும் சமுதாயத்திற்கும் ஆற்றுகிற இரண்டு வகைத் தொண்டுகள் என்றே அழைக்கலாம்.

சமுதாயத்திற்கென்று தனியே ஒருவாழ்க்கை முறை இல்லை. அதனுள்ளிருக்கும் மக்களின் தனித்தனி வாழ்க்கையே அச் சமுதாயத்தின் வாழ்க்கை நெறியாகும். மக்கள் இல்லாத சமுதாயம் சூன்யமே. சமுதாயம் எனப்படுவது ஒரு கூட்டு எண்ணமே ஆகும். முற்றிலும் தனக்காக வென்று எந்த மனிதனும் வாழமுடியாது.

தனிமனிதன் பொதுமை உணர்ச்சி, தொண்டுள்ளம் என்ற அம்சங்கள் அறவே இல்லாமலிருந்தால் அது வறுமையும், அருவருப்புத் தன்மையும், மந்தப் புத்தியும், மிருகத் தன்மையும் குறுகிய வளர்ச்சியும் உடையதென்றே ஹாப்ஸ் என்னும் அறிஞர் சொன்னார். எந்த ஒரு மனிதனையும் கடவுளாகப் பார்த்துக் கூட முழுவதும் நல்லவனுகச் செய்துவிட முடியாது. (Not even God can make a man good) goodness by it very nature must be the achievement of the individual, each must work out his own Sahation Games Seth Ellical Pinnupts)

மனிதசமுதாயத்துக்குத் தேவையான திருப்பங்கள்!

விழி திறந்த வீரரே, விரைந்து வாரீர் !

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்பு முழக்கம் இன்றைய தினம் இனமுழக்கமாக இலட்சியம் காத்திடும் அறப்போர் முழக்கமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இருபது ஆண்டுகளாக இந்தி மொழி ஆதிக்க வெறியர்களின் ஆசைகளையெல்லாம் அரசியல் சட்டமாக்கி விடலாம் என்று வடநாட்டுத் தலைவர்கள் செய்திருக்கும் சதிகள் எல்லாம் எள்ளிநகையாடப் படுகின்றன துள்ளியெழும் மக்களால்! அண்மையில் கழகம் கொடுத்த குரல், கருப்புக் கொடி காட்ட வாரீர் என்ற அழைப்பு, இவைகளையும் தமிழர்கள் தாயக விடுதலைக்குத் தம் இன்னுயிரையும் தரத் தயங்காதவர்கள் ஏற்றுக் கொண்டனர். குடியரசுத் தலைவர் தன்னுடைய தமிழ் நாட்டுச் சுற்றுப் பயணத்தில் தன்னுடைய இதயவேட்கையினைத் ; தென்னக மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார். நாம் எல்லோரும் பாரத மக்கள் என்று இங்கேயுள்ள அகில இந்தியக் கட்சிக்காரர்கள் புலம்பிக் கொண்டிருந்தாலும் ராசேத்திரப் பிரசாத் நாங்கள் (வடவர்கள்) நீங்கள் (தென்னவர்) எங்கள் [(வடவர்) உங்கள் (தென்னவர்) போன்ற சொற்களைப் பயன்

அவர்கள் புதுடில்லியில்நடைபெற்ற கல்வி அமைச்சர்களின் மாநாட்டில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"நம்நாடு பல மொழிகளைக் கொண்ட பரந்த நாடு. இந்த மொழிகள் அனைத்தும் இந்திய மொழிகளே என்பதையும் எல்லாமொழிகளையும் ஒரே மாதிரியாகக் கவனிக்க வேண்டும் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். எல்லா

கைக்கு மறுப்புக் கொடுப்பவர்களைக் காட்டிலும் மறைமுகமான ஒப்புதலைத் தருபவர்கள் எல்லாப் பகுதியிலும்

கூடலரசன்

இருக்கிறார்கள். தற்போதைய அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராக இருக்கும் சஞ்சீவியார் அவர்கள் சென்னை அமைச்சராக இருந்த நாட்

இருக்கிறார்கள். இருந்தாலும் அதிகார போதையும் அரசியல் மமதையும்-கழகத்தை அடக்குவேன் ஒடுக்குவேன் என்று மிடுக்கு மொழிப்பேசி அடிக்கடி தடுக்கி விழுகிறார்! அவர்களுடைய சீடர்களோ—கூலிக்குப் பேனுப்பிடிக்கும் பாரத வீரன்களோ இந்தப் பழைய செய்தியை இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. படித்த அறிவும் பகுத்தறிவும் பங்கப்பட்டு நிற்கின்ற காரணத்தால் கழ

என்ற உணர்வில்தான் இருக்கிறார்கள். இந்த நாடு முழுவதும் தங்களுக்குச் சொந்தம் என்ற உணர்வு அவர்களுக்கு உண்டாகவில்லை. அகில உலக எண்களை எடுத்துக் கொள்வதற்கு நீங்கள் ஏன் வெட்கப்பட வேண்டும்? இந்த நாடு முழுவதும் நீங்களே ஆதிக்கம் செலுத்துவதாகக் காட்டிக் கொள்வதற்குத்தானு இந்த ஏற்பாடு?"

★ தேசீயத் தோழனே! எட்டி நில்; கிட்டே வராதே!
★ தரங்கெட்ட இந்திக்குத் தகுதியென்ன தேவை?
★ அபுல்கலாம் ஆசாத்தின் பேச்சுக்கு அமைச்சர்கள் பதில் என்ன?
★ இந்தியாவிலே இருப்பவர்கள் இந்தியர்களா?

மொழிகளுமே இந்திய மொழிகளாதலால் ஒரு மாகாணத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட சிறுபான்மையினர் பெரும்பான்மையினரது மொழியில்லாத மற்றொரு மொழியில் பேசினுல் அல்லது கல்வி கற்ருல் அதை மறுத்துரைப்பதற்கு என்ன இருக்கிறது."

1949 ஆகஸ்ட் 19-20 நாட்களில் இப்படிப் பேசியிருக்கிறார் ஆசாத்! ஆனால் இன்

களில் ஒரு நாள் (1949-ல்) மைலாப்பூர் இந்துஸ்தானி வகுப்புகளைத் துவக்கி வைக்கும் விழா ஒன்றில் பேசும் போது, வடநாட்டு மொழி வெறியர்களின்கொடுமையை தாங்காத வேதனை நிறைந்த உள்ளத்துடன் சொல்லியிருக்கிறார்!

"தென் இந்தியர்கள் மீது இந்தி எண்களைப் புகுத்த வடஇந்தியர்கள் முயற்சிப்பது அவர்கள் பால் அழகு

கத்தவர் மீது பழி தீர்க்கத் துடிக்கிறார்கள் அடித்துக் கொல்கிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியத் துணைக் கண்டத்து ஒற்றுமையையும் தேசிய மொழியாக அமைந்துள்ள ஆட்சி மொழியையும் ஒப்புக்கொள்ளாதது வேதனை மிக்கதென்றுசிலர்மட்டுமல்ல பல வகையான பரந்த கண்ணேட்டத்தினர்களும் கணக்கிடுகின்றனர். அவர்களுக்

என்றெல்லாம் வடவரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.

இந்த நிலைமைகள் எதுவும் இன்று வரையிலும் மாறிவிடவில்லை என்பதனையும் காங்கிரசு அமைச்சர்களும் மற்றவர்களும் மறுத்துவிட முடியாது. எந்தப் பிரச்னையை எடுத்துக் கவனித்தாலும் உண்மை விளங்கும். இந்தத் தாயக விடுதலை உரிமையை எட்டி உதைத்து விடத் துடிக்கும் துட்டர்களும் எத்தர்களும் ஏமாளிப் பித்தர்களும் தங்களுடைய கங்காணித் தன்மைகளை இனத்தைக் காட்டிக் கொடுக்கவும் இன்பத் திருவிடத்தை அடகு வைக்கவுமே பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தான் அவர்களுடைய மறுப்புரைகள் புலப்படுத்துகின்

கொடுத்த வாக்குறுதிச் சீட்டு, குப்பைகளுக்கிடையிலே !

படுத்தியே பேசியிருக்கிறார். மாஸ்கோவிலே கூட இந்தியிலேயேபேசிய அவர்சென்னைக் கடற்கரையில் ஆங்கிலத்திலேயே பேசியிருக்கிறார்-தான் ஒரு இந்தி ஏகாதிபத்தியவாதி அல்ல என்றும் விளக்கியிருக்கிறார். கழகம் தன்னுடைய எதிர்ப்பினை எந்த நேரத்திலும் இச்சகம் பேசினுலும் அச்சுறுத்தினுலும்விட்டு விடாது என்பதனை நன்கு உணர்ந்திருக்கும் குடியரசுத் தலைவர் தன்னுடையகொஞ்சு மொழிகளை நெஞ்சுயர்த்திக் கூறிவிட்டுச் சென்றுள்ளார்! ஆனல் இடையிலேயிருக்கும் காங்கிரசுத் தரகர்கள் கழகத்தின் முயற்சிகளைக் களங்கப்படுத்தத் துடிக்கிறார்கள். அவர்களுடையதலைவர்களின் அறிக்கைகளையும் [வாக்குறுதிகளையும் குப்பைத் தொட்டியிலே தூக்கியெறியப்பட்டவைகளாக மதிப்பிடுகிறார்கள் மொழிப் பிரச்னையென்றுல் விவாதிக்கத் தெரியாமல் நிலைமைகளை கணக்கிடத் தெரியாமல் கலங்கி நிற்கும் கருத்துக் குருடர்கள் நல்லவர்களின் பொன்னுரைகளைக் காணவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி மொழியின் தகுதியற்ற தன்மைகளையும் தரங்கெட்ட நிலைமைகளையும் பல வகைகளிலே விளக்கிவிட்டது. காங்கிரசுத் தலைவர்களும் இந்தி வெறியர்களின் போக்கினைக் கண்டிக்கிறார்கள். ' இந்திய சர்க்காரின் கல்வி அமைச்சராக இருந்த அபுல்கலாம் ஆசாத்

றைக்கும் இந்திதான் பெரும்பான்மையினர் பேசும் மொழி அதனுலே அதுதான் ஆட்சி மொழியென்று சமாதானம் தருகிறார் ராஜேந்திரப் பிரசாத்! ஆசாதும் பிரசாதும் தேசிய இயக்கத்தில் ஒன்றுகப் பணியாற்றியவர்கள் தான் என்றுலும் கருத்துக்களிலே முரண்பட்டுவிட்டார்கள்! இன்னொரு இன்பச் சேதியையும் ஆசாத் தந்துவிட்டுச் சென்றுள்ளார்.

"கலாச்சாரம் அல்லது மொழி விசயங்களில் தற்போதுள்ள வேறுபாடுகளை ஒப்புக்கொள்வதுதான் ஒற்றுமை ஏறிட வழியென்று அனுபவம் நமக்குப் போதித்துள்ளது. இந்த வேறுபாடுகளைப் போக்கச் செய்யும் முயற்சிகள் மேற்கொண்டும் அதிகத் தகராறுகளிலும் மனக்கசப்பிலுமே வந்து முடியும்!

இந்தியாவிலே இருப்பவர்கள் எல்லாம் இந்தியர்களே என்று வாய்வீச்சுச் சவடால் பேசும் சுப்பிரமணியம் போன்றவர்கள் ஆசாதின் உண்மை உரைகளை உணர வேண்டும்! பிரசாத் சொன்னது போல அவர்கள் வேறு நாம் வேறு என்பதனைப் புரிந்து கொண்டு நாட்டு நலன் குறித்தும் மொழி வளர்ச்சி குறித்தும் பேச வேண்டும்! ஆசாதும் கல்வி அமைச்சர்தான் ஆனல் எத்தனையோ வேற்றுமை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்

டைய தன்மையாகாது. அப்படிப்பட்ட விசயங்கள் தென் இந்தியர்கள் மீது வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படுமேயாஞல் தென் இந்தியர்கள் வேதனைப் பட்டு அவற்றை வெறுக்கத் தலைப்பட நேரிடும் என்ற உண்மையினை அவர்கள் உணர வேண்டும்!"

இன்றுங்கூட இந்திஆதிக்கப் பிரச்னையில் பால பாடம் படித்திராத பரிதாபத்துக்குரிய பக்தவத்சலங்கள் - பட்டைச் சோற்று மந்திரிகள் இந்தி எண்களைப் புகுத்துவதை உரத்த குரலில் கண்டிக்கும் உணர்வற்று உலக்கைகளாக நிற்கிறார்கள்! ஆனல் பத்தாண்டுகளுக்கு முன்பே அமைச்சராக இருந்த சஞ்சீவியார் கண்டித்திருக்கிறார், பின் வருமாறு எச்சரிக்கையும் தந்துள்ளார்!

"தென்னுட்டவர் மீதுவலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் எதுவும் மறுக்கப் பட்டே தீரும். அது தென்னிந்தியாவிலுள்ள இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்களுக்கு வலுவூட்டுவதாகத் தான் முடியும்! மேலும் மிக முக்கியமாக திராவிடஸ்தான் இயக்கம் போன்ற பிரிவினை இயக்கத்திற்கு வலுவூட்டுவதாகவும் முடியும்" என்கிறார்!

சஞ்சீவியாருடன் கைகுலுக்கும் வாய்ப்பினைப் பெறுகின்ற காமராசர்கள் இந்த அரிய உண்மையினை இப்போது உணர்ந்து கொண்டுதான்

கெல்லாம் ஒரு சுவையான செய்தியாக 13-9-49-ல் அரசியல் நிர்ணய சபையில் டி. ஏ. இராமலிங்கம் என்ற கோவை நகரத்து உறுப்பினர் பேசிய கருத்துக்கள் உள்ளன!

"நாடு அடைந்த சுயேச்சையைப் பற்றியும் சுதந்திரத்தைப் பற்றியும் தென்னுடு சிறிதளவே உணர முடிந்திருக்கிறது. தென்னுடு தான் ஏமாற்றப்பட்டு விட்டதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறது, தென்னுட்டிலிருந்து இங்கு வந்திருக்கும் உறுப்பினர்களும் தாங்கள் அயலார்

றன. ஆனுல் தங்களுடைய இதயத்து வேட்கைகளை வெளியே சொல்ல வெட்கப்படுகிறார்கள்! கழகத்தை எதிர்க்க வேண்டும் வசை மொழிகளைச் சிந்த வேண்டும் என்ற சபலபுத்தி கொண்டவர்கள் இதனைத்தான் செய்ய முடியும். அகில இந்தியக் கட்சிக்காரர்கள் என்ற கொட்டடியிலே அடைபட்டுக் கிடக்கும் எவரும் கழகத்தின் செயல் முறைகளை இலட்சியப் பெருக்கத்தினை இன்னும் சில ஆண்டுகளிலாவது உணர்ந்து கொள்வார்கள்!

தலைமைக்கழகத்தேர்தல்

★

25-9-60 ஞாயிறு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழக அவைத்தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், முக்கிய குழுக்கள் முதலிய தேர்தல்கள் 25 - 9 - 60 ஞாயிறன்று சென்னையில் நடைபெறும்.

இடம், நேரம், பிற விவரங்கள் அனைத்தும் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

ஆதிக்க வெறியா? அரசியல் சட்டமா?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

--அது எனக்குத் தென்றலாக இனித்தது.

அது மட்டுந்தான். இனித்தது! அதைமட்டுந்தான் விரும்பினேன்,

எழுந்து நடந்தேன்! அவள் சென்ற திக்கை கத் திரும்பிப் பார்த்தேன்! ஒன்றும் தெரியவில்லை-திடீரென்று வந்தாள்-திடீரென்று மறைந்து சென்ருள், அவள் சென்ற சுவடுகள் கூடத் தெரியவில்லை. திடுக்கிட்டு விட்டேன்.

அன்றைய இரவு மதுரமான எண்ணங்களின் நலம்பாடி நகர்ந்து சென்றது! படுக்கையிலே விழ்ந்தபோது சிரித்துக் கொண்டே விழ்ந்தேன்! புரண்டு புரண்டு படித்தேன். சிரிப்பை என்னுல் அடக்கமுடியவில்லை, எதற்காகசிரிக்கிறேன்? எதற்காகவோ சிரிக்கிறேன். எழுந்து உட்கார்ந்தேன்! என்னோடு நினைவுகளும் எழுந்துகொண்டன! பேச்சிலே குறும்பைக் குழைத்தஅந்தக்குதூகலமான மங்கையிடம், களங்க நினைவுகள் இருக்க முடியாது! வெடுக் வெடுக்கென்று பேசும் அந்த வனிதை, கபடத்தை யாருக்கும் காணிக்கை வைக்கும் தகுதியற்றவள்! அவள் என் நெஞ்சில் நிறைந்தாள்!

பள்ளமாகிக் கிடந்த என் நெஞ்சும், நிரப்பப்பட்டது போன்ற உணர்வு; இதயத்தில் பாரமேறவில்லை--பளு தாக்கவில்லை!

எனவே நெஞ்சு வலிக்கவில்லை! இல்லாததைப் பெற்றேன் நான், அந்த வாய்ப்பினை வழங்கிய அந்த பெண்ணை மேலும் பார்க்கவேண்டும் போல் தோன்றியது!

விளக்கை அணைத்தேன். என்ன ஆச்சரியம், வீடு இருளடையவில்லை! மாருக ஒளியிலே திளைத்து மின்னியது!

என் முன்னே அவள் நின்ருள்! வா என்றேன் -- வரமாட்டேன் என்ருள். எழுந்து பக்கத்திலே போனேன்! நன்றி யுள்ளத்தோடு எனக்காகவே காத்துக் கிடக்கும் என் உள்ளங் கவர்ந்த நாயை மிதித்து விட்டேன். வேதனையில் அதுகுரல் கொடுத்தது! மீண்டும் இருள்! படுத்துவிட்டேன்! மீண்டும் அந்த எண்ணம் புகாமல் தடுத்துவிட்டேன்! தூக்கம் என்னைத் தழுவியது. நான் எங்கோ போய்விட்டேன்!

"மாமா, மாமா! என்ன சிரித்துக் கொண்டே இன்னும் தூங்குகிறீர்கள்." அழகுப் பாப்பா, பக்கத்து வீட்டுச் சிட்டுஎன்னை எழுப்பியது வெட்கமாகக் கூட இருந்தது!

குழந்தையுள்ளம் என்னைக் கேலி செய்கிறது! பலநேரங்களில் நெருக்கடியில் மாட்டிக் கொள்ளும் பெரியவர்களை, எவ்வளவு சுலபமாக, குழந்தைகள் தங்களின் குறும்பு மூலம் தலை குனிய வைத்து விடுகிருர்கள்!

அடிக்கமுடியுமா அந்தஅன்புப் பெட்டகங்களை! அணைத்துக் கொள்வதன்மூலம், விழ்ந்த அடியின் வலியைப் போக்கிக்கொள்ள வேண்டியதுதான்! வாரியணைத்துக் கொண்டேன்.

எனக்கே புரியவில்லை. என் வாழ்வில் இரட்டிப்பு மகிழ்ச்சி இணைந்து விளையாடியது. புதிதாகப் பெற்ற மகிழ்ச்சியின் பொருள் என்ன? அதற்குரிய விளக்கமென்ன? அலசிப்பார்க்க முடியுமா? ஆழ்ந்து சிந்தித்தால் அது தரும்அர்த்தமென்ன? எந்த அடிப்படையில் அந்த மகிழ்ச்சிக்கு விளக்கம் கூறுவேன்.

கிடைக்கமுடியாதது கிடைத்து விட்டதென்ற மகிழ்ச்சியா? எதிர்பார்த்தது, எதிர்பாராதநேரத்தில் எதிர்நோக்கி நின்றதாலே ஏற்பட்ட எக்களிப்பா? ஏங்கி நின்ற இருண்ட உள்ளத்தில், ஏற்றி வைக்கப்பட்ட ஒளி விளக்காக அவள் அமைந்துவிட்டாளா?

என் இதயத்தை அவள் தொட்டாளா? எனில் உருவாக்கிய உணர்ச்சிகள் எத்தகையது? நான் புரிந்துகொள்ள முடியவில்லை.

குறை தீர்ந்தது போன்ற எண்ணம் மட்டும் என்னிடம் நிரம்பி வழிந்தது!

மாலை நேரம்! அதே குளக்கரை! அண்மையிலே தனித்து நின்று செழுங் கிளைகள் தாங்கி நிழல் தரும் ஆலமரம் ஒன்று. அதன் அடியிலே உட்கார்ந்தேன்!

கையிலே புலவன் ஒருவன் தீட்டிய கவிதைத் தொகுப்புகள். பக்கங்கள் புரண்டு கொண்டேயிருந்தன! நான் நிகழ் உலகில் இல்லை. கவிஞன் அழைத்தேவிய உலகில் குடிபுகுந்து விட்டேன்! விட்டு வர மனமில்லை - வராமலேயிருந்தால் என்ற எண்ணமும் ஏனோ எழவில்லை - விரும்புகின்ற பொருட்கள், ஒன்றுக்குமேல் கிடைத்து விடுகிறபோது, ஏற்படுகிற சிக்கல் போலிருக்கிறது இது. "என்னை எழுதென்று வானம் கொஞ்சுகிறது. ஓடையும், தாமரைப் பூக்களும், தங்களின் ஓவியம் தீட்டுகஎன்று கவிஞனைக் கெஞ்சுகிறது! துள்ளிடும் புள்ளிமான், துரத்திடும் தூர்த்தன், வட்டமிடும் வானம்பாடி, அதை வளைத்துச் செல்லும் விசைக் கணைகள், பொங்கிடும் அருவி, சிந்திடும் சந்தப்பா, இவைகள் அனைத்தும் கவிஞனிடம் போட்டியிடுகின்றன. ஆச்சென்றும் இச்சென்றும் கத்தும்அணில், கிளையைத் தழுவும் முல்லை—முகிலைத் தழுவும் வெற்பு. கவிஞனை வம்புக்கிழக்கின்றன. கடைக்கண் பார்வைக்குக்காத்து நிற்கின்றன! மனம் இளகவில்லை - மாறவில்லை - அவன் கண்கள் கண்ணீர் உகுத்தன! கன்னங்கள் கவலைக்கோடுகளை உருவாக்கின!

நாட்டு நிலையில் தன் இதயத்தை ஓட்டினுன்! நீர் சுரக்கும் நாட்டு மக்களின் நிலை கண்டு நாணினுன்!

மக்கட் சமுதாயமே உன் கதி இதுவா என்றுகேட்டான்! உனக்காகப் பாடுவேன் என்று குரல் கொடுத்தான்! என்னையறியாமல் என் இதயம் கவிஞனை வாழ்த்தியது!

கவலை புகாதஇன்பத் தென்றல் வீசும் உலகை உருவாக்க விழைகிருன்.

கவிதைத் தொகுப்பின் பக்கங்கள் நகர்ந்தன, நானும் எப்படியோ இதயத்தை அதனின்றும் பெயர்த்தெடுத்தேன்.

"வணக்கம்"—சரளமான, சுவை கூட்டும், கொஞ்சம் பழக்கமான குரல் - ஏறிட்டுப் பார்த்தேன் — ஆமாம், அந்த எங்கிருந்தோ வந்தவள், சிரித்து நின்ருள்! பழக்கத்தை அதிகமாக்கிக் காட்டிக் கொண்டேன். "உட்காரேன்—கால்வலிக்குமே" என்றேன், அனுதாபத்தோடு!

'நான்ஒன்றும்பலவீனமானவள் அல்ல' என்ருள். கொஞ்சம் அலட்சியம் தெறித்தது!

"பலவீனமானவள் அல்ல"— என் சிந்தனையைக் கிளறியது! இருபொருள் தரும் இப்படிப்பட்ட இடங்களில்தான் அபாயத்தை அடுக்கிக் காட்டும் ஆபத்துக்கள் இருக்கின்றன!

"என்னைத் தவருகப் புரிந்து கொண்டு விட்டாய் போலிருக்கிறது-மன்னிக்க வேண்டுகிறேன்-நான் குறையிரந்தேன்—"

"உங்களைப் புரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பின் ஆரம்ப அத்தியாயமே தொடங்குவதற்கு முன்பு தவருகவேறுநான்புரிந்துகொள்ள முடியுமா?—அவள் பேச்சிற்குப் பேச்சு எனக்கு இனித்தது! அவள் இன்னும் பேசவேண்டும் போலிருந்தது

அவளே பேசினுள்! நிறையப் பேசினுள்! பேச்சின் இனிமையில் நான் சொக்கினேன்! கிண்டலும் கேலியும் என்னைக் கவர்ந்தன! இன்னும் பேசமாட்டாளா என ஏங்கினேன்!

அவள் பேசினுள்—தொடர்ச்சியாகப் பேசினுள்—என்ன பேசினுளோ, அனைத்தையும் பருகினேன்-அவளைப் பற்றிப் பெருமையாக நினைக்க ஆரம்பித்தேன்! அவளது ஆற்றலை வியந்தேன். திறமையைப் பாராட்டினேன். எதை எதையோ பேசுவாள்—விஷயங்களைப் பற்றிக்கூட நான் கவலைப்படுவதில்லை.

நினைத்ததைச் சாதிக்க முற்படும்போது, அதற்காக, அவள் தன் முழுத் திறமையையும் பயன்படுத்த முனையும் போது, எண்ணி எண்ணி வியப்பேன்! எவ்வளவு திட்பமான உள்ளம் அவளுக்கு! அவள் இதயமும் வைரந்தான்! எனவேதான் அவள் உள்ளத்தில் ஒளியிருக்கிறது! அந்தச் சுடரை நான் விரும்பினேன்!

அல்லி, தொடர் கதையாளுள்! வாடிக்கையாக வருவாள், போவாள். அவளுக்குற்றூர் யார்என்றே எனக்குத்தெரியாது!

என் பேச்சிலும் அவள் இரண்டறக் கலந்தாள்! சில நேரங்களில் மெய் மறந்து போவாள் - சொன்னதையே திருப்பிச் சொல்லக் கேட்பாள்! சொல்லமறுத்தால்கண்களைச் சிவப்பாக்குவாள்! அதிலே நீர்த் திவலைகளை தெறிக்கச் செய்வாள் -

கவலையற்றஇதயத்தை விரும்புபவன் நான். உடனடியாகச் சொல்ல ஆரம்பித்துவிடுவேன்! கதிரவனைக் கண்ட பனித்துளியாகும் அவளது கண்ணீர்த்துளிகள் - கைகொட்டிச் சிரிப்பாள்! நாணிக் கோணுவாள்! வெட்கத்தால் வதனம் சிவப்பேறும்! சில நேரம் கோபத்தால் துடிப்பாள் - அது இமைப் பொழுதுதான் - இவைகளெல்லாம் நடிப்பென்பாள் தலைவியாவாள், தாயாவாள், குழந்தையாவாள் — பட்டாளத் தலைவனுவாள் --- ஆசிரியையாவாள், கவிஞராவாள்புரட்சி வீராங்கனையாவாள் - அனைத்துமாவாள் ஒன்று நீங்கலாக! ஒருவேளை ஆணுளோ என்னவோ? எனக்கு அந்த உருவந்தெரியவில்லை.

அந்த ஒன்று என்ன? எனக்குப் புரியவில்லை. அதை எண்ணி அறிந்திடத்தான் எனக்கேது நேரம்—எண்ணிடினும் எனக்குப் புரியுமா என்றே தெரியவில்லை.

"அல்லி - போகட்டுமா?"

"போய்வருகிறேன்" என்று சொல்லுங்கள்... அன்பு குழைந்து இழைந்தது! விழைந்தது எது? விழையாதது எது? மயக்க நிலை; ஓரப் புன்னகை காட்டிற்று!

அல்லி... அழைத்தாள் — கொஞ்சம் பொறு ஏன்?

"அதோ வீசுகிறதே பெயர் என்ன தெரியுமா?" தெரியுமே என்ருள், தென்றல் என்ருள்!

தனி மனிதர்களின் வாழ்வில் அதுவீச வேண்டுமென்றேன். அதைத்தான் நானும் விரும்புகிறேன் என்ருள்.

கவிதைத் தொகுப்பின் பக்கங்கள்தென்றலில் அசைந்து விளையாடின! விரலிடையில் மாட்டிக்கொண்ட பக்கமொன்றுஎன்னைக்கண்காட்டி அழைத்தது! நுழைந்தேன்! மெய் சிலிர்த்தது!

"அல்லி...என்றேன்..."

"என்ன அவ்வளவுஆபத்து அலறுகிறீர்களே? என்ருள்!

"ஒரு கேள்வி...பதில்சொல் சொல்கிருயா?" கேட்டேன்.

முற்றுந்தெரிந்தவளுமல்ல, முற்றுந் துறந்தவளுமல்ல நான்!

எனவேஅடக்கமும்உண்டு, மானமும் உண்டென்ருள்! கேள்வியைக் கேளுங்கள்... அவள் பதில் கூறத் தயாராளுள்.

கேள்வியை நான் ஆரம்பித்தேன்,

"பொதிகைமலை விட்டெ
ழுந்து, சந்தனத்தின்
புதுமணத்தில் தோய்ந்து
ழந்தாது வாவி
நதி தழுவி அருவியின்
தோள் உந்தித் தெற்கு
நன்முத்துக் கடலலையின்
உச்சிதோறும்
சதிராடி மூங்கிலிலே
பண்ணெழுப்பி
தாழையெல்லாம் மடற்
கதன்றி சுழற்ற வைத்து
முது தெங்கின் இளம்பாளை
முகஞ் சுவைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின்
வீதி நோக்கி
அந்தியிலே இளமுல்லை
சிலிர்க்க, செந்நெல்
அடி தொடரும் மடைப்
புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை, உடல், அணு
ஒவ்வொன்றிலும் சிலிர்க்க
செல்வம் ஒன்று வரும்,
அல்லி அதன் பெயர் என்ன
சொல்லு.

'சொல்லட்டுமா? செல்லமாகக் கேட்டாள்! தாராளமாகச் சொல்...சொன்னுல் உனக்குப் புத்திசாலிப் பெண் என்று பட்டம்வழங்குகிறேன் என்றேன்; பல்கலைக் கழகத் துணை வேந்தரானேன்!

அதன் பெயர்தான் "தென்றல்' என்ருள்! இதயம மகிழ்ச்சியினுலே நிரப்பப் பட்ட பலூனுயிற்று'

இணைந்து எழுப்பிய எங்களது நகைப்பொலிகள் பூங்கா முழுமையும் எதிரொலித்தது! விடைபெற்றுக் கொண்டோம்!

தஞ்சைக்கு ஏஜண்டு தேவை

தஞ்சை நகரில் 'இனமுழக்கம்' ஏட்டிற்கு பிரதி ஒன்றுக்கு ரூ. 1 வீதம் முன்பணம் கட்டி, 200 பிரதிகளுக்குமேல் விற்பனை செய்யக்கூடிய ஏஜண்டுகள் தேவை. உடன் விண்ணப்பிக்க:

பொறுப்பாளர்,
'இனமுழக்கம்'
சென்னை-2

அழைக்கிறது சிறைச்சாலை!

வெளிச்சநிலா பருவமலர் விண்மீன் கூட்டம்
விடவில்லை தம்சிரிப்பை! கரும்பு செந்தேன்
புளிச்சுவையா தருகிறது? பெட்டைக் கோழி
போடவில்லை கருப்புநிற முட்டை! பச்சைக்
கிளிச்சிறகும் நிறம்மாறிச் சிவக்க வில்லை!
கீழ்மேலாய் மாறவில்லை எதுவும்! ஆனுல்
பளிச்சென்று தெரிகிறது; தமிழி னத்தில்
படுபாவி சிலர்மரனம் இழந்து விட்டார்!

எவனுக்கு எவன்அடிமை? இந்த நாட்டில்
எதற்காக வடநாட்டு டில்லி ஆட்சி?
கவனிப்போம் வடநாட்டை! முதுகெ லும்பைக்
கணக்காக எடுத்தெடுத்து எண்ணி வைப்போம்!
சவக்குழிதான் இந்திக்கு இங்கே என்று
சத்தமிட்டுக் குரல்கொடுக்கத் தயங்க லாமா?
அவ்மானம்! அவமானம்! ஊமை யைப்போல்
அப்பனுக்குப் பிறந்தவர்கள் இருக்க லாமா?

சுடுநெருப்பு பறக்காதா கண்ணில்? மூச்சு
சுழலவைக்கும் புயற்காற்றை எழுப்பிடாதா?
நடுநடுங்க வேண்டுமடா பகைவர் கூட்டம்!
நரம்பெல்லாம் இரும்பாகிப் புடைத்து நிற்க
கிடுகிடென வாவிரைந்து! தூங்கித் தூங்கி
கேடுகெட்டுப் போனகதை போதும்! நெஞ்சைத்
தொடநெருங்கும் துப்பாக்கி தூள்! தூள்! என்று
தொடைதட்டிப் புறப்படடா துணிச்ச லோடு!

அம்மாமி அப்பளத்தை வடையைப் பற்றி
ஆராய்ச்சி எதற்காக இன்னும்? இன்று
தெம்மாங்குத் தமிழ்மொழிக்குச் சவஅ டக்கத்
தீர்மானம் அனுப்புகின்ருன் வடக்கு நாட்டான்!
கும்மாளம் போடுகின்ருன் இங்கே உள்ள
கொழுக்கட்டை காங்கிரசான் நீயும் நானும்
சும்மாவே இருப்பதனுல் நமது வீட்டுச்
சோற்றுக்குத் தான்கேடு! என்ன லாபம்?

அழைக்கிறது சிறைச்சாலை! இனிந மக்கு
அங்கேதான் புதுவிருந்து தோழா! இங்கே
பிழைக்காமல் இந்திதன்னைச் சாக வைத்த
'பிழை'தன்னைப்புரிந்திடுவோம்; பிறகுசெய்வோம்
தழைக்கட்டும் நமதுதமிழ்' நமது நெஞ்சில்
தவழட்டும் இனிஎன்றும் புரட்சி வேட்கை!
விழிக்கட்டும் இங்குள்ள அடிமைக் கும்பல்!
விடைபெற்றுப் புறப்படடா! வெற்றி காண்போம்

—புலவர் பொன்னிவளவன்

வீ. இராமசாமி, செங்கற்பட்டு

கே: சிந்தனைச் சிற்பி அவர்களே! வரும் 62 தேர்தலுக்கு, தாங்கள் M. P. க்கு நின்று, வெற்றி பெற்று நீங்கள் டில்லிக்குப் போனல் அங்குள்ள மந்திரிகளும் நேருவும் உங்களைப் பார்த்து என்ன சொல்வார்கள்?

ப: இப்பொழுதே ஒரு அணுகுண்டிருக்கிறது. இது இரண்டாவது குண்டு போலிருக்கிறது என்றெண்ணுவார்கள்.

கே: இராசேந்திரபிரசாத் சென்னைக்கு வந்த பொழுது என்ன நினைத்திருப்பார்?

ப: தப்பித்தவறி எங்காகாவது இரண்டொரு கருப்புக் கொடிகள் இருக்குமோ என்று நினைத்திருப்பார்.

கே: எதற்கெடுத்தாலும் சிசு துள்ளுகிறதே, ஏன்?

ப: சிசு துள்ளாதே. வீச் வீச் என்று அழும். அதை விட்டு விட்டு துள்ளுகிறது என்றால் கள்ளப் பிறவி தான்.

கே: திராவிடத்தின் தேசிய முகாமாம் தி. மு. கழகத்தின் ஏடான, 'நம் நாடு' பெரிய அளவில் வெளிவர தலைமைக் கழகம் முயலவில்லையே ஏன்?

ப: தயவு செய்து நம்நாடு வளர்ச்சிக்காக ஐம்பது ரூபாய் அனுப்பிவையும்.

கே: நமது சொல்லின் செல்வர் சம்பத் அவர்கட்கு, நேரு பண்டிதர் திட்டிய முடங்களைப்பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

ப: நாடுஎன்னகருதியதோ அதையே தான் நானும் கருதினேன்.

ம. த. வேலன், சென்னை

கே: தாத்தா அவர்களே! சுவரொட்டி ஒட்டக்கூடாதென்று கடும் உத்தரவு போட்ட காங்கிரஸ்காரர்கள், அவர்கள் மட்டும் ஒட்டலாமா? இவர்களுக்கு மட்டும் தனிச் சட்டமா?

ப: சட்டம் என்பது எல்லார்க்கும் ஒன்று தான். ஆனால் இது விஷயத்தில் அவர்களுக்குப் புத்திதான் கொஞ்சம் மட்டம்.

மணியன், தமிழ்நாடு

கே: காமராஜர்தொடர்ந்து மந்திரியாக இருப்பதின் மர்மமென்ன?

ப: ஆலை இல்லாத ஊரில் இலுப்பப் பூ சர்க்கரை என்பார்களே அந்த மாதிரி.

அ. ர. அப்துல்சலாம். கோவை

கே: அண்ணா அவர்களே! நான் ஒரு முஸ்லீம் மாணவன், வீட்டில் உருது மொழி பேசுகின்றவன். தி. மு. கழகத்தில் சேர ஆசை! கழகம் ஏற்றுக் கொள்ளுமா?

ப: எத்தனையோ முஸ்லீம் நண்பர்கள் இயக்கத்தில்சேர்ந்திருக்கிறார்களே. செங்கற்பட்டு மாவட்டத்தின் அவைத்தலைவரே ஒரு முஸ்லீம். வகாப் என்ற பெயருடையார்.

எஸ். டி. இராசன், பம்பாய்-1

கே: நமது நாவலர் நிதி மந்திரியானால், மதிப்பிற்குரிய சி. சுப்பிரமணியம் என்ன தொழிலுக்குப் போவார்?

ப: ஏற்கெனவே அவரிடம் வழக்கறிஞர் வேலைக்கு சன்னத் இருக்கிறதே. ஆனால் கட்சிக்காரர்கள் வருவதுதான் கடினம்.

பெரியார்த்தொண்டன், போலகம்

கே: ஆசிரியர் அவர்களே' திராவிட முன்னேற்றக் கழகம் இந்திப் போராட்டம் நடத்துமா? அப்படி நடத்தினால் எந்தத் திங்களில், எந்த ஆண்டில் என்று உங்களால் உறுதியாகக் கூற முடியுமா?

ப: தலைமை நிலையம் சொல்லும்.

டி. வி. சுந்தரம். தங்கசாலை.

கே: "பெரிய பெரிய நாடுகளெல்லாம் சுதந்திரமடையாது இருக்கும்போது நீங்கள் நாட்டுப் பிரிவினை கேட்பது தவறு. அவ்வாறு சுதந்திரம் கொடுத்தாலும் அதை காப்பாற்றுவது கடினம்" என்று ஒரு காங்கிரஸ்காரர் என்னிடம் வாதிக்கிறார், நான் அவருக்குஎன்ன பதில் சொல்வது?

ப: எங்களிடம் கொடுத்தே சீனன் உள்ளே நுழைந்து விட்டானே, உங்களிடத்தில் கொடுத்தால் வேறு யார் யார் நுழைவார்களோ என்ற அச்சந்தான் தோழருக்கு. சுடு பாலைக்குடித்து உதட்டையே கடித்துக் கொண்டவனுக்கு மோர் கொடுத்தாலும் ஊதி ஊதிகுடிப்பான் என்ற பழமொழி தெரியும் அல்லவா உமக்கு.

ஆர். லூர்துசாமி, அரக்கோணம்

கே: 'கடைசி நேரத்திலாவது தி. மு. க. விற்கு புத்தி வந்ததே!' என, காமராசர் கூறுகிறாரே, இதுவரை காமராசர் தி. மு. க. வை என்னவென்று நினைத்திருந்தார்?

ப: குண்டு வைத்திருக்கிறேன், துப்பாக்கி வைத்திருக்கிறேன் என்று வெத்து வேட்டுக் கிளப்பிக் கொண்டிருந்த அவருக்குக் கடைசி நேரத்திலாகிலும் புத்தி வந்ததே அதற்காக மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

கே: தி. மு. க. வினால் தான் தமிழுக்கு இழுக்கு வருவதாக ஒரு அமைச்சர் கூறுகிறாரே, அந்த இழுக்கு காங்கிரஸ்காரர்களால் தான் துடைக்கப்படுகிறதா?

ப: மேல் உதடு இல்லாதவன் புல்லாங்குழல்வாசிக்க ஆசைப்பட்ட மாதிரி இருக்கிறது காங்கிரஸ்காரர்கள் தமிழைப் பற்றி பேசுவது.

கே: ஆகஸ்டு போராட்டத்தில் தி. மு. க. இன்னும் ஒருவித முயற்சியும் நடக்கப்படவில்லையென எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுகிறார்களே?

ப: தாமரையைக் கேட்டுக் கொண்டா சூரியன் வருவான்.

க. மு. எல்லன், பெங்களூர்-7

கே: அன்புள்ள அண்ணா அவர்களே!

தயவுசெய்து கருநாடக வரலாற்றையும் ஆண்ட மன்னர்களைப் பற்றியும் தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுவீர்களா?

ப: எழுத்து வேலை அதிகம் கொஞ்சம் தணியட்டும்.

கே: மனிதன் செய்யுங் குற்றங்களில் பெரியது எது?

ப: பொய்ப் பேசுவது, மற்றவனை வாழவிடாமல் செய்வது. வஞ்சனை செய்வது, பொறாமைப்படுவது.

கே: மித்திரன், தினமணி போன்ற நாளிதழ்களில் திங்கட் கிழமை தோறும் ஆசிரியர் தலையங்கம் வருவதில்லையே, ஏன்?

ப: ஞாயிறு விடுமுறையல்லவா அதனால்.

கவலை இல்லாத மனிதர் அளிக்கும் கவலை இல்லாத மனிதன்

தன் வாழ்க்கையும், அதில் பெறும் இன்பமும் பெரிதென்று எண்ணிப் பிறர் வாழ்வைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாத மனிதன் அண்ணன்!

தன் வாழ்வைப் பற்றிச் சிறிதும் எண்ணாது பல்கலைக் கழகத் துணைவேந்தரின் சொல்படி பிறருக்காகவே கவலைப்பட்டு அதன் மூலம் கவலையில்லாத மனிதனாக வாழ விரும்பும் தம்பி...!

இருவித மனப்பான்மை கொண்ட மக்களைச் சேர்த்துவைத்து நிம்மதியாகக் கவலையில்லாது வாழ விரும்பும் தந்தை...!

காதலித்துக் கர்ப்பவதியானதன் பின் கைவிட்டு விட்ட மாஜி காதலனை அடைந்து கவலையில்லாது வாழ விரும்பும் கன்னி!...

ஆற்றோரங்கரையருகே ஒரு "சாமியைச்" சந்தித்து அவருக்கு பசி தீர்த்து உறவை வளர்த்துக் கொண்டு பின் அவருக்கே உரிமையாகிக் கவலையைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு குடிசை வாழ் குமரி...!

இவற்றோடு!

எங்கிருந்தோ வந்து இடையிலே புகுந்து ஒட்டாண்டியாகிச் சோறு திருடப் போய் ஒரு பெண்ணைக் காதலித்து அவள் மூலம் கவலைகளைத் தீர்த்துக் கொள்ள விரும்பும் இளைஞன்...!

காதலித்தவன் ஒருவன் இருக்க நாம் மற்றொருவனை மணக்க வேண்டியதிருக்கிறதே என்று கவலைப் படும் இளமங்கை...!

இவர்களைச் சுற்றி ஓடுகிறது கதை,

முழுபலம் இல்லாத மூலக்கதைக்கு கண்ணதாசனின் உயிரோட்டமுள்ள வசனம் பொடி போட்டுச் சுறுசுறுப்பூட்டுகிறது.

தத்துவம் அதிகமாகக் காணப்படும் காரணத்தால் வசனம் இயற்கையாகவே சில இடங்களில் சுவை குறைவுற்றாலும் இனிமைக்குப் பங்கம் விளைவிக்கவில்லை,

பாடல்களில் கண்ணதாசனின் சிறப்பு முத்திரை அழகாக விழுந்திருக்கிறது, என்றாலும் சந்திரபாபுவின் பாடல்கள் நம்மை மேல்நாட்டிற்கும், மகாலிங்கத்தின் பாடல்கள் நாடக காலத்திற்கும் இழுத்துச் செல்கின்றன. இசையமைப்பாளர்களைப் பொறுத்தவரை சிறந்த வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறமுடியாது.

பொறுப்பற்ற அண்ணன் பாகத்தை ஏற்கும் ராதாவின் நடிப்பைப் பற்றிச் சொல்லவேண்டுமானால் அவர் நடித்ததைவிட ஆடும் இடம் அதிகம், பொருந்தாத பாகத்தை பொருந்தாத முறையில் செய்திருக்கிறார்.

சந்திரபாபு...புது முயற்சி—வெற்றியளிக்கும் இடங்கள் பல. குறிப்பாக விஜயலட்சுமியிடம் கஞ்சி கேட்பதும், எம். ஆர். ராதாவை அடிப்பதும், அடி வாங்குவதும், காதலிக்காக அடி வாங்குவதும், கவலையே உருவாக கோர்ட்டில் அமர்ந்திருப்பதும் போற்றக் கூடியவைதான் என்றாலும் இவ்வளவு அங்க சேட்டைகள் அவசியம் தானா என்றால்......?!

பாலையா, வருகிறார் என்றாலும் வழக்கம் போலில்லை!

ராஜசுலோசனா, கதைப்படி கணவனால் வீட்டை விட்டுத் துரத்தப்படுகிறார். முடிவை உணரும் கட்டத்தில் இன்னும் இயற்கை காட்டப்பட்டிருக்கலாம்.

மகாலிங்கம், ராஜம், பாத்திரங்கள் நினைவில் நிற்காவிட்டாலும் அவர்கள் பாடிய பாட்டு நினைவில் நிற்கிறது!!

படத்தின் பாதி வெற்றி படப்பிடிப்பிற்கு உண்டு. நீலமலைக் காட்சிகளும், பூங்கா இடப் படப்பிடிப்பும் (Location shot) நல்லமுறையில் செய்யப்பட்டிருக்கின்றன. ஒலி இயற்கையாக இருக்கிறது.

'கவலையில்லாத மனிதன்' படம் பார்ப்பவர்களுக்கு உண்டாகும் சில கவலைகள்,

கவிஞரின் சிறந்த தத்துவக் கற்பனைச் சித்திரத்திற்கு இதைவிடத் திறமைமிக்க டைரக்டர் பணியாற்றி யிருந்தால்...?

பாகங்களுக் கேற்ற நடிகர்களைத் தேடிப்பிடித்திருந்தால்...?

மூலக்கதையின் திருப்பங்கள் வலுவாக இருந்திருந்தால்...?

நூறு நாட்களுக்குப் பஞ்சமேது...?

—நரேந்திரன் பி. ஏ.,

ஆசிரியர் ; கி. பி. சிற்றரசு. வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபாலநாய்க்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

கடைச்சங்கக் கருவூலம் கொஞ்சம்; வஞ்சக்
  கொடுங்கோலர் கருத்துக்கள் அதையும் மிஞ்சும்!
இதையேநல் லிலக்கியமென் றெண்ணி வாழ்ந்த
  இதயத்தை இருட்டறையின் இழிவைப் போக்கப்
பகலிரவைப் பேச்சாக்கி, பனியைத் தாக்கிப்
  பாரறிய பகலவனாய்ப் பவனி வந்து
புத்துயிரை புதுவுணர்வைப் புதுமை யேட்டில்
  பொறித்திட்ட பொன்னான அண்ணா வாழி !

நமக்கென்று ஒருநாடு தேவை யென்று
  நறுக்கென்று அந்நாளில் பெரியார் முன்னே
சொன்னவரும் அண்ணாதான்; சொன்ன சொல்லின்
  சுவைகண்டு செயலாற்றச் சேலம் நோக்கிச்
சென்றவரும் பெரியார்தான்; பேரா ளன்தான் !
  சென்றிங்கு மீண்டவுடன் திராவிடந்தான்; நெஞ்சில்
அன்றுதொட்டு இன்றுவரை அண்ணா வென்னும்
  அன்புக்கோ, அருளுக்கோ, ஓய்வே இல்லை !

ஏசுவையும் புத்தரையும் எடுத்துக் காட்டி
  ஏற்றமிகு சொற்களையே எழிற்பூக் காட்டில்
மோதவிட்டு, மாந்தரினை குளிக்க வைத்து,
  முதுமறையாம் தமிழ்மறையை முழக்கக் காட்டி,
'வாழ்ந்துகெட்ட தமிழினமே ! விழிப்பா' யென்று
  மன்றமதில் நின்றுதினம் மொழிப்பற் றேற்றி
முதுமையெனும் மடமைதனை மூச்சால்; பேச்சால்
  முறியடித்த மூத்தவனே ! முதல்வா, வாழி !

— வே. கபிலன்

இனமுழக்கம்

பைல்கள் காணவில்லை; ★ ★ நாய் தின்றுவிட்டதாம்!

அண்ணாவுக்கு எழுதப்பட்ட தபால் காமராசரிடம் போய்ச் சேர்ந்திருக்கிறது. இப்படியும் நடக்குமா?என்று எல்லோரும் எண்ணுவது இயல்புதான். இப்படி நடக்காவிட்டாலும் இதைப் போன்ற ஓர் நிகழ்ச்சி அண்மையில் பஞ்சாபில் நடைபெற்று, மக்கள் சபையில் இது குறித்து கேள்விகள் கேட்கப்பட்டு, நீதி விசாரணை வேண்டும் என்று எதிர்க்கட்சியினரால் வேண்டுகோளும் விடுக்கப்பட்டிருக்கிறது.

திருடனைப் பற்றிக் குறிப்புத் தயார் செய்து போலீஸ் அதிகாரிக்கு அனுப்ப அது திருடன் கையிலே சேர்ந்தால் எப்படி இருக்குமோ அத்தகைய ஓர் நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. பஞ்சாபைச் சார்ந்த ஒரு எம்.எல்.ஏ. லஞ்ச ஒழிப்புக் கமிட்டிக்கு ஒரு மடல் எழுதியிருக்கிறார். எழுதிய மடலை பதிவுத் தபாலில் அனுப்பியிருக்கிறார். அதிலே கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் அத்தனையும் பஞ்சாப் முதன் மந்திரி கெய்ரோன் என்பவரைப் பற்றியவைகளாகும். ஆனால் எவர்மீது லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டதோ அவரது அலுவலகத்திற்கே அக் கடிதம் சென்றிருக்கிறது. இது தான் பெரிய விந்தை. விந்தை என்று சொல்வது கூடப் பொருத்தமில்லை. மர்மம் என்று சொல்வதே சாலச் சிறந்தது. முகவரி தவறாக இருந்துவிட நியாயமில்லை. தவறாகப் பட்டுவாடா செய்யவும் சாத்யமில்லை. ஏனெனில் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கும் முதன் மந்திரி அலுவலகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே தபால்காரர் தவறாகப் பட்டுவாடாச் செய்து விட்டார் என்று குறிப்பிட வழியே இல்லை. ஒரு வேளை தபால்காரரே தவறாகப் பட்டுவாடா செய்துவிட்டதாக வாதத்திற்கு வைத்துக்கொண்டாலும் தங்களது முகவரி குறிப்பிடப்படாத ஒரு பதிவுத் தபாலை முதன் மந்திரி அலுவலகத்தில் உள்ளவர் வாங்கலாமா? வாங்கக் கூடாது என்றுதான் யாரும் சொல்லுவார்கள். ஆனால் வாங்கியிருக்கிறார்கள். எனவே திட்டமிட்டுச் செய்த வேலை என்று தான் எண்ணத் தோன்றுகிறதே தவிர எதிர்பாராத தவறென்று இதை ஏற்றுக் கொள்ள இயலாது. அதிலும் லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சாட்டப் பட்டிருப்பதோ கெய்ரோன் மீதுதான். அதே கெய்ரோன் அலுவலகத்திற்கே அவர் மீது லஞ்ச ஊழல் என்ற குற்றப் பத்திரிக்கையைக் கொண்ட மடல் வருவதென்றால் இது மிக மிக விந்தையான சேதி. இதிலிருந்து காங்கிரஸ் கட்சியில் அவர்கள் நினைத்தால் எதையும் செய்யலாம் என்ற நிலை உலவி வருகிறதென்பது கண்கூடு.

நமது மாநிலத்திலே முன்னால் கவர்னராய் இருந்த பிரகாசா என்பவர் நீதித் துறையில் தலையிட்டது, தவறு என்று நீதி மன்றம் தீர்ப்பளித்த சேதியினை அண்மையில் கண்டோம். நானாவதி மீது சாட்டப்பட்ட கொலை வழக்கில் தண்டனை விதிக்கப் பட்ட பின்னும் கோர்ட் உத்தரவை மதியாது,கப்பற்படைத் தளபதிஎன்றகாரணம்காட்டி, சிறையிலல்லாது கப்பற்படையிலே காவல் வைக்க விசேட உத்திரவொன்றைப் பிறப்பித்தார் கவர்னர். கொலை செய்தது யார்? அதற்காகக்கூறப்படும் காரணங்கள் நியாயந்தானா என்பதைப்பற்றி எல்லாம் நாம் கவலைப்படவில்லை. கோர்ட்டிலே குற்றவாளி என்றுதீர்மானித்துதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை கவர்னர்தனது விசேட அதிகாரத்தைக் கொண்டு கப்பற்படையிலேயே காவலில்வைக்கச் சொல்வது சரியல்ல—முறையல்ல. இதைத்தான் கோர்ட்டாரும் சுட்டிக்காட்டி கவர்னரின்செயல் தவறென்றுகுறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதே போல் எல்லாத்துறைகளிலுமே தங்களுக்கேற்றாற் போல் நடக்குமாறு தலையிட்டு பிரச்னையைக் குட்டிச் சுவராக்கும் கைங்கர்யத்தில் காங்கிரஸார் இப்போது ஈடுபட்டுவிட்டார்கள். எங்கள் மாவட்டத்தில் கூட இப்படி ஒரு சம்பவம். மாவட்டக் கலெக்டர் பசுபதி என்பவரை மாற்றுவதற்கான எல்லா முயற்சிகளையும் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களும், பிரமுகர்களும், கையாள ஆரம்பித்திருக்கின்றனர். காரணம் என்னவென்றால் இவர்கள் இஷ்டம் போலெல்லாம் அவர் வளைந்து கொடுக்க வில்லையாம். ''நான் யார் தெரியுமா? காங்கிரஸ் எம். எல். ஏ.'' என்று ஒருவர் வீராப்பு பேசி

தூத்துக்குடி
ஜோசப்

னராம். அதற்கு கலெக்டர், 'எம்.எல்.ஏ.மட்டுமல்ல,மந்திரியே ஆகவேண்டுமானாலும் இந்த நாட்டில் 5-ம் வகுப்பு படித்தால் போதும். ஆனால் கலெக்டர்ஆகவேண்டுமானால் I.A.S. படிக்கவேண்டும், என்றாராம். இது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. ஆனால் அப்படிச் சொல்லி இருந்தாலும் அதில் தவறில்லை. அப்படித்தானே நிலைமையும் இருக்கிறது. ஒரு வேளை காமராசரைத் தாக்குகிறது என்று கவலைப் படுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. தங்கள் சொற்படி எல்லாம் கேட்கவில்லை என்பதற்காக எப்படியேனும் அவரை வேறிடத்துக்கு மாற்ற வேண்டும் என்று வேலை நடக்கிறது.

விவேகமில்லா ஆட்சியிலே விந்தையான செய்தி!

நீதியோடு எந்த அதிகாரியும் நடக்க முடிவதில்லை ---- மாவட்டக் கலெக்டர் பிரச்னை அதற்கு உதாரணம். நீதியை சம்மந்தப் பட்டவர்களுக்குத் தெரிவிக்க முடியவில்லை—கெய்ரோன் பிரச்னை அதற்கு உதாரணம். நீதியை ஆட்சியாளர் நினைத்தால் இஷ்டம் போல் மாற்ற முடியும் — நானாவதி பிரச்னை அதற்கு உதாரணம். எவ்வளவோ குற்றங்களைச் செய்திருந்தாலும் அவர்கள் அரசாங்கத்திற்கு வேண்டிய பெரிய புள்ளிகளாக இருந்தால்அவர்கள் சம்மந்தப்பட்ட 'பைலை'யே காணாமல் ஆக்கமுடியும். நான் கீழே குறிப்பிடப்போகும் ஓர் சம்பவம் அதற்கு உதாரணம்.

★ காகிதத்தைக் கழுதை தின்னும்!
★ இந்தக் கேடுகெட்ட ஆட்சியிலே நாய் தின்கிறதாம்!

வடக்கே உள்ள நீதிமன்றம் ஒன்றில் ஏழு பைல்களைக் காணவில்லையாம். எங்கெங்கோ தேடிப்பார்த்தும் ஏதும் பயனில்லை. அதில் கிரிமினல் குற்றத்தில் சம்மந்தப்பட்ட பெரிய புள்ளிகள் சிலரது குறிப்புகள் இருக்கின்றன வாம். விசாரித்துப் பார்த்தால் நாய் தின்றுவிட்டதாகத்தெரிகிறதாம். கழுதை தான் காகிதம் தின்னும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்கள் ஆட்சியில் நாய்கூடத் தின்ன ஆரம்பித்துவிட்டது. ஆனால்அதில் வேடிக்கை என்ன வென்றால் பல பெரிய புள்ளிகளின் கிரிமினல் குற்றம் சம்பந்தமான குறிப்புகள்உள்ள பைல்களைப் பார்த்து அந்த நாய்கள் தின்றிருக்கின்றனவே! அந்தப் பகுத்தறிவு படைத்த நாய்கள் வாழ்க என்று வாழ்த்தத்தான் வேண்டும். இதே போலத்தான் பக்ராநங்கலில் உடைப்பு எடுத்து தண்ணீர் உள்ளே புகுந்த போது 'பிளானை'த் தேடினார்கள் — அகப்படவில்லை. ஏற்கனவே எவனோ 'பிளான்' போட்டுத்தானே இக்காரியங்கள் எல்லாம் நடக்கின்றன. பின் எவ்வாறு கிடைக்கும்?

அதிகாரத்தால் ஆணவம் நீளுகிறது
★நீதிக்குமாறாக அநீதி புரளுகிறது!

இப்படிஎதிலுமேதலையிட்டு, எந்தப்பிரச்னையிலும்பாதுகாப்பற்ற நிலைக்கு நாட்டைக் கொண்டுவந்து விட்டார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் முதலில் நான் குறிப்பிட்ட பஞ்சாப் பிரச்னை. நீதி விசாரணை வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. முதலமைச்சர் மீதே குற்றம் சாட்டிவிட்டானே! என்று எழுதிய எம்.எல்.ஏ. யை, ஏதாவது செய்யாமல் விட்டு விட்டால் அதுவே இவர்கள் ஆட்சியில் அதிசயமான சம்பவம். இதில் நீதி விசாரணை வேறு வைக்கவா போகிறார்கள்?

முதுகுளத்தூர் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது கேட்டோம் நீதி விசாரணை வேண்டும் என்று — செய்யவில்லை. சமீபத்தில் குடந்தையிலே எங்கள்ஊரைச் சேர்ந்த ஒருவீணன்வெறியூட்டும்வகையிலே பேசி, அதன் எதிரொலியாக மாண்ட இராமலிங்கத்தின் மரணத்துக்கு நீதி விசாரணை வேண்டும் என்றுகேட்டோம் செய்யவில்லை. அப்படிப்பட்ட 'நீதிமான்களிடம்' எப்படி நீதி கிடைக்கப் போகிறது? கிடைக்கவே கிடைக்காது.

மக்கள் சக்தி விழித்தெழுந்து இந்த மதோன்மத்தர்களின் ஆட்சியிலே நடைபெறும் அக்ரமங்களைக் கண்டு இந்த ஆட்சியைஅகற்றுதவரைஇத்தகைய தவறான தலையீடுகள் நிரம்ப நடந்துகொண்டுதான் இருக்கும்.

★

தலைமைக்கழகத்தேர்தல்

★

25-9-60 ஞாயிறு

★

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழக அவைத்தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், முக்கிய குழுக்கள் முதலிய தேர்தல்கள் நடைபெறும்.

25-9-60 ஞாயிறு காலை 10 மணிக்கு சென்னை இராயப்பேட்டை, லாயிட்ஸ் ரோடு 156 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

நீதியா? நேர்மையா? நியாயந்தானா?

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2 ★ 16—9—60 ★ [இதழ் 3

காந்தியின் கண்ணீர் கழகத்தின் செந்நீர்

எங்கும் கொலை. எவ்விடத்திலும் குத்து வெட்டு. காந்தியின் கல்லறை கண்ணீர் சிந்துகிறது. கழகத்தினர் செந்நீர் சிந்துகின்றனர். அகிம்சைப் பேசியவர்களின் வழி வந்தோர் ஆயுதங்களை ஏந்தித் திரிகின்றனர். எதிர்க் கட்சியினர் எல்லாரையும் வெட்டிச் சாய்க்கின்றனர், குத்தி மாய்க்கின்றனர் என்று சொல்வதற்கில்லை. நம் கழகத்தினரையே குறி பார்த்து கொலை செய்வதும் குத்திச் சாய்ப்பதுமாக இருக்கின்றனர்.

துயிலெழுந்து செய்தித்தாளை விரித்தவுடன் கழகக் காளையர், மாவட்ட முன்னணி வீரர்கள் குத்தப்பட்டனர்; படுகாய முற்றிருக்கின்றனர், மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்; அவர்கள் நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறது என்ற செய்தியே வந்தவண்ணம் இருக்கின்றன. இந்த துக்கச் செய்தியை நாமும் படிக்கிறோம். நாணயம், நேர்மை, நீதி எதுவுமே இல்லாத முட்டாள் சர்க்காரும் படிக்கிறது. அந்த முட்டாள்தனமான-முர்க்கத்தனமான ரௌடி ராச்சியத்தை நடத்திக் கொண்டு போகின்ற மந்திரிகள் இந்தச்செய்திகளைப் படிக்கும்போது புளகாங்கிதமடைகின்றனர். நம்எதிரிகள் பட்டியலிலேஇத்தனை பேர்கள் வீழ்ந்தார்களா. இவ்வளவு பேர்கள் சாய்ந்தார்களா. இனி அப்பக்கத்தில் கழகத்துக்காரர்கள் இரவு 9 மணிக்குமேல் துணிந்து வெளியேவர மாட்டார்கள். துணிந்து இறங்கி பகிரங்கமாக கழக வேலையைச் செய்ய மாட்டார்கள். நம்மிலே ஒருவருக்கும் சேதமில்லை. சிறு காயமும் ஏற்படாது. போலீசும் நம் தொண்டர்களை (இன்று புதியதாய் இதற்காகவே கதரணிவித்து காங்கிரசில் சேர்க்கப்பட்ட காலிகளை, ரௌடிகளை) ஒன்றும் செய்யாது, அடித்துவிட்ட ரௌடிகளை தாகசாந்தி செய்வித்து, கைக்குலுக்கியனுப்பி வைக்கிறது. வழக்கு மன்றம் போனாலும் தண்டனைக் கிடைக்கக்கூடும். ஆகையால்தான் நமது பாரத மாதாவின் இன்றைய சுவீகார மக்கள்மேல் வழக்கும் பதிவு செய்வதில்லை. கழகத்துக்காரர்களும் இவர்களைத் திருப்பியடிக்கப் போவதுமில்லை. ஏனெனில், அவர்கள் கடமை கண்யம் கட்டுப்பாடு, எதையும் தாங்கும் இதயம், எல்லாம் படைத்தவர்கள். இப்படி இறுமாப்புப் பேசிக்கொண்டிருக்கிறது காங்கிரஸ் கட்சி. அதன்பேரால் அமைக்கப்பட்டிருக்கிறது சர்க்கார்.

வெள்ளைக்காரனை விரட்டப் பயன்படாத ஆயுதம் எல்லையிலே இருக்கும் சீனனை விரட்டப் பயன்படாத ஆயுதம் நம் நெஞ்சை நோக்கி வீசப்படுகிறது. கோழைகளால் பயமுறுத்தப்படுகிறோம். வீரஇளைஞர்களை வேலிக்குள் அடைத்து வைத்திருக்கிறோம். இறந்தோர் கல்லறை மேல் கண்ணீர் சிந்தவா நாம் இரவென்றும் பகலென்றும் பாராமல் மாநிலத்தைச் சுற்றி சுற்றி நெஞ்சுலர நாவுலர கத்தினோம். நமது பணியின் மூலம் அவர்கள் கோழைகளாகின்றனர் என்றால், நாமிந்தப் பெரும் பணியைமேற்கொண்டிருக்க வேண்டியதில்லையே.

கோழைகளை வீரர்களாக்கவும், துடிப்பில்லாத நரம்புகளைத் தட்டி துள்ளச் செய்யவும், வளைந்தவனை நிமிர்ந்து நடக்கச் செய்யவும், அக்கறையற்றிருந்தவர்களை அரசியலில் விழிப்புக் கொள்ளச் செய்யவும், அடிமைத்தனத்தை எடுத்து விளக்க, நாட்டு விடுதலைக்காகப் போராடவும், முன் பிறந்து மாண்டவர்கள் முட்டாள்கள் அல்ல, முடிதரித்தாண்ட மன்னர்கள் என்று அவர்களுக்காக எழுதப்பட்ட வீர வரிகளை, குருதி ஓட்டம் நிறைந்த காவியத்தை எடுத்துச் சொல்லி அவர்கள் இசைபட வாழ்ந்தனர். நீவீர் ஏன் விசையொடிந்து வீழ்ந்தீர் எனக் கேட்டதெல்லாம் இருட்டில் அடிபட்டுச்சாகவா, ஒரு பயமில்லாமல் குருதிக் கொட்டி மாளவா எனக் கேட்கத் தோன்றுகிறது. இதற்கா நாட்கணக்காக. திங்கள்கணக்காக வீடு, வாசலை மனைவி மக்களைவிட்டு காற்றிலும் வேகமாய்ச் சுற்றினோம்? கவலை தோய்ந்த முகத்தினராயிருந்த காளைகளைப் போர்க்களம் வாருங்கள், என வீர அழைப்பை விட்டோம்? அவர்களும் எந்தவிதக் கைமாறும் கருதாமல், குடும்ப எதிர்ப்பு, உற்றார் உறவினர் எதிர்ப்பு, வேலையும் ஊதியமும் தந்தோர் எதிர்ப்பு, தாய் எதிர்ப்பு, தந்தை எதிர்ப்பு இவ்வளவையும் துச்சமென மதித்து துள்ளிக் குதித்தனர் களத்தில்.

விடுதலைப் போரில் பெறவேண்டிய இரத்தத் தழும்புகளை வீதி ஓரங்களிலே சமூகத்தில் வீணாய்ப் போனவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களால் அடிபட்டுத் திரும்பினர் என்ற செய்தி கேட்டபோது, 'மானிடனே, இளைஞனே, விடுதலைஇயக்கத்தின் வீரனே! இரத்தத்தைத் துடைத்துக் கொண்டு கண்ணீர் குளத்தில் மிதக்கவா உன்னை அழைத்தோம். இல்லை, இல்லை. அநியாயத்தின் தலையிலே சம்மட்டி கொண்டு அடிக்க, அநீதியை திசைத் தெரியாமல் ஓட்டி, நீதியை வெளிச்சத்திற்குக் கொண்டு வரவே உன்னை அழைத்தோம். சிங்க வேட்டையாடப் புறப்பட்டவன் குறுக்கே வரும் பூனையைப் பார்த்து சகுனத்தடை என்று திரும்பியதைப் போல் திரும்பி விட்டாயே. என்று கேட்கத் தோன்றுகிறது. சுதந்திரம் பெறுகின்ற வரையில் அகிம்சைப் பேசித் திரிந்தவர்கள் தங்கள் அநியாயங்கள் வெளிப்படுகின்றதென்ற ஆவேசத்தால் ஆயுதங்களெடுத்துத் திரிகின்றபோது தாங்கச் செல்கிறாயா? எண்பதாண்டுகள் வாழ வேண்டிய நீ இருபதாண்டில் சாகத்துணிந்து விட்டாயா?

எள்ளி நகையாடும்

இந்தியாவின் தெற்கே ஒரு விடுதலை இயக்கம்மாம். படித்தவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் மிக்கதோர் இயக்கமாம். அதன் எண்ணிக்கை ஐந்து லட்சத்துக்கு மேலிருக்குமாம். மொழியால் ஆதிக்கம் கொள்ள நினைக்கும் வட ஏகாதிபத்தியத்தைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் பெற்றவர்களாம். பிரதமர் நேருவுக்கே கருப்புக்கொடி காட்டியவர்களாம். 'குடியரசுத் தலைவரே! மொழி உறுதியை உறுதி மொழியாக்கா முன் தென்னகம் வராதீர். வந்தால் கருப்புக்கொடிகளைக் காண்பீர்' என்று எச்சரிக்கை விட்டவர்களாம். இல்லை, இல்லை. விளக்கம் தந்த பிறகே அந்த வீர மண்ணில் கால் வைக்கிறேன் என்று அவரும் உள்துறையமைச்சரும், முதலமைச்சரும் போட்டிப் போட்டுக் கொண்டு விளக்கம் தரச் செய்த விடுதலை இயக்கத்தினராம்.அவர்களில் ஒவ்வொருவரும் கள்ளமார்க்கட்காரனால், கஞ்சா விற்பவனால், காட்டன் சூதாடியால் இருட்டில் குத்தப்படுகிறார்கள் என்ற செய்தியை அவர்கள் படிக்கும் போது இவ்வளவுதானா — மாசற்ற வீரம்படைத்தோரின் வரலாறு இதுதானா என்று எள்ளி நகையாடுவர். ஆகவேதான் வரலாற்றைத் திருப்புங்கள் என்று தைரியமாகச் சொல்கிறோம்.

இனி

இனி குடந்தை இராலிங்கங்களை, கோவைஆரோக்கிய சாமிகளை, கே. வி. கே. சாமிகளை, ஆசிரியர் வேலாயுதங்களை, வடசென்னை பாண்டியன்களை, நெல்லிக்குப்பம் மஜீத்களை, சென்னை மொய்தீன் பிச்சைகளை, தாளமுத்து— நடராசன்களை, கேசவன் நடராசன்களை இனியும் பலி கொடுத்துக் கொண்டிருக்கமுடியாது. ஏனெனில் அவர்கள் எல்லாம் விடுதலைப் போரில் ஈடுபட்டு பலிபீடம் நோக்கி வரவேண்டியவர்கள். அவர்களை வீணாக சாகவிட மாட்டோம். பிறர் அவர்களைச் சாகடிக்கவும் விடமாட்டோம் என்று சொல்லித்தீர வேண்டிய கட்டம் வந்துவிட்டது.

சம்மந்தம்

செங்கற்பட்டு மாவட்ட முன்னாள் செயலாளர் குன்றத்தூர் தி. ந. சம்மந்தம் காலி ஒருவனால் வெட்டப்பட்டார் என்றவுடன் நானும் இன்னாள் செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களும் குன்றத்தூர் ஓடினோம். எங்களுக்குப் பின்னாலேயே முன்னாள் மேயர் அ.பொ. அரசு, பெரு நகராட்சி மன்ற உறுப்பினர் செல்வராசு ஆகியோர் இரவு 2-30க்கு வந்து சேர்ந்தனர். குடிசைகளைக் கொளுத்துவோம் என்ற காலிகள் ஓடி மறைந்தனர். அடுத்த நாள் காலை போலீஸ் உயர்தர அதிகாரிகளை சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும்போதே பூவிருந்த வல்லியிலிருந்து ஒரு செய்தி வந்தது. அதில் அந்தக் காலிகள் அறுவரும் முக்கியமாக இந்தக் கலவரங்களை ஓராண்டுகாலமாகச் செய்துகொண்டு வரும் குன்றத்தூர் சுப்பிரமணியம் என்பவனும் அவன் அண்ணனும், மற்ற நால்வரும் பூவிருந்த வல்லியில் வட்டச் செயலாளர் சின்னசாமியை அடிக்கப் போனதாகவும், பொது மக்கள் அந்தக் காலிகளைப் பிடித்து போலீசில் ஒப்படைத்து விட்டதாக வந்த செய்தியையறிந்து உடனே பூவிருந்தவல்லிக்கு ஓடி அந்த காலிகளை போலீஸ் ஸ்டேஷனில் கண்டோம். அவர்களைப் பார்க்கும்போது இவர்களா ஒரு விடுதலை இயக்க முன்னணி வீரர்களை ஒழிக்கப் புறப்பட்டவர்கள் என்று நம்மை நாமே பார்த்து சிரித்துக் கொண்டோம்.

எதிரிகளுக்கு அஞ்சாத நிலை பிறந்துவிட்டது. இனி எந்த தி. மு. கழகத்தானாவது தாக்கப்பட்டால் கண்டிப்பாக பொது மக்களால் அந்த ரௌடிகள் தாக்கப்படுவார்கள் என்ற நிலையை பூவிருந்தவல்லி அன்று உணர்த்தி விட்டது.

பூவிருந்தவல்லி தோழர் இராசரத்தினம், கண்ணப்பன், போரூரான் போன்ற வீரர்களைப் பெற்ற கோட்டம். அவர்கள் எல்லாம் அன்று அமைதியை நிலைநாட்டிக் கொண்டிருந்தனர்.

ஆகவே இனி இந்த நிலையை நீடிக்க விடுவது நமது வீரத்திற் கோர் மாசு என்று சொல்லிக்கொள்கிறோம்.

தங்களன்புள்ள.

சி. பி. சிற்றரசு

கண்ணதாசன் பாட்டு- சென்சார் வெட்டு

இந்தியா என்கின்ற துணைக்கண்டம் விடுதலை பெற்ற நாளிலிருந்து, இந்தியர் என்பவர்கள் சுதந்திரம் பெற்று விட்டதாக விழாக் கொண்டாடிய தேதியிலிருந்து சனநாயகம் அவிழ்த்து விடப்பட்டிருப்பதாக தில்லியிலே இருக்கிற காங்கிரசார்கள் முழங்க, அவர்கள் குரலுக்கு ஒலிபெருக்கிகளாக வேலை செய்யும் இங்கே இருக்கின்ற கதர்த்துப்பட்டிகள் அதை நாடுமுழுவதும் அப்படியே ஒளிபரப்பினார்கள். நமக்குப் பரிபூரண உரிமை உண்டென்று ஓலமிட்டார்கள். நாமும் நம்பினோம்! நடந்தது என்ன?

கூட்டத்திற்கு தடை! எழுதினால் கட்டுப்பாடு! நாடகம் நடத்தினால் வெட்டு! பாடினால் சிறைத் தண்டனை கலைத்துறையிலும் சரி, அரசியலிலும் சரி, சமுதாயத் துறையிலும் சரி, தி. மு. கழகத்தவரின் வலிமை பொருந்திய எழுத்துக்கள், பேச்சுக்கள் எங்கெங்கு வெற்றி முழக்கமிட்டு வருகிறதோ அங்கெல்லாம் காங்கிரசாரின் அடக்குமுறைத் தாண்டவம் தலைவிரி கோலத்துடன் நுழையத் தொடங்கியது. அந்தக் கண்மூடித்தனமான வெறியாட்டம் இன்றுவரை நின்றபாடில்லை. சனநாயகக் குழந்தையின் மென்னியை கொஞ்சங்கொஞ்சமாக நெறித்தபடி நின்று கொண்டுதான் அதுகதறிஅழும் பரிதாபமான காட்சியை பார்த்துக் கொண்டுதான் காங்கிரசிலே இருக்கின்ற முலவர்கள் தங்களை சனநாயகத்தின் தூதுவர்கள் என்று நாடு முழுவதும் பறைசாற்றிக்கொண்டு வருகிறார்கள். இந்த ஈனத்தனமான செய்கையை, வெட்கங்கெட்ட வித்தையை காங்கிரசுக்காரர்களைத் தவிர வேறு யாராலும் செய்து காட்டமுடியாது.

கலைத் துறையைப் பொறுத்தவரை காங்கிரசுக்காரர்கள் மலட்டுத்தன்மை படைத்தவர்கள். அவர்கள் அரும்பாடு பட்டும் பெறமுடியாத கலைத் துறையில் நாம் கொடி கட்டிப் பவனி வருவதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த ஏக்கத்தினால், பெருமையினால் விளைந்த விளைவுதான் அறிஞர் அண்ணா அவர்களின் வேலைக்காரியின் அங்கங்களை சிதைப்பதற்காக தூக்கிய கத்திரிக்கோலை இன்னும் கீழே போடவில்லை.

சமீபத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் ராஜா தேசிங்கு திரைப்படத்தில் கவிஞர் கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்டு புரட்சி நடிகர் அவர்களால் பாடப்படும் பாடலில் சில அடிகளை சென்சார் போர்டு வெட்டி எறிந்திருக்கிறது, அந்தப் பாடல் இது:

ஆண்டவன் தான் மனிதர்களை
அடுக்கடுக்காய்ப் படைக்கின்றான்
அறியாத மனிதர்கள் பலர்
ஆண்டவனைப் படைக்கின்றார்
தாயொருத்தி ஏழு பிள்ளை
பெறுவதனை நாமறிவோம்
ஏழுதாய் ஒன்றாக ஒரு பிள்ளை
ஒரு நாளும் பெறுவதில்லை.

இந்த வரிகளில் சமுதாயத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில் என்ன இருக்கிறது?

வெட்டி எடுத்தெறியப்பட்ட இந்த எட்டுவரிகளும் படத்தில் ஒலித்தால் நாட்டில் புயல், பூகம்பம் வந்துவிடுமா? அரசியலில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு விடுமா?

தி. மு. கழகம் அரசியல் துறையில் பெற்றிருக்கும் செல்வாக்கை ஒழித்துக் கட்ட தமிழ்நாடு முழுதும் காங்கிரசுத தோழர்கள் கத்தியைத்தூக்கிக்கொண்டு அலைவதைப்போல் நாம்கலைத்துறையில் பெற்றிருக்கும் செல்வாக்கை ஒழித்துக் கட்ட அவர்களின் தலைமை பீடம் கத்திரிக்கோலை தூக்கிக் கொண்டு அலைகிறது.

குத்துவதால், வெட்டுவதால் தி. மு. கழகத்தின் அரசியல் வளர்ச்சியை, கலையுலகச் செல்வாக்கை நசுக்கிவிடலாம் என காங்கிரசுக்காரர்கள் கனவு காண்கின்றார்கள். அவர்களின் சிறுபிள்ளைத்தனமான செய்கை கண்டு பரிதாபப்படுவோம்! மன்னிப்போம்! நகைப்போம்!

—தினகரன்

சிறிது நேரத்துக்குப் பிறகு அங்கே சப்இன்ஸ்பெக்டர் வந்தார். இரவு நேரத்தில் அப்போதுதான் முதல் முறையாக வருகிறார். அதனாலே ராணுவ அதிகாரி பதட்டத்துடன் என்ன என்ன வென்று கேட்டார். சப்இன்ஸ்பெக்டர் அவரை அழைத்துக் கொண்டே நான் நின்று கொண்டிருந்த சுவரோரத்துக்கு வந்தார். இருட்டில் நான் நின்று கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியவில்லை. சப்இன்ஸ்பெக்டர் பணிவுடனும் அக்கறையுடனும் ராணுவ அதிகாரியிடம் பேசினார். அவர்கள் பேசியது அரைகுறையாக என் காதில் விழுந்தது. நான் உற்றுக் கேட்டேன்.

"ரோசிலாந்தை நாம் இப்படியே விட்டு விடக்கூடாது. நிலைமை முற்றி விட்டால் உங்களுடைய கௌரவமே பாழாகிவிடும். கேவலம், ஒரு போலீஸ்காரனின் மகன் ஒரு வெள்ளை அதிகாரியுடைய மகளோடு தொடர்பு கொண்டிருப்பதாக மற்றவர்கள் அறிந்தால் கைகொட்டிச் சிரிப்பார்கள். அதுவும் மேல் நாடுகளுக்குத் தெரிந்தால் அதைக் காட்டிலும் மானக்கேடு வேறில்லை." என்று சப்இன்ஸ்பெக்டர் வெள்ளை அதிகாரியுடைய மனதைக் கிளறினார்.

"அவனுக்கு ஒரு சித்தி இருப்பதாகச் சொன்னீர்களே' என்று ராணுவ அதிகாரி நாசூக்காகக் கேட்டார்.

'ஆமாம், அவள் ஒரு இளம் பெண். நல்ல அழகி. அடக்கமான குணம்.' என்று சப்இன்ஸ்பெக்டர் சொன்னார்.

'இப்பொழுது அவள் எங்கே இருக்கிறாள்?

'பரிதாபம், இந்நேரம் அவள் என்ன கதியானாளோ'

என்று சப்இன்ஸ்பெக்டரும் ராணுவ அதிகாரியும் பேசிக்கொண்டிருக்கும்போது வெறி பிடித்தவனைப் போல் என் தந்தை அங்கே வந்தார். வழக்கமாக, அவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்த துப்பாக்கியைக் கையில் வைத்திருந்தார். அவர் கண்களில் அழுகையும் முகத்தில் ஆத்திரமும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. ஓய்வு பெறப் போகும் வயது என் தந்தைக்கு. ஆனால் முப்பது வயதே நிரம்பப் பெற்ற சப்இன்ஸ்பெக்டரிடம் பணிவோடு பேசினார். வயதுக்கு மதிப்புத் தராத கொடுமை போலீஸ் துறையைத் தவிர வேறெங்கும் தலை காட்டுவதில்லை.

"என் வீட்டில் அசம்பாவிதம் நடந்து விட்டது. காரணம் தெரியாமல் திகைக்கிறேன். என் மகனைக் காணவில்லை. வழக்கமாக அவன் இருக்கு மிடங்களிலெல்லாம் தேடிப்பார்த்து விட்டேன். அவன் அகப்படவில்லை. என்னுடைய மனைவி தூக்கிட்டுக் கொண்டாள். அவளுடைய சாவுக்கும் என் மகன் காணமல் போனதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். உங்களைத் தவிர எனக்கு ஆறுதல் கூற யாருமில்லை." என்று அழுது கொண்டே என்னுடைய தந்தை அவரது காலில் விழுந்தார். சுவர்மேல் நின்று கொண்டிருந்த எனக்கு உடம்பு நடுங்கியது.

சப் இன்ஸ்பெக்டர் என் தந்தையைத் தூக்கி நிறுத்தி, கோட்டைக்குள் நடந்ததை விபரமாகச் சொன்னார். சப்இன்ஸ்பெக்டர் கூறியகதை என் தந்தையின் சந்தேகத்தைக் குறைத்து கவலையை அதிகரிக்கச் செய்தது.

"ஐயையோ, ஒரு கொலை என்றுதான் நினைத்தேன். என் மகனும் இறந்திருந்தால் நான் இருந்தும் பயனில்லை" என்று சிறுபிள்ளையைப்போல் அழுதார், என் தந்தை.

அதுவரை அமைதியாக இருந்த வெள்ளைக்கார அதிகாரி கோபமாகப் பேச ஆரம்பித்தார்.

"ஏ போலீஸ், போ வெளியே" என்று துப்பாக்கியைத் தட்டிக் காண்பித்தார்.

சப்இன்ஸ்பெக்டர் கண்ஜாடை மூலம் என்தந்தையை வெளியே போகச் சொன்னார். என் தந்தைக்கு அது புரியவில்லை. அசையாமல் நின்றார். மறுபடியும் வெள்ளை அதிகாரி உறுமினார்.

"என் குடும்பத்தைக் கெடுத்தது மில்லாமல் இங்கு வேறு வந்து அழுகிறாயா? என்று அதட்டினார் அதிகாரி. என் தந்தைக்கு ஒன்றும் புரியவில்லை.

"நான் உங்கள் குடும்பத்தைக் கெடுத்தேனா? ஏழை போலீஸ்காரன் உங்கள் குடும்பத்தை எப்படிக் கெடுக்கமுடியும்? கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்கள். என் வீட்டில் நடந்த விபரீதங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் என்ன உறவு இருக்கிறதோ தெரியவில்லை. காரணம் தெரிந்தால் நான் அமைதி பெறலாம்" என்று என் தந்தைஅழுதுகொண்டே சொன்னார்.

"என் மகளை கெடுக்கப் பார்த்தான் உன் மகன். தன்னந் தனிமையில் வைத்துக் கொண்டு சிறு பெண்ணின் உள்ளத்தைப் பாழாக்கத் திட்டமிட்டிருக்கிறான். இப்பொழுது அவன் என் கண்ணில் பட்டால் சுட்டுப் பொசுக்கி விடுவேன். மரியாதையாக நீ வெளியே போய் விடு" என்று ராணுவ அதிகாரி அடுக்கிக் கொண்டே போனார்.

என் தந்தைக்குக் கொஞ்சம் உணர்வு வந்தது. ஏதோ ஒரு சூது நடந்திருக்கிறது என்பதை மட்டும் அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. அவ்வளவு நேரமாக பயந்து கொண்டிருந்த அவர் முழு விவரங்களை அறிய ஆசைப் பட்டார். அவர் கையிலும் துப்பாக்கி இருக்கிறது என்ற நினைவு அவருக்கு வந்து விட்டது. சப் இன்ஸ்பெக்டரிடம் மீண்டும் மன்றாட ஆரம்பித்தார்.

"நீங்களாவது என் மகன் போன இடத்தைச் சொல்லக் கூடாதா? உங்களுக்கு நான் என்ன செய்தேன்?' என்று கெஞ்சினார். சப் இன்ஸ்பெக்டர் கையை விரித்தார். அவருக்குத் தெரிந்தால்தானே சொல்வார்!

ராணுவ அதிகாரி இடையில் குறுக்கிட்டு என் தந்தையை வெளியே தள்ளினார். அதுவரை உள்ளே இருந்த ரோசிலாந்து ஓடி வந்து குறுக்கே பாய்ந்தாள்.

"நான்தான் குற்றவாளி. என்னைச் சுடுங்கள்" என்று கதறினாள். ராணுவ அதிகாரி ரோசிலாந்தை வேறொரு பக்கமாக இழுத்துத் தள்ளினார். ரோசிலாந்து அகலவில்லை. மீண்டும் மீண்டும் குறுக்கே பாய்ந்தாள். அதிகாரி துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு மகளையே மிரட்டினார். அவள் அந்த மிரட்டலை எதிர்பார்த்திருந்தாள். அதிகாரி என் தந்தையைக் குறி வைத்துக் கொண்டு சுட்டு விடுவேனென்று மகளை மிரட்டினார். ஆனால் கெட்டிக்கார ரோசிலாந்து தகப்பனார் தன்னைச் சுட மாட்டாரென்ற நம்பிக்கையில் என் தந்தையை மறைத்துக் கொண்டு நின்றாள். அதிகாரி தன் இருதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு சுட்டு விட்டார். விழுந்தது மகளுடைய பிரேதம். அவளைக் காட்டிலும் அதிகாரி துடித்தான். என்னுடைய தந்தையும் மிருகமானார். கையிலிருந்த துப்பாக்கியை எடுத்து தன்னுடைய வாழ்க்கைக்கும் முடிவுகட்டிக் கொண்டு தைரியமாக அதிகாரியைக் குறிவைத்தார். பெரும்பாலான போலீஸ்காரர்களுக்கு சுடத் தெரிவதில்லை. சுடுவதுபோல பாவனை செய்யத்தான் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்! என்னுடைய தந்தை நடுங்கிய கரங்களுடன் சுட்டார். சத்தம் கேட்டது. அந்தக் குறியாரை வீழ்த்தியது என்று பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

அரை மணி நேரத்துக்குப் பிறகு நான் உணர்வு பெற்றேன். என்னுடைய கால் ஒடிந்து கிடந்தது. துப்பாக்கிக் குண்டு பாய்ந்த என்னுடைய வலது கால் எந்தக் காரணந் தொட்டும் ஒட்டி வைக்க முடியாத நிலைபெற்று விட்டது. சென்னை மருத்துவ மனையில் என்னைச் சேர்ப்பித்தார்கள். ஒரு மாத காலம் சிகிச்சை பெற்று வெளியில் வரும்போது நான் ஒரு மரக் கட்டைக்காலுடன் வந்தேன். அப்போது எனக்கொரு சோகச் செய்தி காத்திருந்தது. ஆம்; என் தந்தைக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக அறிந்தேன். அவரைத் தேடினேன். இன்னும் அகப்படவில்லை. இன்னும் தேடிக் கொண்டிருக்கிறேன்.

அறிவிப்பு

☆

நமது இன்முழக்கம் பேப்பர் பற்றாக் குறையால் இவ்விதழ் பத்துப் பக்கங்களாக வெளிவருகிறது. அடுத்த இதழிலிருந்து வழக்கம்போல் 12 பக்கங்களுக்குக் குறையாமல் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம், தங்கச்சி மடம் முன் கதைச் சுருக்கம் அடுத்த இதழில் இடம் பெறும்.

—நிர்வாகி

அண்ணா பிறந்த தினப் பரிசுப் போட்டி நண்பர்களுக்கு

இதுவரையில் பரிசுக் கூப்பன்களை பூர்த்தியாக்கி, ஆயிரத்துக்கு மேற்பட்ட நண்பர்கள் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்திருக்கின்றனர். நாள்தோறும் நூறு கூப்பன்களுக்குக் குறையாமல் வந்தவண்ணமிருக்கின்றன. ஆகவே இனியனுப்பும் தோழர்கள், அவிழ்மடலின்மீது. **'அண்ணா பிறந்ததினப் பரிசுப் போட்டி'** என்று தெளிவாக எழுதியனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

முடிவு நாள்: 30...9...60

—நிர்வாகி

ஆங்கிலமும் இந்தியும்

அறிஞர். ஞா. தேவநேயப்பாவாணர்.

பல்வேறுமொழிகள் பேசும் பல்வேறினங்கள் வாழ்வதும், வட மொழி — தென் மொழிப் போராட்டம் கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக நடந்து வருவதும், உண்மையான பண்டை வரலாறு வரையப் பெருததும், நூற்றிற் கெண்பதின்மர் எழுதப் படிக்கத் தெரியாததுமான, இந்நாவலந்தேயத்தில், குடிகளையெல்லாம் ஒரு குடைக் கீழ்க் கொணர்ந்து,அமைதிநிறுவி, ஒற்றுமையுண்டு பண்ணி, அறியாமை யகற்றி, பல்வேறு துறையிலும் அவர்களை முன்னேற்றிச் செங்கோல் செலுத்தி, இறுதியில் விடுதலையும் பெறுவித்த ஆங்கில மொழியை அகற்றிவிட்டு அதனிடத்தில் இந்தியை அமர்த்த முயல்வது, கோளரி விற்றிருக்கும் அணையில் குறுநரியை யேற்றுவது போன்ற சிறுபுன் செயலே.

நடுநிலை நோக்கும் பிறர் நலம் பேணுந் தன்மையும் எட்டுணையுமற்ற இந்தி வெறியர், அயன்மை யொன்றே காரணமாகக் கொண்டு ஆங்கிலத்தை அகற்றப் பார்ப்பது திராவிடத் தென்னாடுகட்கும் அவற்றினும் வேறான தூய தமிழகத்திற்கும், ஒரு சிறிதும் பொருந்தாது. ஆங்கிலப் பகைவர் அதனிடத்துள்ள ஒரு சில சிறு குறைகளை அளவிறந்து மிகுத்துக் காட்டுவதாலும், மொழியளவில் எல்லாம் ஒன்றென்று கொள்ளும் பொதுமக்கள் இந்தியின் பல பெருங்குறைகளை அறியாதிருப்பதனாலும், அவ்விரண்டிற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக்காட்டுவது இன்றியமையாததாகின்றது.

ஒற்றுமை

1. அயன்மை

வட நாட்டு மொழிகள், ஆரியர் வருமுன் திராவிடமாய் இருந்தன வேனும், பின்பு ஆரியக் கலப்பால் ஆரிய வண்ணமாய் விட்டன. அதனால், மொழிநூலார் இந்தி வங்காளம் முதலிய வட நாட்டு மொழிகளையும் ஆரியக் குடும்பத்திலேயே சேர்த்திருக்கின்றனர். ஆகவே, ஆங்கிலம் மேலையாரியத்தையும் இந்தி கீழையாரியத்தையும் சேர்ந்தனவாகும். இதையறியாத வடவர், கட்புலனான இடச்சேய்மை யொன்றையே கருதி, ஆங்கிலம் அயன் மொழியெனக் கூறுகின்றனர். அதே சமயத்தில், இந்தி தென்னவர்க்கு அயன் மொழியாயிற்றே யென்பதை அணுவளவும் கருதிப்பார்ப்பதில்லை. ஓர் ஆரிய மொழி பேசுவார்க்கே இன்னோர் ஆரிய மொழிஅயன் மொழியாயின், ஆரியத்தினும் வேறுபட்ட தூய தமிழைப் பேசுவார்க்கு இந்தி எத்துணை அயன்மொழியாகும்!

மேலும், தென்குமரி நாட்டு தமிழருள் ஒரு பகுதியினரே வடபனிமலை சென்று திராவிடராகி, அவருள் ஒரு சாராரே அங்கு நின்று வடமேற்கிற் சென்று ஆரியராகி—மாறி, அவருள் ஒரு வகுப்பினரே வேத ஆரியராக இந்தியாவிற்கு வந்ததாக, வரலாறும் மொழி நூலும் ஒருங்கு கூறுவதால், ஆங்கிலம், காலமுறைப்படி, ஆரியவண்ணமாய்ப்போன இந்தியினும் தமிழுக்கு நெருக்கமாகும். இதை ஒரு சொற்றிரிபால் எடுத்துக் காட்டுவாம்.

அறிதல் என்னும் பொருளைக்கொண்ட ஓர் ஆங்கில சாக்சனிய அல்லது கொடுஞ் செருமனிய வினைச் சொல், **Con, Kon, Cun, Ken** எனப் பல வடிவு பெற்றிருந்தது. அது பின்னர் இலக்கணப் போலி என்னும் முறைமாற்றாக **Kno (Know)** எனத் திரிந்தது. அத்திரிபு, இலத்தீனில் **gno** என்றும், கீழையாரியத்தில் ஜ்ஞா என்றும், முறையே, வடிவு மாறிற்று. ஜ்ஞான என்னும் கீழையாரிய அல்லது வடசொல்லே இந்தியில் ஜான் என வழங்குகின்றது. தமிழில், 'காண்' என்னும் சொல்லிற்கு அறிதற் பொருளும் உளது. காட்சி — அறிவு, ஞானம், காண் என்னும் சொல் **kon** என்னும் கொடுஞ் செருமனியச் (**Low German**) சொல்லொடு தொடர்புள்ளது. ஜ்ஞா அல்லது ஜான் என்னும் கீழையாரியச் சொல் மூலத்தினின்று எத்துணை வேற்றுமை யடைந்துள்ள தென்றும், **Kon** என்னும் மேலையாரியச் சொல்லினும் தமிழுக்கு எத்துணை அயன்மைப் பட்டுள்ள தென்றும், ஒப்பு நோக்கிக் கண்டு கொள்க.

இனி, ஆங்கிலம் அடிமைப் படுத்திய மொழியென்றும், விடுதலை பெற்ற இந்தியாவில் அது அகற்றப்படல் வேண்டுமென்றும், ஒருசார் வடவர் கூறுவர். இதுபற்றி வடவர் கருத்தும் தென்னவர் கருத்தும்வடக்கும் தெற்கும் போல் நேர்மாறாகவுள்ளன. ஆங்கிலேயர் தமிழகத்திற்கு அடிமைப் படுத்தியராக வராமல் மீட்பராக வந்தாரென்றும், அவர் ஆட்சியாலும் மொழியாலும் தமிழுக்கும் தமிழருக்கும் ஆக்கமே யன்றிக் கேடில்லை யென்றும், உண்மைவரலாறறிந்த தமிழரெல்லாங் கருதுகின்றனர்.

இற்றைத் தமிழருள் நூற்றிற் கெண்பதின்மர் எழுதப் படிக்கத் தெரியாதிருப்பதனாலும், பண்டைத் தமிழக வரலாறு உண்மையான வகையில் இன்னும் வரையப்படாமையாலும், இதுபோதுள்ள வரலாற்று நூல்கள் பெரும்பாலும் உண்மையை மறைத்து ஆரியத்தை உயர்த்தியும் தமிழைத் தாழ்த்தியும் கூறுவதாலும், கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக நடந்துவரும் ஆரிய—தமிழ் அல்லது வட மொழி — தென் மொழிப் போராட்டம் எத்தகையது என்பதைப் பற்றியும், பிராமணர் தென்னாட்டிற்கு வருமுன் கோயில் வழிபாட்டு மொழியாயிருந்த தமிழ் எங்ஙனம் அந்நிலையினின்று வீழ்த்தப் பட்டதென்பதைப் பற்றியும், பலர் அறிய வழியில்லை. ஏற்கெனவே வடமொழியால் நலிவுண்டு குற்றுயிராய்க் கிடக்கும் தமிழ், இனி இந்தியாலும் நசுங்குணின், இன்னும் ஒரு நூற்றுண்டிற்குள் இருந்த இடமுந் தெரியாமற்போம் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. இதனாலேயே, தமிழ்ப் பற்றுள்ள புலவரெல்லாம் கட்டாய இந்தியை வன்மையாய் எதிர்க்கின்றனர்.

2 புதுமை

ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டும் புதுமொழிகளே. ஆயின், ஆங்கிலம் தோன்றி ஆயிரம் ஆண்டாயிற்றென்றும், இந்தி தோன்றி ஐந்நூறுண்டுகளே ஆயினவென்றும், அறிஞர் கூறுவர்.

3. கலவைமை

ஆங்கிலம் போன்றே இந்தியும்ஒருகலவை மொழியாகும். அதில், ஆரியம், திராவிடம், சேமியம் ஆகிய மூன்றும் கலந்துள்ளன.

4. சொற்றொடரமைதி

தமிழ்ச் சொற்றொடர் ஒன்றன் பொருண்மையை வினவும் போதும் சுட்டும்போதும், எழுவாயையும் பயனிலையையும் இணைக்குஞ்சொல் வேண்டியதில்லை. ஆங்கிலத்திலும் இந்தியிலும் அது வேண்டும்.

எடுத்துக்காட்டு :

தமிழ் : இது என்ன?
இது(ஒரு)தூவல்.

ஆங்கிலம் : **What is this?**
This is a pen.

இந்தி : யஹ் கியா ஹை?
யஹ் கலம் ஹை

ஆங்கிலத்தில் 'is' என்பதும், இந்தியில் 'ஹை' என்பதும் இணைக்குஞ் சொல்லாய் (**Copula**) இருப்பதையும், தமிழில் 'இது என்னவாயிருக்கிறது?' என்றோ இது' தூவலாய் இருக்கிறது!' என்றோ இல்லாமையுங் காண்க.

ஆங்கிலத்திற் போன்றே இந்தியிலும், நேரல் கூற்றுத் (**Indirect speech**) தொடரில், கூற்றிற்குமுன் 'என்று' எனப் பொருள்படும் இடைச்சொல் நிற்கும்.

எ.டு :

He said that he would come tomorrow.

உஸ்னே கஹா கி மைன் கல் ஆவூங்கா.

இங்ஙனம், சில சொற்றொடரமைதிகள் ஆங்கிலத்திற்கும் இந்திக்கும் பொதுவாக உள்ளன.

5. ஒழுங்கின்மை

ஒழுங்கின்மை, ஆங்கிலம் இந்தி ஆகிய இரண்டிற்கும் பொதுவேனும், பின்னது அதில் மிகச் சிறந்ததாம்.

எ.டு :

எழுத்தொலிப்பு

சொற்களில் நால்வேறு நிலைமையில் வரும் அகரம் ஒலிப்பதில்லை.

எழுதப்படும் வகை
மன
கமரா
பலக, பாலக
கடபட

ஒலிக்கப்படும் வகை
மன்
கம்ரா
பலக், பாலக்
கட்பட்

இவ்விதி புதிதாய்ப் புகுத்தப்பெறும் சமற்கிருதச் சொற்கட்கும் பிற சொற்கட்கும் விளக்காம்,

சொற்பால்

இந்தியில் சொற்பாலன்றிப் பொருட்பாலில்லை. அதாவது இந்திச் சொற்கள் சமற்கிருதச் சொற்கள் போல் ஈறு பற்றியோ மரபுபற்றியோ பொருத்தமின்றி ஒரு பாலையுணர்த்துவதல்லாது அவை குறிக்கும் பொருள்கட் கேற்ப உணர்த்துவதில்லை. அது பின்வரும் சொற்களால் அறியப்படும்.

ஆண் பால்

காகஸ் (தாள்)
தாலாப் (குளம்)
தவ்தர் (அலுவலகம்)
கான் (காது)
ப்யாலா (கிண்ணம்)

பெண் பால்

கித்தாப் (புத்தகம்)
ஸ்யாஹி (மை)
கச்சரி (வழக்கு மன்றம்)
பூஞ்ச் (வால்)
சுட்டீ (விடுமுறை)

இகர ஈகார வீற்று இந்திச் சொற்கள் பொதுவாகப் பெண்பாலாம். அவற்றுள், பானீ (நீர்), தஹி. (தயிர்) கீ (நெய்), மோத்தீ (முத்து), ஜீ (மனம்) ஆகிய ஐந்தே ஆண்பாலாம்.

சொற்றொடர்களில், எழுவாய் பயனிலையோடு பாலொத்து முடிய வேண்டியிருப்பதால், இந்தியில் சொற்றொடர் அமைக்கு முன் எழுவாயின் பால் தெரிந்து கொள்ளல் வேண்டும். அல்லாக்கால் வழுவாம்.

எ. டு :

கடீ டீர் சல்தீ ஹை—
கடிகாரம்நன்றாய்ப்போகிறது

கடீ (கடிகாரம்) என்பது பெண்பாற் சொல்லாதலால், சல்தா ஹை என்று ஆண்பால் வினையொடு முடிப்பின் வழுவாம். ஆகவே, இந்தியைப் புதிதாய்க் கற்போர், அதிற் புலமை யடையும் வரை, இந்தியாசிரியனையோ இந்தியகராதியையோ துணைக்கொண்டல்லது சொற்றொடரமைத்தல் இயலாது.

இந்தியில், ஆகாரவீற்றுப் பெயரெச்சமெல்லாம், ஆண்பாற் பன்மைப் பெயரைத் தழுவும் போது ஏகார வீறாகவும், பெண்பாற் பெயரைத் தழுவும் போது ஈகார வீறாகவும், திரியும்.

எ. டு :

அச்சா லட்கா—
நல்ல பையன்
அச்சே லட்கே—
நல்ல பையன்கள்
அச்சீ லட்கீ—
நல்ல பெண் பிள்ளை
அச்சீ லட்கியாங்—
நல்ல பெண் பிள்ளைகள்

வேற்றுமை யுருபு மாற்றம்

இந்தியில், கிழமை (உடைமை) வேற்றுமை ஆண்பாலொருமை யுருபாகிய 'கா' என்பது, அதனால் தழுவப்படும் பெயர் ஆண்பாலொருமையாகவே யிருப்பினும் வேற்றுமை யுருபேற்று நிற்பின், 'கே' என ஆண்பாற் பன்மை யுருபாகத்திரியும்,

எ. டு :

ராம் கே கர்மே—
இராமனுடைய விட்டில்

இந்நிலையில், வேற்றுமை யுருபேற்ற ஆகார வீற்று ஒருமைப் பெயரும் ஏகார வீறாகத்திரியும்.

எ. டு :

கம்லா கே லட்கே கோ—
கமலாவின் மகனுக்கு

இனி, வேற்றுமை யேற்ற பெயரைத் தழுவும் ஆகார வீற்றுப் பெயரெச்சமும், இத்தகைய தொடரில் ஏகார வீறாகத்திரியும்.

எ. டு :

ராம் கே படே கோடே பர்-
இராமனுடைய பெரிய ஆண் குதிரையின் மேல்

இதில், படா என்னும் பெயரெச்சம் படே எனத் திரிந்தமை காண்க.

இறந்தகால வினை

இந்தியில், இறந்த கால வினை செயப்படு பொருள் குன்றிய வினையாயின், எழுவாயொடு பால் எண்ணொத்து முடியும். லா (கொண்டு வா), போல் (சொல்), பூல் (மற) என்னும் மூன்றும் செயப்படு பொருள் குன்றிய வினையாகவே ஆளப்படும்.

எ. டு :

மைன் சோயா—
நான் தூங்கினேன்
க்ருஷ்ண போலா—
கிருட்டிணன் சொன்னான்
ராதா லாயி—இராதா
கொண்டு வந்தாள்
வே பூலே—அவர்கள்
மறந்தார்கள்.

இறந்தகால வினை செயப்படு பொருள் குன்றாவினையாயின், என்றும் 'நே' என்னும் விகுதி பெற்று, செயப்படு பொருள் வெளிப்பட்டு வேற்றுமை யுருபு தொக்கு நிற்பின்,எழுவாயோடொத்து முடியாது செயப்படு பொருளோடேயே பாலெண்ணொத்து முடியும்.

எ. டு :

மைநே ஏக் கோடா தேக்கா-நான் ஓர் ஆண் குதிரையைப் பார்த்தேன்
மைநே தஸ் கோடே தேக்கே-நான் பத்து ஆண் குதிரையைப் பார்த்தேன்
மைநே ஏக் கோடீ தேக்கீ-நான் ஒரு பெண் குதிரையைப் பார்த்தேன்
மைநே தஸ் கோடியாக் தேக்கீங்-நான் பத்துப் பெண் குதிரையைப் பார்த்தேன்

இறந்தகால வினை செயப்படு பொருள் குன்றா வினையாயினும், செயப்படு பொருள் தொக்கு நிற்பின் அல்லது வேற்றுமை யுருபுடன் கூடி நிற்பின், எழுவாயோடேனும் செயப்படு பொருளோடேனும் ஒத்து முடியாது ஆண்பால் ஒருமை வடிவு கொண்டே முடியும்.

எ. டு :

ஹம் நே தேக்கா-நாங்கள் பார்த்தோம்
மைநே உஸ் ஸ்திரீகோ தேக்கா-நான் அப்பெண்ணைப் பார்த்தேன்

இங்ஙனம், இந்தியிலக்கணத்தில் பல குழறுபடைகள் இருப்பதால், அதைப் புதிதாய்க் கற்கும் அயலார் மிகுந்த நினைவாற்றலுடனும் விழிப்புடனும் ஒவ்வொரு சொற்றொடரையும் அமைக்க வேண்டியிருக்கின்றது. ஆங்கிலத்தில் இத்தகைய தடுமாற்றமில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

புறப்படு மகனே

8

பட்டத்தரசி தன் மகன் வளர்மதியோடு விளையாடிக் கொண்டிருக்கின்றாள். அரசன் கவலை தோய்ந்த முகத்தோடு அந்தப்புரம் வருகின்றான். வளர்மதி ஓடி தன் தந்தையை யணைத்துக் கொள்கின்றான்.

வளர்: என்னப்பா என்னை காட்டுக்குக் கூப்பிட்டுபோறேனு ஏமாத்திகிட்டே வாரீங்கோ.

சங்: எத்தனைதரம் கேட்கிறான். வேட்டைக்குப் போரபோது கூட்டிக்கிட்டுபோனு என்னங்க.

ஊழி: வேட்டைக்கு போரபோதுதான் குழந்தைகளே கூப்பிட்டுக்கிட்டுபோறதா. என்னமோ தேர்திரு விழாவுக்கு போர மாதிரி சொல்றையே. காட்டாலே வந்த கலவரத்தைக் கொஞ்ச நேரம் மறந்திருந்தேன். திரும்பி பையன் கவனப் படுத்திவிட்டான்.

சங்: காட்டால் வினையா.

வளர்: புலி சிங்கம் கடிக்க வந்ததாப்பா. இந்தாப்பா வில்லு, என்று தன்கையிலிருக்கும் சிறு வில்லைக் கொடுக்கின்றான்.

கொஞ்சியகுரலில்,'நீங்கோ தனியா போனு பயப்படுவிங்கொனுதானேப்பா என்னை கூட்டிக்கிட்டு போகச் சொல்றேன்.'

சங்கேந்தி செல்லமாக கணவனது தவடையில் தட்டிக்கொண்டேகாட்டில் என்ன நடந்தது.'

மன்: காட்டில் ஒன்றும் நடக்கவில்லை. காட்டைக் கேட்டான் ஒருவன்.

சங்: ஏன், தவம் செய்யவா?

மன்: தவம் செய்ய அவ்வளவு பெரியகாடு எதற்கு? சிறிய குகையே போதுமே. வெளி நாட்டுக்காரன் ஒருவன். அவன் வேண்டுமென்று கேட்டான்.

வளர்: அவன் கரடியாப்பா.

மன்: மனிதன் தாண்டா, சங்கேந்தி. 99 ஆண்டுகள் குத்தகைக்கு வேண்டுமென்று கேட்டான்.

சங்: விருப்பம் இருந்தால் தந்திருக்கலாம்; இல்லை என்றால், இல்லை என்று சொல்லி யிருக்கலாமே. இதில் கலவரம் என்ன இருக்கிறது.

மன்னன் வைசாலி நாட்டு வேந்தன் பவணகேது தூதுவனை அனுப்பிவைத்ததையும், அவன் இறந்து விட்டதையும் சொன்னான். அவனோடுயாரோ போனார்கள் என்றீர்களே, அது யார் என்று கண்டு பிடித்து விட்டீர்களா என்றாள் அரசி.

மன்: இல்லை.

சங்: இறந்தவன் உடலாகிலும் கிடைத்ததா?

மன்: இல்லை.

சங்: தேட முயற்சிக்க வில்லையா?

மன்: முயற்சித்தோம், முடியவில்லை.

சங்: அந்த இடத்தைப் பார்வையிடலாமா?

மன்: காலை பார்வை யிடலாம்.

(இதே நேரத்தில் வேதியன் கஞ்சதாசன் வீட்டில்)

வேதியன் தன் மகள் வேதவல்லியை அழைத்து நம் குடும்பத்தின்மேல் அரசாங்கத்திற்கு சந்தேகம் வந்து விட்டதென்றும், இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் சொல்கின்றான்.

"நாம் எச்சரிக்கையாக இருந்து பயனில்லை. அவர்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நம்முடைய குடும்பத்திற்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் இரணசிங்கன் கோட்டையில் புல் முளைத்து விடும்". என்று ஆவேசமாகப் பேசுகிறாள், குற்ற முடையவர்கள்தண்டிக்கப்படும்போது ஊரார் உதவி கிடைப்பதில்லையம்மா. நாம் "குற்றம் செய்யாதவர்களாகவே இருக்கலாம், சாதாரண சுமையைத் தாங்கிக் கொள்ள வழி நெடுக சுமைதாங்கிகள் உண்டு. ஆனால் குற்றச் சுமையை குற்றம் செய்தவனேதான் கடைசீ வரையில் தாங்கித் தீர வேண்டும். இரண்டு தரம் தளபதி விருது பாண்டியன் நம் வீட்டுபக்கம் வந்தபோது இரண்டு தரமும் செத்துப் பிழைத்தேன். மன்னன் நம்மைக் காப்பாற்றுகின்றான் என்றாலும், பகைத்தால் வாழ மாட்டோம். மழை தருகிற வானத்திலே தான் இடியும் மின்னலும் இருக்கிறது என்பதை நீ அறிய மாட்டாய். இதற்குள் சூள் உரைக்கப் புறப்பட்டுவிட்டாய். நான் போவதைப் பற்றி கவலையில்லை. பிறகு தாயற்ற உன் நிலை என்ன. அதை நினைத்து தான் கவலைப் பட்டுக் கொண்டிருக்கின்றேன். சிறு பிள்ளை விட்டவேளான்மை வீடுவந்து சேராது என்ற பழமொழி போல் சிறு பிள்ளை நீ உன்னை மறந்து எதை எதையோ பேசுகிறாய். பெண்களுக்கு அடக்கம் என்ற ஒரு அணிகலனிருந்தால் வேறு எந்த விலையுயர்ந்த அணி கலன்களும் வேண்டாம் அம்மா வேதவல்லி" என்று சொல்லிவருத்தப் படுகிறான் வேதியன் கஞ்சதாசன். ஆனால் இவனுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்ற ஐயம் தவிர வேறொன்றுமில்லை. ஆனால் தன் மகளுக்கு இந்த புத்திமதிகள் சொன்னதற்குக் காரணம். அவள் வெகுண்டெழுந்துசூள் உரைத்தக் காரணத்தினால் தான். இது முதல் அவளுக்குக் கோபம்வரக்கூடிய எதையும் சொல்லக் கூடாதென்று முடிவு செய்து கொண்டான். ஏனெனில் தாயற்றவள். ஆறுதல் சொல்ல அடுத்து ஒரு ஆள் இல்லை. அதனால்.

விடிந்ததும்

முன்னாள் மாலை மன்னன் ஊழிவெள்ளம் தன்மனைவிக்கு சொல்லியிருந்தபடி மன்னனும் அவன் பட்டத்தரசி சங்கேந்தியும் வளர்மதியை அழைத்துக் கொண்டு கடலோரம் போகிறார்கள். அங்கே மணற்பரப்பில் இவர்களுக்காக அமைக்கப் பட்டிருந்த கூடாரத்தில் கொஞ்ச நேரம் இளைப்பாறி விட்டு, உடைகள் கிடைத்த இடத்தையும், அவன் இறங்கியதாக சொல்லப் பட்ட இடத்தையும் பார்வை யிடுகிறார்கள். அவன் இறங்கியதாகச் சொன்ன இடத்தில் சேரும் சகதியுமாகஇருந்தது. அவன் இறந்து விட்டான் என்றறிந்தவுடன் அந்த இடத்தை யாரும் நெருங்கா வண்ணம் காவல் போட்டிருந் தார்கள் காலடிகளைக் கவனித்துக் கொண்டுவந்தசங்கேந்தி மெள்ள மன்னன் காதில் ஏதோ சொன்னாள்.

வளர்மதி, "அம்மா எனக்கும் சொல்லும்மா" என்று கெஞ்சுகிறான். விளையாட்டுக்காக அவன் காதிலும் ஏதோ சொல்லி பிடிவாதம் பிடித்த மகனை சமாதானப் படுத்தினாள் சங்கேந்தி

மனைவி காதில் சொன்னதைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டு, "ஆ, அப்படியா அவளுக்குத் திருமணம் ஆகவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும். திருமணம் ஆனவள் இதில் சம்மந்தப் பட்டிருக்கக் கூடாதா என்கிறான். இல்லை, திருமணமாகாதவள்தான் இதில் சம்மந்தப் பட்டிருக்கிறாள்,' என்பதற்குக் காரணத்தையும் இரகசியமாகச் சொன்னாள். அதை மன்னன் ஒருவாறு நம்ப வேண்டியிருந்தது. "அப்படியானால் என்ன நடந்தது என்பதைக் கண்டு பிடிப்பது அவ்வளவு கடினமல்ல" என்கிறாள் சங்கேந்தி. "எத்தனை நாளில் கண்டு பிடிக்கலாம்" என்று கேட்கின்றான்மன்னன். "ஒரு திங்களுக்குள் கண்டு பிடிக்கலாம்" என்கிறாள் சங்கேந்தி. அதற்குள் பையன் குறுக்கிட்டு 'என்னை யனுப்புங்கோ அப்பா. நான் ஒரே நாள்ளே கண்டு பிடிச்சூட்றேன்' என்கிறான்.

மன்: என்னத்தெ.

பையன்: புலியை

தாய் அவனை வாரி அணைத்துக்கொள்கிறாள். மன்னன் கவலையோடு—'ஒரு திங்களாகுமா—அதுவரை அவன் பொறுக்க வேண்டுமே?'

சங்: யார் அது?

மன்: பவணகேது. அவன் கொஞ்சம்சுறுசுறுப்புடையவனாக இருந்தால இன்னேரம் வேறு ஒரு ஆளையனுப்பியிருக்க வேண்டும். எதற்கோ இது வரையில் சும்மா யிருக்கின்றான். காரணம் தெரியவில்லை. முயற்சி செய் நீ அந்தப் பெண் யார் என்று கண்டு பிடித்தால், தூதுவன் நிலை என்ன ஆயிற்று என்று கண்டு பிடித்து விடுவேன்.

அதற்குள் மீனவர்கள் தங்கள் தங்கள் கட்டு மரங்களை கடலில் மிதக்கவிட்டு கடலில் செல்லுகின்றார்கள். தானும் கட்டு மரத்தில் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறான் வளர்மதி. எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. ஒரு மீனவனை அழைத்து பையனைக் கொஞ்ச தூரம் கொண்டுபோய் வரும்படி கட்டளை யிடுகிறான். "பையன் பயப்படுவானே" என்கிறான் வலைஞன். "கொண்டு போ. பிடிவாதமும் குறையும், பயமும் தெளியும்" என்கிறான் மன்னன். மகனை கட்டு மரத்தில் ஏற்றியனுப்பிவிட்டு சங்கேந்தி வைத்தக் கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். "தமிழோடு பிறந்த கடல், தமிழரெடுத்த முத்தோடு பிறந்த கடல், முத்தமிழ்—மூவேந்தர் முச்சங்கம், முக்கடல், முப்பால் தந்த குறள் தமிழ்த் தரணிக்கே சொந்தமானவை. கடலைத் தமிழன் அடக்கியாண்டிருக்கின்றான். கடல் தமிழனை யடக்கியதில்லை." என்று மன்னன் சொல்லிக் கொண்டிருக்கும்போதேகட்டு மரத்தில் உயர உயரக் கிளம்பிப் போய்க் கொண்டிருந்த வளர்மதி கடலில் மிதந்து வந்த கிளை ஒன்றை எடுக்க தாவி கடலிலே குதித்து விட்டான்.'ஐயோ' என்ற பெருங்குரல் எழும்பிற்று கரையில். சங்கேந்தி அலறித் துடித்து கடலை நாடி ஓடுகிறாள். மன்னன் தடுத்து நிறுத்தி தானே ஓடுகிறான். சுற்றியிருந்த மீனவர்கள் அவரவர்கள் கட்டு மரத்திலிருந்து கடலிலே குதித்து பையனைத் தேடுகிறார்கள். இதற்குள் செய்தி அரண்மனைக்கு எட்டி விட்டது.எல்லோரும் ஓடி வருகிறார்கள்—களஞ்சியம், புரவி மாடன், அவன் மகள் பூங்குழல், கஞ்சதாசன், அவன் மகள் வேதவல்லி அனைவரும் வந்து விட்டார்கள். எல்லாரும் கவலை தோய்ந்த முகத்தோடு கரையில் நின்று கொண்டிருக்கின்றார்கள். அங்கே நின்றுக் கொண்டிருந்த பாய்மரக்கப்பலிலிருந்தவர்கள் அனைவரும் கடலில் குதித்துத் தேடுகிறார்கள். பையனைக் காணவில்லை. ஒரு பிணத்தைத் தேட வந்து மற்றொரு பிணத்தைக் காணவா வந்தோம் என்று சொல்லாமல் சொல்லிக் கதறுகின்றார். 'மன்னனுக்குச் சோதனைக் காலம் ஒரே மகன் ஆளப்பிறந்தவன் ஆராத்துயர் தந்து விட்டான் பெற்றோருக்கும் பிறந்த பொன்னாட்டிற்கும் தரும சிந்தை யுடையவர்களுக்கும் இப்படித்தான் துன்பங்கள் அடுக்கடுக்காய் வரும்போலும் என்று பொதுமக்கள் பேசிக் கொள்கின்றார்கள். அரண்மனையில் ஏற்றிவைத்த ஒரே ஒரு விளக்கு அணைந்து விட்டது. இரணசிங்கன் கோட்டையையிருள் கௌவிக் கொண்டது. சாதாரண மனிதர்களானால் சாதாரணமானவர்கள் சமாதானம் சொல்லலாம். மன்னனுக்கும் அரசிக்கும் யார் ஆறுதல் சொல்ல வல்லவர்கள் என்றெல்லாம் பேசி நின்றார்கள். வாழ்க்கை இவ்வளவுதான் என்று வறண்ட வேதாந்தம் பேசினார் வேதியர்.

அதோ! என்றதுஒரு குரல். எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். நனைந்த உடைகளோடு வளர்மதி ஒரு குதிரையின் மேல் ஏறிக் கொண்டு வருகின்றான். தாய் ஓடிப் போய் அவனைக் கீழேஇழுத்து மார்போடுஅணைத்துக்கொண்டாள். தந்தையும் தழுவிக் கொண்டான். கடலிலே குதித்த அவனை அலை கொஞ்சம் தொலைவிலே கொண்டு போய் கரை சேர்த்துவிட்டது. அங்கே இந்தஅபாயச்செய்தியைக் கேட்டு அரண்மனையிலிருந்து ஓடிவந்த குதிரை வீரன் மரத்தடியிலே விட்டிருந்த குதிரையின் மீது அதே மரத்தின் துணைக் கொண்டு குதிரை மீதேறி வந்தான் வளர்மதி.

எல்லாரும் களிப்பெய்தி அரண்மனைக்கு வந்தனர்.

வைசாலி நாட்டு தூதுவனை இட்டுச் சென்ற பெண் யார் என்று கண்டு புடித்து விட்டேன்என்றாள்சங்கேந்தி. 'உண்மையாகவா?' என்றான் மன்னன். அவள் யார் என்று தெரியத் தனக்கிருக்கும் ஆவலைக்காட்டினான். அவசரப்படாதீர்கள் என்று கையமர்த்தினாள். உண்மை வெளிச்சத்தின் அருகில் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் அது சரியான நிலைக்கு வந்துசேர இரண்டே நாட்கள் போதும். ஆனால்நாம் திடீர்திடீர்என்று காரணம் சொல்லாமலே சிலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். அவர்கள் விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. விசாரணையும் கூடாது. இதற்குத் தாங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா என்று கேட்கிறாள் சங்கேந்தி. சரி என்று ஒப்புக் கொள்கின்றான் மன்னன்.

(வைசாலியில் பவணகேதுவின் அவைக்களம)

பவணகேது! மிகக் கோவமாக அரியாசனத்தில் அமருகிறான்.

அமைச்சன் சூர்மா சந்ந் காரணம் தெரியாமல் விழிக்கின்றான். கேட்கத் தொடங்குகின்றான்.

"பவணகேது:நல்லமன்னர்கள், நல்ல முன்னோர்கள் ஆடுகளையும் மாடுகளையும் பலி கொடுக்கக் கூடாதென்று அன்று அவர்கள் செய்த முறை, இன்று நம்மை வெகுவாகப் பாதித்துவிட்டது.ஆரியர்கள் செய்யும் அஸ்வமேத யாகத்தால் ஆடு, மாடுகளுக்கு அவ்வளவு கேடு வருவதில்லை. ஏனெனில் அஸ்வமேத யாகத்தில் வெறும் குதிரைகளையே பலியிடுகிறார்கள். மக்கள் தொகையைவிட நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றன, ஆடுகளும், மாடுகளும். இவைகளை மேய்க்கக் காடுகள் இல்லையென்றுதான் தமிழ் வேந்தனிடம் தூது அனுப்பினோம். அவன் என்னஆனான்?அவனுக்குக்கிடைத்த பதில் என்ன? கர ஒப்புக்கொண்டானா இல்லையா என்பது ஒன்றும் தெரியவில்லை. மற்றோர் ஆள் அனுப்பலாம் என்றால் அது கேவலமாகத் தெரியுமே என்று யோசிக்கவேண்டியிருக்கிறது.

சூர்மா சந்த்: அவன் தர ஒப்புக் கொண்டிருந்தால் இந்நேரம் வந்திருப்பானே!

பவணகேது: உம்! மறுத்ததால் இவனே காடுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றானோ—நல்ல யோசனை சொல்கிறீர். உண்டு, இல்லைஎன்று உடனே வந்துசொல்லவேண்டியதுதானே இவன் வேலை?

சூர்மா: தெற்கே போகின்றவர்கள் யாரும் விரைவில் திரும்பி வருவதில்லை.

பவண: ஏன்! அது என்ன சுடுகாடா?

சூர்மா: சுடுகாடாயிருந்தால் தான் அவன் திரும்பியே வரமாட்டானே. விரைவில் வரமாட்டார்கள் என்று சொன்னேன்.

பவண: அப்படி என்ன கவர்ச்சி இருக்கிறது, அங்கே?

சூர்மா: அவர்களோடு பழகி விட்டால் பிரிய மனம் வராது.

பவண: பெண்களோடா, ஆண்களோடா?

சூர்மா: இதுஅவர்கள் காதுக் கெட்டினால் போர் முரசு கேட்கும்.

பவண: கேட்கும் கேட்கும். பவணகேது ஏமாந்தால் கேட்கும். வேறு என்ன கவர்ச்சி அங்கே?

சூர்மா: இயற்கைக் காட்சிகள். வற்றாத ஜிவநதிகள். சந்தன மணம், மிளகின் நெடி. முத்தின் ஒளி. பொன்னின் பொலிவு எல்லாம் உண்டு அங்கே. வாணிபப் பொருள்களால் வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள், மொழியாராய சங்கங்கள் உண்டு அங்கே. பாவாணர், கலைஞர், கவிஞர்கள் மதிக்கத் தகுந்த நிலையினர் அங்கே. அறிஞர்கள் பலரைப் பெற்றெடுத்திருக்கிறது,அந்தப் பூமி.மென்மை மனத்தினர். ஈகை நெஞ்சினர். ஆனால் வெஞ்சமருக் கஞ்சாத வீரர்கள். இல்லையானால் நாம் ஏன் அவர்களிடம் காடு வேண்டி தூதனுப்புகிறோம்?

பவண: நாம் அவைகளை இலவசமாகக்கேட்கவில்லையே!

சூர்மா: நாம் எவ்வளவு தருவோம் என்றும் அவர்களுக்குச் சொல்ல வில்லையே—

பவண:அவர்கள் முதலில்காடுகளைத் தர ஒப்புக் கொள்கிறார்களாஇல்லையா என்று தெரிந்தால் அல்லவா தொகையை முடிவு கட்ட முடியும்.எதற்கும்தூதுவன் வரட்டும். அவன் வந்து சேர வேண்டிய கெடுவுக்கு மேல் ஏழு நாட்களாய் விட்டது.

இந்நிலையில் காவற்காரன் வந்து தமிழக வேந்தன் ஊழி வெள்ளத்திடமிருந்து ஒரு தூதுவன் வந்திருப்பதாகச் சொல்கின்றான்.

'உள்ளே வரவிடு' என்கிறான் மன்னன்.

வந்த தூதுவன் ஓலை யொன்று தருகிறான். அந்த அவைக்களத்தில் பிரதாப குப்தர் என்பவர் தமிழறிந்தவர். அவர் அதைப்படித்து காட்டுகிறார்.

"மாட்சிமைதங்கியமன்னன் பவணகேது அவர்களுக்கு எழுதியது வணக்கம். தங்கள் தூதுவனிடம் சொல்லியனுப்ப வேண்டிய விடை இன்னும் தயாராகவில்லை. காடுகள் சம்மந்தமாகத் தாங்கள் கொண்டிருக்கின்ற எண்ணம் முற்றுபெறலாம். அவைகளிலிருக்கிற ஒரு சில சிக்கல்களைத் தீர்த்த பிறகு தூதுவனிடம் நல்ல முடிவைசொல்லி யனுப்புகின்றோம். பொறுத்தருள்க! என்று மட்டும் எழுதப்பட்டிருந்தது.

பவண: நாளாகுமானால் தூதுவனையனுப்பி விட்டிருக்கலாமே. 'அவன்தாய் அடிக்கடி வந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவன் திருமணத்திற்கு நாள் வைக்க வேண்டுமாம். அவையில் வழக்கும் போல் நடக்கும்.ஆடல்பாடல்நடக்கின்றது. முடிந்ததும் அவை கலைகிறது. மன்னன் பவணகேது தோட்டத்தில் ஏதோ சிந்தித்த வண்ணம் இரண்டு கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு முன்னும் பின்னும் திரிந்து கொண்டிருக்கின்றான்.

ஒருவேளை தூதுவனுக்குஏதாவது நேர்ந்தால் தூதுவனைத் தொல்லைப் படுத்தக்கூடாதே. பின் ஏன் இவ்வளவு நாட்கள் என்றெல்லாம் தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கின்றான்.

வானத்தை அண்ணாந்து பார்க்கின்றான்.இரண்டு புறாக்கள் ஜோடியாகப் பறந்து காண்டிருக்கின்றன. ஒன்றின் காலில் ஓலைச் சுருள் ஒன்றுகட்டப்பட்டிருக்கிறது. அவைகள் இரண்டும் பூந்தோட்டத்தில் இறங்கியவுடன், வேலைக்காரனை விட்டு அவைகள் இரண்டையும் பிடித்து வரும்படிச் சொல்லி, ஒன்றின் காலில் கட்டப்பட்டிருந்த ஓலைச் சுருளைப் படிக்க முடியாமல் பிரதாப குப்தரை அழைத்து வரச்செய்து அவரிடம் இதைப் படித்துக் காட்டும்படிக் கேட்கிறார். அவர் படித்தவுடன் பொல பொல வெனக் கண்ணீர்விடுகிறார்.

மன்னன் காரணம் தெரியாமல் பதறினான். "குப்தரே! அழுகையை நிறுத்திச்செய்தியைச் சொல்லும்."

"தென்னகம் சென்றிருந்த தூதுவன் செத்துவிட்டான்."

மன்னன் கண்களிலே தீப்பொறி பறக்க, "தூதுவன் செத்து விட்டானா—சாகடிக்கப்பட்டானா-பிரதாபகுப்தரே! கண்களைத் துடைத்துக் கொண்டு சரியாகப் படியும். கண்களிலே நீர் இருந்தால் எழுத்துக்கள் ஆடும். இரண்டாகத் தெரியும், உருமாறவும்கூடும்."

பிரதாப குப்தர் கண்களைத் துடைத்துக்கொண்டு நிதானமாகப் பார்க்கிறார். அதில் தூதுவன் இறந்தான் என்று மட்டிலுமேஇருக்கிறது. விளக்கங்கள் ஒன்றும் இல்லை.

மன்னன்: கீழே கையெழுத்திருக்கிறதா?

குப்தர்: இல்லை.

அதற்குள் அமைச்சர் வரவழைக்கப்பட்டார். அவர் இந்தச் செய்திகளை எல்லாம் கேட்டு எதிலும் நிதானம் வேண்டும். அப்படி ஏதாவது நடந்திருந்தால் மன்னனே நமக்கு இதை அறிவிப்பார். ஒரு நாட்டானுக்கு பிற நாட்டில் தற்செயலாக எந்த விபத்தும் ஏற்படாதென்பதுஎன்ன நிலை. அப்படிஏதாவதுஏற்பட்டதென்றாலும்நமக்குஅறிவிக்காமலிருக்கமாட்டார்கள். போர்க்களத்தில் பலரை சாகடித்து, அவர்கள் துள்ளிச் சுருண்டுவிழுவதைப் பார்த்துப்பழகிவிட்ட எந்த மன்னனும் ஒருவன் இறப்புக்காக அதிர்ச்சி கொள்ள மாட்டார்கள். நீங்கள் அதிர்ச்சி கொள்வது தான் எனக்கு வியப்பாக இருக்கிறது. அப்படியே அவன் இறந்திருந்தால் பிணமாவது இங்கே வந்து சேர்ந்திருக்கும். அல்லது பிணத்தையே கண்டுபிடிக்க முடியாததான முறையில் அவன் இறந்து விட்டான் என்று வைத்துக் கொண்டாலும், செய்தியைப் புறாவின் காலிலா கட்டிவிடுவார்கள்? ஏன், அவர்களிடம் தூதுவர்கள் இல்லையா. ஒருவன் உயிருக்காக போர்த்தொடுக்கப் போகிறோமா. இல்லையே! காரணம்கேட்போம்.உண்மைதான் என்றால் நட்டஈடுகேட்போம். ஒருவன் வாய்ச் சொல்லுக்காகப் பலர் மடிவது தான் மன்னராட்சி. ஒரு உயிருக்காக பலர் மடிவது மன்னராட்சியல்லவே! மக்களாட்சியல்லவா. நமது நாடு எப்போது மன்னராட்சியிலிருந்து மக்களாட்சிக்கு மாறியதோ எனக்குத் தெரியவில்லை. யாரோ இப்படி ஒரு ஓலையைப் புறாவின் காலில் கட்டிவிட்டு வீண் புரளி செய்து கொண்டிருக்கின்றான். சில நேரங்களில் விவேகம் பயன்படுகின்றஅளவுக்கு வீரம் பயன்படுவதில்லை. இன்

சி.பி.சிற்றரசு

(11-ம் பக்கம் பார்க்க)

மனிதனிடத்தில் மட்டுமல்ல மாற்றம் மற்ற உயிர்களிடத்தும் உண்டு

வே. சௌந்தரராசன்

ஒவ்வொருவரும் தத்தமது நலன்களைத் தாமே செய்துதான் பெறமுடியும். சமுதாயத்தின் சூழ்நிலை ஒவ்வொருவரையும் பாதிக்கிறது. அச் சூழ்நிலையின் பிடிப்பும், வேகமும் ஒவ்வொரு பழக்கம் கருத்து ஆகியவற்றைத் தொடாமலிருக்காது. சமுதாயம் தனி மனிதனைத் தூண்டி விடலாம் அல்லது தனி மனிதனும் சமுதாயத்தைத் தூண்டிவிடலாம். அடிமை வியாபரம் எனும் கொடுமையைக் களையவேண்டும். என்ற

★ மன்னனும் மகேசனும் மரப் பொம்மைகளென்றால் அன்பு செலுத்துவது யார்?

உணர்ச்சியைச் சமுதாயம் தூண்டி விட்டது, சாதிக் கொடுமைக்காகச் சமுதாயம் தூண்டி விட்டது, அதே போல் சமுதாயத்தில், பொது சொத்துரிமை யென்ற பொது வுடைமை, மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் எல்லாம் தனிமனிதன் தூண்டிவிடும் எண்ணங்களாகும். இயலாதோர்க்கு இரங்குதல் சமுதாய அறமாகும். ஆனால் இரக்கத்திலும் பொருள் வந்துவிடக் கூடாது. அறம் அல்லது 'தர்ம காரியம்' என்று சொல்லி உள்ளத் தூய்மையில்லாமல் மக்களை ஏதோ ஒரு மறைமுகமான அளவில் ஏமாற்றுகிற போக்கு இருந்தால் அது தவறு, அது அறமாகாது. அப்படிப்பட்டதோர் அறம் குற்றம்கூட ஆகும் என்பதே ஸ்பென்சரின் நோக்கமாகும். அதனால்தான் கொடை பல பாவங்களுக்கு இடமளிக்கிறது என்றார். இங்கே பாவம் என்று நேர்மைக் குறைவையே குறிப்பிடுகிறார்.

வளர்நிலை மாற்றங்கள் :

உலகின் துறைகள் பலவும் பல்வேறு மாற்றங்களை அடைந்துகொண்டே வருகின்றன. எந்த ஒரு துறையும் அது தோன்றியவாறே இன்னும் இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. மனித குணமும் நாளுக்கு நாள் புதிய மெருகடைந்து மிளிர்கிறது. வரையறையற்ற துன்பமான வாழ்க்கை முறை ஒழிந்து பாதுகாப்பு, இன்பம், புகழ் எனத் தகுந்த நன்னெறிகளை விலகிக்கொண்டே செல்கின்றது பொருட்களின் தன்மைகளும் விளங்கிக் கொண்டே வருகின்றன. பூமி தட்டையெனப்பட்டதுபோய் உருண்டைதான் அதன்வடிவமைப்பு என்று உறுதிப்படுத்தப்பட்டாகிவிட்டது.அரசன் என்றால் யாரோ ஒரு முரடன் எனப்பட்டான். அவன் ஆண்டவனின் பிரதிநிதி எனவும் கருதப்பட்டான். ஆனால் மாறும் காலம் அதை நிர்ணயித்து அரசனும் கடவுளும் யார் யார் என்று விளம்பிவிட்டது. இன்று அரசன் என்றால் மக்கள் விரும்பாத ஒரு மடமையான ஏற்பாட்டின் பழமைச் சின்னம் என்றாகிவிட்டது. அரசனுக்குள்ள தகுதி, வசதி எல்லாம் பொருளற்றவை என்று வாதிடப்பட்டு இன்று அக்கூற்றுகள் நடைமுறையில் வெற்றி நடைபோட்டு வருகின்றன. உலகம் என்றாலே கொடுங்கோல்மன்னர்களும் இடைவிடாத தொல்லைகளும் நிறைந்த ஒரு முட்புதர் என்றுஅருவெறுத்த நிலைபோய் இன்று அது ஒவ்வொருவரின் முயற்சிக்கும் ஆவலுக்கும் பெரும் அளவு இடங்கொடுத்து அன்புடன் அரவணைத்துச் செல்லும் அரு

அச்சம் மனிதனை ஆராயத் தூண்டும்

இருக்க வேண்டும். அது ஏமாற்றமாகிவிடக் கூடாது. அதாவது பாவனை செய்வோரை ஒதுக்கிப் பயன்பட வேண்டியோர்க்கே நலன் செய்வதுதான் நல்லறம், அல்லது இரக்கம் எனலாம். கொடை யளிப்பதிலும் குறிப்பான நேர்மையான தன்மைகள் இருக்கவேண்டும். அரசாங்கத்தை ஏமாற்றிவிட்டு அப் பணத்தைக் கொண்டு ஒரு கல்விக் கூடம் கட்டுவதில் சிறப்பில்லை. பலரை வஞ்சித்த பணத்தைக் கொண்டு கோவில் காரியங்கள் செய்வது; அல்லது மோசடியைத் தெரிந்து கொண்டே அத்தகைய அலுவல்களுக்கு உடன்படுவது என்ற தன்மை; குழப்பம். விளைவிப்பதற்காக என்று பணம் செலவிடுதல் அல்லது பொது நலனைக் கெடுக்கத் தூண்டுகோலாய் இருத்தல் என்ற செயல்கள் எல்லாம் அறமாகா. சமுதாயத்திற்கு முரண்பட்ட அலுவல்கள் அவை. அறம் என்ற பெயர். அநேக குற்றங்களை மூடி மறைக்கின்றது என்றார் ஹெர்லர்ட்ஸ்பென்சர் எனும் சமுதாய இயல் ஆராச்சிக்காரர். (Chari covers a multifide of Sins) இதனால் கொடையே தவறு, நன் கொடையளிப்பவர்கள் எல்லாம். இதே தவறுடையவர்கள் தான் என்ற முடிவிற்கு நோக்கிவாழ்க்கை அமைந்து வருகிறது. ஒவ்வொரு முறையும் பழக்கத்தில் வந்து பிறகு நீண்ட நாட்கள் கழித்து அதன் தொடர்பு நீடிக்க வேண்டுமா அல்லது நிறுத்தப்பட வேண்டுமா என்று அறுதியிடப்படுகிறது. பழங்காலத்திலிருந்து வந்த குடியிருப்பு முறையும் கடவுட் கொள்கையும் இன்று இல்லை. எங்கேயாவது மரத்தடியில், மலையோரங்களில் வசித்து, நாவிற்குச் சுவையெனப்பட்டதைத் தின்று வந்தனர். ஆனால் இன்று ஒருவர் தம்க்குக் குடியிருக்கும் இடம், உணவு முறை எல்லாம் முற்றிலும் ஆய்ந்தே மேற்கொள்ளுகிறார். சற்றும் யோசிக்காமல் யாரும் எங்கேயும் போய்க் குடியிருக்கமாட்டார்கள். ஏன்? துறவிகள்கூடத் தங்களுக்கென ஒரு சிறு வசதியை இன்று அமைத்துக் கொள்ளுகிறார்கள் இது தேவையின் வற்புறுத்தலால் எழும் தெளிவான ஏற்பாடுகள். முன்பு கடவுளைக் கல்லிலும், மின்னல் வெட்டிலும், இடிமுழக்கத்திலும் கண்டு அஞ்சி ஒழுகியவன் இன்று அவற்றைத் தீவிரமாய் நுட்பமாய் ஆய்ந்துஒவ்வொன்றின் காலம். வன்மை, பரிமாணம், உருமாற்றம் ஆகிய வளர்நிலைகளைக் கணக்கிட்டு முடிவு கட்டி வருகிறான். அச்சம் தொடர்ந்த ஆராய்ச்சியால் மையானதோர் அமைப்பு என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. மதங்கள் எல்லாம் மன்னர்களின் கட்டளைகள் தான் அல்லது அரண்மனைச் சடங்குகள் தான் என்று நினைத்தார்கள். இன்று அது இல்லை காரணம்,மதங்களால் வெளிப்படையாகச் சமத்துவத்தைப் பற்றிப் பேசமுடியவில்லை. அன்பையும் முழுவதுமாக விளக்காமல் சிலருக்கு அவ்வன்பு உணர்ச்சி இருக்கக் கூடாத பண்பாகவும் கற்பித்தார்கள். ஏழைகள் எல்லாம் பாவத்தின் சின்னங்கள், அவ

★ மிதிபட்டவர்கள் மிஞ்சிவிட்டார்கள், அஞ்சி வாழ்ந்தவர்கள் அகமலர்ந்து இருக்கிறார்கள்.

ரவர் தம்முன்பிறவியில்செய்த தவறின் விளைவுகள், ஆண்டவனின் அன்பை என்றும்பெற முடியாதவர்கள்என்று விலக்கி வைத்தார்கள். இன்று அந் நோக்கம் மாய்ந்து மங்கிவிட்டது. ஏழை பாட்டாளிகளின் எண்ணம் எதுவோ அதுதான் ஏற்றம்பெற முடியும் என்ற சூழ்நிலை வளர்ந்துவிட்டது. மிதிபட்டவர்கள் மிஞ்சிவிட்டார்கள். அஞ்சிவாழ்ந்தவர்கள் புதிய நம்பிக்கையோடு அகமலர்ந்து இருக்கிறார்கள். இது மாறும் உலகின் ஒரு கட்டம்.

பயந்து செத்தவர்கள் இன்று புதுப்பாதை செல்கின்றனர்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

II வேற்றுமை

1. சொல்வளம் :

உலகில் மிகுந்த சொல் வளமுடையது ஆங்கில மொழி. **Cbapel, Church, Cathedral** என்னும் முச்சொல்லும் முத்தரமான கோயிலைக் குறிப்பன. **Fair, beautiful, handsome, pretty** என்னும் சொற்கள் வெவ்வேறழகை உணர்த்துவன. **Notorious, famous** என்னும் சொற்கள் முறையே, வசையும் புகழும் பற்றியன. **Regulation, rule, law, actstatute, ordinance** என்னும் சொற்கள், வெவ்வேறு வகைச் சட்டத்தைக் குறிப்பன.

இந்தியில் இத்தகைய சொல்வளமில்லை. அவன் அவள் அது என்னும் பெயர் வேறுபாடும், இருக்கிறான் இருக்கிறாள் இருக்கிறது என்னும் வினை வேறுபாடும் கூட இந்தியிலில்லை.

வஹ் ஹை — அவன் இருக்கிறான் / அவள் இருக்கிறாள் / அது இருக்கிறது

ஆங்கிலங் கற்க ஆறாண்டு செல்லுமென்றும், இந்தி கற்க ஓராண்டு போதுமென்றும், கூறுவர் சில இந்தி வெறியர். இதற்குச் சொல் வளமுண்மை இன்மையுமே காரணம். சீகாழியைப் பார்க்க ஒரு நாளும் சென்னையைப் பார்க்க ஒரு மாதமும் வேண்டுமெனின்,சென்னைக்கு உயர்வா, இழிவா?

ஆங்கிலம் சொல் வளம் பெற்றது. உலகிலுள்ள பல மொழிகளினின்றும் கடன் கொண்டதினால் என்பது உண்மையே. ஆயின், ஆங்கிலேயரின் நாகரிகப் பண்பாடும் அறிவு வளர்ச்சியுமன்றோ ஆங்கில வளத்திற்கு அடிப்படைக் காரணம். கடன் கொள்வதினால் மட்டும் ஒரு மொழி ஆங்கிலத்தின் நிலைமை அடைந்து விடுமா? புலியைப் பார்த்து பூனை சூடிட்டுக் கொண்டால் புலியாய் விடுமா? ஆங்கிலம் உலகமொழியாகி விட்டதனாலும், ஏனை மொழிகளின்று கடன் கொள்வது அதற்கு ஏற்பதே. உலக மொழி ஒன்றுதானிருக்க முடியும். எல்லாரும் பல்லக்கேறினால் எவர் தூக்குவது?

2. அறிவியலிலக்கியம்

இக்காலக் கல்வியெல்லாம் அறிவியற் கல்வியே. அறிவியலிலக்கியம் பற்றி ஆங்கிலத்திற்கும் இந்திக்குமுள்ள ஏற்றத்தாழ்வு அரசனுக்கும் ஆண்டிக்குமுள்ள அளவினதே.

3. மொழி வழங்கும் பரப்பு

ஆங்கிலம் உலகமொழி; இந்தி ஒரு நாட்டு மொழி.

4. புராணத் தொடர்பு

மக்கட்குப் பேதமையூட்டி மாக்களாக்கும் புராணத் தொடர்பு இந்திக்குண்டு, ஆங்கிலத்திற்கில்லை. இந்தியிலக்கியத்தைக் கற்று எய்தும் பயன் மலை கல்லி எலி பிடிப்பது போன்றதே.

5. ஆட்சி மூலம்

ஆங்கிலம் ஏற்கெனவே ஆட்சி மொழியாய் ஆற்றலுடன் இருந்து வருகின்றது, இந்தி இனிமேல் தான் ஆக வேண்டும்.

ஒரு மொழி வளர்ச்சி இயல்பாகவும் மெல்ல மெல்லவும் அமைதல் வேண்டும். திடுமென ஆயிரக்கணக்கான சொற்களைக் கடன் கொள்வது, வளி (வாத) நோயால் உடல் விரைந்து ஊதத்தங் கொள்வது போன்றதே. ஆயிரக்கணக்கான ஆங்கிலக் குறியீடுகளையும் சொற்களையும் கடன் கொள்வதை விட ஆங்கிலத்தை அப்படியே வைத்துக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

ஏற்கனவே நெடுங்காலமாகத் தொடர்ந்து வரும் வடமொழி — தென் மொழிப் போராட்டத்தினால்,வடமொழி மீது தமிழர்க்கு வெறுப்புண்டாகியுள்ளது. இன்று கட்டாய இந்தியும் வந்துளதால், வடவர்க்கும் தென்னவர்க்கும் நாளடைவில் கடும்பகை மூள்வதற்கே வழி கோலப்பட்டுளது. இந்தியா முழுவதையும் ஒன்றாய் இணைத்ததும் இணைக்கின்றதும் இணைப்பதும் ஆங்கிலம் ஒன்றே. இந்திக்கு இவ்வாற்றல் எள்ளளவும் இல்லை. அதனால் பிரிவினையும் போரும் உண்டாகுமேயன்றி ஒற்றுமையும் அமைதியும் உண்டாகா. ஆகவே, இந்தியாவின் முன்னேற்றத்தை உண்மையாகக் கருதுவோரெல்லாம் இந்தி வம்பை விட்டுவிட்டுத் தெளிந்த மதியுடன் ஆங்கிலத்தையே போற்றுவாராக.

இந்தி இந்தியப் பொது மொழியாகும் தகுதியற்றதென்றும், தமிழ்நாட்டிற்கு இந்தி தேவையில்லையென்றும், தீர ஆய்ந்து தெளிந்த மறைமலையடிகளும் அவர் வழி நின்ற பண்டாரகர் (Dr) சோமசுந்தர பாரதியாரும், கட்டாய இந்தியைப் பேச்சாலும் எழுத்தாலும் கடுமையாக எதிர்த்தனர். நூற்றிற்கெண்பதின்மர் எழுதப் படிக்கத் தெரியாத இந்நாட்டில், கல்வியும் மொழியும் இலக்கியமும்பற்றிக்கருத்துக் கூறத்தக்கார் தமிழ்ப் புலவர் பெருமக்களே. அவர்களின் தலைவரான இருபெரும் புலவரும் இந்தி வேண்டாமெனச் செய்த முடிபே, தமிழ்நாட்டிற்கு முடிந்த முடிபாம்.

★ டாக்டர் மு. வ. வாழ்த்து ★

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30

3.9.60

'இனமுழக்கம்' மலர் வரப்பெற்றேன். மலர் நல்ல வேலைப்பாடு உடையதாக, கருத்தோவியங்களும் கவிதைகளும் நிறைந்ததாக இருந்தால் சிறப்பாகும். எழுத்தாளர் பேச்சாளர் பலருடைய தொண்டுகளும் இடம்பெற்று மேன்மேலும் சிறந்து விளங்குவதாக.

வரதராசன்

ஜோலாவின் கடிதங்கள்

சி.பி.சிற்றரசு

தலைவருக்கு

புகழ் பெற்ற பிரெஞ்சுத் தாயகத்தின் தனிப் பெருந் தலைவரே! டிரைபஸ் வழக்கு பிரெஞ்சு நீதியின் மேல் அழியாத களங்கத்தை உண்டாக்கி இருக்கிறது. அதை நீங்கள் துடைத்துத் தீர வேண்டும். உங்கள் ஆட்சி மிக மேன்மையானது. இது வரையிலிருந்த தலைவர்களுடைய ஆட்சியைவிட உங்கள் ஆட்சி நீதியும், நேர்மையும் நிறைந்தது. ஆனால்ஒரே ஒரு மோசடி நடந்திருக்கிறது.

ஜோலா கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக்கொண்டு மேலும் படிக்கிறான். அது ஒரு தனிப்பட்ட நபருக்கோ, மெச்சத் தகுந்த மேதைகளுக்கோ ஏற்பட்டிருந்தால் துடைக்கலாம். அல்லது அத்தகையோரை அவ்வித அபவாதத்திலிருந்து எளிதில் காப்பாற்றி விடலாம் ஆனால் இன்று ஏற்பட்டிருக்கும் இந்த இழிவான களங்கம் பெருமை பொருந்திய பிரெஞ்சு பூமிக்கே ஏற்பட்டிருக்கிறது.

பிரான்சு அழகு நகர், பிற நாட்டார் தங்கிப் பூரிப்படைவதற்கேற்ற வளமிக்கப் பூங்கா. எல்லா வசதிகளும் நிறைந்திருக்கும் எழில் மிக்க நாடு. எனினும் இதில் ஒரு சமுதாயக் கொடுமை நடந்திருக்கிறது...அதுவும் தங்கள் காலத்தில். பொறுமைப் படவேண்டியவர்கள் எல்லாங் கூட போற்றிப் புகழும் தன்மையிலிருந்த நாட்டைப் புதைக்க, அதன் புதல்வர்களே தங்கள் கருணைக் கைகளால்புதைக்குழிவெட்டுகின்றார்கள்.மன்னுதிமன்னர்களுக்கெல்லாம்மரணத்தீர்ப்பளித்த மண், இன்று சில மடையர்களின் மௌனத்திலே பலியாகும் நிலையிலே இருக்கிறது. இந்த நிலைக்குத் தங்கள் தலைமை இடந்தரக் கூடாது என்பது மாத்திரமல்ல என் எண்ணம். ஆள்வதற்கென்று யார் இருந்தாலும் நீதியின் நிகரற்ற வாள் முனையில் ஆட்சி நடைபெற வேண்டும். நீதி தன் வாளேந்தி அந்தக் கொடியவர்களைத் தேடித் திரியக் கூடாது. அந்தக் கொடியவர்கள் தாமாகவே நியாயம் என்ற சூறுவளியால் உந்தப்பட்டு நீதியென்ற வாளின் கூர்முனையிலே தங்களை பலியாக்கிக் கொள்ள வேண்டும்.

தங்களுக்கு மற்றொன்றை நினைவுபடுத்துவது உண்மையான குடியரசு வாதியாகிய எனக்கு இந்த நாடு அளித்திருக்கும் சட்ட வரம்பை மீறி விடாதுஎன்று கருதுகிறேன்.

தாங்கள் குடியரசுத் தலைவர் மாத்திரமல்ல, முதல் நீதிபதியும் தாங்கள்தான் என்பதை ஏற்கெனவே தாங்கள் அறிந்திருப்பதைக் கொஞ்சம் நினைவுபடுத்துவதற்கு இந்த என் வேண்டுகோள் தூண்டுகோளாயிருக்குமென்று எண்ணுகிறேன். ஆகையால்தான் மாபெரிய பங்கரமான நாசவேலைக்குச் சாவுமணி யடிக்க வேண்டு மென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். எந்த இடத்தில் நியாயம் கிடைக்குமோ, யார் உள்ளத்தில் நீதி குடி கொண்டிருக்கிறதோ, அந்த உண்மையான தலைவரைப் பெற்றிருப்பதற்காகப் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன். அத்தகு தலைவரும், அந்தப் பரிபூரண நீதிக்கு உறைவிடமானவரும் தாங்கள் தான் என்பதில் எனக்குக் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இவ்வளவு மாபாதகத்தை, பழிக்கஞ்சாத செயலை ஒரே ஒரு தனி மனிதன் துணிந்து செய்திருக்கின்றான். அவன்தான் கர்னல் பட்டி என்பவன். குற்றம் செய்யாத டிரைபஸ் தண்டிக்கப்படும்போது மேற்சொன்ன பட்டிஎன்பவன் ஒருசாதாரண மனிதனாயிருந்தான்- இன்று அவன் ஒரு கர்னல். அந்த உத்தியோகம் அவனுக்கு எப்படி வழங்கப்பட்டது என்பதைத் தாங்கள் விசாரிக்க வேண்டும். இவன் குற்றம் செய்தானா அல்லவா என்பதை இதைத் தீர விசாரிப்பதின் மூலம்தான் கண்டு பிடிக்க முடியும்.

வீரத் தலைவரே! வீடு பற்றி எரியும்போது விருந்தினர்க்குப் பரிமாறிக் கொண்டிருப்பதைப்போல, நாடு அறியாயமாக நாசப் பாதையை நோக்கி நடந்து கொண்டிருக்கும் போது இந்த நயவஞ்சகர்கள் நல்லவர்கள் போல் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

டிரைபஸ் தலைவனாக இருந்த போது பிரான்சின் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இரகசியக் கடிதங்களைத் தாங்கள் தாராளமாகப் பார்க்கலாம். அவைகளை வெளியேற்றியவன் கர்னல் பட்டிதான் என்பதையும், அதில் போடப்பட்டிருக்கும் கையெழுத்துக்கள் டிரைபஸ் என்பவனுடையதல்ல என்பதையும் என்னால் நிருபிக்க முடியும். டிரைபசை சிறைச்சாலையில்எழுதும்படிசொல்லி, அவனுடைய கையெழுத்தும், இரகசியக் கடிதங்களின் கையெழுத்தும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதைப் பார்த்து, மற்ற ராணுவத் தலைவர்கள் இதைக் கண்டுவிட்டால்எங்கே டிரைபசுக்கு விடுதலை கிடைத்து விடுமோ என்று பயந்து, இவன் சொல்வதை டிரைபஸ்இரண்டுவரிகள் எழுதியவுடனேஅவசரஅவசரமாக டிரைபஸ் எழுதியதைக் கலைத்துவிட்டு, இரண்டு கையெழுத்துக்களும் ஒன்றாயிருக்கின்றதென்று சூழ்ச்சி செய்தவனும் இந்தக் கர்னல் பட்டிதான் என்பதை என்னால் நிருபிக்கமுடியும்.

நிரபராதி டிரைபஸ் சிறைச்சாலையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென விழித்து ஏதாவது உளறிக் கொட்டி விடட்டும் என்று அவன் முகத்தில் பளிச்சென்று விளக்கை அடித்து. அவனை விழிக்கச் செய்து, ஏதாவது சொல்லி விடுகின்றானா—அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு டிரைபஸைப் பழிவாங்கி விடலாமா என்று எதிர்பார்த்து அந்த பெரிய முயற்சியிலும் ஏமாந்தவன் இதே கர்னல் பட்டிதான்.

பெருமைக்குரிய இராணுவத் தலைவன் டிரைபஸ் ஜெர்மன் பட்டாளங்களை முறியடிக்க ரணகளத்தில் தன்இரத்தத்தைச் சிந்திக் கொண்டிருந்தபோது திடீரென ஒரு நாள் அந்த மாவீரன் வீட்டைச் சோதனை யிட்டவனும் இந்த பட்டிதான் என்பதைத் தாங்கள் குறித்துக் கொள்ள வேண்டும்.

தன் சுயநலத்திற்காகவும் தான் சார்ந்திருக்கும் யூத எதிர்ப்பு இயக்கம் உன்னத நிலையை அடைய வேண்டுமென்ற குறிக் கோளுக்காகவும் இவ்வளவு பழிகளையும் டிரைபசின் தலைமேல் சுமத்தி அவனைத் தீவுக்கு அனுப்பி விட்டுத் தானும் தப்பித்துக் கொண்டான். இதை நினைக்கவே வெட்கப் படுகிறேன். வேதனை என் உள்ளத்தை வேல்போல்குத்துகிறது. நாட்டுக்கு ஏற்பட்ட இப்பெருங் கேட்டை நினைக்க நினைக்க நாணித் தலை குனிகிறேன்.

அடுத்து, அந்தக் கொலைகார எஸ்டரெஸி என்பவனைப் பற்றி ஆராய்வோம். டிரைபஸ் தந்தி கொடுத்தாக தந்தி கொடுத்தவன் அவன்தான். வெட்க மில்லாமல் இவனும் ஒரு இராணுவ உயர்தர உத்தியோகஸ்தனாக இருக்கிறானே என்பதற்காக வேதனைப்படுகிறேன். இவன்தான் உண்மையான குற்றவாளி என்பதற்கான பல ஆதாரங்களோடு டிரைபசின் சகோதரன் மேத்யூ டிரைபஸ் முன் வந்திருக்கின்றான். அவன் கொண்டு வந்திருக்கும் ஆதாரங்களைப் பார்க்கும் போது உண்மையான குற்றவாளி எஸ்டரெஸி என்பவன் தான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆனால் பொய்யனுக்காகஒரு போலிவிசாரணை நடத்தி அந்தப் புரட்டனுக்குப் புனித முத்திரையிட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள், இராணுவ நீதிமன்றத்தார். ஆகவே மேத்யூ டிரைபஸ் புனர்விசாரணையை விரும்புகிறான். அதற்குத் தங்கள் அனுமதியை வேண்டுகிறான். அண்ணனை மீண்டும் காண வேண்டுமென்ற அவாவால் இந்த மண்ணின் தலைவராகிய தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறான்.

நான் டிரைபசின் உயிரைக் கேட்கவில்லை. யாருடைய அபிமானமும் எனக்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்பவில்லை நீதி கிடைக்க வேண்டுமென்று என் உயிரின் ஆணையாகத் தங்கள் மேலானகவனத்தை மிக மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்

குற்றவாளிக்குப் பதில் நிரபராதி தண்டிக்கப்படுவதை நான் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள முடியாது. என் போன்றார்கள்இதைஅனுமதிக்கமாட்டார்கள். அதுவும் தாங்கள் தலைவராக இருக்கும் இந்த சமயத்தில் மாத்திரமல்ல, பூகோள அமைப்பில் பிரான்சு நாட்டின் எல்லைக் கோடுகள் இருக்கும் வரையில் மாத்திரமல்ல, உலகம் உள்ளளவும் இந்த அநீதி நடைபெறக்கூடாது.

இதையெல்லாம் சிந்திக்காமல் தக்க ஆதாரங்களைத் தருவித்துப் பார்க்காமல், அவர்களுக்கிருக்கும் செல்வாக்கால் ஒரு நிரபராதியின் மேல் குற்றம் சுமத்தி, பிரான்சின் மேன்மைக்காக செந்நீர் சிந்தியவன் இன்றுடெவில்ஸ் தீவிலே கண்ணீர் சிந்த, இங்கே கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கும் துரோகிகள் மேல் நான் குற்றஞ் சுமத்துகிறேன்.

சி பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்.

செப்டம்பர்

16 போத்தனூர்

17 மொகாயனூர்

18 சேலம்

19 சோலையார்பேட்டை

20 காலை சென்னை சிறப்பு சொற்பொழிவு.

மாலை 31வது வட்டம் பொதுக்கூட்டம்

21 பெருநகர்

ஆசிரியர், "இனமுழக்கம்," சென்னை-2.

ஆசிரியர் அவர்களுக்கு,

இனமுழக்கம் முதலாண்டு மலராகவும், அதே சமயத்தில் இந்தி எதிர்ப்பு மலராகவும் வந்ததை குறித்து மிகவும் மகிழ்ச்சி.அதோடு அல்லாமல் இனமுழக்கம் இவ்வளவு குறுகிய காலத்துக்குள் திராவிடர் உள்ளங்களை கொள்ளைகொள்ளும் என்று எவருமே எண்ணியிருக்க மாட்டார்கள் என்பது என் துணிவு. அதுவும் ஒ[illegible] பத்திரிக்கை நடத்துவது [illegible] தமிழகத்தை பொறுத்த வரை[illegible]யில் ஓராண்டு வெற்றியுடன் வெளிவருவது என்பது இன்றைய சூழ்நிலையில் மிகவும் அரிது. இவ்வளவு இடையூறுகளுக்கு இடையில் நம் இனமுழக்கம் நம் இன இயக்கத்தின் பீரங்கி கொள்கையை இவ்வளவு சிறப்பாக பரப்பி வருவதைக் குறித்து நாம் எல்லாரும் மகிழ வேண்டியது அல்லாமல் வேறு என்ன செய்வோம். என்றும் போல் இனமுழக்கம் வருக! வளர்க! வெல்லுக!!! என வாழ்த்துகிறேன்.

அன்பன்

சி. சு. தேவராசன்
சிறுதையூர்

அன்புடையீர்!

வணக்கம்.

இனமுழக்கம், ஆண்டு மலர் இந்தி எதிர்ப்பு மலராக பூத்து, மணம் வீசியது. நான் இனமுழக்கம் என்ற மலர்க் காவிலே புகுந்தேன். அங்கே.........பல அறிஞர்களின் கட்டுரைகளும், கவிஞர்களின் கவிதைகளும், க[illegible]ஞர்களின் கதைகளும், மல்லிகை...ரோஜா முல்லை, செவ்வந்தி, கனகாம்பரம், மனோரஞ்சிதம், போன்ற மலர்கள் பூத்து, புதுமணம் வீசுவது போல்......எனக்கு புதுமணம் தந்தும், அவர்களின் கருத்துக்கள் என் உள்ளத்தில் புத்துணர்ச்சியும் ஊட்டியது.

அன்புள்ள,

அன்புமகிழன்
அயன்புரம்.

புறப்படு மகனே...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

னும் இரண்டு நாட்கள் பொறுத்திருங்கள். அதற்குள் தூதுவன் வராவிட்டால் நானே போய்வருகிறேன்.

குப்தா: தாங்களா?

அமை: ஆம். நானேதான் இந்தக் கோலத்திலல்ல. எனக்கும்கொஞ்சம் தமிழ்த் தெரியுமல்லவா. அந்தக் கொஞ்சத் தமிழைக் கொண்டே அந்நாட்டை சுற்றி வந்துவிடுவேன்.

மன்: நீர் என்னதான் தமிழ்ப் பேசினாலும் உம்மை அயலார் என்று கண்டு பிடித்து விடுவார்கள். தமிழ் ஓசை மென்மையுடையது. அப்படி உம்மால் பேசமுடியாது.

அமை: அப்படியானால் குப்தரை என்னோடு அனுப்பி வையுங்கள். (தொடரும்)

புருவமெனும் வில்லுக்கு மையேன்? அதில்
பொல்லாத பார்வையெனும் அம்பேன்?

நட்சத்திரப் பேட்டி :

1 வீட்டில் விஜயலட்சுமி

வனப்பும் வார்த்தையும்!

வெளியுலக வாசிகளுக்குக் கலையுலக வாழ்வு 'சொர்க்க வாழ்வு' என்ற எண்ணம். ஆனால் கலையுலகை வாழ்க்கைத் துறையாக்கிக் கொண்ட கலைஞர்களுக்கோ அது சாதாரண — ஆனால் மக்களிடையே நின்று நிலைத்துவிடக்கூடிய ஒரு தொழில் துறை. கலை கலைக்காக என்போரும் கலை வாழ்வுக்காக என்போரும் — இரண்டுமல்ல கலை காசுக்காக! என்று கூறும் பலதரப்பட்ட கலைஞர்களைக் காண்கின்றோம், அவர் தம்பேச்சையும் கேட்கிறோம். அழகு, திறமை, இளமை இம்மூன்றும்உடைய கலைஞர்கள் தமிழ்ப் படவுலகத்தைப்பொருத்தவரை வெகுகுறைவு. இம்மூன்றும் நிறைவுறப்பெற்ற நடிகை விஜயலட்சுமி. மனிதன் தன் உள்ளத்திலேயே தன் பிற்கால வாழ்வைப் பற்றிக்கனவு காண்கிறான். அந்தக் கனவு பலித்துவிட்டால் வாழ்க்கை அவனுக்குத் தேனருவி. நடிகர்களும் மனிதர்கள் தானே எனவே இந்த முறைமைக்கு எப்படி மாறுபட முடியும்? எழில்மிக்க இளம்நடிகை விஜயலட்சுமி தன் எண்ணத்தைக் கனவை — நினைப்பை உங்களுக்குக் கூட்டத் தயாராகிறார்! தொடருங்கள்.

பம்பாய்க்கு அருகிலுள்ள மவுண்ட் கார்மல் கான்வெண்டில் நான் அப்பொழுது ஆறாவது படிவம் படித்துக் கொண்டிருந்தேன். பள்ளிப் பருவ மங்கைக்கு இயற்கையாக உள்ள படிப்பு உணர்ச்சியே அப்பொழுது என்னிடம் அதிகமிருந்தது. கவிஞர்கள் பெண்களின் நடையை அன்ன நடையென்றும், மயிலின் ஆட்டம் என்று வர்ணிப்பதாலோ என்னவோ பெண்களுக்கு இயற்கையிலேயே நடனத்தில் அதிகம் ஆர்வம் உண்டு!

ஆடவாரீர் என்னோடாட வாரீர்!!

சிறுவயது முதலே நடனத்தில் எனக்கிருந்த ஆசையும் ஆர்வமும் படிப்போடு தொடர்ந்தது. மேலும் மேலும் பயின்று நடனத்தில் சிறந்தவளாகிப் பெயர்பெறவேண்டும் என்ற எண்ணம் ஒன்றே என் வாழ்க்கைக் கனவாகிப் பூத்து மலர்ந்து மணம் பரப்பியது. அன்றே நான் என் தோழிகளை வலிந்து கூப்பிட்டு ஆடுவேன். என்றாலும், படிப்பின் மேல் எனக்குத் தீராத மோகம். படித்துப் பட்டம் பெற்று என் குடும்பச் சூழ்நிலைக்கு மாறுபடாதவளாகவே வாழ விரும்பினேன்.

எனக்கு மோகமில்லை!!

திரைப் படத்தில் நடிக்க வேண்டுமென்ற தணியாதமோகம் எனக்குஇருந்ததில்லை. ஆடலைக் கலையெனக் கற்றேன். கற்ற வித்தையைக்காட்டி மக்கள் மத்தியில் ஆடிவந்தேன். என்னிடம் திறமையிருக்கிறது என்பதை உணர்த்துவதைப் போலவோ என்னவோ வீனஸ் பிக்சர்சார் தாங்கள் தயாரிக்கவிருந்த படத்தில் நடிப்பதற்கழைத்து மேக்கப்செய்து படம் பிடித்தார்கள்.

ஆசை பிறந்தது!!!

முன் மாதிரியாகப் பிடிக்கப்பட்ட படம் திரையிலே ஓடியபோது நானும் பார்த்தேன். எனக்கு முன்னாலேயே நான் இருப்பதை முதன் முதலாக நான் பார்த்தபோது ஏதோ ஒருவித இனம் தெரியாத மகிழ்ச்சி என்னைப் பற்றிக் குலுக்கியது. என்னிடம் இவ்வளவு திறமைஉண்டா என்பதை நானே எடை போட்டுப் பார்த்து மகிழ்ந்தேன்.

ஆடலுக்குப் பாடம்சொல்லும் அங்கயலின் கண்ணியிவள்
பாடலுக்கு முள்நகட்டும் பாங்குதனை என்சொல்ல!

திரைஒலி

இந்த மகிழ்சியே எனக்குத் திரைப்பட வுலகில் நுழையும் எண்ணத்தைத் தூண்டிவிட்ட திரிக்கோலாய் அமைந்தது.

ஆர்வம் கலந்தது!!

எதிர்பாராத விதத்தில் விரும்பிய கலைத்துறை எனக்கு விரைவில் கிட்டியபோதும், என்னை நானே பார்த்து மகிழ்ந்து பாராட்டிக் கொண்ட போதும் கிடைத்த நேரத்தைவிட, விரைவில் அந்த மகிழ்ச்சி என்னைவிட்டு அகலும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் நடிக்க வேண்டிய பாகத்தில் வேறொருவர் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டபோது என் 'கலை' ஆர்வம் கலந்த ஆர்வமாகியது. ஆனால் அதைத் தொடர்ந்து எனக்கு ஆறுதல் கூறி சந்தர்ப்பமளித்த உள்ளங்கள் கலையார்வத்தைவளர்த்தன.

அடுத்த இதழில்

பத்மினி பிரியதர்சினி

நட்சத்திரப்பேட்டியில் இடம்பெறுவார்.

ஐயையோ ஆகாது! ஆபாசம் கூடாது!!

எனக்குத் தெரிந்த வரையில் பொதுவாகத் தமிழ்ப் படவுலகம் இந்தி படவுலகத்தைப் பின்பற்றுவதை நான்வெறுக்கிறேன். அவர்கள் பண்பாடுவேறு நமது பண்பாடுவேறு ஆங்கிலப்படங்களைப் பார்த்துத் தமிழ் உலகம் பின்பற்றக்கூடிய நிலைவருமானால் அது எவ்வளவு கீழ்ப்பட்ட நிலைமைக்கு நமது பண்பாட்டை இழுத்துச் சென்றுவிடும்? ஆபாசம், அதுபோன்ற நமக்குத் தேவையற்றவற்றை நீக்கி நல்ல கருத்துக்களைக் கையாளுவதற்கு என்றுமே தடையில்லை.

எல்லோருக்கும் இடமுண்டு

அதுபோலவே தன்னம்பிக்கையில் நம்பிக்கை வைத்து அழகு, திறமை, உடைய இளைஞர்களும், பெண்களும் தமிழ்ப் படவுலகில் புகுவதில் தவறில்லை. வளரும் கலைக்கு அது புதுத் திருப்ப மட்டுமன்றி புகழின் படி!

புகைப்படம் : வெங்கடேஷ்

தொகுப்பு : நரேந்திரன்

நிலவிற்கேன் வெண்மேகப் போர்வை மண்ணின்
நிலவே வுன் வதனத்திலேன் மோகப் பார்வை ?

முகவரி மாற்றம்

எம். எஸ். இராமசாமி,
C/o. கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ்,
147, இரண்டாவது மெயின் ரோடு,
சி. ஐ. டி. காலனி,
சென்னை-4.

கண்ணால் மொழிபேசும் காரிகைதன் வாய்திறந்து,
பண்ணாய் மொழிபேசப் பாலுந்தேன் என்னாகும்?

குந்திக் கால்மடித்துக் குத்துவிளக் கேற்றிவைக்க
முந்திக் கோலமிட்ட மோகினியாள் !

ஆசிரியர் : பி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபால நாய்க்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

இனமுழக்கம்

ஆசிரியர்..... சி. பி. சிற்றரசு

இலுப்பைப்பூ சர்க்கரைதான் இவர்கள் ஆட்சி !
  இனிக்கின்ற தேனல்ல இவைகள் மாட்சி !
கொதிக்கின்ற சுடுநீரைக் கொட்டி ஞலும்
  கொதிக்காது நம்கழகம்; குளிர்நீ ராகும் !
வதைக்கின்ற வடவரது வாஞ்சை யில்லா
  நெஞ்சமெலாம் ஒருநாளில் நொந்தே சாகும் !
இதைக்கூட உணராத இலுப்பைப் பூக்கள்
  மடிகின்ற மாலேவரும்; மடிந்தே போகும்

கொடிக்கம்பை சாய்த்தாலும் கொள்கை யில்லா
  கொடுங்கோலர் நம்மவரை கொலேசெய் தாலும்
கூரைகளே எரித்திடினும் கூர்மை யில்லா
  கற்களேயே வீசிடினும் வீழா நெஞ்சம்
நமக்குண்டு ! நமதண்ணன் நாளும் காட்டும்
  நீடித்த நெறியுண்டு ! நொந்துச் செத்த
சாத்வீகக் காந்தியவர் கொள்கை யெல்லாம்
  சொரணேயற்றோ ரிடமில்லே; நமக்கே சொந்தம் !

வெட்டட்டும் ! குத்தட்டும் ! இரத்த வெள்ளம்
  ஓடட்டும் ! ஒழியட்டும் ! ஓநாய்க் கூட்டம்
பாடட்டும் ! பிணப்பாடல் பாடிப்பாடி; வாழ்வைப்
  பாதியிலே போடட்டும் ! மிஞ்சும் கொஞ்சம்
பேர்களேயும் பலியாக்கிப் போட்டுத் தீர்த்துப்
  பிரதமரின் கல்நெஞ்சு பிரியும் போது
நமதருமை அண்ணவை அழைத்துப் பேசி
அளித்திடுவார் ! அதுவரையில் பொறுத்தி ருப்போம் !

முன்கதைச் சுருக்கம்]

அனுராதையின் தந்தை நரசிம்மன் ராமேசுவரத்தில் ஒரு யானைப்பாகன். அனுராதை அவனுக்கு ஒரேமகள். அவள் செல்லமாக வளர்ந்தாள்.

யானைப்பாகன் நரசிம்மனுடைய வீட்டுக்கு அருகில் டி. டி. ஆர். தியாகராஜன் ஒரு அறையில் வசித்தான். ஓய்வு நேரங்களில்அனுராதையோடு பேசி மகிழ்வான். அனுராதை சிறுமியாக இருந்தாலும்தியாகராஜனோடு ஆடிப்பாடி பொழுதைப் போக்குவாள்.

திடீரென்று டி. டி. ஆர். தியாகராஜனை பெங்களூருக்கு மாற்றிவிட்டார்கள். அவன் ராமேஸ்வரத்தை விட்டுப் பிரியும் போது, அனுராதை சின்னவள். விபரம் தெரியாதவள். தியாகராஜன் பெங்களூருக்குப் போய் விட்டான்.

யானைப்பாகன் நரசிம்மனுக்கு ஒரு கையை இழந்தது போல் இருந்தது. அதுபோலத்தான் அவனுடைய செல்வக்குமாரிக்கும். தியாகராஜன் பெங்களூரில் சில ஆண்டுகள் பணியாற்றிவிட்டு மறுபடியும் ராமேஸ்வரத்துக்கு, மாற்றலாகி வந்தான். வந்ததும் வராததுமாக முன்பு அவன் குடியிருந்த அறைக்குப் போனான். அங்கே, அவனுடைய அறைக்குப் பக்கத்திலிருந்த நரசிம்மனுடைய வீடு இருந்த இடம் தெரியாமல் மண்மேடாக இருந்தது, மறுபடியும் திரும்பி ரயில்நிலையத்துக்கு வந்தான். பத்துஆண்டுகளாக ராமேஸ்வரத்திலேயே தொடர்ந்து வாழ்ந்தவர்கள் நரசிம்மன் குடும்பத்தைப்பற்றி சில விவரங்களைத் தெரிவித்தார்கள்.

ஆங்கிலக் கவர்னர் ஒருவர் ராமேஸ்வரத்துக்கு வருகை தந்தபோது, அவரை வரவேற்பதற்காக, அதிகாரிகளும், பொதுமக்களும் ரயில் நிலையத்தில் கூடியிருந்து, வரவேற்க ஏற்பாடு செய்திருந்த போது.வானவேடிக்கைகளில் மிரண்ட யானை, மதங்கொண்டு நரசிம்மனைச்சுமந்து கொண்டே ஊரெல்லாம்ஓடி. கடைசியாக, அவனைக் கீழே போட்டு மிதித்து கொன்று விட்டதாம். அதிலிருந்து அனுராதை அனாதையாகி விட்டாளாம்.இயற்கையிலேயேஇனிய குரல் படைத்த அவள் நாளடைவில் ரயிலில் பாடிப் பிழைக்கும் பாடகியாகி விட்டாளாம்.

இந்த சோகக் கதையைக் கேள்விப்பட்ட தியாகராஜனின் கண்களில் நீர் துளிர்த்தது. ஒரு நாள்அனுராதையை ரயிலில் பார்த்தான். அவள் தான் அனுராதையென்று தியாகராஜனால் கண்டு கொள்ள முடியவில்லை. தியாகராஜன்,அவனுடைய தொழில் அதிகாரப்படி, டிக்கட் வாங்காத அந்த யுவதிப் பெண்ணை மிரட்டினான். சாதாரணமாக குற்றம் செய்வர்களிடத்தில் காணப்படும் பணிவு அவளிடத்தில் இல்லை. அவள் வெறித்து நின்றாள். படபடவென்று பேசினாள். அனுராதைக்குத் துணையாக அந்த வண்டியில் ஒரு நொண்டி பிச்சைக்காரன் வந்தான். அவன் பெயர் துருவன். வாழ்க்கையில் நொந்துபோய் தானாகவே காலை ஒடித்துக் கொண்டவன்போல் தென்பட்டான். அந்த நொண்டி பிச்சைக்காரன் அனுராதைக்காகவே வாழ்பவன் போல நடந்துகொண்டான். அனுராதை தியாகராஜனுடைய முகச்சாயலைத் தெரிந்து கொண்டும் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளவில்லை. உணர்ச்சியை முகத்தில் காட்டிக்கொள்ள அவள் வெட்கப் பட்டாள். வண்டி புறப்பட்டது- மறுநாள் பாம்பனிலிருந்து ராமேஸ்வரத்துக்கு போய் விட்டு மண்டபத்துக்குத் தனியாகத் திரும்பினாள் அனுராதை. அவளுக்காக மண்டபம் ரயில் நிலையத்தில் துருவன் காத்துக் கொண்டிருந்தான், வண்டி இரண்டு மணி நேரம் தாமதமாக வந்தது. துருவன் உரிமையோடு கடுமையாகப் பேசி வரவேற்றான். ஆனால் அவள் வேறொரு தகவலை சோகமாகத் தெரிவித்தாள். "நேற்றுப் பார்த்த டி.டி.ஆர். இன்று தங்கச்சி மடத்துக்கருகில் ஒரு சிறு விபத்தில் சிக்கிக் கொண்டார். அவருக்கு முகமெல்லாம் பலத்த காயம்"என்றாள். துருவனுக்குக்கோபம்வந்தது. அவனுடைய இதயத்தில் சந்தேகம் அரும்பு விட்டது. ஆனாலும் அதை அவன் பெரிதாக்காமல் அனுராதையிடம் அன்பாகவே இருந்தான்.

ஒருநாள், துருவனில்லாத நேரத்தில், காயமடைந்து மண்டபத்தில் தனி வீட்டில் சிகிச்சை பெற்றுவந்த தியாகராஜனைப் பார்ப்பதற்காக அனுராதை போயிருந்தாள். போனதும் அவள் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டாள். தியாகராஜனுக்குஆச்சரியமாக இருந்தது. இப்படி ஒரு சூழ்நிலை வருமென்று அவன் எதிர் பார்க்கவே இல்லை. பழைய கதைகளை யெல்லாம் அவளுக்கு நினைவுபடுத்தினான். அவைகளைக் கேட்டு சிரிக்கக் கூடிய பருவமா அனுராதைக்கு? சிரித்தாள், அழுதாள், மௌனமாக இருந்தாள் தனித் தனி பொருள் கொள்ளக்கூடிய மிடுக்கான பருவமல்லவா இப்போது! காலம் பெண்களின் உருவத்தை மாற்றுகிறது. அதைப்போல் சிரிப்பின் பொருளையும் திரித்து விடுகிறது.

தியாகராஜனோடு பேசிக் கொண்டிருந்தஅனுராதைக்கு நேரம் போவதே தெரியவில்லை. ரயில் நிலையத்திலிருந்து துருவன் கூவியழைத்தது அவள் காதில் விழவே, அவள் திடுக்கிட்டு ஓடினாள். அப்போதுதான் அவன் சிறிது எச்சரித்தான். அந்த எச்சரிக்கையில் சுயநலமில்லை, கள்ளங்கபடமில்லை. அனுராதைக்கு அது புரியாமலில்லை. புரிந்ததால்தான் எல்லாவற்றுக்கும் மௌனமாக இருந்தாள்.

இன்னொரு முறை பாதி ராத்திரி வேளையில் துருவனும் அனுராதையும் வழக்கமாகத் தங்கியிருக்கும் தென்னந் தோப்பிலிருந்து அனுராதை தியாகராஜன் அறைக்குப் போய்விட்டு, பொழுது விடியப் போகும்போது வந்தாள். துருவன் அரைக் கண்ணால் அவள் வருவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவள் அருகிலே வந்ததும் திடீரென்று விழிப்பவனைப் போல் எழுந்தான். அவள் திகைத்துப் போய் அவனுக்கு சாமாதானம் கூற எத்தனித்தாள். அந்த சமாதானத்தில் துருவனுக்கு நம்பிக்கையில்லை. தன்னை ஏமாற்றும் நோக்கத்தோடு தான் அனுராதை இவ்வாறு நடந்து கொள்வதாக அவன் நினைத்தான். தன்னைப் பற்றிய முழு விபரத்தையும் அவளுக்குத் தெரிவித்து விட வேண்டுமென்று துருவன் தீர்மானித்து விட்டான். அவனுடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

"நான் பரம்பரை பரம்பரையாக பிச்சைக்காரனல்ல. என்னுடைய வாழ்க்கைச் சரிதம் சுவையானது. ஆனால் துப்பறியும் கதையைப் போல் திடுக்கிடும் சம்பவங்கள் கொண்டது.

சென்னைக்கு அருகிலுள்ள கும்மிடிப்பூண்டி எனும்ஊரில் என்னுடைய தந்தை போலீஸ் வேலை பார்த்தார். கும்மிடிப் பூண்டி பேர் பெற்ற ஒரு ராணுவ முகாம்: வெள்ளையர் ஒருவர் உயர்தர ராணுவ அதிகாரியாக இருந்தார். அவருக்கு ரோசிலாந்து என்ற மகள் இருந்தாள். அவளுக்கும் எனக்கும் பள்ளியில் நடக்கும் பேச்சுப் போட்டியால் தொடர்பு ஏற்பட்டது. அது காதலாக மாறுமென்று நான் எதிர்பார்க்கவில்லை.

கும்மிடிப் பூண்டியில் பாழடைந்த கோட்டை ஒன்று இருக்கிறது. கோட்டைக்குள்ளே இரண்டு பீரங்கிகள் வைக்கப் பட்டிருக்கின்றன. அந்த பயங்கரமான இடத்துக்கு ரோசிலாந்து என்னை அழைத்துப் போனாள். பீரங்கிக்குள் ஒரு கடிதச் சுருள் இருந்ததை அவள் எடுத்துக் காட்டினாள். அது ஒரு பெண் ஒரு ஆடவனுக்கு எழுதிய கடிதம். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. கடிதத்தைப் படித்த நான் யாரோ இரண்டு கள்ளக் காதலர்கள் அங்கு அடிக்கடிசந்திப்பதாகஎண்ணி காத்திருந்தேன். நான் திடுக்கிடும் வகையில் என் சித்தி அங்கே வந்தாள். நான் ஏதேதோ அவளிடத்தில் பேசினேன். என் சித்திக்கும் இன்னொருத்தனுக்கும் ரகசியத் தொடர்பு இருக்குமென்று தவறாகக் கருதிக் கொண்டு நான் அவ்வாறு பேசினேன். கோட்டை வாசல் வழியாக உள்ளூர் சப் இன்ஸ்பெக்டர் வந்தார். எனக்குச் சந்தேகம் வலுத்தது. சப் இன்ஸ்பெக்டருக்கும் என்சித்திக்கும் கள்ள உறவு உண்டு என்று நான் முடிவுகட்டிவிட்டேன்.ஆனால் சப் இன்ஸ்பெக்டர் என் கண்களைத் திறந்து விட்டார். என் சித்திக்கு தமிழைத்தவிரவேறு எந்த மொழியும் தெரியாது. பீரங்கிக்குள் இருந்த கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதை சப் இன்ஸ்பெக்டர் எனக்கு நினைவுபடுத்தி என் சந்தேகத்தைப் போக்கினார். பின் எதற்காக என் சித்தியும் சப் இன்ஸ்பெக்டரும் கோட்டைக்கு வரவேண்டும் என்று நீ கேட்கலாம். ரோசிலாந்தும் நானும்கோட்டைப் பக்கமாக வந்த சேதியை அறிந்த சப் இன்ஸ்பெக்டர் என் தந்தை மேலுள்ள அன்பால் என்னை திருத்துவதற்கு கோட்டைக்கு வந்திருக்கிறார். என் தந்தைக்கும் ஆள் மூலமாக தகவலைச் சொல்லி யனுப்பிருக்கிறார். என் தந்தை வீட்டில் இல்லா

(9-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

முதுகுளத்தூர் தாலூகாவில் கடந்த பத்துநாட்களாக ஏற்பட்டுள்ள குழப்பத்தால் அங்கு 144 தடையுத்தரவு போட்டிருக்கிறார்கள். நான் அங்கேயே தங்கி கழக நிலவரங்களை கவனித்து வர வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த வாரம் **தங்கச்சிமடம்** தொடர்கதை எழுத இயலவில்லை. அடுத்த வாரம் முதற் கொண்டு கதை 2 பக்கங்களுடன் துவளாமல் வரும்என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
தென்னரசு

அறிவிப்பு

வெளி நாடுகளுக்கு பத்திரிகை அனுப்புவதில் திடீரென பிறப்பிக்கப் பட்டுள்ள புதிய சட்டத்தால்,மலாயா, சிங்கப்பூர்,சிலோன் ஆகிய நாடுகளுக்கு ஆண்டுமலர் முதல் பத்திரிகை அனுப்ப இயலவில்லை. விரைவில்அதற்கானஅனுமதி கிடைத்து விடுமென எண்ணுகிறோம். அண்ணா பிறந்த தின பேட்டியில் வெளி நாடுகளில் உள்ளவர்களும் கலந்து கொள்ள வேண்டுமென விரும்புவதால் போட்டியின் முடிவை 31...10...60 தாக தள்ளி வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—பொறுப்பாளர்

இனமுழக்கம்
ஆசிரியர்: சி. பி. சிற்றரசு
மலர் 2] ★ 23—9—60 ★ [இதழ் 4

முத்தோரில் முத்தவனே! விசுவேசுவரையாவே! இன்னும் ஒரு நூறுண்டிரும்.

சராசரி இருபத்தி ஐந்தாண்டுகளே மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் நூறுண்டுகள் வாழ்ந்து காட்டிய ஓர் ஒப்புயர் வற்ற இலட்சிய வாதியின் வாழ்த்துத் திருவிழாக்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் கொண்டாடியது சென்ற கிழமை.

அவர் கண் முன்னாலேயே, அவரது உருவம் தபால் தலைகளில் பொறித்துப் பாமாலைகளையும் பூமாலைகளையும் சொரியக் கண்டார். அதனால் அவர் பெருமைப் படுவதற்கு முன்னால் நாடு அந்த பழுத்தப் பழத்தைப் பார்த்து மகிழ்ந்து, இவ்வளவு நாளும் ஒருவர்வாழ முடியும் என்று வாழ்க்கைக்குப் புது இலக்கணத்தை யாக்கி தந்த பெரியவனைத், பெரியவர்கள் என்று இன்றைய காலம் ஏற்றுக் கொண்ட பெரியவர்களும், பூவாய்ப் பிஞ்சாய் அசைந்தாடும் இளைஞர்களும் கொண்டாடினார்கள்.

கரு நாடகத்தைப் பெரு நாடாக்கிய பெரியோன்

இறந்து மண்ணோடு மண்ணாகப்போகும் மனிதன், இறவாதப்பல வேலைகளைச் செய்கின்றான் என்று சொல்வதற்குச் சான்றாக விளங்குகிற விஞ்ஞான மேதை, மற்றவர்களைத் தன் வாழ்க்கைக் கோட்டுக்கு அழைத்துச் செல்லத் தன் கருணைக் கரங்களால் அழைக்கிறார்.

புது தத்துவம் சொன்ன மேதை.

உழைப்பால் மனிதன் உருமாறிப் போகிறான், தினம் தினம் தேய்ந்து போகிறான் என்று தான் இதுவரை வையம் பேசிக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கு ஒரு புதிய விளக்கமும் மாற்றமும் தரும் வகையில், ஓயாத உழைப்பாலே மனிதன் வாழ்நாள் நீள்கிறது என்று வாயால் சொல்லாமல், எழுதிக் காட்டாமல், வாழ்ந்து காட்டிய சான்றோனைப் பெற்றதாயைப்போல், பெருமைப் பெற்றது கரு நாடகம். அது நம் திருவிடத்தின் அங்கம் என்ற முறையிலே நாமும் பெருமைப் படுகிறோம்.

கிருட்டிணராசசாகர் பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை

இந்த இரண்டும் அறிஞர் விசுவேசுவரய்யா அவர்களின் அறிவு ஈன்றெடுத்த இரட்டைக் குழந்தைகள்.

இன்றும் மைசூர் செல்பவர்கள், அங்கிருந்து 13 கல் தொலைவிலுள்ள அந்த அழகிய நீர்த் தேக்கத்தை, அதன் மற்றோர் பக்க்த்தில் அமைந்திருக்கும் பூஞ்சோலைகளை, அதைச் சுற்றி சுற்றி ஓடிவரும் நீர் அருவிகளை, அந்த நீர் அருவிகள் உருண்டோடும் ஒவ்வொரு படியை, ஒவ்வொரு வண்ண மிட்டுக் காட்டும் மின் விளக்குகளைக் கண்டவுடன் இப்படியும் ஒரு உலகம் உண்டா, சொர்க்க போகம் என்று ஒன்றிருப்பதாகக் கற்பனைச் செய்து கொண்டு, அங்கு போய்ச் சேருவதற்கு வழியும் தெரியாமல், ஏணியும் கிடைக்காமல் அலைந்து திரிந்த பலர் இதைக் கண்டவுடன், இதுதான் அது என்று சொல்லி விட்டார்களோ என்று எண்ணத் தோன்றியது.

இதை நான் முதன் முதலில் 1949-ல் பார்த்தேன். என்னோடு சில நண்பர்கள் வந்திருந்தார்கள். சுற்றிப் பார்த்து முடிந்தவுடன் ஓரிடத்தில் உட்கார்ந்தோம். என்னோடு வந்திருந்த நண்பர்களில் ஒருவரான, நமதியக்க முன்னணி வீரர் பெங்களூர் உசேன் அவர்கள், இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டார். நினைக்க ஒன்றுமில்லை. உடம்பைத்தான் கொஞ்சம் இந்தத் தண்ணீரில் நனைக்க வேண்டும் போலிருக்கிறது என்றேன். குறும்பு இருக்கட்டும், உண்மையாக என்ன நினைக்கிறீர்கள், என்று மறுபடியும் கேட்டார். இரண்டு நினைக்கிறேன். ஒன்று—இவைகளைச் செய்த மேதையைக் காணவேண்டும்; மற்றொன்று என்று சொல்லி தொடரை முடிக்காமல் நிறுத்தினேன். சும்மா சொல்லுங்கள் என்றார் அந்த உசேன் பாதுஷா—நீண்ட நாட்களாகக் குடும்பத்திலே ஒற்றுமை இல்லாமல், சதாசண்டை சச்சரவுகளோடு தள்ளாடித் தள்ளாடி குடும்பஓடத்தை நகர்த்திக் கொண்டிருக்கிற, கணவன் மனைவியைக் கொண்டு வந்து இங்கே விட்டால், ஒருமணி நேரத்தில் சமாதானம் ஆகி விடுவார்கள், என்றேன். மேலெழுந்த வாரியாக அவர் ஒப்புக் கொண்டாரே யன்றி அதன் உள்ளடங்கிய தத்துவத்தை அவர் தெரிந்துகொள்ள விரும்பவுமில்லை. நான் சொல்லவும் இல்லை.

முதியவர் விசுவேசுவரய்யாவில் தொடங்கி, விஷயப் முரண்பட்ட ஒரு குடும்பத்திற்கு வந்து விட்டதே என்று எண்ணாதீர்கள், வாழ்க்கை ஒருகூட்டுச் சரக்கு அது தனியாக இருந்தாலும்சுவைப்பதில்லை. அதிகக்கூட்டமாக இருப்பதாலும் ரசிப்பதில்லை. வாழ்க்கை வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்வதைப் போல,முதலில் தனியாக பாக்கை மட்டிலும்போட்டு மென்றுதுப்பிவிட்டு பிறகு இரண்டு வெற்றிலையையும் போட்டு, மென்று, அதையும் துப்பிவிட்டு, கடைசியில் கொஞ்சம் சுண்ணாம்பை மட்டிலும் போட்டுச் சுவைத்தால் வாயின் நிலைமை மழுங்கும். தனித்தனியாகப் போடுவதில் எவ்விதப் பயனுமில்லை. ஆகவே தான் மூன்றையும் போட்டு மென்றா லொழிய சுவைகாண முடியாது. அதைப் போன்று தான், வாழ்க்கை என்ற தத்துவத்தை இந்த பல வண்ணப் பூங்கா விளக்குகிறது என்று மேலும் சொன்னேன்.

அந்த ஆராய்ச்சியை நமக்களிக்கிற அருமையான பூஞ்சோலையையும் அந்த நாளில் மிகப் பெரிய நீர்த் தேக்க மெனக் கொண்டாடப்பட்ட கிருஷ்ணராச சாகரைக்கட்டி, கருனடகத்தின் பைங்கூழ்களுக்கு நீர் ஊட்டி, பிறப்பிடத்தைப் பெருமைப் படுத்தியிருக்கிறார்.

பத்ராவதி

பெங்களூருக்குசுமார் 180 மைல் தொலைவிலுள்ள பத்ராவதி இரும்பாலை, வான் நோக்கிப் புகை விட்டுக் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. ஆந்திரரும், கருனடகரும், தமிழரும், கேரளரும் கைக் கோர்த்து ஆலைக்குப் போகும் காட்சி! கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அங்கும் நமது கொடி

உங்கள் கொடி இங்கே உண்டா, அங்கே உண்டா என்று கேட்டுக் கொண்டிருக்கும், மௌடீகங்கள் வாயடைத்துப் போகும் அளவுக்கு, அந்த இரும்பாலையின் புகைப் போக்கிக்குப் பக்கத்தில் நம் இயக்கக் கொடி பறந்து கொண்டிருக்கிறது.

இங்கே நமது கொடிகளைப் பொது மக்கள் பார்த்தவுடன், ஓ! இங்கேயும் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறதா? என்று கேட்பதைப் போல அங்கேயும், **ஏனப்பாஇல்லி திராவிட அபிவிருத்தி சங்கா** என்று கேட்டவண்ணம் இருக்கின்றனர். அங்கு பல ஆயிரம் தொழிலாளர்களுக்குத் தொழில் தேடித் தந்த மேதையின் பெரு விழா நடைபெற்றிருக்கிறது.

நாடு, ஐந்தாண்டு திட்டங்கள், பற்சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டு அறை பட்டுப் போகாத காலம். திட்டக் கமிஷன், மொட்டைக் கமிஷன் பொட்டைக் கமிஷன் என்றெல்லாம் பேச்சுக்கள் அடிபடாத காலம். எடுத்ததெற் கெல்லாம் வரிப் போட்டு மக்களைக் கசக்கிப் பிழியாத காலம், இவ்வளவு வேலைகளைச் செய்து முடித்திருக்கின்றார். அவருக்குப் பிறகும், தொழில் துறையில், தென் மாநிலங்களில் மற்றெல்லா வற்றையும்விட கொஞ்சம் அதிகமாக முன்னேறியிருக்கும் மாநிலம், கருனடகம். தொலை பேசி செய்யும் தொழிற்சாலை, விமானம் செய்யும் தொழிற்சாலை, ஜோக் நீர்வீழ்ச்சி, சோப்புத் தொழிற்சாலை. ஆகியவைகள் அவைகளுக்குக் காரணம் விசுவேசுவரையாவுக்குப்பின்னால் வந்த திவான்களில் மிகக் குறிப்பிடப்பட வேண்டியவர், சர்மில்சா இஸ்மாயில் அவர்கள். அண்மையில் அனுமந்தையா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், திராவிட நாகரீக முறையிலே உலகம் கண்டு வியக்கும் அளவுக்கு கட்டப்பட்ட சட்ட சபைக் கட்டிடமான, **விதான சௌதா** என்பது.

டில்லிக்காரர்களே இதைக் கண்டு வியந்து, டில்லி மக்கள் சபையையே இங்கே நடத்தலாமா என்றளவுக்கு அவர்களுக்கு ஆசை நமச்சல் எடுத்திருக்கிறது—அவ்வளவு நேர்த்தியான கட்டிடம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கருனடகம், தன் ஈரம் வற்றாத நெஞ்சைத் திறந்து, நூற்றாண்டு வாழ்ந்து காட்டிய முத்தோரில் முத்தோனை, இன்னுமொரு நூறுண்டிரும், என்று நெஞ்சார வாழ்த்தி, கண்ணிறைய ஆனந்தக் கண்ணீர் சொரிந்திருக்கிறது, நாமும், நம் திருவிடத்தின் சார்பாக அம்முதியவரில் முதல்வனை, நீர் வாழி! வாழி! என்று வாழ்த்துகிறோம்.

தங்களன்புள்ள.



அடுத்த இதழிலிருந்து...

இந்த இடத்தில்

?

புறப்படு மகனே

9

படை வீட்டில் நைனு மலை வளர்மதிக்கு வாட்போர்கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றான். அது முடிந்ததும், குதிரை யேற்றத்தைக் கற்றுக் கொடுக்கிறார்கள். தண்ணீரில் இறங்கினால் அபாயம் ஏற்படாமலிருக்க நீச்சல் கற்றுக்கொடுக்கிறார்கள்.

கடைசியில் ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கின்றார்.

ஆசிரி: வளர்கிறது என்று தொடங்கி வளர்கிறது என்று முடி.

வளர்: உணவால் உடல் வளர்கிறது. உடலால் உள்ளம் வளர்கிறது. உள்ளத்தால் அறிவு வளர்கிறது. அறிவால் எல்லாம் வளர்கிறது.

ஆசி: அறத்துப்பாலில் ஒன்பதாவது குறள் என்ன?

வளர்: கோள் இல் பொறியின் குணம் இலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை.

ஆசி: தூங்குகின்றவனுக்கும் இறந்தவனுக்கும் என்ன வேற்றுமை?

வளர்: தூங்குகின்றவன் விழித்தெழுவான். இறந்தவன் எழுந்திருக்கமாட்டான்.

ஆசி: நீ வீரனாக இருக்க விரும்புகிறாயா விவேகியாக இருக்கவிரும்புகிறாயா?

வளர்: நாற்பது வயதுவரையில் வீரனாகஇருக்க விரும்புகிறேன். அதற்கு மேல் விவேகியாகஇருக்கவிரும்புகிறேன்.

ஆசி: ஒரு மனிதனுக்கு எவ்வளவு ஆயுள்?

வளர்: பிறந்ததுமுதல் இறக்கும் வரை உள்ள நாட்கள்.

ஆசி: நீ உன் தாய் தந்தையரை எப்படிக் கருதுகிறாய்?

வளர்: தந்தையை நேசிக்கிறேன்; தாயை வணங்குகிறேன்.

ஆசி: கைம்மாறு கருதாமல் நமக்கு உதவி செய்பவை எவை?

வளர்: மழை, நிலம், காற்று, வெய்யில்'.

ஆசி: ஒரு பெரிய மரத்தை சிறியவீட்டிற்குள் நுழைக்க முடியுமா?

வளர்: முடியும்.

ஆசி: எப்படி?

வளர்: துண்டுத் துண்டாக வெட்டி.

ஆசி: கடவுளேவந்து உன்னை கூப்பிடுவதாக வைத்துக் கொள்வோம். நீ உடனே அவரோடு போவாயா?

வளர்: ஏன் அழைக்கின்றீர்கள் என்று கேட்பேன். சரியான காரணம் சொன்னால் அம்மாவைக் கேட்டுக் கொண்டு போவேன். 'சரி போய் விளையாடு'. என்று சொல்லி விட்டு, ஆசிரியர் எழுந்து போய்விடுகிறார். வளர்மதி நந்தவனத்தின் பக்கம் போகிறான். அங்கே புரவிமாடன் மகள் பூங்குழலியும், வேதியர் கஞ்சதாசன் மகள் வேதவல்லியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

பூங்: வேதவல்லி உனக்குத் திருமணம்னு கேள்விப்பட்டேனே எப்போ?

வேத: உனக்கு நாள் வெச்சிருக்காங்களே அதுக்கு அடுத்தநாள்.

பூ: மாப்பிள்ளை யாரு?

வேத: உங்க மாப்பிள்ளை இருக்காரோன்னோ? அவா ஆத்துக்கு எதிர் ஆத்திலே.

பூ: ஏன் குளிக்கிறாரா என்ன?

வேத: என்ன சொல்றே விபரமா சொல்லேண்டி.

பூங்: உங்க மாப்பிள்ளை ஆத்திலே இருக்கிறான்னியே, அதனாலே குளிக்கிறாரோ என்னமோன்னு கேட்டேன்.

வேத: நீங்க வீட்டுக்குப் போகனும்ன்னு. நாங்க ஆத்துக்குப்போனும்போம்.

பூங்: எப்பவும் ஆத்தங்கரை வாசந்தானே உங்களவாளுக்கு.

வேத: உன் கல்யாண வேலை எல்லாம் முடிஞ்சுப் போச்சோ?

பூங்: ஓ பட்டு சேலை எடுத்தாச்சு; நகைகள் எல்லாம் செய்தாச்சு; சமையல் காரனுக்குச் சொல்லியாச்சு மேள தாளக்காரனுக்கும் முன்பணம் கொடுத்தாச்சு பந்தலும் போட்டாச்சு. ஓலையனுப்பியாச்சு. ஓலையும் வெச்சாச்சு.

வேத: ஐயோ. இவ்வளவும் செய்தாச்சுங்கிறே இன்னும் இங்கே ஏண்டி உட்கார்ந்திருக்கிறே?

பூங்: எல்லாம் ஆச்சு. இன்னும் ஒன்னுதான் கிடைக்கல்லே. கிடைச்ச பிறகு போகலாம்ன்னுஇருக்கேன்.

வேத: என்ன கிடைக்கல்லே?

பூங்: மாப்பிள்ளை.

வேத: நல்லவேலை. இன்னும் மாப்பிள்ளையே பொறக்கல்லேன்னு சொல்லாமே போனியே.

பூங்: அது சரி. என்னோட மணம் விஷயந்தான் இந்த அளவோடு நிக்குது. உன் திருமண விஷயம் என்னாச்சு?

வேத: அப்பா தேடிகிட்டிருக்கிறாரு.

பூங்: எந்த சந்தையிலே.

வேத: சீ, போடி, எப்பவும் குறும்புதான் உனக்கு.

பூங்: உங்களவங்களே. யாரையாவது கொண்டுவந்து நிறுத்தி. இவர கட்டிக்கோன்னு சொன்னா. கட்டிக்கிற வேண்டியதுதான், இல்லையா?

வேத: இதுவரையிலும் அப்படித்தான் நடந்துகொண்டிருந்தது. நான்தான் கொஞ்சம் மாத்தலாம்ன்னு நெனைச்சிருக்கேன்.

பூங்: சீர்த்திருத்தம் பஞ்சாங்கத்தைக் கடிக்கிறப்போல இருக்கே.

வேத: சீர்த்திருத்தமுமில்லே. பேர் பொருத்தமுமில்லே. நான் அழகா இருக்கிறவன கட்டிக்கோணுங்கறேன்! எங்கப்பா அறிவாளியே கட்டிக்கோணுங்கிறாரு.

பூங்: உங்களவங்கள்ளே, யார் அதிகம்? அறிவாளிகளா, அழகன்களா.

வேத: இரண்டுவகையுமுண்டு.

பூங்: அப்போ நீ ரெண்டு பேரையும்கட்டிக்கிடலாமே. பாஞ்சாலி அஞ்சு பேரை கட்டிக்கிறலையா.

வேத: பூங்குழலி, நீ மறைமுகமா தாக்குறே.

பூங்: இல்லே, இல்லே! பகிரங்கமாகத்தான் சொல்றேன். ஏன்னா. அழகா இருக்கிறவன கட்டிக்கிட்டதனாலே உன் ஆசையுந் தீரும், அறிவாளியைக் கட்டிக்கிட்டதனாலே, உங்கப்பா ஆசையுந் திரும். குடும்பத்திலே எதுக்கு சண்டைன்னுசொன்னேன். வேறே ஒன்னுமில்லே. வருத்தப்படாதே. ஏன் இன்னைன்னு செய்யலாமே.

வேத: உன் யோசனையெல்லாம் ரொம்ப பயங்கரமா இருக்கு. சொல்லித் தொலை.

பூங்: அறிவு, அழகு, இரண்டும் சேர்ந்தாப்பலே யாரும் இல்லையா.

வேத: எங்க அக்ரகாரத்திலேயே ரெண்டு பேருதான் இருக்காங்க. அவங்களுக்கு இன்னும் கலியாணமும் ஆகல்லே.

பூங்: ரெண்டு பேராவது உயிரோட இருக்கிறானுங்களே. ரொம்ப அதிர்ஷ்டக்காரிடி நீ. அவங்க ரெண்டு பேரிலே யாரையாவது கட்டிக்கிறதுதானே.

வேத: அந்த ரெண்டுபேரிலே யாரையும் கட்டிக்க முடியாது.

பூங்: ஏன்?

வேத: ஒன்னு திக்கு வாயி, இன்னொண்ணு செவிடு.

பூங்: ஆ அதுதானே பார்த்தேன். முனுவாயிருந்தா ஒன்னு குருடாயிருந்திருக்கும் போலிருக்கு. அறிவு, அழகு ரெண்டும் சேர்ந்திருக்கிறதை விட்டு வைச்சிருக்கமாட்டாங்களே. இந்நேரம் விலையாயிருக்குமே. ஏன் இப்படி கேட்பாரில்லாமே கிடக்குதுன்னு. உங்களுக்கும் எங்களுக்கும் திருமண முறையிலே வேற்றுமையுண்டு, எங்களில் நாங்களே விரும்பினாலன்றி யாரும் கட்டாயப்படுத்த முடியாது. உங்களில் பெற்றோர்கள் சொல்கின்றவர்களை மணக்க வேண்டும். உங்களில்வரதட்சணைஎன்ற பேரால் மாப்பிள்ளைகளை விலைக்கு வாங்கவேண்டும். எங்களில் அந்த தொல்லையே இல்லை. எங்களில் ஆண்கள் மரங்களென்றால் பெண்கள் நிழல் என்பார்கள், உங்களில் அப்படியல்ல. பெண்கள் குதிரைகளென்றால், ஆண்கள் கடிவாளமென்கிறார்கள். எங்களில் பிள்ளைகள் பிறக்கவில்லை என்றால் அது ஒரு பெரிய குற்றமல்ல, உங்களில் பிள்ளைகள் பிறக்கவில்லையானால் ரௌரவாதி நரகமே கிடைக்கும் என்று பயங் காட்டுகிறார்கள். இப்படி அடிப்படை வேற்றுமைகள் அநேகம் உண்டு.

வேத: அதை மாற்றத்தான் பெரிய புரட்சி நடத்திக் கொண்டிருக்கின்றேன்.

பூங்: அந்த புரட்சியிலே நீ முதலில் பலியாகத் தயாராயிரு.

இந்த உரையாடலை எல்லாம் வளர்மதி பின்னாலேயிருந்து கேட்டுக் கொண்டே இருந்தான். தாய்மாமன் நாகமன் வருவதைப்பார்த்தும் பாராதவன் போல்இருந்துவிட்டுமேலும் என்ன நடக்கிறதென்பதைக் கவனிக்க ஆரம்பிக்கிறான்.

பெண்கள் புரட்சி செய்கிற அளவுக்கு வந்துவிட்டார்களா என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டு வந்த நாகமன் புரட்சி செய்யப்போகும் இவர்களின் தைரியம்எப்படி இருக்கிறதென்று கவனிக்க விரும்பி மறைவிலிருந்துகொண்டுஒருதென்னங்குடுக்கையைத் தூக்கி அவர்கள் முன்னால் விழும்படி எறிகிறான். வேதவல்லி திரும்பிப் பார்க்காமல் ஓடுகிறாள். பூங்குழலி அதைப் பார்த்து சிரித்துக்கொண்டே நிற்கிறாள். நாகமன் பூங்குழலியருகில் வருகிறான்பூங்குழலிதலைகுனிந்து நிற்கிறாள்.

நாகமன்: சொன்னதை செய்து முடித்து விட்டாயா?

பூங்: இல்லை, அதற்குள் நீங்கள் வந்துவிட்டீர்கள்.

நாகமன், இந்நேரம் புரட்சி, கிரட்சி என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

பூங்: கலியாண விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தோம். அது கடைசியில் புரட்சியில் முடிந்தது

நாக: புரட்சி செய்யத்தான் ஓடுகிறாளா அவள். பூங்குழல். அவள் செய்ய நினைப்பது கலியாணப் புரட்சி அல்ல.

பூங்: அதுதான் எனக்குத் தெரியுமே.

நாக: தெரிந்துதான் இப்படி மக்கு மாதிரி இருக்கிறாயா? புரவிமாடன் மகளா நீ? அவன் பெயரை எட்டிலிருந்தே எடுத்து விடுவாய்ப் போலிருக்கிறதே.

பூங்: அவளை பேச்சில் எந்த பக்கம் இழுத்துக் கொண்டு போனாலும் அந்தப் பக்கம் மாத்திரம் வர மறுக்கிறாள்.

நாக: பெண்கள் ஆண்களிடத்திலே சாகசம் செய்யக் கற்றுக் கொண்டிருக்கின்றார்களே தவிர, பெண்கள் பெண்களிடத்திலே சாகசம் செய்யப் பழகவில்லையே.

பூங்: நன்றாகச் சொன்னீர்கள். கண்ணாடி முகம் பார்க்க உதவுகிறதேதவிர, கண்ணாடி கண்ணாடியைப் பார்க்கப் பழகலையே என்கிறமாதிரிஇருக்கு நீங்கோ சொல்றது.

நாக: நல்ல உதாரணம். பேசவும் கத்து கிட்டியே.

பூங்: பேசாமெ இருந்தா ஊமைஎங்கிறிங்கோ அடக்கமா பேசனா ஆமை எங்கிறிங்கோ. படபடனு பேசனா வாயாடி எங்கிறிங்கோ. விட்டு விட்டு பேசனா மக்கு என்கிறிங்கோ. அதனால் தான் எப்படி பேசறதுங்கறதே இப்போதான் பழகிக் கொள்றேன்.

நாக: பேச்சும் பலனுள்ளதாயிருந்து செயலும் முறையோடிருந்தா, பூங்குழல்! இந்நேரம் நம்போ வேலை முடிஞ்சுட்டிருக்குமே அக்கா வேறே துடியா துடிக்கிறாங்கோ. அவங்களே அடிக்கடி பாக்கறதுக்கே அச்சமாயிருக்கு. வேதவல்லி உன் நம்பிக்கைக் குரியவள்தானே.

பூங்: நம்பிக்கைக் குரியவள் தான். நஞ்சு மனிதனை சாகடிக்கவும் பயன் படுகிறது. நோயை நீக்கவும் பயன் படுகிறது. வேதவல்லி என்ற நஞ்சு எந்த ரகத்தைச் சேர்ந்தது என்று தெரியவில்லை.

நாக: இவ்வளவு நாளில் நீ அதைக் கண்டு பிடிக்கவில்லையா?

பூங்: உண்மையான, நட்பு எப்படி யிருக்கும் என்பதை தெரிந்து கொள்ள சில வாய்ப்புகள் கிடைக்க வேண்டியிருக்கிறது. இருகரங்களைக் கூப்பிப் போய் வாருங்கள் என்று சொல்வதற்கும், இதோ இதைப் பெற்றுக் கொண்டு போய் வாருங்கள் என்று சொல்வதற்கும் வேற்றுமை யுண்டல்லவா.

நாக: அதேபோல் இந்த நெருக்கடியான நேரத்தில் அவள் நட்பைத் தெரிந்து கொள்வது எளிதாக இருக்கும் என்கிறாய். அல்லவா?

பூங்: ஆனால் ஒன்று. ஏதாவது ஆசை காட்டினால் மயங்கி விடுவாள் என்று நினைக்கின்றேன்.

நாக: நான் வேறு விதமாக நினைக்கிறேன்.

பூங்: எப்படி?

நாக: அவனுக்கு ஆசைக் காட்டுவதை விட, உனக்கு அபாயம் என்று தெரிவித்தால், ஒரு வேளை மனம் இரங்குவாளா என்று நினைக்கிறேன்.

பூங்: இரண்டு முறைகளாலும் அவள் எண்ணத்தை அளந்து விடலாம். அதில் எது சரி என்று உங்களுக்குத் தோன்றுகிறது?

நாக: அவளுக்கு ஆசை காட்டுவதைவிட, உனக்கு அபாயம் என்று காட்டலாம்.

பூங்: எந்த வகையில்எனக்கு அபாயம் என்று காட்டப் போகிறீர்கள்.

நாக: அசத இப்போதே சொல்லி விட்டால் தெளிந்துவிடுவாய். அந்த அபாயம் ஏற்படுகிற போது உனக்கு அதிர்ச்சித்தோன்றுது—செயலில் பாரு.

என்று நாகமன் புறப்படுகிறான். தண்டோரா சத்தம் கேட்கிறது.

"இதனால் யாவாக்கும்தெரிவிப்பதென்ன வென்றால் மாட்சிமை தங்கிய மன்னருக்கு உடல் நலமில்லையாகையால் இன்றிலிருந்து ஒரு திங்கள் அவைக் கூடாது என்பதோடு மன்னரைப் பார்க்க யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்."

இதைக் கேட்டவுடனே வளர்மதி அரண்மனை நோக்கி ஓடுகிறான். தந்தை படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிறார். தாய் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.

உள்ளே வேகமாகச்சென்ற வளர்மதி தந்தையைக் கட்டியணைத்துக் கொண்டு, என்னப்பா! பேய் வந்ததாப்பா—பிசாசு வந்ததாப்பா? என்று கேட்கிறான்.

"இது யாரடா உனக்குச் சொன்னது? பிஞ்சு உள்ளத்தில் குடியேறி விட்டதா பேயும் பிசாசும்? சங்கேந்தி! இந்த எண்ணத்திலிருந்து ஒழிக்க வேண்டுமே. காலம் கடத்தாதே! உடனே செய். யாரப்பா சொன்னது உனக்கு பேய்ப் பிசாசுகளைப்பற்றி?"

வளர்: ஐயர் தாத்தா சொன்னாரப்பா.

மன்: அவரு பார்த்தாராமா. எப்படிஇருந்ததாம், எப்போ வருமாம், என்ன செய்யுமாம்'

வளர்: கருப்பா உயரமா இருக்குமா — ராத்திரிலே வருமா! ஆளை புடிச்சிகிட்டு போயிடுமா. அவங்கொ வீட்டுக்குப் போகாமலே வாசல்லே ஒரு சந்து இருக்கு பாருப்பா, அங்கேதான் ராத்திரியிலே வருதாம். ஐயர் தாத்த அடிக்கடி பார்க்கிறாராம்.

மன்: தம்பிப்பையலே, ஆள பாத்தா புடிச்சிக்கிட்டுபூடுதானு சொன்னையே—அப்பொ ஐயர் தாத்தாவே ஏன் புடிச்சிக்கிட்டுப் போகலேன்னு கேட்டியா—

வளர்: கேட்கலேப்பா—

மன்: முட்டாள்!.

சங்: உம்...கொழந்தையே போய் உங்க வாயாலே...

மன்: நீ எங்கே அப்படிசொல்லிடப்போறியோன்னுநானு முந்திக்கிட்டேன்.

இதற்குள் களஞ்சியம் மன்னனிடம் வந்து நிற்கிறான். அவனைப் பார்த்த மன்னன் எல்லாம் தயாராய் விட்டதா என்கிறான். மாலை புறப்படலாம் என்கிறான் களஞ்சியம். எப்படியும் ஒரு திங்களுக்குள் முடித்துவிட வேண்டுமென்று சொல்லிக்கொண்டேதிரும்பிப் படுக்கிறான்.

இரண்டு காவற்காரர்கள். புரவிமாடனைக் கைது செய்கிறார்கள். காரணம் கேட்கிறான் புரவிமாடன். காரணம் கேட்கவேண்டிய இடம் வேறு என்றுசொல்கின்றனர்காவற்காரர்கள். வரமறுக்கிறான் முரட்டுத்தனமாக காவற்காரர்களை அடித்து விரட்டப் பார்க்கிறான். இன்னும்இரண்டு காவற்காரர்களைச் சேர்த்துக் கொண்டு, கையில் விலங்கிட்டுக் கொண்டு வருகின்றனர். குதிரைகள் எல்லாம் கனைக்கின்றன. புரவிமாடன் மகள் பூங்குழல் ஓவெனக் கதறுகிறாள். அப்படியே அவனை வேதியர் வீட்டுப் பக்கம் கொண்டு வருகிறார்கள். இந்த அரசாங்கத்தில் நீதிஇல்லையா என்று கத்துகிறான் புரவிமாடன். அடிக்கிறார்கள். வேதியர் குறுக்கிட்டு தடுக்கமுயற்சிக்கிறார். அவரையும் அப்பால் தள்ளிவிட்டு மேலும் நடக்கிறார்கள். வேதவல்லி குறுக்கிட்டு தடுத்து நிறுத்தி கைது செய்ததற்குக் காரணம் கேட்கிறாள். 'நீ என்ன பட்டத்தரசியா—உனக்கேன் இந்த வேலை,எட்டிப்போ'என்றுஅவளையும் எச்சரிக்கிறார்கள். 'எப்படியும் விடுவிப்பேன்,' என்கிறாள் அவள். முடிந்தால் பார் என்று சொல்லிக்கொண்டே போகிறார்கள். ஊரெல்லாம் இதே பேச்சு. இவனைக் கைது செய்தது மன்னனுக்கும் தெரியாது. மன்னனும் இந்தச் செய்திகேட்டு திடுக்கிட்டான். யார் அவனை கைது செய்தது என்று கேட்டான். பக்கத்திலிருந்த சங்கேந்தி, நான்தான் செய்ய கட்டளையிட்டேன், என்றாள். ஏன்? என்றான். பிறகு சொல்வதாகச் சொல்லிவிட்டாள்.

தன் தந்தையைக் கைது செய்து கொண்டு போனவுடனே பூங்குழல் நேராக வேதவல்லியிடம் ஓடுகிறாள் அவள், உனக்குத்தான் நாகமன் நன்றாக அறிமுகமானவராயிற்றே. அவரிடம் கேட்டால் ஏதாவது உதவி கிடைக்கும் என்கிறாள். நேராக நாகமனைக் காணவருகிறாள். நாகமன் அவளை தற்சமயம்சந்திப்பதற்கில்லை என்று புறக்கணித்து விடுகிறான். தமக்கைக் கைது செய்ய கட்டளையிடுகிறாள். தம்பி உதவி செய்ய முடியாதென்கிறான். மீண்டும் வேதவல்லியிடமே ஓடிவருகின்றாள். இருவரும் சேர்ந்து வேதியரைப் பார்க்கிறார்கள். ஏற்கெனவே தண்டோரா மூலம் அறிவித்திருப்பதைப்போல் மன்னனைக் காண முடியாது தவிக்கிறான். சங்கேந்தியைச் சந்தித்து சொல்லவோ அவனுக்குப் பயமாயிருக்கிறது. ஏனெனில் புரவிமாடனைக் கைது செய்யக் கட்டளையிட்டவளே அவள்தான். அடுத்து நாகமனைச் சந்தித்துச் சொல்லலாமென்றால், பூங்குழலையே பார்க்க மறுத்துவிட்டான். ஆகவே இந்த இக்கட்டான நிலையில் வேதியர் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட புரவிமாடனை சிறையில் தனிஅறையில் வைக்க வேண்டுமென்றும், வேண்டிய வசதிகள் செய்துதரவேண்டுமென்றும். அவனை இரண்டு நாட்களில் ஒரு தரம் பூங்குழல் சந்திக்கலாம் என்று சலுகைத் தரப்பட்டிருந்தது. கைது செய்து கொண்டு போனபோதுகொடுமையாக நடத்தப்பட்ட புரவிமாடன் சிறையிலடைத்தபின் வேண்டிய வசதிகளைப் பெறுகிறான் என்பது மக்களுக்கு வியப்பைத்தந்தது. பூங்குழலை எல்லாரும் சூழ்ந்துகொண்டு துக்கம் விசாரிப்பதைப்போல் விசாரிக்கின்றார்கள். அவளுக்கும் காரணம் சொல்லத் தெரியவில்லை. அன்றிரவு பூங்குழலும் வேதவல்லியும் பழையபடி பூங்காவில் தனியாக சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

பூங்காவைநோக்கி குதிரைகள் வரும் சத்தம் கேட்கிறது. இன்னும் என்ன ஆபத்துவரவிருக்கிறதோ என்று அச்சத்தோடு எழுந்து நிற்கிறாள். குதிரைகள் இரண்டும் ஒரு மரத்தடியில் நிறுத்தப்பட்டு அவற்றிலிருந்து இரண்டுபேர் இறங்கி ஓடைக்கருகில் வருகின்றார்கள்.



அடுத்த இதழ் முகப்பில்

புதிய

பொதுச்செயலாளர்!

★ சி. பி. சிற்றரசு ★

ஆர். தாண்டவன், திண்டுக்கல்

கே: அண்ணு அவர்களே! மதுரை முத்து அவர்களுக்குப் போட்டியாக இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். போட்டியிடுவதாகக் கேள்விப்பட்டேன். இச்செய்தி உண்மையா?

ப: எதற்கு என்று விளக்கமில்லையே. எஸ். எஸ். ஆர்.முத்துவுக்கு மட்டிலும் அலல, எல்லோருக்கும் நண்பராயிற்றே. யாரோ கட்டிவிட்ட சரடு. நம்பாதீர்.

நடனசிகாமணி, திருவனந்தபுரம்

கே: இவ்வாண்டு 'ஒலிம்பிக்' பந்தயத்தில் இந்தியா பாகிஸ்தானிடத்தில் தோல்வி கண்டுவிட்டதே?



ப: இந்தியாவின் 'தலையெழுத்து' இனி யாரிடத்திலும், எதிலும் வெற்றி காண வழியில்லை! ஒவ்வொரு அமைப்புக் குழுவிலும் தனியார் தலையீடுகள் வழுத்துவிட்டன. திறமையுள்ளவர்கள் புறக்கணிக்கப்படுவதும், வேண்டியவர்களுக்கு வாய்ப்பளிப்பதுமே இப்படி வாயில் மண்ணைக் கவ்வும் நிலைகளை ஏற்படுத்துகின்றன!

கஜேந்திரன். கேரளம்

கே: பாரதியாருடையநினைவு நாளை காங்கிரஸ்காரர்கள் சிறப்பாக கொண்டாடி வருகின்றனரே?

ப: கொண்டாடலாம், ஆனால்... "தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்தடுக்க முயற்சிசெய்யார் வாயைத் திறந்து, சும்மா—கிளியே 'வந்தே மாதரம்' என்பார்!" என்ற அவரது உள்ளக் குமுறலை அவர்கள் அறியமாட்டார்கள்!

மணியன், தமிழ்நாடு.

கே: ஆளும் கட்சியாகத் தி. மு. க. வந்தால்?

ப: வேடிக்கை பாரும்.

கே: நம் தமிழ்நாட்டைப் போலவே பிற ராஜ்யங்களும் வஞ்சிக்கப்படுகின்றனவா?

ப: கட்டாயம் வஞ்சிக்கப்படுகின்றன. கண்டனக் குரல் உங்கள் காதுகளில் விழவில்லையா.

கே: நமக்குத் துரோகம் செய்வதையே வேலையாகக் கொண்ட மந்திரி யார்?

ப: எட்டு பேர்கள்.

டி. வி. சுந்தரம். தங்கசாலை.

கே: அண்ணு அவர்களே! மா. பொ. சி அடிக்கடி தம் பேச்சை மாற்றி மாற்றிப் பேசித் திரிவதற்கு என்ன காரணம்? அவருக்கு இது நன்மையா? தீமையா?

ப: நன்மையோ தீமையோ அடிக்கடி பெயர் அடிபட வேண்டும் அவ்வளவுதான்.

செ. கருப்பையா, துவரங் குறிச்சி.

கே: அன்புள்ள அண்ணு! புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் முகவரி என்ன?

ப: 160, லாய்ட்ஸ் ரோடு, சென்னை

கலைச்செல்வன், கேரளா.

கே: தமிழகத்தின் படேல் காமராசரை எதற்கு ஒப்பிடலாம்?

ப: ஒட்டு வேட்டைக்காரர் என்று சொலல்லாம். அவரை ஒப்பிடுகின்ற அளவுக்கு யாரும் இல்லை.

கே: அறிஞர் அண்ணு உங்களுக்கு இளவலா? அல்லது முதுவலா?

ப: ஓராண்டு பதினேரு நாட்[illegible]ள் இளையவர்.

R. தாண்டவன், திண்டுக்கல்

கே: ஆந்திரம் பிரிந்த பிறகும் திராவிடம் கேட்பது உடைந்த கண்ணுடியைஒட்ட வைக்கும் முயற்சி என்கிறார்களே, இதற்கு தங்கள் பதில் என்ன?

ப: பிரிந்த ஆந்திரத்தை ஒட்டவைக்க வில்லையே. கூட்டாட்சி என்பதன் கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளும்

டி. வி. சுந்தரம், திருப்பாச்சூர்

கே: மேலைய நாடுகளின் தொழில் வளங்களைக் காண புறப்பட்டிருக்கும் நிதிமந்திரியார் எடுத்துக்காட்டாக நம் நாட்டுக் கைத்தொழிற் சாமான்களில் எதையாவது எடுத்துச் சென்றுள்ளாரா?

ப: இருக்கமுடியாது! இங்கென்ன தொழில் வாழ்கிறது? எடுத்துச் சென்றிருந்தால் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இயக்கி வருகிறார்களே, மாபெரும் தொழில்' கருவியாம் கைராட்டையில் ஒன்றும் அவர்களது அற்புதப் படைப்பில் உருவான மண்பானை, ஓலைக் கூடை, கிழிந்த பாய் இவைகளைத்தான் எடுத்துச் சென்று காட்ட முடியும்!

R. இராசமாணிக்கம், தேவராண்யம்

கே: மந்திரி பக்தவத்சலம் எதிர்க் கட்சிகளெல்லாம் பச்சைத் துரோகிகள் என்று பேசியுள்ளாரே, இவர் நினைக்கும் பச்சைத் துரோகம் தான் என்ன?

ப: இந்தி வேண்டாம் என்கிறோம், தமிழ் நாடு என்று பெயர் வைக்கச் சொல்கிறோம். வடநாட்டுக்கு வால் பிடிக்காதே என்கிறோம், இவை எல்லாம் அவர் வாங்கும் கூலிக்கு அவர் கணக்குப்படி பச்சைத் துரோகம் தானே.

தி. மா. மணி. திருப்பாச்சூர்

கே: கறுப்புக்கொடி நிகழ்சியைக் கேட்டவுடன் தயவு செய்து வாபஸ் வாங்கி விடுங்களென்று கேட்டுக் கொண்ட சுப்பிரமணியம், வாபஸ் வாங்கியபின் கிண்டலாகப் பேசுகிறாரே! இவரைப் பற்றி என்ன எண்ணுவது?

ப: என்ன வேண்டுமானாலும் நினைக்கலாம். மேலே ஏரியவுடன் ஏணியை உதைத்துத்தள்ளும் புத்திசாலிக்குஒப்பிடலாம்.

மு நெடுமாறன், திருப்புகலூர்

கே: 'அண்ணு அவர்களே! 1965-க்குப் பிறகு தென்னகத்தில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்துவோம்!' என்று எழுதியிருக்கிற சட்ட புத்தகத்தை வைத்து நான் இதை ஒத்துக் கொள்கிறேன் என்பதற்கு அடையாளமாக சட்டமன்றத்தில் அனுமானப் பிரமாணம் செய்துவிட்டு வெளியில் வந்து, 'இந்தி வேண்டாம்' என்று பேசுவதும் எழுதுவதும் சரியா?

ப: கூட்டத்தைப் பார்த்து கும்பிடு போட்டால் எதிரிகளுக்குப் போட்டதாக அர்த்தமா என்ன? 1938-ல் வெள்ளைக்காரன் அளித்த பதவியில் பிரமாணம் செய்து உட்கார்ந்து கொண்டு விடுதலைப் போர் நடத்தவில்லையா அவர்கள்.

ப. இ. இளங்கோ, பம்பாய்-10:

கே: இன்றைய காங்கிரஸ்காரர்கள் போகும் போக்கு (காலித்தனத்தில் போகும் போக்கு) அவர்களை எங்கு கொண்டு போய்விடும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: அவர்கள் எங்கும்போக மாட்டார்கள் நாம் தான் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

அ. பிரகாசம், சென்னை-14

கே: நடிகர் சிவாஜி-கணேசன் சிருங்கேரி சாமியார் காலில் விழுந்திருக்கிறாரே, ஏன்?



ப: கடந்த சில நாட்களாகவே 'தொழில்' மிகவும் மந்தம்! எதிர் காலத்தைப் பற்றி சிறிதும் நம்பிக்கையில்லை அவருக்கு ஏற்பட்டுள்ள அச்சம் அந்தச் சாமியாரின் காலை கழுவிக் குடிக்கச் செய்திருக்கிறது. பரிதாபம்!

தி ஆ. இளங்கோவன், பெங்களூர்

கே: 'இந்தி எதிர்ப்பு சிறு விஷயம்; தமிழ்நாடு பிரிவினை தான் முக்கியம்!' என்று கூறிய ஆதித்தன், ஏன் இப்பொழுது திடீரென்று இந்தியை ஒழிக்க கருப்புக்கொடி பிடித்தார்?

ப: எட்டி எட்டிப்பார்த்து எட்டாத காரணத்தால் சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும் என்ற நரியைப் பற்றி படித்திருப்பீரே சிறு வயதில். அதை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளும்.

இரா. கலையரசன், திருச்சி

கே: ஒழுக்கத்தில்சிறந்த நாடு எது?

ப: கீழ் நாடுகள், மேலை நாடுகள் ஒழுக்கத்தை விட்டு வசதியைத் தேடுகின்றன. கீழநாடுகள் வசதியை விட்டுக் கொடுத்து ஒழுக்கத்தைத் தேடுகின்றன.

துரை கொரட்டூர்

கே: இந்தி எதிர்ப்புப் போராட்டம் நமக்கு வெற்றியா, தோல்வியா?

ப: படு மோசமான ஆளைய்யா நீர்! இந்தி எதிர்ப்புப் போரே இன்னும் நடைபெறவில்லையே, தூங்குகிறீரா.

அணணுதாசன், நீலமலை

கே: அஞ்சலகம், புகை வண்டி நிலையம், அஞ்சல் அட்டை, அஞ்சல் கூடு, தபால் தலைகள், பள்ளிக் கூடங்கள், மைல் கற்கள் ஆகிய இடங்களில் இந்தி ஆதிக்கம் செலுத்திக்கொண்டுள்ளபோது, இந்திப்போர் வெற்றி பெற்றுவிட்டது என்று கூறலாமா? மேற்கண்ட இடங்களில் இருந்து இந்தியை வெளியேற்ற பாடுபட்டு, இந்தியை தமிழ்நாட்டில் நுழைய விடாமல் பார்த்துக்கொள்ள தி.மு.க.முயற்சி எடுக்கிறதா?

ப: இந்திப்போர் வெற்றி பெற்று விட்டது என்று யார் சொன்னார்கள். எங்கே வெற்றி விழா கொண்டாடினார்கள். கருப்புக் கொடி காட்டுவதை நிறுத்தினோம். இந்திய தலைவர்களின் குழப்பத்தைத் தெளிவாக்கிக்கொண்டு, இனி அவர்கள் ஆளுக்கொரு விதமாகப் பேசமுடியாதவாறு செய்தோம். அவ்வளவு தான்.

துரை, வேலூர்

கே: கணவனை இழந்துவிட்ட இந்திரா மறுமணம் செய்து கொள்வாரா?

ப: அதைப்பற்றித் தான் அவர் கடந்த சில தினங்களாகவே 'இன்பக்' கனவு கண்டு கொண்டிருக்கிறார்

கெ. ராஜப்பன், சென்னை-2

கே: ஈ. வெ. கி. சம்பத் மீது தொடரப்பட்ட வழக்கு மெய்யா, பொய்யா?

ப: ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது அதைப் பற்றிய கருத்துக்களைச் சொல்லக் கூடாதென்ற விதியை முதலில் தெரிந்து கொள்ளும்.

கூறைவேந்தன். மாயூரம்

கே: மனிதன் ஏன் விரைவில் விடுதலை உணர்ச்சி பெருமல் மந்த நிலையில் உள்ளான்?

ப: மனிதன் என்று எல்லாரையும் குறிப்பிடாதீர்கள். நம் நாட்டு மனிதர்களைச் சொல்லுங்கள். மந்தம் இவர்களுக்குச் சொந்தம்.

ஆசிரியர் அவர்கட்கு!

கோ. வில்லவன்! வணக்கம்!! தங்களின் 16—9—60. இனமுழக்கம் முகப்பைக் கண்டேன்! களிப்பு கொண்டேன். தென்னுட்டின் இலட்சிய சிங்கம்! திராவிடம் தேடி பேற்ற செல்வம்! அறிவுக் களஞ்சியம்! நாம் பெற்ற நல்லவர்! நாடுகள் பல போற்றத்தக்க வல்லவர்! தமிழைக்காக்க புறப்பட்ட மறவர் படையின் தளபதி! தென்னுட்டின் பெர்னுட்ஷா, அறிஞர் அண்ணு அவர்களின் திரு உருவத்தைக் கண்டேன்! இயேசுவுக்கும், புத்தருக்கும் வான்புகழ் கொண்ட வள்ளுவனுக்கும் அகிம்சாமூர்த்தி—ஜீவ காருண்ய சீலர்-மகாத்மாகாந்திக்கும், ஞாலம் போற்றும் ஞாயிறுக்கும் சான்றுகாட்டி அண்ணுவை ஒப்பாக, சிரித்த, சிங்கார முகத்தோடும், புதுப்பொலிவுடனும் சித்தரித்து தந்திருக்கிறார் ஓவியச் சக்கரவர்த்தி, சோமு அவர்கள். உண்மையிலேயே, சோமு அவர்களை நான் பாராட்டுகிறேன். ஓவியத்துக்கு உயிர் ஊட்டியிருக்கிறார். கவிதைக் குவியல் தந்த வே. கபிலன் கன்னித் தமிழ் பேசும் அறிஞர் அண்ணுவின் பேச்சை கேட்காத காதென்ன காதோ! இன்ப இனமுழக்கும் முகப்புதனைக் காணுத கண்னென்ன கண்ணே!

தங்கள்,

கோ. வில்லவன்.

கொரடாச்சேரி

ஜோலாவின் கடிதங்கள்

சி. பி. சிற்றரசு

நான் குற்றம் சுமத்துகிறேன்

ஜெனரல் ஜோன்ஸ் என்பவன் மேல் குற்றஞ் சுமத்துகிறேன். உண்மைக் குற்றவாளியான எஸ்டரெஸியை விசாரிப்பதைப் போல் பாசாங்கு விசாரணை நடத்தி, அந்தத் துரோகியை விடுதலை செய்து விட்ட இரண்டாவது இராணுவ நீதி மன்றத்தின் மீது குற்றம் சுமத்துகிறேன். நான் இந்தப் பிரெஞ்சு நாட்டின் மீது குற்றம் சுமத்துகிறேன்.

இவர்கள் யார் பேரிலும் எனக்குக் குரோதமோ, வஞ்சமோ இல்லை. ஆனால் அவர்கள்? வளர்ந்துவரும் சமூகக் குழந்தையின் நெஞ்சை நெறித்துக் கொல்லத் துணியும் கொலைகாரர்கள். ஆகையாலேதான் சமூக வளர்ச்சிக்குண்டான உண்மையையும், நீதியையும் விசுவாசத்தையும் கண்டு பிடிக்க வேண்டுமென்று என் உள்ளம் தூண்டியதால் இதை உங்கள் கவனத்திற்கும் முடிவுக்கும் கொண்டு வந்திருக்கின்றேன்

ஆகவே எண்ணரிய மக்களை நல்வழிப்படுத்த வகையில்லாது கொலை, கொள்ளை, பழிதீர்க்கும் பழக்கம் ஆகிய பல அக்ரமங்களை செய்து செய்து பழகிவிட்ட இறந்த காலத்தின் மீது குற்றம் சுமத்துகிறேன்.

வறுமையால் வாடினாலும், பொறுமை குன்றினாலும், வளம் வறண்டு போனாலும், நிலைமை எப்படி தலைகீழாக மாறினாலும், நீதியை மாத்திரம் மறக்காமல் இருக்கவேண்டுமென்ற உன்னதமான நோக்கத்தை உயிரோடு புதைத்துவிட்ட புல்லர்களைக் குற்றம் சுமத்துகிறேன். குற்றம் சாட்டப்பட்டு பூதத்தீவிலே (**Devils Island**) காவலில் வைக்கப் பட்டிருக்கும் இராணுவத்தலைவன் டிரைபஸ் சம்மந்தமாக ஏற்பட்ட இந்த வழக்கின் முடிவு அவனுடைய வாழ்நாளை மாத்திரம் குறி பார்த்திருக்கவில்லை. அல்லது அவனுடைய குடும்பத்தின் நலிவைமாத்திரம் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை.

நாடு வாழ்வதா, வீழ்வதா என்ற அபாயமான கேள்விக்குறியை எதிர்நோக்கி நின்று கொண்டிருக்கின்றது. பல வெளி நாட்டு நீதிமான்கள் கேலி செய்யும்அளவுக்கு நிலை தவறி நடந்து கொண்ட நீதிமான்களை நல்வழிப் படுத்தவும், இந்த வழக்கின் உண்மையைப் பகிரங்கமாக வெளியே கொண்டு வந்து நிறுத்தி, எது சரி என்பதைக் கண்டு பிடிக்கும் மகத்தானதோர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் பொதுமக்கள் எண்ணிக்கையிலே நானும் ஒருவன் என்ற உரிமையின் பேரால், இந் நாட்டின் வீழ்ச்சியிலே சந்தோஷப்பட இஷ்டப்படாத நான், என் தைரியத்தின் ஆணையாக சட்டவரிகளைக் குற்றம் சாட்டுகிறேன்.

இராஜ விசுவாசப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டு இதுவரை ஒருகுற்றமும் செய்தறியாத டிரைபஸ், தன்மேல் சுமத்தப்பட்ட குற்றங்களுக்கும் சரியான ஆதாரங்களை தயார் செய்வதற்கு நியாயமாக வழங்கவேண்டிய காலத்தை வழங்காமல், கணநேரத்தில், தகாத தீர்ப்பைச் சொல்லி, வஞ்சத்தைமுடித்துவிட்டோம் என்று சொல்வதற்குப் பதில், நாகரீகத்தொனியில்கடமையை முடித்துவிட்டோம் என்று உள்ளுக்குள்ளாகவே சிரித்துக் கொண்டிருக்கும் சில மற்றவர்கள் மேல் நான் குற்றம் சுமத்துகிறேன்.

தனிப்பெருந்தலைவரே! அநீதிக்கு நீண்ட நாட்கள் அரசோச்சும் வன்மையில்லை யென்பதும், நீதியை வெல்லும் ஆற்றல் அநீதிக்குஎன்றுமே இருந்ததில்லை என்பதும் தெரிந்திருந்தும், தெரியாதவர்களைப் போல் பாசாங்குசெய்யும் பாவிகளனைவரையுமே நான் குற்றம் சுமத்துகிறேன்.

இப்படி நீதியும் அநீதியும்உராய்ந்து உராய்ந்து ஏற்படும் நெருப்பு ஜ்வாலையில் என் உடல் தகிக்கப்பட்டாலும், அதன் பிறகாவது என் சிதைவிலிருந்து நீதி வெளியாகட்டும் என்ற மரண முடிவிலேயே குற்றம் சாட்டுகிறேன்.

இந்த வழக்கில் இவ்வளவு பொறுப்பில்லாமல் நடந்து கொண்ட டார்ட் என்பவர் மீது நான் குற்றம் சுமத்துகிறேன். கிடைத்த உண்மைக் குறிப்புகளை மறைத்ததற்காக யுத்த மந்திரியின் மீது நான் குற்றம் சுமத்துகிறேன். அதே பழித் தொழிலைச்செய்த இராணுவக் குழுவினரையும், உதவிப் படைத் தலைவரையும் நான் அஞ்சாமல் குற்றம் சாட்டுகின்றேன். கைதியினிடத்தில் கொடுமை காட்டிய பாரீஸ் சிறைச்சாலைத் தலைவர் மீது நான் குற்றம் சாட்டுகிறேன். வழக்கில் பொய் சாட்சிகளையும் பொய் கையெழுத்துக்களையும் தயார் செய்தவர்கள் மீது நான் குற்றம் சாட்டுகிறேன். பொது மக்கள் மனதை மாற்றும் வகையில் பொய்ப் பிரசாரம் செய்த யுத்த இலாக முழுவதையுமே நான் குற்றம் சாட்டுகிறேன். வழக்குக்கு ஆதாரமான சாட்சியங்களை, தண்டிக்கப் படுபவனால் பரிசீலனையும் சமாதானமும் கூற முடியாத வகையில் அவசரத்துடன் நீதி வழங்கிய முதல் இராணுவ நீதிமன்றத்தின் மீது நான் குற்றம் சாட்டுகிறேன். உண்மையான குற்றவாளியை ‘குற்றமற்றவனென’ விடுதலையளித்து பெருந்தவறு செய்து விட்ட இரண்டாவது இராணுவ விசாரணை மன்றத்தின் மீது நான் குற்றம் சாட்டுகிறேன். ஒரு அனாதையின் மீது இல்லாத பழிகளைச் சுமத்தி ஆயுட்காலத் தண்டனை யளித்த அனைவர் மீதும்குற்றம் சாட்டுகிறேன்.

இத்தகைய குற்றச் சாட்டுகளைத் தெரிவிப்பதின் மூலம் நான் சட்டத்தை அவமதிப்பதாக எண்ணி, என்னை அவதிக்குள்ளாக்கலாம் என்பது எனக்குத் தெரியும். என்றாலும் எனக்குக் கவலையில்லை நான் நீதி வேண்டுகிறேன். குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்து விட்டது. விளக்கமான மறு விசாரணை நடப்பதாக.

திராவிடநாடு பிரிவினை வார விழாவும்
தி. மு. க. 11-வது ஆண்டுவிழாவும்

24—9—60 சனி மாலை 6 மணிக்கு
சூரப்ப முதலிதெரு, திருவல்லிக்கேணி (சாம்பசார் அருகில்)
தலைவர் : **வே. கபிலன்** (துணையாசிரியர் இனமுழக்கம்)
பேச்சாளர்கள் :
தத்துவமேதை **டி. கே. சீனிவாசன்**
சிட்டிபாபு, M.C., நீலநாராயணன், L. கோபால்,
அ. பிரகாசம், அன்புதாசன்,

—உதயசூரியன் படிப்பகம், 76வது வட்டம்

★ பச்சோந்தி ★
சிவ‘ஞானி’ கணேசன்!

அவர்தான்—?

பராசக்தி கணேசன்
கட்டபொம்மன் கணேசன்
கெய்ரோ கணேசன்
முக்குலத்துக் கணேசன்
பாரதி கணேசன்
சிருங்கேரி கணேசன்

—இவர் மரத்தடி கணேசனாக மாறும் நாள், அதிவிரைவிலே—?

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றிகொன்ற மகற்கு” என்பது தமிழ்மறை.

இந்தப் பொதுமறையின் கருத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அதன்மீது பணமேடையமைத்து, பரத்தையைப்போல் பல்லிளித்துக் காட்டும் இந்தக் கணேசன் வளர்ந்த வரலாற்றை நாடறியும், ஏடறியும்!

இயக்க நாடகத்தில் நடிப்பதற்காக...காத்துக் கிடந்த கணேசன், இன்று ஜாதி வெறியராக மாறிவருவது கண்டு பரிதாபப்படுகிறோம்.

பராசக்திக்கு முன்னே பரிதாபத்துக்குரிய நிலையிலே—பிளாட்பாரங்களையே குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த கணேசனின் துயரத்தை, நமது அண்ணாவும் கலைஞர்கருணாநிதியும்கண்டு, இரக்கப்பட்டு பராசக்திகணேசனாக்கினர். கணேசனுக்காகப் படாதிபர்களிடம் கலைஞர் பட்ட கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமல்ல! ஏன்? ஓரளவுக்குத் திறமை இருப்பதை அறிந்ததால்! வறுமையால் கணேசனின் குடும்பம் கண்ணீர் சிந்திக் கிடப்பதால்! திறமையுள்ள ஒருவர் பெருந்துயருக்கு ஆளாகக்கூடாதென்ற பெருநோக்கால்! அதன் விளைவால்தான் பராசக்தி கணேசன் என்றபட்டம் பெற்றார். இதை நன்றியுள்ள மனிதர் எவரும் மறக்கமுடியாது.

அதன்பிறகு ஆறேழுபடங்கள்! அந்த ஆறேழுக்குள்ளாகவே கொஞ்சம் ஆணவம் தலைதூக்கத் தொடங்கியது, அலட்சியப் போக்கு அரும்பு விடத் தலைப்பட்டது. மேலுக்குச் சென்றபின் ஏணியை எட்டித்தள்ளும் பின்புத்தியை மூளைக்குள் புகுத்திக் கொண்டு, அந்த இடத்திலிருந்து வந்த பகுத்தறிவை வெளியேற்றிவிட்டு, புராணப் படங்களிலே நடிக்கப் புகுந்தார்! ‘இயக்கமல்ல பெரிது; பணம் சேர்க்கும் இலட்சியம் தான் பெரிது!’ என்று சொல்லியும் செயலிலேசிலவற்றைச் செய்து காட்டியும் வாழத் தொடங்கினார். அன்றையிலிருந்து பகுத்தறி விழந்து, பண்பாடிழந்து, பணமேகுறிக்கோளென்றலைந்து நாலு காசுக்கு உரியவரானார்.

இவருக்கு மேல் நாட்டு நடிகர்களை ‘காப்பி’ செய்யும் திறமை இல்லையென்று சொல்லமுடியாது; அதைவிட தலைக்கிறுக்கு அதிகமென்பதை எவராலும் மறுக்கமுடியாது; மறைக்கவும்முடியாது. அதனால்தான் கண்டபடி உளறுவதை உறுதியாக உள்ளத்தில் கொண்டு கத்துவதையே பெரிதாக்கிக் காட்டி,’ கட்டபொம்மன் கணேசன், என்ற பெயரை பெற்றார். அதென்னவோ அதிவுன்னதபடமென்று ஆட்சியிலே இருக்கின்ற அலங்கார பொம்மைகள் கருதி, கெய்ரோவுக்குஅனுப்பி வைத்தது. அதனாலே மேலும் கொஞ்சம் தலைக்கணம் பிடித்துஅலைந்தார்கணேசன். அந்த விழாவுக்கு தோழர் கணேசன் சென்றார். அங்குள்ளவர்கள், அந்தப்படத்திலுள்ள நடனங்களையும் காட்சியமைப்புகளையும் கண்டு, ‘நல்லமுறையில் உருவாக்கப்பட்ட நடனப் படம்’ என்று சொல்லி பொழுதோடு அனுப்பிவைத்தனர்இதற்காக இங்குள்ள சில வந்ததுகளும் போனதுகளும் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கின, அதன் பிறகு, எதை வேண்டுமானாலும் பேசலாம்’ என்ற ஆணவத்தோடு ஜாதித் திமிரை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். யார் யாரோ என்னைப் பாராட்டி இருக்கிறார்கள். ஆனால் என் குலமான முக்குலம் என்னை இன்று பாராட்டியது என் தாய்பாராட்டியது, போல இருக்கிறது என்ற முறையில் ஜாதிப் பித்து தலைக்கேறி பேசிஇருக்கிறார். இப்படி இழிவான முறையிலே—தமிழ்ப் பண்பாட்டிற்குப் புறம்பாகப் பேசிவிட்டு பாரதியார் விழாவை நடத்தி இருக்கிறார். ‘ஜாதிகள் இல்லையடி பாப்பா!’ என்றவர்பாரதியார். அப்படிச் சொன்ன ஒரு கவிஞரின் விழாவுக்கு, ஜாதி வெறி தலைக்கேறிய ஒரு சர்வசாதாரணமான கணேசன் முன்னின்று நடத்தி இருக்கிறார். இதைவிடக் கேடுகெட்ட அறியாமையொன்று இருக்க முடியாது. இதோடு, தோழர் கணேசன் சிருங்கேரி சாமியாரின்பாதத்துக்குப் பாதபூசை செய்திருக்கிறார். கடந்த நாளில் சென்னைக்கு வந்திரு[illegible]த இராசேந்திரபிரசாத்தும் சிருங்கேரிக்கு சிவபாத பூஜை செய்துப்போனார். அதே நினைவில் இதைக் கணேசன் செய்திருக்கிறார். வடவர் செய்யலாம். காரணம் பிறர் காலைக் கழுவிக் கழுவி வளர்ந்தவர்கள் அவர்கள். ஆனால் கணேசன்—?

எனவே, இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது கணேசனின் உள்ளத்தில் தற்போது உலவி வருகின்ற கருத்து, ‘நம்மைவிட சிறந்த நடிகன் இல்லை!’ என்பதே யாகும். இப்படி நினைத்துக் கொண்டிருந்த எவரும் வாழ்ந்ததில்லை.

காலஞ்சென்ற ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜபாகவதரைப்போல் ஒருவரும் புகழடைந்து இருக்கமுடியாது: அவர் சம்பாதித்த பணத்தில் நூறில் ஒருபங்கு கூட தோழர் கணேசனால் சம்பாதித்து இருக்கமுடியாது. ஆனால் கடைசியில்?—இதைத் தோழர் கணேசன் உணர வேண்டும். இல்லையென்றால் விரைவிலே ஆலமரத்தடி கணேசனாக மாறுவதுஉறுதி, உறுதி, உறுதி!

காலிகளே! கூலிகளே! கவனமிருக்கட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டாய இந்தி எதிர்ப்புக் கொள்கையினையும் அதனைச் செயல்படுத்துவதற்காகக் கழகம் மேற்கொண்ட முறைகளையும் அரசியல்அரங்கில் சில வரம்புகளுக்கு மதிப்பு வைத்திருப்பவர்கள் மறுக்கவில்லை. ஆனால் முன்னேற்றக் கழகம் சொல்கிறது என்பதற்காகவே தங்களின் சிந்தனையை ஒதுக்கி எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டிருப்பவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

★ புண்பட்ட நெஞ்சம் புறப்படுமானால்...
★ தாங்கும் இதயம் தாக்கத் தொடங்கி விட்டால்?
★ நிச்சயம் சொல்வேன்! நீங்கள் தூள், தூள்!

இதிலே காங்கிரஸ்காரர்கள் முதலிடம் பெறுகிறார்கள். மத்திய ஆட்சிப்பீடத்திலிருப்பவர்கள் மமதை மலையிலேதான்இருப்பார்கள்மாறி வருகின்ற மக்களின் மனவளத்தைப் புரிந்துகொண்டவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே குடியரசுத் தலைவருக்கு கருப்புக்கொடி வரவேற்பு அளிக்கவேண்டிய அவசியம் வந்தேதிருமென்றுதான் கழகம் தன் கடமையினைச் செய்தது.

கழகத்தை எதிர்க்கத் துடிப்பவரே, கேளும்!

கருப்புக்கொடி காட்டுவது இழிவான செயல் அல்ல என்பதனைக் கற்றவரும் மற்றவரும்அறிந்திருப்பர். தேசீய ஏடுகள் இதனைஉணராதகாரணத்தினாலேயே குடியரசுத் தலைவரை எதிர்க்கும் நோக்கம் அரசியல் நோக்கமே தவிர தமிழ்ப் பற்று அல்லஎன்று எழுதின. சொக்கலிங்[illegible]ன் சீடன் என்று சொ[illegible]லிக்கொள்ளும் ஒரு பத்திரிக்கை ஆசிரியர்—அதற்குத் தகுதியற்ற ஒரு மனிதன்—கழகம் கருப்புக்கொடி நிகழ்ச்சியை வாபஸ் வாங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. பொதுமக்கள் எவரும் கழகத்தவரை ஆதரிக்கத் தயாராக இல்லை. எனவேதான் முடிவினை மாற்றிக் கொண்டார்கள்! என்றார். காங்கிரசுக்காரர்கள் கழகத்தின் குரல் ஒலிக்கு உடனே செவி சாய்த்து விட்டார்கள் என்ற கவலை அவர்களின் தலைவர்களுக்கு ஏற்படவேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் தலைவர்களே கழகத்தின் முன்னே வாக்குறுதிகளை வைத்து இந்திக் கொள்கையினை மாற்றிக் கொள்வதற்கு முன் வந்து விட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் கருப்புக்கொடி காட்ட வேண்டிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் இரண்டு லட்சம் பேர்களை, ஒரேஇடத்தில், கோடம்பாக்கம் மைதானத்தில் கூட்டிவைத்து அவர்களிடத்திலே தனது தீர்மானத்தை கருப்புக்கொடி காட்டுவது என்றமுடிவினைத்தெரிவித்து, ஆதரிக்க, வேண்டியது. ஆனால் காமராசரைப் போன்ற குறுக்குவழி அரசியல் தரகர்கள் சொன்னது பொதுமக்களிடம் குடியரசுத் தலைவருக்கு வரவேற்பு தராதீர்கள். அவர் பேசுகின்ற கூட்டங்களுக்குச் செல்லாதீர்கள் என்று தடுத்து ஆதரவு திரட்டவேண்டுமாம். இதனையே திருப்பி அவரிடத்திலே கேட்கமுடியும். காங்கிரசுக்காரர்களும் ஆட்சியாளர்களும் கருப்புக்கொடி வரவேற்பை எதிர்த்த மற்ற கட்சிகாரர்களும் பொது மக்களைப் பார்த்து கழகத்தவர் காட்டும் கருப்புக் கொடி நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டாம் என்று கேட்டிருந்தால் மக்கள் ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்பது தெரிந்திருக்கும். அதனைச் செய்யத் தகுதியற்ற காமராசர்கள் ஆழம் தெரியாமல் காலை விடுகிறார்கள். போராட்டம் துவங்கிய பிறகுதான் முன்னேற்றக் கழகத்தவர்க்குசர்க்கார் எப்படிப்பட்டது என்பது தெரியவரும் என்று மிரட்டினார்கள். அவருடைய அம்மாமித் தமிழ் அழகைக் கேட்டுப் பேசுகின்ற அழுகுரலையும் கேட்டு ஒரு பகுதி மக்கள் அவர் பின்னே சென்றுவிடுவார்கள் என்று முன்னேறக் கழகம் எப்போதும் எண்ணியதில்லை. முதலமைச்சமர் காமராசரின் பேச்சைக் கேட்டுக் கூட சிலர் மயங்கிவிட்டார்கள் என்றால் அவர்கள் மனிதர்களல்ல! அவருடைய மூலவர்கள் மூவரும், அவசரப்பட்டு அறிக்கைகளைத் தராமல் ஊமைகளாக இருந்திருப்பார்களேயானால். காமராசருடைய அதிகார வலிவையும் முன்னேற்றக் கழகத்தின் பின்னேயிருக்கும் மக்கள் சக்தியையும் இரண்டாவது முறையாகப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு சரியானதோர் வாய்ப்புக் கிடைத்திருக்கும்!

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டுப் பிரிவினை கேட்டால் தவறு. இந்தியை எதிர்க்க வேண்டுமென்றால் அது கூடாது. காங்கிரஸை அதன் ஆதிக்கத்தை அழிக்கவேண்டுமென்றால் அதுவும் கூடாது என்ற வகையில் கழகத்தை எதிர்க்கும் சிலம்புக் கள்வன் சிவஞானம் குடியரசுத் தலைவருக்குக் கருப்புக் கொடி காட்டுவதை அறிவீனம் என்றாராம்! அந்தப் பேரறிஞன் கடைசி வரையிலும் அப்படியே இருக்

கூடலரசன்

காமல்-கருப்புக்கொடி காட்டுவதைத் தி. மு. க. நிறுத்திவிட்டதினால் வெற்றி கிடையாது-தோல்விதான் கிடைத்துள்ளது என்று திரும்பவும் சொன்னாராம்! இந்த இரண்டில் எது அறிவீனத்தின் அடிப்படையில் அமைந்த கருத்து என்பதை கழகத்தின் வேடம் கலைந்துவிட்டதாகத் தெரிவிக்கும் கையெழுத்துக் கவிகள் அமெரிக்கன் கல்லூரியிலே விரட்டப்பட்டு, குன்றக்குடி அடிகளாரின் பள்ளியிலும் ஒழுங்காகப் பேசத் தெரியாமல் கால் பிடித்து ஒடிப்பிழைத்த பிராணிகள் விளக்கினால் நல்லது. முன்னேற்றக் கழகமும் அண்ணாவும் சிலம்புக்கள்வன் எண்ணிக் கொண்டிருப்பது போல வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கவில்லை. ஒழித்துக் கட்டுவேன் என்று சிலம்புக் கள்வன் பாளையங் கோட்டையிலே போய் பல்லைக் கடித்துக் கொண்டு பேசிவிடுவதினாலே நடைபெறும் காரியமல்ல. திருத்தணிக்கு அழைத்து அமைச்சர் சுப்பிரமணியத்தின் இருகரம் தழுவிய இன்பத்திலே மயங்கி அந்த மயக்கத்திலேயே தமிழ் நாட்டுக் காங்கிரசுக் கமிட்டிக்குள் நுழைய முடியாமல் போய்விட்டதே என்ற கலக்கத்தினாலேதான் சிவஞானத்திற்கு புதுப்புலம்பல் வந்திருக்க வேண்டும்!

★ பிறரைக் கேட்டுப் புயல் வருவதில்லை!
★ நாவை நீட்டாதீர்! நாளையே துண்டிப்போம்?
★ வீம்புக்குப் பேசாதீர்! வினைவு விரைவிலே!

கட்டிப்பிடிக்கப் போன இந்தக் கன்னித் தமிழனைக் கல்வி அமைச்சர் எனப்படுவர் எட்டி உதைத்து விட்டுப் போய்விட்டால் முன்னேற்றக் கழகத் தோழர்கள் என்ன செய்யமுடியும்? அந்த அப்பாவி அமைச்சர் திருத்தணி விழாவில் அலியென்று தெரியாமல் அணைத்திருப்பார் 'அய்யோ சனியனே'யென்று அலறித்துடித்து உதறித் தள்ளிவிட்டார் போலும்! வாழ்க சிவஞானம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை எதிர்க்கும் படை எந்தப்படையாக இருந்தாலும் அது தப்பட்டையாகத்தான் இருக்கும் என்பதை மொழிப்பிரச்னையில் கம்யூனிஸ்டுகளும் காட்டிக் கொண்டுவிட்டார்கள். வடநாட்டிலேயிருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கு அஸ்ஸாம் கலவரமும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும்-மத்திய சர்க்கார் ஊழியர்களின்வேலை நிறுத்த எதிரொலிகளும் முக்கிய பிரச்னைகளாக இருக்கும்போது, தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் முன்னேற்றக் கழகத்திற்காகவே மொழிப் பிரச்னைபற்றி ஒரு பெரிய தீர்மானத்தை, எவரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடாத தீர்மானத்தைவெளியிட்டார்கள்! அது அவர்களுடைய உரிமை.எவரும் தடுக்க முடியாது! அதிலே ஒருபகுதி தி. மு. க-வின் சிந்தனைக்கு என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவரின் அறிக்கையை, ஆணையை எதிர்ப்பது இந்தி மொழியையேஎதிர்ப்பதுபோல இருக்கிறதாம். தமிழ் மக்களின் எண்ணத்தைத் திசை திருப்புவதாகவும் கழகத்தின் முயற்சிகள் இருக்கின்றனவாம்! இது கூடாதாம்-முன்னேற்றக் கழகம் சிந்திக்க வேண்டுமாம்! கருப்புக்கொடி காட்டுவதையும் கட்டாய இந்தி எதிர்ப்பையும் கம்யூனிஸ்டுகள் எதிர்க்கத்துடிக்கிறார்கள் என்பதைத்தான் அவர்களுடைய கருத்துக்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ஏனோ வெளிப்படையாகப் பேச வெட்கப்படுகிறார்கள்! அவர்களுடைய உண்ணாவிரதத் தலைவர்களிலே ஒருவரான பாலசுப்பிரமணியம் என்பவர் கம்பம் நகரத்தில் பேசும்போது இந்தி மொழி எதிர்ப்புத்தேவைதானா என்பதை தி. மு. க. விளக்கவேண்டும் என்பதாகக் கேட்டாராம்! திண்டுக்கல்லிலும் வேடச்சந்தூரிலும் சுற்றிக் கொண்டிருக்கும் இவர்களைப்போன்ற கம்யூனிஸ்டுகள் சோவியத் யூனியனுடைய ராக்கெட் வேகத்தைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பதால் கழகத்தின் தெளிவான இந்தி எதிர்ப்புக்கொள்கைகளைத் தெரிந்துகொள்ளவில்லைபோலும்! நேருவுக்கும் ராசேந்திரருக்கும் பந்துக்கும் தெரிந்தது திண்டுக்கல் கம்யூனிஸ்டுகளுக்குப் புரியாமல் போனதில் வியப்பில்லை.அவர் சந்திரனுக்குப் போய்விட்டார்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் மொழிக் கொள்கையை இந்திஎதிர்ப்பு அவசியம் என்றஎண்ணத்தை நல்லசிந்தனைக்குப் பிறகுதான் சிறப்பு மாநாடு அறிவித்துள்ளது. கம்யூனிஸ்டுகள் அவசியமா என்று கேட்கிறார்கள். பாலசுப்பிரமணியம் என்பவர் பேசிய அதே கம்பம் கூட்டத்தில், கம்பத்திலிருந்து மதுரைக்கு ஒரு துரிதமுறை மோட்டார்விடவேண்டுமென்றும் சர்க்கார் இந்தக் கோரிக்கைக்கு இணங்காவிட்டால் பேரியக்கமாகப் போராட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதே கம்யூனிஸ்டுகள்தான் மொழிப்பிரச்னையைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள்! திருத்தம் தேவையென்று ஆய்வுரைகளைத் தருகிறார்கள். அதே நேரத்தில் எதிர்க்காதே என்றும் வேண்டுகிறார்கள். "எக்ஸ்பிரஸ்பிஸ்" — விடவேண்டுமென்பதைக்காட்டிலும் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் அவசியமானதுதான் என்பதை பாலசுப்பிரமணியம் போன்ற கம்யூனிஸ்டுகள் இனிமேலாவது உணர்ந்து கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்! குடியரசுத் தலைவரிடமிருந்து விளக்கம் தேவையென்று எந்தக் கம்யூனிஸ்டும் இதற்கு முன்னால் கேட்கவில்லை. முன்னேற்றக் கழகம் கேட்டது. குடியரசுத் தலைவரும் பிரதமரும் பேசியிருக்கிறார்கள்! அந்தப் பேச்சுக்களின் தொனி சரியில்லையென்று கருதும் கம்யூனிஸ்டுகள் கொஞ்சகாலம் பொறுத்திருக்க வேண்டும்.கழகத்திற்குச் சொன்ன உறுதி மொழிகளைப்பற்றி டில்லி ஆட்சித் தலைவர்கள் ஒழுங்காக நடந்துகொள்ளவில்லையென்றால் கழகம் தன் இலட்சியப் பணியினை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினை எல்லா வகை பலத்துடன் எதிரிகள் கலங்கும் வகையில் நடத்துவிக்கும் என்பதனையும் கம்யூனிஸ்டுகள் காணமுடியும்! வடநாட்டுக் கம்யூனிஸ்டுகள் எவரும் குடியரசுத் தலைவரின் கட்டளையைப்பற்றி கவலைப் படவில்லை என்பதனை இங்குள்ள கம்யூனிஸ்டுகள் அவசியமாக உணர்ந்துகொள்ள வேண்டும்! கழகத்தை எதிர்க்கத் துடிக்கின்ற எல்லோருக்கும் எங்களது அன்பினையும் அனுதாபத்தையும் தெரிவிக்கிறோம்.

★

நாடாள வந்தோரே, காடாளப் போகாதீர்!

பதிவு எண்: 7200 விலை 16 காசுகள் இனமுழக்கம்

திரைஒலி

கிருஷ்ணு பிக்சர்சாரின்

ராஜா தேசிங்கு

வாய் வீச்சு வீரன் கட்டபொம்மனைக் காட்டிலும் வாள் வீச்சு வீரன் ராஜா தேசிங்கு எவ்வளவோ மேல். கட்டபொம்மனுக்கு 100 நாட்களென்ருல், ராஜா தேசிங்கிற்கு......?

மானின் நிலை யெதற்கோ?
வானின் முழு நிலவே!

திரையில் தோன்றித் தோன்றி
மறையும் எழில் நினைவோ?

யார் தந்த கனவோ நெஞ்சில்
போராடும் நினைவும்

கனவுகள் கோடி கோடி அதைக்
காப்பதற் கோர் உயிர்நாடி

உள்ளத்தில் எழுகின்ற எண்ணமெல்லாம்-
கலை வண்ணமாய் மாறிவிடும் காட்சி பாரீர்

சுடு நெருப்பாய் தென்றல் மாறி
"குறி" யுணர்த்துப் விரக மேனே

உ. வீட்டில்

பத்மினி பிரியதர்சினி

மறக்க முடியாதது

பகற் கனவோ பைங் கொடிக்கு
பார்ப்பதற்கும் தடை யெதுவே

என் வாழ்வில் ஒருநாள்......

பல வருடங்களுக்கு முன் நடந்தசம்பவம் இது. நான் தஞ்சாவூர்சென்று வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது,ஏதோ ஒருஸ்டேஷன்.ஞாபகமில்லை. ஒரே கூட்டம். நானும் என் தாயும்தான் எங்கள் கம்பார்ட்மெண்டில் (அறையில்)உள்ளோம். நாங்கள் ரிசர்வ் செய்திருந்தோம். கதவு தட்டப் பட்டது. அன்னை உறங்கிக்கொண்டிருந்தார்கள். கதவைத் திறந்தேன்,கார்டு நின்று கொண்டிருந்தார். அம்மாவை எழுப்பினேன். கார்டு அம்மாவைப் பார்த்து, இதோ அம்மா, ஒருவரைச் சுட்டிகாட்டி இவருக்கு கடுமையான ஜுரம், வண்டிகளில் எங்கும் இடமில்லை. இவரை பாதுகாக்க மற்றவரும் உள்ளார். இருவருக்கும் தயவுசெய்து சென்னைவரை கொஞ்சம் இடம் கொடுத்தால் நல்லது என்ருர்.

அம்மா, சம்மதிக்கவில்லை, ஆனுல் நான் அம்மாமை சம்மதிக்க வைத் தேன்.

அவர்கள் இருவரும் எங்களுக்கு, எதிரே உட்கார்ந்தனர். வண்டியும் புறப்பட்டது.

ஒவ்வொரு ஸ்டேஷனுக வண்டி நின்று நின்றுசென்றது. ஒவ்வொரு ஸ்டேஷனிலும்மாலைகளும்,பழங்களும்,இன்னும் பலவிதஉபசரிப்புகளும் நடந்தன, அந்த இருவர்களுக்கும். ஆனுல் நான் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்திருந்ததால் எனக்கும் அந்த உபசரிப்பு கிடைத்தது.

சென்னை வந்தது. அவர்கள் இருவரைத் தேடி பெரிய பெரிய நபர்கள் வந்தனர்.

அண்ணு யார் நீங்கள் என்றேன்! தங்கச்சி! "பராசக்தி" பார்த்தாயா...நான்தான் "சிவாஜி கனேசன்" என்ருர். அவர், மு. கருணுநிதி என்ருர்.

"ஹூலா ஹிப்" நடனத் தோற்றம்

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபால நாய்க்கன்சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2:

திராவிடத்தின் தனிப்பெருஞ் செல்வம்!

சிங்கப்பூரிலே குண்டு விழுந்தது. பினங்கிலே ஜப்பான் நாட்டு விமானங்கள் வட்டமிட ஆரம்பித்தன. "இங்கிலாந்தின் மூதுகெலும்பு" என்று புகழப்பட்ட, உலகத்திலேயே பெரிய இரும்புக் கப்பல் ஜப்பான் குண்டு வீச்சால் ஒரு நொடியில் மூழ்கியது. மலேயா ஜப்பானியர் பிடியிலே மாட்டிக்கொண்டது.

மலேயா — நேச நாடுகளின் உயிர், முக்கியமான போர்க்களம். அதன் வீழ்ச்சிக்குப் பிறகு, நேச நாடுகளுக்கு ஒரு மூக்கியமான இழப்பு, ஈடு செய்யமுடியாத ஒரு தேவை ஏற்பட்டது. இதை எப்படிச் சரிகட்டுவது என்ற எண்ணம், ஆராய்ச்சி அவர்களின்

★ இந்தியாவில் முதன்முதல் ரப்பர் பயிரான இடம் இதுதான். இன்று இந்தியாவுக்கு ரப்பரில் மிகப் பெரும்பகுதியை உற்பத்தி செய்வதும் நமது வளம்மிக்க திருவிடம் தான் !

பெரியதோர் பிரச்சினையாகிவிட்டது.

மலேயா — உலக ரப்பர் உற்பத்தியில் 90 சத விதத்தை உற்பத்தி செய்யும் நாடு. மோட்டார்கள், ஆகாய விமானங்கள், சைக்கிள்கள் முதலியவற்றிற்கு வேண்டிய டயர்கள் செய்ய ஏராளமான ரப்பரை, அந்த மிக நெருக்கடியான போர்க் காலத்திலே, நேச நாடுகள், மலேயாவிடம் பெற்று வந்தன. அந்த மலேயா வீழ்ந்துவிட்டது. ரப்பர் கிடைப்பதும் நின்று விட்டது !

ரப்பர் இன்றி கார் ஓட்டுவது எப்படி? காரும் விமானமும் இன்றிப் போர் செய்வதெப்படி? எனவே அமெரிக்காவும் பிரிட்டனும் ரப்பர்தரும்படி இந்தியாவை நோக்கின. இந்தியா கல்கத்தாவையும், பம்பாயையும் நோக்கிற்று ! பம்பாயும், கல்கத்தாவும் திராவிடத்தை நோக்கின !

தொண்டைமான்

திராவிடத்தின் ரப்பர் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் சென்றது. அங்கே டயராக, பொருள்களாக மாற்றப்பட்டது. போர்க் களங்களுக்கு அனுப்பப்பட்டது. போர்க் களத்திலே குண்டு வீசிக்கொண்டிருந்த விமானங்களின் சக்கரங்களிலும், மோட்டார்களின் சக்கரங்களிலும் திராவிடத்தின்ரப்பர்காட்சியளித்துக்கொண்டிருந்தது !

இரண்டாம் உலகப் பெரும் போரின்போது, நடந்த நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் இதுவும், ஆஸ்டினிலும், மாரிஸ் மைனரிலும், 'ப்யூக்'கிலும், வாக்சாலிலும் அமர்ந்து, மணிக்கு அறுபது மைல் போட்டி போட்டுப்போகின்ற "மேதை" கள் பலருக்குக் கூட, தங்கள்காரின் டயர் எங்கே செய்தது, எங்கிருந்து கிடைத்தது எனபது தெரிந்திருக்காது. உண்மையிலே பம்பாயிலும், கல்கத்தாவிலும் செய்யப்படும் அந்த டயர்கள், திராவிடத்தின் ரப்பரினுல் செய்யப்படுபவைதான்என்ற உண்மையை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

திராவிடத்தின் ரப்பரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? நேரே நீலகிரிக்குச் செல்லுங்கள். அங்கே பல ரப்பர்த் தோட்டங்கள் 340 ஏக்கரில் இருப்பதைக் காணலாம். முழுவதும் காணவேண்டுமா? வளம் கொழிக்கும் மேற்குக் கடற்ரைக்குச் செல்லுங்கள், அரபிக் கடலின் அலைகளால் தாலாட்டப்பட்டு அழகுற விளங்கும் அந்தக் கடற்கரையை ஒட்டி. அதன் அருகேவானமளாவி நிற்கும் மேற்கு மலைத்தொடரின் சரிவுகளின் பக்கத்திலே, தெற்கு வடக்காக சுமார் 400 மைல் தூரம் பிரயாணம் செய்யுங்கள், காடுகளுக்கு மத்தியிலும், குன்றுகளுக்கு இடையிலும், சமவெளிகளின் நடுவிலும், சிற்ருறுகளின்

★ ரப்பர் வரலாற்றிலே ஒரு புது சகாப்தம் 1855-ம் ஆண்டுக்குப் பின்புதான் ஏற்பட்டது. அதற்கு முக்கிய காரணம் 'டன்லப்' என்ற ஒரு அயர்லாந்துக்காரன்தான்.

அருகிலும் சிங்காரமான ரப்பர்த் தோட்டங்களை, இடை இடையே ஏராளமாகக் காண்பீர்கள் !

திராவிடத்திற்கு எப்படி வந்தது ரப்பர்? 1876ம் ஆண்டுக்கு முன்னுல் அமெரிக்காவிலிருந்து, அமெரிக்கர் சிலர் அடங்கிய குழு ஒன்று அரபிக்கடலிலே வந்து இறங்கியது. அவர்களில் பலர் நல்ல மாலுமிகள்-ஊக்கமும் உற்சாகமும் உடையவர்கள். திராவிடத்தின் மேற்குக் கடற்கரையிலே வந்து அவர்கள் இறங்கினுர்கள். நிலப்பகுதியிலே நுழைந்தார்கள். பெரிய காடுகளை, குன்றுகளைக் கண்டார்கள். அந்தக் காடுகளிலே சீறும் சிறுத்தைகளை, பாயும் புலிகளை, பிளிறும் யானைகளைக் கண்டார்கள் !

பயங்கரமான இடங்கள்தான். எனினும் பதருது ஆராய்ச்சி செய்தார்கள். அவர்களை இங்கே அனுப்பிவைத்தவர் ஹென்றிவிக்கன் (Henrywiken) என்ற அமெரிக்கர். கூடவே ஒரு பெட்டியையும் அவர்களிடம் கொடுத்தனுப்பியிருந்தார்.

வந்தவர்கள் விலங்குகளோடும், விஷப் பூச்சிகளோடும் போரடிக்கொண்டே காடுகளை அழித்தார்கள். கொண்டு வந்திருந்த பெட்டியைத் திறந்தார்கள். ரப்பர் விதைகளை இங்கெல்லாம் பயிரிட்டார்கள் ! விரைவில் பெரிய பெரிய ரப்பர்த் தோட்டங்களை பல இடங்களில் அமைத்து விட்டார்கள். ரப்பர் உற்பத்தி திராவிடத்தில் தொடங்கியது. இந்தியாவின் ஸ்டேட் செயலாளராக இருந்த சாலிஸ்பரி பிரபுவும் இதற்கு ஓரளவு பொறுப்பாளி,

இந்தியாவில் முதன் முதல் ரப்பர் பயிரான இடம் இதுதான். இன்று இந்தியாவுக்கு தேவைப்படும் ரப்பரில் மிகப் பெரும்பகுதியை உற்பத்தி செய்வதும் நமது வளம் மிக்க திருவிடம்தான் !

மரத்தைக் கொத்தினுன். பால் வடிந்தது. பாலை உறையச் செய்து, சிறிது கெட்டியாக்கினுன், அதை எடுத்துகாகிதத்தில் தேய்த்தான். எழுத்துக்கள் அழிந்தன. எழுத்தை அழித்த காரணத்தால் "அழிப்பான்" என்று பொருள்படும். 'ரப்பர்' என்ற ஆங்கிலப் பெயரை (Rub-off) அதற்குச் சூட்டினுன்.

நூற்றுஎழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஜோசப் பிரீஸ்ட் லீ காலத்தில் கூட பென்சில் எழுத்தை அழிக்கமட்டுமே, ரப்பர் உபயோகப்படும் என்று உலகம் கருதிக் கொண்டிருந்தது.

ரப்பர் வரலாற்றிலே ஒரு புது சகாப்தம் 1885-ம் ஆண்டுக்குப் பின்புதான் ஏற்பட்டது. அதற்கு முக்கிய காரணம் 'டன்லப்' (Dunlop) என்ற ஒரு அயர்லாந்துக்காரன். அயர்லாந்தின் நாட்டுப்புறங்களிலே அவன் சுற்றிவந்தான். இரும்புச் சக்கரம் மாட்டப்பட்ட வண்டிகளை, அவற்றை இழுத்துச் செல்லும் மிருகங்களுக்கு ஏற்படக்கூடிய வேதனைகளை, அந்த வண்டியிலேமணிக்கு இரண்டு மைல் வேகத்திலே செல்லும் பிரயாணிகளுக்கு உண்டாகும் தொல்லைகளைக் கண்டான். அவற்றைக் கண்ட அவனுக்கே வேதனை அதிகரித்தது மிகமிக.

வேதனைக்கும் ஓர் எல்லை காண விரும்பினுன். விரைவிலேயும் கண்டுவிட்டான். அவன் கண்டுபிடித்தது ரப்பரால் ஆன காற்றடைத்த டயர்! அந்த டயரின் புதுமையால்தான், அந்த டன்லப்பின் கண்டு பிடிப்பால்தான், விஞ்ஞானத்தை இன்று வெறுத்துப் பேசும் வேதாந்திகள் கூட, மணிக்கு 60 மைல் இன்றைய தினம் செல்லமுடிகிறது !

டயரைக் கண்டுபிடித்த டன்லப் அதைச் செய்தும் காட்டினுன். 10 வயது நிரம்பிய தன் அருமை மகனுடைய சைக்கிளை எடுத்து. அதன் கால்களுக்கு, டயரைப் பொருத்தினுன். மகனை அதில் ஏற்றினுன். சைக்கிள் போட்டி ஒன்றுக்கு அனுப்பி வைத்தான். டயரின் மகத்துவத்தால் மகன் போட்டியிலே வெற்றி பெற்ருன்- டன்லப் மனம் மகிழ்ந்தான்.

டன்லப்பால் செய்யப்பட்ட இந்த முதல் டயர் சுமார் 3000 மைல்கள் ஓடியபின் தேய்ந்தது இந்த டயரை இன்றும்இங்கிலாந்திலே ராயல் எடின்பாக் மியூசியத்தில் காட்சியாக வைக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

(அடுத்த இதழில் முடியும்)

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ததால் எனது உயிருக்குயிரான சித்தி நேரடியாக கோட்டைக்கு வந்திருக்கிருள். ஆனுல் நான் அங்கே இருந்த கடிதத்தை வைத்து, இரண்டு பேருடைய வருகைக்கும் தொடர்பு படுத்தி விட்டேன். உண்மையில் அந்தக் கடிதம் ரோசிலாந்தினுல் எனக்கு எழுதப்பட்டது. விபரம் புரியாத அந்த வெள்ளைக்காரப் பெண் சிரித்துக் கொண்டே நின்று விட்டாள். சப் இன்ஸ்பெக்டர் என்னைத் துரிதப்படுத்தி வீட்டுக்குஓடியிருக்கும்சித்தியிடம்மன்னிப்புகேட்குமாறு சொன்ஞர். நான் வீட்டுக்கு ஓடினேன். கொடுமை! என் சித்தி பிணமாகத் தொங்கினுள். நான் அவளைக்கொலை செய்து விட்டேன். அதற்குப் பதிலாக தற்கொலை செய்து கொள்வது தவிர வேறு வழி தெரியவில்லை. இறுதி முறையாக ஜன்னல் வழியாக உலகத்தைப் பார்த்தேன். என் தந்தை வேகமாக வந்து கொண்டிருக்கும் சப்தம்கேட்டது. அவர் வருவதற்குள் சாக முடியாது. ஆகவே வீட்டை விட்டு ஓடி விடத் தீர்மானித்தேன். எனக்கு ஒரு சபலம் - ரோசிலாந்தை ஒரு முறை பார்க்க வேண்டுமென்று. இருட்டு நேரத்தில் அவளுடைய வீட்டின் கொல்லைப் புறமாகப் போய் சுவரில் ஏறினேன். ரோசிலாந்து இசைத்துக் கொண்டிருந்தாள் அவளுடைய தந்தை துப்பாக்கிக்குள் தோட்டாவை போட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு முன்கோபி என்ற பெயர் வேறு உண்டு.

(தொடரும்)

தலைமை நிலையச் செய்தி

தலைமைக் கழகத் தேர்தல்கள்

25-9-60 ஞாயிறு காலை 10-மணி

156, லாயிட்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14

1. புதிய சட்ட திட்டப்படியும், பொதுச் செயலாளர் அவர்கள் அறிவிப்புப்படியும் தலைமைக்கழகத் தேர்தல்கள் 25-9-60 ஞாயிறன்று சென்னையில் (மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில்) நடைபெறுமென்று உறுதி செய்யப்படுகின்றன.
2. தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ளும் கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக்கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பெறும் அடையாளச் சீட்டுக்களுடன் கலந்து கொள்ளுதல் வேண்டும்.
3. அன்றையத் தேர்தல் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் பொதுக்குழு உறுப்பினர்களால், தேர்ந்தெடுக்கப்படும் எந்தப் பதவிக்கும் போட்டியிட விரும்பாத பொதுக்குழு உறுப்பினர் ஒருவர், தேர்தல் ஆணையாளராக இருந்து பணியாற்ற வேண்டும்.
4. தேர்தல் ஆணையாளர், தேர்தல் விதிமுறைகளை முறைப்படி விளக்கிக் கூறியபின், அவைத் தலைவர் ஒருவர், பொதுச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகிய தலைமைக் கழக அலுவலாளர்கள் தேர்தல் முறையே ஒன்றன் பின் ஒன்ருக நடைபெறுதல் வேண்டும்.
5. அடுத்து, தணிக்கைக் குழுவுக்கு பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களை முறைப்படி தேர்ந்தெடுக்க வேண்டும்.
6. அடுத்து, தீர்ப்புக்குழுவுக்கு பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களை முறைப்படி தேர்ந்தெடுக்க வேண்டும்.
7. அடுத்து, சொத்துப் பாதுகாப்புக் குழுவிற்கு பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களை முறைப்படி தேர்ந்தெடுக்க வேண்டும்.
8. அடுத்து, ஆட்சிமன்றக் குழுவிற்குபொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து ஐந்து உறுப்பினர்களை முறைப்படி தேர்ந்தெடுக்க வேண்டும்.
9. அவைத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், திராவிடத்தின் எந்த ஒரு மாநிலத்தைச் சார்ந்த தகுதி படைத்த எந்த உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்படலாம்.
10. அவைத் தலைவர், பொதுச்செயலாளர், ஆகிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள், குறைந்தது மூன்ருண்டு காலமாவது கழகத்தில் தொடர்ந்து உறுப்பினராயிருந்திருக்க வேண்டும்.
11. பொதுச்செயலாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர், உள்ளாட்சி மன்றங்கள், சட்டமன்றப்-பாராளுமன்றங்கள் போன்ற ஆட்சிமன்ற அமைப்புக்களில் உறுப்பினராயிருந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நாட்களுக்குள் இரண்டு வகைப் பொறுப்புக்களில்ஏதேனும்ஒன்றிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.
12. தேர்ந்தெடுக்கப்படும் பொதுச்செயலாளர், ஒரு திங்களுக்குள் பத்துக்கு மேற்படாத தகுதி படைத்த உறுப்பினர்களை பொதுக்குழு உறுப்பினர்ளாக நியமித்துக்கொள்வார்.
13. தேர்ந்தெடுக்கப்படும் பொதுச்செயலாளர் ஒரு திங்களுக்குள் பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து தலைமை நிலையச் செயலாளர் ஒருவர், அமைப்புச் செயலாளர் ஒருவர், பிரச்சாரச் செயலாளர் ஒருவர், தொழிற்சங்கச் செயலாளர் ஒருவர், வெளியீட்டுச் செயலாளர் ஒருவர் ஆகிய ஐந்துபேர்களைத் தம் விருப்பம்போல் நியமித்துக் கொள்வார்.
14. தேர்ந்தெடுக்கப்படும் பொதுச்செயலாளர் ஒரு திங்களுக்குள் அவைத் தலைவர், பொருளாளர், தலைமைக் கழகச் செயலாளர்கள் ஐவர் ஆகியோருடன், மேற்கொண்டு 13 பேர்களை பொதுக் குழுவிலிருந்து செயற்குழு உறுப்பினர்களாக நியமித்துக்கொள்வார்.
15. மற்ற விவரங்களை 'தேர்தல் விதிமுறைகள்' வெளியீட்டில் கண்டுகொள்ளலாம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

கழகமதில் சுழல்காற்றுப் புகுந்த காலை
கலைந்திடவே காளையர்கள் கிளம்பும் வேளை!
மலைபோல எதிர்ப்புக்கள் குவிந்த நேரம்
மலையருவி போல்கண்ணீர்! வெந்நீர்! நெஞ்சில்
பொல்லாத காலமதில் பெரியார் கொண்ட
பேராசை! பெண்ணாசை! பொருத்த மில்லா
வயதினிலே வந்துதித்த வனிதை எண்ணம்!
வாலிபர்கள் விலகிடவே வளர்ந்த காளான்!

செய்வதென அறியாது செயல்வீ ரர்கள்
செத்தமனம் பெற்றநிலை கண்டு கேட்டு
நமதண்ணன் நடுநிலையில் நின்று கண்ணீர்
சிந்துகின்ற செல்வர்களை சேர்த்துக் கோர்த்துச்
சிந்தித்துச் செயலாற்றச் சிரித்து நின்றார்!
அந்த வேளை...
கொள்கையினை வலுவாக்கி; கொடியை மாற்றி
கொட்டுகின்ற மழையினிலே கொதிக்கும்
நெஞ்சை

கலங்குகின்ற காளையர்முன் கருத்தால் காட்டி
கழகமெனும் மரத்துக்கு வேராய் நின்று
அன்றுமுதல் இன்றுவரை தொண்டு செய்யும்
பொன்னான அண்ணாவை பொறுப்பு ஏற்க
பொறித்திட்ட நற்செய்தி புவியோர் போற்றும்
கற்கண்டே! கலங்கரையே! கனியின் சாறே!
வேறில்லை! வழிகாட்டி அவரே! வாழி!

-வே. கபிலன்

‘இரத்த’ சீனுவின் மர்மங்கள் வெளியிடப்படுகின்றன

நாடு கடத்தப்பட்ட சீனப் பேராசிரியர் ‘லோ’ தரும் செய்திகள்

சிறுகதை :

எவளோ ஒருத்தி

எம். எஸ். அனந்தன்

எவளோ ! ஒருத்தி.

எங்கே?பிறந்தாள். எங்கே? வளர்ந்தாள். இங்கெதற்காக வந்திருக்கிருள்? இவை எதுவும் எனக்குத் தெரியாது.

இங்குதான் பிறந்தாளா ? வளர்ந்தாளா?வாழ்கின்ருளா? இதுவும் எனக்குத் தெரியாது பிறகெதற்கு அவளைப் பற்றி எண்ணுகிறேன் ?

பெற்றவள் ? ... பெருமைக்குரியவள். வளர்த்தவள் ? வாஞ்சைக் குரியவள். பராமரிப்பவள்?பாசத்திற்குரியவள். ஆனுல், இவள் ?

எவளோ ஒருத்தி! வீதியில் சென்று கொண்டிருப்பவள். விலகிச்செல்ல வேண்டியவள். என்ருலும், அவளைப் பற்றி அறிய துடிக்கிறது, மனம். கன்னி என்பதற்காக இருக்குமா? இருக்க முடியாது. மரமென்று இருந்தால், மலர் ஒன்றே ஒன்றுதானு? பூக்கிறது. எத்தனை எத்தனையோ பூப்பதுண்டு. பிறகு ஏன்! மனம் அவள் வழியே செல்கிறது.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் — உருவத்திலும் குணத்திலும் — ஒருவரைப் போல் ஒருவர் இருப்பதில்லை. மலர்களும் அப்படித்தானே? தன்மையிலும் மென்மையிலும் மாறுபட்டிருக்கும். இருக்கலாம்.

ஒரு மரத்து மலர்களே இப்படியென்ருல், அதுவே தோட்டத்து மலர்களாக இருக்குமானுல், ஒன்று கண்ணைக் கிறங்க வைக்கும். மற்றொன்று கருத்தைக் கவர முயலும். இன்னொன்று, எண்ணங்களை இழுத்து இழுத்து வேடிக்கை காட்டும். இப்படித்தான் இருக்க வேண்டும். இல்லையென்ருல், ஏன் ? மலரைக் கண்ட வண்டுபோல், மனம், அவளைச் சுற்றி சுற்றி வருகிறது.

அவள் ? அழகின் மொத்த உருவமல்ல. கவர்ச்சி நிறைந்தவள். ஒருமுறை பார்த்தால், மறு முறையும் பார்க்க ஆவலைத் தூண்டுபவள். அவளுடைய நடையில், அன்னம், இடம் பெறவில்லை; மானின் துள்ளல் தெரிந்தது. கயலைக் காண முடியுமா வென்று கண்களைப் பார்த்தேன். மருண்ட மான் தான் என் மனக் கண் முன் நின்றது. ஆனுல், பார்வையில் ? ஒளியில் ? மானின் மருட்சி இருக்க வில்லை.

தன்னுடைய அழகைக் கண்டுபிறர்மயங்குவது,தனக்குப் பெருமையளிக்கிறது, மகிழ்ச்சி யூட்டுகிறது, என மலர்கள் எண்ணுமோ? எண்ணுதோ ? மாது எண்ணுகிருள். இளமை எண்ணுகிறது. ஏன்? மனித வர்க்கமே எண்ணுகிறது. அதனுல் தான் அவளுடைய நடையில் — சாயலில்- முறுவலில், மிடுக்கு இருக்க முடிகிறது.

நான் கடற்கரை நோக்கி சென்று கொண்டிருந்தேன். எனக்கு எதிர் திசையில், அவள், வந்து கொண்டிருந்தாள். வீதி, அவளைப்பார்த்தது அவள், வீதியைப் பார்த்தாள் எவரும், எங்கும், நிற்கவில்லை.

நல்ல சிகப்புமில்லை. “மா” நிறமென்னும்வைரம்விளைந்த கறுப்புமல்ல. நீலம் பாய்ந்த கறுப்பு; நாவற்பழ நிறம். மெருகு குலையா திருந்தாள்.

அழகு! அதன் மீது எழும் எண்ணம் — தலைக்கனத்தில் — “தான்” என்ற அகந்தையில் கொண்டு போய் நிறுத்தி விடுகிறது. தக்காரும் மிக்காரும் இல்லையென்ற தவருன எண்ணம், இன்பம் எனும் மலையின்உச்சிக்கு அழைத்துச் செல்வதைப் போல் பாவனை காட்டி, அதள பாதாளத்தில் கொண்டு, தள்ளி விடுகிறது இஃது தவருக இருக்குமானுல் எவனே? ஒருவனேடு,நேற்று உல்லாசமாக உரையாடிச் சென்றவள், இன்று, எவனே? மற்ருெருவனேடு, ஊடி மகிழ்ந்து, உரையாடிச்செல்ல மாட்டாள். ஒருவர்—ஒருத்தி என்ற உன்னத நிலையில் இருந்திருப்பாள்.

வீதியில் ஏதாவதொன்று, அழுகி நாற்ற மெடுத்தால்? காண்போர் அனைவரும் அருவருக்கத்தான் செய்கின்றனர் ஆனுல், அதைப் பற்றிய கவலை, எண்ணம், எவனே ! ஒருவனுக்குத் தான் ஏற்படுகிறது. அதுவே, அவனுக்கு கடமையாகவும் மாறி விடுகிறது. அப்படியானுல், அவளைச் சுற்றி ஓடும் என்னுடைய எண்ணங்கள்! என்னுடைய கடமைகளில் ஒன்றுதானு? அப்படித் தானிருக்க வேண்டும். இல்லையென்ருல், அனுதாபம், அதைத் தொடர்ந்து ஆவேசம், எழ முடியாது. பொருமை, அதைத் தொடர்ந்து போக்கிரித்தனம் பிறந்திருக்க வேண்டும்.

எது பிறந்தாலும், நான் என்ன செய்ய முடியும். உடன் பிறந்தவளா? உரிமையோடு, பேச. இல்லை, பெற்ருேரைச் சேர்ந்தவளா ? சுற்றத்தில் இருப்பவளா? அருகே சென்று பேசினுல், “உதை கிதை” வாங்காமலிருக்க. நான் யாரோ? அவள் யாரோ?

யாரோ ஒருவர்தான், யாரோ ஒருவராகத் திகழும். மனிதனுக்காக — கூடிவாழும் மக்களுக்காக— தன்னுடைய, உடல், பொருள், ஆவியனைத்தையும் அர்ப்பணிக்கிருன். நானும்அவர்கள்போல்உடல், பொருள், ஆவியனைத்தையும் அர்ப்பணிக்க முடியாது போனுலும், என்னுடைய எண்ணங்களை— ஆலோசனைகளை, சொல்லியிருக்கலாம். திரும்பிப் பார்த்தேன். அவளைக் காணவில்லை. அவள் சென்ற சுவடுகள் கூடத்தென்படவில்லை, மறைந்துவிட்டாள் —

ஆனுல், அவளுடைய ‘நிலையால்’ நான் அறிந்த பாடம், பார்வையில் பக்குவமும், சிரிப்பில் சிக்கனமும், பேச்சில் பிழையின்மையும், உறவாடுதலில் ஒத்த பண்பும் இருக்க வேண்டும் என்பதாகும். அதை என் தாய்க்குலமான “பெண்” குலத்திற்கு தானமாக வழங்குகிறேன். ஏற்றுக் கொள்வார்களாக.

‘இரத்த’ சீனுவிற்குச் செல்லும் பார்வையாளர்கட்குக் காட்டப்படுவதென்ன ? இரும்புத் திரை கிழிக்கப்படும் இங் காலத்திலுமா — ஒளி மறைவுகள் ? நாடு கடத்தப்பட்ட சைனப் பேராசிரியர் ‘லோ’ தரும் உண்மையான செய்திகள் !

மக்களை சிறையில் வைத்துப் பாதுகாப்பதுதானு உண்மையான பாதுகாப்பு !

பொதுவாக நாம் ஒரு நாட்டைப் பற்றி அறிந்துகொள்ள அந்த நாட்டு மக்களுடன் பழகி அவர்களுடைய பழக்க வழக்கங்களைக் கண்ணுல் கண்டு தெளிவடைகிருேம். அதை நம் நாட்டிற்கு வந்தவுடன், ‘சீனுவில் மக்கள் வாழ்க்கை’எனப்பேசுகிருேம்! எழுதுகிருேம் ! அப்படியென்ருல் அந்த நாட்டினுடைய மக்களும் நம்மோடு மனம் விட்டுப் பேசியிருக்க வேண்டும்! பழகி இருக்க வேண்டும் !

அயல்நாட்டிலிருந்து வரும் பார்வையாளர்கள் பழகுவதற்கென்று சில குடும்பங்களை அரசாங்கம் குறித்து வைத்திருக்கின்றது. அரசியலாரின் ஆணைப்படி உண்மையை மறைத்து — உரையாட வேண்டும். பொருள் விற்பனைக்காகக் கடைக்குக் கடை காட்சி அறைகள் (show rooms) வைக்கப் பட்டிருப்பது போல் மாதிரிக்கு குடும்பங்கள் காட்டப்படுகின்றன. இவர்களை, ‘அரசியல் வியாபாரிகள்’ என்று குறிப்பிடுவதில் என்ன தவறு ?

இப்படியே தொழிலாளிகள் குடும்பங்களிலும் பலவற்றை தேர்ந்தெடுத்து வைத்துள்ளனர். சொன்னதைச் சொல்லும் சிறையிலடைபட்ட இறக்கை முறிந்த கிளிகள் போல் — செவ்வாய்க் கரடிகள் உரைகளையே திரும்பத் திரும்பக் கூறுவார்கள் ! மூலதனக்காரர்கள் (capitalists), பேராசிரியர் வீடுகளிலும் இதே நிலைதான் !

இந்த அவல நிலையில் தொழிலாளிகள், குடிமக்கள் நலன் பாதுகாக்கப் படுவது எப்படி ?

பேராசிரியர் ‘லோ’வும் ‘லோ’ வைப் போன்றவர்களும் பொதுவுடமைக் கொள்கையை விரும்பாதவர்கள் ! என்ருலும் உயிர் வாழ வேண்டுமென்ருல் ... இந்தப் பொய்யான கொள்கையை ஆதரிப்பதைத் தவிர வேறு வழி இல்லை !

அரசியல் பொருளாதார விடுதலையே வேண்டும்

‘முதலாளிகள் உண்டு என்கிருர்களே ? ’

‘ஆம்!முதலாளிகள்உண்டு. ஆனுல் முற்றிலும் புதுமையான முதலாளிகள்அரசாங்க ஆணைக்கு பம்பரமாகச் சுற்றுவார்கள் ! கயிறுதான் ஆட்சி பீடத்தில் இருக்கிறதே !

நினைத்தால் முதலாளி மாற்றமே ஏற்படும் ! இந்த முதலாளிகள் அரசியலாரால் நியமிக்கப்படும் நிர்வாகிகள் போன்றவர்கள்.

எனவே வியாபாரத்தை உண்மையிலேயே ... நடத்துவது பொதுவுடமைக் கழகச் செயலாளர்தான் ! பேராசிரியர் ‘லோ’ கூட இப்படிப்பட்ட புதுமையான முதலாளியாக இருந்தவர்தான் !...அப்படிப்பட்ட அனுபவத்தைத் தான் அப்பட்டமாகக் கூறுகிருர் !

விலைவாசி ஏற்றத் தாழ்வில் ஏற்பட்ட பெரும்இழப்பு ! 500 ஹார்ஸ்பவர் மோட்டார் யந்திரம் 40,000 ஜேஎம்பி டாலர்களுக்குக் கேட்ட போது விலை குறைவு என விற்கவில்லை. ஒரே மாதத்தில் அதன் விலை 3 000 மாக மாறியது ! ... இந்த நஷ்டஈட்டினை அரசாங்கம் சரிவர கவனிக்கவில்லை !

இவ்வளவு துன்பத்திற்கும் இடையூறுக்கும் இடையில் நீர் ஏன் பெரிய முதலாளியாக இருக்க நினைத்தீர்கள் ?

1. நான் ஒரு நல்ல நிம்மதியான வாழ்க்கை வாழ எண்ணினேன்.

2. என் தொழிலைப் பெருக்கி நல்ல முறையில் நடத்த நினைத்தேன்.

3. வருங்கால சந்ததியான என் குழந்தைகள் நல்வாழ்வு வாழ நாட்டங் கொண்டேன். இவைதான் நான் எண்ணிய குற்றங்கள் !

குழந்தைகளுக்குப் போதிக்கப்படும் கல்விமுறை... மனித சமுதாயத்திற்கு விரோதமானதாகவும் குரோதமானதாகவும் இருக்கிறது. சுயதேவையை நிறைவேற்றிக் கொள்ளும் சொந்த முயற்சி பாவமெனப் பாடம் சொல்லித் தருகிருர்கள். அரசாங்கத்தின் நிரந்தரமான அடிமைகளாக வைத்துக் கொள்ள ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஈன்றெடுத்துப்பேணி வளர்த்துப் பெயரிட்ட தாய் தந்தையரை வெறுக்கக் கற்றுக் கொடுக்கின்றனர்.

தனியார் தொழில் துறைகளுக்கு கட்டுப் பாடுகள் வரி விதிப்பு மூலம் நிறைவேற்றப் படுகின்றன. வெளி உலகிற்குத் தெரியாத முறையில் வலுத்த கட்டுப் பாடுகள் நாளுக்கு நாள் விதிக்கப் படுகின்றன.

ஏனைய பொதுவுடமை நாடுகளிலும் இதே கதிதான். தான் ரஷ்யா சென்ற போதும் இந்தமோசமான நிலைகளையே கண்டதாக பேராசிரியர் லோ கூறுகிருர். எனவே பார்வையாளர்களென்று சென்று வாழ்க்கை நிலை, பண்பாடு முதலியவற்றைக் கண்டதெல்லாம் ... கேட்டதெல்லாம் ... உண்மையல்ல ! வெறும் பித்தலாட்டங்களே ! எனவேஉலக சரித்திரத்தைக் கண்டு மக்கள் விழிப்படைய வேண்டும் ! அரசியல் பொருளாதார விடுதலை வேண்டும் ! நம் விடுதலைக்கு உலக வரலாற்றையும் துணையாகக் கொள்வோமாக !!

வெளியாகி விட்டது !

விற்பனையாகிறது !

காவியக் கழகத்தாரின்

நான்காம் படைப்பு !

கவிஞர் கண்ணதாசன்

கவிதைகள்

[இரண்டாம் தொகுப்பு]

தனிப்பிரதி விலை : 2-8-0

விற்பனையாளருக்கு 25 கழிவு உண்டு

குறிப்பு : நேரடியாகப் பெற விரும்புகின்ற தோழர்கள் ஒரு புத்தகத்துக்கு மூன்று ரூபாய் அனுப்பி வைக்க வேண்டும்.

விபரங்கட்கு : **காவியக் கழகம், சென்னை-2.**

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சிற்றரசு
மலர் 2] ★ 7-10-60 ★ [இதழ் 5

நாட்டிலிருந்து 400 திருமதியின் பெருமதி

சிங்களத்தீவிலே எங்களவர்கள் தவிர மற்றையோர் (தமிழர்கள்) இருந்தால் ஆண்டொன்றுக்கு ரூபாய் நானூறு வரியாகத் தர வேண்டும். இல்லையானால் வெளியேற வேண்டும். இது திருமதி பண்டாரநாயகாவின் விருப்பம். இல்லை, இல்லை. சட்டம். நேற்றுவரை இறந்தவர்களும் இன்று வரை பிறக்காதவர்களும் நல்லவர்கள், இப்போதிருப்பவர்கள் யாரோ என்று பழமொழி ஒன்றுண்டு. அதன்படி பார்த்தால் நேற்றுவரை இறந்தவர்களின் எண்ணிக்கையிலே சேர்க்கப்பட்ட திருவாளர் பண்டாரநாயகா நல்லவர்கள் பட்டியலில் போய்ச் சேர்ந்துவிடுகிறார். இன்றுவரை மிகக் கொடுமையானவர்கள் பிறக்கவேண்டாம். நானே இருக்கிறேன் என்ற தோரணையில் திருமதி பண்டாரா மிகத் தீவிரமான, கொஞ்சமும் இரக்கமற்ற செயலிலே இறங்கி இருக்கின்றார்.

தாய் உள்ளம் எங்கே?

'புத்தரே! நீர்தான் அந்த அம்மையாருக்கு புத்தி சொல்ல வேண்டும். ஏனெனில் நீரும் இந்த உபகண்டத்திலிருந்து சிங்களம் சென்றவர்தான். ஆனால் உயிரோடல்ல. உங்களுக்கு எந்த போதி (அரச) மரத்தடியில் ஞானம் ஏற்பட்டதென்று சொல்லப்படுகிறதோ, அந்த மரத்தின் கிளை ஒன்றை அனுராதபுரத்தில் வைத்து வணங்குகின்றார்கள். உங்கள் பல் ஒன்றை சிங்களப் பேரரசர்கள் தங்களுக்குத் தலைநகராகக் கொண்ட கண்டியில் வைத்து வணங்குகிறார்கள். உங்களை மதித்தாவது உங்கள் தாயகத்திலிருந்து சென்றவர்களுக்குக் கொஞ்சம் கருணை காட்டக்கூடாதா அந்த அம்மையார்.

400 ரூபாய்

இந்தத் தொகை ஆண்டொன்றுக்குக் கொடுக்கக் கூடிய நிலையில் உள்ளபடியே உள்ளார்களா தமிழர்கள் என்று சராசரி மனிதனும் சொல்லி விடுவான். திங்கள் ஒன்றுக்கு தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கின்றவன் வருமானம் ரூ. 100- இதில் அவன் இப்போது போடுவதாக அம்மையார் உத்தேசித்திருக்கும் வரியாக செலுத்தவேண்டிய தொகை ரூ. 35 மிகுதி ரூ. 65 இதில்தான் அவன் வாழ்ந்து தீர வேண்டும். உணவுப் பொருள்களின் விலை இங்கிருப்பதைப் போல் இரண்டு மடங்கு. வீட்டு வாடகையும் அப்படித்தான். இந்த வாழ்க்கைப்புள்ளி விவரங்கள் அந்தஅம்மையாருக்குத் தெரியாதென்று நாம் சொல்ல முடியாது. என்றாலும் ஏன் இந்த முடிவுக்கு வந்தார்கள்.

வெட்டப் பயப்படுவர்கள் விஷம் கொடுத்துக் கொல்வதைப் போல், தமிழர்களே! நீங்கள் வெளியேறுங்கள் என்று சொல்வது அவ்வளவு நாகரீகமாகத் தெரியவில்லை. ஆகவேதான் வரிவிதிக்கிறேன், என்று சொல்லாமல் சொல்லிவிட்டார்கள்.

வருவாயில் பாதி மது

இலங்கைத் தோட்டத் தொழிலாளிகள் மாத்திரமல்ல மந்திரிகளே கூட ஏதாவது சிக்கலான பிரச்னையைப் பற்றி சிந்திக்கும்போது அவர்கள் மேசையின் மீது மதுபான புட்டிகள் இருப்பதையும் அதை அப்படியே படம் போட்டு பத்திரிக்கைகள் வெளியிடுவதையும் இலங்கைச் செய்தித்தாள்களில் அன்றாடம் பார்க்கலாம். ஏனெனில் அங்கு குடிப்பது அவ்வளவு குற்றமென்று கருதப்படுவதில்லை. சினிமா கொட்டைகைளில்கூட மதுபானக் கடைகள் இல்லை என்றால் லைசென்சில்லை. எல்லாவற்றையும் துறக்க உபதேசித்த புத்தரை வணங்கும் நாடு எதையும் துறந்ததாகத் தெரியவில்லை. அந்த வகையில் தேயிலைத் தோட்டங்களில் அட்டைக் கடியால் இரத்தத்தை இழந்துவிடுகின்றவர்கள் குடிக்காமலிருப்பதில்லை. அதனால் வருவாயில்பாதிப்போய் விடுகிறது.

எஞ்சி நிற்பதை வைத்துக் கொண்டுதான் வாழ வேண்டும். இங்கு அவர்கள் விட்டுச் சென்றவர்கள் எவ்வளவு ஏழ்மையான வாழ்க்கை நடத்துகிறார்களோ இதே மாதிரிதான் பித்தல் கோட்டு, பரட்டைத் தலை. ஓட்டை ஒடைசல் சாமான்கள் வைத்துக்கொண்டுதான் வாழ்கிறார்களே தவிர வேறு மேலான நிம்மதியான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் என்ன மாற்றம் என்றால், இங்கு வேலை இல்லை. அங்கு வேலை கிடைக்கிறது. கூலி கிடைக்கிறது. அவ்வளவுதான் மாற்றம்.

அங்கு குடியேறிய தமிழர்களின் தொடர்ச்சியான வரலாற்றை எடுத்துக் கொண்டால் நினைப்பதற்கே நெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறது. அந்த பரிதாபத்துக்குரிய நிகழ்ச்சி ஒன்று நடந்ததைக் கீழே படியுங்கள்.

வளையல் போராட்டம்

தேயிலைக்கிள்ளும் பெண்கள் கையில் வளையல்கள் போட்டுக்கொள்ளக் கூடாதென்று ஒரு வெள்ளையன் உத்திரவிட்டான். காரணம் கேட்டதற்கு ஏதோ ஒரு பெண்ணின் வளையல் ஒன்று வேலை செய்யும்போது உடைந்து தேயிலையோடு சலந்து அது அறைபடும்போது இந்தக் கண்ணாடித் தூளும் அறைப்பட்டு, தேனீராகக் காய்ச்சிக் குடிக்கும் போது இந்தக் கண்ணாடித் தூளும் கலந்து அந்த வெள்ளையன் நெஞ்சில் குத்திக் கொண்டதாம். அதனால் தேயிலைக்கிள்ளும் எந்தப் பெண்ணும் கையில் வளையல் போட்டுக் கொள்ளக் கூடாதென்று கடுமையான உத்திரவு ஒன்று போட்டான். அதனால் கொதித்தெழுந்தத் தமிழ்ப் பெண்கள் வேலை நிறுத்தம் செய்தனர். வெளித் தோட்டங்களிலிருந்து ஆட்களைக் கொண்டு வர முயன்றனர். வந்தவர்களைப் பெண்கள் தடுத்து நிறுத்தினர். பல்வேறு தோட்டங்களிலிருந்தும் கொழும்புப் பாராளு மன்றம் நோக்கிப் படையெடுத்து அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அந்த உத்திரவு வாபஸ் வாங்கப்பட்டது. மீண்டும் பெண்கள் வேலைக்குத் திரும்பினர். இதைத் தொடர்ந்து பல இன்னல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது குடியிருப்பு வரி என்ற பேரால் நானூறு ரூபாய் வரி தரவேண்டும் என்று வந்திருக்கிறது. இது வரையில் பெரும் பெரும் அரசியல் புயலுக்குத் தப்பி நின்ற தமிழர்கள் இந்தப் பயங்கரமான பெரும் புயலுக்குத் தப்பி நிற்கப் போவதில்லை. பாதிக்கப் படுபவர்கள் தமிழர்கள். ஆகவே இந்தியத் துணைக் கண்டத்தின் பேரரசும் கேட்கப் போவதில்லை.

எதைக் கேட்டது

இலங்கையில் இத்தனை யாண்டுகள் வாழ்ந்ததற்கு அடையாளமாக நற்சாட்சி பத்திரம் வைத்திருக்க வேண்டும் என்று இல்லாத ஏழைகளை மிரட்டினார்களே, அப்போது இந்திய அரசாங்கம் கேட்டதா? வடிகட்டித் துரத்தினார்களே, அப்போது கேட்டதா—? தமிழ்ப் பெண்களை நடுத் தெருவில் நிறுத்தி மானபங்கம் செய்தார்களே, கர்ப்பப் பெண்ணை வயிற்றில் உதைத்து கரு வெளியே பிண்டமாக வந்து விழுந்ததைக் கண்டு சிங்கள வெறியர்கள் சிரித்தார்களே, அப்போதுஇந்த மானங் கெட்ட டில்லி சர்க்கார் கேட்டதா? எதைக் கேட்டது டில்லி. ஏன்? அங்கே வாடுகிறவர்கள், மானம் பறிபோக நிற்பவர்கள், இக்கரையில் ஒரு காலையும், அக்கரையில் ஒரு காலையும், அடியிலிருக்கும் கடல் நீரோடு கண்ணீரைச் சிந்திக் கொண்டிருக்கிறார்களே, அவர்களைப்பற்றி ஒரு வார்த்தை இல்லை. 'கள்ளத் தோணி' என்ற ஒரு நாடகம் எழுதி அதைத் தமிழர் வாழ்ப் பகுதிகளில் போட்டுக் காட்டி நையாண்டிச் செய்தார்களே அதைப்பற்றி ஒரு வார்த்தையும் டில்லிக்கேட்காததினால்தான் திருமதி பண்டா துணிச்சலான இந்த முடிவுக்கு வந்திருக்கின்றார்கள். பாராளு மன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் மிகக் குறைவாக. அவர்களால் என்ன செய்ய முடியும். கண்டனக் குரல் எழுப்பலாம், ஊர்வலங்கள், கண்டனக் கூட்டங்கள் நடத்த உரிமைக் கிடைத்தால் நடத்தலாம். அல்லது அந்த படுமோசமான சட்டம் நிறைவேற்றப் படும்போது வெளியேறலாம். வேறு என்ன செய்ய வல்லார்கள். அவர்களைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. ஒரு நாள் வாளேந்திச் சென்றவன் இன்று கையேந்தி நிற்கிறான். கரிகால் பெருவளத்தான் காலடிபட்ட இடம், இன்று அவன் வழி வந்தோர் கருகிய முகத்தோடு நிற்கின்றனர். அவர்கள் அவல நிலையை எடுத்துச் சொல்ல, ஒரு மாற்றங்காண, இங்குள்ளோர் அங்கு செல்ல மறுக்கப் படுகின்றனர். கசிந்துருகும் நெஞ்சங்கள்இங்கே. கண்ணீர்அங்கே. எம்மவரே! எழுங்கள் என்பதா? — இலங்கையே இரக்கம் காட்டு என்பதா? எதைச் செய்வதென்றே புலப்படவில்லை.

இறுதியில் சிங்களத் தாயே "சீற்றம் தணிக" என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

தங்கள் அன்பன்,





இருண்ட கண்டத்தில் விடுதலை ஒளி!

விடுதலை உணர்வு என்றும் மங்காதது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஓர் இனத்தை அடிமைப்படுத்தி வைத்திருந்தாலும் என்றேனும் ஓர்காலம் வரும். அன்று அடிமைப்பட்டவர்கள் வீறு கொண்டெழுவர்; அடிமைத்தளையை அறுத்தெறிவர்; ஆனந்த சுதந்திரம் பெற்று இன்பப் பண்பாடுவர். உலக வரலாறு இந்த உண்மையை அறிவுறுத்திக்கொண்டு வருகிறது. அதற்குச் சான்ருக அண்மையில் விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகள்விளங்குகின்றன.

விடுதலை எண்ணம் மக்கள் இதயங்களில் இடம்பெற வொட்டாது பலவித சூழ்ச்சிகளை மறைமுகமாக நடத்தியிருக்கிறது பெல்ஜியம். இருப்பினும் வஞ்சகர்கள் தொடர்ந்து வாழ்ந்ததில்லை; அடிமைகள் என்றும் அடிமைகளாகவே இருந்ததில்லை. கோழைகளும் மோழைகளும் கோட்டை காக்கும் வீரர்களாக மாறிய காட்சியைக் கண்டது காங்கோ.

கருநீலக் கடலைக் கடந்து கதிரவன் உதிப்பதேபோல் இருண்ட கண்டத்தில் விடுதலை ஒளி உதயமாயிற்று.

★ பெல்ஜியத்தின் பொருமையா?
★ அமெரிக்காவின் சூழ்ச்சியா?

இருண்டகண்டம் என்று கூறப்படும் ஆப்பிரிக்க நாட்டில் பதின்மூன்று பகுதிகள் புதிதாகச் சுதந்தரம் பெற்றுள்ளன. 82 நாடுகளைக் கொண்டிருக்கும் ஐக்கியநாடுகள் சபையில் 96 நாடுகள் இன்று பங்கு கொள்வதற்கு இந்த ஆப்பிரிக்க மக்களின் விடுதலை ஆர்வமே காரணம் ஆகும்.

ஆப்பிரிக்காவின் இதயபீடமாக அமைந்திருப்பது காங்கோ என்னும் சின்னஞ்சிறு நாடு; நம் திராவிடத்தை அதனுடன் ஒப்பிடும்போது மலைக்கும் மண்குவியலுக்கும் இடையே இருக்கும் வித்தியாசம்தான் தோன்றும். காங்கோவில் வாழ்பவர்கள் கறுப்பர்கள்தான்; ஆனுலும் அவர்களைக்கூட விடுதலை வீரர்களாக ஆக்கியது அந்நாட்டில் எழுந்த உணர்ச்சி வெள்ளம்!

சமீபகாலம் வரை பெல்ஜிய நாட்டிற்கு அடிமையாக இருந்தது காங்கோ. அந்த நாட்டின் ஒரு பகுதியான கடங்காவில், கனிச் சுரங்கங்கள் உள. அவைகள் நாட்டிற்கு நல்ல வருவாயைத்தருவன. வணிகத்துறை, ஆட்சித்துறை, தொழிற் துறை, போக்குவரத்து முதலான பெரிய துறைகளனைத்திலும் பெல்ஜிய நாட்டாரே முதன்மைபெற்று நடத்திவந்தனர். கடங்காச் சுரங்கங்களின் வருமானத்தில் பெரும்பகுதி பெல்ஜியத்துக்கேகிடைக்கும். அதுமட்டுமன்றி, நாட்டு மக்களுக்குப் போதிய கல்வி வசதி தராமல் அவர்களுடைய அறிவையும் ஆற்றலையும் குடவிளக்காக அடைத்து வைத்தனர். படித்த மக்கள் இருந்தால்தானே விடுதலை வித்தை ஊன்ற முடியும் என்று பகற்கணவு கண்டு கொண்டிருந்தது பெல்ஜியம். காங்கோவினருக்கு அடிப்படைக் கல்விக்கு மேல்படிக்க எதையும் செய்து தரவில்லை ஆண்டு கொண்டிருந்த பெல்ஜிய அரசு. காங்கோவில் பல்கலைக் கழகங்களில்லை; உயர்தர அறிவு நிலையங்களில்லை; ஏன் அந்த நாட்டு மக்கள் எவருமே தொழிற் துறைகளில் திறமை பெறவோ, ஆராய்ச்சி செய்யவோ கூட அனுமதிக்கப்படவில்லை.

எவ்வளவோ இன்னல்களைக் கடந்த பின்னர் காங்கோ விடுதலை பெற்றது; கசவுபு என்பவர் நாட்டுத்தலைவராகவும் லுமும்பா என்பவர் முதலமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள்நேர்மையானமுறையில் பொதுமக்கள் தம்முடைய வாக்குரிமைகளைப் பயன்படுத்தி ஆட்சி பீடத்திற்கு அனுப்பிய தலைவர்கள் ஆவர்கள். கசவுபுவும் லுமும்பாவும் அவர்கள் அமைச்சரவையுடன் கடந்த மாதம்வரை நன்முறையில் ஆட்சி நடத்தி வந்திருக்கின்றனர். ஆனுலும் உரிமை பெற்ற நாடு புதிய ஆட்சியின்கீழ் வளர்ச்சியுறுவதற்கு முன்பாக அதனைத் தம் கைப்பொம்மையாக்கிக் கொள்ள அரசியல் வல்லூறுகள் சில முயன்றன. அவற்றுள் காங்கோவின் வளர்சிசிக்குத்தடையாக இருக்கும் நாடு பெல்ஜியமே!

லுமும்பா தலைமை அமைச்சரானதும் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டார்; அதன் விளைவுகளில் ஒன்றுதான் கடங்கா கனிச் சுரங்கங்களை காங்கோவிற்கு உரிமையாக்குவதாகும். பெல்ஜியப் பிடியிலிருக்கும் அவைகளைப் பெறுவதன்மூலம் தன் நாட்டின் வளர்ச்சிக்குத் துணைபுரிய நினைத்த லுமும்பாவுக்கு எதிர்ப்புக்கள் கிளம்பின. சுரங்கம் முழுமையும் காங்கோவிற்குக் கிடைத்துவிட்டால் பெல்ஜியம், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பொருளாதாரப் பிடிகளிலிருந்து அது விடுபட்டதாகும். சுரங்கங்களைப் பெறும் அளவிற்குப் போதிய நிதி இல்லாமலிருந்தும் லுமும்பா சோவியத் நாட்டின் உதவியுடன் அதை நிறைவேற்றி யிருப்பார்; இதை உணர்ந்த மேற்கு வல்லரசுகள் லுமும்பா பொதுவுடமைப் பக்கம் உதவி நாடுவதை வெறுத்தன: லுமும்பாவைக் கவிழ்க்கவும் சதிகள் செய்ய ஆரம்பித்தன. அதன் முதல் படிதான் காங்கோ நாட்டுத் தலைவர் கசவுபுவையும் கடங்கா பகுதிப் பிரதமர் ஷோம்பேவையும் லுமும்பாவிற்கு எதிராகத் தூண்டி விட்டதாகும். கசவுபு லுமும்பா அமைச்சரவையைக் கலைத்தார், மேற்கு நாடுகளின் தூண்டுதலினுல்; ஆனுல் லுமும்பாவோ நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடித்து மீண்டும் பிரதமரானுர்.

பிரதமர் லுமும்பாவை அகற்றுவதில் மேற்கு நாடுகள் தோல்வியே கண்டன; ஆனுல், கசவுபுக்கும் லுமும்பாவுக்கும் மனக்கசப்பை மிக அதிகமாக உண்டாக்குவதில் பெருவெற்றி கண்டன! அதற்குள்ளாக பெல்ஜியப் படைகள் காங்கோவிலிருந்து வெளியேற மறுத்து மீண்டும் குழப்பத்தை உண்டாக்கின. "அரசியல் விடுதலைமட்டுமன்றி, இராணுவ விடுதலையும் காங்கோவிற்குத் தேவை" என்று கருதிய லுமும்பா விடுதலை பெறுவதற்குமுன் இராணுவத்தில் இடம் பெற்றிருந்த பெல்ஜியத் துருப்புக்களை வெளியேற்ற எண்ணினுன். ஆனுல், பெல்ஜியமோ பொதுவுடமையினரை இராணுவத்தில் நிரப்பவே பெல்ஜியத் துருப்புக்கள் விலக்கப்படுகின்றன என்று கருதியது; கடும் குற்றச்சாட்டையும் வீசியது. பெல்ஜியர்களை காங்கோவிலிருந்து வெளியேற்ற நடத்தும் சதி இது என்று ஒருமித்த குரலில் சொல்லியது பெல்ஜியம். இதன் காரணமாக கலவரம் நிகழ்ந்தது. இந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் இராணுவம் அமைதியை நிலைநாட்ட காங்கோவிற்கு வந்தன. பிரதமர் லுமும்பா, விலக்கப்பட்ட பெல்ஜியத் துருப்புக்களின் காரணமாகவே ஐ. நா. படை வந்ததெனக் கருதி அதனைத் திருப்பிப் பெறக்கூறினுர். அத்தோடன்றி ஐ. நா. பொதுச் செயலாளர் டாக் ஆமர்ஷீல்டு பெல்ஜியத்தின் தலையாட்டிப் பாவையாக இருக்கின்ருர் என்றும் கடுமையாகச் சாடினுர் இவ்வாருக காங்கோ பிரச்சினை நாளுக்குநாள் பெருஞ் சிக்கலாக வளர்ந்து வந்தது. இந்த நேரத்தில் ஒரு புதிய மனிதர் தலையை நீட்டினுர். அவர்தான் இராணுவத் தலைவர் மொபுடு! தற்போது வலுவான மனிதராக இருக்கும் இவர் கசவுபு லுமும்பா ஆகியோரிடையே உடன்பாடு உண்டாகு மட்டும்தான் அரசியல் நிர்வாகத்தைக் கவனிப்பதாகக் கூறியுள்ளார். கசவுபு, லுமும்பா, மொபுடு ஆக இம்மூவரும் மூன்று வேறு நிர்வாகத்தைக் கொண்டு காங்கோ நாட்டில் தாம் தலைவரென முழங்குகின்றனர்.

இரஷ்ய நாடும் ஆப்பிரிக்க நாடுகள் பலவும் லுமும்பாவை ஆதரிக்கின்றன; ஆனுல் அமெரிக்க வல்லரசோ லுமும்பா நீக்கப்பட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது; லுமும்பாவின் தோல்வி அமெரிக்க வெளி நாட்டிலாகவிற்குப் பெருவெற்றி எனக் கருதப்படுகிறது. கசவுபுவை நம்பிய அவர்கள் கைவிடப்பட்டனர்; ஐக்கிய நாடுகள் சபையில் தாம் கொண்ட பலத்தைப் பயன்படுத்த தற்போது முனைந்துள்ளது அமெரிக்கா. ரால்ப்பஞ்ச் ஜான் மக்தியார்மிந்த், ஹென்றிக் வீவிரப், ஆன்ட்ரு கார்டியர். ஆகிய நான்கு அமெரிக்கர்களும் சூழ்ச்சி வேலையில் தீவிரமாக இறங்கித் திட்டங்கள் தீட்டினர். இவர்களின் எண்ணமெல்லாம் லுமும்பாவை ஒழிப்பதும் கசவுபுவை அரியணை ஏற்றுவதும் தான். ஆனுல் அமெரிக்கரின் எல்லா முயற்சிகளும்

★ தேர்தலுக்கு மதிப்பில்லை!
★ நேர்மைக்கு இடமும் இல்லை!

தோல்வியடைந்தே வருகின்றன. லுமும்பாவிற்காகத் துணைபுரிய கனுமுதலிய நாடுகள் காத்துக்கிடக்கின்றன.

இந்தப் பதவிப் போட்டியில் சம்பந்தப்படாத பல நாடுகள் இப்போது கவனிக்கவேண்டிய நிலைக்கு வந்திருக்கின்றன. நேர்மையான அமைச்சரவை அமைத்த பிரதமர் லுமும்மா வெற்றிப் பெறப் போகிருரா? அல்லது அமெரிக்கக் கைப்பாவை கசவுபு வெல்வாரா? இன்றேல் இராணுவ ஆட்சியாளர் மொபுடுவே தொடர்ந்து நாட்டை நிர்வகிப்பாரா? என்பவற்றைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள்ளது.

ஆனுல், அமெரிக்க வல்லரசின் அநியாயமான தலையீடுகளை - மறைமுகமானவைதான் - எனினும் மன்னிக்கமுடியாத குற்றங்களை — உலக நாடுகள் எப்படியும் கவனத்தில் கொண்டு மேல் நடப்பவற்றைக்கவனிக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இப்போது மிகவும் சங்கடமான நிலையிலிருக்கிறது. உறவா அல்லது போரா என்ற நிலைதான் காங்கோ பிரச்சினை என்று ஒருமுறை ஐ. நா. பொதுச்செயலாளர் கூறியது கவனிக்கவேண்டிய செய்தியாக உள்ளது. இந்தப்பிரச்சினைகாரணமாக அவருடைய பதவிக்கே கூட ஆபத்து வந்துள்ளது. பொறுத்திருந்து பார்ப்போம், நாட்டு நடப்புக்களை!

ஆயினும் நினைவில் நிற்க வேண்டியது ஒன்று உளது! அதுதான் விடுதலை உணர்வு! பெல்ஜியம் தன் ஆதிக்கத்தைக் காங்கோ நாட்டின் ஒவ்வோர் பகுதியிலும் செலுத்தியிருப்பதால் அந் நாட்டிற்கு விடுதலை தந்தாலும் நம் கையில்தானே சூத்திரக் கயிறு இருக்கப்போகிறது என்று எண்ணியிருந்தது. ஆனுல், அது இன்று உணர்ந்திருக்கும் தன்னுடைய பெரும் தவற்றை காங்கோவில் பொருளாதாரப் புதையலாக இருக்கும் தனிச்சுரங்கங்களில் கைவைக்காதே என்கிருன் லுமும்பா; இராணுவப் படையில் ஒரு பெல்ஜியனும் உயர்பதவியை உடையவனுக இருக்கக்கூடாது என்கிருன் லுமும்பா; நாட்டின் பெரும் பொறுப்புக்கள் அனைத்திலும் காங்கோவினரே வைக்கப்படவேண்டும் என்கிருன் லுமும்பா.

பிரதமர் லுமும்பாவின் இந்த எண்ணங்களும் கொள்கைகளும் தவருனவை என்று எவரும் கூறுர்; எந்த விடுதலை நாடும் கொள்ளவேண்டிய பாதை இதுவே என்றுதான் விவேகிகள் சொல்வர். எனவேதான், காங்கோவிற்கு விடுதலை தந்தால் அந்தநாடு ஒற்றுமையுடனிராது; பல வேறு பகுதிகளாகச் சிதைவுறும் என்று கருதிய பெல்ஜியம் இன்று கவல்கிறது அதனுடைய எண்ணம் ஈடேறவில்லை. பல நாடுகள் லுமும்பாவை ஆதரிக்கின்றன, நேர்மை என்ற காரணத்தால். விடுதலை தந்தும் தன் சூழ்ச்சி வலையை வீசிய பெல்ஜியம் காங்கோவிடம் நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

விடுதலை பெற்ற புதிய நாடுகள்

நாடு		மக்கட் தொகை
1.	காமருன்	33 லட்சம்
2.	தகோலிஸ்	10 ,,
3.	மடகாஸ்கர்	52 ,,
4.	சோமாலி	13 ,,
5.	காங்கோ	130 ,,
6.	டோகா	17 ,,
7.	நைஜர்	24 ,,
8.	வோல்டா	32 ,,
9.	ஐவரிகோஸ்டு	31 ,,
10.	செயிட்	26 ,,
11.	கேப்பன்	4 ,,
12.	மத்திய ஆப்பிரிக்கா	12 ,,
13.	பிரஞ்சுகாங்கோ	8 ,,
14.	சைப்ரஸ்	5 ,,

—இவைகளில் முதல் பதின்மூன்றும் கறுப்பர்கள் வாழும் ஆப்பிரிக்கக் கண்டத்தில் இருப்பவை. சைப்ரஸ் கிரீஸில் இருக்கிறது. ஐ. நா. சபையில் உறுப்பினராகியுள்ள இவைகள் திராவிடத்தை விட மிகச் சிறியவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்ய நாடுகள் சபை செய்யப் போவதென்ன?

வளர்க்க வேண்டியதை வளர்ப்பீர்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

டன்லப்பின புகழும், அவன் கண்டுபிடித்த டயரின் புகழும் 1899க்குள் உலகெங்கும் பரவத் தொடங்கிற்று. கூட்டாளி ஒருவரைச் சேர்த்துக்கொண்டு கம்பெனியொன்று துவக்கினுன்— ரப்பர் டயர் உற்பத்தி செய்ய! மதிப்பும் தேவையும் அதிகரித்தது. கம்பெனியைப் பெரிதாக்கினுன். அந்தக் கம்பெனி வளர்ந்து, இன்று உலகில் டயர் உற்பத்தி செய்யும் பெரிய கம்பெனிகளுள் ஒன்ருக, மிகப் பழமையானதாக, சிறந்ததாகத் திகழ்கின்றது, இங்கிலாந்தில்!

வதைக் கணக்கெடுத்துப் பார்த்தாலும், மிகமிகக் குறைந்த அளவில் சுமார் 30 லட்சம் ராத்தலுக்குக்கூடக் குறைவாகவே இருக்கிறது.

இதற்குக் காரணம் என்னவென்று நிபுணர்களைக் கேட்டால் அவர்களிடமிருந்து. "ரப்பர் விளைய அதிக மழையும், அதிக வெட்பமும் தேவை. அதோடு நல்ல, ரப்பருக்குத் தகுதியான மண்ணும்வேண்டும். மூன்றும் வாய்க்கப் பெற்றுள்ள இடத்தில் ரப்பர் அதிகம் விளைவதில்—விளைவிக்க முடிவதில் வியப்பென்ன?" என்ற பதில்தான் கிடைக்கும்!!

இதற்குப் பெயர் என்ன? எந்த நாட்டுச் சுரண்டல் என்று சொல்லப்படவேண்டும்??

ஒரே ஒரு ரப்பர் தொழிற்சாலை, திராவிடத்திற்குச் சொந்தமாகத் திருவாங்கூரிலே இருக்கிறது. 1935, லே திருவாங்கூர் சர்க்காரால் துவக்கப்பட்டது 1949ல் இதைச் சென்னை சர்க்கார் வாங்கிக் கொண்டார்கள் இத்தொழிற்சாலைக்கு மூலதனம் 5,45,000 ரூபாய்! சைக்கிள் டயர்கள், தரை விரிப்புகள், ரப்பர்க் குழாய்கள், பென்சில் ரப்பர்கள் கையுறைகள், பொம்மைகள் முதலியன இங்கே செய்யப்படுகிறது. இந்த மூன்ருண்டு காலத்தில் சர்க்காருக்கு இதில் கிடைத்த லாபம் மட்டும் 2 32,300 ரு.!

★ **திராவிடத்திலே உற்பத்தியாகும் மூன்றரை கோடி ராத்தல் ரப்பருக்குத் தேவையான தொழிற்சாலைகள், திராவிடத்திலே இல்லாதிருப்பதுதான் ஒரு மாபெரும் குறையாகும்.**

இந்த இடைக்காலத்தில் ரப்பரிலிருந்து புதுப்புதுப் பொருள்கள் செய்யப்பட்டன. ரப்பரைக் கொண்டு புதிது புதிதாக எத்தனை எத்தனையோ விதப்பொருள்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பென்சில் எழுத்தை அழிக்கும் ரப்பர், டயர் முதல் சுமார் 25,000 (25 ஆயிரம்) விதமான பொருள்கள் இன்று ரப்பரைக் கொண்டு செய்யப்படுகின்றன. இவ்வளவு உபயோகமாகும் வேறு ஒரு பொருள் உலகில் இருப்பது சந்தேகமே!

ரப்பரின்உபயோகம் அதிகரிக்க அதிகரிக்க, அதன் தேவை அதிகரிக்கவே-உற்பத்தியும் அதிகரிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மலேயா, இந்தோனேசியா, சிலோன்,இந்தியா முதலிய நாடுகளில் ரப்பர்ஏராளமாக விளைவிக்கப்படவேண்டி வந்தது. இதன் காரணம் மேற்கு, ஐரோப்பிய நாடுகள் ரப்பர் உற்பத்திக்கேற்ற வசதிகளைப் பெருமல் போனதும் ஒன்ருகும்.

இன்றைய தினம் ரப்பர் உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகிப்பது மலேயா. அங்கே ஆண்டு தோறும் 7 லட்சம் டன்கள் விளைகின்றது! ஆங்கிலத் தளபதி டெம்ப்ளர் அண்மையில் மலேயாவில் ஒரு பொதுக் கூட்டத்தில்,

"மலேயாவில் இருக்கும் ரயில்வேத் தொழிலாளரில் 90சதவீதம் பேர் தமிழர்கள்! அதுபோல் ரப்பர்த் தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளரில் பெரும்பாலோர் தமிழர்களே" என்ற உண்மையை வெளியிட்டார்! அதுமட்டுமல்ல தமிழர் மற்ற எல்லோரையும்விட எந்த வேலைசெய்வதிலும் திறமையும், வன்மையும் வாய்ந்தவர்கள் என்று கூறியிருக்கிருர்!

ரப்பர் உற்பத்தியில் மூன்ரும் இடம் வகிக்கும் இலங்கையிலும், ரப்பர் தோட்டங்களில்வேலைசெய்யும் தொழிலாளர்களில் பெருவாரியான தமிழர்களைக் காணுகிருேம்.

இந்த வகையில் தமிழரின்—திராவிடரின் பங்குமிகமிக உன்னதமானது—கூர்ந்து கவனிக்கத் தக்கது என்று கூற விரும்புகிருேம்!

திராவிடத்திலே உற்பத்தியாகும் ரப்பரின் மொத்த அளவு ஆண்டொன்றுக்கு சுமார் 3,40, 000,00 (3 கோடியே 40 லட்சம்) ராத்தல்கள்! இது அகில இந்திய உற்பத்தியில் சுமார் 95 சதவீதம் ஆகும்!

விந்தியத்துக்கு வடக்கே விளைகின்ற ரப்பரைப்பற்றி நமது கண்ணேட்டத்தைச் செலுத்தினுல், அங்கே ஏதோ ஓரிரண்டு இடங்களில் பெயரளவில் விளைந்து கொண்டிருப்பதைத்தான் காண்கிருேம். அப்படி அங்கே விளை

திராவிடத்திலே உற்பத்தியாகும் மூன்றரை கோடி ராத்தல் ரப்பருக்குத் தேவையானதொழிற்சாலைகள், திராவிடத்திலே இல்லாதிருப்பது தான் ஒரு மாபெரும் குறையாகும். 1935 வரை திராவிடத்தின் ரப்பர் அப்படியே ஏற்றுமதியாகியது. அங்கே டயராகவும், பொருள்களாகவும் மாற்றப்பட்டு அதே ரப்பர் திரும்ப வந்தது!

தொண்டைமான்

இதைக்கண்ட அந்தக்காலத்து "உண்மை இந்தியர்" சிலருக்கு வயிறு எரிந்தது! "நம்மிடம் 10 ரூபாய்க்கு வாங்கிச் சென்ற ரப்பரைப் பொருளாக மாற்றி, நம்மிடமே வெள்ளையன் 100 ரூபாய்க்கு விற்கிருனே! வெள்ளையன் சுரண்டுகிருன்! சுரண்டல்ஒழிக!" என்று அந்தத் தேசாபிமானிகள் முழக்கமிட்டார்கள்! "நமக்கு பெரியதோர் பொருளாதார நஷ்டம் இது" என்று விளக்கி விளக்கிச் சொன்னுர்கள்.

1935-ல் டன்லப் கம்பெனியார் கல்கத்தாவில் ஒரு ரப்பர் தொழிற்சாலையைத் திறந்தார்கள்! 1939-ல் பயர்ஸ்டோன் கம்பெனியார் பம்பாயிலே மற்ருெரு தொழிற்சாலையைத் திறந்தார்கள்! என்ன காரணத்தால், எந்தச் சூழ்நிலையால் பம்பாயிலும் கல்கத்தாவிலும் அந்தக்கம்பெனிகள் அமைக்கப்பட்டன என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை! எனினும் இந்தக் கம்பெனிகள் மிகப் பெரிய அளவிலே பெருக்கப்பட்டன. திராவிடத்தின் ரப்பர் முழுவதையும் இதே கம்பெனிகள் ஆண்டுதோறும் வாங்கிக்கொள்கின்றன. நமது ரப்பரையும், சிறி

மிகச் சிறிய கம்பெனி இது, என்ருலும் மிகப் பெரிய லாபம் கிடைத்திருக்கிறது. திராவிட ரப்பர் முழுதும் திராவிடத்திலேயே பொருள்களாக்கடபட்டால், குறைந்தது 60 கோடி ரூபாயாவது திராவிடம் மேலும் லாபமடையலாம்!

கடந்த காலத்தில்...

இந்திய ரப்பர் போர்டு என்ற ஒரு கழகத்தை, ரப்பர் உற்பத்தியாளர் பலர் கூடிப் பல காலமாக நடத்தி வருகிருர்கள். அரசாங்கத்திற்கும், இக்கழகத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை, இதன் நிகழ்காலத் தலைவர் A. V. தாமஸ் என்பவர்—டில்லி பாராளுமன்ற உறுப்பினர்.

இவருக்கும், தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களுக்கும் டில்லி பாராளுமன்றத்தில் டிசம்பர் 21ல் ஒரு கடுமையான ஆனுல் வேடிக்கையான விவாதம் நடந்தது.

A. V. ராமதாஸ்:

தென்னுட்டில் ரப்பர் உற்பத்தி அதிகமாகி யிருக்கிறது. டன்லப், பயர்ஸ்டோன் கம்பெனிகள் முழுவதையும் வாங்கவில்லை. வீணுக உற்பத்தியாளரிடம் குவிந்து கிடக்கும்ரப்பரை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் அனுமதிக்கவேண்டும்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி:

ரப்பர் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்பது, சில சுயநலக்காரரின் ஆரவாரம். ஏனெனில் ரப்பரை ஏற்றுமதி செய்வதால், இவர்களுக்கு ஒவ்வொரு 100 ராத்தால் ரப்பருக்கும்சுமார் 20 ரூபாய் அதிகமாகக் கிடைக்கும்; உள்நாட்டில் விற்ருல் அது குறையும். ஆனுல் நம் நாட்டில் விளையும் ரப்பர் நமக்கே போதவில்லை. எனவே ஏற்றுமதி அனுமதிக்கப்படமாட்டாது டன்லப் கம்பெனியார்கூட சமீபத்தில் 1360 டன் இறக்குமதி செய்தனர். காரணம் உள்நாட்டு ரப்பரைவிட வெளிநாட்டு ரப்பர் விலை குறைவு!—

★ **திராவிடத்தின் செல்வம் ரப்பர். இந்தச் செல்வம் வளரவேண்டுமானுல், இது பற்றிய பல விவரங்களை அறிந்து ஆவன செய்ய வேண்டும் 'நாம்'!**

தளவு வெளி ரப்பர்களையும் கொண்டு, இந்தியாவுக்குத் தேவையான டயர்கள் முழுவதையும் இந்த இரு முக்கிய கம்பெனிகளுமே ஆக்கி அளிக்கின்றன!

1935 வரை திராவிட ரப்பர் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அங்கே பொருளாக்கப்பட்டு திரும்பியது. அதற்குப் பெயர் "இங்கிலாந்தின் சுரண்டல்" என்று கூருத தேசபக்தர்களே இல்லை! 1935க்குப் பின் 1953லும் கூட திராவிட ரப்பர் வடக்கே பம்பாய்க்கும், கல்கத்தாவுக்கும் செல்கிறது! அங்கே பொருளாக்கப்பட்டு திரும்ப வருகிறது இங்கே, முன் போலவே!

இப்படித் தொழில் மந்திரி பேசியிருக்கிருர்!

திராவிடத்தின் செல்வம் ரப்பர். இந்தச் செல்வம் வளரவேண்டுமானுல், இதுபற்றிய பல விவரங்களை அறிந்து ஆவன செய்ய வேண்டும் 'நாம்'!

பலநூறு ரப்பர்த் தோட்டங்களைத் திறக்கவேண்டும்; வணிக மன்னர்கள், ரப்பர்த் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். அமைத்தால் ஆண்டுக்கு 300 கோடி ரூபாயை அள்ளித்தா திராவிடத்தின் ரப்பர்த் தோட்டங்கள், நமது 'பால்வழியும்' செல்வங்கள் காத்துக்கிடக்கின்றன! அதை ஏளாடபோம்

ஆளவந்தார்கண்ணேட்டம்எங்கே?

செத்துப் போவோம்!

கோடையிடிக் குரல்முழக்கம் கொடுத்தோம்; ரத்தக்
கொந்தளிப்பை ஏற்படுத்தும் எழுத்து தந்தோம்
பாடையிலே காங்கிரசை ஏற்று தற்குப்
பலநியாயம் இதுவரைக்கும் சொன்னேம்; சுத்த
சோடைகளும் சொத்தைகளும் மேலும் மேலும்
சொறிநாய்போல் குரைக்கின்ருர்; திட்டு கின்ருர்!
வாடைதரும் வடநாட்டை நடுங்க வைப்போம்!
வரும்எதிர்ப்பைச் சமாளிப்போம்; வாழ்வு காண்போம்!

எண்ணெயிலே வெடிக்கின்ற கடுகி னுலோ
ஏற்பட்டு விடும்நம்மேல் ரத்தக் காயம்?
மண்டைக்குள் களிமண்ணை வைத்தி ருக்கும்
மடையர்களால் ஏற்படுமா நமக்குத் தோல்வி?
பண்டாரப் பரதேசிப் பொறுக்கிக் கும்பல்
பஜனைமடப் பாரதம்ஏன் நமக்கு? நல்ல
கொண்டாட்ட வாழ்வுபெற மகிழ்ச்சி நெஞ்சில்
கூத்தாடத் திராவிடம்தான் இன்று தேவை!

என்பிணம்தான் இப்பொழுது தேவை என்ருல்
இதோநொடியில் சாகின்றேன்; கவலை யில்லை!
உன்பிணமும் தேவையென அண்ணு கேட்டால்
உயிர்கொடுக்கத் தயங்காதே! திராவி டத்தைப்
பின்வாங்கிக் கொள்வோம்நாம் எனநி னைத்துப்
பின்வாங்கிக் கொள்வதிலே நேர்மை யில்லை!
முன்னெழுந்து வா! பிணத்தால் நாடு மீட்க
முடியுமென்ருல் உயிர்கொடுப்போம்; செத்துப் போவோம்!

வடநாட்டான் உடல்ரத்தம் இந்த நாட்டில்
வாய்க்காலாய் ஓடட்டும்! ஓடி னுல்தான்
உடனடியாய்க் கிடைக்கும்நம் நாடு என்ருல்
ஒருபயலை விடுவோமா? பாய்ந்து சென்று
குடலுருவி அதைமாலை யாக்கிப் போட்டுக்
குதிகுதித்து நடப்போம்நாம்! இரும்பைப் போன்று
திடமனது படைத்தவனே! நமக்கிப் போதே
தெரிந்தாக வேண்டுமடா இரண்டில் ஒன்று!

எதற்காகத் துடிதுடிப்பு — புரட்சி வாடை
ஏன்இந்தப் புதுமுழக்கம் என்கின்ருயா?
சதமல்ல நம்வாழ்வு! இந்தப் பேச்சு
சந்யாசி உபதேசம் அல்ல; நாளும்
எதைச்செய்து வருகின்ருேம்? பேசு கின்ருேம்,
எழுதுகின்ருேம்; பின்தூங்கி விழிக்கின் ருேம்நாம்
இதுமட்டுமா போதும் நமது நாட்டில்
எல்லோரும் கழகத்தை ஆத ரிக்க?

கதையளந்து கொண்டிருக்க நேர மில்லை
கட்டுரையால் எரிமலையை வெடிக்க வைப்போம்!
பொதுமேடைப் பேச்செல்லாம் புயலாய் மாறிப்
பொங்கட்டும்! குமுறட்டும்! நமது நாளில்
உதைபட்டோம்! அடிபட்டோம்! போராட் டத்தால்
உள்ளுக்குப் போய்வந்தோம்! என்பதோடு
கதைமுடியக் கூடாது! திராவி டத்தைக்
கண்டிடுவோம்; இல்லையெனில் செத்துப் போவோம்!

புலவர் பொன்னிவளவன்

புரட்சி

நியூடன், கலிலியோ போன்றவர்கள் விஞ்ஞான அடிப்படையில் செய்த அறிவிப் புரட்சியால் விழிப்படைந்த மக்கள் கத்தோலிக்க மார்க்கம் வெறுத் தொதுக்கத் தக்கது என்ற திசை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்காள். இது சிலுவைக்கும் செங்கோலுக்கும் விட்ட சவால் என மன்னனும் மதகுருவும் கருதியதில் வியப்பில்லை.

பிரெஞ்சு நாடு முழுவதையும் கத்தோலிக்க மார்க்க மயமாக்கவேண்டுமென்று கருதிய லூயி மன்னன் கத்தோலிக்கர்களல்லாத எவனும் கிருத்தவனே அல்ல என்று காகிதத்தில் எழுதிக் காட்டினுன்.

எனினும் பிரான்சு மன்னராட்சியின் கடுமையான விமர்சனத்திலிருந்து தப்ப முடியவில்லை.

சபாஸ்டியன்! — டிவாபன் திறமை வாய்ந்த பொறியியல் நிபுணன். பதினுன்காவது லூயி மன்னனுக்கு போரில் பெருந் தியாகம் செய்தவன். ஆனுல் இவன் மன்னனின் அபிமானத்தைப் பெற முடியவில்லை. ஏனெனில் இவன் புராடெஸ்டெண்டுகளின் அபிமானியாயிருந்தான்..! ஆகவே 1707ல் மன்னனுல் பிறப்பிக்கப்பட்ட ஒரு கடுமையான உத்திரவின் மூலம் மனமுடைந்து மாண்டுபோனுன்.

அவனேடு பிரான்சை சுற்றியடித்துக் கொண்டிருந்த பயங்கரப் புயல் ஓய்ந்துவிடவில்லை. வாபன் மரணம் பல தீரர்களேயுண்டாக்கித் தந்துவிட்டுச் சென்றது. அந்தத் தீக்குண்டத்தில் தோன்றிய மேதை **பியரிபெயிலி** என்பவன். இவன், அயர்ந்து விடாமல், பிரான்ஸிலிருந்தும் தன் உயிருக்கு ஆபத்துத் தேடிக் கொள்ளாமல் ரோட்டர் டாமில் புகலிடம் தேடிக்கொண்டு அங்கிருந்து கத்தோலிக்க மார்க்கத்தைக் கடுமையாகத்தாக்கினுன். நம்பிக்கையில்லாத கொள்கைகளின் மூலம் மக்களே மதத்துறையில் ஒன்று படுத்தலாம் என்று சொல்லிவந்த மதத் தலைவர்களின் முக மூடியைக் கிழித்து ஒரு பெரிய அகராதி ஒன்றை 1697ல் வெளியிட்டான் அவன் பெற்ற செல்வாக்கு அளவு கடந்திருந்தது. அவன் வெளியிட்ட அந்த அகராதியை பதினெட்டாம் நூற்ருண்டின் விவிலியம் என்றழைத்தனர்.

தங்கச்சி மடம்

தென்னரசு

தன்னுடைய கதையை ஆரம்பத்தில் துடுக்கோடும் எடுப்போடும் சொல்லிக் கொண்டேவந்த துருவனுக்கு இறுதிக் கட்டத்தில் நாடி தளர்ந்து விட்டது. குரலில் வலுவில்லை. தலையைக்கவிழ்த்துக் கொண்டே கதையைக் கேட்டுக் கொண்டு வந்த அனுராதை நிமிர்ந்து பார்த்தாள. துருவனின் கண்கள் பனிப் பூக்களைப் போல் நனைந்திருந்தன. அந்த உருக்கமான சூழ் நிலையில் சிக்கித் தவிக்காமல் தப்பித்து விட மார்க்க மில்லாமல் தத்தளித்தாள் அனுராதை. அவள் களங்கமில்லாதவள்; வினயத்தோடு சிந்திக்கும் திறன் பெற்றிராதவள். அதனுல் அவளும் அழுது விட்டாள். நல்வர்கள் இரண்டுபேர் சேர்ந்து அழுது விட்டால் மனக்குமுப்பங்கள் அழிந்து விடுகின்றன; சந்தேகங்கள் மறைந்து விடுகின்றன. உறவு சுரந்து புதிய நண்பர்களாகி விடுகிருர்கள். ஆனுல் இங்கே அப்படி நடைபெறவில்லை. துருவனின் துன்பக் கதை அனுராதையை விம்ம வைத்தது. கண்ணீரைக் கொட்ட வைத்தது. ஆனுல் அவளுடைய கண்ணீரை — தேம்பலை துருவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவளுக்கு அவன் ஆறுதல் கூறவில்லை. அவள் அதை எதிர்பார்த்திருந்தாள். எதிர்பார்ப்பதும் தவறில்லை, பெண்கள் காரணமில்லாமல் கண்ணீரை வடிக்க மாட்டார்கள் தீய பெண்கள் தப்பிப்பதற்காக 'வடிப்பார்கள்'. சாந்தமான பெண்கள் மன்னிப்பை எதிர்பார்த்து வடிப்பார்கள். நெறியுள்ள பெண்கள் நீதிக்காக வடிப்பார்கள், எந்தப் பெண்ணின் கண்ணீருக்கும் பொருளில்லாமல் இருக்காது. அனுராதை வடித்த கண்ணீர் அவளுடைய தூய்மைக்கு வாதாடியது. அதைத் துருவன் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை, கல்லாக இருந்தான். அவன் கதையை சொல்லி விட்டு மீண்டும் வாயைத் திறக்க நெடுநேரம் பிடித்தது.

"நன்ருக யோசனைசெய்து சொல். இவ்வளவு துயரத்திற்கிடையே நான் ஏன் சாகாமல் இருக்க வேண்டும்; அது மட்டுமல்ல, யாரென்று தெரியாத உனக்காக நான் போராட வேண்டிய அவசியமென்ன?"

"நான் உன்னை நம்புகிறேன். ஆனுல் நீ என்னை நம்பவில்லை. நம்பிக்கை, தீயவர்களையும் நல்லவர்களாக்கும் என்பார்கள்" என்று துக்கத்தோடு சொன்னுள் அனுராதை.

"உண்மைதான்! ஆனுல் பருவப் பெண்கள் பாதி ராத்திரி வேளையில் உலா போய் வருவதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள். உன் தந்தை இந்தக் காட்சியைப் பார்த்திருந்தால் உன் தலை உருண்டிருக்கும். உனக்கு ஒரு அண்ணன் இருந்திருந்தால் நீ யாரைச் சந்தித்து வருகிருயோ அவனைப் பிணமாக்கி மகிழ்ந்திருப்பான். நான் என்ன செய்ய முடியும்? நீ யாரோ நான் யாரோ? மேலும் நான் நொண்டி. உரிமை எனக்கு இல்லை என்றுதானே நீ வெளியேறிப் போயிருக்கிருய்?" என்று உரத்திப் பேசினுன் துருவன்:

"துருவா, நான் உன்னிடம் எதை மறைத்திருக்கிறேன்; ஒன்று சொல்லு! ரயில் நிலையத்தில் என்னையும் உன்னையும் இணைத்துப் பேசும் கேலிக் கூத்திகளிலிருந்து உருட்டி மிரட்டி என்னைக் கெடுக்க நினைக்கும் ஊதாரிகளின் காட்டு தர்பார் வரை — ஒன்று விடாமல் கூறியிருக்கிறேன். என்னிடம் என்ன ரகசியம் இருக்கிறது; அழகான பெண், இளமையான கன்னிப் பெண் — இருதயத்தில் ரகசியத்தை வைத்துக் கொண்டு ஏன் இந்த வனந்திரத்தில் தங்கியிருக்க வேண்டும்!" என்று விறுவிறுப் போடு பேசினுள் அனுராதை,

"ராதை, நான் நேரடியாகக் கேட்கிறேன். நீ ஏன் சுற்றி வளைத்துப் பேசுகிருய்?"

"துருவா, நீ என் மீது நம்பிக்கை வைத்தால் நான் உத்தமியாக வாழ்வேன்; இல்லா விட்டால் எனது இளமையும் எதிர்காலமும் சருகாகி விடும்" என்று கூறி இடுப்பில் சொருகி வைத்திருந்த ஒரு டைரியை துருவனின் முன் எறிந்தாள்.

"இது என்ன? துருவன் கேட்டான்.

"அதில் தான் எனது எதிர்காலமிருக்கிறது. அதைப் பெறத்தான் நான் இரவு எழுந்துபோனேன்" என்று அடக்கமாகப்பதில் சொன்னுள் அனுராதை. துருவன் அந்த டைரியைப் புரட்டிப் பார்த்தான். சில பகுதிகளைப் படித்துப் பார்த்தான். அனுராதையின் தந்தை நரசிம்மன் திருவனந்தபுரத்திற்கு யானை வாங்கப் போன கதை, அவர் தஞ்சை மாவட்டத்தில் சோற்றுக்கில்லாமல் அலைந்த போது அவருக்கு உதவியளித்த ஒரு பெரிய தனக் காரரைப்பற்றிய குறிப்பு முதலியன அந்த டைரியில் அடங்கியிருந்தன. துருவன் டைரியைப் பார்த்து முடித்துவிட்டு அனுராதையைப் பார்த்தான்.

"இதில் என்ன இருக்கிறது! இதைப்பெற நீ ஏன் அவரைச் சந்திக்க வேண்டும்?" என்று குறுக்குக் கேள்வியைக் கேட்டான் துருவன்.

அனுராதை டைரியைக் கையில் வாங்கி ஒருமுகவரியை எடுத்துக் காண்பித்தாள் துருவன் அதைப் படித்தான். "புதுக்கோட்டை சமஸ்தானம் - தெற்கு நான்காம் வீதியிலுள்ள புலவர் செந்தாமரைக் கண்ணர் வசம் எனது மகளுடைய திருமணத்திற்காக இரண்டாயிரம் ரூபாய்களை ஒப்படைத்திருக்கிறேன். எனக்குப் பிற்காலத்தில் அந்தத் தொகையை என் மகளிடம் கொடுத்துவிட யாருக்கும் தடை விதிக்க அதிகாரமில்லை" என்று அந்த டைரியில் குறிப்பிடப்பட்டிருந்தது. துருவன் முழுதையும் படித்து விட்டு அனுராதையைப் பார்த்தான். அவள் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அமைதி துருவனை அறைந்தது போலிருந்தது. நகர்ந்துபோய் அவள் முகத்தைத் திருப்பித் கன்னத்தில் முத்தமிட்டு மன்னிப்புக் கேட்க வேண்டும் போல் தோன்றியது துருவனுக்கு ஆனுல் அவள் வயது வந்தவள். தொட்டால் தீட்டு - அதுவும் அவளுக்குத்தான் தீட்டு என்கிறது தமிழ் மரபு

"அனு ராதா!"

"என்ன துருவா!"

"என்னைப்பார்!"

"பரவாயில்லை! நீ என்னைத் தவருகப் புரிந்துகொள்ளாமல் இருந்தால் போதும். எந்தக் கன்னிப் பெண்ணுக்கும் இந்த உலகத்தில் யாரேனும் தெரிந்தவர்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் அவள் அவர்களுக்காகவாவது நெறியுடன் வாழ நினைப்பாள். எல்லோருமே அறிமுகமாதவர்களாகவும் வேற்றூர்களாகவும் இருந்தால் அவர்கள் யாரும் அவளைக் கவனிக்கமாட்டார்கள்-பொருட்படுத்த மாட்டார்கள். அவளுக்கும் உலகத்தைப்பற்றி, ஒழுக்கத்தைப் பற்றி அக்கறையில்லாமல் போய்விடும்: அதனுல்தான் நான் உன்னிடம் மண்டியிடுகிறேன். உன்னிடமாவது நல்ல பெயர் வாங்கவேண்டும் என்று துடிக்கிறேன். நல்ல பெண் என்று பெயர் வாங்க ஆசைப்படாத பெண்கள் இருக்கமாட்டார்கள். என்னைப் புகழ யார் இருக்கிருர்கள் - உன்னைத் தவிர," என்று உருக்கமாகப் பேசினுள் அனுராதா.

துருவன் சிரித்தான். அனுராதையின் மேல் அவனுக்குப் பழைய அன்பு வந்துவிட்டது என்பதை அந்தச் சிரிப்பு உணர்த்தியது. பதிலுக்கு அவளும் சிரித்தாள். அவள் சிரித்தது வெற்றிச் சிரிப்பு, தரையில் துள்ளிய மீன் குஞ்சு, திடீரென்று மழை பெய்து மீண்டும் குளத்தில் சேர்ந்து விட்டது போன்ற இன்ப உணர்ச்சி அவளை ஒரே உலுக்காக உலுக்கிவிட்டது.

பொழுது புலர்ந்துவிட்டது. இராமேசுவரத்திலிருந்து மானு மதுரைக்குச் செல்லும் ரயில வரும் வேளை வந்துகொண்டிருந்தது. துருவனும் அனுராதையும் ரயில் நிலையத்திற்குக் கிளம்பினுர்கள். அதில் அவர்களுக்கு ஒரு வகைப் பூரிப்பு. இருவரையும் கொஞ்ச நாட்களாகத் தனித்தனியாகப் பார்த்தவர்களுக்கும், அந்த தனிமை நீடிக்காதா என்று ஏங்கியவர்களுக்கும் அன்று அவர்கள் இருவரும் இணைந்து சென்ற காட்சி பேரிடியாக இருந்திருக்கக்கூடும். மூக்கில் விரல்வைத்த பத்திரிகைப் பையன் - முறுக்கு மசால்வடை வியாபாரிகள்-பொட்டுக்கடலை வண்டிக்காரன், போர்ட்டர் அத்தனை பேருக்கும் அன்று ஒரு பெரிய தகவல் கிடைத்ததைப்போல் பேசிக்கொண்டார்கள். வாடிக்கையான சாப்பாட்டுக் கடைக்காரன் கிண்டல்கூடச் செய்யத் தொடங்கி விட்டான். துருவன் பொறுமைசாலி. ஆனுல் அவன் பொறுமை விலை போவதில்லை. அவன் நொண்டி, எதுவும் செய்ய இயலாதவன் என்பது அந்த ரயில் நிலையத்தின் முடிவு.

ஒரு வாரத்திற்குப் பிறகு துருவன் ராதையிடம் அன்று காண்பித்த டைரியைப்பற்றி விசாரித்தான். புதுக்கோட்டைக்குப் போய் அந்தப் புலவரைக் கண்டு இரண்டாயிரம் ரூபாயை வாங்கி வந்துவிட அவன் நினைத்தான். அவனே நொண்டி; அவளோ கன்னிப் பெண்; தனியாகப் போக முடியாது, இருவரும் சேர்ந்து போனுல் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்குமென்று எண்ணி அந்தப் புலவர் தன்னிடம் பணமே இல்லையென்று சொல்லவும் கூடும் - என்றெல்லாம் நினைத்துப் பார்த்த துருவன் மரத்தில் சாய்ந்து கொண்டு நின்ற அனுராதைக்கு அருகில் போய் புன்முறுவல் பூத்தபடி நின்ருன்.

"அனுராதா!"

"என்ன துருவா!"

"தியாகராசனைப பார்க்கப் போகவேண்டாமா?" என்ருன்.

"அவர் எப்படிப் போனுல் நமக்கென்ன! நமக்கும் அவருக்கும் என்ன உறவு இருக்கிறது?" என்று துண்டித்தாற்போல் பேசினுள் அனுராதை.

"என்ன இருந்தாலும் நமது பணம் இருக்குமிடத்தைக் காண்பித்தவரல்லவா!" என்ருன் துருவன்.

அவள் விடவில்லை "பணம் இருக்குமிடத்தைக் காண்பிப்பதால் மட்டும் ஒரு பருவப் பெண் பாதிராத்திரி வேளையில் எழுந்துபோவது தவறில்லாமல் போய்விடுமா?" என்று ஒரு போடு போட்டாள்.

துருவன் பதில் சொல்லத் திணறினுன். சிரித்துச் சிரித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டான். இருவருமாகச் சற்று நேரத்திற்குப் பிறகு தியாகராசன் அறைக்குப் போனுர்கள். (தொடரும்)

அரசியலாரின் அநீதிக்கு தி.மு.க. கிராமாதிகாரி பலி!

மாநில ஆட்சியாளரின் மமதையான போக்கு, பல துறைகளிலே இன்று தலை விரித்தாடுவதைநாடறியும். எப்படியாகிலும் எதிர்க்கட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை அடக்கி ஒடுக்கவேண்டுமென்ற ஒரே காரணத்தால் ஆணவத்தை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றனர். அந்த முறையிலே தான் திருப்பூரை அடுத்த தொங்குட்டிபாளைய கிராம அதிகாரியான மு. முத்துரத்தினம் அவர்களை, அந்தப் புதிய பதவியிலிருந்து விலக்கி வைத்திருக்கிறது. அதற்கு அவர்கள் காட்டியுள்ள முழுக்காரணம் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்பதே. இது நேர்மையான குற்றச் சாட்டுதானு?

கிராமாதிகாரி ஓர் அரசியல் அலுவலகத்தின் முழு நேர ஊழியர் அல்ல. அவர் ஒரு கட்சியில் இருப்பதை தடுத்து நிறுத்தும் உரிமை அரசியலாருக்குச் சிறுதுளியும் கிடையாது. ஆனுல் வேண்டுமென்றே இன்று விபரீதத்தை விலை கொடுத்து வாங்கி இருக்கின்றது.

இன்றைய தினம் எத்தனையோ கிராமதிகாரிகள் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களாக இருக்கின்றனர்; ஆதரவாளர்களாக இருந்துவருகின்றனர். அவர்களுக்கெல்லாம் இல்லாத விலக்கு தோழர் மு. முத்துரத்தினத்துக்கு மட்டும் தந்தது ஏன்?

'எந்தக் கட்சியிலும் கிராமாதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது; அரசியலிலே அவர்கள் ஈடுபடக்கூடாது என்று சொல்லுகின்ற சொரணையற்றவர்கள் தம் கட்சியிலே அங்கத்தினர்களாகவுள்ள கிராமாதிகாரிகளுக்கு மட்டும் சலுகை தந்து வருவது ஏன்? தம் கட்சியைச் சார்ந்தவரென்ற நோக்கமா? இதற்கு பதில் தரவேண்டியது ஆட்சியினர் பொறுப்பாகும்.

இனமுழக்கம் இதழிலே நவம்பர் முதல் நாளிலிருந்து....

நமதியக்க நாவலாசிரியர் கே. ஜி. இராதாமணாளன் எழுதும்

★ மறவர் குலத்து மணிப்புரு ★

சரித்திரத் தொடரோவியம்

அரசியல் திட்டமா? அடிமையாக்கும் சட்டமா?

"1956ம் ஆண்டிற்குப் பிறகும் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற காலம்வரை இருக்கவேண்டும்" என்று இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்பதை அறிஞர் அண்ணு அவர்கள் இந்தி எதிர்ப்புப் போர் வெற்றி விழா கூட்டத்திலே குறிப்பிட்டார்கள். சம்பத் எழுதிய கடிதத்திற்கு நான்கு மணி நேரத்தில் நமக்கு கிடைத்த பதில் ஜனநாயகத்திற்கு ஓரளவு மதிப்பு தருகிருர் பண்டித நேரு என்

கோள். மாநிலங்கள் பிரிந்து போகின்ற உரிமையை அரசியல் திட்டம் அந்தந்த நாட்டு மக்களுக்குஅளிக்கவேண்டும். மற்ற அரசியல் கட்சிகளைவிட இந்திய அரசியல் திட்டத்தை திராவிட முன்னேற்றக்கழகம் கடுமையாகத் தாக்கி வருவதற்கு காரணம் அரசியல் திட்டத்தில் உள்ள ஓட்டைகளும் கீறல்களுமேயாம்.

முதலாவதாக இந்திய அரசியல் திட்டத்தை தயாரிக்க ஏற்படுத்தப்பட்ட குழுவில் உள்ள அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட

யெல்லாம் வெள்ளைக்கார தாசர்கள் என்றழைப்பதில் பெருமையும் பூரிப்பும் பேரானந்தமும் பெருமகிழ்ச்சியும் கொண்ட கோவைச் சீமான் சுப்ரமண்யம் அவர்களைத்

நெக்ரூமா பெஸ்கி
M.A., (அரசியல்)
M. A., (பொருளியல்)

தாங்கியுள்ள காங்கிரஸ் கட்சியின் அரசியல்திட்டம் 1935ம் ஆண்டு பிரசித்தி பெற்ற வெள்ளைக்கார வழக்கறிஞர்

பாரராள வந்தோரே, சீராகத் திருத்துவீர்!

பதை காட்டுகிறது என்று அண்ணு மேலும் குறிப்பிட்டார்கள். அன்றைய தினம் நடைபெற்ற வெற்றி விழாவில் பேசிய கழகத் தோழர்கள் இந்திய அரசியல் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவை திருத்தப்படவேண்டும் என்று வலியுறுத்திஞர்கள். இந்திய அரசியல் திட்டத்திலே காணப்படுகின்ற குறைபாடுகளை, படித்த மேதைகளான சுப்ரமண்யம் போன்ற மந்திரிகள் உணர்ந்திருந்தும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று முன்னேற்ற கழகம் சொல்லுகின்ற உண்மைக்கு ஆதரவாக குரலெழுப்பினுல் எங்கே டில்லிஎஜமானின்எடுத்தாளும் கைப்பிள்ளையாக, அதாவது சென்னை மந்திரியாக இருக்க வேண்டிய சூழ்நிலை போய் முகவரி தெரியாமல் முகாரி பாடவேண்டிய நிலைவந்து விடுமோ என்ற அச்சத்தால் ஆங்கில ஏகாதிபத்தியமான வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் குட்டுக்கு குனிந்து கொடுக்கிருர்.

வில்லை. இன்றைய தினம் உள்ள அரசியல் திட்டம் மக்கள் பிரதிநிதிகளால் தயாரிக்கப்படவில்லை. அரசியல் திட்டத்தை உருவாக்கிய அல்லாடி கிருஷ்ணசாமி [அய்யர்] டாக்டர் அம்பேத்கார்போன்றவர்கள் இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அல்லர். இந்திய அரசியல் திட்டம் இந்திய மக்களுக்காக தயாரிக்கப்பட்டது என்று கூறுவது மக்களை ஏமாற்றுவதேயாகும். எனவேதான் 1950ம் ஆண்டு ஜனவரிமாதம் 26ம் நாள் இந்திய அரசியல் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப் பட்டபொழுது தோழர் ஜயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் "இந்திய

கள் தயாரித்த சட்டங்களிலிருந்து 'காப்பி'யடிக்கப்பட்டவை. எனவேதான் இந்திய அரசியல் திட்டம் பிரிட்டிஷ் ஆட்சியின் மறுபதிப்பு" என்று டாக்டர் ஜென்னிங்ஸ் என்பவர் குறிப்பிட்டார். நம்முடைய நாட்டு மக்களின் சூழ்நிலைக்கேற்ப எழுதப்படவில்லை. உதாரணமாக இந்தியா ஒரு நாடல்ல, அது ஒரு கண்டம் என்று வரலாற்றுப் பேராசிரியர் வின்சன்ட் ஸ்மித்திலிருந்து சாஸ்திரி வரை கூறியுள்ளார்கள். பலநாடுகள் சேர்ந்த ஒருகூட்டமைப்புத்தான் இந்தியா. இந்தியா வெள்ளையன் வருவதற்கு முன்பு ஒற்றுமையாக, இந்தியா என்று ஒரு நாடாக

nalities dissolved by the very fact of will which should be the basis of its Life" என்று அழகுபட கூறிப்போந்தான்.

எனவே பிரிந்துபோக விரும்புபவர்கள்உண்டு.இந்தியாவில் என்ற உண்மையை உணர்ந்திருந்த அரசியல் திட்டத்தின் கர்த்தாக்கள் உண்மைக்கு மாருக மாநிலங்கள் மத்திய கூட்டமைப்பு ஆட்சியிலிருந்து பிரிந்து போகும் உரிமையை இந்திய அரசியல் திட்டத்தில் தரவில்லை. உண்மைக்கு விரோதமான—திராவிடத்திற்கு எதிராக அரசியல்திட்டம் அமைக்கப்பட்டுவிட்டது. எனவே தான் இந்திய அரசியல் திட்டம் மக்களுக்காக எழுதப்பட்டது அல்ல என்பதை முன்னேற்றக் கழகம் தெளிவுபட கூறி வருகின்றது.

ஒரு நாட்டின் அரசியல் திட்டம் அந்த நாட்டில் உள்ள படிக்காத பாமரனும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய தன்மை படைத்ததாக எழுதப்படவேண்டும். ஆனுல் இந்திய அரசியல் திட்டம் தெளிவாக எழுதப்படவில்லை. குழப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன என்று அண்ணுவல்ல சேதிமகாஜன் என்ற அரசியல் பேராசிரியர்கள் குறிப்பிடுகிருர்கள். இந்திய அரசியல் திட்டத்தை பற்றி விளக்கத்தை கேட்பதற்கு வழக்கறிஞர்களை நாடிஓட வேண்டியிருக்கின்றது. வழக்கறிஞர்களுக்கு வருவாய் வரக்

தும் உரிமையை மத்திய அரசாங்கம் வைத்திருக்கிறது. அவசர காலங்களில் ஜனுதிபதிக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாநிலங்களின் உரிமையைச் சுதந்திரத்தை பாதிப்பதாக உள்ளன. ஏதாவது ஒரு மாநிலத்தில் ஆட்சி சரிவர நடைபெறவில்லை. குழப்பமும் அமைதியின்மையும் இருக்கின்றன என்று கண்டால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மந்திரிசபையைக் கலைத்து அந்த மாநிலத்தை தன் ஆளுகையின் கீழ் கொண்டுவர இந்திய ஜனுதிபதிக்கு இந்திய அரசியல் திட்டம் 356 பிரிவின்படியான உரிமையை வைத்துத் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அமைச்சரவையை கலைத்து காங்கிரஸ் அமைச்சரவையை ஏற்படுத்த ஜனுதிபதியால் முடிந்தது. இதன் மூலம் மாநிலத்தின் சுதந்திர உரிமை பறிக்கப்படுகிறது. அமைதியின்மை என்ற காரணத்தைகூறி மாநிலத்தின் உரிமையை பறிக்க முடிகிறது. அவசர காலங்களில் 19வது பிரிவில் கூறப்பட்டுள்ள தனி மனிதனின்பிறப்புரிமைகளைக்கூட பறித்துக்கொள்ளமத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே மக்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகள் ஏட்டளவில் தானேதவிற நடைமுறையில் தனிமனிதனின் சுதந்திர உரிமையைபறிக்கஅடக்கஅடக்கு முறையை அள்ளிவிட ஆட்சியாளருக்கு அதிக சந்தர்ப்பம் தரப்பட்டிருக்கின்றது. மாநிலங்கள் பிரிந்து போகின்ற உரிமையைத் தர, மத்திய அரசாங்கத்தின் யதேச்சதிகாரப் போக்கிற்கும் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் வரையறையில்லா அதிகாரங்களுக்குஒரு முற்றுப்புள்ளி வைக்க, மொழிப் பிரச்னையில் வடவர் வைத்த சூதுவெடியை தகர்த்து தமிழர் நல்வாழ்விற்கு வழிவகுக்க, மாநிலங்கள் தலைநிமிர்ந்து மத்ய அரசாங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 70 கோடி ருபாயை கொட்டியழுது, அதன்பிறகு பிச்சைக்காசு போல் ஒரு சில கோடிகளை பிச்சை ஏந்தும் நிலையைத் தடுக்க திராவிட விடுதலைக்கு முன்னேடியாக, அரசியல் திட்டம் மாற்றப்பட வேண்டும்.

ஓரவஞ்சனைக்குரிய திட்டமே இது!

சர்வேசுவரனின் சாகாவரம் பெற்று சிரஞ்சீவியாக நித்ய கல்யாணியாகக் காட்சியளிக்கு அரசியல் சட்டத்தையா திருத்துவது என்று அபயக் குரல் கொடுக்கிறது. காங்கிரஸ் சர்க்கார் குறைபாடுகள் கண்டவிடத்து அதைக் களைவதுதான் அரசியல் நாகரீகம் அரசியல் நெறியாகும். மொழிப் பிரச்னையில் இந்தி வெறியைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்திய அரசியல் திட்டம், இந்தி பேசாத பெரும்பாலான மக்களின் வாழ்வை சூறையாட வடவர் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கூட்டுறவுடன் தீட்டிய கழுத்தறுப்புத் திட்டம். மொழிப் பிரச்னையில் மட்டுமல்லாது பல்வேறு கோணங்களிலிருந்து நாம் ஆராய்ந்து பார்க்கின்ற காலை அரசியல் திட்டத்தில் உள்ள ஒட்டைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

இன்றையதினம் இருந்து வருகின்ற இந்திய அரசியல் திட்டத்தின்மீது நம்பிக்கை இல்லை என்று நாம் பல ஆண்டுகளாக கூறி வந்திருக்கிருேம். அரசியல் திட்டம் மாற்றி யமைக்கப்பட வேண்டும் என்பது நமது குறிக்

அரசியல் திட்டம் தனிமனிதனின் சுதந்திரத்தை பறிக்க வந்திருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட ஒருகுழுவின் மூலம் வேறு ஒரு புதிய அரசியல் திட்டத்தை உருவாக்க வேண்டும்" என்று அழகுபட குறிப்பிட்டார். அவர் கூற்று ஆட்சியிலிருப்போர்களின் காதில் இன்று வரை ஏறவில்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டத்திற்கு பிறகு அவர்கள் மாற்றுவார்கள் என்பது இயற்கையின் நியதி போலும்.

இங்கிலாந்தின் மிகப் பெரிய அரசியல் அறிஞன் எனக் கருதப்பட்ட எட்மண்ட் பர்க் அரசியல் திட்டத்தைப் பற்றி குறிப்பிடுகின்ற பொழுது, 'ஒருநாட்டின் அரசியல் திட்டம் அந்த நாட்டின் சூழ்நிலைக்கேற்ப மக்கள் மனவளத்திற்கேற்ப உருவாக்கப் படவேண்டும்,' என்று கூறினுன். அவன் கூறிய கருத்தை தவைத்து பார்க்கின்ற பொழுது இந்திய அரசியல் திட்டம் மக்களுக்காக தயாரிக்கப்பட்ட திட்டமல்ல என்பது தெரிகின்றது. ஏனென்ருல் இந்திய அரசியல் திட்டத்தில் உள்ள சட்டங்கள் பெரும்பாலும் 1935ம் ஆண்டு வெள்ளைக்காரன் இயற்றிய Government of India Act என்பதில் உள்ளவையே. நம்மை

இருந்ததில்லை. வெள்ளையன் இந்தியாவை சுரண்டுவதற்கு துப்பாக்கி முனையில் ஒன்ருக்கிஞன் என்பதை ஸ்மித்முதல் சாஸ்திரி வரை சொல்லாமல் சொல்லியிருக்கிருர்கள். அப்படி பல இனங்களையும் பல்வேறு மொழி பேசுகின்ற மக்களையும் கொண்டுள்ள பல நாடுகளை கொண்டுள்ள ஒரு இந்தியாவின் அரசியல் திட்டம், ஒரு நாட்டு மக்கள் இன்ஞெரு நாட்டுமக்களை சுரண்டுவதற்கு வழிவகுப்பதாக இருக்கக்கூடாது உதாரணமாக பல்வேறு நாடுகளைக் கொண்ட இந்தியாவில் ஒரு நாடாகிய வடநாடு (உத்தரப் பிரதேசம் பீஹார் போன்றவை, மற்ருெரு நாடாகிய

கூடிய ஒரு தன்மையில் இந்தியஅரசியல் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஏனென்ருல் அரசியல் திட்டத்தை தீட்டியவர்கள் வழக்கறிஞர்கள். எனவே அவர்கள் பரம்பரைக்கு ஏற்ப பாமரனும் அறிந்து கொள்ளமுடியாத திட்டத்தை தீட்டிவிட்டனர்.

இப்பொழுது இருக்கிற இந்திய அரசியல் திட்டம் மாநிலங்களை மத்திய அரசாங்கத்தின் பொம்மைகளாக---எடுப்பார்கைப்பிள்ளைகளாக-ரவலர் பணிப் பெண்களாக ஆக்கி வைத்திருக்கிறது. மாநிலங்களின் சுதந்திர உரிமையை டில்லியிடம், அதாவதுமத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்க வழி செய்திருக்கிறது. குறிப்

அன்றுள்ள திட்டமே இன்றும் இருக்கிறது

திராவிடநாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு வழி வகுப்பதாக இருக்கிறது. இந்திய அரசியல் திட்டம் பல்வேறு மொழி பேசுகிறவர்களும் பல்வேறு இனத்தினரும் காலக் கோளாறினுல் ஒன்றுபட்டால்கூட, அவர்கள் பிரிந்து போவது என்பது சாத்தியம். இதைத்தான் ஆங்கில அரசியல் அறிஞன் E. பார்க்கர், "A democratic state which is multinational will fall as under into as many democracies as there are natio-

பாக சென்னை மாநிலம் சுதந்திரமாக எந்தக் காரியத்தை செய்யும் உரிமையையும் இழந்து மத்திய அரசாங்கத்திற்கு அடிமையாக இருக்க வேண்டிய கட்டாயத்தை அரசியல்திட்டம்ஏற்படுத்தியிருக்கின்றது. மத்திய அரசாங்கத்தின் உத்தரவின்றி மாநிலங்கள் எதையும் செய்யமுடியாது ஒரு சிலவற்றை தவிற, மற்ற காரியங்களில் மாநிலங்களின் சம்மதத்தை பெருமல் அரசியல் திட்டத்தை திருத்

என திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகின்றது. அந்த முயற்சிவெற்றி பெரும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. இன்றிரவு எப்படியும் விடிந்தாகவேண்டும். எனவே இன்றில்லையேல் நாளை, நாளைபோனுல் நாளைய மறுநாள்! அதுவும் இல்லையென்ருல் என்ருவது ஒரு நாள். அந்த நம்பிக்கையில் நாம் வீறு நடை போடுவோமாக.

இந்திய அரசியல் திட்டத்தை இன்றே மாற்றுக! - ஏன்?

அறியாமையே! உன் பெயர்தான் ஆண்டவனா?

பழமை என்னும் அஞ்ஞானத்திற்கு கால்கோள் விழா நடத்திய பெருமை மேன்மையுள்ள நமது நாட்டுக்குத்தான் சாரும்! அத்தோடு புதுமையென்னும் பூங்காவினுள் புயல் வேகத்தில் புகுந்த பெருமையும் இந்த நாட்டைத்தான் சேரும் என்பதையம் மறக்க முடியாதுதான்!

'புதுமை விஞ்ஞானத்திற்கு அடிப்படைக் கல் நாட்டிய சிறப்பு முகமதுவின் சீடர்களான மூர் வகுப்பாருக்கு உண்டு!' என்றார் மறைந்தும், மக்களின் மனத்திடையே வாழும் பேரறிஞர் இங்கர்சால்! இந்த இருபதாம் நூற்றாண்டிலே அறியாமை நிறைந்த ஆத்திகத்தைப் போக்கி விட்டு, புதுமைக்கு — பகுத்தறிவுக்கு இடம் கொடுத்திட்ட சீர்திருத்தச் செம்மல்களும் செந்தமிழ் நாட்டில் உண்டு என்னும் போது நெஞ்சம் பெருமிதத்தால் பூரிக்கின்றது!

பழமையால்— பழமைவாதிகளால்—ஆம், ஆத்திகவாதி வடிவம் இன்னதுதான்' எனத் துணிந்து சொன்ன மாலுமி மகெலனையும், 'உலக அமைப்பு' கண்டுணர்ந்த கலிலியோவையும், 'பொதுமறை' தந்த பொய்யாமொழிப் புலவரையும், 'கிரகங்களின் அசைவு. என்றநூலை எழுதிய கெப்ளரையும், அறிவுச் சுடர் தெறிக்கும் லெனின், கார்ல் மார்க்ஸ், மார்க்ஸிம் கார்க்கி, போன்ற மேதைகளையும், திராவிடத் தளபதியாம் அறிஞர் அண்ணாவையும், செயலுக்கு மதிப்பளிக்கும் சொல்லின் செல்வரையும், 'தான் பெற்ற செல்வங்கள்' என்று தலைநிமிர்ந்து சொல்லும் நிலையான பெருமையை இந்த அறிவுகெட்ட ஆத்திகம் துளியேனும் பெற்றிடவில்லை! பாவம் !!

ஆனால் இந்த ஆத்திகம் சொன்ன—செய்த காரியங்மைக் கர்த்தாக்களுக்குப் புதை குழி ஏன்?' என்று கேட்டோருக்கு, "அது அவர்கள் பண்ணிய பூஜாபலன்" என்று கூறித்தப்பியது! விதியெனவும், விதிப்பயன் எனவும், தலையெழுத்து எனவும் கயிறு திரித்து வாழ்ந்தது! வாழ்கிறது!!

ஆர்விப்பட்டி
இளங்குமரன்

மத குருக்களையும், போப்பாண்டவர்களையும், புரோகிதக் கூட்டங்களையும் படைத்து, அவர்களுக்கென்றே ஓர் தனியுலகம் கட்டிக் கொடுத்து, காத்திடும் பணியை சிரமேற் கொண்டது! வீணான சாத்திரக் குப்பைகளை, மூடப் பழக்கங்

வௌவால்கள் வந்து தங்கினால், அந்த இல்லத்திற்கே ஆகாது என்று இட்டுக் கட்டியது! விடைபெறும் போது 'போகிறேன்' என்பது கூடாது; 'போய் வருகிறேன்' என்பதே பொருத்தமானது எனப் புகன்றது! கனவில்தோன்றியகருநாகம் கடித்தால்தான் சனி தொலையும் என்று இந்தச்சீரற்றஆத்திகம் சாத்திரம் பேசியது! பூனையானது குறுக்கே ஓடுவதும், ஒற்றைப் பார்ப்பனன் எதிரே வருவதும், மொட்டைத் தலையான பார்ப்பனப் பெண் பார்வையில் படுவதும் பொல்லாதது என்று நவின்றது! மணமான தொடக்கத்தில் புதுமண மங்கை புக்ககம் நுழையும்போது, வலது காலை வாசற்படியில் வைத்து நுழைந்தால்தான் நல்லது என விளம்பியது! வெள்ளிக் வீட்டினில் இழவு விழும் என்று அச்சுறுத்தியது! தாயுள்ளவரின் தலையில் அடிப்பது தகாது என்று உரைத்தது! காசிக்கே பயணமென்றாலும் கழுதையானது கத்தினால் சாலச் சிறந்தது என சங்கீதம் பாடியது! இல்லத்தை விளக்குமாற்றால் சுத்தம் செய்யும் போது, வஞ்சிக் கொடியாளின் கொள்ளேகாலம் பட்டுப் புடவை தரையில் இழுபட்டால் அந்த இல்லத்திற்கே அழிவாகும் என ஆலாபனை செய்தது! கணவனை இழந்து கண்ணீர் உருக்கும் கைம்பெண்கள் வெள்ளை நிற ஆடையைத்தான் அணிய வேண்டும் என்று கட்டாயப் படுத்தியது! பளபள வென ஒளி விடும் குங்குமப் பொட்டைப் பிறைநுதலில் வைக்கக் கூடாதென்றும், கலகல வென ஒலிக்கும் கண்ணாடி வளையல்களைக் கைகளில் போடலாகாதென்றும், கமகமவென மணக்கும் மல்லிகைப் பூச்சரத்தைக் கார் குழலில் சூடக் கூடாதென்றும்

மூடநம்பிக்கையை முறியடிப்போம் வாரீர்

களால் செய்யமுடியாதஅரிய பெரிய காரியங்களை எல்லாம் புதுமைச் சிற்பிகள் கணப்பொழுதில் செய்து முடித்திருக்கின்றனர்! ஆனால் இந்த ஆத்திகம் எதையெதைச் சாதித்திருக்கிறது என்பதனைக் காணுமிடத்து, நமக்கெல்லாம் கைகொட்டி நகைக்கத் தோன்றுகிறது!

உலகம் உருண்டை என்று கண்டுபிடித்த மகத்தான பெருமையை இந்த ஆத்திகம் அடையவில்லை! (தரணி தட்டையானது என்று தற்குறித்தனமாக உளறியது!) கொந்தளிக்கும் கடலிலே கெம்பீரமாகப்போகும் கப்பல்களைக் கட்டிய சிறப்பைஇந்த ஆத்திகம் பெறவில்லை! வான வெளிதனிலே வண்ணக் கிளி போல் பறந்து செல்லும் வானவூர்தியைக்கண்டுபிடித்த அருமையை இந்த ஆத்திகம் தனதாக்கிக் கொள்ளவில்லை! வகை வகையான இன்பக் கீதங்களை எழுப்பி, வாடும் மனத்தை எழில் பெறச் செய்யும் வானொலியை உருவாக்கிய பெயரை இந்தஆத்திகம் தன் சொத்தாக்கிடவில்லை! கரை கட்டிக்காட்ட முடியாத கணக்கற்ற நவரசங்களை அள்ளிக் கொட்டும் பேசும் திரைப் படங்களை உண்டாக்கிய நல்ல புகழை இந்த ஆத்திகம் பெறவில்லை! "கோள் நிலைகளின் சுழற்சி"யைக் கண்டு தெளிந்த அறிவை இந்த ஆத்திகம் அடையவில்லை! (வாரா வாரம் ராசி பலன் எழுதும் 'புத்தியுள்ள பல்லாயிரக் கணக்கான பார்ப்பனர்களை இறக்குமதி செய்திருக்கிறது!) தூரப் பார்வைக் கண்ணாடியைக் கண்டுபிடித்த லிப்பெர்சீமையும் 'இவ்வையகத்தின் இயல்பான களை நினைக்கும்போது நெஞ்சகத்திலே ஒரு வெடிப்பு ஏற்படுகிறது.

'வறட்டு வேதாந்தம் பேசுங்கள்' என்றது! 'ஜெபமாலைகளை உருட்டுங்கள், சொர்க்கம் உங்களுக்கே' என்று பஜனை பாடியது! ***'சிந்திக்காதே; சீரழிவாய்! நம்பு; நலமடைவாய் !!'*** என்று பொய்ப் பிரச்சாரம் செய்தது! வண்ணச் சிலை நிகர் கன்னிப் பெண்களை 'வாழ்வின் சுவையை நுகராதீர்!' எனக்கூறி காராக்கிரகமான கன்னி மாடத்திலே சேர்த்தது! எழில் கொழிக்கும் இன்பரச வல்லிகளை ஆலயத் தாசிகளாக ஆக்கி

களை மக்கள் முன் வாரி வாரி இறைத்தது! இன்னும் இறைத்துக் கொண்டிருக்கிறது!

வீட்டுக் கூரையின்மேல் உட்கார்ந்து காகம் கரைந்தால் வீட்டுக்கு விருந்தாளி வருவார் எனப் புளுகியது! எரியும் அடுப்பு இரைந்தால் வீட்டுக்கு உறவினர் வந்திடுவார் என்று வேதாந்தம் சொல்லியது! இரண்டு ஆண்கள் பேசும்போது இடையிலிருக்கும் பெண் 'நச்' சென்று தும்மினாலோ, அல்லது இரண்டு பெண்கள் பேசும் போது இடையிலிருக்கும் ஆண் 'நச்'சென்று தும்மினாலோ பேசப்படும் காரியம் பலிக்குமென்றும் பச்சைப் பொய்யை அவிழ்த்து விட்

கிழமை வீட்டிலுள்ள பொருள்களை அடுத்தவருக்குத் தந்தால், வீட்டு லட்சுமி வெளியேறி விடுவாள் எனப் பகர்ந்தது? (அறுத்த கையிக்குச் சுண்ணாம்பு தராத இதயம் சிறுத்த 'வள்ளல்களுக்கு' இந்நாள் ஒரு பொன்னாளே!) வடக்கு சூலம் உள்ள நாளில் வடக்கே பிரயாணம் செய்வதும், தெற்கு சூலம் உள்ள தினத்தில் தெற்கே போவதும் கிழக்குசூலமான நாளில் கிழக்கே பயணம் செய்வதும் மேற்கு சூலமான நாளில் மேற்கே புறப்படுவதும்காரிய சித்திக்கு அனுகூலமில்லை என்றும், கட்டாயம் ஆபத்து வருமென்றும் பயங்காட்டியது! திங்கட்கிழமை திரும்

★ சாத்திரமல்ல, சனாதனக் குப்பை!
★ சாதி சமயத்தால் வீழ்ந்த சமரசம்!
★ அன்றிருந்த நிலையிலேயே இன்றும் வாழ்பவர் ?

இன்பம் கண்டது! 'மண்ணும் பொன்னும் — பெண்ணும் வெறும் மாயை' என்றுஉதட்டளவில் பிலாக்கணம் வைத்தது! காமாந்தகார எண்ணங்களை ஊட்டும் கோயில்களை — புராண நூல்களை உருவாக்கியது இந்த ஆத்திகம்! கதிரவனைச் சூரிய பகவான் என்றும், காற்றை வாயு பகவான் என்றும், நெருப்பை அக்கினி பகவான் என்றும் கதை திரித்தது! 'கட்டுக்கதைகள் - கண்மூடிக் கொள்கைகள்' எனக் கண்டித்தோரைக் கண்டம் துண்டமாக வெட்டியெறிந்தது! புதுமைப் பண் பாடிய மனிதாபிமானிகளை —மேதைகளை மயானக்கரைக்குவழியனுப்பி மகிழ்ச்சியடைந்தது! 'புது

டது! உணவு உண்ணும் வேளையில் மூக்கில் புரையேறி இருமல் வந்துவிட்டால், எங்கோ இருக்கும் ஆசாமி நினைப்பதற்காகவோ, அல்லது நிந்தனை செய்வதாகவோ நம்பலாம் என்று 'டுப்' விட்டது! 'நீ வீட்டை விட்டு வெளியேறும்போது வேதனையின் வடிவமாக விளங்கும் விதவையானவள் வீதியில் வரக்கண்டால் உனக்குச் சகுனத் தடை' என்று சங்கநாதம் செய்தது! கௌளி கத்தினால் நல்லதோ—கெட்டதோ நேருமென அளந்தது! திடீரென்று பற்கள் கூசத் தொடங்கினால், நெருங்கியவர்களில் ஒருவர் நிச்சயம் சாவார் எனத் தம்பட்டம் அடித்தது! இல்லத்தினில்

பாப் பயணம் என்று தில்லுமுல்லுகள் செய்தது! சுவரிலே ஊர்ந்து போகும் பல்லி, உடம்பின் எப்பாகத்தில் விழுந்தாலும்; ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக நல்லது—கெட்டது நவின்றது! அகத்திலே விளக்கேற்றியவுடன் உப்போ, சுண்ணாம்போ ஒருவருக்கும் தரலாகாது என்று ஒப்பாரி வைத்தது! உள்ளங்கை அரிப்பெடுத்தால் பணம் பறந்து வருமென்றும், உள்ளங்காலில் அரிப்பெடுத்தால் ஊர்ப்பயணம் உடனே செய்ய நேரிடுமென்றும் உளறிக் கொட்டியது! வீட்டிலே ஒருவர் நோயுடன் படுத்திருக்கும் போது, வீதியிலே போகும் சொறிநாய் ஊளையிட்டால்

சலசல வென்று தென்றலில் நெளிந்தாடும் அழகழகானப் பட்டுச் சேலைகளைச் சந்தன மேனியில் உடுத்தக் கூடாதென்றும் கட்டளையிட்டது! 'இன்பம் இங்கே கொள்ளை கொள்ளை !' என்று மனத்தை இழுக்கும் இளமைக்குக் கை விலங்கு மாட்டியது! பொங்கிப் பொங்கி எழுகின்ற பூரிப்பான அங்கங்களுக்கு நிரந்தரமான சிறைவாசம் கொடுத்துவிட்டதாக எக்காளம் போட்டது! ஆனால், அதில் ஏமாந்துவிட்டது !!

கட்டாந்தரையைக் கண்ட நாம் கலப்பைப் பிடித்துக் கடினமாக உழுது கடைசியில் கழனிகளாக்குகின்றோம் கிடைப்பதைக் களிப்புடன் உண்ணுகின்றோம்! பட்ட பாடுகளுக்கேற்ற பலன்கிட்டிவிட்டதே என்று பூரிக்கின்றோம்! அடுத்தகணம் 'ஆயிரம் தடவை உலுத்த உபதேசங்களைப் பெறுவதால் ஏற்படும் விளைச்சல்எது?'வென கேள்வி கேட்கின்றோம்! 'இல்லை' என்ற பதில் வருவதைத் தவிர, 'இவர்களெல்லாம், மனிதர்களா? நாத்திகர்கள் என்ற எரிச்சல் கலந்த— வெறுப்பு விரவிய கேள்வி பதில், ஆத்திகர்களால்ஆவேசமாக வீசியெறியப்படுவதை நோக்கி வேதனைப் படவில்லை நாம்!

விரைவிலே...

பொன்னி

வெளிவருகிறாள் !

பேயென்று வாய்கிழியப்பேசிடும்பேடிகள்!

★ சி. ரி. சிற்றரசு ★

பெ. கோவிந்தன், மலாயா

கே : சீனர்கள் ஆக்ரமித்த இந்திய வடபகுதியை மீட்கு முகத்தான் செல்லும் தென்னகப் படைகளுக்கு வயிருரச் சோறு போட்டு அனுப்பும்படி, சென்னை சட்ட மன்றத்தில் அறிஞர் அண்ணு சொன்னரே, இதன் பொருள் என்ன?

ப : தென்னவர்களை அவர்கள் இதுவரை நடத்திக் கொண்டு வரும் முறைகளிலிருந்து பிறந்த சந்தேகந்தான்.

கே. அன்பரசன். பெங்களூர்

கே : செல்வந்தர் வீட்டுப் பெண்களின் உள்ளம் எதைப் பற்றி யெல்லாம் எண்ணும்?

ப : பணம் தேடத் துரும்பாகப் பறக்கிராரே ஒரு பத்து நாட்களாகிலும் சேர்ந்தாப்போல வீட்டில் தங்கக் கூடாதா என்று நினைக்கக் கூடும். அப்படி வெளியே போக வேண்டிய வேலையில்லாமல் வீட்டிலேயே தங்குகின்றுர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த வீட்டுப் பெண்கள் இந்த நகைகளை எல்லாம் வைர நகைகளாக மாற்றினு லென்ன என்று நினைப்பார்கள். அதுவும் நிரம்பப் பெற்றவர்கள் ஏதாவது கிளப்புக்கு போனு லென்ன வென்று நினைப்பார்கள்.

கே : இள மாணவர்களை மயக்கக் கூடியவை யாவை?

ப : சுவையான கல்வி நல்ல மாணவர்களைமயக்கும். கிட்டாத காதல் கெட்ட மானவர்களை மயக்கும்.

டி. வி. சுந்தரம், தங்கசாலை

கே : சீனர்களை விரட்டாதா, இந்த நேரு அரசாங்கம் — ?

ப : விரட்டாது. அவர்கள் முன்னேற முன்னேற குறட்டை விட்டுக் கொண்டு தூங்கும்.

நிலவண்ணன், புதூர்

கே : இந்தி எதிர்ப்பின்காரணமாக நமது குடியரசுத் தலைவருக்கு நமது கழகம் காட்ட இருந்த கருப்புக் கொடிப் போராட்டம் ஏன் நிறுத்தப்பட்டது? இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஏன் நிறுத்தப்பட வில்லை?

ப : கருப்புக் கொடி காட்டுவதை நிறுத்தியது, ஒரு குறிப்பிட்ட வாக்குறுதியைப் பெற்றதால். இந்தி எதிர்ப்பை நிறுத்தாதது இன்னும் அது ஒழியாததால்.

ஏ. சுப்பிரமணியம், கரியாபட்டிணம்

கே : தமிழ் நாட்டிலேயே பிறந்து, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு, தமிழர்களின் பிரதி நிதியாக இருக்கும் சர்தார் வேதரத்தினம் அவர்கள் தமிழைப் புறக்கணித்து இந்தியை ஆதரிப்பது ஏன்?

ப : அவர் தமிழர்தான். சந்தேகமில்லை! அவரிருக்கும் இடத்தைக் கவனியுங்கள்.

ஏ. தங்கவேலு, வேலூர்,

கே : நம் தி. மு. க. வில் பலர் கதைவசனம் எழுதுகிருர்கள் சொந்தமாகப் படமும் எடுக்கிருர்கள். தாங்கள் மட்டும் ஏன் இன்னும் கதை வசனம் எழுதியதாக ஒரு படமும் வரவில்லை. அதற்கான காரணமென்ன? அறிய ஆர்வம்.

பதில் : படம் எடுப்பவர்கள் எண்ணத்திற்கும் என் எண்ணத்திற்கும் ஒத்துவருவதில்லை.

பொ. காபிரியல், சு. மணியன், பொ. இளங்கோவன், மைலாப்பூர், சென்னை.

கே : நம் இயக்கத்தில் தோழியர் பூங்கோதை அவர்கள், முன்னுள் பொதுக்கூட்டங்களுக்கு வருவார்களே! அவர்கள் இப்போது என்ன செய்கிருர்கள்? அவர்கள் விலாசம் தர இயலுமா?

பதில்: அவர்கள் இப்போது திருமணம் செய்து கொண்டு நலமாக ஆந்திரத்தில் இருக்கின்றுர்கள்.

கே : சுதந்திரம் (இந்தியா) அடைவதற்கு பொதுவுடமைக் காரர்கள் செய்ததென்ன?

பதில் : ஒன்னும் செய்யவில்லை.

கே : 'திராவிட நாட்டு' பிரிவினையை வெள்ளையன் இருக்கும்போது ஏன்? கேட்கவில்லை?

பதில் : சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்பவன் தூதுவந்த போது கேட்டோம். அவன் நூற்றுக்கு நாற்பது வாக்குகளை வாங்கித் தாருங்கள் என்றுன், அப்போது நாடு கனிந்திருக்கவில்லை.

ஆ. கணேசன். சென்னை-21

கே: காந்தியாரைகோட்சே சுட்டுக்கொள்ள காரணம் என்ன?

பதில் : காந்தியார் முஸ்லீம்களுக்குஅதிகசலுகைக் காட்டி விட்டார் என்ற கோபத்தால்.

பழநி, சென்னை-5

கே : பாரதியார் இறந்தது எந்த ஆண்டில்?

பதில் :

எஸ். டி. ராசன், பம்பாய்-1.

கே : சிந்தனைச்சிற்பி அவர்களே! தமிழ் நாட்டிலேயே இருந்துகொண்டு, 'நாங்களும் பச்சைத் தமிழிர்கள் தான்' என்று வாய்வீரம் பேசுகின்ற மந்திரிமார்களுக்கு 'நாம்இருக்கும் நாடு தமிழ்நாடாயிற்றே! நம்நாட்டிக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டுமே!' என்ற உணர்ச்சி கொஞ்சம் கூட ஏற்படுவதில்லையே ஏன்?

பதில்: குஷ்ட நோய்க்காரன் தோலைக் கிள்ளினுலும் உணர்ச்சி இருக்காது.

வி. கர்த்திகேயன், கரூர்

கே : ஆசிரியர் அவர்களே! புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் ஏன் வெளிநாடுகளுக்குப் போவதில்லை? அரசாங்கம்அனுமதிப்பதில்லையா அல்லது அவர்கள் போவதற்கு ஓய்வு இல்லையா? அறிய ஆவல்.

ப : ஓய்வில்லா மலிருக்கலாம். அல்லது விருப்ப மில்லாமலிருக்கலாம். போக வேண்டிய தேவை இல்லா மலிருக்கலாம்.

அ. கந்தசாமி, சேலம்

கே : 1962-ல் காங்கிரசின் நிலை எப்படி இருக்கும்?



ப : ஆடிக்காற்றில் அலைந்தாடும் முருங்கமரம் மாதிரி இருக்கும்.

சரசுவதி, சென்னை-14

கே : வருகிற பொதுத் தேர்தலில் தாங்கள் எந்தத் தொகுதியில் நிற்கப் போகிறீர்கள்?

ப : அதை நான் முடிவு செய்ய முடியாது.

நடராசன், நத்தியம்பேடு.

கே : ஆசிரியர் அவர்களே! எங்கள் இந்தி தடித்த உடல்; கொழுத்த கட்டை; பழுத்த மூளை உடையவள். உங்கள் தமிழோ ஒட்டிய வயிறு; ஒல்லியான உடல், குழிவிழுந்த கண்கள் இந்தத் தமிழா ஆட்சி மொழியாக வர வேண்டுமெனக் கனவு காண்கிருய்? என்று, இந்தி வாலா ஒருவன் கேட்கிருன். இதற்கு என்ன பதில்?

ப : பெண்ணுக்கு தடித்த உடல் கூடாதடா கழுதையே என்று அவனுக்குச் சொல்லு.

மலேயா மன்னர் மறைந்தார்!

சுதந்திர மலேயாவுக்கு மாமன்னராக விளங்கிய **துவாங்கு ஹிஸா முதீன் சனஜா** அவர்கள் செப்டம்பர் மாதம் காலை 11-48க்கு விழிகளை மூடிவிட்டார். இவர் சுதந்திர மலேயாவுக்கு மன்னராக ஏப்ரல் மாதம் 14-ம் நாளன்று தேர்ந்தெடுக்கப்பட்டவர். 62-வது வயதோடு நமது தொண்டினை விடுத்துச் சென்று விட்டார. அவர் இறந்ததைக் குறித்து துக்கத்தோடு இருக்கும் மலேயா மக்களுக்கும் அரசினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரியதாக்குகிறோம்.

—ஆசிரியர்

நாராயணன், கோவை.

கே : மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தால் கிடைக்கும் லாபமென்ன?

ப. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கவனிப்போம் என்பதுதான்.

வெங்கடேசன். திருப்பதி

கே : நம்மை யெல்லாம் அடித்து நொறுக்குவதையே கடமையாகக்கொண்டிருக்கும் காங்கிரஸ் ரௌடிகளுக்கு எப்போது கண் குருடாகிப் போகும்?

ப : நாம் திருப்பித் தாக்கினுல் தான் அவர்களுக்குப் புத்தி வரும்.

மூர்த்தி, திருச்சி.

கே : காங்கிரஸ்காரர்களால் தான் தமிழ் வளர்ந்ததாமே உண்மையா?

ப : ஐந்து விணடிகள் காமராசர் சொற்பொழிவைக் கேளுங்கள். தெளிவடைவீர்.

கே. டி. முத்தமிழன், கரியாபட்டினம்.

கே : தி. மு. க. கேட்கும் திராவிட நாட்டுக் கோரிக்கையைப் பார்த்து, இன்றுவரை கேலியும் கிண்டலுமாகப் பேசி வரும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், கருமாதி சிவஞானமும் கால்வருடி காமராசரும் கக்கனும், காவடி தூக்கும் சி. சுப்ரமணியமும் பக்தவத்சலமும் அர்த்த இராத்திரியில் குடை பிடிக்கும் அளகேசனும் ... நாளை திராவிட நாடு கிடைத்து விட்டால் என்ன நினைப்பார்கள்? எதை பற்றிப் பேசுவார்கள்? என்நிலை ஆவார்கள்?

ப : வாழ்த்துவார்கள். நாங்கள் அப்படி யெல்லாம் உங்களுக்குக் கோபத்தை மூட்டியிருக்கா விட்டால், நீங்கள் இவ்வளவு தீவிரமாகப் போராடித் திராவிடத்தைப் பெற்றிருக்க மாட்டீர்கள். ஆகையால் முதல் மாலை எங்களுக்குப் போடுங்கள் என்பார்கள்

மணியன், தமிழ்நாடு

கே : மைசூர் மந்திரி நஞ்சப்பா, மழை பெய்ய மகேசுவரனுக்கு பூசை செய்யுங்கள்! என்கிருரே?

ப : அவர் செய்த பூசை என்ன ஆயிற்று என்று கேளும்.

கே : சிந்திக்க தி. மு. கழகமும், செயல்பட பொன்னுன காலமும் இருப்பதை, தென்னக மக்கள் யாவரும் உணர்ந்து திராவிடம் வேண்டும் என்று ஒரே உரிமைக் குரலுடன் கிளர்ந்தெழுந்தால் தென்னக வரலாறு வருங்காலத்தில் எத்தகையதாக இருக்கும்?

ப : வரலாற்றுக்கு வேண்டிய செய்திகள் கிடைக்கா முன்னம் வரலாறு எப்படி இருக்கும் என்று கேட்பது நெல் கழனியிலிருக்கும் போதே தோசை எப்படி இருக்கும் என்று கேட்பதைப் போலிருக்கிறது.

நாமதேவன், சென்னை-21.

கே : ஆசிரியர் அவர்களே! சிவாஜி கணேசன் சங்கராச்சாரியாரின் பாதத்தைக் கழுவித் தொழுதாரே, இது தன் மானமுள்ள தமிழன் செய்யும் வேலையா? சிவாஜி என்ற பட்டத்துக்கு உகந்த முறையா?

ப : குடியரசு தலைவரே அந்தகெதி என்றுல் இவரைப் பற்றிப் பேசி என்ன பயன்.

அ. பிரகாசம், சென்னை-14

கே: ஆண்களை பெண்களாகவும், பெண்களை ஆண்களாகவும் மாற்றுவது சாத்தியக்கூருன செயலே என்று ஒரு டாக்டர் அறிவித்துள்ளாரே தாங்கள் யாரையாவது சிபாரிசு செய்கிறீர்களா?

ப: ஆம்! நமது மாநில மந்திரிகள் அனைவரையுமே அவ்வாறு செய்து விடலாம்!

தென்றல் தவழ்ந்துவரும் சோலை!

அமுதும் தேனும்

இயற்றியவர் :
கவிஞர் **சுரதா**
கிடைக்குமிடம் :
சுரதா பதிப்பகம்
13, அடைஞ்சான் முதலி தெரு,
சென்னை-28.

உலகிலே பல்வேறு கலைகள் உள்ளன. அவைகளனைத்தும் மனித சமுதாயத்தின் வாழ்விலிருந்து முகிழ்த்தவைதாம். ஒவ்வொரு கலையிலும் வல்லவனைப் 'புலவன்' என்கிறோம். ஆயின் கவிதைக் கலையில் வல்லவனைக் கவிஞன் என்கிறோம். கலைஞர்கள் உள்ளேயும் தனிச் சிறப்பும் பெருமையும் பெறுபவன் கவிஞன். ஏனெனில் உணர்ச்சியின் அடிப்படையில் தான் கவிதைக்கலை துளிர்க்கின்றது. இந்த உணர்ச்சி காலத்தால் அழியாத ஆற்றல் பெற்றது.

Poetry is the spontanious overflow of poverful feelings recollected in tranquelity, என்பார் wordsworth ... வேர்ட்ஸ்வொர்த்

கவிஞர் சுரதா அவர்கள் எழுதிய 'அமுதும் தேனும்' என்ற கவிதைத் தொகுப்பைப் படித்தேன். பல முறைபடித்தேன். இசை நயத்திற்காகவும் உவமை நயத்திற்காகவும், பொருள் நயத்திற்காகவும் — தமிழ் நயத்திற்காகவும் இலக்கண இலக்கிய நயத்திற்காகவும் படித்தேன் இல்லை! கவிதை என்னைப் பாட வைத்தது. மேற்குறிப்பிட்ட கவிதைக்குரிய எல்லா நலன்களும் பொருந்தியமைந்திருப்பதுடன் அரசியற் கொள்கையும், சீர்திருத்த எண்ணங்களும், பொருளாதார விளக்கங்களும், வரலாற்று நிகழ்ச்சிகளும் இன்னும் பலவும் 'கவிதை அமைதி' பெற்று சிந்தனைப் பிழிவுகளாக ஆழ்ந்த உணர்ச்சியோடு நிலவுகின்றன.

சொல்லின் செல்வன் அநுமன் மாவீரன் இராவணனுடைய இலங்கைமா நகரைக் கண்டு,

"விற்படை பெரிதென் கோயான்,
வேற்படைமிகுமென் கோயான்
மற்படை யுளதென்கோயான்,
வாட்படை வலிதென்கோயான்
கற்பணந் தண்டு பிண்டிபால
மென்றினைய காந்தும்
நற்படையுடைத் தென்கோயா னுயகற்
குரைக்கு நாளில்.

என்றான். இந் நூலுக்கு மதிப்புரை நல்கும் நாளில் எனக்கு வரிக்குவரி விளக்கங்கள் தரவே மனம் போகின்றது.

இங்கு விரி வஞ்சித் தனியாகவே மதிப்புரை நூல் போட எண்ணியுள்ளேன். தவிர படிப்பவர்களே நல்ல மதிப்புரையாளர்களாக மாறுவார்கள் என்ற நம்பிக்கைஎனக்கு உண்டு. மேனாட்டுக் கவிஞனுடைய சிந்தனையாற்றலும் மன உழைப்பும் — கீழ் நாட்டுக் கவிஞனுடைய வடிவ, இலக்கண அமைப்பும் உள்ள இனிய நூல், 'அமுதும் தேனும்' தலைப்புப் பொருத்தம் சிறப்பாக உள்ளது. அமுதினையாரும் கண்டதும்கிடையாது. சுவைத்ததும் கிடையாது. 'நாம் சுவைத்தசுவைகளுள் இனியதைவிட இனியதுஎன யூகிக்கமுடியும் கவிஞர் சுரதாவின் கவிதையும்கவிதைகளுளெல்லாம் சிறந்து விளங்குகின்றது இது மிகையல்ல! மனஉழைப்பின் விளைவு!

கவிஞனுடைய உணர்ச்சி எத்தகையது? என்று நம் சிந்தித்து — அதனைப் பெற முயற்சி செய்கிறோம். அப்பொழுது திறனாய்வு வெளிப்படுகிறது. கவிஞர் சுரதாவோ நம்மோடு வாழும் கவிஞர்! அவர் தம் சொந்தப் பதிப்பகத்திலே வெளியிட்டுள்ளார். அவருடைய கவிதைஆற்றலை பெறமுடியா விட்டால், நேரே சென்று அவரிடமே விளக்கம் பெறலாம். அவரும் வருவோரை வரவேற்று - நன்கு பேசுகிறார். அறிவின திறம் மிக்கவர். கவிதையைப் படைத்த கவிஞனிடமே திறனாய்வு கேட்பது புதுமைமட்டுமின்றி நல்லதும் ஆகும். உண்மையே புலப்பட ஏதுவாகும். -க: கோவிந்தராமானுசன்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

லியோபால்டுவில் நிகழ்ச்சிகள் அடிமை நாடுகள் அனைத்திற்கும் அறைகூவல் விடுவதாகும்; "என்ன விலை கொடுத்தும் சுதந்திரத்தை நாங்கள் அடைவோம்; ஆனால் எந்தக் காரணம் கொண்டும் பிறருக்குச் சரணடைய மாட்டோம்" என்று லுமும்பாவின் செயல்கள் மூலம் நமக்கு அறிவுறுத்துகின்றர் காங்கோ மக்கள்.

கறுப்பர்கள் இதயம் ஒளி பெற்று விடுதலைக் கொடியை உயர்த்திய தோடல்லாமல் அந்த விடுதலைக்கு வரும் எண்ணற்ற ஆபத்துக்களையும் பொறுமையுடன் கடைப்பிடித்து வருகிறது.

"சின்னஞ்சிறு சுண்டைக்காய் நாடுதானே காங்கோ" என்று எந்தக் காமராசரும் அங்கே கூறவில்லை; காங்கோவில் நாட்டு மக்களின் எண்ணத்திற்கு மாறாக எது நேரிடினும் சமாளிப்போம் என்று குரலெழுப்புகின்றது, லுமும்பா அமைச்சரவை. நேசக்கரங்களை அன்புடன் நீட்டுகின்றன இரஷ்யநாடும் பிற ஆப்பிரிக்கச் சுதந்திர நாடுகளும்.

சிறிய காங்கோ பெரிய பிரச்சினையை உருவாக்கி இருக்கிறது; குருஷேவ், ஐசனேவர், நேரு, முதலான பெருந்தலைகளை ஒன்றுகூட்டி வைத்திருக்கிறது ஐக்கிய நாடுகள் சபையின் மூலம்.

ஐ. நா. சபை பெல்ஜிய துருப்புக்களை காங்கோவிலிருந்து வெளியேற்றப் போகின்றதா? பிரதமர் லுமும்பாவின் நேர்மையான அவைக்கு ஆதரவளிக்கப் போகின்றதா? இல்லையேல் ஆதிக்க நாடுகளுக்குக் கைலாகு கொடுக்கப் போகின்றதா என்பதில்தான் இன்றைய உலக அரசியல் சூழ்நிலையே அடங்கியிருக்கிறது.

காங்கோவில் மேற்கும் கிழக்கும் ஒன்று சேருமா? உலக சமாதானம் நிலைக்குமா என்பதற்குச் சில நாட்கள் காத்திருக்கவேண்டும்.

இவ்வளவும் நடந்திருக்கிறது ஆப்பிரிக்காவில்; ஆனால் டில்லிப் பேரரசு இதுவரையில் வாயசைக்கவில்லை; காங்கோ நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றிப் பெருந்தலைவர்கள் எதுவும் சொல்லவில்லை. "நேரு பிரான் என்ன கருதுகிறார், இந்திய மக்களின் ஒருமித்த கருத்து யாது? ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆமர்ஷீல்டுக்குத் துணை புரியும் இந்தியர் இராஜேஸ்வர தயாள் கூறுவதென்ன? அவர் கூற்று மேற்கு நாடுகளில் ஏற்றுக் கொள்ளப் பட்டனவா?" என்றெல்லாம் இந்திய மக்களின் உள்ளங்கள் அறிய ஆவலுடன் உள்ளன. அமெரிக்கா சென்றிருக்கும் பிரதமர் நேரு காங்கோ பற்றி ஏதும் கூறிச் சொல்லவில்லை.

அமெரிக்கா சென்றிருக்கும் நேரு ஐக்கிய நாடுகள் சபையில் காங்கோ பிரச்சினைக்குத் தக்க பரிகாரம்கூறுவிடினும் கூட அங்கு புதியதாக வீற்றிருக்கும் பதினான்கு சுதந்திர நாடுகளின் உறுப்பினர்களைக் காண்பார். அந்தப் புதிய உறுப்பினர்கள் மூலம் விடுதலை ஆர்வத்தைச் சிறிதளவாவது அறிந்து வரட்டும்; வந்தபின், நம்நாட்டில் கொழுந்து விட்டெரியும் திராவிட விடுதலை உணர்ச்சியை எண்ணிப் பார்க்கட்டும்! ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை ஆசிய ஜோதிக்கு அறிவு கொளுத்தட்டும்!

தமிழ்நாட்டில் தொழிற் சங்கத்தை தோற்றுவித்தவர் திரு. வி. க.

தொழிலாளருக்காக முதன் முதல் தொழிற் சங்கத்தைத் தோற்றுவித்த முதல்வர் நாள் இன்று!

மாணிக்கச் சுடரொளி மறைந்து மக்களிடையே பெரும் அவல நிலையை ஏற்படுத்திய நினைவு நாள் இன்று!

அண்ணல் காந்தியடிகள் இறந்ததைக் குறித்து இந்தியத்துணைக்கண்டம் கண்ணீர் சொரிய நின்றது போல், தமிழகத் தென்றல் திரு வி. க. அவர்கள் இறந்ததைக் குறித்து தமிழகம் தவித்து நின்றது. தமிழறிஞர்களெல்லாம் கரைகாண முடியாத மாலுமியைப்போல் தன்னிலை இழந்து தவித்த நாள்!

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று இரண்டாம் நூற்றாண்டில் கூறிய பூங்குன்றனார் கருத்தின் திருவுருவமாய்த் திகழ்ந்த திரு. வி. க. வின் சிந்தனை நின்ற நாள்!

இளங்கோவடிகளின் கனவை நினைவாக்க, நித்த நித்தம், செல்லுகின்ற இடமெல்லாம் ஓயாது 'ஒற்றுமை"— ஒற்றுமை' என்று கூறிய அவரின் வாய் பேச முடியாதவாறு நின்றது. அறிவு மலர்ந்து, அன்பு காய்த்து, அருளாக்கம் கனிந்த கருணை வடிவம் கண்மூடியவாறு நீண்ட உறக்கம் செய்து விட்டது.

தமிழக மக்களுக்குத் தொண்டு புரிந்த தலைவர்களில் சிறந்து விளங்கிய பெரியாரைத் தமிழகம் இழந்து கிடக்கிறது. ஆனாலும் அவரின் நினைவு நாள் நம்மை என்றும்போல் இன்றும் நினைவுறுத்துகிறது.

"இளமை விருந்தின்" மூலமாக நம்மையெல்லாம் இன்பப் பூங்காவிற்கு அழைத்துச் சென்ற அறிஞர்—"பெண்ணின் பெருமை"யை நிலை நாட்டவந்த பெம்மான்— "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்று எழுதி, 'மனிதன் யார்?' என்ற வினவை எழுப்பி, விடையளித்த பெரியார்-"தமிழ்த்தென்றல்" வாயிலாகத் தமிழமுதம் அளித்த தந்தை—"தமிழச் சோலையின்" வழியாக நம்மை அழைத்துச் சென்று

வே. கபிலன்

உணர்வை உண்டாக்கிய உத்தமர் இன்று நம்மிடையே இல்லை. ஆயினும் அவருக்குப் பதிலாக அறிவுரை புகட்டி வரும் நூல்கள் நம்மை அறிவுலகத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

இத்தகைய பெரியாரை நாம் என்று திரும்பவும் காணப் போகிறோம்? அன்பையும் பண்பையும் அடிப்படையாகக் கொண்டு எழுதிய ஏந்தலை என்று பார்க்கப் போகிறோம்? தூய்மையும், எளிமையும், பொதுமையுமாக விளங்கிய ஒப்பற்ற தலைவரை என்று காண்போம்?

ஆம்! அத்தகைய தலைவரை இனி நம்மால் காண முடியாது. இனி அவரின் நூல்களைத்தான், நாம், அவராகப் பாவித்து நடக்கவேண்டும். செத்துக்கிடந்த தமிழகத்தில் புத்துயிரளித்த அப்பெரியாரை, இனி நூலின் வாயிலாகத்தான் கண்டு களிக்கவேண்டும். அவரின் பேச்சை நம்மால் கேட்க இயலாவிட்டாலும், எழுத்தின் மூலமாக எதனையும் கண்டு உணர்ந்து திருந்தலாம். பாடலின் வாயிலாக,

"தாய்மொழி போற்றுக :
தமிழகம் போற்றுக ;
வேற்றுமை நீக்குக ;
ஒற்றுமை வேண்டுக ;
உடலினைப் போற்றுக :
ஒழுங்கினை ஓம்புக ;
மண்ணினை வெறுத்திடும்
மாதரை வெறுத்திடும்
போலித் துறவினைப்
புறத்தே தள்ளுக ;
நந்தமிழ்த் தாய்மார்
முந்திடும் முறையில்
எவ்வெவ் வழியிலும்
செவ்விதின் உழைக்க ;
இயற்கை அழகில்
இறைவனைக் காட்டுக ;
சாதி சமயச்
சழக்கினை ஒழிக்க ;
சமநிலை காண்க :
சமரசம் போற்றுக ;
வறுமை ஒழித்திட
உளமிகப் பெருக்குக ;
அடிமை நினைவை
அகற்றுக யாண்டும்"

என்றவாறு பணி புரிவோம். இதைவிட ஒரு உயர்ந்த கருத்து எந்த நாட்டு நூல்களிலும் காண இயலாது. அத்தகைய கருத்தை எழுதிப் போந்ததை நினைத்துச் செயலாற்றுவோம். அவர் வழிகாட்டிய பண்பின் பிரகாரம் ஒற்றுமை நிலை நாட்டுவோம்! அதுதான் அவரின் நினைவு நாளில், நம் அகத்தே நினைத்துச் செயலில் செய்துகாட்டும் ஒரே வழி!

போரையும், பிணக்கையும் உண்டாக்கிப் பிதற்றும் மக்களே! ஒன்று படுங்கள்— உங்களிடையே உயர்ந்த எண்ணங்கள் வளரட்டும்— ஒருவரை யொருவர் நன்றாகப் புரிந்து அன்பையும், அறிவையும் பெருக்குங்கள்! என்று அவரின் கல்லறையில் இருந்து கிளம்பும ஓசையைக் கேட்டுத் திருந்துங்கள்.

எரிக்கப்பட்ட சாம்பலிலிருந்து எழும் எண்ணற்ற கருத்துக்களைப் பாருங்கள்! இனியாகிலும் 'தமிழினமே ஒன்றுபடு!' என்று வரும் ஒலியைக் கேளுங்கள். அந்த ஒலியைக்கேட்டுப் பின்பற்றி நடக்க முற்படுங்கள். அப்போது தான் தமிழ்த் தந்தை திரு. வி. க. அவர்களுக்கு நன்றி செலுத்தியவர்களாவோம். உண்மையில் நாம் அவரை, நினைவுபடுத்திக் கொண்டவர்களாவோம்.

அறிவிப்பு.

தோழர் தென்னரசு அவர்களால் எழுதப்பெற்று **இனமுழக்கத்தில்** வெளிவந்த—வெளிவரும் கதை, கட்டுரை யாவும் புத்தக வடிவில் வெளியிடும் உரிமை **காவியக் கழகத்**தாருக்கே உண்டு. மீறி வெளியிடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காவியக் கழகம் : சென்னை-2.
உரிமையாளர் : கண்ணப்பா வள்ளியப்பன்

காமக் கட்டழகி - ஏதென்ஸ் எழிலரசி ஹெலன்ஷாவ் களியாட்டம்!

நீதிமன்றத்திலே பாராட்டும் பட்டமளிப்பும்!

கலாச்சார தூது கோஷ்டி பெருகட்டும்! மானமும் பண்பாடும் அழியட்டும்!!

அங்கங்களெல்லாம் தெரியும்படி, ஆ(சா)பாசமாக ஆடினுள் — ஏதென்சு நகரத்து எழில் நங்கை "ஹெலன் ஷாவ்" அரை நிர்வாணமாகக் காண்போர் காமுற்று மதி மயங்கும் வண்ணம் காணப்பட்டாள் எனக் கைது செய்தனர். குற்றம் புரிந்தவளை நீதி மன்றத்திற்குக் கொண்டு வந்தனர். பண்பாட்டிற்கு முரணுக — ஆசையைத் தூண்டிவிட்டு ஆண்கள் சமுதாயத்தை அல்லோல கல்லோலப் படுத்த எண்ணிய வனிதாமனிக்குக் கிடைத்ததென்ன?

தண்டனையா? — இல்லை. தனக்குள்ளேயே ஆயிரம் ஊழல்களை வைத்திருப்பவர்கள் அயல்நாட்டுக்காரரையா தண்டிப்பார்கள்? பண்பாட்டின் பாது காவலன் என்ற பேரிலே — அயல் நாட்டுக்காரர்கட்கு மரியாதைகொண்டாடு என்ற முறையிலே — நற்சாட்சிப் பத்திரம் வழங்கி இருக்கிறுர்கள்! இந்த வெட்கக்கேடு இந்த நாட்டில் தவிர பிற நாட்டில் உண்டா? நெஞ்சில் உரமற்ற நீதிபதிகளின் செய்கைகட்கு மக்கள் மன்றம்தான் தீர்ப்பளிக்க வேண்டும்!

'பாம்பஸ்டர்ஸ்' என்ற குழுவோடு களியாட்டம்புரிய கல்கத்தா கிராண்ட் ஹோட்டலில் தங்கி யிருந்தாள் 'ஹெலன் ஷாவ்' ஏதென்சு நகரத்திலே பிறந்த கிரேக்கக் கட்டழகி. 1956-ல் மிஸ்கிரீஸ் (Miss Greece) என்ற பட்டம் வாங்கியவள்.

அன்றிலிருந்து அவளுக்கு அடித்தது யோகம். பல பட்டங்களை வாங்கி விட்டுவேலை தேடி அலுவலகங்கள் தோறும் ஏறி இறங்கி வரும் இந்நாளில் — ஓரே பட்டத்திஞல் வருங்காலத்தை வாழ்க்கை வசதியோடு ஓட்டத்தலைப் பட்டு விட்டாள். கயிற்றின் மேல் நடந்து ககனத்தில்ஆடினுள்! அங்கங்களெல்லாம் தெரியும் படி — உடலோடு உடலாய் ஒட்டிய உடையணிந்து காமக்கூத்து ஆடினுள்! - காலில் கட்டை அணிந்து-கால் தட்டி ஆடும் டேப் டான்ஸ் ஆடினுள்! பருவங்கை இப்படி யாடும் போது பார்ப்பவர்கள் சும்மாவா இருப்பார்கள். நல்ல ஆதரவு தந்தனர். வாழ்க்கை முழுதும் பொதுத் தொண்டாற்றுபவன் மண்ணோடு மண்ணுய் மக்கிப் போவதைக் கண்டிருக்கிறோம் நேற்று வந்தவள் இழிந்த முறையில் பொருள் ஈட்டி உலக நாடுகளான ஜப்பான் சீனு, அமெரிக்கா, ரஷ்யா, கெய்ரோ போய் வருவதையும் கண்ணுரக் காண்கிறோம்! 'ஹெலன் ஷாவ்' உலகம் சுற்றத் தலைப்பட்டாள். நல்ல வேளை—இழுத்துக் கொண்டு வந்த கணவன்ராபர்ட்ஜோனை வீட்டை விட்டு விரட்ட வில்லை! பலரைப்பழையசோத்துப்பரமசிவமாக்க வில்லை! ஆதரித்தாள். உலக நாடுகள் பலவற்றையும் சுற்றி விட்டு கராச்சிக்கு வந்தாள். அங்கே கண்ட கலையார்வ மிக்க திரு ஆபெராய் என்பவர் ஆறு வாரங்களுக்கு ஹெலனை ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இந்திய மக்கள் ஆதரவு நன்ருகக் கிடைத்தது. இந்தியாவை 'நைஸ் பிலேஸ்' (Nice place) என்கிருள்! சும்மாவா அருமையான இடம் என்கிருள். எத்தனை குபேரர்கள்கொட்டி அளந்தார்களோ இப்படி சிலநாட்களை ஓட்டிய பின்னர்தான் அவளைக் கைது செய்தனர். 'காமக் காட்சி' நடத்தியவளைக் கையிலே விலங்கு பூட்டவில்லை! ஒரு வேளை மகாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து அடியார்களை சோதிக்கிருரோ என எண்ணிஞர்களோ என்னவோ?

கல்கத்தா மாகாணத் தலைமை நீதிபதி திரு. பி. ஜாயிஸ் முகர்ஜி வழக்கை விசாரணை செய்தார். அவரோ நல்ல கலை ரசிகர்! அவளோ கறைபடாத வடிவம்? நீதி 'வழக்கை' ரசித்தது! குற்றம் தள்ளுபடி செய்யப் பட்டது அத்தோடு விட்டாரா? சிறந்த கலையரசி என்று பாராட்டி ஒரு நற்சாட்சிப் பத்திரத்தை வழங்கினுர்!

விடுதலையும் விருதும் பெற்றப் பேரழகிக்கு வரவேற்புக் கொடுக்க நீதிமன்றத்திற்கு வெளியே ரசிகர் கூட்டம் காத்துக் கிடந்தது. கணக்கற்ற உதடுகள் அவள் கன்னத்தைச் சுவை பார்த்தன. அவளுக்குத்தான் இது புதுமையில்லையே! கலை ரசிப்பதற்குத் தானே! 'இப்படி அவமரியாதையாக ஆரணங்கைக் கைது செய்து விட்டனரே' என்று மக்கள் ஆத்திரங்கொண்டனர்'.

'என் மீது ஏனைய இடங்களிலெல்லாம் பெண்கள் தான் பொருமைப் பட்டனர் என்றிருந்தேன்! இங்கேயோ ஆண்கள் பொருமைப் படுகின்றனர்' என்ருள் ஹெலன் ஷாவ்'

"அவர்கள் கிடக்கிருர்கள். ஆண்மையற்ற அலிகள்! உங்கள் வருங்காலத் திட்டமென்ன?"

இது ரசிக சிறு மக்களின் பேட்டி!

"பிள்ளைகள் பெறுவேன். அவர்களுக்கும் இதே தொழிலை அதாவது நாட்டியக் கலையை கற்பிப்பேன். ஏனென்ருல் கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையல்லவா?"

இதுதான் இன்றைய அரசாங்கம் அயல் நாட்டாரிடம் கொண்டுள்ள கலாச்சார உறவு முறைகள் வாழட்டும் கலைகள்! ஒழியட்டும் மானமுள்ள மனித சமுதாயம்!

★

கவிஞரின்

அடுத்த படம்!

கவிஞரின் அடுத்த படத் துவக்க விழாவிற்கு சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் எம். பி., அவர்கள் தலைமை தாங்கினுர்கள். 30—9—60 காலை 9 30 மணியளவில், மெஜஸ்டிக் தியேட்டரில் துவக்க விழா நடந்தது.

திரு சம்பத்—கவிஞரின் கலைப்பணியைப் பாராட்டிப் பேசினுர். கவிஞருக்குப் பெருமையும் புகழும் அளிப்பது அன்னைத் தமிழ் மொழி கவிஞருக்கு பக்கபலமாக இருந்து அவருடைய இன்னல்களை யெல்லாம் தீர்ப்பது அவருடைய 'நட்பு' கவிஞருக்கு நண்பர்கள் அதிகம் இருக்கிருர்கள். அவருடைய நட்பினுல் நமக்குப் பெருமையும் இன்பமும் உண்டு என்ருர்.

மேலும் பேசுகையில் கலைஞர்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் சொல்வதை விட தப்பு அபிப்பிராயமே அதிகம் சொல்லுகின்றனர். அப்படித் தவருகக் கூறுதல் 'சுவை' போலும் என்ருர். கலைஞர்களிடம் இந்த நாட்டின் பெரும் பொறுப்புக்கள் உள்ளன. இப்பொழுதெல்லாம் கலைஞர்கள் இத் தொழில் மாட்டு பொறுப்போடு நடந்து கொள்ளுகின்றனர். இது மிகவும் பாராட்டுதற்குரியது. கவிஞர் கண்ணதாசன் படத்தில்—நடிக்க சிவாஜி கணேசன் ஒப்புக் கொண்டு முன் வந்திருப்பது உண்மையிலேயே தாராள மனப்பான்மையையும் நட்பையும் காட்டுகிறது. அருமை நண்பர் சிவாஜி கணேசன் நல்ல முறையில் இப்பணிக்கு உறு துணையாக இருப்பார் என நம்புவதாகக் கூறினுர்.

தென் இந்திய திரைப் படத் தயாரிப்பாளர் ஸ்ரீராமுலு நாயுடு படப் பெட்டியை முடுக்கி வைத்தார். சிவாஜி கணேசன் 'கிளாப்' பலகையைத் தாங்கி நின்ருர்.

வெற்றிப் படங்களை எடுத்துப் பெரும் புகழ் பெற்ற ஸ்ரீராமுலு நாயுடு இன்றைய சினிமா நிலையைக் குறித்துப் பேசினுர். இன்றைக்கு சினிமாத் துறை உள்ள நிலையில் படமெடுப்பது பயப்பட வேண்டிய ஒன்று — என்ருர்.

இதற்கு படத் தயாரிப்பாளர்கள்தான் குற்றவாளிகள் எனவே வேறு எவரையும் குறை சொல்ல முடியாது என்ருர். சென்ற ஆண்டு 136 படங்கள் வெளிவந்தன. அவற்றுள் 4 படங்கள் தான் லாபம் பெற்றன. 5, 6 படங்கள் தான் அசல் வந்தது. மிகவும் எதிர்பார்த்த 5, 6 படங்கள் நஷ்டமடைந்தன. படத் தயாரிப்பாளர்கள் படத்தை வினியோகஸ்தர்களுக்குக் கொடுத்து விடுகின்றனர். நஷ்டம் பரவலாகிறது 'கச்சா' பிலிம் குறைக்கப் பட்டது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 'ஷீனா' திசையை அடைந்தது.

நடிகர்களைக் குற்றம் சாட்ட முடியாது. நடிகர் ஒருவர் பல படங்களில் நடிப்பது தெரிந்தும் படத் தயாரிப்பாளர் அவரை ஒப்பந்தம் செய்கிருர். நண்பர் சிவாஜி கணேசன்—கவிஞர் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டது அதிர்ஷ்டம் தான். இதற்கு கணேசன் நல்ல முயற்சி செய்ய வேண்டும் என்ருர்.

வழக்கறிஞர் வீ. பி. ராமன் பேசும் போது — கவியுள்ளம் படைத்தவர்கட்கு பொறுப்பும் நேரமும் பெரிது. கவிஞருக்கு மறதியதிகம். இவர் **Prompt and Business minded** டாக இருக்க வேண்டும் என்ருர். பேசி முடித்து இடத்திற்குப் போய் உட்கார்ந்தவுடன் கவிஞர் மாலையிட்டார் இப்பொழுதுதான் குறித்த காலத்தில் எதையும் செய்ய மறந்துடருர் என்றேன். அதுபடியே — மாலையை இப்ப போடுருர் — என்ருர், (சிரிப்பு)

பிறகு சிவாஜி கணேசன் பேசினுர். நட்பினுல் சாதிக்க முடியாத காரியத்தையும் சாதிக்க முடியும் என்ருர். இந்தப் பொறுப்பை இவர் ஏற்பது 'குருவித்' தலையில் பனங்காயை ஏற்றுவது போலிருக்கிறது என்ருர். தன்னுல் இயன்ற அளவு பொறுப்போடு துணை நிற்பதாகக் கூறினுர்.

விழா இறுதியிலே கவிஞர் அனைவருக்கும் நன்றி கூறினுர். கணேசன் எவ்வளவு மாற்றுக் கருத்துக்களும் கொள்கைகளும் கொண்டிருந்தாலும் தொழிற்துறையில் உதவி செய்வார் என்ருர். வெற்றிப்பட இயக்குநர் பீம்சிங்—இப்படத்தையும் 'டைரக்ட்' செய்வார் என்ருர் அவர் மேலும் ஐந்து ஆண்டுகள் பெரு வெற்றி காண வேண்டுமென்ருர் 'கேமரா'வையும் — வெற்றிப் பாதையில் வீறு நடைபோடும் 'விட்டல்' தான் கவனிப்பார் எனவுங் குறிப்பிட்டார். சிவாஜி மிகவும் நல்ல எண்ணம் படைத்த நண்பர் என்ருர். இந்த எங்கள் தொடர்பினுல் வெளியுலகம் பரபரப் படைந்துள்ளது. இவர் எழுதி-அவர் நடித்தால் எப்படி இருக்கும் பார்ப்போம்? என்கின்றனர் எனக்கும் அதைப் பார்க்க ஆசைதான். விழாவிற்கு வந்திருந்த ஆசிரியர் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கட்கும் நன்றி கூறினுர்.

இத்துவக்க விழாவிற்கு திரு ஏ. எல். எஸ்., மானகிரி லேனு, டைரக்டர் பீம்சிங், தாதாமிராசி முதலிய பல பிரமுகர்களும் வந்திருந்தனர்.

ச. கோ. இராமானுசம் (எம். ஏ.,)
விசேட நிருபர்.

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர்: கண்ணப்பாவள்ளியப்பன், இளமுழக்கம் அச்சகம், இராசகோபால நாய்க்கன்சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2;

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சிற்றரசு
விலை 16 காசுகள்.
பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

தோழர்கட்கு!

இந்தஇதழ் இனமுழக்கம் வழக்கமாக இடம் பெறுகின்ற முகப்பு இல்லாமல் வெளிவந்துள்ளது. 'இனமுழக்க இதழிலே வருகின்ற ஒவ்வொரு கட்டுரையும் சுவையாக இருக்கிறது. அப்படி இருக்கையில் முன்பக்கத்திலும் ஏன் நீங்கள் கட்டுரைகளை வெளியிட்டு எங்களுடைய எண்ணத்தை பூர்த்தியாக்கக்கூடாது?' என்று பல தோழர்கள் நாள்தோறும் மடல்கள் வரைந்து கொண்டிருப்பதால் இவ்வார இதழ் முகப்பை நிறுத்தி இருக்கிறேம். மேலும் உங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிப்பீர்களானல் அதன்படி செய்ய கடமைப்பட்டவர்களாவோம்.

முந்திரா சுரண்டலை முந்திவிட்ட கிருஷ்ணராஜ் தேக்கர்ஜி!

உலகப் போருக்கு முன்

உலகயுத்தத்திற்கு முன்பே பஞ்சாலைத் தொழில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, சராசரி வியாபாரத்துடன் சில லட்சங்களுக்கே நடைபெற்றது. கிருஷ்ணராஜ் தேக்கர்ஜிதான் இதனைக் கட்டுப்படுத்திவந்தார். 1938—லேயே இந்தத் தொழில் மட்டரகமானதுடன் ஊழல் நிறைந்ததாகி முற்றிலும் அழிந்துவிடும் நிலையில் இருந்தது.

என்றாலும் உலகப் பெரும்போர் பலருக்கும் 'நல்லயோகம்' அளித்தது போலவே — தேக்கர்சிக்கும் 'நல்ல யோகம்' அளித்தது. இவர்தான் கட்டுப் பாட்டுத் திட்டக் குழு'விற்கு தகுந்த தலைவரெனத் தேர்ந்து நியமித்தனர். இத்துறையில் இந்தியாவின் முக்கியத்துவத்தைப் பெற்றார்.

ஒருவன்கைக்கு அதிகாரத்தைக் கொடுத்துப் பார். அப்பொழுது

மெய் மெய்யாய் போகுமடி—
குதம்பாய்
மெய் மெய்யாய் போகுமடி

என்பதுதான் மெய்யாயிற்று.

பாதை தெரியுது பார்!

இதற்குப் பிறகு இவர்கள் கண்ணோட்டம் -- புதிய தொழிலில் விழுந்தது! 'சீனப் பஞ்சு ஏற்றுமதியாளர் - லட்சுமி பஞ்சு வியாபாரிகள் என்ற பெயர்களில் 'ஏற்றுமதி இறக்குமதி'த் துறையில் இறங்கினர். அடிப்படையாக அமைந்த நான்கு பஞ்சாலைகளுடனும் மேற்தளமாய் அமைந்த ஏற்றுமதி இறக்குமதியுடனும், உலகநாடுகளான சீனு, ஜப்பான், ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், மத்தியகிழக்கு நாடுகள் ஐரோப்பாக்கண்டம், அமெரிக்கா மேலும் தெற்கு அமெரிக்க மாகாணங்களோடுவியாபாரத்தொடர்பு கொண்டார். இவ்வாவு வேலை தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. அதை வாங்கி ஏனைய தொழிற்சாலைகளுக்கு

இயக்கும் இயந்திரங்கள்இல்லை!!! பெயர்ப் பலகைகளும் இல்லை!!!!- இம்மட்டுமா பதிவு செய்யப்படக்கூட இல்லை பிறகு—எப்படி இத்தொழிற் துறைகள் இயங்க முடியும்?—என்றால் கணக்கு ஏடுகளிலும் குறிப்புப் புத்தகங்களிலும் தான் வியாபாரமும் தொழிலும் இயங்கின!

வருமான வரியைத் தவிர்க்கவும் பொய்க்கணக்குத் தயாரிக்கவும் இந்த 'ஏடுகள்' பயன்பட்டன! இவ்வேடுகள் கிருஷ்ணராஜ் தேக்கர்சி-யின் சொந்தப் பாதுகாப்பின் கீழ் இருந்தன.

இறக்குமதி அனுமதிகள் கிடைக்கு முன்பே-தொழிற்துறை இயக்குநருக்கு முன்பாகிப் பதிவு செய்யப்படவுமில்லை. ஒவ்வொரு பஞ்சாலைத் தொழிற்சாலையும். பஞ்சாலை கமிஷனரிடம் 'வரிமுத்திரை' பெற்றாகவேண்டும், இவருடைய தொழிற்சாலைகள் எதையும் பெறவில்லை. அப்படியிருந்தார்! இன்னும் பல பதவிகள் இவரைத் தேடி அடைந்தன.

'பாங்க்'கின் பங்கு!

'பாங்க்'குகள் இவருடைய தனியுடமையாயின. அடிப்படைப் பணத் தொகைகளெல்லாம் கடனாக எடுக்கப்பட்டன! 'ஒவர் டிராப்ட்' (over draft) தாராளமாக வழங்கப்பட்டன! இவருக்குக் கட்டுப்பட்ட 'ஆடிட்டர்'களே கணக்கு வழக்குகளை சரிபார்த்தனர். கையாண்டதுபோக மீதிதான் 'பாங்க்குகளில் கிடந்தன.

நல்ல குடும்பம்—ஒரு 'பேங்க்' ஆகும்! பாலைபிடித்தவள்-பங்குதாரி ஆனாள்!

பத்தொன்பது பங்குதாரர்களைக் கொண்ட 'பேங்க்'கில் அனைவரும் கிருஷ்ணராஜ் தேக்கர்சியின் நெருங்கிய உறவினர்கள்! இவர்களில் பதினான்கு பேர்கள் பெண்கள்! பாலை பிடித்தவள் பாக்கியசாலியானாள், இப்

ரூ. 4.66 கோடி வருமான வரி தேக்கிவைத்தார்!

அவனுடைய உண்மையான குணங்கள் வெளிப்பட்டுவிடும்.

என்ற ஒரு பொன்மொழி உண்டு. இவருடைய முழு ஆக்கிரமிப்பை பதின்மூன்று ஆண்டுகட்கு முன்பே கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

பை பையாய் பொன் கொண்டோர்...

பொருளாதார, வாணிப, தொழிற்துறை அமைச்சரவை நியமித்த துப்பறியும் அதிகாரிகள் சமர்ப்பித்த செய்திகள் சரிவர கவனிக்கப்படாமல் ஓர்புறம் ஒதுக்கி வைக்கப்பட்டன. ஷோலாப்பூர் மில்'லின் இயக்குநர்களில் ஒருவராயிருந்த இவர் மேல்—பொருளைக் கவர்ந்து கொண்டதற்காகவும், நிர்வாக ஊழலுக்காகவும், வ்யாபார சட்டத்தை மீறியதற்காகவும் குற்றம் சாட்டினர். எந்தவிதமான வழக்கும் எடுக்காமல் இவரை விட்டு விட்டனர்.

பை பை யாய் பொன்
கொண்டோர்
பொய் பொய்யாய் சொன்னாலும்

களையும் கவனிப்பதென்பது எவராலும் முடியாது! தேசிய கைத்தறி நூற்புத் தொழில் - ரயான் கைத்தறி தொழில் பிரபாத் கைத்தறி ஆலை - என்ற மூன்று தொழிற்சாலைகள் கால வெள்ளத்தில் கரைக்கப்பட்டன. இதன் பேரால் 1.36 கோடிக்கு 'லைசன்சு' வாங்கப்பட்டதாகத் தெரிகிறது.

விற்று அவைகளையும் அழியும்படி செய்தது. 'தாளில் பதிந்த குறிப்புக்கள்தாம் இவைகளை தழைக்கச் செய்தது. தாள் அளவில் வியாபாரம் தடைபட்டது.

**அதிசயம்!—
ஆனல் உண்மை!?**

இப்படிப்பட்ட தொழிற்சாலைகளும், நிறுவணங்களும் பற்பல

தும் லட்சக்கணக்காக புழங்கி வந்தன,

பதவி உயர்வு

இங்ஙனம் தொழில் சாம்ராஜ்யம் அமைத்து அவைகட்கு முடிசூடாத மன்னராக விளங்கினர். தொழிலை சுமுகமாக ஒட்ட பண முடை ஏற்பட்டது. இரண்டு சேமிப்பு நிலையங்கட்கு டைரக்டர் ஆனர். பின்னும் பல சேமிப்பு

★ முன்னாள் நிதிமந்திரிகள் திரு. சி. டி. தேஷ்முக்' திரு. டி. டி கிருஷ்ணமாச்சாரி கதிதான் மொரார்ஜி தேசாயிக்கும் ஏற்படுமா?

★ இந்தியப் பஞ்சாலை சங்கத் தலைவர் கிருஷ்ணராஜ் எம். டி. தேக்கர்ஜியின் ராஜத் துரோகம் - வெளிப்படுகிறது'

'ஆர்ட் சில்க் யார்ன்'(art silk yarn) ஜப்பான், இத்தாலி மற்றும் ஏனைய நாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்பட்டு இந்த

கிளைகளாகத் தழைத்து எண்ணிக்கை ஐம்பது (50) ஆக்யது. இவைகளுக்கு — அலுவலகங்கள் இல்லை! அலுவலர் இல்லை!!

நிலையங்களில் நுழைந்தார். பிறகு இரண்டு 'பாங்கு'களுக்கு 'டைரக்டர்' ஆகும் பேறு பெத்

பெரும் பங்குகள் இவருக்குப் போதவில்லை! சாம்ராஜ்யாதிபதி போன்றப் பதவியும் — பச்சை நோட்டுக்களும் கொண்ட கிருஷ்ணராஜ் — கோடிக் கணக்கைத் தான் கணக்கென்பார்',

ஆனாலும்,

" எத்தனை கோடி பணமிருந்
தாலும்
கணக்கு வேனும் நாட்டிலே
கணக்கு வேனும் நாட்டிலே"

என்றாயிற்று. இச் செய்தியை வெளியிட்ட 'பிளிட்ஸ்' என்னும் பாம்பே பத்திரிகைமீது 'தேக்கர்சி' வழக்குத் தொடர்ந்துள்ளாராம்.

இப்படிப்பட்ட முதலைகள்இ[illegible] நாட்டிலே ஏராளம்! அரசா[illegible] தின் கண்ணுக்குப் பட்ட[illegible] மட்டும் வழக்கு மன்[illegible] கொண்டு வருகின்றன[illegible] இலை மறை காயா[illegible] களை மக்கள்மன்[illegible] வாவேண்டும்! [illegible] காட்டிக்கொ[illegible] கா[illegible] கை[illegible]

பதினாரும் லூயி மன்னன் பட்டத்திற்கு வந்ததும் ஒரு புதுயுகம் தோன்றுமென எதிர்பார்க்கப்பட்டது. வழி வழி வந்த மன்னர்களில் ஒரு சிலரேனும் நல்லவர்களாக, நாட்டு மக்களுடைய குறைகளைக் கவனித்துப் போக்குபவர்களாக இருக்கலாமல்லவா என்று நூற்றாண்டுகள் தோறும் ஏமாற்றமடைந்த மக்களின் சந்ததியார்கள் எண்ணுவது இயற்கை தான். ஆள்வோனுக்கும் ஆளப்படுவோருக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் புனித ஒப்பந்தம் புரவலர்களால் மதிக்கப்படவேண்டுமென்று மாதா கோயிலை வணங்கி வரங்கேட்டு நின்றோர் அநேகர். எனினும் பதினாறுவது லூயி மன்னன் காலத்திலும் மக்கள் முகங்கள் மலரவில்லை, ஏனெனில் அரசனுக்குரிய இலக்கணமே இல்லாத பேதை அவன், மந்த புத்தி, தூங்குமூஞ்சி, கேளிக்கை லோலன், அவனுக்குப்பிடித்தவை வேட்டைஆடுதல், நாடகம், குடி, இன்ப வேட்டைக்காரியும், ஊதாரியுமான மேரி அண்டானியட் இவனது மனைவி, கணவனைத் தன் விருப்பம்போல் ஆட்டிப் படைக்கக் கூடியவள். மெத்த சாகசக்காரி, ஆகவே அரசன் லூயியைத் தன் மனம்போல் ஆடி தனக்கு அடங்கி நடக்கக் கூடிய நிலையில் கொண்டுவந்து வைத்துக்கொண்டாள். இருவரும் இளவயதினர். அரசியல் காரியங்களைக் கவனிக்கவேண்டிய நேரத்திலும் ஆனந்தத்திலேயே மூழ்கி இருந்தனர். என்றாலும் மக்களிடம் நம்பிக்கை வளர வேண்டுமென்று, டர்காட் என்ற முற்போக்கு வாதியை பொருளாதார மந்திரி யாக்கினார்கள். அவர்கள் நினைத்தபடியேமக்களுக்கு நம்பிக்கை வளர்ந்தது. இனி பயம்இல்லை என்று எக்காளமிட்டனர் மக்கள், மன்னனால்தான் புதுயுகம் பூக்கவில்லை, இந்த டர்காட் என்ற மந்திரி மூலம் கட்டாயம் புதுயுகம் பூக்கும் என்று முழுக்க முழுக்க நம்பினர்.

இவரை ஒரு பாதிரியாக பழக்க வேண்டுமென்று விரும்பினார்கள். எனினும் அவருக்கு அந்த வேலை பிடிக்காத காரணத்தால் வழக்கறிஞரானார். அவர் ஓர் புரட்சிக்காரர் அல்லவென்றாலும், அமைதி, ஆள் குறைப்பு, சீர்த்திருத்தம் என்பது அவரது குறிக்கோள். மக்களுக்குப் பொறுப்பான ஆட்சியை பழையபடி மன்னன் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது அவரது எண்ணம். அதை அமைதியான முறையிலேயே செய்யவேண்டுமென்று அவர் விரும்பினார்.

எனினும் அவரது உயர்ந்த நோக்கத்தில் இடி விழுந்ததைப் போல 1774ல் விளைச்சல் சரி இல்லை. நிலங்களெல்லாம் தரிசாகக்கிடந்தன. உழவர் பெருமக்கள் ஊருக்கு ஊர் பெயர்ந்தோடத்தலைப் பட்டனர். ரொட்டியின் விலை விஷம்போலேறிற்று. இதன் காரணமாக பல நகரங்களில் கலவரமும்குழப்பமும் நடந்தன. இந்த பஞ்சத்தை ஒடுக்கச் சரியான வழிகண்டு பிடிக்கத் தெரியாத டிஜான் கவர்னர் மக்களைப் பார்த்து புல்லை சாப்பிடச் சொன்னார். டர்க்காட்டுக்கு விலைக் கட்டுப் பாடு பிடிக்கவில்லை. நகரங்களில் கிளர்ச்சியைத் தூண்டியதன் விளைவாக இரண்டு கலகக்காரர்கள் தூக்கிலிடப்பட்டார்கள் பார்சில். மெள்ள மெள்ள தலை தூக்கிக்கொண்டிருக்கும் புரட்சியின் சின்னமாக விளங்கியது அது. டர்க்காட்டின், மக்கள் பிரதி நிதித்துவக் கொள்கையை ஒப்புக்கொள்ளாத அரசன் அரசியின் தூண்டுதலின் பேரில் டர்க்காட்டை பதவியிலிருந்து நீக்கி விட்டார்; இந்த செயல் மக்களுக்கு ஏற்பட்ட மற்றோர் ஏமாற்றமாகும். புரட்சியின் வாடை இன்னும் கொஞ்சம் அதிகமாக வீசத்தலைப் பட்டது.

டர்க்காட்டை நீக்கி விட்ட பிறகு ஜெனிவா லேவாதேவிக் காரனை நெக்கர் பொருளாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் நேர்மையானவர் ஆனால் வலுவற்றவர். டக்கார்ட்டுவுக்கு இருந்த கொஞ்சம் நஞ்சம் துணிகரம் கூட இவரிடம் இல்லாமலிருந்தது. இவர் ஒரு புராடெஸ்டெண்ட். புராடெஸ்டெண்டுகளுக்கு அதிகாரமில்லாத நாட்டில இந்த புராடெஸ்டெண்டால் நீண்ட நாட்களுக்குப் பதவியிலிருக்க முடியாதுஎன்பதுதெளிவாகிவிட்டது. எனினும் சற்றுத் துணிகரமான காரியங்களிலே இறங்கினார். இந்தத் துணிகரம் இவருக்கு ஏற்பட்டதற்குக் காரணம், எந்த நேரத்திலும் தன் பதவி பறிபோகும், ஆகவே அதற்குள் எதாவது தன்னாலியன்றதை செய்துவிட வேண்டும் என்பது தான். ஆகவே இவர் விலைக்கட்டுப் பாட்டை ஆதரித்தார். 1779 அரசாங்க நிலங்களிலிருந்த பண்ணை அடிமை முறையை ஒழித்தார். 1780ல் கைதி களிடமிருந்து வாக்குமூலம் வாங்குவதற்கு நடத்தப் பட்டு வந்த சித்ரவதைஒழிக்கப்பட்டது. அமெரிக்கா விடுதலைப்போர் தொடங்கிய நேரம், அதில் பிரான்சு தலையிட்டு துருப்புக்களைத்தன் செலவிலேயேஅமெரிக்காவுக்கு அனுப்பி வைத்த காரணத்தால் கஜானா காலியாகி விட்டது. 1781ல் பிரான்சின் பொருளாதார நெருக்கடியின் காரணம் என்ன என்பதை விளக்கி தைரியமாக நெக்கர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதனால் இவருக்கும் டக்கார்ட்டேவுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்பட்டது. அரசன் சினம், அரசியின் தூண்டுதல் பொருளாதார மந்திரி விலக்கப்பட்டார் என்ற பழைய செய்தி தான்.

சீர்திருத்தம் பொருளாதாரம்சமத்வம், ஏழைகள் அழுகுரல், சிறு சிறு கலகங்கள், புரட்சியின் வாடை, எல்லாம் மயக்கம் போட்டு விழுந்தது. சிலஆண்டுகள் பிற்போக்குவாதிகள் கொட்டமடித்தனர். தலைதெறிக்க நடந்தனர். அதிகார வர்க்கம் அந்தக் கொடுமை யாளர்களுக்கு வெண்சாமரம் வீசிற்று. பொருளாதார அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட இருவர் சீர்த்தி ருத்தத்தின் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள் என்ற காரணத்தால் அவர்கள் விலக்கப்பட்ட பிறகு வேறு யார் என்று மக்கள் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும் நேரம், அரசியின் உள்ளங்கவர்ந்த கலோன் சுலோன் அலெக்சாந்தர், 1783ல் பொருளாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். கடன் கிடைக்கின்ற வரையில் கடன் வாங்கினார். ஏன்? மக்கள் வறுமையை போக்கவா? அல்ல. அரசியை மகிழ்விக்க. இதனால்அரசியின் கூத்தும் கேளிக்கையும் அளவு மீறின.

திருவாளர் பற்றுக்குறை திருவாட்டி பற்றுக்குறை

கலோன் எவ்வளவுகடன்வாங்கியும் மக்களுக்கு அதனால் நன்மையொன்றும் கிடைக்கவில்லை. அரசமாளிகை யிலிருந்தவர் சேல்ஸ் வெளிச்சமாக இருந்ததே தவிர மக்கள் மனம் உட்பட அவர்கள் வாழ்ந்த இடம் அவ்வளவும்இருட்டாய்த் தானிருந்தது. இதனால் கொதிப்படைந்த மக்கள் கலோனை, திருவாளர் பற்றுக்குறை என்றும், அரசி அண்டானியட்டை திருவாட்டி பற்றுக்குறை என்றும் அழைக்கத் தொடங்கினர். இந்தக் கேலியும் கிண்டலும் கலந்த ஏளனக்கணைகள் நாட்டின் எல்லா பக்கங்களிலிருந்தும் புறப்பட்டன. இவ்வளவு பற்றுக்குறைக்கும் கொந்தளிப்புக்கும் என்ன காரணமென்றால், அதுவரை சீமான்களுக்கு வரியே இல்லை. அதனால் கடன் சுமை ஏறியது. ஏழைகள் வரி தரவில்லை, சிற்றூர் முதல் பெரு நகரங்கள் முதல் கொந்தளிப்பு உருவெடுத்து விட்டது. அதனால் சீமான்களுக்கும் பாதிரிகளுக்கும் வரி விதிக்கவேண்டுமென்று கலோன் திட்டமிட்டார். சீமான்கள் இதை எதிர்த்தனர். 1787ல் அரசன் சீமான்களின் எதிர்ப்புக்கஞ்சி கலோனை பதவியிலிருந்து நீக்கிவிட்டார், அவருக்குப் பின் வந்த லொமீனும் இதே கருத்தை வெளியிட்டார். பாராளு மன்றம் (States General) சட்டமாக்கினாலொழிய புதியவரி விதிப்பை ஏற்க முடியாது என்று நீதி மன்றம் சொல்லிற்று.

வேறு வழியில்லை

1789ல் பாராளு மன்றம் கூடுவதென்றும் அதற்காகத் தேர்தல் நடத்தவேண்டுமென்றும். அந்தத் தேர்தல் வேலையை மேற்பார்வை பார்ப்பதற்காக முன்பு பதவியிலிருந்து விரட்டப்பட்ட நெக்கர் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டார்.

175 ஆண்டுகள்

175 ஆண்டுகளாக பிரெஞ்சு மக்களுக்கு தேர்தல், வாக்கெடுப்பு ஒன்றுமே தெரியாது. மன்னர், அவனிடும் கட்டளை, கீழ்ப்படிய வேண்டும், இல்லையானால் கருந்தண்டனை, பயங்கர பாஸ்டில் சிறை, இப்படி நினைத்துக்கொண்டிருந்த மக்களுக்கு 175 ஆண்டுகளுக்குப்பின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை தங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்றவுடன் இந்தத் தேர்தல் மிக முக்கியத்வம் வாய்ந்ததாக, வரப்பிரசாதமாக, பெரும் பண்டிகையாகக் கருதி, உரிமை முழக்க மிட்டுக்கொண்டு பல வெளியீடுகள் கிளம்பின. உரிமையற்றிருந்த நடுத்தர வர்க்கத்தினர் கிளர்ந்தெழுந்தனர். 1788ல் ஏற்பட்ட வறட்சி விவசாயிகளை ஆத்திர முட்டியது.

தேர்தல் நடந்தது

எப்படியோ தேர்தல் நடந்து முடிந்தது. அதில் 300 பாதிரிகளும், அதைவிட சற்றுக்குறைந்த எண்ணிக்கையில் சீமான்களும், 600 சாதாரண மக்களும் 'பாராளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 47 பாதிரிகள், உடும்புப்பிடிவாதமுள்ள, கடைந்தெடுத்தப் பிற்போக்கு வாதிகள்.

சீமான்களில் லாபயட் என்பவர் சிறிது முற்போக்குக் கொள்கை யுடையவர். சாதாரண மக்களில் பாதிப்பேர்வழக்கறிஞர்கள். ரூசோவின் சீடரான ரோபஸ்பீயரும் தேர்ந்தெடுக்கப் பட்டார். காமக் களி யாட்டங்களில் மூழ்கி திளைத்ததால் தன் தந்தையாலேயே மூன்று முறை சிறையிலே தள்ளப்பட்ட மீராபேவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டாக்டர் கில்லட்டினும், இவன் தான் லூயியை ஒரு வேதனையும் தெரியாமல் சாவதற்காக கில்லட்டின் என்ற தூக்குமர வாளைக் கண்டு பிடித்தவன். அதனால் இவனுடைய பெயரையே அதற்கு கில்லட்டின் என்று வைக்கப் பட்டது. ஆக, இவனும், கிய்சும் பாரிஸ் பிரதிநிதிகளில் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

ஆடம்பரத் தொடக்கம்

வார்சேல்ஸ் மாளிகை நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மே 4ம் நாள் வெளியே மக்கள் கூட்டம் பிரான்சின் தலைவிதியை நிர்ணயிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் வரும் காட்சியைக் கண்ணாரக் கண்டு களிக்க பாராளு மன்றத்தின் கதவுகள் திறக்கப்பட்டன என்றால் நல்லோர் நெஞ்சங்கள் திறக்கப்பட்டன, வறுமையை ஒட்டும் வழியான வல்லவர்கள் வரப் போகிறார்கள் என்ற மகிழ்ச்சிக் கடலிலே மக்கள் மதி மயங்கி நீந்தினார்கள், மக்கள் நினைத்தபடியே மிக ஆடம்பரத்துடன் பிரதிநிதிகள் கூட்டம் தொடங்கியது. உயர்ந்த வர்க்கத்தினர் வணங்கா முடிகளாகவே இருக்க வேண்டுமென்று நெக்கர் தூண்டி விட்டார். இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த உரிமை யற்றோர் கடும்போராட்டத்திற்குப் பிறகுதான் ஏதேனும் கிடைக்கும் என்பதைக் கண்டு கொண்டனர்

உட்காரும் உரிமை

நாட்டுக்கு உரிமை தேடித் தருவது கிடக்கட்டும், முதலில் உட்காரும் உரிமையை நிலைநாட்டுவோம் என்று நினைத்த நடுத்தர உறுப்பினர்கள், பாதிரிகளும் சீமான்களும் ஒரே இடத்தில் தங்களுடன் உட்கார்ந்து செய்யப்படவேண்டுமென்று உறுதி பூண்டனர். பாதிரிகளில் பெரும்பாலோரும், கிட்டத் திட்ட எல்லா சீமான்களும் இதற்குஒப்பவில்லை. இப்படி எல்லாரும் சமமாய் உட்காரும் நிலை மூலம் தங்களுடைய கண்யமும் கௌரவமும் குறைந்து விடுவதாக எண்ணி இந்த ஏற்பாட்டை மறுத்தனர். மன்றத்துக்கு வெளியே நாளுக்கு நாள் பர பரப்பு அதிகமாயிற்று. நாள்தோறும் மற்ற செயல்போல் துண்டு அறிக்கைகள் புறப்பட்ட வண்ணமிருந்தன. தெருவுக்குத் தெரு பேச்சாளிகள் மேடை எறி கனல் கக்கினர். எங்கும் கண்டனக்குரல். குடிகள், அரசர் தம்மை உயர்ந்த வர்க்கத்தினிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்று முறையிட்டனர். இந்த அபயக்குரல் அரசனைப் பொருத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்கோசை யாயிற்று. மன்னன் மக்களை மதித்தானில்லை. அரசன் கொஞ்சமாவது வருங்காலத்தை எண்ணி மக்கள் பக்கம் சேர்ந்திருந்தால் நாடே அவன் காலடியில் விழ்ந்திருக்கும். ஆனால் அவன் வேறு வழியில் சென்றான் என்பதைக் காட்டிலும் அவன் முன்னோர்கள் சென்ற சீமான்கள் பாதையிலே, பாதிரிகள் போட்டப்பாதையிலே சென்றான். அது தான் அவர்களுக்கு பழக்கமும் கூட மக்களை 19வது நூற்றாண்டின் முடிவு வரையிலும் எந்த மன்னன் மதித்தான். ஆகவே இவன் மக்களை மதிக்காததில் வியப்பேதும் இல்லையல்லவா.

மூன்று புத்திசாலிகள்

அன்றாடம் வளர்ந்துவரும் மக்கள் ஆவேசத்தை எண்ணிமூன்று புத்திசாலி பாதிரிகள் மட்டும் தங்கள் கூட்டத்தினரைப் புறக்கணித்துவிட்டு மக்கள் பிரதிநிதிகளுடன் சேர்ந்து கொண்டனர் இது மக்கள் என்றுமே எதிர்ப்பார்க்காத அதிசய நிகழ்ச்சி. இந்தச் செயல் உரிமையற்றோரின் கற்பனைக்கே எட்டாத ஒன்று. பாதிரிகள், பக்கத்திலேயே பாமர மக்கள், ஆண்டவனே அனுமதிக்காத ஒன்றல்லவா இது! ஜெபமாலை எங்கே? பாபிகள் எங்கே பரமண்டலம் ஏற்றுக்கொள்ளுமா இந்த ஏற்பாட்டை என்ற நிலை திரிந்த நேரமல்லவா. அது ஒன்றுமே கிடைக்கப்பெறாத ஏழைகளுக்கு இதைப்போன்ற ஏதாவது ஒன்று கிடைத்தால் தங்களையே மறந்துவிடுவார்கள். களிப்பு அதன் காரணத்தை மறைத்து விடும். பக்கத்திலே பாதிரியார், 'அப்பா! பரமண்டலம் அல்லவா கிட்டியிருக்கின்றது என்ற எக்காளம் அந்த ஏழைகளுக்கு. இதனால் மக்கள் பிரதிநிதிகளுக்கு உற்சாகம் மிகுந்துவிட்டது. ஜுன் 17ல் சப்சின்பிரேரேனையின்பேரில் தாங்கள் 96 சதவிகித மக்கள் பிரதிநிதிகளானபடியால் தாங்கள்பிரெஞ்சு தேசிய சட்ட சபையினர் என்றும், வராதவர்களைப் பற்றி கவலைப்படாமல் தங்கள் சீர்த்திருத்தப் பணியினைத் தொடர்ந்து நடத்துவதென்றும் தீர்மானித்தனர். சட்டசபைக் கலைந்ததும் வரிகளை யாரும் செலுத்தக்கூடாதென்றும் தீர்மானித்தனர்.

(தொடரும்)

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட

அநீதி கண்டன வாரம்

25...9...60 அன்று நடைபெற்ற தி. மு. க. பொதுக்... வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க 10-10-60 ...16-10-60வரை நாடெங்குமுள்ள திராவிடமுன்னேற்றக் ...களைகளும், சார்பு மன்றங்களும், ஊர்வலங்கள், ...ட்டங்கள் ஆகியவைகளின் மூலம் மூன்றுவது ...திட்ட அநீதி கண்டன வார நிகழ்ச்சிகளை நிறை...க்கொள்கிறோம்.

...-13. இரா. நெடுஞ்செழியன்.

கொள்கை பரப்புச் (பிரச்சாரம்) செயலாளர்

பேரன் பிறந்தான்

★

நமது ஆசிரியர் திரு. சி.பி. சிற்றரசு அவர்களின் மூத்... மகள் சரசுவதி அவர்களுக்... 6...10...60 வியாழன் இர... 12-20க்கு ஒரு ஆண் மகன் பிறந்தான். தாயும் சேயு... நலம்.

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2] ★ 14—10—60 ★ [இதழ் 7

ஐ. நா. வின் அலங்கோலம்

இரண்டு கிழமைகளுக்கு மேலாக ஐக்கிய நாட்டு சபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. உலக நாடுகளின் ஐக்கியத்திற்காக செய்து வைத்திருக்கும் பயங்கர ஆயுதங்களை என்ன செய்யலாம் என்பதைப் பேசித் தீர்ப்பதற்காக, கீழை நாடுகளும் மேலை நாடுகளும் ஒத்துப் போவதற்கான வழி வகைகளைத் தேடுவதற்காக புதியதாக சுதந்திரம் பெற்ற காலனி நாடுகளை ஐ.நா.வில் சேர்த்துக் கொள்வதற்காக—நாட்டுத் தலைவர்கள் கூடிப் பேசுவதற்காக அந்த அழகுமிக்க நியூயார்க் நகரில் முகாம் அடித்திருக்கின்றனர்.

எனினும் ருஷ்ய நாட்டுத் தலைவர் நிகிடா குருசேவ் பேசுகின்ற ஒவ்வொரு கூட்டத்திலும் கூச்சலும் குழப்பமாக இருக்கிறது என்ற செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவ்வளவு முறைகேடாக வெறிபிடித்துப் பேசுகின்றார். அதனால் தலைவர் அவர் பேச்சை நிறுத்தும்படி கேட்டுக் கொள்கின்றார். சில நேரம் எடுத்துக்கொண்ட பொருள் பற்றி மாத்திரம் பேசும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். அதையும் மீறி பேசிக்கொண்டிருந்ததால் எதிரில் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி அப்புறப்படுத்தப்பட்டது என்ற செய்தியும் வந்தது.

ஒரு பெரிய பலம் பொருந்திய நாட்டின் தலைவரா இப்படி நடந்து கொள்கிறார் என்றெண்ணும்போது தெருவில் சிறுபிள்ளைகள் சண்டையே பரவாயில்லைபோல் தோன்றுகிறது.

விருந்தாளியை வீட்டிற்கு அழைத்து, நாய்களை அவிழ்த்துவிட்டிருக்கிறீர்களே என்று அமெரிக்கரைப் பார்த்துக் கேட்கின்றார். அடுத்த முறை நான் டூரிஸ்டாக வருவேன். அப்போது இந்த ஜனாதிபதி இருக்கமாட்டார் என்கிறார். கண்ணியமாகத் தன்னிடம் பேசிவிட்டுப்போன பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனை அவர் போனபின் கேலியும் கிண்டலும் செய்கிறார். பத்திரிக்கையிலே வருகின்ற செய்திகளைப் பார்க்கும்போது குருசேவ் ஒரு கோமாளிபோல் நடிக்கிறார் என்பது தவிர வேறொன்றும் தெரியவில்லை. ஐநாவை வேறு இடத்துக்கு மாற்றும்படி கேட்கிறார். அதன் செயலாளர் ஹமர்ஷீல்டை ராஜிநாமா செய்யும்படி மிரட்டுகிறார். இல்லையானால் கம்யூனிஸ்டு நாடுகள் எல்லாம் சேர்ந்து ஒரு தனி ஐ. நா. சபையை வைத்துக் கொள்ளும் என்று பயமுறுத்துகிறார். இந்தக் கோமாளிக் கூத்தை எல்லாம் பார்க்கும்போது தனக்கு மிஞ்சியவர்கள் தரணியிலே இல்லை என்ற தலைக்கணமேறியிருக்கிறதுஎன்பது தவிர வேறு ஒன்றும் புலப்படவில்லை.

மனவேறுபட்டவர்கள் ஒன்றுகூடிப் பேசுவதன்மூலம் கசப்பு நீங்கலாம், எதிர்மறையான அரசியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் நாட்டுத்தலைவர்கள் ஒருவருக்கொருவர் நேரடியாகச் சந்திப்பதன்மூலம் அவரவர்கள் வகுத்துக்கொண்டிருக்கும் உள்நாட்டுக் கொள்கைகளை விட்டுவிட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் எந்த அளவுக்கு எவ்வளவு தூரத்துக்கு ஒத்துப் போகலாம் என்பதைக் கூடிப் பேசுவதற்காக ஏற்பட்ட அந்த மாமன்றத்தில் நாவடக்கமில்லாமல் கத்திக் கொண்டிருந்தால் உலகம் சமாதானப் பாதையில் ஒரு அடியாவது எடுத்துவைக்கும் அறிகுறிதான் தென்படுகிறதா? இல்லையே.

சூயஸ்

1955-ல் சூயஸ் கால்வாய் சம்மந்தமாக ஏற்பட்ட தகராறு உலகப் போரையே தூண்டிவிடுமோ என்ற பயங்கர அதிர்ச்சியாகத் தோன்றியது. அஸ்வான் அணைகட்ட வேண்டுமென்ற நோக்கத்தால் பிரிட்டனை நாசர் பணம் கேட்க, அவர்கள் இல்லை என்று கைவிரித்து விட்டார்கள் என்ற கோபத்தால், சூயஸ் நிபந்தனையின் காலாவதி முடிவதற்கு 16 ஆண்டுகட்கு முன்னமே சூயஸ் எகிப்துக்கு பரிபூரண சொந்தமாகி விட்டது என்று அறிவித்தவுடன் ஏற்பட்ட கொந்தளிப்பை ஐ.நா. படைகள் போய்தான் தீர்த்து வைத்தது. அதனால் பாதிக்கப்பட்ட பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனும், எகிப்து அதிபர் நாசரும்கூட இன்று நியூயார்க்கில் கைக்குலுக்கிக் கொண்டார்கள். அந்த அளவு பகைகூட அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இல்லை, அல்லது இருக்கமுடியாது என்று துணிந்து கூறலாம். ஏதாவது பகை இருககுமானல், அமெரிக்கா முதலாளித்வநாடு, ரஷ்யா பொது உடமைநாடு என்பது தவிர அண்மையில் ஏதோ உளவு விமானம் ஒன்று பறந்ததும் அதை வீழ்த்தி அதன் ஓட்டியை விசாரித்துக் காவலில் வைத்த சம்பவங்களே தவிர வேறொன்றுமில்லை. அமெரிக்காவின் அரசியல் ஏன் அப்படி இருக்கிறது என்று கேட்க, குருசேவ் என்ன உலக ரக்ஷகரா - அல்லது இவர் நாட்டில் தான் என்னஜனநாயகம் வாழ்கிறது ?

ஸ்டாலின் இருக்கும்வரை அவரைத் தெய்வம் என்று போற்றி, அவர் இறந்தபின் அவர் சிலையைச சுக்கு நூருக்கிய மகா நன்றியுள்ளவராயிற்றே குருசேவ். டாக்டர் ஷிவாகோ என்று நூலெழுதிய அறிஞனுக்கு வரவிருந்த நோபிள் பரிசை வாங்காதே என்று தடுத்த மகா மேதையாயிற்றே குருசேவ். புல்கானின் நிலை என்ன? ஜனாதிபதியின் விலகளுக்கு என்ன காரணம்? அல்ஜீரிய அழுகுரல் நின்றுவிட்டதா என்ற கேள்விகளைத் தன் பின்னுலேயே வைத்துக்கொண்டு ஊராரை மிரட்டித் திரிவதிலே வல்லவராயிருக்கிறார் குருசேவ் என்பது தவிர வேறென்ன?

அழிவு வேலையா? ஆக்க வேலையா?

அழிவு வேலையைவிட்டு ஆக்க வேலைக்கு வழிதேடப் போனவிடத்தில் மீண்டும் அழிவு வேலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஆக்க வேலைக்காணப் பாதையே இதுவரை அங்கே தென்படவில்லை. சமாதானம் செய்து வைக்கப் போனவனே சண்டைக்காரனுக மாறினல் நிலைமை என்னகும். இந்தச் சிக்கலைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒரே தலைவர் நேரு ஒருவர்தான் என்று பேசப்பட்டது. அவரும் நியூயார்க் போய்ச் சேர்ந்தார். சமாதானத் தூதுவர் நேருவே வருக வருக என்று அமெரிக்கச் செய்தித்தாள்கள் மகுடமிட்டு வெளியிட்டன.

பஞ்சபாண்டவர் தூது

இதிகாசத்தில் பஞ்சபாண்டவர்கள் தூதுபோனதாக இல்லை கண்ணன் தூதுபோயிருக்கின்ருன் என்பதுதான் கதை. ஆனல் இதில் பஞ்சபாண்டவர்கள் நேருஜி, நிக்ருமா, நாசர், டிட்டோ, சுகர்னே ஆகிய ஐவர், இவர்கள் தூதின் கருத்து - ஐசன்ஹோவரும் - குருச்சேவும் சந்தித்[...] பேசவேண்டும். இவர்கள் இதை ஐநாவுக்குக் கொண்டு வருவதற்கு முன்[...] இரவே அது சாத்தியமில்லை என்று ஐசன்ஹோவர் அறிவித்து விட்[...] குருசேவின் நிலை தெளிவாகவில்லை. ஆனல் சந்திப்புக்கு முன்னல் [...]ரிக்கத் தலைவர் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று குருச்சேவ் எதி[...]கிறார்.

இதில் சுகர்னேவின் நப்பாசை, இரு தலைவர்களும் கைகுலுக்கிக் கொண்டாலே போதும் என்கிறார். அவருடைய சமாதான நோக்கத்தை நாம் மனமாரப் பாராட்டுகிறேம். ஆனல் உள்ளூர எவ்வளவோ கோபத்தை வைத்துக் கொண்டு வெளியே ஒப்புக்கு உதட்டின் ஓரத்தில் சிரிப்பை வலிய தருவித்துக்கொண்டு கைக்குலுக்குவதில் என்ன பயன் ?

ஒவ்வொரு நாடும் செய்து குவித்து வைத்திருக்கும் பயங்கர குண்டுகளை தூக்கிக் கடலிலே எரிந்து ஆயுதச்சாலைகளை மூடி, இனி போரே இல்லை என்ற ஒப்பந்தத்தில் அனைவருமே கையெழுத்திட்டு, அட்லாண்டிக் கடலைக் கடக்கவேண்டியவர்கள் கடந்து — பசிபிக் கடலைக் கடக்கவேண்டியவர்கள் கடந்து அவரவர்கள் நாட்டுக்கு வந்து சேர்ந்தாலன்றி அமைதி எங்கே நிலை பெறப் போகிறது?

நிற வெறி, மத வெறி, இனவெறி சுரண்டல், ஆதிக்க ஆசை—மண்ணசை ஆகியவைகள் அறவே ஒழிவதற்கென்ன வழி என்பதை ஐநாவில் கூடியிருக்கும் அரசியல் தலைவர்கள் கண்டுபிடிப்பார்களா— உலக நன்மைகள் உலக மக்களுக்கு பங்கிட்டு வருமா என்பதை ஆவ[...] பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கூடினேம், கைகுலுக்கினேம். அவ[...] இவர் விருந்தளித்தார். மணிக்கணக்காகப் பேசினேம். எனினும் ஒன்று[...] பயனில்லை. வந்துவிட்டோம் என்பது வீணன பொழுது போக்கு[...] வெட்டிச் செலவும் என்பது தவிர வேறில்லை. ஆகவே அவையோரே — ஆக்கவேலைக்கு உங்கள் அறிவை பயன்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கின்கிறேம். ஆத்திரம் விதைத்த விதையின் அறுவடை 'போர்' என்ப[...] தவிர வேறொன்றுமில்லை. மக்களைக் கொன்று குவிக்கவா மனிதர்க[...] நீங்கள் பிறந்தீர்கள் என்று இந்த மண் சாபமிடா முன்னம் தெளிவு பெறு[...]கள் என்று இந்த நேரத்தில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறேம்.

தங்களன்புள்ள,

சி. பி. சிற்றரசு

இது புதுக்கோட்டை!

புலவர் செந்தாமரைக் கண்ணன் சிறந்தசிவபக்தர். சமஸ்தானத்தைச் சேர்ந்த உயர்நிலைப்பள்ளிஒன்றில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். ஆனால் அவர் புதுக்கோட்டைக்குப் புதியவர்தான். பத்தாண்டுகளுக்குள்தானிருக்கும். அவர் அங்கு குடியேறி!

செந்தாமரைக் கண்ண[illegible] புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நல்ல செல்வாக்கு [illegible]ருந்தது. மன்னரே அவரை [illegible]ழைத்துப் பேசிக் கொண்[illegible]ருப்பார். தமிழ் இலக்கியம், [illegible]மிழ் இசை, வீர விளையாட்டு இவைகளைப் பற்றியெல்[illegible]ம் மன்னர் அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்பார். எல்லாவற்றிற்கும் புலவர் பொறுமையாகப் பதில் சொல்லுவார். எல்லாப் பதில்[illegible]ளுமே இனிமையாகத்தானிருக்கும்.

புலவரிடம் நல்ல பண்புகள் இருந்தன. எந்நேரங் கிடைத்தாலும் முன்னேறப் பணிப்புரிபவர். தானும் வாழ்ந்து, பிறரும் வாழ வேண்டும் என்று எண்ணுபவர். அவர் எழுதிய புத்தகங்கள் நாட்டில் நல்ல பெயர் எடுத்திருந்தன. அரசியலார் கூட அவரது இரண்டு புத்தகங்களுக்குப் பரிசு வழங்கியிருந்தார்கள். சமஸ்தானப் பகுதியில் தமிழியக்கம் ஒன்றைத் தொடங்கி, வாலிபர்களிடையே, மாணவர்களிடையே தமிழ் உணர்ச்சியைத் துளிர்விடச் செய்த பெருமை செந்தாமரைக் கண்ணரைத்தான் சாரும். அவருடைய உதவியால் வெகுபேர் படித்துத் தேர்ந்திருக்கிறார்கள். உயர் உத்தியோகம் பெற்றிருக்கிறார்கள். அன்பினாலும் அறிவாற்றலினாலும் புதுக்கோட்டையில் உள்ள பெருந்தனவந்தர்களுக்குக் கிடைக்காத மரியாதையை புலவர் பெற்றுவிட்டார். அவரது வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்டவர்கள் இல்லை. தீங்குநினைத்தவர்கள் கிடையாது. அந்த நெஞ்சங்களைப் பெற்றவர்களைக் கூட புலவரின் பணி கவர்ந்திருந்தது.

இவ்வளவு கீர்த்தியும் ஆள் பலமும் பெற்றிருந்த புலவர் உள்ளத்தில் ஒரு பெருங் குறை கிடந்து உருண்டு கொண்டே இருந்தது. உற்சாகமுள்ள நேரத்தில் எண்ணிப் பார்த்தால்கூட அந்தக் கவலை அவரைக் குன்ற வைத்துவிடும். அவருக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அழகான பெண். படித்தவள். பாடத் தெரியும். ஆனால்வாரிசுக்கு ஒரு ஆண் இல்லையே என்ற பெருங் குறைதான் அவரைத் தின்றுகொண்டிருந்தது. சுவீகாரம் எடுக்க அவருக்கு விருப்பமில்லை. அந்த முறையே தவறு என்று வாதிப்பவர். பிள்ளைக்காக இன்னொரு மணம் செய்து கொள்ளும்படி பலபேர் அவரைத் தூண்டினார்கள். மனம் அதற்குத் துளியும் இடங்கொடுக்கவில்லை. முதல் மனைவியினிடம் அவர் அத்துணை அன்பை வைத்திருந்தார். சில வேளைகளில் புலவர் மனோதத்துவ ஆராய்ச்சியில்இறங்கி விடுவதுண்டு. ஏழைகள் இல்லங்களில் வாழ வளமில்லாத குடும்பங்களில் ஏன் குழந்தைகள் அதிகம் பிறக்கின்றன? பிள்ளை இல்லையே என்று ஏங்கித் திரிவோர் அனைவரும் பணக்காரர்களாகத் தானிருக்கிறார்கள். ஏன் இந்த அமைப்பு உருவாயிருக்கிறது — என்று தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பிப்பார். நேரம் போவதே தெரியாமல் உட்கார்ந்திருப்பார். மகள் வந்து கவனப்படுத்தினால்தான் அவர் முகத்தைத் துடைத்துக்கொண்டு உணவு கொள்ளச் செல்வார்.

புலவர் செந்தாமரைக்கண்ணர் புதுக்கோட்டைக்கு வருமுன்னர் தங்கச்சி மடத்தில் வாழ்ந்து வந்தார். அங்கு ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை வைத்துக்கொண்டு காலங் கழித்தார். அவரும் ஏராளமான பிள்ளைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். ஆனால் வருவாய் குறைவு - மிகக் குறைவு. அப்போதுதான் எழுதத் தொடங்கினார். அவரது ஆராய்ச்சி முதன்முதலாக தங்கச்சிமடத்தைச் சுழலத் தொடங்கியது. யாராவது தங்கச்சி மடத்தைப்பற்றி கேட்டால், புலவர் ஆரம்பித்து விடுவார். அந்தப் பகுதியைப் பார்த்த எந்தக் கற்பனை உள்ளங் கொண்டவனும் நூல் எழுத முயலாமல் இருக்கமாட்டான். ரயிலில் போகும்போது நம் நெஞ்சையே பறிகொடுத்துவிடும் அளவுக்கு இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் மணற்திட்டுகள். பொங்கி வரும் நீரலைகள் கல்லாய்ச் சமைந்ததுபோல், சந்தனத்தை அறைத்து ஊற்றி ஊறவைத்ததுபோல் அந்த மணல் மேடுகள் காட்சி தருகின்றன. அந்த மேடுகள் சில இடங்களில் மிகவும் உயரமாகிவிட்டிருக்கின்றன. பனைமரத்தின் கொண்டைவரை மணல்மேடுகள் உயர்திருப்பதை தங்கச்சி மடம் பகுதியில்தான் பார்க்க முடியும்.

ரயில் பாதையின் இருமருங்கிலும் தென்னை மரங்கள் நிறைந்திருக்கின்றன. அதைப் போலவே உடன் மரங்கள் என்ற இன்னொரு வகை மரங்களும் காணப்படுகின்றன. ஏராளமான கோட்டைகள், மண்டபங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தெரிகின்றன. அனைத்தும் இடிந்து கிடக்கின்றன. எல்லோருக்கும் அவைகளைப் பற்றிச் சரியான விவரங்கள் தெரியவில்லை.

பாம்பனிலிருந்து இராமேசுவரம் போகும் வழியில் மாத்திரம் ஆறு மண்டபங்கள் இருக்கின்றன. அக்காள் மடம், தங்கச்சி மடம், உடையத் தேவர் மடம், பிள்ளை மடம், காட்டுப் பிள்ளையார் கோயில் மடம்-என்று அவற்றிற்கு பெயர்கள் வழங்கிவருகின்றன. இந்த மடங்களில் தங்கச்சி மடத்திற்குத்தான் அதிகப் பெருமை உண்டு. சரித்திர முக்கியத்துவமும் அதற்கே இருக்கிறது. மங்கல தீர்த்தம், ஏகாந்த ராமர் தீர்த்தம்-என்ற இரண்டு நீர்த்தடாகங்கள் இருக்கின்றன. இன்னொரு வியப்புக்குரிய காட்சி அங்கே இருக்கிறது. அந்த இடத்திற்கு 'வில் ஊன்றி' என்று பெயர். கடலோரத்தில் ஒரு கிணறு. சில நேரங்களில் அந்தக் கிணற்றைக் கடல் மூடிவிடுகிறது. அவ்வாறு கடல் மூடி இருக்கும்போது அந்தக் கிணற்று நீர் உப்புக் கரிப்பதில்லை. கடல் நீர் வற்றி கிணற்றின் மேல் மட்டம் தெரியும்போது அந்தக் கிணற்று நீர் உப்புக் கைப்பதில்லை. சீதைக்குத் தாக மெடுத்ததும், இராமன் வில்லை எடுத்து ஒரு இடத்தில் அம்பைக் குறிவைத்தானாம். அதுதான் அந்தக் கிணறாம்! அதனால்தான் அந்தக் கிணற்றுக்கு வில் ஊன்றி என்று பெயர் வந்ததாம்! இப்படி ஒரு ஐதீகம் அந்தப் பகுதியில் உலவிக் கொண்டிருக்கிறது.

தங்கச்சி மடத்தில் இன்னொரு சத்திரம் உண்டு. இன்று அது இடிந்து உருக்குலைந்து காணப்படுகிறது. சத்திரம் என்று அதைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அது ஒரு அரண்மனைபோலவே இருக்கிறது. மணிபண்டபம், கோணல் வாசல், உக்கிராணம், அந்தப்புரம் இவை அனைத்தும் அந்தச் சத்திரத்தில் இருக்கின்றன. மதுரை மகாராணி மங்கம்மாளின் காலத்தில் அந்தச் சத்திரம் கட்டப்பட்டதாக முதியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

தங்கச்சி மடத்திற்கு இவ்வளவு பெரியதமிழ்ச் சரித்திரப் பெருமை இருந்ததால்தான் அங்கு குடியிருந்ததாகப் புலவர் அடிக்கடி கூறுவார். அவர் தங்கச்சி மடத்தில் இருந்தபோது கல்வெட்டுகள், பழம் ஏடுகளை ஆராய்வதையே பெரிதும் தினசரிப் பணியாகக் கொண்டிருந்தார். மனிதர்கள் தங்களுக்கு விருப்பமான செயலில் ஈடுபட்டிருக்கும்போது பசி தெரிவதில்லை. பணத்தைப் பற்றிக் கவலையே எழுவதில்லை. அதுவும்தமிழ்ப்புலவர் ஏட்டாராய்ச்சியில் ஈடுபட்டால் கேட்கவா வேண்டும்! தலையில் குருவி உட்கார்ந்தால் கூடத் தெரியாமல் இருப்பார்கள். தங்கச்சி மடத்திலிருந்து புதுக்கோட்டைக்குப் போய் ஆண்டுகள் பலஆகிவிட்டாலும், அவர்தங்கச்சிமடத்து நினைவுகளை மறந்து விடவில்லை. வகையான மீன்களை மறந்துவிடவில்லை. வகை வகையான மீன்களைத் தந்து சிந்தனைக்கு வலுவேற்றிக் கொடுத்த பகுதி அல்லவா அது! யாராவது விருந்தினர் வந்துவிட்டால் கூட புலவர் அடிக்கடி கூறிக் கொள்வார்; "இவ்வளவு நேரம், தங்கச்சிமடமாக இருந்தால் பலவகை மீன்களைக் கொண்டு வந்திருப்பேன்" தங்கச்சிமடம் அப்படி ஆழப்பதிந்திருந்தது அவரது நெஞ்சில்!

∴ ∴ ∴

அன்று வெள்ளிக்கிழமை!

புலவர் குளித்துக் குங்குமமிட்டு யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது துருவனும், அனுராதையும் உள்ளே நுழைந்தார்கள்.

(தொடரும்)

இனமுழக்கம் இதழிலே நவம்பர் முதல் நாளிலிருந்து....
நமதியக்க நாவலாசிரியர் கே. ஜி. இராதாமணாளன் எழுதும்
மறவர் குலத்து மணிப்புறா
சரித்திரத் தொடரோவியம்

விலங்கறுத்த வில்லியம் வில்பர் போர்ஸ்

1780-ம் ஆண்டு. ஆப்பிரிக்கக் கடற்கரையோரம். கப்பல் ஒன்று புறப்படுகிறது. அட்லாண்டிக் கடலில் செல்கிறது. கப்பல் உள்ளே குமுறல் சப்தம். அழுகை மனித ஓலம். ஏனென்ற சப்தம். கடல் அலைகளின் ஓசையும் தோற்கடிக்கும் வண்ணம் கேட்டது. இரும்புச்சங்கிலிகளால் இணைக்கப்பட்ட மனித உருவங்கள். கைகளிலும், கால்களிலும் விலங்குகள் பூட்டப்பட்டிருந்தன. அவ்வளவு தடைகளையும் மீறி அம் மக்கள், கடலில் குதிக்க எத்தனிக்கும் காட்சி. ஐரோப்பியகாவற்காரர்கள் துப்பாக்கியுடன் காவல்புரிகின்றனர். கீழே குதிக்க முயற்

★ அடிமை என்ற சொல்லைக் கேட்டதும் ஆப்ரகாம் லிங்கனின் நினைவு ஏற்படும்

சித்த ஒருவனை சாட்டையால் அடிக்கின்றனர். அவன் உடலிலிருந்து ஒழுகும் குருதியைக் கண்டு மற்றவர்கள் பயந்து நடுங்கிப் போயினர். உள்ளே இவ்வளவு நடைபெற்ற போதும், ஏதும் அறியாததுபோல் கப்பல் தன்கம்பீரத் தோற்றத்துடன் சென்று கொண்டிருக்கிறது.

அடிமைகளை ஏற்றிச் செல்லும் கப்பல் அது. ஆப்பிரிக்கக் காடுகளில் விலங்குகளுடன் விலங்குகள் போன்று சுதந்திரமாய்த் திரிந்தனர் அவர்கள். நீக்கிரோக்கள். திடீரென்று துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. ஓடினார்கள். [illegible]லாபக்கங்களிலும் ஐரோப்பியர் ஆயுதம் தாங்கியோர் சுற்றி வத்தனர். ஆயிரம் நீக்கிரோக்கள் பிடிப்பட்டனர். விலங்கிடப்பட்டு, சங்கிலியினால் இணைக்கப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டனர். கப்பல் புறப்பட்டுவிட்டது. சில மணி நேரங்களுக்கு முன்பு அவர்கள் மனிதர்கள்; இப்போது அவர்கள் அடிமைகள். அவர்களை ஏற்றிச் செல்லும் கப்பல் அமெரிக்கா நோக்கிச் செல்கிறது. அமெரிக்கா அந்த உருவங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளப் போகிறது.

அடிமை வியாபாரம் நடைபெற்ற காலத்தில் ஏற்பட்ட காட்சிகளில் ஒன்றைத்தான் மேலே கொடுத்துள்ளோம்.

1780-ம் ஆண்டு. உல்லாசபுரியாம் லண்டன் நகரில் வாசக சாலை ஒன்றில் பாக்ங், ஷெரிடன் போன்ற அறிஞர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அருகே இளைஞர் ஒருவர், புன்னகை முகத்தவர், பாராளுமன்ற உறுப்பினர் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அவர்தான் வில்லியம் வில்பர்போர்ஸ். அடிமை வியாபாரம் கூடாது என்று அதற்கெனச் சட்டம் செய்த மனிதாபிமானி.

1759-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் ஹல் என்னும் ஆங்கில நாட்டு சிற்றூர் ஒன்றில் ராபர்ட் வில்லியம் என்ற பிரபல வியாபாரி ஒருவரின் மகனாய்ப்பிறந்தார். சிறு வயதில் ஹல்லில் உள்ள பள்ளியில் கல்வி பயின்றார். 1768-ல் அவர் தந்தை இறந்து போனார். 1776-ல் கேம்பிரிஜ் சென்று அங்கே உள்ள செயின்ட் ஜான் கல்லூரியில் சேர்ந்தார். விளையாட்டிலும், இசைப்பயிற்சியிலும் அவருக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. அவரது ஆசிரியர்கள் சீமானின் வீட்டுக் குழந்தையாகிய வில்லியம் கல்வி பயில வேண்டியது அவசியமில்லை என்று உபதேசம் செய்தார்கள். என்றாலும் வில்லியம் படித்துப் பட்டம் பெற்றார்.

ஊர் திரும்பினார். தன் தந்தையின் வியாபாரத்தில் இறங்க அவர் விரும்ப வில்லை. பொது வாழ்க்கையில் ஆர்வம் கொண்டவர் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று எண்ணினார். மக்களிடையே இவர் அறிமுகம் ஆனவர் அல்ல. 1780-ல் நடைபெற்ற பார்லிமெண்ட் தேர்தலில் வில்லியம் வில்பர் போர்ஸ் ஹல் (Hull) தொகுதிக்கு உறுப்பினராய் பாராளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லண்டன் நகரம் இந்தப் பணக்கார இளைஞனை தன் இரு கைகளாலும் வரவேற்றது. அவரது அழகும், நாவன்மையும் இவருக்கு ஏராளமான நண்பர்களை உண்டாக்கின. இளவரசன் பிரின்ஸ் ஆப்வேல்ஸ் இவருக்கு நண்பரானார். அக் காலத்தில் சிறந்த அரசியல் வாதியான வில்லியம் பிட், வில்லியம் வில்பர் போர்சுடன் நண்பரானார். பிட்டின் அரசியல் முறைகளை வில்பர் போர்ஸ் என்றும் ஆதரித்து வந்தார். 1783-ல் வில்லியம் பிட்டுடனும் அவரது நண்பர் ஒருவருடனும் வில்பர் போர்ஸ் பிரான்ஸ் நாடு சென்றார். அங்கே சென்ற அவர்களுக்கு லூயி மன்னன் விருந்

பிரகாசம்

தளித்தான். அந்த ஆண்டு டிசம்பரில் பிட் இங்கிலாந்தின் பிரதம மந்திரியானார். ஆனால் அரசியல் காரணங்களுக்காக பாராளு மன்றத்தில் அப்போது நடைபெற்ற விவாதங்கள் ஏராளம். அப்போதெல்லாம் தன் நண்பரான பிட்டின் கொள்கையைத்தான் வில்பர் போர்ஸ் ஆதரித்தார். 1784-ம் ஆண்டில் தன் குடும்பத்தாருடன் ஐரோப்பா நாடுகளில் சுற்று பயணம் செய்தார். வெளிநாட்டு மக்களின் வாழ்வையும், அங்கே நிலவும் கிருத்து மதத்தின் தத்துவங்களையும் அவர் நன்றாக ஆராய்ந்தார். வாழ்க்கையில் மதம் வகுத்துத் தந்திருக்கும் விதி முறைகளை அப்படியே பின்பற்ற வேண்டுமென்ற முடிவுடன் தாய் நாடு திரும்பினார்.

லண்டனில் தன் நண்பர் பிட்டைச் சந்தித்து தன் முடிவைப் பற்றிக் கூறினார். பிட்டின் வேண்

★ அடிமைகளுக்குலிங்கன் வாழ்வளித்தவர். ஆனால் வில்லியம் வில்பர்போர்ஸ் அடிமை வியாபாரத்தை ஒழித்தவர்!

டுகோளின்படி நாட்டின் பிரச்சனைகளில் அதிக கவனம் செலுத்துவதாக வாக்களித்தார்.

1786-ல் அவர் கிரிமினல் சட்டத்திற்கு திருத்தம் ஒன்றை கொண்டு வந்தார். ஆனால் பிரபுக்கள் சபை அதை நிராகரித்தது. பின் அவர் அரசரின் அனுமதியுடன் சீர்திருத்தக் கழகம் ஒன்று தோற்றுவித்தார். மனிதனின் கீழ்த்தரமான எண்ணங்களைத் தூண்டும் பிரசுரங்களைத் தடை செய்ய வேண்டு மென்பதுதான் அக் கழகத்தின் நோக்கம்.

அப்போது ஆங்கில நாட்டில் அடிமைகளின் வாழ்வு பற்றிப் பலர் பேசினார்கள். எழுதினார்கள். 1772-ல் கிரன்வில் ஷார்ப் என்னும் நீக்ரோ ஒருவன், நீதி மன்றத்தில் தன் உரிமைபற்றி வழக்கு ஒன்றைக் கொண்டு சென்றான்.

அடிமையாக இருந்தாலும் அவன் இங்கிலாந்தின் மண்ணை மிதித்தவுடன் அவன் சுதந்திர மனிதனாகிறான். அவனுக்கும் மற்றவர்கள் போன்று உரிமை உண்டு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. 1785-ல் தாமஸ் கிளார்க்சன் என்பவர் 'அடிமை' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதி பரிசு பெற்றார். பென்னட் லாங்டன் என்பவர் அடிமைகளின் நிலை பற்றிப் பார்லிமெண்டில் விவாதிக்கப்போவதாக கூறினார். 1787-ல் அடிமை வியாபாரத்தை ஒழிக்க கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. வில்லியம் வில்பர்போர்சின் உள்ளத்திலும் அடிமைகளை பற்றிய எண்ணங்கள் தோன்றின பிட்டின் வேண்டுகோளின் மீது அடிமை வியாபாரத்தை ஒழிப்பது என்று முடிவு செய்தார்.

அடிமை வியாபார ஒழிப்புக் கமிட்டியினர் ஆதாரங்கள் தேடித் தந்தனர். வில்பர் போர்ஸ் பார்லிமெண்டில் தன்கடமையைச் செய்தார். பார்லிமெண்டில் ஆப்பிரிக்க அடிமை வியாபாரம் பற்றிய பிரச்சினைகள் விவாதிக்கப் பட்டன. 1787-ல் பாரிஸ் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் அடிமை வியாபாரத்தை நிறுத்த வேண்டு மென்று ஒரு ஷரத்து எழுத வேண்டுமென்று எவ்வளவோ முயன்றும் பலன் இல்லை.

வில்லியத்தின் உடல் நிலை மிகவும் பாதிக்கப் பட்டது. ஆனால் அவர் தன் கோரிக்கையை வற்புறுத்திய வண்ணம் இருந்தார். 1789 மே திங்கள் 12-ம் நாள் வில்லியம் அடிமைவியாபாரத்தை நிறுத்த வேண்டு மென்று பன்னிரெண்டு தீர்மானங்கள் கொண்டு சென்றார். மாலை 6 மணி முதல் இரவு3-30மணிவரையில்காமன்ஸ் சபையில் விவாதம் நடைபெற்றது. பிட், எட்மண்ட் பர்க் போன்ற எத்தனையோ அரசியல் மேதைகள், வாத வல்லுனர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள். என்றாலும், பலன் ஏதும் ஏற்படவில்லை. பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்திற்கு இப் பிரச்சினை ஒத்திப் போடப் பட்டது. அடுத்த கூட்டத்திலும் தோல்விதான்.

கீழ் சபையில் ஏற்படும் எதிர்ப்பைக் கண்டு வில்பர் போர்ஸ், தன் தீர்மானத்தை பிரபுக்கள் சபை எனப்படும் மேல் சபையில் பிரேரேபித்தார். ஆனால் அடிமைகளை விற்று அதன் மூலம் லாபமடையும் பிரபுக்கள் நிறைந்த சபை அடிமை வியாபாரத்தை நிறுத்த வேண்டுமென்ற சட்டத்தை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்க முடியுமா? அங்கேயும் தோல்விதான்

தன் முயற்சியில் அவர் என்றுமே பின்வாங்கியது கிடையாது A practical view of the prevaling systems of Proffessed Christians in the Higher and Middle Class of this country contrasted with Real Christianity என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை வில்லியம் எழுதினார். அடிமைகளை விற்பனை செய்வோர் கிறித்துவ மதத்தின் வழி காட்டிகளாக அமைய முடியாதென்றும் உலகில் குடியரசின் தத்துவங்களைப் போற்றி வளர்க்கும் நாடெனும் ஆங்கில நாடு அடிமை வியாபாரம் செய்வது கூடாது என்று அப்புத்தகத்தில் அவர் எழுதியுள்ளார். இப்புத்தகம் பனிரெண்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலக மெங்கும் விற்பனையாயிற்று.

திருமணம்

1797-ல் பார்பரா ஸ்பூனர் என்னும் பெண்மணியை வில்லியம் வில்பர் போர்ஸ் மணம் செய்து கொண்டார். இல்லறத்தில் அன்பும் அறமும் உடைத்து பொது நலத் தொண்டு செய்தார்.

பார்மெண்டில் வில்லியம் தனக்குக் கிடைத்த தோல்வியைக் கண்டு வாளாயிருக்க வில்லை. நாடெங்கும் அடிமை வியாபாரம் ஒழிய வேண்டுமென்று பிரச்சாரம் செய்தார். ஆயிரக் கணக்கான பொதுக் கூட்டங்களில் அடிமை வியாபாரத்தை நிறுத்த வேண்டுமென்ற தீர்மானங்கள் நிறைவேறின. இறுதியில் 1804-ம் ஆண்டு பிப்ரவரி 23-ம் நாளன்று அடிமை வியாபாரத்தைக் கைவிட வேண்டு மென்ற சட்டம் நிறைவேறியது. ஆப்பிரிக்க நாட்டில் மனிதனைப் பிடித்துவந்து அவனை அடிமையாக்கும் கொடிய பழக்கமும் நின்றது.

வெற்றி பெற்ற வில்லியம் வில்பர் போர்சை ஆங்கில நாட்டு மக்கள் பெரிதும் பாராட்டினர். 1807-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது பொதுமக்கள் அவரது தேர்தல் செலவுகளுக்காக பொதுநிதி ஒன்றைத் திரட்டித் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். செனிஸ்ங்டனில் உள்ள அவரது வீட்டிற்கு நாள்தோறும் ஏராளமான மக்கள் சென்று அந்த மனிதகுல அபிமானியை பாராட்டினர்.

நோயினால் பிடிக்கப்பட்டு 1837-ம் ஆண்டு ஜூலை 29-ல் வில்லியம் வில்பர் போர்ஸ் மரணமடைந்தா.

அடிமை என்ற சொல் நம் முன்னே தோன்றும் போது ஆப்பிரகாம் லிங்கனின் நினைவு நமக்கு ஏற்படுகிறது. ஆப்பிரகாம் லிங்கன் தன் நாட்டில் வாழ்ந்த அடிமைகளின் வாழ்வுக்கு விடுதலை அளித்தார். 1865-ம் ஆண்டில் அதற்கான சட்டம் இயற்றினார். வில்லியம் வில்பர் போர்ஸ் ஆப்பிரிக்கர்களைப்பிடித்து அவர்களை விற்பனை செய்யும் கொடிய பழக்கத்திற்கு ஒரு முடிவு தேடினார். மனித வியாபாரம் கூடாது என்று அதைத் தடுப்பதிலே தன் சக்தி அனைத்தையும் செலவழித்தவர் வில்பர்போர்ஸ். அதன் காரணமாகவே ஆங்கில அரசாங்கம் அவரது உடலை, அறிஞர்கள், மனிதகுல அபிமானிகள், மக்கள் அன்பைப் பெற்ற மன்னர்களைப் புதைக்கும் இடமான வெஸ்ட்மினிஸ்டரில் அடக்கம் செய்து போற்றியது. நாமும் வாழ்க வில்லியம்வில்பர்போர்சின் சேவை என்று கூறிவோம்.

மலாயாவிலே கொண்டாடப்படும் கலாச்சார விழாவிலே தமிழும் மிளிர்கிறது! கடல் கடந்து வாழும் தமிழ் அன்னை தன் நாட்டிலே எத்தி உதைகப்பட்டு, எடுப்பார் கைப்பிள்ளையாகி யிருக்கிருள்.

வெளியாகி விட்டது!

விற்பனையாகிறது!

காவியக் கழகத்தாரின்

நான்காம் படைப்பு!

கவிஞர் கண்ணதாசன்

கவிதைகள்

[இரண்டாம் தொகுப்பு]

தனிப்பிரதி விலை: 2-8-0

விற்பனையாளருக்கு 25 கழிவு உண்டு

குறிப்பு: நேரடியாகப் பெற விரும்புகின்ற தோழர்கள் ஒரு புத்தகத்துக்கு மூன்று ரூபாய் அனுப்பி வைக்க வேண்டும்.

விபரங்கட்கு: காவியக் கழகம், சென்னை-2.

வீட்டுக்குள் வாத்தியார்

கோவிந்தராமானுசன்
(எம்.ஏ.)

(ஆசிரியர் வாய்விட்டு அகவுதலும் அவர் மனைவி ஓடிவருதலும்).

விரிவுரையாளர் மனைவி: "ஏன் இப்படி ஒரேயடியாக் கத்துறிங்க? காலேஜிலே படிக்கிறப்பத்தான் நாலாவது வீட்டிலே இருந்த என் காதுக்கு விழுருப்படி அலருவீங்க. இப்போ யாரு 'லவ்' பண்ணப் போறுங்க?"

விரிவுரையாளர்: "அடி அசடு. இது என் பாடம் கதறுவேன்; பிளிறுவேன். இது என் விருப்பம் நீ போ உள்ளே."

"உம். காலேஜில பாடம்சொல்லித்தர இன்னைக்கே கடம் அடிக்கிருப்படி யிருக்கு."

"அடி மக்கு, பையன்களுக்குப் பாடம் சொல்லித்தர யாராவது படிச்சிக்கிட்டுப் போவாங்களோ? நான் 'பி-எச்-டி' வாங்கப்பாடு படுகிறேன், ஆமாம்."

"பி. எச். டி'யாவது தேங்காப் பச்சடியாவது? சரிதான் அது ஒரு 'லாட்டரி சிட்' போலேருக்கு! எத்தனை நாளா இந்த நாடகம்? அதானே பாத்தேன். இப்பத்தான் நீங்க தினம் காசு செலவு பன்ற நோக்கம் புரியுது! ஊரிலே எல்லாரும் முன்னுக்குவரப் பாப்பாங்க நீங்க...

கருமம்! கொஞ்சமாவது 'இங்லீஸ் சென்ஸ்' இருந்தாத்தானே. இதுமட்டும் உண்மை. உங்க தகப்பனுர் ஒரு பேத்தல். அவர் பெத்த நீ ஒரு பெரும்பிதற்றல்."

"இதோ பாருங்க. என்னை என்ன வேணும்னுவது சொல்லுங்க. எங்க தகப்பனுரை மட்டும் பழிக்காதீங்க. சொல்லிவிட்டேன்."

"என்னடி பயமுறுத்துறே. உங்க தகப்பனுர் ஒரு மாபெரும் பேத்தல். கீழே கோடு போட்டுப்படி... நம்ம கலியாணத்துக்கு மட்டும் சீதனமா ருபா ரெண்டாயிரம் தர்ரேன்னுர். நானும்...சரிதான் நாம, படிச்ச பி. ஏ-க்கு 'மூதல்' இது போதும்னு பேசாம இருந்தேன். வெட்கத்துக்குபயந்து இன்னும் இதைப் பத்திக் கேக்கல்ல! இந்தா அந்தான்னு வருசம் ரெண்டாச்சி. ஒரு சல்லி பெயரல்லே! கேவலம்! ரூபாய்க்கு ரெண்டு நயாபைசா வந்தாதான் தருவாறு போலேருக்கு! எங்க? அதையும் உன் பேரிலே அநுமான் பேங்கிலே போட்டிருப்பார்..."

"பேசுங்க! நல்லாப்பேசுங்க! காலேஜிலே கத்துறது போதாதுன்னு வீட்டிலேயும் வந்து என் பிராணனை வாங்குங்கோ! நான் தான் பாவம் பண்ணினவள்! பையன்க என்ன பாவம் பண்ணினுங்களோ உங்க 'லெக்சரை' கேக்க?..."

"அட போவுது. போன தீபாவளிக்குத்தான் வாட்சு பூட்றேன். பூட்ஸ் மாட்றேன்னுர் என்ன மாட்னுர்? குல்லாதான் — அதுக்குக் கூட அளவுதான் எடுத்துக்கிட்டுப் போயிருக்கார். நான் ஒரு தீவிர சீர்திருத்தவாதி!? தீபாவளி யெல்லாம் பிடிக்காது. இருந்தாலும் உங்க அப்பாவுக்காகவந்தேன்...வீட்டுக்குள்ள நுழையிறப்போ—யானை வெடி போட்டார். வீட்டுக்குத் திரும்புறப்போ— புஸ்வானம் விடுருர். அதுலகூட பொறி இல்லே! ஒரே புகை வாணம்! ஒங்க வீட்டுத் திண்ணையிலே ஆப்பம் சுடுறவகூட என்னைப் பரிதாபமாப்பாத்தா...நான் தான் ஒரு 'வாட்சு' இல்லாமத் தவியாத் தவிக்கிறேனே. அரை விசையிலே ஒரு இரும்புவாச்சாவது செஞ்சிப்போட்டா அதை வச்சிக்கிட்டு ஒரு 'எக்ஸ்பரிமெண்ட்'டாவது செய்வேன்."

"சரி சரி மெதுவாய் பேசுங்கோ. யாரோ வாசப்படியிலே பையன்க சத்தம் கேட்குது. நீங்க மொணகுறதைக் கேட்டுட்டு 'வாத்தியார் மனைவிக்கு' மூக்கடைப்புன்னு சொல்லப் போறுங்க."

"ஏன்டி நான் பேசுறது பொம்புளை புலம்புற மாதிரி யிருக்கா. தோபாரு இன்னொருதடவை இது மாதிரி சொன்னே உன்னை கிளாசைவிட்டு ... அதாவது வீட்டைவிட்டு ஊருக்கு அனுப்பிடுவேன், ஜாக்கிரதை."

"முதல்லே 'கோட்டை'யும் 'பேண்டை'யும் கழட்டிட்டு வேட்டி கட்டுங்க. இன்னும் காலேஜ் நினைப்பு மாறல்ல (கோட்டைக்கழற்றுதல்) அப்பா. இப்பத்தான் உங்க உருவமே ஒழுங்காருக்கு, ... உங்களை ஒன்னு கேக்குறேன் சொல்றிங்களா?"

சொல்றிங்களாவா?! அப்ப தாராளமா கேளு. 'கற்றலிற் கேட்டலே நன்று'ன்னு சொல்றுங்க. பணம் மட்டுங் கேக்காதே."

'எக்ஸ்பரிமெண்ட்'ன்னு என்னு அர்த்தம்?"

உக்கும்! நீ சமையல் செய்ற பாரு. அதுவே ஒரு எக்ஸ்பரிமெண்ட்டுத்தான்."

"எப்படி?"

"சமையல்செய்ய என்னென்ன தேவையோ அதெல்லாம் அப்பேரடஸ் அதாவது உபகரணங்கள்."

"டிஸ்கிரிப்சன் அதாவதுவிளக்கம் அடுப்பு, குழம்பு, ரசம் ரிசல்ட்டு இருக்கே...அதாவது முடிவு அது என் உடம்பு."

"அப்புடின்னு...என் சமையல் மட்டம். உங்க 'லெக்சர்' மாதிரி, நீங்க பாடாப் படுத்துறதுக்கெல்லாம் நான் மாடா ஒழச்சி ஓடாப் போனேன் ... ஒரு காலேஜ் பெண்ணை கட்டிக்கிறதுதானே? என்னை ஏன் கட்டிக்கிட்டீங்க?"

"உன்னைக் கட்டிக்கிட்டே நான் இந்தப் பாடுபடுகிறேன் ஒரு காலேஜ் பொண்ணை கட்டிக்கிட்டேன்...என் வாழ்க்கையைக் கனவுகூடக் காணமுடியாது..."

"உங்கள எனக்குத் தெரியாதோ? ஒருநாள் சினிமாவுக்குப் போனேன், அங்கே ஒரு காலேஜ் பையன் என்னை உங்க மனைவிங்கிறது தெரிஞ்சுக்கிட்டு ஒன்னு சொன்னுன்"

"புகழ்ந்து தானே"

"உம். வசமாத் திட்டினுன்"

"ஆ, அப்புடியா? அவன் நம்பர் என்னு?...ஓ...வேறென்ன சொல்லிருப்பான்...'உஷ்'... 'உஷ்'...ன்னிருப்பான். 'போர்' "'போர்'ன்னிருப்பான்"

"போர்னு சொன்னுலே நீங்க அங்கே இருப்பீங்கன்னு அர்த்தமா?"

"போருக்கு அஞ்சிய பரம்பரையில்லடி நான்...உம். அவன் வேறென்ன சொல்லித் திட்டினுன்?"

"ஏன் இவ்வளவு? இந்தக் கடிதம் உங்க புத்தகத்திலே இருந்தது. படிக்கிறேன் கேளுங்க... திருமதி வாத்தியார் மனைவிக்கு வணக்கம்.

தாங்கள் தங்கள் கணவரை மகிழ்ச்சியூட்டி ஆனந்தப் படுத்தவும். ஆங்கில அறிவிருந்தால் அன்றுடப் பாடம் முன்பே சொல்லித்தருக. இப்பவும் அவர் திக்குமுக்காடுவது பையன்கள் கலாட்டாவால் அல்ல-பாடம் தெரியாததால்! அவர் அறிவைப்பெருக்கி, அசட்டைக் கழித்து எங்கட்கு வழி வகுக்கவும். இந்த அறிவுரையின் கீழ் ஆயிரம் முறைக்கோடு கிழித்து அவர் திருமுன் வைக்கவும்.

இங்ஙனம்,
பழைய கல்வித் திட்ட மாணவர்கள்.

"ஆ...தன்வினை தன்னைச்சுடும் ...(ஆசிரியர் மயக்கமடைந்து தெளிதல்) இது நான் காலேஜில படிக்கிறப்போ எங்க வாத்தியார் மனைவிக்கு நான் அனுப்பிய நோட்டீசு நகல்"

"அப்படின்னு இந்த காலத்து பையங்க எவ்வளவோ மேலானவுங்க..."

"ஆமாம் ஆமாம்...உன் தம்பி ரொம்ப மேலானவன். பனமரத்து உச்சிவரை போவான்...கருமம்... ஏன்டி நான் 'லெக்சரரா'யிருக்கிற காலேஜிலே கொண்டாந்து சேத்தே? கிளாசுலே மரியாதையில்லாம நடந்துக்கிருன். இதோ வர்ரான். கொஞ்சம் கண்டிச்சு வையேன்புண்ணியமா போவுது!"

உம். 'லேடீஸ் ஸ்டுடன்ட்' ஒங்க காலேஜில சேர்ந்தாலும் சேந்தாங்க நீங்க 'டீக்'கா 'டிரஸ்' பண்ணிக்கிறிங்க. அவன் 'நீட்டா போனு திட்டுறிங்க. இது என்ன நியாயம்?...பாவம் காலேஜிக்கு விளையாட்டு 'டிரஸ்'லே போருன். வீட்டிலே 'என். சி. சி. டிரஸ்' லேயே கிடக்குருன். அவனுக்கு என்னைத்தவிர இந்த உலகத்திலே ஆதரவு யாரு?"

"அடியே ரொம்பப் பேசாதே. காலேஜிலே என் மானத்தைவிலை கொடுத்து வாங்குகிருன். ஏலமும் போடுருன். எனக்கு ஒரே 'டை' தானிருக்குங்குருன்!"

"ஏது? எங்க தகப்பனுர் நம்ம கலியாணத்துக்கு வாங்கித் தந்தது தானே! அதிலே ரெண்டு பக்கமும் வேறே வேறே படமிருக்கே."

(வந்து கொண்டே)

"ஆமாம் அக்கா; அது பையன்களுக்குத் தெரியல்லே. ரெண்டு 'டை'யின்னு நினைச்சானுங்க. இப்பத்தான் அதை காலேஜிக்கு எடுத்துக்கிட்டுப் போயி காட்டிட்டு வர்ரேன்"

"அப்படியா சங்கதி...டேய்... வா...உன்னை...நாளைக்கி கிளாஸ்லே கேள்வி மேலே கேள்வி கேட்டுத் திண்டாட வைக்கிறேன்."

"அவன் பதில் சொல்லாட்டி உங்களுக்குத்தானே கேவலம்!"

"உன்னைக் கட்டிக்கிட்டதே கேவலம்"

"யக்கா. கிளாஸ் (class) லே பையங்க இவரைத் திட்டுறது எனக்குக் கேவலமாயிருக்கு. கடைசி 'பென்சு' (Bench) பையனுங்க கொரட்டையை விட சத்தம்போட்டு கத்துருரு. இதுக்கு பேரு 'லெக்ச'ராம் (lecture)."

"சும்மார்ரா...கழுதை"

"உங்க தகப்பனுருக்குத்தான் நாயின்னு உயிர்" "உங்க தகப்பனுருக்கு எருமை உங்கம்மாவுக்குப் பேனு. உங்க பாட்டிக்கி ஈயடிக்கிறதும் மூட்டைப் பூச்சியடிக்கிறதும் வேலை, உன் தம்பி ஒனுன் அடிப்பான். உங்க அக்கா கொசுவுக்கு வலையே பின்னுவா. ஆன் தி கோல் (on the whole) உங்க பேமிலியே (Family) ஒரு நடமாடும் மிருகக்காட்சி சாலை"

"ஏன் பன்னியை விட்டுட்டீங்க?"

"அதான் உங்க வீட்டு மூகப்புலேயே கெடக்குமே."

"நீங்க தவுக்களையை விலை கொடுத்து வாங்குறதுக்கு இது எவ்வளவோ மேல்"

"யக்கா வாசல்லே...யாரோ... பையன்...டியூசனுக்கு (Tution) வந்த மாதிரி..."

"அப்படியா!!...டேய் பிடி— விடாதே. அடியே என்னமோன்னு, நினச்சியே, பாரு என்ன நடக்கபோவுதுன்னு ஏன்டி மலைக்கிறே உள்ளே கூப்பிடுடா அவனை"

"இந்தப் பணத்திலே ஒரு மாடு வாங்குங்க. வீடு மொழுக சாணி. அடுப்பெரிக்க 'ராட்டி' உங்களுக்கு பாலுக்கு எல்லாம் சரியாயிருக்கும்."

"சரி சரி...போ.. உள்ளே.. இப்ப பேசாதே.. (மனைவி போதல்)..வா..தம்பி.. பாரு நான் கண்டிப்பானவன். நூறு ருபாய்க்கு கீழே வச்சுக்கிறதில்லை."

"தந்திடுறேன் சார். நீங்க சரின்னு போதும். இந்தாங்க இருநூறு ருபாய்..டாக்ஸி (Taxi) கொண்டாந்திருக்கேன், வாங்க உடனடியா போவோம்."

"எங்கப்பா?!.."

"ஓ. சி. பி. டி. எக்ஸ் கிட்டே"

"எதுக்கப்பா?"

"மெடிகல் காலேஜிலே இடம் வாங்க"

(வாத்தியார் மயக்கமடைந்து விழுதல் மனைவி வந்து கொண்டே..)

"அது சரிதான். அந்த ஆள் மூலம்தான் இவரு காலேஜிக்கே லெக்சரரா வந்தாரு. அதுவும் எங்க அப்பாதான் செய்து வச்சாரு. நீ போப்பா வேறே யாராவது நல்ல ஆளாத் தேடிக்கிட்டு ..(பையன் போதல்)..

தோழர் A. P. ஜனர்த்தனம், M.A.

நாமெல்லாம் தென் இந்திய நலஉரிமைச் சங்கம் (S.I.L.F.) என்ற அமைப்பிலிருந்து பணியாற்றிக் கொண்டிருந்ததிலிருந்து பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் நண்பர் ஜனர்த்தனம்.

நல்ல பேச்சாளர்—சிறந்த எழுத்தாளர் — திராவிடர் கழகத்தில் ஏற்பட்ட போட்டி பூசலின் காரணமாக குடத்திலிட்ட விளக்கென இருந்தார். உண்மையான நாட்டு நிலையறிந்தவர்கள், பெரியாரின் ஆற்றலைஅறிந்தவர்கள், இன்றைய பெரியாரின் சக்தியும் அவரின் தொண்டர்களின் சக்தியும், யாருக்கோ, எந்த சுயநலவாதிகளுக்கோ பயன்படுவதை எண்ணி வருத்தப்பட்டு வெளியே வந்தவர்களில் ஜனர்த்தனம் ஒருவர். திராவிட கழகத்தைவிட்டு வெளியேறியது அவர்களுக்கு ஈடுசெய்யமுடியாத நட்டந்தான். எனினும் புழுக்கத்திலகப்பட்டுக் கொண்டு மனப் போராட்டம்நடத்திக்கொண்டிருப்பதைவிடவெளியேறி-நமது முன்னைய அடிப்படைக் கொள்கைகளை அப்படியே செயல் முறையில் கடைபிடித்துக் கொண்டிருக்கும் நமது கழகம் அவரது பேச்சு எழுத்துப் பணிகளை ஏற்றுக்கொள்ளத் தக்கவகையில் அவரைக் கூட்டங்களுக்கழைத்தும், கட்டுரைகளை வெளியிட்டும் அவரை சிறப்பிக்க வேண்டுகின்ருேம்.

—ஆசிரியர்

அவரது முகவரி:
A. P. ஜனர்த்தனம், M.A.
28, சுபேதார் உசேன் தெரு,
புதுப்பாக்கம், சென்னை-14.

பார்வைக்கு வந்தவை

"வாழ்வியல்"
(திங்கள் இருமுறை)

ஆசிரியர், பதிப்பாசிரியர்:
மா. வேங்கடாசலம்
172, குமரன் தெரு,
பொள்ளாச்சி.

'வாழ்வியல்'—வளரத்தக்க ஓர் ஏடு. இலக்கண இலக்கியத்தோடு வந்துள்ள இந்த இதழைப்போல் இனி எந்த இழையும் கொண்டு வந்து தொண்டாற்றும் என்பதற்கு இஃதோர் சான்று. வாழ்க! வளர்க! தமிழர் இல்லந் தோறும் மணக்க!

★

வரப்பெற்றேரும்:—
முரசு
[ஆசிரியர்: இரா. அதிமன்]
வெளியிட்டோர்: நீயூலீலா அச்சகம்,
இலங்கை.
விலை 10 சதம்

★ சி. பி. சிற்றரசு ★

இரா. தங்கமுத்து, தேவர்சோலை

கே : திராவிட நாட்டில் எத்தனைக் கிளைக் கழகங்கள் உள்ளன, தமிழ் நாட்டைத் தவிர !

ப : தலைமை நிலையத்தில் கேளுங்கள் புள்ளி விவரம் சரியாகக் கிடைக்கும்.

அ: பிரகாசம், சென்னை-14

தங்கள் பத்திரிக்கையின் தலைப்பான 'இனமுழக்கம்' என்பதற்கு பொருள் விளக்கம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ப : ஒரு இனத்தை (திராவிட)த்தை தட்டி எழுப்பப் படும் முழக்கம்.

கே : பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் பொதுக் குழு கூட்டங்களில் கலந்து கொள்ளலாமா?

ப : சினிமாவுக்கு டிக்கட் வாங்கியவர்கள் உள்ளே போகலாமா என்று கேட்பதைப் போலிருக்கிறது உங்கள் கேள்வி

வே. புதியப்பன், ஒத்தைக்கால்மண்டபம்

கே : கற்பு என்பது நெருப்பா ?

ப : நெருப்புமல்ல, நீருமல்ல ஆழ்கடல். முத்தெடுக்கத் துணிந்தவனே அதில் குதிக்க முடியும்.

கே : திராவிடநாடு பிரிந்தால் மது வருமா ?

ப : அதற்குள் அதுவே வந்து விடும் போலிருக்கிறதே.

கே : 'திராவிடர், என்ற சொல் எந்த மொழியைச் சார்ந்தது?

ப : திருவிடம் என்ற சொல்லிலிருந்து.

இளந்தென்றல், தோப்புத்துறை

கே : சென்னை மந்திரிகள் எட்டு பேர்களில் எட்டப்பர் என்ற பெயர் யாருக்குப் பொருந்தும் ?

ப : மந்திரி பக்தவத்சலத்துக்கு சொல்லலாம்.

டி. எஸ். சிட்டு, பெரம்பலூர்

கே : கழகம் நடத்துகின்ற மாநாடுகளை பற்றிய வரவு செலவு கணக்கை காங்கிரஸ் காரர்கள் கேட்கிறார்களே, அவர்கள் நடத்துகின்ற கண் காட்சிகள், மாநாடுகள் பற்றிய வரவு செலவு கணக்கைக் காட்டுகிறார்களா?

ப : இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கென்ன வேலை என்று கேளும்.

மு மதிவேலன், ஒத்தைக்கால் மண்டபம்

கே : இந்தி மொழியில் கலைச் சொற்களை உண்டாக்க இலட்சக் கணக்கில் பணம் செலவழிக்கிறார்களாமே, உண்மையா?

ப : இல்லை, இல்லை. கோடிக் கணக்கில்.

கே : என்னுடைய நண்பர் பேய் பிசாசுகள் இருக்கிறதென்கிறார். நான் இல்லை என்கிறேன். அவர் பேய் பல இடங்களில் பலருக்குப் பிடித்திருப்பதாகவும், பேய்வந்தவர் சிலம்பாட்டம் ஆடியதாகவும் சொல்கிறாரே, உண்மையா ?

ப : அந்த நண்பரைக் கூப்பிட்டு பேயை உம்மேல் ஏவி விடும்படிச் சொல்லும். அப்போது பார்க்கலாம்.

கே : சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வரலாற்றைப் படித்தறிய நல்ல வரலாற்று நூல்கள் தமிழில் உள்ளனவா?

ப : ஏராளமாக உள்ளன. ஆனால் கோர்வையாக இல்லை.

ம. கா, வசந்தா, சென்னை-18

கே : ஐயா ! இந்திக்குப் பாலம் கட்டி எழுதுகிறார்களே (மேலே உள்ள கோடு) அது, அம்மொழிக்கு பாலம் இல்லை என்பதைத்தானே காட்டுகிறது ?

ப : உப்புக் கண்டம் உலர்த்துவதை நீர் பார்த்ததுண்டா.

ஆர். லூர்துசாமி, அரக்கோணம்

கே : சிந்தனைச் சிற்பி அவர்களே ! குடந்தையில் கழகத் தோழர் இராமலிங்கத்தை காங்கிரஸ் காலிகள் அடித்துக் கொன்றார்களே, அதைப்பற்றி கழகம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

ப : போலிஸ் அதிகாரிமேல் வழக்குத் தொடுத்திருக்கிறது.

ட. இ. இளங்கோ, பம்பாய்-70

கே : சுப்பிரமணியம் சட்ட சபையில் பேசும்போது உணவு உற்பத்தி முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மக்கள் வயிறுபுடைக்க சாப்பிடுகிறார்கள் என்று வாய்கிழிய பேசி இருக்கிறாரே? இதற்கு பதில்தர விழைகிறேன்.

ப : அவர் சொந்த அனுபவத்தைச் சொல்கின்றார்.

கா.லோ. நவநீதன், நீலகிரி

கே : அண்ணா ! நான் கவிதைகள் எழுதப் பிரியப்படுகிறேன். அவைகளை இயற்றுவதற்கு தேவையான இலக்கண நூல்கள் என்ன என்ன?

ப : நூல்களைப் படித்தவர்கள் அனைவரும் கவிஞர்களா என்ன? அதோடு நுண்ணறிவு இயற்கையறிவு இருக்கவேண்டுமே அது இருக்கிறதா உம்மிடம் என்பதை சோதித்துப் பாரும்.

கே : திருக்குறளையும் நாலடியாரையும், நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்று சொல்லி இருக்கிறார்கள். நாலை விட்டு விட்டு இரண்டை மட்டும் அகிலமெல்லாம் மெச்சும்படி பேசுகிறோம். இதைப்போல் நாலையும் உலகத்தில் நடமாடவிட்டால் நல்லதா கெட்டதா ?

ப : நல்லதுதான்.

மு. முகம்மது ஷரீப், கீவளூர்

கே : இரா. நெடுஞ்செழியன், ஆசைத்தம்பி — ஆகிய இருவர்களையும் ஏன் பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வில்லை ?

ப : திரு. நெடுஞ்செழியன் நிற்கவில்லை. ஆசைத்தம்பி நின்று வெற்றிக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டார்.

கே : அமைச்சர் பக்தவத்சலத்தின் படத்தை திறந்து வைக்க வேண்டுமென தீர்மாணம் கொண்டு வந்தார்களே அங்கென்ன இராமாயண நாடகம் நடப்பதாக இருக்கிறதா?

ப : இருக்கலாம்.

கே : அமைச்சர் சி. சுப்ரமணியம், மேல் நாடுகளில் தொழில் துறையைப் பார்வையிட சென்றுள்ளாரே, அவருடைய சொந்தப் பணத்தையா கொண்டு சென்றிருக்கின்றார்? சுமார் எவ்வளவு பணம் கொண்டு சென்றிருப்பார் ?

ப : தெரியவில்லை.

யூ. கா. ஷரீப், ஆற்காடு

கே : நம் கழகக் கொடியில் கறுப்பும் சிவப்பும் இருப்பதன் பொருள் என்ன?

ப : கறுப்பு அடிமையாயிருப்பதன் அவமானச் சின்னம். அதை ஒழிக்க இரத்தப் புரட்சி செய்யவேண்டும் என்பதால் சிகப்பு.

கே : தி. மு க.வின் கோரிக்கை திராவிடநாடு பெறுவது ஒன்றுதானா ?

ப : ஆம்.

குமாரி செ. மங்கையர்க்கரசி, பல்லாவரம்

கே : சூட்டும் கோட்டும் அணியும் சுந்தரவடிவேலு ஏன் இப்போது திடீரென கதர் அணிய ஆரம்பித்துவிட்டார் ?

ப : வேடத்திற்கேற்ற உடை அணிய வேண்டாமா?

பி. கிருஷ்ணன், ஆரணி

இரஷ்யாவில் கோவில்கள் உண்டா? மதக் கொள்கைகள் உண்டா? முஸ்லிம்கள் உண்டா? முஸ்லீம் மசூதிகள் உண்டா? தமிழர்கள் உண்டா? தமிழர் கோயில் உண்டா ? கிறிஸ்தவர்கள் உண்டா ? அவர்கள் கோயில் உண்டா?

ப : தமிழர்கள் கோயில்கள் தான் இல்லை. மற்ற எல்லாம் உண்டு. தொழுகை உண்டு.

கழக இடைத்தேர்தல்கள்

வட்ட - மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

மேல் அமைப்புக்களின் நிர்வாகிகளின் நிர்வாகக்குழுக்களில் தேர்த்தெடுக்கப்பட்டதன் காரணமாக, கீழ்அமைப்பின் நிர்வாகப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள வேண்டிருக்கும் தோழர்கள், முறைப்படி வட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒப்புதலுடன் தலைமைக் கழகத்திற்குத் தாங்கள் விலகிக் கொள்ள விரும்பும் பொறுப்புக்கான விலகல் மடலை அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

கீழ் அமைப்புக்களில் தாங்கள் வகித்துவந்த பொறுப்பு-மேல் அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பதவி ஆகியவைகளைத் தெளிவாக ஒரு வார காலத்திற்துள் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்க வேண்டுகிறோம்.

இந்தப் பதவிகளுக்கு விரைவில் முறைப்படி தேர்தல் நடத்தவேண்டும் என்பதையும் வட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் நினைவில் கொண்டு ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13.
10—10—1960

என். வி. நடராசன்,
அமைப்புச்செயலாளர்.

மு. துலுக்காணம், சென்னை-12.

கே : அண்ணா அவர்களே ! ஒரு காங்கிரஸ் நண்பர், காங்கிரசில் 19பட்டதாரிகள் இருக்கிறார்கள். ஆனால் தி. மு. க. வில் 3 பட்டதாரிகள்தான் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மையா?

ப : நூறு ஆடுகளுக்கு மேய்ப்பவன் ஒருவன் இருந்தால் போதும் என்று சொல்லுங்கள்.

எஸ். டி. இராஜன், பம்பாய்-1

கே : சென்னை சட்டசபையில் பிரிவினைக் கொள்கையை கைவிடுமாறு நிதிமந்திரி நம்மைக் கேட்டதுபோல் ஐரோப்பிய மக்களைப் பார்த்து 'ஒன்று படுங்கள்' என்று சொல்லியிருந்தால் அவர்கள் என்ன பதிலளித்திருப்பார்கள்.

ப : ஒன்றுபடுவதுஏன்என்று கேட்பார்கள். எப்படிஎன்று கேட்பார்கள் எதற்காக என்று கேட்பார்கள். காலனி ஆதிக்க ஒழிப்பு சுரண்டல் ஆதிக்கம் பிரிந்தால் ஒழியுமா? ஒன்றியிருந்தால் ஒழியுமா? என்று தலையில் குட்டிக்கேட்பார்கள். இன்று சேர்க்காத சீனுவைத் தள்ளி 96 நாடுகள் தனித்தனியாக இருக்கின்றனவே, குடிமுழுகிப் போய்விட்டதுஎன்று கேட்பார்கள்.

ச. தமிழன்பன், கேரளா.

கே : அண்ணா ! ஆங்கிலமும் இந்தியும் இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்ற சென்னை அரசின் திட்டத்தை இந்திய அரசு ஏற்றுக் கொண்டதாகச் சென்னை சட்ட மன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில், கவர்னர் மேதி பேசி இருக்கின்றாரே, இது தி. மு. க. வின் மொழிக் கொள்கையில் முழு வெற்றியடைந்துவிட்டதாகக் கூற முடியுமா? அப்படியானால் நமது போராட்டத்தின் நிலை என்ன ?

ப : பேச்சில் மயங்காதீர். செயலைக் கவனித்துக் கொண்டிரும்.

க. சுப்பிரமணியம், கருகம்பாளையம்

கே : பிரதமர் நேருவைப் பற்றி தங்கள் கருத்தென்ன ?

ப : சுதந்திரக் கயிற்றால் ஆடும் பொம்மை.

தி மா. மணி, திருப்பாச்சூர்

கே : தென்னகத்தின் கலாச்சாரத்தின் சிறப்பை மதிக்காத வடவர், தென்னாட்டு நடிகையரின் நடனக் காட்சியை மட்டும் வியந்து பாராட்டுகின்றனரே, ஏன்?

ப : அவர்கள் பாராட்டுவது நாட்டியக் கலையை அல்ல ....படத்தைப் பாரும். விளங்கும் !

ஐ. நா. வில் சீனா

உலகத்தின் பல நாடுகள் ஐக்கிய நாடு சபையில் அங்கம் வகிக்கின்றன. தற்போது புதிதாகச் சுதந்திரம் பெற்ற 14 நாடுகளுக்கும் பிரதிநித்துவம் கிடைக்கிறது. விடுதலை முழக்கம் செய்வோர், வெற்றி பெறுவதும் அந்நாடுகளுக்கு ஐக்கியநாட்டு மன்றத்தில் இடம் கிடைப்பதும் மகிழ்ச்சிகரமான செய்திகள்தான். ஆனால் சீனாவுக்கு இடமில்லை

சர்வதேசச் சங்கத்திலே? சேரத்தகுந்தது சேரவில்லை!

என்று நீண்ட நாட்களாகவே சொல்லி வருவது கண்டிக்கத்தக்கது என்பதை நடுநிலையாளர்கள் எவரும் மறுக்கஇயலாது. இந்நிலையில் ஐக்கிய நாடு சபையில் நடைபெற்ற பல சம்பவங்களைக் குறித்து இங்கு எழுதுவது மிகமிக அவசியம் என்றெண்ணுகிறேன்.

ஐக்கிய நாட்டுச் சபையில் தலைவர் போலண்ட் என்பவர்—பொதுச் செயலாளர் ஹாமர்ஷில்டு என்பவர் பல சிக்கலான பிரச்னைகளில் தலையிட்டு வெற்றிகரமாக நடத்தியவர் ஹாமர்ஷீல்டு என்பது அரசியல் தெளிந்தவர்களுக்குத் தெரியும். ஜப்பான் பஸிபிக் கடலில் உள்ள கிறிஸ்மஸ் தீவில் ஒருமுறை அணுகுண்டு பரிசோதனை நடத்தியதாகச் செய்தி கேள்விப்பட்டவுடன் அங்கு விரைந்து அப்பிரச்னையை பரிசீலித்தார். சூயஸ் கால்வாய் பிரச்னையின் போது நாசரைச் சந்தித்து விவரங்கள் கேட்டு தனது அக்கரையைக் காட்டிக் கொண்டார். தற்போது காங்கோ விடுதலை அடைந்தாலும் அதில் ஒரு பகுதியான கடாங்காவில் பெல்ஜியத்துருப்புகள் தொல்லை கொடுப்பதைக் காங்கோ பிரதமர் லுமும்பா தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஐ. நா. துருப்புகளை அங்கு அனுப்பி வைத்தார். ஆனாலும் பெல்ஜியத் துருப்புக்கள் இன்னும் நிலைமையைச் சீர்படவிடாமல் செய்துகொண்டு இருப்பதால் லுமும்பா சோவியத் நாட்டின் உதவியை வேண்டவே குருச்சேவும் தனது ஆதரவை அளிப்பதாகக்கூறி ஹாமர்ஷீல்டு தனது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்ற முறையில் பேசி வருகிறார். அத்துடன் சீனாவை ஐ. நா.வில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. அது குறித்து தனது கருத்தை வெளிப்படுத்துகையில் அமெரிக்கப் பிரதிநிதி வார்ட்ஸ்வொர்த் சீனாவின் ஆக்ரமிப்புகளைச் சுட்டிகாட்டி இத்தகைய நாட்டைச் சேர்க்கக் கூடாது என்று குறிப்பிட்டார். அதை அடுத்துக் குருச்சேவ் பேசுகையில் வார்ட்ஸ்வொர்த்தைப் பற்றித் தரக்குறைவாகச் சில வார்த்தைகள் பேசிவிட்டார். மேலும் சியாங்கே ஷேக்கை பிரேத மனிதன் என்றும் வர்ணித்தார். சியாங்கே ஷேக்கைப் பற்றி நாம் பேசும்போது கூட அவரைக் கண்டித்துத் தான் பேசுகிறோமே தவிர பாராட்டிப் பேசுவதில்லை. ஆனாலும் ஒரு பொதுச்சபையில், உலக நாடுகள் அங்கம் வகிக்கும் சபையில், இத்தகைய சொற்களை, அதிலும் ஒரு நாட்டின் தலைவர் பேசலாமா? என்பது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பிரச்னைதான்.

ஆனால் வார்ட்ஸ்வொர்த் சீனத்தைக் கண்டித்தாரே அது தவறில்லையா என்றால், அவர் எந்தத் தலி நபரையும் தாக்கிப் பேசவில்லை. சீனாவின் போக்கு ஆக்ரமிப்பு மனப்பான்மை உடையதாய் இருக்கிறது என்று மட்டுமே குறிப்பிட்டார். மேலும் அது அப்போது ஓட்டுக்கு விடவேண்டிய பிரச்னையாக இருந்ததால் அவரது கருத்தை அச்சமயம் வெளியிட வேண்டியது அவசியமாகவும் இருந்தது. மேலும் பர்மா, நேப்பாளம், இந்தியா ஆகிய இடங்களில் சீனா நடந்துகொண்ட முறை விரும்பத்தக்கதாகவும் இல்லை.

—ஐ நா. வில் நேரு—

தகராறுகள் பல இன்னும் பல இருந்தாலும், அதற்காக 65கோடி மக்களைக்கொண்ட ஒரு நாட்டை அங்கம்வகிக்கவிடாமல் தடுப்பது சரியல்ல.

-ஐ. நா. வில் நேரு

அதிலும் குறிப்பாக சீனாவுக்கு ஐ. நா. வில் பிரதிநித்துவம் கொடுத்தாகவேண்டும்என்று வற்புறுத்திய இந்தியாவிடமேஅது ஆக்ரமிப்புச்செய்தது பொறுக்க முடியாத செயலாகும்: இந்த ஐ. நா. கூட்டத்தில்கூட நேரு “தகராறுகள் பல இன்னும் இருந்தாலும் அதற்காக 65 கோடி மக்களைக் கொண்ட ஒரு நாட்டை அங்கம் வகிக்கவிடாமல் தடுப்பது சரியல்ல” என்றே பேசியிருக்கிறார். அவரது பெருந்தன்மையை அவசியம் பாராட்டியே ஆகவேண்டும். மேலும் உலகப் பிரச்னையில் தீர்வுகளுக்கென்றே ஏற்பட்ட ஒரு மன்றத்தில் ஒரு நாடு விடுபட்டுப்போவது அதற்கு மட்டும் நட்டமல்ல, அது தவறு செய்யும்போது அதை அழைத்துக் கேட்க முடியாமல் போவதன் மூலம் அடுத்த நாட்டுக்கும் நட்டம்தான். இதே நிலைதான் இன்றுஇந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள நட்டமும் சீனா அங்கம் வகித்திருந்தால் இந்தியப் பகுதியில் ஏன் புகுந்தாய்—லடாக் யாருக்குச் சொந்தம்--மாக் மோகன் எல்லைக்கோடு பற்றி உனது கருத்து என்ன? என்று கேட்கமுடியும். இப்போது கேட்கவழி இல்லை. என்றாலும் அதற்குப் பிரதிநித்துவம் வேண்டுமென்று எல்லா நாடுகளையும் விடத் தீவிரமாகப் போராடிய இந்தியாவின் தலையிலேயே அது கைவைத்ததை எண்ணுகிற போது வரங்கொடுத்த பரமசிவன் தலையிலேயே கைவைத்து பரிசீலித்த அசுரன் கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. இந்நிலையில் சீனாவைப்பற்றிச் சொல்லப்பட்ட கருத்துகளில் சில பல ஞாயமானவையே. அதற்காகக் குருச்சேவ் கோபித்துக் கொண்டு வார்ட்ஸ் வொர்த்

தூத்துக்குடி

ஜோசப்

தையும், சியாங்கே ஷேக்கையும் வாய்க்கு வந்தவாறு சற்று சூடாகப் பேசியிருக்கிறார். உடனே மன்றத்தலைவர் போலண்ட் குறுக்கிட்டு பேசாதவாறு தடுத்திருக்கிறார். ஆனால் குருச்சேவோ ஏன் வார்ட்ஸ்வொர்த் பேசும் போது கண்டிக்கவில்லை என்று எதிர்க் கேள்வி போட்டிருக்கிறார். அத்துடன் நில்லாது தொடர்ந்து பேசவும் ஆரம்பித்திருக்கிறார். பார்லிமெண்டரி முறை என்பதே தலைவர் சொல்லுக்குக் கட்டுப்படவேண்டும் என்பதுதான். தலைவர் தவறாகப் போனால் என்ன செய்வது என்று கேட்கலாம். அதற்கு வேறு எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. அதை விடுத்து ஒரு மற்றக் கூட்டத்தில் தலைமை தாங்கும் ஒருவர், சொல்லும் கருத்தையும் மதிக்காமல் மீறிப் பேசுவது ஜனநாயக வரம்பிற்கு உட்பட்டது என்று எவராலும் ஒத்துக்கொள்ள இயலாது. தலைவர் ஆணைபிறப்பிக்க குருச்சேவ் பேசுவதற்காக வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி அப்புறப்படுத்தப்பட்டது. இது ஒருவகையிச் குருச்சேவுக்கு அவமானமே. இதைக்கண்டு குருச்சேவ் கோபித்திருந்தால் அது மனித சுபாவத்துக்கு மாறுபட்ட செயல் என்று சொல்ல முடியாதுதான்.

சீனாவுக்குப் பிரதிநித்வம் தரவேண்டும் என்று இந்தியா வாதாடுவதுபோல் குருச்சேவ் வாதாடுவது நியாயம் இல்லை என்று முட்டாள் கூடச் சொல்லமாட்டான். மேலும் படைக் கலைப்புப் பிரச்னையில் சீனா பிரதிநித்துவம் அளிக்காமல் பேச்சு வார்த்தை நடத்துவது சரியல்ல என்ற குருச்சேவின் வாதமும் முற்றிலும்பொருத்தமானதே. ஆனால் அப்படிச் செய்தால் தானும் இன்னும் சில சோவியத் நாடுகளும் தனியாகப் பிரிந்து வேறொரு உலகச் சங்கம் வைக்கவேண்டிய நிலை பிறக்கும் என்றும் அதைத் தான் விரும்பவில்லை என்றும் குருச்சேவ் மிரட்டியிருப்பது அவசியந்தானா என்பது தெரியவில்லை.

இந்நிலையில் இந்தியா, கோல்டு கோஸ்ட் என்ற அழைக்கப்பட்டு தற்போது சுதந்திர நாடாகத் திகழும். கனா, யுகோஸ்லோவியா, இந்தோனேஷியா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய ஐந்து நாடுகளும் ஐசனோவரும் குருச்சேவும் மீண்டும் சந்தித்துப் பேசவேண்டும் என்ற கருத்தை எழுத்துமூலம்வெளியிட்டிருக்கின்றன. இதற்குத் தான் தயார் என்று குருச்சேவ் கூறுகிறார். ஆனால் தனக்குப்போர்க்குணம்இல்லை என்பதை ரஷ்யா பூரணமாக ருசுப்பித்தால்தான் பேச்சுவார்த்தை நடத்த இயலும் என்று அமெரிக்கத் தரப்பில் சொல்லப்படுவது வடிகட்டிய

கனி போன்ற சொல்லிருந்தும் காய் போன்றவார்த்தை ஏன்?

திமிர்வாதமாகும். ‘யு 2’ விமானத்தையும் ‘ஆர். பிடர்’ விமானத்தையும் அமெரிக்கா வேவு பார்க்க அனுப்பியதால் வந்த வினைதான் இவ்வளவும் என்பதை அரசியல் புரிந்தோர் மறுக்கமுடியாது. ஆனால் அதற்குப் பின்னர் நடந்த பாரீஸ் உச்சக்கட்ட மாநாட்டுக்கு வந்துவிட்டு அதை உருப்படியில்லாமல் செய்துவிட்டுப் போனது குருச்சேவ் செய்த தவறுதான் என்பதையும் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை.

ஆனால் அக்டோபர் 1-ந் தேதி பர்மியப் பிரதமர் ஊநூ பிகிங்குக்கே சென்று ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு விட்டுவந்துவிட்டார் நேபாளத்துக்கும் சீனத்துக்கும் இடையில் முடிவான நிலைகள் உருவாகாவிட்டாலும் பூர்வாங்க ஒப்பந்தம்ஏற்பட்டிருப்பது நல்லதோர்அறிகுறிதான். அதேபோல் இந்திய சீனப் பேச்சுவார்த்தையும் பலனளித்தால் பெரிதும் மகிழ்வுக்குரிய காரியம்தான்.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக சீனப் பிரச்னை முடிவடைந்து கொண்டே வருகிறது, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இருந்த சிந்து நதிச் சிக்கல் முடிவடைந்தது காஷ்மீர் பிரச்னையின் தீர்வுக்கு அடிப்படையாக அமையும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது. இந்நிலையில் சீனாவுக்கு ஐ. நா.வில் பிரதிநிதித்வம் கொடுப்பதே நியாயமான செயல். ஆக்ரமிப்புச் செய்கிறது என்று காரணங்காட்டி அதற்காகப் பிரதிநிதித்வம் கொடுக்கக் கூடாது என்று வார்ட்ஸ் வொர்ட் போன்றோர் வாதாடினாலும் பாதிக்கப்பட்ட இந்தியாவே அங்கம் வகிக்க அனுமதி அளிக்க வேண்டும்என்று சொல்லும் போது அந்த வாதம் வலிவிழந்து போகிறது. மேலும் சின்னஞ்சிறு நாடுகளுக்கெல்லாம் இடமிருக்கும்போது உலகத்திலேயே ஜனத் தொகையில் பெரிய நாடான சீனாவுக்கு இடமில்லை என்பது அநீதியான வாதமாகும். ஆனால் அதை மையமாக வைத்து ஐசன் ஹோவரும், குருச்சேவும் ஆளுக்கொரு கருத்தைப் பறிமாறி, தங்களது வரட்டுக் கௌரவத்திற்காக பிரச்னையைக் கோட்டைவிட்டு மீண்டும் ஓர் யுத்தம் மூள வழிகோலாது உலக சமாதானத்தை நிலைநாட்ட முயலவேண்டும் என்பதே நல்ல உள்ளம் படைத்த நடுநிலையாளர்களின் எண்ணம். சர்வதேச சங்கம் என்ற பெயரால் அமைக்கப்பட்ட ஒன்று ஏற்கனவே செயலற்றுப் போனதை எண்ணி ஐ.நா. சபையும் இதற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.



மலேயா நாட்டு மக்கள் பதிவகத்தின் முகப்பில் நம்மொழி! ஆனால் இந்த மானங்கெட்ட நாட்டில்—?

...ல்லறை யாருக்கு ?

கா. வேழவேந்தன்

...ந்தி மடமகளே !

...சத்த சமக்கிருத மங்கைக் கு... தேடிவந்த உருது ஆடவனுக்கும் திருவவதாரம் எடுத்தவளே !

எங்கே வருகிருய்? சங்கை கெட்ட சதைப் பிண்டங்கள் தான் தன்மானங் கெட்டு தென்னகத்திலே வாழுகின்றனஎன்றுசதிராடிக்கொண்டு வருகிருயா? தரங்கெட்டவர்களால் சரித்திரம் மாறிய திராவிடத்தார் மரங்களைப் போல் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிருர்கள் என்...த தட்டிப் பார்க்க வரு...யா?

மூதேவி! முப்பத்தெட்டிலே ...க்குடைப்பட்டு ஓடிய நிகழ்ச்சியை எப்படி மறக்க முடிந்தது உன்னுல்? கப்பங் கட்டி பிழைப்பதற்கே வாழும் காமராசர் ஆட்சியேறும் முன்னுல் தாளமுத்து நடராசன் பிணங்களைக் கொத்திக் கொண்டு ஒடினுயே! பசி நீங்க வில்லையா உனக்கு?

வெட்கங் கெட்டவளே! வேதனையை ஒப்புக் கொள்கிருேம். வீடு மாறிக் கால் வைத்த உன் விலாவினை அனைவரும் சேர்ந்து ஒடிக்காத காரணத்தால் இன்று வெறிக்கூத்து ஆடி வருகிருய் !

அரக்கியே ! அன்னைக்குரிய பல்லக்கிலே உன்னை அமர்த்தி ஆர்ப்பரித்து உலாவந்த அற்பர்களை நாடு இன்று அடிக்கால் தூசாக மதிக்கிறது. அன்னவர் சொற்களைத் தூக்கியெறிந்து மிதிக்கிறது.

நாடோடியே! எங்கள் நாடி நரம்புகளிலே சூடேற்றிய மங்காத் தமிழ்த் தாயின் மானங்காக்க மறவர் தானை சங்கொலித்துப் புறப்பட்டு விட்டது.

தடிச் சிறுக்கியே! பொங்குமாங் கடலை, பூகம்பத்தை பொடியாக்கும் எரிமலையை போர்ப் புயலை ஒரே நேரத்தில், உலகக் கோளத்தின் மையத்திலே உள்ள திராவிடத்திலே சந்திக்கப் போகிருய் !

எங்கள் இனத்தவர் ஈழத் திருநாட்டில் தங்கித் தமிழனைக்குப் பங்கம் நேரிட்ட போது, சிங்கமெனச் சீறி எழுந்து வெங்குருதி சிந்தினராம்! அங்கம் துண்டுபட ஆயிரமாயிரம் பேர் ஆவியினை விலையாக்கினராம் !

மலேயாவிலும் மற்ற பல நாடுகளிலும் பெற்றெடுத்த மாதாவின் மானத்திற்குப் பிழை வராமல் இருக்க நித்தம் நித்தம் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிருர்களாம்!

ஆணவம் பிடித்தவளே ! சொத்தைகளும் சோணங்கிகளுமே காமராசர்களாய், சுப்ரமணியங்களாய் மொத்த மாகத் தமிழகத்தில் வாழுகின்றனர் என்ற பித்தம்பிடித்துத் தானே, தென்னகத்திலே தலையை நீட்டுகிருய்! இல்லை.

இல்லை! நான்கு கால்களும் தலையும் வாலும் இருப்பவை எல்லாம் நடுங்க வைக்கும் சிங்கங்கள் அல்லவே! போட்ட பொதியினைச் சுமந்து கொண்டு, ஓட்டுகின்ற திக்கிலே நடந்து செல்லும் பிராணிகளாகவும் இருக்கலாம் அல்லவா!

தரங்கெட்டவளே ! எங்கள் தமிழனை செய்த குற்றம் குற்றம்தான்! கொல்லும்வரிப் புலிகளை, ஈன்ற அதே கருவறையில், கூனிக் குறுகி வாழும் கோட்டான்களையும் தாங்கி நின்ருள் அல்லவா?

ஆனுல் விழி மூடிக்கிடந்து பழி மூடிப்போகும் திராவிடத்தை இன்னும் பாழ் நிலைக்கு ஆளாக்க புறநானூற்றுத் தென்னக வீரர் விரும்பமாட்டார்கள்.

'மானமா, மரணமா?' - இது அவர்கள் இதயத்திலேதேங்கி நிற்கும் ஒரே கேள்வி !

இரத்த வெறிபிடித்த இந்திப் பிடாரியே! என்ன செய்யப் போகிருய்? 'எத்தனை, எத்தனை? என்று எண்ண முடியாத அளவுக்கு எழுச்சியுடன் புறப்பட்டு விட்ட திராவிடர்தம் கபால ஓடுகளின் கிறலை எப்படி இருக்கிறது என்று, நோட்டம் பார்க்க வருகிருயா?

பழிகாரியே! நீ ஆடுவதற்கு கழற் காய்கள் தேவையா? இதோ, எங்கள் தாயின் தன் மானங் காக்கப் புறப்பட்டோம் என்று எழுந்த மறவர்களின் மண்டையோடுகள் இருக்கின்றன.

நீ, நீந்தி விளையாடுவதற்கு நீரோடை வேண்டுமா? நிலவுலகம் அழிந்தாலும் நேர்ந்த பழி துடைப்போம் என்று புறப்பட்ட நீள் மறவரின் நெஞ்சிலேயிருந்து குருதி வெள்ளம் ஓடிவருகின்றது. நுரை கிளம்பிச் செல்லும். அதில் மூழ்கி நீ உன் வெறித்தனத்தைத் தொடங்கு.

நீ, சூடி மகிழ்வதற்கு மலர் மாலைகள் தேவையா? கவலைப் படாதே! ஊட்டி வளர்த்த ஒப்பற்ற தாயின் கேட்டினைப் போக்கக் கிளர்ந்தெழுந்த தென்னவரின் நீண்ட குடல்கள் கிழிந்து தொங்குகின்றன; வேண்டிய மட்டும் பிடுங்கி உன் மேனியிலே அணிந்து உன் மகிழ்ச்சி ஆட்டத்தைத் துவங்கு !

இமயத்தின் வழி வந்த உனக்கு உடலம் குளிர் எடுக்கிறதா? அஞ்சாதே! எதிர் நோக்கி வரும் ஏகாதிபத்தியத்தை கொதித்தழிப்போம் என்று எழுச்சிப் பண் பாடும், மாவீரர்களின் வெள்ளெலும்புகள் ஏராளமுள்ளன; எடுத்து விறகாக்கி எரிமூட்டி உன் குளிரைப் போக்கிக் கொள் !

நீ உல்லாசத்துடன் பவனி வர ஓடங்கள் தேவையா? இதோ 'என் அன்னை வாழ்க' என்று இறுதி மூச்சை விட்டு விழி மூடிப்போன ஏராளமான பிணங்கள் இரத்த ஆற்றிலே மிதந்து செல்கின்றன; அவற்றிலே ஏறி உன் உல்லாசப் பயணத்தைத் தொடங்கு !

வகை கெட்டவளே! வாயிலில் நுழையாதே என்ருேம். இரயிலிலே வந்து இறங்கினுய்! இளிச்ச வாயைக் காட்டுகிருய்!

அறங்கெட்டவளே ! அடுத்தவர் வீட்டில் அடியெடுத்து வைக்காதே என்ருேம்; அஞ்சல் மூலம் வந்து மஞ்சத்திற்கு இடங்கேட்கிருய்! மாண்பு கெட்டவளே! இல்லத்தில் உனக்கென்ன வேலை என்ருேம். மைல் கற்களிலே ஏறிவந்து மையல் விழிகாட்டி மயக்கம் ஊட்டுகிருய்! கள்ளியே! கவனத்தில் வைத்துக் கொள். தமிழ்தான் எங்கள் தாய்; நீ வெறிப்பிடித்தலையும் நாய் !

ஓண்டவந்த பிடாரியே ! இடுகாட்டிலே பிணவாடைக் கிடையே சவப்புகைச்சலில் உன் ஆட்சியை நிறுவப்பார்க்கிருய் !

ஆமாம் நமக்கிடையே நடக்கும் 'சாவா, வாழ்வா?' என்ற போராட்டம் இடுகாட்டின்எல்லையிலே நடைபெறும் இறுதிப் போராட்டம்.

ஒன்று, நீ வாழ வேண்டுமானுல் நாங்கள் அழியவேண்டும். அல்லது நாங்கள் வாழ வேண்டுமானுல் நீ அழிய வேண்டும்.

'கல்லறை யாருக்கு?' இது காலமுள் காட்டப்போகும் முடிவு.

மங்கலத் தமிழா? சிங்கள வெறியா?

56-58 இந்த இரண்டாண்டுகளை எண்ணுவீர்!

இருண்டு கிடந்த இலங்கையை பூங்காவாக உருவாக்கியவர் யார்?

திரும்பவும் புயல் !

தமிழர் இல்லந் தோறும் உள்ளந்தோறும் ஒரே குழப்பம்! கொந்தளிப்பு! வெடித்த பூகம்பத்தின் பிளவு, இன்னமும்இலங்கையைவிட்டு மறையவில்லை. அதற்குள்ளாகவே மாபெரும் அதிர்ச்சியை, இலங்கை ஆட்சியினர் உருவாக்கி இருக்கின்றனர்.

'சிங்களம் மட்டுந்தான் இல்ங்கையில் ஆட்சிமொழி!' என்கின்ற சட்டத்தை, இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றிவிடத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றனர். இதனுல் யார் பாதிக்கப்படுவார்களென்ற பொதுக்கருத்துக்கு இடமில்லாத வகையில் மறைந்த பகையை — மண்ணுக்குள் புதைக்கப்பட்ட எரியுணர்ச்சியை மீண்டும் சந்திக்க திருமதி பண்டாரநாயகா ஆட்சி நினைத்திருக்கிறது.

ஆட்சியிலே இருக்கின்றவர்கள் பகையை வளர்த்துக் கொள்ளவதிலே அக்கறை காட்டுவதை விடுத்து அன்பிலே தன் அன்பை இணைய வைப்பதில்தான் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அதுதான் ஜனநாயகப் பண்பாடாகும்! அதைவிட்டுவிட்டு ஒரு சிலர் நல்வாழ்வுக்காகப் பல இலட்சக்கணக்கான இலங்கை வாழ் தமிழர்களைக் கொல்லாமல் கொல்வதா? இந்த இழிசெயலை —சர்வாதிகாரத்தன்மையை திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சியிலும் நாம் எதிர்பார்க்கவில்லை.

இன்றையதினம் இலங்கை ஆட்சியிலே வீற்றிருக்கும் அம்மையார் முன்னே நாம் நீட்டுகின்ற கடந்த காலச் செய்தி இதுதான் !

1956 - 58 — இந்த இரண்டாண்டுகளிலே ஏற்பட்ட இன்னல்களை நினைக்கின்ற போதேநெஞ்சுநெருப்பாகும்.

வே. கபிலன்

அத்தகைய கொடுமைகள் ! கலவரங்கள்! சிங்கள வெறியர்களால் செந்தமிழர் வீடுகளெல்லாம் சூறையாடப்பட்டன. கன்னித்தமிழ் மங்கையரின் மானம் பறிக்கப்பட்டது. இத்தனையும் நடந்தது, கடந்தகாலத்திலே ! அதே சூழ்நிலையை மீண்டும் உருவாக்க நினைத்தால், வம்பை விலைகொடுத்து வாங்க ஆட்சியினர் உறுதியாகி விட்டனர் என்பது பொருளாகிறது. இந்தக் கொடுமையைக்களைந்தெறிய திருமதி பண்டார நாயகா முன்வர வேண்டும்.

ஒரு காலத்திலே வெறும் காடுகளாக — மலைகளாக — மலைப்பாம்புகளாக — மிருக வெறிபடைத்த மனிதர்களாக உலவிய பூமிதான் இலங்கை!

அந்த இலங்கையை இன்பப் பூமியாக மாற்றிய கரம், எந்தக் கரம்? உழைப்பைத்தந்து, உதிரத்தைத் தந்து உயர்த்திய இனம், எந்த இனம்? நாகரிக மில்லாமல் பண்பாடென்பதே புரியாமல் இருந்த புல்லர்களுக்குப் புத்தி வரப் பகுத்தறிவை ஊட்டியவர்கள் எந்தக் காலத்துச் செல்வங்கள் ! இவற்றை யெல்லாம் இன்று ஆட்சியிலே அமர்ந்திருக்கின்ற அம்மையாரும், அவரைச் சார்ந்த அமைச்சர்களும் நினைவுக்குக் கொண்டு வந்து, 'சிங்கள வெறி'யைத் தம் நெஞ்சிலிருந்து அகற்றிக்கொள்ள வேண்டும்.

சிங்கள மென்கின்ற சிறு பாம்பு கடிக்கவும் அதனுல் ஆயிரக் கணக்கான-அன்னையாம் தமிழன்னை ஈன்றெடுத்த செல்வங்கள், செத்தொழிந்து போவதும் சர்வாதிகாரத் தன்மைக்கு ஒத்ததாக இருக்கலாம். ஆனுல் ஜனநாயகம் பேசப் படுகின்ற இந்தக் காலத்தில் — ?

அது அப்பாற்பட்டது. இந்தக் கருத்தை இலங்கை ஆட்சியாளர் தம் இதயத்திலே நிறுத்தி வைத்துக் கொண்டு தொண்டுள்ளத்தோடு எதையும் எண்ணிப் பார்த்துச் செயலில் இறங்க வேண்டும்.

சிங்கள வெறிக்கு சிரந் தாழ்த்தாமல் தமிழர் உள்ளத்துக்கு உவகை தருகின்ற வகையிலே உருவாக்க இருக்கும் சட்டத்தைச் சாம்பலாக்க வேண்டும். செய்ய முன் வருவார்களா? அல்லது அநீதியைப் பின் தொடர்வார்களா?

பொறுத்திருந்து பார்ப்போம்!

கனவுக்குமிழிகள்

மதிதவழும் கடலோரம் நீதவழவேண்டும்—உன்
மடிமீதில் குழந்தையாய் நான் தவழவேண்டும்
நதியலைகள் நடனமிடும் அரங்கமதுபோல—நிதம்
நாமிருவர் ஒருயிராய் நடம்புரிய வேண்டும்

வெள்ளிநிலா அமுதூறும் படகாகவேண்டும்—நாம்
விண்ணேறிப் பண்பாடி உலவிவர வேண்டும்
பள்ளியறை நாம்குளிக்கும் குளமாகவேண்டும்-தேன்
பனிமலர்நம் காதலுக்குப் பிரிந்தசைய வேண்டும்

உன்விழியில் என்விழிகள் தேன்பருகவேண்டும்-உனை
உள்ளத்தில் சிறைசெய்து நான் சிரிக்கவேண்டும்
பொன்மலராய் நம்வாழ்வு பொலிகின்றபோது—நீ
பூந்தென்றல் வீசிவரும் பொழிலாக வேண்டும்

ஓவியனின் உள்ளம்போல் நீயிருக்கவேண்டும்-அந்த
ஓவியனின் கரம்போல நான் சுழலவேண்டும்
தாவிவரும் இன்பஅலை நமையெடுத்துச்சென்று-மிகத்
தனித்ததொரு தீவினிலே தள்ளிடவும் வேண்டும்

கதிரவனை உன்கண்ணில்கண் கொண்டுவர
வேண்டும்—அந்த
காரிருளை உன்விழிக்கு மைதீட்ட வேண்டும்
புதுப்பறவை போலுன்றன் விழியிமைகள்சேர்ந்து
—மதுப்
போதையிலே படபடக்க நான் காணவேண்டும்
வெண்ணிலவைக் குடையாக்கி நாம்பிடிக்கவேண்டும்-
—உனக்கு
விண்மீனை மலராக நான் சூடவேண்டும்
கண்ணாடிப் பொய்கையிலே நீகுளிக்கவேண்டும்-நான்
கரையினிலே நின்றபடி கண்டிடவும் வேண்டும்.

—எம். கே. ...னிவாசன், பி.ஏ.

கலை வெறி!

வாழ்வைவிட மானம் பெரிது!

திரையில் ஆண்மைக்கு முதலிடம் தருக!

இருபதாம் நூற்றுண்டின் இறுதியிலே இருக்கின்ற மக்கள் நலம். எதையும், ஏன்? எதற்காக? எப்படி' என்று வினு எழுப்பி விடை காணும் பகுத்தறிவுவாதிகள் நாம். அறிவிற்கு சுதந்திரம் கொடுத்து எதையும் அலசிப்பார்த்து ஒரு முடிவிற்குவரும் திறனுய்வு நமக்கு உண்டு. இருண்ட காட்டுமிராண்டி காலத்திலிருந்து ஒளிச் சுடரும் உயர் நாகரிக காலத்தில் வாழுகிறேம். சுற்றி வளைத்துப் பேசுவானேன்-எதிலும் 'மறுமலர்ச்சி' காணும் புத்துலகக் கலைஞர்கள் நாம்.

நம்மால் புதிய புதிய கலைகளைப் படைக்க முடியும்! படைக்க இயலாத வற்றை ரசிக்க முடியும். ஏதோ ஒரு வகையில் கலைஞனுகவோ — அன்றி கலை ரசிகனுகவோ நம்மால் இருக்க இயலும்!

பள்ளியறைக் கலையின்பம் கணவன் மனைவிக்கேஉரியது. அங்குநிகழும் அழகுக் காட்சிகள் — மன்மதனுக்குத் தான் தெரியும். பிறர் காணுதது, பிறர் காணும்படி ஏதாவது நிகழ்ந்தாலும் அது காட்டுமிராண்டித்தனம் தான்! இதில் ஐயமில்லை! அருவருக்கத் தக்க காட்சியல்ல இது! மிருக உணர்ச்சியைத்தூண்டி விடும் காட்சி. 'காஜுராஹோ' என்ற இடத்திலுள்ள கற்கோயில்களில் சிற்பி செதுக்கிய சிற்றின்பச் சிலைகள் பல உள்ளன. பழைய 'கலை' (சினிமா மாத இதழ்)"யைப் புரட்டிப் பார்த்தால் சான்றுகள் கிடைக்கும். இப்படிப் பட்ட படுக்கையறைக் காட்சிகளாகிய 'தழுவல்களை'ப் பிறருக்கு யாரும் கூறமாட்டார்கள். கூறினுலும் மிகவும் நாகரிகமான முறையில் நெருங்கிய நண்பர்கட்குப் பட்டும் படாமலும் கூறுவார்கள். எழுதுவார்கள். அதிலும் 'எழுத்து நாகரிகம் இருக்கும். எனவே இது மக்கள் மன்றம் ரசிக்க அல்ல. தனி மனிதன் தன் மனைவியிடம் தனித்தே கண்டு கேட்டு உண்டு உயர்த்துஉற்றறியும் ஐம்புல நுகர்ச்சியும் பெறுகிறுன்.

கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் பிறந்தது வங்காளம். தீர்க்க தரிசிகள் எனப்படும் ராமகிருஷ்ண பரம ஹம்சர், சுவாமி விவேகானந்தர் முதலியோர் தோன்றிப் புகழ்பெற்றதும் வங்காள நாட்டில்தான்.

பாம்பு பிணைந்தாடும் - பார்ப்போர் விலங்கென்பார்
தீம்பு மிக விளைக்கும் தீயர் கலைப் பெயரால்
சேர்ந்து உடல் தழுவும் சேர்க்கை விலங்குணர்வு!

பேனர்ஜி, சட்டர்ஜி போன்ற பெரிய மனிதர்கள் தோன்றி உயர்ந்த கருத்துக்களை உபதேசம் செய்ததும் வங்காளத்திலேதான். கதைகளிலும் கட்டுரைகளிலும் புதினங்களிலும் காவியக் கவிதைகளிலும் ஓரளவுக்கு சீர்த்திருத்தமும் மறுமலர்ச்சியும்கண்டுள்ளனர் என்பதையும் ஒப்புக்கொள்வோம். உண்மையை மறுப்பதில் பயன் இல்லை அல்லவா? எனவேதான் நாம் அவர்களை பெருமைப் படுத்தத் தயங்கியதே இல்லை! இவர்களிடம் தான் மிகக் குறுகிய மனப்பான்மைகள் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. தம் மக்கள் தான் பேரறிவாளிகள், தங்களுக்குத்தான் அறிவாற்றலோடு கூட செயற்படும் திறமையும் உண்டு என வீண் 'டம்பம்' அடித்துக் கொள்வதில் மன்னர்கள்! இனவெறியும்—மொழி வெறியும்—கலை வெறியும் உள்ளவெறியர்கள். இந்தியாவின் பண்பாடும் நாகரிகமும் இவர்கள் படுக்கையறையிலே இருப்பதாகக் கூறுவார்கள்! வங்காளத்திலிருந்து சர்வசாதாரணமனிதன் வேற்றிடங்களுக்குச் சென்ருல் கண்மூடித் தனமாகப் பேரறிஞன் என்பார்கள்! அவர்களுடைய நாட்டில் எவனுவது அறிவாளி சென்ருலும் அவனையும் இரண்டாந்தரமாக மதித்து எடைபோடுவார்கள்! இனப் பித்து இவர்கட்கு உடன் பிறப்பு! பண்பாட்டின் நாகரிகத்தின் பாதுகாவலர்கள் எனத் தம்மை நினைத்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் படம்தான் — அவர்கள் (வங்காளிகள்) திரை இதழில் வெளியாகியுள்ளது!

"சினிமாவினுல் ஊரும் உலகமும் கெட்டுவிட்டன. பண்பாடும்நாகரிகமும்கெட்டு விட்டன. குறுக்கு வழியில் பணம் சேர்க்கும் வழிகள் பெருகிவிட்டன. கலை — என்ற பெயரால் சிற்றின்ப உணர்ச்சியே மேலிடம் பெறு [illegible] பொதுவாக ஒழுக்கம் கெட்டுவிட்டது!" என்று பல வாருகப் பெரியவர்களும் அறிஞர்களும் பேசுவதில் என்ன தவறிருக்கிறது? ஒரு ஆணுக்குக் காதலும் வீரமும் இரு கண்கள் தாம். 'காதல்' உணர்வே அதிகமாயிருந்தால் எல்லோரும் பள்ளியறைக் கதாநாயகர்களாகிறதைத் தவிர வேறென்ன ஆக முடியும்? 'பெண்மை' மலிந்து விட்டால் பேச்சே ஓங்குமே ஒழிய செயலா முற்படும்?

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில்ஆண்மை உணர்வைத் தூண்டும் 'படங்கள்' அருகி விட்டன. இந்த நிலை நீடித்தால் 'பேடிகள்' கூட்டம்தான் பெருகிவிடும். இன்றைய திரை உலகை மக்கள் நன்ருகப் புரிந்துகொண்டுவிட்டார்கள். முன்பு வசனங்களுக்கு நல்ல 'கிராக்கி' இருந்தது. இப் பொழுதெல்லாம் கதையமைப் பிற்குத்தான் நல்ல மதிப்பும் பாராட்டும்! எனவே கதை அமைப்பில் ஆண்மைத் தன்மை ஓங்கி இருக்குமாறு எடுத்தால்தான் இனியும் கலை வாழும். கலையுலகம் 'வீழ்ச்சி' பெறுது ஓட வேண்டுமென்ருல் காமக்களியாட்டம் கூடாது.

கலை - வெறியைத்தூண்டக் கூடியதாக இருந்தால் 'வீழ்ச்சி' அருகிலிருக்கிறது என்று பொருள். கலை-புனிதமானது என்பதனுல் அல்ல! கலை - பொழுது போக்கிற்கு என்பதனுல்தான்!

அசிம்குமாரும், மஞ்சுளா பானர்ஜியும் தனிவாழ்வில் கணவன் மனையரா! திரை வாழ்வில் கணவன் மனைவியரா? என்பதல்ல, நம் பிரச்சனை! அவர்களுடைய கலை ஆர்வம் எந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்து விட்டது — என்பதுதான் நாம் கண்கூடாகக் காணும் காட்சி! இவர்கள் இருவரும் ஒழுக்கங்கெட்ட பரத்தர்கள் என்பது ஒருதலை. இதற்குத் தான் சினிமா உலகிற்கு வந்தார்கள்? பம்பாய் 'கிராண்ட் ரோடி'லே 'லைசன்சு' — வாங்கிக் கொண்டு 'போர்டு' போட்டுக் கொண்டு இருப்பதுதானே? அங்குதான் 'முப்படை வீரர்கள்' முகாம் இருக்கிறது. நல்ல 'சான்சு' கிடைக்கும்! எனவே திரை உலகை மாசு படுத்தாதீர்கள். தூர விலகுங்கள்! கலையுலகே மாற்றி அமைக்கப்பட — முயற்சி செய்யுங்கள்!

இனமுழக்கம்—'கலை முழக்கம் செய்யத் தவறியதில்லை! ஆனுல்ஒழுக்கமானவாழ்க்கை அமைத்த பிறகுதான் வாழ்க்கையை இன்புறுத்த கலை இன்பம் சேரலாம். எப்படிப் பார்த்தாலும் கலைக்கு இரண்டாந்தரமான மதிப்புத்தான். முதலிடம் கிடையாது.

"கோடி கோடி கொட்டிக்
கொடுத்தாலும்
ஆடி பிழைக்கும் பிழைப்பு
வேண்டாம்

என்று கூறியது தமிழர்தாம். அப்படிக் கலையை இழிவுபடுத்திப் புறக்கணிக்கக் கூடாது. அதை செம்மைப் படுத்தி வாழ்வோடு பிணைக்க எண்ணினேம்! இப்படி 'மறுக்கள்' வளர்ந்தால் கலையோடு சேர்த்து வாழ்வையும் கொன்றுவிடும். வாழ்வைவிட மானம் பெரிது—கலையல்ல

பண்பாட்டிற்கு முரணுன கலை ஒழுக்கத்தைத் தீய்க்கும்;
காதலைவிட இன்று நமக்கு வேண்டியது வீரம்தான்!!

தேவை

மின்சார வசதியோடு, பெரிய அளவில் அச்சுக் கூடம் நிறுவுவதற்கு ஒரு கட்டிடம்வாடகைக்கு தேவை. கீழ்க்கண்ட முகவரிக்கு உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

'இனமுழக்கம்'
4, இராசகோபால் நாய்க்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

திகட்டும் செய்தி.....!
பொன்னி
திங்கள் இருமுறை
ஆசிரியர்....
கண்ணப்பாவள்ளியப்பன்
சிறு கதை
கட்டுரை
கலை
அரசியல் விமர்சனம்
அத்தனையும் உண்டு
தமிழர்களின்
ஒரேகுடும்பப்
பத்திரிகையாக
அதிவிரைவில்
வெளிவருகிறது!

டாக்டர் மு.வ எழுதும்
தொடர் நவீனம்
இடம்பெறுகிறது....
பொன்னி அலுவலகம்
சென்னை-2
விலை 25 காசுகள்

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

விலை 16 காசுகள்.

தோழர்கட்கு!

இந்தஇதழ் இனமுழக்கம் வழக்கமாக இடம் பெறுகின்ற முகப்பு இல்லாமல் வெளிவந்துள்ளது. 'இனமுழக்க இதழிலே வருகின்ற ஒவ்வொரு கட்டுரையும் சுவையாக இருக்கிறது. அப்படி இருக்கையில் முன்பக்கத்திலும் ஏன் நீங்கள் கட்டுரைகளை வெளியிட்டு எங்களுடைய எண்ணத்தை பூர்த்தியாக்கக்கூடாது?' என்று பல தோழர்கள் நாள்தோறும் மடல்கள் வரைந்து கொண்டிருப்பதால் இவ்வார இதழ் முகப்பை நிறுத்தி இருக்கிறோம். மேலும் உங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிப்பீர்களானால் அதன்படி செய்ய கடமைப்பட்டவர்களாவோம்.

பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

காதி என்றால் என்ன?

அதில் காணும் லாபம் என்ன?

காதி—என்றால் கைத்தறித்துணி என்று பொருள்! 'கைத்தறி' என்று சொல்ல காந்தி சீடர்கட்கு மனம் நோகும். 'காதி' என்று கரைவதில் அலாதிப் பிரியங் கொண்டவர்கள். கதர் எனவுங் கதறுவார்கள். இப்படிப்பட்ட கைத்தறி துணியைப் பயன்படுத்தவும், அதன் பெருமைகளைப் பறையறையவும் நம் அரசாங்கம் 'காதி இலாகா' என்ற பெயரிலே ஒரு அமைப்பு வைத்து ஆண்டுதோறும், திட்டந்தோறும் வெற்றிகரமான 'நஷ்டம்' அடைந்து வருகிறது. இங்கு வேலை பார்ப்போர் காதிதான் உடுக்கவேண்டும் (வீட்டுக்குப் போய் என்ன உடுத்தினாலும் பரவாயில்லை!) இது வேலை நிலைக்கும் சட்டம்! இதைமீறினால் உடனடியாக விலக்கப்படுவார்கள். சம்பளமும் கிடையாது இது இங்ஙனமிருக்க :

இக்கைத்தறியை உடுப்பவர் யார் யார்? என நோக்க வேண்டும். பெரிய பெரிய முந்திரா, பந்து, நேரு, இராதாகிருஷ்ணன், கிருஷ்ணராஜ், தேக்கர்சி, சிவாஜி கணேசன், டால்மியா, ராஜ்—போன்றவர்கள் உடுப்பது கைத்தறி ஆடையே. பரவாயில்லை! எப்படியோ 'காதி இயக்கம்' — கைத்தொழில் முன்னேற்ற இயக்கம் பரவினால் நல்லதுதான்! நம் மக்கள் அயராத உழைப்பினால் ஆக்கித்தந்த கைத்தறி ஆடையை அணிவதே பெருமைதான்!

"இதை அணிந்த பிறகுதான் - நான் இந்த நாட்டுக்காரன் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது! பிரி (Free) யாக இருக்கிறது! இல்லையென்றால் ஏதோ விலங்கு பூட்டப் பட்டிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்படப்போகிறது."

'அப்படியா?..... அடடே... கொஞ்சம் கையைப் பாருங்களேன்! என்ன?... அட 'சுவிஸ்' தயாரித்த 'வாட்சு' (Swiss made Watch) என்ன திகைக்கிறீர்கள்?! அயல்நாடு என்ற எண்ணம் வந்துவிட்டதா?'

"அய்! இதென்ன? துணியை ஏழை நெய்ய முடியும்! அதை எல்லாப்பொருளுக்கும் ஒப்பிடமுடியுமா?"

ஒப்பிட்டுப் பார்த்துத்தான் இன்றெல்லாம் உண்மை தெளிய வேண்டியவர்களாயிருக்கிறோம். கைத்தறி போடுவதைக் குறைசொல்லவில்லை. அதன் மதிப்பும் - நிலையும் சமுதாயத்தில் எந்த நிலையில் இருக்கின்றன? அதனால் ஏற்படும் 'லாப நஷ்டங்கள்' என்ன?—என்பதைக் கணக்கிட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

காந்தியுனுடையஉறவினர் நரன்தாஸ் காந்தி என்பவர் இக்கைத்தறித் துறையை 'நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வெட்டிச் செலவு' என்றுள்ளார். வாஜுபாய் ஷ என்பவர் இத்துறை 1700 லட்சம் பேருக்கு வேலையைத் தந்து நாளுக்கு எட்டணா கூலியைத் தருகிறது. நாளெல்லாம் அல்லற்பட்டு அலைமோதி அரை ரூபாயில் வயிறு கழுவுவோர் தொகை ஏராளமாகிவிட்டது.

(1) இதனால் ஆலைத் துணியோடு போட்டி போட முடியுமா? — அப்படித் துணிந்ததால் துணி விலை என்னாயிற்று? (அதோ கதி)

(2) சரி முக்கியடித்து தயாரித்துவிட்டாய். தயாரிக்கப்பட்டது. விற்பனையாயிற்றா? ஏன் ஆகவில்லை" காரணம் தெரியுமா? ஆலைத்துணி லாபத்தில் 2சதவிகிதமாவது பெற்றதா? (கிடையாது!)

(3) அம்பர் சர்க்காவுக்காக பம்பாய் அரசாங்கம் மட்டும் ரூ. 43 லட்சம் செலவாகவும், ரூ. 50 லட்சம் கடனாகவும் தந்ததே. ஒரு 'செட்'க்கு ஒன்பது பைசாவாவது சம்பாதிக்க முடிந்ததா? (இல்லை)

இப்படிக் கூறி - இத் திட்டத்தை வீண் என்கிறார் காந்தியாரின் உறவினர் நான் காந்தி.

மனிதனுடையதிறமையால் செய்யப்படும் கலைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், வேடிக்கைப் பொருட்கள் வேண்டுமானால் யந்திரத் தயாரிப்போடு விலையளவில் போட்டி போட்டு வெற்றி காணமுடியும். மக்களும் ஆதரிப்பர், ஆனால் உடையோ முக்கியமான பொருள். அதைத் தயாரிப்பதில் யந்திரம்தான் விரைவானது. செலவு குறைவான ஆடைகளை நூற்றுக் குவிக்கவல்லது. (Yarn) 'யார்ன்' என்ற மெல்லிய துணியைவிட இருமடங்கு விலையுள்ளது. இதை நெய்வதற்கு வேறு கூலியதிகம். இதை விற்குமிடம்பெரிய மாடமாளிகைபோலஉள்ளன. கடைத் தெருக்களின் முக்கியமான பாகத்தை அடைத்துக் கொண்டுள்ளன. இங்குவேலை செய்வதாகக் கூறும் தொண்டர்கள் தொகை (மாதாமாதம் ஒழுங்காகச் சம்பளம் கிடைக்கும்) ஏராளம். ஆனால் துணி விற்பனையோ மிக மிகக் கேவலமாக இருக்கிறது.

மட்டரகத் திட்டங்கள்

இரண்டாவது திட்டப்படி ரூ. 21 கோடி ஒதுக்கி - 340 லிருந்து 600 லட்சம் கெஜம் வரை 'காதி' தயாரிக்க உள்ளனர். இதைத் தவிர பொதுவாக ரூ. 15 கோடி ஒதுக்கி வைத்துள்ளனர். 'அம்பர் சர்க்கா' என்ற நூற்பு யந்திரத்திற்காகவும் தனிப்பட்ட முறையில் ஒதுக்கியுள்ளனர்.

மூன்றாவது திட்டம் கைத்தறி 480 லட்சம் கஜமும், அம்பர் சர்க்காவால் நெய்யப்பட்ட துணி 420 லட்சம் கஜமும் எனத் திட்டமிட்டுள்ளது. இப்படிப்பட்ட செலவினங்களையெல்லாம் கணக்குப் போட்டுப்பார்க்கையில்—உண்மையிலேயே கைத்தறி கெஜம் ரூ.18 ஆகிறது. இந்த விலை மதிப்பு வரி தருவோனையே முதலில் பாதிக்கிறது. இரண்டாவது ஆலைத் துணி உடுப்பவனும் அதிகம் விலைகொடுத்து வாங்க வேண்டியவனாகிறான்.

மூன்றும் திட்டத்தில் காதி அம்பர் சர்க்கா, குடிசைத் தொழில்கள் முதலியவற்றிற்காக ரூ. 89 கோடி ஒதுக்கியுள்ளனர்!

செலவை அதிகம் செய்து குறைவாகத் தயாரிக்கின்றனர். பயன்படுத்துவோரும் குறைவு! (அதாவது பெரிய லட்சாதிபதிகளான — டாட்டாக்களும்—பிர்லாக்களும்.)

வரிப்பணம் வீணடிக்கப்படுவதுடன் நெய்து தருவோருக்கு 50 நயா பைசாதான் கூலி தருகின்றனர். அதை ஒரு பெரிய நகரில் உள்ள சர்வ சாதாரண பிச்சைக்காரன்கூட சம்பாதித்துவிடுவானே!

உம்மையே நீர் எண்ணிப்பாரும்!

சுயதேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்கு தயாரிப்பை ஒழுங்குபடுத்தி பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் அளிக்கப் படவேண்டும். வரிதருவோர் வரிப்பணம் உழைக்கும் சக்திக்கே அதிகமாகப் பயன்படுத்தப்படவேண்டும். வேலை தேடித் தருவதாகக்கூறிலாபமில்லாத இம்மாதிரித் துறையில் கவனம் செலுத்தினால் — கடன்காரர்களாகிறதைத் தவிர வேறு வழி இல்லை. பொதுவாக மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதையும் நோக்கவேண்டும். வாங்குவோர் இல்லாமல் பொருட்களை குவித்து வைத்து அழகு பார்ப்பது நாகரிகமாகுமா? அறிவுள்ள எந்த மனிதனும் செய்வானா? எனவே மக்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பொருளாதாரத்திலே ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். இதனையும் கவனிக்கவேண்டும்.

இந்தப்பொருளாதாரத்துறையோடு அரசியலையும் பிணைத்தல்கூடாது. தியாகிகள், ஆதரவாளர்கள் என்ற பட்டியலில் வருவோர்களுக்கு, இந்த மட்டரகமான 'பார்வை அறைப் பொம்மை'போன்ற பிரசாரகர் (Show room toys) பதவியை கொடுத்து, சம்பளம் வேறு தருகின்றனர். இதனால் உண்மை உழைப்பாளிகள் பாதிக்கப்படுவதுடன் வேலை இல்லாதார் பட்டியலும் நீளுகின்றது!

கைத்தறி, கைத்தறி என்று கால் ஓய கை ஓய கண் மங்க தலை மழுங்க நாள் முழுதும் வியர்வை சிந்துவோன் பெறுவது 50 நயாபைசா! இதுதான் மனித சக்திக்குத் தரும் ஊதியம்! தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்கும் விதம் இதை எந்ததொழிற்பண்ணை விசாரணைக் குழுவும் கவனிப்பதாகக் காணோம்!

கண்மூடிப் பழக்கங்கள்...!

உலக மதங்கள் அனைத்தும் அழிந்தன! நான் உண்மையான மதவாதி—என்று ஒருவரை சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம்! — என்றாலும் மதச் சடங்குகள் ஆங்! காங்கே பின்பற்றப்படுகின்றன. எனவே மதங்களின் உண்மையான -- வினயமான கொள்கைகளும் குறிக்கோள்களும் போய் போலியான — விரயமான — சடங்குகளும் செலவுகளும் நிலைத்து விட்டன. அவை அறியாமை என்பது பகுத்தறிவு வாதிகள் மெய்ப்பித்துக் கொண்டு வருகின்றனர் அங்ஙனமே;

காந்தியார் நாட்டின் நன்மைக்காகப் பல உண்மைகளைக்கூறித் திட்டங்களையும் தந்தார். அவற்றில் ஒன்றுதான் இத்திட்டம். காந்தி

(8-ம் பக்கம் பார்க்க)

மக்கள் வரிப்பணம் பாழாக்கப்படுகிறது!

சி.பி.சிற்றரசு

சவால்

இப்படி செய்யப்பட்ட தீர்மானம் ஆட்சியினருக்கு விட்ட நேரடியான சவாலாயிற்று. மீண்டும் அடங்காப்பிடாரி அரசி தலையிட்டு சட்ட சபை மண்டபத்தை முடிவிடச்செய்தாள். அரசர் எவ்வழி அவ்வழி குடிகள் என்பது போய், அரசி எவ்வழி அவ்வழி அரசன் என்ற நிலையில் தன் திருக்கரங்களாலேயே சட்ட சபை மண்டபத்தைமூடிவிட்டு சிலநாட்களில் தன் முடிவை அறிவிப்பதாகச் சொல்லிவிட்டான் லூயி. சட்ட மன்றம் மூடப்பட்டதை யறிந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் டென்னிஸ் திடலில் பெய்லி தலைமையில் கூடி, பிரான்சுக்குப் புதிய அரசியல் நிர்ணயிக்கிற வரையில் தாங்கள் கலைவதில்லை என்று பிரமாண மெடுத்தனர், இதனால் இவர்கள் முழு அதிகாரத்தையும் ஏற்றுக் கொண்டனர். என்று ஆர்தர்யங் குறிப்பிடுகிறார்.

இதைக்கண்ட சில பாதிரிகள் மக்கள் பிரதிநிதிகளுடன் சேர்ந்துகொண்டனர். ஆனால் சீமான்கள் மட்டும் சிறிதும் அசைந்து தரவில்லை. அரண்மனைவாசிகளும் அவ்வாறே. நாளுக்கு நாள் மக்களின் கொந்தளிப்பு அதிகமாவதைக்கண்ட மன்னன் சூன் 23ல் அனைவரையும் கூட்டினான்,ஏதோ ஒரு புதுயுகம் தோன்றப் போகின்றதென்ற முகமலர்ச்சியில் அனைவரும் ஒன்று கூடினர். ஆனால் நடந்ததென்ன? மக்கள் பிரதிநிதிகளின் செயல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டதல்ல, ஒரே சபையாக அனைவரும் கூடலாம் என்றும், ஆனால், பிரதிநிதிகள், சீமான்களின் உரிமையைக் குறித்து எதுவுமே பேசக்கூடாதென்றும், மதவிஷயங்களில் பாதிரிகளின் சம்மதமில்லாமல் சபை தலையிடக் கூடாதென்றும். இவை ஏற்கப்பட்டால், வரவு செலவு அடிமை நீக்கம், சில சில்லறை சீர்திருத்தங்கள் ஆகியவைகளுக்கு சட்டசபை அதிகார மேற்கதான்இசைவதாகவும்திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பயமுறுத்தல்

"ஏதாவது தவறுதலாக இந்த உயர்ந்த முயற்சியில் நீங்கள் என்னை ஆதரிக்கத் தவறினால், நானே என் மக்களுக்கு எது நல்லதோ, அதைச் செய்வேன். அவர்களது ஏகப் பிரதிநிதியாக என்னைக் கருதிக்கொள்வேன்." என்ற எச்சரிக்கையுடன் முடித்தார்.

அரசர் சென்றதும் பெரும்பாலான சீமான்களும் பாதிரிகளும் வெளியேறிவிட்டனர். மக்கள் பிரதிநிதிகள் மட்டும் மண்டபத்தில் இருந்தனர். அரசன்தான் காரியக்காரனை யனுப்பி, "அவர்களைக் கலைந்துபோகச்சொல்,என்றார்.

மீராபே ஆவேசமாக எழுந்தான்

"மக்களால் அனுப்பப்பட்டு வந்த அன்பர்களே! அரசன் கட்டளையைக் கேட்டோம். இந்தப் பேரவையில் உரிமையோ, குரலோ, வாக்கோ ஏதும் இல்லாத தாங்கள் அரசரின் கருத்தை தெரிவிக்கச் சிறிதும்தகுதிஇல்லாதவர்கள். நாங்கள் இங்கே மக்களின் சம்மதத்தின் பேரில் இருக்கிறோம் என்பதையும் துப்பாக்கிச் சனியன்கள் தவிர வேறு எதனாலும் இங்கிருந்து அசையமாட்டோம் ' என்பதையும் உங்களை இங்கே அனுப்பியவர்களிடம் சொல்லவும்' நாடே இங்கு கூடியிருக்கிறது. யாரும் அதற்கு ஆணையிடமுடியாது, என்று தலைவர் அதற்கு முத்தாய்ப்பு வைத்தார்.

'வேலையைத் தொடர்ந்து நடத்துவோம்' என்று யங் யோசனைக் கூறினர். சபை உறுதியாக நின்றது. அரசர் தன்னிடம் துப்பாக்கிச் சனியன்கள் இல்லை என்பதை அறிவார். பிற்போக்குத் தலைவர்களை மக்கள் கேலி செய்தனர்.

இராணுவத்தினர் சுட மறுத்தனர்

மக்களைப் பார்த்து சுடும்படி இராணுவத்தினருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் சுடமறுத்தனர். எந்த ராணுவத்தை நம்பி மன்னன் லூயியும். மகராசி அண்டானியிட்டும் மண்டைக்கனம் பிடித்தாடினார்களோ. அந்த இராணுவம் செயலற்று நின்றது. எந்த இராணுவ பலத்தால் தன் செங்கோலையும் சிங்காதனத்தையும் காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்று கருதினானோஅந்தஇராணுவத்தின்செயலற்றத் தன்மையால் அந்தசிங்காதனம் ஆடி, செங்கோல் சாய இருந்தது மன்னனுக்கிருந்த கடைசி பலம் மண்மேடாயிருந்தது. ஒவ்வொரு போர் வீரனும் ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டு துப்பாக்கியைக் கையால் தூக்கினானே அவன் துப்பாக்கியின் விசையை முடிக்கி விடமறுத்தான். காரணம் என்ன? எதிரிகளை விரட்டி மக்களைக் காப்பாற்றத்தான் தன் கையில் துப்பாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுணர்ந்த போர் வீரன், அந்த மக்களையே சுட்டுத் தள்ளவேண்டும் என்ற உத்திரவைக் கேட்டபோது மனமும் மெய்யும் மௌனமாயிருந்து விட்டன. அதை நாட்டுத் துரோகம் எனக் கருதினான். உத்திரவிட்டவுடன் வேட்டு சத்தங்கள் கேட்கும் என்று உற்சாகத்தோடிருந்த மன்னன் மயான அமைதியைக் கண்டான். உள்ளுக்குள்ளே குமுறினான். எதையும் செய்யமுடியாமல் வாளாயிருந்துவிட்டான். அங்கத்தினர்களை யாருமே தொடக்கூடாது, என்ற தீர்மானத்தை நிறைவேற்றி வெற்றியைத் தட்டிப்பறித்தான். எஞ்சிய சீமான்கள். பாதிரிகள் ஆகியோர் எதிர்ப்பு சுக்கு நூறாயிற்று. சூன் 27ல் அரசன் கீழே இறங்கிவந்து, சீமான்களும், பாதிரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்து ஒரு உறுப்படியான யோசனையை கூறுமாறு கட்டளையிடவில்லை, வினயமாகக் கேட்டுக் கொண்டான்.

மக்கள் எழுச்சி

இப்படி அரசரையும் அரசியையும் அரண்மனை வாசிகளையும் எதிர்த்தவர்கள், வழக்கறிஞர்களும், வியாபாரிகளும், படித்தவர்களுமாவார்கள். அவர்களனைவரும் மக்களாட்சியை விரும்பினார்கள் என்று சொல்வதற்கில்லை. பலதிரப்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்களா யிருந்தார்கள். பலர் பச்சையாகவே பண நாயகத்தை விரும்பினார்கள். சொத்துத்தான் அறிவின் திறவுகோல் என்பது பெய்லியின் அசைக்க முடியாத கருத்து. பிரிட்டிஷ் முடியாட்சி முறையை மொனியர் முழுக்க முழுக்க விரும்பினார் ரோமஸ்பியர் ஒருவர்தான் உண்மையாக மக்களாட்சிதேவைஎன்று விரும்பினார். மீரா பேவைத் தவிர வேறு யாரும் அவரைப்புரிந்துக்கொள்ளவில்லை. பிரெஞ்சு துருப்புகளைக் கொண்டு மக்களை அடக்க முடியாது என்று ஏற்கனவே அரண்மனை வாசிகள் உணர்ந்துவிட்டிருந்த காரணத்தால் அயல் நாட்டுக் கூலிப்படைகள் ஐம்பதினாயிரவரைக் கொண்டு மக்களை அடக்கவும்,சட்டசபையைக்கலைக்கவும் பாரிசைச் சுற்றி குவிக்கப்பட்டிருந்தனர்.

அந்தக் கூலிப்படை எது?

அவர்கள் அவ்வளவு பேரும் ஜர்மனியிலிருந்து தருவிக்கப்பட்டவர்கள். சூலை 11ல் நெக்கர் நாடு கடத்தப்பட்டு, அரசியின் நெருங்கிய நண்பர் பரோன். தெ-பிரட்டுல் பலாத்காரத்தால்பழைய அரசை நிலைநிறுத்த அமர்த்தப்பட்டார். அடுத்தநாள் ஞாயிற்றுக் கிழமை பாரீஸ் மூழுதும் இந்தச் செய்தி பரவியது. அன்றைய பாரீஸ் அளவில் சிறியது, ஐந்து லட்சம்தான் அதன் மக்கள் தொகை. அச்சுறுத்தும் பாஸ்டிலி இறை மக்களைப் பயமுறுத்திய வண்ணமிருந்தது.

நெக்கரின் பதவி நீக்கம், நாடு கடத்தல், அயல் நாட்டுத் துருப்புகளின் நடமாட்டம், ஆகிய இவற்றால் அன்றைய பாரீஸ் குமுறிக் கொண்டிருந்தது. மக்களையடக்க வெளிநாட்டுப்படை என்றால், மன்னனை அடக்க யார்? என்ற கேள்வியும், வேறு யாரும் இல்லை, நாம்தான் என்ற விடையும் பாரீஸ், பாஸ்டிலி, வார்சேல்ஸ் போன்ற பகுதிகளில் முட்டி மோதிக் கொண்டிருந்தது. எங்கும் இதே பேச்சாய், யார் முகத்தும் அருளற்றுக் கிடந்தது. உரமில்லாத நெஞ்சினர், அடுத்து என்ன நேருமோ என்று தங்கள் கைகளைப் பிசைந்த வண்ணமிருந்தனர். உள்நாட்டுக் கலகம் மூண்டால் பாரிசின் நிலை என்ன. நாம் ஈன்ற பச்சிளங் குழந்தைகளின் நிலை என்ன. என்ற வருத்தத்தில் தாய்மார்கள் கலங்கி நின்றனர்.

ஆவேசப் பேச்சு

ஒரு வழக்கறிஞர் ஆவேசமுடன் மேடை ஏறி கீழ்க் கண்டவாறு பேசுகிறார்.

'மக்களே ஒன்று திரளுங்கள். எடுங்கள் ஆயுதங்களை. நம்மை அடக்க கூத்லிதுருப்புகள். நமது ஜன்ம பூமியில் நம்மையடக்கத் துணிவற்ற மன்னன் அயல்நாட்டு போர் வீரர்களைத் தருவித்திருக்கிறான். நாம் என்ன தவறு செய்தோம்.உண்ண ரொட்டி நியாயமான விலைக்குக் கிடைக்கவேண்டும் என்றது குற்றமா? நமக்காகப் பேசிய நெக்கர் நாடு கடத்தப்பட்டார். இனி தாமதம் வேண்டாம். என்றாவது ஓர்நாள் சாகப்போகின்ற நாம் நெடு நாட்கள் அடிமையாய் வாழ்ந்து வீழ்வதைவிட இன்று இந்தக் கூலிப்பட்டாளத்தோடு மோதித்தரையில்வீழ்வோம் என்று முரசறைந்தார்".

மக்கள் எழுந்தனர்

மக்கள், வெள்ளம்போல் திரண்டனர். ஒவ்வொரு வீட்டிலிருந்த உரம்பெற்றநெஞ்சினர் அனைவரும் திரண்டனர். ' தலைபோகுமே ' என்ற அச்சமில்லாதார் அலையெனக் கிளம்பினர். மன்னனை எதிர்க்கப் போகிறோம் என்ற மரணமுடிவோடு குவிந்தனர். துப்பாக்கிகள் தலை தூக்காதிருக்கவும், அவற்றை ஏந்தி நிற்கும் கைகள் நொறுங்கவும் ஆவேசமாகக் கிளம்பினர். குள்ளமதி படைத்த மன்னனின் குறை நிறைந்த ஆட்சியால் கோழை வீரனானன். ஜெர்மன் கூலிப்படையுடன் தெருக்களில் மோதினர். பிரெஞ்சுப் பாதுகாப்பாளரும் கட்டுப்பாட்டை மீறி பொதுமக்களோடு சேர்ந்துகொண்டனர். ஜர்மன் படைகளை நொறுக்கினர். ஆயுதம் ஏந்தியவர்கள் அது இல்லாதவர்களால் நையப்புடைக்கப்பட்டனர். திசை தெரியாமல் ஓடி இறுதியில் பாசறைக்குத் திரும்பினர், ஜர்மன் வீரர்கள்.

மக்கள் வெற்றி

முதல் மோதலில் பாரீஸ் மக்கள் வென்றனர். அடுத்த போருக்கு ஆயத்தமாவதற்காகபழையஇரும்புச் சாமான்களை உலைக்கூடத்திலிட்டு ஆயுதங்களாக்கிக் கொண்டிருந்தனர். உலைக்கூடங்கள் இரவு பகலெனப் பாராமல் ஓயாமல் உழைத்தன.

மனு

துருப்புகளை வாபஸ் வாங்குமாறு சட்டசபை அரசனுக்கு மனுச்செய்த முதல் வெற்றி மக்களுக்குத்தான் என்றாலும், இரண்டாவது வெற்றி நிச்சயமாக, தான் ஏவி விட்ட ஜெர்மன் கூலிப்பட்டாளத்துக்குத்தான் கிடைக்கும் என்று மதியில்லாத மன்னன் நினைத்த காரணத்தால் சட்டமன்றத்தினர் கொடுத்த மனுவை நிராகரித்தனர். அந்த நம்பிக்கையின் பேரிலே அவன் அசைந்து கொடுத்தானில்லை. மக்களிடம் போதிய அளவு துப்பாக்கி மருந்தில்லை. எல்லாம் முதல் போரிலேயே தீர்ந்துவிட்டது. அவ்வளவு ஆவேசமாக சுறுசுறுப்பாகத் தாக்கி இருக்கின்றனர். ஒரே அடியாக மக்கள் வெற்றி காண விழைந்ததின் விளைவாக மருந்துகளை வேண்டிய அளவுக்கு வெடிக்கச் செய்தனர். அதனால் தான் போர்புரிந்து பழக்கப்பட்ட போர் வீரர்கள் பழக்கமில்லாத பொதுமக்களிடம்தோற்றோடினர். மருந்துகள் தீர்ந்துவிடவே என்ன செய்யலாம் என்று யோசித்தனர்.

பாஸ்டிலி நினைவு

எங்கே மருந்து கிடைக்கும்? படைக்கலன்களுக்கு எங்கே போவது என்றெல்லாம் புரட்சிக்காரர்கள், அல்ல பொதுமக்கள் சிந்தித்த வண்ணமிருந்தனர். திடீர் என்று நினைவு வந்தது. பாஸ்டிலி என்றான் ஒருவன். அங்கே என்ன? என்றான் மற்றொருவன். கைதிகள் என்றான் ஒருவன்; இல்லைப் படைக்கலன்கள் என்றான் மற்றொருவன். ஆம் ஆம், என்று அனைவரும் திரும்பினர் அப்பக்கம் அங்கு ஏராளமான குண்டுகள் குவிக்கப்பட்டிருந்தன. படைக்கலன்களு போதிய அளவுக்கு இருந்தனர். வார் சேங்கிய மன்னர் மாளிகையை காவல் புரிந்ததைப் போலவே, பாஸ்டிலி சிறையையும் பென்ஷன் பெறும் சிப்பாய்களில் சிலரும் சில சுவஸ் நாட்டு கூலிப்படையினரும், சில சொர்தத் துருப்புகளும் ஆக 100 பேர் பாஸ்டிலிக்குக் காவலிருந்தனர். கண்ட கண்ட சாமான்களோடு திரிந்தமக்கள் பட்டப்பகலில் அதனை சூழ்ந்து கொண்டனர். மக்கள் எழுச்சியை அங்கிருந்த காவற்படைதடுத்துநிறுத்த முடியவில்லை. ஒரே ஆவேசமாகத் தாக்கினர். சற்று நேரத்துக்கெல்லாம் சிறைக்குள் நுழைந்துவிட்டனர். கால வரையரை யில்லாமல் உள்ளே அடைத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள் முகமலர்ச்சியோடு வெளியே ஓடிவந்துவிட்டார்கள். ஏழு கைதிகள். அதில் ஒரு பைத்தியம். நான்கு அதிகாரிகளும், மூன்று படைவீரர்களும் மக்கள் ஆவேசத்துக்குப் பலியாயினர். பயங்கர பாஸ்டிலி தூள் தூளாயிற்று. பலரை மிரட்டிக் கொண்டிருந்த பாஸ்டிலி கூடம், டர்ப்பண்டைன் என்ற பொருள்களின் கூட்டுச் சேர்க்கையால் தரைமட்டமாயிற்று. பாஸ்டிலின் வீழ்ச்சி உலகத்தையே கவர்ந்தது. ஏனெனில், அவ்வளவு பயங்கரமான சிறை " உலகத்தில் வேறு எங்கும் இல்லை. உலகத்திலேயே என்றும் நடந்திராதபெரும் நிகழ்ச்சி," என்றார் சார்லஸ்பாக்ஸ்.

என்ன அலைகள்

எண்ண அலைகள் எழுந்தெழுந்து மோதிடவே,
எண்ணம் கலையாகும்! எல்லோரும் கண்டதிது!
வண்ணத் தமிழ்மொழியை வாயாறப் பேசிடவே,
உண்ணத் திகட்டாத உயர்ந்த கனியாகும்!
பண் ஒத்திசைக்கும் பச்சைப் பசுந்தமிழே!
எண்ணத்தை நீதா! எனக்கு அதுவேஇன்பம்!
உன்னைத் தவிர உயிரெனக்கு வேறில்லை!
சென்னைத் தமிழ்போல் சிதறேன். இதுஉறுதி!

எண்ண அலைகள் எழுந்தெழுந்து மோதிடவே,
எண்ணில் கலைபிறக்கும்! எல்லோரும் கண்டதிது!
கன்னல் நிகர்த்தமிழே! கற்கண்டே! தேனமுதே!
இன்னல் உனக்குவரின் என்னாகும் என்னுணர்வு?
தங்கத் தமிழ்மனது தாங்காது—பொங்கிஎழும்
எங்கும் பொறிபறக்கும்! ஏந்திடுவார் போர்வாளை!
பொங்குவதுதான் உணர்வு! பொங்கட்டும் பேருணர்வு!
சிங்கத் தமிழ்மறவா! சிந்திக்க நேரமில்லை!

எண்ண அலைகள் எழுந்தெழுந்து மோதிடவே
எண்ணம் உலைக்களமாம்! எல்லோரும் கண்டதிது!
தொண்டன் எனப்புகழ்வார் தோளுக்குத்தார் அணிவார்.
என்றும் புகழ்மாலை, எங்கெங்கும் வாழ்த்தொலிகள்!
அன்று நடக்கும் அதற்காகத் தானின்றே
சென்று வருகின்றேன் சிறைச்சாலை' என்பாயேல்,
உன்னைப்போல் நாட்டில் உலுத்தன் ஒருவனிலை
தன்னலத்தை நீமறுத்தால் தம்பி! நீயே தியாகி!
எண்ண அலைகள் எழுந்தெழுந்து மோதிடவே,
எண்ணம் கொலைக்களமாம்! எல்லோரும் கண்டதிது!

—க. கோ. இராமானுசன், (எம்,ஏ.)

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2] ★ 21—10—60 ★ [இதழ் 8

களம் அமைகிறது

தேர்தல் களம் அமைகிறது. ஆளும் கட்சியினர் பணத்தையும் சேர்த்துக்கொண்டு, தொகுதிக்கான ஆட்களையும் பொறுக்கி எடுக்க மின்னல் வேகத்தில் மந்திரிமார்கள் கிராமங்கள் தோறும் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கின்றனர். தொகுதிகளுக்கு நிற்கக்கூடிய ஆட்கள் தியாகிகளாக இருக்கவேண்டியதில்லை. எந்தெந்தத் தொகுதியில் எந்தெந்த வகுப்பார் அதிகமாக இருக்கின்றார்களோ, அவர்களில் செல்வாக்கும், பணமும் இருக்கக்கூடிய நபர் ஒருவரைத் தேடிப் பிடிக்கின்ற வேலையில் காங்கிரஸ் கனம்கள் காற்றாய்ப் பறக்கின்றார்கள். மற்ற எதிர்க்கட்சிகள் இன்னும் அந்த அளவுக்குச் செயல்படவில்லை என்று துணிந்து கூறலாம். அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். தேர்தலில் வெற்றிபெறுவதற்கு இரண்டு உதவிகள் தேவைப்படுகிறது ஒன்று பணம், மற்றொன்று, மக்கள் ஆதரவு. இரண்டும் ஒரு கட்சிக்குக் கிடைப்பது இயற்கைக்கு மாறானது. ஏனெனில் மக்கள் ஆதரவு நிறைய இருந்தால் அங்கே பணச் செலவுக்கு இடமில்லை. பணம் நிறைய இருந்தால் மக்கள் ஆதரவு இல்லை என்றாலும் பணத்தைக் கொடுத்து வாங்கிவிடலாம் என்பது. ஆகவே இன்றைய ஆளும் கட்சியினர், மக்கள் ஆதரவு தங்களுக்கு வெகுவாகக் குறைந்து வருவதைக் கண்டு பணத்தைக் கொடுத்தேனும் பெற்றுவிடலாம் எனத் துடியாத் துடிக்கின்றனர். அதிலும் அவர்களுக்கு இப்போது ஒரு சந்தேகம் தோன்றியிருக்கிறது. பணம் செலவழித்த இடங்களிலும் வெற்றி கிடைக்காமல் போனதால் கலகம், குழப்பம், அடிதடிகளைச் செய்தாவது தங்கள் அரசியலை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டுமென்பதில் மிகத் தீவிரமாக முனைந்து நிற்கின்றனர்.

அகிம்சை

அகிம்சையை அண்ணல் காந்தியார் கல்லறையிலேயே புதைத்துவிட்டு ஆயுதங்களை எடுத்து சுற்றுகிறோமே என்பதற்காக அவர்கள் இன்று வெட்கப் படவில்லை. சனநாயக முறைப்படி எதிர்கட்சிகளை வளரவிடவேண்டும். அப்போதுதான் சனநாயகம் வளரும் என்ற இறந்த கோட்பாட்டின் குரல்வளையை நெறித்த நயவஞ்சகர்கள் நாடாள்கிறார்கள்.

தயாராகுங்கள்

இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தாரைத்தான் காங்கிரஸ் காலிகள் கொல்லுகிறார்கள், வெட்டுகிறார்கள், திட்டுகிறார்கள்என்பதில்லை. நாளைதேர்தல் நெறுங்க நெறுங்க மற்ற எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் இந்த நோய் பரவாது என்பது என்ன நிச்சயம். ஆகவேதான் மற்ற கட்சியினரே, தேர்தல் வேலைகளைத்தொடங்குவதற்கு முன்னால் இப்போது நடந்துவரும்அராசகத்தை எப்படி தடுத்து நிறுத்துவது என்பதில் கவனம் செலுத்துங்கள் என்று சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாசகாரர்களை நாட்டிலே உலவ விடுவது நல்லதல்ல. அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் தந்து, சுதந்திரப் போர்வை என்று அடையாளம் தெரிவதற்காகக் கதர் சட்டையை மாட்டி மிக்கக் கண்யவான்கள்போல் நடமாடவிடுகிறார்கள். இது எந்த நாட்டிலும் இல்லாத புதுமையாக இருக்கின்றது. உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பளிக்காத இந்தப் போக்கற்ற சர்காரை மாற்றி அமைத்து மக்களுக்கிருக்கின்ற பயத்தைப் போக்குவது ஒவ்வொரு குடிமகனின் நீங்காத கடமையாகும். இல்லையானால் கேரள நிலைமையை இங்கும் எதிர்பார்க்க நேரிடும் என்பதை சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆண்டால்....

ஆண்டால் காங்கிரஸ் மந்திரிகளே ஆளவேண்டும்.இல்லையானால் குடியரசுத் தலைவரே ஆண்டுபோகட்டும் என்ற நிலையிலேதான் இன்றைய சர்க்காரின் போக்கு இருக்கின்றது.

அவர்கள் காங்கிரசில் உறுப்பினர்களைச் சேர்க்கும் முறையே விந்தையாக இருக்கின்றது. கைத்தறி நெசவாளரிடம் போகிறார்கள். கதர் சிட்டத்தைக் கொடுத்து ஆடை நெய்து தரும்படிக் கேட்டு கூலி உயர்வைத் தருகிறார்கள். கூலி உயர்வு கிடைக்கிறதே என்று ஆசைப்பட்டு சிட்டத்தைக் கேட்டால் காங்கிரசில் உறுப்பினர்களாகச் சேரு, தருகிறோம் என்கிறாகள். தொழிலுக்கும் கட்சிக் கொள்கைக்கும் தொடர்பே இல்லை என்று இன்னும் பலர் அந்த சிலந்திக் கூட்டில் விழாமலிருக்கிறார்கள். இது ஆந்திரத்திற்கு போய் மீண்டும் தமிழகத்திற்கு வந்திருக்கிற திருத்தணி, நகரிப் பகுதிகளின் பக்கத்திலிருக்கிற — பொதட்டூர்பேட்டை, சொரக்காப்பேட்டை, பொம்மராஜ பேட்டை, கிருஷ்ணராஜபேட்டை, அம்மவார்குப்பம், பள்ளிப்பட்டு ஏகாம்பரக் குப்பம் போன்ற ஊர்களில் நடந்து கொண்டிருக்கின்றது. கிணறு வெட்ட வேண்டுமா, காங்கிரசில் சேரு. விளக்கு வேண்டுமா, காங்கிரசில் சேரு. வாய்க்கால் வெட்ட வேண்டுமா, காங்கிரசில் சேரு. செக்குப் போட்டுத் தரவேண்டுமா, காங்கிரசில் சேரு. மற்ற எந்த வசதி வேண்டுமானாலும் காங்கிரசில் சேர்ந்தால்தான் நீ அதைப் பெறுவாய், என்று மானங்கெட்டதனமாக ஆட்களைச் சேர்க்கும் ஈனத்தனத்திலே இன்றைய காங்கிரஸ் தன் சார்பாக இருக்கின்ற சர்க்காரை பக்கத்தில் வைத்துக்கொண்டு மிரட்டிக்கொண்டிருக்கிறது. இந்த வெட்கங்கெட்ட செயலை நல்லறிவாளர்கள் நடுநிலைமையாளர்கள், கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதைத்தந்தால் அதைத் தருவேன். அது வேண்டுமானால் இதைப் பெற்றுக்கொள் என்ற நிலையில் பண்டமாற்று வேலையைச் செய்து கொண்டிருக்கிறது.

1962

இந்த ஆண்டை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறது நாடு. அந்த ஆண்டு, ஒவ்வொருவருக்கும் இருக்கும் வாக்குரிமையைப் பயன்படுத்தப் போகின்ற ஆண்டு.

இதுவரை நடந்த தேர்தலில் காங்கிரஸ் வாங்கிய வாக்குகளைக் காட்டிலும் மற்ற கட்சிகளும், சுயேச்சைகளும் வாங்கிய வாக்குகள் குறைந்ததல்ல. ஆனால் ஒரே கட்சி வாங்கிய வாக்குகளுக்குமேல் ஏனைய கட்சிகள் வாங்கி அதைப் பங்கு போட்டுக் கொள்வதால் காங்கிரஸ் கட்சி மெஜாரிட்டியாகத் தெரிகின்றது. அதுவேயன்றி காங்கிரஸ் தம்பிங்க் மெஜாரிட்டி என்று சொல்வதற்கில்லை. ஆகவேதான் காங்கிரசல்லாத மற்ற எதிர்க் கட்சிகள் தேர்தல் காலங்களிலேயாகிலும் கூட்டுச் சேர்ந்தால் நல்லது என்ற எண்ணம் பரவி வருகிறது.

எங்கே மற்றக் கட்சிகள் எல்லாம் கூட்டுச் சேர்ந்து தன் கட்சியை ஒழித்து விடுமோ என்ற பயத்தினால்தான் இந்த கட்சியை அந்த கட்சி ஏமாற்றி விடும். அந்தக் கட்சியை இந்தக் கட்சி விழுங்கிவிடும் என்று போகின்ற பக்கங்களிலெல்லாம் பேசி எல்லா கட்சியையும் விழுங்கப் பார்க்கின்றார் கனம் காமராசர்.

கேரளம்

அண்மையிலே கேரளத்தில் என்ன நடந்தது. இங்கே கூட்டுச் சேருவது கேவலம் என்று பேசுகின்ற கனம் காமராசர் கேரளத்தை இதற்குள் மறந்துவிட்டாரே என்பதை எண்ணிச் சிரிக்கிறோம். முஸ்லீம் லீக் வகுப்புவாதக் கட்சி, என்று நேரு பேசிவிட்டுச் சென்ற ஒலியடங்கா முன்னம் அந்த பிறைக் கொடியின் காலில் விழுந்து கும்பிட்ட கதையை மறந்து விட்டாரா, தீராத தலைவலிக் கட்சி என்று தூற்றப்பட்ட பி. எஸ். பி. கட்சியோடு கூட்டுச் சேர்ந்தது எதற்காக. மத சார்பற்ற சர்க்கார் என்று சொல்லிக் கொண்டு மதவாதிகளான சிரியன் கிறிஸ்துவர்களோடு கூட்டுச் சேர்ந்தது என்ன பொருத்தம், இவ்வளவு வேண்டாத விரும்பத்தகாத கூட்டுச் சேர்ந்தது கம்யூனிஸ்டு சர்க்காரை ஒழிக்கவேண்டும் என்பது தவிர இதில் வேறென்ன அரசியல் நாணயம் அடங்கி இருக்கின்றது. வேண்டாத எதிரியை வீழ்த்துவதற்கு விரும்பத்தகாத கூட்டுச் சேருவது நியாயம் என்று அவர்கள் வாதாடுவார்களானால் அதே நியாயம் தமிழகத்துக்கு ஏன் பொருந்தாது என்று காலம் அவர்களைப் பார்த்துக் கேட்கத்தான் போகிறது. ஆனால் அந்தக் காலத்தை உருவாக்க வேண்டிய பொருப்பிலே மாற்றுக் கட்சிகள் இருக்கின்றன என்பதை இன்றே நினைவுபடுத்த வேண்டியவர்களாகிறோம். எந்த அராசகத்தையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை இவர்கள் பெற்றுத் தீர வேண்டும். அதில் கொஞ்சமாவது சுணங்கினால் நரிக்கு நாட்டாண்மை கொடுத்த கதையாக முடியும் என்பதை எச்சரிக்கை செய்கின்றோம்.

அன்புள்ள,





துருவனையும் அனுராதையையும் புலவருக்கு அடையாளம் தெரியவில்லை. அதைப் போலவேதான் இவர்களுக்கும். "நீங்கள்யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று புலவர் கனிவோடு கேட்டார்.

"நாங்கள் மண்டபத்திலிருந்து வருகிறோம், என் பெயர் துருவன். அந்தப்பெண்ணின் பெயர் அனுராதை. தங்களைச் சந்திப்பதற்காகவே நெடுந் தொலைவிலிருந்து வந்திருக்கிறோம்.'' என்று துருவன் பதில் சொன்னான்.

"தாராளமாகச் சொல்லுங்கள். என்னால் முடிந்ததைச் செய்து கொடுக்கிறேன். மனிதர்கள் தங்களால் செய்யக் கூடிய காரியத்தைபிறருக்குச் செய்து கொடுக்காததால் தான் ஏராளமானவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து கிடக்கிறார்கள். பூமிக்குள் கிடக்கும் தங்கத்திற்கு மதிப்பு இல்லை. புதருக்குள் இருக்கும் மானுக்கும் அப்படித்தான். அதுபோலவே ஆற்றல் உள்ளவர்கள் நல்ல உள்ளம் இல்லாததால் யாருக்கும் பயன்படாமல் போய் விடுகிறார்கள்.'' என்று புலவர் அடுக்கிக்கொண்டே போனார்.

"உங்களை எனக்குத் தெரியாது. ஆனால் இந்தப் பெண்ணிற்கு நன்றாகத் தெரியும்.

நீங்கள் தங்கச்சி மடத்தில் இருந்தபோது ராமேஸ்வரத்தில் யானைப் பாகனாக இருந்த நரசிம்மனின் புதல்வி இந்தப் பெண். நரசிம்மனுடைய அகால மரணத்தைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள். யானையை அடக்குவதற்கு உயிரையே தியாகம் செய்த அந்த வீர மகனின் மகளுக்கு ராமேஸ்வரம் கோவில் நிர்வாகிகள் எந்த உதவியும் செய்யவில்லை. இன்று அந்தப் பெண் வளர்ந்து உலகத்தை உணரும் பருவத்திற்கு வந்து விட்டது.'' என்று துருவன் சொல்லும்போது புலவரின் கண்களில் நீர் துளிர்த்தது.

"எனக்கு நன்றாகத் தெரியும் நரசிம்மன் உத்தமன், அடிக்கடி தங்கச்சிமடத்திற்கு வருவான். ஒவ்வொரு முறையும் சங்ககால வீரக் கதைகளை என்னிடம் கேட்டு தெரிந்து கொண்டு போவான். அவன் சிலவேளைகளில் விணயமான கேள்விகளைக் கேட்பான். அந்தக் காலத்தில் ராஜாக்களெல்லாம் யானைகளில் ஏறியிருக்கிறார்கள், ஒவ்வொரு இளவரசர்க்கும் யானை ஏற்றம் தெரிந்திருந்தது ஆனால் இப்பொழுது யானை அடக்கும் பாகன் வேலை ஏன் அடிமைத் தனமாகக் கருதப் படுகிறது—இப்படி திடீர் திடீரென்று கேள்விகளைக் கேட்பான். குழந்தை உள்ளத்தில்தான் குதர்க்கமான கேள்விகள் எழும்புவது உண்டு. அவன் இறந்தது எனக்குப் பெரிய நட்டமாகும். ஆனால் அவனுடைய கடைசி காலத்தில்என்னிடம் தெரிவித்ததை நான் நிறைவேற்றி வைத்திருக்கிறேன். அவனுடைய சடலத்தை தங்கச்சி மடத்திற்கு அருகில் உள்ள உடன் காட்டில் புதைக்க வேண்டும் என்று ஆசைப் பட்டான். அவன் நினைத்தது நடந்தது. இந்தப் பெண் அப்பொழுது சிறுமி'' என்று புலவர் கூறினார். அனுராதை தேம்பித் தேம்பி அழுதாள்.

"உங்களைத்தான் அனுராதை மலைபோல் நம்பியிருக்கிறாள். யானைப் பாகன் நரசிம்மன் அவர்கள் அவர் சேகரித்து வைத்த பணத்தைத் தங்களிடம் சேர்ப்பித்திருப்பதாக அவர் எழுதி வைத்திருக்கும் டைரி மூலம் எங்களுக்குத் தெரிய வந்தது. அதைப் பற்றி விசாரித்துப் போகத் தான் வந்தோம்.''

"உண்மைதான் அவன் பெயரால்என்னிடம்கொஞ்சம் பணம் இருக்கிறது. அனுராதை இவ்வளவு பெண்ணாக வளர்ந்து திருமணம் எல்லாம் முடியும் வரை என்ன செய்தீர்கள். அனுராதையின் திருமணத்திற்கு யார் பணம் கொடுத்தார்கள்?'' என்று களங்கமில்லாமல் ஒரு கேள்வியைப் போட்டார். துருவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. துருவன் அனுராதையின் முகத்தைப் பார்த்தான். அனுராதை சிரித்தாள். சிரித்தாலும் அவள் கண்களில் நீர் குறையவில்லை. மாலை வெய்யிலுடன் மழைதூறுவது போல்இருந்தது அந்தக்காட்சி. துருவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

புலவர் விட்டபாடில்லை. "திருமணத்தைக் கடன் வாங்கிச்செய்தீர்களா? என்று மீண்டும் கேட்டார்.

"மன்னிக்க வேண்டும்; அனுராதைக்குத் திருமணம் இன்னும் ஆகவில்லை'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான். "அப்படியா? நீ யார்? என்று ஒரு புதிரைக் கிளப்பினார் புலவர்.

"நான் அனாதை, அனுராதையை எனக்குத் தெரியும்'' என்று அடக்கமாகச் சொன்னான் துருவன்.

புலவர் முகத்தில் சந்தேகக் குறி விழுந்தது,

"எவ்வளவு நாட்களுக்குத் தான் இப்படி ஒளிந்து மறைந்து வாழப்போகிறீர்கள்? தமிழ் மக்களிடம் இந்தக் குறை இன்னும் அதிகமாக இருக்கிறது. பணங்கொடுத்து விலைமாதர் வீடுகளுக்குப் போகிறார்கள். அங்கே சாதி வித்தியாசம் பார்ப்பதில்லை. ஆனால் முறைப்படி திருமணம் செய்து கொள்வதற்கு மட்டும் உயர்வு, தாழ்வு, அந்தஸ்து, பணம் இது போன்ற தரா தரங்களை அலசிக்கொண்டிருக்கிறார்கள். நீ ஏன் அனுராதையை தாலிகட்டிய மனைவியாக்கிக்கொள்ளக்கூடாது. கூடவே கூட்டிக் கொண்டு அலைய மட்டும் மனம் வருகிறது, அந்தப் பெண்ணை மனைவி என்று கூறமட்டும் மனம் வல்லையாக்கும்''என்று ஒரு கிள்ளுக் கிள்ளினார்.

அனுராதைதுணுக்குற்றாள். துருவன் உள்ளம் துடித்தது. எதையும் வெளிக்காட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலை. இருவரும் ஊமைகளாகவே இருந்தார்கள்.

புலவர் மீண்டும் பேசத் தலைப்பட்டார். "உனக்கோ கால் ஊனமடைந்திருக்கிறது. நீ அவளை அழைத்துக் கொண்டேதிரிவதில்எனக்குத் திருப்தியில்லை. இதுபோன்ற நட்புக்களை நான் விரும்புவதில்லை. உங்களால் தமிழ் நாட்டுக்கே பெரிய அபகீர்த்திகள் ஏற்பட்டுவிடுகின்றன. துருவா, நீ நல்லவனாக வர வேண்டும் உன்னை நம்பியிருக்கும் அனுராதையும் சுகமாக இருக்க வேண்டும்; எனவே நீங்கள் இருவரும் முதலில் தம்பதிகளாகி விடுங்கள். தரவேண்டிய பணத்தை நான் தருகிறேன்.'' என்றார் புலவர்.

"புலவரய்யா, எங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். நான் அனுராதையை அப்படி நினைக்கவே இல்லை. நாங்கள் இருவரும் சந்தித்தோம், எப்படியோ அன்பு வளர்ந்து விட்டது. அந்த அன்பு மாசுபடாதது. எந்தக் கரும் புள்ளியும் அந்த அன்பில் இல்லை'' என்று உருக்கமாகச் சொன்னான் துருவன்.

புலவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. இரண்டு இளம் உள்ளங்கள் எந்தவிதமான பிரதி உபகாரத்தையும் எதிர்பாராமல் இணைவதில்லை என்று அவர் திடமாக நம்பினார். அதனால் துருவன் வார்த்தைகளை அவர் பொருட்படுத்தாமல் இருந்தார்.

"துருவா, நான் முதியவன். எனக்கும் ஒருபெண் உண்டு. உலக அனுபவம் பெற்றவன் நான். என்னை ஏமாற்றிப் பயனில்லை. நான் உங்கள் இருவருக்கும் வேண்டியவனாக, வழி காட்டியாக இருக்க வேண்டுமானால் நீ, இந்தப் பெண்ணை ஏமாற்றாமல் நடந்துகொள். அவள் கழுத்தில் மாங்கல்யத்தைப்போடு!'' என்றார் புலவர்.

துருவன் அழுதான். "ஐயா, புலவரே, அனுராதையைத் திடீரென்று எப்படி மனைவியாக்கிக் கொள்வது! நான் அனுராதைக்கு உதவிக்கு வந்தவனய்யா!'' என்றான் துருவன்.

"யாரும் நம்ப மாட்டார்கள் இளைஞனே! அவளுக்குப் பணம் இருப்பதால்தான் நீ அவளைப்பின் தொடர்ந்து வந்திருப்பதாகக் கருதுவார்கள். முன்பின் தெரியாமல் நீ அந்தப் பெண்ணோடு சுற்றிக் கொண்டிருப்பதையாரும் தமிழ் நாட்டில். அனுமதிக்க மாட்டார்கள். என்னிடம் மறைத்துப் பயனில்லை.'' என்று பிடிவாதமாகப் பேசினார், புலவர்.

"ஐயா எங்களை நம்புங்கள். துருவன் எனக்கு மிகவும் வேண்டியவர்—எனக்கு வழி காட்டி!'' என்றாள் அனுராதை.

"நீ பேதைப் பெண். நீ நம்பிக்கை மோசம் போகப் போகிறாய்! இந்த இளைஞன் உன்னை ஏமாற்றப் போவதில்லை என்றால் ஏன் உன் கழுத்தில் தாலி கட்டக் கூடாது. நீயாவது உன் எதிர்காலத்தை நினைத்துப் பார்த்தாயா? பணம் இருக்கும் வரை உன் பின்னால் பலர் வருவார்கள். உன் பணம் தீர்ந்ததும் அவர்கள் அனைவரும் உன்னை எதிர்த்து வருவார்கள். இதுதான் உலகம். கடைசியாகச் சொல்லுகிறேன் நீங்கள் இருவரும் தம்பதிகளாக வாருங்கள். அல்லது அந்த இளைஞனின் தொடர்பை அறுத்துக் கொண்டு நீமட்டும் வரவேண்டும். பணம் எப்போதும் என்னிடம் தயாராக இருக்கும். இன்று என் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வருகிறார்கள். என் பெண்ணுக்கு திருமணநாள் வைக்கப் போகிறோம். நீங்கள் போய்விட்டு இன்னொரு முறை வாருங்கள். நான் சொன்னதை மட்டும் மறந்து விடாதீர்கள்'' என்று சொல்லிவிட்டு புலவர்உள்ளே போய்விட்டார். அந்த நேரத்தில் உள்ளே இருந்து ஒரு பெண் வந்தாள். அவள்தான் புலவரின் மகள். அவளைப் பார்த்ததும் அனுராதைக்குப் பழைய நினைவுகள் மனதுக்கு வந்தன. ஏனெனில் அந்த இளம் பெண் இராமேசுவரத்தில் அனுராதையோடு படித்தவள்.

"அனுராதா என்னை நினைவிருக்கிறதா? நான் உன்னோடு படித்தவள்'' என்றாள் அந்தப் பெண்.

சதியாலே சாய்ந்த சீர்திருத்தவாதி!

சதி—பதி என்ற வார்த்தைகளில் முதலாவதான சதி—என்ருல் மனைவி என்ற பொருளுக்கல்ல இந்த ஆராய்ச்சி.

சதியால் கொல்லப்பட்டான், சதி செய்யப்பட்டான், சதி செய்தான், சதியால் வென்ருன், சதியால் ஆகாததொன்றில்லை, சதியைவிட மகாக்கொடியதும் வல்லமை வாய்ந்ததும் வேறென்றுமில்லை என்றெல்லாம் பேசப்படுகின்றவற்றையேசுற்றிவருகிறது, நமது ஆராய்ச்சி.

இந்தச்சதிஎன்பது இன்ஞரிடம்தான் இருக்கும் இன்னரிடம்இருக்காது என்று சொல்வதற்கில்லாமல், ஏழைஎளியவர்முதல். பணக்காரன் பாராளு மன்னன் ஆகிய அனைவரிடையேயும் குடிகொண்டிருக்கின்றது. சதியைத் தன் ஆயுதமாக வைத்துக்கொள்ளாதவர் ஒரு சிலர்தான். ஆனல் சதியிலிருந்து தப்புவது மிகக் கடினமானதாகும்.

ஆனலும் சதி எந்த இடத்தில் இருந்தாலும், அதற்கு ஒரே தன்மையான வல்லமைதான் உண்டா என்ருல் இல்லை. ஏழைகள் தங்கள் வாழ்க்கைக்காக ஏதாவது சதியில் இறங்கினல் அதை பிரமாதப்படுத்துவார்கள். அதே சதி பணக்காரர்களிடமிருந்தால் அதைப் பாதுகாப்பு என்பார்கள். சர்க்காரிடம் இருந்தால் அதற்கு சட்டமுலாம் பூசிவிடுவார்கள். பக்தர்களிடமிருந்தால் பரமன் கட்டளை யென்பார்கள். மொத்தத்தில் சதி என்பது நேரடியாக எதிர்க்கமுடியாமல், எதிர்க்கச் சக்தியற்று, எதிர்த்தால் காரியம் கெட்டுவிடும் என்ற பயத்தால் சதியைத் துணைக் கழைத்து எடுத்த காரியத்தைத் தங்களுக்குச் சாதகமாக முடித்துக்கொள்ளவும் பேருதவி செய்வது சதி. சதி, ஏன் தன் உருவை அப்படியே வெளிக் காட்டுவதில்லை என்ருல், அது சாகசத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பட்டுத் திரைக்குப் பின் பயங்கர உருவம் ஒன்று நின்றுகொண்டு இருப்பதைப்போல், சதி என்ற பயங்கரச் செயல் சாகசத்திற்குப் பின்னல் நின்று கொண்டிருக்கும்.

சதி செய்யவேண்டு மென்று நினைப்பவன் சாதாரண மனிதனுயிருந்தால் அன்பாகப் பேசி அழைத்துக் கொண்டுபோய் இருட்டில் வேலையை முடித்துவிட்டு, பழியைத்தனக் தப்பிடிக்காதவன்மேல் போய்ச் சேரவேண்டிய அளவுக்கு ஏதாவது அடையாளங்களைப் போட்டுவிட்டு வந்துவிடுவான். பணக்காரனுனல் உணவில் விஷம் கலக்கச் செய்து எதிரியைச் சாகடித்து, பழியை சமையல்காரன் மேல் போட்டு அவனைச் சிறைக் கனுப்பிவிட்டு, அவன் குடும்பத்தைத் தான் காப்பாற்றிவிடுவான். அல்லது தனக்கிருக்கும் பணச் செல்வாக்கால் ஏதாவது விஷப்பாம்பை உணவுப் பொருளில் போட்டுவிட்டு தன் சமையல்காரன் நிரபராதி, ஏதோ தற்செயலாக நடந்துவிட்டது என்று குற்றவாளியை நிரபராதியாக்கும்படி செய்துவிடுவான்.

அந்தஸ்தும் அதிகாரமும் கையில் இருப்பவன், அதன் பேரில் ஏதாவது பொய்வழக்கை ஜோடித்து தண்டனை வாங்கித் தந்துவிடுவான் அப்படி, தான் செய்த சதியில் தோல்வியுற்ருலும், தெரிந்துவிட்டாலும், தனக்கோ, தன் உத்தியோகத்துக்கோ எவ்வித தீங்குமில்லை என்று திடமாகத் தெரிகிறபோது தீவிரமாக சதிச் செயலில் துணிந்து குதிக்கிருன்.

சதி செய்துவிட்டான் என்று பகிரங்கமாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும், கண்டு பிடிக்கப்பட்டவர்கள் அனைவர்க்குமே ஒரே விதத் தண்டனையில்லாத காரணத்தால் ஒரு சிலர் வெகு தைரியமாக சதிச் செயலில் ஈடுபட்டுவிடுகிருர்கள்.

தானே நேராக எதிர்ப்பில் இறங்குவதற்குப் பதில், சுற்றி வளைத்து மற்றவர்களைக்கொண்டு இரண்டு நாட்களுக்குள் பிளவையும் பேதத்தையும் உண்டாக்கிவிடுகின்றது. ஏனெனில் அது உருத்தெரியாமம் உள்ளே நுழைவதால், அதன் வேலைக்கு அடிமைப்பட்டு விடுகிருர்கள்.

சதி நடக்கிறது என்று சொன்னவர்கள் மிகச் சிலர்தான். ஆனல் சதி நடந்துவிட்டது என்று அலறியவர்கள் கோடானுகோடி பேர்கள், சதி செய்யாமல் இருக்கலாமா? இருக்கலாம். சதியில் அகப்படாமல் இருக்க முடியுமா? முடியாது. ஏன்? சமூகத்தில் சதி செய்பவர்கள் இன்னின்னர்தான் என்று அடை

உயிரோடிருக்கும் வரையில், சதி நடந்த பிறகேனும் அது புறப்பட்ட இடத்தைக் கண்டுகொள்ள முடியும் பயமில்லை. சதியே உன் வேலையைத் தொடங்கு. உனக்குப் பின்னல் ஒரு உண்மையான உலகம் இருக்கிறது என்பதை மாத்திரம் மறந்து விடாதே. சதி செய்யத் தொடங்கிய ஒருவன் சன்மார்க்கன் ஒருவனை சாட்சிக் கழைக்கின்ருன். இங்கே தெரியவில்லையா? சதியின் அடையாளம் என்று சமூகமே கேட்கின்றது. சதி செய்துகொண்டே சதி செய்தான் என்று சட்டங்களுக்குள் மறையாதே. இரும்புத்திரை

★ சதி என்பது இன்ஞரிடம் இருக்காதுஎன்று சொல்வதற்கில்லாமல், ஏழை எளியவர் முதல் பணக்காரன் பாராளு மன்னன் ஆகிய அனைவரிடையேயும் குடிகொண்டிருக்கின்றது.

பழி தீர்த்துக்கொள்ளுகிற மகாக் கொடிய செயலையே சதி என்று முன்னே சுட்டிக்காட்டினேம். இந்தச் சதி என்ற பயங்கரச் சொல் இன்றல்ல, நேற்றல்ல, எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இருக்கத்தான் செய்தது. இன்னும் அந்தச்சதிமாண்டபாடில்லை.மாளவும் மாளாது. ஏன் எனில் அது இருக்குமிடம் அவ்வளவு வண்மை மிக்க இடம். சதி செய்தவனைப் பார்த்து, நீர் சதி செய்துவிட்டீர் என்று சொல்வதற்கே முடியாமல் பல விடங்களில் சட்டமென்ற கடிவாளம் பூட்டப் பட்டிருக்கிறது. சதி, நீதியைவிட வல்லமை வாய்ந்ததென்றே கூறலாம். ஏனெனில் நீதி மென்மையானது. அது அனைவரிடத்திலேயும் குடிகொள்ளாது. ஒரு பொதுப் பிரச்னைக்காக யார் யார் உயிர்விடத் துணிகின்ருர்களோ, அவர்களை பல முறைகாப்பாற்றியிருக்கிறது. அந்த நீதி ஒரு நியாயம் என்ற எல்லைக் கோட்டுக்குள் அடங்கிவிடும் தன்மையது. ஏனெனில், நீதி ஒருவனுக்கு மரண தண்டனை அளித்து விட்டால், அவன் மாண்டதோடு அந்த நீதியின்

யாளம் போட்டில்லை, அண்ணன் தம்பியைச் சதி செய்கிருன். தம்பி அண்ணனைச் சதி செய்கிருன். மகன் தந்தையையும், தந்தை மகனையும் சதி செய்கிருன் கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் சதி செய்கிருள். அதிகாரி குடிகளையும், குடிகள் அதிகாரிகளையும் சதி செய்கிருர்கள். முதலாளி தொழிலாளர்களை

சி. பி. சிற்றரசு

சதி செய்கிருர், தொழிலாளிகள் முதலாளியை சதி செய்கிருர்கள். கூட்டுமுறையில் வியாபாரம்செய்வோர் ஒருவரை ஒருவர் சதி செய்கிருர்கள். ஆகவேதான் தக்க இடத்தில், தகுந்த நேரத்தில் சதியை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போய்விடுகிறது.

பல புனிதவான்களின்கல்லறை எழும்பியதற்குக் காரணம் சதி

கிழிக்கப்படும் உன் முகமூடியை அகற்றும் நாள் அதிக தூரத்தில் இல்லையென அனைவருமே பேசுகின்றனர்.

விதி, விதி என்று சதியில் சாகாதே, சதியைக் கொல்லு. விதியை வெல்லு. நீதியை நிலை நாட்டு என்ருன் சாக்ரடீஸ்.

மெலீடல் சதி வெளிப்பட்டது. நஞ்சுண்டு நீதியை நிலை நாட்டினன் சாக்ரடீஸ். அவன் காட்டிய அறிவொளி அகிலமெல்லாம் நுழைந்தது. இவன் விட்டுச் சென்ற சாம்பலைத்தான் பார்க்கிறது, ஏதென்ஸ் நீதிமன்றம். தான் பிறந்த நாடு தன்னைக் கொன்றுவிட்டது. எனினும் மாபெரிய மன்னர்களெல்லாம் ஜெயிக்க முடியாத அகிலத்தையே தன் அறிவால் வென்ருன். அங்கே சதி வெட்கி தலை குனிந்தது. இங்கே சதிராடுகிறது. அந்தோ சதியே! நீ ஒழியும் நாள் எந்நாளோ?

★ விதி, விதி என்று சதியில் சாகாதே, சதியைக் கொல்லு. விதியை வெல்லு. நீதியை நிலைநாட்டு என்ருன் சாக்ரடீஸ்,

வேலை முடிந்துவிடுகிறது. அவன் குடும்பத்தையும் பின் சந்ததிகளையும் அது தொடுவதில்லை. ஆனல் சதி அப்படியில்லை. சதியிலிருந்து ஒருவன் சாமார்த்தியமாகத் தப்பித்துக் கொண்டாலும், அவன் இயற்கையாக இறக்கும் வரையில் அவன் வீட்டைச் சுற்றிக் கொண்டே இருந்து, அவன் இறந்த பிறகு வீட்டுக்குள் தாராளமாக நுழைந்து, அவன் குடும்பத்தைக் கலகலக்கச் செய்து சின்னபின்னப் படுத்திவிடுகிறது.

தந்தை இறக்கும் வரையில் ஒற்றுமையாக இருந்த அண்ணன் தம்பிகளுள் தந்தையிறந்த

தார். நீதி ஒத்தைக் குரலிப்பதறிக்கொண்டிருந்த நேரத்தில் சதிசசங்கை அணிந்து சதிராடியிருக்கின்றது. நீதியற்ருேர் நெஞ்சினில், அநீதியின் நிழலெனப் படமெடுத்தாடி யிருக்கிறது

அந்தோ சதியே! இதோ என் உயிர் எடுத்துக்கொள். உன் பசி தீர்ந்ததா - சந்தோஷமாகப் போ. இனியாகிலும் யாரையும் தீண்டாமல் இருப்பாயா? என்ற கடைசி வார்த்தையோடுதான் எவ்வளவோ மேதைகள் கல்லறையில் நுழைந்தார்கள். எனினும் அதன் பசி அடங்கியபாடில்லை.

நீதிவான்களில் ஒருவராவது

பார்வைக்கு வந்தவை

இந்தி ஆதிக்கத்துக்கு எங்கும் எதிர்ப்பு

உருவாக்கியவர்:மா. சீ. தசரதன்
வெளியிட்டோர் :-
பாரி நிலையம், சென்னை-1.
விலை 50 காசுகள்.

இந்தியை எதிர்த்துக்கூக்குரலெழுப்புவதுஇன்றல்ல, நேற்றல்ல! என்றைக்கு இந்த நாட்டில் இந்திய அரசியலார் இந்தியைப் புகுத்தினர்களோ அன்றைய தினத்திலிருந்து இருந்து வருகின்ற இலட்சியக்குரல். அக்குரலை அலட்சியப்படுத்தி வந்த ஆச்சாரியார் காலத்து ஆட்சி என்னவானது என்பதை நாடறியும்! ஏடறியும். அதே இந்தியை மீண்டும் இந்தத் தென்னகத்தில் — திராவிடத்தில் நுழைக்கப் பேரரசினர் முனைந்து செயலாற்றி வருகின்றனர். அதற்கு மாநில ஆட்சியினரும் பேராதரவு தந்து பேருவுகையோடு வரவேற்று நிற்கின்றனர். இப்போக்கினைக் கண்டிக்கும் முறையிலேயும், அந்தக் காலத்தில் அவரவர்கள்இந்தியை எதிர்த்துச் சொல்லி வைத்த கருத்தினை நாட்டு மக்களிடத்தில் மீண்டும் ஞாபகப்படுத்தும் முறையிலேயும் இந்நூல் சிறப்புப் பெற்றிருக்கிறது.

திராவிடத்தில், இந்தித் திணிப்புக் குறித்து அமைச்சர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் தம் தம்கருத்தினைஅழுத்தந்திருத்தமாகக்கூறியிருக்கின்றனர். அவற்றை யெல்லாம் ஆரமாக்கி,நாளிதழில்வெளிவந்த செய்திகளை அதோடு இணைத்துஇன்பத்தமிழர்களுக்கோர் படையலாக்கித் தந்திருக்கிருர், இதன் ஆசிரியர்.

அவர் செய்துத்தந்த இவ்வுதவியை இன்பத்திராவிடம் என்றென்றும் மறக்காதென்பது உறுதி.

அவர் தொண்டு வாழ்க அன்னரது எழுத்துப் பணி மேன்மேலும் சிறப்புறுவதாக!

வெளியாகி விட்டது! விற்பனையாகிறது!
காவியக் கழகத்தாரின்
கவிஞர் கண்ணதாசன்
கவிதைகள்
[இரண்டாம் தொகுப்பு]
தனிப்பிரதி விலை: 2-8-0
விவரங்கட்கு: காவியக் கழகம், சென்னை-2.

மதியிழந்தோன் பேசும் விதியும் சதியே!

எகிப்தின் ஏட்டிலே...

எத்தனையோ கருத்துக் குவியல்உள்ளது. அத்தனைக்கும் மேலான, சுவையான ஒரு சோகச் செய்தி இருக்கிறது. அதுதான்-?

அலெக்சாண்டிரியாவின் அரண்மனை ஒன்றில் மாவீரன் ஜூலியஸ் சீசர் தன் தளபதிகளுடன் அமர்ந்திருக்கிறான். எகிப்திய சிம்மாசனத்தின் வாரிசுப் போட்டி நடைபெறுகிறது. பேரழகி கிளியோபாட்ராவுக்கும், அவளது சகோதரன் டாலமிக்கும் சமரசம் செய்துவைக்கவேண்டிய பொறுப்பை சீசர் பெற்றுக் கொண்டிருக்கிறான். கிளியோபாட்ரா அங்கே இல்லை. இளவரசி தான் அடைய வேண்டிய பதவிக்குபடை திரட்ட சிரியா நாடு சென்றிருக்கிறாள். டாலமிக்கு ஆதரவாகரோமானிய தளபதிகள் முடிவு செய்யப்போகிறார்கள்.

அப்போது கிரேக்க நாட்டு வியாபாரி ஒருவன் ஜூலியஸ் சீசருக்குப் பரிசுகள் கொண்டுவருகிறான். அந்தவியாபாரி கொண்டு வந்த மூட்டை ஒன்றிலிருந்து கிளியோபாட்ரா வெளிவருகிறாள். அழகு என்ற சொல்லுக்கு எத்தனை விளக்கங்கள் சொல்லமுடியுமோ, இளமை என்ற பருவத்துக்கு எவ்வளவு பெருமைகளைக் கூறமுடியுமோ, கொவ்வை இதழ், துடி இடை, புன்னகை தவழும் முகம், பராரியானாலும்-பாராளும் மன்னன் என்றாலும், போர்வீரன் என்றாலும் - அரசியல் சூழ்ச்சிக்காரன் என்றாலும், அந்த உருவத்தைக்கண்டதும்,அடிமையாகிவிடுவார்கள் என்று எழுதுகிறார்களல்லவா,அத்தனையும் கிளியோபாட்ராவுக்குப் பொருந்தும்.

அழகு உருவெடுத்து வந்து தன்னைப் பார்த்துப் புன்னகை செய்கிறதோ என்று எண்ணினான் ஜூலியஸ் சீசர். அரசு கிளியோ பெட்ராவுக்கு என்று முடிவாயிற்று. டாலமி அனாதையானான்.

கிளியோபட்ரா கி. மு. 69ல் பிறந்தாள். எகிப்து நாடு, எழில் மிகுந்த நாடு. அங்கே செல்வம் கொழித்தது. நாகரிகம் அங்கே தோன்றியது என்று கூறுவோர் உண்டு. தமிழ் நாட்டுக் கப்பல்கள், அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் அனுதினமும் நின்றதாம். அவ்வளவு வியாபார வளர்ச்சி. கிளியோபட்ரா, இளவரசி இப்போது. அவள் அரசி - அழகுக்கும் அவள்தான் ராணி. உல்லாசபுரிக்குத் தகுதியானவள். சீசருக்குப் பல நாடுகளை வெல்ல வேண்டுமென்று விருப்பம். கிளியோபட்ராவுக்கு உலகை ஆள வேண்டுமென்று பேராசை. அந்த வல்லமை சீசரிடம் இருந்தது என்பதைஉணர்ந்துகொண்டாள். அவள் வீசிய வலையிலே விழ்ந்தான் மாவீரன் சீசர். கிளியோபட்ரா அழகி மட்டுமல்ல, அறிவாளியும்கூட. பத்துமொழிகளைக் கற்றவள். பாராளப் பிறந்தவள்.

அனாதையாகச் சென்ற டாலமி, படை எடுத்து வந்தான். சீசரை எதிர்த்துப் போராடமுடியாது என்று அந்த இளைஞனுக்குத் தெரியவில்லை. போர்க்களத்திலே தோற்றோடினான். சீசர் எகிப்தின் மணிமகுடத்தை, தன் அன்புக் காதலிக்கு அளித்தான். வாழ்ந்தார்கள் இருவரும்; வாழ்க்கை இன்பத்தைச் சுவைத்தார்கள். ஆண்டுகள் உருண்டோடின. எகிப்திய சிம்மாசனத்துக்கு, ஏன் ரோமானிய சாம்ராஜ்யத்துக்கும் வாரிசு தோன்றினான். 'சீசரியன் டாலமி' என்று பெயரிட்டனர் அக்குழந்தைக்கு. ரோமானிய சாம்ராஜ்யம், எகிப்திய பேரரசு இவை இரண்டும் தன் மகனுக்குத் தான் என்றுஎண்ணி மகிழ்ந்தாள், எகிப்திய நாட்டின் எழிலரசி. குழந்தை பிறந்த அன்று இரவே சீசர் அரண்மனையை விட்டுச் சென்றான். தன் மகனுக்கு, தனக்கிருக்கும் சாம்ராஜ்யம் மிகவும் சிறியது என்று எண்ணியதால், தன் மகனுக்கு மீண்டும் பல நாடுகளை வென்று அளிக்க விரும்பினான் சீசர். மண்ணாசை பெண்ணாசை, இரண்டும் சேர்ந்துவிட்டால், அத்துடன் வாள் வலிமையும் உண்டு என்றால் போர்களின் எண்ணிக்கை குறைவாகவா இருக்க முடியும்?

ஓராண்டு காத்திருந்தாள். சீசர் திரும்பவில்லை. ஆனால் ரோம் நகருக்கு வருமாறு அவளுக்கு அழைப்பு வந்தது. கிளியோபட்ரா தன் மகனுடன் ரோம் நகரம் சென்றாள். அங்கே டைபர் நதிக்கரையில் இருந்த சீசரின் மாளிகையில் வாழ்ந்த இந்த எழில் மங்கையை ரோமானியர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். சீசர் இப்பெண்ணின் அழகில் மயங்கி; மக்களை அலட்சியம் செய்தால் என் செய்வது என்று எண்ணினார்கள். மாளிகையின்உள்ளே கிளியோபட்ராவுக்கு மகிழ்ச்சியில்லை. நாட்டிலே உள்நாட்டுச் சண்டை தோன்றியது. கி. மு. 44 ம் ஆண்டில் ஓர்நாள் சீசர் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தது. சீசருடன் அவள் கட்டியிருந்த கற்பனைக் கோட்டைகள் கனவுக் கோட்டைகளாயின. ரோம் நகரில் தங்கியிருந்தால் தன் உயிருக்கும் ஆபத்து என்றுணர்ந்த கிளியோபட்ரா எகிப்து நாட்டுக்குச் சென்றாள். அவள் வாழ்க்கையிலே ஓர் அத்தியாயம் முடிவடைந்தது.

வி. சிவப்பிரகாசம், B.A., B.L.

★ **அழகே உருவெடுத்துவந்து தன்னைப் பார்த்துப் புன்னகை செய்கிறதோ என்று எண்ணினான் ஜூலியஸ் சீசர். 'அரசு' கிளியோபாட்ராவுக்கு என்று முடிவாயிற்று. அவன் தம்பி...**

சீசரின் மரணத்திற்குப் பிறகு அவள் தன் வாழ்வும் முடிந்தது என்று கருதவில்லை. தன் முன்னே வீரர்கள் மண்டியிட வேண்டும், தன் புன்னகை ஒரு போர் வீரனை தன்பக்கம் இழுத்து வரவேண்டும் என்றுதான் எண்ணினாள். மூன்று ஆண்டுகள் உருண்டோடின.

ஒருநாள் மார்க் அண்டனியிடமிருந்து கிளியோபட்ராவுக்கு அழைப்பு வந்தது. அண்டனி இப்போது ரோம் நாட்டின் அதிபன். ரோம் நாட்டில் நடைபெற்ற சண்டைகளில், ரோம் நாட்டின் சகோதர நாடான, எகிப்து தன் படைகளை அனுப்பி, ஏன் ரோமுக்கு உதவவில்லை என்று தன் முன்னேவந்து காரணம் கூறுமாறு கிளியோபட்ராவை அண்டனி அழைத்திருந்தான். கிளியோபட்ராவும் இச்சமயத்தை எதிர்பார்த்திருந்தாள். அண்டனியைப்பற்றி அவள்கேள்விப்பட்டிருந்தாள். எந்த மனிதனின் உத்தரவுக்கு ரோம் நாட்டு வீரர்கள் விளக்கம் கேட்காமல் போரிட்டு மாண்டுபோகத் தயாராக இருந்தார்களோ, அந்த வீரன்தான் அண்டனி என்பதை கிளியோபட்ரா நன்கு உணர்ந்தாள். அழைப்பை அனுப்பிவிட்டு காத்திருந்தான் அண்டனி. அந்த நேரத்தில் தன்னை வந்து பார்த்து விருந்துண்டு போகுமாறுஅழைத்திருந்தாள் கிளியோபட்ரா அண்டனியை. கிளியோபட்ராவின் அழகின் எல்லை என்ன என்பதை உணர்ந்திருந்த அண்டனிஅழைப்பை பெற்றுக்கொண்டான்.மீண்டும் ஒரு விருந்து நடைபெற்றது. கிளியோபட்ரா அண்டனியைத் தன் அடிமையாக்கினாள். விருந்துண்டார்கள். உல்லாசமாகத் திரிந்தார்கள். தமிழ்நாட்டு முத்துக்களை சாராயத்தில் போட்டுக் குடித்தாள் பேரழகி கிளியோபட்ரா என்று கூறுவது அவள் அண்டனிக்கு விருந்து நடத்திய போதுதான்.

அண்டனி தன்னை மறந்தார். தன் நாட்டு மக்களை மறந்தார். தன் வரவை நோக்கி ரோம் நாடு காத்திருக்கிறது என்ற உண்மையை மறந்தார் நீரிலே மூழ்கி மாண்டுபோனதாகச் சொன்ன டாலமி என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு எகிப்தின் சிம்மாசனத்துக்கு படை திரட்டிவந்தான். சூழ்ச்சியின் மூலம் அக்கொடியவனுடன் போராடி வெற்றி கண்டாள் கிளியோபட்ரா. ரோம் நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க வேண்டி அண்டனி தன் கடமையை மறந்துவிட்டான் என்று நினைவூட்டினான் ரோமின் மற்றொரு வீரன், ஆக்டேவியஸ்.

பிரன்டிசம் என்னும் நகரில் அண்டனியும், ஆக்டேவியனும் சந்தித்தார்கள் ரோமானிய சாம்ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துக்கொண்டு, ஆக்டேவியன் மேற்குப் பகுதியைப் பாதுகாக்க வேண்டுமென்றும் அண்டனி கிழக்குப் பகுதியைக் காக்கவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. இந்த முடிவை வலிவுபடுத்த அண்டனி ஆக்டேவியனின்சகோதரியை மணந்து கொண்டான். அதனால் கிளியோபட்ராவை மறந்துவிடவில்லை. கி. மு. 37ல் அண்டனி தன் காதலியிடம் திரும்பி வந்துசேர்ந்தான். பார்த்தியர்களுடன் அண்டனி போர் செய்யும்படி நேரிட்டது. அச்சண்டையில் உலகம் போற்றும் வீரன் தோல்வி அடைந்தான். கிளியோ பட்ராவின் அன்பு மொழிகளும், மதுக் கிண்ணமும் அவனுக்கு ஆதரவளித்தன. அடுத்து ஆர்மீனியர்கள் மீது படையெடுத்துவெற்றிகண்டான். மதுபோதையில் ஓர்நாள் அண்டனி, தன் மனைவியிடம் அவள் சகோதரன் ஆக்டேவியனைப் பற்றிக் கேவலமாகப் பேசினான். உலகில் தன்னைவிட சிறந்த வீரன் யாருமில்லை என்று எக்காளமிட்டான் அலெக்சாண்டிரியாவில் மதுவிழா ஒன்றை அண்டனி ஏற்பாடு செய்தான். அவ்விழாவில் ரோம்நாட்டின் அரசுரிமையை அண்டனி கிளியோபட்ராவின் குழந்தைகளுக்குத் தானம் செய்தான். விபீஷணனுக்கு நாட்டை அளித்தான் இராமன் என்றுகதை படிக்கவில்லையா நாம். அதுபோல் அண்டனி ரோமின் சிம்மாசனத்தைஅலெக்சாண்டிரியாவில் இருந்தபடியே பரிசளித்தான்.

இந்த விழா முடிவடைந்த சில நாட்களுக்குள் ஆக்டேவியனின் படைகள் புறப்பட்டன; அது போலவே அண்டனியும் கிளியோபட்ராவும் படைகளுடன் புறப்பட்டனர். அம்ரோஷியா வளைகுடாவில் நடைபெற்ற சண்டையில் இருவருடைய படைகளுடன் தோற்றன. கிளியோபட்ரா தன் படைகளுடன் ஆரம்பத்திலேயே தோல்வி அடைந்து திரும்பி வந்துவிட்டாள். தன் காதலி திரும்பிச் செல்வதைக் கண்ட அண்டனி, தானும் திரும்பினான்.

அலெக்சாண்டிரியாவில் மீண்டும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தாள் கிளியோபட்ரா. தனக்குச் சமாதி ஒன்றையும் கட்டினாள். தன் செல்வம் அனைத்தையும் அங்கே கொண்டுசென்று கதவை மூடிக்கொண்டாள். நகரில் நுழைந்துவிட்ட ஆக்டேவியன் படைகளைத் துரத்தி அடித்தான் அண்டனி. அந்த நேரத்தில் கிளியோபட்ரா மாண்டுபோனாள் என்று ஆக்டேவியனின் ஒற்றர்கள் வதந்தி ஒன்றைக் கிளப்பிவிட்டார்கள். இதைக் கேட்ட அண்டனி தன் வாளால் தன்னையே குத்திக்கொண்டு வீழ்ந்தான்.

குற்றுயிராக இருந்த அண்டனியை கிளியோபாட்ராவின் அடிமைகள் தூக்கிச் சென்றனர். அண்டனி, தன் காதலியின் மடி மீது உயிர் துறந்தான்.

ஆக்டேவியன் படைகள் தன்னை உயிருடன் வாழ விடமாட்டார்கள் என்பதை உணர்ந்துகொண்ட கிளியோபட்ரா, ஒருநாள் காலையில் நீராடி, புத்தாடை உடுத்தி, தன் காதலன் கல்லறைக்கு முன் கண்ணீர் சிந்தி, பின்மதுவருந்தி, பூநாகம் என்னும் பாம்பினைத் தன் மார்பின் மீது கடிக்கச் செய்து மாண்டுபோனாள், உலகப்பேரழகி கிளியோபட்ரா.

இளமுழக்கம் இதழிலே நவம்பர் முதல் நாளிலிருந்து....

நமதியக்க நாவலாசிரியர் கே. ஜி. இராதாமணாளன் எழுதும்

மறவர் குலத்து மணிப்புறா

சரித்திரத்தொடரோவியம்

பேட்டியா நிருபரே!

கோவிந்தராமானுசன் (எம். ஏ.)

அன்று நடிகையின் விட்டின் முன் பெருங்கூட்டம். பேட்டி காணவந்த நிருபர் நிலவர்ணம் - கூர்க்காவினுல் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகிருர். திருப்பி அனுப்பப்படுகிருர். இப்படியே பல நாட்கள் கழிகின்றன.

இன்று 100-வது நாள்!

நிருபர்

உள்ளே அனுமதிக்கப்படுகிருர். நடிகையின் எல்லா வாழ்க்கையும் தெரியும்! நேரே காணத்தான் படித்த 'பி, ஏ. பட்டம்' திரை போடுகிறது! இருந்தாலும் பாழும் வயிறு என்று ஒன்று எல்லாவற்றையும் ஆட்டிப் படைக்கிறதே! போகிருர் - அங்கே......

[நிருபர் மயக்கமடைந்து விழுதல்.]

ஒருவன் : வாங்க......வாங்க. சும்மா உட்காருங்க! இப்பத்தான் கொஞ்சம் ஓய்வு கிடச்சுது. அம்மா உள்ள போயிருக்காங்க ....இதோ வந்திடுவாங்க!

நிருபர் நீ : " அம்மாவா ?"

" இல்ல அதான் என் 'வய்பு (Wife') இன்னேரம் சமுக சேவை செய்தா. நாய் கூடப் பாருங்க...... 'ஜம்' மின்னு நிக்குது. அதுக்கு ஹேர் டிரஸ் (Hair Dress) அதாவது சீவி சிங்காரிச்சா ...அது அவுங்க பொழு போக்கு "

நி நீ : "அப்படியா ?உங்களை இந்த ' நடிப்புக் கலையரசி ' எப்ப திருமணம் செய்து கொண்டாங்க !"

"...ஹூம்...ஹி ...ஹஹ்.... ம்...ஒரு வாரமாச்சு...இந்த ரசிகர் தொல்லையாலே தேன் நிலவுக்கு பெங்களூர் கூட போக முடியல்லே! இதுக்கு மத்தியிலே 'புரொடியூசர்' தொல்லைகள் வேறு !'

" எந்த ருபத்தில் ?"

" அதான் 'கால்ஷிட்' -என்று வர்ராங்க ! ஒப்பந்தம்னு வர்ராங்க......"

" அப்படி வந்தவுங்க தானே நீங்களும் ?"

" அட......அந்த ஒப்பந்தம் இல்லேங்க. நடிக்க ஒப்பந்தம்......ஹி.....ஹீ.... நீங்க ஒன்னு"

" இல்ல—அடிக்கடி சினிமா ஒப்பந்தம் கையெழுத்து நடக்கிறதாலே — பேறு பெற்ற கலையரசிகளெல்லாம்—வாழ்க்கை ஒப்பந்தத்தையும் 'கால்ஷீட்' ரத்து பண்றமாதிரி......"

[நடிகை வருகிருள். இருவரும் எழுந்து கும்பிட்டு மரியாதை செய்கின்றனர். நடிகை கணவனிடம் கைப்பை (Hand bag)யை கொடுத்துவிட்டு - நாயை மடியில் வைத்துக் கொள்கிருள். நடிகையின் பின்புறம் பணிவன்புள்ள கணவன்.]

நடிகை : " வணக்கண்ணு ! நீங்க "

நி நீ : " நிருபர் நீலவர்ணம் ' திரை இடி 'ங்கிற பத்திரிகையிலே - உங்களை பேட்டி காண வந்தேன். இது 101-வது நாள்..."

நடி : " ரொம்ப சந்தோஷம். கலைப்பணி செய்யிற எங்களைப் போன்றவர்களை பேட்டி கண்டாத்தான் எங்க மனக்குறைகளை உங்களுக்கு சொல்ல முடியும். நீங்க கலை ரசிகர்கட்கு வெளியிட முடியும்."

நி நீ : "உங்க குடும்பத்தைத் பற்றியும் உங்களுடைய இன்றைய நிலைக்குக் காரணம் வாய்ப்புா பற்றியும் சுருக்கமாக கூற முடியுமா ?"

நடி : ஓ...பேஷா. என் பேரு சாவித்திரி—பிரேம - பாஷினி! என்னைப் பெற்று இக்கலை உலகிற்கு என் தாயார் ஈந்தார்கள். ஒரு கௌரவமான பணக்கார குடும்பத்தில் பிறந்தேன். பெரிய ஜமீன் எனக்கு இருந்ததாம் சின்ன வயதிலேயே கலை யார்வம் என்னை வளர்த்தது ! பிறகு பெரிய புரொடுயூசர் வறபுறுத்தி திரை உலகிற்கு சேவை செய்ய அழைத்து வந்தார்.

நி. நீ: உங்களுடைய எதிர்கால திட்டம் என்ன? ஆசை என்ன ?

நான் எதிர்காலத்தில் வையகப் பெரும் நடிகையாகி உலகப் புகழ் பெற விரும்புகிறேன். உலக நாடுசளை சுற்றி கலாச்சார உறவு பெற வேண்டும் என்று ஆசை.

உஙகளுச்கு சீர்திருத்தத்தில் விருப்டம் உண்டா ?

ஓ...பேஷா. நான் கலப்புத் திருமணம் செய்து கொண்டேன். நான் சுத்தப் பிராமண குலம். (pure brahmin caste) என் கணவர் வடநாட்டுக்காரர். என் மொழி தெலுங்கு. அவர் மொழி இந்தி.

பரவாயில்லை. ஜாதிக் கலப்பு மொழிக் கலப்பு, இனக் கலப்பு, மதக் கலப்பு எல்லாம் ஒரே சீர்திருத்தமா இருக்கே !

இதுமட்டுமா ? நான் இந்தி,கன்னடம், மலையாளம் படத்திலெல்லாம் நடிக்கிறேன்.

மிக்க மகிழ்ச்சி ! தங்களுக்கு அரசியலில் நம்பிக்கை உண்டா ? இலட்சியம் உண்டா?

கலைப்பணிதான் என் இலட்சியம். அரசியலில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனுல் வெளிநாட்டுப் பிரதமர்கள்வந்தால் ஆராத்தி சுத்தப் கூப்பிட்டு அனுப்புவார்கள் வரவேற்புக் குழுவிலெல்லாம் மெம்பர்.

கலையைப்பற்றித் தாங்கள் கருதுவதென்ன ?

நான் கருதுவதா ?... கலை இல்லை யென்ருல் உலகமே இல்லை! வாழ்வைவிட கலையேபெரிது! தெய்வீகமானது! புனிதமானது! மக்கள் வாழ்க்கைக்கு உயிர் கலைதான் !......மேலும்...

அடடே...ரொம்ப நல்லா கலையைவிவரிக்கிறீங்களே எந்தக் கல்லூரியில் படித்தீர்கள்.

வாழ்க்கை யென்னும் கல்லூரியில் அனுபவம் என்ற நூல் கற்பித்த பாடம்தான் நான் கற்றது...

" இன்னும் கற்கவேண்டியது..." " இல்லை! நிறைய அனுபவம் ஏற்பட்டுவிட்டது. இது போதுமானது. எனவேதான் இவரைத் திருமணம் செய்து கொண்டேன்."

மன்னிக்கவும் !... அவரைப் பற்றிப் ஒன்றும் விசாரிக்கவில்லையே! அவர் உங்கள் கணவன் என்பதாகக் கூறினுர்...உங்கள் கலைப்பணியில் இவர் பங்கென்ன ? எப்படித் திருமணம் செய்து கொண்டீர்கள், காதலா? கடமையா?...

மிகவும் லேசாகக் கேட்டுட்டீங்க! அவர் பெயர் ஜோகிந்தர்...

ஆ...ஜோகிந்தரா ? சூரிய நாராயணனு விப்பிரா நாராயணனு !...

ஏன் ? ஜோகிந்தர் தான்... இருந்தாலும் தமிழ் தெரியும் என் அம்மாதான் கணக்குவழக்குகளைகவனிப்பது இவர்என்னேடு' ஷூட்டிங்' (shooting) 'வாக்கிங்' (walking) முதலியவற்றிற்கு வருவார். நல்லவர். என் 'டாமி'யைவிட சாந்தமானவர் ! பார்வைக்குத்தான் வில்லனுட்டம் இருப்பார்.' (டாமி என்பது நடிகை வளர்க்கும் நாய்) ஒரு இரவில் 'செட்'டில் (set) சந்தித்தேன். அவர் வில்லன். நான் கதாநாயகி. என்னை கற்பழிக்க வந்தபோது அவர் நடிப்பு பிரமாதம்! உடனே காதல் செய்தேன். அங்கேயே 'டைரக்டர்' முன்னிலையில் 'மேரேஜ்' (Marriage) செய்து கொண்டேன்.

" ஆயிரங் காலத்துப் பயிர் என்பார்கள் ... இவ்வளவு சீக்கிரம் முடிவிற்கு..."

" அது முடப் பழக்கம். கணவன் மனைவியர் 'பார்ட்னர்ஸ்' (Partners) போல் ஒருவருக்கொருவர் துணையிருந்தால் போதும்...

நடிகை : " நீங்களே பாருங்கள் ... நாளைக்கு எனக்கு ஏதாவது ஏற்பட்டாலும் ஏற்படும் என்று என் கணவருக்கு ஒரு கடை வைத்துத் (பெட்டிக்கடை) தந்துவிட்டேன். அந்த நினைப்பு இருந்தாற் போதும்! எனக்கு இப்போ மாம்பலத்தில் மூனுவீடு இருக்கு !... எல்லாம் வாடகைக்கு... இன்னும் பல திட்டங்களிருக்கு " " உங்கள் திட்டமாவது இந்த நாட்டில் நிறைவேறுதே என்று மகிழ்ச்சி அடைகிறேன்! .. (பசிக்கிறது) தாங்கள் என்னென்ன பிரியமாக சாப்பிடுவீர்கள் !

" காலையில் ' மில்க்' (Milk) ஒரு அரைமணி நேரங்கழித்து 'டிரிங்ஸ்' (Drinks) பிறகு ஒரு 'ரோஸ் இட்லி ... அப்புறம் ரொம்ப 'கம்பல்' (Compel) பண்ணினு ஒரு 'டிரிங்க்' (Drink) மற்றபடி எல்லாம் ஜூ தான்! அடடே...மறந்துட்டேன் ... (கணவனைப்பார்த்து) வந்த நிருபருக்கு 'டீ' தாங்களேன். எனக்கு மாதுளை ஜூஸ் கொண்டாங்க! என் கணவர். என் கண் கண்ட தெய்வம்! நான் நினைத்ததை செய்து முடிப்பார் !"

"நீங்கள் உண்மையிலேயே ஒரு புதுமைப் பெண் ! உங்களால் கலையுலகம் பெருமையடைகிறது! இன்றைய படத்தயாரிப்பைப் பற்றித் தங்கள் கருத்தென்ன "

" வரவரப் படங்களை சில லட்சம் ருபாய்களுக்கே எடுக்கின்றனர். அரசாங்க உதவியோடு பல கோடி ருபாய்களுக்கு எடுக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென கொஞ்சம் ஒதுக்க வேண்டும் அப்பொழுது தான் இந்த நாடும் மக்களும் சுபிட்சப் பாதையில் செல்லமுடியும் "

" சரி இறுதியாக உங்கள் ஆசை என்ன? எங்கள் 'திரை இடிக்குத் தாங்கள் தரும் நல்லாசிகள் யாவை ?'

" நான் 'ஹாலிவுட் '' நடிகையாக ஆசை. 'எம். ஜி. எம்'—படத்தில் "யூல் பிரைநர் " ரோடு நடிக்க ஆசை. 'ஹிச் காக்' படமென்றுலும் பரவாயில்லை !...

நடிகை ... தங்கள் ' திரை இடி ' 'மின்னல்' போன்ற எங்கள் கலையுலகில் நல்ல பெயர் பெற்று வருகிறது ' திரை இடி ' இல்லை யென்ருல் நான் கலையுலகிற்கு வந்திருக்கவே முடியாது. திரை இடி - இடித்துக் கொண்டே இருக்கட்டும்! மின்னல் துடித்துக் கொண்டே இருக்கட்டும்!! — என்பதே என் ஆசை...

" ஆகா ... மிக அருமை ! தங்களைப்போன்ற அறிவு மிக்க அழகியை இதுவரை நான் பேட்டி கண்டதே இல்லை. நான் செய்த பாக்கியமே பாக்கியம் தாங்கள் புகைப்படம் ஒன்று கொண்டு வாருங்கள், தங்களை 'ஹாலிவுட்' தாளுக்கு அறிமுகம் செய்துவைக்க ஆங்கிலத்திலேயே எழுதுகிறேன் "

" மிகவும் நன்றி "...

[துள்ளிக்கொண்டே உள்ளே ஓடுதல் உள்ளே ஒரே சத்தம். நடிகையின் திருமணப் படம் கீழே விழுதல். நிருபர் திடுக்கிடுதல். உடைந்த படத்தை சரி செய்யும்போது -நடிகையின் கணவன் அறையிலிருந்து வெளியே வருதல்......முகத்தில் பூதம் அறைந்த மாதிரி வெறுப்பு.]

(8-ம் பக்கம் பார்க்க)

மனித சமுதாயத்தின் பகை - லஞ்சம்!

★ **இப்படி இருக்கக்கூடாது என்பதற்காக இதை எழுதுகிறேம்! அன்ருடம் தினத்தாள்களில் வரும் செய்திகளே, இவற்றிற்குச் சான்று பகரும்! தவறிழைப்பது மனிதனின் இயல்பே! ஆனல் திருந்தவேண்டியது-திருத்தப்படவேண்டியது கட்டாயமானதாகும்.**

ஆரம்பமாவது..?

லஞ்சம்' என்பதைத்' தூய தமிழிலே கையூட்டு என்பார்கள். ஆங்கிலத்திலே பிரைப் (Bribe) என்பார்கள். 'கிம்பளம்' என்ற வேறு பெயரும் உண்டு! இது எப்பொழுது உண்டானது-ஏன் உண்டானது என்பதற்கு வரலாறு கிடையாது. ஆனல் இதை மட்டும் உறுதியாக கூறலாம்-மனிதனுடைய சுயநல உணர்ச்சி தோன்றிய நாள் தொட்டே பழக்கத்திற்கு வந்து விட்டது! இந்தியாவிலேதான் 'லஞ்சம்' நன்ருகத் தழைத்துள்ளது. குறிப்பாகத் தமிழ் நாட்டிலே பல வடிவங்களில் உலாவி வருகிறது.

பக்தர்கள் மத்தியில்!

பார்க்குமிடமெங்கனும் நீக்கமற நிறைகின்ற பரிபூணத்தை' கோயிலிலே காண விழைந்து பக்தர்கள் தங்க வேல், பொன்காசு முதலியவற்றைக் காணிக்கை செலுத்துகின்றனர். கோயிலுள் நுழையு முன்பு-எண்ணிலடங்கா 'நடமாடும் தெய்வங்கள்' (செவிடு, குருடு, முடம், நோய் நொடி முதலியன) "அம்மா! தாயே! பரதேவதை புண்ணியவான்! சத்தியவ!ான்!" என்று வரவேற்

'லஞ்சத்'தின் - வடிவமும், வரலாறும்!

புத் தருகின்றனர். இவற்றைக் கடந்து இறைவன் அருள் பெற விழைந்து உண்டியலிற் பணத்தைக் கொட்டுவது ஏன் தெரியுமா?

கடவுளிடம் அருட்பிச்சை பெறத்தான். இவர்கள் செய்த-செய்யப்போகிற பாப காரியங்களுக்கு இக்காணிக்கை கடவுளுக்குத் தரும் 'லஞ்சமாகிறது! 'பக்தர்கள் கடவுளிடம் பிச்சைதான் கேட்கின்றனர்' என்று 'பெர்னுட்ஷா' சொன்னது எவ்வளவு உண்மை! அயல்நாட்டுக் காரன் 'ஒரு ஏழைக்கு (பிச்சைக் காரனுக்கு அல்ல!) உதவி செய்தால் அது கடவுளுக்கு நீசெய்யும் நன்றி, என்ற முறையில் இறையருள் பெற விழைகின்றனர், நம்மவர்களோ—நேரடியாக லஞ்சம் பெற்றவர்களாதலால்—கடவுளுக்கும் லஞ்சங் கொடுத்துப் பாவங்களை மறைக்கப் பார்க்கின்றனர். கடவுள் மட்டும் மானமுள்ள யோக்கியதையான ஒன்ருக இருந்தால் லஞ்சம் போடும் கைகளைத்தீய்க்கும்! அது தான் குழவிக்கல்லாயிற்றே!

அறிவு நிலையங்களில்!

மாணவன் கல்லூரியில் இடம் பெறவேண்டும். அவனே குறைந்த மதிப் பெண்களைப் பெற்றுள்ளான் என்ருல் 'சிபார்சு' தேவைப் படுகிறது.

சிபார்சு செய்பவருக்குப் பணம் (லஞ்சம்) தருகின்றனர்; மறுபடியும் கல்லூரியில் தேர்வடைய வேண்டும்-மதிப்பிடுவோருக்குப் பணம் தரப்படுகிறது!-வேலையில் சேர்த் வேண்டும்!-வேலையில்சேர்த்து விடுவோருக்குப் பணம் (லஞ்சம்) தருகின்றனர். இந்தப் பையன் நாளைக்கு 'ரெவின்யூ' போர்டிலோ — பொறியியலாலர்பணியிலோ — மருத்துவத் துறையிலோ இருந்தால்-தன்னிடம் வருவோரிடம் எப்படி நடப்பான்.

'லஞ்சம்கொடுத்து உள்ளே நுழைந்தவன்-'லஞ்சம்' வாங்காமல் இருப்பான் என்பது என்ன நிச்சயம். வேரிலே விஷத்தைக் கலந்துவிட்டு—மரம் பட்டுவிட்டதென்ருல்—மரத்தின் குற்றமா? இப்படிப் பட்ட ஊழல்கள் தொழிற் துறைப் படிப்பிலே மலிந்து கிடக்கின்றன. இதைக் கவனிப்பதற்கென்று அதிகாரிகளை வைத்தால் அவர்கட்கும் 'லஞ்சம்'வழங்கி நிலைமையை சரிக்கட்டுகின்றனர். சரிவர சமாளிக்கத் தெரியாத அப்பாவிகளே அகப்பட்டுக் கொண்டு விழிக்கின்றனர். அரசாங்கத்'திலே 'லஞ்சம்' வாங்குவோருக்குக் கடுமையான தண்டனை வைத்துள்ளனர். ஆயினும் 'லஞ்சம்' வழக்கத்தில் இருந்து கொண்டு தான் உள்ளது.

அரசியலார் நடத்தும் தேர்வுகள்!

படித்த பட்டதாரிகள் அரசினர் அலுவலகங்களில் வேலை பெற இம்மாதிரித் தேர்வுகள் நடத்துகின்றனர். இதில் தேர்வடைவது யார்? எப்படி? என்பது ஆராயப் படவேண்டிய விஷயம். அப்பொழுது தான் 'லஞ்சம்! என்ருல் என்னஎன்று தெரிய வரும். ஒருவன் என்னதான் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தாலும்—திறமையுள்ளவனுயிருந்தாலும் படிக்குங் காலத்திலேயே வேலையையும் தேடிக்கொண்டு படிக்க வேண்டியவனுகின்ருன். தான் படிக்கும் படிப்பு என்ன? என்பது அக்கரை இல்லை. அந்தத் துறையில் வேலை கிடைக்கும் என்பது தான். நோக்கமாக இருக்கிறது. பி. எஸ்ஸி — என்னும் அறிவியற்றுறையில் பட்டம் பெற்றவன்—கணக்குக் கூட்டிப் போடும் குமாஸ்தாவாக இருப்பது— சட்டக் கல்லூரியில் படிப்பதும் — விந்தை தானே! இது இந்த நாட்டில் தவிர வேறெந்த நாட்டிலும் நடக்குமா? எந்த இடத்தில் யாரை வைக்க வேண்டுமோ அந்த நிலை மாறிவிட்டது! இது ஆச்சரிப்படக்கூடிய விஷயமல்ல — அவமானப் படவேண்டிய செய்தியாகும்!

பட்ட மளி புவிழாவிற்குப் பின்......

பட்டம் பெற்றபின்—பட்டதாரிகள் 'வேலைக்கு ஆள் தேவை' என்ற பக்கத்தையே பக்தியோடு பார்ப்பார்கள். அடுத்து வேலை தேடித் தரும் அலுவலகத்திலேயே பழியாய்க் கிடப்பார்கள்! ['தேவை' — என்று விளம்பரங்களை வெளிபிட்டே ஒரு தினத்தாள் நடத்தலாம்!— நன்ருக விற்பனையாகும்.] இவர்கள் விண்ணப்பத்தாள்கள் பெறப்படும் பாடு மிகவும் விந்தையானது. உள்ளே நுழைய பியூனுக்குப் பணம்! 'பாரம்' [form] பெற கண்க்குகளுக்கும் பணம்! அதை எடுத்து அலுவலர்கண் முன் வைத்துக் கையெழுத்து (குட்டைக் கை யெழுத்து போதுமானது) வாங்க 'அட்டெண்ட'ருக்குப் பணம்! வேலைக்குத் தெளிவாகி நேரடித் தேர்வு (Interview) வைக்கும்போது 'டாக்டர் — சர்டிபிகேட்'டுக்குப் பணம்! நேரடித் தேர்வுக்குழு வினருக்குப் (தனித்தனியே) பணம்! இந்தப் பணத்தை (லஞ்சத்தை) ஈடுகட்ட நினைப்பது மனித இயல்பு தானே?

பட்டப்பகற் கொள்ளை! போட்டி!!

மாணவர்கட்கென்று இரயில்வே — குறைந்த கட்டணம் உண்டு! அதற்கான விண்ணப்பத்தாள் பெறும்போது கல்லூரிகளில் கூலிக்கு மாரடிக்கும் குமாஸ்தாக்களின் சிடுசிடுப்பும் கடுகடுப்பும்! அதை நீங்கி—கல்லூரி முதல்வர் கையெழத்துப் பெற பியூனுக்குப் பணம்! —இதனுல் தான் போலும் 'கலெக்டர் ஆபீஸ்'--போன்ற இடங்களில் 'பியூன்' வேலைக்குப் படித்தவர்கள் கூடப் போட்டி போடுகின்றனர்!

தலையான கலைஞர்களின் சேவை!

திரையுலகிலே பவனிவந்து விளம்பரம்பெற்ற நடிகர்கள் 'வெள்ளை'ப் பணத்தைவிட கருப்புபணம் இரண்டு மூன்று மடங்கு பெறுகின்றனராம்! அதை நிறைவு செய்ய சாதாரணக் கலைஞர்கள் [Extra] ஒப்பந்தில் பணம் அதிகம் போட்டு வருமான வரியை பட தயாரிப்பாளர்களே கட்டுகின்றனராம். எனவே 'வஞ்சத்'தால் சாதாரணக் கலைஞன் துன்புறுகிருன். ஆதலால் நடிப்பினைத் 'தொழில்' என்று நடிகர்கள் கூறுவதில் தவறில்லை என்றே தோன்றுகின்றது.'

பாதிக்கப்படுவது யார்?

வாழ்க்கை வசதியில்லை — என்று பிற்காலத்தையும் நிகழ் காலத்தையும் நினைத்துத் தான் லஞ்சம் தருகிருன் ஒருவன். லஞ்சம் பெறுகிருன்—ஒருவன் லஞ்சம் தருபவனே, பெறுபவனே-பாதிக்கப்படுவதில்லை. பொது மக்களும் உண்மையான உழைப்பாளிகளும் தான் சுரண்டப் படுகின்றனர். லஞ்சம் பெறுபவனை — லஞ்சம் தருபவன் சமயம் வரும்'போது கை வைத்தால் அது நியாயமானதே! ஆனல் லஞ்சத்தை ஒரு திருடனுக்குத் தந்து விட்டு அதைப் பொதுமக்களிடம் கறக்க எண்ணினல்—அவனைவிட ஈனத்தனமான அறுவறுக்கத் தக்க மனிதப் பன்றியைக் காணமுடியுமா?

லஞ்சம் வாங்காதவர் யார்?

நாள்தோறும் உடல் உழைப்பால் ஓயாது வேலை செய்து கூலி பெறும் தொழிலாளி. கீரை — காய்கறிகள் விற்பவர். மற்றும் மானமுள்ள யோக்கியதையான குடும்பத்திற் பிறந்தவர்கள். இவரைத் தவிர பிற யாரேனும் உண்டா? இருந்தால் வெளியே சொல்லாதீர்கள்-இந்தச் சமுதாயம்-அவர்களை வாழத் தெரியாதவர்கள்! கோழைகள்! இலட்சிய வாதிகள்! என்று கேலி பேசும்......அவ்வளவு நாற்றமடிக்கும் 'கூவம்' இது.

Kaygeeyar.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

"மன்னிக்கவும் மிஸ்டர் ஜோகிந்தர்! தாங்கள் வில்லனுக நடித்த படம் பெயர்..."

"வில்லனுவது! மண்ணுவது! அவள் சொன்ன கதை பழையது! நான் நான்காவது கணவன்..."

"ஆ... பின் உங்கள் சந்திப்பு எப்பொழுது நடந்தது?"

"நானும் உம்மைப்போல் ஒரு 'திரை மேளத்தின் நிருபராகப் பேட்டி காணவந்தேன். பத்திரிகையில் நன்ருக எழுதினேன்! மறுநாள் திருமணம் செய் கொண்டு ஆங்கில சினிமாவுக்கு எழுதச் சொன்னுள்...எனக்கு ஆங்கிலம் தெரியாது..."

"உள்ளே சத்தம் கேட்டதே அது தானு? ... போட்டோ தேடுகிருர்களா?"

"ஆமாம்... அதோடு உம்மைத் திருமணம் செய்து கொள்ளப் போகிருளாம். நீர் தான் பி. ஏ. படித்து..

[நிருபர் மயக்கமடைந்து விழுதல்] மயக்கமடைந்து விழுந்த நிருபர்மனம்.

காரைக்குடிக்குப் பக்கத்திலே காட்டுத்தலை வாசலிலே புட்டுவிற்கும்கிழவிக்குபிறந்த மூக்காயி! உன்னைத் தெரியாதாம? — கலையைப்பற்றி பக்கம்பக்கமாகப்படித்து இன்னும் முடிக்காமல் 'பாஸ்' செய்த நான் திரையுலகிலே முகாமடித்துத் திறனுய்வு செய்த நான் உன்னிடம் பேட்டி கண்டது என் பத்திரிகைக்குத்தானே மாதா

(முதல் பக்கத் தொடர்ச்சி)

யினுடைய உண்மையான கொள்கைகளை எல்லாம் காற்றில் விட்டுவிட்டு — போலியான—பித்தலாட்டமான இக் காதிக் கொள்கையைக் கடைபிடிக்கின்றனர்.

அன்று தியாகம் செய்தேன் என்று இன்று தியாக முத்திரை பெறுபவர்கட்கு இந்த இலாகா பெருத்த உழையாக் கூலி கொடுக்கின்றது. காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்திற்காகக் கைக்கூலி வாங்குதலுக்குப் பெயர்தான் காதி முன்னேற்றமா?

கண்கண்ட உண்மை

இப்படிப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது'என்றுநாம் பலகாலம் கூறிவந்தோம்திட்டஎதிர்ப்பு வாரமும் கொண்டாடினேம். பொதுவாக வரிப்பணம்சுரண்டப்பட்டு வீணடிக்கப்படுகிறது என்பது யாவரும் அறிந்ததே. என்ருலும்குறிப்பாக இந்தக் 'காதி' இலாகா பிரச்சாரத்திற்காகவே ஏற்பட்டது 'காதி' என்பதற்கு கைத்தறி என்று பெயரல்ல. 'காங்கிரஸ் என்றே' பெயர். ஏழைகளிடம் ஓட்டுப் பிச்சை கேட்க எடுத்துக் கொண்ட எளிய உபகரணம்!

Kaygeeyar

மாதம் ஒழுங்காக சம்பளத்தைப் பிய்க்கும் எனக்கே வேட்டு வைக்க எண்ணினுயா? ஊஹூம் நடக்காது. ஏ உயிரே போய்விடு! போய் விடு

கண்ணதாசன் கவிதைகள்

கோவிந்தராமானுசன், எம். ஏ.

கூர்த்த மதி மட்டுமே வாழ்வியலை நடத்தாது துணைசெய்யலாம்! வாழ்விலிருந்து பிறந்த உண்மைகளை, அறிவின் துணைகொண்டு உணர்ச்சியின் அடிப்படையில் நூலாகப் படைத்தால் அது இலக்கியமாகும். இது படிப்பினை நல்கும் வரலாற்றுப் பகுதியாகும். வாழ்விடைத் தழைத்த எண்ணங்களை இலக்கியத்திலே கனியச்செய்கின்ற அருமைப்பாடு சிறப்பாகக் கவிஞனுக்கே உண்டு! எனவே தான் இலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் இருந்தாலும் கவிதையையே பெரும்பாலும் அறிவு படைத்த மக்கள் விரும்புகின்றனர்.

எடுத்த எடுப்பிலேயே கவிஞரின் எண்ணம் மலர்கின்றது! கொள்கையால் பூரிக்கின்றது!!

"பூத்தது புதுமை! புலர்ந்தது பொழுது!
பொங்கின தமிழரின் முகங்கள்!
காத்தது கடமை - கண்ணியம் எனவே
கனிந்தது சென்னையில் காலம்!"
"வில்லெனக் கிளம்பும் நல்லிளம் பரிதி!
விளங்குவான்! வழங்குவான், வாழ்வே!"

ஒற்றுமை என்பது நாம் வளர்க்க வேண்டிய ஒரு கலையாக உள்ளது. என்றார் அறிஞர் மு. வ. கழகத்தில் ஒற்றுமையைக் கண்டு கவிஞர் பாடுகிறார்.

"பத்துக் குழந்தைகள் பெற்ற குடும்பத்தில்
பாகம் பிரிவதுண்டு - அறி(வு)
ஒத்தவர் சிற்சிலர் ஓரிடம் கூடிடில்
உள்ளம் பகைப்பதுண்டு!
எத்தனை லட்சமடா எங்கள் வீட்டினில்
அத்தனை பிள்ளைகளும் — மனம்
ஒத்து நடந்தொரு மாலையிட்டாரெனில்
ஓதுதற்கென்ன உண்டு!"

வரலாற்றுப் போக்கிலே 'பிரிவினை' வேண்டிப்பாடும் பொழுது.

இனித்த சுவை வாழ்க்கை முறை பலவுங்கண்ட
இயல்புமிகும் தமிழரெலாம் இனத்தால் ஒன்று!
மனித குணம் சிறிதுமிலா வடவர் நம்மில்
மாறுபடு இனத்தார்! காரணத்தில் ஒன்று!
என எண்ணிக் கையைத் துவக்கி,
இனத்தாலும் மொழியாலும் கலைகளாலும்
இயல்புமாறும் நாகரிகத் துறையினுலும்
தனித்த தொரு வரலாற்றுச் சான்றினுலும்
தமிழ்மாந்தர் தனித்தோரே! தமிழர்நாடும்
தனித்தேதான் வாழ்வுபெறும்! ஆதலாற்றான்
"தமிழ்நாடு தமிழர்க்கே" என்கின்றோம் நாம்
மனத்தே ஓர் களங்கமிலாப் பெரியீர்! இந்த
வழிவருவீர்! தனி நாட்டைப் பிரித்தே
வாழ்வோம்!

என்று முடிக்கின்றார்.

போர் வீரனுடைய மற உணர்ச்சியைவிடக் கவிஞனுடைய வீரஉணர்ச்சி வலிமை வாய்ந்ததாகும்.

"கூப்பிடு பகைவரை! கூப்பிடு பகைவரை!
கொத்திக்கிளறிக் கொன்றிடுவோம்!
காப்பிடு வோர்தமிழ் அன்னையின் கால்களில்
கைகளை வெட்டிப் பங்கிடுவோம்!"
"தென்னாட்டு மண்ணாண்ட தென்னாட்டு மன்னர்
தீராதி தீரர்தம் வழிவந்த நாங்கள்
அண்ணாந்து போதேடி நிற்கின்ற வேளை!"
"செந்தாழம் பூச்சாதித் தென்பாண்டி மண்ணை
தீச்சாதிப் பெண்ணுக்கே ஆளாக வந்தால்
அன்றே எம் தமிழ் ரத்தம் கொண்டோடும்ஆற்றில்
அன்னாரின் தலைகூடச் சேர்ந்தே மிதக்கும்!"

ஏனிப்படி 'வஞ்சினம்' கூறுகிறார் என்றால்...

"மொழியின்றி விழிகளில்லை!
மூச்சில்லை பேச்சு மில்லை!"

உலகமொழியான ஆங்கிலத்தை ஆதரித்து,

"ஆங்கிலங் கொடுத்த பேறே
அரசிடை மக்கள் ஆட்சி!
ஆங்கில விளக்கின் கீழே
ஆங்கில ஒலிபெருக்கி!
ஆங்கிலக் கடிகாரத்தோ(டு)
ஆங்கில ஊர்தி கண்டும்
ஆங்கிலம் ஒழிப்பேனென்பான்
அறிவிலா மடையன் என்பேன்!
என்று கூறிவிட்டு
"வெள்ளையர்கள் தந்த விஞ்ஞான மல்லாமல்
கொள்ளையராம் இவர் செய்த கோபுரங்கள்
ஏதுமிலை!"

என எள்ளி நகையாடுகிறார்.

மொழியைக் காத்து, மொழிவளத்தைக் கூறுமுகத்தான்

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே
காய்கின்ற விறகாகும் மரங்கள் யாவும்
அவைஏறி வாராமல் காக்கவேண்டும்.
அடிமீது அடிவைத்தே ஓட்டவேண்டும்"
"முப்பாலுக் கப்பாலோர் பொருளுமில்லை
மூவாத சிலப்பின்றோர் கூத்துமில்லை!
ஒப்பாத புறமல்லால் வீரமில்லை!
தளிர்போலும் அகமல்லால் காதல்இல்லை

என்று பாடிவிட்டு-துன்பத்திலேஉழன்று நிற்கும் நிலையையும் கூறுகிறார்.

"பசியெனத் துடித்து மாண்ட
பழந்தமிழ் வரலாறுண்டா?
புசியெனத் தருவதான
புகழலால் பசிதானுண்டா?
'இசைகுடி மான'ந் தேரும்
இயற்புகழ் உளவோரின்று
வசைபடு சாவில் மாயும்
வன்மையா தமிழர் வாழ்வு?"
"நாடல்ல ஈது! பொய்மை
நாகத்தின் உண்மை ஆக்கம்!
வீடல்ல ஈது! சாவில்
வீழ்பவர் துலங்கும் பாதை."
"சாதியெனும் பகைஉணர்ச்சி வாழுமட்டும்
தமிழ் நாட்டில் முன்னேற்றம் கானல் நீரே!"

சினம் மூண்ட கவிஞர்,

"சாதியினைத் தவிர்த்தொன்றும் வாழ்வதில்லை!
தமிழகமே! இனி உனக்கு மீட்சி இல்லை!"

என்று கோபங் கொள்கிறார்.

அழுகையையும் ஒரு சுவையாகக் கண்டவர் தமிழர்தாம்! வாழ்க்கையிலே நல்ல தொண்டாற்றியவர் உலகைவிட்டுப் பிரியும் பொழுது - அன்புள்ளங்கள் ஏங்காமல் இருக்க முடியுமா? என்றாலும் கவிஞன் அழும்போது கலையாற்றல் வெளிப்படுகிறது.

"மன்னர் மணி முடியில்
வாழ்ந்திருந்த செந்தமிழை(த்)
தென்னர் பொருளாக்கி
தீங்கவிதை தந்தமகன்
கண்மூடித் தூங்குகிறான்
கனவு நிலை காணுகிறான்!"
"கழுத்தில் தவழ்ந்து வரும்
கைத்தறியின் துண்டெல்லாம்
பழுத்த தமிழ் பாடும்
பண்புரைக்கும், வாழ்க வெனும்!"
"ஆரம்பமாவதெலாம்
பெண்ணுக்குள் என்றானே
ஆடி அடங்குகிறான்
மண்ணுக்குள்! என் சொல்வேன்?"

நாவலர் சோம சுந்தரர் இறந்த ஞான்று.

"தமிழ் மகள் உறங்கத் தான் விழித்திருந்து
இமை யசையாதொரு பகையணு காமற்
காத்திருந்தானுயிர் காற்றொடும் போயது!
"தாயழப்" பாரதித் தமிழ"ழப் போயினன்"

இந்த இரக்க உணர்ச்சியும் பரிவும் கவிஞனுக்கே உண்டான பண்புநலன்கள்.

இளங்கோ ஓர் இளந்துறவி—தமிழ்ப் பற்றைத் துறவாதவர். பாட்டுடைத் தலைவியாகக் கண்ணகியைக் கொண்ட பின்னர் **'நாடகம் ஏத்தும் நாடகக் கணிகையாம் மாதவி**யைப் பெரிதும் பாடவில்லை.

இக்கவிஞரோ—

"...இட்டார்க்குத் தொட்டார்க்குப் பட்டாடை மாற்றி பள்ளிக்கழைத்தேகும் குலத்திடை வந்த நற்குல விளக்காய் வாழ்வதுதான் அழியாப்பெருமை!" —என மாதவியை உயர்த்திக் கோவலனை ஏசுகிறார்.

"பாட்டைக் குறித்துப் பறந்துவிட்டான்!
உண்மையிலே
மோகந்த விர்ந்ததனுல் செய்து விட்டமோசம்
அது!"
"கோவலனைக் கொன்றதுதான் குறையாத நீதி
என்பேன்!"
"கண்ணீர் அருவி கலகலென ஓடிவர
உள்ளீரல் பற்றி உருகிக் கரைந்துவிட
கருகி அலமந்தாய்! கற்புநிலை நேர் கொண்டாய்!
"கண்ணகியின் கற்புக்குத் தாய்க்கற்பு நின்கற்பு"
"தும்பைப்பூ உள்ளம்! தூய்மை பிறந்த இடம்!"
"உன்னைக் கணிகை என்றால்உலகே கணிகையாம்"

என்று மாதவியைப் பலவாராகப் பாராட்டுவது ஒரு புதுமைதான்.

கவிக்குயில் பாரதியையும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரையும் - கவிஞர் பாடியிருப்பது மிக அருமை. இறப்பிற்கும் பின்னால் கவிஞர் பெறும் புகழினையும் பாராட்டுக்களையும் - பாரதி கூறுவதாக அவர் நடையிலேயே

இன்று மண்டபம் எழிலுறக் கட்டுவர்
இருபதாயிரம் பேர்கள் திரட்டுவர்
கொன்று போட்டு என்பிணத்தினி லேறுவர்
கொட்டு முரசெனப் பாடல்கள் பாடுவர்
"அன்று சோற்றுக் காதரவானவர்
ஆருமில்லை! அடா இவர் உன்னையும்
தின்று தீர்த்தபின், தேமது ரத்தமிழ்
செய்தவன் எனத் திருவிழாக் கூட்டுவர்!"
"ஓங்கி நின்ற தமிழரின் பிள்ளையாய்
உடலெடுத்தும் என்னடா புண்ணியம்?"

இது பாரதி நடையிலேயே அமைந்துள்ளது கவிஞரின் ஆற்றலைத் தெரிவிக்கிறது.

களை மண்டிக்கிடந்த கனித்தமிழ் மொழியைக்
களை நீக்கி வடித்த கவிஞன் பாரதி!
களை நீக்கித் தந்த கழனியிற் பலவாய்
கனிக்காடு கண்டவர் பாரதிதாசன்!"
'எங்கள் நாடு எங்கள் மொழி'[illegible]
இயம்புந் திறனைத் தந்தவன் பாரதி!
இயம்ப மறுத்து ஏளனம் செய்தோர்
எலும்பை முறித்தவர் பாரதிதாசன்!
"வகுத்தவன் முன்னோன்; காத்தவன் பின்னோன்!
வாழுந்தமிழின் காவலர் இவர்கள்!"
"பாரதி பாட மறந்த—ஒரு
பக்கம் திராவிட நாட்டின் எழுச்சி
யாரதைப் பாடிய வீரன்?—வேறு
யாரவன், பாரதிதாசனல் லாமல்!

இப்படி ஒரு கவிஞர் தன் முன்னோனைப் பாராட்டுதல் கவிஞரின் செம்மையைக் காட்டுகின்றது.

மூடப் பழக்கத்தை வெறுத்து - தத்துவ நெறி கூறுதலிலும் எள்ளல் உண்டு!

"ஏங்காமல் காப்பதற்கே இயல்பெடுத்த தெய்வ
மெலாம்
தேங்காய்க்குக் காத்திருக்கச் செய்து விட்டார்
பூசுரர்கள்!"

'வாரீர் வாரீர் தமிழனைக் காப்போம்' என்ற தலைப்பில்

"பொன்னிகர் மாதர் போர்க் குணம் பெறட்டும்!"
"மடிவோர் யாவரும் இதில் மடியட்டும்!
பட்டதுமேனி படைத்தது புகழ் என(ச்)
சுட்டெரிப்போரும் சுற்றமும் அழட்டும்!"
"புகழை நமது புதல்வர்கள் பெறட்டும்!
பூக்கும் திராவிடம் சிலை வடிக்கட்டும்!"
"நோயில் விழுந்து பாயிற் படுத்து
நொடிக்கொரு துன்பம் அடிக்கடி சாவென
நாளைக் கடத்தி நாமும் சாவதா?"
"தமிழன் பெற்ற தமிழர்களெல்லாம்
தலை கொடுத்தேனும் தமிழினைக் காப்போம்!"
"பொன்னிழந்து வாழ்விழந்து சாய்ந்தபோதிலும்
—மாதர்
பூவிழந்து பொட்டிழந்து போன போதிலும்
கண்ணிழப்ப தில்லை யென்று போரிலேறுவார்
—மூடர்
கண்டிருக்கத் தென்னகத்தர் நீதி காணுவார்
இன்று வீரர் நன்று காண ஒன்று கூடுவார்
— இவர்
என்று மெங்கள் மக்கள் வாழ வென்றி காணுவார்!

இவையன்றி காவியப் போக்கிலே, கல்லக்குடி மாகாவியம், கழக மாகாவியம் என இரண்டு சிறு காவியங்களைச் செய்துள்ளார்.

"சித்திர மிழைத்த நகைத் தீரர் பலர் அங்கே
முத்துமொழி பேசிமன மொத்துமகிழ் வெய்தி
கத்துகடல் சத்தநிகர் கையொலி எழுப்பி
மத்தகுணத் தொடுதீர் மானமிது கொண்டார்"
"ஆழியலை சிவக்க, அவனியுளார் மெய் சிலிர்க்க
தாழைப்பனி பறக்கத் தாய்ப்பறவை பாட்டிசைக்க
பாளம் பிளந்தது போல் பரிதிஇறை மெய்விளக்கிக்
கீழைத் திசைக் கடலில் கேள்விக்குறி வடித்தான்!"
"பகை ஒண்டிக் கிடக்கு மிந்தப்
பாழ்வெளி எனைக் கொன்றாலும்
நகைமண் டிக்கிடந்த நாடு
நலம் பெற்று இறந்துபட்ட
தொகை எண்ணப் புதிய வாழ்வில்
துலங்கட்டும் என்பான் போல
புகைவண்டிப் பாதை முன்னம்
போயினன்! படுத்தான் ஐயோ!"

இப்படிச் சுவையான 'கவிதையாக' அமைந்துள்ளன.

பொதுவாகக் கவிஞர் கண்ணதாசனார் கவிதைகள் இன்றைய வாழ்க்கை நிலையை ஒட்டியே அமைந்துள்ளன. இனம், மொழி, நாடு என்ற வட்டத்திலே உணர்வூட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளன.

இங்ஙனம் கவிதைத் தத்துவம் நிரம்பப்பெற்ற கவிஞரின் வாழ்க்கைத் தத்துவமோ தொட்டில்—கட்டில்—சுடுகாடு! வாழ்வோடு தொடர்பற்றிய கவிதைகளாதலின் உண்மையும் உணர்வும் விரவக் காண்கின்றோம்! கவிதைக் கூறுபாடுகள் அனைத்துங்கொண்ட தொகுப்பே கண்ணதாசன் கவிதைகள் இரண்டாம்தொகுப்பு! தொகுப்புமுறையும் திறம்பட அமைந்துள்ளது.

வெங்கட்ராமனின் விபரீத ஆசை!

தொழிலாளியைச் சுரண்டுவதில் அமைச்சர் முதலாளிக்கும் அப்பனுகிருர்!

வெள்ளையர் காலத்து நீதிகூட இக்கொள்ளையர் காலத்தில் இல்லையே!

தொழிலாளர்களின் நலனுக்கென்று அரசாங்கத்தால் தொழில் மந்திரி என்று ஒருவர் நியமிக்கப்படுகிருர். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் ஏற்படும் தகராறுகளில் தலையிட்டு அதைக் சுமூகமாக முடித்துவைக்கும் பொறுப்பு இவருக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆனுல் லாபம் முழுவதும் முதலாளிகளின் கைகளுக்குகே போய்ச் சேர்ந்து, அவர்களின் மூலம்தான் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்கப்படுவதால், முதலாளிகள்தான் தகராறு செய்வது பொதுவான வழக்கம். இந்நிலையில் முதலாளிகளிடம் நிலைமைகளை எடுத்துச் சொல்லியோ அல்லது மிரட்டியோ அவர்களிடமிருந்து தொழிலாளர்களுக்குக் சேரவேண்டிய நியாயமான பங்குத் தொகையை வாங்கிக் கொடுக்கவேண்டியது அமைச்சரின் கடமையாகும். ஆனுல் நமது மாநிலத்துக்கு பார்ப்பனர் என்ற ஒரே தகுதியை மட்டுமே கொண்டு தொழிலமைச்சராக வந்துள்ள ஆர்: வெங்கட்ராமன் வந்த நாள் முதலாய் எந்தத் தொழிலாளர் போராட்டமாவது தொழிலாளர்களுக்குச் சாதகமாக முடிந்திருக்கிறதா என்று தேடிப் பார்த்தாலும் ஒன்றுகூட அகப்படவில்லை.

இந்நிலையில் ஒரு புதிய அணுகுண்டைத் தூக்கி வீசியிருக்கிருர் அமைச்சர். நிருபர்களிடம் பேசும்போது மூன்று மாதத்திற்கு மேல் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பது என்று முடிவானுல் மூன்று மாதச் சம்பளத்தைப் பணமாகவும் அதற்கு மேலுள்ளதை அரசாங்கப் பத்திரமாகவும் வினியோகிக்க வேண்டுமென்றிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிருர்.

தொழிலாளர்கள் உழைத்துக் கொடுத்த பணத்தைக் கொண்டு முதலாளிகள் புதிய புதிய மில்களைத் கட்டுகிருர்கள்—கார்களை மாற்றுகிருர்கள் அல்லது புதிய கார்கள் கூட இரண்டு வாங்குகிருர்கள் வீடு கட்டுகிருர்கள்-நிலம் வாங்குகிருர்கள் - இன்னும் எவ்வளவோ. ஆனுல் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய சம்பளம் அவர்களது வயிற்றுக்குப் போதவில்லை. சோறு கிடைக்க வில்லையே என்று சோகக்குரல் எழுப்பினுல் “கொஞ்சமாகச் சாப்பிட வேண்டும், நாமென்ன சாப்பாட்டு ராமன்களா?” என்று ஒருமுறை அகம்பாவமாகப் பதிலளித்தார் அமைச்சர் பக்தவச்சலம், வயிற்றுக்கே போதவில்லை என்ருல் துணிமணி, குழந்தைகள் படிப்புக்கு இவற்றிற்கு எங்கே போவது? எனவே ஏராளமாகக் கடன்வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. போனஸ் என்ற பெயரால் தரப்படும் தொகை புதிய லாபம் எதையும் தருவதில்லை. —மாருக வாங்கிய கடனை வட்டியோடு திருப்பிச் செலுத்திவிட வழி செய்கிறது. சில சமயம் அதில்கூட துண்டு விழுந்து விடுகிறது. இந்நிலையில் தொழிலாளர்கள் கடன் தொல்லையால் அவதிப்படுவதைத் தவிர்த்து ஓரளவு அவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கான நிலைமைகளை உருவாக்கும் போனஸ் தொகையைக்கூட முழுவதையும் கொடுக்காமல் “நாங்களும்தான் கடன்பட்டிருக்கிறோம். எனவே கடன் பத்திரத்தை வாங்கு” என்று சொல்லுவது வடிகட்டிய அயோக்கியத்தனம்.

தற்போது எல்லா ஆலைகளிலும் பரிசுப் பத்திரங்கள் விநியோகிக்கப் படுகின்றன. பலர் வாங்குகிருர்கள்—சிலர் வாங்குவதில்லை வாங்காதவர்களைவலுக்கட்டாயமாக வாங்கச் செய்வதற்கு இப்படி ஒரு மறைமுகமான வழியைக் கையாள முனைகிருர் மந்திரி. இது தொழிலாளர்களை வஞ்சிக்கும் பச்சைத் துரோகம் என்று குற்றம் சாட்டுகிறோம்.

ஒரு ஆலையில் சுமார் 1000 பேர் வேலை பார்ப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அவர்களுக்கு அலவன்ஸ் நீங்கலாக அடிப்படைச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு 30 ருபாய் என்று கணக்கிட்டு, 4 மாத போனஸ் அவர்களுக்குத் தீர்ப்பாகி, போனஸ் என்ற பெயரால் 1 தொழிலாளிக்கு ரு. 120 கிடைத்தால் வேலை பார்க்கும் 1000 பேருக்கும் கொடுக்கப்பட வேண்டிய போனஸ் தொகை 1 லட்சத்து 20 ஆயிரம் ருபாய். மந்திரி கூற்றுப்படி மூன்று மாத போனசைத்தான் ரொக்கமாகக் கொடுக்கவேண்டும். 1 தொழிலாளிக்கு 30 ருபாய் வீதம் 30 ஆயிரம் ருபாய் பரிசுப் பத்திரமாக வழங்கப்படும். ஆனுல் முதலாளியை லாபத்தில் 30 ஆயிரம் ருபாய்க்குப் பரிசுப் பத்திரம் வாங்கச் சொல்லி கேட்பார்களா என்ருல் அதுதான் இல்லை.

அப்படியானுல் கொள்ளை கொள்ளையாகச் சம்பாதிக்கும் முதலாளிக்கு ஒரு நியாயம்-வறுமைத் தேளால் கொட்டப்பட்டு வாடும் தொழிலாளிக்கு ஒரு நியாயமா? இது தான் நேரு சொன்ன சோசலிச மாடல் சமுதாய அமைப்பா என்று கேட்கிறோம்?

முதலாளிகளிடம்வாலாட்ட மிடியாது. அப்படிச்செய்தால் தேர்தலின்போது அவர்களிடம் சென்று நிதி வாங்க முடியாது. மேலும் அவர்களை எதிர்த்தால் உலகத்திலுள்ள அத்தனை கோர்ட்டுகளிலும் ஏறி இறங்குவார்கள். அதற்கான பொருளாதார வசதியும் இருக்கிறது. ஆனுல் தொழிலாளியால் என்ன செய்ய முடியும். கூச்சல் போடுவார்கள் — அலட்சியமாக இருந்துவிடலாம். கூட்டம் போட்டு பேசுவார்கள் — 144 போட்டு நிறுத்திவிடலாம். ஆர்ப்பாட்டம் செய்வார்கள் — தடிகொண்டு தாக்கிவிடலாம். கிளர்ச்சிகள் செய்வார்கள்-சிறைப் பிடித்து அடைத்துவிடலாம். அதற்கும் மீறினுல் இருக்கவே இருக்கிறது. துப்பாக்கியும் குண்டும் வேறு எதற்குத் தான் அதை வைத்திருக்கிருர்

தூத்துக்குடி
ஜோசப்

கள். சட்டப்படி வழக்குத் தொடர வேண்டுமானுலும் வக்கீலுக்குக் கொடுக்க ஏழையிடம் பணம் ஏது. எனவேதான் இவர்களை மிரட்டிப் பணம் பறிக்கப் பார்க்கிருர் தொழில் அமைச்சர்.

ஏராளமாகக் கடன் வாங்கியிருக்கிறது இந்திய அரசாங்கம். இப்போதுகூட ஏற்கனவே கொடுத்ததுபோக இன்னும் 9½ கோடி ருபாய் இந்தியாவுக்குக் கடனுகக் கொடுக்கலாமா என்று ஜப்பான் யோசித்து வருகிறது. இப்படிக் கடன்களை வாங்கி மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டி அதிலும் வடக்கேயே எல்லாத் தொழில்களையும் ஒதுக்கி பணம் காணவில்லை என்பதற்காக பரிசுப் பத்திரம் என்ற பெயரால் லாட்டரிச்சீட்டுநடத்தி வாங்காதவர்களை வற்புறுத்த இந்தமுறையைக்கையாளுகிருர்கள்

தொழிலாளர்களின் நலனில் உண்மையிலேயே அக்கறைபடைத்தவர்களாக இருந்தால் தொழிலாளர்களும் இவர்களுக்கு உதவத்தான் செய்வார்கள். ஆனுல் தொழிலாள வர்க்கத்தை நசுக்கி முதலாளித்துவத்தை வளர்ப்பதையே கொள்கையாகக்கொண்ட இவர்களுக்கு எப்படி உதவி செய்ய மனம் வரும்? அதிலும் குறிப்பாக வெங்கட்ராமன் வந்ததற்கப்புறம் தொழிலாளர்கள் நிலை இன்னும் சீர் கேடாகிவிட்டது.

ஆர்வீ மில்லில் 68 நாட்கள் நடந்த போராட்டத்தில் தொழிலாளர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. வெள்ளையன் ஆட்சி செய்த காலத்தில் ஆர்விக் கம்பெனி வெள்ளைக்காரன் கம்பெனியாக இருந்தும்கூட தொழிலாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. 6 ஊசிகள் கொண்ட மிஷின் ஒன்றை ஒரு தொழிலாளி பார்க்க வேண்டும் என்று இருந்த நிலைமையை மாற்றி 4 மிஷின்களில் 4 தொழிலாளிகள் பார்த்து வந்த 24 ஊசிகளை, 8 ஊசிகள் 1 தொழிலாளி பார்க்கவேண்டும் என்று தீர்மானித்து 24 ஊசிகளை 3 பேர் பார்த்தால் போதும் ‘ தொழிலாளியைக் குறைத்து விடலாம் என்று கம்பெனி முடிவு செய்தது. தொழிற் சங்கம் வாதாடியதன்பேரில் ஒவ்வொரு மிஷின்களிலும் இணைத்து வைத்திருந்த அதிகப்படியான 2 ஊசிகளை வெட்டி எறியுமாறு உத்திரவிட்டது வெள்ளை அரசாங்கம். இவ்வளவுக்கும் கம்பெனியும் வெள்ளைக்காரன் கம்பெனி. ஆனுல் இத்தடவை 10 ஊசிகள் பார்க்கவேண்டுமென்று' போராட்டத்திற்குப் பின்னரும் சொல்லப்பட்டு தொழிலாளர்கள் பார்த்து வருகிருர்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபால நாய்க்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

இனமுழக்கம்

ஆசிரியர் சி.பி.சிற்றரசு

உள்ளே...

★ போக்கத்தவருக்கு பொய்தான்கைமுதல்

★ புரட்சி

★ அண்ணு பிறந்த தினப் பரிசுப் போட்டி முடிவு

கஞ்சாகடத்தும்காந்தீயவாதிகள்

பழைய கதை!

பழம்பெருமை பேசுவதென்பது மனிதனுடைய இயல்பு! தான் செய்த நல்ல காரியங்களை நாலுபேருக்குக் கூறுவதில் தவறென்ன இருக்கிறது!—ஆனுல் எதற்கும் ஓரளவுதான் மதிப்பிருக்கிறது. அடிக்கடி திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டே இருப்பதால் ஒரு பயனுமில்லை.

காந்தியடிகள் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டார். அமைதியான முறையையே விரும்பினுர். எனினும் சில சமயங்களில் பலருக்கும் ஆபத்தாய் முடிந்தது! தான் செய்த பல குற்றங்களுக்கும் பிராயசித்தம் செய்து கொண்டார்! மதவெறியனுல் மண்ணுல வாழ்வை நீத்தார்! தீண்டாமையை ஒழிக்க எண்ணினுர்! கட்குடியை ஒழிக்க முற்பட்டார்! இப்படியே சில நல்ல காரியங்களைச் செய்ய நினைத்துத் தம் சீடர்கட்கும் உபதேசித்தார்.

இவர்களே காந்தீயவாதிகள் என்னும் காங்கிரசார்! தேர்தல் வந்தாற்போதும்—பழைய தியாக முத்திரைகளைக் காட்டிக் காட்டி—காந்தீய தத்துவங்களைப் பேசிப் பேசி—ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டித் தீட்டி ஓட்டுப் பிச்சை கேட்பார்கள்! இதைத் தவிர ஐந்து ஏக்கர் நிலத்தை—ஐந்தாயிரம் ஓட்டு வாங்கித் தரும் போக்கியதை உள்ளவருக்குத் தந்து-தியாகிகள் எனப் பட்டஞ் சூட்டி மகிழ்வார்கள்!

உலக அவமானம்!

இன்னும் ஏதேனும் உண்டா? என்ருல் 'ஒன்றும் கிடையாது' என்று உலக நாடுகளைப் பிச்சை கேட்கும் நிலைதான்! 'உலக சமாதானம்' என்று கூடச் செல்வார்கள். 'போன மச்சான் திரும்பி வந்தான் அவமானத்தோடே'—என்றுதான் திரும்பி வருவார்கள். இவை நாம் கண் முன் காணும் மறைக்கப்படாத அரசியல் வரலாருகும்! மறைக்கப்படும் காங்கிரஸ் வரலாறுகளும் உண்டு. அவை மன்றங்களுக்குக் கொண்டு வரப்படவேண்டும்!

தொழிற்துறை தொடர்பு

மாகாணங்களுக்கு இடையே சில கள்ளக் கடத்தல்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் 'கஞ்சா' (போதையூட்டும் புகைப்பொருள்) வும் ஒன்று. சௌகார்களும் மார்வாரிகளும் இதில் லயித்திருப்பார்கள்! கள்ளக் கடத்தல் பொருள்தானே லாபகரமாக விற்பனையாகிறது அத்தோடு நல்ல கிராக்கியும் இருக்கிறது. இந்தக் 'கஞ்சாக் கடத்தல் பேர்வழிகளுடன்' காங்கிரசார் தொடர்பு நெருக்கமாக உண்டு. இக் கூட்டத்தின் தலைவனும் எட்டு உறுப்பினர்களும் இரண்டு கார்களில் நிறைய "கஞ்சாப் பொருளை" ஏற்றிக் கொண்டு வரும் வழியில் நேபாள எல்லையில் பிடிபட்டனர்! மந்திரி சபையின் வட்டாரத் தொடர்புகொண்ட எம். எல். ஏ. ஒருவருக்கும் இக் கூட்டனத்தினருக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறதாம்! பாதுகாக்கப்பட்ட ஏனையவர் 'காதி தோதி', குர்டா, காந்தி-கேம்ப் முதலிய உடைகளில் உள்ளனர். இவர்கட்கும் பிரதேச காங்கிரசுக்கும் தொடர்பு உண்டாம்! இக்கஞ்சா கடத்தும் கூட்டமானது நேபாளத்திலிருந்து பீஹார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், உத்தர பிரதேசம், பாம்பே முதலிய இடங்களுக்குத் தம் 'கள்ளக் கடத்தல் தொழிலை' விரிவு படுத்தின.

சுங்க அதிகாரிகளும், போலிஸ் அதிகாரிகளும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்ய முடியாவண்ணம் அரசியல் சுமையாக இருந்தது. பீஹார் பிரதேச காங்கிரஸ் கமிட்டி ஜீப்-ஒன்றில் 15 மணங்கு கஞ்சா பிடிபட்டு இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை! ஜீப்பிலிருந்தவர்கள் மேல் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை! மேலிடத்தாரின் ஆணையின் படி பாராமுகமாயிருந்து விட்டனர் போலும்!

வாழையடி வாழையாய்

இது வாழையடி வாழையாக வந்த வழக்கமாகும்! இன்று நேற்றல்ல நான்காண்டுகாலமாக நடந்துவருகிற தொழில் முன்னேற்றமாகும்!

இதனுல் ஒன்றரை கோடிக்கு மேல் ஆதாய மடைந்துள்ளனர்! சுங்கத்தாரும் போலிஸாரும் ஒரு பட்டியல் தயாரித்து மேல் நடவடிக்கை எடுக்க விருந்தனர். இதில் பல காங்கிரஸ்காரர்களும் சம்பந்தப்பட்டிருந்ததால் இதைப்பற்றி ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டனர்.

கைக்கூலி அடிமைகள்!

இந்தியா விடுதலை பெற்றது என்றபோது-நாம் 'விடுதலை' என்ற சொல்லை மட்டுமே பெற்ருேம். வடநாட்டார் விடுதலையோடுதொழிற்துறைகளைக் கவர்ந்ததுடன்-அரசியலார் துணையோடு கள்ளக்கடத்தலையும் பெற்றுவிட்டனர் நடுநிலைமையிலிருந்து தொண்டாற்ற வேண்டியவர்களும் அரசியல் அடிமைகளாகி விட்டனர். அடிமைக்கு விடுதலை தந்தால் அனுபவிக்கத் தெரியாது என்பது போலாயிற்று. நிர்வாகத்தின் எல்லாத் துறையிலேயும் அரசியல் அடிமைகள் உண்டு! அடிமைகளே உணர்வு பெறுங்கள்! அக்கிரமத்தின் ஆணிவேரை அகற்றுங்கள்!!

கடவுள் பெயரால் அர்ச்சகர் - கொள்ளை !

காந்தி பெயரால் காங்கிரசார் - கடத்தல்!!

விலை 16 காசு

இதைத் தெரிந்த பிரபுக்களில் சிலர் ஓடிப்போய். அரசே புரட்சி! என்றபோது, இல்லை சிறு கலகம் என்றார். சற்று நிதானித்த பின்பு தான் புரட்சி பூத்துவிட்டது என்றுணர்ந்து சற்று தடுமாற்றத்துடன் பணிந்தார். நாடு கடத்தப்பட்ட நெக்கர் திரும்பி அழைக்கப்பட்டார். பெய்லி மேயராகவும், லாபயட் தேசிய பாதுகாப்புப் படையினரின் தலைவராகவும் அரசரால்ஒப்புக்கொள்ளப்பட்டார்கள். பழைய அமைச்சர்கள்வெளியேறினர்

புல்லைத் தின்னச் சொன்னான்

அரண்மனை அமைச்சன் பௌலான் என்பவன், மக்களைப் புல்லைத் தின்னச் சொன்னான் என்ற வதந்தி பரவியது. கடைந்தெடுத்த ஆணவக்காரன் என்று பெயரெடுத்தவன், மக்கள் கொதித்தெழுந்ததைக் கண்ட அந்த தந்திரக்காரன் தான் இறந்துவிட்டதாக வதந்தியைக் கிளப்பிவிட்டு அவன் ஓடிவிட முயற்சித்தான். ஆனால் சில விவசாயிகள் அவனை அடையாளங்கண்டு கொண்டு பிடித்துவந்து தெரு விளக்குத் தூணில் தூக்கிலிட்டுவிட்டனர். அவனுக்காகப் பரிந்து பேசவந்த அவனுடைய மருமகனுக்கும் அதே கதி.

கண்டனமும் எதிர்ப்பும்

லால்லிடா லெண்டால், என்பவர் இந்த கொலைகளைப் பற்றி வருத்தப்பட்டு, மிகவேகமாகக் கண்டித்தார். பார்னேவ் எழுந்து உடனே திருப்பித் தாக்கினார். கீழ்க்கண்ட சுடுமொழிகளால். நண்பரே! கொலை செய்யப்பட்டவர்களின் இரத்தம் அவ்வளவு அப்பழுக்கற்றதா?குற்றமற்றதா? புனிதமானதா. அவர்கள் குருதி பொதுநல நீரோடையா என்று சுடச்சுடக் கேட்டார். 'நயவஞ்சக ஆட்சியினால் மிரட்டப்பட்ட மக்கள், சித்திரவதைகளைக் கண்டு பழகிய மக்கள், அதிகார வர்க்கத்தால் ஆத்திரமூட்டப்பட்ட மக்கள், தங்களைக் கொடுமை படுத்தியவர்களை கண்டபடி பழி வாங்கியே தீருவார்கள்,'' என்று தாமஸ்பெய்ன் போன்ற அறிஞர்கள் குறிப்பிட்டனர்.

பாஸ்டில் வீழ்ச்சி மக்களுக்கு புத்துணர்ச்சியை ஊட்டியது. நூற்றாண்டுகாலமாக வீழ்த்த முடியாத ஒரு முரடனை வீழ்த்தி விட்டதாகக் கருதினர். இனி அப்படி ஒரு பயங்கரமான சிறைச்சாலை எவராலும் எழவே முடியாது என்று கருதினர். அதன் வீழ்ச்சியை எண்ணி எண்ணி மக்கள் தங்கள் நரம்புகளை இரும்பாக்கிக் கொண்டனர். நாட்டுப்புறங்களில் கிளர்ச்சி தீவிரப்பட்டது. விவசாயிகளுடைய பிரச்னைகள், 1788ல் பற்றாத விளைச்சல், அதன்பிறகு தொடர்ந்த கடுங்குளிர், சட்டசபைக் கூட்டப்பட்டதால் ஏற்பட்ட புதிய நம்பிக்கை இத்தனையும் நிலைமையை முற்றச் செய்தன. தங்களுக்கு உரிமையும் விடுதலையும் சட்டப்படி கிடைக்கும்என்று எதிர்ப்பார்த்தவிவசாயிகள் தீர்வை செலுத்த மறுத்தனர், தங்கள் எசமானர்களுக்கு வழக்கமாக செய்துவந்த வயல் வேலைகளைச் செய்யவில்லை. சிலவிடங்களில் வரிவசூலிப்பவர்களை நையப்புடைத்தனர். இரண்டு பெரிய நிலச்சுவான்தார்கள் கொலை செய்யப்பட்டனர்.

1789 ஜூலை திங்களிலிருந்து தங்களை எதிர்க்க எந்த சக்தியுமில்லையென்று அறிந்துகொண்ட விவசாயிகள் மாதா கோயில்களைக் கொளுத்தினர். தங்கள் அடிமைத்தனத்தை உறுதி செய்த பத்திரங்களைப் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொளுத்தினர். எவனெவன் தங்களையும் தங்கள் வாழ்க்கையையும் கேலி செய்தானோ அவனெல்லாம் நையப் புடைக்கப்பட்டான். ஆயிரக்கணக்கான நிலச்சுவான்தார்கள் இனி ஆபத்து என்று அலறி ஓட்டமெடுத்தனர். நகரங்களிலிருந்து மத்தியதர வர்க்கத்தினருக்கு திகில் ஏற்பட்டது. விவசாயிகள் தாக்குவது நிலச்சுவான்தாரர்களைத்தான் என்றாலும்,இவர்கள் பயப்படக் காரணம் என்னவென்றால், தங்கள் தீராத பகைவர்களான உயர் வர்க்கத்தினரின் சமச்சடங்குதான் இது வென்றாலும் அடுத்தக்கட்டத்தில் தங்களுக்கும் தங்கள் சொத்துக்கும் ஆபத்துத் தொடரும் என்று நடுத்தர வர்க்கத்தினர் அலறினர்.

அமைதியிழந்த பகுதிகளில் மக்கள் ஆயுதந் தாங்கினர். பாரீஸ் நகர பாதுகாப்புப் படை போன்று எல்லா நகரங்களிலும் படைகள் ஏற்பட்டன. ஏன்! பிரான்சு முழுதுமே போர்க்களமாகக் காட்சியளித்தன. டாபின், பர்கண்டி போன்ற பகுதிகளில் நகர மக்களுக்கும் விவசாயிகளுக்கும் மோதல் ஏற்பட்டது. இந்த சினம்மிகுந்த செடலுக்குக்காரணமென்னவென்றால், விவசாயிகளாகிய நாம் உழைத்து அறுவடை செய்த தானியத்தை இந்த நகர மக்கள் உண்டு கொழுத்து சோம்பேறி வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதுதான். மேலும் விவசாயிகளையும் நகர மக்கள் நாகரீகமற்ற மக்கள் என்ற எண்ணத்தில்தான் நடத்திக்கொண்டு வந்தார்கள், உள் நாட்டுக் கலகம் ஏற்படும் என்ற அச்சம் உச்சக்கட்டத்தை யடைந்தது.

விவசாயிகள் நிலங்கள் எல்லாம் தங்களுக்கே சொந்தம் என்ற முறையில் நடந்துகொண்டார்கள். நிலங்களுக்குச்சொந்தக்காரர்களான பாதிரிகளுக்கோ, நிலச்சுவான்தாரர்களுக்கோ எதையும் தர மறுத்தனர் நிலச்சுவான்தார்களோ, பாதிரிகளோ நியாயமாக எதையாவது வசூல் செய்ய முற்பட்டால் கிராம மக்கள் திரண்டெழுந்து. அவர்களது வீடுகளையும் பத்திரங்களையும் கொளுத்தினார்கள்.

சட்டசபை தடுமாறியது

ஆம். எங்கும் காட்டுத் தீபோல் கலகம் பாவிவிட்டது. கட்டுப்படுத்த முடியவில்லை. சட்டசபை தடுமாறியது. மக்கள் சக்தி ஓங்கி வளர்ந்து முன்னேறியது. மக்களுக்குப் பழைய நில பிரபுத்வ முறையை மாற்றவேண்டுமென்ற ஆத்திரத்துடன், கொடூரமான பழைய குற்ற சட்டத்தையே திருத்த வேண்டுமென்ற ஆத்திரமும் சேர்ந்து கொண்டது. சக்கரத்தில் வைத்து சித்ரவதை செய்யப்படவிருந்த ஒரு கைதியை வார்

சேல்ஸ் மக்கள் விடுவித்தனர். பாரீஸ் பாட்டாளிகளும் தங்கள் உரிமைகளுக்கென ஆகஸ்ட் 4ம் நாளிலிருந்து வேலை நிறுத்தங்களை ஏற்பாடு செய்தனர். சட்டசபை எதிர்ப் பார்த்ததைவிட அதிகப் பிரச்னைகள்தலை தூக்கின.

விரைவில் வெளிவருகிறது!

பொன்னி

(மாத மிருமுறை)

★ ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1, 15 தேதிகளில் வெளி வருகிறது.

★ கண்கவரும் மூவண்ண முகப்புடன் புத்தக வடிவில் வெளியிடப்படுகிறது.

★ தமிழகத்தின் தலைசிறந்த நாவலாசிரியர்களின் எழுத்தோவியங்கள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுகின்றன.

★ உங்களுடைய நீண்ட நாளைய ஆவல் பூர்த்தியாகும் வகையில் பத்திரிகை அமைந்திருக்கும்.

விலை 25 காசுகள்

எங்கும் ஏஜண்டுகள் தேவை

குறிப்பு: இனமுழக்கம் பட்டியல் பாக்கி இல்லாமல் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டும் முதற்சலுகை அளிக்கப்படும்.

திரையுலகப் பத்தினிக்குத் திருக்குறள் உவமை!

முறிமேனி முத்தம் முறுவல் வெறி நாற்றம்
வேல் உண்கண் வேய்த்தோ ளவட்கு முப்பால்.

என்ற திருக்குறளுக்கு ஓவியம் தீட்டவில்லை!(ஓவியக்காரர்களின் பத்திரிகையிலே...) திரையுலக நட்சத்திரத்தின் 'கும்கும்' படத்தை உவமை காட்டியுள்ளனர். மாணவருலகின் மாட்சிமையை, இளைஞர் சமுதாயத்தின் ஏற்றத்தை விளக்க வருவதாகக் கூறிக் கொண்டு வெளிவந்த பத்திரிகை-அழிவுப்பாதையை நோக்கிப் போகிறது! இப்படிப்பட்டவர்கள் ஒழுக்கத்தைப் பற்றியும்-அரசியலைப் பற்றியும்-இலக்கியத்தைப் பற்றியும்-கலைகளைப் பற்றியும் கூறும் பொழுதுதான்-இந்த நாடு (குறிப்பாகத் தமிழ் நாடு) எவ்வளவு மானக்கேடான நிலையிலிருக்கிறது என்பது தெரியவருகின்றது. சமுதாய ஒழுங்கினைப் பற்றியும்—பண்பாட்டு நிலையினைப் பற்றியும்—மாதர் முன்னேற்றத்தைப் பற்றியும் ஒரு சர்வ சாதாரண கோடம்பாகத்துக் கும்மிருட்டுக் குமரி கூறுவது போலுள்ளது.

திருவள்ளுவர் (15—10—60) ஏட்டிலே—இறுதிப் பக்கத்திலே இருக்கும் காட்சிதான் இது! மறைத்திரு குன்றக்குடி அடிகளாரை சாய்த்துப் போட்டிருக்கிறார்கள்! காவியுடையுள்ளிருக்கும் தமிழர் காவலனுக்கு சினிமா நடிகையோடு நிமிர்ந்திருக்க முடியவில்லை போலும்! அடிகளாருக்கு இது ஒரு பெருத்த அவமானம்! இவர் எழுதிய ''வள்ளுவரின் வழிவாழ்வோமாக...'' என்ற கட்டுரையிலே குறித்துள்ள

''உண்டு, உடுத்து, அனுபவித்து வாழ்ந்தால் சரிஎன்று கருதாமல், முறையோடு வாழவேண்டும் என்று கவலைபட்டவர்கள் தமிழர்கள்'' என்ற வாசகத்தை நினைவுபடுத்துகிறோம்.

திருக்குறள் இன்பத்துப் பாலிலே களவியற்பகுதியில் 'நலம்புனைந்துரைத்தல்' என்ற அதிகாரத்தின் மூன்றும் பாடல் தான் இது! அதன் பொருள்.

'மூங்கில் போன்ற தோளை உடைய இவளுக்குத் தளிரே மேனி; முத்தே பல்; இயற்கை மணமே மணம்; வேலே மை உண்ட கண்!

சினிமா நடிகைப் படத்தைப் போட்டது-இளங்காளைகளைக் கேட்டால் :—

முறிமேனி—யார் யார் எத்தனை தடவை முறித்தனர்?

முத்தம்—'இச்-இச்'காவியமா?

முறுவல்—சினிமா ஒப்பந்தத்திற்கா? பணத்திற்கா? காமக் காதலுக்கா?

வெறி நாற்றம்—அட! அதான் ஊர் சிரிக்குதே! இது உண்மையிலே ஒரு மாணவன் கூறி கேலி பேசியது! சினிமாக்காரி படத்தைப் போட்டால் திருக்குறளை மறை என்று படித்து மகிழ்வார்கள். ஜாலியாக-சிகிரெட் ஊதிக் கொண்டு — நியூஎல்பின்ஸ்டன் ஓரம்தான் படிப் பார்கள்!

சினிமா அழியக் கூடியது! பொழுது போக்கிற்கென ஏற்பட்டது. கலையும் அவ்வாறே! ஆனால் இலக்கியம் வாழ்வோடு தொடர்புகொண்டது காலங்கடந்தும் வாழும் ஆற்றல் உண்டு! இப்படிப்பட்ட 'அசிங்கங்கள்' ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது மானமுள்ள உண்மையான இலட்சியமுள்ள தமிழனின் கடமையாகும்!

கைவண்ணத்தைக் காட்டி எண்ணத்தைப் பிரதிபலிக்கச் செய்பவனே உண்மையான ஓவியன்! இனமுழக்கம் செயதுவரும் கலை முழக்கத்தை கண்டு இஃது எழுதலுற்றேன்!

''அஞ்சாவூரன்'' (எம்.ஏ)

சென்னை-14.

இயக்குநர் ஜி. கே. ராமு இருப்பது எந்த மூடில்?



'வீரக்கனல்'சுக்கும் வேங்கைவிழிப்பார்வை! தூர்த்தனங்காட்டும் சொகுசாக செட்டினிலே!

இனமுழக்கம்
ஆசிரியர்: சி. பி. சிற்றரசு
மலர் 2] ★ 28—10—60 ★ [இதழ் 9

போக்கத்தவருக்கு பொய்தான் கைமுதல்

இப்படி ஒரு பழமொழி உண்டு, நெடுநாட்களாக. வேறு எந்த வகையாலும் ஏமாற்றிப் பிழைக்க முடியாதவனுக்கு இருக்கும் கடைசி ஆயுதம் பொய்தான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த வகையாலும் எதிர்க்கமுடியாதவர்கள் இப்போது ஒருபுதிய முறையைக் கையாள்கிறார்கள். மேடையேறிப் பார்த்தார்கள். போட்டிக் கூட்டங்கள் நடத்திப் பார்த்தார்கள். ரௌடிகளை விட்டு அடக்கிப் பார்த்தார்கள். கூட்டங்களுக்குத் தடை என்றார்கள். வீணான வழக்குகளை ஜோடித்தார்கள். குற்றமற்ற கழகத் தோழர்களை சிறைக்கனுப்பினார்கள், லைசென்ஸ்,நேரத்திற்குமேல் ஒரு ஐந்து பத்து நிமிடங்களாகி விட்டால் அதற்கு ஒரு வழக்கு; அபராதம், கிளைகளுக்கு இடந்தந்தவர்களை மிரட்டுதல், கழகங்களின் உள்ளே புகுந்து படங்களை உடைத்தல். இதைப்போன்ற இன்னும் இதைவிட மிக மோசமான இழிசெயல்களிலே இறங்கிப் பார்த்தார்கள். சலித்துப்போய் அவர்கள் பெருமூச்சுவிட்டது தவிர வேறொன்றும் காணாதவர்களாகி விட்டார்கள்.

கடைசி ஆயுதம்

கடைசியாக ஒரு புதுமுறையைக் கையாள்கிறார்கள். அதுதான் சில எலும்புத் துண்டு பொறுக்கிகள் நடத்துகின்ற பத்திரிக்கையில், அந்த ஊரில் தி. மு. க. உறுப்பினர் விலகினார், இந்த ஊரில் தி. மு. க. உறுப்பினர் விலகினார் என்ற செய்திகளாகும். அதில் ஒன்றாவது உண்மையா என்றால் இல்லை. அதற்கு மறுப்பு, அந்தந்தக் கிளைகளின் செயலாளர்களே அடுத்தநாள் விடுவதைப் பார்க்கிறோம், இப்படிச் செயலாளர்கள் மறுப்புவிட்ட பிறகு. இல்லை விலகியது உண்மைதான். அதற்கு ஆதாரம் எங்களிடத்திலே இருக்கிறது என்று எந்த முண்டமாவது இதுவரை சொல்லிற்றா என்றால் அதுவும் இல்லை.

விலகல் எங்கே?

தோளில் கதர் சுமந்து விற்ற பெரியார் முதல் ஆச்சாரியார் வரை விலகல். எங்கே எந்தக் கட்சியில் நடந்திருக்கிறது என்பதை அந்த மரமண்டைகள் உணர்ந்தால் இப்படி தப்பிலித்தனமாக எழுதமாட்டார்கள். ஏதோ பல உண்மைகளில் சில பொய்களைக் கலந்து விடுபவர்களைக்கூட நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இந்தப் பொய்க்கே பிறந்த புரட்டர்கள் பேசுகின்ற பொய்யில் ஒரு உண்மைகூட கலக்காமல் வெகு சாமர்த்தியமாக இருக்கிறார்கள்.

காந்தியார் விலகினார்

காந்தியார் காங்கிரசை விட்டு விலகினார். ஏன்? வயது முதிர்ந்த காரணத்தாலோ, எடுத்தவேலை முடிந்து விட்டது என்ற காரணத்தாலோ, தான் விட்டுப் போகும் வேலையை எடுத்துச் செய்ய வாரிசு கிடைத்து விட்டது என்ற காரணத்தாலோ அல்ல. விலகியதற்கு அவர் சொன்ன காரணம் என்ன? இன்று நாங்கள்தான் புனித காங்கிரஸ்காரர்கள் என்று பேசும் புதுக் காங்கிரஸ்காரர்களுக்கு நன்றாகத் தெரியுமே. அவர்கள் இன்று அனுபவிக்கும் ஆடம்பரத்திலே மறந்து விட்டிருந்தாலும் அவர் அன்று சொன்ன வாசகங்களை அப்படியே தருகிறோம். "காங்கிரசில் பதவிப் பித்தும் பணத்தாசையும் நிரம்பி விட்டது. அதை ஒழித்து புனிதப்படுத்தவே நான் காங்கிரசிலிருந்து விலகுகிறேன்." இப்படிச் சொல்லிவிட்டுத்தான் காங்கிரசை விட்டு விலகினார். அவருக்கு முன்பே காஞ்சிபுரத்தில் நடந்த மாநாட்டில் பெரியாரும், தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரமும் விலகினார்கள். ஆச்சாரிய கிருபாளினி முதல் முத்துராமலிங்கம் வரையிலும் விலகியதற்கென்ன காரணம்?

தென்னாட்டு மூவர்களிலே ஒருவரான டாக்டர் வரதராசுலு அவர்கள் விலகி, இந்து மகாசபையில் சேர்ந்ததை யார் அறியார்?

பிரிந்து சென்றவர்கள் சும்மா இருக்காமல் அவரவர்கள் ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு. சுதந்திராக் கட்சி என்றும், இந்து மகா சபை என்றும், ஜனசங்கம் என்றும், ஜனநாயகக் காங்கிரஸ் என்றும் அமைத்துக் கொண்டிருப்பதை மூடி மறைக்க, நம் கழகத்தில் பெரும் பெரும் புள்ளிகளெல்லாம் விலகி ஒரு பூகம்பத்தையே உண்டாக்கி விட்டு வேறொரு கட்சியைத் தோற்றுவித்திருப்பதைப் போல் பிதற்றிக் கொண்டு திரிகின்றன. சில தேசீய ஏடுகள் என்று விளம்பரப் படுத்திக்கொண்டிருக்கும் சில கூலி ஏடுகள்.

வெளியாகி விட்டது! விற்பனையாகிறது!

காவியக் கழகத்தாரின்

நான்காம் படைப்பு!

கவிஞர் கண்ணதாசன்

கவிதைகள்

[இரண்டாம் தொகுப்பு]

தனிப்பிரதி விலை: 2-8-0

விவரங்கட்கு: காவியக் கழகம், சென்னை-2.

சகிக்கமுடியாத நாற்றம்

விலகியவர்கள் போகட்டும். இருக்கின்றவர்களாகிலும் சும்மாயிருக்கிறார்களா—

ஆந்திரத்தின் தலைவலி, கேரளத்தின் குரல்வலி, கருநாடகத்தின் கண்வலி, பஞ்சாப் மாநில அஜீர்ண நோய், மராட்டியர்கள் கொடுக்கும் மண்டைவலி, அசாம் அலர் ஜன்னி, வங்காள வயிற்று வலி, எல்லையிலே தொல்லை, கடல் கடந்த பிச்சை, ஐ. நா. வில் அவமானம் இத்தனையும் சேர்ந்து கொண்டு இறுக்கித் தாக்கிக் கொண்டிருப்பதை மறந்து எதிர்கட்சிகளை ஏளனம் செய்துகொண்டிருக்கின்றன ஏடுகள். சேற்றில் இறங்கிவிட்ட எருமைக்கு பன்னீர் ஒரு கேடா என்பதைப்போல் ஆழந்தெரியாமல் காலை விட்டதுபோல் வீண்டம்பாச்சாரித் தனமாக ஐந்தாண்டுத்திட்டத்தை வகுத்துத் திருவோடேந்தி திசை எங்கும் பிச்சைக்குப் பறந்து கொண்டிருப்பதை மறந்து நம்மை நையாண்டி செய்யப் புறப்பட்டிருக்கின்றன. முதலில் காங்கிரஸ் ஏடுகள் தங்கள் முன்னே இருக்கும் கறையைத் துடைக்கட்டும். பிறகு மற்றவர்களைப் பார்க்கலாம்.

அன்புள்ள,

சி. பி. சிற்றரசு



"எனக்கு நினைவிருக்கிறது. பாலர் வகுப்பிலிருந்து நாம் இரண்டு பேரும் ஓடியாடி விளையாண்டதை நான் மறக்கவில்லை. தங்கச்சி மடத்திலிருந்துநீ,இராமேஸ்வரத்திற்குப் படிக்க வந்த கதையை எத்தனையோ முறை என்னிடம் சொல்லியிருக்கிறாய்.'' என்று பழைய நினைவுகளைக் கிளறினாள் அனுராதை.

துருவனுக்கு அதற்குமேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. அனுராதையைத் தூண்டிக் கொண்டே நின்றான். அனுராதைஅவளுடைய தோழிமூலமாகசெந்தாமரைக் கண்ணனிடமிருந்து பணத்தைப் பெற்றுவிடலாம் என்று கருதினாள். ஆனால் அந்த யுக்தியை துருவன் புரிந்து கொள்ளவில்லை. ஒரே பிடிவாதமாக நின்றான்.

அனுராதை தோழியிடம் விடைபெற்றுக்கொண்டாள். வாசற்படியைவிட்டு இறங்கும் போது பெரியவர் ஒருவர் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். அவர் கையில் ஒரு சிறிய புத்தகம் இருந்தது. துருவனுக்கு அவரைத் தெரியவில்லை. அனுராதை கண்டுபிடித்துவிட்டாள். அவர் வேறுயாருமல்ல. டிக்கட் பரிசோதகர் தியாகராச பிள்ளை தந்தைதான்! தியாகராசர் ஒரு முறை காயமுற்று படுக்கையில் கிடக்கும்போது அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். அப்போது அனுராதை அவரைப் பார்த்திருக்கிறாள்.

தியாகராசரின் தந்தை புலவர் வீட்டிற்கு ஏன் போகிறார்? புலவருக்கும் தியாகராசனுக்கும் என்ன உறவு?—இப்படி அனுராதை தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள். அதற்கு அவளுக்கு விடை கிடைத்தது. புலவர் தன் மகளைப் பெண் பார்ப்பதற்கு யாரோ வரப்போவதாகச் சொன்னது அவள் கவனத்திற்கு வந்தது.

ஆனால் இந்த விவரம் எதையும் துருவனிடத்தில் அவள் காட்டிக் கொள்ளவில்லை. இது தான் பெண்மை என்பது. எதையும் அடக்கிக் கொள்வது, பொறுத்துக் கொள்வது. அந்த உணர்ச்சியைக் கண்ணீரில் காட்டுவது. ஆடவர்களிடத்தில் அந்தப் பண்பை பார்க்க முடியாது.

⁘ ⁘ ⁘

பத்து நாட்களுக்குப் பிறகு துருவன் தியாகராசனைச் சந்தித்தான். தியாகராசன் முகத்தில் களை இல்லை. நடையில் தெம்பு இல்லை. பேச்சில் வலிவில்லை. இருதயத்திற்கும் நாக்கிற்கும் தொடர்பில்லாமலேயே அவன் பேசினான். துருவன் எதையும் வெளிப்படையாகக் கேட்டுக்கொள்ளவில்லை. புதிய நட்பு. அரைகுறையாகப் பேசிவிட்டு பித்துப் பிடித்தவனைப் போல் தியாகராசன் அவன் அறைக்குப் போனான். அங்கே அவனுக்காக ஒரு கடிதம் காத்திருந்தது. அந்தக் கடிதம் அவனுடைய தந்தை எழுதியது.

அன்புள்ள தியாகராசனுக்கு,

நலம். நலம் விரும்புகிறேன். காயங்களெல்லாம் மறைந்து பூரணசுகம் அடைந்திருப்பாய் என்று கருதுகிறேன். உன்னிடம் தெரிவித்து வந்தபடி சென்ற ஞாயிற்றுக்கிழமை உன்னைப் பார்க்க வரமுடியவில்லை. எதிர்பாராத விதத்தில் எனக்கு ஒரு நல்ல தகவல் கிடைத்தது. புதுக்கோட்டையில் நிறைய சொத்துக்களுடன் பொறுப்புள்ள குடும்பத்திற்கு தகுதியுள்ள ஒரு பெண் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். பெண்ணின் தந்தை ஒரு தமிழறிஞர். அவருடைய ஒரேமகள்தான்அந்தப்பெண். எந்த வகையிலும் உனக்குப் பொருத்தமில்லை என்று சொல்லமுடியாது. ஜாதகப் பொருத்தம் பார்த்து விட்டோம். எதுவும் குறைவில்லை. உன்னுடைய ஒப்புதல்கிடைத்தவுடன் திருமண ஏற்பாடுகளை செய்ய நான் தயாராக இருக்கிறேன். பெற்ற மனத்தின் பேராவல் என்னை உன்னுடைய அனுமதியின்றி பெண் பார்க்க ஓட வைத்தது. அதை நீ பொருட்படுத்த மாட்டாய் என்ற நம்பிக்கையும் உண்டு. நீ எந்த நேரத்திலும் பெண்ணைப் பார்த்துக்கொள்ளலாம். தெற்கு, நாலாம் வீதியில் புலவர் செந்தாமரைக் கண்ணன் என்றால் சிறு குழந்தைக்குக் கூடத் தெரியும். இதுதான் அவர் முகவரியும். கூடுமானவரை இந்த வார இறுதிக்குள்ளேயே உன்னிடமிருந்து விரிவான பதிலை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தந்தை,
சிவசண்முகம்.

கடிதம் தியாகராசனைக் குழப்பியது. அவன் எண்ணமெல்லாம் அனுராதையைச் சுற்றிக் கொண்டு அலைந்தன. ஆனால் அவளிடம் எப்படிக் கேட்பது என்றே அவன் தவித்துக் கொண்டிருந்தான். தந்தையின் கடிதத்தை மடியில் சுற்றிவைத்துக்கொண்டு ரயில் நிலையத்திற்கு விரைந்தான். அங்கே இராமேஸ்வரத்திற்குப் போகும் வண்டி வந்து நின்றது. அந்த நெருக்கடியில் துருவனும் அனுராதையும் சேர்ந்து பாடிக் கொண்டே பிச்சை எடுத்தார்கள். பார்த்தவர் அனைவரும் அவர்கள் இருவரையும் கணவன் மனைவி என்றே கருதினார்கள். தியாகராசனும் அந்தக் காட்சியைப் பார்த்துக் கண் கலங்கிப் போனான். இவ்வளவு ஒற்றுமையோடு இருக்கிற இரு உள்ளங்களைப் பிரிப்பதற்கு அவனுக்குத் தைரியமில்லை. தீங்கு செய்ய நினைப்பவர்கள் எதிர்த் தாக்குதலை சமாளிக்க முடியாமற் போனால் எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவதில்லை. இதைத் தியாகராசன் நன்கு உணர்ந்திருந்தாலும் இளமையின் பிடியில் சிக்கித் தவித்ததின் கோளாறு கற்றதையும் மறக்கவைத்தது. துருவன் நொண்டி, காலப் போக்கில் அவனை அனுராதை மறந்து விடவும் கூடும் என்று தியாகராசன் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டு தன் அறைக்கு ஓடினான். அங்கு போயும் அவனுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. தந்தைக்கு என்ன பதில் எழுதுவது என்பதிலேயே அவன் நினைத்திருந்தான். அந்தக் கவலையிலிருந்து விடுபட்டுத் தெளிவதற்கு மூன்று நாட்களுக்கு மேலாகி விட்டது.

புதுக் கோட்டையில் புலவர் செந்தாமரைக் கண்ணன் மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்த வண்ணமாய் இருந்தார். அவருக்கு எவ்வளவோ கடிதங்கள் வந்தன, ஒன்று கூட அவர் நினைத்த இடத்திலிருந்து வரவில்லை. பத்து நாட்களுக்குப் பிறகு திருமண சம்பந்தமாக அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் அவருக்குத் தலையில் தீயை வாரிக் கொட்டியது.

உயர்திரு புலவர் செந்தாமரைக் கண்ணன் அவர்கட்கு,

வணக்கம். உங்கள் பாலும் உங்கள் குடும்பத்தின் பாலும் அன்பும் மரியாதையும் கொண்ட தங்கச்சி மடத்தில் உள்ள தங்களது பழைய மாணவன் ஒருவன் எழுதும் கடிதம் இது. தங்களுடைய ஒரே மகளும் எங்களுக்கெல்லாம் அக்காளுமாக இருந்த திலகத்திற்கு திருமணப் பேச்சு நடந்து வருவதாக எனக்குத் தெரிய வருகிறது. நீங்கள் விரும்பி முடிவு செய்ய இருக்கும் மணமகன் எங்களது பகுதியில் இப்பொழுது ரயில்வே டிக்கெட் பரிசோதகராகப் பணி புரிகிறார், அவரை நீங்கள் நேரில் பார்த்தால் உங்களுக்கு மூளை குழம்பி பித்து பிடித்து விடவும்கூடும். அவருக்கு வெண் குஷ்டம். முகமனைத்தும் குஷ்டத்தழும்புகள். கோரமான முக அமைப்பு. தயவு செய்து திலகத்தின் திருமண விஷயத்தில் நிதானமாக நின்று முடிவுக்கு வருவது உத்தமம். இந்தக் கடிதத்தில் உங்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுமானால் தாங்களே ஒருமுறை யாருக்கும் தெரியாமல் மணமகனை பார்த்துக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன். தொல்லை தந்தமைக்கு மன்னிக்கவும்.

உங்கள் பழையமாணவன்

கடிதத்தைப் படித்து முடித்தார் புலவர். அவருடைய மனக் கோட்டைகள் தகர்ந்து விட்டன என்றுதான் சொல்லவேண்டும். ஊரிலே நடக்கும் நூற்றுக் கணக்கான சச்சரவுக்கு சமாதானம் கூறுகிறவர்கள் சொந்த வீட்டில் சிறு குழப்பம் என்றாலும் துடிதுடித்துப் போகிறார்கள். இதற்காகத் தான் பாசம் கொடியது என்கிறார்கள் போலும்.

புலவர் கடிதத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள்ளே ஓடினார். உள்ளே இருந்த அவர் மனைவி ஆவலோடு கேட்டாள்: "என்ன, மாப்பிள்ளை போட்டோ வந்திருக்கிறதா? சம்மதம் தெரிவித்து விட்டார்களா? முகூர்த்தம் வைத்து விடவேண்டியது தானே.'' "மாப்பிள்ளை புகைப்படம் வரவில்லை அவருடைய முக அலங்காரத்தைப் பற்றிய வருணனை வந்திருக்கிறது. ஆழம் தெரியாமல் காலை விடப்பார்த்தோம். நல்ல வேளை. பெண் பிழைத்தது'' என்று புலவர் சொல்லும் போதே அழுதார். அவரது மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. திரும்பத் திரும்பக் கேட்டாள். புலவர் கையில் இருந்தகடிதத்தை அவள்முன் வீசி எறிந்தார். புலவரின் மனைவி கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அவளுக்குப் பக்கத்திலிருந்து திலகமும் படித்தாள். அவர்கள் இருவரும் கடிதத்தைப் படித்து முடிப்பதற்கும் வெளியில் யாரோ கதவைத் தட்டுவதற்கும் சரியாய் இருந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

ஸ்ரீ 111

இடம் : கல்லூரி விடுதி. அறை எண்-3. கோதண்டமும் வேதாந்தமும் சினிமா ஏடுகளைப் புரட்டுகின்றனர். சன்மார்க்கம் "கல்லறையை மோதிய காதலன்" என்ற நாவலைப் படிக்கிருன்.

சன்: (உறக்கப் படித்தல்) இடம் - கிணற்றடி களம். காதற்களம்.
சலீம் அனுர்கலிமேல் காதல் கொண்டு...
காதலாகி...கசிந்து...கண்ணீர் மல்கி

கோ: "லவ்' மல்கி...

சன் : லவ் (love) மல்கி... கண்ணே...அனு !

கோ : "ஆறுநயா பைசா..."

சன்: "டேய் சும்மாஇருடா... கண்ணே. காதலி அனுர் ! பொன்மலரே ! விண்தாரகையே ! எண்ண முடியாத நுண்மணலே !...

கோ : "குட்டிச் சுவரே..."

சன்: "கழுதையே!" (தன்னை மறந்து) : டேய் என் விஷயத்திலே அனுவிஷயமா தலையிடாதே !

கோ : "பின்ன என்னடா ! ராத்திரி பன்னிரண்டு மணிக்கு கத்துறியே...பிரசவ வேதனையா இருக்கு!... காலேஜ் வார்டன் தேடிக் கிட்டுவந்தா..."

சன் : "வந்தா என்ன?...ஒத்' தெல்லோ'விலே ஒரு கனி ரசமான கட்டம் கிறேன் "

வேதா : "அதுக்கு ஏன் இப்புடி ஆந்தைமாதிரி அலருரேன்னு..."

சன் : "சார்...வசனப் பெருமுச்சில்காதற் தீ பற்றியது என்பேன்..."

கோ : "ஆருவது தடவை தேர்வைப் படையெடுத்தாலும் ஆருத காதல் உனக்கேன் ? என்ருன்..."

[வேதாந்தம் முகத்தை மறைக்கும் பேப்பரை எடுத்தல்—நாமம் அணிந்த முகத்துடன்]

வேதா : டேய்...இது நம்மளை பாதிக்குது ! காதலுக்குத் தெரியுமா கல்லூரிப் பாடங்கள் ! போடா..."

கோ : "அப்ப...காதல் சில சமயங்களில் கால் தூக்கி உதைக்கும் என்கிறே... சோகரசத்தைப் பொதி போலத் தாங்கும்— உனக்கு..."

சன் : "யாருக்கு எப்புடி இருந்தா என்ன! அடியேன் சன்மார்க்கத்திற்கு ஏற்பட்ட காதலி மாதிரி ஒருத்தியைக் காணமுடி... யாது...காண்போரை எல்லாம் கவரும் காந்தக்கண் மோகினியாள்..."

வேதா : "அடே...காதல் துருப்பிடிச்ச இரும்பா !... காண்போரை எல்லாம் கவருதா அது ? நீ எத்தினி யாவுது..."

சன் : டேய்...என் வீட்டுக்கு வரப்போற வரலட்சுமிய களங்கப் படுத்தாதே! உனக்கு ஒரு காதலி இருந்தா தெரியும்..."

வேதா : அடே மஜித்சிங் ! அதுமட்டும் சொல்லாதே. இதோ கல்யாணப் பத்திரிகை 'புருப்' (proof). எனக்கு மாமன் மகள் 'காலேஜ்'ல படிக்கிரு. போலிக்காதலில்லே உரிமைக் காதல்-..."

சன் : இப்பத்தான் நீ ஜரிகை வேட்டி கட்டிக்கிட்டு வர்ர 'தாத்பரியம்' புரியுது !... அட...நம்ம வேதாந்தத்துக்கு ஒரு முறைப்பெண்... அதுவும் காலேஜ்-லே படிக்கிற அளவுக்கு...

கோ : சரிதான்... காலேஜ் செலக்ஷன் நேரத்திலே மேரேஜ் செலக்ஷன் ! காலேஜ் தேர்வு நேரத்திலே திருமணம் ! தேர்வு முடிந்து-ரிசல்ட்(Result)...

சன் : "குவா......குவா...... (குழந்தைபோல் கத்துதல்)

கோ : "குழந்தை எப்புடிடடா....நாலுமாதத்திலேயே?..."
"அட நீ ஒன்னு இவன் முதல் தடவையேவா பாஸ் பண்ணுவான் ?...ஆறுமாதங் கழிச்சி செப்டம்பரிலே..."

வேதா : யப்பா... போதும். நல்லதை பேசிக்கிட்டு இருக்கிறப்போ படிப்பை பத்தியும் குழந்தை குட்டிகளைப் பத்தியும் பேசாதிங்க...புண்ணியமாவுது... படுங்க....காலையிலே.... எனக்கு 'எலெக்ஷன்' வேலை இருக்கு !

கோ : "உனக்கு ஏண்டா இந்தவம்பு. பணம்பத்தும் செய்யும். பதவி பத்தாதும் செய்யும்—அதை நெனச்சுக்கிட்டுப் படுக்காதே...தூக்கம் வராது."

வேதா : "ஆவ்...ஊ..."

சன் : "என்னடா மூட்டைப் பூச்சியா? இப்ப நசுக்காதே நாறும்......காலையிலே நசுக்கிக்கலாம்... கொசுவாஇருந்தா ஒடிடும்...மூட்டைப் பூச்சிக்கு இருக்கிறது இன்னேண்டு வாய். பேசத் தெரியாது.-- அது என்னடான்னு...இவ்வளவு மனுசங்களையும் அலரவை ...ஆவ்...ஊ..."

வேதா : "மூட்டைப் பூச்சிகடிச்சியே பழக்கமானதாலே...இது கடிக்காட்டி இப்பெல்லாம் தூக்கம் வர்ரதில்லே...கொர்...கொர்.."
எல்லோரும (உறங்குதல்)

காலை: [கோதண்டமும் சன்மார்க்கமும் எழுதல்...]

சன் : அட ....கோதண்டம் ! வேதாந்தம் எங்கடா ?... எப்பவும் ஒன்பதுமணிக்குத்தானே எழுந்திரிப்பான்...

கோ : நீ ஒன்னு...அவுங்க மாமனுர் ... ஞானமார்க்கம் 'பப்ளிக் எலக்ஷன்'லே நிக்குருர்...அவரை—எம். எல். ஏ—சீட்லே உட்காரவைக்கப் பய பாடுபடுருன். அவர் மகளையே கன்னிகாதானம்... செய்து தரப் போருராம்...

சன் : பாவம்! பிரம்மச்சாரி!... அவன் கல்யாணம் இந்த ஜன்மத்திலே இல்லே... அந்த கல்யாணபத்திரிகையைத் திருடிப் படிப்போம்...(கோதண்டம் எடுத்தல்) படி படி பார்ப்போம்.

கோ : நிகழும் உதயா...

சன் : ஆ...மேலேபடி (மயக்கத்துடன்)

கோ: ஏண்டா உதயாதிநாழிகைங்கிறதுக் குள்ளே... அவசரம் ... வேணும்னு பெண்ணுபேரை கேளு... சொல்றேன்... உ.தயா குமாரி...

சன் : ஆ...அய்யகோ...என் நெஞ்சம் நெருப்பாக எரிகின்றதே...உஷ் ஷ்...என் காதுகளை நம்பமுடியவில்லையே ! மயக்கமாக வருகிறதே. கிர்ர்...என்காதலி உதயா-வேதாந்தம் மனைவியாகப் போகிறவளா !

கோ : ஹ ஹ் ஹ ஹ் ஹ ஹ ஹா...(வசனம்பேசத் துவங்குதல்) செத்துக்கொண்டிருக்கும்மாணவசமுதாயத்தைப் பித்துப் பிடித்தலைய வைக்கும் உணர்வு தான்—காதல்! காதலென்று சென்றவர்கள் கண்டதென்ன? சாதலைத் தான்! தன்உடல் மேற் சமாதியைத் தான் !!

லைலாவினுல் பைத்தியம் பிடிக்கப்பட்ட மஜ்னு ஒரு—கோழை !

நூறு பாட்டுப்பாடி வாய் கிழியச் செத்த அம்பிகாபதி ஒரு-இடியட் !

கல்லறையை மோதிமோதி மூளை சிதறத் தீர்ந்த சலீம் ஒரு-முட்டாள் !

'ஸ்காடிஸ் விஷ்கி' குடித்து வயிர் வெந்து மாண்ட தேவதாஸ் ஒரு-பேடி !

ரோமியோவும் ஜூலியத்தும் மரப்பாச்சிப் பொம்மைகள் ! தம்பி மரப்பாச்சி பொம்மைகள் !!

மொத்தத்தில் உணர்வுப் பாவைகள் கொலு வீற்றிருக்கும் உல்லாசப்புரிதான் —

அறிவற்ற காதலுக்கு அரண்...இக்காவியக்கதா நாயகர்கள் பட்டியலே கல்லறைகளிலே புதைந்துள்ள போது ...(பெரு மூச்சினுல் விளைந்த சிறு பேச்சினுல்) நீ சர்வ சாதாரண குறைப் பட்டதாரி எம்மாத்திரம்?
Undergraduate.
(எதிர் வசனம் பேசுதல்)

சன் :
"வில்லனில்லாக் காதலும் பெண்களில்லாக் கல்லூரியும் சுகமில்லை என்பார்கள் சான்ருேர் ! தேர்விலே சிலமுறை என்ன— பலமுறை தோல்வி கண்டேன்— கலங்கவில்லை ! ...பெண்கள் மத்தியில் வகுப்பு கடத்தப்பட்டேன் !—வெட்கப்படவில்லை ! கடைசி பெஞ்சில் குறட்டை விட்டுத் தூங்கினேன்—கனவு காணவில்லை!...ஆனுல் என் இதயத் தாமரைகளிலிருந்து உதயகுமாரியைப் பிரித்தால் போய் விடுமே மண்ணுக — என் பொன்னுன வாழ்வு !

"டேய் ஒரே சான்ஸ் !— உன் எதிர்கால மாமனுர் ஞானமார்க்கத்தை எலக்ஷனிலே ஜயிக்க வச்சிட்டே உனக்குத் தான் அவர் மகள்! நான் அவர் வீட்டுக்குப் போய் ஏற்பாடு பண்றேன் !"

"ஆகா ... இந்த சன்மார்க்கத்திற்கு ஞானமார்க்கத்தை அடைய ஒரு மார்க்கங்கண்ட கோதண்டம் வாழ்க ! என் நெஞ்சில் இரத்த ஓட்டம் இருக்கும் வரை உன்னை மறக்கமாட்டேன் ... போய் வா ! வெற்றியோடு மீள் ! ! வெற்றி வேல் ! வீரவேல் !... ஆ...ஊ... (கதறுதல் கோதண்டம் போதல்),

உதயா : சார் ... சார் ... உள்ளே வரலாமா? கோதண்டம் இருக்காரா ?

சன் : யார் ... யாருமில்லை, கோதண்டமுமில்லை ! எமகண்டமுமில்லை !

உ : எமகண்டம் தான் நீர் இருக்கீறே !...

சன் : ஆ... (திரும்புதல்) ... அட...ஹி ..ஹி — வாங்க ...உங்க பேரு ... உதயா இல்லே...என் பேரு... எஸ். எம். 'கம்' (gum). அதாவது சன்மார்க்கம் ... உட்காருங்க... நான்கூட டிராமாவிலே குண சித்திரமா..

உ : அடே ... டே ... அந்த காலத்து.ராஜபார்ட் மாதிரி ... பிரமாதம் ! எனக்கு வேலை அதிகம். Mr. கோதண்டம் வந்தா என் மாமன் மகன் வேதாந்தம் மேரேஜ் ! பண்ணிக்கப் போறது இந்த உதய குமாரி இல்லே. யு. தயா குமாரி அது வேதாந்தத் திற்குத்கூடத் தெரியாது' ன்னுங்க.
போதல்)

சன் : ஆகா...நான் பிழைத்' தேன். என் காதல் தழைத்தது. அட...காஃபி கூட சாப்பிடாம போறிங்களே ! ...(மனதுக்குள்) டேய் சன்மா ! நீ பிறவிப் புண்ணிய சாலி !

(ஞான மார்க்கம் வந்து கொண்டே டேய் அம்பி.' கோதண்டம்! கோதண்டம் !! ...யாரு நீ...தான் சன்மார்க்கமா ?... நல்ல திவ்யாலங்காரமா இருக்கே !...ஹி...ஹி என் நாமம் ஞானமார்க்கம். வேதாந்தத்தின் சாட்சாத் தாய் மாமன். எலக்ஷன்லே நிக்கிறேன்...திருமண் தான் 'சிம்பல்' தனியொருவனுக்கு 'புட்' (food) இல்லை யென்ருல் இந்த 'ஒரல்டு' (world) 'டிஸ் சால்வு' (disolve) பண்ணிடனுங்கிறது தான் 'மோட்டோ' (motto). நாமத்தைக் கண்டு அடியார்கள் மெய்யன்பர்கள் சொக்கி வாக்கிடுவாங்க. என் பேச்சுலே 'லயிச்சி' நீ இப்பருக்கிற மாதிரி மற்ற 'ஸ்டுடன்ஸ்' 'லைக்' (like) ஆயிடு வாங்க ...தேர்தல் வேலை செய்யற வாளுக்கு தத்தி யோண்ணம் புளியோதரைப் பட்டை... பட்டை பட்டையா ... விடுறது...உன்னை நம்பித் தான் காரியத்திலே இறங்குறேன்.. என் மகள்கூட... நீ ... எனக்காக உயிரைக் கூட கொடுப்பே...ன்னு!"

சன் : "இந்தாங்க...(உதயா மறந்துவிட்டுச் சென்ற 'பை'யைத்தருதல்).

ஞான : "அட உயிரா !... வேணும்பா...ஜீவ ஹிம்சை கூடாது... நான் வாரேன்.. ஸ்டுடன்ஸ்—அரசியல்ல தான் பங்கு கொள்ளப் படாது. தேர்தலுக்கு வேலை செய்யனும் தெரியுதா ?... இன்னும் பத்து நிமிஷத்திலே (போதல்)

வே : (வேதாந்தம் வந்து கொண்டே)... என்ன சன்மார்க்கம் ... புளியோதரை வாசனை அடிக்குது...எங்க மாமன்...வந்தாரா !உம்... இன்னும் ... அரைமணியிலே ... அவர் தலைவிதி தெரியும் ... பிறகு என் மாமன் மகள்— காதலி — கள்ளி உதயா ... என் கையில் ... ஹ ஹ' ஹ ஹ ... எல்லாம் இன்ப மயம்...

சன் : போதும் நிறுத்து !... உன் கண்ணைத் திறந்து இதைப் பார்... நீ மணக்கப் போவது உதய குமாரியல்ல !
...உ. தயாகுமரி—ஈ. எஸ். எல். சி. (பெயில் நன்ருகப் பார் !

வே : ஆ...(வசனம்பேசுதல்) என் கண்களை நம்ப முடியவில்லையே...ஏமாந்தேன்... கடுமையான கொடுமையான ஏமாற்றம் !... பஞ்சவர்ணக்கிளி போல் ஒரு பெண் உதயா வைத்தருகிறேன் என்று நெஞ்சில் நெருப்பைக் கொட்டி விட்டாளே ! பூதகி என்னைத் தின்றிருக்கலாமே அவள் ! மாமியாள் !... பூமியாள வந்தவள் !... உட்கார்ந்து சாப்பிடும் குதிர் ? வம்பின் பிறப்பிடம். வழக்கிடும் இருப்பிடம் ! எல்லாம் !...

சன் : டேய்...நிறுத்து ! என் எதிர்கால மாமியாரைத் திட்டாதே !

வே : என் சொந்த உரிமையைப் பறிக்காதே ! நீ யார் என் மாமன் மனைவியைப் பற்றிப் பேச...

சன் : எதிர்கால மாப்பிள்ளை ...ஆ......
(கோதண்டமும் உதயாவும் கழுத்தில் மாலையுடன் காட்சி அளித்து) ஏற்கனவே சொல்ல மறந்துட்டோம்.
இப்பத்தான் 'ரிஜிஸ்டர் மேரேஜ் 'பண்ணிக் கிட்டோம். ஏன்னு... மிஸ்டர் ஞானமார்க்கம் தேர்தலிலே தோல்வியடைந்து சாகக் கிடந்தார். அவரை வாழ்விக்க அவர் மகளாகிய உதயாவை... இன்றைக்கு சாயந்திரம் டீ பார்ட்டிக்கு வாங்க !
(ஞானமார்க்கம் ஓடிவந்து கொண்டே...) அடே ... அய்யாக்களா ! போச்சுடா ... மானம் மரியாதை கவுரதை எல்லாம் போச்சு ! பட்ட சாதம் பட்டை பட்டையா போச்சு ! தேர்தல் போச்சு! என்குடும்ப கௌரதையையும் இந்தப் பாதகி ... போக்கிட்டா ! எல்லாம் திருமண் ரகஷ்ய மாயிடுச்சி...சிம்பல் தான் மிச்சம் !
வேதாந்தமும் சன்மார்க்கமும் : எங்களுக்குந் தான் மாமா !

பின்பாட்டு

காதலிலே தோல்வி பெற்ருன்
காளை ஒருவன் !
கதருகின்ருன் அவளின்
மாமன் மகனும் !
தேர்தலிலே தோல்வி பெற்று
நாமமடைந்தார்
தத்தியோன்னம் பட்டை
தனில் செல்வம் இழந்தார்
ஈன்றெடுத்த மகளை
பறிகொடுத்தார் !
ஏல்லோரும் ஒன்ருய் ஏ...
மாற்றமடைந்தார்.

—கோவிந்தராமானுசன்

மகளிர் மாண்பு

" தற்காத்துத் தற்கொண்
டார்ப் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வி
லாள் பெண் "

என்று பெண்ணுக்கு இலக்கணம் சொல்லிப் போந்தார் தெள்ளுதமிழ்க் குறள் தந்த வள்ளுவப் பெருந்தகை. அதாவது பெண்ணின் பெருஞ் செல்வமாம் கற்பு நெறியினின்றும் வழுவாமல் தன்னைக் காத்து, தன் மலர்க் கழுத்தில் மாலைசூட்டி மனைவியாக ஏற்றுக்கொண்ட தனது மணாளனின் மனம் கோணாதபடி அவனுக்குப் பணிவிடைகள் புரிந்து, வாழ்வின் இன்ப துன்பங்களிலும் பங்கேற்று அவனையும் காத்து, இவர்களிடத்திலே இருக்கின்ற உள்ளன்பு, ஒற்றுமை ஆகியவற்றை உற்று நோக்கிப் புகழ்கின்ற மற்றவர்களின் சொற்படி, அந்த நிலையினின்றும் தவறாமல் அந்தப் புகழையும் காத்து, இத்தகைய நற்குணங்களைக் கடைப்பிடிப்பதில் சோர்வின்றி, வாழ்பவள் தான் பெண் என்று மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கின்றார். அது மட்டுமா? பெண்களுக்கு வீரம் வேண்டும் அன்றொரு நாள்.

ஈன்றெடுத்த தந்தையும், கைப்பிடித்த கணவனும் களத்திலே மாண்டு விட்ட சேதி கேட்டுப் புலம்பி அழவில்லை; மாறாகப் புன்னகை பூத்தாள் புறநானூற்று வீரத்தாய் ஒருத்தி, இருவரும் போனாலென்ன? என் மகன் ஒருவன் இருக்கிறான். அன்னை நாட்டின் அடிமை விலங்கொடிக்க, அதற்காகத் தன் இன்னுயிர் கொடுக்க, என்று எண்ணி அகமகிழ்ந்தாள், மழலை மொழி பேசி மகிழ்வித்த தன் ஒரே ஒரு செல்வச் சிறு மகனை அழைத்து, சீவி முடித்துச் சிங்காரித்து, மகனே! போர்க்களம் சென்று வா, புல்லர்களை வென்று வா! என்று ஆணையிட்டு, ஆசி கூறி அனுப்பி வைத்தாள் ஒரு வீரத்தாய் என்று படிக்கின்ற நேரத்தில் நம்மையறியாமல் வீர உணர்ச்சி மேலிடுகிறது நமக்கு. ஆனால் இன்றைய நிலையை நினைக்கின்ற நேரத்தில் நமது இதயம் வேதனையால் விம்மித் தணிகின்றன. காரணம்? புராணப் புளுகுகளிலும், மதக்கட்டுப் பாடுகளிலும், சாத்திர சம்பிரதாயங்களிலும் மூடப்பழக்கங்களிலும் மூழ்கடிக்கப் பட்டு விட்ட தாய்க்குலம் புலி என்றால் கிலி கொள்கிறது. வானத்தில் பறக்கும் கருடனைக் கூடக் கரங்கூப்பி வணங்குகிறது. இந்த நிலை மாறி பகுத்தறிவு ஒளிபெற்ற பத்தரை மாத்துத் தங்கமாய் இந்நாட்டுத் தாய்க்குலம் பிரகாசிக்க வேண்டும். அடுத்து இன்னொன்றையும் மிக வருத்தத்துடன் குறிக்க வேண்டியுள்ளது. ஆம், பரத்தையரின் நடமாட்டம் இப்பொன்னாட்டு வீதிகளில் பெருகி விட்டதைத் தான் குறிப்பிடுகிறேன்.

" நெஞ்சில் பிறன் நினைந்தாள்.
அஞ்சுகம் நிறையழிந்தாள் "

என்பது என் தமிழ்ப் பெண்ணின் பண்பு. ஆனால், கற்பின் செல்வியாம் கண்ணகி பிறந்த கன்னித் தமிழகத்தில், நள்ளிரவு நேரத்தில் கள்ளனைப் போல் வருகின்ற கயவர்களை காமவெறியர்களை வரவேற்று, அவர்கள் வீசியெறியும் சில வெள்ளிக் காசுகளைப்பெற்று, விலைமதிக்க வொண்ணாத் தனது கற்பைஇன்பம் என்ற பேரால் அள்ளிக் கொடுத்து, அவல வாழ்வு நடத்துகின்ற கன்னியரின் கறைபடிந்த வரலாற்றை செய்தித் தாள்களின் மூலமாக அன்றாடம் கண்ணுற்றுக் கண்ணீர் வடிக்கிறோம். இந்த நிலை மாறியாக வேண்டும். தரணி வாழ் மக்களுக்கு நாகரிகம் கற்றுத் தந்த தமிழ்த் தாய்க்குலம், மீண்டும் தன் பழம் பெருமை அடையப் பாடுபட வேண்டும்.

இறுதியாக, தென்னகத்து மேதையாம்—திராவிடர்க்கோர் திசைகாட்டும் திருவிளக்காம் அறிஞர் அண்ணா அவர்கள், பெண்ணுக்குத் தேவை என்று சுட்டிக்காட்டியுள்ள இலக்கணத்தைச் சொல்லி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

" பெண்களுக்கு அடக்கம் இருக்கவேண்டும்; ஆனால் அசடாக இருக்கக் கூடாது. அழகு இருக்க வேண்டும்; ஆனால் ஆளைமயக்கும் நோக்கம் இருக்கக் கூடாது. சகஜமாகப் பழகும் சுபாவம் இருக்கவேண்டும்; ஆனால் சந்து பொந்து திரியும் நோக்கம் இருக்கக்கூடாது "- அண்ணா.

எட்டுச் சுரைக்காய்

கூடலூர் "தமிழ்மணி"

முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டந் தன்னை
முடிப்பதற்கே வழியில்லாக் காலம் நீள
கதைக்கின்ற மூன்றாண்டுத் திட்டம் வேறு
காங்கிரசார் ஆட்சியிலே முளைத்த தின்று!
இதமான செயலேதும் இல்லாத் திட்டம்
இருப்பவரின் கையோங்கச் செய்யும் மீண்டும்!
விதவிதமாய்க் கூறுகிறார் விளக்கம் ஆனால்
விளங்காதப் புதிராக இருப்பதேனோ?

வெயிலென்றும் மழையென்றும் உழைப்போர் நாளும்
வெந்தழலில் நொந்துழலும் நிலைமை நீக்கச்
செயல் நோக்க விளக்கமதில் காணோம் அன்னார்
சேமநலம் தனில் உலையே வைக்கக் கண்டோம்!
வியர்வையிலே பூக்கின்ற சமுதாயந்தான்
விண்முட்டும் புகழ்காக்கும் மாற்றோரேத்த
வயல் பூத்தச் செழுமையிலே தொழிலே வேண்டும்
வாடுகின்ற தென்னவர்க்கு வாழ்வேவேண்டும்!

பொதுவுடைமை சமதர்மம் 'சோசலிசம்'
பொதுவாகப் பேசிடவே என்றுங் கேட்டு
முதுகிழமாய்ப் போனதுதான் நாளும் கண்டோம்
முயற்சியிலே உருவாகும் திட்டம் இல்லை!
மதுவுண்ணும் நிலைகொண்டோன் பேச்சில் காணும்
மயக்கந்தான் காங்கிரசார் அரசில் இன்று!
நிதமிந்தப் பணிகாட்டும் முறையே என்றால்?
நாட்டிற்கேன் புதுத்திட்டம் இவரால் மட்டும்?

உருக்காலை உற்பத்தி எல்லாம் ஆங்கே!
உருப்படியாய் ஒரு தொழிலும் இல்லை ஈங்கே!
பொருத்தமுறும் புகழ்விளங்க முத்துச் செல்வம்
போற்றிடவே தரும் "தூத்துக் குடி"யை விட்டார்;
கரிய உளப்பான்மையுடன் ஆய்ந்தே மாறாய்
'கண்டாலா' துறைமுகத்தை கண்டார் ஆங்கே!
வெறி யூட்டுங் கயவரவர் செய்யுந் திட்டம்
வெறி யூட்டுங் கடிவிரைவில் நமக்கோர் நாளே!

தாய்மொழியும் தமிழுக்குக் காப்பும் இல்லை!
தாயகமாய் நிற்பதற்கு நிழலுமில்லை!
ஓய்வின்றி உழைத்துடலம் சோர்ந்தோம், தொட்டு
உணர்த்தவரும் உணர்வினையும் இழந்தோம்-வெள்ளம்
பாய்ந்தோடும் புனல்போன விலைகள் ஓட
பயந் தெண்ணிப் பட்டினியில் துயரே யுற்றோம்
வாய்மையொடு பிறந்துவிட்ட நாமோ இன்று
வகை யற்றோம்! நிலையற்றோம்! திட்டம் ஏனோ?

சேலத்துக் கனிப்பொருளைப் பெற்றோ மில்லை!
செயல் விளைக்கும் நெய்வேலிக் கையிலில்லை!
வாலைக்கு மரியவளின் தவத்திற்காக
வானெழும்பிக் களியாடும் 'சேது'ம் இல்லை!
காலத்தில் நிறைவேறா வண்ணம் நீட்டிக்
கள்ளமுடன் கொலைத்தொழிலை நிகழ்த்துகின்ற
வேலையில்லாத் திட்டம் இவை கனவே யாகும்!
வெறு மேட்டுச் சுரைக்காய்தான் மூன்றாந் திட்டம்!

ஆடவர் மாண்பு

நான் விரும்பிப் படிக்கும் இனமுழக்க இதழில் ஆடவரின் பண்பைப் பற்றி விவரிக்க பெண்களுக்கு கொடுத்துள்ள ஓர் சந்தர்ப்பத்தைப் பார்த்ததுமே எனக்கு நான் பழகும், ஆடவர்களாகிய என் அன்புக் கணவரும், என் உடன் பிறவாத சகோதரர்களின் அன்பும், பண்பும் ஒருங்கே காட்சி யளித்தது. அந்த எண்ணமே இக்கட்டுரையாக விரிவுற்றது.

பொதுவாகஆடவரை, யாவருமே அதிகாரப்பித்துபடைத்தவர் என்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் அன்புள்ளம் படைத்தவர்கள். அன்பே உருவானவர்கள். அவர்களிடம் உள்ள உயர்வான பண்புகளுக்கு மூலகாரண குணம் அன்பே. சுயநலமற்ற தன்மை தன்மனைவி மக்களுக்காக இரவு, பகலென்று பாராமல் உழைக்கும் உத்தமர்கள். தனது குடும்பத்தின் சுகமே தன் சுகம் என்று நினைக்கும் உயரிய பண்பு படைத்தவர்கள்.

உதாரணமாக எடுத்துக் கொள்ளுவோம். ஓர் கடையில் ஆடவர் புகுந்தால் முதலில் தன் மனைவிக்கு ஏற்றதாக நல்லபுடவை இருக்கின்றதா? தன் செல்வங்களின் அழகுக்கு ஏற்ப துணிகள் இருக்கிறதா? என்று பார்த்து விட்டுத் தான் தனக்கு உரியவைகளைப்பார்க்கிறார்கள். இவ்வுத்தம உயரிய பண்புகளை ஆடவரின்றி யாரிடம்எதிர்பார்கக முடியும். இவ்வாடவரிடம் கோபமே கிடையாதா? என்று கேட்கக்கூடும். ஆம்! உண்டு எந்தச் சமயத்தில் அவர்கள் களைத்துசோர்ந்து வீடு திரும்பும்போது மனைவி யானவள் கூடுமான வரையில் தன்னை அலங்கரித்து அதாவது பொன் நகைகளால் அல்ல புன்னகையால், வாசலில் நின்று வரவேற்காமல் வீட்டினுள் அல்லது யாராவது தன் தோழி வீட்டிற்குச் சென்று விட்டாலோ ஆடவருக்குக் கட்டாயம் கோபம் வரத் தான் செய்யும். வாசலில் நின்று அன்புடன் வரவேற்று களைப்புத்தீர சுடச் சுடக் காப்பி கொடுத்துவிட்டு, தன் தோழி வீட்டிற்கோ அல்லது குடும்பமாக சினிமாவிற்கோ செல்லவேண்டும் என்று கேட்டால் மறுப்பு உண்டாகுமோ? உண்டாகவே செய்யாது. இது ஆடவருக்கே உரிய ஓர் பண்பு.

மேலும் அவர்கள் சாட்பிடும் போதும் கூடவே இருந்து பரிமாற வேண்டும். எத்தனை வேலைக்காரர்கள் இருந்தாலும் மனைவி அருகில் இருந்து பரிமாறுவதையே அவர்கள் பெரிதும் விருப்பு கிறார்கள்.

சகோதர ஆடவர்களை எடுத்துக்கொண்டால், சகோதர அன்பு என்றும் பண்பு மிகுந்தது.

யாரிடமும் எந்தச்சமயத்திலும் எவ்வித நிலையில் இருந்தாலும் தன் சகோதரி என்று சொல்லிக் கொள்ளுவதில் பெருமையே கொள்வர். அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்

நமக்கு ஓர் அன்பு சகோதரர் இருந்துவிட்டாலே, அவரின் உயரிய பண்பே நம்மை உயர்ந்த நிலையில் வைத்து விடும், என்பதற்கு தடையேதும் இல்லை.

பொதுவாக தனக்கு ஏதாவது அசௌகரியமோ, சுகவீனமோ, இருந்தாலும் அதைமனைவி, சகோதரியிடம் சொல்லுவதில்லை, காரணம் ஏன்?

அவர்களை ஏன் தொந்தரவு செய்யவேண்டும், என்ற உயர்ந்த எண்ணம் தான். ஆனால் அது முற்றி நம்மைத் தான் துன்புறுத்தும் என்கிற எண்ணம் கிடையாது. இவ்வித அன்புத் தொல்லையை என்னவென்று உரைப்பது.

ஆடவர்களுக்கு குழந்தை புத்தியே அதிகம். குழந்தை மாதிரியேதான் பேண வேண்டும்.

பொதுவாக நமது திராவிடத்தின் திறமை மிகு ஆடவரிடம் " பெண்களே பெரும் பேயடா," " அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பேது " என்னும், பெண்களை கீழ் நிலைக்கு கொண்டு செல்லும் தாழ்ந்த மனப் பான்மை கிடையாது. பெண்களும், ஆடவரும் சமம், என்கின்ற உயர்ந்த பண்பே படைத்தவர்கள், என்றே நான் கூறுவேன்.

ஆகவே இவைகளைப் பின்பற்றி, வாழ்ந்து இந்தத் தங்கத் தரணியாம் திராவிடத்தின் தாய்க்குலம் எல்லாத் துறைகளிலும் ஏற்றமும் எழிலும் பெற்று இன்புற வேண்டும்.

வாழட்டும் தாய்க்குலம்!

வளரட்டும் தமிழ்ப்பண்பு!!

வணக்கம்!

—ஜானகி ஜோசா

கலைவளர் மன்றம்
5ம் ஆண்டு நிறைவுவிழா
30—10—60 ஞாயிறு
மாலை 6-30 மணி அளவில்
சென்னை சிந்தாதிரிப்பேட்டை
கலவச் செட்டித் தெருவில்
தலைவர்: **கே. வி. சீராமுலு**
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்,
கே. ஏ. மதியழகன், பீ.ஏ.
தி. மணிவண்ணன், எம்.சி.
கலைவளர் மன்றம், சென்னை-2

அலையே நீயா!

மாலை நேரம். மன அமைதிக்காக மணல் மேட்டில் அமர்ந்து மனச்சாந்தி பெற சென்றேன். கடற்கரை ஓரம் அமர்ந்தேன். அடுக்கிருக்கும் கட்டுமர ஓரத்தினிடை, ஒய்யாரமாக அல்ல, ஒடுங்கியபடி சற்று நோக்கினேன். ஓவென்றஇறைச்சலுடன் வரும் அலைகள் என்னை ஏளனம் செய்வது போலிருந்தது. காரணம் 'அமைதி பெறவேண்டி அலைகடலை நோக்கி வந்த அறிவிலியே அனுபவி' என்பது போலிருந்தது, அலைகளின் ஓங்கார சப்தம்.

என்னைவிட அமைதியற்ற நிலையில், எப்பொழுதுஉற்பத்தியானனே அன்றிலிருந்து இன்றுவரை அமைதியற்று இருக்கும் எங்களிடம், அமைதி பெறவரும் நீங்களெல்லாம் என்ன நினைக்கிறீர்கள் என் நிலையை? உங்களுக்கு எங்கு தெரியப் போகிறது என் நிலை? உங்கள் மனித சமூகத்தில் உள்ள பெருந்தனக்காரர்கள் எப்படி ஏழைகளையும் வலிவற்றவர்களையும் வாட்டி வதைத்து வெஞ்சினத்தினுல் விழுங்குகிறார்களோ. அதுபோலவே எங்களிடத்திலும் திமிங்கிலம் என்பவன் அவனுக்குள் வலிமை குன்றியவர்களை விழுங்குகிறான். அப்படியிருக்க நாங்கள் எப்படி அமைதியாக இருக்கிறோம் என்று எண்ணுகிறீர்கள்? ஆமாம்! உங்கள் முதுகே உங்களுக்குத் தெரியாதபோது என் நிலை எப்படி தெரியும்? என்பது போலிருந்தது குனிந்த நான் கோடிட்டுக் கொண்டிருந்தேன் மணலில். என்மீது சில நீர்த்துளிகள் விழுந்தன. கடல் அலையிலிருந்து வரும் நீர் திவலை என்று எண்ணினேன். தலை நிமிர்ந்தேன் ஆனால் என் அருகில் நின்ற நங்கையின் கண்ணீர் அது என்பதுசாட்சியாக அவள் கெண்டை நிகர் கண்கள் கண்ணீர் கசிந்ததைக்காட்டின. எள்ளி நகையாடும் பருவமல்ல நங்கையின் மேனி, ஞாயிறுகூட நாணக்கூடும் நல்ல அழகு நிற மேனி, நாயகனை இழந்தவள் என்பதைக் காட்டியது. கருமணியற்ற கழுத்து. நிமிர்ந்த நான் எங்ஙனம் என்ன இயம்புவேன்? அவள் நெற்றியை நோக்கினேன். அறிவுடையவள் என காட்டிற்று. அரை நிலா நெற்றி, அவள் புருவம் வளைவுற்ற வானவில்லை வலுவுக்கு இழுத்தது வம்புக்கு, அவள் கண்ணே கெண்டையையும் தண்டனிட செய்யும் சாயலில் அவள் கண்கள் கலங்கமற்றது. ஆனால் கண்ணீர்தான் கசிந்தது. அவள் வாய் கொவ்வையையும், கொஞ்சு மொழி கிளியும் கோபம் கொள்ளும் வண்ணத்தில் தன்னம் தங்கக் கிண்ணம், கட்டுடையர் காய்கள் இரண்டும் காளையர்களுக்கு நல் இன்பத்தைத் தூண்டும், இடையோ உடுக்கின் இடை, நடை எதிரியையும் சாய்த்திடும் படை, இத்தியாதியுடன் கூடியவள் தான் அந்த நங்கை, மாசற்ற மங்கை, உடன் பிறவாத தங்கை.

கண்டேன் பேச நா எழவில்லை. பேசத் தெரிந்தும் ஊமையென அசைவற்றிருந்தேன் என் நிலையையும்அவள் புரிந்து கொண்டவள் போல் என்னை நோக்கினாள். நோக்கியவள் ஏதோ சொல்ல நினைத்தாள் போலும், ஆனால் கண்ணீர்தான் கசிந்தது. காரணம் கேட்கவில்லை. நான் எண்ணினேன். அதையேஅவளும் இயம்பினாள்,'' தாங்கள் அமர்ந்திருக்கும் இதே இடத்தில்தான் சில மாதங்களுக்கு முன்னால் எனது காதலரும் நானும் பல எண்ணக் கோட்டைகளைக் கட்டினோம். அத்தனையும் கனவாகவே முடிந்தது. இத்தனை காலமும் என் கற்புக்கு களங்கம் ஏற்படாது தற் காத்து வந்திருக்கிறேன். கல்யாணம் என்ற இணைப்பு ஏற்பட்ட அன்றிரவே காலன் என் கணவர் வரவை எதிர் நோக்கியிருந்தான் போலும், கைகொடுத்துஅழைத்துக் கொண்டான். கல்யாண கோலத்திலிருக்க வேண்டிய நான் கைம் பெண் கோலத்தில் காட்சியளிக்கவேண்டியதாயிற்று. எப்படி யிருக்கும என் மனம்? என்னென்ன எண்ணியிருப்பேன், எண்ணியது அப்படியிருக்க எனது இருக்கையே வேறு விதத்தில் மாற்றிவிட்டார்கள், என்மாமனார் இல்லத்தில்.

எனது காதலருக்கு ஒரு தங்கையுண்டு. அவள் பூத்து புக்ககம் புக வேண்டிய நிலையிலிருந்தாள், புக்ககமும் புகுந்து ஒரு திங்களுக்குபிறகு பிறந்தகம் வந்தாள். வந்தவள் ஒருநாள் அண்ணி என்றழைத்தாள் அருகில் சென்றேன். பக்கத்தே இருந்த இருக்கையில் அமர்ந்தோம். அவள் கூறினாள், அண்ணி! என் கணவர் மிகவும்நல்லவர். கவினார்கூட ஒரு சில நிமிடங்கள்கூட என்னை விட்டுப் பிரிய மணம் சகியாதவர். அண்ணி சொல்ல மறந்துட்டேன். முதல் இரவில் நாங்கள் சந்திக்கும்போது. அங்கு பசும் பாலை காய்ச்சி வைத்திருந்தார்கள் பருகுவதற்காக, பால் வைத்திருக்கும் இடத்தைக் காட்டி பருகுங்கள், பால் என்றேன், "நீ அப்பால் இருக்க எனக்கு ஏன் இப்பால் என்றார்'' பின் எப்பால் வேண்டும் என்றேன்? நல்ல நினைப்பால், உன் பொறுப்பால் நீ யிருக்கும் பூரிப்பால், நம் பிணைப்பால், அது பெரும் அணைப்பால் பெறுவோம் சுசிரப்பால்'' என்றார். நெருங்கினேன். நேசக்கரம் நீட்டினார். பாசக்கரத்தால் அன்றிரவு முழுதும் அள்ளி அள்ளிப்பருகினோம்.ஆனந்தத்தை பகலவன் தன் பணியைப் பாருக்களிக்கும் நேரம் வந்ததுகூட தெரியாது, எங்களுக்கு நெடும் நேரம் வரை'' என்றுரைத்தாள் அவள். இதை என்னிடம் கூறும் அவள் எண்ணினாளா? நானும் ஒரு பெண்தானே அவள்! உரைத்த மொழியனைத்தும் என்னைப் புதுப்பாதைக்கு அழைத்துச் செல்லமலிருக்குமா? ஏன் அவள் புரிந்துக் கொள்ளவில்லை. அதுதான் போகட்டும் அதோடு விட்டாளா? நேற்று கூறுகிறாள். என்கணவரும் நானும் இணை பிரியமாட்டோம். அவர் என்னை. என்னென்ன கோணங்களில் ரசிக்கிறார் தெரியுமா? என்றால் இதை யெல்லாம் கேட்டு நான் மனநிலை சரியில்லாது பைத்தியம் பிடித்தது போலிருந்தேன் என் உண்மை நிலை யாருக்கு தெரியும். சில தினத்தில் அவளும் புக்ககம் போய்விட்டாள். அவள் போனது முதல், அவள் கூறிய முதல் இரவு கதை என் நெஞ்சத்தைவிட்டு நீங்க அதற்கு ஏற்றாற்போல் என் எதிர் வீட்டுக்குப் புதிதாக வந்த வாலிபனும் என்மீது பார்வையைச் செலுத்தினார். சிரிப்பார் நானும் சிரிப்பேன். சிறிது நிற்பார், நானும் நிற்பேன். இப்படியிருக்க அந்த நண்பர் எங்கள் இல்லம் வர வேண்டிய வேளை ஒன்று ஏற்பட்டது தானால் ஏற்பட்டதோ, அல்லது ஏற்படுத்தினாரோ தெரியாது. அவர் வந்த நேரம் யாரும் வீட்டிலில்லை. தெரிந்துதான் வந்தாரோ என்னமோ? வந்த வாலிபன் என்னை கேட்டான். வீட்டில் யாரும் இல்லையா? என்றான். இல்லை நீங்கள் படித்தவர்தானே என்றேன். பட்டம் பெற்றவன் என்றான், பரவாயில்லையே பகுத்தறிவு வாதியாக இருப்பான், என நினைத்தேன். ஆனால் அவன் ஒரு பத்தாம் பசலி. திருமணம் எப்போது? என்றான். நமக்குள் தீர்மானம்தான் தேவை, என்றென். கன்னியின் கன்னத்தை காயப்படுத்தலாமா என்றான். அதற்கு உங்கள் உபாயம் தான் தேவை. அபாயமில்லை என்றேன், பெயர் என்றான் தேன்மொழி என்றேன். அதைக் கேட்டவன் பேசவில்லை ஏன்என்றேன், அவன் சொன்னான், எனது அக்காள் அடிக்கடி சொல்வாள். எதிர் வீட்டில் ஒரு பெண்ணிருக்கிறாள். அவள் கல்யாணத் தன்றே கணவனை விழுங்கியவள், துர் அதிஷ்டக்காரி, வாழாவெட்டி, அவள் பெயர் தேன்மொழி என்பாள். அந்த தேன் மொழியா நீ, என்றான் ...அசைவற்று நின்றுவிட்டேன். சில நிமிட அமைதிக்குப் பிறகு ஆம்...நான் ஒரு விதவை என்றேன். நின்றவனை காணவில்லை. நிர்மலமாக இருந்தது, அந்த இடம். இந்த நிலையில் நான் என்ன செய்வது...அண்ணா! சொல்லுங்கள் அண்ணா!!

மறுபடியும் சொன்னாள். கணவனை நானா அண்ணா விழுங்கிவிட்டேன். புராணத்தில் சொல்லுவார்கள் பீமன் மனிதனை விழிங்கினான் என்று அதுபோல நானென்ன புராணகாலத்து பீமனா? அப்படியே கணவன் விழுங்கிவிட? எந்த பெண் அண்ணா கணவனை இழந்திருக்க சம்மதிப்பாள்? அது போகட்டும். புராணத்தை நம்புகிறார்களே, திருமணம்நடைபெறுவதற்கு முன் புரோகிதர் சொல்லவில்லையா? இதை புரிந்துக் கொள்ள புத்தி எங்கேயிருக்கிறது? இந்த புராண காலத்து மனித பிண்டங்களுக்கு பருவகாலத்துப்பெண்களின் உள்ள நிலையை, உணர்வதற்கு—யாரோ பாரதத்தில் துரௌபதையாம், அவளுக்கு ஐந்து கணவன்மார்களாம். அவளை பத்தினி என்று கூறுகிற பார்ப்பன பாசறையில் உலவும் மனிதர்களுக்கு என் உள்ள வேதனை எப்படி தெரியும்? ஆங்கில நாகரீகத்தை பின்பற்றும் அத்தனை பேரையும் கேட்கிறேன், நான் விதவை என்றதும் ஓடிவிட்டானே அந்த படித்த முட்டாள்! கழுத்தில் மங்கல்பம் என்ற மாலையில்லை என்றதும் மாற்றுப் பெயர் கற்பிக்கும் மடமையினரே எந்த ஆங்கில மாது தாலி அணிந்து இருக்கிறாள்.அவர்களில்உங்களிலே யாரேனும் விதவயைக் கண்டு பிடிக்கமுடியுமா? ஊர்க்கு உபதேசம் செய்பவர்களே! உண்மை என்ன உரைக்க முடியுமா? ஊரடங்கும் நேரத்தில் உலுத்தையான வேசியிடத்துக்கு போக, பாம்பை கயிறு என நினைத்து கைப் பிடித்து சுவர் ஏறினான் கம்பன் மகன் அம்பிகாபதி, பாம்பையும் கயிறு என நினைக்க செய்தது என்ன காதல் தானே? விதவை என்றதும் காதல் என்ன வேரற்ற மரம் போல் வீழ்ந்து விடுமா? இந்த நிலையே வளர்ந்து போனால் விபரீதம் ஏற்படும் என்றுநினைத்துத்தான் இங்கு வந்தேன் என்றாள். என்றவள் நிற்கவில்லை, நீலக்கடளனுள்ளே நீந்தி விட்டாள். அமைதியற்ற அலைகளினூடே அமைதி பெற்றுவிட்டாள் போலும், அமைதி பெறச் சென்ற நான் ஆறுத் துயருடன் அகல நினைத்தேன் அவ்விடத்தைவிட்டு. ஆனால்

அலை கடல் அழைத்தது போலிருந்தது. திரும்பினேன். மனம் வெதும்பினேன், அலை கடல் அனைத்த நங்கை ஆயிரம் வேண்டுகோள் விடுவதைப் போலிருந்தது. ஆண்களுக்கு ஏற்பட்ட சட்டம் என்போன்ற அலைகளுக்கு இல்லையா? ஆராய்ந்து ஆற்றல் புரியும் ஆண்கள் தோன்றும் வரை விதவைகளின் வாழ்க்கை வீண்தானா? அண்ணா! அலைகள் எனச் சொல்கிறீர்களே! அது என்ன தெரியுமா?'' என் போன்ற விதவைகளை அணைக்கக் காத்திருக்கும் கடலிருந்து வருவது; இங்கு வரும் காதலர்களைக் கண்டு, இறந்த விதவைகள் விடும் பெரு மூச்சி அது'' என்று கூறுவது போலிருந்தது. அமைதி பெறச் சென்ற நான் அல்லலோடு திரும்பினேன்...

—கோ. ஆழ்வார்

பொய் என்ன பொய்யோ?

(புலவர் பொன்னிவளவன்)

தினைமுதிர்த்து விளைந்திருக்கும் பெருங்கொல்லை! தினந்தோறும் அதைத்தின்னவந்து கிளிக்கூட்டம் தரும்தொல்லை! அதைத் தடுக்க ஒருகாவல்—அதைத்தவிர வேறு வழிஇல்லை.

நேரிழை ஒருத்தி அதற்குக் காவல்—இந்தத் தொழிலில் அவளுக்கு அளவு கடந்த ஆவல்! சிரித்தபடி அசைந்தாடும் பூங்கொத்து-சிப்பிக்குள் ஒளிந்திருக்கும் வெண்முத்து-இவைகளையும் மிஞ்சுகின்ற புன்சிரிப்பு அவளுக்குக் கிடைத்திருக்கும் தனிச் சொத்து! இவளைக் கண்டுவிட்டால் காளையர்களுக்கும் நிச்சயம் ஏற்படும் மனப்பித்து!

தேகமோ அவளுக்குப் பொன்னென மின்னும்! இதழோ தேன் கிண்ணம்! இதுவரை அவளுக்கு ஏற்படவில்லை காதல் எண்ணம்! தோழியும் அவளும் குந்தியிருப்பார்கள் பேசிய வண்ணம்! இணை பிரியாத தோழிகளுக்குத் துணை-இருவர் இருக்கையில் எங்கே போய்விடும் தினை? கொத்துத் தினையைக் கொத்த வரும் கிளி—குமரி இவளைக் கண்டாலோ அதற்குக் கிலி!

அவளோ தூரிகை எழுதாத காரிகை! வீட்டிலே வளர்ந்து வெளியிலே உலவும் தீட்டாத சித்திரம்! காலைமலரையெல்லாம் கண்விழிக்க வைத்துவிட்டு மாலையிலே மறைகின்ற மாணிக்கச் செங்கதிரோன் சிந்தும் ஒளிக்கதிர்தான் செந்தமிழில் பாடிற்று? கொட்டும் மாலையருவி கும்மாளக் குரலெடுத்துத் திட்டமிட்டு வைத்திருந்து திடீரென்று பாடிற்று? தித்திக்கும் கொம்புத்தேன் தினற வைக்கும் பாட்டாகி எத்திக்கும் தென்றலில்தன் எழில் காட்டி மிளிர்ந்ததுவா? தென்றலே பாட்டாகித் திசையெட்டும் தன்புகழைச்சென்று நிலை நாட்டிச் சிந்தை பறித்ததுவா?-என்றெல்லாம் கேட்டோர் இதயம் தடுமாற குன்றெல்லாம் சென்று குரல் மீண்டும் எதிரொலிக்கக் குமரி இவள் பாடுவாள்-குயிலோடு போட்டி போடுவாள்! ஆட்ட மயிற்கூட்டம் அதிசயித்து நின்றுப் பின் வாட்டம் அடையும் வகை வாடாத இளம்மங்கை ஆட்டமாய் ஆடுவாள்-பிறகு ஓட்டமாய் ஓடுவாள்! அந்த அந்திவானத்துச் செந்தழல் மேனியால் சுந்தரப் புன்னகை சிந்திடும் மலர்களைக் கிள்ளுவாள்-மடியில் அள்ளுவாள்—கூந்தலில் முடித்து கொண்டு துள்ளுவாள்!

ஒருநாள்...மயிலுக்கு மாருக ஆடி குயிலுக்கு மாருகக் கூவி, சோலை மலர்களைக் கொய்து, சுனையிலே நீராடி, துள்ளித்திரிந்த புள்ளிமானுக்கு ஓடவும் பிடிக்கு வில்லை- ஆடவும் பிடிக்கவில்லை-மலர்களைக் கூந்தலில் ஏத்தவும் பிடிக்கவில்லை! தோழிக்கோ நெஞ்சு துடித்தது. (தொடரும்)

மெலிடஸ் பாதையிலே பலர்!

உலக வரலாறு சொல்லும் பாடம்

''ஏதன்ஸ் நகர மக்களின் முன்னேற்றத்தில் பெரும் கவலை கொண்டுள்ள மெலிடஸ் என்னும் நான் சாக்ரடீஸ் என்று அழைக்கப்படுவோனும் இப்போது இந்த நீதிமன்றத்தின் முன்பு குற்றம் சுமத்தப்பட்டு நிற்பவருமான ஏதன்ஸின் குடிமகனின்மீது நான் தேசத்துரோகக் குற்றம் சுமத்துகிறேன்.

இதுவரை இந்த நகரத்து மக்களிடையே நிலவிவரும் கடவுள் நம்பிக்கையைக் குலைப்பதுடன், கடவுளே இல்லையென்று இந்த சாக்ரடீஸ் பிரச்சாரம் செய்கிறான். இந்த நகரத்தின் வருங்காலப் பிரஜைகளான இளைஞர்களின் உள்ளத்தில் 'சிந்தனை செய்' என்னும் புதிய தத்துவம் ஒன்றைப் புகுத்துகிறான். அதன் மூலம் அவர்களுக்கு ஏதன்ஸ் குடியரசின் மீது நியாயமாக வளரவேண்டிய பாசம் தோன்றாமற்போய்விடும் என்று நான் அஞ்சுகிறேன்.

இதோ உங்கள் முன்னிலையில் நிற்கும் சாக்ரடீஸ் இந்தத் தள்ளாத வயதிலும், மாலை நேரங்களில், மக்கள் கூடுமிடங்களிலெல்லாம் இவனது தூய்மையற்ற உள்ளத்திலிருந்து கிளம்பும் கொடிய செயல்களைப் புரியுமாறு மக்களிடம் பிரச்சாரம் செய்கிறான்.

இங்கே பிறந்த சாக்ரடீஸ் ஏதன்ஸ் நகரக் குடியரசு அவனுக்கு அளித்திருக்கும் உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தியது மன்னியில், நாட்டில் புரட்சி ஏற்படும் அளவுக்கு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுகிறான் என்று குற்றம் சுமத்துகிறேன். இந்த நீதிமன்றத்தின் முன் நிற்கும் சாக்ரடீசுக்கு சட்டம் இடம் கொடுக்குமளவுக்கு அதிகமான தண்டனை அளிக்க வேண்டுமென்று நீதியின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன். தண்டனை ஏதும் இன்றி சாக்ரடீசை இந்த நீதிமன்றம் விடுதலை செய்யுமேயானால், அதன்மூலம் இந்த ஏதன்ஸ் குடியரசின் வீழ்ச்சிப் படலத்தை நாமே துவக்கி வைக்கிறோம் என்பதைத் தெருவித்துக் கொள்கிறேன். என் எதிரே வீற்றிருக்கும் நீதிமான்களே, நான் சாக்ரடீசின்மீது சுமத்தும் குற்றம் அவன் மீது எனக்கிருக்கும் பகையால் அல்ல. நீதியின்மீது நான் கொண்டுள்ள பாசமும் இக்குடியரசின் வளர்ச்சியில் எனக்குள்ள ஆர்வமும்தான் காரணங்களாகும் என்பதைத் தெரிவிப்பதோடு மீண்டும் ஓர்முறை சட்டத்தின் எல்லைக்கோட்டின் அருகே உள்ள அதிக தண்டனையை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், வாழ்க நீதி, வளர்க நம் குடியரசு.''

ஏதன்ஸ் நகர நீதிமன்றத்தின் பேரறிஞன் சாக்ரடீஸ்மீது குற்றம் சுமத்திய கொடியோன் மெலிடஸ், சாக்ரடீசுக்கு கடுமையான தண்டனை தரவேண்டுமென வாதாடினான். சரித்திரம் இதை நமக்குச் சொல்கிறது.

''உலகம் உருண்டை என்று கூறும் இந்த உன்மத்தனை இவ்வுலகில் நாம் விட்டுவைக்கக் கூடாது. நமது பைபிளுக்கு விரோதமாக உலகம் உருண்டை என்று ஊர்தோறும் பிரச்சாரம் செய்யும் இவன், மதத்தின் முதல் விரோதியாவான். தூரதிஷ்டிக் கண்ணாடி ஒன்று கண்டுபிடித்தானாம். நாம் இதுவரை காணாத பல நட்சத்திரங்களைக் கண்டுவிட்டதாக மக்களிடம் பொய் சொல்லித் திரியும் இந்தக் கலிலியோவின்மீது நாம் குற்றம் சுமத்துகிறோம். நம் எதிரே நிற்கும் கலிலியோவின் விழிகளில் காணப்படும் மருட்சியையும், அவன் உடல் நடுக்கத்தையும் காணும்போதே நாம், அவன் உள்ளத்தில் உண்மையில்லை என்பதை அறியலாம். மதவிரோத பிரச்சாரம் புரிந்ததால்தான் இவனது உடல் மெலிந்து போய் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கிறான். என்றாலும் இவனுக்குக்கடுமையானதண்டனை அளிக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். கலிலியோ என்னும் இவனுக்கு நாங்கள் ஆயுள் தண்டனை விதிக்கிறோம்.''

ரோம் நகரில் அன்றோர் நாள் கூடிய மதகுருமார்கள் சபை கலிலியோவுக்கு கடுமையான தண்டனை தரவேண்டுமென்று விரும்பிற்று. கலிலியோவின் வரலாறு இதை நமக்குச் சொல்கிறது

''மன்னர்பிரானே, உங்கள் முன் நிற்கும் இவன் பரமபிதாவின்மீது நாங்கள் கொண்டுள்ள அன்பில் குறை கூறுகிறான். பாப மன்னிப்புச் சீட்டுகளை விற்கும் நாங்கள் பரமபிதாவின் எதிரிகளாம். எங்களை நோக்கி நேரடியாக கேள்வி கேட்க தைரியமற்ற கோழையான இந்த மார்டின் லூதர் என்பான், மாதாகோவில் கதவில் எண்பத்திரண்டு கேள்விகளை எழுதி ஆணிகொண்டு அடித்தான். பரமபிதாவின் நற்பெயருக்காகவே உழைக்கும் மன்னர் பெருமானாகிய நீங்கள் ஏழை குருமார்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு மார்ட்டின் லூதர் என்னும் இக்கொடியோனைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ஜர்மன் நாட்டு மன்னன் ஐந்தாம் சார்லசினிடம் இப்படிக் கேட்டனர் மதகுருக்கள்.

''நபிகள் நாயகத்தின் பெயரின்மீது நீங்காத பற்று வைத்து, இந்தத துருக்கி நாட்டின் ஆட்சிப் பொறுப்பை மாசுமறுவற்று நடத்திவரும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், இன்று நமது போலிசார் கைது செய்து வெஞ்சிறையில் அடைத்திருக்கும் கமால் பாட்சா என்பவனும், அவனது தோழர்களும் மேன்மை தங்கிய உங்கள் ஆட்சிக்கு எதிராகப் புரட்சித்திட்டம் ஒன்றைவகுக்கிறார்கள். இலக்கியக் கழகம் ஒன்

சி. பி. சிற்றரசு

றமைத்து சதி செய்யும் இந்த இராணுவத் தலைவர்களை நாம் உயிருடன் வெளியே அனுப்பினால், இவர்கள், எத்தனையோ காலமாக புகழ் மிகுந்துள்ள இந்த அட்டாமன் சாம்ராஜ்யம் அழிந்து போகச் செய்து, நபிகள் நாயகத்தின் கொள்கைக்கு விரோதமாக இந்தத் துருக்கி நாட்டு மக்களைத் திரட்டுவார்கள் என்று நான் அஞ்சுவதால், இவர்கள் அனைவரையும் உடனே தூக்கிலேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அட்டாமன் சாம்ராஜ்ய அதிபன் அப்துல் மஜீத்தின் முன்பு பேசினாராம் மந்திரி ஒருவர்.

''பண்டித நேரு என்று அழைக்கப்படும் இவர், இந்தியாவில், சூரியனே அஸ்த்தமிக்காத பெருமை பெற்ற பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சி ஒழியவேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார். மன்னர்பிரானின் ஆட்சிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் மோதிலால் நேருவின் மகன் பண்டித ஜவாகர்லால் நேருவின்மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டுகிறேன். இந்த நீதி மன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அதிகமான அளவு கடுமையான தண்டனை த வேண்டுமென்று மேன்மைதங்கிய நீதிபதியவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.''

அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் பண்டித ஜவகரின்மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்திப் பேசிய சர்க்கார் வக்கீல் இவ்வாறு பேசினாராம். காங்கிரசின் பழைய காலத்துச் சேவகர்கள் கூறுகின்றனர்.

உலகச் சரித்திரத்தில் இது போன்ற வழக்குகள் எத்தனையோ காணப்படுகின்றன. விசித்திர வழக்குகள், வேடிக்கையான நீதிமன்றங்கள் அத்தனையும் காணாதவர்களல்ல நாம். ஊரை ஏமாற்றித் திரியும் எத்தனையோ பேர்களை நீதிமன்றம் சந்தித்திருக்கிறது. உலகைத்திருத்த முயன்றோரையும் நீதிமன்றத்தில் நிறுத்தியிருக்கிறார்கள்.

கொள்ளையடிப்பது குற்றம், மாற்று நாட்டின்மீது படையெடுக்க முயல்வது குற்றம், மன்னர்பிரான் என்று அழைக்கப்படுபவன் மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தஎண்ணியபோது, அந்த ஆதிக்கத்தை எதிர்த்துப்போராடுவோரை நீதிமன்றம் சந்தித்திருக்கிறது. அரசியல் வழக்குகள், இராணுவ நீதிமன்றங்கள், இப்படிப் பல பெயர்கள் உண்டு. தனி மனிதன்மீது சர்கார் வழக்குத் தொடர்ந்திருக்கிறது. தனி மனிதன் சர்கார்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறான். வழக்கு—நீதிமன்றம் என்ற சொற்களுக்குப் பின் தீர்ப்பு என்ற சொல்லையும் எழுதித்தான் தீரவேண்டும்.

ஏதன்ஸ் நீதிமன்றம் பேரறிஞன் சாக்ரடீசுக்கு மரண தண்டனை என்று தீர்ப்பளித்தது. கலிலியோவுக்கு மதகுருக்கள் சபை ஆயுள் தண்டனை விதித்தது. கமால் பட்சாவுக்கு தணடனை அளித்தால் நாட்டிலே புரட்சி ஏற்படும் என்பதை உணர்ந்த மன்னன் அப்துல் மஜீத் அவருக்கு மன்னிப்பளித்தான். மார்டின் லூதரை ஜர்மானிய மன்னன் சார்லசால் தண்டிக்க முடியவில்லை.

★

செந்தமிழ் நாடக மன்ற இரவு பாடசாலை நிதிக்காக

30—10—60 ஞாயிறு
மாலை 6-15 மணிக்கு

செயிண்ட்மேரீஸ் மண்டபத்தில்
செந்தமிழ் நாடக மன்றம்
அளிக்கும் பி. வி. பதி தீட்டிய
எகிப்திய எழிலரசி

கிளியோபாட்ரா

என்னும் வரலாற்று நாடகம் நடைபெறும்.

வெங்கட்ராமனின் விபரீத ஆசை

சென்ற இதழ் தொடர்ச்சி...

போராட்டம்நடந்து ரொம்ப நாட்கள்வரை அமைச்சர் எட்டியே பார்க்கவில்லை. திடீரென்று ஒருநாள் ஆர்வி வந்துவிட்டார் என்றதும் தொழிலாளர்கள் தங்களது கம்பெனியின் முதலாளியான வெள்ளைக்காரன் 'ஆர்வி' தான் வந்துவிட்டாரோ என்று நினைத்தார்கள். கடைசியில் பார்த்தால் அமைச்சர் ஆர். வெங்கட்ராமனைத் தான் சுருக்கி ஆர்.வி. என்று சொன்னதாகத் தெரியவந்தது. இவர் வந்தும் சமரசம் ஏற்படாமல் கடைசியில் பிரச்சினை முதலாளிக்குச் சாதகமாகவே முடிந்தது.

கைத்தறியாளர் கூட்டத்தில் ஒருமுறை பேசும்போது இதே வெங்கட்ராமன் "நீங்கள் எல்லாம் இந்தத்தொழிலை மட்டும் நம்பியிருக்கக் கூடாது வேறு தொழிலும் தேடவேண்டும்" என்று திமிராகப் பதில் சொன்னார். பேட்ட வாய்த்தலை சர்க்கரை ஆலைப் போராட்டத்தில் 36 நாட்களுக்கு மேல் வாய் மூடி மௌனியாக இருந்த வரும் இதே அமைச்சர்தான். துறைமுகத் தொழிலாளர்கள் போராட்டத்தின்போது அவர்களுக்குக் கிடைத்த பரிசு துப்பாக்கிச்சூடு. குந்தாவில் நடைபெற்ற தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர்களுக்குக் கிடைத்தது குண்டாந்தடி. பக்கிங்காம் கர்னாட்டிக் மில் தொழிலாளர்கள் போராட்டம் ஆரம்பித்த போது அந்த ஸ்டிரைக்கைச் சட்ட விரோதமாக்கியது இந்தக் காருண்ய சர்க்கார். ஸ்டேட் பாங்கு ஊழியர்கள் போராட்டமும் இதே நிலையைத்தான் அடைந்தது. மத்திய சர்க்கார் ஊழியர்கள் போராட்டத்தால் பலருக்குச் சிறைவாசமும் வேலை போனதும் வழக்குத் தொடரப்பட்டதும் தான் கண்ட பலன். காணாததிற்குத் தொழிற்சங்க உரிமையைக் கூட பறிப்போம் என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டிருக்கிறது காங்கிரஸ் சர்க்கார். இவ்வளவும் போதாது என்று இப்போது போனசிலும் கை வைக்கப் பார்க்கிறது. இவ்வளவுக்கு அப்புறமும் அகில இந்திய ரீதியில் ஐ. என். டி. யு. சி என்ற பெயரால் காங்கிரஸ் தொடர்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிற்சங்கத்திலும் ஆட்கள் இருக்கிறார்களே என்பது வேதனை கலந்த வேடிக்கையாகத் தானிருக்கிறது.

3வது ஐந்தாண்டுத் திட்ட அநீதி கண்டனக் கூட்டம்

★

சென்னை இராயப்பேட்டை
அம்மன் கோயில் திடலில்
1-11-60 மாலை 6 மணிக்கு

தலைவர் : ஆ. பக்தவத்சலம்

பேசுவோர் :

அறிஞர் அண்ணா
நடிகமணி **நாராயணசாமி**
கோ. இளவரசு,
பொ. நா. சண்முகம்,
நாகை **என்.டி.சுப்ரமணியம்**
மோ. கண்ணபிரான்

முத்தமிழ் முன்னேற்ற மன்றம்
60வது வட்டம்

அரசியல் ஆணவம் அடாத செயல்

★ சி. பி. சிற்றரசு ★

ப. இ. இளங்கோ, பம்பாய்

கே : திராவிடத்தின் இன்றைய இட்லர் அவர்களே! இன்றுதிரைப்படத்தின் கதையின் தலைப்பையே சரிவர எழுதத் தெரியாத எழுத்தாளர்கள் எல்லாம் திரைப்படத்திற்கு கதை எழுதும்போது திராவிடப் பெருங்குடி மக்களின் மனதை தங்களதுஎழுத்தாலும் பேச்சாலும் கவரப்பட்ட நீங்கள் கதை வசனம் ஏன் எழுதக்கூடாது?

ப : நகரத் தந்தை என்ற தலைப்பில் ஒன்று எழுதித் தந்திருக்கின்றேன். எடுக்கத் தொடங்குவார்கள்.

ச. ரகுபதி, திருவண்ணாமலை

கே : அன்புள்ள அண்ணா. இந்தியை ஒழித்து விடுவோமென்று இன்னும் எத்தனை ஆண்டுகள் வரை சொல்லிக் கொண்டிருப்பீர்கள்!

ப : ஆண்டுக்கணக்கில் இருக்காது நிர்வாக மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. திங்கள் கணக்கிலேயே இந்தி எதிர்ப்பு இருக்கலாம்.

எஸ். துரை, சென்னை-1.

கே : ஆசிரியர் அவர்களே! ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், நான்கு வருடங்களுக்கு முன்னே குடும்பத்துடன் பழனிக்குச் சென்று மொட்டை அடித்துக்கொண்டு, ஆண்டவனைக் கும்பிட்டு வந்ததாக என் நண்பர் சொல்கிறார். நான் இல்லை என்கிறேன். இதில் எது உண்மை?

ப : ஆசைத்தம்பி மொட்டையடித்தது உண்மைதான். ஆனால் அது திருப்பதியில் அல்ல. திருச்சி சிறையில் சர்க்காரே சவர வேலை செய்துவிட்டது என்று உங்கள் நண்பருக்குச் சொல்லும்.

சரசுவதி, பம்பாய்

கே: காங்கிரஸ்காரர்களுக்கு சர்க்கார் பணத்தில் மாடுவாங்கித் தரப்போகிறார்களாமே! நிலமில்லாத,வண்டியில்லாத காங்கிரஸ்காரர்கள் அதனை எதற்கு உபயோகிப்பர்.

ப : (எம தர்மராஜாக்கள்-எப்படியும் உபயோகிப்பர்!

மணிமொழியன், துறையூர்

கே : பகுத்தறிவுக் கொள்கையில் நம்பிக்கையுடைய நான் தி.மு.க. உறுப்பினன். எனக்கு நடை பெறவிருக்கும் திருமணம் சீர்திருத்த முறையில் இருக்க வேண்டுமெனக் கேட்கிறேன். என் பெற்றோர் மறுக்கிறார்கள். ஆகவே பெற்றோர்களின் விருப்பப்படி வைதீகத் திருமணம் செய்து கொண்டு தி. மு. க. வில் இருக்கலாமா?

ப : கொள்கையை விடாமலிருப்பதுதான் நல்லது. துணிவைத் தருவித்துக் கொள்ளுங்கள்.

சி. சுப்பிரமணியம், கண்டியூர்

கே: இப்போது காங்கிரசின் நிலைமை எப்படி இருக்கிறது.

ப : தேர்தல் திருத்தலங்களை சுற்றி வருகிறது.

கே : மன்னிக்க முடியாதது எது?

ப : 'என்னன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைசெய்நன்றி கொன்ற மகர்க்கு என்று வள்ளுவரே கூறி இருக்கிறாரே.

கற்பக மணியம், மீர்சாகிப்பேட்டை

கே: சுயாட்சியை விரும்பும் ம. பொ. சி. சில அதிகாரங்களை மத்திய அரசினரிடமே விட்டு விடுவதுதான் சிறந்தது என பிடிவாதம் பிடிப்பது ஏன்?

ப: எப்படியும் அடிமைப் பூச்சியாகவே இருக்கவேண்டும். இதுவே அவரது கொள்கை!

சுந்தரி, பூனா

கே : தி. க. வுக்கும் தி. மு. க. வுக்கும் உள்ள கொள்கை வேறுபாடு என்ன?

ப : தி. க. வுக்குத் தலைவர் பெரியாரா காமராசரா என்று கேளுங்கள். அதில் பொருள் இருக்கிறது.

கே : நீங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் முதல் என்ன செய்வீர்கள்?

ப : பொருந்திருந்து பாரும்.

கே: நாம் திராவிட நாடு பெற்றுவிட்டால் ஆங்கிலம் எந்நிலையில் இருக்கும்?

ப : ஆங்கிலம் நமது ஆதரவைப் பெற்றிருக்கும்.

கே: இந்தியாவின் அடுத்த பிரதமர் யாராக இருக்கும்?

ப : திருமதி விஜயலட்சுமி பண்டிட்டாக இருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

கனக. சுப்பிரமணியம், சென்னை-1.

கே : நிதியமைச்சர் சுப்பிரமணியனும் அழகிரிசாமியும் உறவினர்களா?

ப : திரு. சுப்பிரமணியம் அவர்கள் செய்து கொண்ட கலப்புமணத்தால் உறவு.

அ. பிரகாசம் சென்னை-14

கே : ஐந்தாண்டுத் திட்ட அநீதி என்ன!

ப : உழைப்பவன் ஒருவன் — அதன் பலனை அடைபவன் வேறொருவன் என்ற நிலையை எப்படி அனுமதிப்பது கண்டனக் குரல் எழுப்பி முடிவு காணவேண்டாமா?

ப. இ. இளங்கோ, பம்பாய்-70

கே : ஆசிரியர் அவர்களே! மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் தென்னாட்டுக்குக் கிடைக்கும் தொகை எவ்வளவென்று எட்டு எட்டப்பர்களுக்குத் தெரிந்துவிட்டதா? அந்த எட்டப்பர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்களா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப : எட்டு எட்டப்பர்கள் தட்டிக்கேட்கமுடியாதே, கேட்டால் தலையில் குட்டல்லவா விழும் அவர்களுக்கு நாக்கிருக்கிறது ருசிக்க. வாக்கைக் காப்பாற்ற அல்ல.

கே: நமது கழகத்தார் வாதிட அழைத்ததால் காங்கிரசுக்காரர்கள் பயந்து சாகிறார்களே, ஏன்?

ப : அவர்களுக்கு வாதநோய் தான் பிடித்திருக்கிறதே தவிர, வாதத் திறமை அவர்களுக்கு எப்போதும் யாருக்கும் இருந்ததில்லை.

சங்கரன், இலங்கை

கே : நமது மாநில மந்திரிகள் தீபாவளியை எப்படி கொண்டாடியிருக்கின்றனர்?



ப : நித்தம் நித்தம் அவர்களுக்குத் தீபாவளிதானே! பஞ்சைகளைத் தாக்குவதும், எதிர்கட்சியினரைச் சுட்டுத் தள்ளுவதும், ஜனநாயகத்தை கொன்று தின்பதும் அவர்களது ஓய்வில்லாப் பணியாயிற்றே!

செ. க. சிங்காரம், அறந்தாங்கி

கே : நான் இதுநாள் வரையில் தி. மு. க. அனுதாபியாக இருந்தேன். உறுப்பினராக விரும்புகிறேன். உறுப்பினராவதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப : உங்களூரில், அல்லது அண்மையிலுள்ள தி. மு. கழகக் கிளையில் 50 புதிய காசுகளைச் செலுத்தி உறுப்பினராகலாம்.

கே : தேர்தலில் கம்யூனிஸமும் தி. மு. க. வும் கூட்டு சேர்ந்தால் அதில் சுதந்திரா கட்சி கூட்டுச் சேருமா?

ப : ஆச்சாரியார் பச்சைக் கொடி காட்டுகிறார். அது பச்சைக் கொடியா, பச்சைப் பாம்பா என்று தெரியவில்லை.

ச. இரா. பால்ராசு, திருச்சி

கே : ரஷ்யாவில் இருந்த பிரபல எழுத்தாளர் 'போரிஸ் பாஸ்டர் நாக்' என்பவர் கொல்லப்பட்டாரா அல்லது நோய் வாய்ப்பட்டு இறந்தாரா?

ப : அவரைக் கொல்லவேண்டியதில்லை. தன் அறிவை அவனியோர் மதித்திருந்தும் தன்னோடு பிறந்த சில அயோக்கியர்கள் மதிக்கவில்லையே என்று மனம் உடைந்து இறந்திருப்பார்.

சுந்தரம், திருப்பாச்சூர்

கே : டார்பிடோ சனார்த்தனமே நம் இயக்கத்திற்கு வந்து விட்டாரே! பெரியார் கூட விரைவில் வந்து விடலாம் அல்லவா?

ப : 62 தேர்தலில் அய்யாவின் நிலை அப்படியிருந்தால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

'இனமுழக்கம்' ஆண்டுமலர்
அண்ணாபிறந்ததின பரிசுப் போட்டி முடிவு

பரிசு பெற்றோர் :

1. திரு. மா. கணேசன்,
   4, பொன்னியம்மன் கோயில் தெரு,
   கசப்பா, வேலூர், வ.ஆ.
2. நாகை முத்து,
   எவர் சில்வர் வேலை,
   36, ஈஸ்வரன் கோயில் தெரு,
   பழைய மாம்பலம், சென்னை-17.
3. திரு. கு. செந்திவேல்
   செல்வ விநாயகர் கோயில் தெரு,
   பேட்டை, நெல்லை-4.
4. ஆ. அன்பரசு,
   அன்பு தையல் நிலையம்,
   பெரிய கடைவீதி, தாராபுரம்.
5. க. லெட்சுமணராஜு,
   கொட்டக்குடி, மேலூர் வட்டம்,
   மதுரை மாவட்டம்.
6. டி. எம். இராசன்,
   தலைவர் எம். ஜி. ஆர். மன்றம்,
   கண்ணன்புதூர், செண்பகராமன்
   புதூர் போஸ்ட் (குமரி மாவட்டம்)
7. திரு. என். ஏ. அஜீஸ்,
   எண். 1, பஜார் தெரு,
   சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

இவர்கள் எழுவருக்கும் பரிசுத் தொகையான ரூ. 100/-ம் சமமாகப் பங்கிடப்பெற்று தலைக்கு ரூ. 14-28 வீதம் 7—11—60 அன்று கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு:— மேலே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உரியவர்கள் பிரசுரிக்கப்பட்டுள்ள முகவரி சரியானதா என்று பார்க்கவும். இல்லையென்றால் பணம் கிடைக்கவேண்டிய சரியான முகவரியை உடன் எழுதியனுப்புக.

சரியான விடை அடுத்த இனமுழக்கத்தில் பிரசுரிக்கப்படும்.

திரைஒலி

நேஷனல் பிக்சர்சார் தயாரித்த சிவாஜி கணேசன் அளிக்கும்

பெற்ற மனம்

"பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்பது பழமொழி என்றாலும் பெற்ற மனத்தின் போராட்டங்களுக்குக் (Conflicts) காரணம் சமுதாய அமைப்பும். வாழ்க்கைத் தரத்தின் ஏற்றத் தாழ்வுகளுந்தான்! இலக்கிய உலகத்திலே மறுமலர்ச்சியையும் புதினத்திலே (Novel) புதுமையையும் கண்ட பேராசிரியர் மு. வரதராசனாரின் கதை தான் 'பெற்ற மனம்' ஐயாவின் போக்கிலே அறிஞர் மு. வ. வின் கருத்துக்களைத் தெள்ளு தமிழ் நடையிற்தந்து பெருஞ் சிறப்புப் பெறுபவர் திருவாரூர் தங்கராசு! பிச்சைக்காரனில்லாத சமுதாயத்தை உருவாக்கிக் குறள் வாழ்வு காணவிழையும் டாக்டர் மு. வ. வின் எண்ணங்கள் வசனங்களுடே பிரதி பலிக்கின்றன!

சிவாஜி கணேசன் மனப் போராட்டங்களின்போது நன்றாக நடித்துள்ளார்! மற்றவர்களைக் கிண்டல்செய்யும் முரடனாக நடிக்கும் போது எம். ஆர். ராதா நடையிலமைந்துள்ளது! வெண் தாடியோடு நடிக்கும்போது ஐயாவைப் போல நடிக்க முயன்றிருக்கிறார். பெரியாரோ அழகான சாக்ரடீஸ்!

அவர் போல் கர்ஜிக்கும் பெருமிதம் அந்த எம். ஜி. எம். சிங்கத்திற்குக் கூடக் கிடையாதே!

இலட்சிய நடிகர் இராஜேந்திரன் கச்சிதமாக நடித்துள்ளார்! குறள் மணக்கும் உரையாடல் - பளிங்குச் சொல்லாகப் பளிச்சிடுகின்றது.

புஷ்ப வல்லிதான் அன்னையாக நடிக்கிறார். துவக்கத்திலிருந்து கண்ணுக்கு மை தீட்டிக் கொண்டு (eye tex) அலுங்காமல் குலுங்காமல் நடித்துள்ளார். தாயின் குமுறல் வசனங்களில் தானுள்ளது! மற்றும் எம். என், ராஜம், விஜயலட்சுமி, சந்திர பாபு, எஸ். ஏ. ஜி. சாமி, சிவகங்கை ச. வான்மதி, (புதுமுகம்) ரங்கா ராவ், எஸ். வி. சுப்பையா முதலியோர் நடித்துள்ளனர். 'சின்ன' முத்துவாக நடிக்கும் பையன் திறமை சாலி!

குழந்தையைப் பணக்காரிக்குக் கொடுக்கும்போது பாட்டு பாடுவதும்; உல்லாசமாக வேற்றிடம் சென்று கூட்டத்தோடு 'ராக் - அன் - ரோல்' ஆடுவதும்; கனவு காணும்போது குறத்தி நடனமும்; மழையில் மணிவண்ணனை நனைய விடுவதும்; இசைத் தட்டுப் போட்டு விட்டு அங்கமுத்துவை ஆட வைப்பதும் நன்றாக இல்லை, கதையோட்டத்தைத் தடைப்படுத்துகின்றன.

பசியும் வறுமையும் தரும் காட்சி; டி. வி. நாராயண சாமி கூறும் கடவுட் கொள்கைகள்; இலட்சிய நடிகர் தரும் குறள் நெறி, வயதான மணிவண்ணனார் தரும் வாழ்க்கை நெறி அனைத்தும் பகுத்தறிவுக் கொள்கைகளாகும். இயக்குநர் பீம்சிங்கின் டைரக்ஷனில் புதுமை இல்லை — எப்பொழுதும் போலுள்ளது! அன்னை வெண்ணிலவாக — மணிவண்ணன் தெருவிலே மரங்களுடே நடந்து வரும் தூரக்காட்சி (long shot) நன்றாக உள்ளது!

காதலுக்கோ வீரத்துக்கோ முதன்மை தாராது — வாழ்க்கைத் தரத்தால் எழுந்த மனம் போராட்டத் திற்கே (Conflict) அதிகமான இடந் தந்துள்ளனர்! திரைப்படம் பொழுது போக்கிற்கென அமைந்தாலும் கருத்துச் செறிவுள்ளதாய் சிறப்படைகின்றது. இக்கருத்துக்களை உணருமளவிற்கு மக்களிடம் அறிவு வளர வேண்டும்— மக்கள் அறிவிற்குசுதந்திரம் தரவேண்டும்.

பெற்றமனம், இவ்வாண்டு திரை இலக்கியமாகும்!

அஞ்சான்

இனமுழக்கத்தின் அரையாண்டுத் திட்டம்

சினிமாவிற்கு பாடல் எழுதுவது எப்படி?

விவரம், விளக்கம் நாங்கள் தருவோம்

நீங்கள் எழுதுங்கள்!

ஒவ்வொரு வாரத்திலும் இடம்பெறுகின்ற பாடலுக்கு **கவிஞர் கண்ணதாசன்** கவிதை ஒன்று பரிசாகத் தரப்படும்.

"இனமுழக்கம்" தரும் இன்சுவை விருந்து!

நூமதீயபக்க நாவலாசிரியர்

கே. ஜி. இராதாமணாளன் எழுதும்

மறவர்குலத்து மணிப்புறா

புதிய தொடர்கதை

நவம்பர் மூன்றாம் வாரத்தில் தொடங்குகிறது

ஏஜண்டுத் தோழர்கள் அதிகம் பிரதிகளுக்கு முன்பணத்துடன் எழுதுங்கள்

"இனமுழக்கம்" சென்னை-2.

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர்: கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபால நாய்க்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

இனமுழக்கம்

ஆசிரியர் சி.பி.சிற்றரசு

உள்ளே...

★ பெருந்தன்மைவேண்டும்
★ வெறுப்பில் வளரும் கருப்புக்கண்ணடி
★ கேள்வி பதில்
★ கலங்கரை விளக்கு

சூதும் சூழ்ச்சியும் வீழ்ச்சி அடையும் நாள்-?

1-11-60-ம் நாளன்று 'மூன்ருவது ஐந்தாண்டுத்திட்ட கண்டனக் கூட்டத்'தில் நம் பொதுச் செயலாளர் அறிஞர் **அண்ணு** அறிவுரை புகன்ருர், மற்றும் நடிகமணி நாராயண சாமி, கோ. இளவரசு, எம்.சி., பொ. நா. சண்முகம், நாகை என். டி. சுப்பிரமணியம், மோ. கண்ணபிரான் முதலியோர் பேசினர். திரு. ஆ. பக்தவத்சலம் தலைமை தாங்கினுர்,

நம் வளர்ச்சி !

நம் கழகம் உருவாகி சில ஆண்டுகளே கடந்தன என்ருலும், நல்ல முறையில் வளர்ந்துள்ளோம். காங்கிரஸ் கட்சி உருவாகி இந்த நம் நிலையில் ஆண்டுகள் கழிந்தபோது, இவ்வளவு பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை. மூவாயிரத்திற்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களுடன் தழைத்து வளர்ந்துள்ளது. சென்ற தேர்தலில் சட்ட மன்றத்தில் குறைந்த அளவு இடங்கள் கிடைத்த போதும்—மொத்த ஓட்டெடுப்பில் மூன்றில் ஒரு பங்கிற்கு வாக்களித்துள்ளார்கள் ! இவையெல்லாம் நமது வருங்கால வெற்றியை உறுதிப்படுத்துகின்றன. ஊர்ப்புறங்களில் அடிக்கடிசென்று பிரசாரம் செய்து வருதலால் நகருக்கு வருதல் அரிதாகி விட்டது. மழையென்றும் கருதாது மக்கள் திரண்டிருப்பது—நம் கழகத்தில் மக்கள் கொண்டிருக்கும் மதிப்பும் நம்பிக்கையும் தெரிகிறது.

அவர்களும் நாமும்

நம் பட்டம் உயரப்பறக்கின்றது ! கையில் நூற் கண்டில் நூல் போதவில்லை. இருந்தால் இன்னும் உயரப் பறக்கும் ! மாற்ருர் கையில் நூற்கண்டு பெரிது—ஆனுல் பட்டம் கிட்டேபறக்கின்றது! அந்த நூற்கண்டு தான் நம் பொருளாதார நிலை ! எனவே பொருளாதார நிலையில் வசதியில்லாத நாம் தேர்தல் நிதி திரட்ட முற்படுகிருேம். இதைத் தவருன வழியில் பேசி மாற்றுக் கட்சியினர் நம்மை இழிவுபடுத்த நினைக்கின்றனர் !

நம்மை நாடகக்காரர்கள் என்கின்றனர். நாம் நாடகம் போட்டால் லாபம் வந்தாலும் வரும், நஷ்டம் ஏற்பட்டாலும் —கைப்பணம் போகும். ஆனுல் காமராஜரை ஒரு தினத்தாளில் சர்க்கஸ்காரருக்கு ஒப்பிட்டிருந்தனர்' அதில் . கரணம் தப்பினுல் என்னவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை. வரும் தேர்தலில்—காங்கிரசார் தரும் லஞ்ச ஊழல்களைப் புகைப்படமெடுத்து — உலக முழுதும் அறியச் செய்வோம். இதற்கு

வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

கொள்கையில் உறுதி

மந்திரி ஒருவர், ஏன் எல்லோரும் 'திராவிட நாடு திராவிட நாடு' என அடிக்கடிக் கூறுகிறீர்கள். நீங்கள் ஒருவர் கூறினுல் போதாதா ?' என்ருர். எங்கள் ஒவ்வொருவருக்கும் லட்சியக் கருத்துக்கள் ஒற்றுமையானதாகத் தானிருக்கும். நாங்கள் எந்த இடத்தில் — எந்த நிலையில் இருந்தாலும் ஏகோபித்த உரிமைக்குரலை எழுப்பத் தவற மாட்டோம் ! சட்டசபைக்கு வந்த நோக்கமே எங்கள் லட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ளத்தான். ஆதலின் எங்கள் கொள்கையின் உறுதி புலப்படும்.

அதுவேதான் காரணம் !

சுதந்திரம் கிடைத்தால் எல்லாம்சரியாகிவிடும் என்று அந்தக் காலத்தில் காங்கிரசார் 'சுதந்திரத்தையே' காரணங் காட்டுவார்கள். சுதந்திரம் கிடைத்து அவர்கள் செய்ததென்ன ? விலைவாசிகள் குறைந்தனவா ? மக்களுக்கு நன்மைகள் ஏற்பட்டனவா ? சிறிதேனுமில்லை.'

திருமணமாகாத ஒருவனுக்கு—உடல் நலமில்லை ! சாப்பாடு சரியில்லை ! உடம்பு இளைத்துள்ளது ! சரியாகக் கடமைகளை செய்ய முடியவில்லை ! — ஏனப்பா இப்படியுள்ளாய் ? என்ன குறையுனக்கு ? என்று கேட்டால் எல்லாவற்றிற்கும் காரணம்- 'கல்யாணம் ஆகவில்லை. கல்யாணம் ஆகவில்லை' என்றே கூறுவான். இதில் தவறென்ன இருக்கிறது ? அதேபோல நமக்கும் திராவிட நாடு கிடைத்தால்தான் மக்களுச்குப் பல நன்மைகளும் செய்ய முடியும் !

திராவிட நாட்டின் அருமையும் பெருமையும் அறிந்தவருக்குத்தான் தெரியும் ! மலடிகளுக்குக் குழந்தையின் கன்னத்திலே விழும் குழி—எண்ணத்திலே இனிக்கும். மலடிக்கு இது ஒரு 'மேடு பள்ளம்' போன்ற நிலைதான்!

அறிவும் சோறும் !

'அரிசி பற்ருக்குறையாக இருக்கிறது. அரிசியைக் குறைவாக சாப்பிட்டு—மற்ற கோதுமை போன்ற பொருட்களை அதிகமாகச் சாப்பிடுங்கள். அரிசி கிடைக்காவிட்டால்—அரிசியை சாப்பிடவே வேண்டாம். அது மூளையைப் பாதிக்கும்.' என்கின்றனர். இதையே பிரதமர் நேருவும் கூறியுள்ளார் !

அரிசிச் சோறு சாப்பிட்டு மாமேதையாகியவர் இந்த நாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஏராளம். உதாரணமாக திருவாளர்களான சர். சி. பி. ராமசாமி, ஆற்காட்டு —லட்சுமணசாமி காமராஜு போன்ற பெரிய மனிதர்கள் சாப்பிடுவதும் அரிசி உணவு தான். அந்தக் காலத்துக் கட்டபொம்மனிலிருந்து இந்தக் காலத்து கட்டபொம்மனுக்குக் கலையழகு கொடுத்த கணேசன் வரை சாப்பிடுவது அரிசிதான். இப்படிப் பழிப்புரை கூறியது, மக்களைமட்டுமல்ல—நம் மந்திரிகளையும் பாதிக்கிறது.

சூழ்ச்சி வெல்லுமா ?

சென்ற தேர்தலில் நமக்கு வாக்களித்தவர்கள் மொத்த ஓட்டெடுப்பில் மூன்றில் ஒரு பங்கு. அப்படியென்ருல்நியாயப்படி நாற்பத்தைந்து (45) இடங்கள்தான் காங்கிரசுக்குக் கிடைத்திருக்க வேண்டும் ! அதாவது நம்மைப் போல் மூன்றுமடங்கு இடங்கள் கிடைத்திருக்க வேண்டும் ! ஓட்டெடுப்பில் உள்ள சூழ்ச்சியாலும் தந்திரத்தாலும் அதிகப்படியான இடங்களைக் கவர்ந்தனர். இந்த நிலை இனியும் நீடிக்காது மக்கள் கண்டு கொண்டுவிட்டனர்.

இன்றல்ல, நாளை?

அறிவிப்பு

"**இனமுழக்கம்**" அலுவலகம் கீழ்கண்ட முகவரிக்கு மாற்றப்படுவதால், ஏஜண்டுத் தோழர்களும், வாசக நண்பர்களும் இனி கீழ்கண்ட முகவரிக்கே தொடர்பு கொள்ள வேண்டுகிருேம்.

"**இனமுழக்கம்**"
158, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

விலை 16 காசு

கலங்கரை விளக்கு

1783ம் ஆண்டு ஜூன் திங்கள் 5ம் நாள் மாலை நேரம். பிரெஞ்சு நாட்டின் அழகிய நகரங்களில் ஒன்றான அனேனேயில் (Annonay) ஒரே கூட்டம். ஆடம்பர உடையணிந்த பிரபுக்கள், அவர்கள் மாளிகையிலே உலவும் காரிகைகள், பொது மக்கள், பாட்டாளிகள் அனைவரும் அவசரமின்றி செல்கின்றனர். இன்று ஸ்டேட் ஜெனரலின் உறுப்பினர்கள் அங்கே வந்துள்ளனர். அந்த நகரத்தின் தோற்றம் விடுமுறை நாட்களைப் போன்றிருந்தது. தினசரி காணப்படும் நிலைமையில்லை. எல்லா மக்களுக்கும் ஒரே இடத்துக்குச் செல்கின்றனர், விருந்தினர்கள். இச்சம்பவத்துக்கென்றே அமைக்கப்பட்டோர், சர்க்கார் அதிகாரிகள் அனைவரும் கூடியுள்ளனர். பெரியதோர் மைதானம் அதன் மத்தியில் அதிசயப் பொருள் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. லினன் துணியினால் செய்யப்பட்ட பொருள் அது. உருண்டை வடிவமாகத் தயாரிக் கப்பட்டிருந்தது. அதன் அருகே நெருப்பு மூட்டி அப்புகையை அப்பொருளின் உள்ளே செலுத்துகின்றனர். சுற்றி நின்ற மக்கள் கூட்டம் கேள்விக் குறியுடன் அப்பொருளைப் பார்த்து நின்றது. அமைதியாக நின்றவர்கள், "ஆ!" என்று கூச்சலிட்டனர். கீழே துணியினால் செய்யப்பட்டிருந்த பொருள், திடீரென்று உப்பியது. கொஞ்சம் கொஞ்சமாக உயரமாக எழும்பியது. 'பலூன்' போன்ற வடிவம் வானத்தை நோக்கிச் செல்வதைக் கண்ட மக்கள் ஒரே ஆரவாரம் செய்தனர். உயரச் செல்கிறது. வானத்தில் வெகுதூரம் சென்றதும் பறவை ஒன்று பறப்பது போல் தோன்றியது. பத்து நிமிஷங்கள் சென்றன. உயரே சென்ற பலூன் வேகமாக கீழ்நோக்கித் திரும்பியது. புறப்பட்ட இடத்திலிருந்து அரை மைல் தூரத்திற்கப்பால் கீழே வீழ்ந்து விட்டது. மக்கள் கூட்டம் கலைந்து சென்று விட்டது. இரண்டு பேர்மட்டும் அந்தப் பலூன் வீழ்ந்தஇடம் நோக்கி ஓடினர். அவர்கள் முகத்திலே மகிழ்ச்சி. ஆம்! மனிதன் வானத்தை வென்றுவிட்டான். வான ஊர்தியை முன்மொழியும் பலூன் உலகில் முதல் தடவையாகப் புறப்பட்டுவிட்டது. அதோ ஓடுகிறார்களே இரண்டு பேர் ஜோசப் மைகேலும், ஜாகுவஸ் மாண்ட் கால்பரும் (Joseph Michael, (Jacques Etienne Montgolfer), அந்த இரண்டு பேரும் தான் பலூனை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள். வான வூர்தி என்று நாம் அழைக்கும் ஆகாய விமானத்தின் வழிகாட்டிகள். தரை, கடல், வானம் மூன்றையும் மனிதன் வெல்லமுடியும் என்றுகூறியவர்கள்.

ஜோசப் மைகேல் 1740லும், மாண்ட் கால்பர் 1745 லும் பிரான்சு நாட்டின் நகரான அனேனேயில் பிறந்தார்கள். அவரது தந்தையார் பேப்பர் மில் ஒன்றின் முதலாளி. மைகேல் சிறு வயதில் கல்வியில் ஊக்கம் உடையவராகக் காணப்பட்டார். அனேனே கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார், தந்தையின் பேப்பர் மில்லில் தனது திறமையின் மூலம் பல அபிவிருத்திகள் செய்தார். மில்லில் இவர் கூறிய மாற்றங்களைச்செய்ய இவரது தந்தை ஒப்புக்கொள்ள வில்லை. இயற்கையிலேயே சுதந்திர உணர்ச்சியுடைய மைகேல் தனியாகச் சென்று வைரன் (Vairon) என்னும் நகரில் அகஸ்டின் என்போருடன் புதிய பேப்பர் மில் ஒன்றைத் துவக்கினர். ஆனால் இவரது புதுமுறைகளைக் கையாளும் அளவுக்குப் பொருளாதாரம் இடம் கொடுக்க வில்லை. 1770ல் திருமணம் செய்து கொண்டு மில் நிர்வாகத்தை, தன் குடும்பத்தாரிடம் ஒப்படைத்து விட்டு, விற்பனையை அதிகரிக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டார். கால் நடையாகப் பிரெஞ்சு நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்றபோது இவர் உள்ளம் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யவேண்டு மென்று இவரைத் தூண்டியது. அத்துறையில் இவருக்கு பயன் ஏற்படாது போக இல்லை. அச்சு இயந்திரத்தில் புது முறைகளைக் கண்டு பிடித்தார். நெருப்பணைக்கும் பம்பு அமைப்பு முறையில் புதிய 'செட்' ஒன்றைத் தயார் செய்தார். பின்பு இவரது உள்ளம் வான ஆராய்ச்சியில் ஈடுபட்டது. அதே நேரத்தில் மாண்ட் கால்பரின் எண்ணமும் மைக்கேலைப் போன்றிருந்தது.

மாண்ட்கால்பர் தன்வாழ்க்கையைச்சிற்பத்துறையில்ஈடுபடுத்த எண்ணினர். செளபோட் (souffot) என்னும் சிற்பியிடம் சிறிது காலம் தொழில் பயின்றார். சிற்பக்கலை அவருக்கு வெற்றியளிக்கவில்லை. தன் தந்தையின் தொழிலின் மீது அவரது கவனம் சென்றது. பேப்பர் மில்லில் இவரது உழைப்பின் மூலம் ஏராளமான லாபம் கிடைத்தது. தொழில் உள்ளம் கொண்ட மனிதனின் ஆவல் தணிவது கிடையாது. புது ஆராய்ச்சிகள் ஏதேனும் செய்து அதன் மூலம் மக்களிடையே மதிப்பு பெறவேண்டு மென்று மாண்ட் கால்பர் நினைத்தார். அன்று உலகில் மனிதன் தன் கவனத்தைச் செலுத்தாத இடம் வானம் தான், மாண்ட் கால்பர் சகோதரர்கள் வாழ்ந்த காலம் எனலாம். வால்டேரின் அறிவுரைகள், ரூசோவின் சுதந்திர முழக்கம், குடியரசுத் தத்துவ வாதிகளின் அறைகூவல். இத்தனையும் பிரெஞ்சு நாட்டில் கேட்டுக் கொண்டிருந்த காலம். அங்கே வாழ்ந்த மக்கள் மறு மலர்ச்சியை நோக்கிச் சென்ற நேரம்.

ஆராய்ச்சி

இரண்டு சகோதரர்களும் சேர்ந்து தங்கள் ஆராய்ச்சியினைத் துவக்கினர்கள். வானத்தில் ஊர்ந்து செல்லும் மேகங்களை கண்ணுற்றார்கள். மேகத்தில் உள்ள வாயுக்கள் போன்று பெரிய பை ஒன்றில் வாயுக்களை நிரப்பினால் அப் பை உயரப் பறந்து செல்லும் என்ற முடிவிற்கு வந்தார்கள். பாரசூட் போன்ற துணைகளினால் உயரமான இடங்களிலிருந்து கீழே குதித்துப் பார்த்தார்கள். ஏழு அடி வட்டமுள்ள குடை ஒன்றை இணைத்தார்கள். கூடையில் ஆட்டுக்குட்டி ஒன்று வைக்கப்பட்டது. அவிக்னனன் நகரில் உள்ள கோபுரத்தின் உச்சியிலிருந்து அக்கூடையைக் கீழே அனுப்பினார்கள். அனேனேயில் உள்ள உயரமான மாளிகை ஒன்றில் உச்சியிலிருந்து மைகேல் பாரசூட்மூலம் கீழேகுதித்துவெற்றியடைந்தார்.

மாண்ட் கால்பர் ஓர்நாள் கொடியில் காய்ந்துகொண்டிருந்த சட்டை ஒன்றை கவனித்துக் கொண்டிருந்தார். காற்று வேகத்தில் சட்டையினுள் காற்றுப் புகுந்து அது பருமனாகி., உயர எழும்புவதைக் கண்ணுற்றார். அவர் மனதில் அப்போதுதான் 'பலூன்' பற்றிய நினைவு ஏற்பட்டது. அதன் பயன் 1783ம் ஆண்டு ஜூன் திங்கள் 5ம் நாள் உலகில் முதல் பலூன் பறக்கவிடப்பட்டது.

பிரகாசம்

உலகக் கவனம்

மாண்ட் கால்பர் சகோதரர்களைப் பின்பற்றி ஐரோப்பா வெங்கும் பலூன்கள் பறக்க விடப்பட்டன. வானத்தை வெல்ல வேண்டுமென்ற மனிதனின் நீண்ட நாளைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யப் பலர் முயன்றனர். 1783 ஆகஸ்டில் ராபர்ட் சகோதரர்கள் என்போர் ஜே. ஏ. சி. சார்லஸ் என்னும் விஞ்ஞானியின் உதவியால் பலூன் ஒன்று தயாரித்தார்கள். இப் பலூன் சில்க் துணியினால் செய்யப்பட்டு அதன் [illegible]ல் வார்னிஷ் பூசப்பட்டிருந்தது. இதன் உள் புகையைச் செலுத்துவதைவிட ஹைட்ரஜன் வாயுவை செலுத்துவது பயன் உள்ளது என்பதை கண்டறிந்தார்கள். இதனுள் வாயுவை நிரப்ப மூன்று நாட்கள் பிடித்தது. ஆனால் இப்பலூன் வானில் ஒரு மணி நேரம் தங்கியிருந்தது. அமெரிக்காவில் பில டெல்பியா விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தினர் பலூன் பரிசோதனை செய்தார்கள். 1785 ஜனவரி 7ம் நாள் அன்று பலூன் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து சென்றுவிட்டது. பிரான்சு நாட்டிலிருந்து அனுப்பிய பலூன் ஒன்று கடல் தாண்டி ஆங்கில நாடு போய்ச் சேர்ந்தது.

அரசர் அழைப்பு

அனேனேயில் நடைபெற்ற பலூன் பரிசோதனை பற்றிய செய்திகள் பாரீஸ் நகரை எட்டின. பிராஞ்சு அரசாங்க விஞ்ஞானக் கழகம் இந்தச் சகோதரர்களுக்கு அழைப்பு அனுப்பியது. இவர்களது சேவை போற்றத்தக்கது, விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவையானது என்று அக் கழகத்தினர் முடிவு செய்தனர். மன்னன் பதினாலாவது லூயி இவர்களுக்குப் பரிசளித்தான். மைகேலுக்கு நாற்பதாயிரம் லிவர்கள் (நமது நாட்டு ரூபாய்கள் போன்று மதிப்புடையது) பென்ஷன் அளித்து லூயி மன்னன் இவர்களைப் போற்றினான்.

1783 செப்டம்பர் 19ம் நாள் பிரான்சுப் புரட்சியில் கில்லெட்டினில் மாண்டுபோன லூயி மன்னன், அவன்மனைவி பேரழி, அஸ்திரியாவின் இளவரசி மேரி அண்டாய்னி இவர்கள் முன் மாண்ட் கார்பல் சகோதரர்கள் பலூன் ஒன்றைப் பறக்கச் செய்து மன்னர் தம்பதிகளை மகிழச் செய்தனர். அந்தப்பலூனுடன் ஒரு கூடையில் ஆட்டுக் குட்டி, சேவல், வாத்து இப் பிராணிகளும் அனுப்பப்பட்டன. அவைகளும் தங்கள் பலூன் பிரயாணத்தை நன்று முடித்துக்கொண்டு திரும்பின. ஆனால் கோழியின் வலது சிறகு மட்டும் ஆட்டுக்குட்டியின் தாக்குதலால் புண்ணாகிப் போயிருந்ததாம். இந்தக் காயம் பலூன் உயரச் செல்லு முன்பே ஏற்பட்டது என்று திர்ப்புக் கூறினார்கள், அங்கே கூடியிருந்த மக்கள்.

வானத்தில் மனிதன்

பிரான்ஸ் நாட்டில் அக் காலத்தில் ஒரு மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய அதிகமான பரிசு மன்னரின் அன்புதான். மாண்ட்கால்பர் சகோதரர்களுக்கு மன்னரின் பரிசும் கிடைத்தது. ஆனால் அவர்கள் மனம் நிம்மதி அடையவில்லை. மனிதன் உயரே செல்லவேண்டும். அது தானே அவர்கள் குறிக்கோள், தாங்கள் விரும்பும் கருத்துக்கள் மன்றத்தால் ஒப்புக்கொள்ளப்படும் வரை, தங்களது ஆராய்ச்சியின் பயனை மனித இனம் பயன் படுத்தும் வரை, சமுதாயம் தன் அறைகூவலை ஏற்று நடக்கும்வரை, அறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் என்போரின் உள்ளம் ஓய்வு பெறுவதில்லை. அதுபோல் மாண்ட் கால்பர் சகோதரர்கள், மனிதன் வானத்தில் செல்லவேண்டுமென்று விரும்பினர்கள். 1783 அக்டோபர் 15ம் தேதியன்று ஜியன் பிரான்காயிஸ் பிலேட்ரே என்பவர் முதல் தடவையாக பலூனில் உல்லாசப் பிரயாணம் செய்தார். 1784ல் இவர்கள் செய்த பலூன், லா காஸ்டவ் (La Custave) என்ற பெயரிடப்பட்டு ஏழுபிரயாணிகளை ஏற்றிச் சென்றது. அப் பிரயாணிகளில்ஒருவரான மாடம்டிபில் (Madam Tible) என்னும் பெண்மணிதான் வானத்தில் முதலில் பிரயாணம் செய்த பெண்மணியாவார்.

பேப்பர் மில் தொழிலில் வெற்றி காணமுடியாத மாண்ட் கால்பர் சகோதரர்கள் வானத்தை வெல்லமுடியும் என்பதை நிருபித்தார்கள். ஒரு தொழிலில் வெற்றி காணமுடியாத மனிதன், யாரும் எதிர்பாராத வகையில் வேறு தொழிலில்வெற்றி காண்பதைக் காண்கிறோம் நாம். மாண்ட் கால்பர் சகோதரர்கள் பலூன் உயரே செல்வதற்கு அதன் உள்ளே செலுத்தப்படும் வாயுதான் காரணம் என்று நம்பினார்கள். வெப்பத்தின் மூலம் பருமனில் அதிகமாகும் காற்றுத்தான் அதற்குக் காரணம் என்பதை அவர்கள் உணரவில்லை. ஆனால் வானவூர்தி என்று நாம் அழைத்துப் பெருமைப்படும் விஞ்ஞானத்தின் கருவியைப் பாருங்கள். நன்றாக்க் கவனியுங்கள். அதன் பின்னே இரண்டுபேர் பலூன் விடும் காட்சி தெரியும். விஞ்ஞானம் தன்னிடம் அடைக்கலம் புகுந்த எந்த மனிதனையும் மறந்துவிடுவது கிடையாது. ஜாகுவஸ் மாண்ட் கால்பர் 1789ல் மாண்டுபோனார். அதுதான் அவரது சரிதம். மைக்கேல் தனது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தினர் 1792ல் நடைபெற்ற புரட்சியின்போது, மரண தண்டனை விதிக்கப்பட்ட தன் நண்பர்கள் பலரை மீட்பதில் அவர் தன் செல்வாக்கு அத்தனையும் பயன்படுத்தினர். புரட்சித்தீ அவரது தொழிலையும் நாசமாக்கியது. நாட்டில் அமைதி ஏற்பட்டதும் அவர் பாரிஸ் நகரம் சென்றார். 'மனிதனே! நீ ஏன் வானத்தில் பறந்துசெல்லக்கூடாது? பறவைகளைப் பார். அவைகளுக்கு வானத்தில் செல்ல சக்தி இருக்கிறது. உன்னிடம் அச்சக்தி இல்லையா?' என்று விஞ்ஞானிகளின் உள்ளத்தைத் தட்டி எழுப்பி, மனித வாழ்வில் புது அத்தியாயம் ஒன்றை எழுதுமாறு செய்த ஜோசப் மைக்கேலுக்கு பாரிசில் கலைக்கழகம் ஒன்றில்தான் வேலை கிடைத்தது. சிலகாலம் சென்ற பிறகு, அரசாங்கம் அவரை, அரசாங்கக் கலை இலாகாவிற்குத் தலைமை அதிகாரியாக்கிற்று. பலூன் பரிசோதனைகள்பற்றி மைக்கேல் புத்தகங்கள் எழுதினர். நோயினால் வருந்தி 1880ல் ஜோசப் மைக்கேல் இயற்கை எய்தினர்.

இன்று சாதாரண மனிதனுக்கு மாண்ட் கால்பர் சகோதரர்களின் பெயர் மிகவும் சாதாரணமானதாகத் தெரியலாம். வானத்தில் பறந்து செல்லும் அழகிய விமானம், எதிரியின் நாட்டின் மீது குண்டு மாரி பொழியும் கோட்டை விமானங்கள், ஏன், ஆடிக்காற்றிலே சிறுவர்கள் பறக்கவிடும் பட்டம் இவைகளைக் காணும்போது, மாண்ட் கால்பர் சகோதரர்களின் பெயர் நினைவிற்கு வராமல் போகாது.

சீவக சிந்தாமணியில் விமானம் சென்றதாம், மயானத்தில் இறங்கியதாம். இங்கே இலக்கியம் உண்டு. இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றானும், விமானம் ஒன்றின்மூலம். இன்றும் அப் புராணத்தை நம் நாட்டில் படிக்கிறார்கள். ஆனால் விமானத்தில் காதலர்கள், அரசியல்வாதிகள், போர்வீரர்கள், ஏன்—குரங்குகள், யானைகள், அதிசயப் பறவைகள் அனைத்தும் விமானமூலம் செல்கின்றன. அதற்கு வழிகாட்டியவர்கள் மாண்ட் கால்பர் சகோதரர்கள். ஒரு காலத்தில் பறவை இனம் மட்டும் தான் வானத்தில் பறந்து செல்லும் வல்லமை பெற்றிருந்தது. இப்போது மனிதனுக்கும் அந்த வல்லமை உண்டு என்று எடுத்துக் காட்டிய மாண்ட் கால்பர் சகோதரர்களின்பெயரைப்போற்றுவோம்

இனமுழக்கம்
ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

மலர் 2] ★ 4—11—60 ★ [இதழ் 10

பெருந்தன்மை வேண்டும்

பொது வாழ்க்கை புனிதமானதென்று சொல்கிறோம். அதில்தான் இன்று பொய்யும் புரட்டும் நிறைந்திடக் காண்கிறோம். இதுவரை பொது வாழ்விலிருந்து விலகியவர்கள், இயற்கையாக மாண்டவர்கள், கொல்லப் பட்டவர்களின் பட்டியல் ஏராளம். அவர்கள் விட்டுச்சென்ற வேலைகளைச் செவ்வனே செய்து முடிப்பதற்காகவே பின் தலைமுறைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இறந்தவர்கள் கல்லறைமேல் மாலைகள் போடு வதும் மன்றங்கள், படிப்பகங்கள், நாடக மன்றங்கள், நூல்நிலையங்கள், பூங்காக்கள் வைப்பதும் நன்றி கொல்லாத்தன்மையைக் காட்டுகிறது. என் ருலும், மொழியால், கலையால், பண்பாட்டால் திருவிடம் எவ்வளவுதான் அதிசயிக்கத்தக்க மேன்மையை அடைந்திருந்தாலும், அரசியல் துறையிலே ஒரு அடிகூட முன்வைக்கவில்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. மேனாடுகளில் தேர்தலில் போட்டிப் போடுகிறவர்கள் எப்படி நடந்துக் கொள் கின்ருர்கள் என்பதற்கும் அதிக வேற்றுமையைக் காண்கிறோம்.

அண்மைச்சான்ருக நவம்பர் 8-ம் நாள் ஐக்கிய அமெரிக்காவின் குடி யரசுத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இருவரும் ஒருமுறை நேருக்கு நேர் டெலிவிஷனில் சந்தித்து அவரவர்கள் கொள்கைகளை, திட்டங்களை சொல்லி விவாதிக்கிருர்கள். இதை ஒரே நேரத்தில் கோடிக் கணக்கான மக்கள் பார்க்க வாய்ப்பும் வசதியும் ஏற்படுகிறது. அங்கே இரு பெரும் கட்சிகள். ஒன்று ஜனநாயகக் கட்சி; மற்ருென்று குடியரசுக் கட்சி. இவைகள் தவிர வேறு கட்சிகள் இல்லையா என்ருல் மிகச்சிறுபான்மைக் கட்சி ஒன்று. அதற்கடுத்தாற்போல் மதுவிலக்குக் கட்சி ஒன்று. இந்த இரண்டின் கொள்கைகளில் ஏதாவதொன்றை மேற்சொன்ன இரண்டு பெரிய கட்சிகளில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளுகின்றபோது பால் வற்றிப் போனதாயின் முகத்தை ஏங்கிய வண்ணம் பார்த்துக்கொண்டிருக்கும் நிலையை அடைந்து விடுகின்றன, இந்தச் சிறு கட்சிகள்.

அங்கேயும்

இவ்வளவு அமைதியாகத் தேர்தலை நடத்தும் அமெரிக்காவில்கூட ஆப்ரகாம்லிங்கன் தேர்தலில் நின்றபோது, அவரை எதிர்த்து நின்ற டக்ளஸ் ஆப்ரகாம்லிங்கனை தனிப்பட்ட முறையிலே தாக்கிப் பேசியதும், அதற்கு ஆப்ரகாம்லிங்கன் சுடச்சுட பதில் அளித்ததையும் இன்று படித்தால்கூட நாம் குலுங்க குலுங்கச் சிரிக்கிறோம். அப்படி என்ன பேசிக்கொண்டார்கள் என்பதை கவனிப்போம்.

தேர்தல் மேடை

ஆப்ரகாம்லிங்கனுக்கும், டக்ளசுக்கும் போட்டி. இந்த இருவருக்கும் அரசியல் போட்டி மாத்திரமல்ல, காதல் போட்டியும் உண்டு. அதாவது ஆப்ரகாம்லிங்கன் திருமணம் செய்துகொண்ட பேரிடாட் என்பவளை டக்ளஸ் காதலித்திருந்தான். அழகன் டக்ளஸ்தான் என்ருலும் அவள் அழகில்லாத ஆப்ரகாம்லிங்கனைத்தான் திருமணம் செய்துகொண்டாள் காரணம் கேட்டபோது' நான் அழகைக் காதலிக்கவில்லை; அறிவைக் காதலித் தேன்' என்ருள். காதலிலே தோல்வியுற்ற டக்ளஸ் மேடையிலே கீழ்க் கண்டவாறு பேசினுன்.

டக்ளஸ் :

'அவையோர்களே! என்னை எதிர்த்து நிற்கும் இந்த ஏப் யார் தெரி யுமா? ஒரு காலத்தில் சாராயம் விற்றுக்கொண்டிருந்தவன். அவ்வளவு இழிதொழிலைச் செய்துகொண்டிருந்தவனுக்கு உங்கள் வாக்கு!

ஆப்ரகாம் லிங்கன்

'அவையோர்களே! எனது நண்பர் டக்ளஸ் மிக நல்லவர். ஏனெனில் என் வாழ்வில் ஏற்பட்ட ஒரு உண்மையான சம்பவத்தை தக்க நேரத்தில் தைரியமாக வெளியிட்டார். அதை அவர் சாதாரண நேரத்தில் வெளியிட்டி ருந்தால் காற்ருேடு கலந்து வானக்கூச்சலில் வெறுங்கூச்சலாகப் போயிருக் கும். அன்று அது ஒரு பயனும் பெற்றிருக்காது. இன்று அவர் அதை வெளியிட்டதில் இரண்டு உண்மைகளைத் தெரிந்து கொள்ளுகிறீர்கள் ஒன்று என் வறுமை நிறைந்த வாழ்க்கையைக் குறிப்பதாலும், மற்ருென்று இந்தக் குற்றச்சாட்டின் மூலம் நான் தோல்வி அடைவதும், அதன்மேலே வீற்றிருக்கும் வெற்றியை எனது நண்பர் டக்ளஸ் அடைவதுமாகும். இதை உங்கள் சிந்தை ஆராய்வதற்காகச் சொன்னேன். ஆனுல் இப்போது வேருெரு உண்மையைச் சொல்ல வேண்டியவனுயிருக்கின்றேன். என்ன வெனில் என்நண்பர் சொல்லியபடி ஒருகாலத்தில் என் வறுமையின் காரணத் தால் நான் சாராயத்தை விற்றது முக்காலும் உண்மை, ஆனுல் நான் கடைக் குள்ளிருந்து சாராயத்தை விற்றபோது, என் நண்பர் டக்ளஸ் வெளியே இருந்து வாங்கிக் குடிப்பவராக இருந்தார் என்பதுதான்! என்று சாடினுன்.

திருக்குறள் கட்டுரைப் போட்டி

பரிசு ரூ. 100

ஆம்பூர் திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக, தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகள், பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்காக நடத்தப்படும் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர். 'திருவள்ளுவரும் உலக அமைதியும்' என்ற தலைப்பில் 200 முதல் 250 வரிகள் வரை எழுதி, "எம். வி. சாமி - கட்டுரைப் போட்டிக்குழு, திருவள்ளுவர் கழகம், ஆம்பூர் (வ. ஆ. மா.)" என்ற முகவரிக்கு 19—11—60 தேதிக்குள் அனுப்பு வதுடன், நுழைவுக்கட்டணம் ரூபாய் ஒன்றை (எம். ஒ. மூலம்) அனுப்புக. சிறந்த கட்டுரைக்கு ரூ. 101 வழங்கப்படும். மற்றும் மாவட்டத்திற்கொரு கட்டுரைவீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டுரையாளர்களுக்கு 'நற்சான்றிதழ்' வழங்கப்படும்.

ஆனுல் அவை எல்லாம் இன்று அறவே மறந்து மனிதனின் தனிப் பட்ட வாழ்க்கையைத் தாக்கிப் பேசுவது அநாகரீகம் என்ற முடிவுக்கு வந்தி ருக்கிறது, அமெரிக்கா.

நாளை இங்கு நடைபெறப் போகும் தேர்தலைப் பார்க்கப் போகிறோம். எவ்வளவு பேர்கள் எதிரிகளின் தாக்குதலுக்கு இரையாகப் போகிருர்களோ, எவ்வளவு பொது மக்கள் ஓட்டுச் சாவடிகளுக்குப் போகப் பயந்துகொண்டு வீடுகளிலேயே அடைபட்டுக் கிடக்கப் போகிருர்களோ, எவ்வளவு ஏழைகள் பணத்துக்கடிமையாய் தங்கள் வாக்குகளை தகுதியும் திறமையும், கல்வியறி வும், பொதுநலமும் கொஞ்சங்கூட இல்லாதவனுக்குப் போடப்போகிருர் களோ, தடியெடுத்தவனுக்கெல்லாம் எவ்வளவு நல்லவர்கள் நடுங்கிச்சாகப் போகின்ருர்களோ — போலீஸ் தர்ப்பார் எவ்வளவு கட்டுக்கடங்காமல் போகுமோ யார் கண்டார்கள்.

நல்லவர்கள் சந்தேகத்துக்குள்ளாவதும், நாணயமுள்ளவர்கள் கையப் புடைக்கப்படுவதும் நாட்டில் அன்ருட நிகழ்ச்சியாய் விட்டன. சனநாயகம் சவக்காட்டை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அது திரும்பி வருவதற் கான அறிகுறிகளே காணவில்லை. காரணம் பெருந்தன்மை இல்லை. நாட்டின் தலைவர் காமராசர், கட்சியின் தலைவர் அளகேசனர் குற்றக்கூண்டில் நிற்க வேண்டிய கேடிகளும் ரௌடிகளும் காங்கிரஸ் கொடிக் கம்பத்தின் கீழே நிற்கிருர்கள். இந்த நிலையிலே ரௌடித்தனத்தை கட்டவிழ்த்துவிட்டிருக் கிருர்கள். அது எதிரிகளை அழிக்கும் என்பதில்லை, தக்க நேரத்தில் தகுந்தபடி இரைபோடாவிட்டால் தன்னை வளர்த்தவனையே கொன்றுவிடும் என்பதை அறியாதவர்கள் கோலோச்சுகிருர்கள். அதன் விளைவுதான் பெருந்தன்மை பேழைக்குள்ளடங்கிவிட்டது. அதை எப்படியேனும் வெளியே கொண்டு வருவதற்கான முயற்சியிலே அனைவரும் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள,

சி. பி. சிற்றரசு



சோசலிஸ்ட் சோதாக்கள்!

போபால் என்னும் ஊரில் ஒரு போக்கிரி பேசிய செய்தியின் விளேவே இக்கட்டுரை. இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும் இந்தி வெறி ஏறிப்போயுள்ள வடநாட்டு இந்தி வெறியர் லோகியா தான் நான் குறிப்பிட்ட போக்கிரி. வளமார் தமிழகத்தில் கால் வைத்தபோது வக்கிர புத்தியுடன் நடந்து, மக்கள் தந்த பரிசுப் பொருள்களோடுவடக்கே சென்ற இந்த வாலறுந்த வானரம் மறுபடியும் தன் சுயருபத்தைக் காட்ட ஆரம்பித்திருக்கிறது. ஐக்கிய நாடு சபையில் இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் நேரு ஆங்கிலத்தில் பேசியது தவறு என்ற அரிய கண்டு பிடிப்பை இந்த அயோக்ய சிகாமணி வெளியிட்டிருக்கிருர். இவர் பெயருக்கு முன்னுல் உள்ள டாக்டர் என்ற பட்டமும் இவர் சார்ந்துள்ள கட்சியாகிய சோசலிஸ்ட் என்பதும். ஆங்கிலச் சொற்கள் தானே தவிர இந்திச் சொற்கள் அல்ல, முதலில் அதை யல்லவா மாற்றி யிருக்கவேண்டும் ?

தூக்கிப் போட்டார். அது தான் “ தி. மு. கழகத்தார்கள்தான் என் கூட்டங்களில் கலாட்டா செய்தார்கள். அவர்கள் மேல் ஏன் சென்னே அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கவில்லே” என்பது. இதற்குக் காரணம் நமக்கு வந்து வாய்த்திருக்கிருரே முதலமைச்சராக, காமராசர் என்ற பெயரிலே ஒரு வடநாட்டு அடிமை அவரது பேச்சுத்தான். அவர் சொன்னுர். “தி.மு. கழகத்தாருக்கு இவ்வளவு வெறி இந்தி மேல் கூடாது. கூட்டத்தில்

காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு நேரு வந்தபோது பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். பேசவந்த நேரு, மக்களேப்பார்த்து எந்த மொழியில் பேசவேண்டும் என்று கேட்டார். மக்கள் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும் என்று வற்புறுத்தவில்லே - அமைதியாகத்தான் இருந்தார்கள். ஆனுலும் ஆங்கிலத்திலேயே பேசினுர். அதேபோல் சென்னேக்கு வந்த குடியரசுத் தலேவரும் தென்னகத்தில் உள்ள மக்களின் மனே நிலேயைப் புரிந்து

விடல்” என்ற வள்ளுவனின் வாக்கை வாழ்விலே கடைப்பிடிக்கும் அண்ணு தலேவரா ? அல்லது ஆதியில் குறிப்பிட்டேனே, அவர் தலேவரா—சேச்சே ! நான் தவறு செய்துவிட்டேன். அண்ணுவோடு அவரைஒப்புமை கூறி எழுதியதே தவறு. மலேயோடா மண் மேட்டை உவமை கூறுவது ?

அசாம் சம்பவங்கள் ஆட்சியாளருக்கு தீராத தலேவலியாய் இருந்துவருகிறது. இப்படி எங்கு நோக்கினும் மொழிப்பற்று கொண்டு மக்

★ தமிழகத்தில் உள்ளவர்கள் தடித்த நோவினர் அல்லர்

★ சீடர்கள் என்ற பெயரிலே சில மூடர்கள் !

★ மானஈனமற்ற இந்த மடையர் கூட்டம் எப்படித்தான் மறத்திமிழர் பரம்பரையில் பிறந்ததுவோ !

★ தடுத்து நிறுத்தவேண்டும் அல்லது உதைத்து அனுப்பவேண்டும்!

விடாமல் தடுத்து நிறுத்தவேண்டும். வழக்குத் தானே போடுவார்கள்—போடட்டுமே! இப்போது மட்டுமென்ன வாழ்கிறது. ஆயிரக் கணக்கான வழக்குகளே நமது தோழர்கள் அன்ருடம் சந்தித்த நீதிமன்றத்தில் ஏறி இறங்கத் தான் செய்கிருர்கள். அடிபட்டு மனுக்கொடுத்தால் கூட பல இடங்களில் அடிபட்ட நமது தோழரைத்தான் மிரட்டுகிறது.

சௌரிபாளேயம் ஆரோக்கியசாமி கொலே வழக்கு வேறு நடந்து கொண்டிருக்கிறது. வழக்கு நடந்து கொண்டிருப்பதால் அதைப் பற்றி எழுதுவது முறையல்ல மானம், வெட்கம், சூடு, சொரணே இல்லாத இந்த சோதாக் கூட்டம் இனியாவது இத்தகைய தீர்மானங்களேப் போடாமல் இருக்கட்டும். இவர்களது தலேவனும்

வடநாட்டு வெறியனின் வாய்த்துடுக்கு!

இந்தியில் பேசினுல்ஐக்கிய நாடு சபையில் எவருக்கு விளங்கும்? மொழி பெயர்ப்பாளர் ஒருவர் கூடவே சென்று விளக்க வேண்டியதுதான். அதற்காக நாம் ஒன்றும் ஆங்கிலத்துக்கு வக்காலத்து வாங்கவில்லே. இந்த இழிமகனின் இந்தி வெறியையே சுட்டிக்காட்ட விரும்புகிருேம்.

ஒரு முறை சென்னே வந்தபோது இந்தியில் பேச ஆரம்பித்து—மக்கள் புரியவில்லே என்று சொல்லியும் கேளாமல் தொடர்ந்து இந்தியிலேயே பேசி, அது விளங்காமல் வெளியேறிய மக்களேப் பார்த்துக் குறும்புக்காரர்கள் என்று குறிப்பிட்டார். அடுத்து வந்தபோது தான் கோவையிலே ஏற்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. நம் நாட்டிற்கே வந்து நம் மக்களின் மீதே சோடா பாட்டிலே வீசி எறியுமளவுக்கு அவருக்கு எப்படித் தான் துணிச்சல் ஏற்பட்டதோ தெரியவில்லே.

ஊருக்கு இரண்டு உதவாக்கறைகள் சோசலிஸ்ட் என்ற பெயரால் இருந்து கொண்டு ஊளேயிடுவதைப் பார்த்து ஏதோ தனக்கு ஒரு பட்டாளமே தமிழகத்தில் இருப்பதாகத் தப்புக் கணக்குப் போட்டு விட்டார். அதன் விளேவு தான் மக்களேப் பார்த்துச் சோடா பாட்டிலே எறிந்தது. அடுத்தடுத்து அவர் சென்ற ஊர்களில் எல்லாம் மக்களின் கொதிப்பை காணுவதற்கான வாய்ப்புக் கிட்டியது. இதைக் கண்டு கொண்ட லோகியா வடநாடு சென்றதும் அடுத்த தன் தமிழக விஜயத்தில் தமிழ்ப் படித்துக் கொண்டுவந்து சில சொற்களேயாவது தமிழில் பேசுவதாகக் கூறினுர். தமிழகத்திலே உள்ளவர்கள் தடித்த தோழர்கள் அல்ல என்பதைப் புரிந்து கொண்டாரே என்று ஒரு சிறு மகிழ்ச்சி நமது இதயத்தில் குமிழியிட்டது. ஆனுல் அடுத்து ஒரு அணுகுண்டைத்

இப்படியா செய்வது” என்று. இது காற்றின் அலேகளால் எடுத்துச் செல்லப்பட்டு இந்தக் கழிசடையின் காதுகளில் விழுந்திருக்கிறது. அதன் விளேவுதான் நம்மேல் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லே என்ற பேச்சு...

இவர்தான் இப்படி என்ருல் இவருக்குச் சீடர்கள் என்ற பெயரிலே இருக்கிருர்கள் சில மூடர்கள் — இவர்களுக்கு மூளே இல்லே என்பது நமக்கு முன்பே தெரியும். களிமண்ணுவது இருக்குமென்று எண்ணினேம் அதுவுமில்லே என்று காட்டிக்கொடுத்துவிட்டது அவர்களது கடலூர் தீர்மானம். கடலூரில் இந்தக் காலி மண்டைகள் கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றின. அது என்னவென்ருல் குடியரசுத் தலேவர் இராசேந்திரப் பிரசாத் சென்னேயில் பேசும்போது ஆங்கில மொழியில் பேசுவது தவறு இந்தியில் பேசியிருக்கவேண்டும்என்று. குருதி ஓட்டமுள்ள எந்தத் தமிழ்மகனும் இதைப் படித்தால் கொதிப்படையத்தான் செய்வான், மானஈனமற்ற இந்த மடையர் கூட்டம் எப்படித்தான் மறத்தமிழர் பரம்பரையில் பிறந்ததோ தெரியவில்லே. லோகியாவுக்கு நேர்ந்த கதி குடியரசுத் தலேவருக்கும் ஏற்படட்டும் என்ற நோக்கத்தில் தான் சொன்னுர்களோ என்னவோ தெரியவில்லே.

பெங்களூரில் நடைபெற்ற

★ ஊருக்கு இரண்டு உதவாக்கரைகள் சோசலிஸ்ட் என்றபெயரால்இருந்து கொண்டு ஊளேயிடுவதைப்பார்த்து ஏதோ தனக்கு ஒரு பட்டாளமே தமிழகத்தில் இருப்பதாகத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார். அதன் விளேவுதான் மக்களேப் பார்த்துச் சோடா பாட்டிலே எறிந்தது.

கொண்டோ என்னவோ ஆங்கிலத்திலேயே பேசினுர். இப்படிப் பெரும் பொறுப்புக்களில் இருப்பவர்களே மக்க

தூத்துக்குடி
ஜோசப்

ளின் உணர்ச்சிக்கு மதிப்பளிக்கத் தவறுவது மானபங்கத்தில் போய் முடியும் என்று தீர்மானித்து விட்ட பின்னர் இப்படி ஒரு மந்திக் கூட்டம் தீர்மானம் போடுவதென்ருல் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா என்பதே கேள்வி.

இந்தியிலே பேசினுர் — மக்கள் கேட்டால் பாட்டிலே வீசி எறிகிருர். ஆனுல் காஞ்சியில் அறிஞர் அண்ணு பேசும்போது ஒரு சிறு சலசலப்பு ஏற்பட்டு, ஆத்திரமடைந்த சில தோழர்கள் சோசலிஸ்ட் தோழர் ஒருவரை அடித்துவிட ஆவேசம் கொண்டபோது அண்ணு அவரையழைத்து, தன்பக்கத்திலேயே உட்கார வைத்து, ஆபத்து எதுவுமின்றிகாத்து, தன் காரிலேயே ஏற்றிக் கொண்டுபோய் அந்தச் சோசலிஸ்ட் தோழரது வீட்டு வாயிலிலேயே அவரை இறக்கிவிட்டார் என்ற செய்தி பார்த்தோம்.” இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து

கள் முழக்க மிடுகையில் சோசலிஸ்ட் கட்சி என்ற ஒரு சோதாக்கூட்டமும் அதன் தலேவரும் சொல்லி வருகின்ற சொற்களேப் பார்க்கும் போது அகிலத்திலே கடைசிக் கோழையும் ஆத்திரமடைவான். அடுத்த முறை தமிழகத்திற்கு இவர் வந்து இம்மாதிரி பேசுவாரேயானுல் பேச

தப்பிதமாக உளறிக் கொட்டாமல் இருக்கட்டும். மீண்டும் மீண்டும் இதுபோன்ற கருத்துக்கள் வாந்தி எடுப்பாரேயானுல் தமிழகத்திற்கு வரும்போது ஆயிரக்கணக்கான பழஞ் செருப்புகளேத் தான் சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கிருேம்.

வளர்க தாய் மொழிப்பற்று! ஒழிக இந்தி வெறியர்கள்!!

விரைவில் வெளிவருகிறது !

பொன்னி

(மாத மிருமுறை)

★ ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1, 15 தேதிகளில் வெளி வருகிறது.

☆ கண்கவரும் மூவண்ண முகப்புடன் புத்தக வடிவில் வெளியிடப்படுகிறது.

★ தமிழகத்தின் தலேசிறந்த நாவலாசிரியர்களின் எழுத்தோவியங்கள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுகின்றன.

★ உங்களுடைய நீண்ட நாளேய ஆவல் பூர்த்தியாகும் வகையில் பத்திரிகை அமைந்திருக்கும்.

விலே 25 காசுகள்

எங்கும் ஏஜண்டுகள் தேவை

குறிப்பு: இளமுழக்கம் பட்டியல் பாக்கி இல்லாமல் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டும் முதற்சலுகை அளிக்கப்படும்.

ஆசிரியர் வேலை அவ்வளவு சுலபமா ?

நாட்டின் முதுகெலும்பு மாணவ சமுதாயம். வேறு உதாரணம் கிடைக்கவில்லையா என்ருல், ஆமாம் அதுதான் பொருந்தும். அப்பிஞ்சு மனத்தை எப்படி வேண்டுமாலுைம் திருப்பலாம். தேசபக்தி ஏற்படவும் தேசத்திற்கு விரோதமாக கிளப்பிவிடவும் அவர்களைக் கொண்டே செய்யலாம். மாணவப் பருவத்தை அவர்கள் முக்கால் பங்கு ஆசிரியர்களிடத்தும் கால் பங்கு வீட்டிலும் கழிக்கின்றனர். மாணவர் பருவத்தில்அவனுக்குக் கிடைக்கும் அறிவுதான் அவன்தன் பிற்கால வாழ்க்கையைச் செப்பனிடவும் நான்கு பேர்களுக்கு மத்தியில் நல்லவனுகத் திகழவும் உதவுகிறது. இத்தகைய நிலையில் அவன் பொறுப்பு முழுவதையும் ஆசிரியனே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி ஒரு நல்ல சமுதாயத்தையே நல்ல முறையில் உருவாக்கப்புகும் ஆசிரியன் எத்தன்மையுடையவனுயிருத்தல் வேண்டும்.

முதல் நாள் தான் சொல்லிக் கொடுத்த பாடத்தையே இன்று திருப்பிச் சொல்லித் தருகிருர் என்று வைத்துக் கொள்வோம்,

“ஆம் இது நேற்றே சொல்லிக் கொடுத்த பாடம்” ஒரு மாணவன்.

“ஓகோ! மறந்து விட்டேன்” ஆசிரியர். “சார்! நீங்கதானே மந்தியே கூடாதுன்னு சொல்லி யிருக்கீங்க”

ஆசிரியன், நமக்கு புத்தி சொல்லுகிருனே என்று கோபமடைந்து- பல்லைக்கடிக்கிருர்.

“அப்படியா! சரி. நேற்று பத்து-வீட்டுக் கணக்குப் போட்டுக் கொண்டு வரச் சொன்னேனே, போட்டுக் கொண்டு வந்தியா ?

“இரண்டுதான் சார் போட்டுக் கொண்டு வந்தேன் !”

இரண்டு என்னடா! மண்டு பெஞ்ச் மேல் ஏறி நில்.

எனவே ஆசிரியன் சிறுவன் தானே என்று கூடப் பாராமல் அவனை எப்படியாவது மற்ற மாணவர்களுக்கு மத்தியில் கேவலப் படுத்தி அதில்இன்பம்காணும் கேவலமான புத்தியை விட்டொழிக்க வேண்டும்.

சார் நம்ம மணி இருக்கானுல்லசார். அவன் அடிக்கடி அந்த வாத்தியாரோடே போருன்சார்.அவரு அவனைத்தான் சார் கவனிக்கிருரு.

ஆமான்டா கோபு. நானும் கவனிச்சேன். இருக்கட்டும். அவனை என் “சப்ஜெட்”லே மார்க்கை குறைக்கிறேன். என்று சிறுவன் சொல்லுவதைக் கேட்பதோடு செயலிலும் இறங்கும் இப்படிப்பட்ட சிறுபுத்தியை விட்டொழிக்க வேண்டும்.

ஆசிரியர் ஒருவர் ரோட்டிலே சென்றுகொண்டிருக்கிருர். யாரோ பின்னுலிருந்து கூப்பிடும் சத்தம் கேட்டுத்திரும்புகிருர்.

“யார்? என்னையவா” ஆமா! சார்! தெரியலியா

நான்தான் சார் நாகலிங்கம், பதினைந்து வருடத்திற்கு முன்னுல் உங்களிடம் படித்தேன் ?

‘அடடே, யாருஇந்த ஆரக்குடியிலே யிருந்து தினம் சைக்களிலே வருவாயே! எனக்குக்கூட...”

“ஆமா சார் நான்தான்”

“ரொம்ப சந்தோஷம். இப்ப என்னப்பா செய்கிருய்.”

“எஞ்சினிரிங் முடிச்சுட்டு அசிஸ்டன்ட் எஞ்சனீரியராக இருக்கேன் சார்”

ரொம்ப மகிழ்ச்சிப்பா ! நான் அதே தொழில்தான்... விரக்தியின் மேலீட்டால் பேச்சே இல்லை.

சௌக்கியம்தானே எனக்கு அவசரமாய் ஒரு காரியம் சார். வீட்டுற்கு சாவகாசமாய் வந்து தம்பிதங்கச்சிகளைப் பார்க்கனும் வரேன் குழந்தைகள் எப்படி சார்.?

“அதுகளுக்கென்ன குறைச்சல்”

பிரிதல்.

ஆசிரியர் விரக்தியோடு உலகத்தையே வெறுத்து வானத்தைப் பார்த்துக் கொண்டே நடக்கிருர்.

பின்னே யாருக்குத்தான் வெறுப்பு வராது. இருபது வருடங்கள் ஆசிரியர்கள் அதே தொழிலைச் செய்கிருர்கள். அவர்கள் பாடம் சொல்லிக்கொடுத்த மாணவர்களும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிருர்கள். அவர்கள் எந்தவித முன்னேற்றமின்றி “சாக்பீஸ்” புகை மண்டலத்திற்குள்ளேயே அவர்கள் உடலமும் அமிழ்ந்து சாக்பீஸ் தூசியைப் போலவே உடலமும் இற்று காற்ருேடு கலக்கிறது.

அவர்களுக்குத் தெரியும், இந்தத் தொழிலில் அவ்வளவாக முன்னேற்றம் இல்லையென்று- வாழ்க்கையில்விரக்தியைத் தவிர வேருென்றையும்காணமுடியாது.-சூழ்நிலைகளால் சிறுபான்மைப்புத்திகளுக்கும் இழிசெயலுக்கும் இடமேற்படும்;- நாளெல்லாம் குறும்பு செய்யும் குழந்தைகளோடும் எதிர்வாதம் புரியும் மாணவர்களோடும்— விபரம் புரியாமல் தான்தான் மிகவும் தைரியம் உள்ளவன் என்று நினைத்து அசம்பாவிதமாக அட்டகாசம் செய்யும் பையன்களோடும் நாளெல்லாம் கழிக்க வேண்டிய நிலை எற்படும்-தனக்கு வயதில் மூத்தவர்களும் அறிவில் மூத்தவர்களுடனும் அதிகம் பழகினுல்தான் நம் அறிவும் வளரும் ஆனுல் பாவம்! அவர்கள் பழகும் சமுதாயம் அறிவு முற்றுப்பெருத குறும்பு மிகுதியாய்ச் செய்யும் மாணவர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல எண்ணங்களும் வளரமுடியாத நிலைமை ஏற்படுகிறது.

இவற்றிற்குமேல் ஆசிரியர் உள்ளத்தைப் பிடித்திழுக்கும் அணங்குகள் வேறு அவர்களுக்கு ஓர் தொந்தரவு. என்னதான் அவர் விரக்தி எண்ணங்களால் அலைக்கழிக்கப் பட்டாலும், சிட்டுப்போல் பறந்து வந்து தன் முன்னுல் இருக்கும் அந்தப் பெடைமயிலைப் பார்க்காமலா இருக்க முடியும். எனவே அங்கே ஓர் சபலம். பாடத்திலே சிறிது குழப்பம்,

இத்தனை சக்திலும் ஒருமனிதனை ஆட்டுகிறது. இவ்வளவும் தெரிந்தும் அத் தொழிலில் இறங்கி வேலை செய்கிருர்களே என்ருல்? அவர்கள்தான் உண்மையான—தன் வாழ்வை—தன் பேச்சை—மூச்சை பிறருக்காக அர்ப்பணிக்கும் தியாகிகள். ஆம்! உண்மையான ஆசிரியர்கள்தான் நிம்மதியாகவும் வாழ முடியும். எப்படி “நாம்தானே இக்குழந்தைகளை உருவாக்குகிருேம் இவர்களில் நாளைக்கே எத்தனையோ பேர் மந்திரிகள் கலெக்டர்கள்—எஞ்சினீயர்—டாக்டர். எவ்வளவோ...அவர்கள் எல்லாம் நாம்தானே சிறுவயதில் பாடம் சொல்லிக் கொடுத்தோம் என்றுதானே சொல்வார்கள்” இப்படிப்பட்ட நிம்மதி ஒன்றைத்தவிர அவர்களுக்கு வேறு என்ன இருக்கிறது.

எனவே சிறந்த மனிதனுக- ஒழுக்கமுள்ளவனுக - சிறிய உணர்ச்சிகளுக்கெல்லாம்இதயத்தை இடங் கொடுக்காதவனுய் இருக்க விழைந்தால் ஆசிரியர் தொழில் ஒரு பயிற்சி. —ஆசிரியர் வாழ்க்கை ஒருசிறந்த வாழ்க்கை—

படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டுத் திரியும் பட்டதாரிகள். இத்தகைய புனிதமான—அமைதியான—தொல்லையற்ற (அனுபவத்திற்குப்பின் தொழிலை எத்தனையோ அலுவலங்களுக்கு எல்லாம் முட்டி மோதிவிட்டுத் தட்டுத் தடுமாறிக் கடைசியில் நோக்கி ஓடிவருகின்றனர்.சிறிதுநாட்களுக்கு முன் அம்பலத்தைக் கூட்டினுலும் கூட்டினுர்கள் இத்தொழிலுக்குக்கும்பல்அதிகமாகி விட்டது-முதலில் இத் தொழிலைப்பற்றிக் கேலியும் கிண்டலும் செய்து விட்டு கடைசியில் இத் தொழிலுக்கு வந்து முக்குடைவதை விட முன்னேயே இத் தொழிலுக்கு வந்து தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வார்களாக ! வாழட்டும் ஆசிரியர்கள் !

—காட்டுத்தெரு-ஆசிரியர்-
சேதுராமன், பி.எஸ்ஸி.

வெளியாகிவிட்டது! **விற்பனையாகிறது**

காவியக் கழகத்தாரின்
நான்காம் படைப்பு!
கவிஞர் கண்ணதாசன்
கவிதைகள்
[இரண்டாம் தொகுப்பு] **விலை ரூ. 2-50**

விவரங்கட்கு: **காவியக் கழகம், சென்னை-2.**

சிறைப்படுத்து ! நெருப்பிலிடு ! சாம்பலாக்கு !

(கவிஞர் வல்லம் வேங்கடபதி பி.ஏ. (ஆனர்சு)

குமுறுகின்ற நெஞ்சத்தின் குரலை இன்று
கொடுக்கின்றேன்; கேட்பாய் நீ ! கேட்டுவிட்டே
அமர்ந்துறும் ஆமையைப்போல் கிடந்தி டாமல்
அடலேறு போலெழுந்தே இந்த மண்ணில்
நமைப்பெற்ற தமிழுக்கு நலங்கள் சேர்க்க
நடுங்காமல், ஒடுங்காமல் உழைக்க வேண்டும்.
இமயத்தைப் போன்றவனே ! திராவிடத் தோய் !
இதுஒன்றே உன்னிடத்தில் கேட்கின் றேன்நான்!

மதுவேந்திக் கொண்டிருக்கும் மலரோ, சின்ன
மணிவண்டின் காலுக்கு மெத்தை யாகும்!
குதித்துவரும் நீரலையோ கரைக்கு முத்தம்
கொடுப்பதற்குத் தன்வாழ்வை தியாகம் செய்யும் !
முதுதமிழைக் காக்கஉன்றன் மூச்சை நீயும்
முழுஉரிமைச் சொத்தாக்கி விட்டா லென்ன?
அதைச்செய்நீ முதன்முதலில் ! செய்துவிட்டால்
அதைவிடஓர் இன்பந்தான் உலகில் ஏது ?

தமிழுக்குப் பகைவெளியே இல்லை ! இந்தத்
தமிழகத்துக் குள்ளேயே இருக்கு தென்பேன் !
இமைகாக்கும் கண்மணிபோல் தமிழைக் காக்க
இருக்கின்றேம் நாமெல்லாம் ! ஆனுல் சுத்த
உமிமனிதர் சிலபேர்கள் உச்சி மீது
சுமக்கின்ருர் அயல்மொழியை மாடுகள் போல் !
நமக்கென்ன என்றிருக்க முடியவில்லை
நாமுமந்த நாய்களுடன் பிறந்த தாலே !

தன்பெயரை அயல்மொழியில் எழுதி வீட்டின்
தலைவாயில் முன்புறத்தில் தொங்க வைக்கும்
புன்மகனை ; புலைமகனைத் தமிழன் என்று
புகலாதே ! அழைக்காதே ! அவனே, வாழ்வில்
என்றைக்கும் நிமிராத நாய்வால் போன்றேன் ;
எச்சிலினை நத்துகின்ற இழிகு ணத்தோன் !
கல் மனத்தோன்; பெற்றெடுத்தத் தாயைக் கொல்லும்
கொலைகாரன்; படுபாவி; துரோகி யாவான் !

‘திரு’வென்று போடாமல் ‘ஸ்ரீமான்’ என்றே
தயங்காமல் நாணுமல் எழுதும் பக்காத்
திருடர்களும் தமிழகத்தில் இருக்கின் றுர்கள் !
திருப்புன்றன் கவனத்தை அவர்கள் பக்கம் !
திருப்பாமல் விட்டுவிட்டால் நாளை இந்தத்
திருநாட்டின் ; திராவிடத்தின் கதிஎன் னுகும் ?
உருவழிந்து, பொலிவிழந்து, நலிந்து நொந்தே
உயிர்ப்படங்கிப் போவதுதான் மிச்சமாகும் !

செந்தமிழை வாய்நிறைய பேசும்போது
செருக்குடனே இடையிடையே ஆங்கி லத்தைச்
சிந்துகின்ற வாய்க்கோணல் பயல்க ளுக்குச்
சிறப்புசெய மறுத்துவிடு ; ஒதுக்கித் தள்ளு !
சந்தனமே ! சவ்வாதின் மணமே ! என்றும்
சிரிக்கின்ற புகழொளியே ! தமிழே ! என்று
சிந்துகவி நீபாடு ! தமிழ் எதிர்ப் பைச்
சிறைப்படுத்து ! நெருப்பிலிடு !! சாம்பலாக்கு !!

வெறுப்பில் வளரும் கறுப்புக் கண்ணாடி

சிவகெங்கை ச. வான்மதி

தமிழ்நாட்டில், 'புற்றீசல் போலபுல புல எனக் கல கல என' நாள்தோறும் பத்திரிகைகள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன !

ஒரே இதழ்மட்டும் வெளியிட்டு ஓய்ந்துபோகும் பத்ரிகையும் உண்டு !

சில இதழ்கள் மட்டும் வெளியிட்டுச், 'செத்து'ப் போகும் பத்திரிகைகளும் உண்டு !

இவ்வாறு அற்பாயுளில், 'அடிசாய்ந்து' போகும் பத்திரிகைகள்— அய்யகோ !— நூறு நூறு !

இவற்றுள்—

மக்களின் மனங்கவர்ந்து- அவர்கள் தம் இல்லங்கள் தோறும் உள்ளங்கள் தோறும் தவழ்ந்து அசைக்கவொண்ணுத இடத்தையும் அருமையான வளர்ச்சியும் பெற்ற பத்திரிகைகள் தமிழகத்தில் மிகச்சிலவே உண்டு.

4,50,000 பேர்கள் படிக்கும் பத்திரிகையாக தமிழ் நாட்டின் வாசகர்களின் தனி அன்பைப் பெற்ற பத்திரிகையாக விளங்குவது—கல்கண்டு !

கல்கண்டின் இத்துணை வளர்ச்சிக்கு- இத்துணை சிறப்பிற்கு காரணமானவர் யார் ? அவர்தான் ! அவரே தான் ! 'கறுப்புக் கண்ணுடியார்' 'தான்' புரட்சி எழுத்தாளர் தமிழ் வாணன்தான் என்பது அனைவரும் அறிந்ததே !

தொடக்க காலத்தில், 'குழந்தைப் பத்திரிகை'யாக— சிறுவர் சிறுமியர்களின் சிந்தையைக் கிளறும் ஏடாக இலங்கிய கல்கண்டு--இன்று சிறுவர் சிறுமியர்மட்டுமன்றி வயதுவந்த அனைவருக்கும் பகுத்தறிவு விருந்து பறிமாறும் ஏடாக இலங்குகிறது !

பதின்மூன்றுஆண்டுகளாக இடைவிடாது எழுத்துத் தொண்டு புரிந்த தமிழ்வாணரின் — கறுப்புக் கண்ணுடியாரின் உண்மை உழைப்புக்கு கிடைத்த பரிசே இது !

கட்சி வேற்றுமையின்றி— கருத்து வேற்றுமை யின்றி, பொது நோக்குடன், 'பத்திரிகை எழுத்தாளர், அதிலும்,' திராவிட எழுத்தாளர்' என்ற அடிப்படையில் பார்க்கும் பொழுது 'கறுப்புக் கண்ணுடியார் அனைவரின் பாராட்டுக்கும் உரியவராகிறுர் !

கறுப்புக் கண்ணுடி என்ருல்—

திரு. ராசகோபாலாச்சாரியார் அவர்களையே இந்தப்பட்டப் பெயர் குறிக்கும் !

கறுப்புக் கண்ணுடி என்ருல்—

இந்தியத்துணைக் கண்டத்திலேயே ராசகோபாலாச்சாரியார் அவர்களையே குறிப்பிட்டுக் கூறும் 'செல்லப் பெயராக வழங்கப்பட்டு வந்தது !

ஆனல் இன்று அந்தக் 'கறுப்புக் சண்ணுடி' என்ற பட்டத்தை 'கனம்', 'ராசகோபாலாச் சாரியார், அவர்களிடமிருந்து இந்தப் பொல்லாத' புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன் தட்டிப் பறித்துக் கொண்டார் !

ஆம்! 'கறுப்புக் கண்ணுடி' என்ருல் இன்று புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன் ஒருவரைத் தான் குறிக்கும் ! பத்திரிகையில் ஒரு கதையைப் பிரசுரித்து அந்தக் கதைப் பகுதியில் அதன் ஆசிரியரின், பெயரைக் குறிக்காது, 'கறுப்புக் கண்ணுடி' படத்தைமட்டுக் வரைந்து விட்டால் அந்தக் கதையின் ஆசிரியர் தமிழ்வாணன் தான் என்பதை வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொள்கிருர்கள் ! அது மட்டுமல்ல, வெறும் கறுப்புக் கண்ணுடி பட்டத்தை மட்டும் வரைந்து 'சென்னை 10' என்று, கார்டிலோ, கவரிலோ எழுதி அனுப்பி விட்டால் தமிழ் வாணனுக்கு கிடைத்து விடுகிறதே !

தமிழ்ப் பத்திரிகை உலகத்தில், 'அவாள் ஆதிக்கம் செலுத்திக்கொண்டு 'ஏகாதிபத்யக்கொடி'பறக்க விட்டுக் கொண்டிருந்தனர் ! அதை முறியடித்து, அந்தக் கொடியை இறக்கி 'நம்மவர்' கொடியைப் பறக்கவிட்ட பெருமை மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களையும், வாழ்கின்றஅறிஞர். அண்ணுஅவர்களையும்சாரும்! தமிழில் பெரியார் திரு. வி.க. வழியில் எந்தக் கட்சியிலும்

கலவாது பொது நோக்குடன் தனக்கெனத் தனி வழி ஒன்றை வகுத்துக் கொண்டு எழுத்துப் புரட்சி செய்து கொண்டிருக்கிருர், கறுப்புக் கண்ணுடியார் !

கேள்வி - பதில் பகுதிக்கு வடநாட்டு, 'பிலிம் இந்தியா ஆசிரியர் பாபு ராவ் பட்டேலைத்தான் பிரமாதமாகக்கூறி வந்தார்கள் !

ஆனுல் அதைக் காட்டிலும் சிறப்பாகவும், நகைச் சுவையாகவும். சிக்கலான கருத்தையும் சிரமமின்றி புரிய வைக்கும் முறையிலும் தமிழ் வாணனின் 'கேள்வி—பகுதி' யில் வெளிவரும் பதில்கள் அமைந்திருக்கின்றன' கேள்விபகுதிபதில், பல பத்திரிகைகளில் வெளிவரக்காரணம் இந்தக் கறுப்புக் கண்ணுடியாரே. தமிழ் வாணனின் நடை தமிழ் இலக்கண முறையில் இயைந்த புதுமைக்கு இதயங்கவர் எளியநடை ! அவருடைய நவீனங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் இவற்றில் நயம் உண்டு — நவரசம் உண்டு.

அறிவு நூல்கள் பலவற்றைக் கறுப்புக் கண்ணுடியார் எழுதியிருக்கிருர்! அவை சென்னை அரசினரின் கல்வி இலாகாவினரால் அங்கீகரிக்கப்பட்டு மாணவ மாணவியர்க்குத் துணைப்பாடப் புத்தகங்களாக வைப்பதற்கு தரத்திலும், தமிழிலும், கருத்திலும் உயர்ந்தவை !

முதல் முழக்கம் செய்தவன் கட்டப் பொம்மனே ! என்று அறுதியிட்டு முறுக்கிய மீசையுடன் சிலர் முழக்கமிட்டதை தமிழகம் மெய்யென நம்பிக்கொண் டிருந்த போது—புகழால் பொருளால் உயர்ந்த நடிகர் திலகம் ஒருவர் ஜிலட்சக் கணக்கான நோட்டுகளை வாரி இறைத்து அதைப் படமாக்கிக் கொண்டிருந்தபோது:—

இந்தக் கறுப்புக் கண்ணுடியார்தான் மிகத்துணிந்து தனது அரிய ஆராய்ச்சியால் கண்டறிந்து, 'முதல் முழக்கம் செய்தவன் கட்டப் பொம்மன் அல்லன் ! கட்டப் பொம்மன் ஒரு கோழை ! முதன் முழக்கம் செய்தவன் தமிழ் மறக்குல வேந்தன் புலித்தேவனே !' என்று முழங்கி கட்டப் பொம்மன் ஒரு கொள்ளைக் காரன் என்பதை வரையறுத்து தக்க சான்றுகளுடன்புலித்தேவன் நாடகத்தை எழுதி அரங்கேற்றம் செய்தார் ! இன்றும் நாடெங்கும் புலித்தேவன் நாடகம் நடிக்கப்பட்டு வருகிறது.' 'கட்டப் பொம்மன் ஒரு கொள்ளைக் காரன் !' என்ற தலைப்பிலே கறுப்புக் கண்ணுடியார் தொடங்கிய ஆராய்ச்சி இன்னும் ஓயவில்லை! கல்கண்டில்வளர்ந்து கொண்டே யிருக்கிறது !

புலித்தேவனின் மூலமாக, 'புரட்சி எழுத்தாள'ராகிய தமிழ் வாணன் மற்றும் புரட்சிகளைச்செய்து கொண்டே யிருக்கிருர் !

'வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சின்னமான இந்தியை எதிர்க்கும் போராட்டத்தில் முதல் வீரனுகநின்று பலியாவேன் !' என்று வீராவேசத்துடன் போர்க்குரல் கறுப்புக் கண்ணுடியார் புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கு முன் நின்று எழுப்பினுர்! அன்றே இவரது தாயகப் பற்றும், தமிழக் காதலும், தன் மான உணர்வும் தமிழ் நாட்டவர்க்குத் தெற்றெனத் தெரியலாயிற்று! புரட்சிப் பாவேந்தர் பாரதி தாசனுர், 'தந்நலமோ வேம்பு ! தமிழ், நலமோ கற்கண்டு !' என்று கறுப்புக் கண்ணுடியாரின் கன்னற்றமிழ்ப் பற்றை பாராட்டியுள்ளார். தமிழ் வாணனின் கேள்வி...பகுதி பதில் வெளிவரும் பதிலை வைத்துக் கொண்டு சிலர் அவரை தற்பெருமைக் காரர்! சுயவிளம்பர விரும்பி ! என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள்! கறுப்புக் கண்ணுடியாருடன் மிக நெருங்கிப் பழகுபவர் களுக்கே அவரைப்பற்றி நன்கு தெரியமுடியும் ! மிக மிக எளிய இனிய பண்பு படைத்த தமிழ்வாணன் ஒரு குழந்தையைப் போன்றவர் ! எழுத்தில் இருக்கும் புரட்சியையும், கறுப்புக் கண்ணுடிமர்மத்தையும் கண்டு மிரள்கிறவர்கள் தமிழ் வாணனுடன் நேரடியாகப் பேசும்பொழுது அவரது கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளத்தைக்கண்டு வியப்பினுல் அப்படியே அயர்ந்து போய்விடுவார்கள்! தமிழ் நாட்டில், ஆசிரியர்' என்ற முறையில் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் எழுத்தாளரும் இந்தக் கறுப்புக் கண்ணுடியாரே ! துணைக்கு பிழை திருத்து வோரோ-துணை ஆசிரியரோ ஒருவரும் இன்றி தனி மனிதனுக இருந்து கொண்டு எல்லாப் பக்கங்களையும் தானே நிரப்பிக் கொண்டு வாரந்தோறும். குறித்த காலத்தில் கல்கண்டை இந்தக் கறுப்புக் கண்ணுடியார் கொண்டுவந்து விடுகிருர் !

இவரின் வளர்ச்சி கண்டு வேண்டு மென்றே வலிந்தே பல பத்திரிகைகள் தாக்குகின்றன, சிலர் மேடைகளிலும் தாக்கிப் பேசுகின்றனர்; அவற்றையெல்லாம் கண்டு கேட்டு இந்தக்கறுப்புக் கண்ணுடியார் கதி கலங்கி விடவில்லை; மாருக புன்னகை புரிந்து கொண்டே தனது பணியைத்தொடர்ந்து செய்கிருர்;

கட்டப்பொம்மனை கோழை என்று நிரூபித்து வருவதையும், கேள்வி— பதில் பகுதியில் தன் மனதில் பட்டதை 'நறுக்'கென்று பதிலளித்து வருவதையும் கண்டு இந்தக் கறுப்புக் கண்ணுடியாரின் பால் ஓர் புறம் வெறுப்பு வளர்ந்து கொண்டே யிருக்கிறது ! ஆனுல் கறுப்புக் கண்ணுடியார் இந்த வெறுப்பை இலட்சியம், செய்யாது வளர்ந்து கொண்டே யிருக்கிருர்! ஆம். வெறுப்பில் வளரும் கறுப்புக் கண்ணுடி யார் !

பொய் என்ன பொய்யோ?

புலவர் பொன்னிவளவன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

''உனக்குஎன்ன கேடுகாலம் பிறந்தது?எனதக்கண்டாலும் வெறுக்கிருய்!ஏன்டி இப்படிஇருக்கிருய் ?''- என்று கோட்டாள். எப்படிச் சொல்வது? 'தோழியா நமக்கு உடந்தை - தொலைகிறது இவளிடம் சொல்வோம்' என நினைத்தாள் மடந்தை! ''காத்துக் கொண்டிருந்தேன் தினைக் கொல்லையை ஒருநாள்-அந்தவேளை என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான் ஒருஆள்! அவனே கட்டிளங்காளை-காலிலே கழல் அணிந்தவன்-கருதிய எதனையும் உடனே செய்யத் துணிந்தவன்! எட்டியிருந்தவன் என் எதிரிலே வந்தான்-பின் என்னைக் கட்டியணைத்தான்-கனிவான முத்தமும் தந்தான்-விட்டுப் பிரிந்தான்— விரைந்து சென்ருன்! நெஞ்சு அவனை நினைக்கிறது-அதனுல் தான் கன்னத்தைக் கண்ணீர் நனைக்கிறது! இனி என்ன செய்வது? அவனைக் காணுமல் எப்படி உய்வது?'' என்ருள் தலைவி:

என் தலைவியின் முகம் என் எதிரிலேயே இப்படிச் சுருங்குமா? எதிர்பாராத கவலையினுல் அவள் இதயம் நொறுங்குமா? இனிமேலும் நான் இருக்கும்போது தொல்லை தொடர்ந்து அவளை நெருங்குமா?—என்று தோழி நினைத்தாள். உதவி பிறந்தது- தலைவிக்கு ஓயாத கவலை பிறந்தது !

மந்தியும் அறியாத மணமுள்ள சோலையில் குந்தியிருந்து, குவளை மலர்க் கண்ணிரண்டால் வந்தவனை வாவென்று வரவேற்பாள். முத்து வியர்வையோ நெற்றியில் புரளும்-முத்து மாலையோ மார்பினில் புரளும்-கொத்து மலர்களோ மண்ணிலே புரளும்-கொஞ்சும் காதலோ கண்ணிலே புரளும்! குமுத இதழ்கள் துடிக்கும்-குமரியின் நெஞ்சமும் துடிதுடிக்கும் ! தமிழ்நிகர் முத்தங்கள் அவன் தருவான்;இவள் பெறுவாள்! 'கொடுத்ததைத் திருப்பிக்கொடு'-என்று அவன் கேட்பான். குங்குமச்சிவப்பு கன்னத்தில் படர 'மாட்டேன்' என்று மறுப்பாள். அவனே 'கடன்காரி' என்று குற்றம் சாட்டுவான் கோபத்தை மூட்டுவான்-பிறகு கோபம் லாபமாகும்! அவளுடைய இதழ்கள் விரியும்-அங்கே அரும்பு முல்லையின் அணிவகுப்பு தெரியும்!

சிரிப்பமா? இல்லை-இது நிலவின் எரிப்பா ? என்று அவன் திகைப்பான் !

நாட்கள் உருண்டன. அல்லும் பகலும் அறுபது நாழிகையும் பொல்லாத அவன், அவளது நெஞ்சிலே புகுந்து கொண்டான்- கொஞ்சிக் குலவிச்சென்ருன்— கோவைஇதழ்களைத் தின்ருன்— கொல்லாமல் கொன்ருன் ! தினையையா நினைக்கும் நெஞ்சம் ? தேவைப்படும்போது அவள் கவனிப்பாள் அதைக் கொஞ்சம்! கிள்ளைவந்தது-தொல்லைதந்தது ! கொால்லைத்தினையோ கொள்ளை போயிற்று ! கொத்துத்தினையைக் கூட்டக்கிளிகள் கொத்தின— அ!வளை எத்தின ! காதலில் நிறைவு - எனவே காவலில் குறைவு !

தாய் ஒருநாள் தினைப்புனத்தை வந்து கண்டாள்-நிலைமை கண்டு வெகுண்டாள்-அடங்காத சீற்றம் கொண்டாள். அருகிலே மகளை அழைத்தாள். தின்று முடித்து விட்டன தினையைக் கிளிகள்- நீயோ சென்று விட்டாய் எங்கோ? எங்கே சென்ருய் ?'' என்று கேட்டாள்.

தலைவிக்கு என்ன சொன்னேம் என்பதே புரியாத நிலை. ஆனுல் அங்கே கவிழ்ந்தது தாயின் தலை தாய் போனுள். தலைவியைத் தோழிதனியே இழுத்து வந்தாள். ''நீஇனிமேல் இங்கே வரவும் முடியாது-அந்த மலைநாடனைக் காணவும் முடியாது !'' என்ருள். ''ஏன்?'' என்று கேட்டாள் தலைவி. ''தாயிடம் நீ என்ன சொன்னுய்?''-வினு பிறந்தது தோழியிடமிருந்தது. ''நானு? பொய்தான் சொன்னேன் !''- விடைகிடைத்தது தலைவியிடமிருந்து. ''ஆமாம்! பொய்தான் சொன்னுய். ஆனுல் அந்தப் பொய் என்ன பொய்யோ? அதுவே உண்மையை உணர்த்தி விட்டது. அதனுலேயே நிலமை கெட்டது. தேனருவி கொட்டும் திருமலை நாடானைத் தெரியவும் தெரியாது. -பார்த்தது மில்லை-சோலைக்கு நான் ஓடவுமில்லை-சுனைநீரில் ஆடவுமில்லை ! என்று சொன்னுய். இனி என்ன ஆகும்? நீயும் நானும் வீட்டிலே கிடப்போம். நடந்ததையெல்லாம் நினைத்து நெஞ்சம் துடிப்போம். இன்னும் என்னென்ன நிலைமைக்கு ஆளாவோமோ? தெரியவில்லை...'' என்ருள் தோழி!. நற்றிணை தந்த அந்தப் பாடல் தான் இந்தப்பாடல்:—

யாங்கா	குவமோ
தேம்படு	சாரல்
செவ்வாய்ப்	பைங்கிளி
எவ்வாய்ச்	சென்றனை
அன்னை	ஆனுல்
அருவி	ஆர்க்கும்
அறியலும்	அறியேன்
வெதிர்புனை	தட்டையேன்
சுனைபாய்ந்	தாடிற்றும்
பொய்யல்	அந்தோ
தலையிறைஞ்	சினளே
செலவொழிந்	தனையால்

அணிறுதற்	குறுமகள்
சிறிதினைப்	பெருங்குரல்
கவர நீ	மற்று
அவணெனக்	கூறி
கழற்	முன்நின்று
பெருவரை	நாடனை
காண்டலும்	இலனே
மலர்பூக்	கொய்து
இலனென	நினைவில்
வாய்த்தனை	அதுகேட்டுத்
அன்னை	
அளியைநீ	புல‌த்தே

★ சி. பி. சிற்றரசு ★

குப்பன், திருப்பதி

கே: டார்பிடோ ஜனுர்த்தனம் அவர்கள் தி.மு.க.வில் சேர்ந்துவிட்டாரே, ஒரு வேளை பெரியார்கூட தன் கடைசி காலத்தில் அண்ணுவை அல்லது சம்பத்தை அழைத்துச் 'சாவி'யைக் கொடுத்துவிடுவாரா?

ப: அவர் வரமாட்டார் என்று தெரிந்துதான் இவர் வந்திருக்கிருர். ஈரோட்டில் பெரியார் அண்ணுவிடம் ஒரு சாவியைக் கொடுத்தார். ஆனுல் அது பெட்டிச் சாவி அல்ல, சிறைச் சாவி என்று அன்றே சொல்லிவிட்டார் அண்ணு.

சிகாமணி, சென்னை

கே: திராவிடத்தின் மக்கள் தொகை எவ்வளவு?

ப: சற்றெப்ப ஒன்பது கோடி.

எம். பரீத்து அலி, கண்டியூர்

கே: நம்நாடு எதில் முன்னேறி இருக்கிறது?

ப: வேகமாக முன்னேறி இருக்கிறது. பஞ்சம், பட்டினி, தற்கொலை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவைகளில்.

கே: வருகிற தேர்தலில் செட்டு வாங்குவதற்கு காங்கிரஸ்காரர்கள் என்ன முறையைக் கையாளுவார்கள்?

ப: சாக்கடையில் கூடகையை விடுவார்கள்.

கே: காமராசர் என்ன செய்து கொண்டு இருக்கிருர்?

ப: ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிருர்.

கே: உலகிலேயே மிக மிக அதிசயமானது எது?

ப: முடிவான அதிசயம் என்று ஒன்றைசொல்வதற்கில்லை. ஏனெனில் புதுப்புது அதிசயங்கள் தோன்றுவதால்.

ஆர். எஸ். மணி, சென்னை-21

கே: இன்றைய சமுதாயம் சூதாடிகளின் மடத்தைப் போன்றது. அதில் ஆடத் தெரிந்தவன்தான் பிழைக்க முடியும் என்பது என் எண்ணம். உங்கள் எண்ணமென்ன?

ப: மெத்த மகிழ்ச்சி.

தாமரைச் செல்விராசன், பல்லாவரம்

கே: உலக அதிசயங்கள் (பழையன) ஏழையும் வரிசைப் படுத்திச் சொல்லவும். அவைகளில் பழையானது எது?

ப: இதாலி நாட்டு சாய்ந்த கோபுரம், பிராமிட்கோபுரங்கள், சீனத்தின் நெடுஞ்சுவர், ரோட்ஸ் நகர தாமரைச்சிலை, ஆப்பிரிக்காவின் ஆகாயப் பூந்தோட்டம். இவற்றில் பிராமிட் கோபுரங்கள் மிகப்பழையன.

பி. ஆர். சாமி, கரியாபட்டினம்

கே: கல்விக்கரசியாம், நாவினில் உறைபவளாம், அவள்தான் 'கலைமகளாம்' — இவளுக்கோர் விழாவாம். அதுதான் கலைமகள் விழாவாம். இப்படியெல்லாம் எண்ணி விழா நடத்துவது பகுத்தறிவுக்குப் பொருந்தாத செயல் என்கிறேன் நான். என் நண்பரோ, பகுத்தறிவுக்குப் பொருந்தும் செயல் என்கிருர். இத்தகைய எங்களின் கூற்றுக்குத் தங்கள் தீர்ப்பு என்ன?

ப: விழா நடத்துவதால் கருத்தறிவதற்கு இடமில்லாமல் போகிறது என்று உங்கள் நண்பருக்குச் சொல்லுங்கள்.

எ. செல்வராஜ், ஒத்தைக்கால் மண்டபம்

கே: அண்ணு! தாங்கள் எழுதும், 'புறப்படு மகனே!' என்னும் இன்பத்தொடரோவியம் இரண்டு வாரமாக வருவதில்லையே, ஏன்?

ப: எனக்கு நம் நாடு பொறுப்பும் வந்துவிட்டதால் ஓய்வே இல்லை. நிலமை சரியாகட்டும். இரண்டொரு வாரத்தில் எழுதுகிறேன்.

அப்துல் ரசாக், சென்னை.1

கே: 'பொதுத் தேர்தலுக்கு ஆறுமாதத்துக்கு முன்பு நேரு தம் பதவியிலிருந்து விலகவேண்டும்! என்று சுதந்திரா கட்சி ஸ்தாபகர் ராஜாஜி பல கூட்டங்களில் பேசி வருகிருரே, அப்படி திரு. நேரு செய்வாரா?

ப: விலகமாட்டார். அதுவும் மாநில ம்தோறும் மண்டையிடி தோன்றியிருக்கிற இந்த நேரத்திலா எதிர்ப்பார்க்க முடியும்?

சு. பெ. கோவர்த்தனன், செக்கிந்திராபாத்-15

கே: தமிழரசுக் கழகத்தவர்கள் சென்னை நகராண்மைக் கழகத் தேர்தலில் மண் கவ்வியதை மறந்துவிட்டு, (க. மு. ஷெரீப்) நம்மை பதவி நப்பாசை பிடித்தவர்கள் என்கிருரே! இதைப்பற்றி நீங்கள் அவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப: எல்லாரும் பார்த்து இவரை கவி என்று அழைக்க வேண்டியிருக்க, இவரே தன் கையெழுத்துக்கு முன் கவிஎன்று போட்டுக்கொள்ளுகின்ற ஒரு பேராசைக்காரரைப்பற்றி ஏன் பேசுகிறீர்.

பி. எஸ். மணி, தூத்துக்குடி

கே: கண்ணதாசன்பொதுக்குழு உறுப்பினரா?

ப: இல்லை, பொதுக்குழுவுக்கு அவர் நிற்கவே இல்லை.

என். இ. எட்வர்ட், சென்னை-6

கே: தமிழர்கள் உணர்ச்சியற்றவர்களா? மரக்கட்டைகளா?

பதில்: இரண்டுமில்லை. ஒற்றுமையற்றவர்கள். தீவிர மற்றவர்கள்.

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!

வாங்கிவிட்டீர்களா!

கண்ணதாசன் கவிதைகள்

இரண்டாம் தொகுப்பு

முதல் தொகுப்பிற்குப்பின் இதுவரை வெளிவந்த எல்லாக் கவிதைகளும் இடம் பெற்றிருக்கிறது.

விலை ரூ. 2-50

காவியக்கழக வெளியீட்டில்

விற்பனைக்குத் தயாரான நூல்கள்

கண்ணதாசன் கட்டுரைகள் ரூ. 1 50

மயிலாடும் பாறை (நாவல்)

தென்னரசு எழுதியது ரூ. 1 50

தேவைக்கு எழுதுங்கள்:

காவியக் கழகம்,

158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

சி. ஜே. டேனியல், அவாக்கா எஸ்டேட்

கே: காங்கிரஸ் காலிகள் செய்யும் அநீதிக்குக் கழகம் எடுத்த நடவடிக்கை என்ன?

ப: வழக்குத் தொடுத்திருக்கிறது. சில இடங்களில். காலித்தனத்தால் வீழ்ச்சி என்பதால், தாங்கிக்கொள்கிறது. இறப்புக்குமுன்னே சவக்குழி வெட்டிக்கொள்பவனை தடுப்பவர்கள் யார்?

கே: அண்மையில் சென்னை மாவட்டம் நடத்தியதிராவிட நாடு விடுதலை வார ஊர்வலத்தில் காங்கிரஸ் பிணம் கொண்டு வந்தது தவரு?

ப: அது 62ல் சிலவிடங்களில் நடக்குமே. அதற்குள் ஏன் அவசரப்பட்டார்கள் என்பதுதான் வருத்தம்.

மு. மணி, அயன்புரம்

கே: அண்ணு அவர்களே! 'திராவிடநாட்டை அடைந்தே தீருவோம் என்பவர்கள், இல்லாத ஊருக்குத் தெரியாத பாதையைப் புரியாதவனிடம் காட்டுவது போல' என்கிருரே, ஒரு தமிழறிஞர். தங்களுடைய பதில் என்ன?

ப: தமிழறிஞரா? அவர் யார். தமிழர்போல் இருந்திருப்பார். சரியாகக் கவனியும். எந்தப் பழமும் ஆப்பிள் பழம்போல் இருப்பதுண்டு.

கே. எஸ். அமீது, பேட்டை வாய்த்தலை

கே: மாநிலமாநாடு எப்போது, எந்த இடத்தில் நடக்க இருக்கிறது?

ப: நவம்பர் 6ந் தேதிக்குப்பின் பதில் கிடைக்கும். பத்திரிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிரும்.

★ தமிழர்கள் உணர்ச்சியற்றவர்களா? மரக்கட்டைகளா?
★ காங்கிரஸ் காலிகள் செய்யும் அநீதிக்குக் கழகம் எடுத்த நடவடிக்கை என்ன?
★ மாநிலமாநாடு எப்போது எந்த இடத்தில் நடக்க இருக்கிறது?

கே: மனிதன் எதற்காகப் பிறக்கிருன்?

ப: வாழப்பிறக்கிருன். ஆனுல் எங்கும் சாகக் கிடக்கிருன்.

கே: அரையணு, இரண்டணு செல்லாது என்கிருர்களே, ஏன்?

ப: சுதந்திரமே செல்லாது என்கிறபோது. ஏன்அதைப் பற்றிக் கவலைப்படுகிறீர்.

கே: தி. மு. க. விலிருந்து ஏன் சிவாஜி கணேசன் காங்கிரசில் சேர்ந்தார்?

ப: அவர் விருப்பம். தி. க. விலிருந்த சனுர்த்தனம் ஏன் தி. மு. க. வில் சேர்ந்தார்.

கே: நாம் அழைக்காத இராஜாஜியே நம்முடன் கூட்டு சேருவதாக அறிவித்திருக்கிருரே, இது எதைக் காட்டுகிறது?

ப: நம் வளர்ச்சியைக் காட்டுகிறது.

எஸ். டி. இராசன், பம்பாய்-1

கே: சிந்தனைச்சிற்பி அவர்களே! முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், பெண்ணுடம் பொதுக்கூட்டத்தில் பேசும்போது, 'திராவிட நாடு கிடைத்தால் சோறு கிடைக்குமா?' என்று பேசி இருக்கிருரே?

ப: இப்போது இவர்கள் போடுகின்ற சோற்றைவிட வெள்ளையன் அதிகச் சோறு போட்டானே அவனை விரட்டியது ஏன்? தன் மானத்துக்காகவல்லவா என்று கேளும், இந்தத் தன்மான மற்றவர்களை.

கே: வடநாட்டு நடிகரின் காலைத் தொட்டுக் கும்பிட்டாராமே ஒரு தமிழ் நாட்டு நடிகை? இது முறையான செயல்தானு?

ப: வட நாட்டுக்காரனைத் திருமணமே செய்துக்கொண்டாளே ஒருத்தி, இதற்கேன் வியப்படைகிறீர். அது காதல்; இது பக்தி.

தெ. கண்ணப்பா, ஆறுமுகம், கோவை

கே: நேருவுக்குப்பின் யார் என்று கேட்டு கேலியும் கிண்டலும் செய்கிறீர்களே (தி.மு. கழகம்) உங்கள் கட்சியில் அண்ணுத்துரைக்குப் பின் நெடுஞ்செழியன் மட்டுந்தானு?

ப: அவருக்குப்பின் யார் என்பதுதான் சரியான கேள்வி. இவருக்குப் பின் இப்போதே ஏழு பேர்கள் இருக்கிருர்கள்.

ஆர். தாண்டவன், திண்டுக்கல்

கே: அண்ணு அவர்களே! நம்முடைய கழகத்தில் இருக்கின்ற நடிகர்களையும் நண்பர்களையும் என் நண்பர் கண்டபடி ஏசியபடியே இருக்கிருர். அவரைத் திருத்த என்ன செய்ய வேண்டும்?

ப: கன்னத்தில் படார் என்று ஒருஅறைகொடும். திருந்துவார்.

ப. இ. இளங்கோ, பம்பாய்-70

கே: ஆசிரியர் அவர்களே! பண்டைய காலத்தில், வீரத்தால் வேலி கட்டி, விவேகத்தால் அரண் அமைத்து, அறிவால், பேச்சால் உயர்ந்து நின்ற நாடும், அறிவு பிறந்ததும் அரசியல், சரித்திரம், ஜனநாயகப் பேரொளி வீசியதுமான முதல்நாடு எது? அங்கு தோன்றிய மேதைகளின் பெயர்களையும் அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ப: கிரேக்க நாடு. அதுதான் மற்ற எல்லா ஜனநாயக நாடுகளுக்கும் அறிவுச் சுடர் காட்டி ஆராய்ச் மணியடித்த நாடு. பிண்டார், பெரியாண்டர். ஹோமர் ஜெஸ்ஸெச்சி. ஜினோ சாக்ரடீஸ். பிளாட்டோ அரிஸ்டாடல் போன்ற வர்களே, அந்த மேதைகள்.

தங்கச்சி மடம்

எதிர்பாராத சூழ்நிலையினால் தங்கச்சி மடம் இடம்பெறவில்லை. அடுத்த இதழில் கண்டிப்பாக இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—பொறுப்.

போலீஸ் : நடைபாதை சிமின்ட்டுல கட்டினுலும் கட்டுனுன். நாடோடி மன்னன்லாம் ஜாலியா படுத்துக்க ஆரம்பிச்சுட்டாளுங்க!...ஏய்...எழுந்திருடா...எழுந்திருடா...

இரா: நான் எத்தை திருடினேன்?எழுந்திருடா! எழுந்திருடா!-ங்குறிங்க...

போ: ஏன்டா...ரோடுதான் கிடச்சுதா படுத்துக்க... மேற்கொண்டு குதர்க்கம் பேசுற...போடா...போ... வேறெங்காவது சத்திரம் சாவடி பார்த்துப் போ

இரா : சத்திரஞ் சாவடியேது மெட்ராசிலே... மூலைக்கு மூலை 'போலீஸ் ஸ்டேசன்' தானிருக்கு! அதுக்குள்ள படுக்கனும்னு-இதுல படுக்கனும்...

போ: யேய்... என்ன சொன்னே... (ஓடுதல்)

போ: திருட்டுப் பசங்க! இன்னைய தேதியிலே பிளாட்பாரம்லே படுக்கிறவன்தான் சட்டம் பேசுறுன். திட்டம் போடுறுன்.... இவனுங்களை சமாளிக்க ஹிட்லராலகூட முடியாது.

இரா: ...உலக வரலாற்றை எழுதுறவனேகேர்ஆப்பிளாட்பாரம் தான். புரட்சினு தூசிப் படையா நிற்கிறது நாமாதானே. என்னமோ (பிளாட்பாரம்)னு கேவலமா நினைக்கிறுங்க. நாம்உலக சரித்திரத்திலேயே திரும்புமையம்... படையெடு மகனே என்றுல் விடைகொடு தாயே என்போம்அஹ.. [வயிற்றைப் பிடித்துக் கொண்டுஹஹ்ஹா...அய்] யோ, அப்பா...அடிவயிறு பகீர்ங்குதே...பசி...பசி...

சங்கரன் : இந்தா இந்தத் துணியை வச்சி அமுக்கிக்க கொஞ்சம் 'தம்' பிடிச்சிக்கிட்டு இருக்கலாம்.
(போஸ்டர் ஒட்டும் அப்பர்)

அப்பர்: ஏய் ... நீங்கதானு ! உம்...

ச: (ஓடமுயலுதல்!) டேய் போலீஸ் போலீஸ்...

அ: ஏன்டா இப்பத்தான் poster ஒட்டுனேன். ஈரம் காயிரத்துக்கு முந்தி எடுத்துக்கிட்டீங்களா? எங்கடா அது?

ச: யோவ் போஸ்டர் !... அவன் அவன் சஞ்சிக்கு செத்துப் போயிருக்கிறுன் இந்த லட்சணத்திலே இது வேறயா

அ: ஆ...என்போன்ற வருக்குத்துயரமா ? இந்தா... (டப்பாவிலிருந்து உணவு தருதல்)

ச: அடேடே... சீனிபோடாத அல்வா! அடி சக்கை! கொட்டு இன்னம்...

ச: ஏன்னே...உன் வேலை என்னு ?

அ: சட்டத்தை மீறுதல்—

இ: ஐய்யய் யோ! அப்ப வெளியே நிக்குறியே...

அ: உம்... நம்ம(டுடி-நைட்ல) பன்னிரெண்டுக்குத்தானே 'ஸ்டாட்' ஆவும்...

ச: ஏன்னே...பெரிய கொள்ளைக் கூட்டமோ ?

அ: உம்அதான்...இல்லை.சினிமா 'போஸ்டர்' ஒட்டுதல்! "நோட்டீஸ் ஒட்டாதே மீறினுல்தண்டனை" என்று எழுதியிருக்கும். அது மேலேயே...ஒட்டுவேன்.

ச: ஏன்னே...தங்கியிருக்க வீடுவாசல்...

அ: ஐந்தடுக்கு மாளிகை...
ஆ...

எங்கள் நண்பன்

அ: அதாவது Notice ஒட்டுவேன். அப்படியே மொட்டைமாடியிலே தூக்கம் போட்டுடுவேன். சுதந்திரமான வேலை...

ச: சம்பளம் கிம்பளம்...ஏதாவது !

அ: உம் நான் எடுத்துக் கிட்டதுபோக மீதிதான் !

ச: அட!...எங்கண்ணே? நானும் வர்றேன்.

அ: Nocite postice ஒட்ட மைதா மாவு தருவாங்க— அதை கேசரி, உப்புமா... களிபோட்டு தின்பேன். மீதியை...போஸ்டர் அது இதுதான் தர்மம்.

இ: அட...பாவம். இருந்தாலும் இப்புடி போயும் போயும்...படம் ஒட்டுற பசையை திங்கக் கூடாது ...என்ன ! என்னமோ ஈரகுலையெல்லாம் ஒன்னோட ஒன்னு ஒட்டிக்கிட்டாப்புடி இருக்கே ... ஆட்டத்தைக் காணுமே !

அ: நீங்கபசியாறினது நோட்டீஸ் ஒட்டுற பசையைத்தான்...

இ: நான் அப்பவே சொன்னேன்! சந்தேகப்பட்டு... இவன்தான் ஒரேயடியா மண்டிபுட்டான்...காசை எடு...பேதிமாத்திரை வாங்கி கிட்டுவர்றேன்... அட! என்னடா...பேச்சை காணும்! வாயும் ஒட்டிக் கிச்சா...

ச: உம்...உம்... (வாய்மூடி விடுதல்)

இ: சரிதான் இதுக்கு வைத்தியம் செய்ய எங்க போறது ?...

அ: உம் நீங்கெல்லாம் அனுபவ மில்லாதவுங்க...நான் அன்ெறுருநாள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துஐம்பதாம் ஆண்டு இந்தியா குடியரசானபோது ஜனவரி 26-ல் கோடம் பாக்கம் வந்தேன். சினிமா—என் ஆசையை வளர்த்தது. அல்லல்பட்டு அலைமோதி மதிப்பிழந்து மானமிழந்து இங்கவந்தேன். 'மூர்மார்க்கெட்' என் வயிறை வளர்த்து உயிரை நிறுத்தியது.

இ: அப்ப நீயும் சினிமாவில் நடிக்க ஆசைப்பட்டு ஓடோடி வந்த நாடோடியா?

அ: அப்படின்னு ? நீங்களும் நடக்க வந்த ஆளுங்களா?...ஏய்...உன் காலலே விழுந்து கேட்கிறேன் உடனே ஊருக்குப் போங்கப்பா! சாமி...போதும்! நான் பட்டபாடு.

இ: உம். உனக்குத் திறமையில்லே. பத்து வருஷமாயும் படத்துல நடிக்கல்ல. நான் பாரு இன்னம் இரண்டுமாதத்திலே...

அ: ஊருக்குப் போயிடுவே!- 'வித்அவுட் டிகட்ல'...என்னமோ நான் சொல்லுறதை எடுத்தா எடுத்துக்க ...இல்லாட்டி...
(போலீஸ் வருதல்—எல்லோரும் ஓடுதல்)

[மாலையில்—பிளாட் பாரத்தில்-வடைசுடும் கிழவி-]

இ: ஆயா...உன்னைப்பாத்தா என்பாட்டி நினைப்பு வருது! ...நீதான் என்னை கவனிக்க மாட்டேங்குறே!

கிழவி: என்னட...படாபேஜாரு...சொன்னு கேளு... வடை முறுக் கெல்லாம் வித்ததும்தான் உனக்கு மீதியைத் தருவேன். அதுவரை சும்மா கிட...

இ: உம்...என் பாட்டியா இருந்தா இன்னேரம்... (எடுத்தல்) அய்யய்யோ அடிக்காதே அடிக்காதே... எல்லாம் விக்கிறவரை காத்திருக்கேன்.

கி: ஏன்டா...அது என்ன நம்ம குருசேவை பாத்தா- குருசாமி முதலியாருமாதிரி இருக்கு ...ரஷ்யாவிலேயல்லாம் நம்ம ஆளுங்க இருக்காங்களா...

இ: படா ஆளு ஆயா நீ! உலகச் செய்திகளெல்லாம் தெரிஞ்சி வச்சிருக்கே... இதோ பாரு...குருசேவு கோயம்புத்தூரிலே நெலத்த உழுதாரு... போன ஜன்மத்திலே இங்கதான் பொறந்தாராம்...

கோவிந்தராமானுஜம்

ஜோசியன் சொன்னுன். ஐசன்ஹோவரு கூட ஐயனுவரத்திலேதான் பிறந்தவராம்.

இ: அது சரி...இந்த நேத்தாஜி விஷயம் என்னடா ஆச்சு...

இ: அவரா... இமயமலையிலே சாமியாரா திரியுருர். 'டென் சிங்கு' அங்க போயிட்டுவந்து சொன்னுன். அவர்தான் டீ போட்டுக் கொடுத்தாராம். (அழகான பெண் வந்து ஓரமாக நிற்றல். பேப்பரைப் பார்த்து-கிழவிசேட்டல்)

கி: அதுயார்ரா ... சினிமா இஸ்டாரு! (நிற்கும் பெண்ணைப் பார்த்து)

இ: அதான் தெரியல்ல. நானும் நாலுமாசமா பாக்குறேன். விவரம் புரியல்லே? இடம் பொருள் ஏவல் தெரியும்! என்னு செய்யிருங்கிறது தெரியல்ல...பாவம் அழகாவும் இருக்கிருள்! என் மனசும் ஏங்குது. என்னமோ பெரிய பணக்காரி போலேருக்கு

கி: ஏன்டா ... பேப்பரிலே இருக்கிற இஸ்டாரு யாருன்னு அந்த ஒய்யாரியை சொல்றியே...

இ: "ஓ...பேப்பர் லேடியா?... அவ யாரோ...சில்லரை நடிகை ஆயா! இப்படி போட்டோ போட்டாதான் அவளுக்கு கலை உலகத்திலே 'சான்ஸ் கிடைக்கும்! பேப்பரும் விற்கும்! அதுக்காகத்தான் ஆயா...போட்டிருக்கான். நானும் வாங்கினேன்..."

(பெண் இவனைப்பார்த்து)

பெண்: "ஏன் மிஸ்டர்?...இந்தப்பக்கம் ஒரு நீலக்கார் வந்து நின்னுதா?

இ: "ஓ...... ஒரு நீளக்கார் வந்துநின்னுது.போச்சு..."

பெ: "குறும்புக்காரர் போலேருக்கே..."

இ: ஹி ... ஹி ... நீகுறும்புக்காரிபோலேருக்கே சினிமாவுலே நடிக்கிறியா?"

பெ: "ஏய் ... மரியாதை இல்லாம பேசுறே! என்னை என்னுன்னு நினைச்சே?"

இ: டெய்லர் கடை பொம்மைன்னு...
ஜவுளிக்கடை லேடின்னு...
மஸ்லின் மடந்தைன்னு...
குமுதம்—படம்னு...

பெ: ஏய்...என்னு...ரொம்ப பழகின ஆளுமாதிரி பேசுறே......இது ரோடு நாலுபேர் நடமாடுற இடம்"

இ: "உம்...நீதான் பழகல்ல! நான் தினந் தெனம்— பழகுறதுமட்டுமா ஒரு 'டுயட்டு' கூட பாடி ஆடினேன் கனவுலே! இந்த

ஆயா, குப்பைத்தொட்டி, ...சாட்சியா சொல்றேன்... நான் உன்னை...
(போலீஸ் வருதல்)

போ: "டேய்... ராமலிங்கம் ! என்னடா......கலாட்டா, நானும் அப்போ பிடிச்சி பாக்குறேன். குனியிறே... குழையிறே...என்னடா பருவப் பெண்ணிடம் வம்புசெய்யிறே...

பெ: "ஆமாம் சார்......நான் போற இடமெல்லாம் பின்னுலேயே சுத்துருன். ஏன்னு கேட்டா—சர்க்கார் ரோடுங்குருன்..."

போ: டேய்......என்னடா சோமாரி. உள்ளே பிடிச்சி ...போடணுமா ?

இ: "ஆமாம். குளிர்காலம் வந்திடுச்சி...பிளாட் பாரத்திலே யெல்லாம் தண்ணி ஓடுது!"

போ: அடத் திருட்டுப்பயலே! என்னையே டபாய்க்கிறியா ...பிடிடா...பிடிடா... (ஓடுதல்: இராமலிங்கமும் சங்கரனும் ஓடுதல்).
(மறுநாள்: மாலை: இராமலிங்கம் வருதல்.)

இ: "ஏன் ஆயா......இங்கே நிப்பாளே ஒரு வெங்காயச் சருகு சேலை...... எங்க காணேம்?!..."

கி: "டேய்...நீயும் ஓடிப்போயிடு!......அவளை போலீஸ் காருலே கொண்டுகிட்டு போயிட்டாங்க"

இ: "ஆ...(வசனம்) கொண்டு போய் விட்டார்களா என் கோமளவல்லியை! பொன்னும் மணியும் மின்னும் ஜிகனுவும் போட்டு மகிழ்ந்துமஸ்லின்நல்லதா? ரயான் சில்க் நல்லதா?— எனைக் கேட்டு தெளிந்து— ஐடெக்ஸ் பூசிய கண்களுடன்—லிப்டிக்ஸ் தடவிய உதடுகளுடன் கண் கவர நின்ற என் பெண் மயிலை- கொண்டு போய்விட்டார்களா? கொடியவர்கள்... ஆ...அவள் நின்ற இடத்தில் குமுதத்தில் பூசிய 'சென்ட்' மணக்கிறதே.

[போலீஸ் ஜீப்: வருதல்- அதில் அவளிருத்தல்.]

இ: "ஆ...... வந்துவிட்டாள் என்வனிதாமணி! வண்ண மலரே! நீயும் என் போல் 'சேர் ஆப் பிளாட்பாரம்! என்பதனை அறியேன். மன்னித்துவிடு. அன்புள்ள நகர்க் காவலர்களே...என் ஆரணங்கை விட்டுவிடுங்கள். நான்தான் குற்றவாளி! என்னைக்கைது செய்யுங்கள் — சிறையிலே போடுங்கள்— குத்துங்கள். கொல்லுங்கள், அவள் நிரபராதி. நிரபராதி. கண்ணே! பார் என் தியாகத்தை! நான் விடுதலையாகி வரும் வரை காத்திரு. நீயற்ற நான்—அறிவற்ற மூளை!"

இன்ஸ்பெக்டர்:
இவள் கொலைகுற்றம் புரிந்தவள். மேலும் கள்ளக்கடத்தல், சாராயம் முதலிய..."

இ: ஆ......எனக்கு ஒன்றும் தெரியாது. நான் நாடக ஒத்திகை தான் பார்த்தேன் (ஓடுதல் போலீஸ் பிடித்துக் கொள்ளுதல்).

டேய்......இவ இருக்கிற இடத்தை சொன்னு...உனக்குப் பரிசுகிடைக்கும். இவளுக்கு பத்து இடத்தில் பழக்கம். அவை அத்தனை இடத்திலும் துப்புகிடைக்கும் பல வழக்குகள் தெளிவடையும்.! தயவு செய்து சொல்லுப்பா... உனக்கு...

(இராமலிங்கம் மறுத்தல். கடைசியில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வந்து வேண்டுதல்)

'பிளாட்பாரம்'என்று கேலி பேசிய அதே 'போலீஸ் இவனுடைய உதவியால் பயங்கர கேசுகளைப் பிடித்தன. இறுதியில் இராயப்பேட்டை ராமலிங்கம் 'போலீஸ்' ஆக்கப்பட்டான்!

பரிசும் பதவியும் பெற்ற இராமலிங்கம் விடுத்த முத்தமிழ்ஒலை.]

(இயல்) அன்புள்ள தோழர்களே! பொதுமக்களே! நீங்கள் எதிரி—கேவலமானவன் கீழ்மகன்-இழிந்தவன்-என்று கருதுகின்றவர்களில் கூட நல்லவர்களிருக்கின்றுர்கள்.

(இசை)

சேற்றினிலே பல நோயிருந்தாலும்
தாமரை மலர் வதுண்டுவுஊ...
நடைபாதையிலே பலர் வாழ்ந்து வந்தாலும்
நன்மை புரிவதுண்டுவுஊ...

(நாடகம்)

ஹஹ...ஹஹ்ஹா! அரசியல் நிலவும் பிளாட்பாரமே! விலங்குகள் உலவும் பிளாட்பாரமே! உன்னைக் கடந்து சென்றவன் மெய்ஞானி-உன்னைக் கடவாதவன் பொய்ஞானி!! நீ வாழ்க !!

கடமையா? தியாகமா?

சினிமாவிற்குப் போவதற்காக நிலைக்கண்ணாடி முன் நின்று தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டிருந்த சேகரின் காதில், 'சார் தந்தி' என்ற ஒலி விழவே அவன் எண்ணக் கோட்டைகள் அத்தனையும் கை தவறி விழுந்த கண்ணாடிப் போன்று நூறாக சிதறித் தெறித் தோடின. அவசரமாக அறையைவிட்டு வெளியே ஓடிவந்த அவன் அங்கு நின்றுகொண்டிருந்தவனிடமிருந்து தந்தியைப் பெற்று அதை உடைத்துப் பார்க்கிறான். பார்த்தவன் பிரமித்து விடுகிறான். தந்தி மேல் வைத்த விழி எடுக்காது, கண் சிமிட்டாது அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்த நேரத்தில் தந்தியில் இருந்த வார்த்தைகள் உருப்பெற்று அவன் கண் முன்னே தோன்றித்தோன்றி மறைந்து கொண்டிருக்கிறது. "ஆபத்து உடனே புறப்படு" என்ற குறிப்பைக் கண்டதுடன் மிகவும் கலங்குகிறான். பயங்கரமான எண்ணங்கள் அத்தனையும் அவன் சிந்தனையில் இடம் பெறுகின்றன. எதையோ கண்டு பீதி யடைந்தவனைப் போல் மனம் மிகவும் குழம்பியவனாக கலக்கத்தோடும் கலங்கிய கண்ணீரோடும் நிற்கிறான். காசை எதிர் பார்த்து நின்றுக்கொண்டிருந்த தபால்காரன் அவன் நிலைக் கண்டு ஒன்றும் புரியாமல் அப்படியே திரும்பிச் சென்று விடுகிறான். எவ்வளவு நேரம் நின்றானென்று சேகருக்கே தெரியாது. அவன் தன்னுணர்வுபெற்றவுடன் தன்னையும றியாமல் கை தவறி கீழே விழுந்த தந்தியை குனிந்து எடுக்கிறான். அதன் மீதும் ஓரிரு கண்ணீர்த் துளிகள் பட்டு சிதறிக்கிடந்தன. எந்த வித ஒரு முடிவுக்கும் வராமல் அமைதியற்ற முறையில் அறைக்குள் சென்று விடுகின்றான்.

சேகர், சென்னையி லுள்ள தனியார் துறை அலுவலகமொன்றில் ஒரு சாதாரண குமஸ்தாவாக பணியாற்றி வருபவன், உற்றார், பெற்றோர் அனைவரையுமிழந்து தமக்குத் துணையாக வந்தவளையும் திருச்சியிலே விட்டு விட்டு சென்னையிலே வாழ்ந்து வருபவன், தந்தியைக் கண்டவுடன் அவன் உண்மையிலேயே பதை பதைத்துவிட்டான். காரணம், இதைப்போன்றதோர் சந்தர்ப்பம் நேரக்கூடுமென்பதை யறிந்து தினமும் அவன் அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவனாயிற்றே.

கமலிதான் சேகரின் கரம் பற்றியவள். கமலிக்கு அவள் தங்கை சுசிலாவைத் தவிர வேறு யாருமே கிடையாது. சுசிலா பருவமடைந்துஅன்று பூத்த மலர்போன்று அழகு சொட்ட வளர்ந்திருந்தாள். அத்தனை அழகுடன் அவள் விளங்கிதான் என்ன பயன்-? பிறப்பிலே அவள் ஊனம். நொண்டியாகவே பிறந்து விட்டாள். சுசிலாவிற்கும் கமலியைத் தவிர வேறு யாரும் கிடையாததால் தன் அக்காளிடமே விட்டு விட்டாள். இதனால் கமலி, சுசிலாவைப் பற்றி எண்ணாத நேரமே கிடையாது. கமலி ஏடெடுத்து படித்தறிந்தது கிடையாது. ஆனால் குடும்பப்படிப்பிலே முதல்தரமாக வரவேண்டியவள். அதனால் தம் நிலையறிந்து தம் கணவர் வருவாயைக் கொண்டு சென்னையிலே குடும்பம் அமைத்து, அதில் மூன்று உயிர்களும் வாழ்க்கை நடத்த முடியாதென்பதை நன்கு புரிந்து கொண்டு திருச்சியில் எளிமையானதோர் குடும்பத்தை அமைத்தாள்.

சேகருக்கும், கமலிக்கும், திருமணம் முடிந்து சரியாக ஓராண்டு காலம்தான் நிறைவடைந்தது. இதற்குள் தம் வாழ்வில் ஏற்பட்ட தாங்க முடியாத வேதனைகளையும், எதிர்பாராத சோதனைகளையும் கண்டு உண்மையிலேயே சேகர் பயந்தவனாகவே வாழ்ந்து வந்தான். சேகர் ஊரைவிட்டு வந்து சரியாக மூன்று மாதங்கள்தான் ஆனது. இந்த மூன்றுமாத இடை வெளியில் அங்கு என்னென்ன நடந்ததோ—எத்தனை துன்பங்களை ஏற்று பொறுத்து நடக்கவேண்டிய வளானளோ கமலிஎன்ற எண்ணம் எழ, எழ சேகரின் உள்ளம் தடுமாறுகிறது. சேகர் கமலியிடமிருந்து விடைபெறும்பொழுது அவள் ஏழு மாத கர்ப்பிணி. இப்பொழுது அவள் பூர்ண கர்ப்பிணி, இந்த நிமிடமோ அல்லது அடுத்த நிமிடமே கமலி தாய்மை என்னும் எல்லைக்குள் புகுந்துவிடப் போகிறாள். ஒரு குழந்தைக்கு தாயாக மாறும் இந்தத் தருணத்தில் தானா கமலியின் உயிர் போராட்டம் தொடங்கவேண்டும்? வாழும் உயிரை மாய்த்துத்தானா வாழப்போகும் உயிர் பிறக்க வேண்டும்? உலகில் இது தானா நியதி? இதுதான் நியதியென்றால் இந்த உலகம் இருந்தென்ன? அழிந்தென்ன? என்று எண்ணக் கூடாத எதை எதையோ எண்ணி மிகவும் மனம் கலங்கி தன் கைக்கடிகாரத்தைப் பார்க்கிறான். அப்பொழுதுதான் மணி சரியாக ஏழு. தன் சாமான்கள் அடங்கிய மேஜை மீதிருந்த கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு அறையை பூட்டி விட்டு வெளியே வந்து பார்க்கிறான். ஒரு திருப்பத்தில் நின்றுக்கொண்டிருந்த 'டாக்ஸி'யில் ஏறியமர்ந்து டிரைவரிடம் ஏதோ சொல்கிறான். 'டாக்ஸி' பறந்து செல்ல ஆரம்பிக்கிறது. ஆனால் சேகரின் மனோ இயந்திரம் ஓடும் வேகத்திற்கு இணையாக அந்த மோட்டார் இயந்திரத்தினால் ஓடமுடியவில்லை.

'இந்தோ-சிலோன் எக்ஸ்பிரஸ்' ஆகையால் அது காற்றைக் கிழித்துக் கொண்டு கணவேகத்தில் சென்றுக் கொண்டிருந்தது. வண்டி விழுப்புரத்தை விட்டு புறப்பட்டதும் மிகுந்த குழப்பத்தில் இருந்த சேதர், தூக்கத்திலாவது சற்று நிம்மதி காணலாம் என்று படுக்கிறான். இந்த உலகில் தூக்கத்திலும், இறப்பிலும் தானே அமைதியைக் காணமுடியும். இதைத் தவிர உலகில் முழு அமைதியைப் பெற மனிதனுக்கு வேறுவழி தானேது..? தூங்குவதற்காக எவ்வளவோ முயற்சிக்கிறான் சேகர். புரண்டு — புரண்டு படுக்கிறான். தூக்கத்தின் சாயலே அவனுக்குத் தென்படவில்லை. பின் எழுந்து ஜன்னலோரமாக அமர்ந்து மூடியிருந்த கண்ணாடிக்கதவுகளைத் திறந்து வெளியே பார்க்கிறான். ஒரே இருட்டு, மழை வேறு லேசாக தூறிக் கொண்டிருந்தது. சேகர் கண்களில் இருந்து வடியும் கண்ணீரின் கருத்தைப் புரிந்துகொண்டுதான் இயற்கையும் சேர்ந்து அழுகின்றதோ என்னவோ...விட்டு— விட்டு மின்னல் வேறு பளிச்சிட்டு தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. வானமே இடிந்து விழுவதைப் போன்று பேரிரைச்சலுடன் இடிவேறு முழங்கிக் கொண்டிருந்தது. இவற்றை யெல்லாம் சேகர் பொருட்படுத்தவே இல்லை. காரணம் மின்னும் இந்த மின்னலைவிட பன்மடங்கு அதிகமாக அவன் சிந்தனையிலே பலவித எண்ணங்கள் மின்னலென-உருப்பெற்று தோன்றி-தோன்றி அழிந்துக் கொண்டிருந்தது. துடிக்கும் இந்த இடியைவிட ஆயிர மடங்கு அதிகமாக அவன் உள்ளக்குமுறல் எழுந்த வண்ணமிருந்தது. இவ்வித மனப் போராட்டத்திலே மனிதன் நிலை குலைவது

ஓ. என். ராஜ்

இயற்கை தானே ... அதற்குச்சேகர் மட்டும் என்ன விதிவிலக்கா...? தன் சிந்தனையை வேறு பக்கம் திருப்பயெண்ணி 'அறிஞர்கள் வரலாற்றுத் தொகுப்பு' என்னும் ஒரு ஆங்கில நூலை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பிக்கிறான். அதிகமாக ஓரிரு வார்த்தைகள் தான் பார்த்திருப்பான். அதற்குமேல் அவனால் தன் சிந்தனையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் எது செய்தாலும் அவன் எண்ணங்கள் மட்டும் கமலியைச் சுற்றிச் சுற்றி வந்தன, ஒவ்வொரு எழுத்திலும் கமலி தோன்றினாள். அவள் ஆடினாள் — பேசினாள். இதே நிலையில் மீண்டும் இருந்தால் திருச்சியை யடைவதற்குள் தாம் முழுப்பைத்தியமாகி விடக்கூடுமென்று புரிந்து கொண்டு மனதை எப்படியோ தைரியப் படுத்திக் கொண்டு கண்களை பலாத்காரமாக மூடிக்கொண்டு அப்படியே சாய்ந்து விடுகிறான்.

வண்டி திருச்சி நிலையத்தை யடைந்ததும், சேகர் அவசரம் அவசரமாக இறங்கி வெளியே வந்து ஒரு வாடகைக் கார் ஒன்றை எடுத்துக் கொண்டு தம் வீடு நோக்கி வருகிறான். வரும் வழியில் திருச்சியில் மிகவும் பெயர் பெற்ற லேடி டாக்டர் மிஸஸ். ஸோபனாவையும் உடன் அழைத்து வருகிறான். வீட்டை யடைந்ததும் வீடு மிகவும் அமைதியான முறையிலே காட்சியளித்தது. வீட்டின் எல்லா கதவுகளும் திறந்தபடியே கிடந்தன. தம் பழைய நண்பர்களின் மனைவிகள் இரண்டு, மூன்று பேர்களும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும், வந்திருப்பதாக அவனுக்குத் தெரிந்தது. துடிதுடித்துக் கொண்டு உள்ளே ஓடிய சேகரை பக்கத்து வீட்டுக் கிழவி யொருவள் தடுத்து, அத்தான்—அத்தான் என்று அன்போட உன்னை அழைச்சிகிட்டே இருந்தா-கமலி அவர் வந்துவிட்டாரா? வந்துவிட்டாரான்னு ஆசையோட வழியையே எதிர் பாத்துக்கிட்டு இருந்தா ஆனால்......அவள் ஆசைகள் எண்ணங்கள் எல்லாம் அழிஞ்சு, ஒழிஞ்சு, அடங்கின பிறகு நீ அவளைத் தேடி ஓடோடி வந்திருக்கே...நீ கொடுத்துவைத்தது அவ்வளவுதான்" என்று சொல்லிமுடித்து மீண்டும் சேகரை நிமிர்ந்து பார்க்க மனம் வராதவளாய் தலையை மறுபக்கம் திருப்பிக் கொள்கிறாள். இச்சமயம் சேகரின் வருகையைக் கண்ட கமலியின் தங்கை சுசிலா, "அத்தான்—அத்தான்" என்று அலறியடித்துக்கொண்டு நொண்டி—நொண்டி ஓடி வந்து சேகரின் பாதங்களில் தடாலெனவீழ்ந்துவிடுகிறாள். அவள் நொண்டி—நொண்டி ஓடிவந்த நிலையைக் கண்டதும் துயரத்தால் சேகரின் உணர்ச்சிநரம்புகள் அத்தனையும் புடைத்தெழுந்து விட்டன. அப்படியே வடியும் கண்ணீரோடு சுசிலாவைத் தூக்கிப் பார்க்கிறான். சிவந்த அவளது முகம் வெளுத்து வீங்கி விட்டது, இரவில் இருந்தே அவள் அழுதிருக்க வேண்டும். அவளது பளிங்குக் கண்கள் வறண்டு கிடந்தன. இந்தக் கண்ணீரையெல்லாம் அழுது-அழுது கொட்டி விட்டாள் போதும்! அந்த ஊரே திரண்டு வந்து சேகருக்கு அமைதி கூறினாலும், அவன் நிம்மதிபெற முடியாத அந்த நிலையில் அவனெப்படி சுசிலாவைத் தேற்றமுடியும்? அவளை எப்படித் தேற்றி அமைதி கூறமுடியும்? அதனால் எதுவும் கூறாமல் சுசிலாவை அப்படியே விட்டு விட்டு வெடுக்கென்று அறைக்குள் நுழைகிறான். அங்கு நிலவியக் காட்சியைக் கண்டு பைத்தியக்காரனாகவே மாறி விடுகிறான்!! அந்த அறையை மௌனம் சூழ்ந்துக் கொண்டிருந்தது! சிரித்த முகத்துடன் கமலி பிணமாகக் கிடந்தாள்! கமலியைக்கண்டவுடன் தன்னையுமீறி அலறி விட்டு அவள் மீது வீழ்ந்து கதறுகிறான். புலம்புகிறான்— கமலியிடம் என்னென்ன பேசவேண்டும் ... எதை எதை சொல்லவேண்டும் என்று கற்பனைக் கோட்டைகள் கட்டியிருந்தானோ எல்லாவற்றையும் கூறுகிறான்! ஆனால் கமலியிடமிருந்துதான் பதிலேதும் வரவில்லை! மற்றவர்கள் இறந்து பிணமாகக் கிடக்கும் அந்த நேரத்தில் தானே மனிதன் உள்ளத்தில் அளவுக்கு மீறிய அன்பும், பொங்கும் பாசமும் ஏற்படுகிறது. "அழுது புலம்புவதால் இனி ஆகப்போகின்றதொன்றுமில்லை" என்ற குரல் கேட்டு சேகர் திரும்புகிறான். யாரோ ஒரு பெரியவர் அவன் கரம்பற்றி அவனை அணைத்தபடியே அப்பால் அழைத்துச் சென்று விடுகிறார்.

தம் வாழ்க்கையில் பூத்த மலர் — பூங்காவில் வீசிய தென்றல் — வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வந்த ஜோதி, எல்லாம் அழிந்து ஒழிந்து அடங்கிய பின் மீண்டும் என்ன செய்வது என்பது புரியாமல் ஒரே கலவரத்துடன் மனம் குழம்பியவனாக சேகர் அங்கு மிங்கும் உலவிக் கொண்டிருக்கிறான். தம் நண்பர்களும் மற்றவர்களும் சொல்வதில் பொருள் இருக்கிறதா? என்பதை நன்கு ஆராய்ந்து பார்க்கிறான். இதுவரையில் ஒரு முடிவும் கிடைக்கவில்லை. அதே சிந்தனையில் படுக்கைக்குச் சென்று விடுகிறான்.

இதைத் தவிர வேறு வழியேதுமில்லையென்பதைநன்கு தெரிந்த பின், சேகர் சுசிலாவிற்கு மாலையிட்டு அவளை மறு மணம் செய்து கொள்கிறான், திருமணம் முடிந்த மறு வாரமே இருவரும் சென்னை நோக்கி புறப்படுகின்றனர். பொங்கும் உணர்வில் துடிக்கும் புது மனைவி தன் பக்கத்தில் அமர்ந்திருந்தாலும் ஏனோ சேகர் அவளிடம் பேசவில்லை. சுசிலாவும் சேகரிடம் எதுவும் பேசவில்லை. அன்னை தந்தை இறந்து தம்மை ஆதரிக்க ஆள் இல்லாத அந்த நேரத்தில் தம்மை எடுத்து வளர்த்த கண்களைவிட பன்மடங்கதிகமாகத் தம்மைக் காத்து வந்த அந்த அன்பு அக்காள் இருக்கவேண்டிய இடத்தில் தாம் இருப்பதற்கான ஒரு வாய்ப்பு நேரிட்டதே என்ற அந்த ஒரே கவலையிலேயே சுசிலாவந்து கொண்டிருந்தாள்.

இளமுழக்கத்தின் அரையாண்டுத் திட்டம்

சினிமாவிற்கு பாடல் எழுதுவது எப்படி?

விவரம், விளக்கம் நாங்கள் தருவோம்

நீங்கள் எழுதுங்கள்!

ஒவ்வொரு வாரத்திலும் இடம்பெறுகின்ற பாடலுக்கு, **கவிஞர் கண்ணதாசன்** கவிதை ஒன்று பரிசாகத் தரப்படும்.

—நிர்வாகி

திரைஒலி

அகிலனின்

பாவை விளக்கு

பத்திரிகையில் தொடர் நாவலாக வெளிவந்து பல்லாயிரக் கணக்கானவர்களின் பாராட்டுதலைப் பெற்றகதை பாவை விளக்கு

திரையில் அந்த வெற்றிப் பவனி உண்டா என்ருல்...(?)

தொடர்கதையில் மனதை ஈர்த்த சம்பவங்கள் திரைக் கதையில் 'சப்' பென்றிருக்கிறது. தல்ல தேன் கூட்டிலிருந்து சுவையான தேனை எதிர் பார்த்தவர்களுக்கு அதன் சக்கையை மட்டும் தந்திருக்கிருர் சர்ப்ப (நாக) ராஜன்.

ஒரு 'திரிசங்கு' எழுத்தாளனின் வாழ்க்கையில் நான்கு பெண்கள் குறுக்கிடுகிருர்கள். இரண்டு பெண்களை அவன் விரும்பிக் காதலிக்கிருன். மற்ற இரண்டு பெண்கள் அவன் விரும்பாமலே அவனைக் காதலிக்கிருர்கள்.

ஒன்று உண்மைக்காதல்!

மற்ருென்று, ஊமைக் காதல்!

நான்கு பெண்களில்—ஒருத்தி தன் விரக்தியைத் தீர்த்துக்கொள்ள அவளைக் காதலிக்கிருன். மற்ருெருத்தி அவன் வெகுளித் தனத்தைக் கண்டு காதலிக்கிருன்.

வேருெருத்தி அவன் எழுதிய நாவலைப் படித்துவிட்டு அவனைக் காதலிக்கிருன். இன்னுெருத்தி சொந்த உறவைச் சொல்லிக் கொண்டு காதலிக்கிருன். இதில் — உறவைச் சொல்லிக்கொண்டு வந்தவள் அவன்வீட்டு விளக்காகி வெற்றி பெறுகிருள். மற்ற மூவரும் தோல்வியடைகிருர்கள், இதுதான் கதை! திரையில் வரும் எந்தப் பாத்திரமும் மனதைத் தொடுவதாக அமைக்கப்படவில்லை. மூலக்கதையை முடமாக்கி வைத்திருக்கிருர், திரைக் கதை அமைத்தவர்.

எழுத்தாளன் தணிகாசலமாக வரும் சிவாஜி கணேசன் நடிப்பு "இதில்" என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு எதுவுமில்லை என்ருலும் நடிப்பில் அவருக்கே உரித்தான முத்திரை தெரிகிறது. செங்கமலத்திடம் காதல் கடிதம் எழுதிக்கொடுத்து விட்டு அதைத் திரும்பக் கேட்கும் பொழுது அப்படிக் காட்டுக் கத்து கத்துவானேன்? அவ்வளவு தூரம் உடம்பை அலட்டிக் கொண்டிருக்க வேண்டாம்! விரசமாக இல்லையா? விதவை தேவகியாக வரும் பண்டரிபாயின் நடிப்பு வழக்கம்போல் சிறப்பாகஉள்ளது.

செங்கமலமாக வரும் கமலாவின் நடிப்பைக் காட்டிலும் அவர் ஆடும் நடனங்கள் நன்ருக உள்ளன.

கௌரியாகவரும் சௌகார் ஜானகி மிக நன்ருக நடித்துள்ளார். தன் அத்தான் முதன் முதலில் வீட்டுக்குவருவதைப் பார்த்ததும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடி அவரை வரவேற்கப் பறப்பதும், தன் குழந்தைகல்யாணி மாடிப்படியிலிருந்து விழுந்து இறந்தவுடன் அவர் துடியாய்த் துடிப்பதும் ஜானகியின் நடிப்புக்கு எடுத்துக் காட்டு.

பாவை விளக்கா(உமாவா) கவருகிருர் எம். என். ராஜம். தணிகாசலத்தை அவர் மனைவிக்காகப் பரிதே கொண்டு கண்டிக்கு மிடங்களிலும். தணிகாசலத்தின் மீது தான் வைத்துள்ள காதலை உள்ளத்திற்குள்ளேயே புதைத்து பொறுமுமிடங்களிலும் அவர் நடிப்புச் சிறப்பாக உள்ளது.

சாரங்கபாணி எதற்கெடுத்தாலும் பாட்டு மூலம் பதில் சொல்லாமல் இருந்திருந்தால் அவர் நடிப்பு கச்சிதமாக இருந்திருக்கும்.

வசனம்:—பிடை, முஞ்சியைப்பாரு, அடிச்சுக் கொன்னு போடுவேன் — என்று எதற் கெடுத்தாலும் அந்த அப்பாவி எழுத்தாளன் உறுமுகிருனே அது தான் நினைவில் நிற்கிறது.

இன்றுள்ள பத்திரிகை ஆளுக்கெல்லாம் ஒரு காலத்தில் வழிகாட்டியாக இருந்த 'குடியரசு' பத்திரிக்கையை கேலி செய்வதுபோல் ஓர் காட்சி அமைத்துஅதன் ஆசிரியருக்கு தமிழ் தெரியாதென்றும்—பிறர் கதையைத் திருடி தன் பெயரில் வெளியிடுவார் என்றும் காட்டியிருப்பதன் மூலம் தன்னைத் தானே கேலி செய்துகொண்டிருக்கிருர், நாகராஜன்.

நாகசண்முகம் போன்றவர்களின் கருவில் வளர்ந்த "நான்பெற்ற செல்வத்தை" தான் பெற்ற செல்வமென பறையடித்துக் கொண்டு கோர்ட்டு வாசற்படி வரை ஏறி இறங்கிய இந்த நாகராஜனின் நாறிப்போன எழுத்துத் திருட்டை நாடறியும்.

நல்ல இடத்து சம்பந்தம். என்பதற்குப் பதில் நல்ல இடத்து சம்மந்தம் என்று பெயர்வைத்து; ஒரு படத்திற்கு தலைப்பு வைக்கவே தனக்கு தகுதியில்லை என்று காட்டிக்கொண்ட இவருக்கு பேனு ஒரு கேடு! இவர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட எத்தனையோ எழுத்தாளர் களின்கதைகள் யானைவாயிற்போனகரும்பாக, குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையாக ஆன அந்த வெட்கங்கெட்ட கதையை நாமறிவோம். எழுத்துத் திருட்டையே தொழிலாகக் கொண்ட இவருக்கு பாவை விளக்கா பழியாகவேண்டும், பாவம்!

பாடல்கள்:—வண்ணத் தமிழ் பெண்ணுெருத்தி என்ற பாடல் நன்ருக உள்ளது. நீ, சிரித்தால் நான் சிரிப்பேன் என்ற பாடல் இனிமையாக இருந்தாலும் அதன் இசை படிக்காத மேதையில் வந்த படித்ததினுல் அறிவு பெற்ரேர் என்ற பாடலை நினைவூட்டுகிறது. மற்ற பாடல்கள், பீடி சிகரெட் குடிப்பவர்கள் வெளியே எழுந்து செல்வதற்கு வசதியாக அமைந்திருக்கிறது.

'காமிரா' கண்களுக்கு விருந்து!

டைரக்ஷன்:—பாவம்! எத்தனையோ படங்களை டப்பா' வாக்கிய பெருமை இவருக்கே உரித்தானது. பாவை விளக்கை மட்டும் பழி வாங்காமல் விடுவாரா-விளக்கை அணைத்தே விட்டார்.

ஒருவார்த்தை:—மெக்காவிற்கு போய் நொண்டிப் பக்கிரி காலிலே விழுந்ததைப் போல் அகிலன் அவர்களின்- நல்ல கதையை திரைக்குக் கொண்டுவரும் பொறுப்பை நொண்டி பக்கிரிகளான நாகராஜனிடமும் - சோமுவிடமும் ஒப்படைத்திருக்க வேண்டாம். மொத்தத்தில்—தீபாவளிக்கு வெளியாகும் படங்களில் பாவை விளக்கு சீனிப் பட்டாசாக வெடிக்குமென்று பலர் எதிர்பார்த்தார்கள்— ஆனுல் இது புஸ்வானம்.

—தினகரன்

காவியமல்ல, முழுநாவல்!

இலக்கிய உலகம் கண்டிராத மாபெரும்புரட்சி!!

வே. கபிலன் எழுதிய

சிலம்புச் செல்வி

டாக்டர் மு. வரதராசனுர், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, கா. அப்பாத்துரையார், டாக்டர் மா. இராசமாணிக்கம், சி. பி. சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன், முகவை இராசமாணிக்கம் போன்ருேரின் முன்னுரைகளுடன் கூடியது.

தனிப்பிரதி ரூ. 2-00

விற்பனையாளர்கட்கு 25 சதவிகிதம் கழிவு உண்டு.

விபரங்கட்கு:

பேரொளி பதிப்பகம்,

41, V. M. தெரு :: சென்னை - 14.

"இனமுழக்கம்" தரும் இன்சுவை விருந்து!

நமதியக்க நாவலாசிரியர்

கே. ஜி. இராதாமணாளன் எழுதும் புதிய தொடர்

மறவர்குலத்து மணிப்புரு

மறவர்குலத்துப் பெருமை சொல்லுவாள் மங்கையர் குலத்து மணிப்புரு இவள்!

நாவல் முழுதும் இவள் தரும் தத்துவம் இராதாமணாளனின் எழுத்துச் சித்திரம்!

★ கதையிலோர் திருப்பம்! ★ கற்பனையிலோர் புதுமை!

★ நல்ல தமிழ் நடை! ★ வெல்லத் தமிழ்ச் சுவை!

ஏஜண்டுத் தோழர்கள் அதிகம் பிரதிகளுக்கு முன்பணத்துடன் எழுதுங்கள்

"இனமுழக்கம்" சென்னை-2.

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர்: கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபால நாய்க்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

இனமுழக்கம்

ஆசிரியர் சி.பி.சிற்றரசு

உள்ளே....

★ நல்லார் ஒருவர்
★ கேள்வி பதில்
★ மனுநீதி மன்னன் - விமர்சனம்
★ தங்கச்சி மடம்
★ ஜான்சன் வரலாறு
★ புரட்சி நடிகரின் பொற்குவியல்

பணம் சேருகிறது, அங்கே! பிணம் குவிகிறது, இங்கே!

இந்திய அரசியலார் இன்பத் திராவிடத்துக்கு இழைத்து வருகின்ற கொடுமை கொஞ்சமல்ல! நாமும், நம்முடைய நாடும் அடிமைக்குரியதென்ற ஒரே காரணத்தால் கோடிக் கணக்கான கொடுமைகளை விளைத்து வருகின்றனர். கேட்டால் கழகத்தின் மீது குற்றஞ்சாட்டி, கண்டபடி தூற்றுகின்றனர், இங்குள்ள அமைச்சர்கள்! இதை நினைக்கின்றபோது எந்த இதயமும் பேசாமல் இருக்கமுடியாது.

கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிக் கொடுக்கப் படுகிறது, வடக்கிற்கு! அப்பணத்திலிருந்து ஓரளவுக்காவது நமது நாட்டுக்குப்பயன் படுகிறதாவென்றால் அது தான் இல்லை. டில்லிப் பேரரசுக்கு ஏஜண்டுகளாக இருக்கின்ற எடிப்பிடிகளைக் கேட்டால், நம்மைக் கண்டு—நம்முடைய இயக்கத்தைக் கண்டு ஏளனம் புரிகின்றன. தாம் ஒரு பெரிய பொறுப்பிலிருக்கிறோம் என்பதையும் மறந்து மமதையோடு சொற்களை அள்ளி வீசுகின்றன.

பிணம் குவிகிறது இங்கே!
பணம்சேருகிறது அங்கே!!

-இந்தநிலை நீடிக்கின்ற வகையிலேதான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும்உள்ளது. 'மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தாலாவது தேன்வந்து பாயும்நம் காதினிலே!' என்று நினைத்திருந்தோம். ஆனால் நம்முடைய நெஞ்சின் மீது நெருப்பள்ளிப்போட்டு விட்டார்கள்! எதிர்பார்த்த நேர்மைக்கு முன்னே நெடுந்திரை போட்டுவிட்டு வடக்கை வளர்ப்பதற்காகத் துரிதமாகி விட்டார்கள். இதைப் பற்றிக் கேட்டால் குருவியைப் பார்க்கும் வேடுவனின் கண்ணோட்டம் போல் நம்மீது குறிப்பு இருந்து வருகிறது.

மத்திய அரசினர், இம் மாநில அரசினருடைய உத்தரவின்றியே எடுத்துக் கொள்கின்ற பணத்தை, ஊர் பேர் இல்லாதவரிடம் கொடுத்து ஏமாறுகின்ற செய்தியை, நாளிதழ் வாயிலாக நாம் காணாமலில்லை. காண்ட்ரேக்ட் இல்லாத ஒரு கம்பெனிக்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் கொடுத்து ஏமாந்துள்ளது. இதை நினைக்கும் போது-நாளிதழ் வாயிலாக, இதுபோன்ற அநியாயச்செய்திகளைப் பார்க்கும்போது யாரால்தான் பொறுமையோடு இருக்க முடியும்? அமைச்சர்கள் இருக்கலாம், அங்கிருந்து கிடைக்கக் கூடிய பலாபலன்களுக்காக! காங்கிரஸ் காலிகள் இருக்கலாம், தகுந்த கூலி கிடைப்பதற்காக! சொரணைபற்றோர் இதுபோன்ற அநியாயங்களை சொந்தமாகக் கொள்ளலாம். ஆனால் ஆண்டபரம்பரையின் அடிச்சுவட்டிலே ஏறு நடை போட்டுக் கொண்டிருக்கும் வீரப்பரம்பரை இதற்கெல்லாம் தன் இதயத்தைப் பணிய வைக்காது.

இன்றைய தினம் இந்திய சர்க்கார் நம் நாட்டையும் சேர்த்துக்காட்டித்தான்அயலவரிடம் கடன் கேட்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுபவர் நாமில்லை என்று சிலர் கருதலாம். கயவர் கூட்டம், இதற்கு வக்காளத்து வாங்கலாம். விளைவு-? நாமும்தான்' மூர்மார்க் கட்டிற்த வருகின்ற வெள்ளையன் முன்னே நம்முடைய ஆட்கள்-வாழ்வதற்கு வசதியற்ற சிலர், அவனுக்கு அங்குள்ள பொருள்களைக் காட்டி காசுக்காக காரின் முன்னே நிற்பார்கள். இதைப் போலவேதான் ருமேனியா, ஆஸ்திரேலியா, செக்கோஸ்லோவியா, கனடா போன்ற சின்னஞ்சிறிய நாடுகளிலிருந்து யாரேனும் வந்தால் அவர்களிடத்தில் சிற்சில இடங்களைக் காட்டிக் கடன் கேட்கிறார்கள். இதற்குப் பெயர், 'இந்தியா?' அதற்குப் பிரதம மந்திரி நேரு அவர்கள், அவர்களை நம்பி வாழும் இந்நாட்டு 'அடிமை'கள்—அலங்கார பொம்மைகள்! இனத் துரோகிகள்! அதனால் தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும்முழுப்பலாவாக இல்லாமல், வெறும் அதன் மேல் இருக்கும் முட்களாக அமைந்துள்ளது.

முதல் முடிந்தது!

இரண்டாவதும் முடிவடைந்தது!!

மூன்றாவது திட்டமும் தீர்மானமாகிவிட்டது!!!-முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களைத் தீட்டிக் காட்டப்பட்ட நீட்டோலையைக் கண்டு கேட்டோம். தெற்குக்குரிய பங்கு எங்கே?" என்று. 'இருக்கிறது, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில்!' என்று, இங்குள்ளோர் சொன்னார்கள். ஆனால் தெற்குக்குரிய திட்டங்கள்-?

மட்டமாக்கப்பட்டு விட்டது!

சேதுசமுத்திர திட்டம், தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தி செய்தல், நெய்வேலி நிலக்கரி திட்டம், இரயில்வே இருப்புப் பாதை, சேலத்து இரும்புபோன்றதேவையான திட்டங்கள் இல்லாமல் வெறும் திட்டத்தைத் தீட்டிக்காட்டி, 'பார்த்தீர்களா, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தை!' என்று வாய்ச்சவடால் அடிக்கும் அமைச்சர்கள் காட்டுகிறார்கள். இந்நிலை நீடிக்கத்தான் வேண்டுமா?

எதிலும் வஞ்சகம்—எப் பக்கம் நோக்கினும் அப்பக்கமெல்லாம் சூழ்ச்சி,—இந்த இழிசெயலிருந்து நாம் தப்பிக்க வேண்டுமானால் தனித் திராவிடக் கூட்டாட்சி ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லை நமக்கு. எத்தனை வகையான ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டிக் காட்டினாலும், அதனால் பயன் பெறுவது நாமாக, இல்லை; இன்பத் திராவிடசமுதாயமாக இல்லை; ஓராயிர மைல்களுக்கப்பால் வாழும் ஒரு கூட்டமாகத் தான் உள்ளது. இதையெல்லாம் மக்கள் மத்தியிலே எடுத்துக் கூறுகின்ற இயக்கத்தைக் கண்டு, வாய்க்கு வந்தபடி பேசுகின்றனர்.

'இவர்கள் எதற்குமே எதிர்ப்பைத்தான் காட்டுவார்கள்!' என்று, இங்குள்ள மான ரோஷமற்ற மந்திரிகள் வாய் கூசாமல் கூறுகின்றனர். அவர்களுக்கு அடியாட்களாகவுள்ள சில அனுதைகள் — அங்கத்தினரென்ற பெயருருவிலே இருக்கின்ற அடிமைகள், அறிவற்ற முறையிலே பேசித் தீர்க்கின்றன. இவர்களுக்கெல்லாம் நாம் ஒரு முடிவைக் காட்டவேண்டுமானால் வருகின்ற பொதுத் தேர்தல்தான். வேறில்லை. அந்தத் தேர்தலிலாவது நமது சுயமரியாதையைப் பணத்துக்குப் பலியாக்காமல் -பயத்துக்குப் பாழாக்காமல் நேர்மைக்குப் பணியவைக்க முனையவேண்டும். அப்போது தான் இந்த ஆட்சியால் நம் நாட்டுக்கு ஏற்பட்டு வருகின்ற அநியாயங்களைத் தடுக்க முடியும், ஆணவங்களைத் தகர்த்தெறிய இயலும். இல்லையெல் வடக்கு மென்மேலும் வாழவும் தெற்கு வரவர வீழக் கூடியசூழ்நிலையும் தான் உருவாக முடியும்.

இதுவரையில் இந்திய சர்க்காரால் நாம் பாழடைந்தது போதும்! இனியும் அந்தச் சூழ்நிலையிலேயே நடப்போமேயானால்,இந்த நாடு சுடுகாடாக—காகமும் கழுகும் உலவும் பிணக்காடாகப் போவது திண்ணம்.

-வே. கபிலன்

விலை 16 காசு

இங்கிலாந்தின் கருவூலம்; இணையற்ற ஜான்சன்!

"ஆ" "ஆ"... என்ற அலறல் இரவின் அமைதியைக் குலைத்தது. இரவு 12 மணி இருக்கும். லண்டன் நகரம் காரிருளால் சூழப்பட்டு அமைதியுடன் இருந்தது. மீண்டும் அதேசப்தம். நகைப்பொலியா, வேதனைக் குரலா, குடிகாரனின் துடிப்பா? என்ன வென்றேவிளங்கவில்லைபிளீட் தெரு வாசிகளின் நித்திரை கலைந்து போயிற்று. என்ன அங்கே—ஏதாவது கொலையா? ஏன் இந்த அலறல்? மாடிப்படிகளைத் திறந்து

மண்ட்பர்க்; கவிஞன் கோல்ட்ஸ்மித் போன்றோர் வாழ்ந்த காலத்தில் அவர்களுக்குத் தலைவனாய், அவர்களின் வழிகாட்டியாய் விளங்கிய எழுத்தாளர். வறுமையில் வாடினாலும் தன் சுயமரியாதைக்கு இழிவுஏற்படாமல் தன் மானத்துடன் வாழ்ந்தவர். ஆங்கில மொழிக்கு அகராதி ஒன்றைத் தயாரித்து அதன் மூலம் மொழியின் வளர்ச்சிக்கு உதவியவர் டாக்டர் ஜான்சன்.

காண்டா மிருகத்தின்

ஏளனம் செய்தவர், ஏற்றிப் போற்றினர்!

கொண்டு தலையை வெளியே நீட்டினார்கள். வெளியில் பனி பெய்துகொண்டிருந்தது. எட்டிப் பார்த்தனர் பலர். அதோ விளக்குக் கம்பம் ஒன்றின் அருகில் ஒரு உருவம். உடலை இப்படியும் அப்படியும் அசைத்துக்கொண்டு கம்பத்தின் உதவியால் நின்றது. ஆம். அந்தக் கூச்சல், அந்த உருவத்தினுடையது. 'யாரோ குடிகாரன் போலிருக்கிறது.' என்ற சொற்களுடன் கதவைச் சாத்திக் கொண்டனர்.

நள்ளிரவில் மக்களின் அமைதியைக் குலைத்து அங்கே நின்ற உருவம், உலகம் போற்றும் டாக்டர் ஜான்சனுடையது. 'ஆங்கில இலக்கியத்தின் தந்தை' என்று அழைக்கும். ஜான்சன்தான் அங்கே கம்பத்தின் அருகே நின்று அலறினார். அது அவர் சுபாவம் என்று கூறுகின்றனர்.

காலம்

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து, அறிஞர்களின் தாயகமாய் விளங்கியது. பொருளாதாரம் என்றதோர் கலைப்பகுதியை உலகுக்கு அளித்தநிபுணர் ஆடம் ஸ்மித். புகழ் பெற்ற நடிகன்; மகாகவி ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நடிப்பதற்கென்றே நடிகனான வனைகாரிக்வாதத்தில் வல்லவன், அரசியலில் நிபுணன், ஆங்கிலப் பாராளுமன்றத்தில் சொற்போர் நிகழ்த்தியவன், பேச்சின் மூலம் மக்களின் உள்ளத்தில் புரட்சியை உண்டு பண்ண முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய நாவலன் எட்

நகைப்பின் ஒலி, பூமி வெடிக்கும்போது ஏற்படும் ஒலி, இவைகளைப் போன்று நகைத்தாராம் அவர். ஆனால் ஆங்கில இலக்கியத்துக்கு அவர் செய்த சேவை மகத்தானது.

பிறப்பு

1709 செப்டம்பர் திங்களில் அவர் நச்பீல்டு என்னும் ஊரில் பிறந்தார். அவரது தந்தை ஒரு புத்தக வியாபாரி. ஏழைதான். சிறுவயதில் தீராத நோய் ஒன்று அவருக்கு ஏற்பட்டது. அக்காலத்தில் ஒரு சில வியாதிகளையுடைய குழந்தைகளை நாட்டின் மன்னர்கள் தொட்டால் அந்நோய் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை நாட்டில் நிலவியது. அதனால் ஜான்சனை லண்டனுக்கு எடுத்துச் சென்றார்கள். மகாராணி ஆண் குழந்தை ஜான்சனைத் தொட்டார், நோய் தீரவேண்டுமென்று கூறினார். பலன் இல்லை. அந்த நோயின் காரணமாய் சிறு வயதில் கண்களில் ஒன்றை இழந்தார். அவரது முகம் விகாரமாகி விட்டது.

புத்தக வியாபாரியின்மகன் அல்லவா! வீட்டிலிருந்தே கல்வி கற்றார். கிடைத்த நூல்களையெல்லாம் படித்தார். ஆங்கிலம், லத்தீன் மொழிகளில்புலமை பெற்றார். பத்தொன்பதாவது வயதில் ஆக்ஸ்போர்டு கலாசாலையில் சேர எண்ணினார். பணம் இல்லை. யாரோ உதவினார்கள். மாணவர் ஆனார். நண்பர்கள் உதவிசெய்வதாக வாக்களித்தனர்.

இனமுழக்கத்தின் அரையாண்டுத் திட்டம்

சினிமாவிற்கு பாடல் எழுதுவது எப்படி?

விவரம், விளக்கம் நாங்கள் தருவோம்;
நீங்கள் எழுதுங்கள்!

ஒவ்வொரு வாரத்திலும் இடம்பெறுகின்ற பாடலுக்கு, **கவிஞர் கண்ணதாசன்** கவிதை ஒன்று பரிசாகத் தரப்படும்.
—நிர்வாகி

வகுப்பில் ஆசிரியர் ஏதாவதொன்றுக்கு விளக்கம் கேட்டால், ஆசிரியருக்கே தெரியாத சில நூல்களிலிருந்து ஆதாரங்களைக் காட்டினார். ஆனால் வறுமை அந்தப் பேரறிவாளனிடமிருந்து விடை பெற்றுச் செல்ல மறுத்துவிட்டது. இவர் அணிந்திருந்த பூட்சின்கிழிசல்களைப் பார்த்துவிட்டு இவரின்மீது அனுதாபம் கொண்ட மாணவர் ஒருவர் இவருக்குத் தெரியாமல் ஒரு புதிய செட் ஒன்றை இவரது அறையில் விட்டுச் சென்றார். ஆனால் ஜான்சனின் உள்ளம் அவைகளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. தன் மான உணர்ச்சி அவரிடம் காணப்பட்டது. வறுமையில் வாடிய அவர் வகுப்புகளுக்குச் செல்லப் போதிய உடையின்றி துன்புற்றார். கல்லூரியை விட்டு வெளியேறினார். பிற்காலத்தில் ஆங்கில இலக்கியம் யாருடைய எழுத்துக்களால் பெருமை பெற இருந்ததோ, அவருக்கு பட்டமொன்றை அளிக்க மறுத்து விட்டனர், கல்லூரி அதிபர்கள்.

1736ல் லிச்பீல்டுக்கு அருகில் எடியல் என்னும்கிராமத்தில் பள்ளி ஒன்றை ஏற்படுத்தினார். இவர் ஒருவர்தான் ஆசிரியர். மாணவர்கள் எத்

வி. சிவப்பிரகாசம்,
B.A.,B.L.

தனை பேர் தெரியுமா? மூன்று பேர்கள் தான். அதிலே ஒருவர் தான் நடிகர் காரிக்.

ஜான்சன் அப்பொழுது பெண்மணி ஒருவரைக் காதலித்தார், மங்கையல்ல, பருவத்தின் முகப்பிலே அடியெடுத்து வைத்த அழகி அல்ல. விதவை! ஜான்சனை விட பத்து வயது மூத்தவள். காதலுக்குக் கண் இல்லை என்று கவிஞர் ஷேக்ஸ்பியர் காவியம் இயற்றிய நாட்டில் பிறந்தவர் அல்லவா? இவரும் ஒரு கண்ணை இழந்தவர். ஆனால் இவர்களிடையே ஏற்பட்ட காதல் புனிதமானது. போற்றத்தக்கது.

ஆசிரியர் தொழில் இன்று மட்டுமல்ல, அப்போதும் வறுமையின் தோழனாய் விளங்கியது. ஜான்சன் தன் மாணவ நண்பரான காரிக்குடன் லண்டன் வந்து சேர்ந்தார். எழுத்தாளர் ஆனார். பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதி அனுப்பினார். இக்காலத்தில் ஜேம்ஸ் பாஸ்வல் என்னும் பணக்கார நண்பர் ஒருவர் ஜான்சனுடன் நண்பரானார். அன்று தொடங்கிய நட்பு ஜான்சனின் கடைசி நாட்கள் வரை நீடித்தது. ஜான்சனின் வாழ்க்கைச் சரிதம் அவரால் தான் எழுதப்பட்டது. அச்சரிதம் உலகப் பிரசித்தி பெற்றது. அதை எழுதியதன் மூலம் பாஸ்வலின் பெயரும் அழியாது, மறையாது இவ்வுலகில் நிலைத்துவிட்டது.

1738ல் ஜான்சன் 'லண்டன்', என்ற பெயரில் கவிதை ஒன்று எழுதினார். அது அவருக்குப் புகழைத் தேடித் தந்தது. அன்று முதல் அவரது கருத்தோவியங்கள் ஆங்கில நாட்டு மக்களின் பாராட்டு தலைப்பெற்றது.

சேவை

ஆஸ்துமா வியாதிஅவரைப் பிடித்தது. வியாதி, அந்தச் சிந்தனையாளனின் உடலைத் தான் துன்புறுத்தியதேயன்றி அவரின் அறிவின் வளர்ச்சியைத் தடுக்க இயலாது போயிற்று. ஆங்கில மொழியின் வளர்ச்சியின் மீது அவரது கவனம் சென்றது. அந்த மொழியில் அகராதி ஒன்றை எழுத எண்ணினார். அதற்கு முன் யாரும் அம் முயற்சியில் தங்கள் கவனத்தைச் செலவிடவில்லை. அது மட்டுமல்ல, அதற்கு வேண்டிய அறிவாற்றலும் யாரிடமும் காணப்படவில்லை. டாக்டர் ஜான்சன் துணிந்து நின்றார். தம் எண்ணத்தை வெளியிட்டார். 'ஆங்கில நாட்டு வள்ளல்களே, என் முயற்சிக்கு ஆதரவு தாரீர்' நிதி தந்து உதவுவீர், என்று அறைகூவி அழைத்தார். ஒரே ஒரு பிரபுவின் புன்னகை ஜான்சனின் நம்பிக்கையைத் தூண்டியது. அக்காலத்தில் எழுத்தாளர்களுக்கு உதவி செய்த பணியில் பலர் ஈடுபட்டிருந்தனர். நம் நாட்டில் புலவர்களுக்குப் பொற்காசுகள் கொடுத்த மன்னர்கள், கொடைவள்ளல்கள் வாழவில்லையா அதுபோன்று, அக்காலத்தில் ஆங்கில நாட்டில் பிரபுக்கள் பலர் தங்கள் மீது கவி புனைந்தோருக்கு பொற்காசு தந்தார்கள். ஜான்சனின் முயற்சிக்கு ஆதரவு அளிப்பதாக செஸ்ட்டர் பீல்டு பிரபு முன்வந்தார். அதை நம்பி டாக்டர் ஜான்சனும் அவரது மாளிகையின் முன் வாயிலில் பல நாட்கள் காத்து நின்றார், ஆனால் கொடியவனைக் கோமான், புனிதமானவன் என்று கவிபாடும் பண்புடையவர் அல்ல ஜான்சன். அதையறிந்து கொண்ட செஸ்ட்டர் பீல்டு பிரபுதன்மாளிகை வாசலில் காத்துக்கிடந்த கருத்து

ராதி தயாராகிவிட்டது. வெளியாகப் போகிறது என்பதை அறிந்த செஸ்ட்டர் பீல்டு பிரபு அதில் தன் பெயரைச் சேர்க்க எண்ணினார். அதைத் தயாரிக்க உதவியவர்களில் தன் பெயரையும் சேர்க்கஎண்ணினார். 'ஜான்சனின் முயற்சி போற்றத்தக்கது. அவரது அறிவாற்றலை நான் மதிக்கிறேன். அவர் தயாரித்த அகராதியை இவ்வுலகம் போற்றும். அனைவரும் ஜான்சனை ஆதரிப்பது அவசியம்' என்று உலகம் என்ற பத்திரிகையில் எழுதினார். அதைக் கண்ட ஜான்சனுக்கு அடங்காக் கோபம் பிறந்துவிட்டது.

கடிதம் ஒன்று எழுதினார்.

பிரபுவே, தாங்கள் என்னை ஆதரிக்கவேண்டும் என்று எழுதியிருக்கிறீர்கள் என்று அறிகிறேன். தங்கள் உதவியை எப்படி ஏற்றுக் கொள்வது என்று இந்த ஏழைக்கு விளங்கவில்லை.

உங்களுக்கு ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன். என்னைப் பார்த்து நீங்கள் புன்னகை செய்தீர்கள். உங்கள் சொற்களில் மயங்கினேன். உங்களின் உதாரண குணத்தை மக்கள் மத்தியில் புகழ்ந்து பேசினேன். எவ்வளவு பெருமையாக நான் உங்களின் பெருந்தன்மையைப் பற்றிப் பேசினேனோ அவ்வளவுக்கு அவ்வளவு தாங்கள் என்னை அலட்சியப் படுத்தினீர்கள்.

இப்போது ஏழு வருடங்கள் உருண்டு ஓடிவிட்டன. நான் உங்கள் வீட்டு வாயிலில் ஆதரவைத் தேடி காத்து நின்ற நாட்கள் சென்று ஏழுஆண்டுகள் கடந்துவிட்டன. நான் யாரிடமும் இதுவரை உதவி கேட்டது கிடையாது. தாங்கள் என்னிடம் காண்பித்த அலட்சியம் கண்டு திகைத்துப் போனேன். நானே முயன்றேன். மாளிகைக்குள்ளே, பளிங்கு மண்டபங்களுக்குள்ளே அன்பு இல்லை என்பதை உணர்ந்தேன், பாறைகள் இடையியே அன்பு நிரம்பிக்கிடக்கக் கண்டேன். இன்று நீங்கள் எனக்குத்

பாசங்காட்ட மறுத்தவர் நேசக் கரம் நீட்டினர்!

வேந்தனை அலட்சியம் செய்தார் ஆனால் ஜான்சன் அங்கேயே இருக்கவில்லை. எட்டு ஆண்டுகளாகப் பாடுபட்டார். வார்த்தைகளைச் சேகரித்தாா. அவைகளுக்கு வரிசையாகப் பொருள் தந்தார். அகராவ முடிந்தது. அத்துடன் அம் மாது மனைவியின் வாழ்வு முடிந்துவிட்டது. அவரது வாழ்க்கையின் ஜீவன்- போய் விட்டது. கண்ணிழந்தவனுக்கு வாழ்வளித்த அந்த அம்மை மாண்டு போனார். ஜான்சனின் - உள்ளம் வேதனையால் நிரம்பிவிட்டது.

கடிதம்

டாக்டர் ஜான்சனின் அக

தரும் ஆதரவு, காலம் கடந்தது. தேவையற்றது. என்னால் அதன் பயனை அடைய முடியாது. நான் தனியாக, தனிமையில் வாழ்கிறேன். எத்தனையோ ஆண்டுகளாக நான் கண்டு வந்த கனவு நினைவாகப்போகிறது. அந்த நினைவு என் உழைப்பின்பலன் என்று நான் நம்புகிறேன். பெருமைப்படுகிறேன். அதில் தாங்கள் ஏன் பங்கு கேட்கிறீர்கள்.

இப்படி அவர் எழுதிய கடிதம் கண்டு செஸ்ட்டர் பீல்டு பிரபு வாயடைத்துப் போனார். ஜான்சனின் நூல்

[8-ம் பக்கம் பார்க்க]

கண்ணிழந்தும் கருத்தறிவித்த கவிஞன்!

இனமுழக்கம்

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

மலர் 2] ★ 11-11-60 ★ [இதழ் 11

நல்லார் ஒருவர்

அஞ்சல் அமைச்சர் திரு. டாக்டர் சுப்பராயன் அவர்கள் துறைமுகத்தில் பேசும்போது ஒரு அருமையான கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதுவும் அவர் சொந்தக் கருத்தல்ல, பழமொழி. எப்போதுமே அமைச்சர்கள் புது மொழிகளைப் பேசுவார்கள் என்று மக்கள் எதிர்பார்ப்பதுதான் இயற்கை. ஆனால் அமைச்சர்கள் பழமொழியையே பேசிவிட்டுப் போய்விடுகிறார்கள். அதில் இன்று முன்னாள் நீதிக்கட்சி மந்திரியும், இந்நாள் காங்கிரஸ் மந்திரியுமான குமாரமங்கலம் ஜமீன் டாக்டர் சுப்பராயன் அவர்கள் திரு. காமராசரைப் பற்றியும் ஒருவாரமாசப் பெய்துகொண்டிருக்கும் பேய்மழையையும் குறிப்பிட்டுப் பேசும்போது 'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை.' என்று பேசி இருக்கிறார்.

அடுத்துவரும் தேர்தலிலே தனக்கு ஒரு எம்.பி. இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே, அல்லது நப்பாசையிலே அவர் அப்படி பேசியிருந்தால் நமக்குக் கவலையில்லை. கிடைக்கப் போகும் ஒரு இடத்திற்கு ஏதோ இரண்டொரு புகழ்மாலைகளைப் போடுவதால் நட்டமொன்றுமில்லை என்று அவர் நினைத்திருக்கக்கூடும்.

பெய்த மழையும், பெரிய மந்திரியும்!

இப்போது பெய்துகொண்டிருக்கும் நிதானமான மழைதானா — மக்களும், கட்டிடங்களும், ஏழைகளின் குடிசைகளும், பயிரினங்களும் சமாளித்து நிற்கக்கூடிய மழைதானா? மதுரை நகரத்திலிருந்து பயங்கரமான செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. கொடைவள்ளல் எம். ஜி. ஆர். அவர்களின் வெள்ள நிவாரண நிதி, குடிசையற்றோருக்காக நிதி பெருமளவு மதுரை நோக்கிப் பறந்துகொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான உணவு பொட்டலங்கள் அந்த ஏழைகளுக்கு அளிக்கப்படுகின்றன. சொக்கிக்குளம் தல்லாகுளம் பகுதிகள் ஆபத்தான நிலையிலே இருக்கின்றன என்ற அதிகாரிகளின் எச்சரிக்கை.

சாதாரண நாட்களிலேயே 200, 300 நிமிடங்கள் தாமதமாக வந்து வந்து 13 ஆண்டுகளாக பழக்கப்பட்டுவிட்ட ரயில் வண்டிகள் எழும்பூரையும் சென்ட்ரல் ஸ்டேஷனையும் எட்டிப்பார்ப்போமா என்று ஏங்கி வழியில் நின்றுக்கொண்டிருக்கின்றன. நஞ்சை புஞ்சை நிலங்கள் நாசம். ஏரிகள் உடைப்பு என்றெல்லாம் செய்திகள் வந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில்தான், 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்று கூசாமல் கூறுகிறார். இந்தப் பேய்மழையும் பெருங்காற்றும்தான் நல்லவர் காமராசருக்காகப் பெய்த மழை என்றால், 'அந்த மழை ஒழிக' என்று சொல்வதைத் தவிர வேறு வழி இல்லை. இதைப் போன்ற நல்லவர்கள் பாகிஸ்தானிலேகூட ஒருவர் இருக்கிறார் போலிருக்கிறது. அதனால்தான் அங்கேயும் பல்லாயிரவர் சென்ற கிழமை இறந்திருக்கிறார்கள்.

நல்லவர்

ஒருவரை நல்லவர் என்று குறிப்பிடுவதற்கு முன்னால் எந்த வகையில் என்பதையும், அவரால் நாட்டுக்கு விளைந்த நன்மைகள் யாவை என்பதையும் எண்ணித்தான் முடிவு கட்டவேண்டும். அந்த அளவுகோலைக் கொண்டு திரு. காமராசரை அளக்கும்போது இவர் எந்த வகையில் நல்லவர் என்றே நமக்குப் புரியவில்லை.

மாதம் மும்மாரி, மணிக்கு மும்மாரி

மாதம் மும்மாரிப் பெய்ததா என்று பழைய அரசர்கள் தர்ப்பாரில் கேட்டார்கள். மணிக்கு மும்மாரி பெய்கிறது என்று காமராசரைக் காட்டி டாக்டர் சுப்பராயன் பேசுகிறார். இரண்டும் ஆபத்தானது. மாதம் மூன்று முறை மழை பெய்தால் என்ன நட்டமோ, அதைவிட மிக ஆபத்தானது மணிக்கு மூன்று முறை மழை பெய்வது. அதேபோல் காமராசரால் யாருக்கு நட்டம், யாருக்கு லாபம் என்று கருதுவோமானால் வடவர்களுக்கு இலாபம். ஏனெனில் மற்ற எல்லா மாநிலங்களிலும் தலைவலி. இந்த ஒரு மாநிலத்தில்தான் அது இல்லை. ஏன் இல்லை? தனக்கு நிகரான ஒருவரை காமராசர் தலைஎடுக்க விடுவதில்லை. அப்படியே தோன்றினாலும் எதையாவது பழிகளை சுமத்தி திரையிட்டு மறைத்துவிடுவது இந்த வாய்ப்பு- அவருக்கு எப்படி ஏற்பட்டது. இந்தத் தகராறுகள் தன்னைத் தாக்காமலிருக்க அவருக்கேற்பட்ட வாய்ப்பும் வசதிகளும் என்ன என்றால் அவர் ஒரு ஏகாங்கி. குடும்பக் கவலையற்றவர். இரவு பகலும் அரசியல் சிந்தனை. சுமார் பத்தாண்டுகளுக்குமேல் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவராக இருந்திருக்கிறார். மூலை முடுக்குகளிலிருக்கும் பணக்காரன் முதல் பாமரன், ரௌடி, கேடி, கள்ளமார்க்கட்காரன் ஆகிய எல்லாரையும் அடையாளம் கண்டு வைத்திருக்கிறார். இவைகள் எல்லாவற்றையும்விட வடநாட்டு மந்திரிகள் முன்னால் தைரியமாகப்பேசி காரியத்தை சாதிக்கும் ஆற்றலற்றவர்: செத்த பாம்பு. அங்கு எங்கு கிடந்தால் என்ன என்ற அலட்சியமான நிலையை வடவருக்கு உண்டாக்கியவர். தொல்லைத்தர தைரியமில்லாதவர்; எதற்கெடுத்தாலும், 'ஆமாம்' ஆகட்டும் பார்க்கலாம்! என்பவர்; வார்த்தைகளை அவசரப்பட்டு விற்றுவிடாதவர். இப்படி ஒருவர் வடவர்களுக்குக் கிடைப்பது அரிதுதான். அதனால்தான் இவரைத்தட்டிக் கொடுத்துக் கொண்டே தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கு வடவர்களுக்கு சாதகமாக இருக்கிறது. இதை வைத்தே இவரை நல்லவர் என்று பாராட்டிய திரு. சுப்பராயன் அவர்கள் உள்ளத்தில் ஏதோ பதவி நமச்சல் இருக்கத்தான வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லிவிடலாம்.

இந்த நல்லவரால்தான் இந்த அழிவு மழை பெய்ததென்றால் அவரையே கொண்டு பேய்மழையே! பெருங்காற்றே! புயலே! நீங்கள்போய் வாருங்கள் என்று, சொல்வது தவிர வேறு வழியில்லை.

முன்பெல்லாம் சத்தியமூர்த்தியார் இதைத்தான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். அந்த நல்லவர் போய் அவர் சீடர் காமராசருக்கு சுப்பராயன் அவர்கள் முடி சூட்டுகிறார். இந்த நல்லவர் காலத்தில் என்னென்ன நன்மைகள் நாடு கண்டது என்பதை நாமறிவோம்; நாடறியும்.

அன்புள்ள,



அறிய வேண்டியது அமைச்சர் கடன்!

புரட்சி நடிகரின் பொற்குவியல்

கடந்த சில தினங்களாக நாடெங்கும் ஒரே மழை! தமிழ் நாடு முழுவதிலும் ஒரே பெருமழையும் கட்டுக்கடங்காத வெள்ளமும்! இதனால் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள துன்பம் கொஞ்சமல்ல! எப்பக்கம் திரும்பினாலும் அப்பக்கமெல்லாம் வீடிழந்தோர், பொருளிழந்தோர், உயிரிழந்தோர் காட்சி; இக் காட்சியை, ஒரு கண் காட்சியாகவேதான் கனம்கள் கருதி இருக்கிறார்கள். அதனால்தான், இதுவரையில் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள விபத்தைக்குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்கின்றனர். இத்தகைய அனுமதேய மந்திரிகளுக்கு அறிவு வரத்தக்க அளவிலே நமது இயக்கத்துக்குத் தூணாக—தூப விளக்காக இருந்து வருகின்ற புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் மதுரை மாவட்டத்துக்கென்று இருபத்தையாயிரம் ஒதுக்கி, முதலில் ஐயாயிரம் கொடுத்திருக்கிறார். ஆனால் நம்மிடத்திலேயே வரியென்ற பெயராலே பணம் பறித்து வடநாட்டுக்கு அனுப்பும் இந்த ஏஜண்டுகள் ... மாடிகளிலே வாழும் மமதைமிக்க மந்திரிகள் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்; பார்வையாளர்களாக இருக்கிக்கின்றனர்.

கடந்த நான்கு நாட்களாக வைகையிலே வெள்ளம்! அதனால் மதுரையிலும் சுற்றுப் புறங்களிலும் தென்னகத்து மக்கள் தெருவீதியிலே நின்று தேம்பி அழுகின்றனர். அந்த அழுகுரலில் ஒலிகேட்டு நமது இயக்கம்தான் ஓடோடிச்சென்று அன்னவர்களுக்கு ஆறுதலும், இயன்ற அளவுக்கு உதவியும் செய்துள்ளது. ஆனால் அமைச்சர்கள்-?

ஊமைகளாக இருக்கின்றனர். நம்மை ஆளும் அமைச்சர்களா?' என்று, சிலர் கேட்கலாம். ஆமாம்! நம்மை ஆண்டு கொண்டிருக்கின்றவர்கள்தான்! நம்முடைய பணத்தாலே பங்களாக்களிலே இருப்பவர்கள்தான்! நாம் தருகின்ற வரிப்பணத்தால் உல்லாச யாத்திரை நடத்துபவர்கள்தான்! ஊதாரிச் செலவுகளைச் செய்பவர்கள்தான்! நம்மவரைக் கண்டுஎள்ளி நகையாடுபவர்கள்தான்! நம்மைக் கண்டு நடிகர் கூட்டமென நகைப்பவர்கள்தான், நின்றிருக்கும் நெடுமரம்போல் மூச்சு பேச்சில்லாமல் இருக்கின்றனர். நாம்தான்— நம்முடைய கழகம் தான்— நமதியக்கப் புரட்சி நடிகர்தான் ஆவன செய்திருக்கிறார்.

இதுமட்டுமல்ல! சென்னை 95-வது வட்டத்திலே பெருமழையால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கென்று நமது இயக்க நடிகர் வளையாபதி முத்துக்கிருட்டினன் அவர்கள் போதுமான அளவுக்கு உதவி செய்திருக்கிறார். இப்படி எதற்குமே அக்கறை காட்டுபவர்களாக நாமாக இருக்கிறோமேயொழிய ஆளுகின்ற அமைச்சர்களல்ல! நம்முடைய வரிப் பணத்தால் கொழுத்துக் சொண்டிருக்கும் வடவர்களல்ல!

தஞ்சையிலே புயலடித்த போதும் நமது இதயத்திலெல்லாம் அன்பால் அமர்ந்திருக்கின்ற புரட்சி நடிகர் எம். ஜி ஆர். அவர்கள்தான் பணம் கொடுத்தார். தஞ்சை மக்களின் துயரைத் தடுத்தார். அந்த முறையிலே அன்னாரது கருணை நெஞ்சை —கழக மணியை வாழ்த்துவோம். அவரது அருந்தொண்டை அறிந்தாவது அமைச்சர்கள்-?

திருந்தவேண்டும். இல்லையேல்-?

இடத்தைக் காலி செய்யவேண்டும். அப்படித் தான் வள்ளுவர் அறிவுறுத்திச் சென்றுள்ளார் 'குடிகாத்தல்' தான் 'கனம்'களின் கடன். அதைவிட்டு விட்டு, 'கொடிகாத்தல்' என்றிருந்தால்-? கொடுமை; மடமை; அறிவது, அறிவறிந்தோர் கடன்.

—வே. க.

பருவக்கோளாறு

“ஒரு வாரத்தில் வந்து விடுகிறேன்” என்றுதான் பிரேமாவிடம் சொல்லிவிட்டு, சென்னைக்கு வந்தேன் நான். ஆனால் பத்து நாட்கள் ஆகியும் திரும்ப முடியவில்லை. அத்தையின் உடல் நிலை மேலும் மோசமடைந்துக் கொண்டு வந்தது மட்டுமல்ல அதற்குக் காரணம். அதைவிட ஒரு புதிய—முக்கிய காரணமும் இருந்தது.

அத்தை அதனை என்னிடத்தில் சொல்லும்பொழுது என் மனது உண்மையில் படாதபாடுபட்டது. அதைவிட துன்பப்பட்டது. “ஒரு முடிவு சொல்லிவிட்டுத்தான் நீ இங்கிருந்து போகவேண்டும்.” என்று கட்டளையிட்டபொழுது.

அத்தையை எவ்வளவோ சமாதானப்படுத்த முயன்றேன்—முடியவில்லை. ஒரே குழப்பச் சூழ்நிலை. பிறகு, மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, எல்லாவற்றையும் மீறி புறப்பட்டேன், கடலூருக்கு.

‘பிரேமா என்ன சொல்லுகிறாளோ எப்படி வரவேற்கிறாளோ, என்றுதான் எண்ணிக்கொண்டு வந்தேன் நான். ஆனால், அவளோ என்னுடைய நிலையறிந்து வரவேற்றாள்—நொந்து வந்த எனக்குச்சிறிது நிம்மதியைத் தந்தது அது.

“அத்தைக்கு உடல் நலம் எப்படியிருக்கிறது?” என்றாள் பிரேமா.

“அத்தையின் உடல் நிலை இருக்கட்டும். உன் உடல் நிலை எப்படியிருக்கிறது?” என்றேன் நான்.

“எனக்கென்ன? நான் நலமாகத்தானிருக்கிறேன். அவர்கள் எப்படியிருக்கிறார்கள்?” என்றாள் மறுபடியும்.

“அதை ஏன் கேட்கிறாய் பிரேமா? உண்மையில், இப்பொழுது ஏன் அத்தையைப் பார்க்கப்போனோம் என்றிருக்கிறது. நான் போனவுடன் என் கைகளைப் பிடித்துக்கொண்டு,

‘முத்து! நீதான் என் மகளுக்கு வாழ்வளிக்க வேண்டும். அவளுக்கு உன்னைத்தவிர வேறு கதியில்லை. சாகப்போகும் உன் அத்தைக்கு நீ செய்யும் கடைசி உதவி இதுதான், மறந்துவிடாதே...’ “என்று கதறினார்கள்.

“நீங்கள் என்ன சொன்னீர்கள்?

பதட்டத்துடன் கேட்டாள் பிரேமா.

“என்னதான் கூறினாலும், என் பிரேமாவுக்குத் துரோகம் செய்யமுடியாது” என்று சொல்லிவிட்டேன்.

பிரேமா ஆனந்தப்படுவாள் என்று எண்ணினேன். ஆனால், அதற்கு மாறாக,

“தவறு செய்து விட்டீர்கள்” என்று வருத்தத்துடன் கூறினாள்.

“என்ன பிரேமா சொல்லுகிறாய்?

“நீங்கள் அவர்கள் உள்ளத்திற்கு மாறாக நடந்துகொண்டது தவறு என்கிறேன்.”

“பிரேமா?!”

“நான் சொல்வதைக் கேளுங்கள். முதலில் நீங்கள் சென்று உங்கள் அத்தைக்கு அவர்களின் மகளை திருமணம் செய்துகொள்வதாக வாக்களித்துவிட்டு வாருங்கள்.”

“நீ சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை பிரேமா!”

“புரிந்து கொள்ளாமல் இருப்பதையே, நான் விரும்புகிறேன்.

“அவர்களுக்காக உன்னை நான் வஞ்சிக்க விரும்பவில்லை.”

‘எனக்காக அவர்கள் ஏமாற்றப்படுவதை நானும் விரும்பவில்லை...

“அவர்களுக்கு நான் இல்லையென்றால், இன்னொருவன்..”

“முத்து! நீங்கள் எதைச் சொன்னாலும், அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது, உங்களின் அத்தை மகளை நீங்கள் திருமணம் செய்துக் கொள்வதையே நான் விரும்புகிறேன். பெரியவர்களின் மனதைத்

கடலூர் கனல்

திருப்தி படுத்துவதையே நான் சிறந்ததெனக் கருதுகிறேன். தயவு செய்து இடையில் வந்த என்னை மறந்து—அவளை வாழவையுங்கள்...” என்று சொல்லிவிட்டு, என்னுடைய பதிலுக்குக் கூட காத்திராமல் புறப்பட்டுவிட்டாள் பிரேமா.

என்னால் அவள் போக்கைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவளைத் தடுத்து நிறுத்தவும் நான் துணியவில்லை, ஏன்?

அத்தை மகள் மல்லிகா என் மனக்கண் முன்னால் வந்து நின்றதினாலா?

பிரேமா தெளிந்திருந்த என் எண்ணத்தை—ஒரு நிலைக்கு வந்துவிட்ட என் உள்ளத்தை மீண்டும் கலக்கினாள். என் உள்ளத்தின், ஒரு மூலையில் உரசிக்கொண்டிருந்த எண்ணத்திற்கு புத்துயிர் அளித்தாள்—புதுமுறுக்கேற்றினாள்.

மனம் எங்கோ மறுபடியும் ஓடியது.

மல்லிகா—அத்தைக்கு ‘ஹார்லிக்ஸ்’ கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றபொழுது தற்செயலாக பார்த்தேன் அவளை! அவளும் பார்த்தாள்.

அமைதியான பார்வை — கட்டுக்கோப்பான உடல். மனதை என்னவோ செய்தது. அப்பொழுதே ஒப்புதல் அளித்திருப்பேன், பிரேமா மட்டும் வாயும், வயிறுமாக இல்லாமலிருந்திருந்தால். ‘ஓடி, ஆடி கூடிக்குலவி இருந்துவிட்டு, கைவிட்டு விட்டான் சயவன் என்று யாரும் நாளை குறை சொல்லக் கூடாது’ என்று கருதினேன் நான். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் பிரேமாவை நானே உதறவிரும்பவில்லை. ஆனால், சூழ்நிலையறிந்து அவளே விலகிக் கொள்ளும்பொழுது நான் ஏன்வீணாக அலட்டிக் கொள்ளவேண்டும்? எனக்கு வழி வகுத்துக் கொடுத்து தியாகியாகிற ஒருவளை நான் ஏன் வீணாக தடுத்து நிறுத்தவேண்டும்? பேசாமல் வீடு திரும்பினேன், அடுத்து வண்டியிலேயே சென்னை செல்ல.

பிரேமா ஏன் இப்படிச் சொன்னாள்—போனாள் என்பதைப் பற்றியெல்லாம் நான் சிந்திக்கவேயில்லை.

புதிய மலர் பூத்திருக்கும்பொழுது, பழைய மலரையே சுற்றிக்கொண்டிருக்க வண்டுக்கு பைத்தியமா என்ன?

என் முடிவைக் கேட்டு அத்தை பூரிப்படைந்தாள்; அப்பா புளகாங்கிதமடைந்தார். கொட்டு மேளம் கொட்டியது. நானும் மல்லிகாவும், மனையில் உட்கார்ந்து எழுந்திருந்தோம். வாயிலில் அப்பா அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார். நான் நண்பர்களை கவனித்துக்கொண்டிருந்தேன். அம்மா, இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

“வாங்க, வாங்க, என்ன இவ்வளவு நாழிகை? தம்பி, முத்து! யார் வந்திருக்கான்னுபாருடா?” என்று வழக்கத்திற்கு மாறாக உரத்தக்குரலில் கூவி அழைத்தார், என்னை அப்பா.

அவருடைய பழைய முதலாளி கதிரேசம் பிள்ளையை வரவேற்கத்தான் அப்படி அழைத்தார்.

“வாருங்கள்” என்றேன், கைகூப்பி.

அதற்குள் அம்மாவும் வந்துவிட்டார்கள்.

“என்ன, நீங்கள் மட்டும்தனியாக வந்திருக்கீங்க? பிரேமாவையும் கூட்டிக் கொண்டு வரக்கூடாது?” என்றார்கள் அம்மா,

‘பிரேமா’ பெயர் என்னை ஒரு உலுக்கு உலுக்கியது.

“அவளும் நேற்றைக்கு முதல் நாள் வரை தயாராகத்தானிருந்தாள். நேற்று எதிர் பாராத விதமாககுறைப் பிரசவமாகிவிட்டது. வரமுடியவில்லை.”

கதிரேசம் பிள்ளை விஷயத்தை விளக்கினார்.

தலை சுற்றியது எனக்கு.

“அதோ போகலே! அவர் தான் கந்த விலாஸ்’ கதிரேசம் பிள்ளை. 58 வயசுலே சொத்துக்கு ஒரு வாரிசு வேணும்னு, மூணும் தாரமா சொர்ணூர் சொக்கநாதம்பிள்ளை கடைசி பெண் பிரேமாவைக் கட்டினார் — பெண்ணுன்னு இன்னைக்கு பூரா பார்த்துக் கிட்டிருக்கலாம். அப்படியிருப்பா. அவளும், ஒரு வருஷத்துக்கப்புறம் இப்பதான் கர்ப்பம் தரிச்சா. ஆசையாயிருந்தாரு மனுஷன், பாவம், குறைப்பிரசவம் ஆயிடுத்தாம். அவ்வளவு தான் அவர் கொடுத்து வைத்தது...”

பிரேமா ஏன் மல்லிகாவை மணந்துக்கொள்ளும்படி மன்றாடினாள் என்ற புதிருக்கான விடையை பாட்டிகள் இருவரும், விடுவித்துக் கொண்டிருந்தது, என் காதுகளில் தெளிவாகவிழுந்தது.

தடுமாறி நாற்காலியில் தொப்பென்று’ சாய்ந்தேன்.

என்ன செய்வது?

பருவக்கோளாறு அவளுக்கு; காதல் போதை எனக்கு.

முக்கிய அறிவிப்பு

‘இனமுழக்கம்’ அலுவலகம் கீழ்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருப்பதால் **‘இனமுழக்கம்’ ‘காவியக் கழகம்’ ‘தங்கமலர்’ ‘பொன்னி’** ஆகிய அலுவலகங்களோடு கீழ்க்கண்ட புதிய முகவரிக்கே தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

—உரிமையாளர், **‘இனமுழக்கம்**.

முகவரி :—

‘இனமுழக்கம்’
158, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

உனக்குத்தான்

சி. மு. திராவிடச்செல்வம்

“ஏடெடுத்தேன் உனைபற்றி எழுத யெண்ணி
எத்தனையோ எண்ணங்கள் மலிந்த போது
பாடிவரும் தென்றலுடன் எனது உள்ளம்
படிப்படியாய் அதனூடே கதைகள் பேசி
காடுமலை நதிகளெலாம் கடந்துச் சென்று
காணறியக் காட்சிகளை கண்டு வந்து
வாடிருக்கும் எனைநோக்கி “ஏடா”வென்று
வருத்தமுற எனையுறுத்த சொல்வே னம்மா.”

பணத்திற்கும் பகட்டிற்கும் மயங்கி வீணில்;
பாதைவிட்டு பாதைமாறிப் போனபேரும்
குணமறந்த குடிகேடர் சூழ்ச்சி தன்னால்
குற்றுயிரும் கொலையுயிராய் வீழ்ந்த பேரும்
கணப்போழ்தில் கருத்திழந்து வாழ்வி ழந்து
கண்கலங்கி கதியற்றோர் ஆனபேரும்
அணிவகுத்து நிற்குதம்மா அந்தக் காதை
ஐயகோ! இனிவேண்டாம் போதும் போதும்!

முறங்கொண்டு துரத்தினாள்; புலியை யுந்தன்
மூத்தவளே யுந்தமக்கை, முதியத் தாயின்
திறமதனை அறிவதாயின் போர்க்க ளத்தில்
செத்துவிட்டான் முறைதவறி மைந்த னென்று
மறக்குலத்து தமிழ்த்தாயும் காதிற் கேட்டு
மனந்துடித்து வெந்திட்டாள், நைந்தாள்; மீண்டும்
பறந்திட்டாள் சூளுரைத்து அவனுக் கீந்த
பால்தந்த மார்பையான் சிதைப் பேனென்று

போர்க்களத்தில் தன்மகனைக் கண்டெ டுத்து
புனிதவதி தமிழன்னை மடிகிடத்தி; வீர
மார்நடுவில் தைத்திருந்த அம்பகற்றி; நெஞ்சில்
மாவீரா? நீகோழை இல்லை யப்பா!
சீர்முத்தம் பலதந்தேன் செத்த தற்கு
செந்தமிழர் வீரமென்? என்றிட்டபோது
பார்த்திருந்த பொன்முடியார் பறந்து வந்து
பாவடிவம் புறத்தினிலே யாத்தா ளன்றோ?

தான்பிறந்த பொன்னாடும் தாய் மொழியும்
தனியொரு நாட்டார்க் கடிமை யென்று
வீணாக நம்முன்னோர், இருக்க வில்லை
விலங்கொடித்து பகைமுடித்து வெற்றி கண்டு
வான்சிறக்க புகழ்பெற்ற தமிழர் கூட்டம
வதைபட்டு வடவர்களின் பிடியிற் பட்டு
ஏனின்று இக்கோலம் கொண்டோ மி:.தை
எண்ணிநீ பார்த்திட வேண்டு மன்றோ?

குறைமதியோர் ஆட்சியிலே யிருந்தும்; மக்கள்
குறைகளைய அன்னோர்க்குத் திறனு மில்லை
முறையற்ற மொழியான இந்திப் பேயும்
முத்தமிழில் கலக்கின்ற நிலையைக் கண்டும்
நிறையழிந்த பெண்ணைப் போல் முக்காடிட்டு
நிற்பாரை வாய்மூடிக் கிடக்கின் றாரை
விரைவினிலே வெளியேற்றி இந்திப் பேயை
விலாவொடித்து மொழிகாக்க வேண்டு மென்றால்

ஆர்த்தெழுந்து உன்குலமே ஒன்றாய்ச் சேர்ந்து
அணிவகுத்து பண்ணி சைத்து விடுதலைக்கு
போர்முரசு கொட்டிவிட்டால் போதும் போதும்
பொய்யில்லை விடுதலைதான் உண்மை யுண்மை
சீர்கெட்ட திராவிடமும் செப்பம் பெற்று
செந்தமிழர் “அறிஞரண்ணா” தலைமையேற்றால்
கார்கண்டு களித்தாடும் மஞ்ஞைப் போன்று
களிப்பாலே மக்களெலாம் வாழ்வார் நன்று

★ சி. பி. சிற்றரசு ★

க. கபிலன் போலகம்.

கே : ஜனநாயகத்தின்மீது துளியும் நம்பிக்கையற்ற பெரியார் ஈ.வெ.ரா. நாங்கள் தான்அகில உலக ஜனநாயக வாதிகள் என்று மார்தட்டும் காமராாசர்களே ஆதரிப்பது ஏன் ?

ப : பெரியார் சாகடித்ததைக் காமராசர் குழி தோண்டி புதைக்கிறார். சங்கு, தாரை, தப்பட்டை, பிலாக்கன்ம்ஆகியவைகள் பாரதமாதாவின் மக்கள் முறையேஇயக்குகிறார்கள். துக்கம் விசாரிக்க 1962 காத்துக்கொண்டிருக்கிறது.

கற்பகமணியம், சென்னை-14

கே: 'அரசியல் உலகத்திலும், தனிப்பட்ட முறையிலும், பெரியார் அவர்கள் தனக்குத்தான் உரிமையுள்ள பழம் பெரும் நண்பர்' என்று ஆச்சாரியார் கூறியுள்ளாரே...?

ப: புதிய நண்பர்களுக்கு அதிர்ச்சியைத் தர அவர் அப்படிச் சொல்லியிருக்கலாம்.

வே. புதியப்பன் ஒத்தைக்கால் மண்டபம்

கே : கலைச்செல்வமே! தங்கள் கடமை என்ன ?

ப : நாட்டுக்கு நற்பணி புரிவதே. சுயநல மில்லாத விருப்பம் நிறைவேற்றப்படும் அல்லவா.

கே : இராஜாஜியைப் பற்றி தங்கள் கருத்து என்ன ?

ப : அரசியல் தந்திரி. வழுக்கு நிலமானாலும் தைரியமாக நடப்பவர். வெற்றித் தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதவர். மூச்சிருக்கும் வரை எந்த முழக்கத்தையாவது எழுப்பிக் கொண்டிருப்பவர்.

பிரகாசம், மயிலை

கே : பள்ளிகளிலிருந்து எப்போது இந்தி அகற்றப்படும் ? இதற்காகப் பொதுக் குழுவில் கேட்டு, மாணவ சமுதாயத்தின் அவல நிலையை நீக்க முற்படுவீர்களா ?

ப : டிசம்பர் திங்களில் கூடும் பொதுக் குழுவில் அதற்கான முடிவு எடுக்கப்படும் என்றுகருதுகிறேன்.

கே : திராவிடநாடு பிரிந்ததும் மார்வாடிகளை என்ன செய்வீர்கள் ?

ப : தென்னாட்டில் அவர்கள் சம்பாதித்ததைக் கணக்குக் கேட்போம். காட்ட மறுத்தால்....

ப. இ. இளங்கோவன், பம்பாய்70

கே : 1947ஆகஸ்டு 15-க்கு முன்னால் காங்கிரஸ்காரர்களின், 'பாரதமாதா' எந்த நிலையில் இருந்தாள்? அப்போது நமது தமிழன்னை எப்படி இருந்தாள்? இன்று பாரத மாதா எப்படி இருக்கிறாள்? நம் தமிழன்னை எப்படி இருக்கிறாள் ?

ப : பாரதமாதா எப்போதும் பாதம் அல்வா தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். தமிழன்னை தான் பாவம் தரித்திரத்தி லேயே மூழ்கி இருந்தாள்.

எம். எஸ். டேவிட், பம்பாய் I

கே : சிந்தனைச்சிற்பி அவர்களே ! இந்தியத் துணைக் கண்டத்தில் இயங்கி வந்த சென்னை மாநிலமானது ஆந்திம், கருநாடகம், கேரளம் என, மொழிவழி பிரிந்து, தனிமாநிலம் பிரித்து அரசு நடத்தி வருகிறது. ஆனால் வரலாற்றுச் சிறப்பு பெற்ற நமது தாய்த் திருநாடான தமிழகத்திற்கு மட்டும் தமிழ் நாடென்று பெயர் வைக்காமல், கொஞ்சம்கூட மான ரோஷம் இல்லாமல் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்களே, ஏன் ?

ப : பதவியில்ஒட்டிக்கொண்டிருப்பது வைடமின்பா — அதை மறந்து விடாதீர்கள், பணம்தான் முக்கியம் என்கிறபோது மான ரோஷத்துக்கு இடம் எங்கே இருக்கும்?

சங்கரன், சுவாமிமலை

கே: திராவிட நாட்டிற்கு எல்லை எது யென்று கேட்பவர்களைப்பற்றி என்ன நினைப்பது?



ப: மணிக் கூண்டிற்குக் கீழே நின்று கொண்டு 'மணி என்ன' என்று கேட்கும் 'மாமேதை' களில் ஐயா—அப்படித்தான் அவர்களும்!

ப. ஆ கணேசன், சென்னை-21

கே : அருமை அண்ணா ! ஒரு கவிஞனுக்குத் தெரிய வேண்டியது இலக்கணமா ? இலக்கியமா ?

ப : இரண்டும் தெரியவேண்டும். அதோடு வரலாறு தெரிந்திருப்பதும் நல்லது. ஏனெனில் எண்ணத்தை சம்பவங்களாக்குவது வரலாறு; சம்பவங்களை எண்ணங்களாக்குவது இலக்கியம்.

முருகேசன், தஞ்சாவூர்

கே : சிந்தனைச் சிற்பி அவர்களே ! நம்நாடு பெரிய அளவில் எப்போது உருவாக்கப் போகிறீர்கள் ?

ப : மார்ச்சு திங்களில் எதிர்பார்க்கலாம் ? அதற்கான தொடக்க வேலைகள் தொடங்கிவிட்டன.

மணிமாறன் குன்றத்தூர்.

கே : நம்மை நாடமாடிகள் என்று சொல்லும் ஆளவந்தார்கள், தம்மை எந்த நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள் ?

ப : படத்தைப் பாருங்கள்.

த. சுந்தரி, பூனா-3

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு வந்த ஆரியர்களின் வாரிசு இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா ?

ப : ஆச்சாரியார், யார் ? அவரேதான்.

கே: சங்கராச்சாரியாரைப் பற்றித்தங்கள்கருத்தென்ன? விளக்கவும்.

ப : முடப்பழக்கங்கள் இருக்கும் வரை சங்கராச்சாரி இருப்பார்கள். அவரை (ஜகத்குரு) உலக குரு என்கிறார்கள். எந்தெந்த உலகத்துக்கு என்று கேளுங்கள்.

கே: ஒருபெண் தன்மனதுக்குப்பிடித்த புருஷனைத் தேர்ந்தெடுக்கும் வயது எது?

ப : பருவம்.

அப்துல் காதர், சென்னை.3

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்றால் அத்தேவன் யார்? அவனை வழிபடுவது எங்ஙனம் ?

ப : உழைப்பு வியர்வு.அதை நினையுங்கள். பூசிக்க வேண்டாம்.

நாதமுனி, பெரம்பூர்

கே : இப்போது ம. பொ. சி. எந்த உலகத்தில்உட்கார்ந்து கொண்டிருக்கிறார் ?

ப : அடுத்துவரும் தேர்தலுக்கான கற்பனை உலகத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறார்.

கே : தமிழ் நாட்டிலிருந்து பெரும் ரகளை புரிந்துகொண்டிருந்த திருமங்கலம் தீவட்டியார், இப்போது எங்கே இருக்கிறார் ?

ப : அவரை நல்லவராக்கி விட்டாரே அளகேசனார். தயவு செய்து திருமங்கலத்தாரை மறந்துவிடும்.

எஸ். டி. இராசன், பம்பாய் I

கே : சிந்தனைச் சிற்பி அவர்களே ! 'தமிழ் நாட்டுக்கு எந்தப் பெயர் இருந்தால் என்ன ?' என்று கேட்கும் அமைச்சர்கள், தங்கள் குழந்தைகளுக்கு கழுதை, குரங்கு, பன்றி, எருமை என்றெல்லாம் பெயர் வைக்க சம்மதிப்பார்களா ?

ப : வைக்க மாட்டார்கள், அப்படி வைத்தால் வாக்காளர்கள்கூட அவைகளின் பக்கத்தில்வர அஞ்சுவார்களே

கே : கணவன் இறந்தபின் வெள்ளைப்புடவை அணிவது ஏன்? இது சரிதானா ?

ப : உள்ளம் தூய்மையாக இருக்கவேண்டும் என்ற தத்துவம் ஏதாவது அதில் அடங்கி இருக்கக்கூடும். என்றாலும் ஒரு சிலர்தான் அப்படிச் செய்கிறார்கள். குறிப்பாக (செட்டி) நாட்டில் இன்னும் கடைப்பிடிக்கப்படுகிறது.

கே : உலக அதிசயத்தோடு சேர்க்கத்தக்க அமைச்சர் யார் ? என்ன பேர் ?

ப : உருவில் ஒருவரைசேர்க்கலாம், குணத்தில் ஒருவரைச் சேர்க்கலாம். இப்படி எல்லாரையுமே சேர்க்கலாம். பெயர்கள்தான் உங்களுக்குத் தெரியுமே.

வேலவன், மணலூர்

கே : நேருவுக்கும் சூ-என்-லாய்க்கும் இருந்து வந்த போராட்டம் முடிவடைந்து விட்டதா ?

ப : கீரிக்கும் பாம்புக்கும் சண்டை வந்துவிட்டால் இரண்டில் ஒன்று முடிவுதெரியவேண்டுமே..பொறுத்திருங்கள்.

கே : 14-ம் லூயி மன்னனுக்கும் 16ம் லூயி மன்னனுக்குமுள்ள வேற்றுமை என்ன? இருவரில் எவர் அதிகக் கொடுமை புரிந்தவர் ?

ப : சாரப்பாம்பு நல்லதா— நல்ல பாம்பு நல்லதா என்று கேட்பதைப் போலிருக்கிறது. இருவருமே அப்படித்தான். ஆனால் 16வது லூயியைக் கொஞ்சம் அதிகமாகச் சொல்லலாம்,

உலகநாதன், பொன்னேரி

கே : பெரியாருக்கும் ஆதித்தனுருக்கு மிருந்து வந்த தொடர்பு எந்த மாதிரி முடிந்தது? இப்போது காமராசரோடு இருக்கின்ற தொடர்பு எப்படி முடியும் ? விளக்கமாகக் கூறவும்.

செந்தாமரை, காஞ்சிபுரம்

கே : நேருவும் ம. பொ. சி.யும் ஒன்றுமே ?

ப . எதிலே தோழரே?

ப : பெரியாருக்கும்ஆதித்தனாருக்கும் இருந்த தொடர்பு, தில்லைக்கும்தஞ்சைக்கும் போகின்ற பிரயாணிகள் ஒரு பெட்டியில் போனமாதிரி. பெரியாருக்கும் காமராசருக்கும் இருக்கிறதொடர்பு டிரைவருக்கும்கார்டுக்கும்இருக்கின்ற தொடர்பு மாதிரி.

வெங்கடேசன், மதுரை

கே : இப்போது மேடைகளிலே அறியாமைகளைப் பற்றி அதிகமாகப் பேசாமல் இருப்பதற்குக் காரணமென்ன ?

ப : அதற்காகவே ஒருவர் இருக்கிறார். நமக்கு அரசியல் பேசவேண்டியவேலை இருக்கிறது.

கே : 1962 பொதுத் தேர்தலில் தாங்கள் எந்தத் தொகுதியில் நிற்பதாகமுடிவு செய்துள்ளீர்கள் ?

ப : தனி மனித முடிவை கழகம் ஏற்றுக் கொள்ளாது. அதன் அமைப்பு அப்படி.

டி. பி. சுந்தரம் சென்னை-4

கே : வருகிற பொதுத் தேர்தலில் சிவாஜி கணேசன் போட்டி போடுகிறாராம். காங்கிரஸ் ஆதரிக்குமாம்! அதே தொகுதியில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர் அவர்கள் போட்டியிடுவதற்கு கழகம் முடிவு எடுக்குமா ?

ப : நிற்பதற்கு இரண்டு பேர்களுக்கும் ஒரே இடந்தானா, இப்பரந்த திருவிடத்திலிருக்கிறது?

நாராயணன் சேலம்

கே : மேலே பறக்கின்ற காக்காய்க்கும் கீழே உலவுகின்ற காமராசருக்கும்என்ன வித்தியாசம் ?

ப : காக்கை வானத்திலும் பறக்கும் தரையிலும் நடக்கும், ஆனால் காமராசரால் வானத்தில் பறக்க இயலாது. நிற ஒற்றுமை என்று மட்டிலும் தன்னடக்கத்தோடு சொல்லலாம்,

வேகமாகத் தயாராகிறது!
விரைவில் வெளிவருகிறது!

கொள்கைப் புரட்டர்கள்"

கழகத்தை எதிர்ப்போருக்குக் கடுமையான மறுப்பு ஏடு.

ஆசிரியர்: **கூடலரசன்**

புகைப்படம் இணைக்கப்படுகிறது. தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

தனிப்பிரதி 50 காசு

முகவரி :
3, கமாண்டிங் ஆபீஸர் 2ம் தெரு. மேலமாசி வீதி, மதுரை-1.

தூயவர் யார்? தீயவர் யார்?

அடிக்கடி காரணமில்லாமல் சிரிப்பவன், அழுக்கன். அயோக்கியத் தனத்தை நாகரீகப் பேச்சால் மறைப்பவன், பல நாட்கள் செய்து கொண்டுவரும் புரட்டை மறைத்து, தான் ஒரு பெரிய நீதிமான்போல் வேடம் போடுபவன்; நேரடியாக எதிர்க்கச் சக்தியோ நியாயமோ இல்லாதவன்; உண்ட வீட்டிற்கே இரண்டகம் நினைக்கும் நிர்மூடன், வளர்ந்துவரும் சமூகக் கட்டுக்கோப்பை வெட்டித்தள்ளி அதில் இறைந்தோடும் இரண்டோர் துண்டுகளைப் பொறுக்கித் தின்னலாமா என்று நாவை நீட்டிக் கொண்டிருப்பவன்; எந்நேரமும் தூங்கித் தூங்கிச் சோம்பேறியாய் கொட்டாவி விட்டுக் கண்களைத் திறந்து பார்த்துத் தன் எதிரிலே உழைப்பால் முன்னுக்கு வந்தவனைப் பார்த்துப் பொருமைப்பட்டு அவனை எப்படிக் கவிழ்க்கலாம், அவன் வளர்ச்சியிலே அவனையும் அறியாமல் இந்தத் துரோகிகள் உள்ளே நுழைய எங்கேயாவது சந்து பொந்துகள் விடப்பட்டிருக்கின்றதா என்று எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பவன்; குறுக்கு வழியிலே ஒடி பிறர் வியர்வையால் குசாலாக வாழலாம் என்று திட்ட மிடும் குறைமதியாளன்; உள்ளே நுழையும்போதே மோச எண்ணத்தோடு நுழைந்து தனக்குச் சந்தர்ப்பம் ஏற்படும் எல்லா நேரங்களிலும் தனக்குச் சாதகமாக என்னென்ன செய்துகொள்ள முடியுமோ அவ்வளவையும் செய்து வைத்துக்கொண்டு சீலமிக்கவன்போல் நடிக்கும் சிறுமதியாளன்; பணம் கிடைக்கும்போது, வேறு தனக்குக் கிடைத்த குலாம் எவனையாவது விட்டு பணம் பறிக்கலாமா என்று இங்குமங்கும் நாய் போல் ஒடிக் கொண்டிருப்பவன் — ஆகிய இவர்கள் எல்லாம் துரோகிகள் பட்டாளத்தில் முதல் வரிசையிலே வீற்றிருப்பவர்கள்.

துரோகிகள், திருடர்கள், கொலைகாரர்கள், இந்த மூன்று தரத்தாரையும் எடுத்துக்கொண்டால், கொலைகாரர்களும், திருடர்களுமே துரோகிகளைவிட கொஞ்சம் நல்லவர்கள். ஏனெனில், கொலை செய்பவன் ஏதோ தனக்கு ஏற்படுகிற அடங்காத ஆத்திரத்தின் விளைவாக கொலை செய்துவிட்டு தானும் இறக்கத் தயாராய் விடுகிறுன். அவன் கொஞ்சம் மான உணர்ச்சி இருப்பவன் என்று சொன்னுலும் மிகையாகாது. கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கொலை செய்பவன், சூழ்நிலையால் கொலை செய்பவன், கூலிவாங்கிக்கொண்டு கொலை செய்பவன், பயமுறுத்துவதற்காக ஆயுதம் எடுத்து எதிரிமேல் வீசி, அப்படி வீசப்பட்ட ஆயுதம் படாத இடத்தில் பட்டு எதிரி இறக்க அதனுல் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவன், ஆகியவர்கள். இவர்கள் எல்லாம் கொலைகாரர்கள் என்றே நீதியின் முன் பட்டம் பெறுகிறுர்கள். ஆனுல் ஒரு நாட்டைக் காப்பாற்றுவதற்காக, பட்டாளத்தில் சேர்ந்து சட்ட சம்மதம் பெற்று, சமர்க்களத்தில் எதிரிகளை வீழ்த்துவோர், நாடுகளை தீக்கிரை யாக்குவோர், பெரிய பெரிய பட்டணங்களை சூறையாடுவோர் என்ற பட்டியலில் அடங்கும் அனைவரும் நாட்டின் மானத்தைக் காப்பாற்றிய வீரர்கள் என்றே விருதுகள் பெறுகின்றுர்கள். இவர்களிலும் அப்பாற்பட்டவர்கள் சிலர் இருக்கிறுர்கள். தன் உயிருக்கு ஆபத்துவரும் என்று தெரிந்தால் எதிரியை சுட்டுவிடுவது.

இவர்களை கொலைகாரர்கள் என்று அழைப்பதில்லை. இதிலிருந்தும் வேருேர் பிரிவினர் இருக்கிறுர்கள். அவர்கள் அசம்பாவிதத்தால் கொலைகாரர்களானவர்கள். வேட்டையாட காட்டுக்குப் போய் மிருகத்தைச் சுட குறி

சி. பி. சிற்றரசு

தவறி புதருக்கப்பால் மாடு மேய்த்துக் கொண்டிருக்கும் சிறுவன் மேல் பட்டு அவன் இறந்து விடுவதால் கொலைகாரரானவர்கள். யந்திரத்தின்மூலம் இயங்கும் விஞ்ஞான வண்டிகளை ஓட்டிக் கொண்டு போகும்போது யந்திரக் கோளாருல் அது தன்

திரை மறைவில் துரோகிகள்

கைக்கு அடங்காமல் ஓடிப் போய்த் தெருவில் நடந்து கொண்டிருப்பவர்கள் மேல் ஏறிவிடுவது அல்லது அந்த வண்டியிலேசாலையின் பக்கத்திலே இருக்கிற பள்ளத்தில் வீழ்ந்து அதில் பிரயாணம் செய்து கொண்டிருப்பவர்கள் அனைவருமோ அல்லது ஒரு சிலரோ மாள்வது. இந்தநிலையிலே அதை ஓட்டிய டிரைவர் உயிரோடிருந்தாலும் அவன் மேல் கொலைக் குற்றம் சாருவதில்லை. ஆனுல் மக்கள், பொதுவாக அவனை, 'அட கொலைகாரா' என்று தான் அர்ச்சிக்கிருர்கள். மற்றென்று, குண்டு உள்ளே இருப்பதை அறியாமல், தந்தை அதைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கும்போது எதிரிலே உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் மகன் மேல் வெடித்து அவன் இறந்து விடக் காரணமாகிற திடும் பிரவேசமாக ஏற்பட்டகொலை வேறென்று, முன்பின் விரோதமில்லாமல், எங்கேயோ ஒரு இடத்தில் முகமறியாத இருவருக்கும்வாய்ச் சொல் முற்றி சண்டையாய், அந்தச் சண்டை கைகலக்கும் அளவுக்கு மாறி ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வதாலே எவனுவது ஒருவன் இறந்துவிடுவது.இதைத்தான் திடும்பிரவேசமாய் கோபம் உண்டாகும்படிச் செய்தால் கொலையாகாது 'அகால மரணம்' என்ற சட்ட விதிகளில் நெடு நாட்கள் அடங்கியிருந்தது. ஆகவே இத்தனைவிதக் கொலைகளைவிட மகாக்கொடியது துரோகம்.

அடுத்தது, திருடு. இவர்களில் பல தரப்பட்டவர்கள் இருக்கிருர்கள் என்று முன்பே கூறினேம். பிறவித் திருடனின் குணம் எத்தன்மையது என்று ஆராய்வோம். பெரிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முதலமைச்சனுக இருந்தான் கிளேட்சன். அவன் திருட வேண்டிய அவசியமேஇல்லை. அவன் அகண்ட சாம்ராஜ்யத்தில் கிடைக்கும் அற்புதமான பொருள் எதுவாயினும் அவன் காலடியில் வந்து விழும். இவ்வளவு செல்வாக்கும் சிறப்பும் உடையவனுயிருந்த கிளேட்சன் கடைகளுக்குப் போய் பல பொருள்களை பணத்துக்கு வாங்குவான், கடைசியில் கடை காரனுக்குத் தெரியாமல் ஒரு குண்டுசி, பித்தான், சோப்பு, பற்பசை எதையாவது ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து விடுவான். இவன் கடைக்காரனுக்குத் தெரிந்தபடியே எடுத்தாலும் அவன் பணம் எங்கே என்று கேட்கப் போவதில்லை. அப்படி செய்வதையே கேவலமாகக் கருதிய கிளேட்சன், திருடத் துணிந்தான் என்ருல் அவனுடைய பிறவிக் குணம் என்பது தவிர வேறு என்னவென்று இதைச் சொல்ல முடியும்? காந்தியாரைப்போல், நேருவைப்போல சிறு வயதில் திருடினுர்கள் என்று கூட இதைச் சொல்ல முடியாதே. இவ்வளவு பெரியவனுன பிறகு திருடினுன் கிளேட்சன். இவன் குணம் இவனுடைய மனைவிக்கு தெரியாமலிருக்க முடியுமா? கணவன் வீடு வந்து சேர்ந்தவுடனே கொண்டு வந்த பொருள்களையெல்லாம் குறித்துக் கொண்டு, கடைகாரனை டெலிபோனில் கேட்பாள். ஏனெனில் சில நேரம் பில் வாங்காமலே பணத்தைக் கொடுத்துவிட்டு வந்து விடுவதும் உண்டு. ஆகையாலே இங்கே இருக்கும் சாமான்களையும் வாங்கியதாக கடைகாரனுல் சொல்லப்படுகிற சாமான்களையும் ஒத்திட்டுப் பார்க்கும்போது ஏதாவது ஓரிரண்டு சிறிய சாமான்கள் அதிகமாக இருக்கும்.

அடுத்த இதழில் முடியும்

'நம் நாடு' - வேண்டுகோள்

6—11—60ல் மதுரையில் கூடிய செயற்குழுவில் நமது இயக்கத்தின் அதிகாரபூர்வமான 'நம் நாடு' நாளிதழைப் பெரிய அளவில் கொண்டுவரவேண்டுமென்றும், அதற்கான அறிக்கையை அடுத்துவரும் பொதுக்குழுவில் வெளியீட்டுச் செயலாளர் தரவேண்டுமென்றும், தீர்மானித்திருப்பதன் விளைவாகவும், அடுத்துவரும் பொதுத் தேர்தல், கழகத்தின் இன்றைய மின்னல் வேக வளர்ச்சியைக் கருதியும் இதழைப் பெரிதாக்க வேண்டுமென்ற முயற்சியில் இறங்குவதற்கான ஊக்கத்தைப் பெறுவதற்கு, மாவட்டச் செயலாளர்களும், வட்டச் செயலாளர்களும், கிளைச்செயலாளர்களும், சார்பு மன்றச் செயலாளர்களும் அவரவர்கள் சார்ந்திருக்கின்ற கிளைகள் அல்லது சார்பு மன்றங்கள் 'நம் நாடு' இதழுக்கு ஓராண்டுச் சந்தா அல்லது குறைந்தது அரை ஆண்டுச் சந்தாவை டிசம்பர் முடிவதற்குள் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் 1961 மார்ச் முதல் நாலிலேயே பெரிய அளவைக் காணமுடியும் என்ற நம்பிக்கை, இந்த வேண்டுகோளை விடத் தூண்டியது.

'நம் நாடு' தொடக்கத்திலிருந்தே பெரியதாகுமா-பெரியதாகுமா என்று போன பக்கமெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நண்பர்கள், இன்று எழுத்து மூலமே எழுதிக் கேட்டவண்ணம் உள்ளனர். சிறியது பெரியதாவதுதான் இயற்கை நியதியே தவிர, பெரியது சிறியதாவதில்லை. ஆகவே, நண்பர்கள் இந்தச் சாதாரண உதவியைச் செய்யவேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

சி. பி. சிற்றரசு

ஆண்டு சந்தா	ரூ. 27—0
அரையாண்டு சந்தா	ரூ: 13—50

2ம் பக்கத் தொடர்ச்சி

வெளியாயிற்று. பின் அவ ஆங்கில நாட்டுக் கவிஞர்களின் வாழ்க்கை சரிதம் ஒன்றை எழுதி வெளியிட்டார். The Idler ஐட்லர் என்றதோர் பத்திரிகைநடத்தினுர்.

மாலை நேரத்தில் ஜான்சன் இல்லத்தில் நாம் முன்னே குறிப்பிட்ட பேரறிஞர்கள் பலர் கூடிப் பேசினுர்கள் அவர்கள் பேச்சு இலக்கியமாயிற்று. ஜான்சனின் பேராற்றலைக் கண்ட ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் தன் பழைய மாணவனுக்கு, வறுமையின் காரணமாம் வகுப்பைவிட்டு வெளியேற்றியவருக்கு டாக்டர் என்ற பட்டம் அளித்தது தான் முன்பு செய்த தவறுக்குப் பரிகாரம் தேடிக்கொண்டது. புகழ் இவரைத் தேடிவந்தது. ஜான்சனுடன் பேசுவதில் பெருமை கொண்டோர் பலர். அவரது நண்பராக வாய்ப்புப் பெற்ற பலர் இலக்கிய ஏடுகளில் இடம் பெற்ருர்கள். ஆனுல் வறுமை இந்த வரைகோல் வேந்தனை விட்டு அகலமறுத்தது. நோயினுல் பீடிக்கப்பட்ட அவர் 1874ம் ஆண்டில் தனது எழுபத்தி ஐந்தாவது வயதில் மரணமடைந்தார்.

'ஆங்கில நாடு கிடைத்தற்கரிய பேரறிஞனை இழந்து விட்டது' என்று கூறினுர் எட்மண்ட்பர்க்,

டாக்டர் ஜான்சனின் எழுத்துக்களில் மிளிரும் சுதந்திர உணர்ச்சி போற்றத் தக்கது. எதிரியைக் கிண்டல் செய்து அவனைத் தலை குனிய வைப்பதில் அவர் நிபுணர். ஸ்காட்லாந்து நாடு ஆங்கிலேயர்களின் ஆளுகைக்கு உட்பட்டது என்பதை அனைவரும் அறிவர். ஆனுல் ஸ்காட்லாந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே என்றும் பிணக்குகள் ஏற்பட்ட வண்ணம் இருந்தன.

'ஸ்காட்லாந்தில் பிறந்த மனிதனின் வாழ்க்கையின் இலட்சியம் என்னவென்ருல், அது லண்டன் மாநகரை நோக்கிச் செல்லும் சாலையை அடைவதுதான்' என்ற ஸ்காட் தேசத்தவன் என்ற சொல்லுக்கு டாக்டர் ஜான்சன் தன்நூலில் விளக்கம் எழுதினுர்.

ஓட்ஸ் என்பது மேலைநாட்டுத தானியங்களின் ஒன்று. நம் நாட்டில் நெல்லுக்கு உள்ள உயர்வு அங்கே ஓட்ஸுக்கு உண்டு. "ஓட்ஸ் என்னும் தானியம் பொதுவாக இங்கிலாந்தில் குதிரைகளுக்கும் ஸ்காட்லந்தில் மனிதர்களுக்கும் உணவாகும்தானியமாகும்' என்று தன் அகராதியில் விளக்கம் எழுதினுர் டாக்டர் ஜான்சன்.

இன்றைக்கும் அழியாது நிற்கும் அவரது நூல்களில் நாம் எத்தனையோ இது போன்ற செய்திகளைக் காணலாம். அதையனைத்தும் டாக்டர் ஜான்சனின் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொல்லியபடி நம்மிடையே உலவுகின்றன.

∴ ∴ ∴

வேண்டுகோள்

இனமுழக்கம் சம்மந்தமாக மணியார்டர்கள், ரிஜிஸ்தர் கடிதங்கள், போஸ்டல் ஆர்டர்கள் ஆகிய எல்லாவறறையும் **கீழ்க்கண்ட முகவரிக்கு** அனுப்பவும். தனிபபட்ட நபரின் பெயரில் அனுப்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

—**நிர்வாகி**

அனுப்ப வேண்டிய முகவரி :
பொறுப்பாளர். 'இனமுழக்கம்',
158, பெரிய தெரு, சென்னை-5.

உயிர் குடிக்கும் திட்டமா ? உயிர் கொடுக்கும் சட்டமா ?

சமுதாய நலத்திட்டம், வாட்டம் போக்கிடும் வண்டமிழ்ச் சோலையாக - மணம் வீசும் மல்லிகைத் தோட்டமாக — தென்றல் தவழ்ந்து தமிழ்ச் சிந்துபாடிடும் பைந்தமிழ் அருவியாக—தீந்தமிழ் ஏட்டினில் தித்திக்கும் தேனமுதமாக அமைந்து, நம் தமிழ் மக்களுக்கும் தென்னகத்திற்கும் வழிகாட்டியாக வாகைசூடும் என்ற எண்ணத்திலே தான் பெரியார், காந்தியார் இத்திட்டம் குறித்து, இலட்சியக் கனவு கண்டனர். காந்தியார் கண்ட கனவிலே தவறில்லை; குறைவில்லை; கோணல் இல்லை. அதனால் அவரது திட்டங்களையும் தி. மு. கழகம் குறை கூறுவதில்லை. ஆனால் அவரது நல்ல இலட்சியக் கனவுகளை இன்றைய தினம் இழிவான முறைக்கும் செயலுக்கும் இழுத்து வந்துவிட்டனர். ஒரு சில சுயநலக்காரர்கள் காந்தியாரின் கருணையில் வளர்ந்த காங்கிரசில் 'போலிகள்' புகுந்து புளகாங்கிதம் அடைவதால், பொலிவிழந்தனர், காந்தியாரின் சீடர்கள். காந்தியாரின் அரிய திட்டம் இன்று அலங்கோல நிலையை அடைந்துவிட்டது! சான்றாக, சமுதாய நலத் திட்டம், ஏட்டளவிலே இனிக்கின்றதேதவிர சமுதாயத்திற்கோ வேறு துறைகளுக்கோ துணை செய்வதாகத் தெரியவில்லை.

பாமர மக்களுக்கு உயி கொடுக்க வேண்டிய திட்டம் "உயிர் குடிக்கும்" திட்டமாக உருவெடுத்து, உலுத்தர்களின் கையிலே சிக்கிவிட்டது. நலத்திட்டத்தின் பெயரால் நடக்கும் நாச வேலைகளும் பணமோசடிகளும் ஏராளம் உள்ளன.

சமுதாயநலத் திட்டத்தின் பெயரால் செலவாகும்கோடிக் கணக்கான தொகையில், மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் விகிதம், அலுவலகங்களின் நிர்வாகத்திற்குச் செலவாகும் விகிதத்தைவிடக் குறைவானதேஆகும். இந்தக் கருத்தினையே கொஞ்சம் பச்சையாக கூறுவோமேயானால் அலுவலக அதிகாரிகளுக்கும் மற்ற தொடர்புடையோருக்கும் கொடுக்கப்படும் சம்பளமும் படியுமே திட்ட நிதியின் பெரும் பகுதியை விழுங்கி விடுகின்றது. தனிப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கு இத்திட்டம்'ஏணி'யாக அமைவதால்தான் முன்னேற்றத் திட்டம் என்று பெயர்கொடுத்தார்கள் போலும்.

எரிமலையாகிறான் ஏழை!

இத்தகைய குறைகள் மலிந்த குருட்டுத் திட்டத்திலே முடங்கிக் கிடக்கும் சோதாக் கூட்டங்களை நினைத்து, அதே நேரத்தில் தமிழகத்தின் வறுமை நிலையையும் நினைத்தால், கும்பிபற்றிஎரிகின்றது. அரை வயிறுக் கஞ்சிக்குக்கூட வழியின்றி வறுமையில் வாடுகின்றனர் ஒரு பகுதியினர். பசியுடனும் பிணியுடனும் உழைக்கும் பாட்டாளிகள் குடியிருக்க வீடின்றி சாலையின் ஓரத்தில் அமைந்த மேடைகளில் உறைகின்றார்கள். உழவர் பெருங்குடி மக்கள், விலைவாசி உயர்வைத் தாங்கமுடியாது, புழுவெனத் துடித்து வாடுகின்றனர். நாடு இப்படி இருக்க, நல்லதிட்டமென்று சொல்லி, அங்கே தியாகியின் பரம்பரை வாழ, வழி வகுக்கப்பட்டிருக்கிறது. ஏழைகள், துன்பத்தாலும் துயரத்தாலும், தொல்லைகளாலும் விலைவாசியின் உயர்வாலும் அளவில்லாஅல்லல்அடைந்த போதும், வரிமட்டும், தவறாது கொடுக்க அரசு ஆணை அனுப்புகின்றது. மக்கள் கண்ணீரையும்செந்நீரையும்சிந்தி காடுதிருத்தி கழனியாக்கி, பயிர் செய்து வரியாகக் கேட்கும்போது 'கொள்ளைக் காசுகளைக்கொட்டி யழுகின்றனர். இந்தமுறையில்மக்களைவாட்டி வதைத்து, வரியைப் பெரும் அரசுபயிர் வளர பருவ மழையால்ஊர்செழிக்க பஞ்சாயத்து முறை"என்றவேதாந்தவிளம்பரமும் செய்கின்றது. வேதாந்தம் பேசும் அரசு, மக்களிடம் சுரண்டிய பணத்தை, நல்வழியில், செலவிடவில்லை. மாறாக காங்கிரசுக் கட்சிப் பிரசாரத்திற்கும் மிட்டாதார்களுக்கும் மிராசுதார்களுக்கும் செலவு செய்கின்றது.

எக்காளமிடுகிறான் கோழை !

திட்டத்தின் பெயரால், தியாகிகளுக்கும் அவர்களுடைய மக்களுக்கும், உற்றார் உறவினர் சுற்றத்தார் ஆகியோருக்கும் வேலை கொடுத்து மறைமுகமாக கட்சிப் பிரசாரம் செய்யும் சாதனங்களை உருவாக்குகின்றனர். தியாகி பரம்பரை கதர் விற்கவும் கைராட்டை விற்கவும், பஞ்சுவிற்கவும், கட்சிப் பிரச்சாரம் செய்வதற்கும் பயன்படுகிறார்கள்.

இன்றைய தினம், தமிழ் நாட்டில், ஏறத்தாழ 170 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் உள்ளன. 1962க்குள் தமிழகத்தில் மொத்தம் 375 நிறுவனங்கள் அமையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் முதன் முதலில் 1946ல் பிர்க்கா முன்னேற்றத் திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு, பச்சோந்தியைப்போல ஆண்டு தோறும், பல மாற்றங்களை அடைந்து, சமுதாய நலத்திட்டமாக உருவெடுத்தது.

இத்திட்டமும் நிலைத்து நிற்க முடியவில்லை. காரணம்? நிலையில்லாத திட்டங்களால் அமைக்கப்படும் முறைமையும் செயலும் படுதோல்வியைக் கண்டதுதான் பல கோடிகள் பாழாகியது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும். $12\frac{3}{4}$ கோடி பாழாகியுள்ளது. இத் திட்டத்தால்! அரசினர் 12·75 கோடியைப் பாழாக்கிய பின்புதான், இதனை பஞ்சாயத்து யூனியன்களாக மாற்றுகின்றனர். இதற்கு ஆதாரமாகப் புதிய பஞ்சாயத்துச் சட்டமும் பெயரளவில் இருக்கின்றது.

இந்தப் புதிய திட்டம் அக்டோபர் 2ல் நாடெங்கும் நடைமுறைக்கு வந்தது. இதனை ஒட்டி, விளம்பரம் செய்யவும், பஞ்சாயத்து வளர்ச்சி வாரவிழா மாவட்ட மாநில அடிப்படையில் நடத்தவும், பஞ்சாயத்துகளில் 'பஞ்சாயநாள் விழா" நடத்

இதற்குமுடிவு1962

தவும் பல லட்ச ரூபாய்களை அரசு அள்ளி அள்ளி வீசிவிட்டது. இனி, இத்திட்டமும் என்னென்ன மாற்றங்களை அடையுமோ என்று அஞ்சுகின்றனர். இந் நாடு செய்யும் ஊதாரிச் செலவுகளையும் ஆடம்பரச் செலவுகளையும் கண்டு, வருந்தி அரசுக்கு ஆலோசனை கூறுகின்றனர். அரசோ அவர்களின் குரலை மதிக்காதுகேலியும் கிண்டலும் செய்கின்றது.

நமது உள்ளத்திலே, பசியால வாடும் மக்களிடம் பெற்ற வரிப்பணம் பாழாகின்றதே என்ற பரிதாப உணர்ச்சி; அமைச்சர்களின் உள்ளத்தில்ஒரு திட்டத்தைச் சோதனை செய்து பார்த்தோம் என்ற திருப்தி; நமது இதயத்தில் நம்மைஅடகுவைத்து வெளி நாடுகளில் பணம் திரட்டி, நமது மானத்தைப் போக்குகிறார்களே என்ற மான் உணர்ச்சி; அவர்களின் உள்ளத்தில் "நமக்கு எப்படியும் பணம் கிடைக்கின்றதே" என்ற மகிழ்ச்சி; நமது மனதில் வறுமையின்பிரதிபலிப்பு; அவாகளின்மனதில் ஆடம்பரத்தின்சாயல், இப்படியாகஉணர்ச்சி அலைகள் ஒருநிலைப்படாது கிடக்கின்றது. இந்த நிலையை மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். இனியும் உயிரில்லாத திட்டத்திற்கு உயிர் கொடுக்க பணத்தைப் பாழாக்க நினைப்பார்களே யானால், மக்கள் வாளாயிருக்க மாட்டார்கள்.

உயிரில்லாத் திட்டங்களும் உடைந்த கொள்கைகளும் தென்னகத்திற்குப் பொருந்தாது என்று மக்கள் உணர்ந்து விட்டனர். ஆகவே "அறிஞர் அண்ணா" வால், அரசியலில் விழிப்படையும் இந்நாட்டினரை மந்திரிகளால் ஏமாற்றமுடியாது! ஏமாற்ற நினைத்தாலும் அதன் பலனை வருகிற பொதுத் தேர்தலின் மூலம் அமைச்சர் பெருமக்கள் அனுபவிப்பார்கள். இது உறுதி.

மா. இராமலிங்கம் பி. ஏ.

திற; விழி; திருப்பு முகத்தை !

உயிர் நமக்கு வெல்லமல்ல..!

—★—

'வெண்டைக்காய்ச் சாம்பார்ஏன் வைக்க வில்லை?
வெங்காயச் சாம்பார்ஏன் எனக்கு? என்று
சண்டைக்கு மனைவியிடம் போவ தற்கும்
சாப்பாட்டுச் சுவைதன்னை நினைத்துக் கொண்டு
மண்டையினை உடைத்துக்கொள் வதற்கும் தானா
மனிதருக்கு இருக்கிறது நேரம்? சுத்தத்
தண்டங்கள் வடநாட்டுக் கும்பல் நம்மைத்
தண்டனிட வைப்பதனை நினைக்கின் றோமா ?

எட்டு முறை தின்றுவிட்டு ஏப்பம் விட்டு
இருக்கின்ற படுக்கையினை விரித்து விட்டுக்
கொட்டாவி விடுவதிலே என்ன நன்மை ?
கோட்டைவிட்டு விடுவதுவா நமது நாட்டை?
கட்டாயம் நம்நாடு நமக்கு வேண்டும்!
கண்டிப்பாய் வடவரைநாம் எதிர்க்க வேண்டும் !
திட்டமிட்டு திராவிடத்தைப் பெறுவ தற்குத்
தீவட்டித் தடியரையும் திருத்த வேண்டும் !

எவ்வளவோ பெரிதாக மாம்ப ழந்தான்
இருந்தாலும் ஒரேவிதைதான் உண்டு! அத்தி
எவ்வளவோ சின்னதுதான்! இருந்த போதும்
இருக்கிறதே நூறுவிதை! இனிமேல் மண்ணைக்
கவ்வஉள்ள காங்கிரசின் மானம் தன்னைக்
காப்பாற்ற ஒரேநேரு! கழகம் தன்னில்
ஒவ்வொருவர் ஆற்றலையும் தொட்டுப் பார்த்தால்
ஒருஅண்ணா ! ஆயிரம்பேர் அவர்க்குப் பின்னால்!

முட்டாளின் பட்டாளம் நம்மை நோக்கி
முறைத்தாலும் அதுபற்றிக் கவலை கொள்ளோம்!
சட்டசபைக் கொட்டாவிக் கும்பல் நம்மைச்
சதாநேரம் திட்டிடினும் தயங்க மாட்டோம்!
விட்டாலும் விட்டிடுவோம் மானம் தன்னை
விடமாட்டோம் சோறுதனை என்போர் நம்மைத்
திட்டிடினும் நாமதற்கு மயங்க மாட்டோம் !
திராவிடத்தைப் பெறும்வரையில் ஓய மாட்டோம் !

பண்டாரப் பயல்களுக்கோ உயிரைப் பற்றிப்
பயமிருக்கும்; தானெடுக்குப் பிச்சைச் சோற்றை
உண்டிடுவான்; உடற்கூட்டில் உயிரை என்றும்
ஒட்டவைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்வான்;
கண்டவர்கள் நமையடிமை யாக்கக் கண்ணால்
கண்டபின்னும் வாய்மூடி இருக்க லாமா?
மண்டுகளா ? மண்டையிலே மூளை யில்லா
மடையர்களா நாம்என்றால் இல்லை ! இல்லை !

ஆழநெடுந் திரைகடலும் நிலப்பெண் ணாளின்
ஆடையில்லா மார்பகம்போல் மலையும் மக்கள்
வாழவழி செய்கின்ற வயலும் கொண்ட
வளமான திராவிடம்தான் நமது நாடு!
பாழடைந்து போய்விட்டோம்! வடக்கு நாட்டால்
பழுதடைந்தோம்! தாழைமடல் போல்ம ணப்போம்!
வாழைமடல் வாழ்வெதற்கு நமக்கு ? சேர்ந்து
வாருங்கள்! உயிர்நமக்கு வெல்ல மல்ல!

புலவர் பொன்னிவளவன்

திரைஒலி

நடேஷ் ஆர்ட் பிக்சர்சாரின்

மன்னாதி மன்னன்

" களங்கம் பிறந்தால் பெற்ற
வள் மானம்
காத்திட எழுவான் அவள்
பிள்ளை !"

கதை :

சோழன் கரிகாலன் வஞ்சியின் தலைவனை அவமதித்தான்! ஆத்திரங்கொண்ட சேர இளவரசன் — மணிவண்ணன் — தோள்வலி காட்டினான்! கரிகாலன் கர்வத்தை அடக்க அவன் மகள் கற்பக வல்லியைக் கவர்ந்து வந்தான்! — ஏற்கனவே நாட்டியக் கலையால் காதலித்து வாக்குறுதி பெற்றவள் சித்திரா! அவளைத் துறத்தும் கணிக்கண்ணன்— வில்லன்! கதை பின்னிப் பிணைந்து சித்ராவைத் துறவு பூணச்செய்து பிறகு உலகை விட்டே அனுப்பிவிடுகிறது! இறுதியில் மணிவண்ணனும் கற்பக வல்லியும் ரதத்தில் பாடிக் கொண்டு போகின்றனர்!

வசனம் :

இலக்கிய நயம் படைத்த கவிஞர் கண்ணதாசனின் வசனங்கள் கவிதைப் போக்கிலே யுள்ளன! சீர்த்திருத்தக் கருத்துக்கள் மலர்ந்துள்ள சிறப்பான உரையாடல்கள்!

பாடல் :

" அச்சம் என்பது மடமை
யடா
அஞ்சாமை திராவிடர் உட
மையடா "

என்ற கவிஞரின் பாடல் எடுத்த எடுப்பிலேயே எழுச்சியை யூட்டுகின்றது. ஏனைய பாடல்களும் கருத்தும் இனிமையும் உடையனவே!

நடிப்பு :

" கனக விசயரின் முடித்தலை
நெறித்து
கல்லினை வைத்தான் சேர
மகன் "

என்ற பாட்டை, புரட்சி நடிகர்—வரலாற்று மன்னனாக நடித்து- அத்துறையில் திரையுலகில் முடிசூடாத மன்னனாகத் திகழ்வதற்குக் கூறலாம்!

" ஆறிலும் சாவு நூறிலும்
சாவு "
தாயகம் காப்பது கடமையடா"

என்ற அவர் கூற்றிலும் நடிப்பிலும் உண்மையான லட்சியம் இருக்கின்றது. படத்தின் துவக்கத்தில் காலுக்குவேலை! (நாட்டியம்). இடை நேரத்திற்குப் பிறகு வாளுக்கு வேலை. இரண்டிலும் தனித்தனியே வெற்றி காண்கின்றார்.

"சித்திரத்தோகை செவ்விதழ்க்
கோவை சேதி சொல்லாதோ
—இந்த
பத்தரைமாற்றுப் பாவை மேனி
பங்கயம் ஆகாதோ "

சித்திரா (பத்மினி) வோடு காதல் காட்சி நன்றாக உள்ளது! புத்தபிக்குனியான வுடன் சோகத்தால் ' சித்ரா ' ' சித்ரா ' எனப் புரட்சி நடிகர் நடிப்பது அற்புதமாக உள்ளது. புரட்சி நடிகர் நடிப்புக்கலையில் முழு வெற்றி யடைந்துள்ளார் என்றேகூறலாம்.

வி. ஆர். ராஜகோபால் முழுக்க முழுக்க கலைவாணர் நடையிலேயே நகைச்சுவை யூட்டுகின்றார். பி. எஸ். வீரப்பாவும், எம். ஜி. சக்கரபாணியும்எப்பொழுதும்போல் நடித்துள்ளனர். அடிப்பற்கள் தெரிய சேரநாட்டு மன்னனாக நடிப்பவர் என். எஸ். நாராயண பிள்ளை-வேதனை!

"பதறிச் சிவந்ததே நெஞ்சம்; வழிபார்த்துச் சிவந்ததே கண்கள்! கதறிச் சிவந்ததே வதனம்; கலங்கி நடுங்கிக் குலைந்ததே மேனி ?" இதில் பத்மினிக்கு இணை பத்மினி தான்! அஞ்சலி தேவிக்குப் பழைய நடிப்புத்தான்!

படப்பிடிப்பு!

எடிடிங்—பல இடங்களில் சரியில்லை! இசையமைப்பு சில பாடல்களுக்கே அருமை. ஒப்பனை முழுமோசம்! (டோப்பாக்கள் வெளியே தெரிகின்றன) back-ground music) பெண்களுக்கு மத்தியில் ' புரட்சி நடிகரை ' ஆட்டிப் படைத்து அஞ்சலி சோதிப் பதா-கற்பனை?! நடனங்கள் (group)அதிகம்!

"வருபவர் அதிகம்; மறை
பவர் அதிகம்.
ரசிகர் மனதில் நிற்பவர்
யார் ?
மாபெரும் வீரர் மானம்
காப்போன்
சரித்திர நடிகர் ' புரட்சி '
யடா !"

திறம்

19-10.60 வெளிவந்தபடங்களில் சிறப்பான ' வெற்றிப் படம்!' அதுவும் இந்த ' மணிவண்ண'னால்தான்.

அஞ்சான்

வெளிவந்துவிட்டது விற்பனையாகிறது!

வாங்கிவிட்டீர்களா!

கண்ணதாசன் கவிதைகள்

இரண்டாம் தொகுப்பு

முதல் தொகுப்பிற்குப்பின் இதுவரை வெளிவந்த எல்லாக் கவிதைகளும் இடம் பெற்றிருக்கிறது.

விலை ரூ. 2-50

காவியக்கழக வெளியீட்டில்
விற்பனைக்குத் தயாரான நூல்கள்

கண்ணதாசன் கட்டுரைகள் ரூ. 1 50

மயிலாடும் பாறை (நாவல்)
தென்னரசு எழுதியது ரூ. 1 50

தேவைக்கு எழுதுங்கள் :
காவியக் கழகம்,
158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

★

இயக்குநர் இயங்க
இங்கே
இருப்பது என்ன?

★

"இனமுழக்கம்" தரும் இன்சுவை விருந்து!

நமதியக்க நாவலாசிரியர்
கே. ஜி. இராதாமணாளன் எழுதும் புதிய தொடர்

மறவர்குலத்து மணிப்புறா

மறவர்குலத்துப் பெருமை சொல்லுவாள் மங்கையர் குலத்து மணிப்புறா இவள்!
நாவல் முழுதும் இவள் தரும் தத்துவம் இராதாமணாளனின் எழுத்துச் சித்திரம்!

★ கதையிலோர் திருப்பம்! ★ கற்பனையிலோர் புதுமை!
★ நல்ல தமிழ் நடை! ★ வெல்லத் தமிழ்ச் சுவை!

ஏஜண்டுத் தோழர்கள் அதிகம் பிரதிகளுக்கு முன்பணத்துடன் எழுதுங்கள்
"இனமுழக்கம்" சென்னை-5.

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபால நாயக்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

இனமுழக்கம்

ஆசிரியர் சி. பி. சிற்றரசு

உள்ளே....

- ★ வரவேற்ற மரணம் - சிறுகதை
- ★ கேள்வி பதில்
- ★ ஜெர்மன் முன்னுள் ஜனதிபதி ஹெஸ்
- ★ வெற்றி பெற்ற கென்னடிக்கு வாகைமாலை

தமிழா!

நாளை, உனக்கும் இதே கதிதான்!

இந்திய துணைக் கண்டத்தின் இரும்பு நெஞ்சத்தால் இன்னல் பல அனுபவித்து வருகின்ற மாநிலம் ஒன்றல்ல, இரண்டல்ல....

ஆணவத்தால் — அலட்சியத்தால்—அதிகார போதையால் சதுராடும் டில்லிப் பேரரசால் பல கோடிக்கணக்கான மக்கள் நாளும் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கொடுமையை—கொடுஞ் சாவை முத்தமிடுகின்ற அந்த அவல நிலையை ஒரு காவியமாகவே உருவாக்கி விடலாம். அந்த அளவுக்கு அதிகார வெறி, அனைவரையுமே அலட்சியப் புன்னகையோடு பார்க்கிறது. அதனுடைய பிரதிபலிப்பாகத்தான் சமீபத்திலே ஒரு சோகமான கதை உருவாகி இருக்கிறது. 'கதையா?' என்று கேட்பீர்கள்.

ஆம்! கதைதான்! ஆனாலும் அரசியல் களங்கம் அதிலே அடங்கிஇருக்கிறது. குடியரசென்றபெயராலே கல்கத்தாவிலே நடந்த ஒரு நிகழ்ச்சியைத்தான் உங்களுக்குக் கதை என்கிறேன். நெஞ்சத்தைக் கல்லாக்கிக் கொண்டிருக்கின்ற மிருக வெறியர்களால் உருவானதே அந்தச் சித்திரம்.

சொல்லுகிறேன்! சிரிக்க முடிந்தால் சிரியுங்கள்; இல்லையேல் சிந்தித்து கண்ணீரைச் சிந்துங்கள், அல்லது இந்த ஆட்சிக்குக் கல்லறை கட்ட முடிந்தால் உணர்ச்சியோடு விழித்தெழுந்து கிளம்புங்கள்!

கல்கத்தா!

விண்ணைப் பிளக்கத்தக்க மாடிவீடுகள் நிரம்பிய நகரம் அது! அயலவர் அனைவரும் ஆச்சரியப் படக்கூடிய அழகிய வீதிகள் — அவைகளை அழகுபடுத்தும் அரண்மனை போன்ற மாடிகள்! அப்படிப்பட்ட கல்கத்தாவிலே நடந்த சோகத் துளிகள்...

மாதுரி— இந்தப் பெயருக்குச் சொந்தமானவள், சிந்தனைச் சுடர் விளக்கு! கிளி கொத்தும் கனிபோன்ற கன்னத்துக்குச் சொந்தக்காரி! களியாட்டம் துளிர் விடக் கூடிய பருவத்தாள்! பால் போன்ற மொழியாலே, தன் கணவனின் விழியை விலை பேசும்கெட்டிக்காரி! குடும்பத் தலைவியாக விளங்கி வருபவள். அப்படிப்பட்ட அவளுக்கு என்.சி. பெரிவால் கணவன். அவளுக்கேற்ற ஆணழகன் அவன்! 'அவளில்லையேல்நானில்லை!' என்றுசொல்லத்தக்க அளவிலே அவள் மீது அன்பை நீட்டியவன்.

இருவருமே இணைபிரியாது, அந்த இன்பகரமான கல்கத்தாவிலே குடும்பப் பொறுப்பிலே புகுந்து விளையாடி வந்தனர். தம்முடைய தாய் மொழியான இந்திமொழியினுலே இன்பச்செய்திகளை பரிமாறிக் கொள்வார்கள். பெரிவால் வெளியே புறப்பட்டுப் போவானேயானுல், அவன் வரும் வரையிலே மாதுரியின் விழி வாசலையே நோக்கிக் கொண்டிருக்கும். அவன் வீட்டுக்கு வரும் வரையில் அப்படி இப்படி அசையமாட்டாள். அந்த அளவுக்கு அன்புக்கு அவள் அடிமைப்பட்டுக் கிடந்தாள். அவனும் அப்படித்தான்.

அவனொரு டாக்டர். அறிவாலும் ஆற்றலாலும் உயர்ந்த குணத்தை அவன் பெற்றிருந்தான். அத்தகைய அவனுக்கு F. R. C. S. படிக்க வேண்டுமென்ற ஆசை எழுந்தது. அந்த ஆசையை, ஈன்றெடுத்து வளர்த்த பெருமைக்குரிய தந்தையான லக்ஷ்மிநாராயண பெரிவாலிடம் தெரிவித்தான். அவர் கொஞ்சம் தயங்கினுர். தன்னுடைய மகன் லண்டனுக்குச் சென்று விட்டால், அவனுடைய மனைவியும் குழந்தையும் எப்படிப் பிரிவுத் துயரை பொறுத்துக் கொள்வார்கள் என்று அவர் எண்ணினுர்; 'முடிவை மாற்றிக்கொள்!' என்று சொல்லவும் அவர் நா எழவில்லை. தலையசைத்தார்.

அங்கிருந்து தன் அன்புச் செல்வத்திடம் — மாதுரி என்னும் தன் இல்லக்கிழத்தியினிடம் ஓடோடி வந்தான்! 'அன்பே! படித்தது போதாது; பெற்ற பட்டமும் பெரிதாகாது. ஆகவே மேற்படிப்புக்காக லண்டனுக்குச் செல்ல முடிவெடுத்து விட்டேன்!' என்று, சொல்லிலே சுவை சேர்த்துச் சொன்னுன். அதுகேட்டு அவள் சிரித்தாளா? இல்லை, இல்லை! விழி களைக் குளமாக்கினுள்! சூடான கண்ணீரை அவன் சுந்தரவதனத்தின் மீது சிந்தாமல் சிந்தினுள்.

அவன் சிந்தை கலங்கியது! உணர்ச்சி மிக்க நரம்புகளெல்லாம் சோகத்தால் அழுத்தம் பெற்றன. ஆனாலும் அவன் தன் குறிக்கோளை மாற்றிக்கொள்ளவில்லை.

"ஆருயிரே! அழாதே! மூன்றே ஆண்டு! அங்கே முழுநேரமும் உன் நினைப்பு! ஒவ்வொரு நாளையும் உன்னை அணைக்கும் ஆவலோடு அகற்றுவேன். பிரிவுத் துன்பம் உனக்கு மட்டுமல்ல, உயிரோவியமே! எனக்கும் தான்! பேச்சிலே படிப்பிருக்கும்; என் மூச்சிலே நீ இருப்பாய்! உன் நிழலிருக்கும். நீ என் மனைவி! அந்த நினைப்புடனேயே நாட்களை கழிப்பேன். விடைகொடு! விழிப்போடு நம் குழந்தையை வளர்த்து வா! என் தந்தையின் உறுதுணையால் தேறுதல் பெற்றுக் கொண்டிரு! ஓடி வந்து விடுகிறேன்!, என்று கூறி, பிரிவுக்கோர் அச்சாரமாக முத்தமொன்றை மோதவைத்துவிட்டுப் பயணமானுன்.

அவன் பயணமாகும்போது தான் பெற்ற செல்வத்தைத் தூக்கிக் கொஞ்சினுன்! அந்தக் கொஞ்சுதலை முடித்துக் கொண்டு லண்டன் நோக்கிச் சென்றுன்.

சென்றவன் வந்தானு? செய்தியையாகிலும் தெரிவித்தானு? எதுவுமே இல்லை. அனைவரையுமே அடியோடு மறந்தான்!

தன்னுடைய மருமகளின் கவலையைக் காணச் சகிக்க முயாத லக்ஷ்மி நாராயணன் தன் பிள்ளைக்குப் பல கடிதங்கள் போட்டார். பதில்—?

ஏமாற்றம்

அவளும் அப்படித்தான்!— இப்படி மூன்றுண்டுகள் ஓடி ஒளிந்து கொண்டன. அழுதாள்! அவன் போட்டோவை நாளும் பார்த்துப் புலம்பினுள், 'அம்மா! அப்பா எப்போம்மா வருவார்?' என்று மழலை மொழி பேசிடும் தன் செல்வத்தின் சொல்லைக் கேட்டு நாளும் மெலிந்தாள்! நலிந்தாள்! இக்கொடுமையைக் காணமுடியாத அவள் மாமனுர், லண்டனிலுள்ள தம்முடைய உறவினர்களுக்கு ஒரு கடிதம் எழுதினுர். அந்தக் கடிதத்திற்குப் பதில் வந்தது.

"...தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றேம். மகிழ்ச்சி. இங்கு உங்கள் மகன் பட்டம் பெற்று, ஒரு மருத்துவ மனையிலே வேலை பார்க்கிருர்; அதுவும் ஒரு ஆங்கிலப் பெண்மணியோடு வாழ்க்கை நடத்துகிருர். அவர் மீண்டும் உங்களை வந்து சந்திப்பார் என்பது சந்தேகம்தான்!" என்று, அந்தக் கடிதத்தில் அடங்கி இருந்தது. அந்த வாசகங்களைக் கண்ட அவரும் அவளும் அலறித்துடிக்க

(9ம் பக்கம் பார்க்க)

இன்று அங்கே;

நாளை இங்கே ?

விலை 16 காசு

வெற்றிபெற்ற கென்னடிக்கு வாகைமாலை

உலகக் கண்கள், அமெரிக்காவையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன. அரசியல் தலைவர்களும், அகில உலகப் பொது மக்களும், 'கென்னடியா? நிக்சனா?" என்ற கேள்விக் குறியோடு தம் விழிகளை உயர்த்திக் காட்டிக் கொண்டிருந்தனர். 'நிக்சன்தான் வருவார்' என்று ஆருடம் கணித்தவர்களெல்லாம், 'குடியரசுத் தலைவராக கென்னடி தேர்ந்தெடுக்கப்பட்டார்!' என்ற வானிலை ஒலிபரப்பைக் கேட்டவுடன் தலையைத் தொங்கப் போட்டுவிட்டனர். இன்று-?

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த செனட்டர் கென்னடி வாகை மாலை சூடிவிட்டார். எட்டு ஆண்டு காலமாகக் கோட்டை விட்டுக்கொண்டிருந்த ஜனநாயகக் கட்சிக்குப் புத்தொளியைத் தரக்கூடிய முறையிலே அமெரிக்காவிற்கு அதிபதியாகிவிட்டார்.

அடிமை வாழ்வை அகற்றப் பாடுபட்ட ஆப்ரகாம் லிங்கன் அமர்ந்திருந்த அரியாசனத்திலே அமரும் ஆற்றலை, கென்னடிக்குத் தேடிக் கொடுத்துவிட்டனர். வாஷிங்டன் வீற்றிருந்த குடியரசுக் கொலுமண்டபத்திலே கென்னடிக்கு இடம் கொடுத்துவிட்டனர். கடந்த நாள் வரையிலே, 'குடியரசுக்குரிய 'வெள்ளை மாளிகை'யில் ஐசனேவர் அமர்ந்திருந்தார். இன்றைக்கு அந்த இடம், ஜான்.எப்.கென்னடிக்கு உரியதாகிவிட்டது. 'நமக்குத்தான் ஜனதிபதி!' என்று முழுமனதோடு எண்ணிக்கிடந்த நிக்சனும், அவரது மனைவியான பேட் நிக்சனும் தோல்வியைப் பரிசாகப் பெற்றனர்.

கென்னடிதான் குடியரசுத் தலைவராக வரவேண்டுமென்று விழைந்த மக்கள், தந்த மொத்த ஓட்டுக்கள்: 32,998,134.

நிக்சன்தான் வரவேண்டுமென்று நினைத்த மக்கள் தந்த மொத்த ஓட்டுக்கள் 32,669,065. குறைந்த ஓட்டுகளினால்தான் நிக்சன் தோல்வியுற்றார். கென்னடிக்கும் நிக்சனுக்குமிடையே கொஞ்ச ஓட்டுக்கள்தான்! ஆனாலும் கென்னடிக்குள்ள தனி மரியாதையால் குடியரசுத் தலைவராக மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

1901-ல் பதவியேற்ற ரூஸ்வெல்டைவிட வயதிலே மிக இளையவர் கென்னடி! அவரது வெற்றியைக் கேட்ட இந்திய பிரதமர் நேருவும், ருஷ்யப் பிரதமர் குருஷேவ் அவர்களும் தம்முடைய பாராட்டுக்களை தந்தியின் மூலமாகச் சிந்தினர்—இப்படி பல நாட்டினர் தம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்ற வகையிலே வாகை மாலை சூடிவிட்டார். இவரது வாழ்க்கை வரலாற்றை நோக்கும்போது இவர் ஒரு பெரிய பணக்காரராகவே விளங்குகிறார். ஒரு நாட்டையே விலைபேசும் அளவுக்கு செல்வமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவரென்பது, அவரது வாழ்க்கைக் குறிப்புக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

மாசாசூசெட்ஸ், புருக்ளன்ற பெருநகரிலே 1917-ம் ஆண்டு, மே 29-ம் நாளன்று பிறந்தார். பெரும் பணக்காரருக்குப் புதல்வனாகப் பிறந்தவர்தான் கென்னடி. இவரது தந்தையார், பிரிட்டனில் அமெரிக்கத் தூதராக விளங்கியவர். இவரது தூய தொண்டைக் கண்ட அமெரிக்கர்கள் அவரது புகழை ஏற்றிப் போற்றுவதையே பெரும்பணியாகக் கொண்டிருந்தனர்.

அத்தகைய தூதுவரின் தனயன்தான் ஜான். எப். கென்னடி. பொதுத்துறை பள்ளிகளிலும், தனிப்பட்டவர் நடத்தி வந்த பள்ளிகளிலும் படித்தார். சின்னஞ்சிறு வயதிலிருந்தே, 'கல்வியே நமக்குரி கண்!' என்று கருத்துக் கொண்டு பள்ளி வாழ்க்கையிலே தேர்ச்சி பெற்றார். இறுதியில், 1940-ல் ஆவார்டு பல்கலைக்கழகத்தின் மூலமாக, 'பட்டதாரி' என்கின்ற புகழ் முடி சூட்டிக் கொண்டார்.

இப்படி, படிப்பின் வாயிலாகப் பெரும் புகழுக்கும் பட்டத்துக்கும் உரியவரான ஜான். எப். கென்னடி, பட்டம்பெற்ற மறு ஆண்டே, அதாவது 1941-ம் ஆண்டே அமெரிக்க இராணுவப் படையில் புகுந்தார். தெற்கு பசிபிக் போன்ற பகுதிகளில் 'பஞ்ரோல்-டார்ப் பீட்டோ கப்பல் தலைவராகப் பணியாற்றினார். தான் ஏற்ற தலைமைப் பதவிக்காகவும், ஆற்றல் மிக்க அருஞ் செயல்களுக்காகவும் விருதுகள் பல பெற்றார். அவரது அரும் பணி 1945-ல் நின்றது. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பலத்த காயத்தால் இராணுவத்திலிருந்து விலகினார்.

அதன்பிறகு, 'இண்டர் நேஷனல் நியூஸ் சர்வீஸில் நிருபராகபணியாற்றினார். அவரதுஊக்கத்தையும் அறிவையும்அறிந்த அரசாங்கம்,1946,ல் மாசசூசெட்ஸ் நகரிலிருந்து அமெரிக்கப் பிரதிநிதிகள் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார். அவரது அருந்தொண்டு கண்ட அனைவரும்; அவரையே1948, 1950-ம் ஆண்டுக்கும் தேர்ந்தெடுத்துப் பிரதிநிதியாக்கினர். இவருக்கு, அயல் நாட்டு விவகாரங்களிலே தலையிட்டு தீர்த்து வைப்பதிலே அதிகக் கண்ணோட்டம்உண்டு. அதற்காகவே மேற்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு போன்ற பகுதிகளில் சுற்றுப்பயணம் நடத்தி இருக்கிறார்.

1952-ம் ஆண்டில் அமெரிக்க செனட் சபையில் அங்கம் வகித்து தம்முடைய அரசியல் கருத்தை அங்கெடுத்து ஓதினார். அதன் பலனாக 1958-ம் ஆண்டும் இவரையே தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ்வாறு படிப்படியாக உயர்ந்த கென்னடியை ஜாக்கலின் லீ போவீர் என்ற பெண், தன் வாழ்க்கைக்குரிய கணவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இவரது திருமணம், 1953-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 12-ம் நாள் சிறப்பாக நடந்தேறியது, இப்போது இவருக்கு மூன்று வயதுடைய மகள் இருக்கிறாள். இத்தகைய வாழ்க்கைக் குறிப்புக்களுக்குச் சொந்தக்காரரான ஜான். எப். கென்னடியைத்தான் அமெக்கர்கள், தமக்குரிய குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளனர். பணத்துக்காக ஏற்றுக் கொண்ட பதவியல்ல இது! அந்த அளவுக்குப் பாமர ஏழையாக இவரில்லை. ஒரு நர்ட்டையே விலைகொடுத்து வாங்கும் அளவுக்கு வசதி உடையவர்தான். என்றாலும் தொண்டு புரிய வேண்டுமென்ற பெரு நோக்கத்தால் போட்டியிட்டார், பதவிக்குரிய பதிவும் போதுமான அளவுக்குக் கிடைத்துவிட்டது! இதை விட வேறென்ன வேண்டும்.? இந்த முறையில் நாமும் நம் வாழ்த்தை அறிவித்துக் கொள்ளுவோம்,

வாழ்க கென்னடி!

வளர்க, அவரது தொண்டுள்ளம்!!

★

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2] ★ 18—11—60 ★ [இதழ் 12

நேரு என்ன செய்வார் ?

அசாம் வெள்ளம், அங்கு வெள்ளம், இங்கு வெள்ளம் என்றெல்லாம் கேள்விபட்டவுடன் எலிகாப்டரில் ஓடோடி பார்க்கும் நேரு, தமிழகத்தில், அதுவும் சென்னையில் பெருமழை, பேய்க் காற்று, இவர் 250 மூட்டைகளை வழங்கினர். அவர் உணவு பொட்டலங்களை வழங்கினர். இந்தப் பள்ளிக் கட்டடங்கள், அந்த வீடற்றோர் தங்கத் திறந்து விடப்பட்டன. செஞ்சிலுவைச் சங்கம், புத்தர் சங்கம் மற்றப் பல சங்கங்கள் தாமே முன்வந்து உதவி செய்கின்றன. கலைஞர்கள் பலர் கார்களை அமர்த்திக்கொண்டு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று வேண்டிய உதவிகளைச் செய்கிறார்கள் என்றெல்லாம் சுமார் பத்து நாட்களாக பத்திரிக்கைகளில் பத்திப் பத்தியாகச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. எனினும் முதல்வர் நேருவிடமிருந்து இதை எழுதுகின்றவரை எந்தவிதமான அனுதாபச் செய்தியோ அல்லது அவரிடம் இதைப்போன்ற அசம்பாவிதங்களுக்கு உடனடியாக உதவுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையோ கிடைத்ததாகத் தெரியவில்லை.

அதனால் நாம் ஆச்சரியப்படவுமில்லை. அதிர்ச்சி கொள்ளவுமில்லை, ஏனெனில் அவர் தென்னகத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதும், தென்னக மக்களை அவர் கேவலமாகப் பேசியதையும் இதற்குள் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. இது உள்நாட்டு விவகாரம் என்று விட்டுவிட்டாலும் வெளிநாட்டிலுள்ள தமிழர்களைப் பற்றித்தான் அவர் என்ன கவலை எடுத்துக் கொண்டார்?

நேரு செய்வதென்ன ?

இலங்கையிலே தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டபோது, தமிழர்களை தெருவில் நிறுத்திக் கொன்றபோது, அதன் எதிரொலியாய்த் தமிழகத்தின் கோரக் குரல் கேட்டபோது, கண்டனக் கணைகளை சிங்களத் தீவை நோக்கி ஏவியபோது என்ன செய்தார் நேரு? அது, அவரவர்கள் உள்நாட்டு விஷயமென்றால் இவர் வெளிநாட்டு அமைச்சராய் இருப்பானேன்.

தன் நாட்டான் ஒருவன் வெளிநாட்டில் அவமானப்படுத்துகிறபோது, இந்த மானங்கெட்ட இந்திய நாடு தவிர வேறு நாடுகள் கொதித்தெழாமல் இருந்ததில்லை. ஒரே ஒரு நடிகன், அமெரிக்க நடிகன், அவன் அமெரிக்கர் மெச்சத் தகுந்த மேதையல்ல, விஞ்ஞானியல்ல, சட்ட நிபுணனுமல்ல, அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் சொந்தக்காரனுமல்ல! அவன் இந்தியாவுக்கு வந்ததும் அரசாங்க வேலையல்ல! ஊர் சுற்றிப் பார்க்க வந்தான். அமெரிக்காவின் சாதாரணக் குடிமகன். அவ்வளவுதான். அவன் அவமானப்படுத்தப்பட்டான் என்று தெரிந்தவுடன் கொதித்தெழுந்தது அமெரிக்கா. 'மதுவில்க்கா! எங்கே இந்தியா பூராவிலுமா?' 'ஒரு பகுதியில் உண்டு, ஒரு பகுதியில் இல்லை' என்றது இந்தியா. 'சீ, சீ இது என்னமோசமான ஏற்பாடு? எங்கே மது, எங்கே மதுவிலக்கு என்று அயல் நாட்டானுக்கு எப்படித் தெரியும். நேருவே என்ன பதில் சொல்கிறீர்?' என்று கேட்டது. பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார் நேரு.

ஒரு நடிகன்தானே! அதுவும் அமெரிக்காவில் எங்கோ ஒரு மூலையில் குடியிருப்பவன்தானே என்று அது வாளாயிருந்துவிடவில்லை.

பணிந்துபோன பிரதமர் ?

நேரு ஏன் அவ்வளவு பணிந்து மன்னிப்பு கேட்டார் என்றெண்ணுகிறீர்கள். 'என் நாட்டு சட்டத்தை மீறினன், உங்கள் நாட்டு குடிமகன் **பிரடரிக்மார்ச்** சட்டத்தின் முன்னால் அனைவரும் சமமே. எங்கள் எஃகு சட்டங்கள் எவனுக்கும் வளைந்து கொடுக்காது. வெளிநாட்டார் வந்தால் என்ன செய்வது என்பதற்காகத்தான் தலைநகரமெனும் டில்லியிலே மதுவை விற்கிறோம். அங்கே அவன் குடிப்பது மாத்திரமல்ல, நீந்தியிருக்கலாம். ஆனால் அவன் தென்கோடியிலே போய்க் குடித்தான். அதோடில்லாமல் வழியிலே தாகமெடுத்தால் என்னசெய்வதென்று, கூடவே கொஞ்சம் கொண்டு வந்தான். அது அந்தப் பகுதியைப் பொருத்தவரை மன்னிக்க முடியாத குற்றந்தான். சட்டத்தைச் செய்வது சர்க்கார்; அதை மதித்து நடக்கவேண்டியது மக்களின் நீங்காத கடமை. அந்தக் கடமையிலே இருந்து வழுக்கிவிட்டான், உங்கள் பிரடரிக்மார்ச். ஆகவே அவனைக் கைது செய்ததும் நடவடிக்கை எடுத்ததும் முற்றிலும் சரி, என்று வாதிட்டாரா நேரு? ஏன் வாதாடவில்லை? விடிந்தால் திருவோடேந்தி அமெரிக்காவின் தலைவாயலிலே நிற்க வேண்டிய நேரு நிமிர்ந்து பேசியிருந்தால் என்ன நடக்கும் என்பது நம்மைவிட அவருக்கு நன்ருகத் தெரியும். அதன் காரணமாகத்தான் வளைந்து கொடுத்தார்.

பெறட்டும் படிப்பினை !

மற்றொரு படிப்பினையும் அவர் பெற்றிருக்கவேண்டும். அண்மையில் அமெரிக்காவில் குடிரசுத் தலைவர் தேர்தல் நடந்தது. நிக்சன், கென்னடி போட்டியிட்டனர். இருவரும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டனர், ஒரு சிறு மாற்றத்தோடு. ஆனால் ஒரே விஷயத்தில் இருவருக்கும் மாற்றமே இல்லை, அதுதான் சீனத்தை ஐ. நா. வில் சேர்க்கக்கூடாது என்பதிலே. சீனாவினால் நேரடியாகப் பாதிக்கப்படாதவர்கள் அது ஒரு பொதுவுடமை நாடு என்பது தவிர வேறில்லை. என்றோ ஒரு நாள், அதாவது ஐக்கிய அமெரிக்காவின் முதல் சுதந்தரப்போர் வீரனும் முதல் குடியரசுத் தலைவனுமான ஜார்ஜ் வாஷிங்டன் காலத்தில் பொன்னாசையால் ஓடினார்கள் சீனர்கள். அவன் எழுப்பிய சுதந்திரச் சூருவளியில் சிக்கி திக்குமுக்காடி தாயகம் ஓடி வந்துவிட்டனர். அதற்குப்பின் சீனர்களுக்கும் அமெரிக்கருக்கும் எவ்வித அரசியல் தொடர்புகளே இல்லை. எனினும் அது ஒரு பொதுவுடமை நாடு என்ற காரணத்தால் தேர்தலில் நின்ற இருவரும் சீனத்தைப் பொருத்தவரை ஒரே விதமான கருத்தைத் தெரிவித்தனர்.

ஆனால் எல்லையோரத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட நேரு. 'சீனத்தை ஐ.நா,வில் சேர்த்துக்கொள்ளுங்கள்,' என்று வாதாடுகிறார். இது அவர்சரியாகவோ தவருகவோ வெளியிட்டுவிட்ட பஞ்ச சீலத்துக்கு ஒத்ததாயிருக்கலாம். ஆனால் தன்மானப் பிரச்னையைப் பொருத்தவரை மிகக் கேவலமாக இருக்கிறது என்று பல ஏடுகளும் பல தலைவர்களும் பேசினார்கள். ஆகவே அன்றைய நேரு எப்படியோ. இன்றைய நேருவின் நிலை கடியாரத்தின் பெண்டுலம்போல் இப்படியும் அப்படியும் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அவர் நாட்டுத் தலைவர் என்ற நிலையிலே இருந்து நாட்டின் ஒரு பகுதித் தலைவர் என்ற சந்தேகத்திற்கிடமில்லாமல் நடந்து காட்டியிருக்கிறார். ஆகவே, இன்றைய தென்னகத்தின் வெள்ள அழிவுக்கு உதவி செய்தார் என்றால்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டுமேயன்றி செய்யவில்லை என்றால் வியப்பில்லை. தன் கையே தனக்குதவி என்ற முறையில் பாதிக்கப்பட்டப் பகுதிகளிலிருக்கும் பொருள் படைத்தோர். அதோடு ஈரநெஞ்சம்படைத்தோர், அதோடு ஈதலேமேல் என்ற குறள் படைத்தோர் உள்ள திருவிடம் எப்படியும் தன்னைக்காப்பாற்றிக் கொள்ளும். ஆகவே ஈகையாளர்களே! வாழ்வற்றோர் சிந்தும் கண்ணீரோடு நீங்களும் கலந்துகொண்டு கடுகளவு கண்ணீரை துடைக்க முயற்சி செய்யுங்கள், நாங்கள் சென்னையிலே அந்த கோரத்தைப் பார்க்க வேதனையாக இருக்கிறது. சென்னை மக்கள்தான் உதவி செய்ய வேண்டுமென்பதில்லை. மாநிலத்தின் எல்லா பகுதிகளிலிருந்து உங்களாலான எல்லாவித உதவியை அளிக்க முன்வாருங்கள் என்று இனமுழக்கத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்புள்ள,





வரவேற்ற மரணம்

தூங்கவயல் லோகிதாசன்

மொகலாய பேரரசுகள் வாழையடி வாழையாகத் தங்களது தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்த டில்லி மாநகரத்தில், அன்று எங்கு பார்த்தாலும் ஒரே பரபரப்பு துள்ளிக் கிடந்தது.

முரசு அதிர்ந்தது:
மொகலாயர் கிளம்பினர்!

போர் முரசு முழங்கிய வண்ணமாக இருந்தது— படையணிகள் அணிவகுக்கப்பட்டன — ஆயுதங்களையும் ஆகாரங்களையும் குவியல் குவியல்களாகக் குதிரைகளின் மீது நிரப்பிக் கொண்டிருந்தனர், போர் வீரர்கள்— தளபதிகளோ அவரவர்களின் அணியை ஒழுங்குபடுத்த—புறப்பட்டுச் செல்ல ஆரம்பித்தன, மொகலாயப் பெரும்படை.

மேகம் வானத்தைக் கப்பிக் காரிருளை உண்டாக்கி—சிறு தூற்றலையும் சிதற விட்டுக் கொண்டிருந்தது. இந்தப் படையெடுப்பு அந்த வானத்திற்கே விருப்பமில்லையோ என்னவோ; உள்ளம் புண்பட்டு,உணர்ச்சிப் பெருக்கால் கண்கள் வடிக்கும் நீராகவே அது காட்சியளித்தது.

புதுமை குலையா தாஜ்மகால் நிமிர்ந்து நின்று புறப்பட்டுச் செல்லும் படையணிகளையே பார்த்துக் கொண்டிருந்தது. அதனுள் கோயில் கொண்டிருக்கும் மும்தாஜ் மட்டும் உயிருடன் இருந்து இருந்தால் இரத்தக் கண்ணீர் வடித்திருப்பாள், தன் புத்திரன் ஔரங்கசீப்பின் அலங்கோல ஆட்சியைக் கண்டு.

வருமா, படை ?
தருமா, விடை?

ஆம், அன்றைய டில்லி பீடத்து ஆட்சிக்கு அதிகாரியாக விளங்கியவன் ஔரங்கசீப்பாகத்தான் இருந்தான். அவனது ஆணையை நிறைவேற்றவே அணிதேர் புரவிகள் ஆட் பெரும்படையுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தன, நெடு நாட்களாகவே அவனோடு பகைமை கொண்டு இருந்து வரும் மராட்டியத்தை நோக்கி.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

மராட்டியத்தின்முடிமன்னன சிவாஜியினிடத்தில் தன் திறத்தை யெல்லாம் காட்டி மராட்டியத்தைக் கைப்பற்ற முயன்றும் ஔரங்கசீப் தோல்வியே கண்டான். சிவாஜிக்குப் பிறகு அவனுடைய மைந்தனை சாம்பாஜியினிடம் தன் கைவரிசையைக் காட்ட முயன்றும் அவன் எண்ணம் ஈடேறவில்லை. ஆரம்பத்தில் சாம்பாஜி குடி கூத்தியோடு ஒரு கோழையாகத் திகழ்ந்தாலும் முடிவில் புலிக்குப் பிறந்தது பூனையாகவில்லைஎன்பதைநிரூபித்துக் காட்டிவிட்டான். தோல்விமேல் தோல்வியே கண்ட ஔரங்கசீப்பிற்கோ ஆத்திரம் மடு திறந்த வெள்ளமென பொங்கி வழிந்துக் கொண்டிருந்தது உள்ளத்தில்.

"மலை எலி" என்ற பெயர் பெற்ற மாவீரன் சிவாஜியை ஒடுக்க நினைத்தோம் முடியாமல் போய்விட்டது. அவன் மைந்தன் சாம்பாஜியைப் பணிய வைத்து மராட்டியத்தைக் கைப்பற்ற எண்ணினேம்; அதுவும் நடந்தது ஒன்ருகிவிட்டது. அவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்திருக்கும் அவனுடைய இளவலான இராஜாராமை நாம் எப்படியும் இம்முறை தொலைத்தே ஆகவேண்டும்." என்ற ஔரங்கசீப்பின் தீவிரமான முடிவே, மராட்டிய மண்டலத்தை நோக்கி மொகலாயப் பெரும்படை புறப்பட்டுக் கொண்டிருந்தன.

அன்னியரின் படையெடுப்பை அறிந்த இராஜராம் மிகவும் வேதனை கொண்டான். "தன்னிடமுள்ள படைபலமோ மிகக் குறைவு. இதைக் கொண்டு எதிர்க்க வரும் பெரும் படையை எப்படி எதிர்ப்பது," என்ற திகில் அவன் உள்ளத்தைக் கவ்விக் கிடந்தது.

இராஜக்கோட்டையிலே இராணுவக்காரர்கள்!

அப்சல்கானும், சேஷ்டகானும் சிவாஜியை எதிர்த்த போதெல்லாம் அவன் சித்தம் குலைந்தானில்லை. தன்னிடமிருந்த சிறுபடைகளைக் கொண்டே பெரிய வெற்றிகளைக் கண்டிருக்கின்ருன்; சாம்ராட் சத்ரபதி; ஆனுல், அவன் மைந்தன் இராஜாராமோ அவ்வளவு துணிவும், தந்திரங்களும் பெருதவனுகையால் அவள் உள்ளத்தில் பயம் சூழ்ந்தது இயற்கையே.

பூனுவிற்கு வெகு சமீபத்தில் மொகலாயப் படைகள் நெருங்கிவிட்டன. இராஜாராமுக்கு எதுவுமே கண்முன் தோன்றவில்லை. திக்குத் தெரியாத காட்டில் இருப்பவன் போல் திகைத்து விட்டான் அவன். உடனே தன் குடும்பத்தாரையும் முக்கிய அதிகாரிகளையும், இருந்த படைகளையும் அழைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த சிம்மகட் கோட்டைக்கு ஓட்டம் பிடித்தான்.

சிவாஜியின் அணைப்பிலே இராஜாராமின் இதயம்

மொகலாயப் படைகள் பூனுவை அடைந்ததும் அரசன் தப்பியதை அறிந்து பின் தொடர்ந்து சிம்மகட் கோட்டையை முற்றுகையிட ஆயித்தமாயின. இதை அறிந்த இராஜாராம் அதற்குப் பக்கத்திலிருந்த தோரணக் கோட்டைக்குத் தாவினுன்; அங்கேயும் விடவில்லை; தொடர்ந்து விரட்டின, மொகலாய படைகள்.

அங்கிருந்து இராஜகோட்டை! அதையடுத்து புரந்தரக்கோட்டை! இப்படி ஒவ்வொன்ருக மாறி மாறி கடைசியாக செஞ்சிக் கோட்டையை வந்தடைந்தான். அங்கேயும் அவனை விட்டபாடில்லை; அவன் கோட்டையை விட்டு வெளியேறு முன்னரே வந்து சூழ்ந்து கொண்டன, டில்லிபடைகள்.

சிந்தனைக்கு முன்னே செஞ்சிக்கோட்டை!

கோட்டையைவிட்டுவெளியேற முடியாமல் திகைத்தான் இராஜாராம். அதிகாரிகளுடன்அதிக நேரம்ஆலோசனை நடத்தனுன். முடிவில் அண்டையில் தங்கள் வசமுள்ள கோட்டைக்கு ஒருவரை அனுப்பி, அங்குள்ள படைகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெளியே சூழ்ந்து நிற்கும் படைகளை தாக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, அதே நேரத்தில் கோட்டைக்குள் இருந்தும் தாக்கினுல் எதிரியை சுலபமாக வெல்லலாம். திடீரென்று ஏற்படும் முன்னுபின்னுமான இந்தத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் மொகலாயப் படைகள் சிதறுண்டு ஓடும்; அன்னியரை எளிதாக வென்று விடலாம் என்று திட்டங்கள் தீட்டினுர்.

அன்னியர் முன்னே அடைக்கலமாவதா?

திட்டம் முடிந்ததும் செயல்படவேண்டிய நிலையில், யார் அந்தக் கோட்டைக் காவலன் பைரோஜியிடம் சென்று இச்செய்தியைஅறிவிப்பது என்ற பிரச்னை எழுந்தது. கோட்டையைச் சுற்றியோ அன்னியர் படைகள் சூழ்ந்திருந்தன. கோட்டையை விட்டு வெளியேற வேண்டுமானுல் அவர்களது கழுகுக் கண்களுக்குத் தென்படாமல் தப்பிச் செல்ல வேண்டும்; "இதற்குத் திறமைசாலியாக யாரைத் தேர்ந்தெடுப்பது?" என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டேயிருந்த இராஜாராமின் முன்னர் கண்டோபல்லா என்னும் தளபதி வந்து நின்று, "அரசே: சிறிதும் சிந்திக்காதீர்கள்; இச்சிறந்த பணிக்கு நானே சென்று, கோட்டையைக் காத்து நிற்கும்என் மைந்தன் பைரோஜியிடம் விபரத்தைக் கூறி அந்தக் குறித்த நாளில் குறித்த நேரத்தில் படைகொண்டு வந்து தாக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் சஞ்சலத்தைப் போக்குங்கள்." என்று கூறினுர்.

கண்டோபல்லாவின் கண்டனக் குரலொலி

இதைக் கேட்டதும்இராஜாராம் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்து, "என்ன...நீங்களா? இந்த வயோதிகப் பருவத்திலா...?" என்று கேட்டான்.

"ஆமாம் அரசே; என் உடல்தான் மூப்பெய்து இருக்கின்றதே தவிர, உள்ளம் உரம் பாய்ந்தது;" என்று பதில் கூறினுர் கண்டோபல்லா.

அவரிடம் இராஜாராமனுக்குத் தனியான மதிப்புண்டு. அவனது தந்தையான சிவாஜியினது காலந்தொட்டு அவர் இருந்து வருபவராகையால் அவருடைய வாக்கிற்கு மறுத்துப் பேச முடியாத இராஜாராம், அவரிடமே முடிவாக அந்தப் பொறுப்பை ஒப்படைத்தான். அவரும் அன்றிரவே கோட்டையை விட்டுப் புறப்பட தயாரானுர்.

இரவிலே வந்தான்; இமையைத் திறந்தான்

இரவு, தன் கருப்புப் போர்வையை எங்கும் பரப்பி இருந்தது. கோட்டைக்கு வெளியில் காவல் புரிந்திருந்தகாவலாளிகளில் ஓரிருவர் உறங்கி விழ — விழித்திருந்தவர்கள் அவர்களை விழிப்புறச் செய்து கொண்டிருந்தனர்.

நடுங்கிய கண்டோபல்லாவும் அவனைத் தொடர்ந்த நிழலுருவமும்

நடுநிசி எங்கும்சுடுகாட்டு அமைதி தவழ்ந்திருக்க - சுற்றும் முற்றும் பார்த்தவாறே கண்டோபல்லா பதுங்கிப் பதுங்கி வந்துகொண்டே இருந்தார்; அந்தமையிருட்டு வேளையிலே மனந்துடிக்கும் நிலையினிலே மறைந்து மறைந்து வந்துக்கொண்டிருந்த அவர், தன்னை எவரும் கண்டுகொள்ளவில்லை என்றே நினைத்துப் போய்க் கொண்டிருந்தார். ஆனுல்,அவரைத் தொடர்ந்து ஒரு உருவம் வந்து கொண்டிருப்பதைஅவர்காணவில்லை. சிறுகச் சிறுக கோட்டைக்கு வெளிப் புறமாக வந்து விட்டார். அவர் உள்ளத்தில் பெரும் அமைதி குடிகொண்டது. இனி அன்னியரைச் சுலபமாக விரட்டி விடலாம் என்ற உறுதி அவர் உள்ளத்திலே துளிர் விட ஆரம்பித்தது. சிறிதும் காலத்தைக் கடத்தாமல் ஒரு மூலையில் கட்டி வைத்திருந்த குதிரையில் அருகில் சென்று அதை அவிழ்க்க முயற்சிக்கும் போது, இரும்பு போன்ற ஒரு கரம் கண்டோபல்லாவின் கரத்தைப் பற்றியது.

இடி விழுந்தது; நடுக்சம் பிறந்தது!

திடீரென்று தலைமீது ஒரு பேரடி விழுந்ததைப் போல் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தபோது, மொகலாயப் பெரும்படையின் தளபதி மலை போல் நின்று கொண்டிருந்தான்; அவன் கண்கள் நீர்பிழம்பைக் கக்கிக்கொண்டிருந்தன. மீசை துடிக்க, பற்களை நர நர வென்று கடித்தவாறே, "யார் நீ?"என்று காட்டுத்தனமான குரலில் வினவினுன்.

கைதானுன், கண்டோபல்லா?

கண்டோபல்லாவும் தைரியத்தை இறக்காமல், "நான் ஒரு வழிப்போக்கன்" என்று மறைக்க முயன்ருர். என்ருலும், தளபதி விட்டபாடில்லை; உடனே இரு வீரர்களை அழைத்துக் கைது செய்யும்படி கட்டளையிட்டான்.அடுத்தக்கணமே கொண்டு போய் சிறையில்அடைக்கப்பட்டார், கண்டோபல்லா; அவரது திட்டம் தூள் தூளாகியதை நினைக்கும்போது நெஞ்சமே வெடிக்கும்படியான வேதனை கொண்டார் அவர்.

நம்பிக்கை அணைந்தது

இச்செய்தியானது கோட்டைக்குள் இருக்கும் இராஜாராமுக்கு பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது. அன்னியர்களிடமிருந்து தப்புவதற்கு இந்த ஒரு முயற்சியைத்தான் அவன் பெரிதும் நம்பியிருந்தான். அந்த நம்பிகையும் இடிந்த கட்டடம் போல் இப்படிச் சுக்கு நூருய்ச் சிதறுமென்று அவன் சிறிதும் எதிர் பார்க்கவில்லை.

சிறைக்குள்ளே தந்தை! சிந்தனைக்கிடையே தனயன்

கோட்டையைவிட்டு தப்ப முயற்சிக்கும்போது, தந்தை கைது செய்யப்பட்ட செய்தி தனயன் பைரோஜிக்கும் எட்டியது. தந்தையின் நிலை குறித்து சொல்லொனு வேதனை கொண்டான். எப்படியும் தந்தையை மீட்டாக வேண்டும் என்ற துணிவான முடிவோடு, தன்னை ஒரு பட்டாணியனைப்போல் உருமாற்றிக்கொண்டு சிறைக் கடத்தை நோக்கிப் புறப்படலானுன்.

புறத்திலே கடமை; உள்ளத்திலே பணத்தாசை!

கண்டோபல்லாவை அடைத்து வைத்திருந்த சிறைக்கு வெளியில் உருவிய வாளுடன் ஒரு வீரன் அங்குமிங்குமாக உலவிக் கொண்டிருந்தான். அவன் தன் கடமையிலிருந்து வழுவாதவன் என்று வெளிக்குக் காட்டிக் கொண்டிருந்தாலும், பணத்தைக் கண்ட மாத்திரத்தில் அவன் கண்கள்வேறெதிலும் கவனத்தைச் செலுத்தாது போய்விடும் குணம் படைத்தோனுவான். பணமயக்கத்திலே சொக்கிச் சுருண்டுவிடும் பண்பு கொண்டவனுக இருந்தான் அவன்.

கெஞ்சிய பைரோஜியும், காவலனின் பார்வையும்!

பைரோஜி முதலில் அவனை நெருங்க சிறிது அச்சங் கொண்டாலும், பிறகு மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு அக்காவல் வீரனை நெருங்கி "சலாம் ஆலேகும்" என்று மொகலாய மொழியில் வணக்கம் செய்துவிட்டு, மெதுவாகப் பேச்சை ஆரம்பித்து, "உள்ளே இருக்கும் ஆளை ஒருமுறை பார்க்கவேண்டும்; என்னை சிறிது நேரம் உள்ளே அனுமதிப்பாயா?" என்று கேட்டான்.

ஆரம்பத்தில் காவற்காரன் கடமையைக் காப்பவன் போல் காட்டிக்கொண்டு, அனுமதிக்க இயலாது என்று கூறிவிட்டான். பைரோஜி கெஞ்சிக் கேட்டுப் பார்த்தும் முடியாது என்று முடிவாக அறிவித்துவிட்டான். தன்னுடைய கடைசி ஆயுதமாக எண்ணியிருந்த பண ஆயுதத்தை உபயோகிக்க ஆரம்பித்தான் பைரோஜி. கொண்டு வந்திருந்த பணப்

(7ம் பக்கம் பார்க்க)

சர்வாதிகாரம் இங்கே?

"மக்களுடைய, மக்களால் நடத்தும், மக்களுக்காகவே இயங்கும் ஆட்சியே, சரியான மக்களாட்சியாகும்!" என்று,தன்னுடைய அழியாப் புகழ் பெற்ற கெட்டிஸ்பர்க் பேச்சிலே குறிப்பிட்டார்.விடுதலை வீரர் ஆபிரகாம் லிங்கன். ஏழை என்றும் பணக்காரன் என்றும் பாராமல், உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்று பேதம் காட்டாமல் ஆட்சியானது அனைவரின் நலத்திற்காகவே பகிர்ந்தளிக்கப்பட்டால் அதுவே உண்மையான குடியாட்சியாகும். வேண்டியவன்-வேண்டாதவன் என்ற வேற்றுமைக்கே குடியாட்சி என்னும் அந்தக் கோட்டையில் அறிவுள்ள -திறமையுள்ள எல்லார்க்குமே இடமுண்டு ; முரண்பாடான தத்துவத்தில் கோட்டையானது காட்சி கொடுத்தால், அதற்கு வைக்கவேண்டிய பெயர் முடியாட்சியே தவிர பிறிதொன்றுமில்லை. (ஒருவனுக்காகப் பலர் சாவது முடியாட்சி; பலருடைய நல் வாழ்விற்காகச் சிலர் தம்முடைய வாழ்வைத் தியாகம் செய்தால் அதுதான் குடியாட்சி!)இந்தத் குடியாட்சியின் குணம் நமது பாரத நாட்டுக்கு உண்டா? என்ற கேள்வி கிளம்பும்போது விடை கிடைக்காமல் தலையைச் செரறியும் வால் பிடிக்கும் மனிதர்களைக் கண்களால் காணுகிறோம்.

"விவேகமாகவும், சிக்கனமாகவும் நடக்கும் ஓர் ஆட்சி வேண்டும்—அந்த ஆட்சி, மக்கள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாதவாறு தடுக்க வேண்டும். மற்றப்படி அவர்களுக்கு அவரவர் தொழிலைச் செய்யவும் — முன்னேற்றம் அடையவும் உரிமை இருக்கவேண்டும். தொழிலாளர் உழைத்துப் பெற்ற உணவை அந்த 'ஆட்சி தட்டிப்பறிக்கலாகாது. இப்படிச் சிறப்பாக நடைபெறும் ஆட்சிதான் நல்ல ஆட்சி என்று கூறவேண்டும்!" என்றார் தாமஸ் ஜெஃபர்சன் என்பவர்.

ஆனால் இந்தப் பாரத நாட்டைப் பொறுத்த மட்டில் மக்களாட்சி முறை—குடியாட்சியின் கூறுபாடுகள் செவ்வனே வெற்றி பெற்றிருக்கின்றனவா? என்றால் அதுதான் துளியும் இல்லை! 'அரசியல் சட்டவல்லுவரான திருவாளர் பிரோஸ்; ஜே. சராப் கூறுகிறார்: "நாட்டில் மக்களாட்சி முறை வெற்றிகரமாக இயங்குவதற்கு அரசாங்க நிருவாகத்துறைகள் நேர்மையுடன் செயல்பட வேண்டியது இன்றியமையாததாகும். ஆனால், தீவினைப் பயனாக இந்திய நிருவாகத் துறைகளில் இலஞ்சமும், மக்களின் தொல்லையும் பெருகிவிட்டன. இந்நிலையை உடனடியாகச் சீர்படுத்த வேண்டும். எதேச்சாதிகார முறையில் திட்டம் வகுத்தால், மக்களாட்சி நெறி ஒருபோதும் இணைந்துசெயல்படஇயலாது!

சட்ட வல்லுநரின் சிந்தையில் இந்திய நாடு ஒரு சிறப்பான இடத்தைப் பிடிக்கவில்லை என்றால், அதற்கான காரணமே வடக்கின் ஆண

வப் போக்குத்தான்! பலகலைகளும் பயின்று பார்புகழும் மேதையாகத் திகழும் அரிஸ்டாட்டில் சுருக்கமாவே கூறினான். "அவனவனுக்கு உரித்தானதை, அவனவனுக்கு வழங்குவது நீதி." என்று.

தான் ஒரு குடியாட்சி நாடு என்று பெயர்ப் பலகையோடு காலத்தைக் கடத்தும் பாரதம், அந்தந்தப் பகுதிகளுக்குரிய பங்குகளை அந்தந்தப் பகுதிகளுக்கே கொடுக்க முன்வருகிறதா? ஜனநாயக ஆட்சியின் பண்பை உணர்ந்து தன்னை ஓர் அப்பழுக்கற்ற ஆட்சி நடக்கும் திருநாடு என்று போற்றப்படும் அளவிற்கு இந்த நாடு இன்று இருக்கிறதா? இல்லை என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ,சொல்லுகிறார் வடக்கிலுள்ள ஓர் அமைச்சர்: "மத்திய அரசிடம் நிதி குவிந்திருப்பதன் காரணமாகவே அதிகாரங்களும், பணிகளும் நிறைந்திருப்பதாகக் கருதுகிறேன். அத்துடன் அடித் தளத்தில் தலைமைக்

கொண்ட ஆட்சியாக இந்த நாடு விளங்குகிறது. 'நம்பிக்கை என்பது அறியாமையும், பைத்தியமும் கூடிப் பெற்றெடுத்த பிள்ளை, என்றார் பேரறிஞர் இங்கர்சால். குடியாட்சி

றத்தோடு எந்த ஒரு காங்கிரஸ் நண்பரும் இதைக் கருத்தூன்றிப் படிப்பாரானால், அடுத்த விநாடி அவர் தலை நாணத்தால் கவிழும்! ஐயமேயில்லை!!

எண்பத்தைந்து லட்சம் சதுரமைல் நிலப்பரப்பும், லட்சம் ஆறுகளும், பூமியிலுள்ள காடுகளில் மூன்றில் ஒரு பங்கும், மொத்த நிலக்கரி,

விஷத்தைக் கக்குகிறான்.,' என்று சீனத்து மேதாவி கன்பூஷியஸ் கணக்காகத்தான் சொல்லியிருக்கிறார். "எளிய வாழ்க்கையும், எடுப்பான சிந்தனையும் என்பதே கதரின் மறுபெயர்." என்றார் அண்ணல் காந்தி. அவர் மறைந்தார்; ஏட்டைத் திருப்பிப் படித்தார்கள்: "தான் தோன்றித் தனமும், பித்தலாட்ட

ஜனநாயகம் எங்கே?

என்னும் போர்வை போர்த்தி, சர்வாதிகாரப் பாதையில் சண்டிமாடு நடைபோடும் வடக்கு, தென்னகத்திற்கு நன்மை செய்யும் என்று இங்குள்ள நமதருமை காங்கிரஸ் கனதனவான்கள் நம்பிக்கை தெரிவிப்பதும் மேற்கூறிய சொல்லுக்கு இணையாகும்.

தனி மனிதனிண் சிந்தனைக்கு உரிமை இருக்கவேண்டும்; அவனது சொத்துக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும் மக்களின் நன்மைக்குதந்த எதையும் அரசாட்சி அபகரித்துக் கொள்ளக் கூடாது.

இரும்பு, பெட்ரோல் இவற்றில் பாதியும் கொண்ட நாடான ருஷ்யா எவ்வாறு தன்னிறைவுபெற்று விளங்குகிறது! பஞ்சசீலம் பேசும் பாரதமும் தான் இன்றைய நாளில் எப்படித் தோற்றமளிக்கிறது?...வேதனை!

கிடக்கிறது கிடக்கட்ம்; கிழவனைத்தூக்கி மடியில்வை!' என்னும் பழமொழிக்கேற்ப, இருக்கிறதெல்லாம் (ஊழல்கள்) இருக்கட்டும்; இன்னும் எப்படி வரியைப் போட்டுக் கொல்லுவோம்?' என்ற கீழ்த் தரமான சிந்தனையில் மூழ்கி

மும் என்பதே கதரின் மறு பெயர்!" என்று.

காந்தியார் இன்றில்லை ; ஆனால் நாடெங்கிலும் உள்ள காந்தியார் சிலைகள் (சென்னைக் கடற்கரையிலுள்ள சிலையையும் சேர்த்துக் கொள்ளாதீர்கள்!) கண்ணீர் வடிக்கின்றன, இவர்களின் இழிந்த செயல் கண்டு! "நாம் செய்யத் தவறிவிட்ட ஒவ்வொரு கடமையும்' நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒவ்வோர் உண்மையினை மறைத்து விடுகின்றது." என்று கூறிய ஓர் அறிஞனின் வாக்கை மறந்து விட்டவர்கள் இந்தக் 'குடியாட்சி' (?!) நடந்தும் குணசீலர்கள்!

★ **"சீலமுடைய மக்கள், கட்டுக்கோப்பான சமுதாயம், பண்பட்ட அரசாங்கம் இவைகளைக் காணத் துடித்தவனே மனிதன்!" என்றார் அதே கன்பூஷியஸ்.**

குறைவு ஏற்பட்டிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். இந்திய அரசிடம் அதிகாரம் குவிவதால் மக்களுக்குக் கேடுவிளையும் — டில்லியைத் தட்டிக்கேட்க இயலாத நிலையில் மாகாணங்கள் இருக்கின்றன. அதிகாரம் பகிர்ந்தளிக்கப் படுவதுதான் நாட்டின் நலனுக்கு உகந்தது."

குடியாட்சியிலே குறைகளைக் குப்பைமேடு போல் குவித்துக் கொண்டிருப்பதால் மக்கள் சமுதாயத்தின் மன அதிருப்திக்கு இந்த நாடு ஆளாகி வருகின்றது. "ஆள்கின்றவர்கள், நன்னடத்தை உள்ளவர்களாகயிருக்கும் பட்சத்தில், அவர்கள் விடுக்கின்ற ஆணைகளுக்கு எல்லாருமே கீழ்ப்படிகின்றார்கள்." என்று தெளிவாக உரைத்தார், சீனாவின் சிந்தனைச் சிற்பியான கன்பூஷியஸ்.

"பயனுடைய சிந்தனையை மனிதன் செய்ய வேண்டுமானால், அந்தச் சிந்தனை உரிமையுடையதாய், சுதந்தரமுள்ளதாய் இருக்க வேண்டும். அச்சம் மூளையைக் கட்டுப்படுத்திவிடுகிறது." என்றுரைத்தார் இங்கர்சால்.

அசோகனின் சின்னத்தையே தேசியக் கொடியில் போட்டுக்கொண்டு பெருமையடிக்கும் பரிதாபத்திற்குரியவர்கள், அதே அசோக மன்னன் ஒரு சாசனத்தில் சொல்லியிருப்பதை இந்நேரத்தில் நினைவு படுத்திக் கொள்ளுவது நலமாகும்.

"எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும், நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சரி, பெண்களின் அந்தப்புரத்தில் இருந்தாலும் சரி, பிரயாண வண்டியிலோ,

யிருக்கிறது 'புத்தியுள்ள பாரதம்!' 'கோடைக்காலத்திலே உண்ண ஒரு கவளம் சோறு கிடைப்பதில்லை மாரிக்காலத்திலே அடுப்பங்கரையில் இருந்து குளிர்காய்வதுதான் மிச்சம்!' (அதற்குக் கூட விறகு வேண்டுமே! என அங்கலாய்ப் போரும் இலட்சக் கணக்கில் இங்குண்டு.)என்ற வறுமையான நிலை இங்கே கூத்தாடுகிறது.

உண்மையை எடுத்துக் காட்டும் பொழுது அதற்குச் சரியான விடை கூறத் தெரியாத இங்குள்ள அரியலூர் அழகேசனார்கள் — திருமங்கலம் ராஜாராம்கள்— விருதை வீரர்கள்—கக்குகிற 'ஜீ,கள் அனைவரும் நஞ்சைத்தான் கொட்டுகிறார்கள். 'கோபத்துக்கு இரையாகும் மனிதன்

ஆட்சியின் நெளிவு சுளிவுகளை அறியாதவர்கள், ஆட்சிபீடத்திலே ஏறியதும் ஆணவத்தால் குதிக்கிறார்கள். 'துப்பாக்கிகளால் சிம்மாசனம் அமைக்க முடிழும்!' என்று கன்வு காண்பவர்கள், இவர்கள்! "வெற்றியடையத் தம்மால் முடியும் எனத் திட்டமாக நம்புபவர்கள். நிச்சயம் வெற்றியடைந்தே தீருவார்கள்!" என்ற ஆங்கிலக் கவிஞரின் கருத்தை நெஞ்சகத்திலே நிலை நிறுத்திக் கொண்டவர்கள் நிறைந்தது நமது கழகம். எனவே, நாம் வெற்றி பெறுவோம்; அதற்கான நல்வழியில் நடப்போம் வாருங்கள்! குடியாட்சி என்னும் பெயரில் 'முடியாட்சி' நடத்தும் ஆட்சியாளர்களின் சர்வாதிகாரப் போக்கை ஒழித்துக் கட்டுவோம் வாருங்கள்!!

வணக்கம்,

ஆர்விப்பட்டி.
ப. மு. இளங்குமரன்,

★ **"கோபத்துக்கு இரையாகும் மனிதன் விஷத்தைக கக்குகிறான்" என்று சீனத்து மேதாவி கன்பூஷியஸ் கணக்காகத்தான் சொல்லியிருக்கிறார்.**

"சீலமுடைய மக்கள், கட்டுக் கோப்பான சமுதாயம், பண்பட்ட அரசாங்கம் இவைகளைக் காணத்துடித்தவனே மனிதன்!" என்றார் அதே கன்பூஷியஸ்.

இங்கே — இந்த ஆட்சியிலே சீலமுடையவர்களைக் காணமுடியவில்லை; கட்டுக்கோப்பான சமுதாயம் ஏட்டளவில் இருக்கிறது; பண்பட்ட அரசாங்கம் பொருட்காட்சிப் பொருளாக மாறிவிட்டது. 'ஊருக்கு உபதேசமடி பெண்ணே! அது உனக்கில்லையடி கண்ணே!' என்று உதட்டளவில் நேர்மை பேசும் மனிதர்களைக்

அரண்மனைத்தோட்டத்திலோ—எங்கிருந்தாலும் சரி, அரசாங்க அதிகாரிகள் அங்கு வந்து, மக்களுடைய செயல்களைப் பற்றி எனக்குத் தெரிவிக்க வேண்டும். மக்களுடைய நலத்தைக் கவனிக்க நான் எல்லா இடங்களிலும் தயாராகவே இருக்கிறேன்—எல்லாருடைய நன்மைக்காவும் நான் தொண்டு செய்ய வேண்டும். மனித சமுதாயத்தின் நன்மையையும், மகிழ்ச்சியையும் விருத்தி செய்ய வேண்டுமென்று என் சிந்தனையைச்செலுத்துகிறேன்."

அறிவின் துணைகொண்டு-ஆழ்ந்த சிந்தனையின் தோற்

முக்கிய அறிவிப்பு

'இனமுழக்கம்' அலுவலகம் கீழ்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருப்பதால் **'இனமுழக்கம்' 'காவியக் கழகம்' 'தங்கமலர்' 'பொன்னி'** ஆகிய அலுவலகங்களோடு கீழ்க்கண்ட புதிய முகவரிக்கே தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

—உரிமையாளர், **'இனமுழக்கம்,**

முகவரி :—

'இனமுழக்கம்'
158, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

மக்களுக்காக இயங்குவதே மக்களாட்சி !

தூயவர் யார், தீயவர் யார்?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உடனே அதற்குப் பணத்தைக் கொடுத்து அனுப்புவாள் மேடம் கிளேட்சன் என்று வரலாறு. அதைப் போன்று இருப்பவர்களை திருத்தமுடியாது. தேவைக்குத் திருடுபவர்கள் அல்ல, அவர்களுக்கு திருடுவது ஒரு ருசி (Taste).

திருடக்கூடாது என்று எவ்வளவோ வைராக்கியத்தோடிருந்தாலும், திருட இந்த நிலையில் அவன் முன்னதாக போலீசில் பிடிப்பட்டால் திருடன் என்றே பெயர் பெறுகிறான். இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்றால் இல்லை. அப்படி முன்னே இறங்கியவன் பின்னால் இறங்கியவனைக் காட்டிலும் செல்வாக்குடையவனாக இருந்தால் தப்பித்துக்கொள்வான்: மன்னித்து விடப்படுவான்.

மற்றொன்று :—தான் தன்

★ துரோகிகளுக்கு உடலமைப்பில் எந்தவித வித்தியாசமும் இருக்காது. ஆனால்?

வேண்டிய கட்டாயத்தில் வந்து விடுகிறவன், பிறர் படும் துன்பத்தைக் கண்டு சகிக்காமல் திருடியாவது இவர்களுக்கு உதவுவோம் என்று நினைப்பவன், அன்றாடம் தேவையின் அளவுக்கே திருடுபவன், தனக்கு மாத்திரமல்லாமல் தன் குடும்பத்துக்கே சேர்த்துத் திருடுபவன், தன் கால பரியந்தம் வந்தால் போதும் என்றெண்ணாமல் தன் பின் சந்ததிகளுக்கே தலைமுறை தலைமுறையாக வரவேண்டும் என்று நினைத்து பெரியதிருட்டில் கால் வைத்து அவசர அவசரமாக கடைகளில் திருடப்போய் உடனே அகப்பட்டுக்கொண்டு, தனக்கு அதுவரை சொந்தமாய் இருந்த சிறிய தொகையையும் வக்கீல் காலில் வைத்து, அப்படியும் வழக்கில்ஜெயிக்க முடியாமல் தண்டனையடைந்து, போன திசை எல்லார்க்கும் பொல்லனாய்ப் போகும் எத்தர்களும் ஏமாளிகளும் உண்டு. திருட்டிலும் திடம்பிரவேசமாய், நிரபராதி ஒருவன் தன் அறியாமையாலோ சந்தர்ப்பத்தினாலோதான் தெரியாமல் செய்த ஒரு செயலுக்கு திருட்டு பட்டம் வாங்கிக் கொள்வதும் உண்டு. அது எப்படியெனில்:—ரயிலிலே இரவில் இரண்டு பிரயாணிகளும் ஒரே மாதிரியான பெட்டியைக் கீழே வைத்து விட்டு தூங்குவார்கள். ஒரு பிரயாணி வழியிலே இறங்கும்போது மற்றொருவர் பெட்டியைத் தூக்கிக்கொண்டு இறங்கி விடுவான். மற்றொருவன் இன்னும் கொஞ்ச தூரம் வந்து கீழே இருப்பது தன் பெட்டிதான் என்று நினைத்துக்கொண்டு அதை எடுத்துக்கொண்டு இறங்குவான். வழியிலேயோ, வீட்டிற்குப் போயோ பார்க்கும் போது, அது தன் பெட்டியாய் இல்லாததைக் கண்டு போலீசில் புகார் செய்வான். அதே நேரத்தில் இவன் பெட்டியை அறியாமல் எடுத்துக்கொண்டு வழியிலே இறங்கியவன் எக்காரணத்தாலோ பெட்டியைத் திறந்து பார்க்கவேண்டிய வேலையே அவனுக்கு ஏற்பட்டிருக்காது.

காதலியின் பேரில் கொண்ட அளவுகடந்த அன்பால் அவள் கேட்கும் பொருளை தன்னால் வாங்கித் தர முடியாத நிலையில் வேறு யாரிடமிருந்தாவது திருடிக் கொண்டு வந்து கொடுத்தாவது தன் இச்சைகளை பூர்த்தி செய்து கொள்கிறான். இது சாதாரண மனித வர்க்கத்தார் மாத்திரம் செய்தார்களா என்றால் இல்லை. மிகப் பெரிய பக்தர்களென்று கொண்டாடப்பட்ட ஆழ்வார்களிலே ஒருவர் தங்க வட்டிலைத் திருடிதாசிக்குக் கொடுத்ததாக கதையுண்டு. அந்த ஆழ்வார் கொண்ட பக்திவிசேடத்தால் அதை திருடு என்று சொல்லாமல், ஆண்டவன் திருவிளையாடலையும், பக்தன் பரத்தைமேல் வைத்த காம பக்தியையும் சுட்டிக் காட்டுகின்றனர் அடியார்கள். எது எப்படியாயினும், ஒருவன் பொருளை அவனை அறியாமல், பிறருக்கும் தெரியாமல், யாரிடமும் சொல்லாமல் எடுத்துக் கொண்டு வந்து விடுவதைப் பொதுவாக திருடு என்று சொன்னால் கூட, எப்படியோ அதில் இரண்டொன்று நாகரீகம், நாயகன் திருவிளையாடல் என்ற முலாம் பூசப் பட்டு வருகிறது. மேற் சொன்ன திருடும் கொலையும் தீர்க்க முடிந்தது எளிதில் அல்லது கடுமையான உழைப்பின் பிறகு கண்டு பிடிக்கக் கூடியது. என்றாவது ஓர் நாள் வெளியே வந்து விடக் கூடிய செய்திகள் தான் மேலே கண்டவை. வைத்த பொருள் காணாவிட்டால், போன ஆள் திரும்பாவிட்டால் நீண்ட சோதனைக்குப் பிறகு உண்மை விளங்கிவிடும். திருடும் கொலையும் தனித் தனியாக இயங்கினாலும் அல்லது இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து இயங்கினாலும் வெளியே தெரிந்து விடக் கூடியதுதான்.

திருடும் கொலையும் ஒரு சேர இயங்குமா என்ற ஐயப்பாடு பலருக்குத் தோன்றலாம். பலவிடங்களில் இதைப் போல் நடந்திருக்கின்றான். ஒருவன் திருடிவிட்டு ஓடுகிறான். வழியிலே இரண்டொருவர் அவனை மடக்கி விடுகிறார்கள். அவர்களிடமிருந்து தப்பித்தோட தன் கையிலிருக்கும் அரிவாளால் வெட்டி விட்டு ஓடி விடுகிறான். அந்தத் திருடனுடைய முதல் நோக்கம் தன்னைத் துரத்திக்கொண்டு வருபவர்களைக் கொல்ல வேண்டுமென்பதல்ல, திருடவேண்டுமென்பதுதான். ஆனால் அகப்பட்டுக் கொண்டால், அடிப்பார்களே, உதைப்பார்களே, ஊரார் எல்லாம் சேர்ந்து ஆளுக்கு ஒரு அடி அடித்தாலும் பிணமாய் விடுவோமே என்ற பயத்தால் கொலை செய்யத் துணிகிறான்.

ஆனால் இந்த இரண்டும் சேர்ந்து ஒரு துரோகியின் உள்ளத்தில் புகுந்து விட்டால், இந்த இரண்டிலுள்ள அபாயத்தை எண்ணி அவன் வகுக்கிற மூன்றாவது முறை தான் துரோகம்.

துரோகிகளுக்கு உடலமைப்பிலே எந்தவித வித்தியாசமும் இருக்காது. நல்லவர்களை, கண்டிப்பாக இருப்

பவர்களை, கடு கடு என்று பேசி சுடு சுடு என்று முகத்தைச் சுளித்துக் கொள்பவர்களை எல்லாம் கண்டு பிடித்துவிடலாம். இந்தச் சண்டாளச் சதிகாரர்களை கண்டு பிடிப்பதென்பது முடியாத காரியம். தான் துரோகத்தின் மூலம் அடைய வேண்டிய சலுகையை அதட்டி, கெஞ்சி, பயங்காட்டி, மிஞ்சி பெறப்பார்ப்பார்கள். இதுஒருவேசித் தன்மையைவிட மிக மோசமானதும், பேடித்தனத்திலேமுதன்மையானதுமாகும். பாவம், இவர்கள் பெண்களாகப்பிறந்திருந்தால், அதுவும்ஒருவேசியின் வீட்டில் பிறந்திருந்தால் துரோகம் இல்லாமல் வாழ்ந்திருக்கலாம் என்று கூட எண்ணுவார்கள்.

தன் துரோகம் பலிக்க வேண்டுமே என்பதற்காக அதிக தூரத்திலும் போய் விடமாட்டார்கள்; நெருக்கத்திலும் வந்துவிடமாட்டார்கள். கோபத்தைக் காட்டவும் எண்ண மாட்டார்கள். தங்களையும் மீறி கோபம் வரும்போது அடக்கிக்கொள்ளவும் சக்தியற்றவர்களாய் விடுவார்கள்.

இந்த துரோகம் என்ற நெருப்பு அணையாமல் பார்த்துக்கொள்ள, இவர்களைச் சுற்றிச் சிலர் ஊதிக் கொண்டே இருப்பார்கள். அப்போதுதான் அவர்கள் இந்த நெருப்பில் குளிர் காய்ந்து கொண்டே இருக்க முடியும். எக்காரணத்தாலோ இந்த நெருப்பு அணைந்துவிட்டால், அதுவரை அதை ஊதிக் கொண்டிருந்தவர்கள்அந்தப் புகை மறைவதற்குள் மறைந்து விடுவார்கள். பரிதாபம், அவர்களை நம்பி வாழ்ந்தோமே, வீணாய்ப் போனோமே என்றுஇறுதியில் தலைமேல் கையை வைத்துக் கொண்டு திரிவார்கள்.

'விட்டோமா பார்!' என்பவர்கள். ஒன்றும் செய்யமுடியாவிட்டால் ஒத்து ஊதுகின்றவர்கள் போல உடன் வந்து உட்காருவார்கள். வஞ்சனையாலேயே வாழலாம் என்று பலமுறை முயன்று முயன்று வழுக்கி விழுந்தவர்கள். நேர்மை, நாணயம் என்ற இரண்டில்லாத காரணத்தால், எவ்வளவு முயன்றாலும் குடத்துக்குள்ளிட்ட விளக்கு போலாய் விடுவார்கள்.

ஆ! நம்மால் முடியாதா, என்பார்கள். மனிதனால் முடியாதது ஒன்றுமில்லை தான். ஆனால் அதற்காக முயற்சி வேண்டுமே! அதற்கு உடம்பில் சுறுசுறுப்பும், உள்ளத்தில் கள்ளமில்லாமையும், நடத்தையில் நாணயமும் வேண்டுமே! அவைகள்தான் தன் முன்னேற்றத்திற்கு அஸ்திவாரம் என்றெண்ணாதவர்களின் குறுக்கு வழியும் சுருக்கமான வழியும் துரோகம்தான் என்று தீர்மானிக்கிறார்கள். இது, தண்ணீரில் நீந்திக் கொண்டிருப்பவனைப் பார்த்து, 'ஏன் நம்மால் முடியாது, அப்படியே நீந்தத் தெரியாவிட்டாலும், அடியில் தரையிருக்கிறதே, அதைப் பிடித்துக்கொண்டு நின்று விடலாம், என்று துணிந்து குதிக்கின்றவர்களின் கோமாளித்தனம் என்பது தவிர வேறில்லை.

போய் காடுமேடுகளில் சுற்றி சீந்து வாரற்ற பிணமாய், காக்கையும் கழுகும், நாயும் நரியும் பிடுங்கித் தின்னும் பிணமாய்ப் போவார்கள்.

உதாரணம் :— நல்லவன், வீரன், கடமையறிந்து பணியாற்றுபவன், அவன் இனத்தாரிடையேயும் போர் வீரர்கள் அனைவரிடத்தேயும் செல்வாக்கு வாய்ந்தவன், பிரான்சு நாட்டுப் போர்ப் படைத் தளபதி டிரைபஸ். அவன் ஒரு யூதன் என்ற காரணத்தால், துரோகிகளால் சுமத்தப்பட்ட சுமையை எவ்வளவு தாங்க வேண்டுமென்பதை அவனே சொல்கிறான் கேளுங்கள்.

மேன்மை தங்கிய நீதிபதி அவர்களே! இந்த இராணுவ மன்றத்தில் வீற்றிருக்கும் நீதிமான்களே! என் தாய் நாட்டின் ஆணையாகச்சொல்கின்றேன். நான் குற்றமற்றவன், இந்தக் குற்றங்களை நான் செய்யாதது மாத்திரமல்ல, என் எண்ணத்தாலும் தீண்டியதில்லை. நான் உண்மையாகவே என்னை ஈன்ற பிரான்சு நாட்டை எதிரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நினைத்திருந்தால், இதைப்போன்ற இரகசிய கடிதங்களை எழுதி, அவைகளை ஜர்மன் இராணுவமுகாமுக்கு அனுப்பி, அவர்கள் அந்த ரகசியங்களை யுணர்ந்தபின், நம் நாட்டின் மேல் படையெடுத்து, அதன்பிறகு அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தர நான் இவ்வளவு மறைமுகமான வேலையைச் சுற்றி வளைத்துக் கொண்டு வந்து செய்யவேண்டியதில்லை.

சுமார் நாற்பதினாயிரம் போர் வீரர்களையும், யுத்த தளவாடங்களையும், பீரங்கிப் பட்டாளங்களையும், மருந்து கிடங்கையும், நான் கேட்ட போதெல்லாம் செல்வத்தையும் என்னிடம் ஒப்படைத்திருந்தீர்கள். ஏன், இந்த பிரெஞ்சு நாட்டின் விதியை நிர்மானிக்க வேண்டிய பெரிய பொறுப்பையே என்னிடம் ஒப்படைத் திருந்தீர்கள். இவ்வளவு சக்திகளை வைத்துக்கொண்டிருந்த நான், எதிரிகள் படையெடுத்தபோது நான் ஒருவித தீவிரமான நடவடிக்கைகளும் எடுக்காமல், படைகளை சரிவர நடத்தாமல் இருந்தாலும் தாம் தோற்றுப் போயிருப்போம். அப்போது என்மேல் அந்தக் குற்றம் சாராது. ஏனெனில் இவ்வளவு முன்னேற்பாட்டோடு சதி செய்ய நினைக்கிற நான், 'படைவீரர்கள் சேர்ந்து விட்டார்கள்' என்று ஒரே வரியை எழுதிவிட்டு தப்பித்துக்கொள்ளலாம்.

★ உலகத்தில் தோன்றிய துரோகிகள் யாராவது வெற்றிபெற்றிருக்கின்றார்களா என்றால் இல்லை.

இப்படி உலகத்தில் தோன்றிய துரோகிகள் யாராவது இறுதிவரை வெற்றி பெற்றிருக்கின்றார்களா என்றால் இல்லை. அவர்கள் துரோகம் தொடங்கிய சிறிது நாட்களிலேயே கண்டு பிடிக்கப்பட்டு கழுவிலேற்றப் பட்டிருக்கின்றார்கள். கல்லாலடித்துத்துரத்தப்பட்டிருக்கின்றார்கள். பொதுமக்களால் காரி உமிழப்பட்டிருக்கிறார்கள். கஞ்சிக்கலையத்தையேந்தி கடுஞ்சிறையில் வாடியிருக்கின்றார்கள். கண்காணா தேசம்

(தொடரும்)

திரை மறைவில் திருடர்கள்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பையை ஒரு குலுக்குக் குலுக்கிக் காட்டி, "இதிலுள்ள பணம் அத்தனையும் உனக்குத்தான்; இரண்டே விநாடிகளுக்குள் திரும்பிவிடுகிறேன்," என்று கேட்டுப் பார்த்தான்.

பணத்தைக் காட்டினான்; பல்லிளித்தான்!

பணத்திற்குப் பல்லிளிக்கும் குணம் படைத்த காவற்காரன் உள்ளே ஆளை விடவும்மனமில்லாமல், பணத்தை விடவும் மனமில்லாமல் உள்ளத்தில் கடமைக்கும் பணத்திற்கும் போராட்டம் நடத்திப் பார்த்துக் கொண்டிருந்தான். முடிவில் பணமே வெற்றி கண்டது. சீக்கிரமாகத் திரும்பிவிட வேண்டும்," என்று கட்டளையிட்டு பணத்தைப் பெற்றுகொண்டு, பைரோஜிசிறையினுள் செல்ல கதவைத் திறந்துவிட்டான்.

தேம்பியழுத தந்தையும் சினங்கொண்ட தனயனும்

சோகத்தின் பிறப்பிடமாய் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்த தன் தந்தையைக் கண்டதும் உள்ள மெல்லாம் கொதித்து உணர்ச்சி மேலிட்டவனாய், "அப்பா" என்று அழைத்துக் கொண்டே அருகில் சென்று அள்ளி அணைத்துக்கொண்டான் பைரோஜி.

கண்டோபல்லாவினால் தன் கண்களை முதலில் நம்ப முடியாவிட்டாலும், பைரோஜியின் வேடம் கலைந்த பின்னர் அவரால் நம்பாமல் இருக்க முடியவில்லை. தந்தையும் தனயனும் அன்புப் பிணைப்பிலிருந்து விடுதலை யடைந்த பின்னர், அவரவர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். படை கொண்டு வர வேண்டிய நாளையும், குறித்த நேரத்தையும் பைரோஜியினிடம் வலியுறுத்திக் கூறினார், கண்டோபல்லா.

தந்தையை விடுக்க தனயனின் துடிப்பு

தந்தை இங்கே கூண்டுக் கிளிபோல் மூர்க்கர்களிடம் சிக்கித் தவிப்பதைநினைக்குந்தோறும், அவன் நெஞ்சம் வெடிக்கும்போல் வேதனை கொண்டான். தந்தையைத் தனியே விட்டுச் செல்ல மனமில்லாதவனாகி, "அப்பா; நீங்கள் இங்கிருந்து தப்பிச் சென்று படையைத் திரட்டிச் சென்றுவெற்றி காணுங்கள், நான் இங்கிருந்து எப்படியாவது தப்ப முயற்சிக்கிறேன். இந்த வயதான காலத்தில் நீங்கள் இங்கிருக்க வேண்டாம்," என்று பாசத்தோடு கூறி, தான் அணிந்து வந்திருந்தபட்டாணியஉடைகளை அணிந்துகொண்டு தப்பித்துக் கொள்ளுமாறு துரிதப் படுத்தினான்.

தந்தார், விஷத்தை! பெற்றான். தனயன்

பல முறைகள் வேண்டாமென்று தடுத்தும் பைரோஜி கேளாமையால், வேறு வழியின்றி அவன் அணிந்து வந்திருந்த பட்டாணிய உடைகளை அணிந்து கொண்டு, "தம்பி; இன்று நான்காம் நாள். நமது படைகள் புறப்படும். வெற்றி மாதா நம் பக்கம் நின்றாளானால், ஐந்தாம் நாள் காலை சூரியன் உதிப்பதற்குள் உன்னை வந்து மீட்கிறேன்; அதற்குள் உன் உயிருக்கு ஏதாவது ஆபத்து என்று நீ அறிவாயானால், இதோ இந்த ஒரு துளி விஷத்தைப் பெற்றுக் கொள்;" என்று தான் தயாராக வைத்திருந்த விஷத்தை எடுத்துக் கொடுத்தார். அவனும் அதைப் பெற்றுக் கொண்டான்.

சிக்காதே! சீரழியாதே!!

"பைரோஜி! அன்னியனின் கரங்களில் நீ சிக்கிச் சீரழிவதைவிட, உன்னை நீயே கொன்று கொள்வதைத்தான் விரும்புகிறேன்;" என்று அழுதுப் புலம்பிக் கொண்டே கூறினார், கண்டோபல்லா.

'தந்தையே; வீணே சஞ்சலங் கொள்ளாதீர்கள்; நானும் அதைத்தான் விரும்புகிறேன். நீங்கள் உடனே இங்கிருந்து புறப்பட்டு விடுங்கள்; இல்லையென்றால் ஆபத்துக்கள் சூழ்ந்துவிடும்," என்று அவசரப் படுத்தி அனுப்பினான், பைரோஜி. அவரும் பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்றார்.

விலகிவந்தவன், கடமையில் புனைந்தான்!

கண்டோபல்லா சிறைக் கதவுகளைக் கடக்கும்போது, சிறைக்குள் சென்ற ஆளே திரும்புகிறான் என்று உடையைக் கண்டு ஏமாந்த காவலாளி, விரைவாகப் போகும்படி கட்டளையிட்டு விட்டு, சிறைக் கதவுகளைப் பூட்டுவதிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருந்தான். சிறையிலிருந்து தப்பிய கண்டோபல்லா கோட்டைக்குச் சென்று, நான்காம் நாள் படை யெடுப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார்.

முற்றுகையிட்டும் முழுவெற்றி இல்லையே!

காலைக் கதிரவன் தன் பொன்னொளி கொண்டு உலகின்கண் புறப்படத்துவங்கி விட்டான். அதைக் கண்ட புவி மாந்தர் தத்தம் பணிகளில் ஈடுபட்டனர். அதே போல செஞ்சிக் கோட்டையை முற்றுகை யிட்டிருக்கும் டில்லி தளபதியும் தன் பணியைக் குறித்து சிந்திக்க ஆரம்பித்தான். கோட்டையை முற்றுகையிட்டு பத்து தினங்களுக்கு மேலாகியும் உள்ளே செல்ல வழி ஏதும் கிடைக்காமல் இருக்கிறதே என்ற பெருங்கவலை அவன் உள்ளத்தில் உதயமாகத் துவங்கியது. உடனே சிறைச்சாலையை நோக்கி நடந்தான்.

தீயைமிதித்தான்! திகைத்துப் போனான்!

தளபதியைக் கண்ட சிறைக் காவலாளி மிகவும் சுறுசுறுப்பாக இருப்பவன் போல் பாவனை காட்டிக் கொண்டு கதவைத் திறந்து விட்டான். தளபதி உள்ளே சென்று கதவைத் திறந்து விட்டான். தளபதி உள்ளே செல்ல பார்த்தபோது தீயை மிதித்தவன்போல் அப்படியே திகைத்து நின்று விட்டான்! கைது செய்தது ஒரு வயோதிகனைத் தானே; வாலிபன் எப்படி இங்கு வரமுடியும்? என்று தீர்மானித்தவனாய் பைரோஜியைப் பார்த்து,

"யார் நீ? என்று ஆத்திரத்துடன் கேட்டான் தளபதி.

மூன்று கேள்விகள்!

"பார்த்தாலே தெரியுமே; இளமை துடிக்கும் வாலிபனென்று!" அலட்சியத்தோடு பதிலளித்தான் பைரோஜி.

"அதற்குத்தான் கேட்கிறேன், இங்கிருந்த கிழம் எங்கே என்று!"

"அந்தக் கிழவனின் மறு உருவந்தான், இந்தக் குமரன்."

"யாரிடமடா வித்தை காட்டுகிறாய்? மரியாதையாகச் சொல்லிவிடு; யார் நீ...? ஏன் இங்கு வந்தாய்...? எங்கே அந்தக் கிழவன்?"

"இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் சொல்லித்தான் தீரவேண்டுமோ?"

"சொன்னால் பிழைப்பாய்;"

"இல்லையென்றால்!"

"அதற்குப் பதில் இந்த வாள் தான் அளிக்கும்!"

"ஓ... அவ்வளவு பெரியவரா நீங்கள்? வேண்டுமானால் ஒரே ஒரு பதில் அளிக்க முடியும் என்னால்!"

நீ யார்? என்ன பேர்?

"என்ன அது சீக்கிரமாகச் சொல்; ம்...ம்...!"

"எனக்கு எதுவுமே தெரியாது; என்னுடைய ஒரே ஒரு பதில் இதுதான். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!"

"ஆ...! அவ்வளவு திமிரா உனக்கு?"

"திமிரல்ல தளபதியாரே! எங்கள் இரத்தத்திலே ஊறிக் கிடக்கும் நாட்டுப் பற்று!"

"சிந்தித்துப் பதில் சொல்; சிதைத்துவிட முடியும் உன் நாட்டுப் பற்றை என்னால்"

"இதற்கெல்லாம் அஞ்சும் கோழை என்று எண்ணி விட்டீர் மராட்டியனை?"

"வீரனாகவே மதிக்கிறேன்; உனக்குவிருதுகள்பலவழங்குகிறேன்; ஆனால் தப்பியோடிய அந்தக் கிழவன் எங்கே? நீயார்? ஏன் இங்கு வந்தாய்? என்பதை மட்டும் சொல்லிவிடு!"

"ஏன் இன்னும் பழைய பல்லவியிலேயே இருந்து கொண்டிருக்கிறீர்கள்? நான் தான் ஒரேபதிலை எப்போதோ சொல்லிவிட்டேனே!" என்று பைரோஜி அலட்சியமாகக் கூறியஇவ்வார்த்தைகள், தளபதியின் இதயத்தில் கரம்புகளாகத் தைத்தன! வேல் தைத்த வேங்கை போல் சீறிக்கொண்டே, "நாளை ஒருநாள் உன் சிந்தனைக்கு வேலை கொடுத்துப் பார்; மறுநாள் காலை நான் வருகிறேன்; அப்போதும் இதேபதில் தான் என்றால், உன் தலை இம்மண்ணிலே புரளும் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்!" என்று கூறிவிட்டு புயல் வேகத்தில் நடந்து சென்றான் தளபதி!

ஆள் மாறுபட்டதின் காரணமாக சிறைக் காவலாளி தண்டிக்கப்பட்டு, வேறொருவன் நியமிக்கப் பட்டான்;

அன்றுதான் பகைவரைத் தாக்கவேண்டிய தினம்; கண்டோபல்லா வீரர்களுக்கு உற்சாக மூட்டிக்கொண்டு, வெற்றிக்கு வழி வகைகளைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்; மராட்டிய வீரர்களும் அந்தக் குறித்த நேரத்தை எதிர் நோக்கிக் குதூகலத்தில் மூழ்கிக் கிடந்தனர்: மூர்க்கர்களுடன் முட்டி மோதி தம் அரசரைக் காப்பாற்றப் போகிறோம் என்ற பெருமிதத்தால்!

நேரம் நெருங்கியது; படைகளும் திடீர் தாக்குதலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தன.

ஒரே சமயத்தில் முன்னும் பின்னுமாகத் தாக்குதலை ஆரம்பித்தனர், மராட்டிய வீரர்கள்! இருதரப்பாருக்கும் பயங்கரமான கடும் போர் மூண்டன!

பொழுது புலர்ந்தது. சிறையில் உறங்கிக் கிடந்த பைரோஜி கண் விழித்துப் பார்த்தான்; இருளகற்றி ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தான் உதய சூரியன்! உலகத்தின் இருள் அகன்ற அந்த நேரந்தான் பைரோஜியின் வாழ்வில் இருள் சூழும் நேரம்! அதுதான் தளபதி தந்த தவணை கழிந்த மறுதினம்.

தளர்ந்தது குரல்!

"காலையிலேயே வருவதாகச் சொல்லியிருந்தானே கசடன்! கட்டாயம் வந்து விடுவான்! நம் கழுத்திற்கும் கத்தியைக் கொண்டு வந்துவிடுவான்!" என்றெல்லாம் பைரோஜி சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே சிறைக் கதவு திறக்கும் ஓசையை உணர்ந்தான்! இனி எவராலும் நம்மைக் காப்பாற்ற இயலாது என்ற முடிவிற்கு வந்தவனாகி, அன்று தந்தை தந்து சென்ற விஷத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்: அன்னியனால் கொல்லப்படுவதைவிட, நம்மை நாமே மாய்த்துக் கொள்வோம் என்ற எண்ணத்தோடு!

"வெற்றி! வெற்றி!" என்ற முழக்கம் சிறை வாசலில் முழங்கிக் கொண்டேயிருக்க, இராஜாராமும், கண்டோபல்லாவும் வீர நடை போட்டுகொண்டு பூரிப்போடு புகுந்தனர் சிறைச்சாலையினுள்!

அந்தோ! அவர்கள் அங்கு கண்டது பைரோஜியின் பிணந்தான்! "ஐயோ" எனக் கூறி அலறித் துடித்தார் கண்டோபல்லா! "மன்னனைக் காக்க மாய்ந்தாயே மைந்தா!" எனப் பொருமி அழுதான் இராஜாராம்!

வெற்றி வலம் வரவேண்டிய அவர்களால், மரண வலந்தான் வரமுடிந்தது!

வெளிவந்துவிட்டது விற்பனையாகிறது

வாங்கிவிட்டீர்களா!

கண்ணதாசன் கவிதைகள்

இரண்டாம் தொகுப்பு

முதல் தொகுப்பிற்குப்பின் இதுவரை வெளிவந்த எல்லாக் கவிதைகளும் இடம் பெற்றிருக்கிறது.

விலை ரூ. 2-50

காவியக்கழக வெளியீட்டில்

விற்பனைக்குத் தயாரான நூல்கள்

கண்ணதாசன் கட்டுரைகள் ரூ. 1 50

மயிலாடும் பாறை (நாவல்)

தென்னரசு எழுதியது ரூ. 1 50

தேவைக்கு எழுதுங்கள் :

காவியக் கழகம்,

158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காவியமல்ல, முழுநாவல்!

இலக்கிய உலகம் கண்டிராத! மாபெரும்புரட்சி!

வே. கபிலன் எழுதிய

சிலம்புச் செல்வி

டாக்டர் மு. வரதராசனார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, கா. அப்பாத்துரையார், டாக்டர் மா. இராசமாணிக்கம், சி. பி. சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன், முகவை இராசமாணிக்கம் போன்றோரின் முன்னுரைகளுடன் கூடியது.

தனிப்பிரதி ரூ. 2-00

விற்பனையாளர்கட்கு 25 சதவிகிதம் கழிவு உண்டு.

விபரங்கட்கு :

பேரொளி பதிப்பகம்,

41, V. M. தெரு :: சென்னை - 14.

சி. பி. சிற்றரசு

வே. புதியப்பன், கோவை.

கே: பணத்தால் ஒரு நாட்டை அடைய முடியுமா?

ப: ஓட்டு அதிகம் பெறுபவர்கள் நாட்டை ஆள்கிறார்கள்; ஓட்டை அதிகம் பெற பணத்தை அள்ளி வீசுகிறார்கள். எனவே பணம் தான் நாட்டை ஆள்கிறது. இதற்குத் தக்க சான்று, 'ஏக இந்தியா,

கே: நம் கழகக் கொடியை ஏன் திருடுகிறார்கள்?

ப: அடுத்து பறக்கப்போகும் கொடி அதுதானே, அதனால்!

கே: சி. சுப்ரமணியம் அவர்கள், வெளிநாடு சென்று திரும்பும்போது எதைக்கண்டு ரசித்தார்?



ப: ஆங்கிலப் பெண்களின் அடி உயர்ந்த செருப்பைக் கண்டு ரசித்தார்.

கே: முதன் முதலாக இந்திக்கு உயிர் கொடுத்த மந்திரி யார்?

ப: இந்திக்கு 1937-ல் வளர்ச்சிக்கு மருந்து கொடுத்தவரும் ஆச்சாரியார், இன்று அது சாகவிஷம்கொடுப்பவரும் அவர்தான்!

கே: கடவுள் எங்கே? கடவுள் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

ப: உள்ளதைக் கடந்து செல்லல்

கே: தி. மு. க. வில் அதிக நன்கொடை தந்தவர் யார்?

ப: இன்னும் தொகையைக் குறிப்பிடவில்லையே!

கோ. அமிர்தலிங்கம்,
கும்பகோணம்.

கே: மக்கள் திலகம் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு, இயக்கக் கொள்கைகள் நிறைந்த கதையை அனுப்பினால் எடுத்துக் கொள்வார்களா?

ப: கலைக்கு ஒத்துவர வேண்டும்.

கே: மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சோறு போட்டுக் கொண்டிருக்கும் நடிகரைபார்த்து முதலமைச்சர், 'இன்னும் ஒரு நாள் கூடுதலாகச் சோறு போடுங்கள்!' என்று சிபார்சு செய்ததற்குரிய காரணமென்ன?

ப: அவரிடமிருக்கும் கொஞ்ச நஞ்சமிருக்கும் கஞ்சியை மாணவர்க்கு ஊற்றிவிட்டதால் மக்களுக்கு-?

கே: தமிழ்வாணன் எப்படிப் பட்டவர்?

ப: தொழில் நுணுக்கம் அறிந்தவர்; வாழத் தெரிந்தவர்; துணிந்த நெஞ்சினர்.

தில்லைநாயகம், வேலூர்.

கே: அடுத்த பொதுத்தேர்தலில் சிவாஜி கணேசன் அபேட்சகராக நிற்பாரா?

ப: ஆட்டம் சண்டு விட்ட காங்கிரஸ்சுக்கு அடிப்பலம் அவர் போன்றவர்தான் என்று காமாசர் நம்பி இருக்கிறார்!

-மு. தர்கவேலன்,
ஆமதாபாத்

கே: ஆசிரியர் அவர்களே! இராசேந்திரபிரசத், நேரு போன்ற வடநாட்டவரும், இராதாகிருஷ்ணன், சஞ்சீவி (ரெட்டி)யார் போன்ற தென்னாட்டவரும், வட நாட்டில் பேசும் ஒவ்வொரு கூட்டத்திலும் நாட்டின் 'ஒற்றுமை' என்பதாக நினைத்து, நாட்டு விடுதலை (பிரிவினை) கேட்போரை வசைமொழி பொழிகிறார்களோ ஏன்? அதற்குக் காரணம் தி. மு. க. ஒன்று தானா?

ப: ஆம்! நம்முடைய பன்னிரெண்டாண்டு காலவளர்ச்சிதான் அவர்களுக்கு மிரட்சி தருகின்றது. அந்தப் பேச்சு, அரசியல் வாழ்வுக்கு நல் உரம்:

மணிவேந்தன், குன்றத்தூர்:

கே; மழைக்கும்காமராசருக்கும் என்ன சம்மந்தம்?

ப: வறட்டுத் தவளைக்கும் புது நீர்க் குளத்துக்குமுள்ள சம்மந்தமென்னவோ அதே தான்!

இ. சண்முகம், பொதும்பு.

கே: சிந்தனைச்சிற்பி அவர்களே! ஜெர்மனிக்கு ஒரு மார்டின் லூதர், அமெரிக்காவிற்கு ஒரு ஆப்ரகாம்லிங்கன் இதுபோல் திராவிடத்திற்கு ஒரு தலைவரென்றால் தாங்கள் முன்வருவீர்களா?

ப: எனக்கு முன்னால் எவ்வளவோ பெரியவர்கள் இருக்கிறார்கள்.

நாராயணன், கோவை.

கே: ஊமைக்கும் ஊராளும் மந்திரிகளுக்கும் என்ன வேற்றுமை?

ப: ஊமை ஊரை கெடுக்கும்; பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும் என்பார்களே!

ப. இ. இளங்கோ, டம்டாய்-70

கே: உலக சமாதான தூதர் (நேரு) பிலாய் உருக்குத் தொழிற்சாலையில் பேசும்போது சோறு தின்னால் சோம்பேரித்தனமும் மந்தமும் உண்டாகும் என்று பேசி இருக்கிறாரே?

ப: 'எதையும் எளிதில் கற்றுத் தெளிவு பெற்று, பாண்டித்யம் பெறுவதில், தென்னகத்தாரை தவிர வேறு யாருமில்லை!' என்று குடியரசுத் தலைவர் சொல்லி இருக்கிறாரே! ரொட்டித் தின்பவன் மூடன், முரடன், முட்டாள் என்று நாமும் சொல்வோம்.

கே: தென்னக வெள்ள நிவாரண நிதிக்காக வடக்கிலிருந்து ஏதேனும் உதவி வருமா?



ப: தெற்கிலிருந்து அடித்து வருகின்ற வெள்ளத்தில் ஏதேனும் பொருள்கள் வருகின்றனவா, அவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளமாட்டோமா என்றுதான் நினைப்பார்களேயொழிய உதவி வராது...

கே: உலக நாடுகளுக்குச் சமாதானம் செய்யப் போன நேரு, தன் உபகண்டத்திலுள்ள போரட்டங்களை சமாதானம் செய்ய ஏன் மறந்தார்?

ப: நேரு ஒரு விசிறி மடிப்புத் துப்பட்டா. பார்ப்பதற்கு பிரகாசமாகத்தான் இருக்கும். அதைப் பிரித்துப் பார்த்தால்-? அந்தோ பரிதாபம்! உள்ளூரில் விலை போகாத மாடு சந்தையில் விற்பதுதான் வழக்கம்.

சாவோம் வாராய்!

— அர. தமிழன்பன் —

தென்னாட்டார் பொறுமைதன்னை வடக்கு நாட்டார்
தொடைநடுங்கித் தனமென்று நினைத்தார் போலும்!
இந்நாட்டில் இந்திநாயைக் கொலுபீடத்தில்
ஏற்றிவைக்க முடிவெடுத்த திதற்கே போலும்!
தென்னாட்டுச் சிங்கமேநீ தமிழைக் காக்கத்
தோள்தட்டித் தாவியெழு! பொறுமை வேண்டாம்!
பொன்னாட்டைக் கொல்லத்தான் இந்தச் சூழ்ச்சி!
பெற்றதாயின் தளையறுக்கச் **சாவோம் வாராய்!**

காலையிளங் கதிரவனின் கதிர்கள் எல்லாம்
கவின்தமிழைக் கொல்லவந்த இந்திப் பேயின்
தாலியினை அறுத்திடத்தான் எழுந்த தப்பா!
திண்கடலின் இடிமுழக்கம் இந்தி நாய்க்குக்
காலனாக உருவெடுத்த **இனமுழக்கம்**
கேட்டாயா செந்தமிழா! பொறுமை என்று
வேலிபோட்டாய் உணர்ச்சிக்கு 'புறப்படப்பா'
வண்டமிழைக் காப்பதற்குச் **சாவோம் வாராய்!**

"நோய்நொடியால் மாண்டவர்கள் கோடி கோடி!
நொடிப்பொழுதும் அவர்நினைவு நாட்டில் இல்லை!
தாய்நாடு வாழ்கஎன மடிந்த வீரர்
சரித்திரத்தில் சான்றுகளாய் நிலைத்து நிற்பார்!"
தாய்நாட்டின் தனிக்கவிஞர் **கண்ண தாசன்**
தருகின்றார் ஆணையினை கவிதை தன்னில்
ஏய்தமிழா! எழுந்திருடா! தியாகம் செய்வோம்!
இந்திநாயின் இடுப்பொடிக்கச் **சாவோம் வாராய்!**

பச்சைரத்தம் பரிமாறி மொழியைக் காக்கப்
புறப்படுநீ! புலியேறே! பொறுமை வேண்டாம்!
நச்சரவ எதிர்க்கட்சிக் காரர் கூட்டம்
நாடுகாக்கும் போராட்டம் வேண்டாம் என்றும்!
எச்சிலைக்கு நாவைநீட்டும் சொறிநாய்க் கூட்டம்
எத்தனைபேர் வந்தாலும் விரட்டு தோழா!
நிச்சயமாய் வெற்றியுண்டு! நன்மை யுண்டு
நாம்செத்தால் நாட்டிற்கு! **சாவோம் வாராய்**

நாளுக்கு நாளாக இந்தி நாயின்
நச்சுப்பல் நீள்கிறது நம்மை நோக்கி!
வாளுக்கும் வேலுக்கும் அஞ்சி டாத
வண்டமிழர் எழுந்துவிட்டால் எம்ம வர்திண்
தோளுக்குப் பதில்சொல்ல முடியா தென்று
திமிரான ஆட்சிக்குச் சொல்லிப் பார்ப்போம்!
ஆளுகின்றார் கேட்கவில்லை என்றால் ஆவி
அளித்தேனும் தமிழ்காப்போம்! **சாவோம் வாராய்**

இம்மண்ணில் என்னவேலை இந்தி நாய்க்கே?
எல்லோரும் திரண்டுவாரீர் அழிப்போம்!' என்று
நம்மண்ணா அறைகூவல் விடுத்து விட்டார்!
நாவலரும் போர்க்கொடியை உயர்த்தி விட்டார்!
சம்மட்டி தூக்கிவிட்டார் நமது **சம்பத்**
சதிகார இந்தியினை ஒழித்துக் கட்ட!
நம்மையே பலிகொடுத்துந் தமிழைக் காப்போம்!
நீதிக்குப் போராடிச் **சாவோம் வாராய்!**

உங்கள் விருப்பமே எங்கள் விருப்பம்!!

1961-ம் ஆண்டு இனமுழக்கம்

பொங்கல் மலர்

★ எப்படி அமைய வேண்டும்?

★ என்ன விலையில் இருக்கவேண்டும்?

நீங்கள் எழுதுங்கள்
நாங்கள் பூர்த்தி செய்கிறோம்

இனமுழக்கம் படித்து இன்புறும் 30,000 வாசகர்களிடத்திலிருந்தும் எண்ணக் குவியல்களைக் காண ஆவல் கொள்ளுகிறோம். எழுதும் தோழர்கள், '**பொங்கல் மலர்**' என்று மகுடமிட்டு வரையவும்.

இம்மாத முடிவுக்குள் முடிவைச் சொல்லுங்கள்!

திராவிடத் தோழனே, துணிந்து வா!

தாய்நாடு மீட்க தோள் தட்டி நில்!

பொறுத்தது போதும்; புலியெனக் கிளம்பு!

கல்கத்தா காட்டும் கலங்கரை விளக்கம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

லாஞர்கள். அவ்விருவருடைய அலறலைக் கேட்டு பதிஞேரு வயதுடைய குழந்தையும் அழத் தொடங்கியது. குழந்தை அழுவதைக் கண்ட அவ்விருவரும் தம்முடைய குமுறலை அடக்கிக் கொண்டார்கள் 'என் அன்புக் கணவரைக் காணுவதெப்போது?' என்று, தன் மாமனுரைப் பார்த்துக் கேட்டாள்.

'மாதுரி! கவலைப்படாதே! என் மகன் அப்படிப்பட்டவனல்ல! இப்போதே நாம் லண்டனுக்குப் போவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறேன்!' என்று, உறுதி தந்துவிட்டு, கருணையற்ற சர்க்காரின் அலுவலகத்தை நோக்கி வேக வேகமாக நடந்தார். வெளிநாட்டுக்குப் போவதற்குரிய அனுமதி சீட்டுக்களையெல்லாம் முறையாகப் பெற்றுக் கொண்டார். அதோடு விமானத்துக்குரிய சீட்டுக்களையும் பெற்றுக்கொண்டு மாதுரியின் முன்னே வந்து நின்றுர்.

"அம்மா...புறப்படு! நீ படும் துயரத்தை என்னுல் சகித்துக்கொள்ள முடியவில்லை." என்று சொன்னுர். அவர் அப்படிச் சொன்னது தான் தாமதம்! அப்போதே, தான் லண்டனில் இருப்பதாகவே நினைத்தாள்! தன் நெஞ்சை நிமிர்த்திஞள்; கணவனைக் காணப்போகிறேமே—கட்டித்தழுவப் போகிறேமே என்ற ஒரே காரணத்தால் குதூகலத்தோடு பயணத்துக்குத் தயாராஞள்!

நாளும் வந்தது; விமானம், விண்ணை நோக்கிக் கிளம்பும் நேரமும் நெருங்கியது. சீட்டைக் காட்டியபடி லக்ஷ்மண நாராயணன் நின்றுர். அவர் பின்னுல் ஆர்வத்தாலும் ஆனந்தத்தாலும் மூழ்கிப்போயுள்ள மாதுரியும் அவன் குழந்தையும் நின்றனர். ஆனுல்—?

அவர்களுடைய நெஞ்சின் முன்னே நெருப்பள்ளிப் போட்டுவிட்டு வெறிக்கூச்சலோடு விமானம்கிளம்பியது. 'நிறுத்துங்கள்!' என்று தன் நெடுங்கரத்தை மேலே உயர்த்திஞள், மாதுரி! அந்தக் கைகளை நெட்டித் தள்ளிவிட்டு விமானம் மேலே உயர்ந்தது.

'கணவனை நீ காணமுடியாது!'—சொல்லாமல் சொல்லியது, அந்த விமானம்!

கீழே விழுந்தாள்! புரண்டாள்! பொலபொலவெனக் கண்ணீர் வடித்தாள்! துடித்தாள்! தடித்த நெஞ்சங்களின் முன்னே தன் தாள்களைப் பணிய வைத்தாள். அந்தக் கோரத்தைக் காணமுடியாத அவள் மாமனுர் மனம் உருசிற்று! உள்ளம் தடுமாறிற்று! அந்நேரத்தில் அவருடைய நெஞ்சம் அலையாயிற்று! காரணம்-?

விமானம் ஏற்றிக் கொள்ளவில்லை; தடுத்து நிறுத்தப்பட்டார்கள்! ஏன்? அனுமதிச் சீட்டு வாங்கவில்லை என்பதாலா? அல்ல அல்ல! அவ்விருவருக்கும் ஆங்கிலம் தெரியாது என்ற ஒரே காரணத்தால் பழிவாங்கப்பட்டார்கள்! பதைபதைக்கச் செய்தார்கள். அவர்களுடைய உள்ளம் துடி துடிக்கும்படி, 'இலண்டன் மாநகரம் செல்ல ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்!' என்ற ஒரே ஒரு காரணத்தைக் காட்டி அவளுடைய ஒளி பொருந்திய கண்களை பறித்தனர்; அவள் இதயத்திலே அமர்ந்திருந்த அன்பை சொல்லென்னும் வாளாலே வெட்டி தூரே எறிந்தனர்; கணவனைக் கட்டித் தழுவஇருந்த அவள்கரத்தை, கட்டளை என்ற கயிருலே கட்டிப்போட்டனர். அவளுடைய தீராத தாகத்தைத் தூக்கிப் பந்தாடினர். யார் தெரியுமா?

இந்த நாட்டை வேட்டையாடுகிறுர்களே அவர்கள்? குடியரசென்ற பெயராலே முடியாட்சி நடத்துகிறுர்களே, அவர்கள்! 'உங்களுக்காகவே நங்கள்' என்று சொற் ஜாலம் காட்டி, இந்த நாட்டைச் சுரண்டுகின்றுர்களே, அவர்கள்! அவர்களுடைய அதிகார வெறியால் தான், அவள் தன் கணவனைக் காணும் வாய்ப்பை இழந்தாள்; அவர் தன் தனயனைக்காணும் ஆசைநிராசை ஆயிற்று.

இந்தச் சோக நிகழ்ச்சியைத்தான் 'பிளிட்ஸ்' என்னும் ஆங்கிலப் பத்திரிக்கையினுடைய நிருபரிடம் சொல்லாமல் சொல்லி, கண்ணீரைச் சிந்தாமல் சிந்தி உள்ளார், மாதுரியின் மாமனுர்.

"ஒரே மகன்! ஒரே ஒரு மருமகள்! என் மகனுக்குத் திருமணமாகி பன்னிரெண்டு ஆண்டுகள் முடிந்தன. அவனுக்கு ஒரு குழந்தை பிறந்து, வளர்ந்து அதற்கும் வயது பதிஞென்றுகிறது. இங்கிருந்து அவன் லண்டன் சென்று மூன்றுண்டு ஆகிறது. இதுவரையில் அவன் வரவில்லை. போட்ட கடிதங்களுக்கும் பதிலில்லை. அங்குள்ள என் உறவினர்கள் வாயிலாகச் செய்தி அறிந்தேன். அவன் படித்துவிட்டுப் பணிபுரிவதாகவும், ஒரு வெள்ளைக்காரப் பெண்ணேடு குடும்பம் நடத்துவதாகவும் கடிதம் வந்தது. அந்த வரிகளை நான் நம்புவதற்கில்லை. அப்படி இருந்தாலும் நான் ஆச்சரியப்படப்போவதில்லை. தவறுவது மனிதனின் இயற்கை. மூன்றுண்டு காலத்துக்குள் ஏற்பட்ட இடைவெளியால் மாறி இருக்கவும்கூடும். ஆனுலும் என் மருமகளைக் கண்ட மறுகணமே அவன் மனம் மாறிவிடும். அது, எனக்குத் தெரியும். என் மருமகள் பண்பின் பிறப்பிடம்! அறிவாற்றல் நிரம்பியவள்! சமயச் சார்புள்ள நூல்களை நன்குபடித்தவள்; குடும்பத்துக்குரிய கட்டுப்பாட்டிலிருந்து சிறிதும் பிறழாதவள். அப்படிப்பட்டவளைக் கண்டதுடன் அவன் அப்போதே தன் தவறை உணர்ந்து திருந்தி உடன் கிளம்பிவிடுவான். அதற்காகவே நாங்கள் லண்டன் நோக்கிச் செல்ல முனைந்தோம்; அனுமதிச் சீட்டையும் பெற்றேம். ஆனுலும் ஆங்கிலம் தெரியாதவர்க்கு அயல்நாட்டில் வேலை இல்லை என்ற ஒரேஒரு காரணங் காட்டி எங்களை தடுத்து நிறுத்திவிட்டது, இந்த அரசாங்கம். அப்படியும் கேட்டேன்.

'லண்டனுக்குச் சென்று, அங்கு ஆங்கிலம் தேவைப்பட்டால் ஒரு மொழி பெயர்ப்பாளரை வைத்துக் கொள்ளுகிறேம்' என்றேன். அதற்கு அவர்கள்,' நீங்கள்சொல்லும் விளக்கம் சரிதான்! உண்மைதான். ஆனுலும் அரசியல்சட்டம் இடங்கொடுக்கவில்லை." என்று சொன்னுர்கள். நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டேன்.'அயல் நாட்டிலிருந்து எத்தனையோ பேர்கள் வருகிறுர்கள். அவர்களெல்லாம் இந்நாட்டுக்கு வருவதற்கு முன்னதாகவே நம் நாட்டு மொழியைப் பயின்று கொண்டாவருகிறுர்கள்? அல்லது இங்கிருந்து அயல் நாட்டுக்குச் செல்பவர்கள், அந்நாட்டுக்குரிய மொழியைக் கற்றுக்கொண்டா செல்கிறுர்கள்?' என்று, எனக்குள்ள ஆத்திரத்தை அள்ளி கொட்டினேன். அவர்கள் வெறும் மௌனத்தையே காட்டினுர்கள்!' என்று அவர் சொல்லி இருக்கிறுர்.

திராவிடத் தோழனே! இந்தச் சோக நிகழ்ச்சியை உன் கண் முன்னேகொண்டுவந்து நிறுத்திக் கொள்! நாளை உனக்கும் இதே கதிதான்! அவல நிலைதான்!

நீ கேட்கலாம், 'ருஷ்யாவுக்குச் செல்கின்ற நேரு, அந்நாட்டு மொழியைக் கற்றுக்கொண்டா போகிறுர்?' என்று.

அவர் பிரதமர்!

'அமெரிக்காவுக்குச் சென்று வந்த இராசேந்திர பிரசாத் அவர்கள், அங்கு பேசப்படுகின்ற மொழியைக் கற்றுக்கொண்டா இங்கிருந்து சென்றுர்?' என்று கேட்கலாம்.

அவர் குடியரசுத் தலைவர்!

'இங்கே வந்து வாழ்கிறுர்களே, வடவர்கள்! அவர்களெல்லாம் நம் தாய் மொழியான தமிழ் மொழியைப் பயின்று கொண்டா இங்கு குடியேறி உள்ளார்கள்?' என்று கேட்கலாம்.

அவர்கள், ஆளும் கட்சிக்கு உரியவர்கள்! வடக்கிற்குச் சொந்தக்காரர்கள். ஆனுல் நீ—?

தொங்கும் நரம்பின் தூளாக — பொட்டுப் பூச்சியாக—புண்மைத் தேரையாகக் காட்சி அளிக்கிறுய். இன்பத் தமிழனே! திராவிடத் தோழனே! இதையெல்லாம் உனக்குஉணர்த்துவது யார்? திராவிட முன்னேற்றக் கழகம்தான். வடநாட்டு பிடியிலே நம்முடைய தென்னகம்—இன்பத் திராவிடம் சிக்கிச் சீரழிவதை எடுத்தோதுவது நம்முடைய தாய்க் கழகம் தான். அதுதான் இன்றைய தினம் இதையும் உணர்த்துகிறது. நாளை உனக்கும் இதே கதி வரும். இது நிச்சயம். அது வருவதற்குள்ளாக—கல்கத்தாவிலே நடைபெற்ற நிகழ்ச்சியையே நெஞ்சின் முன் கொண்டு வந்து நிறுத்திக்கொள்! நெடுந் தூக்கத்தை விட்டுத்தள்ளு! வடவரின் நெஞ்சை இருதுண்டாக்க கண்களையே வேலாக்கு! திராவிடரின் சங்காரம் ஜெகமெங்கும் எதிரொலிக்கும் வகையிலே போர்ப்பரணிபாட இன்றே கிளம்பு!

தன்மானம் தரைமட்டமாவதற்குள் திற விழியை! திருமாவளவன் புகழ் தேய்வதற்கு முன்னே துணிந்து நட! துந்துபி முழங்கு! இல்லையேல் நமக்கும் நாளைக்கு இதே கதிதான்! இன்று அங்கே; நாளை இங்கே!

விரைவில் வெளிவருகிறது!

பொன்னி

(மாத மிருமுறை)

- ★ ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1, 15 தேதிகளில் வெளிவருகிறது.
- ★ கண்கவரும் மூவண்ண முகப்புடன் புத்தக வடிவில் வெளியிடப்படுகிறது.
- ★ தமிழகத்தின் தலைசிறந்த நாவலாசிரியர்களின் எழுத்தோவியங்கள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுகின்றன.
- ★ உங்களுடைய நீண்ட நாளைய ஆவல் பூர்த்தியாகும் வகையில் பத்திரிகை அமைந்திருக்கும்.
- ★ தமிழகத்தின் இலக்கியச் சோலைக்கு ஒளியூட்டும் பல சிற்பிகள் பொன்னியில் எழுதுகிறுர்கள்.

விலை 25 காசுகள்
எங்கும் ஏஜண்டுகள் தேவை

விவரங்கட்கு:
பொன்னி அலுவலகம்,
158, பெரிய தெரு, சென்னை-5.

குறிப்பு: இனமுழக்கம் பட்டியல் பாக்கி இல்லாமல் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டும் முதற்சலுகை அளிக்கப்படும்.

வெளியாகிவிட்டது! விற்பனையாகிறது

காவியக் கழகத்தாரின்
நான்காம் படைப்பு!

கவிஞர் கண்ணதாசன்

கவிதைகள்

[இரண்டாம் தொகுப்பு] விலை ரூ. 2-50

விவரங்கட்கு: காவியக் கழகம், சென்னை-5.

ஜெர்மன் முன்னாள் ஜனாதிபதி ஹெஸ்!

ஜெர்மனியைச் செல்வம் கொழிக்கச் செய்தவர்!

சிறப்புக்குரியவர் சென்னை வருகை

ஜெர்மனியில்...

பத்தாண்டு காலமாக ஜனாதிபதியாகப் பதவி வகித்து வந்த டாக்டர் தியோடாக் ஹெஸ் இந்தியாவுக்கும் சென்னைக்கும் வருகைதர இசைந்து, இன்று இந்தியாவுக்கு வந்துள்ளார்.

ஏற்கெனவே தாம் இந்தியாவுக்கு வருவதைக் குறித்து பெருமகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இவர், ஜெர்மானியர்களுக்குத் தலைவராக இருக்கும் போதே டாக்டர். இராதா கிருஷ்ணன் அவர்கள், எத்தனையோ அழைப்புக்களை அன்னாருக்கு அனுப்பித்திருந்தார். அந்த அழைப்புக்கேற்ப அவரும் இந்தியாவுக்கு வரவேண்டுமென்றே விரும்பினார். எதிர்பாராத அரசாங்க அலுவலங்களின் காரணமாக அப்போது வரமுடியாமல் இப்போது வந்துள்ளார்.

ஜெர்மன் நாட்டு மக்கள், இவரை, 'எங்கள் தந்தை!' என்றே, இன்றும் சொந்தம் பாராட்டுகின்றனர். அந்த அளவுக்கு ஜெர்மானியரின் அன்பைப் பெற்றுள்ளார். இப்போது அவருக்கு 76-வது வயது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த வயதுக்குள்ளாகவே 40-ககு மேற்பட்ட நூல்களை தம்முடைய நாட்டுக்கென்று நல்கியுள்ளார்.

இன்று, இரண்டு நூல்களை எழுதி வருகிறார். இந்த இரண்டு நூல்களும் அவருடைய வாழ்க்கையில் நடந்த குறிப்புக்களும் சுவையான அனுபவங்களும் ஒட்டியவை.

ஒரு நூலுக்குகள், தம்முடைய வாலிப வயதில் ஏற்பட்ட அனுபவங்களைக் குறிக்கிறார். மற்றொரு நூலில் 19.9-59-வரையில் ஜனாதிபதியாக வீற்றிருந்து பெற்ற அரசியல் அனுபவங்களைப் பற்றியதாகும். இவரொரு சிறந்த ஓவியக் கலைஞர். அத்தகைய ஆற்றல்மிக்க டாக்டர் ஹெஸ் சென்னைக்கு வருவதை நாமும் ஆவலோடுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர், இந்தியாவுக்கு வருவதைக் குறித்து ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார்.

'இந்தியாவுக்கு விஜயம் செய்வதை என் வாழ்க்கையில் முக்கிய சம்பவமாக நான் கருதுகிறேன். என் இந்திய நண்பர்களைக் காணவும், இந்தியாவுடன் கலாச்சாரத் தொடர்பு கொள்ளவும் இவ்விஜயம் அரியதொரு வாய்ப்பை அளிக்கும்!' என்று மகிழ்ச்சியோடு தெரிவித்திருந்தார்.

இவர், இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் முழுநேரமும் எழுத்துத்தொண்டு புரியவே இருக்கிறார். ஜெர்மானியர் இவரை, 'எங்கள் சிந்தைக்குரிய தந்தை' என்று. இன்று வாயார வாழ்த்திக் கொண்டிருக்கின்றனர். அவ்வித அரும் பெருந்தலைவரை யார்தான் வரவேற்கமாட்டார்கள்? அந்த முறையிலே இந்தியாவுக்கு வந்துள்ள டாக்டர் ஹெஸ் அவர்களுக்கு நம்முடைய வாழ்த்தையும்வரவேற்பையும் தெரிவித்துக் கொள்வோமாக,

இன்னும் சில நாட்களுக்குள் இங்கும் வரவிருக்கிறார். ஜெர்மானியர் உள்ளங்களிலெல்லாம் குடிகொண்டிருக்கின்ற முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஹெஸ் அவர்களுக்கு நம்முடைய அன்பை காணிக்கையாக்கிக் கொள்வோம்.

விமர்சனம் :

வாசு பிலிம்ஸ்

கைராசி

'ஒரேவழி' மூலம் திரை உலகிற்கு அறிமுகமான வாசு பிலிம்சார், கைராசி மூலம் திரைப்பட உலகிற்கு ஓர் புதிய வழியைக் காட்டவில்லை. திரையில் பார்த்துப் பார்த்து சலித்துப்போன — மனைவி மேல் சந்தேசம், குடும்பத்தில் குழப்பம், பின்னர் பிரிவு-முடிவில் மங்களம். இந்த ஒரே வழியில்தான் கைராசியின் கதையும் ஓடுகிறது.

குறள் வழியில் வாழ்க்கை நடத்தும் கடமை தவறுத போலீஸ்காரர் சுந்தரத்தின்மீது பழிவாங்கிக் கொள்ள குமார் என்ற கொள்ளைக்காரன் சூழ்ச்சி செய்கிறான். சூழ்ச்சி வெற்றி பெறுகிறது. சுந்தரத்திற்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் படுகிறது. மனைவி லெட்சுமியையும் ஒரே மகன் மோகனையும் அனாதையாக விட்டு சிறை செல்லுகிறான்.

சந்தர்ப்பம் லெட்சுமி மீது நடத்தை கெட்டவள் என்ற பட்டத்தை சுமத்துகிறது. லெட்சுமி ஊரைவிட்டு வெளியேறுகிறாள். தன் செல்வம் மோகனின் எதிர் காலத்தை முன்னிட்டு— ஆசைக்கொரு பிள்ளையில்லாமல் அலைந்து கொண்டிருக்கும் ஓர் நீதிபதியின் வீட்டில் மோகனை ஒப்படைத்துவிட்டுவரும்வழியில் —எந்தக் கொள்ளைக்காரன் குமாரால் தம் குடும்பம் சீரழிந்ததோ அவள் மனைவி ஒரு பெண் குழந்தையும் கையுமாக மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கையில் அவளைச் சந்திக்கிறாள். அவள் லெட்சுமியிடம் இந்தப் பெண் குழந்தையை ஒப்படைத்து விட்டு இறந்து விடுகிறாள்— மோகன் நீதிபதியின் வீட்டில் வளர்ந்து டாக்டராகிறான்.லெட்சுமியிடம் ஒப்படைக்கப்பட்ட குமாரின் குழந்தை சுமதி என்ற பெயரோடு வளர்ந்து நர்சாகிறாள்— பிறகென்ன? கதைப்படி மோகனுக்கும் சுமதிக்கும் [illegible]வளர்கிறது. இடையில் அந்தஸ்து பேதம் காதலை முறிக்கிறது.

தலைமறைவாக சிங்கப்பூரில் வாழ்ந்த கொள்ளைக்காரன் குமார் திருந்தியவனாக தமிழ்நாடு திரும்புகிறான். எதிர்பாராத விதமாக தன் மகள் சுமதியைச் சந்திக்கிறான்—பின் பல சிக்கல்களுக்குப் பிறகு முறிய இருந்த காதல் கைகூடுகிறது. ரசிகர்கள் விடும் பெருமூச்சோடு கதையும் முடிவடைகிறது.

இடைவேளை வரையிலும் நூல் பிடித்தாற்போல் குழப்பமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தகதையை இடைவேளைக்குப்பின் சிக்கல் படுத்தி முடிவில் அவிழ்க்கமுடியாமல் அறுத்தெறிந்திருக்கிறார்கள்.

ஜெமினி கணேசனுக்கு சிரமமில்லாத பாத்திரம் — கொடுத்ததை செம்மையாகச் செய்திருக்கிறார். காதல் கட்டங்களில் அவர் நடிப்பு வெகு சரளம் — அதில் மன்னன்தான்.

சரோஜாதேவிக்கு நர்ஸ்வேடம் பொருத்தமாக இருக்கிறது நடிப்பிலும் சோடையில்லை.

கொள்ளைக்காரராக வரும் எம். ஆர். இராதா ரசிகர்களின் உள்ளங்களை ஒவ்வொரு காட்சிகளிலும் கொள்ளையடித்து விடுகிறார். அவர் பேசும் ஒவ்வொரு தத்துவமும் சிரிக்க—சிந்திக்க — ரசிக்க வைக்கிறது. கைராசிக்கே அவர்தான் இரத்த ஓட்டம். சகஸ்ர நாமம் வழக்கம்போல் சிறப்பாக நடித்துள்ளார்.

தன் கணவனுக்கு முன்னால் தான் களங்கம் இல்லாதவள் என்று நிருபிக்கப்பட்டவுடன் எம். வி. ராஜம்மாவின் நடிப்பு அருமையாக உள்ளது.

தங்கவேலுவின் வெங்காயச் சருகுச்சேலை பிரச்சாரம் தற்போதுள்ள சில நைலான் புடவைகளின் மானங்கெட்ட நாகரிகத்திற்கு அருமருந்து நல்ல டோஸ், சமுதாயத்தில் உள்ள சில ஊழல்களை பொதுப்பணி செய்வதின்மூலம் வெளுத்து வாங்குகிறார் தங்கவேலு.

வசனம்—குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமில்லை. பாடல்கள்—கவிஞர் கண்ணதாசன் புதிய முறையில் எழுதியிருக்கும் 'அன்புள்ள அத்தான் வணக்கம்' என்ற பாடல் இனிமையாக இருக்கிறது.

டைரக்ஷன் — எதிர்பாராமல் நடந்துவிடும் சம்பவத்தை குறிப்பதற்காக காட்டப்படுகின்ற - எரிமலை வெடிப்பதும், சடலங்கள் கொந்தளிப்பதும் — நிலம் பிளப்பதும்-படம் விழுந்து உடைவதும் போன்ற காட்சிகள் மிகப் பழமையானவை. புதிதாக ஒன்றைச் செய்திருந்தால் டைரக்ஷனைப் பாராட்டியிருக்கலாம். விளக்கை அணைத்துவிட்டு தப்புவது போன்ற காட்சி ஜெமினிப் படத்திற்கு வாடிக்கையானது. புதுமையில்லை. காதல் காட்சிகளை நெருக்கமாக்கியிருப்பதின் மூலம், தான் ஓர் இளைஞர் என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறார் டைரக்டர் கே. சங்கர்.

என்னதான் இருந்தாலும் காதல் காட்சிகளை இவ்வளவு பச்சையாக எடுத்து இளம் இதயங்களைகிள்ளிவிட்டிருக்க வேண்டாம்.

மொத்தத்தில் தீபாவளிக்கு வெளியான படங்களில் கைராசி இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்தாலும்,

காகிதப்பூவிற்கு அழகுண்டு— மணமில்லை. கைராசியும் அப்படித்தான்.

— தினகரன்

ஆசிரியர்: சி.பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், இராசகோபாலநாய்க்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

இனமுழக்கம்

மலர் 2 ★ 25-11-60 ★ இதழ் 13

சென்னை,
23—11—60

பேரனுக்கு,

நீ இன்று தொட்டிலிலே இருக்கிறாய், என்றாலும் எழுதுகிறேன். நீ உடனே இதைப் படிக்க முடியாதவன், என்றாலும் எழுதுகிறேன். இதைக் காணும் உன் தாயோ, தந்தையோ, பாட்டியோ, சிற்றன்னைகளோ, தாய்மாமனோ உனக்குப் படித்துக் காட்டினாலும் இன்றுள்ள உன் பிஞ்சு உள்ளத்திற்குப் புரியாது. என்றாலும் எழுதுகிறேன். ஏன் தெரியுமா? நான் தேய்பிறை, நீ வளர் பிறை. இதை நீ உன் வளர்ச்சியில் தெரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்று அதன்படி நடப்பாய் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன். என்றாவது ஒருநாள் நீ இதைப் படிக்கும்போது அன்புள்ள பேரனுக்கு என்றெழுதாமல், மொட்டையாக பேரனுக்கு என்று ஏன் எழுதினார் தாத்தா என்று நீ கேட்கக் கூடும். நீ கேட்கப் போகும் அந்தநாள் அருகிலிருப்போர் விடைகூறாமலும் போகலாம். கூறும் விடையும் உனக்கு ஆறுதல் அளிக்காமல் போகலாம். ஆகவே அதையும் இந்த முதல் மடலிலேயே சொல்லிவைத்து விடுகின்றேன். அன்பை உள்ளத்தில் எழுதிக் கொண்டேனாகையால் தாளில் எழுதத் தேவையில்லை என்று விட்டுவிட்டேன். அன்பின் மிகுதியால் ஒருவரை அழைக்கும் போது, அதுவும் பேரனை அழைக்கும்போது, பேரனே! என்றுதான் வெடுக்கென்று அழைப்பார்களேயன்றி அன்புள்ள பேரனே என்று சொற்பொழிவு நடத்துவது போல் அழைக்கமாட்டார்கள். இதற்கு இவ்வளவு விளக்கமா என்று நீ எண்ணக்கூடும். சிறு பொறி பெரு நெருப்பாவதையும் நீ உலக அரங்கில் காணத்தான் போகிறாய். நீ சிலநேரம் சிரிக்கிறாய். அது எதனால் என்று 27 குழந்தைகளைப் பெற்றெடுத்ததாகச் சொல்லும் குசேலனுக்கே தெரியாதென்கிறபோது நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்த எங்களுக்கோ ஒரே குழந்தை (உன்னை)யைப் பெற்றெடுத்திருக்கும் உன் பெற்றோர்களுக்கோ எப்படி தெரிய முடியும்?

உன்தாய், மருத்துவ மனைக்குப் போகும் போது எல்லார் முகத்திலும் கவலை சூழ்ந்திருந்தது. நான்நம்குடும்பத்தில் நடந்த பலநிகழ்ச்சிகளிலே பங்கு பெற்றதில்லை. ஏன் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா உனக்கு! அதற்கு நான் பதில் சொல்வதற்காக வீட்டில் நிறைய படங்களை மாட்டியிருக்கிறேன் அவைகளைக் கேள் ஒவ்வொன்றும் விளக்கமாகச் சொல்லும்.

உன் தாத்தா,

சி. பி. சிற்றரசு

ஜெயராஜ்.

இடந்தேடி அலைகின்ற இளைய பாரதத்தினர்!

அயல்நாட்டு எண்ணெய்க்கு அழைப்பிதழ்!

(விளக்கு) எண்ணெய் அமைச்சிற்கு திரு. கே. டி. மாலவியா தலைவர்! மண்ணெண்ணெய் வேண்டி 10,500டன்களுக்கு ரஷ்யவிற்கு எழுதப்பட்டது! உடனே ரஷ்யாக்காரன் 'மோலோடெச்னோ'விலே ஏற்றுமதிசெய்தான்! 'தேவை'க்கு அடிமைப்பட்ட 'நவ பாரதம்' தேக்கிவைக்க 'டாங்க்குகள்' இன்றித் திக்கு முக்காடுகின்றது. பம்பாயில் அன்டாப் மலையில் 12,000டன் கொள்ளும் எண்ணெய் டாங்குகள் உள்ளன! அவற்றில் இந்திய எண்ணெய் கம்பெனியின் எண்ணெய் 11 500 டன்கள் ஏற்கனவே உள்ளன!

ஆப்பைப் பிடுங்கியதால் அல்லல்!

எடுத்துவைக்க இடமில்லை என்றால்வரவழைத்ததேன்? மதிமந்திரியின் மூளையில்தான் நிரப்பவேண்டும்! 'வேறெந்த நாட்டிலாவது விற்றுப்பார்' என்றால் கொண்டு வந்திருப்பவன் ரஷ்யாக்காரன்! காந்தியவாதமோ-காங்கிரஸ் வாதமோ அவனுக்குத் தேவைப்படாது. காரியம்தான் முக்கியம் -வேறும் வேதாந்தமல்ல! இதற்கென்று ஒரு 'கமிட்டி' போட்டு ஆராயலாமா? ஏன் செய்யக் கூடாது?-குடிமக்கள் ஏமாளிகளாக இருக்கின்றவரை!

வந்தது ரஷ்ய எண்ணெய் வைத்திட இடந்தானில்லை!

வினை விதைத்தவன்...

டேங்க்குகளில் நிரம்பியுள்ள ரஷ்ய டீசல் எண்ணெயை என்ன செய்வது? அதுவோ விலை அதிகம்! மாகாண, நகராண்மைகளின் போக்குவரத்திற்கு இதையே உபயோகப்படுத்த வற்புறுத்தப்பட்டது. அப்படியும் கடந்த மூன்று மாதத்தில் 3000லிருந்து 4000 டன்கள் வரைதான் செலவாயின! எனவே டாங்க்குகள் காலியாவது முடியாத காரியம்! இருதலைக் கொள்ளி எறும்பு போல் திக்கு முக்காடவேண்டியதாயிற்று.

புதிய பாதை!

இந்திய கடற்படையினர், கொச்சியிலே ஒரு பெரிய டேங்க்கும், ஆறு சிறிய 'டேங்க்' (Tanks) குகளும் - கப்பலுக்கான எரி எண்ணெய் சேமித்து வைக்கக்கட்டியிருந்தனர்!- ஆபத்திற்கு -வேறு வழியின்றி- கடற்படையினர் கட்டிய புதிய டாங்குகளில் கண்ணோட்டம் செலுத்தலாயினர். அவர்கள் தங்களுடைய உபயோகத்திற்குக் கட்டியதை ஆபத்திற்கு உதவிவிட்டுத் தாங்கள் சமயத்திற்கு எங்கு போவார்கள்? பாவம்-மந்திரி! இந்த மண்ணெண்ணெய் வருமுன் ரஷ்யன் 'டீசல் ஆயில்' தீர்ந்துவிடும் என்று மனக்கோட்டை கட்டியதன் விளைவு இந்தப் பொல்லாத பிரச்சனைக்குக் கொண்டுவந்து விட்டு— இப்படியொரு புதிய பாதையைக் காட்டிவிட்டது! நிர்வாக இயக்குநர் அரோரா கண்ட பாதை!!

சட்ட விரோதம்!

திருவாளர் அரோரா - கொச்சி 'டாங்க்கு'களில் மண்ணெண்ணெயை நிரப்புவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். துரிதமாக வேலைகள் நடந்தன! இது இங்ஙனம் விரைவு பெறும் பொழுது— கடற்படையினர் 'இந்திய அரசாங்க ஒழுங்கு முறைகளை மீறும் -சட்ட விரோதம்' 'எனக்குறிப்பிட்டு மறுத்தனர். இதற்கான மேலதிகாரி திரு. லாகிரியை அரசாங்கம்-இடத்தை மேற்பார்வையிட அனுப்பிவைத்தது! தீர்ந்தது பிரச்சினை-வெற்றி! சட்டத்தைப் போட்டவர்களே சட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தனர்!

அரோ(க)ரா தீட்டிய திட்டம்!

'மேற்கிந்திய எண்ணெய் வினியோகக் கம்பெனி' 4000 டன் சேமிக்கும் அளவு இடம் 'வாடாலா'வில் தருகிறேன் வா- என்றது! திரு அரோரா திட்டங்கள் தீட்டினார் (i) பம்பே டாங்குகளிலிருந்து டீசல் கொச்சிக்குப் போகட்டும். (ii) அந்த இடத்தில் இந்தமண்ணெண்ணெய் ஊற்றப்படட்டும் (iii) 'வாடாலா'வுக்குக் கொள்ளும் வரை போகட்டும். (iv) மண்ணெண்ணெய் வினியோகமானவுடன் - கொச்சிக்குக் கொண்டுபோன 'டீசல்' திரும்பக் கொண்டுவரப்படட்டும். போவதும் (நஷ்டம்) வருவதும் (நாமம்) சகஜம்தானே!

பணம் பாழாகும் பரிதாபம்!

இப்படிஎண்ணெய் இங்குமங்குமாக இழுக்க அடிக்கப்படுவதால் ரூ.$3\frac{1}{2}$ லட்சம் (தான்) செலவாகிறது!(அவர்கள்பணமா?- மக்களா கணக்குக் கேட்பார்கள்?) மக்களின் மந்திரிகளும் நிர்வாகிகளும் மனது வைத்து ஏதோ இப்படி (நஷ்டமானாலும்) பல காரியங்களைத் திட்டம் போட்டு செய்தாற் போதும்! நாதியற்ற நடைபிணமென்று குடிமக்களைக் கருதுகின்றனரே ஒழிய-கிளர்ந்து கேட்கும் மானமுடையவர்களாகக் கருதவில்லை! நெருப்பணைக்கும் குழாய்கள் மூலம் டீசல் எண்ணெ'யை கப்பலில் எற்ற மூன்று நாட்களாகும்.

கணக்குப் புலிகள்!

'வாலாடா' டேங்க்கு 4000டன்கள் கொள்ளும் எனக் கணக்குப் போட்டு கப்பலிலிருந்து பம்புகள் மூலம் ஏற்றினர். அந்தோ பரிதாபம்! அது கொண்டது 3000 டன்கள்தாம், இணைப்புக் குழாய்களில் 1000 டன்கள் தங்கிவிட்டன-அவற்றைப் பின்னோக்கி கப்பலுக்குத் திருப்பி அனுப்பினர்! அந்த 'பைப்' வழியில் தங்கிய எண்ணெயின் மதிப்பு சுங்கவரியின்றி ரூ. 1,40,000 ஆகும்.

தொடர்கதை

'பிர்பா'வுக்கும் புட்சர் தீவுக்குமிடையே ரஷ்யக்கப்பல் இடைவிடாது போய்வந்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட போக்கு (நஷ்டம்) வரத்து (நாமம்)களால் ரஷ்ய-இந்திய உறவு பலப்படுகிறது! மந்திரி நிர்வாகக்குறைவு விரிவடைகிறது!! ஏனென்று கேட்காத குடிமக்கள்பணம் வீணாகின்றது!!! இது தொடர்கதைதானா?

Kaygeeyar(M.A.)

திட்டமிடத் தெரியாத திக்குமுக்காடிகள்!

ஆசிரியர்
சி.பி.சிற்றரசு

விலை 6 காசு

இயக்கக் கவிஞரின் இதயப்பூங்காவிலே?

நிர்மலா படுத்துள்ளாள். நல்ல இனிய நினைவுகளால் தனது நெஞ்சை நிரப்பிக்கொண்டு என்பதை ஆரம்பக்காட்சி எவ்வளவு அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறது! அவளது மன நிலையை படப்பிடிப்புக் காட்சிகளும்-கற்பனைப் படைப்புக்களுமே தெளிவாக்கிவிடுகின்றன. முதலில் ஒரு மலர் ...அம்மலர் மற்ற எல்லா மலர்களையும் விடப் பெரியது; அம்மலர் அவள் முகத்தின் அருகில் விழுகிறது; தன் நெஞ்சில் நீங்காது இடம்பெற்று

உணர்ச்சிப்படைப்புக்களை உண்டு பண்ணுகிறது!

தன் நினைவின் ஆக்க சக்தியால், நினைவுக்கற்பனையை ஆக்கக் கற்பனையாக்கித் தானே — 'தனக்குத் தானே'-மகிழ்கிறான். அந்த ஆக்கக் கற்பனையை அழகிய 'கலைக்கற்பனை'யாக ஒளிப்பதிவு இயக்குநர் திரு. வின்ஸெண்ட் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அவள் மனத்தின்—உள் மனத்தின் ஆழ்ந்த உணர்ச்சிக் குவியல்கள் எடுப்பும் - படைப்புக்களின்

மாலைக்கு நோயாகிப் போனேன்-காலை மலருக்குப் பகையாக ஆனேன்

விட்ட தன் நண்பனின் நினைவே அம்மலர் என்பதைக் குறிக்கிறது. அம்மலரைத் தொடர்ந்து சிறு சிறு மலர்கள்......தன் அன்பன் பற்றிய இனிய பல பல நினைவுகளைத் தொடர்ந்து எண்ணி அவள் மகிழ்ச்சி அடைகிறாள் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றன. (சேகர்) அவன் தன்னைக் கண்டது, கண்டு வினவியது தனக்கு நடனம் கற்றுத்தர அழைத்து வந்தது, நடனம் கற்றுத்தர ஏற்பாடு செய்தது, தான் ஒன்றும் சொல்லாமலே தனது தேவைகளை அவனே உணர்ந்து பூர்த்தி செய்து வருவது, பண்பாடு தவறாத அவனது ஆண்மை ஆகிய எல்லாம் அவள் நினைவுக்கு வருகின்றது...இவையே சிறுசிறு பூக்கள்.

பின் பொங்கும் அலை கடல்
முகில் சூழ்ந்த வானத்தின்
காட்சி

(கனவுக் காட்சிகளின்) வெண்மையும்-தத்துவமும் என்ன?

அந்த அவள் மனத்தின் கற்பனை உணர்வை, காணும் நமக்கு எவ்வளவு அழகாக தெளிவாக கவிஞரின் பாடல் எடுத்துக் காட்டுகிறது! கவிஞரின் அகமனம் எந்த அளவுக்கு கற்பனையால் தோய்ந்து மூழ்கியிருக்க வேண்டும்! அவளோடு தானும் ஒன்றியிருக்க வேண்டும்?

நினைவும்- நினைவு ஆக்கமும் - நினைவு ஆக்கமும் கற்பனையும் - அவள் வாழ்க்கையும் பார்த்தால்,

காணுகின்ற கனவு — கனவுக் காட்சி -உண்மையே என்பது தெரியவரும்; கனவு பொய்யல்ல உண்மையே! நினைவுக் கற்பனை

ளுக்கோ ஆச்சரியம், ஆச்சரியப்படுவதுபோலக் காண்பித்துக் கொள்கிறாள். அந்தப் பெண் யார், அந்தப் பெண் எங்கே என்று அவளுக்கே தெரியும். ஆனாலும் அவள், 'அவன் வாயிலிருந்தே வரட்டும்' 'அவனே சுட்டிக் காட்டட்டும்' என்று 'எங்கே' என வினவுகிறாள்.

'இங்கே' தான் என்று சுட்டிக்காட்டி, மேலும் அவள் மனக் குறையைப் பூர்த்தி செய்பவன் போல,

எந்நாளும் துயிலாத பெண்
ஒன்று கண்டேன்

என்று கூறிச் செல்கின்றான். அவளுக்கு வேறு என்ன வேண்டும்? தன் மனத்தில் 'சிறை' இருப்பவன் தன்னை அறிந்து கொண்டு விட்டான். அது மட்டுமல்ல தன் வாய்விட்டும், வாய்மொழியாகவும் வேறு, வெளிப்படையாகவே

"அருள்"

சொல்லியும் விட்டான். இனி மேல் வேறு என்னவேண்டும்?

அழகான பழம் போலும்
கன்னம்—அதில்
தரவேண்டும் அடையாளச்
சின்னம்

என வேண்டுகிறாள். அவனோடு உறவுகொள்ள எண்ணங் கொண்டுள்ள அவள் தன் எண்ணத்தைக் குறிப்பாக உணர்த்து

முறை அவனையே வினவி, அவன் நினைவுக்கு மீண்டும் அவன் சொன்ன துயிலாத அந்தப் பெண்ணையே கொண்டுவந்,. அவள் நிலையை எடுத்துரைக்கிறான்—தன்மை ஒருமையாக!

மாலைக்கு நோயாகிப்
போனேன்—காலை
மலருக்குப் பகையாக
ஆனேன்

நீங்கள் சொல்லும் அந்தத் துயிலாத பெண்ணின் நிலை—காலைப்பொழுதுக்குச் செய்த நன்மையும் மாலைப் பொழுதுக்குச்

கண்களோ காதல் விளையாட்டு (கன்னம் அழகான பழம்போல இருக்கிறது; அதைக் கொய்து தின்னுங்கள் என) விளையாட எண்ணும்; அப்படிப்பட்ட எண்ணங்கொண்ட கண்கள் உறங்காது; உறங்கவே உறங்காது என்று அவளது ஆழ்ந்த மனநிலையை வெளியிடுபவனுக்கு காட்சியளிக்கின்றான்.

துயிலாத பெண் 'யாரோ' என்று வினவுகிறாள். காரணம் இல்லாமல் இல்லை. காரணம்

அழகான பழம் போலும் கன்னம்-அதில் தரவேண்டும் அடையாளச் சின்னம்

செய்த தீமையும் என்ன? எந்த ஒன்றும் நான் செய்யவில்லையே! அப்படியிருக்க என் இன்பம் காலைப்பொழுதில் அரும்பாய்த் தோன்றி பகற் பொழுதெல்லாம் போரும்பாய் வளர்ந்து மாலைப் பொழுதில் மலராய் முதிர்ந்து எனக்குத் துன்பத்தைக் கொடுக்கிறதே! மாலைப் பொழுதுக்கு நான் நோயாளியாகபபோய் விட்டேன்; காலையில் மலர்ந்து மணம் வீசும் மலர்களுக்கெல்லாம் நான் பகையானவளாகவும் ஆகிவிட்டேனே!

இப்படிப்பட்ட 'பொழுதுகண்டு இரங்கும் நிலை'யில் அல்லவா என் நிலை இருக்கிறது எனக் காப்பியத் தலைவிபோல தனது

அடுத்து வருகிறது... ஆனால் அவன்.

நீதான் (நீயேதான்) எந்நாளும் துயிலாதபெண் நீ...(நீயேதான்)
என்று சொல்லுகிறான்.

எண்ணத்தை—தன் விருப்பத்தைத் தெரிவித்து, பின்பு பொழுது கண்டு இரங்கும் நிலையிலுள்ள தன் மனநிலையைத் தெரிவித்து எல்லாம் முடிந்த பின் இப்போது கடைசியாகத் தன் முடிவையே வெளியிட்டும் — வேண்டியும் கொள்கிறாள்.

மணமேடை தனில் மாலை
சூடும்—உங்கள்
மனமேடை தனிலாட
வேண்டும்.

பலர் காணும்படியாக, பலர் நிறைந்த மணமேடையில் நீங்கள் மாலைசூடி, என்னை உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்: உங்கள் ஒரே ஒருவரின் மனமேடையாகிய நெஞ்சத்தில் மட்டுமே நான் தனியாக ஆடுதலும் வேண்டும்.

அதற்கு அவன் மறுப்புரையாகவே தன் எண்ணத்தைத் தெரிவிப்பதாக அவள் காண்கின்றாள். எப்படி?

நெஞ்சம் பிறர் காணமுடி
யாத மேடை—அதில்
நடமாடிப் பயனேதும்
இல்லை.
துயிலாத பெண் ஒன்று
கண்டேன்.

எந்நாளும் துயிலாத பெண்ணே, நெஞ்சம் என்பது பிறர் எல்லோரும் காண்கின்ற மேடையல்லவே. அதில் நீ நடமாடிப் பயன்

(10-ம் பக்கம் பார்க்க)

துயிலாத பெண் ஒன்று கண்டேன்!

காட்டப்படுகிறது. பொங்கும் அலை கடல்-அவள் மனநிலையைக் காட்டுகிறது, வானத்தின் காட்சியும் அவள் மனநிலையையே தொடர்ந்து காட்டுகிறது. விம்மும் நெஞ்சையும், ஒன்றையடுத்து ஒன்றைத் தாவிச் செல்லும் எண்ணங்களையும் நினைவுக் கோவைகளையும்......

நீலவானம் - அவள் மனம் முகில்-நினைவுக்கோவைகள், நினைவோடு தொடர்ந்து கற்பனையும் பங்கு கொள்கிறது; நினைவின் வேலை முடிந்து கற்பனையின் வேலை தொடங்குகிறது. கனவாகக் காட்சி தருகிறது. அவை வெறும் நினைவுக் கோவைதானே என்று எண்ணி அலட்சியப்படுத்திவிடக் கூடாது. அவள் மனவுணர்வு நினைவோடு பங்குகொள்கிறது; கற்பனை (மனம்) அடுத்து இடம் பெறுகிறது. நினைவும், உணர்வும், கற்பனையும் ... நினைவின் ஆக்க சக்தியே ஆழ்ந்த

பொய்யாகாமல் உண்மையாகவே ஆகிவிடுகிறது!

அவள் அருகே அவன் வருகின்றான்.

துயிலாத பெண் ஒன்று
கண்டேன்

என்று அவன் கூறுகின்றான் அவள் உண்மையில் தூங்குகிறாளா? இல்லை......காணும் நமக்கு உறங்குவதுபோலக்காண்பித்துக் கொள்கிறாளே தவிர உண்மையாக உறங்க வில்லை; விழித்த நிலையிலேயே உறங்குகிறாள். அவள் (பொய்) உறக்கத்தை அவள் இதயத்தில் இடம் பெற்றுவிட்ட அவன் அறியாமல் இருப்பானு? நமக்கு அவள் காட்டும் பொய்க் கோபத்தையே அவனுக்கும் காட்ட முடியுமா? காட்டினுல்தான் அவன் நம்புவானு? நம்பாமல்தானே அவன் 'துயிலாத பெண் ஒன்று கண்டேன்' என்று சொல்லி மெல்ல அவள் அருகே வருகின்றான். அவ

கிறாள். தன் எண்ணத்தை நீங்காத விருப்பத்தை மெல்ல வெளியிடுகிறாள்.

ஆனால் அவன், தான் சொன்னதற்கு இசைந்து உடனே தன் முகத்தில் இதழ் பதித்ததாகவோ, தானே தன் விருப்பத்தை வெளியிட்ட பிறகாவது தனது எண்ணத்தை (அவன்) பூர்த்தி செய்ததாகவும் அவள் கற்பனை (நினைவு மனம் அல்ல) மனங்கூட இடம் தரவில்லை. அதற்கு மாறாக அவன் (எந்நாளும்) தூயிலாத பெண் ஒன்று கண்டேன்; (அந்த) பொன்போன்ற (பெண்ணின்) உடல்மீது மோதும்-இந்தக் கண் தந்த அடையாளம் போதும் என்று அவன் சொல்லுவதாகவே அவளால் எண்ணிக் கற்பனையும் செய்ய முடிகிறது.

அவன் அவ்வாறு சொன்னதும், 'துயிலாத பெண்' என்று குறித்து வருவது தன்னைத்தானே என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறாள். ஐயத்தால் அன்று, வேண்டுமெனறே, குறும்புக்காகவே—நானு? — (அந்தப் பெண்).

ஆமாம் (நீயேதான்) எந்நாளும் துயிலாத பெண் என்கின்றான்.

அவனது மனநிலையுடனே ஒன்றிச் சென்று தன் மனநிலையையும் எடுத்துச் சொல்லி அவன் மனத்தை மாற்ற வேண்டும் என்பதற்காகவே — துயலாத பெண் தான்தான் என்று அவளுக்குத் தெரிந்தும், அதை அவனைக் கொண்டே சொல்லி — அவனுக்கும் நினைவுபடுத்தி. பின் அந்தப் பெண் அவனின் அடையாளச் சின்னம் வேண்டி நிற்கிறாள் என்ற அப்பெண்ணின் விருப்பத்தை வெளியிட்டதற்கு —அப்பெண்ணைக் கண்களால் காணும் அடையாளமே போதும் என்று கூறி அவன் மறுத்துவிடவே, மனம் வருந்தி 'துயிலாத பெண்' தான்தானு என்று மீண்டும் ஒரு

நிலையை வெளிப்படுத்துகின்றாள் அவளது இனிய நெஞ்சில் வாழும் அவனும்அதைஅறியாமலா இருப்பான்? அறிந்தே இருக்கின்றான். 'துயிலாத பெண்' என்று, அடைமொழி தந்து அவளை அழைத்தவனுக்கு அவள் மனநிலையைத் தெரிந்தும், அவன், இப்படி மறுமொழியாக விடை சொல்வது போலவே அவள் உள்ளம் எண்ணுகிறது.

உறவோடு விளையாட எண்
ணும்—கண்கள்
உறங்காது உறங்காது
கண்ணே
துயிலாத பெண் ஒன்று
கண்டேன்.

துயிலாத பெண் ஒன்று கண்டேன் நான். அந்தப்பெண்ணின்

வெளியாகிவிட்டது! விற்பனையாகிறது

காவியக் கழகத்தாரின்

நான்காம் படைப்பு!

கவிஞர் கண்ணதாசன்

கவிதைகள்

[இரண்டாம் தொகுப்பு] விலை ரூ. 2-50

விவரங்கட்கு: காவியக் கழகம், சென்னை-5.

பெருமுயற்சிக்குப்பின்
பெருமிதத்தோடு 1961 ஜனவரி முதல் வெளியிடுகிறோம்

பொன்னி

(மாத மிருமுறை)

ஆசிரியர்: கண்ணப்பாவள்ளியப்பன்

டாக்டர் மு. வ. வின் தொடரோவியமும்
கவிஞர் கண்ணதாசன் அவர்களின் தொடர்காவியமும்
இடம் பெறுகிறது,

விலை 25 காசுகள்

பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

எழுதுக:

பொன்னி அலுவலகம்,
158, பெரிய தெரு, சென்னை-5.

குறிப்பு: இனமுழக்கம் பட்டியல் பாக்கி இல்லாமல் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டும் முதற்சலுகை அளிக்கப்படும்.

கற்பனைக் கவிஞரின் கருத்துக் கருவூலம்!

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2] ★ 25—11—60 ★ [இதழ் 13

ஆற்றோரம்

இந்தச் சொல், எழுச்சியும் மகிழ்ச்சியும் தரக்கூடியது. பல சிற்றாறுகள், அருவிகள் ஒன்றாகச் சேர்ந்து பெரிய ஆறாய் உருக்கு அணித்தே சலசல வென்று ஓடிவரும்போது பெரியவர்கள் நீராடுவதும், சிறுவர்கள் நீந்தி விளையாடுவதும், மங்கை நல்லாள் குடத்தில் தண்ணீர் கொண்டு அன்ன நடை போடுவதும், மீனவர்கள் பாலத்துப் பக்கத்தில் வலை போட்டு காத்திருப்பதும், சிறிய சிறிய வாய்க்கால்களாகப் பிரிந்து நிலங்களுக்குப் பாய்வதும், சில மணற் திட்டுகளில் மாலை நேரத்தில் நண்பர்கள், மாணவர்கள் உட்கார்ந்து உரையாடுவதும் பார்க்க அழகாயிருக்கும். நாகரீகங்களின் பிறப்பிடமே அவைதான் என்று பெருமைபட பேசுகிறோம்.

நைல் நதிக்கரையில் எகிப்திய நாகரீகமும், மஞ்சள் நதிக்கரையில் ஜப்பான் நாகரீகமும், யாங்க்ஷி நதிக்கரையில் சீனர் நாகரீகமும், தேம்ஸ் நதிக்கரையில் வெள்ளையர் நாகரீகமும், மிசௌரி மிசிசிபி ஆற்றோரம் அமெரிக்க நாகரீகமும், வால்கா நதிக்கரையில் ருஷ்யா நாகரீகமும், கங்கைக்கரையில் ஆரிய நாகரீகமும், காவேரி ஆற்றங்கரையில் தமிழர் நாகரீகமும் தோன்றின என்று பெருமைப்பட பேசுகிறோம், வற்றாத ஆறுகள் வற்றும் காலமும், வற்றியே இருக்கும் 'சில ஆறுகள்' பெரு வெள்ளத்தால் மூழ்கி இருப்பதையும் சில நேரங்களிலே நாம் காண்பதுண்டு.

ஆனால் இன்று ஆற்றோரங்களை; அதுவும் சென்னைக் கணித்தே இருக்கும் ஆற்றோரங்களிலும், சென்னையிலேயே இருக்கும் வாய்க்கால் ஓரங்களிலும் அதன்மேல் கட்டப்பட்டிருந்த குடிசைகளைத் தின்றுவிட்டு ஓலைகளை மென்றுக் கொண்டிருக்கின்றன. அதில் வாழ்ந்தோர், பள்ளிகளில் தற்காலிகமாக வாழ்கிறார்கள்.

இரண்டு இடங்கள்

குடிசைகளைக் கட்டிக்கொள்ள இரண்டு இடங்கள் உண்டு. ஒன்று — அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட இடம், மற்றொன்று அனுமதிக்கப்படாத இடம். இந்த இரண்டிலுமாகக் கட்டப்பட்டு அவற்றில் நாசமான குடிசைகள் பத்தாயிரம் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாசமான குடிசைகள் சர்க்கார் அனுமதித்த இடங்களில் எவ்வளவு, அனுமதிக்காத இடங்களில் எவ்வளவு என்பது இன்னும் தெரியவில்லை. எப்படியிருந்தாலும் சட்டத்திற்கு உட்பட்டோ, உட்படாமலோ பாதிக்கப்பட்டோர் அந்தப் பத்தாயிரம் குடிசைகளிலிருந்தோர்.

எதிர்பாராதவர்களெல்லாம், அவர்களாகவே முன்வந்து வேண்டிய உதவிகளைச் செய்தனர். தமிழர் பண்பாடு சாதாரண நேரங்களில் தெரியாவிட்டாலும், இதைப் போன்ற நெருக்கடியான நேரங்களில் தெள்ளத் தெளிய தெரிகின்றது.

பாரியும், காரியும், ஓரியும்

தலை ஏழு வள்ளல்கள் இடை ஏழு வள்ளல்கள், கடை ஏழு வள்ளல்கள் ஆக இருபத்திவொரு வள்ளல்களைப் பெற்றெடுத்த நாடு இந்த நாடு என்பதை ஏட்டிலே படித்துக் கொண்டிருந்தவர்கள், இன்று நாட்டிலே அந்த நல்லவர்களின் வழித் தோன்றல்கள் இருக்கிறார்கள் என்பதை இதைப்போன்ற சந்தர்ப்பங்களில் நன்றாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. செத்தும் கொடை கொடுத்த சீதக்காதியைப் பற்றியும் படித்திருக்கிறோம்,

இல்லை என்பார்க்கு இல்லை என்ற சொல்லையே இல்லாமலாக்கிய திருவிடந்தான் இன்று பல ஆயிரம்வரை இல்லாதவர்களாக்கி இருக்கிறது. அவர்கள் உதட்டின் ஓரத்திலே புன்சிரிப்பு கொள்ளும் அளவுக்கு கண்களிலே ஒரு நம்பிக்கை ஒளி தோன்றுமளவுக்கு வெளிச்சமான எதிர்காலம் தோன்றும் அளவுக்கு நிலைமை விரிவடைந்திருக்கிறது.

சென்னைப் பெருநகராட்சி மன்றம்

சென்னைப் பெருநகராட்சி மன்றம் நம்முடைய கையிலிருப்பதால் காமராசர் உதவியோ, நேருவின் உதவியோ கிடைக்கும் என்று நாம் எதிர்ப்பார்ப்பதற்கில்லை. எதையும் சர்க்கார் செய்யும் என்று நாம் எதிர்ப்பார்க்கவும் இல்லை. ஏனெனில் நமக்குக் கிடைத்திருக்கிற சர்க்கார், பள்ளிக்கூடம் கட்டவேண்டுமானாலும் பாதிப்பணம் கேட்கிற சர்க்காராக இருக்கிறது. அதற்கு மனவறட்சி மாத்திரமல்ல, பண வறட்சியுமுண்டு. ஆகவேதான் பொருள் படைத்த பொதுமக்கள் தங்கள் ஈகையின் கைகளைநீட்டவேண்டும் உதவி யார் செய்வது என்பதில்லாமல், யாருக்குச் செய்வது, எந்த நேரத்தில் செய்வது என்பதுதான் முக்கியமானது.

அந்த வகையில் பார்க்கும்போது சென்னைப் பெரு நகராட்சித் தலைவர் மேயர் அவர்கள் பத்து லட்ச ரூபாய்களைத் திரட்ட திட்டமிட்டிருக்கிறார். அவர்களை அணுகிக் கேட்டபோது, ஒரு குடிசைக்குக் குறைந்தது ஐம்பது ரூபாய் செலவாகும் என்கின்றனர். கேட்டிருக்கும்பத்து லட்சத்தில் பாதியாவது கிடைத்தாலன்றி இந்தப் பத்தாயிரம் குடிசைகளைக் கட்டிக் கொடுக்க முடியாது என்று கணக்கு சொல்கிறது.

இனியாவது

அவரவர்களைக் கண்ட கண்ட இடங்களில் குடிசைகளைக் கட்டிக் கொள்ளவிடாமல் மேடான இடங்களில் கட்டித்தர வேண்டுமென்பதே நம் அவா.

அமெரிக்கரின் ஆணித்தரமான கேள்வி

சென்னையிலுள்ள அமெரிக்க நண்பர்களையணுகி இதைப் பற்றிச் சொன்னபோது ஒரு சர்க்கார் மூலந்தான் மற்றொரு சர்க்காரை இதைப்போன்ற காலங்களில் உதவி கேட்கலாமே தவிர, தனிப்பட்டவர்களோ, தனிப்பட்ட நிறுவனங்களோ கேட்க முடியாது என்று சொல்லிவிட்டு, உங்கள் நாட்டில் அநேகமாக ஏழைகளுக்கு வாழ்வதற்காக குடிசைகள்தான் இருக்கின்றன. அடிக்கடி புயல், வெள்ளம், தீ போன்ற அபாயங்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்க ஏதாவது நிரந்தரமான நிதியை ஒதுக்கி வைத்திருக்கின்றீர்களா — அடிக்கடி இப்படி கேட்டுக் கொண்டிருப்பது சிரமமாக இல்லையா — அப்படி ஏதாவது நிரந்தரமான நிதி உங்கள் சர்க்கார் வைத்திருந்தால், அந்தச் சர்க்கார் மூலமே அமெரிக்காவுக்கு தெரிவித்தால் எவ்வளவு உதவி வேண்டுமானாலும் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய இந்த அரிய கருத்து, இந்திய சர்க்காரின் கண்களையும், மாநில சர்க்காரின் கண்களையும் திறந்துவிட்டிருக்கிறது. அவர்கள் சொல்லில் எவ்வளவு கருத்தாழம் பொதிந்திருக்கிறது என்பதை எண்ணும்போது உள்ளபடியே இந்தியசர்க்கார் வெட்கித் தலை குனிய வேண்டும்.

ஆகவே இனியாகிலும் நிரந்தரமான நிதி ஒன்றை ஒதுக்கிவைத்தாலன்றி அடிக்கடி ஏற்படும் தொல்லைகளிலிருந்து மக்கள் தப்புவது கடினமாகும். எந்த நேரத்தில் என்ன ஏற்படும் என்று தெரியாத அளவுக்கு இன்றெல்லாம் திடீர் திடீர் எனறு ஆபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. கடப்பாரையை விழுங்கியவன் சுக்கு கஷாயத்தைக் குடித்ததைப் போல், அந்த நேரத்தில் பாதிக்கப்பட்டோரின் தற்காலிகமான உதவியாக ஏதோ ஒன்றைச் செய்துவிடுவதால் பயன் இல்லை என்பதே அந்த நண்பர்களின் வாதம். அது முற்றிலும் உண்மைதான் என்று நாம் ஒப்புக்கொள்வதானால், ஒன்று குடிசைகளே இல்லாமலாக்க வேண்டும், அல்லது நிரந்தரமான நிவாரண நிதி ஒன்றை சர்க்கார் சேமித்து வைக்கவேண்டும். இல்லையானால், ஒரு காலத்தில் மகிழ்ச்சி தந்த ஆற்றோரங்கள் இன்று மன வேதனையைத் தந்துகொண்டிருக்கின்றன. அந்த வேதனையைப் போக்க எல்லாரும் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அன்புள்ள,

சி. பி. சிற்றரசு.



சி. பி. சிற்றரசு

ஏ. பி. ராமு, கவுந்தப்பாடி.

கே: அண்ணா! தோழியர் அனந்தநாயகி, திராவிடத்தின் சரியான எல்லையை இவர்களால் கூறமுடியுமா என்று சவால் விடுகிறாரே?

ப: 'இந்திய எல்லை எது?' என்று சீனர்கள் கேட்கட்டும். தவடையிலேயே ஓங்கி அறைவார்கள்.

கே: அண்ணா! தாங்கள் தேர்தலில் நிற்பீர்களா?

ப: நிற்கவைக்கப்படலாம்.

சிவராமன், கோவூர்.

கே: மனிதனுக்குத் தேவையானது எது?

ப: மானம்

கே: இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் கதர்க்குல்லாய் போடாமல் இருப்பதற்குக் காரணமென்ன?

ப: ஊரறிய குல்லாய் போடும்போது இந்த ஒன்னே காலணா குல்லா எதற்கு என்று விட்டுவிட்டு இருக்கலாம்.

கே: பெரியார், பொதுக் கூட்டங்களில், அடிக்கடி 6¼ லட்சம் இருக்கிறது. அது மூன்று பேர் மீது உள்ளது.' என்கிறார். அம் மூவர்யார் என்றால் சொல்லமாட்டேன் என்கிறார். அம் மூவர் யார்?

ப: எனக்கும் இரண்டுபேர் தான் தெரிகிறது. ஒருவர், பெரியார்; மற்றொருவர் மனியம்மையார். மூன்றுமவர் எனக்கும் தெரியவில்லை.

மா. பாலன், பருத்தியூர்

கே: அன்புடைய அண்ணா! பார்ப்பன பணக்காரர்கள்வீட்டில் வேலை செய்யும் ஏழை தமிழர்களை, "சோழன் பிரும்மஹத்தி" என, இழித்துரைப்பதின் உள் விளக்கம் என்ன?



ப: தவடையில் அறையாமலிருக்கிறார்களே என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

கே. ஆர். எம். ஜக்கிரியா, தேரழுந்தூர்

கே: சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், 'அரிசி உணவு சாப்பிடுபவர்களுக்குத் தான் அறிவு அதிகம்' என, பல உதாரணங்களோடு எழுதி இருக்கின்றார். ஆனால் தலைமை அமைச்சர் நேரு அவர்கள், 'அரிசி சாப்பிடுவதைக் குறைக்க வேண்டும். அதனால் மந்தம் ஏற்படுகிறது.' என்று பேசி இருக்கின்றாரே! இந்த இருவரின் எடுத்துக் காட்டிலும் மந்தம் எங்கே இருக்கிறது? வடக்கிலா? தெற்கிலா?

ப: அரிசி சாப்பிடுகிற வரதராசனார்தானே அதைப்பற்றிய கருத்தைச் சொல்ல முடியும். கோதுமை உண்கிற நேரு இதைப்பற்றி கருத்து சொன்னதே தவறு

கே: அண்ணா! தங்களின் சொந்த ஊர், பிறந்த இடம், படிப்பு, வயது அறிய ஆவல்! தெரிவிப்பீர்களா?

ப: பிறந்த ஊர் காஞ்சிபுரம்; படித்தது இண்டர்; வயது 52.

அ. பிரகாசம். சென்னை-14

கே: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகமாக உதவி செய்பவர் யார்?

ப: மக்கள் துயர் போக்க பணத்தையும் பொருளையும் கொடுத்தவர் மக்கள் கலைஞர் எம். ஜி. ஆர். மந்திரிகள் பாராட்டைப் பெற வேண்டுமென்பதற்காகவே வாரி இறைத்தவர் சிவாஜி!

சத்தியவாணி

பிரியதரிசினி, குளித்தலை

கே: 'தினத்தந்தி'யில் கருவுற்றிருக்கின்ற தாய்மார்களின் படம் போட்டு, கேலி செய்து சிரிப்புப் படம் போடுகிறார்கள். இது, பெண் குலத்துக்கே அவமானம் இல்லையா?

ப: அதைச் செய்துச்செய்து தானே 'தினத்தந்தி' வளர்கின்றது, வாழ்கின்றது. அதைக்குறைப்பது யார்? படிப்பவர்கள்.

K. S. S. ராஜன், ஈரோடு

கே: ஐயா! 'நான் கல்லுக்கும் மண்ணுக்கும் பிறக்கவில்லை, ஒரு பெண்ணுக்குத் தான் பிறந்தேன்!' என்று சாக்ரடீஸ் சென்னதாகச் சிறப்புற் சொற்பொழிவில் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் இவ்வாய்மொழி, கிரேக்கக் கவிஞர் ஹோமர் கூறியதாக நான் அறிந்தேன், ஒரு புத்தகத்தில்! மேற்கண்ட சொற்கள் ஹோமர் கூறியதா? அல்லது சாக்ரடீஸ் கூறியதா? ஐயம் அகல விளக்கவும்.

ப: பிண்டார் என்பவன் கூறியதை உவமை காட்டினான் சாக்ரடீஸ்.

தி. மா. மணி, வண்ணை

கே: பழக்கத்தில், 'தமிழ்நாடு' என, இருக்கச் சட்டத்தால் ஏற்படவேண்டுமென என்ன தேவை இருக்கிறது?- கேட்கிறார், புத்தியில்லாத 'அறிவாளி' அளகேசன். பதிலென்ன?



ப: அவர் தமிழ்த்தாய்க்குத் தான் பிறந்தாரா என்று கேளும், 'சூடு சொரணையற்ற மாட்டுச்சின்னமே, உன்மந்த புத்தி சாக' என்று சொல்லும்.

வண்ணன், கோவை

கே: இதுவரையில் தாங்கள் எழுதியுள்ள புத்தகங்களின் தலைப்புக்களை அறிய ஆவல். என் ஆவலை விடையின் மூலமாகப் பூர்த்தி செய்வீர்களா?

ப: சிந்தனைச்சுடர், சிந்தனைச் சுழல், மார்ட்டின்லூதர், கொலம்பஸ். விடுதலை வீரன், சுதந்திரத் தந்தை, மதி. போர்வாள்-சாக்கிய சும்மன் கணவனல்ல, சீனத்தின் குரல், சரிந்த சாம்ராஜ்யம், ரோம்நாட்டு வீரன், தங்க விலங்கு, விஷக்கோப்பை, இரத்தத் தடாகம். வெங்கலச் சிலை, சாய்ந்த கோபுரம், எமிலிஜோலா, மந்திர முட்டை.

நாள்தோறும் வாசகர்களின் எண்ணிக்கை வளர்கிறது!

வாரந்தோறும் 30,000

வாசகர்கள் விரும்பி வாங்கிப் படிக்கும்

ஒரே கழக ஏடு!

'இனமுழக்கம்'

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

12 பக்கங்கள் 16 காசுகள்

9-12-60 முதல்

மீண்டும் வண்ண முகப்புடன்

நாவலாசிரியர்

கே. ஜி.

இராதாமணாளன்

எழுதும்

மறவர் குலத்து

மணிப்புறா

வரலாற்றுத் தொடரோவியம்

ஆசிரியரின்

பேரனுக்கு (கடிதம்)

சுவையான பதில்கள்!

(விளக்கப் படங்களுடன்)

வெளிவருகிறது.

சந்தாதாரர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் புதிய தொடர் கதை வண்ணப் படங்கொண்ட காலண்டர் இலவசம்.

விற்பனையில்லாத இடங்களுக்குப் புதிய விற்பனையாளர்கள்

பிரதி 1-க்கு ரூ. 1. வீதம் முன்பணத்துடன் எழுதுக.

இனமுழக்கம்

சென்னை-5.

கொடுத்து வைத்தது, வடக்கு

★ மலடிக்குத் தெரியுமா மக்கட் பெருமை?
★ பொருளாதார முன்னேற்றம் அங்கே?
★ பொருளாதார பின்னேற்றம் இங்கே?
★ இதற்குரிய முடிவு எங்கே?

கிள்ளிப் பிடிக்கச் சதையில்லாத ஏழை எளியவர்கள் — குசேலர் பரம்பரைகள் நமது தாயகத்திலே மிகமிக அதிகமாக மலிந்து கிடக்கின்றார்கள் என்னும்போது, இந்த இந்திய அரசு ஏன் குன்னக்குடிக்குக் காவடி தூக்கிக்கொண்டு போகக்கூடாது? என்று ஒரு கேள்வியும் நம்மிடையே எழத்தான் செய்கிறது. இப்படி நாள்தோறும் எழுகின்ற — காரணத்தோடு பிறக்கின்ற வினாவுக்கு ஏற்றதொரு விடைகாண வடக்கிலுள்ள 'அதிவிவேகி'களுக்கோ, அல்லது இங்குள்ள 'கீழ்ப்பாக்கம் மதியூகசாலி'களுக்கோ, துளியேனும் திறமையில்லை; அப்படி ஒருவேளைத் தப்பித் தவறியிருந்தாலும் அதனைப் பயன்படுத்த போதிய மனப்பான்மை — பரந்த அறிவு இல்லையே!

பூசணிப்பழம் போன்று அசைக்கமுடியாத 'மெலிந்த' உடம்பை வைத்துக்கொண்டு தில்லியிலே பள்ளி கொண்டிருக்கும் வடக்கத்தியானுக்கு —குபேரப் பரம்பரைக்கு வாய் பொத்தி, கைகட்டிச் சேவகம் செய்யும் 'பாக்கியசாலிகள்' இந்தத் திருவிடத்திலே மிகவுண்டு என்னும்போது நெஞ்சம் புண்ணாகிறது; நினைக்கவே வேதனையாக இருக்கிறது'பொருளாதார முன்னேற்றமா?'—வடக்கே அதற்குக் கொடுத்து வைத்திருக்கிறது! 'சமுதாய வளர்ச்சியா?'—சந்தேகமில்லாமல் சொல்லலாம் சாட்சாத் வடக்கு மாடுதான் என்று! 'ஆராய்ச்சிக் கூடங்கள், அதிகமான தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், அது—இது என்றெல்லாம் குவிந்திருக்கும் நாடு எது?'—அடாடா, அதுவும் வட நாடுதானய்யா! 'அப்படியா! அப்பளத்தயாரிப்பு, அகப்பை செய்தல், பாய்கள் பின்னுதல், கூடை முடைதல், சாக்கடைகள் கட்டுதல் போன்ற 'பெரிய பெரிய' தொழில்களெல்லாம் எங்கேயப்பா ஏராளமாக நடைபெறுகின்றன?'—கேள்வி கேட்டவரே கொடிய வேதனையாக இருக்கிறது கன்னித் தமிழ் நாடு என்று கூற! 'ஏனப்பா இருக்காது? சொந்த நாட்டைச் சுடுகாடாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு வாழும் — வடக்குத் திமிங்கலங்களுக்கு வால் பிடிக்கும் 'சூரப்புலிகள்' செறிந்த தாயகமல்லவா இது? இவர்களுக்காக—இந்தத் தேச (நாச) வீரர்களுக்காக வேதனைப்படுங்கள்!' என்று நாட்டின்மீது அக்கறையுள்ளவர்கள்—அறிஞர் பெருமக்கள் நம்மைப் பார்த்துப் பேசுகிறார்கள்! பதர்கள் பெருகிப்போன பாழும் தென்னகத்திலே வாழும் பரிதாபத்துக்குரிய பெருமக்களே வாருங்கள், மீட்போம் நமது திராவிடத்தை!

வேலையற்றவர்கள், வேலை பார்த்தும் குறைவான வருவாயினைப் பெறுகின்றவர்கள் மலிந்த நாடு இது! மானக்கேடு! ஈனபுத்தியுள்ளவர்கள் இங்கே இருக்கும் வரை இன்பத்திற்கு என்றுமே இடமில்லை! ஏட்டிலே பார்க்கிறோம் அந்நிய நாட்டின் அமோகமான முன்னேற்றத்தை! பிறந்த நாட்டிலே மூட்டைகள், சுமந்து முதுகெலும்பொடிய வாழ்வை வலியப் பிடித்துத் தள்ளும் உழைப்பாளிகளின் - நம்மவர்களின் அவல நிலை!

இருந்தும் இல்லாத வாழ்வு நடத்துவதுதான் அறிவுடைமையா? பருந்துகளின் இரைக்குப் பச்சைக்கிளி பலியாகவேண்டுமா? திருந்துவதற்குத் தவறினால் தென்னாடு தேரையாகிப் போகுமே என்ற நாட்டு உணர்ச்சியில்லாத மரக்கட்டைகளை வைத்துக் கொண்டு எத்தனை நாட்களுக்குத்தான் மாரடிப்பது? மான உணர்ச்சியற்றவர்க்கு 'மாதா' இருப்பதும் ஒன்றுதான்! மயானம் போவதும் ஒன்றுதான்!

அமெரிக்காவின் தேசீய வருமானம் ஆளொன்றுக்கு ஐந்தோ, பத்தோ அல்ல! ஆச்சரியப்படாதீர்கள் 9680 ரூபாய்என்றால்! கனடாவிலே 7035 ரூபாய்! சுவீடனிலே 6150 ரூபாய்! சுவிட்சர்லாந்திலே 5796 ரூபாய்! நியூசிலாந்திலே 5570 ரூபாய்! ஆஸ்திரேலியாவிலே 5177 ரூபாய்! பிரிட்டனிலே 4520 ரூபாய்! அது சரி, நமது மேன்மை தங்கிய இந்தியாவின் தேசீய வருமானம் என்ன? அடேயப்பா, அதை எழுதத்தான் என்றால் இயலுமா? ஆள் ஒன்றுக்கு இருநூற்று எழுபத்தாறு ரூபாய்! எண்ணால் எழுதினால் சுருக்கமாகிவிடுமே என்பதற்காக எழுத்தால் எழுதியிருக்கிறேன் மிக மிக நீளமாக! ஒரு முழக் கயிறு தேவை!

(தயவு செய்து யாருக்கு என்று மட்டும் என்னைக் கேட்காதீர்கள்!)

பொருளாதாரத்தில் -புள்ளி விவரத்தில் சிறந்த அறிஞர்களின் கணக்குப்படி வேலையற்றோரின் எண்ணிக்கை இந்நாட்டில் ஏறத்தாழ 70 இலட்சங்கள்! இந்த எண்ணிக்கை இப்படியே இருக்குமா? இருக்கவே இருக்காது! 1965-ல் உயருவது 2 கோடியே 10 இலட்சம்! வறிய வாழ்வு, வேலையில்லாத் தன்மை இவைதனைச் சுட்டிக்காட்டிட நாட்டில் புதுப் புதுக் கட்சிகளும், போராட்டங்களும் ஏற்படுகின்றன! 'எந்தநாட்டில் நாள்தோறும் புதுப் புதுக் கட்சிகளும், வேலை நிறுத்தங்களும் தோன்றுகின்றனவோ,அந்த நாடு புரட்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கிறது என்று பொருள்.' என்றார் வால்டேர். அவர் கூறிச் சென்ற உண்மை இங்கு செயல்முறையில் நடக்க இன்னும் அதிக நாளில்லை.

நாட்டின் நிலைமை இப்படி என்றால், இந்த நாட்டை ஆளும் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள் பேசும் பேச்சைப் பாருங்கள்! "அதிகாரங்களை இந்திய அரசு விரும்பியோ, விரும்பாமலோ ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சாலைபோடும் உருளை இயந்திரத்தைப் போன்று எதிர்க்க முடியாத பெருஞ்சக்தியாக மத்திய அரசு மாறி வருகிறது. ஆனால் மாகாண அரசுகளோ வருந்தத் தக்க நிலைக்குத் தாழ்ந்து வருகின்றன!"— இப்படிச் சொல்லுகிறார் ஓர் அமைச்சர். அதிகாரங்கள் அனைத்தும் நிதி முழுவதும் மத்திய அரசிடம் அகப்பட்டுக் கொண்டதால் தென்னாட்டிற்குவறுமையான நிலை! நெஞ்சிலே கிஞ்சித்தேனும் ஈரப்பசையில்லாமல் சொல்லுகிறார் திருவாளர் படீல் அவர்கள் "தென்னாட்டு மக்களே! அரிசி உணவைக் குறைத்துச் சாப்பிடுங்கள்!" (கோதுமை அல்வாவை விழுங்கிவிட்டு கோவேறுக் கழுதைபோல் இருக்கும் வடநாட்டுப் பிண்டங்களுக்கு வேண்டுமானால் படீல் ஐயாவின் உபதேசம் பகவத் கீதையாக இருக்கலாம்!...இங்கே நடக்காது!!)

தில்லியை ஏனென்று தட்டிக் கேட்கும் தகுதிபடைத்த —தைரியம் கொண்ட சுயபுத்திக்காரர்கள் இந்த ஆட்சியில் இல்லவே இல்லை! அதனால்தான் சொல்லுகிறோம் மீட்போம் திராவிட நாட்டை என்று!

சேலம் நீலகிரி மாவட்டங்களிலுள்ள இரும்புக் கனிப் பொருள், நெய்வேலியிலுள்ள பழுப்பு நிலக்கரி, நெல்லை மாவட்டத்திலும் — சேலம் மாவட்டத்திலும் கிடைக்கும் உயர்ந்தரகச் சுண்ணும்புக் கற்கள் போன்ற இயற்கைச் செல்வங்களைத் தன்னகத்தே பெற்றும், தலைகவிழ்ந்து வாழும் பரிதாப நிலையில்—திராவிடம் உலக முச்சந்தியில் ஒண்டியாய் நிற்கிறது. இந்தப் போக்கு மாறவேண்டாமா? மாருவிட்டால், மாற்றவாவது முன்வரவேண்டாமா தென்னாட்டு மக்கள்? நெல்லை, சேலம் மாவட்டங்களில் கிடைக்கும் சுண்ணும்புக் கற்களைக்கொண்டு நல்ல தரமான கால்சியம் கார்பைடை உற்பத்தி செய்ய முடியும். இது திராவிடத்தின் முக்கியமான இரசாயனப் பொருள்; மேலும் தொழிற்சாலை நிறுவ நல்ல வாய்ப்பு உண்டு! தென்னரசை முன்னுக்குக் கொண்டுவரும் கனிந்தஇதயம் மத்திய அரசுக்குக் கடுகளவேனும் இல்லையே! நம் நாட்டுக்கும் நிதி தருகிறார்கள்! ஒண்ணே முக்காலே, அரைக்கால் கோடி! அரையரைக்கால் கோடி! மாகாணிக் கோடி! வட நாட்டுக்கும் நிதி தருகிறார்கள்! ரூர்கோலாவுக்கு ருபாய் 170 கோடி! பிலாய்க்கு 131 கோடி ரூபாய் துர்க்காபூர் எஃக்குத்தொழிற்சாலைக்கு ரூபாய் 138 கோடி! அட அறிவுச் சூன்யங்களே, இன்னுமா வடநாட்டுப்பக்தி?

தமிழகத்தின்செம்பு, வெள்ளீயம், குளோரைட் போன்ற தாதுப் பொருட்களையும், எண்ணெய் வளத்தையும் முழு அளவில் பயன்படுத்தி இந்நாட்டை பொன்னாடாக மாற்ற முன்வருவது வட நாடு அல்ல! தன்கையே தனக்கு உதவி!...புரிந்ததா?

பத்து மாதங்கள் சுமந்து பெற்றெடுக்கிருளே அன்னை அவளுக்குத்தான்பிள்ளையின் அருமை தெரியும்! மாற்றுந் தாய்க்கு மகப்பேறு இல்லாத மலடிக்குத் தெரியுமா பிள்ளையின் அருமை? அதன் பெருமை?

எனவே, நாடு நம்முடையதாக வேண்டும். அதற்கான வழிவகைகளைக் காணும்வரை கண்ணுறங்கிடாத விழிப்புணர்ச்சித் தேவை! நாட்டின் நலனில் அக்கறைவேண்டும்!

வணக்கம்,

ஆர்விப்பட்டி,

ப. மு. இளங்குமரன்.

கொட்டித் தொலைப்பது தெற்கு

முக்கிய அறிவிப்பு

'இனமுழக்கம்' அலுவலகம் கீழ்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருப்பதால் **'இனமுழக்கம்' 'காவியக் கழகம்' 'பொன்னி'** ஆகிய அலுவலகங்களோடு கீழ்க்கண்ட புதிய முகவரிக்கே தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

—உரிமையாளர், **'இனமுழக்கம**,

முகவரி:—

'இனமுழக்கம்'

158, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

இனமுழக்கத்தின் அரையாண்டுத் திட்டம்

சினிமாவிற்கு பாடல் எழுதுவது எப்படி?

விவரம், விளக்கம் நாங்கள் தருவோம்;

நீங்கள் எழுதுங்கள்!

ஒவ்வொரு வாரத்திலும் இடம்பெறுகின்ற பாடலுக்கு, **கவிஞர் கண்ணதாசன்** கவிதை ஒன்று பரிசாகத் தரப்படும்.

—நிர்வாகி

கல்வி அமைச்சரின் கவனத்துக்கு ?

இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் மொழி, கலாச்சாரம், பண்பாடு, வரலாற்று பெருமை— இன்னபிற அடிப்படைகளில் புதிய தேசிய வித்துக்கள் செழிப்பாக வளர்ந்து வருவதை தெளிவாகக் காணுகின்றோம். திராவிட தேசியம் பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் என்றும் ஒளிர்ந்து வருவதை எவராலும் மறுக்க இயலாது. இன்றைக்கு திராவிட தேசியம் தனக்கான ஒரு அரசை அமைப்பதில் முனைந்து நிற்கின்றது.

★ திராவிட தேசியம் பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் என்றும் மிளிர்ந்துவருவதை எவராலும் மறுக்க இயலாது.

சில தேசிய இனங்கள் தமக்கான தனி அரசுகள் இல்லாமல் வளர்ந்து, பின்னர் அமைத்துக் கொள்ளுவதை சரித்திரம் காட்டுகின்றது. யூத இனம், தனக்கு உரிமை வாய்ந்த இடம் என்று சொல்லிக் காட்ட பூபாகம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த நாடோடி நிலைமை மாறி, இன்றைக்கு இஸ்ரேலைத் தாயகமாகக் கொண்டு திகழ்கின்றது. ஆனால், திராவிட இனமோ இந்திய ஏகாதிபத்தியத்தில் இணைக்கப்பட்டு, தன் ஒருதனி உரிமையை இழந்துத்தவிக்கின்றது. என்றாலும் தாயகம் பெற, திராவிடநாடு திராவிடருக்காக போராடும் தேசிய எழுச்சி இமயம் போல் வளர்ந்தோங்கி வருகின்றது.

இந்தப் புதிய தேசிய எழுச்சியை இந்திய ஏகாதிபத்தியம் உணரத் தலைப்பட்டு விட்டது. அதன் விளைவை, மாநிலக் கல்வி அமைச்சர்களின் மாநாட்டு முடிவுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

மாணவர்களுக்கு இந்திய மனப்பான்மையை ஊட்டி வளர்க்கவேண்டும்; மதப் பண்டிகைகள் இந்தியப் பின்னணியோடு கூடிய விழாக்களாக மாற்றப் படவேண்டும்; பகுதி உணர்வை வளர்க்கக்கூடிய பெயர்கள் ஒழிக்கப்படவேண்டும்; மாணவர்கள் தேசிய கீதத்தை மனப்பாடம் செய்யவேண்டும்; திங்களுக்கொரு முறையாவது தேசியக் கொடியை ஏற்றுவித்து மாணவர்கள் வணக்கம் செலுத்தி உறுதி மொழி எடுத்துக்கொள்ள வேண்டும்;—இவ்வாறு கல்வி அமைச்சர்கள் மாநாடு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட முடிவுகளால் மாணவர்களிடத்தில் இந்திய மனப்பான்மை அறவே இல்லை என்பது தெளிவாகின்றது. எனவே அதை ஊட்டினால் தான் வருங்கால சந்ததிகளாவது இந்தியாவை ஒரு நாடாக நம்பும்என்ற நப்பாசை இந்தியப் பேரரசை அலைக்கழிக்கின்றது. மேலும், முதியவர்களிடத்தில் இந்திய மனப்பான்மையை வளர்க்க முடியாது என்பதையும் இந்திய அரசு உணர்ந்திருக்கின்றது.

இந்தியாவில் உணர்ச்சி பூர்வமான ஒற்றுமை இலங்க வேண்டும், காஷ்மீரிலிருந்து கன்னியா குமரிவரை ஒரேத் தன்மை விளங்க வேண்டும், இந்தி ஆட்சி மொழியானால் தான் ஒற்றுமை வளரும் என்றெல்லாம் இந்திய ஒற்றுமை வாதிகள் முழங்கி வந்தனர். அம் முழக்கம் இன்று வெறும் பறையொலியாய், சாவு ஒலியாய் போய் விட்டது. எனவே, மாணவர்கள் மத்தியிலாவது அரசாங்க உத்திரவுகளை மூலதனமாகக் கொண்டு தங்களது பலிதமாகாத ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகள் முனைந்து நிற்கின்றனர்.

சி. ஜம்பு
பொறையார்

ஒரு உண்மை அவர்களுக்குப் புரியவில்லை-என்று ஒரு தேசிய இனம் தன்னை தெரிந்து கொண்டு செயல்பட துணிந்து விடுகின்றதோ, அந்த தேசிய எழுச்சியை அடக்க எச்சக்தியாலும் முடியாது என்ற உண்மை அவர்களின் எகாதிபத்திய திரை மூடிய கண்களுக்குப் புலனாகவில்லை.

ஆகவேதான் இந்திய தேசிய கீதத்தை மனப்பாடம் செய்யவேண்டும், இந்தியக் கொடியைப் பறக்க விட வேண்டும், தமிழ்நாடு உயர்நிலைப் பள்ளி என்றால் மூட வேண்டும் என்றெல்லாம் காரியங்கள் செய்ய அவர்களைத் தூண்டுகின்றது.

★ இன்றைக்கு திராவிட தேசியம் தனக்கான ஒரு அரசை அமைப்பதில் முனைந்து நிற்கின்றது.

மேலும், 'பகுதி உணர்வை, வளர்க்கின்ற ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும் என்றும் விரும்புகின்றனர். 'பகுதி உணர்வு' என்று அவர்கள் அடைமொழியிட்டு அழைப்பது திராவிட தேசிய எழுச்சியையே என்பது நமக்கு நன்கு விளங்கும்.

ஒருதமிழாசிரியர், சிலப்பதிகாரம் சொல்லிக் கொடுத்தால் அவரது வேலைக்கு ஆபத்து வந்துவிடும். ஏன் எனில், சிலப்பதிகாரம் முழுவதிலுமே தமிழ் சார்ந்த நாட்டுணர்வு பொங்கி வழிகின்றது-பாடம் போதிக்கையில் தமிழ் உணர்வை வளர்க்கக் கூடாது என்பது உத்தரவு - ஆனால், பாடமோ வரிக்கு வரி தமிழ்ப் பற்றை ஊட்டுவது. எனவே, காங்கிரஸ் அரசாங்கம் சிலப்பதிகாரத்துக்கே தடைப் போட்டாலும் போடலாம்!

சான்றாக, கற்புச் செல்வி கண்ணகிக்கும், கலைச்செல்வன் கோவலனுக்கும் திருமணம் இனிது நடந்தேறுகின்றது-மணமக்களை பலரும் வாழ்த்துகின்றனர்.- மணமக்களை வாழ்த்தும் நிகழ்ச்சியில் கூட, அந்நாளில் மன்னனை நினைவுகூர்ந்து பலபட பாராட்டுவதும் அதன் வழி நாட்டை வாழ்த்துவதும் மரபாக கொள்ளப்படுமளவுக்கு நாட்டைபற்று மிளிர்ந்துள்ளது.

மணவாழ்த்தில் கடைசியாக, 'இமயமலைக்கு இப்பால் எம் திருமாவளவன்பொறித்த புலிக்கொடி, அதனையும் கடந்து மேரு மலையை எட்டுமாகுக! எப்பக்கமும் வெற்றியே கண்ட செம்பியன் உலகமனைத்தையும் ஆளுவதாகுக'' என்று கருத்துப்பட தங்கிய

இப்பால் இமயத் திருந்தியவாள் வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே,

என அழகாக வரும் வரிகள் வடவர் ஏகாதிபத்தியத்தையும் கடந்து அழிப்பதாக காங்கிரஸ்கார் கருதக்கூடும்.

இந்திர விழாவானாலும், மாதவி பாடும் டாடல் களானாலும், வேட்டு வரியிலும், ஆய்ச்சியர் வாழ்த்தினாலும், குறவர் கூத்திலும், வஞ்சி மகளிர்வாழ்த்திலும் தமிழ் உணர்ச்சியை, நாட்டுப் பற்றை இளங்கோவடிகள் உள்ளமுருக, வீரம் கொப்பளிக்கப் பாடுகிறார்.

'இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறியத்',
'வடவாரியர் படைகடந்து
தென்றமிழ் நாடொருங்கு காண',
இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய',

'குமரி வேங்கடங் குண குட கடலா
மண்டினி மருங்கிற் றண்டமிழ் வரைப்பில்',

போன்ற இனிய வரிகளை ஆசிரியர் விளக்கி மாணவர்களுக்கு உரைத்தால், அம்மாணவருக்கு தமிழ் உணர்வும், தமிழ்நாட்டுப்பற்றும் முகிழ்க்காமல் இருக்கும்?

சிலப்பதிகாரத்தில் மட்டிலுமல்ல, எந்த நல்லதமிழ்க் காவியங்களிலும் தமிழ் ஒலிக்காமல் இருக்காது—எனவே, தமிழையே அழிக்கவும் வடநாட்டு வன்கணாளர்கள் துணிந்தாலும் ஆச்சரியமில்லை-இவ்வாறு, அறிவைத் தொடைக்கின்றவன் செயலை நிலைநாட்ட காங்கிரஸ்காரர்கள் துடிக்கின்றனர்.

ஆனால், நாட்டுணர்வு இவைகளுக்கெல்லாம் அஞ்சாது-அல்ஜீரியா சின்னஞ்சிறிய நாடு 90 லெட்சம் மக்கள் தான் வாழுகின்றனர். விடுதலைக் குரலெழுப்பி, உரிமை முழக்கம் ஆர்த்து அல்ஜீரிய தேசியவாதிகள் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை முறியடித்து விரட்ட போர் முனையில் நிற்கின்றனர்-அல்ஜீரிய புரட்சி சர்க்கார் தரும் விவரப்படி 15 லெட்சம் அல்ஜீரியாகள் இதுவரை சுதந்திரப் போராட்டத்தில் உயிர்ழந்துள்ளனர்-என்றாலும், அவர்களின் தேசபக்தி மடிந்து விடவில்லை — மாறாக, வளர்ந்து செழித்துப் பரவுகின்றது

போராட்ட முனையிலும் மழுங்காத தேசிய உணர்வைகல்வி முனையில் மழுங்கச்செய்ய இந்திய சர்க்கார் முயல்கின்றது-பொதுவுடமை நாடுகள் 'அறிவை தொடைக்கும் செயலில் (Brain Washing) ஈடுபடுவதாக தனிவுடமை நாடுகள் குற்றஞ் சொல்லுவதை படித்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கு அந்த ஈனச் செயலை இந்திய சர்க்கார் மேற்கொள்ள ஆசைபடுகின்றது.

இந்தக் காரியங்களெல்லாம் நொறுங்கி விழப்போகும் இந்தியாவை தாங்கிப் பிடித்து காப்பாற்றப் போவதில்லை — ஏன் எனில், என்றைக்குமே இந்தியா ஒரே தனி நாடாக வாழ்ந்ததில்லை.

இந்தியாவின் வைஸ்ராயாக 1884 முதல் 1888 வரை இருந்த லார்டு டப்ரீன், இந்தியா பல்வேறுபட்ட தனியான தேசிய இனங்கள் கொண்டதாக விளங்குகின்றது என குறிப்பிட்டுள்ளார்- அவர் மட்டிலும்மல்ல, எவரெவர் இந்தியாவைப் பற்றி எழுதியுள்ளனரோ, அவர்களெல்லாம் இந்தியாவின் இந்தத் தன்மையைப் பற்றி எழுதாமல் இல்லை.

தேசிய பற்றுகளை, குறிப்பாக திராவிட தேசிய எழுச்சியை அடக்கி ஒடுக்கி இந்தியா நாடாக வாழ்ந்துவிடும் என்று கருதுவது வெறுங் கற்பனையாகவே இருக்கும் எனவே, திராவிட எழுச்சியை கல்வி முனையிலாகட்டும், வேறு அடக்கு முறைகளிலாகட்டும் அழித்துவிடுவோம் என்று கருதி காரியங்களில் ஈடுபடுவது அரசியல் மடமையாகும்—திராவிடம் பல்வேறு தடைகளையம் தாண்டி, தனி நாடாக மலரப் போவது உறுதி.

இந்த இடைநேரத்தில், கல்வியில் கைவைத்து குழப்ப வேண்டாம் என்று சம்மந்தப் பட்டவர்களை எச்சரிக்க விரும்புகின்றோம்.

கல்வித் துறையிலே கைவைக்காதீர்!

அயலான் மனைவி

புலவர் பொன்னிவளவன்

பாருங்கள் நான்இதோ பார்க்கும் புகைப்படம் !
கூறுங்கள் இவள்ஒரு கோலப் பூங்கா
இல்லையா ? ஏன்இதில் என்ன யோசனை ?
முல்லைதான் பற்கள் ; மூடும் உதடுகள்
கொல்லை வேலியின் கோவைப் பழங்கள் ;
அல்லி என்றும் சொல்லாம் ; இந்த
மெல்லியின் முகமோ நல்ல தாமரை :
கொல்லும் விழிகள் குளிர்நீ லப்பூ ;
சொல்லோ மலர்கள் சொரிந்திடும் செந்தேன் ;
தூங்கா தென்னைத துவளச் செய்பவள்
பூங்கா இல்லையா ? பூங்கா இல்லையா?
சத்தக் குரலில் சரிதான் என்கிறீர்.
இத்தனை நாழியா ஒத்துக் கொள்ள ?
என்ன அவசரம் ? இருந்துகேளுங்கள்
இன்னும் கொஞ்சம் இவளைப் பற்றி !
சோடையில் வந்த குளிர்ந்த தென்றல் !
கூடையில் வந்த குண்டுமாம் பழம் ! இவள்
வாடையில் எனக்கு வாய்த்த போர்வை !
ஓடையில் மலரா உயர்ந்த தாமரை !
சூடிய பூ! நான் சுவைத்த கவிதை !
வாடா மல்லிகை ! வளரும் காவியம் !
தேடிய செல்வம் ! தித்திப் புக்கனு !
ஆடிடும் மாமயில் ! பாடிடும் பூங்குயில் !
தீட்டா ஓவியம் ! செதுக்காச் சிற்பம் .
வாட்டநோய் தீர்த்திடும் மருத்துவச் சாலை !
கட்டிக் கரும்பு ! கற்கண்டு ! முன்புநான்
தொட்டுத் தூக்கிய தேன்குடம் ஐயா !
யாரெனக் கேட்கிறீர் ஆசைக் குயிலின்
பேர்என் ? ஊர்என் ? பிரியமாய் முன்புநான்
கொஞ்சிய கிளி ! இவள் குளித்த நீரோடை !
நெஞ்சின் அலைகளில் நினைவாய் மிதந்தவள்
பழைய காதலி ! பழைய காதலி !
விழியில்ஏன் வியப்பு ? விரைவாய் இதனைக்
கிழிக்கிறேன் என்றா? கிழிந்தஎன் நெஞ்சில்
வழிகிற குருதியின் வாய்க்கா லாக
இருட்டிலே திறப்பேன் எனது விழிகளை !
வரட்டுமா என்கிறீர் வணக்கம் ! காதலி
அயலான் மனைவியாய் ஆனதால் இரவில்
துயில்வதே இல்லை ! துடித்துத் துவள்கிறேன் !
வந்துபோய் இருங்கள் ! வாழ்வில்
நொந்துபோய் இருக்குமென் நோவினைப் போக்கவே!

சிறுகதை ;

பலவீனம்

இதோ என் புயத்தை அழுத்துகிறது மஞ்சுளாவின் பிணம்! பிணப் பாரத்துடன் நால்வரில் ஒருவனாக நடந்து கொண்டிருக்கிறேன் மயானத்தை நோக்கி! சற்று நேரத்துக்கு முன் சரத்காலத்து பொன்மலர்போன்று ஜொலித்துக் கொண்டிருந்த அவள் வதனம் வெளுத்துப் போய் விட்டதே! சாவின் கரங்களே அப்படித்தானோ? வாடிச் சுருண்டுபோன வெள்ளை ரோஜா மலரைப் போன்று பாடையில் கிடத்தப்பட்ட நிலையிலும் அவள் ஒருவித அழகாகத்தான் காட்சியளிக்கிறாள். இன்னும் சற்று நேரத்தில் அவள் உடல் எரிக்கப்படும் அல்லது புதைக்கப்படும். ஆனால்...? ஆயிரக் கணக்கான நடமாடும் அபலைப் பெண்களின் மனப் போராட்டங்களை எரிக்க முடியுமா? புதைக்க முடியுமா?

மணியம் என் நண்பன் தான், என்னுடன் ஒரே கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்தவன்தான். பொருளாதாரத்தில்மாகாணத்திலேயே முதல் வனாகத் தேறினான், படிப்பில் சூரப்புலி! ஆனால் கலைப் பைத்தியம், கலைத்துறையில் இலக்கிய சேவை செய்து ஒரு புரட்சியை உண்டுபண்ண வேண்டும் என்பது அவன் உயிர்த்துடிப்பு!

கலா மேதையாகவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த அவனுக்கும் வாழ்க்கை என்னும் நாடக மேடையில் சந்தோஷ வேடம்பூண்டு தாண்டவமாடலாம் என்று இளமைக் கனவு காணும் மஞ்சுளாவுக்கும் எப்படியோ-தற்செயலாக—திருமணம் நடந்தது.

கலையை மையமாகவைத்து வாழத்துடித்த மணியத்துக்கு உள்ளூர் ஆசிரியர் வேலையோ, குமாஸ்தா வேலையோ பிடிபடுமா? இளம் மனைவியை அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்து விட்டான். கலையுலகில் ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கப் போவதாக — ஒரு அரிய சாதனையை புரியப் போவதாக — கனவு கண்டு சென்னை வந்த மணியத்துக்கு கலை மாளிகையின் கதவுகள் திறக்கப்படவில்லை. அந்தக் கலைக் கோபுரத்தின் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிய அந்தத் துயர நாட்கள்அவன் கனவுகளையெல்லாம் துகள் துகளாக்கிவிட்டன, தன்னை விட சிறந்த கலைஞர்களும், பிறவி மேதைகளும், மெத்தப் படித்த பட்டதாரிகளும் கேவலம் வயிற்று பிழைப்புக்காக என்ன பாடு படுகிறார்கள் என்ற கலையுலகத்தின் யதார்த்த நிலையைப் பார்த்த பின் கலையிலேயே அவனுக்கு விரக்தி தட்டிவிட்டது.

ஆயிரக் கணக்கான கதாபாத்திரங்களும், திறமை மிகுந்த நடிகர்களும் தெருவீதிகளில் கிடக்கிறார்கள். என்ற தெளிவான உண்மையைப் புரிந்துகொண்டஅவன் கலை இதயம் கண்ணீர் வடித்தது. கலையுலகத்தில் மட்டுமல்ல இந்த சமுதாயத்தில் எங்கு பார்த்தாலும் சல...... துயரத்திலும் வறுமையிலும் வாழ்பவர்களிடத்தில் தான் மகிழ்ச்சியிலும், பணததிலும் கிடப்பவர்களைவிட கவிதையும் கலையும் பரவலாகக் காணக் கிடைக்கிறது என்ற அவன் சொந்த அனுபவம் அவனை ஒரு புது மனிதனாக்கியது.

ஆனால்...இளமையில் வறுமை, தாங்கமுடியாததாயிற்றே! புதுமணப் பெண்ணான மஞ்சுளா எத்தனை நாள்தான் கணவனுக்குப் பாத சேவை செய்யமுடியும், கொலைப்பட்டினி கிடந்து கொண்டு! இந்து தர்மம் போதிக்கும் அந்த நீதியைஇளமையெனும் வசந்தகால ஊஞ்சலில், வறுமையெனும் நெருப்புக் காட்டில் ஆட முடியுமா? வாழத் துடிக்கும் அவள் பெண்மை எவ்வளவு காலம்தான் கணவனின் பைத்திக்காரப் போக்கைக் கண்டு வாய் பேசாமலிருக்க முடியும்?

"ஏதாவது வேறு சர்க்கார் வேலைக்கு போங்கள்...உத்தியோகம் புருஷலட்சணம்!" என்று கணவனுக்கு ஓயாமல் சொல்வதைவிட அவளால் வேறு என்ன செய்யமுடியும்?

கலைவாழ்வின் யதார்த்த உண்மையைப் புரிந்து கொண்ட போதிலும், மணியத்துக்கு கலையார்வம் ஒரு பக்கம் குன்றவில்லை. ஏதோ ஒரு நப்பாசையுடன் அலைந்து கொண்டிருந்தான். அப்போதுதான் அவனை சந்தித்தேன், நான் ஒரு திரைக்கதை ஓவியன் என்பதைத் தெரிந்துகொண்ட அவன் மேலும் கலையில் பூரண நம்பிக்கை வைக்க ஆரம்பித்து விட்டான்.

பாவம், அவனுக்கென்ன தெரியும்? திரையுலகில் கதை வசன கர்த்தாக்கள் படும் பாடு எனக்கல்லவா தெரியும்? தான் பிரசவித்துப் பெற்ற சிசுவை மாற்றானுக்குப் பிறந்ததென்று பொய் கூறிப் பிழைக்கும் அவல நிலை அவனுக்கெங்கே தெரியப்போகிறது? தன் சுய மானத்தையும் விட்டுக் கொடுத்துத் தாசி போல முதலாளிகளுக்கும் பெரும் நடிகர்களுக்கும் தன்னை அடமானம் வைக்கும் அவமானத்தை அவன்எங்கே அறியப் போகிறான்? சினிமாக் கதையாசிரியன் என்றால் ஏதோ சொப்பன வாழ்வில் சஞ்சாரம் செய்யும் கந்தர்வன் என்றல்லவா நினைக்கிறார்கள்!

அன்றொரு நாள் என்னை வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றான், மணியம், காபி கொண்டு வரும் போதுதான் மஞ்சுளாவை முதன் முதலாகப் பார்த்தேன்.

மஞ்சுளாவின் அழகு ஒரு தனிக்கவர்ச்சி பொருந்தியது. இதயத்தைத் துள்ளவைக்கும் ஒரு விசித்திர அழகு! எழுச்சியைக் கிளறக்கூடிய எழில்!

நண்பனின் மனைவியின் முகலாவண்யத்தை அவனுக்கெதிரிலேயே அணு அணுவாக ரசிப்பது அவ்வளவு நாசூக்கான செயலல்லவே! அறிமுகம் செய்து வைக்கும் போது அவளுடைய கண்களைப் பார்த்தேன். தெய்வீகத் தன்மையும், எதற்கோ எதையோ நாடித்துடிக்கும் ஏக்கமும் பிரதிபலிப்பதாக எனக்குத் தெரிந்தது! அவள் முகம் வறுமையிலும் தன் வளத்தை இழந்துவிடவில்லை!

மணியத்தின் வீடு இப்போது எனக்கு சகஜமாகிப் போய்விட்டது, மஞ்சுளா தன் குடும்ப நிலையை என்னிடம் சொல்லும் அளவுக்கு நான் அவ்வளவுஅந்நியோன்யமாகிவிட்டேன்! என்னால் ஓரளவு அவர்கள் வறுமையைத் தீர்க்க முடிந்தது, அவர்கள் குடும்ப அக்கறையில் எனக்கேற்பட்ட இந்தக் கனிவு எதனாலேற்பட்டது என்பது எனக்கே விளங்கவில்லை!

எஸ்.ஆர். கண்ணன்

கலைத் துறையில் ஏற்பட்ட ஏமாற்றம், அதில் சர்வசாதாரணமாக நடக்கும் மனிதத் தன்மையற்ற சுழிப்புகள், நாளடைவில் மணியத்தின் மனத்தை உருக்கி உலுக்க ஆரம்பித்துவிட்டன. அத்துடன் இளம் மனைவியின் "உத்தியோகம் பாருங்கள்" என்ற தொணதொணப்பு கூரிய சொல்லம்புகளாக அவன் இதயத்தைக் தைத்தன.

வறுமையும், வாழ்வில் தட்டிய விரக்தியும், அதனால் உண்டான மன அவலமும், மணியத்தின் இளமையையும் சுவாசப் பையையும் அரித்தன. ஆம்! காச நோய் அவன் சுவாசப்பையில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டது.

இளமையின் இன்ப விளிம்பு இல்லாளுடன் கை கோர்த்து மகிழும் நேரத்தில் அவன் அங்குலம் அங்குலமாக துன்பப்படு குழியில் சரிந்து கொண்டேயிருந்தான்.

மணியத்தின் உயிர் மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. நான் அவனை சாக்காக வைத்துக் கொண்டு அங்கேயே தங்க ஆரம்பித்து விட்டேன். அந்த நிலையில் அவர்களை விட்டு நான் எப்படி இருக்கமுடியும்!

என்னை விட்டால் வேறு உறவினர்களும் அவர்களுக்கு இல்லை. மஞ்சுளாவோ இளம்பெண், பேதை! வாழ்வின் சுழிப்பை அறியாத அபலை! நண்பனுக்கு சிஷ்ருட்சை செய்யும்போது பல முறை எங்கள் இருவருடைய விரல்கள் ஸ்பரிசித்துக் கொண்டதுண்டு. அந்த கணங்களில் என் உடல் சிலிர்த்ததுண்டு; உள்ளம் துடித்ததுண்டு. ஆனால் அவளுக்கோ...? அவளிடமிருந்து எந்தவித உணர்ச்சியின் பிரதிபலிப்பையும் என்னால் அறிய முடியவில்லை.

அன்று ஓரிரவு! மணியத்தின் நிலை மகா மோசமாகி விட்டது, நானும் மஞ்சுளாவும் இருபுறமும் உட்கார்ந்திருந்தோம். மணியத்தின் கண்ணிமைகள் லேசாகப் பிரிந்தன. சவக்களை தட்டிய அவன் முகத்தில் அந்த ஒளியிழந்த கண்கள் மஞ்சுளாவின் முகத்தைப் பார்த்தன. மஞ்சுளாவின் கரத்தைதன் தன் எலும்பு முட்டும் மார்பில் எடுத்துவைத்துக் கொண்டான். அவன் குழிவிழுந்த ஒளியற்ற கண்கள், தன் இளமனைவியின் கபடமற்ற முகப் பிராந்தியத்தில் நிலைகுத்தி நின்றன. அவன் கண்களில் தான் என்ன பரிவு! ஏன் அப்படி அவளை வெறித்துப் பார்க்கிறான்? அவன் கண்களில் காணப்படும் அந்தப் பரிவுக்கு என்ன அர்த்தம்?

மனைவியைத் தன்னந்தனியே விட்டுவிட்டு எங்கோ வெகு தூரத்துக்குப் பிரயாணம் செய்யப்போகும் கணவனின் கண்களில் அலைபாயும் ஏக்கம், பரிவு! இந்த நோயாளி மணியம் இப்போது எங்கே அப்படிப் போகப் போகிறான்? அவனால் அசையக்கூட முடியாதே!

அவன் உதடுகள் பிளந்தன. "மஞ்சு" என்ற தீனக் குரலில் எல்லையில்லாத சோகம் இழையோடியது.

அவ்வளவுதான்! ஏதோஒரு பயங்கர நிழலின் சாயல் அவன் முகத்தில் படர்ந்தது போல் ஒரு கணம் தோன்றியது. மணியம் மறுகணம் எங்கே? அவன் உடல்தான் இருந்தது. ஆம்...மரணத்தின் மடியில் சாய்ந்துவிட்டான். அழுவதற்குக்கூடத் தெம்பில்லாமல் அப்படியே சாய்ந்துவிட்டாள், மஞ்சுளா அழக்கூடத் திராணியில்லை அவளுக்கு!

மணியத்தின் சாவு ஒரு வகையில் எதிர்பார்க்கப்பட்டதுதான். இளமையில் வரும் காசநோய்க்கு இரையாகாமல் தப்புவது மிக துர்லபம், ஆனால் அந்தப் பிவிக்கலை உள்ளத்தின் ஆசைகள், எண்ணங்கள்...!

காலம் ஓடியது. அதன் வேகத்தைத் தடைப்படுத்த எந்தச் சக்தியால் முடியும். அதனுடைய சுழற்சியில் எத்தனை பேதங்கள், மாற்றங்கள்...! ஆனால் இந்த சமுதாயத்தின் பண்டைய நீதிகள் என்ற அர்த்தமற்ற கட்டுப்பாடுகளும், கோட்பாடுகளும் இன்னும் மாறவில்லையே! மனிதர்களுக்குக் கட்டுப்படாத அந்தப் புரியாத தர்மம் இன்னும் எதற்காக இருக்கிறது.

மஞ்சுளாவின் மஞ்சள், குங்குமத்தை அந்தப் பழைய தர்மத்தின் கொடிய விரல்கள் அழித்தன. வாழத் துடித்த அந்த வானம்பாடியின் சிறகுகளை அந்தப் பொல்லாத — மனித குலத்துக்குப் புறம்பான — கோட்பாடு என்னும் மழுங்கிய கத்தி வெட்டி விட்டது.

கணவனை இழந்து கைம்மை விரதம் பூணம் மஞ்சுளா என்ற அந்தத் துர்ப்பாக்கியவதிக்கு ஆறுதல் கூறுவதற்காக அவளிடம் செல்வேன். வெறும் வாய் ஆறுதல் வார்த்தைகள் கூறத்தானா நான் மஞ்சுளாவை நாடிச் செல்கிறேன்? ஏற்கனவே நெருங்கிப் பரிச்சயமான நாங்கள் களங்கமில்லாமல் அடிக்கடி சந்திப்போம். மணிக்கணக்காக நானும் அவளுடன் பேசிக் கொண்டிருப்பேன், அவள் மன அமைதிக்காக.

எத்தனையோ சந்தர்ப்பங்களில் என் இளமை சஞ்சலமடைந்தது. உண்மைதான். வெறும் தசை ஆசைக்கு என் நெஞ்சம் சபலமடைந்த ஒவ்வொரு முறையும் என்னை நானே எச்சரித்துக் கொண்டேன், எத்தனையோ முறை இனி மஞ்சுளாவைப் போய் அடிக்கடி பார்க்கக்கூடாது

(8-ம் பக்கம் பார்க்க)

காவியமல்ல, முழுநாவல்!
இலக்கிய உலகம் கண்டிராத மாபெரும் புரட்சி!

வே. கபிலன் எழுதிய

சிலம்புச் செல்வி

டாக்டர் மு. வரதராசனார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, கா. அப்பாத்துரையார், டாக்டர் மா. இராசமாணிக்கம், சி. பி. சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன், முகவை இராசமாணிக்கம் போன்றோரின் முன்னுரைகளுடன் கூடியது.

தனிப்பிரதி ரூ. 2-00

விற்பனையாளர்கட்கு 25 சதவிகிதம் கழிவு உண்டு.

விபரங்கட்கு :
பேரொளி பதிப்பகம்,
41, V. M. தெரு :: சென்னை - 14.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எனக்கு நானே கட்டுப்பாடு போட்டுக் கொண்டேன். மனத்தின் வேகத்தை இழுத்துப் பிடித்தேன். சில சந்தர்ப்பங்களில் அவளுடைய கண்களில் மிதக்கும் மெல்லிய சோகமும் எதையோ நோக்கி ஏங்கும் ஏக்கமும் என் உள்ளத்தை நெகிழ வைத்ததுண்டு. என்றாலும் கட்டுப்படுத்திக் கொண்டு களங்கமின்றி அவளருகே நெருங்கி ஆறுதல் கூறியிருக்கிறேன். என்றாலும் இந்தப் பொல்லாத மனம் கேட்கிறதா?

அன்று ஒருநாள். மாலை நேரம், மஞ்சுளாவைப் பார்க்கச் சென்றேன். மனப்பாரம் நீங்காமல்தான் இன்னும் இருந்தாள், வெறும் என் வார்த்தைகளுக்கு அவள் மனச்சுமையைக் குறைக்கும் சக்தி ஏது? வெகு நேரம் மீண்டும் மீண்டும் ஆறுதல் கூறினேன், கடற்கரைக்கு அழைத்துச் சென்றேன், திரும்பி வீட்டுக்கு வரும்போது வெகுநேரம் ஆயிற்று. மழை பிடித்துக் கொண்டதால் பஸ்ஸும் கிடைக்காது.

அன்றிரவு மஞ்சுளா வீட்டில் தங்கவேண்டியது வரும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவளும் அப்பொழுது மனப்பாரம் குறைந்தவள் போலக் காணப்பட்டாள். சாப்பாடு முடிந்ததும் நான் தனியறையில் படுத்துக் கொண்டேன், கையில் புதுமைப்பித்தன் கதைத்தொகுதி இருந்தது, 'உயிராசை' என்ற அந்தச் சிறுகதை மன்னனின் கதையைப் படிக்கும்போது என் நெஞ்சு 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. 'ஐயோ' எனக்குப் பயமாயிருக்கே!' என்ற அந்த வாசகம் உண்மையிலேயே எனக்காக எழுதப்பட்டதுதானே; மஞ்சுளாவின் வாழ்வு? அவள் கருகிப் போக வேண்டியவள்தானா? நான் ஏன் அவளை...? மறுமணமா? இந்தச் சமுதாயம் அதை ஏற்குமா? மண்ணாங்கட்டிச் சமுதாயம்; மடத்தனமான தர்மங்கள்...! சே, அதை விட்டுத்தள்ளு...

கண் விழித்துப் பார்க்கும்போது, கடையாமத்தின் மையிருள் லேசாகக் கலைந்து கொண்டிருந்தது. கிழக்கே விடி வெள்ளி என்னைப்பார்த்துச் சிரித்தது. இல்லை, இல்லை! சமூகக் கட்டுப்பாடெனும் மூட நம்பிக்கையைப் பார்த்துச் சிரிப்பதுபோல இருந்தது.

என் கால்கள் மஞ்சுளாவை நோக்கிச் சென்றன. என் நெஞ்சில் பெரும் பாறாங்கல்லை வைத்தது போன்ற உணர்வு.

மஞ்சுளா புரண்டு கொண்டிருந்தாள். கூந்தல் பரவலாக விரிந்து நெளிந்து கிடந்தது, மார்பகத்தை மறைத்துக் கொண்டிருக்க வேண்டிய ஆடைகள் தூக்கக் கலக்கத்தால் பிரிந்து கிடந்தன.

என் விரல்களுக்கு எங்கிருந்தோ அவ்வளவு வேகம் எப்படி வந்தது? "மஞ்சு" என்று அவள் மூங்கில் தோளில் கையை வைத்தேன். என்ன ஆச்சர்யம்! உடனே எழுந்து விட்டாளே! அவள் கண்கள் மருண்டன. கைகள் நிலைகுலைந்த ஆடையை ஒழுங்குபடுத்தின. குனிந்த பார்வையும் குறுகிய உதடுகளும் என் வாயை மூடிவிட்டன, என் நாக்கில் ஏதோ ஒரு கனமான பொருள் வைக்கப்பட்டுவிட்டதா?

விடி வெள்ளியின் மங்கலான ஒளி, அவள் முகத்தில் மட்டுமல்ல அவள் அகத்திலும்பட்டது. நான் அவள் கையைப் பிடித்ததும் அவள் என் வசமானாள்.

உதய வெள்ளி மறைந்து வைகறையின் புத்தொளியால் பூமித்தாயின் மேனி சிலிர்த்தது. மஞ்சுளாவின் மேனியும் மறுவாழ்வு என்னும் புத்தொளியால் சிலிர்த்துக்கிடந்தது. அவளுக்கு வாழ்வளிக்கப் போகும் என் மீதுதான் அவளுக்கு எவ்வளவு நன்றி!

மஞ்சுளாவை மறுமணம் புரிந்து கொள்வதாக வாக்களித்துவிட்டு தைரியம் பல சொல்லிவிட்டு வந்தேன். என் உள்ளத்திலும் ஒருநிறைவுடன் திரும்பினேன். விதவையை வதுவை புரியப் போகும் பூரண திருப்தியுடன் தான் வந்தேன். ஆனால்...!

பெண்மையையே ஒரு பலவீனமாகக் கருதும் இந்தச் சமுதாய அமைப்பில் எனக்கும் அவளுக்கும் ஏற்பட்ட சந்திப்பையே தவருகக்கருதியவர்களும் உண்டு. நான் அவளை மணந்துகொண்டால் ...எல்லாம் சரியாகப் போய் விடும் ... என்றுதான் நினைத்திருந்தேன்.

திரைக்கதை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டி தனி இடத்துக்கு நானும் டைரக்டரும் போக வேண்டியிருந்த காரணத்தால், மஞ்சுளாவிடம் கூட சொல்லிக்கொள்ள முடியாமல் போகவேண்டி நேரிட்டு விட்டது. திரைக்கதையை அமைக்க ஒரு வாரமாகி விட்டது. திரும்பியதும் ஓடிச்சென்றேன் மஞ்சுளாவைப் பார்க்க, நெஞ்சு நிறைய ஆசையைத் தேக்கியவனாக. ஆனால்...?

அங்கு நான் கண்டது மாஜி மஞ்சுளா! கதறினேன்; கண்ணீர் சிந்தினேன்! எவ்வளவு நேரம் புலம்பி என்ன? மஞ்சுளா வரவா போகிறாள்? ஆனால் எப்படி செத்தாள்? ஏன்?

மஞ்சுளாவின் தலையணைக் கடியில் ஒரு கடிதம் என்னைப் பார்த்துச் சிரித்தது! நடுங்கும் கையால் அதை எடுத்துப் பிரித்தேன்.

"...நான் போகிறேன் புரியாத இடத்தை நோக்கிப் போகிறேன், தங்களுக்கு என் நன்றி...தாங்கள் தங்களுடைய வாக்குப் பிரகாரம் என்னை மறுமணம் செய்து கொள்வீர்களென்ற நம்பிக்கைபரிபூரணமாக எனக்கு உண்டு. என்றாலும் தூற்றலுக்கிடையே தங்களுடன் வாழ்வதும், என் பொருட்டு ஏச்சுக்கும் பேச்சுக்கும் தாங்கள் ஆளாவதும்...! அக்கம் பக்கத்தாரின் பேச்சை என்னால் காது கொடுத்துக்கேட்க முடியவில்லை. ஏதோ...சபலம்...எனக்குப் பயமாயிருக்கிறது. என்னதான் நீங்களும் நானும் சமுதாயத்தில் எதிர் நீச்சலடித்து வாழ்ந்தாலும் நமது வாழ்க்கையில் இயற்கையின் தன்மை மறைந்து இயல்பு மாறிவிடும், என் கணவரின் நினைவு அடிக்கடி உண்டாக்கப்படும். அந்தப் பயமே நாளடைவில் என் நெஞ்சில் உறையேறிவிடும். அந்த வாழ்க்கை எதற்கு? க்ஷணநேர சபலத்தில் அந்த உதய கால வேளையில்... அதை யெல்லாம் மறந்து விடுங்கள்...நான் போகிறேன்...போகும் இடத்தில் நிம்மதி...!?"

மஞ்சுளா.

அன்று அகலிகை கல்லானாளாம், சாபத்தின் காரணமாக! மஞ்சுளா பிணமானாள் சமுதாயத்தின் சாபத்தை ஏற்கவேண்டியது நேரிடுமே என்றவெறும் அச்சம் காரணமாக!

மஞ்சுளாவின் பலவீனம் தான் அவள் மரணத்துக்குக் காரணமா? பெண்மையின் அந்தப் பலவீனம் அவர்களுடைய நாணயமான இதயத்தின் ஒரு பக்கம்தான். அதன் மறுபக்கம் புனிதத்தன்மையானது. அந்தப் பக்கம் அன்பு, தியாகம் என்பவைகளால் பொறிக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அந்த பலவீனம்தான் எப்போதும் நம் கண்ணில் படுகிறது.

உங்கள் விருப்பமே எங்கள் விருப்பம்!!

1961-ம் ஆண்டு இனமுழக்கம்

பொங்கல் மலர்

★ எப்படி அமைய வேண்டும்?
★ என்ன விலையில் இருக்கவேண்டும்?

நீங்கள் எழுதுங்கள்
நாங்கள் பூர்த்தி செய்கிறோம்

இனமுழக்கம் படித்து இன்புறும் 30,000 வாசகர்களிடத்திலிருந்தும் எண்ணக் குவியல்களைக் காண ஆவல் கொள்ளுகிறோம். எழுதும் தோழர்கள், 'பொங்கல் மலர்' என்று மகுடமிட்டு வரையவும்.

இம்மாத முடிவுக்குள் முடிவைச் சொல்லுங்கள்!

தீயவர் யார்? தூயவர் யார்?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

'அவ்விதம் படைவீரர்கள் தோற்றதற்குக் காரணம் என்ன? என்று சமாதானம் கூறும்படி சர்க்கார் என்னைக் கண்டிப்பாகக் கேட்கும். அதையும் நான் அறிவேன்.

அந்தச்சர்க்கார் கேள்விக்கு விடை கூறும் வகையில், 'படைகளை நடத்திச் செல்லும் பாதையில் உள்ள நீர்த் தேக்கங்களில் நானே விஷத்தைக் கலக்கிவிட்டு, அதை எதிரிகள் செய்து விட்டார்கள், ஆகையால் போர்வீரர்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல்சோர்ந்துபின்னடைந்து விட்டார்கள், என்று சமாதானமும் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம். வெடி மருந்து கிடங்குக்கு நானே தீ வைத்துவிட்டு எதிரிகள் செய்து விட்டார்கள் என்று சொல்லியிருக்கலாம். இவ்வளவு சுலபமான வழிகள் இருக்க, இவைகளை யெல்லாம் செய்ய இடங் கொடுக்காத என் மனம், அந்த அற்ப காரியத்தை செய்ய மனம் இடங்கொடுக்குமா என்பதை யோசித்து நீதிமான்களாகிய நீங்களே முடிவு கட்டுங்கள்.

மேலும் இன்னொன்று கூற விரும்புகிறேன். எதிரிகள் காட்டும் ஆசை வார்த்தைகளுக்கு ஏமாந்து தன் நாட்டு இராணுவ ரகசியத்தை காட்டிக் கொடுத்துவிட்டுதான், தன் படை, தன் நாடு எல்லாம் சரணுகதியடைந்த பிறகு, காட்டிக் கொடுத்தவனை எதிரிகள் கண்ணியமாக நடத்துவார்களா என்பதை அறியாதவனா நான்? எந்தப்பொது மக்கள் உப்பால் உடலை வளர்த்தேனே, அதே பொதுமக்களையும்நாட்டையும் காட்டிக் கொடுத்தேனென்றால், அந்த விதமான துரோகியைத் தூக்கிலேற்றுங்கள் என்று எந்த மானமுள்ள சர்க்காரும் சொல்லும். அதையும் நான் உணராதவனல்ல, என்று சொல்லி முடித்தான்.

பிரெஞ்சு தாயகத்தின் தனிப் பெரும் குடியரசுத் தலைவரே!

யூத எதிர்ப்பு இயக்கம் இது வரை பத்து லட்ச ரூபாயை விழுங்கிவிட்டு வளர்ந்திருக்கிறது. அதன் நோக்கம் யூதர்களை ஒரேயடியாக ஒழிக்க வேண்டுமென்பதுதான் இயேசுவை ஒரு யூதன் கொன்றான் என்று எல்லா யூதர்களையும் நாம் பழிவாங்குவோமானால் நாம் அந்த நல்ல கிருஸ்துவின் விசுவாசமுள்ளவர்களாகவும் அந்த பேராளனுடைய கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களாகவும் இருக்கமுடியாது.

யூதர்கள் மேல், யூத எதிர்ப்பு இயக்கத்தார் சுமத்தும் குற்றம் வெளிப்படையானதா? இல்லை. பனமா கால்வாய் விஷயமாக பணத்தைக் கையாடினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட மூன்று யூதர்களின் பெயர்களை வைத்துக் கொண்டு பிரான்சின் மானங்காக்க ரணகளத்தில் ரத்தத்தை சிந்திக் கொண்டிருக்கும் இராணுவத் தலைவர்கள் 500 பேர்கள் யூதர்கள் மேல் பழி சுமத்துவதும் கோபித்துக் கொள்வதும் எவ்வாறு நியாயமாகும். ஆகவே நம் நாட்டில் ஒரு சமுதாய கொலை நடக்கின்றது.

தனிப்பெருந் தலைவரே! அந்தப் புனித கைங்கரியத்தைச் செய்தவன் சிறிது நாட்களுக்குமுன் விசாரணை நடத்துவதைப்போல் ஒரு நாடகம் நடத்தி புனிதவான், குற்றமற்றவன் என்று முத்திரையிட்டு வெளியே அனுப்பிவிட்டீர்களே கொடியவன் எஸ்டரெஸியை, அந்தக் குறைமதியாளன்தான் இன்று டெவில்ஸ் தீவிலே திக்கற்ற நிலையிலே வாடும் டிரைபஸ் எழுதியதாக போர்டோ என்ற போர்ஜரி கடிதம் எழுதி, அதை ஜெர்மன் இராணுவ முகாமுக்கு அனுப்பி, அதில் ஒரு நகலை எடுத்துக்கொண்டு அசல் பிரதியை தனக்கு அனுப்பி விடும்படிக் கேட்டிருந்தான். அந்த மண்டைக் கனமேறிய ஜெர்மன் இராணுவத்தினர் அதைப்படித்துக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்துவிட்டனர். அந்தப்பொய்க் கடிதத்தின் துண்டுகள் அங்கே வேலை பார்த்து வந்தமேடம் பாஸ்டியன் என்பவனிடம் அகப்பட்டது. அதைஎன்னிடம் சேர்க்கவந்த கர்னல்பிக்கார்ட்டைவழிமறித்துகைப் பற்ற எதிரிகள் என்னென்னவோ செய்துபார்த்தார்கள். அவன் அதிலிருந்து தப்பித்துக் கொண்டு அந்தக் கடிதத் துண்டுகளை என்னிடமும் டிரைபஸ் சகோதரன் மேத்யூ டிரைபசிடமும் சேர்த்து விட்டான். அதுவும் இதோ இருக்கிறது பாருங்கள்.

உண்மைக் குற்றவாளியான எஸ்டரெஸியை விசாரணைக்கு அழைத்து வருவதற்கு முன்னால், அவனை தண்டிக்காமல் விட்டுவிட வேண்டுமென்று முதலாவது இராணுவ நீதிமன்ற ஜூரர்களுக்கு யுத்த மந்திரி மிலான் எழுதியிருக்கும் கடிதத்தைப் பாருங்கள்.

நீதிமான்களே! இவ்வளவு ஆதாரங்களை வைத்துக்கொண்டு தான் சொல்கிறேன். டிரைபஸ் குற்றமற்றவன் என்று. இவ்வளவும் போதவில்லையென்றால் இன்னமும்தக்க ஆதாரங்களையும், அதன் சார்பான சாட்சிகளையும் உங்கள் முன்னால் கொண்டுவர சித்தமாய் இருக்கிறேன்.

யார் யார் விஷயமாகவோ நீதி நெடுநாட்கள் தலைமறைவாய் இருந்திருக்கின்றது. அதைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் அநேகரிடம் நாடு சிக்கிக்கொண்டிருந்ததில், ஆனால் டிரைபஸ் வழக்கு சம்மந்தமான நீதியைத் துண்டுதுண்டாக வெட்டி பூமிக்கடியில் புதைத்து விட்டாலும், அவைகள் பூமிக்கடியிலே ஒன்றுகச் சேர்ந்து கொண்டு பெரிய பூகம்பத்தை யுண்டாக்கி பூமியைப் பிளந்துகொண்டு வெளியே வருவது திண்ணம்" என்று ஜோலா சொன்னான். துரோகிகள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

சி.பி.சிற்றரசு

இரத்தம் சிந்துவோம்; இலட்சியம் பெறுவோம்!

'செந்தமிழ் நாடென்ற போதினிலே' என்று, புரட்சிக் கவி பாரதியார் பாடிவிட்டுப் போனுர். அவர் பாட்டை வைத்துக் கொண்டு பஜனே செய்கின்ற மாநில அரசினர் அந்தப் பாட்டிலுள்ள கருத்துக்கு மதிப்பளிக்க இன்று மறுத்துள்ளனர்.

சொல்லுவது, பாரதியார் பாடலே!

செய்வது, அதற்கு மாருக! இப்படிப்பட்ட அரசை ஒரு அரசாக ஏற்றுக்கொள்ள முடியுமா?

ஒருவரை சில நாள் ஏமாற்றலாம்; பல நாள் ஏய்க்கலாம்! ஆனுல் என்றுமே எவரையுமே ஏமாற்றி வாழ முடியாது. இது, அமைச்சர்களுக்குப் புரியாததல்ல! புரிந்ததுதான். என்ருலும் பதவியினுல் பதட்டமாக உத்தரவிடுகின்றனர். இத்தகைய தேவையற்ற உத்தரவுகளால் உரிமை இழந்த மக்களாக இருந்தாலும், ஒரு காலத்தில் எல்லா உரிமைகளுக்காகச் சேர்ந்து புரட்சிக் குரல் உயர்த்தும்போது உத்தரவு

★ ஆட்சி மன்றங்களுக்கு ஆணை போடுவது, ஜனநாயகத்துக்கு உட்பட்ட செயலல்ல, ஆணவத்தின் செயல்!

இன்றைய தினம், 'சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வை!' என்று எல்லா கட்சி (காங்கிரசை தவிர) களும் ஒருமனதாகச் சொல்லிவருவதை நாடறியும், நல்லோர் அறிவர். ஆனுல் ஆணவத்தையே அரசுக்குரிய இலக்கணமாகக் கருதியுள்ள பேரிச்சம்பழக் கனம்கள், தம்முடைய காலடியின் கீழே தமிழ்நாடு என்னும் பெயரை மிதித்துக்கொண்டு மமதையோடு உலவுகின்றனர். அதனுல்தான் ஊராட்சி மன்றங்களுக்கும் நகராண்மைக் கழகங்களுக்கும் கடுமையான உத்தரவைத் தந்திருக்கின்றனர்!

சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கும்படி வருகின்ற தீர்மானத்தை நிறைவேற்ற இருவகையினருக்கும்உரிமைஇல்லையென்று உத்தரவிட்டிருக்கின்றனர். இதைப் பார்க்கும்போது, இந்த நாட்டில் எந்த அளவுக்கு 'ஜனநாயகம்' வாழுகிறது என்பது தெளிவாகும்.

குடிமக்களுடைய எண்ணத்தை, குடிமக்களின் ஆதரவுள்ள கட்சிகளின் கருத்தை கேட்டு நடப்பதுதான், 'குடியாட்சி'க் குரிய முறையாகும். ஆனுல் அதற்கு நேர்மாருக இங்கு செயலாக்கம் நடைபெறுகிறது. 'தீர்மானத்தை நிறைவேற்றும் உரிமை நகராண்மைக்கும் ஊராட்சிக்கும் கிடையாது.' என்று, வெளிப்படையாகச் சொல்லியுள்ளது, மாநில அரசு! இந்தப்போக்கை நினைக்கின்றபோது மந்திரிகளுக்குள்ள 'தன்மானம்' தெளிவாகிறது!?

"தமிழ் நாட்டிற்கு, 'தமிழ் நாடு' என்று பெயர் வை!" என்பது மக்கள் குரல்.

'அதைப் பற்றிஎங்களுக்குக் கவலை இல்லை' என்று சொல்லாமல் சொல்லுகிறது, மந்திரிகள் குரல்!-இந்தக் குரலிலே கலந்துள்ள ஆணவத்தை — அதிகார கூச்சலை மக்கள் கேட்டு விட்டனர்!

கள், உதிரிப்பூக்களாகிவிடும். இதைத்தான் பிரான்சும், ரஷ்யாவும் படம பிடித்துக் காட்டுகின்றன.

தனிப்பட்டவனுடைய உத்தரவுக்குத் தாள் பணிந்து கிடப்பது முடியாட்சியாக இருக்கலாம். குடியாட்சி அப்படிப்பட்டதல்ல! ஆட்சியிலே இருக்கின்றவர்கள், தம்மை ஆட்சியிலே அமர்த்திய மக்கள் குரலுக்குச் செவிசாய்த்தாக வேண்டும். அட்டை போல அமர்ந்திருக்கும்அமைச்சராக இருந்தாலும் சரி, ஆச்சாரியார் காலத்திலே, அவரால் கொண்டுவரப்பட்ட குலதர்ம கல்வியை ஆதரித்து, அவர் சென்றுவிட்ட பின்னர் காமராசர் அந்தஇடத்துக்கு வந்தவு

வே. கபிலன்

டன் அதேகுலதர்மக்கல்வியை எதிர்த்த இரட்டை நாக்குடைய அமைச்சராக இருந்தாலும் சரி, தொழிலாளர் நலன்களுக்காகப் பாடுபட்டு விட்டு பதவி வந்தவுடன் 'பச்சோந்தி'யாகிவிட்ட மந்திரியாக இருந்தாலும்சரி, நேற்று வரையிலே 'ஆனு' விலாசம் தெரியாதிருந்து, இன்று'மூனு' வாகப் பேசித் திரியும் கனமாக இருந்தாலும் சரி. அது பற்றி மக்களுக்குக் கவலை இல்லை. செவிசாய்த்தாக வேண்டும் அதுதான் குடியாட்சியாகும்.

தான் முட்டாள் தனமான உத்தரவை வெளியிட்டிருக்கிறது, அரசு!

ஆட்சி மன்றங்களுக்கு ஆணை போடுவது, ஜனநாயகத்துக்கு உட்பட்ட செயலல்ல, ஆணவத்தின் சொல்! அந்தச் சொல்லே செயலாக்கத்துக்கு வருமானுல் இங்கும் ஒரு பாஸ்டிலி சிறைதான்! அதைத் தவிடுபொடியாக்கும் புரட்சிதான்! அந்தப் புரட்சித் தீயால் வெந்துபோவது தான் தீயவர்களுக்குரிய இறுதிப் பரிசு! அந்தப் பரிசைப் பெறுவதற்குச் சித்தமாக இந்த அரசு இருக்குமானுல் இதைவிட பயங்கரமான உத்தரவுகளைப் போட்டுப் பார்க்கட்டும்! அது பற்றி நமக்குக் கவலையில்லை.

நாய் வேலை தொடங்கட்டும்!

நரித் தொல்லை ஆரம்பமாகட்டும்... அப்போதுதான் புரட்சி உருவாக முடியும். தன்மான மில்லாதவர்கள் தரும் தொல்லை, தொகை தொகையாகப் பெருகினுல் தான் பொங்கியெழுவதற்கு நல்ல உரமாகும். அந்தத் திருப்பணியை அரசே தொடக்கி வைக்கட்டும்.

மாநில அரசே! மாமிசப் பிண்டமே! சோற்ருலடித்த சொரணையற்றவர்களுக்குக் கைப்பாவையாக விளங்கும் கொலுபீடமே! நீ உன் வேலையைச் செய்! வெறித்தனமாக உத்தரவிடு! உரிமையைப் பறி!

சிந்தனையாளர்களைச் சிறையிலிடு! அவர்களுடைய செல்வங்களைச் சுட்டுச் சாம்பலாக்க உத்தரவிடு! அப்போதுதான் 'ஜனநாயகம்' என்ற பொருளுக்குரிய உண்மை தெளிவாகும்.

இரத்தத்தால்தான் எந்த இலட்சியமும் நிறைவேற முடியும். அதற்குரிய அடிகல் நீயே போடு! ஆரம்பமாகட்டும், உன் வேலை!

அர்ப்பணமாக நாங்களும் தயாராகிரேம். வருங்காலச்

★ இரத்தத்தால்தான் எந்த இலட்சியமும் நிறைவேற முடியும். அதற்குரிய அடிகல் நீயே போடு! ஆரம்பமாகட்டும், உன் வேலை

இந்த உண்மையை உணராமல் இருக்கின்றவர்கள், எவ்வளவு பெரிய மனிதர்களாலே மதிக்கப்படுபவர்களாக இருந்தாலும் மக்களாட்சிக்குக் கவலை இல்லை. தூய்மை குறைந்து தீமை உலவத் தொடங்கிவிட்டால் துக்கிப் பந்தாடிவிடும். அதுதான் ஜனநாயகத்தின் கடமை. இந்தக் கடமையை நிறைவேற்றத் தக்க முறையிலே

சந்ததியினருக்காக நாங்கள் சாகிரேம்! சாம்பலாகிரேம்! எங்களுடைய சாம்பல் மேட்டிலாவது புதிய 'சமுதாயம்' மலரட்டும். 'தமிழ் நாடு' என்ற பெயருக்கு மறுமலர்ச்சி வரட்டும்! திராவிட கூட்டாட்சி துலங்கட்டும்!!!

ஊம்......தொடங்கு, உன் வெறித்தனத்தை! விலங்கா அல்லது விடுதலையா என்பதை நிர்ணயிப்போம்.

முள் வாங்கி

அரிசி சாப்பிட்டு ஜ. நா. செல்க! கோதுமை உண்டு குழம்பியது போதும்!

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்"

என்று கவிக்குயில் பாரதி பாடினுர், தமிழர் உணவு உண்டபின் வெற்றிலை போடுவார்கள். வெற்றிலை இல்லாமலும் உயிர் வாழ முடியும். அட வடநாட்டுக் காரனே! உன்னுடைய கோதுமைப் பண்டம் எங்கள் காவிரி வெற்றிலைக்குச் சமம். எனவே நீ கோதுமையைக் கொடுத்து விட்டு அரிசிகிடைக்குமென்று கனவு கூடக் காணுதே! என்ருர்.

தென்னுட்டிலிருந்து காசிக்குப் போய் கருமத்தைத் தொலைப்போம் எனச் செய்யும் அறியாமை மிகுந்த அடியார்கள் உண்பது அரிசி! அவர்கள் இரயில் பிரயாணத்தின்போது அருகில்அமர்ந்து பிரயாணம் செய்யலாம். நாருது! வடநாட்டு சப்பாத்திக்களும், பூரிகளும், பரோட்டாக்களும் இராமேசுவரத்தை நோக்கி வருகின்றன. ஈர அப்பளம் போன்ற சப்பாத்திகளை 400-500 கூடைகளில் சுட்டுப் போட்டுக் கொண்டு! அப்பப்பா...அந்த ரயிலிலேயே ஏற முடியாது. அவ்வளவு நாற்றம்' அரியலூர் ரயிலே இந்த நாற்றம் பொருமல்தான் கவிழ்ந்ததாம்! இது எங்கு தெரியப் போகிறது, உலகமகா சமாதானமூக்குடைப்பண்டிதர் நேருவுக்கு! அவர் போவது 'பெஷல்' வண்டியிலல்லவா?

அரிசி உணவில் அவ்வளவு சக்தில்லை தான். (மற்ற உணவுகளுடன் ஒப்பிடுகையில்) ஆனுல் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு உணவுதான் பொருந்தும். ஆங்கிலேயன் இங்கிலாந்திலே அரிசி சாப்பிட்டு உயிர் வாழ முடியுமா?

அல்லது விஷ்கி, பிராந்தி இல்லாமல் நாள் போக்க முடியுமா? குளிர்நாட்டில் எது எது தேவையோ அது அதுதான் பயன்படுத்தப்படும். காந்தி சென்னுர் 'மதுவிலக்கு' என்று நேர் நின்று கூற முடியுமா?

நேருவுக்கு உலக வரலாறு தெரியும்? ஒப்புக்கொள்வோம். ஆனுல் உலகமக்களின் வாழ்க்கை வரலாறு தெரியாது! பரிதாபப் படுவோம். தடார் புடார் என்று கண் மூடித்தனமாக—காட்டுமிராண்டி போல வாய்க்கு வந்ததைக் கூறிவிடுகிருர் பெரிய பதவியிலிருப்பவர். எதுசொன்னுலும்வேதவாக்கு என்று எண்ணிய காலமும்—எங்கோ போய்விட்டது! ஐந்து சக்தித்தீர்மானம் ஐ-நா குப்பைக் கூடைக்குப் போனதிலிருந்தே தெரிய வேண்டாமா? சமாதான எப்புருவிற்கு மூக்குதானிருந்தது- அதையும் உடைத்து அனுப்பிவிட்டனர்!

இந்தியாவிலேயே நல்ல முறையில் சண்டை சச்சரவுகளில்லாமல் சென்னை மாகாணத்தில் (தமிழ் நாட்டில்) தான் அரசாட்சி நடக்கிறது! என்று கூறியது நேருதான். இன்று 'அரிசி சாப்பிட்டால் அறிவு மழுங்குகிறது' என்று கூறுவதும் நேருதான். அப்படியென்ருல் யாருக்கு புத்தி மந்தம்? குழப்பம்! இதைக் கேட்ட பிறகாவது நம் மதி மந்திரிகளுக்கு புத்தி வர வேண்டாமா? காவடி தூக்குகிருர்களே—கலங்காமல்.

எனவே —அரிசிசாப்பிட்டால் அறிவு குறையாது— உணர்ச்சிதான் குறைந்துவிட்டது. இல்லாவிட்டால் ஊர்ப்பயல் பேச்சையெல்லாம் கேட்டுக் கொண்டு இன்னும் சும்மா இருப்பார்களா?

வெளிவந்துவிட்டது விற்பனையாகிறது

வாங்கிவிட்டீர்களா!

கண்ணதாசன் கவிதைகள்

இரண்டாம் தொகுப்பு

முதல் தொகுப்பிற்குப்பின் இதுவரை வெளிவந்த எல்லாக் கவிதைகளும் இடம் பெற்றிருக்கிறது. விலை ரூ. 2-50

காவியக்கழக வெளியீட்டில் விற்பனைக்குத் தயாரான நூல்கள்

கண்ணதாசன் கட்டுரைகள் ரூ. 1 50

மயிலாடும் பாறை (நாவல்)

தென்னரசு எழுதியது ரூ. 1 50

தேவைக்கு எழுதுங்கள் :

காவியக் கழகம்,

158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

கவிஞரின் கற்பனைத் துளிகள்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன? உன் அழகு, ஆடல் கலையை யார் காணுவர்? எனது நெஞ்சில் ஆடுவதால் யான் மட்டுமே காணமுடியும்! ஆனால் என்ன பயன் உண்டு? எனக்கு அந்த எண்ணம் இல்லை; அதற்கு நீ உரியவளும் அல்லள்! எல்லோர் உள்ளங்களிலும் கலையரசியாக ஆடுதல் வேண்டும்; கலைத் தேவிக்குரிய கலையரசியாக அனைவரின் நெஞ்சங்களிலும் ஆடுதல்

அழகான பழம் போலும்
கன்னம்—அதில்
தரவேண்டும் அடையாளச்
சின்னம்

என்கின்றபோது மலைவிழ் அருவி காண்பிக்கப்படுகிறது. காணும் அருவி கண்ணுக்கு விருந்து; அருவி நீர் அருந்தினால் வாய்க்கும் விருந்து—சுவை பயப்பது. அதுபோலவே பழம். அழகான பழம் கண்ணுக்கும் விருந்து பயப்

தொலைவில் சிறிய அளவில் அவனதுஉருவமும் காட்டப்படுகிறது. அவன் அவளைவிடப் பெரியவன் தான். ஆனால் இப்பொழுது சிறியவனாக ஆகிவிடுகிறான். உண்மையில் சிறியவனாக ஆகி விடுவதில்லை. அவள் எண்ணம்—வேட்கையின் முனைபு — அவன் 'சிறியவனாக' ஆகிவிடுகின்றான். முதலிலேயேதான் அவனைப் பெரியவனாகக் காண்பிக்கிறார்களே, அதன் உண்மை அது தான்...எனக்குக்கூட உரியவள் அல்ல, கலைக்கே உரியவள் என்று கூறுகிறவன் பெரிய மனிதன் அல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்? அவள் ஆசை பெரியது—அதையே அவன் அவள் அருகே இல்லாமல் தொலை தூரம் நிற்கிறான்—கூறுகிறான். அவன் முகம்-கண்கள் மட்டும் (குளோசப் காட்சியால்) காட்டும்போது சோகம் நிரம்பிய பாவத்தில் இருந்து கூறுவதில் இருந்து இந்த உண்மையை அறிய முடியும்! பின்னர்—

மணமேடை தனில் மாலை
சூடும்—உங்கள்
மனமேடை தனிலாட
வேண்டும்

என்று வெளியிடும்போது - அலை பொங்கும் அவள் உள்ள நிலையை

என்கின்றபோது ம..யுர்சியின் காட்சி காட்டப்படுகிறது. அவனது தாழ்ந்த உள்ளத்தை மலையின் அடிவாரமும், அவனின் உயர்ந்த நல்லெண்ணங்களை குறிக்க மலையின் உச்சியும் காட்டப்படுகிறது. நல்ல அறிவுடைய சான்றோர்களைப் பற்றிச் சொல்லும்போது பெருமலைக்கும் மலையுச்சிக்குமே ஒப்பிட்டுச் சொல்வர்..அறிவுடைச் சான்

கின்றாள் என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறந்துங்கூட மறந்துவிடக்கூடாது. அவள் தன்னைப் பற்றியும் அவனைப்பற்றியும் எண்ணிக் காணும் கனவில், **அவள் தன் மனம்போன போக்கில் கனவு காணவில்லை. (அல்லது மற்ற படங்களில் வருவது போலவும் கனவு இல்லை)** கனவிலும் தன் எண்ணத்தை—தன் விருப்பத்தை தானே வெளியிட்டும் அவற்றைப் பூர்த்தி செய்யாதவனாகவும், மறுத்துப் புறக்கணிப்பவனாகவுமே **அவன் அவனைப் பற்றிக் காண்கின்றான்.**

பொன்போன்ற உடல்மீது மோகம்—இந்தக் கண் தந்த அடையாளம் போதும்

வேண்டும். அப்படி ஆடுதல் வேண்டும் என்றால் என் நெஞ்சில் மட்டும் தனியே ஆடினால் முடியுமா? ...முடியாது என்கின்றான்.

அவன் இவ்வாறு சொன்னதும் அவள்தான் என்ன செய்வாள்? என்ன சொல்லுவாள்?

ஒஹோ—வென்று ஒரே ஒரு வார்த்தையில் மட்டுமே கூறி நிறுத்தி விடுகின்றாள். நல்ல பண்பாடு உடைய பெண் அவள்! அதற்கு மேல் என்ன சொல்லித் தான் வேண்டுவாள்?

அவன் சொல்லுகிறான்: எந்
நாளும் துயிலாத

அவன் முடிக்கிறான்: பெண்
ஒன்று கண்டேன்

இவ்வாறு அவனே, அவனைப் பற்றியும் அவளைப்பற்றியும் கனவு காண்கின்றான்...நிற்க...

கவிஞரின் பாடல் அவள் மன நிலையை எவ்வாறு 'பிரதிபலித்தது என்று பார்த்தோம் ... படப்பிடிப்பு முறையால் அதை எவ்வாறு மேலும் விளக்கிக் காட்டி அழகுறச் செய்தார்கள் என்று பார்க்காவிட்டால் உண்மையாகவே தவறு செய்தவர்களாக ஆகிவிடுவோம். ஆகவே பாடலுக்கு — படப்பிடிப்பு முறையையும் உற்று நோக்கும் :-

அவனின் நினைவைக் காட்ட மலர்ந்த மலரையும், அவனைப் பற்றிய எண்ணங்களைத் தொடர்ந்து எண்ணி எண்ணி இருப்பதைக் குறிக்க சிறுசிறு மலர்களையும் மொக்குகளையும், அவள் நெஞ்சத்தை பொங்கும் அலைகடலும் முகில் சூழ்ந்த வானத்தின் காட்சிக்கும் காட்டி விளக்கினார்கள்.

பது, வாய்க்கும் விருந்து நல்குவது; சுவை பயப்பது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்! அடுத்து,

பொன்போன்ற உடல்மீது
மோகம் இந்தக்
கண் தந்த அடையாளம்
போதும்

என்கின்றபோது அவள் கண்களில் அவன் உருவம் காட்டப்படுகிறது. ஒளிப்பதிவாளரின் திறமை என்பதோடு நின்றுவிட்டால்..நாம் உணர்ந்தவர்களாக

மணமேடை தனில் மாலைசூடும்—உங்கள் மனமேடை தனிலாட வேண்டும்

ஆகிவிடமுடியாது! அவள் கண்களில் வாழ்கிறான் அவன். பின் பெரிய அளவில் அவனின் உருவமும், தொலைவில் சிறிய அளவில் அவள் உருவமும் காட்டப்படுகிறது. அவன் அவளைவிடப் பெரியவன். எங்கு இருந்தாலும் காணமுடியும் அவனால்! கண்களால் காணும் அளவே போதும் என்பதற்கு, 'கண்களில் அவன் உருவமும், கண்களால் எங்கு இருந்தாலும் அவளைக் காணவே முடியும் — அதுபோதும் என்பதற்கு' பெரிய அவன் உருவமும் சிறிய அளவில் அவள் உருவமும் காட்டப்படுகிறது. இனி,

உறவோடு விளையாட எண்
ணும்—கண்கள்
உறங்காது உறங்காது
கண்ணே

என்கின்றபோது அவன் கண்களில் அவள் உருவம் காட்டப்படுகிறது. அவர் கண்களில் அவளுக்கு இடம்உண்டு. பின் பெரிய அளவில் அவளது உருவமும்,

வெளிபடுத்த, அலைகடல் காட்சியையும் மேலே முழு நிலவுக் காட்சியையும் காட்டுகிறார்கள். அலைகடல் ஓயாது அலை வீசிக் கொண்டேயிருக்கிறது; அவள் மனம் ஓயாது குரலெழுப்பிக் கொண்டே இருக்கிறது! முழு நிலவு சேகராக உருவகப்படுத்தப் பட்டுள்ளது! அலைகடல் நடுவே இருந்து வந்தே அவன் மேற் சொன்ன கருத்தை வெளியிடுகிறான்.

நெஞ்சம் பிறர் காண முடி
யாத மேடை—அதில்
நடமாடிப் பயனேதும்
இல்லை.

என அவர் எண்ணத்திற்கு மறுத்துப் பாடுகிறான். பொங்கும் கடலில் இருந்து வந்தவன் தன் மன நிலையை வெளிப்படுத்தி 'மனமேடை தனிலாட வேண்டும்' என்று சொல்லும் போது மலையின் அடி'வாரத்தில்-(மலையின்) கீழே...நெஞ்சம் பிறர் காணமுடியாத மேடை — அதில் நடமாடிப் பயனேதும் இல்லை—

நெஞ்சம் பிறர்காண முடியாதமேடை—அதில் நடமாடிப் பயனேதும் இல்லை

றோர்களான மறைமலையடிகள்—தமிழ்ச்சான்றோர் திரு. வி. க. அவர்கள் பற்றியும் எண்ணும் போது - மலை - • யர்ந்த மலையின் காட்சித் தோற்றம் நினைவுக்கு வருகிறது ... அதுபோலவே அவனின் உயர்ந்த மனநிலையைக் குறிக்க குன்றின் உச்சி இடம் பெறுகிறது.

அன்புசால் ஐயன்மீர்!

இதை யான் ஏன் குறிக்க வந்தேன் என்றால் கவிஞரின் பாடலுக்கு — பொருத்தமான முறையில் படத் தயாரிப்பாளர்கள் எப்படி எண்ணிப்பார்த்து **பொருத்தமாக பொருந்தும் வகையில்** அழகிய முறையில் காட்சி அமைக்கிறார்கள் என்பதைக் குறிக்கத்தான். கவிஞர், பெண்ணின்—கதை ஆசிரியரின்—மன நிலையை அறிந்து பாடல் புனைந்தார்: பாடல் சிறப்பு. அது படப்பிடிப்புக் காட்சியால் உயர்ந்து விளங்குகிறது!

சிலர் சிறிதளவும் பொருத்தமே இன்றி காட்சியமைக்கிறார்களே, அவர்கள் எண்ணிப் பார்க்கட்டும் என்பதற்காகவே எழுதினேன். இல்லையேல், கவிஞர் பாடலின் ஒரு பகுதியையே உணர்ந்தவர்களாகி மறுபாதியை அறியாதவர்களாகி விடுவோம்!

அதுமட்டுமல்ல, இதில் மேலும் ஒரு சிறப்பு. அவள் கனவு காணும் காட்சியில் அவன் பங்கு ஒன்றும் இல்லையே! எல்லாம் அவளுடையதே! அவளாகவே கனவு காண்கின்றான்; அவன் மனத்தின் ஆழ்ந்த உணர்ச்சிக் குவியல்களே அத்தகைய படைப்புக்களை (காட்சிகளை) படைத்தன. இவன் காணும் கனவின் உண்மை என்ன?

அவன்தான் கனவு காண்கின்றான். அவள் அவனைப்பற்றி மட்டுமல்லாமல். தன்னைப் பற்றியும் அவனைப்பற்றியுமே கனவு காண்

பின்னால் உண்மையாகவே நடைபெறப் போகும் பல நிகழ்ச்சிகள், இதில் நன்கு தெரிகின்றன... இதில் குறிப்பாக இடம் பெற்றுள்ள பேச்சுக்கள் பின்னால் இடம் பெறுகின்றன.

அவள் உண்மையாகவே தன் எண்ணத்தை வெளியிட அவன் மறுப்பது, புறக்கணிப்பது, மனைவியாக சொல்லுமாறு சொல்வது, கலையரசி என விடையிறுப்பது எல்லாம் எண்ணிப் பார்த்தால் நீங்கள் உணர்ந்து கொள்ளமுடியும்.

கனவுக் காட்சி கலை மணம் மிகுந்த சுற்பனைக் காட்சியாக இருக்கிறது; பாடலின் பொருளும் கருத்தும், அதைச் சிறப்பாகவும் பொருளோடும் நன்கு கதையை—பாடலை யொட்டி பொருந்தும் வண்ணம் படமாக்கியுள்ள வின்ஸெண்டையும் திறம்பட குறை சொல்லா வண்ணம் இயக்கிய இயக்குநரான திரு. ஸ்ரீதர் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது!

ஆலங்குடி
கொடியேற்றுவிழாவும்
தி. மு. க. பொதுக்கூட்டமும்

இடம்: காந்தி திடல்
காலம்: 27...11...60ஞாயிறு
நேரம்: மாலை 6 மணி
தலைவர்: பெரி. அழகு

கொடியேற்றுபவர்:
கண்ணப்பாவள்ளியப்பன்
இனமுழக்கம் பதிப்பாசிரியர்

சொற்பெருக்காற்றுவோர்:
எஸ். எஸ். தென்னரசு
பி. திருஞானம் (பாகனேரி)
கா. காத்தமுத்து
சா. வீ. நடராசன்
அழ. கணபதி

தி. மு. க. கிளை,
ஆலங்குடி மேலமாகாணம்

ஆசிரியர்: சி.பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர்: கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5

இனமுழக்கம்

மலர் 2 ★ 2-12-60 ★ இதழ் 14

சென்னை,
2—12—60

பேரனுக்கு,

நீ என்னைத் தாத்தா என்று அழைப்பதற்கு முன்னால் நாட்டில் என்னைப் பலர் தாத்தா என்று அழைக்கத் தொடங்கி விட்டார்கள். என் தோற்றம், அவர்கள் அன்பு-இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது தாத்தா என்பதுதவிர அழைத்தவர்கள் உதட்டில் வேறொன்றுமில்லை. அந்தப் பெரும் பணியை முதன் முதலில் செய்தவர் என் அருமை நண்பர் கவிஞர் கண்ணதாசன் ஆவார்கள்.

அவர் என்னை இப்படி அழைக்கும்போது அவருக்குத் திருமணம்கூட ஆகியிருக்கமுடியாது என்று நீகருதுவது இயற்கைதான். என்றாலும்... ஆனால் சிரிக்காமல் படி அல்லது படித்த பிறகு சிரிக்காதே. அவர் என்னைத் தாத்தா என்று அழைக்கும்போது அவருக்கு ஒன்பது குழந்தைகள். அப்படியானால் எனக்கு அதில் மூன்று பங்கு அதிகமாக இருக்குமென்று நினைப்பாய். எனக்கு நான்கே குழந்தைகள். அவர்களில் என் மூத்த மகள்தான் உன்னை ஈன்றெடுத்தத் தாய். படித்த குடும்பத்திலே நீ பிறந்தாய் என்ற காரணத்தால் உன் வாழ்விலே பாதை தவற மாட்டாய் என்று உறுதியாக நம்புகிறேன். வஞ்சனை, பொய், பேராசையில்லாமலே வாழ்ந்து காட்ட வேண்டியதுதான் வாழ்க்கை என்பது என் முடிவு. இவற்றை நீ கடைபிடிப்பதன்மூலம் பொருள் சேராமல் போகலாம். ஆனால் நடுத்தர வாழ்க்கைக்கூட நம்மால் வாழமுடியாது என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. நாணயமாகவும், நேர்மையாகவும், கண்டிப்பாகவும் மனிதர்கள் இருக்க வேண்டுமென்று விரும்புவேன். அவர்களுக்காக என்னாலான எந்த உதவியையும் செய்ய நான் தயங்கியதே இல்லை. நீயும் அப்படி இருக்க வேண்டு மென்றே விரும்புகிறேன். ஒருவன் இறந்த பிறகு அவனுக்கு எத்தனை பங்களாக்கள் இருந்தன. எத்தனை கார்கள் இருந்தன. எந்தப் பேங்கில் கணக்கு வைத்துக் கொண்டிருந்தார் என்று யாரும் கேட்பதில்லை. அப்படியெல்லாம் வாழ்ந்த ஒருவர் திருட்டு நோட்டுகளை அச்சடித்து வழங்கினார் என்று சுமார் நானூறுக்கு மேற்பட்ட சாட்சிகளோடு சென்னையில் திரு. திண்ணைபிரம் என்ற நீதிபதியின் முன்னால் ஒரு வழக்கே நடந்து கொண்டிருந்தது. கோடி கோடியாகச் செல்வம் படைத்த சீமான்தான். இருந்தும் பயன் என்ன? அவரைக் காணும் காலம் என்ன சொல்லியிருக்கும் என்பதை நீ இன்று நினைத்தால்கூட வெட்கப்படுவாய்.

'செல்வத்தால் சீலம் வராது, சீலத்தால் வேண்டுமானால் செல்வம் வரும்' என்றான் சிந்தனையாளன் சாக்ரடீஸ். அது, இன்றுகூட உண்மையாக இருப்பதைக் காண்கிறோம். ஆகவே இந்தத் தத்துவங்கள், காலத்தாலும் மாற்ற முடியாதது என்பது என் திடமான நம்பிக்கை. என்னைப் பொருத்தவரை நான் எதைக் கண்டும் பயந்ததாகவோ எதற்கும் அடிமைப்பட்டதாகவோ நினைவில்லை. அடுத்த மடலில் உன் பாட்டியைப் பற்றிச் சில எழுதுகிறேன்.

உன் தாத்தா,

சி. பி. சிற்றரசு

ஜெயராஜ்.

குத்த வந்த வேல்! நம்மைக் கொத்த வந்த கழுகு!

இருக்குமிடம் தெரியாமல் இருட்டறைக்குள் நுழைந்தன

குத்தவந்த வேல் முனைகள் கோடி; நம்மைக் கொத்த வந்த கழுகுகளோ கோடி, கோடி! அவைகளையெல்லாம் கடந்து நாம் வெற்றிபெற்று விட்டோம்! வாகைமாலை சூடி விட்டோம்!!

29-ம் நாள்!

இந்த நாள் வருவதற்குள், இயக்கத்தைத் தூற்றுவதற்கென்றே-தொல்லை தருவதற்கென்றே உருவாகியுள்ள சிற்சில பத்திரிக்கைகள் கயிறு திரித்துக்காட்டிக் கொண்டிருந்தன; இரண்டொரு பத்திரிக்கைகள் வெறிக்கூச்சலெழுப்பி தம்முடைய சொந்த நடையிலே புளுகிக் கொண்டிருந்தன. அவைகளின் வாயிலே மண்ணை வாரிப் போடும் அளவிலே நமது மேயராக வி. முனுசாமி தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டார். நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிகுந்த ஒருவர் நமது மேயராக - நகரத்தின்காவலராக அமர்ந்துவிட்டார். இந்தப் பூரிப்பான செய்தியை நாம் சுமப்பதற்கு முன்னதாகவே, நம்மைப் பற்றியும் நமதியக்கத்தைப் பற்றியும் ஆருடம் கணித்துக் கொண்டிருந்த அற்பாயுசுகள் நம்முடைய வெற்றிச்செய்தியைக் கேட்டவுடன் இருக்குமிடம் தெரியாமல் தாமாகவே கல்லறைக்குள் நுழைந்து கொண்டன. ஆதிகாலத்திலிருந்தே எத்தனாக இருந்து பழக்கப்பட்டுவிட்டவரின் பத்திரிக்கையில், பத்திக்குப் பத்தி, பக்கத்துக்குப் பக்கம், 'அவர் வருவார்; இவர் வருவார்!' என்கின்ற முறையிலே முட்டாள்தனமாக-மூர்க்கத்தனமாக - சில மூதேவிகள் எழுத்துக்களை அள்ளி வீசி 'பிளாஷ்' செய்த வண்ணமிருந்தன. அவைகளின் வெறிக்கூச்சலை அடக்கி ஒடுக்கிவிட்டார், நமது முனுசாமி.

29-ம் நாளன்று மாநகராட்சியின் முன்னே மக்கள் வெள்ளம்! அடிவானத்தின் முன்னே ஆதவன் மண்டியிட்டுக் கொண்டிருந்த நேரம்! அப்பொழுதுதான் நாய்க் குரைப்புச் சத்தம் கேட்டு வந்திருந்த சில சாதி வெறியர்கள் மன்றத்தின் முன்னே மண்டியிட்டுக் கொண்டிருந்தனர். 'இந்த முறை நகராட்சி மன்றம் நம் கையில்தான்!' என்று கனவு கண்டு கொண்டிருந்த சில காங்கிரஸ் காரர்கள் கட்டடத்தை நோக்கி வாயைப் பிளந்து கொண்டிருந்தனர். அவர்களின் வாயிலெல்லாம் ஒரு பிடி மண்ணைத் திணித்துவிட்டு, வெற்றிப் புன்னகையோடு திராவிட முன்னேற்றக் கழகக் கொடி கட்டடத்தின் முன்னே உயர்த்தப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக மாவீரர்களின் முழக்கத்தைக் கேட்டு, முக்காடிட்டு, முதுகைக் காட்டிக்கொண்டு ஜாதி வெறியும் பணத்திமிரும் தலைகால் தெரியாமல் ஓடி ஒளிந்தன. இனியாகிலும் எலிக்கூட்டம் உணர வேண்டும்.

நீதியும்—அநீதியும்!

நம்முடைய இபக்கத்தின் நெடுங்காலத் தொண்டரான வி. முனுசாமி அவர்களை, நகர மேயருக்கு இபக்கத்தின் சார்பிலே நிறுத்திவைத்தோம். நகர நலமுன்னணியின் சார்பிலே இராசரத்தினத்தைச் சிலர் நிறுத்தி வைத்தனர்.

ஜேசுபாதம் முன்மொழிந்தார்!

அ. பொ. அரசு வழிமொழிந்தார்! -அதுபோலவே இராஜரத்தினத்துக்காக எஸ். கோவிந்தசாமி என்பவர் முன்மொழிந்தார்; ஸ்ரீ ராசகோபலன் வழிமொழிந்தார். அவ்வேளையிலிருந்து பணத்துக்கும் பகுத்தறிவுக்குமிடையே பலத்த போட்டி! நீதிக்கும் அநீதிக்குமிடையே சில மணி நேரம் போர்!

ஓட்டுக்கு விடப்பட்டது! விறுவிறுப்போடு வாக்குகள் பதிவாயின. அதனுடைய பிரதிபலிப்பாக அநீதி அடைவேண்டிய தோல்வியை அடைந்தது; நீதி பெறவேண்டிய இடத்தைப் பெற்றது.

நமக்கு கிடைத்த ஓட்டுகள் 53.

நம்மை எதிர்த்து நின்ற பணத்துக்குக் கிடைத்த மொத்த ஓட்டுக்கள் 4[illegible]!

பொறுமைக்குக் கிடைத்தது, வெற்றி!

பொருமைக்குக் கிடைத்தது, தோல்வி!! — இந்த நிகழ்ச்சியிலிருந்தாவது படிப்பினை பெறவேண்டும், புரளியைக் கிளப்புகின்ற பத்திரிக்கை! இது கூட இருண்ட காலமல்ல! ஒளிவிளக்குகள் மிளிரும் காலம்! இந்தக் காலத்திலும் எதையேனும் ஒன்றை எழுதிவிட்டு, நீதியைத் தன் நெடுங்கரத்தால் மறைத்து விடலாமென்று யாரேனும் கருதினால் அவர்களுக்குக் கிடைக்கின்ற பரிசு இதுவாகத்தான்இருக்குமென்பதை எச்சரிக்கைசெய்கிறோம்.

முக்காடிட்டு ஓடாதீர்கள்!! நீங்கள் யார் என் என்பதை நாங்கள் அறிவோம்!

விழாக்காலங்களிலே வீதியிலே தொங்கவிடப்படுகின்ற காகிதத் தோரணங்கள் நீங்கள்! காற்றடித்தால் குப்பையிலே விழுகின்ற சக்திதான், உங்கள் சக்தி! அந்தச் சர்வசாதாரண சக்தியைக் கொண்டு நீதியை அழித்துவிட முடியாது; நேர்மையை மறைத்துவிட முடியாது என்பதைச் சொல்லாமல் சொல்லி வைக்கிறோம்.

திருந்துவது மனிதன்!

திருந்தாதது, மிருகம்!!— இவ்விரண்டில் எதைத் தேர்ந்தெடுத்து ஒரு முடிவுக்கு வருகிறீர்களோ அதைப் பொறுத்துத்தான் உங்கள் உயிர் உடலிலே நிலைத்து நிற்கவழி இருக்கிறது —தேவ கபிலன

தீயான தினத்தந்தி இனியேனும் திருந்துமா?

ஆசிரியர் சி.பி.சிற்றரசு

விலை 6 காசு

முள்வாங்கி

ஊடலில் பெரியது விவாக ரத்து !

உடனே திருந்துக ! விடுகணை ஏற்க!

கலையுலகப் பேரரசிகளே! சொந்தத்தில் பெரிய வீடு, கார், எடுபிடி ஆள், பந்தோபஸ்து, பணம் முதலிய வசதிகள் உங்களுக்கு உண்டு! ரசிகர்கள் ஆதரவைக் கண்டு பட முதலாளிகள் தரும் மதிப்பீடுதாம் இவை! கலைக்கு வெறியூட்டிக் கவர்ச்சிசெய்கின்ற கதாநாயகிகள் நீவிர்! உங்களுக்குப் பேருழைப்புத் தேவையில்லை— நளினமாகக் 'கேமரா,முன் நடந்து வந்தாற்போதும்! **பருவப் பூரிப்பு** இருக்கும்வரை இரும்புப் பெட்டி நிரப்பிக் கொண்டேயிருக்கும்-தொழில் இல்லையானுலும்வாழ்நாள்வரை நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொள்ளுமளவிற்கு செல்வவளம் உங்கள்பால் உண்டு!

புயல், வெள்ளம், பூகம்பம், நிலநடுக்கம்,காலரா, க்ஷய ரோகம் ஏற்பட்டால் உங்களால் உதவமுடியும்! அரசாங்க சக்தியைவிட உங்கள் பொருளாதார சக்தி ஆற்றல் வாய்ந்தது—நல்ல சமயத்தில் உதவுவது! பொதுப்பணிமனைகளுக்குப் பணத்தைவாரி இறைத்தால்-சிருங்கேரி - சங்கராச்சாரி போன்றவர்கூட **'அருந்ததி'** என்ற பட்டம் வழங்குவார்கள்! அமைச்சர்கள் உங்கள் புகைப் படத்தைத் திறந்து வைத்துப் பாராட்டிப் பேசுவார்கள்.

கலைத் தெய்வங்களாகிய உங்களுக்குப் படமுதாளிகள் தாம் அர்ச்சகர்கள்-ரசிகர்கள் தாம் வழிபடுவோர்-இவ்விருவர் மூலமாகவும் உங்களுக்கு நல்ல வருவாய் வரும் கடவுளர்களைப் போலக் கண்முடிகளல்ல! நடமாடும் தெய்வங்கள்-நீவிர்! சில அர்ச்சகர்கள் தாம் பயன் பெறமுடியும்—அதுவும் உங்கள் கையில் தானுள்ளது! இது இங்ஙனமிருக்க:

உங்கள் கணவர் (Partners) நிலை யென்ன? சொன்னதைச் செய்யும் அடிமைகளாக இருக்கவேண்டும் எனநினைக்கிறீர்களா? நீங்கள் **எடுப்பார் கைப் பிள்ளைபோல்** இருப்பதை அவர்கள் தடுக்கக் கூடாதா? தலைக்குமேலே வெள்ளம் - சான்போனுலென்ன? முழம்போனுலென்ன? என்று நீங்களிருக்கும்போது நல்வாழ்வு எண்ணிக் கரைசேர நினைப்பது தவரு? மணுளனே மங்கையின் பாக்கியம், கணவனே கண்கண்ட தெய்வம், என்று பதிபக்தி நிறைந்த மாதர்குல மாணிக்கங்களல்லவா?—நீங்கள்! நினைத்தால் பதிவுத் திருமணம் செய்து கொள்கிறீர்கள்! மறுத்தால் **விவாக ரத்து'** என்கிறீர்கள்-இந்தச் சட்டத்திட்டங்கள் அறிந்த வழக்கறிஞர்களாகத் திகழ்கின்றீர்கள்!உங்கள் **'ஊடல்'** வழக்கு மன்றங்களுக்கு வருவதுஏன்? உங்கள் கணவர் என்று சொல்லிக் கொள்வதே பழிப்பு அவமானம் என்று கருதப்படும் உலகில்—துணிந்து 'நான் இவள் கணவன்' என்று கூறுகிறவன் எவ்வளவு எதிர்ப்புணர்ச்சிகளைக் கடந்தவன்! அதை நினைத்ததுண்டா? **'போன்' பண்ணிப் 'போலீஸ்' வந்து விட்டால்பெரிய அதிகாரம் இருப்பதாகக் கருதுகிறீர்களா? 'பணம்' இருப்பதால் நீதிமன்றத்தை விலைபேசி விடலாம் என்று எண்ணுகிறீர்களா?** உங்களிடம் 'ஆண்மை' இருக்கிறதே தவிரப் பெண்மை இல்லை! பல போர்க்களங்களுக்குச் சென்றவன் பெரு வீரனுகின்றுன்—நீங்கள் எந்தப் போர்களங்களுக்குச் சென்றீர்கள்? வென்றது எவரை? விழுப்புண் பெற்றீர்களா?

உங்கள் வாழ்க்கையை நினைத்துப் பரிதாபப் படுகிறேம்! இனியாவது திருந்துங்கள். **இப்படியொரு பரம்பரையை வளர்த்து விடாதீர்கள்!** சமுதாய அமைப்பிற்குக்கட்டுப்பட்ட ஓர் ஒழுங்குப் பண்புதான் நீதி! அந்த வரம்பை மீருதீர்கள் !-அப்படி மீறினுல் உங்கள் புகழ்—'போஸ்டர்'களோடு நின்றுவிடும்! பழைய அவல வாழ்க்கை வந்து விடும்!!

வெளியாகிவிட்டது! விற்பனையாகிறது

காவியக் கழகத்தாரின்
நான்காம் படைப்பு!

கவிஞர் கண்ணதாசன்
கவிதைகள்

[இரண்டாம் தொகுப்பு] விலை ரூ. 2-50

விவரங்கட்கு: காவியக் கழகம், சென்னை-5.

அவளும் அவனும்!

கண்களோ கணையை விட கூர்மையானது; ஆண்களைத் தாக்க அது எந்த நிமிடமும் தயங்குவதில்லை ; அதைக் கண்டவர் தாக்குண்டவர் போல் அதிர்ச்சியால் துடிப்பர்—துவளுவர்-சில சமயங்களில்துவண்டுவிடுவ முண்டு கண்களிலே இவ்விதமான அபாய ஆயுதத்தை வைத்திருக்கும் இவள் ஒரு பேரழகின் பிறப்பிடம்; எழில் கொஞ்சும் அழகுச் சோலை! குளிர் பூசும் தென்றல்! மலர் முகத்தாள்; மல்லிகை நிறத்தாள்; மிளிர்கின்ற பொன்னெளியாள்!

பருவம் தன் எல்லைக் கோட்டிற்கு அவளைப் பற்றி இழுத்து வந்து விட்டிருந்தது! அந்தப் பருவநிலா எழில் பெற்ற அழகு நங்கை, ஊராளும் மன்னன் பால் மனதை வைத்து, நீருற்றி வளர்கின்ற செடியினைப் போல் அன்பு நீர் பாய்ச்சி வளர்த்து வந்தாள் தன்காதல் தன்னை !

காதல் வளரும் கதையினையறிந்தாள் தாய்; களவொழுக்க மென்றுலும் கண்டிப்பு தேவையன்றே? எனவே, அந்த நடையலங்காரிக்கு விதித்தாள் தடை! பயிர் காக்க வேலிதனைப் போடுதற்போல், அந்தச் சுந்தரிக்கும் ஊர் சுற்ற முடியாதவாறு வீட்டிற்குள் எல்லை போட்டுக்காட்டி விட்டாள்!

ஏந்திழையாள் என் செய்வாள்? ஏங்கியது போக அவள் நெஞ்சம் வீங்கியதே மிச்சம்!

"இரவிலாவது வந்து நம்மை சந்திப்பானே?" என்ற கேள்வியை மனதில் எழுப்பிக் கொண்டு இரவு முழுவதும் விழித்துக் காத்திருப்பாள்-உடல் நலம் கெடாதவாறு உறங்கவேண்டுமே என்ற எண்ணம் உண்டாகி முயற்சித்தாலும் — அவளால் உறங்க முடியவில்லை!

மரங்களில் உறங்குகின்ற பறவைகள் திடீர் திடீரென்று ஒலியைக் கிளப்பிக் கொண்டே இருக்கின்றன. அவ்வொலியைத் தன் தலைவனின் தேரின் மணியொலியோ என்று விழித்து விழித்துப் பார்த்து ஏமாந்து நின்ருள் !

இந்நிலைமை அந்தப் பட்டுநிகர்ப்பாவைக்குத் தொடர் கதையாகவே அமைந்து விட்டது! இவ்விதம் ஏங்கித் தவிக்கும் தளிர் மேனியாளுக்கு ஒரு நாள் உள்ளத்தில் ஒரு விசித்திர எண்ணம்உதயமாயிற்று!

பகை சூழ்ந்த நேரத்தில் வகையறியாது தவிக்கின்ற குலமல்ல அவளின் குலம்! தொகையறியாது தொடை தட்டிக் கிளம்புகின்ற மறவர் குலமாது அவள்! வேங்கையரின் வழித்தோன்றலான அவள் எதை யெண்ணுவாள்? போர் நிகழ்ச்சியைத் தன் உள்ளத்திலே சித்தரித்தாள்!

வானத்தைத் தொடுகின்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்ற மதில்களையுடைய கோட்டையை அழிக்கும் எண்ணத்தோடு பகைவேந்தன் மிகப் பெரிய யானைப் படையுடன் முற்றுகையிட்டுக் கோட்டையைச் சுற்றிச் சூழ்ந்திருக்க, அந்தப் பாதுகாப்பான மதிலுக்குச் சொந்தக்காரர்கள், 'நமக்குத் தக்க காவலை இக் கோட்டை வழங்குகிறது" என்று நம்பியிருக்கின்ற நேரத்தில் அக்கோட்டையையும், அதைச் சார்ந்த மக்களையும் பாதுகாக்கின்றபொறுப்பு நாட்டுப் பற்றுடைய நல்ல வீரனெருவன் உறங்காது காவலாகக் கோட்டைக்குள்ளேயே காவல் காத்து நிற்கின்ற நிலையினைப்போல் நான் இவ்வீட்டுக்குள்ளே அடங்கித் தவிக்கிறேனே !

அஞ்சக்கூடிய முதலைகளின் பகைக்கும் அஞ்சாது காதல் உணர்ச்சியால் உந்தப்பட்ட தலைவன் இரவு நேரங்களில் வந்த போதெல்லாம் அஞ்சாதிருந்த என் நெஞ்சம் இந் நாட்களில் பறவைகள் எழுப்புகின்ற ஒலியைக் கேட்கும் போதெல்லாம் தலைவனின் தேர் மணியின் ஒலி தானே என்று ஏங்குகின்றதே என் செய்வேன்! ஊரே சேர்ந்து உறக்கத்திலாழ்ந்திருக்க, என் நெஞ்சம் உறக்கத்தை மறந்ததும் ஏனே?

தங்கவயல்
லோகிதாசன்

இரவில் உறக்கமில்லாமல் தவிக்கின்ற இந்தத் தளிர்க் கொடியை நற்றிணையில் அறிமுகப்படுத்துகிருர் உலோச்சனுர் என்னும் புலவர். இதோ அது:—

விசும்புஉறழ் புரிசை வெம்ப முற்றிப்
பைங்கண் யானை வேந்துபுறத்து இறித்த
நல்எயில் உடையோர் உடையம் என்னும்
பெருந்தகை மறவன் போல...சேர்ப்பன்
நாம முதலை நடுங்குபகை அஞ்சான்
காமம் பெருமையின் வந்த ஞான்றை
அருகா தாகிய வன்கண் நெஞ்சம்
நள்ளென் கங்குல் புள்ஒலி கேட்டொறும்
தேர்மணித் தெள்ளிசை கொல்என
ஊர்மடி கங்குலும் துயில்மறந் ததுவே

தலைவன் தலைவியை நீண்ட நாட்களாகச் சந்திக்க முடியாமற் போகவே, அவளைக் காணத் தவியாய் தவித்தான்! தணலில் வீழ்ந்த புழுவாய்த் துடித்தான்! நெஞ்சம் வெடித்துவிடுமோ என்று அஞ்சினுன்.

இரவு படுத்தான்-புரண்டான்-நெளிந்தான்- சுருண்டான் என்றுலும், தூக்கம் அவனைத் தொடக்கூட மறுத்து விட்டது. என் செய்வான்? எழுந்தான் அந்த அமைதியற்ற நிலையிலே! ஏறெடுத்துப் பார்த்தான் இந்த உலகை; அது இரவு மங்கையின் கரங்களிலே இன்பமாகத் தூங்கிக் கொண்டிருந்தது!

இரவு தன் கருமையான இருளை உலகின்கண் எங்கும் பரவவிட்டிருந்தது. எப்பாகத்திலும் சுடுகாட்டு அமைதி சூழ்ந்து நின்றது!

தலைவன் கடற்கரை அமைந்திருக்கும் ஊர்களுக்குச் சொந்தக்காரன். அவன் உள்ளம் கொந்தளிக்கும் கடலாகவே உப்பரிகையிலே உலவிக் கொண்டிருந்தது.

பரந்து விரிந்திருந்த கடலைப் பகற்பொழுதிலும் காண்பதைப் போல் காண முயன்ருன். அவனுல் முடியவில்லை! இரவு மங்கைதான் இருளை எங்கும் பரப்பி விட்டாளே, எப்படிப்பார்க்க முடியும்?வழக்கப்படி கேட்கின்ற அபலைகளின் ஓசையையாவது கேட்கலாமே என்று செவியைக் கூர்மையாக்கிக் கேட்டான். எவ்விதமான ஒளியும் அவனுல் அப்போது அறிய முடியவில்லை.

எந்நேரமும் ஒலி அடங்காத கடலும் ஒலி அடங்கி உறங்குவதாக நினைத்தான்! ஓயாமல் வீசுகின்ற ஊதைக் காற்றையும் உணர முடியாததால் கடற்கரைச் சோலையிலே கண்ணுறங்கி விட்டதோ என்று எண்ணினுன்!

மணல் நிறைந்த இந்தப் பழமையான ஊரில் அகன்ற பெரிய சாலையில் ஆண் கோட்டான் பெண் கோட்டானேடு சேர்ந்து கொண்டு அரிய பெரிய நாற்சந்தியில் அனைவரும் அஞ்சும்படியாக அலறிக் கொண்டிருக்கின்றதே!பேய் உலவும் வேளையென்பார்களே, அந்தநடுநிசியில்பாவை போன்ற அழகு பொருந்தி பருத்த மெல்லிய தோள்களும் உடைய இளமை கொஞ்சும் என் காதலியின் தேமல் படர்ந்த அழகிய மார்பகத்தைத் தழுவி மகிழ எண்ணியெண்ணி கடலில் மீன் உறங்கும் நேரத்திலும் நான் உறங்காது தவிக்கின்றேனே? என் நிலை எங்குதான் கொண்டுபோய் சேர்க்குமோ !

காதலியைக் காண முடியாமல் கலக்கமுறும் இக் காளையை வினைத்தொழிற் சோகீரனுர் என்பார் நற்றிணையிலே அறிமுகப் படுத்துகிருர்.

அது இதோ :—

ஓரும் ஒலிஒ வின்றே; ஊதையும்
தாதுஉளர் கானல் தெளவென் றன்றே;
மணல்மலி மூதூர் அகல்நெடுந் தெருவில்
கூகைச் சேவல் குராலோடு ஏறி
ஆரிருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குடிறும் ;
அணங்குகால் கிளரும் மயங்குஇருள் நடுநாள்
பாவை அன்ன பலர்ஆய் வனப்பின்
தடமென் பணைத்தோள் மடமிகு குறுமகள்
சுணங்குஅணி வனமுலை முயங்கல் உள்ளி
மீன்கண் துஞ்சும் பொழுதும்
யான்கண் துஞ்சேன் யாதுகொல் நிலையே.

அமெரிக்கத் தேர்தல் அறிவுறுத்தும் பாடம் ஜனநாயகத்தின் புதிய திருப்பம்!

அண்மையில் நடைபெற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் உலக நாடுகள் மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தன. வரக்கூடிய குடியரசுத் தலைவரைப் பொறுத்தே உலக சமாதானம் இருப்பதாகவும், வல்லரசுகளின் எடையில் புதிய திருப்பம் ஏற்படக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. காலனி நாடுகளைக் கைவசம் வைத்துக் கொண்டு இன்னும் ஏகாதிபத்தியப் போக்கில் இருந்து வரும் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலண்ட் போன்ற நாடுகளின் நிலையில் மாற்றம் ஏற்படக்கூடும் என்றும் கணிக்கப்பட்டது. அமெரிக்கத் தேர்தல் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. இதில் பல கட்சிப் பிரதிநிதிகள் ஒவ்வொரு மாகாணத்திலும் குடியரசுத் தலைவர் பதவிக்காகப்போட்டியிட்டு இறுதியில் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொருவனைப் பொறுக்கி இவர்தான் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு முடிவான பிரதிநிதியென்று ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இங்ஙனம் நடைபெறும் தேர்தல் இந்தியாவில் நடைபெறும் தேர்தலைவிட மாறுபட்ட முறையாகும். இந்தியாவில் குடியரசுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராகிப் பின் பாராளுமன்றில் உள்ள பெரும்பான்மையைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இவர் பாராளுமன்ற நிகழ்ச்சிகளின் நடைமுறைக்கூட்டங்களிற்கலந்து கொள்வதில்லை. அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரங்கள் எல்லாம்இந்தியக் குடியரசுத் தலைவருக்கும் உண்டு. இந்தியாவில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையும் அமெரிக்காவில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் பொதுக்தேர்தல் நடைபெறும்

அமெரிக்காவில் நடைபெற்ற தேர்தலில் முக்கியமாகக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தநிக்சனும்,ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கென்னடியும் போட்டியிட்டனர். இதில் ஐசன்ஹாவர் குடியரசுக் கட்சியைச் சார்ந்த நிச்சனுக்கு ஆதரவு கொடுத்தார். நிக்சன் செனட் சபை உறுப்பினர். அரசியல் அனுபவம் உள்ளவர். நிருவாகப் பயிற்சியும் பெற்றவர். ஐசனோவருடைய ஒரு மதிப்பையும் உலக நாடுகளின் பரவலான அன்பையும் பெற்றவர். தொடர்ந்து எட்டு ஆண்டுகளாகப் பொறுப்பில் இருந்துவருகிறார். வயதும் ஐம்பதுக்கு மேற் பட்டவர். புராட்டஸ்டண்ட்மதத்தைப் பின்பற்றுபவர். ஆனால் கென்னடி இளைஞர். பெருஞ் செல்வந்தர். கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். இதுவரை அரசியல் பொறுப்புக்களை மேற் கொண்ட அனுபவம் அதிகமாய்ப் பெற்றிராதவர். இவர்தான் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஏன் என்பதைச் சற்று நாம் உற்று நோக்க வேண்டும்.

வே. சௌந்தரராசன்

ஐசனோவருடைய குடியரசுக் கட்சி தனது பலத்தை அமெரிக்க மக்களிடையே இழந்து விட்டது என்பது இதன் பொருளா என்றால் இல்லை. பின்னர் ஐசனோவரின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏதேனும் தகாத விளைவுகள் ஏற்பட்டனவா என்றால், இல்லை வல்லரசுகள் கூடிய உச்சக்கட்டமாநாட்டில் வெற்றியேற்படவில்லை யென்றால் அதற்கு ருசியாவின் பிடிவாதப் போக்குதான் காரணமே தவிர அமெரிக்கா அல்ல என்பது வெளிப்படை. மேலும் இன்று மத்திய கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், செஞ்சீனத்தின் கையைக் கட்டுப்படுத்தி ஓர் வரம்பிற்குள் புரட்சி வாதிகள் இயங்கவும் வைப்பதற்கான ஒரு கொள்கையைக் குடியரசுக் கட்சி மேற்கொண்டது. பொதுவாக நோக்குமிடத்து ஐசனோவரின் திறனுக்குக் குறைவு வந்துவிடவில்லை. ஆயினும் அவரது குடியரசுக் கட்சி வெற்றி பெற முடியவில்லை என்றால் ஆழ்ந்த அரசியல் நோக்கம் எதுவுமில்லை.

தொடர்ந்து ஒரே கட்சியினர் பதவியில் இருந்து வருவதை முற்போக்கு ஜனநாயகத்தை விரும்பிவரும் அமெரிக்கர்கள் விரும்பவில்லை நீண்ட நாள் ஒருகட்சி அதிகாரபீடத்திலிருப்பதால் அதிகாரம் குவிந்து கட்சிக் காரர்களின் எதேச்சதிகாரம் பொதுமக்களைத் துன்புறுத்தக் கூடும். அதிகாரம் நிலையாக ஒரே கட்சியினத்தோ அளவுக்குமேல் குவிந்தோ இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. வாய்ப்புகளை மாற்றி மாற்றிக் கொடுத்துச் சரியான ஜனநாயகப் பண்புகளை வளர்ப்பதோடு அரசியல் காரணமாகப் புதிய நெருக்கடிகள் ஏற்பட்டு விடாமல் உலக சமாதானம் நிலைக்க வழிவகைகாண விரும்புகிறார்கள். ருசியாவோடு கொள்ள வேண்டிய உறவைப் போட்டியாக நீட்டாமல் நல்லுறவாக மாற்றவும் அமெரிக்கர்கள் விரும்புகிறார்கள். இந்தியாவோடு இன்னும் அதிக நெருக்கமான இணைப்பை ஜனநாயகக் கட்சி வற்புறுத்துகிறது. ஆயுதக் குறைப்பு, அணுசக்திக் கட்டுப்பாடு ஆகியவற்றில் தீவிரக் கவனஞ் செலுத்தித் திருத்தமான ஆத்மீகமான வழிகளிற் செல்ல ஜனநாயகக் கட்சி விரும்புகிறது. வளம் பெற்ற வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்கா இன்று ஜனநாயகம் இருக்கவேண்டிய முறைகளைப் பற்றிக் கவலைப்படுகிறதே யொழிய தலைவர்களின் முக்கியத்துவத்தைப்பற்றிப் பொருட்படுத்தவில்லை. ஜனநாயகத்திற்கு யாரும் விதி விலக்கு அல்ல என்பதைக் கென்னடியின் வெற்றி தெளிவாகக் குறிக்கிறது.

ஜான் கென்னடியின் தேர்தல் அறிக்கைகளிலும் சொற்பொழிவுகளிலும் தாம் காலஞ்சென்ற ரூஸ்வெல்ட்டின் உலக சமாதானப் பாதையைப் மேற்கொள்ளப்போவதாகவும், உலக அரங்கில் ரூஸ்வெல்ட்டின் சந்ததி என்பதை மெய்ப்பிக்க இருப்பதாகவும் எடுத்துச் சொல்லி வந்தார். உள்நாட்டு நிர்வாகம் சீரிய முறையில் திருத்தி அமைப்பதில் கவனம் செலுத்தப் போவதாகவும் சொன்னார். இதுதான் சிறப்பான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி அமெரிக்க மக்களிடையே செல்வாக்கை உண்டாக்கிக் கொடுத்து இதுவரை வெளிநாட்டு அரசியல், வெளிநாட்டு வணிகம், வெளி நாட்டுத் தொடர்பு என்றே ஆழ்ந்திருந்த நிலையைத் தம் சொந்த நாட்டு நிருவாக உள் உறுப்புகளின் வளர்ச்சி மற்றும் தளர்ச்சி நிலைகளைக் கண்டு ஆவன செய்யத் திட்டமிடப்போவதாக கூறியது வரவேற்கத் தகுந்ததாயிருந்தது. உள்நாட்டில் டாலர் செலாவணி நெருக்கடியான மதிப்பைப் பெற்றுவருவதும் இதனால் உற்பத்திப் பாதிக்கப்படுவதும் கண்கூடு ரூஸ்வெல்ட் எங்ஙனம் முதன் முதல் ருசியாவோடு 1932-ல் நேசக்கரத்தை நீட்டி உலக நாசத்தைத் தவிர்க்க விரும்பினாரோ அதேபாணியில் கென்னடியும் ருசியத் தொடர்பில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுத்தி அமெரிக்க ஜனநாயகத்தையும். உலக அரசியலையும் கண்காணிக்க விரும்புகிறார். இப்படியொரு எண்ணம் செஞ்சீனாவிலும் நலம் பயப்பதாக அமைக்கக்கூடும். உடனடியாக இல்லையென்றாலும் சிறிது காலத்தில் அமெரிக்காவின் பிடிவாதம் மாறக்கூடும் என்று கென்னடி காலத்தில் நம்பலாம்.

அரசியல் கெடுபிடி; வேலைக்கு இடையூறு!

கூலி உயர்த்தவில்லை; வேலை உயர்த்தியுள்ளது!

இந்த நாட்டை, 'இந்தியா' என்ற புனைபெயரால் ஆண்டு கொண்டிருக்கின்ற மத்திய அரசினர், பலவகையான கொடுமைகளைச் செய்து வருகின்றனர். அதனால் ஆயிரமாயிரமான தொழிலாளத் தோழர்கள் வதை படுகின்றனர். 'இச் செயல், கொடுமையானது!' என்று, யாரேனும் சொல்லிவிட்டால் போதும். உடனே, இங்கிருக்கும் பதுமைகளுக்கும், அங்கிருக்கும் நரிகளுக்கும் கோபம் பொத்துக் கொண்டு வந்து விடுகின்றன. இந்தக் கோபத்தால் ஆவதென்ன? அழிவதுதான் அதிகம்! அந்த அழிவிலே ஒருபகுதிதான் இது:—

இங்கல்ல, பம்பாய்!

மத்திய அரசினர் வேலை நிறுத்தத்தின் எதிரொலி, மழைபோல் தொடர்ந்து இருந்துவருகிறது. இன்றைய எதிரொலி பம்பாய் தலைமை அஞ்சலகத்தில் ஆயிரக்கணக்கான அஞ்சல்களை, அஞ்சல்களுக்குரியவர்களுக்குச் சேர்க்கப்படாமலும், பிரித்தெடுக்க முடியாத நிலையிலும் தேங்கி உள்ளன. இது எதனால்? மத்திய அரசினரின் மமதைப் போக்கால்?

முன்பெல்லாம் பல்லாயிரக் கணக்கான அஞ்சல்களைப் பிரித்தெடுத்து வகைப்படுத்தும் (Sorter) அலுவலாளர்களுக்கு ஒரு சலுகை இருந்தது, ஒரு மணி நேரத்துக்குள்ளாக ஓராயிரஅஞ்சல்களைப்பிரித்தெடுத்து வகைமுறை செய்ய வேண்டும். இவ்வாறு தாம் பணி செய்யும் எட்டு மணி நேரத்துக்குள் எட்டாயிரம் அஞ்சல்களை முறைப்படுத்த வேண்டும். அந்த எட்டுமணி நேரத்துக்குரிய வேலையை— தாம் வேலை செய்யவேண்டிய எட்டு மணி நேரத்துக்கு முன்னதாகவே அந்த எட்டாயிரம் அஞ்சல்களைப் பிரித்தெடுத்து விட்டால் வீட்டுக்குப் போகலாமென்ற ஒரு சலுகை அரசியலாரால் கொடுக்கப்பட்டிருந்தது. அதன்படியே (Sorter) அனைவரும், தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலையைச் சீக்கிரமாகச் செய்து விட்டு வீட்டுக்குச் சென்றனர். அதனால் அஞ்சல்கள் தேங்கவில்லை. குறித்த காலத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் கிடைத்து வந்தது. ஆனால் இன்று-?

அந்தோ, பரிதாபம்! பொது வேலை நிறுத்தம் தோல்வியைத் தழுவியபின், அரசியலார் அரக்கத்தனத்தைத் தழுவத்தொடங்கினர். அதாவது கொடுத்திருந்த சலுகையைப் பறித்துக் கொண்டனர். இன்று முறைமாறிவிட்டது! தொழிலாளருக்குத் தொல்லை அதிகமாகி விட்டது. காரணம், கொடுத்த சலுகையைப் பறித்துக் கொண்டதுதான்!

'எட்டு மணி நேரத்துக்குள்ளாக எட்டாயிரம் அஞ்சல்களைப் பிரித்தெடுத்து வகைப்படுத்தி முடித்துவிட்டாலும் வீட்டுக்குப் போகக் கூடாது!' என்று, சர்வாதிகாரச் செயலைக் காட்டி இருக்கிறது. அந்த எட்டு மணி நேரத்துக்குள்ளாக வேலை முடித்து விட்டாலும் மேற்கொண்டு வேலை கொடுக்கத் தொடங்கி உள்ளனர். அதற்கேற்ற அளவுக்கு அதிக நேரஊதியம் தரப்படுகிறதாவென்றால் இல்லை. பழி வாங்கப்படுகிறது! இதனால் ஊழியர்களும், 'தனக்கென்ன?' என்கின்ற போக்கில், குறிப்பிட்ட வேலையை, குறிப்பிட்ட நேரத்தில் செய்தால் போதும் என்ற எண்ணத்தில் வேலைபார்க்கத் தொடங்கி இருக்கின்றனர். அதனால் நாள் ஒன்றுக்குப் பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் பிரித்து எடுக்கப்படாமலும், சேரவேண்டிய பொது மக்களுக்குச் சேராமலும் தேங்கிய வண்ணம் உள்ளன. இதனால் பாதிக்கப்படுவர்கள் யார்?

பொது மக்கள்! எதனால்? மத்திய அரசினரின் ஆணவத்தால்-அலட்சியத்தால் - அரக்கத்தனத்தால். அவர்களுடைய அரக்கச் செயலால் ஆயிரமாயிரமான அஞ்சல்கள் தேங்கிக் கிடக்கின்றன. இந்தக் கொடுமையான செயல் சாத்வீகத்திற்கு உகந்ததுதானா? சத்திய சோதனைக்கு உட்பட்டதுதானா? என்று கேட்பதைத் தவிர வேறு வழியில்லை. எத்தனையோ வகைகளில் பழிவாங்கும் மத்திய அரசினர், அஞ்சல் துறையில் நுழைந்துமா பழிவாங்க வேண்டும்? ஆகவே இனியாகிலும் இது போன்ற ஈனத்தனமான செயலில் ஈடுபடாமல், ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்த சலுகையை மீண்டும் தொழிலாளர்களுக்குத் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். இல்லையேல் தொல்லைதான்! பொதுமக்களுக்குத் துயரம்தான்!

—வே. கபிலன்

ஆயினும், கத்தோலிக்க மதத்தின் கடுமைகளை இவர் பாராட்டி வருவார். கடந்த பொதுத் தேர்தலில் போப்பாண்டவர் விட்டிருந்த அறிக்கையில் பொதுவுடமையை ஆதரிப்போர் உண்மையான ஒரு கத்தோலிக்கராயிருக்க முடியாது என்று தெளிவுபடுத்தி யிருந்தார். அத்தகையதொரு பிற்போக்கு நெறிகளுக்கு அரசியலில் இடம் கொடுக்காமல் பொது நலம், பொது வளம் என்ற பெருநோக்கால் போனால் கென்னடிக்கு வெற்றியுண்டு. இன்றேல் ஐசனோவருடைய காலத்தையே பெருமைக் குரியதாக மக்கள் நினைக்கும்படி ஆகிவிடும். மதமாச்சரியம் அரசியலைக் குலைத்து அநாகரிகமான குறுக்கு யோசனைகளைக் கொண்டு வந்து விட்ட நிகழ்ச்சிகள் வரலாற்றில் பலவுண்டு என்பதை கென்னடி நன்கு அறிந்து செயலாற்றுவார் என்று உலகம் எதிர்பார்க்கின்றது.

திரைஒலி

தேவர் பிலிம்ஸ்

யானைப்பாகன்

வெறும் மனிதர்கள் நடிக்கும் படங்களைப் பார்த்துப் பார்த்து ... அவர்களின் ஆசாபாசங்களையும், வாழ்க்கையின் வெற்றி தோல்விகளையும் முதலாளி தொழிலாளிப் போராட்டங்களையும், மேட்டுக் குடியினரின் கொடுமைகளையும், காதல் தோல்விகளையும் பார்த்து, ரசித்து மங்கிப்போனகண்களுக்கு புதிய விருந்து படைத்துள்ளார்கள் தேவர் பிலிம்சார்

சிறுத்தைக்கும் மனிதனுக்கும் சண்டை!

புலிக்கும் காட்டெருமைக்கும் போர்!

கரடிக்கும் புலிக்கும் சண்டை!

யானைக்கும் யானைக்கும் சண்டை!

பாம்புக்கும் முதலைக்கும் சண்டை!

இது பாராட்டுக்குரிய முயற்சிதான்: ஆனால்...தமிழ்த் திரைப்படமென்றால் எப்படியும் அந்த வெள்ளைத்திரையை மூன்றரை மணி நேரத்திற்கு படம் ஆக்கிரமித்துக்கொண்டு, ரசிகர்களின் இடுப்பொடியச்செய்து — தமிழ் திரைப்படக் கொட்டகைகளிலுள்ள மூட்டைப் பூச்சிகளுக்கு ஒரு அவுன்ஸ் இரத்தத்தையாவது ரசிகர்கள் தியாகம்செய்யவேண்டுமல்லவா அந்த மூன்றரை மணி நேரத்தில் அதற்கு சவ்வுமிட்டாயைப்போல் இழுத்த பக்கம் ஓடும் கதை தேவை! இது தமிழ் திரைப்பட உலகப் பாரம்பரியம்! இந்த வழிக்குமாறு பட்டதல்ல யானைப் பாகனின் கதை.

ஒரு எஸ்டேட்டையும், அதற்குள் அடங்கிய காட்டையும்சுற்றி ஓடுகிறது. கதை, காதல், வீரம், சோகம், நகைச்சுவை இருக்கிறது கதையில்.

ஜமீன்தாராக வருகிறார் எஸ்.வி. சுப்பையா கொடுத்த எந்தப்பாத்திரத்திற்கும் உயிர் கொடுப்பவர் அவர் சிறப்பாக நடித்துள்ளார்.

வில்லனுக்கு... வீரப்பா! நடிப்புக் கச்சிதம்.

யானைப்பாகனாக வருகிறார் உதயகுமார் நடிப்பில் — பிரபல தமிழ்நாட்டு நடிகர் ஒருவரின் சாயல் தெரிந்தாலும் ரசிக்க முடிகிறது. ஆனால் குரல் அவருக்கு கொஞ்சம்கூட ஒத்துழைக்கவில்லை முயற்சித்தால் முன்னுக்கு வரலாம்.

யானைப்பாகனின் காதலி சரோஜாதேவி இயற்கைக் காட்சிகளின் எழிலோடு அவர்எழிலையும் ரசிக்க முடிகிறது. நடிப்பும் உண்டு சில இடங்களில் ராஜகோபாலும், மனோரமாவும் சில இடங்களில் சிரிக்க வைக்கிறார்கள்.

யானையும் யானையும் மோதிக் கொள்ளும் காட்சி, பாம்பும் முதலையும் கட்டிப்புரளும் கோரம் இவை இமை கெட்டாமல் பார்க்க வேண்டிய காட்சி! யானைபிடிக்கும் வித்தையும் பார்க்கவேண்டிய பகுதி.

திரையில் கேட்கமட்டும் இனிமை—''பதினாறு நிறைபாத பருவமங்கை'' என்ற பாட்டு!

படத்தின் முக்கால் பகுதி அத்தனையும் வெளிப்புற இயற்கை காட்சிகள். காடு, மலைகள், பாய்ந்தோடும் நதிகள் இத்தனையும் கண்ணுக்கு நல்லவிருந்து.

குறிப்பிடத்தகுந்த எந்தக்காட்சியையும் ஆங்கிலப்படங்களிலிருந்து வெட்டி-ஒட்டிச் சேர்க்காமல் மிகுந்த சிரமப்பட்டு நேரடியாகப்பட மாக்கியிருக்கும் தேவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஆனால்—இது காட்டுப்படம்!

எல்லாருக்குமா பிடிக்கும்.

தினகரன்

செங்கற்பட்டு மாவட்ட

தி. மா. மு. கழக

முதல் மாநாடு

4—12—60 ஞாயிறு காலை 9 மணி முதல் இரவு 12 மணி வரையில் தாம்பரம் சானிடோரியம் வைரம் டாக்கீசில் நடை பெறும்.

அனைவரும் திரண்டு வருக!

—செ. மா. தி. மா. மு. க

ஏவி. எம்.

திலகம்

வடக்கின் வாடை ஆரம்பத்தில் வீச, தெற்கின் திருவிழா இடைவேளையில் நுழைய, கதையின் கருத்துக் கலகத்தை மூட்ட இப்படித் தான் திலகம் வெளி வந்துள்ளது.

கதை கலகத்தை மூட்டக் காரணம், தந்தைக்கும் மகளுக்கும் திருமணம் நடக்கவேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது, பொருத்தமற்றது என்றாலும் பொருந்தும்படி இணைத்துள்ளனர்,

தெள்ளிய நீரோட்டம் போன்ற கதையோட்டம் எளிதில் புரிகிறது. ஆனால் எக்கட்டமும் விறு விறுப்பில்லை.

நடிப்பு :—இதைப் புரிந்து கொண்டவர்கள் : குலதெய்வம் ராஜகோபால், எம். என். ராஜம் மற்றவர்களுக்கெல்லாம் வலிப்பு.

பாட்டு:—''சந்தேகம் என்னும் ஒரு சரக்கு'' பரவாயில்லை.

மற்றவை வெத்துவேட்டு

இசையமைப்பாளர் சுதர்சனத்திற்கு விமர்சனம் தேவையில்லை. விபரீதம்.

இயக்குநர் கிருஷ்ணன் பஞ்சு என்றுமே தோல்வி கண்டதில்லை.

படத்தின் பாதிக்குச் சொந்தக்காரர் இயக்குநர்;மீதிக்குச் சொந்தக்காரர் ராஜகோபால்; நம்பணத்திற்குச் சொந்தக்காரர் ஏவி. எம். மொத்தத்தில்:—

ஏவி. எம்முக்கோ ஒருபொழுது போக்கு; நமக்கோ மனக் கசப்பு.

இளவல்

இரத்தினம்

வாக்குறுதி

கதை, வசனம், டைரக்ஷன் பேரையூர் நடராசன்.

கதையில் புதுமை இல்லை!

பாடல்கள் இனிமையாக இருந்தன. ஆண் நடிகர்களைக் காட்டிலும் பெண் நடிகர்கள் நன்கு நடித்தனர்

ஆடை அணிமணிகள், ஒப்பனை சிறப்பாக இருந்தது.

நாடகத்தை அரங்கேற்றியவர்களுக்கு...

முயற்சி அதிகம்!

பயிற்சி குறைவு!

வாக்குறுதி :-நாடகம்: வேகாத சோறு! அதற்குள் விருந்துவைத்திருக்க வேண்டாம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்புற்ற கலைஉலகில்
கலைஞனுக்குவது
ஒழிய வேண்டும்.

கலைப்பண்பும் உயர் நினைப்பும்
கொண்டவனே கலைஞனென
அறிவுலகம் ஏற்கும்!

என்பதை நீ நன்கு உணர வேண்டும். இனியாவது நீ, தெளிவுப்பெற்று உண்மை எழுதி நல்ல நிலைபெற வேண்டுகிறேன்.

பார்த்தாயா நாகராசா, உனக்குநீண்டமடல் தந்துவிட்டு, மக்கள் பத்திரிகையை மறந்தே போய்விட்டேன். நல்ல முறையில் விமர்சனம் எழுதிய விமர்சகர் நண்பர் தினகரனுக்கும், வெளியிட்ட 'இனமுழக்கத்திற்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 'எனக்கு எழுதியக் கடிதத்தில் இனமுழக்கத்திற்கும் நன்றியா' என்று நீ, என்மீது சினம் கொள்ளவேண்டாம்!

உன் ஜோசியன்,

—குடந்தை இமையன்

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம், தென்னகத்தில்உள்ள தலை சிறந்த பாங்குகளில் முன்னணியில் நிற்பதும் இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஒன்பதாவது பெரிய பாங்கு என்று கருதுப்படுவதுமான "இந்தியன் பாங்கி',கள் நீதி நிலைமை பற்றி யாரோ கிளப்பி விட்ட வீண் புரளியை நப்பி பொதுமக்கள் போட்டிருந்த பணத்தை பாங்கிலிருந்து திரும்பப் பெறத் துவங்கினர், இந்த வீண் வதந்தி தென்னகம் முழுவதும் பரவி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டன. இந்த செய்தி அறிந்த நமது மாநில நிதியமைச்சர் அரசாங்க பாங்கு கவர்னரைக்கலந்து கொண்டு வெளியிட்ட அறிக்கை எல்லாருடையஉள்ளத்திலும் ஆறுதலை அளித்திருந்தது. திரு ஈ; வே. கி. சம்பத் அவர்கள் மத்திய நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் கேட்ட விளக்கத்திற்கு மந்திரி தந்த ஆறுதல் எல்லாருடைய கவலையையும் நீக்கி இருக்கிறது தக்க சமயத்தில் அரசாங்கம் முன் வந்து பிரச்சனையை தெளிவு படுத்தியது வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் மிக்க நன்மையாக இருக்கிறது. இதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்கத்தாரையும் திரு. ஈ. வே. கி. சம்பத் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

அன்புள்ள,

பா. பாண்டுரங்கன்

உடுமலைப் பகுதியில் திராவிடத் தொழிலாளர் சங்க நிர்வாகிகளுக்குத் தொல்லையா?

தொழிற்சங்கச் செயலாளர் க. அன்பழகன் அறிக்கை

தொற்சங்கச் செயலாளர் க. அன்பழகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருப்பதாவது :—

கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டையில் திராவிடக் கலாசுத் தொழிலாளர் முன்னேற்ற சங்கமும், மோட்டார் தொழிலாளர் சங்கமும் தி. மு. க. சார்பில் திறம்பட செயலாற்றி வளர்ந்து வருகின்றன'

இதனைப் பொருதமாற்றுக் கட்சியினரும் போட்டித் தொழிற் சங்கம் அமைக்க எண்ணுவோரும் நமது தொழிற்சங்க வளர்ச்சியைத் தடுக்கப் பல வகையிலும் தொல்லை தர முனைந்துள்ளனர். சில தொழிலாளிகளும் தாக்கப்படுகின்றனர்.

அத்துடன் உடுமலை காவல் துறையினரும், மாற்றுக் கட்சியினர் தூண்டுதலால் நமது தொழிலாளர்களை மிரட்டுவதாகவும், அவர்கள் மீது வழக்குத் தொடர முற்படுவதாகவும், நமது தொழிற்சங்கத்தினர் தெரிவிக்கும் புகார்களைக் கவனிப்பதில்லை என்று தெரிகிறது.

இந்நிலை நீடிக்குமானல் அந்த வட்டாரத்தில், தொழிலாளரிடையே வீண் குழப்பமும் சச்சரவும் வளர ஏதுவாகும் என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து 'கடமை, யைச் செய்ய முற்பட வேண்டும்.

நமது சார்புடைய தொழிலாளர்களும், மற்றவர்களும் தொல்லைகளையும் துன்பத்தையும் பொறுத்து அமைதி காக்க வேண்டுகின்றேன்.

காவல் துறையினர் பாரபட்சமின்றி குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க முற்படுவர் என நம்புகிறேன்.

ஆசிரியர் : சி.பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பா வள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

இனமுழக்கம்

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

மலர் 2] ★ 2—12—60 ★ [இதழ் 14

பட்டிணத்தாருக்குப் பட்டை நாமம்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மூக்கறுபட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடறி விழுந்து, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டிணத்தாருக்குப் பட்டை நாமம் என்ற அளவில் போய்க் கொண்டிருக்கிறது, திட்டக் கமிஷன். மானம் போனுலும் போகட்டும், பதவி நிலைத்து வயிறு நிரம்பினுல்போதும் என்ற அளவுக்கு பட்டிணத்தார் காமராசர் சர்க்கார் மௌனமாயிருக்கிறது.

இங்கே எதிர்க்கட்சிகளை அடக்கக் கேலியும், கிண்டலும் நையாண்டி செய்வதில் குறைவில்லை. என்னமோ இவரே சகல கலாவல்லவர் மாதிரியும் இவர் ஆட்சியில்லா விட்டால் பட்டணமே பாழாய் வங்காளக் குடாக் கடலிலே விழுந்து விடுவதைப் போலவும் மேடைகள் தோறும் பீத்திக் கொள்வதிலே கொஞ்சமும் குறைவில்லை.

வடவரைக் கண்டவுடனே தாசர் புத்தி தலைக்கேறி அவர்கள் முன்னுல் கைக்கட்டி வாய்ப்பொத்தி எசமான் காலாலிட்ட வேலையைக் கையால் செய்யும் அடிமைப் புத்தி தலைக்கேறி நிற்கும் இவர்களுக்கு ஒரு சுதந்திரம் கேடு. சூடு சொரணையில்லாத மாடுகூடச் சில நேரம் முட்டவரும். இதுகளுக்கு அது கிடையவே கிடையாது.

வங்க முதலமைச்சர் கேட்டாரே, 'எங்கள் மாநிலத்துக்கு என்ன வேண்டும் என்பதை நாங்களல்லவா தீர்மானிக்க வேண்டும். இந்தத் திட்டக் கமிஷன் யார்? இதற்கென்ன தெரியும்?' என்று தாடையில் அறைந்த மாதிரி கேட்டாரே, அந்த மான உணர்ச்சி ரோஷம் இதுகளுக்கிருந்திருந்தால், சேலம் இரும்பு, சேது சமுத்திரத் திட்டம், புதிய ரயில் பாதைகள், நவீன தொழிற்சாலைகள் என்ற திட்டங்கள் எல்லாம் ஏன் பிளேக் நோயால் அகப்பட்டுக் கொண்டு, இன்ருே நாளையோ என்றிருக்கின்றன,

டில்லிக்குப் போவதும் வருவதும்தான் பெருமையாகப் பேசுகின்ருர்களே தவிர போய் என்ன சாதித்தார்கள். அங்கு போய்த் திரும்பியவுடன், சாதித்து வேரோடு சாய்த்துக் கொண்டு வந்ததை ஒன்றும் சொல்வதில்லை. இருந்தாலல்லவா சொல்ல! பிள்ளைகளுக்கு கஞ்சி ஊற்றினேன், பள்ளிக்கூடம் கட்டினேன், பாலம் திறந்தேன் என்று சொல்வதைத் தவிர வேறு இல்லை. ஊரார் சொத்தில், பத்து நாள் திருவிழா நடத்தினேன். சாமிக்குப் பச்சைப் பதக்கம் செய்து சாற்றினேன் என்று கோயில் தருமகர்த்தா சொல்லிப் பெருமை பட்டுக் கொள்வதற்கும், இவர் சொல்லிப் பெருமை பட்டுக் கொள்வதற்கும் என்ன வேற்றுமை?

விசித்திரமான வாதம்

தென்னுட்டுக்கு ஏன் தொழிற்சாலை இல்லை என்ருல் ரயில்கள் போதுமான அளவு இல்லை. அதனுல் தொழிற்சாலைகள் இல்லை. சரி, ரயில்கள் ஏன் போதுமான அளவு இல்லை என்ருல், தொழிற்சாலைகள் இல்லை, அதனுல் ரயில்கள் இல்லை என்கின்றனர். இந்த மடத்தனமான சமாதானத்தை எதற்கு ஒப்பிடலாம் என்ருல், கலியாணம் ஏன் ஆகவில்லை என்ருல், பைத்தியம் தீரவில்லை என்பதும், பைத்தியம் ஏன் தீரவில்லை, என்ருல், கலியாணம் ஆகவில்லை அதனுல் பைத்தியம் தீரவில்லை என்று சொல்வதற்கு ஒப்பிடலாம்.

எப்படியும், எந்த உருட்டல் மிரட்டல்களைக் கொண்டாவது தென்னுட்டை அடக்கி விடலாம் என்ற துணிகரம் அவர்களுக்கு எப்படி வருகிறதென்ருல், காமராசர் இருக்கும் வரை இந்தத் தில்லுமுல்லுகளைச் செய்து விடலாம் என்று திடமாக நம்புகின்றனர். அதற்கேற்ற மண்ணுங்கட்டிப் போலத்தான் இருக்கிறது காமராசர் அமைச்சரவை. ஆனுல் அந்த ஆட்சி மாறினுல் நிலைமை என்னுகும் என்பதினுல்தான், காமராசரைப் போல கெட்டிக்காரர், அவரைப் போலத் தியாகி வேறு யார் இருக்கிருர்கள், என்று முதுகில் தட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த ஐயோ பாவமும் எந்தனுக்கோர் ராசா இல்லை, நானே ராசா என்ற தெம்பிலிருக்கிருர். மக்களை நல்வழியில் ஆளமுடியாத இடங்களிலெல்லாம் இதைப் போன்ற ரௌடி ராச்சியம்தான் நடந்திருக்கிறது. அது சீக்கிரமே முடிந்தும் போய்விட்டிருக்கிறது. இங்கே மந்திரிகளே அடாத செயலைச் செய்ய வேண்டுமென்பதில்லை. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரே செய்ய வேண்டுமென்பதில்லை. தோழர் அளகேசனின் அக்காள் மகனே, தங்கை மகனே, ஒரு காலிப்பயலிருக்கிருன். ராஜேந்திரன் என்ற பேரால், அவன் சில காலிகளைக் கூட்டிக் கொண்டு, கருங்குழி, மதுராந்தகம் இந்தப் பகுதிகளில் செய்யும் அட்டகாசம் கொஞ்சம் நஞ்சமல்ல. இதற்கு மதுராந்தகம் போலீசும் உடந்தையாக இருக்கிறது என்ற செய்திகள் பத்திரிக்கையில் அடிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சில போலீஸ்கார அதிகாரிகளுக்கு என்ன சொன்னுலும் நல்ல புத்தி வராது போலிருக்கிறது. தோழர் சம்பத் சொன்னபடி அந்தமாதிரி அக்ரமமாய் நடந்துக் கொள்ளும் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு முன்னுல் மறியல் செய்வது தவிர வேறு வழி இல்லை போல் தோன்றுகிறது. ஒருவர்தான் இப்படி நடந்து கொள்கின்ருர்கள். அவர்களும் தங்கள் சொந்தப் புத்தியில் இப்படி நடந்து கொள்ளுகின்ருர்கள் என்று சொல்வதற்கில்லை. அளகேசன், அவர் மருமகன் மிரட்டல், உருட்டல், ஆகியவைகளே அவர்களை அப்படி நிலை மாறிக் கடமை தவறி நடக்கச் செய்கின்றன. நீதியாய் நடக்க முடியாததைக் காட்டிலும் உத்தியோகம்தான் பெரிது என்று எண்ணுவது பேதமை மாத்திரமல்ல, அற்பத்தனமும் கூட. ஏனெனில் மந்திரிகள் மாறக்கூடும், ஆனுல் போலீஸ்காரர்களும, அதிகாரிகளும் அந்த நிலைபெற்றவர்களல்ல. காலாவதி வரையிலும் வேலை செய்யக் கடமைப் படடவர்கள். அதற்குள் எந்த மந்திரி சபை வருமோ, அல்லது வேறு யார் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக வருவார்களோ - யார் கண்டார்கள்:

ஆகவேதான் காங்கிரஸ் திடீர் தேச பக்தர்களே! காங்கிரஸ் சர்க்காரே! அதுவும் ஏழைப்பங்காளர் என்று பெருமைபட பேசிக் கொள்ளும் காமராசரே! தென்னகத்தில் காட்டும் கைவரிசை எல்லாம் வடநாட்டாரிடம் காட்டுங்கள் பார்க்கலாம், அவ்வளவு திராணி ஏது உங்களுக்கு? வெளி எதிர்ப்பை சமாளிக்க முடியாத கோழை, வீட்டிலிருப்போரை போட்டடிப்பதைப் போன்ற நிலையாயிற்றே உங்களுடையது.

ஒவ்வொரு தரமும் டில்லிக்குச் சென்று வரும் நீங்கள் செய்த செலவெல்லாம் வெட்டிச் செலவு என்பது தவிர வேறென்ன வெளி நாட்டு யந்திரங்களை தருவிப்பதானுல் ஸ்டர்லிங், டாலர், இடங்கொடுக்கவில்லை என்று அவர்கள் சொல்லும் சமாதானத்தை அப்படியே கிளிப்பிள்ளை ஒப்படைப்பது தவிர வேறு என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

குழந்தைகள் உணவு

யந்திரங்கள்தான் வெளிநாட்டிலிருந்து வருகிறதென்பதல்ல, குழந்தைகள் உணவு (கௌ அண்ட் கேட்) போன்ற உணவுகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி யாகின்றவை. அவைகளும் கிடைக்கவில்லை. எங்கு போனுலும் இல்லை இல்லை என்ற பதில் தவிர வேருென்றும் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் ரூ. 5-50க்கு வாங்கவேண்டிய டின் ரூ. 6-50 அல்லது 7-50 கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது.

வர வர சில வியாபாரிகள் திருடர்களாய், பகற்கொள்ளைக்காரர்களாய் விட்டார்கள். இவர்களுக்கெல்லாம் எப்போதுதான் இந்த சர்க்கார் நல்ல புத்தி புகட்டுமோ தெரியவில்லை. இந்தச் சர்க்காருக்கு நல்ல புத்தியில்லையே, இது எப்படி தேர்தல் நிதி கொடுக்கும் திருட்டு வியாபாரிகளைத் திருத்தப் போகிறது. சாக வேண்டியவர்கள் மக்கள். அந்தச் சவக்காட்டின் சாம்பலைப் பூசிக் கொண்டு ஊர்வலம் வரவேண்டியது சர்க்கார்.

கண்ணுல் சரக்கைக் கண்டுவிட்டு எவனுவது, அதோ இருக்கிறதே வைத்துக்கொண்டே இல்லை என்று சொல்லுகிறீர்களே என்ருல், அது கலெக்டருக்கு, இது தாசில்தாருககு, மற்றதெல்லாம் மந்திரிகளுக்குச் சொந்தக்காரர்களுக்கு என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளும் யோக்கியதையிலேதான் இருக்கிருர்கள் வியாபாரிகள்.

அந்த வியாபாரிகளுக்குச் சாதகமாகத்தான் இந்த சர்க்காரும் அடிக்கடி நியாயவிலைகொண்டு வரப்போகிருேம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது, இதைக் கேள்விப்பட்டவுடனே நிலச்சுவான்தார்களும், வியாபாரிகளும் சரக்குகளைப் பதுக்கி வைத்துவிடுகிருர்கள். பிறகு பொது மக்கள் நிலை என்ன? இதை எல்லாம் வளர்த்துவிட்டு, மக்களை அன்ருட வாழ்க்கைக்கே திணற வைத்து, மன எழுச்சியோ, அரசியல் புரட்சியோ ஏற்படாமல் ஐந்தாண்டு திட்டங்களிலெல்லாம் பட்டிணத்தாருக்குப் பட்டை நாமம் போட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

அன்புள்ள,

சி. பி. சிற்றரசு.



★ சமுதாயம் உறங்கிக் கொண்டிருந்த நேரம் அதற்கு உட்பட்ட இரு உயிர்கள்மட்டும்'காதலைவியாபாரிக்கு விற்றுவிட்டுக் கிடந்தன. ஆனுல் ?

சிறுகதை :

கசங்கிய மலர்

ஓ. என். ராஜ்

ஏந்த மனிதனின் வாழ்க்கைப் பாதையும் செப்பனிட்டு சீரோடு அமையவில்லை. இயற்கையிலேயே அதில் எத்தனையோ மேடு பள்ளங்கள். எண்ணற்ற முட்புதர்கள் — தென்றல் தவழும் சோலைகளுமுண்டு. மனிதன் தன் வாழ்வில் ஏற்படும் பள்ளங்களையும், மேடுகளையும், முட்புதர்களையும் கடந்து தாண்டிச்செல்ல எண்ணும் பொழுதுதான் அவன் வாழ்வலே போராட்டமென்னும் புயல் வீசத் தொடங்குகிறது. வாழ்வுப் போராட்டம் அப்பொழுதுதான் ஆரம்பமாகிறது. இந்த நிலைக்கு ஒவ்வொரு மனிதனும் வரும் சந்தர்ப்பத்தில்தான் உலகில் கொலை - களவு - பயங்கர நிகழ்ச்சிகள் நடைபெற ஆரம்பிக்கின்றன. ஆனுல் ஒரு பெண்ணின் வாழ்வுப் பாதையானது பாசிபிடித்த கல்லின் மீது அமைக்கப்பட்டிருக்கிறது. அவள் அதன் மீது மிகவும் கவனத்துடன் நடந்து செல்லவேண்டும். கொஞ்சம் தவறினுல்.....! அவள் பாதையில் காக்கவேண்டியப் பொருள்கள் நிறைய இருக்கின்றன. கண்டு ஒதுங்கவேண்டிய இடங்களும் பல உள்ளன. கருத்தறையை இருட்டாக்கி, கண்ணை மூடிக்கொண்டு வாழ ஆரம்பித்தால் அவளுக்கு உலகிலே அமைதி இருக்காது — அவள் வாழ்விலே நிம்மதி இருக்காது— கருத்திலே தெளிவிருக்காது. ஏன் இந்த நிலைக்கு அவள் வர வேண்டும்...? இந்த நிலைக்கு வந்து ஊர் கோடியிலே வாழ்ந்து தமக்கு ஒரு முடிவை ஆற்றிலோ —கிணற்றிலோ — அல்லது தொங்கும் கயிற்றிலோ காண்கிருர்களே அத்தகையவர்களைக் கண்டும், அவர்கள் கதையைக் கேட்டுமா? இன்னும் இந்த இள ஆண், பெண் சமூகம் திருந்தவில்லை. 'காதல் காதல்' என்று இளங் கன்னியர் வாழ்வைக் கெடுத்து இன்ப உணர்வுகளை அவளது இளமை உதிரத்தில் பாய்ச்சி, மெய் மறந்திருக்கும் அந்த நேரத்திலே தன் காமப் பசியைத் தணித்து அவள் கண் விழிக்குமுன் எழுந்து ஓடும் காமப் பிசாசுகள் உலவும் வரை இதற்கு ஒரு முடிவே இருக்காது —ஒரு வழியும் பிறக்காது. அது வரை வனஜா போன்ற ஆயிரமாயிரம் பேதைப் பெண்கள் அழுது, அழுது சாகாமல் செத்துக் கொண்டிருக்க வேண்டியது தானு...?

வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட காதல் குழியில் வழுக்கி விழுந்த வனஜாவைப் பார்த்து, வாழ்ந்தவர்கள் சிரித்தார்கள்— பார்த்தவர்கள் பரிகசித்தார்கள்— எஞ்சியவர்கள் ஏளனம் செய்தார்கள். எல்லோருமே தூற்றினுர்கள்—தூஷித்தார்கள். எதையோ திருடிவிட்டு எங்கேயோமறைந்து வாழும் திருடன்போல வீட்டின் ஒரு மூலையிலேயே பதுங்கி—பதுங்கி காலத்தைக் கழித்துக் கொண்டு வந்தாள். கண்ட பெண்களெல்லாம் காரிக்—காரித் துப்பினுர்கள், கற்புக்கரசி தாம் என்ற நினைப்பால், இதையே தருணமாகக் கொண்ட காலிகளும், கயவாளிகளும் கட்டழகி அவளை கருவண்டு வெண்மலரை மொய்ப்பதுபோல் ரீங்காரம் பாடிக்கொண்டே வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். வாட்டமுற்ற வதனத்தோடு வாழவகை தெரியாமல் இருந்த அந்த நிலையிலும் வனஜா காசுக்கு ஆசைப்படவில்லை. கற்பை விற்று காரும், ஊரும் வாங்க அவள் பிரியப்படவில்லை. கையிலும் காசில்லாமல், கலயத்திலும் கஞ்சியில்லாமல் காலமெல்லாம் இப்படியே வாழ்ந்து அழிந்து இறந்தாலும் இறந்து விடுவேனே தவிர காசிற்காக கண்டவனேடு கூடி, — உறவாடி — நான் உனக்கே சொந்தம் என்று முறை கொண்டாடி காதல் கீதம் பொழிந்து களவியலைக் கையாண்டு வாழ மாட்டேன் என்று ஊருக்கு,— உலகத்திற்கே எடுத்து சொல்லிக் கொண்டிருந்தது அவளது மனச்சாட்சி. இருந்தபோதிலும், ஊர் அவளை ஏன் தூற்றவேண்டும்? சமூகம் அவளை ஏன் ஒதுக்கவேண்டும்? அப்படி என்ன குற்றம் தான் செய்து விட்டாளவள்? யாருமே செய்யாததை அவள் செய்துவிடவில்லை! கன்னிப் பெண் — கட்டழகி — கட்டுடையாதவள் கல்யாணமின்றி கையிலே கைக்குழந்தையை பெற்றெடுத்ததுதான் பேரிடியை— பெரும் துயரை அவளுக்கு அளித்தது. கண்டவனை கண்ணடித்து காரிருளில் 'வா' என்று கண்ணுல் பேசி காலமெல்லாம் கண்டவனேடு காதல் கீதம்பாடி— சேர்ந்து ஆடி, களிப்பில் ஆழ்ந்ததினுல் பெற்றெடுத்த குழந்தையல்ல அது-ரோஜாவும், முல்லையும் பரப்பிய மஞ்சத்திலே ராஜாக்கள் பலரை அழைத்துக்கூசாமல் பேசி புரண்டதினுல் பெற்றெடுத்த குழந்தையல்ல அது - வெட்டும் விழிகளால் பேசி, தன் கொவ்வை உதடுகளை திறந்து முத்துப்போல் பல்லைக் காட்டி - அன்ன நடையிட்டு - அழகிய பின்னலிட்டு— அங்கங்கள் அசைந்திட ஆடிக் காட்டி-கண்ணிற்கு மைதீட்டி— கைக்கு வளையல் பூட்டி - கால் சிலம்பு முழங்கிட 'கண்ணு வா' யென்று மோகன புன்னகையை சிந்தியவாறே 'சித்திரப் பாவை' என்னைப்பார் என்று கொஞ்சு மொழி பேசி சிரிக்க - சிரிக்க சிந்தையிழந்து நிற்கும் வாலிபர்களைக் கட்டித்தழுவி கைக்கோத்துக் கட்டியதால் பெற்றெடுத்த குழந்தையல்ல அது-தனவந்தன் மடியிலே புரண்டு, அவன் அமுதும் தேனும் ஊட்ட தன் அகன்ற மார்பைத் திறந்து காட்டியதால் பெற்றெடுத்த குழந்தையல்ல அது. கொண்டவன் காப்பான்- நேசித்தவன் பூஜிப்பான் என்ற ஆசையினுல் கன்னிப் பருவத்தின் துடிப்பில் இருந்த வனஜா வாலிபனெருவனை நேசித்தாள். உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவனுக்கே அர்ப்பணித்துவிட்டு அல்லும், பகலும் அவனருகிலேயே அமர்ந்து அடையவேண்டிய இன்பங்கள் அத்தனையையும் அடைந்தாள். "நீ இல்லை யென்ருல் நானுமில்லை யென்ருன்." நிலைத்தது நமது ஆசை என்ற பூரிப்பில் நினைவிழந்தாள் வனஜா. அவன் வேண்டும் பொழுதெல்லாம் விரைந்தோடிச் சென்று, போதும் என்ற அளவு வரை பொறுமையாக இருந்து புன் சிரிப்போடு திரும்புவாள். இந்த வாழ்வு என்றும் நிலைத்திருக்கும் என்று தான்முதலில்நினைத்தாள், அந்தப் பேதைப் பெண். கட்டிய கணவன் மனைவியாக வாழப்போகிருேம் என்றுதான் கற்பனைக் கோட்டைகள் கட்டியது, அந்த பேதையுள்ளம். உலகமும், சமூகமும், தூற்றி எதிர்த்தாலும் எதையும் லட்சியம் செய்யாது என்னையே என்றும் ஏற்றுக் கொள்வார் என்றுதான் எண்ணினுள். என்னைப் பார்த்த அவரதுகண்களுக்கு எழிலரசி எவளும் அழகு படத் தோன்ற மாட்டாள் என்றும் நம்பினுள். பேதை யெண்ணம் பின்னுல்தானே உணரும். மதுவை அருந்திய பின் மதுக்கோப்பையைத் தூரவிட்டெறியும் குடிகாரர்களும் இருக்கத்தான் செய்கிருர்கள் என்பதை அவள்அன்று மறந்தே போனுள். தேனைச் சுவைத்த பின் வண்டும் அந்த மலரை சுற்றி-சுற்றி வருவதில்லையே. அந்த நிலையில்தான் இன்று அவளும் ஆக்கப்பட்டிருக்கிருள்.

சென்னையே தஞ்சமென வந்து ஒரு வீட்டில் காலியிருந்த தனியறை யொன்றை வாடகைக்கு எடுத்து தங்கிக்கொண்டு எங்கேயோ வேலைக்கு போய்க்கொண்டும், வந்துக் கொண்டிருக்கிருன் ராஜா. அவன் தங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரர்கள் நல்ல குடும்பத்திலே வந்தவர்கள். நாணய மிக்கவர்கள். சொக்கலிங்கம்தான் அந்த வீட்டின் சொந்தக்காரர். அவரது அன்பு மனைவிதான் அம்புஜம். அவர்களின் ஒரே அருமை மகள் அமுதா. அவள் தனது வாழ்க்கையில் எதற்காக ஓடோடி வந்தாளோ - வளர்ந்தாளோ. அந்தப் பருவக் கல்லை இன்றோ அல்லது நாளையோ அடைய துடிதுடித்துக் கொண்டிருக்கிருள். அழகிற்கு அழகு செய்ய அவளது கூந்தல் அலங்காரத்திற்கு தினமும் வனஜா வாடிக்கையாக 'பூ' கொடுத்து வருகிருள்.

வனஜா ஒரு பூக்கார குடும்பத்திலே பிறந்தவள். தத்தி-தத்தி நடக்கும் அந்த இளம் வயதிலேயே தந்தையைப் பறிக் கொடுத்துவிட்டு தாயின் அரவணைப்பிலே வளர்ந்து வந்தவள். வனஜாவின் வருங்கால வாழ்விற்காக அவளது தந்தை ஆஸ்தியாக விட்டுச் சென்றது ஒரு பாழடைந்த மண்வீடும், பூசுமக்க உதவும் கூடைகளும், தட்டுகளும் தான். இதைத் தவிர அவளுக்கு வேறு ஒரு அடி மண்ணே அல்லது ஒரு பிடிச்சோறு கிடைக்குமளவுக்குக்கூட கழனியோ கிடையாது. தனது வாழ்க்கைத் துணைவரைப் பறிக்கொடுத்து, தாங்க முடியாத சோகத்திற்கு இலக்கானுலும், வனஜாவின் வாழ்க்கையை வளமுள்ளதாக்க வேண்டுமே என்ற அந்த மாளாத ஆசை மேல் எழும் கவலையிலேயே அல்லும், பகலும் அரும்பாடு பட்டு தன்னல மறந்து-தன் சுகமிழந்து வனஜாவைக் காத்து வந்தாள். அதன் பயனுக இன்று வனஜா சேற்றில் முளைத்த செந்தாமரையாக - செவ்வந்திப் பூவாக - காண்போர் எவரும் கண் கவரும் கட்டழகியாக— அழியா அழகு ஓவியமாக - அங்கங்கள் மீது தங்கமுலாம் பூசியதைப் போன்று பளபளக்க அழகு தெய்வமாக உலவி வருகிருள். அவள் வாழும் தொகுதியில் உள்ள பெண்களனைவரும் அவளின் அழகைக் கண்டு உண்மையிலேயே பொருமைப் பட்டனர். அவளைக் கண்ட ஆண்களனைவரும் அவளின் அழகை அப்படியே அள்ளி, அள்ளிப் பருகி அவளை ஒருமுறையாவது அணைத்துச் சுவைக்க ஆசைப்பட்டனர் - எண்ணினர். ஆனுல் வனஜா இவர்களையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை. ஆண் சமுதாயத்தைக் கண்டு அவள் அஞ்சவும் இல்லை. ஆனுல் அவளை நெருங்கி அவளோடு பேசத்தான் எந்த ஆணிற்கும் அப்பொழுது துணிவில்லாமற் போய்விட்டது. தான் உண்டு, தன்வழியுண்டு என்று எண்ணி பிற எதையும் கவனிக்காது வாழ்ந்துவந்த வனஜாவே ஒரு-நாள்...

ஒரு நாள் மாலை.-அது அவளுக்கு மறக்க முடியாத வேளை. வழக்கம்போல் தன்னுடைய அலங்காரங்களை முடித்துக் கொண்டு மலர்க்கடையையும், மல்லிச் சாரத்தையும் எடுத்துக் கொண்டு வாடிக்கையாக கொடுக்கவேண்டிய இடத்திற்கெல்லாம் கொடுத்துவிட்டு கடைசியாக சொக்கலிங்கம் வீட்டிற்கு வருகிருள் வனஜா. அன்று விடுமுறையானதால் சொக்கலிங்கமும், அவர் குடும்பமும் முன்னதாகவே கடற்கரைக்குச் சென்று விட்டனர். ராஜாவும் எங்கேயோ வெளியில் செல்வதற்காக தன்னை அலங்கரித்து முடிக்கும் தருணத்தில் யாரோ வீட்டினுள் நுழையும் சந்தடிக் கேட்டு அறையை விட்டு வெளியே வந்து பார்க்கிருன். இதற்குள் வனஜா முன் அறைக்கு வந்து விடுகிருள். வனஜாவை இதற்கு முன் ராஜா எத்தனையோ முறை ஜன்னல் வழியே பார்த்திருக்கிருன். ஆனுல் அவளை நேருக்கு நேர் பார்க்கும் ஒரு அரிய சந்தர்ப்பத்தை இப்பொழுதுதான் அவன் பெற்ருன். வனஜாவும், ராஜாவைப் பார்த்தாள்! அவனுடைய கட்டுடையாத தேக யமைப்பையும், கண்ணிலேயிருக்கும் ஒரு விதக் கவர்ச்சியையும் கண்ட வனஜா தன்னை மறந்து அவனைப் பார்க்கிருள்—அவனும் அவளைப் பார்க்கிருன் இந்த இரு துடிக்கான பருவக் கண்களும் எதை எதையோ தங்களுக்குள் மற்றவர்களுக்கு புரியாததொரு மொழியில் பரிமாறிக் கொண்டன. இதற்குள் வனஜாவிற்கு நாணவுணர்வு எழ தலையைக் கவிழ்த்தபடியே "வீட்டில் யாருமே இல்லையா...?" என்று மெதுவாக கேட்கிருள். அவளிடம் பேசுவதற்குரிய ஒரு தருணத்தை எதிர்பார்த்து துடித்துக் கொண்டிருந்த அவனின் உதடுகள், அவள் கேள்வியை முடிக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

பெருமுயற்சிக்குப்பின்
பெருமிதத்தோடு 1961 ஜனவரி முதல் வெளியிடுகிருேம்

பொன்னி

(மாத மிருமுறை)

ஆசிரியர் : கண்ணப்பாவள்ளியப்பன்

டாக்டர் மு. வ. வின் தொடரோவியமும்
கவிஞர் கண்ணதாசன் அவர்களின் தொடர்காவியமும்
இடம் பெறுகிறது.

விலை 25 காசுகள்

பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

எழுதுக :
பொன்னி அலுவலகம்,
158, பெரிய தெரு, சென்னை-5.

குறிப்பு : இனமுழக்கம் பட்டியல் பாக்கி இல்லாமல் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டும் முதற்சலுகை அளிக்கப்படும்.

வெளிவந்துவிட்டது விற்பனையாகிறது
வாங்கிவிட்டீர்களா!

கண்ணதாசன் கவிதைகள்

இரண்டாம் தொகுப்பு

முதல் தொகுப்பிற்குப்பின் இதுவரை வெளிவந்த எல்லாக் கவிதைகளும் இடம் பெற்றிருக்கிறது.
விலை ரூ. 2-50

காவியக்கழக வெளியீட்டில்
விற்பனைக்குத் தயாரான நூல்கள்

கண்ணதாசன் கட்டுரைகள்

ரூ. 1 50

மயிலாடும் பாறை (நாவல்)

தென்னரசு எழுதியது ரூ. 1 50

தேவைக்கு எழுதுங்கள் :
காவியக் கழகம்,
158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

வள்ளுவர் காட்டிய வழிகள்-?

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் நிலந்தரு திருவிற் பாண்டியன் மதுரையம்பதில் நிறுவிய கடைச் சங்கத்தில், புலவர் நக்கீரர் அவர்கள் தலைமையின் கீழ் நாற்பத்தொன்பது நற்றமிழ்ப் புலவர் பெருமக்கள் நற்றெண்டு ஆற்றி வந்தார்கள். அவர்களில் ஒருவராகச்சிறப்புறத்திகழ்ந்தவர் தான் சீர்திருத்தவாதி திருவள்ளுவர் அவர்கள். அச்செந்தமிழ்ப் பாவாணர், இப்பரந்த நிலபாகத்தில் செந்தமிழின் பெருமையை அன்றும், இன்றும், இனி என்றும் ஏற்றமுடன் புகழும் வண்ணம் அளித்துள்ளார் ஒரு நூல்! உலகப் பொதுமறையாம் திருக்குறள்? அந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் பதினொருவது இடம் வகிக்கின்றது.

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப்
புகட்டிக்
குறுகத் தறித்த குறள்
என்று பாடினர் இடைக்காடார்.
அல்ல, அல்ல!
அணுவைத் துளைத்து ஏழ்
கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்
என்று விளக்கங் காட்டினர்
ஔவையார்.
வள்ளுவர் இன்குறள் வெண்பா
அகிலத்தோர்
உள் இருள் நீக்கும் ஒளி
என்றார்,மதுரைப் பாலாசிரியனார்
மும்மலையும், முந்நாடும்,
முந்நதியும், முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும்
முக் கொடியும்-மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல்
தார் அன்றோ
பாமுறை தேர் வள்ளுவர்
முப்பால்.
என்று போற்றினர்! மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார்.

அன்றைய தினம் பாவேந்தர்கள் பலர் பாராட்டிய, மாமன்னர்கள் புகழ்ந்த, மக்கள் மன்றம் ஏற்று வழி நடந்த திருக்குறள் இன்றைய நாளிலும் நமக்கு நல் வழிகாட்டியாக விளங்குகின்றது. வாள், வில், ஈட்டி இருந்த இடத்தில் அணு குண்டும். ஜலவாயு குண்டும் ஆக்ரமிக்கும் இக்காலத்திலேயும்; இமயத்தில் கொடி நாட்டிய சிறப்புச் செயல்திறனுள்ள இடத்தில், இருள் நீக்கும் வான வெண்ணிலாவில் ரஷ்யா கொடி நாட்டிய, சிறப்பு செயல் திறன் அதிசயமூட்டும் இக்காலத்திலேயும்; 'நிலா நிலா ஓடிவா' என்ற பழைய பண்ணினை மாற்றி, 'நிலா நிலா பறந்து வருகின்றேன்' என்று புதிய இசை கிளம்பும் இவ்விஞ்ஞான யுகத்திலேயும் நமக்குக் குறள் நல்வழி காட்டியாக இலங்குகின்றது.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களைக் கொண்ட குறளில் ஒரு பாலில் இருக்கும் ஒரு குறள், மற்றொரு பாலில் இருக்கும் மற்றொரு குறளினை வேற்றுமையாக காட்சியளிக்கவைக்கின்றதே என்று சிலர் எண்ணமிடலாம். அறிவு மேதையை அரை குறை கல்வியுடையவர் எள்ளி நகையாடவும் செய்யலாம். ஆனல் உணர்ந்து பார்த்தால் தெள்ளத்தெளிய ஆராய்ந்து பார்த்தும், ஆராயும் அளவுக்கு விரிந்து பரவும் கருத்துக்களடங்கிய கருவூலப் பெட்டகம் அது என்றெண்ணி வியப்பர். சிந்திக்கும் அளவுக்குச் சிறப்பு தென்படும்எனவேதிருக்குறளினை நாம் மனிதனின் சிந்தனைக் குரல் என்றும் கூறிமகிழலாம்

'குறள், மனிதனின் சிந்தனைக் குரல்'! இப்பொருள் திருக்குறளுக்குப் பொருந்துமா என்ற வினவுக்கு விடை காண முழு திருக்குறள் ஏட்டினுள் நாம் மூழ்க வேண்டாம்; மூன்று குறட்பாக்களே போதும்! ஒவ்வொரு பாலிலும் ஒரு குறள் எடுத்துக் கொண்டாலே போதுமானது. முதலில் அறத்துப்பால் ஒழிபு இயல் கண் சான்ருண்மை பகுதியில் ஏழாவது பாடல்.

இன்ன செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்தோ சால்பு

தமக்கு ஒரு தீங்கு செய்தவரைக் கண்டு வெறுப்புற்று,பழிக்குப் பழி என்று கூறி அவருக்கும் தீங்குசெய்ய முற்படுதல்கூடாது: தமக்கு ஒருவர் செய்த இன்னலைத் திருப்பி அவருக்கே செய்யாமலிருப்பது மட்டுமல்ல,! அவருக்கு இன்பம் தரத்தக்க நன்மையைச் செய்யவேண்டும். இன்னல் தந்தவருக்கும் நன்மையை நாடிச் செய்யாவிடில் என்ன பயன் சால்பினல்? என்று நமக்கு நயமாகச் சுட்டிக் காட்டுகின்றார், வள்ளுவர் பெருந்தகை

அடுத்து பொருட்பாலில் அரசியலில் காயம் அறிதல் பகுதியில் பத்தாவது குறள்.

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து
மற்றதன்
குத்து ஒக்க சீர்த்த இடத்து.

'உறுமின் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு' என்று கூறும் தொடரினை நாம் அறிவோம். கரையருகில் மீன் வரும் வரை உயிரில்லாத உருவம் போன்று கொக்கு அசையாது நின்றிருக்கும். ஆனல்

எஸ். பி. சற்குணம்

கரையருகில் காத்திருக்கும் கொக்கு மீன் தென்பட்ட மாத்திரத்தில் அதைத் தன்னலங் கருதி கௌவிக் கொள்ளும். அதைப் போன்றே அரிய காலம் வாய்க்கும்வரை காத்திருக்க வேண்டும். காலம் கனிந்ததும் அச்செயலை வினை முடிக்கவேண்டும் என்று நமக்குத் தந்திரம் கூறுகிறர் செந்நாப்போதர்.

அறத்துப்பால் குறளைப்படித்து விட்டு பொருட்பால் குறளைப் படிப்பவர் யாது நினைப்பர்? துன்பம் செய்தவனுக்கும் நன்மை செய்யாவிடில் சால்பினல் யாது பயன் என்ருர். பின்னர் கொக்கு போல் காத்திருந்து காலம் கனிந்ததும் காரியமாற்றிக் கொள் எனகிருர். இது என்ன முரண்பாடு? என்று தான் எண்ணமிடுவர். ஆனல் நாம் தெளிந்த மனதுடன் சிந்தனை புரிவோமாயின் அறத்துப்பால், தனிமனிதனின்—வாழ்வுக்கு-இல்லற வாழ்வுக்கு—பண்பு வாழ்க்கைக்கு — அன்பு வாழ்க்கைக்குத் தேவையான கருத்தைத் தெளிவுறுத்தியிருக்கிறர் வள்ளுவர் என்றுணரலாம். பிறருக்குத் தீமை புரியாவிடில் தனிவாழ்வில் தமக்கு எதிரிகள் தோன்ற மாட்டார்கள்; நண்பர் குழாம் பெருகும். அன்பு தழைக்கும்; அறம் பிழைக்கும்! என்ற நோக்கமே அந்த மூல காரணமாய் எழுகின்றது.

ஆனல் பொருட்பால் அப்படிப் பட்டதன்று. ஒரு நாட்டிற்கு—நாட்டுத் தலைவனுக்கு—தலைவனின் துணைக் குழுவினருக்குத் தேவையானவற்றைத் தெளிவுறுத்தியிருக்கிருர். தன் நாடு செழிப்புற-தன் நாட்டு மக்கள்—வாழ்வு மலர-மகிழ வழி செய்வது தான் நாட்டுத் தலைவனின் கடமை! கடமை நிறைவேற்ற காலத்தை எதிர் நோக்கி நிற்றல் வேண்டும். மக்கள் அல்லலுற நேர்ந்தால் அந்த அல்லலுக்குக் காரணமானவற்றை அழிப்பதில் காத்திருந்து காரணப் பொருள் கிடைத்ததும் கொக்கினைப்போல் உடனே செயல் முடித்தது தீர வேண்டும். தன்னொருவனுக்காக அல்ல? தன் நாட்டுக்கு. மக்களுக்கு எவ்வகையிலும் தீங்கு ஏற்படுமாயின் அதனைக் களையும் தந்திரத்தைத்தான் கூறுகிருர் பொய்யா மொழி! இங்கு நாடு, மக்கள், நாட்டு வளம், பொருளாதாரம், சிறப்பு இவைகள் தான் மூல காரணமாய் எழுகின்றது.

இறுதியாக, இன்பத்துப் பால் கற்பு இயலில், பொழுது கண்டிரங்கல் பகுதியில் இரண்டாவது குறள்.

புனகண்ணை வாழி மருள்மாலை
எம்கேள்போல்
வன் கண்ணதோ நின்துணை.

தலைவனின் வருகைக்காகக் காத்திருக்கும் தலைவி, வானில் உறையும் வட்ட நிலாவும் தனியாகயிருப்பதைக் கண்ணுற்று, என் துணை வராது என் கண்களின் ஒளியிழக்கச் செய்த கொடுமை போன்று, உனது துணையும் வரவில்லையோ என்னைப் போன்றே நீயும் கண்ணுறங்காது காத்திருக்கின்ருயோ,எனக்குத் துணையாக! என்று தலைவி கூற்று போல கூறுகின்ருர் திருவள்ளுவனர்.

பொருட்பாடல் குறளைப் படித்துப் பார்த்தப் பின் இன்பத்துப் பால் குறளைப் படிப்பவர் யாது எண்ணமிடுவார்? கொக்கினைப் போல் காத்திருந்து காரியமற்ற வேண்டும் என்று கூறிய வள்ளுவருக்குத் தலைவனைக் காணுத தலைவிமீது இவ்வளவு இரக்கமா? இருக்கக் கூடுமா? என்று தானே எண்ணமிட்டு வியப்பர். இ∴து இன்பத்துப் பால் அகராதி: மனம் ஒன்றிய மறத்தமிழ்ப்பெண்ணின் துன்பம், அவளுடைய கற்புநெறி இவைகளைக் கண்டு வானத்தில் வட்டமிடும் நிலாவைத் துணையிருப்பது போன்று இயற்கைக் காட்சியையும் இன்பத்துப்பாலில் இணைத்து உவமைக் காட்டி நிற்கிருர் வள்ளுவர் என்ற உண்மையினை எழிற்காட்சியை உணர்ந்தோமென்ருல் உள்ளத்தே புத்துணர்ச்சி நிறுவிவிடும்.

இவைகளை நாம் சிந்தித்துப் பார்த்து, ஆராய்ந்தால் ஒழிய அறியமுடியாது. அவசரத்தில் ஆராயாது அறிவு மேதையை எள்ளி நகையாடல் செய்திருந்தால் பேதைத் தன்மையைத் தானே காட்டிடும்? இதுபோன்றே ஒவ்வொரு பகுதியிலும் சில குறட்பாக்கள் பார்வைக்கு வேறுபட்டிருப்பது போல எழுதியிருப்பினும் அவ்வந்தஇடத்திலேமக்களுக்குத் துணையாக நிற்கும் நண்பராய்த் துன்பங்கண்டு துவளும் இரக்கமுள்ளவராய் அரசியில் காரியங்களுக்கு இராச தந்திரங்கூறும் நல்லமைச்சராய், புகழ் தோன்ற வழி கூறும் வழிகாட்டியாகத் தென்படுகின்ருர், பொய்யில் புலவர். இப்பெருண்மையைக் கண்டு பிடிப்பது எளிதுதான். எப்போது ஐயமின்றி குறளினை ஆய்ந்து அறிந்தபோது! அப்போது குறள் மனிதனின் சிந்தனைக் குரல்என்ற பொருள் உள்ளங்கை நெல்லிக் கனியெனத்தெற்றென விளங்கும்.

அத்தகையச் சிந்தனைக் குரலினை நாம் போற்றி வளர்த்து, அதன் புகழ்பாடி, பாரெங்கும் பண்புசால் தமிழரின் திராவிடரின் பெருமையை நிலை நாட்டுவோம்! ஒவ்வொரு தீந்தமிழ்த் திராவிடரின் இல்லத்துள்ளும் திருக்குறள் இடம் பெறட்டும், அறியாமை இருள் ஆகலட்டும்: அறிவு ஒளி பரவட்டும்? மனிதனின் சிந்தனைக்குரலான குறள் எத்திக்கும் ஒலிக்கட்டும்! செந்தமிழ் திராவிடரின்உரிமைக்குரல் ஓங்கட்டும்!! திராவிடத் தனியரசு மலரட்டும்!!!

காலம் அறிவித்த கலங்கரை விளக்கு

ஆசிரியர், "இனமுழக்கம்," சென்னை-2.

அன்புள்ள ஏ. பி. நாகராசனுக்கு.

நீ திரைக்கதை வசனம் எழுதி வெளிவந்துள்ள 'பாவை விளக்கு' திரைப்படத்தில் 'குடியரசு' பத்திரிகை ஆசிரியர் பிறர் கதைகளைத் திருடி தன்பெயரில் வெளியிடுவதாகக்காட்சி அமைத்திருக்கிருய். புதைந்துக்கிடந்த பெரியதொரு திருட்டை எப்படியோக் கண்டுப்பிடித்துத் திரையின்மூலம் நாட்டு மக்களுக்குக் காட்டி விட்டாயே, என்னே உன் மதி!

நாக சண்முகத்தைத் தெரியுமல்லவா உனக்கு? அவர் தான்; நீ, நான் பெற்ற செல்வத்தை என்னுடையது என்று வழக்காடி கடைசியில் தலை குனிந்து மன்னிப்பும் பெற்றிருக்கிருயே. அப்போது உன்னைக்கூட மன்னித்து மனிதனுக மதித்து திரை உலகில் நடமாட விட்டாரே; நான் பெற்ற செல்வத்தை ஈன்றெடுத்த நாகசண்முகம்; இப்போது தான் அவர் உன் நினைவிற்கு வருகிருர், இல்லையா...?'

'குடியரசு' பத்திரிக்கை திராவிட சமுதாயத்திற்கு வழிக்காட்டியாகவும், பத்திரிக்கை உலகிற்கோர் புதிய திருப்பத்தை உண்டாக்கியதையும் அறியாத தமிழர்கள் இருக்கமுடியாது! ஒரு வேலை உனக்குத் தெரிந்திருக்காது என்று எண்ணுகிறேன்! அப்போது நீ, கால் வயிற்று, அரை வயிற்றுக் கஞ்சிக்கூடக் கிடைக்காது, ஒரு சில நாடகங்களை நடத்திக்கொண்டு குடந்தை வீதிகளில் அலைந்த வண்ண மிருந்தாய் அப்படியிருக்க, குடியரசு பத்திரிக்கையைப் பற்றி எங்கே தெரிந்திருக்கப் போகிருய்! உண்மை தானே...? இந்த இடத்தில் நீ, நான் அறியாதவன் என்று ஒப்புக்கொள்ளுகிருய் அவ்வளவு தானே?

தன்னினத்துப் பத்திரிக்கையாலும், வேரினித்துப் பத்திரிக்கையாலும். உன் நண்பனை ஆசிரியனுகக் கொண்ட பத்திரிக்கையாலும், இல்லை வேறு ஒருவன் ஆசிரியனுகக் கொண்ட பத்திரிக்கையாலும் அது நாட்டிற்கு செய்துவந்த அரும்பெரும் செயல்களைப் பாராட்டி நாட்டு மக்கள் முன்னிலையில் எடுத்துச் சொல்ல வேண்டியது. எழுத்தாளனுடைய கடமையல்லவா? அதைவிடுத்து, மாற்ருன் ஒருவனை ஆசிரியனுகக் கொண்ட பத்திரிக்கை என்பதால் பத்திரிக்கையையும், அதன் ஆசிரியரையும் இழித்தும், பழித்தும் 'பாவை விளக்கு' திரைப் படத்தில் காட்சியை அமைத்து மாசு கற்பிக்க முன் வந்திருக்கிருயே! அப்படத்தில் எத்தனை வடமொழி சொற்களைக் கோர்த்து தமிழுக்குக் காயம் ஏற்படுத்தியிருக்கிருய் என்பதை எண்ணிப் பார்த்தாயா? படம் பார்த்து விட்டு வெளியே செல்லும் ஒவ்வொருவரும் அக்காட்சியைப் பற்றிப் பேசி மனம் நொந்து செல்லும் காட்சியைக்கண்டாயா? அதெல்லாம் உனக்கு எங்கே தெரியப்போகிறது! கஞ்சிக்கு அலைந்தக் காலம்தான் மலையேறிப் போய்விட்டதே! குடந்தை நாடகக் கொட்டகையில் குண்டிக்காய, குடல் சுருங்க ரசிகர் பெருமக்களை எதிர்பார்த்து ஏமாந்துக் கிடந்ததை நினைத்தாலல்லவா உனக்குத் தெரியும்! 'குடியரசு' பத்திரிக்கைக்கும் அதன் ஆசிரியருக்கும் மாசு கற்பித்த, காட்சியைப் பார்த்து விட்டு வருவோர்கள் எத்தனைத் துன்பமடைந்தார்கள் என்பதை நான் நேரிலே கண்டேன். ஏன் அதைக் கேட்கிருய் அத்தனையும் உனக்குத்தான்! (வெட்க[torn]

படைத்தைப் பார்த்த அநேக உனனைப்பற்றியே, அதுவும் நாசண்முகம் பெற்றுவிட்ட செல்வத்தை நீ, உன்னுடையதாக்கிக் கொண்டாயே அதைப்பற்றி, (பாவை விளக்கைப் பார்க்கின்ற நேரத்தில்) திருடன் நாகராசன்! கதைத்திருடன் நாகராசன்!! என்று உண்மையை வேறு சொல்லி உன் மானத்தை அடிக்கின்ற காற்றிலேபறக்க விடுகிருர்கள்! இதெல்லாம் உனக்கெங்கே உறைக்கப் போகிறது, மரத்துப் போன உடம்புதானே! நாகசண்முகமே உன் ஜாதகத்தை 'கலைச் சோலை' ஏட்டிற்குத் தந்துவிட்டாரே' திருடன், அயமுலை, யற்றவன், சொந்த ஆற்றல் இல்லாதவன் என்று நீயே ஒப்புக் கொண்டிருக்கிருயாமே? சும்மாக்கூட இல்லையாம் சட்டப்படி வக்கீல் மூலம்! நானுக் கதைக் கட்டிவிடுகிறேன் என்று எண்ணி என்மீது சினம் கொள்ளாதே! நீ விரும்பினுல், 'இனமுழக்க' ஆசிரியர் ஒப்புதல் தந்தால் நாக சண்முகம் மனம் நொந்து எழுதியக் கடிதத்தை மீண்டும் நான் இனமுழக்கத்திற்கு அனுப்பி வைக்கத் தயங்கமாட்டேன்.

நீ திரைக்கதை வசனம் எழுதிய' பாவை விளக்குப் படத்தைப்பற்றி அநேக ஏடுகள் ஒன்றும் எடுத்துக்கூருது (குறையை மறைத்து) புகழ்ந்து எழுதிவிட்டது இல்லையா? மகிழ்ச்சி உன் உள்ளத்திலே நடனமாடியிருக்கும்! ஆனுல், 4-11-60-ல் வெளிவந்து 'இனமுழக்கம்' கிழமை ஏடு உன் படத்தைப்பற்றிய உண்மையைச் சொல்லிவிட்டது! எத்தனை ஏடுகள் உனக்கு சாதமாக இருந்தது, இந்த இனமுழக்கத்திற்கு மட்டும் ஏன் அந்தனை துணிவு? எல்லாம் உண்மை ஒன்றினுல்தான்!

'தாளுடா விட்டாலும் தன் தசையாடும்' என்பார்களே, அது போல, 'குடியரசு' பத்திரிகைக்கும் அதன் ஆசிரியருக்கும் மாசு கற்பித்த உன்னைக் கண்டித்து விமர்சனம் எழுதிவிட்டது கண்டு நீ வேதனைக் கொள்வாய்-வெறுப்பாய்-முடிந்தால், தமிரசுக்கட்சி ஏடுகளில் பக்கம் பக்கமாக தி.மு. கழகப் பத்திரிக்கைகளையும், நடிகர்களையும். திரைப்படங்களையும் தூற்றிக்கூட எழுதவும், பேசவும் செய்வாய்!

ஆனுல் ஒன்று!

அறிவும் ஆற்றலும்
இல்லாதான் வசனமெழுதல்
கேடு பயக்கும்
உணவினிலே நஞ்சிட்டு
பசி தீர்க்க உண்ணுவது
போல்
முட்டாளைப்போய்

(8-ம் பக்கம் பார்க்க)

'திராவிடன்' முகவரிமாற்றம்

திராவிடன் (சோமு அச்சகம்) இன்றுமுதல் கீழ்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. விற்பனையாளர்கள், கழகத்தோழர்கள் அனைவரும் புதிய முகவரிக்கே தொடர்பு கொள்ளவேண்டுகிறோம்.

'திராவிடன்'
163, வால்டாக்ஸ் ரோடு
சென்னை[torn]
[தொலை[torn]

இயக்கத்துக்கென்றே 'இனமுழக்கம்' வழங்கும் இன்சுவை!

நீங்கள் சொன்னீர்கள்; நாங்கள் வெளியிடுகிறோம்!

கழகத்தின் களஞ்சியமாய் - கன்னித் தமிழ் நாட்டின்
கற்கண்டாய் - நற்கனியாய் - உருவாகிறது!

இனமுழக்கம்

பொங்கல் மலர் 1961

அதிசயிக்காதீர்! அவான் ஏடுகளுக்குச் சவால்!!

300 பக்கங்கள் — விலை ரூ. **4-00**

முகப்பு ஓவியம்: ஓவியக் கலைஞர், 'மணியம்'

மலருக்குள் வரையும் ஓவிய மணிகள்: **மாதவன், லதா, சீநி சோமு, ஜெயராஜ், ஆனந்தன்**

மலருக்கென்று எழுதும் சிறுகதை மணிகள்:
அகிலன், ஜெகசிற்பியன், இராதாமணாளன், டி. கே. சீனிவாசன், எஸ்.ஏ.பி. அண்ணாமலை, அரு. இராமநாதன், க. வள்ளியப்பன், பூவை எஸ். ஆறுமுகம்

துப்பறியும் நாவல்கள்:
தமிழ்வாணன், சிரஞ்சீவி

அரசியல் கட்டுரை நல்கும் அறிஞர்கள்:
அறிஞர் அண்ணா, ஆச்சாரியார்,
டாக்டர் **லட்சுமணசாமி,** **ஈ. வெ. கி. சம்பத்,**
பி. டி. இராசன், M.L.C., **அநுமந்தையா,**
சங்கரன் நம்பூதிரிபாத், பி. இராமமூர்த்தி,
நாஞ்சில் கி. மனோகரன், ப. ஜீவானந்தம்,
டாக்டர் **கிருஷ்ணசாமி,** M.P.

கலையுலகு பற்றி:
நடிப்பிசைப் புலவர் **கே. ஆர். இராமசாமி,** M.L.C.

இலக்கியக் கட்டுரைகள் வழங்கும் கருவூலங்கள்:
டாக்டர் **மு. வரதராசனார்,**
டாக்டர் **ஏ. சிதம்பரநாதன்,**
பன்மொழிப்புலவர் **கா. அப்பாத்துரையார்,**
டாக்டர் **மா. இராசமாணிக்கம்,**
திராவிடமொழி நூலார் **தேவநேயப்பாவாணர்,**
டாக்டர் **ரா. பி. சேதுப்பிள்ளை,**
அ. மு. பரமசிவானந்தம், வே. கபிலன்

சிறுகாப்பியம் நல்குபவர்:
கவிஞர் கண்ணதாசன்

கவியரங்கம்:
தலைவர்: புரட்சிக் கவிஞர் **பாரதிதாசன்**
பங்கேற்போர்:
கவிஞர் **வாணிதாசன்,** கவிஞர் **முடியரசன்,**
கவிஞர் **கம்பதாசன்,** கவிஞர் **ரவீ**

குழந்தைப் பாட்டு. கவிஞர் **அழ. வள்ளியப்பா**

ஓரங்க நாடகம்;
கழகப் பொருளாளர்: கலைஞர் **மு. கருணாநிதி**
(அந்நாடகத்திற்கு திரையுலக நடிகர்கள் நடிக்கின்றனர்)

நாட்டிய அரங்கம்:
உடுமலை நாராயணகவி'யின்
இசைப்பாடலுக்கு
ஈ. வி. சரோஜாவின். நடனக் காட்சிகள்

மகளிர் பகுதி:
தலைவர்: **சௌந்தரம் கைலாசம் அம்மையார்**
(மகளிர் எழுத்தாளர் பலரும் பங்குபெறுகின்றனர்)

புதிய பரிசு போட்டி ரூ. 1000
கூப்பன் மலரிலே!

இயற்கைக் காட்சிகள்:
புகைப்பட நிபுணர் **சாந்தாமியான்**

நமது பணி;
மாநகராட்சி மன்றத்தின் நமது சாதனைகளை
மாநகராட்சி மன்றத் தலைவர் **வி. முனுசாமி** விளக்குகிறார்

குடியரசுத் தலைவர்கள்;
உலக நாடுகளின் குடியரசுத் தலைவர்களின்
புகைப்படங்கள் இடம் பெறுகின்றன.

ஆசிரியர் **சி. பி. சிற்றரசு** வழங்கும்
விசேடக் கட்டுரை
விளக்கப் படங்களுடன் கேள்வி-பதில் 100

கழக அகராதி

இயக்க வரலாறு: தென்னாட்டு நல உரிமைச் சங்கக் காலத்திலிருந்து (1917) இன்றுவரை (1960) நாம் வளர்ந்த விதத்தினை வரலாற்றுக் குறிப்புக்களுடன் வரைகிறார், **மா இளஞ்செழியன்,** எம்.ஏ. அவர்கள்.

கழக அமைப்பு: தலைமைக் கழகம், மாவட்டக் கழகம், வட்டக் கழகம், கிளைக் கழகம் ஆகியவற்றின் அமைப்பு விவரங்கள், 4000த்திற்கு மேற்பட்ட எல்லா கிளைக் கழகங்களின் பெயர்கள், கிளைக் கழகச் செயலாளர், வட்டப்பிரதிநிதி ஆகியோரின் பெயர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்களின் புகைப் படங்கள், மாவட்டக் கழக அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரின் பெயர்கள்.

வட்டக் கழகச் செயலாளர்களின் புகைப்படங்கள், அவைத் தலைவர், செயலாளர், துணைச்செயலாளா, பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியோரின் பெயர்கள்.

பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்களின் புகைப் படங்கள், கழக எம்.எல்.ஏ.க்களின் புகைப்படங்கள், சென்னை மாநகராட்சி மன்ற கழக மேயர், துணை மேயர் புகைப்படங்கள், தலைமைக் கழக அவைத் தலைவர், பொதுச்செயலாளர், துணைச்செயலாளர்கள், பொருளாளர் ஆகியோரின் புகைப்படங்கள் அடங்கிய பலவண்ண முகப்பு.

கழகச் சட்டதிட்டங்கள், கொள்கை விளக்கங்கள் மற்றும் துணை மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றின் முழு விவரங்கள், கழகத்துக்கென நீத்த உத்தமர்களின் புகைப்படங்கள், அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்.

இதுவரை நடைபெற்ற மாவட்ட மாநில மாநாடுகள், மாவட்ட மாநாடுகள்; சிறப்பு மாநாடுகள் ஆகியவை நடைபெற்ற தேதி, இடம், அவற்றால் தலைமைக் கழகத்திற்குக் கிடைத்த வருவாய் போன்ற எல்லா விவரங்கள், 1949-லிருந்து 1960 வரை கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ச்சியைக் காட்டும் விளக்கப்படம்—இவற்றோடு கழகத்தின் இருவண்ணக்கொடிவிளக்கமும் இடம்பெறுகிறது.

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் முன்பணத்துடன் பதிவு செய்துகொள்ளுங்கள்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னே " இல்லை " என்று பதில் கூறிவிட்டு இன்னும் ஏதேதோ பேசினன். தம் கேள்விக்கு விடையைப் பெற்றவுடன் அவன் சொல்லும் வார்த்தைகளைக் கேளாதவள்போல விருட்டென்று திரும்பி அதைவிட்டு சென்று விடுகிறாள்.

எவ்வளவு துடுக்காக-வீரமாக-எத்தனை விவேகமாக இருந்தாலும் பருவக் கண்களுக்கும், பருவ எழிலுக்கும் ஆண் — பெண் அடிமையாக வேண்டியவர்கள் தானே...! இன்ப உணர்வு இளமனதிலே ஊற்றெடுத்துவிட்டால் அதற்கு ஒரு முடிவுதானேது! வழிதானேது! ஊற்றெடுத்த உணர்வு உடல் முழுவதும் பரவும் பொழுதுதான் அவர்கள் தங்களை மறக்கிறார்கள் - நிலைமாறுகிறார்கள். இந்த எல்லைக் கோட்டுக்குள் வனஜாவும், ராஜாவும் நுழைந்து விடுகின்றனர். ராஜா அவள் சென்ற பிறகும் அவளைப் பற்றியே எண்ணினான். அன்றிரவு முழுவதும் அவன் கற்பனை செய்த அவள் உருவத்தோடு பேசினான் — பாடினான்—அவளும் ஆடினாள். [illegible]டும் அவளை அப்படி சந்திப்ப[illegible] - என்ன பேசுவது என்பது போன்ற ஆயிரமாயிரம் திட்டங்களை நூலாக்கி, பின் அதை வலையாக்கி வனஜா வரும் வழியிலே அந்த காதல் வலையை வீசத் துணிந்துவிட்டான்.

வனஜாவும் ஒரு பெண். அதுவும் பருவத்தில் நின்று இன்பம் காணத் துடிதுடித்துக் கொண்டிருப்பவள். என்றாலும் இதற்கு முன் அவள் எத்தனையோ ஆடவர்களை அழகு வாலிபர்களை சந்தித்திருக்கிறாள்; பேசியிருக்கிறாள். இருந்தாலும், அவர்களைப்பற்றியெல்லாம் ஒரு நாள்கூட அவள் எண்ணியதே கிடையாது. ஆனால் அந்த முதல் சந்திப்பிலேயே ராஜாவின் உருவம் அவள் இதயத்திரையிலே பதிந்துவிட்டது. ஏதோ ஒன்றுக்குத் தான் அடிமைப்பட்டவள் போன்றதோர் உணர்வு எழு, என்கிறது. ராஜாவைக் காண துடிக்கிறாள். இந்த இதயத் துடிப்பு ராஜா விரித்த காதல் வலைக்குள் வனஜாவைக் கொண்டு போய் தள்ளிவிட்டது.

காதல் படகிலேறி உல்லாச பயணத்தை ராஜாவும், வனஜாவும் தொடங்கியதால் ஆறுமாதங்கள் அவர்களுக்குத் தெரியாமலே சென்றுவிட்டன. இருவரும் சென்னையில் சேர்ந்து சுற்றாத நேரமில்லை—பார்க்காத இடமேயில்லை. தன்னை மறந்து—சுற்றி நடப்பதை மறந்து— உலகையே மறந்து வாழ்ந்துவந்த வனஜாவின் வாழ்விலே புயல் குறிகள் தோன்ற ஆரம்பித்தன.

நாட்கள், வேகமாக ஓடும் வண்டிச் சக்கரத்தைப்போல உருண்டோடிக் கொண்டே யிருக்கின்றன. வனஜா காதல் வாழ்விற்கு இலக்காக—காதல் சின்னமாக மாறுகிறாள். இப்பொழுது அவள் [illegible]ட்டு மாதகர்ப்பிணி இன்னும் [illegible]ண்டு மாதத்திற்குப் பின் காதலின் காணிக்கை — அந்த அன்பளிப்பு மலர்ந்து வெளி வந்துவிடும். தன் வயிற்றிலே உருப்பெற்றுவரும் சின்னத்தைப் பற்றி எத்தனையோ முறை கலங்கிய கண்களுடன் ராஜாவிடம் சொல்லியிருக்கிறாள். அவள் சொல்லும் பொழுதெல்லாம். அவள் கண்களில் பிருந்து வடியும் கண்ணீரைத்துடைத்து, அவளைத் தேற்றி "மாலையிட்டுஉன்னை மணமுடிக்கும் நாள் இன்னும் தொலைவில் இல்லை." என்று கூறி அவளை சமாதானப்படுத்திக் கொண்டே வந்தான் ராஜா.

குடும்ப கௌரவத்தைக் காப்பதில் பெண்களுக்குத் தானே முக்கிய பங்குண்டு. அவர்களே அதைக் காக்க தவறி விட்டால்.? வனஜாவின் கள்ளக்காதலும், அவள் கர்ப்பிணியாக இருக்கும் விஷயமும் தெரிந்த அவளின் தாய் மிகவும் வேதனைப்படுகிறாள் வெளியே தலைகாட்ட வெட்கமும் படுகிறாள். இதுவரையில் தங்கள் குடும்பம் கண்டிராத-உலகம் உள்ளவரையிலும் அழியாத களங்கத்தை — எவராலும் துடைக்க முடியாத வாழ்வில் ஏற்பட்ட கறையை வனஜா உண்டாக்கி விட்டாளே என்கிற அந்த ஒரே மனவேதனையில் வனஜாவைபார்க்கும் பொழுதெல்லாம் திட்டுகிறாள் —அவள் பேச்சைக் கேட்கும் பொழுதெல்லாம் வெறுக்கிறாள். குலமகள் வாழ்வு கொழுந்து விட்டெரிந்து அது தரும் ஒளியில் தம் கடைசி காலத்தை நிம்மதியாக தள்ளலாமென்று எத்தனையோ ஆயிரமாயிரம் ஆசைக்கோட்டைகள் கட்டியிருந்த தாயிக்கு ஒரு பெரும் ஏமாற்றத்தை அளித்தாள் வனஜா. கலங்கமில்லா தன் தாயின் முகத்திலும் கரியைப் பூசி விட்டாள். நாளுக்கு நாள் இதே கவலை பெருகி வந்ததால் மனோவியாதியால் பீடிக்கப்பட்டவள் பாயிலேபடுத்துவிடுகின்றாள் படுத்தவள் படுத்தவளே!

ஊரை மதிக்காமல், எவரையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்து வந்த வனஜா இன்றோ அல்லது நாளையோ ஒரு குழந்தைக்கு தாயாகப் போகிறாள், ராஜா நிச்சயம் தனக்கு மாலையிட்டு தன்னை மனைவியாக்கிக் கொள்வார் என்ற நம்பிக்கையில் இன்னும் அவள் தைரியமாகத் தானிருக்கிறாள். நாட்கள் செல்லச் செல்ல அவள் தைரியமும், கொண்டிருந்த மனோதிடமும் கொஞ்சம் கொஞ்சமாக சரிந்து கீழே விழ ஆரம்பிக்கின்றன. அப்பொழுதுதான் அவள் உலகத்தைப்பற்றி சிந்திக்கிறாள் ... தன் பெற்றதாயின் முடிவைக் கண்டு வேதனைப் படுகிறாள்... பெண்மையுலகில் தாம் செய்த பெரும் தவறையுணர்கிறாள். ஏன் கடந்த இரண்டு நாட்களாக ராஜா தம்மை வந்து பார்க்க வர இல்லை? என்ற கேள்வி எழ, எழ விருட்டென்று எழுந்து வேகமாக நடக்க ஆரம்பிக்கிறாள்.

சொக்கலிங்கம் வீட்டையடைந்ததும், நேராக ராஜா தங்கியிருந்த அறைக்குள் செல்கிறாள். அறைக்கதவு திறந்தபடியே கிடந்தது. அங்கு ராஜா இல்லை. அவன் சாமான்களும் இல்லை. அந்த அறையைக் கண்டவுடன் பேயறைந்ததைப் போன்றதோர் பீதியேற்பட்டது, அவளுக்கு. ஒன்றும் புரியாத நிலையில் ஓடோடி வந்து அமுதாவிடம் கேட்கிறாள். இதற்குள் அக்கம், பக்கத்துவீட்டு பெண்களும் வந்து விடுகின்றனர். "ராஜா காலி செய்து இரண்டு நாட்களுக்கு மேலாகிவிட்டது" என்று அமுதா கூறிவிட்டு அவளைப் பார்த்து சிரிக்கிறாள். மற்ற எல்லாப் பெண்களும் 'கொல்'லென்று வனஜாவைப் பார்த்து சிரிக்கின்றனர். வனஜாவின் உள்ளக்குமுறலை புரிந்து கொள்ளாமல் சிரிக்கும் அந்தப் பேதைப் பெண்களின் சிரிப்பின் காரணத்தை புரிந்து கொண்ட வனஜாவின் நிலை தடுமாறுகிறது...அவள் உள்ளத்திலே எரிந்த ஜோதி அணைந்து விடுகிறது. தலை சுற்ற ஆரம்பிக்கிறது. தாம் ஒரு பயங்கர உலகத்திற்கு மத்தியில் நிறுத்தப்பட்டிருப்பதாக உணர்ந்த அவள் தடுமாறுகிறாள். பின் எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நடக்க ஆரம்பிக்கிறாள்.

ஒரே மனப் போராட்டத்தோடு வந்த அவள் பாதி வழி வந்ததும் தன் சுய நினைவிழந்து 'தடாலென' நடு வீதியில் வீழ்ந்து விடுகிறாள். உடனே அவளைச் சுற்றி ஒரே கூட்டம்.

தர்ம ஆஸ்பத்திரியில் பிரசவத்தை முடித்துவிட்டு ஆண்குழந்தைக்குத் தாயாகி செக்கச் சிவந்த சிறுமலர்போன்று விளங்கும் அந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வருகிறாள் வனஜா. இப்பொழுது அவள் வெளியே தலைக்காட்டவும் வெட்கப்படுகிறாள். தமக்கு இவ்வளவு தூரம் அவமானத்தையுண்டாக்கி, பெண்களின் மாணிக்கமென்று போற்றும் கற்பையும் சூறையாடி விட்டு எங்கேயோ ஓடி மறைந்த ராஜாவை பழிக்குப் பழிவாங்க துடிக்கிறாள். ஆனால் அவளால் அதை எப்படி நிறைவேற்ற முடியும்? வாழ்க்கையில் எந்த திருப்பத்திலாவது ஒரு முறை தவறியவர்கள், அதனால் ஏற்படும் பலனை பின்னால் உணரும்பொழுதுதான் அதைப்பற்றிய சிந்தனைக்கு வருவார்கள். ஆனால் அந்த நேரத்தில் அவர்களின் காது செவிடாகிவிடும்-மற்றவர்கள் சொல்வது அதிலே விழாது. அவர்களின் அறிவுக்கண் மங்கி விடும். பிற எதையும் பிரித்துப் பார்க்க அவைகள் சக்தியை இழந்துவிடும். ஆசை உணர்வு அப்படியே அவர்களை தன்னுள்ளடக்கிவிடும். இந்த நிலைக்கு அடிமையான காரணத்தினால்தானே இன்று வனஜா கண்ணீரும், கம்பலையுமாக கதறி கதறிக் கொண்டிருக்கிறாள்!

இனி, ராஜா திரும்பிவந்து தன்னை ஏற்றுக் கொள்ளமாட்டான் என்பதை நன்கு புரிந்து கொண்ட வனஜா தாம் செய்த தவறை எண்ணி-எண்ணி அழுகிறாள். இந்தச் சமயத்தில் ஊராரின் தூற்றலும், ஏசலும் நாளுக்கு நாள் பெருகி வந்த காரணத்தினாலும், மேலும் தாம் ஊராருக்கு மத்தியில் ஒரு அவமானச் சின்னமாக-எல்லோராலும் இகழப்படும் ஒரு இழிப்பொருளாக தாம் இருப்பதினாலும் அவள் மீண்டும் அங்கு தங்கி வாழ விரும்பவில்லை. அதனால் அந்த இடத்தை விட்டே ஏன்? இந்த உலகத்தைவிட்டே போகத் தன்னை தயார் படுத்திக் கொண்டு, தன் பிறப்பின் உண்மையை அறியாது செந்நிற சிறுகைத்தூக்கி விளையாடும் குழந்தையையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு விடுகிறாள்.

தான் செல்லும் வழி தனக்கே தெரியாமல் வந்துக் கொண்டிருந்த வனஜா, மரங்களடர்ந்த ஒரு பெரும் மலை உச்சிக்கு வந்து விடுகிறாள். அதன் மீது நின்றுக் கொண்டு கீழே பார்க்கிறாள். பொங்கும் வெண் நுரையோடும், பேரிரைச்சலோடும் கிடக்கும் கல்லின் மீது மோதிக்கொண்டு வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது காட்டாறு. பின் குழந்தையின் முகத்தை ஒரு தரம் பார்க்கிறாள். தன் வாழ்வு முளையிலேயே கிள்ளி யெறியப்படப் போகின்றதே என்பதை அறியாமலும், தாயின் மனவேதனையை புரிந்துக் கொள்ளாமலும் தன் சிறு உதடுகளை விரித்துச் சிரிக்கிறது. இதைக் கண்ட அவள் அப்படியே அதை அணைத்துக் கொண்டு தன் உடலில் பாச உணர்வு இருக்கும்வரை அதன் பிஞ்சுக் கன்னத்திலே முத்தங்களை மாறி மாறிக்கொடுக்கிறாள். பாவம். அதன் கன்னங்களும் சிவந்து விடுகின்றன. பின் அங்கிருந்தபடியே உலகத்தை ஒரு முறை தன் வறண்ட கண்களால் சுற்றிப் பார்க்கிறாள். உலகம் ஒரே அமைதியாக இருக்கிறது. இந்த அமைதியின் முடிவில்தான் சூறாவளி ஆரம்பமாகிறது என்பதை மனிதர்கள் மறந்துதான் வாழ்கிறார்கள் என்று தனக்குள் சொல்லிக்கொண்டு பால் மணம் மாறா அந்தப் பச்சிளங் குழந்தையை தன் மார்போடு மார்பாக அணைத்துக்கொண்டு அப்படியே வீழ்ந்து விடுகிறாள். அவள் கதையும் முடிந்துவிட்டது. வெகு நாள் பசியோடு காத்துக் கிடந்த சிங்கம் இரை காண கர்ஜிக்கும் ஒலியைப்போல பேரிரைச்சலுடன் இன்னும்அதிவேகமாக காட்டாறு பாய்ந்தோடுகிறது. அதில் வனஜாவின் அழகு உருவம்... எழில் மேனி, பிணமாகஅடித்துச் செல்லப்படுகிறது.

∴ ∴

மீட்போம்! மீட்போம்!

——:0:——

இரும்புண்டு; நிலக்கரியும் இங்கே உண்டு!
இலகுதமிழ்க் குமரிகடல் முத்தும் உண்டு!
கரும்புண்டு; பருத்தியோடு தேக்கும் உண்டு!
காபிவளம் தேயிலையும் இங்கே உண்டு!
விரும்புபொருள் விளைப்பதற்கு இரப்பர் உண்டு!
வீசிமணம் கமழ்கின்ற பொருள்கள் உண்டு!
மருவில்லாப் பலவளங்கள் நிறைந்த இங்கே
மாக்னசைட் அலுமினியம் குறைவே இல்லை!

மங்கையரின் உடல்போன்ற தங்கம் உண்டு;
மலைநாட்டுக் கொடிமிளகும் இங்கே உண்டு.
சங்கமதில் தமிழ்வளர்த்த பெருமை, வீரம்
சற்றேனும் குறையாமல் இங்கே உண்டு.
மங்காத பெருமைபெறு மறவர் நெஞ்சில்
மாசில்லா துழைக்கின்ற திறமும் உண்டு.
இங்குவளம் இவ்வளவு இருந்த போதும்
இனிக்கின்ற புதுவாழ்வும் மட்டும் இல்லை!

துடுக்குடைய வடநாட்டுத் தூர்த்தர் கூட்டம்
துணிவோடு திராவிடத்தில் வரியை வாங்கி
அடுக்கடுக்காய்த் திட்டங்கள் அமைத்தார் அங்கு;
அத்தனையும் வடநாட்டை வளத்தில் ஆழ்த்த!
கொடுத்தவர்கள் நெஞ்சமெலாம் கொதிக்கும் வண்ணம்!
கொடியவர்கள் தென்னகத்தைப் புறக்கணித்தார்
கிடுகிடுக்கும் போராட்டக் கிளர்ச்சி ஒன்றால்
கீழ்மக்கள் சுரண்டலுக்கு முடிவு காண்போம்!

நிலவளமும் நீர்வளமும் நிறைந்த தோடு
நிகரில்லா மலைவளமும் குவிந்த நாட்டை
பலநாளாய்ச் சுரண்டிவரும் வடவர் நம்மில்
பண்பாலும் மொழியாலும் மாறு பட்டோர்!
உலகமதில் பாரதத்தை ஒன்றாய்க் காட்ட
உண்மையினை மறைக்கின்ற உள்ளத்தோடு
நிலவுபுகழ் பரப்பிவரும் தமிழை வீழ்த்த
நீசமனம் கொண்டவர்கள் நினைத்து விட்டார்!

சொறிபிடித்த தெருநாய்க்கள் கூச்சல் போன்று
சொல்வளமே இல்லாத இந்தி கொண்டு
தறிகெட்ட வடநாட்டுத் தருக்கர் கூட்டம்
தமிழ்கொல்லத் துணிந்ததடா! தோழா, செந்தீப்
பொறிபறக்கும் விழியோடு திரண்டு சென்று
பொங்கியெழுந் தார்த்திடுவோம் புலிகள் போல!
'முறியட்டும் நமதடிமை விலங்கு' என்று
முழங்கிபெருந் திராவிடத்தை மீட்கச் செல்வோம்

அடிபட்டும் வெடிபட்டும் அணைப்போம் சாவை
அடிமையராய் வாழ்வதினும் அதுவே நன்று!
துடித்தெழுந்து போர்தொடுத்தால் தூக்குமேடை
தூளாகும்; புதுடெல்லித் தொடர்புங் கூட!
வெடித்துவரும் எரிமலைபோல் எழுவோம்; சென்றே
வெறியரது தளையறுக்க முனைவோம்; இன்றே!
ஒடித்தெறிவோம அடிமையெனும் விலங்கை! வாழ்வில்
ஒளிகாண்போம்! திராவிடத்தை மீட்போம்!
மீட்போம்!

காஞ்சி—வில்லவன் கோதை

★ சி. பி. சிற்றரசு ★

க: காளியப்பன், நெல்லை.

கே: 'கவிஞர் கண்ணதாசன் பேசுவது ஓரிடமும், படிப்பது ஓரிடமும்' என்று, ஒரு தமிழ் ஆசிரியர் கூறுகிறார். இதுபற்றி—?

ப: கேட்டவர் படுக்கையில் பேசாத ஊமை போலிருக்கிறது.

ப. இ. இளங்கோவன், பம்பாய்-70

கே: நாடும் ஏடும் போற்றும் நல்லாசிரியர் அவர்களே! 'நாட்டுக்குச் சேவை செய்வதற்கே காங்கிரஸ் ஏற்பட்டது. சேவையை, அது செய்யத் தவறினால், அதைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு கட்சி ஏற்பட வேண்டும், என்று பிரதமர் நேரு போபாலில் பேசும்போது கூறியிருக்கிறாரே! இப்பொழுது காங்கிரஸ் சேவையைச் செய்ய தவறிவிட்டதே. அதன்படி காங்கிரஸ் கலைக்கப்பட்டு புதுக்கட்சி ஏற்படுமா?



ப: காந்தியார் இதே கருத்தைத்தான் சொன்னார். நேரு கேட்கவில்லை. இப்போது நேரு செல்வதை யார் கேட்கப்போகிறார்கள். ருசிகண்டபூனைகளாய் விட்டார்களே காங்கிரஸ்காரர்கள். கருவாட்டுக் கடையை எப்படி விடுவார்கள்?

எம். எஸ். டேவிட், பம்பாய்-1

கே: சிந்தனைச்சிற்பி அவர்களே! உலகத்திலே முதன் முதல் மக்களாட்சி வேண்டும் என்று போர் முரசு கொட்டிய முதல் மேதையார்?

ப: அறிஞன் ரூசோதான்— வால்டர் தீயால் எழுதினான்.

நா. இராம. சிவராமன், இராமநாதபுர மாவட்டம்

கே: எப்படி இந்தியா சுதந்திரம் அடைய வேண்டுமென்று போராட்டம் நடத்தினார்களோ, அதற்கும் பலமடங்கு பெரிய ஓர் போராட்டத்தை நம் கழகம் நடத்தினால் என்ன?

ப: நடத்தத்தான் போகிறது.

மு. செல்வராசன் வாலாஜா

கே: தி. மு. க. தலைவர்களில் ஒருவரான, கவிஞர் கண்ணதாசன் தி. மு. க. வில் இருந்து விலகிவிட்டாராமே, உண்மையா?

ப: உங்களுக்கு அப்படி ஏதாவது நம்பத்தகுந்த செய்தியிருந்தால் தயவு செய்து அனுப்பி வையுமே—

எஸ். இளம்பரிதி மதுரை,

கே: புரட்சி நடிகரைக் குறைகூறும் புல்லறிவினரையும், கழகத்தவரைத் தாக்கியும், பழித்தும் கூறும் பண்பற்றவர்களையும் திருத்துவது எப்படி?

ப: பலவகையுண்டு. அதில் நீங்கள் எதைப்பின்பற்றினாலும், பலாத்காரம் இல்லாமலிருந்தால் சரி.

கே: சிந்தனைச்சிற்பி அவர்களே! எங்களூரில் முஸ்லிம்கள்தான், பெரும்பாலும் தி. மு. க. வில் உறுப்பினராக இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஆண்டவனை வணங்குகிறார்கள். இதைப் பற்றி முஸ்லிம் தோழரிடம் வினவினேன். இஸ்லாம் கூறுவதும் உருவமற்ற ஓர் இறைவன். தி. மு. க. கூறுவதும் அவ்வாறே. ஆகையால் வணங்குவதில் தவறில்லை என்கிறார். இதைப் பற்றி தங்களின் கருத்தென்ன? இவர்களின் போக்கு, கழகக் கொள்கைக்கு உட்பட்டதா? இல்லையா?

ப: நாம், 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்கிறோம், அவர்கள், 'ஏகி குதா.ஏகி பந்தா' என்கிறார்கள். இரண்டும் ஒன்றே.

எம். கே. இராமு, மின்னப்பாளையம்.

கே: சிந்தனைச்சிற்பி சி. பி. சி. அவர்களே! ம.பொ.சியைப் பற்றிய பேச்சே இல்லையே ஏன்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? ஏதாவது சினிமாவிற்கு—?

ப: அவர் எப்போதும் ஏதாவது செய்துகொண்டுதானிருப்பார். ஆனால் ஒன்றும் அம்பலத்துக்கு வருவதில்லை.

இரெ. இளங்கோவன், சென்னை-21

கே: அன்புள்ள அண்ணா! கரிபால்டிக்கு சிறைக்கூடமும், கொலம்பசுக்குக் கைவிலங்கும், சாக்ரடீசுக்கு நஞ்சும், ஏசுவுக்குச் சிலுவையும், நபிக்குக் கல்லடியும், காந்திக்குக் குண்டும் கிடைத்தது போல் திராவிட விடுதலை வீரர்களுக்கு என்ன கிடைக்கும்?

ப: அவைகள் அவ்வளவும் சேர்ந்தே கிடைக்கலாம். எதற்கும் தயாராக இருந்து தானே தீரவேண்டும்.

கே: அண்ணா சிந்தனைச் சிற்பி அவர்களே! படிக்காத மேதை காமராசரை எதற்கு ஒப்பிடலாம்? இவருக்கும், அளகேசனுக்கும் என்ன வித்தியாசம்?

ப: முன்னவருக்கு பொறுப்பு அதிகம்; பின்னவருக்கு வெறுப்பு அதிகம்!

அரங்க. கலையரசன் புதுக்கோட்டை

கே: அண்ணா அவர்களே! தங்கள் இனமுழக்கத்தில் வந்த புறப்படுமகனே தொடரோவியம் என்னவாயிற்று என்பது தெரியவில்லை. முற்றியதா, இல்லை. நேரமில்லாததால் எழுதவில்லையா என்பதை தயவு செய்து அறிவிப்பீர்களா?

ப: புறப்பட்ட மகன், எங்கோ சுற்றிக்கொண்டிருக்கிறான். விரைவில் அவனை உங்களிடம் அனுப்புகிறேன்!

கே: நேருவைப்பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: குளிர்ச்சாதனப் பெட்டியில் வைத்த பழம் எனலாம்.

தி. மா. மணி, சென்னை

கே: இந்தி எதிர்ப்பு பாடல் ஒன்று எழுத இயலுமா?

ப: இயலை முதலில் புரிந்து கொள்ளும். பிறகு இசையைப்பற்றி கவனிப்போம்.

ப. அன்பரசு, கிண்டி

கே: ஆசிரியர் அவர்களே! ரோமன்இனம் நல்ல இனமா அல்லது திராவிட இனம் நல்ல இனமா? இதில் எந்த இனம் நல்லது?

ப: 2400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இனம் ரோமன் இனம். அதைவிட முந்தித் தோன்றியது திராவிடஇனம். இப்போது தனி திராவிடம் இருப்பதைப் போல தனி ரோமன் இனம்இல்லை. ஐரோப்பாவில் பல்வேறு இனங்களாக மாறி விட்டன.

நா. நடராசன், கரூர்

கே: தி. மு. க. ஒரு கூத்தாடி கட்சி என்று மந்திரி ராமையா தாக்குகிறாரே, ஏன்?



ப: நாம் இரவில் மாத்திரந்தான் சிலநாட்களில் கூத்தாடுகிறோம், அவர்கள் எந்த நேரமும் கூத்தாடுகிறார்களே, என்ன செய்வது?

அ. நா. முத்து மணல்மேடு

கே: சிந்தனைச்சிற்பி அவர்களே! தங்களைச்சிம்மக்குரல். (தங்கப்) பித்தளைப் பழம் ஆலிவுட் சிப்பி என்று குறிப்பிடுகிறாரே! தாங்கள் இதற்கு என்ன சொல்கிறீர்?

ப: அவரும் நானும் 1953ல் இலங்கைக்குப் போனோம். அப்போது அவர்தான் ஆலிவுட்டாக இருந்தார்.

கே: தங்களுக்கு எத்தனை குழந்தைகள் உண்டு. பெயர்கள் என்ன?

ப: நான்கு பேர். மூன்று பெண்கள், ஒரு. பையன்.

இசண்முகம் பொதும்பு

கே: 'சிந்தனைச்சிற்பி அவர்களே' நமது கழக உறுப்பினர், தன் வீட்டில் நம் கழகக் கொடியைக் கட்டலாமா? ஏன் கட்டவேண்டும்? விளக்கம் தேவை.

ப: கட்டலாம். நகராண்மைக் கழகம் நம் வீட்டிற்கு எண்ணைப் போடுவதில்லையா அந்தமாதிரி.

கே: தி. மு. க.வின் அடுத்த மாநாடு எங்கு நடக்கும்?

ப: அநேகமாக கோவையில் நடை பெறலாம். இது என் யூகந்தான்; இயக்கத் தின் முடிவல்ல.

கே: விதிக்கும், மதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: முயற்சியற்ற தன்மை விதி; முயற்சியின் முன்னேடுவது மதி.

மு. மணி, அயன்புரம்

கே: தி. மு. கழக நடிகர்கள் நடிக்கும் படங்கள், அண்மையில் தோல்வி அடைந்து கொண்டு வருகின்ற வெறுப்பினால்தான் கலவரம் ஏற்படுகிறது' என்று அழகேசன் சொல்கிறாரே, தங்கள் பதில் என்ன?

ப: பொக்க வாயனுக்கும் பட்டாணிக்கும் எவ்வளவு சம்மந்தமோ, அவ்வளவு சம்மந்தந்தான் படத் தோல்விக்கும் கலவரத்துக்கும் என்று அந்தச் சூரப்புலிக்குச்சொல்லுங்கள்.

சென்னை பல்கலைக்கழக பேச்சுப்போட்டி!
கே. ஏ. கிருட்டிணசாமி, பி.ஏ. [ஆனர்ஸ்] முதற்பரிசு பெற்றார்!

1960-61 ஆண்டிற்கான, சென்னைப்பல்கலைக் கழகத்தின், தலைசிறந்த மாணவப்பேச்சாளர்களைத் தேர்ந்தெடுக்கும் இறுதிப்போட்டி, 22—11—60 செவ்வாய் மாலை 6 மணியளவில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றது.

குமரி முதல் சென்னை வரையிலுமுள்ள கல்லூரிகள் அனைத்தினின்றும். பொறுக்கி எடுக்கப்பட்ட நான்குமாணவர்களும், நான்கு மாணவிகளும், ஆக எண்மர் போட்டியில் பங்கேற்றனர்.

தோழர். கே. ஏ. கிருட்டிணசாமி, பி. ஏ. (ஆனர்ஸ்) (சட்டக்கல்லூரி) தோழர். சண்முகம், (விவசாயக்கல்லூரி, கோவை) தோழர். கண்ணன், (நாகர்கோயில் கல்லூரி) காரைக்குடி அழகப்பா கல்லூரி மாணவர், தோழியர் ஏழிசை வல்லி, (எஸ் ஐ. இ டி. மகளிர் கல்லூரி, சென்னை) தோழியர். பார்வதி, (மேரி ராணி மகளிர் கல்லூரி, சென்னை) திருச்சி மகளிர் கல்லூரி மாணவி ஆகியோர் கலந்து கொண்டு விவாதித்தனர்.

பச்சையப்பன் கல்லூரித்தலைவர் திரு கிருட்டிணமூர்த்தி அவர்கள் நடுவணர்களின் சார்பில், பல்கலைக்கழகத்தின் தலை சிறந்த பேச்சாளராக, சட்டக்கல்லூரி மாணவர் தோழர். கே. ஏ. கிருட்டிணசாமி, பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

கூடியிருந்த மாணவர்கள் தங்களின் மகிழ்ச்சிப் பெருக்கை கையொலி மூலம் வெளிப்படுத்தினர்.

இரண்டாவது பரிசினை சென்னை. மேரி ராணி மகளிர் கல்லூரியினைச் சார்ந்த தோழியர். பார்வதி அவர்கள் பெற்றார்.

சட்டக்கல்லூரிப் பேராசிரியர் திரு. ஏ. பழனிச்சாமி, சென்னை சர்க்கார் மொழிபெயர்ப்பாளர் திரு. பார்த்தசாரதி, ஆங்கிலம் - தமிழ் அகராதி குழு உதவியாளர், திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் ஆகியோர் நடுவணர்களாக பணியாற்றினார்கள்.

போட்டியின் துவக்கத்தில்பச்சையப்பன் கல்லூரிப்பேராசிரியர் டாக்டர். மு. வரதராசனார் அவர்கள் பல்கலைக் கழகத்தின் சார்பிலும் பச்சையப்பன் கல்லூரியின் சார்பிலும் எல்லோரையும் வரவேற்று நல்லுரை கூறினார்.

ஏராளமான மாணவர்களும், பேராசிரியர்களும் பேச்சுப் போட்டியினைக் காண மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

இனமுழக்கம்

மலர் 2 ★ 9-12-60 ★ இதழ் 15

பேரனுக்கு,

சென்னை,
9—12—60

சென்ற கிழமை உன் பாட்டியைப்பற்றி சொல்கிறேன் என்று எழுதியிருந்தேன். அதற்குள் சில நண்பர்கள் உங்களைப் பற்றியே சரியாகச் சொல்லாமல் அண்ணியாரைப் பற்றி எழுதத் தொடங்கி விட்டீர்களே, முதலில் உங்களைப் பற்றி எழுதுங்கள். உங்கள் பேரன் பின்னல் படிக்கப் போவதை நாங்கள் முன்னலேயே படித்துத் தெரிந்து கொள்கின்றோம். என்று அலுவலகம் நோக்கி அஞ்சல் கணைகளை ஏவினர்கள். ஆகையால் என் எழுதுகோல், நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்க திசை திரும்ப வேண்டி வந்தது. நீண்ட காலத்தின் நிதானத்தை ஒரு சுருங்கிய நூல் வேல் வேகமாக்கி விடுகிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள், ஏனெனில் நூருண்டுகள் ஒரு பெரியவரின் வாழ்க்கையை நூறு வரிகளிலே எழுதிவிடலாமல்லவா. அதனல்தான் வளைந்திருக்கும் வாழ்க்கையை வரலாறு ஒரு நீண்ட கம்பியாக்கி விடுகிறது.

அந்த வகையிலேதான் என் வாழ்க்கையைச் சுருக்கிச் சொல்ல வேண்டியிருக்கிறது. என் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு இயக்க நண்பர்கள் மட்டிலும் விரும்பினர்கள் என்பதல்ல. உன் தாயும் சிற்றன்னைகளும் என்னை எழுதித் தரும்படியும் அதை அவர்களே வெளியிடுவதாகவும் அடிக்கடி கேட்டு வந்தார்கள். பிறகு எனக்கிருந்த வேலைகளைப்பார்த்து அவர்களே வாளாவிருந்து விட்டார்கள். அதை எழுதுவதற்கான அரிய சந்தர்ப்பத்தை நீதான் ஆக்கித்தந்தாய் என்று சொல்லலாம். அப்படி நான் எழுதப்போகும் என்னுடைய வாழ்க்கையில் பிறர் பின்பற்றக்கூடிய பகுதிகள் ஏதாவதிருந்தால் அதற்காக வருங்கால உலகம் உனக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். ஏனெனில் என்னை எழுதத் தூண்டிய கர்த்தா நீயல்லவா — அதனல்தான், நான் எழுதத் தொடங்குவதற்கு முன்னல் ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அதைச் சொல்லிவிட்டு நேராகத் தெரிந்துக் கொள்ளவேண்டிய இடத்திற்குப் போவோம்.

1951-ம் ஆண்டு நான் சேலத்திலிருக்கும் மாடர்ன் தியேட்டரில் கதை இலாகாவிப் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். மாதச் சம்பளம் ரூ. 500/- என்னேடு தோழர்கள் மு. கருணநிதி அவர்களும், ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களும் அதே கதை இலாகாவில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அதன் அதிபர் திரு. டி. ஆர். சுந்தரம் அவர்கள். அவர் ஸ்டுடியோவில் வேலை செய்கின்ற மற்றவர்களை எப்படி நடத்தினலும், ஒரு இயக்கத்தைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் என்ற காரணத்தால் கண்யமாகவே நடத்தி வந்தார்.

அவர் ஒரு நாள் என்னை அழைத்து, 'தாமஸ் ஹார்டி என்பவர் எழுதிய, Mayor of Caster bridge காஸ்டர் பிரிட்ஜ் நகரத்தின் மேயர் என்ற கதையை படமாக்க வேண்டும். அந்த நூல் கிடைக்குமா' என்று கேட்டார். சென்னை மாநிலத்தில் தேடிப் பார்த்தோம். கிடைக்கவில்லை. பிறகு நான் பம்பாயிலிருந்து அதைத் தருவித்து படித்து கதைச் சுருக்கம் ஒன்றை எழுதிக்கொடுத்தேன். அதைப் படித்து விட்டு விழுந்து விழுந்து சிரித்தார். அவர் அநேகமாகச் சிரிக்க மாட்டார். அப்படிப்பட்டவர் குலுங்க குலுங்கச் சிரித்ததற்கு என்ன காரணம் என்று கேட்டால், அதில் வரும் கதாநாயகன் குடித்ததால் ஏற்பட்டகடனைத் தீர்ப்பதற்காகத் தன் மனைவியைஏலம் போட்டு விற்கிறான். (தொடரும்)

உன் தாத்தா,

சி. பி. சிற்றரசு

ஜெயராஜ்.

இலை உதிரும்; மரம் சாயாது!

இயக்கம் ஒரு ஓங்கி வளர்ந்த மரம்போன்றது. அதில் பழுத்த சில இலைகளும் விழலாம். அடிக்கும் காற்றுக்குத் தாங்காமல் சில இலைகள் விழலாம். அதிலுள்ள பழங்களைப் பறிக்கும்போது. அவற்றோடு சில இலைகள் விழுந்து விடலாம். இது மரத்திற்கு மாத்திரமல்ல, மனிதர்கள் சிலருக்கும் இந்த கெதி நேரிடுவதுண்டு. அதிலும் அவர்கள் எந்தக் கட்சியையும் சாராதவர்களாக இருந்தாலும் உண்டு ஏதாவதொரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்துகொள் வகைபிடிப்பு இல்லாமல் அடிக்கடி கோமாளிக் கூத்தடித்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு எதிர்ப்பார்த்தே ஏற்படுவதுண்டு.

முடிந்துவிடும் என்பதை உணர்ந்தவர்கள். தங்கள் எண்ணம் என்ருவது ஒருநாள் நிறைவேறக்கூடும் என்று காலத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்கள். தாம் எதிர்ப்பார்க்கும் பதவிக்கும் தாம் செய்த சேவைக்கும் சரியான எடைவரவில்லை போலிருக்கிறது. என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள். ஒன்றை எதிர்ப்பார்த்து அதற்காகப் போராடி, அது கிடைக்க வில்லையாலும் பழையபடி இயக்க வேலையை விட்ட இடத்திலிருந்து தொடங்கிச் செய்துக்கொண்டிருப்பவர்கள்.

ஆனல், இரண்டாம் விதத்தினர் அப்படிப்பட்டவர்கள் அல்ல. தான் சேவை செய்திருந்தாலும் செய்யாவிட்டா

பணியவைக்கலாம் என்று நினைப்பவர்கள். இந்த இரு சாராரும் எல்லா கட்சிகளிலும் இருக்கத்தான் செய்கிறர்கள். இந்த இரு சாராருக்கும் மோதல் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே தலைமையின் கடமை. அது எந்தப் பயமுறுத்தலுக்கும் பயப்படாது. இன்று நம் இயக்கத்துக்குக் கிடைத்துள்ள தலைமை தியாகத்தீயில் குதித்தவர்களைக் கொண்டதாகும். ஜனநாயக விரும்பிகளை அரசியலைகற்றுணர்ந்தவர்களின் கூடாரமாக அமைந்திருப்பதாகும். வளர்த்துக்கொண்டு போகாமல் விவகாரத்துக்கு வருவோம்.

தோழர்கள் முனுசாமி ஜீவரத்தினம்

இந்த இருவரில் விடாமல்

வி. முனுசாமி, என். ஜீவரத்தினம் சி. பி. சி. விளக்கம்

இருவிதத்தினர்

எந்த அரசியல்கட்சியிலும் இருவிதத்தினர்கள் இருப்பார்கள். ஒரு சாரார் கட்சியால் தாம் நாம் இருக்கிறேம் என்று நினைப்பவர்கள். மற்றொரு சாரார், நம்மால்தான் கட்சி இருக்கின்றதென்று நினைப்பவர்கள். முன்னவர்கள் கட்சியின் கட்டளையையேற்று நடக்கக் கூடியவர்கள், நடப்பவர்கள், தங்களுடைய ஆசைகள் நிறைவேராத நிலையிலும், அதை வலியுறுத்தத் தங்களுக்கு உரிமையிருந்த போதிலும், அந்த ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளத் தங்களுக்கு ஆற்றல் இருந்த போதிலும் சனநாயகத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்றபோதிலும் மக்களை நடத்திச் செல்கின்ற பொறுப்பை எப்படி ஒரு சிலரிடம் ஒப்படைக்கிறேமோ. அதேபோல் ஒரு கட்சியை ஒரு சிலர் தான் நடத்திக் கொண்டுபோக வேண்டியதாக இருக்கிறது. அப்படி இல்லையானல் தூனைச்செங்கல்லும் பிடாரியான கதைபோல

லும் தான் எதிர்ப்பார்த்தது கிடைக்க வில்லையானல் உடனே எதிரிகளோடு சேர்ந்து கொண்டு இபக்கத்தை அழிக்கப்பார்க்கும் ஈனபுத்திபடைத்தவர்கள். இவர்கள் தங்களால் இயக்கம்தான் இருக்கிறது என்று நினைப்பவர்கள். எதையோ அடையவேண்டுமென்றே இபக்கத்திலிருப்பவர்கள் பயங்காட்டினலும், மிரட்டினல் இயக்கம் பணிந்துவிடும் என்று நினைக்கின்ற அப்பாவிகள், கட்சி விட்டு கட்சி மாறுவது சோரத்தனம் போன மாதிரி என்பதைப் பற்றிக் கொஞ்சம் கூட சிந்திக்காதவர்கள்தான் இல்லையானல் கட்சிஇல்லைஎன்றுநினைப்பவர்கள். நாம் அனைத்துத் திராவிட சமுதாயத்துக்காகப்பாடுபடுகிறேம் என்பதை அறவே மறந்து தனக்குப் பின்னல் ஆயிரக்கணக்கானவர்கள் அணிவகுத்து நிற்பதாகக் கற்பனை செய்து, கொண்டு, இயக்கத்தை மிரட்டிக்கொண்டிருப்பவர்கள்.

தலைமையைப் பலவீனப்படுத்தி அதைத்தனக்கு அடி

இபக்கத்திலிருந்தவர் முனுசாமி, விட்டுவிட்டிருந்தவர் ஜீவரத்தினம். இருவரும் சென்னை மாநகராட்சி மன்றத்தில் அனுபவம் பெற்றவர்கள்கள்தான். சந்தேகமில்லை. இதில் தோழர் முனுசாமிக்கும் ஜீவரத்தினத்துக்கும் நிர்வாகத்துறை அனுபவத்தில் நிறைய வேறுபாடுண்டு. பல திறப்பட்ட கொள்கைகள், மனோபாவங்களைக் கொண்ட பலர் கூடி இபக்கும் ஒரு நிருவனத்தில் வளைந்து கொடுக்கும் சுபாவத்தோடு பணியாற்றுவது ஒன்று. யாரையும் தன்வசம் இழுக்கும் முகத்தோற்றத்தோடு இருப்பது ஒன்று. தான் சார்ந்திருக்கும் நிருவனத்தின் உள்ளும்புறமும்உள்ள எல்லாக் கோணங்களையும் தெரிந்து கொண்டு பணியாற்றுவது ஒன்று. தன்னுள் புதைந்திருக்கும் திறமையைத் தக்க நேரத்தில் பயன்படுத்தித் தனக்கும்தான் சார்ந்திருக்கும் இபக்கத்திற்கும் நற்பெயரை தேடிக்

(10-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்
சி.பி.சிற்றரசு

விலை 6 காசு

சூத்ரக் கயிறு அறுந்துபடும் சூட்சமம்

பண்டிதர் போற்றும் காங்கிரசுப் பொம்மலாட்டம்

வே. சௌந்தரராசன்
B.A., B.L.

அகில இந்தியாவும் ஒரே ஆட்சியில் பிடிப்போடு இருப்பதற்காகச் செய்து வரப்படும் முயற்சிகள் நாளுக்கு நாள் வீணாகிக் கொண்டு வருகின்றன. ஒற்றுமையை உணர்த்தி, தொண்டினைக் காட்டித் தங்களது கட்சிக்குப் பலம் தேடவேண்டியவர்கள் பலன் தேடித்திரிகிறார்கள். நாட்டிலுள்ள நேரடியான பிரச்னைகளைக் கவனிக்காமல், ஏன் ஒரு புறம் புறக்கணித்து விட்டுக் கூடப் புதிதாகத் தாங்களே பிரச்னைகளை எழுப்பிக் கொண்டும் வருகிறார்கள், தேசிய வாதிகள். பண்டித நேருவின் ஆத்திரத்தை மூட்டிவிடும் அளவிற்குக் காங்கிரசு பதவிவேட்டைக் காடாக மாறிவருகிறது. பொது நலம், பொதுத் தொண்டு, நேர்மை, என்றிருந்த பண்புகள் மாறித் தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு, சுற்றம் இவையுண்டு, தானுண்டு என்ற இழிநிலைக்கு அவர்களது போக்கு மாறிவருகிறது, என்பதாகப் பண்டிதர் கடிந்துரை பகர்கிறார். எப்படியேனும் சமாளித்து விடவேண்டும், சமாளித்து விடமுடியும் என்ற நம்பிக்கையோடு சிலவற்றை அலட்சியம் செய்து, வேறு சிலவற்றை வேடிக்கை பார்த்தும், இன்னும் சிலவற்றைக் காலத்தின் கணிப்பிற்கும் விட்டுப்பார்க்கிறார் நேரு. தமது சுதந்திரக் கயிறுகளைக் கொண்டு காங்கிரசு அரசாங்கம்என்ற பொம்மலாட்டத்தை நடத்த அவர் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளைக் கூடக் கருதாது கயிற்றையே அறுத்துக் கொள்ளும் அளவிற்குப் பொம்மைகள் இயங்கி வருகின்றன.

மைசூர் காங்கிரசுக் கட்சிக் காலத்தில் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். என்ன அது? ஆட்சி பீடத்திலிருந்து வரும் காங்கிரசு மந்திரி சபை கலைக்கப்படவேண்டும், அல்லது அவர்களே பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று அந்தத் தீர்மானம் வற்புறுத்துகிறது. நிலைமை எவ்வளவு சீர்கேடாக, வளருகிறது என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஒருமாநிலத்தில் பொதுத் தேர்தல் நடந்து எவ்வளவு சிரமங்களுக்கு இடையில் ஒரு கட்சி நிர்வாக இயந்திரத்தைக் கைப்பற்ற வேண்டியிருக்கிறதென்று, மக்களை அவ்வளவு எளிதாக நினைத்து ஒவ்வொருவருடைய சொந்த எண்ணங்களுக்காக நிருவாகத்தை நிர்மூலமாக்கும் அளவிற்கு நிதானம் இழந்து காணப்படுகிறார்கள். குற்றஞ்சுமத்துகிறவர்கள் புனிதமானவர்கள் என்பதல்ல, ஆட்சிப் பீடத்திலே இருக்கும் தங்களது உடன் தோழர்களுக்கு நல்ல பெயர் ஏற்பட்டு விடக்கூடாது என்பதே ஆகும். இது சிறுமை ஆயினும்காங்கிரசில் மலிந்து கிடக்கிறது கட்சியினுடைய அடிப்படையிலே செய்ய வேண்டிய வேலையை வெளிப்படையாய்ச் செய்கிறார்கள். நுனிமரத்திலிருந்து கொண்டு அடிமரத்தை வெட்டும் போக்கில் காங்கிரசார் இறக்கியிருக்கிறார்கள். இப்படியொரு தீர்மானம் வரக்கூடாது என்று கருதி அண்மையில் செய்ப்பூரில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரசுக் கட்சி மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பண்டிதநேரு, மிகவும் வருந்திக் கூறினார்.

"அன்று காங்கிரசு இயக்கம் தியாகம் செய்து வளர்ந்தது. இன்று அதன் நிலை வேதனைக்குரியதாக மாறி வருகிறது. பதவி, பட்டம், லாபம் ஆகியவற்றையே கருதிச் சுயநலமிகளாக மாறிவருகிறார்கள். கட்சிக்குள் பூசல், மலிந்து விட்டது. காந்தியடிகள் சொன்ன உண்மை, அன்பு, அறம், ஒழுக்கம் ஆகிய கோட்பாடுகள் மறைந்து காணப்படுகின்றன. அது மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமையாகும். ஏன்? நானே அநேகதடவைகளில் நினைத்ததுண்டு. இனி எதற்காக இப்படிப்பட்ட இடையூறுகளோடு சுயநல வேட்டைக்காக, காங்கிரசை வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? புனிதமும் பெருந்தன்மையும் இல்லாத இடத்தில் பொதுத் தொண்டு உருப்படாது என்று எனக்கு நன்றாகப்படுகிறது. அந்த வேளைகளில் காங்கிரசை என் இன்னும் நீட்டித்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது.

தலைமை அமைச்சர் நேருவின் தகுதிப் பாட்டிற்குக் குறைகள் கூறமுடியாது. ஆயினும் அவர் வருந்துகிறார். நாட்டின் பிற்போக்கு அரசியற் சூழ்நிலைகளைக் கண்டு. இதற்கு அவரும் ஒரு காரணம் ஆவார். மாநிலங்களில் எதிர்கட்சியினர் சொல்லிவரும் நியாயமான கோரிக்கைகளை அவர் செவிமடுப்பதில்லை. அங்ஙனம் உதாசீனப்படுத்துவது பிரிட்டிசாருக்குப் பெருமை அளித்திருககலாம். இன்று அது பொருந்தாது மொழிப்பிரச்சனையிலும், மொழி வாரி மாநிலங்கள் அமைப்பதிலும் முற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல் முட்டுக்கட்டையானவர்களின் எண்ணங்களுக்கு இடம் கொடுத்தது முறையாகாது. மாநிலங்களைப் பிரித்தபோதே மராட்டா, பஞ்சாபி சுபாராக நாடு ஆகிய பகுதிகளை முறைப்படுத்தியிருக்கலாம். பொதுமொழி என்பதாக இந்தியை வைத்து அதனால் காங்கிரசின் சீரழிவிற்கே ஓர் சிறந்த இடம் அமைத்துக் கொடுத்துவிட்டார் நேரு.

அதே போல் ஐந்தாண்டுத் திட்டத்தில்மேற்கு வங்காளம், தான் கேட்ட திட்டங்களைச் சில ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காகவும், போதுமான அளவு வங்காளத்திற்த திட்ட நிதியும் ஒதுக்கப்படவில்லை என்பதை அங்குள்ள முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் கண்டித்தார். கண்டித்தது ஒருவேளை மிகுதியான தேவைகள் புறக்கணிக்கப்பட்டதால் ஏற்பட்ட ஆவேசமாயிருக்கலாம். தன் மாநிலம் வளம் பெற வாய்ப்புகள் குறைந்ததற்காக வாட்டமுற்று கோபத்தில் அங்ஙனம் மத்திய ஆட்சியை எதிர்த்துக் கண்டிக்கும் அளவிற்குப் போயிருக்கலாம். ஆனால் நிலைமை அதோடு நின்றதா என்றால் அதுதான் இல்லை. தங்களது கண்டனத்தை வற்புறுத்திக் காட்டும் முறையில் இந்த ஆண்டு நடைபெற்ற சுதந்திர நாளைத், துக்க நாளாகக் கொண்டாடினார்கள். இதைவிட விசித்திரம் வேறு என்ன இருக்க முடியும் என்று நினைத்துப்பாருங்கள்,

மைசூரிலே பார்த்தால் ஆளும் நிருவாகத்தை, ஆட்கொண்டிருக்கும் காங்கிரசுக் கட்சியே விலகச் சொல்லித் தீர்மானிக்கிறது. மேற்கு வங்காளத்திலோ மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தம் மாநிலம் புறக்கணிக்கப்பட்டதற்காகத் துக்கதினம் கொண்டாடுகிறது. இரண்டு இடத்திலேயும் காங்கிரசுக் கட்சிதான் ஆட்சியிலேயிருக்கிறது. மத்திய ஆட்சியில் மதிப்பிற்குரிய பண்டித நேருவும் அவரது காங்கிரசுக் கட்சியும்தான் நிருவாகத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குள்ளே எவ்வளவு நெருக்கடி என்பதை பார்த்துத் திருந்திக் கொள்ளாமல் எதிர்க்கட்சியினர் மீது சீறுகிறார்கள் இந்தக் குறைப்பாடுகளை உணர்ந்துதான் பண்டித நேரு காங்கிரசை கலைத்து விட்டால் என்ன என்ற அளவிற்குக் கொந்தளிப்பு அடைகிறார்,

ஒரிசாவிலே என்ன நிலைமை ஒழுங்காயிருக்கிறதா என்று பார்த்தால் அங்கே கனதந்திரப்பரீசத் கட்சியோடு சேர்ந்து கூட்டு மந்திரி சபையைக் காங்கிரசுக் கட்சி அமைத்து இருக்கிறது. அங்கு முதலமைச்சராக டாக்டர் அரிஹிருஷ்ணமேதாப் இருக்கிறார். அவரே தலைவராகக்கொண்ட தனிக் காங்கிரசுதான் ஆட்சிப் பொறுப்பிலிருக்க வேண்டுமே தவிர கூட்டு நிருவாகம் வேண்டாம் என்று ஒரிசா காங்கிரசு தீர்மானித்திருக்கிறது. இக் கூட்டு நிருவாகமும் காங்கிரசு மேலிடத்தைக் கேட்டுச் செய்யப் பட்டதுதான். என்றாலும் உள்நாட்டு அரசியலுக்கு முக்கியத்துவம் தராமல் அல்ஜீரியாவில் என்ன, அங்கேரியில் என்ன என்பதைப் பற்றியே அதிகமாய்க் கவனம் செலுத்துவதன் விளைவுகளே இக் குழப்பங்களுக்குப் பெரிதும் காரணம் எனலாம். வெளிநாட்டு விவகாரங்கள், ஏதோ பெருமைக் குரியன போலவும் உள்நாட்டு நிருவாகம் தீவிர கவனம் தேவைப்படாத ஒரு அமைப்புப் போலவும் கருதிவரும் தன்மையே உள்நாட்டுக் குறைகள் அதிகமாகி வருவதற்குக் காரணம் என்பதில் ஐயமில்லை. அமெரிக்காவில் ஐசனோவரின் உள்நாட்டுக் கொள்கை பலவீனமடைந்ததுதான் அவரது குடியரசுக் கட்சித் தேர்தலில் தோற்று விட்டதற்கு ஒரு காரணம் என்பதை மறுக்க இயலாது. அன்றுள்ள நிலையில் காங்கிரசுப் பொம்மலாட்டம் என்றோ ஓயும்நாளை எதிர்பார்த்து நடைபோடுகிறது என்பது தெளிவு. ஒன்று ஆட்டம் நிறுத்தப்படவேண்டும் அல்லது கயிறுகள் பலமான இழுப்பால் அறுபட்டுத் தனித்து விடும் என்பது மட்டும் யூகமாய்ப் புலப்படுகிறது.

காலம் நம்மிடம் சூதாடும்,—நம்
கனவுகள் அதனிடம் வாதாடும்;
ஏலம் போய்விடும் நம் இதயம்-எனில்
எங்கே வாழ்வின் கதிர் உதயம்!

நீயும் நானும் இருகுமிழி;--நம்
நேசமும் நினைவும் பனிப் படலம்!
காயும் வெயிலில் மலர்போலே--நாம்
கருதும் ஆசை கருகிவிடும்!

காலைப் பூவாய்ச் சிரிக்கின்றோம்;--சில
காலம் இருந்து மரிக்கின்றோம்!

சோலைப் பூவோ நம் வாழ்வு?--பனித்
துளியின் அழகோ நம் காதல்!

கல்லறை செல்லும் முன்னாலே--நாம்
கதையாய் மாறும் முன்னாலே,
நல்லிளம் பருவ காலத்தில்--எந்
நாளும் இன்பப் பயிர் செய்வோம்!

ஊரும் பேரும் தெரியாமல்--இவ்
வுலகின் வழியும் புரியாமல்
பாரில் இறந்து படுமுன்னே--இளம்
பருவத் தேரில் அமர்வோம் நாம்!

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2] ★ 9-12-60 ★ [இதழ் 15

முட்டாள்தனம்

யார் யாரை எதைச் சாப்பிடுவது என்பதை யார் முடிவு கட்ட வேண்டும்? அதை அதை சாப்பிடுகிறவர்கள்தான் அதை முடிவு கட்ட வேண்டும். வேண்டுமானுல் நிலைமைக்கேற்ற மாதிரி கொஞ்சம் உணவு பழக்கத்தை மாற்றிக்கொள்ளுங்கள் என்று வினயமாகக் கேட்டுக் கொள்ள லாமே தவிர, ஒருவர் உணவைக் கூறுவது அவ்வளவு நல்லதல்ல. அதுவும் ஒரு பிரதமரே இப்படி ஒரு சாராரை அவமானப்படுத்துவதைக் கண்டிக்க மேலே சொன்ன முட்டாள்தனம் என்பதைத் தவிர வேறு சொற்கள் கிடைக்க வில்லை.

அரிசியா? கோதுமையா?

அரிசி உண்பதா அல்லது கோதுமை உண்பதா என்பது இன்று கிடைக்கும் உணவு தானியங்களைப் பொருத்ததாயிருக்கலாம். ஆனுல் கோதுமை உண்பவர்கள் எல்லாம் மகா மேதைகள், அறிவிலும், ஆற்றலிலும் சிறந்தவர்கள், வீரர்கள்; அரிசிச் சாப்பிடுகின்றவர்கள் எல்லாம் கோழைகள், மந்தப் புத்தி உடையவர்கள் ஏன்றெல்லாம மனம் போனபடி பேசுகிறவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாயிருந்தாலும் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. அதோடு ஒரு நீண்ட சரித்திர ஆதாரங்களையே தரவேண்டியிருக்கிறது.

நேருவின் மிக இந்திய பாட்டன் தலையிலே கல்லை ஏற்றிய சேரன் செங்குட்டுவன் அரிசியை உண்டவன். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் அரிசியை உண்டவன். இலங்கையை வென்ற கரிகாலன் அரிசியை உண்டவன். பர்மாவின்மேல் படை எடுத்து பெகு என்ற மாகாணத்தை வென்று விசயோத்துங்கனைக் கைது செய்த ராசேந்திரன் அரிசியை உண்டவன். இப்படி இன்னும் பலரைச் சொன்னுல் பட்டியல் நீளும்.

கோதுமை உண்ட அப்பி என்ற ஆரிய மன்னன், குடல் நடுக்கமெடுத்து அலெக்சாண்டரை உள்ளே விட்டவன், கல்லைச் சுமந்த கனக விசயர்கள் கோதுமையை உண்டவர்கள். ஏன் இப்போது சீனர்களை தன் எல்லையில் உட்கார வைத்துக் கொண்டு பஞ்சசீலம் பேசிக் கொண்டிருக்கும் நேரு கோதுமை உண்பவர். கோதுமையில் சத்திருக்கிறது, இது அவர்கள் வாதம். அதில் மந்த புத்தி, காட்டுமிராண்டித்தனம், அவசர புத்தி, நாகரீகமின்மை, வெறி எல்லாம் இருக்கிறது. இது நமது வாதம். எது உண்மை என்பதை நாடே சொல்லும். அரிசி தின்னும் கிருட்டிண மேனன் இன்னும் ஐ. நா.வில் நிரந்தரமாக இருக்கிறுர். கோதுமைத் தின்னும் நேரு தோற்றுப்போன ஒரே தீர்மானத்தோடு ஓடி வந்துவிட்டார். இந்தியாவின் முதல் கவர்னர் ஜனரல் ஆச்சாரியார் அரிசியிலேயும் பச்சரிசி சாப்பிடுபவர். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய பலர் அரிசியைத் தின்பவர்கள்.

தரமுடியாதவர் தாக்குகிறுர்

அரிசியை எங்களால் கொடுக்கமுடியவில்லை. அயல் நாட்டில் பிச்சை எடுத்தக் கோதுமையைத் தருகிறேம் என்று சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது என்று வேண்டுமானுல் சொல்லட்டும், குழந்தை கேட்கும் பண்டத்தை வாங்கித்தரமுடியாத தந்தை, வேண்டாம் அது கசக்கும், என்று சொல்வதைப்போல, அரிசியைப் போதிய அளவுக்குத் தரமுடியாத பண்டிதர் அரிசி உணவுக்காரர்களைத் தாக்குகிறுர்.

வரலாறு காட்டும் விளக்கம்

இதனுல்தான் பிரிவினை வேண்டுகிறேம். கோதுமைக்காரன் அரிசிக்காரனை இப்போது மாத்திரம் கிண்டல் செய்யவில்லை. அரியாசனமேறிய நாள் முதல் இப்படி வாய்க் கொழுப்பாகப் பேசுவதும், அரிசிக்காரர்கள் முதலில் வருந்துவதும், பிறகு கண்டிப்பதும், பிறகு எச்சரிக்கை விடுவதும், அதையும் மீறி அந்த ஆணவக்காரர்கள் வெறியேறிப் பேசுவதும், இறுதியில் கருப்புக் கொடியைக் கண்டு கண்டகண்ட சந்துகளில் விழுந்து ஓடுவதுமான நிலையை வரலாறு இன்னும் மறந்துவிடவில்லை.

இதிலிருந்தே—தென்னுடு வடநாடு பேசுவது தவறென்று சொல்லுகின்ற மரமண்டைகள் திருந்தும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் உடலிலும் உள்ளத்திலும் அவ்வளவு அடிமைத் தழும்பு படர்ந்துவிட்டிருக்கிறது. அது விரைவில் மறையாது. மேலும் அந்தத் தழும்பு 15,000 வெள்ளி-இல்லை, இல்லை வேரோர் உலோகத்துக் கலப்படத்தால் செய்யப்பட்ட துண்டுகளை கூலியாகப் பெற்று ஏற்றுக்கொண்ட தழும்புகள். ஆகவேதான் அந்த நல்ல அடிமைகளின் சர்க்காரில் மக்களாக வாழ்கிற நாம் வடவனர்களின் ஈனத்தனமான சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகிறேம்.

ஆனுல் இந்த நிலையை நெடுநாட்கள் நீடிக்கவிடுவதென்பது திருவிடத்தாரின் தன்மானமற்றச் செய்கையாகும். இப்படி அவர்கள் வாய்க்கு வந்தபடி உளறும்போதெல்லாம் இங்கிருந்து கண்டனக் குரல் எழுப்புவது நாம்தானே தவிர வேறு எந்தக் கட்சிக்காரனுக்கும் சூடு சொரணை இல்லை.

எதைச் சொன்னுலும் தென்னவர்கள் கேட்டுக் கொள்கின்றுர்கள் என்ற மமதையை சிறுகச் சிறுக மாற்றினுலும் அவர்கள் பிறவிக் குணம் என்பதால் நாம் அதை அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா ? ஒரு குற்றம் சிறியதாயினும் பெரியதாயினும் உடனுக்குடன் கண்டிக்காவிட்டால், கண்டிக்க ஆள் இருக்கிறது என்பதைக்கூட அவர்கள் மறந்துவிடுவார்கள்.

கருப்புக்கொடி

பண்டிதர் இப்படியே பேசிக் கொண்டு போனுல் மீண்டும் ஒரு கருப்புக் கொடி பட்டாளத்தை அவர் சந்திக்க வேண்டி வரும். இங்கே இருக்கும் வெத்து வேட்டு காமராச சர்க்கார் ஒன்றும் அசைத்துவிட முடியாது. எங்களிடத்திலே தோட்டா இருக்கிறது, துப்பாக்கி இருக்கிறது என்று மேடைகளில் வெத்து வேட்டுகளைக் கிளப்பிக் கொண்டிருப்பது தவிர வேறொன்றுக்கும் லாயக்கில்லாதது என்பதை நாமறிவோம். ஏனெனில் அதனிடத்தில் நல்ல துப்பாக்கியும் தோட்டாவும் இருப்பது உண்மையானுல் ஆங்காங்கே கேடிகளையும் ரௌடிகளையும் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பானேன்?

ஆகவே முதல்வரின் முட்டாள்தனத்தை முழு மூச்சோடு கண்டிக்கிறேம், அதற்காக அவர் வருத்தம் தெரிவிக்காவிட்டால் மீண்டுமொரு போர்க்களத்தை அவர் சந்திக்க வேண்டிவரும் என எச்சரிக்கிறேம்.

அன்புள்ள,

சி. பி. சிற்றரசு



சிறுகதை :

ஆசைக் கனவுகள்

பால்வண்ண நிலவு—எண்ணத்திற்கேற்ப இதமாக வீசும் இளம்தென்றல்-பொன்னியின் பொங்கிவரும் புதுப்புனல்-தெம்பாங்கு பாடுவது போன்ற அதன் இனிய சலசலப்புச் சப்தம். இத்தனையும் இதயத்திற்கு இதமாக இருந்தது. இதனால் இன்பம் பொங்கும் இதயம் இறும்பூதெய்ய, இரசித்தவாறு காவிரிக்கரையில் நின்று கொண்டிருந்தான் பால்வண்ணன்.

அவன்—ஒரு இளம் கவிஞன். பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஒருதனித் தன்மையைக் காணும் புரட்சிக் கவி! புத்தம் புது கருத்துக்களால்புத்துலகை உருவாக்கப் பாடு படும் பாவலன்!! திருந்திய சமுதாயத்தைச் சமைக்க விளைவுகொண்ட செம்மல்! எழுச்சி மிகு எண்ணங்கள் கொண்டவன். வண்ணக்காவியங்கள் பலவடித்தெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்தவன். திண்ணிய உள்ளம் படைத்தவன். அறவாளி! அறிஞனும் கூட.

காவிரியன்னையின் பொலிவையும் வலிவையும் கண்டு களித்துக்கொண்டிருந்தஅவனின் கருத்திலே கற்பனை பொங்கி வழிந்து கொண்டிருந்தது காட்டாற்று வெள்ளம் போல. எழுந்த கற்பனை எழுச்சி பெற்று வடிவமும் பெற்றது. இதயத்தின் அடித்தளத்திலிருந்து புதுக் கருத்துகள் உருபெற்றன.

'காவிரிஅன்னாய்! என்னே உன் பெருமை! கட்டாந்தரைகளெல்லாம்உன்கடைக்கண் பார்வையால் கழனிகளாய் மாறிவிட்டன.பொன்னித்தாயே! உன் புதுப்புனல் என்னை மட்டுமல்ல எத்தனையோ இதயங்களைப் பூரிப்பிலாழ்த்தி இருக்கிறது. அது மட்டுமல்ல தென்புலத்து மண்ணையே பொன்விளையும் பூமியாக்கி விட்டது. அது கண்டு என்னகம்குளிர்கிறது இம்மண் மாதா தன்னகம் பூரிக்கிறாள்.

"வளவன் கொண்டவளநதியே! உன் வனப்பை என்னென்பேன்! உன் புகழ்பாட எனக்கேது சக்தி? ஒரு இளங்கோ இருக்கவேண்டும். இல்லையேல் இன்னொரு புகழேந்தியாவது பிறக்கவேண்டும். அவர்களால் தான் உன் புகழ்பாடமுடியும். நக்கீரர் வந்தால்தான் நானிலமறியும் உன் பெருமையை. செயங்கொண்டார் ஒருவரால் தான் உன் அருமை பெருமைகள் குறித்து ஒரு பரணியே பாட முடியும். கவிச் சக்கரவர்த்தியால் தான் உன்கடைக் கண் பார்வை பெற்ற கழனிகளின் சிறப்பு பற்றி ஒரு காவியமே இயற்றஇயலும். அவர்களெல்லாம் சேர்ந்து செய்து முடிக்கப்படவேண்டிய செயலை இந்த ஏழை இளம் கவிஞனால் மட்டும் எப்படிச் சாதிக்க முடியும்? கர்வியப் பெருங்கடலில் சிறு துரும்பன்றோ நான்! இப்படியே அவன் உள்ளம் அள்ள அள்ளக் குறையாத ஊற்றுக் கேணியைப் போல் கருத்துக் கருவூலங்கள் உருவமாகிக் கொண்டே போனது.

சற்று நேரம் அவன் வாய் ஓய்வு பெற விளைந்தது போலும். ஆனால் அவன் கவியுள்ளம் மட்டும் எல்லையில்லாநீள்கடல் போல் கருத்துப் பெருக்கெடுத்துக் கொண்டே இருந்தது.

இன்று பாரிலே சீர் கெட்டுக் கிடக்கும் தமிழ் சமுதாயத்தின் சாக்கடைப் போக்கைச்சிறிதுசிந்தித்துப் பார்த்தான். நெஞ்சம் நெருப்பாகியது. இதயம் கனலாகத் தகித்தது. உள்ளம் எரிமலையாகக் குமுறியது. கொதித்தெழுந்தான். வாயிலிருந்து. வார்த்தைகள் வெடித்தன "சோணாட்டுப் பேராறே! உன் பெருமைதனைப் பரப்ப அன்று பாரெல்லாம் பரணி பாடிச் சென்று சிறப்பித்த செந்தமிழர்கள் இன்று சீரழிந்து சிறப்பு கெட்டு சித்தம் கலங்கிப் பித்தர்களாய்—மறமற்ற கோழைகளாய் மாண்பிழந்து மாக்களாக வாழ்கின்றார்கள். பலர் அடிபணிய அரசோச்சிய அவர்கள் தான் இன்று வேற்றுக் கருத்துகளால் மாற்றாருக்கு குற்றேவல் பாடுபவர்களாக இருக்கிறார்கள்.

"தமிழைப் பழித்தோரைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்று சிறுத்தை போல் சீறிப்பாய்ந் தவர்கள் தான் இன்று இழித்துரைத் தோர்களையும் வாழ விட்டுக் கொண்டு வாய்மூடி மௌனிகளாய்—மான மிழந்து, மரியாதை கெட்டு ஈனர்களின் இழிச்சொல்லுக்கும் பழிச் சொல்லுக்கும் இலக்காகி இம் மானிலத்தில் வாழ்கின்றார்கள். இதை நினைக்கும் பொழுது தான் நெஞ்சமே துஞ்சிவிடும் போலிருக்கிறது அஞ்சுவதால் ஏற்பட்டதல்ல. அவனியில் நம்மவருக்கு ஏற்பட்டுவிட்ட அவல நிலையை நினைக்கும் தோறும் இந்நிலை ஏற்படுகிறது. என் செய்வேன்?"

ஆர்த்தெழும் அலைகடலும் சிறிது அமைதி பெறத் தான் செய்கிறது.தணலாகத் தகித்துக் கொண்டிருந்த அவன் இதயமும் சற்றுத் தணிய விளைவு கொண்டது போலும். ஒரு நீண்ட நெட்டுயிர்ப்புடன் நிறுத்தினான் தன் பேச்சை, அப்போது "அத்தான்" என்றசத்தான மொழி யாழினு மினிமையாகக் கேட்டது. திகைப்போடும் வியப்பும் விளங்க விழிகளைத் திருப்பினான் அம்மொழிவந்த திக்கு நோக்கி.

அங்கே......

அவள் நின்று கொண்டிருந்தாள்-அவன் சொத்தாகப் போகும் அத்தை மகள் முத்துவடிவு. நோக்கினான். அந்த செந்தாமரைக் கண்ணாளோ சிரிக்கும் முல்லையென முறுவல் தவழும் முகத்தினளாய் அன்னநடை போட்டாள் அவனை நாடி, உள்ளத்தால் கொண்டவனைக் கண்கள் கண்டதும் களிப்புற்றன.

"என் ஆருயிரே!" என்றாள்.

"எழிலோவியமே!" என்றான்.

"கண்ணாளரே!" கரங்கள் தாமே அவனை நோக்கி நீண்டன.

"காவியமே!" அவளை அணைத்துச் சுகம்பெற துடித்தன அவன் கரங்கள். அவள் மட்டும் என்ன? அவனுக்கு விட்டுக் கொடுப்பாளா? சின்னஇடைசிருங்கார நடனமாடிற்று. அவள் செவ்வடிகளோ அன்னநடை பயின்றன. ஆம்! அந்த எழிலோவியம் நீட்டிய அவன் கரங்களுக்கிடையே தஞ்சம் புகுந்துவிட்டது. அவன் நெஞ்சோடு கொஞ்சு மொழி பேசிற்று. தெள்ளு தமிழ் வள்ளுவனார் செங்குறளைப் புதுப்பித்துக் கொண்டு இல்லை! இல்லை!! புடம் போட்டு எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

மாரா. தமிழ்ச்செல்வன்

சற்று முன் புரட்சிக் கவியாக இருந்தவன் இப்போது அம்பிகா பதியானான். அவன் அம்பிகாபதியானால் அவள் மட்டும் தமிழ்ப் பாலுண்ணாதவளா என்ன? நீங்கள் அம்பிகாபதிஎன்றால் நான் அமராவதியே தான் என்று சொல்லாமல் சொன்னாள். இருவரும் காதல் சாம்ராஜ்யத்திலே கானம்பாடி வானம்பாடிகளாய் வட்டமிட்டுத் திரிந்தனர்.

"அத்தான்!"

"உம்..."

"இப்பொழுது நாம் எங்கிருக்கிறோம்?"

"வள்ளுவர் செய் குறளுக்கு வடிவம் அமைத்துக் கொண்டிருக்கிறோம் வண்ண மயிலே!"

"உண்மை தான் அத்தான்."

"இன்பமே! குறளின் இன்பத்துப்பாலை எனக்கு எடுத்திக்காட்டி விட்டாய்."

"அகத்தை எனக்கு அறிவுறுத்தி விட்டீர்கள்."

"அதன் அருகே புறம் இருப்பதையும் நினைவூட்டி விட்டாய்."

"நீங்கள் புறம் சென்று விட்டால் நான் மணிமேகலையாக மாறிவிடுவேன்."

"அதுதான் முடியாது."

"ஏன்?"

"இப்பொழுது தானே நாம் சிலப்பதிகாரத்தில் சிந்து பாடிக்கொண்டிருக்கிறோம்."

"இல்லை! வளையாபதியில் விளையாடுகிறோம்."

"ஊகூம். குண்டலக் கேசியில் குலாவிக் கொண்டிருக்கிறோம்."

"கண்ணாளா!"

"காவியமே!"

"கம்பரின் காவியத்திலிருந்து என்னால் ஒரு அடி கூட அப்பால் எடுத்து வைக்க முடியாது"

"ஐயையோ! நம் பண்பையே பாழ்படுத்திவிடப் போகிறாய்."

"நான் காவியத்தைச் சொல்லவில்லை அத்தான். கவிதை நயத்தைச்சொன்னேன்."

"உம் நாம் இந்த நானிலத்தையே மறந்து விடப்போகிறோம். வா. வா. கலிங்கத்துப் பரணியைப் பார்த்து வருவோம்,"

"முடியாது."

"ஏன்?"

"கலித்தொகையைக் கண்டபின் தான் வருவேன்."

"அப்படியா? தேனமுதே! நற்றிணையை நாடியதும் முல்லைத்திணையில் மூழ்கிக் கிடந்ததையே மறந்து விட்டாயே?"

"மறப்பேனா அத்தான் அங்கு கிடைத்த முத்தங்களை."

"அத்தனையும்......"

"நாம் குறுஞ்சிக்கலியில் கொண்ட முறுவலின் முத்தாய்ப்புகள் தானே?"

"இல்லை."

"என்ன!"

"இல்லை என்று சொல்ல எனக்கென்ன பித்தமா? பிடித்திருக்கிறது?"

"ஆமாம்!"

"என்ன?"

"காதல் பித்தம்."

"எனக்கு மட்டுமல்லவே?

"எனக்கும் தான். சரி வாருங்கள் நெடுத்தொகைக் குப்போகலாம்."

"சிறு பாணாற்றுப் படைக் குப்போகும்வழியில்தானே?" உம்..., முத்து வடிவு."

"என்னத்தான்?"

"இத்தனைக்கும் மத்தியிலே இரும்பல் காஞ்சிமட்டும் இருந்திருந்தால்...?

"என்னத்தான் சொல்கின்றீர்கள்?"

"சொல்ல என்ன இருக்கிறது? நம் சொத்துக்கள்—செந்தமிழ்ச் செல்வங்கள் எட்டையா புரத்தில் ஏற்பட்ட கடலிறிப்பில் எத்தனையோ அழிந்துபட்டன. சுமார் எண்ணாயிரம் சுவடிகளுக்கு மேலிருக்கலாம். அத்துனையிலும் தலையானது இரும்பல் காஞ்சி முத்துவடிவு இரும்பல் காஞ்சி."

"அப்படி என்றால்—?"

"அகத்தையும் புறத்தையும் தன்னகத்தே ஒருங்கே கொண்டுள்ள அரும்பெரும் களஞ்சியம்! நமக்குக் கிடைத்திருந்த விலை மதிப்பில்லா பொக்கிஷம்!!"

"நீங்கள் எனக்குக் கிடைத்ததைப்போல."

"குறும்புக்காரி!"

"சரிதான் விடுங்கள்."

"முத்துவடிவு!"

"வேண்டாம் நேரமாகி விட்டது. வீட்டில் யாராவது விழித்து விட்டார்களென்றால் வீண் விபரீதங்கள் விளையும்."

"உண்மை தான். அலை கடல் போலப் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கும் காதல் வெள்ளத்திற்கும்அணைபோட முயல்கின்றார்களே சில அறிவிலிகள்."

அவன் சொல்லிமுடிக்கவில்லை. அதற்குள் "முத்து" என்ற முரட்டுக்குரல் கேட்டு இருவருமே தீயைத் தீண்டியவர்கள்போல் திடுக்கிட்டுப் பிரிந்து நின்றனர். பீதியோடு திரும்பிப் பார்த்தனர். அங்கே...

கண்களிலேகனல் பறக்க, மீசைகள் துடிதுடிக்க முத்துவடிவின் தந்தை மருதப்பர் நின்று கொண்டிருந்தார்.

கோபத்தால் கொக்கரித்தார் அவர். அவனோ வாயடைத்து மௌனியாய் நின்றான். முத்துவடிவோ குளிர் ஜுரம் கொண்டவள் போல் நடுங்கிக் கொண்டிருந்தாள். தலைமுறைப் பகையைத் தீர்த்துக்கொள்ள விளைந்த மருதப்பருக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. வாய் வலிக்கு மட்டும் வசைபாடினார். பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா! எரிமலை சொல்லிக் கொண்டு வெடிப்பதில்லையே! அமைதியின் திருவுருவாக இருந்த பால்வண்ணனும் ஆத்திரத்திற்கு ஆளானான். என்றாலும் அவன் அறிவை மட்டும் இழந்துவிடவில்லை. தன் எண்ணக்கிடையை எடுத்தியம்பினான். அது அவருக்கு எரிகின்ற நெருப்பில் எண்ணெயை வார்ப்பதுபோல் இருந்தது. தன்னையே மறந்தார். அவன் கன்னத்தில் பளாரென அறைந்தார். அடுத்த கணம் அவள் அலறினாள். "அத்தான்" என்று தன் கன்னத்தைத் தடவியவாறு. அவள் கண்களும் கலங்கின. அவனைத் தழுவிக் கொள்ளத் தாவினாள். தாவியவளின் தளிர்க்கரத்தை முரட்டுத் தந்தையின் இரும்புக் கரம் இழுத்துப் பற்றியது. முல்லைக் கொடி தாவிப்படர கொழுகொம்பு கிட்டாமல் தட்டி விடப்பட்டதால் துவண்டு தள்ளாடியது.

"இனி நீ அவனை நாடினாய்? செத்தாய். வா இப்படி." இனமுழக்கம் - போல் முழங்கியவாறு அவளைத் தன்பால் இழுத்துக் கொண்டார்.

இடி இடித்து, மின்னி மறையும் வேகத்தில் அவரும் முத்துவடிவைக் கதற இழுத்துக் கொண்டு போய் விட்டார். இமைக்கும் நேரத்தில் எல்லாமே நடந்துவிட்டது. அவன் அப்படியே செயலிழந்து நின்றான்.

அன்றிலிருந்து அவன் ஆழ்கடலின் மத்தியிலே புயலில் சிக்கித் தவிக்கும் படகானான். அவள் அனலில் விழுந்த புழுவானாள். இருவருமே பிரிவுத் துயரால் துடித்தனர்! துவண்டனர்!! சிந்தை நொந்து கண்ணீரைச்

(7-ம் பக்கம் பார்க்க)

தென்மாநிலங்கள் தீட்டியுள்ள தீர்மானங்கள்

பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் தென்னகம் புறக்கணிக்கப்படும் கொடுமை குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாளிலிருந்து முழங்கி வருகின்றது. திராவிட முன்னேற்றக் கழகம் உணர்வுடன் எடுத்தோதி வரும் வடக்கு வளர்கிறது-தெற்குத் தேய்கிறது என்ற தெளிவான பொருளாதார உண்மையை எதிர்த்துரைப்பதே இந்திய ஒற்றுமைக்கு தாங்களாற்றும் அருந்தொண்டு எனக் கருதிக் கொண்டு அகில இந்திய கற்பனை வாதிகள் செயலாற்றி வருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நல்ல பணியினால். தென்னகம் பொருளாதார வளர்ச்சி பெறவேண்டும் என உண்மையிலே கருதுபவர்களின் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகால பொருளாதாரக் கண்ணோட்டம் இன்றைக்கு மாறிக்கொண்டு வருகின்றது புயலுக்குப் பின் அமைதி தவழுவதைப் போல, இருளுக்குப் பின் ஒளி பிரகாசிப்பதைப் போல, மொட்டு மலர்ந்து மணம் பரப்புவதைப் போல தி. மு. கழகம் சொல்லிவரும் பொருளாதார உண்மைகள் இன்றைக்கு எல்லோராலும் அவர்களுக்கேற்ற வகையில் பேசப்படுகின்றன.

டா கோஸ்டா, சி.டி. தேஷ்முக், டாக்டர், ஏ. ராமசாமி (முதலியார்) போன்ற பொருளியல் அறிஞர்கள், ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகம் புறக்கணிப்புக்கு ஆளாகின்றது. என்பது உண்மையே என்று கூறி சிலபல கருத்துக்களைத் தெரிவித்தனர். தமிழ் நாடு பொதுவுடமைக் கட்சி, தமிழ்நாடு தனக்குரியப் பங்கினை வளர்ச்சித் திட்டங்களில் பெறவில்லை என்ற கருத்தை தற்போது வெளியிடுகின்றது. மதுரையில் சென்ற வாரம் நடைபெற்ற தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் கேரளம் ஆகிய தென்மாநிலங்களைச் சார்ந்த வாணிகக் கழகங்களின் மண்டல மாநாட்டிலும்தென்னகம்

னங்களை வாசிப்பதற்கும், தி. மு. கழக மாநாட்டின் தீர்மானங்களைப்படிப்பதற்கும்தென்னக வளர்ச்சித் திட்டங்களின் கோரிக்கையைப் பொறுத்தளவில் ஒன்றுகவிருப்பதைக் காணலாம். வடக்கு வளர்கிறது—தெற்குத் தேய்கிறது என்பது தி: மு. கழகத்தின் பிரச்சார கோஷமில்லை; ஆனால் அசைக்கமுடியாத பொருளாதார உண்மை என்பதும் விளக்கமாகத் தெரிய வரும்.

"வேலையில்லாத் திண்டாட்டம், பூரணமாக வேலை கிடைக்காத நிலைமைகளைப்பட தொழில் வளர்ச்சித் திட்டங்கள் தேவையாகும். என்றாலும், இந்தியாவின் தெற்குப பகுதி மற்றையப் பகுதிகளின் தொழில் வளர்ச்சியை விட மிகவும் பின்தங்கியுள்ளது. இந்தப் போக்கைத் திருத்த பத்தாண்டுகால திட்டம் தீட்டுதலிலும் எவ்வித முயற்சியும் இல்லை. பொதுத் துறையில் தெற்குப் பகுதிக்காக நிறைந்த தொழிற்சாலைகள் அமையவேண்டும். குறிப்பாக, எண்ணை சுத்திகரிப்பு தொழிற்சாலை, அணு மின் சார உற்பத்தி நிலையம், இரும்பு உருக்குத் தொழிற்சாலை, துறைமுக வளர்ச்சித் திட்டங்கள் மிகவும் தேவை"- இப்படி ஒரு தீர்மானம் பேசுகின்றது.

"தென்னிந்தியாவிற்காக புதுச்சேரி துறைமுகத்தை ஒரு சுயேச்சைத் துறைமுகமாக மாற்றவேண்டும். மைசூர், சென்னை மாநிலங்களின் தேவைகளை நிவர்த்திக்க மங்களூரும், தூத்துக்குடியும் ஆழ்கடல் துறைமுகங்களாக மாற்றும் திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும்"—இன்னொரு தீர்மானத்தின் வாசகமாகும்.

'தென் மாநிலங்களில் இரயில் பாதை அதிகரிக்க வேண்டும்,'—இந்த வேண்டுகோள் மற்றுமொரு தீர்மானத்தில் அடங்கியுள்ளது.

★ வேலையில்லாத் திண்டாட்டம், பூரணமாக வேலை கிடைக்காத நிலைமை களையப்பட தொழில் வளர்ச்சித் திட்டங்கள் தேவையாகும்.

புறக்கணிக்கப்படும் நிலை பற்றி பேசப்பட்டு, அப்படிப்பட்ட பொருளாதாரப் புறக்கணிப்பு நிவர்த்திக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வாறு, பொருளாதார வளர்ச்சிப்பற்றிய எண்ணங்கள் தி. மு. கழகம்கூறிவரும்கருத்தோட்டத்திற் கிசைய மலர்வதை உணர்கின்றோம்.

தென்னகத் தொழிலதிபர்கள் கலந்து கொண்ட மேற்கண்ட மாநாட்டின் தீர்மா

தென்னகத்தின் வர்த்தகர்கள் இப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி, திராவிடத்தின் பொருளாதாரத் தேவைகளை வலியுறுத்திக் கூற முன்வந்துள்ளனர். தீர்மானங்களை முன் மொழிந்தும் வழி மொழிந்தும் சொற்பொழிவாற்றிய தொழிலதியர்களின் உரைகள் திராவிடத்தின் தேவைகளை உணர்த்தும் உறைக்கல்லாகவே விளங்கின.

தென்னகத்தில் பொருளா

தார வளர்ச்சி உருவான வகையில் ஏற்படவேண்டும் என்று கருதுபவர்கள், தெற்குப் பகுதி புறக்கணிக்கப்படுகின்றது. என்று முழங்குகின்றனர். தெற்குத் தேயவில்லை என்று பிதற்றித் திரிபவர்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும். இந்த ஒற்றுமையிழை எப்படி ஏற்படுகிறது என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

தென்னகத் தொழிலதிபர்கள் தெற்கு உரிய முறையில் வளரவில்லை என்று கூறுகிறார அதே நேரத்தில் திராவிடம் விடுதலை பெறவேண்டும் என்று கோரவில்லை என்பதையும் நாம் நன்கறிவோம். மைசூர்மாநில வர்த்தகக் கழகத்தின் முன்னாள் தலைவரும், தொழிலதிபருமான திரு பி. கே.சாரங்கபாணி(முதலியார்) தெற்கின் நலன்கள் கவனிக்கப்படாமல் இருப்பதற்கு விசித்திரமான விளக்கத்தையும் விளம்பினார். தெற்குப் பகுதியைச் சேர்ந்த நான்கு மாநிலங்களும் தொழில் துறையில் மிகவும் பின்தங்கியிருக்கும் பிற்போக்கு நிலைமை

சி. ஜம்பு

குறித்து திட்டக் குழுவோ, மத்திய சர்க்காரோ, சரிவர உணரும்படி எடுத்துச் சொல்லப்பட வில்லை என்று அவர் உரைக்கின்றார்.

எனவே, திட்டக்குழுவும், மத்திய சர்க்காரும் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகத்திற்கு உரிய பங்கினை சரியாக வழங்காமல்இருப்பதற்கு,பிரச்சினையைப் புரிந்துக்கொள்ளாததுதான் உண்மையான காரணம் என்று அவர் நம்புவதை எவரும் நம்பத் தயாராக யில்லை. வடக்கு-தெற்கு சில சமயங்களில் மாநில அமைச்சர்களே மனங்குமுறி சிலகருத்துக்களை வெளியிடுகின்றனர். குறிப்பாக, சென்னை மாநில தொழிலமைச்சர் தேசிய வளர்ச்சிக் குழுவில், தமிழகம் புறக்கணிக்கப்படும் பான்மை பற்றிப் புள்ளி விவரங்களை சொல்லிய நேரத்தில் இந்திய முதலமைச்சரும், திட்டக் குழுவின் தலைவருமான ஜவகர்லால் நேரு புள்ளி விவரத்தையே நம்பாமல், அக்கருத்தினை கற்க மறுத்துவிட்டார்.

ஆகவே, தொழிலதிபர்கள் ஒன்றை மிக நன்றாக உணர வேண்டும். தெற்கு புறக்கணிக்கப்படுவது என்பது வெறும் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல; அப்பிரச்சினையின் அடிப்படையில் ஏகாதிபத்தியமே திட்டமிட்டு அமர்ந்திருக்கிறது என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இந்தநிலைமையைப் பாண்டியன் பாங்கின் நிர்வாகி திரு. எஸ். என். கே. சுந்தரம் அவர்கள் புரிந்துக்

கொண்டிருக்கிறார் என்பதை அவரது பேச்சு புலப்படுத்துகின்றது. மத்திய சர்க்காருக்கு இருக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்டால்தான் தெற்குப் பகுதி; வடஇந்தியாவை நம்பியிருக்கும் பரிதாப நிலையும், வடக்கு—தெற்கு ஏற்றத்தாழ்வும் நீங்க முடியும் என்பது சுந்தரம் அவர்களின் கருத்தாகும்.

இந்த விழுமிய கருத்தினை தொழிலதிபர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். வட நாட்டு ஏகாதிபத்தியம் அனைத்தை

இவைகளெல்லாம் தனித் தனியாக இயங்கும் பிரச்சினைகளல்ல. ஒன்றொடொன்று இணைந்து, பிணைந்து, இழையோடிருப்பவைகளாகும். இந்த நஞ்சு வளையத்தை நொறுக்கியாகவேண்டும். அதுவே, திராவிட முன்னேற்றக் கழகம் முழங்கி வரும் 'திராவிடநாடு திராவிடருக்கே' எனும் இலட்சிய கீதமாகும்.

அந்தப் பாதை வழி நடைபோட இன்றைக்கு வர்த்தகர்கள் தயங்கலாம் ஆனால்,

★ தென்னிந்தியாவிற்காகப் புதுச்சேரி துறைமுக்த்தை ஒரு சுயேச்சைத் துறைமுகமாக மாற்றவேண்டும்.

யும் பயன் படுத்திக் கொள்ளும். இதையே மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் பளிங்குபோல் உணர்த்துகின்றன.

தென்னாட்டைத் தன்னுடையசுலபமான சந்தைக்காடாக மாற்றிக்கொள்ளவேவட நாடு முனைந்து நிற்கின்றது. இந்த அரசியல் சிக்கலை விடுவித்துக் கொள்ளாமல் தென்னகம் மேம்படும் என நினைப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்றைக்கு அமெரிக்காவின் மூலதனம் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்றது. தென்னகத்திலோ வடநாட்டின் மூலதனமும், ஆதிக்கமுமே அரசோச்சுகின்றன. இன்னும் கொஞ்சம் நாட்களில் இந்தி மொழி வழியாக கலாச்சார ஆதிக்கமும் ஏற்படவிருக்கின்றது.

காலஞ் செல்லச் செல்ல அது தவிற வேறு மார்க்கமில்லை என்பதையும் அவர்கள் உணர்வர்.

ஒரே அடிப்படையில் எழு[...] பிரச்சனைகளை உண்மையோ[...] ஆராய்வோர் ஒரு நாள் [...] இடத்திற்கு வந்துதான் ஆ[...] வேண்டும். தென்னகத்தி[...] தொழிலதிபர்கள் இன்றைக்[...] பொருளாதாரப் பிரச்சனை[...] விளக்கிப் பேசுகின்ற[...] அது தி. மு. கழகத்தின் கு[...] லாகவே ஒலிக்கின்றது. அந்த மட்டில் திராவிடத் தேசிய எழுச்சிக்கு இலாபமும், ஆதிக்கமும் உண்டு.

தேசியப் பிரச்சினை எங்கும் முகிழ்க்கும். அது வர்த்தகர்களின் குரலிலும் ஒலிக்கும் என[...] மதுரைத்தொழிலதிபர்கள் மாநாடு சான்றாகும்.

ஏஜண்டுத் தோழர்களுக்கு அறிவிப்பு!

இந்த ஆண்டு இனமுழக்கம் பொங்கல் மலர் மிகச் சிறந்த முறையில் வெளிவர இருக்கின்றதென்பதை நமது விளம்பர வாயிலாக அறிந்திருப்பீர்கள். விலை ரூ. 4-00 என்பதையும் அறிவீர்கள்

இந்த விலையில் ஓர் சிறந்த கழக மலர் வெளி வருவதை வரவேற்றுப் பலரும் எழுதியிருப்பதால்—மலரை நமது கழக வரலாறு காட்டும் கண்ணாடியாகவும், நமதியக்கத் தோழர்களுக்கு ஓர் கழகக் கையகராதியாகவும்,—மற்றும் மூவண்ணப் படங்களும் இன்னும் பல்சுவைகளும் நிரம்பியதாகக் கொண்டு வரத் திட்டமிட்டு அதற்காக ஆக்க வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டு வருகிறது.

மலர் பொங்கலுக்கு இரண்டு நாள் முன்னதாகவே எங்கும் விற்பனைக்குக் கிடைக்கும். ஏஜண்டுத் தோழர்கள், ரூபாய் ஒன்று கழிவு நீக்கி தேவையான பிரதிகளுக்கு, பிரதி ஒன்றுக்கு ரூ. 3-00 வீதம் முன் பணத் தொகையை 30—12—60 தேதிக்குள் அனுப்பி வைத்துவிடவேண்டும். அதற்குமேல்வரும் ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முன் பணமின்றிக் கண்டிப்பாய் மலர் அனுப்பி வைக்கப்படமாட்டாது. மலருக்குப் பணம் அனுப்பும் தோழர்கள் "இனமுழக்கம்" பட்டியல் தொகையும், மலர்த்தொகையும் சேர்த்து அனுப்பாமல், மலருக்கென்று தனியாக அனுப்பிவைக்க வேண்டும்.

டிசம்பர் முடிய 'இனமுழக்கம்' பட்டியல் பாக்கி உள்ள தோழர்களுக்கு மலர் அனுப்பிவைக்கப்படமாட்டாது. பின்வருந்திப் பயனில்லை. ஏஜண்டுத் தோழர்கள் மேற்கண்ட அறிவிப்பை நன்கு கவனித்து ஒத்துழைப்புத் தரவேண்டுகிறோம். -நிர்வாகி

அறிஞர்கள் எங்கே? இந்த அமைச்சர்கள் எங்[...]

இயக்கத்துக்கென்றே 'இனமுழக்கம்' வழங்கும் இன்சுவை!

நீங்கள் சொன்னீர்கள்; நாங்கள் வெளியிடுகிறோம்!

கழகத்தின் களஞ்சியமாய் - கன்னித் தமிழ் நாட்டின்
கற்கண்டாய் - நற்கனியாய் - உருவாகிறது!

இனமுழக்கம்

பொங்கல் மலர் 1961

அதிசயிக்காதீர்! அவாள் ஏடுகளுக்குச் சவால்!!

300 பக்கங்கள் — விலை ரூ. **4-00**

முகப்பு ஓவியம்: ஓவியக் கலைஞர், 'மணியம்'

மலருக்குள் வரையும் ஓவிய மணிகள்: **மாதவன், லதா, சீநி சோழ, ஜெயராஜ், ஆனந்தன்**

மலருக்கென்று எழுதும் சிறுகதை மணிகள்:
அகிலன், ஜெகசிற்பியன், இராதாமணாளன், டி. கே. சீனிவாசன்
எஸ்.ஏ.பி. **அண்ணாமலை** அரு. **இராமநாதன்,**
க. வள்ளியப்பன், **பூவை** எஸ்.**ஆறுமுகம்**
கோவி. மணிசேகரன்

துப்பறியும் நாவல்கள்:
தமிழ்வாணன், சிரஞ்சீவி

அரசியல் கட்டுரை நல்கும் அறிஞர்கள்:
அறிஞர் அண்ணா, ஆச்சாரியார்,
டாக்டர் **லட்சுமணசாமி,** **ஈ. வெ. கி. சம்பத்,**
பி. டி. இராசன், M.L.C., **அநுமந்தையா,**
சங்கரன் நம்பூதிரிபாத், பி. இராமமூர்த்தி,
நாஞ்சில் கி. மனோகரன், ப. ஜீவானந்தம்,
ஏ. பி. ஜனார்த்தனம், M.A. **கிருஷ்ணசாமி,** M.P.

கலையுலகு பற்றி:
நடிப்பிசைப் புலவர் **கே. ஆர். இராமசாமி,** M.L.C.

இலக்கியக் கட்டுரைகள் வழங்கும் கருவூலங்கள்:
டாக்டர் **மு. வரதராசனார்,**
டாக்டர் **ஏ. சிதம்பரநாதன்,**
பன்மொழிப்புலவர் **கா. அப்பாத்துரையார்,**
டாக்டர் **மா. இராசமாணிக்கம்,**
திராவிடமொழி நூலார் **தேவநேயப்பாவாணர்,**
டாக்டர் **ரா. பி. சேதுப்பிள்ளை,**
அ. மு. பரமசிவானந்தம், வே. கபிலன்

சிறுகாப்பியம் நல்குபவர்:
கவிஞர் கண்ணதாசன்

கவியரங்கம்:
தலைவர்: புரட்சிக் கவிஞர் **பாரதிதாசன்**
பங்கேற்போர்:
கவிஞர் **வாணிதாசன்,** கவிஞர் **முடியரசன்,**
கவிஞர் **கம்பதாசன்,** கவிஞர் **ரவீ**

குழந்தைப் பாட்டு. கவிஞர் **அழ. வள்ளியப்பா**

ஓரங்க நாடகம்:
கழகப் பொருளாளர்: கலைஞர் **மு. கருணாநிதி**
(அந்நாடகத்தில் திரையுலக நடிகர்கள் நடிக்கின்றனர்)

நாட்டிய அரங்கம்:
உடுமலை நாராயணகவி'யின்
இசைப்பாடலுக்கு
ஈ. வி. **சரோஜாவின்** நடனக் காட்சிகள்

மகளிர் பகுதி:
தலைவர்: **சௌந்தரம் கைலாசம் அம்மையார்**
(மகளிர் எழுத்தாளர் பலரும் பங்குபெறுகின்றனர்)

புதிய பரிசு போட்டி ரூ. 1000
கூப்பன் மலரிலே!

இயற்கைக் காட்சிகள்:
புகைப்பட நிபுணர் **சந்தாமியான்**

நமது பணி;
மாநகராட்சி மன்றத்தில் நமது சாதனைகளை
மாநகராட்சி மன்றத் தலைவர் **வி. முனுசாமி** விளக்குகிறார்

உலகத் தலைவர்கள்;
உலக நாடுகளின்விடுதலைவீரர்கள் குடியரசுத்தலைவர்களின்
புகைப்படங்கள் இடம் பெறுகின்றன.

ஆசிரியர் **சி. பி. சிற்றரசு** வழங்கும்
விசேடக் கட்டுரை
விளக்கப் படங்களுடன் கேள்வி-பதில் 100

கழக அகராதி

இயக்க வரலாறு: தென்னிந்திய நல உரிமைச் சங்கக் காலத்திலிருந்து (1917) இன்றுவரை (1960) நாம் வளர்ந்த விதத்தினை வரலாற்றுக் குறிப்புக்களுடன் வரைகிறார், *A. S.* **வேணு,** பீ.ஏ. அவர்கள்

கழக அமைப்பு: தலைமைக் கழகம், மாவட்டக் கழகம், வட்டக் கழகம், கிளைக் கழகம் ஆகியவற்றின் அமைப்பு விவரங்கள், 4000த்திற்கு மேற்பட்ட எல்லா கிளைக் கழகங்களின் பெயர்கள், கிளைக் கழகச் செயலாளர், வட்டப்பிரதிநிதி ஆகியோரின் பெயர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்களின் புகைப் படங்கள், மாவட்டக் கழக அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரின் பெயர்கள்.

வட்டக் கழகச் செயலாளர்களின் புகைப்படங்கள், அவைத் தலைவர், செயலாளர், துணைச்செயலாளா, பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியோரின் பெயர்கள்.

பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்களின் புகைப் படங்கள், கழக எம்.எல்.ஏ.க்களின் புகைப்படங்கள், சென்னை மாநகராட்சி மன்ற கழக மேயர், துணை மேயர் உறுப்பினர்களின் புகைப்படங்கள், தலைமைக் கழக அவைத் தலைவர், பொதுச்செயலாளர், துணைச்செயலாளர்கள், பொருளாளர் ஆகியோரின் புகைப்படங்கள் அடங்கிய பலவண்ண முகப்பு.

கழகச் சட்டதிட்டங்கள், கொள்கை விளக்கங்கள் மற்றும் துணை மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றின் முழு விவரங்கள், கழகத்துக்கென உயிர்நீத்த உத்தமர்களின் புகைப்படங்கள், அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்.

இதுவரை நடைபெற்ற மாவட்ட; மாநில மாநாடுகள், சிறப்பு மாநாடுகள் ஆகியவை நடைபெற்ற தேதி, இடம், அவற்றால் தலைமைக்கழகத்திற்குக் கிடைத்த வருவாய் போன்ற எல்லா விவரங்கள், 1949-லிருந்து 1960 வரை கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ச்சியைக் காட்டும் விளக்கப்படம்—இவற்றோடு கழகத்தின் இருவண்ணக்கொடிவிளக்கமும் இடம்பெறுகிறது.

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் முன்பணத்துடன் பதிவு செய்துகொள்ளுங்கள்!

ஆசைக் கனவுகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செந்நீராகச் சிந்தினர்! சித்தம் கலங்கினர்.

மகளின் நிலை கண்டு மருதப்பர் மனங் கொதித்தார். மனிதத் தன்மையையே இழந்தார். மகளின் இந்நிலைக்குக் காரணம்? அவன்—பால்வண்ணன். அவனது அழகு முகம். கலை ஒளி மிளிரும் காந்தக் கண்கள். அதைக் கெடுத்துவிட்டால்...? ஏன்? அவனையே அழித்துவிட்டால்...?

சிந்தித்தார். சிறந்த ஒரு திட்டத்தையும் தீட்டினர். அதைச் செயல்படுத்தவும் பின் வாங்கவில்லை.

மனிதன் குரோதத்தின் எல்லையைக் கடந்துவிட்டால் அவன் தன் மேலான தன்மையையே இழந்துவிடுகிறன். மனிதன் என்பதை மறந்து மிருகமாக மாறிவிடுகிறன். மருதப்பரும் அப்படித்தான்.

ஒரு நாள் நள்ளிரவு. நல்லவர்களெல்லாம் உறங்கிகொண்டிருந்தனர்கள்ளர்கள் மட்டும் நடமாடும் நேரமது புல்லரவர் இருமுரடர்களின் துணைகொண்டு பால்வண்ணனைக் கவர்ந்து வர ஏற்பாடு செய்தார்.

காவிரிக் கரையின் மணற்பரப்பிலே அன்று கட்டிப் புரண்டு, காதல் கோட்டைக் கட்டிகளிப்புற்றிருந்த காட்சிதனை நினைத்து, நெஞ்சம் நொந்து, வேதனையால் வெதும்பி தன்னை மறந்த சோகத்தில் திளைத்து, காவிரிக்கரையிலே அமர்ந்திருந்தான் பால்வண்ணன். அவன் பால் வடியும் வதனம் வாடி வதங்கிப்போய் இருந்தது. கருத்து சுரக்கும் இதயம் வரண்டு கிடந்தது. கவி பாடும் நெஞ்சம் கருகிப் போய் இருந்தது. காதல் கதை பேசும் கண்கள் ஒளியற்று சலனமின்றி இருந்தன. மொத்தத்தில் அவன் சித்திரப் பதுமையாய் அமர்ந்திருந்தான். ஆனல்; அவனது வலது கரம் மட்டும் மணலோடு விளையாடிக் கொண்டிருந்தது. இடது கரம் முகவாய்க் கட்டைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தது.

மருதப்பரால் ஏவப்பட்ட இரு முரடர்களும் திடீரென அவனைத் தாக்கினர். தடுமாறினன் முதலில். திடுக்கிட்டுத் திரும்பி எழுந்து தாக்க முனைந்தான். பலத்த போராட்டம். இதனல் ஆத்திரமுற்ற முரடர்களில் ஒருவன் தன் கையிலிருந்த கத்தியை ஓங்கினன். அதைத் தடுக்க முனைந்த பால்வண்ணனின் வலது கரம் வெட்டுண்டு வீழ்ந்தது. "ஆ"வெனஅலறினன். மற்றவன் தொடர்ந்து தாக்கவே தள்ளாடி விழுந்தான். விழுந்தவன் 'ஐயோ' வென்று கதறினன். கரையில் விழுந்த கயல் போல் துடித்தான். கண்ணை இடது கரத்தால் அழுத்திப் பிடித்துக் கொண்டான். இந்நிலை கண்டு திடுக்கிட்ட முரடர்கள் திகைத்து நின்றனர்.

இதற்கிடையில் தந்தையால் சிறைப்படுத்தப்பட்டிருந்த முத்துவடிவுக்கு எப்படியோ விபரம் எட்டிவிட்டது. வீறுகொண்ட வேங்கையானுள். வந்த தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து விட்டு வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல் விரைந்தோடினுள் பால்வண்ணனைக் காண காவிரிக்கரையை நோக்கி. தடைகள் பெருகும் போது அவைகள் உடைபடுவது இயல்புதானே, மகளின் நிலை கண்டு மலைத்து மரமாக நின்றுர் மருதப்பர்.

திகைத்து நின்ற முரடர்கள் இருவரும் யாரோ ஓடி வரும் ஒலி கேட்டதும் எடுத்தனர் ஓட்டம்.

கதறிக்கொண்டு ஓடிவந்தவள் காணவேண்டியவனைக் கண்டாள். காவிரிக் கரையிலே, ஒரு கரம் அற்றவனுக இரத்த வெள்ளத்திலேமிதந்து கொண்டிருப்பதை பார்த்ததும் பதறினுள். "அத்தான்" என்று அவன் மேல் நிலை குலைந்து விழுந்தாள். அவன் "முத்து, முத்து" எனவேதனையோடு முனகிக் கொண்டிருந்தான், அவள் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. துண்டிக்கப்பட்ட கரத்தையும் வெட்டுண்டு அருகே கிடந்த முன் கரத்தையும் மாறி மாறி வெறி கொண்டவள் போல் பார்த்தாள். பாய்ந்து சென்று அக்கையை எடுத்து முகத்திலே ஒத்திக் கொண்டாள். மார்போடுஅணைத்துக்கொண்டாள்; கதறினுள்; கண்ணீர் வடித்தாள்.

"என்னைத் தொட்டணைத்து காதல் சுகம் தந்த கரமே! காவியங்கள் பல புனைந்த கன்னித் தமிழ்க் கையே! எழுதுகோல் பிடித்து, எண்ணத்தின் எழுச்சி எல்லாம் வண்ணத் தமிழ்ப் பாவாகத் தொடுத் தெடுத்த பொற்கரமே! படுபாவிகள் உன்னைப் பதை பதைக்க வெட்டி வீழ்த்தினரோ? ஐயகோ! துண்டித்தனரோதுடிதுடிக்கதுரோகித்கள். கத்தியால் கண்ட துண்டமாக்கினரோ கயவர்கள். தூய உங்கள் கரத்தை துண்டித்த துரோகிகள் யாரத்தான்? சொல்லுங்களத்தான் அந்த புல்லர்கள் யாரென்று" என்றவாறு அவன் முகத்தைத் திருப்பினுள். திகைப்போடு அவன் முகத்தையே ஊடுருவிநோக்கினுள். அவன் உதடுகள் இப்பொழுதும் 'முத்துவடிவு' என முணுமுணுத்தது. அவனது இடது கண்ணிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டே இருந்தது. இதைக் கண்டதும் அவள் இதயமே வெடித்து விட்டது போலும்! "ஐயோ அத்தான்" என அலறி அவன் மார்பின் மேல் விழுந்தாள். அவனும் தன் பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி 'முத்து" என்றுன். தன் எஞ்சி இருந்த இடக்கரத்தால் அவளை இறுக அணைத்தான்.

அவளிடமிருந்து பதிலை எதிர்பார்த்த அவன் ஏமாந்தான். உதடுகள் மீண்டும் ஒரு முறை மெதுவாக "மு...த்...து" என முணுமுணுத்து விட்டு ஓய்ந்தன. ஆம்! அவன் கண் ஒன்று குருடாக்கப் பட்டிருப்பதைப் பார்த்ததும் "ஐயோ அத்தான்" என அலறியவள் அதிர்ச்சியால் ஆவி துறந்தாள். அளவுக்கு மீறிய இரத்தம் வெளியேறி விட்டதால் அவனும் இறப்போடு உறவாடி விட்டான். கருத்தொருமித்த காதலர் இருவரும் இறப்போடு கலந்தனர்.

முரடனெருவனுல் கரம் வெட்டுண்டதால் 'ஆ'வென அலறி கீழே விழுந்தவனின் இடது கண்ணிலே மணலோடு கலந்திருந்த நெருஞ்சி முள் ஒன்று பாய்ந்தது. அதன் பலனே அவனது இடது கண் குருடாகியது. அதைக் கண்டே முத்து வடிவு அலறி அதிர்ச்சியுற்று இறந்தாள்.

முத்து வடிவு வெளியேறிய சிறிது நேரத்திற்கெல்லாம் சுய நினைவு பெற்ற மருதப்பர் பெற்ற பாசத்தால் அவள் அடிச் சுவட்டைப் பின்பற்றி ஓடி வந்தார் காவிரிக் கரைக்கு. வந்தவர் கண்டதென்ன? வாழவேண்டிய இரு உயிர்களின் உயிரற்ற உடல்களைத்தான்.

அவர் உள்ளம் வெடித்து விடும்போலிருந்தது. அவர் களதுஉடல்கள்மேல் விழுந்து கதறினுர்.

"ஐயோ மகளே! உன்னை நான்தான் கொன்று விட்டேன். இல்லை! இல்லை!! நான் கொண்ட பகை உள்ளம்தான் கொன்றுவிட்டது. உன்னை மட்டுமல்ல மகளே! வருங்காலத்து மரத்தமிழின் மாபெரும் கவிஞனையும் கொன்றுவிட்டேன். மானசீகமாய் மலர்ந்தஉங்கள்உயிர்க் காதலையும் சேர்த்துக் கொன்றுவிட்டேன். ஐயோ மகளின் பொன்னுன வாழ்வை புதைக்குழிக்கு அனுப்பிவிட்ட புல்லன் நான். பெற்ற மகளையே கொன்று விட்ட கொடியவன். மதோன்மத்தன். "ஐயோ முத்து" என்று அவளுடைய பாதத்தைக் கண்களிலே ஒத்திக் கொண்டு கதறினுர் கண்ணீரால் அவள் பாதத்தைக் கழுவினுர். கணநேரம்தான். பின் வீறு கொண்டு எழுந்தார்.

"மக்களைப்பெற்றவர்களே! பருவப் பெண்டிர்களின் தந்தையர்களே! மகளின் மனம் நாடிய மணவாளனெருவனுக்கே அவளை மணமுடித்து ஒரு தந்தை மகிழாதுபோனல் என் நிலைதான் உங்களுக்கும் ஏற்படும். அவர்களும் இப்படித்தான் பரிதாபகரமாகச் சாகநேரும். காதலால் கட்டுண்ட அவர்களெல்லாம் காலன் வசமாகி விட்டால் பெற்றவர்களெல்லாம் கதறி, கண்ணீர் வடித்துத்தான் துடித்துத் சாகவேண்டும். மாண்புடை மாதர்குலம் சாக்காட்டை நோக்கி விட்டால் செத்து மடிந்துவிடும் மனித குலம். பின் வாழ்வேது நமது வருங்காலச்சமுதாயத்திற்கு?

∴ ∴ ∴

சந்தாதாரர்களுக்கு!

இனமுழக்கம் பொங்கல் மலர் இந்த ஆண்டு மிகச் சிறந்த முறையில் வெளிவர இருப்பதை நமது விளம்பர வாயிலாக அறிவீர்கள். விலை. ரூ 4-00 மலர் வேண்டுவோர் மலருக்கென தனியாகப் பணம் அனுப்பி வைக்க வேண்டும். மலரை சாதா அஞ்சலில் அனுப்பி வைத்தால் சரிவர கிடைப்பதில்லையாதலால் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கான செலவுத் தொகை 75 காசு சேர்த்து ரூ 4-75 வீதம் தனிப் பிரதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

★ சி. பி. சிற்றரசு ★

மு. பொன்னையன்,
அரியலூர்

கே: திரு. சிவாஜி கணேசன் அவர்கள், நேரு பண்டிதரிடம் ரூ. 1,00000 (ஒரு லட்சம்) கொடுத்தற்குப் பரிசாக, காங்கிரஸ் கணேசன் அவர்களுக்கு, தஞ்சை தரணியில் 30 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டது என்று கூறப்படுவது உண்மையா?

ப: சிவாஜி கணேசன் அவர்களுக்கு நிலம் தானமாக வழங்கப்பட்டது என்பது முற்றிலும் பொய். அவர் தன் சொந்தப் பணம் போட்டுதஞ்சைக்குப்பக்சத்திலே சூரக் கோட்டைக் கருகில் நிலங்களை வாங்கி இருக்கின்றுர். அவர் இப்போது கேட்பவராக இல்லை. கொடுப்பவராக இருக்கிறுர்.

இராமானுஜம் சென்னை-13

கே: வடக்கு நோக்கிச் சென்ற மூன்று மந்திரிகளும் எந்தக் கோலத்தோடு இங்கு வந்து சேர்ந்தார்கள்!

ப: படத்தைப் பாருமே!

பொறை எழிலன், திருச்சி

கே: காங்கிரஸ், சென்ற தேர்தலில் 5 கோடி ரூபாய்களைச் செலவு செய்து வெற்றி பெற்றதாமே? அப்படியானுல் வருகிற தேர்தலில்—?

ப: பக்கத்தில் ஒரு பூஜ்யத்தைச் சேர்த்துக் கொள்ளுமே.

S. A. P. எழிலரசி
மஞளன்,
தோப்புத்துறை

கே: கலை உலகம், தமிழரசுக் கழகத்தினர் கைக்கு வந்துவிட்டதாகவும், அதை, என்றுமே மாற்ற முடியாதென்றும் தி. மு. க. வினர் எண்ணம் இடிந்து விட்டதாகவும். கா. மு. ஷெரீப் எழுதி இருக்கிறுரே?

ப: கண்மூடி எண்ணமெல்லாம் மண்மூடிப் போக.

கே: தி மு க வுக்கு 5 லட்சம்; ஆச்சாரியாருக்கு ஒரு கோடி என்று தங்கப் பழம் தி. மு. க. வைப் பற்றி இழிவான முறையில் எழுதுகிறுரே. இதனுல் தங்கப்பழத்துக்கு என்ன பலன்?

ப: அவர்களுக்கு எவ்வளவு என்று கேளுங்கள். இதுவரை 75 லட்சம் என்று தெரிகிறது.

கே:அன்புமிக்க ஆசிரியர் அவர்களே!உலக மேதை என்றுல், அதன் பொருள் என்ன?

ப: உலகத்தாரால் ஒருமித்த அறிஞர் என்று ஒப்புக் கொண்ட ஒருவரையே மேதை என்கிறேம்.

அ. பிரகாசம், மயிலை

கே: பிரதம நேருவிடம் நம்முடைய மந்திரிமார்கள் எந்த முறையில் நடந்து கொள்கின்றனர்.



ப: பிச்சைகேட்க வருகின்றவர்களைப்போல்!

கே: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிவாஜி கணேசனும் புரட்சிநடிகர் எம். ஜி. ஆர். அவர்களும் உதவி செய்திருக்கிறுர்கள். கனம் காமராசர், சிவாஜி கணேசனைப் போய் பார்த்துப் பாராட்டி இருக்கிறுரே! நமது புரட்சி நடிகரை மறந்துவிட்டாரே, ஏன்?

ப: எம். ஜி. ஆரைப்பாராட்ட ஒரு நாடே இருக்கிறது. நமக்கென்ன அங்கு வேலை என்று விட்டுவிட்டிருக்கலாம்.

கே: 1962 தேர்தலில் நாம் எத்துணை எம். எல். ஏ. க்கள் வரக்கூடும் என்று கருதுகிறீர்கள்?

ப: இப்போதிருப்பதைவிடக் கூடுதலாக இக்ருகலாம்.

ப. தங்கவேலன்,
திருப்பரங்குன்றம்

கே: ஆசிரியர் அவர்களே! நேருவுக்கும் சூ-என்லாய்க்குமிடையே இருக்கும் சச்சரவு எத்தகையது?



ப: காட்டுப் பூனைக்கும் கிளிக்குமிடையே இருக்கக்கூடிய பீதியும் போராட்டமும்தான்! வேறென்ன?

அதிகாரி தோளிலே அமைச்சர்கள்

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுவிடுதலைப் பணியில் தன்னுடைய பிரச்சாரத்தை முன்னிறுத்தி அதற்குத் துணையாக மக்கள் ஆதரவினைத்தேடி வருகின்ற நேரத்தில் அமைச்சர்கள் சர்க்காரின் சாதனைகளை மக்களுக்குச் சொல்லப்போகிறோம். என்று சொல்லி ஊர் சுற்றுகிறார்கள். சர்க்காரின் சாதனைகளைப் பேச வேண்டிய சமயங்களிலும் இடங்களிலும் அவர்கள் பேசுவது காங்கிரசுக்கட்சியின் லட்சியத்தைப் பற்றியல்ல எதிர்க் கட்சிகளைக் குறிப்பாகச் செல்லுமிடமெங்கும் முன்னேற்றக் கழகத்தைப்பற்றி! ஊருக்கு ஊர்அடியாட்களைவைத்துக் கூட்டங்களில்கலவரம் செய்வதும் கழகத்தோழர்களைத்தாக்குவதும் தமிழ் நாட்டுக் காங்கிரசுக் கமிட்டியின் உயர்ந்த செயல்கள்! இவைகளை மந்திரிகளும் மறக்காமல் ஆதரிக்கிறார்கள். மக்களுடைய நட்பினைப் பெறுவதற்கு நாடெங்கும் பஞ்சாயத்து யூனியன் அமைப்பு விழாக்களை சர்க்கார் செலவில் நடத்தினார்கள். ஆனால் அந்த விழாக்களில் பொதுமக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை, அனுமதிக்கப்படவில்லை! அதிகாரிகள் காங்கிரசுக் கட்சியின் கடைசித்தர நபர்களை யெல்லாம் அழைத்து பஞ்சாயத்து யூனியன் விழாவில் பேசவைத் துள்ளார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் அதிகாரிகள் எனப்படுவோர் நடுநிலையாளராகச் செயல்படவேண்டும் என்று எண்ணுகிறது. எதிர்பார்க்கிறது. ஆனால் அதிகாரிகள் காங்கிரசுக்காரர்களைக் கண்டால் அடிபணிகிறார்கள். அத்தகைய அவசியத்திலே அதிகாரிகள் இருக்கிறார்கள். கொஞ்சம் கண்டிப்புக் காட்டினால் கலெக்டரையே மிரட்டுகிறார்கள்! நெல்லை மாவட்டக் கலெக்டர் பசுபதி அவர்கள்மீது இப்படிக் குறை கூறித்தான் உடனே மாற்ற வேண்டுமென்கிறார்கள், ஆனால் நாமெல்லாம் ஆச்சரியப்படத்தக்க வகையில் சில வட்டார வளர்ச்சிப்பகுதி அதிகாரிகளும் டிப்டி கலெக்டர்களும் காங்கிரசுக் கட்சியின் தொண்டர்களாகவே மாறியிருக்கிறார்கள்! பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக காங்கிரசுக்காரர்களேவரவேண்டுமென்று முதலமைச்சர் காமராசர் தான் சென்ற விடமெல்லாம் சொல்லி வைத்தாராம்! மதுரை மாவட்டத்தின் பலவட்டார வளர்ச்சி அதிகாரிகள் அந்த வேலையை இடைவிடாது செய்தும் கூட காமராசர் கணக்குப்படி காங்கிரசுக்காரர்கள் யூனியன் தலைவர்களாக வரமுடியவில்லை! சில காங்கிரசுக் காரர்களைத் தலைவர்களாக்கிவிட்டு அவர்கள் தயவினைக்கொண்டு அமைச்சர்களின் ஆதரவுடன் தங்கள் பதவிகளை உயரத்திக்கொள்ளலாம் என்று கனவு கண்டவர்களும் எதிர்பார்த்து ஏமாந்தவர்களும் இருக்கிறார்களாம்! சர்க்கார் மக்களின் வரிப்பணத்தைக்கட்சிப்பணிக்குப் பயன்படுத்தியதற்கு சில சுவையான செய்திகள் கிடைத்துள்ளன. ஒன்றைமட்டும் காணுங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகமும் மற்ற சில கட்சிகளும் நெல்லைமாவட்ட கலெக்டர் விவகாரத்தில் நேர்மையோடு நடக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில் அதிகாரிகளைத் தங்கள் வழியில் இழுக்கப் பார்க்கிறார்கள் என்று காங்கிரசுக் கனவான்கள் சிலர் மேடையிலே முழக்கினார்கள், கலெக்டர் பசுபதியை எதிர்த்தவர்கள் தேவகோட்டை சப் கலெக்டர் அகமது என்பவரைத் தங்கள் ஏஜெண்டாக வைத்துக் கொண்டுள்ளார்கள். திருப்பத்தூர் திருவாடனைப் பொதுமக்களைக் கேட்டால் அருமையான சான்றுகளைத் தெரிவிக்கக் காத்திருக்கிறார்கள்! திருவாடனையில் உபதேர்தல் நடைபெற்ற போது தேவகோட்டை சப்கலெக்டர் அகமது அந்தப்பகுதி முஸ்லீம்களை யெல்லாம் சந்தித்து காங்கிரசுக்கே ஓட்டுப்போட வேண்டுமென்று கேட்டாராம்! அதைப் போலவே முசுலீம் பெரிய மனிதர்களை யெல்லாம் தொண்டியில் கூட்டிவைத்து முஸ்லீம் ஓட்டுக்களை காங்கிரசுக்கே தரவேண்டுமென்று தன் முயற்சியில் வேலை செய்தாராம்! இதற்கெல்லாம் உதவியாக அவர் தேவகோட்டையிலிருந்து வேறு இடங்களுக்கு மூன்று முறை மாற்றப்பட்டுகூட அந்த மாறுதல் உத்திரவு எம் எல் ஏக்கள், அமைச்சர்களின் தலையீட்டினால் நீக்கப்பட்டு விட்டனராம்! இரண்டு திங்களுக்கு முன்னால் திருப்பத்தூர் வட்டார அரசியல் மாநாடு நடைபெற்றுள்ளது. முதலமைச்சர் காமராசர் அங்கே முனகியிருக்கிறார். முதல்நாளே வந்திருந்து டிப்டி கலெக்டர் அகமது பந்தல் அமைப்பு வேலைகளைக் கவனித்திருக்கிறார். அதே பந்தலில் பஞ்சாயத்து யூனியன் வேலைகளும் விழாவும் நடைபெற்றுள்ளன!

திராவிட முன்னேற்றக் கழகம் குறையை எடுத்துக் காட்டும்

கூடலரசன்

போது வேதனைப் படுபவர்கள் டிப்டிக் கலெக்டர் அகமதுவை மாற்றவேண்டுமென்று எப்போதும் சொல்லவில்லை! அவர்தான் காங்கிரசு மாநாட்டுத் தொண்டராயிற்றே. திருப்பத்தூர் தேவகோட்டைப் பகுதியில் பஞ்சாயத்து யூனியன் அமைப்பு விழாவுக்கு அனுமதிக்கப் பட்டதுகை சுமார் ரூ 2,500 ஆனால் நடத்தப்பட்ட ஒருவார விருந்துகளும் வாணவேடிக்கை களும் நடனங்களும் விழுங்கிய தொகை ஏறத்தாழ ரூபாய் 50 ஆயிரத்துக்குமேல் ஒரு லட்சம் இருக்குமாம்! இத்தனை பகட்டுக்கும் பணம் திரட்டியது அதிகாரப் பிரயோகத்தினால்தான்! அடங்கிப் பழக்கப்பட்டவர்கள் காங்கிரசுப் பணக்காரர்கள் பணம் தரவில்லை! வட்டார வளர்ச்சி அதிகாரி ஒருவர் M. P. ஆக இருக்கும் ராமனுதன் செட்டியார் என்பவரிடமேசென்று பணம்கேட்டாராம்! அவர் மறுத்துவிட்டு, அந்த அதிகாரிபின்பேரில் சர்க்காருக்குப் புகார் செய்ய 'போன்' செய்தி அனுப்புவேன் என்றாராம் அதிகாரி ஓடிவந்தாராம்? பஞ்சாயத்து விழாவில் முழுக்க முழுக்கக் காங்கிரசுப் பிரச்சாரம் நடைபெற்றுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை. சிவகங்கை எம்.எல்.ஏ. இளைய ராஜாவுக்கும் அழைப்பில்லை. விழாவில் கலந்து கொண்டவர்களில் சாதாரண கூலிப்பேச்சு சில்லரைக் காங்கிரசுக்காரர்கள் நிறைய இருந்தார்களாம்! அவர்கள் தயாரித்துள்ள நிகழ்ச்சி நிரலைப்பார்த்தால்இந்த உண்மை புரியும்! சர்க்கார் அதிகாரிகள் மேற்பார்வையில் சந்திரசேகரன் என்ற நிலக்கோட்டை எம். எல். ஏயின் புதல்வியான கலையரசி நடனமாடியிருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரசியல் போதனைகள்தருகின்ற அமைச்சர் கூட்டம் இவைகளை யெல்லாம் இப்போதாவது எண்ணிப் பார்க்கவேண்டும். சர்க்கார் விழாவில் பேசிய செங்கல்வராயன் ராஜகோபாலாச்சாரியைத் திட்டினாராம், அனந்த நாயகி என்ற அன்ன நடை அம்மையார் அறிஞர் அண்ணாவைப் பிடித்துக் கொண்டாராம்! "ஒரு பிடி. பிடியுங்கள்" என்று சொல்லிக்கொடுத்தாராம் தலைமை வகித்துப்பேசிய ஆர். வி. சுவாமிநாதன்! இவர்களது வசை மொழிகளைப்பஞ்சாயத்து விழாவினை ஏற்பாடு செய்த டிப்டி கலெக்டர் அகமதுவும் மற்ற அதிகாரிகளும் கேட்டு ரசித்தார்களாம்! காங்கிரசு எம். எல். ஏ. சொக்கலிங்கம் என்பவரிடம் ஒரு தாசில்தார் வரி கேட்கப்போனாராம். அப்போது உன்னை உதைப்பேன்' என்று மிரட்டினாராம்! அந்த அதிகாரி அதனை சர்க்காருக்குப் புகார் செய்தாராம். புகார்கள் தேவகோட்டை ஆர். டி. ஓ. அலுவலகத்தில் மூடி மறைக்கப்பட்டு அந்தத் தாசில்தாரையே வேறோர் இடத்திற்கு மாற்றி விட்டார்களாம். காரணம் கேட்டால் காதித்திரைக்குப் பின்னாலே இப்படிஎத்தனையோ நடக்குமாம்! இப்படிப் பஞ்சாயத்து யூனியன் விழா என்ற பெயரில் காங்கிரசுக் காரர்கள் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் நடத்தியிருக்கிறார்கள்.மாவட்டக்கழக அமைப்புகள் இருந்த நேரத்தில்தாங்கள் தோற்கடிக்கப்பட்ட பின் அவைகளைக் கலைத்துவிட்டவர்கள், தங்களின் கட்சி வளர்ச்சியினை அதிகாரிகளிடத்தில் தந்துள்ளனர்!

திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லும்போதுபொதுமக்களின் வரிப்பணத்தைக் கட்சிக்குச் செலவிடும் காங்கிரசு அமைச்சர்கள் இப்போதாவது தேவகோட்டைப் பகுதியிலே இருக்கும் அதிகாரிகள் குறிப்பாக டிப்டி கலெக்டர் அகமது என்பவரைக் கண்காணிக்கட்டும்! இவர்கள்வீணுக்கியுள்ள பணம் எவ்வளவு என்பதைக் கணக்கு எடுத்துக்காட்ட அங்கேயுள்ள 'சப்புரசரி' கள் காத்துக் கொண்டுள்ளன! நிர்வாகம் செய்யவேண்டிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாடகமாடினார்களாம் அந்தப் பயணச்சிலவு தேவை கோட்டை வீதிகளில் நடத்தியதிருக் கூட்டத்திற்கு சர்க்கார்பணத்திலேயிருந்துபரிசுகளாம்! காங்கிரசு கட்சி தன்னுடைய சொந்தக் கொள்கைகளைச் சொல்லி மகளிடத்திலே தன்னுடைய பெருமையை நிலைநாட்ட முடியவில்லை! பிழைப்புக்குப் பணிசெய்யும் சில காங்கிரசு எம். எல். ஏ. எம்பிக்கள் கலெக்டர் பசுபதியைக் குறைசொல்லித் தீர்மானங்கள் நிறை வேற்றினாலும் அகமது போன்ற தேவகோட்டை டிப்டிக்கலெக்டர்களை காங்கிரசுக்காரர்கள் தங்களுக்குக் கடிவாலமிட்டுத்தரப்பட்டகுதிரைகளாகவே மதித்துவருகிறார்கள் நெல்லைமா வட்டத்திலே இருக்கும் கணபதிகளைப் போன்ற காங்கிரசு எம். பிக்கள் இதனை எண்ணிப்பார்க்கவும். தற்போதைக்கு அதிகாரிகள் அத்தனை பேர்களும் தங்களின் உரிமைகளையும் பெருமைகளையும் காத்துக் கொள்ள முடியாமல் அமைச்சர்களின்தாள் பணிந்து வாழ்கிறார்கள்! அதனால்தான் அமைச்சர்கள் அதிகாரிகளின் தோளிலே சவாரி செய்து கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள்! அதிகாரிகளே அமைச்சர்களின் மிரட்டலுக்கு அஞ்சாதீர்கள்!

அமைச்சர்களின் தாள்பணியும் அதிகாரிகள்

மெய்க்காதல்

சலசலக்கும் நதியோசை - சரக்கொன்றை மர நிழல்கள் - வஞ்சகத்தை அறியாது வாழ்கின்ற புள்ளினங்கள் - வண்ணத்து அடுக்குகளை வானவில்லில் மட்டுமல்ல; இதோ! என் வளைந்தாடும் பெரு சிறகில் எனக்கூறும் மயில் கூட்டம் - வானத்தை எட்டுகின்ற நாற்றமுள நன்மலர்கள் - இயற்கையெனும் சிற்பியவன் வடித்தெடுத்த எழிற்கூட்டம் —

இத்தனையும் அமைந்தது குறிஞ்சி நிலக் கோட்டம். பெண்ணினத்தை வெறுக்கின்ற துறவிகளும் இவ்விடத்து எழில்காணின் உணர்வென்னும் உரம்பெற்று பெண் நிலத்தைத் தன்நிலமாய் ஆக்கற்கு முனைந்திடுவார்.

களவொழுக்கக் காதலர்க்கு இன்பத்தின் எல்லையினை எடுத்து வந்து காட்டிவிடும் வெண்ணிலவு காதலரைத் தாலாட்டும் வண்டிசைக்கும் ரீங்காரம். தண்ணீரில் மீன்களெல்லாம் துள்ளுகின்ற காட்சி, வானத்து மீனினத்தை எதிர்க்கின்ற போர்க் காட்சி. பார்ப்போருக்குப் பரவசத்தை ஊட்டுகின்ற நிலையுண்டு குறிஞ்சி நிலக் காட்சிக்கு.

அதோ ஓர் கொன்றை மரம்! வடித்தெடுத்தப் பொன்தகட்டைப் பூவாக்கி சரம் தொடுத்து மாட்டிவிட்டாற் போன்றதுதான் அங்குள்ள பன்னீரப் பூக்காட்சி. அம்மரத்தின அடியில்தான் தினந்தினமும் தலைவனும் தலைவியும் சந்திப்பார்கள்.

காலமும் அதன் வேலையைச் செய்து அவர்கள் காதலை - களவியலை வளர்த்தது. ஊரறியா இச்செய்தியை ஒருத்தி அறிவாள். அந்த ஒருத்தி...?

சிற்றுடை கட்டத் துவங்கிய அந்நாள் முதலாய் இயற்கைதந்த முத்திரையை மறைத்தற்குச் சேலையணியத் துவங்கிய இந்நாள் வரை தலைவியோடு ஆடிப்பாடிக் களித்து வந்த தலைவியின் தோழிதான் 'அந்த ஒருத்தி' களவியலைக் காதலர்கள் கைபற்றி வருவதை அறிந்தவள் அவள். காதலனைக் காணாத நேரத்தில் சந்திப்பில் ஏற்பட்ட அனுபவக் காவியத்தைத் தோழியிடம் கூறுவதில் இன்பம் கண்டாள் தலைவி.

என்னதான் தலைவனும், தலைவியும் களவியலால் சந்தித்து வந்தாலும் துன்பம் இருக்கத்தான் செய்தது யாரேனும் பார்த்துவிடில் ஊர் நகைக்கத் துவங்கிவிடும் என்கின்ற பயமுண்டு அவளுக்கு. ஏன்? அவனுக்கும் தான்...!

ஊரறியத் திருமணத்தைத் தன் தலைவிக்கு எப்படியேனும்முடித்து வைக்க எண்ணினாள் தலைவியின தோழி. உடன் செயலாற்றத் தொடங்கினாள். தலைவியின் நிலையை அவளது பெற்றோர்க்கு எடுத்துச் சொன்னாள். தன் தலைவியின் உள்ளத்தை எப்படியெல்லாம் படம் பிடித்துக் காட்ட முடியுமோ தன் சொற்களால் அப்படி யெல்லாம் எடுத்துச் சொல்லி தலைவியின் பெற்றோரைத் திருமணத்திற்குச் சம்மதிக்கச் செய்தாள்,

ஓர் நாள்...! உலகம் விழிக்கத் துவங்கிவிட்ட காலை நேரம். ஊராரும், உறவினரும் வாழ்த்த கற்பியலில் குடி புகுந்தனர் தலைவனும், தலைவியும். இருவருக்கும் புது ஆட்சி. தோழிக்கோ பெரு மகிழ்ச்சி. ஒரு நான்கு உயர்கரங்கள் உயர்வு பெற்றப் புதுக் காட்சி. வாழ்விற்கு வழி வகுத்தத் தோழிக்கு எம்முறையில் தாம் நன்றி செலுத்துவது என்பதற்கு வழிகாண இயலாது திகைத்தனர் தலைவியும், தலைவனும்.

புதுவாழ்வுப் புத்தகத்தைப் புரட்ட - தலைவனின் வீட்டிற்குச் செல்லவேண்டிய நாளும் வந்தது. இதுவரை பழகிய இடத்தை விட்டுப் பிரிகிறோம் எனத் தலைவி எண்ணும்போது கண் கார்மேகமாகியது. உதட்டுக் கூரைகள் ஆடின. தவழ்ந்தெழுந்து நடந்து வளர்ந்த நாள் முதலாய் உறவாடி வந்த தோழியைப் பிரிகிறோம் என எண்ணியபோது தோழிக்கு இமய வேதனை. பொன்னோடு புதுவைரம் சேர்வதற்கு வருந்தலாமா என எண்ணினாள் வேதனை மறையத் துவங்கியது.

அறிவுரைகள் பலர்கூற அதனை பெற்றுப் புறப்படலர் தலைவனும், தலைவியும். இறுதியாக தோழியிடம் விடைபெற வேண்டிய நேரமும் வந்தது. பிறர் போன்றே தானும் அறிவுரை கூற எண்ணினாள் ஆனால்...?

தன்னோடு தலைவி வளர்ந்தாள். உடலால், உளத்தால் என்பதனால் அவளுக்கு அறிவுரையோ, பிறவோ தேவையில்லை என எண்ணிய தலைவி தலைவனுக்கு அறிவுரை கூற எண்ணினாள்.

"தேனுண்ட வண்டினங்கள் மயக்கமுற்று மலர்தனையே படுக்கையாகக் கொண்டு மயங்கி வீழும் பூக்காடாம் மலர்ச் செடிகள் நிறைந்துள்ள ஊரின் தலைவரே!

நான் சொல்ல நினைப்பது தாங்கள்உணராதஅறியாத ஒன்றல்ல, எனினும், என் கடமை என்னைத் தூண்டுவதால் சொல்ல ஆசை.

தாங்கள் என் தலைவியைக் காதலித்து அவளது உடலழகைக் கண்டுமட்டுமல்ல; உள்ளத் தூய்மையைக் கண்டும்தான். இது நானாக இட்டுக் கட்டிச் சொல்வதல்ல. தாங்கள் தங்கள் காதலியாம் என் தலைவியிடம் சொன்னவற்றின் சுருக்கம். தங்கள் பால் அவள் கொண்ட காதல்-குறிஞ்சி நிலம் வளர்த்துவிட்ட அன்பு என்றும் மாறாது என்பதை நான் அறிவேன். அவளோடு நன்கு பழகிவிட்ட காரணத்தால்.

இன்றுள்ள மனமகிழ்வில் வருங்கால முதுமை நிலை மிகப் பயங்கரமாகத் தோன்றலாம் — என்றாலும் தடைபோட இயலாத ஒன்றல்லவா. எனவே, அத்தகைய முதுமை என் தலைவியைத்தழுவும் காலத்து அதைக் கண்டு மனம் மாறுபடாது இன்றுள்ள அன்புக் காதலர்களாகவே என்றும் தாங்கள் காட்சியளிக்க வேண்டும். உடல் போன்று உள்ளம் முதுமையடைதல் கூடாது. உள்ளத்து இளமை என்றும் நிலைக்கட்டும் இதுதான் எனது விருப்பமும், வேண்டுதலும். இதை மறந்து விடாதீர்கள். உங்கள் வாழ்வு மலரட்டும். சென்று வாருங்கள்."

தன் தலைவி என்றென்றும் தலைவரால் விரும்பப்பட்டு ஒத்த உளமாய் ஒன்றிய வாழ்க்கை நடத்த வேண்டும் என விரும்பிய தோழி தலைவனிடம் வேண்டுவதாகக் கூறப்பட்ட மேலுள்ள நிகழ்ச்சிகளை 'நற்றிணை' என்ற சங்க நூலின் ஒருபாடல் நமக்குத் தெரிவிக்கிறது. இதோ அப் பாட்டு...

"அண்ணாந்து ஏந்திய
வனமுலை தளரினும்
பொன்நேர் மேனி மணியில்
தாழ்ந்த
நல்நெடும் கூந்தல் நரையொடு
முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி! பூக்கேழ் ஊர!"
—நற்றிணைப்பாடல்.

—கவிஞர் பண்ணரசன்

விழிப்புணர்ச்சியே விடுதலைக்கு வழி?

★ எகிப்திலும், பாபிலோனியாவிலும் நாகரீக விதையூன்றிய திராவிடக் குலமே! நீ இன்னுமா உறங்க வேண்டும்? சாகாத காவியங்களிலும், அழியாத ஓவியங்களிலும் தனியிடம்பெற்றுவிட்ட வள்ளுவர் இனமே, நீ உறங்கிக் கிடக்காதே!

ஆர்விப்பட்டி ப. மு. இளங்குமரன்

"நாளெல்லாம் செய்த சிந்தனையின் வடிவமாகச் செதுக்கப்பட்ட சிலைதான், மனிதன்!" என்று ரோமாபுரி மன்னர் மன்னனை மார்க்கஸ் அரேலியசும், அறிஞன் எமர்சனும் ஒரே விதமாகக் கூறியுள்ளார்கள்! மனித இனத்தைப்பற்றி எவ்வளவு உயர்வாகக் கருதியிருக்கிருர்கள் அறிஞர்கள் என்பதை இதன் மூலம் உய்த்துணரலாம்! அப்படிப்பட்ட மனிதப் பரம்பரை — ஆறறிவு கொண்ட உயர்ந்த இனம் எந்த முறையில் இருக்க முயலவேண்டும்? இந்தக் கேள்வியினுல் பிறக்கும் பதிலில்தானே அந்த மனித இனத்தின் உயர்வு — தாழ்வு ஒளிந்து கிடக்கிறது! சோம்பேறியாய் — சோற்றுத் துருத்தியாய் சுறுசுறுப்பே இல்லாத சொர்க்கலோகச் சுகவாசியாய் வாழ்ந்து காட்டுவதுதான் ஒரு தனிமனிதனின் ஆசை என்ருல், அந்த ஆசை அறிவு மாளிகையை விட்டு அகலவேண்டியதுதான்!

தன்னைத்தானே சுற்றிக்கொண்டும், தகதகக்கும் கதிரவனைச் சுற்றிக் கொண்டும் ஓய்வின்றி வாழும் இந்த உலகத்தில் எவ்வளவு நாடுகள்! அந்த நாடுகளிலெல்லாம் சமுதாயச் சிறப்பு, பொருளாதார வளம், விஞ்ஞான முன்னேற்றம், அரசியல் விழிப்புணர்ச்சி, இலக்கிய மறுமலர்ச்சி போன்றவைகள் வேகமாக வளருகின்றன என்ருல், அதற்கு மூல காரணம் சும்மா உட்கார்ந்துகொண்டு அரட்டையடிப்பதும்— உறங்கிக் கிடப்பதும் அல்ல! வியர்வையைப் பன்னீராகச் சிந்துவதல்ல; தண்ணீராகச் சிந்துவதுதான்! குருதியை அளந்து கொட்டுவதல்ல; உதிரத்தை நிலத்தில் ஊற்றி உயிரைத் தத்தம் செய்வதுதான்! உழைப்பு! அந்த உழைப்பினுல்தான்—விழிப்பான செய்கையால்தான் நாட்டுக்குச் சிறப்பு! ஏன் நமக்கும்தான்!

கண்ணீர்க் குளம், செந்நீர்ச் சமுத்திரம் போன்றவைகளில் எதிர் நீச்சல் போட்டு வெளிவந்த மேதைகளால்தான் மாநிலம் மாண்பு பெற்றது; மக்கள் இனம் நலம் அடைந்தது!

"நான் எதை வாழ்வென்று கருதுகிறேனே, அந்த அளவுக்குரிய விலை கொடுத்தால்தான் அந்தப் பொருள் உடனடியாகவோ, நாட்கள் கழித்தோ கிடைக்கிறது!" என்று உழைப்பினுடைய பெருமையை — உறக்கத்தின் சிறுமையை விளக்கிக் காட்டினுன் தத்துவ நூலாசிரியனை ஹென்ரி தொரே என்பவன். "சோம்பலையும், துன்பத்தையும் வெல்ல முடியாதவர்கள், இளமையிலேயே இறந்துவிடுகிருர்கள்!" என்று மிகமிகத் தெளிவாகக் கூறினுன் நோபல் பரிசு பெற்ற டாக்டர் அலெக்சிஸ் காரெல்.

எவன் உறங்கிக் கிடந்தாலும், உயாந்த இனத்தின் வழி வந்தவன் உறங்கிக்கிடக்கவேகூடாது என்பதைஅழுத்தந் திருத்தமாகக் கூறவேண்டும்! கசடரின் தலைகளிலே கல்லேற்றிய வல்லவர்கள்; பர்மாவிலே படையெடுத்த பலசாலிகள்; பன்னிரண்டாயிரம் சிங்களவரைக் கைதிகளாக்கிக் கொண்டுவந்த வீரர்கள்; அசோகனும், ஹர்ஷனும் அடியெடுத்து வைக்கவே அச்சப்பட வைத்த அசகாயச் சூரர்கள்; அந்த தீராதி தீரர்களின் இரத்தக் கலப்பிலே உருவானவர்கள் உறங்கிக் கிடந்தால்உலகம் ஏளனம் செய்யாதா?

"மனிதன் சுதந்திரமுள்ளவனுகவே பிறக்கிருன்; ஆனுல் பின்னர்அவன் எங்கும் கட்டுண்டு கிடக்கிருன்." என்று ருஸோ தனது 'சமுதாய ஒப்பந்தம்' (The Social Contract) என்ற நூலில் எழுதியிருக்கிருன். மனிதன் கட்டுண்டு — மண்டியிட்டுக் கிடப்பதன் காரணம் என்ன? அவனைப்பிடித்திருக்கும் சோப்பல்தான்; தேச அபிமானமற்ற தன்மைதான் - நீண்ட உறக்கம்தான்!

பல நாட்டவர் புகழும் திராவிட இனத்திலே பிறந்தவர்கள் நாம்! நமது கொடிகள் இமயத்தின் முடியிலே பறந்தன! நமது நாவாய்கள் கடலிலே கம்பீரமாக சென்றன. நமது பொருட்கள் நாகரீகமான நாடுகள் தோறும் வெற்றி உலா வந்தன. நமது பண்பு புவி எங்கும் பரந்து கிடந்தது!.. இதை மறுப்பவர் யார்? இல்லை யென்று உரைப்பவர்யார்? 'இல்லை' என்று சொல்லும் இதயமில்லாதஅயோக்கியர்கள் இங்கே இருக்கிருர்கள்! ஏன், வடக்கிலும் இருக்கிருர்கள்! புகழ் கண்டு பொருமை கொள்ளும் பொச்சரிப்பாளரைத் துச்சமாக ஒதுக்கி விடக்கூடாது! ஏன்? அவர்கள் அந்த அறிவுச் சூன்யங்கள்தான் நம்மை ஆட்சி செய்கின்ருர்கள்!

'திராவிடர்கள் சுத்தச் சோம்பேறிகள்' என எண்ணுபவர்கள் வடக்கேயுள்ள 'இந்திய ரத்தினங்கள்' கோழிக் குஞ்சைப் போல் தென்னவரின் தலைகளைத் திருகிப் போட்டு விடுவோம்!' என்று திமிர்வாதம் பேசுகிறவர்களின் உருட்டலுக்கும். மிரட்டலுக்கும் நாம் ஒருபோதும் மனம் மருளவில்லை! அகம்பாவமான வாக்கியத்தைத் தூக்கிப் போடும் 'அதிபுத்திசாலி'களுக்கு. உறங்கிக் கிடக்காத நாம் சுரீரென்று வலிக்கும்படி சாட்டையடி தந்ததோம்; தருகிரேம், தருவோம்: "வெறி பிடித்த வடக்கே! குருட்டுத்தனமாக உளருதே! குப்பையைக் கிளறும் நாட்டுக் கோழியல்ல நாங்கள்! குபீரென்று பாய்ந்து குரல்வளையை நெரித்துக்கொன்று குருதியைக் குடிக்கும் கொடூரமான காட்டுப் புலியடா நாங்கள்! கவனமிருக்கட்டும்! வம்புச் சண்டைக்குப் போகும் பழக்கமில்லை எங்களுக்கு; ஆனுல், வந்த சண்டையை விட்டு விடும் வழக்கமும் இல்லையடா எங்களுக்கு! தெரிந்து கொள்! வீரத்திலே திராவிடர்கள் அரிமா! இழிவு செய்தவரை — இம்சைப் படுத்தியவரை என்ருவது ஒரு நாள் தீர்த்துக் கட்டி விடுவதில் நாங்கள் கரி! கொள்கையில்லாத கோணல் புத்திக்காரர்களைக் குப்புறத் தள்ளி அவர்களுக்குக் குழி பறிப்பதில் சிறந்த பரி! 'மந்திரத்திலே மாங்காயை விழவைப்போம்' என மார்தட்டும்சீர்கெட்ட ஆட்சியினருக்கு - அவர்தம் அடிவருடிகளுக்குப் பாடம் புகட்டுவதில் பைந்தமிழ்க் காளையர் தோள் தட்டும் வீரர்கள்! பண்போடு நடந்து கொள்! வாலாட்டாதே!!

நமது திராவிடச் சமுதாயம் உறங்கிக்கிடந்ததால்தான், ஆடு, மாடு மேய்திட்ட பரம்பரை இன்று எத்திப் பிழைக்க ஏதுவாக இருக்கிறது! ஏனிந்த எருமை மாட்டுக் குணம்?

★ பசியா?-தெரியாதே! பட்டினியா? ஏற்பட்டதில்லையே! வறுமையா? அப்படியென்ருல் அர்த்தமென்னவோ! பிணியா? சமர்க்களத்தில்தான் சாவே தவிர, பிணிக்குப் பலியானவர்கள் இங்கில்லையப்பா! இப்படிக் கேட்டவர்கள், இன்பமாக விடை புகன்றவர்க்ள் பண்டைத் திராவிடர்கள்!

எகிப்திலும், பாபிலோனியாவிலும் நாகரிக விதையூன்றிய திராவிடக் குலமே! நீ இன்னுமா உறங்கவேண்டும்? சாகாத காவியங்களிலும், அழியாத ஓவியங்களிலும் தனியிடம் பெற்றுவிட்ட வள்ளுவர் இனமே! நீ உறங்கிக் கிடக்காதே! பசியா? தெரியாதே! பட்டினியா? ஏற்பட்டதில்லையே! வறுமையா?— அப்படியென்ருல் அர்த்தமென்னவோ! பிணியா? சமர்க்களத்தில்தான் சாவே தவிர பிணிக்குப் பலியானவர்கள் இங்கில்லையப்பா! இப்படிக்கேட்டவர்கள், இன்பமாக விடை புகன்றவர்கள் பண்டைத் திராவிடர்கள்! சோம்பலின் முடிவு சுடுகாட்டுச் சாம்பல்தான் என்பதை நன்ருகவே அறிந்தவர்கள் நம் இனத்தவர்!

'ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன்.'

எனப் பாடி மகிழ்ந்த செந்தமிழ்ப் புலவர்கள் - அவர்களை அன்போடு காத்து மகிழ்ந்த வண்டமிழ்ப் புரவலர்கள் வாழ்ந்த பொன்னுட்டின் புதல்வர்களே! உறக்கம் உங்களுக்குத் தேவையா? (நீண்ட உறக்கம் என்பதனை நினைவில் கொள்க!) 'இருந்தவன் இளைத்தான்; வந்தவன் வலுத்தான்.' என்ற பழமொழியை மாற்றிப் படித்திட வேண்டுமானுல் உறக்கத்தை ஒதுக்கித் தள்ளுங்கள்! 'இருந்தவன் இன்பம் எய்தினுன்; வந்தவன் வாடி வதங்கினுன்!' என்கின்ற புதுமொழி - புரட்சி மொழி பிறக்க வேண்டுமானுல் நீண்டதோர் நித்திரைக்கு நிரந்தரச் சமாதி கட்டுவோம்; சுறுசுறுப்புக்கு நல்ல வரவேற்பினைக் கொடுப்போம். 'திராவிடர்களா, அவர்கள் அடிமாண்டு போனவர்கள்!' என்ற தடித்த புத்தியால், அடிமைத்தளை என்ற இரும்பு இடுக்கியில் வைத்து நசுக்கிடும் வடிகட்டின 'எவரெஸ்டு விவேகி'களுக்கு ஒரு 'வழி' செய்ய வேண்டுமானுல் சிந்தனை வேண்டும்; செயல் வேண்டும்! ஆனுல் உறக்கமே கூடாது; ஒருவருக்கொருவர் பிளவு கூடாது! 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிப் பயலுக்குத்தான்கொண்டாட்டம்!'

'தேங்கி நின்ற தண்ணீர் துர் நாற்றமடிக்கும்; வில்லை விட்டுக் கிளம்பாத கூரிய கணை எதையும் எய்யாது; புதைந்து கிடக்கும் பொன்னுக்கு மதிப்பில்லை.' என்ற தத்துவம் நம்மிடையே நிலையாக நிற்கவேண்டும்! நம் நாடித்துடிப்பாகத் துலங்கிட வேண்டும்!! 'இடைவிடாத விழிப்புணர்ச்சிதான் விடுதலை.' என்பது ஓர் அமெரிக்கப் பழமொழியாகும்!

நாம் யார்? நமது வரலாறு என்ன? நீதிக்காக — நங்கை ஒருத்திக்காக உயிர்விட்ட நெடுஞ்செழியனின் பரம்பரை நாம்! எட்டுத்தொகை தந்த கெட்டிக்காரர்கள் இங்கே தான் இருந்திருக்கிருர்கள்! பத்துப்பாட்டைக் கொடுத்த இன்பத்தமிழ்ச் செல்வங்கள் இந்த நாட்டில் தான் உறைந்திருக்கிருர்கள்பதினெண் கீழ்க்கணக்கைப் பக்குவமாகத் தந்த தக்கவர்கள் திராவிட நாட்டில்தான் வாழ்ந்திருக்கிருர்கள்! அவர்களெல்லாம் உறங்கிக் கிடந்து—உருப்படாத வகையில் வாழ்நாளைக் கடனுக்குக் கடத்தியிருந்தால் பொன்ஞன பலநூல்கள் பூத்திருக்க வாய்ப்பில்லை! 'இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?' என்கின்ற பொறுப்பற்ற தன்மையில் பண்டைத் திராவிடர் பொழுதைப்போக்கியிருந்தால், தென்னகத்தின் கீர்த்தி விண்ணைத்திரக் கிளம்பி யிருக்க இடமேயில்லை! 'சோம்பித் திரிவோர் தேம்பி அழுவார்' என்பதை மறக்கப் போய்த்தானே, மண்டைக்கனம்கொண்ட சுண்டைக்காய்ச் 'சூரர்கள்' எல்லாம் நம்மை ஆண்டு வருகிருர்கள்! இன்னும் இந்த இழிந்த போக்கு இப்படியே நீடிக்க வேண்டுமானுல் நாமெல்லால் உறங்கிவழிவோம்! இந்த அவலநிலை—கேவலமான போக்கு உடனே மாறவேண்டுமானுல் விழித்தெழுவோம்; வீணுன தூக்கத்தை விரட்டியடிப்போம்; மக்கள் நலவிரும்பிகளின் தக்க சொற்படி நடப்போம்!

பிரெஞ்சு மக்கள் உறங்கிக் கிடப்பதையே உயர்ந்த வாழ்வெனக் கொண்டிருந்தால், 1789-ம் ஆண்டு ஜுலைத்திங்கள் 14-ம் நாள் பாஸ்டிலி என்னும் படுபயங்கரச் சிறைக்கூடத்தைப் பொடிப் பொடியாக்கிய பெரும் புகழைப் பெற்றிடத் தவறியிருப்பார்கள்! சுறு சுறுப்பும் - கொள்கையும் இல்லாமல் கோயில்மாடு போல் இங்கிலாந்து மக்கள் திண்ணைத் தூங்கி வீரர்களாக விளங்கியிருந்தால், ஆணவம் பிடித்த மன்னனின் சிரத்தைக் கொய்துசிறந்தவாழ்வை அடைந்திருக்க மாட்டார்கள்! இரத்தம் கொட்டும் தீவிரப் புரட்சியை அமெரிக்கர்கள் நடத்திக் காட்டியிருக்காவிட்டால், 'விடுதலை' என்ற வார்த்தையை ஏடுகளில் கூடக் காணுகின்ற பேற்றைப் பெற்றிருக்கமாட்டார்கள்! ருசிய மக்கள், உண்டு, உறங்கி வாழ்நாட்களை விரயமாக்கியிருந்தால், ஜார் மன்னனின் சர்வாதிகாரமுக மூடியைக் கிழித்தெறிந்திருப்பது கடினம்தான்! கொடுமைகள் கொக்கரிக்கும் கோட்டை கொத்தளங்கள். மிருக வெறி மலிந்த மாடமாளிகைகள், சீர்திருத்தச் செம்மல்களைச் சிதைத்து—சிரித்து மகிழ்ந்த சதிகாரச் சாம்ராஜ்யங்கள் எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல், மண்ணோடு மண்ணுக மக்கி மறைந்துவிட்டதின் முக்கியக் காரணமென்ன? இதய மதில் கொண்ட இலட்சியத்தை எட்டிப் பிடிக்கும்வரை உறக்கமே கொள்ளாத விழிப்புணர்ச்சிதான் என்பதை விளக்கவும் வேண்டுமா?... வேண்டாம்!

தூங்கியது போதும், துடித்தெழு!

திரைஒலி

சாரதி பிலிம்சாரின்

புதிய பாதை

ஏற்றதொரு சீர்திருத்தக் கதைக்கு மூலம்
'ஏக்ஹிராஸ்தா' என்னும் இந்திக் காதை!
மாற்றமிலா 'ஆர்டினரி' வசனம் நன்ருய்
போற்றிடவே நடித்திருக்கிருர் ஜெமினி- அங்குப்
பொறுப்போடு பாலாஜி அழகாய் வர்ரார்!
காற்றினிலே அசைந்தாடும் சாவித் ரியும்
'கனபாடி!' ஆனாலும் 'கவர்ச்சி' உண்டு!
வீட்டினிலே அநுமார்க்கு சிஷ்யன்- தங்க
வேலுக்கு ஜோடிச ரோஜா நன்று!
வில்லன்கர் ணுநிதியே! வேஷம் 'கிராண்டு'!
பாட்டிமனப் போராட்டம் மிக்க டெய்சி
ராணிக்கு நல்நடிப்பு! 'டப்பிங்' இன்றிப்
போட்டிடவே பதில்குழந்தை இங்கா இல்லை?
போகிறது! 'டைரக்ஷன்' பரவா இல்லை!
கேட்டிருக்கும் இந்திமெட்டுப் பாட்டுக்கள் தாம்
கேடில்லை பார்ப்பதனுல்! 'கிளைமாக்ஷ்' இல்லை!

—அஞ்சான், (எம். ஏ.)

விற்பனையாளர்கள் கவனிக்க!

★

''மறவர் குலத்து மணிப்புரு'' தொடர் கதை வரும் இதழிலிருந்து அதிகம் பிரதிகள் கேட்டு நாள் தோறும் கடிதங்கள் குவிந்த வண்ணமிருக்கின்றன. சில விற்பனையாளர்கள் — வாடிக்கைக்காரர்களிடம் தொடர்பு கொள்ளவும், நல்ல முறையில் விளம்பரம் செய்யவும் காலம் வேண்டுமாதலால் தொடர்கதையை ஒரு வாரம் தள்ளித் தொடங்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

''இனமுழக்கம்'' அச்சாகும் காகிதத்தின் விலை விஷம்போல் ஏறி இருந்தாலும் — இலாபம் கருதாது, 16—12—60 இதழிலிருந்து பன்னிரண்டு பக்கங்களாக ''மறவர் குலத்து மணிப்புரு'' தொடர் கதையுடன் வழக்கம்போல் முகப்புச் சித்திரத்துடன் வெள்ளியன்றே விற்பனைக்குக் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுவதுடன், அதிகம் பிரதிக்கு எழுதும் விற்பனையாளர்கள் அதற்கான முன்பணத் தொகையும் சேர்த்து அனுப்பி வைத்து விடவேண்டுகிருேம்.

—நிர்வாகி.

இலட்சியத்துக்காக வாழ்பவன், மனிதன்! இச்சைக்காக இருப்பவன், நடைப்பிணம்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கொள்வது ஒன்று. நிர்வாகத் துறையில் தனக்கு எவ்வளவு தான் அசாதாரண ஆற்றலிருந்தாலும் பிறரையும் அந்த ஆற்றலில் இழுத்து அவர்களைப் பெருமைப் பட வைத்துத் தான் காரியத்தை முடித்துக் கொள்வது ஒன்று. தான் ஏற்றிருக்கின்ற பணியின் நுண்கலையைத்தெள்ளத் தெளியத் தெரிந்து வைத்துக் கொண்டு, பிறர் தன்னை ஏமாந்தவன் என்று நினைத்துக் கொண்டு செயல்பட முனையும் போதெல்லாம், அவர்கள் தலையில் குட்டி உட்காரவைக்கும் தைரியம் பெற்றிருப்பது ஒன்று. எவ்வளவு படுமோசமான எதிரிகளாக இருந்தாலும் ஆ, அவரா பரவாயில்லை, என்று பேசும் வாய்ப்பைத் தேடித்தருகின்ற ஆற்றல் ஒன்று, ஆக இவ்வளவு ஆற்றலையும் பெற்றிருப்பவர் தோழர் முனுசாமி. அவர் மேயராகக் கூடிய எல்லாத் தகுதியும் திறமையும் பெற்றவர் என்று மக்கள் சொல்வதற்கு முன்னுலேயே கழகம் கண்டுகொண்டிருந்த காரணத்தினுலேதான் அவரைத் தேர்ந்தெடுத்தது.

அப்படியானுல் தோழர் ஜீவரத்தினத்தின் நிலை என்ன என்பதை நீங்கள் கேட்கக்கூடும். தோழர் முனுசாமி அவர்களுக்குச் சொன்ன திறமைகளில் ஒன்றுகூட இவருக்கில்லையா என்று நீங்கள் வினவநினைக்கிறீர்கள். நாம்மேலேசொன்ன இருதரத்தாரிலே கட்சியாலே தான் நாம் இருக்கிருேம் என்று நினைப்பவர் மேயர் முனுசாமி. நம்மாலேதான் கட்சி இருக்கிறதென்றுநினைத்தவர் தோழர் ஜீவரத்தினம். இந்த அடிப் படையிலேயே தோழர் ஜீவரத்தினம் தவறி விட்டார் என்ருல் அவருக்கு வேறு எவ்விதத் திறமைகள் இருந்தும் என்ன பயன்?

மேயர் பதவியை யாருக்குக் கொடுப்பது என்பது விருந்து யாருக்கு வைப்பது என்ற சாதாரணப் பிரச்னையல்லவே. அண்மையில் நடந்த மேயர் தேர்தலில் தோழர் ராசரத்தினம் அவர்கள் தோற்றதால் இருட்டில் ஓடுகிற திருடனைப் போல் யாருக்கும் தெரியாமல் போய்விட்டது. ஒரு இயக்கத்தின் சார்பாக நின்ற தோழர் முனுசாமி தோற்றிருந்தால்-மாற்றுக் கட்சிகள் எவ்வளவு எக்காளம் போடும். ஆளும் கட்சிக்கு தன் கட்சியிலே ஆள் கிடைக்காமல் தத்தெடுத்தப் பிள்ளை போல் தோழர் ராசரத்தினம் அவர்களை கிணற்றில்இறக்கி ஆழப் பார்த்தது. அவர் தானே தோற்ருர் நமக்கென்ன. கிடைக்க வேண்டியவைட மின்'ப' கிடைத்து விட்டதென்ற மகிழ்ச்சியில் போய் விட்டார்கள். இதுவரை நடந்த எந்த மேயர் தேதலும் இவ்வளவு பரபரப்பு அடைந்ததில்லை, அவ்வளவுபரபரப்பை உண்டாக்கி விட்டது ஒரு தின இதழ்.

இரவு ராணிப் பத்திரிக்கை ஈனபுத்தி தினத்தந்தி

அந்த மூல்லமாறி பத்திரிக்கைக்கு மானமும் இல்லை. ஈனமுமில்லை. இரவில் ஒதுங்கி நிற்கும் வழுக்கிவிழுகின்றவர்களை பத்திரிக்கையிலே போட்டு, பண்பு கெட்ட தன்மையில் பொது மக்கள் பணத்தைப் பறிக்கும் இந்த ஈனப்பிறவி தினத்தந்திக்கும் தேவடியாளுக்கும் வித்தியாசமே இல்லை.

நாம் தமிழர்

நாம் தமிழர் இயக்கத்தைக் கண்ட மூதேவி ஆதித்தன் தான் இந்தப்பத்திரிக்கையின் சொந்தக்காரர். இந்த லட்சணத்தில், நாம் தமிழர் என்று வேறு சொல்லிக் கொள்கின்ருர். தமிழர் பண்பாடு இது தானு என்று அந்தக் களிமண் மண்டையைக் கேட்டுப் பயனில்லை. ஏனெனில் தோழர் ஜீவரத்தினம் எடுத்த வாந்தியை இவர் வாயால் வாங்கி அப்படியே பத்திரிக்கையிலே வாந்தி எடுத்து விட்டார் பாவம். அதன் பலன்.

தினத்தந்திக்குத் தீ

மேயர் முனுசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று 29-11-60 செவ்வாய் இரவு 8 மணிக்கு அறிவித்தவுடனே தினத்தந்திக்குத் தீ வைத்தார்கள் சிலர். அதைப்பஞ்சுப் பஞ்சாகப் போகும் வரை செருப்பாலடித்தார்கள் தினத்தந்திகையில் வைத்திருந்தவனை விரட்டிக்கொண்டு ஓடினுர்கள். இந்த நிலையாயிற்று தினத்தந்தி. தினத்தந்தியின் மூலமே மேயராய் விடலாம் என்று நம்பியிருந்த தோழர் ஜீவரத்தினம்கட்சியிலிருந்தே விலக்கப்பட்டார், விலகினுர். இயக்கத்தையே நம்பி, இயக்கத்தைக் காத்த, இயக்கத்தின் சொற்படி நடந்த தோழர் முனுசாமி மேயரானுர். இந்த நிகழ்ச்சி நமக்கும் கற்பிக்கும் பாடம், இயக்கத்துக்காகத் தான் நாம் இருக்கிருேம் என்பதை மறந்து, இயக்கம் நம்மால்தான் இருக்கிறது என்ற மண்டைக்கனம் கொள்ளாதே என்பது தான். வாழ்க மேயர், துணை மேயர்!

முள்வாங்கி

கொள்கையில்லாதவன் குறையுடற் பிண்டம்! லட்சியம் வேண்டும் கட்சியும் வேண்டும்

மக்கள் சமுதாயத்திலே முழுக்க முழுக்கப் பொதுநலம் பேணும் தியாகிகள் இருக்கமுடியாது! சுயநலம் பச்சையாகத் தெரியாவிட்டாலும்மறைமுகமாகச்சிறிது இருக்கத்தான் செய்யும்! இதில் வியப்பொன்றும் இல்லை! மனித வாழ்க்கை அமைந்த விதமே இது! பொது நோக்கத்திற்காகத் தன் இலட்சியத்தை அடைய விரும்பியவர்கள். கல்லடியும் குண்டும் பட்டு இறந்து பட்டனரே தவிற-பொது நலமே கருதி முற்றிலும்சுய நலத்தைத் துறந்து வாழ்ந்தது கிடையாது! எனவே தியாக முத்திரை இலட்சியத்தால் உயிர் துறந்தவர் கட்கே உரியது! தன்னலம் மறுத்து வாழ முடியாமல் மாண்டவர்களே தியாகிகள்!!

''இப்படி ''இறந்து'' போனவர்கட்குத் தாம் மணிமண்டபம் கட்டுகின்றனர்! நினைவு விழா எடுக்கின்றனர்! பாராட்டுகின்றனர்? எனவே இலட்சியங்களைப் பேசிக்கொண்டு நிம்மதியாக ''வாழ'' முடியாது! அது சமுதாயத்தின் எதிர் நீச்சல் பேர் வழிகட்குத்தான் முடியும். குறிக்கோள் வாழ்க்கையானது வாய்ப்பும்வசதியும் மிக்கோருக்குத்தான் உரியது. இல்லையென்ருல்—உலகிலே எந்தப்பற்றும் இல்லாமல் தெரு ஓரத்திலே வாழ்க்கை நடத்தி 'வெந்த சோற்றைத் தின்று விதிவந்தால் சாகின்ற' இந்த நாட்டு முடிசூடாத மன்னர்கட்கு உரியது!''— என்று சமுதாய—அரசியல்— பொருளாதார மறுமலர்ச்சிகளிலே அக்கறையில்லாத மக்கள் அதிகம் உள்ளனர்.

'தாம் உண்டு—தம் வேலையுண்டு' என்போர், உண்டு உறங்கும் வாழ்க்கையையே பெரிதெனக் கொண்டு சமுதாயஓட்டத்திலேயே செல்வார்கள்.

இவர்களுக்கு லட்சியம்—கொள்கை—குறிக்கோள் முதலியவற்றில் பற்றில்லை என்று கூற முடியாது. 'ஏன் வீண் வம்பு?' என்ற பயத்தினுல் எதிலும் முழுமூச்சாக ஈடுபடாமல் இருக்கின்றனர். மேலும் இவர்கட்கு—வாழ்க்கையேபெரிதாகத்தோன்றுகின்றது. நீரோட்டத்திற்கு வளைந்து கொடுக்கும் நாணல் போன்றவர்கள்! ஊர் மாடுகூட மேயமுடியாது. புல்லையாவதுமேயும் பயனற்றவர்கள்!

நீரோட்டத்தைத் தடுக்கும் அணைபோன்ற சமுதாயவாதிகள் — நீரைப்பிரித்து பயிர் விளைச்சல் காண விழைகின்றனர்! நீரும் வீணுகவில்லை! பயிரும் பயன்படுகின்றது! அணைகளுக்கு ஒரு பயனுமில்லை!—பணிசெய்த புகழில் என்றும் நிலைத்து விடுவதைத் தவிர, புகழ்ந்தால் காசுபணமா செலவாகிறது? நான்கு வார்த்தைகள் தானே!

இங்ஙனம் குறிக்கோளற்ற மக்கள் அதிகமிருப்பதால்தான்—இந்த நாட்டிலே எந்த லட்சியமும் எளிதில் கை கூடுவதில்லை! உணர்ச்சியும் அறிவும் - லட்சியத்தை உருவாக்க முனைதல் வேண்டும். உணர்ச்சியை அடிப்படையாகக் கொள்ளாத லட்சியமும், அறிவைத் துணைகொள்ளாத கொள்கைகளும் பயனற்றவை! எனவே நான் எந்தக் கொள்கையும் இல்லாதவன்! எந்த லட்சியமும் கிடையாது! 'என்று சொல்லிக் கொள்வதைப் பெருமை என எண்ணுதீர்கள்! அவை சிறுமையே!

கட்சிகளிலே ஈடுபட்டு உங்கள் உடலையும் உள்ளத்தையும் வருத்திப் பணிசெய்யவேண்டும் என்று கூடக்கேட்கவில்லை, உங்களுக்கென்று தனிப்பட்ட முறையிலாவது சில கொள்கைகள் லட்சியங்களைவைத்துக்கொள்ளுங்கள். அது நாட்டின், மொழியின், சமுதாயத்தின் எதிர்காலத்தை நல்ல முறையில் வக்கு விப்பதாக அமையட்டும்! உங்களால் நாட்டின் பொதுப் படையான நோக்கங்களுக்காக முன்வர முடியாவிட்டாலும்-பிறர் முன்வந்து செயல்படுவதை ஆதரியுங்கள்!

ஆசிரியர் : செ.பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பா வள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சி
மறவர்குலத்து மணிப்புறா
ஆரம்பம்
அமுதன்

மும்மூர்த்திகளுக்கு முப்பட்டைதான் மிச்சம்!

முதல் ஐந்தாண்டுத் திட்டம் 2,600 கோடி ரூபாய்க்குத் தீட்டப்பட்டு, 3,360 கோடி செலவிடப்பட்டது. இந்தத் திட்டத்தில் தமிழகத்தின் பங்காக, உதைத்த காலுக்கு முத்தமிடும் உத்தமர்கள் கேட்ட தொகை ரூ. 97 கோடிதான்! கேட்ட தொகை 97 கோடிதான் என்ருலும், கேட்டதைக் கொடுக்கும் பண்பட்ட உள்ளமில்லாத தில்லி 86 கோடிரூபாய் மட்டுமே தர ஒப்புக்கொண்டது. ஆனல் செலவிட்டதோ 80 கோடிரூபாய்தான்.

ஆனல் நியாயமான அளவிலே, மக்கள் தொகை கணக்கீட்டின்படி ஏறத்தாழ 280 கோடிரூபாய்களைத் தமிழகம் பெற்றிருக்க வேண்டும். பெற்றதொகையோ, தனியார் துறை, மத்திய அரசின் திட்டம் ஆகியவற்றின்படி ஏறத்தாழ 120 கோடிரூபாய்தான்! ஆகவே, முதல்திட்டத்தில் 160 கோடிரூபாய் தமிழகத்துக்குத் தரப்படவில்லை'

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேதான் இந்தநிலை என்ருல், நியாயமானதொகையை தில்லிதர மறுத்து விட்டது என்ருல், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்திலும் புறக்கணித்து விட்டது.

முதல் திட்டத்தில் சேர வேண்டிய தொகை 280 கோடிரூபாய்.

இரண்டாவது திட்டத்தில் சேர வேண்டிய தொகை 562 கோடி!

முதல் திட்டத்தில் கிட்டிய தொகை ரூபாய் 120 கோடி.

இரண்டாவது திட்டத்தில் கிட்டிய தொகைரூபாய் 188 கோடிதான்.

ஆக இரண்டுதிட்டத்திலும் கிடைத்த மொத்த தொகை 308 கோடிரூபாய்தான்.

இரண்டு திட்டத்திலும் கிடைக்க வேண்டிய மொத்த தொகையான 842 கோடியில் கிடைத்ததொகை 308 கோடி போக மீதம் 534 கோடிரூபாய்கள்!

முதலிரண்டு திட்டங்களிலும் தமிழகம் 534 கோடி ரூபாய்களை இழந்து விட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்களோ, நாம், எடுத்துக்கூறிய நேரத்திலும், எட்டி உதைக்கும் காலைத் தொட்டுக் கும்பிட்டுத் தலைமீது தூக்கிவைத்துத் துதிபாடும் தமிழக அமைச்சர்கள் 'பொய் பொய்' என்று எடுத்தெறிந்து பேசி எகத்தாளமிட்டு, ஊர்சுற்றி உலாவப் புறப்பட்டாரே தவிர, கழகத்தின் கருத்துக்களை, புள்ளிவிவரப்பட்டியல் ஞர் அண்ணுவைப் பண்டாரம் என்றும், அண்ணுத்துரையின் அற்பஆசை ஆயிரம் கோடித்தான் என்றும் மேடை மீதேறி முழக்கமிட்டார்!

ஆயிரம் கோடி கேட்ட அண்ணுவைப் பண்டாரமென்றவர்; அற்பஆசையென்றவர் கேட்டதொகை 250 கோடிதான் என்ருல், 1000 பெரிதா, இருநூற்றைம்பது பெரிதா என்பதைக்கூட அறிந்து கொள்ளும் ஆற்றலற்றுப்போன அற்பப் பதர் என்றுதானே பொருள்!

ஏ. கலைமுகிலன்

இப்படி 250 கோடிமட்டுமே கேட்கமுடியும்; திட்டமும் அவ்வளவு தொகைக்குத்தான் தீட்ட முடியும் என்ற கோவைக்குமாரர் திடீர்பல்டி அடித்து, 397 கோடிரூபாய்க்குத் திட்டமிட முன் வந்தார்!

மூன்ருவது திட்டத்தின் மொத்த முதலீட்டுத் தொகையே 10,250 கோடியாக இருந்தும், அதில் தமிழகத்துக்குக் கிடைக்கவேண்டிய தொகை ஏறத்தாழ 850 கோடியாக இருந்தபோதும், 397 கோடிக்கு மட்டுமே திட்டமிட்டுத், தில்லியை நோக்கி ஓடினுர்கள், பட்டும் புத்திவராத பாராள வந்த மந்தி(ரி)மார்கள்!

முதலிரண்டு திட்டத்திலும் தமிழகம் பெறத்தவறிய 534 கோடியையும், மூன்ருவது திட்டத்தில் கிடைக்க வேண்டிய தொகை 850 கோடியையும் சேர்த்துக் கணக்கிட்டால், 1,384 கோடி ரூபாய்தமிழகத்தின் பங்காகக் கிடைக்கவேண்டி இருந்தும் தில்லித் தேவதைகள் அனுமதித்துள்ள தொகை ரூபாய் 292 கோடிரூபாய்தான்! தமிழக அமைச்சர்கள் கேட்ட தொகையிலும் 106 கோடி ரூபாய்கள் வெட்டப்பட்டு விட்டது!

கிடைக்கவேண்டிய தொகையோ 850 கோடி. கேட்ட தொகையோ 397 கோடி. கிடைத்த தொகையோ 292 தான்.

கேட்ட தொகையிலும் வெட்டுப்பட்டு, குறைந்தபோதும், மனதை நிறைவு செய்து கொள்ளவும், கழகத்தவரின் கருத்துக்களுக்கு மறுப்புரைக்கவும் எண்ணிக்கொண்டு, புள்ளிவிவரம் நமக்குப் புரியாதென்ற ஏமாளித்தனத்தோடு, "கிடைத்துள்ள தொகை மக்கள் கணக்கீட்டின்படிதான் கிடைத்திருக்கிறது", என்று பறைகொட்டி இருக்கிருர், மதிமுக நிதியமைச்சர்!

ஒன்றை மறைக்க ஒன்பது பொய் கூற வேண்டுமென்பதுபோல், நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தொகை எவ்வளவு என்பதை மறைக்க மக்கள் கணக்கீட்டுப்படிதான் நமக்குத், திட்டத்தில் பங்குகிடைத்திருக்கிறது, என்று எடுத்து விளக்கி இருக்கிருர்கள்!

புள்ளிவிவரம் புரியாத குருட்டுமதிபடைத்தவர்களிடத்திலே செய்ய வேண்டிய புரட்டுத்தனத்தை, தமிழகத்திலே வந்து, அதுவும், புள்ளி விவரங்களைக் காட்டிக், கொள்கைமுழக்கமிட்டு வரும் கழகத்தின் கண்ணை மறைக்க நினைத்திருப்பது, கொல்லன் தெருவிலேயே ஊசி விற்கப் புறப்பட்ட கதையாகத்தான் இருக்கிறது!

தட்டிக் கேட்கும் திறமையற்று, வாய்மூடி மௌனிகளாகி, கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு வந்த ஆற்றலற்ற அமைச்சர் மற்ருெரு கருத்தை வெளியிடுத் தங்கள் மானக்கேட்டை மறைக்க முயற்சித்து வருகிருர்!

"சென்னை அரசாங்கம் ரூ நடைபெற்று விட்டிருப்பதை அமைச்சர் அறியாத அப்பாவியாகவே இருந்திருக்கிருர் என்பதுதான்.

திட்டக்கமிஷனேடு விவாதித்துவிட்டு கல்கத்தாவுக்குத் திரும்பிய வங்கத்தின் முதலமைச்சர் டாக்டர். பி. சி. ராய் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசியபோது, "நாம் 341 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு, அவர்கள் 160 கோடித்தான் தரமுடியும் என்பது பொறுத்துக்கொள்ள இயலாதது. எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது; இந்த நாட்டு மக்களுடைய தேவை இன்னதென்று நாங்கள் கூறும்போது எங்கோ இருக்கிற திட்டக் கமிஷன் இதில் தலையிட்டு. நீ இதை இதைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்பதில் என்ன நியாயமிருக்கிறது? தேவையான திட்டங்கள் எது; எது என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நாங்களே தவிர, திட்டக்குழு அல்ல! எனவே, அதைநாங்கள் தீர்மானித்திருக்கிறேம்; தீர்மானித்ததை நிறைவேற்றியே தீர்வோம்!" என்று போர்க்குரல் கொடுத்திருக்கிருர்.

சென்னை மாநில அமைச்சர்களைப்போல் அஞ்சி அஞ்

பட்டை நாமம் பெற்றவர் பிதற்றுகிருர்;

இரண்டாவது திட்டத்தில் 4,800 கோடிரூபாய்க்குத் திட்டமிட்டு, 6,750 கோடி ரூபாய்க்கு முதலீட்டை உயர்த்தியது. 6750 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்யப்பட்டபோது தென்னகத்தின் பங்கு—தமிழகத்தின்பங்கு ஏறத்தாழ 562 கோடி ரூபாயாக இருந்தபோது, இளகிய மனத்தின் காரணமாகவோ. அதிகமாகக் கேட்டால், அமைச்சர் பதவிக்கு ஆபத்து வந்து விடக்கூடும் என்ற எண்ணத்தாலோ, 390 கோடிரூபாய் மட்டுமே தமிழக அமைச்சர்கள் பெற முயன்றனர்!

அஞ்சி அஞ்சி, கெஞ்சிய நிலையிலே மிகமிகக் குறைந்த தொகையை அதாவது 390 கோடி ரூபாய்களை! மட்டுமே கேட்டஅமைச்சர்களுக்குத்தமிழகத்தின் பங்காக 152 கோடி ரூபாய்களை மட்டுமே தில்லி வழங்க ஒப்புக்கொண்டது!

நியாயமான தொகை 562 கோடி ரூபாயாக இருந்தும், வழங்கபபட்ட தொகை 152 கோடிரூபாய்தான்! எனினும், கனடா போன்ற நாடுகளின் உதவியாலும், தன் கையே தனக்கு உதவி என்ற முறையில் நாமாகவும் தேடிக் கொண்ட தொகையெல்லாம் சேர்த்து 188 கோடிரூபாய்தான் கிட்டியது.

களை மறுத்து, மெய்யானது எது என்பதை எடுத்துக் காட்ட முன் வரவில்லை! ஏனென்ருல், கழகத்தால் காட்டப்பட்ட புள்ளிவிவரங்கள் அப்பழுக்கில்லாத, உண்மைக்கு மாறுபடாதது என்பதுதான்!

முதலிரண்டு திட்டங்களிலும் தீட்டிய திட்டத்தின்படி- கேட்ட தொகையை முழுவதும் பெறமுடியாத தமிழக அமைச்சர்கள் மூன்ருவது திட்டத்திலாவது தென்னகத்தின் நியாயமான பங்கை—உரிய தொகையை—முதலிரண்டு திட்டங்களிலும் புறக்கணிக்கப்பட்ட தொகையையும் சேர்த்துக் கேட்க முற்பட்டனரா, என்ருல், இல்லை! நியாயமான தொகையைக் கூட கேட்கத் திறனியற்றுப் போய் விட்டார்கள்.

மூன்ருவது திட்டத்தில் தென்னகத்தின் பங்கு என்ன? எவ்வளவுகேட்பது? என்பது பற்றி விவாதிக்க 1959-ம் ஆண்டு திசம்பர் திங்களில் கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு ஆயிரம்கோடி கம்யூனிசுடுத் தோழர் திரு கல்யாணசுந்தரம் 500 கோடியும் கேட்டார்கள். ஆனல், அமைச்சரோ 250 கோடிரூபாய்க்கு மட்டுமே திட்டமிடமுடியுமென்று வாதிட்டதோடு, அறி

397 கோடியையும் குறைக்கக் கூடாது என்று வற்புறுத்தியிருந்தால், எல்லா மாநிலங்களும் அப்படியே கேட்கும். அதற்குப் போதிய அளவு மத்திய அரசிடம் பணமில்லை. இருக்கிற அப்பத்தைப் பங்கிட்டுக் கொள்வதுதான் பிரச்சினை."

—இதுதான் நிதியமைச்சரின் பச்சைப் புளுகுடன் கூடிய சமாதானம்!

வற்புறுத்திக் கேட்டிருந்தால், கிடைத்திருக்கும்; ஆனலும் அதட்டிக் கேட்கவில்லை என்று கூறிவிட்டு, மற்றைய மாநிலங்களும்இப்படியே கேட்டால் மத்தியஅரசு என்ன செய்யும்? என்று இளகிய மனதுடன் கேடகவில்லை என்று காரணம் காட்டித், தங்கள் கோழைத்தனத்தை மறைக்க முயல்கின்ருர்.

ஆடு நனைகிறதே என்று ஓநாய் கவலைப்படுவதைப் போல், தாங்கள் மத்திய அரசுக்குக் கவலைப்பட்டு, 'அழுத பிள்ளைதான் பால்குடிக்கும்' என்பதையும் மறந்து விட்டுத், தில்லித் தேவதைகளின் திருவடி வணங்கி இருக்கின்றனர்.

இதில் இன்னொரு வேடிக்கை என்ன வென்ருல் நிதியமைச்சர் எந்தப் பிரச்சனையைக் காரணம் காட்டி இருக்கிருரோ, அந்தப் பிரச்சினை சிச் சாகாமல், இப்படிக் கேட்டால், மத்திய அரசு என்ன செய்யும் என்று எண்ணுமல், "திட்டக் கமிஷனே! எங்களைத் தட்டிக்கேட்க நீயார்? உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது, தட்டிக் கேட்க" என்றுதான் முழக்கமிட்டிருக்கிருர்.

வங்கத்தின் முதலமைச்சர் மட்டுமல்ல, மத்திய அமைச்சர் ஜி. எல். நந்தாவுடன் பேச்சுவார்த்தை நடத்திய மராட்டிய மாநில அமைச்சர் W. P. சாவன் குரலைக்காணுங்கள்.

"நாங்கள் சமர்ப்பித்த திட்டத் தொகையில் ஒருபகுதியை வெட்டி இருக்கிறது திட்டக்கமிஷன். வெட்டப்பட்ட இந்தத் திட்டத்தொகையை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டேன்! திட்டக் கமிஷனின் முடிவுகளை நான் ஒத்துக்கொள்ள முடியாது! மராட்டி மாநிலத் திட்டத்தொகையை வெட்டுவது மிகமோசமான செயலாகும்."

—இதுதான் சாவன் அவர்களின்குரல்! வெட்டப்பட்ட இந்தத்திட்டத் தொகையை நாங்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது; வெட்டுவது மிக மோசமான செயலாகும் என்றுதான் கூறி இருக்கிருரேதவிர, தமிழக அமைச்சர்களைப்போல்

(10-ம் பக்கம் பார்க்க)

புள்ளிவிவரத்திலே புரட்டு செய்கிருர்!

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 2] ★ 16–12–60 ★ [இதழ் 16

யார் நீங்கள் ?

இப்படிக் கேட்டது யார், யாரைப் பார்த்து என்றெண்ணுவீர்கள். மக்கள் தலைவர் மாகாணத் தலைவர் திரு. காமராசர்தான். சென்னை மாநகராட்சி மன்ற வெள்ள நிவாரணக் குழுவைப் பார்த்துக்கேட்டார். மேற்படி வெள்ள நிவாரண நிதிக் குழுவில் யார் யார் இடம் பெற்றுள்ளார்கள் என்றெண்ணுகிறீர்கள்?

குழுவின் தலைவர் இருபது லட்சம் மக்களின் ஏகோபித்தத் தலைவர். நகரத் தந்தை. நகரத்தின் முதல் மனிதர் திரு. எம். எஸ். அப்துல்காதர். உறுப்பினர்கள் சென்னை ஷெரீப் திரு. லோகநாதன் அவர்கள். டில்லி பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தலைவருமான எஸ். சி. சி. அந்தோணி அவர்கள். தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் சென்னை சட்டசபை உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள். இவர்களைத்தான் மிக அலட்சியமாகக் கேட்டிருக்கிறார், நீங்கள் யார்? என்று. சுமார் இருபது லட்சம் மக்களுக்கு அடையாளந் தெரிந்த மேயர் தனக்குத் தெரியவில்லை என்று இவர் சொல்வாரானால் இதை ஆணவம் என்பதா? அறியாமை என்பதா? என்பதை நண்பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதிலிருந்து நமக்கும் என்ன புரிகிறதென்றால், இவரும் இவருடைய சக மந்திரிகளும் அடிக்கடி டில்லிக்குப் போகும்போதெல்லாம், வடக்கே இருக்கின்ற தலைவர்கள் நீங்கள் யார் என்று கேட்கிறார்கள் போலிருக்கிறது- அந்த ஆத்திரத்தைத்தான் இங்கே கொட்டித் தீர்த்துக் கொள்கிறார் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

பெரிய உருவம்; சின்ன புத்தி!

உருவம் சாதாரணப் பெரியதல்ல, மிகப் பெரியது. ஆனால் புத்திதான் மிகமிகச் சின்னது. இல்லையானால் வெள்ள நிவாரண நிதிக்குத் தாராளமாக நன்கொடை கொடுக்க முன்வருபவர்களை எல்லாம் கொடுக்காதீர்கள். கொடுத்தாலும் பெருந்தொகை கொடுக்காதீர்கள் என்று சொன்ன முதலமைச்சரை வரலாற்றிலேயே நாம் இப்போதுதான் சந்திக்கிறோம்.

நிதி யாருக்கு ?

நிதி, நிதிக்குழுவிலே இருக்கின்றவர்களின் சொந்த பயனுக்காக அல்ல, அவர்கள் அதில் ஒரு புதிய காசையும் எடுத்துக் கொள்ள முடியாது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர்கள் கைக்குப் போய்ச் சேராத உதவி முதலமைச்சர் கையிலேயே வைத்துக் கொண்டிருக்கின்றார் என்றால், அதனால் அவதிப்படுகின்ற மக்கள், ஆத்திரப்படுகின்ற மக்கள் தங்கள் கொதிப்பை 1962ல் காட்டாமலிருக்கப் போவதில்லை.

எதனால் இப்படிச் செய்கிறார்?

சென்னை மாநகரம் காங்கிரஸ் கையிலே இருந்து போய்விட்டதென்றே சொல்லலாம். மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கழகத் தோழர்களே நகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நம் கட்சிக்கு (காங்கிரஸ்) வாக்களிக்காதவர்கள் செத்தாலென்ன, இருந்தாலென்ன என்ற எண்ணம் தவிர இதில் வேறு என்ன நாணயமும் நேர்மையுமிருக்கிறது? ஆனால் இதனுடைய முடிவுகளை மக்கள் வருங்காலத்தில் அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் காட்டாமலிருக்கப் போவதில்லை. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதைப்போல, இன்று இந்த ஈனத்தனமான செயலைத் துணிந்து செய்யும் சர்க்கார் தன் தலையில்தானே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்ளப் போகின்றதென்பது திண்ணம். அரியலூர் அழகேசரே! ஆண்டது போதாதா மக்கள் மாண்டது போதாதா என்று சுவரொட்டிகளை ஒட்டினோம், அழகேசர் மண்ணைக் கவ்வினார். அதேபோல் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டாமல் போகப்போகிறதா கழகம்.

நகரங்கள் நாசமாகட்டும்!

நகரங்களிலே விழிப்பு ஏற்பட்டுவிட்டது. இனி நம் கை வரிசை நகரங்களிலே செல்லாது என்பதினால்தான் சில கிராமங்களைப் பிடித்துக் கொண்டிருக்கின்றார் காமராசர். அந்த கிராமங்களிலேயும் நம்முடைய கிளைகள் வெகு வேகமாக வளர்ந்துக் கொண்டிருக்கின்றன. அநியாயங்களுக்கெல்லாம் தீர்ப்புகிடைக்கும்நாள் அந்த நாள்தான். அதுதான் 1962. அந்த ஆண்டை, வருக வருக என அழைப்போம்.

அன்புள்ள,

சி. பி. சிற்றரசு

முள்வாங்கி

பிச்சை போட்டுப் பேணுதல் வேண்டாம்! சோம்பேறிப் பரம்பரை கண்டது போதும்!!

பிச்சைக்காரர்கள் பரம்பரை கண்டது இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான்! பிச்சைகேட்க வெட்கப்படாத மக்கள் மலிந்துவிட்டனர். ஆண்டவன் முன்பு நின்று கன்னம் வீங்க அழுது அழுது அருட் பிச்சை கேட்ட பக்தி இயக்கம் தோன்றியதால் — பிச்சை கேட்க மனங் கூடாத ஒரு பரம்பரை தோன்றி நிலைத்து விட்டது. நம் தமிழ்க் குடும்பங்களில் பலர் —பிச்சை போடுதலை அன்றாடக் கடமைகளில் ஒன்றாகவே கொண்டுள்ளனர். தான் செய்யும் பாப காரியங்களுக்கெல்லாம் இப்படியொரு (அ)தர்மம் செய்து புண்ணியம் கட்டிக்கொண்டு விடலாம் என்ற சுய நலம்தான் இதற்குக் காரணம் எனலாம்.

பிறப்பாலே ஊனப்பட்டவர்களுக்கு உதவலாம். எதிர்பாராத விபத்துக்களுக்கு உள்ளாகி வாழமுடியாதவர்கட்கு உதவலாம். நோயால் பாதிக்கப்பட்டவர்கட்குக் கூட நம்மாலான தொண்டுகளைச் செய்யலாம். ஆனால், பரம்பரை பிச்சைக்காரன், திண்ணைத் தூங்கி, சோம்பேறி, ஆண்டிப் பண்டாரம், வேலை இல்லாதவன், பஞ்சத்துக்கு ஆண்டி இப்படிப்பட்டவர்கட்கு 'பிச்சை' என்ற முறையில் உணவிட்டு வளர்த்தால் அது சமுதாயத்தை நாமே கெடுப்பதாகத்தான் பொருள்படும். வேலை செய்து பிழைக்கக்கூடிய உடலும் உரமும் பெற்ற திடிதண்டப் பரதேசிகளை 'தருமம்' என்ற பெயரிலே பிச்சையிட்டு வளர்த்தல் முறைமையல்ல!

வயிற்றிலே பழைய துணிகளை அமுக்கிக் கட்டிக்கொண்டு சென்னை மவுண்ட்ரோடு ஓரங்களில் மாலை வேளைகளில் சம்பளம் வாங்கும் வார நாட்களில் பல பிச்சைக் காரப் பெண்கள் "அய்யா பிரசவ வேதனை —மருந்துக்குப் பணம்" என மாயப் பொய்மொழிகள் கூறுதலைக் காண்கிறோம். தோளிலும் இடுப்பிலும் குழந்தைகளை அள்ளிப் போட்டுக்கொண்டு தெருத்தெருவாக அலைகின்ற திருட்டுப் பெண்களையும் காண்கிறோம். அஞ்சாமல் சிறுகுழந்தைகள் ஆயிரமாயிரம் இரங்கற்பாக்கள் பாடுகின்றன. நெஞ்சழுத்தம் மிக்க பிச்சைச் சிறுவர்கள் நம் கையைப்பற்றி இழுத்துக் காசு கேட்கின்றனர்.

எவ்வளவு மானக் கேடான நிலையில் சமுதாயத்தில் பிச்சைக்காரர்கள் வளர்ந்துவிட்டனர். இவர்கள் தாமாகவா வளர்ந்தனர்? இல்லவே இல்லை! இவர்களை வளர்த்தது இந்தப் பொல்லாத சமுதாயம் தான், தானம், தருமம், புண்ணியம், மோட்சம் என்ற முறையில் இந்த மானங் கெட்ட சமுதாயத்தில் 'பிச்சைக்காரர்கள்' என்ற ஒரு பரம்பரையை வளர்த்துவிட்டது. மூட நம்பிக்கைகள் இருக்கின்ற வரையில்— பத்தாம் பசலிகள் வாழ்கின்ற வரையில் இந்தப் பிச்சைக்காரர் கும்பல் இருக்கத் தான் செய்யும்.

நாடு ஏழ்மைப் படவில்லை! தமிழன்தான் ஏமாற்றப்பட்டுவிட்டான்! இங்கு சௌகார்களையும், பனியாக்களையும் சொந்த வீடுகளில் பார்க்கிறோம். தமிழர்கள் பலரைக் தெரு ஓரங்களில் காண்கிறோம். வடநாட்டுப் பிச்சைக்காரன் ஒருவன் கூட இல்லை. எல்லாம் 'இமயத்தில் புலிபொறித்த' நம் இனப் பிச்சைக் காரர்கள்தாம்.

"தேடிச் சோறுநிதம் தின்று-பல
சின்னஞ்சிறு கதைகள்பேசி-நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி-கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின்மாயும்"

வேடிக்கை மனிதர்களைக் கண்டு இளிவரல் உணர்ச்சி கொள்கிறார்-பாரதி. இங்குதான்,

"இருக்கும் இடந்தேடி என்பசிக்கு
அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால்
உண்ணுவேன்', என்ற

ஆண்டவ அடியார்களும் (கோயில் பிச்சைக் காரர்களும்) தோன்றி வளர்ந்து களஞ்சியத்தைத் தின்று தீர்த்தார்கள்.

இந்தப் பிச்சைக்காரர் கட்கு நாட்டு உணர்ச்சியும் இல்லை. மொழிஉணர்ச்சியும் கிடையாது. வேறு எந்த சமுதாய உணர்ச்சியும்சிறிதும் கிடையாது! எல்லாம் வயிற்றுக்குடல் உணர்ச்சியும் வாய் சுவை உணர்ச்சியும் தான் உண்டு! இந்தப் பிச்சைக்காரர் கட்கு உணவிடலாமா? சோம்பேறிகளை இந்த நாட்டிலே வளர்த்து அப்படி ஒரு பரம்பரையைக் காணலாமா?



★ நான் என் பிள்ளைகளுடன் அமைதியை முத்தமிடப் போகிறேன்! தாயே! கடைசிநேரத்தில் ஒருவேண்டுகோள் இந்த நாட்டில் சதிகாரர்க்ளும்-சுயநலக்காரர்களும்-வஞ்சகர்களும், பஞ்சமும்-பசியும் வாழும்வரை இம்மாதிரி சரிந்த கிணறுகளையும் பெருக்கிக்கொண்டே இரு. என்னைப்பெற்றதிற்க்ாக என் நன்றி !

ஏஜண்டுத் தோழர்களுக்கு அறிவிப்பு !

இந்த ஆண்டு இனமுழக்கம் பொங்கல் மலர் மிகச் சிறந்த முறையில் வெளிவர இருக்கின்றதென்பதை நமது விளம்பர வாயிலாக அறிந்திருப்பீர்கள். விலை ரு. 4-00 என்பதையும் அறிவீர்கள்

இந்த விலையில் ஓர் சிறந்த கழக மலர் வெளிவருவதை வரவேற்றுப் பலரும் எழுதியிருப்பதால்— மலரை நமது கழக வரலாறு காட்டும் கண்ணுடியாகவும், நமதியக்கத் தோழர்களுக்கு ஓர் கழகக் கையகராதியாகவும்,—மற்றும் மூவண்ணப் படங்களும் இன்னும் பல்சுவைகளும் நிரம்பியதாகக் கொண்டுவரத் திட்டமிட்டு அதற்காக ஆக்க வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டு வருகிறது.

மலர் பொங்கலுக்கு இரண்டு நாள் முன்னதாகவே எங்கும் விற்பனைக்குக் கிடைக்கும். ஏஜண்டுத் தோழர்கள், ரூபாய் ஒன்று கழிவு நீக்கி தேவையான பிரதிகளுக்கு, பிரதி ஒன்றுக்கு ரு. 3-00 வீதம் முன் பணத் தொகையை 30—12—60 தேதிக்குள் அனுப்பி வைத்துவிடவேண்டும். அதற்குமேல்வரும் ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முன் பணமின்றிக் கண்டிப்பாய் மலர் அனுப்பி வைக்கப்படமாட்டாது. மலருக்குப் பணம் அனுப்பும் தோழர்கள் "இனமுழக்கம்' பட்டியல் தொகையும், மலர்த்தொகையும் சேர்த்து அனுப்பாமல், மலருக்கென்று தனியாக அனுப்பிவைக்க வேண்டும்.

டிசம்பர் முடிய 'இனமுழக்கம்' பட்டியல் பாக்கி உள்ள தோழர்களுக்கு மலர் அனுப்பிவைக்கப்படமாட்டாது. பின்வருந்திப் பயனில்லை. ஏஜண்டுத் தோழர்கள் மேற்கண்ட அறிவிப்பை நன்கு கவனித்து ஒத்துழைப்புத் தரவேண்டுகிறோம். -நிர்வாகி

சிறுகதை :

சரிந்த கிணறு

மணிமாறன்

உண்மையின் உறைவிடம்- உயர்ந்த கருத்துக்கள், உறுதியான கொள்கை, பேச்சிலே சீர்திருத்தம் — செயலிலே முன்னேற்றம். எதையும் ஏன் ?—எதற்காக ?—எப்படி ?—என்று நெற்றிப் புருவத்தை உயர்த்தும் சிந்தனை. எதற்கும் அஞ்சா நெஞ்சம் ! 'குற்றம் செய்தது நெற்றிக் கண்ணனுனாலும் குற்றம் குற்றமே !' என்றுரைத்த நக்கீரர் பரம்பரை — அவர்தான் மகிழன். மாண்புமிக்கமனைவி மரகதம். மனதை மகிழ்விக்கும் குழந்தைச் செல்வங்கள் தேவகி — சித்தார்த்தன்.

அடக்கமான வீட்டில் அமைதியான வாழ்க்கை. ஊரெல்லாம் பேசப்பட்டது. 'மகிழன்—மகிழன்' என்று அவரது பேச்சும் செயலும் ஊர் மக்களைக் கவர்ந்தது. பண்புள்ளவர்கள் பாராட்டினர். அவரது செல்வாக்கு ஊரிலே உதயசூரியன்போல் வளர ஆரம்பித்தது.

உதயசூரியன் ஒளிவிட ஆரம்பித்தால் இருள் மறையுமே ; கொள்ளையடிக்க முடியாதே என்று திருடன் பயப்படுவதில் ஆச்சரியமில்லை ! கோர உருவத்தோடு குடிசையருகில் சென்று குட்டி ஆட்டை விழுங்க முடியாதே என்று ஓநாய் கவலைப்படுவதில் வியப்பில்லை. அந்த வரிசையிலே நின்று பெருமூச்சு விடுபவர்தான் பெரியசாமி. பெயருக்கு ஏற்றுர் போல் பெரிய உருவம்தான். ஆயிரமாயிரம் செலவழித்து ஆண்டு பல கடந்து கண் விழித்து கருத்தைப்பொதித்து அறிவைச் சேர்க்கின்றவர்களுக்கு முறைப்படி கொடுக்கப்படுவது பட்டம். ஆனல் ஆட்சி செய்கின்றவர்கள், தன்னைச் சார்ந்த கட்சிக்காரர்களுக்கு ஒரு புதுப் பட்டம் வழங்கி இருக்கிறது. அது தான் 'தியாகி.'

தியாகி என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தவர்கள், நீண்ட கதர்ச்சட்டை — தலையிலே ஒரு கதர்க் குல்லா ! இதைத்தான் நாம்இப்பொழுது பார்க்கிறோம் ! அந்த நீண்ட சட்டைக்குள்ளேமறைந்திருப்பது—மறைக்கப்பட்டிருப்பது கள்ளமார்க்கெட், கயமைத்தனம், அண்டிக் கெடுத்தல். அந்தோ ! ஒவ்வொன்றும் முற்றுப்பெருத தொடரோவியமாக நீளும். எது எவ்வாறிருப்பின் கதர் மாட்டிஞல் பதராயிருப்பவரும் பெரிய மனிதராகிவிடுகிறுர்கள். மக்களை இவர்கள் மதிக்காவிட்டாலும் மக்கள் இவர்களை மதிக்க வேண்டும். 'ஆண்டவனே ! பெருமை நீண்டவனே !' என்று துதிக்கவேண்டும். இல்லையேல் துதிக்கச் செய்வார்கள் !

தியாகி பட்டம் பெற்ற பெரியசாமி மகிழன் வீட்டிற்குப் பக்கத்து வீட்டுக்காரராயிருந்தாலும் மகிழனின் முற்போக்குக் கருத்தும்முன்னேற்றக் கருத்தும் முன்னேற்றக் கொள்கையும்—அதனுல் அவருக்கு ஏற்படும் புகழுக்கும் அவர் மனம் இடம் தருமா என்ன! புயலாகக் குமுறியது அவர் உள்ளம். பெரியவனிருக்க சிறியவனிவனுக்குச் சிறப்பா ? இவர்களை வாழவிட்டால் — வளரவிட்டால் நம் போன்ருேர் வாழ முடியாது. வளரமுடியாது என்று கருதிய பெரியசாமி மகிழனையும் அவரது குடும்பத்தினரையும் அழிக்க முற்பட்டார். அவர்கள் நினைத்தால் இத்தருணம் எதையும் செய்யலாம். காரணம் ஆட்சி அவர்களது. அதிகாரம் அவர்கள் கையில்.

கைகள் இரண்டையும் பின்புறம் கட்டிக்கொண்டு கூண்டிற்குள் அடைபட்ட மிருகம் போல் அங்குமிங்கும் சென்று நடைபயின்ருர். அருகிலிருந்த சோபாவில் சாய்ந்தார். பின் எழுந்தார். தலைதரையை நோக்கியவண்ணம் மறுபடியும் நடைபயின்ருர். குனிந்த தலை உயர்ந்தது. அவரது பார்வையில் போன் பட்டது. அருகில் சென்ருர். போனை எடுத்தார். சப் இன்ஸ்பெக்டர் சதாசிவத்தை தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தார். தியாகி அல்லவா ! சதாசிவம் பதறியடித்துக்கொண்டு ஓடி வந்தார்.

"என்ன மிஸ்டர் சதாசிவம் ஒரு காரியம் உங்களால் ஆக வேண்டியதிருக்கிறது."

இன்ஸ்பெக்டர் ஆச்சரியப்பட்டார்.

"என்னுலா ! உங்களைப் போன்ற பெரியவர்களுக்கு என்னைப் போன்றவர்கள் என்ன செய்யமுடியும்?"

"அப்படிச் சொல்லாதீர்கள் சதாசிவம் ! மகிழனைத் தெரியுமல்லவா உங்களுக்கு ?"

"என்னங்க? இரண்டரை வருடங்களாக இந்த ஊரிலேயே சப் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வருகிறேன் இதுகூட தெரியாமலா இருப்பேன்."

" அவனை எப்படியாவது நீர் உள்ளே தள்ளிவிடவேண்டும்"

" காரணமில்லாமல் எப்படிங்கஅவரைக் கைதுசெய்ய முடியும்?"

" நீர் எப்படியாவது இந்தக் காரியத்தைச் செய் தீரென்ருல் உமக்குப் பிரமோஷன் வாங்கித் தருகிறேன்."

"இன்ஸ்பெக்டர் சிந்தித்தார்! பெரியசாமி அவர்காதில் ஏதோசொன்னுர். "அப்படியே செய்யுங்கள்" என்றுசொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டார் சதாசிவம்.

மகிழன் மேஜைக்கு எதிரில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். பக்கத்திலே ஒரு அலமாரிஇருந்தது. அதன் ஒரு கதவு சாத்தப்பட்டும், மறு கதவு திறந்தும் கிடந்தது. அதற்குள்ளே பல புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. 'குறள்', 'சிலப்பதிகாரம்', 'பாரதி கவிதைகள்' முதலியன வெளியில் தெரிந்தன. அச்சமயம் தியாகி பெரியசாமி அங்கே வந்தார். அவர் வருவதைப் பார்த்தார்.

"வணக்கம்! வாருங்கள்!"

"நமஸ்காரம்!"

"எதிர்பாராத வருகை!"

"என்றைக்காவது உங்களிடம் வரவேண்டியதுதானே !"

"ஏதாவது..."

"ஒன்றுமில்லை ! தங்களிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன் ! நீங்கள் பேசினுல்தான் கேட்டுக் கொண்டே இருக்கலாமே! ஆமா மகிழன் நீங்கள் எப்படிப் பேசுகிறீர்கள். நாங்களும் பேசிப் பேசிப் பார்க்கிருேம்! உங்களாட்டம் பேச முடியவில்லையே !"

அச்சமயம் மரகதம் வீட்டிற்குள்ளிருந்து மகிழனைக் கூப்பிடவே "இருங்கள் வருகிறேன்!" என்று பெரியசாமியிடம் சொல்லிவிட்டு மகிழன் உள்ளே சென்ருர். மகிழன் உள்ளே சென்றதும் பெரியசாமி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தன் மடியிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து அங்கிருந்த அலமாரி உள்ளுக்குள் வைத்துவிட்டு தன் இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு மேஜை மீதிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து பிரித்துப் பார்த்தார். அங்கே "அடுத்துக் கெடுக்கும் அபிராமி" என்ற தலைப்பு இருந்தது. அதைப்படித்தவர் இஞ்சி தின்ற குரங்கு போல் ஆனுர். அங்கே மகிழன் வரவே புத்தகத்தை மூடி வைத்துவிட்டு "வருகிறேன்மகிழன்!"என்று விடைபெற்ருர். என்ன வந்ததும் போகிறீர்களே என்று மகிழன் கேட்கவே "சொந்த வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். அப்பொழுது மகிழனின் மகள் தேவகி வந்து,

"அப்பா!இவர் யாராப்பா?"

"பக்கத்து வீட்டுக்காரர் ! உனக்குத் தெரியாது?"

"பாக்கவே பயமாயிருக்கு! அதான் அவர் வந்ததும் கதவுக்குப் பக்கத்தில் ஒளிந்து கொண்டேன் !...... அப்பா ! நேத்திக்கி எங்க பள்ளிக்கூடத்திலே மிட்டாய்க் கொடுத்தாங்க ! எதுக்கு டீச்சர் மிட்டாய்னு கேட்டேன் ! 'நேரு பிறந்த நாள்' என்னு டீச்சர் சொன்னுங்க... நேரு நேத்தக்கிதான் பிறந்தாராப்பா?"

"ஆமாம் மா !"

"அப்ப ரொம்ப சின்னப் பிள்ளையாஇருப்பாரு ஏம்பா?"

" இல்லேம்மா ! அவரு பெரிய ஆளு !"

"அப்பறம் இப்ப எதுக்கப்பா பிறந்த நாளுன்னு கொண்டாடுராங்க?"

"அவரின் ஞாபகார்த்தமா கொண்டாடுராங்கம்மா!"

"அப்போ தெனக்கிம் பொறந்த நாளு இருந்தா தெனக்கிம் மிட்டாய் கொடுப்பாங்களப்பா !"

மகிழன் சிரித்தார் ! தேவகியும் சேர்ந்து சிரித்தாள் !

அப்பொழுது சப் இன்ஸ்பெக்டர் சதாசிவம் அங்கே வந்தார்.

"வணக்கம் சப் இன்ஸ்பெக்டர் சார் !

"மன்னிக்கவும் ! புகார் ஒன்று வந்திருக்கிறது. அது சரியா என்று உங்கள் வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் !"

"என்ன புகார்?"

"அதைப் பிறகு சொல்லுகிறேன் ! முதலில்...!"

"தாராளமாக ! சோதனை செய்யுங்கள் !"

அவ்வளவுதான். சப் இன்ஸ்பெக்டரும், நான்கு கான்ஸ்டேபிள்களும் வீட்டிற்துள்ளே சென்று சோதனை செய்யச் சொன்னுர் சதாசிவம். இருக்கின்ற பெட்டிகளை திறக்கும்படி மகிழனிடம் சதாசிவம் சொன்னுர். மகிழன் பெட்டிகளைத் திறந்தார். அவற்றை எல்லாம் மேற்பார்வையாகப் பார்த்துவிட்டு வெளியேவந்து மகிழனின் மேஜையைப்பார்த்தார். டிராயரை இழுத்துப் பார்த்தார். பிறகு பக்கத்திலிருந்தஅலமாரியைச்சோதித்தார். அதிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்தார். அதைப் பிரித்தார். அதற்குள் ஒரு டப்பா இருந்தது. அதைத் திறந்தார். அதற்குள் பார்த்தார். சதாசிவத்தின் முகம் மலர்ந்தது.

" மிஸ்டர் மகிழன் ! உங்களைப் போன்றவர்களெல்லாம் இம்மாதிரி செய்வீர்களென்று எதிர்பார்க்கவே இல்லை !"

" சப் இன்ஸ்பெக்டர் சார் ! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே ! இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது !"

" ஐ ஆம் வெரி சாரி மிஸ்டர் மகிழன் !...மற்றவைகளை கோர்ட்டில்பேசிக்கொள்ளுங்கள் ! புறப்படுங்கள் இப்பொழுது !"

மகிழன் புறப்பட்டார்! அவருக்குப் பக்கத்தில் நான்கு கான்ஸ்டேபிள்களும் சென்றனர். மரகதம் சித்தார்த்தனைத் தூக்கிக்கொண்டு வீட்டிற் குள்ளிருந்து வெளியே வந்து கணவன் செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்ருள். தேவகி மரகதத்தின் கால்களைக் கட்டிப் பிடித்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

மாணவர்களைத் தாக்கி எழுதிய மட‘மணியார்!

இந்த நாட்டின் அறிவுச் செல்வங்களாக, பண்பாட்டின் தொகுப்பாக, தென்னசத்து விடுதலை வீரர்களாக, பகுத்தறிவுச் சிங்கங்களாக, விளங்கும் இன்றைய மாணவர்களை இழித்தும், பழித்தும், பேசி, எழுதி, மாணவ மணிகளைக் களங்கப்படுத்த ஒரு கூட்டமே கங்கணம் கட்டி கொண்டு திரிகின்றது. இத்தகைய ஈனத்தனமான காரியத்தில் ஈடுபட்டுள்ள மானமில்லா மடையர்களுக்கு தலைமை தாங்குபவர்தான் ‘தின மணி’ என்ற மடமணி இதழின் ஆசிரியர்.

ஏற்பட்டுள்ளது! மிகவும் கேவலமான தன்மையில் ‘முத்து’நிகர் மாணவர்களையும், அவர்களின் தெய்வமாம் பெற்றோர்களையும் நேரிடையாக ஏசி இருப்பது கண்டு “மாணவர் உலகு” மட்டுமல்ல, மற்றையோரும் வாளாவிருக்க முடியாது.

இந்த மடமணியின் ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளை படிக்கும்போது, நமது உள்ளம் நொந்து, கொதிக்கின்றது; துடிக்கின்றது; வேதனையால் நமது மனம் வெதும்புகின்றது! கழகத் தோழர்கட்கு தீபாவளிப் பரிசாகக்

5. தற்பொழுது மாணவர்கள் பெற்றோர்களை மதிப்பதில்லை.

6. ஆசிரியர்களை மதிப்பதில்லை.

7. இதனால் வாழ்க்கையில் குறிக்கோள் இல்லாது, நீரில்

ம. இராசலிங்கம், பி ஏ

மிதக்கும் தக்கைகள் ஆனார்கள்.

8. உணர்ச்சி யில்லாக் கட்டைகள்.

9. இழுத்த பக்கமெல்லாம் செல்லும் இயல்பினர்.

10. அறிவு நூல்களைப் படிக்காதவர்கள்.

11. ஆபாசப் புத்தகங்களிலேயே மோகம், கொள்கின்றனர்.

12. மாணவர்கள் திருடர்கள்.

13. கிரிமினல் குற்றம் புரிந்த கைதிகள்.

14. கலகக்காரர்கள்.

15. கொலைகாரர்கள்.

16. பலாத்கார வாதிகள்.

17. அட்ட காசம் புரிபவர்கள்.

18. அறியாமையிற் சிக்கிக் கிடப்பவர்கள்.

19. தான் தான் அறிவாளி என்று கூறும் ‘பகுத்தறிவுக் குஞ்சுகள்.’

வத்தைப் பாழ்படுத்தும் அளவுக்குத் தாக்கி எழுத மாணவர்கள் என்ன குற்றங்களைச் செய்தார்கள்? என்ன கொலை பாதகங்களைச் செய்தனர்?

ஒரு குற்றமும் செய்யாதவர்களை இவ்வளவு இழிவாக எழுதியது வேண்டுமென்றே திட்டமிட்டு செய்யப்பட்ட செயலாகத் தோன்றுகின்றது!

களங்கமில்லாத் தூய்மையானவர் உலகினைகறை படியச்செய்தது,ஏன்?என்றுநல்ல உள்ளம் படைத்தோரும் நடுநிலையாளர்களும் கேட்கின்றனர்!

அப்பன் முட்டாள்; என... ஆசிரியன் முட்டாள் நா... தான் பகுத்தறிவுக் குஞ்சு... என்று மாணவர்கள் கூறி... கொள்வதற்காக கேலி பே... கிறீரே! உமது நாவை... அறுக்க, கையை ஒடிக்க... அதோ காளையர் கூட்டம்... தயாராகிவிட்டது! மாணவ... களுக்கு மதபோதனை புரி... அரசுக்கு சிபாரிசு செய்யு... அடிவருடியே! முதலி... உமது அறியாமையைப்... போக்கிப் பின், மாணவ... உலகினைப்பற்றி சிந்தனை... செய்துபார்! அதுபோத... அவர்களின் முன்னேற்ற...

சீற்றத்துக்காளாக்காதே — சிரந்தாழ்த்திப்போகாதே!

மடமைக்கும் மடையர்களுக்கும் தலைமை தாங்கும் ‘மடமணியார்’ சிறிதும் சிந்தனை செய்யாமல் மாணவர்களின் குண நலன்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல் குருட்டுத்தனமாகத் தலையங்கம் தீட்டியுள்ளார். எந்தச் சிக்கலையும் நடு நிலைமையுடன் இருந்து வெறுப்பு விருப்புக் கொள்ளாது ஆராய்ந்து, துலாக்கோல்போல் அமைந்து சீர்தூக்கிப் பார்த்த பின்புதான் அதற்கு முடிவான தீர்ப்பினை வழங்க வேண்டும். இது அறிவுடையோர் செயல்.

‘கலைஞர்’,கொடுத்த‘முறுக்கு’ நமது கரத்தில் பரவுகின்றது. ஏனெனில் அறிவாலயங்களில் பல உயர்ந்த பட்டங்களைப் பெற்றவர்களும் “மாணவ அறிஞர்களும்” மாணவர்களாக விருப்பதை நாமறிவோம். அத்தகைய அறிவுச் செம்மல்களை யாரோ ஒருவர், இருவர் உலகின் எந்த மூலையிலோ சிறு தவறு செய்துவிட்டதாக வந்த வதந்திகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு “மடமணியார்” தென்னகத்து மாணவர்களைப்படுகேவலமான

விசாரணையின்றி, தீர்ப்பு வழங்கியிருக்கும் குருட்டு மணி, மற்ற கட்சிகளையும் சும்மாவிட்டு விடவில்லை.

“கம்யூனிசம், அதற்கு எதிர்ப்பு இயக்கம் அல்லது நன் நெறிகளை எதிர்த்துத்தான் தோன்றிப் போக்குக்கு ஊக்கம் தரும்சிலவகை அரசியல் அல்லது சில கருத்து சம்பந்தமான இயக்கங்கள் தான், மாணவர்களைக் கவருகின்றனவே தவிர, படிப்பில் அவர்கள் கவனம் செல்லவில்லை.” இது புழுகு மணி

தெரியும்! ஆராய்ச்சி செ... யாது, ஆற்றல் மிக்க இ... ஞர் படையை இழிவா... எழுதியதால், அதற்கா... அவர்கள் கொடுக்கவிருக்கு... பரிசினை நீர் ஏற்க வேண்டி... சூழ்நிலைதான் உருவாகு... எவ்வழியிலும் தப்பமுடியாது... தப்பவிடமாட்டார்க... தென்னவர்கள்! அதோ மாண... வர்களின் தூய உள்ளம் ... மலையாகிவிட்டது. எ... யின் வாயினின்றும் எழும்ப... புகைமண்டலம் விண்ணை... முட்டுகின்றது. அது நி...

புரோகிதப் பார்ப்பானின்-‘புளுகுமணி’

இதுதான் நாம் கற்றுள்ள குறள் நெறியுமாகும்.

“சமன் செய்து சீர்தூக்கும்
கோல்போல் அமைந்
தொருபால்
கோடாமை சான்றோர்க்கு
அணி”

இதுவே வள்ளுவர் தந்த குறளோவியம். தமிழ் மரபிலே வந்த நாம் சான்றோர்க்கு அணியாக அமைவதுஎதுஎன்பதனை அறிந்துள்ளோம். ஆனால் “மடத்தின்” நிழலில் வளர்ந்தவர்களுக்கு குறள் நெறி தெரியாது போலும். ஆகவே அவர்கட்கு, இக்குறளை அன்புக் காணிக்கையாகப் படைப்போம். ஏனெனில் மாணவர்கள்மீது தகாத முறையில், அடுக்காத தன்மையில் குற்றம் சாட்டும் மடமணியார் கூட்டம் தமிழகத்தில் பிறந்து, தமிழ் பேசி வளர்ந்து, தமிழைப் படித்து, அந்தத் தமிழையே கருவியாக வைத்து நாள் இதழ்களையும், வார இதழ்களையும் நடத்தி, பணம் சேர்க்கும் பாதகக் கூட்டம், தங்களுக்குத் தாய் மொழி “தமிழ்” என்று கூறவும் அஞ்சுகின்றனர்! கூசுகின்றனர்! வேற்று மொழிகளையே தாய் மொழி என்று துணிந்துகூறுகின்றனர். ஆகவேதான் குறள் நெறியை மறந்த மடமணியாருக்குநாம் அறிவு புகட்டவேண்டிய அவசியம்

போக்கில் தாக்கி எழுதியது மன்னிக்கமுடியாத மாபெரும் தவறாகும்.

மறைந்த மாவீரர், அருமை அண்ணன் அழகிரி அவர்கள் அன்று, இந்த ஏட்டிற்கு “புளுகு மணி” என்ற பட்டத்தைக் கொடுத்தார். இன்று மாணவர் படை, இந்த ஏட்டிற்கு “மட மணி” என்ற பட்டத்தையும் கொடுக்கின்றது.

இந்த ஏடு மாணவர் படை மீது தொடுத்திருக்கும் நஞ்சு

20. படிக்காத மண்டுகள்.

21. படிக்காமலே அரசியல், கட்சி, ஜாதி ஆகியவைகளின் பெயரால், சம்பந்தப்பட்டவர்களை மிரட்டி பாஸ் (Pass) செய்பவர்கள்.

இப்படி யெல்லாம் மனம் போன போக்கில்ஏசித்தீர்த்து தனது மதவெறியைத் தனித்துக்கொண்டுள்ளது மடமணியேடு. இவைகள் மட்டுமல்ல. இன்னும் எவ்வளவோ சுடு சொற்களை வீசியுள்ளது மாணவர்களின் மேல்! முழு

யின் அழுக்குப் படிந்த “ஓய்வுரை”

கம்யூனிசமும், தி.மு.கழகமும் மாணவர்களைக் கவருகின்றனவாம். அதற்காக குருட்டு மணி கண் கலங்குகின்றது. “எங்கு முன்னேற்றக்கருத்துகள் உள்ளனவோ அங்கு மாணவர்கள் படையும் பவனிவரும்” என்ற மறுமலர்ச்சிக்கால உண்மையை, எப்படி மதத்தின் காவலர்கள் அறிய முடியும்!

யம் உமக்கு வேதனையாகத் தான் இருக்கும்.

குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை இன்றுவெடிக்குமோ? நாளை வெடிக்குமோ? நாமறி... யோம். ஆனால் நிச்சய... வெடிக்கத்தான் போகிறது அதனால் ஏற்படும் வேதனை... களை நீவிர் தாங்கத்தான் வேண்டும். அந்த நேரத்தி... உமதுபுளுகுமணி ஏடுகள் தீ... கிரையாகும். உமது பாசன... பொட்டலாக மாறும். இ... கள் நடக்காமல் தடுப்பத, ஒரே வழி, மாணவர் ... மண்டியிட்டு, மன்னிப்பு கேட்பதேயாகும். வே... வழியில்லை.

அன்று கொடுத்தார் ‘புளுகுமணி’ இன்று கொடுக்கிறோம், ‘மடமணி’

தடவிய கணைகளை இதோ வரிசையாக வைக்கின்றோம்.

1. மாணவர் உலகினை இன்று ரகளை வியாதிபிடித்து வாட்டுகின்றது.

2. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை.

3. மாணவர்கள் எந்தவிஷயம் பற்றியும் யோசிப்பதில்லை.

4. யோசிப்பதற்கான விஷயஞானமும் (அறிவு) அனுபவ ஞானமும் கிடையாது.

விவரமும் அறிய 21-10-60 ஆம் தேதிய குருட்டு மணியின்’ தலையங்கத்தைப் படிப்பீர்களே யானால், குருட்டு மணியாரின் கொட்டம் அடங்க அவரது பாசறை தூள் தூளாக்கப் பட்டாலும், அதில் ஆச்சரியம் இருக்க முடியாது என்பதனை உணர்வீர்கள்! இத்தகாத தாக்குதலால் மாணவர்களின் அந்தஸ்து பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.. எழுத்திலும் எண்ணத்திலும் கூட அடங்காத அளவுக்கு, மாணவர்களின்கௌர

தி. மு. க. வின் மீது காய்ப்பும் காட்டமும் பொருமையும் இருந்தால், அதற்காக மாணவர்களின் மீது பாய்வது ஏன்? என்று மாணவர்கள் கேட்கின்றனர்?

பிற்போக்கு சக்தியின் உருவமாக உலவும் புளுகுமணியாரே! மாணவர்களின் மகத்தான மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் முன்னேற்ற எண்ணங்களையும் புரிந்துகொள்ள முடியாத உங்கள் மண்... களுக்கு, விரைவில் மாணவர் படை புத்திபுகட்டும். “எனது

சந்தாதாரர்களுக்கு!

இனமுழக்கம் பொங்கல் மலர் இந்த ஆண்டு மிகச் சிறந்த முறையில் வெளிவர இருப்பதை நமது விளம்பர வாயிலாக அறிவீர்கள். விலை. ரு 4-00 மலர் வேண்டுவோர் மலருக்கென தனியாகப் பணம் அனுப்பி வைக்க வேண்டும். மலரை சாதா அஞ்சலில் அனுப்பி வைத்தால சரிவர கிடைப்பதில்லை யாதலால் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கான செலவுத் தொகை 75 காசு சேர்த்து ரு 4-75 வீதம் தனிப் பிரதிக்கு அனுப்பி வைக்க வேண்டு மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மண்டியிட வேண்டும், மாணவ மணிகளிடம்!

மறவர் குலத்து மணிப்புரு

கே. ஜி. இராதாமணாளன்

தைக்கு முன்பு...!

தமிழ் மன்னர்கள் தங்கள் வீரத்தை, வடக்கே இமயம் வரைக்கும், தெற்கே இலங்கை வரைக்கும் பொறித்திருக்கிறார்கள். பனிமலைக்கும் ஈழமண்டலத்திற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில், தமிழ் வீரர்கள் ஆடிய வீர விளையாட்டுக்கள் பலப்பல, தங்க ஏடுகளாக வரலாற்றுச் சுவடியில் ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன.

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில், முதல் இராசராச சோழன் தஞ்சைத் தரணியிலிருந்து ஏவிய கணைகள், வெற்றி மலர்கள் பலவற்றைக் கொய்து வந்து, அவனது திருப்பாதங்களில் வைத்து வணங்கி யிருக்கின்றன.

அந்தச் சோழவேந்தனின் ஆசைமகள் குந்தவைப் பிராட்டி! வேங்கி நாட்டு ஆற்றல் மகன் விமலாதித்தன், சோழநாட்டு எழிலரசியின் காதலைக் கவர்ந்து, கரத்தைப் பிடித்தான்.

கீழைச்சாளுக்கிய மரபினனான விமலாதித்தனை அடுத்து, அவனது வழிவந்த காளையர் சிலர், சோழ அரண்மனையின் வாசமலர்களின் 'காதல் அரசர்'களாக விளங்கியிருக்கிறார்கள்! அத்தகைய மணத் தொடர்பினால், வேங்கி மன்னனுக்கும், கங்கை கொண்ட இராசேந்திர சோழனின் மகள் அம்மங்கை தேவியாருக்கும் பிறந்த மகனே, பிற்காலத்தில் குலோத்துங்க சோழன் என்ற பெயரில் தஞ்சையில் சக்கரவர்த்தியாக மகுடம் சூடினான்!

இவ்வாறு தமிழக வரலாற்றில் முக்கிய இடம் பெற்றிருக்கும் வேங்கி நாட்டில், முதலாம் இராசராச சோழன் காலத்தில் அமைக்கப்பட்ட போர்க்களங்களின் வெற்றி முழக்கமே, 'ம்றவர் குலத்து மணிப்புரு'!

கிருஷ்ணா கோதாவரி ஆகிய இரு பேராறுகளுக்கு இடையே அமைந்திருந்த நாடாகும், வேங்கி நாடு. அந்த வளநாட்டின் அரசு கட்டிலில் அமர்ந்திருந்த தானார்ணன் என்பவனை, கி. பி. 973-ல் தெலுங்கச்சோழனான ஜடா சோட வீமன் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான்.

தானார்ணனின் மக்களாகிய சக்திவர்மனும், விமலாதித்தனும் வட கலிங்க நாட்டிற்கு ஓடி ஒளிந்தனர். அவர்களை ஆதரித்த காரணத்தால் கலிங்க மன்னன் காமார்ணவனும், அவன் தம்பி விநாயாதித்தனும், ஜடா சோடவீமனின் சீற்றத்திற்கு ஆளாகி, சிரத்தை மட்டுமல்ல சிம்மாசனத்தையும் இழந்தார்கள்!

கலிங்கத்து 'மணிப்புரு'—இளவரசி வல்லபி—சுகமிழந்து சுற்றமிழந்து, கீழைச் சாளுக்கிய அரசகுமாரர்களோடு காடு மேடுகளில் சுற்றியலைகிறாள்! துன்பம் சூழ்ந்த அந்த நாட்களில், ஒரு நாள்......

1

மான் இழுத்தமலர்

வேங்கி நாட்டின் வடக்கே, கோதாவரி ஆற்றை அடுத்த இருள் சூழ்ந்த பெருங்காடு! வான்முட்ட உயர்ந்து அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் அடியில், ஒரு பாசறை! அதைச் சுற்றிலும் வாள்வேல் ஏந்திய வீரர்கள்!

அந்தப் பாசறையைவிட்டு, அங்கையற் கண்ணாள்—பொன்னவிர் மேனியாள்—ஒருத்தி வெளியே வந்தாள்!

அவளைக் கண்டதும், போர் வீரர்கள் எழுந்தனர். மரியாதையால் தலைசாய்ந்து நின்றனர்.

காற்சிலம்புகள் கலீர் கலீரெனச் சிரிக்க, அந்தத் தாமரை முகத்தாள் அங்கே இருந்த வேங்கை மரத்தின் அருகே வந்தாள். காட்டுக் கொடியால் அம்மரத்தில் கட்டப்பட்டிருந்த புள்ளிமான் ஒன்று, கச்சை கட்டிய அந்த மான்விழியாளைக் கண்டு துள்ளிக் குதித்தது.

மானை அவிழ்த்துக் கையில் பிடித்துக் கொண்டு, அவள் அங்கிருந்து செல்ல அடியெடுத்து வைத்தபோது, "வல்லபி!" என்று தன்னை அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

நெடுந்தோளும், அகன்ற மார்பும், இரத்தத்தில் குளித்தெழுந்த பெரிய கண்களும் கொண்ட சக்திவர்மன், குதிரையை விட்டுக்கீழே இறங்கி, அந்த வண்ண மயிலாள் அருகே வந்து நின்றான்.

"வல்லபி! எங்கே புறப்பட்டு விட்டாய்?" என்று அவன் கேட்டான், குனிந்து மானைத் தட்டிக் கொடுத்தப்படி!

"ஏன்?"

மானைத் தன் அருகே இழுத்தபடி, அவள் பதில் கேள்வி தொடுத்தாள்.

"போர்க்களத்துக் காட்சிகளைக் கண்டு களிப்படைந்திருக்கும் கலிங்கத்து இளவரசியார், இயற்கை அழகின் சிரிப்பில் மயங்கி, அதிக தூரம் சென்றுவிடக்கூடாதே என்று சொல்ல வந்தேன்!"

முறுக்கிவிட்ட கனத்த மீசையை மேலே ஏற்றி, அவன் உதடுகளிலிருந்து சிரிப்புப் புறப்பட்டது.

"செல்ல வேண்டிய தூரம், எனக்குத் தெரியும்!"

சுருக்கமாக இவ்வாறு அவள் சொன்னது, சுறுக்கெனத் தைத்துவிட்டதைப் போல, அவன் நிமிர்ந்து நின்றான்.

"வல்லபி! எல்லாம் உனக்குத் தெரியும் என்று, நான் சும்மா இருந்துவிடக்கூடாதல்லவா? சிறு எறும்பும் உன்னை அண்டாதபடி பாதுகாத்து, கலிங்கத்து சிம்மாசனத்தில் உன்னை அமர்த்த வேண்டிய பொறுப்பு எனக்கிருக்கிறது! ஆகவே எந்த நேரத்திலும் முன் யோசனையோடே செயலாற்ற விரும்புகிறேன்! பகைவரின் ஆட்கள் இந்தக் காட்டிலும் நடமாடிக் கொண்டிருப்பார்கள்! எதற்கும் எச்சரிக்கையோடே நாம் இருக்கவேண்டும்!"

"என்னைக் காத்துக் கொள்ள எனக்குத்தெரியும்!"

"எல்லோருமே தெரியும் தெரியும் என்று சொல்லிக் கொண்டேதான், ஆபத்தில் போய்ச் சிக்கிக் கொள்வது! என் தங்கை சாமவதி கேட்டாளா, என் சொல்லை? வேண்டாம், வேங்கிக்கு நீ வராதே என்றேன்! கேட்டாளா! பிடிவாதம் செய்தாள்! எதிரிகளிடம் பிடிபட்டாள்!..."

"நமது வீரர்கள் அவளை மீட்டுவிட்டதாக..."

"ஆமாம், அந்தத் தகவலைச்சொல்லத்தான் உன்னை நிறுத்தினேன்!"

"சாமவதி மீட்கப்பட்டு விட்டாள் என்ற மகிழ்ச்சியினால்தான், சிறிது நேரம் உலவிவிட்டு வரலாமே என்று புறப்பட்டேன்!"

அவள் குரலில் ஏற்பட்ட மாற்றம், சக்தி வர்மனுக்கு ஆறுதல் தந்தது.

"மாலை நேரம், அதிக தூரம் போய்விடாதே!"

"இல்லை! தாமரைக்குளம் வரை சென்றுவிட்டு, திரும்பி விடுகிறேன்!"

"தாமரைக் குளத்துக்குத் தானே—சென்றுவிட்டு வா, இருட்டுவதற்குள் திரும்பி விடு, வல்லபி!"

"சரி!" என்று அவள் புறப்படத் திரும்பியபோது, "வல்லபி! மற்றொரு செய்தி அல்லவா?" என்றான், சக்தி வர்மன்.

"வேங்கி நாட்டு அரசனின் ஆட்கள், இந்த இடத்துக்கும் நம்மைத் துரத்திக் கொண்டு வரப்போகிறார்களா?" என்று புன்முறுவலோடு அவள் கேட்டாள்.

"நாமிட்ட தீயை அணைக்கவே, அவர்களுக்கு இன்னும் ஐந்தாறு நாட்கள் பிடிக்குமே! அவர்களாவது நம்மைத் துரத்திக் கொண்டு வருவதாவது!...நான் சொல்வது வேறு செய்தி! இராசராச சோழர் நமக்கு உதவியளிக்க இசைந்திருக்கிறார் என்று, விமலாதித்தன் தகவல் அனுப்பியிருக்கிறான்!"

"அவர் உதவ முன் வந்தால் நாம் என்ன வேண்டாமென்று சொல்லப் போகிறோம்!"

அலட்சியமாக வல்லபி கூறியதைக் கேட்டு, மலை போன்ற சக்திவர்மன் ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டான்!

"நான் எவ்வளவு பெரிய செய்தியைச் சொல்கிறேன்—கடுகளவுகூட நீ வியப்போ களிப்போ அடையவில்லையே?"

"களிப்போ வியப்போ கொள்ள, இதிலென்ன இருக்கிறது?"

அவனது புருவங்கள் மேலே ஏறின. நெற்றி சுருங்கியது. அவளை உற்றுப் பார்த்தான். "நாம் என்ன சொன்னோம் என்பதை, இவள்சரியாக மனதில் வாங்கிக் கொள்ளவில்லை போலிருக்கிறது! இல்லாவிட்டால், இப்படிப் பேசுவாளா!" என்று நினைத்தான்.

"வல்லபி! நான் சொன்னது, உனக்குச் சரியாகக் கேட்டதா? புரிந்ததா?"

"நானொன்றும் செவிடு அல்லவே! வார்த்தைக்கு வார்த்தைப் பொருள் புரியக் கேட்டேன்! நீங்கள் வேங்கி நாட்டு அரசுகட்டிலைமீண்டும் அடைய, இராசராச சோழர் உதவியளிக்கப் போகிறார் என்று தானே சொன்னீர்!"

"ஆமாம் வல்லபி, ஆமாம்!" என்று தோள்கள் பூரிக்க, சக்திவர்மன் தலையை ஆட்டினான்.

"ஆச்சரியமோ ஆனந்தமோ அடையும்படியாக இதிலொன்றும் இல்லையே!" என்று அவள் கூறியதைக் கேட்டதும், அவனது பூரிப்பும் பெருமையும் சுண்டி விட்டன! கோபமும் வெறுப்பும் பீறிட்டுச் சிதறின!

"இது போன்ற செய்திகளில் குறும்புப் பேச்சு கூடாது வல்லபி, கூடாது!"

"ஏன் இப்படி உங்களுக்குக் கோபம் வருகிறது! நீங்கள் கொள்ளும் மகிழ்ச்சியை, நான் கொள்ளவில்லை என்று தானே? நீங்கள் அடையும் பெருமையை, நான் அடையவில்லை என்று தானே?"

"ஆமாம்"' என்று அவன் தன் பார்வையை அவள் முகத்திலிருந்து மீட்டு வேறு திசையில் திருப்பினான்.

"சோழப் பேரரசின் ஆற்றல் மிகு மன்னர் இராசராசன்! தஞ்சை மாநகரிலே அவர் எழுப்பிய பெரிய கோயிலிலும், அவ்வேந்தர் பிரானின் பெருமை உயர்ந்தது! படை பலம் மிக்கவர்! பராக்கிரமத்தில் ஈடு இணையற்றவர்! அவரைப் பணிந்தவர் வாழ்வர்! பகைத்தவர் சாய்வர்! இவ்வளவும் தெரிந்துதான் சொல்கிறேன்—சோழ அரசர் உதவு வதாகச் சொல்வதில், வியப்பொன்றுமில்லை என்று! இராச ராச சோழரின் குலக்கொடி குந்தவைப் பிராட்டியார்! அந்தச் செல்வ மகளின் கணவராவார், தங்கள் தம்பி விமலாதித்தன்! மகளுக்கு மாலையிட்ட விமலாதித்தனும் அவர் அண்ணன் சக்தி வர்மனும் சொந்த நாடற்றவர்கள்... பேரும் பெருமையும் பேசத் தகுதியற்ற வர்கள்—என்றால், அந்த அவமானம் யாரைச் சாரும்! சோழப்பெருமானின் கடைக்கண் பார்வை வேங்கிப்பக்கம் திரும்பியிருக்கிறது என்றால்—அது உங்களுக்கு உதவ அல்ல — அவர் பெயருக்குள்ள அவமானத்தைத் துடைத்துக்கொள்ளவே என்று நான் நினைக்கிறேன்! அந்த நினைப்பு, என் மகிழ்ச்சிக்குத் தடையாக நிற்கிறது! பெருமைக்குக் குறுக்கே தலை தூக்குகிறது!" என்று பேச்சை நிறுத்திக்கொண்டு, அவன் கண்ணைப் பார்க்க தன் விழிகளைத் திருப்பினாள்.

அவன் கண்கள், தரையில் கிடந்தன!

அவள் கொட்டிய வார்த்தைகள், கூர் அம்புகளாய் அவன் உள்ளத்தைக் குத்தின. "இன்னொருவன் உதவியைக் கொண்டுவெற்றியடைவேன் என்று கூறுகிறாயே, நீயும் ஒரு வீரமகனா?" என்று அவள் இடித்துக் கூறுவதாக அவனுக்குப் பட்டது.

சாய்ந்திருந்த பார்வையை நேராக்கி, "என் வீரத்தில்—தோள் வலிமையில்—எனக்கு நம்பிக்கை இருக்கிறது, வல்லபி!" என்றான், தரையில் பாதத்தை அழுத்தி நின்றபடி!

"இருக்க வேண்டும்!" என்று சொல்லிவிட்டு, அவள் சிரித்தாள்!

அந்தச் சிரிப்பு, சாட்டையால் அடிப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது!

"தங்கள் தந்தையாகிய தானார்ணவன் அவர்களைக் கொன்று, அவர் அமர்ந்திருந்த வேங்கிநாட்டின் அரியாசனத்தை ஜடா சோட வீமன் கவர்ந்துகொண்டான்! வட கலிங்க நாட்டிற்கு உயிர்தப்பியோடிவந்த உங்களையும், உங்கள் தம்பியையும், என் தந்தை ஆதரித்தார்! என் பகைவர்களுக்கா கலிங்க மன்னன் காமார்ணன் தஞ்சமளிப்பது என்று ஜடா சோட வீமன் சீறி யெழுந்தான்! கலிங்கம் வீழ்ந்தது! என் தந்தையின் தலையை வெட்டியெறிந்தான்!......"

"அதெல்லாம் இப்பொழுது எதற்கு வல்லபி! நீ தாமரைக் குளத்துக்குப் போக வேண்டு மென்றாயே, போய் விட்டு வா!"

"வெண் கொற்றக் குடை சாய, மணிமுடி மண்ணில் சாய, இரத்தக் குளத்தில் என் தந்தை பிணமாகச் சாய்ந்த அந்தக் காட்சியை, நான் நினைவுபடுத்தக் கூடாதே என்று, என்னைத் தாமரைக் குளத்துக்குச் செல்லும்படி சொல்லுகிறீர்களா?

வல்லபியின் கண்களில் நீர் முத்துக்கள் தோன்றியதைக் கண்டு, சக்திவர்மனின் மனம் திடுக்கிட்டது.

அன்று காலைதான், வேங்கியின் தலைநகரிலே மனிதத் தலைகளின் மீது அவன் நடந்துவிட்டு வந்திருக்கிறான்!

குருதி ஆற்றிலே நீந்தி விட்டு வந்திருக்கிறான்! அவனது வீரர்களின் தீப்பந்தங்களின் விளையாட்டால், அந்த நகரமே நெருப்புக் காடாக மாறி,மக்கள்கதறியழுத கூக்குரலைக் கேட்டுவிட்டு வந்திருக்கிறான்! அப்பொழுதெல்லாம் சிறிதும் கலங்காத அவன் நெஞ்சம், வல்லபியின் கண்ணீர்த் துளிகளைக் கண்டதும் இப்பொழுது கலங்கிவிட்டது!

கலிங்க மன்னன் பிணமான அந்தக் காட்சி, அவன் மனக் கண்முன் ஓடிவந்து நின்றது.

கவலை நிறைந்த குரலில் "வல்லபி!" என்று அழைத்தவாறு, அவளை நெருங்கினான். கண்ணீரைத் துடைக்க அவன் வருகிறான் என்பதைத் தெரிந்துகொண்ட அவள், தானே அதைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

"வல்லபி! என் இரத்தத்தின் சிகப்பு மாறு முன்பு, உன் தந்தையின் பிணத்தின் மீது நான் செய்த சத்தியம் சாகாது! அன்று நான் செய்த வஞ்சினம், என் உள்ளத்தில் இருக்கிறது! அந்த வாளும், இதோ என் உறையில் இருக்கிறது!" என்று சக்தி வர்மன் ஆவேசத்தோடு கூறிவிட்டு, பாசறை நோக்கி நடந்தான்.

மான் இழுத்த திசையில், அந்த மலருடலாள் சென்றாள்!

படிகளில் இறங்குவதை அறிந்த பிறகுதான், தான் தாமரைக் குளத்துக்கு வந்து விட்டது அவளுக்குத் தெரிந்தது.

குளத்தில் மலர்ந்திருந்த தாமரையின் அழகைப்பார்த்தபடி, அவள் படியிலேயே சிறிது நேரம் நின்றாள். கையிலிருந்த கொடியை அவள் விட்டுவிடவே, மான் படிகளில் துள்ளித் துள்ளி விளையாடியது.

வல்லபி மெல்ல அடிமேல் அடிவைத்து, தண்ணீரை அடைந்தாள். முகத்தைக் கழுவிக்கொண்டு — தாமரை மொட்டுக்கள் சில பறித்துக் கொண்டு — கரைக்கு வந்தாள்.

சிறிது தூரத்தில் யாரோ பேசும் குரல் கேட்டு, அத்திசை நோக்கி நடந்தாள். பனங்கன்றின் ஓலைகளின் மறைவில் நின்று எட்டிப் பார்த்த அவள், ஆச்சரியத்தால் அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள்!

சிறிது தூரத்தில் வேங்கி நாட்டு வீரர் இருவர் உட்கார்ந்திருந்தனர்! ஒருவன் இரத்த காயங்களோடு, மற்றொருவனின் மீது சாய்ந்திருந்தான்!

அப்படி இரத்த காயங்களோடு இருந்தவன் ஜடா சோட வீமனின் குதிரைப் படைத் தலைவன் நரேந்திரன் என்பதை அறிந்ததும்,அவள் பெண் உள்ளம் அதிர்ச்சியடைந்தது.

"இன்று காலைதானே நமது வீரர்களை இந்த நரேந்திரன் துரத்தித் துரத்தி அடித்து விரட்டினார்! வெட்டிக் குவித்தார்! அவரா இப்படி விழுந்து கிடக்கிறார்!" என்று அவள் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

"பகைவரின் ஆட்கள் இந்தக் காட்டிலும் நடமாடிக் கொண்டிருப்பார்கள்!" என்று சிறிது நேரத்திற்கு முன்பு சக்திவர்மன் சொன்னது. அவள் காதில் வந்து ஒலித்தது.

"நரேந்திரன் இப்படி விழுந்திருப்பதும், அவன் உடலில் இரத்தம் கொட்டும் காயங்கள் என்பதும், உண்மையாக இருக்கா! இது ஏதோ நடிப்பு!" என்று நினைத்ததும், அவள் நெஞ்சில் திடீரென்று நெருப்புப் பற்றி யெழுந்தது!

(வளரும்)

பூரட்டாதி புரடக்ஷன் ஸாரின் முதல்தயாரிப்பு

பூரட்டாதி புரடக்ஷன்ஸாரின் தங்கள் முதல் தயாரிப்புக்கான வேலைகளைத் துவங்கி யுள்ளனர். ஜி. வரலட்சுமி, சுந்தர், சௌரி, ராஜகோபால் ஆகியோர் இதில் நடிக்கின்றனர்.

சென்ற வாரம் மருதகாசி இயற்றிய இரண்டு பாடல்களை லீலா, கோமளா ஆகியோர் பாடி பதிவு செய்யப்பட்டன.

டைரக்ஷன் -கிருஷ்ணமூர்த்தி.

வசனம்:-இளந்திருமாறன்.

தயாரிப்பு :— கோபாலகிருஷ்ணன், பாபு.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு, "அம்மா ! அப்பா எங்கேம்மா போருங்க!" என்று கேட்டாள். அதற்கு மரகதத்திடமிருந்து பதில் வரவில்லை. தேவகி தாயின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர்த் துளி முத்து முத்தாகச் சொரிந்து கொண்டிருந்தது. தாய் அழுவதைப் பார்த்த தேவகியும் சித்தார்த்தனும் 'கோ' என்று அழ ஆரம்பித்துவிட்டார்கள்

சூழ்ச்சியையும் சாட்சியையும் சாதகமாகக் கொண்டு சட்டத்தின் பெயரால் மகிழனுக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனைகொடுக்கப்பட்டது. விபரம் தெரிந்தவர்சள் வியப்படைந்தார்கள் ! விபரமறியாத விபூதிப் பட்டைகள் 'இவன் அந்த ரகத்தைச் தைச் சேர்ந்தவன் தான். இவனுக்கு அந்தத் தண்டனை போதாது. பகவான் அவனுக்கு இன்னும் தண்டனையைக் கொடுப்பார் !' என்று 'பகவான்-பகவான்' என்றுபேசித் திரிந்தவர்கள் தன்னையே பகவானுகப் பாவித்து சபிக்க ஆரம்பித்தார்கள்.

சிறை வாசத்தைக் கண்டு கலங்காத மகிழன், தன்னை சிறைக்குள் தள்ளப்பட்டவழி அதை நினைத்து கலங்கத்தான் செய்தார். அவர் உள்ளம் களங்கமற்றதென்று அவர் உறுதி கொண்டிருந்தாலும், மக்கள் உண்மை என்று நம்பிவிட்டால் ஐயோ! நினைத்துப் பார்க்கையிலேயே நெஞ்சுவெடித்துவிடும்போலிருந்தது. அவருக்கு சிறையிலேயே உயிரைவிட்டு விடலாமா என்று கூட நினைத்தார். அவ்விதம்நடந்துவிட்டால், சந்தேகப்பட்டவர்கள் சரி என்று நம்பிவிடுவார், குறை கூறியவர்கள் பறையடித்துக் கொண்டே இருப்பர். தன்னை மதித்தவர்களும்— தன்னைப் போலுள்ளவர்களும் தலை குனிய நேரிடும்! என்று நினைத்து பொய்யை மெய்யாக்கும்வரை உயிரோடு வாழத்தான் வேண்டுமென்று முடிவெடுத்தார்.

மரகதம் தன் பிள்ளைகளுடன் மனதைத்திடப்படுத்திக் கொண்டு இருந்தபணத்தைக் கொண்டு மூன்று திங்களைக் கடத்தி விட்டாள். அடுத்து, இருக்கின்ற பொருள்களையும் விற்றுவிட்டாள். ஆதரிக்க யாருமற்ற அபலை அதற்கு மேல் என்ன செய்வாள் ! பசியெடுத்த சேய்கள் தாயைப் பார்க்கும். தாய் அடுப்பைப் பார்ப்பாள். அடுப்பு யாரைப் பார்க்கும் ? இந்த நிலையிலே தன் வீட்டிற்கு அடிக்கடி வரும் ஒரு கிழவியின் துணை கொண்டு ஒரு உத்தியோகஸ்தரின் வீட்டில் பாத்திரம் துலக்கும்வேலையில் அமர்ந்து பாதி வயிற்றை நிரப்பிவந்தார்கள். அவர்களின் நல்ல காலம் அந்த உத்தியோகஸ்தர் வேறு ஊருக்கு மாற்றப்பட்டு குடும்பத்துடன் சென்றுவிட்டார். மரகதத்தின் உத்தியோகமும் முடிந்தது. மறுபடியும் வறுமை அவர்களை வட்டமிட பசி அவர்களைப் பிய்த்து எடுத்தது.

பசிக்கும்பொழுது பசி என்று சொல்லத் தெரியாமல் அழுத காலத்தில் அதன் பசியை அறிந்துபால் கொடுத்ததாய், இப்பொழுது 'பசி-பசி' என்று கூறிஅழும் பொழுது அந்தத் தாயால் பதில் சொல்லமுடியவில்லை. பதிலாக குழந்தைகளுடன் சேர்ந்து தானும் அழத்தான் முடிந்தது. நம் வீட்டில் மட்டும் தான் இந்நிலையா என்ருல் நாட்டிலும் அதே நிலை தான் தலை விரித்தாடியதை மரகதமும் கவனிக்கத் தவறியதில்லை.

நம் நாடு— வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிய தமிழ் நாடு... தன் மண்ணிலே தான் பெற்றெடுத்தவர்களையே 'பசி பசி' என்றுஅலறும்— அலையும் நிலமையை உருவாக்கியிருக்கிறதுஇல்லை உருவாக்கப் பட்டிருக்கிறது. "ஐயோ தமிழ்த் தாயே ! நீ இந்நிலைக்கு மாறிய தேன் ? உன்னை மாற்றியவர்கள் யார் ?... ஐம்பெரும் படையை அக்கால மன்னர்கள் வைத்திருந்தார்கள். இக்காலத்தில் அது வேண்டாம் தாயே— அஞ்சா நெஞ்சமுள்ளவர்கள் போதும் அவர்களை அழிக்க' அஞ்சிவாழ நினைப்போர் ... கெஞ்சிப் பல்லிளிப் போர்... பஞ்சணையிலே புரளவோர் உன்னைத் தாயாக மதித்தால் போதும். நம்மைப் பெற்றது தமிழ்த் தாய் தான் என்று உணர்ந்தால் போதும் ! உன் புகழ் அறியாவிட்டாலும் சொல்லுவது புரிந்தால் போதும் ! உன்னைப் பழித்தவர்களுக்கு குழி தோண்டி விடுவோம். உன்னை இக்கதிக்கு ஆளாக்கியவர்களை நிர்க்கதியாக்கி விடுவோம்!" என்று சரித்திரம் கற்றவர்கள் சூளுரைக்கிருர்கள் சரித்திரம் தெரிந்தும் தெரியாதவர்கள்அடிமைக் குணத்தார், அலட்சியப்படுத்துகின்றனர்.

ஆண்மை உள்ளவர்களே வாழ வழியின்றி வீதியிலே அலையும்பொழுது ஒருபெண்- அதுவும் தனியாக வாழ முடியுமா ? முடியும் ! இலக்கியத்தை மறந்து தமிழின்பண்பாட்டைத் துறந்து பார்ப்பவர்களைப் பல்லிளித்துபரவசப் படுத்திஞல் பசியில்லாமல் என்ன பஞ்சு மெத்தையில் கூட புரளலாம். அந்நிலையும் இன்று நாட்டிலே அதிகரித்துவிட்ட காரணத்தால் போட்டிகள் ஏராளம். ஏராளம்! கடமையிலே தவருது- கண்ணியத்திலே பிறழாமல்- கட்டுப்பாட்டிலே மீருமல் நேர்மையுடன் வாழ்ந்த மகிழனுக்கு வாழ்க்கைப்பட்ட மரகதம் அவ்வழிக்குச் சென்று விடுவாளா என்ன !

சிந்தை கலங்கி யிருந்தமரகதம் வாடகை கொடுக்கப்படாத காரணத்திற்காக பச்சிளங்குழந்தைகளுடன்பராரியாய் வீதியிலே துரத்தப்பட்டாள். கால் செல்லுமிடமெல்லாம் சென்று கொண்டிருந்தாள், கருமேகங்கள் அதற்கு மேலும் பொறுக்கவில்லை! மழை பொழிய ஆரம்பித்தது, மழை பெய்தவுடன் தங்குவதற்குப் பக்கத்திலே நோக்கிஞள் மரகதம், ஒரு வட்டக்கிணறு... அகலமான கிணறு...சுவர்கள் சரிந்த கிணறு இருந்தது. மழைக்காக தங்குவதற்கு மட்டுமென்ன வாழ்க்கைக்கேதங்குவதற்கு ஏற்றஇடம்அதுதான் என்று தீர்மானித்தாள். அருகில் சென்ருள். உலகை ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். 'தாயகமே! என்னைப்பெற்ற, தமிழகமே! அமைதி-அமைதி என்றலைந்தேன். தேடினேன் கிடைக்கவில்லை ! நீ எனக்கு அளிக்கவில்லை! அந்த சரிந்த கிணறு அமைதியை வைத்திருக்கிறது ! அது என்னை 'வா வா வென்று அழைக்கிறது. நான் என் பிள்ளைகளுடன் அமைதியை முத்தமிடப் போகிறேன் ! தாயே! கடைசி நேரத்தில் ஒரு வேண்டுகோள் ! இந்நாட்டிலே சதிகாரர்களும்— சுயநலக்காரர்களும்- வஞ்சகர்களும் பஞ்சமும்-பசியும் வாழும் வரை இம்மாதிரி சரிந்த கிணறுகளையும் பெருக்கிக் கொண்டே இரு. என்னைப் பெற்றதிற்காக என் நன்றி !" என்று மனதுக்குள் கூறிக் கொண்டுதன் பிள்ளைகளுடன் கிணற்றுக்குள் குதித்து நிலையான உலகத்திற்குச்சென்று விட்டாள்,

மறுநாள் தினசரிப் பத்திரிகைகளில் "சரிந்த கிணற்றில் மூன்று பிணங்கள் மிதந்த கோரக்காட்சி" என்ற தலைப்பில் அந்த கிணற்றையும் அதிலே படுத்துப் புரண்ட மூன்று உடல்களையும் புகைப்படத்துடன் வெளியிட்டு தன் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சிக்குக் காரணம் வறுமையும்—பசியும் தான் என்று விமர்ச்சித்தவர்கள் அதன் காரணத்தை அறிய முற்படாமல் போனது விந்தைதான்.

விரைவில் வெளிவருகிறது !

புதுமைகள் பூத்துக் குலுங்கும் புரட்சிப் படைப்பு!
தென்னகத்தின் தன்நிகரில்லா ஒளிவிளக்கு !!

முன்னணி

-கலை, இலக்கிய, அரசியல்.......வார ஏடு-

ஆசிரியர் : பி. வி. முத்துசுவாமி
பதிப்பாசிரியர் . ம. ரா. தேவராசன்

ஒவ்வொரு இதழிலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், அரசியல் விமர்சனங்கள், கலைஉலகச் செய்திகள் அனைத்துமே "முன்னணி"யை எழில்படுத்தும்.

தனிப்பிரதி 16 காசுகள் ★ ஆண்டு சந்தா ரூ. 8-00

உங்கள் பிரதிகளுக்கு இன்றே பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஊக்கம் நிறைந்த விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு:
முன்னணி அலுவலகம்
26. எம். சி. ரோடு, சென்னை-21.

தேர்தல் நிதி திரட்டத் தீவிரம் காட்டுவீர்!

1962-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் ஈடுபட, ஐந்து இலட்ச ரூபாய் நிதி திரட்டுவதென்றும் அதற்கு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ரூ. 25,000-ம், மாநிலங்கள் ஒவ்வொன்றும் ரூ. 5,000-ம் பிப்ரவரித் திங்களுக்குள் வழங்கவேண்டு மென்றும் மதுரையில் கூடிய தலைமைக்கழகச் செயற்குழு தீர்மானித்திருக்கிறது. அதன்படி மாவட்டங்களும், மாநிலங்களும் தத்தம் பங்குத் தொகையினைச் செலுத்துவதில் முந்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

பணத்தை வீசி வாக்குகளைப் பெறுவதற்காக நாம் நிதி திரட்டவில்லை. தேர்தல் நமது திட்டங்களை விளக்கவும், நாட்டு நிலைமைகளை மக்கள் மன்றத்தில் எடுத்து வைக்கவும், பட்டிதொட்டிகளிலெல்லாம் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தவும், தேர்தல் நிதியாகக் குறைந்தது ஐந்து இலட்ச ரூபாயாவது இருந்தால்தான் 'கோடி'களை குவித்துக்கொண்டு கொக்கரிக்கும் காங்கிரசை எதிர்க்கும் சக்தியை நாம் பெறமுடியும்.

இந்த உண்மையை உணர்ந்த பிறகும் உறங்கிக் கொண்டிருப்பது முறையல்ல ! "நாளைக்குப் பார்ப்போம்!" என்று ஒத்திப்போடுவதும் உகந்ததல்ல ! உடனடியாகக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கச்சை கட்டிக்கொண்டு காரியமாற்றத் தொடங்கவேண்டும்.

ஊருக்கு ஊர்சென்று உண்டியல் எடுத்தோ—நண்பர்களிடம் நாட்டு நிலையை விளக்கியோ — நீதியை நிலைநாட்டும் காரியத்திற்கு நேர்மையான முறையில் 'சிறுதுளி பெருவெள்ளம் என்ற சீரிய நோக்கத்தோடு தேர்தல் நிதியைப் பெருக்கிடவேண்டும்.

யாராவது வந்து கேட்டுத்தான் கொடுப்பது என்றில்லாமல், ஆர்வம் படைத்த தோழர்கள் தாங்களாகவே தேர்தல் நிதிக்கெனத் தங்களால் இயன்ற தொகையை அனுப்பிவைக்கும் உணர்வினைப் பெறவேண்டும்.

நிதி சேர்க்கும் முறைகளாக, சிறப்புக் கூட்டங்கள் நாடக நிகழ்ச்சிகள், கலை அரங்குகள் இவைகளை மட்டுமே நகரங்களில் மாத்திரமின்றி கிராமங்களிலும் நம்பியிருப்பது சரியல்ல; எதிர்பார்க்கும் பலனும் கிட்டாது. உருவான பலன் கிடைக்குமிடங்களில் மட்டுமே சிறப்புக் கூட்டம் நாடக கலை நிகழ்ச்சிகள் போன்றவைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பொதுக்கூட்டத்திற்கும் வருகை தருகிற தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் வாயிலாகத் தேர்தல் நிதிக்குக் கணிசமான தொகையை அளிக்கும் முறையை அந்தந்த அமைப்புக்கள் வகுத்துக் கொள்ளலாம்.

இன்னும் இருப்பது ஓராண்டுக் காலம்தான். மாநில மாநாடு, மாவட்ட மாநாடுகளை நடத்தியாக வேண்டும். பணிகள் ஏராளமிருக்கின்றன. அதற்கிடையில் ஐந்து இலட்சத்தைத் திரட்டத் தோழர்கள் அயராது பாடுபட வேண்டும்.

ஜனநாயகக் கடமையாற்ற—நர்டு வாழ—நலிவுநீங்க இன்றே முனைந்தெழுவீர் ! நீங்கள் சேர்த்தனுப்பும் ஒவ்வொரு காசும் மாசுமருவற்ற நமது கொள்கைகளை வெற்றி பெறச் செய்யும் தூயவழிக்குப் பயன்படுத்தப்படுவது ! திராவிடச் சமுதாயத்தின் சுதந்தர எதிர்காலத்தை உருவாக்கவல்லது !

அன்பன்,
மு. கருணாநிதி,
(தலைமைக் கழக பொருளாளர்)
'அறிவகம்', சென்னை-13.

இயக்கத்துக்கென்றே 'இனமுழக்கம்' வழங்கும் இன்சுவை!

நீங்கள் சொன்னீர்கள்; நாங்கள் வெளியிடுகிறோம்!

கழகத்தின் களஞ்சியமாய் - கன்னித் தமிழ் நாட்டின்
கற்கண்டாய் - நற்கனியாய் - உருவாகிறது!

இனமுழக்கம்
பொங்கல் மலர் 1961

அதிசயிக்காதீர்! அவாள் ஏடுகளுக்குச் சவால்!!

300 பக்கங்கள் — **விலை ரூ. 4-00**

முகப்பு ஓவியம்: **ஓவியக் கலைஞர், 'மணியம்'**

மலருக்குள் வரையும் ஓவிய மணிகள்: **மாதவன், லதா, சீநி சோமு, ஜெயராஜ், ஆனந்தன்**

மலருக்கென்று எழுதும் சிறுகதை மணிகள் :

அகிலன், ஜெகசிற்பியன்,
இராதாமணாளன், டி. கே. சீனிவாசன்
எஸ்.ஏ.பி. **அண்ணாமலை அரு. இராமநாதன்,**
க. வள்ளியப்பன், பூவை எஸ்.**ஆறுமுகம்**
கோவி. மணிசேகரன்

துப்பறியும் நாவல்கள் :

தமிழ்வாணன், சிரஞ்சீவி

அரசியல் கட்டுரை நல்கும் அறிஞர்கள் :

அறிஞர் அண்ணா, நெடுஞ்செழியன்
டாக்டர் **லட்சுமணசாமி, ஈ. வெ. கி. சம்பத்,**
பி. டி. இராசன், M.L.C., **அநுமந்தையா,**
சங்கரன் நம்பூதிரிபாத், பி. இராமமூர்த்தி,
நாஞ்சில் கி. மனோகரன், ப. ஜீவானந்தம்,
ஏ. பி. ஜனார்த்தனம், M.A. **கிருஷ்ணசாமி,** M.P.

கலையுலகு பற்றி:
நடிப்பிசைப் புலவர் **கே. ஆர். இராமசாமி,** M.L.C.

இலக்கியக் கட்டுரைகள் வழங்கும் கருவூலங்கள் :

டாக்டர் **மு. வரதராசனார்,**
டாக்டர் **ஏ. சிதம்பரநாதன்,**
பன்மொழிப்புலவர் **கா. அப்பாத்துரையார்,**
டாக்டர் **மா. இராசமாணிக்கம்,**
திராவிடமொழி நூலார் **தேவநேயப்பாவாணர்,**
டாக்டர் **ரா. பி. சேதுப்பிள்ளை,**
அ. மு. பரமசிவானந்தம், வே. கபிலன்

சிறுகாப்பியம் நல்குபவர் :

கவிஞர் கண்ணதாசன்

கவியரங்கம் :

தலைவர் : புரட்சிக் கவிஞர் **பாரதிதாசன்**
பங்கேற்போர் :
கவிஞர் **வாணிதாசன்,** கவிஞர் **முடியரசன்,**
கவிஞர் **கம்பதாசன்,** கவிஞர் **ரவீ**

குழந்தைப் பாட்டு. கவிஞர் **அழ. வள்ளியப்பா**

ஓரங்க நாடகம் :

கழகப் பொருளாளர் : கலைஞர் **மு. கருணாநிதி**
(அந்நாடகத்தில் திரையுலக நடிகர்கள் நடிக்கின்றனர்)

நாட்டிய அரங்கம் :

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின்
எழுச்சிப்பாடலுக்கு
ஜெமினி சந்திராவின் நடனக் காட்சிகள்

மகளிர் பகுதி :

தலைவர் : **சௌந்தரம் கைலாசம் அம்மையார்**
(மகளிர் எழுத்தாளர் பலரும் பங்குபெறுகின்றனர்)

புதிய பரிசு போட்டி ரூ. 1000
கூப்பன் மலரிலே!

இயற்கைக் காட்சிகள் :

புகைப்பட நிபுணர் **சாமுவேல்**

நமது பணி ;

மாநகராட்சி மன்றத்தில் நமது சாதனைகளை
மாநகராட்சி மன்றத் தலைவர் **வி. முனுசாமி** விளக்குகிறார்

உலகத் தலைவர்கள் ;

உலக நாடுகளின் விடுதலை வீரர்கள் குடியரசுத் தலைவர்களின் புகைப்படங்கள் இடம் பெறுகின்றன.

ஆசிரியர் **சி. பி. சிற்றரசு** வழங்கும்
விசேடக் கட்டுரை
விளக்கப் படங்களுடன் கேள்வி-பதில் 100

கழக அகராதி

இயக்க வரலாறு : தென்னிந்திய நல உரிமைச் சங்கக் காலத்திலிருந்து (1917) இன்றுவரை (1960) நாம் வளர்ந்த விதத்தினை வரலாற்றுக் குறிப்புக்களுடன் வரைகிறார், *A. S.* **வேணு,** பீ.ஏ. அவர்கள்

கழக அமைப்பு : தலைமைக் கழகம், மாவட்டக் கழகம், வட்டக் கழகம், கிளைக் கழகம் ஆகியவற்றின் அமைப்பு விவரங்கள், 4000த்திற்கு மேற்பட்ட எல்லா கிளைக் கழகங்களின் பெயர்கள், கிளைக் கழகச் செயலாளர், வட்டப்பிரதிநிதி ஆகியோரின் பெயர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்களின் புகைப் படங்கள், மாவட்டக் கழக அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரின் பெயர்கள்.

வட்டக் கழகச் செயலாளர்களின் புகைப்படங்கள், அவைத் தலைவர், செயலாளர், துணைச்செயலாளா, பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியோரின் பெயர்கள்.

பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்களின் புகைப் படங்கள், கழக எம்.எல்.ஏ.க்களின் புகைப்படங்கள், சென்னை மாநகராட்சி மன்ற கழக மேயர், துணை மேயர் உறுப்பினர்களின் புகைப்படங்கள், தலைமைக் கழக அவைத் தலைவர், பொதுச்செயலாளர், துணைச்செயலாளர்கள், பொருளாளர் ஆகியோரின் புகைப்படங்கள் அடங்கிய பலவண்ண முகப்பு.

கழகச் சட்டதிட்டங்கள், கொள்கை விளக்கங்கள் மற்றும் துணை மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றின் முழு விவரங்கள், கழகத்துக்கென உயிர்நீத்த உத்தமர்களின் புகைப்படங்கள், அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்.

இதுவரை நடைபெற்ற மாவட்ட; மாநில மாநாடுகள், சிறப்பு மாநாடுகள் ஆகியவை நடைபெற்ற தேதி, இடம், போன்ற எல்லா விவரங்கள், 1949-லிருந்து 1960 வரை கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ச்சியைக் காட்டும் விளக்கப்படம்—இவற்றோடு கழகத்தின் இருவண்ணக் கொடி விளக்கமும் இடம்பெறுகிறது.

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் முன்பணத்துடன் பதிவு செய்துகொள்ளுங்கள்!

சரித்திர ஓரங்க நாடகம்:

அரண்மனை மகுடம்

ஆர்விப்பட்டி ப. மு. இளங்குமரன்

(சரித்திரப் புகழ்பெற்ற ஆக்ராவில், பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதியில், நகரமக்கள் தம் வழக்கப்படி ஒவ்வொராண்டின் பிறப்பு விழாவைப் பெருங் களிப்புடன் கொண்டாடுவது வழக்கம். கி. பி. 1607-ம் ஆண்டு விழாவின் ஒன்பதாவதுநாள். சக்கரவர்த்தி ஜஹாங்கீர் அரண்மனையைச் சார்ந்த சோலைகளில் பன்னிறக் கூடாரங்கள்; பல்லாயிரக் கணக்கான விளக்குகள் பேரொளி கொட்டுகின்றன. மன்னர் குலத்திலும், பிரபுக்கள் குலத்திலும் உதித்த குவளைவிழிக் கோமளவல்லிகள் அல்லங்காடிகள் வைத்திருக்கின்றனர். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம்; ஒரே இரைச்சல்; மகிழ்ச்சியின் ஆரவாரம்!...அப்போழுது...)

[காட்சி:—1]

பாத்:- இளவரசன் குராம் என்ற ஷாஜஹான், இளமங்கை ஷாரா என்னும் எழில்நங்கை.

இடம்:- ஆக்ரா நகரம். ஜஹாங்கீரின் அரண்மனைப்பூங்கா.

காலம்:- இரவு. விண்ணில் மின்னும் வெண்ணிலவு தண்மையைப் பொழிகிறது.

ஷாஜ:- (அழகும்' பருவமும் இரண்டறக்கலந்து, பேரழகு ஓவியமாய்த் திகழும்—வண்ணக் கூடாரத்திலிருந்து கொண்டுபண்டமாற்றுசெய்யும் பாவை நல்லாளிடம் மெல்ல, நெருங்கிப்போய் அவள் அருகில் நின்றபடி) இந்தா, உன்னைத்தான்!

ஷாரா:- (அவனை ஏறஇறங்கப் பார்த்து) கூப்பிடும் முறையைப் பார்த்தால்...

ஷாஜ:- பாகுகலந்த பனிநீரைப் பருகியதைப்போல் குளிர்ச்சியாக, இனிப்பாக இருக்கும்! அப்படித்தானே?

ஷாரா:- இல்லை! (முகத்தைச் சுளித்து) கோபம் கொப்பளிக்கிறது!

ஷாஜ:- (சிரித்துக்கொண்டே) நன்ருகத் தெரிகிறதே உன் நீலமலர் விழிகளில்!

ஷாரா:- (நாணத்தால் கீழுதட்டைக் கடிக்கிருள்) தங்களைப் பார்த்தால்...

ஷாஜ:- சக்கரவர்த்தியாரின் செல்வமைந்தன் ஷாஜஹான்தான் நானென்று நிச்சயம் தெரிந்திருக்குமே!

ஷாரா:- (பயம்கலந்த பார்வையுடன்) பிரபு! நீங்களா! அமருங்கள்!...இந்த ஆசனத்தில் அமருங்கள்!

ஷாஜ:- (அமர்ந்து) மிரட்சியிலும் ஒரு உயர்ந்த தனிக்கவர்ச்சி இருக்கத்தானே செய்கிறது!

ஷாரா:- இளவரசருக்கு என்ன வேண்டுமோ?

ஷாஜ:- ஈடு இணையற்ற இன்பப் பொருள்வேண்டும். அந்தப் பொருள் உன்னிடம் இருக்கிறன; உணர்ந்துதான் வந்திருக்கிறேன்.

ஷாரா:- அப்படியா பிரபு! மெத்த மகிழ்ச்சி! வைரங்கள் விலையாகிவிட்டன; புஷ்பராகம் தீர்ந்து போயின; கோமதேகத்திற்கு மிகுந்த கிராக்கி; மாணிக்கம் மளமள வென்று விற்பனையாகி விட்டனவே!

ஷாஜ:- (ஏமாற்றத்தோடு) எதுவுமே இல்லையா?

ஷாரா:- (சிந்தனைசெய்வதுபோல் பாவனை) ஒன்றே ஒன்று இருக்கிறது பிரபு. உயர்ந்த பொருள் அது; வேண்டுமானல் காட்டுகிறேன்; விலைதான் அதிகம்! விருப்பம்தானே இளவரசே?

ஷாஜ:- ம்!...விருப்பம்தான்! எடு பார்ப்போம்!

ஷாரா:- வைரமணி வைத்திருக்கிறேன். கண்களை வெட்டியிழுக்கும் பேரொளி கொண்ட பெரு வைரம். (ஒரு பேழையிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்து) பிரபு! இது மிகவும் இனியவைரம். இலட்ச ரூபாய் மதிப்புடையது! ...ஹும்! பாருங்களேன்!

[இளவரசன் அதை வாங்கி விளக்கு வெளிச்சத்தில் உற்றுப் பார்க்கிருன்; விஷயம் வெட்ட வெளிச்சமாகிறது. வண்ணக்குமரி கொடுத்ததை வாங்காவிட்டால் கூடியிருப்போர் தன்னைப் பற்றிக் குறைவாக மதிப்பிடுவார்களே என்றெண்ணுகிருன்]

ஷாஜ:- பாவை உன் பெயரென்ன என்பதை அறியலாமா?

ஷாரா:- (அதரங்களைக் குவித்து) என் பெயரா பிரபு!. .ஷாரா!

ஷாஜ:- ஷாரா! அடடா, கற்கண்டுபோல் இனிக்கிறது. பெயருக்கே கொடுக்கலாம் கோடிப் பொன்; குவியலான ரத்தினங்கள்

ஷாரா:- (தலைகுனிந்து) ஏழையை அதிகமாகப் புகழ்கிறீர்கள்!

ஷாஜ:- பின்னே புகழவேண்டாமா ஷாரா? இனிக்கும் கற்கண்டைப் போய் ஜொலிக்கும் வைரமென்று கூறி விளையாடி விட்ட விநோதப் பைங்கிளி நீ!...விதை ஊன்றிவிட்டாய்!

ஷாரா:- எதை இந்தப் பேதை ஊன்றிவிட்டாளோ?

ஷாஜ.- (கடகட வெனச்சிரித்து) நாளையமுனநதிக்கரைக்கு வா ஷாரா சொல்லுகிறன்! சரி, முதலில் இந்த இலட்சரூபாயைப் பெற்றுக் கொள்!

[ஷாரா பணத்தை வாங்கிக் கொள்கிருள். கட்டழகி கொடுத்த கற்கண்டைப் பத்திரமாக வைத்துக் கொண்டு எழுந்து நிற்கிருன்.]

ஷாரா:- வருகிறேன் பிரபு! (மலர்க்கண்களால் மன்னர் மகனை நோக்கிப்பின் தலையைத் தாழ்த்துகிருள் தளிர் மேனியாள்)

ஷாஜ:- (மெல்லிய குரலில்) காதல்பார்வையில் தேன் சொட்டுகிறது.

ஷாரா:- (அதைவிட மெல்லிய குரலில்) காதலில் கடுக்காய் இருப்பதாக என் அம்மா அடிக்கடி சொல்லுவாளே!

ஷாஜ:- அம்மாவுக்கு எங்கே தெரியும் அதன் மகிமை! உன் குறும்புக்கும் மட்டும் குறைவில்லை...ஷாரா!

ஷாரா:- ஹும்!... சொல்லுங்கள் பிரபு!

ஷாஜ:- மங்கை உன் மேனியழகை அசோக மரத்தின் இளந்தளிருக்கு ஒப்பிடலாம்!

[மங்கையவள்மௌனம் சாதிக்கிருள். அழகிய-அகன்ற விழிகளில் ஆனந்தக் கண்ணீர் தேங்கி நிற்கிறது.]

ஷாஜ:- நாளை— நிலவுபொழியும் வேளை-நதிக்கரையிலே வாலைக் குமரியாம் உனக்காக வழி பார்த்துக் கிடப்பேன் வருவாயா ஷாரா?

ஷாரா:- இந்த ஷாரா வரவாபிரபு? (அச்சமும் அகமகிழ்ச்சியும் போட்டியிட பூமுகத்தைநிமிர்த்துகிருள் பருவச்சிலை.)

ஷாஜ:- ஆமாம்! நீவா! வராமல் மட்டும் இருந்து விடாதே! நான் வரட்டுமா ஷாரா?

ஷாரா:- (வேறு திசையில் விழிகளைச் செலுத்தியபடி) வாருங்கள் பிரபு!

[இளவரசன் அடுத்த கணம் சென்று மறைகிருன். அவன் கம்பீரமாகப் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் அழகு மணிப்புரு பெருமூச்சை வெளியிடுகிறது.]

காட்சி—2

பாத்:- ஷாஜஹான், பேரழகுப் பதுமை ஷாரா.

இடம்.- யமுன நதிக் கரை

காலம்:- பால் நிலா பவனிவரும் இன்ப இரவு.

[நதிக்கரையிலே-பன்னீர்மரத்தடியிலே நிற்கிருன் காதல் வயப்பட்ட இளவரசன். நதியைத் தழுவி, கரையை முத்தமிடும் குளிர்ந்த காற்று அவனைத்தீண்டி விளையாடுகிறது. மங்கையின் நினைவில் மெய்ம்மறந்து நிற்கும் அவனை நோக்கி மலர் மணம் வீசவே, திரும்பிப்பார்க்கிருன்; நிலவின் ஒளியிலே அழகுப் பேழையாக ஆடி அசைந்து வருகிருள் இளங்கொடி ஷாரா.]

ஷாஜ:- (ஓடிப்போய்) வந்து விட்டாயா ஷாரா? நீ இங்கு வருவாய் என்று நிச்சயமாக எனக்குத் தெரியும்.

ஷாரா:- இந்தப் பெண்மீது இவ்வளவு அன்பா பிரபு?

ஷாஜ.- பிரபுவல்ல; ஷாராவின் அடிமை நான்.

ஷாரா:- உங்கள் அன்புக்கு உரியவளா நான்?

ஷாஜ:- ஆமாம், ஷாரா! சுவையான கற்கண்டை வைரமெனக் கொடுத்த புதுமலர், பொற்புடைய தன் மனத்தில் ஓர் இடம் ஒதுக்கித் தராதா?

[பன்னீர்ப்பூக்கள் பரவிக்கிடக்கும நதிக்கரையில் அமருகின்ருள் தங்கச்சிலையென இளந்தையல். அவள் அருகில் நெருங்கி உட்காருகிருன் ஷாஜஹான். கன்னியவள் கனிக் கன்னங்களில் செம்மை படர மௌனத்தை மேற்கொள்கிருள்.]

ஷாஜ:- விரும்பியதை வாயினுல் சொல்லும் வழக்கம் வஞ்சியர்க்கே இல்லை போலும்!

ஷாரா:- (தன் கருங்கூந்தலில் செருகியிருந்த மலரை உருவி எடுத்தவாறு) இளவரசே! முதல்நாள் மாலை சூடி, மறுநாள் காலையில் வீசியெறியும் மலர்ச்சரமாக மங்கையர் குலத்தை மதிப்பிடுகிறதே மன்னர் குலம்! இதில்...

ஷாஜ:- (இடைமறித்து) நான் மட்டும் விதிவிலக்கு ஷாரா, பொன்னிலே பொதிந்த பளபளப்பான பெருமுத்து நீ! அரசர் பரம்பரைக்கு அரிவையரின் அழகு மேனி மட்டுமே வேண்டியதானுல், அந்த அறிவற்ற பண்பை அடியோடு நான் வெறுக்கிறேன் ஷாரா! உடலை மாத்திர மல்ல; உள்ளத்தையும்மனமாரக் காதலிப்பவனே மனிதன்; அப்படியில்லாதவன் மிருகத்துக்கும் கீழானவன்.

ஷாரா:- (உளம் நெகிழ) பிரபு!

ஷாஜ:- (கனிவுடன்) கண்ணே ஷாரா!

ஷாரா:- (இன்பத்தால் இதயம் துடிதுடிக்க) பிரபு! பேதை என் உள்ளத்தை நேற்றிரவே நீங்கள் கொள்ளை கொண்டுவிட்டீர்கள். நீங்கள் கதிரவனுனல் நான் கமலப்பூவாகிறேன்; நிலவு நீங்கள்தான் என்ருல், அல்லிக்குரிய இடத்தை நான் பிடித்துக்கொள்கிறேன்! ஏனோ இந்த விநோதம்?

ஷாஜ:- காதல் நோய் வசப்பட்ட வண்ணப்பேடு நீ! என் எண்ணத்தின்உயிரேடு நீ! இதயங்கவர் எழில் மலர்க்காடு நீ! இன்பத்தேன் கூடு நீ!

ஷாரா:- (வெட்கம் சூழ) நானு பிரபு மலர்க்காடு?

ஷாஜ:- ஆம் ஷாரா! அதைச் சொல்கிறேன் கேள்! உன மதிமுகம் தாமரை; மான்விழிகள் நீலோற்பலம்; பழக் கன்னங்கள் ரோஜாப்பூ; முத்துப்பற்கள் மல்லிகை மொட்டுக்கள்! போதுமா?

ஷாரா.- (நாணத்திரைபடர) இனிக்க இனிக்கப் பேசுகிறீர்களே பிரபு! கவிஞரோ நீங்கள்?

ஷாஜ.- காதல் என்பதே உணர்ச்சிமயமான கவிதைகள்தானே! என் ஷாரவை நான் காதலிக்கிறேன்; எனவே நான் கவிஞனுகி விட்டேன். கைரேகை வைப்பவன் கூடக்காதல் உலகிலே புகுந்து விட்டால் கவியாகிவிடுவானே ஷாரா!

ஷாஜ:- (தன்னை மறந்து) என்னை ...மறக்கமாட்டீர்களே?

ஷாஜ:- உயிரை மறந்தால் உடலை இடுகாட்டுக்கல்லவா எடுத்துப் போகவேண்டும்? கடலை விட்டு அலைகள் பிரிவதில்லை! மனோரஞ்சிதமும் மணமும் வேருவதில்லை!...அன்பே ஷாரா!

[ஷாராவை அன்புடன் அருகே இழுத்துத் தழுவிக் கொள்கிருன்.]

ஷாரா:- பிரபு! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்! இந்த ஷாரா இனி நீங்கள் இல்லாமல் ஒரு விநாடி கூட உயிர் வாழ மாட்டாள் பிரபு! (இளவரசனின் படர்ந்த மார்பில் தன் பொன் முகத்தைப்புதைத்துக்கொண்டு விம்முகிருள் மெல்லியலாள் ஷாரா. அவளது மென்னுடல் குலுங்கிக் குலுங்கி அவன் மடியில் விழுகிறது.)

ஷாஜ:- (இதயக்கசிவுடன் கோதையின் கார் குழலைக் கோதிவிடுகிருன்; கன்னக்கதுப்புக்களை வருடுகிருன்; கன்னியின் பொன்னுன கன்னங்களில் தன்னுலேயே வழிந்தோடும் கண்ணீரை மன்னர் மகன் விரல்களால் சுண்டிவிடுகிருன்.) ஷாரா! பெண்மை, மென்மையின் உறைவிடம்என்பதற்கு நீயே ஒரு எடுத்துக்காட்டு, அன்புக்குகந்தவளே!... அழாதே! ஷாஜஹானின் உள்ளத்தில் பள்ளி கொண்டுவிட்ட புள்ளி மானடி நீ! இதை நான் சொல்லியா நீ தெரிந்து கொள்ளவேண்டும்!

ஷாரா:- (அவனுடைய கரங்களை எடுத்துத்தன் கயல் விழிகளில் ஒற்றிக்கொண்டே) ஷாரா பாக்கியசாலி இளவரசே! உங்கள் உயர்ந்த அன்பு யாருக்குக் கிடைக்கும்!

ஷாஜ:- உனக்குத்தான் ஷாரா! சந்தேகமா?...எங்கே கொஞ்சம் உன் பவளவாயைத் திற!... கொஞ்சம் திறஷாரா!

ஷாரா:- ஹுக்கும்...மாட்டேன்! ...எதற்கென்று சொன்னுல் தான் என் வாயைத் திறப்பேன்!

ஷாஜ:- முதலில் சொல்லிவிட்டால் சுவையே இருக்காதே ஷாரா!...என் கண்ணல்லவா நீ! வாயைத் திற!

[செல்லமாகச் சிணுங்கியவாறு அந்த இன்பவல்லி தன் குமுத மலர் வாயைக் கொஞ்சம் திறக்கிருள். ஷாஜஹான் சட்டென்று ஒரு பொருளை அவள் வாயில் போட்டு விடுகிருன்]

ஷாரா:- (வாயில் வைத்தபடி) என்னவாம் இது?

ஷாஜ:- இதுவா? இலட்சம் ரூபாயை ஏப்பம் போட்டுக் கொண்ட அசல் வைரம்; அசந்து விடாதே இனிக்கும் வைரம்!...ஷாரா! வைரத்தை வாயில் வைத்திருக்கிருயே, ஆபத்தல்லவா? சீக்கிரம் துப்பிவிடு கீழே!

ஷாரா:- செத்து விடமாட்டேன் பிரபு! இனிப்பின் மயக்கத்தால் உங்கள் மடியில் படுத்துவிடுவேன். கற்கண்டின் இனிப்பு என்னைக் கனவு உலகத்திற்கு இழுத்துச் செல்கிறது!...உங்களை?

ஷாஜ:- உன்னோடுதுணைக்கு வரத் தூண்டுகிறது ஷாரா! (அன்புடன்) கண்மணி ஷாரா!... ஷாரா! என்னைப்பாரேன்! (அவள் நாடியைத் தொட்டு தன் முகத்துக்கு நேராக நிமிர்த்துகிருன்:)

ஷாரா:- (வெட்கத்துடன் முகத்தைமூடிக்கொண்டு) ஊஹூம்! நான் மாட்டவே மாட்டேன்!... பார்க்கவே மாட்டேன் பிரபு!

[சலசலவென ஓசையுடன் ஓடும் யமுனநதிக் கரையிலே, 'கல-கல' வென்று சிரிப்பொலி காற்றுடன் இரண்டறக்கலந்து தேய்கிறது. பால் நிலா மேகத் திரையில் பதுங்குகிருன்.]

(12-ம் பக்கம் பார்க்க)

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஊமை வேடம் தரித்திருந்துவிட்டு வீம்புக்கு வீராப்பும், போலிக் கௌரவமும், புரட்டுத்தனமும் செய்யவில்லை!

தில்லியில் இருந்து திரும்பிய ஆந்திர அமைச்சர் P. ரங்கா (ரெட்டி) அவர்களும், திட்டக்குழு உறுப்பினர்களிடையே விவாதித்தபோது "மக்கள் தொகை அடிப்படையில் மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்டத்தொகையான 3,525 கோடியில் 310 கோடி ரூபாய்களைப் பெற ஆந்திரத்துக்கு உரிமை இருக்கிறது" என்று விவாதித்துத்தான் திரும்பி இருப்பதாகப் பத்திரிகையாளரிடம் தெவித்தார்.

கடந்த 22—9—60 அன்று உ. பி. மாநில மேல்சபையின் விவாதத்தைத் தொடங்கி வைத்த மாநில முதல்வர் டாக்டர் சம்பூரணனந்தர், "மூன்ருவது ஐந்தாண்டுத்திட்டத்தில் உத்தரப்பிரதேசத்துக்கு 600 கோடி வேண்டும். ஏதோ பிச்சை எடுக்கும் பாவனையில் மத்திய சர்க்காரிடம் இதைக் கேட்கவில்லை. மக்கள் தொகையைக் கணக்கெடுத்து அதன் அடிப்படையிலே தொகையைத் தாருங்கள்" என்று திட்டவட்டமாகக் கூறி இருக்கிருர்.

ஏதோ பிச்சைகேட்பதாக எண்ணுதீர்கள்; மக்கள் தொகை அடிப்படையில் உரிமையோடு கேட்கிருேம் என்று தெள்ளத்தெளிவாகக் கேட்டிருக்கிருர் உ. பி. மாநில முதல்வர்.

இப்படி ஒவ்வொரு மாநிலமும் தங்கள் தங்கள் உரிமையை வலியுறுத்திக் கேட்க முற்பட்டிருக்கும்போது அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் மற்றைய மாநிலங்களும் நம்மைப்போல் தட்டிக் கேட்க முற்பட்டால் என்ன செய்வது என்றுதான் வந்து விட்டோம் என்ருல், என்ன பொருள்? அமைச்சர், நம்மை ஏமாற்ற எண்ணி தம்முடைய ஏமாளித்தனத்தை- கோழைத் தன்மையை- ஆற்றலற்ற நிலையை விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கிருர் என்று தானே பொருள்!

மூன்ருவது திட்டத்தில் முப்பட்டைநாமம் தீட்டிக் கொண்டு வந்த இந்த மும்மூர்த்திகள், பெற்ற நாமத்தை மறைக்க நாப்பறை கொட்டி, பெருமை கொள்வது பேதைமை! வெட்கம்! வெட்கம்!!

ஏ. கலைமுகிலன்

அரசினர்க்கு வேண்டுகோள்!

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாடு இருந்த நிலையைக் கண்ணுற்ற பேராசிரியர் கா. நமச்சிவாயர் அவர்கள், பொங்கல் திருநாளைத் தமிழ் விழாவாகக் கொண்டாட வேண்டும் எனவும், அந்நாளில் தமிழர் நாகரிகம், பண்பு, மொழி, வளம் முதலியவற்றை நினைவு கூர்தல் வேண்டும் எனவும் நினைத்தார். அந்நாளில் தமிழ் மொழி பேசும் அனைவரும், தமிழ்ப் புலவர்கள் அனைவரும்—இருபாலாரும் ஓர் இடத்தில் கூடிப் பேசிக் களிப்பெய்தவேண்டும் என நினைத்தார். அதன்படி சுமார் 4 ஆண்டுகள் தமிழ்த் திருநாளை, சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் நடத்திப் பெருமையடைந்தார் — தமிழர்க்கும் பெருமை அளித்தார். அவர் மறைந்த பிறகு அதே முறையில் புரசைக் கம்பர் கழகமும், சென்னை நக்கீரர் கழகமும் முத்தமிழ் விழாக் கொண்டாடி வந்தது.

இன்று நாம் பல சூழ்நிலைகளில் நம்மையே நாம் நன்கு அறிந்து-சிறப்பாகத்திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டுதோறும் நடத்தி வரும் தமிழர் திருநாள் மூலமும்-சிறப்பெய்தி உள்ளோம். அதோடு சமுதாயம் வளரவேண்டும் என இலக்கிய வித்தகர்கள் இடையருது பாடுபட்டார்கள். தமிழ் இனம், தமிழ் மொழி, தமிழ் நாடு சிறப்படைய வேண்டும்; உலக அறிஞர் பெருமக்களோடும் உலக மாமன்றங்களிலும் சரிநிகர் சமமாக வீற்றிருந்து புகழ்பெற வேண்டும் என்று கவிஞர்க் கோமான் பாரதி, திரு. வி. க, நமச்சிவாயர், சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகள் முதலிய பெரியார்கள் உழைத்தார்கள்.

அவர்கள் உழைத்த உழைப்பு வீண்போகவில்லை- அந்தப் பரம்பரைவளர்ந்துகொண்டே இருக்கிறது. அந்த வளர்ச்சி, நல்ல எதிர்காலம் தமிழ் மொழிக்கு உண்டு என்ற நம்பிக்கையை அளிக்கிறது. எனினும் நாம் வளர சில திட்டங்களைத் தீட்டிக் கொண்டால் மேலும் நலம் பயக்கும். தமிழர்கள் முடிமன்னர்கள் காலத்திலும் அதற்கு முன்பும் திட்டமிட்டு வேலை செய்தனர். திட்டங்கள் உருக்குலையத் துவங்கியதும் தமிழ் அரசு வீழ்ந்தது. அந்நாளில் செய்த உழைப்பின் பயனுக நாம் இன்னும் பெருமைபடக் கூடிய அளவுக்கு நமது பெருமைகள் குன்ருமல் குறையாமல் இருக்கிறது. ஆயினும் அது போதாது. நாம் வளர வேண்டும், நாம் வளர முடியும் என்ற நல்ல சூழ்நிலை நமக்கு இருக்கிறது. இலக்கிய உலகத் தலைவர்களும் அரசியல் உலகத் தலைவர்களும் தமிழ் மொழி மாட்டு கொண்டுள்ள பற்றும் பாசமும் சொல்லி முடியாது.

ஆகவே இந்த நல்ல வேளையில், நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டும். நமக்குக் கிடைக்கப்பெறும் விடுமுறைகளில் தமிழ்ச் சம்பந்தமான விடுமுறைகள் மிக மிகக் குறைவு. நமது தமிழ் மொழிப் பன்புக்கும், தமிழ் இனப் பண்புக்கும் முற்றிலும் முரண்பட்ட பலவிடுமுறைகளை வேண்டா வெறுப்புடன் அனுபவித்து வருகின்ருேம். ஆகவே சில பண்டிகைகளைக் குறைத்து, குறைக்கப்பட்ட அந்த நாட்களைப் பொங்கல் விழாவுடன் சேர்த்து விடுமுறை வழங்கி நாட்டிற்கு ஏற்றம் அளிக்கலாம்.

இப்பொழுது பேகிப் பண்டிகை என இரண்டு நாட்களுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்படுகிறது. இந்த விடுமுறை பொங்கல்விழா, திருவள்ளுவர் விழா, தமிழ் விழா, தமிழர் விழா, தமிழ்ப் புலவர்கள் விழா என அமைத்துக் கொண்டு 5 நாட்களாகச் சேர்ந்து விடுமுறை வழங்கலாம். இதற்கு மேலே கூறியபடி சில ஒவ்வாத விடுமுறைகளை நீக்கிவிடலாம். பொங்கல் விழாவில் நாம் ஒருவருக் கொருவர் நாம் விசாரித்துக் கொள்ளவும், திருவள்ளுவர் விழாவினைக் கொள்ளுதல் மூலம், நாம் இதுவரை 60 ஆண்டுகள் என்ற சக்கர வண்டத்தின் மூலம் உள்ள ஆண்டினைக் கொள்ளாது, கிறித்து சகாப்தத்தினைப் போல் நாமும் ஒரு தொடர் ஆண்டினை வைத்துக் கொண்டுகிறித்துவுக்கு முன் இப்படி இருந்தோம்-கிறித்துவுக்குப் பின் இப்படி இருக்கிறோம் என்று அவர்கள் காட்டுவது போல, தமிழ் இனமும் நமது தலைசம இலக்கிய வித்தகன் திருவள்ளுவர் காலத்துக்கு முன் இப்படி இருந்தோம் -திருவள்ளுவர் காலத்துக்குப் பின் இப்படி இருக்கிருேம் என்று உலகுக்கு எடுத்துக் காட்ட முடியும். தலைசிறந்த புலவனைக் காட்டுவதன் மூலம் அவனுடைய பாரம்பரியமே நாளாவட்டத்திற்கு உலகிற்கு அறிமுகம் ஆகும். சோதிட வட்டக் கணக்குப்படி எத்தனையோ அக்ஷய வருடங்களும், நள, பிங்கள வருடங்களும் வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருக்கின்றன. ஒரு காரியம் எந்த நள வருடத்தில் நிகழுவது என யாரும் எப்போதும் இலகுவாக அறிந்து கொள்ள முடியாது. நமக்கு என ஒரு தொடர் ஆண்டுஇருந்தால்தான்; அதுவும், நமது விருப்பு வெறுப்புகளுக்குப் பாத்திரமாகாமல் வழிக்காட்டியாய், நமக்கெல்லாம் வாழ்க்கைச் சட்டத்தை வகுத்த தலைமைசான்ற ஒரு புலவனதுபெயரை முன்னோடியாகவைத்து தொடர்ஆண்டினைக் கொண்டால்தான் நலம் பயக்கும்; நலம் பெறலாம்; வரலாற்றுத் துறைக்கும் சிறந்த பயன் அளிக்கும். இப்படித் திருவள்ளுவரை நினைவு கூர்தல் மூலம்- திருவள்ளுவர் ஆண்டினை நாள்தோறும்வாழ்வியலில் பயன்படுத்திவருவது மூலம் நமது முன்னேட்டத்தில் பல மைல் கற்களை வேகமாகக் கடக்கிருேம் என்று பொருள். மூன்ருவதாக, தமிழ் விழாவினை நினைவு கூர்தல் மூலம், நாம் நமது மொழிப் பண்பைப் பற்றி அன்று கூடிப் பேசிப்பேசி மேலும் வளரத் திட்டம் வகுக்கலாம். நான்காவது மக்கள் விழாவாகத் தமிழர் விழா என நினைக்கின்றபோது உலக மக்களோடு அவர்கள் உயரத்தில் நாம் எவ்வளவு உயரம் வளர்ந்திருக்கிருேம் என்ற கணக்கை எடுத்து வளர்ச்சி அடையலாம், ஐந்தாவதாக தமிழ்ப் புலவர்கள் விழாவினை நினைவுகூறும் போது இன்று நாம் பெருமையுடன் விளங்குவதற்கு நமக்கு இலக்கண இலக்கியங்கள் படைத்துக் கொடுத்த அவர்களுக்கு நன்றி செலுத்தும் நாளாகவும் பயன்படுத்தலாம் புலவர் விழாக்களைக் கொண்டாடும் போது, வளர்ந்து வரும் நகர அமைப்பில் தோன்றும் புதுப் பேட்டைகளுக்கும், தெருக்களுக்கும், சவுக்கங்களுக்கும் பூங்காக்களுக்கும், நூல் நிலையங்களுக்கும், கட்டிடங்களுக்கும் பொது மண்டபங்களுக்கும் புலவர் பெருமக்களின் பெயரை இட்டு மகிழலாம்; நன்றி செலுத்தலாம் "சுக நிவாஸ்", "மங்கள விலாஸ்" "ஹரித்துவார்", "கங்கா", என்று இருப்பதைவிட "திருவள்ளுவர் அகம்", "தொல்காப்பியர் வீடு", "மறைமலை அடிகள் நிலையம்", "பாரதி இல்லம்", என்று இப்படி மாற்று அமைக்கக் கூடிப் பேசும் திருநாளாகவும்நன்னுளாகவும் பயன்படுத்தலாம்.

உருஷ்யா சென்று வந்த அறிஞர்கள் மூலம், அங்கு மொழிவல்லுநர்களுக்கும்,புலவர்களுக்கும், கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் நல்ல மதிப்பையும் பெருமையையும் அளிக்கிருர்கள் எனவும், அந்நாட்டுக் கவிஞர்கள் பெயராலும்சவுக்கங்களும்,தெருக்களும் அமைத்து பெருமையோடு வாழ்கின்ருர்கள் எனவும் அறிகிருேம். இந்த நிலை தமிழகத்திற்கு மிக மிக அவசியம்.

ஆகவே தமிழ்ச் சான்ருேர்களே! அறிஞர்களே! பொது மக்களே! தாய்மார்களே! இனி நாளது பொங்கல் விழா முதல் மேலே கூறியபடி பொங்கல் விழா, திருவள்ளுவர் விழா, தமிழர் விழா, தமிழ்ப் புலவர்கள் விழா எனக் கொண்டாடுவோம். அப்படியே கொண்டாடுதல் நலம் என எல்லாத் தமிழ் நிறுவனங்களாய மன்றங்கள், கழகங்கள், சங்கங்கள், படிப்பகங்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றை வேண்டுவோம். முக்கியமாகக் கல்லூரி. உயர்நிலைப் பள்ளி நிறுவாகிகளையும், தலைமை ஆசிரியர்களையும் வேண்டுவோம். பள்ளிக்கூடங்கள் விடுமுறை விடுதல் மிகச் சுலபம். அது கல்லூரித் தலைவர் அல்லது பள்ளித் தலைமை ஆசிரியர் கையில்தான் இருக்கிறது. ஒழ்வொரு பள்ளியும் ஒவ்வொருவிதமாக விடுமுறை இருக்கிறது. அது அந்தந்த நிறுவாகத்தையும் பொருத்து இருக்கிறது ஆகவே, நிறுவாகிகளும் மனம் வைத்தல் மேண்டும். இத்தனை நாட்கள் பள்ளி வேலை செய்ய வேண்டும்என்றகணக்கை மட்டுமே அரசாங்கம் வரையறுத்துள்ளது. மற்றவை எல்லாம் நிறுவனங்களைப் பொருத்தவை ஆகும். இதற்கு நல்ல மனம் படைத்தவர்களும், கொள்கையில் உரம் பெற்றவர்களும், நேர்மையாளர்களும் சிலர் முதலில் துணிந்து இறங்கிஞல் பின்னர் தமிழகம் ஒருமுகப்படும். ஆகவே எல்லோரும் ஒருமித்து இந்த நல்ல முடிவினை ஏற்று நடத்திஞல் கனவுகள் நினைவாகும். மேலும் பல நல்ல எண்ணங்கள் உருவாக வழி செய்யலாம். நம்மை அறியவும், தொடர் ஆண்டினை வாழ்க்கையில் தினம் பயன்படுத்தவும், மொழியைப்பற்றிச் சிந்திக்கவும், மொழி பேசும் மக்கள் நிலைமைகளை உணரவும் மக்கள் உயர்வுக்காக உழைத்த முன்னோர்களை நினைவுறவும் அங்கிருந்து பல மைல் தூரம் வேகமாக முன்னே சென்று உலகத்தோடு நாம் போட்டியிடவும் ஏதுவாகும். மனம் உண்டேல் மார்க்கம் உண்டு. முதலில் மனம், இரண்டாவது துணிவும் வேண்டும். புறப்படுங்கள்-விரைந்து பணியாற்றுவீர் என்று வேண்டிக் கொள்கிறேன்.

நச்சிஞர்க்கினியன்

அழியட்டும் இந்நாடு

திருவிடத்துப் பூஞ்சோலை இந்தித் தீயால்
தணல்பாலை ஆவதுதான் நியாய மென்ருல்.
செருவிடையே புறங்கொடாத மறவ ரெல்லாம்
அடிமைகளாய் நோவதுதான் நியாய மென்ருல்,
வருங்கால நம்மினத்தின் இளைஞர் எல்லாம்
வளங்குன்றிச் சாவதுதான் நியாய மென்ருல்,
உருவற்றுப் போகட்டும் இந்த நாடு!
ஒண்டமிழும் பொலிவற்றுப் போய்விடட்டும்!

அழுகின்ற நிலைகண்டும் சிரித்திருக்கும்
அற்பர்கள் வாழ்வதுதான் முறைமை யென்ருல்,
எழுமுரிமைக் குரலடக்கி வடக்கு நாட்டார்
இடுகின்ற உணவருந்தும் உணர்வில் லாதார்
செழிப்போடு வாழ்வதுதான் முறைமை என்ருல்.
செந்தமிழர் வாடத்தான் வேண்டு மென்ருல்,
அழியட்டும் இந்நாடு! இன்றேல் இன்றே
ஆக்கிடுவோம் நம்நாட்டை தனிநா டாக!

வடவாட்சி தீட்டுகின்ற திட்டத் தாலே
வண்டமிழர் வாழ்விற்கு வளமே யில்லை!
விடந்தோய்ந்த கூர்வாளால் தமிழர் நெஞ்சை
வெட்டுகின்ருர், நெஞ்சத்தில் வஞ்சம் தாங்கி!
படமாக மிளிர்கின்ற இந்தக் காட்சி
பலநாளாய் கண்முன்னர் தெரிந்தும் கூட,
வடக்கிற்குப் பரிந்துரைப்போர் தானிங் கிருக்க
வேண்டுமெனில் அழியட்டும் இந்த நாடு!

கொதிக்கின்ற நம்மவர்கள் உண்மை சொல்ல
கிஞ்சித்தும் மதியாது நம்மை யேசி,
விதியென்றப் பேருரைத்து நமையே மாற்றும்
வடவர்கள் தாசர்கள், தமிழர் தாழ
சதிபுரிவோர் வாழ்வதுதான் உரிமை யென்ருல்,
சாக்காடே நமக்குரிய வீடு, என்ருல்,
கதியற்றுப் போகட்டும் நல்லோர் நாடு!
கடல்பொங்கி இந்நாட்டை அழித்தி டட்டும்!

அழியத்தான் வேண்டுமிந்த நாடு! இல்லை,
அடிமைநாண் அறுப்படத்தான் வேண்டும்! வஞ்சம்
செழிப்பதுதான் நியாயமென்ருல், உண்மை இங்கே
சாவதுதான் முறைமையென்ருல், நாட்டில் எங்கும்
செழுந்தமிழின் சீரெல்லாம் இந்தி யாலே
சீரழிதல் தானுரிமை யென்ருல் கெட்டே
அழியட்டும் நம்நாடு! இன்றேல், இன்றே
ஆக்கிடுவோம் நம்நாட்டை தனிநா டாக!

—வாழை. வையாபுரி

வாசித்துவிட்டீர்களா?
திராவிடப்பித்தன் எழுதிய
"திராவிடநாடு திராவிடருக்கே"
(இரா. நெடுஞ்செழியன் முன்னுரை)
200 பக்கங்கள் விலை ரூ.2-00
எல்லா சுதேசமித்திரன் ஹிக்கின்பாதம் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.
விவரங்கட்கு :—
தமிழ் நூற்பதிப்புக் கழகம்
203 தங்கசாலை தெரு,
சென்னை -1.

என்று விடியும்

— : 0 : —

1. உல்லாச வலம்நாளும் கேடா—இதுவும்
உயர்வான தொருபோக நாடா...?
சல்லாபக் கும்மாளம் அங்கே—நெஞ்சில்
செல்வாக்குத் தன்மானம் எங்கே?

2. வெளிநாட்டில் எடுப்பதுவோ பிச்சை-அவனும்
வெறுப்போடு உமிழ்கின்றான் எச்சை;
களியாட்டம் அதனாலோ நண்பா-வெட்கம்
கெட்டாலும் இதுதானுன் பண்பா...?

3. நடைபாதை மனையாக்கிப் புரண்டு-இரவில்
நகர்காப்புப் படையோட்ட மிரண்டு;
இடமேதும் கிடையாமற் திரிந்து-மக்கள்
இனத்தாரில் தவிக்கின்றார் விரிந்து!

4. சதைபோக எலும்பான தோற்றம்-மனிதன்
சொறிநாயின் நிலையான மாற்றம்;
எதையேனும் புசிப்போமென் றேக்கம்-எச்சில்
இலைதேடிச் செல்வதிலோர் வீக்கம்!

5. சிலையோடு போராடும் பிஞ்சு-தோற்று
முடியாமை காண்கின்றன் நெஞ்சு;
குலைகாயத் தாய்நோக்கி மடியும்-இந்தக்
கொடும்பாவி நாளென்று விடியும்?

—"சௌந்தரன்"

அரண்மனை மகுடம்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

[காட்சி—3]

[தனயன் காதல் மணத்தைப் பூரண விருப்பத்துடன்தானே முன்னின்று நடத்திவைக்கிறார் தந்தை ஜஹாங்கீர். சக்கரவர்த்தித் தன் ஆசை மருமகளுக்கு மும்தாஜ் என்னும் பட்டப் பெயரைச் (அரண்மனை மகுடம்) சூட்டி மகிழ்கிறார். 19-வயது பாவையும், 21-வயது இளங்காளையும் தம்பதிகளாகிறார்கள். 18 ஆண்டுகள் இல்லற வாழ்க்கையில் கழிகின்றன. அவர்களுக்கு எட்டு ஆண்களும், ஆறுபெண்களுமாகப் பதினான்கு குழந்தைகள் பிறக்கின்றன. கி. பி. 1630-ம் ஆண்டு. பர்ஹன்பூரிலே கான் ஜஹான் லோடிக்கெதிராகத் தொடுத்த போர் நீடிக்கிறது. அந்த ஆண்டிலேதான் ஷாரா என்ற சக்கரவர்த்தினி மும்தாஜ் பேகம் பதினான்காவது மகவைக் கருவுயிர்க்கிருள்பிரசவம் கொடிய வேதனையாகிறது. அப்போது...]

பாத்:- சக்கரவர்த்தி ஷாஜஹான், மும்தாஜ் பேகம், மூத்த புதல்வி ஜகன் நாரா பேகம், தளபதி கபார்கான்.

[சக்கரவர்த்தி மாளிகையின் முன்வாயிலில் குறுக்கும்]நெடுக்குமாக நடைபோடுகிறார். தளபதி கபார்கான் ஓடி வருகிறான்.]

கபார்:- சலாம் ஆலேகம்!

ஷாஜ:- என்ன கபார்கான்?

கபார்:- சக்கரவர்த்தினியார் அவசரமாகத் தங்களை அழைக்கிறார்.

ஷாஜ:- (திடுக்கிட்டு) அல்லாவே நபிநாயகமே! (ஸல்) என்னைத் தவிக்க விட்டுவிடாதீர்கள்!... ஷாரா!...மும்தாஜ்!

[மாளிகைக்குள் ஓடுகிறார். படுக்கையில் துவண்டு போய்க் கிடக்கும் மும்தாஜ்பேகத்தின் மதிவதனம் வெளுத்திருக்கிறது; கடைவிழிகளிலே கண்ணீர் வடிகிறது.]

ஷாஜ:-என்னோடுஏன்தொடர்ந்து நீயும் வந்தாய்? பிரசவகாலத்தில் பிரயாணம் ஏற்றதல்லவென்று சொன்னேனே கேட்டாயா?

ஷாரா:- (மலர்ந்த சிரிப்புடன்) பிரபு! உங்களைவிட்டு என்னால் பிரிந்து இருக்க முடியாதே!.. உங்கள் ஷாராவுக்கு நேரம் நெருங்கி விட்டது! நபிநாயகம் (ஸல்) என்னை அழைக்கிறார் பிரபு!

ஷாஜ:- (கண்ணீர் மல்க) ஏன் ஷாரா இப்படியெல்லாம் பேசுகிறாய்? மொகலாயப் பேரரசையே திறம்படக் கவனித்துக் கொண்ட உன் உயர்ந்த அறிவை எப்படிப் போற்றுவது கண்ணே! குணத்தின் குன்றான என் மும்தாஜை என்னால் எப்படி இழக்க முடியும்?

ஷாரா:- பிரபு! இதோ நம்மூத்த மகள் ஜகன்நாராபேகம். நம் குழந்தைகளை மறந்து விடாதீர்கள்! என்னைப் பெற்றவர்களையும் பாதுகாப்பது தங்கள் கடமை!

ஷாஜ:- (கதறி) ஐயோ மும்தாஜ்! மீண்டும் மீண்டும் மாண்டு போவதை ஞாபகப் படுத்துகிறாயே! என்னை ஏன் ஷாரா கொல்லாமற் கொல்லுகிறாய்? நீ இல்லாத வாழ்வும் எனக்கொரு வாழ்வா? பொல்லாத பிரிவுப் பாலைவனத்திலே என்னைப் பிடித்துத் தள்ளாதே ஷாரா! தள்ளாதே!..மும்தாஜ்!

ஷாரா:- ஏன் பிரபு இப்படிப்பதறுகிறீர்கள்? அரசைப் பற்றிக்கவலைப்படாமல் என் மரணத்திற்காக வீணே துன்பப் படுவதை நிறுத்தி கொள்ளுங்கள்! நாட்டின்மீது அக்கறை காட்டுங்கள்! புகழ் பெறுங்கள்! (நிதானமாக) பிரபு! ... பிரபு! பிரிந்து போகிறேன்! என்னை மன்னியுங்கள்!...

[சக்கரவர்த்தினி மும்தாஜின் உயிர் பிரிகின்றது]

ஷாஜ:- (அளவற்ற துன்பத்துடன்) ஷாரா! மும்தாஜ்! அரண்மனையின் அழகே உருவான மணிமகுடமே! உன்னை இனி என்று காணப் போகிறேன்? கண்ணே! புனிதமான காதலுக்குப் புதுவழி வகுத்துக் கொடுத்த பெண் குலத்தின் வெள்ளிச் சரவிளக்கே! அழிவற்ற காதலுக்குத் தெளிவான முத்திரையிட்டுச் சென்ற என் எழுத முடியாத வண்ணச் சித்திரமே! என்னை ஏன் துடிதுடிக்க வைத்துவிட்டு அல்லாவின் அடிகளிலே அடைக்கலம் புகுந்துவிட்டாய் ஷாரா? நறுமணமலரே! என்னை நலிய வைத்து விட்டாய்! ஐயோ மும்தாஜ்! இன்பம் இறந்தது; துன்பம் பிறந்தது; வேதனை வளர்ந்தது! எல்லாமே பாழ்! கண்ணே ஷாரா! நம் கதை முடிந்துவிட்டது! ஆமாம், கதை முடிந்துவிட்டது மும்தாஜ்! [விரக்தியினால் சில நொடிகள் மௌனமாக இருக்கிறார், ஏதோ எண்ணியபடி] என் இன்பமே! கண்டுபிடித்து விட்டேன். உன்னை நான் தினமும் பார்த்துக் கொண்டிருக்க ஒரு பாதையைக் கண்டு பிடித்துவிட்டேன்! ஆமாம் மும்தாஜ்! இந்த உலகத்தையே வியப்பில் ஆழ்த்தப் போகிறேன்; அற்புதத்தின் சிகரம்; அழகின் கலைக்கூடம் என்று பாராட்டும்படியாக உனக்கொரு நினைவுச் சின்னம் எழுப்பப் போகிறேன். என்றுமே அழியாத நிரந்தரச் சின்னமாக அது விளங்கப்போகிறது! கண்ணே! உன்னை அடக்கம் செய்து, அதையே மகத்தான மாளிகையாக உருவாக்கிடப் போகிறேன். சலவைக் கற்களால்—விழிகளைச் சுண்டியிழுக்கும் சூரிய காந்தக் கற்களால்-மரகத நீலக் கற்களால்-கண்ணைக் கவரும் வைடூரியத்தால்—ஈழத்து இந்திர நீலக் கற்களால்— அராபி தேசத்துக் குருவிந்தக் கற்களால்— பாரசீகத்துச் செவ்வந்தி மணிகளால் சிறப்பான காதல் மாளிகையைக் கட்டி முடிக்கப்போகிறேன். மும்தாஜ்! என் ஆசைக்குகந்தவளே! அன்புக் கொடியே! நான் கட்டும்காதல் மாளிகையைக் கண்டு, உலகிலுள்ள காதல் ஜோடிகளெல்லாம் உன்னை நினைத்து நினைத்துப் புகழட்டும், பாடட்டும்! ஷாரா! ஷாரா! இதோவிரைந்து விட்டேன் அதிசயமான காதல் மாளிகையை அற்புதமாகக் கட்டி முடிக்க!

[சக்கரவர்த்தி வெறிபிடித்தவர் போல் ஓடுகிறார்; தளபதி கபார்கான் அவ்வரைப் பிடித்துக் கொள்கிறான். மயக்க முற்றுக் கீழே சாய்கிறார் மன்னன்.]

[ஷாஜஹான் தன் காதற்கிழத்தியின்மீது கொண்டிருந்த ஆழ்ந்த அன்பின் அடையாளமாக ஒளி வீசி, உலகத்தின் பார்வையைத் தன்பால் இழுத்துக் கொண்டிருக்கிறது. அவர் கட்டிய தாஜ்மஹால்! உலக அற்புதங்களில் ஒன்றெனப் போற்றப்படும் அந்த மாளிகை, இருபதினாயிரம் மனிதர்களின் அரும் முயற்சியால்—பதினேழு ஆண்டுகளில்—நான்கு கோடி ரூபாயில்- உஸ்தாத் ஈசா என்னும் கட்டிடக் கலைச்சிற்பியின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப் பெற்றதெனச் சரித்திரம் கூறி மகிழ்கிறது; வாழ்த்துகிறது! காதலின் பெருமைக்குப் பரணிபாடும் அந்த அழகு மாளிகை வாழ்க!]

பொருளாளர் அறிவிப்பு

நான் கலந்துகொள்ளும் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் தேர்தல் நிதியாகக் குறைந்தது 250 ரூபாயும், அதற்கு மேலும் தருவதாக வாக்களித்துக் கடிதம் எழுதியுள்ள கிளைக் கழகங்கள் அந்தந்த வட்டச் செயலாளர்கள், அல்லது அந்தந்த மாவட்ட, மாநிலச் செயலாளர்களிடம் அந்தப் பொதுக் கூட்டத்திற்கான அனுமதி பெற்று, உடன் எனக்கு, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைத்தால் ஜனவரித் திங்களில் தேதிகள் குறித்தனுப்ப வசதியாக இருக்கும்.

கிளைக் கழக முகவரியுடன் எந்த வட்டம், மாவட்டம், அல்லது மாநிலம் என்ற விவரமும் தேவை. ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அன்பன்,

மு. கருணாநிதி,

(தலைமைக் கழகப் பொருளாளர்)

'அறிவகம்', சென்னை-13.

பெருமுயற்சிக்குப்பின்
பெருமிதத்தோடு 1961 ஜனவரி முதல் வெளியிடுகிறோம்

பொன்னி

(மாத மிருமுறை)

ஆசிரியர்: **கண்ணப்பாவள்ளியப்பன்**

டாக்டர் மு. வ. வின் தொடரோவியமும்
கவிஞர் **கண்ணதாசன்** அவர்களின் தொடர்காவியமும்
இடம் பெறுகிறது.

விலை 25 காசுகள்

பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

எழுதுக:

பொன்னி அலுவலகம்,
158, பெரிய தெரு, சென்னை-5.

குறிப்பு: இனமுழக்கம் பட்டியல் பாக்கி இல்லாமல் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டும் முதற்சலுகை அளிக்கப்படும்.

பார்வைக்கு வந்தவை

தனித்து வாழும் சின்னஞ்சிறிய நாடுகள்

ஆசிரியர்; **கொங்குவேள்**

விலை ரூ. 1—00

கிடைக்குமிடம்:
நால்வர் பதிப்பகம்,
சென்னை-15.

இயக்கத்துக்கென்று நம்முடைய இலட்சியத்தைக் குறித்து விளக்குவதற்கென்று எத்தனையோ நூல்கள் வந்திருக்கின்றன. அவைகளால் நம் இனப்த் திராவிடர் பயன் பெற்றனர்; பயனடைந்தும் வருகின்றனர். அப்படிப் பயன் பெறத்தக்க நூல்களில் ஒன்றாக, 'தனித்து வாழும் சின்னஞ்சிறிய நாடுகள்!' என்னும் வரலாற்று நூலையும் சேர்க்கலாம். இதன் ஆசிரியர் கொங்குவேள் அவர்கள், அரசியல் திறனாய்வு மிகுந்தவர் என்பதை இந்நூல் தெளிவாகக் காட்டுகின்றது.

'திராவிடம் தனிவாழ இயலாது!' என்பது இன்றுள்ள மாற்றுக் கட்சியினர் முதுமை உளறல். அவ்வுளறலை அடக்கி ஒடுக்கத் தக்க வகையிலே, தனித்து வாழும் பன்னிரெண்டு சின்னஞ் சிறிய நாடுகளைச் சுட்டிக்காட்டி, திராவிடம் தனித்து வாழுவதற்குரிய விளக்கத்தை விரிவான முறையிலே நல்கியுள்ளார், இதன் ஆசிரியர். அன்சா, ஈரான், ஈராக், துருக்கி, இஸ்ரேல், ஜோர்டான், எகிப்து, சிரியா, எதியோப்பியா, கனா, லைபீரியா, போன்ற சின்னஞ்சிறிய நாடுகளையும், அவற்றில் வாழ்கின்ற மக்கட் தொகையையும், வாழ்க்கைக்குறிப்புக்களையும் உரையாடல் மூலமாக சுவையாக்கித் தந்துள்ளார்.

அன்சாவிலே தொடங்கி, லைபிரியாவரை முடித்துள்ளார். உண்மையிலேயே இது இயக்கத்துக்குரிய இன்பநூல். நடையில் சுவையும் நற்கருத்தில் புரட்சியும் எதிரொலிக்கின்றன. எதிர்க்காலச் சமுதாயத்துக்கு ஏற்றம் தரும் வகையில் எழுத்துக்களை உணர்ச்சிகளாக்கித் தந்துள்ளார். பயனுள்ள நூல்!

—**வே. க.**

அறிவிப்பு

"இனமுழக்கம்" அலுவலகத்திற்கென 'டெலிபோன்' வசதி செய்யப்பட்டிருக்கிறது.

'இனமுழக்கம்', 'பொன்னி' 'காவியக் கழகம்' சம்மந்தப்பட்ட விவரங்களுக்கு கீழ்க்கண்ட எண்ணுள்ள டெலிபோனில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

டெலிபோன் எண்: **83592**

—நிர்வாகி.

பேரனுக்கு...!

ஆசிரியர் அவர்களின் தவிர்க்கமுடியாத வெளியூர்ப் பயணத்தால், இந்த வாரம் 'பேரனுக்கு', 'கேள்வி—பதில்' இடம்பெறவில்லை. அடுத்த வாரத்திலிருந்து தொடர்ந்து வருமெனத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

—நிர்வாகி.

ஆசிரியர்: சி.பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர்: கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5;

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சி
வாரந்தோறும் 30000 பிரதிகள் விற்பனையாகும் கழக ஏடு!
அமுதன்

ஒரு கண்ணிலே வெண்ணெய்; இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பா?

ஆர்விப்பட்டி
ப. மு. இளங்குமரன்

★ 'நீதியை அநியாயக்காரன் வெற்றிகொள்ளவே முடியாது!' என்றான் நெப்போலியன்.

பெற்று வளர்த்துப்பேணிப் போற்றும் அன்னை, தான் பெற்ற குழந்தைகளுக்கு ஒரே விதமான பாதுகாப்பு, வளர்ப்பு, உணவு இவற்றைக் கொடுத்து நல்ல முறையில் பேண வேண்டும். இதுதான் முறை; ஒரு சரியான தாய்க்குரிய இலக்கணமுங்கூட! அதை விடுத்து, ஒரு மகனுக்கு அறுசுவை உண்டி கொடுத்து வருவதும், இன்னொரு மகனுக்கு உப்பேயில்லாத மொட்டைக் கூழை உடைந்த சட்டியில் ஊற்றித் தந்து மூச்சு விடாமல் குடிக்கும் படித்தடியால் அடித்து வருவதும் அந்தத் தாயின் வழக்கமான செயலென்றால், அவளுக்கு நாம் என்ன பட்டத்தைச் சூட்டுவோம்? ஒன்று, அவள் ஒரு கொடுமைக்காரியாக இருக்க வேண்டும்! மற்றொன்று, இரண்டு குழந்தைகளில் ஒன்று உருப்படாமல் போக வேண்டும் என்று அவள் மனத்தில் கீழான நினைப்பு ஊறிப் போயிருக்க வேண்டும்!!

இந்தத் தரங்கெட்ட—தறுதலைப் போக்கான தாயின் ஸ்தானத்தில் மானங்கெட்ட மத்திய அரசு தோற்றம் தருகிறது. அந்த அரசு தென்னாட்டுக்குச் செய்யும் ஓரவஞ்சனைகள் ஒன்றா, இரண்டா? அப்பப்பா! இனமுழக்கம் ஏட்டில் கூட இடங்கொள்ளாதவை! "எப்படி யப்பனே?" என்று எகிறிக் குதிக்கும் துப்புக் கெட்டவர்கள் — பட்டப்பகலில் 'அண்ணா'வென்று அழைத்து, நட்ட நடு நிசியில் 'ஆசை அத்தானே!' என்று அழைக்கும் பரம்பரைப் பரத்தையின் பண்பு பெற்றவர்கள், நம்மை நோக்கி நாயின் அவதாரம் எடுக்கிறார்கள்! ஐந்தறிவு படைத்த விலங்கினும் இழிந்தவர்கள்!!

தென்னகம் என்று சொன்னவுடன் மரமண்டையான மத்திய அரசுக்கு ஆழாக்கு வேப்பெண்ணெயை அப்படியே மடக் மடக்கென்று குடித்ததுபோல் ஆகிவிடுகிறது! வடக்கு எனக் கூறியவுடன் வாய் நிறையச் சர்க்கரையை அள்ளிப் போட்டது போன்று இனிக்கிறது; ருசிக்கிறது! இந்த இமாலயப் பாகுபாட்டை எடுத்துக் கூறுபவர்களைக் கூறுபோட்டு விடுவதாகத் 'தப்பிலி' ஆட்டம் போடுகிறது மத்திய அரசு.

"தென்னாடு வளர்ச்சியடைவதற்கு வளமும், வாய்ப்பும் இருந்தும், திட்டக் குழு தென்னக வளர்ச்சியில் போதிய கவனம் செலுத்தவில்லை என்ற மனக்குறை தென்னாட்டு வணிகர்களிடையே நிலவி வருகிறது." என மைசூர் தொழிலதிபர் சாரங்கபாணி கூறியிருக்கிறார். அவர் மேலும்," தென்னாட்டில் துணித் தொழில், உரத்தொழிற்சாலைகள், ரேயான் மற்ற தொழிற்சாலைகள் ஆகியவற்றை விரிவுபடுத்துவதற்கோ அல்லது ஏற்படுத்துவதற்கோ பெருமளவில் வாய்ப்புக்கள் உள்ளன! தென்னாட்டில் ஒரு ரேயான் தொழிற்சாலை கூட இல்லை! அப்படியிருந்தும், ஏற்கெனவே வளமான பகுதிகளாக (வடக்கு) உள்ள இடங்களில் ரேயான்தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அனுமதியளிக்கப் படுகின்றன!" என்று குறை பட்டிருக்கிறார். ஒவ்வொரு சிறு துறையிலும் இந்த நாடு தூரவே தள்ளி வைக்கப்படும் கொடுமையை எப்படி வர்ணிப்பது?

ஜென்மப் பகைவன் கூட அஞ்சுவான் இப்படிச் செய்வதற்கு! என்றாலும் இந்த வடநாட்டு அரசு செய்கிறதே! நமது தாய் நாடு (சில புல்லுருவிகள்) தாள் பணிந்து வரவேற்கிறது. இங்குள்ள நம் 'அறிவு சான்ற' அமைச்சர்கள் மூச்சுவிடாமல் திருப்பதிக்குச் சென்று திருப்தியுடன் தலையை மழுங்க மொட்டையடித்து—ருத்ராட்ச மாலைகளைக் கழுத்தில் அணிந்து — களிப்போடு காவியுடுத்தி—கையிலே திருவோடு ஏந்தி, 'சங்கரா, சங்கரா சம்போ! இந்த வடநாட்டின் மீது ஏன் இந்த வம்போ! என்று பாடிக் கொண்டே கைலாசம் பார்த்து நடையைக் கட்டட்டும்! மூளையைச் சூளையில் போட்டு விட்டு,முழு 'யோக்கியர்'களாகத்திரியும் மண்ணாங்கட்டி மந்திரிகள்! சீச்சீ!... தன் புத்திதான் இல்லை; சொல் புத்தி கூடவா இல்லாமல் போகவேண்டும்? அடக் கடை விளக்கே! (கடை விளக்கு — கடவுளுக்கு மறுபெயர்' இது பகுத்தறிவு அகராதி சொன்ன கேலி இலக்கணம்).

"எஃகு, நிலக்கரித் தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாவது திட்டத்தில் உருவாக்கப்பட்ட பெரும் வளர்ச்சித் திட்டங்களால் பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகள்தான் அதிகளவில் பயன்பெற்றன. ஆனால் தென்னாடு பெருமளவில் பயன்பெறவில்லை!"

மைசூர் தொழிலதிபர் சாரங்கபாணி கழகத்தைச் சார்ந்தவரல்லர். இருந்தாலும் இதயங்குமுறிக் கூறுகிறார் தென்னாடு ஒதுக்கிவைக்கப் படுகிறது என்று! இங்குள்ள அஷ்டதிக்குப்பாலகர்கள் (எட்டு மந்திரிகள்) என்ன பதில் சொல்லுவார்கள்? "அரசியல் வாதியாக இருப்பது எளிது! மனிதனாக வாழ்வதுதான் கடினம்!" என்ற மாஜினியின் மணிமொழியானது இந்த அறிவாளிகளைப் பொறுத்தமட்டில் மெய்யாக இருக்கிறது.

"அரசியல் விடுதலையால் மட்டும் ஒரு நாடு நல்வாழ்வு கண்டுவிட முடியாது. அரசியல் உரிமை அடைந்துள்ள இந்தியா, பொருளாதாரச் சுதந்திரமும், சமுதாய நல வளர்ச்சியும் பெற்றாலன்றி, அனைத்துலக அரங்கில் அது முன்னணிச் சிறப்பிடம் வகிக்க முடியாது." என்று மதுரைத் தொழில் மன்னர் நினைவுபடுத்தி யிருக்கிறார். இத்தோடு நின்றுவிடாமல், "திட்டங்களைத் திட்டிவிடுவதால் மட்டும் முன்னேறிவிட இயலாது. ஒவ்வொரு வட்டாரத்தின் தேவைகளையும் நன்கு கவனிக்கவேண்டும்." என்றும் குறிப்பிட்டிருக்கிறார்; குத்திக் காட்டிப் பேசியிருக்கிறார்.

'ஆனை, பூனை அறுபத்திரண்டு' என்று உயர்ந்த திட்டங்களைத் தீட்டிவிட்டு— பிறகு எச்சில் கையை வடக்கு நோக்கி நீட்டிக் கொண்டு, கோவணத் தாண்டிகளைப் போல் காட்சி கொடுப்பது தான் சிறப்பா? பாதையோரத்தில் கிடந்து, பசியால் துடிதுடிக்கும் மனிதனுக்கு 'கெடில்லாக் காரில்' பறக்கும் சீமான் வந்து உதவி செய்யமாட்டான். அவன் ஏறிப்போகிறானே அந்தக் கார், அதை முதலில் பிடுங்க வேண்டும்! ஏன்? அந்தக் கார் 'திடீர்'ப் பணக்காரனின் உடைமையல்ல; பாதையில் கிடக்கும் பட்டினியாளனைச் சேர்ந்தது. ஆமாம், வரி கொடுத்து அவன் ஓட்டாண்டியானான்; அதை வாங்கி— வயிற்றில் போட்டுக் கொள்ளும் அந்தத் திடீர்ப் பணக்காரன் செல்வத்திற்கு அதிபதியானான்! இந்த நாட்டின் செல்வம் ஆண்டுதோறும் கோடி கோடியாக வடநாடு போகிறது. திரும்பி எந்த ரூபத்திலும் வருகிறதா? யானை வாயில் போன கரும்பின் கதை தானே நடக்கிறது!

திருவனந்தபுரம் வணிகர் கழகத்தைச் சார்ந்தகலைமான் செயித் என்பவர், தென்னிந்திய வணிகர் மாநாட்டில் பேசுகையில் "இந்திய அரசு தென்னகத்தை மாற்றாந்தாய் நோக்கோடு கவனிப்பது வருந்தத்தக்கது." என்று வேதனைப் பட்டிருக்கிறார். எத்தனையோ ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவரும் தூத்துக் குடித் திட்டம் கூட இன்னும் முழு அளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகக் காணோம்! நாடு பிரிந்த பிறகு மேற்கொள்ளப்பட்ட காண்ட்லா துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது!! காரணம்? திராவிடர்கள் விவரமே தெரியாத சோணாசலங்கள் என்று திமிர் கொண்ட வடக்குத் தப்புக் கணக்குப் போட்டதன்—அப்படிப் போடவிட்டதின் கைகண்ட பலன் இது! மானம் உள்ளவர்கள் பதவியில் இருக்கக்கூடாது! ஏதாவது ஒரு மூலையைத் தேடிப்போய் முக்காடு போட்டுக் கொண்டு அடங்கிக் கிடக்கட்டும்!! அமெரிக்காவில் உள்ள மக்கள் எண்ணிக்கையில் ஐந்து பேருக்கு ஒருகார் வீதம் வைத்திருக்கிறார்கள். ('ஏன் நம் பாரத நாட்டிலும் இல்லையா? பத்துப் பேருக்கு ஒரு மாட்டு வண்டி வீதம் இருக்கிறதே!' என்று இங்குள்ள கிராமத்துக் காங்கிரஸ் தொ (கு) ண்டர் கூறுவதிலும் ஆச்சரியமேயில்லை! அவர் அரசியல் ஞானம் அப்படி இருக்கிறது!) இந்த நாட்டுக்குக் கார் கூட வேண்டாம்; ஒரு தொழிலாளி தன் ஊதியத்தில் ஓர் ஒட்டைச் சைக்கிளாவது வாங்க முடிந்தால் அதுவே போதும்! முடியுமா?

இந்த லட்சணத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவு! 1950-51ல் ரூ. 48 கோடியாக இருந்த மத்திய ஆட்சித் துறைச் செலவுகள் மட்டும் 1958-59ல் ரூ. 200 கோடியாக உயர்ந்துவிட்டது! ('ஆன முதலில் அதிகம் செலவானால் மானமழிந்து, மதிகெட்டுப் போனதிசை—'எனத்தொடங்கும் ஔவைப்பாட்டியின் பாடல் வடவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது!) இந்தியாவின் தேசிய வருமானம் பத்தாண்டுகளில் 40 சத விகிதமே கூடியிருக்க, ஒன்பது ஆண்டுகளில் மத்திய ஆட்சித் துறைச் செலவு 417 சத விகிதத்தில் பெருகியிருக்கும் அவல நிலையை எண்ணவே மனம் துடிக்கிறது. வரவு ஒரு பங்கானால், இந்த யோக்கியரின் செலவு பத்துப் பங்குகள்!

'சக்திக் கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற ஊதியம்!" என்ற கார்ல் மார்க்ஸின் கருத்தான கொள்கை, ஆடிக் காற்றில் பறக்கும் சிறுதுரும்புக்குச் சமமாகிவிட்டது. இங்கே! "சக்திக்கு மீறிய உழைப்பு; தேவைக்கும் கூடுதலான வறுமை!" என்று புதுமொழி பைத்தியக்கார மொழி கூறும் காமராஜிஸம் - நேருசிஸம் நிறைந்து விட்டது! நிம்மதியில்லாத ஒரு நாட்டில் வாழ்வதைவிட, புலி வாழும் பயங்கரமான காட்டிலேயே வாழலாம்.

கொடுமைகள் - 'வைத்தால் குடுமி, எடுத்தால் மொட்டை' என்ற சர்வாதிகாரப்பாதைகள் - 'பிடி அடி, பிணமாக்கு' என்ற தான் தோன்றித் தர்பார்கள் என்றைக்கும் ஒரே மாதிரியாகக் கொடி கட்டிப் பறந்ததில்லை. "நீதியை அநியாயக்காரன் வெற்றி கொள்ளவே முடியாது!" என்றான் நெப்போலியன். இதைத்தான் இங்குள்ளவர்களுக்கு நினைவுபடுத்துகிறோம். உங்கள் ஆணவமான அதிகார பீடம் ஆடுகிறது; அதைக் கண்டு சாவுகுருவி பாடுகிறது; கதையும் முடிகிறது! இனி தொடங்கப் போவது புதுக்கதை; ஆமாம், கழகக்கதை! அதைப் படிக்க — தெளிவடைய எல்லாருமே தயாராகிக் கொள்ளுங்கள்! வீண் பிடிவாதத்தை விட்டு விடுங்கள்!!

சந்தாதாரர்களுக்கு!

இனமுழக்கம் பொங்கல் மலர் இந்த ஆண்டு மிகச் சிறந்த முறையில் வெளிவர இருப்பதை நமது விளம்பர வாயிலாக அறிவீர்கள். விலை. ரூ 4-00 மலர் வேண்டுவோர் மலருக்கென தனியாகப் பணம் அனுப்பி வைக்க வேண்டும். பதிவஞ்சல் செலவுத் தொகை 75காசு சேர்த்து ரூ 4-75 தனிப் பிரதிக்கு அனுப்பி வைக்க வேண்டு மென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். —நிர்வாகி

வட நாடு பருகுவது பழரசம்!
திராவிடத்துக்குத் தரப்படுவது பாதரசம்!

இனமுழக்கம்
ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

மலர் 2] ★ 23—12—60 ★ [இதழ் 17

யாரைக் கேட்டீர்?

வங்கத்தின் ஒரு அங்கமாக இருக்கும் பெருபாரியை பாகிஸ்தானுக்கு மாற்றும் எண்ணத்தையும், அதனுல் முன்னுள் பாகிஸ்தான் தலைவர் நூன் அவர்களோடு செய்துக்கொண்ட ஒப்பந்தமும் இதுநாள் வரை வங்கச் சட்ட சபைக்குத் தெரியாமலே இருந்தது என்ற நிலையைத்தான் இன்று வங்கச் சட்டசபையில் நடந்துகொண்டிருக்கும் காரசாரமான விவாதங்களும், கடுமையான தாக்குதல்களும், பொதுவேலை நிறுத்தங்களும் அறிவிக்கின்றன. நேரு எவ்வளவுதான் அதிகாரம் படைத்தவராக இருந்தாலும் நூனேடு செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் நகலை ஏன் எங்களுக்குத் தரவில்லை. நமது மாநிலத்தின் ஒரு பகுதியை பிற அரசாங்கத்திற்குத் தர யாரைக் கேட்டு சம்மதம் அளித்தார். கேட்பது தேவையில்லை அது தன் கௌரவத்திற்கு இழுக்கு என்று கருதினுல் அவரை (நேரு) எப்படி நாம் ஜனநாயகவாதி. சோஷலிசப் பிரியர் என்று ஒப்புக்கொள்ள முடியும், ஆகவேதான் அவரை நாம் சர்வாதிகாரி என்கிறோம். இப்படியே அவரை விட்டுக்கொண்டு போனுல், நாளை வங்கமே எங்களுக்குச் சொந்தம் என்று சொன்னுல்கூட, ஆம், உங்களுக்குத்தான் சொந்தம் என்று நேரு நம்மை யாரையும் கேட்காமல் கொடுத்துவிடுவார் போலிருக்கிறதே. மாற்ற உத்தேசித்திருக்கும் பெருபாரியின மக்கள் தொகை பத்தாயிரந்தான். அவர்கள் எங்கே இருந்தாலும் ஒன்றுதான் என்று வங்க சர்க்கார் நினைக்கவில்லை. ஏற்கனவே பாகிஸ்தானுல் விரட்டியடிக்கப்பட்டு வங்கப் பகுதிகளுக்கு ஓடி வந்தவர்களை எண்ணும்போது தம் மாநிலத்தில் வாழ்ந்து விட்டவர்களை உயிரோடு வாரிக் கொடுக்கத் துணியவில்லை. இதில் மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் அடித்துக் கொள்ளுகிறதே தவிர பெருபாரியில் வாழும் மக்களின் முடிவென்ன வென்பதை யாரும் கேட்டதாகத் தெரியவில்லை. ஒரு வேளை மாநில சர்க்கார் கேட்கத் தயாராக இருந்தாலும் மத்திய சர்க்கார் அதற்குத் தயாராக இல்லை. ஏனென்ருல் நேரு ஏற்கெனவே ஒப்புக் கொண்டார். ஆகவே அது மறுபடியும் நடந்து வந்து விட்டப் பாதைக்குத் திரும்புவதென்பது முடியாத காரியம்.

பி. சி. ராய்

இவர்தான் வங்கத்தின்முதலமைச்சர். பெருபாரி பிரச்னை வருகின்ற வரையிலும் வங்க மக்கள் மாத்திரமல்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் இதுவரை சிங்கமென்றே தோற்றமளித்தார் சொல்லாலும் செயலாலும் ஆனுல் இன்று—

சிங்கமா சுண்டெலியா? இன்று பகிரங்க சட்டமன்றத்திலேயே பல உறுப்பினர்கள், நீர் சிங்கமா சுண்டெலியா என்று கேட்கத் தொடங்கிவிட்டனர். பெருபாரி சம்மந்தமாக நீர் மகா கோழையாகி விட்டீர். யாரைக் கேட்டு நேரு இதைச் செய்தார் என்றெல்லாம் கேட்டு சீறி வீழ்ந்தார்கள்.

தன்மானத்திலே தலைமை!

அதற்கு அவர் சொன்ன சமாதானம் என்ன? நம்முடைய தன்மானத்தைக் காப்பாற்றுவதற்கு முன்னுல் நேருவின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். அவர் செய்தது சரியா தவரு என்பதை நாம் இப்போது யோசித்து கொணடிருக்கக் கூடாது. பாரதப் பிரதமரின் கட்டளைக்குக் கீழ்படிய வேண்டும். நாம் ஒரு சிறிய பகுதியை இழந்து விடுவதன் மூலம் பாரதப் பிரதமரை இழந்துவிடக் கூடாது என்ருர் ராய்.

திட்டம் தீட்டி விட்டாராம் நேரு

எது பாரதம்? எங்கே பாரதம்? இது பாரதம்தான் என்ருல் பதினெட்டாம் போர் தொடங்குவோம் என்று தொடங்கிவிட்டார்கள். அது சம்மந்தமாக சுப்ரீம் கோர்ட்டுக்குப் போன மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அந்த முடிவுக்குப் பிறகு நேருவின் ஏதேச்சாதிகாரம் உச்சநிலையை அடைந்து விட்டது. சரியோ, தவருே எது எப்படியிருந்தாலும் சரி, பெருபாரியைப் பாகிஸ்தானுக்குத் தந்துவிட முடிவு செய்துவிட்டேன். என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்.

வங்காளக் குமுறல்

வங்காளம், இது சுதந்திரச் சாசனத்தில் இரத்தக்கறை படிந்த இடம். லாலா லஜபதி ராய் முதற்கொண்டு இந்திய தேசீய இராணுவத்தின் தலைவர் சுபாஸ்சந்திரபோஸ் வரை பலரைப் பெற்றெடுத்த திருநாடு. நோபிள் பரிசு பெற்ற கவி ரவீந்திரரைப் பெற்றெடுத்த நாடு. அபினியை அளவில்லாமல் தயார் செய்து சீனத்துக்கனுப்பியதும் இதே வங்கம்தான். இங்கேதான் இன்று கொந்தளிப்புக் கிளப்பியிருக்கிறது. தங்கள் நாட்டிற்கு, தங்கள் மொழிக்கு, தங்கள் நாகரீகத்திற்கு கேடு வருகின்ற போது கிளர்ந்தெழும் மக்களைக் கொண்டது வங்கம். அது பாரதத்தை ஒட்டிக் கொள்வதில்லை. மத்திய சர்க்கார் ஊதும் மகுடிக்கு அது என்றுமே அடங்கிப் போனதில்லை. மறுத்தும் மண்டையிலடித்தும் இருக்கின்றது. சுதந்திரம் என்ற சொல்லில் அடங்கியிருக்கும் உண்மையான பொருள் என்ன, ஒரு மாநிலத்தின் மேல் மத்திய சர்க்கார் தன் இஷ்டப்படி ஆதிக்கம் செலுத்துவதுதான் சுதந்திரம் என்ருல், அந்த சூது நிறைந்த சுதந்திரம் ஒழிக' என்று கொக்கரிக்கின்றனர்.

எல்லை எது?

திராவிடத்தின் எல்லை எது என்று இங்கே அர்த்தமில்லாமல் கத்திக் கொண்டிருக்கின்றனவே சில இரண்டு கால் பிராணிகள். அதுகளைக் கேளுங்கள், சுதந்திரம் வந்து 13 ஆண்டுகள் ஆகிவிட்டனவே இன்றும் சீனத்தின் எல்லை எது? பெருபாரி யாருக்குச் சொந்தம்? பாகிஸ்தான் எல்லை எது. கோவா-டையு-டாமன் பிரச்னை ஏன் இன்றும் தீர்க்கப்படவில்லை இவைகளே தீர்க்கப்படாமலிருக்கும் போது - காங்கோ பெல்ஜியம் பிரச்னையைப் பேசி என்ன பயன் என்றெல்லாம் அவர்களைக் கேளுங்கள். வீட்டில் ஓராயிரம் ஊழல்களை வைத்துக் கொண்டு தெருவுக்கு பெரியதனம் செய்யப் போவது அழகாயிருக்குமா என்றெல்லாம் கேளுங்கள். அவைகளுக்குப் பதில் சொல்லமுடியாத காரணத்தினுல்தான் வெட்டுகிறேன், குத்துகிறேன் என்கிருர்கள். அதன்படி சில விடங்களில் செய்தும் பார்க்கிருர்கள்.

அகில பாரதம் எங்கே?

கீழே இறைத்த சோற்றுப் பருக்கைகளை காக்கைகள் கௌவிக் கொண்டு போவதுபோல் இந்தியா சிறுகச் சிறுக வெட்டி எடுக்கப் படுகின்றது. அதில் பெருபாரி ஒரு துண்டு. எங்கே உங்கள் அகில பாரதம் என்று கேட்கிருேம்.

அன்பன்,





23-12-60 இனமுழக்கம் 5

மறவர் குலத்து மணிப்புரு

கே. ஜி. இராதாமணாளன்

முன்கதைச் சுருக்கம்...

வேங்கி நாட்டின் வடக்கே, கோதாவரி ஆற்றின் அருகே ஒரு பாசறை! அந்தப் பாசறை விட்டு ஒரு வண்ணச் சிலை நிகர் கன்னிப் பெண்ணொருத்தி வந்தாள். அருகில் நின்ற அழகு மானைப் பிடித்துக்கொண்டு எங்கோ புறப்படத் துடித்த பாவையை ஒரு மாவீரன்-மங்கைக்குத் தெரிந்தவன் மறித்து, வினாவைப் போட்டான். தங்கப்பதுமை தாமரைக்குளம் போகிறேன் என்றாள்.

நெடுந்தோள் வீரனான சக்திவர்மன், 'இராசராச சோழர்' நமக்கு உதவப் போவதாகத் தம்பி விமலாதித்தன் தகவல் அனுப்பியுள்ளான்' என்றான். நங்கையான வல்லபியோ அந்த உதவியை உதாசீனப்படுத்திப் பேசுகிறாள்; அலட்சியமாக எண்ணுகிறாள். சக்திவர்மன் உள்ளம் வருந்தியது.

'சோழ வளநாட்டின் புகழ் வாய்ந்த மன்னர் இராசராசன். படைபலம் மிக்கவர்; அவரைப் பணிந்தவர் வாழ்வர்; எதிர்த்தவர் வீழ்வர். தங்கள் தம்பி விமலாதித்தன் அவர் புதல்வி குந்தவைப் பிராட்டியை மணந்து கொண்டவர். எனவே, தன் பெயருக்குள்ள அவமானத்தைக் கழுவிக் கொள்ளவே நமக்கு உதவுவதாகக் கூறியிருக்கிறார். அவர் உதவி என் மகிழ்ச்சிக்குப் பெருஞ்சுவராக நிற்கிறது.' என்றாள் வல்லபியான அந்த வனிதாமணி.

அவனை விழிக்கச் செய்கின்றன வல்லபியின் வார்த்தை மணிகள். தன் தந்தையைக் காப்பாற்றப் போய் போரில் மடிந்த கலிங்க மன்னன் காமார்ணன் தன் உயிரிழந்தார் என்பதை நினைத்து அவன் நெஞ்சம் நெக்குருகி நின்றது. அவளுக்கு முன் வீர சபதம் எடுக்கிறான். 'என் குருதியின் சிவப்பு மாறு முன்பு உன் தந்தையின் பிணத்தின்மீது நான் செய்த சத்தியம் ஒரு போதும் அழியாது' என்று ஆவேசமாகச் சக்திவர்மன் மொழிந்தான்,-பாசறைக்கு விரைந்தான்.

மான் விழியாள் வல்லபியோ, மான் இழுத்த திசையில் நடையைப் போடுகிறாள்.

குளத்தில் கால்களை வைக்கும்போது அருகில் பேச்சுக் குரல் கேட்கவே, மறைந்து நின்று கவனித்தாள் கட்டழகி வல்லபி. எதிரியான ஜடா சோட வீமனின் குதிரைப் படைத் தலைவன் நரேந்திரனையும், இன்னொருவனையும் கண்டாள்; வியப்பால் விழிகளை அகலத் திறந்தாள்.

"பகைவரின் ஆட்கள் இந்தக் காட்டிலும் நடமாடிக் கொண்டிருப்பார்கள் !" என்று சிறிது நேரத்திற்கு முன்பு சக்திவர்மன் சொன்னது, அவள் காதில் வந்து ஒலித்தது.

"நரேந்திரன் இப்படி விழுந்திருப்பதும், அவன் உடலில் இரத்தம் கொட்டும் காயங்கள் என்பதும் உண்மையாக இருக்கா ! இது ஏதோ நடிப்பு !" என்று நினைத்ததும், அவள் நெஞ்சில் திடீரென்று நெருப்புப் பற்றி யெழுந்தது !

2

மோகினிப் பெண்!

நரேந்திரன் மெல்ல எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் வெறித்த பார்வையோடு தன் நண்பன் செல்லையனைப் பார்த்தான். செல்லையன் அருகே இருந்த சில பச்சிலைகளைப் பறித்து வந்து, அரைத்து நரேந்திரனின் காயங்களுக்குத் தடவினான்.

"நரேந்திரா ! நீ சொல்வது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை ! சயசிங்கன் பிரதம தளபதியாக இருந்தாலும், நாட்டு மக்களின் மதிப்பைக்கவர்ந்து அவர்கள் மனதில் நிறைந்தவன் நீதானே ! அரசர் உன் மீது மிகுந்த நம்பிக்கையும் அன்பும் கொண்டவர் ! அரசிக்கு என்றால்... சொல்லவே வேண்டாம் ! அத்தகைய நீயா, சயசிங்கன் மீது கொண்ட ஆத்திரத்தினால் நாட்டிற்கே திரும்பமாட்டேன் என்று கூறுவது? இது சரியல்ல நரேந்திரா, சரியல்ல!" என்றான் செல்லையன்.

நரேந்திரன் பதிலொன்றும் கூறாமல், ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவாறு மௌனமாக இருந்தான் !

"எப்படி நடப்பது என்று யோசிக்கிறாயா! அந்தக் கவலை உனக்கு வேண்டாம் ! நான் இருக்கிறேன்! தூக்கிக் கொண்டு போய் விடுகிறேன் !"

செல்லையன் இவ்வாறுகூறியது, கவலையோடு இருந்த நரேந்திரன் முகத்தில் சிரிப்பைக் கூட்டி வந்து பூட்டியது !

"அடேயப்பா ! அவ்வளவு பலம் உன் உடம்பில் இருக்கிறதா ?" என்று நரேந்திரன் சிரித்துக் கொண்டே நண்பனின் முதுகில் ஒரு தட்டுத் தட்டினான் !

அந்த ஒரு தட்டுக்கே, செல்லையன் உடல் ஆயிரம் வளைவுகளாக வளைந்து நெளிந்து, பழைய நிலையில் நிமிர்ந்து நிற்க சில நொடிகள் பிடித்தன !

"பலம் உடலில் இல்லை நரேந்திரா, இதோ உள்ளத்தில் இருக்கிறது ! இந்த மனம் நினைத்தால், வானத்தையும் தரைக்கு இழுக்க முடியும் ! தரையையும் பாயாகச் சுருட்டமுடியும் !... அவசரம், தாமதித்தால் லட்சுமணனின் உயிர் போனது போனதே, திரும்பாது ! சஞ்சீவி மூலிகை உடனே தேவை என்று நினைத்த அடுத்த கணம், அனுமான் என்ன செய்தான்? ஏறினானா மலையை? தேடினானா மூலிகையை? இல்லை, அலுக்காமல் அந்த மலையை அப்படியே தூக்கிக் கொண்டு வந்துவிட்டான் அல்லவா ! அதை நீ நம்பமாட்டாய் கட்டுக் கதை என்பாய்! நான் சொல்கிறேன், அதில் அபூர்வமான தத்துவமிருக்கிறது என்று! மனம் ஒன்றைச் செய்ய வேண்டுமென்று நினைத்து விட்டதோ — அது கடலாக இருந்தாலும் தாண்டி விடும்—மலையாக இருந்தாலும் பெயர்த்துக் கொண்டு வந்து வைத்துவிடும் !..."

"செல்லையா! இப்போ நீ அனுமானாக மாறவேண்டும் !"

"சஞ்சீவி மூலிகை வேண்டுமா? சந்திரவதன சீதையைத் தேடிக்கொண்டு வர வேண்டுமா?, சொல், செய்கிறேன் !"

"இரண்டும் வேண்டாம் ! தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும் !"

"சே ! இவ்வளவுதானா ! இதோ, குளத்தையே தூக்கிக் கொண்டு வந்து விடுகிறேன் !" என்று வேகமாக எழுந்தான், செல்லையன்.

பனங்கன்றின் ஓலைகளின் மறைவில் நின்றபடி அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வல்லபி, வருபவன் கண்ணில் பட்டுவிடப் போகிறோம் என்று பயந்து, அடுத்திருந்த புதருக்குள் நுழைந்து விட்டாள்.

இரண்டடி எடுத்துவைத்த செல்லையன், தயங்கி நின்றான்.

"என்ன ?" என்று நரேந்திரன், கேலிச் சிரிப்போடு அவனைக் கேட்டான்.

"தண்ணீர் குடித்தானதும், நீ வேங்கிக்குத் திரும்பி விடுவாய் அல்லவா ?"

"திரும்புவதைப் பற்றி என்ன அவசரம், முதலில் நீ தண்ணீர் கொண்டு வா !"

"இந்தக் காடு மிகவும் அடர்ந்திருக்கிறதே..."

"ஏன் தயங்குகிறாய்— தண்ணீர் இங்கே இருக்குமா என்று கேட்கிறாயா ?"

"அதைப் போய் நான் கேட்பேனா ! தண்ணீர் இல்லாவிட்டால், தண்டாவிட்டதென்று திரும்பி விட்டேன் ! ஆனால்..."

"ஏண்டா, வார்த்தைக்கு வார்த்தை ஒரு நாழிகை இடை வெளி விடறே ! எனக்குத் தொண்டை வரண்டு போகிறது போய் விட்டுவா !"

"போறேன் — ஆனா திரும்பி வருவேனான்னு தான் சந்தேகமா இருக்கு !"

"ஏன் ?"

"இவ்வளவு பெரிய காட்டிலே, கரடி புலி சிங்கம்...... இப்படி யெல்லாம் இல்லாமலா போகும் !"

செல்லையனின் உடல்மட்டுமல்ல, குரல்கூட நடுநடுங்கியது.

புதரின் இடுக்கின் வழியே பார்த்துக் கொண்டிருந்த வல்லபி, கையால் வாயை மூடி சிரிப்பை அடக்கப்பார்த்தாள்.

"நல்ல கோமாளி!" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

தள்ளாடும் நடையோடு செல்லையன் அங்கிருந்து புறப்பட்டான்.

"இந்தப்பா, நடையை கொஞ்சம் வேகமாக்கு-தாகத்திலே என் உயிர் அதிக நேரம் தாங்காது ! சஞ்சீவி மூலிகை கொண்டுவந்தால் கூட, பிறகு என்னை எழுப்ப முடியாது !" என்று உரத்த குரலில் நரேந்திரன் கூறியதையும் — அதைக் கேட்டு செல்லையன் ஓடத்தொடங்கியதையும் — கண்ட வல்லபியின் செவ்விதழ்களிலிருந்து சிரிப்பு சிந்தியே விட்டது.

சிரிப்பொலி கேட்டுவிட்டதோ என்ற அச்சத்தால், அவள் தன் தலையைப் பின்னால் இழுத்துக் கொண்டாள். மீண்டும் மெல்ல எட்டிப்பார்த்தாள் நரேந்திரன் கண்களை மூடிக்கொண்டு தரையில் படுத்திருந்தான்.

இது நடிப்பாக இருக்குமோ என்று ஆரம்பத்தில் தோன்றிய அந்த ஐயம் தேய்ந்து மறைந்து விட்டதென்றாலும், புதுப்புது கேள்விகள் எழுந்தாட்டம் போட்டன.

"வேங்கியின் பிரதம தளபதி சயசிங்கனுக்கும் நரேந்திரனுக்கும் என்ன தகராறு ? தலைநகருக்குள் புகுந்த சக்திவர்மனின் போர்வீரர்களைச் சின்னாபின்னமாகச் சிதறுண்டு ஓடும்படி அடித்து விரட்டியதில், அரசனின் இரு கரங்களாக அல்லவா இவர்கள் போரிட்டார்கள் ! அப்படிப் பட்டவர்களுக்கு இடையே எதுபற்றி மோதல் ஏற்பட்டிருக்கும் ? பிறந்து வளர்ந்து, பேரும் புகழும் பெற்ற தாய் நாட்டையே மறந்து வெளியேறும் அளவுக்கு, நரேந்திரனுக்கு ஏற்பட்ட மனக்கசப்பு என்ன ? ஏதாவது குற்றம் சுமத்தப் பட்டாரா, அல்லது அவமானப் படுத்தப்பட்டாரா ?"

உள்ளத்தில் எழுந்த கேள்விகளுக்குப் பதிலறிய முடியாமல் வல்லபி, அந்தப் புதரை விட்டு வெளியே வந்தாள்.

நடக்கப் பழகும் சிறு குழந்தையைப் போல், அடிமேல் அடிவைத்து மெல்ல அவன் அருகே சென்றாள். அந்த ஆண் மகனின் முகத்திலே, தன் கயல் விழிகளை நீந்த விட்டாள்

முகத்திலே வியர்வை முத்துக்கள் தோன்ற, அவன் மிகவும் தளர்ந்த நிலையில் சோர்ந்து சுருண்டு கிடந்தான்.

"தாகத்திலே என் உயிர் அதிக நேரம் தாங்காது !" என்று அவன் சொன்ன வார்த்தைகள், அவள் பெண் உள்ளத்தில் சிலுசிலுப்பை உண்டாக்கின.

"பரம விரோதியானாலும், ஆபத்தில் உதவ வேண்டாமா ?" என்று சொல்வதைப் போல, அவளது கால்கள் அவளைத் தாமரைத் தடாகத்திற்கு இழுத்துச் சென்றன ! தாமரை இலையைப் பறித்து, அதைக் குவளையாக்கி தண்ணீரை மொட்டுக் கொடுத்தன, கரங்கள் !

அவன் அருகே தண்ணீரோடு அவள் வந்து நின்றதும், காற் சிலம்புகளின் சப்தம் கேட்டு, அவனது கண் இமைகள் திறந்தன.

வேகமாக அவன் எழுந்து உட்கார்ந்தான். அவன் அவ்வாறு எழுந்து உட்கார்ந்த பிறகுதான், தான் என்னசெய்கிறோம். என்பது அவளுக்குப் புரிந்தது !

தூரத்திலிருந்த மான் துள்ளிவந்து, அவர்களுக்கு இடையே நின்று, இருவரையும் மாறி மாறிப் பார்த்தது.

"யார் நீ ?"

இவ்வாறு ஆச்சரியத்தோடு கேட்ட நரேந்திரன், அவள் நீட்டிய தண்ணீரைத் தன்னிரு கைகளால் வாங்கிப் பருகினான்.

"நரேந்திரா ! நரேந்திரா ! நம்பாதே !

அது தண்ணீர் அல்ல ! குடிக்காதே !" என்று கத்திக் கொண்டே செல்லையன் ஓடிவருவதைக் கண்டதும், அவர்களிருவரும் திடுக்கிட்டு விட்டார்கள்.

"குடித்து விட்டாயா ! அய்யோ, இப்போ நான் என்ன செய்வேன் !" என்று அவன் பதைபதைத்து அழவே ஆரம்பித்து விட்டான்.

"இவள் யார் என்பது உனக்குத்தெரியுமா?" என்று வல்லபியின் முகத்தை உற்றுப் பார்த்தபடி, நரேந்திரன் கேட்டான்.

"இவள் யார், எங்கே வந்தாள், எதற்கு வந்தாள், எப்படி வந்தாள் -எல்லாம் எனக்குத் தெரியும் ! தண்ணீரைத் தேடிக்கொண்டு, நான் போனேன் போனேன், வெகு தூரம் போனேன் ! எங்குமே தண்ணீரே தென்படவில்லை ! இதில் ஏதோ மோசமிருக்கிறது என்ற சந்தேகம் என் மனதில் தோன்றியதோ இல்லையோ, உடனே திரும்பிவிட்டேன் ! வந்து பார்த்தால், இவள் தண்ணீர் கொடுக்க, நீ குடித்துக்கொண்டிருக்கிறாய் ! இப்படி மோசம் போவோம் என்று தெரிந்திருந்தால், இந்த இடத்தை விட்டு நான் நகர்ந்திருக்க மாட்டேனே !"

புலம்பும் இவனிடமிருந்து ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாதென்பதைக் கண்டு கொண்ட நரேந்திரன், அவளை முறைத்துப் பார்த்து, "நீ யார் ?" என்றான்.

அவள் திருதிருவெனவிழித்தாள். என்ன சொல்வதென்றே புரியாமல் திணறினாள்.

"யார் நீ—மரியாதையாகச் சொல்லிவிடு !" என்று அதட்டி கேட்டபடி, நரேந்திரன் உடைவாளை வெளியே எடுத்தான்.

"நீ குத்து, வெட்டு, துண்டு துண்டாக்கிப் போடு ! அப்போதும் இவள் வாயிலிருந்து உண்மை வராதே ! முயற்சி செய்துபார், முடிகிறதா உன்னால் என்று! அதுதான், நடக்காது ! எனக்குத் தெரியாதா-இவளைப்பற்றி கதை கதையாக நான் எவ்வளவு கேட்டிருக்கிறேன் !"

"தவறாக என்னை யாரோ என்று நினைத்துக் கொண்டு உங்கள் நண்பர் பேசுகிறார்......"

வல்லபி பேசி முடிப்பதற்கு முன்பே, செல்லையன் குறுக்கே விழுந்து தன்குரலை எழுப்பினான்.

"நானா தவறாக நினைத்துக் கொண்டு பேசுகிறேன்? உண்மையைச் சொல் ! ... மறந்து விட்டேனே, நீதான் உண்மையே பேசமாட்டாயே! சரி, நான் சொல்கிறேன் ! கேட்டு விட்டு, மரியாதையாக இங்கிருந்து போய் விடு ! ... நீ மோகினிப் பெண் இல்லே?"

"இல்லே !" என்று வல்லபி சொல்லி விட்டுச் சிரித்தாள்.

"பைத்தியக்கான் ! மோகினியாம் மோகினி !" என்று நரேந்திரனும் சிரித்தான்.

"என்ன நரேந்திரா இப்படிச் சிரிக்கிறாய்? குடித்தநீர், வேலை செய்ய ஆரம்பித்து விட்டது போலிருக்கிறதே!."

"செல்லையா, வாயை மூடு! நீதான் முட்டாள் என்றால், என்னையும் அப்படியாக்கப் பார்க்காதே !"

"நானா முட்டாள் ! இவள் மோகினிப்பெண்தான்! அதில் சந்தேகமே இல்லை! கொடிய மிருகங்கள் நடமாடும் இந்தக் காட்டிலே ஒரு பெண்— அதிலும் பார்ப்போர் கண்ணைப் பறிக்கக்கூடிய பேரழகோடு கூடிய ஒரு பெண்— இருக்க முடியுமா? இருந்ததை நீ கண்டிருக்கிறாயா? கண்டதாக யாராவது சொன்னதையாவது, நீ கேட்டிருக்கிறாயா ? நரேந்திரா ! ஜோதிடத்தைச் சொன்னாலும் நீ நம்பமாட்டாய் ! உனக்கு ஏதோ கெட்ட காலம் ! அதனால்தான் இந்த மாயக்காரியை—மானிடப் பெண் ... மான்விழி மடந்தை என்று நீ நம்புகிறாய் !" என்று செல்லையனின் பேச்சில் ஆவேசம் ஏற ஏற, அவர்களின் சிரிப்பும் அதிகரித்தது.

நாலாப் பக்கங்களிலுமிருந்து ஆட்கள் ஓடி வருவதைக் கண்டதும், மூவரும் அப்படியே அதிர்ந்து நின்று விட்டார்கள்.

அவர்களைச் சக்திவர்மனின் ஆட்கள் சுற்றி வளைத்துக் கொண்டதும், வல்லபியின் கண்களில் கோபத்தில் செவ்வரிகள்பின்னலிட்டன! உதடுகள் பட படத்தன !

"உங்களை யார் இங்கே வரச்சொன்னது?" என்று ஆத்திரத்தோடு கேட்டபடி, அருகிலிருந்த வீரர்களில் ஒருவன் வாளை அவள் இழுத்தெடுத்துக் கொண்டாள்.

"நான்தான் அனுப்பினேன் வல்லபி !" என்று அப்பொழுது அங்கே குதிரை மீது வந்து நின்ற சக்திவர்மன் கூறியதைக் கேட்டதும், அவள் தன் கையிலிருந்த வாளைத் தரையில் வீசியெறிந்துவிட்டு வேகமாக அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

"நரேந்திரா ! வளைக்கு வெளியே வந்து நண்டு தன்னால் நரியிடம் சிக்கிக் கொள்வதைப் போல, நீ இவ்வளவு எளிதில் சிக்குவாய் என்று நான் சிறிதும் எதிர் பார்க்கவில்லை !" என்று சக்திவர்மன் கலகலப்பான சிரிப்போடு சொல்லிவிட்டு, "இவர்கள் இருவரையும்கட்டி இழுத்துக்கொண்டு பாசறைக்கு வாருங்கள் !" என்று தனது வீரர்களுக்கு உத்தர விட்டு குதிரையைத் தட்டி விட்டான்.

பாசறையை நெருங்கியதும் வாடிய முகத்தோடு வேங்கை மரத்தின் மீது சாய்ந்திருந்த வல்லபியை, அவன் கண்டான்.

குதிரையை விட்டிறங்கி, "கோபமா, வல்லபி!" என்று அவன் பரிவோடு கேட்டபடி, அவன் அருகே சென்றான்.

அவள் பதிலொன்றும் சொல்லாமல், கோபத்தோடு அவனை முறைத்துப் பார்த்து விட்டுத் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

"நான் தவறு எதுவும் செய்யவில்லையே வல்லபி, நீ எதற்காக இப்படி ஆத்திரமடையவேண்டும் ?"

"எனக்கும் ஒற்றர்களா — இனி ஒரு நொடிகூட இங்கே நான் இருக்கப் போவதில்லை !" என்று அவன் முகத்தைப் பார்க்காமலேயே, அவள் சுடச்சுட வார்த்தைகளை வீசினாள்.

"கலிங்கத்து இளவரசிக்கு அத்தகைய சந்தேகம் தோன்றி யிருந்தால், அதற்காக நான் வருந்துகிறேன்!"

"வருந்த வேண்டியவள் நான் — உண்மையானவர், நேர்மையானவர் என்று உம்மை நம்பினேனே அதற்காக !"

"வல்லபி ! இல்லாததை நீ கற்பனை செய்து பேசுகிறாய் ! அதைக் கேட்க, என் மனம் மிகுந்த வேதனை அடைகிறது !"

"ஆகா, என்ன நடிப்பு ! இதையெல்லாம் நம்பி, இனியும் நான் ஏமாந்து விடமாட்டேன் ! நான் இங்கிருப்பதினால்தானே, ஒற்றர்கள் என்னைப் பின் தொடர்கிறார்கள் ? பிறந்த நாடு அடிமைப்பட்டதினாலேயே—வளர்ந்த அரண்மனை மண்மேடாகி விட்டதினாலேயே—இந்தப் பூமியே மயானமாகி விடவில்லை ! திக்கற்றவள் — நம்மை விட்டால் உலகில் வேறு திசை தெரியாதவள் எங்கே போய் விடப் போகிறாள் என்று நினைத்து விடாதீர்கள் !"

"நான் நினைக்காததையெல்லாம் சொல்லி, ஏன் இப்படி என் மனதைப் புண்படுத்துகிறாய், வல்லபி ! நான் உனக்கு நயவஞ்சகம் செய்ய எண்ணி யிருந்தால் தானே அல்லது உன்னால் எனக்கு அழிவு வரும் இழிவு வரும் என்று அஞ்சியிருந்தால்தானே ஒற்றர்களை உன் பின்னால் அனுப்புவேன் ? நான் செத்து விழுந்தாலும், என் பிணங்கூடச் செய் நன்றியை மறக்காது, வல்லபி ! ...மாலை நேரமாயிற்றே, தனியாகச் செல்கிறாயே என்று காவல் துணையாக ஒருவனை அனுப்பி வைத்தேன் ! நரேந்திரன் விழுந்து கிடக்கிறான் என்ற தகவலை, அவன்தான் இங்கே ஓடிவந்து கூறினான் ! அதன் பிறகே, வீரர்களை நான் அனுப்பியது ! நமது ஆட்கள் அங்கே வந்த போது, மயங்கிக் கிடப்பதாகச் சொன்ன நரேந்திரன் எழுந்து கொண்டிருக்கிறான் ! எங்கிருந்தோ இன்னொருவன் வேறு, அங்கே வந்திருக்கிறான் ! தாமரைக் குளத்திலிருந்த நீயும் அவர்கள் எதிரே வந்துவிட்டிருக்கிறாய்! அகப்பட்டுக் கொண்டான் எதிரி என்று நாங்கள் அங்கே ஓடிவர, ஆபத்தில் சிக்கிவிடக் கூடிய நிலையில் உன்னைக் கண்டோம் ! தக்க நேரத்தில் நமது வீரர்கள் அங்கே வராமலிருந்தால், நரேந்திரனால் உனக்கு எத்தகைய கேடு நேரிட்டிருக்கும் தெரியுமா ?" என்று உருக்கமான ஒரு கேள்வியோடு அவன் தன் பேச்சை நிறுத்தினான்.

நரேந்திரனையும் செல்லையனையும், வீரர்கள் காட்டுக் கொடிகளால் கட்டி இழுத்து வந்து, அங்கே நிறுத்தினார்கள்

கட்டுண்டிருந்த நரேந்திரனை, சக்திவர்மன் ஏளனத்தோடு ஏறிட்டுப் பார்த்தான்.

"நரேந்திரா ! இந்தக் காட்டிற்கு நீ ஏன் வந்தாய் ? உன்னோடு வந்தவர்கள் எத்தனை பேர்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? உண்மையை ஒளிக்காமல் மறைக்காமல் சொல்லிவிடு ! இல்லையேல், இந்த மரத்தில் உன்னைக் கட்டி, உயிரோடு தீயிட்டுச் சாம்பலாக்கி விடுவேன் !" என்றுஅவன்கொக்கரித்தான்

நரேந்திரன் புன்னகையோடு அவனைப் பார்த்து, "நானும் இதோ இருக்கும் செல்லையனும் தான் வந்தோம் ! வேறு யாரும் எங்களோடு வரவில்லை !" என்று அலட்சியமாகபதிலளித்தான்

அப்பொழுது வேகமாக ஒரு குதிரை வரும் குளம்படிச் சப்தம் கேட்கவே பார்வையை அத்திசையில் திருப்பினர் !

(வளரும்)



★ சி. பி. சிற்றரசு ★

எம். எஸ். டேவிட்,
பம்பாய் I

கே: சிந்தனைச் சிற்பிஅவர்களே!சென்னைக்குவந்திருந்த ஜெர்மன் நாட்டு முன்னுள் ஜனுதிபதி க்யூஸ்,வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டுமக்களுக்கு ரூ. 17,000 நன்கொடையாகக் கொடுத்திருக்கிருர். ஆனல் நம்மவராம் பிரதமர் நேரு கோடிக்கணக்கான நிதிவைத்துக் கொண்டு கொடுத்திருப்பது ரூ. 25000. அசாம் வெள்ளத்தில் அவதிப்பட்டோருக்கு அவர் கொடுத்தது ரூ. 1½ லட்சம். உதவி செய்வதில்கூட 'வடக்கு-தெற்கு' என்ற பேதம் காட்டி இருப்பதேன்?

ப: வடக்கு தெற்கு என்று பேசக் கூடாது என்று கூப்பாடு போடுகிருர்களே சில வடிகட்டிய முட்டாள்கள். அவர்கள் மண்டையைக் கீறி இந்த ஊசியைச் செருகுங்கள்.

எஸ். டி. இராசன்,
பம்பாய்-I

கே: தெற்கு தேயவில்லை என்று இனி மந்திரிகள் எந்த வாயால் பேசப் போகிருர்கள்? நூறு கோடியை குறைத்துக் கொண்டு வருவதற்குத்தானு மூன்று மந்திரிமார்களும் காவடி தூக்கிக் கொண்டு டில்லிக்குச் சென்ருர்கள்?

ப: மூன்று மந்திரிகள் போனதால் நூறு கோடியைக் குறைத்துக் கொண்டார்கள். எட்டுப் பேரும் போயிருந்தால் என்ன கெதி.

த. சுந்தரி, பூனு-3

கே: நீங்கள் பூனுவுக்கு எப்போது வருவீர்கள்.

ப: அழைத்த இரண்டு திங்களில் வருவேன்.

மணி. சென்னை-14.

கே: மகளிர் மன்றத்தில் சேர தகுதிகள் யாவை? அதன் விலாசம் என்ன?

ப: மகளாயிருந்தால் மாத்திரம், போதாது. சீர்த்திருத்தம், சமூக சேவை தெளிவான கருத்துக்கள். இவைகள் இருக்க வேண்டும்.

திரு-சத்தியவாணிமுத்துM.L.A.அவர்கள்.கிருஷ்ணதாஸ் ரோடு ஐதரி தோட்டம், பெரம்பூர். சென்னை.

சு. பெ. கோவர்த்தனன்,
செக்கிந்திராபாத்

கே: மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்மவரெல்லாம் உதவி புரிந்து கொண்டிருந்தபோது எப்போதும் பிற்போக்கு வாதம் நடத்திக் கொண்டிருக்கும் தமிழரசுக் கழகத்தாரும், நாம் தமிழரும் என்ன செய்து கொண்டிருந்தனர்?

ப: ஒருவர் மீசையை முறுக்கிக் கொண்டிருந்தார். மற்ருெருவர் பத்திரிக்கை பார்சல்களை எண்ணிக் கொண்டிருந்தார்.

கே: மேயர் தேர்தலுக்குப் பிறகு எதிர்முனையினரின் நிலை எப்படி உள்ளது?

ப: மழையிலே பூத்தகாளான் வெய்யிலில் என்ன ஆகுமோ, அதுதான் அவர்கள் நிலை.

ந, பிரகாசம்,
நரசிம்மபுரம்

கே: இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நடத்திய மன்றம் இன்று வெளிவருகிறதா? அதன் முகவரி என்ன?

ப: நடக்கிறது. நீர் எந்த உலகத்திலிருக்கிறீர். மன்றம் 49 வெள்ளாளத் தெரு அமைந்தகரை சென்னை 29

கே. ஆா. எம். ஜக்கிரியா,
தேரழுந்தூர்

கே: செய்ந்நன்றி கொன்றவரா சிவாஜி கணேசன்? இல்லையென்ருல் தி. மு க. தேர்தல் நிதிக்கு நாடகம் மூலமோ அல்லது மற்றவகையிலோ உதவ முன்வருவாரா?

ப: அவரையணுகிக் கேட்காமலே இப்படி நாம் முடிவெடுக்கக் கூடாது.

பி. பலராமன், சென்னை-2

கே: ஐயா! முதன் மந்திரி காமராசர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் சரக்கு ஏதும் இல்லையென்று சொல்லுகிருரே, அதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: அவர், சரக்கு என்பதற்குக் கொண்டிருக்கும் பொருள் பணம். அது இல்லைதான்.

சம்பத்குமார், ஆரணி

கே: சோஷியலிசத்திற்கும் கம்யூனிசத்திற்தும் உள்ள வேற்றுமை என்ன?

ப: ஆளுக்கொரு பசுவை வைத்து பால் கறந்து கொள்வது சோஷியலிசம், பாலைமொத்தமாகக்கறந்து ஆளுக்குக் கொஞ்சம் பங்கிட்டு கொள்வது கம்யூனிசம்.

அ. பிரகாசம், மயிலை

கே: ஆசிரியர் அவர்களே! இந்த ஆட்சி நடக்கிறதா, நகர்கிறதா?

ப: படத்தைப் பாருமே

கே: அறிஞர். பெர்னுட்ஷா எப்போதாவது இந்தியாவுக்கு வந்ததுண்டா?

ப: இல்லை.

கோ. நஞ்சப்பன்
மூலத்துரை

கே: வரும் பொதுத் தேர்தலில் எத்தனை தொகுதியில் தி. மு. க. போட்டியிடும்?

ப: கழகம் முடிவெடுக்கும்!

ப. நாகராசன் திருப்பூர்

கே; உலகத்திலே மிகப் பயங்கரமானது எது?

ப: வறுமை, அறியாமை.

கே: கனம். காமராசர் தி. மு. க. விற்குத் தலைவரானல்-?

ப: காங்கிரசுக்குத் தலை இருக்காது.

கே: தங்களைப்போல சொற்பொழிவாளராக வர என்ன வழி.

ப: என்னேடு ஓராண்டிருங்கள். வருகிறதா பார்க்கலாம்.

வி. நடேசன்,
மேட்டுப்பாளையம்

கே: அண்ணு! தி. மு. க. வில், 'பிளவு பிளவு' என்று தினத்தந்தி' யார் குதிப்பது ஏன்?

ப: அவர் மானம் கிளவு போவதால் நம்மிலே பிளவு பிளவு என்கிருர்.

தெ. மா. வேலுச்சாமி,
தெலுங்கபாளையம்

கே: பக்திமான்கள், பெண்கள் பேச்சு என்ருல் தேனைவிட சுவையாகப் பேசுகிருர்கள். ஏன்?

ப: பக்தி பரமனிடத்திலேயிருந்து சில பாவையர்கள் பக்கம் திரும்பி விட்டதோ என்னவோ.

தி. க. நடராசன்;
திருக்கழுக்குன்றம்

கே: அன்புள்ள தாத்தா அவர்களே! 'அறிஞர். அண்ணு அவர்கள், தேர்தலில் போட்டியிட்டபோது, தன் வீட்டில் பிள்ளையார் கோயில் கட்டப் போவதாகச் சொன்னுர்-என்று காமராசர் பேசி இருக்கிருர். இது உண்மையா?

ப: அவரே பிள்ளையாராக உட்கார்ந்துவிடலாம் என்ற ஆசையோ என்னமோ.

கே: ஈழத்தின் மீது படையெடுத்த முதல் தமிழ் மன்னன் யார்? எப்போது?

ப: கரிகால் பெரு வளத்தான் கி. மு. மூன்ரும் நூற்ருண்டு,

கே. பி. நாராயணன்,
எழும்பூர்

கே: திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கன்னட ஏடு உண்டா?

ப: இல்லை. ஆதரவான கன்னட ஏடுகள் உண்டு.

கே: இந்தி படிப்பதால் விளையும் கேடுகள்யாவை?

ப: தமிழ்ச்சாகும், இலக்கியங்கள் அழியும், நாகரீகம் நாசமாகும், தென்னகம் செத்தவரலாற்றைச் சுமந்து திரியும்.

கே: 'அகம்'—என்பது வடமொழியா?

ப: அகம், தமிழ்.

இனமுழக்கப் பிரியன்,
பம்பாய்-70

கே: தாத்தா அவர்களே! தகரடப்பா தலைவர் (ம. பொ,சி.)'கலிங்கத்துக்கைதி'-என்ற நாடகத்திற்கு தலைமை தாங்கும் சமயம் 'நான் ஐக்கிய தமிழகக் குடியரசு கிடைத்து விட்டதாகவும், அதிலே நான் ஜனுதிபதியாகி விட்டதாகவும் பேசி இருக்கிருரே, தங்கள் பதில்?

ப: அந்தக்கனவு பகலாயிருந்தால் பலிக்காது. இரவாயிருந்தால் எடுக்காது. அவரின் ஆசை நமச்சல். நன்ருகச்சொரிந்து கொள்ளட்டும்.

T. M. தியாகராஜன்,
திருமலைச்சேரி

கே: அண்ணு அவர்களே! தி. மு. க. வில் உறுப்பினராகச் சேர என்ன தகுதி வேண்டும்?

ப: 21 வயது வேண்டும். பொது நலத்திற்குழைக்கிற எண்ணம் வேண்டும்.

ம. த. வேலன், சென்னை-2

கே: தாத்தா அவர்களே! திராவிட முன்னேற்றக் கழகம், இதுவரை, எத்தனை ஊராட்சி மன்றங்களைக் கைப்பற்றி உள்ளது?

ப: நான் அறிந்த மட்டில் ஆயிரத்திற்கு மேற்பட்டவைகளை.

தேர்தல் நிதி சிறப்புக்கூட்டம்

மதுரை சந்திரா டாக்கீஸ்

25—12—60 ஞாயிறு காலை 10 மணிக்கு

தலைவர்: **திரு. காந்திதாஸ்**, பி. ஏ., பி. எல்.

பேசுவோர்:

கவிஞர் கண்ணதாசன்

(பொருள்: **'போய்வருகிறேன்'**)

சிந்தனைச்சிற்பி சி. பி. சிற்றரசு

(பொருள்: 'விடைதருகிறேன்')

நன்கொடை: ரூ. 2, 1, 0.50

—மதுரை மாவட்ட தி. மு. க

பெருமுயற்சிக்குப்பின்

பெருமிதத்தோடு 1961 ஜனவரி முதல் வெளியிடுகிருேம்

பொன்னி

(மாத மிருமுறை)

ஆசிரியர்: **கண்ணப்பாவள்ளியப்பன்**

டாக்டர் மு. வ. வின் தொடரோவியமும்
கவிஞர் **கண்ணதாசன்** அவர்களின் தொடர்காவியமும்
இடம் பெறுகிறது.

விலை 25 காசுகள்

பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

எழுதுக:
பொன்னி அலுவலகம்,
158, பெரிய தெரு, சென்னை-5.

குறிப்பு: இனமுழக்கம் பட்டியல் பாக்கி இல்லாமல் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டும் முதற்சலுகை அளிக்கப்படும்.

ஐக்கிய நாட்டுச் சபையில் அங்கம்வகிக்கும் மாரிடேனியா

சி. ஜம்பு

ஏகாதிபத்தியத்தின் வலிவு இன்று செத்துக்கொண்டுவருகின்றது. ஏகாதிபத்தியம் தேவை; அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து பார்க்கையில் அது நியாயம் வாய்ந்தது என்று வாதிக்கும் கல்நெஞ்ச நாடுகள் அருகிவிட்டன. வரலாற்றின் அருவருக்கத்தக்க இரண்டு பெரிய ஏகாதிபத்திய நாடுகளான பிரிட்டனும், ப்ரான்சும்ஏகாதிபத்தியம் ஒழிக்கப்பட வேண்டியதே என்றும், ஆனால் முறையையும், நேரத்தையும் கவனிக்க வேண்டுமென்றும் கூறவேண்டிய நிலைக்கு இறங்கிவந்துவிட்டன. வெட்கக்கேடு நிறைந்த போர்ச்சுகல் நாடுதான் இன்றைக்கும் அடிமை நாடுகளை போர்ச்சுகலின் அங்கம் என வரையறுத்துச் சொல்லி, அத்திரை மறைவில் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க முயற்சிக்கின்றது. எது எப்படியிருப்பினும், தேசிய நாடுகள் விடுதலை பெறுவது இந்த நூற்றாண்டின் காலங்காட்டும் வழியாகிவிட்டது.

ஐக்கிய நாடுகள் மன்றத்தில், சென்ற வாரம் இருபத்தெட்டு ஆசிய ஆப்ரிக்க நாடுகளின் சார்பாக கம்போடியா நாட்டு சான்சேன் என்பார் உலகில் ஏகாதிப்பத்தியம் விரைவாகவும், கட்டுப்பாடுகளின்றியும் எந்த உருவிலும் இல்லாமல் ஒழிக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டுவந்தார். அத்தீர்மானம் பற்றிய விவாதமும் அம்மாமன்றத்தில் நடை பெற்றுள்ளது. அதை எதிர்த்துப் பேசும் நாட்டையே அவ்வுலக மன்றத்தில் காண முடியவில்லை. ஆனால், அடிமை நாடுகளைச் சுரண்டி, அதன் வழி வல்லரசுகளாக மாறிய நாடுகளைக் கண்டித்தும், அவைகளின் இன்றைய இரங்கத்தக்க நிலை பற்றியும் பேசப்பட்டது.

சவூதி அரேபியாவின் உறுப்பினர், மேற்கண்ட தீர்மானத்தின் மீது உரையாற்றுகையில் அருமையான பாடம் போதிக்கும் சுவையான ஒரு நிகழ்ச்சி யை வருணித்தார். ஐ. நா. மன்றத்தில் காங்கோவின் பிரதிநிதித்துவம் குறித்த ஒரு தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்று நைஜீரியா, கானா நாடுகளின் தூதுக் குழுக்களை பிரிட்டனின் தூதுக்குழுத் தலைவர் டேவிட் ஆர்ஸ்ம்பி கோர் மண்டியிட்டு இரந்து வேண்டினார் என்று அவர் குறிப்பிட்டார். படம் பிடிப்பவர்களின் அலையும் கண்களுக்கு இந்த நிகழ்ச்சி தென்படாமல் போய்விட்டதே என்று வருந்தினார். எனவே, உலகத்தில் கதிரவனின் மறைவையே காணாதிருந்த மிகப்பெரிய ஏகாதிபத்திய நாடான பிரிட்டன், அதனது ஆட்சியில் அடங்கிக் கிடந்து விடுதலையுற்ற இரண்டு நாடுகளிடம் மண்டியிட்டு இரக்கும் நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆண்டு, அடக்கி வாழ்ந்தவர்கள் அடக்கத்துடன் உலகப் பிரிச்சினைகளில் ஈடுபடும் காலத்தைக் காண்கின்றோம். அடிமைப்பட்டு உழன்ற நாடுகள் விடுதலை பெற்று, உலக அரங்கில் சமத்துவமாக எல்லாக் காரியங்களிலும் கலந்துகொள்ளுவதையும் பார்க்கின்றோம். இத்தகைய விழுமிய உரிமைகளை அனுபவிக்க, அடிமை முத்திரைகளை இழிவுடன் சுமந்து கொண்டிருக்கும் நாடுகள் விடுதலை வாழ்வு பெறவேண்டுமென்பதே இக்காலத்தின் அறிகுறியாகும்.

ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுபட்டு, சுதந்திர ஆட்சி காணும் காலத்தின் அறிகுறி இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் மிக வேகமாகவே காரியங்கள் ஆற்றியிருக்கின்றது. குறிப்பாக, இருண்ட கண்டம் என்று அனைத்து வகையாலும் கருதப்பட்ட ஆப்ரிக்கா கண்டம் இவ்வகையில் வெகுவாக முன்னேறியிருக்கின்றது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த சமயத்தில், ஆப்ரிக்காவில் எத்தியோப்பியா, எகிப்து, லைபீரியா, தென் ஆப்ரிக்கா யூனியன் ஆகிய நான்கு நாடுகள்தான் சுதந்திர வாழ்வில் திளைத்திருந்தன மற்ற ஆப்ரிக்க நாடுகள் எல்லாம் ஐரோப்பிய நாடுகளிடம் அடிமைப்பட்டு, அந்த ஏகாதிபத்திய நாடுகளுக்கு வாழ்வளித்துக் கொண்டிருந்தன.

25 லெட்சம் சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட, 620 லெட்சம் மக்கள் வாழ்கின்ற பகுதி பிரிட்டனின் வசத்தில் இருந்தது. 40 லெட்சம் சதுர மைல்கள் கொண்ட, 380 லெட்சம் மக்கள் வதிகின்ற பகுதி ப்ரான்சின் பிடியில் இருந்தது. இதைப் போலவே, போர்ச்சுகலும், பெல்ஜியமும், இத்தாலியும், ஸ்பெயினும் ஆப்ரிக்காவில் மிகுதியான பகுதிகளை விழுங்கியிருந்தன. இவ்வாறு ஐரோப்பாவின் சொத்தாக, வேட்டைக் காடாக ஆப்ரிக்கா வாடியது.

இரண்டாம் உலகப்போரில் ஆப்ரிக்கா தன்னையே அறிந்துகொள்ளத் தொடங்கியது. நேச நாடுகளின் சார்பாகப் போரிட, ஆப்ரிக்கா கண்டம்ஐந்து லெட்சம் போர் வீரர்களை மகிழ்வுடன் அளித்தது. அதன் காரணமாய், உலகத்தில் சமாதானம் படர ஆப்ரிக்கா செலுத்திய பங்கு எவருக்கும் தாழ்ந்ததல்ல என்ற புத்துணர்வு பொங்கி வழிந்தது. விடுதலை பெறுவதற்கான தன்னம்பிக்கையையும் அந்த வீர நிகழ்ச்சி உருவாக்கியது.

இரண்டாம் உலகப்பெரும் போரின் போது ஆப்ரிக்க போர் வீரர்கள், இருண்ட கண்டத்தை விட்டு வேறு பல நாடுகளுக்குச் சென்றனர். லண்டன் வீதிகளிலே திரிந்தனர். பாரிஸ் நகரத்திலே உலா வந்தனர். ரோம் நகரைச் சுற்றினர். அங்கெல்லாம் அவர்களுக்கு ஒரு அனுபவம் கிட்டியது. எந்த வெள்ளையர்களை உயர்ந்தவர்களாக, தெய்வமாக மதித்துப் பாராட்டினரோ அவர்கள்— எந்தச் சுரண்டல் சுகபோகிகளை தந்தையே! தாயே!! என்று மரியாதையாக விளித்து முகமன்கூறுவதிலே மகிழ்வு கொண்டனரோ அவர்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை ஆப்ரிக்கர்கள் கண்டனர். அவ்வாழ்வை ருசியும் பார்த்தனர்! இருண்ட நேரத்தில், ஒதுங்கிய அறையில் அழகைக் காட்டி வெறியைத் தீர்க்கும் வெள்ளை மாதர்களின் சதை வியாபாரம் வெள்ளையர்கள் உயர்ந்தவர்கள் அல்ல என்ற எண்ணத்தை ஆப்ரிக்க வீரர்களுக்கு ஊட்டியது. அந்த அனுபவத்தை ருசித்த ஆப்ரிக்கர்கள் தங்கள் தாய்நாட்டைப் பற்றிய புதிய கனவோடு வெளிவந்தனர். யாரை தெய்வீக நங்கைகள் என நம்பி, தாளிட்டுப் பணிந்து பணிவிடைகள் பல செய்தனரோ அவர்களின் உண்மை வாழ்வை உணர்ந்த பின்னர் புதியத் தெம்பு அவர்களது மனதை உற்சாகப்படுத்தியது. வெள்ளையர்களின் ஏகாதிபத்திய வெறி, ஆணவம், அகம்பாவம், திமிர் அத்தனையும் அந்த இருண்ட அறைகளிலே நொறுங்கின.

உலகப் போர்முடிவடைந்ததும், இத்தகையமன மாற்றங்கள் புதிய சிந்தனைப் போக்கை, விடுதலை வேட்கையை உருவாக்கின. மேலும், சுதந்திரம் என்றால் என்ன என்பதையும், தேசிய உணர்வு எத்தகையது என்பதையும் ஆப்ரிக்கர்கள் அறிந்ததின் விளைவாக ஏகாதிபத்தியங்கள் சரிந்தன; விடுதலை பெற்ற நாடுகள் மலர்ந்தன.

இன்றையத்தினம் ஆப்ரிக்கா கண்டத்தில் சுமார் முப்பது சுதந்திர நாடுகள் உள்ளன. "ஐ.நா. மன்றத்தில் ஆப்ரிக்காவின் பிரதிபலிப்பைக் கண்டேன்"என்று இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, ஐ. நா. மன்ற நடவடிக்கைகள் பற்றி விமரிசைக்கையில் குறிப்பிட்டார். விடுதலை ஒளியேந்தி, இருண்ட கண்டம் இருளகற்றும் இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோடும் பான்மையை உலக மாமன்றம் உணர்த்துகின்றது.

இத்தகைய வெற்றிப் பட்டியல் ஆப்ரிக்காவில் இன்னும் முற்றுப் பெறவில்லை. இவ்வாண்டு நவம்பர் 28-ம் நாள் முதல் மாரிடேனியா என்ற நாடும் ஆப்ரிக்க சுதந்திர நாடுகளின் பட்டியலில் இடம் பெறுகின்றது. ப்ரெஞ்சு ஏகாதிபத் தியத்திற்கு அடிமைப்பட்டு அவதிப்பட்ட நாடுகளில் அதுவுமொன்றாகும்.

மாரிடேனியா விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டபொழுது, அந்நாட்டின் மக்கட் தொகை என்ன என்று வினவியவர்கள் இல்லை. இயற்கை வளங்கள் உண்டா என்று கேட்டவர்கள் இல்லை. அயல் நாடுகள் கடன் கொடுக்குமா என்று பஞ்சத்தனமான கேள்விகளைத் தொடுப்போர் இல்லை. பாதுகாப்பு உண்டாஎன்று கேட்டவர்கள் இல்லை. ஏன் எனில் இத்தகைய கேள்விகளெல்லாம் ஒரு நாடு சுதந்திரம் வெறுகையில் அவசிய மற்ற வெறுங் கேள்விகளாகும்.

நீந்தக் கற்றுக் கொள்ளுபவன் நீரில் எப்படியும் இறங்கித்தான் ஆகவேண்டும். நீந்தத் தெரிந்துகொண்ட பின்னர்தான் நீரில் இறங்கவேண்டும் என்று சொல்லுபவன் முட்டாளாவான். அதைப் போலவே, நாடு என்பது பல பிரச்சினைகளை நல்ல முறையில் எவ்வகையிலாவது தீர்த்தாகவேண்டும். அப்படி இல்லாமல், பிரச்சினைகளை மட்டில் எண்ணிக்கொண்டு, முடிவுகளைகாணாமல் உழன்று கொண்டிருப்பது பேதமையாகும். அது உண்டா, இது கிடைக்குமா என்று குழம்புவது விடுதலை வீரர்களுக்கு அழகல்ல.

மாரிடேனியா வளங்கொழிக்கும் நாடல்ல. சகாரா பாலைவனத்தின் விளிம்பில் தான் அந்த நாடே அமைந்திருக்கிறது. அங்கு வதியும் ஆடவர்கள் மூக்கினையும், வாயினையும் துணித்திரைகளால் மூடிக் கொண்டு தான் காரியங்களாற்ற வேண்டும். இல்லை யெனில் வாயிலும், மூக்கிலும் மண்கள் நிறைந்துவிடும். இயற்கை அவ்வளவு வசதிக் குறைவைத் தான் மாரிடேனியர்களுக்கு அளித்துள்ளது.

தொழில்கள் உண்டா என்றால், அவைகள் குறைந்த தேவைகளை நிவர்த்திக்கு மளவிற்கு புதிதாக ஏற்படக்கூட இயற்கை வாய்ப்புகள் இல்லை. ஆடு மாடுகளை மேய்த்தலும், மீன் பிடித்தலும், உப்பு உற்பத்தியும், பசை செய்தலும் தான் மாரிடேனியாவின் தொழில்களாகும்.

மக்கட் செல்வத் திலாவது அந்நாடு முன்னணியில் நிற்குமா என்றால் அதிலும் சோடைதான். சுமார் ஐந்தரை லெட்சம் மக்கள் தான் அந்நாட்டிலுண்டு.

என்றாலும் அந்நாட்டு மக்கள் சுதந்திரம் பிறப்புரிமை- அதற்கீடு இச்செகத்தினில் வேறில்லை என்ற உணர்வைப் பெற்று சுதந்திரம் கோரி, விடுதலை பெற்றுள்ளனர். ஆம்! எவ்வகையாலும் முன்னேற்றங் காண ஒரு தனி மூலதனம் விடுதலை என்பதை மாரிடேனியர்கள் நன்கறிவர்.

மாரிடேனியாவின் விடுதலைச் செம்மலும், முதலமைச்சருமான நாக்தர் ஊல்ட் தாதா, தன்னுடைய நாட்டின் விடுதலை விழாவின்போது, அல்ஜீரியாவிலும் விடுதலைப்போர் முடிவுற்று. அல்ஜீரியர்களும் சுதந்திர வாழ்வில் திளைக்க வேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தை வெளியிட்டுள்ளார். அண்டை நாடான அல்ஜீரியாவும் விடுதலை பெற வேண்டும் என்ற ஆசை, அவரின் விடுதலை பூத்து நிற்கும் நெஞ்சில் மணம் பரப்பும் பெருந்தகைமை விடுதலை வேண்டி நிற்போருக்கு ஊக்கத்தை நல்கும்.

ஐ. நா. மன்றம் ஏகாதிபத்தியம் ஒழியவேண்டும் எனப் பேசுகின்றது. மாரிடேனியா சுதந்திரக் கொடியை பட்டொளி வீசப்பறக்கவிட்டிருக்கின்றது. ஐ. நா. மன்றத்தில் நூறாவது உறுப்பினராக மாரிடேனியா அங்கம் வகிக்கப் போகின்றது. மாரிடேனியா அளிக்கும் விடுதலை வெற்றி விழாவில் களித்து, திராவிடம் விரைவில் சுதந்திரம் எய்த உணர்ச்சியுடன் உழைக்கவீர உறுதிகொள்ளுவோமாக!

ஆணவத்தை மயானத்திற்கு அனுப்புவீர்!

★ இருண்ட தேசத்தில் முடங்கிக் கிடக்கும் இதயமற்றவரே இன்னுமா உங்களுக்குப் புரியவில்லை?

அறிவுக் கண் திறந்து பாரீர்

பதிவு எண்: 7200 விலை 16 காசுகள் இனமுழக்கம்

அபாரம், அற்புதம் என்ற சொற்கள் சாதாரணம் தங்கரத்தினம் படத்தைப் பொறுத்தவரையில்!

எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ்

தங்கரத்தினம்

மூலக்கதை

சிக்கல் எதுவுமின்றி-சிறப்பான வகையில்-ஆற்றுப்போக்கான நடையில் மூலக்கதையைக் கொடுத்திருக்கிறார் கரூர்-ல. சேதுராமன். இவர்முயற்சி பாராட்டுதற்குரியதே!

திரைக்கதை வசனம்

இதன் ஆசிரியரை தெரியாதவர்கள்இங்கு இருப்பது அபூர்வமே! பிரபல நாவலாசிரியர்-கற்பனை வளம் படைத்த கே. ஜி. இராதா மணாளனின் திறமைக்கு இப்படம் ஓர் எடுத்துக்காட்டு. கொம்புத்தேனைத் தொட்டு நாக்கில் வைத்தால் இனிக்கத்தான் செய்யும். இவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் உயிர் இருக்கிறது; சரளமான போக்கில் வசனம் பீ நடை போடுகிறது. உணர்ச்சிமிக்க வசனங்களுக்கு நிறைய இடம் தந்திருக்கிறார்-குறிப்பாக இலட்சிய நடிகர் தன தந்தையோடு வாதாடும் கட்டத்தை-உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதத்தைக் காட்டும் விருந்தில் நல்லமுறையில் அமைத்திருக்கிறார். சாதித் திமிரைச் சாடுகிறார்; பணவெறியைப் பழிக்கிறார். நகைச்சுவை வசனங்களையும் ஒரு கைபார்த்திருக்கிறார். நல்லமுத்துப்பிள்ளை, 'நீ என்ன வர்ணம்?' என்று கேட்க 'நான் மாவர்ணமுங்க!' என்று சிரிப்புநடிகர் பதில் கூறுவதும், 'சேலைகட்டிய பெண்களை நம்பக்கூடாது' என்று இலட்சிய நடிகர் சொல்ல, இலட்சிய நடிகை அதைக் கேட்டு கோபங் கொள்ள, 'பாவாடை கட்டிய நீ ஏன் கோபப்படுகிறாய்!' என்று திருப்பிச் சொல்லும் காட்சி ரசிக்கத்தகுந்தது. பாத்திரங்களுக்கு உகந்த வகையில் வசனம் இணைந்துபோவது எடுப்பாக இருக்கிறது. 'ஒன்றேகுலம்' என்ற பொன்மொழி-கீழ்சாதிப் பெண்ணை தங்கம் மணப்பது மூலம் பளிச்சிடுகிறது.

நடிப்பு

இலட்சிய நடிகரும்-இலட்சிய நடிகையும் போட்டி போட்டுக் கொண்டு நடிக்கிறார்கள். கனல் பறக்கும் வசனங்களைப் பேசி அருமையாக நடித்திருக்கிறார். காதல் காட்சிகளைக் கைதட்டும்படி நடித்துக் காட்டி விட்டார். தந்தையிடம் சாதிப் பாகுபாட்டை இடித்துக் கூறுவதிலும், சிற்றன்னையாக வந்த ராஜத்திடம் கோபாவேசத்தோடுபேசுவதும், நகைச்சுவைவெடிகளை அள்ளி வீசுவதிலும் அற்புதமாகத் தன் கடமையைச் செய்திருக்கிறார். இலட்சிய நடிகை மிராசுதாரிடம் தன் அப்பாவுக்காக பரிந்துபேசி, வரவர வார்த்தையில்-நடிப்பில் சூடு ஏற்றுவதை வாழ்த்தவேண்டும். சோகக்கட்டத்திலும், தனக்கு வருங்காலம் நிச்சயமாக இருக்கிறது. என்று நிருபிக்கிறார். 'என்னைத் தொட்டால் தீட்டு' என்னும்பேச்சு நம் உள்ளமே சிலிர்க்கிறது. சிரித்துசிரித்து வயிறு புண்ணாகும்படி நடிகர் தங்கவேலும் சும்மா புகுந்து விளாசுகிறார். தாழ்ந்த சாதிக்காரனாக வரும் நமது நடிகர் நாராயணசாமியைப் பற்றி விவரித்துக் கூறுவதைவிட சுருக்கமாக 'செம்மையுடன் செய்திருக்கிறார்.' என்று முடிக்கலாம். சீதையாகவரும் ராஜம் காதலியாக—சிற்றன்னையாகப் போற்றும்படி தன் பங்கை நிறைவேற்றியிருக்கிறார். மற்றும் எல்லோருமே தங்கரத்தினத்தை உயர்த்தும் வழியில் நடித்திருக்கிறார்கள்.

பாடல்கள்

படத்தின் வெற்றிக்குக் கருத்தாழம் மிகுந்த பாடல்களும் பேருதவி செய்திருக்கின்றன. 'இன்னொருவர் தயவெதற்கு...' என்று தொடங்கும் முதல் பாட்டே படத்திற்கு மகுடமாக அமைந்து விட்டது. மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், இலட்சிய நடிகர், குடந்தை கிருஷ்ணமூர்த்தி ஆகிய இவர்கள்தான் பாடலை இயற்றியவர்கள். 'சந்தனப் பொதிகையின் தென்றலெனும் பெண்ணாள் ...என்ற பாடல் செவியில் தேனாகப் பாய்கிறது. சங்கீத டைரக்டர் மகாதேவன் ஏற்ற இசையில்—இனிமையான வகையில்—திருப்பிப்பாடக்கூடிய முறையில் தன் கைவரிசையைக் காட்டியுள்ளார். பின்னணிபாடியவர்கள் இசைப்பாடல் சித்தர் சிதம்பரம் ஜெயராமன், சௌந்தரராசன், ஜமுனாராணி, பி. சுசீலா முதலியோர்.

காட்சி அமைப்பு

மதுரை மாவட்ட திராவிட சமுதாய சீர்திருத்த மாநாட்டுக் காட்சிகள் மனத்தை விட்டு அகலாதவை. கழகக் களஞ்சியங்களின் கொள்கை முழக்கங்களைக் காணவும்-கேட்கவும் உள்ளமே புத்துணர்ச்சி பெறுகின்றது. இன்னொரு காட்சியை நினைத்தாலே விழிகள் குளமாகின்றன, வேதனை பெருகுகிறது. 'எங்கள் தீனா, மூனா, கானா, என்றும்பாடும் கலைவாணரை—அந்தப்பாரி வள்ளலின் புகைப்படத்தைப் பார்த்ததும் மெய்ம் மறந்து விடுகிறோம். கலைவாணருக்கு உகந்த இடத்தைத் தந்த இலட்சிய நடிகரை எப்படிப் போற்றினும் போதாதுதான். ஒளிப்பதிவில் கலைநுணுக்கம் பளிச்சிடுகிறது. உதாரணமாக இலட்சிய நடிகரும்—இலட்சிய நடிகையும் நீண்ட பாதையில் ஓடி, கொஞ்சம் கொஞ்சமாக மறையும் காட்சி நன்கு அமைந்துள்ளது. ஒலிப்பதிவில்ஒப்பனையில்ஓர்குறையுமில்லை

டைரக்ஷன்.

இந்தப் படத்தின் மூலம் தானும் ஒரு சிறந்த டைரக்டர் என்பதை உறுதிப்படுத்திவிட்டார் இலட்சிய நடிகர்.

இறுதியாக ஒரு வார்த்தை! இதற்குப் பெயர் தங்கரத்தினமல்ல! திகைக்காதீர்! நவரசங்களும் நிறைந்த — எல்லாரும் பார்க்க வேண்டிய நவரத்தினம்!

ப. மு. இளங்குமரன்

சித்திரப்படங்களுடன் புத்தகங்கள்

ரூ. 30 விலையுள்ள புத்தகங்கள் குறைந்த விலையில் ரூ. 10-க்கு கிடைக்கும்.

முத்தமிடும் கலை	ரூ.	3-00
ஆர்வ அணைப்புக் கலை	,,	3-00
இன்பத் தேனிலவு	,,	3-00
மண நாள் இரவு	,,	3-00
அதிசயக் கழுகுகள்	,	3-00
கூடசாஸ்திரம்	,,	3-00
காதற்கலை	,,	3-00
சிற்றின்ப வாழ்க்கை	,,	3-00
கருத்தடை முறை	,,	3-00
காதற் கதைகள்	,,	3-00

10 புத்தகங்கள் அடங்கிய முழுத்தொகுதிக்கு ரூ 10 மட்டும் வி.பி. கட்டணம் உபரியாகத் தனி ரூ. 1-50

கடிதப் போக்கு வரவு ஆங்கிலத்தில் மட்டும்,

Sulekha Book Depot (10) Aligarh.

வாழ்க்கைத் தொழில் கலை நுணுக்க ஏடுகள்

மின்சார வானொலித் துறை வழிகாட்டி ; மின்சார வசதியில்லாமலே வீட்டிலிருந்து கொண்டு ரூ. 15/- மட்டும் செலவு செய்து வானொலிப் பெட்டி உருவாக்குவது எப்படி என்று விளக்கம்தரும் ஏடு. வானொலிப்பெட்டி பழுதுபார்ப்பது வீட்டு மின்சார இணைப்பு முதலியசெய்திகள் அத்தனையையும்170படவிளக்கங்களுடன்போதிப்பது, ஆர்வப் பயிற்சி மேற்கொள் பவர்களுக்கு வானொலி, மின்சார பணி உயர்ந்த ஒரு சிறு தனிப்பட்டறை வைத்து நடத்துவதற்கு வேண்டிய பாடங்களையுடைய புத்தகம் விலை ரூ. 6/-

குடிசைத் தொழில் வழிகாட்டி : விளக்கப்படங்கள்கொண்ட இந்தப் புத்தக உதவிகொண்டே மை செய்தல், சர்க்கரை, மின்சாரக் கருவி கலங்கள், கன விளையாட்டுச் சாமான்கள் விளையாட்டுப் பொம்மைக் கருவிகள் பிளாஸ்டிக் சாமான் முதலிய 50க்குக் குறையாத சிறு தொழில்களை நீங்கள் வீட்டிலேயே நடத்தலாம் விலை ரூ. 8-50. படம் ஓவியம் ரூ. 4-50. தையல் கத்தரிப்புக் கலை ரூ. 4-00. நிழற்படக் கலை ரூ. 3-00. சோப் செய்தல் ரூ 4-00 மோட்டார் மெக்கானிக் ஆசான் ரூ. 4-50. அஞ்சல் ஆணை ஒவ்வொன்றுக்கும் வி. பி. கட்டணம் கூடுதலாகத் தனி ரூ 1-00.

கடிதப் போக்குவரவு ஆங்கிலத்தில் மட்டுமே.

Sulekha Book Depot (6) Phapela Aligarh.

பேரனுக்கு,

சென்னை,
23—12—60

இதைப் படித்துவிட்டுத்தான், இப்படியும் நடக்குமா என்று கேட்டார். ஏன், நம்நாட்டில் அரிச்சந்திரன் இப்படிச் செய்தானே என்று சொன்னேன். அரிச்சந்திரன் செய்திருக்கலாம், ஆனால் சாதாரண மனிதன் இப்படிச் செய்வதாக சமூகக்கதைகளிலே காட்டினால் மக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்களே! என்றார். அந்தக் கதை நம்முடைய நாகரீகத்திற்கு மாற்றுவதானால் கதாநாயகனிடமிருந்து மனைவியையும் குழந்தையையும் பிரித்துவிடவேண்டும். அவ்வளவு தானே 'அதைச் செய்து விடலாம்' என்றேன். சரி என்று ஒப்புக் கொண்டு, 'இந்தக் கதையை இப்படியே எடுப்பதாக வைத்துக் கொண்டு, அதன் தலைப்பு திரையில்எப்படிப் போடலாம்' என்று கேட்டார். **நடந்தும் இருக்கலாம், நடக்காமலும் இருக்கலாம். ஆனால்நடக்கக்கூடும்.** என்று போடலாம் என்றேன. உண்மையானதும் கவர்ச்சிகரமான தலைப்புதான் என்று ஒப்புக் கொண்டார். இதை நான் சொல்வதற்கே காரணம், ஒருவர் வாழ்க்கையில் ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள் பிறருக்கு வியப்பை உண்டாக்கக் கூடும். ஆனால் என் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள், நிகழ்ச்சிகள் படிக்கிற உனக்கோ மற்றவர்களுக்கோ ஒரு படிப்பினையாக அமையுமாயின் நன்றியுள்ளவனாவேன். நான் பிறந்த காஞ்சீபுரத்திலிருந்து தொடங்குகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சீபுரம். அது பெரியகாஞ்சீபுரம், சின்னக்காஞ்சீபுரம் என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அதில் பெரிய காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயில் சன்னதித் தெருவில், அரசத்தம்மன் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள 19-ம் எண் இருந்த வீட்டில் 1908 ஆகஸ்டு திங்கள் 21-ம் நாள் இரவு 7. 42 க்குப் பிறந்தேன். நான் பிறந்தபோது எனக்கிருக்கவேண்டிய இரண்டு பாட்டன்களும் இல்லை, தாய்ப்பாட்டியும், தந்தைப்பாட்டியும் இருந்தனர். இருக்க வேண்டிய முறைப்படி தாய்ப்பாட்டி வேலூரிலும், தந்தைப்பாட்டி எங்கள் வீட்டிலேயும் இருந்தார்கள். அப்போது நமது குடும்பத்திற்கு இருந்த சொத்து இரண்டு வீடுகள், 15 ஏக்கர் நிலங்கள், ஒரு குதிரைவண்டி, ஒரு மாட்டுவண்டி. இவை இரண்டும் வாடகைக்கு ஓடிக் கொண்டிருந்தன. அன்றாடச் செலவுகளுக்கு அவைகளின் வருவாய் போதுமானதாக இருந்தது. இந்த சொத்துக்கள் என்பாட்டன் சம்பாதித்தவை. அவர் என்ன தொழில் செய்து கொண்டிருந்தார் என்று உனக்குக் கேட்கத் தோன்றும், அதையும் சொல்லிவிடுகின்றேன். ஒரு உடைக்கடையில் கணக்கு எழுதுபவராக இருந்தார். மாதச் சம்பளம் ஏழுரூபாய். இந்த வருமானத்தில்தான் மேற் சொன்ன சொத்துக்கள் மிச்சம். இது என்னுடைய கற்பனைக்கே எட்டவில்லையென்றால் உன் கற்பனைக்கு எப்படி எட்டப் போகிறது. இதைப்படிக்கும் நீ வருத்தப்படாமலிருந்தால் ஒன்றைச் சொல்கிறேன். இதை எழுதுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் பெங்களூர் போயிருந்தேன். உன் தந்தையும் என்னோடு வந்திருந்தார். உன் சிற்றன்னையைக் கட்டிக்கொள்ளப் போகும்மாப்பிள்ளை பெங்களூரிலே வேலைப்பார்த்துக் கொண்டிருந்ததால் திருமணத்திற்கு வேண்டிய உடைகளையும் அங்கேயே எடுத்துவிடலாம் என்று சென்றிருந்தோம்.

உன் தாத்தா,

சி. பி. சிற்றரசு

ஜெயராஜ்.

ஆசிரியர் : இ.பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5;

இனமுழக்கம்
ஆசிரியர் சி.பி.சி
வாரந்தோறும் 100000 பேர்கள் படிக்கும் கழக ஏடு!
அமுதன்

சிறுகதை :

அன்னதானம்

முல்லை தென்னவன்

★ 'குப்பாண்டிக்கு ஒரு படி அரிசி கொடுத்திருந்தால் அவன் மகன் பிழைத்திருப்பான் ; ஆனால் என்னைச் சட்டமன்ற உறுப்பினராகச் செய்யமுடியுமா?' என்று மனதிற்குள் நினைத்துப் பார்த்தார். தான் திட்டமிட்டுச் செய்த அன்னதானத்தை நினைத்துச் சிரித்தார்.

இயற்கையின் வெறிக் கூத்திற்குப் பின் வானம் வெளிறிக் கிடந்தது. நீண்ட நாட்களாக மறைந்து கிடந்த ஆதவன் மெல்ல உலகை எட்டிப் பார்த்தான்; குளிரால் சோம்பிக் கிடந்த மக்களை தனது வெப்பக் கதிர்களால் தட்டிக் எழுப்பிக் கொண்டிருந்தான்.

பெரு மழையால் பாதிக்கப்பட்ட வீடுகளை மக்கள் உற்சாகத்துடன் சீர்படுத்திக் கொண்டிருந்தனர். ஊருக்கு அருகிலுள்ள சம நிலத்தில் ஒரு திடீர் குடிசை எழும்பியிருந்தது, பத்து நாட்களுக்கு முன். இந்த நாட்டில்தான் 'திடீர் நகரங்கள்' தோன்றுவதுதான் பழக்கமாய் விட்டனவே! திடீர் குடிசை எழுவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது. பிறகு என்ன, இந்தத் தமிழகத்தில் கூட கோபுரங்களும், மாட மாளிகைகளுமா எழும்?

குடிசை என்றால் மண்சுவராலும் இலையாலும் வேயப்பட்டது என்று எண்ணி விடாதீர்கள். மண் சுவர் தடுப்பிற்குப் பதில் கிழிந்த சாக்கும், பிய்ந்து போன ஓலையும் தான். கூரை என்ற பெயரில் கம்புகளைக் கட்டி, காய்ந்த இலைகளாலும் புற்களாலும் வேயப்பட்டிருந்தது. இரண்டு நாட்களுக்குமுன் அடித்த காற்றில், அதுவும் ஓரிரு இடங்களில் பிய்ந்து கொண்டன. அந்தக் குடிசையிலிருந்து வானத்தின் எழிற் கோலத்தை அந்த ஓட்டைகளின் வழியாகப் பார்க்கலாம். சன்னல் இல்லாத அந்தக் குடிசைக்கு அவைகளே வென்டிலேட்டராகப்பயன் பட்டது.

'லொக் லொக்' என்று நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் பயங்கரமாக இருமிக் கொண்டிருந்தான். அவனுடைய தாய் நல்லம்மாள் அந்தக் குழந்தையின் நெஞ்சைத் தடவிக்,கொடுத்துக்கொண்டிருந்தாள். ஏதோ நினைத்தவள் போல், தலையை நிமிர்ந்து தன் கணவனைப் பார்த்தாள். அவன் இந்த உலகிலில்லாமல் ஏதோ கவலையுடன் சிந்தித்துக் கொண்டிருந்தான். சிந்திப்பதைத் தவிர பெரு மழையால் பாதிக்சப்பட்ட அந்த ஏழையால் என்ன செய்யமுடியும்?

மதுரையிலுள்ள செல்லூரில் குப்பாண்டி குடிசை ஒன்று அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். பெரு மழையாலும், வைகையின் சீற்றத்தாலும் செல்லூர் வெள்ளக் காடாக மாறியது. அடித்துச் செல்லப்பட்டது. குப்பாண்டி தன்னுடைய மனைவியையும் மகனையும் அழைத்துக்கொண்டு நகரசபை பள்ளியில் பாதுகாப்புத் தேடினான். திடைப்படக் கலைஞர்களும், நகரசபையும், ஈர நெஞ்சு படைத்தவர்களும் நிதி வழங்கினர். அதன் மூலம் சில நாட்கள் உணவு வழங்கப்பட்டது. பின் பிழைப்பிற்கு வழி தேடி மேலூர் வந்தடைந்தான் வேலையும் கிடைத்தது.

சில நாட்களுக்கு முன் தன் வாழ்க்கைப் பாதையின் திசை மாற்றத்தை எண்ணி குப்பாண்டி சிலைபோல் வீற்றிருந்தான்.

'லொக் லொக்' என்று மீண்டும் இருமல் சப்தம் எழுந்து, குப்பாண்டியைத் திடுக்கிட வைத்தது. சிந்தனை கலைந்த அவன், மனைவியையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தான்.

"என்னங்க, பையன் நிலை ஆபத்தாக இருக்குங்க" என்று கவலையுடன் கூறினாள் நல்லம்மாள்.

"பணமிருந்தால் டாக்டரையாவது அழைத்து வரலாம். அதற்கும் வழியில்லை" குப்பாண்டி பெரு மூச்சு விட்டான்.

"டாக்டர் எதுக்குங்க?பையனுக்கு மருந்து வேணுங்க; சோறு இருந்தால் போதும் அவன் இரண்டு நாட்களாகப் பட்டினி"

குப்பாண்டி கண்ணீர் விட்டான். இரண்டு நாட்களாக அவர்கள் காந்தியாரின் கொள்கையைப்பின்பற்றிவருகின்றனர். ஆம் ; அவர்கள் இரண்டு நாட்களாக உபவாசம் இருந்து வருகின்றனர். நான்கு வயதுக் குழந்தையால் அவர்கள் வழியைப் பின்பற்ற முடியுமா?

"ஏன், இப்படிக் கல் போல் இருக்கீங்க; பையனுக்கு ஒரு வேலைச் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யுங்க. இல்லையின்னு பையன் பட்டினியால் இறந்து போயிடுவான்" என்று கேவினாள்.

"நல்லம்மா! ஒரு வேளை சாப்பாட்டிற்கு வேண்டிய பணத்திற்கு எங்கு போவது?"

"போங்க, உங்க முதலாளியிடம் நிலைமையைச் சொல்லி ஏதாவது ஏற்பாடு செய்யுங்க" என்று கண்ணீர் விட்டாள். அந்தத் தாய் உள்ளம் எப்படியும் தன் குழந்தையைப் பட்டினிச் சாவிலிருந்து மீட்கத் தவித்தது.

குப்பாண்டி துண்டைத் தோளில் உதறிப் போட்டுக் கொண்டு முதலாளி வீட்டை நோக்கித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தான்.

"எஜமான்! என் மகன் பசியால் செத்துக் கிட்டு இருக்கான். ஒரு ஐந்து ரூபாய் கொடுத்து உதவுங்க", குப்பாண்டி பணிவுடன் தனது முதலாளி தர்மராசனிடம் கேட்டான்.

"அதெல்லாம் முடியாது. நாளை இங்கு மந்திரி வருகிறார். அதற்கு ஏகப்பட்ட ரூபாய் செலவாகி விட்டது. போய் வேலையைப் பார்"

"எஜமான், எஜமான் நீங்க உதவி செய்யா விட்டால் குழந்தை பசியால் இறந்து விடுவான். இந்த ஏழை மீது இரக்கம்காட்டுங்க" என்றான். அவன் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் அவனது ஒட்டிய கன்னங்களில் உருண்டோடின.

"அதுக்கு நான் என்ன செய்வேன்! ஒரு மாத சம்பளம் உனக்கு முன்பணமாகக் கொடுத்து விட்டேன். நீ ஊர் பேர் தெரியாதவன். பணத்தை வாங்கிக் கொண்டு எங்காவது ஓடி விட்டால் நான் என்ன செய்வேன்" என்றான், தர்மராசன் என்ற பெயர் படைத்த அந்தக் கல் நெஞ்சக் கனவான்.

"எஜமான்! என்னை நம்பா விட்டாலும் பரவாயில்லிங்க; சாகக்கிடக்கிற குழந்தையை நினைத்தாவது ஒரு படி அரிசி கொடுங்க" என்று குழைவுடன் வேண்டினான்.

"இங்கென்ன அன்னசத்திரமா கட்டி வைத்திருக்கு, ஒரு படி அரிசி கொடுக்க. அதெல்லாம் முடியாது"

"எஜமான், எஜமான்!"

"டேய், ஒழுங்கா இங்கே இருக்கணும்னு இந்தப் பிச்சுப் பிடுங்கலெல்லாம் வைத்துக் கொள்ளாதே. அப்படி ஏதாவது நேர்ந்ததோ உன்னை வேலையிலிருந்து நீக்கி விடுவேன்" என்றார் கண்டிப்புடன்.

குப்பாண்டி தலையைக் குனிந்து கொண்டு நின்றான்.

"டேய் குப்பாண்டி வண்டியைக் கட்டிக் கொண்டுஅழகர் மலைக்குப் போயி தோரணம் கட்டுவதற்குவேண்டியஇலைகளைக் கொண்டுவா. யாரும் தடுத்தால், மந்திரிக்கு என்று சொல். ஒருவரும் ஒன்றும் பேசமாட்டார்கள். இன்னிக்கு மாலைக்குள் இங்கு நீ வந்துவிடு" என்று தர்மராசன் கட்டளையைப் போட்டு விட்டு வீட்டிற்குள் சென்றார்.

குப்பாண்டி "சரி" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்துக் கொண்டு, வண்டியைக் கட்டிக் கொண்டு அழகர்மலைக்குப் புறப்பட்டான்.

மறுநாள் நடுப்பகல்!

தர்மாராசன் வீடு தோரணங்களாலும், வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஏழை மக்கள் அவருடைய வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர். தர்மராசன் அவர்களுக்கு உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தார். அமைச்சர் ஒருவர் புன்னகையுடன் அந்தக் காட்சியை இரசித்துக் கொண்டிருந்தார்.

ஏழைமக்களுக்கு அன்னதானம் முடிந்தபின், தர்மராசன் அவர்களைப் பாராட்டி அமைச்சர் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

அமைச்சர் எழுந்து, "கனம் தர்மராசன் அவர்கள் இன்று ஏழைகளுக்கு அன்னதானம் கொடுத்தார். மனிதர்களின் இதயத்தில் ஆண்டவன் குடி கொண்டிருக்கிறான். ஏழை மக்கள் பசியால் வாடினால், ஆண்டவன் குடிகொண்ட

(6-ம் பக்கம் பார்க்க)

சித்திரப்படங்களுடன் புத்தகங்கள்

ரூ. 30 விலையுள்ள புத்தகங்கள் குறைந்த விலையில் ரூ. 10-க்கு கிடைக்கும்.

முத்தமிடும் கலை	ரூ.	3-00
ஆர்வ அணைப்புக்கலை	,,	3-00
இன்பத் தேனிலவு	,,	3-00
மண நாள் இரவு	,,	3-00
அதிசய அழகுகள்	,,	3-00
கூடசாஸ்திரம்	,,	3-00
காதற்கலை	,,	3-00
சிற்றின்ப வாழ்க்கை	,,	3-00
கருத்தடை முறை	,,	3-00
காதற் கதைகள்	,,	3-00

10 புத்தகங்கள் அடங்கிய முழுத்தொகுதிக்கு ரூ 10 மட்டும் வி.பி. கட்டணம் உபரியாகத் தனி ரூ. 1-50

கடிதப் போக்கு வரவு ஆங்கிலத்தில் மட்டும்,

Sulekha Book Depot (10)
ALIGARH

பொங்கல் வாழ்த்திதழ்கள்

ஓவிய மன்னர் கே.மாதவன், பகவதி ஆகியோரின் வண்ணமிகு ஓவியங்கள். ஆப்செட் கலரில் பளபளப்பான வார்னிசுடன் தயாரித்துள்ளோம் 1961ம் ஆண்டுக்குரிய அழகியடயறி பிளாஸ்டிக் கவருடன் கூடியது.

மாதிரி வேண்டுவோர் ரூபாய் 2-50 - M.O. செய்க.

மின்னொளிப்பதிப்பகம்

3. மலையபெருமாள் தெரு சென்னை-1

விரைவில் வெளிவருகிறது !

புதுமைகள் பூத்துக் குலுங்கும் புரட்சிப் படைப்பு !
தென்னகத்தின் தன்நிகரில்லா ஒளிவிளக்கு !!

முன்னணி

-கலை, இலக்கிய, அரசியல்.......வார ஏடு-

ஆசிரியர் : பி. வி. முத்துசுவாமி
பதிப்பாசிரியர் . ம. ரா. தேவராசன்

ஒவ்வொரு இதழிலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், அரசியல் விமர்சனங்கள், கலைஉலகச் செய்திகள் அனைத்துமே "முன்னணி"யை எழில்படுத்தும்.

தனிப்பிரதி 16 காசுகள் ★ ஆண்டு சந்தா ரூ. 8-00

உங்கள் பிரதிகளுக்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஊக்கம் நிறைந்த விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு:
முன்னணி அலுவலகம்
26. எம். சி. ரோடு, சென்னை-21.

இனமுழக்கம்
ஆசிரியர்: சி. பி. சிற்றரசு
மலர் 2] ★ 30—12—60 ★ [இதழ் 18

தாய் உள்ளம், தடவினலும் கிடைக்கவில்லை !

சிங்களத் தீவில் பல்லாண்டுகளாக நிதானமாகவும் அண்மையில் வேகமாகவும் நடந்த அரசியல் அசம்பாவிதங்களை எண்ணிக் கடல்நீரோடு கண்ணீரைக் கலக்கிச் சென்றவர்கள், இலங்கை அரசியலிலே ஏதாவது ஏமாற்றம் ஏற்படாதா என்றெண்ணினர். இருண்டிருக்கும் நம்மவர் வாழ்க்கையில் விடி வெள்ளித் தோன்ருதா என்றெண்ணினர். வாழ்க்கை வானத்தில் சுமந்திருந்த காரிருள் நீங்கி, வைகறைத் தோன்றி செஞ்ஞாயிறு தன் சிவந்த முகத்தைக் காட்டமாட்டாணு என்றெண்ணினர். தாயகம் விட்டு வந்த நமக்கு தாராளமான வாழ்வு கிடைக்காதா என்றெண்ணினர். வயிற்றுக்கும் வாய்க்குமிடையே சட்டதிட்டங்கள் சண்டமாருதம் செய்துக் கொண்டிருந்ததும், உழைப்புக்கும் வாழ்க்கைக்கும் இடையே ஒரு பெரும் புயல் அடித்துக்கொண்டிருந்ததும் நமது தாயகம் அரசியல் ஆசனமேறிய நாடு ஆகையால் நமக்கு அயல்நாடு இன்னல் இழைத்தால் ஏன் என்று அதட்டிக் கேட்க நமது நாட்டின் முதல்வர் இருக்கிருர் என்றெல்லாம் பெருமையோடு பேசிக்கொண்டிருந்தவர்களின் முகத்தில் புழுதி வாரி இரைத்தக் கதையாய் முடிந்தது. இவ்வளவு இன்னல்களைத் தாங்கிக் கொள்ளுகிற ஒரு கூட்டம் ஐந்தாம்படையாக மாறிஞல், அதுவே அயலார் உள்ளே நுழைவதற்குப் பாதையாக அமைந்து விடுகிறது என்பது உலகறிந்த உண்மை. ஆனுல் அத்தகு சிந்தைத் தோன்ருமலிருப்பதற்கும் தோன்ற முடியாமல் இருப்பதற்கும் காரணமாக இருப்பவர்கள் யார் என்ருல், ஆள்வோரும் ஆளப்படுவோர்களும்தான் என்ற உண்மையை வரலாற்றிலிருந்து யாராலும் மாற்றமுடியாது. இந்த நெருக்கமானத் தொடர்பை உடைத்தெறிவதற்கு யார் காரணமாக இருந்தாலும் வெறுப்புக்கு ஆளானவர்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

மக்களுக்கும் ஆட்சிக்கும் இடையே இருக்கும் புனித ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு ஆட்சியாளரே முதற் காரணமாகின்றனர். இந்த வரிசையில் சிங்களசர்க்கார் முதலிடத்தில் நிற்கிறது. தமிழகத்திலிருந்து அந்த சிங்களம் நோக்கிச் சென்றவர்கள் உழைத்தார்கள், உழைத்தார்கள். வியர்வையில் குளித்துக்கொண்டேஇன்றும்உழைத்துக்கொண்டேஇருக்கின்ருர்கள்.உழைத்த முதற்கால மனிதனுக்கும் இந்தகால மனிதனுக்கும் இடையில் விழுந்த பெரும் பள்ளத்தை யாரும் தூர்க்கமுடியாதென்ற நிலையே நாளுக்கு நாள் உருவாய்க் கொண்டிருந்தது. இதுதான் இன்று நமக்கு வேண்டிய சிங்களத்தின் மிகச் சுருக்கமான வரலாறு.

ஆனுல் சிங்கள வெறியன் ஒருவனுல் முதலமைச்சர் சாலமன் பண்டாரநாயகா கொலை செய்யப்பட்ட பிறகு ஓரளவுக்காவது தமிழர்களிடம் அவர் காட்டிய நல்லெண்ணம் தொடரும் என்ற நம்பிக்கையிலே, அந்த கௌரவமிக்கப் பெருமகனின் உடலைத் தமிழர்தம் கண்ணீரால் கழுவினர். ஒரு உருவத்தைச் செய்வதற்கு மரத்தைச் சிதைப்பது அழிவென்று பெயர் பெருது, ஆக்கம் என்றே பெயர் பெறும், ஆனுல் ஆளும் தலைவன் ஒருவனைக் கொல்வது ஆக்கம் என்று பெயர் பெருது, அழிவென்றே பெயர் பெறும் என்ற தத்துவத்தைத் தங்கள் குருதியோடு கலக்கப் பெற்றத் தமிழர்கள் கொலைக் களத்திலும் குற்றக்கூண்டிலும் நிற்க மாட்டார். அந்த நல்ல உள்ளம் படைத்தவர்கள் கடல் கடந்த நாடுகளிலே படாத பாடுபடுகிருர்கள் என்றெண்ணும் போது கவலைப்படாமலிருக்கமுடியவில்லை. இந்த வகையிலே தான் நமது சிந்தனை அடிக்கடி நமக்குமிக அணித்தே இருக்கிற அந்த செல்வத் தீவினில் மேல் செல்கிறது. அங்கே நமதியக்கத்தின் கிளைகள் ஏராளமாக உண்டு. அந்த முறையிலே நாம் அறிந்தவற்றை எண்ணி கவலைப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், இலங்கையின் அரியாசனத்தை அலங்கரிக்க ஒரு தாயுள்ளம் புறப்படுகிறது என்றெண்ணியபோது, எப்படியிருந்தாலும் தாய்உள்ளம் அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் தாய் உள்ளம்தான். சேய்நலம் பெற தான் மருந்துண்ணும் தாய்க்குல மாயிற்றே என்றெல்லாம் எண்ணி இரும்பூதெய்தியிருந்தோம். ஆனுல் இதுவரை இலங்கை அரியாசனத்தை அலங்கரித்த யாரும் இழைக்கத் துணியாத கொடுமையை குடி உரிமையிலும், மொழியிலும் செய்து விட்டார்கள். இலங்கையிலே வாழ நினைக்கிற ஒவ்வொரு தமிழனும் குடி உரிமை வரியாக நானூறு ரூபாய் வழங்கவேண்டும் என்றது அந்தத் தாய் உள்ளம், அதோடு விடவில்லை. சிங்களமொழி ஒன்றுதான் சிங்களத்தின் ஆட்சி மொழி என்று அறிவித்துவிட்டது. இன்று இந்தியா வந்திருக்கும் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா முதலமைச்சர் நேருவோடு இதைப் பற்றி எல்லாம் பேச மாட்டார்களாம். தாய் உள்ளம் என்று ஒன்று பளிங்குபோல் யார் யாருக்கு இருக்கிறதோ வாழ்க அந்தத்தாய் உள்ளங்கள்! கருணைபற்றத் தாய் உள்ளத்தை வாழ்த்தமாட்டோம்.

அன்பன்,
சி. பி. சிற்றரசு

இணைப்புக்கு மறுப்பு

(தூத்துக்குடி ஜோசப்)

இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸ் ஐ. என்.டி.யு.சி. என்ற பெயராலும், அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ் ஏ. ஐ.டி.யு.சி. என்ற பெயராலும் இந்த இந்திய உபகண்டம் முழுவதிலுமாக இயங்கி வருகின்றன. இதுபோக ஹெச்-எம் எஸ் போன்ற இதர நிறுவனங்களும் ஆங்காங்கு தொழிற்சங்கங்களை ஏற்படுத்தியுள்ளன. தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளைப் போராடி வாங்குவதற்கு ஆவன செய்வதற்காக இவைகள் ஏற்பட்டுள்ளன.

நீண்ட நாட்களாக நமக்கென்று எவ்வித தொழிற் சங்கமும் இல்லை. ஏதாவது ஒரு தொழிற்சங்கத்தில் நம்மவர்கள் சேர்ந்து இருந்தார்களேயொழிய தனியே எதுவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் நாம் அன்றைய நாட்களில் முழுக்க முழுக்க சமுதாய சீர்த்திருத்தப் பணியினையே கவனித்துக் கொண்டிருந்தோம். மற்றவேலைகளை சமுதாய சீர்த்திருத்தப்பணியினையே கவனித்துக் கொண்டிருந்ததுதான். மற்றவேலைகளை நம்மால் கவனிக்க முடியவில்லை. ஏனென்ருல் மூடப் பழக்க வழக்கங்களின் உறைவிடமே இந்த நாடுதான் என்று சொல்லுமளவுக்கு நிலைமைகள் இருந்தன. மனிதனை மனிதன் தொடுவதே பாவம் என்றும் ஆண்டவன் எல்லோருக்கும் தந்தை என்ருலும் ஆலயத்துக்குள் அனைவரையும் அனுமதிப்பது தவறு என்றும் பேசப்பட்டுவந்தது. எனவே சமுதாய சீர்த்திருத்த வேலை மிக மிகஅவசியமானதாக இருந்தது. இந் நிலையில் அவற்றிற்கு இருந்த கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்கவே நமக்குப் போதிய நேரமில்லை. இந் நிலையில் மற்றைய வேலைகளை நம்மால் கவனிக்க முடியவில்லை காலம் கனியக் கனிய ஆலயப் பிரவேசம் போன்றவைகளும் மனிதனை மனிதன் தொடுவது பாவம் என்று எவன் சொன்னது என்று கேட்கும் ஆத்திரமான மனோ பாவமும் வளர ஆரம்பிக்கவே மற்ற வேலைகளையும் நாம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் பிறந்தது. மேலும் கழகம், தனது வளர்ச்சியிலே நல்லதோர் கட்டத்தை அடைந்துவிட்ட காரணத்தால் எல்லாப் பிரச்சினைகளும் நாம் கவனம் செலுத்தியாக வேண்டிய கட்டாயமும் பிறந்துவிட்டது. இந்தப் பிரச்சினை பற்றி தி.மு.க. என்ன சொல்கிறது என்று ஆர்வத்தோடு கேட்க மக்கள் ஆரம்பித்து விட்டார்கள். திராவிட நாடு தேவை என்ற விடுதலைப் போரே நமது குறிக்கோளாக இருந்தாலும் உலக அரங்கில் நடைபெறும் சகல விஷயங்களையும் நாம் அறிந்து கொள்ளவும் அவைகளைப் பற்றிக் கழகம் என்ன கருதுகிறது என்பதை விளக்கிக் கூறவுமான நிலைகள் பிறந்து விட்டன. பாரீஸில் உச்சக் கட்ட மாநாடு முறிந்தால் என்ன முறியாவிட்டால் என்ன என்று திராவிடர் கழகத் தோழர்களைப் போல் நம்மால் இருக்க முடிவதில்லை. இதைப் பற்றி உங்கள் கருத்தென்னஎன்று மக்கள் நம்மிடம் கேட்கிருர்கள். அல்ஜீரியா விடுதலைப் போர், ஹங்கேரியில் நடைபெற்ற புரட்சி, தலாய்லாமா இந்தியாவில்தஞ்சம்புகுந்தது லடாக் பிரச்சினை, சீனுவை ஐக்கிய நாட்டு சபையில் சேர்ப்பதா வேண்டாமா, ஐக்கியநாடு சபையில் நேரு கொண்டு வந்த தீர்மானமும் அதையொட்டிய நிகழ்ச்சிகளும், பெருபாரியை பாக்கிஸ்தானுக்குக் கொடுப்பதாக நேரு சொன்னது,பஞ்சாபி சுபா போராட்டம் காங்கோ பிரச்சினையும் அங்குள்ள லுமும்பா, மொபுடு, கசபவு ஆகியோரின் முயற்சிகள், இப்படிப்பட்ட சகல பிரச்சினைகளுக்கும் விளக்கம் கொடுத்தாக வேண்டிய நிலைமைக்கு நாம் வந்திருக்கிருேம். அமெரிக்கா டெய்லி டைம்ஸ் என்ற பத்திரிகையின் நிருபர் பிரிட்ன்பர்க் ஜெர்மன் நாட்டு நிபுணர் ஆகியோர் அண்ணுவைச் சந்தித்ததும், பிரிட்டீஷ் தூதுவர், நமது மேயா முனுசாமியைக் கண்டு பேசியதும், உலக அரங்கில் நாம் கவனிக்கப் படுகிருேம் என்பதற்குச் சான்றுகளாகும். இதேபோல் தொழிற் சங்கங்களில் பணி புரிவது மட்டுமின்றி அவைகளின் நிர்வாகப் பொறுப்புகளையும் ஏற்று நடத்த வேண்டிய அவசியம் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் "திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்" என்ற அமைப்பிலும் இன்னும் பல தனிப்பட்ட நிறுவனங்கள் மூலமும் நாம் தொழிலாளர் நலனுக்கென உழைத்து வருகிருேம். நமது தொழிற் சங்கங்கள் தனித்து இயங்காமல் ஏ. ஐ. டி. யு. சியுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவர் திரு. மீராஜ்கர் சென்னை வந்த போது கூறினுர். இதை கம்யூனிஸ்ட்ஏடான 'ஜனசக்தி' தி மு. க. தோழர்களுக்கு மிராஜ்கர் 'யோசனை' என்ற தலைப்பில்

[8-ம் பக்கம் பார்க்க]

தேனெனச் சொல்லை நீட்டி,

தென்பொதிகை மலையைக் காட்டப்போகும்

கவிஞர்கள் :

கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வாணிதாசன்,
„ கம்பதாசன், „ முடியரசன்,
கவிஞர் ரவி

இத்தனையும் உண்டு !
அத்தனைக்கும் விலை ரூ. 4

3

சக்திவர்மனின் நிபந்தனை

"தனிக் குதிரை வரும் சத்தம் கேட்கிறதே? வருவது யாராக இருக்கும்?" என்ற சிந்தனை, சக்தி வர்மனின் புருவங்களை மேலே ஏற்றி, நெற்றியில் சுருக்கங்களை ஏற்படுத்தியது.

"சரி இவர்களைப் பாசறைக்குஅந்தபக்கம்கொண்டு போங்கள்!" என்று அவன் கட்டளையிட்டதும், நரேந்திரனையும், செல்லையனையும் அங்கிருந்து வீரர்கள் இழுத்துச் சென்றனர்.

வேங்கை மரத்தின் மீது சாய்ந்திருந்த வல்லபி, இழுத்துச் செல்லப்பட்ட நரேந்திரனைத் தனது ஓர விழிகளால் பார்த்தாள்.

குதிரை வந்து அங்கே நின்றதைக் கேட்டதும், அவள் வேங்கை மரத்தை விட்டுச் சக்திவர்மன் அருகே வந்து நின்றாள்.

குதிரையை விட்டிறங்கிய வீரன், இரத்தக் குளத்தில் மூழ்கிவிட்டு வந்திருந்தவனைப் போலிருந்தான்! அவன் உடலெல்லாம் அம்புகள் தைத்த காயங்கள்!

அவன் நிற்க முடியாமல் தள்ளாடினான்.

"இளவரசியாரை இழந்து விட்டோம்!" என்று முச்சுத் திணற—பேச்சுத் தடுமாற—கூறிவிட்டுச் சாய இருந்த வனைவேறொரு வீரன் தாங்கிப் பிடித்தான்.

"என்ன?"

சக்தி வர்மனின் குரல்—மனிதன் குரலாக இல்லை—வேல் பாய்ந்த சிங்கத்தின் கர்ஜனையாக இருந்தது!

"வில்லவா! நீ என்ன சொல்கிறாய்? சாமவதிக்கு என்ன நேர்ந்தது?" என்று வல்லபி துடிதுடிப்போடு கேட்டாள்.

வில்லவன் என்ற அந்த வீரன், குனிந்த தலையை உயர்த்தி, கலங்கும் கண்களோடு அவளைப் பார்த்தான்.

"வேங்கி வீரர்களின் பிடியில், மீண்டும் இளவரசியார் சிக்கிவிட்டார்!" என்று அவன் தட்டுத் தடுமாறி கூறிவிட்டுத் தரையில் உட்கார்ந்து விட்டான்,

"சாமவதி சிக்கிவிட்டாள்! நீங்கள் எல்லாம் தப்பியோடி வந்து விட்டீர்களா? அங்கேயே செத்து மடிவது தானே?"

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வில்லவனைப் பற்றி எள்ளளவும் இரக்கங் காட்டாமல், சக்தி வர்மன் கனல்தெறிக்கப் பேசினான்.

"ஆமாம், இளவரசே! நமது வீரர்களில் பெரும்பாலோர் அந்தப் போரில் செத்து விட்டார்கள்! உயிரோடிருந்த ஒரு சிலரையும் கைது செய்து விட்டார்கள்! அந்தப் பயங்கரப் போரிலிருந்து, எதிரிகளிடம் சிக்காமல், நான் ஒருவன் மட்டுமே தப்பினேன்! உயிர்மேல் கொண்ட ஆசையால் அல்ல, உங்களுக்குத் தகவல் அறிவிக்க வேண்டுமே என்று ஓடிவந்தேன்!......"

பேச்சை முடிக்க பலமில்லாமல், வில்லவன் கண்களை மூடிக்கொண்டான்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டபடி, சக்தி வர்மன் அங்கே இருந்த ஒரு பெரிய கல்லின் மீது உட்கார்ந்தான்.

வில்லவனுக்கு வல்லபி ஓடிச்சென்று தண்ணீர் கொண்டுவந்துகொடுத்தாள்.

தண்ணீரைக் குடித்ததும் அவ்வீரன், கண்களைத் திறந்துசக்திவர்மனைப் பார்த்தான்.

"வேங்கி வீரர்களிடம் அகப்பட்டுக்கொண்ட இளவரசியாரை, நாங்கள் மீட்டுக் கொண்டு திரும்பினோம்! பாதிதூரம் வந்ததும், குதிரைப் படைத் தலைவன் நரேந்திரன் எங்களைத் துரத்தி வந்து மடக்கினான்! அவனோடு வந்திருந்தவர்களோ, ஐம்பதுக்கும் குறைவான எண்ணிக்கை உள்ளவர்கள்! நமது வீரர்களோ முன்னூருக்கு மேற்பட்டவர்கள்! வேல்கள் எறிந்தோம்! வாள்கள் சுற்றினோம்! உடல் வேறு தலைவேறாக அவனது வீரர்கள் தரையில் சிதறுண்டனர்!

நரேந்திரன் ஓடப்பார்த்தான்! அவனது குதிரையின் காலை வெட்டினோம்! காயங்களோடு அவனும் புழுதியில் விழுந்தான்! அவனைப் பிடிக்க ஓடினோம்...அதற்குள் பெரும்படையோடுவந்து எங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டான், சயசிங்கன்! எழுச்சியோடே போரிட்டோம்! என்ன செய்ய முடியும்? அவர்களோ ஆயிரமாயிரம் பேர்!..."

வில்லவனின் பேச்சு மீண்டும் நின்றுவிட்டது. மூர்ச்சையாகி பிணம் போலத் தரையில் சாய்ந்துவிட்டான்.

"இவனைப் பாசறைக்குள் கொண்டு சென்று, ஜாக்கிரதையாகக் கவனியுங்கள்!" என்று சக்திவர்மன் கூறிவிட்டு, எழுந்து நின்றான்.

தன் தங்கை சாமவதி பிடிப்பட்டதற்கு, நரேந்திரன்தான் காரணம் என்பதைக் கேட்டதும், அவன் ஆவேசம் அதிகமாயிற்று.

"நரேந்திரனை இங்கே இழுத்து வாருங்கள்!" என்று கோபாவேசத்தோடு வல்லபி கூறிவிட்டு, ஒரு வீரனிடமிருந்த வாளைக் கையில் வாங்கிக் கொண்டாள்.

"என் அருமை சாமவதிக்குக் கேடுசெய்தவனை, நானே வெட்டி வீழ்த்துகிறேன்!" என்று அவள் வாளை உயர்த்தினாள்.

"உன் மலர்போன்ற கரத்துக்கு அந்தச் சிரமம் நான் தரலாமா? அவனை நானே கவனித்துக் கொள்கிறேன்!" என்ற சக்திவர்மன், அவள் கையிலிருந்த வாளை வாங்கிக் கொண்டான்.

எதிரே கொண்டு வந்து நிறுத்தப்பட்ட நரேந்திரனையும் செல்லையனையும், அவள் சுட்டுப்பொசுக்கி விடுபவளைப் போலப் பார்த்தாள்.

காயங்களோடும், தாகத்தோடும் தவித்த நரேந்திரனைக் கண்டு, அவள் அப்பொழுது இரக்கப்பட்டாள். எதிர்பாராத விதத்தில் சக்திவர்மனின் ஆட்கள் பாய்ந்து வந்து அவனைப்பிடித்தபோது அவள் ஆத்திரங் கொண்டாள்.

ஏதோ எப்படியோ காயம் பட்டுக் கிடந்தவனைப்பிடித்து விட்டு, வீராதி வீரனைப் போலக் கொக்கரிக்கிறானே என்று சக்திவர்மனின்மீது அவள் வெறுப்பும் கொண்டாள்.

நரேந்திரனிடம் இவ்வளவு தூரம் இரக்கங்காட்டிய வல்லபியின் மனம், இப்பொழுதோ அக்கினி குண்டமாக மாறிவிட்டது. தன்அன்பிற்குரிய சாமவதியைத் துடிதுடிக்கச் செய்தவனை, பதைபதைக்க வெட்டியெறிய வேண்டுமென்று கோபத்தால் கொதித்தாள்.

வல்லபியிடமிருந்து வாங்கிய வாளோடு, நரேந்திரன் அருகே சக்திவர்மன் சென்றான். அவர்களைக் கட்டியிருந்த கொடிகளை வாளால் வெட்டி யெறிந்தான்.

கைகளை உதறிக் கொண்டு நரேந்திரன் நிமிர்ந்து நின்றான்.

"என்ன நரேந்திரா, இன்னமும் நிற்கிறாய்? அதுதான் கட்டுகளை அறுத்து, நம்மை அவிழ்த்து விட்டு விட்டார்களே! போயின்னு சொன்னாத்தான் புறப்படுவாய் போலிருக்கு! உம் நமக்கு இங்கென்ன வேலை வா!" என்று சொன்ன செல்லையனின் கன்னத்தில், சக்திவர்மன் ஓங்கிஒருஅறை கொடுத்தான்.

அவன் பம்பரம்போல் சுற்றி, அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டான்.

"நரேந்திரா! என் தங்கைக்கு கேடு செய்த கயவனே! உன்னைச் சித்திர வதை செய்யப் போகிறேன்!......"

ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றுவிட்டசக்திவர்மனின் குரல், திடீரென்று தடைப்பட்டு நின்றது. ஏதோ ஒரு எண்ணம் தோன்றி, அவனைத் தயங்கிப் பின்னடையச் செய்தது.

தலை குனிந்தான்—தரையைப் பார்த்தான். நிமிர்ந்தான்—தன் வீரர்களைப் பார்த்தான்.

வேங்கிநாட்டுச் சிம்மாசனமும், ஆசைத் தங்கை சாமவதியும், மாறி மாறி கண் முன் தோன்றவே, அவன் மனதில் புதிய புதிய எண்ணங்கள், புற்று நாகமெனப் படமெடுத்தன.

"இரண்டும் இனி தனித் தனி அல்ல! ஒன்றேதான்! வேங்கியின் அரசு கட்டில் கிடைத்தால்தான், தங்கை கிடைப்பாள்! தங்கை கிடைக்க வேண்டுமென்றால், முதலில் மணிமுடியைஅடைந்தாக வேண்டும்!"

எவ்வளவு பெரிய போர்க்களத்தின் மத்தியில் சாமவதி நிற்கிறாள் என்பதை அவன் உணரத் தொடங்கினான். வாளை அழுத்திப் பிடித்த அவன் கையிலே தளர்ச்சி ஏற்பட்டது.

அவன் எதிரே வந்து வல்லபி நின்று, "ஏன் தயக்கம், வாளை இப்படிக் கொடுங்கள்!" என்றாள்.

"வல்லபி! உன் கையை விட, என் கைக்கு வலிமை அதிகம்!"

"பின்பேன் தயக்கம்?"

அவன் பெருமூச்சு விட்டபடி, "இவனை என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்?" என்று கேட்டான்.

சக்திவர்மனா இப்படிக் கேட்கிறான்—அவளால் அதை நம்பவே முடியவில்லை. அவன் தயக்கத்துக்கு ஏதோ காரணமிருக்க வேண்டுமென்று அவள் நினைத்தாள். ஆனால் அந்தக் காரணம் என்ன என்பதை அவளால் யூகிக்க முடியவில்லை.

"இவனை என்ன செய்யலாம், சொல், வல்லபி!"

பதில் தெரியவேண்டும்என்பதற்காகக் கேட்கப்படும் கேள்வியாக இது இல்லையே! அவள் என்ன சொல்ல முடியும்? கலக்கத்தோடு அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"இவனைத் துண்டு துண்டாக வெட்டிப் போட வேண்டும்!"

"காக்கை கழுகுக்கு இரையாக்க வேண்டும்!"

வீரர்களின் மத்தியிலிருந்து இவ்வாறு எழுந்த குரல்கள், சக்திவர்மனின் கண்கள் அப்பக்கம் திரும்பியதும் அடங்கி விட்டன.

மறவர் குலத்து மணிப்புரு

கே. ஜி. இராதாமணாளன்

"இல்லை, சொல்லுங்கள்!" என்று அவன் தைரியம் தந்ததும், தாவிப் புறப்பட்டன பலகுரல்கள்.

"இவன் கண்களைக் குத்த வேண்டும்!"

"கரங்களை வெட்டிவிட்டு, காட்டில் விட்டுவிட வேண்டும்!"

"மலைமீதிருந்து உருட்ட வேண்டும்!"

"இளவரசியாரை இம்சைக்குள்ளாக்கிய இவனைத் தலைகீழாக மரத்திலே கட்டித் தொங்கவிட்டு, அடியிலே பெரிய தீயை மூட்டவேண்டும். இவன் துடி துடிக்கச் சாவதைக் கண்டு, நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைய வேண்டும்!"

"கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும்!"

"இல்லை. பாம்புகளை விட்டு இவனைக் கடிக்கவிட வேண்டும்!"

"போதும்!" என்பதைப் போலச் சக்திவர்மன் கையை உயர்த்தியதும், குரல்கள் நின்றன.

"இவனைக் கொல்லவேண்டும்! அதுவும் சித்திரவதை செய்து, சிறுகச் சிறுக சாகடிக்க வேண்டும்! இதுதானே நீங்கள் எல்லோரும் சொல்வது?"

"ஆமாம்! ஆமாம்!" என்று வீரர்கள் குரலெழுப்பினார்கள்.

"சரி! வல்லபி, நீ என்ன சொல்கிறாய்?"

"உங்கள் கேள்வியை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே?"

"சாதாரணக் கேள்வி தானே!"

"ஆமாம் சாதாரணக் கேள்விதான் — பிறர் கேட்டிருந்தால்! ஆனால் கேட்பது தாங்கள் அல்லவா? அதனால் தான் புரிந்துகொள்ள முடியவில்லை!"

"நரேந்திரனைச் சித்திர வதை செய்து விடுவதினாலோ—கொன்று கோபம் தீருவதினாலோ—சாமவதியை நாம் திரும்பப் பெற்றுவிட முடியுமா?"

சக்திவர்மன் இவ்வாறு கூறியதும், சுற்றிலுமிருந்தவர்களின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"அதற்காக ஒன்றுமே செய்யாமல் விட்டுவிடலாம் என்கிறீர்களா?" என்று வல்லபி கேட்டாள்.

"ஏன் எதாவது செய்தாக வேண்டுமா?" என்று அவன் கேட்டதும், அந்தக் கோபத்தில் அவளுக்குச் சிரிப்புத் தோன்றியது.

"இல்லை, சாமவதிக்கு அவ்வளவு பெரியதீங்கிழைத்த.."

"ஆமாம் வல்லபி, என் அருமை தங்கைக்குமாபெரும் கேடு செய்த இவனை, மன்னிப்பதென்றும், விடுதலை செய்வதென்றும் முடிவு செய்து விட்டேன்!"

"உங்கள் பேச்சை நான் மட்டுமல்ல, நரேந்திரன்கூட நம்ப மாட்டார்!"

"விடுதலைக்கான என் நிபந்தனையைச் சொன்னால், நம்புவாய்! நல்ல முடிவு என்றும் ஒப்புக் கொள்வாய்!" என்று சக்திவர்மன் தன் பார்வையை நரேந்திரன் பக்கம் திருப்பினான்.

"உன் விடுதலைக்கான என் நிபந்தனையைச் சொல்லலாமா?"

"விடுதலை வேண்டுமென்று நான் கேட்கவில்லையே!" என்று நரேந்திரன் கூறியதும், சக்திவர்மன் ஒரு கணம் திகைத்து விட்டான்.

"கேட்பதற்கு முன்பே கெஞ்சிக் கூத்தாடுவதற்கு முன்பே—ஒன்றைத் தருவது பெருந்தன்மையான செயல் என்பதை, நான் அறிவேன்! ஆகவே உனக்கு ஒரு நிபந்தனையோடு, நான் விடுதலை அளிக்கிறேன்! என்ன நிபந்தனை தெரியுமா?"

"சொல்லுங்கள்!"

"இன்றிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் சாமவதியை மீட்டு வந்து என்னிடம் நீ ஒப்படைக்க வேண்டும்! உன்னால் அது முடியாவிட்டால், ஓராண்டின் கடைசிநாளன்று என்னிடம் வந்து நீ சேர்ந்து விட வேண்டும்! அதன் பிறகு உனக்கு என்ன தண்டனை தரலாமென்பதை நான் முடிவு செய்வேன்!"

"நான் வேங்கி நாட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும்! உங்கள் தங்கையை மீட்டு வரவேண்டும்! அது தானே நிபந்தனை?"

"ஓராண்டிற்குள் அது நடந்தாக வேண்டும்!"

"எப்படியாவது தப்பினால் போதும் என்று, நிபந்தனையை ஏற்றுக் கொள்வதாக நான் சொன்னால்?"

"நரேந்திரன் எப்படிப்பட்டவன் என்பதை நான் அறியேன்! ஆகவே உன் சொல்லில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது!"

"என்னைப் பற்றி அந்த அளவுக்குத் தெரிந்திருப்பதற்கு நன்றி! ஆனால் உங்கள் நிபந்தனையை நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருக்கிறேன் என்பதற்காகவருத்தமடைகிறேன்!"

"ஏன்?"

"வேங்கி நாட்டிற்கு நான் திரும்பிச் செல்ல விரும்பவில்லை!"

"இன்னும் ஒரு நாழிகை உனக்கு அவகாசம் தருகிறேன்! அதற்குள் யோசித்து உன் முடிவைச் சொல்! நிபந்தனையை ஏற்றுக் கொள்ளாவிட்டால், உங்கள் இருவருக்கும் என்ன தண்டனை தெரியுமா-மரண தண்டனை! என்று சொல்லிவிட்டு சக்திவர்மன், பாசறையை நோக்கி நடந்தான்

"நரேந்திரா! ஒப்புக்கொள்! இல்லாவிட்டால் மரண தண்டனையாம்! அய்யோ வேண்டாம் நரேந்திரா! நாம் சாக வேண்டாம்!" என்று செல்லையன் கெஞ்சத் தொடங்கி விட்டான்

மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த ஒரு கொடியைப் பிடித்தவாறு நரேந்திரன் மௌனமாக நின்றிருந்தான்.

அவர்களிருவரையும் பார்த்தபடி சிறிது தூரத்திலிருந்த ஒரு கல்லின் மீது வல்லபி உட்கார்ந்திருந்தாள்.

"நரேந்திரா! ஒப்புக்கொள்!"

"வேங்கி நாட்டிற்குத் திரும்ப நான்விரும்பவில்லை!"

"நரேந்திரா! நரேந்திரா! எனக்குச் சாவதற்குப்பயமாக இருக்கிறது! வேண்டாம் நரேந்திரா! சரிஎன்றுசொல்லி விடு!" என்று செல்லையன் அழவேஆரம்பித்துவிட்டான்.

குச்சியொன்றை எடுத்து வாயில் கடித்தபடி வல்லபி அக் காட்சியைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தாள்.

இனமுழக்கம் வழங்கப்போகும்
இன்பப் பொங்கலிலே பங்குகொள்ளும்
அரசியல் தங்கங்கள்!

சொல்லின்செல்வர் ஈ. வெ. கி. சம்பத், M.P.
நாஞ்சில் கி. மனோகரன், M.A.
ஏ. பி. ஜனார்த்தனம், M.A.
க. அறிவழகன், M.A.

உங்களுக்கு எங்கள் பொங்கல் பரிசு இது:

டாக்டர் மு. வரதராசனார்
திராவிடமொழி நூலார் ஞா. தேவநேயப்பாவாணர்
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்
டாக்டர் அ. சிதம்பரநாதன்
அ. மு. பரமசிவானந்தம், B.O.L.,
ப. ஜீவானந்தம், புலவர் அரசுமணி

இலக்கியச் சோலையிலே இவர்கள்
உலா வரும் கோலம் காண

இன்றே 'இனமுழக்கத்திற்'கென்று
ரூ.4 சேர்த்து வையுங்கள்!

சக்திவர்மன் பாசறைக்கு வெளியே வருவதைக் கண்ட செல்லையன், "நரேந்திரா! ஒப்புக் கொள்! ஒப்புக் கொள்வதாகச் சொல்! இல்லாவிட்டால் இப்பவே என் உயிர் போய்விடும்!" என்று கெஞ்சி அழுதான்.

"செல்லையா! அழாதே! நான் ஒப்புக் கொள்கிறேன்!" என்று சிரித்துக் கொண்டே நரேந்திரன் கூறினான்.

அதைக் கேட்டுக் கொண்டே அங்குவந்து நின்ற சக்திவர்மன், "அப்படியானால் உங்கள் பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்!" என்று நரேந்திரன் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

(வளரும்)

★ சி. பி. சிற்றரசு ★

சே. கோவிந்தராசு
சென்னை-12

கே: உத்தமன் புத்தர் அவர்களது தாய் மொழி எது? அதுபோல் இராவணன், இராமன், கிருட்டிணன், பாண்டவர், வீர மங்கை ஜான்சி இவர்களின் தாய் மொழிகள் யாவை?

ப: புத்தர்-பாலிமொழி. இராவணன் தமிழ். இராமன்-கிருஷ்ணன் -வடமொழி-ஜான்சி மராட்டியம்.

ப. இ. இனமுழக்கப்பிரியன்
பம்பாய்-70

கே: வரலாறு கண்ட எங்கள் சிந்தனைச் சிற்பி அவர்களே! நான் முன்னாள் கிறிஸ்தவன். இன்றைய தி. மு. க. உறுப்பினன். எனது காதலியோ கிறிஸ்தவ வயோதிகரின் மகள். எங்கள் மண ஏற்பாடு நடைபெறுகிறது. இக்கட்டான வேளையில் நான் எப்படிச் செய்வது? கழகக் கட்டுப்பாடும் குலையாமல்(மீருமல்) காதலித்த பெண்ணையும் விடாமல்-நாங்கள் ஒன்று சேர நீங்களே ஒரு வழி சொல்லுங்கள்!

ப: கழக கட்டுப்பாடு காதலித்தப் பெண்ணைக் கைவிட வேண்டும் என்பதல்லவே. காதலியைக் ஜகவிடுவதென்பது அவ்வளவு எளிதா.

திருத்தமிழன், பிளிச்சி.

கே: "தமிழர்கள் போதிய அளவு மதி நுட்பமும், ஆண்மையும், முன்னேறும் ஆற்றலும் படைத்தவர்கள். எனவே தென்னிந்தியாவை வாழ வைக்கும் முழுப் பொறுப்பையும் தமிழரையே சேர்ந்தது." என்று குய்ஸ்தாவ் லெபோன் என்னும் மேனாட்டு அறிஞர் கூறியுள்ளார். ஆனால், இங்கு தமிழர்களுக்குத் தனியரசு வேண்டி, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் முழக்கம் செய்ய ஒரு சில தமிழர்கள் தயங்குவது ஏன்?

ப: நம்முடைய அறிவிலே யாருக்கும் சந்தேகமில்லை. ஒற்றுமையில்தான் பலருக்குச் சந்தேகம்

C. சங்கரன், பாலக்காடு.

கே: தங்கரத்தினம் திரைப் படத்தில், பழனிமா நாட்டில் பேசிய தமிழகத்தைச்சேர்ந்த தி மு. க. தலைவர்களைக்காண்பித்த இலட்சிய நடிகர், அதே மாநாட்டில் பேசிய கேரளமா நிலத்தில் பெரும் படை திரட்ட அரும்பாடுபட்டவரும் கே. எச். எம். சுபேர், மற்றும் திராவிட மாநிலத் தலைவர்களைக் காண்பிக்கவில்லையே ஏன்?

ப: அது அவரைத்தான் கேட்க வேண்டும்.

வெ. வணங்காமுடி
புனையனூர்.

கே: நம் மந்தி(ரி)கள் பொதுக் கூட்டங்களில் எதைப் பேசுகிறார்கள்?

ப: ஒரு நாள் சிரமம் பாராமல் போய்க் கேளும்.

கே: காங்கிரஸ்காரர்கள் செய்யாத அக்கிரமங்கள் ஏதாவது.........

ப: பஞ்சமா பாதகம் முதல் மகா பாதகம் வரை செய்தாய் விட்டதே, இனி ஏது பாக்கி.

எழுஞாயிறு, மதுரை

கே: மதுரை அடிகளார்பிற மதத்தினரை இந்துவாக மாற்றுகிறாரே! அப்படியானால் இந்து மதப்படி அவர்கள் எச் சாதியைச் சேர்ந்தவர்களென்று அழைக்கப்படுகிறார்கள்?

ப: கதம்பம் என்று கேள்விபட்டிருப்பீர்களே. எல்லாப் பூக்களையும்சேர்த்துக்கட்டும் மாலை அதுதான்.

கே: இந்தியத் துணைக்கண்டத்தில் திரையிடப்படும் திரைப் படங்களில் அதிகபங்கேற்றுள்ள நடிகர் யார் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

ப: தோழர் சிவாஜி கணேசனாக இருக்கலாம்.

வையக்கனி, நல்லமங்கலம்.

கே: வருகிற பொதுத் தேர்தலில் புரட்சி நடிகர் M. G. R. நிற்பாரா? இல்லையா?

ப: கழகத்தையும் கேட்க வேண்டும், அவரையும் கேட்க வேண்டும்,

இளமுழக்கம் படைக்கப்போகும்
இன்னமுதப் பொங்கலை,
சுவையுள்ளதாக்கப் போகும் சிறுகதைச் செல்வங்கள்
முடிசூடா மன்னர் :
அறிஞர் அண்ணா, M.A., M.L.A.
பங்குபெறுவோர் :
அகிலன் — ஜெகசிற்பியன்
கே.ஜி. இராதாமணாளன் — டி. கே. சீனுவாசன்
அரு. ராமநாதன் — வாசவன்
வே. கபிலன் — க. வள்ளியப்பன்
கோவி. மணிசேகரன் — பூவை.எஸ்.ஆறுமுகம்
இருகூரான் — பஞ்சு. அருணாசலன்

R. தாண்டவன் திண்டுக்கல்.

கே: அண்ணா அவர்களே, காங்கிரஸ் கட்சிக் கடைசிக் காலத்தில் எப்படியிருக்கும்?

ப: இழுத்துப்பறித்துக்கொண்டிருக்கும் ஒரு கரண்டி பாலும் ஓவென்ற அலறலும இருக்கும்.

கே: ராஜாஜி அவர்கள் இப்போது பேசி வருவது போல் 5 வருடம் முன்பே பேசியிருந்தால் எப்படியிருக்கும்?

ப: அப்போது அவர் பேசி இருக்க முடியாது. பேசியிருந்தால் தேர்தல் கொஞ்சம் ரசிக்கத் தகுந்ததாக இருக்கும்.

எழுஞாயிறு. மதுரை

கே: திருமண அழைப்பு இதழில் யாவரும் தங்கள் நல்வரவை விரும்பும் உறவினர்களும், நண்பர்களும் என்று அச்சிடுகிறார்களே, அப்படியானால் திருமண விழாவில் கலந்துகொள்ள அழைக்கப் படுகிறவர்கள் யார்?

ப: தங்கள் வரவை ஆவலுடன் எதிர்ப்பார்க்கும், என்ற சொற்றொடர்களே அவர்களுக்காகத்தானே.

அ. செல்வராஜ். ஒத்தைக்
கால் மண்டபம்.

கே: இன்றைய இட்லரான சி. பி சி. அவர்களே! நாங்கள் பூனை (காங்கிரஸ்காரர்கள்) நீங்கள் எலி (தி மு. க) பூனை எலியைப் பிடிப்பதைப் போல், நீங்கள் முன்னுக்கு வந்தால் அமுக்கிவிடுவோம் என்கிறார்களே சிலர் !......... இதற்கு......

ப: சுமார் நான்கு இலட்சம் பேர்களில் இதுவரை எத்தனை பேர்களை அமுக்கியிருக்கிறார்கள்.

செ. மங்கையர்க்கரசி,
பல்லாவரம்

கே: அன்புள்ள தாத்தா! எனக்கொரு தங்கை பிறந்திருக்கிறாள். ஒரு நல்ல பெயராக வையுங்கள் பார்க்கலாம்

ப: **அன்பு மணி** என்று வையுங்கள்.

வி. நடராசன்
மேட்டுப்பாளையம்

கே: பத்மினிக்கு திருமணம் என்றால் இந்தத் தினத்தந்தி ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறது?

ப: புரோகிதம் செய்யக் கூப்பிடுகிறார்ளோ என்னமோ.

கே: தான் ஒரு 'நாம் தமிழர்' இயக்க ஏடு என்பதைச் சொல்ல ஏன் தினத்தந்தி பயப்படுகிறது?

ப: சொன்னால் தினத்தந்தி முன்னூறு பிரதிகள் அடித்தால் போதும்.

கே: 'கழகம்' என்றால்சூதாடும் இடம் என்ற ஒரே ஒரு பொருள்தான் உண்டு எனப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் 'ஆதித்தனார்' 'பண்ணுதற் பெருங்கடவுளும் கழக மோடமர்ந்து' என்னும் அடிகளில் வரும் கழகத்திற்குப் பொருள் தருவாரா?

ப: தெரியாதவருக்குத் தெரியச் சொல்லுங்கள். கழகம் என்றால் பல அறிவாளிகள் கூடிப் பேசும் இடம்! அதில் கலந்துக் கொள்ள முடியாதவர் வேறு எப்படிச்சொல்லுவார்.

1 காலண்டர் விலை ரூ. 1.

அளவு $10\frac{1}{2}'' \times 8''$ மூவர்ண கலர், ஆர்ட் பேப்பர், வார்னீஷ் விடப்பட்டது. கழிவு சில்லரை வியாபாரிகளுக்கு $12\frac{1}{2}$ சதவிகிதம் குறைந்த பட்ச ஆர்டர் 1 டசன். மொத்த வியாபாரிகளுக்கு 20 சதவிகிதம் குறைந்த பட்ச ஆர்டர் 100. வி. பி. பி., ஆர். ஆர். பேங்க், லாரி, செக்மூலம் ஆர்டர்கள் அனுப்புவதில்லை.

குறிப்பு:—விற்பனையாளர் இல்லாத ஊரில் கழகத் தோழர்களும், கிளைக் கழகங்களும் ரூபாய் 1 அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

முகவரி : **சமரன் அன் கம்பெனி,**
11, சுந்தரவிநாயகர் கோவில் தெரு, சென்னை-11.

அன்னதானம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோயிலுக்கும்- ஆண்டவனுக்கும் இழுக்குத் தேடியவர்கள் ஆவோம். அதையறிந்தே நமது தர்மராசன் அவர்கள் இந்த அன்னதான ஏற்பட்டைச் செய்திருக்கிறார் என்று நம்புகிறேன். அவரைப் பாராட்டுகிறேன்" என்று பேசிக்கொண்டிருந்தார்.

அந்த வேளையில், சவ ஊர்வலம் ஒன்று தர்மராசன் வீட்டு வழியாக வந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் உள்ளவர்களில் சிலர் எழுப்பிய அழுகை ஒலியில் மந்திரியின் பேச்சுத் தடைப்பட்டது. அதைக் கண்ட தர்மராசன் சப்தம் வந்த திக்கை நோக்கினார்.

குப்பாண்டி தனது இறந்த மகனைக் கையில் ஏந்திக் கொண்டு நடந்து கொண்டிருந்தான். மகனை இழந்த நல்லம்மாள் கதறிக்கொண்டு தன துகணவனைப் பின்பற்றிச் சென்று கொண்டிருந்தாள். அந்த ஏழையின் சவ ஊர்வலத்தில் அவர்களைப் போல் ஏழைகளில் சிலர் பின்பற்றிச் சென்று கொண்டிருந்தனர்.

இந்தக் காட்சியைக் கண்ட தர்மராசன், குற்றவாளியைப் போல் தலை குனிந்து கொண்டார். அவருடைய முகம் சோர்ம்பிக் காணப்பட்டது. சவ ஊர்வலம் அந்த வீதியைக் கடந்ததும், மந்திரி மறுபடியும் பேச ஆரம்பித்தார்.

"கனம் தர்மராசன் அவர்கள் காங்கிரஸ் நிதிக்கு பாரியைப்போல் வாரி வழங்கியிருக்கிறார். அதே போல் இன்று அன்னதானம் செய்து உங்கள் அன்பைப் பெற்று இருக்கிறார். அடுத்து வரும் தேர்தலில் அவர் இந்தப் பகுதி எம். எல். ஏ. யாக நின்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அதற்கு வேண்டிய வேலைகளை நான் கவனித்துக் கொள்ளுவேன். இந்த அன்னதானத்தை ஏற்பாடு செய்த கனம் தர்மராசனை மீண்டும் மீண்டும் பாராட்டுகிறேன்" என்று கூறி மந்திரி அமர்ந்தார்.

சவ ஊர்வலத்தைக் கண்டு உற்சாகமில்லாமல் அமர்ந்திருந்த தர்மராசன், மந்திரியின் கடைசிப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தார், குப்பாண்டிக்கு ஒரு படி அரிசி கொடுத்திருந்தால், அவன் மகன் பிழைத்திருப்பான்; ஆனால் என்னைச் சட்ட மன்ற உறுப்பினராகச் செய்ய முடியுமா? என்று மனதிற்குள் நினைத்துப் பார்த்தார். தான் திட்டமிட்டுச் செய்த அன்னதானத்தை நினைத்துச் சிரித்தார். மந்திரி அவரைப் பார்த்துப் புன்னகை செய்தார் அவருடைய புன்னகை, 'நீ சட்ட மன்ற உறுப்பினராவது உறுதி, என்று கூறுவது போல் இருந்தது.

தென்னகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத அமைச்சர்கள்!

திராவிடமுன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியை அதனுடைய பெருமையைக் காணவும் அரசியல் தகுதியைப் பாராட்டவும் விரும்பாத தேசியவாதிகள் தங்களுடைய அறியாமையைக் காட்டிக் கொள்ளும் வகையிலும் முறையிலும் கழகத்தின் மீது வழக்கம் போல் தருகின்ற வசைமொழிகள் இருக்கின்றன. நாட்டைக்கண்காணிக்கத் தவறிப்போனாலும் ஆளுகின்ற கட்சி காங்கிரசுக் கட்சியென்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள். வயிற்றுப்பிழைப்பை மட்டும் குறியாகக் கொண்டு அமைச்சர்களிடத்திலே அடைக்கலம் புகுந்தவர்களைக்கூட நாம் மறந்து விடலாம். மன்னித்து விடலாம்! ஆனால் மந்திரிகள் எனப்படுபவர்கள் தங்களது தரத்தைத் தாழ்த்திக்கொள்ளும் வகையில், கழகத்தின் கொள்கைகளைப் பற்றிப் பேசாமல் தலைவர்களைக் கணக்கெடுப்பதில் முனைந்திருக்கிறார்கள். கழகத்தின் பல்வேறு வகையான கருத்துக்களைக் கேட்டவர்கள் அவைகளிலே தவறில்லை என்பதை ஒப்புக் கொள்வார்கள் கழகத்தின் விருப்பங்கள் தமிழகத்தின் தேவைகள் என்பதும் உண்மையாகும். ஐந்தாண்டுத் திட்டங்களில் சென்னையின் வேண்டுதலை வடவர்கள் மதிக்கவில்லையென்றால் இங்கேயிருப்பவர்களைச் செல்லாகாசுகளாகவே கருதுகிறோம் என்று நேருவும் அவரது தாசர்களும் சொல்கிறார்கள் என்றால் தமிழகத்திற்கு கர்மவீரன் காமராசரும் மற்றவர்களும் மந்திரிகள் என்று உட்கார்ந்திருப்பானேன்! 400 கோடி தேவையென்று வெங்கட்டராமனும் சுப்பிரமணியமும் கேட்டார்கள். 190 கோடிதான் தரமுடியும் என்று பதில் சொல்லிவிட்டார் நந்தா! எதிர்பார்த்தது கிடைக்கவில்லை என்று விதவைகளைப் போல விழுகிறார்களே தவிர விரும்பிக் கேட்ட பங்குத் தொகையைப் பெற்றே தீருவோம் என்று பேசுகின்ற மந்திரியைக் காணவில்லை! தென்னகத்தின் தேவைகளைக் கேட்டு பெறவேண்டியநேரத்தில் தூங்கிவிட்டீர்கள் என்று சட்டமன்றத்திலும் பொது மன்றத்திலும் கழகம் விடுத்த வேண்டுதலை மறந்துவிட்டவர்கள் திட்டக்குழு விட்டெறிந்த பிச்சைக்காசுகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு இங்கே வந்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கொள்கை இல்லை, இலட்சியங்கள் இல்லை, திராவிடநாடு என்றைக்கும் வரப்போவதில்லை என்றெல்லாம் இங்கே ஊருக்கு ஊர் சென்று ஊளைக்குரல் தரும் காமராசர்கள் திட்டக் குழுவிலே என்ன பேசினார்கள் என்பதை இன்றுவரையிலும் தெரிவிக்கவில்லை! வலிப்பு வந்தவர்களைப் போல் இழுத்துப் பேசவும் திக்கு மொழிகளையெல்லாம் வெளியிடுகிற சொக்கலிங்கத்தின் பத்திரிகைகூட காமராசருடைய அல்லது சுப்பிரமணியத்துடைய பேச்சினைத் தெரிவிக்க முடியவில்லை! சென்னை சட்டமன்றத்திலேயே பேசுவதென்றால் காமராசருக்கு உடல் நடுங்கும். உள்ளம் துடிக்கும். எதிரே அறிஞர் அண்ணா அவர்கள் இருக்கின்ற காரணத்தினால் திட்டமந்திரி நந்தா இவருக்குத் தெரிந்தவர் இவருடைய பொருளாதார அறிவாற்றலை அறிந்தவர் அவரிடத்திலே பேசுவதற்கு யார் தடையாக இருக்க முடியும்? அங்கே எதிர்த்துப் பேசும் அருகதையை இழந்துவிட்டு இங்கே வந்து கழகத்தை நம்பாதீர்கள் என்று நாப்பறையடிக்கிறார்கள். ஆனால் எல்லா காங்கிரசுக்காரர்களும் சென்னை மந்திரிகளைப் போலவா இருக்கிறார்கள்? காங்கிரசுக்காரர்களின் துணைகொண்டு முதல் மந்திரியாகியிருக்கும் பட்டம்தாணுகூட முறைத்துப் பார்த்து உரக்கப் பேசியிருக்கிறார். வங்கத்து முதல்வர் டாக்டர் பி. சி. ராய் டில்லிக்குக் காவடி தூக்கவில்லை. கல்கத்தாவிலிருந்து கொண்டு வங்கத்துக்குரிய பங்குத் தொகையை உயர்த்தப்பட வேண்டுமென்று உரிமையுடன் கேட்டுப் பெற்றுக் கொண்டார்! ஆனால் சென்னை மந்திரிகள் மூவர் நந்தாவீட்டுப் படிக்கல்லிலே காத்திருந்தார்கள்! இதனையெல்லாம் எண்ணிப் பார்க்க சென்னைக் காங்கிரசுக்காரர்களுக்கு நினைப்பில்லை—நேரமில்லை! முதல்தடவை அறிக்கையுடன் சென்று முதுகிலே குத்து வாங்கித் திரும்பிய வெங்கட்ராமன் இப்போது இங்கில்லை. இருக்கின்ற மூவர்களும் மூடி மறைத்துக் கொண்டார்கள் முகத்தை!

காமராசரும் அவருடைய கடைசித்தரக் கூட்டாளிகளும் எதைச் செய்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தமிழ் மக்களுக்குக் கட்டளையைத் தருகிறார்கள்! மக்கள் நலனை மதிக்க வேண்டும் என்ற மனப்பான்மையிருக்குமானால் வெள்ள நிவாரண குழுவுக்குத் தரவேண்டிய நிதியினைக்கூட தரமாட்டேன் என்று அதிகாரத் திமிர் வந்திருக்காது. எத்தனையோ முதலமைச்சர்களுடைய செய்திகளை ஏடுகள் தருகின்றன. பட்டம்தாணுவிலிருந்து பஞ்சாப் மாநிலத்துக் கெய்ரான் வரை எவரும்இந்த காமராசரைப் போல மட்டரகமாக நடந்து கொள்ளவில்லை! சென்னை நகரத்து மேயர் பதவி சென்னை சர்க்காருடைய கடுமையான எதிர்ப்புக்களைக் கூடத் தாண்டிவிட்டுக் கழகத்தின் தோழரிடத்திலே இருக்கிறது! மூன்று முறை முக்குடைபட்டிருக்கும் வேதனையைக் கர்மவீரன் வெள்ள நிவாரணத்திலே நிரப்புகிறார்! தமிழ்நாட்டு மக்களைத் தீய்க்கும் துன்பம்தான் உருவிலே உள்ளதே தவிர இவராலே தொல்லைகள் தீரவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகம் காமராசருடைய தயவிலேதான் தன் பெருமையை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்திலே இல்லை! இந்திய பிரதமரும், போலந்துப் பிரதமரும் கொடுத்த பணம் காமராசருடைய தேர்தல் பெட்டியிலே போட்டுக் கொள்வதற்காக அல்ல! மேயருடைய குழுவிலே காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்கள்! அமைச்சர்களின் சார்பில் யாரும் கலந்து கொள்ளாததால் அந்தக்கூட்ட முடிவுகளை அமைச்சர்கள் அறிந்துகொள்ளவில்லை! திட்டம் என்றால் ஒருவனிடத்திலே கேட்டுப் பெறத் தெரியாத தலையாட்டிகள் மேயர் கேட்டு நேரு தந்ததைத் தங்கள் பெட்டியிலே வைத்துக்கொள்ள வெட்கப்படவேண்டும்? போலந்துப் பிரதமருக்கு காமராசருடைய கனிவான முகத்தைப் பார்த்தவுடன் காதல் உண்டாகவில்லை.

கூடலரசன்

அதற்காகக் கொடுத்த பணமல்ல அந்த பதினேழாயிரமும்! நாசர் வந்தபோது 'உம்' என்று முகத்தைச் சுருக்கி அப்துல் காதர் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்த 'மேதை' இப்போதாவது பேசவேண்டும்.

காமராசர் தலைமையிலேயிருக்கும் அமைச்சர் கூட்டத்திற்கும் கூலிக்குக் குரல் கொடுக்கும் அளகேசன் கும்பலுக்கும் முன்னேற்றக் கழகத்தை எங்கும் எதற்கும் எதிர்க்கவேண்டும் என்பது கட்டாயத் திட்டமாகிவிட்டது. இத்தனைக்கும் முக்கிய காரணம் சொந்த புத்தியில்லாத மந்தத் தன்மை! மந்திரித்தன்மைக்குப் பதிலாக நிறைந்திருக்கும்மந்தித் தன்மையும் முன்னேற்றக் கழகத்தின் மீது சுடுசொல் தருவதற்கு சிறந்த சான்றாக இருக்கிறது. பல ஆண்டுகளாகத் திட்டங்களைப் போட்டுப் பணத்தைப் பாழடித்துக் கொண்டிருப்பவர்கள்இப்போதுதான் திட்டங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வடநாட்டுக்குச் சுற்றுப் பயணமும் செய்கிறார்கள். இரண்டே இரண்டு நாட்களில் காமராசரும் சுப்பிரமணியமும் எல்லாவற்றையும் பார்த்துத் தெரிந்துகொண்டு திரும்பிவிட்டார்களாம்! உடனேயே சொல்லியிருக்கிறார்கள். சேலத்து இரும்புத்தாதுக்களை சோதனைக்கு அனுப்பப் போகிறோம் என்று. அடுத்த தேர்தல் வரை இதைச்சொல்லி ஏமாற்றிக் கொள்ள நினைக்கிறார்கள்போலும்.

இங்கேயிருக்கும் அமைச்சர்களிலேயே வயது முதிர்ந்தவரான பக்தவத்சலம் சில நாட்களுக்கு முன்னால் 'தமிழ் நாடு' பெயர் சூட்டுவதைப் பற்றிப் பேசியிருக்கிறார்! அவசியமில்லை என்று சொன்ன அமைச்சர் தி.மு.க.வினரின் பொய்யுரைகளை நம்பாதீர்கள் என்றும் கேட்டிருக்கிறார்! 'தமிழ்நாடு' என்று தாயகத்திற்குப் பெயர் சூட்டுவதிலிருந்து ஐந்தாண்டுத் திட்டங்களில் வஞ்சிக்கப்படும் நிலைமைகளைச் சமாளிப்பது வரை எதையும் சாதித்துக்காட்டாதவர்களிலே அந்தக் கோட்டைக்குள்ளே குறட்டைவிடும் எட்டுப்பேர்களிலே இவரும் ஒருவர்! தமிழக மக்களுடைய பிரச்னை எதுவந்தாலும் எல்லாவற்றுக்கும் கழகத்தினைக் காட்டி ஒப்பாரி வைப்பதும் புலம்பி அழுவதும் இவர்களின் பழக்கமாகிவிட்டது! கழகத்தை ஏசுவதைக் காட்டிலும் நாட்டு மக்களுக்கு பதில் சொல்லவேண்டிய எத்தனையோ செய்திகள் இருக்கின்றன. ஐந்தாண்டுத் திட்டம் தீட்டிய சென்னை மந்திரிகளின் வேண்டுதலை டில்லிக்காரர்கள் எட்டி உதைத்து விட்டார்கள். அதைப்பற்றிக் கொஞ்சமும் கலங்காமல் போலீசு மந்திரி பதவியில் ஒட்டியிருக்கிறார்.

சென்னை மாநிலத்துக்குள்ள தேவைகளைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் கழகத்தைத் தாக்கித் தீர்ப்பதில் கவனத்தையெல்லாம் பயன்படுத்தும் அமைச்சர்கள் இனிமேலாவது தங்களின் கடமைகளை உணரவேண்டும். காமராசர்களுடைய சீடர்கள் நாலுகால் பாய்ச்சலில் சுற்றித் திரிவதே போதும். காங்கிரசுக் கட்சியின் சாதனைகளைக் காட்டு! தமிழ் நாட்டின் நிலை உயர்த்தும் தகுதி தனக்கும் தன்னுடைய அமைச்சர் குழுவிற்கும் உண்டு என்ற நம்பிக்கை காமராசருக்கு இருக்குமானால் வர இருக்கும் பொங்கல்திருநாளில் 'தமிழ்நாடு' எனப் பெயர் வழங்கி தமிழர்தம் பாராட்டுதலைப் பெறட்டும்.

கவிஞர் கண்ணதாசன் தரும் காவியத்துடன்
இனமுழக்கம்
1961 பொங்கல் மலர்
விலை ரூ 4/-
வாங்கத் தவறாதீர்கள்

400 கோடி கேட்டனர், 190 கோடிதான் தரமுடியும் என்கிறார் திருவாளர் நந்தா

தப்பாதே தளையறுக்க!

குட்டுவனின் வழியா நீ? கொடுமை கண்டால்
குமுறியெழும் குலத்தவனா? இமய மீது
சிட்டாக உனதுகொடி பறக்க விட்ட
செந்தமிழர் இனத்தவனா? சீச்சீ, வெட்கம்!
எட்டப்பர் பரம்பரையில் வந்தாற் போல
இனமதனை அடகுவைத்த துரோகிக் கும்பல்
முட்டாளே! உனைக்கட்டி ஆள விட்டாய்;
மூவேந்தர் பரம்பரைக்கே களங்கம் கண்டாய்!

பட்டமரம் எனஉனது நாடு மாறப்
படுபாவி சிலர்காட்டிக் கொடுத்து விட்டார்!
திட்டமென்ற பேர்சொல்லி வடவர் கூட்டம்
திராவிடத்து வளமதனைச் சுரண்ட விட்டார்!
பட்டதடா, நமதுபுகழ், நமது மானம்
பழம்பெருமை செத்துவிடப் பார்க்க லாமா?
துட்டமனம் கொண்டவரின் சட்ட மெல்லாம்
தூளாக்கப் புறப்படடா துணிச்ச லோடு!

அறைகூவி அழைக்கிறது, சிறைகள் நம்மை!
அணிவகுத்துப் புறப்படுவோம்! கழகம் என்ற
உறையினிலே உறைகின்ற வாட்கள் நாங்கள்;
உரிமைப்போர் முழக்கமிட்டு எழுந்து விட்டோம்!
சிறைஎன்ன எமைச்செய்யும்? நாட்டிற் காகச்
செத்துவிடத் துணிந்தவர்கள், சிறையைக் கண்டா
அறையினிலே அடைபடுவோம்? இல்லை; நாங்கள்
அருந்தமிழர் பரம்பரையில் பிறந்த கூட்டம்!

'என்னையீன் றெடுத்தவளே! உன்மே லாணை!
எழிற்றமிழைக் கொல்லுபவன் எவனா னாலும்
பொன்னுடலில் உயிர்உள்ள வரையில் இங்கே
போராடத் துணிந்துவிட்டேன்! இந்தி வந்தால்
இன்னுயிரும் தந்தெதிர்க்கத் தயங்கேன்! நாட்டை
இனியடிமைச் சேற்றினிலே பார்க்க மாட்டேன்!
என்றுணை கூறிவிட்டு இளைஞ னேநீ
எரிமலைபோல் குமுறியிவண் எழுவாய் இன்றே!

இறுதி மூச் சிருக்கு(ம)வரை இந்த நாட்டில்
இடமளியோம் இந்திக்கு; மீறி வந்தால்
குருதியினைக் குடங்குடமாய்க் கொட்டு தற்கு
குமுறிவரும் இளையவர்கள் உண்டு இங்கே!
உறுதியடா; உறுதியிது! இந்தி வந்தால்
உன்மொழியின் உயர் வழியும்; உரிமை போகும்.
இறுதிபெறும் உனதுபுகழ், உனது நாடு!
இனப் பெருமை சீரழியும்! செத்துப் போகும்!

துப்பாக்கி, சிறைச்சாலை, தூக்கு மேடை
துணிவோடு துடித்தெழுந்தால் தூசாய்ப் போகும்
சிப்பாய்கள் தமைநம்பி வாழ்ந்த ஆட்சி
சிலநாளில் சிதறியதை சரிதம் சொல்லும்.
தப்பாதே தளையறுக்க! தவறி விட்டால்
தன்னுரிமை இழந்திடுவாய்; தமிழும் சாகும்!
எப்பாடு பட்டேனும் திராவிட த்தை
இனிமீட்கத் தயங்காதே! எழுவாய் இன்றே!

—காஞ்சி வில்லவன் கோதை

இணைப்புக்கு மறுப்பு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டிருக்கிறது. 'வேண்டுகோல்'என்று வெளியிட்டிருக்கலாம். ஏனோ 'யோசனை, என்று வெளியிட்டது-நல்லவேளை உபதேசம் என்று வெளியிடவில்லை, அது வரையில் மகிழ்ச்சிதான்.

நமது கலைஞர் கருணாநிதி அவர்கள் 'முரசொலி' ஏட்டில் அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டுமே தொழிலாளர்களுக்காகப் பாடு படக் கூடியதுதான். என்றாலும் பின்னது விடுதலை இயக்கம்,இந்தியா ஒன்று என்பதை ஏற்க மறுக்கும் இயக்கம். தொழிலாளர்களுக்காகப் பாடுபடுவதோடு, அவர்களுக்கு விடுதலையுணர்வையும் ஊட்டுவது என்ற இரு. கடமைகளைக் கொண்டுள்ளது. ஆனால் அவர்களுடையது இந்தியா ஒன்று என்று பேசும் இயக்கம். எனவே தொழிற் சங்கப் பணி ஒன்று மட்டும் தான் அவர்களுடைய குறிக்கோள் என்று குறிப்பிட்டு இருந்தார்கள்

அது மட்டுமின்றி இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் என்றால் எப்படி அது காங்கிஸுக்குச் சொந்தமானதோ, அதே போல் அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சொந்தமானது. ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மட்டும் சொந்தமான ஒரு அமைப்பில் நம்மை நாம் எப்படி ஈடுபடுத்த முடியும்?

இன்றைய காங்கிரஸ் கட்சி முழுக்க முழுக்க மில் முதலாளிகளையும் தொழில் அதிபர்களையும் நம்பியே இருக்கிறது. எனவே அவர்களின் நிழலின் கீழ் பணியாற்றும் தொழிற் சங்கம் அகில இந்திய ரீதியில் முதலாளிகளுக்குச் சாதகமாகவேதான் செயல்பட முடியும்—அப்படித்தான்செயல்படுகிறது. ஆனால் அத்தகைய குற்றச் சாட்டை நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவில் வளரும் தொழிற் சங்கத்தின்மீது சுமத்த விரும்பவில்லை. என்றாலும் எப்படியும் இன்னொரு கட்சிக்கு மட்டுமே சொந்தமான அமைப்பில் "இணைய முடியுமா?" என்ற கேள்விக்கு "முடியாது" என்ற பதிலைத் தான் தரமுடியும்.

உணவு விலை வாசிகளைக் குறைக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியும் நாமும் சேர்ந்து ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்தினோம். அதேபோல் தொழிலாளர் போராட்டங்கள் ஏற்படும் போதோ-உரிமைக் கிளர்ச்சிகள் நடைபெறும் போதோ-அவற்றிற்கான கட்டங்கள்,ஊர்வலங்கள் நடத்தும் போதோ—தீர்மானங்கள் நிறை வேற்றும் போதோ நாம் கட்சிப் பாகு பாட்டை மறந்து பிரச்சினையின் தன்மையைப் புரிந்து பொது நோக்கோடு ஒன்று படலாம். அதற்காக நிரந்தரமாகவே அந்த அமைப்பில் நம்மைப் புகுத்திக்கொள்வதென்றால் அது நம் கழகத்தின் தன்மையையே கேலிக் கூத்தாகி விடும்.

அதுமட்டுமின்றி முன்பு ஆங்காங்கு நமது தோழர்கள் தொழிற் சங்கப் பணி புரிந்து வந்தாலும் நமது தலைமைக் கழகம் அதுகுறித்து நிரந்தரமான ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. ஆனால் இப்போதோ தொழிற் சங்கச் செயலாளராக பேராசிரியர் க அன்பழகன் அவர்களை நியமித்து தலைமைக் கழகமே தொழிற் சங்கத் தொடர்புகளை ஏற்படுத்தி விட்டது. இவ்வளவு தூரம் நிலைமைகள் வளர்ந்து விட்டதற்கப்புறமும் எங்களுடன் இணைய வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரி என்று நமக்குப் படவில்லை,

"அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ் இந்தியா முழுமைக்கும் உள்ள நிறுவனம். நீங்கள் ஏக இந்தியரை ஒப்புக் கொள்ளாதவர்களாதலின் சென்னைக் கிளையிலாவது இணைந்து பணியாற்றுங்கள்" என்று சொல்லுங்கள். "சென்னையில் இருக்கும் தலைமைக் கழகம் உனக்குப் பிடிக்க வில்லை யென்றால் தூத்துக்குடியில் இருக்கும் கிளையில் சேர்ந்து பணியாற்று' என்று நாம் யாரை யாவது பார்த்துச் சொன்னால் அவன் ஏற்றுக் கொள்வானா? அப்படியானால் தலைமையுடன் சேராவிட்டாலும் சென்னைக் கிளையிலாவது சேருங்கள் என்று அவர்கள் சொல்வதை நாம் எப்படி ஏற்கமுடியும்? தலைமை தரும் தாக்கீதுகளைக் கடைப் பிடிப்பது தான் சென்னை ஏ ஐ டி யூ சி கிளையின் வேலை எனவே நாம் சென்னை கிளையில் நம்மை இணைத்துக் கொண்டாலும் அவர்களின் தலைமையின் உத்திரவுகளின்படிதானே நாம்நடக்கமுடியும். அதைவிட தலைமையுடனேயே சேர்ந்துவிடலாமே! எனவே சென்னைக் கிளையிலாவது சேருங்கள் என்பது நம்மை எப்படியாவது சேர்க்க வேண்டுமென்பதற்காகச் சொல்லப்படும் கண் துடைப்புச் சமாதானமே தவிற வேறல்ல. இவ்வளவு தூரம் இப்பிரச்னையை விரிவாக நான் எழுதுவதற்குக் காரணமே கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான இடத்திலிருந்து கம்யூனிஸ்ட் தோழர் ராமமூர்த்தி அண்ணாவைச் சந்தித்து இப்பிரச்னை குறித்துப் பேச இருக்கிறார் என்று கிடைத்த தகவல்தான். மேற்குறிப்பிட்ட காரணங்களால் அவருடைய அமைப்போடு இணைவது சாத்தியமில்லை என்ற முடிவுதான் ஏற்பட முடியும்.

எனவே அகில இந்திப தொழிற் சங்கக் காங்கிரஸோடு நமதுதொழிற் சங்க அமைப்பு இரண்டறக் கலக்க முடியாது. ஆனால் பொதுவான தொழிலாளர்உரிமைப்பிரச்சினைகளில் அவர்களோடு கைகோர்த்து நமது அமைப்பும் பணிபாற்றும் என்பது மட்டும் உறுதி.

தொழிற் பயிற்சி நுணுக்கப் புத்தகங்கள்

மின்சார வானொலித் துறை வழிகாட்டி ; மின்சார வசதியில்லாமலே வீட்டிலிருந்து கொண்டு, ரூ. 15/- மட்டும்செலவு செய்து வானொலிப் பெட்டி உருவாக்குவது எப்படி என்று விளக்கம்தரும் புத்தகம்.வானொலிப்பெட்டி பழுதுபார்ப்பது வீட்டுமின்சார இணைப்பு முதலியசெய்திகள்அத்தனையையும்170படவிளக்கங்களுடன்போதிப்பது, ஆர்வப் பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு வானொலி, மின்சார பணி உயர்ந்த ஒரு சிறு தனிப்பட்டறை வைத்து நடத்துவதற்கு வேண்டிய பாடங்களையுடைய புத்தகம் விலை ரூ. 6/-

குடிசைத் தொழில் வழிகாட்டி : விளக்கப்படங்கள்கொண்ட இந்தப் புத்தக உதவிகொண்டே மை செய்தல்,சர்க்கரை, மின்சாரக் கருவி கலங்கள், கன விளையாட்டுச் சாமான்கள், விளையாட்டுப் பொம்மைக் கருவிகள், பிளாஸ்டிக் சாமான் முதலிய 50க்குக் குறையாத சிறு தொழில்களை நீங்கள் வீட்டிலேயே நடத்தலாம் விலை ரூ. 8-50. படம் ஓவியம் ரூ. 4-50. தையல் கத்தரிப்புக் கலை ரூ. 4-00. நிழற்படக் கலை ரூ. 3-00. சோப் செய்தல் ரூ. 4-00 மோட்டார் மெக்கானிக் ஆசான் ரூ. 4-50. அஞ்சல் ஆணை ஒவ்வொன்றுக்கும் வி. பி. கட்டணம் கூடுதலாகத் தனி ரூ. 1-00.

கடிதப் போக்குவரவு ஆங்கிலத்தில் மட்டுமே.

SULEKHA BOOK DEPOT(6) Phapala Aligarh

பேரனுக்கு,

சென்னை,
30—12—60

குடும்ப சம்பந்தமாக ஏதாவது வெளியூர்களில் வேலையிருந்தால் அதோடு நான் பேசவேண்டிய பொதுக் கூட்டத்தையும் வைத்துக் கொள்வேன். இதில் செலவினங்கள் சிக்கனம் என்பது மாத்திரமல்ல, குடும்பவேலைகளுக்காக இரண்டொருநாளை ஒதுக்குவதென்பது என்னால் முடியாமலே இருந்தது. அதனால்தான் பெங்களூர் நகராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்துக்காகப் போகின்ற போதே உடைகள் எடுக்கும் வேலையையும் முடித்துவிடலாம் என்று நினைத்து அதன்படி உடைகளை எல்லாம் முடித்துவிட்டவுடன், அப்போது குழந்தைகள் உணவு கிடைப்பது அரிதாகவும், கிடைத்தாலும் அதிகவிலை கொடுக்க வேண்டியிருந்தகாலம் அது. உனக்கு Cow&gate கௌஅண்ட் கேட்என்றநீர் உணவைக்கொடுத்துவிட்டப் பழக்கத்தாலும், அதையேபழக்கமாக அருந்தியதால் உன் உடலில் ஏற்பட்ட தெம்பையும் பார்த்து அதையே கொடுப்பதென்று இரண்டு டின்களை வாங்கினேன். ஒன்றின் விலை ஆறு ரூபாய் என்றார்கள். பனிரெண்டு ரூபாய்களைக் கொடுத்து இரண்டு டின்களை வாங்கும் போது, தாத்தா பேரனை மறக்கவில்லை என்று உன்தந்தையார் நினைத்திருக்கக் கூடும். ஆனால் நான் என்ன நினைத்தேன் தெரியுமா? சில நாட்கள் குழந்தைகளின் உணவு விலை ஆறு ரூபாய். ஆனால் உன் பாட்டனின் பாட்டனுக்கு மாதச்சம்பளமே ஏழு ரூபாய். இதற்கிடையே குழி விழுந்த காலம் சுமார் எழுபது ஆண்டுகள் இருக்கலாம். என் பாட்டன் சம்பாதித்த ஏழு ரூபாயிலா மேற்சொன்ன சொத்துக்களை சம்பாதித்தார் என்று நீ உன் பாட்டனைக் கேட்கக் கூடும். இதே கேள்வியைத்தான் நானும் என் பாட்டனைக் கேட்க எண்ணினேன். ஆனால் அன்று அவர் உயிரோடில்லை. ஆகவேதான் என் தந்தை யாரைக் கேட்டேன் அவர் தந்தையாரின் காலத்தில் அரசி ரூபாய்க்கு 32 படி பெரியபடி என்றார்கள். வீட்டில் விளக்கேற்றி குடியிருக்க யாராவது தயாராக இருந்தால் வீடு வாடகை இல்லாமலே இனமாக விடுவார்களாம். அப்படியானால் ஒருதிங்களுக்கு ஒரு ரூபாய் அரிசிவாங்கினால் போதும் என்கின்ற போது மற்ற உணவுப் பொருள்களின் விலைகளைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லையல்லவா-இப்படி இருந்த நடுத்தரக் குடும்பத்திலேதான் மேற்சொன்ன நாளில் திரு. பெத்தசாமி அவர்களுக்கும் திருமதி லட்சுமி அம்மாள் அவர்களுக்கும் இரண்டாவதாகப் பிறந்தேன். மூத்தது என் சகோதரி. அந்தம்மையார் பெயர் தேவராசம்மாள். நாங்கள் ஐந்துபேர்கள் பிறந்ததில் நாங்கள் மூவர் அதாவது என் தமக்கை, நான். என் தங்கை பத்மாவதி ஆகியோரே இருந்தோம். என் தந்தையின் இளவல் திரு சாரங்கபாணி அவர்கள். இதுதான் நம் குடும்பத்தின் வரலாறு. நான் ஒருவனே ஆண் மகவு என்ற காரணத்தால் என்னைச்செல்லமாகவளர்த்தார்கள் என்று சொல்வதற்குப்பதில் கண்டிப்பாக வளர்த்தார்கள் என்று சொல்வதே பொருந்தும். என் பிள்ளைப்பருவத்திலும் சரி, மகா முரடனாக இருந்தேன். அடிக்கடி என் தாய் என்னைக் கண்டிக்கும் போதெல்லாம், நீ எட்டாண்டுகள் பால் குடித்திருக்கிறாய், ஆகையால்தான் நீ முரடனாக இருக்கிறாய் என்பார்கள், பால் என்றால் நீ குடித்து வளர்ந்தாயே புட்டிப்பால் அதுவல்ல, தாய்ப்பால், என்னுடைய எட்டாவது வயதுவரைக் குடித்திருக்கின்றேன். நான் பால் குடித்தது எனக்கே நன்கு நினைவு இருக்கின்றதென்றால்,இப்போதிருக்கின்ற குழந்தைகள் பெருவாரியானவை, தாய்க்கும் பால் உண்டா என்று கேட்கும் அளவுக்கு இருக்கின்றன,

அடுத்த இதழில் படிப்பைத் தொடங்குவோம்,

உன் தாத்தா,

சி. பி. சிற்றரசு

ஜெயராஜ்.

ஆசிரியர் : சி. பி. சிற்றரசு, அச்சிடுபவர், வெளியிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

இனமுழக்கம்

மலர் 2 ★ 27-1-61 ★ இதழ் 21

உள்ளே . . . . . .

★ சம்பத் அறிக்கை

★ அண்ணா அறிக்கை

★ பொதுக்குழுவில் அண்ணா பேச்சு

★ பேரனுக்கு

பொதுச்செயலாளருக்கு சம்பத் விலகல் கடிதம்

ஈ. வி. கே. சம்பத் எம். பி.,
(வழி நிலை : வேலூர்)

22—1—61

அன்புள்ள பொதுச்செயலாளர் அவர்கட்கு, சம்பத் வணக்கம்.

நேற்று நடைபெற்ற செயற்குழு, கழகத்தில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமைகள் பலவற்றையும் ஆராய்ந்தது.

கழக அமைப்பில் நல்ல ஜனநாயகம் மலரவும், அதிகாரங்கள் ஓரிடத்தில் குவியாது பரவலாக அமைப்புகளனைத்திற்கும் பொறுப்புகள் பங்கிடப்பட்டும், ஏற்பட்ட அமைப்புகள் திறம்படச் செயலாற்றவும் ஆன நிலை வளருவதால் மட்டுமே நமது லட்சியங்களில் வெற்றி காண முடியும் என்ற எண்ணத்தில் அண்மையில் நான் மேற்கொண்ட பல நிலைமைகள் பற்றியும், தெரிவித்த கருத்துக்கள் குறித்தும், அவற்றின் விளைவுகள் பற்றியும் செயற்குழு பரிசீலித்தது.

அதுபோது, செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பாலோர், நான் மேற்கொண்ட நிலைகள் நடைமுறைக்கும் ஏற்றதல்ல வென்றும், அவற்றுள் பல கழகத்துக்கு ஊறு விளைப்பதாயும், எதிரிகட்கு இடம் கொடுப்பதாயும் அமைந்துள்ளன என்ற கருத்தைத் தெரிவித்தனர்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினருள் பெரும்பான்மையோருக்கு, இத்தகைய எண்ணம் ஏற்படத்தக்க வகையில் என் நிலை அமைந்தமைக்கு என் வருத்தத்தைத் தெரிவித்து, மேற்கொண்டு கழகத்தினில் எனது நிலையை வலியுறுத்துவதோ, அல்லது அதனைத் துறந்து கழகத்தில் பொறுப்புகளைத் தொடர்ந்து வகிப்பதோ உகந்ததல்ல என்ற என் முடிவினையும் வெளியிட்டேன்.

கழகத்தின் சாதாரண உறுப்பினன் நிலையைத் தவிர, ஏனைய கழக அமைப்புகளில் ஏற்றுள்ள பொறுப்புகள் அனைத்தினின்றும் நான் விலகிவிட எடுத்த முடிவு, செயற்குழு உறுப்பினர்களில் பலருக்கும் பெருத்த வேதனையைக் கொடுத்ததெனினும், இச் சூழ்நிலையில் நான் மேற்கொள்ளும் இச்சனநாயக முடிவே ஏற்றதொரு முடிவென்ற முடிவுக்கும்

கழகத்தில் நான் வகிக்கும் பொறுப்புகளினின்றும் நான் விலக நேரிடினும், கழகத்தின் சாதாரண உறுப்பினராக இருந்து கொண்டே முழு மனதோடும், ஆர்வத்தோடும், கழகப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவர சித்தமாயிருக்கிறேன் என்பதனை இதன் மூலம் உறுதியளித்துக் கொள்கிறேன்.

கழக அமைப்பில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றிய நேரங்களில் என்னிடம் தோழமை உணர்வோடும், நம்பிக்கையோடும் உடனிருந்து பணியாற்றிய தோழர்கட்கு என் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
ஈ. வே. கி சம்பத்

பகுத்தறிவுப் பாசறை பஜனை மடமாகிவிட்டது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பில், சாதாரண உறுப்பினர் பொறுப்பினைத் தவிர ஏனைய பொறுப்புகளனைத்தினின்றும் நான் விலகி உள்ளேன.

இந்நிலை கழகத்தின் அடிப்படை இலட்சியங்களிலோ, அன்றி கொள்கைகளிலோ எனக்குள்ள பற்றும் உறுதியும், குறைந்ததால் அல்ல. சழகத்தை நடத்திச் செல்லும் அமைப்பு முறை, தலைமையில் போக்கு இவை குறித்து எனக்கேற்பட்ட எண்ணமும், அதனை உணர்த்துதற்கு நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளும், அதன் விளைவுகளும் என்னை இந்நிலையில் கொண்டு சேர்த்துள்ளது.

கழகத்தை நடத்திச் செல்லும் அமைப்புகளின் தன்மை கழக இலட்சியங்களில் வெற்றி தேடித் தரத் தக்கதாய் இருத்தல் வேண்டுமென்றும், அத்தன்மை சிறந்த ஜனநாயக அடிப்படையில்

★ 'இராஜபார்ட் இரங்கதுரை' தான் தொடர்கிறது!

அமைய வேண்டுமென்றும் நான் விரும்பி முயன்றேன்.

சிறந்த ஜனநாயகத்தின் நல்ல நலன்களை ஒரு அமைப்பு பெற்று வளருவது சாதாரண குழுக் கூட்டங்கள் நடத்தப்படுவதறகான, ஒழுங்கு முறைகளிலிருந்து, அமைப்புகள் ஈடுபடும் செயல்கள் ஒவ்வொன்றிற்கும் குழுவின் சம்மதம் உள்ளதென்பதைத் தெளிவுர நிலை நாட்டும் வழி முறைகள் வரை, அவைபால் காட்டடபடும் நம்பிக்கையினையும், மரியாதை

மடமாக்கி மகிழும் தம்பிரான்கள்

யினையும் பொறுத்தே அமைகிறது.

இதனை வலியுறுத்தும்போது, பழைய போக்கில்—தன்மையில் பாதுகாப்பும் பெருமையும் பெற்ற சக்திகள் சில. புதிய முறையால் அவை போய்விடக்கூடுமோ என்ற அச்சத்தில் இந்த என் முயற்சிக்கு உள்நோக்கம் கற்பித்துக் கடுமையாக எதிர்த்தன.

என்னை பொறுத்த வரை இம் முயற்சிகளின் மூலம் எனது தோழர்களின் மனதை மாற்றுகின்ற நோக்கத்தைக் கொண்டே செயல்பட்டேன். அதில் நான் இன்னும் வெற்றி காணவில்லை.

இப்பொழுதுள்ள சூழ்நிலையில் வெறும் யோசனை கூறும் தலைமை அமைப்பில் இருந்து கொண்டு அம் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட முடியாது என்பதை உணர்ந்தே, தலைமை அமைப்புகளினின்றும் விலகிக் கொண்டேன். தலைமைச் செயற்குழு எதனையும் முடிவு செய்யும் உரிமை படைத்தது அல்ல. அது பொதுச் செயலாளருக்கு ஆலோசனை கூறும், வெறும் ஆலோசனைக்குழு; எனினும் அதில் உறுப்பினர்களாகப் பொதுச் செயலாள

★ அண்ணா சக்தி படைத்தவராக யிருக்கலாம். ஆனால்...கழகம்?

ரால் நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் கட்சியின் விளம்பரம் பெற்ற (வெளியில் தெரிந்த) தலைவர்களாக உள்ளனர். ஆக, அவர்களுடைய எண்ணத்தையும் போக்கையும், எனது நிலை துளியும் மாற்றவில்லை என்பதோடு கூட, நிலவிய (நேர்மாறான) போக்கையும் எண்ணத்தையுமே பலப்படுத்தியுள்ளது என்பதை உணருகிறேன்.

21-1-61 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், அவர்கள் எனது நிலை குறித்த தங்கள் எண்ணத்தை தெளிவுபடுத்தினர். அதுபோது அவர்கள் வெளியிட்ட பல கருத்துக்கள் என்னைத் திடுக்கிட வைத்தன.

ஒரு பெரியாரிடமிருந்து நாம் பிரியும்போது, (அவருடன்) தங்கிவிட்டவர்கள் பயன்படுத்திய

வேலூர் சம்பவம்-தோழர் சம்பத் அறிக்கை

அதே வாசகங்களைப் பலரும் திருப்பிச் சொன்னபோது, பல ஆண்டுகளைக் கழித்திருக்கிறோமே தவிர,- வேறு இடத்திற்கு வந்து மேலும் பல புதிய தோழர்களைப் பெற்றிருக்கிறோமே தவிர 1949-க்கு முன்பிருந்த மனோபாவங்கள் மாறவில்லை என்பதையே உணர்ந்தேன்.

ஒரு உறுப்பினர், எனக்குக் கட்சியில் வேறெதுவும் தெரியாது அண்ணாவைத்தான் தெரியும். அவரிடம் ஒரு மாதிரி பக்தி என்று தேம்பியவண்ணம் கண்டித்து அவரது கட்டுரைக்கு மறுப்பெழுதுவதை நான் பொறுத்துக் கொள்ள முடியாது என்றார். 1949-ல் 'அண்ணா' என்ற பெயருக்குப் பதில் 'பெரியார்' என்ற பெயரைச் சொல்லி இதேபோல் வேறுபலர் உணர்ச்சி பொங்கப் பேசியதைக் கேட்டு 'நாம்' மிகவும் வருத்தப்பட்டோம். நாம் சொல்லுவதில் உள்ளவற்றைக் கவனியாமல், 'பெரியாருக்கு மறுப்பா' என்று கேட்டு 'கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவர்களோடு 'நாமும்' இருக்க முடியாது என்றே வெளியேறினோம்.

இந்நிலையில், எனது விலகல் பற்றி பொதுக்குழு உறுப்பினர் முன் விளக்கும் போது பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள்,

★ வாடகை வீடல்ல - நம் சொந்த வீடு!

எனக்குத் தனிப்பட்ட முறையில் பல பாராட்டுகளை வழங்கியிருப்பதும், என்னைக்கெடுக்கும் 'வஞ்சகர்' பற்றிப் பேசியதையும் " Rightists are always right and leftists will be left out ", எனக் கூறியதையும் கேட்டு மிகவும் வேதனையடைந்த தோழர்கள் என்னைக் கண்டு உரைத்தது கேட்டு நான் மிகவும் வருந்தினேன்.

நான் மேற்கொண்ட நிலை சரியெனச் சிலர் கருதுவதாலேயே அவர்கள் வஞ்சகர்கள் என்று ஏசுவதும் 'தூக்கியெறியப் படுவார்கள்' என்று மிரட்டுவதும், அவருடைய பொறுப்பிற்கும் தகுதிக்கும் சிறிதும் பொருத்தமில்லை என்றே நான் கருதுகிறேன். கழகத்தில் அவர் மிகவும் சக்திபடைத்தவராக இருக்கிறார். ஆனால், கழகம் இன்னும், தனது இலட்சியங்களில் வெற்றி காணுவதற்குரிய சக்தியைப் பெறவில்லை. அந்தச் சக்தியைத் திரட்டித்தர அவருக்குக் கழகம் கொடுத்திருக்கும் சக்தியை கழகத்தில் உள்ள சிலரைத் தூக்கியெறியப்பயன்படுத்துவேன் என்று அவர் கூறியது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்குப்பிறகு 'நாம்' எங்கு வந்துள்ளோம்? ஒரு புதிய தெய்வத்தை சிருஷ்டிப்பதற்கும், அதற்குரிய வழிபாட்டு முறைகள், ஆசார அனுஷ்டானங்கள், பஜனை நாமாவளிகள், உற்சவங்கள், திருவிழாக்கள் என்றும் இப்படி வெகு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறோம். இதைக் கண்டு முகஞ்சுளிப்பவனை அவரவர் தரத்திற்குத் தக்கவாறு 'சமாளிக்க' முற்படுவதே முன்னணியினரின் பணிமுறையாக அமைந்து விட்டிருப்பதும் தெரிகிறது. அண்மையில், இந்நோய் முற்றியும் விட்டது.

இலட்சியங்களில் வெற்றிக்கான இந்தப்பாதை நம்மை அழைத்துச் செல்வதாகாது, என்று, இலட்சிய வெற்றிக்காக நடக்கத் தொடங்கியவர்கள் தெரிந்து கொள்வார்கள். என்பதோடன்றி பிறருக்கும் அதனை உணர்த்தி உரிய பாதைக்கும் அழைப்பார்கள்.

நாம் திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறியது, புதிய மடத்தை நிறுவுவதற்கும், புதிய மடாதிபதியை பீடமேற்றி, 'காத்திருக்கும் தம்பிரான்களாக' விவரம் தெரிந்த சிலரும், தரிசனம் செய்து, ஆசீர்வாதம் பெறும் பக்தர் கூட்டமாகப் பிறரும் சூழ்ந்திருக்க அல்ல. அரசியலல் மடத்து வாழ்க்கையே ஏற்றது என்றால் பழைய மடத்தைவிடத் தமிழ்நாட்டில் வேறு சிறந்த புதிய மடம் என்றும் ஏற்பட முடியாது.

எது எப்படியிருப்பினும், இந்நிலைகளை எண்ணிக் கழகத் தோழர்கள் கலக்கமடைவதோ, திகைத்துக் கிடப்பதோ, தேம்பி நிற்பதோ சிறிதும் பொருத்தமில்லை. பெரிய விஷயங்களை எண்ணுவதை விடுத்துச் சிறு சம்பவங்கள் குறித்து வெளிவருவதை எண்ணி நெஞ்சத்தை வாட்டிக் கொள்வது அறிவுடமையாகாது.

கழகப் பணிகள் என்பவற்றுள் யோசனை கூறும் பொறுப்புகளை மட்டுமே விடுத்து கழகத்தின் சாதாரண உறுப்பினர் நிலையில், மேலும் உற்சாகத்தோடும், அதிகமாகவும் இலட்சிய வெற்றிக்கான கழகப் பணியில் முழு மனதோடு ஈடுபட இருக்கிறேன்.

இது குறித்து எனது விலகல் கடிதத்திலேயே தெளிவு படுத்தி இருக்கிறேன். அதனை 'நம் நாடு' இதழ் வெளியிட்டிருக்கலாம். அதனை வெளியிடாததோடு, எனது விலகல் நிகழ்ந்த செயற்குழு கூட்டத்தின் நடவடிக்கைச் சுருக்கத்தை ஒருதலைப் பட்சமாக வெளியிட முற்பட்டிருக்கிறது காண வருந்துகிறேன்.

எனது விலகல் மூலம் இந்த வேதனையான விவாதத்திற்கு நீண்டதொரு இடைவேளையாவது தரலாமென்றஉண்மையான எண்ணத்தோடு இருந்த நான் மீண்டும் விளக்கம் தரவேண்டிய நிலைக்காளாக்கப்பட்டுவிட்டேன்.

'மாற்றாருக்கு இடம் கொடுக்கும் நிலைமையை ஏற்படுத்திவிட்டதை' நான் உணருவதாகக் கூறினேன் என நம்நாடு இதழில் வெளிவந்துள்ளது தவறு.

என்னைப் பொறுத்தவரையில், எனது நிலைமைகள் மாற்றாருக்கு இடம் எதனையும் கொடுத்துவிட்டதென கருதவில்லை. இன்றும் காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, நிர்வாகக் கமிட்டிக் கூட்டங்களில் பெரும்பாலும் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். விவாதங்

★ பெரியார் என்ற பெயருக்குப் பதில் அண்ணா அவ்வளவுதான்!

கள் முழுக்க வெளியிடப்படுகின்றன. அவற்றால் பெரிய ஆபத்தொன்றும் அச்சபைக்கு வந்துவிடவில்லை. அண்மையில் இங்கிலாந்து நாட்டுத் தொழிற் கட்சியில், பலத்த உள் கட்சி விவாதம் நடைபெற்றது. அவ்விவாதம் பொதுமேடைகளின் வாயிலாகவும், பத்திரிகைகள் வாயிலாகவுமே நடைபெற்றன. அதற்கு முன் சூயஸ் பிரச்னைப் பற்றி கன்சர்வேடிவ் கட்சியினர் தங்களுக்குள் விவாதித்துக்கொண்டதும் பொதுமக்கள் முன்னிலையிலேயே தான் தனிப்பட்டக் குற்றச் சாட்டுகளிலும் தனிப்பட்டோரின் நாணயம், நடத்தைப் பற்றிய புகார்களிலும் வேண்டுமானால் கட்சி மிகக்ரகசியமாகப் பரிசீலனை செய்வது மரபாகுமேயன்றி, கட்சியின் கொள்கைகள் நிர்வாக அடிப்படை முறைகள், கட்சியின் சட்டதிட்டங்கள் குறித்து நடைபெறும் விவாதம் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெறுவது தான் முறை, என்றே நான் கருதுகிறேன். திராவிடரியக்கத்தைப் பொறுத்தவரை இதற்கு முன் மாதிரியில்லை என்றும் கூறிவிடமுடியாது. திராவிடர் கழகத்தில் இருந்தபோதே பெரியாரின் சர்வாதிகாரப் போக்கைக் குறித்து விவாதத்தை பொதுமக்கள் முன்னிலையில் அண்ணா அவர்கள் மிக அழகாக நடத்தினார். அவர் அப்பொழுது திராவிட நாட்டில் எழுதிய -இராஜ பார்ட் இரங்கதுரை- 'மரத்துண்டு லேபிள் வேண்டாம்'

★ வெளியேறுவதோ-வெளியேற்றப் படுவதோ அவ்வளவு எளிதல்ல!

'இரும்பாரம்' 'தாத்தா கட்டிய தாலி' போன்ற கட்டுரைகள் இத்தகைய விவாதத்தை எப்படி நடத்துவது என்பதற்கே இலக்கணமாக அமைந்தன.

எனவே, நான் இத்தகைய விவாதங்கள் முறையோடுபொதுமக்கள் முன்னிலையிலும், கழகத் தோழர்களாகவுள்ள இலட்சக்கணக்கானவர்கள் முன்னிலையிலும் நடைபெறுவதுதான் சரியென்றே எண்ணுகின்றேன். இம்முறையினை செயற்குழு உறுப்பினர்கள் ஏற்காததை உணர்ந்து வருந்தினேனேயன்றி, மற்றபடி அம்முறை தவறு என்ற முடிவுக்கு நான் வந்துவிடவில்லை. இத்தகைய பிரச்னைகளில் பரபரப்பூட்டும் வதந்திகளைவிட, தெளிவாகத் திட்டவட்டமாகக் கருத்துக்கள் பரிமாறப்படுவதே எந்த அமைப்புக்கும் ஏற்றது மற்றொன்று, அமைப்பில் பெரும்பான்மையோர்-சிறுபான்மையோர் என்று இனம் பிரிக்கவேண்டிய கட்டம் இப்பொழுது வந்துவிட்டதாக நான் எண்ணவில்லை. இருதரப்புக் கருத்துக்களையும் அவை குறித்த விவாதத்தையும் இன்னும் சில காலம் கழகம் கவனித்து அதன் பிறகே இக்கட்சியில் சிறுபான்மைக் கருத்து எது, பெரும்பான்மைக் கருத்து எது என்பது முடிவு செய்யப்படும். அக்கட்டத்திற்கு முன் விவாதம் வெளியில் நடந்தாகவேண்டும்.

அவ்விவாதத்தை இரு தரப்பினரும் மிகவும் பொறுப்புடன் நடத்தியே தீரவேண்டும். 'நம் நாடு' இதழில் அவசரமாக வெளியிடப்பட்டுள்ள செய்தி என்மீதான குற்றச்சாட்டுபோல் தென்பட்டதாலேயே இந்நீண்ட விளக்கம் தர நேரிட்டுள்ளது.

மற்றபடி, கழகப்பணிகளில் எத்தகைய சோர்வும் யாரும் கொள்ளத் தேவையில்லை.

இச்சமயத்தில் எனது விலகலை முன்னிட்டு கழகத்தினின்றும் சிலர் விலக விரும்புவதாய் செய்திகள் வெளிவருகின்றன. அதனை நான் ஆதரிக்கவில்லை. கழகம் எத்தனையோ தோழர்கள் தன் இன்னுயிரை ஈந்தும், இரத்தத்தைச் சிந்தியும் வாழ்வைச் சிதைத்துக் கொண்டும் வளர்ந்த ஒன்று 'திராவிட முன்னேற்றக் கழகம்' ஒரு வெறும் பெயரல்ல. ஒரு வரலாறு. அதற்குரியவர்கள் நாம். நாம் குடிபோன வீடல்ல. நாம் அமைத்தது. வெளியேறுவதென்பதோ, வெளியேற்றப்படுவதென்பதோ யாருக்கும் அவ்வளவு எளிதானதல்ல. அதன் அடிப்படைகளுக்கு, கழகத்தின் மீது என்றுமே ஒரு ஆதிக்கம் உண்டு. அது வெறும் சலசலப்புகளினாலோ, ஒரு நாளையக் கூத்திலோ அசைந்து கொடுக்க வேண்டியதல்ல. ஆகக் கழகத்தை மேலும் வலுவுடையதாக்க நாம் செய்ய வேண்டியதென்ன என்பதை பற்றியே தோழர்கள் சிந்திக்கவேண்டுமேயன்றி, விலகி வெளியேறுவதென்பது நினைத்துப் பார்க்கக் கூடாத ஒன்று.

கழக உறுப்பினர் நிலைத் தாழ்ந்த நிலையல்ல. அந்நிலையிலும் செம்மையானப் பணிகளைச் செய்ய முடியும். அந் நிலையில் நாம் செய்யும் பணிகள் நிச்சயம் மேல்மட்டத்தையும் சரி செய்து விடும் என்ற நம்பிக்கையோடு கழகப் பணியாற்ற நம் கழகத் தோழர்களை கேட்டுக் கொள்கிறேன். இது கலவரப்படவேண்டிய வேளையல்ல. நிதானத்தோடு பணி புரிந்து காத்திருப்பதே நம் கடமை,

முகஞ்சுளித்து சமாளிக்கும் முன்னணியினர்

இனமுழக்கம்

மலர் 2 ★ 27—1—61 ★ இதழ் 21

★

வருந்துகிறோம் ! வேதனைப்படுகிறோம் !

★

ஜனவரி 21, 22-ந் தேதிகளில் வேலூரில் கூடிய தி. மு. க. செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களில் நடைபெற்ற ரசாபாசங்கள் கண்டு வருந்துகிறோம், வேதனைப்படுகிறோம் !

★

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ள தீர்மானங்கள் நின்று விடுமோ என்று பயந்து நான் காலம் கடத்த செய்யப் பட்ட காரியமல்ல ஆய்வுக் குழுவிற்கு அனுப்புவது. ஒத்துப்போகும் சுபாவம் பயத் தினுல் ஏற்படுவதல்ல. காலப் பக்குவத்தை எதிர்பார்ப்பது என்பதுதான் அதன் பொருள் ஜனநாயகமா ? கீழ்மட்டத்தி லுள்ள ஜனநாயகத்திற்கும் நான் தயார். வா போகலாம். 'ரெபரெண்டத்'திற்கும் நான் தயார். யார்செயலாளர். வை ரெபரெண்டம். எந்த பிரச்னேயானுலும் சரி, ரெப ரெண்டம் வை. பார்க்கலாம் ஒரு கை தம்பி ! மிரட்டாதே எதற்கும் பயந்தவனல்ல !

மிரட்டல் மலிந்து விட்டது

மிரட்டல், கிண்டல் மலிந்து விட்டது. நமது தமிழகத்தில் முந்தியெல்லாம் ஒரு மாநாட் டிற்கு வாடகைக் காரில் வந் திறங்குவோம்—இப்போது நம்மில் சிலர் சொந்தக் கார் வைத்துக்கொள்ளும் வாய்ப் பைப் பெற்றுள்ளார்கள் ? இது கிண்டலுக்குரியதா ? இல்லே! நமது தோழர் கள் பெற்றுள்ள வளர்ச் சியைக் காட்டுவதாகும். ஜன நாயகம் என்ருல் இனி ஒரு மணி நேரம்தான் தூங்க வேண்டுமென்று கூறுவார் கள் போலிருக்கிறதே. எல்லா வற்றிற்குமா ஜனநாயகம் ? ஜனநாயகம் பேசுவதிலும் நயமிருக்கிறது. கூறுவதும் கூறுகிற முறைப்படி கூறி ஞல் கேட்பவர்களும் ஒப்புக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டாமா? இதோ இங்கே வீற்றிருக்கும் ராஜேந்திரன், ராமச்சந்திரனேப் பார்த்து 'நீ ஓராண்டுகாலம் தேர்தல் நிதி சேர்க்கவேண்டும் என்று கூறுவதைவிட 'நீங்கள் இந்த ஓராண்டு ஓய்வுள்ள நேரத்தில் தேர்தல் நிதி சேர்த்துத் தந்தால் நலமாக இருக்கும்' என்று கூறிஞல் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளாமலா போவார்கள் ?

சம்மதம் கேட்கிறேன்

அப்படித்தான் இம்முறை யில் ஒருவன் தான் சாதித்துக் கொள்ள வேண்டியதற்காக பின்பற்றவேண்டிய முறை கள். அந்த முறையில் தீர் மானங்கள் அமையவேண் டும். தொழிற் சங்க செயலா ளர்., பொதுச் செயலாளர் கட்டளே மேற்கொண்டு செயல் புரிய வேண்டும் என் றிருந்தால் மேற்கொண்டும் என்பதை மட்டும் எடுத்துக் கொண்டு அதிகாரங்களேப் பிடுங்கிக் கொள்வது என்ற முறையில் அர்த்தத்தை கற் பித்துக்கூறுவது நியாயமல்ல இது ஜனநாயகமும் ஆகாது. ஆகவே, தோழர்களே, இந்த தீர்மானங்களேப் பற்றி செயற் குழு முடிவை உங்கள் முன் வைத்து உங்கள் சம்ம தம் கேட்கிறேன். என்று கூறினுர். உடனே எல்லோ ரும் கையை உயர்த்தினுர்கள் அண்ணு அவர்கள் தனது வலது பக்கம் எழுந்து நின்று பார்த்தார். பிறகு "கிடைக்க வேண்டிய கரத்தைத் தேடி னேனே அது கிடைத்துவிட் டது'' என்று கூறி தனது உரையை முடித்துக்கொண் டார்.

மலர் மணம் நுகர்ந்தோர்

★

சோ. கணேசன்
குருந்தம்பட்டு

தாங்கள் பெரும் முயற்சியோடு வழங்கியுள்ள பொங்கல் மலரைக் கண்டேன் ; மகிழ்ந்தேன். அதில் உள்ள 'வைரக் கல்' என்ற கதை நல்ல முறையில் அமைந்துள்ளது. வளர்க உங்கள் பணி.

அரங்க. தங்கவேலன்
நான்சச் தேயிலேத் தோட்டம்

'இனமுழக்கம்' பொங்கல் மலர் உண்மை யிலேயே திகைப்பூட்டும் வகையில் அமைந்திருக் கிறது. படிக்க, பாதுகாக்க வேண்டிய அரியதொரு மலர்.

கோ. இறைமணி
சேலம்-2.

எதிர்பார்த்தவர்களின் ஏற்றமிகு கைவண்ணம் திராவிடர் நாகரிகம்போல் மிளிர்கின்றது. மொத் தத்தில் மலரைத் திராவிடநாட்டு வளம்போல் கண்டு மகிழ்கின்றேன்.

ப. கா. தமிழ்த்தாசன்
திருப்பரங்குன்றம்

பொங்கல் மலரைக் கண்டேன். மட்டில்லாத மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் மூழ்கிவிட்டேன் ; உங்கள்விளம்பரம் நூற்றுக்கு நூறு உண்மை ! ஆம், 'அவாள்' ஏடுகளுக்கு இனமுழக்கம் ஒருசவால்தான் !

கண்ணப்பர்
சென்னே-17.

இயக்க ஏடுகளிலேயே இனமுழக்கம் மலர்போல் ஒரு சிறந்தமலர் வெளிவரவில்லே. இயக்க நண்பர் களுக்கு மலர் ஒரு கையகராதிதான் என்பதில் கடுகள வும் ஐயமில்லே.

மு. கந்தசாமி
மதுரை-10

மலர் கண்டேன் ; போற்றுதற்கு வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடுகின்றேன். உங்கள் முயற் சிக்குக் கிடைத்தது சாதாரண வெற்றியல்ல இமாலய வெற்றி !

மு. காளியப்பன்
இராயகிரி

மலரை முழுதும் சுவைத்துப் படித்தேன். எழுத் தாளர்களான வாசவனேயும், ஜெகசிற்பியனேயும் மலரில் இணேத்த உங்களின் பரந்தமனத்தைப் பாராட்டுகிறேன்.

இராமதாசன்
கோவை-1.

திரைப்பட வசனகர்த்தா ப. கண்ணன் அவர் களின செந்தமிழ் நாடகத்தைப் படித்தேன். உள்ள படியே நாடகம் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

எம். எஸ். முத்தையா
நெல்லே.

மலரில் உள்ள ஓவியங்களேப் பார்க்கப் பார்க்க உள்ளம் துள்ளுகிறது. மணியமும், லதாவும், சித்ரலே காவும், ஜெயராஜும், அமுதனும் நல்லமுறையில் தம் திறமையைக் காட்டியிருக்கிருர்கள். மலரின்வண்ணத் திற்கு இவர்கள் தலேயானவர்கள்.

மு. தங்கவேலன்
காரைக்குடி

சென்ற ஆண்டு மலரைவிட இவ்வாண்டு மலர் முன்னணியில் நிற்கிறது. சொல்லின் செல்வரின் 'எனது ஆசைகளே' என்ருல் மறக்க முடியாது. உங்கள் உழைப்புக்கு எம் நன்றி.

கழக மதைத் துண்டாடத் துடிக்கும் காங்கிரசார்!

தி.மு.க. செயற்குழு பொதுக் குழுக் கூட்டங்கள், வேலூரில் ஜனவரி 21, 22 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்றன.

வளர்ந்துவரும் தி.மு. கழகத்தில் என்ன காரணத்தினாலாவது ஏதாவதொரு வித ஊறு நேரிடக் கூடாதா என்று அரசியல் இலாபம் தேடுவோர், ஆவலாகக் காத்துக் கொண்டிருப்பதை, அரசியல் வட்டாரம் நன்கு அறியும்.

ஆளும் கட்சியின் நப்பாசை

கட்டுப்பாடு உடைபட்டுப் போனால், கழகத்தில் வலிவு முறிந்துவிடும் என்று நப்பாசை கொண்ட நிலையில், இன்று ஆளும் கட்சி இருப்பதை அனைவரும் அறிவர்.

எனவே, ஒவ்வொரு பொதுக் குழுக் கூட்டமும், ஏதாவது ஒரு பிரச்சினையின் காரணமாகக் குழப்பத்திலே முடியவேண்டும்; கழகத்திலே நீண்ட காலமாக காண்போர் களிப்புறும் வண்ணமும், மாற்றார் வியக்கும் வகையிலும் மலர்ந்துள்ள தோழமை உணர்வு கருகிவிட வேண்டும்-என்று எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கும் நிலையில், கழக வளர்ச்சி கண்டு மனம் வெதும்பிக் கிடப்போர் இருந்து வருகின்றனர்,

எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடிய இளமைப் பருவத்தினர் மிகப் பெரிய அளவில் தி.மு. கழகத்திலே இருப்பதால், கருத்து வேற்றுமைகள் எழுவதும், அவைகளை எடுத்துக் கூறும் போக்கிலேயே கசப்பு ஏற்படுவதும், கசப்பு ஏற்படுவதால் காலம் வீணாவதும், எதிர்பார்க்கப்பட வேண்டியவை என்ற எண்ணம் மாற்றுக் கட்சியினரைக் குடைந்த வண்ணம் இருக்கிறது.

இதே மனப் போக்குடனேயே வேலூரில் நடைபெற்ற செயற் குழு, பொதுக் குழுக் கூட்டங்களில் கண்ணோட்டம் செலுத்தி, கதை கூறி களிப்படைய முயற்சித்துள்ளனர்.

வேலூரில் நடந்ததென்ன?

நாட்டு மக்களும், நமது கழகத் தோழர்களும் அறிந்து கொள்வதற்காக, வேலூரில் இரு நாட்களும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகிறேன்.

21-ந் தேதி காலை 10 மணிக்கு மேல் தி.மு, கழகச் செயற்குழுக் கூட்டம், தனிக் கூட்டம் ஒன்றில் மாடிக் கூடத்தில் நடைபெற்றது,

பெரிய கூட்டம் — எனவே அங்கு பொதுக் குழு உறுப்பினர்கள் சிலர் தங்கி இருக்கவும் இடம் தரப்பட்டிருந்தது. இவ்விதம் தங்கி இருந்தவர்களில் பொதுக்குழு உறுப்பினர்களாக உள்ள நடிக நண்பர்களும் இருந்தனர். செயற்குழுக் கூட்டம் நடந்த மாடிக் கூடத்துக்குச் சற்றுத் தள்ளியிருந்த வேறோர் கூடத்தில் அவர்கள் தங்கியிருந்தனர், செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற கூடத்தில் அவர்கள் இல்லை, செயற்குழு உறுப்பினர்களில்லாத எவரும் அனுமதிக்கப்படவில்லை.

செயற்குழு நிகழ்ச்சிகள்

செயற்குழு, அவைத் தலைவர் சம்பத் தலைமையில் நடைபெற்றது.

பல பிரச்சினைகள் குறித்துப் பேசப்பட்டன. குறிப்பிட்டுக் கூறுவதானால், செயலாளர்களின் பணிகள் குறித்தும் அவர்களுக்குச் செய்து தர வேண்டிய வசதிகள் பற்றியும் பேசப்பட்டன.

அதையொட்டி, நடைமுறையில் ஏற்படும் சிக்கல்கள் குறித்துப் பேசப்பட்டதுடன், பொதுவாகக் கழகத்தில் தலைமைத் துறையினருக்குள் இருந்து வரும் நேசத் தொடர்புகள் கெடத்தக்க விதமான கசப்புகள், கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டதுபற்றி விரிவாகப் பேசப்பட்டது.

இரண்டு மூன்று ஆண்டுகளாகவே முறைகளில் மாற்றம் வேண்டும், செயல் திட்டத்திலே தீவிரமான ஜனநாயக வழிகள் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுவதும். அதுகுறித்து வேற்றுமை உணர்ச்சிகளும், வேண்டாதகா வெறுப்புணர்ச்சியும், 'கோஷ்டி'த் தன்மையும், தலைதூக்கி வரலாயிற்று என்பதை மறைக்கத் தேவையில்லை; செம்மைப் படுத்தப்பட்டால், இந்நிலையே கழகத்துக்கு மேலும் வலிவைத் தேடித் தரவும் கூடும்.

கட்டுரைகள் எழுதுவது பற்றி செயற்குழு வருத்தம்

கசப்புகள் குறித்த பேச்சு எழுந்தபோது. பத்திரிகைகளிலே கட்டுரை வெளியிடும் போக்கு பற்றியும்பேசநேரிட்டது. என்னை இழிவுபடுத்தும் முறையில் கட்டுரைகளைக் கழக முக்கியஸ்தர்களே எழுதுவது குறித்துத் தமது வருத்தத்தைச் செயற் குழுவினர் கூறினர்.

அதிலிருந்து, விவாதம் தீர்மானங்கள் குறித்து எழுந்தது.

கழகத்தின் சட்ட திட்டத்திலேயே, அடிப்படையான மாறுதல்களைச் செய்யத்தக்க திருத்தங்களைக் கழகத்தை நடத்திச் செல்வோர் என்ற வரிசையிலே உள்ளவர்கள் என்று கூற இயலாத சிலர்தந்திருப்பது குறித்து தோழர் முத்து குறிப்பிட்ட போது-அவைத்தலைவர், அங்கு இல்லாதவர்களைப் பற்றிப் பேசுவது முறையாகாது என்று எடுத்துக் கூற வெளியிலுள்ளவர்கள் பெயரைக் குறிப்பிடக் கூடாது என்பதற்கு இது சட்ட மன்றமோ, அல்லது பாராளு மன்றமோ அல்ல வென்றும் அவர்கள் கொடுத்த தீர்மானங்களின்மீதுதான் பேசப்படுகிறது என்றும் செயற் குழு உறுப்பினர்கள் விளக்கம் சொல்ல— அதனைத் தொடர்ந்து பிரச்சினை பொதுக் குழுவிற்குக் கொண்டு போக வேண்டும் என்பதுபற்றி காரசாரமான விவாதம் எழுந்தது அதன் காரணமாக இரண்டு நிமிடங்கள் பரபரப்பு ஏற்பட்டது.

பரபரப்பே தவிர அசம்பாவிதம் அல்ல

இதற்குள், நானும் மற்றவர்களும், ஏற்பட்ட பரபரப்பைக் குறைத்துக் கொள்ளும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டோம். உரத்த குரலில் பேசிக் கொண்ட பரபரப்பு தவிர, எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை.

ஐந்து பத்து நிமிடங்கள் அனைவருமே அசைவற்று உட்கார்ந்திருந்தோம்- கலங்கியகண்களுடன்.

பிறகு அவசரமும் ஆத்திரமும் கொண்டிடலாகாது என்ற உணர்வு பெற்று விவாதத்தைத் தொடர்ந்து நடத்தினோம், பிற்பகல் 2-30 மணி வரையில்.

அதற்குப் பிறகு, நானும் தோழர்கள் சம்பத், மதியழகன் ஆகிய மூவரும் சாப்பாட்டுக்காகப் பொதுக் குழுக் கூட்டத்துக்காக அமைத்திருந்த இடம் சென்று சாப்பிட்டுவிட்டுத் திரும்பினோம். மற்றவர்களும் அவ்விதமே.

பிற்பகல் மூன்றரை மணிக்கு மேல் மீண்டும் செயற்குழு நடைபெற்றது.

கட்டுரைபற்றி மீண்டும் விவாதம்

கட்டுரைகள் பற்றி காலையில் எழுந்த விவாதம் மறுபடியும் தொடர்ந்து பேசப்பட்டது.

நான் எழுதிய 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற தொடர்கட்டுரையும், அக்கட்டுரை ஜனநாயகத்திலே உள்ள நம்பிக்கையை நாசமாக்குவதாக இருக்கிறது என்ற கருத்தை வெளியிட அவைத் தலைவர் சம்பத் எழுதிய 'அண்ணாவின் மன்னன்' என்ற கட்டுரையும் விவாதிக்கப்பட்டது.

தோழர் சம்பத் அவர்கள் எழுதிய கட்டுரை தங்கள் மனதை வெகுவாகப் பாதித்திருக்கிறது என்றும், கட்சியின் கட்டுப்பாட்டுக்கு அது உகந்தது அல்ல என்றும், மாற்றுருக்கு இடம் கொடுக்கும் நிலைமையை ஏற்படுத்தி வருகிறது என்றும் பலரும் பேசினர்.

தோழர் அன்பழகன் அவர்கள் இது குறித்துப் பேசிய போது, அவைத்தலைவர். "முறைப்படி ஒவ்வொருவராகத் தமது கருத்துபற்றிப் பேசுவதுதான் சரியாகும்" என்று கூறினார். அதன்படியே அனைவரும் பேசினர்.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவருமே கட்டுரை எழுதியது தவறு என்றுதான் எடுத்துக் கூறினர். ஒருவர், இருவர், 'அண்ணாவிடம் உள்ள நேசத் தொடர்பு குறைந்ததால் இப்படி எழுதும் நிலை ஏற்பட்டது' என்றனர்,

நான், என் கட்டுரைக்கு விளக்கமளித்ததுடன், தோழர் சம்பத் எழுதிய கட்டுரையை மாற்றார்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கூறினேன்.

சம்பத் தந்த விளக்கம்

கடைசியில், அவைத்தலைவர் விளக்கம் உரைத்தார்.

நான் எழுதிய கட்டுரை ஜனநாயகநம்பிக்கையையே கேலிக்கூத்தாக்குவதாகவும், நான் அவ்விதமாக ஒரு புதிய சித்தாந்தத்தையே புகுத்துகிறேனோ என்று தமக்குத் தோன்றியதாகவும், தோன்றவே, ஜனநாயகம் பற்றி பொதுமக்கள் நம்பிக்கையும் பற்றும் கொள்ளச் செய்ய வேண்டிய கட்டுரை எழுத வேண்டியது தமது கடமை என்றும், அதை நிறைவேற்றுமலிருக்கத் தமது உள்ளம் இடம் தராதென்றும் கூறி விட்டு, என்றாலும் செயற்குழு உறுப்பினர் அனைவருக்குமே மன வேதனை ஏற்பட்டிருப்பதைத் தாம் உணருவதாகவும்; அதற்காக வருந்துவதாகவும் தெரிவித்தார்.

விவாதத்தின்போது தோழர் சி. வி. எம். அண்ணாமலை, தோழர் சம்பத் அவர்கள், இப்போது மட்டுமல்லாமல், தொடர்ந்து ஒவ்வொரு பொதுக்குழுக் கூட்டத்தின் போதும் அதிர்ச்சி தரத்தக்க விதத்திலே நடந்து கொண்டு வந்திருப்பதைக் கூறினார்.

தோழர் அன்பழகன் அவர்கள், தோழர் சம்பத் அவர்கள்பிறகுஎன்னிடம்கூறிய மொழியின்படி- மனதில் பட்டதை எடுத்துக் கூறுபவர்' என்ற முறையில் "ஒவ்வொரு செயற்குழு, பொதுக்குழுக் கூட்டத்திலும் சம்பத்துக்கும் அண்ணாதுரைக்கும் ஏற்படும் தகராறு, அல்லது கருத்து வேற்றுமை பற்றிப் பேசத்தானா நாங்கள் வந்திருக்கிறோம்?" என்றுகேட்டார்,

எனவே, கட்டுரை குறித்துப் பேசுவதிலிருந்து, தோழர் சம்பத், தொடர்ந்து மேற்கொண்டு வரும் முறைகள் பற்றியே பொதுவாக விவாதிக்கும் நிலை பிறந்தது.

சம்பத் சொன்ன திடுக்கிடும் முடிவு

இது குறித்து தோழர் சம்பத், "எனக்குச் சரியென்றும், கழகத்துக்கு மிகமிகத் தேவையென்றும் படுகிற கருத்துக்கள், முறைகள் பற்றி நான் தொடர்ந்து கூறிவருவதும் உண்மையானால், அவை ஏற்றுக் கொள்ளப் படாததுடன், செயற் குழுவினருக்கு மனவேதனையையும்தந்து வருகிறது. இந்நிலையில் நான் மேற்கொண்டுள்ள கருத்துக்கள், சிறுபான்மையினரால் மட்டுமே ஆதரிக்கப்படுகிறது; பெரும்பான்மையினருடைய கருத்து இதற்கு முரணாக இருக்கிறது. இந்நிலையில் நான் பொறுப்பான பதவியில் இருந்து கொண்டு, என் கருத்தைப் புகுத்தும் முறையை மேற்கொள்வது தூய ஜனநாயகமாகாது என்று கருதுவதால், நான் அவைத்தலைவர் பதவியிலிருந்து விலகி, சாதாரண உறுப்பினராகவே கழகப் பணியாற்ற முடிவு செய்கிறேன்" என்று நாங்கள் அனைவருமே திடுக்கிடும் வகையில் கூறினார்.

அப்போது மாலை 5-30. நான் தோழர் சம்பத் அவர்கள் அவ்விதம் விலகத் தேவையில்லை என்று வாதாடினேன், மற்றவர்களும் கேட்டுக் கொண்டனர்,

மீண்டும் காலையில் கூடுவதென்று செயற்குழு கலைந்தது.

ஒருநாள் முழுவதும் செயற்குழுவே நடைபெற்று பொதுக்குழு கூட முடியாத நிலை ஏற்பட்டது கண்டு, பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுமை இழக்கும் நிலை அடைந்துள்ளனர் என்று எனக்கு அறிவிக்கப்பட்டது.

முடிவை மாற்ற நான் வாதாடினேன்

நாளைய தினம் பொதுக்குழு நடைபெறும் என்று சமாதானம் கூறி அனுப்பிவிட்டு, நான், தோழர் சம்பத் மேற்கொள்ள விரும்பிய முடிவை மாற்ற வாதாடியபடி இருந்தேன், தோழர் மதியழகன் எனக்குத் துணை புரிந்தார்.

இரவு 8-மணி வரையில், செயற்குழு நடைபெற்ற கட்டடத்திலேயே பேசிக் கொண்டிருந்தோம்.

தோழர் சம்பத், தமது முடிவு தான் சமதர்மக் கட்சிகள் மேற்கொள்ளும் முறை என்றும், அதுகுறித்து நான் கலக்கமடையத் தேவையில்லை என்றும், வேறுசிலர் தம்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சிப்பதாகக் கேள்விப்பட்டதாகவும் கூறி, என்னைத் தமது முடிவுக்குச் சம்மதம் தரும்படிக் கூறினார்,

கண் கசிய வேண்டினேன்

"வெளியில் சென்று பேசுவோம்" என்று கூறி நான் தோழர்கள் சம்பத், மதியழகனுடன் ஊருக்கு வெளியே சென்று, காரிலே உட்கார்ந்தபடியே கண்கசியும், நிலையில் பேசிப்பார்த்தேன்.

என்னைத் தேற்றவும், எப்போதும் போல கழகப் பணியாற்றுவதாக உறுதி கூறவும் தான் தோழர் சம்பத் முயற்சித்தாரே தவிர, தமது முடிவினை மாற்றிக்கொள்வதாக இல்லை. மேற்கொண்டு காலம் கடத்தவும் வழியில்லை. மறுநாள் பொதுக்குழு. வீடுதிரும்பினோம் மூவரும்.

விலகல் அறிவிப்பு எவ்விதம் இருக்கலாம் என்பது குறித்து இருவரும் பேசினோம். ஆங்கிலத்தில் நான் சில குறித்துக் காட்டினேன். இது பொருத்தமாகவே இருக்கிறது என்று கூறிவிட்டு, 'காலையிலே பார்க்கலாம்' என்று அன்றைய நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டோம்.

நான் வேலூரில் ஒரு நண்பர் இல்லம் சென்று தங்கினேன்.

தோழர் சம்பத், சேலம், கோவை மாவட்டத் தோழர்கள் தங்கியிருந்த விடுதி சென்றதாகக் காலையில் கேள்விப்பட்டேன்.

தோழர் மதியழகன் செயற்குழு நடைபெற்ற கட்டடத்திலேயே தங்கியிருந்தார்.

காலையில் 10-மணிக்கு நான் வந்தேன், தோழர் சம்பத்துக்கு டெலிபோன் செய்தேன். எழுதிக் கொண்டிருப்பதாகவும், தோழர் ஏ. கோவிந்தசாமி பதிலளித்தார்.

மதியழகனும் ஒப்புக்கொண்டார்

11-மணிக்கு வந்த தோழர் சம்பத், தனியாக உட்கார்ந்து கொண்டிருந்த என்னிடம் தமது விலகல் கடிதத்தைக் கொடுத்தார். தோழர் மதியழகன் உடன் இருந்தார். மூவருமே கலங்கித்தான் போனோம்,

"மதி! நீயும் இது சரியென்று கூறுகிறாயா?" என்று நான் கேட்டேன். ஏனெனில், முன்னாள் இரவுவரை விலகுவது கூடாது என்று கருதினார் அவர்,

தோழர் மதியழகன், "ஆமாம்! இப்போது இதுதான் சரி!" என்றார்,

"இதற்கு நான் தானா...?" என்று கேட்டேன்.

"என்ன அண்ணா நீங்களேவா கலங்குவது?" என்று தைரியம் கூறிவிட்டு, கடிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டு, மாலை பொதுக் கூட்டத்துக்கு வருவ

பொதுச்செயலாளர் அறிக்கை

சித்திரப்படங்களுடன் புத்தகங்கள்

ரூ. 30 விலையுள்ள புத்தகங்கள் குறைந்த விலையில் ரூ. 10-க்கு கிடைக்கும்.

முத்தமிடும் கலை	ரூ.	3-00
ஆர்வ அணைப்புக்கலை	,,	3-00
இன்பத் தேனிலவு	,,	3-00
மணநாள் இரவு	,,	3-00
அதிசய அழகுகள்	,,	3-00
கூடசாஸ்திரம்	,,	3-00
காதற்கலை	,,	3-00
சிற்றின்ப வாழ்க்கை	,,	3-00
கருத்தடை முறை	,,	3-00
காதற கதைகள்	,,	3 00

10 புத்தகங்கள் அடங்கிய முழுத்தொகுதிக்கு ரூ. 10 மட்டும் வி.பி. கட்டணம் உபரியாகத் தனி ரூ. 1-50

கடிதப் போக்கு வரவு ஆங்கிலத்தில் மட்டும்.

Sulokha Book Depot (10)
ALIGARH

அடுத்த இதழில்..

தோழர் சம்பத் அவர்கள் அளிக்கும் விசேடக் கட்டுரை

உள்ளத்திலுள்ளதை ஒளிக்காமல் கூறும் சொல்லின்செல்வர்

தாக உறுதி சொல்லிவிட்டு, தோழர் சம்பத் சென்றுர்.

மனச் சங்கடத்துடன் செயற்குழு ஏற்றது

பிறகு செயற்குழுக் கூட்டம் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. தலைமையில் கூடிற்று. விலகல் கடிதத்தைப் படித்துக் காட்டினேன். செயற்குழு மனச் சங்கடத்துடன், ஒப்புக் கொள்வது தவிர வேறுவழியில்லை என்ற முடிவுக்கு வந்தது.

பிறகு சட்ட திட்ட சம்மந்தமான திருத்தங்களை ஆர அமர ஆராய்ந்து பார்க்கத்தக்க விதத்தில், அவை ஒரு வார காலத்துக்கு முன்புகூட அனுப்பப் படாததாலும், கசப்பான சூழ்நிலையின்போது அவைபற்றி முடிவெடுப்பது முறையாகாது என்பதாலும், அவைப்பற்றி ஆய்ந்தறிந்து அடுத்த பொதுக் குழுவுக்கு கருத்தளிக்க ஒரு தனிக் குழு அமைப்பது என்று நான் கூறினேன்.

செயற்குழு உறுப்பினர்களிலே பலர் நடமுறைக்கு சில திங்களுக்கு முன்பே கொண்டு வரப்பட்ட சட்ட திட்டத்தைத் திருத்தவே தேவையில்லை என்று வாதாடினுர்கள்.

தோழர் என். வி. நடராசன் மெத்த வேதனையுடன், "எங்கள் சுயமரியாதையையே பாதிக்கும் வகையில் திருத்தம் தருகிறுர்கள் நாங்கள்தான் நீண்ட ஆலோசனைக்குப் பிறகு சட்டத்தை உருவாக்கினேம்" என்று கூறினுர்.

சட்ட திருத்தத்துக்கு மூவர் குழு

சட்டத்துக்காக திருத்தங்கள், முற்போக்கையும் ஜனநாயகத்தையும் வலியுறுத்தப்படுகின்றன. அவைகளைத்தள்ளிவிடுவது முறையாகாது. குழுவின் ஆய்வுக்கு அனுப்புவதுதான் சரி" என்று தான் எடுத்துக் கூறி, மூவர் கொண்ட குழுவை அமைக்க செயற்குழுவுக்கு ஆலோசனை கூறி, அந்த மூவரில், தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்களை ஒருவராக இருந்து பணி யாற்றும்படிக் கேட்டுக் கொண்டேன்.

அவர், சில திருத்தங்கள் தாமே கொடுத்திருப்பதால், குழுவில் இருப்பது முறையாகாது என்றுர்,

அது சரி என்று நான் கருதினேன்.

ப. உ. சண்முகம்,
டி. கே. சீனிவாசன்,
தில்லை. வில்லாளன்,
ஆகிய மூவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

பொதுத் தீர்மானங்களிலே சிறு சிறு மாறுதல்கள் செய்யப் பட்டன.

12-30 மணிக்கு பொதுக்குழு கூடிற்று.

சேலம் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களைத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்டேன். தோழர் மதியழகன் வழிமொழிந்தார்.

செயலாளர்கள் என்னுடன் அமர்ந்திருந்தனர்.

நான், கழக நிலைமைபற்றி பொது விளக்கம் அளித்துப் பேசினேன்.

என் பேச்சில் முக்கியமானவை

நான் குறிப்பிட்டுப் பேசியவைகளிலே, முக்கியமானவை என்று நான் கருதுபவை—

நம் கழகத் தோழர்களிடம் தோழமை உணர்ச்சி குறைந்தது, குறை காண்பதும் பகை வளர்ந்தும் ஏற்பட்டு விட்டுள்ளநிலைமை—

புதிய முறைகள் புகுத்த விரும்புபவர்கள்; அந்த முறையின் மேம்பாட்டினை வலியுறுத்துவதைவிட, Rightist என்றும், Leftist என்றும் காரணமற்ற தத்துவப் பூசலை ஏற்படுத்துவது—

காரணமற்ற தத்துவப் பூசலை ஏற்படுத்துவோரிடம் நான் பேசும்போது, "Rightist will be always right and leftist will be left out" என்று கூறியதை நினைவுப் படுத்தியது.

Leftist—ஆக இருப்பதிலே எனக்குத் தயக்கமோ பயமோ கிடையாது என்ற கருத்து—

ஜனநாயக முறையை எந்த அளவுக்கு கொண்டு செல்லலாம் Referendum வரை கூட (மக்கள் வாக்கெடுப்பு) நான் தயார் என்று சொன்னது—

மனக்கசப்பு வளர்ந்த காரணத்தால், தோழர் சம்பத் போன்றவர்கள் காணவிரும்புப் நல்ல முறைகள் கூட புகுத்த முடியாது சூழ்நிலை ஏற்பட்டிருப்பது—

என்னை மாற்றுக் கட்சியினர் மனம்போன போக்கில் ஏசும் தன்மை—

கழகத்தவர்களிலேயே சிலர், அந்த மாற்றுர்களுக்கு இடம் கொடுக்கும் விதத்தில் என்னிடம் குறை காண்பது, கேவலப்படுத்தும் முறையில் பேசுவது, எழுதுவது என்ற போக்கு—

இந்த நிலையிலே சட்டத் திருத்தங்கள் பற்றி பொதுக் குழுவினர் விருப்பு, வெறுப்பு அற்ற ஆராய்ந்து பார்க்க முடியாத நிலையில் இருப்பது—

இந்த நிலையில் திருத்தங்கள் நிச்சயம் தோற்றுவிடும் என்ற என் அச்சம்—

திருத்தங்களிலே சில நல்லவை, தேவை என்று எனக்குப்படுகிறது என்ற எண்ணம்—

எனவே, குழுவிடம் திருத்தங்களை ஒப்படைக்கும் என் யோசனை—

வளர்ந்துவிட்ட கசப்புகள் காரணமாக, தோழர் சம்பத்தின் பேச்சும், எழுத்தும் செயற்குழுவினரின் மனதைப் புண்படுத்தி விட்டது என்ற செய்தி—

தோழர் சம்பத் எடுத்துள்ள முடிவு—

மகன், சிங்கப்பூர் சீமை சென்று ஆறுமாதத்தில் திரும்பிவந்து விடுவான் என்று தாய் கூறும் நிலையில் நான் இதைச் சொல்லுகிறேன் என்ற உரை—

—இவ்விதம் என் பேச்சு அமைந்திருந்தது.

தோழர் சம்பத்தின் விலகல் கடிதத்தைப் படித்துக் காட்டினேன்; பொதுக்குழு திகைத்தது- எனினும் வேறு மாற்றம் இல்லை என்பதை உணர்ந்து ஏற்றுக்கொண்டது.

அந்தச் சங்கடமான நிகழ்ச்சிக்குப் பிறகு, உணவுக்காகக் கலைந்தோம்.

மூன்று மணிக்குமேல் மீண்டும் கூடினேம்.

தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

செயலாளர்களில் தோழர் மதியழகன் மட்டும் வரவில்லை. கோவை ராஜமாணிக்கம் அவர்களை அனுப்பியும் பார்த்தேன்— தோழர் மதியழகன் வர வில்லை. பொதுக்குழுக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

கருணநிதியின் தேர்தல்நிதி அறிக்கை

தேர்தல் நிதி அறிக்கையைக் கொடுத்து விட்டு தோழர் மு. கருணநிதி பேசினுர்.

20-1-61—வரை தேர்தல் நிதியாக வந்த தொகை

சென்னை மாவட்டம்	—	5,178	22
செங்கற்பட்டு	—	238	16
வடாற்காடு	—	19,358	79
தென்னுற்காடு	—	549	41
திருச்சி	—	177	85
தஞ்சை	—	1,075	92
சேலம்	—	2,066	19
கோவை	—	119	61
மதுரை	—	15,086	50
இராமநாதபுரம்	—	5.031	00
நெல்லை	—	4,.95	00
நாஞ்சில்	—	86	60
ஆந்திர மாநிலம்	—	55	50
மற்ற மாநிலங்கள்	—	203	12
தனிப்பட்டத் தோழர்கள்	—	7,718	48
ஆகமொத்தம்		61,140	35

என்ற விவரங்களை கூறி விட்டு. பணம் இராயபுரம் இந்தியன் பேங்கில் இருக்கிறது என்று அறிவித்து, பாஸ் புத்தகத்தையும், 'செலானை'யும், அவைத் தலைமை ஏற்றிருந்த தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களிடம் ஒப்பிட்டுப்பார்க்குமாறு கொடுத்தார். அவர் ஒப்புக்கொண்டார்.

தேர்தல் நிதி பற்றிய குறிப்பை படிக்கும்போது, 'ஆந்திர மாநிலம் 55 ருபாய்' என்று தோழர் மு. கருணநிதி படித்ததும், ஆந்திர மாநிலத் தோழர்கள் பதறி எழுந்து "ஆயிரம் ருபாய் ஏகாம்பரக் குப்பம் சிறப்புக் கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், சம்பத் ஆகியோரிடம் ஜனவரி 1-ல் கொடுத்திருக்கிறேம்: கணக்கிலே ஏன் இல்லை ?" என்று கேட்டனர்.

தம்மிடம் அந்தத் தொகை வந்து சேரவில்லை என்ற தகவலை தோழர் கருணநிதி தெரிவித்தார்.

"அதைப்பற்றித் கவலை வேண்டாம். தோழர்கள் கண்ணதாசன் சம்பத் ஆகியோரிடம் இருந்தால் பெற்றுக்கொள்ளலாம்" என்று நான் கூறினேன்.

நம்நாடு பற்றி சி. பி: சிற்றரசு

வெளியீட்டுச் செயலாளர் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், 'நம் நாடு' கணக்கினை விளக்கமாகக் கூறியதுடன், பெரிய அளவில் பத்திரிகையை நடத்தும் திட்டத்தையும் விளக்கினுர்.

இந்தி எதிர்ப்பு நிதி விவாதம்

சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டு மிச்சத் தொகை, இந்தி எதிர்ப்புக்காக தரப்பட்ட நன்கொடை. இவற்றைக் கழகப் பொது நிதியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பொதுக்குழு உறுப்பினர்கள் பலரும், அந்த நிதிக் கணக்கு கேட்டனர். அது தம்வசமில்லை என்று பொருளாளர் பதில் கூறினுர்.

"மாநாடு முடிந்து ஐந்து மாதங்களான பிறகு மா கணக்கு முடிக்கவில்லை ? பணம் தலைமைக் கழகத்திற்குச் சேர்ப்பிக்கப்படவில்லை?" என்று பலரும் கேள்விகளைக் கேட்டனர்.

"இந்தி எதிர்ப்புக்காகவே ஒரு தனிக்குழு தோழர் சம்பத் தலைமையில் அமைக்கப்பட்டது தோழர் மதியழகன் மாநாட்டுச் செயலாளராகப் பணியாற்றினுர். இந்தி எதிர்ப்புப்போராட்டம்நடத்த வேண்டி ஏற்படும் என்பதற்காக, போராட்டக்குழுத் தலைவரிடம் பணமும் நிர்வாகமும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்தி எதிர்ப்பை விளக்கி ஆங்கிலத்தில் புத்தகம் கூட வெளியிடலாம் என்று சொல்லியிருந்தேன்: இப்போது போராட்டம் உடனடியாக இல்லை என்று தெரிவதால்: மேற்படி பணத்தைக் கழகப் பொதுநிதியில் சேர்த்துவிடும்படிக் கேட்டால், குழு பணத்தைக் கொடுத்து விடும்; இது குறித்துப்பலப்பல பேசவேண்டாம்" என்று நான் கூறினேன்.

தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. தோழர்கள் கண்ணதாசன், கண்ணப்பா வள்ளியப்பன், பில்லப்பன், ராஜாராம், ஆர்.எஸ். பாண்டியன், பி.எம். குப்புசாமி, தாண்டவன், இராமலிங்கம், எம். பி. சுப்பிரமணியம் ஆகியோர் பொதுக் குழுவிற்கு பிற்பகல் வரவில்லை. எனவே, அவர்கள் கொடுத்திருந்த தீர்மானங்கள் பொதுக்குழுவால் தள்ளிவிடப் பட்டன.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் மறைமுகமாக இந்தித்திணிப்பைத் தடுக்க ஒரு கையெழுத்து இயக்கம் நடத்த வேண்டும் என்று கொடுத்த தீர்மானம். தோழர் தில்லை வில்லாளன் அவர்களால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறிற்று.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதல் கூறும் தீர்மானமும், தமிழ்நாடு பெயர்பெற கிளர்ச்சி துவக்க வேண்டும் என்ற தீர்மானமும் என்னுல் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றின.

என் முடிவுரையில், கசப்புகளை நீக்கிக்கொண்டு கழகப் பணியாற்றும்படி அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொண்டேன்.

இரவு 9-மணி அளவில் பொதுக் குழுக் கூட்டம் முடிவுற்றது.

வேலூரில் இரண்டு நாட்களாக நடைபெற்றவை இவை.

என் வேண்டுகோள்

கழகத்துக்கு மாசு கற்பிக்க வேண்டி, விபரீதமான செய்திகளை வேட்டையாடித் திரிவோர் வெளியிடும் செய்திகளைப் பொருட்படுத்த வேண்டாமென்று பொது மக்களையும் கழகத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

ரசாபாசமோ, ரகளேயோ அங்கு ஏற்படவில்லை. கருத்து வேற்றுமைகள் எழுந்தன; கசப்பு காணப்பட்டது; என்றுலும் கழகத் தோழர்கள் கண்ணியத்தைக் காப்பாற்றினர்.

அவர்கள் அனைவருக்கும் என் நன்றி,

அன்பன்,
அண்ணுதுரை.

'இனமுழக்கம்'

உரிமையாளர்

கண்ணப்பா வள்ளியப்பன்

அறிவிப்பு

நாளது தேதி வரை சரியாக ஊதியம் பெற்று எனது இதழ் 'இனமுழக்கம்' ஏட்டில் ஆசிரியர் பணிபுரிந்து வந்த திரு: சி. பி; சிற்றரசு அவர்கள் 28-1-61 'முரசொலி' ஏட்டில் நான் கழகத்தின் ஒழுங்கு முறை, கட்டுப்பாடு ஆகியவைகளுக்கு ஊறு தேடும் வகையில் நடப்பதாகவும், அதனுலேயே அவர் தனது ஆசிரியர் பணியிலிருந்து விலகிக்கொள்வதாகவும் அறிக்கை விடுத்துள்ளதை வாசக நண்பர்கள் கண்டிருக்கலாம்.

அவரது விலகல் பற்றி இன்று வரை எனக்கு எழுத்து மூலம் அவரால் எவ்விதக் கடிதமும் அனுப்பப்படவில்லை.

இதுபற்றி அவரது எழுத்து மூலமான கடிதம் எனக்குக் கிடைத்த பின் என்னுடைய கருத்தை விளக்கமாக வெளியிடலாமென்று எண்ணியுள்ளேன்.

இதுபற்றி விவரம் தெரிய விரும்பும் தோழர்கள் அனைவரும் அதுவரை பொருத்தருள பெரிதும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை-5, **கண்ணப்பா வள்ளியப்பன்**
28—1—61. உரிமையாளர், 'இனமுழக்கம்'

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

வலதுசாரிகள் வரவேற்புக்குரியவர்கள்

வேலூரர்ப் பொதுக்குழுவில் அண்ணா பேச்சு

இடதுசாரிகள் விரட்டப்பட வேண்டியவர்கள்

எனது மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே! தோழர்களே! நேற்று பிற்பகல் ஆரம்பமாக வேண்டிய இப்பொதுக் குழு கூட்டம் இன்று பகல் 1 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய, தவிர்க்க முடியா நிலை ஏற்பட்டுவிட்டதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். நேற்று காலைமுதல் இன்று பிற்பகல் வரைநீங்கள்யாவரும் மிகவும் பொறுமையாகவும், கண்ணியமாகவும் இருந்தமைக்கு நான் மிகவும் உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பல சங்கடங்களை சமாளித்தும் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுப் பழக்கப்பட்டு போனவர்கள் நாம். நமதுகழக ஆரம்ப காலத்தில் நமக்கு ஏற்பட்ட இன்னல்கள்; இடுக்கண்கள் ஏசல்கள், பழிச்சொற்கள் அளவுக்கு அதிகம். இவர்கள் ஒன்றுமறியாதவர்கள் அரசியல் ஞானமற்றவர்கள்—இவர்கள் ஒரு கட்சியைக் கட்டிக் காப்பாற்றும் பண்பற்றவர்கள் என்று பகைவர்கள் மட்டுமின்றி, நம்மிலே பலரும் கருதியதுண்டு. ஆருடம் கணித்தார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஆச்சர்யப்படும்படி இன்று நமது வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ் வளர்ச்சியைக் கண்டு மாற்றானும் மருட்சியடைகிறான் என்றால், அதில் உண்மையில்லாமல், நமது கழகம் மேற்கொண்டுள்ள கோட்பாடுகளும், கொள்கைகளுமே அதற்குக் காரணங்கள் என்பது மட்டுமல்ல, அதற்காக நாம் செய்த தியாகங்கள்—கொஞ்ச நஞ்சமல்ல.

எதிர் முகாமிலிருந்து வரும் எதிர்ப்பு, ஆட்சியாளரின் அடக்கு முறை—தடியடி, துப்பாக்கிப் பிரயோகம்—சிறை வாசம், சிற்சில சமயங்களில் பயங்கரப் படுகொலைக்கும் நம்மவர்கள் ஆளானார்கள். இவ்வளவையும் தாங்கிக் கொள்ளும் மன உறுதி படைத்தவர்களாக இருக்கிறோம். இன்று இங்கு நமது கழக ஆரம்ப காலத்தில் இருந்தவர்களில் சிலரைத் தான் காண முடிகிறது அதிலும் மூன்று பேர்கள் தான் முதுமையடைந்தவர்கள் ஒருவா உங்கள் முன் வீற்றிருக்கும் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள், மற்றொருவர் கும்பகோணம் கே.கே. நீலமேகம் உங்கள் முன் நிற்கும் நான். நண்பர் நீலமேகம் அவர்களைக் கண்டால் நீங்கள் கண்ணீர் விடாமலிருக்க முடியாது.

நிலை குலையாத நடையுடைய நீலமேகம், இருவர் இருபக்கம் தாங்கத் தள்ளாடி நடப்பதைக் கண்டேன், சென்னையில் என்னைப் பார்க்க வரும்போது, என் உடலே பதைத்துவிட்டது. இவரா நீலமேகம் என்று சந்தேகப்படும்படி அவர் உருவம் மாற்றமடைந்துவிட்டது. அதே போன்று அவைத்தலைவராக வீற்றிருக்கும் சோமசுந்தரம் அவர்களும் உடல் நிலைக்கெட்டு-பிழைப்பாரோ இல்லையோ என்ற ஏக்கத்தையுண்டாக்கிவிட்டது எனக்கு. ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் இவர்கள் கட்சிகு ஆற்றிய தொண்டுகள் அளவிட முடியாதது. அவர்கள் அதன் பலனை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையற்றவர்கள் என்பதற்காகவேயாகும். இப்படிப் பட்டவர்களின் பெரும் உழைப்பால் உருவானது தான் நமது கழகம். இன்று எல்லோரும் வியக்கத் தக்க அளவில் விரிவடைந்துள்ளது. இவ்வளர்ச்சியைக்கண்டு நாம் பெருமைப்படாமலிருக்க முடியாது. எனினும் நாம், ஒரு தலைமுறையைத் தாண்டி அடுத்தத் தலைமுறைக்கு வந்துள்ளோம் இந்தத் தலைமுறையைப் பின் பற்றி நடக்கவே முற்படவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் வகுத்த வழி முறையில் வந்தவர்கள் நாம் அவர்கள் வகுத்த வழியில் செல்வதால் நஷ்டமொன்றுமில்லை லாபங்கள் தான் அதிகம்.

தெளிவு பெற

நேற்றுக் கூடிய செயற்குழு இன்று பகல் வரை நடைபெற்றிருக்கிறது, இது நமது கழ்க சரித்திரத்திலே இதுவரை கண்டிராத நிகழ்ச்யாகும். காலை 10-மணிக்கு ஆரம்பமாகி பகல் உணவுக்குள் முடித்து பிற்பகல் பொதுக்குழு கூட்டம் ஆரம்பமாகும். இம்முறை ஒண்ணரை நாட்கள் பிடித்திருக்கிறது. காரணம்? நாம் கூடுவதற்கு சில நாட்களுக்கு முன் நமக்குள் ஏற்பட்ட சந்தேகம், பகைமையுணர்ச்சி மற்றும் பல! நம்மிலிருந்த குடும்ப பாசம் மறைந்து விட்டது. ஒருவரையொருவர் பார்க்கும் பார்வையோவிசித்தரமானது ஏன் இந்த நிலை? எப்படி ஏற்பட்டது.? என்ன காரணம் என்பதையே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவைகளே செயற்குழுக் கூட்டத்தில் இடம் பெற்றன .தம்பி சம்பத்தின் செயலில் சந்தேகம் கொண்டனர். தெளிவு பெற முற்பட்டனர் செயற்குழு உறுப்பினர்.

நான் ஒரு மாதத்திற்கு முன் எழுதிய 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்ற தொடர் கட்டுரையை நீங்களும் படித்திருப்பீர்கள். ஐந்து வாரங்கள் நான் அதைத் தொடர்ந்து 'திராவிட நாடு' பத்திரிக்கையில் எழுதி வந்திருக்கிறேன். அதில் ஜனநாயகம் பற்றிய பகுதியில் சம்பத்துக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டது. என்னைச் சந்தித்துக் கேட்டார். ஜனநாயகத்தைப் பழிப்பதாகக் கூறியது மட்டுமல்லாமல், முடியாட்சி தான் நல்லது என்று படும்படியான சூழ்நிலையில் அக்கட்டுரையில் காட்சியளிக்கிறதென்று கூறினார். நான், அப்படி நீ நினைப்பது தவறு என்று கூறினேன் 'ஆபிள் கார்ட்' என்னும் புத்தகத்தின் மொழி பெயர்ப்பு நான் உங்கள் எல்லோரையும் விட ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையவன், அதுமட்டுமல்ல அதை எந்த அளவுக்கு அதிகமாக மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு அதிகமாகப் பேசுபவன்-எழுதுபவன், என்று கூறினேன். திருப்திஏற்பட்டிருக்குமென்று நினைத்தேன். ஆனால் அடுத்து, தென்றல் வார இதழில், 'அண்ணாவின்-மன்னன்' என்ற தலைப்பில் ஓர் கட்டுரை வெளிவந்தது, அது சம்பத்தால் எழுதப்பட்டது. அதுவே செயற்குழு கூட்டத்தில் இடம் பெற்றன.

காரணம் தெரியவில்லை

நீண்ட நாட்களாக என்னோடு பழகி, என்னை நன்றாக அறிந்து கொண்டவன் சம்பத். அவன் என்னுடைய செயலிலும்-எழுத்திலும் சந்தேகம் கொள்ள காரணம் எனக்கே தெரியவில்லை.

நான் முடியாட்சியை ஆதரிப்பதற்குக் காரணம் வேண்டுமல்லவா? நான் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவன். நான் முடியாட்சியை ஏன் ஆதரிக்க வேண்டும்? உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன். முடிதுறந்த மைசூர் மகாராஜா இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரிடம் ஒரு பத்தாயிரம் ரூபாய் பெற்று-முடியாட்சி ஒன்றுதான் நல்லது என்று நான்கு ஐந்து வாரம் பத்திரிக்கையில் எழுதி, அதற்கு ஆதரவு தேடி, மக்களைப் பக்குவப்படுத்தி, பின் மன்னனுக்கு முடி சூட்டவா முற்பட்டேன். அப்படி நான் செய்வேனா? இப்படி எதிர்க் கட்சிக்காரனும் கூறமாட்டானே! நம் கட்சிக்காரன் எதிர் கட்சிக்காரனிடம் கைக்கூலி பெற்றுக் கூறுவதாயிருந்தாலும் பரவாயில்லை அப்படியில்லாத நம்மவரே நம்மைத் தாக்குவது நியாயமா என்று கேட்கிறேன் இது எவ்வளவு தூரம் நமது கட்சியை நமது நல்ல எண்ணத்தை பாதிக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்

தவறு

செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இக்கட்டுரையைப் பற்றி மிகத் தெளிவாகப் பேசினர்.

எல்லோருமே இக்கட்டுரை எழுதப்பட்டது தவறு என்று கூறினார்கள்.

[7-ம் பக்கம் பார்க்க]

முதல் இதழ் பிப்ரவரி 3-ம் தேதி வெளிவருகிறது!
புதுமைகள் பூத்துக் குலுங்கும் புரட்சிப் படைப்பு!
தென்னகத்தின் தன்நிகரில்லா ஒளிவிளக்கு!!

முன்னணி
-கலை, இலக்கிய, அரசியல்......வார ஏடு-
ஆசிரியர்: நாஞ்சில் கி, மனோகரன் M.A.
பதிப்பாசிரியர்: ம. ரா. தேவராசன்
சிந்தனைச்சிற்பி சி. பி. சி. அவர்களின் 'கபாடபுரம்' சரித்திரத் தொடரோவியம்
முதலிதழிலேயே ஆரம்பமாகிறது
தனிப்பிரதி 16 காசுகள் ★ ஆண்டு சந்தா ரூ. 8-00
உங்கள் பிரதிகளுக்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.
எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஊக்கம் நிறைந்த விற்பனையாளர்கள் தேவை.
விபரங்கட்கு:
முன்னணி அலுவலகம்
26. எம். சி. ரோடு, சென்னை-21

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!!
'போய் வருகிறேன்!'
(கவிஞர் கண்ணதாசன்)
விலை 50 காசுகள்
★
'உதிர்ந்த இதழ்கள்'
(டி. கே. சீனிவாசன்)
விலை ரூ. 1
விவரங்கட்கு:
காவியக் கழகம்,
158, பெரிய தெரு : : சென்னை-5.

'மனதில்சரியென்றுபட்டதை சொல்வதில்கெட்டிக்காரன் சம்பத்'

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இதோ என்முன் வீற்றிருக்கும் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் செயற்குழு உறுப்பினர். அவர் சம்பத்தைப் பார்த்துக் கேட்டார் 'என்ன சம்பத், நீ எப்போதும் இப்படியே பேசியும் எழுதியும் தொந்தரவு கொடுக்கிறாயே, 1950-ல் காஞ்சீபுரத்தில் கூடிய பொதுக்குழு கூட்டத்தில், நாரணமங்களத்தில்—நெடுஞ்செழியன் பேசுவதாக

★ 'ஜனநாயகத்தின் ஜென்மப் பகைவன் யார்?'

இருந்த கூட்டத்திற்கு 144 தடைபோட்டார்கள். கூட்டத்திற்கு அங்கு பேசப்போன நீ ஏன் கோவில்பட்டித் தீர்மானப்படி தடையை மீறவில்லை? என்று வம்புக்கிழுத்தாய்- குமாரப்பாளையத்திற்கு முன், சுற்றறிக்கை விட்டு எல்லோரையும் குழப்பத்தில் ஈடுபடுத்தினாய், இப்பொழுது இக்கட்டுரை எழுதியும் கழக சட்டத்திற்குத் திருத்தங்கள் விடுத்தும் கஷ்டப்படுத்துகிறாய்! இதை எப்படி நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியும் என்று கேட்டார்.

விலகுகிறேன்

இந்த நிலையில் செயற்குழு உறுப்பினர்களின் எல்லோருடைய கருத்தையும் அறிந்த பிறகு, சம்பத் அவர்களுக்குக் கூறினார். நான் இந்தக் குழுவின் தலைவன். என் செயலில் நான் கூறுவதில் இவர்களுக்கு ஒருமைப் பாடில்லை ஜனநாயகப் பண்புப்படி என் மீது நம்பிக்கையில்லாத ஒரு அமைப்பின் தலைவனாக நான் இருப்பது கூடாது. ஆகவே, நான் தலைமைப் பதவியிலிருந்து விலகி, சாதாரண உறுப்பினராக இருந்து கழகத்திற்குப் பணி புரிகிறேன் என்று கூறினார். அவர் கூறியதை செயற்குழு ஏற்றுக் கொண்டது பின் விலகல் கடிதம் எழுதிக் கொடுத்தார். அது இதோ இருக்கிறது. அதுவும் சுத்தமாகவும் பெருந்தன்மையோடும் எழுதப்பட்ட கடிதம் என்பதைப் பார்த்து என் மனம் பூரிப்படைந்தது (விலகல் கடிதம் பொதுக்குழு முன்பு படித்துக் காட்டப்பட்டது.) இந்த விதமான கடிதம் நான் சம்பத் அவர்களிடம் கொடுப்பதற்குப் பதில் சம்பத்தால் என்னிடம் கொடுக்கப்பட்டது. அந்த நிலையைக் கண்டு என் மனம் பட்ட பாட்டை என்னால் இங்கு விவரித்துக்கூற இயலவில்லை. அது ஆறு மாதத்திற்குப் பிறகு திரும்பி வரும் பிள்ளையை சிங்கப்பூர் அனுப்பிவைக்கும் தாயின் நிலையை யொத்தது. தழதழத்த குரல் அதைப் பெற்றுக்கொண்டு விடை கொடுப்பதைப் போன்றிருந்தது. இது உண்மை: இதை உணராதவன் மனிதனல்ல என்பதைத் தவிர வேறு ஒன்றும் என்னால் கூற முடியவில்லை.

ஒப்புதல் அளித்தேன்

சம்பத் என்னிடம் தனியாகப்பேசும்போது, அன்பழகன் ஒருவர் தான் இதைப் பற்றி உண்மையைப் பேசினார் அண்ணா! அதை நான் முழுமனதோடு ஒப்புக்கொள்ளுகிறேன் என்று 'அண்ணாவின் மன்னன்' என்ற கட்டுரையைப் பற்றி அன்பழகன் கூறிய அபிப்பிராயத்தைப் பாராட்டினார். செயற்குழுவில் ஏகோபித்த முடிவு—எதிர்ப்பில்லை—கடைசியில் நானும் விலகல் கடிதத்திற்கும் ஒப்புதல் அளித்தேன்.

கெடுத்து விடுகிறார்கள்

இப்படிப்பட்ட வேதனைக்குரிய நிகழ்ச்சிகள் ஏற்படக் காரணம் இல்லாமலில்லை.

சம்பத் மிகவும் நல்லவன், அவனைச் சிலர் கெடுத்து விடுகிறார்கள் சந்தேகத்திற் குரியவர்கள் அவனைச்சூழ்ந்திருக்கிறார்கள்.

அவன் மனதில் சரி என்று பட்டதைச் சொல்வதில் தயங்காதவன். நேற்று என்னிடம் கூறினான், அண்ணா' ஏதாவது கழகத்தின் நன்மையைப் பற்றி என் மனதில் தோன்றினால் அது சரியோ தப்போ-அதை உடனே சொல்லிவிட வேண்டும் என்பது என் சுபாவம்-அப்படியில்லாமல் அதை என்மனதில் அடக்கிவைத்தால் என் உடல்நிலை கெட்டு விடுகிறது. இதோ பாருங்கள் என் உடலில் தடிப்புகள்" என்று காட்டினான். அவ்வளவு வெள்ளை உள்ளம் படைத்தவன், சம்பத்.

நம்பிக்கையுண்டு

சிலர் என்னைக் கேட்பதுண்டு. "என்ன, அண்ணா! நீங்கள் சம்பத் எதைச் சொன்னாலும் அப்படியே ஒப்புக்கொள்ளுகிறீர்கள் எதைச் செய்தாலும் அது சரியாகத் தான் செய்தான்" என்று கூறுகிறீர்கள் என்று வருத்தப்படுவார்கள்.

இது உண்மை! எனக்கு சம்பத்திடத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுமுண்டு. நான் எப்படி பெரியார் சாயலில் உருவாகி அவரால் தயார் செய்யப்பட்டேனோ அதைப்போன்றே தம்பி சம்பத்தும் என் சாயல், என்னால் தயார்செய்யப்பட்டவன் இதை சம்பத்தே ஒப்புக்கொள்ளாவிட்டாலும், சரி உண்மையில் மிக்க அறிவாளி. அவனுக்குள்ள திறமை மற்றவர்களுக்கில்லை அவன் சொல் சிறப்பு வாய்ந்தது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகின்றேன்.

மாநாட்டில்

சென்னை கோடம்பாக்கத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. நான் தலைமை வகித்தேன். தீர்மானம் என்ன என்றார்கள். சம்பத் பேசும்போது சொன்னான்; அண்ணாவின் மாநாட்டின் உரையே தீர்மானம் அதுவே முகவுரை; முடிவுரை ஆட்சியாளரை எச்சரிக்கும் இறுதியுரை என்று குறிப்பிட்டான். இப்படிப்பட்டவனை சந்தேகத்திற்குரியவர்கள் கெடுத்துவிடுகிறார்கள். மற்றுமோர் செயலை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அன்பழகன் பேசினார். என்ன இருக்கிறது பாயின்ட் அதில், நெடுஞ்செழியன் பேசுகிறார் போர் அடிக்கிறது அண்ணாவின் பேச்சு, இப்போது விஷயம் ஒன்றுமில்லை அவரிடம், என்று பேசியவர்களும் இருக்கிறார்கள். நம்மிடையே, இவர்கள் கழகத்திற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன் வந்தவர்கள்

தகுமா?

ஒருவன் மோட்டார் ஒன்றை வாங்கி ஒரு மைல் சென்றதும் ரிப்பேராகிவிடுகிறது. அதை பழுது பார்க்க ஒருவர் ஸ்பேனர் எடுத்துக் கொடுக்கிறார், ஒருவன் நட்டை முடுக்கிவிடுகிறான். மற்றொருவன் பானட்டைத் துடைத்து சுத்தம் செய்கிறான். இதைப்போன்று ஆரம்பத்தில் உதவி செய்பவர்கள் குறை கூறியிருந்தாலும் பொறுத்துக் கொள்ளலாம் ஒன்றுமே செய்தறியாத இவர்களா இப்படிக் கூறுவது இதைக்கண்டு யாருக்குத் தான் கோபம் வராது? தகுமா இப்படிப்பட்ட செயல், இது நீடிக்கலாமா கழகத்தில் என்று யோசித்துப் பாருங்கள்.

ஜனநாயகமா

மற்றொரு விஷயம். நம்நாடு அலுவலகத்தில் ஊதியம் பெற்றுப் பிழைப்பவர், மாலை 5 மணிக்குமேல் கழகக் கட்டிடத்திலுள்ள வெளித் திண்ணையில் உட்கார்ந்து கழகத்தில் மிதவாதத்தன்மை மலிந்து விட்டது அவை ஒழிக்கப்படவேண்டும் இடது சாரி பகுதிகள் ஆரம்பமாக வேண்டிய கட்டம் கழகத்திற்கு வந்துவிட்டது என்றெல்லாம் பேசுகிறார். இதுவா ஜனநாயகம்?

மிதவாதி

நான் மிதவாதியாம்! மிதவாதி என்பது அரசியலிலே மதமதத்து மெதுவாக காரிய மாற்றவேண்டும் என்று நினைப்பவனுக்கு ஒப்பிடுகிறார்கள். இது நியாமா? 'ரைட்டிஸ்ட்—'லெப்டிஸ்ட்' என்ற வாதத்தை கிளப்புகிறார்கள். 1953-ம் ஆண்டு நாங்கள் சிறையிலிருந்த போதே எங்களைக் குறை கூறினார்கள், 'லெப்டிஸ்ட்'

★ 'தம்பி சம்பத் என்சாயலில்-என்னால் தயார் செய்யப்பட்டவன்!'

எண்ணம் கழக உறுப்பினர்களுக்கு உண்டாகவேண்டும் இவர்கள் மிதவாதிகள். இவர்கள் அரசியலுக்கு லாயக்கில்லை என்று 'லெப்டிஸ்ட்' என்றால் இடது சாரிகள் என்று பொருள். வாதி என்றும் கூறலாம். யார் மிதவாதி? நீங்கள் ஒரு குண்டு தயார் செய்தால், நான் ஒன்பது குண்டுகள் தயார் செய்வேன். படையென்று சொன்னால் நீங்கள், நான் ஒரு பெரும் படையைத் திரட்டிவிடுவேனே, நான் எதையும், எண்ணயபடிச் செய்யமுடிந்தவன் தம்பி! நீங்கள் மிதவாதியென்றால் அங்கே முதலில் நான்தானே இருப்பேன். அதைச் செய்து கொள்ளமுடியாது என்று நினைக்கிறாயா? நான் எதையும் எண்ணியபடிச் செய்ய முடிந்தவன் தம்பீ! பயம் காட்டாதே. 'ரைட்டிஸ்ட்' 'லெப்டிஸ்ட்' என்பதின் பொருளென்ன தெரியுமா? "Rightists will always be rights and Leftists will be left out.' என்றுதான் இருக்கவேண்டும் அதாவது இடது சாரி தூக்கியெறியப் படவேண்டியன என்பதல்லவா பொருள்! இதுகூடத் தெரியவில்லையே! மறுபடியும் கூறுகிறேன் Leftists will be leftout என்று

பார்க்கலாம் ஒரு கை

இன்று காலை மீண்டும் செயற் குழு கூட்டம் கூடியது. கழக—அலுவலகம் சம்பந்தமான தீர்மானங்கள் பரிசீலிக்கப்பட்டன. பின்பு தனியார் அனுப்பிவைக்கப்பட்ட தீர்மானங்கள் பரிசீலிக்கப்பட்டன. அவைகள் யாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில்தான் அமைந்திருந்தன. இலங்கைத் தமிழர் பற்றிய தீர்மானம், தமிழ்நாடு பெயர் மாற்றம் பற்றிய போராட்டம் ஆகியவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. சட்ட திட்ட தீர்மானங்கள் பொருத்தவரை, அவை இப்போதைக்கு உடனடியாக ஏற்றுக்கொள்வதா என்று விவாதிக்கப்பட்டு-அவைகள் ஆய்வுக் குழுவிற்கு விட்டு—அடுத்து கூடும் பொதுக் குழுவில் பரிசீலிக்கலாம் எனச் செயற்குழு சிபார்சு செய்துள்ளது எனவே, தீர்மானத்தை அனுப்பியவர்கள் ஏமாற வேண்டியதில்லை. அடுத்துப் பொதுக் குழு எப்போது கூடுமோ என்ற அச்சம் வேண்டியதில்லை. ஆய்வுக் குழு ஒரு மாதத்திற்குள் கூடி ஆய்ந்து—அதை மூன்று மாதத்திற்குள் ஒரு பொதுக் குழு கூட்டி உங்கள்முன் வைக்கிறேன். ஆய்வுக் குழுவின் முடிவை கிளைக் கழகங்களுக்கும் முன்னதாகவே அனுப்பிவைக்கும்படி செய்கிறேன். என் சுபாவம் யாவரையும் கட்டியணைத்துப் போவது என்றாகிவிட்டது. இதை பலர் குறை கூறுகிறார்கள். ஜனநாயகத்தில் இவை முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை நான் ஜனநாயகத்தைக் கண்டு அஞ்சுபவனல்ல. அனுப்பப்பட்

[3-ம் பக்கம் பார்க்க]

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல். இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5-00. வி. பி செலவு ரூ. 1.20

வாணி தமிழ் இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றித் தானே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ 2-25 ந.பை.

வி. பி. செலவு 75 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

இதில் சோப்; இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகுவர்த்தி ஸ்னோ. பேஸ் பௌடர், சாம்பிராணி, பேனாமை போன்ற 200 கைத்தொழில் கொண்டது. விலை ரூ.3-00 வி. பி: செலவு ரூ; 1-00,

VANI BOOK DEPOT

3 மலைய பெருமாள் தெரு,

Post Box No 239, Madras-1.

ஏது உண்மை?

நீங்களே சொல்லுங்கள்!

கழகத் தலைவர்களை ஆசிரியர்களாகக்கொண்டு வெளிவரும் நம் நாடு, திராவிட நாடு, திராவிடன், மன்றம், முரசொலி, தனியரசு, தென்னகம், தென்றல், இனமுழக்கம் ஆகிய ஏடுகள்' அந்தந்த ஏடுகளின் தொடக்ககாலம் முதல்—இன்றுவரை கழக வளர்ச்சிக்காகவும், கழகத்தைக் குலைப்பதற்காகவும், வெளிவந்த செய்திகளைத் தவறாமல் தொகுத்து, எந்த ஏடு கழகத்தின் சீர்குலைவுக்கு அதிகப்படியான 'தொண்டு' செய்திருக்கிறது என்பதனை தக்க ஆதாரங்களுடன்—நடுநிலை பிறழாது இரண்டு படிகள் எழுதி, ஒன்றைப் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கட்கும்—பிறிதொன்றை 'ஆசிரியர், இனமுழக்கம்' என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கும்படி, இனமுழக்கம் படிக்கும் ஒரு லட்சம் வாசகர்களையும் மிக்க அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சீரிய பணியினை நீங்கள் செய்தால், நம் கழகத்திற்குப் பெரிய தொண்டினைச் செய்த நற்பெயருக்கு ஆளாவீர்கள்!

கண்ணப்பா வள்ளியப்பன்
பதிப்பாசிரியர்.

குறிப்பு:- சிறந்த கட்டுரைகளுக்குத் தகுந்த சன்மானங்கள் தரப்படுவதுடன், கட்டுரைகளும் வரிசைப்படி இனமுழக்கத்தில் பிரசுரிக்கப்படும்.

முடிவு தேதி: 12-2-'61

பேரனுக்கு,

சென்னை,
27—1—61

ஆனால் அந்த கடுமையான தண்டனையிலிருந்து நான் அடிக்கடி தப்பித்துக் கொள்வதுண்டு. ஏனெனில் மற்ற பிள்ளைகளெல்லாம் தனியாகவே பள்ளிக்கு வந்துவிடுவார்கள். ஆனால் என்னை என் கொள்ளுப்பாட்டி, (என் தந்தையின் பாட்டி) ஒவ்வொரு நாளும் அழைத்துக்கொண்டு வந்து விட்டு விட்டு, பையனை அடிக்காமல் சொல்லிக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போவாள். அந்த வேண்டு கோளுக்கிணங்கவே எனக்குத் தண்டனை சற்றுக் குறைவாகவே இருந்தது என்று சொல்லலாம். அடிப்பதைவிட மிகப் பெரிய தண்டனைகள் இரண்டு இருந்தன. ஒன்று உத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துக்கொண்டு நீண்ட நேரம் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும். மற்றொன்று அப்படி தொங்கிக் கொண்டிருக்கும் போது கீழே பனை ஓலையைச் சொளுத்திவிட்டு, நம்மை ஊஞ்சலையாட்டுவதைப் போல் ஆட்டிவிட்டு விடுவார்கள், இதையும் ஏன் என்று கேட்பாரில்லை. இதைத்தான் கோதண்டம் மாட்டுவது என்பார்கள். அப்போதிருந்த பிள்ளைகளுக்கு வேறு வேடிக்கை, விளையாட்டு சினிமா, கண்காட்சி ஒன்றுமே இல்லை. கோயில்களில் அடிக்கடி நடக்கும் திருவிழாக்கள் தவிர அவர்களுடைய கவனத்தை வேறுபக்கம் இழுக்கும் எந்தகாட்சிகளுமில்லை, சில நேரங்களில் தெருக் கூத்தாடுவார்கள். அதை இரவெல்லாம் கண் விழித்துக்கொண்டு கூத்தைப்பார்க்கும் சக்தியுமில்லை. இப்படிக் கண்டிப்பான முறையில் பயிற்சியளித்த ஆசிரியர்களுக்கு, திங்களுக்கு நாலணா. அறுவடை காலங்களில் தானியங்கள், தேவைப்படும்போது காய்கறிகள், பொங்கல் பரிசு என்ற பெயரால் வேஷ்டிகள். இவைதான் ஆசிரியர்களின் வருவாய். இதுவல்லாமல் நாங்கள் எல்லாம் சனிக்கிழமை மாலையில் ஒவ்வொரு மாணக்கன் வீட்டிற்கும் சென்று விராட்டிகளையும், மண் எண்ணெயும் வாங்கிக்கொண்டுவரவேண்டும், சனி எண்ணெய்த் தப்பாமல் வாங்கவேண்டும் ; தவறாமல் வாத்தியார் வீட்டில் சேர்க்க வேண்டும், என்ற பாட்டைப் பாடிக்கொண்டுதான் செல்ல வேண்டும். ஆசிரியரின் வேட்டிகளை நாங்கள் தான் முறை போட்டுக்கொண்டு வெளுத்துக்கொடுக்க வேண்டும்.

இப்படியே அந்தப்பள்ளியில் மூன்றாண்டுகளைக் கழித்தேன். தெலுங்கிலிருந்த எல்லா கடினமான பாடங்களை எல்லாம் மனப்பாடம் செய்து விட்டேன். தேர்வு முறைகளுமில்லை. ஆசிரியராகப் பார்த்து இந்த நூலுக்குப்பின் அதைப்படி, அந்தநூலுக்குப் பின இதைப் படி என்று கட்டளையிடும்போதுதான் நாம தேர்வு அடைந்துவிட்டோம் என்பதன் அறிகுறி.

இரத்தம் கசிந்த நாள்......? அடுத்த இதழில்

உன் தாத்தா,

ஜெயராஜ்.

அனுதாபம்

நாவலரை ஈன்றெடுத்த அம்மையார் மீனாட்சிசுந்தரம், அவர்கள் இயற்கை எய்தியது கண்டு மிகவும் வருந்துகிறோம். அம்மையாரைப் இழந்து நிற்கும் நாவலர் திரு. இரா. செழியன், திரு. இராமதாசு, டாக்டர் விசாலாட்சி அம்மையார் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் இனமுழக்கத்தின் சார்பாக நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

தொழிற் பயிற்சி நுணுக்கப் புத்தகங்கள்

மின்சார வானொலித் துறை வழிகாட்டி : மின்சார வசதியில்லாமலே வீட்டிலிருந்து கொண்டு, ரூ. 15/- மட்டும்செலவு செய்து வானொலிப் பெட்டி உருவாக்குவது எப்படி என்று விளக்கம் தரும் புத்தகம். வானொலிப்பெட்டி பழுதுபார்ப்பது வீட்டுமின்சார இணைப்பு முதலியசெய்திகள் அத்தனையும்170படவிளக்கங்களுடன்போதப்பது. ஆர்வப் பயிற்சி மேற் கொள்பவர்களுக்கு வானொலி, மின்சார பணி உயர்ந்த ஒருசிறு தனிப்பட்டறை வைத்து நடத்துவதற்கு வேண்டிய பாடங்களை ... புத்தகம் விலை ரூ. 6/-

குடிசைத் தொழில் வழிகாட்டி : விளக்கப் படங்கள் கொண்ட இந்த புத்தக உதவிகொண்டே மை செய்தல், சர்க்கரை, மின்சாரக் கருவி கலங்கள், கன விளையாட்டுச் சாமான்கள், விளையாட்டுப் பொம்மைக் கருவிகள் பிளாஸ்டிக் சாமான் முதலிய 50க்குக் குறையாத சிறு தொழில்களை நீங்கள் வீட்டிலேயே நடத்தலாம். விலை ரூ. 8-50. படம் ஓவியம் ரூ. 4-50. தையல் கத்தரிப்புக் கலை ரூ. 4-00. நிழற்படக் கலை ரூ. 3-00 சோப் செய்தல் ரூ. 4-00 மோட்டார் மெக்கானிக் ஆசான் ரூ. 4-50. அஞ்சல் ஆணை ஒவ்வொன்றுக்கும் வி. பி. கட்டணம் கூடுதலாகத் தனி ரூ. 1-00.

கடிதப் போக்குவரவு ஆங்கிலத்தில் மட்டுமே,

SULEKHA BOOK DEPOT(6) Phapala Aligarh

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் : கண்ணப்பாவள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 158, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சி
பொங்கல்
மலர் 1961
தி.மு.கழகப்
பேரகராதி

மறவர் குலத்து மணிப்புறா

கே. ஜி. இராதாமணாளன்

4

ஆலத்திப் பாட்டு

அழகிய வேலைப்பாடுகள் உடையதும், சுற்றிலும் விதவிதமாக மலர்ச் செடிகளும் கொடிகளும் நிறைந்ததும், மதில்களால் சூழப்பட்டதுமான பெரிய கட்டிடம். அரசனின் மாளிகைக்கு இணையான கெம்பிரத்தோடும் கவர்ச்சியோடும் விளங்கும் அக்கட்டிடத்தை, வெண்ணிலா, தன் ஒளிக்கரங்களால் 'பாலாபிஷேகம்' செய்து கொண்டிருந்தாள்.

நரேந்திரனும் செல்லையனும் வந்த குதிரைகள், அக்கட்டிடத்தின் வெளிப்புறவாயில் முன்பு வந்து நின்றதும் கதவுகள் திறந்தன.

கதவுகளைத் திறந்த வாயிற் காப்போன் அவர்களைக் கண்டதும், "ஆ!" என்று அலறியபடி அப்படியே தரையில் சாய்ந்து விட்டான்.

குதிரையை விட்டுக் குதித்த நரேந்திரன், வாயிற் காப்போனைத் தூக்கி உட்கார வைத்தான். அவன் மெள்ளக் கண்களைத் திறந்து பார்த்தான். அவன் முகம் பயங்கரமாக மாறியது. கைகால்கள் நடு நடுங்கின.

"அய்யோ செத்தேன்! பேய்! பேய்!" என்று நாக் குழற நரேந்திரனின் பிடியை விலக்கிக் கொண்டு அங்கிருந்து அலறியடித்துக் கொண்டு ஓடினான்.

"ஏன் இவன் இப்படி ஓடுகிறான்? ஒன்றுமே புரியவில்லையே!" என்று கேட்பதைப் போல நரேந்திரனும் செல்லையனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மலர்கள் பூத்துக் குலுங்கும் செடிகள் நிறைந்த பாதையின் வழியே அவர்கள் நடந்தார்கள். பல கணிகளின் பட்டுத் திரைகளை விலக்கிக் கொண்டு பல முகங்கள் தங்களைப் பார்ப்பதையும், கதவு தாளிடப் பட்டிருப்பதையும் கண்டனர். கட்டிடத்தை அவர்கள் நெருங்கியதும், பலகணியின் கதவுகள் 'படார் படார்' என்று மூடப்பட்டன.

பளிங்குக் கல்லால் ஆன படிகளில் குழம்பிய மனதோடு நரேந்திரன் அடிமேல் அடி வைத்துச் சென்று, கதவைத் தட்டினான்.

குசுகுசுவென உள்ளே பேசிக் கொள்ளும் சப்தம் கேட்டதே அன்றி, கதவை யாரும் திறக்கவில்லை.

"கதவைத் திறவுங்கள்!" என்று அவன் தன் முன் கையாலே கதவை அழுத்தித் தட்டினான்.

குசுகுசுப்புச் சப்தம் நின்று விட்டது. அமைதி—மயான அமைதி—அங்கே நிலவியயது.

"தாரா! மாயா! என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? கதவைத் திறவுங்கள்!" என்று நரேந்திரன் உரத்தக் குரலில் கோபத்தைக் குழைத்தான்.

உள்ளே ஆட்கள் நடக்கும் சப்தம் கேட்டது. அப்போதும் கதவு திறக்கப்படவில்லை.

"சங்கிலித் தாத்தா! சங்கிலித் தாத்தா! நான் தான் நரேந்திரன் வந்திருக்கிறேன்! வந்து வாயிலைத் திறவுங்கள்!

"யாரது! நரேந்திரனா?" என்று உள்ளே இருந்து ஒரு குரல் கேட்டது.

"ஆமாம் தாத்தா, ஆமாம்! நான் தான் வந்திருக்கிறேன்!"

கதவு திறக்கவில்லை. உள்ளே மீண்டும் இரகசியமாகப் பேசிக் கொள்ளும் குரல்கள் எழுந்தன.

"வேண்டாம் தாத்தா! திறக்காதீர்கள்! எங்களுக்குப் பயமாக இருக்கிறது! இதை நம்பாதீர்கள்! இரவு நடுநிசியாகப் பார்த்து வந்திருக்கிறது! பேய் பேய்!" என்று யாரோ ஒரு பெண்ணின் அழும் குரல் கேட்டது,

"பேயாய் இருந்தாலும் சரி-பிசாசியாக இருந்தாலும் சரி. கேட்பது என் நரேந்திரன் குரல்! சங்கிலித் தாத்தா என்று அவனது இனிமையான குரல் இதோ கேட்கிறதே! அதைக் கேட்ட பிறகும் எப்படிக் கதவைத் திறக்காமல் இருப்பது? பயப்படுபவர்கள் அறைகளில் போய்ப் பதுங்கிக் கொள்ளுங்கள்! என்னைத் தடுக்காதீர்கள்! நரேந்திரனாக இருக்கட்டும் அல்லது அவனது பேயாக இருக்கட்டும், இரண்டும் எனக்கு ஒன்றேதான்! அந்த இரண்டுமே என் அன்புக்குரியவை—ஆசைக் கண்மணிகள்! என்னைத் தடுக்காதீர்கள்! நான் கதவைத் திறக்கத்தான் போகிறேன்!" என்று சங்கிலித் தாத்தா ஆவேசமாகப் பேசியது, நரேந்திரனுக்கு நன்றாகக் கேட்டது.

கதவு திறந்தது. கையில் ஒரு விளக்கோடு சங்கிலித் தாத்தா வாயிற் படியில் வந்து நின்று, "யாரது?" என்று கேட்டார்.

விளக்கின் வெளிச்சத்தில் தாத்தாவின் நீண்ட தாடி முகத்தைக் கண்டதும், நரேந்திரனுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

"நான் தான் தாத்தா!" என்று அவன் அவரது கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

பெரியவர் விளக்கைக் கீழே வைத்துவிட்டு நரேந்திரனை அப்படியே சேர்த்துக் கட்டிக் கொண்டார்.

"நரேந்திரா! என் கண்ணே! நீ சாகவில்லையா! உயிரோடு தானே இருக்கிறாய்! கண்ணால் இதோ பார்க்கிறேனே—இது உண்மைதானே! நரேந்திரன் தானே நீ? அவனது பேய் இல்லையே! பேயாக இருந்தாலும் சொல், நானும் பேயாக மாறிவிடுகிறேன்! நாம் இருவருமே சேர்ந்து சுற்றுவோம்!" என்று ஏதோ காய்ச்சல் வேகத்தில் பிதற்றுபவரைப் போலக் கிழவர் பேசினார்.

சங்கிலித் தாத்தாவின் கண்ணீரைத் துடைத்து விட்டு, "நான் செத்ததாக யார் சொன்னது தாத்தா?!" என்று நரேந்திரன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

கீழே வைத்த விளக்கை எடுத்து கிழவர் தம் கண்ணிமைகளைச் சிமிட்டி விட்டுக் கொண்டு, அவன் முகத்தை மீண்டும் உற்று உற்றுப் பார்த்தார்.

"தாத்தா! இந்தப் புரளியைக் கிளப்பிவிட்டது யார்?"

"நரேந்திரா! சத்தியமாகச் சொல்—நீ சாகவில்லையே?"

"யாரோ சொன்னதை நம்பி, இப்படியெல்லாம் பேச உங்களுக்கென்ன பைத்தியமா!"

"எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருப்பதுதான் ஆச்சரியம், நரேந்திரா! நீ போர்க்களத்தில் செத்து விட்டதாகவும், சக்திவர்மனின் வீரர்கள் உன் பிணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டதாகவும் ஊரெல்லாம் பேசிக் கொள்கிறார்களே! அது உண்மை அல்லவே?" என்று தேம்பிக் கொண்டே பெரியவர் கேட்டார்.

செல்லையன் கலகல வென்று சிரித்துக் கொண்டே அவர் அருகில் வந்து, "இப்பொழுது எதிரிலிருப்பது நரேந்திரனா அல்லது அவரது பேயா என்பதுதானே உங்களுக்குத் தெரிய வேண்டும்?" என்று கேட்டான்.

"யார்? செல்லையனா? நீ எப்பொழுது வந்தாய்?"

"நானும் நரேந்திரனும் ஒன்றாகத்தான் வந்தோம்!,'

"ஆமாம்! உன்னைக்கூடத் தான் செத்துவிட்டதாகச் சொன்னார்கள்!"

"நரேந்திரன் செத்தால், நானும் சாக வேண்டியதுதானே! அதெப்படி நான்

(7-ம் பக்கம் பார்க்க)

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5-00. வி. பி. செலவு ரூ. 1.20

வாணி தமிழ் இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றித் தானே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-25 ந.பை.

வி. பி. செலவு 75 ந.பை:

ஐசுவரியம். (குடிசைக் கைத்தொழில்)

இதில் சோப்; இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகுவர்த்தி ஸ்னோ, பேஸ் பௌடர், சாம்பிராணி, பெனுயில் போன்ற 200 கைத்தொழில் கொண்டது. விலை ரூ.3-00 வி: பி: செலவு ரூ: 1-00,

VANI BOOK DEPOT
3 மலையபெருமாள் தெரு,
Post Box No. 239 Madras-1.

தலைமை நிலைய அறிக்கை (அ) 13/60

தி. மு. கழகப் பொதுக்குழுக்கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம், **1961 சனவரித் திங்கள் 21, 22 (சனி, ஞாயிறு)** நாட்களில் வ. ஆ. மாவட்டம் வேலூரில் நடைபெறும்.

'அறிவகம்', சென்னை-13,
20—12—1960

கே. ஏ. மதியழகன்,
தலைமை நிலையச் செயலாளர்

இனமுழக்கம்
ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

மலர் 2] ★ 6—1—61 ★ [இதழ் 19

‘உண்ணாதே உயிரைவிடு’ எனக்கென்ன?

= நேரு

உண்ணாவிரதம் இருக்கிறார் ஒரு சீக்கியத் தலைவர். சாந்தபதேசிங் எனும் பெயருடையார், காலில் எரிச்சல் கண்டுவிட்டது. காதுகள் கேட்க வில்லை. நிலைமை மோசமாய் நாளுக்கு நாள் கவலைக்கிடமாய் இருக்கிறது. அவருக்குப் பின்னாலே அதே உண்ணா நோன்பை மேற்கொண்டு இறக்க பத்து பேர் உறுதி எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

பஞ்சாபி சுபாவின் தலைவர் மாஸ்டர் தாராசிங் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தோழர் ஜெயப்பிரகாச நாராயணன் மாஸ்டர் தாராசிங்கை நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டுமென்றக் கருத்தையறிவித்திருக்கிறார். நேருவுக்கு பம்பாயில் **1961** புத்தாண்டுப் பரிசாக அகாலிதளத்தினர் அமைதியான முறையிலே கருப்புக் கொடி காட்டி யிருக்கின்றனர். அவர் இரண்டு மூன்று நாட்களுக்கு முன் டில்லி ராம் லீலா திடலில் பேசும் போது, பஞ்சாபி சுபாவின் நோக்கமென்ன, அதன் விளக்கமே எனக்குப் புரியவில்லை. அது ஏன் அமைக்கப்பட்டது, அதுவும் எனக்குத் தெரியாது. இப்படிப் பேசுகின்ற நேரு ஏன் மாஸ்டர் தாராசிங்கை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் விசாரணையில்லாமல் சிறையிலடைத்திருக்கின்றார்? அவரைக் கைது செய்த பின் நிலைமை தணிந்ததா-முற்றியதா?

யார் இவர்கள் ?

மாஸ்டர் தாராசிங் இன்று இராணுவத்தில் வேலைபார்த்துக் கொண்டிருக்கும் சுமார் 25 லட்சம் போர் வீரர்களின் சமூகத்தலைவர். அவர்களது கோரிக்கை நியாயமானதா-அநியாயமானதா என்பதல்ல கேள்வி -சர்க்காருக்கெதிராக எவ்வளவு உரிமைக்குரல் கிளம்பினும் அதை மொழிப்பித்து, மாநிலப்பித்து வகுப்புக்கலவரம் என்று சொல்லுவதே இன்றைய சர்க்காரின் சங்கநாதமாகப் போயிற்று. முதலமைச்சர் நேரு உலகசமாதானத் தூதுவர். பஞ்சசீலக் கொள்கையில் அசையாத நம்பிக்கையுடையவர். ஐநாவினர் மெச்சத்தகுந்த அளவுக்கு அருமையான பேச்சாளி என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிற நேரு, தன் நாட்டில் பிறந்தோரை இருட்சிறையில் அடைத்து வைத்துவிட்டு அல்ஜீரியா பிரச்னையையும், காங்கோவில் லுமும்பா பிரச்னையையும் பேசி என்ன பயன்?

காந்தியாருக்குப்பின்

காந்தியாருக்குப்பின், யார், அவர்கள் எவ்வளவு பெரிய தலைவர்களாயிருந்தாலும், மக்கள் ஆதரவை எவ்வளவுதான் அவர்கள் பெற்றிருந்தாலும், அன்பர்கள் விருப்பம் எவ்வளவு நியாய மானதாக இருந்தாலும், அந்த உரிமைகளைப் பெற வேறு வழியில்லாமல் அவர்கள் உண்ணாவிரதமிருந்தால் அதை கேலிக் கூத்தாக்க சர்க்கார் என்றுமே தயங்கியதில்லை. உண்ணா நோன்பில் நமக்கு நம்பிக்கை இல்லையானாலும் ஆழ்ந்த அனுதாபம் கட்டாயம் உண்டு. ஒரு உயிர்! அதுவும் பலரால் மதிக்கத்தகுந்த ஒரு உயிர் அதுவும் மனித உயிர் தான் கொண்ட கொள்கைக்காக சிறுகச் சிறுக உயிர் விடுகிறது என்றெண்ணும்போது கல் நெஞ்சமும் கரையும். ஆனால் நேருவின் நெஞ்சம் ஏனோ கரையவில்லை.

ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் இப்படித்தான், இட்லர் போல், முசோலினி போல், இரண்டாம் சார்லஸ் மன்னன்போல், லூயி மன்னர்கள் போல், பர்கண்டி மாகாணத்துக் கொடுமையாளர்கள் போலிருப்பார்கள் என்பதற்கு நேருவே உதாரணமாக விளங்குகின்றார் என்றால் மிகையாகாது.

பஞ்சாபி சுபாவில் இருவித கருத்துக்களைக் கொண்ட இரு சாரார்கள் இருக்கின்றார்கள். என்றும் பேசுகிறார். முதலில் பஞ்சாபி சுபாவின் கருத்துக்களே சரியாக விளங்கவில்லை என்றார். இப்போது இருவேறு கருத்துக்கள் நிலவுகிறதென்கிறார். எவ்வளவு முன்னுக்குப்பின் முரணாயிருக்கிறது வாதம் என்பதைக் கவனியுங்கள்;

‘உண்ணா நோன்பைக் கைவிடும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்’,என்று இடக்குபேசுகின்றார். வாயால் கேட்டு விட்டால் மட்டும் போதுமா?

அறிவிப்பு

★

பொங்கல் மலரை முன்னிட்டு அடுத்த இதழ் 13...1...61-ந் தேதி இதழ் வெளிவராது என்பதை வாசகத் தோழர்களுக்கும், ஏஜண்டு நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—நிர்வாகி

செங்குருதி பாயட்டும்

★

தமிழர்க்கு தமிழ்மீது கொள்ளை ஆசை !
தாயிக்கு மகன்மீது உள்ள ஆசை !
தமிழர்க்கும் தமிழர்மேல் அதே போல !
தமிழ்மாள வந்திடுமோ இந்தி ஆள !
உமிநீங்கின் முளைஎழுமோ, உயிரும் போனால்
உடலமைப்பு இருந்தென்ன போயு மென்ன !
இழிவான வடநாட்டு மொழிக்கு இங்கே
இடம்தந்தோன் மடையனுக்கும் மடைய னவான்

செங்குருதி பாயட்டும்! இந்திப் பேயை
சவக்காட்டுக் கனுப்பிடுவோம், இங்கு வந்தால்
தங்கநிகர் மொழியிருக்க தகிடு தத்த
தறுக்கர்களின் மொழிக்குஇங்கு என்ன வேலை ?
பொங்கி எழும் தாயகமே ! தமிழே என்தாய் !
பொறுப்பற்ற அயல்மொழிக்கு இடமே இல்லை
இங்குள்ளோர் இந்திக்கு இறுக்கை தந்தால்,
இழிபிறப்போ னென்றுசொல்வேன் தயங்க மாட்டேன்.

— **தென்னூர். மு. தருமராசன்**

பொட்டி சீராமுலு

உண்ணா நோன்பிருப்பவர்களை சாகவிட்டு விட்டால் என்ன நடக்கும் என்ற அனுபவத்தை பெறாதவரல்ல நேரு. ஆந்திர மாநிலம் தனியாக வேண்டுமென்று பொட்டி சீராமுலு சென்னையில் உண்ணா நோன்பிருந்தபோதும்தனி மனிதன் உண்ணா விரதத்திற்கு நான் பணியவா-நான் யார்? இந்த உபகண்டத்தின் முதல்வராயிற்றே! இன்று நான் இந்த தனிமனிதனின் அடத்திற்குப்பணிந்து விட்டால் நாளை ஒவ்வொருவனும் இதே ஆயுதத்தைக் கையிலெடுத்தால், அதற்கெல்லாம் நான் பணிந்து போனால் நிலைமை என்னாகும் என்றெல்லாம் பேசியவர்தான் நேரு, ஆனால் முடிவென்ன. விஜயவாடாவில் தீ-கொள்ளை. உயர்தர அதிகாரிகள் பிடித்து உள்ளே தள்ளப்பட்டு பூட்டப்பட்டார்கள். வாகன்களில் ஏற்பட்டிருந்த சரக்குகள் சூறையாடப்பட்டன. எங்கும் அமளி, ஊரடங்குச்சட்டம். கண்ணீர்ப்புகை இவை எல்லாம் நடந்தேறியபிறகு தனி ஆந்திர மாநிலத்தின் கொடியேற்று விழாவுக்கு நானே வருகிறேன் என்றார். நேரு. இந்த ரத்தக்கரை படிந்த சோக சம்பவம் இந்திய சுதந்திர சாசனத்தில் எழுதப்பட்டு விட்டது. அதற்குப்பின் உலக மக்களின் கவனத்தை ஒரு சேர இழுக்ககூடிய உண்ணா நோன்பு சாந்தப்பதேசிங் அவர்களுடையதுதான். அகாலிதளத்தினர் சீற்றம் கொள்ளா முன்னம், நாடு அமைதியிழக்கா முன்னம் மாஸ்டர் தாராசிங்கை விடுவிடுத்து சமரசம் பேசி ஆவன செய்வதே அறிவுடமை என்று சொல்லிக் கொள்கிறோம்.

தங்களன்புள்ள,

சி. பி. சிற்றரசு

பொறுப்பற்ற தலைமை, பொருட்படுத்தாத கட்சி

வே. சௌந்தரராசன்

இந்தியாவின் விடுதலைக்காக அன்று பிரிட்டிசு ஏகாதிபத்தியத்தைப் பிடரியைப் பிடித்து ஆட்டியதாகப் பெருமை கூறும் காங்கிரசார் இன்று விடுதலை நாட்டில் நடந்து கொள்ளும் முறைகளைப் பார்த்தால் நகைப்பு ஒருபுறமும் எரிச்சல் மற்றொரு புறமும் எழுகின்றன. எதையும் பொருட்படுத்தாத காங்கிரசுக் கட்சி அதையும் பொருட்படுத்தாத தலைமை அமைச்சர் என்று விசித்திரமாக இங்கு அரசியல் அமைந்திருக்கிறது. அரசியலை வானளவில் ஏற்றிப் புகழ்ந்து உரிமைக் குரல் எழுப்பிய உத்தமர்கள் இன்று பிறரது பிரச்னைகளைக் கேட்கவும் மறுக்கிறார்கள். முடிந்த அளவு முறையீடுகளைப் புறக்கணிப்பதும் முற்றிக்கொண்டு நிலை விபரீதமானால் வளைந்து கொள்வதும் ஒரு சாதுரியமான கொள்கையாக இன்று கையாளப்பட்டு வருகிறது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தையே மிகச் சாமான்யமாகக் கருதும் அளவிற்கு தனித் தலைவர் வணக்க முறை இன்று காங்கிரசில் மிஞ்சி விட்டது, எதையும் தலைமை அமைச்சர் நேருவே செய்யலாம், தவறாக இருந்தாலும் அதற்கு அவரே ஒரு சமாதான விளக்கம் சொல்வார். இத்துடன் நிறுத்திக் கொள்ளவேண்டும். இப்படி இழுபடும் பிற்போக்கு ஜனநாயகம் (guided democracy) ஆளும் கட்சியில் அதிகம் பாராட்டப்படுகின்றது. இங்ஙனம் அரசியல் மக்களின் அறிவுத் துறையை விட்டுப் பக்திக்கு மாறினால் வரவரத் தன்மான உணர்ச்சியே குறைந்து தன்னம்பிக்கையும் தளரும் ஒருவித மயக்க நிலையும் வளரும். இந்தியாவின் விடுதலைக்கு வித்திட்டவர்கள் இன்று அதன் சீர்குலைவிற்கும் வித்திடும் தன்மைகளைக் கண்டால் நெஞ்சு பொருமுகிறது. இங்ஙனம் எடுத்ததையெல்லாம் நேரு, நேரு, என்று செல்லும் முறை அதிகாரக் குவியலை ஏற்படுத்தி நாட்டிற்கு அது கேடு பயக்கும் என்பது ஒரு தலை. அன்றைய ஸ்டாலினும் இன்றைய சியாங்கே ஷேக்கும் இதற்கு உதாரணமாவார்கள் அல்லவா! குறிப்பாகப் பண்டித நேரு, சில நாட்களுக்கு முன்னர்ப் பாரதத்திருநாட்டின் தனிப்பெருந் தலைவர் என்ற முறையில் பாகிஸ்தான் தலைநகரான கராச்சிக்குச் சென்றிருந்தார். அங்கு நீண்ட நாட்களாகக் கைவிடப்பட்டிருக்கும் சிந்துநதித் தண்ணீர் விநியோகம் குறித்துப் பேசித் தீர்வு காண விழைந்தார். பாகிஸ்தான் தலைவர் அயூப்கானும் இதற்கு உடன்பட்டு வந்தார்.

முடிவாக இந்தியா சிந்துநதித் தண்ணீரை கால் பாகம் பயன்படுத்திக் கொள்வதென்றும், அதற்காக 83 கோடி ரூபாய் நிதி உதவியாகப் பல தவணைகளில் அளிப்பதென்றும் முடிவாகியது. பண்டித நேருவும் தமது வாக்கினைக் காப்பாற்ற வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுப், பின் பாராளுமன்றக் காங்கிரசுக் கட்சியும் இம்முடிவை ஏற்றுக் கொண்டது. ஆனால் நடுநிலைமையோடு பிரச்னைகளை அணுகும் அரசியல்வாதிகளுக்குப் பண்டிதரின் முடிவு ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது. முதலாவது தமது யோசனையை பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லி அதற்குப்பின் பாராளுமன்றமும் சொல்லக் கூடிய திருத்தங்களை ஏற்று அத்தகைய திருத்தத்தோடு கராச்சிக்குச் சென்று இவர் உடன்பாடு கண்டிருந்தால் நன்று. ஆனால் அங்கு நடந்தது என்ன? பண்டிதரே ஒரு முடிவைத் தாமாகவே செய்துவிட்டு பாராளுமன்றத்தை தம் முடிவிற்கு அப்படியே ஒத்து போகுமாறு வற்புறுத்துகிறார். இந்நிலை எதைக் காட்டுகிறது? இது உருவாவதற்குக் காரணம் என்ன? பாகிஸ்தானின் தளபதி அயூப் கான் அச்சுறுத்திக் கொண்டு வருவதும் அவர் அமெரிக்காவின் பிடிக்குச் செல்லப் பிள்ளையாக

மாறி வருவதும்தான். இந்தியாவின் எல்லைகளிலே தொல்லை. காஷ்மீரில் களங்கம், காங்கிரசிலே பிளவு, இங்ஙனம் பலப்பல. பல இடையூறுகளைப் பாகிஸ்தான் நினைத்தால் இந்தியாவிற்குக் கொடுத்து இதன் அமைதியைக் குலைக்க முடியும். உள்நாட்டுச் சிக்கல் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் போர்ப் பயமுறுத்தலுக்குச் சவால் விடும் தன்மையில் இந்தியா இல்லை. மேலும் இத்தகைய தொரு இக்கட்டான நிலையைப் பலரும் பலவாருகப் பயன்படுத்த முனைந்து வரலாற்றில் காணப்படும் ரஜபுத்திர வீரமும் அவரது 'ஒற்றுமையும்' போலாகி

காஷ்மீரில் காணப்படுவது மூன்று பிரச்னைகள். ஒன்று பாகிஸ்தானியரின் அச்சுறுத்தல், இரண்டு அது மகமதியர் நிறைந்த பகுதி. ஆதலின் மத மாச்சரியம் ஏற்பட்டு விடக்கூடும் என்பது, இறுதியாகத் தனி நாடு கோரிக்கை விரும்பும் மக்கள் பெருகிக் கொண்டு வருவதும் அவர்கள் எல்லாம் ஷேக் அப்துல்லாவை ஆதரித்துவருவது மாகும், இங்ஙனம் காஷ்மீரிலும் கசப்பான பல நிலைகள் வளரப் பண்டிதரின் பிடிவாதப் போக்கும், நேரிய விளக்கங்களைப் புரிய மறுத்ததுமே காரணங்களாக அமைகின்றன. இதிலும் பாகிஸ்தானின் போக்குக் கடுமையாக இருந்தால் நிலைமை வேறொரு கோணத்தை அடையலாம், அதனால் அவர்களுக்கே அதிக நலனும் விளையும் என்றும் எதிர்பார்க்கலாம். அச்சுறுத்தலுக்குப் பணிகின்ற போக்குப் பண்டிதரிடம் இருக்கும் வரை இப்படிப் பல சூழ்நிலைகள் தொடர்ந்து உருவாகிக் கொண்டே வரும், என்பதில் ஐயமில்லை. உள் நாட்டில் எதிர்க்கட்சியினருடன் பேசும் வீரவுணர்ச்சி வெளி தெரிகிறது. இதை அவர் சிந்தித்துச் செயலாற்றினால் பல தீய விளைவுகள் அமைதியாகவே தீர்க்கப்பட்டிருக்கலாம் என்றே கருத வேண்டியதிருக்கிறது.

அண்மையில் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பெருபாரி என்னும் பகுதியைப் பாகிஸ்தானுக்குக் கொடுத்து விடச் சம்மதித்து விட்டார் நேரு. ஆனால் மேற்கு வங்கச் சட்ட சபையில் இப்படி அம்மாநிலத்தின் ஒரு பகுதியைப் பிரித்துப் பாகிஸ்தானுக்குக் கொடுப்பது பற்றி ஓர் தீர்மானம் அங்கு நிறைவேற்றிக் கொள்ளவில்லை. பழைய முதலமைச்சர் பிரோஷ் கான் நூனோடு செய்து தொடை வாக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றுகிறாராம்! பிரிக்கும் இடம் எது? அம்மக்கள் விரும்புகிறார்களா? அம்மாநில அரசு ஒத்துக்கொண்டதா? பாராளுமன்றத்தின் முன் கூட்டி விவாதிக்கப்பட்டதா? என்றெல்லாம் கேட்டால் சரியான பதில் இல்லை. ஏன்? நேரு விரும்பினார். கொடுப்பதாகச் சொல்லி விட்டார். இனி அவர் சொல்லைக் காப்பாற்ற வேண்டிய மரியாதைப் பிரச்னைதான் வற்புறுத்தப்படுகிறதே தவிர இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி, முறை கேடான செயல் திருத்தப்படவில்லை. ஒருவரின் ஆவல்களை நிறைவேற்ற இந்நாட்டில் 38 கோடிப் பேரா தேவை? தவறே செய்யாத அல்லது செய்யக்கூடாத மனிதரா நேரு? எந்தப் பகுத்தறிவாளரும் தவறைத் திருத்திக் கொள்ளுவதில் தானே பெருமையே இருக்கிறது? இன்று இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பெருபாரி குறித்துப் பண்டிதர் நடந்து கொண்ட முறைக்கு வருந்துகிறார்கள். கண்டிக்கிறார்கள். இப்பொழுது நினைக்கிறார் ஏன் இப்படி அவசரப்பட்டோம் என்று? இதே போல் பல சிக்கல்களில் காரியம் முடிந்த பிறகு சிந்திக்கும் (Second Thought) தன்மை பண்டிதரிடம் இருந்து கொண்டேயிருக்கிறது. இந்நிலை மாறும் நாள் எந்நாளோ?

சிந்திய பாலுக்கு அழும் சிறுபிள்ளைத்தனம்

விடுமோ என்ற அச்சம் வேறு முன்யோசனையோடும், துணிவோடும், செய்யப்படவேண்டியதைத் துவண்டு போய்ச் செய்திருக்கிறார். அயூப்கானின் குமுறலை இவர் அடிக்கடி கேட்டு அச்சம் மேலிட்டவராய் இப்படியொரு ஏற்பாட்டிற்கு விரைந்தார். நேரு பிரிவினைக் காலத்திலேயே அன்றிருந்த லியாகத் அலிகான், மகமது அலி போன்றவர்களைக் கேட்டு அமைதியாக, இந்தியாவிற்கு அனுகூலமாகச் செய்திருக்க வேண்டிய அலுவலைப் புறக்கணித்தே இதுவரை வந்து இன்று எதிரியின் எக்காலத்திற்கு இடங்கொடுக்க எளிதாக முன்வந்தது விந்தையே. இதைப் பாராளுமன்றத்திலும் பலர் கண்டித்திருப்பதைக் காணலாம். இதே போல், இந்தியா பிரிக்கப்பட்ட நாளில் 55 கோடி ரூபாய் பாகிஸ்தானுக்குஇந்திய நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்துக் காந்தியார் உண்ணாவிரதம் இருந்தார். பலர் அது சரியாகாது எனக் கூறியும் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. இறுதியில் இந்தியா தருவதாக, அத்தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதை இன்றும் நினைத்து இன்னும் பலர் குறைப்பட்டுக்கொண்டுள்ள நிலையில் பண்டிதர் போய் 83 கோடி ரூபாய் சிந்துநதி நீர்ப்பிரிவினைக்காகத் தர ஒப்புக்கொண்டதை இரண்டாவது இமாலயத் தவறு என்றே கருதுகின்றனர். குமுறலுக்கு அஞ்சியவர் என்ற நிதான விளக்கங்களுக்குச் செவி சாய்க்க முன் வரவில்லை. இது அவரது பழக்கம்.

நாட்டுப் பிரச்னைகளில் திருப்பப்பட்டால் நல்லது.

போராட்டம் அல்லது குழப்பம் என்ற பயமுறுத்தல்களுக்குப் பின்னர் தான் பல பிரச்னைகளில் நேரடியான உண்மைகளைக் காண முற்படுகிறார் அதற்கிடையில் சிக்கல்களின் அடிப்படைகளை அமைதியாகச் சொன்னால் அலட்சியம் செய்து விடுகிறார். நாக நாட்டு மக்கள் நாகரிக மற்றவர்கள். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வசித்துவரும் மலை சாதியினர் இவர்கள். காட்டுமிராண்டித்தனமான பழக்க வழக்கங்கள் பல இன்னும் அவர்களிடையே இருந்து வருகின்றன. அவர்களின் தலைவன் பிசோ என்பவர் நாக நாட்டிற்குத் தனி நாடு, தகுதி கொடுக்கப்பட வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். பிசோவைப் பிடிக்கக் கட்டளை பிறந்தது. பிசோ லண்டனுக்குப் போய் விட்டார். அவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இனும் வழங்கப்படும் என்று பறை சாற்றினார்கள். பலனளிக்கவில்லை. இங்கிலாந்து அரசாங்கத்தோடு ஏன் கேட்டுப் பிசோவைக் கைது செயயக் கூடாது என்றதற்கு (Extradition) அத்தகைய முறையில் நாம் அந்நாட்டோடு உடன்பாடு செய்து கொள்ள வில்லை என்றார் நேரு.

எனவே தான் பண்டிதரின் போக்கில் ஒரு நியாயத்தைப் பெறச் சகிப்புத்தன்மை வேண்டுமா அல்லது போராட்டம் வேண்டுமா என்றால் போராட்ட உணர்ச்சி தான் அவரின் கவனத்தை இழுக்கிறது என்றே நன்கு

பண்டித நேருவின் முறையற்றபோக்கு

பொங்கல் வாழ்த்திதழ்கள்

ஓவிய மன்னர் கே. மாதவன், பகவதி ஆகியோரின் வண்ண மிகு ஓவியங்கள். ஆப்செட் கலரில் பள பளப்பான வார்னிசுடன் தயாரித்துள்ளோம் 1961ம் ஆண்டுக்குரிய அழகியடயறி பிளாஸ்டிக் கவருடன் கூடியது.

மாதிரி வேண்டுவோர் ரூபாய் 2-50 - M.O. செய்க.

மின்னொளிப் பதிப்பகம்

3. மலைய பெருமாள் தெரு சென்னை-1

சித்திரப்படங்களுடன் புத்தகங்கள்

ரூ. 30 விலையுள்ள புத்தகங்கள் குறைந்த விலையில் ரூ. 10-க்கு கிடைக்கும்.

முத்தமிடும் கலை	ரூ.	3-00
ஆர்வ அணைப்புக்கலை	,,	3-00
இன்பத் தேனிலவு	,,	3-00
மண நாள் இரவு	,,	3-00
அதிசய அழகுகள்	,,	3-00
கூடசாஸ்திரம்	,,	3-00
காதற்கலை	,,	3-00
சிற்றின்ப வாழ்க்கை	,,	3-00
கருத்தடை முறை	,,	3-00
காதற் கதைகள்	,,	3-00

10 புத்தகங்கள் அடங்கிய முழுத்தொகுதிக்கு ரூ. 10 மட்டும் வி.பி. கட்டணம் உபரியாகத் தனி ரூ. 1-50

கடிதப் போக்கு வரவு ஆங்கிலத்தில் மட்டும்,

Sulekha Book Depot (10)
ALIGARH

பொங்கல் புது நாளன்று!

புதுமைகள் பூத்துக் குலுங்கும் புரட்சிப் படைப்பு!
தென்னகத்தின் தன்நிகரில்லா ஒளிவிளக்கு!!



முன்னணி

-கலை, இலக்கிய, அரசியல்.......வார ஏடு-

ஆசிரியர் : பி. வி. முத்துசுவாமி
பதிப்பாசிரியர் : ம. ரா. தேவராசன்

சிந்தனைச்சிற்பி **சி. பி. சி.** அவர்களின் **'கபாடபுரம்'** சரித்திரத் தொடரோவியம் முதலிதழிலேயே ஆரம்பமாகிறது

தனிப்பிரதி 16 காசுகள் ★ ஆண்டு சந்தா ரூ. 8-00

உங்கள் பிரதிகளுக்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.
எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஊக்கம் நிறைந்த விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு:
முன்னணி அலுவலகம்
26. எம். சி. ரோடு, சென்னை-21.

முள்வாங்கி

தூதுகோஷ்டிகளால் தொலைந்தது வரிப்பணம்

கார்த்திகை மாதம் கடந்தது! மார்கழி மாதம் ஜால்ரா சத்தத்துடன் கோவில் சுற்றத்து வங்கிவிட்டது! கோழி கூவுதற்கு முன்பு பக்தன் எழுந்து விடுகிறான்! காக்காய் குளியல் ஒன்று நடத்துகிறான்! வான் கோழி மாதிரிப் பாட்டு கத்துகிறான்! வாத்துக் குஞ்சுகள் போல நடை நடந்து சொறி பிடித்த குழந்தைகள் சுண்டலுக்கும், பொங்கலுக்கும், தேங்காய் கீற்றிற்கும் கோயில் வாசலில் காத்துக்கிடக்கின்றன!—ஆக மொத்தம் இங்கே நல்ல, குடும்பம் ஒரு பஜனைப் பண்டார மடமாகும். இப்படி வாழையடி வாழையாய் நந்தமிழ் நாட்டிலே பல குடும்பங்களின் பாரம் பரியங்கள் உள்ளன! இத்தனை நூற்றாண்டுகளாகியும்-இறைவன் ஜால்ராவுக்கு இளகியதாகத்தெரியவில்லை!—யாரிந்த தெரு ஜால்ரா கோஷ்டி? நடுத்தரம் கீழ்த்தர வகுப்பினர் தாம். அதாவது தினச்சோற்றிற்குத் தாளம் போடுபவர்தாம்!

இந்து மதத்தில் மட்டுமா இந்த மாறாத மடமை? கிறித்துவ மதத்திலும் தான்! கிட்டத்தட்ட ஜால்ரா கோஷ்டி இங்கே இருப்பது போல அங்கேயும் ஒரு 'ஆர்கன்' ஜால்ரா கோஷ்டி! இதைவிட மூட நம்பிக்கை வாய்ந்த-காட்டுக் கத்தலான—காட்டுமிராண்டித் தனமான கருத்த கும்பல்! எடுத்த எடுப்பிலேயே—

"ஏ பாபிகளே!"

என்று பொதுமக்களை ஏளனம் செய்யும் தேவ தூதர்கள் பரமண்டலவாசியின் பூலோக தாசர்கள்! கருத்தருக்கு சேவை செய்யும் கருப்பர்கள்! கொலை செய்து விட்டுக்கூடப் பாபமன்னிப்புக் கேட்பார்கள்! மதவெறியர்கள்! இயேசு ஒளியாய் இருக்கிறார் என்று மின்சார விளக்கைப்போட்டு விளம்பரப்படுத்துகின்றன!! எது எது உலகிற்குப் பயன் படுகிறதோ அதெல்லாம் அவர்! ஏன் சாணியில் கூடத் தான்—பெருநோயின் சீழில் கூடத்தான்' இருப்பதாக இந்துமதம் கூறுகிறது! ஒரு மதத்தை இரத்த காசம் என்றால் ஏனைய மதம் பெருநோயாகத்திகழ்கின்றது!

அமெரிக்கா உலகிலேயே ஏறத்தாழ எல்லா வசதிகளும் பெற்ற நாடு, அறிவியலில் ரஷ்யாவின் தரத்திற்கு உயர்ந்த நாடு என்று கூடச் சொல்லலாம். அந்த நாட்டுக் காட்டு மிராண்டித்தனத்தை எங்கு போய்ச் சொல்வது? இந்த கிறிஸ்துமஸ்ஸில்—மூன்று நாட்களில் மட்டும் சுமார் 244-பேர் குடியாலும் வெடியாலும் மாண்டிருப்பதாகச்செய்திகிடைத்துள்ளது அதாவது மணிக்கு 6-பேர் வீதம் இறந்து கொண்டே இருந்திருக்கின்றனர்! இன்றேடு எவ்வளவு இறப்போ?

ஜனத்தொகை இப்படிக் குறைவதனால் நாம் அனுதாபப்படவில்லை! ஆனால்-இப்படி தேவகாரியத்தினால்-மூட நம்பிக்கையால் - பலர் இறப்புண்டும் மதத்திலும் தம் நம்பிக்கையிலும் மனிதர்கள் தொத்திக் கொண்டிருக்கிறார்களே! என்ற அருவருப்புத் தான் ஏற்படுகிறது. தன் நம்பிக்கை குறையக் குறைய இம்மாதிரியான சடங்குகள் பெருகும்! இப்படிப் பட்ட அழிவுகளும் வளரும்!

இறக்கத்தான் வேண்டுமெனில் சீக்குப்பிடித்தா இறப்பது? அருணகிரிகளாகவா மாள்வது? நாள் தோறும் பயந்து பயந்து உயிரஞ்சிவாழும் பேடிகளாகவா இருப்பது?

பகுத்தறிவு வளர்ந்த உலகம்! பிளாட்பாரத்திலே சுற்று பவன் முதல் பெரிய பெரிய அடிகளார் வரை பகுத்தறிவுப் பிரசாரம்செய்யும் நாளிது இன்று கூட அறியாமை மிகுவதா? இது நாட்டினுடைய வளர்ச்சியாகும் என்று கருதுகிறீர்களா? இதனால் பயன் பெற்றோர் யார்? பயனடையாதவர்கள் தான்-பயன் கருதி வாய் கிழியப்பாடுகின்றனர்! நான்குமணி நேரம் நாடியிலே கையூன்றி நவரத்தின ஒப்பாரி வைக்கும் "யாழி வாய்ப்பாகவதர்"களுக்குக் கிடைப்பது ஒரு பிடி சுண்டல்!

இந்த மாதிரியான பஜனை கோஷ்டியினால் நமக்கொன்றும் இழப்பு வந்து விடவில்லை! அவர்களுக்கும் ஒன்றும் வாழ்வு வந்து விடவில்லை!

அவர்களுக்கு வாய் வலி!

நமக்குக் காது வலி!!

அவ்வளவு தானே யன்றி வேறில்லை!

அரசாங்கத்திலும் இப்படிப் பட்ட கோஷ்டிகள் உண்டு! ஜால்ரா சத்தம் கேட்காது! சப்ளாக்கட்டை அலராது! கன்ஜிரா ஒலிக்காது! ஆனால் மக்கள் வரிப்பணம் மட்டும் பாழாக்கப்படும்! பெரும் பதவிக்காரர்களிலேயே கிழப்பருவம் எய்திய 'ரிட்டயர்டு'களை உற்சாகப்படுத்தும்வகையில்-கலாச்சார தூது கோஷ்டி, நல்லுறவு தூது கோஷ்டி, போன்ற நாசகார தூது கோஷ்டிகளை அமைப்பார்கள்! இவர்கள் செலவிற்கெல்லாம் யாரைக் கட்டி அழுவது? எவன் வீட்டுப் பணத்தை முட்டம் போடுவது?

முன்னைய பக்த ஜால்ரா கோஷ்டி அறியாமை மிகுத்தது என்றால், பின்னைய அரசாங்க தூது கோஷ்டிகளோ அழிவினம் மிகுந்ததாக உள்ளது! மூட நம்பிக்கை மிகுந்த அந்த கோஷ்டிக்கும் முட்டம் போடுதல் மிகுந்த இந்த கோஷ்டிக்கும் அரசாங்க ஆதரவு உள்ளது! எது பாதுகாக்கப்பட வேண்டுமோ அது பாதுகாக்கப்படவில்லை!

அரசாங்க கோஷ்டிகளின் அழிவை சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்வோம்! பக்தர்கள் கோஷ்டி இழப்பை மக்கள் மன்றத்திலே விளக்குவோம்!

தோழர்களே!—பஜனை கோஷ்டியை நிறுத்தி பகுத்தறிவு புகட்டுங்கள்! கோவில்களில் அறிவுப் பிரசாரம் செய்யுங்கள்! ஒரு தோழர் ஒரு பக்தனைத் திருத்தினால் கூடப் போதும்! அழியட்டும் அறியாமை! மலரட்டும் பகுத்தறிவு!!

இனமுழக்கம் வழங்கப்போகும்
இன்பப் பொங்கலிலே பங்குகொள்ளும்
அரசியல் தங்கங்கள்!

சொல்லின்செல்வர் ஈ. வெ. கி. சம்பத், M.P.
நாஞ்சில் கி. மனோகரன், M.A.
ஏ. பி. ஜனார்த்தனம், M.A.
க. அறிவழகன், M.A.

உங்களுக்கு எங்கள் பொங்கல் பரிசு இது :

டாக்டர் மு. வரதராசனார்
திராவிடமொழி நூலார் ஞா. தேவநேயப்பாவாணர்
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்
டாக்டர் அ. சிதம்பரநாதன்
அ. மு. பரமசிவானந்தம், B.O.L.,
ப. ஜீவானந்தம், புலவர் அரசுமணி

இலக்கியச் சோலையிலே இவர்கள்
உலா வரும் கோலம் காண

இன்றே 'இனமுழக்கத்திற்'கென்று
ரூ.4 சேர்த்து வையுங்கள்!

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



சிந்தித்துப் பதில் சொல்வீர்!

அஞ்ஞானத்தின் அந்தகாரச் சுழலில் சிக்கிச் சீரழிந்த அக்கால மனிதர் கையாண்ட சிகிச்சைமுறை பிணியாளரைப் பீதி கொள்ளச் செய்தது.

விஞ்ஞானச் சுடர் ஒளியில் தெளிவு பெற்ற இக்காலச் சிகிச்சைமுறை பிணியின் பிடியைப் பக்குவமாகத் தளர்த்துகிறது.

இதுபோன்று மருத்துவத் துறையில் மட்டும் அல்ல, மற்றும் மார்க்கத் துறையிலே, சமுதாயத் துறையிலே. அரசியல் துறையிலே, ஆக ஒவ்வொரு துறையிலேயும் மனிதன் படிப்படியாக முன்னேறிக் கொண்டே வருகிறான்.

இந்த முன்னேற்றத்திற்கு ஆதாரமாக நிற்பது அவன் ஏற்படுத்திக்கொண்ட **மொழியும்**, அதனால் அவன் பெறும் **கல்வி** யறிவுமே யல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர கடைசி தேதி: 10-1-61 | பயிற்சிகள் ஆரம்பம்: 11-1-61

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப் படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 நயா பைசா தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

சிறுகதை :

பிரிவுக்கனல்

ஆர்விப்பட்டி
ப. மு. இளங்குமரன்

அறையைத் திறந்தேன். அடக்க முடியாத வேதனையுடன் படுக்கையில் போய் விழுந்தேன். அலுவலகம் சென்றுவிட்டு வந்து உடையைக் கூடமாற்ற விருப்பமில்லை எனக்கு. பெருமூச்சு விட்டுக் கொண்டே கட்டிலில் நெளிந்தேன், வெயில் அடிக்கும் பாறையில் தூக்கிப்போட்ட விலாங்கு மீனைப்போல். சேச்சே! என்ன இயந்திர வாழ்க்கை! புளித்துச் சலித்துப் போன தனித்த வாழ்வு! வேம்பை விட-எட்டிக்காயை விட-கரியபவளத்தை விடக் கசந்தது இந்த ஒண்டி வாழ்க்கை! கொடிது கொடிது தனிமை கொடிது என்பார்கள், தனிமையின் கோரத்தை உணர்ந்தவர்கள். எனக்கு இந்தச் சூழ்நிலை சுடுகாட்டில் வாசம் செய்வது போல் தோன்றியது. மனம் ஈடுபாடு இல்லாத வாழ்க்கை என்றால் யாருக்குத்தான் சங்கடமாக இருக்காது!

அதிகாலையிலே எழுந்திருப்பது; காலைக் கடன்களை முடிப்பது; அலங்காரம் செய்து கொள்வது; அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்புவது; அருகாமையிலுள்ள உணவு விடுதியில் காலை உணவு முடிப்பது! அப்படியே அவசர அவசரமாக அலுவலகத்தைப் பார்த்துப் பஸ்ஸில் ஏறி ஓடுவது; அலுவகத்தில் அசந்திருக்க முடியாத வேலை; மதியம் 'கேண்டீனில்' சாப்பாடு; பிறகு மாலைவரை வேலை; முடிந்தவுடன் பஸ்ஸில் வருவது; அறையில் நுழைவது; இரவுச் சாப்பாடு; பிறகு படுக்கை; இரவு பூராவும் வேதனை; விடிந்தவுடன் வழக்கம் போல் அலுத்துப்போன வேலைக்காகத் தயார்படுத்திக் கொள்வது! இப்படியே ஒருநாளா, இரண்டு நாளா! ஐந்து வருடங்கள்! அப்பப்பா! நினைத்தாலே உடம்பு கலகலத்துப் போகிறது. இந்தத் தனி வாழ்வில் துளியும் ரசனை இருக்கிறதா? என்னைப் பொருத்த வகையில் இம்மியும் இதில் இன்பம், அமைதி, மகிழ்ச்சி இருப்பதாகக் காணோம். ஆனால், என் அலுவலகத் தோழன் ஆத்மநாதன் அப்படியில்லையே! அவனும் தான் என்னைப்போல் மணமானவன்; அவன் மனைவி திருநெல்வேலியில் இருக்கிறாள்; இளம் வயது; இருந்தும் அவளைப் பார்த்தே அவனுக்கு ஆறு வருடங்கள் ஆகின்றன; ஆனால், அவனைப் பார்த்தவர்கள் யாரும் மனைவியைப் பிரிந்திருக்கும் பரிதாபத்துக்குரிய பேர்வழி என்று கூறவே மாட்டார்கள். காரணம்? அந்த அளவுக்கு அவன் தன்னை மாற்றிக்கொண்டு விட்டான்; எப்பொழுது பார்த்தாலும் கலகலப்பான பேச்சு; ஜாலியான போக்கு; சினிமா, கடற்கரை என்று நாள் தோறும் போய் விடுவான்; ஒரு மணமாகாத வாலிபனைப் போன்றே நடந்து கொள்வான்! நான்?... என்னை ஒரு சோகப் பாத்திரம் என்று நொடிக்கு நூறு முறை நையாண்டி செய்வான், ஆத்மநாதன். கலகலப்பு இல்லாத விசித்திரமான மனிதன் என்று எல்லாரிடமும் என்னைப் பற்றி அறிமுகம் செய்து வைப்பான். டைப்பிஸ்ட் இந்திரா கூட என்னைக் கேலி செய்யும் அளவுக்கு அவன் பிரச்சாரம் செய்து வைத்திருந்தான். அந்த இந்திரா ஒரு அமைதியான இளமங்கை. அவள் வருவதும் தெரியாது; போவதும் தெரியாது. அவ்வளவு அடக்கம்! அவளே என்னைப்பார்த்துக் கேலி செய்ய வேண்டுமானால் நான் எந்தமாதிரி நடந்திருப்பேன்? என்னைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்; எனக்காகச் சுமார் நானூறுமைல்களுக்கு அப்பால் இருந்து நாட்களைத்தள்ளிக் கொண்டிருக்கும்என் அழகுமனைவி ராஜம்-அவளுக்குத்தான் என் குணம் தெரியும். நல்ல உத்தியோகத்தை வேண்டாமென்று உதறித் தள்ளக் கூடாது என அம்மா அறிவுரை சொல்ல, அத்தானைப் பிரிகின்றோமே என்ற துடிப்பில் ராஜம் கண்ணீரை மளமள வென்று சொரிய ரயிலேறிய அந்த நாளை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை. அந்த முகம்-வேதனையினால் களையிழந்து போன என் துணைவியின் முகம் என் முன் தோன்றி மறைந்தது. நான் நெட்டுயிர்த்தேன். அடிக்கடி மனைவியைப் போய்ப் பார்க்கக் கூடிய இடத்திலா இருந்தேன்? இல்லையில்லை! ஐந்து வருடங்களை எப்படி நான் கழித்தேன்! அந்தத் துயரத்தை நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறது! எதிலும் நிம்மதியில்லை; மன நிறைவு இல்லை; எதிலும் வெறுப்பு; விரக்தி; பற்றில்லாத போக்கு! நடமாடும் பிணமாக நான் இருந்தேன். எதிலும் சோம்பல்; பிரியமே இல்லாமல் நடந்து கொள்ளும் பழக்கம் என்னைப்பிடித்துக் கொண்டன.

மெல்ல எழுந்து விளக்கைப் போட்டேன்; சாவதானமாகச் சட்டையைக் கழற்றிக் கம்பியில் மாட்டினேன்; 'பேண்டை'க் கொடியில் போட்டேன். ஒரு பழைய எட்டு முழவேட்டியைக் கட்டிக் கொண்டு, துண்டை எடுத்துமேலே போட்டுக் கொண்டேன் மூலையிலிருந்த பெட்டியைத் திறந்து, ஒரு புகைப்படத்தையும், ஒரு கடிதத்தையும் வெளியில் எடுத்தேன். அந்தப் படத்தைப் பார்க்கப் பார்க்க என் இதயமே மருகியது. எழில் ராணியாகக் காட்சி கொடுத்தாள் ராஜம். அவளுடைய கண்கள் இருக்கின்றனவே! அதற்கு ஈடு எதுவுமே இல்லை! அகன்ற—அழகிய அந்த விழிகள் ஆயிரமாயிரம் பிரிவுக் கதைகளைப் பேசிப் பேசிப் பிரிவுக் கனலை மிகைப்படுத்தின. வேதனையால் அழுதன! ஆற்ற முடியாத தாபத்தோடு அந்த அழகிய விழி மலர்களை ஆசைதீர முத்தமிட்டேன்; பெருமூச்சு எழுந்து என்னைப் பொசுக்கிச் சாம்பலாக்கியது. 'ராஜம்!' என்றவாறு மார்போடு அந்தப் படத்தை அணைத்துக் கொண்டு கொஞ்ச நேரம் இந்த உலகையே மறந்திருந்தேன்.

கொஞ்ச நேரம் கழித்துப் படத்தைக் கீழே வைத்து விட்டுக் கடிதத்தை எடுத்துப் படித்தேன். அதிலுள்ள நான்கைந்து வரிகள் என் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்தன.

அத்தான்! என் உடல் இங்கு இருக்கிறது. உள்ளமோ உங்களையே சுற்றிக்கொண்டிருக்கிறது. நினைக்கவே பயங்கரமாக உள்ளது. உங்களைப் பிரிந்து ஐந்து வருடங்கள் முடிந்து விட்டன! உங்கள் ராஜம் படும்வேதனை!...வேண்டாம். அந்த வேதனையின் விளக்கம் உங்களுக்குத் தெரியவே வேண்டாம்!

நேற்று வந்த கடிதம். ராஜத்தின் நெஞ்சக்குமுறலை ஏந்தியவாறு வந்திருந்தது. ஊதியம். உத்தியோகம் என்று என்னை—என் வாழ்வை—என் இளமைக் கனவை நானே அழித்துக் கொண்டு விட்டேன்-அதன் பலனை அனுபவிக்கிறேன். ஆசை நினைவுகளைக் கோடி கோடியாக மனத்தினில் தேக்கிவைத்துக் கொண்டு என்னை மணந்து கொண்ட அந்த மங்கையர் குலக் கொழுந்தின் நினைவுகளை எல்லாம் புதைத்து விட்டுக் கிளம்பி விட்டேன்; இல்லை கிளப்பி விடப் பட்டேன். வாழ்வின் சுவையை நுகர வேண்டிய பருவத்தில்-திருமணம் நடந்த இரண்டு மாதங்களில் புறப்பட்டு விட்டேன் வேலையைத் தேடி! வந்தவன் திரும்பவில்லை; வருடம் ஐந்து முடிந்து விட்டன! அவளுக்கு எத்தனை கடிதங்கள் எழுதியிருப்பேன்? எனக்கே தெரியாது! எனக்கு அவள் அனுப்பிய கடிதங்கள் எத்தனை? அவளுக்கும் அந்தக் கணக்குத் தெரியாது. அவ்வளவு கடிதங்களைப்பரிமாறிக் கொண்டோம். என்ற போதிலும் எங்களுக்கு இடையேயிருந்த தனிமைத்தனல், வேதனைப் பெருக்கம், ஆசைத்தவிப்பு அடங்கினவா? இல்லையே! வளர்ந்து கொண்டே போகின்றனவே!

உணவு உண்ணாமல் படுக்கையில் உடலைக் கிடத்தினேன். 'சாப்பிடவில்லையா?' என்று என்னைப் பரிவோடு கேட்க இங்கே யார் இருக்கிறார்கள்? என் உடல் நலத்தைப் பேண நாதியற்றுக் கிடக்கிறேன். எனக்கு நானே உதவி செய்து கொள்கிறேன். பசி என்று சொல்லுவதற்கு முன், பறந்தோடி வந்து ஆசையோடு உணவு படைத்து—அன்போடு 'அதைச் சாப்பிடுங்கள் அத்தான்—இதைச் சேர்த்துக் கொள்ளுங்கள் அத்தான் உடம்புக்கு நல்லது!...' என்று கனிவோடு உரையாடி என்னைக் கண்ணின் இமைபோலப்பாதுகாத்த அவளை இனி என்று காணப்போகிறேன்? சனிதோறும் எண்ணெய் முழுக்கில் நான் தவறி விட்டால் அவளுக்கு வரும் கோபம்! அப்பப்பா! இப்பொழுது நினைத்தாலே கண்ணீர் பெருகுகிறது, அந்தப் புனிதவதியின் கரைகாணாத பாசத்தைக் கண்டு! குளிக்கும்போது, முதுகைத் தேய்த்து விட அந்தக் குணவதிக்குத்தான் உரிமை; தப்பித்தவறி நானே முதுகைத் தேய்த்துக்கொண்டால் அவள் சிணுங்கும் சிணுக்கத்திற்கு இணைதான் உண்டா? ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையிலேயே அவள் தொந்தரவு பொறுக்க மாட்டாமல் எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டேன். மாலையில் அவளுக்குத் தெரியாமல் புதுப்படம் ஒன்றைப் பார்க்கக் கிளம்பி விட்டேன். படம் பார்த்து விட்டு வீடு திரும்பும் போது, வாசல் படியிலே உட்கார்ந்து கொண்டு என் வரவை எதிர் நோக்கியிருந்தாள் ராஜம். எனக்குப் பக்-பக்கென்று அடித்துக் கொண்டது. வாசல்படியை மிதித்ததும் கொடுத்தாளே ஒரு ஆவேசக்குரல்!

"நில்லுங்கள்!"

"ஏன்?"

"எங்கே போய் விட்டு வருகிறீர்கள்?"

"வந்து...என் சிநேகிதன் வீட்டுக்குப் போய் விட்டுவருகிறேன்ராஜம்...!"—திக்கித்திணறினேன். அதன் காரணம், அவளின் அசாதாரண அன்புக்கு நான் அடிமையிலும் அடிமை!

"பொய் பேசப்படித்துக் கொண்டீர்களா? சினிமாவுக்குத்தானே போய்விட்டு வருகிறீர்கள்?"

மௌனமாக உள்ளே நுழைந்தேன். என் பின்னாலேயே வந்தாள் என் இதயராணி ராஜம்.

"உடம்புக்கு ஆகுமா? எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு இப்படிச் செய்யலாமா அத்தான்?"

நான் ஏன் பேசப்போகிறேன்! மூச்...! அன்றிரவும் சரி, அதற்கடுத்த நாளும் சரி, அவள் என்னோடு முகம் கொடுத்துச் சரியாகப்பேசவேயில்லை! 'கண்ணே-பொன்னே-அரசி-இனிப்போகவே மாட்டேன்.' என்று நூறு முறைத் தோப்புக் கரணம் போடாத குறையாக அவளைக் கெஞ்சிய பிறகுதான், மன்னித்தாள்; 'அத்தான்!' என்று என் மீது சாய்ந்து கொண்டு கண்ணீரே கொட்டி விட்டாள்! நான் திகைத்தேன்; அவள் சொன்ன கருத்து என்னைப் புல்லரிக்கச் செய்து விட்டது!

"அத்தான்! நான் உங்களுக்கு மனைவி மட்டுமல்ல! உங்கள் நலத்தைப் பேணும் தாய்; தங்கை எல்லாம் நான்தான்! உங்களுக்கு சிறு துன்பமென்றால் கூட நான் பொறுக்க மாட்டேன் அத்தான்!"

அந்தப் பாசம்—அந்த அளவு கடந்த அன்பு—என் கண்களைக் குளமாக்கின! சிலையாக்கின!!

இன்று அந்தக் குலக்கோடி என் பக்கம் இல்லை! என் விழிகளில் தூசி விழுந்தால், தன் விழிகளில் முள்குத்திவிட்டதாகத் துடிதுடிக்கும் அந்த அன்புக் களஞ்சியம், நானில்லாமல் அனல் பட்ட மெழுகாய் வாழ்கின்றாள்! நானும் விரக தாபத்தால்-அந்த மங்கையர்க் கரசியின் பிரிவால் வாடுகிறேன்; பிரிவு நெருப்பு என்னை வாட்டுகிறது.

ஒரு நாள்—எனக்குத்தலைவலி பொறுக்க முடியவில்லை. முகத்தைச் சுளித்துக்கொண்டு 'உம்'மென்று உட்கார்ந்திருந்தேன். வந்தவள் என்னைப் பார்த்தாள்.

"என்னத்தான் இப்படி யிருக்கிறீர்கள்?"

"லேசான தலைவலி"—மெல்ல முனகினேன். அடுத்த விநாடி அவளைக்காணோம். மறுவிநாடி என் முன்தைலப் பாட்டிலுடன் நின்றாள்-வேகமாக நெற்றிப் பொட்டுகளில் தடவினாள், என் அம்மா கூப்பிட்டதும் போய் விட்டாள். அம்மா என் மனைவியிடம் கேட்டது என் காதில் விழுந்தது

"அவனுக்கென்ன?"

"தலைவலி அத்தை?"—அந்தக்குரலில் மிதந்த வேதனையை என்னால் உணர முடிந்தது. அடுத்த நிமிடம், "அடி அசடே! அதற்குக் கூடவா கண்களைக் கசக்குவது! கணவனுக்குத் தலைவலி என்றால் கூடக் பொறுக்க மாட்டாய் போலிருக்கிறதே!"

எனக்கு எப்படியிருக்கும்? என் தலைவலி போன இடமே தெரியவில்லை. நான்—இந்த மோகன் அவளுக்கு—அவள் இமய அன்புக்குக் கொஞ்சமும் தகுதியில்லாதவன்! என் மீது என் துணைவிக்கு இத்தனை அன்பா? ஐயோ, அன்பு மழையில் சிக்கித்தத் தளித்தேன்; மெய்ம் மறந்து உட்கார்ந்திருந்தேன், அப்படிப் பட்ட அன்புக் கரசிபோன வாரம் என் நிலையைக் கண்டிருந்தால் செத்தே போயிருப்பாள்! ஆமாம், சென்ற வாரம் முழுவதும் எனக்குக் கடுமையான காய்ச்சல்! ஒரு வாரம் லீவு எடுத்து விட்டேன்! ஆத்மநாதன் டாக்டரை அழைத்து வந்து வேண்டிய உதவிகளைச் செய்யா விட்டால் என் நிலை மிகவும் மோசமாகியிருக்கும்! இதை என் மனைவிக்கு நான் எழுதவேயில்லை! எழுதினால் அவள் மூச்சே நின்று விடும். எல்லாருக்குமே இல்லறம்நன்றாக அமைவதில்லை. என்னைப்பொறுத்தமட்டில் நான் பாக்கியசாலி. ராஜத்தைப் போன்ற ஒருத்தியை மனைவியாகப் பெற்றயார்தான் வாழ்வில் வெறுப்படைவார்கள்!

விடிந்ததுகூடத்தெரியவில்லை. அலாரம் அடித்ததும் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தேன். எப்பொழுதும் போல் இயந்திரமாக மாறினேன்.

பத்து மணிக்கு அலுவலகம் சென்றேன். மானேஜர் கூப்பிட்டு அனுப்பினார். வழக்கம் போல் வேலைச் சுமையைக் கொடுப்பார் என்ற வெறுப்பில் அவர் அறையில் கால் வைத்தேன்!

"மோகன்! உன்னை நாகர் கோயிலுக்கு மாற்றிருக்கிறார்கள். அடுத்தவாரமே வேலையை ஒப்புக் கொள்ள வேண்டும்!..."

அதற்கு மேல் அவர் என்ன சொன்னார் என்பதைக் கேட்கவே என் செவிகள் மறுத்தன. நான் ஆகாய வெளியில் மிதந்தேன். கடந்த ஓராண்டு காலமாக முயற்சி எடுத்தேன்; இன்று விடிந்திருக்கிறது என் சொந்த ஊரில் வேலை பார்க்க!...அது மட்டுமா?...ஆகா, அது மட்டுமா?

என் உயிர்—என் உடல்—என் மனைவி—என் காதலி—என் தாய்—என் தங்கை—என் உலகம், ஆமாம், எனக்கு எல்லாமுமாக அமைந்த ராஜத்தைக் காணப்போகிறேன்!...வரட்டுமா, வணக்கம்!

இனமுழக்கம் படைக்கப்போகும்
இன்னமுதப் பொங்கலை,
சுவையுள்ளதாக்கப் போகும் சிறுகதைச் செல்வங்கள்

முடிசூடா மன்னர் :
அறிஞர் அண்ணு, M.A., M.L.A.

பங்குபெறுவோர் :

அகிலன்	ஜெகசிற்பியன்
கே.ஜி. இராதாமணாளன்	டி. கே. சீனுவாசன்
அரு. ராமநாதன்	வாசவன்
வே. கபிலன்	க. வள்ளியப்பன்
கோவி. மணிசேகரன்	பூவை.எஸ்.ஆறுமுகம்
இருகூரான்	பஞ்சு. அருணசலன்

ஆர்விப்பட்டி இளங்குமரன்

தேனெனச் சொல்லை நீட்டி,
தென்பொதிகை மலையைக் காட்டப்போகும்
கவிஞர்கள் :

கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வாணிதாசன்,
" கம்பதாசன், " முடியரசன்,
கவிஞர் ரவி

இத்தனையும் உண்டு!
அத்தனைக்கும் விலை ரூ. 4

காரைக்குடியில் "சாணக்கியன் சபதம்."

செல்லையில் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் அரங்கேற்றமாகி அமோக கண்ட 'சாணக்கியன் சபதம்' என்ற சரித்திர நாடகம் பொங்கற் புதுநாளில் ஜனவரி 15, 16 தேதிகளில் காரைக்குடி வ. உ. சி. ரோடில் உள்ள நா. மே. காரை. மெய்யப்ப செட்டியார் காம்பவுண்டில் நடைபெற விருக்கிறது. பத்தாயிரம் ருபாய்களும் மேல்செலவு செய்து இந்த மூத்ததமிழ் கருவூலத்தை தேவகோட்டை பி. எல். தின்னப்பன் தயாரித்திருக்கிறார். இதன் கதை; வசனத்தை எஸ். டி. இளந்திருமாறன் எழுதியுள்ளார்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் உயிரோடு இருக்க முடியும்! இருப்பதாகச் சொன்னால்தான் விடுவார்களா—பேய்! பேய்! என்று கல்லாலும் கட்டையாலும் அடித்துச் சாகடித்துவிட மாட்டார்களா?"

"செல்லையா! உன் பேச்சும் ஒரே புதிராக இருக்கே! உண்மையைச் சொல்லுங்க! என்னைக் குழப்பாதிங்க!"

"உண்மை தாத்தா! நான் சாகத்தான் இருந்தேன்—ஏதோ நரேந்திரனின் மனம் மாறவே—இப்படி உயிரோடு திரும்பியிருக்கிறேன்!...... என்ன தாத்தா என் முகத்தையே பார்க்கிறீர்கள்! காலைப்பாருங்கள்—பேயாக இருந்தால், காலே இருக்காது—இருந்தாலும் தரையில் படாது-என்று சொல்வார்கள்!"

இப்படி நரேந்திரன் கூறி, தன் கால்களைக் குதித்துக் குதித்துக் காட்டினான்.

"உள்ளே வாங்க!" என்று கிழவர் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு முன்னே சென்றார்.

ஆங்காங்கே பதுங்கியிருந்த ஆட்களும் அடிமைப் பெண்களும் அவர்கள்அருகே மெல்ல மெல்ல ஒருவர் பின் ஒருவராக வந்து நின்றார்கள். தங்கள் தலைவன் சாகவில்லை-பேயாகவும் மாறவில்லை-என்பதைக் கண்டதும், அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்ல முடியாது. வாடியிருந்த முகங்களெல்லாம் மலர்ந்தன. நீர் வழிந்த கண்கள் எல்லாம் ஒளி பெற்றன.

பட்டுமெத்தை போடப்பட்ட ஒரு சந்தன ஆசனத்தில் நரேந்திரன் உட்கார்ந்தான்.

பாலும் பழமும் அடிமைப் பெண்கள் அங்கே கொண்டு வந்து வைத்தார்கள்.

"அரண்மனைக்குச் சென்றேன்! அரசரைக் கேட்டேன்! அவர் பதில் சொல்லவில்லை-வருத்தத்தோடு தலையைத் தாழ்த்திக் கொண்டார்! பக்கத்தில் தளபதி சயசிங்கன் இருந்தான்! அவன் சொன்னான், நரேந்திரன் பிணமாகக் கிடந்ததைத்தான்கண்டதாக!......" என்று கிழவர் கூறியதற்கு இடையே "சயசிங்கனா அப்படிச் சொன்னான்?" என்று நரேந்திரன் ஆத்திரத்தோடு கேட்டான்.

"ஆமாம் நரேந்திரா! ஊரார் பேசிக் கொண்டதையெல்லாம் நம்பாமலிருந்த நான்-அவன் சொல்லை நம்பினேன்!" என்று கூறியசங்கிலித் தாத்தாவின் கண்கள் கலங்கின.

"தாத்தா! சயசிங்கனைத் தெரிந்து கொள்ள, சக்திவர்மனின் படையெடுப்பு எனக்கோர் அரிய வாய்ப்பாக அமைந்தது! காய மடைந்து களத்திலே நான் கிடந்தேன்-அதை சயசிங்கன் பார்த்தான்! ஆனால் என்னைக் காப்பாற்றாமல், எதிரியின் தங்கையை மட்டும் கவர்ந்து கொண்டுதன் வீரர்களோடு திரும்பிவிட்டான்! எதிரியின் வீரர்கள் சாமவதிக்காகத் துரத்திக் கொண்டு வருவார்கள்-சாயங்களோடு கிடக்கும் நான், அவர்கள் கண்ணில்படுவேன்-என்னைக்கைதியாக்கி சக்திவர்மன் முன் கொண்டு போய் நிறுத்துவார்கள்-தன் தங்கை சிக்குவதற்குக்காரணமான என்னை அவன் கொன்று போடாமல் விடமாட்டான்-அத்துடன் என் கதை முடிந்து விடும் என்று சயசிங்கன் நினைத்திருக்கிறான்! அந்தத் துணிவோடு தான், மன்னர் முன்பே நான் செத்துக் கிடந்ததைக் கண்டதாகக் கூறியிருக்கிறான்! அவன் எதிர் பார்த்தபடி, அப்பக்கம் எதிரியின் ஆட்கள் யாரும் வரவில்லை......" என்று நரேந்திரன் கூறியதும், கிழவரின் கண்கள் கோபத்தால் சிவந்தன.

"அத்தகைய நயவஞ்சகனா இந்தச் சயசிங்கன்?" என்று கிழவர் ஆத்திரத்தோடு தன் கையைத் தூணின் மீது அறைந்தார்.

"ஆமாம்!" என்று நரேந்திரன் கனல் மூச்சு விட்டபடி தன் தலையை உயர்த்தினான்.

தலைவனின் வாழ்வே தங்கள் வாழ்வு என்று நம்பியிருந்த தனது ஆட்களைக் கண்டதும், அவன் உள்ளத்திலிருந்த கோபமெல்லாம் புகையாக மறைந்து விட்டது.

அடிமைப் பெண்கள் கொண்டு வந்து வைத்திருந்த பாலையும் பழத்தட்டுகளையும் வெகு நேரம் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த செல்லையன், பொறுமை இழந்து விட்டான்.

"நரேந்திரா! என்னைச் சோதிக்காதே! என்னால் இதைத் தாங்க முடியாது!" என்று அவன் கூறியதைக் கேட்டு, நரேந்திரன் சிரித்தான்.

"என்னப்பா! திடீரென்று இப்படி வெடி போடுகிறாய்! உன்னை நான் என்ன சோதிக்கிறேன்?"

"பழமும் பாலும் வந்து எவ்வளவு நேரமாகிறது! நீ தொட்டால் தானே-நான் டதொ!"

"இந்த வீட்டில் உனக்குத் தடை ஏது? தேவை என்றால், நீ எடுத்துக் கொள்வது தானே! என்னையேன் எதிர் பார்க்கிறாய்?"

"அது தெரியாதாயென்ன எனக்கு! சும்மா மரியாதைக்குஅப்படிக்கேட்டேன்!" என்று குதூகலத்தோடு சொல்லிக் கொண்டே செல்லையன், ஒரு மாதுளம் பழத்தை எடுக்க கையை நீட்டினான்.

நீட்டிய அவன் கையைச் சங்கிலித் தாத்தா பிடித்துக் கொண்டு, "தொடாதே!" என்றார்.

"அவமானம்!" என்று முகத்தைச் சுளித்தவாறு செல்லையன் தன் கையை இழுத்துக் கொண்டான்.

"உன்னை மட்டும் தடுக்கவில்லை-நரேந்திரன் கூட இந்தப் பழத்தையோ பாலையோ தொடக்கூடாது!" என்று செல்லக் கோபத்தோடு தாடிகுலுங்க கிழவர் கூறினார்.

"ஏன் தாத்தா! பழம் கெட்டு விட்டிருக்கிறதா?" என்றான் நரேந்திரன்!

"அதெல்லாம் இல்லை! முதலில் நீங்கள் இரண்டு பேரும் எழுந்திருங்கள்!......எழுந்தாயிற்றா!...சரி...இப்படியே நடந்து, வெளியில் போய் நில்லுங்கள்!" என்று கிழவர் கூறியதைக் கேட்டு-தாத்தாவின் விளையாட்டுக்குவாய்ப்பு அளிப்பது போல—அவர்களிருவரும் வீட்டிற்கு வெளியே சென்று நின்றார்கள்!

"என்னப்பா இது?" என்று செல்லையன்நண்பனின் முகத்தைப் பார்த்தான்.

"எனக்குக் கூடத்தான் புரியவில்லை!" என்று நரேந்திரன் புன்னகை செய்தான்.

தாத்தா முன்னால் வர, அடிமைப் பெண்கள் கையில் தட்டுகள் ஏந்திய வாறு, மங்கள இசையான ஆலத்திப்பாட்டோடு அங்கங்கே வந்து நின்றார்கள். பெண்கள் ஆரத்தி எடுத்து, நரேந்திரனின் நெற்றியில் பொட்டு இட்டார்கள்.

"இனி உள்ளே வரலாம்! சாப்பிடலாம்!" என்று கிழவர் அவர்களை அழைத்துக் கொண்டு சென்றார்.

அன்றிரவு முழுவதும் அவ்வாறே மகிழ்ச்சியில் கழிந்தது.

மாடி அறையில் தூங்கிக் கொண்டிருந்த நரேந்திரன் பொழுது புலர்ந்து வெகு நேரம் கழித்து கண் விழித்தான். கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.

சங்கிலித் தாத்தா யாருடனே கோபமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டதும், அருகிலிருந்த அடிமைப் பெண்களைப் பார்த்து, "யார் வந்திருப்பது?" என்று கேட்டான்.

"தளபதி சயசிங்கன் வந்திருக்கிறார்!" என்ற பதிலைக் கேட்டதும், அவன் மனம் ஏனோ திடுக்கிட்டது!

(வளரும்)

திருந்தாத ஜென்மங்கள்

இந்தியா முழுமைக்கும் மூன்றாவது, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகை 10,200 கோடியாகும். இதன்படி தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய தொகை 1000 கோடியாகும். வரி விதிக்கும்போதும், பிரிவினைகூடாது என்று பேசும்போதும் சமத்துவம் பேசும் மத்திய அரசு, தமிழகத்திற்கு உரிய பங்கைத் தராமல் 394 கோடியாகச் செய்து, அதையும் குறைத்து 292 கோடியாக்கி, அதிலிருந்து கணிசமான அளவில் குறைந்து தற்போது 192ல் வந்து நிற்கிறது. இதே நிலை தான் ஆந்திரகன்னட கேரள அரசுகளைப் பொறுத்தும் நிலவுகிறது!

இதை உணர்ந்து தான் அண்மையில் நடந்த முதலமைச்சர்கள், மாநில ஆளுநர்கள் மாநாட்டில் தென்னகப் பிரதிநிதிகள் சிலர் நடுவரைசைக்குறை கூறி யுள்ளனர். இந்தக் கொடுமையை எதிர்க்கத் துணிவற்ற நமது அமைச்சர்கள், குறைக்கப்பட்ட 102 கோடி ருபாயை இருவழிகளில் அடையவேண்டும். ஒன்று புதுவரிகள் விதிப்பது; மற்றொன்று கடன் எழுப்புவது. முதலில் கூறியதைச் செய்ய முயன்றால் தூங்கும் புலியை இடரும் குருடன் கதையே ஆகும். மற்றொன்றும் சாத்தியக்கூறு அற்றதாகவே இருக்கிறது. ஏனெனில் ஈடு செய்ய வேண்டிய தொகை பெரிய அளவில் உள்ளது.

டெல்லிக்குக் காவடி எடுத்துச் சென்ற கர்மவீரர், கருப்புத் தமிழர் என்றெல்லாம் போற்றப்படும் நம் காமராசர் முகத்திலே கரியைப் பூசியிருக்கிறார் நந்தா! மேலிடத்திலே மிகுந்த செல்வாக்கு உள்ள விருதுபட்டி வியாபாரியும் மூக்கைத் துடைத்துக் கொண்டே சென்னை திரும்பி விட்டார். கனம் சி. சுவுக்கு இலண்டன் பிரமைநந்தாபோட்டபோடில் தான் தெளிந்ததாம்.

கோட்டை விடுவதிலே குறைவற்ற வீரம் நிரம்பியவர்கள் பச்சைத் தமிழர் அமைச்சரவையினர். ஒன்றா இரண்டா உடனே கூற? தேவிகுளம். பீர்மேடு, தென் உணவு மண்டலம், மொழிப் பிரச்சினை, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் மூன்றாவது, ஐந்தாண்டுத்திட்டம், சென்னை மாநகராட்சி மன்றம். கோட்டை விடும் இந்தப் புலிகள் சென்னைக் கோட்டையையும் 1962ல் கோட்டைவிடும் என்பது உறுதி! ஓட்டை விழுந்த கோட்டையிலே கூட்டு ஆகாது என ஒப்பாரி வைக்கும் காமராசர் தி. மு.க. வினரின் இலட்சியக் கணைகளுக்குப் பயந்து கோட்டையை விட்டு கொல்லைப் புறமாகச் சென்று நவீன கட்ட பொம்மன் ஆகிவிடுவாரோ என்ற ஐயம் எழுகிறது!

படிக்காத மேதை பிறந்த திருநாட்டில் பசிஎன்று துடிக்காத மக்கள் குறைவு. வாழ வழியில்லையே என்று ஏங்கி வெடிக்காத இதயங்கள் அதிகம் இல்லை.

தமிழர் திருநாளில் உங்கள் உள்ளங் களிக்க

பொங்கல் மலராக

வெள்ளித் திரை

ஆசிரியர் :

துரைக்கண்ணு எம், சி.

★ கண்கவர் முகப்பு
★ கவர்ச்சிப் படங்கள்
★ கருத்தையள்ளும் கதைகள்
★ மின்னும் தாரகைகளின் எழுத்தோவியங்கள்
★ அயல்நாட்டு நட்சத்திரங்களின் சுவையான செய்திகள்
★ இன்னும் பல புதிய அம்சங்கள்

இத்தனைக்கும் விலை

30 காசு

விவரங்களுக்கு:

வெள்ளித்திரை,
சென்னை-5.

கழகப் பேரகராதியுடன்

இனமுழக்கம்

பொங்கல் மலர் 1961

300 பக்கங்கள்
விலை ரூ.4-00

சிந்தை அள்ளும் செந்தமிழ்ச் சிறு கதைகள்

நெற்றியில் நெஞ்சில்... அறிஞர் அண்ணா

காதறுந்த ஊசி -ஜெகசிற்பியன்
நடிகர் நஞ்சப்பா -தமிழ்வாணன்
வைரக் கல் -கண்ணப்பா-வள்ளியப்பன்
மஞ்சளும், மருக்கொழுந்தும், -பூவை எஸ். ஆறுமுகம்
கொள்கையும் குழப்பமும் -டி. கே. சீனிவாசன்
பிர்லா மாளிகை வே. கபிலன்
நன்றிக்கு ஒரு நாய் கோவி. மணிசேகரன்
அவன் அவ்வளவுதான் பஞ்சு. அருணசலன்
நட்ட கல் -வாசவன்
அமரக் கவிதை -இ. கூரான்
மாம்பழம் ஆர்விப்பட்டி ப. மு. இளங்குமரன்
வானை முத்தமிட்ட வண்ணச்சுடர் -கே. ஜி. இராதா மணாளன்

இலக்கிய மணம் கமழும் கட்டுரைகள்

இதுதான் தத்துவம் -டாக்டர் மு. வரதராசனார்
உலகத்தில் நாம் -ஈ.வெ. கி. சம்பத்
அசுரர் யார்? -ஞா. தேவநேயப் பாவாணர்
அகத்தியன் எங்கே? அ. மு. பரமசிவானந்தம்
நான் விரும்பும் உலகம் -கா. அப்பாதுரையார்
தொல்காப்பியர் காலத்தில் -ப. ஜீவானந்தம்
பிரித்தானியா பாராளுமன்றத்தில் சில சம்பிரதாயங்கள் -நாஞ்சில் கி. மனோகரன்
இதுதான் கலையுலகம் கே. ஆர். ராமசாமி
திராவிட நாகரீகம் -ஈ. அறிவழகன்
வளரும் மாணவர் கழகம் கே. ஏ. கிருட்டிணசாமி
இலட்சியப் பற்று -ஏ. பி. ஜனார்த்தனம்
நமது பணி -மேயர் முனுசாமி
தென்னாப்பிரிக்கமண்ணிலே -புலவர் அரசுமணி

மற்றும் பலர் வழங்கும் மணிகள்

முகப்பு விளக்கக் காதல் காதை—கவிஞர் கண்ணதாசன்
கலைஞர் மு. கருணாநிதி வழங்கும் ஓரங்க நாடகம்
திரைப்பட வசனகர்த்தா திரு ப. கண்ணன் வழங்கும் சரித்திர நாடகம்
ஆசிரியர் சி. பி. சி. வழங்கும் அழகோவியம்
ஓவியக் கலைஞர்கள்: மணியம், லதா. சித்ரலேகா, அமுதன், சுபா, ஜெயராஜ வழங்கும் வண்ண ஓவியங்கள்

அவைத் தலைவர்-ஈ.வெ.கி. சம்பத், பொதுச் செயலாளர்-அறிஞர் அண்ணா பொருளாளர்-மு. கருணாநிதி, தலைமை நிலையச் செயலாளர். கே. ஏ. மதியழகன், வெளியீட்டுச் செயலாளர்–சி. பி. சிற்றரசு, பிரச்சாரச் செயலாளர்-இரா. நெடுஞ்செழியன், அமைப்பு செயலாளர்-என். வி. நடராசன், தொழிற்சங்க செயலாளர்: அன்பழகன், ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகளும், வண்ண ஓவியங்களும்.

★ 100 பக்கங்களில் இயக்க வரலாறு!
★ தலைமைக் கழக, மாவட்டக் கழக, கிளைக் கழக அமைப்பு விவரங்கள்!
★ 5000-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களின் பெயர்கள்! செயலாளர்கள் வட்டப் பிரதிநிதிகள் பெயர்கள்!
★ வட்டக் கழகம்: அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர் பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் பெயர்கள்!
★ மாவட்டக்கழகம்: அவைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் பெயர்கள்!
★ வட்டக் கழகச்செயலாளர் (சென்னையில் வட்டக்கழகங்கள், தொகுதி கழகங்கள் இரண்டும்), மாவட்டக் கழக செயலாளர்கள், பொதுக் குழு, செயற் குழு உறுப்பினர்கள், சென்னை மாநகரமன்ற மேயர், துணை மேயர், உறுப்பினர்கள் கழக-சட்டமன்ற,-பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் புகைப் படங்கள் பல வண்ணங்களில்!
★ கழக சட்ட திட்டங்கள், கொள்கை விளக்கங்கள், மற்றும் கழக உயிர் நீத்த உத்தமர்களின் புகைப் படங்கள், அவர்களின் வாழ்க்கை குறிப்புக்கள்!

இதுவரை நடைபெற்ற மாவட்ட, மாநில மாநாடுகள், சிறப்பு மாநாடுகள் ஆகியவை நடைபெற்ற தேதி, இடம் போன்ற எல்லா விவரங்கள் 1949-லிருந்து 1960-வரை கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ச்சியைக் காட்டும் விளக்கப் படம்!

இவற்ருேடு சி. பி. சிற்றரசு தரும் இருவண்ணக் கொடிவிளக்கம்

இன்னமும் சில; வண்ணமும் பல!
இன்றே உங்களூர் விற்பனையாளரிடம்
முன் பணத்துடன் பதிவு செய்துகொள்ளுங்கள்.

பல விற்பனையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்பணம் கட்டக் கூடிய தேதியை 7—1—1961 வரை தள்ளிவைத்திருக்கிறோம். இந்தத் தேதிக்குள் அனுப்பி விடவேண்டும். அதற்குப்பின் வரும் ஆர்டர்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இனமுழக்கம் : : சென்னை-5.

தொழிற் பயிற்சி நுணுக்கப் புத்தகங்கள்

மின்சார வானொலித் துறை வழிகாட்டி; மின்சார வசதியில்லாமலே வீட்டிலிருந்து கொண்டு, ரூ. 15/- மட்டும்செலவு செய்து வானொலிப் பெட்டி உருவாக்குவது எப்படி என்று விளக்கும் புத்தகம். வானொலிப்பெட்டி பழுதுபார்ப்பது வீட்டுமின்சார இணைப்பு முதலியசெய்திகள் அத்தனையையும் 170படவிளக்கங்களுடன்போதிப்பது, ஆர்வப் பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு வானொலி, மின்சார பணி உயர்ந்த ஒரு சிறு தனிப்பட்டறை வைத்து நடத்துவதற்கு வேண்டிய பாடங்களையுடைய புத்தகம் விலை ரூ. 6/-

குடிசைத் தொழில் வழிகாட்டி: விளக்கப்படங்கள்கொண்ட இந்த புத்தக உதவிகொண்டே மை செய்தல், சர்க்கரை, மின்சாரக் கருவி கலங்கள், கன விளையாட்டுச் சாமான்கள், விளையாட்டுப் பொம்மைக் கருவிகள், பிளாஸ்டிக் சாமான் முதலிய 50க்குக் குறையாத சிறு தொழில்களை நீங்கள் வீட்டிலேயே நடத்தலாம். விலை ரூ. 8-50. படம் ஓவியம் ரூ. 4-50. தையல் கத்தரிப்புக் கலை ரூ. 4-00. நிழற்படக் கலை ரூ. 3-00. சோப் செய்தல் ரூ. 4-00 மோட்டார் மெக்கானிக் ஆசான் ரூ. 4-50. அஞ்சல் ஆணை ஒவ்வொன்றுக்கும் வி. பி. கட்டணம் கூடுதலாகத் தனி ரூ. 1-00.

கடிதப் போக்குவரவு ஆங்கிலத்தில் மட்டுமே.

SULEKHA BOOK DEPOT(6) Phapala Aligarh

பேரனுக்கு,

சென்னை,
6—1—61

சென்ற அஞ்சலில் என் படிப்பைப்பற்றி எழுதுவதாக தெரிவித்திருந்தேன். ஐந்து வயதானவுடன், எழுத்தறி வித்தல், இதை அந்த நாளில், வித்தியாப்பியாசம், என்று அழைத்தார்கள். காதுகுத்துவது, சிகை நீக்குவது எப்படி ஒரு ஆடம்பரமானச் சடங்காகச் செய்கிறார்களோ, அதற்குச் சமமாக அல்லது அதற்குச் சற்று ஆடம்பரமாகத்தான் இந்த எழுத்தறிவித்தல், என்ற விழாவையும் கொண்டாடினார்கள். எனக்கும் அப்படித்தான் கொண்டாடினார்கள். அதாவது வெள்ளியாலும் தங்கத்தாலும் நெல்மணிகளைப் போல் செய்து அதில்தான் ஆசிரியர் எனது விரலைப்பிடித்து தெலுங்கின் முதல் எழுத்து ஓ-என்ற எழுத்தை எழுதினார். அதன் பிறகு நான் எழுதப் பயன்பட்ட அந்த வெள்ளித்தங்க நெல் மணிகளையும், அவர் உடுத்திக் கொள்ளப் புத்தாடைகளையும், வேறு பல தானியங்களையும், காய்கறிகளையும், ஆசிரியருக்குக் கொடுத்தார்கள். என் ஆசிரியர் கருணீக வகுப்பைச் சேர்ந்தவர். அவர்தான் தெருத் திண்ணைப் பள்ளிக் கூடத்தையும் நடத்தி வந்தார். அந்தத் திண்ணை ஒரு பிள்ளையார் கோயிலுக்கு முன்னாலே இருந்த திண்ணை. அதில்தான் நாங்கள் சுமார் இருபது பேர்கள் படித்து வந்தோம். நான் முதல் நாளதான் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்த நெல்லில் எழுதினேனே தவிர, அடுத்த நாள் நானும் என்னோடு படித்தவர்களும் ஆற்று மணலைப் பரப்பி அதன்மேல்தான் எழுதினோம், இப்படி இரண்டாண்டுகள் படித்த பின் பனை ஓலையும் எழுத்தாணியும் கொடுக்கப் பட்டன. தாளோ, எழுதுகோலோ இல்லை. ஓலையில்தான் எழுதி பழகவேண்டும். அதில் ஒழுங்காக எழுதுவதற்கு முதலில் கொஞ்சம் தொல்லையாகத் தானிருந்தது. வரவர மிக வேகமாக எழுத முடிந்தது. அது சர்க்கார் கண் காணிப்பில் இல்லாத காரணத்தால் மாணவர்களை எப்படி நடத்த வேண்டுமென்ற வழி முறைகள் ஆசிரியர்களுக்கோ-ஆசிரியரிடம் மாணவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற வழி முறைகளோ இல்லாமலிருந்தது. மேலும் அந்த நாளில் கடைக் கணக்குகள், கொடுக்கல் வாங்கல் கணக்குகள் எல்லாங்கூட பனை ஓலையில்தான் எழுதப்பட்டு வந்தது. எனது ஆசிரியர் மிகுந்த முன் கோபக்காரர். அடிப்பது என்று ஆரம்பித்தால் மயக்கம் போட்டு விழும் அளவுக்கு அடிப்பார். அந்த நாளில் பெற்றோர்களுக்கிருந்த எண்ணமெல்லாம், ஆசிரியர் அடிக்கத்தான் பிறந்தார். மாணவர்கள் மாண்டு போகாமல் கல்வி கற்றால் போதும் என்ற நிலையிலேயே இருந்தார்கள் என்று என்னால் துணிவோடு சொல்ல முடியும், ஆசிரியர் அடித்து விட்டார், என்று எந்தப் பையனாவது பெற்றோர்களிடம் சொன்னால், அடிக்காமல் முத்தமா கொடுப்பார், என்று கேட்பவர்களாகவே இருந்தார்கள். அந்தப் பெற்றோர்களுக்கு கருணை உள்ளம் இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். அடித்தால்தான் படிப்புவரும், அதுவும் நாம் அடிக்காமல் கண்ணுக்கு மறைவாக ஆசிரியரே அந்த அருந்தொண்டைச் செய்கிறாரே, அந்த மட்டில் இலாபந்தான், என்ற நிலையிலேதான் பெருவாரியான பெற்றோர்கள் இருந்தார்கள். அதில் என் பெற்றோர்கள் எப்படி விதிவிலக்குப் பெற முடியும்.

உன் தாத்தா,

சி. பி. சிற்றரசு

ஜெயராஜ்.

இடி 1 ★ வார இதழ் - சென்னை (24--6--'60) வெள்ளிக்கிழமை ★ முழக்கம் 42

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

விலை 16 காசுகள்.

உள்ளே......

★ ஜப்பானில் செங்குருதி
★ ஊர்ந்தது உயர்ந்தால்...?
★ ஆரியரைக் குறித்து ஆரியரே கூறுகிறார்
★ ஆதிக்க உணர்விற்கு ஆதாரம்
★ பாதுகாப்பு எங்கே?
★ முரளீஸ் கபே மூர்க்கத்தனம்!

பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

★ புயலெனக் கிளம்பினர்; போர்க்குரல் எழுப்பினர்
★ மாணவர் கிளர்ச்சி; மந்திரிகள் மருட்சி
★ கிஷியின் கிலியில் ஐசனோவர் மருட்சி
★ அடக்க முயன்றோர் நடுக்கம் கண்டனர்

-இவ்வளவும் நடந்தது, ஜப்பான் நாட்டிலே!

ஆவலின் கிளைகள் ஆயிரமாயிரம்!

ஆதிக்க உணர்வு: 3

மனித வாழ்க்கை ஆவலைச் சுற்றிச் சுழல்வதாகும். ஆவல் பல உருவங்களில் எழுவதுண்டு. சிலருக்குப் புகழ் பெறவேண்டும் என்பதிலும், சிலருக்குப் பொருள் ஈட்டுவதிலும், சிலருக்குப் பயணம் செய்வதிலும், சிலருக்கு உடல் வலிமையோடு இருப்பதிலும், சிலருக்கு நூற்களைக் கற்பதிலும், சிலருக்கு எழுத்தாளராக இருப்பதிலும், சிலருக்குத் தொண்டு செய்வதிலும் ஆவல்

ஆதிக்க உணர்விற்கு ஆதாரம் இரண்டு!

இருக்கலாம். ஒருவகை ஆவல் உடையவர்கள் அதை அடையாமற் போனால் மன நிறைவு பெற முடியாது. சிந்தனை செய்து எழுதிக்கொண்டே இருக்க எண்ணுபவருக்குத் தொழிற்சாலை மேலாளராகப் பணியாற்ற இயலாது. இவற்றிற்கு ஊதியம் அல்ல அடிப்படை. உள்ளப் பான்மையே ஆகும். உள்ளம் ஒரு குறிப்பிட்ட ஆவலை நாடி நிற்கும் போது அதைப் பொருட்படுத்தாது வேறு வழிகளில் திருப்பினாலும், வன்மையாக அந்த ஆவலை மறைக்க முயன்றாலும் மனவளம் குன்றும். ஆவல் நிறைவேறினால் வளர்ச்சியைக் காட்டும், நிறைவேறாவிடில் குமுறலைக் கொட்டும். இதே ஆவல் நிலைத்திருக்க ஒரு வன்மை அதற்குத் தேவைப் படுகிறது. தம்மை ஏசுவோர் மதிக்க ஒரு சூழ்நிலைவேண்டும். அதை அடைய ஆதிக்கம் அல்லது அதிகாரம் (Authoritarianism)இருக்க வேண்டியதாகிறது. இதைக்கொண்டுதான் தம் சொல்லுக்கு ஒரு தனிச் சிறப்பும், ஒருவித நிலைமையும் ஏற்படுத்தவியலும் என்று எண்ணுகிறார்கள்.

இத்தகைய ஆதிக்க உணர்வு எப்படி ஏற்படுகிறதெனின் அதற்குப் பல சார்புகள் உண்டு முன்பு, பழங்காலத்தில், போரில் வெற்றி பெற்ற வீரனுக்கு ஏனையோர் அஞ்சி அல்லது பெருமைப் படுத்தி உயர்ந்தவனாகக் கருதினார்கள். அப்பெருமை அளித்திருப்பதற்கான அறிகுறியென்று அந்த வீரனின் சொல்லை மதித்து நடந்தார்கள். அந்த வீரனும் அவனது இல்லத்தாரும் 'நாளடைவில் அவ்வகுப்பாரிடையே செல்வாக்கு உள்ளவனாகினான். இது பெரும் அளவில் விரிவடையும்போது அரசன் என்ற நிலை ஏற்படுகிறது. ஆதிக்க உணர்விற்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று ஆதிக்கம் செலுத்துபவர், மற்றொன்று ஆதிக்கத்தை மதித்து அடங்கி நடப்பவர்கள்.

போர்களில் வெற்றி அடைந்தவர்க்கு மட்டுமே அதிகாரஉணர்வு வந்துவிடுவதில்லை. உள் நாட்டில் பெரும்நிலக்கிழார்களாயிருப்பவர்கள், அல்லது வேறு வகைகளில் பொருள் திரட்டுகிறவர்கள் எல்லாம் மற்றவர்களை விடப் பெரிய அல்லது சிறப்புடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். இன்னும் சிலர் சூழ்ச்சியால் முன்னேறுபவர்களைப் பாராட்டுவார்கள், மற்றும் சிலர் நுணுக்கமான அறிவையும், மற்றும் சிலர் கலைத் திறனையும், மற்றும் சிலர் சமயத் தொடர்பில் உயர்வடைவதையும் சிறப்பென்று நினைக்கிறார்கள். அந்தந்த நிலைக்குத் தனியொரு ஆர்வமும் பெருமையும் அளிப்பவர்கள் அத்துறையில் உயர்வோரைக் கண்டு வியந்து நிற்கிறார்கள். அந்தவியப்பு, உள்ளத்தில் பணிவையும், அடக்க உணர்ச்சியையும் ஊட்டுகிறது. இந்தப் பணிவு தலைவனாகக் கருதப்படும் மனிதனுக்கு ஒரு செல்வாக்கை அளிக்கிறது. பலரது மனமும் இதே பான்மையில் ஒன்றுபடும் போது அத்தலைவன் அதிகார நிலையடைகிறான். அவன் துவளும்போது இவர்கள், அதாவது அவனைப் பெருமைப் படுத்தியவர்கள் துவளுகிறார்கள், அவன் உயரும்போது தாமும் உயர்வதாக எண்ணி மகிழ்ச்சி அடைகிறார்கள். வயதில் மூத்தோர், வளவாழ்க்கை நடத்துவோர் ஆகியோருக்கும் ஒரு அளவு அதிகாரம் உண்டு. ஆனால் அது வலிமையற்றது.

அவ்வதிகாரம் ஒரு வகுப்பாருக்குக் கிடைத்தது பற்றிப் பிறிதொரு வகுப்பார் பொறாமைப் படுவதுண்டு. பின் தங்கிய சூழ்நிலைகளில் துவண்டு கிடப்போர் தங்களைத் தகுதிப்படுத்திக்கொண்டு

ஆதிக்கஞ் செலுத்துவது ஒன்று; அடங்கி வாழ்வது மற்றொன்று!

எப்படியேனும் மற்ற வகுப்பாரை அடக்கிவிடத் துணிவதுண்டு. தம்முள் சிலர் நல்ல கல்வி, அரசியற் துறையில் நற்பணி, என்ற தன்மையிலிருந்தால் அதைக் கீழிறக்க முற்படுவார்கள் அல்லது அதைவிடத் தமது வகுப்பார் மேனிலை அடையும் வழிகள் பற்றி ஆய்வர். இது பொறாமையால் உந்தப்படுவது. பொறாமை குறுக்கிடும்போது அதிகாரத்தின் தன்மை அதிகக் கவர்ச்சியுள்ளதாக ஆகிறது. அதிகாரத்தைக் கைப்பற்றினால் அதன் அடிப்படையில் ஊழியம் புரியும் பல்வேறு பணியாளர்களையும் தம் நிலைமைக்கு ஒத்தவாறு பயன்படுத்திக்கொள்ள ஓர் சூழ்நிலை

வே. செளந்தரராசன்

இருக்கிறது. இங்ஙனம் ஆதிக்கம் அல்லது அதிகாரம் ஓர் சமூக அளவுகோல் அல்லது தற்காலப் பெருமைகளில் ஒன்று எனக் கருதக்கூடிய உருவை அடைந்துள்ளது.

இந்த ஆதிக்கம் அறிவிலியிடமிருந்தாலும், வகுப்புஅல்லது சுயநல வெறியுள்ளவனிடமிருந்தாலும் முதலில் தன்னை அழிக்கும் தவறின் பிறரைச் சிதைக்கும். ஆதிக்கம் இன்று மக்கள் மன்றங்களினால் கட்டுப் படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு தனி மனிதனிடம் பொது நிருவாகத்திற்கென்று நல்கப்படும் அதிகாரம் பல சுயநலப் பணிகளுக்கு வளைக்கப்படும் தீயநெறி தவிர்க்கப் படல்வேண்டும். எந்த அதிகாரமும் மக்கள் மன்றத்திற்கு உட்பட்டதாகவே இருத்தல் நலம். மேற்பட்டிருந்தால் ஒவ்வொரு சிக்கலான சூழ்நிலைகளில் அம்மனிதன் சர்வாதிகாரியாகி நாட்டின் நலங்களைச் சூறையாடிவிடக் கூடும்.

'ஒருவரிடமுள்ளசாதாரண அதிகாரம் சாதாரணமாய்க்கெடுக்கும். அதிக அதிகாரம் அவனை அதிகமாய்க் கெடுக்கும், என்றார், ஆக்டன் பிரபு. அதிகாரம் ஆரவாரமான இயல்புடையது. யாரையும் நிலை தடுமாறச் செய்யும் நீர்மையுடையது. கையாள்வோரின் கண்ணியத்தையும், கல்வி, ஒழுக்கம் மற்றும் உயர்ந்த பண்புகளைப் பொறுத்தே அது நடு நிலையாகச் செல்லும். கடலிற் செல்லும் பாய்மரக்கப்பல் போன்றது ஆதிக்க உணர்வு. புயலால்ஆட்டமும், கடல் கொந்தளிப்பால் அலைக்கழிப்பும், கடும் இருட்டால் போக்கு வேறுபாடும் ஏற்படும். இந் நிலைகள் அதிகாரத்திற்கும் உண்டு. ஒரு மனிதன் பலரது தன் மானத்தை ஆட்படுத்தும் நிலை அதிகாரத்திற்கு இருப்பதால் அதன் வலிமையை இன்றைய நாட்களில் வரையறுத்து விடுவதுடன் ஒவ்வொரு அதிகார

இந்த மாறும் உலகிலே மறையும் அமைப்புகள்!

மும் தன்னளவில் முற்றிலும் முழுமையான அலங்காரமாக இல்லாமல் ஒன்றோடு ஒன்றைப்பிணைத்து ஒன்றிற்கு ஒன்று மேலானதாக வட்டவடிவமாய்க் கருத்தளவில் இயக்கப்படுகிறது. முகமனாக, மக்களை ஆட்படுத்தும் ஊர்க்காவலர்கள் பலர். ஒவ்வொரு தகுதியினருக்கும் மேல் மேலாளர், சிறப்பு மேலாளர் என்று உண்டு. அமைச்சர் இறுதியில் தலைவராயிருக்கிறார். அந்த அமைச்சர் சட்ட மன்றத்திற்குக் கட்டுப்பட்டவர். சட்டமன்றம் குடியரசுத் தலைவருக்கு ஒரு வகையிலும், வாக்காளர்களுக்கு ஒரு வகையிலும் கட்டுண்டு இருப்பது. வாக்காளர்களும் ஒரு சிறு அதிகாரம் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அது முறைப்படுத்தப் படாது. வெளிப் படையாய்த் தெரியாது. இங்ஙனம் இன்று மன்னர் என்ற தனிமனிதன் ஆட்டிப் படைத்த ஆதிக்க உணர்வு மக்கள் மன்றத்திற்கு மாறி, வரையறைகளோடு நிலவுகிற நிலைமை ஏற்பட்டுள்ளது.

எந்த மனிதனும் எல்லா அதிகாரமும் உடையவனும் அல்லன். அன்றி முற்றிலும் அடிமையானவனும் அல்லன். தத்தமக்கு உரிமையுள்ள அளவிற்குத் தாமே தம்மைக் கட்டுப்படுத்தி நடத்திக் கொள்ளும் பண்பு வளரவேண்டும். வகுப்பு நீக்கல், வகுப்புமுறைகள்; எல்லாம் நீக்கிவிட்டுப் பொது நீதிகள், பொது முறைகள் என்று விரிவான, வளமான மனப்பான்மையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இன்றேல் வளரும் சமுதாயத்தின் விரோதிகள் என்று கருதப்படும் நிலை இன்று உருவாகி வருகிறது. உள்ளத்தில் வகுப்புவெறி, வெளியுலகில் பெருந்தன்மைப் போக்கு என்ற தன்மையும் நாட்டில் அதிகாரம் இலட்சியப் பாதைக்குத் திரும்பும் போது ஒறுத்துவிடும். அதிகாரமின்றி அன்பினால் மட்டும் குறைபாடுள்ள ஒரு சமுதாயத்தைத் திருத்த இயலாது. வரையறுக்கப்பட்ட அதிகாரமே சமத்துவ நிலைக்கான அரசியலை இயக்க வல்லது. இவ்வதிகாரம் யாரிடம் இருந்தால் நல்லது? எப்படியிருந்தால் நல்லது? என்பதைப் பற்றித்தான் இன்றைய உலகு சிந்தித்துவந்து குவியலான அதிகாரப் பகுப்பு தவறானது என்று கண்டிருக்கிறது. எந்த ஒரு அதிகாரத்திற்கும் கட்டுப்பாடு செய்யும் மேலதிகாரமுள்ள ஒரு நெறி இருக்கவேண்டும் என்றும் விரும்புகிறது. மக்களாட்சி மாண்பிற்கு அதுதான் அரசியல் ஒழுக்கமும்; அதிகாரப் பிரயோகத்தில் நாகரிகமும் ஓரளவு ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறார்கள், இத்தகைய "பொதுவொழுக்கம் இல்லாமலிருந்தால் அச் சமுதாயம் கெட்டொழியும், தனிமனித ஒழுக்கம் இல்லாத குடி மக்களுக்கு அவர்களது வாழ்க்கையினால் எந்தப் பயனும், அர்த்தமும் இல்லை, எனவே சமூக நலனுக்குப் பொதுவொழுக்கமும் தனியொழுக்கமும் இன்றியமையாதது என்கிறார் அறிஞர் பெட்ரண்ட் ரஸ்ஸல்.

கட்டுரை-4.

அரசியல் உலகில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படும் என்பது இயல்பு. மன்னருக்கே முழு அதிகாரம் என்றிருந்த நிலைமை மாறி உலகில் எங்கும் மக்களது பிரதிநிதி மன்றங்களைக் கேட்டே அரசர் இயங்க வேண்டும் என்ற நிலை உருவாகிவிட்டது. இது இன்னும் அரசரை வைத்துச் சகித்துக் கொண்டிருக்கும் நாடுகளில் காணப்படுகிற சூழ்நிலை. இதேபோல் ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆட்படுத்தி வரும் கட்டத்தை "ஆதிக்கம்" என்று அழைக்கிறோம். இத்தகைய ஆதிக்கமும் முன்பு இருந்ததைப் போல் இன்று இல்லை. காலனி அல்லது குடியேற்ற நாடுகள் என்ற போர்வையிற் பொருளாதாரச் சுரண்டல் நடத்தி நாட்டுக்குரிய வரலாற்றுப் பரம்பரையினரின் உரிமைகளை மறுக்க இயலாத நெருக்கடி வலிவு பெற்று வருகிறது.

இனமுழக்கம் ஜூலை 15 முதல் தென்னரசு தரும் இரண்டாம் படைப்பு ஆரம்பமாகிறது!

★

★ சேதுக்கரையில் அலைமோதிக்கிடந்த ஏழை வீட்டு அழகி ஒருத்தியின் உன்னதச் சரித்திரம்......

தங்கச்சி மடம்

★ நாற்பதாண்டுகளுக்கு முன்பு இராமனாதபுர மாவட்டத்தில் நிகழ்ந்த சுவைமிக்க காதல் கதை!

ஜூலை 15! ஜூலை 15!

சூழ்ச்சியால் முன்னேறும் சுயநலமிகள்!

உரிமை பறிபோகுது உபன்யாசமேன்?

இனமுழக்கம்

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

மலர் 1] ★ 24—6—60 ★ [இதழ் 42

ஜப்பானில் செங்குருதி

ஜப்பான் மக்கள், சர்க்காரே கண்டஞ்சுமளவுக்கு கொதித்தெழுந்திருக்கின்றனர். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வருகை நிறுத்தப்பட்டு விட்டது. பார்லிமெண்ட் கட்டிடத்தின் முன் அன்றுடம் லட்சக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துகின்றனர். 'அமெரிக்க ஜப்பான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாதே கிஷியே! ராஜினமா செய்' ஹிரோஷிமா நினைவு இன்னும் அவர்கள் நினைவைவிட்டு மாறவில்லை. அணுகுண்டு சோதனையின் விளைவாக இறந்த லட்சக்கணக்கானவர்களின் சந்ததியார் செங்குருதி கொட்டுகின்ற அளவுக்கு நிலைமை நாளுக்கு நாள் மோசமாய்க் கொண்டிருக்கின்றது

ஒரு அயல் நாட்டு ஜனாதிபதியை அழைத்து, அவரும் வர ஒப்புக் கொண்டு அதற்காக ஏற்பாடுகள் எல்லாம்செய்து கடைசி நேரத்தில் பாதுகாப்பு தரமுடியாது என்று போலீசும் பட்டாளமும் கைவிரித்துவிட்டன. அதற்குப்பின் சர்க்கார் என்ன செய்ய முடியும்?

நாமறிந்த மட்டில் ஜப்பான் மக்கள் எப்படி இருந்தார்கள்?, அப்படி இருந்தவர்களா இப்படியானார்கள் என்றெண்ணும்போது உள்ளபடியே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. மன்னர்கள் ஆட்சியை அனுமதித்து.அவர்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு கைக்கட்டி வாய்ப்பொத்திக் கொண்டிருந்த பல நாடுகளை நாம் வரலாற்றிலே சந்தித்திருக்கிறோம்.

என்றாலும் ஜப்பானைப் போல மன்னர்களை மகாதேவர்களுக்கதிகமாக மதித்த நாடு வேறொன்றுமில்லை. அதேபோல் நாட்டுப் பற்றிலும் அவர்களை மிஞ்சபவர்களுமில்லை.

மன்னரையும் நாட்டையும் காப்பாற்ற வேண்டுமென்று வெடிக்கும் குண்டுகளை உடலிலே கட்டிக்கொண்டு, எதிரி கப்பல்களின் புகைப் போக்கியிலே குதித்து, கப்பல்களை நாசமாக்கிய வீரர்கள் மலிந்தநாடு. மன்னர் ஆணையை மீறுவதென்பது, தூக்குத் தண்டனையடைய வேண்டிய குற்றத்துக்குச் சமானம் என்று நினைத்த நாடு அது. எனினும், அந்த மன்னர் இன்று வாய் மூடி மௌனியாய் விட்டார்.

ஹிரோஹிடோ

இவ்வளவு கலவரங்களுக்குப் பிறகும் மன்னர் வாய் திறக்கவில்லை. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வரும்போது சாதாரண உடையிலேபோய் அவரை வரவேற்கும் அளவுக்கு இறங்கி வந்து விட்டார். காலம் அவரை எங்கே கொண்டு தள்ளியிருக்கிறது. முதலமைச்சர் கிஷிதான் பேசுகிறார். கர்ச்சனை புரிகிறார். என் கௌரவம் என்னாவது என்றெல்லாம் கேட்கிறார். "மண்ணாகட்டும்'! ஒரே குரலில் பதில் அளித்துவிட்டார்கள் மக்கள். மக்கள் சக்திக்கு முன்னால் எவ்வளவு சக்தி வாய்ந்த ஆயுதமும் நிற்காது என்பதை மற்ற மன்னர்களுக்கு நாம் சொல்லவில்லை. ஏனெனில் உலக நாடுகளில் மன்னர்கள் தொகை மிக மிகக் குறைவு. ஆகவேதான் ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரம் நடத்தும் மந்திரி சபைகளுக்கே சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். கொடுமை-ஆயுதங்களுக்குப் பின்னாலேயும்,உரிமை—நீதி நல்லவர்கள் நெஞ்சத்திலும் நிறைந்திருக்கிறது.

இவைகள் இரண்டும் நேருக்கு நேர் சந்தித்த ஒவ்வொரு கட்டத்திலும் நீதியும் உரிமையும் கொண்ட நல்ல நெஞ்சங்களே வென்றிருக்கின்றன என்பதை சரித்திரம் ஓயாமல் காட்டிக் கொண்டிருக்கிறது.

ஹிரோஷிமா

இந்தப் பெயர், உலக மக்களின் உயிர் நாடியை உலுக்கிய பெயர். அதற்கு முன் இது எங்கே இருக்கின்றதென்று பலருக்குத் தெரியாது. கை நமச்சல்காரன் கண்ணாடித் துண்டில் கையைச் சொரிந்து கையை ரத்தமயமாக்கிக் கொண்ட நிலைமைபோல் செய்து வைத்திருக்கும் அணுகுண்டை எங்கே போட்டு சோதனை நடத்துவது என்ற ஆராய்ச்சியில் ஹிரோஷிமா என்ற பகுதிதான் கிடைத்தது. அங்கு சோதனை நடத்தியதன் விளைவு. இன்றைய ஜப்பான் மக்களை மிருக உணர்ச்சிக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறது.

மூவர் மாண்டனர். எண்ணற்றோர் பலத்த காயமடைந்தனர். எனினும் கிளர்ச்சி, தீயில் ஊற்றிய எண்ணெயென செந்நாக்கை நீட்டிக் கொண்டு வான்முட்டக் கிளம்புகிறது. ஹகார்டி ஜப்பான் நாட்டில் பட்ட தொல்லைக்குப் பிறகும்—ஜப்பானுக்குப் போவது என்று குடியரசுத் தலைவர் முடிவெடுத்ததும், அப்படியே சொல்லிவிட்டு தாயகத்திலிருந்து கிளம்பியதும், ஜப்பானில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கிளர்ச்சியைப் பார்த்து, 'விருந்தாளிகளே நாங்கள் அங்கு வரமுடியாது; உங்கள் நாட்டில் எங்களுக்கு பாதுகாப்பிருக்காது' என்று மறுப்பதற்குப் பதிலாக, விருந்துக்கு அழைத்தவர்களே, 'இங்கு தயவுசெய்து வரவேண்டாம்; நாங்கள் பாதுகாப்பு கொடுக்க முடியாது' என்று சொல்லி விட்டதென்றால் இரண்டு நாடுகளுக்கும் ஏற்பட்ட சகிக்க முடியாத அவமானமாகும். இந்த நிகழ்ச்சி வரலாற்றிலேயே இன்று தான் காணமுடிகிறது. இன்னும் என்னென்ன நிகழ்ச்சிகள் நடக்குமோ யார் கண்டார்கள். எது எப்படியிருந்தாலும் ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முன் நம் முன்னோர்களுக்கேற்பட்ட அவலநிலையை எண்ணும் இக்கால இளைஞர்கள் நெஞ்சில் அந்த நெருப்பு ஆறுவதில்லை என்பதுதான் இந்த நிகழ்ச்சி காட்டும் படிப்பினை.

தங்கள் அன்புள்ள,

சி. பி. சிற்றரசு

இலக்கியம் :—

சாதல் இனிது

—தென்குமரன்

உயிர்க்கு நீர் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது நம்பிக்கை, மனித வாழ்க்கைக்கு. 'நம்பிக்கையின்மேல் தான் மனிதன் நடக்கிறான்' என்றார் ரஸ்கின் உண்மைதான்; உறங்கினால் நாளை விழிப்போம்' என்கிற நம்பிக்கையால்தான் மனிதன் உறங்குகிறான்! அந்த நம்பிக்கை அவனுக்கு இல்லையென்றால், 'உறங்கும்போதே இறந்து விடுவோம்' என்று தவறாக நம்பினால், பாவம் அந்த உயர்ந்த மனிதன் உறங்குவானா? மனித வாழ்க்கையில் நல்ல நம்பிக்கை எத்தகைய சிறப்பிடம் பெற்றிருக்கிறது!

தென்னகத்தில் புதியதொரு சமுதாய மறுமலர்ச்சி ஏற்படத்தான் போகிறது என்ற நம்பிக்கைத்தானே நம்முடைய பணிக்கு உயிர்நாடியாக இருக்கிறது! அந்த நம்பிக்கை பலன் தருமா? தரும்; நிச்சயம் தரும்! நாம் வாழத்தான் போகிறோம்; உலகம் வியக்கத்தான் போகிறது! நமக்குத் தான் நம்பிக்கை இருக்கிறதே!

இதோ, இந்த 'நற்றிணை'யில் வரும் காவியத் தலைவிதான் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாள், தலைவன் மீது!

முதன் முதலில் அவனும் அவளும் சோலையொன்றிலே சந்தித்தார்கள்; அவன் கண்ணுள் அவள் நுழைந்தாள்; அவள் இதயத்தில் அவன் இடம் பெற்றான்! பிறகு...... பிறகென்ன? அவர்கள் வாழ்க்கைத் தடாகத்திலே காதல் பூத்தது! அவன் அவளுடைய நம்பிக்கையின் உயிர் ஆனான்; அவள் அவன் வாழ்க்கைக்கு உயிர் ஆனாள்! 'அவள் இன்றேல் வாழ்வில்லை!' என்று நம்பினான் அவன்; 'அவரின்றேல் செத்துவிடும் வாழ்வு என்று நம்பினாள் அவள்!

ஆனால் அந்தத் தலைவனோ திருமண முயற்சியில்லாமல் காலத்தைக் கடத்தி வருகிறான்; அது அவனுடைய இயல்பு! தலைவி வருந்துகிறாள்; அது பெண்ணின் பண்பு! ஊராரின் தூற்றல்; சுற்றத்தார் ஐயுறுதல்; தாய் தந்தையரின் தடுப்புச் சட்டம்; தலைவனைக் காணாத நாட்கள்; இவையெல்லாம் சேர்ந்து அவளைக் கொல்லாமல் கொல்லுகின்றது. இந்த நிலையில் வாடுகின்ற அந்த வனிதாமணிக்கு உயிர் நாடியாய் அமைகிறது நம்பிக்கை! 'தலைவர் கைவிடமாட்டார்; அவர் சான்றோர்; சொல் தவறமாட்டார்!' என்ற நல்ல நம்பிக்கைதான், அவளை வாழவைக்கிறது! தோழிக்கோ அவள் நிலை புதிராய் இருக்கிறது!

"ஏனம்மா! அவரை எண்ணி யெண்ணி இப்படி இளைத்து வருகிறீர்கள்? காலம் இப்படியே போனால் ஊர் வாய் சும்மா இருக்குமா? தலைவர் தான் உங்களை மறந்து விட்டாரே! காதலரை நினைத்து நினைத்துத் தனியாளாய் வாழ்ந்தால் அமைதி என்ற கரையைத் தொடமுடியது; பழி என்ற முதலைதான் வாய்பிளந்து நிற்கும்"

தோழி இப்படி ஆயிரமாயிரம் எடுத்துச் செல்கிறாள், தலைவரை மறந்து விடும்படி. அதற்கெல்லாம் தலைவி சொல்லும் பதில் இதுதான்:

"என்னை நாடிவந்த சான்றோரை—எனக்குயிராய் அமைந்துவிட்டவரை—என்-காதல் துரையை நான் விரும்புவது, என் வாழ்க்கையில் கண்ணீரையும் பழியையும் நிரப்பும் என்றால், என் ஆருயிர்த் தோழி! தூக்கம் இல்லாமல் அழுகின்ற சிவந்த கண்களோடு தினமும் வருந்தி மெலிந்து சாவதை நான் விரும்பி வரவேற்கிறேன்! சன்றோர் வாய்மை தவறாதவர்! என் தலைவர் உயர்ந்தவர்; அறிவுடையவர்; சொன்ன சொல் தவறாதவர்;. வானம் பொய்ப்பினும் பொய்யா நாவினர் என் காதலர்! குளிர்ந்த கடற்கரைக்குச் சொந்தமான அவரின் விரிமார்பும் தடந்தோளும் எனக்குத் தான் சொந்தம்! என் இதயத்தில் வாழும் தெய்வமடியவர்! என் நம்பிக்கையே அவர்தானடி!"

தலைவியின் நம்பிக்கைகொண்ட மனநிலையை விளக்குகிறது, புலவர் **அம்மூவனாரின்** இந்த நற்றிணைப் பாடல் :

'நாடல் சான்றோர் நம்புதல் பழிஎனின்
பாடுஇல கலுழும் கண்ணொடு சாஅய்ச்
சாதலும் இனிதே; காதலந்தோழி!
அந்நிலை அல்ல ஆயினும் சான்றோர்
கடன்நிலை குன்றலும் இலர்என்று உடன்
அமர்ந்து
உலகம் கூறுவது உண்டுஎன நிலைஇய
தாயம் ஆகலும் உரித்தே......
தண்ணந் துறைவன் சாயல்மார்பே.'

ஜூலை 3-ந் தேதியிலிருந்து....

மாநகராட்சி மன்றத்திலே காங்கிரசுக்காரர்கள் களவாடியவைகளை காட்டும் கலங்கரை விளக்கமாக உதயமாகிறது.

ஞாயிறு

ஆசிரியர் . சி. சிட்டிபாபு, எம். சி.

விலை 16 காசுகள்தான்

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்.

ஜூலை 17-ந் தேதி இதழிலிருந்து......

நாவலாசிரியர் எஸ். எஸ். தென்னரசு

எழுதும் தொடர்கதை

சட்டம் ஓர் இருட்டறை

விவரங்கட்கு :

ஞாயிறு அலுவலகம்,

5, குப்புமுத்து முதலி தெரு, சென்னை-5.

என். அண்ணாதாசன்,
திருவாரூர்.

கே: தாங்கள் கட்சிக் கொள்கையைப் பற்றி விளக்கி எழுதாதது ஏன்?

ப: கட்சிக் கொள்கைகளைக் காட்டுகின்ற சட்டதிட்ட வெளியீடு நம் தலைமை நிலையத்திலிருக்கிறதே வாங்கிப் படியுங்கள்.

கே. ஆர். கருப்பையா,
அரிகாலன், சென்னை.

கே: அன்புள்ள ஐயா. நமது இயக்கப் பத்திரிகைகளில் எண்களெல்லாம் 1, 2, 3, என்று ஆங்கிலத்தில் வருவதைத் தடுக்க தமிழிலுள்ள க-உ, என்ற தமிழ் எண்களை அச்சிட்டு வந்தால் எத்தனையோ தமிழர்களுக்கு மன மகிழ்ச்சி. செய்வீர்களா?

ப: உங்கள் அறிய விருப்பம் விரைவில் நிறைவேற்றப்படும்.

கே: திராவிடர் கழகத்தின் இன்றைய நிலை என்ன?

ப: இழுத்தப்பக்கம் போகும் நிலை. என்ன செய்யலாம்.

கே: "அரிமா நோக்கு'—என்றால் என்ன?

ப: சிங்கப்பார்வை என்று பொருள்.

என். ஏ. ஷரீப், நரிப்பள்ளி.

கே: 'காபி' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் என்ன?

ப: சொல்லாக்கல் மாநாடு கூட்டி யோசிப்போம்.

—: சி. பி. சிற்றரசு :—

இ. மு. தாசுல்தீன், கேரளா

கே: எனதருமை அண்ணா! மதப் பெரியார்களாகிய முகமது நபி, இயேசு கிறித்து புத்தர் ஆகிய இவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும், மக்களிடம் கொண்டுள்ள தொடர்பு பற்றியும் சிறிது விளக்குங்கள்.

ப: அறநெறி காட்டியவர் புத்தர்; மன நெறி காட்டியவர் கிறித்து; வாழ்க்கை நெறி காட்டியவர் நபி.

ஆர். லூர்துசாமி,
அரக்கோணம்.

கே: தாங்கள் புராணப்புளுகு மூட்டைகளையெல்லாம் அவிழ்த்து உதறுவதாக பத்திரிகையில் தெரிவித்தீரே, அந்த நன்னாளை எப்போது ஆரம்பிப்பதாக உத்தேசம்?

ப: அதற்கு நாள் என்று ஒன்று இருக்கிறது? ஓய்வும், தாளும் கிடைக்கும்போது எழுதித் தள்ள வேண்டியதுதானே.

கே: சிந்தனைச் சிற்பி அவர்களே! மேல் சபை என்றால் என்ன? அங்கு செய்ய வேண்டிய பணி என்ன?

ப: கீழ் சபை செய்வதை மேல் சபை விவாதித்து முடிவு சொல்லும்.

ச. தமிழன்பன், கேரளா.

கே: மத்திய அரசின் கொடுமுடியின் அதிகாரம் வலுத்து, திராவிடத்தின் நிலை சீர்குலைந்து இருக்கின்ற நேரத்திலே—திராவிடப் பெருங்குடி மக்கள் கொதித்தெழ, நமது அண்ணா போராட்டத் தளபதியாகிய தங்களுக்குக் கட்டளையும், என் போன்ற இலட்சக்கணக்கான வீர வாலிபர்கள் கொடியேந்தி அணிவகுத்துச் செல்ல, போராட்டத்திற்கு நாவலர் தலைமை தாங்க, நாகூர் அனிபா விடுதலைப் பண் இசைக்க நாமெல்லோரும் பீடு நடை போடும் நாள் என்று வருமோ? அதன் முடிவு என்னவாக இருக்கும்?

ப: அநேகமாக செப்டம்பரில் இருக்கலாம். முடிவை மேலே பாருங்கள்.

மயிலை. வே. தமிழ்மணி.

கே: பெருந்தகையீர்! தென்னகத்தில் இயங்கி வரும் பல்வேறு அரசியல் கட்சிகளில் எக்கட்சியில் 'களை எடுப்பு விழா' செய்ய வேண்டும்? அவ்வாறு 'களை எடுப்பு விழா' செய்யப்பட்ட பின் அக் கட்சியின் நிலை எப்படி இருக்கும்?

ப: நெல்லுக்குத்தான் விதைக்கிறோம்; ஆனால் களை தானுகை முளைத்துவிடுகிறது. அவைகளை அவ்வப்போது அகற்றவேண்டிய வேலை பொதுவாக எல்லா கட்சிகளுக்கும் ஏற்படுவதுண்டு.

செயசீலன், பெரம்பூர்.

கே: பக்தவத்சலம் பழனிக்குச் சென்று பஞ்சாமிர்தம் சாப்பிட்டாராமே, உண்மையா?



ப: அவர் மாத்திரமா சாப்பிட்டார்? பக்தர்கள் அனைவரும் தான் சாப்பிட்டார்கள். மந்திரி என்றால் பஞ்சாமிர்தம் கசக்குமா என்ன?

கே: பிரான்சு நாட்டை செம்மைப்படுத்திய நெப்போலியன், கார்சிகா தீவிலே பிறந்து, பிரான்சு நாட்டை அரசாண்டு, செண்ட் எலினா தீவிலா மாண்டான்? நெப்போலியனுக்கு ஒப்பிட்டுப் பார்க்கும் முறையிலே தற்கால அரசியல் மேதாவி யாராவது இருக்கிறார்களா?

ப: இன்னும் சில ஆண்டுகள் போனால் தெரியும். இது வரை யாரும் இல்லை.

பிரகாசம், சென்னை-7.

கே: இன்றைக்குள்ள அமைச்சர்களில் அன்னக்காவடி யார்?



ப: இன்றுள்ள அமைச்சர்கள் மாதம் ரூ. 1500 வாங்கிக்கொண்டு எப்படி அன்னக்காவடிகள் ஆவார்கள்? மாஜி அன்னக்காவடிகள் யார் என்று கேளும்:

கே: தங்களைத் தாறுமாறாகத் தாக்கி எழுதும் சில துரோகிகளின் கடிதங்களை ஏன் இனமுழக்கத்தில் போடவேண்டும்?

ப: போற்றுகிறவர்களை விட தூற்றுகிறவர்களைத்தான் அறிமுகப்படுத்த வேண்டும். அவர்கள் யார் என்பதை நம்மவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமல்லவா.

ப. கி. ஏசுடியான்,
பட்டாபி-70.

கே: சிந்தனைச் சிற்பி அவர்களே! நாம் இன்னும் எத்தனையாண்டுகளுக்கு வடவர் குட்டக் குட்ட குனிந்துக் கொடுக்கும் கோழைகளாக இருக்கவேண்டும்? நம்மிடம் பலமில்லையா? வலிவில்லையா? பின் ஏன் தயக்கம்?

ப: புயலுக்கும் போருக்கும் ஒற்றுமையுண்டு. கொடுமைகளைத் தகர்த்தெறியும் அளவுக்கு பலம் சேர வேண்டும். அந்த வேலைதான் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையில் மாபெரும் கல்வி அரங்கம்

KNOWLEDGE IS POWER

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாகத் திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்திசெய்து **9-7-60-ந் தேதி** வரை அனுப்பலாம்

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் **11-7-60-ந் தேதி** முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப்பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம் (3) இங்கிலிஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகப் பயிற்சி அளிக்கப்படும். (4) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விபரங்களையும் எட்டு நயே பைசே (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

நாட்டுப் பிரிவினையே நமது இலட்சியம்

விடுதலை விழா

★ சோ. ர. ★

'விடுதலை' பெற்ற திராவிடத்தில் 'விழா' கொண்டாடப்படுகிறது. அந்த விழா நாளில் நாட்டிலுள்ளோர் நிலையை விளக்கிக்காட்டுகிறது, இந்தக் கட்டுரை.

திராவிடர் தனிபரசு பெற்றுவிட்டனர்; வடவரின் அடிமையாட்சியினின்று விடுபட்டு, 'திராவிடம்' விடுதலை பெற்றுவிட்டது. வீரர்கள் வீதிகள்தோறும் வெற்றி உலா வருகின்றனர். 'அடிமைத் தளையகன்று நாடு நமதாகிறது' என்ற மகிழ்ச்சிப் பெருக்கால் மக்கள் ஏறு நடை போடுகின்றனர். பெண்டிர், தோரணங் கட்டி, கோலமிட்டு, வீடுகள்தோறும் அலங்கரித்து வைத்திருக்கின்றனர். ஊரெங்கும் புத்தொளிபரவி நிற்கிறது.

சென்னைத் திருநகராம் தலைநகரில் வாழ்த்துக்கள் முழக்கியவாறு மக்கள் அணிவகுத்துச் செல்லுகின்றனர். இன்னிசை முழக்கங்கள் காதுகளைத் துளைக்கின்றன. ''திராவிட நாடு திராவிடருக்கே'' என்று முன்பு சொன்ன கொள்கை முழக்கங்கள் மாறி, ''திராவிடம் பெற்ருேம்; தனியரசு கண்டோம்;- திராவிடம்வாழ்க! நம்நாடுவாழ்க!' என்று கூறும் மக்களின் வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளக்கின்றன.

திராவிடத்து மண்ணை மிதித்த பகைவர்களை நாம் களத்தில் சந்திக்கவில்லை; நாம் நம்மில் எவரையும் பலி கொடுக்கவில்லை. இன்று நம் தனிநாடு பெற்றதற்கு ஒரு சொட்டு இரத்தமும் சிந்தவில்லை. போரில்லாமல்—பகைவருடைய எதிர்ப்பு சக்திக்கு எவரையும் பலிகொடுக்காமல்—துன்பப்படாமல்- தோல்வியுருமல் வெற்றிகண்டோம். நாடு பெற்ருேம்.

இன்று நாடே விழாக்கோலம் பூண்டிருப்பதற்குக் காரணம் என்ன? நாம் காண்பது கனவா? மாற்ருர் கனவென்று கூறினரே, அது மெய்யா? போர் முழக்கங்களின்றி திராவிடப் பொன்னுடு தன்னுட்சி கொண்டு விளங்குவது எதனுல்? யாருடைய முயற்சியால் இந்நிலை அடைந்தோம்? எவர் நம் பெருமைக்குக் காரணம்?

இவைகளைப் பற்றி ஒருவரும் சிந்திக்கவில்லை. சிந்திக்கவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை, களிப்புமிகுதியான காரணத்தால்.

வெற்றிக் களிப்பால் மக்கள் தங்களையே மறந்தவர்களாய்விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றனர். ஒவ்வொருவரும் தங்களையே விடுதலை வீரர்களாய்—திராவிடப் போர்ப் படைத் தலைவர்களாய் எண்ணி அவரவர் தம் களிப்பில் ஆழ்ந்திருந்தனர்.

''துப்பாக்கி முன் நின்ருயா? தடியடி பட்டாயா? சொல்! விழுப் புண் ஏற்ருயா? எம்முறையில் போரிட்டாய்? எதிரியின் வெடிக் குண்டு உனக்கு அச்சத்தைத்தரவில்லையா?'' என்ற இம்மாதிரியான பேச்சுக்கே அங்கு இடமில்லை.

நம்முன்னேர் ஆண்ட நாட்டை மீண்டும் பெற்றிட்ட குதூகலத்தால் திராவிடர் கேளிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இல்லங்கள்தோறும் கூரைகளின் உச்சியில் இருவண்ணக் கொடிகள், கம்பங்களில் பட்டொளி வீசிப் பறக்கின்றன.

நாட்டைத் துண்டாட விடமாட்டோம்; பிரிவினை வாதிகளின் பேச்சை ஏற்கமாட்டோம்; இவர்களிடம் உறுதியான கொள்கை உண்டா? இவர்கள் பண்டாரங்கள்—பகற்கனவு காண்கிறுர்கள்'' என்றெல்லாம் கூறித் திரிந்த ஆளவந்தார்கள், அவர்களாகவே முன்வந்து பிரிவினைக் கொள்கையை ஏற்றுக்கொண்டு நாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஒப்படைத்துவிட்டு அகன்றுவிட்டனர்.

நம் வளர்ச்சி கண்டு ஏசியோரும், பேச்சிலுள்ள நற்கருத்துக்களைக் கேட்டுப் பொருமைப் பட்டோரும், நம் புகழ் கேட்டு பொறுக்கமுடியாதவர்களும், நமக்குப் பெர்ல்லாங்கு தேட நினைத்தோர் அனைவரும் இருக்குமிடம் தெரியாமல் மறைந்திருக்கின்றனர்.

''வகையுண்டா? ஆளத் திறனுண்டா? என்று கூறியோர் நமக்கு வழிவிட்டு ஒதுங்கி விட்டனர்.

வழிவழியாக நாம்தான் ஆட்சிப் பொறுப்பை வகிக்கத் தகுதி படைத்தவர்கள் என்று இறுமாந்திருந்தவர்கள், இன்று ''ஆண்டதுபோதும்''—இனி அவர்களே ஆளட்டும்'' என்று கூறி நம்மிடம் அரசை ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற்றுவிட்டனர்.

''தனியரசு விழா முழக்கங்கள் தணியவில்லை'' தொடர்ந்து ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

மக்கள் கூட்டத்தில் மற்ருெரு பகுதியினர் நிலைமை வேதனைக்குரிய காட்சியாகிவிட்டது. ஒருபுறம் மகிழ்ச்சி. மறுபுறம் மருட்சி!

கள்ளவழிகளில் செல்வம் திரட்டிக் குவித்து வைத்திருப்போர் திகிலடைந்து தலையில் கைவைத்துக் கொண்டு விழிக்கின்றனர்; ஆம்-ஏய்த்துப் பிழைத்தவர்கள் இனி, யாது செய்வதென்று புரியாமல் மிரள மிரள விழிக்கின்றனர்.

சாதிப் பெயரைச் சொல்லி உயர்வு தாழ்வு கற்பித்து வந்த கூட்டம் பதுங்க இடமின்றி தவிக்கின்றது.

இந்தி வெறியர்கள், இனி இருப்பதற்கு தமிழகம்இடந்தராதெனக் கருதி மருண்டு உறைவிடம் தேடி வடக்கே செல்ல முனைகின்றனர்.

வடக்கிலிருந்து இங்குபிழைக்க வந்தக் கூட்டம் தமிழர்களிடம் சுரண்டிச் சேகரித்த பெருஞ்செல்வத்தை இனி வடக்கே கொண்டு செல்வது எப்படி என்று திகைத்துக் கொண்டு தடுமாறி நிற்கிறது.

தொழிலாளர்களின் வயிற்றிலடித்து அவர்களின்உழைப்பினுல் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்த முதலாளிகள் கூட்டம் மூலைதேடி முக்காடிட்டுக்கொண்டது.

பட்டை நாமம் தீட்டியோரும், பகல் வேடமிட்டுத் திரிந்தவர்களும், கொட்டை கட்டியகோயில் பெருச்சாளிகளும், போலிப் புராணங்களைச் சொல்லி ஊரை ஏமாற்றியோரும், மத வெறியர்களும், மடத் தம்பிரான்களும் அவரவர் தமது தொழிலுக்கு ஏற்படப்போகின்றஆபத்தைஎண்ணி மருட்சி கொள்கின்றனர்.

கோயில்களில் ஆண்டவனுக்கு நடைபெறுகின்ற பூசை தடைபடுகிறது; மணியோசை நின்றுவிடுகிறது. பூசாரிகள் பூனூலை உருவிக்கொண்டு முணுமுணுக்கின்றனர்.

அன்று, ''தமிழ்நாடு என்று பெயரிடத் தவறிய தமிழ்ப் பகைவர்கள் திராவிடத் தலைவர்களிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றனர்.

வண்டியிழுத்து வியர்வை சிந்த உழைத்த தோழர்கள் — அரை வயிற்றுக் கஞ்சிக்காக அல்லல் பட்ட ஏழைமக்கள் உள்ளத்தில் புது ஆர்வம் பொங்கி வருகிறது.

குடிசை வாழ்வோரும், கூலிக்கு உழைத்தவரும், குடிக்க கஞ்சியின்றி வாடியோர்—குடல் கருகிப் பட்டினிக்கிடந்தோர்—வேலையின்றி தவித்தோர் எல்லாம் விழாக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

தமக்கென் சொந்த மண் கிடைத்துவிட்ட பூரிப்பால் உழவர்கள் உவகை கொள்கின்றனர்.

மாணவர் பட்டாளம், திராவிடரின் ''விடுதலை விழா'' குறித்து புதியதோர் வரலாற்றுப் பாடத்தைக் கற்கப்போகிறேம் என்ற பெருமையால் பள்ளி மன்றங்களில் கூடி பெருவிழா நடத்துகின்றனர்.

ஆட்சி பீடம் எமக்கே சொந்தமென்றெண்ணியிருந்த கூட்டத்தார்,

''பகுத்தறிவுக் கூட்டமாம் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் வழி நிற்போம்: தனிஅரசு பெற்றதில் எமக்கும் பங்குண்டு; பதவிவேண்டாம்—புகழ் வேண்டாம்; இதுவரையில் புத்திகெட்டு அதிகார ஆணவத்தால் செய்த அக்கிரமங்கள் போதும் திராவிடர் துரோகிகளாக மாறினேம் என்ற பழியை ஏற்கமாட்டோம் அடிமைத்திருநாட்டை மீட்டிட்ட பெருமையில் எங்களுக்குப் பங்கு இல்லாமற் போனுலும், இனி எங்கள் ஆயுட்காலம் வரையில் திராவிடரின் நல்வாழ்வுக்காக உழைப்போம்; இது உறுதி'' என்று கூறி கண்ணீர் வடித்து நிற்கின்றனர்.

புறப்படு தளையறுக்க!

(வெண்ணெய் வேலன்)

வானெலியை ஆகாச வாணி யென்று
வடநாட்டான் தமிழர்களைத் தாழ்வென் றெண்ணி
ஆணவத்தால் ஆட்சிசெயும் செறுக்கால் இங்கு
அழைக்கின்ருன் அய்யய்யோ தமிழர்க் கிங்கு
மானமெனும் நல்லுணர்வு மறைந்து போச்சா
மணம்மிகுந்த தமிழ்மொழிதான் மங்கிப் போச்சோ
ஈனர்குல வடவரசை எதிர்க்க இங்கு
இருக்கின்ருேர் தொகையென்ன குறைந்தா போச்சு?

கொட்டகொட்ட குனிந்துதலை சொட்டை யாகி
குதிரையின்மேல் ஏறிடினும் தமிழா நீயும்
துட்டமனம் கொள்ளாத தகைமைக் கண்டும்
துன்புறுத்தும் கயவர்க்குப் பாடங் காட்ட
விட்டகுறை தொட்டகுறை முடிக்க வேண்டி
வீரமுடன் அடலேருய் எழுச்சி யுற்று
கெட்டமனங் கொண்ட வடவாட்சி தன்னைக்
கொட்டிகொட்டிப் படுகுழியில் சேர்ப்பாய்த் தோழா!

''வடக்கிற்குத் தெற்கென்ன குறைந்தா போச்சு
வளத்தினிலே தொழில்துறையில் வளருந் தெற்கு
கிடக்கவில்லைக் கீழான நிலையில்'' என்று
கிஞ்சிற்றும் உளத்தினிலே உணர்ச்சி யின்றி
வடக்கிற்கு வால்பிடிக்கும் அமைச்ச ரெல்லாம்
வாயிற்கு வந்தபடிப் பேசிப் பேசி
வடக்கிற்கே சாதகங்கள் பலசெய் கின்ருர்
வளர்கிறது வடக்கங்கே வளங்கள் பெற்றே !

பொன்னுன வாழ்வமைத்து வாழும் வீட்டில்
பொல்லாதோர் இடைபுகுந்து கெடுத்தல் போல
கண்ணுன திராவிடத்தின் கண்ணைக் கொய்ய
கண்ணிவைத்து விட்டார்கள் இந்திப் பேய்கள்
எண்ணுத எண்ணமெலாம் எண்ணு கின்ருய்
எழுச்சியிலை உள்ளத்தில் அதனைத் தீர்க்க
பெண்ணேநீ பெருமையுடைத் தமிழா ! வெட்கம்
புறப்படடா தளையறுக்கப் புலியாய் இன்றே !

மக்களுக்கு மக்களினுல் ஆளும் ஆட்சி
மக்களுடை சொத்துஎனில் நமது எண்ணம்
பொக்கையுடை நம்வாழ்வு நமது நாடு
போற்றுகின்ற தமிழ்மொழியும் உரிமை யெல்லாம்
தக்கதொரு நன்முறையில் மிளிரல் வேண்டும்
தமிழகத்தீர் இதை யுணர்வீர் இந்நாள் தன்னில்
பிக்குடையோம் வடநாட்டான் பிடியில், இஃதைப்
பிய்த்தெறிவோம், பெற்றிடுவோம் வெற்றி அன்றே!

கொஞ்சநஞ்சம் வாழ்கின்ற வாழ்வில் மண்ணைக்
கொட்டிடவே சதித்திட்டம் வடக்கில் நன்ருய்
நஞ்சுடலில் ஏறுதல்போல் ஏற்றம் பெற்று
நம்மைவந்து தாக்குதடா நலிவே மிச்சம்
தஞ்சமென இனிநீயும் உறங்கி வாழ்ந்தால்
தமிழ்சாயும தென்னகத்தின் வாழ்வு சாயும்
கொஞ்சமும்நீ அஞ்சாதே கொடுமை தன்னைக்
கொன்றிடவே கொதித்தெழுவாய் வெற்றி
காண்பாய்!

ஆணவமே !

உன் பெயர்தான் அளகேசனு?

'' தி. மு. க. வோடு மோது!''—இதுதான் இன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரின் பேச்சல்ல-கட்டளை. அப்படியானுல் நம்முடைய தோழர்களை, நாள் கூலிக்காக நித்த நித்தம சித்தமிழந்து கிடக்கும் காங்கிரஸ் காலிகள் தீவிரமாகத் தாக்குவார்கள் என்பது பொருள். இத்தகைய தூண்டிவிடும் குற்றத்தைத் தீவிரமாகச் செய்திருக்கிறு , செங்கற்பட்டுச் சில்லறை !

ஆட்சியிலிருப்போரே!

'அளகேசனின் ஆணவப் பேச்சுக்கு நீங்கள் அளிக்கப்போகும் தீர்ப்பென்ன?' என்று, மக்கள் மன்றம் கேட்கத் தொடங்கிவிட்டது! இதன் முடிவு?

பழம் பெருமை பேசாதீர்

பொதுக்குழு தீர்மானங்கள் :

தமிழ்நாடு என்று பெயரிடுக !

சென்னை மாநிலத்துக்குத் ‘தமிழ்நாடு என்று பெயரிடுமாறு எல்லாக் கட்சியினரும் கோரியும், தமிழக மக்களின் ஒருமித்த வேண்டுகோளை இந்த மாநில அரசு இதுகாறும் அலட்சியப்படுத்திவருவதை இப்பொதுக் குழு மீண்டும் வன்மையாகக் கண்டிப்பதுடன், சென்னை மாநிலத்துக்குத் ‘தமிழ் நாடு’ என்று உடனடியாகப் பெயரிடுமாறு ஆட்சியாளர்களை இப்பொதுக்குழு மீண்டும் வற்புறுத்துகிறது.

இந்திய எல்லைப் பிரச்சினை

எந்த வல்லரசுடனும் கூட்டுச் சேராமல் உலக அரசியலில் இந்தியா நடுநிலைமை வகித்து வந்தும், உலக அரங்கில் சீனாவுக்காகப் பலமுறை இந்தியா வாதாடி வந்திருந்தும், இந்திய—சீன நட்புறவு கெடும் வகையிலும், இந்தியத் துணைக்கண்டத்து மக்களுக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கும் வகையிலும் இந்திய எல்லையின் சில பகுதிகளில் சீனா புகுந்து, ஆக்கிரமிப்புக்கான குழப்ப நிலையை உண்டாக்கியிருப்பதை இப் பொதுக் குழு கண்டிப்பதுடன், இந்தச் சச்சரவை அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலம் இரு நாட்டு அரசியல் பொறுப்பில் இருக்கும் தலைவர்கள் தீர்த்துக் கொள்ள இருப்பதை வரவேற்பதுடன், இந்த நல்லுறவு முயற்சி வெற்றி பெற வேண்டுமெனவும் இப்பொதுக் குழு விரும்புகிறது.

பாரிஸ் உச்சக்கட்ட மாநாடு

பாரிசில் கூடிய உச்சக் கட்ட மாநாடு முறிந்தது குறித்து இப்பொதுக் குழு வருந்துவதுடன், போருக்கான சூழ்நிலையை ஒழித்து, நிடித்த அமைதி காணவும், ஆக்கப் பணிகளில் ஈடுபடவும் உலக வல்லரசுத் தலைவர்கள் மீண்டும்கூடி ஒரு அமைதி உடன்பாடு காண வேண்டுமென இப் பொதுக் குழு விரும்புகிறது.

பாராட்டு

கடந்த 5 ஆண்டுக் காலமாகப் பொதுச் செயலாளராகவும் பொறுப் பேற்று, இடையருப் பணியினால் கழகத்தை வலிவும், வளர்ச்சியும் பெறச் செய்த திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகிய இருவரையும் இப்பொதுக் குழு பாராட்டுவதோடு, கழகம் வளர, கழகக் கொள்கைகளையும் நோக்கங்களையும் மக்கள் நன்கு அறிய நாட்டங்கொண்டு நாடாளும் ஆட்சியினரின் அடக்கு முறைக்களாகி, இன்னல்கள் பல ஏற்று, கழக ஆக்க வேலைகளில் ஏற்படுகின்ற இன்னல்களைத் தாங்கிச் செயல்பட்டு, கழகத்தை நல்ல முறையில் இயங்கப் பணியாற்றியது குறித்து இப்பொதுக் குழு அவர்களைப் பாராட்டி ஒரு மனதாக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

ஊர்ந்தது உயர்ந்தால்

டி.கே.சீனிவாசன்

அப்போதுதான் தன்னை யாரென்று தெரிந்து கொண்ட மனிதன், தன் அழகைப்பற்றி அளவுக்கு மீறி வர்ணித்துக் கொண்டு போவதை வியப்போடு கவனித்தாள் அவள். இருந்தாலும் அவள் உள்ளத்தில் ஒருவித நெகழ்ச்சிஏற்பட்டது இன்னும் கொஞ்சம் கேட்போமா அல்லது இத்தோடு முடித்துக் கொள்ளச் சொல்வோமா என்ற இடைநிலையில் இருந்து தவித்தது அவள் மனம். இரவுவளர்ந்து கொண்டு போவது அவளுக்கு அச்சத்தை உண்டாக்கிற்று.

“இன்று நேரமாகிவிட்டது; இன்னொரு முறை சந்திக்கும்போது பேசிக்கொள்ளலாம்” என்றாள்.

“ஆமாம். நான்கூட கவனிக்கவில்லை. வா, போகலாம்” என்று கூறிக் கொண்டே கடக்கத் தொடங்கினான் ஆறுமுகம்.

இருவருடைய மனங்களிலும் திகைப்பிருந்தது; தெளிவடைய முடியாதபடி எண்ணங்கள் அலைமோதிக்கொண்டிருந்தன.

“உன் பெயரைச் சொல்லவில்லையே!”

“என் பெயரா? கீதா!”

“அழகான பெயர். இரண்டேஎழுத்துக்கள்! எவரும்எளிதில் சொல்லிவிடலாம்”

முத்துப் பெட்டகத்தை லேசாக அசைத்தாள் அவள்; ஒலிகள் உதிர்ந்தன.

“பெயர் நீளமாயிருந்தால் என்ன?”

“சினிமாக்காரர்கள் அதை மாற்றி விடுவார்கள்; இப்போது இதே பெயரில் நடிக்கலாம்”

“இத்தனை நேரமாக என்னைச் சினிமாவில் சேரவா சொல்லிக் கொண்டிருந்தீர்கள்?”

“ஆமாம். ஏன் உனக்கும் அது பிடிக்கவில்லையா?”

“இல்லை...என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்களா என்றுதான்...’

‘‘சேர்த்துக்கொள்ளக் காத்திருக்கிறார்கள். உன்னைப் போன்ற குமரிகள் உள்ளே நுழைந்தால்தான் கூனல் விழுந்தவைகளுக்கு விடுதலை கிடைக்கும்”

“நீங்கள் ஏதாவது படக்கம்பெனியில் வேலை பார்த்திருக்கிறீர்களா?”

“படக் கம்பெனிக்காரன் உன் அழகைப் பார்த்துவிட்டு அழைத்துவர என்னை அனுப்பியிருக்கிறான். எண்ணிப் பத்து நாட்கள்...கழிந்தால் நீ ஒரு நட்சத்திரம்! பிறகு இதுபோல தனியே வரமுடியாது”

“இப்போதுந்தான் வர முடியவில்லையே.’’

இதற்குள் அவள் வீடு வந்தது. அடுத்த நாள் வருவதாகக் கூறி ஆறுமுகம் விடை பெற்றுச் சென்றான்.

அவளை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தாள் கீதாவின் தாய். கொட்டகையில் நடந்த குழப்பம் அவளுக்கு எட்டிவிட்டது. நேரமானதற்கு ஏதோ ஒரு சமாதானம் கூறித் தப்பித்துக்கொண்டாள் கீதா.

படுத்தவள் புரண்டுகொண்டிருந்தாள். உறக்கம் அவளை விட்டு ஓடிப்போய் விட்டதைப் போலத் தோன்றிற்று. மலர்களை உதிர்த்துவிட்டதைப்போல அவன் மனதில் மணம் நிறைந்த இதழ்கள் சிதறி விழுந்தன. முள்ளும் இல்லை—காம்பும்இல்லை! மெருகும் மென்மையும் நிறைந்த இதழ்கள்!

பெண்மை! அது மலர்வதற்குக் காரணமே அதைப் பற்றி அதிகமாக நினைவூட்டுவதால்தான்! உள்ளத்தில் சூடு ஏற ஏற உடல் நெகிழ்ந்து விடுகிறது. அதேபோலத் தான் ஒரு பெண்ணின் உள்ளத்தில் வேட்கைகளும் விருப்பங்களும் வேர் விடுவதும், சிறிதளவு ஏதேனும் மனதில் நுழைந்து விட்டாலே போதும். அதுவாகப் பாதி வளரும்—அவளாகப் பாதி வளர்த்துக்கொள்வாள். எப்படியோ பெரிதாகிவிடும். பிறகு இவள் வளர்த்துக் கொண்டதற்கே அடிமையாகி அதற்கு அடக்கமாகிவிடுவாள். ஆணிடம் அறிவை வளர்த்துவிட்டார்கள்; பெண்ணிடம் உணர்ச்சிகளின்உறைவிடமான மனதை வளர்த்து விட்டார்கள். இருவரிடமும் இரண்டையும் வளர்த்திருந்தால்குடும்பத்தில் உருவாகும் எத்தனையோ தொல்லைகள் குறைந்துவிடும்!

11

கண்டதும் தோன்றுவதற்குப் பெயர் காதலல்ல, உடற் கவர்ச்சி என்று சொல்லுவார்கள் விஷயந் தெரிந்தவர்கள் பளபளப்பான உருவததைப் பார்த்துவிட்டு மனதைப் பறிகொடுத்து விட்டேன் என்று நினைப்பவர்களுக்கு ஒரு விஷயம் கவனத்துக்கு வருவதில்லை. பளபளப்பு எங்கெங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெங்கெல்லாம் அவர்கள் உள்ளமும் பாயும். அழகைக் காதலிப்பவனுக்கு ஆளைப் பற்றிய கவலை எப்படி ஏற்படும்? அழகு எந்தப் பொருளிலும் தனக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவதில்லை !

யாராவது ஒருவருடைய ஏதாவது சில நடவடிக்கைகள் நமக்குப் பிடித்துப் போகின்றன. அப்போது பிறக்கிறது அன்பு. அதே நடவடிக்கைகள் தொடர்ந்து நம் வாழ்வில் குறுக்கிடும் போது நட்பு உருவாகிறது. அந்த நடவடிக்கைகளைச் சந்திக்கா விட்டால் என்னவோ போலத் தோன்றும் போதுதான் அது காதல் என்ற பெயரை அடைகிறது.

அந்தத் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் கீதாவும் ஆறுமுகமும் சாய்ந்து கிடந்தனர். மாலை நேரத்துக் கென்று ஒதுக்கப்பட்ட நேரம் இன்னு கடக்கவில்லை. அதற்குள் நிலாவுக்கு ஏதோ அவசரம் வந்துவிட்டது. வானத்துக்குப் பொட்டிட்டது போல வட்டமாகப் பதிந்திருந்தது. தனி மனிதர்கள் உதிரியாக அங்கொருவர் இங்கொருவராக அமர்ந்திருந்தனர். வேடிக்கையை அனுபவித்துக் கொண்டிருந்தவர்களும், வேதனைக்கு விடைகொடுத்தனுப்ப முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவர்களும், வேலையற்று நேரத்தைப் போக்க அங்கே வந்தவர்களுமாக இருந்தனர், அந்த உதிரிகள். காதல் ஜோடிகள் உலகத்தின் கண்கள் மூடிவிட்டன என்ற எண்ணத்தால் இதயம் பூரித்து ஏதோதோ பேசிக் களித்துக் கொண்டிருந்தனர். குடும்பஸ்தர்கள் தங்களோடு ஒருகூடாரத்தையே அங்கே கொண்டு வந்து, எதுவும் சிந்திப்போகாமலும் சிதறிப்போகாமலும் காப்பாற்றுவதிலேயே நேரத்தைச் செலவிட்டனர்.

எதைப்பற்றியும் கவலைப் படாமல் வானொலிப் பெட்டி கதறிக் கொண்டிருந்தது. இந்த வேடிக்கையைப் பார்க்கக் கொடுத்து வைத்தவர்கள் நாங்கள்தான் என்று அங்கிருந்த செடிகொடிகள்சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தன. இடையில் புகுந்து உலாவிக் கொண்டிருந்தது மென் காற்று.

அந்தப் புற்றரையில் எதிரெதிராகப் பார்த்துக்கொண்டு படுத்திருந்தனர் கீதாவும் ஆறுமுகமும்.

“இன்னும் ஐந்து நாட்கள் தானே இருக்கின்றன, கீதா. அதற்குள் முடிவுசொல்லியாக வேண்டுமே” என்றான் ஆறுமுகம்.

“ஐந்து நாட்கள் என்று சுருக்கமாக ஏன் சொல்லுகிறீர்கள்? நூற்று இருபது மணிகள்... ஏழாயிரத்து இருநூறு நிமிடங்கள்...ஒவ்வொரு நிமிடமும் புதிய புதிய எண்ணங்களை உண்டாக்குகிறது; ஒவ்வொரு மணியும் ஏதாவது ஒரு சிக்கலை உருவாக்குகிறது; ஒவ்வொரு நாளும் என் மனம் குழம்புகிறது. ஏன்? சிறிது நாட்கள் ஒத்திப் போட்டால் என்ன?’’

“ஒத்திப் போடுவதா? சினிமா உலகம் எதையும் சுடச்சுட விழுங்குவதில்தான் கவனம் செலுத்தும். ஆறிப் போனது எதையும் அகற்றி விடும்”

“சூடாகச் சாப்பிட்டு விட்டு, பிறகு குடலைப் புண்ணாக்கிக் கொள்ளும்! அப்படித் தானே?”

குரல் எழுப்பாமல் சிரித்தாள் அவள்.

“ஏன்? சினிமாவில் சேர உனக்குப் பிடிக்கவில்லையா?”

“பிடிக்கவில்லையா! எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் சினிமாவில் சேர்ந்தால் கெட்டுப் போவார்கள் என்று சொல்லுகிறார்களே !”

“சேரா விட்டால் கெட்டுப் போகமாட்டார்களா? கெட்டுப் போனவர்கள் எல்லோரும் சினிமாவில் சேர்ந்தவர்கள் தானா?”

“நல்ல கேள்வி ! சாவு எங்கே இருந்தாலுந்தான் வரும் என்று யாராவது சமுத்திரத்தில் குதிப்பார்களா?”

“உன்னை நான் சாகச் சொல்லவில்லை, கீதா! வாழச் சொல்லுகிறேன். கலையுலகம் கடவுளைப் போன்றது. நல்லவை தீயவை என்று நாம் பிரித்து வகுத்திருக்கிற பண்புகளுக்கு அப்பாற்பட்டது. உணர்ச்சிகள் உடலிலிருந்து பிரிந்து தனியே இயங்கும்; உடலைப்பற்றிய கவலையே அங்கே இருக்கக்கூடாது.”

“உடல் இல்லாவிட்டால் உணர்ச்சிகள் எப்படி உண்டாகும்.’!

“களிமண் பிள்ளையாரானவுடன் கையெடுத்துக் கும்பிடத்தொடங்குவதில்லையா, அதுவரை அதைக் காலால் மிதித்தவர்கள். அதேபோலத் தான்! கலையுலகில் கால்வைத்தவுடன் மற்ற அத்தனையையும் கரைத்துவிடவேண்டும்!’!

தலைகுனிந்து புற்றரையைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த அவள் தலையை நிமிர்த்தினாள். நீண்டு கிடந்த உடல் ஓரளவு சுருண்டது; நாகம் படமெடுத்தது போல் அவன் தலை நின்றது.

“நீங்கள் என்னை நடிக்கக் கூப்பிடுகிறீர்களா?... அல்லது—நாசமாக்க அழைக்கிறீர்களா?”

ஒவ்வொரு சொல்லும் அவனை அதிரச்செய்தது. உடனே மகுடிஊதத்தொடங்கினான் ஆறுமுகம்.

“நாசமாக்காமல் பாதுகாக்கத்தான் நானிருக்கிறேனே, கீதா!”

“என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டு எப்போதும் காவல் காப்பீர்களா?”

“ஆமாம்! அதுவுந்தான் என் மனதில் இருக்கிறது. கீதா! நானே உன்கணவனாகி விட்டால் காவலுக்குத் தனி ஆள் நியமிக்கவேண்டிய தேவையே இல்லை! நீ நட்சத்திரம்—நான் உன்னை தவழ விட்டிருக்கும் வானம்! தவறிக் கூட கீழே விழுந்துவிடாமல் இந்த வானம் தாரகையைப் பற்றிக்கொண்டிருக்கும்.’’

கலையும்-காவலும்! கீதாவின் தலை தாழ்ந்தது. முகம் நாணத்தை நாணுனுக்கிக் கொண்டது. அவளுடைய கொவ்வை இதழ்களில் குருதி புதிதாகப் பாய்ந்து ஒருவித குறுகுறுப்பை உண்டாக்கிற்று. விழிகள் சிவந்தன. எதிரே இருக்கும் அவன் என்ன ஆனான் என்பதைக் கவனிக்கப் பார்வையை நிமிர்த்தினாள். இந்தப் பரிசோதனைப் பொருளைப் பரிசீலனை செய்துகொண்டிருந்தான் அவன். தட்டிவிட்டதைப்போல தன்னாலே கீழே விழுந்தது அவள் பார்வை.

“நீங்கள்...என்னை...’’

“ஆமாம், கீதா! நான் உன்னை என் மனைவியாக்கிக் கொள்கிறேன். என்னை உனக்குப் பிடிக்கவில்லையா?”

அவள் பதில் சொல்லவில்லை; நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். முகம் குழைந்து காணப்பட்டது; உடலில் இருந்த முறுக்கெல்லம் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்துகொண்டே வந்தது; நரம்புகள் நைந்துபோய் விழுந்துவிட்டன.

தோட்டத்தில் இருந்தவர்களில் எத்தனையோ பேர் எழுந்து சென்றுவிட்டனர். மிச்சம் இருந்தவர்களும் ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர்; சிறிது நேரத்தில் மனித உருவங்கள் அத்தனையும் மறைந்து போயின.

நிலவு ஒளி வீசிற்று-காற்று நடனமாடிற்று-செடி கொடிகள் தாளம்போட்டன. புள்ளினம் இசையெழுப்பின. எழுந்துபோகும்வரை அவர்கள் இருவரும்வாய்திறக்கவேயில்லை.

தெருவில் நடந்துசென்றபோது கீதா அவனுடைய அவளாகவே நடந்துகொண்டாள்.

“ஆகவேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு வருகிறேன், கீதா. முதலில் உன் வாழ்வில் நறுமணம்; தொடர்ந்து நம்முடைய திருமணம்’’ என்றான் ஆறுமுகம்

“அக்காளுக்குஇதைத்தெரிவிக்க வேண்டாமா?” என்று கேட்டாள் கீதா.

“உன்அக்காளுக்கா? இதை அவள் அனுமதிக்கவே மாட்டாளே!”

‘‘ஏன்?’’

“சொன்னால் உனக்குப்புரியாது.’’

“என்ன அப்படிப்பட்ட விஷயம்? என்னிடத்தில் சொல்லமாட்டீர்களா?’’ என்று குழைந்தாள் அவள்.

“சொல்லக்கூடாத விஷயம் அது, கீதா! அதெல்லாம் உன் காதுகளில் விழக்கூடாது.’’

“விழுந்தால் என்னவாம்?’’

“வெம்பிப் போவாய்; வேதனை உன்னை வேகச் செய்துவிடும்; அவளுக்குஒருநங்கை என்று நினைக்கவே அருவருப்படைவாய்.’

சந்தேகத்துக்கும் சஞ்சலத்துக்கு மிடையே சஞ்சரிக்கத் தொடங்கியது அவள் உள்ளம். மலைஉச்சிக்கு அவன் தன்னைஅழைத்து போகிறான் என்பது அவளுக்குப் புரிந்ததுஅங்கிருந்து ஆபத்தான பள்ளத்தாக்கை எட்டிப்பார்க்கச் சொல்லப் போகிறான் என்பதையும் உணர்ந்தாள்.

நெஞ்சை நடுங்கச் செய்யும் ஒருநிசழ்ச்சியைக் கொஞ்சங் கொஞ்சமாகஉருவாக்குவது கொடுமையின் விளைவா அல்லது கோழைத்தனமா என்பதை அவளால் நிர்ணயிக்க முடியவில்லை.

“அப்படி ஒன்றும் அருவருப்படையும்படி என் அக்காள் நடந்து கொள்ளமாட்டாள். அத்தான் மிகவும் கடுமையான கோபக்காரராம்; அதனால்தான்அவளை நாங்கள் சந்திக்கமுடியாமல் போய் விட்டதாம்; அப்படித்தான் என்னுடைய அம்மா சொன்னார்கள்.’’

அலட்சியமாகச் சிரித்தான் ஆறுமுகம். ஏதோ சொல்ல வேண்டும்போலத் தோன்றியது அவனுக்கு ஆனால் அப்போது அதைச்சொல்லுவது அவ்வளவு நல்லதாகாது என்று நினைத்தான். ஆகையால் அதற்குமேல் எதையும் தொடராமல் நிறுத்திக் கொண்டான்,

தான் சொன்ன விவரங்களை அவன் ஏற்றுக்கொண்டானா என்பதைத் தெரிந்து கொள்ள ஆறுமுகத்தைப் பார்த்தாள் கீதா.

‘ஏதோ எப்படியோ வாழுகிறாள்: அதைப்பற்றி இப்போது என்ன?’’ என்று அவளுக்கு ஏமாற்றந்தராமல் பதில் சொன்னான்.

“நீங்கள் சொல்லுவது ..’’

“தினம தினமநீ என்னோடு உன் அக்காள் இருக்கும் வீட்டுப்பக்கமாக வா. யார் உன் அத்தான் என்பதைத் தெரிந்துகொள்ளுவாய்?

எதையும் தெளிவாகப் பேசத் தெரிந்துகொள்ளாதவன்போல் நடக்கும் அவ

(10-ம் பக்கம் பார்க்க)

அச்சாகிறது. அறிவுக் கருவுலங்கள்

கவிஞர் கண்ணதாசன் கவிதைகள்

முதற் தொகுதி — இரண்டாம் பதிப்பு
இரண்டாம் தொகுதி — முதற் பதிப்பு

சிறுகதை மன்னர் : டி. கே. சி. யின்
உலக அரங்கில்

விலை ? வெளியாகும் நாள் ?
விரைவில்.

வாசகர்களுக்கு !

கடந்த பல நாட்களுக்கு முன், ‘இன முழக்கம்’ எட்டுப் பக்கங்களாக வெளிவந்தது. அவ்வேளையில், ‘விரைவிலே - பெரிய அளவிலே இன முழக்கம் வெளிவரும்’ என்று உறுதி அளித்திருந்தோம். அந்த உறுதியை இந்த இதழில் நிறைவேற்றித் தந்துள்ளோம்.

இனி வரப்போகும் இனமுழக்கத்தில் மேலும் என்னென்ன புதிய பகுதிகள் சேர்க்க வேண்டுமென்று கருதுகிறீர்கள் ? அவ் விருப்பத்தை எழுத்து வடிவிலே வரைந்தனுப்புங்கள்.

முடிந்தவரை முயற்சிக்கிறோம்
ஆசிரியர்

முடிவு கண்டனர் ; முரசு கொட்டுவர் !

தீங்குள்ள இந்தியை, தேமதுரத் தமிழ் நாட்டிலே-திருவிடத்தின் பெருநிலப் பரப்பிலே புகுத்திவிட; இந்தியத் துணைக்கண்டத்தின் கோமான் கட்டளையிட்டார்.

கடந்தநாளில்!..அதனால் மூண்டெழுந்த தீ முப்புறத்திலும் பரவியுள்ளது ! அகில இந்தியா வென்னும் அமைப்பிலே, இந்த இன்பத் திராவிடத்தை அடிமைப்படுத்த ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள ஆதிக்க புரியினர் திட்டம் தீட்டியுள்ளன ரென்பதை தாய்மொழிப் பற்றுக் கொண்ட தென்னவர் அனைவரும் அறிந்து விட்டனர். கழகக்காளையர், சொல்லேருழவர் யாவரும் கண்டனக் குரலெழுப்பினர். புதுப்பாடம் தந்த நம் சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள், டில்லிப் பாராளு மன்றத்திலே போர்க்குரலெழுப்பினார். அசையவில்லை அவைகள்; இசையவில்லை, நம் இலட்சியத்துக்கு !

இதற்கு முன்னே......

இதே இந்தியத் துணைக்கண்டம் இந்தியை நுழைய விட்டபோது கழகம் கடுஞ்சிறையைக் கண்டது; கழகச் செல்வங்கள் கல்லறையை முத்தமிட்டனர். அடிப்பட்டனர், ஆயிரமாயிரவர்! சான்றுக்கோர் தாளமுத்து நடராஜன்!—இது இறந்த காலச் செய்தி.

இத்தகைய தீவிரமான போராட்டங்களை நடத்திவிட்ட பின்னும் பூநாக இந்தியைப் புகுத்த நினைத்துள்ளனர்; அதற்கு நம் கண்டனக் குரலை அவ்வப்போது எழுப்பி வந்தோம். இதுவரையில் இனிப்பான செய்தியை இந்தியக் குடியரசுத் தலைவர் தரவில்லை. அதனால் குமார பாளையத்திலே கூடிய நம் கொள்கை வீரர்கள் வீரவரிகளை பாரகாவியமாக்கினர். அதனால் பொதுக்குழு போர்க்குழுவினரை நிறுவியுள்ளது. அந்தக் குழுவின் தலைவராக, புரட்சிக் குரலெழுப்பிய நமது அண்ணன் — சொல்லின் செல்வர் சம்பத் அவர்களை தேர்ந்தெடுத்துள்ளது. அதோடு,

சி. பி. சிற்றரசு
கி. மனோகரன்
மு. கருணாநிதி
கண்ணதாசன்
கே. ஏ. மதியழகன்

போன்ற சொல்லேருழவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. பொதுக்குழுவால் அனுப்பப்பட்ட அறிக்கையை, இராசேந்திர பிரசாத் அலட்சியப் படுத்தும்முறையிலே நடந்து கொள்வாரானால் பொதுக்குழு தேர்ந்தெடுத்த போர்க் குழுத் தலைவர் போராட்ட நாளை அறிவிப்பார். அப்படியொரு எழுச்சி கிளம்புவதற்குள், இந்தியின் மீது இந்தியக் குடியரசுத் தலைவருக்கு ஏற்பட்டுள்ள வெறி விலகவேண்டும். இல்லை யேல இந்திப் போர் மட்டுமல்ல; அதுவே நம் இலட்சியப் போராகும். அறிய வேண்டியது, ஆதிக்கபுரியினர் கடமை. அறிய மறுப்போர் அரிமாக்களைக் காண நேரிடுமென்பதை ஆட்சியிலிருக்கும் அனுமதேயங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

படித்தனர் தமிழை; அழித்தனர் பண்பை!

"தென்னவன் பொறுப்பிலே பிறந்து, வைகை ஏட்டிலே தவழ்ந்து, சங்கத்து இருப்பிலே இருந்த நம் வண்டமிழ் அன்னை இன்று எங்கே? கையில் குறளும், மெய்யில் மேகலையும், கருத்தில் உலக நல் வாழ்வும் கருதிய நம் அன்னை இன்று எங்கே? ஏற்றம் பெற்ற அவர் மலர் முகம் எங்கே! எங்கே! என்ற மாபெரும் வினாக்களை இன்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி நம் குடி. "குழவி இறப்பினும், ஊன் தடி பிறப்பினும் ஆள் அன்று என்று வாளின் தப்பார்" என்று கருதி, இறுதிச் சடங்கு செய்த குடி நம் குடி; இமயத்தைவெற்றி கொண்டு கொடிகளைப் பொறித்த சேர, சோழ, பாண்டியர்களைப் பெற்ற நம் குடி; கற்புக்குக் கண்ணகி போன்றோரையும், கொடைக்கு குமணனைப் போன்ற பலரையும் பெற்ற நம் குடியின் இன்றைய நிலை என்ன?

இயற்கை ஓவியமாம் பத்துப் பாட்டையும், இன்பக் களஞ்சியமாம் கலித்தொகையையும், இயற்கை இன்ப வாழ்வின் நிலையங்களாகிய சிலம்பையும், மேகலையையும், இயற்கை வாழ்வியலாகிய வள்ளுவத்தையும், அணிகலன்களாக அணிந்துள்ள நம் வண்டமிழ் அன்னையின் இன்றைய நிலை என்ன?

நம் அன்னையைப் போற்றி வளர்த்த பேரறிஞர்களின் வரலாறுகள் மறைக்கப்பட்டுவிட்டன. தமிழ்ப்பண்பாடுகள் அழிக்கப்பட்டன. நம் அன்னை அணிந்துள்ள இலக்கியங்களாகிய அணிகள் மாசுபடுத்தப்பட்டுள்ளன? எப்படி?

ஐரோப்பாக் கண்டத்தின் ஒரு பகுதியாகிய "ஸ்காந்தி நேவியம்" என்ற இடத்தினின்றும் பிழைப்பு நாடி வந்த ஒரு கூட்டத்தால் நம் அன்னைச் சீரழிக்கப்பட்டாள். இதை நாம் கூறவில்லை. அந்த இனத்தின் பரமபரையிலே தோன்றிய வி. கோ., சூரியநாராயண(சாஸ்திரி)கள், தாம் எழுதிய "தமிழ் மொழி வரலாறு" (History of Tamil Longuage) என்ற நூலில் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிடுகிறார்.

1 "வடமொழி தமிழ் நாட்டில் வெகு நாள் காறும் இயங்கியும், அதற்குத் தமிழ்மொழியைத் தன் வழியிலே திருப்பிக்கொள்ள ஆற்றலில்லாது போயிற்று. வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து, அவற்றிற் கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்ம நூல் பயிற்சி மிக்குடையராயும் கலையுணர்ச்சிச் சான்றவராயும் இருந்தமை பற்றித் தமிழரது திவ்யஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர். தமிழர்களிடத்தில் இல்லாதிருந்த அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைச் சாதிமுறையை மெல்ல மெல்ல நாட்டிவிட்டனர்."

(பக்கம்-33)

2. "இன்னும் அவர் தம்புத்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம். அமைச்சர்களெனவும், மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமர்ந்து கொண்டனர். தமிழரிடத்து இருந்த பல அறிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றே தமிழிற்கு அவை வந்தனபோலவும் காட்டினர்.

(பக்கம்-33)

3. வடமொழி தமிழ் மொழியோடு கலக்கப் புகுமுன்னரே முன்னது பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டிலிருக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. ஏட்டு வழக்கொன்றுமே யுள்ள பாஷையோடு இருவகை வழக்குமுள்ள பாஷை ஒன்றுகூடி — இயங்கப் புகுமாயின், முன்னதன்கட் சொற்களே பின்னதன்கட் சென்றுச் சேருமே அன்றி—முன்னதன் கட் சென்றுச் சேரா. இதை பாஷை நூலின் உண்மைகளுள் ஒன்று என்பர். இம்முறை பற்றியே வடசொற்கள் பல தமிழின்கட் புகுந்தன. தமிழ் சொற்கள் சில தாமும் வடமொழியின் கண் ஏருமற் போயின. எனினும் தென்னாட்டு வடமொழியாளர் மட்டில் சில ஊர்ப் பெயர், மலைப் பெயர், ஆற்றுப் பெயர் முதலாயினவற்றைத் தங்கள் சப்த சாஸ்திரத்திற்கு இயைந்த வண்ணம் ஓசை வேறுபாடு செய்துகொண்டு தாங்கள் வதக்கப் புகுந்த புராணாதிகளில் வழங்குவாராயினர். இது தானுண்மை. இதற்கு மேலொன்றுஞ் சொல்ல இயலாது.

(பக்கம் 33-34)

4. தாங்கள் செல்லுமிடங்களுக்குத் தக்கபடி புதுப்புது இலிபிகள் ஏற்படுத்திக் கொள்ளும் ஆரியர் தமிழ்நாட்டிற் கேற்றபடி தமிழ்லிபியை ஒட்டிக் "கிரந்தம்" என்னும் பெயரில் புதியதோர் லிபியை வகுத்தனர். தமிழரை வசீகரிக்குமாறு அவ்விலிபியில் பல நூல்கள் வரைந்தனர்.

(பக்கம்-33)

★ **வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்ம நூல் பயிற்சிமிக்குடையராயும் கலையுணர்ச்சிச் சான்றவராயும் இருந்தமை பற்றித் தமிழரது திவ்ய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர். தமிழர்களிடத்தில் இல்லாதிருந்த அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால் வகைச் சாதி முறையை மெல்ல மெல்லநாட்டிவிட்டனர்.-வி.கோ.சூ.**

சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர் தீக்ஷிதர் அவர்கள் தாம் எழுதிய "வரலாற்றுக் காலத்துக்கு முந்திய தென்னிந்தியா" என்ற நூலில் எண்ணத் தொலையாத காலந் தொட்டு இந்த நாட்டில் வாழ்ந்து வருபவர் தமிழர். தொன்மைச் சிறப்பு மிக்க ஓரினம் உலகத்தில் உண்டென்றால் அந்த இனம் நம் தண்டமிழ் இனமே" என்று கூறியுள்ளார்.

(பக்கம்-140)

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற வள்ளுவர் வாக்கும், "சாதி இரண்டொழியவேறில்லை" என்று கூறிச்சென்ற ஔவை வாக்கும்', 'ஒன்றே குலம்; ஒருவனேதேவன்' என்று கூறிய திருமூலர் வாக்கும் இன்று யாரால் மறைக்கப்பட்டுள்ளது?

யாதும்ஊரே; யாவரும் கேளிர்,

"ஈன்று புறந்தருதல் என்றலைக்
கடனே
சான்றேன் ஆக்குதல் தந்தைக்குக்
கடனே
நல்நடை நல்கல் வேந்தர்க்கு
கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்
(லற்குக்கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கி
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக்
கடனே"

(புறம்-312)

என்றது போன்றபொதுவுடைமைத் தத்துவங்களைக் கொண்ட தமிழன் வாழ்வு யாரால் மறைக்கப்பட்டுள்ளது?

★ **உரையாசிரியர்கள் நம் தமிழன்னை அணிந்திருந்த தூயஅணிகலன்கள் மீது இனப்பற்று, மொழிவெறி (வடமொழி) என்ற குப்பைகளைத் தூவி மாசுபடுத்திவிட்டனர்.**

'மறைமலைக்காடு" வேதாரண்யமாகவும், "குடந்தை" கும்பகோணமாகவும், 'மயிலாடுதுறை' மாயூரமாகவும் அங்கயற்கண்ணி' மீனுட்சியாகவும், 'குழல்வாய் மொழி' பரிமள நாயகியாகவும் 'தடங்கண்ணி' விசாலாட்சியாகவும் யாரால் மாற்றப்பட்டது?

'சோறு' சாதமாகவும். 'தண்ணீர்' ஜலமாகவும், 'மிளகுநீர்' ரசமாகவும் மாற்றப்பட்டது யாரால்? சிந்தித்தோமா?

"மற்று நீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை, நமக்குள் அன்பில் பெருகிய சிறப்பு மிக்க
அர்ச்சனைபாட்டே ஆகும்? ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ்பாடுகென்றார் தூமறைப் பாடும் வாயால்"

(பெரிய புராணம், தடுத்தாட்கொண்ட பகுதி)

இறைவனே அன்பரிடம் தமிழ் பாடல் பாடும்படிக் கேட்டதாக மேற்குறித்த பாடலில் சேக்கிழார் கூறுகின்றார். அப்படி இருக்க இன்று ஆலயங்களில் நம் மொழி வழங்க இடமில்லை.

இவைகளுக்கெல்லாம் பேராசிரியர் வி. கோ. சூ. அவர்களே விடையளித்துள்ளார். நாம்கூறவில்லை. நாம் கூறினால் நாம்பார்ப்பனவிரோதிகள் என்று நம்மைத் தூற்றுவர். வி. கோ. சூ. அவர்களே கூறுகிறார். அந்தக் கருத்துக்களை நடைமுறையிலே ஒப்பிட்டு ஆராயும்பொழுது உண்மையாகவே இருக்கிறது. இதுமட்டுமா? வி. கோ. சூ. வே கூறுகிறார்.

"தொல்காப்பியத்துக்கு உரை வகுத்த சேனாவரையர், வடமொழிப் போக்கைச் சிறிதளவுகலந்து சொல்லதிகாரத்திற்கு உரைவகுத்தனர். திருக்குறளிற்குப் பரிமேலழகரும் வடநூல் மதம் பற்றியே உரைவகுத்தேகினர் 'நன்னூல்' செய்த 'பவணந்தியாரும்', சின்னூல்' செய்த 'குணவீர பண்டிதரும்' வடநூல் இலக்கணப் போக்கைத் தழுவுவாராயினர். வீரசோழியமும் அதன் உரையுமோ சொல்ல வேண்டுவனவல்ல... (பக்கம்-39)

இவ்வாறு உரையாசிரியர்கள் நம் தமிழன்னை அணிந்திருந்த தூய அணிகலன்கள் மீது இனப்பற்று, மொழிவெறி (வடமொழி) என்ற குப்பைகளைத் தூவிமாசுப் படுத்திவிட்டனர். இன்னும் நம் கலைப் பண்பாடுகளை விளக்கக் கூடிய நூல்களை தீயிலிட்டும், நீரிலிட்டும் அழித்து ஒழித்துவிட்டனர்.

கண்ணகி, குமணன், கடையெழுவள்ளல்கள், சேர, சோழ, பாண்டியர்கள் சங்கஇலக்கியக் கருத்துக்கள் முதலிய வரலாற்றுப் பகுதிகள் மறைக்கப்பட்டு தமிழ்ச் சமுதாயத்துக்கு முற்றிலும் மாறுபட்ட நாகரீகங்களையுடைய திரௌபதி, கர்ணன் இராமன், இதிகாச, புராணங்கள் முதலிய வரலாற்றுப் பகுதிகள் அடங்கிய புளுகு மூட்டைகள் நம் சமுதாயத்தில் பரப்பப்பட்டன.

★ **ஆரியரின் நுழைவால், "மறை மலைக்காடு" வேதாரண்யமாகவும், 'குடந்தை' கும்பகோணமாகவும் 'மயிலாடுதுறை' மாயூரமாகவும், 'அங்கயற்கண்ணி' மீனுக்ஷியாகவும், 'குழல்வாய்மொழி' பரிமள நாயகியாகவும், 'தடங்கண்ணி' விசாலாட்சியாகவும் யாரால் மாற்றப்பட்டது? இந்த அநீதியை நீதியென்று சொல்லும் கயவன் யார்?**

சுமார் முப்பது நாற்பது ஆண்டுகளாகப் பாடுபட்டுவரும், தன்மானத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களாலும், அவர் இயக்கத்திலே இருந்து இன்று தனி இயக்கம் ஆரம்பித்துள்ள ஆற்றல் மிகு தளபதியாம் அறிஞர் அண்ணா அவர்கள் இயக்கத்தாலும், இன்னும் பல தன்மானமுள்ளத் தமிழ்ப் புலவர்கள், தமிழ் மொழியினிடத்து பற்றும் பாசமும் கொண்ட பெரியோர்கள் முதலியோர் ஆரியப் பித்தலாட்டங்கள் அம்பலப்படுத்தி தமிழன்னையின் அணிகள்மீது படிந்துள்ள குப்பைகளைப் போக்கி வருகின்றனர்.

இந்த நிலை வளர, வளர்ச்சி செயல்பட, வண்டமிழ் ஓங்க, நம்அன்னை சீரும் சிறப்பும்பெற்று விளங்க, நம்மால் ஆனத் தொண்டைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு தன்மானமுள்ள தமிழனது கடமை ஆகும்.

வாழ்க தமிழியக்கம்!

வெல்க தமிழன்னை!

—புலவர் ச. தியாகராசன்

ஆரியரைக் குறித்து ஆரியரே கூறுகிறார்!

வடமொழியல்ல; நடமாடும் நச்சுப் பாம்பு!

மொழிப்பற்றெங்கே? விழிப்புற்றெழுக!

முரளீஸ் கபே'யின் முட்டாள் முதலாளி!

கொதிக்கிற நீரை எடுத்துக் கொட்டினர் - எண்ணெயைக் காயவைத்து ஊற்றினர் - உடைந்துபோன - 'மெர்குரி' விளக்குத் துண்டுகளை எல்லாம் எடுத்து எறிந்தனர் - இதுபோதாதென்று மிளகாய்ப் பொடியை அள்ளித் தூவினர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதாவது ஆண்டில் இப்படிப்பட்ட அக்ரமம் நடந்திருக்கிறது. போலீஸ் பார்த்துக்கொண்டு நின்றது. பொதுமக்கள் உள்ளம் துடிக்க, உடல் கொதிக்கப் பார்த்துப் பதறினர். கொதிக்கும் எண்ணெய்ப்பட்டு முகம் கொப்பளித்துப்போன இரு தொண்டர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

காட்டு மிராண்டித்தனமே உருவான இந்தக் காரியங்களைச் செய்தவன் ஆட்சி பீடத்திலே அமர்ந்திருக்கிற அந்தஸ்தையோ அதிகாரத்தையோ பெற்றவனல்ல; மண்ணை விலை கொடுத்து வாங்கி, இதில் என்னைத் தவிர வேறு எவரும் நுழையக் கூடாது என்று கூறிக்கொள்ளும் நிலைபடைத்த நிலச்சுவான்தாரனல்ல. பரம்பரை பரம்பரையாக ஆதிக்கக்கொடி நாட்டி, ஆள் அம்புகளோடு வாழ்ந்து, வல்லமை பெற்ற வழி வந்தவனும் அல்ல. சாதாரண காப்பிக்கடை முதலாளி. சாப்பிட வந்தவர்களிடம் சம்பாதித்து, தன்னைச் சாதாரண நிலையிலிருந்து உயர்த்திக்கொண்டவன்.

அலங்கோலமாக ஓடச் செய்கிறார்களே அந்தச் சென்னையில்தான். கருத்து விளக்கத்துக்குக் கூட்டம்போட்டால் காலொடிய உடல் நோகப் பத்துத் தடவை அலைய வைத்து படாதபாடு படுத்தி, ஆறு மணிக்குக் கூட்டம் என்றால் ஏழு மணிக்கு அனுமதி கொடுத்து, அடுத்தகூட்டம் போடவே அலுத்துக் கொள்ளும் நிலைக்கு அனைவரையும் ஆளாக்குகிறார்களே அந்தச் சென்னையில்தான்.

★ **தீயவன் கேட்கிறான் தற்காப்பு!**

★ **மிளகாய்ப்பொடி தூவிய மிருகம்!**

★ **ஆரியரின் அக்கிரமத்துக்கு அமைச்சர் வழங்கப்போகும் தீர்ப்பென்ன?**

ஒழுங்கான வாழ்வு நடத்துவோரின் உயிரை வாங்குவதற்கு போலீஸ் பட்டாளம் இருக்கிறது. வட்டாரத்துக்கு வட்டாரம் ஒரு போலீஸ் ஸ்டேஷன், தெரு மூலைக்குத் தெரு மூலை ஒரு தாணாக்காரர், பொதுக் கூட்டம் நடக்கும் இடத்தில் கூடை நிறையக் கொண்டு வந்து இறக்க போலீஸ் பட்டாளம், இவ்வளவும் இருக்கிற இடந்தான் சென்னை. அந்த இலாகாவின் நிர்வாக இயந்திரமே இங்கே இருந்து கொண்டு தான் இயங்குகிறது.

லிருந்து ஆதித்தன் கும்பல் வரை ஒத்துப் பேசிக்கொண்டு ஊரை ஏமாற்ற நடத்தியது போலத் தோன்றும் போராட்டம்.

திராவிட முன்னேற்றக் கழகம் அதைத் திரும்பிப் பார்க்கக்கூட இல்லை; அதற்கான தேவையும் நமக்கேற்படவில்லை. ஒருநாள் படமெரித்துவிட்டு மறு நாள் டில்லி ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகளுக்குத் தேர்தலில் வெற்றி தேடித்தர இருக்கிற சக்திகளையெல்லாம் திரட்டிப் பயன்படுத்துவதற்குப் பெயர் போராட்டம் அல்ல - சூதாட்டம் என்பதுதான். எரித்துவிட்டால், அதற்கடுத்து டில்லி என்றாலே திரும்பிப் பார்க்கக்கூடாது. டில்லிக்கு நாம் அடிமை என்று எவர் சொன்னாலும் - அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும், பொல்லாதவர்களாக இருந்தாலும், நம்மவர்களாக இருந்தாலும், நமக்கு ஆகாதவர்களாக இருந்தாலும், எப்பேர்ப்பட்டவரானாலும், கோலோச்சுபவராக இருந்தாலும் குடி

வருவதற்கும் அந்த இடத்தில் வழியில்லை.

அப்போதுதான் நடந்தது, அந்த அக்கிரமம். கொதிக்கும் நீர்—கொப்பளிக்கச் செய்யும் எண்ணெய் — உடைந்துபோன கண்ணாடிகள் - மிளகாய்ப்பொடி. அந்தத் தெருவில் ஒரு பகுதியே உடைந்து சிதறிய கண்ணாடித் துண்டுகளாகவே இருந்ததாம்.

கூட்டம் அங்கே வந்தபோது காப்பிக்கடைப் பூட்டிக் கிடந்தது. பூட்டிக் கிடந்த கட்டிடத்தோடு எவரும் போராட நினைக்கமாட்டார்கள். திறந்து கிடந்தால் ஏதேனும் நடந்து இருக்குமோ என்றுகூடச் சந்தேகிக்கலாம். அந்தக் கூட்டம் அங்கே வந்து நின்றவுடனேயே ஆரம்பித்து விட்டதாம், எண்ணெய் அபிஷேகம். இமை மூடித்திறக்கும் நேரத்துக்குள்ளாகவா ஒரு சட்டி எண்ணெய் கொதித்திருக்கும்? தண்ணீர் கொதித்திருக்கும்? எல்லாம் முன்னேற்பாடு என்று தானே எண்ணத்தோன்றுகிறது.

வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அது என்ன ஆகுமோ தெரியவில்லை.

எந்தக் கட்சியாயிருந்தாலும், தொண்டுசெய்ய வந்தவர்கள் தொல்லைக்குள்ளாக்கப் பட்டார்கள். யாருக்கு வோட்டுப்போடச் சொன்னார்களோ, யார் ஆதிக்கத்திலிருக்கவேண்டும் என்பதற்காக இன்னும் அவர்கள் கட்சியை வைத்திருக்கிறார்களோ, யார் ஆள

சட்டத்துக்குக் கூட இல்லாத துணிச்சல் ஒரு சாதாரண மனிதனுக்கு இருந்திருக்கிறது. எல்லாம் நம்முடைய சர்க்கார்தானே, சமாளித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையின் விளைவு இது. இந்தத் துணிவுமட்டும் இல்லாதிருந்தால் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான கட்டைசுவரை இடித்ததாகப் புகார் செய்யப்பட்ட பிறகும் கவலை துளிக்கூட அடையாமல் இருக்க முடியுமா?

சட்டம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறதோ, தெரியவில்லை. ஆனால் பொது மக்கள் இது குறித்துக் கவலைப் பட்டே ஆகவேண்டும்.

தற்காப்புக்கு ஒருதுப்பாக்கி தேவை என்று கேட்டிருக்கிறாராம், அந்த ஆள்.

கதர்ச்சட்டை போட்டவனெல்லாம் தன்னை ஒரு கலெக்டர் என்று நினைத்துக்கொள்ளும் காலமாக இது மாறி விட்டதுகண்டு நெஞ்சு பதைக்கிறது. சட்டதிட்டத்துக்கோ கட்டுக்காவலுக்கோ துளிகூட மதிப்புக் கொடுக்காத கூட்டம் ஒன்று வளருவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டால் நாடு என்ன ஆவது?

இந்தச் சர்க்காருக்கு உண்மையிலேயே மக்களைக் காப்பதில் அக்கரையிருந்தால், தங்களுக்காக உழைத்தவர்களுக்கு நன்றி காட்டுகிற நல்ல பண்பு இருந்தால், ஒரு பொது விசாரணை நடத்தியாக வேண்டும். நாட்டு மக்கள் நாதியற்றவர்களாக ஆக்கப்

ஆரியனுக்கு அரசியலாரின் ஆதரவா?

இது நடந்த இடம் சந்து பொந்தல்ல. ஆள் போவதற்கே வழியில்லாது காடு மேடுகளே நிறைந்து கட்டை வண்டிகூட எட்டிப் பார்க்க முடியாத கண்ணுக்குத் தென்படாத சிறு கிராமமல்ல. எங்கோ ஒரு மூலை முடுக்கில் இப்படியெல்லாம் நடந்ததென்றால் ஏன் என்று கேட்க நாதியிருந்திருக்காது.

சென்னையில்! குட்டிச்சுவர் போல எட்டு மந்திரிகள் இருக்கிறார்களே அந்தச் சென்னையில்தான். மந்திரி வருகிறார் என்றால் வழியில் நடப்பவர்களை எல்லாம் சுற்றி வளைத்து நடக்கச்செய்ய போலீஸ் பட்டாளத்தையே கொண்டு வந்து நிறுத்துகிறார்களே அந்தச் சென்னையில்தான். பொதுக்கூட்டம் கேட்கப் போகிறவர்களை அந்த இடத்தை நெருங்கவே விடாமல் தடுத்து நிறுத்த குதிரைப் படையை விட்டு விரட்டச் சொல்லுகிறார்களே அந்தச் சென்னையில்தான். அன்றாட வயிற்றுப்பாட்டுக்கு வழியில்லாது அரைவயிற்றுக் கஞ்சிக்கு ஏதாவது தேட முடியாதா என்ற கவலையோடு நடைபாதையிலே கடைகள் வைத்து நாலுகாசு தேடும் நலிந்துபோன அங்காடிக்காரர்களை, போலீஸ்காரர் தலை தெரிந்தவுடன்சிந்தியதுபாதி, சிதறியது பாதி என அவசரத்தில் மூட்டை கட்டிக்கொண்டு

பதைபதைக்கும் வெய்யிலில் பகலெல்லாம் சுற்றிப் பணம் சம்பாதிக்கும் டாக்சி டிரைவர்களை, அதட்டி அதிகாரம் செய்து அலங்கோலப் படுத்த முன் வருகிறார்கள்.

ஆனால்... ஒரு சாதாரண காப்பிக் கடைக்காரன், அதுவும் சந்து பொந்துகளிலே கடை வைத்திருப்பவனல்ல காற்று வாங்கக் கடற்கரைக்குப் போகிற முக்கிய வீதியில் கடைவைத்திருப்பவன் நடத்திய காட்டுராஜா தர்பாரைத் தடுத்து நிறுத்த இவர்களால் முடியவில்லை.

இதன் விளைவு...? இரண்டு பேருடைய முகம் கொதிக்கும் எண்ணெய்ப்பட்டு வெந்து போனது.

பெரியார் நடத்தினாரே ஆதித்தன் தூண்டுதலால் பட எரிப்புப் போராட்டம், அப்போது நடந்தது இது.

அந்தப் போராட்டம், நம்முடையதல்ல. நம்முடையதல்ல என்பது கூட முக்கியமல்ல. நம்மை நாசமாக்குவதற்குத் தங்களைத் தயாராக்கிக்கொள்ள - தேர்தல் வருவதற்கு முன் தீரச் செயல் ஒன்றை நடத்திக் காட்டி, தேசியத்துக்கு வோட்டுக்களை வாங்கித் தரும் வேலையைச் செய்வதற்குப் பொது மக்கள் முன் மனந்துணிந்து முன் வருவதற்காகவே வகுக்கப்பட்ட - சூழ்நிலையைக் கவனித்தால் ஆளுகிற கூட்டத்தி

படைகளாக இருந்தாலும் - அவர்கள் நம்முடைய எதிரிகள் என்று மதிக்கவேண்டும்.

எஜமானன் விரோதி - அவனுடைய ஏஜண்ட் நம்முடைய நண்பன் என்று சொல்லுவதிலே பொருளுமில்லை; பொருத்தமுமில்லை.

ஆகையால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை.

தலைவர்கள்தாம் தாறுமாறான நிலையில் உள்ளவர்கள். தொண்டர்கள் ஒன்றும் அறியாத அப்பாவிகள். தூய உள்ளத்தோடு தாயகத்துக்குச் சேவைசெய்ய வந்தவர்கள். எவருக்கும் தொல்லை தராது எடுத்த காரியத்தை முடித்தனர். கடற்கரையில் படம் கொளுத்தப்பட்டது.

கொளுத்த முடியாமல் தடுக்கப்பட்டவர்களும், கூடியிருந்த அனுதாபிகளும் கோஷம் எழுப்பிக்கொண்டே திரும்பி வந்தனர். வழியில்தான் இருக்கிறது, முரளீஸ் கபே. வந்தவர்கள் நிற்காமல் போயிருக்கலாம். அது ஒரு முச்சந்தி—அதுவும் வந்தவர்களுக்குப் பழைய வாடை வேறு விடாமல் அடித்துக் கொண்டிருந்திருக்கும். நின்று ஒலிகளை எழுப்பினர். அதற்கு மேல் எதுவும் செய்யவில்லை. செய்வதற்குப் போதுமான கூட்டமுமில்லை தேவையான சாதங்களைத் தேடிகொண்டு

வேண்டும் என்பதற்காக அந்தக் கட்சியில் அவர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் ஆட்சியில். பச்சைத் தமிழர் ஆட்சியில்தான் துடிக்கத் துடிக்கக் கொதிக்கிற எண்ணெய்ப் பட்டு, வெந்துபோயினர்.

பட்டு காட்டு ராஜாக்காள் கையில் சிக்கித்தவிக்கும் கதியற்ற நிலை ஏற்பட இடங் கொடுக்கக்கூடாது.

நீதி தெரிந்தோரே! நெஞ்சில் நேர்மைக்கு இடங் கொடுப்போரே! மிருக வலி

★ **கண்ணாடித் துண்டுகளை வீசியெறிந்த வெறியனுக்கு தரப்போகும் முடிவென்ன?**

★ **நீதியே! நீ உன் கண்களை அநீதியின் பக்கம் சாய்க்காதே!**

★ **தாக்கியவனுக்குத் தகுந்த தண்டனை கொடு!**

கலவரம் ஏற்படுமென்று தெரிந்தால், அந்தக் காப்பிக் கடையிலேயே 'டெலிபோன்' இருக்கிறது. கூப்பிடும் தூரத்தில்தான் போலீஸ் படையும் அன்று இருந்தது. எடுத்துப் பேசினால் அடுத்த நிமிஷமே ஓடிவந்திருப்பார்கள். அதைச் செய்யவில்லை, அந்தக் கடைக்காரர். சமர்க்கூடமாக மாற்றினார், தன் சாப்பாட்டுக் கடையை - சட்டியும் எண்ணெயும் ஆயுதங்களாகின.

வுக்கு மனித இனம் பலியாகி பாழாகக்கூடாது என்ற பண்பும் பக்குவமும் பெற்ற நல்லவர்களே! இந்த நிகழ்ச்சி கண்டு நெஞ்சு பதைத்த நல்லோரே! பொறுத்திருங்கள். சர்க்கார் இதற்குள்ள முடிவு காணப்போகிறது என்பதைக் கவனிப்போம். பிறகு இதைப் பற்றிச் சிந்திப்போம்.

—தாமரை

காபி கடைக்காரரின் காட்டுராஜா தர்பார்

கடந்த நாட்களில் நடந்த நிகழ்ச்சிக் கோர்வை!

ஜப்பானிலே எதிர்ப்பு

டோக்கியோ, ஜுன்-17

கடந்தபல நாட்களாக, அமெரிக்காவின் குடியரசுத் தலைவரான ஐசனேவர் வருவதை மறுத்து, ஜப்பானிலே பெரும் போர்க்குரல்! அந்தப் பேருணர்ச்சியால் பத்தாயிரம் மாணவர்கள் போராட்டத்தில் கலந்தனர். ஆயிரக்கணக்கானோர் ஐசனேவர் வருவதை எதிர்த்து, சட்டசபைக்குள் நுழைந்து தீவிரக் குரலெழுப்பினர். இதன் விளைவாக போலிசாருக்கும் மாணவ மணிகளுக்குமிடையே பலத்த கைகலப்பு நடந்தது. 650 பேர்கள் காயத்துக்குள்ளானார்கள். ஐந்து மாணவர்களின் உயிர்கள் உடலைவிட்டு வெளியேபோகும்படிச் செய்தனர். இலட்சத்துக்கு மேற்பட்ட மாந்தர்கள் போர்க் குரலில் தம் குரலை பதிவு செய்து கொண்டனர்.

ரஷ்யாவின் எச்சரிக்கை

மாஸ்கோ-ஜுன், 17

ஜப்பான், அமெரிக்கா இந்த இரு நாடுகளுக்கிடையே விளைந்துவரும் இராணுவ உடன்படிக்கைகுறித்து ருஷ்யா தன் அறிவிப்பை எச்சரிக்கையாக்கிக் காட்டியுள்ளது. இதைச் சார்ந்த நகலொன்றை, ருஷ்யாவின் அயலக அமைச்சர், ஜப்பான் அயலகத்தூதரிடம் அளித்தார்.

டிட்டோவும் - நாசரும்

பெல்கிரேடு, ஜுன்-18.

எகிப்தின் ஏந்தலான நாசர் யூகோஸ்லாவியாவிலே கடந்த தினங்களில் உலா வந்தார். அவ்வேளையில் யூகோசின் தலைவரான டிட்டோவும் எகிப்தின் தலைவரான நாசரும் ஒன்று கூடி அளவளாவினர். உலக ஒற்றுமைக்காக, நடுவு நிலைமைகளோடு நாளும் இயங்கும் நாடுகளெல்லாம் ஒருங்குகூடி பேச்சு வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். அம்முடிவை இந்தியச் செய்தியறிவிப்பவருக்கு [தூதர்] அனுப்பினர்,

சீனுவோடு சீன மோதல்

தைபோ, ஜுன்-19

குமாய் தீவிலே பிரங்கியின் ஒலி! அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் தேசிய சீனுவுக்கு வருவதை முன்னிட்டு செஞ்சீன குண்டுகளை வீசின. தம் எதிர்ப்பை தெரிவித்துக் கொள்வதற்காக இந் நிகழ்ச்சி நடந்தேறியது. அது மட்டுமா? ஐசனேவரின் நிழல், தேசிய சீனுவின் நிலத்தின் மீது விழுமானுல் குண்டுகள் மூலமாக எங்கள் கண்டனத்தைத் தெரிவிப்போமெனச் சொல்லிற்று. இது குறித்து அமெரிக்க ஆட்சி, 'ஐசனேவரின் சுற்றுலாவின் போது இவ்விதம் குண்டுகளைப் பொழிவது மனித சுபாவத்திற்கு அப்பாற்பட்ட செயலாகு மென அறிவித்தது.

அமெரிக்காவிலே அங்கத்தினர்கள்!

வாஷிங்டன், 19

அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ஜப்பானுக்கு வருவதைக் குறித்து அங்குள்ள மக்கள் எதிர்ப்புக்குரல் காட்டியதும் அதன் தொடர்ச்சியான பயணத்தை ஐசனேவர் தள்ளி வைத்ததை முன்னிட்டும் அமெரிக்கச் சட்டசபையிலே விறுவிறுப்பான பேச்சுக்கள்எழுந்தன.

மக்கள் கட்சி அங்கத்தினர், 'ஜப்பான் நாட்டுப் பொருள்கள் எதுவானுலும் வாங்கக் கூடாது. இனி வாங்கும் பழக்கத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும்!' என்றார். மற்றொரு அங்கத்தினர், 'பொதுவுடமைக்காரரின் போக்குக்கு மாறான விதத்திலே தகுந்த நடைமுறையைக் கைக்கொள்ளாத நாடுகளுக்கு அமெரிக்காவின் துணை இருக்கக்கூடாது ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் செய்யப்பட்டுவரும் பண வுதவிகளை உடனடியாக நிறுத்திவிடுவதுதான் தகுந்தசெயல்' என்றார்.

சீனர்கள்இந்தோனேஷியர்களாகின்றனர்.

ஜாகர்த்தா, ஜுன்-20

இந்தோனேஷியாவிலே சீனர்கள் வாழ்கின்றனர். அவர்களைப் பற்றி சீனுவும் இந்தோனேஷியாவும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. அவ்வொப்பந்தத்தின்படி சீனர் அனைவரும் இந்தோனேஷியாவின் மண்ணிலிருக்க உரிமை பெற்றாக வேண்டும். முடியவில்லையானுல் சீனுவுக்கே போக வேண்டியது. இந்த ஒப்பந்தத்தின் பேரில், இதுவரையில் 75 ஆயிரம் சீனர்கள் இந்தோனேஷியாவில் வாழும் உரிமையைப் பெற முடிவெடுத்துள்ளனர். 42 ஆயிரம் சீனர்கள் குடியிருப்பு உரிமை பெற்று விட்டார்கள்.

விடுதலை விழா

டாகர், ஜுன்-20

பிரான்சின் பிடியிலே கிடந்த செனிகால் விடுதலை பெற்றது. 60 லட்சம் மக்களுடைய சின்னஞ்சிறிய நாடு இது. இது ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையிலுள்ள 'கானு'வுக்கு நேர்முகமான வடமேற்கில் இத்தச் சிறிய நாடு இருக்கிறது. இங்கு வாழ்பவர் கறுப்பர்கள்!

சிந்தாதிரிப்பேட்டை சிங்கமே! நீயா சாய்ந்தாய்?

நெஞ்சை நெருப்பாக்கி விட்டு நெடுந்தூக்கம் செய்துவிட்ட சண்முகமே! நீயா சாய்ந்தாய்? பொதுத் தொண்டால் பொதுச் சிறையை முத்த மிட்ட முன்னேற்றக் கழகத்தின் மூத்தவனே! மூப்பின்றி முழுமூச்சை நிறுத்திக் கொண்ட நல்லவனே! வல்லவனே! நீயா வீழ்ந்தாய்? ஜுனிலே பிறந்து அந்த ஜுனின் மடியிலே கொடி போல படர்ந்து விட்ட பகுத்தறிவுப் பகலவனே! நீயா மாய்ந்தாய்? கூலிக்கு வேலைபார்க்கும் காங்கிரஸ் காலிகள் உன் குரல் கண்டு குலை நடுங்க - குனிந்த தலை நிமிர்த்த அஞ்சுவாரே! அத்தகைய ஆற்றலுக்குரிய அன்பனே! என் நண்பனே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டனே! தாள முடியவில்லையடா, நீ தந்த சோகம்? காலமெனும் கயவனின் கைப்பிடிக்கு எப்படித் தான் சிக்கினுயோ தெரியவில்லை; அதனுல் என் போன்றோர் இதயம் தாங்க வில்லை. தூங்காமல் தூங்கிவிட்ட தோழனே! இதற்குத்தான் உன் அன்னையும் தந்தையும் பெற்றெடுத்துப் பெயரிட்டு, பாராட்டிச் சீராட்டி எம்மோடு பழக விட்டனரா? ஐயகோ! கொடுமை, கொடுமை!

1952-லே இயக்கத்தில் சேர்ந்து, செயற்குழுவோடு கலந்து, இந்தி அழிப்புப் போராட்டத்திலே முனைந்து, கருப்புக் கொடி நிகழ்ச்சியிலே இணைந்து, மும்முனைப் போராட்டத்திலே பெரும் பங்கேற்று புதுப் பயணம் செய்துவிட்ட புதல்வனே! மாற்றார் கண்டு மருண்டோடத் தக்க விதத்திலே திராவிடத்தின் தோழனுக- எங்களுக்கு நிழலாக விளங்கிய வீரனே! சுழன்றடித்த காற்றிலே சிக்கி, உன் சடலத்தை மட்டும் கீழே போட்டு விட்டுப் போய் விட்ட விழியசைவே! இதுதானு நீ தந்த பரிசு? கடலூரிலே பிறந்து, சென்னையிலே தவழ்ந்து, சிந்தாதிரிப் பேட்டையிலே நடமாடிய நண்பனே! நீ செய்த செயல் நீதிதானு? நேர்மைதானு? ஞானத்தின் தலைவனுக-நால்வருக்குத் தந்தையாக-இயக்கத்தின் தொண்டனுக - எங்களுக்கெல்லாம் நண்பனுக நின்று வீட்டு சாவிட்ட அழைப்பிலே சாய்ந்து விட்டவனே! இனி என்ன செய்வோம்? கூடிக் குலவிய என்னையொத்த நண்பரிடத்தில் பிடி மண்ணைத் தந்துவிட்டுப் பிடிபடாமல் ஓடிஒளிந்து விட்ட தோழனே! நீ மறைந்தாலும் நின் தொண்டு மறையவில்லையடா, மாணிக்கமே! எங்களையெல்லாம் இருட்டறையில் தள்ளிவிட்டு இயற்கையோடு இரண்டறக் கலந்துவிட்ட கர்ம வீரா! நீ விட்டுச் சென்ற பொருள் இருக்கிறது. அந்த அன்பெனும் விளக்கிலே ஆறுதல் பெறுகிறோம். நீ விட்ட பணியை நாங்கள் தொட்டுச் செல்வோம். இதுவே என் காணிக்கை; அதுவே என் கண்ணீர்!

நீ பிரிந்தாய். ஆனுல் உன்னுல் வளர்த்து விடப்பட்ட பாசம் என்னை விட்டுப் பிரிந்து போகவில்லை.

தேம்புகிறேன் நான்; திரும்பிப் பார்க்கிறேன், நீ நடமாடிய தெருவை ... ...! அந்தோ! அது காட்டும் அழுகையால் எப்படியும் என் போன்றோரால் ஆறுதல் பெற முடியவில்லை. ஆனுலும் சமுதாயச் சட்டப்படி ஒப்புக்கு உங்கள் வீட்டுக்கு ஆறுதல் சொல்லுகிறோம். ஆனுலும் அவர்களுடைய அழுகையை நிறுத்தும் ஆற்றல் எங்களுக்கில்லை. ஏன்? உன்னோடு பழகிய எவருக்குமே இல்லை. காரணம் எங்கள் ஆற்றலை யெல்லாம் நீ பறித்துக் கொண்டு, பாசத்தையும் நேசத்தையும் மட்டும் நீ தந்து விட்டுச் சென்றுள்ளாய். அதனுல்தான் ... ... ஆனுலும் ஒன்று!

நீ விட்ட தொண்டை என்போன்றோர் தொட்டு விட்டனர். அதனுல் கொஞ்சம் தேறுதல். ஆனுல் உன் வீட்டுக்கேது ஆறுதல் —?

கண்ணப்பாவள்ளியப்பன்

7-ம் பக்கம் தொடர்ச்சி

னைத் திகைப்போடு பார்த்தாள் அவள்.

"நேரம் அதிகமாகிவிட்டது.கீதா.போகலாம்" என்று காலங்கடந்து போனதை நினைவுபடுத்தினுன் ஆறுமுகம்.

இருவரும் நடந்தார்கள்.

வளர்ந்திருந்த முழுமதி வையகத்தைப் பார்த்ததா அல்லது வையகம் அந்த வளர்மதியைப் பார்த்ததா என்பது புரியவில்லை. இரண்டும் ஒன்றையொன்று பார்த்துக்கொள்ளும்படித்தான் இருந்தது. இரண்டு கோளங்களுக்கும் ஒளி என்பது கிடையாது. மறைந்துபோன கதிரவனிடத்திலிருந்து ஒளியை இரவாகப் பெற்று இருண்டு போன உலகத்துக்குத் தந்து கொண்டிருந்தது அந்தநிலா. இவ்வளவு கஷ்டப்பட்டு அது செய்யும் அந்தக் காரியத்தைப்பற்றிக்கவலையே கொள்ளாமல் எப்போது கண்மூடலாம் என்று காத்திருந்தது உலகம். பட்டபாடெல்லாம் வீணுகி பாழாகிவிடத்தான் போகிறது என்பது தெரிந்தும் ஒளியைக் குறைக்காமல் அளித்துக் கொண்டிருந்தது, பரிதாபத்துக்குரிய அந்த நிலா!

புதுவாழ்வு தொடங்குவதற்கு முன்னுல் புயலடிக்குமா அல்லது தென்றல்வீசுமா என்பதை நிர்ணயிக்க முடியாமல் சென்றுகொண்டிருந்தனர் கீதாவும் ஆறுமுகமும்.

12

வாழ்வில் வளர்பிறையும் தேய்பிறையும் மாறிமாறி வரும் என்று சொல்லுவார்கள், தத்துவத்துக்குக் கற்பனை மெருகு தீட்டுபவர்கள். நிலவு வளருவதுமில்லை, தேய்வதுமில்லை. அது எப்போதும் ஒரே அளவில்தான் இருக்கிறது. உலகத்தின் நிழல் அதன் ஒளியை மறைக்கிறது மெல்லமெல்லஒளி குறைந்து கொண்டே வந்து இறுதியில் இருளில் சிக்கிவிடுகிறது நிலா வானத்தை இருள்மயமாக்கி விடுவதில் இந்த உலகத்துக்கு ஏதும் ஆதாயமில்லை. அதுவும் சேர்ந்துதான் இடர்ப்படுகிறது. ஏதோ அதன் அமைப்பு அப்படி. ஆனுலும் அந்த நிழல் அகன்றுவிடுகிறது. பிறகு; முழுமதியைப் பார்க்க முடிகிறது. உலகைப் பற்றித் தெரியாதவர்கள் நிலவைப்பற்றி முடிவு செய்து விடுகிறார்கள்.

(தொடரும்)

இலட்சியத்திற்காக இரத்தம் சிந்து

பாதுகாப்பு எங்கே?

ம. இலெனின் தங்கப்பா.

தந்தி வந்தது; "தந்தைக்கு உடல்நலமில்லை; உடனே புறப்பட்டு வா" என்று. மாணிக்கம் கண்ணம்மாவின் முகத்தைப்பார்த்தான். கண்ணம்மா திகைப்புடன் அவனை நோக்கினாள். சிறிது நேரம் அமைதியில் ஆழ்ந்தனர் இருவரும். "ஊருக்குப் போய்வர வேண்டியதுதான்" என்றான், பெருமூச்சுடன் மாணிக்கம். "அத்தான்!" என்றாள் கண்ணம்மா. அவள் குரலில் அச்சம், ஏக்கம், துன்பம் எல்லாம் கலந்து ஒலித்தன. "ஏன் நடுங்குகின்றாய்?" என்றான் மாணிக்கம். "நீங்கள் போகவேண்டாம்; என் மனத்துள் ஏதோ ஒன்று நீங்கள் போக வேண்டாம் என்று சொல்லுகிறது" என்றாள் கண்ணம்மா. "அப்படி ஒன்றும் அஞ்சவேண்டாம் கண்ணம்மா. நம்மைப் பற்றி இன்னும் ஒருவருக்கும் தெரியாது. நான் போய்விட்டு உடனே வந்து விடுகிறேன்". அவள் அழுதாள், கெஞ்சினாள். "தந்தி பொய்த் தந்தியாகத்தான் இருக்கும். போனவாரம்தானே நீங்கள் சொன்னீர்கள், உங்கள் ஊர்க்காரரைப் பார்த்ததாக...இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கலாம் நீங்கள் போகக்கூடாது' என்று தேம்பினாள் மாணிக்கம் அவளைத் தேற்றினான். "அப்படியெல்லாம் இருக்காது. இருந்தாலும் நான் சமாளித்துக் கொள்வேன். உன்னைக் கைவிடுவேனு?" என்றான். "உங்களை விட்டுவிட்டு என்னால் தனியாக இங்கு இருக்கவே முடியாது; நானும் உங்களுடன் வருகிறேன்" என்றாள் கண்ணம்மா. மாணிக்கம் நடுங்கினான்! "வேண்டாம் கண்ணம்மா, இது முடியாது. என் தந்தை நம் இருவரையும் கொலையே செய்துவிடுவார். அவரது சாதி வெறி உனக்குத் தெரியாது." அவள் அழுதாள். அவனை தேற்றினான். "இறுதியில் என்னைக் கைவிடமாட்டீர்களே!" என்றாள். "சீச்சி! இது என்ன கேள்வி? நீ என் மனைவி என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறாய். நம் குழந்தையின் மீது ஆணை. போய் ஒருவாரத்துக்குள் நான் திரும்பிவிடுவேன்" என்றான் மாணிக்கம்.

அன்று மாலை பெங்களூரிலிருந்து புறப்பட்ட புகை வண்டி அவனை ஏற்றிச் சென்றது, அவனது சொந்தஊராகிய கல்லூருக்கு. மாணிக்கம், பெங்களூரில் ஆலைத் தொழிலாளி. தமிழன் ஆலையில் தான் கண்ணம்மாவைச் சந்தித்தான். அவளும் தமிழச்சிதான். ஆனால் இந்தப் பாழுந் தமிழினத்தைப் பற்றியிருந்த சாதியெனும் பெருநோய் அவனை உயர்ந்த குலம் என்றும் அவளைத் தாழ்ந்த குலம் என்றும் பிளவு செய்தது. ஆனால் காதலின் முன் அந்தப் பிளவு ஆற்றலற்றுப் போயிற்று. கண்ணம்மாவின் அன்னை மட்டும் தான் இருந்தாள். அவளுக்கு இந்தத்திருமணத்தில் விருப்பமே. ஆனால் மாணிக்கத்துக்குத் தெரியும், தன் ?ற்பாடு தந்தைக்குத் தெரிந்தால் பெருந் துன்பமும் தொல்லையும் விளையும் என்று. எனினும் என்ன! அறுநூறு கற்களுக்கு அப்பால் அவர் ஒரு மூலையிலே கிடக்கிறார் அந்தத் துணிவுதான் அவனுக்கு.

ஒருமுறை தந்தை பெரியார் பெங்களூருக்கு வந்திருந்தார். அவர் தலைமையில், ஆனால் மிக அமைதியான முறையில் திருமணம் நிகழ்ந்தது. திருமணம் ஆன இரு திங்கட்குள் கண்ணம்மாவின் தாய் இறந்தாள். இருவரும் தனியாக வாழலாயினர் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது மாணிக்கத்தின் வீட்டினர்க்கு இதுவரை ஒருசேதியும் தெரியாது. நாட்கள் செல்லட்டும், மெல்லச் சொல்லாம் என்பது அவன் எண்ணம். இந்த நேரத்தில்தான் தந்தி வந்தது.

தந்தைக்கு எப்படியோ செய்தி தெரிந்துதான் தந்தி அடித்திருந்தார். மாணிக்கம் வீட்டில் நுழைந்ததுதான் தாமதம், கன்னத்திலும் முதுகிலும் அடிவிழுந்தது. சினத்தின் குமுறலிலே அறிவை இழந்தார். அவன் தந்தை. நல்ல அடி. கால் முறிந்துவிட்டது. மருத்துவ விடுதிக்குக்கொண்டு சென்றனர், மாணிக்கத்தை. அவனை எச்சரித்தார் அவன் தந்தை. "மரியாதையாக அந்தப் பெண்ணை மறந்துவிடு. வேறு திருமணம் செய்து கொண்டு வீட்டோடேயே இருந்துவிடு. என் சொல்லை மீறினால் உன்னைக் கொன்றேவிடுவேன்." என்றார் மாணிக்கம், அவர் சினத்தைக் கிளற விரும்பவில்லை. மறைவாகவேகாரியத்தைச் சாதித்துக்கொள்ள நினைத்தான். ஆனால் எதையும் கண்ணம்மாவுக்குத் தெரிவிக்க முடியவில்லை. எழுதும் கடிதங்கள் எல்லாம் அஞ்சல் நிலயத்திலேயே கிழித்தெறியப்பட்டுவிட்டன. அவ்வளவு செல்வாக்கு, அவன் தந்தைக்கு. மாணிக்கத்தின் பணமனைத்தும் பறித்துக் கொள்ளப்பட்டன. கையிலிருந்த மோதிரமும், கடிகாரமும் கூடப் பிடுங்கப்பட்டன. நண்பர்கட்கும் எச்சரிக்கை செய்துவிட்டார் அவன் தந்தை; யாரும் அவனுக்குப் பண உதவியோ பிற உதவியோ செய்யக் கூடாது என்று. அவனையும் செல்லுமிடமெல்லாம் கண்காணிக்க இருமூன்று தடியர்கள் ஏற்படுத்தப்பட்டனர். சிறகிழந்த பறவை போல் துடித்தான் மாணிக்கம்.

கண்ணம்மா :

கண்ணீர் விடுவதற்காகவே பெண்ணாகப் பிறந்துவிட்டேன். 'காதல் கட்டுக் கடங்காதது' என்று சொல்லக் கேள்விபபட்டிருக்கிறேன். ஆனால் ?

மாணிக்கம் :

அது சாதிக்கு அடங்கிவிடுகிறது; மனித இதயத்தின் முன்னே கூனிக்குறுகிப் போய்விடுகிறது; வெறிக்கும் வயதுக்கும் அடிமையாகிவிடுகிறது. என்ன செய்வேன் நான் ?

துணையிழந்த பறவைபோல் துடித்தாள் கண்ணம்மாவும். ஒரு வாரம் இருவாரமாயிற்று; ஒருதிங்களுமாயிற்று. கண்ணம்மாவின் அச்சம் உறுதிப்பட்டுவிட்டது. கண்ணீரும் அழுகையுமாகக் குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு வேலையும் செய்ய முடியாமல் வீட்டிலும் இருக்கமுடியாமல் தூண்டிற் புழுவைப் போல் துடித்தாள். கணவனுக்குக் கடிதம் எழுதினாள். பதில்இல்லை. கைவிட்டுவிட்டான் என்றே உறுதியாக நம்பினாள். துணைத் தொழிலாளர். தமிழர் சிலர் அவளுக்கு ஆறுதல் கூறினர். பயன் கிட்டாமற் போகவே புகைவண்டி ஏற்றி அவளைக் கல்லூருக்கும் அனுப்பிவைத்தனர்.

குழந்தையை மார்போடணைத்தபடி நீரொழுகும் விழியும் துயர் ததும்பும் உள்ளமுமாகப் புகை வண்டியிலிருந்து இறங்கினாள், கண்ணம்மா. முகவரி அவளிடமிருந்தது. ஒவ்வொருவராக உசாவியபடி அந்தப்பேதைநடந்தாள். மாணிக்கத்தின் வீட்டுக்கும்வந்து சேர்ந்தாள். மாணிக்கம் இல்லை. வயலுக்குச் சென்றிருந்தான். அவளையும் குழந்தையையும் கண்டதுமே அனைவர்க்கும் அவள் யார் என்று புரிந்துவிட்டது. மாணிக்கத்தின் தந்தை சீறினார். திட்டினார். போ வெளியே என்றார். அவள் அழுதுகதறினாள். 'அவரை ஒரு முறையாவது நான் பார்க்க வேண்டும். அவர் எங்கே?' என்றாள். 'அவன் மனம்மாறிவிட்டான். வேறு மணம் செய்து கொள்ளப்போகிறான்' என்றார்கள், எல்லோரும். கண்ணம்மாவின் உள்ளம் கொதித்தது; துடித்தது. "மணமா? நான் இருக்கும்போது அவர் எப்படி மணந்துகொள்ள முடியும்? அவர் தொட்டுத் தாலி கட்டிய மனைவி நான். அரசாங்கத்தில் சட்டம் சும்மாவா இயற்றியிருக்கிறார்கள், ஒருவர் இரண்டு மணம் செய்யக்கூடாது என்று?' என்றாள் கண்ணம்மா. பெரியவர் ஒருவர் ஐம்பதுருபாயைக்கொண்டு வந்து அவளிடம் நீட்டினார். 'இதை வாங்கிக் கொண்டு பேசாமற் போய்விடு. தொல்லை பண்ணாதே! எங்கள் குடும்பத்துக்குக் களங்கம் விளைவிக்காதே. போகிறாயா வெளியே தள்ளவேண்டுமா?' என்று முழங்கினார். கண்ணம்மா கண்ணீர் ததும்ப, "முடியாது. அவரைக் காணாமல் ஒரு அடிகூட நகரமாட்டேன். அவரைப்பார்த்து இது உண்மை யென்றால் அவர் மீது வழக்குப் போடுகிறேனா இல்லையா பாருங்கள்" என்று குமுறினாள். பேசாமல் முற்றத்தில் உட்கார்ந்துகொண்டாள். அப்போது மாணிக்கத்தின் தம்பி முத்து அங்கே வந்தான். செய்தி அறிந்தான். அவளைப் பார்த்து, 'இந்தாம்மா வழக்கு கிழக்கு என்றெல்லாம் எங்களை மிரட்டமுடியாது. உங்கள் திருமணத்தைப் பற்றி எல்லாம் அறிந்துதான் வைத்திருக்கிறோம். அது சட்டப்படி செல்லாது என்று உனக்குத் தெரியாதோ? பெரிய சீர்திருத்த திருமணம் செய்துவிட்டீர்கள். சீர்திருத்தத் திருமணம்! மாலை போட்டால் திருமணம் ஆகிவிடுமோ? உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள்போபோ' என்றான்

கண்ணம்மா தன் நிலையை அப்போதுதான் உணர்ந்தாள். இந்தக் கேடுகெட்ட சமுதாயமும் அரசாங்கமும் அவளைப் பார்த்துக் கேலிச் சிரிப்புச்சிரித்தன. ஓராண்டாகத் தான் நடத்தியகாதல் வாழ்வும், அது உடைந்து துண்டு துண்டாகச் சிதற விருப்பதையும் எண்ணினாள். அழக்கூட முடியவில்லை அவளால். பலரும் அவரவர் வேலைக்குச் சென்றுவிட்டனர். கண்ணம்மா எழுந்தாள். தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை மார்போடணைத்து முத்தமிட்டாள். துணியிலே சுற்றிவிட்டுத் திண்ணையில் கிடத்தினாள் புறப்பட்டு விட்டாள். யாரும் அவளை ஏன் என்றுகேட்கவில்லை.

∴ ∴ ∴

அவள் சென்று அரைமணி நேரம் இருக்கும். மாணிக்கம் வயலிலிருந்து வந்தான். வேதனை அவன் மேனி முழுவதும் பொங்கி வழிந்தது வந்தவன் வாசலிலே குழந்தையைக் கண்டான். செய்தி புரிந்தது. குழந்தையை மார்போடணைத்துக் கொண்டான். "எங்கே என் கண்ணம்மா? எங்கே? எங்கே?" என்று அலறினான். யாரும் பதில் சொல்வாரில்லை. இறுதியில் ஒரு சிறு குழந்தை கண்ணம்மா சென்ற வழியே கையைக் காட்டிற்று. ஓடினான் மாணிக்கம். வெறி பிடித்தவன் போல் ஓடினான். இதற்குள் இவனைப் பிடிக்க இருவர் ஓடிவந்தனர். "கையிலே கத்தியிருக்கின்றது. அருகில் வராதீர்கள்; அழிந்து போவீர்கள்" என்று கூறிக் கொண்டே ஓடினான். சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே ஓடினான். அரைக் கல் தொலைவு ஓடியிருப்பான். எதிரே மூன்று பேர் சேர்ந்து எதையோ தூக்கிக் கொண்டு வந்தனர். "யாரோ ஒருத்தி, கிணற்றில் விழுந்து இறந்துவிட்டாள்" என்று ஒருவர் கூறிக்கொண்டே வேகமாக முன்வந்தார். மாணிக்கம் ஓடிப் போய்ப் பார்த்தான். "ஐயோ! போய்விட்டாயா, கண்ணம்மா!" என்று அலறினான். அவர்கள் தூக்கிக் கொண்டு வந்தது, கண்ணம்மாவின் பிணம்தான்.

தங்கமலர்

திங்கள் இருமுறை

அறிவிப்பு

10—6—60ல் வெளியாகவேண்டிய **9வது** இதழ் புதிய நிர்வாகத்தில், ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவராக **திரு. கண்ணப்பா வள்ளியப்பன்** அவர்களைக் கொண்டு, சுவையும் சூடும் கொண்ட புத்தம் புதிய கலை உலகச் செய்திகளைத் தாங்கி, கண்ணுக்கு விருந்தளிக்கும் எண்ணிறந்த படங்களோடு, அழகும் புதுமையும் மிளிரும் கலைப்படைப்பாக

1—7—60 அன்று மலருகிறது

தனிப்பிரதி 12 காசுகள் ஆண்டு சந்தா ரூ. 4

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு ;

தங்கமலர்

4, இராசகோபால நாயக்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை : : சென்னை -2.

நளினப்பேச்சு நமக்கு வேண்டாம்!

திரைஒலி

ஜுபிலி பிலிம்ஸ்

பார்த்திபன் கனவு

பல்லவப் பேரரசின் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு, தனி அரசாக சிறப்புடன் தழைத்தோங்க வேண்டும் சோழநாடு"—இந்த எண்ணத்தை ஈடேற்ற நாளும் கனவு கண்டுகொண்டிருந்தான், சோழமன்னன் பார்த்திபன். அவன் கனவு நினைவாகிறது என்று படத்தில் காட்டப்படுகிறது. சுற்றி வளைப்பானேன். இன்றைக்கு திராவிட நாடு பெற்று வாழ நாம் கனவு கண்டுகொண்டிருப்பது போல அன்றே தனிநாடு அமைக்க பார்த்திபன் கனவு கண்டிருக்கிறான். இதுதான் கதை. கனவு நினைவாகிறதா என்று கேட்காதீர்கள், நினைவானது என்ற எண்ணத்தில் தான் 3மணி 30 நிமிட நேரத்திற்குப் பிறகு திரையில், 'வணக்கம்' என்ற ஐந்தெழுத்தைப் போட்டு, நினைவின் அர்த்தத்தை அடக்கியிருக்கிறார்கள். கல்கி அவர்களால் 400 பக்க அளவில் எழுதப்பட்ட பார்த்திபன்கனவின் கதையை 3 மணி நேரத்தில் சுறுசுறுப்பாகப் படித்துவிடலாம். அவ்வளவு விறுவிறுப்பாக கல்கி அவர்கள் ஆக்கித் தந்திருந்தார்கள்.

படத்தின் விறுவிறப்பு ஆரம்பத்திலிருந்தே தேய்ந்துவிடுகிறது. கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்று கூறுவார்கள். அட பைத்தியக்காரர்களே! இப்படத்தின்கதை கடவுளை நம்பியதால் தான் கைவிடப்பட்டுவிட்டதே. சிவ

தாடியை மட்டும் வைத்து மறைத்தனர். விளைவு படத்தின் நாடி ஒடிந்துவிட்டது.

பலே மோசம். எத்தனை சமஸ்கிருதச் சொற்கள். படம் எடுத்து முடிந்தபின்னர், நடிகர்கள் தங்களுக்குத் தயாரிப்பாளர்கள் கொடுத்த பணத்தை எண்ணியிருக்க மாட்டார்கள், உடைந்து விழுந்த பற்களைத்தான் எண்ணியிருப்பார்கள்.

மாமல்லராக நடிப்பவர் எஸ். வி. ரங்காராவ். நன்கு நடித்துள்ளார். இவர் இல்லையெனில் படமுமில்லை.

பார்த்திப மன்னனாக நடிக்கும் அசோகனின் நடிப்பு பரவாயில்லை.

விக்கிரமனாக வரும் ஜெமினி கணேசனின் நடிப்பு அக்கிரமம்.

பொன்னனாகவரும் எஸ. வி.

மனோகர் நாடக மன்ற வளர்ச்சிக்காக

26-6-60 ஞாயிறு மாலை 6மணி

சென்னை செளந்தர்ய மஹாலில்

திரு. C. K. துரைவேலு அவர்கள் தலைமையில்

இனமுழக்கம் வே. கபிலன், நடிகர், காகா. இராதாகிருஷ்ணன், என் தங்கை நடராசன் ஆகியோர் முன்னிலையில்

தந்தையும் மகனும்

(சமூக நாடகம்)

கதை, பயிற்சி: அண்ணாமலை

நடிப்பிலும் துள்ளி முன்னேறத்தான் பார்க்கிறார்.

சிவகாமியாக வரும் கமலா லட்சமணனின் நடனம் மிகவும் நன்றாக அமைக்கப்பட்டுள்ளது.

காற்றுக்கு முருங்கை மரம் ஆடல் போலும்
கடலுக்குள் இயற்கைபடி அசைத்தல் போலும்
நாற்றுக்குள் இளங்காற்று நடித்தல் போலும்
நல்லோர் தம் அலைக்கண்ணே தோன்றி
நடிக்கின்றார், தோழியர் விசயலட்சுமி.

ஜெய்குமார் பிக்சர்ஸ் தயாரித்து வரும் "மகாவீர பீமன்" என்ற படத்தில் ஒரு காட்சி.

தன் உடலிலுள்ள ஆடை குறைந்தாலும் குந்தவியாக வரும் வைஜயந்திமாலாவின் நடிப்பு [illegible] கட்டங்கள் மிகைப்படுகின்றன. காதல் காட்சி சுவைக்கிறது.

எங்காவது புலி பூனையாக மாறுமா? இப்படத்தில், அப்படி ஒரு பாத்திரம் சுற்றுலா செய்கிறது. அவ்வளவு பயங்கரமான காட்சியளித்த கபால பைரவனாக வரும் பி. எஸ். வீரப்பா பட முடிவில் இப்படி அமைதியாக அடங்கியிருக்க வேண்டாம். ஒரு வேளை தென்னாட்டுக் கிலி பிடித்தது என்ற எண்ணம் இயக்குநர் யோகானந்தத்திற்கு உண்டோ என்னமோ!

ஆனால் படத்திலோ 3மணி 30 நிமிடம் பார்ப்பது 3½ நாட்கள் பார்ப்பதுபோலக் காணப்படுகிறது. "என்னே பட இயக்குநரின் சுறுசுறுப்பு!

நல்ல கதை. ஆனால் மூடி மறைக்கப்படவேண்டிய சிவனடியார் தாடியுடன் காட்சியளித்தால் மட்டும் போதுமா? இந்த ஒரே காரணத்தால் னடியாராக இல்லாமல், அந்தப்பாத்திரம் மறைமுக மனிதனாகப் படைக்கப்பட்டிருந்தால் கதை விறுவிறுப்பை இழந்திருக்குமா? சிவனுக்கு அடியார். எனவே ஜடை முடி,

சுப்பையா நடிப்பில் மன்னன்

மாரப்ப பூபதியாக வரும் டி. எஸ் பாலையாவின் நடிப்பு பலே.

வள்ளியாக வரும் ராகினி

கிழவிகளையெல்லாம் குமரியாக்குவதில் நம் நாட்டு இயக்குநர்கள் சிறந்தவர்கள். இப்பேர்ப்பட்டவர்களில் ஒருவரான யோகானந்த் ராகினிக்கும், சுப்பையாவுக்கும் பட ஆரம்பத்திலேயே காயகல்பம் கொடுத்தது ஏன்? திறமையில்லையா? கவனக் குறைவா? "மல்லிகைப்பூ,பழகும்தமிழே" கவிஞர் — கண்ணதாசனின் இவ்விரண்டு பாடல்களும் இனிக்கிறது. ஆனால் இசையமைப்பில் பசையில்லை.

பாராட்டுகிறோம்!

கலையமைப்பு, உடை ஓவியத்தின் மூலம் கண்களுக்கு விருந்தளித்த மணியம் அவர்களை வெகுவாகப் பாராட்டுகிறோம்.

வெட்கம்

பல்லவ, சோழப் போர்க் காட்சியின்போது பெரும் பொட்டலில் இரு புறமும் குறைந்த வீரர்கள் போர் புரிவது ஹாக்கிமேச் விளையாடுவதுபோல உள்ளது. இதைக் கல்கி அவர்கள் கண்டால் வெட்கித்தலைகுனிந்திருப்பார்

படம் பார்க்க முட்டியடித்துக்கொண்டு போனவர்களைத் தட்டி எழுப்பவேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழனைக் காட்டிலும் பார்ப்பனர்களிடம் ஒற்றுமை அதிகம். எனவே தமிழ்த் தியேட்டர்பக்கம் அதிகம் பார்க்க முடியாவிட்டாலும் கல்கியின் கதையாகையால் பார்ப்பனர்களைப் பார்க்கலாம். குறிப்பாக மாணிக்கத்தையும், முனுசாமியையும் பல தடவை பார்க்கலாம்.

கல்கியின் கனவு இப்படியா நினைவாகவேண்டும்!

உங்கள் அன்புள்ள
இளவல்,
இரத்தினம்



'நாற்சாதிப் பெண்வகையில் இவளே அந்த
நற்சாதிப் பதுமினியாள்! மெல்லத் தூக்கும்
காற்சாதி மலர்ச்சாதி, கண்ணின் சாதி
கருங்குவளைப் பூச்சாதி, கன்னச் சாதி
பாற்சாதி, கைகுவளைப் படைப்பின் சாதி
பனிச்சாதி வாயூறும் நீரின் சாதி
மேற்சாதி இவள் சாதி' என்கிறாரா சரோஜாவிடம் கணேசன்!

பீம்சிங் இயக்கும் பாலாமுவிஸ் 'படிக்காத மேதை'யில் ஒரு இனிய காட்சி

ஜூலை 15ல்

தென்னரசுவின் தங்கச்சிமடம்

சிற்றரசின் புறப்படு மகனே

இரண்டும் தொடங்குகிறது!

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர்: கண்ணப்பா வள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம்
4, இராசகோபால நாயக்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2

இடி 1 வார இதழ் -சென்னை (1--7--'60) வெள்ளிக்கிழமை முழக்கம் 43

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

விலை 16 காசுகள்.

அடுத்த இதழில்......

★

3-7-60 வேலூரில் சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் இந்தியைஎதிர்த்து முழக்கமிடும் குரல் கேட்கும்.

பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

இப்படை தோற்கின் - எப்படை வெல்லும்

வீரத்தைக் காட்ட விரைந்து வாரீர்! கல்லுக்கு கல்-சொல்லுக்குச்சொல்; உயிரையும் தருவோம் என்ற வீர வுணர்ச்சி படைத்தவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள்; எங்கள் வீட்டிலேயும் இருக்கிறார்கள் என்று காட்டத் தக்க அளவுக்கு நீங்கள் முன்வரவேண்டும்.

—அறிஞர் அண்ணா

காங்கிரசுக்காரர்கள் நடத்திய ஒவ்வொரு போராட்டமும், சுதந்திரத்திற்கு எப்படி ஒரு படிக்கட்டாக இருந்ததோ அதைப்போல் நம்முடைய போராட்டங்கள் வடநாட்டு ஆதிக்கத்தை ஒழிக்க, நம் இலட்சியம் நிறைவேற, ஒவ்வொரு படிக்கட்டாக இருந்து திராவிட நாடு பெறும்சூழ் நிலையை உருவாக்கும்.

—இரா. நெடுஞ்செழியன்

தோழர்களே! கிளம்புங்கள், களத்தை நோக்கி! எதிர்ப் போரின் எலும்புகளை ஒடிப்போம். இரத்த வெள்ளத் திலே இலட்சியக் கொடியைத் தோய்த்தெடுத்துப் பறக்க விடுவோம். வெற்றி, அல்லது வீரச்சாவு இதுவே நமது இறுதிச் சூளுரை.

—சி. பி. சிற்றரசு

நம்முடைய தன்மானத்தைக் காப்பாற்றும் போராட்டம்-வருங்கால மக்களுக்கு வாழ்வளிக்கும் போராட்டம்-தமிழக மக்கள்மொழியுணர்வுபெறும் போராட்டம் - வடநாட்டு கொள்ளைக் கூட்டத்தாரை விரட்டும் இறுதிப் போராட்டம் என்பதை நாம் மெய்ப்பித்தாக வேண்டும்.

—க. அன்பழகன்

இந்தியை எதிர்த்து தென்னாட்டான் நிச்சயமாகப் போராடியே தீர வேண்டும். இந்தத் தமிழ் நாட்டிலே நாக்கில் நரம்பில்லாதவர்கள் பேசாமல் இருக்கட்டும். உணர்ச்சியுள்ள ஒவ்வொருவரும் முஷ்டியை மடக்கிக் கொண்டு தயாராகுங்கள்.

—டி. கே. சீனிவாசன்

நமது உரிமையை நிலைநாட்ட வேண்டிய கட்டம் பிறந்து விட்டது. எதிர்காலத் தமிழினம் உரிமையுடன் வாழ உயிரையும் அர்ப்பணிப்போ[illegible]

—கண்ணதா[illegible]

ரோம் நாட்டில் அடிமைகளாக இருந்தவர்களெல்லாம் இன்று விடுதலை பெற்று விட்டார்கள். நாம் நமது தலைமுறையில் விடுதலையைப் பெற்றாக வேண்டும். முதலமைச்சரிடத்திலே இருக்கும் தோட்டாக்கள் அதிகமா, அதற்கு மார்பை காட்டுகின்ற மக்கள் அதிகமா என்பதை காமராசர் அறிய வேண்டும். அந்த விடுதலை போராட்டப் பெருமை இந்த 1960-ம் ஆண்டிற்கு வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதற்காக வீட்டிற்கு ஒருவர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

—ஈ. வெ. கி. சம்பத்

'டோக்'யோ பேசுகிறது...

டி. கே. சீனிவாசன்

"வெற்றி பெற்றுவிட்டோம்! வெற்றி பெற்றுவிட்டோம்" என்று வட்டமாகக் கைகளால் ஒருவரையொருவர் பிணைத்துக் கொண்டு, கொட்டமடித்தனர் அந்தக் கூட்டத்தினர். "கிஷியைக் கொல்லுங்கள்! கொல்லுங்கள் கிஷியை!" என்று வானதிரக் குரல்கள் கிளம்பின; கிஷி வேறு எங்கேயும் இல்லை. அவர் வீட்டிலுள்ளேதான் இருந்தார்; அந்த வீட்டுக்கு வெளியே இந்த வெறியாட்டம் நடந்தது. வீட்டைச் சுற்றிப் போலீசார் காத்து நின்றனர். அதுவும் போதாதென்று மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிவலை வேறு கிஷியைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது.

பாராளுமன்றக் கட்டிடத்தில் நடக்கவேண்டிய அமைச்சரவையைத் தன் வீட்டிலேயே கூட்டனுர் கிஷி. நள்ளிரவு நேரம்; ஆனுல் மக்கள் அயர்ந்துபோய் விடவில்லை. உரிமைப் பணயம் வைக்கப்பட்டிருக்கிறது என்ற ஏக்கத்தால் வெளியேறி அமைச்சரவைக் கூடியிருந்த கட்டிடத்தைச் சுற்றி வளைத்து முற்றுகை இட்டனர். பதினேழு அமைச்சர்கள் வந்திருந்தனர் அங்கே. அவர்களுக்கு வெளியே நடக்கும் கலவரங்கள் தெரிந்தே இருந்தன. ஒரே புகை! செந்நிறத் தீ! கட்டிடங்களும் கண்ணாடி ஜன்னல்களும் சிவப்பு நிறம் தீட்டப்பட்டவை போலக் காட்சி அளித்தன. போலீஸ் லாரிகள் கொளுத்தப்பட்டன மக்களால். அவற்றிலிருந்து கிளம்பிய ஒளி பளிச்சென்று பார்வையைப் பறித்தெடுத்தது ஜப்பானிய மக்களுடைய இதயங்கள் எரிந்து கொண்டிருந்தன என்பதை எடுத்துக் காட்டிற்று அந்தத் தீ!

மிச்சிகோ கம்பா! இருபத்திரண்டு வயது கூட நிரம்பாத இளம்பெண்! அந்தக் கலவரங்களுள் சிக்கி நசுக்குண்டாள். உருவந் தெரியாது அழிந்து சிதைந்துபோன அந்தப் பெண்ணின் உயிரற்ற உடல், அந்தக் கூட்டத்தின் உணர்ச்சிக்கு எண்ணெய் ஊற்றி பெருந்தீயாகச் சூழலச் செய்தது.

இருபதினுயிரம் மாணவர்கள்—இருபது இலட்சம் மக்கள்! ஆலைத் தொழிலாளிகள், குடும்பத் தலைவிகள், மத்தியதர வகுப்பினர் அத்தனைபேரும் பங்கெடுத்துக்கொண்டனர் அந்தப் போராட்டத்தில். வீட்டுக்கு ஒரு ஆள் என்ற விகிதாச்சாரத்துக்கு மேலேயே அந்த விடுதலைப் போராட்டத்துக்கு அனுப்பிவைத்தனர் ஜப்பான் நாட்டு மக்கள்!

இறுதியில் மமதை பிடித்த அந்த மண்டலாதிபதி குரலுக்குக் கட்டுப்பட்டான். கிஷி சர்க்கார் அமெரிக்கக் குடி அரசுத் தலைவர் ஐஸன்ஹோவருக்கு, "வரவேண்டாம் ஜப்பானுக்கு" என்று தெரிவித்தது.

ஆட்சி பீடம் தங்கள் கையிலே இருக்கிறது என்ற ஆணவத்…ால், என் கருத்தைத் தவிர …று எவர்சொல்லையும் கேளேன் …ற தலைக் கனம் பிடித்துத் …றுமாறாக நடக்கும் எதேச்சாதி…ருக்கு வரலாறு பலதடவை …ம் கற்பித்திருக்கிறது. …ஊமைகளாக இருந்தால் 'சண்டப்பிரசண்டம்' செய்வோராக இருக்க முடியும். எதிர்த்துப் பேசுகிற தெளிவும் அறிவும் குடி படைகளுக்கு ஏற்பட்டவுடன் எடுந்தெறிந்து பேசும் நிலை ஆள்வோரிட மில்லை அதிகார பீடத்திலிருந்து விலக்கப்பட்டனர்—உலக வாழ்விலிருந்தே ஒழிக்கப்பட்டனர்.

மன்னர்கள் காலத்தில்தான் மக்களை மதிக்காமல் இருந்தார்கள் என்பதில்லை. மக்களாட்சி நடக்கும்போதும் மமதையாளர்கள் உருவாகிறுர்கள். ஆட்சி பீடம் கையில் சிக்கும் வரை அடங்கி நடப்பதும், அறிவுரை கூறுவதும், அடிமையாக இருப்பேன் என்று உறுதி மொழி கொடுப்பதும், இந்த மயக்கு மொழிகளில் மக்கள் ஏமாந்து ஆட்சி பீடத்தைக் கையில் ஒப்படைத்ததும்அரட்டுவதும்உருட்டுவதும், அதிகாரத்தைத் தன்னிச்சை போல் பயன் படுத்துவதும் ஒரு சிலருடைய இரத்தத்தில் ஊறிப்போன குணமாக மாறிவிட்டது.

இதைப் பற்றிக் கவலைப்பட மக்களுக்கு நேரமோ நினைவோ இருப்பதில்லை. இருப்பதைக் காப்பதா, இல்லாததைத் தேடுவதா, இன்னல்களைத் தவிர்ப்பதா என்பதிலேயே அவர்கள் வாழ்வின் இறுதிகாலம் வரை செலவழிந்துவிடுகிறது. அதனுல் ஆட்சி பீடத்தின் அலங்கோலங்களை உணருகிற வாய்ப்போ, அது பட்டுக் கெட்டுப் போனுல் அதைப் பண்படுத்துகிற வசதியோ மக்களிடம் இல்லை. அதனுல் தட்டிக் கேட்க எவருமில்லை என்ற எண்ணம் அவர்களைத் தாறுமாருக நடக்கச் செய்கிறது.

ஆனுல்என்றும் நிலைத்து நீடித்ததில்லை அவர்கள் கொடுங்கோன்மை. பொறுத்துப்பொறுத்துத் தவிக்கும் மக்கள் தாங்க முடியாத நிலைமைக்குக் காட்டுத்தனம் வளரும்போது, எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு எதிர்த்துப் பேசத் தொடங்குகின்றனர். ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்திருந்தால் ஆணவமபிடித்தவனுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கும். வளர்ந்து முற்றும்போது கிளம்புகிற எதிர்ப்பைத் தன் அதிகாரத்துக்கு எதிராக விடப்பட்ட அறைகூவல் என்றே நினைக்கிறுன். ஏதுமறியா மக்கள்மேல் ஆட்சிபீடம் தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட தற்காப்புச் சக்திகளையெல்லாம் பயன் படுத்துகிறுன். பிணங்கள் விழுகின்றன; மண்ணில் குருதி வழிகிறது; இந்த அலங்கோலங்களையெல்லாம் பார்த்து வெளியேறுகிற மக்கள் மாக்களாக மாறுகின்றனர். வலிவு எந்தப் பக்கம் நிறைந்திருக்கிறதோ அதற்கு வெற்றியேற்படுகிறது.

ஆளப்படுபவர்கள் இஷ்டத்துக்கு ஆட்சிபீடம் நடக்க வேண்டும் என்ற கருத்து நிலைபெற்றிருக்கும் இந்தக் காலத்தில், ஆளுவோர்மேல் வெறுப்பு உருவாகிறது. மன்னனுக்கு உட்பட்டுதான் மக்கள் வாழவேண்டும் என்ற நிலை இருந்தபோது மக்களுடைய எதிர்ப்பு, சதிச் செயலாகவோ, கிளர்ச்சியாகவோதான் மதிக்கப்பட்டு வந்தது.

ஜப்பான்! பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னுல் ஹிரோஷிமா, நாகாசாகி ஆன இடங்களில் போடப்பட்ட குண்டுகளால் பாழாக்கப்பட்ட நாடு அதன் தலைநகர் டோக்யோ உருத் தெரியாமல் உருக்குலைந்தது. எழுபது இலட்சம்பேர் மக்கள்தொகையில் இலட்சத்துக்குக் குறைவானவர்கள் தான் மிஞ்சினர். மற்றவர்கள் அத்தனைபேரும் அழிந்தொழிந்தனர். இடிந்துபோன கட்டிடங்களும், மாண்டுபோன மக்களும், எழில் அழிந்துபோன நிலையை உண்டாக்கிற்று.

பதினைந்து ஆண்டுகளாகப் பாடுபட்டது அந்த நாடு தன் பழைய நிலையை அடைய. இழந்த சுறுசுறுப்பைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெற்று வருகிறது. டோக்யோ நகரில் ஏறத்தாழ எண்பத்தாறு இலட்சம் மக்கள் வாழுகின்றனர். பெரும பெரும் கட்டிடங்கள், நீண்டவீதிகள், ஆலைகள், தொழிற்சாலைகள், இரவுக் களியாட்டக் கூடங்கள் இத்தனையும் ஏராளமாகப் பெருகிவிட்டன.

அமெரிக்காவை ஜப்பான் பார்க்கவில்லை! ஜப்பானை அமெரிக்கா பார்த்தது. பார்த்ததோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை; தன்னுடைய பழக்க வழக்கங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக இறக்குமதி செய்தது.

"ஒரு இனத்தை அடிமைப்படுத்த வேண்டுமானுல் அதன் பண்பைஅழித்துவிட்டு, உன்பண்பைப் பின்பற்றச் செய்" இதுதான் அடுத்தவர்களை அடிமைப்படுத்துபவர்கள் இன்று வரை எடுத்துக் கையாண்டு வந்த ஆயுதம். பண்பை நேரடியாகப் புகுத்த முடியாது. ஆகையால் பழக்க வழக்கங்கள்—காலப் போக்கில் அவர்கள் கவனத்தைக் கவர்ந்துவிடாதபடி,—மெள்ள மெள்ளப் புகுத்தப்படும். அந்தப் பழக்க வழக்கங்களோடு கலந்து பண்பும் ஒட்டும்—ஊறும்—ஓடுகிற குருதியில் கலந்துவிடும்.

ஜப்பானில் நடந்தது இதுதான். அமெரிக்கப் பழக்கங்கள் ஒவ்வொன்ருக சமுதாயத்தில் தூவி விடப்பட்டன. அமெரிக்க உடை, அமெரிக்க நடனங்கள், முடி அலங்காரத்திலிருந்துஉடலை உடையில்லாமல் வெளிக்குக் காட்டுவது வரை அமெரிக்கா அங்கே குடியேற்றிவிட்டது.

பழக்க வழக்கங்கள் மாறுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை ஜப்பானியர்; பண்பு பாழாக்கப்படுவதை உணர்ந்தனர். வீட்டை விட்டு வெளியேறத் தயங்குகிற ஜப்பானியப் பெண்கள் இரவுக் களியாட்ட நிகழ்ச்சிகளுக்குச் செல்லுவது அவர்களுக்கு வேதனையைத் தந்தது. குடும்புத் தலைவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தனர் மற்றவர்கள், இப்போது அந்த மதிப்பு மறைந்தது. விவாக ரத்துக்கள் வளர்ந்தன. குழந்தைக் குற்றவாளிகளின் தொகை ஏராளமானது.

இதெல்லாம் அமெரிக்காவின் மேல் ஒரு வெறுப்பை உருவாக்கியது. அமெரிக்கர்களை அண்டவிடக்கூடாது என்ற எண்ணம் வளர்ந்தது. "அமெரிக்கனே! அப்பாலே போ!" என்ற அறிவிப்புகள் நூற்றுக் கணக்கான சிற்றுண்டி சாலைகளில் எழுதப்பட்டன மீறி எவராவது உள்ளே நுழைந்தால் வெளியேறும்படி மரியாதையாகக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். சிற்றுண்டி சாலையின் முதலாளி தள்ள முடியாமல் எந்த அமெரிக்கரையாவது உள்ளே அனுமதித்து சிற்றுண்டி கொடுத்தால், ஜப்பானியர்கள் அங்கே கூட்டமாகக் கூடிக் கொண்டு, வந்தவர்களே எழுந்து வெளியேறும் அளவுக்குக் கூச்சலும் குழப்பமும் விளைவித்தனர்.

ஜப்பானியர்கள் தங்களை அமெரிக்கர்களாக மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. ஜப்பானியர்களாகவே வாழ ஆசைப்படுகின்றனர். முற்போக்குக் கருத்துக்களாலும், பழக்கவழக்கங்களாலும் அவற்றை ஜப்பானியப் பண்பாட்டுக்கு ஒத்ததாக ஆக்கிக்கொண்டு கடைப் பிடிக்கவே நினைக்கின்றனர். பழக்க வழக்கங்களுக்காகப் பண்பைக்கைவிட விரும்பவில்லை அவர்கள்.

ஆகையால்தான் அமெரிக்கா அவர்களுக்கென்று எதைச் செய்தாலும் ஒருவிதஅதிருப்தி அங்கே வளருகிறது. அந்த அதிருப்தி ஏன் வளருகிறது என்பது புரியாமல், அமெரிக்கா மேலும் மேலும் தன் ஆதிக்கத்துக்கு அதை வயப்படுத்தவே முயற்சி செய்கிறது.

1947லிருந்து 1960 வரை, புதிய அரசியல் சட்டம் ஜப்பானில் புகுத்தப்பட்ட பிறகு ஒன்பது மந்திரி சபைகள் மாறியிருக்கின்றன. ஆறு முதலமைச்சர்கள் மாறியிருக்கின்றனர். இதற்குக் காரணமே அமெரிக்காதான். புதிய அரசியல் சட்டம் அமெரிக்கா ஆமோதித்த பிறகுதான் கொண்டுவரப்பட்டது.

இதுவரை அமைச்சரவைகள் மாறியதற்குள்ள காரணங்களில் முக்கியமானது, ஜப்பான் நாட்டு வெளி நாட்டுத் தொடர்பு குறித்துத்தான். ஆளுவோர்கள் அனைவரும் அமெரிக்க பக்கமே சாய்கின்றனர்.

தங்களைப் பாழ்படுத்திய நாடு என்ற பகையுணர்ச்சி வேறு ஜப்பானில் நிலவுகிறது அமெரிக்காவைப் பற்றி. ஹிரோஷிமா நாகாசாகி! இரண்டு நிகழ்ச்சிகளும் ஜப்பானியர் இதயங்களிலிருந்து இன்னும் எடுத்தெறியப்படவில்லை!

ஜப்பானிய மக்களை அமெரிக்கப் பண்பாட்டுக்கு இழுத்துச் செல்வதை அவர்கள் விரும்பவில்லை. மதிக்கத் தக்க ஒரு பண்பாட்டை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் என்று மனம் பூரித்திருக்கும் இனம் அது. அந்தப் பண்பாடு பாழாக்கப்படுவதை உணர்வுள்ள அந்த மக்களால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை.

மூன்ருவது காரணம், அகில உலக அரசியல் அ[illegible]ங்கள், ஜப்பானை ஒரு சதுராட்டக் காயாகப் பயன்படுத்த முயலுகின்றனர் அமெரிக்கர் என்று சந்தேகிக்கின்றனர் அவர்கள். உண்மையும் அப்படித்தான். ஆபத்து என்று கருதப்படுகிற இரு நாடுகளும் அண்டையிலேயே இருக்கின்றன. ஒரு பக்கம் சீனு, அதற்கடுத்து ரஷ்யா! மறுபக்கம் அமெரிக்கா! இவை யிரண்டுக்கும் இடையே மிதக்கிறது ஜப்பான். ஒன்றையொன்று அழிப்பதற்காகவே, தங்களை உருவாக்கிக் கொள்ளுகின்றன, அந்த வல்லரசுகள். ஆதரவு எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், பாதுகாப்பு வலிவுள்ளதாக அமைந்தாலும், போர் மூண்டால் ஏற்படுகிற அழிவைத் தடுக்க முடியாது. மறுபடியும் ஒரு ஹிரோஷிமா... நாகாசாகி... ஜப்பானியர் அதை விரும்பவில்லை

(தொடரும்)

ஏஜண்டுத் தோழர்கட்கு

ஜுன் திங்களுக்குரிய பட்டியல் அனைத்தும் அனுப்புப்பட்டுவிட்டது. **ஜுலை 10-ந்** தேதிக்குள் தொகையனுப்பாத தோழர்கட்கு இதழ்கள் அனுப்புவது நிறுத்தப்பட்டுவிடும்.

வெளியூர் செக்குகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தொகையை மணியார்டர், டிராப்ட், போஸ்டல் ஆர்டர்கள் மூலமாகவே அனுப்ப வேண்டும்.

அதிக இதழ்கள் தேவைப்பட்டு எழுதுகின்ற தோழர்கள் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைக்கு முன்னதாகவே, உரிய **முன் பணத்துடன்** விண்ணப்பித்தால்தான் கவனிக்கப்படும்.

—**பொறுப்பாளர்.**

இனமுழக்கம்
ஆசிரியர்: சீ.பி.சிற்றரசு
மலர் 1] ★ 1—7—60 ★ [இதழ் 43

திக்கெட்டிலும் திருடர்கள் புகுந்தாலும் திருவிடம் தூங்குவதில்லை!

இந்தியின் தலையிலே சம்மட்டி அடி கொடுக்க எழுவீர் போர்முகம் நோக்கி!

நாட்டின் நல்லவர்கள் நமது பொதுக் குழுவின் முடிவு யாதாகுமோ என்று நெகிழ்ந்த நெஞ்சினராய், கவலை தோய்ந்த முகத்தினராயிருந்தார்கள். இடையில் ஏற்பட்ட சல சலப்பு, பெரும் புயலாய்க் கிளம்பி இயக்க மரத்தை வேரோடு சாய்க்குமோ. பிறகு ஒதுங்க நிழலெங்கே? உண்ணக் கனி எங்கே என்று உள்ளம் உருகி சுமுகமாக முடிய வழி காணுங்கள் என்றெல்லாம் எண்ணியும் சொல்லியும் வந்தனர். நாம் அவைகளறியும் நிலையிலே இயக்கத்திற்கு மிகநெருக்கத்திலே இருந்த காரணத்தால் அப்படி ஒன்றும் நடவாது என்றுஆறுதல் சொல்லிப்பார்த்தோம். எனினும் அவர்கள் 21—6—60ல் தான் 'அப்பாடா' என்று பெரு மூச்சுவிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

மற்றொருசாரார், கலம் உடையாது கற்பாறைதான் உடையும் என்று கணித்தவர்கள், திருடன் யாருக்கும் தெரியாமல் திரும்பி ஓடுவதைப்போல ஓடினார்கள். சிறுபொறியில் செத்தைகளை வாரிப்போட்டுப் பெரு நெருப்பாக்கி அதில் குளிர் காயலாமா என்று நினைத்த குள்ளமதியினர் குறுக்கு சந்துகளில் விழுந்து ஓடினார்கள்.

கட்டிடத்தின் வெளித்தோற்றம் பல்வேறு வண்ணங்களாக இருந்தாலும் உள்ளே இருப்பவர்கள் மன நிறம் ஒன்றே என்பதை உணராத அப்பாவிகள் அயர்ந்து விட்டார்கள்.

நம் குடும்பத்தில் அதை ஒரு பெரிய பிரச்னையாக நாம் கருதவில்லை. ஏனெனில் நம் குடும்பம், நீ காலையிலெழுந்து 5 மணிக்கெல்லாம் காபிவைக்க வேண்டும், 8 மணிக்கெல்லாம் காலை உணவு தயாராக வேண்டும், பகல் உணவு வகையில் இன்னவை, நீ இந்த நிறசட்டைதான் போடவேண்டும் என்றெல்லாம் சட்டதிட்டமெனும் கால அட்டவணையைப் பார்த்துப் பார்த்து செயல் படும் குடும்பம் அல்ல. இன்னார் இன்னார், இதை இதைச் செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே வகுத்துக்கொண்டபடி செயல்படும் குடும்பம். ஒரு குடும்பம் என்கிறபோது ஏதாவது சிறு சிறு பூசல்கள் ஏற்படலாம். அதைத் தீர்த்துக் கொள்ள அந்தக் குடும்பத்திற்குப் புத்தி இல்லை என்று கருதி, கொஞ்சங்கூடப் புத்தியில்லாத அண்டை வீட்டுக்காரன் இந்த வீட்டு விவகாரத்தில் தலையிடுவதே அநாகரீகம், அற்பத்தனம், அயோக்கியத்தனமும் கூட. ஏனெனில், பிறர் குடும்பத்தில் கத்தியை உருவி வெளியே வந்த சங்கதியும் நடந்திருக்கிறது. குடுமியைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்து உருண்ட சங்கதியும் நடந்திருக்கிறது. அப்போதெல்லாம் நாம் பெருந்தன்மையோடு மௌனமாகஇருந்தோம். அதைக்கூட எண்ணிப்பாராமல் தலையைநீட்டினார்கள். இன்று தலைதெறிக்க ஓடுகிறார்கள். அந்த முடிவை நாம் கண்டிருக்கிறோம். நிற்க,

இந்திப் போர்

இந்தி ஒருமொழி என்ற நிலையில் தொடங்கி. இன்று என்னை நிராகரித்தால் பிணமாவீர் என்று தன் கோரப்பற்களைக் காட்டிக்கொண்டு வந்திருக்கிறது. நாம் யார் யாரை நல்லவர்கள், நாணய முள்ளவர்கள் என்று நினைத்தோமோ, சொன்ன சொல் தவறாத சுதந்திர வீரர்கள் என்றெண்ணினோமோ அகிலம் புகழ அரசோச்சும் அறிவாளிகள் என்றெண்ணினோமோ, அவர்களே இந்தி விஷயத்தில் எவ்வளவு மனமாற்றத்தோடு, வாக்குறுதியைக் கொடுத்தப்பின்னும் மாற்றிக்கொண்டால் உலகம் நம்மை இகழுமே, ஏசுமே, நாம் பெற்றிருந்த பவிசு பனிக்கட்டிபோல் கறைந்துவிடுமே என்றுகூட எண்ணுமல், அற்பத்தனமாக, ஆசை வெட்கமறியாது என்ற நிலையில் படு மோசமான இந்தி வெறியர்களாக மாறிவிட்டார்கள். இரத்தத்தைக் குடிக்கும் புலிக்குப் பல் வலி தெரியாததைப்போல், இந்தியைத் திணிக்க பித்தம் தலைக்கேறித்திரியும் பித்தர்களுக்கு வருங்கால விளைவுகள் கருத்துக்குப் புலப்படாது.

பன்றி தான் ஈன்ற குட்டிகளில் இரண்டொன்றைத் தானே தின்றுவிடுவதைப்போல், சுதந்திரம் அடைந்த நாடுதன்னுள் ஒருபகுதியைத்தானே தின்று விழுங்குகிறது. இதனை அனுமதிப்பது, அதுவும் அரசாள்வோர் அதிகார பலத்தால் அல்ல, அதிகார போதையில் எதனைச் செய்கிறோம், அதன் விளைவுகள் என்னவாகும் என்றறியமாட்டாமல் அவர்கள் அறிவுக் கண்கள் பஞ்சடைந்திருக்கின்றன. அதன் நோயை நீக்கி நல்வழி செல்லவிடுவது நமது கடமை.

இரத்தப் பசி

அகிம்சைபேசிய அண்ணல் காந்தியாரை மறந்து வெகு நாட்கள் ஆகிவிட்டது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக்காட்டு என்ற இயேசு பிரானுக்கு அடுத்தபடி அகிலத்தில் அண்ணல் காந்தியாரின் நினைவு ஆடிக் காற்றாய் விட்டது. பேராசை எனும் புயல் கிளம்பி அந்த உத்தமனின் கல்லறையை மூடியிருந்த புழுதியும் உயரக்கிளம்பி விட்டது.

ஆம், அவர்கள் அன்று பஞ்சாப் ஜலியன் வாலாபாக்கில் ஜெனரல் டயர் செய்த கொடுமையைப் பாடிப்பாடி, கொன்று குவித்த பிணங்களின் எண்ணிக்கையைச் சொல்லிச் சொல்லி அந்தக் கொடுமையாளன் நீதி மன்றத்தில் தந்த கர்வமிக்க, மிடுக்கான, துடுக்கான பதில்களை எடுத்துக் காட்டிக் காட்டி, ஏதுமறியாதவர்களை, ஏழைகளைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டு, எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் என்பதனை நாவினிக்கப் பேசி சுதந்திரமடைந்தபின் இன்று நயவஞ்சகத்தின் மாக்களாய் சுதந்திரத்தைத் தந்திரமாக்கி, இது ஏன்? என்று கேட்போருக்குத் துப்பாக்கியைக் காட்டி துரைத்தனம் நடத்தப் பார்க்கிறார்கள்.

ஐந்தாண்டுகளுக்கு மேலாக மிகப் பயங்கரமான கொடுமைகளுக்காளான அல்ஜீரியாவிடம் பிரான்சு நல்லெண்ணத் தூது விடுகிற இந்த நாளில், 'கிஷியே வெளியே போ', 'ஐக்கே உள்ளே வராதே' என்று மாணவர்களும் மக்களும் ஜப்பானில் இடி முழக்கம் செய்து கொண்டிருக்கும் இந்த நாளில், பஞ்சசீலம் பேசி கூட்டறிக்கைவிட்ட மாபாதக சீனன் எவரெஸ்ட் உச்சியில் நின்று கொண்டு எக்காளக் குரலில், மானசரோவருக்கு மகேசுவரனைக்காண வரும் மனிதர்களே! இனி தயவு செய்து இந்தப் பக்கம் தலை நீட்டாதீர்கள், தலைபோய்விடும் என்று எச்சரிக்கைவிடும் இந்த நாளில்,

விலங்கிடப்பட்டு இருட்டறையில் தள்ளப்பட்ட விடுதலை விரும்பிகள் விவாத மேடைக்கு வரும் இந்த நாளில், பிசோவின் தலையைக் கொண்டு வரும் வீரனுக்கு இத்தனையாயிரம் பணம் தருகிறோம் என்று பிரகடனப் படுத்திய பிறகு, அதே நாகர் தலைவன் பிசோ, லண்டனில் தனக்கு ஆதரவு தேடவும், லண்டன் பத்திரிக்கைகள் எல்லாம் பிசோவின் முயற்சி நியாயமானதுதான் என்று மகுடமிட்டு செய்திகளை வெளியிடும் இந்த நேரத்தில் குண்டுகளுக்கிரையாக்குவேன் என்று கொக்கரிக்கிறது சர்க்கார்.

காமராஜர் ரவை

கனம் காமராசர், என்னிடத்தில் ரவை இருக்கின்றது என்று பேசியிருக்கிறார் தஞ்சையில். இதைக்கேட்டவுடனே எனக்குச் சிரிப்புத்தான்வந்தது. நான் அந்தப் பகுதியிலே சுற்றிக் கொண்டிருந்த போது, நம்பிக்கைக் குரிய ஒரு தோழர் என்னை சித்தன் வாழூர் என்ற ஊரில் சந்தித்து, காமராசர் தன்னிடம் ரவை இருக்கிறது என்று சொன்னார் என்றார். ஏன் உப்புமா செய்யவா, என்றேன். தோழர் சிரித்துக் கொண்டே, இல்லை, இல்லை உப்புமா செய்யும் ரவை அல்ல, துப்பாக்கிக்குள் போடும் ரவையாம் என்றார்.

இருக்கும், இருக்கும்! தாம் பிரிட்டிஷ் போர்க்கள தளபதிமாண்ட் கோமரியோ, அமெரிக்க சார்பாகப் போரிட்ட தளபதி ஐசன்ஹோவரோ என்ற சபலபுத்தி அவருக்கு. அவர் பயமுறுத்தலுக்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று அவர் குடும்பப்பற்றற்ற சன்யாசி; பாசபந்தங்க ளென்பதையே அறியாதவர்தான்; தான் சென்னை மாநிலத்தைக் காப்பாற்றவல்ல இரட்சகர் என்ற எண்ணம், தன்னை விட அறிவிலும் ஆற்றலிலும் தக்காரு மிக்காருமில்லை என்ற தருக்கு, மற்ற மந்திரிகளைவிட தாம் தான் மிகச் செல்வாக்குப் பெற்ற மந்திரி சபையை அமைத்திருக்கிறோம் என்ற மமதை. இவையெல்லாம் கூடித்தான் அவரை ஒரு சூன்ய வெளிக்கு அழைத்துச் செல்கின்றது. பல அரசியல் நூல்களைப் படித்தவர்களே தவறி விடுகிறார்கள்! இவரைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது. தமிழகத்தின் தாழ்வான நிலை இவரை அரியாசனம் ஏற்றிவைத்திருக்கிறது. இவருக்குள்ள நிலை, இவர் மந்திரிசபை எந்த அளவு சுதந்திரம் பெற்றிருக்கிறது என்பதை ஒரு உவமையின் மூலமே விளக்கி விடலாம்.

விக்டர் யூகோ

பிரெஞ்சு நாட்டு சிறந்த சிந்தனை எழுத்தாளன் விக்டர்யூகோ ஒரு கதை எழுதியிருக்கிறான். அது அன்று கதையாக இருந்திருக்கலாம், படித்தவர்களுக்கு. ஆனால் இன்றைய பரிபூரண ஜன நாயக விரும்பிகளுக்கு அது படிப்பினையாகவே, என்றுமே அழிக்கமுடியாத இலக்கியமாகவே இருக்கிறது. அதில் இரண்டு நாய்களும் சந்தித்த நிகழ்ச்சியை மிகத் தெளிவாக சித்தரிக்கிறார். நடந்த நிகழ்ச்சி நாலுகால் பிராணிகளுக்குத்தான் என்றாலும் அதன் படிப்பினை இரண்டு கால் மனிதர்களுக்கு. வளர்ப்பானேன். கட்டத்துக்கு வருவோம். ஒரு நாய் மன்னர் மாளிகையிலே பண்டங்கள், மாமிசம், பட்டு மெத்தை, பிஸ்கட், சோப்புப்போட்டு குளியல், ராசாவின் அபிமானம், இராணியின் கொஞ்சல், அதைப் பாதுகாக்கவே பத்துப் பேர் — இப்படி இருந்தது அதன் நிலை. அது தின்றுவிட்டு வெளியே தூக்கி எறியப்பட்ட இறைச்சிக்கு வெளியே பலர் காத்துக் கிடந்தனர். நாயாகவாகிலும் பிறக்காமல் போனேமே! என்ற முணுமுணுப்பு வெளியே. இப்படி வளர்ந்து கொண்டு வந்த நாய் ஒருநாள் தற்செயலாக மாடியிலிருந்து வெளியே எட்டிப்பார்த்தது, தெருவிலே ஒரு ஏழை நாய் ஒட்டிய வயிரோடு, சுருங்கிய முகத்தோடுபோய்க் கொண்டிருந்ததைப் பார்த்து மாடிக்கு வரும்படி கூப்பிட்டது. ஏதோ தனக்கு நல்லகாலம் வந்ததென்ற மகிழ்ச்சியோடு மேலே வந்து, இந்த அரண்மனை நாயின் ஆடம்பரத்தைப் பார்த்து வியப்படைந்து, அது இப்படி இருக்கக்காரணமென்ன என்றெல்லாம் விசாரித்துக் கொண்டே வந்தது. தன் வாழ்க்கையின் வளத்தை எல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே வந்தது. இதை எல்லாம் கேட்டுக்கொண்டே இருந்த தெரு நாய், எனக்கு உன்னைத் தொட்டுப்பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது, தொட்டுப்பார்க்கலாமா என்று கேட்டது. தொட்டுப் பார் என்று தன் உடலைத் திருப்பியது, அந்த வேந்தன் வளர்த்த நாய். அதை வாலிலிருந்து தொட்டுக்கொண்டே கழுத்துவரையிலும் கொண்டுபோனது. காலை, மிக வேதனையோடு, 'ஆகா! கழுத்தைத் தொடாதே. வலிக்கிறது; புண்ணாகப்போயிருக்கிறது' என்று அலறியது, அரண்மனை நாய். தெரு நாய்க்குக் காரணமே தெரியவில்லை. ஏன் என்று கேட்டது. நான் எவ்வளவு வசதிகளோடு வாழ்ந்தாலும் என் கழுத்தில் சங்கிலி போட்டு கட்டி விடுகிறார்கள். அதனால் ஏற்பட்ட புண் இன்னும் ஆறவில்லை. அதனால்தான் தொடாதே என்று சொல்லுகிறேன் என்றதாம்! உடனே தெருநாய், 'சீ, இவ்வளவுதானா உன் சுதந்திரம்! நீ பெற்ற வாழ்வு! எல்லாம் நாசமாகப்போக' என்று திட்டிவிட்டு, வெளியே ஓடிவந்து விட்டதாம். அந்த மாதிரி இந்த மந்திரிசபை வடநாட்டு சர்க்காரால் சங்கிலிபோட்டுப் பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிமை சர்க்கார்தான் விடுதலை விரும்பிகளை மிரட்டுகிறது. என்றாலும், நீதியும் நேர்மையும் தம்பால் இருக்கிறது என்று நம்புகிற எவரும் அஞ்சமாட்டார்கள். அஞ்சுவதற்குப் பெயர் அறமல்ல. என்றாவது ஓர் நாள் என்பதுபோய், இன்னும் இரண்டரை திங்களில், கொடுமையே! உன் உருவம்தான் சென்னை சர்க்காரா என்று திக்கெட்டும் முழக்க தி. மு. கழகம் திட்[illegible] மிட்டு உறுதியிட்டு அறிவித்து விட்டது. ஆகட்டும் பார்க்கலாம் என்[illegible] வாசகம், மீண்டும், ஆகட்டும் பார்க்கலாம் என்ற வாசகம்; ஓய்ந்து போ[illegible] வரையில் திருவிடம் தன் போர்க்களத்தைக் காலி செய்யாது. செய்யக்கூ[illegible] என்று ஒவ்வொருவரையும் இனமுழக்கத்தின் சார்பாகக் கேட்டுக் கொ[illegible] கிறோம்.

வணக்கம்.

தங்கள் அன்புள்ள[illegible]

சி. பி. சிற்[illegible]

அறிவறிந்து செய்வது அமைச்சர் கடமை

எண்ணித்துணிந்து எதையும் செய்வீர்!

திட்டம் வகுப்போருக்குத் தெரியவேண்டியவை?

அறிஞர் தேவநேயப்பாவாணர்

நடுவண் (Central) அரசியலாயினும் சென்னை அரசியலாயினும், திட்டம் வகுப்புக் குழு (Planning Commission) கவனிக்க வேண்டிய முதன்மையான மூன்று புலனங்கள் (விஷயங்கள்) வருமாறு ;—

1. உணவுப் பொருள் விளைவுப் பெருக்கம்

உணவுப் பொருள் விளைவுப் பெருக்கத்தின் இன்றியமையாமையை நடுவண் அரசோ, சென்னையரசோ உணராமலில்லை. ஆயின், உணவுப் பெருக்கப் புதுவழிகளை அரும்பாடுபட்டுக் கண்டு பிடிப்பவர், ஏற்கெனவேயுள்ள சிறந்த அடிப்படை வசதிகளை, அறிந்தோ அறியாதோ, அழித்துவிடுகின்றனர் அல்லது புறக்கணித்துவிடுகின்றனர்.

உணவு விளைத்தற்கு முதலாவது வேண்டியது நிலம். விதையை எந்நாட்டிலும் வாங்கலாம். நீரை நாட்டின் எவ்விடத்திலிருந்தும் கால்வாய் வாயிலாய்க் கொண்டு வரலாம், ஆயின், நிலத்தை அங்ஙனம் வெளிநாட்டில் வாங்கவோ உள்நாட்டில் இடம் பெயர்க்கவோ இயலாது. காதக்கணக்கில் நிலத்தைப் பெயர்த்துக் கடத்தவல்ல இராவணன் இக்காலத்தில்லை.

நிலமும், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என நால் வகை. இவற்றுள் பெரும் பாலும் முல்லையும் மருதமுமே விளைநிலங்கள். (இயற்கையான பாலை என்றும் தமிழகத்திலில்லை. அதனாலேயே, ஞாலம் (பூமி) நானிலம் எனப்பட்டது.)

பெரும்பாலும், முல்லை புன்செய்க்காடும் மருதம் நன்செய்க்காடும் ஆகும். புன்செய்க்காடும், மானவாரி, கிணற்றுப் பாய்ச்சல் என இருதிறப்பட்டது. நன்செய்களுள், புதியது புதுவல் என்றும் பழையது பழனம் என்றும் சொல்லப் பெறும் முல்லையின் பாற்பட்ட பழங் கொல்லை முதையெனப்படும்.

இயற்கையான நீர்நிலைகளை அடுத்திராத முல்லை நிலமும், ஏரியும் குளமும் கிணறும் போன்ற செயற்கை நீர்நிலைகளால் நன்செய் நிலமாகத் திருத்தப் பெறும்.

இயல்பான நிலம், சிறிது திருத்தப்பெறின் புன்செயும், பெரிது திருத்தப்பெறின் நன்செயுமாகும். செய்தல் திருத்துதல் அல்லது திருந்தச் செய்தல். புன்மை சிறுமை, நன்மை பெருமை. செய்யப்பெற்றது செய், பண்ணப்பெற்றது பண்ணை, பண்ணுதல் பண்படுத்துதல். கொல்லை (புனம்), புன்செய், நன்செய், பழனம் [illegible]ன்பன முறையே தன்றி[illegible]ன்று சிறந்தவை. [illegible]ணை என்பது வழக்காற் [illegible] பெரும் பரப்பான நன் [illegible]க் குறிக்கும். பண்ணை [illegible]யது மிராசுதார் என் [illegible] சொல்லுக்கு [illegible]ஆகும்.

உணவுப் பொருள் விளைவுப் பெருக்கம் நிலவளத்தையும் நீர்வளத்தையும் பொறுத்தது. ஆயினும பரந்த முல்லை வெளிகளும் பொட்டல்களும் நகரங்களை யடுத்திருப்பவும், அவற்றை விட்டுவிட்டு, சிறந்த செய்களையும் பழனங்களையும் பொதுமக்களும் கழகங்களும் வாங்கி வீடுகள் கட்டவும் குடியேற்றங்கள் அமைக்கவும் அரசியலார் கண்மூடித்தனமாக இடந்தந்து, வளமற்ற புது நிலங்களைப் பண்படுத்த வகை தேடுவது, கைக் குருவியை விட்டுவிட்டுக் காட்டுக் குருவியை நாடித் திரிவதுபோன்றதே. திருச்சித் தென்னூர்ச் சாலையடுத்த பல வீடுகளும் தெருக்களும் ஏற்கெனவே பழைமையான வயலழித்துக் கட்டப்பட்டவை. அண்மையில் தில்லைநகர் என்னும் நகர்ப் பகுதியும் அங்ஙனம் ஆனதே. தஞ்சைக்கும் புதுக்கோட்டைக்கும் மணப்பாறைக்கும் போகும் வழிகளில், வீடுகட்டவும் குடியேற்றங்கள் அமைக்கவும் நிரம்ப வறு நிலமுண்டு. அவற்றைப் பயன்படுத்தவில்லை. விளையாத வன்னிலத்திலும் வறண்ட நிலத்திலும் வாணந் தோண்டி வீடு கட்டின் எவ்வளவு உறுதியாக இருக்கும்! அங்குத் தோண்டுவது கடினமாயிருப்பின், ஏழைக் கூலிக்காரருக்குக்கூடச் சில நாள் வேலை கிடைக்குமே!

சேலத்திலும் இந்நிலைமையே நேர்ந்துளது. அங்குள்ள நகராண்மைக் கல்லூரி மறவனேரி உட்கரையிலுள்ள வயற்காட்டில், 27 செய் (ஏக்கர்)ப் பரப்புள்ள பரம்புடன் (Compound) கட்டப்பட்டுள்ளது. அப்பகுதி நன்செய்க் களிமண் நிலமாதலின், ஆடிடத்திற்கு (Play-ground) மணலும் முரம்பும் (சரளும்) பரப்பவும், கட்டிடங் கட்ட ஏழடி ஆழமாக வாணந் தோண்டவும் வேண்டும். அதோடு மறவனேரியையே தூர்த்துவிடவும் ஏற்பாடாகியுள்ளது. அக் கல்லூரியைச் சேலம் அகலிப்புப் (Extension) பாகத்திலாவது, ஏர்க்காட்டிற்குப் போகும் வழியிலாவது, கட்டியிருக்கலாமே! இனி, மறவனேரிப் புறக்கரை யடுத்துக் 'கட்டப்பட்டுள்ள வீடுகளும் வயலழித்துக் கட்டப்பட்டவை யென்றே, முதியோர் கூறுகின்றனர். இங்ஙனம் ஒவ்வொரு நகரிலும் இன்னும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. மனைநிலமாக மாற்றப்பட்டுள்ள பழைய நன்செய்களெல்லாம் இன்[illegible]ப் பின், எத்துணை நெல்விளைவு மிகுந்திருக்கும்!

இனி உணவுப் பெருக்கத்திற்கு ஏரியும் குளமாகிய செயற்கை நீர்நிலைகளும் இன்றியமையாதவை. இன்றுள்ள நீர்ப்பாசனக் குளங்களெல்லாம் பெரும்பாலும் பண்டையரசரால் வெட்டப்பட்டவை. சீவலப்பேரி (ஸ்ரீவல்லப ஏரி), வீரநாராயணன் ஏரி, விசுவநாதப்பனேரி முதலிய ஏரிகள், அவற்றை வெட்டுவித்த அரசர் பெயர் தாங்கி நிற்கின்றன. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே குளம்வெட்டுத் திட்டம் அரசரால் மேற்கொள்ளப் பட்டதென்பதற்கு,

> "நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
> உண்டி முதற்றே உணவின் பிண்டம்
> உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
> நீரும் நிலனும் புணரி யோரீண்(டு)
> உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
> வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
> வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
> இறைவன் தாட்குத வாதே யதனால்
> அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
> நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
> தட்டோர் அம்ம இவண்தட் டோரே
> தள்ளா தோர்இவண் தள்ளா தோரே."

என்று பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடிய புறப்பாட்டால் (18) அறியலாகும்.

ஆறுகள் நெட்டிடையிட்டிருப்பதால் நாடு முழுமைக்கும் பயன்படுவதில்லை. அவற்றினின்று கண்ணாறுகளும் கால்வாய்களும் வெட்டினும், அவையும் போதுவதில்லை. ஆதலால், ஏரிகளும் குளங்களும் ஆங்காங்கு வெட்டுதல்வேண்டும். பண்டையரசரும் கண்ணாறுகளும் கால்வாய்களும் வெட்டினர். அவற்றின போதாமை கண்டே குளங்களும் அமைத்தனர். ஆறு கால்வாய்களில் ஓடும் நீர் பெரும்பாலும் கடலிற் கலந்து வீணுவதுடன், வெள்ளக் காலத்தில் மிகுந்த சேதத்தையும் விளைக்கின்றது. ஆதலால், வெள்ளத்தைத் தடுக்கவும் ஆறிலாவிடத்தில் பயன்படவும் குளங்கள் தோண்டப்பட்டன.

2. குடியிருப்பு வசதியமைப்பு

மக்கள் தொகை மிகுந்து வருவதால், வீடுகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. சிற்றூர் பேரூரும், நகர்மா நகரும், மாநகர் மாபெருநகரும், ஆக மாறிவருகின்றன. சென்ற நூற்றாண்டில் மயிலையினின்று விலகியிருந்த சென்னை, இன்று திருவொற்றியூரிலிருந்து தாம்பரம்வரை ஒரே மாநகராகப் பரவியுள்ளது. அங்ஙனமிருந்தும், அலுவலாளர்க்கும் கூலியாளர்க்கும் வீடுபோதாக் குறை தீர்ந்தபாடில்லை, வீடுகட்டற்குப் பொருளொடு நிலமும் வேண்டும். மேலும் மேலும் நிலப்பரப்பையே பயன்படுத்தின், மாநகரிடையுள்ள, அதன் நலத்திற்கு இன்றியமையாத, ஆடிடங்களும் பூங்காக்களும் புல்வெளிகளும் பொட்டல்களும் குறைவதொடு, மாநகர்ப் புறம்பான விளைநிலங்களும் மனைநிலங்களாக மாறிவிடும். அதனல் உணவுத்தட்டு உண்டாகும். ஆதலால், மேனாடுகளிற்போல் வானளாவிகள் (Sky-scrapers) எழுப்பாவிடினும், எழுநிலை அல்லது பலநிலை மாடங்கள் கட்டி, அவற்றின் மாடிகளில் பல குடும்பங்களைக் குடியிருத்தலாம். மாடிகட்குச் செல்வதற்கு மின்சார ஏற்றிகளைப் (Lifts) பயன்படுத்தலாம். மாடியில்லா வீடுகளால் நிலப்பரப்பும் மாடியுள்ள வீடுகளால் விசும்புப் பரப்பும் பயன்படுத்தப்படுகின்றன. மாடிகள் பல்கப் பல்க நிலப்பரப்பைப் பயன் படுத்துவது குறையும். மக்கள் தொகை மேன்மேலும் மிகுந்து வருவதால், விளைநிலமும் மேன் மேலும் மிகுந்து வர வேண்டும், இதற்குமாறாக, மாடியில்லா (ஒருநிலை) வீடுகளையே கட்டிக்கொண்டு போகின், விலைநிலம் குறைந்து கொண்டேவந்து பஞ்சம் உண்டாகும். ஆதலால், ஒருநிலைக் கட்டிடங்களைக் கட்டுவதைத் தடைப்படுத்திப் பல நிலைக் கட்டிடங்களையே கட்டுவித்தல் வேண்டும்.

அமெரிக்காவில் 114 நிலைக் கட்டிடம் உள்ளது. நம் நகரங்களில் 50 நிலைவரை தாராளமாகக் கட்டலாம். ஒரு தனிப்பட்ட உரிமையாளர் ஒரு நிலத்தை வீடுகட்ட விற்பது போன்றே, தம் பல நிலைக் கட்டிடத்தின் மேற்பரப்பையும் ஒரு மாடி கட்ட ஒருவர்க்கு அல்லது ஒரு கழகத்திற்கு விற்கலாம். இங்ஙனம் ஒரு பலநிலை மாடத்தின் ஒவ்வொரு மாடியும் ஒவ்வோர் உரிமையாளராகலாம். அடிநிலைமட்டும் போதிய அளவு உறுதியா யிருக்கும்படி அரசியலார் முன்னதாகவே கவனித்தல் வேண்டும்.

3. பிறப்பு வரையறுப்பு

மொத்த ஞாலத்தின் பரப்பளவு வருமாறு :—

மேற்பரப்பு	...	196,950,000	ச. கல்
நீர்ப்பரப்பு	...	139,440,000	,,
நிலப்பரப்பு	...	57,510,000	,,
வளநிலம்	...	33,000,000	,,
வறுநிலம்	...	19,000,000	,,
மணற்பாலை	...	5,000,000	,,

ஞாலம் பருக்காது என்றும் ஒரேயளவாயிருக்குமாதலால், அதன் நிலப்பரப்பும் என்றும் ஒரேயளவாயிருக்கும், ஆயின் உறையுட்கும் உணவிற்கும் நிலப்பரப்பையே சார்ந்துள்ள மக்கள் தொகையோ வரவர மிகுந்து வருகின்றது. இன்று 200 கோடியாயுள்ள உலக மக்கட்டொகை இன்னுஞ் சில நூற்றாண்டுகட்குப்பின் 450 கோடியாகிவிடும். இற்றை வளநிலப்பரப்பு அதற்கு மேற்பட்ட மக்களைத் தாங்காது.

ஆதலால் ஒவ்வோர் இல்லறத்தானும் ஐந்து பிள்ளைக்கு மேற் பெறுதபடி சட்டம்மைத்தல், விருப்பமுள்ள பெண்டிரையெல்லாம் மலடாக்கல், பிள்ளைபெறுத இல்லறத்தார்க்கு அறுபதாண்டு விழாவிற் பரிசளித்தல், முதலிய வழிவகைகளால் அரசியலார் பிறப்பை வரையறுத்தல் வேண்டும்.

மகப்பேற்றிற்கும் மதத்திற்கும் யாதொரு தொடர்பு மின்மையாலும், பழங்கால மூடக் கருத்துக்கள் இக்காலத்திருந்திய நிலைக்கு ஏற்காமையானும், நாட்டிற்கு நன்மையாகக் கண்டதை அரசியலார் அதிகார முறையிற் புகுத்துவது அவர் கடமையாதலானும், தேவையான அளவே பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வது தேவையான அளவே பயிர் பச்சைகளையும் பறவை விலங்குகளையும வளர்த்துக் கொள்வது போன்றதேயாதலானும், தந்தையார் விருப்பமின்றித் தாமாக அல்லது தெய்வச் செயலாகமட்டும் பிள்ளைகள் பிறவாமையானும், தெய்வச் செயலாகப் பிறப்பதைத் தடுப்பது தரிசு (பாவம்) எனின் தெய்வச் செயலாக வளரும் தலைமயிரைக் கத்தரித்தும் அணலை (தாடியை)ச் சிரைத்தும் விடுவதும் தரிசாதலானும், தொடக்கத்திலிருந்தோ ஐம் பிள்ளைகளைப் பெற்றபின்னே மலடாக்கப்பட்ட வாழ்க்கைத் துணையோடு கூடியும் இல்லற இன்பத்தை நுகர முடியுமாதலானும், இக்கட்டுப்பாடு பொதுமக்கட்கும் அரசியலார்க்கும் ஒப்பவுரியனவாதலானும், ஒரு சிலர் எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாது அரசியலார் உடனே பிறப்பு வரையறுப்புத் திட்டத்தை நிறைவேற்றல் வேண்டும்.

கக்கனே! காமராசரே! கவனமிருக்கட்டும்!

கூடலரசன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுதியான கொள்கைப் பெருக்கத்தை மட்டரக மொழிகளினாலே மறைத்து விடமுடியுமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த கதர்க்குல்லாயினர் இப்போதுதான் தங்களின் மண்டைக் கனத்தன்மையை எண்ணிக் கலங்குகிறார்கள். கழகத்தின் இலட்சியப் பாதையும் அதில் மிகவும் அழகாகவும் அழுத்தமாகவும் பதிந்து விட்ட கொள்கை சுவடுகளும் காங்கிரசுக் கட்சியின் கல்லெறிக்கும் கத்திக்குத்திற்கும் கட்டாறி வீச்சிற்கும் அழிந்துபோகக் கூடியன அல்ல என்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ளும் காலம் வந்துவிட்டது. கழகத்தைக் காலித்தனச் செயல்களால் செயல்படாமல் தடுத்து விடலாமென்றுகூட காங்கிர

சொக்கலிங்கமல்ல; சோற்றுப்பண்டாரம்!

சின் புதிய தலைவருக்குக் கிடைத்துள்ள தண்டச் சோற்றுப் படையினரும் சொல்லியிருக்கக்கூடும்! தமிழ் நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் தேசியத்துப்பட்டிகள் தீவட்டி தூக்கும் செய்திகளைக் கேள்விப்படுகிறோம். அகில உலகத்திற்கும் மூளையை இரவல் கொடுத்து வாங்கி சொந்த மூளையை சொந்த நாட்டிலே பயன் படுத்தத் தெரியாத பண்டித நேருவைத் தங்கள் தலைவராக வைத்துக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டுக் காங்கிரசுக்காரர்கள் முன்னேற்றக் கழகத்தைத் தொலைத்து விட்டுத் தான் தூங்குவார்களாம்! நாட்டின் நலன் நாடவேண்டிய காங்கிரசு அமைச்சர்கள், ஊர் சுற்றிச் சுற்றித் தங்களின் கட்சியை வளர்த்துப் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கிறார்கள்! அமைச்சர்

தமிழுக்குத் துரோகியாகிறார், முதலமைச்சர்

களின் விதவைத் தன்மைகளை விவாதமொழிகளினாலேவிளக்கிக்காட்டும் முன்னேற்றக்கழகம் விருதுநகர் முத்தண்ணாக்களுக்குத் திணறலாக இருக்கிறதாம். மதுரை மாவட்டச் சுற்றுப் பயணத்திலே கரும்பு வியாபாரியிடம் காமராசர்

★ **அழகு சுந்தரனே, "அனார்கலி"யின் காதலனே! உங்கள் அரசியல் தத்துவம் கேட்டு அரிஸ்ட்டாட்டிலும் திகைப்பானே! மக்கள்தந்த வரிப் பணத்தைப் பாழடித்து ஊர்மேலேபோன மேதாவியர்களே! கழகத்தின் குற்றச்சாட்டுகளுக்கு எந்தவகையிலாவது சரியான பதிலுரை தந்தீரா?**

பேசிய செய்திகள் எல்லாம் கழகத்தைக் குறிப்பிட்டுத்தானா! அழகு சுந்தரனே, அனார்கலியின்காதலனே! உங்கள் அரசியல்தத்துவம் கேட்டு அரிஸ்ட்டாட்டிலும் திகைப்பானே! மக்கள்தந்த வரிப்பணத்தைப் பாழடித்து ஊர்மேலே போன மேதாவியவர்களே! கழகத்தின் குற்றச் சாட்டுகளுக்கு எந்தவகையிலாவது சரியான பதிலுரை தந்தீரா?

'திராவிட முன்னேற்றக்கழகம் வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்று சொல்வதெல்லாம் பொய். அதிலே உண்மைகிடையாது என்பதாகப்பேசினாராம், புலம்பல் பிண்டம்! அவனுக்கென்ன தெரியும், இவனுக்கென்ன தெரியும், எனக்கல்லவோ எல்லாம் தெரியும், என்று ஓடுகிற ஓட்டத்திலே மேடையேறி இறங்கிய முதலமைச்சர் எனப்படும் முற்கோணல் வீரர் முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினையை நையாண்டி செய்திருக்கிறார்! அகில உலகத்திற்கும் அரசியல் ஆசானாகிய இவருடைய புத்திக் கூர்மைக்குச் சில செய்திகளைக் கூறுவோம். அறிஞர் அண்ணா அவர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ஆயிரம் கோடி ரூபாய் கேட்டுப் பெற வேண்டும் என்று சொன்னாரே அதனைக் காமராசர் என்ற கர்மவீரன் படித்துப் பார்த்ததுண்டா? அண்ணா, அழகான ஆங்கில மொழியில் 28 பக்கங்கள் தட்டெழுத்தினாலே தயாரிக்கப்பட்டுத் தரப்பட்டுள்ள அந்த அறிக்கையைப் படிப்பதற்காகவது முதலமைச்சர் காமராசருக்கு யோக்யதை இருக்கிறதா? ஆங்கிலம் தெரியாது புரியாது. என்று திருதிருவென விழிப்பதும் தெரிகிறது. இந்த நிலையில் அண்ணா சொல்வதெல்லாம் பொய் என்றால் யார் நம்புவர்? சட்டசபையின் சர்வ கட்சித் தலைவர்கள்கூடி அண்ணாவின் திட்டத்தை ஆய்வுரைக்கு எடுத்துக் கொண்ட போது நிருபர்கள் அருகிலே இருக்கக் கூடாதென்று நிதி அமைச்சர் அவர்களை விரட்டியது ஏன்? அண்ணாவின் சொற்களைக் கேட்டுவிட்டால் அவைகளிலே உள்ள உண்மையினை ஊரறிய உரைத்து விடுவார்கள் என்ற உதறல்தானே அமைச்சரை நடுங்க வைத்தது? அந்தக் கூட்டத்திலேயிருந்த உயர்தர அதிகாரிகள் அண்ணாவின் திட்டத்தினை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வெளிப்படையாகக் கேட்டுக் கொண்டார்களே அமைச்சர்கள் அதனையாவது எண்ணிப் பார்த்ததுண்டா? சீப் மினிஸ்டர் "சீமான் பார்க்கலாம்" அவர்கள், அண்ணாவின் அறிவுரைகளையும் அறவுரைகளையும் அலட்சியப் படுத்துவதற்கு முன்னால் அவர் தந்த திட்டத்தை மறுப்பதற்குத் தன்னுடைய மந்திரிப் பட்டாளத்திற்குச் சொல்ல வேண்டாமா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அறிஞர் அண்ணா அளித்த அறிக்கை அவசியமானதென்றும், அருமையாகவும் அழகாகவும் தயாரிக்கப்பட்டுள்ள தென்றும் அதனை அரசியலார் - அமைச்சர், பெருமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று காங்கிரசின் மேல்சபை உறுப்பினர் பாலசுப்பிரமணிய அய்யர், கட்சித் தலைவர்களின் கூட்டத்திலே சொன்னாரே அதனையாவது நிதி அமைச்சரும் முதலமைச்சரும் இன்றுவரையிலும் வெளியிலே சொன்னதுண்டா? குழுவின் நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் அண்ணா அவர்கள் திருச்சி சிறப்புக் கூட்டத்திலே மிக விரிவாகச்சொல்லி. அயோக்கியத் தனங்களின் உறைவிடமாக உள்ள இந்த அமைச்சரவையினர் மறுப்புத் தரட்டும் என்று அறைகூவல் விடுத்தார்கள். எஸ். வி. லிங்கம் அவர்களின் நிதி அளிப்பு விழாவுக்குக்கூட அரசியல் நாகரீகத்தையும் பண்பையும் புதைகுழியிலேபோட்டு மூடிவிட்டு தன்னுடைய ஒற்றரை அனுப்பிக் குறிப்பெடுக்கச் செய்த சரக்கார் அங்கே அன்றைய தினம் அண்ணா அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு இன்றுவரையிலும் பதில் கூறாதது ஏன்? அண்ணா சொன்னார், "எந்த மந்திரியாவது நான் சொல்லியிருக்கும் அத்தனை காரணங்களையும் மறுத்துவிட்டால் நான் இனிமேல் பொருளாதாரம் பேசுவதையே நிறுத்தி விடுகிறேன்" என்று. நாக்குச் சிலம்பாட்டம் போடுகின்ற காமராசர் அவர்களே! உங்களுடைய அரசியல் அனுபவமும் அபாரமான திறனும் செறிவும் அண்ணாவின் அறிக்கையை மறுக்கத் தயாரா? நத்தம்கிராமத்திற்கு அருகிலே பாலத்தைத் திறந்தவுடன் வடநாடு தென்னாடு, வடக்கு தெற்கு பேசுவதைக் கண்டிக்கும் பேராசிரியரே! அண்ணா சர்க்காருக்குச் சொன்ன ஆய்வுரைகள் எந்த வகையிலே எந்தமுறையிலே தவறென்று சொன்னதுண்டா? உங்கள் காலடியில் அழுதுபுரண்டு கொண்டிருக்கும் பிராணிகளுக்கு எப்போதாவது அந்த உணர்ச்சியும் எண்ணமும் வந்ததுண்டா? சொரணையும் சொந்தப் புத்தியும் இல்லாத சொக்கன் பரம்பரை முன்னேற்றக் கழகத்தவரை "முட்டாள்கள்" என்று கூறுவதை காமராசருமா ஆதரிப்பது?

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டை மறந்துவிட்ட மந்திரிகளுக்குப் பல செய்திகளைச் சொல்லி செயல்பட வேண்டுகிறது. ஆனால் முதலமைச்சர் முழக்குவது எதிரிடையாக! அண்ணா ஐந்தாண்டுகளுக்கு ஆயிரம் கோடி கேட்டார் - டாக்டர் லோகநாதன் பத்தாண்டுகளுக்கு இரண்டாயிரம் கோடித்தொகைதேவையென தக்க காரணகாரிய விளக்கத்துடன் கேட்டிருக்கிறார்! அண்ணாவின் திட்டத்திற்கு ஆண்டிகள் பற்றிய கதை கூறிய கன்னல் மொழியணங்கு சுப்பிரமணியம் லோகநாதனுக்கும் அதே பதிலைத்தருவாரா? தெற்கின் பொருளாதாரம் தேய்ந்த நிலையிலே தான் இருக்கிறது. அதனைத் தெம்புறச் செய்ய வேண்டுமானால்

★ **அண்ணா ஐந்தாண்டுகளுக்கு ஆயிரம் கோடி கேட்டார்-டாக்டர் லோகநாதன் பத்தாண்டுகளுக்கு இரண்டாயிரம் கோடித் தொகை தேவையென்று தக்க காரணகாரிய விளக்கத்துடன் கேட்டிருக்கிறார்! அண்ணாவின் திட்டத்திற்கு ஆண்டிகள் பற்றிய கதை கூறிய கன்னல் மொழியணங்கு சுப்பிரமணியம் லோகநாதனுக்கும் அதே பதிலைத் தருவாரா?**

இரண்டாயிரம் கோடி ரூபாய் வேண்டுமென்று நிபுணரின் அறிக்கை கூறுகிறது. முதலமைச்சரோ வடக்கு தெற்கு வாதம் வம்பு வளர்ப்பதாகும் என்கிறார்! ஊர் சுற்றுகின்ற நேரத்தில் உடனிருக்கும்அதிகாரிகளை மிரட்டுவதுபோல டாக்டர் லோகநாதனை உருட்டி மிரட்டிவிடமுடியுமா? அவருடைய அறிவாற்றலை எடைபோட வேண்டாம். சொல்லியிருக்கும்திட்டங்களையாவது திருப்பிச் சொல்லக் கூடிய திறமை முதலமைச்சரிடம் இருக்க வேண்டுமென்று அடித்தளத்திலே நின்று தவிக்கும் பாமரப் பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்! ஏழைபங்காளன் ஏதாவது சொல்வதற்கு உண்டா? காமராசர் கட்சிப் பிரச்சாரம் செய்யட்டும்-செய்கின்ற நேரத்தில் முன்னேற்றக்கழகத்தின் செயல் முறைகளை கொள்கைகளை தக்க சான்றுடன் மறுக்கத் துணிவுண்டா? கூலிக்குக் கிடைத்திருக்கும் கொடி தூக்கிகளைப் போல முதலமைச்சர் பேசக் கூடாதென்று நல்லவர் எண்ணமாகும். சொக்கலிங்கம் இருக்கிறாரே அவரைக்கேளுங்கள் என்று 'சீப் மினிஸ்டர்' அவர்கள் சொல்லலாம்! சொக்கலிங்கம் உடுத்தக் கலிங்கம் இழந்த நேரத்தில், உண்டிக்குக் கிண்ணம் தூக்கிய தருணத்தில், 'சீப்' அவர்களின் தயவுகிடைத்தது. அதனாலே எதையெதையோஎழுதுகிறார். ஒதுக்கித் தள்ள வண்டிய குப்பைகூளங்கள் ஆனால் சீப்மினிஸ்டரின் சிரஞ்சீவித் தன்மைதான் தெரிய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களும் அவர்தம் ஆணைக்குத் தொண்டாற்று வோரும் தேசீயக் கூடாரத்தின் கூலிப்படையினர் தரும் வசைமொழிகளைக் கேட்டுக் கேட்டு சலித்துப் போனவர்கள்! இப்போது சொக்கலிங்கம் போன்றவர்கள் கீழ்ப்பாக்க மொழி பேசுவதற்காக கழி தூக்கப் போவதில்லை! ஆனால் ஆளும் வாய்ப்பாகப் பெற்றுள்ள கக்கன்களும் காமராசர்களும் கண்டனத்துக் குரியவர்களாகிறார்கள்! எத்தனையோ இழி செயல்களைச் செய்கிறார்கள் இருந்தாலும் பழிவாங்கப்படுபவர்கள் கழகத் தோழர்களே! இவைகளைக் கண்டிக்க முன்வராத காமராசர் சிவகங்கையிலே என்றுஎண்ணுகிறேன். லோகியாவின் கூட்டத்திலே குழப்பம் செய்து அவரைப் பேசவிடாமல் செய்தது கண்டிக்கத்தக்கது என்று கூறினாராம்! தமிழ் நாட்டிலேயிருக்கும் வடநாட்டுக் கங்காணிகள் எனப்படுவோர் எல்லோருமே - இப்படித்தான் பேசுகிறார்கள்! லோகியாவின் இந்தி வெறியைப் பாராட்டுக் கூறி வரவேற்கும் துரோகிகளின் பட்டியலிலே முதலமைச்சரும் இடம் பெறுகிறார்! ஆவடி மாநாட்டில் காமராசரைப் பேசவிடவில்லை. சுப்பிரமணியத்தைப் பேச அனுமதிக்கவில்லை. இந்தி வெறியர்கள் கூச்சலிட்டுமேடையை விட்டுக் கீழே இறங்கினார்கள் தமிழ் நாட்டு மண்ணிலே, தமிழ் நாட்டின் நிதி அமைச்சரை! அப்போதெல்லாம் சீப் மினிஸ்டருக்கு இந்தத் திடீர் உணர்ச்சி உள்ளத்தைப் பொத்துக்கொண்டு வெள்ளம் போல் வெளி வரவில்லை இப்போது மட்டும் கேட் துடிக்கிறார்! லோகியவுக்

(11-ம் பக்கம் பார்க்க)

சிலம்புக்கள்வன் 'சி.பொ.மா.'வின் செய

ஊர்ந்தது உயர்ந்தால்

அது நிலவாக இருப்பதால் தான் உலகால் அதன் ஒளியை மறைக்க முடிகிறது. கதிரவனிடம் அதன் கைவரிசை செல்லுவதே இல்லை. சூடு தாங்கா விட்டால் தன்னைச் சுழற்றிக் கொள்ளுகிறது. அடங்கி நடப்பவர்களிடம் ஆதிக்கத்தைப் பயன் படுத்துவதும் அதட்டி மிரட்டுபவர்களிடம் அடி பணிந்து போவதுதான் இந்த உலகின் இயல்பு! எரிபொருளாக விழுந்து அணைந்த காலத்திலிருந்து, எரிபொருள்களில் இருக்க இடங் கிடைக்குமா என்று தேடும் காலம் வரை உலகம் இப்படியேதான் இருந்துவருகிறது. முறைகள் மாறுகின்றன-அதன் குணம் மட்டும் மாறவே இல்லை!

வல்லான் வகுத்ததே வாய்க்கால்! வலிவற்றனுக்கு இங்கு இடமே இல்லை. இளைத்துப் போனவன் குரல் கூட எடுபடுவதில்லை.

சசிகலாவின் நிலை இப்படித் தானுனது இரக்கம் அவளை இன்னலுக்குள்ளாக்கி விட்டது. ஆறுமுகம் அடைக்கலம் புகுந்தவனுக நடந்து கொள்ளவில்லை. ஊர் சுற்றிவிட்டு வந்தால் ஓய்வெடுத்துக் கொள்ளும் சத்திரமாகவே அந்த வீட்டை மதித்தான். வம்பை வரவேற்று தன் வாழ்வில் புகுத்திக் கொண்டதற்காக மனம் வருந்தினாள்.

வளைந்து நெளிந்து வகையற்றுப்போன தன்வாழ்வைப் பற்றிய எண்ணங்கள் இடையிடையே அவளை இதயம் நோகச் செய்தன. இன்பம் எங்கே? அதைத் தன் இருப்பிடத்தில் இருந்து கொண்டே தேடித் துளாவினாள். எட்டாத உயரத்துக்கும் அப்பால் ஓடி ஒளிந்து கொண்டது அது. வாழத்தான் நினைத்தாள் அவள்; தன்னந்தனியே எவராலும் பெற்று விடக் கூடிய பொருளல்லவே அது. தான் வாழத் துணை தேடுவோர் நிறைந்த உலகில் இவள் வாழ எவராவது இடங் கொடுப்பார்களா?

அன்று ஆறுமுகம் வெளியில் போகவில்லை. விடிந்து வெகுநேரம் ஆகியும் வயிற்றுக்கு வழிகாணுமல் இருந்த சசிகலாவுக்கு, இதைப் பற்றிக் கவனிக்கும் நினைவே தோன்றவில்லை. வெவ்வேறு பாதைகளில் பயணம் செய்வோர் இடையில் ஏதோ ஒரு இடத்தில் தங்கி இருப்பதுபோல் இருவரும் இருந்தனர்.

"சசி! அந்த ஆள் வந்தானு?"

அக்கரையோடு ஆறுமுகம் கேட்ட இந்தக் கேள்வி அவனிடம் ஆத்திரத்தை உண்டாக்கிற்று.

"எந்த ஆள்?" என்று கேட்டாள்.

'அதுதான் உன்னை அழைத்துப்போவதாகச் சொன்னுனே அந்த ஆள்!" என்ருன் ஆறுமுகம்.

வீசி யெறிந்த பொருளைப் பற்றி வேடிக்கையாகப் பேசுவது போல ஒலித்தது அவன் குரல்.

"ஒரு ஆளிடம் பட்டது போதாதா? இன்னொரு ஆள் வேறு வேண்டுமா?" என்ருள் சசி.

உடல்அயர்ந்து போயிருந்ததால் அவளுடைய உணர்ச்சிகளுக்குவேகம் ஏற்படவில்லை. சிதறிப்பறக்கும் தீப்பொறி தீ... விழுவதற்கு முன்ன... அணைந்து போவதைப் போல, இதயத்தில் உருவான ஆத்திரம் வெளிப்படும் போதே சூடு தணிந்து விட்டது.

தணிந்து போகும் நிலையில் ஆறுமுகம் இல்லை. அந்தத் துரும்பு எப்படியோ வளர்ந்து இறுகிஇரும்பாகி இருந்தது.

"இங்கே வருகிற எவரிடமும் உன்னைப் பற்றிய கவலைஇருக்க வேண்டியஅவசியமே இல்லை, சசி! அவர்களுடைய தேவைக்காகத் தான் இங்கே வருகிருர்கள். உனக்கு வேண்டியவைகளைச் சாதித்துக் கொள்வது உன் புத்திசாலித்தனத்தைப் பொறுத்தது" என்ருன் ஆறுமுகம்.

தன்னை அடித்து வீழ்த்தி விட்டான் என்பதை சசிகலா உணர்ந்தாள். அதற்குமேல் அவளால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. பாய்வதா அல்லது பதுங்குவதா என்பது விளங்கவில்லை அவளுக்கு.

"அன்பைத் தேடி வருபவர்களுக்குத்தான் அது பொருந்தும்; ஆதரவு கோருபவர்களுக்குஅல்ல" என்று கத்தி விட்டாள்.

"வீண் பேச்சு எதற்கு, சசி? நான்இங்கிருந்து வெளியேறுவதற்குத் தீர்மானித்து விட்டேன்"

"அதற்கான ஏற்பாடுகள் செய்யத்தான் என்னை அனுதையாக அவதிப்பட விட்டுச்சென்றீர்களோ?"

"நானு உன்னை விட்டுச் சென்றேன். நீ என்னை விரட்டினுய். விலகிப்போக வழி செய்து கொண்டேன்."

"அந்த ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து விட்டனவா?"

"முடியாமல் என்ன? கோடி கோடியாகப் பணத்தைக் குவிக்க வழிகண்டு விட்டேன். படவுலகம் பணத்தை கொட்டிக் கொடுக்கப் போகிறது. கள்ளத்தனமாக பாதி, நல்ல விதமாகப் பாதி என்று பணத்தைப் பத்து விதங்களிலும் சேர்க்கத் திட்டமிட்டு விட்டேன். உன்னைத்தான் நம்பினேன். நீ மட்டும் என் னிஷ்டத்துக்கு நடந்திருந்தால் இப்படியா இருப்பாய்? காய்ந்த வயிருேடு கஷ்டப் படும் நிலைமையா ஏற்படும்? உடலே கனிந்திருக்கும்! அழைத்தால் ஓடிவர ஆயிரம் பேர் காத்திருப்பார்கள்!"

"பணத்துக்காகப் பாழாவதா? பணம், பணம் என்று அலைகிறீர்களே! செத்தபிறகு சுடுகாட்டுக்கு அது வரவா போகிறது?"

"எதுவும் வராது, சசி! பணம் மட்டுந்தானு வராது? செத்தால் எதுவும் வராது! பத்தப்பேருக்குப் பயந்து எரித்துச் சாம்பலாக்க எவரெவரோ வருவார்கள். அவர்களையும் வாழ்க்கை வெள்ளம் அடுத்த நாளே தன்னுேடு இழுத்துக் கொண்டு போய் விடும். எதுவுமே தெரியாதவன் இவ்வளவு பேசுகிருனே என்று ஆச்சரியப்படுகிருயா? நெருக்கடிதான் என்னைப் போன்றவர்களை நினைக்கச் செய்கிறது. நினைவுகள் எண்ணங்களாக இணைகின்றன. எண்ணங்களின் இடையருத தோற்றம் சிந்தனையாகிறது 'மனதை பறிகொடுத்து விட்டாள், மாலையிட அழைக்கிருள்' என்று மனம் பூரித்து தேடிச் செல்லப்பட்ட மங்கை, மளிகைக்கடையில்சாமான்கள் வாங்கிவர ஆளில்லை, அதனுல் சொல்லி அனுப்பினேன்' என்ருல் எப்படி இருக்கும்? அப்படித்தான் ஆனது உன் போக்கு. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். நீ புத்திசாலியாகவில்லை. அன்ருட வாழ்வை அலுப்பில்லாமல் நடத்தஎன்னை ஆள்தேட அனுப்பினுய். தினந்தினம் பயிரிட எனக்கு மனம் வரவில்லை; காலையில் விதைப்பதும் மாலையில் அறுவடை செய்வதும் எண்ணத் தெரியாத இயந்திரங்கள் செய்கிற காரியம். விதைத்தோம்-சில நாள் உழைத்தோம்-பிறகு விளைவை அனுபவித்தோம் என்றிருக்க வேண்டும். அதனுல்தான் வேறு ஆள் தேடிக் கொண்டேன்! திரையுலக இளவரசியாவாள் அந்த எழிலரசி. நான் அவளுடைய நிர்வாகி!"

"யார் அவள்?"

"சொன்னுல் கோபித்துக் கொள்வாய்—என்னைக் கண்டபடி தூற்றுவாய்-அவளை வரவிடாமல் அணைகோல முயற்சிப்பாய்!"

பதறிப் போனுள் சசிகலா. அவள் உடல் நடுங்கிற்று. ஒருவேளை அவளாக இருக்குமோ? சிறு மயிரிழை அளவில் உருவான சந்தேகம் தன் போக்கில் வளர்ந்து பெருமலைக்குன்று போலக்காட்சி அளித்தது.

"தயவு செய்து சொல்லுங்கள். யார் அவள்?"

"சொல்லிவிடுகிறேன். உன் எல்லைக் கல்லைத் தாண்டி அவள் ஏற்கனவே வெளி வந்து விட்டாள்! உன்னுல் ஏதும் செய்ய முடியாது. அவள்தான் கீதா...!"

"ஐயோ!" என்று அலறி விட்டாள்சசிகலா அவள்உடல் அணு அணுவாகச்சிதைந்துத் துண்டுதுண்டாகச் சிதறியது போலத் தோன்றியது. இருண்ட மேகங்கள் அவளைச் சுற்றிக் கவிந்து வருவது போல இருந்தது. இரத்தக் குழாய்கள் குளிர்ந்து குருதி உறைந்துவிட்டது. மூடி இருந்தஇமைகளுக்கும் விழிகளுக்கும் இடையில்வரிசையாகஒளி புள்ளிகளும் கரும்புள்ளிகளும் ஒன்றையொன்றுதொடர்ந்து உருண்டு கொண்டுசென்றன. தலையில் யாரோ ஒரு பெரும் மரக்கட்டையால் அடித்துக் கொண்டே இருந்தார்கள். அப்படியே உணர்வற்றவள் போல விழுந்து விட்டாள்.

அவளுக்கு மூர்ச்சை தெளியும் வரை காத்திருந்தான் ஆறுமுகம். அவ்வளவு உணர்ச்சியடைய வேண்டிய தேவை என்ன அவளுக்கு என்பதை அவனுல் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தன்மேல் உள்ள வெறுப்புதான் அருவருப்பை உருவாக்கி இருக்க வேண்டும் என்று நம்பினுன்.

மெல்ல விழிகளைத் திறந்தாள் சசிகலா. எதிரே ஆறுமுகம் உட்கார்ந்திருந்தான். தெம்பை எப்படித்தான் பெற்ருளோ, தெரியவில்லை. எழுந்து அவன் கால்களைப் பற்றிக் கொண்டாள்.

"தயவுசெய்து உங்களை வேண்டிக்கேட்டுக் கொள்ளுகிறேன். கீதாவைப் பாழாக்கி விடாதீர்கள். அவள் நல்ல விதமாக வாழவேண்டுமென்பதற்காகத்தான் என்னை நானே நாசமாக்கிக் கொண்டேன். ஏழ்மை எங்களை வாட்டி வதைத்தது. எங்களைச் சுற்றி இருந்தவர்கள் எல்லாம் எப்போது வேரோடு எங்கள் குடும்பத்தை பெயர்த்து விடலாம் என்று திட்டம் போடத் தொடங்கினர். வயது வந்தவள் நானெருத்திதான்; தாய் வயதானவள், என் தங்கையும் தம்பியும் உலக விவகாரத்தையே உணராதவர்கள் என்னைப் பாழாக்கிக் கொள்வதன் மூலம் எங்கள்குடும்பம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வழி செய்யலாம் என்ற வேட்கைதான் என்னை வெட்கங்கெட்ட வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ளச் செய்தது. ஊருக்குத் தெரியாமல் - எங்கள் குடும்பத்திலேயே என் தாயைத் தவிர மற்ற எவருக்கும் தெரியாமல் இரவு நேரங்களில் - இங்கு வந்து போய்க்கொண்டிருந்தேன். எங்கள் வாழ்வில் எப்பேர்ப்பட்ட வதை ஏற்பட்டிருந்தால் இப்படிப் பட்ட நிலைக்குத் தாழ்ந்திருப்போம் என்று நினைக்கிறீர்கள்? இவ்வளவும் என் தங்கையும் தம்பியும் ஒழுங்கான வாழ்வு நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் செய்தேன். எதைக் காப்பாற்றுவதற்காக நான் என்னையே அழித்துக் கொண்டேனே அதைக்காணுமற் போக்கப் போகிறேன் என்று சொல்லுகிறீர்கள். என்னைப்பற்றி நீங்கள்என்ன வேண்டுமானுலும் நினைத்துக் கொள்ளுங்கள். ஆனுல் எங்கள் குடும்பத்தின் பெருமையைக் குலைக்காதீர்கள்".

ஒரு நீண்ட வேண்டுகோளை கண்ணீர் துளிகளால் இடையிடையே புள்ளி வைத்துச் சொல்லி முடித்தாள். ஆறுமுகம் அவளை அலட்சியமாகப் பார்த்தான்.

"எவரையும் வதைக்காமல் வாழ்வு தேடிக் கொண்டவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவு, சசீ. உலகமே அடுத்தவர்களை விழுங்கித்தான் வாழுகிறது. எவராவது பாழாகிவிடுவார்களே என்று இரக்கப்பட்டால்எப்போதுமே பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான். எனக்குஎவருமே இரக்கங் காட்டியதில்லை; நீ ஒருத்தித்தான் எனக்காக இரக்கப்பட்டாய். அதைச் சொல்லியே நீ என்னை நன்றி காட்ட வேண்டலாம். ஆனுல் அப்போதும் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். எத்தனையோ பேர் இருக்கிருர்கள், எவரையாவது தொல்லைப் படுத்தி வாழ்வைத் தொடங்கலாம் என்றிருந்தால் உன் வாழ்வில் குறுக்கிடவே மாட்டேன். எனக்குக் கட்டுப் படும் நிலையில் நீ ஒருத்தி தான் இருக்கிருய் - வேறு எவருமே இல்லை. உன்னைக் காக்க நினைத்தால் என்னைக் கைவிடவேண்டி நேரிடும். என்னைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்தால், உன்னைக்கைவிடவேண்டிநேரிடும். எப்போதும் எவரையாவது அண்டிவாழும். நிலைமைக்கு ஆளாக நான் விரும்பவில்லை. ஆகையால் நான் உன் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய இயலாமைக்கு நான் வருந்துகிறேன். கீதா அப்படித்தான் என்ன ஆகப் போகிருள்? சினிமாவில் நடிக்கப்போகிருள்."

என்னைத் த... கணவனுக ஏற்றுக்கொ...ளப்போகிருள்"

அழுகை உடனே ஓடி மறைந்தது. கீதாவிடமிருந்து எழுந்து நின்ருள்.

"என்ன......? உங்களை அவள் கணவராக..."

வெடித்துச் சிதறிய பஞ்சைப்போலப் பறந்தன அந்தச் சொற்கள். நெஞ்சு பதைக்க அவனை நிமிர்ந்து பார்த்தாள் சசிகலா. ஆறுமுகம் பயந்துபோனுன்,

"ஏன்? என்னைத் திருமணம் செய்து கொண்டால் என்ன, சசி?"

"வரி இருப்பதாலேயே கழுதை கர்ஜிக்க முடியாது. தூசி படிவதாலேயே கோபுரம் குப்பை மேடாகிவிடாது. இது நடக்க விட மாட்டேன். எங்கள் குடும்பமே குட்டிச் சுவரானுலும் சரி, நீங்கள் அதில் இடம் பெற முடியாது."

"நீயார் அனுமதிக்க? நான் அங்கே நுழைந்து நாட்கள் பல ஆகிவிட்டன. உன் தங்கை என்னைக் காதலிக்கிருள். அவளை இன்றுதான் சினிமாக் கம்பெனியில் சேர்த்துவிட்டேன். ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டு விட்டாள்"

"உங்களையா என் தங்கை காதலிக்கிருள்?"

"காதல் என்பது தொடக்கத்துக்குப் பயன் படுத்தும் சொல்லல்லவா? தொடர்ச்சியும் உருவாகிவிட்டது"

"ஒழித்துவிடுவேனே தவிர, உருவாக விடமாட்டேன், ஆறுமுகம்!"

அவனுடைய பெயரை அழுத்தந்திருத்தமாக உச்சரித்தாள் சசிகலா. மதிப்புத் துளிக்கூடக் குறையாமல் பேசிவந்த பெண் எதிர்பாராத விதமாக அவனைப் பெயரிட்டு அழைத்தது என்னவோ போலிருந்தது, ஆறுமுகத்துக்கு. சசிகலா தொடர்ந்தாள்.

"நாசத்தைத் தூவுகிற நச்சரவு நீ என்பது எனக்குத் தெரியாது. நாதியற்றவனுகத் திரிந்தாய்; நல்ல வார்த்தைகள் பேசுவதற்குஎவருமே இல்லாமல், எல்லோர்க்கும் இழிந்தவனுய் இட்ட வேலைசெய்யும்எடுபிடியாக வாழ்ந்தாய், உனக்கு இரக்கங்காட்டினேன். ஆஸ்பத்திரியில்அனுதை பிணமாகும் நிலை அடைந்தாய். என்னுடைய பெயரை உனக்கு இரவல் கொடுத்து உனக்கு நல்ல நிலையைக்கொ...த்தேன். நீ என்னையே வெட்டிப் புதைக்கத் திட்டமிடுகிருய். அப்படித் தானே!'

"பேதைப் பெண்ணே! நடந்ததைச் சொல்லிஎதுவும்ஆகப் போவதில்லை. இப்போது பிடி என் கையில் இருக்கிறது. நான் நினைத்தால் உன் தங்கையின்வாழ்வில் தீவைக்கமுடியும்"

"தெருவில் நின்ற நீ தீவைக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டாய். எல்லாம்..."

"உன்னுல் அல்ல இந்தஉலகத்தால்வஞ்சகத்தைக்கொஞ்சங் கொஞ்சமாகஎனக்குகற்பித்ததுஇந்த உலகந்தான். நன்றி மறப்பவன்தான் நல்லநிலை அடைவான்; அதை நினைத்து மதிப்பவன் நாசமாகித்தான் போவான். நல்ல பண்புகளைப் பற்றி எழுதியவர்களும் பேசுபவர்களுந்தான் நயவஞ்சகர்கள்! இல்லாதவைகளை எழுதுவதன் மூலம் ஈடுசெய்து கொண்டவர்கள். உன் தங்கை என் மனைவி, காந்தர்வ விவாகம்செய்துகொண்டேன். இப்போது நீ முட்டுக்கட்டை போட்டால், அவளும் உன்னைப்போல் இல்வாழ்வில் ஓய்ந்து போனவர்களுக்குப் பயன்படும் உல்லாசக் கருவி ஆவாள். ஒதுங்கியிரு; அவளாவது ஒழுங்காக வாழ வழி விடு"

"உனக்கு அவள் மனைவியாவதைவிட மரண மடைவதே மேல்"

இதைச் சொல்லிவிட்டு, அந்த வீட்டை விட்டு வெளியேறினுள் சசிகலா.

வெய்யில் உலகைக் கொளுத்திக் கொண்டிருந்தது. அதன் சூடு தாங்காமல் உலகம் சுருண்டு விழுந்தது. உயிரினங்கள் தவித்தன. பூச்சி புழுக்கள் எல்லாம் வெளிவராது நிழலுக்குள் பதுங்கின. தெருவில் யாரோ சிலர் வியர்த்து விறுவிறுத்துப்போய் வேதனை தாங்காது நடந்து கொண்டிருந்தனர். வெப்பத்தின் சாயலே படியாதவள்போல வேகம் வேகமாக நடந்து சென்ருள் சசிகலா.

அவள் போவதை வீட்டுக் குள்ளிருந்தே எட்டிப்பார்த்துக்கொண்டிருந்த ஆறுமுகம், அவள்உருவம் மறைந்த பின் உள்ளே சென்ருன். அவன் மனம் அமைதி இழந்தது. நெஞ்சில் கோபம் கொந்தளித்தது. அவளைக் கொலை செய்துவிட்டால்...? திரும்பிவந்தவுடன் சசிகலாவின் கழுத்தையே திருகி விட்டால் என்ன என்று சிந்தித்தான். ஆனுல்... அந்தப் புதுவாழ்வு... குவிந்து நிறையப் போகிற பணம்... சீ! ஏதோ புத்தி கெட்டவள்! தெரியாத்தனமாகப் புலம்பி விட்டாள்! போகிருள்! சிறுபிழையைப் பற்றிக் கவலைப்பட்டு வருகிற பெருவாழ்வை இழப்பதா?...... எரிமலை இளவேனில் சோலையாக மாறிற்று...... திரும்பி வந்தவுடன் அவளைத் திருத்த வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான் ஆறுமுகம்!

டி.கே.சீனிவாசன்

ஜூலை 3-ந் தேதியிலிருந்து....
மாநகராட்சி மன்றத்திலே காங்கிரசுக்காரர்கள் களவாடியவைகளை காட்டும் கலங்கரை விளக்கமாக உதயமாகிறது.
ஞாயிறு
ஆசிரியர். சி. சிட்டிபாபு, எம். சி.
விலை 16 காசுகள்தான்
முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்.
ஜூலை 17-ந் தேதி இதழிலிருந்து......
நாவலாசிரியர் எஸ். எஸ். தென்னரசு
எழுதும் தொடர்கதை
சட்டம் ஓர் இருட்டறை
விவரங்கட்கு:
ஞாயிறு அலுவலகம்,
5, குப்புமுத்து முதலி தெரு, சென்னை-5.

இனமுழக்கம் ஜூலை 15 முதல் தென்னரசு தரும்
இரண்டாம் படைப்பு ஆரம்பமாகிறது!
★
★ சேதுக்கரையில் அலைமோதிக்கிடந்த ஏழை வீட்டு அழகி ஒருத்தியின் உன்னதச் சரித்திரம்......
தங்கச்சி மடம்
★ நாற்பதாண்டுகளுக்கு முன்பு இராமனுதபுர மாவட்டத்தில் நிகழ்ந்த சுவைமிக்க காதல் கதை!
ஜூலை 15! ஜூலை 15!

சி. பி. சிற்றரசு சுற்றுப்பயணம்

ஜூலை
1. சோழவந்தான் காலை திருமணம் மாலை பொதுக் கூட்டம்.
2. பிரதாபராமபுரம்.
3. கீவளூர்.
4. திருச்சி, காலை திருமணம் செம்படவன் காடு-மாலை பொதுக்கூட்டம்.
5. ஆயக்காரன்புலம்.
6. ஜெயங்கொண்டம்
7. திருப்பணந்தாள்.
8. திருநீலக்குடி.
9. பட்டீசுரம்.
10. திருவில்லிபுத்தூர்
11. ஆலம்பாடி.
12. வயலப்பாடி.
13. காட்டுமன்னுர்குடி
14. நெல்லிக்குப்பம்.
15. சென்னை.
16. காஞ்சீபுரம்
18, 19. சேலம் பகுதிகள்.
20. பூளமேடு.
21. உடையாம் பாளையம்
22. தெலுங்கபாளையம்
23. கணக்கன் பாளையம்
24. திருப்போரூர்
25. செங்கற்பட்டு.
26. சென்னை.
28. மண்டபம்.
29. வீரசோழம்.
31. வேலூர்.

லியோ வல்ல, டால்ஸ்டாய்!

ஜனார்த்தனம், B. A.

உலகத்திலுள்ள இன்பங்கள் அனைத்தையும் அணு அணுவாகச் சுவைத்தவன்-சுவைத்துக் கொண்டிருப்பவன் - சுவைக்கக் கூடிய ஆற்றல் படைத்தவன்தான் லியோ. அலங்கார அரண்மனை போன்ற மாளிகை, உண்ண வகை வகையான உணவு, உடலைச் சுற்றி உயர்ந்த ஆடை ஆபரணங்கள், பள்ளி அறையை அலங்கரிக்க கொவ்வையிதழ் மங்கையர் பலர், நினைத்ததை நிறைவேற்ற எத்தனையோ பேர்—இவ்வளவு சுக போகங்களிலிருந்தும், அன்று ஏனோ லியோவிற்கு எதிலும் நாட்டமில்லை. உடலை அலங்கரித்த ஆபரணங்கள் முள்ளாக உறுத்திற்று. மலர் மஞ்சம் மயான வெறுப்பை அளித்தது! கண்களில் பட்ட எந்தப் பொருளும் வெறுப்பைத் தவிர வேறொன்றையும் அவனுக்குக் கொடுக்க இயலவில்லை !!

லியோ ! அமைதியற்று அந்தப் பெரிய அறையில் சிறைப்பட்ட சிங்கத்தை ஒப்ப, குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவன் உள்ள அமைதி குலைந்து பல திங்கள் ஆகின்றன.

உண்மைதான் !

ஆனால் இன்று ! அவன் உள்ளத்தில் லேசாக உருவெடுத்த புயல், கொந்தளிக்கும் கடலாக மாறி, சிருங்கார வாழ்விலே மூழ்கிக் கிடந்த அவன் சிந்தையையும் செயலையும் எங்கோ திருப்பி அமைத்துவிட்டது. அதுமட்டுமல்ல, அவன் பரம்பரையே சமூகத் துரோகிகள் என்று அவன் அடி நெஞ்சத்தில் ஒரு குரல் அலறிக் கொண்டே இருந்தது.

தத்தளித்தான் லியோ ! உடல் சோர, உள்ளம்சோர, தன்பஞ்சணையில் போய் விழுந்தான். உள்ளத்தில் அமைதியில்லாத போது, கற்பனையை ஏதோ ஒன்று ஆட்டிப் படைக்கும்போது எழுத்து எங்கிருந்து பிறக்கும்! இதுவரை எழுதி வந்த சிருங்கார சுவை ததும்பும் நாவலை அவனால் ஒரு அடிகூடத் தொடர முடியவில்லை. அதை அப்படியே மூடிவைத்துவிட்டு சாளரத்திற்கு எதிரில் போய் நின்றான் அவன். இதுவரை எந்த வெண்மதியை, எந்த விண்மீன்களை, தன் போதை நிறைந்த கண்களால், வெறியேறிய விழிகளால் கண்டு வந்தானோ, அந்த வானத்துத் தாரகைகள் இன்று அவனைப் பார்த்து பரிகசித்துக் கொண்டிருந்தன !

கொந்தளிக்கும் உள்ளத்திற்கு அமைதிகாண முயன்றவனுக்கு ஏமாற்றந்தான் ! சோர்வுடன் சாளரத்தைவிட்டு மறுபடியும் மேஜை முன் வந்து அமர்ந்தான் மனத்தில் உண்டான எண்ண அலைகள், மனச்சாட்சி என்ற மதிலை மோதிக் கொண்டே இருந்தது.

அந்தக் கொந்தளிப்பின் பயன்...? வண்ண ஒளியடியில், இரவைப் பகலாக்கிக் கொண்டு, மதுவிலும் மங்கையிலும் இன்பம் காணும் லியோவின் கண்கள்—கனத்தன. உலகத்து உயிரினங்கள் உறங்கும் அந்த நேரத்தில், உழைக்கும் உடல்-பகலை விரட்டிவிட்டு இரவு ஏகாந்தமாக ஆட்சி செய்யும் அந்த அந்தகாரத்தில், லியோவிடம் இரக்கம் கொண்ட நித்திராதேவி அவனை, அவன் இருந்த நிலையிலேயே தழுவிக் கொண்டுவிட்டாள்......!!!

காலத்தை உணவாகக் கொண்ட கடிகாரம் பன்னிரண்டை விழுங்கிவிட்டதற்குஅறிகுறியாக ''டாங், டாங்'' என்று ஒலித்துவிட்டு ஓய்ந்தது.

* * *

'' டொக், டொக், டொக் ''

விண்ணும், மண்ணும் அமைதியின் அணைப்பிலே ஆழ்ந்துகிடக்கின்ற இந்த நடுநிசியில் கதவை யார் தட்டுவது ?

அதிர்ச்சி அடங்கி, லியோ கதவைத் திறக்குமுன், தட்டிய ...வம் அறையுள்ளே வந்து ...டது. லியோ உறங்குமுன் ...வைத் தாளிடாதது, வந்த ...வத்திற்கு வசதியாகப் போய்

கண் விழித்த லியோ கண்ட காட்சி...? எதிரில் நின்ற உருவத்தைக் காணச் சகிக்கா(த)மல் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டுவிட்டான் ! வறண்டு பறந்த தலை, ஒட்டி உலர்ந்து, எலும்புகள் குத்திட்டு நிற்கும் உடல், அந்த உடலைச் சுற்றி அழுக்கேறியக் கந்தை-இதோடு ரோமம்படர்ந்தமுகத்திலே குரூரச் சிரிப்பு...இவை போதாதா அந்த செல்வச் சீமானைப் பயமுறுத்துவதற்கு ?

'' யார் நீ ? பேய்களும் ஆவிகளும் ஆட்சி செய்யும் இந்த நேரத்தில் இங்கு ஏன் வந்தாய் ''

லியோ கண்களைத் திறவாமலே கேட்டான். அவன் தன் வாழ்க்கையில் இப்படிபபட்ட கோர உருவத்தை இதுவரைச் சந்தித்திருக்கமாட்டான் போலும் !

'' ஹஹ் ஹஹ '' வந்தவனின் வறண்ட இதழ்களிலிருந்து வேதனைச் சிரிப்பு வெடித்துக் கிளம்பியது.

'' ஆம் ! பிரபு ! என்னை யாரென்று உங்களுக்குத் தெரியாதுதான். தாங்கள்தான் வாழப் பிறந்த வர்க்கத்தில் பிறந்துவிட்டீர்களே ! குபேர வாழ்வு நடத்தும் தங்களைப் போன்றவர்களுக்கு என்னைப் போன்று வறுமையிலே உழலும் உழவனை எப்படித் தெரிந்திருக்க முடியும்...?

அந்த மனிதன் அருகில் நெருங்க, நெருங்க லியோவிற்கு அருவருப்பும், பயமும், போட்டியிட்டு அதிகரித்துக் கொண்டிருந்தன.

''நில்'' '' நிம்மதி(யை)யான உறக்கத்தைக் கெடுக்க, இந்த நேரத்தில் ஏன் வந்தாய்?''

'' தங்களைப் போன்ற பிரபுக்களின் உணர்வற்ற உறக்கத்தின் பயன்தான் இன்று நான் இங்கு—இந்தநேரத்தில்—வந்திருப்பது. தங்கள் பொன்னான நித்திரையைக் கலைத்ததற்கு என்னை மன்னித்து விடுங்கள் பிரபு! நான் (கேட்கும்) அல்ல!...அல்ல—பாட்டாளி வர்க்கத்தின் பிரதி நிதி கேட்கும் சில வினாக்களுக்குத் தாங்கள் (வி) பதிலளித்துவிட்டால்...நான் இங்கிருந்து நீங்குவதில் தடையேதுமில்லை''

''சரி! சீக்கிரம் கூறவேண்டியதைக் கூறிவிட்டு வெளியேறு.''—லியோ படபடத்தான்.

''நல்லது பிரபு! தாங்கள் நடத்தும் இந்த உல்லாச வாழ்க்கையும், உப்பரிகை வாசமும்,விதவித உணவும், மலர் மஞ்சமும் எப்படிக் கிடைத்தனவென்று தங்களுக்குத் தெரியுமா?''

லியோவிற்கு அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் சிரிப்பு வரத்தான் செய்தது.

''இது என்ன கேள்வி...! என் தகப்பனார் எனக்கு விட்டுச் சென்ற ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலிருந்து கிடைக்கும்வருவாய் எனக்கு இந்த இன்ப வாழ்க்கையை அளிக்கிறது. இதிலென்ன உனக்கு ஐயம்?''

எதிரில் நின்ற பஞ்சையின் விழிகளில், கேலி செய்வதைப் போன்ற ஒளி பரவுவதை லியோ கவனிக்கத் தவறவில்லை.

''அது போகட்டும்! உங்கள் பண்ணையில் உழைத்துஉழைத்து உருக்குலையும் ஏழைப் பாட்டாளியின் வாழ்க்கையைப் பற்றித் தாங்கள் அறிவீர்களா?''

''அதை நான் அறியத் தேவையில்லை...அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும் எங்களுக்கில்லை. நாங்கள் அறிவையும், அரசியலையும், கலைகளையும் நாகரிகத்தையும் வளர்த்து உலக வாழ்க்கைக்கு சுவையூட்டுபவர்கள். அப்படிப்பட்ட நாங்கள் சாதாரண பண்ணை வேலையைப் பற்றியோ—கூலி வேலை செய்யும் உன்னைப் போன்றவர்களைப் பற்றியோ எண்ணிப் பார்க்க எங்களுக்கு ஓய்வு ஏது? வேறு ஏதாவது கேட்க வேண்டுமா?'' ஆத்திரத்துடனும், பரபரப்புடனும் ஒலித்தது லியோவின் வார்த்தைகள்.

''என்ன...??? கேவலம் ஒரு உழைத்துப் பிழைப்பவன், என்னைப் போன்ற சீமானை நண்பனென்று அழைக்கின்றாய் என்ன ஆணவம் உனக்கு...என் வேலையாட்களைஅழைத்து உன்னைஎன்ன செய்கிறேன் பார்!''

லியோவின் சிவந்த உதடுகள் துடித்தன! ஆனால் என்ன ஏமாற்றம். லியோவின் பயமுறுத்தல்கள் அனைத்தும் வெற்றுவேட்டாக அல்லவோ ஆகிவிட்டது. எதிரில் நின்ற பாட்டாளியின் நிலையில் ஒருவித மாற்றமுமில்லை. மாறாக மடை திறந்த வெள்ளம் போல் அந்த வறியவன் வார்த்தைகளைக் கொட்டத் துவங்கினான்.

நிழலல்ல, ஒளி !

அநியாயத்தின் வடிவமாய்-ஆணவத்தின் நிழலாய்-கொடுமையின் சாயலாய்க்கிடந்தவன் லியோ !

மதுக்கோப்பை - அவன் கண்ட முதல் இன்பம் ; மங்கைக்கூட்டம் - அவன் விரும்பிய மலர்த் தோட்டம் ! -இத்தனைக்குமிடையே உழன்றவன்தான் லியோ !

அவன்தான் காந்தி அண்ணலின் குருவாக விளங்கியவன் ! - பெயர், டால்ஸ்டாய் !

''தவறாக இருந்தால் தாங்கள் மன்னியுங்கள்...மன்னிக்காவிடிலும் நான் மருண்டுவிடப் போவதில்லை. தாங்கள் எதையும் செய்பவர்கள் என்பதை, இன்றை நிலையில்— அதுவும் இப்போதுள்ள நிலையில் நான் அணுவளவும் மறுக்கவில்லை

ஆனால்...! நான் தங்களிடமிருந்து அறிய விரும்புவது...தங்களை அறியச் செய்ய விரும்புவது ஒன்றே ஒன்றுதான்!!

''தாங்கள் வாழும் உல்லாச வாழ்க்கைக்கு நேர் எதிரான நகர வாழ்க்கை வாழும் ஒரு ஏழைப் பாட்டாளி வர்க்கம்,...விதி என்ற ஒன்றையே நம்பி நசியும்...வர்க்கம் இருக்கிறது என்பதைத் தங்களைப் போன்ற பிரபுக்கள் வர்க்கம் கனவிலும் நினைத்துப் பார்த்துப் பரிதாபப் பட்டதுண்டா?

லியோ மௌனமாக அமர்ந்திருந்தான். அந்தப் பாட்டாளியின் கேள்வி அவனை ஊமையாக்கிவிட்டதுபோலும்...!

''சொல்லுங்கள் பிரபு! தங்களுக்கும் எனக்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சற்றுக் கண்ணெடுத்துப் பாருங்கள்! திரண்டு பருத்த மினுமினுக்கும் உடல் தங்களுடையது. என்னைப் பற்றிக் கூறத் தேவையில்லை என்று நினைக்கிறேன். தாங்கள் தான் கண்கூடாகப் பார்க்கிறீர்களே! ஒட்டிய உடலும், உலர்ந்த மேனியும், பஞ்சடைந்த கண்களும், தள்ளாடிய உருவமும், தங்களுக்குப் பார்க்கவே அருவருப்பை உண்டாக்குகிறது அல்லவா?

''ஆம்'' என்பதைப் போலிருந்தது, லியோவின்மௌனம்.

''நான் இந்த நிலைக்கு எப்படி வர நேரிட்டது என்பதைத் தாங்கள் சிறிதேனும் உணர்ந்துவிட்டால் இந்த நடு நிசியில் தங்களைச் சந்தித்ததின் பயனை அடைந்தவனாவேன்.

''வறுமையின் சின்னமாக இப்படி நான்மட்டுமல்ல என் பின்னே ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான ஏழைகளும், பிச்சைக் காரர்களாக ஆக்கப்பட்டவர்களும், இந்த ருஷ்ய நாட்டின்—? இல்லை! இந்த உலகத்தின் பல்வேறு பாகங்களில் சிதறிக் கிடக்கிறார்கள்.''

''இந்தக் குளிரும் நடுநிசியில், பரதேசிகளாக ஆக்கப்பட்ட அந்தப் பாட்டாளி வர்க்கம் உங்களைப் போன்று பஞ்சணையில் புரண்டுக் கொண்டிருக்காது. எண்சாண் உடம்பை ஒரு சாணாக சுருக்கி, கொட்டும் இந்தப் பனியில்,உடல் விறைக்க, விறைக்க தெருவிலும் திறந்த வெளியிலும் சுருண்டு கிடக்கிறார்கள்; அந்த ஏழை எளியவர்களின் பிரதிநிதிதான் நான்! எங்களுக்கு ஏன இந்த இழிநிலை என்பதைச் சற்று பொறுமையாகக் கேளுங்கள்.

லியோ எப்பொழுதோ, பொறுமை இழந்துவிட்டான். ஆனாலும் அந்தப் பாட்டாளியின் பிரதிநிதி தொடர்ந்தான், ''எப்படியோ உங்களுக்கு உரிமைஎன்று கூறப்படும் நிலங்களிலும், பண்ணைகளிலும், குருதியை நீராகப் பாய்ச்சி, எங்கள் உடலுழைப்பை எருவாக்கி, எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்கி, பயிராக்கி பயன்காணும்போது ... தங்களைப் போன்ற ஜமீன்தார்கள் எங்கள் உழைப்பின் பயனை சிறிதளவும் பாடுபடாமல் எடுத்துக்கொண்டு, பாடுபட்ட எங்களைப் பரதவிக்க விட்டீர்கள்'' அதோடு நில்லாமல் எங்கள் வர்க்கத்திலிருந்தே உயர்ந்தவர்கள், உரிமையுடையவர்கள் என்ற போர்வையில் நாட்டுப் புறங்களைவிட்டு நகரங்களுக்கு வந்தீர்கள்.''

''அப்படி வந்தவர்கள் பிறகு என்ன செய்தீர்கள் தெரியுமா? உங்களைப் போன்றவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான்! ஆனால் அவற்றை அணு அணுவாக கவனித்த உழைப்பாளிகளின் பிரதிநிதியாகிய நான் சொல்லுகிறேன்.

எங்களுடைய உழைப்பின் பலனை நகரங்களுக்குக் கொண்டு வந்து உல்லாச வாழ்க்கை வாழத் தலைப்பட்டீர்கள். உங்களுடைய வாழ்வை சுகமாக்கிக் கொள்ள கல்வி என்றும், கலை என்றும், விஞ்ஞானம்என்றும் எங்களுக்குப் புரியாத —பயன் படாத செயல்களைச் செய்து கொண்டு, உணவு உடை போன்ற தேவைகளை உழைக்காமலே பெற்று வந்தார்கள் உங்கள் மூதாதையர்! இப்பொழுது நீங்கள் அந்த வாழ்க்கையைச் சுவைக்கிறீர்கள். உழைக்காமல் உண்டு உடுத்து உல்லாசம் அனுபவிக்கும் பிரபுக்களாகிய நீங்கள் பாட்டாளியாகிய எங்களுக்கு உங்கள் கலையையும், கல்வியையும் விஞ்ஞானத்தையும் பயன் படச் செய்து, எங்கள் வாழ்வை வளப்படுத்தினீர்களா?...உங்கள் உள் மனத்தைக் கேட்பீர்களானால் ''இல்லை'' என்ற விடைதான் கிடைக்கும்''

''அந்த மனட்சாட்சியின் குரலுக்கு மாசு கற்பித்துத்தான் தாங்கள் இவ்வளவு காலம் வாழ்ந்துவிட்டீர்கள். நாங்கள் உழைத்து உழைத்து உணவின்றி—உடையின்றி—உறைவிடமின்றி—ஆற்றாது புலம்பி அல்லலுற தங்களைப் போன்றவர்கள் உல்லாச வாழ்க்கை வாழ்கிறீர்கள்.

ஒன்றுமட்டும் உண்மை!!

எங்களுக்கு உங்கள் வர்க்கத்தினர் இழைத்த — இப்பொழுது நீங்கள்இழைத்துவருகின்ற கொடுமைகளை நாள்தோறும் பெருகிவரும் உழைப்பாளி வர்க்கம், உணரத் துவங்கிவிட்டது. உங்களைப் போன்றவர்கள் இனியும் இயற்கைக்கு மாறான இன்ப வாழ்வைத் திருத்தி அமைக்காவிட்டால்,—உழைத்து ஓடாகும் பாட்டாளியின துன்பங்களையும், அவர்களுக்கு நீங்கள் இழைத்து வரும் கொடுமைகளையும் உணர்ந்து ஆவன செய்யாவிட்டால்...!

''கொதித்தெழும் ஏழைச் சமுதாயம் உங்கள் பிரபுக்கள் வர்க்கத்திற்கே ஒரு முடிவு கண்டுவிடும் என்பது திண்ணம்!!!''

நான் விடைபெறு முன்புஒன்று கூறுவேன்...எங்கள் வறுமையின் கொடுமையைத் தாங்கள் காண வேண்டுமானால், நீங்கள் தினம் நான்கு குதிரைகள் பூட்டிச் செல்லும் சாரட்டுகளின் திரைச் சீலைகளைச் சற்று விலக்குங்கள். உங்களைச் சுற்றிவாழும் உண்மை உலகம் நன்றாகத் தெரியும்''

ஒரே பேரமைதி! இடியோடு கூடிய மழை பெய்து ஓய்ந்துவிட்டது. அந்தப் பாட்டாளியின் பிரதிநிதி, தான் வந்த காரியத்தைச் சாதித்துவிட்ட பெருமிதத்தில் வெளியேறத் துவங்கிவிட்டான்.

''சற்று நில்! உன் பெயரென்ன! உன்னை நான் எங்கு சந்திப்பது...?

லியோவின் குரல் அவனைத் தடுத்து நிறுத்திற்று.

''என் பெயர்தான் ''பாட்டாளி'' என்னையும் என் அவல நிலையையும் காண வேண்டுமானால் நாளை இந்த மாஸ்கோ நகரத்திலுள்ள 'கித்தோப்' மார்க்கெட்டுக்கு வாருங்கள். அங்கு என்னைமட்டுமல்ல, என்னைப் போன்ற ஆயிரக்கணக்கானவர்களைச் சந்திக்கலாம். ஆனால் அவர்களெல்லாம் பாட்டாளிவர்க்கத்தின் அளவிட முடியாத சிறு பகுதிதான் என்பதும் நினைவிலிருக்கட்டும். நான் வருகிறேன்.''

* * *

லியோவின் உடலிலும் உள்ளத்திலும் ஆயிரமாயிரம் உணர்ச்சி மின்னல்கள் தாக்கியவாறு இருந்தன. சற்று முன் வந்த வறியவன் கூறியதனைத்தும் உண்மைதானா...?? தானும் தன் மூதாதையரும் பாட்டாளிகளுக்கு இவ்வளவு கொடுமைகளா இழைத்து வருகிறோம். இத்தகைய கேள்விகளுக்கு விடைகாணுமுன்பே லியோவின் சிந்தனைத் தொடர் அறுந்தது. உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்க முடியாமல் ஏதோ ஒன்று தடை செய்கிறதே...!!

* * *

''யாரது? நீயா''

அந்த நிலையிலும் லியோவால் அவளை அடையாளம் காண முடிந்தது. கலைந்த கேசமும், உடலை அறைகுறையாக மறைக்கும் ஆடையும்கூட, அவள் ஒரு

காலத்தில் எழிலரசியாக விளங்கி இருப்பாள் என்பதைப் பறை சாற்றிக்கொண்டிருந்தது. பருவம் கடந்த அவள் தன் நான்கு வயது பாலகனைக் கையில் பிடித்தவாறு லியோவின் எதிரில் நின்று கொண்டிருந்தாள். முகத்திலே உலகத்துச் சோகமனைத்தும் திரண்டு, வறண்ட புன்னகை ஒன்று நெளிந்து கொண்டிருந்தது.

லியோவிற்குக் கோபம் எல்லை மீறி விட்டது. அவன் இன்ப நித்திரையைக் கலைக்க வந்த இந்தப் பரட்டைத் தலைப் பாட்டாளியின் பிரதிநிதியும், இப்பொழுது எதிரில் நிற்கிறாளே, இந்த வறுமையின் அவதாரமும் யார்......? யார் ?

லியோ மூளையைக் கிளறிக் கொண்டான். ஆனால் விடையேதும் கிடைக்கவில்லை.

"என்னைத் தெரிய வில்லையா பிரபு!" வந்தவள் தான் பேசினாள் "என்னை நீங்கள் மறந்துவிட்டதில் வியப்பேது மில்லை என்றோ ஒருநாள் தங்கள் வெறியேறியக் காமக் களியாட்டத்திற்குப் பலியான என்னைத் தாங்கள் எப்படி இன்னும் நினைவு வைத்திருக்க முடியும். எனக்கு முன்னும் எனக்குப்பின்னும் எத்தனையோ பருவயெழில் மங்கையர் தங்களுக்கு இன்பம் நல்கியிருப்பார்கள் அந்த எத்தனை பேரில் நான் ஒருத்தி. இல்லையா பிரபு"?

அவள் பேச்சு லியோவை ஊமையாக்கும் ஆற்றல் பெற்றிருந்தது. அவன் தடுமாறினான்,

"என் அந்தரங்க வாழ்க்கைப் பற்றிப்பேச உனக்கென்ன உரிமை இருக்கிறது?

"இருக்கிறது பிரபு!! இருக்கிறது! நீங்கள் வேண்டுமானால் உங்கள் விருப்பம் பூர்த்தியான அன்றே என்னைமறந்திருக்கலாம். ஆனால் பெண்ணாகிய நாங்கள் அவ்வளவு எளிதில் தங்களை மறந்துவிட முடியுமா? ஒரு கனம் சிந்தியுங்கள்! எங்கள் அவல நிலைத் தங்களுக்குத் தெள்ளென விளங்கும் பருவம் என்னும் தேன் எங்களிடம் இருந்தவரை எங்களை நாடிவந்த தங்களைப் போன்ற பிரபுக்களும், கனவான்களும், எங்களிடமிருந்து பருவம் விடைபெற்றபின் நீங்களும்விடைபெற்று விடுகிறீர்கள்! ஆனால் எங்கள் உயிரும், வாழ்க்கையும் எங்கள் பருவத்துடன் கூடவே அழிந்து விடுவதில்லையே? அப்படியானால் சமூகக் கொடுமையால் உங்கள் இச்சைக்குப் பலியான என்னைப் போன்ற ஏழைப் பெண்கள் எப்படி வாழ்வது? சற்று சிந்தியுங்கள் பிரபு!! எங்கள் அவல நிலைத் தங்களுக்குப் புரியாமற் போகாது!!

இனியும் இந்த நிலையை நீடிக்க விடாதீர்கள் என்று கூறிவிட்டுப் போக இன்று இங்கு வந்தேன். நீங்கள் செய்யும் கொடுமையின் கொடூர சொரூபம் வெளிப்படத் துவங்கி விட்டது பணக்காரர்களுக்குப் பலியான எங்களின் எண்ணிக்கை பெருக்கெடுத்து கொந்தளிக்கும் பழி வாங்கும் உணர்ச்சியுடன். புறப்பட்டு விட்டோம். எங்களைப் பாழாக்கியவர்களை நோக்கி! இனியேனும் நீங்கள் இழைக்கும் கொடுமைகளை உணர்ந்து. எங்களை சமூகத்தில் மானத்துடன் வாழ வழி செய்யுங்கள். இல்லையேல்...... உங்களை நீங்களே அழித்துக் கொண்டவர்களாவீர்கள்......வருகிறேன்.

"நீ எங்கிருக்கிறாய்"?

"நீ என்று கூறுதீர்கள். நான் ஒருத்தி மட்டுமல்ல, இந்த அவல நிலைக்கு ஆளானவள். இந்த ஞாலமெங்கும் சிதறிக்கிடக்கின்றனர், உங்களால் மாசு படுத்தப்பட்ட சமூகத்தினர். அதில் ஒரு சிறிய பகுதிதான் நான் வசிக்கும் "கித்தோப் சந்தை."

எதிரில் நின்று வாதாடியவள் மறைந்து விட்டாள். லியோவிற்கு அந்தக் கடுங்குளிரிலும் உடல் முழுதும் வியர்த்து வழிந்தது. அவள் எங்கு செல்கிறாள் என்பதைக் காண விரைந்தெழுந்த லியோவின் கை எதிலோ பட்டு...

'தடார்' என்று கீழே விழுந்து கலகல வென்று நொறுங்கும் சப்தம் கேட்டு லியோ பதறி கண் விழித்தான்...

எதிரில் மேசையின் மேலிருந்த மது வகைகள் கொண்ட சீசாக்களும், வண்ண ஒளி பரப்பும் மதுக் கோப்பைகளும் தரையில் விழுந்து சுக்கு நூறாகச் சிதறிக் கிடந்தன.

உலகமே சுழல்வதைப் போலிருந்தது லியோவிற்கு! எதிரில் முதலில் தோன்றியவறியவனையும் காணோம்!! பணக்காரர்களால் கசக்கி எறியப்பட்ட அந்தவாடிய மலர் ...அந்தக் கணிகையையும் காணோம்! எதிரில் அவன் அறை நன்கு தாளிடப் பட்டிருந்தது! வண்ண ஒளி விளக்குகள் அந்த அறை முழுதும் பிரகாசித்துக் கொண்டிருந்தது ...! எழுதுவதற்குவைத்திருந்த தாள்கள் சிதறிக் கிடந்தன கீழே!

மைஇறகு கீழே விழுந்து கிடந்தது!

லியோ எழுதிக் கொண்டிருந்த சிருங்கார நாவல் பாதியில் சில வரிகளுடன் நின்றுவிட்டிருந்தது. லியோ, தான் அந்த மஞ்சத்தில் அலங்கோலமாகக் கிடந்த நிலையைக் கண்டு அவனே ஒரு கனம் வெட்கி விட்டான்!!

அப்படியானால் ... ... !!!

அந்தச் சிறு நேரத்தில் சிந்தனைச் சிக்கல்களுக்கிடையில் அப்படியொரு கனவா!!!

உறக்கம் கலைந்த லியோவால் தான் கண்டது கனவா? நினைவா? அல்லது உண்மை நிகழ்ச்சியா என்றே தெளிவாக முடிவு செய்ய இயலவில்லை. ஆனால் ஒன்று மட்டும் அவனுக்குத் தெளிவாகவிளங்கிற்று. தன் மனதில் இத்தனைக் காலம் வாள் கொண்டு அறுத்த மனப் போராட்டத்திற்கும், இந்த நிகழ்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டுஎன்பதுதெள்ளென விளங்கிற்று அவனுக்கு!!

விழித்துக் கொண்ட லியோவின் உடலும் உள்ளமும் சற்று முன் தோன்றிய கனவு நிகழ்ச்சியையே அசை போட்டுக் கொண்டிருந்தது, வெகு நேரம் வரை. அந்தப் பாட்டாளியின் பிரதிநிதியும், அந்த வஞ்சிக்கப்பட்ட வனிதையும், அவன் மனக் கண்முன் மறுபடியும் தோன்றிக்கொண்டே இருந்தார்கள்.

இரவு தன் பயணத்தை விரைவாக முடித்துக்கொண்டு விட்டது

பொழுது புலர இன்னும் சற்று நேரந்தான்! லியோ தன் குடும்பத்தார் எவருமே விழிக்காத முன்பு தன் அறையை விட்டு வெளியேறி விட்டான். தன் நினைவிலும் கனவிலும் மாறிமாறி வந்தவர்கள் குறிப்பிட்ட 'கித்தோப்' சந்தையை நோக்கி.

★ **ஆடம்பரத்தின் சொத்தே! என்னைப் பார்; என் போன்ற ஏழைகளின் கோலத்தை கித்தாப் மார்க்கட்டிற்குள்ளே நுழைந்துப் பார்! அப்போதுதான் ஏழை வாழ்விலே இருக்கின்ற பனிப்படலங்களை உங்களால் நன்ருக உணர முடியும்.**

நான்கு குதிரைகள் பூட்டிய காரட்டுகளில் வழக்கமாகச் செல்லும் அந்தச் செல்வச் சீமான், தன் சொந்தக் கால்களினாலேயே மாஸ்கோ நகரத்து வீதிகளில் விரைந்து கொண்டிருந்தான், சமூகத்தில் பெரும் பாலானவர்களின் அவல வாழ்க்கையை நேரில் காண,

ஆயிரக்கணக்கானஏழைகளின் உறைவிடமாகிய அந்தக் கித்தோப் மார்க்கெட் புதுமனிதர்களை வரவேற்பதைப் போல் லியோவை வரவேற்றது. தன் அவல நிலையை அந்தப் புதுமனிதர் கண்டு விட்டதில் அதற்கு நாணம் போலும்!

சமூகத்தின் புரையோடிய பாகத்தை மறைத்துக் கொண்டு, வெளியுலகத்தை வாழ வைத்துக் கொண்டிருந்தது, அந்த கித்தோப் மார்கெட்.

ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், சிசுக்களுமாக யாதொரு வேற்றுமையின்றி, திறந்தவெளியிலே, அறைகுறை அழுக்கடைந்த ஆடையுடனும், வதங்கிச் சுருங்கிய உடலுடனும் அந்த வாடும் குளிரில் சுருண்டு கிடந்தனர், அந்தப் பாமர பாட்டாளி மக்கள்.

எங்கும் ஒரே அழுக்கும், நாற்றமும் லியோவை திக்குமுக்காட வைத்தது.

லியோவின் கால்கள் தள்ளாடித் தள்ளாடி நடந்தன. தன் கண்களை மூடியிருந்த திரை விலக்கியதால் - லியோவைச் சுற்றியுள்ள உண்மையுலகம் நன்கு தெரிந்ததால் - அவனையும் அறியாமல் கண்ணீர் பெருகி வழிந்தது.

உடலாலும், உள்ளத்தாலும், தன் சத்தையெல்லாம் கல்வியாளர்கள், கனவான்கள் என்ற பெயரில் உலவும் பணக்காரர்களுக்கு அற்பணித்து விட்டு, வெறும் சக்கையாக, இனி பயனற்ற பொருளாக, அந்த அகன்ற சமவெளி முழுதும் குவிந்து கிடந்தார்கள், பணக்காரர்களால்வஞ்சிக்கப்பட்ட அந்தப் பாமர மக்கள்!!

இரவில் தோன்றிய நினைவிலோ அல்லது கனவிலோ வந்த அந்த இருவரையும், அந்த ஏழைகளின் கடலில் லியோவால் அடையாளம் காணவே முடியவில்லை.

வேதனை நெஞ்சைப் பிழிய கண்ணீர் கரைபுரண்டோட, உள்ளம் இதுவரை செய்த கொடுமைகளை எண்ணி எண்ணி கழிவிரக்கத்தால் ஏங்க, இயந்திரம்போல் தள்ளாடியபடியே கால்கள் அவன் மாளிகையை நோக்கி இழுத்துச் சென்றன.

பழைய லியோ செத்து விட்டான்! சமூகத்தின் உண்மை நிலையை உணர்ந்து விட்ட புதிய லியோ பிறந்து விட்டான்!! அவன் ஆடம்பர வாழ்க்கை அன்றுடன் அழிந்து விட்டது. 'உண்மைக் கல்வியும், உண்மை நாகரீகமும் என்ன என்பது விளங்கி விட்டது அவனுக்கு! அவனுக்கு உழைப்பின் உயர்வு நன்குபுரிந்து விட்டது! இனி அவன் ஏழைகளை ஏமாற்றி. அவர்களைச் சுரண்டிப் பிழைக்கும் பணக்காரக் கும்பலில் ஒருவனல்ல! இனி அவன் பாட்டாளிகளின் தோழன்! உண்மை உழைப்பாளி!!!

அன்று இரவு வந்தது!

லியோ எழுதத் துவங்கினான்!!! முந்திய இரவு முடிக்காமல் விட்ட சிருங்கார நாவலை அல்ல! அன்று அணுவாக அழியும் பாட்டாளி வர்க்கத்தின் பரிதாப நிலையையும் பணக்காரர் கும்பலில் பயங்கரச் செயல்களையும், உடல் உழைப்பாளிகளின் உயர்வையும் பற்றிய "இனி நாம் செய்ய வேண்டுவது யாது" என்ற காலத்தால் இறவாத நூலைத் தன்னை மறந்த நிலையில், அந்தத் தனித் அறையில் எழுதிக் கொண்டிருந்தான்.

அவன் தான் பிற்காலத்தில் காந்தியடிகளின் குருவெனப் போற்றப்படும் லியோ டால்ஸ்டாய்.

சிரிப்புத்தான் வருகுதையா!

சா. சதாசிவம்

வளர்ந்துவரும் கழகத்தின் பொலிவைக் கண்டு
வாலிபர்கள் பாசறையின் சிறப்பைக் கண்டு
தளர்ந்துவிட்ட சிவஞானம் திட்டி னாலும்
தமிழறியா அழகேசன் ஏசி னாலும்
ஒளிக்கதிராய்ச் சுடர்வீசும் அறிவி யக்கம்
ஒருநாளும் ஒழிந்துவிடப் போவ தில்லை
களம்கண்டும் கலங்காத மனம்படைத் தோர்
காமராசர் கக்கனுக்கா அஞ்சிப் போவார்?

வெட்டுங்கள் குத்துங்கள் என்று சும்மா
வெத்துவேட்டுப் பட்டாளம் ஆட்டம் போட்டால்
திட்டமுடன் பெரும்பயணம் செல்லும் நாமா
தீப்பட்ட புழுபோலத் துடித்துப் போவோம்?
அட்டியின்றி அறுதியிட்டு ஒன்று சொல்வேன்
அழிவுநோக்கிச் செல்கின்றார்; அவர்கள், ஆமாம்
எட்டிநிற்கும் எழிற்கன்னி மறுத்துவிட்டால்
ஏமாற்றம் பெற்றவர்போல் பிதற்று கின்றார்!

வட்டநிலாக் கண்டுவிட்ட மின்னல் பூச்சி
வசைபாடின் ஒளியென்ன குறைந்தா போகும்?
கட்டிவெல்லம் கண்டஎட்டி பொறாமைப் பட்டால்
கன்னல்சுவை கசப்பாக மாறு மோடா?
பிட்டுவைத்த மாதுளையின் முகத்தைப் பார்த்து
புழிக்கிறது சொத்தையென்று கள்ளிக் காய்கள்!
கிட்டாத பழம்புளிக்கும் என்ப தைப்போல்
கிறுக்குமனக் கூட்டமிங்கே திட்டக் கண்டோம்!

எதிர்ப்பெல்லாம் எருவாக்கி வளர்வோம்; வீணே
ஏசுவதால் எடுத்தபணி மறக்க மாட்டோம்!
சதைவற்றிச் சருகான கிழவி யர்கள்
சிங்காரப் பைங்கொடியைப் பழிப்ப தாலே
மதிமுகத்தின் எழிலென்ன மறைந்தா போகும்?
மலர்க்கன்னம் குழிவிழுந்து குறைந்தா போகும்?
இதையுணரா இருள்நெஞ்சக் குருடர் கூட்டம்
ஈனவழிச் செல்வதினால் அழிவே காண்பர்!

சிந்தனைக்கே வேலையில்லா இதை நினைத்தால்
சிரிப்புத்தான் வருகுதையா! சீச்சீ மூடர்!
சந்தையிலே விலைபோகா ஆட்டு மந்தை!
சாக்கடையில் குடியிருக்கும் நெளிபுழுக்கள்!
முன்னையநம் நிலையறியா மூடர் கூட்டம்!
முத்தமிழின் சிறப்பறியாச் சிறுமைக் கூட்டம்!
என்னென்று சொல்வதற்கும் உவமை யற்ற
எருக்கம்பூக் கூட்டமிது! விட்டுத் தள்ளு!!

வட ஆற்காடு

அன்புடையீர், வணக்கம்.

தாங்கள் 20-5-60 தேதி வெளியான இன முழக்கம் இதழில், கள்ளே வா என்று எழுதி இருந்த தலையங்கத்தை வாசித்து நாங்கள் மிக்க மகிழ்ச்சி யுற்றோம். தாங்கள் மிக தைரியமுடன் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்ததற்காக மிகவும் பாராட்டுகின்றோம். தங்கள் கருத்துக்களை மிகவும் வரவேற்கின்றோம்.

திரு V. S. வீஸ்வநாதம் அவர்களும் தங்கள் பத்திரிகையை பார்த்து மிக மகிழ்ச்சியுற்றார்.

வணக்கம்.

ஜி. பாலரத்தினம்

★

சென்னை-3

அன்புள்ள ஐயா,

சமீபத்தில் வெளியான டாக்டர் லோகநாதனின் அறிக்கை, வடவரின் அடிவருடம். நமது 'கனம்' பொருந்திய மந்திரிகளுக்கு உண்மையிலேயே ஒரு பேரிடியாகும். இத்துணை வருடகாலமாக மக்களை ஏமாற்றி வந்த மதிமந்திரிகளுக்கு இனி எழப்போகும் மக்களின் கேள்விகளுக்கு பதிலிறுக்கும் தலைவேதனையை அளித்துள்ளது டாக்டர் லோகநாதன் அறிக்கை.

தமிழகத்திலே பெருந்தொழில்கள் உண்டாக்க மூலப் பொருள்கள் கிடையாதென ஏமாற்றி வந்தீர்களே, சேலம் அலுமீனியத்திற்கு டாக்டர் லோகநாதன் தந்துள்ள திட்டத்தை சற்றே ஆலோசிக்க வேண்டும். நெய்வேலி நிலக்கரியில் நின்றும் எத்துணையெத்துணையோ பெருந்தொழில்கள். கிருஷ்ணாவிலும், நீலகிரியிலும் காகிதத்தொழிற்சாலைகள்; தூத்துகுடியிலே இரசாயன உப்புத் தொழிற்சாலை. இன்னும் பல தொழில்களுக்கு திட்டம் தந்துள்ளார் டாக்டர் லோகநாதன்.

அறிஞர் அண்ணா அவர்கள் ரூபாய் ஆயிரம் கோடிக்கு திட்டம் தரத்தயார் என அறிவித்தபோது எள்ளி நகையாடிய ஆளவந்தார்களே! இதோ உங்களவரே தந்துள்ளாரே ரூபாய் இரண்டாயிரம் கோடிக்குத் திட்டம்! ரூபாய் நூற்றைம்பது கோடிக்கு மேல் செலவிட தமிழகத்தில் திட்டங்கள் இல்லை, ஆனால் அறிஞர் அண்ணா ரூபாய் ஆயிரம்கோடிக்கு திட்டம் தருவாராம் என மேடைக்கு மேடை வாய் வலிக்க அவரை வைதீர்களே? இப்போது உங்கள் வாய் என்ன அடைத்து விட்டதா?

ஆள வந்தார்களே! நீங்கள் இவ்வளவு காலம் மக்களை ஏமாற்றியதுபோல் இனியும் ஏமாற்ற முடியாது. எதிர்காலம் எழுச்சி மிகு இளம் திராவிடருடையதே தவிர பணத்தைக் கண்டு பல்லிளிக்கும் பழமை விரும்பிகளுடையதல்ல. எனவே—

உங்களது மானமும், மரியாதையும் அடுத்த தேர்தலில் சிறிதளவாவது காப்பாற்றப்பட வேண்டுமானால், டெல்லியுடன் போராடி இந்த ரூபாய் இரண்டாயிரம் கோடியையும்பெற்று தமிழகத்தை வாழவிட வழி செய்யமாட்டார்கள் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். இந்தத் தொகையைத் தர வடவர் மறுத்தால் விடுதலைப் போராட்டத்தில் எங்களுடன் ஒன்று படுங்கள். விடுதலைப் போராட்டத்தில் நாம் மடிந்து, நமது எதிர்கால இளம் சந்ததியினராவது "தனி அரசு" பெற்று வளமிகு வாழ்வுகான வ[illegible] செய்வோம்.

அன்னையின் மானம் போனாலும் திண்ணையைவிடமாட்டோம் என்கிறார்கள்

தரங்கெட்ட அமைச்சர்கள் !

“ஒரு நாட்டை அடிமையாக்க வேண்டுமானால், அந்த நாட்டின் மொழியை அழித்துவிடு” என்று சொன்னான், மாவீரன் நெப்போலியன்.

அதுபோன்றுதான், நம் நாட்டின் மீது “இந்தி” என்ற குதிரைவண்டிக்காரன் மொழியை திணித்து வடநாட்டு சோதாக்கள் சவாரிவர முயலுகிறார்கள்.

இந்தி நம்மீது திணிக்க முயலுவதை உணர்ந்த நமதுகழக சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமண்யம் 8-11-57 ல் சட்டமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார், “இந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றி பெருத்தளவில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகிறது. அதனால், இங்குள்ள சர்வ கட்சித் தலைவர்களையும், சமுதாயத் தலைவர்களையும் கூட்டி இறுதியான முடிவுக்கு வர உடனடியாக சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும்” என்று, சட்டமன்றத்திலே கேட்டுக் கொண்டார்.

ஆச்சாரியாரே அலறினர் - ஆண்டிப் பண்டாரம் காமராஜ் எம்மாத்திரம் !

இந்த மாநிலத்தின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் மதிகெட்ட மந்திரிகள் அதற்கு வழி செய்யவில்லை, வகை செய்யவில்லை. மேடையேறிப் பேசுகிறார்கள், ‘இந்தி இருந்தால் என்ன கெட்டுவிடும்’ என்று. மானமற்ற மந்திரிகளுக்கு எதுவும் கெடாது. அன்னையின் மானம் போனாலும் அக்கரையில்லை, திண்ணையை விடமாட்டேன் என்று சொல்லும் தரங்கெட்டவன் நிலமையில் போதிக்கிறார்கள் அமைச்சர்கள்.

அன்று ஆச்சாரியார் ஆட்சியிலேஇருக்கும்போது இந்தியைப் புகுத்த முயன்றார். இன்று அதே ஆச்சாரியார் சொல்லுகிறார், “இந்தி இந்த நாட்டில் குடிபுகுந்தால் தமிழன் வாழ்வை இழந்து விடவேண்டும்” என்ற கருத்துப்பட அன்றுஅடிமை புத்தியோடு, ஆட்சியிலேஇருந்தஆச்சாரியார், இந்தி திணிப்புக்கு வழி செய்தார். இன்று அவரே இந்தியை எதிர்க்கிறார், உண்மை உணர்ந்து. அன்று அவருக்கு அடிமைப்புத்தி இருந்தது. அதனால் அப்படி செய்தார். இன்று சுதந்திர புத்தி இருக்கிறது: இந்தியை எதிர்க்கிறார் அப்பேர் பட்ட “பொலிட்டிக்கல் ஹேம்ப்பர்” (Political Hamper) என்று அழைக்கப்பட்ட அவராலேயே அது நடக்கவில்லை யென்றால் நமக்கு இந்த காமராஜ் எம்மாத்திரம்?

தென்னகத்தின்மீது இந்தியைப் பரப்புவதற்கு நேருவும், மொரார்ஜீயும், பந்தும், பட்டேலும், பிரசாத்தும் கங்கணம் கட்டி நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டார்கள். எந்தெந்தத் துறைகளில் இந்தியைப் புகுத்த வேண்டுமோ, அவைகளில் எல்லாம் சாதுரியமாக, மறைமுகமாக இந்தி திணிக்கப் படுகிறது. வானொலியிலிருந்து சாதாரண மைல் கற்கள் வரை இந்தி திணிக்கப்பட்டு விட்டது.

வாரீர் களம்நோக்கி, உத்தரப் பிரதேசத்து உலுத்தர்களின் எலும்பொடிக்க !

அன்று தென்னகத்தின் மீது கண்வைத்த இந்தி அரக்கியை, சீரழித்து, மானபங்கப்படுத்தி விரட்டியடித்தோம். புருசோத்தமதாஸ் தாண்டன் எத்தனையோ தடவை இங்கே தாண்டியிருக்கிறார், இந்த இந்தியைப் புகுத்த! உத்திரப் பிரதேசத்து இந்தி வெறியர்களும் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. 36 கோடி மக்கள் வாழும் இந்திய துணைக்கண்டத்தில் 11 கோடி மக்கள் மட்டும்தான் இந்தி பேசுகிறார்கள். மீதமுள்ள 25 கோடி மக்கள் இந்தி பேசுவது கிடையாது. பேசத் தெரியாது. இப்படிப்பட்ட ஒரு பிற்போக்கான மொழியை, பொது மொழியாக, ஆட்சி மொழியாகக் கொண்டு வரவேண்டிய நியதி, நேர்மை என்ன இருக்கிறது? வடவர்கள சாணக்கிய தந்திரத்தில் கைதேர்ந்தவர்கள். அதனால்தான், இந்தி திணிக்கப்படமாட்டாது என்று டெல்லி பாராளுமன்றத்தில், தென்னவர்களுக்காக நேரு தந்த வாக்குறுதி உருக்குலைந்து, காற்றிலே உறுதியை மிதக்கவிட்டு விட்டு சொல்லுறுதியை மீறி, 1965 முதல் இந்தியாவின் பொது மொழி, அரசியல் சட்டப்படி, இந்தி மொழி இடம் பெற வேண்டும் என்று ஜனாதிபதி தாக்கீது தந்துவிட்டார். எந்த வழியிலும் 65க் குள் இந்தியை ஆட்சி மொழியாக்கிட முனைந்துவிட்டார்கள். 1965க்குள் ஆட்சிமொழியாக இந்தியைக் கொண்டுவர வேண்டிய அவசியமும், காரணமும் என்ன? தமிழ் மொழி போல இந்திக்கு இலக்கியம் உண்டா? இலக்கண வரம்பு உண்டா? இந்தி என்பது தனி மொழியா? அல்லது இந்திக்காக தனித்தியங்கும் வரி வடிவம்தான் உண்டா? அத்தனை சிறப்பும்இல்லாத சீர்கெட்ட மொழி இந்தி. அப்படி இருக்க ஏன் புகுத்த வேண்டும்? இந்தியைவிட வளமான மொழி வேறு கிடையாது என்ற காரணமா? இல்லை! இல்லை! இந்தியை ஆட்சிமொழியாக்கினால்தான் இந்திய ஏகாதிபத்தியம் நிலைத்திருக்கும். இருக்கும் ஒற்றுமையை நிலை நாட்டிக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று வடவர்கள் கருதுகிறார்கள். அதனால்தான் இந்தியைத் தீவிரமாகத் திணிக்கிறார்கள். அவர்கள் எத்தனை வேகமாகத் திணித்தாலும் நாம் என்ன சோற்றாலடித்த பிண்டங்களா? விட்டுவிடுவதற்கு. அன்று நம் அன்னை மொழியாம் தமிழை ஒரு சொல் சொன்னான் வடவன் என்பதற்காக, அவன் தலையில் கல் சுமக்க வைத்த பரம்பரை நாம் என்பதைத்தெரிந்தும், மறந்து, மறுபடியும் வாலாட்டிக் சாட்டுகிறது இந்தி. நம்மால் இரு முறை சீரழிக்கப்பட்டு, அடிபட்டு ஓடிய அந்த இந்தி என்ற விலைமகள், இதுநாள் வரை, மூலையிலே முடங்கி முக்காடிட்டுக் கிடந்தாள். மறுபடியும், மூன்றாம் முறையாக நம்மீது முற்றுகையிட்டு இருக்கிறாள், இந்தி என்ற அந்த அரக்கி.

இன்னுமா நமக்குப்பொறுமை? மொழியை இழந்து விழிபோன குருடர்களாகவா தமிழ்ப் பரம்பரை வாழ்வது? இன்னும் நாம் பொறுமைக்கு, பெருமைதந்தால், தமிழன்னையின் குரல் வளையை நெறித்துவிடுவாள், அந்த வாலறுபட்ட இந்தி என்ற மந்தி. புறநானூறு கண்டவர்களும் அகநானூற்றைப் பெற்றவர்களும், குறள் தந்தவர்களும் வாழ்ந்த தமிழரை'சொல் காவியம் செய்து, கல்லால் கண்ணகிக்கு சிலை வடித்த வீரர் வழிவந்த தமிழ் இனம் சீரழிவதா? இன்று இந்தியை எதிர்க்க நாம் தவறினால், தென்னகம் வடபுலத்தானுக்கு அடிமைக் காடாகிவிடும். தொன்மைசிறப்பு சிதைந்துவிடும். தமிழின் பெருமை குன்றி தமிழர் பழம் பெரும் புகழ் நாசமாக நேரிடும். ஆகவேதான் இந்தியை திணித்து இந்த நாட்டை அடிமையாக்கிட முயலும் உத்திர பிரதேசத்து உலுத்தர் கும்பலுக்கு, இந்தி வெறியர்களுக்கு முடிவு கட்டிட, தென்னகத்தின் நலம் காப்போரே! தமிழின் மானம் காப்போரே! விடுதலை வேட்கைக்கு வித்தூன்றிடும் நல்லறிவாளர்களே! புறப்படுவீர், போர்க் குரல் எழுப்புவீர்!

முத்துப்பேட்டை,
கே. எஸ். ஆப்தீன்.

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள்
இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்

KNOWLEDGE IS POWER

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாகத் திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் **கற்கலாம்**

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து
9-7-60-ந் தேதி
வரை அனுப்பலாம்

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்
11-7-60-ந் தேதி
முதற்கொண்டு தொடர்ந்துஅனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப்பயிற்சி அளிக்கப்படும். “தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்” எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலிஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம் 3) இங்கிலிஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகப் பயிற்சியளிக்கப்படும். (4) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலம்; பெண்களும் சேரலம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயே பைசே (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

கேசவன், எழும்பூர்.

கே: இப்போதுதான் நாமெல்லாம் பந்தியில் உட்கார்ந்திருக்கிறோம். பொறுத்திருங்கள். சோறு கிடைக்கும்' என்று, நிதி மந்திரி பேசி இருக்கிறாரே, உங்கள் கருத்தென்ன ?

ப: புளியேப்பக்காரன் பசியேப்பக்காரனைப் பார்த்துப் பரிகாசம் செய்தானும் அதுபோலவேதான் நமது நாய்பைசா மந்திரியும்.

மதியழகன், கேரளா.

கே: ஆசிரியர் அவர்களே! இப்போதுள்ள அரசாங்கம், மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கும்போது சாதி, மதம் என்ற கீழ்த்தரக் கேள்விகளைக் கேட்டுப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளுகிறார்களே! தி. மு. க. ஆளும் கட்சியாக மாறினால் அதுவும் இதே நிலையில் இருக்குமா?

ப: முதல் வேலை அதை ஒழிப்பதுதான். மந்திரிகளே சாதிஒருவராக இருக்கும்போது அதை எப்படி ஒழிப்பார்கள்.

K. சதாசிவம், திண்டுக்கல்.

கே: 'காங்கிரஸ் ஆட்சியில் செய்தநன்மைகளை அடுக்கடுக்காகச்சொல்வோம்' என்று, இராமையா அவர்கள் சொல்லுகிறார். அப்படியென்ன காங்கிரஸ்நன்மை செய்திருக்கிறது?

ப: அவர் சொல்லியா நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பண்டங்களின் விலை; பள்ளிக்குப் போக முடியாத சிறுவர்கள்; படித்துப்பட்டம் பெற்றும் வேலைக்கலையும் தோழர்கள்; தற்கொலைகள்; வண்டிகளின் விபத்துக்கள்; வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் இவ்வளவும் அடுக்கடுக்காக இருக்கிறதே.

சி. சோமன், அரு.இராமசாமி கீழ்க்கோட்டை.

இரா. தமிழ்ச்செல்வன், கத்திரிப்புலம்

கே: ஏர் தொழில் புரிபவர் தமக்குள்ளே ஓயாத பொருமையும் போட்டியும் நிலவுவது ஏன்?

ப: வீணான எண்ணங்கள்; வேண்டாத-தேவைகள்.

கோபாலன், எண்ணூர்.

கே: நடைபெறவிருக்கும் இந்திப் போராட்டத்தின் முடிவு எப்படி இருக்கும்?

ப: சொல்லித் தெரிவதா வீரம். மேல் முகப்பைப் பாருங்கள், காதலிக்க வந்த இந்திப் பெண்ணின் கதியை!

—: சி. பி. சிற்றரசு :—

கே: விதியை மதியால் வெல்ல முடியும், மனிதனால்! சதிகாரர்களின் சாகசச் செயலை சமாளிக்க முடியாமல் போவதேன்?

ப: நீந்தத்தெரியாமல் தண்ணீரில் இறங்கிச் சாகின்றவர்களை விதி என்கிறோம். வழுக்கி விழுந்தும் நீந்தி கரையேறுகிறவனை மதி என்கிறோம்; அவ்வளவுதான். சதி என்பதே மறைமுகமாக செய்ய நினைக்கும் கெடுதல்தானே.

வல்லன், புரசை.

கே: 'தி. மு. காக்கள் பெண்களை வர்ணித்து வாலிபர்களை தம் பக்கம் இழுக்கிறார்கள்!' என்று, மயிரழகன் (அளகேசன்) கூறியுள்ளாரே, உண்மையா?

ப: அப்போது ஓவியத்திலுள்ள ரதி (மூதேவி)களைக் காட்டி மயக்குவதா?

கே: காதலுக்குப்பின் மணம்-மணந்ததற்குப் பின் காதல்—இவை இரண்டில் எது சிறந்தது? எப்படி?

ப: இரண்டும் சிறந்ததுதான். ஏனெனில் காதல் செய்யாமலே திருமணம் செய்துகொள்கின்ற வாழ்க்கை மலர்வதில்லை.

இரா. இராசாமணி, வேதாரண்யம்

கே: இன்றைய திராவிடத்தின் எதிரிகள் யார்?

ப: அகில இந்திய பேசுவோர் அணைவநமேதான்

கே: தற்போது மந்திரிகள் அதிகமாக ஊர் சுற்றுவது ஏன்?

ப: திருடி தோட்டத்தில் புதைத்த பொருள் களவு போய் விடப்போகின்றதென்ற அச்சத்தால் இரவு பகலாக வீட்டுக்கும் தோட்டத்துக்கும் திரிந்துக் கொண்டிருப்பானும். அந்த மாதிரி, இவர்கள் அநியாயமாக வாங்கிய ஓட்டுகளை அயலார் அடித்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வதென்ற பயந்தான் இப்படி சூறுவளியில் அகப்பட்ட துரும்பெனச் சுற்றுகிறார்கள்.

எதிர்பாருங்கள்!
சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி அரங்கில்
24—7—60 ஞாயிறு மாலை 6 மணிக்கு
அறிஞர் அண்ணா தலைமையில்
டாக்டர் அழகப்பா கலை மன்றத்தார் அளிக்கும்
சாணக்கியன் சபதம்
(சரித்திர நாடகம்)
முழு விவரம் அடுத்த இதழில்

கே: அமைச்சர் பக்தவத்சலம் ருஷியாவுக்குப் போகிறாராமே! போய்த் திரும்பும்போது என்ன எண்ணத்தோடு திரும்புவார்?

ப: இப்படி ஒரு நாடு உண்டா. நாமும் இருக்கிறோமே சுடுகாட்டில் என்று நினைத்துக்கொண்டே வருவார்.

தில்லையம்பலம், பூளமேடு.

கே: உங்களுக்குப் பிடித்த ஒரு மேனாட்டு அறிஞனைச் சொல்லுங்கள்?

ப: சாக்ரடீஸ்.

கடந்த 13-6'-60-ல் நடிகர் வளையாபதி முத்துக்கிருட்டினன், தோழியர் சந்தானலட்சுமி ஆகிய இருவரும் ஒரு மனதாகிய தோற்றம்!

நாதன், தி. நகர்.

கே: எலிசபெத் ராணி இந்தியாவிற்கு வருவதை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் எதிர்ப்பை தெரிவித்தார்களாமே, உண்மையா?

ப: தாசானு தாசனாகிவிட்ட நேருவின் செயல் பிடிக்காமல் இருக்கலாம்.

ஏசுடியான், பம்பாய்-70.

கே: ஆசிரியர் அவர்களே! அறிஞர் அண்ணாவின் ஆயிரம் கோடித் திட்டத்தைக் கேலி செய்த பண்டாரம் (சுப்பிரமணியம்) லோகநாதன் கமிட்டியின் இரண்டாயிரம் கோடித் திட்டத்தைப் பற்றி என்ன சொல்லுவார்?

ப: ஒன்றும் சொல்ல முடியாததினால்தான் திருடனைத் தேள் கொட்டிய மாதிரி இருக்கிறார்.

மாணிக்கம், கல்லடம்.

கே: இந்தி வந்தால் தமிழ் என்னாகும்?

ப: சுகாதாரமாக இருக்கின்றவன் பக்கத்திலே பிணத்தை பத்து நாட்கள், போட்டு வைத்தால் என்ன ஆவன்.

கே: நடிகைகளுக்கு கற்பில்லை யென்று ம. பொ. சி. கூறியுள்ளாரே, உங்கள் கருத்தென்ன?

ப: 'ஆடவர்க்கும்கற்புண்டு' என்று இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்திலே பொறித்துள்ளதை இந்தச் சிலம்பாடிக்குத் தெரியாதோ என்னவோ?

அறிவிப்பு.

தோழர் வே. சௌந்தரராஜன் B. A., அவர்களது தொடர் கட்டுரையான 'மாறும் உலகம்' தவிர்க்க முடியா நிலையில் இவ்விதழில் வெளிவரத் தவறிவிட்டது. வாசகர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம். அடுத்த இதழிலிருந்து வழக்கம் போல தொடரும்.

ஆசிரியர்.

கக்கனே காமராசரே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடம் புகட்டியது, காமராசருக்கு வேதனையாக இருக்கலாம். கவலையில்லை! ஆனால் சிலம்புக்கள்வன் சிவஞானத்திற்கும் அவரது சீடர்களுக்கும்கூட இதயம் துடித்துவிட்டதாம்! முன்னேற்றக் கழகத்தவரின் மொழிவெறியைக் கண்டிக்கிறார்களாம்! சோற்றுப்பட்டாள சோசலிஸ்டுகள் அறிக்கைகளைத் தந்து, தங்களின் அறியாமையை விளம்பரப் படுத்துகிறார்கள்! 'வானொலி' வேண்டுமென்று தமிழகம் குரல் கொடுத்துக் கொண்டிருந்தபோது சிலம்புக்கள்வன் சிவஞானம் மட்டும் திருச்சி நிலயத்திற்குத் திருட்டுத்தனமாகச் சென்றார் அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் லோகியாவின் வெறிச் செயல்களை வரவேற்கட்டும். இதிலேவியப்பில்லை! காட்டிக் கொடுக்கும் சிவஞானச் சீடர்களின் இழிசெயல்கள் எண்ணிக்கையில்லை

திராவிட முன்னேற்றக் கழகத்தவர்க்கு இந்தி வெறியர்கள் பதில் தருவதற்கு முன்னே-இங்கேயுள்ள துரோகிகள் விடையுடன் வருகிறார்கள்! அவர்களுக்குச் சஞ்சீவி ரெட்டியின் செய்தியினைக் கூறுவோம். புனா நகரத்து இந்திப் பிரச்சார சபையினர் சஞ்சீவி ரெட்டியை வரவேற்றுப் பேசியபோது அதன் தலைவர் தி. வி. போத்தார் என்பவர் சஞ்சீவ ரெட்டி இனிமேல் தேவநாகிரிலிபியில் தான் கையெழுத்திடவேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம்! உடனே கோபத்துடன் எழுந்த சஞ்சீவியார் தன்னுடைய வாழ்நாளில் இதனைச் செய்ய மாட்டேன் என்று அந்த இந்தி வெறியர்களுக்குப் பதில் தந்துள்ளார்.

"I will never do it in my life time, I would like no one to preach some. Why should I be a hypocrite and sign inHindi without knowing the language? I won't do it or ask anyone else to do it either, If 'Forced' propagation of Hindi to disrupt national unity, I would ask to guard national unity first. I will never consent to force in advancing the cause of Hindi" அகில இந்திய காங்கிரசின் தலைவராக்கப் பட்டிருக்கும் சஞ்சீவியாரின் மொழிப்பற்றை, இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் ஆவத்தைக் காமராஜர்கள் காண வேண்டும்.

முன்னேற்றக் கழகத்தின் முதல் முரசு ஆகஸ்ட் 31-ந் நாள் ஒலிக்க இருக்கிறது.

ஒடிப்பதுங்கப்போகும்அகில இந்தியக்கட்சிகளின் உருவங்கள் நமக்குநன்றாகத் தெரிகின்றன தாய் நாட்டை நேசிப்பவர்கள் எந்தக் கட்சியிலேயிருந்தாலும் போர்க்குரல் கொடுக்கவேண்டும்! எந்தக் கண்ணோட்டத்திலேயிருந்தாலும் மொழி காக்க வேண்டும் கழகத்தின் பணியைக் காலிகள் செயல் என்று கணித்திடும் காங்கிரசுக்காரர்களின் கருத்துக் குழப்பங்கள் [illegible]ளிய வேண்டும்-காந்தியாரின் சீடர்கள் கண்ணியத்துடன் உலவட்டும்!

திரை ஒலி

ஏ. எல். எஸ்'ஸின்

சங்கிலித்தேவன்

கதை:

அர்த்த மற்றது. வேடிக்கை யானது; விளக்கிச் சொல்ல முடியாதது. ஊருக்குழைப்பவாம் சங்கிலித்தேவன். யாருக்கு என்ன பயன்? பேருக்கு வருகிறார், போகிறார், குரலைமட்டும் மாற்றிக் கொண்டார். (குழந்தைகளைப் பயமுறுத்த) தேடக் கிடைக்காத செல்வம், தோண்டி எடுக்க வேண்டிய புதையல் கதை வெளியுலகில் ஏ. எல். எஸ். இப்படத்தால் தேட முடியாது. எனவே படத்தில் தேடிப்பார்க்கச் சொல்லியிருக்கிறார், பாவம்.

நடிப்பு:

எஸ். எஸ். ராஜேந்திரன்: எந்தக் கட்டத்தையும் சிறப்பாகக் குறிப்பிட முடியா விட்டாலும், குறை கூற முடியாது. உங்களைப் பாராட்டுகிறோம். ஏனெனில், கட்சிவேறு, தொழில் வேறு, என்று கலைஞர்களெல்லாம் வெட்கமின்றிக் கூறிய போதிலும் பட உலகில் இன்னும் நீங்கள் இலட்சிய முழக்க மிட்டு வருவதால்.

ராஜசுலோசனா: தொகைகேட்கு மளவிற்கு வகையான நடிப்பு உங்களிடம் இல்லை. எத்துணையோ கட்டங்கள் பாழ். நாட்டியம் நடக்கிறது, நடிப்பு சிரிக்கிறது.

வி.கே. ராமசாமி: சிரிக்க வைக்கிறீர்கள். ஆனால் சிந்திக்க வைக்கவில்லை. சீ சீ என நொந்து கொள்ளும் கட்டங்கள் உண்டு.

டி. எஸ். பாலையா: இருண்ட வீட்டிற்கு ஒரு விளக்கு. இதை விட நீங்கள் என்ன செய்ய முடியும்.

மற்றையோர்–வெத்து வேட்டுக்கள்.

இசையமைப்பு: அதிகம் இனிக்காவிட்டாலும் கசக்கவில்லை.

தரமற்ற ஒளிப்பதிவு. குறையற்ற ஒலிப்பதிவு.

பாடல்கள்:

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்: முதற் பாட்டில் இவர் கூறும் கருத்துக்களெல்லாம் வசனத்தால் அமைய வேண்டியவை, இசையால் அமைந்தது இனிப்பைத் தரவில்லை.

கண்ணதாசன்: தங்களின் அமைப்பு இசையமைப்போடு இயல்பாக ஒன்றிக் காட்சியளிப்பதால் உயற்சி பெறுகிறது. ஏதோ சில ஏனோ தானுக்கள், ஊர் பேர் தெரியாத அனுமதேயங்கள், புத்தியற்றவர்கள், உங்களைக் கள்ளதாசன் என்று அழைப்பதால் கவியின் வல்லமை குறையவா போகிறது. சூரியனைப் பார்த்து நாய் குரைக்கலாமா? குயிலைக்கோட்டான் பழிக்கலாமா?

வசனம், டைரக்ஷன்.

வசனம் ஆபாசம். டைரக்ஷன் கலையுலகிற்கே ஒரு புதுமை. இதுபோல மட்டமாக எந்த இயக்குநரும் இயக்க முடியாது. 'கட்டபொம்மனால் பெருமை பெற்று, தமிழகத்திற்கு மதிப்பைத்தேடித் தந்து, கெய்ரோ சென்று திரும்பிய பந்துலுவும், சக்தி கிருஷ்ணசாமியும் இருந்துமா இப்படி! அப்படிக் கேட்கலாம் பொது மக்கள். அவர்களுக்கு நான் கூறிக் கொள்ள ஆசைப் படுவது :—காற்றில் எச்சிலை பறப்பதில் விந்தையில்லை. பறந்த இலை நிச்சயம் கீழேவிழும். நமது புத்திசாலி அமைச்சர்களால், ஏதோ மூலையில் - கிடந்த அதாகப்பட்டது சக்தி கிருஷ்ணசாமியும், பந்துலுவும் காற்றில் பறந்தனர். (கெய்ரோ சென்றனர்) பரிதாபம். பறந்த இலை உடனே கீழேவிழுவதைப்போல இவ்வளவு சீக்கிரம் அடுத்த படத்திலேயே அவமதிப்பு அடைந்திருக்கக் கூடாது. வருத்தப்படுகிறோம்.

அதாகப்பட்டது, படம் மட்டம்.

உங்கள் அன்புள்ள இளவல்

இரத்தினம்.

பொன்னழகன் பேசுவதும்,பூமடந்தைவீசுவதும் காசுக்கா? காதல் காட்சிக்கா?

'கைராசி' என்ற படத்தில் ஜெமினி கணேஷ், சரோஜாதேவி

குளத்தில் விழுந்த தங்கவேலு'டெட்டால்' 'டெட்டால்' என்று கத்தினார்.

"நான்பட்ட பாட்டிலே என் உடம்பு பட்ட பாட்டிலே.."

டணால் தங்கவேலுவின் பாடலும் பெருமூச்சும்

வளையல் கூடை விழுந்து நொறுங்கியதைப் போன்றுஅந்த மங்கையர் கூட்டம் கூடிச் சிரித்தது. குடுமியும்பூவுமாகத்தோற்றமளித்த தங்கவேலு ராக்கெட்டில் அடைபட்ட ஜீவன்போல அந்தப் பெண்களிடம் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தார். அவரை இப்படியும் அப்படியுமாகப் பிடித்துத் தள்ளி பூப்பந்தாடிய அந்த வளையல் கூட்டத்திற்கு M. N ராஜம் தலைமை தாங்கியிருந்தார் தப்பிஓடப் பார்த்த தங்கவேலுவை பின்னே வந்த ராஜம் பிடித்துத் தள்ள அருகிருந்ததடாகத்திற்குள் தலைகுப்புற விழுந்து மூழ்கினார். குடுமியைச் சுற்றியிருந்துபூச்சரம் தண்ணீரில் மிதக்க தண்ணீரின் மேல் மட்டத்திற்கு எழுந்தவர் மூக்கைப் பிடித்துக் கொண்டு, 'ஐயோ, நாற்றம் அடிக்கிறதே' என்று ஓலமிட அதற்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் காமிராவின் இயக்கம் பட்டென நின்று விட்டது. டைரக்டர் T, R. ரகுநாத் தடாகத்தினருகில் சென்று தங்கவேலுவைப் . பரிதாபமாகப் பார்த்துவிட்டு "ஒடிக்கலோன்" கொண்டு வாருங்கள் என்று குரல் கொடுத்தார் "டெட்டால் கூடவேண்டும்" என்று கத்தினார் தங்கவேலு. அடுத்த விநாடி எடுக்க போகும் டெட்டாலும் அவர், உடலைக் குளிப்பாட்டின. நிவாரணம் முடிந்ததும் மீண்டும் படப்பிடிப்பு துவங்கியது.. மருந்துகளின் குணச் சிறப்போ என்னவோ துணிவைப் பெற்ற தங்கவேலு இப்போது தண்ணீரை விட்டு வெளிவந்து அத்தனை பெண்களையும் பிடித்திழுத்து நீரில் தள்ளினார். ராஜத்திடமும் ஓடியவர், "வீட்டுக்கு வாருங்கள். உங்களை நன்றாகக் கவனித்து அனுப்புகிறேன்" என்ற சர்க்கரைப் பேச்சைக் கேட்டதும் பின் வாங்கிவிட்டார். இருந்தாலும் கொஞ்சம் பயம் அந்தப் பெண்கள் கூட்டத்திடம். ராஜத்தின் தோழிகள் தண்ணீரில் தவித்துநிற்க, 'நான் பட்டபாட்டிலே என் உடம்புபட்ட பாட்டிலே நாடாதம்மா உங்க கூட்டிலே" என்று பாட ஆரம்பித்து அவர்களை அழவைத்து முடிந்ததும் 'கட்' என்ற குரலால் காமிரா நின்றது, துணை நடிகைகள் ஈர உடைகளோடு படப்பிடிப்புத் தளத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர். "துண்டு, துண்டு" என்று குரல் கொடுத்தார் தங்கவேலு. படஅதிபர் 'லேனா'வும் டைரக்டர் T, R. ரகுநாத் அவர்களும் அந்த வேடிக்கையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த வேடிக்கைக் காட்சி கிருஷ்ணா பிக்சர்சாரின் "ராஜா தேசிங்கு" படத்திற்காக அன்று விஜயா ஸ்டுடியோவில்வெற்றிகரமாகப் படமாக்கப் பட்டது. வேகமாக வளர்ந்து வரும் இப்பெரும் வெற்றி ஓவியம் விரைவில் திரைக்கு வரக் காத்திருக்கிறது. புரட்சி நடிகர், பானுமதி, பத்மினி, மதுரம், கலைவாணர், O. A. K. தேவர், T. K. ராமச்சந்திரன், தங்கவேலு, M. N. ராஜம், இலட்சிய நடிகர், பாலையா போன்ற ஒப்பற்ற கலைஞர்கள் தோன்றும் இச் சித்திரம் திரை உலகில் ஒரு திருப்புமுனையை உண்டு பண்ணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'நாசருக்கும் நடிகை பத்மினிக்கும் திருமணமாம்'

வடநாட்டுப் பத்திரிகையின் சிறுகதைச் செய்தி.

சென்ற வாரம் கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'சினி அட்வான்ஸ்' என்ற சினிமாப் பத்திரிகை தமிழ் நாட்டில் உள்ளவர்களை யெல்லாம் பரபரக்க வைத்துப் பல பத்திரிகைகளைப் புரட்ட வைத்தது. நடிகை பத்மினியைக் கூடகலங்க வைத்திருக்கும். தமிழ் நடிகர்களெல்லாம் கூடி பத்மினியின் வீட்டிற்குப் போன் பண்ணச் செய்திருக்கும். இங்குள்ள சகோதரப் பத்திரிகைகளை 'பத்திரிகைக்குச் செய்தி கிடைத்து விட்ட பரவசத்தில் ஆழ்ந்துகொண்டிருந்தநேரம்... அந்தக் குறிப்பிட்ட பத்திரிகை வெளியிட்டிருந்த செய்தி 'கற்பனை' என்று தெரிந்துவிட்டது. அப் பத்திரிகை வெளியிட்டிருந்த சிறுகதைச் செய்தி இதுதான் : எகிப்து அதிபர் இந்தியாவந்திருந்தபொழுது இங்கே தமிழகநடிகை பத்மினியைக் கண்டதிலிருந்து அவரை மணக்கும் முடிவிற்கு வந்துவிட்டாராம். தற்பொழுது பத்மினியை நாசர் முழு மூச்சாகக் காதலிக்கிறாராம். இந்த உண்மைச்செய்தியைப் பற்றி இந்திய அரசாங்கம்கூட ஆழ்ந்து சிநதித்துக் கொண்டிருக்கிறதாம்!

இப்படி ஒரு அனுமதேயச் செய்தியை வெளியிட்டு விஷமத்தனம்பண்ணியிருக்கிறது அந்தப் பத்திரிகை. அதுவும் பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக இந்தக் கடன்காரன் புளுகை வெளியிட்டதின் காரணம் 'மஞ்சள் பத்திரிகைகள், பத்திரிகை விற்பனைக்கும் கையாளும் பத்திரிகா தருமம் தவிர வேறில்லை. மேலும் ஒருநாட்டின் அதிபர் இந்த மண்ணின் நாட்டிய மங்கையை நினைத்துக் கொண்டு உணவு கொள்ளாத நிலையில் அங்கே தவித்துக் கொண்டிருப்பதுபோல் அந்த மனிதர் 'நாசரைப்' பற்றி எழுதுகிற தென்றால் அது நமது இந்திய அரசாங்கத்திற்கே அவமானமாகும்.

'கட்டபொம்மன்' கெய்ரோசென்ற போதும் இப்படித்தான் வட நாட்டிலிருந்துவெளிவரும் ஒரு வயிறெரிந்தான்பத்திரிகை அந்த நேரத்தில் வேறு படம் இல்லாததால் வேறு வழியின்றி இந்திய அரசாங்கம் கட்டபொம்மனை' கெய்ரோ அனுப்பியதுஎன்று எழுதியிருந்தது.இப்படித் தென்னகத் திரைக்கலைஞர்களுக்கு மாசு கற்பிப்பதோடு, ஆளும் கட்சியின் செயலுக்கும் கற்பனைக் காரணம் காட்டுகிறது.

முழுக்க முழுக்கதமிழகப்படஅதிபர்களைக் கொண்டும் நடிகைகளைக் கொண்டும் வெற்றிப் படங்களைத் தயாரிக்க வழிகண்டிருக்கிற அந்த அனுதைப் பிறவிகள் இப்படி அடிக்கொரு தடவை தங்கள் உதவாக்கரைப் பத்திரிகைகளின் மூலம் தப்புப் பிரச்சாரம் பண்ணுகின்றன

'கோமாளித்தனம்' என்று முடிவுகட்டி இந்த வட நாட்டுப் பத்திரிகையாளர்களின் செயலைக் கண்டு சிரித்து நின்றுவிடாமல், இங்குள்ள பத்திரிகைகளும் எதிர்க்குரல் கொடுத்து கண்டனம் தெரிவிக்க வேண்டும். இனி மேலும் அந்தப் புரட்டுப் பத்திரிகைகள் நமது கலைஞர்கள் இழிவுபடுத்திக் கதை திரிப்பதின் மூலம் வயிறு வளர்க்கும் போக்கை இங்குள்ள கலைஞர் கூட்டம்தடுத்த நிறுத்த முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

வெளிவந்து விட்டது!

தெள்ளு தமிழ்த் திரை ஏடு!

தங்கமலர்
திங்கள் இருமுறை

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் :

கண்ணப்பா வள்ளியப்பன்

ஒவ்வொரு மாதமும் 1, 15-ந் தேதிகளில் வரும். இரண்டு நாட்களுக்கு முன்னமேயே விற்பனையாளர்களுக்குக் கிடைக்கும்.

தனிப்பிரதி 12 காசுகள் ஆண்டு சந்தா ரூ. 4

விவரங்கட்கு :

தங்கமலர்
4, இராசகோபால நாய்க்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை : : சென்னை-2.

இனமுழக்கம்

களம் கண்ட கலைஞர் மீண்டும் களம் காண அழைக்கிறார்!

மூவேந்தர் மரபிலே வந்த முதல்வனே! தமிழால் - தனிப்பண்பால் - அன்பால் - அறத்தால் - உள்ள உரத்தால் மூத்தவனே! இந்தியில் என்ன தகுதியிருக்கிறது? இலக்கியமுண்டா? இலக்கணமுண்டா?

என்ன இருக்கிறது வம்பாடி மொழியிலே?

தென்னாட்டு மக்களான 9 கோடி பேர்கள் மீது இந்தியைத் திணித்தால் ஏற்க முடியுமா? எப்படி ஏற்பது?

வரப்போகும் போராட்டத்திலே நாம் அனைவரும் சாக நேரிடலாம்! எல்லோருக்கும் 4, 5 வருடம் தண்டனை கடுங்காவல், காராக்கிரகம் தந்து அடக்கி விடலாமென்று காமராசர் கனவு காணலாம். ஜெயிலில் நம்மை அடைத்துவிட்டால், வருகிற தேர்தலில் எதிர்ப்பு இருக்காது என்று எண்ணலாம்! ஆனால் ஜெயிலில் சென்றாலும் விடமாட்டோம்.

காமராசரையும் முறியடிப்போம்!

தமிழர்களிடையே எழும் இந்தப் போராட்டம் எப்படி இருக்குமோ? என்னென்ன செய்வார்களோ தெரியாது. மைல் கற்களில் இந்தியை எழுதினால் அழிப்பார்கள் மக்கள். மீண்டும் எழுதினால் மைல் கற்கள் இருந்த இடத்திலே குழிகள் தான் இருக்கும்; மைல் கற்கள் இருக்காது. தபால் நிலையங்களிலும் இந்த நிலை ஏற்படும். இவைகளைச் சர்க்கார் விரும்புகிறதா? வெற்றிலை-பாக்கு வைத்து அழைக்கிறதா?

எவ்வளவு நாட்களுக்கு நாம் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்று பொறுமையுடன் இருக்க வேண்டும்?

திராவிட மறவர்களே! சேரன் செங்குட்டுவன் சந்ததிகளே! கனகவிசயர் தலையில் கல்சுமக்க வைத்தோரே! கரிகாற்பெருவளத்தானின் பரம்பரையே! இந்தியை எதிர்த்துப்போர்ப்பரணி பாடுவோம்! குடும்பங் குடும்பமாகச் சாவோம்! களத்திலே கருணாநிதி பிணமாக்கப்படலாம், கவலைப்படாதீர்கள்! சவத்தைத் தள்ளிவிட்டுப் போராடுங்கள். இந்திக்கு மகர தோரணமிட்டு மயிலாசனம் தந்து வரவேற்கப் போகிறீர்களா? அல்லது மனைவி-மக்களை-மாடு-வீடுகளை இழந்து, உயிரைப் பணயம் வைத்துப் போராடப் போகிறீர்களா என்று அறைகூவல் விட்டு விட்டனர் வடவர்கள். இந்தியை எதிர்த்து [illegible] போரிடுவோம்! நமது நாட்டை [illegible] வாரீர், வாரீர் என் [illegible]

— மு [illegible]

புரட்சித் தீயின் பொதுப் பண்பு!

பிரெஞ்சு நாட்டு மேதைகளான ரூசோவும் வால்டேரும் உருவாக்கிய எண்ணங்கள் அங்கு நாளடைவிற் கொந்தளிப்பை ஏற்படுத்திக் கொடுமையாட்சியைக் குப்புறத் தள்ளியது, அதையடுத்து ஐரோப்பாவின் பல்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் புரட்சிகள் தோன்றலாயின. ஆளும் இனத்தை அப்புறப்படுத்த மக்களே ஏற்கும் வன்முறையைப் புரட்சி என்கிறோம்.

துவளச் செய்து விட்டார்கள். **வெறும் மக்கள் கூட்டம் எதற்கும் பயன்படாது. அதைப் பண்படுத்தி முறைபடுத்தி ஒருநிலைக்கு உருவாக்கும் செயல் வீரர்கள் சிலராவது இருக்கவேண்டும். உள்ள உறுதியும், உள்நோக்கமும் இல்லாமல் எவ்வளவு குடிமக்கள் ஒன்று சேர்ந்து குழப்பம் விளைவித்தாலும் ஒரு பயனும் ஏற்படாது.** கட்டுக் கடங்காத ஓர் குதிரையை வலிமையுள்ள

ஆகிய இயல்புகளைக் கட்டுப்படுத்தி மேலோங்கி நிற்கத் தொடங்கி விடுகிறது. புரட்சிக்குப்பின் நாடு மீண்டும் உருவாக்கப்படுகிறது. வெற்றிகரமான புரட்சியெல்லாம் வெற்றிகரமான மாற்றங்களை ஏற்படுத்திவிடுவதில்லை. புரட்சி மட்டும் பழைய கொடுங்கோலர்களை நீக்கியிருக்கலாம். ஆனால் வருங்காலத் திட்டம் போடாமலிருந்தாலோ, போட்டு அது சரியற்றதாக இருந்தாலோ புரட்சி நடந்தும் பயனில்லை என்ற தன்மையைப்பெறுகிறது.

ஜனநாயக நாடுகளிலும் சிற்சில சமயங்களில் புரட்சி நடைபெற வாய்ப்புக்கள் உண்டு. குறிப்பாக மத, சமூக, ஆதிக்க விருப்பம் புரட்சிகளைத் தூண்டிவிடும். எல்லா மதங்களும் ஒன்றுபட்டுஅமைதியாய்இருக்க முடியாதுஎன்பதில்லை. ஆனால் அவற்றின் வரையறைகளை அம்மதங்கள் உடன்பட்டு ஏற்றுக்கொள்ளுவதில்லை, இன்னும் சில சமயங்களில் ஆட்சிப் பொறுப்பை நிர்ணயிக்க வேண்டியதே ஆண்டவன் பிரதிநிதிகள்தான் என்ற சூழ்நிலை ஏற்பட்டதுண்டு. இதனாலும் பல கட்டங்களில் ஆட்சிக்கும், மத குருமார்களுக்கும்

பண்பாட்டுக் கலப்பு நிலைக்கோ, பொருளாதாரச் சுரண்டலுக்கோ ஆட்பட்டுவிடக் கூடும் என்ற அச்சம் இருந்துகொண்டே இருக்கும். இன உணர்ச்சி ஒரே குறிக்கோளைத்தான் அது நிறைவேறுகிறவரைமதிக்கும். அதற்குஇடையில் எந்த அலுவலையும் எளிதிற் பொருட்படுத்தாது. யாரேனும் ஒரு சிலர் பிரதிநிதித்துவ மன்றங்களான சட்டசபைகளுக்குச் சென்றால் அங்கிருந்துகொண்டு நிலை

கும் தொழில் என்றோ வகுப்பு என்றோ வேறுபாடு காட்டப்படுவதில்லை, இதனால் புரட்சி வாய்ப்புகள் இதில் குறைவாகக் காணப்படுகின்றன. இதில் முக்கியமாகப் பணம் உடையவர்கள், பணம் அற்றவர்கள் என்ற அத்தகைய வகுப்புப் போராட்டத்திற்குத்தான் இடமுண்டாகலாம். எனினும் மாறும் உலகில் தொழிலாளர் இன்சூரன்ஸ், கடன் உதவி, விலக்களிப்பு, குறைந்தளவு ஊதி

பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டவர், வால்டேரும் ரூசோவுமாகும்!

நியாயப் புறம்பாகச் செல்லும் நிலையைச் சரிபடுத்திச் செவ்வையான ஆட்சி நடைபெறப் புரட்சிகள் தோன்றுகின்றன. புதிய கோட்பாடுகளை வலியுறுத்தி நடைமுறைக்குக் கொண்டு வரவும் இத்தகைய முறைகள் ஏற்படுவதுண்டு. மார்க்சியப் பொருளாதாரக்கொள்கைகள் அன்று ருசிய மக்களிடத்து ஓர் ஆழ்ந்த நம்பிக்கையை ஏற்படுத்தியதால் விவசாயிகளும், தொழிலாளர்களும் சார் மன்னனின் வெறியாட்டத்தை வேரொடு அகற்றிச் சமத்துவம் நோக்கும் ஓர் புத்துலகைக் காணத் துடித்தனர்.

தனிப்பட்டபொருமை, ஆதிக்க வேட்டை ஆகிய உணர்ச்சிகளால் உந்தப்பட்டு நடைபெறும் குழப்பங்களோ, கொலைகளோ, புரட்சிகள் ஆகிவிடா. காரணம் ஒரு கொடிய மன்னனைத் துரத்திவிட்டு அதே இடத்திற்கு மற்றொரு கொடியவன் பதவியேற்பது எந் நிலையிலும் விரும்பத் தக்கது அன்று. மாற்று முறை இல்லாத கலவர நிலை புரட்சி ஆகாது. அந்த மாற்றமும் மக்களின் வாழ்க்கையை வளப் படுத்துவதாகவும், முறை தவறிய அலுவலர்கள், செல்வந்தர்கள் ஆகியோரைக் கண்டித்துத் திருத்தக் கூடியதாகவும் அமையவேண்டும். செல்வந்தர்களிடையேயுள்ள ஆதிக்கம் வலிவானதல்ல. அந்த அதிகாரம் கூலிப்படையின் குறுகிய கால நடமாட்டமே ஆகும். அந்த அடக்கம் அல்லது பணிவு போலித் தன்மை வாய்ந்தது. ஏதாவது ஒரு காரணத்தினால் அந்தப் பணிவு குடிமக்களிடையே குறைந்துவிடலாம் அல்லது கூடுதல் ஆகிவிடலாம். அன்றித் திறமையுள்ள தலைமைகள் மாறினாலும் பணிந்துள்ள சாதாரண குடிமக்களின் தன்மையும் மாறிவிடும். செல்வந்தர்க்கிடையே ஓர் பிளவுஏற்படுமானால் அதில் சாதுரியமானவன் புரட்சியைத் தூண்ட முற்படுவான். ஆனால் இத்தகைய புரட்சிகள் வரலாற்றில் அதிகம் காணப்பட்

ஒருவர் நிறுத்திவிட முடியும். ஆனால் பலவீனமான பலர் அதைப் பார்க்கக்கூட தொலை தூரத்திலேதான் நின்று கொள்வார்கள்.

ரோமாபுரியில் இத்தகைய நெருக்கடித் தீர்க்க அவசர காலச் சர்வாதிகாரிகள் அனுமதிக்கப்பட்டன. தேவையான காலம் அல்லது வேலை முடிவடைந்ததும் இச் சர்வாதிகாரி விலகிக் கொள்ளுவார். சட்டத்திற்குரிய ஒழுங்கும், அடக்க உணர்ச்சியும் புதிய நிலை அடைகின்றன. பொதுவாக மக்களது முடிவே ஒரு அரசாங்கத்தை நிலை நிறுத்த வல்லது. இதனால் மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் புரட்சிகள் பெரும்பாலும் ஏற்படுவதில்லை. பெரும் பெரும் அதிர்ச்சிகளைத் தாங்கக் கூடிய முறையில் மக்களே தங்களது நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றிக் கொள்ளுகிறார்கள். முதலாம் உலகப்போர் நடந்ததனால் இங்கிலாந்தில் ஒரு லாய்ட் ஜார்ஜும் பிரெஞ்சு நாட்டில் கிளிமென்சோவும் முதலமைச்சர்களாக வந்தனர். இவர்கள் இடைக்காலச் சர்வாதிகாரிகள் போன்று அதிகாரம் பெற்றிருந்தனர். ஆனால்

உணர்ச்சியால் உருவாகும் குழப்பங்கள் புரட்சியல்ல!

யான எதிர்ப்பை உருவாக்க அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுவார்கள். ஆளும் கட்சியின் செயல் முறைகளில் நல்லவற்றைப் பாராட்ட அவர்கள் விரும்புவதில்லை. தங்கள் நோக்கம் நிறைவேறும் நாளையே எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். புரட்சி மனப் பான்மை படிப்படியாகக் கொளுந்துவிட்டு எரிந்து கொண்டும் வரும். அயர்லாந்து, நாட்டின் வரலாற்றை நாம் இங்கே நினைவு கூறல் நன்று.

மேலும் பொருளாதார அடிப் படைகளிலும் புரட்சிகள் உண்டாக வழியுண்டு. நிலச் சுவாந்தார்களின் கொடுமைகள், பிற்போக்குத் தனமான சமுதாய நெறிகள், பிடிவாதமான வெறிப் போக்குகள் எல்லாம் உழைக்கும் விவசாயிக்குப் பிடிப்பதில்லை, பாடுபடும் தனக்குப் பயன் குன்றியும், சோம்பேறித் தனமாய், நோய்வாய்ப்பட்டு, உழைக்காமல் திரியும் நிலச்சுவாந்தாருக்கும் பலன் அதிகமும் கிடைப்பதை வெறுக்கிறார்கள். புதிய விவசாய முறைகளுக்குத் துடிக்கிறார்கள். இதில் சற்றும் நிலமேயில்லாத பட்டினத்து. மற்றும் நகர மக்களும் ஒன்று சேர்ந்து

யம், வேறுபாடு காட்டாத சமத்துவ நிருவாகம், குறைபட்டோர்க்கு நீதி, குற்றம் இழைத்தோர்க்குத் தண்டனை என்றெல்லாம் சில ஏற்பாடுகளை வைத்துப் புரட்சி மனப்பான்மையைக் குறைத்து வருகிறார்கள். முறையான தொழிற்சங்கங்களின் வாயிலாகப் பெரு மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள வசதிகள் உள்ளன எனவே செல்வந்தரின் ஆதிக்கத்தை விட மக்களாட்சி முறையில் புரட்சிச் சூழ்நிலைகள் மிக மிகக் குறைவு எனலாம். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற நிலைமாறி தலைவன், தொண்டன் என்ற நிலை மக்களாட்சியில் உருவாகிறது.

புரட்சி ஏற்படுவதால் அதிகாரம் என்ற அரசியல் நிருவாகப் பண்பு மக்களிடையே இல்லாமல் ஒழிந்துவிடாது. முறைதான் மாறக் கூடுமே தவிர அதிகாரம் என்ற நிலையே இல்லாமலிருக்காது. அதிகாரம் மக்களால் அனுமதிக்கப் பட்டதாக இருக்க வேண்டும். அப்படியில்லாமல் ஆண்டவனே நேரடியாகக் கொடுத்தது, பரம்பரையாய் இருந்து வருவது என்ற திமிர் வாதங்களுக்கெல்லாம் தீர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அதிகாரமும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் அடக்கப்பட்டு விடுகிறது. அதிகாரி ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் இயங்க வேண்டும். அதற்கென்று உடை, நேரம் என்று முறைப்படுத்தப் பட்டு விடுகிறது. அநேக கட்டங்களில் பலர் கூடிய மன்றங்களைக் கலந்தும், சிலசமயங்களில் தனக்கு மேலுள்ள அதிகாரியைக் கூடிக் கலந்துமே அதிகாரத்தை மேற்கொள்ள வேண்டியதாகிறது. நாட்டின் நிலையறிந்த நிருவாகமே இன்றைய அதிகாரத்தின் பொருள், இவ்வதிகாரம் கண்காணிக்கப்படுவதைப் பொறுத்து அமைதியும், புரட்சியும் ஏற்படலாம்.

வெறும் மக்கள் கூட்டம் எதற்கும் பயன் படாது. அதைப் பண்படுத்த முறைப்படுத்தி ஒரு நிலைக்கு உருவாக்கும் செயல் வீரர்கள் சிலராவது இருக்க வேண்டும். உள்ள உறுதியும், உள் நோக்கமும் இல்லாமல் எவ்வளவு குடிமக்கள் ஒன்று சேர்ந்து குழப்பம் விளைவித்தாலும் ஒரு பயனும் ஏற்படாது.

வெ. சௌந்தரராசன் B.A., B.L.

தொடர்ந்து போராட்டங்கள் நடை பெற்றிருக்கின்றன. மக்கள் தங்களது பொறுப்புகளையும் நல உரிமைகளையும் தேர்ந்தெடுத்து வகைப் படுத்திக்கொண்ட நாடுகளில் மத ஆதிக்கம் பயனளிக்காது.

இதைவிட வலிமையானது இனப்போராட்டம். ஒரு இனம மற்றொரு இனத்திற்கு ஆட்படுவதைப் பொறுக்காது. ஒன்று தனித்து இருக்கவேண்டும். அல்லது சமமான தகுதியைப் பெற வேண்டும் என்ற உணர்ச்சி பெருகிவிடுகிறது: தேசிய, மொழி, மதப் பற்றுக்களை விட இனப்பற்றுச் சீரிய நோக்கமுடையது. வேறு எந்த அவல நிலையும் இன வேறுபாட்டினால் ஏற்படும் கொந்தளிப்பிற்குச் சமமானதாகக் கருத முடியாது. அந்த அளவிற்கு இன உணர்ச்சி விரிவானதாகவும் விடா முயற்சியுடனும் பெருகிக் கொண்டே வருவதாகும்.

இரண்டு வெவ்வேறு இன மக்களிடம் ஒற்றுமை என்ற பெருநோக்கு ஒரு காசுக்கும் பயன்படா தொழியும். இரு பிரிவினரும் தம்முள் ஒன்றுபடுவாரே யன்றிப் பிரிதொரு இனத்தாரோடு கலந்து வாழ முற்படார். அங்ஙனம் விட்டுக் கொடுத்தால் நாளடைவில் தம் இனம் மீண்டும் அரசியல் அடிமைத் தனத்திற்கோ,

கொடுங்கோலனின் வெறிச்செயலை தூளைமட்டமாக்குவதுதான் புரட்சி!

டாலும் நீடித்த புகழை ஈட்டவில்லை. ஒரு நாட்டின் மக்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒன்றுபட்டு ஆர்த்தெழும் வன்மையோ, நன்மையோ இங்ஙனமுள்ள தன்னலப் புரட்சிகளுக்கு ஏற்பட நியாயமில்லை. பெரும்பாலான புரட்சிகள் செல்வந்தர்களை எதிர்த்து ஏற்பட்டவைகள்தான். பண்ணையாட்கள் புரட்சி போன்றவற்றை ஆதிக்கமிக்க செல்வந்தர்கள்

அதே உலகப் போர் ருசியாவில், ஜெர்மனியில் எல்லாம் ஒரு புதிய புரட்சியையே தோற்றுவிக்கத் தூண்டுகோலாயிருந்தது. புரட்சி என்றாலே பொது மக்களின் மனமுறிவு என்றுதான் சுருக்கமாய்ச் சொல்லலாம். ஆட்சிமுறை வேறுபாடுகள் எல்லாம் உச்சக் கட்டத்தை அடைந்து எதிர்ப்பு உணர்ச்சி வலுத்துவிடுகிறது, கருத்து வேறுபாடு மற்ற பண்பாட்டு ஒற்றுமை, நன்றி, பற்று

ஆதிக்க வேட்டையால் ஆர்ப்பரித்தெழுவதும் புரட்சியல்ல!

கொள்ளுகிறார்கள். இன்றைய நவீன உலகில் தொழில் அதிபர்களும் சேர்ந்து இரண்டு முகாம்களாக அதாவது நிலச்சுவான்தார், தொழில் அதிபர் என்ற நிலைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

மக்களாட்சி எனப்படும் ஜனநாயக நாடுகளில் இருந்துவரும் தொழில் முறையும், சமூக நிலைகளும் வெவ்வேறானவை. அதாவது பல தரங்கள் உண்டு. இதில் அரசாங்கம் தனித்துச் சிறப்பிக்

தத்துவ ஆய்வு செய்த விளைவுகள் :

அரசியல் உலகில் மட்டும் இருபதாம் நூற்றாண்டில் மாற்றங்கள் ஏற்பட்டதாகக் கருதுவது முற்றிலும் சரியல்ல தத்துவாசிரியர்களின் அடிப் படைகளும் அடிக்கடி மாறின. எண்ணங்களுக்குச்சிலர் முதலிடமும், சமர்க்கைக்குச் சிலர் முதலிடமும், பொருள்களுக்குச் சிலர் முதலிடமும், மாய்கைகளுக்குச் சிலர் முதலிடமும் கொடுக்க வாதாடினார்கள்

(தொடரும்)

புரட்சியின் மறுபெயர் உரிமை

இனமுழக்கம்
ஆசிரியர்: சீ.பி.சிற்றரசு

மலர் 1] ★ 15—7—60 ★ [இதழ் 45

கட்டாயப்படுத்தியவர் கட்டாயப்படுத்தப்பட்டார்.

பாராட்டுவின் பதர்கள்.

குழப்பத்தின் மூலமும் கூச்சலின்மூலமும் பிடிவாதத்தின் மூலமும், பிற்போக்கின் மூலமும் தங்கள் மொழியான ஏதுங்கெட்ட இந்தி மொழியைப் பிறர் மீது திணித்துவிட வேண்டுமென்று துடியாய்த்துடிக்கின்றனர் வடவர்கள். ஒருவருக்குப் பேசத் தெரியாத மொழியை கண்டிப்பாகப் பேசித்தீர வேண்டுமென்று வற்புறுத்துவது நியாயத்தின் அடிப்படையில் நீதி நிறைந்ததல்ல. வெறும் மடத்தனம், முட்டாள் தனம், தாம் ஆளும் வர்க்கத்தார் என்ற மண்டைக்கனமென்பது தவிர இதை வேறெந்த நாணயமான சொற்களாலும் அழைக்க முடியாது.

நேரு நம்மைப் பார்த்து காட்டுமிராண்டிகள் என்றார், இந்தப் பாட்டு வாசிகளைப் பார்த்து தெளிவு பெறட்டும். அஸ்ஸாமிலும் வேறு மொழி பேசுகின்ற மைனாரிடிகள் இருக்கக் கூடாதென்று ஓட ஓட துரத்துகின்றனர். கொலை, கொள்ளை, தீயிடுதல் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. பெண்கள் குழந்தைகுட்டிளோடு எங்கே ஓடுவது, எப்படி உயிர்தப்புவது என்ற பயத்தில் திசை தெரியாமல் ஓடி மறுபடியும் அந்தத் தீயோர்கைகளிலேயே அகப்பட்டுக் கொள்கின்றனர். சாகடிக்கப் படுகின்றனர் என்ற சோகச் செய்திகளைத் தாங்கி, ரத்தக்கறை படிந்த நிலையில் வருகின்றன, தினத்தாள்கள்.

மொழி யாதிக்கம் உச்சக் கட்டத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது.

இந்தி மொழி தவிர வேறு எந்த மொழி பேசுகிறவனாயினும், அவன் எவ்வளவு பெரிய பதவியிலிருந்தாலும், எத்தகு செல்வாக்கைப் பெற்றிருந்தாலும், எந்தவிதத் தியாகத்தைச் செய்திருந்தாலும், எத்தன்மையதான தடித்தக் கதரை அணிந்திருந்தாலும் எவ்வளவு பெரிய கதர் குல்லாயைப் போட்டுக் கொண்டிருந்தாலும், பஞ்சபாவனிகள் வாங்காத, நேர்மையை விட்டு விலகாத எவ்வளவு பெரிய யோக்கியனாக இருந்தாலும் அவன் மதிக்கப்படுவதில்லை.

கவர்னர் ஜெனரலாக இருந்தவர், ஆச்சாரியார். காந்தியாரின் சம்மந்தி. இருமுறை சென்னை முதல்வராக இருந்தவர். வங்காள அதிபதியாக இருந்தவர். எனினும் இதே பாட்டுவில் அவரைப் பேசவிடாமல் தடுத்தனர், அவர் செய்த குற்ற மென்ன? இந்தியில் பேசவில்லை, அவ்வளவுதான். அதே போல் சஞ்சீவியார்.

ஆச்சாரியாராவது பொதுக்கூட்டத்தில் பேசினார். அதுவும் எதிர்க் கட்சிக்காரர் என்ற முறையிலே. திரு. சஞ்சீவியாரின்நிலை அதுவல்லவே. அகில இந்திய காங்கிரசின் தலைவர். ஆந்திரத்தின் மாஜி முதல்வர். இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியவர். இவ்வளவு செல்வாக்குள்ளவர் ஒருவரை இந்தியில் பேசும்படி வற்புறுத்தி யிருக்கின்றார்கள். அதுவும் பொதுக்கூட்டத்திலல்ல, காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில். 14 மொழிகளை தேசீய மொழிகளென ஒப்புக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள்.

சஞ்சீவியார் என்ன செய்திருக்க வேண்டும்?

அந்த வெறியர்கள் முகத்திலே காரி உமிழ்ந்து தனக்களிக்கப் பட்டிருக்கும் பதவியைத் தூக்கி நேருவின் முகத்திலே வீசி எறிந்து வந்திருக்க வேண்டும். ஆனால் ஒன்றை மட்டிலும் அந்த மடையர்களுக்கு நினைவுபடுத்தியிருக்கிறார்

அதற்காகவாவது நாம் கொஞ்சம் ஆறுதல் அடைய வேண்டியிருக்கிறது. நீங்கள் இப்படிச் செய்தால் '**நாடு துண்டாகும்**' என்று பல நாட்கள் அவர் மனக்குகையில் பதுங்கியிருந்த எண்ணம் வெளியாயிற்று. இதே போல் கேரளத்தில்ஒரு குமுறல். அங்கு அண்மையில் பேசிய திரு. ஏ. கே. கோபாலன் அவர்கள், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் கேரளம் புறக்கணிக்கப் பட்டால் நாடு பிரிவது உறுதி, என்று முழக்க மெழுப்பி இருக்கின்றார்.

நேரு ஒரு பொய்யர்.

இந்தியாவிலேயே நேருதான் கொஞ்சம் நேர்மையானவர். சில நேரம் கொஞ்சம் நிதானத்தை இழந்து வாய்க்கு வந்ததைப் பேசுகிற சுபாவமும், பின்னால் அதற்காக வருத்தம் தெரிவிக்கிற குணமும் உடையவர் என்று நினைத்திருந்தோம். இப்போது அவர் வெறும் பொய்யராகவே மாறி விட்டார்.

'நெருக்கடியான நேரத்தில் மௌனமாய் இருப்பவன் நயவஞ்சகன்,' என்றான், நெப்போலியன். அதைப்போல் இந்தியைப் பற்றி இரண்டுமுறை மக்கள் சபையில் வாக்குறுதியளித்திருந்தும், குடியரசுத் தலைவர் பிரகடனத்திற்குப் பிறகு மௌனியாயிருக்கிறார்.

இந்த நிலைக்கு அவராக வந்தாரா அல்லது ஆளாக்கப்பட்டாரா என்பது நாமும் நாடும் அறிந்ததே.

மக்கள் சபையில் வாக்களித்தது என்பது அவ்வளவு லேசாகத் தட்டிக் கழிக்கக் கூடிய இடமல்ல. அது வெறும் சந்தை! அங்காடி, கூத்துக் கொட்டகை, வம்பு மடம், திண்ணை வேதாந்தம் பேசும் இடங்களல்ல. முப்பத்தியாறு கோடி மக்களின் நிலையை நிர்ணயிக்கும் இடம். அவர்களது இன்றைய வாழ்க்கையை, எப்படி அமைக்க முடியும் என்பதை தர்க்கித்து தர்க்கித்து முடி வெடுக்கும் இடம். நாடு சுடுகாடாகாமலிருக்க நல்லவர்கள்மனதில் தோன்றியகருத்துக்களுக்காகப் போராடி உருவகப்படுத்தும் இடம். 'எதிர்க் கட்சிகள் பேசிக் கொண்டே இருக்கும், ஆளுங்கட்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்,' என்ற ஜனநாயகக் கோட்பாடுகள்படி எதிர்க்கட்சிகள் பேசுவதை ஆர அமரக் கேட்டு அதன்படி செயல்பட வேண்டிய இடம். தக்காரைத் தக்கபடி நடத்தும் தகைமைசால் இடம், "அந்த இடத்திலேதான் நேரு வாக்களித்தார்" அந்த இடத்தைவிட மேலான இடத்தை நம்பிக்கைக்குரிய இடமாக யாரும் கருத மாட்டார்கள், அந்த இடத்தின் வாக்குறுதியே தரை மட்டமாய் விட்ட தென்றால், இனி எங்கே நாம் நம்பிக்கைக்குரிய வார்த்தைகளை எதிர்ப்பார்க்க முடியும்? ஆகவேதான் நமக்களிக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறந்தபின்பும் நாம் கோழைகளாய், எதிர்த்து வாதாட முடியாத பலவீனர்களாய், போர் தொடுக்க முடியாத மூடங்களாய் இருப்பதில் பயனில்லை, என்ற முடிவுக்கு வந்துதான் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறோம்.

நாம் வடவர்களோடு ஒன்றி வாழ்வதா இல்லையா என்ற சந்தேகமே இல்லாமல், ஒன்றி வாழ முடியாதென்ற முடிவுக்கு வெகு நாட்களுக்கு முன்பு வந்து விட்டோம். சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டின் தலைவர்கள் அந்த முடிவுக்கு வந்து விட்டார்கள். அந்த முடிவைக் கொஞ்சம் கொஞ்சமாக நாம் குறைத்துக் கொள்ளுகின்ற அளவுக்கு அவர்களுடைய செயலில் எந்தவித நாணயமும் நம்பிக்கையும் தோன்றவில்லை. அவர்கள் முகத்திலேயே விழிக்கக் கூடாதென்ற நிலைதான் இன்று ஏற்பட்டிருக்கிறது.

நமக்கும் உரிமையுண்டு; நமக்கென்று ஒரு தாய்மொழி உண்டு; நாமும் வரிசெலுத்துகிறோம் நாம இந்த நாட்டுக் குடிகள், நமக்காகவும், இந்திய அரசியல் சட்டங்கள் பேசலாம். நமக்கு நீதி வழங்க சட்டமன்றங்கள் உண்டு என்ற நிலைஇருக்கும் போதே,இந்திவெறியர்களின் நிலைஇதுவானால், அவர்களும் அவர்களது குடியரசுத் தலைவரும் நினைக்கிறபடி, இந்தி இந்தியாவை ஆள ஏற்பட்டால் கால் நோகும் ஒரு இந்தி வாலாவை தமிழன் முதுகில் சுமந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று அவர்கள் கதை பலிக்குமானால் மேற்சொன்ன சம்பவங்கள்தான் நடைபெறும், இப்போதே பார்க்கிறோம். அவர்கள் ரயிலில் பிரயாணம் [illegible] கின்ற முறையும், பேச்சில் ஒரு மிடுக்கும், நடையில் ஒரு கம்பீரமும் [illegible] மக்களை அவர்கள் எப்படி நடத்த எண்ணுகிறார்கள் என்ற நிலையு[illegible] வளர விடுவது அவர்கள் அகங்காரத்தை அங்கீகரிப்பதுமா[illegible] ஆகவே அடக்குவோம் விரைவில்.

அடிமை விலங்கறுப்பீர்!

ஆடும் மயிலே! ஆடல் நிறுத்து!
அடிமை எனக்குன் ஆட்டமா தேவை?
பாடும் குயிலே! பாடா தொழிவாய்!
பாவியென் செவிக்குன் பாடல்கள் அவலம்!
பேசும் கிளியே! பிழைமொழி ஒழிமின்!
பெற்றநாட் டரசிலான் பேச்சிலா மகிழ்வான்?
இன்னிசை வாண! இசைப்பொருள் முறிமின்!
என்னிரு செவியில் எனக்கிலை உரிமை!
கைகளில் விலங்கு! கால்களில் விலங்கு!
கண்களில் கருத்தில் எங்கணும் விலங்கு!
நெஞ்சினை முறித்தா வாய்க்கோர் உணவு?
நெற்றியைப் பிளந்தா சிகைக்குமை நீவல்!
கலைஏன் கவிஏன்? கானக் கருவிஏன்?
கண்படு தமிழ்ப்புவி காப்பதில் லாமல்!
தன்னர சடையாத் தறுதலை எனக்கே
இன்னருங் கலைகள் ஏன்?ஏன்?ஏன்? ஏன்?
மூடிய கதவின் உட்புறம் முழக்கம்!
மூளையும் வாயும் வேறுவே றாயின!
மனைவியைக் கூடவும் மத்திய அரசின்
அனுமதி வேண்டும்! அடிமையில் முழுமை!
மேடும் குளமும் கேரளர்க் காயின!
ஆடும் மாடும் அமைச்சர்க ளாயின!
'பாரத'க் காலில் சிரம்படச் சாய்ந்த
பண்பி லாளர்' பெருகினர் எங்கணும்!
சட்ட மன்றிலும் சட்டி ஏந்துவன்
தமிழ னல்லால்இப் புவிதனில் யாருளர்!
நாடும் பிறர்பால்! நலமும் பிறர்பால்!
ஏடும் பிறர்பால்! இரப்போன் என்னவன்!
தில்லி நகரிலும் பாதிரந் தூக்கித்
திரிவான் தமிழன்: இந்நாட்டு மன்னன்
ஈழ மண்ணிலும் "அம்மா! தாயே!"
எங்கள் குரல்!இதன் உரிமை எமக்கே
சோறு போட முடியுமா உம்மால்?
சொல்லுக! தமிழன், அங்கே வருவான்!
எம்மை ஈன்றவள், அம்மியைக் குழவியை
ஈன்றிருந் தாலும் அரைப்பதற் குதவும்!
தெருவெலாம் ஓலம்! திசையெலாம் ஏழ்மை!
சீரிலாத் தமிழர்க் குலகெலாம் தோழமை!
நாயினும் தமிழன் இழிந்தவன்! "அந்த
நாய்,மறு நாய்க்குப் பணிவ தின்மையால்"
ஏ ஓய் தமிழ! ஏ ஓய் தமிழ!
எழில்,கலை, காதல் ஒதுக்கி மூடிவை!
மொழிஎனும் வாளொடு மூட்டுக போரை!
அறிவதில் இப்பணிக் கழிவதே பெருமை!
வீடணக் குலத்தை வேரோடு சாய்ப்பாய்!
வேற்றவர் மார்பில் காலூன்றி நடப்பாய்!
குருதியில் குளிப்பாய்! கொற்றவர் ஆண்ட
திருவினை நாட்டை மீட்பதில் அழிவாய்!
தனிமையில் செல்லப் பணிப்பினும் முதலில்
சாகிறேன் நான்! பின் தைரியம் பெறுக நீ!

-கவிஞர் கண்ணதாசன்

புறப்படு மகனே!

சி.பி.சிற்றரசு

போர் முகம் காணாத புதல்வன். போரில்மடிந்தகணவன்; கணவன் இறந்ததும் கோட்டையை முற்றுகையிட அஞ்சும் எதிரிகள்; காரணம் விளங்காத காரிகை. களஞ்சியம் என்ற பெயர் கொண்ட திறமைசாலி.

தன்னை திறமைசாலி என்று அடிக்கடி பிறர் சொல்லும் போது அதையே புகழுரையாகக் கருதி கண்களை சுருக்குவான்: வேண்டாம் என்பதைப் போல் கைமர்த்துவான் புகழெனும் வலையில் சிக்காத மானிடர்களே இருக்க மாட்டார்கள் என்பது இவன் முடிவாகவே வைத்துக் கொள்வதில்லை உலக முடிவே அதுதான் எனறு அடித்துப் பேசுவான்.

நல்ல நெஞ்சினனு, நயவஞ்சகனு என்று தெரிந்துக் கொள்ள முடியாத சிக்கல். தேடியும் காணாத செப்பேடுகள். அதன் வாசகங்களடங்கிய சிலாசாசனம் ஆழியில் தூக்கி எறியப்பட்டிருக்கிறது. ஒரு முட்டாள் கல்லைத் தூக்கிக் கடலிலே எறிந்தால் நூறு அறிவாளிகள் சேர்ந்தாலும் அந்தக் கல்லை வெளியே கொண்டு வரமுடியாத நிலை. இங்கே மடையன் கெட்டிக்காரனு மாமேதைகள் கெட்டிக்காரர்களாஎன்றஜயம். நெடுங்கடலில் நாவாய் ஒட்டியோர் ஆண்டொன்றுக்கு ஆயிரம் பொன்னுக பத்தாண்டுகள் பெற்றனர். எனினும் அந்தச் சிலாசாசனம் வெளியேவந்தபாடில்லை. கூதூகலமாக, ஆடல் பாடல் விருந்து வேடிக்கைகள் இடைவிடாது. நடந்து கொண்டிருந்த அரண்மனையில் விளக்கணைந்து இருள்சூழ்ந்த நிலையாயிற்று. வாள் உருவிபோர்க்களம் செல்லும் வயதைத் தன்மகன் அடையும் வரையிலாவது தன் கணவன் உயிரோடிருக்கக் கூடாதா என்று அரசியின் கண்ணீர் அவளுக்கு அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

என்ருே ஓர் நாள். உதட்டின் ஓரத்திலே ஒரு புன்சிரிப்பு. வீரர்களைப் பெற்றெடுக்கிருள் தாய். எனினும் அவளுக்குப்போர்க்களம்போக வாய்ப்பில்லை. விவேகிகளைப் பெற்றெடுக்கிருள் தாய். ஆனுலும் அந்தவிவேகிகளின் விவாத அரங்கில் அந்தத் தாய்க்குலத்துக்கு இடமில்லை; அறிஞர்களைப் பெற்றெடுக்கிருள் தாய். அவள் அறியாதவை பலப்பல; விஞ்ஞானிகளைப் பெற்றெடுக்கிருள் தாய். அதன் விந்தையே நந்தனுக்கு வழி காட்டிய நாதனருள் என்கிருள். தனக்கு நிழல் தந்து பிறருக்கும் நிழல் தரும் மரங்களுமுண்டு. தனக்கும் நிழலில்லாமல் பிறருக்கும் நிழல்தராத மரங்களுமுண்டு. இவற்றில் எந்த இனம் பெண் இனம். இதுவரை இது தீர்க்கப்படாத பிரச்னைதானு என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் ஓர் ஏந்திழையின் துக்கச் சுமைகளைத் தாங்கித்தாங்கிப் பழுதாகிக் கொண்டிருக்கும் இரணசிங்கன் கோட்டையில் தான் இந்தக் கதைத்தொடங்குகிறது.

புலவரைப் போற்றி, நாவலரை பாவலரை ஏற்றி, கலை வளர்ச்சோலை என மதிக்கத் தக்க விதத்தில் தன் தாதையின் பெயரால் தன் தந்தை கட்டிய இரணசிங்கன் கோட்டையின் தளபதி நெடு நாள் கிள்ளி. அவன் தம்பி கார்மேகம். கோட்டைக் காவலன். களஞ்சியம் சிறை பிடிக்கப்பட்ட சீராத் தேவியின் காதலன். கணவனல்ல. காதல் மோதலிலே தோல்வியுற்ருல் சாதல் தான் புகலிடம். சவக்குழிதான் தஞ்சம். தாரைத் தப்பட்டைதான் தன்னேடு பேசும் நண்பர்கள் என்று நினைப்பவனல்ல.

கோட்டைக் காவலன் என்ருல் மன்னன் முகம் பார்ப்பதற்கு முன் தன் முகத்தைப் பார்த்துத்தானே தீர வேண்டும். யாரையும் காரணமில்லாமலே நிறுத்தலாம். யாரையும் எதுவும் கேட்காமலேயேவிட்டுவிடலாம்என்ற நிலையல்லவா இவன் பெற்ற பேறு. கோட்டைக்குள் செல்பவர்களிடம் செய்ய வேண்டிய ஒரே விதமான முறையை இவன் கையாளாததற்குக் காரணம் சிறைபிடிக்கப்பட்ட தன் காதலி என்ருவது தன்னைத் தேடிக் கொண்டு வரலாம். அவளை விசாரித்து அனுப்புவதற்கு உடனிருப்போர் தடையாக இருக்கலாம் இப்படி ஒருவரைப் பார்த்து பரிசீலித்தும், மற்ெருருவரைப் பார்க்காமலும் விடுகின்ற பழக்கத்தை கடைப்பிடித்துக் கொண்டே வந்தால் சோதனையிடப்படாமலே-அனுமதி சீட்டு இல்லாமலே தன் காதலியை உள்ளே

களஞ்சியம்

அழைத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று இந்த முறையைக் கையாண்டான்.

ஒரு கோட்டை அழிவதற்கு இதுவரை நாமறிந்தகாரணங்கள் பல. அவை மண்ணுசை ஒன்று; மற்ருென்று பெண்ணுசை; வேருென்று பதவியாசை, இன்னென்று பங்காளியின் பேராசை, மற்ருென்று உரிமைஎண்ணம். இவைகளே முடி வேந்தர்கள் காலத்தில் நிகழ்ந்ததாகலாம். மக்கள் ஆட்சியில் விடுதலை ஆர்வம் கொழுந்து விட்டெரிந்து கோட்டையைப் பொசுக்கியிருக்கிறது. புழுவென வாழ்ந்த மக்கள் புலியெனக் கிளம்பி கற்கோட்டைகளை கைப்பிடிச் சாம்பலாக்கி யிருக்கின்றனர். முன்னையதை தன்னலமென்றும், பின்னையதைப் பொது நலம் என்கிருேம். ஆனுல் நம் சரித்திரத் தொடரோவியம் இரண்டையும் தொட்டு, இரண்டுக்கு அப்பாலும் ஒடி நிற்கிறது.

வெளி நாட்டு வேவுக்காரர்கள் வேந்தனை என்ன பாடு படுத்துகிருர்கள் என்பதையும், அதுவரையில் வேந்தனை கடவுள் என நம்பியிருந்தமக்கள் வெறுப்புற்றெழுவதையும் இதில் காணலாம். மன்னன் மக்கள்குரலை மதித்தானு அல்லது படைகளை விட்டு மிதித்தானுஎன்பதைக்காணப் போகிறீர்கள்.

கதையைத் தொடங்குவதற்கு முன்னுல் இந்தக் கதையோட்டத்தில் செல்பவர்களை அறிமுகப்படுத்தி விடுவோம்.

ஊழி வெள்ளம். மன்னன். இரணசிங்கக் கோட்டைக்கதிபதி. கலைஞானம் மிக்கவன். வந்தாரை வரவேற்று வேண்டியதைத் தந்து வழியனுப்பும் வள்ளல் பெருந்தகை. தன் வாழ் நாளிலே ஏதாவது ஒரு புதுமையைச் செய்து தன் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கவேண்டுமென்று நினைக்கும் எண்ணத்தான். குதிரையேற்றம், யானை ஏற்றம் எல்லாம் தெரிந்தவன். போரே நடக்கக் கூடாதென்றெண்ணுவான். ஆனுல் பல போர்கள் அவனைச் சந்தித்திருக்கின்றன. வேறு வழியில்லாமல் வாள் எடுப்பான். வாளை, எடுத்த பின் கையும் எஃகு வாகும், இருதயமும் இரும்பாகும். நாவறட்சிக்கு எதிரிகளின் இரத்தத்தை யன்றி எவ்வளவு புனித ஆறுகளாயினும் அதன் நீரைச் சுவைக்க மாட்டான். அவ்வளவு சூள் கொண்ட நெஞ்சினன். இவன் மாளிகை அலுவல்கள், சபா மண்டப விசாரணை, வரி வாங்குதல், வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குதல் எல்லாம் இரவிலேதான் நடக்கும். ஆட்சி அலுவலகங்களும் அப்படியே. அவர்கள்பகலெல்லாம் தூங்கி விட்டு இரவு எட்டு மணிக்குத்தான் அலுவலகங்களுக்கு வரவேண்டும். இரவு 1 மணிக்கு இலவசசிற்றுண்டி வழங்குவார்கள். அதை உண்டு, காலை 6 மணிவரையிலும் வேலை பார்த்து விட்டு வீட்டுக்குச் சென்று விட வேண்டும். இவன் ஆளுகைக்குட்பட்ட எல்லா அலுவலங்களும் இரவிலேதான் இயங்க வேண்டும். இப்படி ஒருமுறை இருப்பது நமக்கு வியப்பாக இல்லை? இருந்தாலும் இதன் காரணத்தை மன்னனேபிறகு சரியான நேரத்தில் சொல்வான். அதைக் கேட்டால் அதுவும் சரி என்றுதான் நமக்குத் தோன்றும்.

இப்படி இருந்த இந்த மன்னன், ஊழி வெள்ளத்திற்கு ஒரு சபலமான எண்ணமிருந்தது. இவன் எந்த அவசரமான அல்லது முக்கியமான வேலையிலிடுபட்டிருந்தாலும் குழந்தையின் அழுகுரல் கேட்டால் கல கலத்துப்போவான். இவன் ஈடுபட்டிருக்கும் வேலையிலிருந்து இவன் கவனத்தை வேறு பக்கம் திருப்ப நினைக்கும் யாரும்குழந்தையை அழவைப்பது தவிர வேறு வழியற்றவராய் விட்டனர். அதோடு இன்னும் சில நிகழ்ச்சிகளைக் கண்டால் உணர்ச்சி

மருதபாண்டி

வசப்பட்டு விடுவான். அவற்றையும் இவனை கதையில் நடமாடவைக்கும் போது காணப் போகிறீர்கள். இவன் கொடுக்கின்ற தீர்ப்பு இது வரையிலும் நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். இவன் ஆட்

(9-ம் பக்கம் பார்க்க)

மும்முனையல்ல, வீர வரலாறு

எண்ணிப் பன்னிரெண்டு மணியொலிகளை எழுப்பி விட்டு, ஒரு தேதித்தாளை காலண்டரிலிருந்து கிழித்தெறிந்தது கடிகாரம்! ஓய்ந்து உணர்வற்றுக் கிடந்த உயிர்களை எரிமலையாக்கப் பிறந்தது ஜூலை 14-ந் தேதி! தம்மேல் படர்ந்திருந்த சாம்பலை ஊதி ஒதுக்கிவிட்டுகனல்கங்குகளைத்தீச் சுடர்களாக்க முனைந்தது தமிழகம் ஆம்! அந்த நாள்; ஜூலை 14!

டைய வாழ்வுக்காக இதோ என் வாழ்வு'' என்று தன்னைத் தமிழகத்துக்கு அர்ப்பணித்த அறிஞர் அண்ணா அந்தப் படை வரிசையில் அணிவகுத்து நின்ற அவருடைய அருமைத் தம்பிமார்கள் நெடுசெழியன், சம்பத், மதியழகன், நடராசன் அத்தனைப்பேரும் கற்சுவர் களிடையே கட்டுப்படுத்தப்பட்ட சிங்கங்களாய் கர்ஜிக்கிறார்களாமே! வீதிக்குவீதி, வீட்

★ ஓய்ந்து உணர்வற்றுக் கிடந்த உயிரினங்களை எரிமலைகளாக்கப் பிறந்ததுதான் அந்த ஜூலை 14!

★ இறந்த காலச் சரித்திரத்தின் ஏடுகள் பறந்து வந்து தமிழர்களின் முன்னே விழுந்தன. அதுவும் ஜூலை 14 தான்!

★ ஒரு புரட்சி பிரான்சிலே! மறு புரட்சி தென்னாட்டிலே!

இறந்த காலச் சரித்திரத்தின் ஏடுகள் பறந்து வந்து தமிழர்களின் முன்னே விழுந்தன. குமுறிக் கொந்தளிந்த மக்களை கும்மிருட்டுச் சிறையில் தள்ளிவதைக்கப் பிரெஞ்சுநாட்டுக்கொடியோன் லூயி அமைத்த பாஸ்டிலி (Bastille) சிறை உடைத்து நொறுக்கப்பட்ட நாள்! இன்பத் திராவிடத்தின் அஸ்தி வாரம் அமைக்க எலும்புக் கூடுகள் உருவாயின அன்று.

சிறைக்குள்

பன்னிரெண்டரை ஆகியிருக்கும். சென்னையிலிருந்து வந்த சிந்தை கலக்கும் அந்தச் செய்தி திருச்சி மக்களைத் திடுக்கிடச் செய்தது. **அண்ணா, நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன் கைது!''** விடுதலைப் போராட்டம் நடத்த வேண்டிய வீரக் கரங்களின் இதயங்கள் வெடித்துச் சிதறின. 'அண்ணா கைதாகி விட்டாராமே!'' திருச்சி எழுப்பிய அலறல் திசை யெட்டும் எதிரொலிப்பது போலிருந்தது.

நடைப்பிணமா?

வாழ்ந்துச் கெட்ட சமுதாயமே! வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பார்! உன்புன்னகை உலகத்துக் கோர் பொன்னொளியாய்வீசிப்புது மெருகு கொடுத்தது ஒரு காலத்தில்: தளர்ந்து கிடக்கும் உன் தோள்கள் தரணி யெங்கும் முரசு கொட்டி, வாள் சுழற்றி, வானை முத்த மிடும் அளவுக்குக் கொடிகளைப் பறக்கச் செய்தனஎன்பதை நீ ஏன் மறந்து போனாய்? அறிவு எங்கே? ஆற்றலெங்கே? புண்மொழி புகன்றார் எனக் கேட்டவுடன் மனம் பொறுக்காது, காடு மலை வனாந்திரங்களைக் கடந்தோடி, அந்தப் புல்லர்களின் பொன்முடி அகற்றி, தலையில் கல்லேற்றி, கற்புக்கரசிக்குச் சிலையமைக்க அழைத்துவந்த செம்மல்களின் பரம்பரையா நீ? ஐயகோ! என்நாடே! அழகிய திருநாடே! வீரக்கழலிருந்த உன் கரங்களை விலங்குகளால் பிணைக்க நீ எப்படி இடங்கொடுத்தாய்? உறங்காதே, விழித்தெழு! இழந்ததை எண்ணிப்பார். எஞ்சியிருக்கும் மிச்சத்தையாவது வளர்த்துக் கொள்ள!'' என்று திராவிடத்தில் முரசுக் கொட்டிய முதல்வன், விழிகளால் அருகழைத்து இன்மொழியால் இலட்சியச் சிங்கங்களாக்கும் ஆசிரியன், ''எல்லோரு

டுக்கு வீடு பறந்தனர் வீரர்கள் இந்தச் செய்தியைப்பரப்ப. உறக்கத்தை உதறித்தள்ளி விட்டு ஊர் மக்கள் வெறிபிடித்து உலாவினர். ''இன்று தான் பிரெஞ்சு நாட்டு பாஸ்டிலி உடைபட்ட நாளாமே! சென்னைக்கு இன்னுமா உணர்வு பிறக்கவில்லை? என்ன செய்கிறார்கள் அங்கே? தவழ்ந்து வந்து அணைக்கும் காற்றிலே தம்மை மறந்து உறங்கிக் கிடக்கிறார்களா? மின்னும் நட்சத்திரங்களின் கண்ணசைப்பிலே கருத்தழிந்து போனார்களா? அரசியல் சூதாடிகளின் ஆட்டத்தில் அடிபட்ட காய்களாக மாறிவிட்டார்களா? கூலிக்குக் குரலெழுப்பும் குள்ள மனிதர்களின் வேலிக்குள் சிக்கித் தம்மை மறந்து போனார்களா? ஐயோ! இருக்காதே! இரண்டு நாட்கள் ஒலித்த முரசின் ஒலி இன்னும் அடங்கி இருக்காதே. ஆம்! இந்நேரம் சென்னைச் சிறை சிதறிக்கிடக்கும். நம் உள்ளத்தில் ஒளிவிட்டிருக்கும் அந்த மாணிக்கங்கள் வெளிப்பட்டிருப்பார்கள்,'' திருச்சி மக்கள் தம் திணவெடுத்த தோள்களை இப்படிச்சொல்லித்தட்டிக்கொடுத்துச் சாந்தப்படுத்தினர்.

''கலங்காதீர் தோழர்களே! கண்ணியத்தை இழக்காதீர்! உள்ளே இருப்போர்கள் மட்டுந்தான் உலுத்தர்களை ஒழித்துக்கட்ட உழைப்போர்'' என்று எண்ணி இறுமாந்திருக்கும் எதேச்சாதிகாரர்களுக்குப்பாடம்கற்பிப்போம். இருக்கின்றோம்,பலபலட்சம், களத்தில் பிணமாகிஇலட்சியத்தை எட்டிப் பிடிக்க இன்று காட்டுவோம் அந்த ஆர்ப்பாட்டகாருக்கு! என்று தட்டிக் கொடுத்துக் கட்டுப்படுத்தினர். மறுநாள் கல்லக்குடியில் திராவிடத்தின் தன்மான முரசு கொட்ட இருந்த முன்னணி வீரர்கள்.

வைகறையில் வாள்வீரர்

வெள்ளி முளைத்தது—வையகத்தில் எஞ்சியிருந்தோரனைவரும் விழித்தெழுந்தனர். காலையில் வந்தச் செய்திக் கண்ணீரை வெள்ளமாக்கி வீதியெங்கும்வழிந்தோடச் செய்தது.

''சத்தியவாணிமுத்து! அவரோடு ஐம்பது பேர் கைதாமே!''

எழுப்பி விட்டு, அதன் முகத்திலே எட்டி உதைத்தவனை ஏறெடுத்துப் பார்க்கும் சிங்கம் போல திருச்சி நிமிர்த்திற்று, தன் விழிகளை. ஆளுந் திறமையற்ற சர்க்கார் அறிவையும் அடகு வைத்து விட்டது என்பதை வரலாறு குறித்துக் கொண்டது. நீர்கலங்கும் கண்களிலே நெருப்பையும் கொட்டியது போலானது இந்தச் செய்தி வீணையின் நரம்புகள் துடிக்கக் கூடி இல்லை. துண்டுபட்டு அறுந்து விழுந்தன. தெருக்கள் தோறும் திரண்டு நின்றனர் மக்கள். வேதனை—வெறி இவற்றின் வேகத்திற்கு வேலி போட்டிருந்த விவேகம்! களம் நாம் அமைத்தோம்—வீரர்களைத் திரட்டினோம். பதுங்கியிருந்தவர்களை யெல்லாம் பாசறைக்கு விரட்டியடித்தது சர்க்கார் தன் பாதகச் செயல்களால்.

புறப்பட்டது படை, கலைஞர் கர்ம வீரரானார்

கதிரவன் எல்லோருக்கும் சூடேற்றிவிட்டு கண் மூடினான் டால்மியாபுரம் பெயர் மாற்றக் குழுத் தலைவர் கருணாநிதி திருச்சி வந்து சேர்ந்தார், ஓடினர் மக்கள் லால்குடிக்கு. அந்த வீரனின் போர் முரசின் ஒலி கேட்டு உற்சாகமும் உறுதியும் பெற. தோழர் பழனியாண்டி எம். எல். ஏ. தலைமை வகித்தார். மண்ணெல்லாம் மக்கள் திரளாக மாறிக் காட்சியளித்தது. சாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சருகுகள். வாழ்வின் வடுக்களைப் பெற்றிருந்த வயதினர். வரவேற்கும் வாழ்வோடு கை குலுக்கும் வாலிபர்கள், நெளிந்து வளைந்து சதிராடும் துளிரிலைகள். இடையிலே பூத்துக் குலுங்கி மென்னகைபுரியும் புன்னகைப் பூஞ்சோகள், அந்தச் சோலை எப்படி மரண ஓலைகளில் கையொப்பமிடும் வீரர்கள் பாசறையானது என்பதுதான் தெரியவில்லை! மணி முரசொலித்தார்—அம்பில் தர்மலிங்கம் தன் அருமை நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டார். காலத்தைக் கடந்து தன் கருத்தைச் செலுத்தப் பழகிக்கொண்ட கவிஞர் கண்ணதாசன் மறுநாள் மண்ணைச் சேருக்கும் செந்நீரை எண்ணிக் கண்ணீர் விட்டார்—கடைசியில் எழுந்தார் கருணாநிதி தன் இதயத்தைத் திறந்து காட்ட! ''பாழ் செய்து மானத்தைப் பறித்துச் செல்லும் பனியாக்கள் கூட்டத்தைப் பாருங்கள் தோழர்களே!'' என்றழைத்தார் சொற்கள் வாளெனச் சுழன்றன; எண்ணங்கள் தீப்பொறிகளாகச் சிதறின. அந்தத் தெரு உலைக்கூடமானது. பேச்சு எரிதழலாக மிளிர்ந்தது. மக்களைத் தட்டிக் கொடுத்தார்—நீட்டி நிமிர்த்தினார் — தீட்டிக் கூறாக்கினார் — இரண்டே மணி நேரத்தில் ஏக்கம் சூழ்ந்திருந்த அத்தனை இதயங்களும் எஃகு ஈட்டிகளாக மாறின.

வேதனை, இல்லை, உறுதி

மறக்காதீர்கள், தோழர்களே! இன்று விடைபெற்றுச் செல்லும் நான் வெற்றி பெறுமல் திரும்பேன். வெற்றி இன்றேல் உயிருடன் ஊர் திரும்பப் போவதில்லை,

டி.கே.சீனிவாசன்

உங்கள் ஊர் பக்கமாகத்தான் என் உயிரற்ற உடல் போகும். என் மார்பில், கொப்பளித்த குருதி காய்ந்து காணப்படும் காயங்களை உங்கள் கண்ணீரால் கழுவுங்கள். அதுவே போதும் என் நண்பர்கள் ஆறுதலடைய!''

கருணாநிதியின் கடைசி சொற்கள்! வெந்து போயிருந்த அத்தனை மக்களையும் வேதனைக்குள்ளாக்கினார் இந்த விபரீதச் சொற்களை மொழிந்து.

தளபதியின் கருணைக் கண்ணீர்!

''தம்பி கருணாநிதி! உன் பிணத்தையா நான் பார்க்க வேண்டும்'' என்று சிதம்பரம் மாநாட்டில் அருமை அண்ணாவிடமிருந்து வெளிப்பட்ட அந்த அழுகைக் குரல் நினைவுக்கு வந்தது. அழுதேன்—அழுதோம் - அழுதார்கள்!

''எங்களைப் பிணமாக்கிவிட்டு நீர் பிணமாகும் தளபதியே! அப்போதுதான் அது முடியும்''என்று இதயம் கக்கிய சொற்களை எப்படி வெளிப்படுத்துவது என்பது புரியாமல் திகைத்தனர் மக்கள்.

இரவு பதினொரு மணியிருக்கும். **கருணாநிதி, தர்மலிங்கம், மணி, இராமசுப்பையா, ராபி, முத்துகிருஷ்ணன்** இருள் சூழ்ந்த வெட்ட வெளியிடையே இழைந்து சென்ற பாதையில் பறந்தோடியது கார் இவர்களை ஏற்றிக் கொண்டு. காற்று சீட்டியடித்தது - காரிருள் கலங்கி நின்றது — இடையிலே தோன்றி மறைந்த விளக்குகள் என்ன செய்வது என்பது புரியாமல் விழித்தன. பாதையோரத்தில் கூடி நின்ற மக்கள் பயமும் பீதியும் நிறைந்த பார்வையால் கையசைத்தனர்,

மணி பன்னிரெண்டு. ஒரு தேதித்தாள் உருத் தெரியாமல் அழிந்தது, ஒழிந்தது. நீலவிளக்குகளைத் தாங்கி நிமிர்ந்து நிற்கும் தொழிற்சாலையின் சுவர்கள் வானத்தில் வரையப்பட்ட கோடுகளைப் போலத் தெரிந்தன. நீண்டு உயர்ந்திருந்த புகைக்கூண்டு தன் இதயத்தில் நெடுநாட்களாக பதுக்கிவைத்திருக்கும் நெருப்பை, புகை மூலம் காட்டிக் கொண்டது. காரிருளில், நீல் விளக்குகளின் ஒளியில் வளைவு நெளிவான கோடுகளை இழுத்துக் கொண்டிருந்தது, புகை போக்கி வெளியிட்ட வெண் புகை!

பக்கத்தில் நின்றிருந்த மரங்கள் எல்லாம் பாட்டாளிகளின் எலும்புக்கூடான உடல்களை நினைவுபடுத்தின. மறு நாள் விழிப் போகும் பிணங்களை எண்ணிப் பார்த்தோ என்னவோ

கோட்டான்கள் கூவின—இல்லை, அழுதன! சலனமற்ற டால்மியாபுரம் கட்டடங்கள் சவப் பெட்டிகளாகத் தோற்றமளித்தன. அதன் உள்ளே உயிரோடு உலவிக் கொண்டிருந்த இயக்கத் தொண்டர்கள்......!

சாவை நாம் அறிந்ததில்லை, எனினும் செத்துக் காட்டுகிறோம்

''நாம் எப்போது வாழ்ந்தோம் தோழர்களே! இப்போது சாக? நாம் பிணமாகி வெகு காலங் கடந்து விட்டது. இப்போது நடமாடும் எலும்புக் கூடுகளைப் பார்த்துப் பைத்தியக்கார உலகம் நாம் என்று எண்ணி ஏமாறுகிறது.'' என்று குரல் கொடுக்கும் தொழிலாளர் கூட்டம் தூங்காமல் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தது.

இறங்கியவர்களை எதிர்கொண்டழைத்தனர். அங்கே காத்திருந்த வீரர்கள் சிவப்பிரகாசம்—இளமுருகும் பொற் செல்வியும்—மாணிக்கம் — முத்துக்கருப்பன்—குளித்தலை ராஜா எத்தனை பேருடைய பெயர்களைத்தான் எழுத இடங்கொடுக்கும்? பலர் ...

சாவின் எதிரிலே இவர்களால் எப்படிச் சாந்தமாக இருக்க முடிகிறது? ஐயோ பாவிகளே! நீங்கள் இந்நாட்டில் பிறக்காமல் இருந்திருக்கக் கூடாதா? ஏன் பிறந்தீர்கள்? வீடு, நாடு, உற்றார், உறவினர் அத்தனைப் பேரையும் உதறித் தள்ளி விட்டு உயிரோடு கல்லறையில் நுழையவா? பிறந்தீர்களே! அதையாவது பொருத்துக் கொள்ளலாம்; ஏன் உங்களுக்கு இந்தத் தன்மான உணர்ச்சி ஏற்பட்டது? அதோ வாழுகிறார்களே, அழகழமான மாளிகைகளில், பாலும் பழமும் உண்டு, பளபளப்பான கார்களில் உலாவி, மனைவியின் பராமரிப்பிலே மக்களின் புன் சிரிப்பிலே தம்மை மறந்து—சோற்றுக்காக அந்தச்சுகபோகிகளுக்கு அடிமையான புழுக்களின் உழைப்பால் உல்லாசம் பெற்று அவர்களைப் போல நீங்களும் இருந்திருக்கக் கூடாதா? ''அவர்கள் சோற்றாலடித்த பிண்டங்கள்'' என்று நெடுஞ்செழியன் சொல்லிக் கொடுத்ததை நினைவு படுத்துகிறீர்களா? ஐயோ மூடர்களே! அப்படிப்பட்டவர்களால் தான் வாழ முடிகிறது! பத்தையும் விலைக்கு விற்றால்தான் பளபளப்பைப் பெற முடிகிறது. இந்தப் பரிதாபத்துக்குரிய சமுதாய அமைப்பில் மானம் கண்ணுக்குத் தெரியாது தோழர்களே! அதனால்தான் அவர்களால் அதை மறைத்து மூடி அடகுவைக்க முடிகிறது.

கோழைகள் இப்படி எண்ணி இருந்தாலும் இருப்பார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

★ வாழ்ந்து கெட்ட சமுதாயமே! வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பார்! உன் புன்னகை உலகத்துக்கோர் பொன்னொளியாய் வீசிப் புதுமெருகு கொடுத்தது. ஒரு காலத்தில் தளர்ந்து கிடக்கும் உன் தோள்கள் தரணியெங்கும் முரசு கொட்டி, வாள் சுழற்றி, வானை முத்தமிடும் அளவுக்குக் கொடிகளைப் பறக்கச் செய்தன என்பதை நீ ஏன் மறந்து போனாய்?

இரத்த விளக்கேற்றிய இளஞாயிற

15-7-60 இனமுழக்கம் 7

இராமனுதபுர மாவட்டத்தில் எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. யாரும் எழுதப் புகாததால் நாட்டுக்குத் தெரியாமல் போய்விட்டன. இது நடந்த கதை! 'தங்கச்சி மடம்' என்ற பெயரில் இராமேசுவரத்திற்குச் செல்லும் வழியில் ஒரு ரயில் நிலையமே இருக்கிறது. அங்குதான் இந்தக்கதை நடந்ததாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. கேட்டறிந்ததோடு கூட்டுவனகூட்டி இங்கே தொடர் கதையாக எழுதுகிறேன். என்னுடைய முந்திய கதையைப் படித்து கருத்துரை தந்ததைப்போல் இக்கதைக்கும் நான் எதிர்பார்க்கிறேன். முகப் புகழ்ச்சி தேவையில்லை.

—தென்னரசு

டிக்கட் பரிசோதகர் தியாகராஜன் இராமேசுவரம் ரயில் நிலையத்தின் முகப்பில் நின்றுகொண்டு பழைய நினைவுகளில் மூழ்கியிருந்தார். அவர் கையில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. விரும்பத்தகாத இடத்திற்கு வந்து விட்டவரைப்போல் அவரது மூக்கும் விழிகளும் படாத பாடுபட்டன. விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிக்கூடத்திற்கு வந்து விட்ட மாணவனைப் போல் அவர் கலவரமடைந்திருந்தார். பேசத்துணையின்றி அவர் மனதுக்குள்ளேயே பேசிக்கொண்டிருந்தார்.

"அடேயப்பா! எவ்வளவு பெரிய மாற்றம்! ஐந்தாண்டுகளுக்கு முன்பு இந்த ஊர் இப்படியில்லை. இத்தனை கடைகள் அப்போது கிடையாது. இப்பேர்ப்பட்ட பரபரப்பான மக்கள் நடமாட்டமும் குறைவு. அழுக்கு மூட்டைகளை கடலில் கரைப்பதற்காக வரும் மார்வாடிகளைத் தவிர வெளியூர் ஆட்களைப் பார்ப்பதே அன்றைக்கு அரிதான காரியம். என்னைப் போன்ற சின்ன அதிகாரிகள் இந்த ஊரில் பொழுதைக் கழிப்பதற்கு என்னபாடுபட்டார்கள் தெரியுமா? எங்கு பார்த்தாலும் விறகுக் கடை-மேகமண்டலம் முழுதும் கரிப்புகை. தெருவெல்லாம் மீன் வாடை; கண்பட்ட இடமெல்லாம் கார்கூந்தல்நிறைந்த கைம்பெண் தும்பலைப்போல்ஈச்சமரக்கூட்டம், ஒரு வருஷ காலம் இந்த ஊரில் தங்கியதே எனக்குப் பெருந் தண்டனையாகி விட்டது. இராமேசுவரத்திலிருந்து மானமதுரை வரை எனக்கு வேலை. பஞ்சப் பிரதேசத்தின் மொத்தப் பரப்பு அனைத்தும் என் பொறுப்பில் இருந்தது! மானமதுரைக்குப்பிறகுயாரும் ரயிலில் டிக்கட் எடுக்க மாட்டார்கள்என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; அது உண்மைதான். பெரும்பாலும் டிக்கட் இல்லாமல் தான் எல்லோரும் பிரயாணம்செய்கிறார்கள். இந்த நோய், யாரால், எப்போது தொடங்கப் பெற்றது என்று தெரியவில்லை. எத்தனை பேரைத்தான் நானும் பிடிப்பது; எத்தனை பேரைத்தான் சிறைக்கு அனுப்புவது; ஏழைகள் சிறைக்குப் போனால் பணக்காரர்களாகி விடுகிறார்களா? வாழ வழியற்று தண்டனைக்குப் பயந்து, தன்மானக்காரர்கள் தற்கொலை புரிந்துகொண்டால்தான் சட்டம்விட்டுவிடுகிறதா? இது ஒரு விசித்திரமானகட்டுத்திட்டம்;வாழத்துடிப்பவர்களும் சாகத் துடிப்பவர்களும் ஒரே இடத்தில் சந்திக்கிறார்கள் - அது சிறைக்கூடம்!

வறண்ட இந்தப் பகுதி எனக்குப் பிடிக்காமல், மேலதிகாரிகளுக்குப் பலமுறை மனுச்செய்து கொண்டதின் பேரில் என்னை பெங்களூருக்கு மாற்றி வைத்தார்கள். ஏனோ தெரியவில்லை. ஐந்து வருஷங்களுக்குப் பிறகு என்னை இங்கேயே மறுபடியும் போட்டுவிட்டார்கள். இந்த இராமேசுவரம் அந்தக் காலத்திலேயே இப்படி இருந்திருக்குமானால் நான் பெங்களூர் போயிருக்கமாட்டேன். அங்கே போய் மதுபானம் அருந்தப் பழகியிருக்கமாட்டேன். கைப்பொருளையும் இழந்து கடன் பட்டுத் திரும்ப வேண்டியதில்லை.

டி.டி.ஆர்.உத்தியோகத்தைப் போல் மோசமான உத்தியோகமில்லை. அன்பாகப் பேசுவதற்கு ஆள் கிடைக்கமாட்டார்கள். தப்பித்தவறி யாராவது கிடைத்தாலும் நெடுநேரம் பேச முடியாது. ஒன்று அடுத்து வரும் ஸ்டேஷனில் நான் இறங்கி விடவேண்டும்; அல்லதுஅவர்கள் இறங்கிவிடுவார்கள். குறைந்தது ஒரு நாளைக்கு பத்துப் பேருடன் சண்டை போட வேண்டும். எனது உத்தியோகம் இருதயமில்லாதவர்கள் பார்க்கவேண்டியது; அல்லது இருதயத்தை இறுக்கப்பூட்டி திறவுகோலை வீட்டில் வைத்துவிட்டுப்போக வேண்டியவர்கள் பார்க்க வேண்டியது,

"ஐயா, நான் ஏழை! பரமக்குடி மருத்துவ மனைக்குப் போகிறேன்."

"பிரபு! என்னைக் கைவிட்டு விடாதீர்கள்; நாலு நாள் பட்டினி!"

என்பன போன்ற ஏழ்மைக் குரல்களைக் கேட்டுக் கேட்டு என் மனம் மரமரத்துப் போய் விட்டது, சில வேளைகளில் பெற்றோர்களுக்குத் தெரியாமல் கடத்திவரப்படும் காதல் சிட்டுக்களின் இன்பக் கதைகளையும் எனது பிரயாணத்தில் கேட்டிருக்கிறேன். மனிதன் எந்த அதிசயத்தைக் கண்டாலும், அதை இன்னொருவனிடம் திரும்பிச் செல்லும் போது தான் அவன் நிம்மதி பெறுகிறான்; குதூகலமடைகிறான். போனமுறை நான் இங்கு பணிபுரிந்தபோது கண்டவைகளையும் கேட்டவைகளையும் இவ்வூர் யானைப் பாகனிடம் தான் செல்லுவது வழக்கம். நான் வாடகைக்குப் பிடித்திருந்த அறைக்கு அடுத்த குடிசை அவனுடையது. திருவிழாக் காலங்களைத் தவிர மற்றநேரங்களில் அந்த யானைப்பாகனுக்கு ஒய்வு அதிகம் கிடைக்கும். அவனுக்கு எஜமானன் யாருமில்லை;யானை தான் அதேபோல் அந்த யானைக்கும் வேறு எஜமானன் இல்லை. அவன்தான்.

ஒவ்வொரு நாளும் உலகம் மாறிக்கொண்டு வருகிறது; நாள்ஓடித்தான் அரும்புமலராகிறது; மலர் காயாகிறது. இந்த ஐந்தாண்டு காலத்திற்குள் அந்த யானைப்பாகன் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாற்றம் தெரியுமா? அன்று பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கொண்டிருந்த அவனுடை பெண்ணைப்பற்றி என்னென்ன கனவுகளைக் கண்டு கொண்டிருந்தான் என்பதை இப்போது நினைத்தாலும்மனம் சிலிர்க்கிறது. ஆசைக்கு பணக்காரன் ஏழை என்ற பாகுபாடு கிடையாது. அது எல்லோர் மனதிலும் விளைகிறது; எல்லோர் மூளையையும் குழப்புகிறது; பெரியவர்களைச் சிறியவர்களாக்கி, சிறியவர்களைப்பைத்தியக்காரர்களாக்கி மகிழ்கிறது. யானைப்பாகன் நரசிம்மன் பரம ஏழை; கோவிலில் தரும் சோற்றுக்கட்டியை தவிர வேறு வருமானம் அவனுக்கு இல்லை. திரு நாட்கள் நடக்கும்போது யாராவதுபெரியவீட்டுக்காரர்கள் வெளியூர்களிலிருந்து வந்திருந்தால் அவர்களது குழந்தைகளை யானை மீது வைத்து அழகு பார்ப்பார்கள். அப்போது அவர்கள் நரசிம்மன் மீது பரிதாபப்பட்டு ஏதாவது கொடுப்பார்கள். அதுதான் நரசிம்மனுக்கு மேல் வருமானம். அந்த ஏழை நரசிம்மனுக்கு தன் மகள் அனுராதையை நிறையப் படிக்க வைத்து அவள் நெஞ்சம்நிறைந்த மாப்பிள்ளைக்குக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்பது தான் [illegible] தணியாத ஆசை! [illegible] வயது, சத்து நிறைந்த உணவு [illegible] கொள்ளும் சீமான் வீட்டுப் பிள்ளைகளைக் [illegible] அவள் பொலிவுள்ளவளாக இருந்தாள். கவலைக்கு ஆளாகாத கண்ணாடி முகம். எண்ணங்களை [illegible] பான நடை. அவர்கள் குடும்பம் இந்தக்கதிக்குவருமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. சேமிப்பு இல்லாத நரசிம்மனே எண்ணியிருக்க முடியாது; நேற்றுக் காலையில்தான் இந்த ஊருக்கு வந்து இறங்கினேன். வந்ததும் நரசிம்மனைப் பற்றித் தான் விசாரித்தேன். உலகத்தில் யாரைத்தான் நம்புவது? ஒவ்வொருவருக்கும் இரட்டை நாக்கு இருக்கிறது. வேண்டாதவர்களுக்கு ஒரு நாக்கு; நண்பர்களுக்கு ஒரு நாக்கு!

நரசிம்மன் நல்லவன்தான் என்றாலும் அவனுக்கு ஒரு மகள் உண்டல்லவா! அதனால் எல்லோரும் அவன் குடும்பத்தைக் கூர்ந்து கவனித்திருப்பார்கள். அவன் புது வேட்டிகட்டினால் அதற்கு ஒரு அர்த்தம்; மார்பில் சந்தனம் பூசினால் அதற்கு வேறு அர்த்தம்தானாக முளைக்கும்! அதனால்தான் நரசிம்மனைப் பற்றி, ஒருவருக்குப் பத்துப்பேரிடம் வினவினேன். அடேயப்பா! எல்லோருடைய வாக்குமூலங்களும் ஒரேமாதிரி பயங்கரமாக இருந்தது.........

..........................ஒருநாள் வெள்ளைக்கார கவர்னர் ஒருவர் இங்கே--கோயிலுக்கு வந்தாராம். அவரை வரவேற்பதற்குக் கோயில் அதிகாரிகளெல்லாம் ரயில் நிலையத்திற்குத் திரண்டு வந்திருந்தார்களாம். யானையின் துதிக்கையில் ஒரு பெரிய மாலையைக் கொடுத்துக் வைத்து கவர்னரின் கழுத்தில் போடுவதற்காக நரசிம்மனும் ரயில் நிலையத்தில் காத்திருந்தானும், அந்தஊரில் எப்போதுமில்லாத ஆர்ப்பாட்டம் அன்றிருந்ததாகச் சொல்கிறார்கள். இருந்திருக்கலாம். நியாயமுண்டு. கவர்னரின் தனி ரயில் ஊரை நெருங்கிக் கொண்டிருக்கும்போது தூரத்தில்—ஒரு மணற்காட்டில் நின்று கொண்டிருந்த அதிர்வேட்டுக்காரன் கோயில் அதிகாரியின் கட்டளைப்படி வேட்டுக்கு தீ வைத்து விட்டானும்.

.........அந்த வானம் வேட்டுக் குழாயை உடைத்துக்கொண்டு அம்பைப்போல் கிளம்பி வந்து யானையின் முகத்தில் பாய்ந்து விட்டதாம்! அவ்வளவுதான். யானைக்கு மதம் பிடித்துவிட்டால் கேட்க வேண்டுமா? ஊரையே அமர்க்களமாக்கிவிட்டதாம்! ரயில் நிலையத்தில் திரண்டிருந்த மக்கள், வெள்ளத்தைப் போல் புரண்டோடி உயிர் தப்பினார்களாம்; கவர்னர் ரயிலை விட்டே இறங்கவில்லையாம்! ஆனால் நரசிம்மன்? ஐநூறு ரூபாய்ச் சம்பளக்காரர்களெல்லாம் ஓடி ஒளிந்து கொண்டார்களாம்! கோயில் சோற்றைத்தின்றுகொண்டு கும்பியை வளர்த்து வந்த நரசிம்மன்தான் உயிரைப் பணயம் வைத்து யானையோடு போராடினானும்! மரங்களில், மாடி வீடுகளில் நின்று அவனது தீரத்தைப் பார்த்தவர்கள் கண் கலங்கச் சொல்லி அழுகிறார்கள். அவனும்மனிதன்தானே! மதங்கொண்ட யானையுடன் எவ்வளவு நேரந்தான் அவனும் போராடுவான்! வெளி[illegible]

பிடித்த அந்த யானை நரசிம்மனைத்துதிக்கையால்பிடித்துச் சுழற்றி தரையில் அடித்து விட்டதாம்! கோரம்! சாகும் போது அவன் மனம் எதை எதை நினைத்ததோ! அருமை மகள் அனுராதையின் எதிர்காலம் பற்றி என்னென்ன திட்டமிட்டிருந்தானோ? நரசிம்மன் இறந்தான். அவன் மகள் அனுராதை போனஇடம் தெரியவில்லை என்று அறிந்த பிறகு எனக்கு இந்த ஊரில் தங்கவே பிடிக்கவில்லைதான்! என்னசெய்வது? மறுநாள் காலை ஒன்பது மணிக்கு இங்கிருந்து புறப்படும் ரயிலில் மண்டபம் முகாமிற்குப் புறப்பட்டேன்: இடையிலே சில சிறிய ரயில் நிலையங்கள் இருக்கின்றன. தங்கச்சிமடம் என்பது அவைகளில் ஒன்று. அங்கே ஒரு பாழடைந்த சத்திரம் இருக்கிறது, அந்த ஊரின் பெயர்க்காரணத்தைப் பற்றி யாருக்கும் தெளிவில்லை. உள்ளூர்க்காரர்களுக்கே அப்படி அடுத்த ஊர்க்காரர்கள் எழுதியதைபடித்தபிறகுதான் சொந்தஊரின் சிறப்பைஎல்லோரும் புரிந்துகொள்கிறார்கள். தங்கச்சிமடத்துக்காரர்களுக்கு அந்த வாய்ப்பும் இதுவரை கிடைக்கவில்லை. வண்டி அந்தரயில் நிலையத்தில் நின்றது.இரண்டு பேர் இறங்கினார்கள். இரண்டு பேர் ஏறினார்கள். ஏறியவர்கள் இரண்டுபேரும் பிச்சைக்காரர்கள்—ஆண் ஒன்று, பெண்ணொன்று. இந்தத் தொழிலுக்கு வந்த பிறகு பிச்சைக்காரர்கள் என்றால் எனக்குப் பிடிப்பதில்லை. அதுவும் ரயில்வே பிச்சைக்காரர்களைப் பார்த்தால் நஞ்சு! பட்டம் பெற்ற உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் ரயிலில் பாடிப் பிழைப்பவர்கள் சம்பாதிக்கிறார்கள். அதுவும் மேலாள் இல்லாத சம்பாத்தியம். அவர்களுக்குப் பிச்சைக்காரர்கள் என்ற பட்டம். நான் எனது பிரயாணத்தில் டிக்கட் இல்லாத பிச்சைக்காரர்களை மட்டும்மன்னிப்பதில்லை. காட்டுக்குள் உள்ள ஸ்டேஷனாக இருந்தாலும் அவர்களை இறக்கிவிட்டுவிடுவதுண்டு! அதனால்தான் தங்கச்சி மடத்தில் பிச்சைக்காரர்கள் ஏறியதைப் பார்த்ததும் எனக்குள்ளேஉள்ளம் பற்றி எரியத் தொடங்கி விட்டது. வேகமாக அவர்கள் புகுந்த பெட்டிக்கு ஓடினேன், ஒரு நொண்டி கட்டை அடித்துக்கொண்டு பாடினான். அழகிய கிளி நதியின் நீரோட்டத்தைப்போல் அவன் குரல் இனிமையாக இருந்தது. கோபப்படவேண்டிய இடத்தில் கோபப்படாதிருந்தால் மனதில் குடியிருக்கும் கொள்கை நிலையற்றுப் போய்விடுமே என்பதற்காக அவனிடத்தில் ஆத்திரமாகப் பேசினேன். அவன் நடுங்கிப் போனான், "உன்னோடு ஏறினாளே பிச்சைக்காரி, அவள் எங்கே?" என்று அதட்டினேன். அந்த நொண்டி, எதிரே இருந்த ஒரு யுவதியைக் காட்டினான், எனக்குப் பகீரென்றது.அவளை யாரும் பிச்சைக்காரி என்றே ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அவ்வளவு அழகாகஇருந்தாள், [illegible]

தைப் போல் அவள் உடல் பளபளப்புடன் காணப்பட்டது. அவளிடம், டிக்கட் எங்கே என்று கேட்கவே எனக்கு வெட்கமாகஇருந்தது. ஆனால் அவளை நான் கேட்கு முன்னரே அவள் எழுந்து நின்றுவிட்டாள்.

"டிக்கட் எங்கே?"

வாங்கவில்லை!"

"ரயில்என்னஉன்அப்பன்வீட்டுப் பணத்திலேயா ஓடுகிறது? எவ்வளவு நாளாய் இந்த வேலை நடக்கிறது?"

"நான்கு வருஷங்களாக நடக்கிறது!"

"உனக்குப் புத்தியிருக்கிறதா? நீ படித்திருக்கிறாயா? பார்த்தால் பட்டுப் பூச்சிப் போல் இருக்கிறாயே!"

"டிக்கட் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள்! தேவையில்லாததையெல்லாம் பேசாதீர்கள்."

"எடுப்பது பிச்சையாக இருந்தாலும் வரட்டு கௌரவத்திற்கு ஒன்றும் குறைவில்லை!"

-எங்களுடைய வாக்குவாதம் இப்படி வளரத்தொடங்கியது. என்னையும் அறியாமல் அன்று நான் அதிகப்படியான வார்த்தைகளைக்கொட்டி விட்டேன். அந்தப் பெண் அழுதுவிட்டாள். அவள் முகம் சிவந்துவிட்டது. பழுத்துப்போயிருந்த அவள் கன்னங்களில் கண்ணீர் மின்னியது. அவளிடம் மன்னிப்புக் கேட்கக் கூட நான் நினைத்தேன். அவளைப் பற்றியிருந்த வரட்டுக் கௌரவம் உடனே என்னைப் பிடித்துக் கொண்டது.

நொண்டிப் பிச்சைக்காரன் இவையனைத்தையும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். என்னிடம் அதிகாரம் மட்டும் இல்லாதிருந்தால் அவன் என்னைக் கடித்துத் தின்றிருப்பான்.

வண்டி, மண்டபம் சந்திப்புக்கு வந்துவிட்டது. அந்தப் பெண்ணும், நொண்டியும் இறங்கிவிட்டார்கள். நொண்டி முன்னே நடந்தான். அவள் பின் தொடர்ந்தாள். ஆனால் அவள் போகும்போது என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அவள் நடையில்தான் என்னகவர்ச்சி! என்னமிடுக்கு! ஏன் அவள் பிச்சை எடுக்கிறாள்! பிச்சை எடுத்தால்தான் பணக் கவலை இருக்காது என்று நினைக்கிறாளோ!

எனக்கு மண்டபம் சந்திப்பில் இரண்டு மணி நேரம் ஒய்வு இருந்தது. அந்த நேரம் முழுதையும் அவளுடைய நடவடிக்கைகளைக் கவனிப்பதிலேயே செலவிட்டுவிட்டேன். மண்டபம் சந்திப்பில் அவளை எதிர்பார்த்துக்கொண்டே ஒரு நாய் நிற்கிறது. அவளைக் கண்டதும் வாலைக் குழைத்துக்கொண்டு ஓடி வருகிறது. அவள் உடனே பக்கத்திலிருக்கும் பெட்டிக் கடையில் காலணுவுக்கு ரொட்டி வாங்கிப் போடுகிறாள். நொண்டிப் பிச்சைக்காரன் கம்பை ஊன்றிக்கொண்டே சாப்பாட்டுக் கடைக்குப் போய் இரண்டு சாப்பாட்டுப் பொட்டலங்களை வாங்கி வந்து அவளிடம் கொடுக்கிறான். மறு மொழி பேசாமல் அவளும் வாங்கிக் கொள்கிறாள். இருவரும்தென்னந்தோப்புக்கு நடக்கிறார்கள். அப்போதும்அவள்என்னைஅடிக்கடிஎன்னை பார்க்கிறாள். ஏன் பார்க்கிறாள்! எனக்கும் அவளுக்கும் என்ன? அடிக்கடி பார்த்தால் அந்த நொண்டி கோபித்துக் கொள்ளமாட்டானா? அவனுக்குத்தான் அவள் பயப்படுகிறவளைப் போல் நடந்துகொள்கிறாளே!

இடத்திற்கு முந்துங்கள்!

சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி அரங்கில்

24—7—60 ஞாயிறு மாலை 6 மணிக்கு

அறிஞர் அண்ணா தலைமையில்

டாக்டர் அழகப்பா கலை மன்றத்தார் அளிக்கும்

சாணக்கியன் சபதம்

(சரித்திர நாடகம்)

வரலாறு, வசனம்: எஸ். டி. இளந்திருமாறன்.
பயிற்சி: ஈரோட்டார்
பாடல்கள்: ஈரோட்டார்.
இசைஅமைப்பு: தாரை-கணேசன்.
நடனப்பயிற்சி: முருகப்பா.

கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1, 0-50
பெண்களுக்கு தனி இடம் உண்டு.

அண்ணா, சம்பத்

★

அடக்குமுறை திசை திரும்புகிறது. வேலை நிறுத்தத்தைத் தாண்டினார்களாம். இதனால் வழக்கு 18-7-60 ல் விசாரணை. எதையோ நினைத்துச் செய்கிறார்கள். ஆகஸ்டு 31 சூலை 15 க்கே நகர்ந்து வந்து விட்டது போல். இன்னும் என்னென்ன நடக்குமோ நடக்கும். எரிகின்ற தீயில் எண்ணெய் [illegible]துகிறது சர்க்கார்.

—சி. பி. சி.

அடுத்த இதழில்......

நமது இயக்கக் கவிஞர் **கண்ணதாசன்** முகப்பு இடம் பெறுகிறது.

அதோடு, அவரது '**இந்தி எதிர்ப்புப் [illegible]**' என்னும் வீரக் [illegible]

போர் புரிந்து பிணமாவோம், வாரீர்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அவர்கள் வீரர்கள் வரலாற்றில் தம் வாழ்வும் இடம் பெற வேண்டுமென்று எண்ணியவர்கள். அந்த இருளிலும் ஒளி வீசிற்று பொலிவு நிறைந்த அவர்கள் முகங்கள்

ஐயோ! இரவு ஓடிக் கொண்டு இருக்கிறதே, கொஞ்ச நேரம் தங்கி இளைப்பாறிச் செல்லக் கூடாதா, என்ன அவசரம் இந்த அவலட்சணத்துக்கு? கதிரவனே! நீ ஏன் இப்போதே கல்லறைக்குள் போய்விடக் கூடாது. உன் கதிர்களால் நாளை காலை பிணங்களைத் தொட்டு சுடவைக்கவா?

விடிகிறது......வானம் வெளுக்கிறது...பறவைகள் இரை தேடி புறப்படுகின்றன......கதிரவன் பழுக்கிறான்...... சிவக்கிறான்...... வெள்ளை உருப் பெறுகிறான்...... கத்தாழைப் புதர்களைப் போல் மக்கள் திரளாக வீதிகளில் மண்டிக் கிடக்கிறார்கள். அதோ போலீஸ் லாரி.........ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் (Special Armed Police) நிறைந்திருக்கின்றனர்...மௌனமாக விழிகளில் வேதனையை தேக்கிக் கொண்டு அனைவரையும் பார்க்கின்றனர். கல்லக்குடி மக்கள்......நீலநிற விளக்குகள் அணைந்து போயின- புகைப் போக்கியிலிருந்து கிளம்பும் புகை? இப்போது புகைக்கிறேன்—இன்னும் சிறிது நேரத்தில் வெடிக்கப் போகிறேன்—என்று சொல்லாமல் சொல்லிற்று, அந்த வெட்கங்கெட்ட புகைப் போக்கி!

இரத்த புதன் அந்தப் பதினைந்து

முதல் முழக்கம்! ஓங்கி உயர்ந்த குரல்கள் ஒன்றுபட்டு எழுந்தன. "திராவிட நாடு திராவிடருக்கே! டால்மியாபுரம் என்ற பெயரை மாற்று",—அணிவகுத்து நடந்தனர் வீரர்கள்-நெருக்கித் தள்ளிக் கொண்டு முன்னேடி வந்தனர் மக்கள். கருப்பை துரத்தும் சிவப்பை பெற்ற கொடி, காற்றில் பட படத்தது.

நடந்தார் ஏறுபோல நண்பர் கருணாநிதி. கற்களால் அமைக்கப்பட்டு சிமிண்டு பூசப்பட்ட சுவர்களை, தொழிலாளிகளை ...டி வதைத்துச் சாறை உறிஞ்...கொண்டு சக்கையை வீசியெ...ம் டால்மியாவைப் பார்ப்பதை ...ப் பார்த்தார். இதயம் எரி...போது எப்படித்தான் அந்த ...களால் மலர முடிந்ததோ தெரியவில்லை. புன்னகை புரிந்... மக்களைப் பார்த்து—அது ...ய ஊட்டியது குழ்ந்து ...ருக்கு! வெறிக்குத் திரை ... விவேகத்தை வெளியிடும் ...ால் அவரைச் சூழ்ந்து ...ர் மக்கள்.

...ல்மியாபுரம் என்ற ...மாற்று; கல்லக்குடி ...வை விடுதலை செய்; அவர்தம் தம்பிமாரை வெளியே விடு."

"திராவிட நாடு திராவிடருக்கே; வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக"

முன்றேமுழக்கங்கள்! ரயில்வே ஸ்டேஷன் வரை ஒலித்தன, மண்ணதிர—விண்வரைக்கும்!

துப்பாக்கித் தடிகளோடு அணிவகுத்துநின்றபோலீஸார்-நெருங்கிச் சென்றுகொண்டேயிருச்கும் வீரச் செம்மல்கள்—நுழைந்தது படைஸ்டெஷனுக்குள்—மக்களைக் கட்டுப்படுத்தி வெளியே உட்கார வைத்தனர் துணைத் தளபதிகள்.

காளை நடைபோட்டது—வீரத் தோழர்கள் புடை சூழ! "தமிழனை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" என்று புரட்சிக்கவிஞர் பொறுமிப் பாடினாரே, இது இவர்களை எண்ணித்தான் இருக்கவேண்டும். ஒட்டினார்கள் "கல்லக்குடி" என்று அச்சிட்ட தாளை, ரயில்வே போர்டில்.

ரயில் வண்டி வந்து நின்றது திருச்சி போக. ஆம்! இன்றுதான் அந்த ஜூலை பதினைந்து! வடநாட்டுக்குட்டையிலே ஊறிய மட்டையான நேருநம்மை "நான் சென்ஸ்" என்று சொன்ன நாள்! காட்டுவோம் நம்மை யாரென்று அந்தக் கயமை குணம் நீங்கா கண்ணியருக்கு!

நினைத்தனர்; உடனே படுத்தனர் குறுக்கேதண்டவாளத்தில், புறப்பட இருந்த ரயில் வண்டியின் முன்னே ஐயோ கருணாநிதி! அழுத கூட்டம் அலறவில்லை—பேச்சில்லை—மூச்சில்லை - வழியில் கண்ணீரைத் துடைக்கக் கைகள் ஓடவில்லை — பதுமைகள் போல நின்றனர் செயல் மறந்து. அந்தப் பாவிகள்,கார்டு விசில் ஊதிப் போக அனுமதி தந்துவிட்டார்- ரயில் ஓட்டி இயந்திரத்தைக் குரல் எழுப்பச் செய்துவிட்டான். எஞ்சின் ஊதிவிட்டது.

அம்பில் தர்மலிங்கம் அழுதுவிட்டார்: சிவப்பிரகாசத்தின் கண்கள் கலங்கிவிட்டன: அடுத்த தளபதி சி. பி. சிற்றரசு கூட மனம் பதறி நின்றார். அருகே நின்ற இயக்கத் தோழர்கள் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை ஆவலோடு எதிர் பார்த்தார்கள்.

ஆறு தோழர்கள்! இன்பத் திராவிடத்தை எப்படி அடைய வேண்டும்—அடைந்த நாடு எப்படி அமையவேண்டும் என்பதை எண்ணி உழைத்தவர்கள்! எத்தனை எத்தனை இன்பக் கற்பனைகள், துன்ப நினைவுகள், துடிப்புள்ள கருத்துக்கள் அவர்கள் மூளைகளில் தோன்றித் துளிர்த்து நாடெங்கும் அள்ளி தெளிக்கப் பட்டனவோ! அவற்றின் விளைவின் அறுவடையை எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்தார்களோ! எதிர் நின்ற அந்த இயந்திரத்தின் சக்கரங்கள் ஒருமுறை சுழன்றாலே போதும் அவர்கள் மண்டை ஓடுகள் தெறித்துச் சிதறிவிடும்! ஆனால்...பஞ்சு மெத்தையிலே பட்டுத் தலையணை வைத்துப்படுத்திருப்பது போல இருப்புத்தண்டவாளத்திலே தலை வைத்து இன்னொரு தண்டவாளத்தில் கால் நீட்டி இன்முகத்தோடு எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்தனர் அனைவரும்!

ஒன்றும் புரியாமல் விழித்தனர் போலீஸ் அதிகாரிகள். "மூட்டுவார்கள்—பின் அங்கிருந்துபோய் விடுவார்கள். அவ்வளவுதான்" என்றுதான் எதிர்பார்த்தார்கள் அவர்கள். அன்றாட அரசியல் நடவடிக்கைகளை அரசாங்கத்திடமிருந்து தெரிந்து கொள்பவர்கள் தானே! ஆனால் அமைச்சர் ஆச்சாரியாருக்கே தெரியவில்லை. அது ஏன் நடந்தது என்பது! அவருடைய 'அத்யந்த நண்பரும்' புரிந்தோ புரியாமலோ விஷயத்தை வேறு பக்கம் திருப்புகிறார்! பிறகு இவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும், "ஜூலை 15 வாய்க் கொழுப்பால் வகை தெரியாமல் உளறும் வடநாட்டு நேருவுக்குத் திராவிடத்தின் கண்டன நாள்" என்பது.

எட்டிப் பார்த்த எஞ்சின் ஓட்டும் தொழிலாளி எனக்கு நேரமாகிவிட்டது எனக் குரல் கொடுத்தார். பதினைந்து நிமிடங்கள் கழிந்துவிட்டன இதற்குள். எங்கெங்கோ ஓடி யார் யாரையோகலந்தாலோசித்தனர், போலீஸ் அதிகாரிகள். படுத்திருக்கும் தோழர்கள் பக்கம்சென்று பரிவாகப் பேசி எழுந்திருக்கத் தூண்டினர்—இல்லை, கேட்டுக் கொண்டனர்!

நீண்ட சுவர்—அதைத்தாண்டியவுடன் ஆஸ்பத்திரி — ஆஸ்பத்திரியையொட்டிய போலீஸ்ஸ்டேஷன்-போலீஸ் ஸ்டேஷனுக்குப்பக்கத்தில் தபாலாபீஸ். அதைத் தொடர்ந்து தொழிற்சாலைக் கட்டிடம் தொடங்கி விடுகிறது. மறு பக்கத்தில் வரிசை வரிசையாகக் கூரை வேய்ந்த கட்டிடங்கள் பெரும்பாலும் வெற்றிலைப் பாக்கு கடைகள் — ஒரியண்டு மாளிகை, ஜவுளி கடைகள்—டீ கடைகள்— 'பிராமணாள் காப்பி அண்டு சாப்பாடு ஹோட்டல்கள்!"

தொண்டர்கள் உள்ளே புகுந்தனர்— 'கல்லக்குடி' என்று அச்சிட்டதாள்; ஒரு வாளியில் பசை. ஒரு சிறிய ஏணி, கைகளிலே கொடிகள்;மார்பிலேபடை வரிசையைச் சேர்ந்தவரென அறிவிக்கும் சிறு அட்டைத்துண்டு. ஒட்டினர், எதிரேயிருந்த போர்டில்

திருச்சியிலிருந்து வந்த ரயில் வண்டிஅப்போதுதான்வந்து நின்றது அதிலிருந்து இறங்கினர் நூற்றுக்கணக்காக தோழர்கள். நின்று கொண்டிருந்த தொண்டர்களையும்கவனியாமல்தண்டவாளத்தை நோக்கி ஓடினர், அவர்கள் குறுக்கே படுக்க. தடுத்தோம்—நின்றார்கள்...தொண்டர்கள் எல்லோரும்திரும்பினோம்பாசறைக்கு

'இன்னமும் உள்ளே சென்றவர்களுக்குச் சாப்பாடு கொடுக்கவில்லை' என்று சொல்லிக் கொண்டேஓடி வந்தார், ஒரு தோழர்.கடிகாரத்தைப் பார்த்தார், மணி ஒரு மணி அப்போது.

'இதோ போகிறேன்' என்றோடினார் தர்மலிங்கம்.

'எனக்கு நேரமாகி விட்டது' எனத் துடித்தார் கண்ணதாசன்.

'இருங்கள். சாப்பிட்டுவிட்டுப் போகலாம்' எனத் தடுத்தார் சிற்றரசு.

'வேண்டாம், தண்ணீர் மட்டும் கொடுங்கள், போதும்' என்று விடாப்பிடியாக நின்றார் கண்ணதாசன்.

'உள்ளே இருப்பவர்களுக்கே போலீஸ்இன்னும்சாப்பாடு போடவில்லை; நீங்களும் போய் ஏன், பட்டினி கிடக்க வேண்டும்? என்றார்,ஒருவர்.வெறி நிறைந்தஅந்த இடத்தில் சிறிது விளையாட்டுணர்ச்சியையும்புகுத்தலாம் என்று எண்ணி.

ஒரே கூட்டம். எல்லோரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்...சிரித்தார்கள் ...என்னை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்று அலுத்துக் கொண்டார்கள் —நான்காவது படை எப்போது போவது என்று அப்போதே கேட்டார்கள்...ஆனால் ஒருவராவது சாப்பிட வேண்டும் என்றுகவலைப் படவேயில்லை! எல்லாவற்றையும் முடித்துக்கொண்டுஇறுதியில் உணவைப் பற்றிக் கவனிக்கலாம் என்று நினைத்தார்களோ என்னவோ! இழவு விட்டின் சாயல்... இப்போது அழுகிறேன், அப்போது தோன்றவில்லை எனக்கு.

திருப்பிப் பார்த்தேன், கண்ணதாசன் கவிதை எழுதிக் கொண்டிருந்தார்.சரியாக அமைக்கமுடியவில்லை. இரண்டு சொற்கள் மட்டும் தெரிந்தன. 'போகிறேன் ... சாகிறேன்! என்னவோ போலிருந்தது எனக்கு.

புறப்பட்டது, அந்தப் படை! நிலமெல்லாம் கொதித்தது. கற்கள் குத்திக் காலைத் தொல்லைப் படுத்தின. நடந்தனர்,நகைமுகத்தோடு! முப்பத்தாறு தோழர்கள். கூட்டம் அதிகமாகிக் கொண்டே வந்தது, கடைகளில் நிழலுக்காக ஒதுங்கி நின்ற மக்களும் சேர்ந்து கொண்டனர்காலத்தின் ஏடுகளில் கல்லக்குடிப் போராட்டத்தைப் பதிய வைக்கக் காரணமான அந்தப் படையினர் குரல் கொடுத்துக் கொண்டே நடந்தனர்.

வெய்யில் கொதித்துக் கொண்டிருந்தது; வெப்பம் தாங்க முடியவில்லை; ஆனால் குரல்கள் ஓயவில்லை. நடந்தோம் தெருவைத் தாண்டி.கடைவீதியைக்கடந்து... கற்சுவரை நெருங்கி ... நிழலே சிறிது ஒதுங்கி—ரயில்வே ஸ்டேஷனை அடைந்தோம்.

வண்டி இன்னும் வரவில்லை. வெளியிலேயே தங்கிக்காத்திருந்தனர் போராட்ட வீரர்கள்.

அந்த ரயில் ஸ்டேஷனில் மூன்று இரும்புப் பாதைகள். முதல் பாதை ஸ்டேஷன் கட்டிடத்தை ஒட்டியது-அதன் அருகே இரும்புத் தகடுகள் பதித்த வேலி -அதை யொட்டி ஒரு இரும்புப் பாதை...அதனெதிரே இன்னொரு இரண்டாவது இரும்பிப்பாதையை அடைய வேண்டுமானால் மேல் பாளத்தில் ஏறி இறங்கவேண்டும்

இரண்டாவது பாதையில் ஒரு கூட்ஸ் வண்டி நிறுத்தப் பட்டிருந்தது முதல் பாதையில்ஸ்டேஷனுக்கும் காபினுக்குமாக இன்னொரு கூட்ஸ் நின்றது. அந்த கூட்ஸ்வண்டியை யொட்டி ஸ்டேஷனுக்கு வெளிப்புறம் நோக்கி ஆயுதந் தரித்த போலிசார் அணிவகுத்து நின்றனர்—எவரும் தண்டவாளத்தை நெருங்காமல் தடுக்க ஒரே பக்கமாகத்தான் ஸ்டேஷன் சட்டத்துக்குள் நுழையமுடியும்— எதிர்ப்புறமாக வராமல் தொழிற்சாலையின் கம்பிகள் தடுத்தன.

ஒரு பக்கம் தொண்டர்கள்— அவர்களின் அருகே சிறிது தூரத்தில் ஆயுதந்தாங்கிய போலீசார் தண்டவாளத்தருகே.

'ஐஸ் ப்ரூட்' என்று கூவி விற்றுக் கொண்டு வந்தான், ஒரு சிறுவன்.

எரிமலையை நீருற்றியா அணைத்துவிட முடியும்? எண்ணற்ற ஆண்டுகளாகக் கொழுந்து விட்டெரியும் இதயத்தின் கொதிப்பு இதமாகப் பேசுவதால் மட்டும் தணிந்து விடுமா? 'நாகரிகமற்ற காட்டு மிராண்டிகள்—குரங்குகள் —அரசனுவதற்காக அண்ணனைக் காட்டிக் கொடுப்பவர்கள்—வேசி மக்கள்' என்றெல்லாம் எழுதி வைத்தார்கள். புராணகாலப் புளுகுகள் எனப் பொறுத்திருந்தோம். 'ஆடு மாடுகளாக்கிப் புல்லையும் தழையையும் தின்போம்' என்றார்கள். அவசரத்தில் விஷயம் விளங்காமல் பேசி விட்டார்கள் என்று விட்டு விட்டோம், 'நான் சென்ஸ்' என்று நம் மொழிப் போராட்டத்தை அலட்சியப்படுத்தினர். உடனே நாட்டோருக்குத் தெரிவித்ததோடு இந்த நாக்கில் நரம் பில்லாது நடந்து கெண்ட ஆளின் நடவடிக்கையை. இப் போதுமுட்டாள்தனம்என்றுஅதே ஆள். அதேகுரலில்பேசுகிறார்,எத்தனை நாட்களுக்குத்தான் இதைப் பொறுத்திருக்க முடியும்? சூடுள்ள இரத்தம் ஓடவில்லை, இந்த சொரணை கெட்ட ஜன்மங்களுக்கு என்ற முடிவில் தானே அவர்கள் இருந்திருக்க வேண்டும்? முட்டாள்களா நாம்? அறிவை நம்மிடம் இரவல் வாங்கும் அவலட்சணங்களா நம்மை இப்படி அழைப்பது? குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்—குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள்! நாம் அல்ல, அந்த நாளையும் உதிர்த்துவிட்ட கூட்டம் என்பதை எடுத்துக் காட்டுவோம். இதுதான் ஜூலை 15! இரயில் நிறுத்தக் கிளர்ச்சி! முதல் வேலையை முடித்துவிட்டு இரண்டாவது வேலையைச் செய்ய, வந்த ரயிலைக் கொஞ்ச நேரம் நின்று போகச் செய்தனர், வீரர்கள்.

'உங்களைக் கைது செய்திருக்கிறேன்' என்று, ஒவ்வொருவரையும் நொட்டு அறிவித்தார், போலீஸ் அதிகாரி. எழுந்தனர், தோழர்கள் — அடுத்த பிரிவான ஐந்து தோழர்கள் விழுந்தனர், உடனே தண்டவாளத்தின் குறுக்கே.

"அத்தனைபேரும் கைது!" என்று எஞ்சியிருந்தவர்களையும் சேர்த்து இழுத்துச் சென்றார், போலீஸ் அதிகாரி.

போலீஸ் லாரி புறப்பட்டது. புன்னகையோடு கை கூப்பினர், உள்ளேயிருந்த போராட்ட வீரர்கள். அன்றைய பொழுது அவர்களுக்குச் சாய்ந்து விட்டது.அவர்களுக்கு உடல் இருந்தது; உள்ளே உயிர் ஓடியாடிக் கொண்டிருந்தது

அடுத்த இதழில் முடியும்

<u>மறக்கமுடியாத மணிகள்?</u> "தம்பி, கருணாநிதி! ...ா பிணத்தையா நான் பார்க்கவேண்டும்?" என்று, ...ம்பரம் மாநாட்டில் அருமை அண்ணாவிடமிருந்து வெளிப்பட்ட அந்த அழுகைக்குரல் நினைவுக்கு வந்தது. அழுதேன்-அழுதோம்-அழுதார்கள்!

—டி. கே. சி.

எங்கு திரும்பினும் போர்! எந்நேரமும் போர்! எதற்கெடுத்தாலும் போர்! எந்தவிதச் சிறிய உரிமையைப் பெறுவதாயிருந்தாலும் போர்! இதுவா இந்த நாடு சுதந்திரமடைந்த பிறகு மக்கள் எதிர்பார்த்த நிலை!

—கலைஞர் **மு. கருணாநிதி**

வெற்றி அல்லது வீரச்சாவு! பாழ்செய்து மானத்தைப் பறித்துச் செல்லும் பனியாக்கள் கூட்டத்தைப் பாருங்கள் தோழர்களே! மறக்காதீர்கள், மறவர்களே! இன்று விடை பெற்றுச்செல்லும் நான் வெற்றிபெருமல் திரும்பேன். வெற்றி இல்லையேல் உயிருடன் ஊர் திரும்பப் போவதில்லை,உங்கள் ஊர் பக்கமாகத்தான் என் உயிரற்ற உடல்போகும். என் மார்பில் கொப்பளித்த குருதி காய்ந்து காணப்படும் காயங்களை உங்கள்கண்ணீரால் கழுவுங்கள்! அதுவே போதும், என்நண்பர்கள் ஆறுதலடைய!

—கலைஞர் **மு. கருணாநிதி**

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சியில் பிச்சைக்காரர்கள் பில்லி சூனியக்காரர்கள் இருந்தார்களா என்று கேட்டுவிடாதீர்கள். ஏராளமானவர்களை இவனே வளர்த்து வந்தான். அதுவும் எதற்காக என்று கேட்கத் தோன்றுகிறது. அதனால்

ஊழிவெள்ளம் !

இவன் அடைந்த கெட்டப் பெயரைவிட நன்மையே அதிகம். இவன் ஆட்சியைப் பொருத்தவரையிலும் இரவில் இவன் நடத்திய ஆட்சியை பல அண்டை நாட்டரசர்களும்மக்களும் 'இருட்டாட்சி' என்று அழைத்தனர். அத்தகு கேவல மொழிகள் இவன் காதுக்கு எட்டிய போதெல்லாம் வெளிச்சத்தில் இருட்டாட்சி நடத்துவதை விட இருட்டில் ஒளியாட்சி நடத்துவது எவ்வளவோ மேலென்று சொல்லிச் சிரிப்பான். எனினும் அதற்கான காரணத்தை அவனுடைய வாழ் நாளின் கடைசியில் ஒரே ஒரு தரம் சொன்னான். இதுதான் இவனுடைய முறை யென்பதோடு இன்று விடுவதற்கில்லை, ஏதாவதொரு சிறு நிகழ்ச்சிகாக விரைவில் உணர்ச்சி வசம் பட்டு விடுவான். எடுத்துக் காட்டாக ஏதாவது சொல்ல வேண்டுமானால் ஒரு தவளை பாம்பு விழுங்குகிறது என்று வைத்துக்கொள்வோம், எலியைப் பூனை அல்லது நாய்ப் பிடித்துக் கொண்டது என்று வைத்துக் கொள்வோம். காட்டில் மானை வேங்கைத் துரத்திக்கொண்டு ஓடுகின்றதென்று வைத்துக் கொள்வோம் அங்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு எப்படி நடந்து கொள்கிறான் என்பதைக்கதையில் பாருங்கள்.

எல்லாம்ஆண்டவன்செயல் என்று ஒப்புக் கொண்டபிறகு இயற்கைக்கு எங்கே இடமிருக்கிறது என்பான். இயற்கைதான் எல்லாம் என்கிற போது இறையருள் ஏது என்பான். இந்த வாதத்தில் அகப்பட்டுக்கொண்டு ஓடினோர் ஏராளம் அப்படியானால்இவன் கையாண்டுவந்த மதக் கோட்பாடுகள் எவை. எந்தெந்த மதத்தினரை வாழ்த்தினான்? அதுவும் இவன் பால் புதிர்தான். இவன் மாளிகையில்எந்தெந்த மதத் தலைவர்களுடைய படங்கள் இருந்தன. எங்கு பார்த்தாலும், '**நேராக நடக்க வேண்டும்**' என்று எழுதப்பட்டிருந்த வாசகங்களின் உட்பொருள் என்ன? வளைந்து வளைந்து செல்லும் மாளிகையில் புதியதாக வேலைபார்க்க வந்த வேலைக்காரன் இந்த வாசகங்களைப் படித்து என்ன ஆனான்! இவனைப் பொருத்த வரையிலும் இவ்வளவுதான்.

2. சங்கேந்தி இவள்தான் மன்னன் ஊழி வெள்ளத்தின் பட்டத்தரசி. தன் கணவனுடைய விச்சித்தரப் போக்கினை அடிக்கடி கவனித்துக் கொண்டு வந்தாள். அரச வேலைகளில் எப்போதோ ஒரு வேளைதான் தலையிடுவாள்! மன்னனை மதிக்காத மாதிரி மேலுக்கு நடிப்பாள். அதற்கும் ஒரு நல்ல காரணமிருந்தது என்று நெருக்கடியான நேரத்தில் மன்னனுக்கு விளக்கம் தருகிறாள். தன் கணவன் போர்க்களம் செல்வதற்கு ஒரு திங்களுக்கு முன் தன் தாயகம் போய் விடுவாள். அதன் காரணத்தை பல முறை மன்னன் தெரிந்து கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சியிலே தோல்வியே கண்டான். தன் தந்தை தேராண்டான் அரசர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் பெரும்பணியிலே ஈடுபட்டு பல போர்களைத் தீர்த்து வைத்திருக்கின்றாள். அவனும் ஒருநாள் வாளேந்தி போர்க்களம் செல்லவேண்டி வந்து விடுகிறது. அதுவும் யாரை எதிர்த்து, அதுவும் சிக்கல் நிறைந்தது.

கணவனா, தந்தையா, யார் மேலானவர்கள் என்ற முடிவை இரணகளத்தில் முடிவு கட்ட வேண்டிய நிலையிலே விடப்படுகிறாள் ஒரு காரிகை. அவள் யார் என்பதை இந்தச் சங்கேந்தியின் வாயே சொல்லும். பாசம் எத்தனை வகைப்படும்? தாய்ப் பாசம், தந்தை பாசம், கணவன் பாசம், குழந்தைகள் பாசம் எல்லாம் ஒன்றுதானா என்ற சிந்தனைக்கே ஒரு முடிவு கட்டி விடுகிறாள்இவள்.

சங்கேந்தி

மன்னன் இருக்கும்போது எளிய உடையும் அவன் இல்லாதபோது ஆடம்பர உடையுமாக இருப்பதற்குக் காரணம் கேட்ட கணவனிடம் சொல்லும் பதில் நாம் ஒப்புக் கொள்ளக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறது. ஆனால் ஒருநாள் திடீரென்று இருக்கும் முறையை மாற்றிக் கொண்டாள். அதற்கு அவள் சொல்லும் காரணமும் நாம் ஒப்புக் கொள்ளக்கூடியதாகத்தான் இருக்கிறது. இதைக் கண்டுதான் மனதைக் குரங்குக்குஒப்பிட்டதைசரியென்று ஒப்பு கொள்ளத் தோன்றுகிறது. நெடு நாட்கள் இவர்களுக்கு பிள்ளைப் பேறில்லை. இருவரும் ஒரு சேரவருந்த வேண்டியதுதானே. இவர்கள் வாழ்க்கையில் அதுவும் ஒரு விசித்திரந்தான். பிள்ளை இல்லையே என்று மன்னன் வருந்துகிறபோது இவள் சிரிக்கிறாள் இவள் வருந்துகிறபோது அவன் சிரிக்கிறான். பிண்டத்தின் அசைவு வயற்றில்தெரிந்தவுடன் இருவருமே வருந்துகிறார்கள். அன்று அவள் கொண்ட கவலை முதுமை பெறவும். இல்லை. முடிந்து விடவும் இல்லை. இவ்வளவு தான் இவளைப்பற்றி.

3. மருதபாண்டி இவன்தான் தளபதி, இவன் ஒரு கட்டளைத் தம்பிரானாக இருந்திருக்கலாம். அதற்குத்தான் அவன் பொருத்தமாக இருந்தான். படையணி வகுத்துச் செல்ல வேண்டிய இவன் எதிரிகளை வராமல் தடுப்பதற்கு இவன் கையாண்ட முறைஉலகம்சிரித்தது கோட்டை முற்றுகை யிடப்பட்டதற்கு முதல்காரணமானவன்இவன். கெட்ட எண்ணம் ஒன்றுமில்லை. என்றாலும் போதிய புத்தியும் திறமையும் இல்லாதவன், எதைச் செய்தால் மன்னன் மகிழ்வான் என்பதிலே இவனுக்கிருந்த நாட்டம்,எப்படிச் செய்தால் நாடு முன்னேறும், பகை நடுங்கும். என்பதிலில்லாதவன். பெண்கள் என்றாலே வேம்பு. பெண்களாலேதான் உலகம் கெடுக்கிறது என்பது இவனுடைய அசையாத நம்பிக்கை. தன் வாழ் நாளில் எந்தப் பெண்ணையும் தீண்டாதிருந்தால் மோட்சலோகம் போகலாம் என்பதுஇவனது கோட்பாடு. இறுதியில் இவனுக்கேற்பட்ட ஒரு அபாயத்தில் பெண்ணைத் தீண்டப்போகிறான். என்னைத் தீண்டி நரகம் போகதே என்கிறாள். உன்னைத் தீண்டாமல் சொர்க்கம் போவதைவிட தீண்டியாவது நரகம் போகிறேன் என்று வாதாடுகிறான். மோட்சமும் நரகமும் எங்கே இருக்கின்றது என்ற வாதத்தில் இருவரும் ஒன்று படுகின்றனர். திருமணப்பந்தலில் எல்லார் முன்னிலையில் அவளைத் தீண்ட வெட்கப்படுகிறான். அங்கே எல்லோரும் எப்படி வாழ்த்துகிறார்கள் என்பதையும் படிக்கத்தானே போகிறீர்கள். இவன் மனைவி, இவனுக்கு இன்பத்தை யூட்டுபவளாக மட்டிலுமில்லை அறிவை யூட்டும் அந்தக் கால மந்திரியாக இருந்தான். இவ்வளவுதான் இவனைப் பற்றி.

4. களஞ்சியம்.அரண்மனைத் தலைவன். தலைமை வாயில் காப்போன்.ஒவ்வொருநாளும் மன்னனைத் தனியாக சந்திப்போன். வாயில் காப்போனும்மன்னனும் தனியாகச் சந்திக்க வேண்டிய நிலை என்ன? இவன்' தான் தொடங்காத எந்த வேலையையும் ஒப்புக் கொள்ளவும் மாட்டான்; ஒத்துழைக்கவும் மாட்டான். தானே தொடங்கி தானே முடிக்கவேண்டுமென்று எதை யாவது தொடங்குவான் அது வெற்றி பெறவில்லையானால் தன் முட்டாள்தனம் என்று ஒப்புக்கொள்ளாமல் ஒத்துழைத்தவர்கள் மேல் பழியைப் போட்டு விடுவான். குண்டுசி கிடைத்தாலும் அதில் காது என்பங்கு என்பான். அவ்வளவு பேராசைக்காரன். மன்னன் தன்னை அன்றாடம் சந்திப்பதை கைம்முதலாகக் கொண்டு பெரிய பெரிய அதிகாரிகளை மிரட்டி பணம் பறித்துக் கொண்டு வந்தான். எதையும் கற்றுக் கொள்ளலாம் என்று தொடங்கி கற்றதையும் மறந்துவிட்ட மண்ணுங்கட்டி எல்லாம் கற்றவன்போல் அறிஞர் மன்றத்தில் நுழைந்து பொருத்தமில்லாமல் பாடி, கருத்துரைவழங்கிமூக்குடைக்பட்டு வீடுதிருப்புவான் இதனால் இவனுக்கும் மனைவிக்கும் மனத்தாங்கல் வாழ்வு துண்டாகிறது. இறுதியில் இவன் நிலை எல்லோரும் எள்ளி நகையாடுகிறார்கள் கற்றதுகைம்மண்ணளவு, கல்லாதுலகளவு என்ற முடிவுக்கு வருகிறான் இவன். இவ்வளவு தான் இவனை பற்றி.

மற்றவர்களை அடுத்த இதழில் சந்திப்போம்

உலகநாதன், அயன்புரம்.

கே: தற்போது அமைச்சர்கள் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள்?

ப: டில்லியை நோக்கித் தண்டால் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள்!

செந்தில் வேலன், கரூர்.

கே: பதிப்பாளர் அவர்களே! இனமுழக்கம் பெரிய அளவில் வருவது குறித்துப் பெரு மகிழ்ச்சியே. இதுபோல் புத்தக வடிவில் வருவது எப்போது? அந்த ஆவலை எப்போது பூர்த்தி செய்வீர்கள்?

ப: உங்கள் ஆதரவு அதிமாகும் போது!

மாணிக்கம், செம்பனூர்.

கே: ஆசிரியர் அவர்களே! போராட்டக் குழுவிலிருந்து உங்களை நீக்கி இருக்சிருர்கள், இதற்குக்காரணமென்ன?

ப: முன்னின்ருர் முதுகு தீய; பின்னின்ருர் முடுக்க!

ராமநாதன், ஆரணி.

கே: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நம் அமைச்சர்கள் எப்படி இருப்பார்கள்?

ப: இஞ்சி திண்ண குரங்கு போல காட்சி யளிப்பார்கள்!

வேந்தன், நாகலாபுரம்.

குமுதத்தின் பழுது பட்ட எக்ஸ்ரே!

தங்கவேல், ஆமதாபாத்

கே: பொதுவுடைமைத் தலைவர் மோகன் குமரமங்கலம், மில் முதலாளி கிருஷ்ணனுக்காகக் கள்ள நோட்டு வழக்கில் வாதிடப் போகிருரே, பொது வுடைமைக் கட்கியின் சட்ட திட்டம் அவருக்கு இடம் கொடுக்கிறதா?

ப: சட்டதிட்டம் வேறு சட்டக் கல்வி வேறு!

செ மு. சண்முகம், மோத்தக்கல்

கே: எம். ஜி ஆர். அவர்களுக்கு மனைவியர் எத்தனை? வி. என். ஜானகியைத் திருமணம் செய்துக் கொண்டாரா? பதிவு செய்துக்கொண்டாரா?

ப: இதைத் தெரிந்து கொண்டு நீர் என்ன செய்யப் போகிறீர்?

வை. ஆண்டியப்பன்; பேட்ட வாய்த்தலை

கே: இரும்புள்ளம் கொண்ட சிந்தனைச் சிற்பியாரே! நான் ஆலையில் வேலை செய்கிறேன். இந்தி போராட்டத்தில் கலந்து கொள்ளலாமா? அப்படி கலந்தால் வேலை போய் விடுமா?

ப: வேலைப்போய் விடுமோ போகாதா வென்பது கிடைக்கின்ற தண்டனையைப் பொறுத்தது! இந்திப் போராட்டத்தில் கலந்து கொள்வது ஒவ்வொரு தமிழனின் முதற் கடமையாகும்!

கே: தாத்தா! கழகக் கேள்விகளைக் கேட்டால் அறிவகத்திற்கு எழுதிக் கேளும் என்கிறீர்களே! அங்கே எழுதினுல் பதில் வருமா? இதுவரை அங்கிருந்து பதில் வரவில்லையே!

ப: நீ எழுதியமுகவரி கோளாருக இருந்திருக்கும் அதைத் தவிர வேறு காரணமிருக்காது.

கே: திராவிட இனப்பற்றை தமிழர்கள் விரிவாகஉணர்ந்த அளவுக்கு மலையாளிகள், தெலுங்கர்கள், கருநாடகத்தவர்கள் உணராதிருப்பதேன்?

ப: நீங்கள் அன்ருடப் பத்திரிகையை அலசிப் பார்க்காதது ஏன்?

கே: உழைத்துப் பாடுபட விரும்பாதவர்களின் கடைசிப் போக்கிடம்தான் கட்சி, என்று கூறும் தமிழ்வாணனின் கருத்தைப் பற்றி சில வரிகள்?

ப: அதுவொரு யெம்ப்டி வெசல்!

கே: காந்தியடிகள் சொன்னது போல் காங்கிரசை காங்கிரசுக் காரர்கள் எப்போது கலைப்பார்கள்?

ப: காந்தீயம் அழிந்து புற்பூண்டு கூட முளைத்து விட்டதே...!

கே: வரவிருக்கும் நிலச்சட்டத்தால் யாருக்கு நன்மை?

ப: நிலச்சுவான்தார்களுக்கு!

கே: நமது இயக்கத்தவர் நடத்த விருக்கும் இந்தி எதிர்ப்புப் போரில் இந்தி வேண்டுமாமென்கின்ற மாற்றுக்கட்சிகளும் சேருமா?

ப: நீங்களே கேள்வியும் கேட்டு பதிலும் சொல்லிஇருக்கிறீர்களே!

★ சி. பி. சிற்றரசு ★

கே: ஆசிரியர் அவர்களே! தற்போது நேரு எங்கே இருக்கிருர்?

ப: சூயென் லாயின் உள்ளங்கையில்!

மணியன் கோவூர்,

கே: கோயில்பட்டி வள்ளிமுத்து காங்கிரகில் சேர்ந்தாரே, இப்போது என்ன ஆனுர்.

ப. அவர் நம் கழகத்தில் இருக்கும்போது கடைத்தெருவில் வந்தால் வனுவர்ரார் என்ருர்கள் இப்போது வனுவர்கள் இப்போது வனுவர்ரார் என்ருல் போனுல் போராரு என்கிருர்கள்.

முருகன், வேலூர்.

கே: யார் நல்லவர்கள்?

ப. இன்று வரை இறந்து விட்டவர்கள் என்று ஒரு அறிஞன் சொல்லுகிருன்.

திரு. ஈ.வெ.கி. சம்பத்,
அவர்களை ஆசிரியராகக்
கொண்டு வெளிவருகிற
Sunday Times
வாசித்தீர்களா?
விலை 15 காசுகள்

வேலன். ஆற்காடு.

கே: முதலமைச்சர் சகாரா பாலைவனத்துக்குப் போகப் போகிருராமே, உண்மையா?

ப: அங்குதான் பொதி சுமக்க ஒட்டகங்கள் ஏராளமாக இருக்கின்றனவே!

பாலன், திருவத்திபுரம்

கே: முன்பு நடந்த இந்தி எதிர்ப்புக்கும் நாளை நடக்கப் போகும் இந்தி எதிர்ப்புக்கும் என்ன வித்தியாசம்இருக்கும்?

ப. ஊர் சண்டைக்கும் உலகச் சண்டைக்கும் என்ன வித்தியாசமோ அதுதான். அப்போது படை ஓர் அளவு; இப்போது பெரும்பட்டாளமே உருவாயிருக்கிறது.

செந்தாமரை, காஞ்சிபுரம்.

கே: ஓம் கணபதி என்பதற்கு நீங்கள் என்ன பொருள் கூறுகிறீர்கள்?

ப. ஒப்பம் கணபதி என்று இருந்திருக்கும். அது நாளா வட்டத்தில் ஓம் கணபதி என்று மாறி யிருக்கக்கூடும்.

பூபாலன், திருப்புவனம்.

கே: வாய்க்கால், கால்வாய் இந்த இரண்டில் எது சரி?

ப. வாய்க்கால்தான் சரி.

நாகராசன், மாங்காடு.

கே: புதிய மணமக்களைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப. உங்கள் வயதென்ன சொல்லுங்கள் நான்சொல்லப் போவது உங்களுக்கு ஒத்து வருகிறதா இல்லையா என்று பார்ப்போம்.

ஆரோக்கியம், மதுரை.

கே: கைநிறைந்த பொருளை விட கண் நிறைந்த கணவனே மேல் என்கிருர்களே உண்மைதானு?

ப: கண் நிறைந்த கணவனை விட கைநிறைந்த பொருளை விட உடல் நிறைந்த நகைகளே தேவை என்கிருர்கள். அதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

உலகநாதன், சிதம்பரம்

கே: மா. பொ. சி. சட்டசபையைக் கைப்பற்றும் என்கிருரே! நடக்குமா?

ப: எழுத்துப் பிழையாக இருக்கும் சட்டைப்பையைக் கைப்பற்றும் என்று திருத்திப் படித்துக் கொள்ளுங்கள்.

பழநி, வண்ணை.

கே: இந்தி போராட்டத்திற்கு வேறு கட்சிகளை அழைப்பீர்களா?

ப: திருமணமாக இருந்தால்எல்லோரையும்அழைக்க வேண்டியதுதான். ஊரே தீப்பற்றி எரியும்போது ஒவ்வொருவரையும் அழைத்துக் கொண்டிருக்கமுடியுமா? அவர்களாக வரவேண்டியதுதான்

வேந்தன், கோவை,

கே: தாய் நாடு என்பதற்குப் பதில் தந்தை நாடு என்று சொன்னுல் என்ன?

ப. சாதாரண மக்கள் கூட தாய் வீட்டுக்குப் போகிறேன் என்றுதானே சொல்லுகிருர்கள். தந்தை வீட்டிற்குஎன்று சொல்வதில்லை. அன்னை நம்மை ஈன்ருள் என்பதற்காக நாட்டை அவளுக்கு நல்குகிருேம். அவ்வளவுதன்,

கே: இந்திக்கு வக்காலத்து வாங்கும் பச்சைத் தமிழருடன் தந்தை பெரியார் கூட்டு சேர்ந்திருப்பதேன்?

ப: தன் கட்சிக்காரர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்குமென்ருல் காமராசரென்ன, நேருவுடனேகூட கூட்டுச் சேர்ந்து கொஞ்சுவாரே!

கே: நிதிமந்திரி சுப்ரமணியம் நாங்கள்தான் தமிழை வளர்க்கிருேம் என்கிருரே உண்மை தானே?

ப. அது உண்மையாயிருந்தால் தமிழ்நாடு என்று பெயர் வைக்கச் சொல்லுங்கள் பார்ப்போம். அப்படி வைக்கக் கூடாதென்று 150 தமிழத் துரோகிகளை கைத்தூக்கச் சொன்ன இந்தச்சூரப்புலிதான் தமிழை வளர்த்ததா சொல்வார் சொன்னுலும் கேட்பாருக்கு மதி வேண்டாமா?

கே: எதிர்காலத் தமிழக வரலாற்றில் காமராசருக்குக் கிடைக்கும் இடம் எப்படிப் பட்டதாக இருக்கும்?



ப: இராமாயணத்தைப் படிக் படிக்கின்ற போது விபீஷணனைப் பற்றித் தங்களுக்கு என்ன தோன்றும்” அதே நிலைத்தான்!

இனமுழக்கத்தின் ரீட்டேக்!

கலகமா? காலித்தனமா?

திறன்கெட்ட சர்க்காரின் அறிவுக்கண் திறக்கப் பணியாற்றும் முன்னேற்றக் கழகத்தினைப் பற்றி ஆத்திரமொழி தருகின்ற கூட்டத்தார் இன்றே திருந்தியாக வேண்டும். இல்லையேல்?

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட மக்களின் நல்வாழ்வைப் பெருக்கும் நல்லெண்ணத்துடன் பணியாற்றுகின்ற பெருமையை உணர முடியாத ஆட்சியாளர்கள் மிக விரைவிலேயே சங்கடமான நிலைமைகளைச் சந்திக்கப் போகிறார்கள். இந்த அரிய உண்மையினை ஆட்சியாளர்களின் அடிபணிந்து, தங்களின் தன்மானத்தையும் பகுத்தறிவையும் அமைச்சர்களின் காலடியில் காணிக்கையாக வைத்திடும் சில ஏடுகளும் அறியப் போகின்றன. காங்கிரசுக் கட்சியின் கையாலாகாத ஆட்சித் "தன்மையை, கடந்த பனிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாகவே உறுதிப்படுத்திக் கொண்டிருக்கும் இழி நிலையை, எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்குச் சரியான பதில் கூற முடியாமல் பதுங்கிக் கொண்ட கேவலப் போக்குகளை ஆட்சியிலேயிருக்கும் கட்சியினர் இன்னும் உணர மறுக்கிறார்கள். தமிழ் நாட்டுக் காங்கிரசுக் கமிட்டியும், அதனுடைய தலைவரும் அவர் பின்னேயிருக்கும் அடியாட்களும் காங்கிரசைக் காப்பாற்றுவதாக எண்ணிக் கொண்டு வசைமொழிகளை வீசுவதிலே வல்லவர்களாக இருக்கிறார்கள். வழுக்கிவிழுந்திடும் வனிதையர்களைப் போல வாதங்களிலே தங்களின் வலிவைக் காட்ட முடியாதவர்கள், அமைச்சர்களின் அறியாமைப் பேச்சுக்களை காகிதத் திரையிட்டு மறைப்பதற்காக எதையும் எழுதிக் காட்டத் துடிக்கிறார்கள். தேடித் தேடிப் பார்த்தாலும் சொக்கிகளின் மக்குகளிடம் சரியான பதில் கிடைப்பதில்லை. 'பாரதம்' என்ற பத்திரிகையில் தருகிறார்களே செய்திகள் அவைகளிலிருந்து அவர்களுடைய அற்பப் புத்தியும் அரசியல் அரங்கத்தில் மதிப்பிட லாயக்கற்றவைகள் என்ற உண்மையையும் வெளிப்படுத்துகின்றன. பேச்சாளர்கள் என்று விளம்பரப் படுத்தப்படும் பேர்வழிகளுக்கெல்லாம் கிடைக்கின்ற கூலி அளவுக்குப் பேச்சின் தரமும் குறைந்து போகிறது. கழகத்துத் தலைவர்களைத் திட்டுவது மட்டுமே காங்கிரசுக் கட்சியின் கடமையெனக் கருதியிருக்கிறார்கள். அவர்கள் கத்துவதிலும் கதறுவதிலும் கழகத்தின் எழுச்சியினைக் குறைத்து விட முடியாதென்பதை விரைவில் உணரப் போகிறார்கள்! கத்துபவைகளின்குரல்ஒலியும்

கூடலரசன்

அவர்களின் அலறல் ஒலியும் கழகக் கதிரவன் பணியை என்றும் களங்கப்படுத்தப் போவதில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கின்ற காங்கிரசுக்காரர்கள் காமராசர்களைக் காப்பாற்றித் தீர வேண்டுமென்ற அறிவாற்றல் உணர்ச்சி இருக்குமானால் அவருடைய ஆட்சியின் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஊமையாக இருக்கும் முதலமைச்சரின் சார்பிலே பதில்கூற வேண்டும். இன்று வரையிலும் எந்தச் சொக்கனும் முயற்சிக்கவில்லை! சட்டசபையில் பேசாமடந்தையாக இருப்பவர்கள்-பொது மேடையில் நாட்டியமாடக் கூடாதென்பது கழகத்தின் குரல்- சொக்கலிங்கம் போன்ற வயிறு வளர்ப்புகள் முதலமைச்சர் எனப்படுபவர் சட்டசபையிலே நிகழ்த்திய பேருரைகளைத் தன்னுடைய இதழிலே வெளியிடத் துணிவுண்டா? சட்டசபையிலே

ஐதராபாத் பிடிபட்டவுடன் சிறைப்பட்ட லைக்அலி என்ற மந்திரி, இந்திய சர்க்காரை ஏமாற்றி விட்டு லண்டனுக்குப் போய் விடவில்லையா? அகிம்சைப் பட்டாளம் அன்றையிலிருந்து இன்றுவரைஅழுது புலம்புகிறதே தவிர - கிருஷ்ணமேனனின் ஆசைப் பேச்சு என்றேனும் செயல்பட்டதுண்டா?

வேண்டாம். அகில இந்தியக் காங்கிரசுக் கூட்டங்களில் தமிழ் நாட்டை வாழ்விக்க வந்திருக்கும் இலக்கிய மேதை, காவியக் கலைஞன் காமராசர் சொன்ன கருத்துக்களையாவது தெரிவித்ததுண்டா? "கம்யூனிஸ்ட் காமராஜ்" என்று பெயரும் அடைமொழியும் கொடுத்துப் பெருமைபட்டதுகளே. அந்தப் பிராணிகளில் ஏதாவதொன்று கனம் காமராசரிடம் போய், காரல்மார்க்சைப்பற்றி சில வரிகள் எழுதித் தாருங்கள் என்று கேட்டதுண்டா? கம்யூனிசத்திற்கும், சோசலிசத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தன்னுடைய புலம்பல் மேடைகளில் என்றாவது புளுகியதுண்டா? தங்கத் தலைவனுமே இந்தக் காமராசர், தமிழ் நாட்டைக் காட்டிக் கொடுப்பதும் அதன் தேவைகளைத் தூக்கியெறிவதும் தங்கத்தின் செயலா? வடநாட்டிலேயிருக்கும் எந்த முதலமைச்சராவது இப்படித் தன் சொந்த நாட்டை எதிரிக்கு அடகுவைத்துவிட்டு நானே 'தங்கத் தலைவன்' என்று தம்பட்டம் தட்டியதுண்டா? தங்கத் தலைவன் என்றால் துண்டை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு போய்விடுவேன்

ரசாக்கர் கிளர்ச்சியையும் காசிம் ரஸ்வியின் மிரட்டலையும் கண்டு நேருவின் சர்க்கார் ஓராண்டு காலம் எதுவும் செய்யத் தெரியாமல் ஒடுங்கிக் கிடக்கவில்லையா?

என்றெல்லாம் உலறியது எதனால்? மக்கள் உன் பின்னாலேயென்றால் காங்கிரசிலேயிருக்கும் ஆகஸ்டுக் கலவரப் படையேன் கண்ணீர் வடிக்கவேண்டும்? பட்டைச் சோற்றுப் பட்டாபிராமன்களுக்குப் பகுத்தறிவு இருப்பின் பதில் கூறட்டும்?

திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசுக்காரர்களின் கடந்த கால அரசியல் நிலையை மறந்துவிடவில்லை. வெள்ளையன் விரட்டுகிறோம் என்று சொல்லிக் கொண்டே அவனுடைய அன்புக்காகத் தங்களின் தன்மானத்தை விலையாகக் கொடுத்த சங்கதிகளையும் நாம் நினைவிலே வைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். வெள்ளையனுடன் குலாவிக் கொண்டே அவனது குரல்வளையை நெறித்துவிடலாம் என்பது பல காங்கிரசுத் தலைவர்களின் திட்டம் என்பதைத் தெரிந்து கொள்ளாத கதர்ச் சட்டைகள் கூட இன்றையதினம்தமிழ்நாட்டு மேடைகளில் புளுகுவதைக் கேட்டுச் சிரிப்பவர்களும் இருக்கிறார்கள்! "அக்காலத்தில் காங்கிரசிலிருந்த காந்தியுள்பட சில தலைவர்கள் ஆங்கிலயர்களின் யுத்த உதவிக் கோரிக்கையை வரவேற்று அதற்கு உதவி செய்ய நாட்டு மக்களைத் தூண்டினார்கள். யுத்தத்திற்கு நிதி திரட்டினார்கள். ஆட்களைத் திரட்டினார்கள். பீகார் மாகாணத்தில் பல இடங்களில் மகாத்மா காந்தியே நேரில் ரெக்ரூட்டிங் ஆபீசர் போல் சென்று பிரிட்டிஷ்காரரின் பட்டாளத்திற்கு அடிமை இந்திய மக்களைத் திரட்டிக் கொடுத்தார்!"

முத்துராமலிங்கர் தன்னுடைய மதுரைப் பேச்சில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார். சொக்கலிங்கம் போல் பிழைப்புக்காகக் காங்கிரசுக்குத் திடீரென்று வருவதும் யாருக்கும் சொல்லாமல் மறைந்துவிடுவதும் பழக்கமாகக் கொண்டுள்ளவர்களுக்கு மேலே காட்டிய குறிப்பு பொய்யாகத் தோன்றலாம். நல்ல காங்கிரசுக்காரர்களான செங்கல்வராயர்களுக்குத் தெரியும் இந்த உண்மை! சொக்கனுக்குத் தெரியுமா? கக்கனுக்குத் தெரியுமா? இப்போது காலிகள் யார்? கூலிகள் யார்?

★

புரட்சிப் பாதை

தொட்டிலிலே கிடக்கட்டும் குழந்தை! ஓய்ந்த
 தொண்டுகிழம் தொடரட்டும் குறட்டைத் தூக்கம்!
கட்டிலிலே துணைத்தூக்க முத்தச் சத்தக்
 காதலிலே திளைப்போரே! உடல சந்து
கொட்டாவி விட்டகதை போதும்! இன்றே
 கொதித்தெழுந்து புறப்படுவீர்! நம்மை ஏய்த்துக்
கொட்டமடிக் கின்றார்கள் வடக்கு நாட்டார்!
 கொதிக்கிறது துடிக்கிறது நமது நெஞ்சம்!

பருந்துக்கா தலைமையிடம் புறாவின் கூட்டில்?
 பழமுதிரும் சோலையிலே எதற்குக் கோட்டான்?
மருந்துக்கும் உதவாது வடக்கு நாற்றம்!
 மணலைப்போய்ச் சீனியென நினைக்க லாமா?
பொருந்தாது அவர்களுக்கும் நமக்கும்! ஒன்றும்
 புரியாத மரமண்டைக் கூட்டம் இன்னும்
திருந்தாது திரிகின்றார்; திட்டு கின்றார்
 திராவிடனே! இனிஎதற்குத் துறவி மௌனம்?

அதிகார அரசாட்சி வடவர் கையில்!
 அடிவருடும் திருத்தொண்டு இவர்கள் கையில்
சதிகாரக் கும்பலினால் நமது வாழ்வு
 சாய்கிறது! சரிகிறது! எங்க ளுக்கு
உதைதேவை! அடிதேவை! குத்து தேவை!
 உடனேதா! எனஅவர்கள் கேட்க மாட்டார்
எதுதேவை எனத்தெரிந்து கொடுப்ப தற்கு
 எழுந்திடடா! புதுவேலை தொடங்க வேண்டும்!

பலமென்றால் பணபலம்தான்! என்று மூளை
 பலங்கெட்ட அஃறிணைகள் நினைத்துக் கொண்டு
மலம்மென்று துப்புதல்போல் திட்டு வார்த்தை
 மளமளனெக் கக்குகிறார்! இவர்கள் இன்று
தலையாட்டம் கண்டுவிட்ட பம்ப ரங்கள்!
 தடைக்கற்கள்! பெருஞ்சோற்றுப் பானைக் கூட்டம்!
நிலையில்லாக் கட்சியென்னும் சாக்க டைக்குள்
 நெளிகின்ற சிறுபுழுக்கள்! உதிரிக் குப்பை!

இருக்கிறதா பாம்புக்குக் கால்கள்? இல்லை!
 இருந்தாலும் அதுஓடும்! மரவட் டைக்கு
இருக்கிறது இருநூறு கால்கள்! ஆனால்
 என்னபயன் நகரத்தான் முடியும் என்றும்
நெருக்கடிதான் பணங்காசு நமக்கு; அங்கோ
 நிறையத்தான் இருக்கிறது; இருந்தும் என்ன?
பெருக்கெடுக்கும் புதுவளர்ச்சி நமக்கு! இன்று
 பின்னோக்கிப் போகிறது அவர்கள் கட்சி!

குண்டர்களால் — ஓயாமல் வாய்கொ முத்துக்
 குரைக்கின்ற கும்பலினால் அவர்கள் உண்மைத்
தொண்டர்களாம் நமைவீழ்த்த முயலு கின்றார்,
 துடித்தெழுவோம்! கொக்கரிப்போம்! வம்பு செய்தால்
மண்டையடி கொடுப்பதற்கும் தயங்க மாட்டோம்!
 மறக்காமல் புதுவேலை தொடங்க வேண்டும்!
தண்டங்கள் திணறட்டும்! விரைவில் இன்பத்
 திருநாடு பெற்றிடுவோம்! வெற்றி காண்போம்!

புலவர்
பொன்னிவளவ

சண்டாள ஆட்சிக்குச் சாவு மணி

திரைஒலி

கவிஞருக்குப் பிறந்த நாள்- கற்ருேர் புகழ்மாலே!

[விசேட நிருபர் - விவேகானந்தம்]

நிகழ்ச்சி

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தனது 33-வது பிறந்த நாள் நினேவாக 9-7-60-ல் சென்னே பரணி படபிடிப்பு நிலேயத்தில் ஒரு சிறப்பான விருந்தளித்தார்கள். விருந்தில் தமிழ்ப் பேராசிரியர்களும், இயக்கத்தோழர்களும், பத்திரிகை - திரையுலக நண்பர்களும் ஏராளமான அளவில் கலந்து கொண்டது சிறப்புக்குச்சிறப்பளித்தது.

விழாக்குழுவினரின் வேண்கோளுக்கிணங்க பன்மொழிப் புலவர்.கா. அப்பாதுரை அவர்கள் விழாவுக்கு தலேமை தாங்கிஞர்கள். சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத், எம். பி., டாக்டர். அ. சிதம்பரனுதன்; அ. மு. பரமசிவானந்தம்; மயிலே சிவமுத்து, தணிகை. உலகநாதன், அன்பு கணபதி, சிவாஜி கணேசன், வி. பி. இராமன், டாக்டர் சங்கரராசலு, திருமதி.சத்தியவாணிமுத்து ஆகியோர் கவிஞரை வாழ்த்தியும்,பாராட்டியும் பேசிஞர்கள். கவிஞர் நன்றிநவிலநிகழ்ச்சி இனிதே முடிந்தது.

பாராட்டுரைகளின் சுருக்கம்:

புரட்சிக் கவிஞர் !

கண்ணதாசன் தனது முப்பத்திரண்டு ஆண்டுகால ஆயுளிலேயே தமிழ் உலகத்திற்கு செய்துள்ள தொண்டுகளே எண்ணி மகிழ்வதோடு, பெருமை கொள்கிறேன். என்னுடைய மாணவர் இந்த அளவு செயல் செய்து விட்டதை மட்டும் எண்ணி முழுமையாக நான் பெருமை கொண்டுவிட முடியாது. எதிர்காலத்தில் நம் அன்னேயின் விலங்கொடிக்க இந்த நாட்டு மக்களுக்கு அவரது கவிதைகளின் வீர வரிகள் ஆற்றவிருக்கும் தொண்டுகளே எண்ணியே மகிழ்ந்து கொண்டிருக்கிறேன். அவர் இன்று இளேஞர். இன்னும் எத்தனேயோ ஆண்டுகள் அவரது புரட்சிக் கவிதைகளே இந்த நாடு பெறும் அரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. அவரைப் பயன்படுத்தி மொழி தழைக்கவும், நாடு விடுதலே பெறவும்முயற்சிக்கவேண்டும்

-பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரையார்

இன உணர்ச்சிக் கவிஞர்

இவர் ஒரு இன உணர்ச்சிக் கவிஞர், நாட்டு விடுதலேயில் வெறி கொண்ட கவிஞர், இவர் போன்ற தேசியக்கவிஞர்களே இந்திமொழியில் நான் கண்டதில்லே. காணமுடியாது.

சங்கரராசலு (நாயுடு.)

பண்புள்ள கவிஞர்

பள்ளிமாணவர்களே கவிதையிலே நாட்டம் கொள்ளச் செய்த பெருமை கண்ணதாசனுக்குத்தான் அதிகம் உண்டு! அவருடையகவிதைகள் விறுவிறுப்பான புரட்சி வாடை வீசக்கூடியது. காரணம் அவர் மேற்கொண்டுள்ள பணி அப்படிப்பட்டது. அவருக்கென ஒரு பரம்பரையை வளர்த்துக் கொண்டவர். பல்வேறு துறைகளிலும் தனது கவிதா சக்தியை வெளிப்படுத்தி வரும் ஒரே கவிஞர்! நான் சங்க காலத்தை அவரதுகவிதைகளிலே தான் காணமுடிகிறது. சாதித்து விட்டதாக எண்ணித் தலேக்கனம் கொண்டுள்ள மற்ற கவிஞர்களே விட தலேசிறந்த கவிநயம், பாநயம் கொண்ட பண்புள்ள, அடக்கம் நிறைந்த ஒரே கவிஞர் இவர் தான்!

டாக்டர்.அ சிதம்பரனுர்.

பிறப்பிலேயே இவன் கவிஞன்

கவிஞன் ஆக்கப்படுகிறவனல்ல—பிறக்கின்றவன்! இன்று அவர் தனது 32 ஆண்டுகளே முடித்து 33 ல் காலடி எடுத்து வைக்கிருர். தமிழ் இலக்கியத்திலேயே தமிழ் இனத்தை கருவறுக்கும் எண் 32 தான்! இன்று தமிழ்ப் பகைவரை கருவறுக்கத்துடித்து நின்றுகாரிய மாற்றும்நம்கவிஞர்32வயதைமுடித்து33ல் துவங்குகிருர். அவரது கவிதா ஆற்றலே யாரும் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது.

-பேராசிரியர் அ. மு. பரம
சிவானந்தம்.

நிச்சயமாக நீ ஒரு கவிஞன்

நமது கண்ணதாசனேப் பொறுத்தவரையில் அவரை யாராவது விரும்பிஞல் அதிகமாக எல்லேவரை சென்று விரும்புவார்கள். வெறுத்தாலும் இறுதிவரை வெறுத்துவிடுவார்கள். இதுசாமானியர்களால் பெற முடியாது. மேலேய நாடுகளிலே ஓரிரு அறிஞர்களது வாழ்வு மட்டும் அப்படியிருந்ததாக படித்திருக்கிறேன். அவரது கவிதாத் திறமையை நான் நீண்ட நாட்களுக்கு முன்பிருந்தே அறிவேன். என்னேடு நெருங்கிப் பழகி வரும் பழம் பெரும் நண்பர்களிலே இவரும் ஒருவர். ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் என்னிடம் வந்து வேடிக்கையாகக் கேட்டார். 'என்ன சம்பத் நான் கவிஞனு?' என்று. நானும் வெகுதாராளமாக ஏற்றுக்கொண்டேன், 'நீ நிச்சயமாககவிஞன் தான்!' என்று காரணம் அன்றே நான் அவரது கவிதைகளேச்சுவைத்தவன்!

இன்றைய மாணவர்களே ஒருமுகமாக ஈர்த்துவிட்ட கவிஞர் இவர் தான்! இன்று இருப்பவர்களுக்குமட்டுமல்ல,எதிர்காலத்தலே முறைகளுக்கேஉருவான நன்மைகளேச் செய்துவிட எண்ணி உழைத்துக்கொண்டிருப்பவர்.

அதிகத் திறமையுள்ளவர்களாலேயே உயர்த்திக் கொள்ளக்கூடிய அரசியல் துறையிலும் அவர் ஆற்றியுள்ள பணியைமறந்துவிட முடியாது. கலேத் துறை அவரை பெற்று உயர்ந்திருக்கிறது. நாடக, திரையுலகில் அவரது எழுச்சிமிக்க கவிதைகள் மென்மணம் வீசி, நம் மனதிலே நிற்கத் தக்கவை.

—சொல்லின் செல்வர்
ஈ. வெ. கி.சம்பத்,

நாம் இருவர்!

கலே உலகத்தில் இருவரும் ஒரே சமயத்தில் நுழைந்தவர்கள். இருவரைப் பற்றியும் இருவரும் அறிவோம்! இன்று அவருக்கு 32 ஆண்டுகள் முடிந்து, 33ம் ஆண்டு துவங்குகிறது. எனக்கும் அதே ஆண்டுதான்! இதுவரை அவர் ஆற்றிய செயல்களே எண்ணி, எதிர்காலத்தில் அவர் ஏற்றுள்ள பொறுப்புகளே உணர்ந்து மேலும் உறுதியோடு பணிபுரியத் தூண்டுவதற்கே இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கவிஞர் தனது பொறுப்பையும், தொண்டுகளேயும் உணர்ந்தவர். தலே உலகம் அவரது அரிய தொண்டுகளே மேலும், மேலும் எதிர் நோக்குகிறது. கலே உலகமே இன்று வாழ்த்தி நிற்கிறது. நானும் எனது இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழும் உண்மையான அன்பு வாழ்த்துக்களே அவருக்கு அணிவிக்கிறேன், வாழ்த்துகிறேன். வணக்கம்.

---நடிகர் திலகம்,
சிவாஜி. கணேசன்.

வந்திருந்த அனேவருக்கும் நன்றியறிதலே தெரிவித்துக் கொண்டார் கவிஞர்.

...தாசன் புரொடக்ஷன்ஸ் ''கவலேஇல்லாத மனிதனில்''

பாலாமுவிஸ்

படிக்காத மேதை

★ துள்ளினுன், துள்ளினர், துள்ளினேம்.

★ துடித்தான், துடித்தனர், துடித்தோம்.

★ துவண்டான், துவண்டனர், துவண்டோம்.

★ அப்படி நடித்தார், நடித்தனர், நடித்தோம்.

—ரங்கன் சிவாஜி கணேசன்

அன்பால் வளர்ந்து, பண்பால் உயர்ந்த குடும்பம். செய் தொழிலால் துவண்டு விடுகிறது. சீரும் சிறப்புமாக வாழ்ந்த தலேவனும் தலேவியும் தத்தம் கண்ணெதிரிலேயே தாம் பழித்து வெறுத் தொதுக்கப்படுகின்றனர். பிறந்த பிள்ளேகளேவிட அக்குடும்பத்தில் வளர்ந்த பிள்ளே தலேவனிடத்தும், தலேவியிடத்தும் அளவிடர்க்கரிய அன்பு பாராட்டுகிருன். அவர்கட்குத் துயர்வந்துற்ற காலே துடிக்கிருன்; நம்மையும் துடிக்க வைக்கிருன். பிறந்த பிள்ளேகளிடத்தில் அவன் கோபத்தோடு அன்பு பாராட்டும் விதமே அலாதி. ஒன்றுமே அறியாத அவனுக்குத் திருமணம் செய்வித்து, தனித்து வாழ விரும்பும் நல்ல குலப்பெண்மணியின் உளப்பாங்கறிந்து, தனிக்குடித்தனம் செய்யடா என்ருல் அவன் ஒப்புக்கொள்ள மாட்டான் என்பதறிந்து, அவனேக் கடிந்து வீட்டை விட்டு வெளியேறச் சொல்லுகிருன் தலேவன். அவனே அடம்பிடிக்கிருன். நிலேதடுமாறுகிருன், வெளியேறுகிருன். அப்போது, 'நான் போகிறேன்! நீங்க வெய்யிலிலே நிற்காதிங்க உங்க உடம்புக்கு ஒத்துவராது. உடம்பை நல்லா கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று அவனிடமிருந்து கோபத்தோடு கலந்து வெளிவரும் அந்த அன்புச் சொற்கள், தலேவனே மட்டுமல்ல நம்மையும் கண்கலங்கச் செய்கின்றன. தலேவன் இறந்துவிட்டான். அவன் துடிக்கிருன், துவள்கிருன், 'அத்தே, அத்தே' என்று அலறுகிருன் கண்களே குளமாக்கிக் கதறுகிருன்—நாம் கண்ணீர் வடிக்கிருேம். கலங்குகிருேம். நம்மையுமறியாமல் விச்சுக் கூட்டுகிருேம். அணேந்த விளக்காகி விட்ட அந்தக் குடும்பத்தை தன் அன்பெனும் ஒரே சொத்தால் மீண்டும் பிரகாசிக்கச் செய்கிருன். அவன்தான் ரங்கன்—சிவாஜி கணேசன் (தமிழ்க்கலேயுலகு வாழ இவர் நீடு வாழ வேண்டும்) குடும்பத் தலேவனுக ரங்காராவ். அவருக்கே உரித்தான தோரணேயில் அமைதியான நடிப்பால்நம் நெஞ்சில் இடம் தேடிக்கொள்கிருர். குடும்பத்தலேவியாகவரும் கண்ணும்பாவழக்கம்போல். மற்றவர்களுள் எண்ணிப்பார்க்குமளவிற்கு நிற்பவர் ஈ. வி. சரோஜா--நடிப்பில் நல்ல மெருகேறுகிறது. வளரவேண்டியவர்தான். வளரட்டும். கதைகருத்தைக் கவர்கிறது. கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் இசைக்கு மெருகேற்றுகின்றன.

வசனகர்த்தா சில இடங்களில் வீண்வம்பை விலேக்கு வாங்குகிருர். இது ஏனே தெரியவில்லே. வளர்ந்து விட்டோமென்ற செருக்கா? அல்லது இப்படி எழுதிஞல்தான் வளர்ச்சியடைவோம் என்ற தப்புக் கணக்கா? புரியவில்லே.

இயக்குநர் பீம்சிங் எல்லோருடைய பாராட்டுதல்களுக்கும் உரியவரே!

மொத்தத்தில் படம் பலாச் சுளே!

வலை

எங்கும் விற்பனேயாகிறது !

தங்கமலர்
திங்கள் இருமுறை

ஆசிரியர் : கண்ணப்பா வள்ளியப்பன்

விற்பனேயாளரில்லாத இடங்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனேயாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 4

எழுதுக :

'தங்கமலர்'

4, இராசகோபால நாயக்கர் சந்து, சென்னே-2.

...யர் : சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பா வள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம்,
4, இராசகோபால நாயக்கர் சந்து ... சென்னே-2



இனமுழக்கம்
நத்தியும் வடவர் காலை
நக்கியும் பிழைப்போர் எங்கே?
இத்தமிழ் அகத்தின் வாழ்வை
இறக்கிய பகையோர் எங்கே?
கொத்தெனும் படையைக் கண்டு
குழியினில் வீழ்ந்தொழிந்திட் டாரோ?
மத்தள முழக்கம் கேட்டு
மரணநோ டடைந்திட் டாரோ?
இறப்பினும் சரியே; கை கால்
இழப்பினும் சரியே; மேனி
சிறைப்படு மென்றால் போதும்
செல்வழி சரியே என்று
மறப்படை கிளம்பிற் றென்றால்
மடப்படை எங்கே செல்லும்?
புறப்படு தமிழா! மண்ணில்
புதுப்புனல் புறப்பட் டார்போல்!
கண்ணதாசன்
சோமு

புரட்சி என்பதன் பொருள் என்ன?

★ அது எப்போது பிறக்கும்?

★ எங்கு பிறக்கும்?

★ விளைவு எப்படி இருக்கும்?

இவற்றைப்பற்றி வாரந்தோறும் இப்பகுதியில் ஆய்வோம்.

—சி. பி. சி.

★ பிறந்த நாட்டின் பொன் முடிக்காகப் போராடினன் ஒருவன். அந்த நாட்டாரே அவனைக்காட்டிக்கொடுத்து தீயிலிட்டுப் பொசுக்கினர்கள்!

அதோ செல்கிருனே! டாண்டன். அவனுக்கு நாடாளத் தெரியுமா? சீ, சீ, மூடு வாயை— நாடாள நான் தான் என்று நெஞ்சத்தில் திமிரெனும் பாரத்தை ஏற்றிக்கொண்டு செல்கின்ருனே, அவனையே காடாள விரட்டப் போகிறநீயா இப்படிப் பேசுகிருய். புண்ணைக் கீறி ஆற்று என்ருல், அங்கே அதற்குப் பதில் என்ன வைப்பது என்று கேட்கிருயே. இதுவா அறிவுள்ள கேள்வி. படுமுட்டாள் தனமானக் கேள்வி. புண்புரை யோடி மனித உயிரைக் குடிக்காமலிருக்க வைக்கிருயே மருந்து, அதுதான் டாண்டன் என்று நினைத்துக் கொள், தூக்குமர வாளைக் கண்டு பிடித்தானே, கில்லட்டின் அவனும் உடன் செல்கிருன் அல்லவா அவனுக்கும் ஆளத் தெரியுமா என்று கேட்க வாயெடுக்கிருய் அல்லவா. தெரிகிறது உன் துடிப்பு. உள்ளத்தின் சாயல். ஒரு அரசு சரியில்லை என்று சொல்லத் தெரிந்தவர்களுக்கு அரசையமைக்க முடியாது என்றெண்ணுவது பேதமை.

ஒன்று ஒழிந்தபின் மற்ருென்றுக்கு மக்களே வழி கோலுவார்கள் என்று நாடு தீர்மானித்திருக்கிறது. இவர்கள் ஏன் இவ்வளவு விரைவாக ஓடுகிருர்கள் என்ற ஐயம் உனக்கு ஏற்படுகிறது அல்லவா.

நெருங்கிவா அதன் இரகசியத்தைச் சொல்லுகிறேன். மீரா பே! என்ற ஒரு அறிஞனைப் பற்றிக் கேள்வி பட்டிருக்கிருயா - என்னடா வேடிக்கை. மீராபே எனக்குத் தெரியாதா - பொதுவாகச் சொல்லிவிடாதே, அவர் சிறப்பைச் சொல். எனக்கு அவ்வளவாகத் தெரியாது நீயே சொல்

பல அறிஞர்கள்தோன்றி இருக்கிருர்கள். பிறந்த நாட்டால் விரட்டப்பட்டு புகுந்த நாட்டில் போற்றப்பட்டிருக்கிருர்கள் அல்லவா. ஆம், ஒரு சிலர் பிறந்த நாட்டுக்கு சிறப்பைத் தேடித்தந்தவர்களுக்கு இறப்பைத் தேடித் தந்திருக்கிறது —இல்லையா. ஆம். அப்படி யாரைச் சொல்லலாம். கிரேக்கத் தத்துவஞானி சாக்ரடீசைச் சொல்லலாம். பிறந்த நாட்டின் பொன் முடிக்காகப் போராடிய ஒருவனைப் பிறந்த நாட்டாரே காட்டிக் கொடுத்து தீயிலிட்டுப் பொசுக்கி இருக்கிருர்கள் இல்லையா. ஆம், நமது நாடீன்ற ஜோன் ஆப்— ஆர்க்கைச் சொல்லலாம், பல வெளி நாடுகளைக் கதி கலங்க வைத்துத் தன் நாட்டைத் தங்க நாடாக்கிய மாபெரிய வீரனை, விருதுமார் கலைஞனை, போர்க் கண்ட புலியே, என்றெல்லாம் போற்றிய நண்பர்களே குத்திக் கொன்றனர். அத்தகுக் கொடுமைக்கு ஆளானவன் யார் என்று தெரியுமா — ஆமாம் தெரியும், ஜெகமஞ்சப் போராரிட்ட ஜூலியஸ் சீசரைச் சொல்லுகிறீர்கள் அல்லவா. ஆமாம் உனக்கும் ஏதோ கொஞ்சம் வரலாற்று

★ டாண்டன் யார்?

★ அவனுக்கு நாடாளத் தெரியுமா?

★ தூக்குமர வாளைக் கண்டு பிடித்தானே கில்லட்டின் அவனைப்பற்றி நீஅறிவாயா?

★ மீராபேவைப் பற்றிப் படித் திருக்கிருயா?

அறிவு இருக்கிறது, ஆனல் நம்முடைய நாட்டிலே நம் காலத்திலேயே நம்மோடு வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற ஒரு மேதையைப் பற்றித் தெரிந்துக் கொள்ளாமலிருக்கிருயே என்பதற்காகத் தான் வருந்தவேண்டியிருக்கிறது. எப்போதுமே மக்கள் தன்னுட்டில் பிறந்த மேதைகளைப் பற்றித் தெரிந்து கொள்வது அறிதாகத் தான் இருக்கிறது. குளத்திலிருக்கும் தாமரையைப் பற்றி பாவாணர்கள் பாடிப் பாடித் தீர்த்துவிடுகிருர்கள். காதலர்கள் கைகள் அதை நோக்காமலிருந்ததில்லை. எனினும் அதன் பக்கத்திலேயே இருக்கும் தவளைகளுக்கு அதைப் பற்றியே கவலை இருப்பதில்லை. அந்த நிலையில்தான் மக்கள் இருக்கிருர்கள். நீ அப்படி இருக்கக்கூடாது. ஏனென்ருல் நீ ஒரு பெரும் புரட்சிக்குத் தயாராய்க் கொண்டிருப்பவன். ஆகவே நீ மீராபேவைப் பற்றித் தெரிந்துக் கொள்ளும் முன்னல் புரட்சியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்

ஒருவன் உரிமையைப் பறித்துவிடும் போதுதான் புரட்சி ஏற்படும் என்பதில்லை. மானக் குறைவாகப் பேசி மன எரிச்சலையுண்டாக்கும் போதும் புரட்சி தோன்றிவிடும்.அதற்கு தொடக்க நாளும் இல்லை முடியும் நாளும் இல்லை. எப்போது தோன்றும் என்று அறியவும் முடியாது. அறிந்து சொன்னவர்கள் ஏமாந்தும் போயிருக்கிருர்கள். புயல் எப்படியோ அப்படித்தான் புரட்சி என்கின்றனர். புரட்சிக்கு நாள் குறிக்கா முன்னரேபலர் புரட்சிக்கு தயாராய்விடும் காரணமும் அதுதான். அதன் முடிவுயாதாகும் என்று மன்னனுக்கும் தெரியாது, மக்களுக்குமபுரியாது, ஆனல் மக்கள்புரட்சி எனறெண்ணும் போது எதையோ இழந்து எதையோ பெறப்போகிருேம்என்றெண்ணுகிருர்கள்; ஆனல், மன்னனே நாம் எதையும் இழந்துவிடப் போவதில்லை என்று எக்காளமிடுகிருன். இது எதனுல்? விடை கண்டு பிடிப்பதுஅவ்வளவு கடினமல்ல! மன்னன் பக்கத்திலே ஆயுதம் தாங்கிய வீரர்கள் அணிவகுத்து நிற்கிருர்கள். மக்கள் மண்ணையும் கல்லையும் நம்பி நிற்கிருர்கள், கல்லடி குண்டடியை விட கடினமானதல்ல என்பது மன்னனுக்கும் தெரியும் மக்களுக்கும் தெரியும். எனினும் இதுதான் முடிவு அல்லவா என்கிருன் அப்பான்சோ ஆம், இப்போது நாம் நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறபுரட்சிக்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்கிருன் அந்த அப்பாவி. அடபாவி! இன்னும் நீ வேதாந்தவிசாரணையிலே இருந்து எழுந்திருக்கவே இல்லை. உன்னைப் பொருத்த வரையிலும் இன்னும் ஞாயிறு உதிக்கவே இல்லைபோல் தெரிகிறது.உனக்கு இந்தக் கதைகளையும் காரணங்களையும் சொல்லிக் கொண்டிருப்பதற்குள்ளாக புரட்சியும் முடிந்து, புரட்சியில் மடிந்தவர்களின் மேல் போட்ட பூமாலைகளும் வாடிவிடும் போலிருக்கிறதே.

முதலில் மீராபேவை நினைத்தால் புரட்சியே நடக்காது போலிருக்கிறதே-ஏன்! அவ்வளவுதுரோகியா அவன். ச்சூ-யாராவது பக்கத்தில் இதைக் கேட்டுவிடப் போகிருர்கள். அப்படி சொன்ன வாய் மூடுவதற்குள் சொன்னவனை சுட்டு விடுவார்கள், மீராபேயை அடுத்த இதழில் தெரிந்துக் கொள்.

ஆகஸ்டு 28-ம் நாளன்று...
வண்ண ஓவியமாய்
★ எண்ணக் காவியமாய்
★ பாதுகாக்கத் தகுந்த புதைலாய்
வெளிவருகிறது!
இன முழக்கம்
ஆண்டு மலர்
(இந்தி எதிர்ப்பு மலராக மலருகிறது)
அழகான படங்கள் —அறிஞர்களின்அற்புதமான கட்டுரைகள் —கவிஞர்களின் முத்துக்குவியல்
...—அத்தனையும் கற்கண்
...க்கங்கள்—விலை 50 காசுகள்

மனித நீதியைக் கொல்லும் மனு நீதி

"வேதோச்சாரணே ஜிஹ்வாச்சே
தோதாரணேசரீரபேத"

பொருள்: வேதத்தைச் சொல்லுகிற சூத்திரனது நாக்கை அறுத்தெரிய வேண்டும். பொருளையுணர்ந்து வைத்திருக்கிற நெஞ்சைப் பிளக்க வேண்டும்.

"அதா நருணுமதனம வாருத்வாயோ ததாதீத
தர்த்திநே;
ஸவை மோஷண ஜாத்பாபாத் முக்தோ
பவசிதத்காரணம்"

பொருள்: ஈயாத லோபியின் பொருளைக் கொள்ளையிட்டு பிராமணனுக்குக் கொடுக்கிறவன் அக்கணமே திருட்டினுலுண்டான பாபத்தினின்றும் விடுபடுகிருன். மேலும்,

"ச்ராந்தஸம் வாஹணம் ரோகிபரி சர்யா
சுரார்ச்சனம்
பாத சௌசம்த்வி ஜோச்சிஷ்ட மார்ஜனம்
கோப்ர தாவைத் (யாக்ஞவல்கியர்)

பொருள். களைப்புறற பிராம்மணனது உடலைத் தடவுதல், நோய்வாய்ப்பட்ட பிராமணனுக்குத் தொண்டு செய்தல், பிராமணன் வந்தவுடன் அவனது கால்களை அலம்பி விடுதல், பிராம்மணன் உண்ட இடத்தைச் சுத்தம் பண்ணுதல் இவைகளுக்குப் பசுவைக் கொடுத்த பலன் உண்டு.

"அதாஸ்ய வேதமுபஸ்ருண் வதஸ்த்ர புஜதுப்யாம்ஸ்
ரோத்ர பூர்ணம்"

பொருள்: சூத்திரன் நடமாடுகிற இடம் சுடலையானதால் அவன் பக்கத்தில் வேத மோதக் கூடாது.

"நாத: பரதம் தர்மோ நிருபாணும் யத் ரணுர்ஜிதா
விப்ரேப் போதீயதே த்ரவ்யம்"

பொருள். போரில் பகைவர்களைக் கொன்று, பொருட்களைக் கைப்பற்றி அவைகளை அரசன் பார்ப்பனர்களுக்குக் கொடுக்க வேண்டும். இதற்கொப்பான தருமம் வேறில்லை.

"பிராமணன் நஹீம் ஹிதவ்ய"

பொருள்: பார்ப்பணன் எத்தகைய குற்றம் புரிந்தாலும் அவனது உடலை வருத்தலாகாது.

"யதாஹி சௌர: ஸ்யததாஹிபுத்த: ததாக தம் நாஸ்
திகமத்ர வித்தி"

பொருள்: திருடனும் புத்தனும் ஒப்பாவர், இங்கு புத்தரை நாத்திகன் என்று அறியற்பாலது என்ற வசனங்களால் கண்டு கொள்க.

"நஸ்வாமினு நிஸ்ருஷடோபி சூத்ரோ தாஸ்யாத்
விமுச்யதே;
நிஸர்க்கஜம் ஹிதத்தஸ்ய கஸமாத்தஸ்யமாத
போஹதி"

பொருள்: எஜமான் விட்டு விட்டாலும் சூத்திரனின் அடிமைத்தனம் அவனை விட்டொழியாது. இது இயற்கையானதால் எங்ஙனம் ஒழியும்?

"சக்தேனுபிஹி சூத்ரேண நகார்யோதன ஸஞ்சய;
சூத்ரேண தன் மாஸத்ய ப்ரஹ்மணுனேவ பாததே"

பொருள்: பொருளிட்ட திரமையிருந்தாலும் சூத்திரன் அங்ஙனம் செய்யலாகாது. சூத்திரனுக்குப் பொருள் சேர்ந்தால் பார்ப்பான் துன்புறுவான்.

"உச்சிஷ்ட மன் தாதவ்யம், ஜிர்ணுனி
வஸனுனிச;
புலகராகாஸ் சைவதான்யானும் ஜிர்ணுஸ்
சைவ பரிச்சதா"

பொருள்: சூத்திரனுக்கு எச்சிலும் கிழிந்து போன பழைய ஆடையும் நல்ல தானியங்களை எடுத்துக் கொண்டு பதரும் வைக்கோலும் கொடுக்க வேண்டும்.

"சூத்ரஸ்யது ஜீகுப்ஸிதம்"

பொருள்: காதில் விழும் போதே அருவருப்பை உண்டு பண்ணத்தக்க பெயர்தான் சூத்திரனுக்கு இட வேண்டும்.

"நசூத்ராய மதிம் தத்யாத்"

பொருள்: சூத்திரனுக்குப் பகுத்தறிவு உண்டாகும்படி யாதுஞ் செய்யலாகாது.

—ஞானசூரியன்

இனமுழக்கம்

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

மலர் 1] ★ 22—7—60 ★ [இதழ் 46

விருந்துக்குப் போய் மருந்துண்ட கதை

வேலை நிறுத்தம் வெற்றிபெறவில்லை. வீழ்ச்சியுற்றது. பல செய்தித் தாள்கள் படுதோல்வியடைந்துவிட்டன என்று எழுதித் தீர்த்துவிட்டன.

தொழிலாளர்கள் குறைகளை சர்க்கார் அனுதாபத்தோடு கவனிப்பதற்குப் பதில் சண்டமாருதப் பிரகடனம், அவசரகாலச் சட்டம் என்ற பேரால் கொடுமையான ஆயுதத்தை நீட்டி விட்டது. இந்த வேலையும் போனால் நம் கதி என்ன என்று ஏங்கித் தவித்த குடும்பங்கள் எண்ணிலடங்காதவைகளாகவும், போனாலும் பரவாயில்லை. ஏதோ கொஞ்சம் வசதியிருக்கிறது அதை வைத்துக் கொண்டு குடும்பமெனும் ஓடத்தை எப்படியாவது நகர்த்திவிடலாம் என்றெண்ணிய குடும்பங்கள விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலும் இருந்தன.

இனி வேலைநிறுத்தம் செய்வதா இல்லையா என்பதை சம்பந்தப்பட்ட சங்கத் தலைவர்களைக் கேட்டு முடிவு செய்வதைவிட, அவரவர்கள் குடும்பத்திலே இருக்கும் தலைவிகளையும் குழந்தைக்குட்டிகளையும்; விலையேற்றி கொள்ளை லாபமடிக்கும் வியாபாரிகளையும் கேட்டுத்தான் வேலைநிறுத்தம் செய்ய வேண்டுமென்ற நிலைக்கு தொழிலாளர்கள் நிலையை மிகத் தாழ்ந்த நிலைக்குத் தாழ்த்திவிட்டிருக்கிறது சர்க்கார் அவசரகால சட்டம் என்றபேரால்.

வெற்றிபெறவில்லை; ஏன்? நம் நாட்டில் வேலையற்றோர் ஏராளமாக இருக்கின்றனர். இந்தமாதிரியான காலங்களில் காலியாகும் இடம் நமக்குக் கிடைக்காதா என்று, தூண்டில் போட்ட வலைஞன் சடையின் மேல் கண் வைத்துக் கொண்டிருப்பதைப் போலக் கண் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருப்பவர்களுக்குத் தொழிலாளர்கள் மேல் கோபமில்லை. அவர்கள் வேலையில்லாமல் பல நாட்கள் திண்டாடியதன் விளைவு. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை இந்த அளவுக்காக்கியிருக்கிறது. இந்த வல்லமையினால் தான் யார் எந்த நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடினாலும், அந்தக் கோரிக்கையிலுள்ள நியாநியாயங்கள் என்ன என்பதைப் பற்றி எல்லாம் சிந்திக்காமல் கொடுங்கோண்மையின் கோர சொருபத்தைக் காட்டிவிடுகிறது.

பொதுமக்கள்

இவர்கள்தான் இப்படியென்றால் பொதுமக்களுடைய நிலை என்ன என்பதையும் தொழிலாளர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்கள் என்றே நினைக்கிறோம். இதுவரை நடந்த தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்குக் கொஞ்சமாகிலும் பொதுமக்கள் ஆதரவு இருந்தது. இந்த வேலைநிறுத்தத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு கொஞ்சங்கூட இல்லை என்று துணிந்து கூறலாம். ஏனெனில்,

அவர்கள் உரையாடல்

இவர்களுக்கு ஊதியம் அதிகம் வேண்டுமென்றால் நம்முடைய தயவு ஒத்துழைப்பு வேண்டுமென்கிறார்கள். உண்மைதான். ஆனால் நமக்காக என்ன செய்தார்கள். நூறு பேர் உட்கார்ந்துப் போகக் கூடிய பெட்டியில் இருநூறு முன்னூறு பேரைப் போட்டு அடைத்துக் கொண்டு போகிறார்களே சில நேரம் விசிறியும் ஓடாமல் மூச்சுவிட முடியாமல் திக்குமுக்காடினோமே—அப்போது இவர்கள் நமக்காகப் போராடியதுண்டா? இல்லையே! டிக்கெட்டைக் கையில் வைத்துக் கொண்டு. சார், இடமில்லையே. என்று கெஞ்சியபோது, எங்கேயாவது தொத்திக் கொள்ளுங்கள் என்று சொன்னவர்கள்தானே இவர்கள். உணவு நேரத்திற்கு ஊர் வந்து விடுவோம் என்று நம்பி ரயிலேறி, அது ஐந்து மணி நேரம். ஆறுமணி நேரம் தாமதப்பட்டு, வழியில் உணவில்லாமல், கிடைத்தாலும் வாங்கி உண்ண பணமில்லாமல் காதடைக்கக் கண்பஞ்சடைய தொல்லைப்பட்டோமே—அன்று இவர்கள் நம்மீது, நம் குழந்தைக் குட்டிகள் மீது அனுதாபப்பட்டு உணவுப் பொட்டலங்களைக் கொண்டுவந்து வழங்கினார்களா—அவசரச் செய்தி என்று தந்தி கொடுத்தால், அதுவும் அடுத்த நாள் தபாலோடு சேர்த்துக் கொடுத்தார்களே—இழவு எடுக்குமுன் வந்து சேர வேண்டியவர்கள், அடுத்த நாள் பாலுக்கு வந்து சேர்ந்தார்களே, அப்போது நாம் யாரை நொந்துகொண்டோம், இவர்களுக்கு மாத்திரமா விலையேறியிருக்கிறது? நமக்குந்தான். நாம் யாரிடம் போராடுவது, எங்கே வேலைநிறுத்தம் செய்வது என்றெல்லாம் மக்கள் சிந்திக்க. சிந்தித்ததை பகிரங்கவிடங்களில் பேசத் தலைப்பட்டுவிட்டார்கள். அதன் விளைவுதான் இந்த வேலைநிறுத்தத்தில் பொதுமக்கள் ஆதரவு கொஞ்சங்கூட கிடைக்காமல் போனதற்குக் காரணம்.

தபால்கள் ஒரு வாரத்திற்குக் கிடைக்காது—தந்தியடிக்க முடியாது, மணியார்டர்கள் அனுப்ப முடியாது. மணியார்டர்கள்: பதிவுத் தபால்கள் ஏற்கவோ கொடுக்கவோ முடியாது. ரயில்கள் ஓடாது, ஓடினாலும் சரியாகப் போய்ச் சேருமா என்பது சந்தேகந்தான். சரக்குகளை ஏற்றுக்கொள்ள முடியாது. தரவும் முடியாது. ஆகாய விமானங்கள் பறக்காது. டிரங்கு டெலிபோன்கள் இயங்காது. என்றெல்லாம் எவ்வளவுதான் பொதுமக்களுக்கு பயமுறுத்தினாலும் **பரவாயில்லை** என்ற ஒரே பதிலை தூக்கி எறிகிறார்கள்.

இரண்டு எண்ணங்கள்

பொதுமக்கள் பொதுமக்கள் என்கிறோமே அவர்கள் யார்? அவர்களை எல்லாம் வெறும் மண்பொம்மைகள் என்று எண்ணிய காலம் மலையேறிவிட்டது. இப்போதெல்லாம் ஒவ்வொரு பொதுமனிதனும் ஒவ்வொரு அரசியல் மேதையாகதிகழ்கிறான். அன்றாடம் செய்தித்தாள்களைப் படிக்கவேண்டுமென்ற அவாவால் வளர்க்கப்படுகிறான். நம்மை யார் ஆள்கிறார்கள் என்று தெரியாத காலம் ஒன்றிருந்தது. இன்று, நம்மை யார் ஆள்கிறார்கள், எப்படியாள்கிறார்கள், ஏன் ஆள்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளும் நிலையிலேகூட அவர்கள் நிற்கவில்லை! எதுவரையிலும் ஆள்வார்கள் என்று முடிவு கட்ட வேண்டிய அளவுக்கு ஒரு படி மேலேறி நிற்கிறார்கள்.

எந்த அளவுக்கு அவர்கள் பேசுகிறார்கள் என்பதை என் பிரயாணத்தில் நான் கண்ட அனுபவம் ஒன்றை இங்கே தருகிறேன்! வேலைநிறுத்தத்தை பற்றி பேசிக்கொண்ட இருவரில் ஒருவர், 'சங்கத் தமிழ் மூன்றும் தா என்று கடவுளிடம் கேட்டவன் கூட நான்கு பொருளைத் தந்தான். அதாவது:— 'பாலும் தேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும்தா' என்று கேட்டான். ஆனால் இவர்கள் (தொழிலாளிகள்) ஒன்றுமே நமக்குத் தராமல் நம்முடைய உதவியை நாடுகிறார்கள். எப்படி முடியும் என்றார் அவர். இந்த வாசகங்களைச் சொன்னவர் தோற்றம் எனக்கு அவ்வளவுத் தெளிவுள்ளவராகப் படவில்லை, ஆகவேதான் நான் அப்படியே கலகலத்துப் போனேன். உலகம் இப்படி மாறிவிட்டதா என்று மெய்மறந்து போனேன். ஆகவேதான் இனி பொதுமக்களுக்காக ஒன்றும் செய்யாமல் அவர்களிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வர வேண்டியவர்களாய்விட்டார்கள் தொழிலாளிகள் என்று வருத்தத்தோடு சொல்ல வேண்டியவர்களாகிறோம்!

கைவிடப்பட்டார்கள்'

பொதுமக்களாலும் கைவிடப்பட்டார்கள். சர்க்காராலும் கைவிடப்பட்டார்கள் என்றெண்ணும்போது வருத்தமாகத்தானிருக்கிறது. வடக்கே அதுவும் பம்பாயிலும் வங்கத்திலும் நடந்த அளவுக்குக்கூட தென்னகத்திலே நடக்கவில்லை என்றால் அதன் பொருள் என்ன? இதையும் மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் பொதுமக்கள் இரண்டு கருத்துக்களிடையே சில நர்ட்கள் ஊசலாடி இறுதியில் ஒரு முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அந்த இரண்டு கருத்துக்கள் எவை? இறுதியாக அவர்கள் செய்த முடிவென்ன? இதைத்தான் நாமும் தொழிலாளத் தோழர்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஒன்று :— தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரிக்கும் முகத்தான் அவர்கள் உணர்ச்சிகளை மேலும் மேலும் தூண்டி வேலைநிறுத்தத்தை நீடிக்கச் செய்து நாமும் அதோடு தொல்லைப்படுவதா?

மற்றொன்று :— அதை கவனிக்காமலே விட்டுவிட்டு, அவர்கள் கரத்தைப் பலவீனமாக்கி விரைவில் வேலைநிறுத்தத்தை முடிக்கும்படி செய்து விடுவதா?

சர்க்கார் ஊழியர்கள் சற்றொப்ப சர்க்கார் பெற்றெடுத்த மக்கள் என்ற அளவில் உரிமை கொண்டிருக்கிறது. அது உண்மையாயின் மக்களையடக்க தந்தை இவ்வளவு கொடுமையான ஆயுதத்தை எடுக்கமாட்டான்! அவசரச் சட்டம் போட்டு, நேரு ஒலியலைச் செய்தியில் கதறி. முக்கியமானவர்களை முன் கூட்டியே சிறையில் தள்ளி வேலைநிறுத்தத்தை ஒன்றுமில்லாமலாக்கிவிட்டோம், பிசுபிசுத்துவிட்டது. அதன் தலைவர்கள் சரியான வழிகாட்டவில்லை. என்று பெருமை பேசிக்கொள்வதில் எந்தவித கித்தாப்பும் கிடையாது. வேலை நிறுத்தத்திற்கான காரணத்தைத் தெள்ளத் தெளிய விலைவாசிகள் ஏற்றந்தான் என்று சங்கங்கள் சொல்லியாய்விட்டது விலைவாசிகளை கிடுகிடு என்று ஏற்றிவிற்கும் கயவர்கள் யார்? பதுக்கி வைக்கும் மாபாவிகள் யார்? தொழிலாளிகளை ஒடுக்கப்பயன்பட்ட அவசரச்சட்டம் அந்தக் கள்ளமார்க்கெட்காரர்களையும் கொள்ளைலாபக்காரர்களையும் ஒடுக்க ஏன் பயன்படவில்லை? அவர்களில் பெரும்பாலோர் கதராடைக் கனவான்கள் என்ற காரணமா? இந்தக் கேள்விகளுக்கு என்றாவது ஒரு நாள் சர்க்கார் பொதுமக்கள் மன்றத்தில் பதில் சொல்லியேதீர வேண்டும். இன்றைய சர்க்காரின் போக்குப் பாதி கிணற்றைத் தாண்டியவன் நிலையிலே இருக்கிறது. இந்த இரண்டாவது எண்ணத்திற்குச் சாதகமாகவே சர்க்காரின் கொள்கையும் இருந்தது. ஆகவே சர்க்கார் வென்றது தொழிலாளர் தோற்றனர் என்று காலம் தன் தீர்ப்பை சொல்லிவிட்டது.

அடக்குமுறை

மேலும் இந்த நேரத்தில் சர்க்காருக்கு முக்கியமான யோசனையை சொல்ல வேண்டியவர்களாகிறோம்- அடக்குமுறைகள் அற்பாயுள் பெற்றவை என்பதையும், அடக்குமுறை எல்லாக் காலங்களிலும் எல்லா நாட்டிலும் வெற்றித் தேடித் தத்துவிட்டதில்லை என்பதையும் அவர்கள் உணர வேண்டும் கிளர்ச்சி-அடிதடி, இரத்தம் இவைகளைத் தங்கள் கற்பனையிலேகூட எண்ணிப் பார்க்காதவர்களின் வேலைநிறுத்தங்களை நீங்கள் இப்படி அடக்கிவிடலாம். ஆனால் அதைச் செய்து செய்து பழகிவிட்டவர்கள் நம் நாட்டிலே யாருமே இல்லை என்ற முடிவுக்கு நீங்கள் 1960 லேயே வந்துவிடக்கூடாது. ஏனெனில் அடக்குமுறைச் சட்டங்களுக்கு எவ்வளவு வலிவும் ஆற்றலுமிருக்கிறதோ, அதே அளவுக்கு, அதைவிடக் கொஞ்சம் அதிகமாகத் தொழிலாளர் இனம் பெறுகிறபோது சட்டங்கள் வலிகுன்றி வீழ்ந்துவிடலாம். சட்டங்கள் மக்கள் ஆவேசத்துக்கு முன் நிற்காமல் சந்து பொந்துகளில் விழுந்து ஓடிய சம்பவங்களை நமக்கு வரலாறு நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது. பலமற்றவரை பலமுள்ளோர் அடக்கியாள்வதில் ஒரு கித்தாப்பும் இல்லை. உலகாயுதவாதத்தை ஒப்புக் கொள்ள மறுக்கும் நாடு மானசீக வாதத்தையாகிலும் ஒப்புக்கொள்ளக் கூடாதா என்று நாடு கேட்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் காலம் வரும்முன் சர்க்கார் தன் இட்லர் போக்கை மாற்றிக் கொண்டு சர்க்கார் இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதுவே நலமாகும். சிலநேரம் பெட்ரோல் தீர்ந்துவிட்டால் மண்ணெண்ணெயில்கூட கொஞ்ச தூரம் கார் ஓடுவதுண்டு, ஆனால் இயந்திரத்திற்குக் கெடுதல்தான் என்பதை இந்திய சர்க்கார் உணரவேண்டும்!

தங்களன்புள்ள,

★ காலம் காட்டும் கலங்கரை விளக்கம்:
★ கைதானார் கருணாநிதி!
★ நொண்டியானார், நமது ராபி!
★ எட்டி உதைத்தனர், உத்தமக் கவிஞரை!
★ இத்தனைக்கும் யார் காரணம்?

உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது; ஆனால் உரிமையோடு அவை இனி இயங்க முடியாது! குற்றவாளிகள்—தீர்ப்புக் கூறியவுடன் கைதிகள்!

லாரிக்குப் பின்னால் ஓடினார், பலர் உரக்கக் கூவிக்கொண்டு. ஒதுங்கி யிருந்து கவனித்தனர் சிலர். உள்ளேஇருப்பவர்கள்திரும்பிப் பார்த்தார்கள். தாங்கள் விட்டுப் பிரியும் களத்திலே கனல் நிறைந்த வீரர்கள் எண்ணற்றோர் நிற்பதுஅவர்களுக்குத்தெரிந்தது. சிரித்தனர்—கரமசைத்தனர்-'கல்லக்குடியே! நீ என்றும் மாறாமல் அந்தப் போர்டிலேயே நிலைத்திரு' என்று நினைத்துக் குறிப்பால் உணர்த்தினர்.

நீண்ட சுவரைத் தாண்டித் திரும்பியது லாரி. திருப்பினேன். தர்மலிங்கம் நின்றுக் கொண்டு இருந்தார். முதல் நாள் முழுவதும் அவருக்குஒரேஒரு கவலை—யாரையும் சிறைப் படுத்தாமல் விட்டு விட்டால்......? சிரித்தார் அழுது கொண்டே என்னைப் பார்த்து; அணைத்து அழைத்து வந்தேன் வழி நெடுக.

லும் சிறிய ரயில்வண்டி குறுக்கிலும் நெடுக்கிலும் ஓடிக்கொண்டிருந்தது. அங்கிருந்தோர் அனைவரும் சேர்ந்து ஊதினால் உடனே குப்புறக் கவிழ்ந்து விடும். அந்த ரயில் வண்டித் தொடர், வண்டி ஓடும் — ஆலை வாயிற்படியை நெருங்கியவுடன் அதிலிருந்து ஒரு ஆள் இறங்கி வண்டிக்கு முன்னால் ஓடுவான்! தளர்நடை போடும் அந்தக்குழந்தை குடுகுடு என ஓடும் கிழவனைப்போல ஓடிக் கொண்டிருந்தது. அதிலும் ஓர் சுவரொட்டி — 'டால்மியாபுரம் என்ற பெயரை மாற்று!'"

நீண்ட சுவர்-அதைத் தாண்டியவுடன் ஆஸ்பத்திரி-ஆஸ்பத்திரியை யொட்டி போலீஸ் ஸ்டேஷன்-போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் தபாலாபீஸ். அதைத் தொடர்ந்து தொழிற்சாலைக் கட்டிடம் தொடங்கி விடுகிறது. மறு பக்கத்தில் வரிசை வரிசையாகக் கூரை வேய்ந்த கட்டிடங்கள். பெரும்பாலும் வெற்றிலைப் பாக்குக்கடைகள்-ஓரியண்டுமாளிகை, ஜவுளி கடைகள்—உகடைகள்—

மும் முனை

திரும்பிப் பார்த்தேன். கண்ணதாசன் கவிதை எழுதிக் கொண்டிருந்தார், சரியாக அமைக்க முடியவில்லை. இரண்டு சொற்கள் மட்டும் தெரிந்தன. "போகிறேன்... சாகிறேன்!" என்னவோ போலிருந்தது எனக்கு.

புறப்பட்டது, அந்தப் படை நிலமெல்லாம் கொதித்தது. கற்கள் குத்திக் காலைத் தொல்லைப் படுத்தின. நடந்தனர் நகை முகத்தோடு. முப்பத்தாறு தோழர்கள். கூட்டம் அதிகமாகிக்கொண்டே வண்டி இன்னும் வரவில்லை. வெளியிலேயே தங்கிக் காத்திருந்தனர், போராட்ட வீரர்கள்.

★ முடிசூடா மன்னனின் மமதை!
★ அமைச்சராக இருந்த ஆச்சாரியார்!
★ அவருக்கு அடியாளராகஇருந்த நிதிமந்திரி!
★ பக்தவத்சலத்தின் வெறித்தனம்!
★ பனியாக்களின் பெயர் மாற்றம்!

ஒரு பக்கம் தொண்டர்கள்-அவர்களின் அருகே சிறிது தூரத்தில் ஆயுதந்தாங்கிய போலிசார் தண்டவாளத்தருகே,

"ஐஸ் ப்ருட் (Ice fruit) என்று கூவி விற்று கொண்டு வந்தான் ஒரு சிறுவன்.

போலீஸ் அணிவகுப்பில்நின்ற ஒரு கிழவர் அவனை அழைத்தார். இல்லையென மறுத்தான்சிறுவன்.

'பாவம், வயதானவர். அவருக்கு ஒன்று கொடு' என்றார் கண்ணதாசன்.

'ப்ளாஸ்க்'கைத் திறந்து காட்டினான், அந்தச் சிறுவன். உண்மையாகவே அதில் ஒன்று கூட இல்லை.

'வெப்பந் தாங்கவில்லை அவருக்கு. தாகமெடுக்கிறது. அதில் கொஞ்சம் தண்ணீராவது நிரப்பிக் கொண்டுவந்து கொடு' என்றார் கண்ணதாசன் மறுபடியும்

அந்தச் சிறுவன் ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்தான். அதற்குள் படை புறப்பட்டு விட்டது. சுற்றிலும் நின்ற கூட்டம் ஓடியதுஸ்டேஷனுக்கு எதிர்ப்பக்கம் இருந்து நடவடிக்கைகளைக் கவனிக்க, கூட்ஸ் வண்டிகள் நிறுத்தப்பட்டிராவிட்டால் அவர்களுக்கு இந்தத் தொல்லையே இல்லை.

அப்போது இதைப்பற்றி நினைக்கமுடியவில்லை. இப்போது தெரிகிறது, இதெல்லாம் முன்னேற்பாடு என்பது. உள்ளேதிருச்சி திரும்பும் கூட்டம் நின்றது. மாலையில் அங்கு போய்க் கருணாநிதியின் கைதுக்குக் கண்டனம் நடத்த இருந்தவர்கள் அவர்கள்.

ஸ்டேஷனுக்கு உள்ளே இருந்தவர்களை எல்லாம் வெளியே விரட்டினார்கள் போலீஸ்காரர்கள். அப்போது ஓடிவந்த ஒரு போலீஸ் அதிகாரி சருக்கிக் கீழே விழுந்தார் எதிரிலிருந்த மக்கள்சிரித்து விட்டனர். எழுந்துகோபத்தோடு அத்தனை பேரையும் பார்த்தார். போலீஸ்காரர்களை விட்டுக் கூட்டத்தைக் கலைக்கச் சொன்னார். தடியடி தொடங்கியது. லேசாக ஒதுங்கி நின்றது கூட்டம். எல்

'அடிக்காதே! அடிக்காதே! எல்லா மக்களும் சேர்ந்து கூச்சலிட்டனர்.

மதயானைகளைப்போல மாறினர் போலீஸ்காரர்கள். தொண்டர்களை மிதித்தனர்...துவைத்தனர்-எதிரிலிருந்து கூட்ஸ் வண்டியோடு அவர்கள் மண்டைகளை மோதினர் — தூக்கி ஒவ்வொருவராக வெளியே எறியத் தொடங்கினர்.

'அடிக்காதே! அடிக்காதே!'

நரம்புகள் துடிக்க இரத்தம் கொதிக்கக் கூவிற்று, அந்தக் கூட்டம்.அதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டது.

பறந்தனர் கூடி யிருந்தோர். அந்தப் பதைபதைக்கும் வெய்யிலில். தண்டவாளங்களைக் கடந்தனர். கூட்ஸ் வண்டியைத் தாண்டி ஓடினர். காபினுக்கருகே ஒரு பர்லாங்கு தூரத்துக்கு வரிசையாகத் தண்டவாளத்தில் உட்கார்ந்து கொண்டனர்.

வெளியே நானும் பிரகாசமும் வந்தோம் கண்ணதாசன் நின்றுக்கொண்டிருந்தார்.

'ஏன் வந்துவிட்டீர்கள்?' என்றேன். என்னைப் பரிதாபமாகப் பார்த்தார், வெற்றி முரசறைய தன்னால் முடியவில்லையே என்று வேதனை அவர் முகத்தில் காணப்பட்டது.

'உங்களிடம் தான் டிக்கட் இருக்கிறதே வண்டியில் போய் எறிக்கொள்ளுங்கள், புல்லம்பாடியில் வண்டியை நிறுத்தலாம்' என்றேன்.

அதற்குள் வண்டி நின்று விட்டது காபினுக்கருகே. கண்ணதாசன் ஓடி வேகமாக ஏறப் போனார்

அதற்குள் தொண்டர் படையில் ஒருவர்,

"நாங்கள் உட்காரப்போகிறோம்; நீங்கள் மட்டும் வண்டியில் போகப்போகிறீர்களா?" என்று கேட்டுவிட்டார்.

அவரும் போய்க் கூட்டத்தோடு முன்னணியில்உட்கார்ந்து விட்டார்,

ஆத்திரத்தோடு ஓடி வந்தது போலீஸ் படை.

★ அடங்கிக் கிடந்தவர் அணிவகுத்து நின்ற காட்சி!
★ களத்தைக்கண்டவர் இரத்தக்குளத்தையும் கண்டனர்!
★ துடித்தனர் - கண்ணீர் வடித்தனர்!

தபாலாபீசில் ஒரே கூட்டம். தந்திகள் பறந்தன. சிவப்பிரகாசம் எழுதிக் கொண்டே இருந்தார். மணி, பணத்தை எண்ணிக் கொண்டே இருந்தார்.

'உள்ளே போய் அவர்களைப் பார்க்க அனுமதிக்க மறுக்கிறார்கள்!' என்றுசொல்லிக்கொண்டே எதிரே யிருந்த தர்மலிங்கம் வந்தார்.

'இதோ பத்திரிக்கை நிருபர் சிவப்பிரகாசம்! அவர் போகட்டும், அனுமதிப்பார்கள்' என்றார், சிற்றரசு.

'பிரகாசம் போனார்—முகத்தில் இருள் குவிந்து திரும்பினார். என்னையும் போகவிட மறுக்கிறார்கள்" என்ற ஏக்கம் நிறைந்த சொற்களை வெளிப் படுத்தினார். எதிரே பறந்து கொண்டிருந்த கொடியில் பொறிக்கப் பட்ட அசோகச் சக்கரம், "எல்லா உரிமைகளும் உண்டு இந்த நாட்டில்' என்று உலகத்துக்கு அறிவித்துக் கொண்டிருந்தது!"

பாசறைக்குத் திரும்பினோம். காரைக்குடி இராம சுப்பையா அடுத்த அணிவகுப்பை நிறுத்தி வைத்திருந்தார். என்ன களிப்பு, அந்த முகத்தில்! தன்னை இயக்கத்துக்காக அர்ப்பணித்துக் கொண்ட அந்தக் கர்ம வீரன் பேச்செல்லாம் கட்சியாக, மூச்செல்லாம் இலட்சியமாக, செயலெல்லாம் இயக்க உழைப்பாக ஆக்கிக்கொண்ட தொண்டர்—காரைக்குடியை வீரர் குடியாக ஆக்கமுனைந்து வெற்றியும்கண்டவர்! அந்த அணி வகுப்புக்கு அவர்தான் தலைவர்.

படை புறப்பட்டது. மண் லேசாக சூடேறியிருந்தது. டால்மியாபுரத்தில் கல்லேற்றிச் செல்

"பிராமணாள் காப்பி அண்டு சாப்பாடு ஹோட்டல்கள்!"

தொண்டர்கள் உள்ளே புகுந்தனர்- "கல்லக்குடி" என்று அச்சிட்டதாள், ஒரு வாளியில் பசை, ஒரு சிறிய ஏணி, கைகளிலே கொடிகள், மார்பிலே படை வரிசையைச் சேர்ந்தவரென அறிவிக்கும் சிறு அட்டைத் துண்டு; ஒட்டினர், எதிரேயிருந்த போர்டில்.

திருச்சியிலிருந்து வந்த ரயில் வண்டி அப்போது வந்து நின்றது. அதிலிருந்து இறங்கினர். நூற்றுக்கணக்கான தோழர்கள் நின்று கொண்டிருந்த தொண்டர்களையும் கவனியாமல் தண்டவாளத்தை நோக்கிஓடினர் அவர்கள் குறுக்கே படுக்க தடுத்தோம்-நின்றார்கள்-தொண்டர்கள் எல்லோரும் திரும்பினோம் பாசறைக்கு.

"இன்னமும் உள்ளே சென்றவர்களுக்குச் சாப்பாடு கொடுக்கவில்லை" என்று சொல்லிக்கொண்டே ஓடி வந்தார், ஒரு தோழர். கடிகாரத்தைப் பார்த்தார், மணி. ஒரு மணி அப்போது,

"இதோ போகிறேன்" என்றெழுந்தார் தர்மலிங்கம்.

"எனக்கு நேரமாகிவிட்டது" எனத் துடித்தார் கண்ணதாசன்.

"இருங்கள்; சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" எனத் தடுத்தார் சிற்றரசு.

"வேண்டாம். தண்ணீர் மட்டும் கொடுங்கள், போதும்" என்று விடாப்பிடியாகநின்றார் கண்ணதாசன்.

"உள்ளே இருப்பவர்களுக்கே போலீஸ் இன்னும் சாப்பாடு போடவில்லை; நீங்களும் போய் ஏன் பட்டினி கிடக்கவேண்டும்?"

ஒரே கூட்டம். எல்லோரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்-சிரித்தார்கள்-என்னைஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்று அலுத்துக் கொண்டார்கள்-நான்காவது படை எப்போது போவது என்று அப்போதே கேட்டார்கள். ஆனால் ஒருவராவது சாப்பிட வேண்டும் என்று கவலைப்படவேயில்லை! எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு இறுதியில் உணவைப்பற்றிக் கவனிக்கலாம் என்று நினைத்தார்களோ என்னவோ! இழவு வீட்டின் சாயல்...... இப்போது அழுகிறேன், அப்போது தோன்றவில்லை எனக்கு;

வந்தது. கடைகளில் நிழலுக்கா ஒதுங்கி நின்ற மக்களும் சேர்ந்து கொண்டனர். காலத்தின் ஏடுகளில் கல்லக்குடி போராட்டத்தைப் பதிய வைக்கக் காரணமான அந்தப் படையினர் குரல் கொடுத்துக் கொண்டே நடந்தனர்.

வெய்யில் கொதித்துக் கொண்டிருந்தது; வெப்பம் தாங்க முடியவில்லை; ஆனால் குரல்கள் ஓயவில்லை. நடந்தோம். தெருவைத் தாண்டி, கடை வீதியைக்கடந்து, கற்சுவரை நெருங்கி-நிழலிலே சிறிது ஒதுங்கி-ரயில்வே ஸ்டேஷனை அடைந்தோம்.

பெற்றவள் பேசினள்!

ஐயா! அவனுக்கு வயது இருபத்தைந்துதான். அதுவும் அவன் ஒரே ஒரு மகன்தான். அவனை திருமணக் கோலத்தோடு பார்க்க ஆசைப்பட்டேன். ஆனால் அவனை பிணக் கோலத்தில் பார்த்ததிலிருந்து பற்றி எரிகிறதே, இந்தப் பெற்ற வயிறு.

★ குலதர்மக் கல்வியைக் குழிதோண்டிப் புதைத்தனர்!
★ 'நான்சென்ஸ்' நேரு நாவடக்கம் பெற்றுவிட்டார்!
★ பழித்தவர் முன்னே அழித்து ஒழித்தனர்!

அந்த ரயில்வே ஸ்டேஷனில் மூன்று இரும்புப் பாதைகள், முதல் பாதை ஸ்டேஷன் கட்டிடத்தை ஒட்டியது-அதன் அருகே இரும்புத் தகடுகள் பதித்த வேலி-அதை யொட்டி ஒரு இரும்புப் பாதை-அதனெதிரே இன்னொன்று. இரண்டாவது இருப்புப்பாதையை அடைய வேண்டுமானால் மேல் பாலத்தில் ஏறி இறங்க வேண்டும்.

இரண்டாவது பாதையில் ஒரு கூட்ஸ் வண்டி நிறுத்தப் பட்டிருந்தது. முதல் பாதையில் ஸ்டேஷனுக்கு காபினுக்குமாக இன்னொரு கூட்ஸ் வண்டி நின்றது.

டி. கே. சீனிவாசன்

அந்த கூட்ஸ் வண்டியை யொட்டி ஸ்டேஷனுக்கு வெளிப்புறம் நோக்கி ஆயுதந் தரித்த போலீசார் அணிவகுத்து நின்றனர்-எவரும் தண்டவாளத்தை நெருங்காமல் தடுக்க, ஒரே பக்கமாகத்தான் ஸ்டேஷன் கட்டிடத்துக்குள் நுழையமுடியும்-எதிர்ப்புறமாக வராமல் தொழிற்சாலையின் கம்பிகள் [illegible]

லோரிடமும் 'டிக்கட்டு'கள் இருந்தன

வெளியே ஸ்டேஷன் முகப்பில் இருந்த 'டால்மியாபுரம்' என்ற பெயர்மேல் 'கல்லக்குடி' என்று அச்சிட்டதாளை ஒட்டினர், தோழர்கள்.ஏணி உயரம் போதவில்லை. கண்ணதாசனுக்கே கையெட்டவில்லை. தாறுமாறாக ஒட்டினார்—பிறகு உள்ளே நடந்தனர்.

கைகாட்டி இறங்கியது — எல்லோரும் வண்டி வரும் பக்கம் கவனித்தனர். தொண்டர்கள் போர்டின் பக்கம் நின்றனர்.எதிர் வரிசையில் ஜனத்திரள் தொழிற்சாலைக் கட்டிடத்தின் உயரே —ஏறத்தாழ 500 அடிகளுக்குமேல் —தொழிலாளர்கள் அணிவகுத்து நின்றனர். ஏதோ சிறு சிறு கோடுகள் போலத் தோன்றினா அவர்கள்.

வண்டிவந்து நின்றது. தண்டவாளத்துக்கும் தொண்டர்களுக்கும் இடையே எஞ்சினோடு சேர்ந்து நகர்ந்துவந்து குறுக்கிட்டு நின்றனர், ஆயுதந்தரித்த போலீசார்.

ஓங்கி அறைந்தார் ஒருபோலீஸ் அதிகாரி கண்ணதாசனை; மயங்கி ஒருமுறை சுழன்றார் கண்ணதாசன். தடியால் தாக்கத் தொடங்கினர், தொண்டர்களை போலீஸ்

"அடிக்காதே! அடிபடுவாய்!!" எனக் கூவினர் மக்கள்

முன்னால் வந்த போலீஸ் அதிகாரி எட்டி ஒரு உதை விட்டார், கண்ணதாசன் நெஞ்சில்; இழுத்துத் தண்டவாளத்துக்கு அப்பால் எறிந்தார், தடியாலடிக்கத் தொடங்கினார்கள் உடனே.

கூட்டம் கொதித்தது. மனிதன் மிருகம் ஆனான்-இல்லை, ஆக்கப்பட்டான்! தன்னை மறந்தான்-நினை விழந்தான்-தன் வாழ்வைத் தூர வீசி எறிந்துவிட்டு செயலில் இறங்கினான். பறந்தன கற்கள்; ஓடி மறைந்தனர் போலீசார்.

வண்டி ஊதிக் குரல் கொடுத்தது. நகர்ந்தது. சுட்டார்கள்—

(8-ம் பக்கம் பார்க்க)

'இனமுழக்கம்' சந்தா விபரம்

★

ஆண்டு சந்தா ரூ. [illegible]
அரை ஆண்டு சந்தா ரூ. 4[illegible]
வெளியூர் [illegible]
வில[illegible]

2

சென்ற இதழில் இரணசிங்கன் கோட்டையில் நால்வரை அறிமுகப்படுத்தினேம். இந்த இதழில் ஒன்பதுபேரை அறிமுகப்படுத்தியிருக்கிறேம். ஆகமொத்தம் பதினுன்கு பேர்களையும் மற்றவர்களையும் கொண்டதாகத் தொடர் ஓடினுலும் குறிப்பாகமேற்சொன்ன பதினுன்கு பேர்களையே மையமாகக் கொண்டு சுற்றி வருகிறது.

6. **கஞ்சதாசன்** இவன்தான் மாளிகையில் எந்த நேரத்திலும், எந்த இடத்திற்கும் போய்வரக்கூடிய சுதந்திரம் பெற்றவன். வேதியன். ஆகையால் அரண்மனையில் தொடங்கும் எந்த வேலையையும் இவனைக் கேட்காமல் தொடங்கமாட்டார்கள். இவனைக்கேட்காமல் தொடங்குகிற வேலைகள் எதையும் வெற்றி பெருமல் செய்து, வேதியரின் ஆசிக்குண்டான வன்மையிதுவென நிலைநாட்டத் துடிப்பான். தன் இனத்தை எந்தெந்த வகையில் கோட்டைக்குள்ளே நுழைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டானே, அதில் முழுத்தோல்வியே கண்டான். அதனுல் இவன் தன்னை ஒரு சாணக்கியன் என்று கருதிகாரியத்தில் இறங்கினுன். இவன் முடிவை இவனே தேடிக் கொண்டதாயிற்று.

6. **புரவிமாடன்**: இவன் அரண்மனைக் குதிரைகளை வளர்ப்போன். நன்றியுள்ளவன். என்ருலும் அறியாமையால் செய்த தவறுக்காகக் கண்டித்துத் தண்டிக்கப்படுகின்ருன். பிறகு ஒரு நல்ல உள்ளத்தால் மன்னிக்கப்பட்டு விடுதலையடைகிருன். பிறகு யாரால் சிறைச்சாலையிலிருந்து விடுதலைப் பெறுகிருனே அவர்களாலேயே சிறைச்சாலை வாயலிலே மீண்டும் கைது செய்யப்படுகிருன். அன்று மறுநாளே மீண்டும் விடுவிக்கப்படுகிருன்.யாரால்? எதனுல்? என்ருலும் சாகும் வரையிலும் குதிரை லாயமே சதமென வாழ்கின்ருன்.

பூங்குழல்: இவள் மேற்சொன்ன புரவிமாடன்மகள்—இவளால் குதிரைக்காப்போன் நிலமை உயருகிறது. உலகம் வியக்கிறது. இவள் வேகவைத்த எதையும் சாப்பிடுவதில்லை. ஏன்? பிறகு என்னதான் சாப்பிடுகிருள்? படிக்கக் குருகுலம் போனுள். பலதைப் படித்தாள். ஆனுல் படிப்புதான் வரவில்லை. கல்வியில் என்ன இருக்கிறது என்று வாதாடுவாள் வயதானவர்கள் இவளிடம் குடும்பம் நடத்த யோசனை கேட்பார்கள். ஆனுல் இவளுக்குக் குடும்பமே இல்லை. இவளைக் கட்டிக் கொள்ளும்காளை யார் என்பது தான் ஊரெல்லாம் பேச்சு,

பூங்குழல்

எனினும் தக்க வயதில் திருமணம் நடைபெறுகிறது. யாரோடு?

7. **சித்திரவேலு:** சமையற்காரன். இவன் சமையல் செய்யும்முறையேஅலாதி.இவனுக்குக்கீழ்வேலைசெய்பவர்கள்பத்துப்பேர்கள்.அடுப்பின் பக்கத்திலேயேபோகமாட்டான்.என்ருலும் எந்தெந்தபண்டத்தில் என்னென்ன குறைவாக இருக்கிறதென்று வாயில் போட்டுசுவைத்துப்பார்க்காமலேயேசொல்லிவிடுவான்.இவனுக்கு நான்கு ஆண் குழந்தைகள்; நான்கு பெண்குழந்தைகள். இதோடு இரண்டு குழந்தைகளை வளர்க்கவேண்டிய நிலையிலிருக்கின்ருன், இவன் சமையற்காரன். அதுவும் அரண்மனையில் - என்ருலும் குழந்தைகளுக்குப் போதிய உணவு இவனுல் அளிக்கமுடியவில்லை. இவன் மனைவி ஆவணியம்மாள்வருத்தப்படுகிருள். நேர்மைக்கும் பாசத்திற்கும் நெடும்போர். உணவில்லாமல் இரண்டு குழந்தைகள் சாகும் தருவாயில் இருக்கின்றன. முடிவென்ன? நெஞ்சத்தை கல்லாக்கிக்கொண்டு கவனிக்க வேண்டியதுதான்,அந்தச்சங்கடமான கட்டத்தை. இவனை ஊரில் நடக்கும் திருவிழாவுக்கு வரும்படி நண்பர்கள் வற்புறுத்துகிருர்கள். தான் அன்ருடம் ஒரு கடவுளைக் காண்பதாகச் சொல்லி திருவிழாவுக்குப் போக மறுக்கிருன். அது எந்தக் கடவுள்? காண்பதெல்லாம் கடவுள் என்ருல், தான் அன்ருடம் காணும் காய்கறிகளும் கடவுள்தானே என்று வாதிட்டிருப்பான் என்றெண்ணுகிறீர்கள்அல்லவா? அதுவும்இல்லை. பிறகுஎது என்பதைத் தெரிந்துக்கொள்ளத்தானே போகிறேம்.

8. **சந்தனத்திருமேனி** இவர்தான் முதலமைச்சர். எவ்வளவோ கற்றிருந்தும் நாவடக்கமும் அவையடக்கமும் உள்ளவர். எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசன் தவருன வழியில் போகக்கூடாதென்று நினைத்து அதற்காக முழுமையாக முயற்சிப்பார். என்ருலும்சிலநேரம்அரசனின் பிடிவாதமும் மூர்க்கத்தனமும் இவரைவேதனையிலாழ்த்தும். என்ருலும் தவருமல் நிலமையைசமாளிப்பார். அரசனை எப்படியாவது வெளியேற்றிவிட்டு இவரையே அரசனுக்கப்பெறுமுயற்சி நடந்தது. முயற்சிமாத்திரமல்ல, பெரும் புயலே கிளம்பியது. என்ருலும் தன் நாவன்மையால் புயலையடக்கி மன்னனைக் காப்பாற்றுகிருரா அல்லது தானே அரசன் ஆகிருரா? ஆசையாரைவிட்டது.ஆசைஎன்ருல் என்ன? ஒன்றை அடைவது மட்டிலுமா? அது வேண்டாமென்று சொல்வதும் உள்ளத்திலெழும் ஆசைதானே என்ற வாதங்கள் பலமாக நடக்கிறது, சபா மண்டபத்தில். இந்தவாதத்தில் யார்வெற்றி பெறுகிருர்கள்? இதுவேகதையின்உச்ச[illegible]வும்இருக்கலாமல்ல[illegible]போதே முடிவுகட்டி[illegible].

9. **நைனுமலை** இவன் மல்யுத்த வீரன். இவன் வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கிருன். இவன் வீரனுக இருந்தும் மன்னன் இவனைப் போர்க்களம் அனுப்பசம்மதிப்பதில்லை. இது இவனுக்குப் பெருங்குறைதான். காரணத்தைக் கண்டறிய பலமுறை மன்னனின் சபா மண்டபத்தில் மன்ருடிப் பார்த்தான். இவனிடம் சரியான காரணம் சொல்ல மறுக்கிருன் மன்னன். ஆனுல் மந்திரியிடம் மட்டும் இரகசியமாகச் சொல்லிவைக்கிருன். மல்யுத்த வீரனைப் போர்க்களத்திற்கனுப்பாததை எண்ணி ஊரார் இவனை பலவீனன் என்று கருதி கைவரிசைக் காட்டத் தொடங்குகின்ருர்கள். அவர்களில் இருவர்பட்டபாடு நம்மை மெய்சிலிர்க்க வைக்கும். எப்படியும் போர்க்களம் செல்ல வேண்டுமென்ற உரிமையை யாரிடம் பெறுகிருன். போர்க்களத்தில் இவன் நிலை என்ன வென்பதை எல்லாம் காணப்போகிறேம்.

தலைமைக் கழக அறிக்கை: 10/60

தி. மு. கழகச் சட்ட திட்டம்.

விதிமுறைகளில் திருத்தங்கள்

1960-ம் ஆண்டு ஜுன் திங்கள் 18, 19-ம் நாட்களில் குமாரபாளையத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்குழுவில் திருத்தப்பட்ட சட்டதிட்டத் தேர்தல் விதிமுறைகளுக்கேற்ப நகரக் கிளைகள், பெருநகரக் கிளைகள், வட்டக் கழகங்கள், மாவட்டக் கழகங்கள், தலைமைக் கழகம் ஆகிய அமைப்புக்களின் தேர்தல்களில், கீழ்க்கண்டுள்ள திருத்தங்களைத் தேர்தல் ஆணையாளர்களும், கழக உறுப்பினர்களும் மேற்கொள்ளக் கேட்டுக் கொள்கிறேம்.—

திருத்தம் 1 :

சட்டதிட்டம்—விதி 29: பிரிவு 5

சிற்றூர்க் கிளைகள்,பேரூர்க் கிளைகள்,பெருநகர உட்கிளைகள், அலுவலாளர்கள் தவிர்த்து கழகத்தின் மற்ற எல்லா அமைப்புக்களின் அலுவலாளர் பதவிகளுக்கும், பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கும் தேர்தலில் நிற்க விரும்புபவர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது தொடர்ந்து உறுப்பினராயிருந்திருக்க வேண்டும்......

திருத்தம் 2 :

தேர்தல் விதிமுறையில் மாற்றம்

பாராளுமன்றம், சட்டமன்றம், ஊராட்சிமன்றம் ஆகியவைகளில் உறுப்பினராயிருப்பவர்கள் பொதுச் செயலாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இரண்டில் ஒன்றிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் விலகிவிட வேண்டும்

குறிப்பு: இத்திருத்தம் நடைமுறைப் பழக்கம் (Convention) என்பதற்குப் பதிலாக சட்டதிட்டம்—விதி 29: பிரிவு 14 ஆக இடம் பெறுகிறது.

'அறிவகம்' சென்னை-13
9...7...1960

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர் தி. மு. க.

இவனைப் போர்க்களத்திற்குப் போகச் சொன்னவர்களுக்கும் மன்னனுக்கும் எத்தகைய வாதங்கள் நடைபெறுகின்றன என்பதில் நாமே தீர்ப்புக்கூற முடியாதவர்களாகிறோம். செஞ்சோற்றுக் கடன் என்றால் என்ன? என்பதே இவன சிந்தனை. இவனிடம் பயிற்சி பெற்ற அனைவரும் இவனைப் பாராட்டிப் பரிசளிக்கிறார்கள். அந்தப் பரிசு எதுவாக இருக்கும். எங்களுக்கே விளங்கவில்லை என்பீர்கள். இனமுழக்கத்தைத் தவறாது படிப்பதன் மூலம் எப்படி விளங்காமல் போகும் பார்க்கலாம்.

10. **விருதுபாண்டிய**ன் இவன் வீராணக் கோட்டைக் கதிபன். ஊழிவெள்ளத்தின் பகைவன். மக்களைக் கொல்லாமல் படை வீரர்களையே கொல்ல வேண்டுமென்று நினைக்கிறான். அதன்படியே ஆணையிடுகிறான். என்றாலும் பொது மக்கள் பலர் சாகிறார்கள. இதைக் கண்ட இவன் நிலை, தர்மப் போர் என்ற வார்த்தைக்கு புதுக் கருத்தைக்காண விழைகிறான். உயிர்களின் முடிவை யார் முடிவுசெய்கிறார்கள் என்பதே இவன் சிந்தனை. பெற்றவர்கள் குழந்தையைக் கொல்லுவதையே குற்றமென்கிற போது வேறு யார கொன்றாலும் குற்றம்தான் என்று இவன் எங்கிருந்து பேசுகிறான் என்பதைக் கவனிப்போம், அரசியலுக்கும், ஆன்மார்த்தீக வாதத்திற்கும் ஏற்படுகிற சிக்கலிலே கிடந்து உழல்கிறான். இவன் மன்னன் ஊழி வெள்ளத்தின் மேல் படை எடுத்ததற்கு என்ன காரணம்? கவனிப்போம்.

11. **வளர்மதி** இவன்தான் ஊழி வெள்ளத்தின் மகன். இவனுடைய பதினேழாவது வயதிலேதான் தந்தையை இழந்து விடுகிறான். இவன் அரியாசன மேறுவதற்கு முன்னால் இரணசிங்கன் கோட்டை பகை பலத்தால் சூழப் படுகிறது. கோட்டையிலிருந்தோர் யாருமேதுரோகிகளாக மாறவில்லை. எனினும் கோட்டையில் பிறர் நடமாடினார்கள். இப்படி ஒரு சாதகம் இந்தக் கோட்டைக்கு உண்டென்று வாதாடுகிறான் வேதியன் கஞ்சதாசன். இந்த வாதத்திலிருந்து ஒரு தெளிவு பெறுகிறான் வளர்மதி. பெரிய விவாத சிக்கலிலேதன் மகன் அகப்பட்டுக் கொள்வதும் அதுவும் வேதியன் கஞ்சதாசனுடைய பகையைத் தேடிக் கொள்வதும் சங்கேந்திக்கு வேதனையாகத்தான் இருக்கிறது. என்றாலும் சில சமயங்களில் தன் மகன் அறிந்தோ அறியாமலோ நடத்தும் வாதங்கள் மெச்சத் தகுந்ததாயும் அதே நேரத்தில் மிக்க பயங்கர முடையதாகவும் இருக்கிறது. கஞ்சதாசன்தான் இவனுடைய ஆசான். என்றாலும், ஆசிரியர் கேள்வி கேட்பதற்குப் பதிலாக இவனே ஆசிரியரைக் கேள்விகள்கேட்கிறான்.

இவனுக்கு இயற்கையாகவே வாதத்தில் திறமையிருந்த அளவுக்கு அரசியலில்திறமையைப் பெறுவானா என்ற சந்தேகம்இருந்ததுதாய் சங்கேந்திக்கு.ஏனெனில் தன் தந்தையின் முடிவுக்குப் பிறகு மனம் சலித்துப்போன ஒரு வயோதிக உள்ளத்தையும்பற்றற்ற நிலையையும் அடைந்து கொண்டிருந்தான். இவனுடைய வருங்காலக் கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்த இரணசிங்கன் கோட்டையின் ஒவ்வொரு கல்லுக்கும் பேச வாய் இருந்தால் என்ன பேசி இருக்குமோ—

தந்தைக்கேற்பட்ட நிலையை எண்ணி அரியாசனமேற மறுக்கிறான். தாய் வற்புறுத்துகிறாள். மக்களிலே ஒரு சாரார் வேண்டுமென்கிறார்கள். மற்றொரு சாரார் வேண்டாமென்கிறார்கள் மக்கள் மனம் ஒன்றுபடுகின்ற வரையில்தான் சிங்காதன மேறுவது புரட்சிக்கு வித்தூன்றியதாகும் என்கிறான். அதுவரையிலும்நாட்டையார் ஆளுவது. மக்கள் யார்? எத்தகையவர்கள்? எந்த அளவுக்கு அந்தக்காலஅரசியலைப் புரிந்தவர்கள் மக்கள் வாக்குகளுக்கு எந்தஅளவு பெருமையிருக்கிறது. மன்னன் மகேசனாக நடத்தப்பட்டால் அந்த மணி மண்டபத்தில் மக்களை எப்படி நடத்த வேண்டும். அல்லது மக்களுள் ஒருவனாக மன்னன் தன்னை எண்ணிக் கொண்டால், மக்கள் எப்படி கருதப்படுவார்கள், கருதப்பட வேண்டும்என்ற வாதம்அமைச்சருக்கும் சீராளனுக்கும் பலமாகநடக்கிறது.முடிவென்ன? இந்த வாதத்தில் யார்வெற்றி பெறுகிறார்கள். இந்தச் சிக்கலுக்குள் எதிரிகள் நுழைய இடமுண்டா என்பதை சீராளனின் நடை முறையும், துணிவும் விளக்குகிறது. தன் தந்தையின் வாழ்க்கை முறைகளில் பலவற்றைத் தெரிந்து கொள்ள விரும்பிபடுதோல்வியடைகிறான். அப்படியானால் மன்னன் ஊழிவெள்ளத்தின் வாழ்க்கை முறைகள் ஒத்துவராதுஎன்பதல்ல,பல ஒத்து வரக்கூடாது என்பதால் தடுத்துநிறுத்தப்படுகிறான். அவ்வளவுதான்.

12பூதப்பிடாரன் இவன்தான் மந்திரவாதி. அரிய பெரிய சாதனைகளைச் செய்து காட்டி அரண்மனையிலுள்ளோரை எல்லாம் பயமுறுத்தி வைத்திருக்கிறான். ஒர் நாள் இவன் மந்திரங்களும் தந்திரங்களுமே இவனைக் கை விட்டு விடுகின்றன. வேடம் கலைந்த பின் வியக்கிறார்கள். இவன் எல்லாமே மந்திரத்தால் ஆகும் என்கிறான். இருவர் தவிர மற்றவர்கள் இதை நம்புகிறார்கள். நம்பாதவர்கள் நாசமாவார்கள், நாதனுக்குப் பகைவர்கள் என்றெல்லாம் சரமாறியாகப் பேசுகிறான். உண்மை உண்மை என்று உடுக்கையடிக்கிறான் வேறொருவன். அவன் யார்? மந்திரங்கள் மதியைப் பொறுத்திருக்கிறதா—விதியைப் பொறுத்திருக்கிறதா என்ற வாதம் விண் முட்டக்கிளம்புகிறது. மந்திரத்தால் நன்மையுண்டா இல்லையா என்பதை மன்னன் அறிந்திருந்தான். எனினும் மந்திரவாதி இருந்து போகட்டும் என்று தன் கருணை உள்ளத்தில் இடந்தந்தான் மன்னன். அதையே கைமுதலாக வைத்துக்கொண்டு கண்டபடி ஆடினான்.

13,நாகமன் இவன் சங்கேந்தியின் இளவல். சீராளனின் தாய் மாமன். மகா திமிர் பிடித்தவன். இவனுக்கு ஓர் மகள். ஆளுந்திறனுடையவனுக்குத் தன் மகளைக் கொடுப்பதைவிட ஒரு மேதைக்குத் தர வேண்டுமென்று நினைத்து ஒரு படு முட்டாளைத் தேர்ந்தெடுக்கிறான். எனினும் தன் முடிவை மாற்றிக் கொண்டால் ஊர் சிரிக்குமே என்று நினைத்து தன் மருமகனை மேதையாக்கமுயற்சிக்கிறான். படுதோல்வி. பெற்றோர் தேர்ந்தெடுக்கும் காளைக்கு மாலையிடுவதை விட தாங்களே தேர்ந்தெடுப்பதுதான் நல்ல தென்ற முடிவுக்கு பெண்கள் வராத காலமாகையால் வாழாமல் வாழுகிறாள். நாகமன் மகள் நந்தா விளக்கு,

14. **அறிமுகப்படுத்தக் கூடாதவன்**. இவன்யார்என்பதை கதையே சொல்லும்.

மேற்சொன்னவர்கள்தான் தொடரின் முக்கியமானவர்கள். மற்றவர்களை அவ்வப்போது அறிமுகப் படுத்துவோம்.

அடுத்த இதழில் நாம் அனைவரும் இரணசிங்கன் கோட்டையின் மணிமண்டபத்தில் நடக்கும் விசாரணைகளைக் கவனிப்போம். வாருங்கள்.

"அன்னை" இதழ்

உதவி நிதிக்காக!

சென்னை ஒற்றவாடை தியேட்டரில்

6-8-'60 சனி மாலை 6 மணிக்கு

அறிஞர் அண்ணா

அவர்கள் தலைமையில்

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி

அவர்கள் குழுவினர் அளிக்கும்

"தமிழ் வாழ

தலை கொடுத்தான்"

(என்ற புதிய வரலாற்று நாடகம் நடைபெறும்)

காணத் தவறாதீர்கள்!

நுழைவுக் கட்டணம்:

ரூ. 10, 5, 3, 2, 1.



★ ஓங்காரக் கூச்சலுக்கு ஒத்திகை பார்த்த ஓநாய்கள்!
★ அடக்கமுயன்ற போலீசார் அடங்கிப் போயினர்!
★ வேட்டுச் சத்தத்தால் விளைந்த விபரீத வரலாறு!

[5ம் பக்கத் தொடர்ச்சி]

துப்பாக்கிகள் வெடித்தன—பதினைந்து நிமிடங்கள்.............. தொடர்ந்து சுட்டுக்கொண்டே இருந்தார்கள்.

"சுடுகிறார்கள்!"

ஒருவர் கூறினார்—ஒரு சிலர் எதிரொலித்தனர். என் மூளையின் சாரம் தாக்கியதைப் போல அதிர்ந்தது. இரத்த நாளங்கள் இறுகி ஓட்டத்தைக் கட்டுப்படுத்தின.
"இல்லை! நம்மை ஏமாற்றுகிறார்கள்!"

படமெடுத்து நிற்கும் பாம்பை பற்றியிழுக்கச் செல்லும் பயமற்ற பச்சிளங் குழந்தைகள் போல நின்றனர் மக்கள். ஓடவில்லை—ஒளியவில்லை, ஒதுங்கி நின்றனர்!

காலில் குண்டடிப்பட்ட ஆடு ஒன்று துள்ளிக் குதித்தது.

"ஐயோ! உண்மையிலேயே சுடுகிறார்கள்!" என்றலறினார் ராபி.

"நீங்கள் திரும்பிப் பார்க்காதீர்கள்; ஒதுங்கி நில்லுங்கள்" என்று கண்ணதாசனைக் கையைப் பிடித்து இழுத்தார் சிவப்பிரகாசம்.

யாரைச் சுடுகிறார்கள்?"

"நம்மைத்தான்."

"ஏன் சுடுகிறார்கள்?"

அங்கிருந்த அனைவருமே இந்தக் கேள்வியைக் கேட்டார்கள்—விடை தர எவருக்கும் தெரியவில்லை. ஆதரவற்ற அனாதையானது, அந்தக் கேள்வி.

"நாம் என்ன செய்தோம், நம்மைச் சுடும்படி? கட்டுப்பாடும் அமைதியுமாகத்தானே நம் தொண்டர்கள் நடந்து கொண்டார்கள்? உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஒதுங்கியிருந்துதானே கவனித்தனர் மக்கள்; போலீசார் தானே தொண்டர்

"நாங்கள் இரையாகிறோம். அந்தக்குண்டுகளுக்கு. எங்களை விடுங்கள். மிச்சம் மீதிகூட விட்டுவைக்காமல் அவர்களை அழித்து விடுகிறோம்"

தாள் பிடித்தோம்-அவர்களைத் தடுத்து நிறுத்தினோம், அப்போதுதான் ரயில் வண்டி எங்கள் பார்வையிலிருந்து மறைந்தது.

அதற்குள் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தவர்களுக்கு சாப்பாடு கொடுத்துக்கொண்டிருந்த அம்பில் தர்மலிங்கம் ஓடிவந்தார். அங்கேயிருந்த 'ரைட்டர்' அவரை அனுப்பினாராம்-"ஓடு தர்மு; விரைவில் ஓடு.விபரீதம் நேர்ந்து விட்டது" என்று அலறித்துடித்தாராம்.

ஒரே அமைதி-தோழர்கள் முகங்களிலே அவதி-போர்ப்பாதையான புகைப்பாதை சவப்பாதையாகக் காட்சியளித்தது! இரத்தம் கசிந்துக்கொண்டிருந்த தோழர்கள்-மயங்கி விழுந்து கிடந்த மனித உடல்கள்-அடிபட்டு அங்கங்கள் துண்டுபட்டு விழுந்த அறப்போர் துணைவர்கள்?

எடுத்துத்தூக்கி வந்தோம்,ஒவ்வொருவரையும். உதவிக்கு யாருமில்லை; ஒதுங்கவோ கட்டிடங்கள் எதுவும் அருகில் இல்லை.

சிற்றரசு—முத்துகிருஷ்ணன்—ராபி-சிவப்பிரகாசம்- தர்மலிங்கம் ஒவ்வொருவர் தோள்களிலும் துளை போடப்பட்ட மனிதர்கள்.

கருணாநிதியின் கார் இவர்களை ஏற்றிக்கொண்டு பறந்தது லால்குடிக்கு-கல்லக்குடி ஆஸ்பத்திரியில் போலீஸ்காரர்கள் பாதிக்கப்படாத அங்கங்களுக்குக் கட்டுப்போட்டுக் கொண்டிருந்தனர்; அதனால் அங்கே இடமில்லை.

தந்திகள் பறந்தன. முதன் மந்திரிக்கு-போலீஸ் சூப்பிரண்டுக்கு-விக்ரவாண்டி கோவிந்தசாமியின் சட்ட சபை விலாசத்துக்கு. இரண்டு நாட்கள் கழித்து கோவிந்தசாமி தனக்கு அனுப்பப்பட்ட தந்தி மறுநாள் கிடைத்ததாகத் தகவல் தெரிவித்தார், ஆச்சாரியாரிடம்!

"இல்லை" என்று வெட்கமும் வேதனையுமாக என்னைப் பார்த்தார்.

எங்கே அடிபட்டது என்பதை உடனே புரிந்து கொண்டேன்!

துண்டிக்கப்பட்ட உடல்கள் லால்குடியில் இருந்தன—துடித்துக் கொண்டிருந்த உள்ளங்கள்

எத்தனை காலத்துக்கு இருக்குமோ-முடிவு...?

"அடுத்த படை எப்போது புறப்படுவது?" என்று கேட்டார், ஒரு தோழர்.

செயலாளர் மணி தயாரித்த பட்டியலை போர்த் தளபதி சிற்றரசுவிடம் நீட்டினார்.

"இப்போது வேண்டாம்; நாளை பார்த்துக் கொள்ளுவோம். இந்தப்படை கிளம்பினால் அது பெயரழிப்பு போராட்டமாக இருக்காது—டால்மியாபுரம் என்ற ஊரையே அழித்து விடுவார்கள்', என்றார் சிற்றரசு.

கொதித்துக் கொண்டிருந்த விழிகளில் நிறைந்திருந்த கோப

இருந்தனவாம்.மூன்றாவது பெட்டியிலே இருந்தவர்களாம், அவர்கள், செத்தார்கள் என்றவுடன் சீறி எழுந்தனர், தொண்டர்கள்.

"முடியாது அண்ணா! இனி எங்களைக் கட்டுப்படுத்த உங்களால் முடியாது அணிவகுப்புக்கே எங்களோடு துணையிருந்த தோழர்களைப் பிணங்களாக்கி விட்டு, பொம்மைகள் போலவா இருக்கச் சொல்கிறீர்கள் எங்களை? விடுங்கள், எங்களை! வடநாட்டு மார்வாரி ஒருவனுக்காக வக்காலத்து வாங்கி தென்னாட்டு மக்களை-தீரத் தமிழர்களை—தோய்ந்தாலும் தெம்பு குறையாத திராவிடரை—ஒரு சர்க்கார் சுட்டு வீழ்த்துவ

துவண்டிருந்த தோள்கள் துடித்தெழுந்தன!
பதுங்கிக் கிடந்த புலிகள் பாயத்தொடங்கின!
அலட்சியப்படுத்தியோர் அதிர்ச்சியுற்றனர்!

கல்லக்குடியில்கண்ணீர் சிந்தின. அந்தக் கண்ணீர்த் துளிகள்......! துடித்துக் கொண்டிருந்த ஜீவ அணுக்கள் நிறைந்த செங்குருதி. கொதிப்பேறி விழிவழியே வழிய விட்ட வெந்நீர் ஊற்றுங்கள்! அதுதான் தொடக்கம்-தொடர்ச்சி

மும் கோரமும் அவர் நெஞ்சைப் பிடித்துக் குலுக்கித் தானிருக்க வேண்டும்.

நாலு மணி இருக்கும்.லால்குடியிலிருந்து அந்தச் செய்தி வந்தது. புறப்பட்டுப் போன ரயில் வண்டியில் இரண்டு பிணங்கள்

தா? மரண ஓலைகளில் கையொப்பமிட்டு விட்டுத்தான் இங்கே வந்திருக்கிறோம். தடுக்காதீர்-தன்மான உணர்ச்சியைத் தேக்கி நிறுத்தாதீர்!" என்ற ஒலி இன்னும் கேட்கிறது. இனி, என்றும் கேட்கும்!

★ கல்லக்குடியிலே.... படமெடுத்திருக்கும் பாம்பை, பற்றியிழுக்கச் செல்லும் பயமற்ற பச்சிளங் குழந்தைகள்போல் குவலயத்தின் சொந்தக்காரர்கள்நின்றிருந்தனர். ஓடவில்லை - ஒளியவில்லை- புரட்சிக் குரலைபுதுப்பண்ணமைத்துப் பாடிக்கிடந்தனர்.

களை தாக்கினர் தடியால்-கூட்ஸ் வண்டியோடு அவர்கள் தலைகளை மோதினர்-பூட்ஸ் காலால் மிதித்தனர்-நெஞ்சில் எட்டி உதைத்தனர்-பற்கள் உதிர அறைந்தனர்! காலை முழுவதும் மனிதர்களாக இருந்தவர்களை அந்தக்கடும்வெய்ல் மிருகங்களாக ஆக்கினவர்கள் அவர்கள் தானே! பின் ஏன் அடிக்கிறார்கள்? அடிபட்ட ...ிதனைக் கட்டிவைத்து விட்டு, ...த நாய் அவனைக் கல் ...ா?"

... பீரங்கிக ... வெடித்

பாசறையில் அமர்ந்திருந்தோம். பிள்ளைகளைச் சாகக் கொடுத்தவர்கள் கூட அப்படிப் பிதற்றியிருக்கமாட்டார்கள். அழுதனர்-அலறினர்-அவலக்குரல் நிறைந்து காணப்பட்டது பாசறை

ராபி நொண்டிக் கொண்டு நயந்து வந்தார். பரிதாபமாக இருந்தது எனக்கு.

"ஏன் நொண்டுகிறீர்கள்? கல் குத்தி விட்டதா? என்று கேட்டேன்.

"இல்லை 'லத்தி'யால் குத்தி விட்டார்கள்; வலிக்கிறது" என்றார்.

"காலிலா தாக்கப் ...

THE SCHOOL OF ENGLISH LEARNING
ஆங்கிலக் கல்வி நிலையம்
60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



சிந்தித்துப் பதில் சொல்வீர்!

அஞ்ஞானத்தின் அந்தகாரச் சுழலில் சிக்கிச் சீரழிந்த அக்கால மனிதர் கையாண்ட சிகிச்சைமுறை பிணியாளரைப் பீதி கொள்ளச் செய்தது.

விஞ்ஞானச் சுடர் ஒளியில் தெளிவு பெற்ற இக்காலச் சிகிச்சைமுறை பிணியின் பிடியைப் பக்குவமாகத் தளர்த்துகிறது.

இதுபோன்று மருத்துவத் துறையில் மட்டும் அல்ல, மற்றும் மார்க்கத் துறையிலே, சமுதாயத் துறையிலே. அரசியல் துறையிலே, ஆக ஒவ்வொரு துறையிலேயும் மனிதன் படிப்படியாக முன்னேறிக் கொண்டே வருகிறான்.

இந்த முன்னேற்றத்திற்கு ஆதாரமாக நிற்பது அவன் ஏற்படுத்திக்கொண்ட மொழியும், அதனால் அவன் பெறும் கல்வி யறிவுமே யல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் (தபால் மூலம்) கற்கலாம்

சேர கடைசி தேதி: 9-8-60 } பயிற்சிகள் ஆரம்பம்: 11-8-60

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப் படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சியளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 நயா பைசா தபால் தலை அனுப்பிப் பெறுக.

மாறும் உலகம்

★ சட்டமும் நீதியும் கண்கள் போன்றவை!

★ அவற்றை அழித்தொழிக்க முனையாதீர்!

★ அநீதிகளுக்குப் பணிவது சட்டமாகாது!

ஒவ்வொரு நாடும் சட்டத்தின் நெறியை நம்பித்தான் நடந்து வருகிறது. சட்டம் நாடுக்கு நாடு அடிப்படையில் அனுமதி எனும் நோக்கத்தில் வேறுபடாவிட்டாலும் நடைமுறைப் பிரயோகத்தில் வேறுபடும்.

★ ஒவ்வொரு நாடும் சட்டத்தின் நெறியை நம்பித் தான் நடந்து வருகிறது.

ருசிய நாட்டில் சட்டம் மிகச் சில அலுவல்களுக்குத்தான் தேவைப்படும். ஆனால் ஏனைய நாடுகளின் சட்டமே அரசியல் அமைப்பின் உயிர் நாடியாக இருக்கிறது. பொதுவாகச் சட்டம் மக்களிடையே நம்பிக்கையுணர்ச்சி கெட்டுவிடாமலும், பாதுகாப்பு, மற்றும் சொத்துடைமைகளைப்பேண உதவும் ஓர் வலிமையான கருவியாகவும் பயன்படுகிறது. சாதாரணமாகச் சட்டம் இருவகைப்படும். அரசாங்கம் எப்படி எப்படி நடந்துகொள்ளவேண்டும், அதில் ஊழியம் புரிகிற பல்வேறு அலுவலர்களின் அதிகார வரம்பு என்ன? என்பதெல்லாம் பற்றிக்கூறுவது அரசியலமைப்புச் சட்டம் எனப்படும். இது அரசாங்கத்திற்கு மக்கள் மன்றம் இட்ட சட்டம். பிறகு அரசாங்கம் மக்களுக்கு இடுகிற சட்டம் இருக்கிறது. இது நடைமுறைச் சட்டம். அரசாங்கம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளைச் சரிவர நிறைவேற்ற இந்நடைமுறைச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இவைதான் அன்றாட வாழ்க்கையில் இருந்துவரும் சட்டங்களாகும்.

இந்திய அரசாங்கத்திற்கு மக்கள் மன்றம் இட்ட சட்டம் ஒன்று இருக்கிறது. இதைத்தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் என்பார்கள். அரசாங்கம் எப்படி அமைக்கப்படுகிறது என்ற நெறிகள். இதில் முறைப்படுத்தப்பட்டு கூறப்பட்டிருக்கும். அத்துடன் நீதி மன்றங்களின் அதிகார வரம்புகளும் வரையறுக்கப்பட்டிருக்கும். மக்களுள் ஜாதி சமய வேறுபாடு காட்டாமல் சமத்துவம் காட்டப்படும். கல்வி வசதி இந்நாட்டு மக்களுக்கு எந்த வேறுபாடும் இல்லாமல் ஒருமித்த அளவில் அளிக்கப்படும்; யாருடைய சொத்தும் பறிமுதல் செய்யப்படாது. எப்பொழுதாவது நாட்டின் அவசியத்திற்குத் தேவையென்று யாருடைய நிலமோ, வீடோ, ஆலையோ வாங்கியோ வேறு சொத்துக்களோ வாங்க வேண்டியிருந்தால் விலை கொடுத்து வாங்கிக்கொள்ளும் அரசாங்கம் பறித்துக்கொள்ளாது. நஷ்ட ஈடு தராமல் தனிப்பட்டோர் சொத்துக்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளாது; அரசாங்க வேலைகளுக்கு ஊழியர்கள் பொறுக்கப்படுவதில் சாதி வேறுபாடு, இடவேறுபாடு காட்டப்படாது. இந்தியாவின் சுப்ரீம் கோர்ட்டுக்கும் மாநில உயர்நீதி மன்றங்களுக்கும் நீதிபதிகளைக் குடியரசுத்தலைவரே நியமிப்பார்; குடியரசுத் தலைவருக்குப் பாராளுமன்ற சபைகள் கூடாமலிருக்கும் இடைவெளிக்காலத்தில் அவசரச் சட்டம் பிறபிக்கும் உரிமையுண்டு குடிமக்களின் அடிப்படை உரிமைகள் எனப்படும் எழுத்துரிமை, பேச்சுரிமை சொத்துரிமை, மதவுரிமை, குடியுரிமை, வாக்குரிமை ஆகியவற்றைப் பாதிக்கும்

★ பொதுவாகச் சட்டம் மக்களிடையே நம்பிக்கை உணர்ச்சி கெடக்கூடாது.

எந்த சிக்கலையும் எதிர்த்து உயர் நீதி மன்றத்திலேனும், சுப்ரீம் கோர்ட்டிலேனும் வாதாட யாருக்கும் உரிமையுண்டு என்பன போன்ற அலுவல்கள் எல்லாம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் காணப்படுகின்றன. இதைக் கருத்திற்கொண்டுதான் அரசாங்கம் தனது நடைமுறைச் சட்டங்களை இயற்ற முடியும், இவற்றை நிறைவேற்றவே நடைமுறைச் சட்டங்களை அரசாங்கம் மக்களுக்குப் பிறப்பிக்கிறது. அரசாங்கத்தை மக்கள் நிறைவேற்றும் அரசியல் அமைப்புச் சட்டம் கட்டுப்படுத்துகிறது. மக்களை அரசாங்கத்தின் நடைமுறைச் சட்டம் கட்டுப்படுத்துகிறது. அரசாங்கம் தவறிழைத்தாலும், தனிப்பட்டக் குடிமகன் தவறிழைத்தாலும் அதை ஒறுக்க நடுவணர் மன்றங்கள் இருக்கின்றன. இவை நிருவாகத்துறைக்கோ, சட்ட மன்றங்களுக்கோ உட்படாமல் தனித்து இயங்குகின்றன.

மன்னன் வாயிலிருந்து விழுந்த வார்த்தைகள் எல்லாம் சட்டங்களே என்ற அவல நிலை இன்று ஒழிந்துவிட்டது. சட்டம் என்றால் அதிகாரம் என்றோ, கட்டளை என்றோ, மட்டும் பொருள்படாது சட்டம் மக்களே ஏற்றுக்கொண்ட ஒழுக்க நியதி ஆகும், சமுதாய உறவில் ஒருவரது தீய பண்பினால் மற்றொருவருக்குக் கேடோ பொது மக்கள் நலனுக்குக் கேடோ ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவென்று அமைக்கப்பட்ட வரையறைகள் ஆகும். முன்பெல்லாம் சட்டம் என்றால் அரசர், அரசருடைய குடும்பம், செல்வந்தர், செல்வந்தருடைய குடும்பம் மதகுரு, மதகுருவின் ஆலயம் ஆகியவற்றைக் குறித்தது. உரிமை என்று அரசனிடம் கேட்க முடியாது, வற்புறுத்த முடியாது. ஏதோ கருணை மேலிட்டு அரசரே அனுமதித்தால் அது உரிமையாகப் பாவிக்கப்படும். அத்தகைய உரிமையும் நிரந்தரமான

வே. சௌந்தரராசன்

தல்ல. என்றைக்காவது ஒரு நாள் மன்னன் மதியீனனாக மாறிவிட்டால் அவ்வுரிமை பறிபோகும். அரசருடைய ஆவலைப் பொறுத்துச் சட்டம், உரிமை, அரசாங்கம், நீதி ஆகிய நான்கும் நிலை தடுமாறிக்கொண்டே இருக்கும். எல்லா மன்னர்களுக்கும் இது பொருந்தும் அதாவது வரலாற்றில் வருகிற ஒவ்வொரு மன்னனும் இந்தக் குறைபாடு உள்ளவன்தான். நீதிக்கும் நிதிக்கும், கல்விக்கும், கலைக்கும், சட்டத்திற்கும் இவனே தலைவன். போதுமான ஒழுக்கமோ, உயர்ந்த பயிற்சியோ இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவற்றைத் துறை துறையாய் பிரிப்பதில்லை. இன்று

★ அசோகர், அக்பர் காலத்துச் சட்டங்கள் தனி மனிதனின் செல்வாக்கே.

இத்தகைய முறைகள் மாறி வருகின்றன. அதிகாரம் குவியக் கூடாது என்றும், குற்றம் சுமத்துகிறவனே அதை விசாரிக்கக் கூடாது என்றும் முறை மாறி வருகிறது. ஆண்டவன் இட்டது சட்டம், ஆண்டவனால் ஏற்பட்டவன் மன்னன் என்ற சொற்கள் எல்லாம் வீண்புரட்டு என்று காலம் மெய்ப்பித்து நீண்ட நாட்களாகின்றன.

சட்டம்தான் ஒரு சமுதாயத்தில் அழகை உருவாக்கி அமைப்பிற்கு மரியாதையும், சிறப்பும் பெற்றுத் தருகிறது. சட்டத்தை மீறினால் பழங்காலத்தில் கடுந்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர், மன்னனுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்குச் சட்டம் வளைந்து கொடுக்கும் பண்புடையதாக இருந்தது. அனுபவம், அறிவு எதுவுமற்ற ஆடம்பர வாழ்க்கை மேற்கொண்ட மன்னர்களது சட்டமும் நன்கு பயிற்சி பெற்ற மன்னர்களது சட்டமும் வேறுபடும். இங்கிலாந்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்த ஜான் என்னும் மன்னன் நாட்டையே ஓர் விளையாட்டுத்திடல் போலாக்கிக் குழப்பம் விளைவித்தான். இறுதியில் மக்கள் எழுச்சியின் முன்பாக மண்டியிட்டுப் பணிந்தான். இங்ஙனமே பிரெஞ்சு நாட்டிலும், ருசிய நாட்டிலும் ஆசியாக் கண்டத்தில் பல இடங்களிலும் இருந்த சட்டங்கள் அன்று அந்தந்த ஆட்சித் தலைவனின் மனப்போக்கின்படி இருந்து வந்துள்ளன. அசோகர், அக்பர் போன்றவர்களது காலத்துச் சட்டங்களும் இதே முறையில் தனி மனிதன் செல்வாக்கிற்கு உட்பட்டவையே என்றாலும் அவரவர்களின் உளவளர்ச்சி, ஆற்றல், கல்விநிலை ஆகியவற்றைப் பொறுத்தும் வேறுபடுவதுண்டு என்பதைத்தான் இங்கே நாம் கருதவேண்டும். கிரேக்க நாட்டிலும், ரோமாபுரியிலும் சட்டங்களை ஏற்படுத்த மக்கள் பிரதிநிதிகள் மன்றம்

டின் நிருவாகத்திற்குத் துணைபுரியும் வண்ணம் சட்டங்கள் அவர்களால் இயற்றப்பட்டன: இப்பிரதிநிதிகள் எங்ஙெந்த கருத்துடையவர்களோ அக் கருத்துக்கள் சட்டங்களில் பிரதிபலிக்காமலில்லை. செல்வம், உயர்குடிப் பிறப்பு, இராவணுவச் சிறப்பு, ஆகியவற்றிற்குப் பொதுவாகப் பழையச் சங்கடங்கள் எல்லாம் எல்லா நாடுகளிலும் ஓர் அளவு சிறு மதிப்பு அளித்தே வந்திருக்கின்றன. இந் நிலை இன்றும் அடியோடு போய் விட்டதாகச் சொல்லிவிட முடியாது. இன்றும் குற்றவாளிகளைத் தகுதி, செல்வாக்கு, அவர்தம் வணிகம், மற்றும் செல்வ நிலை ஆகியவைப் பார்த்து விசாரணைக்கால விடுதலை அளிக்கும் பழக்கம் இருக்கிறது. நம் நாட்டிலும் உண்டு. ஆயினும் சமத்துவ நெறியின் அடிப்படையில் இனிப்பணக்காரர் வருமான வரி கட்டுகிறவர், என்ற முறைகளுக்காகவென்று எந்தச் சிறு சலுகையும் அளிக்கக் கூடாதென்று நீதிபதிகள் கருதுகின்றனர். மாறும் உலகில் சட்டமும் தன் இயல்பை மாற்றியே ஆக வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை:

இந்நாட்டில் வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்கு வந்த பிறகும் குற்றவாளிகள் இரண்டு முறையாகப் பிரிக்கப்பட்டனர்: மகமதியர் குற்றத் தடுப்புச் சட்டம் எனத் தனியாக ஒன்றும், இந்திய குற்றத் தடுப்புச் சட்டம் என்று தனியாக ஒன்றும் இருந்து வந்தன. மகமதியக் குற்றவாளியை அச் சிறப்புச் சட்டப்படியே பிரித்து தண்டித்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது ஒரே சட்டம் எல்லோருக்கும் பொருந்துவதாய் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் இதே போல் மதகுருமார்களுக்கெனத் தனியே ஒரு நீதி மன்றம், மற்ற குடிமக்களுக்கென தனியே ஒரு நீதிமன்றம் இருக்கவேண்டும். இவ்விரண்டு நீதிமன்றங்களிலும் தனித்தனியேதான் விசாரணை செய்யப்பட வேண்டும்: அரசாங்க நீதி மன்றத்தில் குருமார்களை விசாரிக்கக் கூடாது. மதகுருமார்கள் நீதி மன்றத்தில் அரசாங்க அலுவல்

★ மாறும் உலகில் சட்டமும் தன்இயல்பை மாற்றிக் கொள்ளும்.

எதுவும் நடைபெறக்கூடாது. காரணம் குருமார்கள் ஆண்டவனின் நேரடிப் பிரதிநிதிகள் மற்ற பாவிகளான குடிமக்களோடு எந்த குறிப்பாலும் இணைவது புனிதத்திற்கு இழுக்குத் தேடுவதாம் என்றனர். பலத்த போராட்டங்கள் பல நடைபெற்றன. இரண்டாம் ஹென்றியின் காலத்தில் தாமஸ் பெக்கெட் என்ற குருவினால் தொடங்கப்பட்ட இச் சிக்கல் எட்டாம் ஹென்றியின் காலத்தில் தாமஸ் கிராணம்ர் என்ற மதகுருவின் காலம் வரைத் தொடர்ந்து நீடித்தது. மன்னருக்கும் மதகுருவுக்கும் பிணக்கு ஏற்பட்டது, சட்டமே இரண்டு கண்ணோட்டங்களுடன் இருக்க வேண்டியதாயிற்று. அவ்வேறுபாடுகள் எல்லாம் இன்று நீக்கப்பட்டு மதகுருவாயிருந்தாலும், யாராயிருந்தாலும் ஒரே சட்டத்தின் கீழ் அரசின் ஆதிக்கத்திலிருக்கும் நீதிமன்றத்தின் கீழ் தான் நியாயம் பெறவேண்டும் என்று மாறிவிட்டது. அதே போல் தண்டனை விதிப்பதிலும் இனி மரண தண்டனையே யாருக்கும் இடக்கூடாது என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டிருக்கிறது. மின்சாரம் பாய்ச்சி ஒரு குற்றவாளியைத் தீய்ப்பதோ தூக்கிட்டு

னும் சிறைக் கூடங்களிலேயும் பல அடிப்படைத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். என்ற எண்ணமும் இருந்து கொண்டிருக்கிறது: இங்ஙனம சட்டம் செல்லும் ஒவ்வொரு பாதையிலும் மாற்றங்கள் மெதுவாக ஏற்பட்டு வருகின்றன என்பதை அறிகிறோம்.

ஒவ்வொரு நாட்டிற்கும் தனித் தனியே சட்டங்கள் இருக்கின்றன. இதேபோல் உலக நாடுகள் ஒன்று சேர்ந்து சர்வதேசச் சட்டம் என ஒன்றினை ஏற்படுத்தியுள்ளன. ரோமானியர்கள் காலத்தில் சட்டங்கள் இரண்டு வகையாய் பிரிக்கப்பட்டன. உள்நாட்டுச் சட்டம், வெளிநாடுகள் சட்டம் என்று அவை அழைக்கப்பட்டன. இந்நிலை நன்கு வளர்ந்து இன்று உலகின் பல நாடுகள் பல அலுவல்களில் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளவும், வெளிநாட்டு உறவில் ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதை நிறைவு செய்யவும் வழிவகைகள் செய்துள்ளன. கடற்போக்கு வரவு வானவூர்திப் போக்குவரவு, கடற் கொள்ளை மீன் பிடிக்கும் உரிமை துறைமுக ஓரக் குற்றங்களுக்கான வழக்காடும் உரிமை தூதுவரிகள் பரிவர்த்தனை, போர்முறைகள் நடுவு நிலைமை என்று பல தலைப்புக்களைப் பிரித்து ஒவ்வொன்றையும் துறைவாரியாகப் பகுத்து விளக்கப்பட்டுள்ளன. இதைச் சர்வதேசச் சட்ட நூலாசிரியர்களும் சர்வதேச நீதி மன்றத்தின் தீர்ப்புரைகளும் முறைப்படுத்தி வருகின்றன. சர்வதேச சட்டம் மாற்றமடைந்துகொண்டு வருகிறது. இன்று உலகில் நிறவெறியால் ஏற்படும் பூசல்களை ஒழித்து, ஆக்ரமிப்பு உணர்ச்சியை அறகளைந்து மனித உரிமையைக் காத்து நாடுகளின் அமைப்புக்கு உறுதியானதோர் சூழ்நிலையை உருவாக்க முற்படுகிறது இச் சட்டம். அணு ஆயுதம் நல்ல வேலைகளுக்காகத்தான் பயன்பட வேண்டும் என்றுப் காலனிகள் எல்லாம் விடுதலை பெறவேண்டும் என்றும் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வருகின்றது. இச் சர்வதேசச் சட்டத்தின் வலிமைக்கு ஐ. நா. சபை உறு துணையாக இருந்து வருகிறது. சர்வதேசச் சட்டத்தின் கீழ்தான் ஆங்கில இரானிய எண்ணெய்ச் சிக்கல் தீர்மானிக்கப்பட்டது. கொரியாவில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. திபெத்தில் சீனப்படையெடுப்பு நின்றது அசரேல் தனி நாடாகப்பிரிக்கப்பட்டது, காஷ்மீரில் பொதுக் காவல் நிலையம் ஏற்பட்டது. இவ்வாறு சர்வதேசச் சட்டம் மாறும் உலகின் அலுவல்களுக்கு ஆக்கப் பணிபுரிந்து வருகிறது. போதுமானதாயில்லை என்பது உண்மையேயெனினும் அச்சட்டம் இக்கோணத்தில் பணியாற்றுவது பாராட்டற்குரியதாகும் எனலாம்.

சட்டம் இன்று செம்மையாகத் தன் பணியை ஆற்றவில்லையென்பது வெளிப்படை. ஆற்ற முடியாத சூழ்நிலைகள் அதிகாரப் பீடத்திலிருப்பவர்களால் ஏவிவிடப்படுகின்றன. சட்டமும் நீதியும் கண்கள் போன்று பாதுகாக்கப்பட வேண்டியவை. இத்துறைகளின் சுய நலமிகள் பிறர்

★ ஆண்டவன் படைத்தது சட்டம் என்ற சொல் வீண்புரட்டு.

நலத்தைச் சூறையாடுப் பேதமைக் குணப் தணியவில்லை. செல்வந்தரைக்கண்டு சட்டம் கூசுகிறது. நீதிமன்றம் நிரு

விற்பனையாளர்கட்கு!

பட்டியல் பாக்கியனுப்பாத விற்பனையாளர்கட்கு தொடர் கதைகள் துவங்கிய இதழ் முதல் இதழ்கள் அனுப்புவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

அதிக பாக்கியுள்ள (கீழ்க் கண்ட ஊர்களின்) விற்பனையாளர்களது உரிமை இரத்து செய்யப்பட்டு விட்டதுடன், புதிய நபர்கட்கு உரிமை வழங்குவதென முடிவெடுக்கப் பட்டுள்ளது.

ஜூன் திங்களுக்குரிய பட்டியல் பாக்கியுள்ள தோழர்கள் பலரும் அஞ்சல் நிலைய வேலை நிறுத்தத்தையே காரணம் காட்டி எழுதியுள்ளனர். இவ்வாரத்திற்குள் பாக்கித் தொகை முழுதும் அனுப்பத் தவறுறவர்களுக்கு அடுத்த இதழ் கண்டிப்பாக வராது!

கீழ்க் கண்ட இடங்களுக்கு முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை :—

விருதுநகர்
மாயவரம்
சாத்தூர்
எடப்பாடி
கீரமங்களம்
நெடும்புலி
பெருந்துறை
கார்வார் (மைசூர்)

அனுப்பாளர், இனமுழக்கம்.

திரைஒலி!

ஜூலை 29ல் மீண்ட சொர்கம்!

மதுரம் பிக்சர்சாரின் 'மீண்ட சொர்கம்' இம் மாதம் 29ந் தேதி அன்று தென்னுடெங்கும் திரையிடப்படவிருக்கிறது. சென்றவாரத்தில் பத்மினியின் சிவ தாண்டவ நடனம் படமாக்கப் பட்டது. கவர்ச்சி மிக்க நடனக் காட்சி ஒன்று, பெங்களூரில் உள்ள லால் பாக் தோட்டத்தில் படமாக்கப்பட்டது. இதன் படப் பிடிப்பு ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

மீண்ட சொர்கம் இவ் வருடத்தின் இணையற்ற சித்திரமாக இருக்கு மென்று சினிமா உலக பிரமுகர்களும், கலைஞர்களும் கருதுகின்றனர், இதில் ஜெமினி கணேசன், பத்மினி, தங்கவேலு ஆகியோர் நடித்திருக்கின்றனர். இதன் கதை வசனம் டைரக்ஷன் பொறுப்பை ஸ்ரீதர் ஏற்றுக் கொண்டிருக்கிறார், வின்செண்டின் சிறப்பான ஒளிப்பதிவு, மீண்ட சொர்கத்திற்கு புது மகுடமாக இருக்கிறது!

நடிகர் முத்தையா மில் நிர்வாகியானர்!

குணச்சித்திர நடிகர் டி எஸ். முத்தையா, குமரி பிலிம்சார் தயாரித்து வரும் 'பாதை தெரியுது பார்' என்னும் படத்தில் மில் நிர்வாகியாக நடிக்கிறார்.

இதற்காக கோவையிலே உள்ள இரண்டு பஞ்சாலைகளில் தொழிலாளர்கள் வேலை செய்யும் காட்சியை ஒளிப்பதிவு நிபுணரும், இயக்குநருமான நிமாய் கோஷ் படமாக்கினார். இந்த படப்பிடிப்பில் புதுமுகம் விஜயன். விஜயலட்சுமி, ஏ. வீரப்பன், எஸ். பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்

இதற்கான பாடலொன்று அண்மையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பாடலை பி. சுசீலா பாடினார்!

எமலோகம் சென்று திரும்பினர் என். டி. ராமராவ்!

அமெரிக்கா, ரஷ்யா, பாரிஸ் போன்ற மேலை நாடுகளைச் சுற்றிப் பார்க்க நடிக, நடிகையர்கள் விரும்புகின்ற நேரத்தில் ஆந்திர நடிகர் என். டி. ராமராவ் எமலோகம் சென்றார்!

எமலோகத்திற்கு என். டி. ராமாவ் எப்படிப் போனார் என்று கேட்கிறீர்களா? அவர் ஸ்புட்னிக்கில் பறந்து செல்கிறார். போகிற பாதையிலே இவருக்கு முன்னாலே சென்ற லைகா (சந்திர மண்டலத்திற்கு ஸ்புட்னிக்கில் வைத்து அனுப்பப் பட்ட நாய்)வை சந்திக்கிறார்!

எமலோகத்திற்கு சென்ற ராமராவ், எமனை சந்திக்கிறார். பின்னர் இந்திரலோகம் செல்கிறார். மானிடனைகப் பிறந்த ராமராவ், தேவர்கள் சட்ட திட்டங்களில் தலையிட்டு தொல்லைத் தருகிறார் என்பதால் மீண்டும் பூலோகத்திற்கே அனுப்பிவிட்டார்கள்!

'ராமராவ் அவர்களே எப்போது எமலோகம் போனீர்கள்? எப்போது திரும்பினீர்கள்? என்று கடிதம் போட்டு கஷ்டப் படுத்தாதீர்கள்.

இந்தப் படத்தில் ராமராவின் காதலியாக கிருஷ்ண குமாரி நடித்திருக்கிறார்.

பழம்பெரும் டைரக்டரான புல்லையாவின் டைரக்ஷனில் வளரும் 'தேவார்தகடு' என்னும் தெலுங்குப் படத்தில்தான் என். டி. ராமராவ் எமலோகம் சென்று திரும்பியது!

பதினைந்து கோடியில் 'மாபெரும் கதை' படமாகிறது!

டுவெண்டியத் செஞ்சரி பாக்ஸ் கம்பெனியார் பதினைந்து கோடி டாலர் செலவில் மாபெரும் கதை என்னும் படத்தை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கான கதை வசனத்தை 82 வயது நிரம்பிய கவிஞர் ஸாண்ட் பர்க் என்பவர் எழுதுகிறார். இவர் பலமுறை உலகப் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

அறிக்கை எண். 4-60

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்
பொதுக்குழு, மாவட்ட அமைப்பாளர்
கூட்ட அறிக்கை

அன்புடையீர்!

வணக்கம். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு மாவட்ட அமைப்பாளர் கூட்டம் அறிஞர் அண்ணு அவர்கள் முன்னிலையில் ஜூலைத் திங்கள் இறுதியில் நடைபெறும். அதுபோது கல்லூரிக்கு ஒரு பிரதிநிதி விதம் வந்திருந்து பொதுக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்

கூட்டம் நடைபெறும் தேதியும், இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.

அன்பன்,
எஸ். டி. சோம சுந்தரம்

சுபாஸ் மூவிசார் தயாரித்துக் கொண்டிருக்கும் "ஆளுக்கொரு வீடு" என்ற படத்திற்காக அழகிகள் ஆடிச்கொண்டிருக்கும் காட்சி!

வைஜயந்திமாலா வாங்கும் தொகை

தென்னகத்து நடிகையான வைஜயந்திமாலா ஒரு படத்தில் நடிப்பதற்கு ஐந்து லட்ச ரூபாய் வாங்கிறார் என்று ஒரு பம்பாய் பத்திரிக்கை குறிப்பிட்டிருக்கிறது!

தென்னுட்டில் ஒரு படத்தில் நடிக்க முதன் முதலில் ஒரு லட்ச ரூபாய் வாங்கிய நடிகை கே. பி. சுந்தராம்பாள், மறைந்த நடிகர் ஏழிசை மன்னர் எம். கே. தியாக ராஜபாகவதர் என்பதுகுறிப்பிடத் தக்கது!

'நொண்டிக்கை கன்னையன்' திலிப்குமார்

இந்தியக் குடியரசு தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களின் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்ற 'பாகப்பிரிவினை' படத்தை இந்தியில் தயாரிக்கவிருக்கின்றனர். இந்திப் படத்தில் சிவாஜி கணேசன் நடித்த கன்னையன் பாத்திரத்தை திலிப்குமார் ஏற்று நடிப்பார்!

நடிகையின் ஐந்தாவது திருமணம்?

ஹாலிவுட் நடிகையான பெட்டி டேவிஸ், தனது நான்காவது கணவன் காரி மெர்ரிலிடமிருந்து அண்மையில் விவாகரத்து செய்து கொண்டார்!

விவாகரத்தின்போது, நடிகை பெட்டி டேவிஸ் கோர்ட்டுக்கு வரவில்லை. பெட்டி டேவிசின் ஐந்தாவது கணவன் யார் என்ற கேள்விக் குறி ஹாலிவுட்டைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது!

டோக்கியோவில் '3வது உலகயுத்தம' ஆரம்பம்!

டோக்கியோவில் உள்ள படத் தயாரிப்பு நிலைய மொன்று 'மூன்ருவது உலக யுத்தம்' என்னும் படத்தை கலரில் தயாரிக்கவிருக்கிறது. ஆகஸ்ட் இறுதிக்குள் ஆரம்பமாகும் இப்படத்தின் படப்பிடிப்பு நான்கு மாதங்களில் முடிந்து விடுமாம்! மூன்ருவது உலக யுத்த படம் அடுத்த வருட ஆரம்பத்தில் உலகமெங்கும் திரையிடப்படுமாம்!

எம். வி. ராஜம்மாவின் 'மக்களாட்சி முடிவுற்றது!

கன்னட நடிகை எம். வி. ராஜம்மா தயாரித்து வந்த 'மக்களாட்சி' (மக்கள ராஜ்ய) என்னும் கன்னடப் படம் முடிவடைந்து விட்டது. பி. ஆர். பந்துலுவின் டைரக்ஷனில் வளர்ந்து விட்ட இப்படம் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி அன்று திரையிடப்படும்!

சரோஜா தேவிக்கு திருமணம்?

சரோஜாதேவி, ஒப்பந்தமாகி இருக்கும் படங்களில் நடித்து முடித்து விட்ட பிறகு தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக கூறி இருக்கிறார்!

திருமணம் செய்து கொண்ட பிறகு எக்காரணம் கொண்டும் படத்தில் நடிக்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்!

தான் மணந்து கொள்ளும் மாப்பிள்ளை எப்படி இருக்கவேண்டும் என்பதையும் இவரே கூறியிருக்கிறார்! மாப்பிள்ளை, நிரந்தரமாக நல்ல வேலையில் இருக்கவேண்டும், அவரையே மணந்துகொள்வேன் என்றும் கூறியிருக்கிறார்!

பிரபல நடிகை தபால்வேலை செய்தார்!

பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த 'சத்தியவான் சாவித்திரி' என்னும் தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக நடித்த வடநாட்டு நடிகை சாந்தா ஆப்தே அண்மையில் நடைபெற்ற தபால் சிப்பந்திகள் வேலை நிறுத்தத்தின் போது தாதர் அஞ்சலகத்தில் வேலை பார்த்தார்!

'ஒபேரா மாளிகை'யில் சரோஜாதேவி

பம்பாயில் உள்ள புஷ்பா பிக்சர்ஸ் என்னும் படக் கம்பெனியார் தென்னகத்து நடிகை சரோஜாதேவியை நடிக்க ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

அக்கம்பெனியார் தயாரிக்கப் போகும் படத்திற்கு புதுமையாக "ஒபேரா மாளிகை" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

பி. எஸ். வி. பிக்சர்ஸ் "வீரக்கனல்" படத்தில் தோழியர் எம். என் இராசம் தோன்றும் ஒரு இனிய காட்சி!

அடுத்த இதழ்

முகப்பில்

பொருச்

★ சி. பி. சிற்றரசு ★

கோபால், ஏரல்.

கே : சாட்டையடிபடப்பட, மாடு மந்தமாவது போல் தமிழ் நாட்டு மந்திரிகள் பேரில் வசவு பாடப்பாட அவர்கள் கவைக்குத வாதவர்களாய் ஆகிவிடுகிருர்கள், ஆகையால் வருகிற 62-ல் மக்கள் அவர்களை கால் வாரி விடுவார்களா ?

ப : கண்டிப்பாக விடுவார்கள் என்று தாராளமாக எதிர்பார்க்கலாம்! நீங்களும் அந்தப் பணியைத் தாராளமாகச் செய்யும்.

எஸ். தேவராசன், பம்பாய்

கே : போராட்டம் நடத்தினுலன்றி உரிமைகளைப் பெறமுடியாதென்று நிதிக்கமிஷன் தலைவர் சந்தானம் கூறுகிருரே ?

ப : போராட்டம் நடத்தியே உரிமைகளைப்பெற முடியவில்லையே-அடுத்து புரட்சி தான் தேவைப்படும்!

எம். எஸ். மணி, அரியலூர்

கே : இப்போது இந்த (காமராசர்) ஆட்சியில் ஏழைகளின் வயிற்றில் அடித்து, 'வரி வரி' என்று பணத்தையெல்லாம் பெற்று என்ன செய்கிருர்கள் ?

ப : குதிரை திருடுபோன ஆறு தினங்களுக்குப்பிறகு லாயத்தைப் பூட்டியக் கதையாய் இருக்கிறது. உங்கள் கேள்வி ! டில்லிக்குப் போகிறதென்று ஆயிரம் தடவைச் சொன்னேமே

எஸ், டி. மூர்த்தி, வண்ணை

கே : ஊமை காணும் கனவுக்கும் நமது கனம்கள் காணும் கனவுக்கும் வேற்றுமை என்ன ?

ப : ஊமை வெளியே சொல்மாட்டான்; இவர்கள் சொல்லகிருர்கள் அவ்வளவுதான்.

தமிழ்த்தம்பி, திருவாரூர்

கே : மனித இதயத்தின் திறவுகோல் யாரிடத்தில் உள்ளது ?

ப : அவனிடத்திலேதான் இருக்கின்றது. அதை யாரோ பறித்துக் கொள்கிருர்கள். அந்தத் திருடனைக் கண்டு பிடிக்கவேண்டும்.

உலகநாதன், கொடுமுடி

கே : நம்முடைய மந்திரிகள் மிகவும் கோழைகளாக இருப்பதற்குக் காரணமென்ன ?

ப : பிறவிக்குணம் சேர்ந்த குணத்தாலும் கெடுவதுண்டு அதுதான் காரணம்.

கே : காடாண்டவர் நாடாள வந்ததுண்டா ?

ப : நாடாண்டவர் காடாண்டதுண்டு; காடாண்டவர் நாடாள வந்ததில்லை, நம்முடைய மாநிலத்தைத் தவிர!

மணியம், மேலூர்

கே : ஆகஸ்டு 15-ல் குடியரசுத் தலைவர் தென்னகம் வருகிருரே கழகம் என்ன செய்யப் போகிறது ?

ப : தலைமை முடிவு செய்யும்.

தயாளன், கடம்பூர்

கே : குடியரசுத் தலைவர் இந்தியில் பேசினுல் என்ன நடக்கும் ?

ப : பொது மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

வேலன் மதுரை

கே : இந்திப் போர்தான் இறுதிப்போர் என்கிருர்களே அது சரியா ?

ப : இந்தியை எதிர்ப்பது எல்லாருடைய கடமை, நாட்டைப்பிரிப்பது தி. மு. கழகம் தான்! ஆகவே இதை இறுதிப் போர் எனறு எப்படிச் சொல்ல முடியும்.

தேவராஜன், பெரம்பூர்

கே : திருவில்லிபுத்தூரில் தேர் நகர்ந்து நான்காண்டுகள் ஆயிற்ருமே ஏன் ?



ப : மந்திரிகளே சந்து விடாமல் சுற்றி சுற்றிப் பார்க்கும்போது நமக்கென்ன வெளியே வேலை என்று இருந்திருக்கலாம். இழுக்க ஆள் இல்லை. அதுதான் சரியான காரணம்.

நாகேந்திரன், திருமழிசை

கே : இப்போதெல்லாம் கோவில்களில் பரதநாட்டியம் ஆடுவதை நிறுத்தி விட்டார்களே ஏன் ?

ப : கோயிலிலிருந்து தெருவுக்குத்தெரு வந்து விட்டதே அதனுல்.

மல்லிகா, தஞ்சை

கே : அஸ்ஸாம் மொழிக்கும் வங்காள மொழிக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறதே முடிவென்ன?

ப : முடிவு எதுவானுலும் ஆகட்டும். ஏதுங்கெட்ட இந்தியை இந்தியா முழுவதிலும் திணிக்கும் டில்லித்திமிர் வாதம் அவர்களையும் பிடித்து கொண்டிருக்கிறது.

நாதமுனி, திருப்பதி

கே : லோகியா கோவைக் கூட்டத்தில் சோடா பாட்டிலை மக்கள் மீது வீசியெறிந்தார் ! என்றும் சம்பத் மீது மான நஷ்ட வழக்கு தொடரப்போவதாக லோகியாவின் கோவை கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் சொல்கிருரே ?

ப : வேலிக்கு ஒணுன் சாட்சி ஒணுனுக்கு வேலி சாட்சி.

கே : தி. மு. கழகம் நடத்தவிருக்கும் இந்தி எதிர்ப்புப் போருக்கு ஆச்சாரியார் ஆதரவு தெரிவித்துள்ளாரே ! அவர் அளிக்கும் ஆதரவை ஏற்றுக்கொள்வீரா ? அல்லது பார்ப்பனிய பிரச்னையை முன்னிட்டு ஆதரவை மறுப்பீர்களா ?

ப : ஆச்சாரியாரும் தமிழ் தானே பேசுகிருர்; அவர் தருவது உதவி என்பதைவிட, அவரது கடமை என்று சொல்லலாம்.

ஜெயசீலன், ஓட்டேரி

கே : புத்தர் எந்த மொழியிலே தன் கொள்கைகளைச் சொன்னுர் ?

ப : பாலி மொழியில்.

சுந்தரம் சென்னை-1

கே : கோலெடுத்தால் குரங்காடும் என்ற பழமொழி இன்றுள்ள அமைச்சர்களில் யாருக்குப் பொருந்தும் ?

ப : காமராஜர் கோலெடுத்தால் மற்ற மந்திரிகளுக்கும் பொருந்துமே.

முத்தமிழ் மன்றம்

நாகம்மையார் நகர் : 44-வது வட்டம்

4-ம் ஆண்டு விழா

23 - 7 - 60 சனி மாலை6 மணிக்கு

அயன்புரம் மார்கெட் திடலில்

தலைவர்

மு. தாமோதரம்

பேசுவோர் :

கண்ணப்பா வள்ளியப்பன்
புலவர் பொன்னிவளவன்
என். வி. என். சோமு
கி. ப. அரங்கநாதன் M. C.

மற்றும் பலர்

அசோசியேட் புரொட்யூஸர்ஸ்

எங்கள் செல்வி

★ கதை பலருக்குப் புரியாது. ஆனுல் டாக்டர் மு. வ. வைப்பின் பற்று வோர்க்குப் புரியும்.

★ முற்பகுதி ஓடுகிறதுபிற்பகுதி தடுமாறுகிறது.

★ கவிஞரின் பாடல் மீண்டும் பாடக்கூடியதாய் இருக்கிறது.

★ பண்பட்ட நடிப்பு.

தலைப்பு

"என்னபெயரு வைக்கலாம் எப்படி அழைக்கலாம்" கண்ணதாசன் இயற்றிய இப்பாடலைத் தான் கமலாவின் குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழாவில் பாடுகிருர்கள். எள்ளத்தனையும் சந்தேகமில்லை, படத்தின் தலைப்பையும் இந்த முறையில் தான் தேர்ந்தெடுத்துள்ளனர்.

கதை

"சொல்லத்தான் நினைக்கிறேன் முடியவில்லை!-அதைச் சொன்னுலும் கேட்பவருக்குப் புரியவில்லை" இனிமையான பாடல் (கண்ணதாசன்) இதைத் தவிர கதைக்கு எந்த விளக்கத்தையும் தர இயலாது ஒன்று சொல்லிப் புரியனும் இல்லைனுதன்னுலாவது புரியனும் இதில் இரண்டுமில்லை. பாதிக்கு முன்பே முடிய வேண்டிய கதை கமலாவை விரட்டி மீதிக்கு வருகிறது. சோதனை இத்தோடு முடிந்தது என்று நினைத்தால் செல்வியின் தகராருல் தலை வேதனை ஏற்படுகிறது.

வசனம் (மாறன்)

கதை: சொந்தச் சரக்கல்ல. பிற்பகுதி டாக்டர் மு. வ வின் "கள்ளோ காவியமோ"வை நினைவு படுத்துகிறது.

கருத்துக்குப் புறம்பான கருமாந்திரக்காட்சிகள் தேவையற்ற நிலையில் வலியப்புகுத்தப் பட்டுள்ளன. 1960-ம் ஆண்டில் இருக்கிரேும் என்பதை அவருக்கு நினைவு படுத்துகிரேம்.

பணம் பாக்கெட்லேண்ணு, வசனம் வாய்க்கு வந்தபடி! காசா, லேசா? பொருளாதாரம்தெரிந்தவரல்லவா. அதிலேயே குறியாக இருந்திருக்கிருர்.

குஸ்தி

இது தேவையா என்ருல் இல்லை. இது இல்லாவிட்டால் படம் ஓடுமா என்ருல் அதுவுமில்லை.

நடிப்பு

மனைவி கமலாவின் மீது ரகு (நாகேஸ்வரராவ்)சந்தேகப்படும் கட்டத்தில் உணர்ந்து நடித்துள்ளார்.

கமலா(அஞ்சலிதேவி) எந்த நடிப்பையும் குறையின்றிச் செய்துள்ளார்.

நண்பனின் தவறை உணரச் செய்யும் கட்டத்தில் அசோக்கின் (பாலாஜி) நடிப்பு மிளிருகிறது

ஈயோட்டும் வக்கீல் அதிசயம் (பாலையா) பலே!

குலதெய்வம் ராஜகோபால் குப்பை!

இயக்குனரின் சாதனை (யோகானந்த்).

மனைவி மீது சந்தேகப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து ... ட ரகு இருள் சூழ உட்கார்ந்திருக்க, அசோக் வீட்டிலி...து வரும் கமலாவை வாய்ச்சொற்களால் திருத்தாமல் கையிலிருந்த பொருளை மேசை மீது வீசி எறிந்து அவள் கவனத்தை ஈர்த்து நிறுத்தும் கட்டத்தில் மேல் நாட்டு முறையைக் கையாண்டு முழு வெற்றி கண்டுள்ளார்.

ரகு, அசோக், அதிசயம் இவர்களால் ஓட்டப்பந்தயம் நடக்கும் கட்டம் பலே! இவர்கள் ஓடி வெற்றி கண்டது போல் படம் ஓடுமா.........?

இளவல்

முத்து

எங்கும் விற்பனையாகிறது !

தங்கமலர்
திங்கள் இருமுறை

ஆசிரியர் : கண்ணப்பா வள்ளியப்பன்

விற்பனையாளரில்லாத இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 4

எழுதுக :

'தங்கமலர்'

4, இராசகோபால நாயக்கன் சந்து, சென்னை-2.

...யிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பா வள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 4. இராசகோபால நாயக்கன் சந்து, சிந்தாதரிப்பேட்டை. சென்னை-2

இனமுழக்கம்

ஆசிரியர் சி.பி.சிற்றரசு

புரட்சி...
மீராபே

★ அவன் நா அசைந்த பக்கம் ஆடநாடுகாத்துக்கிடந்தது!

★ அவன் சொல்லுக்கு மன்னன் செவி மடுத்தான்!

★ அவன் அன்புக்கு மக்கள் கட்டுப்பட்டனர்!

சி. பி. சி.

சென்ற இதழில் மீராபேவைப் பற்றி எழுதப்படும் என்று எழுதியிருந்தோம்.

மீரா பே நகர மேயர். அந்த நகரத்திலிருந்து யாராவது வெளி நாடுகளுக்குச் சென்றால் தொத்து நோய்கள் வராமல் தடுப்பதற்கான எந்தவிதமான முயற்சிகளும் செய்வதில்லை. அந்த அளவுக்கு அவன் தன் நகரத்தை சுகாதாரமாக வைத்துக்கொண்டிருந்தான்.

சொல்லின் செல்வன் மன்னனிடத்திலும் மக்களிடத்திலும் ஒரே விதமான அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தான் அவன் நா அசைந்த பக்கம் ஆட நாடு காத்துக் கிடந்தது. அவன் சொல்லை அபிமானத்தால் மன்னனும் தள்ள மாட்டான். அன்பு கருதி மக்களும் தள்ளமாட்டார்கள். மன்னன் லூயின் உயிர் மீராபேயின் நாவில் தொங்கிக்கொண்டிருந்தது. மன்னனைக் கொல்லாதீர் என்று அவன் குரல் எழுப்பி இருந்தால் மன்னன் மீண்டிருப்பான். மக்களுக்கிருந்த ஆத்திரமும் ஆவேசமும் மன்னனைக் கொன்று போடவேண்டும் ஆனால் —இதுவே ஒவ்வொருவரும் தனக்குள் பேசிக்கொண்ட வார்த்தை. ஆனால், என்ன என்று ஒரு அவசரக்காரன் கேட்டான்! 'மீரா பே' என்றான். ஆம், ஆம் மறந்து விட்டேன்! ஆனால் இவ்வளவு கொடுமை நிறைந்த மன்னனை மன்னிக்கும்படி மீரா பே கேட்டுக் கொள்வாரா என்ற ஐயம் மக்களுக்கு. எனினும், லூயி மன்னனால் கற்பழிக்கப்பட்ட மாதர்களின் கண்ணீரையும் கடந்து விடுமா மீரா பேயின் கருணை என்றனர். மீராபே நம்நாடு ஈன்றெடுத்த அறிவுப் பெட்டகம்! அரசனின் அக்ரமங்கள் அவருக்குத் தெரியாமலில்லை. இரத்தஞ் சிந்தா உணர்ச்சி கொண்டவர் மீராபே. அவர் சொல்லை இது வரை நாம் தட்டியதில்லை. தட்டவும் முடியாது. தட்டி நடப்பதினால் நமக்கொன்றும் நட்டமில்லை. எனினும் அவர் சொல்லை மீறி நடந்ததில்லை' மீறி நடக்க மாட்டோம் என்று இப்படிப் பேசினர் மக்கள். இந்த உரையாடல் மக்கள் மன்றத்தில் நடந்த வண்ணமிருந்தன. ஆனால் வார் சேலிலிருந்த மன்னன் மாளிகையில் என்ன நடந்தது?

மீரா பேயின் மாளிகையிலிருந்து என்ன செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. என்ன அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் மருத்துவ வல்லுனர்கள். இப்போது எப்படி இருக்கிறதாம் அவர் உடல் நிலை என்று கேட்டவண்ணம் இருக்கின்றான் மன்னன். ஏன்? மீரா பே உடல் நலமில்லாமல் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். விநாடிக்கு விநாடி அவர் உடல் நிலையைப் பற்றி வந்து கொண்டிருக்கும்

★ மன்னன் உயிர் அவன் நாவில் தொங்கிக் கொண்டிருந்தது!

★ அவன் நாவசைத்திருந்தால் மன்னன் கொல்லப்பட்டிருக்க மாட்டான்!

அறிக்கைகள் மிகப்பயங்கரமானதாக வருந்தக்கூடியதாக இருக்கின்றன, இருண்ட வானில் சில நேரம் மின்னல் மின்னி மறைவதைப்போல நம்பிக்கைத் தரக்கூடியதாக இருந்தது. 'நிம்மதியாக உறங்கினார்' கண் திறந்து பார்த்தார், நினைவு மாறவில்லை என்பன போன்ற அறிக்கைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. மாளிகையின் முன்னால் ஆயிரக் கணக்கான மக்கள், அரசியல் தலைவர்கள், மேதைகள் முதலானோர் காத்துக்கிடக்கின்றனர்.

இவர்கள் கொண்ட ஆவலுக்கதிமாக மன்னன் மாளிகையிலே கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு முன்னும் பின்னுமாகத் திரிந்துக் கொண்டிருக்கின்றான். நகரத்தில் வெளியாகும் இந்த சோகச் செய்திகள் ஏழு மைலுக்கப்பாலிருக்கும் வார்சேலிலிருக்கும் மன்னனுக்கு அடிக்கடி அறிவிக்கப்படுகிறது. மன்னன் செய்திகளைக் கேட்கும் போதெல்லாம் அவன் நெஞ்சில் ஏற்றிவைக்கப் பட்டிருக்கும் பாரம் கனத்துக் கொண்டிருந்தது. மீரா பேயின் முடிவு தன் முடிவு என நினைத்தான். மீரா பே பிழைத்தால் நாம் பிழைப்போம். மீரா பேயின் முடிவு வேறு விதமாக இருந்தால் நம் முடிவு மக்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுவிடும். அந்தோ! நினைக்கவே நெஞ்சம் துடிக்கிறது.

'அன்று பசித்த மக்கள் நம் மாளிகையின் முன்னால் நின்று ரொட்டி, ரொட்டி என்று கத்திய போது அவர்களுக்கு ரொட்டியைக் கொடுத்திருக்கலாம். இல்லை என்று ஆளைவிட்டுச் சொல்லியிருக்கலாம். மாளிகைக் கதவுகளை மூடிக்கொண்டு உள்ளேயே மௌனமாக உட்கார்ந்திருக்கலாம். ஆகட்டும் பார்க்கலாம் என்று சொல்லி இருக்கலாம். இன்று போய் நாளை வாருங்கள் என்று சொல்லி இருக்கலாம்; இவற்றில் எதையும் செய்யாமல் விட்டுவிட்டோம்! அதனாலும் மக்கள் கொதிப்படையவில்லை. ஒரு நாள் நம் மனைவி சொன்னாளல்லவா; இந்த நாய்களுக்கு ரொட்டி கிடைக்காவிட்டால் என்னகேக்கு தின்னக்கூடாதா என்று. பாவம் அவள் அறியமாட்டாள் ரொட்டிக்கும் கேக்குக்கும் உள்ள வித்தியாசத்தை. குடிக்கத் தண்ணீரே கிடைக்கவில்லை என்கிற போது மதுபானத்தைக் குடித்தால் என்ன என்று கேட்பதைப் போலிருக்கிறது. மாளிகையிலே பிறந்தவள், மாளிகையிலே வளர்ந்தவள், மாளிகையிலே வாழ்க்கைப்பட்டவள். அவளுக்கு மக்கள் நிலை தெரிய முடியாது. மக்கள் கண்ணீரை அறிய மாட்டாள். ஏன் நாம்தான் அறிந்தோமா, இல்லையே. மக்கள் கொடுப்பதாக நினைத்திருக்கும் தண்டனை நமக்கேற்றதாயிருக்கலாம் ஆனால், அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்று நினைக்கும் போது மனம் பூகம்பமாகிறது. எண் திசையிலும் பலர் நின்று எரியீட்டியால் குத்துவதைப் போன்றிருக்கிறது. அரச போகம் எங்கே. நாளை அடையப்போகும் தண்டனை எங்கே. என்றெல்லாம் மன்னன் எழுந்தும் நடந்தும், இருந்தும், படுக்கையில் புரண்டும் பினத்திக் கொண்டிருந்தான். ஏதோ இரண்டு பயங்கரமான இரும்புக் கைகள் தன் கழுத்தை நெறிப்பதைப்போலெல்லாம் கற்பனை செய்து கொண்டான்; தவணை சொல்ல முடியாமல் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் உயிர் ஒன்றுதான், என்ற வேதாந்த விசாரணையில் ஈடுபட்டு இருண்ட மனத்தினனாய் எண்ணக் கடலில் பாய்மரம் சாய்ந்த நாவாயில் திசை தெரியாமல் போய்க்கொண்டிருந்தான்.

நாம் இவனை, இந்த மதோன்மத்தனை என்ன கேட்டோம். மாளிகையை எங்களுக்குத் தந்து விட்டு வெளியேறு என்று கேட்டோம். இல்லையே! தங்க ஆசனத்தையா கேட்டோம், செங்கோலையா கேட்டோம். ஒன்றுமில்லையே, ரொட்டித் துண்டுகளைக் கேட்டோம் ஒவ்வொரு நாளும் உலர்ந்து போய் மாளிகையின் வெளியே தூக்கி எறிகிறீர்களே, அந்த ரொட்டித் துண்டுகளைக் கேட்டோம்; மாளிகையின் உள்ளேயே தின்பதற்கு ஆள் இல்லாமல் அழுகிப்போன பிறகு தூக்கி வெளியே எறிகிறீர்களே, அந்த இறைச்சித் துண்டுகளைக் கேட்டோம். யார் உழைப்பால் வந்தவை இவை எல்லாம்? எவர் உழைப்பால் இந்த உன்மத்தனும், இவனுடைய காமக்கிழத்தியும் உடலைவளர்த்தார்களோ, அந்த உடலை அதே மக்களைக் கொண்டு நார் நாராகக் கிழித்தெறிவோம். இப்படிப் பேசினர் மக்கள். என்றாலும் நமது எண்ணம் நிறை வேறுமா ஏன்? மீராபே தடைக்கல்லாக இருந்தால்? இதையும் மக்கள் பேசாமலில்லை.

ஆனால். இரு தரத்தாருடைய நினைவெல்லாம் மீரா பேயின் மாளிகையை நோக்கி இருந்தது.

ஒரு மருத்துவர் அமைதியாக வெளியே வந்து பிரெஞ்சுதாயகம் தன் தலையான அறிவுச் செல்வம் ஒன்றை இழந்து விட்டது. என்று கம்மியகுரலில் சொன்னார்.

'விளக்கமாக' என்று ஒலித்தது ஒரு குரல் கூட்டத்தில் புகழை நாட்டுக்கீந்து உடலைப் புழுதிக்கு ஒப்படைத்து விட்டார் பேரறிஞர் மீராபே, என்று சற்று விளக்கமாகச் சொன்னார் தலைமை மருத்துவர். ஒரு குதிரைவீரன் வார் சேல்ஸ் நோக்கிஓடினான். மன்னன் முன் மண்டியிட்டு நின்றான் குளறிய வாயோடு, மீராபே முடிந்து விட்டேன் என்று மன்னன் சாய்ந்துவிட்டான் மக்கள் நாட்டைக். கண்ணீரால் கழுவினர். மீராபே இருந்தால் மன்னனை சாகடிக்க முடியாது என்று நினைத்த மக்கள் மன்னனை சாகடிக்காவிட்டாலும்பரவாயில்லை, மீராபே உயிரோடிருக்கக் கூடாதா என்று தான் நினைத்தனர். எனினும் வாழ்க்கை எனும் மலர் என்றாவதுவாடிவிடும் தன்மையது என்று ஆறுதல் அடைந்தனர். மீராபேயின் சவ அடக்கம் தக்க அர

★ அவன் இருந்தால் மன்னனைக் கொல்லமுடியாது என்றெண்ணிய மக்கள் மன்னன் கொல்லப் படாவிட்டாலும் பரவாயில்லை அவன் உயிரோடிருந்திருக்கக் கூடாதோ.... என்று ஏங்கித் தவித்தனர்!

சாங்க மரியாதைகளோடு நடந்து முடிந்து விட்டது.

'உலகம் இதைப் போன்ற மக்களை அடிக்கடி ஈன்று கொண்டிருப்பதில்லை. அருமையாக ஈனும் மிகச் சிலரே, மிகச் சிறந்தவரை நாம் பெற்றோம். அந்த கௌரவமிக்கப் பெருமகனின் கல்லறையையே காண்கின்றோம் ஒன்று உலகம், மற்றொன்று உயிர். உலகம் இருக்கிறது. அந்த உயிரெனும் மீராபே இன்றில்லை இதுதான் முடிவு. என்று பேசினார் ஒரு பெரியவர்.

அதோடு முடிந்தது மீராபேயின் வரலாறு.

அடுத்து மக்கள் மனம் வார்சேல்சை நோக்கிற்று. எந்த நேரமும் புரட்சிப்படை தன் மாளிகையை நோக்கிவரக்கூடும்என்று எதிர்ப்பார்த்தான்.

ஒருபெண் படைப்புறப்பட்டது.

தொடரும்

1960-ல் கிருஷ்ணலீலா



சுற்றிலும் பெண்கள் சூழ்ந்திருக்கச் சொகுசாகச் சாய்ந்து கொண்டிருக்கும் இந்த சுந்தரன் யார் தெரியுமா? இவன்தான் கலியுகக் **கண்ணன்.** பெயர் கிரிபாலு. இவன் நல்ல அழகன். வயது 35. ஐந்து குழந்தைகளுக்குத் தகப்பன். இவன் கடந்த பத்து ஆண்டுகளாகத் தன்னைக் கிருஷ்ணன் அவதாரம் என்று சொல்லிக்கொண்டே வந்தான். தனக்கெனச் சில சீடகோடிகளை (கோபியர்களை) வைத்திருந்தான். அவர்களோடு அடிக்கடி காட்டிற்குச் சென்று காமக் களியாட்டங்கள் நடத்துவான். அதற்கும் பெயர் பூஜை என்றான்! தான் உண்மையிலேயே கிருஷ்ண அவதாரம்தான் என்று மக்கள் நம்பும்படிச் செய்தான். பெரிய பெரிய அதிகாரிகளெல்லாம் தத்தம் பெண்டு பிள்ளைகளோடு வந்து இவன் பாதார விந்தங்களைக் கழுவிக் குடித்தனர். இவனைச் சந்திப்பதே ஒரு பேறு எனக் கருதினர் மக்கள்!

இவனுக்கு விருந்து வைப்பதில் தனி இன்பங் கண்டனர் குடும்பப் பெண்கள். பெரும்பாலும் விருந்துகளெல்லாம் இரவில்தான் நடக்கும். இவன் விருந்து ஒன்றுக்கு ரூ. 200-. காணிக்கையாகப் பெற்றான். விருந்துண்பான், மயக்குமொழி பேசுவான். பருவ மங்கையர் முதல் பல் விழுந்த கிழவிகள் வரை அப்படியே சொக்கிப் போவர். அவர்களையெல்லாம் பிறந்த மேனியோடு இருக்கச் செய்து காமக் களியாட்டங்கள் புரிவான். இவனுடைய காமப்பசியைத் தீர்ப்பதை, கண்ணனோடு கலக்கும் பேறு பெற்றோமே [illegible]ரிப் பெண்கள் புளகாங்கிதம் அடைந் [illegible] நூறு பெண்களைக் கோபியர் [illegible]த்தான். இவ்வளவும் நடந்த [illegible]ந்த **அயோக்கியனைப்** [illegible] நடவடிக்கை எடுத்துள்ளனர்!

அடுத்த இதழில்......!

முகப்பில் ஆசிரியர்

சி. பி. சி. !

இந்தி எதிர்ப்பு மாநாட்டில்

கழகக்காவலர் ★ போராட்டக் குழுத் தலைவர்

அண்ணா ★ சம்பத்

ஆகியவர்களின் சொற்பொழிவுகள் முழுமையாக இடம்பெறும்.

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 1] ★ 29—7—60 ★ [இதழ் 47

பணிவும் பதட்டமும்

பிரதமர் ஒரு விசித்திரமான மனிதர். திசைக்கேற்றப்படி தன் சொல்லின் விசையை மாற்றிக்கொள்பவர். ஒரே கருத்தை வடக்கே பேசும்போது ஒரு விதமாகவும், தெற்கே பேசும் போது வேறு விதமாகவும் பேசுகிறார். வடக்கே முகாரி பாடுகின்றார். தெற்கே அடாணா பாடுகின்றார். வடக்கே பேசும்போது தன்னை ஒரு சிறந்த ஜனநாயகவாதியாகக் காட்டிக்கொள்கிறார். தெற்கே பேசும்போது முசோலினியின் முழு உருவம் என்று காட்டிக் கொள்ளத் தவறுவதேயில்லை. இரண்டுக்கும் அவர்தான் பிரதமர். இருந்தாலும் குரல் மாறுகிறது. மாறுவதன் நோக்கத்திற்குக் காரணம் அவரல்ல. ஆங்காங்கு வாழும் மக்கள் மாற்றியமைத்து விடுகிறார்கள். மிக மோசமான பதட்டமான சுடுசொற்களை வீசிவிட்டு நேரு அவர்கள் விமானம் ஏறிவிட முடியும். ஆனால் வடக்கே அவரை அப்படி பேசவேவிடமாட்டார்கள். ஆமதாபாத் நிகழ்ச்சியை எடுத்துப் பார்த்தால் நடந்தது நன்றாகப் புலப்படும். ஏன் அண்மையில் நடந்த வேலை நிறுத்தத்தைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன். ரேடியோவில் பேசினார் என்பதற்குப் பதில் பெருங் குரல் வைத்து அழுதார் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அதுவே ஒரு மாநில சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தமாக இருந்து, அதுவும் அது சென்னை மாநிலத்தைப் பொருத்ததாயிருந்தால் முகத்தில் தீ சூழ்ந்து வாயில் அனல் பறந்துதிருக்கும். சட்டத்தின்படி தீர்த்துக் கொள்ளலாமே தவிர வாய்வுக்கு வந்தபடிப் பேசினால் விளைவுகள் விபரீதமாக முடியும் என்றுதான் அன்று ரேடியோவில் அந்த அலறல் அலறினார்.

இதை ஏன் எழுதுகிறோம் என்றால் அண்மையில் அசாமில் மொழிசம்மந்தமாக நடந்த கலவரங்களும், அதனால் பல வங்காளக் குடங்கள் கால்பிடரியில்பட ஓடியதும், வீடுகள் தீக்கிரை யாக்கப்பட்டதும், சொத்துக்களை விட்டு ஓடியும் ஒளிய முடியாமல் கலகக்காரர்களிடம் அகப்பட்டுக்கொண்டு உதைப்பட்டதும், பதுங்க இடமில்லாமல் பாதுகாத்திட நாதியில்லாமல், நாசமாக்கப்பட்ட வங்காளக் குடும்பத்தினர் பட்டத் தொல்லைகளும் துயரங்களும், அன்னாடம் ஏந்தி வந்தச் செய்திகளை ஏடுகளிலே பார்த்தோம்.

ஏக இந்தியா?

ஏக இந்தியாவில் ஒருவன் கையில் தீப்பந்தம், மற்றவன் கண்ணில் நீர். ஒருவன் துரத்துகிறான் மற்றொருவன் ஓடுகிறான். ஒருவன் 'சாவு, செத்துப்போ' என்று சம்மட்டியால் தலையில் அடிக்கிறான். சாகிறேன் என்று தலை சுழன்று வீழ்கிறான் மற்றொருவன். இந்த இரு தரத்தினரும் ஏக இந்தியாக்களே — வெட்கம், வெட்கம்.

நடந்ததென்ன?

அசாம் மாநிலத்தில் அசாம்மொழி அரசியல் மொழி என்றது அசாம் சர்க்கார். எங்கள் மொழியின் நிலை என்ன என்றனர் வங்காளிகள். அவ்வளவுதான் அசாம் மொழி ஒழிக, என்று ஊர்வலம் புறப்பட்டது. அந்த ஊர்வலத்தை வீட்டுக்கனுப்புவதா, சுடலைக்கனுப்புவதா என மின்னலெனக் கிளம்பினர் அசாம் மக்கள். அவர்கள் பக்கத்திலே இருக்கும் நாகர்களிடம் அடிபட்டு அடிபட்டு உடல் வைரமேறியவர்கள். வங்காளிகள் விடுதலைப் போரில் தீவிரமாக ஈடுபட்டு பல செயற்கரிய தியாகங்களைச் செய்து சிறைசென்றவர்கள் என்பது தவிர வேறொரு தொல்லையையும் அசாமியர்களைப் போல அனுபவித்தறியாதவர்கள். மேலும் கலகம் நடந்த இடம் வங்காளமல்ல அசாமில், அங்கு வங்காளிகள் மைனாரிட்டிகள். மொழியின் மேல் ஏற்பட்ட புயலும் இடியும் அவர்கள் விழிகளைப் பிடுங்கிவிட்டது.

பல உயிர்கள் செத்த பிறகு, பல கோடி வங்காளிகள் சொத்துக்கள் நாசமான பிறகு, பலவீடுகள் தீக்கிரையான பிறகு, பாரதப் பிரதமரே ஓடிவாரும் ஓடி வாரும் என்று அழைத்த யோசனை, அவரை; இந்தத் தகராறு தொடக்க நிலையிலே இருக்கும்போது அழைத்து சமரசம் செய்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது நமக்கெல்லாம்.

வங்கக் கடலில் இன்ன நாளிலே புயல்கிளம்பும், இந்திந்த திசை நோக்கி, இத்தனை மைல் வேகத்திலே அடிக்கும் என்றுகூட வானிலை ஆராய்ச்சியாளர்கள் முன் அறிவிப்புத் தந்து கூடுமான வரை நாசத்தைத் தடுக்கிறார்கள். ஆனால் இந்த அசாம் கலகம் மின்னலென வெட்டி இடி என முழங்கிற்று. நீண்ட தூக்கத்திலிருந்த டில்லி வெடி சத்தத்தைக் கேட்டவன் தலைதூக்கிப் பார்த்து இது என்ன புகை கிளம்புகிறதே என்று கேட்ட கதையாக, என்ன என்று கேட்டது.

மொழிக் கிளர்ச்சி. பலர் முடமாக்கப்பட்டனர். புயலில் பெயர்ந்தோடு செடிகொடிகளென, விண்ணுயரப் பறக்கும் குப்பைக் கூளங்கள் போல் மக்கள் சூறுவளியில் சிக்கிவிட்டனர். அவ்வளவு பேரும் வங்காளிகள் என்ற செய்தி. நமது பாரதப் பிரதமர் எதையுமே முன்கூட்டியறிந்து அதைத் தடுத்ததே இல்லை.

வடக்கே சீனத்தின் அடாத செயலை சுட்டிக்காட்டி ஏன் இப்படி நடந்தது எப்போது இந்த எல்லைமீறும் செயல் தொடங்கியது என்று கேட்டால்; போடா பைத்தியக்காரர்களா—இது இன்று நேற்று — ஐந்தாண்டுகளாகவே இப்படி நடந்துக் கொண்டிருக்கின்றது என்றார். ஏன் சும்மா இருந்து விட்டீர் என்றால் அந்த இடத்தில் மனிதன் வாழ்வானா மிருகம்தான் வாழும், ஆகவே அந்த சீன மிருகம் வாழ்ந்து போகட்டும் என்று விட்டுவிட்டேன் என்றார்.

வேறு நாடாயிருந்தால்

வேறு நாடாயிருந்தால், பாதுகாப்பு மந்திரி என்ற பெயரால் கிருஷ்ண மேனனும், வெளி நாட்டு மந்திரியென்ற பெயரால் நேருவும் தூக்கி வெளியே எறியப்பட்டிருப்பர். இங்கு, இந்த கேடுகெட்ட பாரதத்திற்கு அவர்களை விட்டால் கெதி இல்லையே.

நேபாளப்—கொய்ராலா

சீனர்கள் நேபாள மந்திரி கொய்ராலாவுக்குக் கொடுக்கின்ற மதிப்புக்கூட நேருவுக்குத் தருவதில்லை. அண்மையில் நேபாள எல்லைக்குள் சீனப்படையினர் புகுந்து நேபாளி ஒருவனை சுட்டுவிட்டனர் என்ற செய்தி வந்தது. உடனே கண்டனக்குரல் எட்டியது பீகிங்கிக்கு. சூ-என்-லாய் அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு நேபாள எல்லைக்கு வெளியே பத்து மைல் தூரம் தன் படையினரை வந்துவிடும்படி கட்டளையிட்டு, இறந்தவன் குடும்பத்திற்கு நட்ட ஈடுதருவதாக வாக்களித்திருக்கின்றான் என்பதையும் நாம் படித்தோம். ஏன், அந்த அச்சம் இவ்வளவு [illegible]றந்த நாட்டின் நாயகர்களிடம் அவனுக்கு வரவில்லை? எல்லாம் நேருவின் [illegible]யாலாகாத்தனம்தான் என்பது [illegible]ர வேறென்ன?

ஆகவே வெளிநாட்டு நிலைதான் இபபடி என்றால் உள்நாட்டில் வறுமைப் போர் இனப் போர், மொழிப் போர், எல்லைப் போர், தண்ணீர்ப் போர் இப்படி பல போர்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

இதில் நேரு ஹெலி[illegible]ப்டரில் சென்று நிலமைகளைக் கவனித்தது அசாம் பகுதிகளைத்தான். அது ப[illegible]றி அவர் சொன்னார்:

'அசாமுக்கு வந்தேன், எ[illegible]ழில்மிகு தோட்டங்களைக் கண்டேன், புல்வெளிகளையும், இடையிடையே இருக்கும் பூந்தோட்டத்தையும் கண்டேன். பூஞ்செடிகளின் கால்களைக் கிள்ளியோடும் நீர் அருவிகளைக் கண்டேன். நேருவே வருக! வருக வென்றழைக்கும் நீர்வீழ்ச்சிகளின் ஓசையைக் கேட்டேன். வயோதிகர்களும் வாலிப உணர்ச்சிக்கொள்ளும் வனப்புகளைக் கண்டேன். தகத்தகவென வீசிய செம்பரிதியின் ஒளியிலே நிறமாறிக் காட்டும் நிலமாதாவின் எழிலைக் கண்டேன். மனிதன் கைவண்ணத்தால் மலைகள் பெற்றெடுக்கும் பலவிதப் பொருள்களைக் கண்டேன். பாரதப் பெருமைக்கோர் அணிகலனாக விளங்கும் அசாம் வளமிக்கப் பகுதிகளைக்கண்டேன். சுமையை நெடுந்தூரம் சுமந்து செல்பவன், ஒரு சுமைதாங்கியைக் கண்டவுடன் கொள்ளும் மகிழ்ச்சியைப் போல், இன்றைய உலக விவகாரங்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் எனக்கு ஒரு ஆறுதலைத் தந்தது இந்தப் பகுதி. ஆனால்,

இந்த, 'ஆனால்' என்ற சொல்லிருக்கிறதே மிகப் பயங்கரமானது, நினைக்கவே நெஞ்சம் திடுக்கிடச் செய்வது. ஓடினான் மலையுச்சி ஏறினான். கண்டான் களித்தான் என்ற வாசகங்களைக் கேட்டுக் கொண்டே வரும்போது ஏற்படுகின்ற மகிழ்ச்சி, ஆனால், என்றவுடன் நின்றுவிடுகிறது. ஆனால் மலையிடுக்கிலே விழுந்து இறந்து விட்டான் என்று அவன் முடிக்கும்போது ஒவ்வொருவனும் என்ன நினைப்பானோ, அதேபோல் நேரு அவர்கள், ஆனால் என்ற சொல்லோடு தயங்கியபோது, என்ன? என்றே நம்மை கேட்கத் தூண்டியது.

ஆனால், என்று தொடங்கி மேலும் தான் கண்ட கவலை மிகுந்த காட்சியின் வர்ணனைக்கு வந்தார். இவ்வளவு எழில்மிகுந்த காட்சிகளைக் கண்ட நான் வேறோர் பக்கம் திரும்பினேன். அந்தோ—நெஞ்சம் புண்ணாகிறது. நிலைதடுமாறுகிறேன். கொளுத்தப்பட்ட குடிசைகள், இடிக்கப்பட்ட வீடுகள் சூறையாடப்பட்ட அங்காடிகள், நாசமாக்கப்பட்ட நகரத்தின் பல்வேறு கட்டடங்கள் ஐயோ, ஐயோ எனும் அபயக்குரல்கள், உணவில்லையே எனும் ஓங்காரச் சத்தம். எங்கள் குழந்தை குட்டிகளின் கெதி என்ன? என்ற கூக்குரல்கள் கேட்ட வண்ணம் இருக்கின்றன. பாரத நாட்டில் பாரத மக்கள் ஒருவருக்கொருவர் மொழியால் ஏற்பட்ட மோதல் இந்த அளவுக்கு அழிவை உண்டாக்கின. வெட்கப்படுகிறேன் வேதனைப்படுகிறேன்.

மொழியைப் பற்றிப் பேசினார்

மொழி என்பது மெல்லிய செடியைப் போன்றதாகும். அதை பக்குவமாக வளர்க்கவேண்டும். அப்படி வளர்ப்பதை விட்டு, அளவுக்கதிகமான எருவையும் தண்ணீரையும்விட்டு, அன்றாடம்அதைஆட்டி ஆட்டிப் பார்த்துக்கொண்டிருந்தால் நிச்சயம் வளராது. வம்புகள்தான் வளரும். தீயிடுதல், கொள்ளை கொலை ஆகிய இவைகள்தான் வளரும். வேறு எதுவும் வளருவதற்கு நிச்சயமாக இடமே இருக்காது. இந்தப் பூசல் நம்மை எங்கோ கொண்டு போய்விட்டுவிடும். வங்காளிகள் யார். அவர்களும் பாரதத்தின் உறுப்பினர்களே. இதை அறியாமல், ஆத்திரத்திலிறங்கி, அழிவை உண்டாக்கிவிட்டீர்கள். ஆகவே அமைதி கொள்ளுங்கள் என்று கையமர்த்திவிட்டு தலைநகரம் வந்தவுடன் தண்டவரி போட்டிருக்கிறார். அதையும் அவரால் கூட்டத்திலே சொல்ல முடியவில்லை, அவ்வளவு கலவரம் அவர் மனதிலே.

அங்கே பணிவு — இங்கே பதட்டம்

நேரு ஒரு முதலை மாதிரி. முதலைக்கு தண்ணீரிலே இருக்கும்போது இருக்கும் வலிவு தரைக்கு வந்தால் இருப்பதில்லை. ஆகவே தண்ணீர்போல் குளிர்ந்த நிலையிலே இருக்கும் தென்னாட்டுக்குவரும் போது முதலை போலாகிறார். தரைபோலிருக்கும் வடக்குக்கரைக்குப் போகும்போது பலமற்றுப் போகிறார் என்பதுதான் உண்மை.

அப்படியானால் குளிர்ந்தநீர் போலிருக்கும் தென்னகம் சூடேற வேண்டும். அப்படியானால்தான் நேரு மொழியைப் பற்றி அசாமில் பேசிய பேச்சுகளின் கருத்துக்கள் தென்னகத்திற்கும் பொருந்தும் என்று நம்பலாம்.

'சிங்கத்தின் உடலிலும் சில நேரம் குளிர்ச்சியான இரத்தம் தோன்றும், குளிர்ந்த நீரிலும் சில நேரம் வெப்பம் தோன்றுவதுண்டு' என்று ஒரு அறிஞன் சொன்னதைப்போல் குளிர்ச்சியான இரத்தம் ஓடிக்கொண்டிருக்கின்ற சிங்கத் தமிழர்களே! உங்கள் உடலில் இதுவரை ஓடிக் கொண்டிருந்த குளிர்ச்சியான இரத்த ஓட்டம் போதும், இனி சூடான இரத்தமே எப்போதும் ஓடட்டும். தூங்கியது போதும், விழித்தெழுங்கள். சோதனை காலம் பிறந்து விட்டது. சூதுமதியினர் படையெடுத்து விட்டார்கள். இனி சுகம் பெறுவதெக் காலம் என்று முகாரி பாடிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

அடுத்து வரும் மொழிப் போரில் அசாம் நேருவாக இ[illegible]க்கிறாரா [illegible] பழைய நேருவாகவே இருக்கப் போகிறாரா என்பதை வ[illegible]ால் சொல்லும். காலத்துக்காக நாம் காத்துக் கொண்[illegible] காலம் நமக்காகவும் காத்துக் கொண்டிருக்காது[illegible]

'விரைந்து வாருங்கள் இந்தியின் [illegible] சார்பாக அழைக்கிறோம்.

மாறும் உலகம்

★ மனிதன் யார்? கடவுள் யார்?

★ மதம்தேவையா? இவ்வுலகம்நிலையானதா?

★ உலகில் பொருளென்று ஒன்றுமேயில்லை

மக்களின் எண்ணங்கள் எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியானதாக இருக்கவில்லை. சிந்தனை வளர்ச்சி பெறப்பெற பழைய வாதங்கள் நன்கு ஆராயப்பட்டு அவற்றிலிருந்த பொருந்தாக் கூற்றுக்கள் மறுக்கப்பட்டன. அரசியல் மட்டுமே அங்ஙனமிருந்ததாகச் சொல்லுவதற்கில்லை. ஒவ்வொரு துறையுமே அப்படித்தான். முக மணுக் டால்ட்டன் என்னும் விஞ்ஞானி அணுவைப் பிரிக்க முடியாது என்றான் ஆனால் இன்று அணுவைப் பிரிக்க முடியும், அதாவது அணுவிற்கு அணு ஏற்படுத்த முடியும் என்று மெய்ப்பித்து

★ மறுபிறப்பு, மோட்சம், நரகம் இவற்றிற்குள்ள தொடர்பு என்ன?

அதன் அடிப்படையில் அணுக்குண்டையும் கண்டுபிடித்தனர். யானைக்குள்ள தந்தங்கள் தனிப்பட்ட ஓர் உறுப்பு என்று நினைத்தனர். ஆனால் அவை யானையின் வெட்டும் பற்களே தான் அங்ஙனம் உருமாறியிருக்கின்றன என்றுகண்டுபிடித்துள்ளனர். அதே போல் யானையின் துதிக்கை அதன் மேல் உதட்டின் மாறுபாடுதான் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சூழ்நிலைக்குத் தகுந்தவாறு உயிரினங்களிடத்தில் பல மாறுபாடுகள் தோன்றியுள்ளன என்பதற்கு இவை ஆதாரங்களாகும். மரம் உயரமான வளர்ச்சி கொண்டது. அதன் இலை, தழைகளை ஒடித்துத் தின்ன கை நீண்டிருக்கும் வகையில் துதிக்கை உருவாகியுள்ளது. மேலும் காடுகளில் ஒரு காலத்தில் சில குறிப்பிட்ட மிருகங்களே இருந்தன. ஆனால் ஒன்றோடொன்று கலந்து புதிய இனங்களும் அவற்றுள் ஏற்பட்டன. பறவைகளுக்கும், நீரில் வாழும் உயிரினங்களுக்கும் இக்கூற்று பொருந்தும். இவ்விலங்குகளுக்கும் சிலர் மனம் உண்டு என்றார்கள். குறிப்பாக ஜைன மதத்தினர் உலகிலுள்ள எல்லாப் பொருட்களுக்கும் உயிர் உண்டு, மனமும் உண்டு என்றனர். எனவே தான் தத்துவம் எனப்படும் மெய்ந்நெறியும் புதிய புதிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டி வந்தது.

தத்துவ எண்ணங்களில் குறிப்பாக மனிதன் யார்? கடவுள் யார்? மதம் தேவையா? இவ் உலகம் நிலையான உண்மைதானா அன்றி ஓர் மாய்கையா? மறுபிறப்பு, மோட்சம், நரகம் என்பவையெல்லாம் என்ன சம்பந்தமுடையவை? நம்பிக்கைதான் மதத்திற்கு அடிப்படையா, வேறு எதுவும் அதன் அடிப்படையா? பகுத்தறிவு என்ன இடம் பெற்றிருக்கிறது என்று பல கோணங்களில் அறிவின் திறன் வேலை செய்து கொண்டே இருக்கிறது. இக்குறிகளை ஆதரித்து ஒவ்வொரு முறை இருக்கி

பின்பற்றிச் சிலரும், பகுத்தறிவைப் பின்பற்றிச் சிலரும், மாய்கைகளைப் பின்பற்றிச் சிலரும் இங்ஙனம் பலவாறாக உள்ளனர். இவர்களில் ஒவ்வொரு குழுவினரும் தங்களது வாதத்திற்கு ஆதரவு தேடும் ஆக்கப் பணியில் முனைகின்றனர். இவையெல்லாம் ஏன் என்று அறவே நாம் ஒதுக்கிவிட முடியாது. நம்மையோ, நம்மைச் சுற்றியிருக்கும் சமுதாயத்திலோ இக்கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றின் நிலைகளை அறிந்தே யாரும் வளர இயலும். இவற்றுள் பயன் உள்ளது எது? மனக்குறையில்லாமல் மகிழ்விப்பது எது என்ற ஆர்வமே உழன்றுகொண்டு வருகிறது. விரைவாகவும் நிறைவாகவும் மகிழ்ச்சியடைய மனிதன் விரும்புகிறான். இதனால் பல எண்ணங்கள் எழுகின்றன. சில சரியாகப்படுகின்றன. மற்றும் சில சரியாகப்படவில்லை. இப்படி முன் பின்னாகப் பல கருத்துக்கள் நிற்கின்றன. அனுபவம், ஆழ்ந்த ஞானம் ஆகியவற்றின் துணைக்கொண்டு விலக்க வேண்டிய அம்சங்களை விலக்கி இறுதி உண்மையைக் காண விழைகிறது உலகம். விஞ்ஞானம், கலை,

★ நாத்திகம் விரும்பும், பொதுவுடைமைத் தத்துவம் பரவலாயிருக்கும் ருசிய நாட்டில் மத உரிமை அளிக்கப்பட்டுள்ளது!

அரசியல் எல்லாவற்றையும் இவைகட்டுப்படுத்துகின்றன. பெரிய விஞ்ஞானிகளும் சிலர் மாய்கைகளை நம்புகின்றனர். நாத்திகம் விரும்பும் பொதுவுடைமைத் தத்துவம் பரவலாயிருக்கும் ருசிய நாட்டில் மத உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இப்படிச் சிக்கலான, சிந்தனை ஆய்வுரைகளைப் பற்றிச் சில குறிப்புக்களை நாம் இங்கே சற்று நோக்கலாம். எண்ணவியல் (IDEALISM) வாதத்தின்படி உலகில் பொருள் என்று எதுவுமே கிடையாது. மேசை என்றால் அது ஒரு பொருள் அல்ல. மரத்தாலான சாமான் என்ற எண்ணம் தான் அது. அதாவது மேசை, நாற்காலி, காகிதம், கட்டிடம், மனிதன், மலை என்பதெல்லாம் சாதாரணமாகப் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன அவ்வளவுதான். இவை ஒன்றும் உண்மையான, நிரந்தரமான பொருட்கள் அல்ல. இவையெல்லாம் அழியக் கூடியவை. ஆகவே பொய்யானவை. மனம் அழியாது. ஆகவே தான் அதுமட்டும் நிரந்தரமானது எனக் கருதப்படுகிறது. பிளேட்டோ என்னும் கிரேக்க தத்துவாசிரியர் போன்ற சிலரும் இவரைத் தொடர்ந்து வந்தனர். இவர்களிலேயே சிலர் மனம் என்பதாக ஒன்றும், பொருள் என்பதாக ஒன்றும் இரண்டு கூறுபாடுகள் தனித்தனியாக உள்ளன என்று நம்பினார்கள். கடவுளின் எண்ணம் தான் இவ் உலகம் என்றார் பெர்கலி என்னும் ஆங்கில ஆசிரியர் ஒருவர். லோட்டஸ் என்பவரோ இவ் உலகம் முழுமைக்கும் சேர்ந்து ஒரு பொதுவான மனம் ஒன்று இருக்கிறது என்றார். மனிதன் கால வளர்ச்சியில் ஓர் அம்சம். தன்னை மட்டும் மனிதன் அறியக்கூடும். ஆனால் அவனுக்கு அப்பாலுள்ள எல்லாப் பொருட்களையும் இவனால் உணர முடியாது. மனிதனது எண்ணத்தின் வளம் தன்னகத்தே சுருங்கித் தன்னை மட்டும் அறியும் அளவிற்கு

வே. சௌந்தரராசன்

அதன் ஆற்றல் வளரவில்லை என்றார் இவர். விலங்கினங்களுக்கும் சிந்திக்கும் திறனுண்டு அவற்றை வெளியிடும் நிலைஅவற்றிற்கு ஏற்படவில்லை. அவற்றின் சிந்தனை தான் அங்கே ஆத்மாவாக இருக்கிறது. மனிதஎண்ணம் தான் உலகில் சட்டமாகவும், உரிமையாகவும், மருத்துவமாகவும், இலக்கியமாகவும், கலையாகவும், கட்சியாகவும் திருமணமாகவும், திருவிழாவாகவும் விரிவடைகிறது. தத்துவம் எனப்படும் மெய்நெறிக் கொள்கைதான் இவ்வெண்ணங்களின் தன்மைகளை எடுத்துக் காட்டுகின்றன.

உலகத்திலுள்ள பொருட்கள் எல்லாம் தாமாக ஏற்பட்டவை அல்ல. அவற்றையெல்லாம் கடவுள்தான் உண்டாக்கினார். கடவுளே பார்த்து அவ்வவற்றின் அசைவு, ஆற்றல், வளர்ச்சி, பெருக்கம், குறுக்கம் எல்லாம் நிர்ணயித்திருக்கிறார். அதன்படி தான் அவை இயங்கும் என்றார் டெக்காட்ஸ் என்பவர். சிந்தனையின் துணையில்லாமல் நாம் ஆத்மாவையோ, மனதையோ, ஒருகாலும் உணர முடியாது. கண் பார்வையும், கற்பனைத் திறனும் தனித்து இயங்குபவை. இவை இரண்டும் தனித்தனி அலுவல்களைக் கொண்டுள்ளன. மனம் மட்டுமே ஒருவரது உடலில் ஒரு மாற்றத்தைச் செய்துவிட முடியாது. அதே போல் உடலாகப் பார்த்து மனதில் எந்தவித மாற்றத்தையும் செய்துவிட முடியாது. மனமும் உடலும்

வயிற்றுப் பசி, ஆசை,காமம், வலி,ஒளி, ஒலி ஆகியவற்றை மனமும் உடலும் சேர்ந்து தான் அறிகின்றன. மனவளத்திற்கும் உடல் வளத்திற்கும் நல்ல ஒழுக்கமே அடிப்படை. நோய்களுக்குக் காரணம் தீய பழக்கங்கள், தீய எண்ணங்களே ஆகும் என்றார் இவர்.

மனம் தன்னைப் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தும் நிலை கலையெனப்படும். தன்னையே உயர்த்தித் தன்னுள் மரியாதையோடு பிரதிபலிப்பது மத உணர்வு. மனம் தான்பல்வேறுகோணங்களில் வெளிப்படாமல் தன்னை மட்டுமே அறிவது தத்துவம். மனம் தான் மதத்திற்கும் தத்துவத்திற்கும் நடுநிலைக்கோடு. மனப்பக்குவம் பொறுத்தே ஒருவருக்கு மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. மனமறிந்த ஆய்வாளர் தத்துவம் அறிந்த பெருமக்கள் ஆவர். மனம் மதத்தின் ஊற்று. அறிவின் பிறப்பிடம். மனதை வைத்துத்தான் எண்ணங்கள். எண்ணங்களை வைத்துத்தான் செயல். எனவே மனத்தின் வழி செயல், என்பர்.

கார்ல் மார்க்ஸ் பொதுவுடைமையின் ஆசிரியர் எண்ணவியல் எனப்படும் இம் மன வழி உலகு என்ற நெறியை அவர் ஒப்புக்கொள்ளவில்லை மனம்அல்லது எண்ணவியலை ஹெகல்எனும் தத்துவாசிரியர் பெரிதும் போற்றினார். ஹெகலின் ஆய்வுகள் எண்ணத்திலிருந்து தான் பொருட்கள் வந்திருக்க முடியும் என்றன. அதாவது பறவையைப் பார்க்காமலே விமானம் செய்ய முடியும். சிந்தித்தாலே போதும். ஒரு முன் மாதிரிப் பொருள் இல்லாமலே ஒரு பொருளை ஆக்கிவிடலாம் என்பது ஹெகலின் துணிவு. எண்ண வழியில் உலகம் இயங்குவதாக அவர் கருதுகிறார். ஆனால் கார்ல் மார்க்ஸ், பொருளைப் பார்த்து,அறிந்து அதன்பின் தான் ஒரு எண்ணமே உருவாக முடியும் என்பார். எப்படி? பறவை எதையும் பார்க்காமலிருக்கிற பொழுது பறக்கும் நிலை என்ற எண்ணமே உருவாக வழியில்லை என்கிறார். ஒரு பொருளைப் பார்த்துப் பல பொருட்கள் வந்திருக்கலாம். வண்டியைப் பார்த்து இன்று பல வாகனங்கள் ஏற்பட்டிருக்கலாம். இவற்றிற்கெல்லாம் மூலமாக ஒரு பொருள் இல்லாமல் இத்தனையும் உருவாக முடியாது. சூன்யமாகச் சிந்திக்க முடியாது. ஏதாவது ஒரு பொருளை வைத்துத் தான் பிறகு எண்ண வேண்டும். எண்ணம் பொருளையடுத்தே விடுவதாகும் தானாக இயங்க வழியில்லை ஏதாவது ஒரு பொருளைச் சாராமல் எண்ணம் இயங்காது. கடவுள், காதல், தலைவன், புகழ் எல்லாம் ஏதாவது ஒரு முன்னோடியை, ஒரு பொருளை உருவாக வைத்துத் தான் நடக்கின்றன. பொருளே முதலில் எண்ணத்தைத் தூண்டுவதாகும். என்பது பொருள் நிலைக் கொள்கையாரின் (Materi-alists) வாதம் ஆகும்.

கார்ல் மார்க்ஸ் குறிப்பாகக் கிழக்கத்திய மதம் பற்றிய தத்துவங்களை மிகுதியாய் ஆழ்ந்து நோக்கிய பான்மை தெரியவில்லை. மேல் நாட்டுத் தத்துவங்களை நன்குஉணர்ந்திருப்பதைப் போன்று கீழ் நாட்டுத் தத்துவங்களை உய்த்துணரவில்லை. இந்து மதம், புத்த மதம். சமணம், சைவம் ஆகிய நெறிகள் பற்றி அதிகக் குறிப்புகள் அவரது நூலில் காணப்படவில்லை. ஆனால் இந்தியாவில் தோன்றிய வங்காள நாட்டு மேதை எம். என். ராய், கீழ் நாட்டுத் தத்துவங்களை நன்கு அறிந்துள்ளார். அரசியல் துறையிலும் ஆழ்ந்த புலமை உண்டு இவருக்கு. பிரிட்டிசாரின் சூழ்ச்சியால் எம். என். ராயின் சிந்தனைகள் பரவலாகப் பயன்பட்டு நம்நாட்டு நெறிகளை அறிமுகம் பெறும் நிலை தவிர்ந்துவிட்டது. இந்நாட்டின் நெறிகளில் இன்னும் சீரிய ஆராய்ச்சி தேவைப்படுகிறது. மார்க்ஸ் பொருளியலை ஒரு தத்துவமாகக் கண்டதைப்போல் இந்நாட்டில் வேறு யாரும் முனையவில்லை. மார்க்சின் அறிவு அகலமும், ஆழமு உடையது. நுணுக்கத்தி குப் பெயர் பெற்றது. தெளி வும் உண்டு. எனினும் அவருடைய ஆய்வுகள் மதக் கட்டளைகள் போல் மாறிவ கின்றன. அதாவது மார் சியமே முடிவானது என் தாக. இப்படி மார்க்ஸ் சொல்லவில்லை. ஆனால் நடைமுறையில் அப்படியோர் எண்ணம் நிலவி வருவ கண்கூடு.

எங்கும் விற்பனையாகிறது!

தங்கமலர்
திங்கள் இருமுறை

ஆசிரியர்: **கண்ணப்பா வள்ளியப்பன்**

விற்பனையாளரில்லாத இடங்களுக்கு ...ன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

...ண்டுச் சந்...

எழு...

புறப்படு மகளே!

சி.பி.சிற்றரசு

3

இரணசிங்கன் கோட்டையின் அலுவல் தொடங்குகிறது. மாலை நேரம், வேலை முடிந்து வீடு திரும்பும் வழக்கத்திற்குமாறுகலைய்வுமுடிந்து பணிகளைக் கவனிக்க பணியாட்கள் கோட்டை நோக்கிச் செல்கின்றனர்! பகலெல்லாம் மூடிக்கிடந்த அங்காடிகள் திறக்கப்படுகின்றன. விளக்குகள் ஒளியேற்றப்படுகின்றன. கோட்டைச் சாரளத்தின் வழி நுழைந்த தென்றல், சரவிளக்குகளைத்தாலாட்டிக்கொண்டிருந்தது. அவைகளின் ஆட்டத்தால்கீழேவிரித்திருக்கும் இரத்தினக்கம்பளங்கள் நிறம்மாறித்தெரிந்தன.

கதிரவன் மேற்றிசையில் மறைந்து விட்டான், மன்னன் ஊழிவெள்ளம் மணிமாடம் நோக்கிவரும் மணி ஓசை அறிவித்தது. ஞாயிறு மறைந்தபின் அவன் தன்னிடம் ஒப்படைத்த வையத்தை காக்கும் பணியென நினைத்துப் பூரித்தான். செவ்வானத்திசை நோக்கினான். மேகங்களைக் கிழித்தோடும் செங்கதிர்களைக் கண்டதும் போர்ப்புரவிகள் ஓடுவதும், அவற்றின் குளம்படிகள் கிளப்பிவிட்ட செம்புழுதி விண்ணை நோக்கிப் பறக்கும் காட்சிபோல் கண்டான். அதன் முடிவென்ன? மாணிக்கக்கல் ஒன்று மண் குடத்தில் விழுந்ததுபோல் செம்பரிதி மலை வாயில் விழுந்து விட்டான். ஈரமில்லா நெஞ்சம் போல் எங்கும் இருள் சூழ்ந்தது. என்றாவது ஓர் நாள் முடிவாகவே இருள் சூழுமா—இருக்காது. மனிதர்கள் வாழ்வுக்கு எல்லையுண்டு. தாவரங்களுக்கும் முடிவுண்டு, வற்றாதகடல் வெடிக்காத வானம், நிறைமதி! இன்று போய் நாளைவரும் பரிதி இவைகளுக்கு முடிவேது. கோலம், இதன் பொருள் உலகம் உருண்டை என்று உலகத்தார்கண்டு சொன்னதற்கு வெகுகாலத்துக்கு முனனால், தொங்கும் உருண்டை என்று பொருள்படும், ஞாலம் என்று சொன்னவன் நம் தமிழ் முன்னோன் அல்லவா, அதற்கு அழிவேது? அழிவுதான் ஏன் வரவேண்டும். ஞாயிறு இன்று மறைந்து நாளை வருவது எவ்வளவு உண்மையோ, அந்த அசையாத நம்பிக்கையை வாழ்க்கையில் வைத்தால், அப்பப்பா எப்படி இருக்கும், சலிப்பு என்பதே வாழ்க்கையின் தீராத வைரி, என்றெல்லாம் சிந்தனை ஓடத்தில் வானக்கடலில் தள்ளாடிக்கொண்டிருந்தான் மன்னன். சிந்தனையிலிருப்பவன் செவிடனுக்குச் சமம் என்பதைப்போல், பக்கத்தில் பணியாள் பேசியதையும் அவன் காதுகள் வாங்க மறுத்தன.

பணியாள் என்ன உடைகளை எடுத்துவைக்கவேண்டுமென்று கேட்க நிற்கிறான். இன்று ஒரு வழக்கை விசாரிக்கவேண்டும், என்று மட்டிலும் சொன்னான், பணியாள் போனபின் இன்று அவைக்களத்தில் நான் மன்னனாக மாத்திரமல்ல நீதிபதியாகவும் இருக்கவேண்டும் மன்னனும் நீதிபதியும் ஒரே தன்மையுடையவர்களா என்றால், மன்னன் வாய்ச் சொல்லே சட்டம், தீர்ப்பு ...லாம்! ஆனால் நீதிபதியின் ... சட்டங்களுக் ...ம் தண்ணீருக்கும் உள்ள தொடர்புதான். தாமரை இலை தண்ணீர்த்துளியைத் தாங்கும் ஆனால் இரண்டுக்கும் தொடர்பில்லை. நீர்த்துளியைத் தாமரை இலைத்தாங்குகிறது என்பதைப் போல் அந்த தாமரை இலையையே தண்ணீர்தான் தாங்குகிறது. அதே போல்தான் நீதிபதி. நீதிபதியின் தீர்ப்புக்கு மறு விசாரணை மேல் விசாரணையுண்டு. ஆனால் மன்னன் தீர்ப்புக்கு மறு விசாரணையும் இல்லை மேல் விசாரணையும் இல்லை. ஆகவே இன்று நாம் இரண்டு நிலைகளை சரிசெய்ய வேண்டும் என்று தனக்குள் எண்ணிக் கொள்கின்றான்.

மன்னன் அவைக்கு வருவதற்கு முன்னால் அமைச்சர் சந்தனத்திருமேனி, வேதியன் கஞ்சதாசன் நாகமன், வளர்மதியின் தாய்மாமன், மந்திரவாதி பூதப்பிடாரன், மல்யுத்த வீரன் நைனாமலை மற்றும் பலர் வீற்றிருக்கின்றார்கள்.

ஊழிவெள்ளம் அவைக்களத்தில் நுழைகிறான். எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள்.

இயற்கையை போற்றி ஒரு பாடல் மெல்லிய குரலில் பாடப்படுகிறது. அதுவரையிலும் அனைவரும் நின்றுக்கொண்டிருந்து, பாடல் முடிந்ததும் அவரவர்கள் இருக்கையிலமருகிறார்கள்.

ஊழிவெள்ளம்: அமைச்சரே! எனக்கு நெடு நாட்களாக ஒரு ஐயம். போக்குவீரா.

அமைச்சர்: வேந்தே! முயற்சிக்கிறேன்.

ஊழி: வினா கடினமாக இருக்காது.

அமைச்: அப்படியானால் நேரமும் வீணாகாது.

ஊழி: பல நாட்டு மன்னர்கள் அவைக்களம் வந்தவுடன்அமைச்சரைப் பார்த்து, மாதம் மூன்று மழை பெய்ததா என்று கேட்கிறார்களே அது சரியா சொல்லுங்கள்!

அமைச்: அப்படி கேட்கின்ற மன்னர்கள் வாழும் நாட்டில் புன்செய் பயிர்களே இருக்காதென்று எண்ணுகிறேன்.

ஊழி: நன்று சொன்னீர். அப்படியானால் பருவமழை பெய்ததா என்று கேட்கலாமா?

அமை: அதைத்தான் ஏன் கேட்க வேண்டும். மழை பெய்வது மன்னருக்கும் தெரிந்திருக்க வேண்டுமே.

ஊழி: சரி உலகம் எப்படி இருக்கிறது.

அமைச்: மரக்கலம் மூழ்கிக் கொண்டிருக்கிறது. மாலுமிகள் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால்எப்படியிருக்குமோ அப்படி இருக்கிறது உலகம்.

ஊழி: சரியான உவமை காட்டினீர்கள். வரும் பொருள் உரைத்தல் அமைச்சர்க் கழகுஎன்பார்களே அதுஉம் பால்மெய்யாகி விட்டது.

அமைச்: அமைச்சர்களிலே இருசாரார் உண்டு. ஒரு சாரார் வரும் பொருள் உரைக்க வல்லவர்கள் மற்றோர் சாரார் பெரும் பொருள் ஈட்டவல்லவர்கள்.

ஊழி: அச்சம் வேண்டாம் அமைச்சே. அதில் தாங்கள் முதல்தரத்தைச் சேர்ந்தவர்கள். ஈட்டிய பொருளை ஏட்டிலே எழுதிவிட்டு நாட்டுக்குக் காட்டாத நல்லவர்களும் உண்டல்லவா.

அமை: இதுவரையிலும் அப்படி யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்பேற்பட்ட உத்தமர்களை இனி காலந்தான் பெற்றெடுக்க வேண்டும்.

ஊழி: வாழ்க அவர்கள். மக்கள் ஒருமன்னனிடம் என்ன எதிர் பார்க்கிறார்கள்.

அமைச்: மன்னனுடைய கண்களில் படாத வரையிலும் நன்மை என்று நினைக்கிறார்கள்.

ஊழி: அவர்கள் திருடர்களாயிருக்கலாம்.

அமைச்: ஒரு சிலர் அன்றாடம் மன்னனை சந்திப்பது நல்லதென்று நினைக்கிறார்கள்.

ஊழி: அவர்கள் மன்னனிடம் எதையோ எதிர்ப்பார்க்கும் சுயநலக்காரர்களாயிருக்கலாம்.

அமைச்: மாளிகையில் பணியாற்றும் ஆயிரம் பேரில் நாமும் ஒருவராக இருக்கக் கூடாதா என்று சிலர் நினைக்கிறார்கள்.

ஊழி: மணி ஓசையில் கை ஓசையைக் கலந்துவிடும் தந்திரக்காரர்களாக இருக்கலாம்.

அமைச்: மன்னனுக்கு எது விருப்பம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள் சிலர்.

ஊழி: ஒன்றுமே விருப்பம் இல்லை என்றால்.

அமைச்: வேந்தனுயிருப்பதே விருப்பந்தானே என்று கூட அவர்களுக்குத் தெரியாது.

ஊழி: அமைச்சரே! எம்மை மறைமுகமாகத் தாக்குகிறீர்.

சென்னை இராயபுரம்

நாவலர் நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றம்

3-ம் ஆண்டுவிழா

★

காலம்: 30...7...60 சனி மாலை 6 மணி

இடம்: மீனாட்சியம்மன்பேட்டை

தலைவர்: திரு. என். ஜீவரத்தினம், எம்.சி.

பேசுவோர்:

சிந்தனைச்சிற்பி சி. பி. சிற்றரசு

அ. அன்புரோசு மற்றும் பலர்.

அமைச்: மன்னிக்கவேண்டும். விவாதிக்க எடுத்துக் கொண்ட பொருள் பொதுவானது. மாமன்னர் அதை மறந்து விடக் கூடாது. மேலேசொன்னவர்களோடு மக்கள் தொகை முடிந்துவிடவில்லை. மன்னன் வாழ மண்வாழும் என்று நினைப்பவர்களுமுண்டு, மன்னன் மகேசனின் மாற்றுருவம் என்று நினைப்பவர்களுமுண்டு. இன்னும் சிலர் இந்த எண்ணங்களுக்கெல்லாம் அப்பால் ஓடி மன்னராட்சியை ஒருபோர்களத்திற்கு ஒப்பிட்டால், புண் இல்லாத போர்க்கள மேது என்று எண்ணுபவர்களும், மன்னராட்சியை ஒரு பெருங்கடலுக்கு ஒப்பிட்டால் புயலில்லாதகடலேது என்று நினைப்பவர்களுமுண்டு. அத்தகையோரே ஆட்சியின் அடித்தளமாக அமைகிருர்கள். மன்னர் என்ற தகுதி எப்படி வந்தது என்றவினவை எங்கும் யாரும் எழுப்புவதில்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அது மிகப் பெரிய குற்ற மென்றே கருதுகிருர்கள். இந்த எண்ணம் ஒரு ஆட்சியின் நீண்டகால அட்டவணை யாகிறது

ஊழி: சரி. இது வரையிலும் பொதுக் கருத்துக்களை விவாதித்தோம், இனி ... என்று மன்னன் சொல்லி வாய் மூடியவுடன் டாங், ஒரு மணி அடித்தது. அந்த மணி ஓசை அன்ருட அலுவல்களின் தொடக்க நேரம் என்பதைக் காட்டுவது.

அதுவரை வெளியே நின்று கொண்டிருந்த மக்கள் உள்ளே ஓடுகிருர்கள்.

மன்னன் ஊழிவெள்ளம் தன் அரியாசனத்திலிருந்து நீதி மன்றத்திற்கு வருகிருன். வழக்குப் பதிவு செய்யும் அலுவலாளர் அன்று விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய இரண்டு வழக்குகளின் கட்டுகளைக் கொண்டுவந்து மன்னன் முன் வைக்கிருர்.

முதல் வழக்கு

பேசியும் பேசாத வழக்கு

அதை மனதிலேயேபடித்து பார்த்த மன்னன்கலகலவென வாய்விட்டு சிரிக்கிருர். 'உம் பேசியும் பேசாத வழக்கு. இதுதான் இந்த வழக்கின் பெயரா, நிர்மலரே!

நிர்மலர்: ஆம் அரசே.

ஊழி: அமைச்சரே! பேசியும் பேசாத வழக்கு. இப்படி ஒரு வழக்கை நீர் என்ருவது கேள்விப்பட்டிருக்கிறீரா.

அமைச்சர்: இல்லை வேந்தே நான் வேறுவிதமான வழக்குகளைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

மன்னன்: விளக்குங்கள் பார்க்கலாம்.

அமைச்சர்: பேசிப் பேசிச் சண்டை வந்து கடைசியில் பேசாமற்போனவழக்குகள் வந்ததுண்டு. ஒருவருக்கொருவர் பேசாமலே இருந்த காரணத்தால் கடைசியில் அது சண்டையாக முடிந்த வழக்கும் உண்டு.

மன்னன்: என்ன—கணவன் மனைவி சண்டையா?

(எல்லோரும்நகைக்கிருர்கள்)

அமைச்சர்: ஆனல் இது பேசியும் பேசாத வழக்கு என்னைல் என்ன ... லேயே புரிந்துகொள்ள முடியவில்லை.

மன்னன்: நமக்கேன் இவ்வளவு தொல்லை. வழக்காளர்களையே பேச வைப்போம்.

வேதியர்: (இதற்கிடையில் வேதியர் கஞ்சதாசன்குறுக்கிட்டு) இந்தவழக்கைநல்ல நேரத்தில் எடுத்துக்கொள்ளுங்கள்.

மன்னன்: நேரம். சிறகில்லாமல் பறக்கும் பறவை. யாருக்கு நல்ல நேரம். தண்டனை அடைபவன் நேரத்தை நொந்துக் கொள்கிருன். விடுதலைப் பெறுகிறவன் அதே நேரத்தை போற்றுகிருன். குற்றம்நேரத்தினுடையது அல்ல வேதியரே — நேரத்திற்கு அந்த வன்மையிருக்குமானல் குற்றம் செய்யாமலே தடுத்திருக்கலாமே. கூப்பிடுங்கள் அவர்களை—வழக்குக்குசம்மந்தப்பட்ட துரைசிங்கமும், தூங்காவிளக்கும் வந்து நிற்கிருர்கள்.

அமைச்: என்ன உன் பெயர்?

துரை: துரைசிங்கம்

அமைச்: வழக்கை யார் தொடுத்தது.

துரை: நான் தான் தொடுத்தேன்

அமைச்: வழக்கின் விளக்கம் தேவை

துரை: மாட்சிமை தங்கிய மன்னர் முன்னல் நான் சொல்வதெல்லாம் உண்மை. இதோ நிற்கிருரே தூங்காவிளக்கு, இவரும் நானும் நீண்ட நாட்களாக நண்பர்களாயிருந்தோம்.

அமைச். இப்போது இல்லை

மன்னன்: அட சண்டாளர்களா. ஆயுள்தான் அற்பம் என்கிருர்கள், போகட்டும். அன்பாவது நீண்டிருக்கக்கூடாதா — உம் பிறகு?

துரை: இப்போது நான் பேசுவதில்லை

அமைச்: அவன்

துரை: அவன் பேசிக் கொண்டே இருக்கிருன்-அதுதான் வழக்கு

அமைச்: இதற்கு ஒரு வழக்கா?

துரை: ஆமாம் நான் அவனிடம் பேசுவதில்லை. அவன் என்னிடம் பேசிக் கொண்டே இருக்கிருன்

அமைச்: அதனல் என்ன?

துரை: தொல்லை. தொல்லை. சகிக்கமுடியாத தொல்லை

மன்: தொல்லை என்பது சரி. அதனல் உனக்கு நேரடியாக ஏற்பட்ட நட்டம என்ன?

துரை: இரண்டு காளைகள். விதை நெல் ஒரு கலம் தழை5 வண்டி. பணம் நூறு ருபாய்

வேதியர்: பகவானே! வழக்கு பேச்சிலிருந்து பணத்துக்கு வந்திருக்கு. இன்னும் அது எங்கெங்கே போகுமோ

அமை: வேதியரே! அது காவேரிக்கும் போகாது கெங்கைக்கும் போகாது, இங்கேதான் இருக்கும். நீர சும்மா இரும். ஏய், துரைசங்கம் எப்படி உனக்கு இவைஎல்லாம் நட்டம்.

துரை: இவன் நாணயமாகத் திருப்பிக் கொடுத்துவிடுவான் என்று நினைத்து எதிர் வீட்டு மாடனிடம இவையெல்லாம் கொடுக்கும்படிச் சொன்னதின் பேரில் அவன் கொடுத்தான். ... இவன் அவைகளை திருப்பித் தரவேயில்லை, மாடன் என்னை அடிக்கடி தொல்லைக் கொடுத்துக்கொண்டிருந்தான். இவனுக்கும் எனக்கும் சண்டை ஏற்பட்டபிறகு நான் பேசுவதில்லை என்று அவனையே நேராகக் கேட்டுக் கொள்ளும்படிச் சொல்லிவிட்டேன். அவனும் அதை நம்பி இருந்தான். ஆனல் ஒருநாள் இவன் என்னிடம் பேசியதைப் பார்த்து விட்ட மாடன், தன்னை ஏமாற்றுவதற்காக இப்படி கூட்டுச் சதிசெய்கிறோம்என்று தவருக நினைத்துக் கொண்டு என்னை மேலும்மேலும்தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிருன். இவன் பேசுவது ஒரு தொல்லை. அவன் நெறுக்குவது ஒரு தொல்லை. நான் இந்த இரண்டு தொல்லைகளெனும் கத்திரி அலகுகளுக்கிடையே சிக்கிப்பெருந்துயர்படுகிறேன். இதிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்

மன்: உம் ...பேச்சில் இவ்வளவு அபாயம் இருக்கிறதா?

அமை: 'வில்லேர் உழவர் பகைக் கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் 'பகை' என்று பொய்யாப் பெருந்தகை வள்ளுவரே சொல்லியிருக்கிருரே

மன்: சரி இவன் கதை முடிந்தது இவன் பேசாதவன், பேசியவனைக் கூப்பிடுங்கள்

தூங்காவிளக்கு வந்து நிற்கிருன்

அமை: இதுவரை துரைசிங்கம் சொன்னதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா?

தூங்கா: ஆமாம்

அமை: அந்த குற்றச் சாட்டுகளை ஒப்புக் கொள்ளுகிருயா—மறுக்கிருயா?

தூங்கா: பலமாக மறுக்கிறேன்.

மன்: காரணம்?

தூங்கா: அவன் என் நண்பன்.

அமை: முன்பு.

தூங்: இப்போதுந்தான்

அமை: அவன் உன்னைப் பகைவன் என்கிருன்,

தூங்: அதுவும் உண்மை.

அமை: நீ அவனை நண்பன் என்கிருய்.

தூங்: இதுவும் உண்மை.

மன்னன்: இவனுடைய கழுத்துக்குமேல் மருத்துவம் செய்ய வேண்டும்.

தூங்: மன்னர் மன்னிக்க வேண்டும், இரண்டும் உண்மை.

மன்: இரண்டும் உண்மையாக இருக்க முடியாது. பகலவனும் வந்தான், பனியும் இருந்தது என்கிருய்.

தூங்: இல்லை, வேந்தே! நான் அப்படிச் சொல்லவில்லை. கப்பல் மூழ்கியது, கொடி மரம் தெரிந்தது என்கிறேன் நான்.

அமை: அதனல் என்ன பயன்?

தூங்: மூழ்கிய இடமாவது தெரிகிறதே

மன்ன: விளக்கமாகச் சொல்லு.

தூங்: அவனும் நானும் நண்பர்கள். அவன் என்மேல் வைத்த நட்புப் பாதியும் நான் அவன்மேல் வைத்த நட்புப் பாதியுமாகச் சேர்ந்து ஒரு முழு நட்பாயிற்று. இடையில் சுட்டிக்காட்டமுடியாத காரணங்களாலே அவன் என் மேல் வைத்த அன்பைத் திருப்பிப் பெற்றுக்கொண்டான், அதனல் அவன் பேசுவதில்லை. ஆனல் நான் அவன் மேல் வைத்த அன்பைத் திரும்பிப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகையால் தான் நான் பேசிக் கொண்டே இருக்கிறேன் அவ்வளவுதான் இப்போது சொல் சொல்லுங்கள் நான் குற்றவாளியா என்று.

மன்ன: இருவருக்காகப் பேச இந்த நீதி மன்றத்தில் யார் முன் வருகிருர்கள்? அவர்கள் பெயர்களைப் பதிவு செய்துவிட்டுப் போகலாம். தீர்ப்பு நாளை வழங்குவோம்.

[அ

★ முத்து எப்படி விளைகிறது - எங்கே விளைகிறது அறிவாயா நீ?

1953-ல் என்னுல் நடத்தப்பட்ட தீப்பொறியில் தோழர் தொண்டைமான் அவர்களால் எழுதப்பட்ட 'திராவிடச் செல்வங்கள்' என்ற பல கட்டுரைகளில் வெளிவந்த அருமையான உண்மைகளை இன்று பலர் விரும்பிக் கேட்டிருப்பதற்கிணங்க அவைகளை முறையே இதழுக்கொன்ருக வெளியிடுகிறோம்! இப்படி இருந்ததா 'நம்நாடு', என்று நினைக்க வேண்டிய அளவுக்கு அந்த கட்டுரைகள் இருக்கும்.

அடுத்த இதழில், வைரம்.

— ஆசிரியர்

முத்துக் கடல்கள்

மாவீரன் ஜூலியஸ் சீசராம் ரோம்நாடு பெற்றெடுத்த தீரனின் மனங்கவர்ந்த காதலி — அண்டனியின் அன்புக்குப் பாத்திரமானவள்—ஷேக்ஸ்பியரின் சுவை சொட்டும் காவியத்தில் சுடர்விடும் அழகி—எகிப்து நாட்டின் எழிலரசி கிளியோபாட்ரா, தமிழ் நாட்டு முத்துக்களைச் சாராயத்தில் போட்டுக் குடித்தாளாம்! அவளது சரப்பணியில் பதித்திருந்த ஒரே ஒரு முத்தின் மதிப்பு மட்டும் 27 இலட்சம் ரூபாயாம்!!

பாலஸ்தீன் நாட்டிலே புகழ்பெற்ற மன்னன் சாலமோன்-அவனைப் பார்க்கவந்த ஷேபாலின் இளவரசி, அவனுக்குப் பாதகாணிக்கையாக, இந்நாட்டு முத்துக்களைப் படைத்தனளாம்!

எகிப்து, கிரீக், ரோம், பாலஸ்தீன், அரேபியா, சீனம்—முதலிய எந்த நாட்டிலுமே, தமிழகத்தின் முத்துக்கள் தவழ்ந்துகொண்டிருந்தனவாம்! "உலகில் மிகச் சிறந்த பொருளொன்று கேள்—அதை உனக்குப் பரிசளிக்கிறேன்", என்று ஆவலோடு கேட்ட காதலரை நோக்கி, "வேறொன்றும் வேண்டாம்—பாண்டிய நாட்டு முத்துக்களைப் பரிசாகத்தருக, அது போதும், மனங்குளிர்வேன்"-என்று அந்த உலக நாடுகளில் கூறிப் பெற்று மகிழ்ந்த கன்னியரும் கொஞ்சமல்லவாம்!

"முத்து நாடு" என்று பெருமையோடு அழைக்கப்பட்ட நம் தாய் நாட்டின் முப்பெருங் கடல்களிலே விளைந்த முத்துக்கள், உலகில் போகாத தேசமில்லை—நுழையாத இல்லம் இல்லை—அணியாத மாதர் இல்லை-அன்று, 2000 ஆண்டுகளுக்கு முன்பு!

அதுமட்டுமா? சீனத்துக் கப்பல்களும், அரேபியர் கலங்களும், தென் மேற்குப் பருவக் காற்று துவங்கும்போது புறப்பட்டு, சிற்ருசியா, பாக்தாத், மோசல், பஸ்ரா துறைமுகங்களின் வழியே சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களான வஞ்சி, கொல்லம், கோழிக்கோடு முதலியவற்றை அடைந்து, அங்கிருந்து புறப்பட்டு, பாண்டியநாட்டு துறைமுகமாம் காயல் நகர் சென்று, அங்கிருந்து, தொண்டி, நாகை, காவேரிப்பூம்பட்டினம், காரைக்கால்—முதலிய சோழ நாட்டுத் துறைமுகங்களைச் சென்றடையும்! சேரனின் மேல் கடல், பாண்டியனுக்குரிய தென்கடல், சோழனுக்குச் சொந்தமான கீழ் கடல்—ஆகிய முப்பெருங் கடல்களிலும் விளைந்த முத்துக் குவியல்கள், அங்கெல்லாம் குவிந்திருக்கும்! வெளிநாட்டு வணிகர்கள் பொன்னும், பொருளும் கொடுத்துப் போட்டி போட்டு வாங்குவார்கள். தங்கள் கப்பல்களில் ஏற்றுவார்கள்!

வடகிழக்குப் பருவக் காற்று இப்போது வசதியாக வீசும்—வணிகக் கப்பல்களும் இங்கிருந்து புறப்படும், நமது முத்துக்களும் உலகெங்கும் செல்லும்—பிறந்த பெருமையை, வளத்தை சொல்லும்!

உன்னதமான பல சம்பவங்கள், நம் மனக் கண்ணெதிரே ஓடிவரச் செய்கின்றன!

படிக்கிறோம் — கேள்விப் படுகிறோம்— பெருமையடைகிறோம்-பூரிப்புக்கொள்கிறோம்! நமது தாயகம். இதைச் சுற்றி முப்பெருங் கடல்கள்—அழகாய்—முத்துக் குவியும் கடல்கள்!—நம்முடைய கடல்கள்!!

இந்தக் கடல்களில் முத்தெடுத்தார்கள் நமது முன்னோர்; உலகெங்கும் அனுப்பினுர்கள், செல்வம் திரட்டினுர்கள் — சீரோடு வாழ்ந்தார்கள்.

மெகஸ்தனிஸ் என்ற கிரேக்கத் தூதுவன், 2000 ஆண்டுகளுக்கு முன்பு, கி. மு. 302-ல், எழுதியுள்ள ஓர் குறிப்பில், நமது முத்துக்களைப் பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிருன்!

★ முத்து எத்தனை வகைப்படும், அத்தனையிலும் சிறந்தது எவ்வகை தெரிந்து கொள்ள வேண்டாமா நீ?...

கி. பி. 1292-ல் இங்கு வந்த இத்தாலி நாட்டின் மார்க்கோ போலோ-முத்து, முத்துக் குளித்தல் பற்றி மிக விரிவாக எழுதியிருக்கிருன்; 1499-ம் ஆண்டில், தமிழ் நாட்டை அடைந்த போர்ச்சுகீசிய மாலுமி வாஸ் கோடகாமா, "தென்னுட்டின் மாட்சிமிக்க பொருள்களில் முத்து மிகவும் சிறந்தது" என்று எழுதியுள்ளான்!

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் முத்துச் சிலாபம் நடத்திருலும், 11-ம் நூற்ருண்டு வரை பாண்டியர்களது கையே முத்து வணிகத்தில் மேலோங்கியிருந்தது; பாண்டி நாட்டு முத்துக்களே பெருமதிப்பும், புகழும் பெற்றன!

11-ம் நூற்ருண்டுக்குப் பிறகு சோழ மன்னர்கள் செல்வாக்கும் சிறப்பும் பெற்றனர், பாண்டியரை வென்று சுமார் 250 ஆண்டுகள் வரை முத்து வணிகத்தில் மிகப்பெரிய லாபங்கள் பெற்றனர்,

பின்பு 50 ஆண்டுகள் வரை முகமதியர்களும், அதன் பிறகு விசயநகர வேந்தர்கள் சுமார் 250 ஆண்டுகளும் - நாடாண்ட வேளையில், நல்ல முறையில் முத்து வணிகத்தை நடத்தி வந்தனர்.

1524-ல் போர்த்துகீசியர் முத்துக் குளித்தலில் ஈடுபட்டனர். 1658-ல் தூத்துக்குடி துறைமுகம், டச்சுக்காரர் வசம் ஆகி 1782 வரை ஆளப்பட்டபோது அவர்கள் லாபமடைந்தனர்.

அதன் பிறகு ஆங்கிலேயர் இந்த நாட்டை, நாட்டின் வணிகத்தைக் கைப்பற்றினர்; முத்துச் சிலாபம் நடத்தினர்; மதுரை நாயக்க மன்னர்கள்: ராமநாதபுர சேதுபதிகள், எட்டையபுரம் பாளையக்காரர் முதலியோர்க்குப் பங்கும் கொடுத்து வந்தனர்.

முத்து விலை உயர்ந்த நவரத்தினங்களில் — ஒன்பது மணிகளில் ஒன்று! ஒவ்வொரு முத்தும் ஆயிரம், பதினுயிரம், லட்சம் என்று மதிப்புள்ளவை. மற்ற ரத்தினங்கள் மண்ணில் விளைந்தாலும், முத்து கடலில் விளைகிறது.

மன்னர் மணிமுடிகள், மாதர் தம் அணிகள் முதலியவற்றில் பதித்த முத்து ஒளி வீசுகிறது! மருந்திலும், மற்ற பிறவழிகளிலும் பயன்படுகிறது!

கடலுக்கடியில், இயற்கையாக விளைவத[illegible] முத்து! கல்லிலும், மண்[illegible] தோன்றுவதல்ல, [illegible] கிளிஞ்சல், [illegible]ளது இந்த முத்துச் சிப்பியின் வயிற்றுக்குள் விளைவதுதான் மிகச் சிறந்த ரத்தினமாகிய முத்து!

முத்துச் சிப்பியின் வயிற்றுக்குள் முத்து எவ்விதம் உண்டாகிறது? மழை பெய்யுங் காலத்தில், முத்துச் சிப்பி கடலின் மேல்மட்டத்திற்கு வந்து, தன் வாயைத் திறக்க, அதில் ஒரு துளி மழைத்துளி வீழ, அந்த மழைத்துளியே முத்தாக மாறுகிறது என்ற ஓர் தவருன நம்பிக்கை பலரிடையே உலவுகிறது -சில நூல்களிலும் இவ்வாறு எழுதியிருப்பதைப் பார்த்தேன், ஆனுல், இது முழுத் தவறு!

கடலின் அடிவாரத்தில் வாழும் முத்துச் சிப்பி, தன் ஓடுகளைத் திறந்து மிகச்சிறிய பூச்சிகளை உணவாக உண்ண, உண்ணும்போது அதை ஒரு பூச்சியோ, அல்லது கல் முதலிய ஏதாவதொரு கூர்மையான பொருளோ கடித்து அல்லது குத்திக் காயமுண்டாக்கிவிட, அக்காயத்தினுல் ஏற்படும் வலியைத் தாங்காத சிப்பி—காயத்தை ஆற்றுவதற்காக தன் வயிற்றிலிருந்து "நேக்கர்" எனப்படும் ஓர்வித 'நீர்த் திரவத்தை' அனுப்பி, அப்புண்ணிலே சிறிது சிறிதாக ஊற்றுகிறது. இந்த 'நீர்த் திரவம்' வர வரக் காய்ந்து கட்டிப் பொருளாகி விலை உயர்ந்த முத்து ரத்தினம் ஆகிறது!

காயம் ஆறிட அதிக நாட்களாகி, அதிக நாட்கள் திரவம் ஊற்றப்பட்டால் பெரிய முத்து உண்டாகிறது; சிறிய காயமாக இருந்து, சில நாட்களில் ஆறி,

தொண்டைமான்

சிறிது திரவமே ஊற்றப்பட்டிருந்தால் சிறிய முத்துக் கிடைக்கிறது! தவிர, சில சமயங்களில் சங்கு, நத்தை, பச்சைக் கன்னிக்கா போன்ற சிப்பிகளிலும் கூட சாதாரண முத்து விளைவதுண்டு.

முத்துக்களில் இன்று இயற்கை முத்து, செயற்கைமுத்து, கல்ச்சர் முத்து—என்று பலவகை உள்ளன. கடலில் மேற்கூறியவாறு விளையும் முத்து இயற்கை முத்து; மீன்களின் செதில்களைச் செதுக்கிக் காய்ச்சி "முத்துத் திராவகம்" (Rearl essence) தயாரித்து கண்ணுடிப் பாசிகளின் உட்புறத்தில் இத் திராவகத்தைத் தடவி, முத்துக்கள் போலவே செய்யப்படுபவை-செயற்கை முத்து!

மற்ருெரு வகையில் நாமே முத்து விளைவிக்கலாம். முத்துச் சிப்பிகளை நிறையச் சேகரித்து, கூண்டுகளில் வைத்து, கடலின் மேல்மட்டத்திற்குச் சற்றுக் கீழாக இருக்கும்படி தொங்க வைத்து, 'ஆபரேஷன்' செய்து புண் உண்டாக்கி; காயத்தில் வலி நீடித்திருக்கும்படி ஓர் கூர்மையான கண்ணுடித் துண்டால் அக்காயத்தில் அழுத்தினுல் போதும். சிப்பி வயிற்றிலிருந்து திரவத்தை அனுப்பும் - திரவம் முத்தாகும்! இவ்விதம் உற்பத்தி செய்யப்படும் முத்துத்தான் —கல்ச்சர் முத்து—(Cultured Pearls) எனப்படுகிறது!

இம்முறையை முதன் முதலில் கண்டுபிடித்தவர் - கண்டுபிடித்து அதன் மூலம் நிறையச் செல்வம் தேடிக்கொண்டவர் — கோகிசி மிகிமி கோ' (Kohichi Mikkimi Ho) என்ற ஓர் ஜப்பானியர்.

மூன்றுவித முத்துக்களிலும் சிறந்தது இயற்கை முத்தே. அதற்கு மற்ற இருவகை முத்துக்களும் எவ்விதத்திலும் ஈடு இணையா[illegible]டியாது. எனவே, கடல் [illegible] முத்தையே [illegible]

நவீன கால ஆரம்பத்திற்குப் பிறகு, உலகில் மற்ற நாடுகளிலும் முத்துக் குளித்தல் நடந்து வருகிறது. ஆஸ்திரேலியா, தென்கடல் தீவுகள். மேற்கு இந்தியத் தீவுகள், ஜப்பான், அமெரிக்கா முதலிய நாடுகளின் அருகே உள்ள ஆழிகளில் எல்லாம் முத்துச் சிலாபம் நடக்கிறது—ஆனுல் முத்து எடுக்க அல்ல - சிப்பிகளின் ஓடுகளுக்காக எடுக்கப்படுகிறது - அந்த ஓடுகளைக் கொண்டு பொத்தான்கள், பேனுக்கத்தி, மேசைக் கத்தி, கைப்பிடிகள் முதலிய பொருள்கள் செய்யப்படுகின்றன, நம் நாட்டில் ஓடுகளுக்காக அல்ல - முத்துக்காக முத்தெடுக்கிரேம்!

மீன் இலாகா அதிகாரிகள்:

ஆண்டுதோறும், குழியோடு முத்துச் சிப்பிகள் காணப்படுகின்றனவா, என்று சோதனை செய்து வருகின்றனர். சிப்பிக் குஞ்சுகள் ஏராளமாய்க் காணப்பட்டால், அந்த எல்லையைச் சுற்றி கொடிகள் மிதக்கவிட்டு, சர்க்கார் கெஜட்டில் போடப்பட்டு, யாரும் அப்பக்கம் போகக்கூடாது-மீன் பிடிக்கக் கூடாது என்று விளம்பரம் செய்யப்படும். சிப்பிகள் 4, அல்லது 5 ஆண்டுகள் வளர்ந்தவுடன் நாடெங்கும் பகிரங்கப்படுத்திவிட்டு முத்துச் சிலாபம் நடத்தப்படும்.

முத்துக் குளித்தல்:

அமைதியான நேரத்தில் கொந்தளிப்பில்லாத சமயத்தில்-முத்துக் குளிக்கும் தொழிலாளிகள் படகில் ஏறிச்சென்று கடலுக்குள் மூழ்குவார்கள். சீக்கிரம் அடிமட்டம் செல்லவேண்டுமென்பதற்காக பெரிய கற்களைக் கட்டிக்கொண்டு குதிக்கிருர்கள்-அடிமட்டம் சென்றதும் கல்லை அவிழ்த்துவிட்டு மிக வேகமாக முத்துச் சிப்பிகளைப் பொறுக்கிக் கொண்டு மேலே வருகின்ருர்கள். எடுத்த சிப்பிகளைப் படகில் போட்டுவிட்டு மீண்டும் குதிக்கிருர்கள்.

எடுக்கப்பட்ட முத்துச் சிப்பிகள் கிடங்குக்கு கொண்டு செல்லப்படும். அங்கே ஏலம் போடப்படும்-உலகமெங்கிருந்தும் ஆயிரக்கணக்கில் வணிகர் வந்திருப்பர். அவர்கள் ஏலத்தில் எடுத்து முத்துச் சிப்பியுள் இருக்கும் முத்தை எடுத்து விற்பர்-முத்துச் சிப்பியின் ஓடுகளையும் விற்பர்-லாபமடைவர்!

★ இதையெல்லாம் அறிய மாட்டாய், இருந்தாலும் பேசுவாய். "தமிழகத்தின் முத்துக்களை எகிப்து நாட்டு எழிலரசி கிளியோபாட்ராசாராயத்தில் போட்டுக் குடித்தாளாம்!" என்று...

முத்துச் சிலாபம் நடக்கும்போது நடக்கின்ற இடம் மிக மிக ஆர்ப்பாட்டமாக இருக்கும் உலகின் பல பாகத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான வணிகர்களும், வேடிக்கை பார்ப்பவர்களும் வெள்ளம்போல் கூடிவிடுவார்கள். வருவோர்க்கெல்லாம் வசதியாக பல நூறு குடிசைகள் கடைகள், விடுதிகள், நீர்க்குழாய்கள், காலி இடங்கள்-முதலியன கட்டி விடப்பட்டிருக்கும்; மருத்துவ நிலையம், போலீஸ் நிலையம், தபால் தந்தி நிலையங்களும் திறக்கப்பட்டிருக்கும்!

உயிர், உலகம், உறவுகள் எல்லாவற்றையுமே மறந்து, ஆழ் கடலில் குளித்து முத்து எடுக்கிருனே அந்த மேலோன். அந்தப் பாட்[illegible] வயிற்றுப்பிழைப்பிற்கில்லை... அவன் குடும்பமும் அனுபவிப்பது கூட இல்லை. முத்தை எடுப்பவனுக்கு முத்துச் சொந்தமல்ல!

அவன் எடுக்கும் முத்தின் மதிப்பு, ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் இருக்கலாம்! ஆனுல் அவன் பெறுவதோ கூலிச்சிப்பி!

ஆழ்கடலின் முத்தெல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தம். அரசாங்க மீன் இலாகா இதையும் கவனிக்கிறது. கூலிபெறும் தொழிலாளி, ஆர்ப்பரிக்கும் கடலின் அடிவாரத்தில் சிக்கிவிட்டால், அங்கே அவனது மூச்சுப் போய்விட்டால், சுரு போன்ற மீன்களின் வாய்க்கு உணவாகிவிட்டால், சுழன்றடிக்கும் சூருவளியில், புயல் காற்றில் கலந்து மறைந்துவிட்டால், சுழல்களில் அகப்பட்டு செத்துப்போய்விட்டால்......தனது ஆழ்ந்த அனுதாபத்தை அரசாங்கம் தெரிவிக்கும்! நூரு-இருநூரு நட்ட ஈடு கொடுக்கும்!

முத்துக்குரிமை கொண்டாடும் அரசாங்கம், முத்துக் குளிப்பவனின் உயிருக்குப் பாதுகாப்பளிப்பதில்லை. வசதி செய்து தருவதில்லை. அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் சகல வசதிகளும் உடைய ஒருவித இரும்பு உடை கடலில் குதிப்போர்க்குத் தரப்படுகிறது. அதைப் போட்டுக்கொண்டு கடலின் கீழ் 200 அடிகளுக்கு மேல் செல்லலாம்-சுமார் ஒரு மணி நேரம் வரை உள்ளே இருக்கலாம் வேலை முடிந்ததும் ஒரு கம்பியை ஆட்டினுல், மேலே கப்பலில் இருப்போர் எந்திரத்தின் உதவியால் உள்ளே இருப்பவனை எளிதில் தூக்கிவிடுவர். இதனுல் கடலில் குதிப்பவனுக்கு எவ்வித ஆபத்தும் விளைவதில்லை. "ஸ்காபண்டர்" (Scaphander) என்ற இந்த உடுப்பு பத்தாயிரம் ரூபாய்தான்!

ஆனுல், நம் நாட்டில் முத்துக் குளிப்பவர்க்கு எவ்வித வசதியும் இல்லை-எவ்வித உடையும்இல்லை. 70 அல்லது 80 அடி ஆழம்தான் செல்ல முடியும்-2 நிமிடம் தான் உள்ளே இருக்க முடியும்! அதற்குள் ஆபத்து நேர்ந்தால் சாக வேண்டியதுதான்! இந்த நிலையில் அரசாங்கம் இருந்தால் எப்படி முன்னேறும் தொழிலும், நாடும்?

மாகாண அரசாங்கம் இதைப் பற்றிச் சரிவரக் கவனிப்பதில்லை; கவனிக்கவேண்டுமென்ற கவலையும், பொறுப்பும் அரசாங்கத்துக்கோ, ஆள்கின்ற மந்திரிகளுக்கோ இல்லை!

பலருக்கு இதைப்பற்றி தெரியக்கூடத் தெரியாது! "விளக்கேற்றி வைத்துக்கொண்டு நெருப்பில்லையே என்று பட்டினி கிடந்தான் மனிதன்" என்று கதை சொல்லுவார்கள்-அவனுக்கும், இன்று கடல்களில் முத்தை வைத்துக்கொண்டு எடுக்கத் தெரியாது இருக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

முத்துக்குளித்தல் இப்போதெல்லாம், ஆண்டுதோறும் தினமும் நடப்பதில்லை. கடலில் முத்துச் சிப்பிகள் உண்டாகியிருந்தால், அதைத் தப்பித் தவறி மீன் இலாகா அதிகாரிகள் கண்டு கொண்டால், பிறகு முத்துக் குளித்தல் நடக்கிறது. அது மட்டுமல்ல! 80 அடி ஆழத்துக்கு மேல் தூரக்கடலில் முத்துச் சிப்பிகள் அடிக்கடி தோன்றும்,

★ தென்னகத்தின் பெருஞ் சொத்து முத்து-அதைப் பெற்றுப்பெருமைப்பட வேண்டியவர்கள் தான் நாம். ஆனுல் சிறுமைப் பட்டுக் கிடக்கிரேம். ஏன்? எதனுல்?

அதைப்பற்றி அரசாங்கமோ, அரசாங்க இலாகாவோ கவனிப்பதில்லை. ஏன் தெரியுமா? 80 அடி ஆழத்துக்குமேல் போக இங்கே ஆள் இல்லை. இறக்க விரும்புவோர்க்கு இரும்பு உடை கா[illegible] இந்த அரசாங்கத்துக்கும்

காதலே கலந்தாள்!

★ **அல்லி எங்கே? ஐயோ! என் அருமைத் தங்கை எங்கு சென்ருள்...?**

★ **கண்டாள், கண்டேன். விண்டாள், விண்டேன். கேட்டாள், மறுத்தேன்! வரலாறு முடிந்து விட்டது!**

முடிந்து விட்டது. எல்லாம் முடிந்து விட்டது. இடிந்து, ஒடிந்து, மடிந்து, முடிந்து விட்டது. அதன் அழிவுச் சாம்பல் அதோ தெரிகிறது. அதற்குத் தாஞ் அமைதி என்று பெயர்.

நான் தவழ்ந்து, வளர்ந்து, வாழ்ந்து வந்த பற்றுக் கோடு தரைமட்டமாயிற்று! என் குடிசை இருந்த இடத்தில், அதை நினைவூட்டும் குட்டிச் சுவர் மட்டுமே காட்சியளிக்கிறது!

என் உள்ளத்தைத் தொட்டிமுத்த மலர்த்தோட்டம் மண் மறைந்து போயிற்று!

சிரித்த மலர்கள், பற்றிப் படர்ந்த கொடிகள், அதனுலே சுற்றி வளைக்கப்பட்ட மரங்கள், அவைகளை நம்பி கூடுகட்டி வாழ்ந்த புள்ளினங்கள், ஒன்றையும் காணும்!

காலைச் சூரியனின் வரவை மகிழ்வோடு வரவேற்க இப்போது அங்கே யாரும் இல்லை. என்னைத் தவிர!

செத்துக் கிடந்த மாடுகள், என்னைப் பயமுறுத்தன! எப்படியோ தப்பிவிட்ட அதை நம்பிக்கிடக்கும் கன்றுகளின் தயானியமான குரல் என் இதயத்தை அறுத்துவிட்டது!

தாயை இழந்த சேய்!...இனி மேல் அது எப்படி வாழும், அதன் கண்ணீரை யார் துடைக்கப் போகிறார்கள்.

வேதனையின் எல்லையில் வார்த்தைகள் வராத காரணத்தாலே எங்கும் அமைதி நிலவுகிறது.

ஒழுகிப் பெருகும் கண்ணீர், உடைந்து, சிதறி வெறிச் சோடிக் கிடக்கும் சுற்றுச் சார்புகள் பேசாமல் பேசி நிலைமையின் கோரத்தை நினைவூட்டுகின்றன!

நான் மட்டும் ஏன் தப்பினேன்? இந்த வேதனைகளைக் காண்பதை விட வேதனைக் குரியவைகளில் நானும் ஒருவனுக ஆகிவிட்டிருக்கக் கூடாதா?

மனித நடமாட்டமே அற்றுப் போன தீவொன்றில் தன்னந்தனியாகச் சிக்கி விட்டவனைப் போல் ஆகிவிட்டேன்.

பெருக்கெடுத்தோடிய வெள்ளம் அடித்துச் சென்றவைகளில் ஒன்ருக ஒரு அல்லி மலர் சென்றது!

அல்லி எங்கே? ஐயோ! என் அருமைத் தங்கை, எங்கு சென்ருள்?...எழுந்து நின்று கத்தினேன்!

எதிரொலி திருப்பி வந்து, என்னையே திரும்பிக் கேட்டது!

எங்கிருந்தோ வந்தாள், எதையோ எதிர்பார்த்தாள்! ஏமாற்றம் பரிசான பின், எங்கோ போய் விட்டாள்!

திடீரென்று அமைதி நிலவியது! என் உள்ளம் கேட்ட கேள்வி தெளிவாக ஒலித்துக் கொண்டிருந்தது.

அல்லி எங்கே? என் இதயம் கமுறிக் கத்தியது!

[illegible] பதில் கூறினார்கள்!... [illegible]கோ ஒரு நாள் நான் [illegible] வாசகங் [illegible] யாரோ

"பித்துப் பிடித்திருந்த பேதையாள், உன்னையன்றி வேறு சொத்தில்லை என்றிருந்த ஏந்திழையாள், தன் வரலாற்றை முடித்துக் கொண்டாள்"...வாசகங்கள் நின்றன! என் உள்ளத்தை எரி தழல் கவ்வுகிறது! தாங்கமுடியாத வெப்பம்! நா உலருகிறது. கண்களின் கருமணிகள் வெளியே தெரித்துவிடும் போலிருக்கின்றன! இரத்த ஓட்டம் நின்று விட்டதா? ஏன் என் கை கால்கள் மரத்து விட்டன!

என் உள்ளம் நின்று எரிகிறது! ஐயோ தாகம் தாங்கவில்லை! கரை புரண்டு வரும் காவிரியே! உன்னுல் என் இதய நெருப்பை அணைத்துவிட முடியாது!

"முடியாது"—யாரோ எங்கிருந்தோ எனக்குச் சொல்லுகிறார்கள்.

அந்த நாவலின் வாசகங்கள் மீண்டும் என்னைக் கொல்ல முனைந்தன!

"ஏமாற்றங்கள் நிரம்பிய இந்த உலகத்தில் இன்று அவள் ஒரு பிடி சாம்பல்"...பேய்ச் சிரிப்பு! சுற்றுச் சார்பை உலுக்கி விட்டது!

நான் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகிறேனு? எழுந்து ஓடிவிட முனறேன்; நடமாடவே முடியவில்லை!

இன்று அவள் ஒரு பிடி சாம்பல்...ஒரு பிடி சாம்பல்...நனைந்த மண் தரையில், ஒருபிடி மண்ணை அள்ளினேன், என் தலையில் கொட்டினேன்!

நான் ஏன் வாழ்கிறேன்? எதற்காக வாழ்கிறேன்? யாருக்காக வாழ்கிறேன்?

அழிவதற்காக நான் ஏன் வாழ வேண்டும்...ஆக்கத்தை அணைப்பதற்கு யோக்கியதை யற்ற நான், வாழத்தான் வேண்டுமா?

நான் வாழவேண்டுமென்று யாராவது விரும்புகிருர்களா?

விரும்பிய பேர்களைச் சாகடித்த எனக்கு—ஐயோ...நானு சாகடித்தேன்?...வாழ்வளிக்க யார் முன் வரப்போகிருர்கள்?

வையத்தைக் காலடியிலே காண விரும்பிய நான், இன்ற தன் காலில் மிதியுண்டு சாகும் தருவாயில் துடிக்கும் புழு ஆகி விட்டேன்!

இன்பக் காவியத்தின் கதா நாயகனுக வாழவிரும்பிய நான் கண்ணீர்க் காவியத்தின் கரு ஆகிவிட்டேன்.

கண்டாள், கண்டேன், விண்டாள், விண்டேன், கேட்டாள், மறுத்தேன்!

வரலாறு முடிந்து விட்டது!

தூது வந்தது தென்றல்! சேதி தந்தன மலர்கள்! வழி யமைத்தது மாலை!

மரண ஓலை தந்தது காலம்!

அல்லி இன்று ஒரு பிடி சாம்பல்!

இல்லை நான் நம்பமாட்டேன். அவள் சாகவில்லை! அவளைச் சாகடிக்க யாருக்கும் தைரியமில்லை! அவள் சாகமுடியாதவள்—இன்னும் வாழுகிருள்.

இடுகாடு நோக்கி என் உள்ளம் இழைகிறது!...இன்பபுரிக்கு நான் செல்ல விழைகிறேன்.

என்னிலே இப்போதோர் மகத்தான போராட்டம்! எங்கு செல்வேன்?

சிதையிலே தீ மூட்டியதற்குப் பிறகும், எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கிற பிணத்திற்கு, வாழ்வைப் பற்றிய அக் கரையா? ஆசையா?

காலம் சதி செய்கிறது! காரிய மாற்றும் சக்தியை இழநதுவிட்ட என்னைப் பழிவாங்க முயலுகிறது. நான் ஏமாற மாட்டேன! தோல்வியெனும் தூக்குக் கயிற்றில் நான் தொங்க மாட்டேன்.

என்னை ஏமாற்ற முயலும் பெரியவர்களே! காலத்தின் துணை கொண்டு கலவரத்திற்கு விதை தூவும் வித்தகர்களே! என் மென்மையான இதயத்தைச் சுக்கு நூருகப் பிளக்கச் சம்மட்டி ஏந்தி விட்ட சாகசக் காரர்களே! நீங்கள் உருப்படமாட்டீர்கள்! உங்கள் பிள்ளை குட்டிகள் வாழாது!

ஏதுமறியாத என்னை ஏன் அனலிலிட்டு வாட்டி வதைக்கிறீர்கள்?

நிரபராதிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்குகின்ற உலக மன்றமே, நீ ஒழிந்து போ—

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத கோழைகளே! குணகேடர்களே, குள்ள நரிகளே, நீங்கள் இந்த உலகத்தில் வாழத்தான் வேண்டுமா? அதன் மூலம் இந்த உலகம் சாகத்தான் வேண்டுமா?

அல்லி, உன்னை எங்கே மறைத்து வைத்திருக்கிருர்கள்! குரல் கொடு.

என்னையும், உன்னையும் இணைத்து, வஞ்சகர்கள் தீட்டும் கதைகளின் சதைகளைக் கூறுக்க நீ விரைந்தோடிவா? வர மாட்டாயா? நீ இருக்குமிடத்தையாவது தெரிவித்து விடு—பறந்து வருகிறேன்! பாதகர்களுக்கு என் இதயத்தைத் திறந்து காட்டுகிறேன்—படிக்கத் தெரிந்தவன் படிக்கட்டும்—புரியத் தெரிந்தவன் புரியட்டும்! இரண்டிற்கும் லாயக்கற்றவன், எக்கேடு கெட்டோ போகட்டும்—நான் கவலைப்பட வில்லை!

அல்லி, நீ உணர்ச்சியின் மொத்த உருவமா? உணர்ச்சிக்கு சீக்கிரம் அடிமையாகி விடக் கூடியவளா? விரைவின் துணை கொண்டு வரம்பை வெட்டி விபரீத புரிக்கு ஓடி விடுபவளா?

பொறுமையின் பண்ணையாயிற்றே! சோகத்தை விழுங்கி ஜீரணிக்கும் ஆற்றல் படைத்தவளாயிற்றே! அறிவுள்ளவளாயிற்றே நீ!

புயலைப் புறக்கணித்துத் தென்றலைத் தழுவிக் கொள்ளும் திறன் படைத்தவளே, நீ எங்கிருக்கிருய்? எங்கிருந்தாலும் குரல் கொடு!

கால வெள்ளம் உன்னை கவ்வி விட்டதா? இல்லை—காலத்தையும் வெல்லும் பண்பின் பிறப்பிடம் ஆயிற்றே நீ!

பரிதாபமான நிலையின் வேதனைக்குரிய உருவமாகிவிட்ட என்னைப் பார்!

நான் தன்னந்தனியாக நிற்கிறேன்.

உலகம் என்னைப் பார்த்து விழிகளை உருட்டுகின்றது! துச்சமென்றுதான் தள்ளுகிறேன்! நேரிலே வந்தால் எட்டியும் மிதிப்பேன்! ஆனுல்,

விளக்கத்தின் மூலம் அந்த விபரீத எண்ணங்கொண்டோரை வீழ்த்த விழைகிறேன் நான்!

ஒரு வேளை விளக்கங்களை வழங்கிவிட்டாயோ? கனவிலும் கூடப் பிறருக்குத் தவறு செய்ய விரும்பாதவளாயிற்றே நீ!

நீ பத்தரை மாற்றுத் தங்கம்! தணலிலே கிடந்தாலும் தங்கம் தங்கந்தானே?—அது தணலாகி விடுதில்லை அல்லவா?

அல்லி, என்றைக்கும் நீ என் இதயத்தில் வாழ்கிருய்! ஆனுல் இந்த உலகத்தில் நீ எங்கிருக்கிருய்?

மீண்டும் அந்தப் பேய்ச்சிரிப்பு!

"எங்கிருக்கிருளா? ஏமாந்தவனே! அல்லியையா தேடுகிருய்? கிடைக்க மாட்டாளடா அவள் உனக்கு! அவள் நிலைத்து விட்டாள்! காவியமாகிவிட்டாள்!



நாஞ்சில் தந்த செல்வம் கி. மனேகரன்

"நீ யார்?"...குரலெழுப்பினேன்! நானு?...நாதியற்றவனே, அவள் சார்பிலே பேசுகின்ற உரிமைபெற்றவன்!

உன் பெயர்..மெதுவாகக் கேட்டேன்!

பெயரா...கொலைகாரனே என் பெயரை நீ ஏன் தெரிந்து கொள்ளவேண்டும்? என்னைப் புரிந்து கொள்வதனுலே உனக்கென்ன லாபம்?

அந்தக் குரல் தழதழத்தது! அந்தக் குரல் அழுதது! நானும் அழுதுவிட்டேன்!

குரல் கொடுக்கும் பெரியவரே, அல்லி எங்கே! என் அருமைத் தங்கை அல்லி எங்கே?

ஒரு கண் பார்க்கிறேன்—பிற்பாடு உலகத்தின் எந்த மூலை நோக்கி என்னைத் துரத்தினுலும் ஓடுகிறேன். சாகச் சொன்னுலும் சாகிறேன்!

ஒரே ஒரு முறை, என் தங்கையைப் பார்க்கிறேன். அனுமதிப்பீர்களா?

"எங்கே அவளைப் பார்க்கப் போகிருய்! நீ அழுகிருயா? அழு! கண் வலிக்க அழு! உன் இதயம் வீங்க வீங்க அழு!

எல்லாம் தீர்ந்தத்ற்குப் பிறகு அழுது என்ன பயன்?...அந்தக் குரலில் அரவணைப்பின் மென்மை பளிச்சிட்டது!

"நீலிக் கண்ணீர் திடீரென்று வடிக்கும் நயவஞ்சகனே; உனக்கு அழக்கூட வருமா......குரல் ஆவேசத்தில் எழுந்து ஆத்திரத்தில் சதிராடியது.

அந்தக் குரல் பேச ஆரம்பித்தது!

இதயமற்றவனே! உன் உள்ளத்தில் அன்பு மலர்ந்திருந்தால், கண்ணீர் வெள்ளத்தின் தூதுவனுசு உன்னை நான் சந்தித்திருக்க மாட்டேன்.

"எந்த அன்புள்ளத்தின் அனுதாபத்தை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்தாளோ, அவள் அந்த அல்லி காதலிலே தோல்வியுற்ருள்.

காதலா?...என் உள்ளம் கத்தியது!...வார்த்தைகள் மட்டும் வெளிவரவில்லை!

குரல் தொடர்ந்தது!

"காதல் போயின் சாதல்—அல்லி காவிய மாகிவிட்டாள்!

"ஐயோ நான் காதலிக்கவில்லை! அல்லி என் அன்புத் தங்கை—என் இதயம் கிளப்பிய வேதனைக் குரல், வெற்ருேலமாயிற்று—யாரும் கேட்க மறுக்கிருர்கள்—

குரல் வேகமாகமுன்னேறியது,

"உடைந்த கல்லும் ஓடிப் போன உயிரும் விழுந்து போன சொல்லும் ஒன்றே,...குரல் நின்றது...விக்கிவிக்கி அது அழுதது!

உடைந்த கல்..ஒன்று சேராது!

ஓடிப்போன உயிர்...மீண்டும் வராது!

வீழ்ந்துபோன சொல்...மன்றம் ஏருது! குரல் துடைத்தெரிந்த கண்ணீர்த் துளி, என் நெற்றியிலே வீழ்ந்தது! வீழ்ந்த இடம் வெந்தது...என்னை அது புண் படுத்த வில்லை...

"ஆராதனைக்குரிய அல்லி, உன் அலட்சியப் போக்கால் அமைதி பெற்று விட்டாள்,......

குரலே, நில்! என் அமைதியைப் பயன்படுத்தி என்னை வதைக்காதே! நான் அலட்சியப் படுத்தினேனு? யாரை? அல்லியையா? என் அருமைத் தங்கையையா? இல்லை பொய்...என் பேச்சை அது செவி மடுத்ததாகவே தெரியவில்லை; பேச்சைத் தொடர்ந்தது!

"அல்லி உன் சாவை ஊழ்வினை என்பதா? வாழ்வின் முடிவுரை என்பதா? இயற்கை என்பதா?...குரல் இடறியது.

என் கண்டமும் இடறியது...

ஊழ்வினையா?...நம்பிக்கையற்றவன் நான்...வாழ்வின் முடிவுரையா?...இல்லை முகவுரையே தொடருவதற்கு முன்பு முடிவுரைக்கு வாய்ப்பே யில்லை!

இயற்கையா?....இருக்கமுடியாது! இயற்கை அவ்வளவு கொடுமையானதா?....

என் உள்ளம் கிளப்பிய கேள்விகளுக்குப் பதில் எனக்குள்ளே கிடைப்பதற்கு முன்பு,

'குரல்' பதில் சொல்விற்று,

அல்லி உன்னை வீழ்த்திவிட்ட வீரன், மதிவாணன் அதோ இருக்கிருன்....

நான் துடித்துத் துவண்டு விட்டேன்...கோ வென்று கத்தி யழுதேன்,

"கண்ணீர் விடுகிருயா? இதயஞ்செத்து விட்டவனே, மாண்டவனை மீட்டு வரும் ஆற்றல் கண்ணீருக்கு ஏதடா?

உன் மனப்பளுவைக் குறைக்க அழுகிருயா? சுய நலமியே அழு!

"உன் புன் சிரிப்பைப் பற்றி ஓராயிரம் கதைகள் கூறும் அந்த

(11-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்,
"இனமுழக்கம்,"
சென்னை-2.

பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

தங்கள் 8-7-60 இதழ் கண்டோம். அதில் வடவர்கள் எப்படிப் பட்டவர்கள்என்பதையும், அவர்தம் முதாதையரின் வீரத்தை விளக்கிக் காட்டி இந்திப் போருக்குத் தயாராகுங்கள் என்றும்கூறுமலேகூறிவிட்டீர்கள்! தலையங்கத்தைப் படித்தவுடன் உண்மையிலேயே எங்கள் மன்றத்தில் உள்ள வீர உணர்வு குறைந்தவர்கள் கூட இந்திப் போருக்குத் தயார் என்று சூளுரைக்கின்றனர்.

புதுக் குருதி ஓட்டமும் புது மன எழுச்சியும், புத்தார்வமும், புதுவேகமும், கரைபுரண்டு ஓடுகின்றது. தமிழுக்கு உயிர் கொடுப்போம் என்ற நினைவு எழும்போது எங்கள் உள்ளமெல்லாம் மகிழ்கிறது, உடலமெல்லாம் சிலிர்க்கிறது. "பொறுமை தேவை தம்பீ!" எனப் புகலும் அண்ணா இது பற்றிக் கூற மாட்டாரோ என ஐயுற்றோம். எதிர்பார்த்ததற்கு மாறாக "கல்லுக்குக் கல் சொல்லுக்குச் சொல்" என்ற வீர வரிகளை மொழிந்தவுடன் எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி, எங்களின் கவலையெல்லாம் என்று வரும் ஆகஸ்டு 31 என்பதிலேயே உள்ளது. எம் வாய் மொழி கேட்டு எம் கண் ஒளிகண்டு, இளமதக் களிறுபோல் நாம் நடக்கும் நடைகண்டு, மொழிப் பற்றற்ற இன உணர்வற்ற பதவி வெறி பிடித்த காங்கிரஸ் கனதனவான்கள் திகைக்கின்றனர். "ஆறிலும் சாவு; நூறிலும் சாவு அருந்தமிழ்காக்கப் போரிலே சாவு" என்றிசைத்தபடியே போரை எதிர்பார்க்கிறோம்.

அ. அன்பரசன்
பெருங்களூர்

கடந்த 8-7-60-ந் தேதி வெளி வந்த இனமுழக்கம் அட்டைப்படத்தில்போராட்டத் தளபதி, அண்ணன் E. V. K. சம்பத் அவர்களின் திரு உருவத்தை காணும் நேரத்தில் எங்கள் உள்ளத்தில், உணர்ச்சி மிளிர்கிறது தளபதியின் இடையில் வாள், எதையும் தாங்கும் மார்பிலே இரும்புக் கவசம், தினவெடுத்த தோள்கள், எங்களை எல்லாம் வருக! வருக! என அறைகூவி அழைப்பது போலவும் இருப்பது கண்டு! தாய்மொழிகாக்க ஏன் இன்னும் புறப்படவில்லை? புறப்படுங்கள் போர்ப் பரணிபாடி, என்றுகூறுவதுபோல் இருக்கிறது. புறப்பட்டு விட்டோம்! தாய்மொழி காக்கத் தன்மான உணர்வு கொண்டு, தளபதியின் ஆணை கேட்டுக் காத்திருக்கிறோம் புற்றீசலைப் போல் புறப்பட்டு. (அனுப்புதல்)

கோ. வில்வலன்
கொரடாச்சேரி

தங்களது 22-7-60 இனமுழக்கம் தலைப்பு கவிஞரின் கவிதை கலந்த கடிதத்தோடு கண்டேன். கவிஞரின் படம் வீர முழக்கமிடும் தளபதியாய் திகழ்கின்றது. இந்தியை எதிர்த்து தமிழை வளர்க்கப்பாடுபடும் கவிஞரின் கவிதை ஓர் சான்று. இனமுழக்கம் மொழி முழக்கத்தை, எடுத்துரைப்பதோடு கதை கட்டுரைகள் எல்லாமே வீர நடை தவழ்கிறது. வளர்ந்து வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

வெண்தாமரை
சென்னை-2

காற்றோடு ...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வாய் இனி எங்கே திறக்கப் போகிறது! உன்னையே ஆராதனை செய்த அந்த இதழ்கள் இனி எங்கே மலர்ந்து மணம் வீசப் போகின்றன!

"விழியெலாம் உன் கதை பேசும் அந்த உருவம் விண்ணிலே மறைந்ததா?

வீசிடும் காற்றிலே கலந்ததா?

உன்போன்ற அன்பிலார் நெஞ்சத்திற்கப்பால் சமாதி ஆகிவிட்டதா?

குரல் மேலும் தொடர்ந்தது.

"அல்லி, உன் வாழ்க்கைப் புத்தகத்தின், கவர்ச்சியூட்டும் ஏடுகளைக் கிழித்தெறிந்து விட்ட கரங்கள் இன்னும் இவ்வுலகத்திற்குத் தேவையா?

"எந்த வசந்தம், தென்றலைச் சிறப்பிக்கும் என நம்பினாயோ, அதே வசந்தம் புயலாகித் தாக்கி விட்டது!

கண் நிறைந்த இடமெல்லாம் கதை பேசி மகிழ்ந்ததெல்லாம், காற்றோடு கலந்த கதையாகி விட்டது.

"தீயவனே,

தென்றல் பேச்சும், தித்திக்கும் உறவும் அவள் வாழ்வுக்குத் தீயாகிப் போய்விட்டதடா, தீயாகிப் போய்விட்டது!

தேன் கரும்பைத் தீக்கிரையாக்கி விட்ட தருக்கனே! நீ இந்த உலகில் வாழத்தான் வேண்டுமா? மலர வேண்டிய மலரைக் கருகவைத்தவனே! மக்கி மடியவைத்தவனே! மண்ணுக்குள் புதைத்து விட்டவனே! கண்ணுக்குள் அவளைவைத்து வளர்த்த குடும்பத்தின் கதியைப்பற்றிச் சிந்தித்தாயா?

"வழியே சென்று, இடையிலே புகுந்தவன் நீ! யானை புகுந்த கரும்புத் தோட்டத்தை காட்சிப் பொருளாக்கி விட்டாய்.

"உன் உள்ளத்தில் எண்ணங்கள் அழுத்தமாக உருவாக்கப்படவில்லையா?

உறவாடி மகிழ்ந்த நினைவுகளை உன் உள்ளம் எழுப்பவில்லையா?

உன் இதயத்தை அளவுக்கு மீறி அவள் நேசித்தாள்...

இரவிலும், பகலிலும், இன்பத்திலும், துன்பத்திலும், கனவிலும் நினைவிலும், இந்த நீள் வையகத்தில்காணபதெல்லாம் உன்னையே கண்டாள்!

அனைத்திலும் உன் உருவழித் தோற்றங்கள்!

"எந்த இதயத்தை நம்பினாளோ, அந்த இதயத்திற் குரியவனை, நகைச்சுவைக்காகக் கிண்டல் செய்தாலும் எத்தனை இரவுகள் வேதனைப் பட்டிருக்கிறாள் தெரியுமா? வாழ்வை முடித்துக் கொண்டவள்.

'எல்லாம் கதையா?...

உன்மத்தம் பிடித்தவனே!... உறவுகள் அனைத்தும் கானல் நீரா?

'சத்துப் பொருளைச் சாம்பலாக்கி விட்ட சண்டாளனே! நீயும் உன்னைச் சார்ந்தோரும் மண்ணோடு மண்ணாகிப்போங்கள்!

கண்ணீர்—இது முடிவுறாத காவியம்...உன் வாழ்க்கைக் காவியம் அதனால் எழுதப் படட்டுமே! அல்லி,

உன் எண்ணக்குமுறலை, இதய வேட்கையை உதாசீனம் புரிந்தவனை, காலம், கொல்லாமல் கொல்லட்டும்—துடித்து அவன் சாகாமல் சாகட்டும்.

குரல் நின்றது!

குற்றுயிராகிவிட்ட நிலையில் நான் குலைந்து கிடந்தேன்!

மீண்டும் குரல் ஒலிக்குமா? கவலையில்லை. ஒலிப்பதற்குள்ளே, நான் இவ்வுலகினின்றே விடை பெற்று விடுவேன்!

தவறான அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட ஆசை மண்டபம் தரை மட்டமாகி விட்டது...

யார் குற்றவாளி!

என்னைக் கொண்டவனுகக் கொண்டாட விழையும் களங்கமற்றவள் — அவளைப் பாசத் தொடர்பிலே பிணைப்புண்ட தங்கத் தங்கையாக ஏற்க விழையும் வேதனைக்குரிய நான்.

இடையிலே பல நிகழ்ச்சிகள்-க[illegible] நல்ல நிகழ்ச்சிகள்-

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைப்பில்லை! அந்த முத்துக்களை எல்லாம் எடுப்பதற்கும் ஆள் இல்லை!

நமது முப்பெருங் கடல்களில் தூரத்தில், மிகமிக ஆழத்தில் நாள்தோறும் பவழக்கொடிகளிலும், பாறைகளிலும் ஒட்டிக் கொண்டு கிடக்கும் பல்லாயிரம் முத்துக்கள் தோன்றிக்கொண்டே உள்ளன! தூத்துக்குடி துறைமுகத்துக்கருகில் மன்னார்வளைகுடாவிலும், பாக்ஜலசந்தியிலும், உலகில் மிகச் சிறந்த முத்துக்கள், மிகப் பெரிய அளவில் விளைகின்றன!

1908, 1916, 1926, 1927, 1928 ஆகிய ஆண்டுகளில். நம் நாட்டில் மிகப் பெரிய முத்துச் சிலாபங்கள் நடைபெற்றன. கடந்த 150 ஆண்டுகளில் 18 முறைகள் முத்துக்குளித்தல் மிகப் பெரிய லாபத்துடன் நடத்தப்பட்டன!

ஒவ்வொரு முத்துச் சிலாபத்திலும், பலகோடி ரூபாய் மதிப்புள்ள முத்துக்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன! பல்லாயிரம் வணிகர்கள் பெரும் லாபம் அடைந்திருக்கின்றனர். சர்க்காருக்கும் லட்சக் கணக்கில் லாபம் குவிந்திருக்கிறது!

ஒவ்வொரு முத்தும்பத்தாயிரம், இருபதாயிரம், நூறாயிரம் ரூபாய்கள் என்று விற்கப்பட்டுள்ளன. நமது முத்துக்கள் உலகெங்கும் சென்றிருக்கின்றன. உலக மகா அழகிகளின் அணி ஆபரணங்களிலும், மன்னர்களின் மணிமுடிகளிலும், அரண்மனை ஆலயங்களிலும், மாட மாளிகைகளிலும் நமது முத்துக்கள் ஒளித்தன - ஒளித்துக் கொண்டிருக்கின்றன!

இந்த ஒப்பற்ற ரத்தினங்களை, முத்துக்களை உற்பத்தி செய்து தந்து, "முத்து நாடு" என்ற புகழ்ப் பெயரை உலகில் நம் தாயகத்திற்கு வாங்கித் தந்த பெருமை, நம் முப்பெரும் முத்துக் கடல்களைச் சாரும்!

இந்த முத்துக் கடல்களில் இது வரை எடுக்கப்பட்ட முத்துக்கள் சொற்பம். எடுக்கப்படாமல் ஆள்கடலின் அடிவாரத்தில் பல லட்சம் முத்து மணிகள் மறைந்து கிடக்கின்றன, சங்கோடும், பவழத்தோடும்!

"வாழத் தெரியாதவனே! ஓடி வா. இதோ முத்து, சங்கு, பவழம்! இம்மூன்றையும் எடுத்துக்கொள். உயர்வு பெறு உன்னையும், என்னையும் இந்த உலகிற்கு மீண்டும் அறிமுகப்படுத்து" -- இது தான் ஆர்ப்பரிக்கும் கடல்கள்-முத்துக்கடல்கள்-தினமும் முழங்குகின்ற ஓசையின் உட்பொருள் போலும்!

அத்தனையும் நடந்து முடிந்து விட்டன.

பூரணமான அமைதிஅரசோச்ச ஆரம்பித்து விட்டது!

அந்த அமைதிக்குப்பெயர் சுடுகாட்டு அமைதியா?

வேதனை எரிமலை வெடிக்க ஆரம்பிக்குபோது, அது உமிழ்ந்துவிடும் தீப் பிழம்புகள் உருவாக்கும் நிலைமைகள் எரிமலைக்குத் தெரிய நியாயமில்லை!

சோகத்திற்கிருக்கிற வாய்ப்பு, அதன் கடந்த காலங்களின் தவறு மூத்திரைகள் மறைக்கப் பட்டுப் போகும் மென்மைக்கும் இந்த வாய்ப்பு உண்டு.

முரண்பட்ட நிலைகள் அந்த வாய்ப்புக்களை பெறுவதென்[illegible] சிரமம் போலிருக்கிறது!

இன்று நான் அமைதியின் பிடியில், அதன் மடியில்!

உலகில் இனி எதுவும் என்னை [illegible]ர்க்கப் போவதில்லை!...

அமைதியின் ஆழத்தி[illegible] ஆழ்ந்துவிட்ட என் உள்ளத்[illegible] சலனமில்லை!

சஞ்சலத்திற்கும், சந்[illegible] திற்கும், வேதனைக்கும், வி[illegible] கும், தொடர்பற்ற தன்[illegible] யானதோர் உலகில், இன்று சிக்கிவிட்டேன். [illegible] திக்குப்பெயர்மதி[illegible]

அந்த அமை[illegible] அல்லது [illegible] த்யே பதி[illegible]

—[illegible]

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



சிந்தித்துப் பதில் சொல்வீர்!

அஞ்ஞானத்தின் அந்தகாரச் சுழலில் சிக்கிச் சீரழிந்த அக்கால மனிதர் கையாண்ட சிகிச்சைமுறை பிணியாளரைப் பீதி கொள்ளச் செய்தது.

விஞ்ஞானச் சுடர் ஒளியில் தெளிவு பெற்ற இக்காலச் சிகிச்சைமுறை பிணியின் பிடியைப் பக்குவமாகத் தளர்த்துகிறது.

இதுபோன்று மருத்துவத் துறையில் மட்டும் அல்ல, மற்றும் மார்க்கத் துறையிலே, சமுதாயத் துறையிலே. அரசியல் துறையிலே, ஆக ஒவ்வொரு துறையிலேயும் மனிதன் படிப்படியாக முன்னேறிக் கொண்டே வருகிருன்.

இந்த முன்னேற்றத்திற்கு ஆதாரமாக நிற்பது அவன் ஏற்படுத்திக்கொண்ட மொழியும், அதனுல் அவன் பெறும் கல்வி யறிவுமே யல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர கடைசி தேதி: 9-8-60 | பயிற்சிகள் ஆரம்பம்: 11-8-60

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலயத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 காசு தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

அ. பிரகாசம், சென்னை-14

கே: காமராசரை நேரு எப்படிப் பயன்படுத்துகிறார்?

ப : படத்தைப் பாரும்.

இரா. கலையரசன், புதுக்கோட்டை

கே: அன்புள்ள ஆசிரியரவர்களே! இனமுழக்கத்தின் தலையங்கம், தனித் தமிழ் நடையோடுவடமொழிவாடை வீசாது வெளிவர வேண்டுமென விரும்புகிறேன். நமது இதழில் வடமொழிச் சொற்களுக்குத் துளிக் கூட இடமின்றி இருக்க வேண்டும். எனது ஆசையை நிறைவேற்றுவீர்களா ?

ப: இன்னும்பல ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ் சொற்கள் இல்லையே அறைகுறை படித்தவர்கள் ஏராளம். தங்களைப்போல் தனித் தமிழ்பற்று உள்ளவர்கள் எவ்வளவு பேர். முயற்சிக்கிறோம்.

ஞா. மதியழகன், கேரளா.

கே: அண்ணா! நம் நாட்டில் கோயில்கள் பெயரை வைத்து அங்கு அநேகமான நன்செய் நிலங்கள் இருக்கின்றனவே, அவை இப்போது ஆட்சி பீடத்தில் இருக்கும் காங்கிரஸ் சர்க்கார், ஏழை விவசாயிகள் பண் படுத்தும்படி கட்டளையிடுவார்களா?

ப: நிலச்சீர்த்திருத்த சட்டப்படி மிச்சமான நிலங்கள் எவ்வளவென்றே தெரியவில்லை. தேர்தல் நேரத்தில் நிலங்கள் ஏழைகளுக்கு என்பதற்காக வைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆர். லூர்துரைசாமி, அரக்கோணம்.

கே: சிந்தனைச் சிற்பி அவர்களே! காந்தீயத்தை அடிப்படையாக வைத்து, கதர்க் குல்லாய் அணிந்து, மக்களாட்சி நடத்தும் அரசியலார் துப்பாக்கியைக்காட்டி மக்களை பயமுறுத்துவதும் அடக்குமுறையை அடிக்கடி புகுத்துவதும்தான்ஜன நாயகமா? அல்லது சர்வாதிகாரமா?

ப: ஜனநாயகம் எல்லாம் பண நாயகமாகவும், பிண நாயகமாகவும் மாறி வெகு நாட்களாயிற்று.

கே: திருமங்கலம் தீவட்டி எங்கே இருக்கிறது?

...ட்டி அணைந்தால் ...த்தி வைத்திருப்

முல்லைநேசன், வேலூர்.

கே: கம்பர், இராமாயணத்தைத் தவிர வேறு நூல் இயற்றியுள்ளாரா ?

ப: தனிப் பாடல் திரட்டு என்று ஒன்று எழுதியுள்ளார். அது அவர் எழுதியதுதானா என்று இன்று ஆராய்ச்சியாளர்களிடையே ஐயம் பிறந்திருக்கிறது.

கே: முக்காலத்தையும் உணர்ந்த நமது மதியூகி அமைச்சர்கள் அண்ணாவிடம் ஐந்தாண்டு திட்டங்களை தீட்டச் சொல்லி, ஆயிரம் கோடியென அண்ணா கூறியபிறகு, தி. மு. க விற்கு அரசியல் அறிவு அறவே கிடையாது என்றனரே, அது முதலில் அமைச்சர்களுக்குப் புரியாது போனது ஏன்?

ப: அண்ணா சொன்னதைக் கேலி செய்த கோவையார் லோகநாதன் சொன்னபிறகு மண்ணைக் கௌவி எழுதி மண்டையில் குட்டிக்கொண்டு தாடையில் புத்தி போட்டுக் கொண்டு இனிஅதைப் பற்றி பேசுவதில்லை என்று முடிவே எடுத்துக் கொண்டார்.

முருகானந்தம் மதுராந்தகம்.

வேலன். சேலம்.

கே: இன்றைய அரசியல்சூழ் நிலை எப்படி இருக்கிறது? நமது இந்திப் போராட்டத்துக்குகாங்கிரசுக்காரர்கள் ஆதரவு அளிப்பார்களா ?

ப: என்றும் போல் தான் இருக்கிறது நமது நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவ கொடுக்கின்றவர்களே அங்கு ஏராளமாக இருக்கிறார்கள்! இந்தியை எதிர்க்கச் சொல்லவா வேண்டும்.

ஜெயசீலன் சென்னை-12

கே: நேரு நடனமாடினாரமே, உண்மையா?

ப: ஆம்'சூ-என்;லாய் முன்பு!

திருமூர்த்தி வேலூர்.

கே: 'மத்திய சர்க்கார் ஊழியர் வேலை நிறுத்தம் பற்றி ... ஊழியர்களின் நன்றி கெட்ட செய்கை' என்று சோற்றுப் பண்டாரம் சொக்கலிங்கம் தன்னுடைய [பாரதம்] ஏட்டில் எழுதியிருந்தாரே. அவரைப் பற்றி ... ... ?

ப: நீங்களே சொல்லி விட்டீர்கள் அவர் பண்டாரம் என்று. பண்டாரம்பத்துவீட்டு சோற்றை நம்பி இருப்பவர். ஒரே வீட்டு சோற்றை எதிர்ப் பார்க்கும் ஊழியர்களைப்பற்றி எழுத அவருக்கு யோக்கியதையே கிடையாது.

கே : நேருவை எதற்கு ஒப்பிடலாம்?

ப : பச்சைத் தேவடியாளுக்கு ஒப்பிடலாம்.

கே. தனசேகரன், விஜயநரம்.

கே: அண்ணா அவர்களே! நாம் திராவிடர் கழகத்தில் ஒன்றாக இருந்தபோது, நம் அண்ணா அவர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் பல பட்டங்களைக் கொடுத்த நம் தந்தை பெரியார், இன்று நம்மை இழிவான முறையில் தாக்குவதேன்?

ப: அவர் இரண்டு திங்கள் ஒரே கருத்தைச் சொன்னதில்லையே. ஏன் கவலைப் படுகிறீர். வயதானவர் இன்னும் கொஞ்சநாள்.

M. A. அன்பழகன், கேரளா.

கே: அன்புமிக்க அண்ணா! ரோம்நாடு எவ்வளவு தூரத்துக்கப்பால் இருக்கிறது? அதனுடைய பெயரைக் கொண்டு வந்து நம் நாட்டில் 'கத்தோலிக்கர்' என்று பெயர் வைக்கக் காரணமென்ன? அப்பெயர் இந்நாட்டைவிட்டு எப்போது ஒழியும்?

ப: அதிலென்ன ஆச்சரியம் அரேபியாவிலிருந்து இஸ்லாம்மதம் வரவில்லையா-அதேபோலத்தான் சுமார் எண்ணாயிரம் மைல்களுகப் பாலிருந்த கிருஸ்துவ மதமும் வந்தது, வட கோடியிலிந்து புத்த மதம் வரவில்லையா-இவைகள் எல்லாம் என் ... யாது

எஸ். சக்ரபாணி, குடந்தை

கே: ஐயா! தேசப்படத்தை எரித்த ஆதி(எ)த்தனின் தொகுதி மக்கள் அவர் படத்தையே கொளுத்தப் போகிறார்களாமே?

ப: அவர் படத்தைத்தானே பரவாயில்லை. அவரையே ஏதாவது செய்யப் போகிறார்களோ என்று பயந்தேன்.

கே: வருகின்ற ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி இந்தி வெறியர் சென்னைக்கு கொடியேற்றும் விழாவிற்கு வருகின்றாரே, அதற்கு நாம் கருப்புக் கொடி காட்ட வேண்டாமா? காங்கிரசுக்காரர்கள் என்ன செய்வார்கள்?

ப: கண்டிப்பாகக் காட்டலாம். ஆனால் நமது தீர்மானமும், போராட்ட முறையும், நாளும் வேறு. காங்கிரசுக்காரர்கள் வழக்கம்போல்...

★ அருமையான தயாரிப்பு !
★ அற்புதமான நடிப்பு !
★ கருத்தைக் கவரும் வசனங்கள் !
★ அத்தனையும் கண்டோம் அழகப்பா கலைமன்றத்தார் அளித்த

'சாணக்கியன் சபதம்'

நாடகத்தில் !



அற்புதப் படைப்பை வழங்கிய அழகப்பா கலைமன்றத்தாருக்கு அறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டுரை வழங்கும் காட்சி !

★

உண்மையான சாணக்கியனையே திகைக்கச் செய்யும் திறமையான நடிப்புக் காட்டி நிற்கும் சாணக்கியர் - செந்தாமரை !

★

அழகுமிக்க வேடப்பொருத்தத்துடன், அமைதியான நடிப்புமூலம் நம்மைக் கவர்ந்த அமைச்சர் - மகேந்திரன் சிவகங்கைமணி ! மன்னன் தனந்தனுக வந்து மன்றத்தையே கலக்கிய சிறப்பு நடிகர் ஆனந்தன்.

★

வெண்கலத் தொண்டை காட்டி, வீர வரலாற்றுக்கு நடிப்பு மெருகூட்டி, துடித்து நிற்கும் போரஸ் மன்னன் திருவாடானை எஸ். பி. சேதுராசன் !

★

கதாநாயகன் பஞ்சத்தைப் போக்கிட முனைந்து நடிக்கும் சந்திர குப்தன் - இராதா கிருஷ்ணன் !

★

சிறந்த நடிப்பு மூலம் நம் மெய்சிலிர்க்கச் செய்த செலூகஸ்-முருகு பாண்டியன்.

★

நடனக் கலை விருந்தை தன் எளினத் தோற்றத்தோடு அள்ளித் தந்த அழகு நடிகை நாஞ்சில் சாரதாதேவி.

அடுத்த இதழில்...

குழந்தைகள் கண்ட குடியரசு

விமர்சனம்

...ற்றூரசு, வெளியிடுபவர் அ... கண்ணப்பா வள்ளியப்பன் இனமுழக்கம்...

இனமுழக்கம்

ஆசிரியர்......சி.பி.சிற்றரசு

★ வேந்தனைச் சந்திக்க,வேல்விழிகள் வேங்கைகளாக மாறின!

★ பேச்சுக்கு இடமில்லாமல் மூச்சுத் திணறிப்போன விந்தை!

★ அண்மையில் அபாயமில்லையெனஅறிந்த அரசனின் துள்ளல்!

புரட்சி

வீரமங்கை தெராயினி

சென்ற இதழில் :- மன்னன் ஓடி ஒளிய, நமக்கில்லை ஆபத்தென்று தைரியமாக உட்கார்ந்திருந்த மந்திரி பிரதானியர்கள் முதுகில் தட்டி, அவர்களும் மூலைக்கொருவராய் ஓட, அந்த நாற்காலிகளில் இந்தப் பெண்கள் உட்கார்ந்து,மேற்கொண்டுஎன்ன செய்வதென்பதைப் பற்றியோசிக்கிறார்கள். வீரமங்கை தெராயினி மன்னனைக்காண வேண்டுமென்ற எண்ணத்தை வெளியிடுகிறாள்.

இதில் எப்படி?அடுத்துஎன்ன? மன்னனை சந்திப்போம். வேல் விழிகள் வேங்கைகளென மாறிய இந்த வீராங்கனைகளின் விருப்பம் வேந்தனுக்கு அறிவிக்கப்பட்டது. ஒருவளே சந்தித்தால் போதும், எல்லோரும்வேண்டாம், என்றான் வேந்தன். சரி என்றனர் மாதர்கள். தேர்ந்தெடுக்கப்பட்டாள் ஒருவள்—அழகானவள், கவர்ச்சிகரமானவள், மன்னனிடம் எப்படி பேசுவதென்ற இங்கித மறிந்தவள். யாழொத்த குரலுடையாள். வசீகரத் தோற்றமுடையவள். மன்னன் தனி அறைக்குச் சென்றாள். தடார் என்ற சத்தம் கேட்டது.

மன்னன் ஓங்கி அடித்திருப்பானோ-அடித்திருந்தால்அழுகுரல் கேட்டிருக்குமே-அப்படி ஒன்றும் கேட்கவில்லையே.ஒருவேளை இவள் அழகில் சொக்கி மன்னன் கீழே விழுந்திருப்பானோ - பிறகு என்ன தான் நடந்திருக்கும். ஒன்றும் புரியவில்லையே. நெஞ்சம் துடிதுடித்து நின்றனர் பெண்கள். பேச்சு மூச்சில்லாமல்ஏதோஒன்று நடந்து விட்டது. கவலை தரத்தக்க செய்தியாக இருக்கலாம். நிதானித்து பார்ப்போம் என்றெல்லாம் கவலை தோய்ந்த முகத்தோடு, கண் பஞ்சடைந்த நிலையில் காத்துக் கொண்டிருந்தனர். உள்ளே சென்ற அழகியை வெளியே கொண்டுவந்து கிடத்தினார்கள். மூர்ச்சையடைந்திருந்தாள், காரணம் என்னவென்று வினவியபோது — மன்னனைக் கண்டவுடன் கீழே விழுந்து விட்டாள். இருவரும் எதுவும் பேசவில்லை. பேச்சுக்கு இடமில்லாமல் பெண்ணின் மூச்சுத் திணறிப் போய்விட்டது. வந்தஆளுக்குச் செய்தியைப் பகிரங்கமாக சொல்ல வெட்கமாகயிருந்தது

சி. பி. சிற்றரசு

உரிமைக்காகப் போராடச் சென்றவள் ஊமைபோல் விழுந்தாள். என்ன கேட்டுவிடுவாளோ, எப்படி பதில் சொல்லித் தப்பித்துக் கொள்வது என்று குடல் நடுங்கிக் கொண்டிருந்த மன்னனுக்குக் குளிர்விட்டுப் போய்விட்டது. நம்மைக் கொல்ல ஆண்கள் அதி தீவிரமான வேலையிலே ஈடுபட்டிருக்கும் காரணத்தால் தான் பெண்களையனுப்பியிருக்கிறார்கள். நம் உள்ளத்தையறிய என்றிருந்த மன்னன் இனி அண்மையில் அபாயம் இல்லை என்று பெருமூச்சுவிட்டான். தன்னைக் காண வந்த பெண் அப்புறப்படுத்தப்பட்டாள் மருத்துவம் செய்வதற்காக அவளைத் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள் என்று நினைத்தான் மன்னன். ஆனால் நடந்தது வேறு. பெண் ஏன் இப்படிஆனாள் என்று தெரிந்து கொள்ளமுடியாத தெராயினிகாவற்காரனைமெதுவாக அழைத்துசெய்தியைக்கேட்டாள். அவன் காதோடு காதை வைத்து, 'நீங்கள் அனுப்பிய பெண் மன்னன் அழகைக்கண்டு சொக்கிவிழுந்து விட்டாள்'' என்றான்.

தெராயினி கண்களில் கோபக் கனல்பறந்தன. குடிகேடிமன்னன் அழகைக் கண்டு வந்து சொல் என்பதற்காகவா உன்னை அனுப்பினோம். இல்லையே—உரிமையைக் கேட்க, அவன் இதுவரை செய்த அநியாயங்களை எடுத்துச்சொல்லி பரிகாரம் தேட, அவன் தான் செய்த அநியாயங்களுக்கு மனம் வருந்துகிறானா இல்லையா, என்பதை அறிய. இனி எக்காலத்திலும் இதைப் போன்ற அநியாயங்கள் அறவே தலை தூக்காமல் இருக்குமா என்ற உறுதி பெற உன்னையனுப்பினோம். மன்னன் முன் ஒரு குருபி நிற்கக் கூடாது என்ற காரணத்தால் அழகான உன்னையனுப்பினோம் நீ பேசத் தெரிந்தவள் என்ற காரணத்தால் உன்னையனுப்பினோம். நீயே படபடவென்று பேசாமல் மன்னனையே பேசவிட்டு, சரியான சந்தர்ப்பங்களில் சரியான வார்த்தைகள் அளிப்பதன் மூலம் சரியான விடைகாணுவாய் என்று முழுக்க முழுக்க நம்பி உன்னை அனுப்பினோம்! உன் வரவின் மூலம் கருவானத்தில் தூரிய ஒளி

(9-ம் பக்கம் பார்க்க)

★ ★ ★ ★

★ ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒரு முன்னேற்பாட்டின் கீழ் உழல்கிறது. அவரவர் உடல் வளம், மூளை வன்மை, சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து ஏதோ ஒரு விதிபோல் அமைந்துவிடுகின்றது. ஒவ்வொரு மனிதனும் அவனவன் நோக்கப்பட வாழவிடவேண்டும். தடைகளை விதித்து கட்டுப்படுத்துவதாகத் துன்புறுத்தக்கூடாது.

மாறும் உலகம்

மனிதனுடைய இறுதியான எண்ணம் இன்பமாய் இருக்க வேண்டும் என்பதும், என்றைக்கும் தான் நிலைத்திருக்கவேண்டும் என்பதுமாகும். எத்துணையோ முறைகளில் தனது சிந்தனையைச் செலுத்தி உலகின்அடிப்படைகளை உய்த்துணர முயலுகின்றான். ஒரு கணம்நம்பிக்கையோடு சிலமுடிவுகளைப் பெறுகிறான். மற்றொரு கணம் நம்பிக்கையோடு அந்நம்பிக்கையை இழந்து காணப்படுகிறான். ஆயினும் எண்ணச் சுழற்சி மட்டும் நிற்பதாயில்லை. ஆசை ஒரு வேளை நிற்கலாம். காம உணர்ச்சி நின்றுபோகலாம். ஆனால் எண்ண அலைகள் கடல் அலைகள் போல் ஓய்வதில்லை. கடலுள் மூழ்கினால் சில இடங்களில் பயனுள்ள நன்முத்து கிடைப்பதுபோல் ஆழ்ந்து சிந்திக்கும்பொழுது சிலருக்குச் சிலஉண்மைகள்புலப்படுகின்றன. இங்ஙனம் பலரும் தத்தம் ஆய்வுகளுக்கு ஆதாரங்காட்டுகிறார்கள். எனினும் குறுகிய நாள் வாழ்க்கைக்குள் பயன்படுவதாகவும் ...டிவுகள் நம்பக்கூடியதாகவும் அமையவேண்டும். இதில்தான் ...க்கல் ஏற்படும். இந்நெறிகளில் ... நாம் இங்கே அறிமுகம் ...லது நலம்.

...மையில் ஆல்பர்ட்கோஸ் ...னித வாழ்க்கையைப் ...கூறினார். ...லயே ...னிதன் சில ...டையவன்; எதை ... வன்மை அவனி ... அச்சமும் உடல் ... அல்லது வாழ்க் ...ந்து வருகின் ... என்ன அடக்க ...ம் அவன் ... நிலையை ... உலகமோ ...த்தமும்

பூகிக்கிறார்கள். இங்ஙனம் பூகிப்பதே அர்த்தமற்றது ஆகும். ஏன்? பலவிதமான மாறுபட்ட உயிரினங்கள் வாழுகின்ற இவ்வுலகில் மனிதன் ஏதோ உயர்வடைய நினைக்கிறான். அந்த முயற்சிலேயே காலம் அவனை வென்று விடுகிறது. ஒவ்வொரு மனிதனும் அவனவன் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெற்று விடுவதில்லை. சில வேளைகளில் சரியான நலனும், சில வேளைகளில் குறைந்தும் கிடைக்கின்றன. இதைக் கண்டு தோல்வியுணர்வால் துவண்டு விடாமல் தன்னைத்தானேதேற்றிக்கொண்டு தான் பல இன்னல்களைக் கடந்து வருகிறான். இவனுக்கு இயற்கையோ வேறு எந்தச் சக்திகளும் வந்து உதவிவிடுவதில்லை. அப்படிச் சொல்வது ஆறுதலுக்காக இருக்கலாமே தவிர ஆதாரத்தோடு இருப்பதாக உறுதிப்படுத்த முடியாது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒரு முன்னேற்பாட்டின் கீழ் உழல்கிறது. அவரவர் உடல் வளம், மூளை வன்மை, சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து ஏதோ ஒரு விதிபோல் அமைந்து விடுகின்றது. ஒவ்வொரு மனிதனும் அவனவன் நோக்கப்பட வாழ்விட வேண்டும். தடைகளை விதித்து கட்டுப்படுத்துவதாகத் துன்புறுத்தக்கூடாது. இந்நெறி பகுத்தறிவுக்கு முரண்படுவதாகும். அவநம்பிக்கையும், அச்ச உணர்ச்சியும் கலந்து வாழ்க்கையைச் சுவைக்க விடாது செய்யும் இயல்பு இந்நெறியில் காணப்படுகிறது. செகப்பிரியர் எழுதிய மேக்பெத் என்னும் நாடகக்காப்பியத்தில், காப்பியத் தலைவன் மேக்பெத் இறுதியாகத் தான் ...றுப்ப... கள் சொல்லுகிறான். அதாவது— இது என்ன மனித வாழ்க்கை? ஒன்றும் அர்த்தமற்றதாயிருக்கிறது. ஏதோ ஒரு முட்டாளினால் சொல்லப்பட்ட கற்பனைக் கதைப் போல்தான் இருக்கிறது. எந்நேரமும் இரைச்சலும், குழப்பமும், ஆரவாரமும் நிறைந்தது. அடிப்படை நோக்கம் எதுவும் இல்லாதது—என்கிறான். இதே கருத்தைத்தான் மேலேயுள்ள தத்துவ ஆசிரியர்கள் வற்புறுத்துகின்றனர். இது பிற்போக்கான கருத்தென எண்ணி ஒதுக்கப் பட்டுவிட்டது. ருசிய நாட்டுப் பிரபல கதாசிரியர் டஸ்டவ்ஸ்கி இந்நெறியைப் பின்பற்றுபவர்

மதுரை வே. சௌந்தரராசன்

தான். அதாவது தோல்வி மனப்பான்மையினால் துவளுகிறவர்கள் என்று குறிப்பாய்ச் சொல்லலாம்.

நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றதொரு தத்துவம் ஒன்று அண்மைக் காலத்து அமெரிக்க உரைநூல் பேராசியர் வில்லியம் ஜேம்ஸ் என்பவரால் எடுத்துரைக்கப்பட்டது. இவர் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் ஹென்றி ஜேம்ஸ் என்பாரின் சோதகர் ஆவார். வில்லியம் ஜேம்சின் எழுத்துக்கள் கூரிய சிந்தனைக்கும், தெளிவான விளக்கத்திற்கும் பெயர் பெற்றவை. இவரது நடைமுறைத் தத்துவம் முற்றிலும் புதிதானது.என்றுசொல்வதற்கில்லை. பழைய முறைக்குப் புதிய பொலிவூட்டியதாகவே சொல்ல வேண்டும். எந்த அலுவலையும் அதன் விளைவுகளைப் பொருத்துத்தான் நிர்ணயிக்கவேண்டும். நேராகப் பார்த்து,அறிந்து,அளப்பதுதான் எதையும் நம்பவேண்டும் என்பார்க... திற்கும் அவனது இவ்வுலக அனுபவத்திற்கும் வெளியே மற்றொரு உலகம் இருப்பதாகக் கூறுவது புரட்டு. அத்தகைய உரையில் சற்றும் பொருளிருக்க முடியாது, என்கிறார்.இவர் தனது அனுபவத்தை மனிதன் நன்கு நம்பவேண்டும். அனுபவம் ஒருவருக்கு நல்லதோர் வழிகாட்டி ஆகும். இவ்வுலகில் நாம் இன்று கண்டு வரக்கூடிய அளவிற்கு அனைத்தும் உண்மையே. உலகம் பொய்யல்ல. மனப் பக்குவத்தை பெற்றுத்து ஒவ்வொருவரும் வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் அடைகிறார்கள், இதுதான் நடைமுறை. பயனற்ற வீணுரைகளை விலக்கித் தன்னம்பிக்கையோடு வாழ வேண்டும் என்றார் இவர். இதைத்தான் சுருக்கமாக நடைமுறைத் தத்துவம் ஆஸ்திகசாமி என்பார்கள், அமெரிக்காவின் மிகப்புகழ்ப்பெற்றமனோதத்துவப் பேராசிரியர் ஜான் டிவே ஆதரித்தார். இதன்படி நேரடியான வாழ்க்கை முறைகளைக் கவனித்து நடக்காமல் ஏதோ இனியொரு உலகம், இனியொரு வாழ்க்கை எல்லாம் வரயிருப்பதாகக் கருதுவதும், நம்புவதும் தவறுகளாகும். இவற்றிற்கு பொருள் ஏதும் சரியாகப் புலப்பட...லை என்பது தெளிவு. வாழ்க்கை வாழ்வதற்கே, அதன் அலுவல்களை கண்காணித்து நட...தே ஒரு மனிதனின் முதற்கடமை என்று இந்நெறி கூறுகிறது. இதற்கு அமெரிக்காவில் பரவலாக ஆதரவு இருந்தது. உலகின் இதர பகுதிகளில் விரிவாக வளர்ச்சிஅடையவில்லை. எனினும் ஆழ்ந்த ஆராய்ச்சி உண்மைகள் வில்லியம்ஜேம்ஸால் சொல்லப்பட்டுள்ளன என்பது ஒருதலை

பெரும்பாலும் பதங்கள் மாய்கைகளைச் சுற்றித்தான் சுழல்கின்றன. இந்த உலகம் எப்படி உண்டானது என்பது ஒரு புதிர் என்றும், உலகில் நடக்கும் வியப்பான அலுவல்கள் எல்லாம் ஆண்டவனின் திருவிளையாடல்கள் என்றும் அது ஒரு மாய்கை என்றும் சொல்வார்கள். இதற்கு எதுவும் அடிப்படை தேவையில்லை. யாராவது சொன்னதை அல்லது எழுதியிருப்பதை அப்படியே நம்புவது. தெய்விக வேடிக்கைகள், விநோதங்கள், புராணக் கூற்றுகள், புண்ணியஸ்தலங்கள், தேவ நூல்கள், அசிரி, மாண்டவர் மீளுதல், பிதுர்க்களின் ஆத்மாவிற்கென்று தானம் செய்தல், நோன்பு நோற்றல் முதலியன இந்த மங்கை நெறியைச் சார்ந்தனவாகும்; ஆதாரங்களைப்பற்றி பொருட்படுத்தாமல் தர்க்கமோ, தேவையோ, புரியாதவேலைகளில் கூட எந்த விளக்கமும் பெறாமல் அப்படியே நம்பிப் பின்பற்றி ஒழுகுதல் மாய்கைநெறி ஆகும். மை பார்த்தல், கோடங்கி, குறி பார்த்தல், பில்லி சூன்யம், எல்லாம் இதை யொட்டிய பழக்கங்களே ஆகும். ஏன்? எப்படி?எதற்காக என்றுகேட்காமல், சொன்னவற்றை மத அடிப்படையில் அப்படி அப்படியே நம்பிவருவது மாய்கைநெறியாகும். தெய்வ நூல், தெய்வகாரியம் என்றதும் மறுப்புரைபேசாமல்ஏற்பது மாய்கையாகும். ஆண்டவனேஒருமாயன்தான் மாய்கையின்றி அவனைக் காண முடியாது. மாய்கையோடு கலந்தே ஆண்டவன் இருக்கிறான், பாவிகளின் கண்களுக்கு இது தெரியாது. மாய்கைகளைச் சித்துக்கள் என்றும் சிலர் சொல்வார்கள், எல்லா மதங்களிலும் மாய்கைக்கு இடம் உண்டு.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜேந்திரப் பிரசாத் திரும்பிப் போ என்றல்ல! இந்தி ஒழிக! ஆணையை நீங்கள் ரத்து செய்யுங்கள், இந்தி ஒழிக.'' என்ற அந்த முழக்கத்தோடு, வேறு அநாகரிக முழக்கங்கள் வேறு யாராகிலும் இடையிலே புகுத்தினாலும் அதைத் தடுத்து நிறுத்தி, நீங்கள் கருப்புக்கொடி காட்டுகின்ற காரியத்தை நீங்கள் செய்து முடிக்க வேண்டுமென்று உங்களை நான் பணிவன்போடு இந்த மாநாட்டுத் தீர்மானமாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் பற்றிய விளக்கங்களையெல்லாம் அளிப்பதற்கும்இதைப் பற்றியெல்லாம் எழுதுவதற்கும் எங்களுக்கு நேரம் இருக்குமோ இருக்காதோ! இதைப்பற்றியெல்லாம் தெரியப்படுத்துவதற்கு நேரமில்லாத வகையில் இப்பொழுது நாங்கள் வீடுபோகிறபோதே நாங்கள் கைது செய்யப்படலாம் அல்லது விடியற்காலை கைது செய்யப்படலாம், அல்லது நாளை மறு நாள் கைது செய்யப்படலாம். ஆகையினாலே அதை எப்படி எப்படிப் பிடிப்பதென்பதையும் யார் யார் நடத்துவதென்பதையும் நான் இந்த மாநாட்டிலேயே உங்களிடத்திலே, நீங்கள் (சபதம்) நண்பர்களே, இந்தக் கறுப்புக்கொடி காட்டுகின்ற காரியத்தில், அவர் எந்தெந்த ஊருக்குச் செல்கின்றாரோ அந்தந்த மாவட்டத்திலே உள்ள செயலாளர்களும் அந்தந்த ஊரிலே உள்ள செயலாளர்களும் அந்த பொறுப்பினை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு அதற்கான நடத்திச் செல்வதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுத்து, உடனிருந்து அதை உடனடியே நடத்திக் கொடுக்கின்ற பொறுப்பினை இந்த செயற்குழு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற முறையிலே செயற்குழு உறுப்பினர்களிடத்திலே நான் இந்தக் கருப்புக்கொடியை உங்கள் சார்பிலே தர இருக்கிறேன், இது கருப்பாக இல்லாமல், வெறும் சிகப்பாக வருவதானாலும் இதை எடுத்துக் கொண்டு போகின்ற தோழர்கள் பிணமாகிக் கீழே விழுகின்றநேரத்தில், மற்றவரிடத்திலே கொடுப்பதானாலும் இது காட்டப்படவேண்டிய நேரத்தில் அவர்கள் மறவாமல் காட்டவேண்டுமென்று உங்கள் சார்பில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு செயற்குழு உறுப்பினர்களை நான் இந்தக் கருப்புக்கொடியை வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதலில் செயற்குழு உறுப்பினரும் போராட்டக்குழு உறுப்பினருமான தம்பி சம்பத்தை இந்தக் கொடியை வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நம்முடைய செயற்குழு உறுப்பினரும் எனது மதிப்புக்குரிய தம்பியுமான கருணாநிதியிடத்திலே இந்தக் கறுப்புக்கொடியைத் தருகிறேன். செயற்குழு உறுப்பினரும் இந்த மாநாட்டுச் செயலாளருமான தம்பி மதியழகனிடத்திலே இந்தக் கருப்புக் கொடியைத் தருகிறேன். நம்முடைய கழகத்துடைய காவலரும் நீண்டநாள் உழைப்பாளியுமான என்னுடைய அருமைத் தோழர் சிற்றரசு அவர்களிடத்திலே... தாய்க்குலத்தின் சார்பாக நம்முடைய கழகத் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களிடத்திலே இந்தக் கருப்புக்கொடியைத் தருகிறேன். நம்முடைய அருமைத் தோழர் ஆசைத்தம்பியிடத்திலே இந்தக் கருப்புக் கொடியைத் தருகிறேன். மதுரை தோழர் முத்துவிடத்திலே, இந்தக் கருப்புக்கொடியைத் தருகிறேன். திருச்சி மாவட்டத் தோழர் அன்பில் தர்மலிங்கத்திற்கு இந்தக் கருப்புக்கொடியைத் தருகிறேன். தென் ஆற்காடு மாவட்டச் செயற்குழு உறுப்பினர் சாம்பசிவத்திடம் கருப்புக்கொடி தருகிறேன் நண்பர்களே இப்பொழுது செயற்குழு உறுப்பினர்களிடத்திலே கருப்புக்கொடி தரப்பட்டிருக்கிறதே தவிர அதிலே ஈடுபட வேண்டியவர்கள் அவர்கள் மட்டுமேதான் என்று பொருளல்ல செயற்குழு உறுப்பினர்கள் ஒரு கழகத்தினுடைய செயற் குழுவிலே இடம் பெற்றவர்கள் என்ற முறையிலே அதிகார பூர்வமாக அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அனைவரும் இந்தக் கருப்புக்கொடி ஏந்த கடமைப்பட்டிருக்கின்றனர். அதிலே குறிப்பாகவும் சிறப்பாகவும் சென்னை நகரத்தினுடைய மேயர் நம்முடைய நண்பர் அப்துல் காதர் அவர்கள் இந்தக் கருப்புக் கொடியை ஏந்துவார். இனி நண்பர்களே 6-ந்தேதியிலிருந்து 16-ந்தேதிவரை என்று குறிப்பிட்டேன் இதிலே 15-ந்தேதி குடியரசுத் தலைவர் நடத்துகிற சுதந்திர விழாவில் நாம் இந்தக் காரியத்திலே ஈடுபடக் கூடாது சுதந்திரதின விழாவிற்கு நாம் இந்தக் கருப்புக்கொடி காட்டும் காரியத்திலே ஈடுபடக்கூடாது மற்ற விழக்களிலே நாம் ஈடுபடலாம். அந்த விழாக்களிலே ஈடுபடுகின்ற நேரத்தில் இரவுக் காலத்தில் அவர் தங்கியிருக்கின்ற விடுதிக்குப் பக்கத்திலே எந்தக் கழகத் தோழரும் செல்லக்கூடாது. எந்த ஆர்ப்பாட்டமும் கூடாது அவர் பவனிவருகின்ற நேரத்தில் கருப்புக்கொடி காட்டலாமே தவிர அவருடைய மோட்டாரில் இதையோ அதையோ வீசுவதுஎன்ற அப்படிப்பட்ட காரியத்தில் யாரும் ஈடுபடக் கூடாது அப்படி யாராவது ஈடுபடுவார்களேயானால் அவர்கள் தமிழ்நாட்டுக்குத்துரோகம்செய்தவர்கள் என்றெல்லாம் அடைமொழி சொல்லமாட்டேன். அப்படி வீசுகின்றவன் என் தம்பி அல்ல! அப்படி வீசுபவர்கள் நிச்சயமாக அவர்கள் எதிரியினாலேயே ஏவிவிடப்பட்டவர்கள் என்று நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே அப்படிப்பட்டவகையிலே இல்லாமல் நீங்கள் இந்தக் காரியத்தில் ஒரு துளியும் கண்ணியம் கெடாமல் நீங்கள் இந்தக்காரியத்தை நடத்தவேண்டும். இனி நான் உங்களுக்கு சொல்லவேண்டியது வேறொன்றுமில்லை. இனி நீங்கள் தான் உற்றார் உறவினர்களிடத்தில் நிரம்பச் சொல்லவேண்டியயிருக்கிறது. இரவெல்லாம்கண்டு பேசுங்கள். கருப்புக்கொடி காட்டச் சொல்லுகிறேன், கடமையை நிறைவேற்றச் சொல்லுகிறேன். தாய்மொழி காக்கச் சொல்லுகிறேன் என்று கூறி அவர்களுடைய அனுமதியைப் பெற்று நீங்கள் அந்தக் காரியத்திலே வெற்றிபெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய இந்தத் தலைமையுரையிலே நான் பேசிய இதுவே தான் இந்த மாநாட்டின் தீர்மானம் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்து விடை பெறுகின்றேன். வணக்கம்.

இனமுழக்கம் ஆண்டு மலர்

பட்டியல் தொகை முற்றிலும் பாக்கி இல்லாமல் அனுப்பிவைக்காத விற்பனையாளர்கட்கு 'மலர்' நிச்சயமாக அனுப்பி வைக்கப்படமாட்டாது. வழக்கம்போல் கழிவு உண்டு.

வளமார் திராவிடம் வழங்கிய வைரம்

பிரிட்டனின் மணிமுடியில் நூற்றாண்டுகாலமாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் அந்தக் கோகினூர் வைரமும், மாவீரன் நெப்போலியன் தன் பட்டாக்கத்தியிலே பதிந்திருந்த வைரமும், பாரசீகம், ருஷ்யா, ஆஸ்திரியா முதலிய நாட்டு மன்னர்களின் மணிமகுடங்களில் ஒளி வீசிய வைரங்களும்-நம் தென்னாட்டின் வைரங்கள்! திராவிடத்தின் வைரங்கள்!!

★ மாவீரன் நெப்போலியன் தன் பட்டாக்கத்தியிலே பதித்திருந்த வைரமும், பாரசீகம், ருஷ்யா, ஆஸ்திரிய முதலிய நாட்டு மன்னர்களின் முடியிலே மின்னிய வைரங்களும் நம் வைரங்களே!

ஆங்கில ராணி விக்டோரியா, அகிலத்தை நடுங்க வைத்த வீரன் நெப்போலியன், டில்லியைக் கொள்ளையடித்த பாரசீக வீரன் நாதர்ஷா, டில்லி சுல்தான்களான பாபர், அக்பர், ஜகாங்கீர், ஷாஜகான், அவுரங்கசீப், ருஷ்யபேரழகி இரண்டாவது காத்தரின் - ஆகியோர் நம் நாட்டு வைரங்களை அளவு கடந்து மதித்தனர்-அணிந்து அழகு பார்த்தனர்!

ரோம், கிரீஸ் - முதலிய பழம் பெரும் நாகரிக நாடுகள் எல்லாம் வைரத்தைப் பற்றியே கேள்விப்படிராத போது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தென்னாட்டில் வைரம் எடுக்கப்பட்டு வந்தது! ரோம் நாட்டுக்கு, இந்நாட்டு வைர மணிகளை அனுப்பி அறிமுகப்படுத்தி வைத்த பின்புதான்-ரோமாபுரி அரண்மனைகளில், அந்நாட்டு அழகிகள், ராணிகள் ஆகியோரின் அணிகளில் -- பொதுவாக ரோம்நாடு முழுவதும் வைரமணிகள் செல்வாக்குப் பெற்றன!

பிளினி என்ற ரோம் நாட்டாசிரியன் கி. பி. 100-ல், "இயற்கை நூல்'' என்னும் ஓர் ஏட்டில், 'நவ மணிகளுள் மிக மிக மதிப்புமிக்கது வைரம்-அது மன்னர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியது. ஆறு கோணம், இரட்டைக் கோபுரம் ஆகிய உருவங்களில் அமைந்துள்ள மிக மிக அழகாக, ஒளி நிறைந்தவையாக இருக்கின்றன'' என்று, நம் வைரங்களைப் பற்றி விவரித்திருக்கிறான்!

கார்சியா டெ ஆரேடா (Cearcia de Oreta) என்ற ஒரு போர்த்துகல் தேசத்தான் முதன் முதலாக 1565-ல் நம் நாட்டு வைரங்களைப் பற்றி நன்கு எழுதினான்!'' உலகிற்கோர் உன்னதமான பொருள்'' என்று புகழ்ந்து கூறினான்!

டாவர்னியர் (J. B. Tavernier) என்ற ஒரு பிரெஞ்சு நாட்டுக்காரன் அடிக்கடி நம் நாட்டுக்கு ஓடி வந்தான். உலகத்தைச்சுற்றினான். 1638-1655 — இந்த இடைக்காலத்தில் அவன் இந்தியாவுக்குப் பல தடவைகள் ஓடி வந்தான்!

வந்தான் என்று சரித்திரம் சொல்கிறது. ஏன் தெரியுமா? அவன் ஓர் ரத்தின வியாபாரி! உலக மன்னர்களுக்கும், பிரபுக்களுக்கும் இந்த நாட்டு வைரங்களையும், ரத்தினங்களையும் வாங்கிச் சென்று கொடுத்தவன்! "டாவர்னியர், பியாணி உருவிலே வந்திருக்கலாம்-ஆனால் அவ

தொண்டைமான்

னது நோக்கமெல்லாம் விலை உயர்ந்த வைரங்களை, ரத்தினங்களை விலைக்கு வாங்கி, கீழ் நாடுகளின் கீர்த்திமிக்க மன்னர்களுக்கும், ஐரோப்பிய அரசர்கட்கும் விற்று வணிகம் செய்வதே'' என்று வர

★ 18-ம் நூற்றாண்டு வரை; தென்னாட்டைத் தவிர வேறெங்குமே வைரம் விளையவில்லை. ரோம்-கிரீஸ் போன்ற நாடுகளுக்கு நம்முடைய நாட்டின் வைரங்களே பயன்பட்டன!

லாற்றாசிரியர்கள் வரையறுத்துக் கூறுகின்றனர்!

18-ம் நூற்றாண்டுவரை (கி. பி. 1700), உலகில்—தென்னாட்டைத் தவிர வேறெங்குமே வைரம் விளையவில்லை! அப்படி விளைந்ததாக எந்த ஆதாரத்தையும் காணோம்! அதுவரை உலகமெங்கும் திராவிடத்தின் வைரங்களே ஒளிவிட்டுக் கொண்டிருந்தன!

1725-ம் ஆண்டில்தான் அமெரிக்க மண்ணில் வைரம் கண்டு பிடிக்கப்பட்டது! 1867-க்குப் பிறகுதான் ஆப்பிரிக்காவில், ஆரஞ்சு நதி கரையில் ஆதர்ஸ்டோ… (Atherstone) என்பவ… வைரத்தைக் கண்டு பிடித்தார்! அதுவரை அவனியெங்கும் ஒளி வீசியது தென்னாட்டு வைரமே!

நம் நாட்டில் வைரம் எப்போது கண்டு பிடிக்கப்பட்டது-என்ற வினாவிற்கு "ஆரம்ப காலம் முதல்" "மிகப் பழைய காலத்திலிருந்து" என்ற வார்த்தைகளை வாலாற்றசிரியர்கள் பதிலாகக் கூறுகின்றனர்! 200… ஆண்டுகளுக்கு முன்பு-எ… பது மட்டுமே நிச்சயமா… தெரிகிறது!

வாலாற்றில் வைரங்க…

சரித்திரத்தில் பல சுவை மிக்க அத்தியாயங்களை நமது வைரங்கள் உண்டாக்கியிருக்கின்றன; காதலை, கவிதையை, கோபத்தை, கொடுரத்தை-பல பயங்கரப் படுகொலைகளை, கொள்ளைகளை எல்லாம் இந்த நாட்டு வைரங்கள் சந்தித்திருக்கின்றன! அவற்றில் சுவைமிக்க, ரசமான ஒரு சில கதைகளை இங்கு தருகிறோம்.

கோகினூர் வைரம்

'கோகினூர்' என்பதற்கு 'மலை விளக்கு' (Mountain of Light) என்று பொருள். குவாலியர் நாட்டுக்காரர் இந்த வைரத்தை இங்கிருந்து வாங்கி வைத்திருந்தார்கள். 1526ல் டில்லி சுல்தான் பாபர், குவாலியர் நாட்டுப் படைகளை வென்றான். சரண்புகுந்த அந்த நாட்டுப் படை வீரர். தங்கள் உயிருக்கு ஈடாக, 'கோகினூர்' வை… த்தை, அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்!

பாபர் அதை வாங்கிச்சென்றான். அலங்காரமாக வைத்துக் கொண்டான். காலம் ஓடியது. பாபர் மறைந்… விட்டான். ஆனால் கோ… னூர் மறையவில்லை. … னுக்குப் பிறகு, அவனுடை… சந்ததியில் வந்த அ… அதை வைத்திருந்த …

(அடுத்த இதழில் முடியும்)

வேண்டுகோள்.

இந்தி எதிர்ப்பு மாநாட்டின் கட்டளைப்படி … புக் கொடி நிகழ்ச்சிகளைக் கவனிக்க வேண்டியிரு… தால் என்னிடம் கூட்டத்திற்காகத் தேதிகளை வ… கிய நண்பர்கள் இந்தத் திங்கள் 20-ந் தேதி … விளம்பரப் படுத்தாதிருக்கும்படிக் கேட்டுக் … கின்றேன்.

அன்ப…

சி. பீ. சி…

★ சி. பி. சிற்றரசு ★

இரா. தமிழ்ச்செல்வன்,
கத்திரிப்புலம்

கே. முண்டு சட்டிக் குள்ளே குதிரை ஓட்டும் மந் திரி யார்?

பதில்: கோவைக் குமரன்!

கே: அறிஞர் அண்ணா அவர்களுக்கு கார் ஓட்டத் தெரியும் என்கிறேன் நான்; கார் ஓட்டுவது போல் புகைப் படம் எடுப்போருக்குப் 'போஸ்' கொடுக்கத்தான் தெரியும் என்கிறார் என தருமை காங்கிரஸ் நண்பர் ஒருவர். இதுபற்றி தங்கள் கருத்தென்ன?

ப: கற்றுக் கொள்கிறார். நாங்கள் வேண்டாம் என்கி றோம். எப்போதும் சிந்திக் கிறவர்கள் கார் ஓட்டக் கூடாது. நானும் இப்போது கார் ஓட்டுவதை நிறுத்திக் கொண்டேன்.

வி. இராமசாமி. செங்கற்பட்டு.

கே: நமது கழகத்தில் இதுவரையில் சேர்ந்துள்ள அங்கத்தினர்களின் மொத்த தொகை என்ன?

ப: ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டவர்கள்.

ஆா. தாண்டவன். திண்டுக்கல்.

கே: அண்ணா அவர்களே! தங்களுக்கு எத்தனை மொழி யில் எழுதத் தெரியும்?

ப: தமிழ் தெலுங்கு, ஆங் கிலம் என்ற மூன்று மொழி களில் எழுதத்தெரியும்.

கா. சகேச்செல்வன், கோளா.

கே: திராவிடநாடு கேட் கும் தி. மு. க. தமிழ்நாட்டில் மட்டும் இந்தியை எதிர்த்துப் போரிட்டால் போதுமா? தமிழ் நாட்டில் இந்தி இல்லா விட்டாலும் திராவிட நாட் டின் மற்ற பகுதிகளான ஆந் திர, கேரள, கருநாடகப் பகு தியில் இந்தி ஆட்சிமொழி யாகிவிட்டால்—?

ப: ஒரே அடியாக கட்ட டத்தை எழுப்பிவிட முடி யாது முதலில் கடக்கால் போட வேண்டுமல்லவா!

கே: அளகேசனை எதற்கு ஒப்பிடலாம்?

...றுந்த நரிக்கு

...ி என்ப
...மச்ச

சொன்னதென்ன வென்பதை மறந்த காங்கிரஸ் உறுப்பி னர்களுக்கு நாம் எந்த வகை யில் எடுத்துக் கூறலாம்?

ப: அவர்கள் இனி சொன் னாலும் கேட்காத செவிடர் களாய் விட்டார்கள். வாத்துக் களுக்கு முன்னே முத்துக் களை இறைக்க வேண்டாம்.

கே: இந்திப் போரில் கை தானவர்களைச் சிறைப்படுத்த காங்கிரஸ் அரசாங்கம் சிறைச் சாலைக்கு என்ன செய்யும்?

ப: மந்திரிகள் மாளிகை கள், கவர்னர் மாளிகை எல் லாம் காலி செய்யப்படலாம்.

ப. சந்திரசேகரன்,
இராமநாதபுரம்.

கே: ரோமாபுரியில் இருக் கும் போப்பாண்டவர் முகவரி என்ன? பம்பாயில் இருக்கும் போப்பாண்டவர் முகவரி என்ன?

ப: போப்பாண்டவர் என்று எழுதி அந்தந்த ஊரின் பெயரைப் போட் டாலே போதும்.

கே: தற்போது பக்தவத் சலம் என்ன செய்து கொண் டிருக்கிறார்?

ப: முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதை போல் கிடக்கிறார்.

ஏ. எஸ். சுப்ரமணியம்,
சரியாபட்டணம்.

கே: மதுரையில் நிதிய மைச்சர் த நா. கா. க. மொழிப் பிரச்னை தீர்மானத் தையொட்டி பேசியபோது, தமிழுக்குப் பதில் இந்தி திணிக்கப்படுகிறது என்ப தற்கு ஓர் உதாரணம் கூற முடியுமா? என, நமது அண்ணாவிற்குச் சவால் விடுத் துள்ளார். இதைப் பற்றி தாங் கள் தெரிவிக்கும் கருத் தென்ன?

ப: அவர் ஒரு அப்பாவி. பண் விடைத்தாள்களை, அஞ் சல் அட்டைகளை. ரூபாய நோட்டுகளை, அஞ்சல் மனை களை, புகைவண்டி நிலையங் களை. மைல், பாலாங்கு கற் களை, அவர்பார்க்கவே இல்லை போலிருக்கிறது. இனியாவது தூங்கிக் கொண்டிராமல் அவைகளைச் சுற்றிப்பார்க்கச் சொல்லுங்கள்.

கே: தமிழுக்காகப் பாடு படுவதாகக் கூறும் நிதிய மைச்சர், தமிழ நாட்டிற்கு, "தமிழ்நாடு"என்று பெயர் வை என்று, திரு. சங்கர லிங்கனார் வேண்டி உயிர் விட்டும்இன்னும்தமிழ் நாட் டிற்கு, 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்காத சுப்ரமணி யம் தமிழுக்கும்தமிழ் நாட் டிற்கும் செய்த தொண்டு தான் என்ன?

ப: தமிழ் நாட்டுக்காக அவர் ஒன்றும் செய்துவிட வில்லை. தமிழ்நாடு என்று பெயர்வை என்ற சங்கரலிங் கனாரை சுடலைக்கனுப்பினார். அவ்வளவுதான்.

ச. தமிழன்பன் கோளா.

கே: மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினான் என்ற பழமொழியை யாருக்கு ஒப்பிட்டுக் கூறலாம்?



ப: டில்லிக்குச் சென்றால் தேவிகுளம் பீர்மேடு கிடைத்து விடுமென்று சென்று, செங்கோட்டையை யும் பறிகொடுத்து வந்த விரு தைச் சிங்கத்துக்கு ஒப்பிட லாம்.

எஸ். சந்திரன், திண்டுக்கல்.

கே: பெரியார் முதல் மாற்றார் அனைவரும், 'இந்தி யை ஆட்சி மொழியாகவுள்ள இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டு பதவிப் பிரமாணம் செய்த தி. மு. க. வினர், இந்தியை மறுப்ப தாகக் கூறுவதில் பொருள் இல்லையெனச் சாட்டும் குற் றத்துக்குத் தாங்கள் அளிக் கப் போகும் பதில் என்ன?

ப: வெள்ளைக்காரன் வகுத்த சட்டத்தை ஒப்புக் கொண்டு விசுவாசமாகயிருப்ப தாக உறுதிமொழி கூறிய பிறகுதான் விடுதலைப்போரை நடத்தினார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளும்.

ப மாதப்படன், பூவாளூர்.

கே: இரும்பு நெஞ்ச முடைய சிந்தனைச் சிற்பி அவர்களே! நடக்கவிருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டத் தில் மாணவர்கள் கலந்து கொள்ளலாமா? நம் இயக்கத் தைச் சேர்ந்த நடிகர் நடிகை கள் போராட்டத்தில் கலந்து கொள்வார்களா?

ப: 31 7-60 ல் கோடம் பாக்கத்தில் நடந்த மாநாட் டின் தலைவர் அறிஞர் அண்ணா வின் தலைமையுரையைப் படித்துப் பாருங்கள். விளக்கம் கிடைக்கும். அதுவும் இந்த இதழிலேயே வேறொரு பக்கம் இருக்கிறது.

கே: மார்வாடிகளுக்கும் தமிழருக்குமுள்ள வேற்றுமை என்ன?



ப: சொல்லாமல் சொல் லும் ஓவியத்தைப் பாருங்கள்!

திருக்குறட் கழகம், காரைக்குடி
எட்டாம் குறள் விழா

தமிழகந்திலே....

வள்ளுவக் கோமானை வாயார வாழ்த்துவதற்காக வும், வாயுரை வரிகளை வளமான தமிழகப் பூங்காவிலே பரப்பவும் காரைக்குடிக் காளையர் முனைந்து, கடந்த 22-7-60 வெள்ளியன்று, காவணக் கலையரங்கிலே பெருந்திரளாகக் கூடினர். கலைஞர்களால் காந்தி சதுக்கத்திலே கைவண்ணம் காட்டப்பட்டு மாநாடென மருளத்தக்க விதத்திலே வழிவகை செய்யப்பட்டது.

முதல்நாள் காலை:-

செல்வி லிலா குழுவினரால் குறள் வணக்க ஒலி விண்ணைப் பிளந்தது. அந்த ஒலியினூடே விழாச் செயலாளர் நா. மெய்யப்பன் அவர்கள், ஆயிரமாயிர மாகத் திரண்டிருந்த பண்பாளர்களை வரவேற்றார்.

விழாத் தலைவர்: திரு பி. ஆர். இராமகிருட்டினன் எம். பி., அவர்கள் தலைமையேற்றார். மாவட்ட நடுவர் திரு தா. பெருமாள் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த் தினார். ஓவியக் கண்காட்சியை கலைஞர் எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள் திறந்துவைக்க, மூதறிஞர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்களின் திருவுருவப்படத்தை கவிஞர் தமிழண்ணல் எம். ஏ. அவர்கள் திறந்து வைத்தார். அவருக்குப்பின் பேரா சிரியர் மெ. சுந்தரம், எம்.ஏ., எம். லிட் போன்றோர் போற்றத்தக்க பாவலரை புகழ்ந்தேத்தினர்.

மாலைவேளை 4-30 மணிக்கு:

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையேற்றார். திருவாளர்கள் பழ பழனியப்பன், கடலூர் கி. வீரமணி, எம்.ஏ., புதுக்கோட்டை க. செல் லப்பன், எம்.ஏ. ஆகியோர் அனைவரும் அருந்தமிழ்த் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துத் தேன்மழை பொழிந் தனர். இறுதியில், திருக்குறள் முனுசாமி அவர்கள், 'சிறந்த செல்வம்' என்னும் இன்பத்தலைப்பிலே சொற் பொழிவாற்றினார். இறுதியில் இரவு 9-30 மணிக்கு இசைமணி மதுரை சோமு அவர்கள் இசையமுது பொழிந்தார். திருக்குறட் கழகச் சார்பில் தலைவர் இராமசாமி அவர்கள் சோமு அவர்கட்கு பொன்னாடை போர்த்தினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

காலை 9-45 மணியளவில் பட்டி மன்றத்துடன் விழா தொடக்கமாயிற்று. திரு. இராய. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் கூடியது பேராசி ரியர் மெ. சுந்தரம், சு. செல்லப்பன், திருமதி. கலைச் செல்வி சாரதா, கவிஞர். தமிழண்ணல் ஆகியோர், 'வள்ளுவர் தரும் வாழ்வியல் உயர்வு' 'அறிவுடைமை' எனும் இரண்டு தலைப்புக்களில் சொல்லாடினர்.

'வாழ்வியல்உயர்வு -பொருளுடைமைதான்' என்று திருவாளர்கள் புலவர். நடேசன, ஔவை துரைநட ராசன். எம் ஏ., அனந்தகிருட்டினன் எம் ஏ., திருமதி. தே. தியாகராசன், எம். ஏ., ஆகியோர் வாதம் புரிந் தனர் இருதரப்பிலும் குறள் நயமும் கருத்துச் சுவை யும் மின்னின இறுதியில். 'அறிவுடைமை வள்ளுவர் தரும் உயர்வு' என்று, விழாத் தலைவர் தீர்ப்பு வழங் கினார்.

மாலையில் திருமதி சௌந்திரம் கைலாசம் அவர் கள் தலைமையில் தொடக்கமாயிற்று.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி:

24...7...60 ஞாயிறு காலை 9 மணி அளவில், கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தலைமையில், 'கவி அரங்கம்' கூடியது. திருவள்ளுவர் துறவி, தலைவர், வழிகாட்டி, அறிஞர், கலைஞர், தத்துவத் தந்தை, ஆசான்என்றபொருள்களில், திருவாளர்கள் முடியரசன் பெரி. சிவனடியான், குரு மாரியப்பன, அரு. சோமசுந் தரம், முத்து சம்பந்தம், கருப்பட்டி கவிராயர் ஆனந் தராசன், நாவுக்கரசன் ஆகியோர் தத்தம் கவிதைகளை அரங்கேற்றி விழாவுக்கு மெருகேற்றினர்.

புலவர் குழந்தை, 'வள்ளுவர் வாழ்வு' பற்றியும், கவலையில்லாத மனிதன்' என்ற தலைப்பில் கவிஞர் கண்ணதாசன் அவர்களும் அறிவு விருந்து நல்கினர். இறுதியில் நமது சொல்லின் செல்வர் ஈ. வெ கி. சம் பத். எம்.பி. அவர்கள் அறிவு விருந்து நல்கினார். கழகச் செயலாளர் நன்றிநவில விழா முடிவுற்றது.

கவிஞர் கண்ணதாசன் அவர்களும் நமது சொல்லின் செல்வர் ஈ. வெ. கி சம்பத், எம். பி. அவர்களும் காரைக்குடி குறள்விழா வ்லே கலந்துகொண்டு வெங்கலக் குரல் காட்டும் காட்சி இது.

... இறை... அச்சகம், 4, இராஜகோபால் நாய்க்கன் சந்து, சென்னை,2.

ஆசிரியர்.... சி.பி. சிற்றரசு

தி. மு. க. ஒரு விடுதலை இயக்கம்

★ இதுவரையில் சென்னை காணாத சிறப்புக் கோலம்!

★ இரண்டரை இலட்ச வீரர்கள் கூடியிருந்த காட்சி!

★ அடங்கியிருந்த அரிமாக்கள் 'நாங்கள் தயார்' என்று ஒருங்கமைந்து தந்த அறப்போர் குரல்!

★ இவற்றைக் காணாத கண்கள் - கேட்காத செவிகள் பயனற்றவையே!

அன்புள்ள தோழர்களே!

இன்றைய மாநாட்டில் நான் தலைமை வகிக்க வேண்டுமென்று என்னுடைய தம்பிமார்கள் என்னை வற்புறுத்திய நேரத்தில், எதற்காக அவர்கள் என்னை, எனக்கு பிடித்தமில்லாத இடத்தில் அமரச் சொல்லுகிறார்கள் என்று எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் இப்போது அந்த ஆச்சரியம் தீர்ந்து விட்டது. என்னை உட்கார வைத்துக் கொண்டு, ஏதோ அவர்களுக்கு தெரிய வேண்டிய வழி மறைக்கப்பட்டுக் கிடப்பதை போலவும், என்னை எதிர் பார்த்து, என்னிடத்திலே கேட்டு, 'நான் காட்டமாட்டேன், காட்டமாட்டேன்' என்ற சொல்லை மறைத்து வைத்திருந்தது போலவும், அவர்களாக கேட்டால் காட்ட மாட்டேனென்று உங்களை எல்லாம் சாட்சியாக வைத்துக் கொண்டு 'அண்ணா வழியைக் காட்டுங்கள்' என்று கேட்பதன் மூலம் என்னு

திற்குரிய நிலையில், அந்த இயக்கத்தைக் கொண்டுபோய் சேர்க்கும். எனக்குத் தெரிந்த ஒருவர் என்னிடத்தில் பேசுகின்ற நேரத்திலே என்னிடம் சொன்னது நினைவுக்கு வருகிறது. 'இதையும் செய்துவிட்டோம் இனி என்ன செய்வது?' என்று ஆயாசப்பட்டு சொல்லியது, எனக்கு நினைவுக்கு வருகிறது. அப்படிப்பட்ட நிலையிலே தி. மு. கழகத்தை வளர்த்து எனக்குப் பழக்கமில்லை. தி. மு. கழகம் ஒரு மாபெரும் விடுதலை இயக்க

திச் செல்ல உங்களாலே அனுமதிக்கப்பட்டிருக்கின்ற நான் போர்த் திட்டங்களைத் தரவில்லை என்றுதான் நீங்கள் வருத்தப்படுகிறீர்கள். நீங்கள் இரசிக்கின்ற அளவுக்கு, இளைத்தவர்கள் களைக்கின்ற அளவுக்கு, நல்லவர்கள் இந்தப் போராட்டம் தான் நல்ல போராட்டம் என்று எண்ணத் தக்க அளவுக்கு, அருமையான, அடுக்கடுக்கான போராட்டத் திட்டங்களை அள்ளி வீசுவதென்பது ஒரு அரை மணி நேரம்

தவாதகாரியத்திற்காகவுமல்ல இது தவிர வேறு மார்க்கமில்லை நமக்கு என்று தெரிந்த பிறகுதான் எல்லா கதவுகளும் அடைக்கப்பட்டிருக்கின்றதென்பதை பார்த்தான பிறகுதான் நம்முடைய மானரோசத்திற்கே இனிமரியாதை இல்லாமல் போய் விடுமென்ற நிலைமை ஏற்பட்ட பிறகுதான் அறப்போராட்டம் நடத்தி இந்தியினுடைய நுழைவை தடுத்து நிறுத்த வேண்டுமெனக் குமாரபாளையத்திலே தீர்மானம் நிறைவேற்றியுள்

தில் அல்லது எங்களுக்கு ஒரு கழகம தேவையில்லையென்று நாங்களே உதைக்கலைத்துவிட வேண்டும். அப்படிப்பட்ட வகையிலே இன்றைய தினம் அந்தப் போராட்டத் திட்டத்திலே ஈடுபட்டிருக்கிறோமே தவிர பத்தோடு பதினொன்று; அதோடு இது ஒன்று. முன்னாலே அது, இப்போது இது; அடுத்தது இனி என்னென்னவோ, என்று கைகாட்டுகின்ற அப்படிப்பட்ட போராட்டமல்ல. என்னுடைய போராட்ட திட்டங்கள் தி. மு. கழகத்திலே மக்களை ஈடுபடுத்துகின்ற நேரத்தில் நான் என் உடன் இருக்கின்ற தம்பிமார்களுக்கிருக்கின்ற தியாக சுபாவத்தை சந்தேகிக்கவில்லை. அவர்களுக்கிருக்கின்றவீர உணர்ச்சியைக் கூட நான் ஒரு துளியும் சந்தேகிக்க மாட்டேன. ஆனால் அவர்களாலே நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய, அவர்களாலே மக்களுக்கு கிடைக்க வேண்டிய அறிவாற்றல் அனுவசியமான போராட்டங்களி

அறிவுமழைபொழிந்தார் அறிஞர் அண்ணா

டைய திகைப்பை என்னிடத்திலே எடுத்துக் காட்டுகின்ற விதத்திலே எனது தம்பிமார்கள் வெகு சாமர்த்தியமாகச் செய்து முடித்தார்கள். ஆனால் உணர்ச்சி யூட்டத்தக்க வகையில் இங்கு கூடியுள்ள உங்களைக் காணுகின்ற நேரத்தில் சோர்வுற்ற நெஞ்சத்திற்கெல்லாம் புதிய களிப்பும், புதியதோர் நம்பிக்கையும் எவருக்கும் நிச்சயம் ஏற்படத்தான் செய்யும். அத்தகைய சிறந்த நம்பிக்கையை இங்கே தி. மு. கழகத்தை நடத்திச் செல்லுகின்றவர்கள் பெறுவதற்கான நல்ல வாய்ப்பாக இந்த மாநாட்டில், குறிப்பாகவும் சிறப்பாகவும் அதிக அளவிலே தாய்மார்களும், வாலிபத்தோழர்கள் மட்டுமல்லாமல், வயதான பெரியவர்களும் ஏராளமாக வந்திருந்து காட்டுகின்ற இந்தப் பேரார்

மாகத் தன்னைத் தானே ஆக்கிக் கொண்டிருக்கிறது. அந்த விடுதலைப் போராட்டத்தை நடத்திச் செல்லுகின்ற நேரத்தில் வீணான போராட்டங்களிலே தி. மு. கழகம் தன்னுடைய மனதை பறி கொடுக்காது. ஆனால் அது உறுதியோடு துவக்கிவிடும் உரிமைப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தத் தக்க வகையில் விடுதலை உணர்ச்சியை அழித்து ஒழித்துவிடத் தக்க வகையில் மாற்றார் எந்த விஷயத்திலே சூழ்ச்சியைக் கையாண்டாலும், நிச்சயமாக அந்த நேரத்தில் அவர்கள் போடுகின்ற முட்டுக்கட்டையைத் தகர்த்தெறிவதற்கும் அவர்கள் வீசுகின்ற பாசவலையைத் அறுத்தெறிவதற்கும், அவர்கள் ஈடுபடுகின்ற சூழ்ச்சிக் காரியத்தை சுக்கு நூறுக்குவதற்கும் தயங்கமாட்டோம் என்பதை நான் உங்களிடத்

வரலாற்றுப் புத்தகத்தைப் படித்தால் எளிதான காரியம். ஆனால் அப்படிப்பட்ட வகையில் பழக்கப்படாத தி. மு. கழகம், குமார பாளையத்திலே கூடி ஒரு அறப் போராட்டம்

> போராட்டத்தை நடத்திக்கொண்டுதான் ஒரு இயக்கம் தன் வலிவைக் காட்டிக்கொள்ள வேண்டுமாயின் அது உண்மையிலேயே பரிதாபத்திற்குரிய நிலையில், அந்த இயக்கத்தைக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

நடத்தியே தீருவதென ஒரு முடிவெடுத்தது. போராட்டங்களைப் பற்றி அதிகமாக கவலைப்படாத ஒரு இயக்கம் இந்தி எதிர்ப்பு விஷயத்தில் இந்தஅளவுக்கு அக்கரை

ளோம் அதற்கான போராட்டக் குழுவில் நான் நிச்சயமாக என்னுடைய யோசனைகளை அவ்வப்போது எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறேன். இனியும் சொல்லிக் கொண்டு வருவேன். அப்படிப்பட்ட போராட்ட திட்டங்கள் நிச்சயமாக உருவெடுக்கும். ஆனால், நம்மிலே இன்றைய தினம் போராட்டத்தில் ஈடுபடத் துடிக்கும் இந்தத்

னாலே பாழ் பட்டு விடக் கூடாது என்பதற்காகத் தான் வீண்போராட்டங்களிலே தி மு. கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. ஆனால் இவைகளைப் பற்றியெல்லாம் ஆற அமர யோசித்துப் பார்த்து ஒரு துளியும் எதிர்ப்புணர்ச்சியில்லாமல் குமார பாளையத்திலே அறப் போராட்டம் நடத்தியே தீருவதென முடிவுக்கு நாம் வந்தோம். அந்த முடிவை இன்றைய தினம் உங்களிடத்திலே தெரியப்படுத்துகின்ற நேரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் மதுரையிலே கூட இந்த அறப் போராட்டம் தீதானது—இதற்குப் பொது மக்கள் ஆதரவு தரலாகாது, இதனை பொது மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று அவர்கள் நிறைவேற்றியிருக்கின்ற அந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். எந்த

திகைப்பை எடுத்துக் காட்டும் தம்பிமார்கள்

வம். நீங்கள் தருகின்ற உற்சாகம். உறுதி, எங்கள் உள்ளத்திலே சிறிது தடுமாற்றமிருந்தாலும் தடுத்துநிறுத்துவதற்கும், எங்களை அறப்போராட்டத்திலே ஈடுபடுத்துவதற்கும் இன்றைய மாநாடு நிச்சயம் உறுதுணையாக இருக்குமென எனது நம்பிக்கையை தெரிவித்துக்கொள்ளுகிறேன். தி மு. கழகம் துவக்கப்பட்ட நாள்தொட்டு, தம்பி. சம்பத் சொன்னபடி போராட்டங்களை நடத்திக் கொண்டேஇருக்க வேண்டும். ஏதாவது ஒரு போராட்டம் என்ற ...பு எனக்கு. எப்போ ...ற்பட்டதில்லை. ...யில் போராட்டத்தை ...க் கொண்டு தான் ஒரு ...தன் வலிவைக் காட் ...வேண்டுமென்ற ...ன் அது

திலே எடுத்துச் சொல்லத் தேவையில்லை. என்னுடைய தம்பிமார்கள் என்னிடத்திலே சொன்னார்கள். நான் தயங்கித் தயங்கித்தான் போராட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதென்று. நான் அதனை இல்லை என்று சொல்லவுமில்லை. நான் வெட்கப்படவுமில்லை. போராட்டத்திற்கு வாருங்கள் என்று ஒரு தலைவர் அழைத்து யாரும் வராவிட்டால்தான் வெட்கப்பட வேண்டுமே தவிர போராட்டம் கொடுங்கள், கொடுங்கள் என்று தோழர்களாலே கேட்கப்பட்டு, 'இருங்கள். இருங்கள்' என்று சொல்லுவது ஒரு தலைவனுக்கு கிடைக்கக் கூடிய மாபெரும் மரியாதை. ஆகையினால் என்னிடத்திலே இருக்கும் போர்ப்படை, 'போர் வேண்டும், வேல்...

காட்டி ஒரு அறப்போராட்டம் நடத்தியே தீரவேண்டுமென தீர்மானத்தை நிறைவேற்றி அதற்காக ஒரு தனிக் குழுவை அமைத்து, அந்தக் குழுவுக்கு தம்பி சம்பத்தை

தோழர்களுக்கு மட்டுமல்ல, ஏன் இவர்கள் போராட்டத்திலே ஈடுபடுகிறார்கள் என்று ஐயப்படுகின்ற தமிழ் நாடு காங்கிரசுக்கும் ஆயாசப்படுகின்றபிறகட்சிகளுக்கும் நான்

வகையில் வரவேற்கிறேனென்றால் அடக்குமுறை கொண்டு ஒரு இயக்கத்தை அழித்தொழிக்க வேண்டுமென்ற அரசியல் ஈனத்தனத்தை கையாளாமல், மக்களுக்கு

★ ஆட்சியாளர்களே, அரசியலில் ஈனத்தனத்தைக் கையாளாதீர்.

★ நான் நிற்கிறேன். என்னை எதிர்த்து நிற்க நிதி அமைச்சர் தயார்தானா?

★ 'நீ அடித்தால் நான் அடிப்பேன்' என்பது அறப்போருக்கு அழகுமல்ல; அது நமது செயலுமல்ல.

அதிலே தலைவராக இருக்கும்படி அந்தப் பொதுக்குழு வேண்டிக் கேட்டுக்கொண்டு, ஒரு போராட்டக்குழு அமைக்கப்...ருக்கிறதென்றால்

இன்றைய தினம் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் போராட்டத்தை நடத்துகின்ற மூலம் எங்களுக்கு ஒன்றும் வெற்றி கிடை...

நாங்களும் கருத்துக்களை சொல்லுகிறோம். முன்னேற்றக் கழகத்தாரும் சொல்லட்டும். யார் பக்கம் மக்கள் சாய்கிறார்கள், பா...து விடுவோம்

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சிற்றரசு
மலர் 1] ★ 5—8—60 ★ [இதழ் 48

சிறையே திற!

நம் நாட்டில் எல்லாவற்றிற்கும் பஞ்சம் வந்திருப்பதைப் போல் சிறைகளுக்கும் பஞ்சந்தான். சர்க்காரின் அடாத செயலால் குற்றவாளிகளாக்கப் படுகின்ற நிரபராதிகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டும், அதனால் சிறைகள் குறுகிக் கொண்டும் இருக்கின்றன.

அதோடு, 31—7—60-ல் கோடம்பாக்கத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாடு, **'சிறையே திற'** என்று அறிவித்துவிட்டது. மூடு, என்று அறிவிக்கவில்லை. ஏனெனில், இந்தி, இம்மாநிலத்திலிருந்து ஒழியும்வரை இயக்க நண்பர்கள் மாத்திரமல்ல, தாய்மொழிப் பற்று கொண்டோர் அனைவரும் வந்த வண்ணம் இருப்பார்கள். ஆகையால் திறந்து திறந்து மூடுகின்ற தொல்லையில்லாமல், **'திறந்தபடியே இரு'** என்று அறிவித்திருக்கிறது அந்த மாநாடு,

மாநாடுகள்

நம் கழகம் எத்தனையோ மாநாடுகளைக் கூட்டியிருக்கிறது. எத்தனையோ லட்சக்கணக்கான கூட்டங்களைக் கூட்டியிருக்கின்றது. எள் விழ இடமின்றி கூடினார்கள். கட்டணம் செலுத்துவது தம்கடமை என்று கருதி, கழகம் கேட்ட கட்டணத்தைக் கொடுத்து உள்ளே நுழைந்தார்கள்.

இதுவரையில் மாநாட்டின் அல்லது பொதுக் கூட்டங்களின் விளக்க உரையைக் கேட்கவும் இந்தியை எதிர்க்கவும் கூடி இருந்தார்கள். ஆனால் 31—7—60-ல் இந்தியை ஒழிக்கவே கூடியிருந்தார்கள்.

கட்டளை பிறந்தது

'இந்தியைக் கட்டாயப்படுத்திவிட்டேன் என அதிகார எல்லையை விட்டு எவருமே ஓடமுடியாது. 'அண்மையில் ஏற்பட்ட தொழிலாளர் கிளர்ச்சியை எப்படி ஒடுக்கி விட்டேன் பார்த்தீர்களா?' என்று தென்னக மக்களின் முகத்தில் அறைந்ததைப் போல் ஆணைப்பிறப்பித்த குடியரசுத் தலைவர் வருகிறார்.

தான் தீ வைத்த காட்டில் தானே உலாவுவதைப்போல், எந்த மக்களின் வெறுப்புக்கு ஆளானாரோ, அந்த மக்கள் வாழும் பகுதிக்கு வரத் தீர்மானித்து விட்டார். அவர் வரும்போது இந்த மாநில மக்கள் வாளாயிருந்து விட்டால் அதன் பொருள் என்ன? அவர் ஆணையை ஒப்புக் கொண்டோம் என்றாகி விடாதா?

'ஒன்றும் பேசாமலிருந்தது உடன்பட்டதேயாகும்' என்ற பழமொழிக்கிணங்க, நாம்—நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்காவிட்டால் நம்முடைய எதிர்காலம் மாத்திரமல்ல, நம்முடைய நீண்ட தலைமுறைகள் நிரந்தர அடிமைகளாய் விடுவார்கள் என்பதை உணர்ந்துதான் நம் இயக்கம் இந்த தீவிரமான முடிவுக்கு வந்தது. எவ்வளவுபேரைப் பிடித்து உள்ளே தள்ளினாலும், கைக்கால்களை முடமாக்கினாலும் குடியரசுத் தலைவர் கருப்புக் கொடிகளைக் கண்ணால் பார்க்காமல் டில்லி திரும்பப் போவதில்லை. இது உறுதி.

வழியெல்லாம் தோரணங்கள் தொங்க, வளைவுகள் வரவேற்க, கொடிகள் தலைவணங்க, மக்கள் வாழ்த்தொலி எழுப்ப பவனிவர வேண்டிய இராசேந்திரர், இரத்த வெள்ளத்தின் மேலே வருவாரோ - சிதைக்கப்பட்ட உடலங்களின் மேலே செத்து மடியும் பிணங்களின் மேல் பவனிவரப் போகிறாரோ தெரியவில்லை, இதை நம் கழகம் வலிய உண்டாக்கித் தீர வேண்டும் என்ற விஷப் பரீட்சையிலே இறங்கவில்லை, அந்த நெருக்கடியான கட்டத்திற்கு தள்ளப் பட்டிருக்கிறது திராவிடம்,

சுதந்திரத்திற்குப் பின்

மக்கள் சுதந்திரத்திற்குப்பின் எந்தெந்த வசதிகளை எதிர்பார்த்தார்களோ அது அவ்வளவும் மடிந்து மண்ணாய்ப்போய், கூலி கேட்டவனுக்கு குண்டாந் தடியும், வேலை கேட்டவனுக்கு வேட்டும், கடமைக்குக் கட்டுப்பட்டவனுக்குக் கண்ணீர்ப்புகையும், சிந்தித்து செயலாற்றியவனுக்கெல்லாம் சிறைத்தண்டனையும்தான் கிடைத்திருக்கிறது.

உதைத்த காலுக்கு முத்தம்!

மத்திய சர்க்கார் எப்போதுமே நியாயத்துக்கும், நீதிக்கும் தலை வணங்கியதில்லை. இதற்கு நான்கு உதாரணங்களைக் கூறலாம். ஒன்று, ஆந்திரப் பிரிவினை, பல நாட்கள் கேட்டுக் கொண்டே வந்தார்கள். பயனில்லை. பொட்டி ஸ்ரீராமலு உண்ணா நோன்பு. பிறகு கொந்தளிப்பு. முடிவென்ன? எந்தப்பிரதமர் நாட்டைத் துண்டாட விடமாட்டேன் என்று கர்ஜித்தாரோ, அவரேதான் கொடியேற்றினார்.

இரண்டு: பம்பாய். குசராத்தி பிரிவினைக் கிளர்ச்சி. பம்பாயில் கலவரம், ஆமதாபாத்தில் பிரதமர் நேரு பேசவே முடியவில்லை. பெருங் கிளர்ச்சி துப்பாக்கிச் சூடு, ஊரடங்குச் சட்டம். இப்படி பல நடந்த பின் - பம்பாய் குஜராத் மாநிலங்கள் என்ற பேரால் இரண்டாகப் பிரிந்தன.

மூன்று: அசாம் வங்காளத் தகராறு மொழியாதிக்கம், அராசகம், கொலை, கொள்ளை, தீயிடுதல் போன்ற பயங்கர நிலைமைகள் உருவெடுத்தன. நேரு எலிகாப்டரில் பறந்தார். இன்னும் அந்தத் தலைவலி தீர்ந்தபாடில்லை.

நான்கு: நாகர்கள் போர். பீசோ தலை எங்கே? தேடியது சர்க்கார். பீசோ லண்டனில் மைகேல் ஸ்காட் என்ற பாதிரியின் பக்கத்திலே நின்று கொண்டிருக்கின்றார். பத்திரிக்கையாளர் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்! அவர் வேண்டுதல் சரி என்று இலண்டன் பத்திரிக்கைகள் பல எழுதிவிட்டன.

அவரை இலண்டனுக்கு அனுப்பி வைத்துவிட்டு இப்போது என்ன சொல்கிறீர் என்று சவால் விட்டதைப்போல நாகர்கள் நிதிக்குழு ஒன்று பதினாறு கோரிக்கைகளை யேந்தி டில்லி வந்தது.

'பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழுங்கள்'

நாகர் தூதுக்குழுவினர் கொடுத்த 16 கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானதாக இருந்தாலும், அதை அப்படியே ஒப்புக்கொள்வது சர்க்காரின் தரத்துக்கு இழுக்கானது என்று எண்ணக்கூடிய நிலையிலே இருந்த டில்லி அப்படியே ஒப்புக்கொண்டது. ஏன்? இனியாகிலும் எங்கள் சர்க்காருக்கு தொல்லை தராமலிருங்கள்—எங்கள் பகுதியிலே யிருந்து அனுப்புகிற ரயில்களும், கூட்சுகளும், கொள்ளையிடப் படாமல் ஒழுங்காகப்போய்ச் சேரட்டும்-நாங்களும் உங்கள் பகுதியிலே உயிருக்கும் உடைமைகளுக்கும் சேதமில்லாமல் திரிய வழிசெய்யுங்கள் உங்களை ஒழித்துவிடவும் முடியவில்லை. எப்படியோ போங்கள் என்று தட்டிக்கழிக்கவும் முடியவில்லை. ஏனெனில் நீங்கள் எல்லையிலே இருக்கிறீர்கள்! பக்கத்திலே சீனன் இருக்கிறான்! மற்றோர் பக்கத்திலே பாகிஸ்தான், இந்த நிலையில் நமக்குள் தகராறு என்றால், உங்களை எளிதில் எதிரிகள் பயன்படுத்தி விடக்கூடும், ஆகவேதான் உங்கள் கோரிக்கைகள் பதினாறையும் அப்படியே ஏற்றுக்கொண்டு, ஆறாயிரம் சதுரமைலும், நான்கு லட்சம் நாக மக்களையும் கொண்ட தனி மாநிலம், தனி சட்ட சபை, தனி மந்திரி சபை, அமைக்க ஒப்புக்கொள்வதோடு, அதற்கான செலவினங்களுக்காக ஆண்டுதோறும் நாலுகோடி ரூபாயைக் கொடுப்பது என்ற முடிவாகியிருக்கின்றது

பீசோ லண்டனில் வைத்த வேட்டு டில்லியில் வெடித்திருக்கிறது. எந்த பீசோவை குற்றவாளி என்று டில்லி அறிவித்ததோ அந்த டில்லி அவரை வரவேற்று கை குலுக்கப் போகிறது.

நாகர்கள் இன்று நேற்றல்ல, சுதந்திரம் வாங்கிய நாளிலிருந்து தங்களுக்குத் தனி நாடு வேண்டுமென்று கிளர்ச்சி செய்தவர்கள். 13 ஆண்டுகள் விடா முயற்சியாலும், அயராத உழைப்பாலும், நிறுத்தாத போராட்டத்தாலும் வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் வரலாற்றிலிருந்த இரத்தக் கறை மறைந்துவிட்டது. ரௌடிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர் காட்டுமிராண்டிகள் என்று தூற்றப்பட்டோரை, சரித்திரம் அவர்களை சுதந்தர மனிதர்கள் என்று கட்டித்தழுவப் போகிறது.

'சுயநல மில்லாத விருப்பம் நிறைவேற்றப்படும்'

சுயநல மில்லாமல் போராடினார்கள்! வெற்றி பெற்றார்கள்! போராடிப் போராடி பிறகு வாதாடிப் பெற்றார்கள். போர்க்குணம் படைத்திருந்த அவர்கள் எப்படி வாதத்திறமை பெற்றார்கள். இந்த ஐயம் எல்லோருடைய மனதிலேயும் எழக்கூடியது தான். அது சுவை மிக்க சம்பவமாகும்! நாகர்களில் பலர், நன்றாகப் படித்தவர்கள், டில்லி சர்க்கார் அலுவலகங்களில் முக்கியமான வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை எல்லாம் சர்க்கார் செலவிலே, நாகர் பகுதிகளுக்கு அனுப்பி அவர்களுக்குப் புத்திமதி சொல்லும்படி அனுப்பி வைத்திருந்தார்கள். அவர்கள் செய்யும் தொழிலுக்கு ஊதியம் தருகிறீர்கள் சரி. எங்களுக்கு விடுதலை யார் அளிப்பார்கள் என்ற நாட்டுப் பற்றுடைய அந்த அலுவலாளர்கள் மனதிலே நினைத்துக்கொண்டு, நாகர் பகுதிகளுக்குச் சென்று அவர்களுக்குப் புத்திமதி சொல்வதற்குப் பதில் சுதந்திர வேட்கையைத் தூண்டினார்கள். படிக்காத அந்த மக்களை அரசியல் துறையிலே பக்குவப்படுத்தினார்கள். அதன் விளைவு இன்று டில்லியிலே பார்க்கிறோம், மற்ற யாரையும்விட, நாகர்கள் முழுவெற்றி பெற்று விட்டார்கள்.

'மக்கள் எழுச்சி வெற்றி; மத்திய சர்க்கார் வீழ்ச்சி

மக்கள் எழுச்சி கொள்ளுகின்றபோது மத்திய சர்க்கார் மாத்திரமல்ல, மண்டலத்தில் உள்ள எந்த சர்க்காரும் பணிந்துதான் போயிருக்கின்றதே தவிர மக்களைக் கொன்று அந்த மரண மேட்டிலே மக்கள் மன்றத்தைக் கூட்டியதில்லை, எழுச்சியின் விளைவாக புரட்சி நடத்தி போலீஸ் தடியடியால் குண்டடியால் இறந்தவர்களின் கல்லறை மண் உலர்ந்துவிடா முன்னம், அவர்கள் கல்லறைமேல் போட்ட மாலைகள் வாடிவிடா முன்னம், அந்த புரட்சி பெருமக்களின் பிணங்களை அழைத்துச் சென்ற வாத்திய கோஷங்கள் வீடு திரும்பா முன்னம், அவர்களுடைய உற்றார், உறவினர், அழுத கண்ணீர் உப்புக்கோடுகளாக மாறு முன்னம், அவர்களை அழித்துவிட்டோம் என்று ஆதிக்கப் புரியினர் சிரித்த சிரிப்பு அடங்கா முன்னம் சுதந்திர பேரிகை முழங்கி இருக்கிறது. தூக்கு மேடையில் ஏறிய தூய நெஞ்சினர் வெஞ்சமரில் மாண்டுவிட்டனர் என்று வரலாற்று வரிகள் எழுதி முடித்த அடுத்த வரியில் பிணங்களின் மேலே வெற்றிப் பேரிகை முழங்கிவிட்டன என்ற தொடர், சங்கிலி போல் சரித்திரம் சொல்லிக் கொண்டே இருக்கிறது.

அந்த வரலாற்றின் அடுத்தவரி நமது இயக்கம். இது முடிவான போரல்ல. மூன்றும் போர் என அறிவித்துவிட்டோம். ஒரு போர் வீரனுக்கு போர்ப் படையில் சேரா முன்னம் சிந்தனைவேண்டும். தீர சிந்திக்கவேண்டும். பல நாட்கள் சிந்திக்க வேண்டும். அப்படி சிந்தித்து போர்ப் படையிலே சேர்ந்துவிட்டபிறகு சிந்தனைக்குக் கொஞ்சமும் இடமில்லை. அதைப்போல் நாம் இனி சிந்திக்கத் தேவையில்லை.

செயலில் இறங்கி விட்டோம்'

புறப்படுங்கள் மக்களே! என்று கட்டளை பிறந்துவிட்டது. எந்த நேரத்திலும் தலைவர்கள் சிறையிடப் படலாம். அதை யறிந்ததனால்தான், அவசர அவசரமாக ஒரு மாநாடு கூட்டி, கருப்புக்கொடி காட்டுகின்ற நிகழ்ச்சி எப்படி இருக்கவேண்டும், என்று மாநாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் நீண்டதோர், சிறப்பு மிக்க, பலாத்காரம் கொஞ்சமும் தலைகாட்டக் கூடாதென்ற கண்டிப்பான முறையில் கட்டளையிட்டிருக்கிறார். அந்த வழி செல்லட்டும் கழகம்! கடல்போல் கூடியிருந்த மக்கள் வெள்ளம் இந்த கட்டளையைக் கேட்டவுடன், வெற்றிகரமாக நடத்தித் தருகிறோம், என்று விண் முட்ட பேரொலி தந்தார்கள். அந்த நம்பிக்கையை நங்கூரமாக வைத்துக் கொண்டிருக்கிறது கழகம். அந்த நம்பிக்கையை நாசமாக்காதீர்கள். நடவுங்கள் போர் களம் நோக்கி. சிறையே திற, சிறையே திற, சிறையே திற. இ[illegible] என்ற பேரொலியோடு பயணத்தைத் துவக்குகிறோம். வெற்றி நம[illegible]

தங்கள[illegible]
சி. பி[illegible]

தம்பி! எடு, பிடி, கருப்புக்கொடி

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்ற ஆண்மையுள்ள அரசியலை அவர்கள் நடத்திக்காட்ட முன்வருவார்களானுல் அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். தனித் தனி கூட்டங்களிலே மட்டுமல்ல, நாட்டை ஆளுகின்ற அமைச்சர்களும், என்னுடைய தம்பிமார்களிலே யார் பலவீனர் என்று கருதுகின்ருர்களோ அந்தத் தம்பியாகப் பார்த்துக்கேட்கட்டும். இரண்டு பேருமாகச் சேர்ந்து பொதுமக்களைச் சந்தித்து, பொதுக்கூட்டத்தில் இந்தி வருவதாலே இருக்கக்கூடிய கேடுகளை என்னுடைய தம்பிமார்கள் விளக்கவும் இந்தியினுலே கேடுகள் இல்லையென்று அமைச்சர்கள் எடுத்துப் பேசவும் அந்தப் பேச்சிக்களிலிருந்து பொதுமக்கள் யார் பக்கத்தில் வருகிருர்கள் என்பதை பரிட்சை பார்ப்பதற்கு அமைச்சரவையிலே உள்ள அசகாய சூரர்கள் யாருக்குத் திறமையிருந்தாலும், யாருக்குத் துணிவிருந்தாலும், யாருக்குத் துடிப்பு இருந்தாலும், யாருக்கு அரிப்பு இருந்தாலும் அந்தப் பொன்னுன சந்தர்ப்பத்தை அவர்களுக்கு அளிக்க நான் தயாராகயிருக்கிறேன். இங்கே நீங்கள் காணுகின்றீர்கள். கழகத்திலேயிருக்கின்ற தோழர்கள் இருபது பேருக்கு மேல் பேசிய நண்பர்களை நீங்கள் பார்த்தீர்கள். யாரை வேண்டுமானுலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். எம். ஜி. இராமச்சந்திரன் வந்தால் ஐயோ பேச்சோட முடியுமா என்ற பயமிருந்தால் தள்ளிவிடுங்கள்; இராசேந்திரன் வந்தால் கலை உணர்வோடு பேசி மக்களை மயக்கி விடுவான் என்ற பயமிருந்தால் விட்டுத் தள்ளுங்கள். கே. ஆர். இராமசாமி வந்தால் நடிப்புத்திறனோடு பேசுவார் எனருல் அவரையும் விட்டுவிடுங்கள். கருணுநிதி வந்தால் கண்களிலே நீர் சுரக்குமளவுக்குப் பேசி அனைவரையும் ஈர்த்து விடுவான் என்ற பயமிருந்தால் அவனையும் தள்ளிவிடுங்கள். ஆனுல் யாரை பலவீனர் என்று கருதுகிறீர்களோ அவர்களை நீங்கள் தேர்ந்தெடுங்கள்.

தோழர்களே தூக்காதீர்கள் தூங்கிக்கொள்ளுங்கள்

இல்லை. நான் அடுத்த தேர்தலில் ஈடுபடுவதைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தயக்கம் இருந்தது. அவர் அப்படி கேட்டதால் நிச்சயமாக காஞ்சிபுரம் தொகுதியில் நாட்டுப் பிரிவினைப் பிரச்னையை முன்னுலே வைத்து நான் தேர்தலிலே நிற்கிறேன். கனம் சுப்பிரமணியம் காஞ்சிபுரத்தில் என்னை எதிர்த்துப் போட்டியிட முன் வருவாரா? அதிலே தோற்றுவிட்டால் என்ன செய்வாய் என்ற கேள்வியைப் பற்றி சுப்பிரமணியமோ நானே கவலைப்படத் தேவையில்லை, ஆனுல் நிற்பாரா? என்று கேட்கிற சுப்பிரமணியம், 'நான் நிற்கிறேன், என்னை எதிர்த்து நிற்பாரா?' என்று கேட்டிருப்பாரானுல் அவருடைய அரசியல் அறிவை மட்டுமல்ல, அவருக்கிருக்கின்ற ஆண்மையை முறுக்கேற்ற அளவுக்கு அரசியல் ஆண்மை படைத்திருக்கிருர் என்று நான் எண்ணிக்கொண்டிருந்திருப்பேன். ஆனுல் இப்போதிருக்கின்ற பிரச்னை யார் தேர்தலில் ஈடுபடுவதென்பதல்ல, இந்தியை யார் தடுத்து நிறுத்துவது? ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற நீங்கள் வடநாட்டுக்குக் கங்காணிகளாகி தமிழர்களை காட்டிக்கொடுத்தாகிலும் இந்த நாட்டு ஆட்சியிலே ஈடுபட்டிருக்க வேண்டுமென்று உங்களை அர்ப்பணித்து விட்டீர்கள். இந்த நாட்டிலேயிருக்கிற படித்த மேதாவிகள் இந்தி வருவது தீது தான். அதனுலே ஆபத்து ஏற்படத்தான் செய்யுமென்பதை ஓய்வு நேரத்திலே உல்லாசபுரியிலே பேசிக்கொண்டு திரிவதும், அறிவு அவர்களுக்கு ஏற்படும் நேரத்தில் இரண்டொரு தலையங்கங்கள் எழுதுவதும், மற்ற மற்ற நேரத்தில் முதியோர்கள் எல்லாம் கூடி இளைஞர்கள் சங்கம் என்று பெயர் வைத்துக்கொண்டு அந்த இடத்திலே மாலை நேரத்திலே பேசுவதோடும் நீங்கள் உங்கள் காரியம் முடிந்ததாக கருதுகிறீர்கள். அல்லது வெளி உலகத்திலேயெல்லாம் சுற்றிவந்து ஒவ்வொரு நாட்டிலேயும் அவரவர்கள் தாய் மொழியை முன்னுலே வைத்துத் தான் தங்கள் நாட்டை ஆளுகின்ருர்கள் என்பதை ஒவ்வொரு தடவையும் பார்த்துவிட்டு வருகின்ற மாபெரும் தலைவர்கள் எங்காவது ஒரு மண்டபத்தில் வாடகை கூட்டம் நடத்தி, அந்த இடத்திலே, 'இது தவறு, மிகத் தவறு, மிகத் தவறு' என்று பேசிவிட்டு வந்துவிட்டால் காரியம் முடிந்தது என்று, அவர்களும் கருதுகிருர்கள். இப்படிப்பட்ட மேலானவர்கள் எல்லாம் தங்களுக்கு இதைப் பற்றி கவலை இல்லை என ஒதுங்கியிருக்கிற காரணத்தினுலேதான்

தி. மு. கழகம் இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கின்றது. இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கின்ற தி. மு. கழகத்தை அழித்து ஒழிப்பதற்கு ஒரு சந்தர்ப்பமென்று கருதித்தான் மதுரையிலே கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் இந்த அறப்போராட்டத்தை ஆதரிக்கக் கூடாது என்று தீர்மானம் இயற்றியதும் என்னுடைய அருமைத் தோழர் முத்து அவர்கள் சொன்னபடி தமிழகத்தில் காலித்தனத்தை மூட்டிவிட்டு அதன் மூலமாக கலகம் விளைவித்து நம்முடைய இயக்கத்தை அழித்தொழிக்கலாமென்று கருதுகிருர்கள். ஆகையினுல் போராட்டம் என்ன என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதற்கு முன்னுல் உங்களை நான் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்வேன்.

நடத்துகின்ற போராட்டம் எப்படிப் பட்டதாக இருந்தாலும் அது அறத்தின்பாற் பட்டதாக இருக்க வேண்டும். அது அமைதியைக் கடைபிடிப்பதாக இருக்க வேண்டும். பலாத்காரம் ஒரு துளியும் தலை தூக்காத அளவுக்கு பாதுகாத்துக் கொள்ளத்தக்க அளவுக்கு அது இருந்து தீர வேண்டும். சிறுசிறு பலாத்காரத்தை நாமே உண்டாக்குவது வாலிபப் பிள்ளைகள் சைக்கிளிலே போகின்ற நேரத்தில் சைக்கிளிலே வருகின்ற சத்தம் போதாமல் சைக்கிளிலே ஓலையைக் கட்டி வைத்து அது சக்கரத்திலே அடிபடுகின்ற நேரத்தில் கேட்கின்ற சத்தத்தைப் பார்த்து ஆனந்தப்படுவதற்குச் சமானமாகும். உண்மையான பலாத்காரம் போலீஸ் துறையிலே இருந்தும், சர்க்கார் துறையிலே இருந்தும் வரவேண்டும்.

அதைத் தாங்கிக்கொள்ளுகிற சக்தி நமக்கு உண்டா?

அதை எதிர்த்து நிற்கிற சக்தி அல்ல, அதைத் தாங்கிக்கொள்ளுகிற சக்தி நமக்கு உண்டா? என் மொழி தாய் மொழி என்கின்ருய் —இதோ தடியடி என்ருல், ஆம்! தடியடி பட்டாலும் தாய் மொழி தாய்மொழிதான் என்று சொல்லத் தக்க நெஞ்சுரம் நமக்கு உண்டா? என்பதுதான் இந்தப் போராட்டிலே விளக்கப்பட வேண்டுமே தவிர, நீ அடித்தால் நான் அடிப்பேன் என்று சொல்லுவதல்ல. போராட்டத்தினுடைய இலக்கணம். அப்படியும் முன்னேற்றக் கழகம் பழக்கப்பட்டதல்ல. அப்படிப்பட்ட பயிற்சியும் நாம் பெற்றதில்லை. அதை நாம் பண்பு என்றும் ஏற்றுக்கொள்வதில்லை.

ஆகையினுல் நடத்தப்படக் கூடிய போராட்டம் போராட்டக் குழு எந்தத்திட்டத்தை வகுத்தாலும் அது பலாத்காரத்தை ஏற்காதக் அமைதியை—குலைக்காத சட்டத்தைப் பற்றி வைத்திருக்கின்ற மதிப்பு அதிகமாக மக்கள் உள்ளத்திலே கெடவிடாத வகையிலும் அந்தப் போராட்டம் அமைய வேண்டும். ஆனுல், அந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில் நாட்டையாளுகின்ற துரைத்தனத்தார், ஏதோ பூவை எடுத்து நம் மீது போடுவதைப் போல் இரண்டொரு தட்டோடு விட்டுவிடுவார்கள்

என்று எண்ணிக்கொண்டு இந்தப் போராட்டத்தில் வந்து தழும்பைத் தடவிப் பார்த்து 'ஏ அப்பா, இவ்வளவு பெரிதா?' என்று பின்னுலே என்னை தூற்றுதீர்கள், சபிக்காதீர்கள். வாழ்த்தி வரவேற்ற தோழர்களே! அதற்குப் பிறகு வாய்க்கு வந்தபடி பேசாதீர்கள்.

இந்தப் போராட்டத்தில், நான் பத்திரிகையில் எழுதியிருப்பது சொல் அலங்காரத்திற்கல்ல. மிகக் கடுமையான முறையிலேதான் சர்க்காரின் அடக்கு முறை தாண்டவமாடும்!

கை கால் ஒடிக்கப்படும் என்று

வடநாட்டுக்குக் கங்காணிகளாகி நாட்டைக் காட்டிக் கொடுக்காதீர்!

நான் எழுதியிருப்பது உங்களுடைய மனதிலே யிருக்கிற உற்சாகத்தை ஒழிப்பதற்கல்ல. அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கவேண்டுமென்று ஆட்சியாளர்கள் கருதுகிருர்கள, என்பது எனக்குத் தெரிந்திருப்பதால் தான் அவைகளுக்குத் தயாராக நம்முடைய மனதையும், நம்முடைய உடலையும், பக்குவப் படுத்திக் கொள்ளவேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்காகத் தான், என்னுடைய நண்பர்கள், அதிலும், குறிப்பாக M. G. இராமச்சந்திரன், இராசேந்திரன், இராமசாமி இவர்களுக்கெல்லாம கூட என் பேரில் அருவருப்பைத் தரத் தக்க ஒரு விதி விலக்குத் தீர்மானம் தரப்பட்டிருப்பதை அவர்கள் கூட கொஞ்சம் வருத்தத்தோடு கவனித்தார்கள். நான் இந்த நோக்கத்தின் அடிப்படையாகத்தான் அந்த விதிவிலக்கு வைத்திருக்கிறேன். அடிபட்டால் மருந்துபோட டாக்டர் வேண்டும்! அதற்குத் தான் வெளியில் இருக்கச் சொல்லியிருக்கிறேன்.

விஞன சதி வழக்குகளிலே புகுத்திவிடுவார்களானுல் நாம் சதிக் குற்றத்திலே ஈடுபட்டவர்கள் அல்ல என்பதை உலகத்திற்கு மெய்ப்பித்துக்காட்ட வழக்கறிஞர்கள் இருக்கவேண்டும். M. G. R. யோசித்துக் கொண்டிருக்கிருர். அண்ணு இந்த இரண்டுக்கும்தான் சமாதானம் சொல்லிவிட்டீர்கள். எங்களைப் பற்றி என்ன? என்று கேட்பார்கள். இவர்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்று நான் கருதுவதற்குக் காரணம் கலைத் துறையில் இவர்களை அழித்தொழிக்க வேண்டுமென்று ஒரு பயங்கரச் சக்தி தமிழ் நாட்டிலே பணியாற்றிக் கொண்டு வருகிறது.

இவர்கள் இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு உள்ளே போய் வெளியே வருவதற்குள் அந்தப் பயங்கரச் சக்தி வெற்றிப் பெற்றுவிடுமானுல் அதற்குப் பிறகு 15 ஆண்டுகளுக்குக் கலைத் துறை நம்முடைய கரத்தை

விட்டே போய்விடும். இந்தச் சூட்சமத்தைத் தெரிந்து தான் அவர்களுக்கு விதிவிலக்கு என்று சொன்னேனே தவிர அவர்கள் அடிபடமாட்டார்கள், சிறைக்குச் செல்லமாட்டார்கள் என்றல்ல! ஒரு சமயம் அவர்களைப் பார்த்தால் அடிக்க வருகிறவன் கூட அடிக்காமல் ரொம்ப நாட்களாக எம். ஜி. யாரைப் பார்க்க வேண்டுமென்று ஆசை. இவர் தானு எம் ஜி. ஆர். என்று இழுப்பார். ஆகையினுல் அந்த ஆபத்துக்கூட அவர்களுக்கு வராது. வந்தாலும் தாங்கிக் கொள்ளக் கூடிய உடலும் உள்ளமும்படைத்தவர்கள் என்பதை நான் நன்ருக உணர்ந்திருக்கிறேன். ஆனுல் நாம் நடத்துகின்ற போராட்டம்நீண்ட காலத்திற்குட் பட்டதாக இருக்க வேண்டும். அடுத்த தலைமுறைவரையில் நாம் சித்தரிக்க வேண்டுமென்று கருதுகிற சமுதாயத்திற்கு துணைபுரியத் தக்கதாக இருக்கவேண்டும், அப்படிப்பட்ட காரணத்திற்காகத்தான் விதி விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இந்த விதி விலக்கை அளித்து நாம் போராட்டத்தை நடத்துவதென்றிருக்கிற நேரத்தில் இப்போது ஒரு புதிய சம்பவம் தமிழகத்திலே நடைபெற இருக்கின்றது. குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திரபிரசாத் இந்தி ஆதிக்க மொழியாக வேண்டு மென்பதிலே அப்பழுக்கற்ற நம்பிக்கை கொண்டவர். அவரைப் போன்ற சாந்த சீலன் இந்திய துணைக்கண்டத்திலே யாருமில்லை. அவரைப் போல யாரும் அறநெறியிலே போகக் கூடியவர்கள் காங்கிரஸ் வட்டாரத்திலே யாருமில்லை. அவரைப் போல சுயநலமற்றவர்கள் காங்கிரஸ் வட்டாரத்திலே யாருமில்லை. அவருடைய தனிப்பட்ட சீலங்களை நான் மதிக்கிறேன். அவருடைய தனிப்பட்ட சிறப்பியல்புகளை நம்மிலே பலரும் பெற வேண்டுமென்று நாமெல்லாம் கூட முயற்சி செய்ய வேண்டும். ஆனுல் அப்படிப்பட்டவர், சீலமிக்கவர் என்ருலும் அவர் இந்தி விஷயத்தில் அப்பழுக்கற்ற நம்பிக்கை பெற்றவர். இந்தியை எப்படியும் ஆதிக்க மொழியாக்கியே தீரவேண்டும் என்பதிலே அவர்கள் பிடிவாதமான குணம் காட்டி வருகிருர்கள்.

நீங்கள் பத்திரிகையைத் தொடர்ந்து படித்தால் தெரியும். இந்தி விஷயத்திலே நடத்தப்படுகின்ற எந்த விழாவானுலும் இந்தி விஷயத்தில் நடத்தப் படுகின்ற எந்தக் கூட்டமானுலும், நேருவை அழைப்பதைவிட ராஜேந்திர பாபுவைத்தான் வடக்கேயுள்ளவர்கள் அழைப்பார்கள், ஏனென்ருல் ராஜேந்திர பிரசாத் தான் இந்தி ஆதிக்க மொழியாக வேண்டும், எப்படியேனும் ஆக்கித் தீரவேண்டும். அதிலும் நம்முடைய கரத்திலே வலு இருக்கிற வரையில், நம்முடைய சொல்லுக்கு மதிப்பிருக்கிற வரையில் குடியரசுத் தலைவராக நாம் இருப்பதற்குள்ளாக இந்தக் காரியத்தைச் செய்து முடித்துவிட்டு, செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து முடித்துவிட்டோம்

அறப்போருக்கு எதிரானவை பலவீன இதயம், பலாத்காரம்

ஆளைப் பார்த்தால் தெரியும் வரலாற்றைபார்த்தால் புரியும்

ஆனுல் அப்படிப்பட்டவர்கள் பொதுமக்களுக்கு எடுத்துச்சொல்வதை நீங்கள் மறுத்துப் பேசி, அதேஇடத்தில் அதேகூட்டத்தில் ஓட்டெடுத்து முடிவு செய்வதற்கு இந்த ஆட்சியாளர்கள் தயார்தானென்ருல் நான் அதற்குத் தயார் என்பதை இந்த ஆட்சியாளர்கட்கு நான் தெளிவாகவே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நிதியமைச்சர் சுப்பிரமணியம் நாட்டுப் பிரிவினை விஷயத்தை முன்னுலே வைத்து அடுத்த தடவை தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதியில் நான் ஈடுபடுவேனு என்று கேட்டிருக்கிருர். அவர் அப்படி கேட்கின்ற வரையில் நான் உங்களிடத்திலே சொல்லிக் கொள்ளுவதில் வருத்தப்பட

இந்தியா ஒரு நாடா? நம்மை தவிர வேறுயார் கேட்டார்கள்?

...ண்ணியத்தோடு கடமையாற்ற வாரீர்!

இந்தியா ஒரு நாடா? கேட்டோம் நாம்!

என்று மனத்திருப்தி பெற வேண்டுமென்று பாபு ராஜேந்திர பிரசாத் துடியாய்த் துடிக்கிறார். அவருக்கு இந்தி விஷயத்திலே இருக்கின்ற ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். தன்னுடைய தாய் மொழியை இந்திய துணைக்கண்டம் பூராவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் துடியாய்த் துடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற தமிழர்கள், இந்த இடத்திலே நாவலர் நெடுஞ்செழியனும் அவரைத் தொடர்ந்த அவரது தோழர்களும் எடுத்துப் பேசிய தமிழ் மொழியைக் காதாரக் கேட்டு, நெஞ்சாரச் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற தமிழர்கள் தங்கள் தாய்மொழி விஷயத்தில் ராஜேந்திர பிரசாத், தன்னுடைய தாய் மொழி விஷயத்திலே காட்டுகின்ற அளவுக்கு அக்கரை நாம் காட்ட வேண்டாமா? அவரைப் பார்த்தா பெறவேண்டிய பாடம்? இவ்வளவு தள்ளாத வயதில், இவ்வளவு உயர்ந்த பதவியில் இருக்கிறவர் தம்முடைய பதவியையும் மறந்து தான் ஒரு கட்சிக்காரராக இருக்கக்கூடாது. எல்லாக் கட்சிகளுக்கும் மேலானவர், எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டவர், குடியரசுத் தலைவர் என்ற அரசியல் இலக்கணத்தையும் மறந்து பேசுவதற்கு வாய்ப்பிருக்கின்ற நாளெல்லாம் இந்தியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றார். பேசப் பழகிக்கொண்டிருக்கும் தமிழர்கள், தமிழ் மொழியறிவை அறிந்திருக்கின்றவர்கள், அந்தமொழிக்கொரு ஆபத்து வருகின்றதென்கின்ற நேரத்தில் அவரைப் பார்த்தாகிலும் நாம் பாடம் பெற வேண்டாமா? என்று உங்களை கேட்க விரும்புகிறேன். அந்தப் பாபு ராஜேந்திர பிரசாத் குடியரசுத் தலைவர் என்ற முறையிலே ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறார். அந்த ஆணை பாராளுமன்றத்திலே பண்டித நேரு நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறுவதாக அமைந்திருக்கின்றது. இதில் விவாதத்திற்கு இடமில்லை. இதற்கு விளக்கம் பெறத் தேவையில்லை, ஏனென்றால் பண்டித நேரு கொடுத்த வாக்குறுதி, இந்தி பேசாத மக்களுடைய கருத்தை அறியாமல் ஆங்கிலத்தை அடக்கமாட்டோம். இந்தி பேசாத மக்கள் எத்தனை காலத்திற்கு ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, எத்தனை காலத்திற்கு ஆங்கிலம் துணை மொழியாக நீடிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறார்களோ, அது வரையிலும் ஆங்கிலம் இருக்கும். அந்த ஆங்கிலம் எத்தனை காலமிருப்பது என்பதைப் பற்றி நான் இந்தி பேசாத மக்களைத்தான் கேட்கக் கடமைப் பட்டவனே தவிர இந்தி பேசிய மக்களைப் பற்றி எனக்கு இந்த விஷயத்தில் அக்கரையில்லை என்று பட்டவர்த்தனமாக, உண்மையிலேயே பண்போடு சற்றுத் துணிச்சலோடு பண்டித நேரு அவர்கள் பாராளுமன்றத்திலே வாக்குறுதி தந்தார். அவர் அந்தவாக்குறுதி தருகின்ற நேரத்தில் நம்முடைய தம்பி சம்பத்து மற்றொரு தம்பி தர்மலிங்கம் இந்த இருவரும் நம்முடைய உறுப்பினர்களாகப் பாராளுமன்றத்திலே வீற்றிருந்தது நமக்கெல்லாம் பெருமை.

வரலாற்றிலே பொன்னெழுத்திலே, எதிர்காலத்திலே பொறிக்கப்பட இருப்பது, இந்த நேரத்திலே கொஞ்சம் திசைமாறி நான் பெரியாரை நினைத்துக் கொண்டதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். 'எதற்காகப் போகிறீர்கள் சட்டசபைக்கு? என்ன வெட்டி முறித்துவிடப் போகிறீர்கள்?' என்று பெரியார் கேட்கிறார். பெரியாருக்கு நான் சொல்லுவேன்! உங்களுடைய வீட்டுப் பிள்ளை, நீங்கள் கண் முன்னாலே பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் இந்த அளவிற்கு மூடிடமா என்று எண்ணிக்கொண்டிருந்த அதே பிள்ளை 'பந்தி'ற்கு முன்னால் உட்கார்ந்து, டாண்டன் போன்ற இந்தி வெறியர்களாலே வளர்க்கப் பட்டிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கட்சி முன்னால் உட்கார்ந்து, அவருக்குப் பக்கத்திலே திருவண்ணாமலைத் தொகுதியிலேயிருந்து வெற்றி பெற்று அமர்ந்திருக்கின்ற நம்முடைய அருமைத் தோழர் தருமலிங்கத்தை பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டு, நேருவைப்பார்த்து பந்தைப் பார்த்து இந்தி மொழி விஷயத்திலே நீங்கள் என்ன விளக்கம் தருகிறீர்கள் என்று கேட்ட கேள்வி இருக்கிறதே பெரியாருக்கு நான் வைதீக பாஷையிலே சொல்வதானால், எத்தனை தவம் செய்தீரோ அப்படிப்பட்ட பிள்ளை உமக்கு வந்து கிடைக்க? எதற்காகப் போகிறார்கள்? என்று இங்கேயே பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர பாராளுமன்றத்திலே உட்கார்ந்து நம்முடைய கழக உறுப்பினர்கள் இந்தி ஆதிக்கக்காரர்களை தடுத்துநிறுத்திய சம்பவம் விடுதலை பெற்ற பிறகும் சரி, விடுதலை பெறுவதற்காகப் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகின்ற இந்த நேரத்திலேயும் சரி, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றிலே மட்டுமல்ல, உலகத்திலே இருக்கின்ற அரசியல் நிகழ்ச்சிகளில் மிகமிக முக்யத்வம் வாய்ந்ததாக இருக்கின்றது. வேண்டுமென்றால் நம்முடைய சம்பத்து அங்கே போய் இப்படிப் பேசினார் என்று எண்ணுகிற பொழுது அதனுடைய அருமை பெருமை நமக்குக் கொஞ்சம் குறைவாகத் தெரியும். ஆனால் பாராளுமன்றத்திலே உட்கார்ந்து, பண்டித 'பந்த்'தைப் பார்ப்பதே கொஞ்சம் தைரியமுள்ளவன்தான் பார்க்க முடியும்! நான் பார்த்தேன்...பக்கத்திலிருந்தல்ல!? உயரத்திலே இருந்து பார்த்தேன்! ஏறக்குறைய சென்னை மிருகக் காட்சி சாலையில் வயதான சிங்கம் தலையை ஆட்டிக்கொண்டிருப்பதைப்போல அங்கே 'கோவிந்த வல்லப பந்த்'தலையை ஆட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்த நேரத்தில் இதைப் பார்த்துக் கொண்டல்லவா சம்பத் இருக்க வேண்டும் என்று எண்ணிய நேரத்தில், எனக்கே ஒரு யோசனை வந்தது. தெளிவு வந்தது. பரவாயில்லை, அடிக்கடி நம்முடைய கழகம், தமிழ்ப்பற்றைப் படித்துப் படித்துப் பண்பட்டிருப்பதாலே எந்த பயங்கர உருவத்தையும் பார்த்தாலும் அவர்கள் பயப்படமாட்டார்கள் என்ற எண்ணம் வந்தது. அதைப் போல், தர்மலிங்கமாகட்டும், சம்பத்தாகட்டும் பாராளுமன்றத்திலே அதைதட்டிக்கேட்கிறார்கள்.

இந்தியா ஒரு நாடா? யார் கேட்டார்கள் இதுவரையில்? எப்படிக் கேட்க முடிந்தது? வெட்ட வெளியிலே பேசுகிற பொழுதே கொட்டையெழுத்திலே சர்க்கார் ஒற்றர்கள் எழுதுகிறார்கள். உடனே வழக்கறிஞர்கள் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறார்கள், இது எந்த செக்ஷனிலே பிடிக்கலாமென்று இந்தப் பிள்ளைகளுக்கு என்ன தைரியம், பாராளுமன்றத்திலே உட்கார்ந்து, 'இந்தியா ஒரு நாடா?' என்றுகேட்கிறார்களே, என்று எண்ணியபொழுதே 'பந்த்' வியந்திருப்பார், நேரு படபடத்திருப்பார். இந்த முன்னேற்றக் கழகம் இருக்கிற வரையில் இதுதான் என்ற முடிவுக்குத்தான் அவர்கள் வந்திருப்பார்கள். அந்த மாபெரும் வெற்றிக்காகத்தான் அங்கும் இங்கும் நம்முடைய கழகத் தோழர்கள் சென்றது. இதை இடைநடுவே நான் பெரியாருக்காகச் சொன்னேன். அவர்களுடைய பெரும் நண்பர்கள் இங்கே வந்திருப்பார்களானால் இதைத் தயவு செய்து அவர் கோபமாக இருக்கிற நேரமாய்ப் பார்த்துச் சொல்லாமல் சந்தோஷமாக இருக்கின்ற நேரம் பார்த்துத் தயவு செய்து சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி அவர்கள் கேட்டநேரத்திலே வாக்குறுதிகொடுத்தார். பண்டிதநேரு, கொடுத்த வாக்குறுதியைச் செயல்படுத்த வேண்டியது ஒரு முறை. செயல் படுத்துவதற்குத்தான் ஒரு துரைத்தனம் இருக்கிறது. அப்படிச் செயல்படுத்த வேண்டிய துரைத்தனத்தின் ஒப்பற்ற தலைவராக இன்றைய தினம் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கும் பாபு ராஜேந்திர பிரசாத் வெளியிட்டிருக்கின்ற ஆணையில் பண்டித நேருவினுடைய வாக்குறுதியைப் பற்றி, அவர் தமிழர்களையும் பொதுவாகத் தென்னகத்தாரையும் திருப்திப் படுத்த வேண்டும், என்ற எண்ணத்தோடும், நீதி யோடும், நியாயத்தோடும், தனது சர்க்கார் நடக்க வேண்டும் என்ற கவலையுணர்ச்சியோடும், மொழி, விஷயத்திலே ஆதிக்கம் கூடாது என்ற நல்ல ஜனநாயகப் பண்போடும், பாராளுமன்றத்திலே கொடுத்த அந்த வாக்குறுதியைக் குடியரசுத் தலைவர் ஏன் மறந்தார்? எப்படி மறக்கலாம்? மறப்பது என்றால் ஒன்று பண்டித நேரு பேசியிருக்கிற பொழுதே இவர் மறுத்துச் சொல்லியிருக்க வேண்டும்.

"இது என்னுடைய துரைத்தனத்தின் கொள்கை அல்ல; இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்!" என்று குடியரசுத் தலைவர் சொல்லியிருப்பாரானால் குடியரசுத் தலைவருக்கும், குடியரசினுடைய முதலமைச்சருக்கும் மாறுபாடான கருத்திருக்கிறது என்றுஉலகம் அறிந்து கொண்டிருக்கும். அப்பொழுது சும்மா இருந்தகுடியரசுத்தலைவர், தனக்கு ஆணை பிறப்பிக்கின்ற வாய்ப்பு கிடைத்த நேரத்தில் அந்த வாக்குறுதியைப் பற்றி ஒரு துளியும் கவலையில்லாமல் அதை மீறுகின்ற தன்மையிலும் அதை மறுக்கின்ற வகையிலேயும் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றார்.

இந்தச் சென்னையிலே இருக்கின்ற ஒரு ஆங்கிலத் தினசரி, வழக்கமாக எழுதுகின்ற பாணியில் எழுதியிருக்கின்றது. குடியரசுத் தலைவருடைய அறிக்கையில் விளக்கமில்லை '(Ambigious) குழப்பக் கூடியதாக இருக்கின்றதேதவிர அவர் ஒன்றும் நேருவினுடைய வாக்குறுதியை மறுக்கவில்லை, மறைக்கவில்லை என்று எழுதியிருக்கிறது. நான் கேட்கிறேன். குழப்பம் எப்படி வரலாம்? எங்கள் பேச்சிலே குழப்பம் வரலாம். சாமான்யர்கள்! காமராஜ் பேச்சிலே கூடக் குழப்பம் வரலாம் சின்ன சர்க்காருக்குத் தலைவர். ஆனால் இந்தியத் துணைக்கண்டத்தினுடைய குடியரசுக்குத் தலைவர்,-போன மாதத்திலேதான் சோவியத் நாட்டுக்குப் போய், எப்படி உலகத்திலே சமாதானம் தழைக்கும் என்பதை குருஷ்சேவுக்குச் சொல்லிவிட்டு வந்தவர் - அடுத்த மாதத்திலே அழைத்தால் அமெரிக்காவுக்குப் போய் எப்படி அணு ஆயுதங்களை, நீங்கள் ஆலைகளுக்கு உபயோகப் படுத்தலாம் என்ற விஞ்ஞானத்தைக் கற்றுக்கொடுக்கக் கூடியவர், அப்படிப்பட்ட குடியரசுத் தலைவருடைய ஆணையிலே குழப்பம் எப்படி இருக்கலாம்? "இருட்டு வேளை, யாரோ என்று எண்ணிக்கொண்டேன், பொறுத்துக் கொள்" — யார் சொல்லுவார்? யார் கேட்பார்கள்? அதை எப்படி உலகம் ஒப்பும்?

அதைப் போல் இங்கே இருக்கிற ஆங்கிலப் பத்திரிகை எழுதுகிறது. குழப்பங்கள் வந்துவிட்டது, அவ்வளவே தவிர வேறொன்றுமில்லைஎன்கிறதுஇது இப்படிக் குழப்ப நிலையிலேயே உள்ளவர்கள் செய்கின்ற காரியத்திற்கு உட்பட்ட பழக்கமிருந்தால் இவர் முன்னாலே கூட அப்படித்தான். அதைப்போல் இனியும் என்று எண்ணிக்கொள்ளக் கூடும். ஆனால் இப்படிப்பட்ட குழப்பங்கள், ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற ஆணையிலே வருகிறதென்றால், அது செயல் படுத்தப்படுகின்றதென்பதை உணர்ந்து பார்க்கின்ற காரணத்தால்தான் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று குமாரபாளையத்திலே அறப்போர் நடத்துவது என்று முடிவு செய்தோமே தவிர, அவர்களுக்குக் குழப்பம் இருக்குமானால் விளக்கம் கொடுங்கள்! குழப்பத்திற்கான காரணத்தை ஆராயுங்கள். நேரடியாகப் போய்ச் சொல்லுங்கள். 'நம்முடைய ஆட்சியிலே குழப்பம் இருக்கலாகாது' ஏற்கனவே பல குழப்பம் இருக்கிறது.

ஒரு பக்கத்திலே நாகர்கள் குழப்பம்; இன்னொரு பக்கத்திலே சீனர்கள் குழப்பம்; வேறொரு பக்கத்திலே பாகிஸ்தான் குழப்பம்; நமக்குள்ளாகவே குழப்பமிருந்தால், எத்தனை கணைகளைத்தான் பாரதமாதா தாங்குவாள்? என்று நீங்கள் கவலைப்பட்டுக் கொள்ளுங்கள்!

ஆனால் அந்தக் குழப்பத்தை விளக்க வேண்டியது, குடியரசுத் தலைவர் ஆணையல்லவா? இந்த நாட்டிலே பதினைந்து எம். எல். ஏக்களையும், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும், சென்னை நகரத்திலே மேயர் பதவியையும் வகித்துக்கொண்டு வருகின்ற ஒரு கழகம் சொல்லுகிறது. இந்த ஆணை தீது பயக்கிறது என்று, குடியரசுத் தலைவருக்கு அந்தச்சேதி தெரிவிக்கப் பட்டிருக்கிறது அந்த அறிக்கை அனுப்பப்பட்டிருக்கின்றது. பெற்றுக் கொண்டதாக அவருடைய செயலாளருடைய கையொப்பத்தோடு கடிதம் கிடைத்திருக்கிறது. அதை வைத்துக் கொண்டு எண்ணிப் பார்த்தால், என்ன கெட்டுவிடும்? டெல்லியிலே இருக்கின்ற செங்கோட்டையிலே பறக்கின்ற கொடி தானாகக் கீழே சரியுமா! அல்லது குடியரசுத் தலைவர் இப்படிப் பட்ட மக்கள் சொல்வதையெல்லாம் கேட்பதற்கா இருக்கிறார் என்ற எண்ணம் தோன்றுகின்றதா? அப்படியிருக்கின்ற காரணத்தால் நாம் என்ன பாடுபட்டால் நம்மை மதிப்பார்களோ, அந்தப் பாடுபட நாம் சித்தமாக இருக்கிறோம்.

நாம் வாசகங்களைக் கொட்டினோம், மதிப்போர் இல்லை! காரணங்களை காட்டினோம், மனம் கரையவில்லை; கெஞ்சிக் கேட்டுப் பார்த்தோம், அவர்கள் மிஞ்சிப் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இனி நாம் செய்யக்கூடியதெல்லாம் நம்முடைய ரத்தத்தைக் கொட்டிக் காட்டி, நம்முடைய உடலைச் சிதைத்துக்கொண்டு காட்டி, நம்முடைய உயிரைப் போக்கிக்கொண்டு காட்டி, நாங்கள் சொல்லுவது, வேடிக்கைக்கல்ல, விளையாட்டுக்கல்ல, அரசியல் வீராப்புக்கல்ல; எங்களுடைய ரத்தம் சாட்சி! அறுபட்ட உறுப்புக்கள் சாட்சி! பிணமான தோழர்கள் சாட்சி! இப்பொழுதென்னசொல்லுகிறீர்கள்' என்று கேட்பதற்குத்தான் நான் உங்களை அழைக்கிறேன்.

எந்த அரசியல் கட்சியின் தலைவனும், தன்னுடைய தோழர்களை அழைக்கின்ற நேரத்தில், 'உங்களை எம். பி. ஆக்குகிறேன், எம். எல். சி. ஆக்குகிறேன்' என்றுகூறி அழைப்பான்? நான் வருத்தப் படுகிறேன் நண்பர்களே! நான் உங்களை அடிபட அழைக்கிறேன், அடக்குமுறைக்கு ஆளாக அழை[க்]கிறேன்! தேவைப்பட்டா[ல்] உயிரிழக்கவும் சித்தமா[க] இருக்கவேண்டும் என்[று] சொல்லி அழைக்கிறேன்! அப்படி அழைக்கிற நான் மிகக் கல் நெஞ்சக்கா[ரன்]தான்! அதைநான் இல்[லை]யென்று சொல்ல வில்லை. ஆனால் யாராகிலும், இந்த[க்] காரியத்தை இந்த அளவி[ல்] செய்து காட்டாவிட்டால் ந[ம்]முடைய கொள்கையினுடை[ய] தூய்மையை உலகம் சந்[தே]கிக்கும். இவர்கள் வாத[ம் செய்]வார்கள். ஆனால் இ[ந்த] கொள்கையை, ஆட்சிய[ாளர்]கள் ஏற்றுக்கொள்ளா[விட்]டால் ஒதுங்கிப் . பே[...]

8-ம் பக்கம் பா[ர்க்க]

★ இந்தியைத் திணித்துவிட்டு இங்கே வருகிறார்!

★ வாக்குறுதியை மறந்தவர் வேகமாக வருகிறார்!

★ குடியரசுத் தலைவரின் குறிக்கோள் என்ன?

★ தள்ளாத வயதில் பொல்லாத வெறி கூடாது?

★ பெரியாரவர்களே! உங்கள் வீட்டுப்பிள்ளையைப் பாருங்கள்!

தடிகொண்டு தாக்கினாலும் திருப்பித்தாக்காதீ[ர்]

4. உருண்டோடியது

சென்ற இதழில் இரணசிங்கன் கோட்டையில் மன்னன் ஊழி வெள்ளம் நீதிபதியாக இருந்து, துரைசிங்கத்திற்கும் தூங்கா விளக்குக்கும் ஏற்பட்ட வழக்கை விசாரித்து, மேற்படி இருவருக்காக யாராவது இந்த அவையில் பேச முன்வரலாம் என்று அறிவித்தான். அதற்கிணங்க துரைசிங்கத்திற்காகப் பேச சேரமானும், தூங்காவிளக்கிற்காகப்பேச விருதுடையானும் முன்வருகிருர்கள்.

முதலில் சேரமான் துரைசிங்கத்திற்காகப் பேசுகிருன். மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்களே! அவைக்களத்தில் வீற்றிருக்கும் பெரியவர்களே!மன்னரே! இந்த வழக்கில் தீர்ப்பு சொல்லலாம். அதை யாரும் மறுக்கவோ, தீர்ப்பு சரி இல்லை என்றே சொல்லமாட்டார்கள். எனினும்வழக்குஇங்கு அழைத்து வந்த இருவரின் சார்பாக இருவர் பேசலாம் என்று அவர் தந்திருக்கிற உரிமை நம்மை எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது. மன்னர் அரியாசனம் விட்டு நீதிபீடத்தை அலங்கரித்து, முறையாகக் குற்றவாளிகள் தங்கள் கட்சியை எடுத்துச் சொல்ல போதிய வாய்ப்பையும் அளித்து அவர்களுக்காக மேலும் இருவர் பேசலாம் என்று பணித்திருக்கிருர். ஆகவே நான் துரைசிங்கத்தின் சார்பாகப் பேசுகிறேன்.

என் கட்சிக்காரரான துரைசிங்கம் தன்மானமுடையவன்; நாணயமில்லாத ஒருவனிடம், அதாவது தூங்காவிளக்கிடம் அவன் நாணயமில்லாதவன் என்று தெரியாத காலத்தில் நட்பு கொண்டான்.

இந்த நேரத்தில் தூங்காவிளக்கிற்காகப் பேச முன் வந்திருக்கும் விருதுடையான் எழுந்து, "நண்பர் சேரமான், என் கட்சிக்காரன். தூங்காவிளக்கை நாணயமில்லாதவன் என்று குறிப்பிடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்."

சேரமான்: தூங்கா விளக்கின் விளக்கம் சொல்லுகிறது. நான் சொல்லவில்லை.

மன்னன்: தூங்காவிளக்கு நாணயமில்லாதவன் என்று தீர்மானிக்கப்பட்டால், சேரமானை அதற்காக வருந்தச் சொல்லலாம். வாதம் தொடரட்டும்.

சேர: துரைசிங்கம் நண்பனுயிருக்க விரும்பாததைக் காட்ட அவனுக்கிருந்த ஒரே வழி பேசாமல் இருந்ததுதான். பகை முற்றி ஒருவர்க்கொருவர் கைகலந்து கொள்ளாமல் கண்யமாகப் பேச்சை நிறுத்திக்கொண்டது நேர்மையானதுதான். அந்த உரிமையும் முடிவும் துரைசிங்கத்திற்கு இல்லையென்ற தோரணையில் தூங்காவிளக்கு நடந்து கொண்டான்.ஒருவர்பேச மறுக்கும்போது மற்றவர் பேச முனைவது அவர்கள் பகுத்தறிவுக்கே இழுக்காகும், மேலும் தன் கடன்காரனுக்குத் தானே நேரடியாக பதில் சொல்ல முடியாமல், உதவி செய்தவனையே காட்டிக்கொடுக்கும் கயமைத்தனமாகும். ஒரு நண்பனுயிருந்தவன் பகைவனுன பிறகும் பேசத் தொடங்குகிருன் என்பது தொல்லைதான். இந்த விதி நண்பர்களுக்கு மட்டிலும் என்பதல்ல. கணவன் மனைவிக்கே இந்தச் சிக்கல் சில நேரம் ஏற்படலாம். ஆகவே இந்த வழக்கில் துரைசிங்கம் எந்த வகையிலும் குற்றவாளியல்லவென்பதும், அதே நேரத்தில் தூங்காவிளக்குதான் குற்றவாளி எனக் கூசாமல் கூற வேண்டியவனுயிருக்கிறேன். ஆகவே இந்த வழக்கில் மன்னர் தக்க தீர்ப்பளிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

விருதுடையான்:

மாட்சிமை தங்கிய மாமன்னர் அவர்களே! மற்றுமுள்ள அவையோர்களே! இந்த வழக்கில் பேசுவதே குற்றமென்று கருதப்படுகிறது.

அமைச்சர் குறுக்கிட்டு, "விருதுடையான்! இங்கே நீர் பேசுவது குற்றமென்று கருதவில்லை."

மன்னர்: பேசுவதே எப்படி குற்றமாகும்? மதிவாணர்கள் மாமன்றமேறிப் பேசுகிருர்கள்; அறிஞர்கள் அவையிலும் அரசியல் மேடையிலும் பேசுகிருர்கள்; பாவாணர்கள் விண்ணேடும், மண்ணேடும், உடுக்கைகளோடும், புள்ளி மானேடும், கலாபமயிலோடும், பளிங்குக் கற்களோடும், நீரோடையோடும், நிலாவோடும், காதலோடும் சாதலோடும் சதா பேசிக்கொண்டிருக்கிருர்கள். அதைக் குற்றமென்று சொல்ல முடியுமா—ஏன்? இவர்கள் பேசுகின்ருர்கள் என்பதுகூட வியப்பில்லை. எல்லோரா—அஜந்தா—சித்தன்னவாசல், தாரமங்கலம், தாடிக்கொம்பு போன்ற இடங்களிலேசிற்பங்களையே பேச வைத்திருக்கிருர்கள் ஆகவே பேசுவதும், பேசவைப்பதும் குற்றமென்று சொல்வதற்கில்லை. விரும்பாத ஒருவனிடம் வேண்டாதவன் ஒருவன் பேசுவதுதான் குற்றமா, அல்லவா என்ற ஆராய்ச்சியின் வழிகாட்டியாக இந்த வழக்கு இருக்கிறது என்பதுதான். ஆகவே விருதுடையான், இந்த வழக்கில் விரும்பாத துரைசிங்கத்திடம் தூங்காவிளக்குப் பேசியது சரியல்ல என்பதற்கு ஏதாவது நியாயமானகாரணங்கள் இருந்தால் சொல்லட்டும்.

விருது: சொல்கிறேன். என் கட்சிக்காரன் தந்த விளக்கமே சரியானது: அதாவது:—

அமை: என்ன அதாவது? பாண்டம் பாதியாக உடைந்து விட்டது. அந்தப் பாதியே எனக்குப் பயன்தரும் என்கிறீர்களா?

விருது: உடைந்த பாதி பயன் தராமல் போகலாம். ஆனால் அதை நினைவுப் பொருளாக வைத்துக் கொள்ளலாம் அல்லவா. அந்த நிலையிலேதான் தூங்காவிளக்குத் தன் தோழமையை மீட்டுக்கொள்ள முடியாதவனுய் விட்டான். அது, அவனுடைய மென்மையான மனச்சாயல் என்றுகொள்வதை விட, இப்படி பல நாட்கள் பேசிக்கொண்டே இருந்தால், என்ருவது ஓர் நாள் மனம் திரும்பி பழையபடி நண்பனுய் விடமாட்டானு என்றும் அவன் நினைத்திருக்கக்கூடும்.

சேரமான் குறுக்கிட்டு, "இந்த இரண்டும் அவனுக்குத் தெரிந்ததாகத் தெரியவில்லை."

விருது: பிறகு என்னதான் காரணமாக இருக்குமென்று நீங்கள் யூகிக்கிறீர்கள்?

சேர: ஏமாற்றுவதற்காக.

விருது: யாரை?

சேர: கடன்காரனை.

விருது: தாங்கள் எப்படி அந்த முடிவுக்கு வரலாம்?

சேர: அவன் உள்ளபடியே துரைசிங்கத்தின் நட்பை விரும்புகிறவனுக இருந்தால் என்ன செய்திருக்கவேண்டும்? துரைசிங்கத்தை முன்நிறுத்தி, வாங்கிய கடனைக் கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் நீர் நினைக்கிறபடி ஒருவேளை நாளாவட்டத்தில் துரைசிங்கம் மனம் திரும்பியிருக்கக்கூடும். அதை ஏன் செய்யவில்லை என்று கேளும். முடிவாகச் சொல்கின்றேன். விரும்பாத ஒருவனிடம் பேச முயற்சிப்பது மகா மட்டரகமான செயலாகும். அதற்குப்பின்னுல் எவ்வளவு நியாயங்கள் அடங்கியிருந்தாலும், தவறு தவறுதான். முத்துக்களை வாத்துக்கு முன்னுல் இறைத்த கதைதான்.

விருது: நாட்டில் பொதுவாக ஒரு நியாயம் இருக்கிறது. மன வேறுபட்ட ஒருவரை ஒன்று படுத்துவது என்பது, அதன்படியாவது இந்த வழக்கை அனுதாபத்தோடு கவனிக்கலாம் அல்லவா?

சேர: கவனிக்கலாம். நாங்கள் இருவரும் முட்டாள் தனமாக சண்டைபோட்டுக் கொண்டோம். எங்களுள் சமாதானம் செய்து வைக்க யாருமே இல்லை என்று அவர்களிருவரும் ஒரு மனதாகக் கேட்கும்போது நீங்கள் சொல்கிற முறை சரியாயிருக்கலாம். ஆனுல் இதில் நான் பேசவே விரும்பவில்லை என்கிருனே. என்ன சொல்கிறீர்?

விருது: முறைப்படி வழக்கு முடிவாகட்டும்.

மன்னன் (நீதிபதி தீர்ப்பு)

இந்த வழக்கில் தீர்ப்பளிப்பது அவ்வளவு சிக்கலானதல்ல; ஏனெனில் நட்பு முறியடிக்கப் பட்டிருக்கிறது. இரண்டு கால்கள் இருக்கும் மனிதனைத்தான் முழு மனிதன் என்கிருேம். ஒரு கால் இல்லையானுல் அவனுக்குச் சமுதாயம் கொடுக்கும் பெயர் நொண்டி. அப்படியே ஒருகை இல்லையானுல் முடவன் என்கிருேம். காதுகள் எல்லாருக்குமே உண்டு. என்ருலும் ஒரு சிலரைச் செவிடர்கள் என்கிருேம். ஏன்? காதுகள் இருந்தும் கேட்காத காரணத்தால். கண்ணுயிரம் என்று இரண்டு கண்களையே உடையவனை அழைக்கிருேம். ஆயிரம் கண்கள் செய்ய வேண்டிய வேலையை இந்த இரண்டு கண்களே செய்ய முடியும். எதுவும் பழுதுபட்டபின் அதன் முழுப்பொலிவு அழிந்து மாற்றுப் பெயர் பெற்றுவிடுகிறது. ஆகவே நட்பு எங்கே தடம் புரண்டாலும் அதற்கும் பெயர் நட்பு என்பதல்ல பகை என்றே கொள்ளப்படுகிறது. ஆகவே இந்த வழக்கில் மனம் கோணிவிட்ட ஒருவனும், மனம் கோணுத ஒருவனும் சிக்கி இருக்கிருர்கள். இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம், கரும்பு கோணிடில் அதன் சுவை குன்றுமோ, நரம்பு கோணிடில் நாமதற்கென்செய்வோம், என்ற முதுமொழியை இந்த மாமன்றத்திற்கு நினைவூட்டி நரம்பு கோணிவிட்ட துரைசிங்கத்தின் மனதை நான் வலிய மாற்ற முயலுவதற்கு விரும்பவில்லை. என்ருலும், இப்போது என்னை அவர்கள் நீதிபதி என்பதை மறந்து மன்னன் ஆணையிடுகிறேன் என்ற முறையில், அவர்களைப் பழையபடி நண்பர்களாகவே இருக்க விரும்பினுலும் இருக்கலாம். அந்தக் கடனை தூங்காவிளக்கு இன்னும் ஒரு திங்களில் கொடுத்துவிட வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?

இருவரும்: 'நாங்கள்பழையபடி நண்பர்களாகவே இருக்கிருேம்.' என்று ஒப்புக்கொள்கின்ருர்கள்.

இதற்குள் கோட்டையின் தலைக்காவலன் களஞ்சியம் ஒருவன் மன்னனிடம் வந்து, யாரோ வெளிநாட்டுக்காரன் மன்னனைக் காண விரும்புவதாகச் சொல்கின்ருன்.

மன்னன்: அவன் எந்த நாட்டவன் என்று கேட்டனையா?

காவலன்: கேட்டேன். அவனும் பதில் சொன்னுன். அவன் மொழி எனக்குப் புரியவில்லை.

மன்னன் : அவனேடு யாரும் வரவில்லையா - தனியாகத்தான் வந்திருக்கிருனு?

காவலன் : ஆம்!

மன்னன் : எங்கே நம் பன்மொழிப்புலவர்?

பன்மொழி : இங்கே இருக்கிறேன்.

மன்னன் : சரி, வந்தவனை வர விடு.

அயல் நாட்டான் உள்ளே வந்து, மன்னனை வணங்கி ஒரு ஓலைச்சுருளைத் தருகின்ருன்.

மன்னன் அதை வாங்கிப் பன்மொழிப் புலவரிடம் தந்து படிக்கச் சொல்கின்ருர்.

பன்மொழிப் புலவர் படித்து விட்டு கொல்லெனச் சிரிக்கிருர். ஏனையோர் சிரிக்க முடியவில்லை. மொழி விளங்கவில்லை. விளங்கிய புலவர் விளக்கம் தந்த பிறகுதான் இவர்கள் ஏதாவது செய்ய வேண்டும்.

பன்மொழிப் புலவர் : இவன் வைசாலி நாட்டு மன்னன். பவணகேதுவின் தூதுவன். நமது காடுகளை 99 ஆண்டுகள் தனக்குக் குத்தகைக்குவிட முடியுமா என்றுகேட்கிருன்: அதில் அவன்தான் நாட்டில் சீவனம் இல்லாமல் ஆண்டுக்குஆண்டு செத்துக்கொண்டிருக்கும் ஆடு மாடுகளை மேய்க்கப் போகிருனும். அதுதவிர, அந்தக் காடுகளில் உள்ள விலையுயர்ந்த மரங்களான தேக்கு சந்தனம் ஆகியவற்றிற்கு எந்தவிதமான அழிவையும் உண்டாக்குவதில்லை என்று உறுதியளிக்கின்ருன். இது பாலி மொழியிலே எழுதப்பட்டிருக்கிறது.

மன்னன் : வைசாலி, கபிலவஸ்துவின்பக்கத்திலிருக்கும் நாடல்லவா?

வேதியர் : ஆம்.

அமைச்சர் : ஒய்! உமக்கெப் படித் தெரியும்?

வேதியர் : தீர்த்த யாத்திரை போயிருந்தேனெண்ணேு. என் மருமான் அங்கேதான் கங்கையிலே அடிச்சூண்டு போயிட்டான்.

அமைச்சர் : உமக்கு ஒண்ணும் ஆகல்லையா?

மன்னன் : நீர் அங்கே என்னே மொழி பேசினீர்?

வேதியர் : சமஸ்கிருதம் பேசினேன். அதையும் அங்கே ஒருவரும் புரிஞ்சிக்கில்லே. ஊமை மாதிரி கை சைகைக் காட்டிக் கொண்டே காரியத்தை முடிச்சூட்டு வந்துாட்டேன்.

மன்னன் : புலவரே! சமஸ்கிருதம் வடமொழி என்கிருர்களே. அப்படி இருந்தும் வடக்கே இருப்பவர்கள் ஏன் அதைப் புரிந்து கொள்ளவில்லை?

புலவர் : அது பிறந்தது வடக்கே-புகுந்தது தெற்கே—வழக்கழிந்து விட்டது.

மன்னன் : இப்போது எவ்வளவு பேர்கள் பேசுவார்கள்?

அமைச் : இந்தச் சபையையெடுத்துக் கொள்ளுங்களேன். இங்குள்ள நாம் அனைவரும் தமிழ் பேசுகிறேும். வேதியர் தமிழை ஆதரிக்கிருர்.

மன்னன் : ஏன்?

புலவர் : வேறுவழி இல்லாமல். இன்னமும் அவர் தாய்மொழி சமஸ்கிருதம்தான் என்று சொல்லிக்கொண்டிருக்கிருர்.

மன் : அவர் தவிர வேறுயார் பேசுகிருர்கள்?

புலவர் : ஆண்டவன் அந்த மொழிதான் பேசுகிருர் என்று ஐயர் சொல்கிருர்.

மன்னன் : ஆண்டவனுக்கும் இந்த மொழிச் சிக்கல் உண்டோ?

அமைச் : சிக்கலே அங்கிருந்துதான் புறப்பட்டது. தமிழ் நாட்டில் கோயில், தமிழர் கட்டிய கோயில், திருவிடத்தின் ஒரு பகுதியான கோல்கொண்டா வைரங்கள் அணிவிக்கப் பட்டிருக்கின்றன. கூடி நின்று கைக்கூப்பித் தொழுவோர் அனைவரும் தமிழர்களே. ஆனல் இவ்வளவு பேர்களையும் காதிருந்தும் செவி[...]ர்களாக்க, கருத்திருந்தும் மடையர்களாக்க ஒத்தைக் குரல், ஒரு புரியாத மொழியைக் கிளப்புகிறது. இதற்குமேல் என்ருல் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

புலவர்: ஏன், ஆலயத்தில்நமது தாய் அவமானப்படுத்தப்படுகிருள் என்று தாராளமாகச் சொல்லலாம். தாராளமாகச் சொல்லலாம் என்பது கூட அளவு கடந்த நம் அடக்கத்தைக் காட்டுகிறது. எரிச்சலோடு சொல்ல வேண்டுமாளுல் வெட்கம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம்! குறள் குரலெழுப்ப முடியாத குகையாயிற்று கோயில். சிலப்பதிகாரம் செல்ல முடியாத சிறு குகையாயிற்று சிவன் இல்லம். தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தைத் தொடவே முடியாதென்று நமது முகத்தில் அறைந்தது போல் அறிவித்து விட்டது ஆலயம். சங்க இலக்கியங்கள் பங்கப்படுத்தப்படுகின்றன. நமது நாட்டுத் தங்கத்தால் விலங்குகள் செய்து, நாமே அவைகளைக் கைகளில் மாட்டிக்கொண்டு குற்றவாளிகள் போல் நிற்கிறேும், கோயில்களுக்கு முன்ளுல். கொடுமை, கொடுமை! நான் நாத்திகம் பேசுகிறேனு?

வேதியர் : ஆமாம்.

அமைச். வேதியரே! உமக்கேன் கவலை? புலவரேபேசும். தாயைப் பாராட்டப்பட வேண்டும் என்கிறீர். அவ்வளவு தானே! உங்கள் விருப்பம் நிறைவேற்றப் படும்.

மன்னன் : ஆம். சுயநலமில்லாத விருப்பம் நிறைவேற்றப் படும்.

இதை எல்லாம் வைசாலி நாட்டுத் தலைவன் தன்னைப் பற்றித்தான் பெருத்த விவாதங்கள் நடைபெறுகின்றது என்று நினைக்கிருன். விவாதத்தின் விளக்கங்களைச் சொல்ல வல்லார் ஒருவர்தான் அந்த அவைக்களத்திலே உண்டு. அவர்தான் பன்மொழிப் புலவர். அவரோ விவாதத்தில் கலந்து கொண்டிருக்கின்ருர். வேதியரை அணுகிக் கேட்கலாம் என்று கருதி வேதியர் பக்கத்திலே வந்து உட்கார்ந்து, என்னவென்று பாலி மொழியிலே கேட்கிருன். வேதியர் விளங்காமல் சமஸ்கிருத மொழிலே ஏதோ பதில்சொல்கிருர்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த மன்னன், "வேதியரே! என்ன கேட்கிருன் தூதுவன்?" என்கிருர்.

வேதியர் : அவர் கேட்டது எனக்குப் புரியவில்லை. நான் சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

மன்னன் : நீங்கள் பேசியது அவனுக்குப் புரியவில்லை. அவன் பேசியது உங்களுக்குப் புரியவில்லை. நீங்கள் இருவர் பேசியதும் எனக்குப் புரியவில்லை. சரி, வந்தவனை வைத்துக்கொண்டு நாம் இந்த வாதங்களை நடத்திக்கொண்டிருக்கத் தேவை இல்லை. தமிழர்களை ஆள்கின்ற அவைக்களமே போர்க்களமாகிறது என்ற புழுதியை வாரி இறைக்க வேண்டாம். தூதுவன் தந்த மடலுக்கு விடை தரவேண்டுமல்லவா? அதைப்பற்றி கவனிப்போம். பவணதுர்க்கன், முரா என்பவள் பெற்றெடுத்த மௌரியர்கள் வழிவந்தவன். இன்னும் மௌரிய வமிசாவளியைப் பற்றி நாம் தெள்ளத் தெளிய தெரிந்துகொள்ள வேண்டும்.

அவை : ஆம். அதுதான் நல்லது.

மன்னன் : எங்கே வரலாற்று வல்லுனர்—அவரை உடனே அழைத்து வாருங்கள்.

'வந்து நிற்கிருர்.'

மன்னன் : வரலாற்ருசிரியரே! மௌரியர்களைப் பற்றி ஒரு சுருக்கமான விளக்கம் தேவை. இன்றே-இப்போதே தேவை. நீர் நினைவின் நிலைக்களம் என்றறிவேன். சொல்லுங்கள்.

ஆசிரியர் அங்கேயே சொன்ஞர். ஆனல் அடுத்தஇதழில் அதுவரும்.

—தொடரும்

தயாராகிறது !

இந்தி எதிர்ப்பு மலராக

"இனமுழக்கம்"

ஆண்டு மலர்

ஆகஸ்ட் 26-ல் எங்கும் கிடைக்கும்.

அறிஞர் அண்ணு

சொல்லின் செல்வர் **சம்பத்**

நாவலர் **நெடுஞ்செழியன்** கவிஞர் **கண்ணதாசன்**

கலைஞர் **கருணுநிதி** பேராசிரியர் **க. அன்பழகன்**

நாஞ்சில் **கி. மனேகரன்** தத்துவமேதை **டி. கே. சி.**

டாக்டர் **மு. வ.** டாக்டர் **அ. சிதம்பரநாதனுர்**

பன்மொழிப்புலவர் **அப்பாதுரையார்**

திராவிட மொழிநூலார் **ஞா. தேவநேயப்பாவாணர்**

முத்தமிழ்க்காவலர் **கி. ஆ. பெ.** விசுவநாதம்

"பாரதரத்னம்" **சி. இராசகோபாலாச்சாரியார்**

ஆசிரியர் **சி. பி. சி.**

மற்றும் பலர் இந்தியைப் பற்றி தம் எண்ணக் குவியல்களை வெளிப்படுத்துவர்.

கவியரங்கம் ! கவியரங்கம் !! கவியரங்கம் !.!

தலைவர் :

கவிஞர் **கண்ணதாசன்**

பங்கேற்போர் :

கவிஞர் **முடியரசன்** கவிஞர் **வே. கபிலன்**

கவிஞர் **வாணிதாசன்** புலவர் **பொன்னிவளவன்**

கவிஞர் அருப்புக்கோட்டை **இராமசாமி**

திரையுலகில் இந்தி பற்றி . . .

புரட்சி நடிகர், இலட்சிய நடிகர், நடிகர் திலகம், ஔவை டி.கே.எஸ். டணால்தங்கவேலு, M.N. ராசம் ஆகியோர் தம் கருத்தை தெரிவிக்கிருர்கள்.

புதுமை! புதுமை!! புதுமை!!!

என்றும் காணுத புதுமை!!!

அண்ணு பிறந்ததினப் போட்டி

பரிசு ரூ. 100 கூப்பன் மலரில்!

பலவண்ண ஆர்ட் முகப்பு

இத்தனையும் உண்டு ! அத்தனையும் கற்கண்டு !

விலையோ 50 காசுகள்தான் !

விபரங்கட்கு :

"இனமுழக்கம்" சென்னை-2.

தாக்கத் துணிபவன் என் தம்பியல்ல!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களே தவிர தங்களுடைய இன்னுயிரை ஈந்தாகிலும் அந்தக் கொள்கைக்காகப் போராடுவார்கள் என்ற நம்பிக்கை அற்றுப்போயிருக்கிற நிலையில் நாம் அடிபட்டும், உதைபட்டும் போலிஸ்காரர்கள் பட்டாளத்தாருடைய இருப்புக் காலுக்குக்கீழே மிதிக்கப்பட்டும், அந்தக்குருதி இந்தமண்ணில் பட்டு இந்த மண்ணே மகிமை பெறவேண்டும்! அந்த ரத்தம் இந்த நாட்டிலே சிந்தப்பட்டு, இந்தநாடே புனித புரியாகவேண்டும். அப்படிப்பட்ட ஒரு அறப் போராட்டத்திற்குத்தான் உங்களை நான் அழைக்கிறேனே தவிர வெறும் வேடிக்கைக்கல்ல, விளையாட்டுக்கல்ல. ஆகையினால்தான் இந்த மாபெரும் கூட்டத்தைப் பார்க்கின்ற நேரத்தில் முதலிலே நான் மலைத்தேன். அதற்குப்பிறகு மருண்டேன். எத்தனை தாய்மார்கள் பச்சிளங் குழந்தைகளோடு வந்திருக்கிறார்கள்! எத்தனை காதலர்கள் தங்கள் காதலிகளை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்? எத்தனை தாய்மார்கள் தங்களுடைய மகனைப் பார்த்துப் பார்த்துப் பூரிக்கிறார்கள்! இப்படிப்பட்ட ஒரு மன்றத்தில் வந்து கூடியிருக்கின்றவர்களை அடிபட உதைபட அல்லவா அழைக்கிறோம் என்று எண்ணுகின்ற நேரத்தில் ஒருகணம் எனக்குத் தாய்மார்களைத் திரும்பிப் பார்க்கும்பொழுது எனக்கு வேதனையாகவும் இருந்தது, வெட்கமாகவும் இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட அளவுக்கும் நாம் செல்வதற்குத் தயாரானால் ஒழிய, வருகின்ற இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதென்பது முடியாதகாரியமாகிவிடும். ஆகையினால் நாம் நடத்துகின்ற போராட்டம் நாட்டுக்காகவும், விடுதலைக்காகவும், அந்த நாட்டு விடுதலைக்கு அடிப்படையாக அமைந்திருக்கும் மொழிக்காகவும்தான். இங்கே ஒரு தோழர், சாரதி என்று கருதுகின்றேன், 'அண்ணா என்ன சொன்னாலும், நாங்கள் செய்வோம். அஸ்ஸாமிலே நடந்ததைப்போல் நடத்தச் சொன்னாலும் நாங்கள் செய்வோம்' என்று சொன்னார்! எனக்கிருக்கிற பயமே அதுதான்...! எங்கே அஸ்ஸாம் போல் நடக்கிறதோ என்பதுதான் எனக்கு பயமே தவிர என்னை சம்பத் அழைத்து நீ இந்த நாட்டிற்குத் தலைமை வகித்து இதைப் பற்றியெல்லாம் பேச வேண்டும் என்று சொன்னபோது கூட எங்கே அஸ்ஸாமாகிவிடுகிறதோ அதை ஓர் அளவுக்குத் தடுக்கலாம் என்பதற்குத்தான் நான் வந்தேனே தவிர, சாரதி அவர்கள் சொன்னதுபோல் அஸ்ஸாமாக, அப்படிப்பட்ட காரியமானாலும் நாங்கள் செய்யத் தயாராயிருக்கிறோமென்று அவர் சொன்னாரே, மறந்தும் அந்த நினைவு நமக்கு வரக்கூடாது. ஏன் வரக்கூடாது என்றால். அஸ்ஸாமிலே நடந்த கலகம் ஒருவாரத்துவான வேடிக்கை! செய்துவிடலாம் சுலபத்தில். திடீரென்று நீங்கள் இன்று இரவே கிளம்பி சௌகார்பேட்டைக்குப் போய் அங்கே இருக்கிற மார்வாடிகளைப் பார்த்து, 'ஜாவ்...ஜாவ்' என்று சொல்லலாம்.

எந்த அரசியல் கட்சியின் தலைவரும் தன்னுடைய தோழர்களை அழைக்கின்றபோது, 'உங்களை எம். பி. ஆக்குகிறேன். எம். எல். சி. ஆக்குகிறேன்' என்று அழைப்பர் நான் —?

இதில் ஒன்றும் பெரியஅதிசயமொன்றுமில்லை, நடக்காதகாரியமென்று அர்த்தமுமல்ல. அதையும் கொஞ்சம் நாசூக்காக எம். ஜி. ராமச்சந்திரன் சொன்னார். நீங்களும் அறிக்கை விடுங்கள் என்று சொன்னதில் அர்த்தமென்ன? விடாவிட்டால் இப்படி இப்படி நடக்கும் என்பதிலே சுட்டியிருக்கும். இதைச்செய்வதிலே ஒன்றும் சிரமமில்லை. ஆனால், அப்படிச் செய்வதிலே என்ன கற்பிக்கப்படும் உலகத்திற்கு என்றால் இவர்கள் தங்களுடைய கொள்கையை ஸ்தாபிக்க முடியாதவர்கள். அதற்காக இவர்கள் கஷ்டப்படாமல் மற்றவர்களை வருத்துகிறார்கள் என்ற பழி நம்மை வந்து சாரும். அந்தப் பழி நமக்குக்கூடாது என்பதற்காகத்தான் நாம் இந்தக் கொள்கைக்காக எவ்வளவு கஷ்டநஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதை ஆட்சியாளருக்கு நாம் அறிவித்துவிடவேண்டும். அந்தப் போராட்டக் குழு முடிவு செய்கின்ற நேரத்தில் அது பள்ளிக்கூட மறியலாக இருக்கலாம். மத்திய சர்க்காரின் ஆளுகைக்குக் கீழே இருக்கின்ற நிலையங்களில் செய்கின்ற மறியலாக இருக்கலாம், தபால் நிலையங்களிலே மறியலாக இருக்கலாம் அல்லது இந்த இந்தி ஆதிக்கத்துக்குக் கங்காணிகளாக இருக்கின்ற இந்த நாட்டு மந்திரி வீடுகளிலே மறியலாக இருக்கலாம், பல ரூபங்களிலே அது உருவெடுக்கலாம், அடுத்தடுத்துப் பலர் வந்து கொண்டுமிருக்கலாம், ஆனால் இப்பொழுது நாம் யோசிக்கவேண்டியது இவ்வளவு

...ருக்குத் தங்கத் தலைவர் அறிஞர் **அண்ணா** ...அவர்கள் அறிவுரை தருகிறார்.

பெரிய இந்தி எதிர்ப்பு உணர்ச்சி இந்த நாட்டிலே ஏற்பட்டு அந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை நான் உங்களிடத்திலே சொல்லிக்கொள்ள மகிழ்ச்சியடைகிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சியும் ஓரளவு ஏற்றுக்கொண்டு பொதுச்செயலாளருக்கு இன்றையத்தினம் கடிதம் எழுதியிருக்கிறார்கள் (பலமான கைதட்டல்). நண்பர்களே, கைதட்டுவதற்கு முன்னாலே ஓரளவுக்கு என்பதைத் தயவுசெய்து கவனத்திலே வைத்துக் கொள்ளவேண்டும். ஓரளவு ஏற்றுக் கொண்டு அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இதுகட்சிகளுக்கு அப்பாற்பட்டபிரச்னை இதிலே எல்லோரும் சேரலாம், என்னுடைய சுதந்திரா கட்சி தவிர, என்று அவர்கள் பாதுகாப்பாக பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப் பலருடைய உள்ளத்தைத் தொட்டுக் கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையை இவ்வளவு வடிவமெடுத்திருக்கின்ற இந்த நேரத்தில் பாபு ராஜேந்திர பிரசாத் நம்முடைய அறிக்கைக்குப் பதிலளிக்காமல் தமிழகத்திலே இந்தத் திங்கள் 6ம் தேதியிலிருந்து 16ம் தேதி வரையில் தமிழகத்திலே சென்னை, கன்யாகுமரி, திருநெல்வேலி, நாகர்கோயில், கோயமுத்தூர், பெரியநாய்க்கன்பாளையம், மேட்டூர், சேலம், வேலூர் என்று இத்தனை இடங்களிலே அவர் பவனிவர இருக்கிறார். சமீப காலமாக நானும் கவனிக்கிறேன் நம்முடைய குடியரசுத்தலைவர், பயணத்தில் நேரு பண்டிதருக்கு இருக்கின்ற ஆசை திடீரென்று எற்பட்டிருக்கின்றது. வயதானகாலம் பாவம்! இந்தக் காலத்திலே இந்த ஆசை வருவது உடலுக்கு நல்லதல்ல. உள்ளத்துக்கு நல்லதாக இருக்கலாம் என்றாலும் இதுவரையிலும் ஏற்படுத்தாத விதத்திலே தமிழகத்திலே 6ம்தேதியிலிருந்து 16ம் தேதி வரையில் பவனி வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதனுடைய பொருள் என்ன? "இதனுடைய பொருள் தெரியவில்லையா? நீண்ட காலமாக அழைத்தார்கள் பாபுவை. அதற்கு அவர் நேரமே இல்லை, இப்பொழுதுதான் வரநேரம் கிடைத்தது அதனாலே வருகிறார்" என்று காங்கிரஸ் வட்டாரத்திலே பதிலளிக்கப்படும்! ஆனால் அமெரிக்காவிலே உள்ளவன், இங்கிலாந்திலே உள்ளவன், பக்கத்திலேயிருக்கிற பர்மாவிலே உள்ளவன், இன்னொரு பக்கத்திலே இருக்கின்ற பாகிஸ்தானிலே உள்ளவன், நாகர் நாட்டுத் தலைவர், லண்டன் நகரத்திலே யிருக்கிற அறையில் உட்கார்ந்து இந்தச் சேதியைப் படித்தால் என்ன எண்ணுவான். திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒரு கட்சியாம் அதிலே கலையழகு சொட்டச் சொட்டப் பேசுவார்களாம், வீரர்களாம், தீரர்களாம் எம். பி.க்களாம், எம். எல். ஏ.க்களாம், மேயராம், கவுன்சிலராம், மாநாடாம், கூட்டமாம், தீர்மானமாம், போராட்டக் குழுவாம், இது அத்தனையுமிருந்தும் இந்தியைப் புகுத்துகின்ற ஆணையைப் பிறப்பித்துவிட்டு பாபு ராஜேந்திரப் பிரசாத் தமிழகத்திலே பவனி வருகிறார், இதற்கு என்ன பொருள் என்றால் அவருடைய ஆதிக்கத்திற்குத் தமிழகம் அடிபணிந்துவிட்டது. அவருடைய பேச்சுக்கு மறு பேச்சில்லை! அவர் புகுத்துகின்ற இந்தியை ஏற்றுக்கொண்டார்கள், என்று வெளியுலகத்திலே உள்ளவர்கள் நம்மைத் துச்சம் என்று கருதுவது மட்டுமல்ல, நம்மைத் தமிழனென்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

நம்மை மனிதன் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! அதுவும் எப்பொழுது நடக்கின்ற சம்பவம்? ஒரு திங்கள் முடியவில்லை. அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர், அணுகுண்டைக் கையிலே வைத்துக் கொண்டிருப்பவர் அகில உலகத்திற்குக் கடன் கொடுத்து நாடுகளையெல்லாம் தன் வசத்திற்கே விலை பேசக்கூடிய ஐசுவரியவான், ஐஸனோவர் ஜப்பான் நாட்டுக்கு வருவதை, ஆளும் கட்சி வரவேற்று வருவதை எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் 'அவர் வருவது எங்களுக்கு அவமானம்' என்றார்கள். "நீ யார் சொல்ல?" என்று ஆளும்கட்சி கேட்டது. 'நானும் நான் ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி' என்றார் எதிர்க்கட்சிக்காரர்! நீ எதிர்க்கட்சிதானே' என்றார்கள். நான் இப்போது எதிர்க்கட்சி அடுத்த தடவை நான் ஆளும் கட்சியர்கலாம், ஆகையால் என்னுடைய வார்த்தைக்கு மதிப்புத் தரத்தான் வேண்டும் என்று சொன்னார்கள். பாராளுமன்றத்திற்கு உள்ளே அமைச்சர்கள் கூடினார்கள். பாராளுமன்றத்தைக் காவல் காத்து இரும்புத் தொப்பியணிந்த போர்வீரர்கள் நின்றார்கள். அதற்குவெளியிலே லட்சக்கணக்கான ஜப்பானிய வீரர்களும், வீராங்கனைகளும், 'வர விடமாட்டோம் ஐசனோவரை' வரவழைக்காதே குடியரசுத் தலைவரை' என்று முழக்கமிட்டார்கள். குடியரசுத் தலைவர் 'நான் விரவில்லை' என்றார். ஜப்பான் நாட்டுப் பிரதமர் 'வராதீர்' என்றார். இதனாலே இரண்டு பேருடைய மதிப்பும் கெட்டுவிட்டதாக நாம் நிச்சயம் கருதவில்லை, மதிப்பு அப்போது தான் உயர்ந்தது.

ஆனால் இங்கேயிருக்கிறவர்கள் அப்படியல்ல இவர்கள் சொல்லுகிறார்கள் எதிர்ப்போம் என்று. இந்த நேரத்திலா போகாமலிருப்பது போய்த்தான் தீருவோம் என்று வருகிறார்கள். இளநீர் குடித்தால் நல்லது அது இளநீரல்ல கள்! அதைக் குடித்தால் வெறிபிடிக்குமென்று சொன்னால் எதுவாக இருந்தாலென்ன? நான் ரெண்டு மொந்தை போடுவேன் என்று சொன்னால், யார் தடுக்க முடியும்? அதைப்போல நாங்கள் எழுதியிருக்கின்ற கடிதத்தில் குடியரசுத் தலைவருக்கு நீங்கள் இந்திப் பிரச்சினைக்குப் பரிகாரம் சொல்லாமல் தமிழ

உள்ளத்தில் எத்தனை பெரிய கொதிப்பை ஏற்படுத்தியிருக்கின்ற தென்பதை நாட்டையாளுகின்ற அமைச்சர்கள் அருள் கூர்ந்து உணர வேண்டும். ஆனால் அவர்கள் அப்படி உணருவதாகத் தெரியவில்லை! எப்பொழுது உணருவார்கள் என்றால் குடியரசுத் தலைவருடைய பவனியில் நாம் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டுகின்ற நேரத்தில் நம்மை எதிர்த்து வருகின்ற அடக்குமுறை, நம்மை எதிர்த்து வருகின்ற அடக்குமுறைக்கு நம்மிலே எத்தனை பேர் பலியாவதற்குத் தயாராயிருக்கிறோமோ அதைப் பார்த்துத்தான் மதிப்போம். நான் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும். உயிரோடிருக்கிற இந்தத் தலைவர்களைப் பார்த்தால், குடியரசுத் தலைவருடைய பவனியிலே திராவிட முன்னேற்றக் கழகம் காட்டும் எதிர்ப்புணர்ச்சியில் அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டுக் கீழே விழுகிற பிணத்தைப் பார்த்துத்தான் டெல்லி மதிக்கும். அந்தப் பிணமாவதற்கு நம்மிலே தயாராய் இருக்கின்றோமா? (சப்தம்) அதைப் பொறுத்துத் தான் நமக்கு மதிப்பு வருமே தவிர, நம்மைப்பார்த்தல்ல. அதனால்தான் நம்முடைய நண்பர் அன்பழகன் உருக்கத்தோடு பேசினாரே தவிர, நான் இப்படியாக வேண்டும், அப்படியாக வேண்டும் என்று எழுதியதற்கு அண்ணா இப்படி ஆகக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள், அது ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள வேண்டியதுதான், அது நட்புரிமைக்கும் சரி, நம்முடைய குடும்பப் பாசத்திற்கும் ஏற்றதுதான். ஆனால், இந்த எதிர்ப்புணர்ச்சியைக் காட்டுகின்ற நேரத்தில் அப்படிப்பட்ட பிணம் கீழே விழுகின்ற நேரத்தில், அடக்குமுறை அவிழ்த்துவிடப் பட்டாலும்,

வருத்தப்படுகிறேன், நண்பர்களே! உங்களை அடிபட அழைக்கிறேன். அடக்குமுறைக்கு ஆளாக அழைக்கின்ற நான் கல்நெஞ்சக்காரன்தான்.

கத்திற்கு வருவது உகந்ததல்ல, விருந்தாளிகளை வரவேற்கின்ற பண்பில் தலைசிறந்து விளங்கும் தமிழகத்தை நீங்கள் வேறு வழியிலே துரத்துகிறீர்கள். தயவு செய்து அந்த நிர்பந்தத்தை எங்களுக்கு ஏற்படுத்தாதீர்கள் என்று குடியரசுத் தலைவருக்கு எழுதியாயிற்று. கையாள வேண்டிய முறைகளத்தனையும் நிச்சயம் செய்தாகிவிட்டது. இனித் தீர்மானிக்க வேண்டியது என்னை ஏதோ போராட்டக்குழு போராட்டத் திட்டம் கேட்டீர்கள். நான் உங்களைத் திட்டம் கேட்கிறேன். குடியரசுத் தலைவர்வருகிறார் ஆணைபிறப்பித்துவிட்டு இந்தியை ஆதிக்க மொழியாக்கிவிட்டு வருகிறார். நீங்கள் அளிக்கின்ற பதில் என்ன? வரவேற்கலாமா? வரவேற்கக்...(பலத்த சத்தம்) நண்பர்களே......நண்பர்களே குடியரசுத் தலைவருடைய வருகை நம்முடைய மக்கள் எதற்கும் தயாராக இருந்தால்தான் அந்த எதிர்ப்புணர்ச்சியைக் காட்ட முடியும். ('தயார் தயார்' என்ற புரட்சி வீரர்கள் படையின் முழக்கம்) அந்த எதிர்ப்புணர்ச்சியைக் காட்டுவதற்குத் தயாராய் இருக்கின்ற நேரத்தில் துவக்கத்திலே நான் சொன்னதை ஒரு துளியும் மறக்கக்கூடாது. அமைதி கெடலாகாது, பலாத்காரம் ஒரு துளியும் இருக்கலாகாது! யார் தாக்கினாலும் திருப்பித் தாக்கக் கூடாது! தாங்கிக்கொள்வதற்குச் சக்தி உள்ளவர்கள் வரலாம், தொட்டால் துவண்டுவிடக்கூடியவர்கள் விலாசம் கொடுத்துவிட்டுக் கூட அல்ல தானாகப் போகலாம்! எப்படி அவன் அடித்தால் பார்த்துக் கொண்டிருக்க முடியும் என்ற விருவிருப்புணர்ச்சியுள்ளவர்கள் வீட்டோடு இருக்கலாம்!

10-ம் பக்... பார்க்க

புரட்சி

★ மேதை மீராபே மடிந்தான் !

★ வாயில்லா ஊமையானுன், லூயி!

★ மௌனத்தை மக்கள் மதித்தனர்!

அதற்குப்பின் ?

வீரமங்கை தொராயினி

சி. பி. சிற்றரசு

எரிந்த நெருப்பை அணைக்க இருந்த மீராபே எனும் தடாகம் வரண்டு விட்டது. இனி எரியும் நெருப்புப் பெருநெருப்பாய் எங்கும் அழிவை யுண்டாக்கும். மன்னனை இனி மரியாதைகளோடு சந்திக்க மாட்டோம். சம்பிரதாயங்கள் எல்லாம் சண்டமாருதமெனப் பறந்தது. எந்த நேரமும் புரட்சிப் புயல் உருவத்தில் வார்சேல்ஸ் மாளிகையைத் தாக்கலாம் என்ற நிலை. ஒரு விஞடி கழிந்தால் ஓராயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்து விட்டதாக நினைத்துப் பெருமுச்சுவிட்டான் மன்னன். அவன் நெற்றியில் சுருங்கல் கோடுகள் விழுவதற்கு முன்னுல் துக்க ரேகைகள் படிந்து விட்டன. விருந்து, வேடிக்கை, களியாட்டங்கள் எல்லாம் நிறுத்தப்பட்டு விட்டன. மயான அமைதி குடிகொண்டது மாளிகையில்.

இதே நேரத்தில் பாரிஸ் பட்டணத்தில் ஒரு படை திரண்டது. இதைக் கண்ட பிரபுக்கள் சூரியனைத் தொட சுண்டெலிகள் புறப்பட்டன என்றனர். சிங்கத்தின் பாதையிலே சிற்றெறும்புகள் நடை போடுகின்றன என்று நையாண்டிச் செய்தனர், அரசனுடைய அபிமானிகள். 'விடியா முஞ்சிகள் வேந்தனை எதிர்பார்க்கப் போகிருர்களாம், என்று விலா வெடிக்கச் சிரித்தனர், வெண்சாமரம் வீசிகள் எனினும் படை புறப்பட்டுவிட்டது. அந்தப் படை எந்தப் படை என்றெண்ணும் வீரர்கள். ஆண்கள் படையா என்று நினைக்கத் தோன்றுகிறது. புறப்பட்ட படை ஆண்கள் படை அல்ல.

தொராயினி புறப்பட்டு விட்டாள்

தொராயினி ஒரு பீரங்கிவண்டியில் ஏறிக்கொண்டு பெண்கள் படையின் வரப்புறப்பட்டு விட்டாள். ஆண்கள் போர்க்களம் செல்ல அவர்கள் வெற்றிக்கு வாழ்த்தி வழி னுயப்புவது தான் மங்கையர்கள் பணி என்ற வழக்கத்துக்கு மாறுக, பெண்கள் அணி வகுத்துச் செல்ல, ஆண்கள் தெருவோரங்களிலே நின்றுகொண்டிருந்தார்கள். உற்சாகத்தோடல்ல, உறக்கம் தூண்டிய கண்ணினராய், சோம்பல் ஏறி நிற்கும். சோர்வுபடைத்தவர்களாய், எங்கே போகிருர்கள் இவர்கள்? என்று கேட்கின்ருன், ஒரு அரைபோதைக்காரன். 'மாதா கோயிலுக்கு, என்கிருன், ஒரு முக்கால் போதைக்காரன். 'கோயிலுக்கு பீரங்கி வண்டியில்தான் போவார்களோ?' என்று சொல்லிச் சிரிக்கிருன் ஒரு கால் போதைக்காரன். அதிசயம் ஒன்றை அல்லது அதிர்ச்சித் தரக்கூடிய ஒன்றைக் கண்டால் போதை இறங்கிவிடும் என்று சொல்லப்பட்டது. அந்த நிலையில் எல்லாரும் விழிப்புற்று, வார்சேல்ஸ் நோக்கிப் போகும் தொராயினி, தெருவோரங்களில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆண்களைப் பார்த்து, 'நீங்கள் ஆண்கள் தானு?' என்று மட்டிலுமே கேட்டாள். இந்த வார்த்தை, குளிரால் நடுங்கி நிற்கும் ஒருவன் உடலில் சூட்டுக்கோல் ஒன்று தாக்கியதைப் போலிருந்தது. அந்த கூட்டத்தில் ஒரு கிண்டல்காரன், 'பெற்ற இனம் முன்னே போகட்டும், பிறந்த இனம் பின்னுல் வரும் என்ருன். கூடியிருந்தவர்கள் கொல்லெனச்சிரித்தனர். இதைக் கண்ட தொராயினிக்கு எரிச்சல், தாங்கமுடியாத கோபம். உங்கள் முகத்திலிருப்பது மீசைதானு?' என்று கேட்டாள். இந்தக் கேள்வி, அந்த ஆண்களின் உச்சிமயிரை உயர்த் தூக்கியது.

மாதா முன் செல்ல, மகன் பின்னுல் செல்வதுபோல் பின் சென்றனர். மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த மாமிச யந்திரங்கள். தொராயினியின் பெண் படை ஏழு மைல்கள் கம்பீர நடை நடந்து மதோன்மத்தன் லூயியின் மாளிகை யிருக்கும் வார்சேல்ஸ் வந்தடைந்துவிட்டது. வீராங்கனைகளின் நடையார்வம் மாளிகைக்குள் கேட்கவில்லையாயினும் பேரிகை ஓசை மாளிகையில் நுழைந்துவிட்டது.

வந்தவர்கள் பெண்களாகையால் மாளிகையின் காப்பாளர்கள் ஒன்றும் செய்யமுடியாதவர்களாய் விட்டார்கள். இந்த நேரத்தில், மன்னன் தன் மந்திரி பிரதானியரை அருகில் வைத்துக் கொண்டு அடுத்து வரும் ஆபத்தை எப்படி தடுக்கலாம், தடுக்க இருந்த ஒரே ஒருவர், மீராபேவை காலம் விழுங்கிவிட்டது. அந்தக் கல்லறை ஒருதுணை தேடுகின்றதோ என்ற ஐயம் மன்னனைப் பிடித்து வெகுநாட்களாய் விட்டது. ஆகவே அவன் மந்திர பிரதானியரைக் கலந்தாலோசிப்பது தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது. அவர்கள் என்ன ஆறுதல் சொல்ல முடியும்? இதற்குள் பெண்கள் படை மாளிகைக்குள் புகுந்து விட்டது. மன்னன் எழுந்து தனி அறைக்குப் போய் விட்டான். அவன் வந்தவர்களைப் பெண்கள் என்று நினைத்திருந்தால், தன் நாய்களைவிட்டே விரட்டியிருப்பான். ஆனுல் அவன் அந்த நேரம் சாவு தேடித் தன்னை வருவதாக நினைத்தான். 'சாவே! திரும்பிப் போ' என்று சொல்ல யாருக்கு தைரியம் பிறந்திருக்கிறது நாட்டில்? பேசாமல் எழுந்து சாவின் பின்னுல் தலை குனிந்து போனது தவிர, 'வீடேறி வந்த சாவே! நீ இன்று போ, நான் நாளை வருகிறேன், என்று, இதுவரை எவன் சொன்னுன்? இதில் மனிதனென்றும், மன்னன் என்றும் வேற்றுமை இல்லையே. வாழ்நாளில் எவ்வளவு உயர்ந்த தன்மையை யடைந்திருந்தாலும், எவ்வளவு கீழான நிலையை யடைந்திருந்தாலும் சாவின் சன்னிதானத்திலே, எல்லாரும் சமம்என்பதை உணர்த்துவதற்கல்லவா அந்த உலுத்தனைத் தேடிப் போயிருக்கிறது, அந்தப் பெண் பட்டாளம்.

அதனுல்தான் மனம் முறிந்த மன்னன், 'சீ, இதுகளின் முகத்திலேயே விழிக்கக்கூடாதென்றுஓடி ஒரு தனி அறையில் மறைந்தான், 'மக்களுக்கு மன்னன் மேல்தான்கோபம்; நம்மேல் அல்ல' என்று அசட்டு தைரியத்தோடு அலங்காரமான நாற்காலியிலே உட்கார்ந்திருந்தவர்கள் முதுகிலெல்லாம் ஒவ்வொரு அறை விழுந்தது. எழுந்து மூலைக்கொருவராக ஓடி ஒளிந்தார்கள். காலியான அந்த நாற்காலிகளில் பெண்கள் உட்கார்ந்தார்கள். அடுத்து என்ன என்ற தீர்மானத்தை ஒருவள் முன் மொழிய தொராயினி பதில் அளித்தாள்.

—தொடரும்

★ சம்பிரதாயங்கள், சண்டமாருதமெனப் பறந்தது!

★ அரிவையரை அணைத்த கைகள் அஞ்சத் தொடங்கலாயின!

★ மாளிகையல்ல அது; மயானத்தின் முதல் சந்திப்பு!

வீரமங்கை பேசுகிருள்:-

★ நீங்கள் ஆண்கள் தானு?

★ உங்கள் முகத்தில் இருப்பது மீசைதானு?

★ ஒலி கேட்ட மன்னன் ஓடி ஒளிந்த வரலாறு!

★ சாவின் சன்னிதானத்தில் யாவரும் சமமே!

★ மன்னனைக் கண்டு மயாங்கிய மங்கை!

அட்டைப்பட விளக்கம்:

யார் இந்த இட்லர்?

வெடிகுண்டுக் கஞ்சாத வேந்தன் ; தீமை
வெடித்தாலும் மருளாத வீரன் ; தூய
தமிழுக்குத் தொண்டாற்றும் சீலன் ; நாளும்
துணிவுக்குத் துணையாகித் தமிழைக் காப்போன்

வேறு

துவண்டிருந்த தோழருக்குக் காலை மாலை
துவளாமல் துடிப்பேற, உணர்ச்சி யூட்ட
துண்டினையே பாயாக்கித் தியாக மாக்கித்
துடிப்பேற்றி வருகின்ற துவளா நெஞ்சன்!

கலங்காத நெஞ்சமதைக் கலங்க வைத்து
இளகாத நெஞ்சுதனை இளக வைத்து
எதிர்காலப் போருக்கு, 'எழுடா!' யென்று
எந்நாளும் எரிமலையாய் எழுந்து நிற்போன்!

'வஞ்சகரின் கொட்டத்தை வீழ்த்த ; நீயும்
வாயாலே சூளுரைத்தல் போதா தின்று!
நெஞ்சத்தை அஞ்சாமல் நிமிர்த்தி ; நாட்டை
நாமாள நீவாடா தம்பி!' என்போன்!

அஞ்சுவதோ கோழைக்கு அழகு ; இந்த
அடிபோன ஆட்சிக்கும் அதுவே சான்று!
அதனாலே கோட்டைக்கு வேட்டு வைப்பாய்
இதனுலே உயிர்போனுல் மயிர்தான்!'என்போன்

'கொட்டுகின்ற தேளாக(க்) கோவைச் சீமான்
குணம்மாறி வருகின்ருர் ; குவல யத்தில்
வெட்டுகின்ற வீரனுக நீயே மாறு ;
வருங்கால வரலாற்றில் புகழாய்ச் சேரு!

எட்டிக்காய் இனிதென்பர் எத்தர் ; பித்தர்
எவரையுமே எப்போதும் எதிர்ப்பர் ; அந்தப்
பட்டமரக் கூட்டத்தைப் பிளக்க ; இந்தப்
பார்காக்கப் புறப்படடா மகனே!' என்போன்

கொட்டுகின்ற மழைபோல மாறும் பேச்சும்
கொதிக்கின்ற வெந்நீர்போல் துள்ளும் சொல்லும்
வெட்டுகின்ற மின்னலென வெளுத்து வாங்கும்
வெண்ணிறத்தான்! யாருக்கும் அஞ்சா சிங்கம்!

யார்?இந்த இட்லரெனக் கேட்பீர் ; நானே
பார்!இந்த இனமுழக்க ஏட்டை! என்பேன்
சீர்மிகுந்த சிந்தனையின் சீற்றத் தோற்றம்
சிரந்தாழ்த்தா சிற்றரசின் மாற்றுக் கோலம்!

இந்தியினை வேரறுக்க இந்தக் கோலம்
இதிகாசக் குப்பைகளை இன்றே தீய்க்க(த்)
சதிகார வடநாட்டு விலங்கை வீழ்த்த(ச்)
சங்கார(ச்) செம்மலென விளங்கும் சிங்கம்!

எண்ணமதை வண்ணத்தால் வடித்துக் காட்டி
சுண்ணமதை சித்திரத்தில் குழைத்துப் பூசி
சீனியென இனித்திடவே செய்த சோமு!
சீர்பெற்ற செங்கரும்புக் கலைஞர் என்பேன்!

சுவையான சொற்களெலா மிருக்கத்—தீயர்
சொரிசிரங்கு சொற்களையே சொரிந்திட் டாலு
துவளாமல் தளராமல் தனித்தி யங்கும்
வள்ளியப்பன் வெள்ளையுளம் வளர்க! வாழ்க!

வே. க

வல்லப பந்த்தல்ல, வயோதிகச் சிங்கம்!

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அடித்தால் தாங்கிக் கொள்ளுகிறேன், 'சுட்டால் செத்து மடிகிறேன்' என்று சொல்லத் தக்கவர்கள் மட்டும் இந்தப் போராட்டத்திலே கலந்து கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை நாம் துவக்குவதன் மூலம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஒரு குந்தகம் விளையுமென்று நாம் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. நான் தெளிவாகச் சொல்லுகிறேன், நேருவுக்குக் கருப்புக்கொடி பிடித்தார்களே அந்தக் காலத்திலே செய்ததைப்போல் இவர்களையெல்லாம் சிறையிலே தள்ளிவிடமாட்டோம் என்று காமராசர் ஒரு கூட்டத்திலே பேசியிருக்கிறார்! அதனுடைய பொருள் என்ன என்றால் சிறையிலே போடமாட்டோம், அடித்து விரட்டுவோம் என்கிறார்! வேறு என்ன அதற்குப் பொருள்? அடித்து விரட்டுவோம் என்று அவர் சொல்லுகிறார். ஜப்பான் நாட்டுப் பிரதமர் 'கிஷி' பாராளுமன்றத்திற்கு உள்ளேயிருந்த நேரத்தில், குடியரசுத் தலைவர் ஐசனோவரை வரவிடாமல் தடுப்பதற்காக ஜப்பான் நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட நேரத்தில், அந்த ஆர்ப்பாட்டம் அனுமதிக்கப்பட்டது. அங்கேதுப்பாக்கி பேசவில்லை பலாத்காரத்திலே ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈடுபட்ட நேரத்திலேதான் துப்பாக்கி பேசிற்றே தவிர, அநீதியான முறையிலே அவர்கள் அந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு ஜப்பானிலே அனுமதி இருந்தது. இந்த நாட்டிலே அதற்கு அனுமதி இல்லையென்ற முறையிலே காமரசர் பேசுகிறார், இந்தத் தடவை இவர்களை நாங்கள் சிறைச்சாலைக்குப் பிடிக்கமாட்டோம்; அடித்து நொறுக்குவோம் என்று! ஆகையினால் இந்தப் போராட்டத்திற்குத் தயார் என்று சொல்லிக்கொள்கின்ற நீங்கள், இந்தத்தடவை சிறைச்சாலைக்கு அல்ல, தடியடி படுவதற்கும், அடக்குமுறைக்கு உங்களை உட்படுத்தப் படுவதற்கும் தயாராக இருக்கிறீர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்குத் தான் இந்த மாநாட்டை இங்கே கூட்டியிருக்கின்றோம். இந்த மாநாட்டின் மூலமாக ஆட்சியாளர்களுக்கு நாம் தெரிவிக்க விரும்புவது இந்த ஒரே ஒரு செய்தியைத் தான். பாபு ராஜேந்திரப் பிரசாத் தமிழகத்திற்கு வருகிறார். 6-ம் தேதியிலிருந்து 16 ம் தேதிவரையில் இந்த இடத்தில் கம்பியில்லாத தந்திச் செய்திகள் இருக்கின்றன. இன்றைய மாநாட்டிலே நீங்கள் கண்ட உணர்ச்சிப் பெருக்கை அருள்கூர்ந்து நீங்கள் ஐதராபாத்திலே இருக்கும் தலைவருக்குத் தயவுசெய்து அறிவியுங்கள் குடியரசுத் தலைவருடைய ஆணைக்குப் புதிய விளக்கங்கள் கொடுப்பது, அல்லது அந்த ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு தமிழர்கள் மதிக்கத்தக்க புதிய விளக்கங்கள் கொடுப்பது, அல்லது அந்த ஆணையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு தமிழர்கள் மதிக்கத்தக்க, தென்னகத்தார் ஏற்றுக் கொள்ளத்தக்க, புதிய ஆணையைப் பிறப்பிப்பதாக வாக்குறுதி தருவது. அதைத் தந்துவிட்டு இந்தத் தமிழகத்திற்கு வந்தால் சென்னை நகரத்தில் முதலில் அவரை வரவேற்பதற்கு எங்கள் மேயர் தான் இருக்கிறார். (கை தட்டல்) ஆனால், இந்தக் காரியத்தைச் செய்யாமல் குடியரசுத் தலைவர் சென்னைக்கு வந்தால் அவரிடத்தில் முதல் கருப்புக் கொடியைக் கொடுக்கவும் எங்கள் மேயர்தான் செல்லுவார். (பலத்த கைத் தட்டல்) அப்படிப்பட்ட வகையில் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டினால் தான், குடியரசுத் தலைவருக்குக்கூட நிலைமை விளங்கும். குடியரசுத் தலைவர் ஏறக்குறைய பிரஞ்சுநாட்டு மன்னர்களைப் போல் இன்றையத் தினம் அலங்காரத்தின் மத்தியில் சிக்கிக் கொண்டிருக்கிறார். அவர் அலங்காரப் பிரியர் அல்ல. ஆளைப் பார்த்தாலும் தெரியும்! வரலாற்றைப் படித்தாலும் புரியும்!

ஆனால் அவரைச் சூழ இருக்கின்ற ஒரு பெரிய மாளிகையில் அவர் சிறைப்பட்டிருக்கிறார். ஆகையால் மக்களுடைய மனது எப்படியிருக்கிறது? அவர்களுடைய உள்ளத்திலே என்னென்ன குமுறல்கள் இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் எண்ணிக் பார்த்திருக்க வேண்டிய நேரமிது. அதை எடுத்துச் சொல்லத்தக்க திறமை, அதை எடுத்துச் சொல்லத்தக்க தரம், அதை எடுத்துச் சொல்லியே பிழைத்துக்கொள்ளலாம் என்ற தைரியம் இங்கே இருக்கிற அமைச்சர்களுக்கு இல்லை! ஆகையால் அவர்கள் அதைச் சொல்லமாட்டார்கள், அல்லது பத்திரிகைகள் அதை எடுத்துக் காட்டுமா என்றால் போனவாரத்திலேஎன்று கருதுகிறேன். சென்னையிலே இருக்கிற மெயில் என்ற ஆங்கிலத் தினசரி அருமையான உபதேசம் தந்திருக்கிறது! இவர்கள் ஏதேதோ செய்வதாகச் சொல்லுகிறார்கள். இந்தத் தடவை அவர்களைச் சும்மாவிடாதீர்கள், லேசாகத் தண்டிக்காதீர்கள். நீங்கள் கடுமையாகத் தண்டித்தால்தான் இவர்கள் அடிக்கடி இந்தக் காரியத்தில் ஈடுபட மாட்டார்கள். என்ன ஈவு இரக்கம்! எவ்வளவு ஜனநாயகப் பண்பு! எவ்வளவு நல்ல தாராளத் தன்மை! இதை வைத்துக்கொண்டு ஒரு பத்திரிகை ஆசிரியர் எழுதுகிறார் பொதுவாகப் பத்திரிகை ஆசிரியர்கள் விடுதலை உணர்ச்சிக்குத் தூபமிடுவார்கள் என்று பெயர். பொதுவாகப் பத்திரிக்கை ஆசிரியர்கள். உரிமைக் கிளர்ச்சியை ஆதரிப்பார்கள் என்று பெயர்.

ஆனால் அவர்கள் அந்த உரிமைக் கிளர்ச்சியை எதிர்த்து நமக்குக் கடுமையான அடக்குமுறைத் தண்டனை தரவேண்டுமென்று ஆட்சியாளரைத்தூண்டி விடுவதற்குக் காரணம் ஒரு சமயம் அவர்களுடைய நிலையத்திலே இருக்கிற தொழிலாளர்டைய உள்ள உணர்ச்சியை நிச்சயம் பார்க்கப் போகிறார். ஏனென்றால் டெல்லிக்காரர்கள் தென்னகத்தை வஞ்சித்திருக்கிறார்கள். இன்னின்ன வகையிலே, இன்னின்ன வகையிலே என்று விளக்கமாக எழுதியிருக்கிறார்.

இதைப் பார்த்த பிறகு ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு அல்லது அந்தப் பத்திரிகை நடத்துகின்றவர்களுக்கு வெட்கமில்லை, மானமில்லை, ரோஷமில்லை என்றால் நாம் பேசியா வரப்போகிறது. (ஷேம் ஷேம் என்ற கோஷம்). இப்படிப்பட்டகிளர்ச்சி கூடாது. அடிக்க வேண்டும், உதைக்க வேண்டும் என்று தலையங்கம் எழுதுவது, அதற்குப் பக்கத்திலே இது என்றால் என்ன அர்த்தம்? மதுவிலக்கை ஆதரித்து ஒரு தலையங்கம் எழுதி விட்டு அதற்குப் பக்கத்தில், அசல் பனங்கள்ளு படி ஆறணா! உடனே வாருங்கள் என்று விளம்பரம் போட்டால் எப்படியோ அதைப் போலத் தலையங்கத்தில் என்ன இருக்கிறதோ அதற்கு நேர்மாறாக அந்த நிருபர் எழுதியிருப்பது படித்தவுடனே சிறிது கோபம் கூட வந்தது! அதற்குப் பிறகு இந்தக் கட்டுரையைப் படித்த பிறகு நிச்சயமாகப் பரிதாபப் பட்டேன். ஐயோ பாவம் இந்தப் பத்திரிகை நடத்துகின்றவர்கள் எவ்வளவு அப்பாவிகளாகளை அவர்கள் அடக்கியடக்கிப் பழக்கப்பட்டதால், அதிலே ஏற்பட்ட அரிப்பிலே அவர்கள் அப்படி எழுதினார்களோ என்று நான் கருதுகிறேன். அந்தப் பத்திரிகையிலே எனக்கு ஒருவேடிக்கை. அடக்கு முறையைக் கடுமையாக நீங்கள் பயன்படுத்தி, இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் கிளர்ச்சியை ஒடுக்க வேண்டும் என்று எழுதிய 'மெயில்' பத்திரிக்கை ஆசிரியரைக் கன்னத்திலே அறைவதைப் போல் அதே பத்திரிகையில் அந்தத் தலையங்கத்திற்குப் பக்கத்தில் அவர்களிடத்திலே பணம்பெற்றுக் கட்டுரை அனுப்புகின்ற டெல்லியிலே இருக்கின்ற பெர்த்தியனார்ட் ஒரு கட்டுரை அனுப்பியிருக்கின்றார். இதில் மெயில் பத்திரிகைக்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை! இந்தத் தலையங்கத்தைப் படித்துவிட்டு இந்தப் பக்கத்திலே படித்தால், டெல்லியிலே உள்ள நிருபர் எழுதுகிறார். இந்தத் தடவை பாபு ரஜேந்திரப் பிரசாத் தமிழகத்திற்குப் போகிறார், தமிழருக்கின்றார்கள்!

ஒருபக்கத்திலே இப்படி வருகின்றது. இன்னொரு பக்கத்திலே அப்படியிருக்கிறதே இதை ஒப்பிட்டுக்கூடப் பார்க்க மாட்டார்களோ, ஒருவேளை விளம்பரத்தை அணிவகுத்துப் பார்த்து அதிலே இருக்கிற பணக் கணக்கை கூட்டி எடுக்கிறார்கள் போலிருக்கிறது. விஷயத்திற்குப் போகவில்லை போலிருக்கிறது என்று நான் எண்ணிக்கொண்டேன். அப்படிப்பட்டவகையிலே ஆட்சியாளர்களைத் தூண்டிக்கொடுக்கத்தக்கத் தலையங்கங்களை எழுதுகின்றார்கள்; எழுதுவார்கள். அவர்களை வைத்துக்கொண்டு ஆட்சியாளர்கள் இன்னும் கொடுமையான அடக்குமுறையை இப்போது தான் நாம் பாபு ராஜேந்திரப் பிரசாத்தினுடைய பவனிக்கு நம்முடைய எதிர்ப்புணர்ச்சியைக் காட்ட வேண்டும் என்றிங்கே பேசிக்கொண்டிருக்கிறோம்! இன்னமும் நாமதை முடிவாக்கவில்லை, தீர்மான வடிவத்திலே நான் உங்களிடத்திலே சொல்லவில்லை.

ஆனால் இதற்குள் இரண்டு மணி நேரத்திற்கு முன்னாலேயே சென்னையில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயற்குழுக் கூட்டத்தில் பாபு ராஜேந்திரப் பிரசாத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தார் கருப்புக் கொடி காட்டுவதாக இருக்கிறார்களாம். அந்தக் கருப்புக்கொடி நிகழ்ச்சியிலே பொதுமக்களே கலந்து கொள்ளாதீர்கள்! என்று தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு நிறைவேற்றி அதே மெயில் பத்திரிகையிலேவந்ததை நான்படித்தேன். ஒரு சமயம் நானதைப் படிக்காமலிருந்தாலாகிலும், மற்றத்தம்பிகளெல்லாம்எவ்வளவுதுரிதப் படுத்தினாலும் பார்க்கலாம்... பார்க்கலாம் என்று சொல்லியிருப்பேன். தெரிந்துவிட்டது இனி என்ன மறைப்பது?(சிரிப்பு) அவர்களே கூடி போயிருக்கிற பொழுது நாமிதை மறைத்து வைத்திருப்பானேன்? 6-ம் தேதியிலிருந்து 16-ம் தேதி வரையில், 15-ம் தேதி மட்டும் நீங்கலாக, சுதந்திர தின விழா நீங்கலாக மற்றைய நாட்களிலே கலந்து கொள்ளுகின்ற பாபு ராஜேந்திர பிரசாத்துக்கு தமிழர்கள் இந்தி விஷயத்திலே அடைந்திருக்கின்ற மனக் குமுறலை வெளிப்படுத்தவும், அவர்களுடைய விடுதலை வேட்கையை அவர் உணர்ந்து கொள்ளவும், அவர்களுடைய தாய்மொழிப் பற்றை அவர் அறிந்து கொள்ளவும், அவர்கள் நேருவினுடைய வாக்குறுதியை எவ்வளவு மதிக்கிறார்கள் என்பதை அவர் அறிந்து கொள்ளவும் தக்க விதத்தில் குடியரசுத் தலைவருடைய பவனியில் அவர் தமிழகத்திற்குச் செல்லுகின்ற இடங்களில் கையிலே வலிவுள்ளவர்கள், கருத்திலே வலிவுள்ளவர்கள், தமிழரென்ற உணர்வுஉள்ளவர்கள், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் திராவிட இனப்பற்றுக் கொண்டவர்கள் கருப்புக் கொடியேந்தி, பாபு ராஜேந்திரப் பிரசாத்துக்கு (பலத்த கைத்தட்டல்) நீங்கள்

(11-ம் பக்கம் பார்க்க)

★ 'அடித்தால் தாங்கிக் கொள்ளுகிறேன்; சுட்டால் செத்து மடிகிறேன்!' என்று சொல்லத்தக்கவர்கள் மட்டும் இந்தப் போராட்டத்திலே கலந்துகொள்ள வேண்டும்.

★ அறப்போர் வீரர்களே! கருப்புக்கொடி காட்டும் நேரத்திலே அமைதி கெடலாகாது; பலாத்காரம் ஒரு துளியும் இருக்கலாகாது; யார் தாக்கினாலும் திருப்பித் தாக்கக்கூடாது!

...து வட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினரும், ...மான சி. சிட்டிபாபு இந்தி எதிர்ப்பு மாநாட்டு ... இழுத்துச் செல்வதைப் பாரீர்!

தோழர்கட்கு

தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள், தமது வட்டக் கழகத் தேர்தல் சம்பந்தமாகத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருந்ததாலும், 'தம்பி! எடு, பிடி, கருப்புக்கொடி' என்ற பொன்னனை அண்ணாவின் முழுச் சொற்பொழிவை, **டேப் ரிகார்டு** மூலமாக எடுத்து ஒரு சொல்லையும் விடாமல் வெளியிட நினைத்து இந்த இனமுழக்க இதழில் தந்திருப்பதாலும் 'தங்கச்சி மடம்' இடம்பெறவில்லை என்பதை வாசகத் தோழர்கட்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

இடி 1 ★ வார இதழ் - சென்னை (8--7--'60) வெள்ளிக்கிழமை ★ முழக்கம் 44

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

விலை 16 காசுகள்.

அடுத்த இதழில்...

புறப்படு மகனே!

தங்கச்சி மடம்!

தொடர் நவீனங்கள்.

ஆண்டு சந்தா ரூ 8.

பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

பொறுத்தது போதும் புறப்படு போருக்கு!

★ நயவஞ்சகர் கூட்டத்தில் நியாயம் பிறக்குமா?

★ இந்தியை இனியும் நாம் அனுமதித்தால், நாமில்லை, நம் மொழியில்லை, நம்நாடு இல்லை - ஒன்றுமேயில்லை.

★ பண்டிதரின் வாக்குறுதி காற்றில் பறக்கிறது. இனியும் நாம் எதை நம்பி வாளாயிருப்பது?

போர்ப்பறை முழங்கட்டும்!

புற்றீசலெனப் புறப்படுவீர்!

[வேலூரில் சம்பத் — 4-ம் பக்கம் பார்க்கவும்]

உலக அரங்கிலே...

ஜெ.

முன் வாரத் தொடர்ச்சி

இவ்வளவுக்குங்காரணம்தற்காப்பு ஒப்பந்தம்தான். அந்த ஒப்பந்தத்திலுள்ள ஆபத்தான பகுதிகள் . . .

"இதில் சம்பந்தப்பட்ட நாடுகள் தனித்தனியாகவோ அல்லது ஒன்ருேடொன்று இணைந்தோ, அரசியல்சட்டங்களுக்கு உட்பட்டு, எதிரியின் தாக்குதலைச் சமாளிக்கச் சொந்த முயற்சியாலும் பரஸ்பர உதவியாலும் தங்கள் வலிவை வளர்த்துக் கொள்ளும்."

"ஜப்பான் நாட்டுப் பாதுகாப்பைக் குறித்தும், அகில உலக அமைதியை நிலைநாட்டவும், கீழ்க்கோடியின் பாதுகாப்புக்காகவும் அவ்வப்போது இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற இரு !தரப்பாரும் கலந்தாலோசிப்பார்கள்."

"ஜப்பானிய நிர்வாகத்தில் உள்ள எல்லையில் எந்தத்தரப்பினர் தாக்குதலுக்கு உள்ளானலும் அது அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தை உண்டாக்குமாதலால், பொது ஆபத்தைச் சமாளிக்க அரசியல் சட்டங்களுக்கும் நடைமுறைக்கும் உட்பட்டு ஆவன செய்ய இருதரப்பினரும் இசைகின்றனர்."

"ஜப்பானிய பாதுகாப்புக்கும், உலக சமாதானத்துக்கும், கீழ்க்கோடிப் பாதுகாப்புக்கும் பயன்படுத்துவதற்காக அமெரிக்கா தன் தரைப்படை, கடற்படை, விமானப்படை மூன்றையும் ஜப்பானிய மண்ணில் வைத்துக்கொள்வதற்கு ஜப்பான் இடமளிக்கிறது."

இவைதான் அந்த ஒப்பந்தத்தின் வெறுப்பை உருவாக்கிய வாசகங்கள்.

அமெரிக்காவின் படைத்தளங்களுக்கு அனுமதி-உலக சமாதானத்தைக் காப்பாற்ற வலிவைப் பயன் படுத்துவது-கீழ்க்கோடிப் பாதுகாப்புக்கானபடை அமைப்புகள்-ஆபத்தை எப்படிஎப்படி வரவேற்கலாமோ அத்தனை சொற்களையும் அடக்கிவிட்டனர் அமெரிக்கர் இந்த ஒப்பந்தத்தில்!

ஜப்பான் முதலமைச்சர் கிஷி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போதே, ரஷ்யா, இது தனக்கும் சீனுவுக்கும் எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று தன் எதிர்ப்பைத் தெரிவித்து விட்டது. இதைப்பற்றி அமெரிக்க வெளிநாட்டு விவகாரக் குழுவில் தன் கருத்தைத் தெரி... காரியதரிசி ஹெர்டர், 'கீழ்க்கோடி' என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அந்தச் சொல் ரஷ்யாவையும் சீனுவையும் உள்ளடக்கியது என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் வேறென்ன வேண்டும் இதற்குமேல்? அண்டை நாடுகளின் வெறுப்பைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை ஜப்பான்நாட்டுமக்கள். ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கினர்.

நான்கு மாதங்களாக ஜப்பான் பாராளு மன்றத்தில் இதைப்பற்றிய கடுமையான வாதம் நடைபெற்றது. ஒரு முடிவுக்கும் வரவில்லை. மன்றத்தின் நடவடிக்கைகளைஇன்னும் ஐம்பது நாட்கள் தொடர்ந்து நடத்த முடிவு செய்தனர். அப்போது நூறு சோஷலிஸ்டு கட்சித் தோழர்கள், சபைத்தலைவர் உள்ளே நுழையாதபடி வழி மறித்துத் தடுத்தனர். அவர்களை ஒவ்வொருவராக போலீஸ் அப்புறப்படுத்திற்று.

நான்கு மாதங்கள் விவாதித்தும் முடிவடையாது, இன்னும் ஐம்பதுநாட்கள் தேவைப்பட்ட இந்த ஒப்பந்தம், எதிர்க்கட்சியினர் வெளியேற்றப்பட்டபிறகு பதின்மூன்றே நிமிடங்களில் நிறைவேறியது.

தொடர்ந்து தொடங்கியது போராட்டம்! பாதுகாப்பு ஒப்பந்தத்திலேயே தீ வைக்கச் சொன்னுர்கள், ஜப்பானிய மக்கள்.

நிறைவேறிய ஒப்பந்தம் நிலைநிற்குமோ என்பது எதிர்காலத்தின் தீர்ப்புக்கு உரியது

மக்கள் குரலை மதிக்காத மமதையாளன் நோபோசுகே கிஷி! அவன் அமைச்சர் பதவிக்கே அருகதையற்றவன்!

டி. கே. சீனிவாசன்

கல்லூரியிலிருந்து வெளிப்பட்டபிறகு பதினறு ஆண்டுகள் அரசாங்க ஊழியனுகப் பணியாற்றியவன். வணிக இலாகாவில் ஒரு அதிகாரி! மெள்ள மெள்ள அதிகாரி என்ற நிலையிலிருந்து ஆலோசகர் என்ற நிலைக்கு வளர்ந்தான், பிறகு முன்னுள் சர்வாதிகாரி டோஜா அமைச்சரவையில் அங்கமானுன். ஜப்பான் போரில் சரணடைந்த போது, !யுத்தக் கைதியாகப் பிடிக்கப் பட்டான். மூன்று ஆண்டுகள் கழித்து விடுதலை செய்யப்பட்டான். அவனுடைய நண்பர்களும் உறவினர்களும், புதிய வளர்ச்சி பெற்ற ஜப்பானில் பெரும் பெரும் தொழிலதிபர்களாக இருந்ததால், தன்மீது படிந்திருந்த களங்கத்தை சுலபமாகத் துடைத்துக் கொண்டான்.

சோஷலிஸ்டு தலைவன் இனெஜீரோ அசனுமா! அறுபத்து மூன்று வயதான பெரும் பேச்சாளன். வாதத்தில் வெல்ல முடியாதவன். உடல் வலிவிலும் உள்ள உரத்திலும் மிகுந்தவன். அமெரிக்க ஆதிக்கத்தை அடியோடு வெறுப்பவன். இரண்டு கோடியே முப்பது இலட்சம் வாக்குகளைப் பெற்ற கட்சியின் தலைவன்.

முப்பத்தெட்டு வயதான அகிரா இவாய், முப்பத்தைந்து இலட்சம் தொழிலாளரை கொண்ட, சோஹயோ என்றழைக்கப்படும் தொழிற்சங்கத்தின்தலைவன். ஜப்பான் அமெரிக்காவின் ஆதிக்கத்திலும் ஜப்பானிய முதலாளிகளிடமும் சிக்கித் தவிக்கிறது என்ற கருத்து உள்ளவன், இரண்டையும் அழித்தொழிப்பதே தன் நோக்கமாகக் கொண்டவன்.

இருபத்திரண்டே வயதான நுபூஆ அருகா, ஜப்பானிலுள்ள ஆறுலட்சம் மாணவர்களுக்குத்தலைவன். டோக்யோ சர்வகலாசாலையில் சட்டக் கல்லூரியில் நான்காம்வருடம் படித்துக் கொண்டிருக்கும் மாணவன். இப்போது சோஷலிஸ்டுகளோடும் கம்யூனிஸ்டுகளோடும் இணைந்திருந்தாலும் இருவரையும் வெறுப்பவன். அவர்களும் முதலாளிகளைப் போலவே, சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும், மாணவர் உரிமைக்கும் விரோதிகள் என்ற எண்ணமுள்ளவன்.

சான்சோ நோசாகா! இவன் தான் அங்கே உள்ள கம்யூனிஸ்டு கட்சியின் தலைவன்! எப்போதும் முன்னணிக்கு வராமல் உள்ளேயிருந்தே எதையும் தூண்டி விடுபவன், இப்போது நடந்த கிளர்ச்சியில் கம்யூனிஸ்டுகள் தங்களைத் தனிப்படுத்திக் காட்டிக்கொள்ளாமலே கலந்து கொண்டனர். ஜப்பானில் கம்யூனிஸ்டு கட்சிக்கு அவ்வளவு செல்வாக்கில்லை.

இருந்தாலும், நடந்த கிளர்ச்சிகளுக்கெல்லாம் கம்யூனிஸ்டுகள் தாம் காரணம் என்று கிஷி குற்றம் சாட்டினுன்.

ஜப்பான் அமைதியாக முன்னேறவிரும்பும்நாடாக இருக்க விரும்புகிறது, அமெரிக்காவோடு சேரவும்விரும்பவில்லை; ரஷ்யாவோடுசாய்வதும் பிடிக்கவில்லை.

தன் ஆதிக்கத்தில் இருக்கிற ஒரே காரணத்தைக் கொண்டு அதன் பண் பாட்டையே மாற்ற விரும்பிற்று, அமெரிக்கா. படுதோல்வியாக முடிந்தது, அதன் முயற்சி!

உலக அரசியல் கற்பிக்கிற பல பாடங்களில் இதுவும் ஒன்று ஒவ்வொரு இனமும் தன் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் பாதுகாத்துக் காப்பாற்றிக் கொள்ளவே விரும்புகிறது. அதை அழித்தொழிக்க எவர் முயன்றாலும் புயல் கிளம்புகிறது-சூறுவளி உருவாகிறது-எரிமலை வெடிக்கிறது!

எந்த நாட்டிலுந்தான்-இன்பத் திராவிடத்திலும் அப்படித்தான்!

இனமுழக்கம் ஜூலை 15 முதல்...

சி. பி. சிற்றரசு எழுதும்

புறப்படு மகனே!

சரித்திரத் தொடரோவியம்

எஸ். எஸ். தென்னரசு தரும்

தங்கச்சி மடம்

★ சேதுக்கரையில் அலைமோதிக்கிடந்த ஏழை வீட்டு அழகி ஒருத்தியின் உன்னதச் சரித்திரம் . . . .

★ நாற்பதாண்டுகளுக்கு முன்பு இராமனுநபுர மாவட்டத்தில் நிகழ்ந்த சுவைமிக்க காதல் கதை!

ஜூலை 15! ஜூலை 15!

இனமுழக்கம்

ஆசிரியர்: சி.பி.சிற்றரசு

மலர் 1] ★ 8—7—60 ★ [இதழ் 44

யாருக்கு யார் பணிவது?

அலெக்சாண்டரை வரவேற்றவன் அம்பி என்ற ஆரிய மன்னன்

அந்தக் கோழையின் வழி வந்தவர்தான் நேரு

வடவர்கள் பரம்பரை பரம்பரையாக நாடாண்டவர்கள் மாதிரீயும், நாம் சரித்திர காலந்தொட்டு அடிமைகளாகவே இருந்தவர்கள் மாதிரியும் மனப்பால் குடித்துக் கொண்டு, நம்மை நேரடியாக எதிர்க்க முடியாத கோழைகள் மறைமுகமாக எதிர்க்கவும், அதை எதிர்ப்பென்று சொல்லாமல். இந்தி என்ற பொது மொழியின் மூலம் நம்மை அடக்கியாளத் திட்டமிட்டு விட்டார்கள் என்பதை நாடறிந்து கொண்டது. பல முனைகளிலே, ஏன், நாம் எதிர்ப்பாராத முகாமிலிருந்தும் ஆதரவு வந்து கொண்டிருக்கிறது. வரவேற்கிறோம், அவர்கள் ஆதரவை.

நேரு யார்?

நம்மை மறைமுகமாக வஞ்சகத்தின் மூலம் அடக்கியாள நினைக்கும் நேரு யார்? கிரேக்க வீரன் அலெக்சாண்டரை எதிர்க்க முடியாமல் பூர்ணகும்பமெடுத்து, மதுவையும் மாமிசத்தையும் கொடுத்து, அவனையும் அவனோடு வந்த மூவாயிரம் படை வீரர்களையும் இந்திய நாட்டுக்குள் அழைத்து வந்த மகா கோழையான அம்பி என்ற பார்ப்பன மன்னனின் வழித் தோன்றல்தான் நேரு.

சுவைமிக்க-ஆனால் சோகமிக்க வரலாறு

மகாவீரன் அலெக்சாண்டர் எப்படி உள்ளே வந்தான் என்பது ஓர் சுவைமிக்க, ஆனால் சோகமிக்க வரலாறுகும்!

கிரேக்க மன்னன் பிலிப்ஸ் இறக்கும்போது, தன் மகன் ஐரோப்பாவையும் ஆசியாவையும் வென்று மன்னர் மன்னனாக விளங்க வேண்டுமென்று நினைத்து உயிர் நீத்தான. அதன்படி அவன் எண்ணத்தை நிறைவேற்ற '**கொரிந்த்**' என்ற இடத்திலே ஒரு மாமன்றம் கூடியது. அதில் ஓராண்டில் ஐரோப்பா படையெடுப்பை முடித்துவிட வேண்டுமென்றும், அடுத்த ஆண்டு ஆசியாவின்மேல் படையெடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி போர் வீரர்களையும் போர்க் கருவிகளையும் சேகரித்துக் கொண்டு ஐரோப்பாவின்மேல் படையெடுத்து மாநாட்டின் தீர்மானப்படி ஓராண்டில் அந்தக் கண்டத்தைத் தன் காலடியில் கொண்டு வந்துவிட்டான்.

ஆனால், அடுத்த ஆண்டில் ஆசியாவின்மேல் படையெடுக்க வேண்டும். அதைப் பற்றி அவன் உள்ளம் அச்சப்படுமளவுக்குக் கேள்விப் பட்டிருந்தான். முதன் முதலில் இமயத்தைக் கடப்பதே கடினமென்றும், அதன் தலைவாயலிலே அம்பி என்ற மன்னன் ஆள்கிறான். அவனை வெல்வது கடினமென்றும், அப்படியே அவனை வென்று உள்ளே நுழைந்தாலும், அங்கே தன்னை எதிர்ப்பதற்கு ஆற்றல்மிக்க பெருவேந்தர்கள் இருக்கிறார்களென்றும் கேள்விபட்டிருந்தான். ஆகவே, பட்டாளத்தைப் பெருக்கி தக்க பாதுகாப்போடு வந்து கொண்டிருக்கின்றான். இமயமலை தென்படுகிறது. அவன் இதாலியிலே, ஏன், ஐரோப்பாவிலேயே பெருமலை எனப்பட்ட ஆல்ப்ஸ் மலையைக் கண்டவன்தான் என்றாலும், இமயம் அவன் இதயத்தைத் திடுக்கிடச் செய்தது.

தளபதி டாலமி சொன்னான். 'வேந்தே! இதுதான் எதிரிகளை நுழைய விடாமல் தடுக்கும் இமயம்' என்றான். 'என் யூகம் சரியாய்விட்டது டாலமி' என்றான் கிரேக்கத்தின் காளை. 'அதன் அடிவாரத்தில் புகைக் கிளம்புகிறதே! எதுவாயிருக்கும்?' என்றான். 'அது நம்மை எதிர்ப்பதற்காக மன்னன் ஆயுதங்களைச் செப்பனிடும் உலைக்களமாக இருக்கும்' என்றான் தளபதி, 'சரி இனி எதுவரின் என்ன?' என்று மேலே நடந்து இமயத்தின் அடிவாரம் வந்து விட்டனர்.

அங்கே நடந்ததென்ன?

அம்பி என்ற மன்னன், ஏற்கெனவே ஒற்றர்களை 'சாண்டர்' முகாமுக்கனுப்பி, எத்தனை வீரர்கள் அவனோடு வருகிறார்கள் என்பதைக் கணக்கெடுக்கச் சொன்னான். அதன்படி அவர்களும் மூவாயிரவர் உடன் வருகிறார்கள் என்று வந்து சொன்னார்கள். அதன்படியே மூவாயிரம் 'பசு'கன்றுகளைக் கொன்று, அதன் இறைச்சியைப் பக்குவப்படுத்தி, அதோடு மூவாயிரம் கட்குடங்களையும் வைத்து, ஒவ்வொரு வீரனுக்கும் ஒரு பசுங்கன்றின் இறைச்சியையும், ஒரு குடம் மதுவையும் கொடுத்துப் பூரண கும்பமெடுத்து நெற்றியிலே திலகமிட்டு, 'வருக! வருக!' என வாழ்த்தி வழிவிட்டவன் அம்பி என்ற அந்தப் பார்ப்பன மன்னன் என்று வரலாறு கூறுகிறது.

அந்தத் தொடைநடுங்கி அம்பியின் வழித் தோன்றல்தான் நேரு. அதனால்தான் இன்றும் சீனனுக்கு வழிவிட்டு ஒதுங்கி இருக்கிறார். இவர்தான் நம்மையடக்கியாளப் போகிறார். ஆகவேதான் நாம் யார் என்று காட்ட வேண்டிய நாள் நெருங்கிவிட்டது. இந்திய சர்க்கார் உள்நாட்டாரின் இரத்தத்தைக் குடிக்க நாக்கை நீட்டிக்கொண்டு திரிகிறதே தவிர அயல்நாட்டானிடம் வாலாட்டும் அருகதையே அற்றுப் போய்விட்டது. மகா மானக்கேடான இந்தச் சூழ்நிலையில், உள்நாட்டில் வெறுப்பையும் குரோதத்தையும் வளர்த்துக் கொள்வது நல்லதல்ல என்பதை அது உணராதது பரிதாபத்துக்குரியதுதான். என்றாலும் நமது கடமையை நாம் செய்ய வேண்டிய அவசரமும் அவசியமும் வந்து சேர்ந்துவிட்டது. நாம் நமக்காகமட்டும் போராடவில்லை. நம் இயக்க நண்பர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு மட்டும் போராடவில்லை. தமிழ் இரத்தம் ஓடும் ஒவ்வொரு தமிழனுக்காகவும், அதைப்போலவே திராவிட மொழிகளான கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசுகிற அனைவர்க்காகவும் போராடுகிறோம்.

இந்திப்போர்

இது இந்திப்போர் மட்டிலுமல்ல; வடநாடு, தென்னாடு போர்! வேறுபட்ட, மாறுபாட்ட, என்றுமே ஒத்துவராத இருவேறு நாகரிக மக்களுக்கிடையே ஏற்படும் போர். ஆண்டான் அடிமை என்ற பேதத்தை ஒழித்துவிட்டோம் என்று மேடையதிரப் பேசி,மறைமுகமாக தென்னக மக்களை அடிமையாக்கும் சதித் திட்டத்தைத் தவிடு பொடியாக்கும் போர். தமிழ் அழிந்தாலும் எங்கள் நா சுவை ஒன்றே போதும் என்று இங்கு திரியும் நடிப்பர்களின் முகமூடியைக் கிழித்து, அவர்களைச் சந்தி சிரிக்கச் செய்யும் போர். தாய்ப் பற்றில்லாமல், தாய்மொழிப் பற்றில்லாமல், தாய்நாட்டுப் பற்றில்லாமல் வந்தவனுக்கெல்லாம் வெண்சாமரம் வீசும் வடிகட்டிய அயோக்கியர்களின் வண்டவாளத்தைத் தண்டவாளத்திலேற்றும் கடுமையான போர்! சுயநலக்கும்பலை நமது போரின் சூறாவளியில் சிக்கவைத்து அவர்களை உருந்தெரியாமலழிக்கும் உக்ரமான போர். இரண்டிலொன்றைப் பார்த்துத் தீரவேண்டிய இறுதிப் போர். தாயை ஒருவன் [illegible]. அவள் சேலையை விற்றுப் பிழைக்கும் தன்மானமற்றவர்களைத் தவிடுபொடியாக்கும் தீவிரப்போர். தாயின் மானம் போனாலும், எதிரிவீட்டு நாய்போல் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கும் ஐந்தாம் படைகளைத் தலையில் குட்டி மூலையில் தள்ளும் தன்மானப் போர் என்பதை நாடே மறக்கவேண்டாம்.

நக்கீரன் இருந்தால்....!

—: ந. ஐயாசாமி B. A., :—

'குற்றம் எவர் புரியினும் குற்றமே' என்றான் நக்கீரன். அவன் இன்று நம்மிடையில்லை! இருந்திருந்தால்... இப்படி ஒரு எண்ணம் எனக்கேற்பட்டது."கல்லடி பட்டாலும் படலாம், கண்ணடி மாத்திரம் படக்கூடாது" என்பதற்கிணங்கக் 'கண்ணடி பட்டவன் நம் நக்கீரன்.

வயிறு வாடிய ஒருவன் இறைவனை அண்டினான். அவன் பெயர் தருமி! இறையவனை அண்டியவர் கைவிடப்படார் அன்றோ! இறைவனும் ஓர் நற்றமிழ்ப் பாடலை எழுதித் தருமியிடம் கொடுத்தான்! மதுரை மன்னனிடம் தருக எனப் பணித்தான்; அவன் தரும் பண்மும் பெறுக என்றான். ஏழைத் தருமி பாடலை எடுத்துக்கொண்டு ஏகினன். சொன்னதைச் செய்தனன். அவன் நினைத்தது ஒன்று... நடந்தது நினையாத ஒன்று!

"கொங்குதேர் வாழ்க்கை
  யஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது
  கண்டது மொழிமோ!
பயிலியது கெழீஇய
  நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை
  கூந்தலின்
நறியவும் உளவோ
  நீயறியும் பூவே!"
      [குறுந்தொகை]

என்பதே அப்பாடல்.

'பூக்களையே அறிந்து வாழ்கின்ற வண்டினிடம் புலவர் உண்மையைக் கூறுமாறு கேட்கின்றார்! நீ அறிந்த பல பூக்களுள் என் காதலியின் கூந்தலிலிருந்து வருகின்ற வாசனைக்கும் மேலான வாசம் பெற்ற பூக்கள் உண்டா?' என்று கேட்டார்.

பூக்களுக்குள்ள மணம் கூந்தலுக்கில்லை என்பதை அறிந்துதான் புலவர் பாடல் செய்திருக்கிறார். தன் காதலியை மிகைபடப் பாடியிருக்கிறார்! இது புலவர் தொழில்! காதலியை மிகைப்படுத்திப் பாடியிருப்பது பொருந்தாது என்றும், கூந்தலுக்கு இயற்கையான மணம் இல்லை என்றும் நக்கீரன் குற்றன் கூறினான்.

தன்னை விரும்பும் பெண்ணை மிகைப் படுத்திப் பாடுவது இயற்கை! "காக்கைக்கும் தன்குஞ்சு போல", கணவனுக்கு மனைவி கட்டிக் கரும்பேயன்றோ' அப்படிப்பட்ட கரும்பினைப் புகழும்போது எதையும் இட்டுக்கட்டலாம் அல்லவா? அப்படி இட்டுக் கட்டுவது புலவர்கள் செய்கை என்பதை நக்கீரன் அறியாதவனா? அறிந்தவனே! ஆயினும் குற்றம் கூறினான். அப்படிக் குற்றம் கூறியது உண்மை. அதற்காக இன்னல்கள் அடைந்தான் நக்கீரன் என்பது கதை! பெருங்கதை! கருததுக்கு ஒவ்வாத கண் மூடிக் கதை!

இலக்கணக் குற்றம் இல்லாத பாடல் என்றான் நக்கீரன்! பொருட் குற்றம் உண்டு என்றான்! குற்றத்தைச் சுட்டிக் காட்டினான், காரணத்தோடு!

குற்றமொன்றும் குன்றனையதன்று. மிகச் சிறிது! அச் சிறிய குற்றத்தையும் ஏன் அவன் எடுத்துக் காட்டினான் என்பதை நம் மனக்கண்கொண்டு ஆய்ந்தறிந்து தேர்தல் வேண்டும்,

1. பாட்டை எழுதியவன் இறைவன்! பாட்டைக் கொண்டு வந்தவன் தருமி எனப்படுபவன். உழைத்தவன் ஒருவன்; பலனை உணர்பவன் வேறொருவன். பரிசு பெறுவதற்கென்றே வந்தவன். இதனை நக்கீரன் உணர்ந்தான். "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பதை அவர் உணர்ந்தவரே!

2. வந்தவன் தமிழ்ப் பாடலாற்றும் தகுதியற்றவன்! கொடுத்ததைக் கொண்டு வந்து கொடுத்தான்! ஏவப் பட்ட அம்பு போல!

3. வந்தவனுக்குத் தமிழ்ப் பாடல் இயற்றும் தகுதி இருந்திருப்பின், இலக்கணக் குற்றமில்லை, பொருட் குற்றமே உண்டு என்று நக்கீரன் கூறித் தெளிவுபடுத்தியவுடனே, அதற்கொரு மாற்றமோ, விளக்கமோ கூறியிருப்பான்! அதைச் செய்யவில்லை அவன்!

"திருவள்ளுவர் குறளே அரங்கேறக் கூடாது என்று தடுத்தவன் நக்கீரன்" என்கின்ற பெரும்பழி இக் காலத்துப் பட முதலாளிகளால் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது!

அதுபோதாதென்று!

இறைவன் எழுதிய இன்சுவைக் கவிதைக்கு இடுக்கண் விளைத்தவன் இவன் என்பதற்காக இறைவனின் கண்ணிற்கு இரையானான் என்னும் இணையற்ற பழிதாங்கும் இவனுக்கு மற்றொரு பழி இருக்கவேண்டாம். ஆனால் இருக்கின்றது.

அதனால் தான் நக்கீரனுக்குப் பரிந்து கொண்டு ஓடி வந்திருக்கின்றோம்.

"ஔவையார்தான் திருக்குறள் அரங்கேற்றத்திற்கு வழி கோலினார்" என்பதைக் கண்டும் கேட்டும் உயிரோடிருக்கும் நாம் நக்கீரன மேலுள்ள குறைக்கு என்ன செய்யப் போகின்றோம்?

விலங்கொடிக்க வீறிட்டெழு!

சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் பேச்சு

★ அரசியல் சட்டத்தையே அவமதிக்கும் ஆணவமிக்கஅமைச்சரை அகற்றுவோம் வாரீர்!

தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! தோழர்களே! இன்றைய தினம் கொட்டும் மழைக்கிடையில் நீங்கள் திரளாகக்கூடி இருக்கும் ஆர்வத்தைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்றையதினம் நடைபெறும் தி. மு. க. வின் பொதுக் கூட்டம் மாறுபட்ட சூழ்நிலையில் நடைபெறுகிறது. இந்தியாவின் புதிய ஏகாதிபத்திய வாதிகள் 'இந்தி திணிப்பின் மூலம் நம்மை நிரந்தர அடிமைகளாக்க திட்டமிட்டுவிட்டனர். தென்னகம் இந்தியின் அடிமைச் சுமையைத் தாங்கும் நிலை உள்ளது.

இன்று புகும் இந்தி நமக்குப் புதிதல்ல; கடந்த 20 ஆண்டுகட்கு முன்பே, நமது இயக்கம் முளை விடாத முன்பே ராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்டு,

இடையில் சட்டசபையிலும் மக்கள் மன்றத்திலும் என்ன நியாயத்தை நாம் எதிர்பார்க்க முடியும்? நம்மை மாற்றானுக்குக் காட்டிக்கொடுக்கும் மதோன்மத்தர்களிடம் நாம் எத்தனை நாள் கட்டுப்பட்டிருப்பது? இந்தியை இந்த நாட்டில் வேர் ஊன்ற விட்டோமானால் இனி 'திராவிடம்' உரிமை பெறும் என்கிற எண்ணத்தையே விட்டுவிடவேண்டியதுதான்; மீண்டும் நமது பழைய புகழும் மேன்மையும் சிறப்பும் பண்பாடும் மொழியும் தனித்துத் துலங்கவேண்டுமானால் டெல்லியின் கழுகுப் பிடியிலிருந்து மீளத்தான் வேண்டும். அதற்கான காலம் வந்துவிட்டது. மொழி வழிவரும் வடக்கின் வல்லரசை வீழ்த்துவதற்கு இதுவே ஏற்ற நேரம்!

மாற்றுக் கட்சிக்காரர்கள் நியாயத்திற்கும் நேர்மைக்கும் எவ்வளவு வாதாடினாலும் சொன்ன

யாகக் கூறினர். இவைகள் எவ்வளவு திறமையான நடிப்பு, கபடநாடகம் என்பது இப்போது தான் தெரிந்தது.

பிரதமரின் உறுதிமொழி உதாசீனம் செய்யப்பட்டு தலைவரின் தாக்கீது வந்தது. இந்தி தேசிய மொழி என்று அறிவிக்கப் பட்டது. 1965-க்கு மேல் எங்கும் இந்தி மயமாக்கப்பட வேண்டும் என்று உண்மையாகக் கூறிற்று. கல்வி மந்திரியை அழைத்துக் கூறுகிறது. 65-க்குள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வை. சட்ட மந்திரியைக் கூப்பிடுகிறது அறிக்கை. 1965-க்குப் பிறகு கோர்ட் நடவடிக்கை அனைத்தும் தேசிய மொழியான இந்தியில்தான் நடைபெற வேண்டும் என்று கட்டளை இடுகிறது. பள்ளிக்கூடம் முதல் பாராளுமன்றம் வரை அத்தனை துறைகளில் 'இந்தி' நுழையட்டும் என்று அறைகூவல் விடுகிறது. ராஜ்ய காரியங்கள் தனது 14 மொழிகளிலே நடைபெறாமல் இந்தியிலேயே நடைபெறவெறிக் கூச்சல் இடுகிறது.

ஏழு மாதத்திற்கு முன்பு இங்குள்ள சி. சுப்பிரமணியம் டெல்லி

கொண்டோம் என்ற நினைப்பு!

அலாவுதீன் கதையிலே அற்புத விளக்கைத் தேய்த்து மிகப் பலம் பொருந்திய ஆற்றல் வாய்ந்தபூதத்திடம் தனக்குவேண்டிய பொன், பொருள், மாளிகை, பெண் இவைகளைப் பெற்றுக் கொண்டு மகிழும் 'நோஞ்சான்' பிள்ளையைப்போல் நமது ஆற்றலை, திறமையை வடக்கிற்கு அடகு வைத்து, 'நான் உன் அடிமை' என்று நின்று தென்னாட்டின் மூளை பலத்தால் டெல்லி சர்க்கார் இன்று வாழ்கிறது.

இன்றோ நமது தன்மானத்தைக்காக்க இந்தி நம்மைபோருக்கழைக்கிறது. தெற்கை நோக்கி விடுத்த போர்க்குரல் இது. இந்தச் சவாலை நாம் ஏற்போம். ஆயிரக்கணக்கில் எதிர்த்து நின்று வல்லாட்சிக்கு ஒரு பாடத்தைக் கற்பிப்போம்.

தமிழ் நாட்டில் உள்ள எல்லாத் தலைவர்களும், எல்லா இதழ்களும் ராஷ்டிரபதியின் தாக்கீது எதிர்ப்பைக் காட்டி யுள்ளார்கள்

ஆகஸ்ட் மாதம் 30-ம்தேதி வரை வாய்தா கொடுத்துள்ளோம். எந்த மக்கள் மன்றத்தின்முன் தலைமை அமைச்சர் கொடுத்த வாக்குறுதியை மீறி ராஷ்டிரபதியின் தாக்கீது பிறப்பிக்கப்பட்டதோ அந்தத் தாக்கீது வாபஸ் பெறப்படா விட்டால் தமிழர்கள் 31-ம் தேதியிலிருந்து வீதியிலே இருந்து நீதிக்குப் போராடுவது உறுதி, உறுதி, உறுதி! மனிதர்களுக்காகச் சட்டமே தவிர சட்டங்களுக்காக மனிதர் இல்லை. இன்றையதினம் எந்த மனிதன் சட்டத்தைக் கொண்டு வந்தானோ அவனே அதைச் சுக்கு நூறுக்குவதை தவிர வேறு வழியில்லை. நாம் ஆளவந்தார்களிடம் இந்த வழி வழி நீதியைப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை அர்த்த ராத்திரிலே ஒரு பத்துப்பேரை வைத்துக் கொண்டு செய்து விட்டதெல்லாம்சட்டமா? இவர்களுக்குச்

★ நாம் நம் இழந்த உரிமையைப் பெற உயிரைக் கொடுப்போம். தியாகம் புரிவோம் வாரீர்!

தி. மு. க. தலைவர்களை சிறைப்படுத்தி, கடற்கரைக் கூட்டத்திற்குவந்த மக்கள்மீது, கண்ணீர் புகைக் குண்டு வீசியும், குதிரைக் குளம்பு கொண்டு மிதித்து தடியால் அடித்துப் பாழ் படுத்தினர். திருமண வீட்டில் சிப்பைஒளித்து வைத்து விட்டால் மணம் நடக்காது என நினைத்த அப்பாவியைப்போல அவர்கள் அவமானப்பட்டது சொல்லத் தரமன்று!

நாங்கள் நாட்டு மக்களின் பியூஸ் கேரியரைப்போல் (Fuse carrier) உள்ளவர்கள் எங்களை எடுத்துச் சென்று விட்டால் ஆளவந்தார்களே நீங்கள் கருகிச் சாவதல்லால் வேறு வழி இல்லை.

காமராசர் முன்பு என்ன நினைத்தாரோ அது நடைபெறவில்லை. அவர் நினைக்காதது எண்ணாதது. நடக்கக்கூடாததெல்லாம் நடந்து விட்டது. ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. கடுமையான விரோதியிடமிருந்து வராத அவமானம் அப்பாவியான நண்பனிடம் வந்துவிடும் என்று.

அதை மெய்ப்பித்து விட்டார் நமது கனம் காமராசர். பாடம் படித்துக்கொள்ளட்டும். இந்திப் போர் நடக்க விடாமல் தடுக்க வேண்டுமானால் — காமராசரும் மற்ற மந்திரிகளும் ஓடட்டும் டெல்லிக்கு. நிலையைக் கூறி இந்தியின் ஆதிக்கத்தை-ராஷ்டிரபதியின் தாக்கீதை வாபஸ் பெறச் சொல்லட்டும்.

இந்தக் காமராசருக்கும் அந்த எண்ணம் இல்லையே, அண்ணா என்றோசொன்னார். நாங்கள் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று. திராவிட இயக்கத்தைப் பற்றி உவமைக்காக.உவமைக்கும் உண்மைக்கும் வேறுபாடு அறியாத காமராசர் ஓர் ஊரில் கூறியிருக்கிறார்: தி.மு க காரர்கள் இரட்டை துப்பாக்கிஎன்கிறார்கள் அவர்கள் துப்பாக்கியில் தோட்டா கிடை

★ குப்பைக்குச் சமமான வடநாட்டுக் குள்ளநரிகள், இங்கு வந்தால்கூட இந்தியிலேயே பேசுகின்றன. இது அதிகாரமா? ஆணவமா?

தாய்மார், பெரியோர், இளைஞர் அறிஞர்கள் பலரால் எதிர்த்துப் போரிட்டு 1000பேர் சிறை புகுந்தும் தாளமுத்து-நடராசன் ஆகிய இருவரின் உயிரை அர்ப்பணித்து தமிழ் மானத்தைக் காக்கப்பட்டது. இது அன்றைய சரித்திரம்.

பிறகு ஓமந்தூரார் நாளிலும் முயற்சி செய்யப்பட்டு, இந்திபுகுகையில் திராவிடர் இயக்கம் போராடி கும்பகோணத்தில் இரத்த ஆறு ஓடிய பிறகு நமக்கே வெற்றி கிட்டிற்று.

அதற்குப் பிறகு காமராசர் பச்சைத்தமிழர் ஆட்சியில் கொல்லைப் பக்கம் வந்து நுழைந்தது. யாருமற்ற இரவிலே கள்ளத்தனமாக கதவு திறந்துவிடும் தொழிலைப் பூண்டிருந்த மானங் கெட்டவர்கள், 'இந்தி கட்டாயம்இல்லை. விருப்பப் பாடந்தான். அதுவும் 14 இந்தி மொழிகளிலே ஒன்று கற்றுக்கொள்ளலாம்' என்று. இந்தியை மட்டும் புகுத்தினர், இந்தக் கையாலாகாத காமராசரும், சுப்ரமண்யமும். இதற்குத் தாளம் தட்டினர். இவர்கள் உள்ளத்திலே வஞ்சம் நிறைந்து இருந்தது. பார்வையிலே கள்ளத்தனம் புகுந்திருந்தது. இந்த ஆண்டு கோடைவிடுமுறைக்குப் பின் பள்ளியின் தேர்வு வெளியிட்டபோது, இந்தி மொழியில் மதிப்பெண் பெற்றவர்கள் 'தோல்வி'' என்று அறிவிக்கப் பட்டது.

சொல்லை காப்பாற்றும் யோக்கியதை அற்றவர்களே டெல்லியின் சிம்மாசனத்திலே வீற்றிருக்கிறார்கள்.

7-8-59-ல்திரு.பிரேஸ் அண்டனி என்ற ஆங்கிலோ இந்தியர் கொண்டுவந்த தனிநபர் தீர்மானத்தின்மீது விவாதம் நடக்கையில், இந்திய தேசிய மொழிகள் 14மொழியுடன் ஆங்கிலத்தையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.அப்போது நான்எழுப்பிய ஒரு துணைக் கேள்விக்குப் பதில் அளிக்கையில் கனம். நேரு அவர்கள், 'இந்தி மொழி பேசாத தெள்ளிய மக்களின் கருத்தை அறியாமல் இந்தியைத் திணிக்க மாட்டோம், இது உறுதி' என்று இரண்டுமுறை வாக்குறுதி தந்தார். நம்பினோம்.

ஆனால் சென்ற 4-9-59-ல் இறுதியில் பார்லிமெண்டில்—ஆட்சி மொழிக் குழு பற்றி கோவிந்தவல்லபபந்த் ¾மணிநேரம் பேசினார்.அதற்கு முன்பு நேரு பெருமான் கூறிய உறுதி மொழி என்னவாயிற்று என்று கேட்டேன். உலகத்திற்குப் பஞ்சீலம் போதிக்கும் பிரதமர் பதில்பேசவில்லை. பந்த் அவர் முகத்தைப் பார்த்தார். நேரு தனது கன்னத்தில் கைவைத்துக்கொண்டு மௌனம் பூண்டார். நான் உடனே கேட்டேன், உங்களுக்குள் கருத்து வேற்றுமை உண்டா? என்றேன். ஒரே கட்சியில், மந்திரிசபையிலே இதென்ன மாற்றம் என்றேன்.

★பொறுத்ததுபொறுத்தோம்! ஜூலை முடியட்டும்; ஆகஸ்டு வரட்டும். இரண்டிலொன்றை நம் இரத்தத்தால் நிர்ணயிப்போம்.

யில் வந்து கோர்ட் முதலிய நடவடிக்கைகள் பிராந்திய மொழிகளின் வழி வகுக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் அவரே இதே ஊரில் இந்தி படித்தால் என்ன கேடு வந்துவிடும் என்று இரட்டைநாக்குடையவராக மாறி விட்டார்.

மத்திய சர்க்கார் பரீட்சையிலே—ஆங்கிலத்திலே யாராவது அல்லது மற்ற இந்திய மொழிகள் 14ல்ஏதாவதொன்றில் தேர்வளிக்கலாம் என்று கூறிவிட்டு, இந்தியை மட்டும் இவர்கள் புகுத்துகிறார்கள் என்றால் இதில் அடங்கி இருக்கும் பொருள் என்ன? அரசியல் சட்டத்தையே அவமதிக்கும் ஆணவமல்லவா இது!

அண்மையில் திரு ராஜாஜி காசிக்குச் சென்றிருந்தபோது, இந்தியில் பேசும்படி மக்கள் கூச்சலிட்டனர். தனக்கு இந்தி தெரியாது என்று எத்தனைமுறை

★காமராசரே! கொக்கரித்த லூயி மன்னனைக் கோடிவரை அடித்துத் துரத்தினர், பிரான்ஸ் நாட்டினர்! அதையே இங்கும் விரும்புகிறீரா?

சட்டத்தை அமைக்கக்கூடத்தெரியாத ஞான சூன்யங்களாக உள்ளனர்.

சட்டத்தைத் திருத்துவது எப்படி என்கின்றனர்.பிறவியிலே உயர்ந்தவனாக மனிதன் பிறக்கிறான்; இறக்கிறான். ஆனால் சட்டம் மட்டும் என்ன அப்படி சிரஞ்சீவித்தத்துவம் உடையது? சட்டம் என்று மக்களின் பகையாகிறதோ அன்றே கிழித்

யாது. இதோ பாருங்கள்' என்று பக்கத்தில் பாதுகாப்புக்கு நின்றிருக்கும் ரிசர்வ் போலீசை சுட்டிக் காட்டி எங்கள் துப்பாக்கியில் தோட்டாக்கள் உண்டு என்றாராம். இந்த ஆணவம் எதைக் காட்டுகிறது? ஆளும் கட்சியில் முதன் மந்திரியாய் இருப்பவருக்குப் பேசக் கூடத் தெரியவில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எவ்வளவு தான் தரங்கெட்டிருந்தா

கனம்களல்ல, டெல்லியின் கூலியாட்கள்!

இந்தக் கபட நாடகத்தின் மூலம் காமராசரும் மாநிலமந்திரிகளும் நமக்கு என்ன தெரிவிக்கிறார்கள். தாங்கள் டெல்லியின் கூலிகள் என்றும், பதவி பித்துக் கொண்டு சொன்ன சொல்லை மாற்றும் நம்பிக்கைத் துரோகிகள் என்றும் நாட்டு மக்களிடத்தே சொல்லாமல் சொல்கிறார்கள்.

இது போன்ற நயவஞ்சகர்

குருதியிலே தோய்த்துக் கொடிநாட்டுவோம்!

உடனே இந்தி வெறி பிடித்த 60 வது முதிர்ந்த உறுப்பினர்களும் மற்றவர்களும் 'ஓ' வெனக்கூச்சலிட்டனர். என்னை, ''உட்கார் உட்கார்; பேசாதே பேசாதே'' என்றனர். 'கூடாது, கூடாது' என்று, என்னை அடக்கி ஒடுக்கப் பார்த்தனர். நான் விடவில்லை. மீண்டும் மீண்டும் எனது குரலை உயர்த்தி—வாக்குறுதி என்னவாயிற்று? பதில் வேண்டும். என்று ஆர்ப்பரித்தேன் பிறகுதான் என்விடா முயற்சியையும்—குரலையும் கண்டு அடங்கினர். இறுதியாகப் பந்த் வாக்குறுதிஅளித்தது பற்றி என்னநடக்கின்றது என்று எங்களுக்குத் தெரியும் என்று திமிரோடு சொன்னார். ராஷ்டிரபதியின் தாக்கீது வந்தபின் இது பற்றி பேசலாம் என்று இறுதி

எதிர்ப்போரை எதிர்ப்போம்!

கூறியும் கேட்காது அவரைத் திருப்பி அனுப்பினர். தமிழ் நாட்டுக்குத் தள்ளப்பட்டார்.

இங்கே குப்பைக்குச் சமானமான அரசியல் தலைவர்கள் வந்தால்கூட இந்தியில் பேசுகிறார்கள். கோவிந்தாஸ் அவர்கள்'தமிழ் நாட்டு மக்கட்கு இந்தி தெரியும் ஆதலால்தான்கூட்டத்தில்பொறுமையாக இருக்கிறார்கள்' என்று பேசினார். அரசசபையிலே தனது திறமையைக் காட்டி சங்கித வித்துவான் சபாஷ் பட்டம் பெறுவதுபோல் நாமும் நமது ஆற்றலையும் திறமையையும் காட்டி 'சபாஷ்' என்று பேர் பெற்றுக்

தெறியப் படவேண்டிய ஒன்று' இதை உலகபெலாம் காணலாம்'

துருக்கியில் மாங்கனிஸ் ஆட்சியை 12-மணிநேரத்திற்குள் சீட்டு கிழிக்கப்பட்டது. மந்திரிகளை புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளை சிறையில் அடைப்பது போல அடைத்தனர் இங்கு மட்டும் விக்ரமாதித்தன் சிம்மாசனமா, காமராசர் உட்கார்ந்ததும் ஞானம்வர?

இருட்டறையில் என்றைக்கோ ஒரு நாள் நடைபெறும் தேர்லில் திருட்டோட்டை இட்டு பிழைப்பவர், நம்மை சுடுகாட்டுக்கனுப்புவதாக மிரட்டுகிறார். உண்மையில் சுடுகாட்டுக்கனுப்பப்பட வேண்டியது யார் என்று மக்கள் தீர்ப்பளிப்பார்கள்.

லும் ஆட்சி பீடத்தில் அமர்ந்த பிறகுமா உங்கள் அறிவீனத்தைக் காட்டிக் கொள்ளவேண்டும்.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை, கள்ள நோட்டடிப்பவர்களை பிடிப்பதற்கே உங்கள் கையில் துப்பாக்கி ஆட்சி. இதை விட்டு விட்டு தரம் கெட்ட முறையில் பேசஎன்னதைரியம்என்று கேட்டு உரை முடித்தார்.

முகப்பு விளக்கம் :

இயக்கத்தின் இரும்பு மனிதர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் இதயத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார், நமது வண்ணக் கலைஞர்.

15-7-60 இதழில்

டி. கே. சீனிவர்சன் தரும்

மும்முனைப் - போராட்டம்

மாறும் உலகிலே மறையும் முறைகள்!

ஒரு நாட்டின் அரசியற் சூழ்நிலை, அது தொடர்பு கொண்டிருக்கும் மற்ற நாடுகளின் தன்மையைப் பொறுத்து நலமாகவோ, நலிந்தோ இருந்து வரும் எந்நாடும் பிறநாடுகளுடன் எத்தொடர்பும் இல்லாமல் தனித்து இயங்க வழியில்லை. அதி தீவிரக் கொள்கைகளை வற்புறுத்தும் நாடுகள் என்று கருதப்படும் பொதுவுடைமை ருசியாவும், சீனாவும் அதே கொள்கைகளை நடத்தி வரும் வேறு நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுகின்றன.

★ மக்களை மதிக்காதவர் மக்கள் தலைவரல்ல!

வெளியுலக அரசியலிலும், ஐ. நா. சபையிலும் இப்பிணைப்பு விட்டுக்கொடுக்கப்படுவதில்லை. அங்கேரியில் நடைபெற்றகிளர்ச்சியைத் தனக்குச்சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட ருசியாவை உலக நாடுகள் கண்டித்தன. செஞ்சீனா, செக்கோஸ்லோவக்யா, கிழக்குஜெர்மனி ஆகிய நாடுகளோ ஆதரித்தன. காரணம், இவையனைத்தும் பொதுவுடைமையர் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை என்பதுதான். செஞ்சீனா தனித்திருப்பதுபோல் தோன்றினும் உண்மையில் அது தனித்து இல்லை. ஐ. நா. செஞ்சீனாவை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவைத்திருக்கும்முறையை ருசியா எதிர்த்து வாதாடியது. இதே போல் ஒவ்வொருகுறிப்பிட்ட கொள்கையைச் சார்ந்துள்ள நாடுகள் தத்தமக்குத் தேவைஏற்படும்போது ஒன்றுபட்ட உணர்வைக் காட்டுவது இயல்பு. காலனி ஆதிக்கம் மேற்கொள்ளுவது என்பது பழைய முறை. அந்நிலை கைவிடப்பட்டுத் தனியாட்சிக் குடியுரிமை வழங்குதலே அரசியற் சான்றாண்மை என்று இன்று பல்காலும்பேசப்படினும், பிரெஞ்சு, பிரிட்டன், போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் இறுமாப்பை இடையிடையே அமெரிக்காவும் ஆதரித்ததுண்டு. எனவே இங்குக் காலனிக்கொள்கையுள்ள நாடுகள் ஒன்றுபட்டன என்பது தெளிவு.

ஜனநாயகப் பண்பாட்டின்படி மக்களின் முடிவை ஏற்காமல் ஒதுங்கிவிட முடியாது. பழைய முறைகளில் இருந்த உரிமைகள் எல்லாம் இன்று சற்றும் பொருந்தாது. இருநூற்றெண்பது ஆண்டுகளிலிருந்த பிரிட்டிசார் இந்தியாவில் சொந்த உரிமை கொண்டாடி இந்தியர்களை தங்களது நிரந்தரக் குடிகளாக ஆக வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. அதேபோல் ஆப்ரிக்காவையும் வற்புறுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலைமைகள் உருவாகிவிட்டன. இனி உரிமைக் குரல் எழுப்பும குடிமக்களே வெற்றியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. வரலாறும் அதைத்தான் மெய்ப்பித்திருக்கிறது.

அமெரிக்காவில் வட மாநிலங்களுக்கும் தென் மாநிலங்களுக்கும் போராட்டம் நடந்த

★ ஆட்சியிலிருப்போரே அறிவீர் அரசியலை!

பொழுதுபிரிட்டிசார்தென்மாநிலங்களை ஆதரித்தார்கள். தென் மாநிலங்களில் அப்பொழுது அடிமைகள் வணிகம் நடந்துவந்தது. இதனால் அமெரிக்கருக்குப் பிரிட்டிசார் மீது வெறுப்பு வளர்ந்தது. அமெரிக்க உள்நாட்டுப் போர் நடந்து முடிந்த பிறகு, அமெரிக்கா பிரிட்டிசாருக்குச் சொந்தமான கனடாநாட்டின் மீது படையெடுத்தது. இதை அமெரிக்க மக்கள் ஆதரித்தார்கள். காரணம் பிரிட்டிசாருக்குக் கனடா கட்டுப்பட்டிருந்தது. நெருக்கடி மிக உச்சக் கட்டத்துக்குப் போகவும் கனடாவிற்குக் குடியேற்ற நாட்டுத்தகுதியை பிரிட்டிசார் கொடுத்தார்கள். ஏன்? வேறு வழியில்லை. மற்றும் கிரிமியன் போர்களில் ரஷ்யாவோடு பிரிட்டன்போரிட்டது. நாளுக்குநாள் ஆசியாவிலும், ஆப்ரிக்காவிலும் பிரிட்டிசாரின் செல்வாக்குச் சரிந்து வந்தது. இதனால் கனடாவின் குரலுக்கு இறங்கிவிட்டது. பிரிட்டிசாரின் ஆதிக்க உணர்வு அதிலிருந்தே குறையத் தொடங்கிவிட்டது. இதற்குமுன் மன்றோ என்னும் அமெரிக்கக் குடியரசின் தலைவர் ஒருவர் ஒரு அரசியல் கருத்தை ஆணித்தரமாக வெளியிட்டு அமெரிக்க மக்களின் விடுதலை உணர்ச்சியைத் தெளிவு படுத்தினார். அவரது அறிக்கையின்படி அமெரிக்கா, ஐரோப்பாவின் அலுவல்களில் தலையிடாது என்றும், பிரிட்டிசார் இனித் தங்கள் அமெரிக்க நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவதை அமெரிக்க மக்கள் விரும்பவில்லை யென்றும், அமெரிக்க அலுவல்களில் யார் தலையிட்டாலும் அதைத் தவறான நட்புரிமை அல்லது வேண்டாத குறுக்கீடாகத் தான் கருத வேண்டி வரும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இதை ஓர் அரசியற் திருப்பம் என்றே சொல்லவேண்டும். பிரிட்டிசாரின் நேரடி ஆதிக்கத்தை அகற்ற மன்றோவின் இப்பிரகடனம் ஒரு தூண்டுகோலாக விளங்கியது.

இதேபோல் காலனிஆதிக்க வெறியில் அழுந்திப்போன பிரெஞ்சு, ஹாலந்து, போர்த்துகீஸ், மற்றும்ஸ்பெயின் நாட்டுக்காரர்கள் எல்லாம்அரசியல் உலகில் புதிய பாடம் கற்றுக் கொள்ளவேண்டி வந்தது விஞ்ஞானத் துறையில் புதுப் புது ஆராய்ச்சிகள், நில உல.

★ குடிமக்களின் முன்னே கொடுங்கோலர் தூள், தூள்!

கின் பாதைகளில் கண்டுபிடிப்புகள் எல்லாம் மற்ற நாட்டுக்காரர்களுக்குப் பொறாமையை உண்டாக்கின. ஒருவரையொருவர் அரசியல் துறையில் அமிழ்த்தும் எண்ணம் மறைமுகமாக இருந்துகொண்டே வந்தது. இன்று ஒரு அளவு அத்தகைய நெருக்கடிகள் அறவே நீங்கி தீர்க்கப்பட இயலாத எண்ணங்கள் ஐ. நா. சபையின் வழியாகத் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டன. இந்தச் சபையும் செல்வாக்கிற்கு இடம் தந்துவிடாமல் மாற்றமடைந்தும் வருகிறது.

பிரஞ்சுநாட்டு புரட்சி, பின்னர் அமெரிக்காவைத் தாண்டிவிட்டது. அமெரிக்காவின் உள்நாட்டுப் போரையும் குடியரசுத் தலைவர் மன்றோவின் அறிக்கையும் பற்றிப் பார்த்தோம். இதையடுத்து ருசிய நாட்டிலும் 1917-ல் புரட்சி தோன்றியது காரல்மார்க்ஸ், எங்கல்ஸ் எனும் இருவர் எழுதிய பொருளாதாரத் தத்துவங்களை வைத்து ஒரு புது தத்துவமே உலகை ஆட்டிவிட்டது. உழைப்பினால் ஒரு பொருளின் மதிப்பு பாதிக்கப்படுவதையும், மக்களே எந்த அரசினையும் தேர்ந்தெடுத்து நடத்தவேண்டும் என்றும, முதலாளித்துவம் என்பது சூழ்ச்சியின் மறு பெயர் என்றும சொன்னார்கள். ஆண்டவன், மறுபிறவி, ஆன்மா, மதம் எல்லாம் முழுப் பொய். அவையெல்லாம் மயக்கம் தரும் அபினி போன்றவை என்று எழுதினார்கள். உழைப்பவனது ஆட்சியே உலகில் இறுதியாக நிலைக்கும் என்று வெளியிட்டார்கள். இலெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் போன்றவர்களின் துணையால் ருசியப் புரட்சிநடைபெற்றது.

தனிமனிதன் மன்னன் என்ற பெயரால் அட்டூழியங்கள் செய்தாலும் மக்கள் அதைப் பொருட்படுத்தாமல் அவ்வப்பொழுது மாற்ற முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதற்கு அண்மைக் காலத்தில் எகிப்து நாட்டு மன்னர் பருக் வெளியேற்றப் பட்டதற்கு அம்மக்கள் தெரிவித்திருந்த அமைதியான ஓர் சூழ்நிலையை உற்றுநோக்கலாம். இப்படியே ஒரு நாடோ ஒரு மன்னனோ, அறநெறி தவறி நடந்த சமயங்களில் வரலாறு காட்டிய பல பிழை திருத்தங்களை நாம் காணக் கூடும்.

உதாரணமாய், மாறி வரும் உலக அரசியலில் நிலையான சூழ்நிலைகள் எவையென்று அறுதியிட முடியவில்லை. அண்மைக் காலம் வரை ஜப்பானியரது வாழ்க்கை அமெரிக்காவை எதிரொலித்தது. ஜப்பானில் பல்வேறு தொழிற்சாலைகளைப் போருக்குப் பிறகு அமெரிக்கர் ஏற்படுத்தினர், உள் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிப்படைப் பொருட்களும், நிதியும்நிறையக் கொடுதது உதவி வந்தனர். ஜப்பானைத் தனக்கு ஒரு நல்ல வணிகக் கூடமாகவும், தூரக்கிழக்கு ஆசியாவின் படைக்களமாகவும் வைத்துக் கொள்ளும் நோக்கோடு திட்டமிடப்பட்டதன் வேலைகள்தான் இவை. எதிர்காலத்தில் ஜப்பானிய அரசியலில் அக்குடிமக்களின் உரிமை அறவே இல்லாமல் நசித்துவிடக்கூடும் என்ற அச்ச உணர்ச்சி ஜப்பானியரில் பலருக்கு ஏற்பட்டது. அங்குள்ள அரசியற் கட்சிகள், குறிப்பாக அன்று முதல் முற்போக்குக் கருத்துடைய கட்சியினர் அமெரிக்க எதிர்ப்பு உணர்ச்சியை வலிமைப் படுத்

★ புரட்சிப் பாடத்திற்கோர் புதுமுறைச் சட்டங்கள்

தினர். ஆளும் கட்சித் தலைவர் கிசி அமெரிக்காவை ஆதரித்து வருகிறார். ஜப்பானுக்கு அருகிலிருக்கும் சீனாவோ, அமெரிக்காவை எதிர்த்து வருகிறது. செஞ்சீனச் சூழ்நிலையும், அதன் புதிய மின்வேக முன்னேற்றமும் ஜப்பானிய இளைஞரிடத்து ஒரு அரிய

நாமும் செஞ்சீனாவைப் போல் யாருடைய சூழ்நிலைக்கும் உட்படாமல் இலட்சியப் பாதையொன்றை அமைத்துக் கொண்டு அதில் பீடுநடை போடவேண்டும் என்ற கருத்து வளர்ச்சி ஏற்பட்டுளது. காரணம், கடந்த காலத்தில் ஜப்பான் இதே அமெரிக்காவினால் எவ்வளவு அலைக்கழிக்கப் பட்டது என்பதும், நாகசாக்கி, இரோசிமா என்ற இரண்டு நகரங்களும் அணுக்குண்டினால் தூள் தூளாகச் சிதைக்கப்பட்டன என்பதும் அவர்கள் நெஞ்சிலிருந்து நீங்கிவிடவில்லை. இன்னும் பசுமையோடு உணர்ச்சி மிக்கோர் உள்ளங்களில் அவை நிழலாடிக் கொண்டுள்ளன.

அங்கு இனி மன்னரது பரம்பரை என்ற பிற்போக்கு அரசியல் முறையை ஒழித்துவிட்டு முற்போக்கான தொழிற்கொள்கையுள்ள ஆட்சியை ஏற்படுத்த மக்களுக்கு விருப்பம் உண்டாகியிருக்கிறது. ஜப்பானில் லட்சிய வேகம் வளர்ந்து வருகிறது என்றால் அது இனித் தடைப்பட்டு நிற்கும் தகைமையுடையது அல்ல, என்றுதான் பொருள். முன்பு சீனாவைப் பிரிட்டிசார் ஆட்படுத்திக் கொண்டு அடிமை ஆட்சி நடத்தி அவர்களது வாழ்வை நிலைகுலைத்த நிகழ்ச்சிகள் வரலாற்றின் கறை படிந்த சுவடுகளில் காணப்படுகின்றன. நாற்பது கோடிச் செஞ்சீன மக்களும் நலிந்து நாயினும் கேடாய் நடைபிணம் போல் வாடிய வரலாறு இன்னும் மறைந்து விடவில்லை. ஏன்? ஆசியாவின் பெரும் பகுதியைத் தனது காலடியிற் போட்டு ஏகாதிபத்திய வெறியாட்டம் நடத்திய கல்கத்தா இருட்டறைச் சம்பவங்களும், கிளைவின் இரட்டையாட்சி வேடிக்கைகளும், ஸ்வீகாரம் எடுக்கக்கூடாது என்று தடுத்துப் பிரிட்டிசு ஏகாதிபத்யத்தை எடுத்துவளர்த்த, டல்ஹவுசியின் "லாப்ஸ்" (Lapse) கொள்கையும் பொருளாதாரச் சுரண்டலும், பிளவுமுறை மதபேத ஆட்சிமுறையும் இன்னும் நம்மை அச்சுறுத்துவது போல் காணப்படுகின்றன.

இவ்வுணர்ச்சி ஜப்பானியரிடத்தே நாளுக்கு நாள் நினைவிற்கு வந்து அதன் விளைவாகத் தங்களது வருங்கால அடிப்படையை மாற்றிக் கொள்ளத் துணிகிறார்கள். இதுகாறும் அவர்கள் அமெரிக்காவிற்குக் காட்டிய பரிவும் பணிவும் மீட்சிக் காலப் பொறுமையே அன்றி உடன்பட்ட இணைப்பு எதுவும்அல்ல என்று இளைஞர் உலகுஇன்று எடுத்துரைக்கிறது. இப்படியொரு நிலைமை துருக்கியிலும் ஏற்பட்டுக் கொந்தளிப்புச் சூழ்நிலை அங்கேஉருவாகி விட்டது.

உலக நாடுகள் தத்தமது நிலையைத் தாமே நிர்ணயித்துக் கொள்ள முன் வந்துவிட்டன.

—வே. சௌந்தரரா...

'தென்னகம்' வளர்ச்சி நிதி

சிறப்புச் சொற்பொழிவுகள்

1

தியேட்டர் ராயல், கோவை,

காலம்; 10-7-60 ஞாயிறு காலை 9 மணி

தலைவர் :

எஸ். ஏ. இராசமாணிக்கம், எம். சி.

[2]

புஷ்பா தியேட்டர், திருப்பூர்

காலம் : 10-7-60 ஞாயிறு பிற்பகல் 2-30 மணி

தலைவர் :

ஆனந்தன், பி. எ. பி. எல்.

சொற்பொழிவாளர்கள் :

ஈ. வெ. கி. சம்பத், எம். பி.

கவிஞர். கண்ணதாசன்

கே. ஏ. மதியழகன்

அனைவரும் திரண்டுவாரீர்

நன்கொடை : ரூ. 5, 3, 2, 1, 0-50 புதிய காசு

கோவை நகர தி. மு. க.

திருப்பூர் நகர தி. மு. க.

தேய்ந்துவருகிறகோபத்துக்கும் வளர்ந்து வருகிற ஆசைக்கும் இடையே ஆறுமுகத்தின் எண்ணங்கள் ஊசலாடிக்கொண்டிருந்தன. அவனுல் அமைதிகாண முடியவில்லை. கீதாவைத் தேடிப் போனசசிகலாவைப்பற்றிய நினைவுகள் அவனுக்கு ஏற்பட்டன; ஆதாய உணர்வு அவனை ஆட்டி வைத்தது.

கீதா என்ன ஆவாள்? சசிகலாவின் எல்லைக் கோட்டைத்தாண்டி எவ்வளவோ தூரம் அவளை இழுத்துச்சென்று விட்டான். இனி மறுபடியும் புறப்பட்ட இடத்துக்கே போய்ச் சேருவது கடினந்தான் என்பது அவனுக்குத் தெரியும். தன் தமக்கை வாழ்வில் தவறியவள் என்பதை ஏற்கனவே இவன் மூலம் தெரிந்துகொண்டாள். மனித இனத்தின் பண்பைப்பற்றி அவன் ஆராய்ந்து தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லா விட்டாலும், சுற்றுச்சார்புகள் எத்தனையோ விஷயங்களை அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கின்றன. கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இருக்கும் வரைதான் எவரும் அதன் கண்காணிப்புக்கு அடங்கி இருப்பார்கள். ஒருமுறை விலகி வந்து விட்டால் மறுமுறை அதைப்பற்றிய நினைவேதோன்றுவதில்லை. இனி கீதாவை சசிகலா தன் பக்கம் இழுப்ப தென்னவோ நடக்கப் போவதில்லை.

கீதாவைத் தேடிப்போன சசிகலா என்ன செய்து கொண்டிருப்பாள். சண்டை போட்டுக் கொண்டிருப்பாளா? வழிதவறி வாழ்வு நடத்துபவள்என்பது அவனுக்குத் தெரிந்த விஷயந்தான். தன்னைப் பற்றி ஏதாவது தாறுமாருக அவளிடம் ... இவனைப் பற்றித்தான் அவள் இழிவாகக் கருதுகிருளே. என்ன சொன்னுலும் ஏற்றுக் கொள்ள மாட்டாள்.

எண்ணங்கள் எறும்புக் கூட்டம்போல் சாரைசாரையாகஅவன் உள்ளத்தில் ஊர்ந்தன. எதையும் முடிவு செய்ய முடியாமல் தவித்தான். கீதாவும் சசிகலாவும் இணைந்து பழகும்போது நேரிலே இருந்து கவனிக்கும் வாய்ப்புக் கிடைத்திருந்தால் எளிதில் அவனுல் எதையும் யூகித்திருக்க முடியும். இணைப்பு விட்டுப் போன நேரத்தில் அவர்களுடைய வாழ்வில் இடம் பெற்றவன்; ஆகையால் எந்த முடிவுக்கும் அவனுல் வர இயலவில்லை. இங்கே எண்ணச் சிக்கலில் இருந்து தவிப்பதை விட அங்கேயே போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று பிறப்பட்டான்.

"என்ன ஆறுமுகம்!" என்ற குரல் கேட்டுத் திரும்பினுன். அன்று அவன் அழைத்து வந்த இளைஞன் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தான்.

"நீங்கள் ..."

ஒரு சொல்லோடு நிறுத்திக் கொண்டான் ஆறுமுகம். மறு சொல் வெளியே வராமல் மமதை தடுத்து விட்டது. வழக்கப்படி வருகிற அந்த மரியாதைக்குரிய சொல்லை இப்போதும் பயன்படுத்துகிருேமே என்று நினைத்தான். ஏன் கூறிஞேம் என்று குறைபட்டுக் கொண்டான். உடனே அந்தத் தவறுக்குத் திருத்தம் கொடுத்தான்.

"இத்தனை நாட்களாக உம்மைக் காணுேமே! எங்கே போயிருந்தீர்?"

அந்த இளைஞனுக்கு ஆத்திரம் உண்டாகவில்லை; ஆச்சரியந்தான் ஏற்பட்டது. ஏற்பட்ட கோளாறுக்கு என்ன காரணம் என்பது புரியாமல் ஆறுமுகத்தை ஏறெடுத்துப் பார்த்தான். எதையும் அவனுல் நிதானிக்க முடியவில்லை

"இப்போதுதான் வரமுடிந்தது. கலாவை அழைத்துப் போவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா? அதற்கு இவ்வளவு காலம் பிடித்தது."

ஏற்றம் அடைந்தவர்கள் எளியவர்களைப் பார்ப்பதுபோல் ஆறுமுகம் அவனைப் பார்த்தான்.

"அப்படியானுல் இன்றுஅவளை அழைத்துச் செல்லப் போகிறீர். இத்தனை நாட்களாக ... டய இருப்பிடத்தைக் ... ஏங்கித் தவிக்க விட்டிருந்தீர். இப்போது உமக்குக் கண் திறந்திருக்கிறது; அவளுக்கும்வெட்கப்படக் கூடிய வாழ்விலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது"

துடைத்துப் போடப்பட்ட காகிதம் எப்படி அவ்வளவு தூரத்துக்கு உயர்ந்தது என்பது அந்த இளைஞனுக்கு விளங்கவில்லை.

"எங்கே, கலா?" என்று கேட்டான்.

"வருவாள். வருகிற நேரத்தை நீர் முன்னதாகவேதெரிவித்திருந்தால் உம்மை வரவேற்கக்காத்திருந்திருப்பாள். நீர் எதிர்பாராத நேரத்தில் உள்ளே நுழைந்து, 'எங்கே அவள்' என்று கேட்கிறீர். எத்தனையோ நாட்களாக நீர் வருவீர் என்று எண்ணியிருந்தாள். எனக்கும் அதே கவலைதான்."

அந்தஇளைஞன் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

"நீயும் அவளோடு வரலாம் என்பதற்காகவா?"

கையில் கட்டையை எடுத்துக் கொண்டு, கடித்துவிட்டு ஓடும் தேளைப் பார்ப்பதுபோல அவனைப் பார்த்தான் ஆறுமுகம்.

"நான் ஏன் வருகிறேன். இருக்கிற வேலைகளைக் கவனிக்க முடியாமல் இவள் ஒரு பாரமாக இருந்தாள், இதுவரை எனக்கு. நீர் அழைத்துப்போய் விட்டால் நிம்மதியாக என்வேலைகளைக் கவனிக்கலாம்."

ஆறுமுகத்தின் அன்றைய போக்குக்கு காரணம் அப்போது தான் புரிந்தது அவனுக்கு.

"உனக்கு வேறுஇடம் கிடைத்துவிட்டதா?"

"என்னைப் போன்றவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. நாங்களே தேடிப் போகிருேம். பயன்தரக் கூடியவைகளை அப்படியேவிடாது பற்றிக்கொள்ளுகிருேம்."

"அதுதான் நல்லது. இடம் பிடிக்கத் தெரியாத ஆளாக நீயிருந்தால், என்னேடு வருகிறேன் என்று தொல்லைப் படுத்துவாய். அது சரி, கலா எங்கே?"

எதிர்பாருங்கள் !

சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி அரங்கில்

24—7—60 ஞாயிறு மாலை 6 மணிக்கு

அறிஞர் அண்ணு தலைமையில்

டாக்டர் அழகப்பா கலை மன்றத்தார் அளிக்கும்

சாணக்கியன் சபதம்

(சரித்திர நாடகம்)

வரலாறு, வசனம் : **எஸ். டி. இளந்திருமாறன்.**
பயிற்சி : **ஈரோட்டார்**
பாடல்கள் : **ஈரோட்டார்.**
இசைஅமைப்பு : **தாரை-கணேசன்.**
நடனபயிற்சி : முருகப்பா.

அனைவரும் திரண்டு வருக !

"ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்? உம்முடைய ஊருக்கே இழுத்துக் கொண்டு போகப் போகிறீரா? உம்முடைய மனைவி சண்டைக்கு வரமாட்டாளா?"

ஒரே நேரத்தில் வரிசையாகக் கேள்விகளை அடுக்கிவிட்டு ஒவ்வொன்றுக்காகப் பதிலை எதிர்பார்த்தான் ஆறுமுகம்.

"திருமணமாகி இருந்தால் இவள் எதற்கு? அன்று என் உள்ளத்துக்கு ஒளி ஊட்டினுள்—இனி என் இல்லத்தில் எரிந்து கொண்டிருக்கப் போகிருள்."

"அப்படி என்றுல் மனைவியாகவா ஆக்கிக் கொள்ளப் போகிறீர்? ஆசைநாயகி என்றல்லவா நான் நினைத்தேன்."

இதைக் கூறி விட்டுத் தன் எதிரே நின்று கொண்டிருந்த அந்த 'ஏமாளி'யை இரக்கத்தோடு பார்த்தான் ஆறுமுகம். இவனை ஏளனமாக நோக்கினான். அந்த இளைஞன்.

"ஆசைக்குஒருத்தி, ஆசையில்லாமல் ஒருத்தி என்பதெல்லாம் அந்தக் காலம், ஆறுமுகம். சமைத்துப்போட பெண் தேடிய காலம் அது. அப்போது அது செல்லுபடியாகும். இது, பெண்கள் எல்லாவற்றிலும் சரிபங்கு கேட்கும் காலம், சமையலுக்கு ஒருத்தி, சல்லாபத்துக்கு ஒருத்தி என்று பெண்களை ஜோடி சேர்த்துக் கொண்டே போக முடியாது"

"இருந்திருந்து ஒரு கெட்டுப் போனவளையா கட்டிக் கொள்ளப் போகிறீர்?"

"கெட்டுப்போனவளா? யார்? சசிகலாவா ...? அவள் கெட்டுப் போகவுமில்லை—பட்டுப் போகவுமில்லை. கெட்டுப் போனவள் என்றுல் குப்பைத் தொட்டியில் அல்லவா வீசியெறிந்திருக்க வேண்டும்! பழம் கெட்டுப்போனுல் பசியாயிருப்பவன் கூட அதை எடுத்துச் சாப்பிட மாட்டான், இவள் கெட்டுப் போனவள் என்றுல் இந்தச் சமுதாயம் ஏறெடுத்து அவளைப் பார்த்திருக்கக் கூடாது. ஏன் கூட்டம் கூட்டமாக அவளைத் தேடி வந்தார்கள்? உபயோக மற்றவள் என்று ஒதுக்கி வைத்துவிடவில்லையே!"

தனக்குப் புரியாதவைகளாகவே சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிருன் என்று நினைத்தான் ஆறுமுகம்.

"அணில் கடித்த பழம் அதிக ருசியாக இருக்கும் என்று அவர்கள் நினைத்திருப்பார்கள்-அதனுல் வந்திருப்பார்கள். பறித்தவுடன் சாப்பிடும் பழமல்ல இவள்; பல நாட்கள் கூடஇருந்து வாழவேண்டியவள். நீர் அவளுடைய முதலாவது ஆள் அல்ல!"

"முப்பதாவது ஆளாசவே இருக்கட்டுமே! முதற்கோணல் முற்றுங்கோணல் என்பது பழமொழி. முதல்கோணலையே நினைத்துக் கொண்டிருப்பதால்தான் அது முற்றிலும் கோணலாகி விடுகிறது. அதை மறந்து விட்டுச் சரிப்படுத்த முயன்றுல் அது சரியாகிவிடும். வாய்ப்பு கிடைக்காததாலேயே பலர் விழுந்த நிலையிலேயே கிடக்கின்றனர்"

நாட்டு நடப்புகளை நன்கு உணர்ந்தவன் ஆறுமுகம். அவன் சொன்னவைகளில் எதையும் அதுவரை சந்தித்ததில்லை. ஏதோ ஒரு புது உலகத்திலிருந்து போதனைகளைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கிருன் அவன் என்று நினைத்தான். ஆனுல் ... அவன் வாழப்போவது இந்தப் பழைய உலகத்தில்தானே!

"ஒரு வேசியைத் திருமணம் செய்துகொள்ள எவருக்குமே மனம் கூசும்."

"கூச்சம் இருந்ததால்தான் இந்தச் சமுதாயம் ஒரு குப்பை மேடாகக் காட்சி அளிக்கிறது. பூச்சி புழுக்களெல்லாம் நெளிகின்றன. ஒரு சந்ததி மனந்துணிந்து இந்தக் குப்பை மேட்டைக்கலைத்தால்தான் நாடு நலிந்து போகாமல் காப்பாற்றமுடியும்."

"நீர் எப்படிப்பட்ட ஆள் என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் மானமுள்ளவர்கள் மானங்கெட்டவளை மனைக்கு அழைத்துச் செல்வதில்லை."

"யாருக்கு மானம் இல்லை? ஆறுமுகம்! அவளையா மானங்கெட்டவள் என்கிறீர்?"

"ஆமாம் அவளுக்குத்தான். எனக்குத் தெரியாததா உமக்குத் தெரியும் அவளைப்பற்றி."

"அதனுல்தான் நானும் கூறுகிறேன். உம்மை வளர்த்தவளே அவள் தான். தன் உடலைக் கொண்டு அவள் வாழ்ந்தாள். அது தகாத காரியந்தான், ஆனுல் செய்யவேண்டிய தவறுகளாகசில ஆகிவிடுகின்றன. வேலைக்குப் போக வேண்டிய தகுதியோ, தொழில் செய்யத் தேவையான மூல தனமோ இல்லாத பெண்கள் வேறு என்னதான் செய்வார்கள்? ஆனுல் நீ ...? அவளுடைய வருமானத்தில் வாழ்ந்த மனிதன்! ஒரு வீட்டு வேலைக்காரன் என்று தெரிந்தும் உனக்கு இந்தவீட்டில் இடங்கொடுத்தாள். வெளியில் நிறுத்தி வைக்க வில்லை; உள்ளே அழைத்து உயர்ந்த இடத்தையும் தந்தாள். நீர் வேலை செய்த வீட்டின் எஜமானர்களையே ஏவல் செய்யவைக்கும் நிலையில் இருந்தவள் அவள்; உம்மை எடுபிடியாக ஆக்கிக் கொள்ளாமல் எஜமானுக ஆக்கிக் கொண்டாள். இப்போது கெட்டவை என்று கருதப்படுபவை எல்லாம்தீயவை அல்ல. அடுத்தவனைக் கெடுக்காமல் வாழுவதுதான் இன்றைய மனிதர் பண்பு; எல்லோருக்கும் மதிப்புக் கொடுப்பதுதான் உயர்ந்தபழக்கம். இவை இரண்டும் இல்லாதவன் எவ்வளவுஉயரத்துக்குவளர்ந்திருந்தாலும் இழிந்தவன் தான்."

பேச்சைத் தொடருவதா அல்லது துண்டித்து விடுவதா என்பது புரியாமல் தவித்தான் ஆறுமுகம்.

மணி இரண்டுக்கு மேல் ஆகி இருந்தது. உச்சியிலிருந்த கதிரவனுக்கு அங்கேயேநிலைத்திருக்க முடியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாகச் சருக்கி விழுந்து கொண்டிருந்தான். உணவருந்தி விட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர் பெரும்பாலான மக்கள். வேலைக்கு ஓடவேண்டிய ஒரு சிலர் வேகம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தனர். எச்சில் இலைகளைச் சுத்தம் செய்து விட்டு என்ன செய்வது அதற்கு மேல் என்பது புரியாமல் ஓய்க்கொண்டிருந்தன சில நாய்கள். அந்த வீட்டுக்கு எதிரே இருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் உட்கார்ந்தபடியே தூங்கிவிழுந்துகொண்டிருந்தான்: குரல் கொடுத்துப் பார்த்து விட்டு அவனை எழுப்ப முடியாததால் வேறு கடைதேடிப் போயினர் சாமான் வாங்கவந்தவர்கள், கொதிப்பேறிய தரையின் மேல் நிழல் படிந்து வளர்ந்து அதைக் குளிர்ச்சியடையச் செய்து கொண்

டி.கே.சீனிவாசன்

டிருந்தது. பெண்கள் மட்டும் அந்த நேரத்தில் ஆடை அலங்காரங்களைக் குறைவறச் செய்து கொண்டு, கணவன் வருவதற்குள் சிறிது களிப்படைவோம் என்ற எண்ணத்தால் சினிமா கொட்டகைகளைத் தேடிச் சென்று கொண்டிருந்தனர்.

ஆறுமுகத்துக்குஎதைப்பற்றிய கவலையும் இல்லாமல் போய்விட்டது. இனி சசிகலாவின் சங்கடம் இல்லை. அன்றே... அப்போதே— அவளை அழைத்துப்போக ஆள் வந்துவிட்டது. கீதா —! அந்த ஆச்சரியக்குறி ஆனந்த வாழ்வுக்குச் சுற்றுச் சுவராக அமையப் போகிறது. வானத்தில் மின்னப்போகும் அந்த நட்சத்திரத்தின்மேல் ஏறி அமர்ந்திருக்கப் போகிருன் இவன். வையகம் இருவரையும் இனி ஏறெடுத்துப்பார்க்கும்! சேலைபோல என்றுலும் அவள் சுற்றிக் கொண்டிருப்பது தானே! — கீ! — அவனைச் சுற்றிக் கொண்டிருப்பது தானே!

வெளிப்பக்கம்இருந்துதெருவை கவனித்துக் கொண்டிருந்தான் அந்த இளைஞன். இன்னும் சிறிது நேரத்தில் அவள் வரப்போகிருள்! அவனும்வாழ்வில் வரம்புக்கு உட்பட்டு நடந்தவனல்ல. அடிமையானவர்கள் — அடைக்கலம் புகுந்தவர்கள் — அடகு பிடிக்கப் பட்டவர்கள்— அன்ருடம் தேடிக் கொண்டவர்கள்— இப்படி அவன் வாழ்வில் எத்தனையோ பெண்கள்! பெரும்பாலோர் உடலை அவனிடம் ஒப்படைத்து விட்டதோடு நிறுத்திக் கொண்டனர்; யாரோ சிலர் உள்ளத்தைத் திறந்து காட்டிக் கண்காணிக்கச் சொன்னுர்கள் — அதுவும் அவர்கள் காரியத்துக் காகத்தான், எவரும் தம் அறிவை வெளிப்படுத்த வில்லை. ஆனுல்— கலா! உடல், உள்ளம், அறிவு மூன்றையும் அவன் முன் நிறுத்தினுள். அவன்தான் அவளைக் கெடுத்தான்—அவள் அவனுக்கு அறிவை ஊட்டினுள். எண்ணெய் இருக்கிறவரை எரியும்விளக்கல்ல அவள்—எப்போதும்தோன்றுகிற ஒளி!

காலம் அளவுக்கு மீறி கடந்து விடவில்லை. சசிகலா உள்ளே நுழைந்தாள்.

அந்த இளைஞனுக்கு வணக்கஞ் செலுத்தினுள்,

"வாருங்கள், எப்போது வந்தீர்கள்?"

"இப்போதுதான் வந்தேன் கலா! புறப்படு, போகலாம்! எல்லாஏற்பாடுகளையும் செய்துவிட்டேன். போனவுடன் திருமணம் —பிறகு... நீயும் நானும்..."

கனிவு — களிப்பு — கவர்ச்சி! மூன்றும் அவளுடைய விழிகளில் ஒளிவிட்டன. அவனையே பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்றுள் பின் பார்வையை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்

"என்னை இனி எவரும் அழைக்கமுடியாது; நானும் எவரையும் அனுமதிக்கப் போவதில்லை மரத்தை உருவாக்கிவிட்டு விதை அழிந்துபோகும். அதுதான் இயற்கையின் நியதி. ஆனுல் என் வாழ்வில் விதை மட்டும் அழிந்துபோகவில்லை. மரமும் சாய்ந்து விழுந்துவிட்டது. வேரான விதையையும் தன்னேடு சேர்த்துத் துண்டித்து விட்டது. சாவின் வாயிற் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறேன் நான். நீங்கள் மாலையை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சிறிது பொறுத்திருங்கள்: பிணத்தைத் தூக்கிக்கொண்டு போவார்கள் கொண்டு வந்திருக்கும் மாலையைப்பிய்த்து வழியெல்லாம் தூவுங்கள்."

உணவை ஊட்டிக் கொண்டிருந்தபோதே, உயிரைவிட்டுப் பிணமாகி விழுந்த மழலையைப் போலத் தோன்றிற்று அவன் வாழ்வு அவனுக்கு.

"நீ என்ன சொல்லுகிருய் கலா?"

"எதை நான் சொல்லுவது? சொல்லும்படி எதுவுமே இல்லை. இருந்தாலும் சொல்லித்தான் ஆக வேண்டி இருக்கிறது. என் குடும்பம் ஒழுங்காக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் என் உடலை பலி கொடுத்தேன். எப்போதோ இரவு நேரங்களில் இங்கே வந்து தங்குவேன். எனக்குப் படி அளப்பவர் வருவார்; பணங்காசு பெற்றுக்கொண்டு வீடு திரும்புவேன். ஆனுல்...ஈனத் தனமான ஒரு காரியத்தைச் செய்து விட்டு அந்த வீட்டில் இருக்க எனக்கு மனம் வரவில்லை. என்னிடம் இன்பத்தை இரவல் பெற வந்தவரும் இருட்டு நேரத்தில் திருட்டுத்தனமாக நடத்தும் செயலாகத்தான் அது இருக்கவேண்டும் என நினைத்தார். எனக்கே அது கேவலமாகத் தோன்றியது. நான் அந்த வீட்டில் இருக்கும் வரைஅங்கேநாசம் உருவாவதைப் போல எனக்குத் தோன்றிற்று. அந்த நேரத்தில்தான் இந்த மனிதர் இங்கே வந்தார். இவரையே திருமணம் செய்துகொண்டு இழிவிலிருந்து மீளலாம் என்று எண்ணினேன். தகுதியைப் பற்றிக் கவலைப்படும் நிலையில் நான் இல்லை. இவர் அதற்கு இடங் கொடுக்கவில்லை. நான் இருந்த நிலையைவிட இழிந்த நிலையில் இருக்கமட்டும் ஒத்துக் கொண்டார். ஆனுல்...எதற்காக நான் என் ஒழுக்கத்தை எரித்துச் சாம்பலாக்கினேனே அதையே கொன்றுவிட்டார். என் தங்கையை..."

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. அழத் தொடங்கினுள். அந்த இளைஞனும் கலங்கினுன். ஆனுல் ஆறுமுகத்துக்கு இதைப் பற்றிய அக்கரையே தோன்றவில்லை, அங்கே என்ன நடந்தது என்பதைத்தெரிந்துகொள்ளவே அவன் மனம் துடித்தது. இவள் அழுவதைப் பார்த்தவுடன், தோல்விதான் அந்தத் துயரத்துக்குக் காரணம் என்று முடிவுசெய்துகொண்டான். தடை உடைபட்டதுஎன்று தாங்கொணுத மகிழ்ச்சி அடைந்தான். அவனை இந்த மகிழ்ச்சி தெம்படையச் செய்தது.

"என்ன செய்யப் போகிறேன். திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்; தீ வைத்துக் கொளுத்தப்போவதுபோலத் தேம்புகிருயே. உன்னை அவர் அழைத்துக்கொள்ளப் போகிருர்; என்னை உன் தங்கை ஏற்றுக்கொள்ளப் போகிருள். இருவருக்கும் ஒரே நேரத்தில் இடங்கள் கிடைத்திருக்கின்றன."

சிரித்தான் ஆறுமுகம்; சிகரத்தின் உச்சியில் இருந்து பார்ப்பவனைப் போல அவர்கள் இருவரையும் பார்த்தான். அப்போது தான் அவன் பக்கம் திரும்பினுள் சசிகலா,

"நன்ருகச் சிரி, ஆறுமுகம்! இப்போதே எல்லாச் சிரிப்பையும் முடித்துவிடு. இன்னும் சிறிது நேரத்தில் எல்லோருமே அழப் போகிருேம். மிச்சம் மீதி வைக்காமல் ஒருவிதமாக இப்போதே முடித்துக்கொள்."

"ஏன்? என்ன நடந்துவிட்டது?"

"உனக்கு மனைவியாகப் போகிறவள்மயானத்துக்குப்புறப்பட்டுக் கொண்டிருக்கிருள். இன்னும் சிறிது நேரத்தில் பல்லக்கிலே பவனி செய்வாள். நீயும் அவள் பக்கத்திலே போய் உட்கார்ந்து கொள்."

"செத்தா போனுள் கீதா? பொய் சொல்கிருயா?"

"அவள் ஏன் சாகிருள்? நான் கொன்றுவிட்டேன். களைகளை பிடுங்கி எறிவதுதான் நல்ல விவசாயி செய்யவேண்டிய காரியம்.'!

ஆறுமுகம் ஆடிப்போனுன். இடிவிழுந்து எரிந்துபோன கட்டிடம்போல அவன் வாழ்வு அவனுக்குத் தோன்றியது.

"கொலைகாரி! என் வாழ்வை நாசம் செய்துவிட்டு வாதங்களா பேசுகிருய்? இரு, நேரே கீதாவைப் போய்ப் பார்க்கிறேன். கொலை செய்யப்பட்டிருந்தால் உடனே போலீசில் உன்னைப் பிடித்துக் கொடுக்கிறேன்."

அந்த இளைஞன் திடுக்கிட்டான்.

"போலீசா? ஐயோ! வேண்டாம்! ஆறுமுகம்!" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே கலா குறுக்கிட்டாள்

"விடுங்கள்! எது வேண்டுமானுலும்செய்து கொள்ளட்டும். எட்டுகிற உயரத்தில் இருந்தால் தானே எவரையும்பிடிக்க முடியும்" என்ருள் அவள்.

வேகமாக வெளியேறினுன் ஆறுமுகம். அவனைத் தொடர்ந்து ஓடினுன், அந்தஇளைஞன்.

இருவரும்ஒருவரைஒருவர் துரத்திக் கொண்டு போவதைப் போல் நடந்தார்கள். வழியெல்லாம் அவர்களை எவரெவரோ திரும்பிப் பார்த்தார்கள். எதைப்பற்றிய நினைவும் இல்லாமல் இருவரும் போனுர்கள். அந்த இளைஞன் ஆறுமுகத்தை நெருங்கி அவன் கருத்தைப் பிடித்து நிறுத்தினுன்.

"வேண்டாம், ஆறுமுகம்! விட்டுவிடு! உன்னை நான்காப்பாற்றுகிறேன்! மூவரும் எங்கேயாவது ஓடிப்போவோம்."

கையை உதறிவிட்டுநடந்தான் ஆறுமுகம்.

"அவளை ஒழித்தே தீருவேன். என் எதிர்காலத்தையே இடித்து நொறுக்கியவனிடம் இரக்கமா காட்டச் சொல்லுகிருய்?"

"பிணமாகப்போன உன்னை, தன் கணவன் என்று சொல்லி உயிர்வாழச் செய்தாளே, அதற்கு நீ காட்டிய நன்றியா இது?"

"உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாளா? வாழ வேண்டும் என்பதைத் தவிர வேறெதற்கும் என் நெஞ்சில் இடமில்லை. எப்படியும் வளர வேண்டும்: எதைச் செய்தாவது ஆதாயம் பெறவேண்டும். இதற்கு இடையூருக இருப்பவர்கள் வலியவர்களாக இருந்தால் அவர்களைவயப் படுத்த வலை வீசுவேன்; எளியவர்களாக இருந்தால் அவர்கள் இருக்கும் நிலையையே நாசமாக்குவேன்"

நன்றி

★

எஸ். எஸ். தென்னரசு அவர்களின், 'துங்கபத்திரை' தொடர்கதைக்குப்பின் சிறு கதை மன்னர் டி.கே.சி. அவர்கள் தந்துவந்த, **'ஊர்ந்தது உயர்ந்தால்'** என்னும் வண்ணத் தொடரோவியம் இதோடு முடிவடைகிறது. தீந்தமிழிலே குழைத்துத்தந்துவந்த தத்துவச் செல்வருக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

—கண்ணப்ப வள்ளியப்பன்

கொலை நடந்த வீட்டுக்குள் இருவரும் நுழைந்தார்கள், அங்கே எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். அந்த இளைஞனுக்கும் மனம் கலங்கிவிட்டது. போலீசார் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள்.

"எனக்குத் தெரியும் கொலைகாரியை வாருங்கள் காட்டுகிறேன்." என்று கூச்சல் போட்டான் ஆறுமுகம்!

அந்தக் கூட்டமே அவன் பக்கம் திரும்பியது,

"உனக்கெப்படி அவளைத் தெரியும்?" என்று கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"அவளிடமிருந்துதான் இப்போது வருகிறேன். உடனே புறப்படுங்கள்; எங்கேயாவது ஓடி விடப்போகிருள்."

இன்ஸ்பெக்டரும் இரு போலீஸ்காரர்களும் அவனேடு புறப்பட்டார்கள். அந்த இளைஞனும் ஓடிவந்து அவர்களோடு காரில் ஏறிக்கொண்டான்.

கார் அந்த வீட்டை அடைந்தது. அவர்கள் அனைவரும் உள்ளே நுழைந்தார்கள்.

"ஐயோ, சசிகலா!" என்று அலறிவிட்டான் அந்த இளைஞன்.

கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்தாள் சசிகலா. பிணத்தை இறக்கிக் கீழே போட்டார்கள். அவள் இடுப்பில் ஒரு துண்டுகாகிதம் இருந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அதை எடுத்துப் பிரித்தார்.

"ஊர்ந்ததைஉயர்த்தினேன்— அது என் உயிரை வாங்கிவிட்டது."

அந்தப் பிணத்தில் கழுத்திலே இருந்த கயிறு பாம்பு போலக் கீழே கிடந்தது.

"இதற்குஎன்னஅர்த்தம், ஆறுமுகம்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'அது எனக்கெப்படித் தெரியும்?"

ஏதேதோ விசாரித்துவிட்டு, பிணத்தை எடுத்துக் கொண்டு போயினர் போலீசார்.

அந்த இளைஞன்மட்டும் அழுது கொண்டிருந்தான்.

"ஒரு விபசாரிக்காக அழுபவர்களை இப்போதுதான் பார்க்கிறேன்" என்ருன் ஆறுமுகம்.

அந்த இளைஞன் இதற்கு பதில் சொல்லவில்லை; அழுதுகொண்டே இருந்தான்.

"வா ஐயா, போகலாம்! கட்டியவளைச் சாகக் கொடுத்தவனைப் போலக் கண்ணீர் விடுகிருயே" என்ருன் ஆறுமுகம்.

அந்த இளைஞன் அவனை நிமிர்ந்து பார்த்தான்.

"இந்தப்பெண் எப்போதும்ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டியவள், ஆறுமுகம்! தன்பெண்மையைப் பலிகொடுத்தாள்—அது பாழாகிவிட்டது, தன் பெண்மையைப் பயன்படுத்தினுள்— அதுவும் அவளை அழித்து விட்டது."

அதற்குமேல் வேறு எதுவும் அவனுல் பேச முடியவில்லை; வேதனை விழிவழியே வழியத் தொடங்கிவிட்டது.

"அந்தக் கெட்டுப்போனவளுக்கு என்று ஒரு தட்டுக்கெட்டவன் இருக்கத்தான் செய்கிருன்."

இதைக் கூறிவிட்டுவெளியேறினுன் ஆறுமுகம். அடுத்து என்ன செய்வது என்பதிலேயே ஈடுபட்டது அவன் மனம்.

அந்த மரத்தடியில் போய் உட்கார்ந்தான் அவன். நிழலுக்காக பலர் அங்கே இருந்தனர். ஏதோ ஒரு புழு மெள்ள மெள்ள மரத்தின் மேல் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. ஆறுமுகம் இதைப் பார்த்தான்; பார்வை அதில் ஈடுபடவில்லை; பரந்த வெளியில் அலைந்து கொண்டிருந்தது. இவனைக் கவனிக்காததைப் போலவே அதையும் எவரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை,

உயரத்தில் இருந்த புழுவைப் பற்றி இந்த உலகமே கவலைப் படவில்லை; புதைந்துபோனவர்களாக இருந்தாலும் மனிதர்களை நினைத்துத்தான் புலம்பியது இந்த உலகம்!

இங்கிலாந்தின் எழுச்சிமிக்க புரட்சியாளர்:

கல்கி'யின் வீர வரிகள்

★

“ பாரதப் பிரதமர் நேரு. மக்கள் சபையில் பகிரங்கமாக, 'இந்தி பேசாத மக்களின்—முக்கியமாகத் தென்னக மக்களின் சம்மதத்தைப் பெற்ற பிறகே இந்தி, மத்திய ஆட்சிமொழியாகும் விஷயம் தீர்மானிக்கப்படும்'. ” என்ருர்.

ஆனல் ஜனுதிபதியின் உத்தரவில், பிரதமர் நேருஜி அளித்த இந்த வாக்குறுதி தொழிற்படவில்லை. பிரதமர் கொடுத்த வாக்குறுதியை இப்போது ரத்து செய்து விட்டாற்போல் காணப்படுகிறது. இல்லாவிடில், அந்த முக்கியமான விஷயத்தைப் பளிச்சென்று எடுத்துக் கூறியிருக்க வேண்டும்.

இந்தி ஆட்சி மொழியாவதற்கு எல்லாவித முயற்சிகளும் இப்பொழுது பிடித்தே எடுத்துக்கொள்ள வேண்டும்—என்று கூறுகிறது. ஜனுதிபதி அறிக்கை, இதைத் தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளுமே கண்டித்தன. தென்னக மக்கள், இந்த உத்தரவை முற்றிலும் எதிர்க்கிருர்கள்

தி.மு. கழகத்தினர் குமார பாளையத்தில் கூடி, ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிருர்கள். பிரதமர் வாக்களித்தபடி உத்தரவைத் திருத்தியமைக்காவிட்டால், கிளர்ச்சி நடத்தப் போவதாகத் தீர்மானித்திருக்கிருர்கள்.

வடநாட்டுத் தலைவர்களுக்கு எந்த உண்மையும் கிளர்ச்சி மூலம் காண்பித்தால்தான் விளங்கும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கும் அமைதியான இயக்கத்துக்கு எல்லா மக்களுமே ஆதரவு தர வேண்டும் என்று விரும்புகிருேம்.

இந்தக் கிளர்ச்சி தி.மு.க. அல்லவா நடத்துகிறது; இதற்கு ஆதரவு தரலாமா? என்று யோசிக்கலாகாது. இந்த விஷயத்தில், தென்னுட்டுக் கட்சிகள் எல்லாமே ஒருமனம் கொண்டவை என்பதை காலதாமதமின்றி நிரூபிக்க வேண்டும்.

3—7—'60
'கல்கி' துணைத்தலையங்கம்.

எலிசபெத் ப்ரை

பத்தொன்பதாம் நூற்ருண்டின் துவக்கத்தில் இங்கிலாந்தின் சிறைச்சாலைகளில் காணப்பட்ட கொடுமை கணக்கிலடங்காது. கைதிகளென்போருக்கு ஆட்சியாளரிழைத்த அட்டுழியங்கள் அளவிலடங்காது. தீராத துன்பங்களைத் தாளாமல் துடிதுடித்து அங்கே உயிர்விட்டனர் அனேகர். விடாமல் அடைந்து வந்த வேதனைகளால் வெறிபிடித்தவர்களென மாறினர் பலர். அதிகாரிகளின் அராஜகங்கள் ஒரு புறமும், கயவர்களின் காலித்தனங்கள் மறுபுறமும் சிறைச்சாலைகளை மிக பயங்கரக் குகைகளாக மாற்றியிருந்தன, அந்தக் காலத்தில். மற்ருெர் காலடி எடுத்துவைக்க அஞ்சும் அந்தச் சிறை கூடங்களில் தயங்காமல் நுழைந்துச் சென்ருள் எலிசபெத். கனிவு நிறைந்த அவள் பார்வையிலே, அன்புதொனித்த அவளுடைய குரலில் கசடர்கள் கட்டுப்பட்டார்கள்; அனுதைகள் ஆறுதலடைந்தார்கள்; எளியோர்கள் இன்பங் கண்டார்கள்; மிருகங்களென மாறியிருந்தோரை வாழவழி செய்தாள், அந்தப் பருவப் பெண்.

★ சிறைச்சாலையை அறச் சோலையாக்கிய அம்மையார்!

நாட்டிலுள்ள அறிஞர்கள் நல்வாழ்த்துக் கூறினர். ஏட்டிலெல்லாம் அந்தப் பெரும்பணிகள் புகழ்ந்து எழுதப்பட்டன. பாட்டாளிகள் போற்றினுர்கள். இங்கிலாந்தின் பாராளு மன்றமே அந்தக் குரல் பிறந்த திசை நோக்கித் திரும்பியது. ஏன், ஐரோப்பாக் கண்டமே எலிசபெத் அம்மையாரின் உபதேசங்களைக் கேட்க செவி சாய்த்தது! பாரெங்கும் அந்தப் பொன்மொழிகளைப் புரிந்துகொள்ளத் தலைபட்டது. சிறைச் சீர்திருத்தம் என்பது உலக அரங்கிலேயே ஒரு முக்யத்வம் பெற்றுப் பொலிவுற்றது. பிச்சைக்காரர்கள், பழிக்கப்பட்டவர்கள், அபலைகள், அனுதைகள் இன்னும் யார் யாரைத் தன்னைவிடத் தாழ்ந்த நிலையிலிருப்பதாகக் கருதினுரோ அத்தனை பேருக்கும் அந்தப் புனிதவதியின் பாசம் பிறந்தது. தொண்டு தாராளமாகக் கிடைத்தது. அன்பும் ஆதரவும், பொறுமையும் பாசமும் எலிசபெத் அம்மையாரின் எழிலோவியங்களாகத் திகழ்ந்தன: அவரை ஒரு உலக மேதையாக்கி உயர்த்தி விட்டன.

எலிசபெத்தின் தந்தையார் கர்னி (Gurney) ஒரு சிறந்த சமூகநல வாதியாகயிருந்தும், தம் மகள் இந்த இளம் பருவத்தினை இவ்வழியிலேயே வீணே பாழாக்கிக் கொள்வதைப் பார்க்க மனம் துணியாதவராய்த் தவித்தார், தன் பெண்ணினுடைய பிடிவாதக் கொள்கைகளை மாற்றியமைக்கத் தீவிரமாக முற்பட்டார். அதனுல் அவருடைய குடும்பத்திலேயும் சிறு குழப்பம் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் கர்னியின் நண்பரான ஜோசப் ப்ரை (Joseph Fry) என்ற நல்லார், அம்மையாரின் பெருங் குணத்திலும், பேரழகிலும் தன் மனதைப் பறி கொடுத்திருந்தார். இதையுணர்ந்த கர்னி (Gurney) மட்டில்லா மகிழ்ச்சி கொண்டு அவருக்கே தம் அருமைச் செல்வியைத் திருமணம் முடிக்கக் கருதி, அவரைத் தம் மாளிகைக்கு வந்திருக்க அழைப்புவிடுத்தார். யார் இசைந்தும் யாது பயன்? மணம் புரிவது தனக்கு ஏற்றதல்ல என்றே எலிசபெத் அம்மையார் கருதினுர். உவகை கொண்டிருந்த அவருடைய தந்தையார் இதையறிந்து உளம் நொந்தார். தன் அன்புக்குகந்தவளின் முடிவைக் கேட்டு ஜோசப் ப்ரை மனந் தடுமாறினுர். எலிசபெத்திற்காகத் தான் எதையும் விட்டுக்கொடுக்கத் தயராகிவிட்டார். அம்மையாரின் கொள்கைகளுக்கும், தொண்டுகளுக்கும் எந்த விதத்திலும் தான் தடையாக நிற்கவில்லை என்ற உறுதியையும் அறிவித்தார். அதைச் செவியுற்ற எலிசபெத் அம்மையாரின் மனம் மகிழ்ந்தது. நாட்டிற்கிடைத்தரிய அந்த நல்ல மனிதரைத் தன் வாழ்க்கைத் துணைவராக்கிக் கொள்ள இசைவுதந்தார்.

1800-ம் ஆண்டு தன்னுடைய இருபதாம் வயதில் அவருடைய திருமணமும் நிறைவேறியது. அதன்பின் தம் கணவருடன் லண்டன் மாநகரிலே சென்று வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார் கொழுநனை ஒரு கொழுத்த செல்வந்தராய்ப் பெற்றும், பார்த்தோர் பரவசமடையும் பருவத்தின் பொலிவைப் பெற்றிருந்தும், தன் அழகிலே அக்கரை கொள்ளவில்லை. ஆடம்பரத்திலே ஆசை வைக்கவில்லை. உயர்ந்த ஆடை அணிவகைகளை உதறித்தள்ளினுர். பொருள் மிக்க பானங்களையும், உணவு முறைகளையும் அறவே நீக்கிவிட்டார். எலிசபெத்தின் தோற்றம் எளிமையின் உருவமாகத் திகழ்ந்தது.

19-ம் நூற்ருண்டில்! இங்கிலாந்தின் சிறைச்சாலைகளில் கொடுமைகள் உலவின! கொக்கிப் பற்களின் முன்னே குற்றுயிராய்க்கிடந்தனர், கைதிகள்! அவர்களுக்கு வாழ்வளிக்கும் விடிவெள்ளியாக எலிசபெத் தோன்றினர்!

1813-ல் நியூகேட் சிறைச்சாலையைச் சென்று பார்வையிட்டார், அங்கே முன்னூறு பெண்களும் அவர்களுடைய குழந்தைகளும் ஒரே கூட்டமாக அசுத்தம் படர்ந்திருந்தக் கட்டாந்தரையிலே புரண்டு கொண்டிருந்தார்கள். குற்றவாளிகள் தரம் பிரிக்கப்படாமலிருந்தனர். எங்கும் ஏசலும் இரைச்சலுமாகவே காட்சியளித்தது. குடியர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். வெறியர்களின் அட்டகாசங்கள் வரம்பு கடந்திருந்தது. இவர்கள் மத்தியில் வேதனைபட்டுக் கொண்டிருந்த அப்பாவிகள் அளவற்ருேர் அவர்களிடையே சிக்கித்தவித்துக் கொண்டிருந்த அபலைப் பெண்களையும், கள்ளமற்ற அவர்கள் இளஞ்சிருர்களையும் கண்டு கலங்கினுர் அம்மையார். இந்த நிலையில் வளரும் அந்த சிசுக்கள் எப்படி வாழ்வில் வளம் காண முடியுமென்று பதறினுர். அங்கிருந்த பெண்களிடத்திலே அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைத்துப் பண்படுத்தத் தன்னுடன் ஒத்துழைக்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

இரவு பகலாக அம்மையாருடைய மனம், ஆதரவற்ற அவர்களுக்காக எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் அவளுடைய குடும்ப நிலை அவருடைய ஆர்வத்தில் அணை போட்டுவிட்டது. அவர்களுக்கு அப்போது ஒரு குழந்தை பிறந்தது. மகிழ வேண்டிய காலத்திலே மனம் தாளாத சம்பவங்களும் நடந்தன. பாசம் மிகுந்த பிரிதொரு சேயும், அன்புமிக்க அருமைத் தம்பியொருவனும் அவரைப் பதைக்கவைத்துப் பிரிந்தார்கள், சோகம் ஒரு புறமும், கடமையுணர்ச்சி மறு புறமும் அவரை வாட்டிவதைக்கலாயின. தவிரவும், ஒன்பது பேர்கள் கொண்ட தன் பெரிய குடும்பத்தைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு வேறு வலியுறுத்தியது. அந்த நிலையில் ப்ரை அம்மையாரின் உடல் நலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அவதியுற்ருர். அதனுல் சில காலம் சிறைச்சாலைகளின் பக்கம் திரும்ப முடியாமல் நேரிட்டது.

ஆனுல், தொண்டாற்றவே பிறந்துவிட்ட அவரை அப்படியே இயற்கை ஒதுக்கிவிடவில்லை. தன் பெரும்பணியை மீண்டும் துவக்கத் துடித்துக் கொண்டிருந்த அந்த வேளையிலே அவருடன் பிறந்தாள் ரேசல் (Rachel) என்பாள், அம்மையாருடைய நான்கு பெண் குழந்தைகளையும் தன்னுடன் வளர்க்க அழைத்துக் கொண்டு தன் கிராமத்திற்குப் போய்விட்டாள். எஞ்சியிருந்த ஆண் பிள்ளைகளைப் பள்ளியிலேயே சேர்த்து விட்டார்கள். ஆபத்திற்குக்கிடைத்த அரும்பொருளாக ரேசலைப் போற்றிவிட்டு மறுபடியும் தான் துவக்கிய பயணத்தைத் தொடர்ந்து விட்டார் எலிசபெத் ப்ரை. நேராக நியூ கேட்டிலுள்ள சிறைச்சாலையை நோக்கி நடந்தார். அங்கிருந்த பெண் கைதிகளுக்குள்ளே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் போதித்தார். அவர்களிடையே ஒரு தலைவியை நியமித்து வேண்டிய வசதிகளைத் தாங்களே சமரசமாக ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும்படிச் செய்தார்,

கொடூரச் செயல்களுக்காக தண்டனையனுபவித்து வரும் குற்றவாளிகள் எலிசபெத் ப்ரை பேச ஆரம்பித்தவுடன் தங்கள் மனதைப் பறி கொடுத்தனர். ஆரம்பத்தில் அநாகரீகமாய்ப் பேசியும் பழகியும் வந்த அவர்கள் முடிவில் அடைக்கலம் புகுந்த

★ தனக்கென வாழா தகைமையாளர்.

அகதிகளாய் மாறிவிட்டனர். தங்களைப் போலவே தங்கள் குழந்தைகளும் வளரக்கூடாது என்றுணர்ந்த அவர்கள், அவர்களையெல்லாம் அம்மையாரின் பாதுகாப்பில் ஒப்படைத்துத் தங்கள் செல்வங்களைச் சிருடன் வளர்க்க வேண்டினர். கடந்தகால நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணி வெட்கப்பட்டனர், வேதனையடைந்தனர். தாம் எடுத்துக்கொண்ட பெரும் பணிக்கு நாட்டிலுள்ளோரையும் நாட்டங் கொள்ளச் செய்தார் ப்ரை. ஆள்வோரின் கவனத்தை அந்தப் பக்கம் கூவியழைத்தார். யாவரிடமும் ஒரு புது உணர்வு புறப்பட்டது. நியூகேட் கவர்னரே அம்மையாரின் திட்டங்களை ஏற்றுக் கொண்டார். 1817-ம் ஆண்டில் நியூகேட் சிறைச்சாலையிலுள்ள பெண் கைதிகளின் புனரமைப்புக்காக ஒரு கழகத்தை ஏற்

(9-ம் பக்கம் பார்க்க)

சம்பத்தின் சங்காரம்!

“சுதந்திரம் என்ற பெயரால் எல்லா அதிகாரங்களையும் வெள்ளையர்கள் வடக்கே இருப்பவர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்று விட்டார்கள்; இப்போது இந்தப் பேராசைக்காரர்கள் நம்மை அடிமைப்படுத்த நினைக்கிருர்கள்; அதற்கு இங்குள்ள சில துரோகிகள் ஒத்துழைக்கிருர்கள். இதில் நாம்கொஞ்சம் தீர்க்கமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்துதீர வேண்டும். இது ஒரு தேசீயப் பிரச்சினை; இதில் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் பங்குண்டு; இது ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமான விஷயமல்ல!

“இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நாங்கள் எல்லாக் கட்சிகளையும் அழைக்க இருக்கிருேம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

“இந்தப் போராட்டத்தில், இங்கிருக்கிற மாநில அமைச்சரவை கொஞ்சம் புத்திசாலித்தனமாக இருக்க வேண்டுமென அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்”.

“விளைந்துவிட்ட நெற்கதிரில் அத்தனையும் பதராக இருக்காது! நாட்டிலே இருப்பவர்கள் அத்தனை பேரும் நெஞ்சில் உரமற்றவர்களல்ல என்பதை, அவர்கள் விரைவில் உணர்ந்து கொள்ளப் போகிருர்கள்!

“நம் திட்டம், கறுப்புக் கொடி காட்டுவது! அதற்குப் பின்னுல் நடந்த நிகழ்ச்சிகளுக்குத் திட்டமிட்டவரே காமராசர்! ஆகவே மக்கள் கிளர்ந்து எழுகின்ற நேரத்தில் சர்க்கார் ஒதுங்கிக் கொள்வது தான் விவேகமான செயலாகும்.

“காமராசருக்கு நாட்டு மக்கள்மீது நல்லெண்ணம் இருக்குமானுல் இங்கு நடைபெறுவதை டில்லிக்கு எடுத்துச் சொல்லி குடியரசுத் தலைவரின் தாக்கீதை நிறுத்திவைக்கச் சொல்ல வேண்டும்; இங்கு நமது கூட்டத்திற்குச் சேரும் மக்கள் கூட்டத்தைப் போட்டோ எடுத்து நேருவுக்குக் காட்டவேண்டும்; 'இங்கே கனல் பறந்து விட்டது; மக்களின் உள்ளமெல்லாம் தீப்பிழம்பாகி இருக்கிறது; எனவே, தாக்கீதை திரும்பப்பெறுங்கள்' என்று இராசேந்திர பிரசாத்தை-நேருவை காமராசர் கேட்கவேண்டும். அப்படிக் கேட்டால், மாற்று முகாமில் இருந்தாலும் மதியூகி என்று காமராசரை இப்போதில்லாவிட்டாலும் காலத் தாழ்த்தியாவது நாம் போற்றுவோம்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தித் தீவிரமாகப் பணி புரியலானார். அவரைக் கடைப்பிடித்து இன்னும் பல இயக்கங்களும் ஆரம்பமாயின. அல்லல்பட்ட உள்ளங்கள் ஆறுதல் அடைந்தன.

சிறைச்சாலைகளுடன் மட்டும் இந்தத் தொண்டு நின்று விடவில்லை. பிச்சைக்காரர்களுக்கும் புகலிடம் கிடைத்தது. திக்கற்றவர்களுக்கும் அருந்துணையமைந்தது. வீடற்ற அனாதைகளுக்கென லண்டன் மாநகரில் ஒரு விடுதியை நிறுவி அவர்களுக்கு உணவு பரிமாறவும் வழி செய்யப்பட்டது. பின்பு அதேபோல் பிரிட்டனிலும் அந்தத் திட்டத்தை உருவாக்கி உதவினார் அம்மையார். ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவினர் தங்கள் கடமையில் சலிப்படைந்து சோம்பித்திரிவது கண்டு, அவர்களுக்கென ஒரு சிறந்த நூல் நிலையத்தை உண்டாக்கி, அந்தந்த அலுவலகங்கள் தவறாது அது உதவும்படி வழியமைத்து அவர்களை ஊக்குவித்தார். ப்ரை பெருமாட்டியாரின் பெரும் பணிகள் இங்கிலாந்தில் மட்டுமின்றி ஐரோப்பாக் கண்டத்தின் முன்பாகவும் தென்பட்டன. நாடுகள் பலவற்றிலிருந்தும் அவருக்கு அழைப்புகள் வந்த வண்ணமாயிருந்தன. 1820-ம் ஆண்டு ரஷ்யாவை ஆண்டு வந்தப் பேரரசியின் வேண்டுகோளுக்கிணங்கி தம் சீரிய கருத்துக்களை அவ்வப்போது அவருக்கு எழுதத் தலைப்பட்டார். அதன் பயனாக ரஷ்யத் துணைக் கண்டத்திலே எலிசபெத் அம்மையாரின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பல சீர்திருத்தங்கள் பிறந்தன,

1838-ல் ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் தாமே ஒரு சுற்றுப் பிரயாணத்தைத் துவக்கினார். அந்நாட்களில் நீண்ட தூரம் பயணம் செய்வதென்பது மிகுந்ததொல்லை தருவதாகயிருந்தது. அதனால் அந்தச் சீமாட்டியாரின் உடல் மிகவும் நலிவடைந்து துன்புறுத்தியது. எதுவரினும் சளைக்காத அந்தச் செம்மல் நெஞ்சின் உரம் குன்றாது நாலாபுறங்களிலும் சுற்றித்திரிந்தார். ப்ரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து, பெல்ஜியம், ஜெர்மனி, ரஷ்யா முதலிய பல நாடுகளிலுள்ளச் சிறைச்சாலைகளைச் சென்று பார்வையிட்டனர். அவருக்குச் சென்றவிடமெல்லாம் கிடைத்த வரவேற்பு அளவு கடந்தது. அந்தப் பெண்ணரசியின் பொன் மொழிகளைக் கேட்டு பார் புகழத் தொடங்கியது. சீர்கேடான நிலையிலிருந்த சிறைக்கூடங்களெல்லாம் செம்மையாக்கப்பட்டன. சாதாரண மனிதர்களும், உலக மேதைகளும், மன்னர்களும் அம்மையாருக்கு மரியாதை செய்தனர்.

இளமையில் துவங்கிய அந்த நற்பணிகள் அவரை முதுமைக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டன. உழைப்பால் அவர் உள்ளம் சலிக்கவில்லை. ஆனால் அவருடைய உடல் மட்டும் தளர்ந்து விட்டது. தவிர்க்க முடியாத துன்புங்கள் அவர்களைத் தாக்கின. மனம் இயற்கையின் மாற்றங்களை கண்டு மருண்டது. தன் வனப்பையெல்லாம் இழந்தும் வாடாத அந்த உள்ளம் தனது வலிமை தன்னைவிட்டு ஓடி விட்டதைக் கண்டு மருண்டது. தன் வனப்பையெல்லாம் இழந்தும் வாடாத அந்த உள்ளம் அவருடைய மக்களும், பேரப்பிள்ளைகளுமாகப் பலர் இறந்தனர், இடையறாதிருந்த துடிப்பு ஒடிந்து விட்டது. இறுகப் பிணைத்துவிட்டன. உலகத்திற்குள் கிடைத்தற்கரிய அந்தப்பெருந்தகை, எளியோர்களுக்காகவே தன் இன்ப நாட்களைத் துறந்த அந்த உத்தமப்பேரணங்கு எல்லோருடைய நெஞ்சிலும் அகலாது இடம் பெற்று விட்டச் சீமாட்டி எலிசபெத் அம்மையார் 1845 ம் ஆண்டில், அக்டோபர் திங்கள் 12-ம் நாளில் இயற்கையோடு இணைந்து விட்டார்.

ஆசிரியர், "இனமுழக்கம்," சென்னை-2.

கட்டளை எங்கே?

அன்புள்ள,

சி. பி. சி. அண்ணா அவர்களே! தங்கள் 17-6-60 இனமுழக்கத்தின் தலையங்கம் படித்தேன். உடல் பூரித்தது இரத்தம் சூடேறியது கண்களிலே ஆனந்தக் கண்ணீர் தெளித்தது. 'புறப்படு புறப்படு' என்று என் மனம் விரட்டியது.''ஓடு,ஓடு' அளகேசன் வீட்டிற்கு. என் தாலி அறுபடுமுன் அவன் தாலியை அறு என்றது, என் கை கால்கள்.

அண்ணா! பொறுத்தது போதும், கட்டளை இடுங்கள், இன்னும் ஏன் காலதாமதம். குழுவின் கட்டளையை எதிர்பார்க்கிறேன்; பார்த்துக் கொண்டே இருக்கிறேன். போராட்ட நாளைக் குறிப்பிடுங்கள். பாரதமாதாவை ஓடஓட விரட்டுகிறோம். என் தாயின் மேல் ஆணை. இடுங்கள் கட்டளை. இன்னுமா தாமதம்? அண்ணா! எங்கே கட்டளை...?

புரட்சித்தம்பி,
திருநெல்வேலி.

பட எரிப்பு

எனது பெரு மதிப்பிற்குரிய,

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம், தங்களின் 3-6-60ல் வெளிவந்த "பட எரிப்பு இரத்தச் சோதனை" தலையங்கத்தைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இதைக் கண்டாவது தி.க. தோழர்கள் திருந்தட்டும். திரைப்பட பாடலான 'குட்டுகளை சொல்லட்டுமா - கூடையிலே அள்ளட்டுமா? ஏற்ப திராவிட கழகத்துக்கு விளக்க உரைதந்துள்ளீர்கள். இது போல அவர்களது 'சில்லரைப் போராட்டத்தைப்'பற்றி தலையங்கம் தீட்டுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

வை. ராசாராமன்,
ஈசனக்குடி.

ஊர்ந்தது வாசிக்கிறேன்

அன்புடையீர், வணக்கம்,

தங்களின் 'இன முழக்கம்' இதழில் வெளியாகும் 'ஊர்ந்தது உயர்ந்தால்' என்னும் தொடர் ஓவியத்தை கூர்ந்து வாசிக்கும் தோழர்களில் நானும் ஒருவன். சிறு கதை மன்னர் டி.கே.சி.யின் எழுத்து வன்மையும், அறிவுச் சுடரும் கலந்து,ஒளிவீசும் கதையைப் படிக்க, படிக்க தெவிட்டாததாக அமைந்துள்ளது. ஓர் இடத்தில், வேகமாகக் கொதிப்படைபவை வெகு விரைவில் குளிர்ந்து விடும் என்பதுதானே இயற்கை தரும் பாடம்; கொளுத்தப்பட்ட வாணம் உயரப்பறந்து எரிந்தாலும் அணைந்து கீழே விழுந்தது. புகையக் கூட இல்லை, அது எஞ்சியிருந்த சாம்பலும் உதிர்ந்து விழுந்து விட்டது. ஆத்திரம் வெளியேறும் வரை காத்திருந்த அனுதாபம் உள்ளே நுழைந்தது. இப்படி எழுதிக் கொண்டே போகலாம். இடம் கிடைக்காது என்று நிறுத்திக் கொள்கிறேன். தத்துவ மேதை டி. கே. சி யின் கதையை அடிக்கடி இதழில் வெளியிடுமாறு வேண்டுகிறேன் ஆவலை பூர்த்தி செய்வீர்களா?

ஆ. து. ஞானம்,
சித்தூர்.

எங்கள் நிலை

அழகான தென்நாடு பெற்றெடுத்தஅறிவுச் சிகரங்களே! தன் நாடு வாழ தன் உயிரை தியாகம் செய்யும் தியாகியே. உங்கள் எண்ணத்துக்கு இலங்கைவாழ் மக்கள் என்ன செய்ய முடியும் என்பது என்னால் எழுத முடியாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திசையிலும் வந்து இருக்கும் செந்தமிழன் படும்பாடு எங்களால் பார்த்துச் சாகிக்க முடியவில்லை உயிர்போகும் தருவாயில்தான் அவர்களை ஊருக்கு அனுப்புகின்றார்கள். அதற்கிடையில் அவர்கள் படும் பாடு. அப்பப்பா! சொல்லவா?

கண்ணீர் ஆறாகப் பெருகி விடும். ஆகையால் எனக்குத் தெரிந்த எண்ணத்தை எழுதித்தங்கள் இனமுழக்கத்திற்கு அனுப்பியிருக்கிறேன்.

இளந்தாடி,
இலங்கை.

மதுரை மாவட்ட தி. மு. கழக
வளர்ச்சி நிதிக்காக

10-7-60 ஞாயிறு இரவு 10 மணிக்கு
தமுக்கம் கலையரங்கில்

அறிஞர் அண்ணா அவர்களும்,
நடிப்பிசைப் புலவர்
கே. ஆர். இராமசாமி, M.L.C.
அவர்களும் நடிக்கும்

சந்திரமோகன்

(நாடகம்)

கழக வளர்ச்சிக்கு நிதிதாரீர் சிறப்புத்தாரீர்
நன்கொடை:- 100, 50, 25, 10, 5, 3, 2.

மதுரை மாவட்ட தி. மு. கழகம், மதுரை.

நாடகம் முடிந்தஉடன் திரும்புவதற்கு சிட்டிபஸ்
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சாவுப் பாதை!

புலவர் பொன்னிவளவன்

'பூங்காவின் ரீங்காரம் வண்டுப் பாட்டு !
பொன்னிநதி தரும்பாட்டோ சதங்கைப் பாட்டு !
நீங்காமல் மூங்கில்துளை தன்னில் தென்றல்
நெருங்கிவெளிப் படுவதுவோ குழலின் பாட்டு !
மாங்கொழுந்துச் சாப்பாட்டுக் குயிலின் பாட்டோ
மகிழ்ச்சிதரும் வாய்ப்பாட்டு ! முத்தம் கேட்டு
ஏங்காமல் எனைத்தழுவும் மங்கை பாட்டோ
இத்தனையும் சேர்ந்தசுவைக் கரும்புப் பாட்டு !'

என்னிடத்தில் பழம்நாளில் கணவர் சொன்ன
இத்தனையும் ஒத்திகைதான் ! ஆனால் இன்றோ
மின்னலிடைத் தாசியின்பால் அரங்கேற் றத்தை
மிகஅழகாய் நடத்துகிறார் ! இதனால் என்றன்
கன்னத்துச் சதைச்சரிவில் நாக்குப் பூச்சி
காட்சிதரும் வழிகின்ற கண்ணீர் ! சாவு
பின்னட்டும் என்னுயிரை ! இனிமேல் தேகப்
பின்னலிட அவர்வந்து கெஞ்ச மாட்டார் !

செங்கரும்பின் கண்ணீரோ இனிப்புச் சாறு !
சிவந்தமலர் ரோஜாவின் கண்ணீர் பன்னீர் !
இங்கெனது கண்ணீரோ உப்பு ! ஏதும்
இருக்கிறதா என்மீது தப்பு ? சீனிப்
பொங்கலைப்போல் நான்இங்கே இருக்கும் போது
புசிக்கின்றார் அவர்கோயில் பட்டைச் சாதம் !
சங்கீதக் குயில்எனக்குச் சோகம் ; கோட்டான்
சாரீரக் காரியிடம் எதற்கு மோகம் ?

நான்என்ன கருங்கல்லா ? மண்ணா ? இல்லை
நரைத்துவிட்ட படுகிழமா ? குடும்ப வாழ்வை
ஏன்வெட்டிச் சிதைக்கின்றார் ? எனக்கு மக்கள்
இதனாலே தரும்பட்டம் வாழா வெட்டி !
ஏன்கெட்டி மேளங்கள் கொட்டி தாலி
என்கழுத்தில் இவர்கட்டி யிருக்க வேண்டும் ?
மான்குட்டி ! பணப்பெட்டி ! வெல்லக் கட்டி !
மலர்த்தொட்டி நான் ! அவளோ மண்ணாங்கட்டி !

பம்பரமோ ஒரேஇடத்தில் சுற்றும் ; ஆனால்
பறவைகளோ எங்கெங்கும் பறந்து சுற்றும் !
அம்புவிழிப் பெண்என்னைச் சுற்றிக் கொஞ்சி
அடைக்காக்கும் கோழியைப்போல் இருந்த அத்தான்
தம்போக்கில் பிறபெண்ணை இழுத்துக் கொண்டு
தனிப்போக்கில் ஊர்சுற்றத் தொடங்கி விட்டார் !
வெம்பலைப்போல் ஆனேன்நான் ; எனது நெஞ்ச
வெதும்பலையும் விசும்பலையும் கேட்பா ரில்லை !

சோலைதரும் மலர்த்தூற்றல் ! கறுப்பு மேகம்
சொரிவதுவோ மழைத்தூற்றல் ! எனது கண்ணின்
வேலைகளில் முதல்வேலை கண்ணீர்த் தூற்றல் !
வெடிக்கின்ற கடுக்காய்வாய்த் தூற்றல் தந்தால் !
சாலையிலே நாலுபேர் காதில் வீழ்ந்தால்
சந்திசிரிக் கும் அதனால் அடுப்பில் காயும்
பாலைப்போல் கொதிக்கின்ற குமுறும் நெஞ்சைப்
பலவிதமாய் நான் அதட்டி அடக்கு கின்றேன் !

நான்சேற்றுத் தாமரையாய் இருந்தி ருந்தால்
நாளெல்லாம் சிரித்தபடிச் செத்தி ருப்பேன் !
தேன்நிலவாய்ப் பிறந்திருந்தால் நீல வானத்
திரையரங்கில் நடனமிட்டுத் தேய்வேன் ! துள்ளும்
மீன்குஞ்சாய்ப் பிறந்திருந்தால் குதித்துத் தாவி
மிகத்துணிவாய் எதிர்நீச்சல் போட்டி ருப்பேன் !
ஏன்பெண்ணாய்ப் பிறந்தேன்நான் ? எனநினைத்து
இவ்வாறு அழுதழுதுச் சாக மாட்டேன் !

பிடிக்கின்றேன் நான்குரங்குப் பிடிதான் ! ஆனால்
பிடிகொடுக்க மறுக்கின்றார் அத்தான் ! என்னை
அடிக்கின்றார் ! உதைக்கின்றார் ! 'என்னைக் கேட்க
யாரடீநீ ? என்கின்றார் ! அதட்டு கின்றார் !
இடிக்கின்றார் தூள்தூளாய் எனது நெஞ்சை !
இனியென்ன வாழ்கிறது உலகந் தன்னில் ?
ஒடிக்கின்றார் என்கையை ! மண்டை தன்னை
உடைக்கின்றார் சுவரினிலே மோதி மோதி !

விலைபோட்டுப் பனிக்கட்டி வாங்கி வைத்து
வேடிக்கை பார்ப்பதிலே என்ன நன்மை ?
கொலை செய்து குழிவெட்டிப் புதைப்ப தற்கா ?
குடும்பத்தை நடத்திடவா மணந்தார் என்னை ?
கலையட்டும் உயிர்க்கனவு ! இனிமேல் வீழ்ந்து
கசங்கட்டும் வாழ்வுமலர் ! மூச்சு நின்று
தொலையட்டும் ! இனியென்ன ? கோப்பை நஞ்சு
துயர்துடைக்கும் ! தரும்எனக்குச் சாவுப் பாதை

ச. தமிழன்பன், கேரளா.

கே: அன்புமிகு அண்ணு! குயவன், சலவைத் தொழிலாளி, முடி அலங்கரிப்பவன், (அம்பட்டன்) செருப்புத் தைக்கும் தொழிலாளி (சக்கிலியன்) செட்டியார் போன்ற பெயர்கள் தொழிலைக் குறிக்கும் பெயர்களா? அல்லது சாதியைக் குறிக்கும் பெயர்களா?

ப: தொழிலால் வந்த பெயர் சாதியாக மாறிற்று. இப்போது எல்லாத்தொழிலையும் எல்லாரும் செய்வதால் சாதிகள் தொழிலுக்கென்று இருக்கத் தேவையில்லை அல்லவா.

எம். ஏ. அன்பழகன், கேரளா.

கே: ஐயா! காங்கிரஸ்காரர்கள் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டதென்று பிரச்சாரம் செய்கிறுர்களே, கிடைத்திருக்கிறதா? கிடைத்திருந்தால் யாருக்குக் கிடைத்திருக்கிறது?

ப: பாரதமாதாவுக்குச் சிலையமைத்து ஒரு கையில் சுதந்திரம், மற்ருெரு கையில் தரித்திரம் என்று எழுதினுல், சுதந்திரக் கை வடக்கே, தரித்திரக் கை தெற்கே.

எம். எல். மணி, அரியலூர்.

கே: 'மிகவும் பலம் பொருந்திய வெள்ளையர்களையே அழித்தொழித்தவர்கள் நாங்கள்; எங்களிடம் இந்தத் தி. மு. கழகத்தினர் என்ன செய்துவிட முடியும்?' என்று, 'அரியலூர்' அளகேசன் ஒரு கூட்டத்தில் பேசியுள்ளாரே, இதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: ராட்டையை ராக்கெட் என்றும், தக்ளியை அணுகுண்டு என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறுர் பைத்தியக்கார அளகேசனுர். விட்டுத் தள்ளுங்கள், அந்தரௌடியை

நாதன், பெரம்பூர்.

கே: பதினுரும் லூயி மன்னனுக்குமுன் பிரான்ஸ் நாட்டை ஆண்டு கொண்டிருந்த அரசன் யார்? அங்கு மக்களாட்சி யார் காலத்தில் ஏற்பட்டது?

ப: பதினைந்தாம் லூயி மன்னன் ஆண்டு கொண்டிருந்தான். மக்களாட்சி ருசோ எழுதிய சமுதாய ஒப்பந்தம் என்ற நூல் வெளிவந்த பிறகு ஏற்பட்டது.

ப. இ ஏசுடியான், பம்பாய்-70.

கே: சிந்தனைச் சிற்பி அவர்களே! தமிழ் நாட்டைத்தவிர மற்ற மாநிலங்களில் வசிக்கும் கழகத்தோழர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ள இடமளிப்பீர்களா? அல்லது மாணவர்களுக்கு விடுத்த வேண்டுகோள்போல் எங்களுக்கும் வேண்டு கோள் விடுத்து விடுவீர்களா?

ப: மாணவர்களுக்குத்தான் ...லக்கு; மற்ற மாநிலத் ...கல்ல.

[சி. பி. சிற்றரசு]

ஜெயசீலன், சூளை.

கே: க்ரீசுக்கும் ரோமுக்கும் என்ன வேற்றுமை? இவ்விரண்டில் எது முன்னது? எது பின்னது? இவ்விரண்டு நாடுகளில் புகழ் வாய்ந்தது எது? எதனுல்?

ப: கிரேக்கம்தான் முந்தியது, ரோம் பிந்தியது. கிரேக்கத்திலே புகழ் வாய்ந்த சிந்தனையாளர்கள் சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில், பிண்டார் போன்றவர்கள். பெருவீரன் அலெக்ஜாண்டர், கிரேக்க நாகரீகத்தை அப்படியே தழுவியது. கி. மு. ரோம். அங்கே அறிஞர்கள் தோன்றவில்லை. ஆனுல், மாரியஸ் கயஸ், சல்லா, பாம்பே, புருடஸ், சீசர் போன்ற வீரர்கள் தோன்றினுர்கள். நாவண்மை படைத்த சிசிரோ - அந்தணி தோன்றினுர்கள். ஒரே ஒரு அறிஞன் காடோ என்பவன் இதாலியில் அன்று தோன்றினுன். அவன்தான் புருடசின் மாமனுர்.

பிரகாசம், மயிலை.

கே: நாம் தமிழர் இயக்கம் நமக்கு அழைப்பு அனுப்பி இருக்கிறதாமே உண்மையா?

ப: பொதுச்செயலாளரைக் கேளுங்கள்.

குப்புசாமி, புரசை.

கே: அன்புள்ள ஐயா! சரித்திரத்துக்கும் வரலாற்றுக்குமுள்ள வேற்றுமை என்ன?

ப: சரித்திரம் (வடமொழி) வரலாறு (தமிழ்மொழி) கருத்தில் இரண்டும் ஒன்றுதான்

ஆப்தீன், புதுவை.

கே: சிந்தனைச் சிற்பி அவர்களே! நடக்க விருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் புதுவை மக்கள் கலந்து கொள்வார்களா?

ப: புதுவை மக்கள் மாத்திரமல்ல, கருனுடகம், கேரளா, ஆந்திர மக்களும் கலந்து கொள்வார்கள்.

பாக்கியநாதன், போளூர்.

கே: மக்கள் மருந்தை அதிகமாக சாப்பிட்டிருப்பார்களா, விருந்தை அதிகமாக சாப்பிட்டிருப்பார்களா?

ப: விருந்தைத்தான் அதிகமாகச் சாப்பிட்டிருப்பார்கள். அதனுல்தான் மருந்து சாப்பிடத் தலைப்பட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

தொண்டைமான், அரியலூர்.

கே: தாடி வளர்த்துக் கொள்வதாலே உடலுக்கு ஏற்படும் நன்மை என்ன?

ப: உடல் கொஞ்சம் குளிர்ச்சியாக இருக்கும் என்கிருர்கள்.

மதிவாணன் வண்ணை.

கே: கடன் வாங்க நீட்டிய கையை மடக்காத சர்க்கார் எது?

ப: இந்தியா (பாரத்) சர்க்கார்.

அறவாழி, அயன்புரம்.

கே: நீண்ட நாட்கள் உயிர் வாழ்வது நல்லதா? இளமையிலேயே இறந்துவிடுவது நல்லதா?

ப: வயிருர உண்பது நல்லதா பாதியிலேயே எழுந்து போய்விடுவது நல்லதா என்று கேட்பதைப் போலிருக்கின்றது உங்கள் கேள்வி. நீண்ட நாட்கள் வாழ்ந்து உலகை உற்று நோக்கும்!

வில்லவன், போளூர்.

கே: நம் நாட்டில் மக்கள் சராசரி எத்தனையாண்டுகள் வாழ்கின்ருர்கள்?

ப: 25 ஆண்டுகள்.

முத்து, தேவாபுரம்.

கே: சாக்ரடீசைப் பற்றி சில வரிகள் சொல்லுங்கள்?

ப: ஏதென்ஸ் நகர நீதிமான்களே! நான் எதை சரி என்று நினைத்தேனே அதையே பேசி இருக்கின்றேன். இனியும் பேசுவேன். மன்னித்து வெளியே அனுப்பினுலும். அதையேதான் பேசுவேன், நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கிற தண்டனையை மாற்றும்படி வேண்டிக்கொள்ள என் குழந்தைகளை இந்த நீதிமன்றத்தின் முன்னுலே கிடத்தி அவைகளை கண்ணீர் சிந்தச் செய்யமாட்டேன். ஏனெனில் அவைகள் உகுக்கும் கண்ணீரால் நீங்கள் உள்ளம் குழைந்து நீதிப் பாதையிலிருந்து தவறி விடக்கூடும். என் குழந்தைகளின் கண்ணீரைவிட என் நாட்டின் நீதியை மதிக்கிறேன்."

சிந்தன், தூளூர்.

கே: மார்க்சிம் கார்க்கி சொன்ன ஒரு மணி வாசகத்தைச் சொல்லுங்கள்?

ப: உண்மையை நிலைநாட்டுவதற்காக எந்தத் தியாகமும் செய்யப் பின் வாங்காதே.

குணசேகரன், குன்றத்தூர்.

கே: மந்திரிகளிடம் நல்ல எண்ணம் கிடைக்குமா?

ப: திருப்பதியிலே போய், என் ஆள் மொட்டை யடித்திருப்பான். பார்த்தீர்களா என்று கேட்பதைப் போலத்தான்.

உலகநாதன், கொடுமுடி.

கே: கடன் வாங்குவதற்கும் பிச்சை எடுப்பதற்கும் என்ன வேற்றுமை?

ப: கடன் வாங்குவது பிச்சை எடுப்பதை விட கொஞ்சம் கண்ணியமானது. மற்றென்று—பிச்சை எடுத்த பொருளை திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. கடனைக் கண்டிப்பாகத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

நாயகநம்பி, வேலூர்.

கே: அறிவுக்கும் படிப்புக்கும்என்ன வேற்றுமை?

ப: அறிவு கத்தி; படிப்பு சாணைக்கல்.

மணிமாறன், திருப்பூர்.

கே: உங்கள் பத்திரிக்கையை ஏன் பெரிய அளவாக்கினீர்கள்?

ப: வளர்ந்திருக்கின்ற மனிதனைப் பார்த்து நீ ஏன் வளர்ந்தாய் என்று கேட்பதைப் போலிருக்கிறது உங்கள் கேள்வி.

துரைவேலன், சேலம்.

கே: அதிகம் பேசுவது நல்லதா-அதிகம் கேட்பது நல்லதா?

ப: அதிகம் கேட்பது நல்லது; அதைவிட படிப்பது மிகநல்லது. அதைவிட பார்த்துத் தெரிந்து கொள்வது எல்லாவற்றையும்விட நல்லது.

முனுசாமி, இராயபுரம்.

கே: பல மொழிகளைக் கற்றுக் கொள்வது நல்லது என்றிருக்கிற போது இந்தியை ஏன் எதிர்க்கிறீர்கள்?

ப: தாய்மொழியைக் கற்றுக் கொள்ளாமலே வேறு மொழியைக் கற்றுக் கொள்ளலாம்என்று எந்தப்பைத்தியக்காரன் சொன்னுன்.

சிகாமணி, மதுரை.

கே: குழந்தையை, முட்டாளாக இருக்கட்டும் என்று வாழ்த்தியவன் யார்?

ப: லியோ டால்ஸ்டாய் எனும் ரஷ்ய அறிஞன்.

ஞானம்பிகை, கேரளா.

கே: ரஷ்ய மன்னன் ஜாருக்கு, 'மிஸ்டர் ஜார்' என்று அஞ்சல் எழுதியவன் யார்.

ப: அதுவும் அதே டால்ஸ்டாய்தான்.

மோகன், திருவொற்றியூர்.

கே: ரஷ்யாவில் மக்களுக்குச சுதந்திரம் உண்டா?



ப: அண்மையில் மனவேதனைப்பட்டு இறந்து விட்டாரே, டாக்டர் ஷிவாகோ என்ற நூல் எழுதிய பாஸ்டர்நாக். அவர் கல்லறைக்குப் பேச வாயிருந்தால் அதைக் கேட்டுப் பாருங்கள்.

அச்சிலே: அறிவுக் கருவூலங்கள்

கவிஞர் கண்ணதாசன் கவிதைகள்

முதற் தொகுதி—இரண்டாம் பதிப்பு

இரண்டாம் தொகுதி—முதற் பதிப்பு

சிறுகதை மன்னர்: டி. கே. சீ. யின்

'உலக அரங்கில்'

விலை? வெளியாகும் நாள்? விரைவில்.

விபரங்கட்கு

காவியக் கழகம், சென்னை-2.

வீரனே, வீறிட்டெழு!

அழையாத வீட்டுக்கு நுழைவது தமிழர்கள் ஏற்றுக்கொள்ளாத முறை, தனக்குப் பிடிக்காத ஒருவருக்கு தாலி கட்டுவதும் தமிழனின் முறையல்ல-வேண்டாததை விரும்புவதும் தமிழர்கள் பண்பல்ல, தன் காலை மிதித்தாலன்றி எதிரியின் காலை வலிய மிதிப்பதும் தமிழன் அறமல்ல. பிறர் கருத்தைக் கேட்காமல் தன் கருத்தை அச்சத்தால் புகுத்துவதும் தமிழனின் மாண்பல்ல. தன்னிடம் மூதாதையர் குவித்துவைத்த அறநூல்களுக்கதிகமாக இந்தி வெறியர்கள் இன்னும் ஏழாயிரம் ஆண்டுகள் முயன்றாலும் முடியாது என்று எடுத்துச் சொல்லியும் கேளாக் காதினராக இருக்கும் அவர்களின் காதுகளில் போர்க்குரல் கேட்கப்போகிறது. எந்த மொழி, எந்த மொழியை எதற்காக ஆதிக்கம் செலுத்துவது, யார் யாரை அடக்கியாள்வது. அடக்கியாளும் உரிமை எங்ஙனம் வந்தது என்பதை எல்லாம் சிந்திக்கவைத்திருக்கிறது, இநதி வெறியர்களின் வெறிச் செயல்.

இந்தி எந்தத் தகுதியைப் பெற்றிருக்கிறது?

தமிழை அடக்கியாளும் தகுதி இந்திக்கு எந்த வகையில் உண்டு என்பதை அவர்கள் எடுத்துக் காட்டட்டும். அது அவர்கள் மாத்திரமல்ல, ஏழேழ்தலை முறைகள் முயன்றாலும் அருகில் நெருங்க முடியாத ஒரு அற்பாயுசு மொழி, அதுவும் ஒரே இந்தியல்ல, பதினொரு பிரிவுகள். ஒரு இந்தி மாநிலத்தான் மற்ற மாநிலத்தான் பேசும் இந்தியைப் புரிந்து கொள்வதில்லை.

தகுதியற்ற இந்திக்குத் தமிழ் நாட்டில் இடமா?

இந்திப் பகுதிகளிலேயே இந்த மதித்தனம் என்றால், இங்கே எப்படி அதுசொந்தம் பாராட்ட முடியும் என்றாலும் உரிமை கொண்டாடுகிறது. எதனால்? தன்னுள் சகல கலா வல்லமை யிருக்கின்றதென்ற காரணத்தாலா- உலகத்திற்கு ஒரு மாபெரிய பொது மறையைத் தந்திருக்கிறது என்ற தகுதியாலா? அல்லது இறந்தோர் போர்க்களம் சென்று உலக முழுதும் வாகை சூடிய வீர காவியம் ஆக்கித்தந்திருக்கிறது என்ற காரணத்தாலா? இயல், இசை, கூத்து என்ற முப் பகுதிகளாகப் பகுத்தி உலகம் வலம் வந்த உன்னத மொழி என்ற காரணத்தாலா - அல்லது நினைத்ததை நினைத்தபடி சொல்லும் சொல்லாற்றலும் கருத்தாழமும் கொண்டிருக்கிற குறையிலாமொழி என்ற காரணத்தாலா? அல்லது மேதினி மெச்சத் தகுந்த விஞ்ஞான அறிவும் புதைப்பொருள் ஆராய்ச்சியும், செப்பேடும், சிலாசாசனமும் சிறந்து விளங்கும் சிறப்பான மொழி என்ற காரணத்தாலா - அல்லது புத்தர் பொன் மொழியைத் தந்த மொழி. அசோகன் காலத்து அரியாசனமேறிய மொழி, மொகலாய மன்னர்கள் முடிமேலாடிய மொழி, நவ நந்தர்கள் நாவில் நடமாடிய மொழி, சாணக்கியனின் அர்த்த சாஸ்திரத்தையாக்கித் தந்த மொழி, கோல் கொண்டா கோட்டையில்குடியிருந்த மொழி, வீர சிவாஜியின் நாவில் நடமாடிய மொழி, அக்பர், ஔரங்கசீப், கில்ஜி வம்சத்தினர், லோடிக்கள், அடிமை மன்னர்கள், பல்லவர்கள், விஜய நகர மன்னர்கள் பாராட்டிய மொழி என்ற காரணத்தாலா - முச்சங்கமேறி முதுரைகளை முழங்கிய மொழிஎன்ற காரணத்தாலா, அல்லதுபோர்க்களவீரர்கள்புறமுதுகுக் காட்டாமல்திமுதிமு என நடந்து வீரக் குருதியை வெங் கானில் சிந்தச் செய்த மொ என்பதாலா? அல்ல, அல்ல. அந்தத் தகுதிகள் எதுவுமே இந்திக்கு இல்லை. இன்றும் இல்லை, இனி என்றுமே அதற்கு இருக்கப் போவதில்லை. அத்தகு நொண்டி மொழியை நடமாட வைக்கத்தான் இந்தியப் பேரரசு சட்டம் எனும் கோல் கொடுத்து உதவுகிறது. அந்தக் குருட்டு மொழியின் கண்ணைக் குடியரசுத் தலைவர் திறந்துவைக்கிறார். இந்தியா, அதில்வாழ்பவர்கள், இந்தியர்கள். அவர்கள்பேசும் மொழி இந்தி. இப்படிச் சொல்லி விட வேண்டும், அயல் நாட்டுக்கு. இதுவே அவர்கள் தணியாத ஆசை. எப்பாடு பட்டாலும் எந்த முறையைக் கையாண்டாகிலும், எவ்வளவு தடியடி தர்பார் நடத்தியாகிலும், குண்டுகளை சரமாரியாகப் பொழிந்தாகிலும் இந்தியை அனைவரையும் பேச, கற்க செய்ய வேண்டும் என்பதே அந்தக் குள்ளமதியினரின் குறிக்கோள்.

அசட்டுத் தைரியம்

மற்றுமோர் அசட்டுத்தைரியமும் அவர்களுக்குண்டு. அதாவது:— முன்பு புகுத்தினோம், தார்கொண்டு அழித்தார்கள். மீண்டும் எழுதி விட்டோம். அதனால் சிலபல லட்சங்கள் செலவு. அவ்வளவு தானே. சுதந்திரம் வந்த பிறகு எத்தனையோ கோடி

விடுதலை பெறுவோம்!

சி.பி.சிற்றரசு

கள் வீணாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கில் இதையும் சேர்த்து விட்டோம். இனி என்ன - மீண்டும் அழிப்பார்கள். அவர்களை கைது செய்யாமல் விட்டால் போராட்டம் பிசுபிசுத்துப்போகும். மீண்டும் சில பல லட்சங்கள் செலவாகக்கூடும். அதனால் நமது செல்வாக்குக் குறைந்துவிடப் போகிறதா? இல்லை - இந்த தடிப்பான எண்ணம் பேராசைக்கூண்டில் புகுந்து அவர்களை பிய்த்துத் தின்றுக் கொண்டிருக்கிறது. மைல்கற்கள், அவைகளும் அப்படியே. மணியார்டர்பாரங்களை என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் எதையும் செய்யட்டும். என்றாலும் அவர்களனைவரும் வெறுங்கையினர். நாமோ போர்க் கருவிகளனைத்தையும் வைத்திருக்கிறோம்.

யாருக்குப் பயம்?

நாம், நம்மைப் போன்ற பலம் பெற்ற சர்க்காருக்குப் பயப்பட வேண்டும், அல்லது நம்மைவிட பலம் பொருந்திய சீனா போன்ற சர்க்காருக்குப் பயப்பட வேண்டும். அதை விட்டு இந்த வெறுங்கையினர்களுக்குப் பயப்பட்டால் நமது கௌரவம் என்னாவது என்றெல்லாம் அவர்கள் நம்பிக்கை நீர் குடித்துக்கொண்டிருக்கின்றனர். பல வல்லரசுகளை வல்லரசுகளால்த் தான் கவிழ்க்க முடியும் என்று கிருத்துவுக்கு முன்பிருந்த ரோம் ஏகாதிபத்திய மிகப் பழைய வரலாற்றைப் படித்துக் கொண்டிருக்கின்றனர். அதையும் அவர்கள் சரியாகப் படிக்கவில்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் அங்கும், ரோமர்கள் குடியேறுவதற்கு முன்னாலிருந்த மலை சாதியினர் கலகம் நடத்தினார்கள். அவர்களுக்கெல்லாம் நிலம் கொடுத்து நிலைமையை சமாளித்தான் மாரியஸ். அடுத்து போர்க்களம் சென்று திரும்பிய வீரர்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் செல்லாமல் ரோமிலே தங்க வேண்டிய வசதிகளைத் தராவிட்டால், மீண்டும் ஆயுதமெடுக்கமாட்டோம் என்று புரட்சி நடத்தினர். அவர்களுக்கு வேண்டியதைத்தந்து நிலைமையை சமாளித்தான் சீசர். எவ்வளவு எதிர்ப்புகளை அடக்கியும் இறுதியில் செனேட் மண்டபத்தில் பாம்பேயின் சிலைக் கடியிலே சாய்ந்தான் சீசர் என்றுதான் வரலாறு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது.

நாம் கேட்பதென்ன?

ஆகவே நாம் அவர்களிடம் வாழ்வு கேட்கவில்லை. வளம்கேட்கவில்லை. மொழிக்கு ஆபத்துத் தேடாதீர் என்கிறோம். வெறும் வாயாலேயே உச்சரிக்க மறுக்கிறோம் என்றெண்ணும்போது உதிர வாயால் உச்சரிக்கச் செய்வோம் என்கின்றனர் வடவர். நாம் வெறும் வாயால் மாத்திரமல்ல, உதிர வாயால்மாத்திரமல்ல, நமது கல்லறைகளுக்குப் பேசவாயிருந்தால், அல்லது அவற்றின்மேல் முளைக்கும் புல்பூண்டுகளுக்குப் பேசவாயிருந்தால் அவைகளும் இந்தியை உச்சரிக்கப் போவதில்லை.

போராட்டம்

இந்தப்போராட்டம்! எப்படி இருக்கும் என்று இளைஞர் அலுவலகத்துக்கு எழுதிக் கேட்ட வண்ணம் உள்ளனர். அதை விரைவிலே கழகத்தின் சட்டரீதியான போராட்டக்குழு அறிவிக்கும். அந்த அழைப்பு உங்களை மணமேடைக்கு அழைத்துச் செல்வதாகஇருக்கப் போவதில்லை. பிணமேடைக்கு அழைத்துச் செல்வதாக இருக்கக்கூடும்.

தமிழுக்கு மாத்திரமல்ல நாம் போராடுவது - திராவிட மொழிகள் அனைத்துமேஇந்தி எனும் மந்தியின் கைசிக்கிய மாலையாகக்கூடாது என்பதால் கருநாடக, கேரள, ஆந்திர மாநிலங்களிலும் போர்க்குரல் கேட்கப்போகிறது - அதற்கான வய்ப்பையும் வசதியையும் பொதுக் குழு ஆக்கித் தந்திருக்கிறது. ஆகவே போராட்டக்குழுவின் அறிக்கை வரும் வரையில் பொறுத்திருந்து அதன் பிறகு புலியெனச் சீறுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

பணிந்தது போதும்; துணிந்தெழு தமிழனே!

குமாரபாளையத்திலே கொள்கை வீரர்கள்!

அவர்களுக்கிடையிலே அண்ணாவின் பொன்னுரை!



புகைப்படம்—சாமி போட்டோ ஸ்டுடியோ, சேலம்.

வீர வரிகள்!

பாமர மனிதன் பாராளும் காலம் இது! கண்மூடித் திட்டங்களை பாரிலே அகற்றுங்கள் வயலிலே விளையும் உணவை அனுபவிக்க விவசாயிக்குச் சுதந்திரம் இல்லை யென்றால் அவ்வயலின் அவ்வளவுதானிய கதிர்களையும் அறுத்தெறியுங்கள்!

கவி இக்பால்

தாய்நாட்டுப் பற்றைக் காட்டிலும் வேறு எதன்மீதும் அதிகப் பற்று இருக்க முடியாது.

பிளேட்டோ

மனிதனுடைய சுதந்திரத்திற்கு விரோதமாக இருப்பவை ஏகாதிபத்தியங்கள்.

டி டாக் வெல்லி

[illegible] சிறைப்படுத்தி வைக்கும் இடம் தெய்வலோகமாக இருந்தாலும் அதைநான் விரும்பமாட்டேன். என்னுடைய தனிப்பட்ட சுதந்திரத்திற்காக அந்தத் தெய்வலோகத்துச் சிறையின் பளிங்குச் சுவர்களையும் தகர்த்து வெளியேறவே துடிப்பேன்.

ஜான் டிரைடன்

திரைஒலி!

ஜுபிடரின்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

வலுத்தவனுக்கு இளைத்தவன் அடிமையா? உண்டு கொழுப்பவனுக்கு உழைப்பவன் அடிமையா? அல்ல. அதற்காக உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம். நிலத்திற்குரியவன் ஏமாளியா...? அதுவுமல்ல. உழைப்பிற்கேற்ற ஊதியம்பெறுகிருயா? அடிமை விலங்கு அறுத்தெறியப்படுகிறதா? உன்னை ஆளவந்தவன் வழிவகைகளோடு வாழ வைப்பவனு?-இதுதான் இன்றைய உயர்ந்த கொள்கை. இதைத்தான் சிந்திக்கச்சொல்லி நாள்தோறும் நல்லவரும், அறிஞர்களும், கலைஞர்களும், கவிஞர்களும் நாட்டு மக்களிடையே பரப்பிவருகின்றனர். இந்தக் கொள்கையைத்தான் கதைக்கு வெளிமுகப்பாக அமைத்து வெற்றி கண்டுள்ளார் கலைஞர். தெள்ளிய நீரொத்த கதையமைப்பு; முத்துப்போன்ற வசனம். இவை உள்ளத்தை உணர்ச்சி வயப்படுத்துகிறது.

வெட்கங் கெட்டவளுக்கு வெண்பட்டு முக ஆரமா—(முத்தாரம்) நடையழகு காட்டும் நயம்

கொட்டவரும் தேள், முட்டவரும் மாடு, உயிரை வெட்டவரும் பாம்பு (...?) இவைகளை விட்டுவைப்பதால் பயனில்லை—சீற்றம் காட்டும் நிலை.

யாரடி இவன் (ஆ) யாரடி (பெண்கள்) தங்கவேலு-நான் ஐந்து அடிதான். நீங்க பார்த்தமாதிரி ஆறடிங்கிறீங்களே - சிரிக்க வைக்கும் நிலை.

ஆமா என் பெயர் செல்லையா. வீடு, செல்லையா செல்லையா என்கிறது. ஆனுல், காடுதான் வாய்யா என்று அழைக்கவில்லை - சிந்தனையைக் கிளரும் நிலை. போராட்டம் வந்தால் முதலில் நான்தான் அண்ணு சாகத் துணிவேன் - ஆகஸ்ட் 31-ம் நாளை நினைவூட்டும் நிலை.

நவரசம் ததும்பும்படி மேற்குறிப்பிட்ட வசனங்களை அமைத்த அண்ணுகருணுநிதி அவர்களைப் பாராட்டுகிறேம்.

தம்பித்துரை
(ஜெமினிகணேசன்)

காதல், வீரம், சோகம் மூன்றிலும் தவறு காண முடியாத நடிப்பு.

தங்கத்துரை (டி.கே.பகவதி)

அற்புதமான நடிப்பு. ஒவ்வொரு கட்டமும் உணர்ச்சியூட்டும் நடிப்பு. நாடக மன்னரே திரையுலக மன்னராகவும் காட்சி யளிக்கத் தவறவில்லை.

எம். என் நம்பியார் ;

குறை கூற முடியாவிட்டாலும் மற்ற படங்களைப் போன்ற குறுகுறுப்பு இல்லை.

ஏ. கருணுநிதி :

பயனில்லை; இவர் சிரிப்பு நடிகராக நடிப்பது திரையுலகிற்கே அவமானம்.

கே. ஏ. தங்கவேலு :

பலே தங்கவேலு!

சரோஜாதேவி :

ஏதோ சில கட்டங்கள். மன்னர் மகளல்லவா, எனவே திரையில் அதிகமாகக் காட்சியளிக்க வில்லை. காதல், சோகம்-இதில் துடிப்புள்ளது. குறும்பு அதிகம் செய்தால் வம்பில் (தமிழ் உச்சரிப்பால்) வந்துமுடிந்துவிடும். மற்றவர்களைக் குறிப்பிட முடியாது.

'என்னருமைக் காதலிக்கு வெண்ணிலாவே'— பட்டுக்கோட்டையாரின் இப்பாட்டு இனிக்கிறது.

'வெற்றிபெற்றமாமனுக்கு' கு.மா. பாலசுப்ரமணியத்தின் இப்பாட்டு சிரிக்கவைக்கிறது.

இயக்குநர் : டி. பிரகாஷ் ராவ் வெற்றிப் படமாகும் அளவிற்கு அற்புதமாக இயக்கியுள்ளார். எனவேதான் அருமையாகவும், பெருமை கொள்ளும் விதத்திலும் பட முழுமையும் அழகாக இயக்கியுள்ளார். குறிப்பாக எம். என். ராஜம் வெட்கத்தால் முகம் மூடிச் செல்கையில் நம்பியார் பின்னுலேயே சென்று ஏமாறும் கட்டம் பலே!

காட்சியமைப்பும், கடைசிக் கட்டத்தில் சரோஜாதேவி கூண்டில் நிறுத்தப் பட்டுள்ள காட்சியும் வியப்பை யூட்டுகின்றன.

பட்டுத் துணியில் ஒட்டை விழுந்துள்ளதைப்போல, அழகான கோர்வைக் காட்சிகளுக்கிடையில், தங்கவேலுவால் அரண்மனை அந்தப்புரத்தில் ஆண்கள் வரலாமா என்னும் தர்க்கக் காட்சி மதுரை வீரனை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. அருவருப்பை அளிக்கிறது.

அரண்மனையில், டி.கே.ராமச்சந்திரனிடம், ஜெமினிகணேசன், தர்க்கம் செய்த பிறகு இவை யெல்லாம் கனவில் என்று சொல்லும் வசனங்கள் அப்படியே 'தூக்கு மேடை' (கலைஞர் தீட்டிய)யில் உள்ளது. புதுமையைக் கலைஞர் விரும்பியிருக்கலாம்.

மக்கள் நல்லபடம் என்று கூறுகின்றனர்
மாக்கள்............?

—முத்து.

திராவிடர் கரங்களிலே தவழவரும் 2-வது இதழ்

தென்னவரின் தேனும்-திராவிடரின் பூமாலையாய்
பவனி வருகிறது

ஞாயிறு

ஆசிரியர் : சி. சிட்டிபாபு, எம். சி.

விற்பனை இல்லாத இடங்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

விவரங்கட்கு :

ஞாயிறு அலுவலகம்,
5, குப்புமுத்து முதலி தெரு, சென்னை-5.

எவர் வந்தாலும் விடமாட்டேன் !

"நெருங்காதே! குத்திடுவேன்" என்ற ராதாவின் மிரட்டல் பாலையாவைப் பணியவைத்திடுமா? ...தகம்' என்பதுபோல் சலித்து நிற்கிருர் சந்திரபாபு. 'கவலையில்லாத மனிதனில்' ஒரு காட்சி.

அருணுசலம் பிக்சர்ஸ் :

பொன்னித் திருநாள்

- ★ பொருத்தமில்லாத தலைப்பு!
- ★ திருத்தமில்லாத கதை அமைப்பு!
- ★ வருத்தமில்லாத நடிப்பு!
- ★ முருகனை நம்பிய வேலன் மொட்டையடித்துக் கொள்வார்!

கதை :

முதலாளி—தொழிலாளி. முதலாளி மகளுக்கும் தொழிலாளிக்கும் காதல். காதலுக்குத் தடை. கள்ளச் சந்திப்பு. தடியடி, காதல் கட்டுமீறுகிறது. காளை பட்டாளத்தில். கன்னிக்குக் கட்டாயக் கல்யாண ஏற்பாடு—இதற்கிடையில் ஒரு வேண்டாத வில்லன். சற்றுக் குழப்பம். பின்னர் சுபம்.

பங்கேற்போர் :

வளையாபதி முத்துகிருஷ்ணன் - தொழிலாளி. இவர் நடிப்பு நாடக ஒத்திகை பார்ப்பதுபோல் இருக்கிறது. இவருக்கு நடிக்க வேண்டுமென்ற ஆசை அதிகம். ஆனுல் அந்த ஆசையை இவர் நிறைவேற்றிக் கொள்ளும் முறை நம்மால் தாள முடியவில்லை.

முதலாளியாக வி.கே. இராமசாமி, தயாரிப்பாளர் வேலன்' இவர் மூலமாகத் தமது சொல் வளத்தையும் நயத்தையும் வெளிப்படுத்துகிருரே தவிர இவர் சோபிக்கவில்லை.

முதலாளியின் மகளாக, தொழிலாளியின் காதலியாக திருமதி...... வருகிருர், போகிருர். அவர் ஏனோ பத்துப்பிள்ளை பெற்றவர்போல் காட்சி தருகிருர்! ஒப்பனைக்குறைவோ, அல்லது அவர்தம் உடற்கட்டுத்தளர்வோ? இவர் போன்ருரெல்லாம் இன்னும் நம் திரையுலகிற்குத் தேவைதானு? இவருக்குத் தோழியாக வரும் திருமதி புதுமுகம் எல். விஜயலட்சுமி அவர்கள் தமிழகத்துத் திரையுலகை வாழவிட்டு விலகிடுதல் நன்று.

சுவாரஸ்யமில்லாத ஹாஸ்ய பாத்திரத்தில் மனோரமா—பக்கிரிசாமி ஜோடி. சிரமப்பட்டுச் சிரிப்பூட்டுகிருர்கள்.

உப்புச்சப்பில்லாத கதை. கருத்தைக் கவரும் வசனம்; இவற்றைப் படைத்தவர் படாதிபதி வேலன். துணை நின்றவர் இராசரத்தினம். எவர் முன்னம் சுயமரியாதைப் பிரச்சாரகராக இருந்தரோ அவர் ஆத்தீகப் பிரச்சாரகராகிருர். அவர் நம்பும் முருகனுவது நூறு இரண்டு ரூபாய் டிக்கட்டுகள் வாங்கட்டும்.

"பொன்னித் திருநாள்" என்ற பொருத்தமில்லாத தலைப்பில் திருத்தமில்லாமல் வெளிவந்துள்ள இப்படம் "அறைச்சார்ஜ்" டிக்கட்டில்கூட ஆறுநாள் ஓடாது.

வலை

எங்கும் விற்பனையாகிறது !

தங்கமலர்
திங்கள் இருமுறை

ஆசிரியர் : கண்ணப்பா வள்ளியப்பன்

★

விற்பனையாளரில்லாத இடங்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 4

எழுதுக :

'தங்கமலர்'
4, இராசகோபால நாயக்கன் சந்து, சென்னை-2.

ஆசிரியர் : சி. பி. சிற்றரசு, வெளியிடுபவர், அச்சிடுபவர் : கண்ணப்பா வள்ளியப்பன், இனமுழக்கம் அச்சகம், 4, இராசகோபால நாய்க்கன் சந்து, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

இனமுழக்கம்
ஆசிரியர்: சி.பி.சிற்றரசு
மலர் 1] ★ 12—8—60 ★ [இதழ் 49

வெற்றி நமதே பணிந்தனர் வடவர்

நேருஅவர்கள் இந்தி சம்பந்தமாகப் பாராளுமன்றத்திலே இருமுறை தந்த வாக்குறுதி குடியரசுத் தலைவர் பிரகடனத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர் தென்னகம் வருவதற்கு முன்னால் தெளிவாக்கப்பட வேண்டும். இல்லையென்றால் மக்களாட்சி முறையனுமதித்திருக்கும் வெறுப்பின் சின்னமான கருப்புக் கொடியைக் காட்டுவோம் என்று ஜூலை 31-ந் தேதி இரவு 9-10-க்கு அறிவித்தோம்.

மறுநாள் காலை நமது தலை நகரிலிருந்து 1359 மைல்களுக்கப்பாலிருக்கும் இந்தியப் பேரரசின் தலை நகராகிய டில்லியில் பேரொலித்தது. நியமிக்கப்பட்ட ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரான பிராங் அந்தோணி என்பவர் நமது முடிவைப்பற்றி எழுப்பிய கேள்விக்கு, உள்நாட்டமைச்சர் கோவிந்த வல்லப பந்த் அவர்கள், குடியரசுத் தலைவர் பிரகடனத்தில் நேருவின் உறுதிமொழிகள் அடங்கியிருக்கிற தென்றும், நேருவின் உறுதிமொழியை இந்திய சர்க்கார் மீறுதென்றும், தென்னகம்வரும் தலைவருக்கு கருப்புக்கொடி காட்டுவதாகத் தீர்மானித்திருப்பதற்காக தாம் வருந்துவதாகவும் தெரிவித்தார். இவரே முன்பு ஒரு முறை நேருவின் வாக்குறுதியைச் சுட்டிக்காட்டி தோழர் சம்பத் கேட்ட கேள்விக்கு,'அப்படி ஒன்றும்இல்லை.' என்று மழுப்பியவர். அப்படி சொன்னவர் இப்போது பணிந்தார் என்றால் எதனால்.

உள் நாட்டமைச்சரின் இந்த உறுதிமொழியே போதுமா? இந்த இந்தி விவகாரத்தில் சம்மந்தப்பட்ட நேருவும், குடியரசுத் தலைவரும் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள். குடியரசுத் தலைவராகிலும் ஐதராபாத்தில் இருக்கிறார், நேரு அவர்கள் டில்லியில் தானே இருக்கிறார். அவர் தான் முன்பு தந்த உறுதிமொழியை மீண்டும் உறுதி படுத்தினாலன்றி கழகம் கருப்புக்கொடி காட்டுகின்ற முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்ற தோரணையில் திட்டவட்டமாகவே தோழர் சம்பத், நேரு அவர்களுக்குத் தானே தனிப்பட்ட முறையிலே ஒரு கடிதமும், 15 மக்கள் சபை உறுப்பினர்கள் கையொப்ப மடங்கிய முடங்கல் ஒன்றும் அனுப்பிவைத்தார்.

5 மணி நேரத்தில் கிடைத்த பதில்.

தோழர் சம்பத் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்ட முடங்கல் 3-ந் தேதி காலை 11 மணிக்கு சேர்ப்பித்து, இன்று இரவே சென்னைக்குத் திரும்புவதால் மாலைக்குள் பதில் கிடைக்க வேண்டுமென்றும்,இல்லையானால் 6-தேதி கருப்புக் கொடி நிகழ்ச்சி நடந்தே தீரும் என்றும் குறிப்பிட்டு விட்டு நேராகப் பார்லிமெண்டுக்குப் போய், அங்கே பிற்பகல் 3-45 வரையிலும் இருந்துவிட்டு. 4 மணிக்கு வீட்டுக்கு வந்தார். சரியாக 4-10-க்கு நேருவின் ஆங்கிலக் கையெழுத்திட்ட கடிதம் சீல்வைக்கப்பட்டு ஆள் மூலம் சேர்க்கப்பட்டது; அதிலிருந்த வாசகத்தை நம் இதழில் நீங்கள் காணலாம்.

இங்கிருந்த சில ஏமாளி ஏடுகள்!

இங்கு நம் எதிர் முகாமிலே இருக்கும் சில ஏதுங்கெட்ட ஏடுகள், தப்பிலித்தனமாக, 'நேரு எங்கே, இவர்கள் எங்கே? நேருவாவது, இவர்களை மதிக்கவாவது, சொம்மாஸ்டண்டு அடிக்கிறார்கள்' என்றெல்லாம் எழுதியும் பேசியும் வந்தன. சில நடு நிலை பத்ரிக்கைகள் இந்தியைப் பற்றி ஏற்பட்ட சர்ச்சைகளை உண்மையாகவே விளக்கி, அதனால் எதிர்க் காலத்தில் விளையக் கூடிய அபாயங்களை எடுத்துக் கூறி, என்றாலும் குடியரசுத் தலைவருக்கு கருப்புக்கொடி காட்டுவது அவ்வளவு நல்லதா என்று வருத்தப்பட்டிருந்தன.

நாம் குடியசுத் தலைவரை அவமானப் படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல, யாரிடமிருந்து நமக்கு ஐயம் தோன்றியதோ அவரிடம் விளக்கம் கேட்டோம். குறித்த நேரத்திற்குள் கிடைக்க வில்லையானால் நமது எதிர்ப்பை அவரிடம் காட்டாமல் வேறு யாரிடம் காட்டுவது? அவரே இதையறிந்து கொண்டு ஆந்திரத்தின் தலைநகரிலிருந்தபடியே, நேருவின் வாக்குறுதிகள் மீறப்படாது. ஒவ்வொருவருக்கும் தாய்மொழி உணர்ச்சி எத்தகையது என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன், என்ற முடிவில் பேசினார்.

முதல் நாள் உள்நாட்டமைச்சர் பந்தும், இரண்டாம் நாள் குடியரசுத் தலைவரும், மூன்றும் நாள் பிரதமர் நேரு தான் கையெழுத்திட்ட கடிதம் மூலமும் உறுதியளித்த பின் கருப்புக் கொடி காட்டுவதை நிறுத்திவிட வேண்டுமென்று செயற்குழுவும், போராட்டக் குழுவும் 4-ந் தேதி மாலை 4-15-க்கு முடிவு செய்தது.

மேற்சொன்ன முக்கியமான மூவர்கள் இல்லாமல், இங்கு இந்த சென்னை மாநில நிதி, நீதி மந்திரியும், தற்காலிக போலீஸ் மந்திரியுமான சுப்பிரமணியம் அவர்கள், இதுவரை போகின்ற பக்கங்களிலெல்லாம், பேசுகின்ற கூட்டங்களிலெல்லாம் நம் கழகத்தைத் தாக்கிப்பேசுவதையே தொழிலாகக் கொண்டவர். கருப்புக்கொடி காட்டப் போகிறோம் என்றறிந்தவுடன், நிருபர்கள் மாநாட்டைக் கூட்டி மிக தழுதழுத்தக் குரலில், **கைவிடும்படி மிகப்பணிவன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.'** என்றும், நாமெல்லாம் சேர்ந்து வேறு வழியில் டில்லியோடு போராடலாம் என்றும் பேசி உறுதிமொழி தந்திருக்கிறார்.

ஆனால்.

ஆனால் முதலமைச்சர்தான் இன்னும் கிண்டல் செய்துக் கொண்டிருக்கிறார். அவருடைய மண்டைக் கனத்தைக் கீழே இறக்குகின்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நாம் மற்ற கட்சிகளுடைய உதவியைக் கேட்டோமாம் அவர்கள் தரமறுத்துவிடவே, நாம் கருபபுக்கொடி காட்டுவதைக் கைவிட்டு விட்டோம். என்று மதுரைச் சந்திப்பில் பேசி இருக்கிறது, இந்த பிரகிருதி.

இந்தச் சூரப்புலிதான் 1958 சனவரி 6-லும் முதலமைச்சராக இருநதது. அப்போது நாம் நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டினோம். அப்போதும் நாம் யாரையும கூப்பிடவில்லை, நாமே தனியாகத்தான் செய்தோம். இப்போதும் நாம் யாரையும் கூப்பிடவில்லை, தனியாகத்தான் செய்ய முடிவு செய்தோம். வேறு கட்சிக்காரர்களை சேர்த்துக் கொண்டுதான் செய்யவேண்டிய நிலையிலே அவ்வளவு பலவீனமாக இல்லை நமது கட்சி என்பதை நேரு உணர்ந்திருக்கிற அளவுக்கு காமராசர் உணராமல் போனது நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

படித்த அரசியல் வாதிகளுக்கும், படிக்காத தற்குறிகளுக்கும் இருக்கும் வேற்றுமை இதுதான் என்று காமராசர் தெட்டென எடுத்துக்காட்டி விட்டார். அதற்காக அவருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இங்குள்ள அமைச்சர் எதற்கெடுத்தாலும், ஆகட்டும் பார்க்கலாம், என்பார், அங்குள்ள [டில்லி] அமைச்சர்கள் அதைக்கூடச் சொல்லாமல் இதுவரை மௌனமே சாதித்து வந்தார்கள்.

எந்தப் பிரச்னைக்காவது பதில் சொல்ல வரிந்துகட்டிக் கொண்டு ஒருவர்க்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு கருத்தறிவிக்க முன் வந்தார்கள் என்றால், நாம் குமாரபாளையத்திலும், கோடம்பாக்கத்திலும் கூடி எழுப்பிய குரலுக்குத்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

முடிந்துவிட வில்லை

இந்தி சம்மந்தமாக நாம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி முற்றுப் பெற்று விட்டதாகவோ, கைவிடப்பட்டதாகவோ யாரும் கருதத்தேவைஇல்லை. நமது தீர்மானத்தில் குறித்திருப்பதைப் போல் நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்தி நுழைவதைத் தடுதது நிறுத்த, நாம் போட்டிருக்கின்ற திட்டங்களில், இனி போடப்போகின்ற திட்டங்களில் பின் தங்கப் போவதில்லை.

இப்போது நாம் பெற்றிருக்கின்ற வெற்றி, இந்தித்தலைவர்களின் எண்ணத்தின் அடிப்படையில் ஆட்டங்காணச் செய்ததும், 1965-க்குப் பின் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற நினைவில் அவர்கள் ஏற்படுத்தியிருந்த குழப்பத்தைத் தெளிவாக்கியதுதான், அதனாலேயே தமிழகத்திலிருந்து இந்தி அறவே ஒழிந்து விட்டதென்ற பைத்தியக்கார எண்ணத்தை நாமும் கொள்ளவில்லை. பொதுமக்களும்கொள்ளமாட்டார்கள்.அதற்கான முயற்சிகள் இப்போது பெற்றிருக்கின்ற வெற்றியின் மூலம்துரிதப்படுத்தப்படும் என்பது மட்டிலும் உண்மை.

ஆனால் இதுவரை முட்டாள் தனமாக எழுதிய பல பத்திரிக்கைகள் இன்னமும் அதைவிட வேகமான முட்டாள்தனத்தை எழுதக்கூடும். பன்றிகள் முன்னால் நவஇரத்தினங்களை இறைத்த கதை போன்ற நிலை அவைகளுடையது.

போர் முரசு.

எவன் போர் முரசு கொட்டினானோ அவன் காண வேண்டிய வெற்றித் தோல்விகளின் முடிவை பதுங்கிக் கொண்டிருப்பவன் சொல்லத்தேவையில்லை. அந்த ஆண்டிகளிடத்தில் நியாயத்தை எதிர்பார்க்கவும் நாம் தயாராகஇல்லை. நம்முடைய சொந்த பலத்தை நம்பியே நாம் ஒரு செயலில் இறங்குகின்றோம் இதில் நம்மைக் கடுமையான நடவடிக்கைகளின் மூலம் அடக்கிவிடுவோம் என்று கர்ஜித்த முதலமைச்சர் உள்ளபடியே வீரராக இருந்தால் நேருவுக்கும், குடியரசுத் தலைவருக்கும் கடிதம் எழுதி, நேருஅவர்களே! 'குடியரசுத் தலைவரை இங்கே அனுப்புங்கள். நான் பார்த்துக் கொள்கின்றேன். என்னிடத்திலே துப்பாக்கியிருக்கிறது என்று நான் ஏற்கெனவே தஞ்சையிலே பேசும்போது சொல்லியிருக்கிறேன். அவர்களை சும்மாவிடமாட்டேன்.' 'குடியரசுத் தலைவரே! இவர்கள் மிரட்டலுக்கு அஞ்சாதீர்கள். ஒரு பெரிய நாட்டின் தலைவர் நீங்கள் இந்த சல சலப்புக்கு அஞ்சிவிட்டால், எங்கள் குட்டி சர்க்காரின் கௌரவம், கித்தாப்பு என்ன ஆவது,' உள் நாட்டமைச்சரே, நீங்கள் உத்திரவிடுங்கள். இந்தப் பயல்களை சுட்டுத் தள்ளுகின்றேன். என்று கேட்டிருக்கலாமே காமராசர்? ஏன் கேட்கவில்லை? அப்படிக் கேட்டிருந்தால், அந்தத் தலைவர்கள் காமராசர் படத்தைக் கையில் வைத்துக் கொண்டு குலுங்க குலுங்கச் சிரித்திருப்பார்கள்.

அப்பாவி ஆம்பளே சிங்கமே! 1958 சனவரி 6-ந் தேதி உங்கள் கையிலிருந்த துப்பாக்கி எல்லாம் ரிப்பேருக்குப் போயிருந்ததா என்ன? பாபுலர் கவர்மெண்ட் என்று ஜம்பம் அடித்துக் கொள்ளாதே. இப்போது கருப்புக் கொடி காட்டுவதாக, அறிவித்திருக்கும் கட்சியும் பாபுலர் கட்சிதான். குடியரசுத் தலைவர் பவனி வருவதாகத் திட்டமிட்டிருக்கும் எல்லாவிடங்களிலும் அவர்கள் கட்சியின் கிளைகள் உண்டு என்பதை நாங்களறிவோம் நீர் அவர்கள் பக்கத்திலேயே இருப்பதால் அவர்கள் சக்தியை உணர முடியாமலிருக்கலாம். எங்களுக்கு இங்கே வந்திருக்கும் தகவல்களின் மூலம், நீர் எவ்வளவுதான் முயற்சித்தாலும், உங்கள் கவனத்திற் கெட்டியவரையில் அவர்களை எவ்வளவுதான் முன் கூட்டியே கைது செய்தாலும் கருப்புக்கொடிகளைக் கண்ணால் காணாமல் குடியரசுத் தலைவர் டில்லி திரும்ப மாட்டார் என்று நாங்களறிவோம். என்று கன்னத்தில் அறைந்ததைப் போல பதில் சொல்லியிருப்பார்கள். வீணாக கித்தாப்புப் பேசி உண்மையை மறைக்கும் வீராதி வீரர் காமராசர் என்பதை நாம் அறிவோம்.

தொல்லை விட்டது.

தொல்லை விட்டது என்று சிரித்துக் கொண்டே சொன்னாராம் மது[illegible]யில், தொல்லை விடவில்லை காமராசரே! தொல்லையின் தொடக்கம் [illegible] மேல்தான் தொடங்குகிறது. அதை மறந்துவிடாதீர்,

பள்ளிகளில்.

பள்ளிகளில் 1958 வரை பொதுத்தமிழ் (General [illegible] தமிழ் (Intensive Tamil) என்று இருவகையும் அவற்[illegible] நூறு மார்க்குகள் வாங்க வேண்டுமென்றிருந்தது. அ[illegible] விரும்பாத மாணவர்கள் சிறப்புத் தமிழைப் படிக்கலாம் எ[illegible] சிறப்புத் தமிழை 1958-ல் எடுத்து விட்ட காரணத்தால் [illegible] இந்தி படிக்க வேண்டிய நிலை உருவாயிற்று. இது 9-வ[illegible] கிறது. அடுத்த ஆண்டு 10-வது படிவத்திற்கும் [illegible] முறையில் அவர்கள் மறைமுகமாகச் செய்யும் தில்லு முல்[illegible] இதற்கெல்லாம் கழகம் ஒரு தீவிரமான முடிவு எடுக்கத்தா[illegible] போது காமராசர் துப்பாக்கி என்ன செய்கிறது என்பதை [illegible]

தங்க[illegible]

சி. பி. சி[illegible]

கறுப்புக்கொடி இல்லை — கடிதம் இருக்கிறது!

கடற்கரையில் அண்ணா விளக்கம்

(விசேட நிருபர் - விவேகானந்தம்)

உங்களையெல்லாம் இங்கே சந்தித்து இன்றைய தினம் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ள, வந்திருக்கிறேன். என்னுடைய வாழ்த்துக்கள்தான் உங்களுக்குக் கிடைக்கும்; வேறு பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உங்களையும், என்னையும் எப்படி வாழ்த்துவார். அவர்கள் அப்படியே வாழ்த்த முன் வருவார்களானால், நாம். உண்மையில் நமது பாதையில் எங்கேயோ தவறி விட்டோம் என்று பொருள். அவ்வாறு நாம் தவறாமல் இருப்பதினால் தான் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

காங்கிரசு இயக்கத்தின் கடைசி சனநாயக வாதி பண்டிதர்தான்!

பண்டிதரின் கடிதம் பாதுகாக்க வேண்டிய தஸ்தாவேசு!

பொருளை எடுத்த பின்னும் ஏணி கேட்கும் பொல்லாத 'கனம்'கள்!

நாம் இன்றைய தினம் பெற்றிருககின்ற இந்த வெற்றியைப் பற்றி, மாற்றார்கள் வேறு விதமாகப் பேசுகிறார்கள் என்பதை; இங்கே நணபர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள், என்பதல்ல நமக்கு முக்கியம். நம்முடைய உள்ளம் என்ன சொல்லுகிறது என்பதுதான் முக்கியமானதாகும். நாம் திட்டங்களைத் தீட்டிய நேரத்தில், உண்மையில் இந்த அளவுக்கு விரைவில் வெற்றி கிட்டிவிடும் என்று எண்ணி தீட்டவில்லை. கருப்புக்கொடி காட்ட வேண்டுமென்று தீர்மானித்த நேரததில், 'என்னென்ன அடக்கு முறைகள் ஏவி விடப்படும் என்பதைப் பற்றியெல்லாம், மனதார எண்ணிப் பார்த்துத்தான், நாமெல்லாம் கோடம்பாக்கத்தில் ஒரு நல்ல முடிவுக்கு வந்தோம். உங்களில் பலபேரிடம் நான் அன்று விடைபெற்று பேசும்போது கண்கலங்கிய நிலையில்தான் அன்று கோடம்பாக்கத்திலிருந்து பிரிந்தேன். 'மறத் தமிழ் பெரும் வீரர்கள் உறுதியாக களத்தில் வெற்றி காணுவாகள் என்றுதான், நான் கோடம்பாக்கத்திலிருந்து திரும்பினேன். இவ்வளவு விரைவில் அப்படிப்பட்ட கஷ்ட நஷ்டங்களையெல்லாம் ஏற்காமல், நமக்கொரு வெற்றி நம்மை நாடி வரும் என்று நான் ஒரு துளியும் எதிர்பார்க்கவில்லை. இதைப் [illegible]
ரு வெற்றியைச்
[illegible] ளுக்கு வேண்
[illegible] தாரணமா
[illegible] ஒரு வாலி
[illegible] தாகவில்லை
[illegible] 'இவனுக்
[illegible] நடக்கப்
[illegible] பேசுவார்
[illegible] திருமணம்
[illegible] னன மகா
[illegible] ரித் தான்
[illegible] மே ஆரம்பம்' என்று சொல்லுவார்கள்! நாங்கள் 'அறிவகத்தில் கூடியிருந்த நேரத்தில், போலிசு பேலதிகாரி ஒருவர், எங்களைச் சந்தித்து கனிவோடு பேசினார். அதிகாரி என்ற முறையில் அல்ல - ஒரு அரசியல் பெரியவர் என்ற முறையில் கேட்டார்." குடியரசுத் தலைவருக்கு கருப்புக்கொடி காட்டுவதன் மூலம், நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று. நான் திட்டவட்டமாக, இதன் மூலம் இந்தித் திணிப்பு அறிக்கையை மாற்றி வைக்கிற ஆற்றலைக் கொண்டவர்கள் சென்னையில் உண்டு என்பதைக் கழகத் தோழர்கள் காட்டுவார்கள். தமிழகத்தின் மானத்தை நிலை நாட்டுவார்கள் என்று எடுத்துச்சொன்ன நேரத்தில, அந்த அதிகாரி, "இருந்தாலும் குடியரசுத் தலைவருக்கா! கறுப்புக்கொடி காட்டுவது? எனறார்.

"இதற்கு முன் என்றுமே இறங்கிவராத இந்தச் சர்க்கார் —மத்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைச் சமாளித்து விட்டோம், என்று, பெருமை பேசுகிற இந்த டெல்லித்துரைத்தனம் அதன் ஆணவத்திலிருந்து இன்று கீழே இறங்கி வந்திருக்கிறது. நான நிச்சயமாகக் கருதுகிறேன், நமக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த உறுதிமொழிகளும், கடிதமும், அரசியல் வட்டாரத்தில் எள்ளி நகையாடுவதற்குறியன வல்ல. திராவிடத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அரசியல் தஸ்தாவேசுகளாகும்—என்று! இதை இன்று பலரும் கூர்மையாகக் கவனிக்கிறார்கள் என்றால் இது இலேசான காரியமல்ல!

மிக முக்கியமான காங்கிரசுக்காரர் ஒருவர் என்னிடத்தில் தொலைபேசி மூலமாக பேசுகையில் 'நிதியமைச்சரது வாக்குறுதியை படித்தீர்களா? படிதத பிறகு ஏதாவது மாறுதல் உண்டா? என்று கேட்டார். உடனே நான், **Itis most un Subramaniamlike!** என்று சொல்லிவிட்டு, 'ஏதோ வாதங்களை யெல்லாம் சுட்டிக்காட்டி தாழ்மையானவேண்டுகோள்களை விடுத்து விட்டதாலேயே எங்கள் உள்ளங்களில் ஏறி இருக்கிற இந்தக் கொதிப்பு அடங்கி விடாது. என்று சொன்னேன் அதற்கு அவர், 'என்னதான் வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார் 'எங்களுக்கு நேருவிடமிருந்து ஒரு உறுதி மொழி வேண்டும்' என்றேன். அதற்கவர் 'நேருவிடமிருந்தா?' என்றார். 'ஆம்!'' என்றேன். 'அது இன்னும் இரண்டொரு நாளில் கிடைத்துவிடும்' என்றும் சொன்னேன். அந்த நேரத்தில் நமது சம்பத்தை நான டெல்லிக்கு அனுப்பி வைத்திருந்தேன். 'இதற்கு ஏன் டெல்லிக்கு அனுப்புவது என்றார் என் நணபர் சிவஞான கிராமணியார்!

நான் டெல்லிக்குப் போக வேண்டுமென்று, தம்பி, சம்பத்திடம் சொல்லிய நேரத்தில், அவன் முகத்தில் ஈயாடவில்லை. ஏன்? இப்பொழுது நம்மை அங்கே போகச் சொல்லுகிறார், என்ற வருத்தம் இருந்தது. டெல்லிக்குப் போனதும் இங்கே போராட்டம் வேண்டாமென்று சொல்லிவிடுவேனோ! என்ற கலக்கத்தின் சாயலைக் கண்டேன். சின்ன வயதிலிருந்தே சம்பத்தை நான் கண்டு வருகிறேன். அவனால் எப்பொழுதும் உணர்ச்சியை மறைக்கவே முடியாது. "என்ன சம்பத் பயப்படுவதைப்போல தெரிகிறதே," என்று கேட்டு விட்டு, அவன் டெல்லிக்குப் போக வேண்டியதற்கு விளக்கம் சொல்லி அவனை அனுப்பி வைத்தேன். எதற்காக அனுப்பி வைத்தேன என்றால், கறுப்புக்கொடி காட்டுவது என்று நாம் தீர்மானம் கொடுத்தோம். இந்த நேரத்தில் டெல்லியிலேயிருக்கிற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நமது, சம்பத்தை நேரிடையாகப் பார்ததால், அவர்கள், அவனை வரும் உற்று, உற்றுப் பார்ப்பார்கள் என்பதும், அமைச்சர்கள் பணிவோடு சம்பத்தின் கையைப் பிடித்துக்கொண்டு பேசுவார்கள், என்பதும், எனக்குத் தெரியும். அதனை நினைவில் வைத்துக்கொண்டுதான் அவனை டெல்லிக்கு அனுப்பி வைத்தேன். அதே வகையில் தான் சம்பத் டெல்லிக்குப் போனதும, அங்கேயிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் கூடி, ஒரு அறிக்கையை அமைச்சருக்கு அளித்தார்கள். அதில் கையெழுத்திடலாமா? என்று சம்பத் என்னிடத்தில் தொலைபேசி மூலமாக கேட்டபோது. 'தாராளமாகப் போடலாம், அது நேருவுக்குப் போகட்டும் அதில்பயம்வேண்டாம்!'' என்று குறிப்பிட்டேன்.

நான் பெருந்தன்மையோடு சொல்லிக்கொள்வேன் **காங்கிரஸ் வட்டாரத்தில் இருக்கிற கடைசி சனநாயகவாதி நேரு தான்!** அதனால்தான், 500 பேர்களைக் கொண்ட அந்தப் பெரிய பாராளுமன்றத்தில், தி. மு கழக உறுப்பினர்கள் இருவர்தான் இருக்கிறார்கள் என்கின்ற கணக்குத் தெரிந்திருந்தும், நாம், கேட்ட உறுதிமொழியை, 4 மணி நேரத்திற்கெல்லாம் சம்பத்திற்கு அனுப்பி வைத்தார்.

'நமக்கு பண்டித பந்த் உறுதிமொழி அளித்தார், நேரு கடிதம் எழுதினார், இவைகளைப்பெற்ற பிறகும் நாம் கருப்புக்கொடி காட்டினால், நாம் கடமையைமறந்தவர்கள், கண்ணியக் குறைவானவர்கள், கட்டுப்பாட்டை மீறியவர்கள், என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருப்போம்

முன்பு ஒரு அரசியல்கட்சி, ஒரு செகரட்டரிக்கு கீழேயுள்ள குமாஸ்தாவிடமிருந்து வந்த ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு, 'உறுதி மொழி கிடைத்தது', நின்றது போர் வென்றது தர்மம்!' என்று அறிவித்தது. ஆனால் நமக்கு எழுதியிருப்பது பண்டித நேரு! எந்தக் கரம் குருசேவுக்கும், ஐசனோவருக்கும், அயூபகானுக்கும் கடிதம் எழுதுகிறதோ? அதே கரம் எங்களுக்குக் கடிதம் எழுதியனுப்பியிருக்கிறது. இன்றைய தினம் நாம் பெற்றிருக்கிற வளர்ச்சிக்கு இது போதும்! நீங்கள் மேலும் நமது கரத்தை வலுவாக்கித் தருவீர்களானால் அதே கரம் திராவிட நாட்டு விடுதலைச் சாசனத்திலும் நிச்சயமாக கையெழுத்திடத் தவறாது!

நான் கொச்சை மொழியில் சொல்ல வேண்டுமானால், இது தான் கை. மற்றதெல்லாம் உலக்கை! இதை இன்று நாம் மதிப்பதற்குரிய காரணம், உண்மையில் சனநாயகம் தெரிந்ததேயாகும்.' இது மதிப்பிற்குரிய கடிதம் அல்ல, என்று யாராவது சொல்லுவார்களேயானால், அவர்களது அரசியல் கட்சியின் தலைமைக் காரியாலயம், கீழ்ப்பாக்கத்தில் தான் இருக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமாயின், வீட்டின் ஒட்டின் மீது ஒரு விளையாட்டுச் சாமான விழுந்து விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். அது கைக்கு எட்டாத தூரத்தில் விழுந்திருந்

விடுதலைச் சாசனம் வெகு விரைவில்!

அவர்கள் சொல்லுவதல்ல- நம் உள்ளம் என்ன சொல்கிறது?

தால், தம் மனைவியிடம் கணவன் அந்தப் பொருளை எடுப்பதற்கு ஏணியை எடுத்து வரச் சொல்லுவான். அவன் மனைவி ஏணியை எடுத்து வருவதற்குள், காற்றடித்து அந்தச் சாமான் கீழே விழுந்து விட்டதென்றால், கணவன் என்ன சொல்லக் கூடும்? - சாமான் கைக்குக் கிடைத்து விட்டது. ஆகவே ஏணி வேண்டாம்' என்று தான் சொல்லுவான், அதை விட்டுவிட்டு 'இல்லை, இல்லை,' நான் முதலில் ஏணி எடுத்து வரச் செல்லி விட்டேன்; ஆகவே இந்தச் சாமானை மேலே போட்டுவிட்டு, மறுபடியும் ஏணியை வைத்துத் தான் எடுப்பேன், என்றால், அது அறிவுடைமையாகாது. இதைத்தான் இப்பொழுது நண்பர் ஆதித்தன் சொல்லுகிறார்.

இன்றைய தினம் இங்கேதங்கி, உடல்நலக் குறைவால்ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும், குடியரசுத் தலைவர் உடல்நலம் பெறவேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால் அவர் இங்கே தங்கியிருப்பது போலீசின் தயவால் அல்ல, இராணுவத்தின் பலத்தால் அல்ல, எங்களுடைய கண்ணியம்-அவருக்கு போலீசாக துணை நிற்கிறது. எங்களது கட்டுப்பாடு-அவருக்கு பாதுகாப்பளிக்கிறது. அப்படிப்பட்ட கண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள், தமிழ்ப் பெருங்குடி மக்கள். நம் மீது இந்தியை பல வந்தமாகத் திணித்துவிடலாமென்று எண்ணிக் கொண்டிருந்த ஆட்சியாளர், "கருப்புக் கொடி காட்டுவோம்"என்ற தீர்மானத்தை நாம, நிறைவேற்றிய நேரத்தில் அவர்களுக்கு ஒரு ஆட்டம் கொடுத்தது. உடனே தான், ஒருவர் பின் ஒருவராய் வாக்குறுதி கொடுத்தார்கள். உடனே இங்கே இருக்கும்காங்கிரசுக்காரர்களுக்கு, முகம் கருகிப் போய் விடடது. இப்படிப்பட்ட தேசியத் தோழர்களை நான் நித்தம், நித்தம் சந்திக்கிறேன்.

டெல்லியிலிருக்கிற அமைச்சர்களிலே, மிகவும். அழுத்தக்காரர் என்று பெயர் படைத்த பண்டித பந்த், நமக்கு வாக்குறுதி கொடுத்தது, தங்களுக்கு அவமானம், வெட்கம என்று கருதிக்கொண்ட சிலர் தான், நம்முடைய வெற்றியை குறைத்துப் பேச முற்படுகிறார்கள்

இன்று நம் கழகம் பெற்றிருக்கின்ற வெற்றி! கழக வரலாற்றிலே சிறப்புக்குரிய வெற்றியாகும் இந்த மகத்தான வெற்றியை, மாசுபடிந்ததோ? தூசு படிந்ததோ என்று கழகத் தோழர்கள் எவரும் கருதத் தேவையில்லை.

நேரு பெருமகனார் அரசியல் நாணயத்துடன், நமது, சம்பத் எழுதிய கடிதத்திற்கு, நான்கு மணி நேரத்திற்கெல்லாம் பதில் அனுப்பியிருக்கிறார். ஆனால், இங்கே இருக்கிற நண்பர் சுப்பிரமணியத்திற்கு, பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசத் தெரிந்ததே தவிர, என்னை அழைத்துப் பேச வேண்டுமென்ற எண்ணம் வரவில்லை. என்னை அழைத்துப் பேசினால், எங்கே? தி. மு, கழகம் வளர்ந்து விடுமோ! என்று அஞ்சுகிறார் போலும்! ஆனால் நேரு அவர்கள், தம்பி சம்பத்திடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, இதைக் கொண்டு போய் உங்கள் அண்ணனிடத்தில் காட்டு. போராட்டத்தை நிறுத்தச்சொல், என்கிறார். இதை நான் குறிப்பிடுவதாலே, நண்பர், சுப்பிரமணியத்தை நான் மதிக்கவில்லை என்று பொருளல்ல. மனித பிறவி அத்தனையையும் மதிப்பவன் நான். ஆனால் நான் சொல்ல விரும்புவது, அந்தக் கடிதத்தை நான்

9-ம் பக்கம் பார்க்க

...வம் பிடித்த டில்லிக் குறைக்கனம் அடிபணிந்தது!

தங்கச்சி மடம்

தென்னரசு

4

> தென்னரசு அவர்கள் கதையின் உயிர் நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்காக 7-ம் தேதியன்று தங்கச்சி மடத்திற்குப் போகிருர்கள். அடுத்தடுத்து வரும் இதழ்களில் கதைக்குகந்த இடங்களின் புகைப்படங்களுடன் தொடர்கதை இடம்பெறும்.

"அனுராதா, நான் பள்ளியில்படித்தகாலத்தில் எனக்கு முயல் என்ற பட்டப் பெயருண்டு' நான் அவ்வளவு வேகமாக ஓடுவேன். பள்ளியில் நடைபெறும் எல்லாப் பந்தயங்களிலும் நான் முதற் பதக்கம் பெருவது வழக்கம்.

"சென்னைக்கு அப்பால் முப்பது கல் தொலைவிலுள்ள, 'கும்மிடிப் பூண்டி'என்றஊரில் தான் என் தங்கை வேலை பார்த்து வந்தார். போலிஸ்காரர் உத்தியோகம் என் தந்தைக்கு. ஊசிக் காதுக்குள் ஒட்டகத்தைத் திணிப்பதைப் போல் குறைந்த சம்பளத்தில் குடும்பத்தை நடத்தியாக வேண்டிய நிலைமை.

கும்மிடிப்பூண்டிவெள்ளையர்களின் ராணுவத்தளங்களில் ஒன்று - மிகமுக்கியமானதும் கூட. கோட்டை கொத்தளங்களைக் கட்டிக்கொண்டு நாட்டை யாளும் வெள்ளையர்களின் உயிரே அந்தத் தளத்தில்தான் இருக்கிறது. பெரிய பெரிய ராணுவ அதிகாரிகளெல்லாம் அங்கே இறக்குமதி செய்யப்பட்டார்கள். பீரங்கிக்கென்று ஒரு அதிகாரி, துப்பாக்கிக்கென்று ஒரு அதிகாரி, கண்ணீரப் புகைக்கென்று ஒரு அதிகாரி என, விதவிதமாக இலண்டனிலிருந்து வந்தார்கள். பட்டுப்பூச்சிகளுக்கிடையே ஒரு சிறு வண்டைப்போல், எனது தந்தையும் அங்கே போலிஸ் உத்தியோகம் பார்த்து வந்தார். நான் அவருக்கு ஒரே மகன்—செல்ல மகன். நான் சிறுவனுக இருக்கும்போதே என் அன்னையை இழந்து விட்டேன். அன்னை முகம் எனக்குத் தெரியாது. எனது தந்தை மறு ஆண்டிலேயே வேருெரு திருமணம் செய்து கொண்டார். எங்களுடைய பூர்வீக ஊரான கீரனூருக்கு அருகிலே தான் எனது சித்தி பிறந்த ஊர். சித்திக்கு நல்ல குணம்; அழகும் இளமையும் உண்டு. ஏறத்தாழ உன்னைப் போல் தான்! படிக்கத்தெரியாது. ஏழை விவசாயி வீட்டுப்பெண். எனது சித்தி, கும்மிடிப் பூண்டிக்கு வந்த பிறகு, நான், தந்தையின் ஆசைப்படி கண்டிப்பும் கண்காணிப்பும் மிக்க வேருெரு பள்ளிக்கு மாற்றப்பட்டு விட்டேன். அதிகமாக வீட்டில் தங்குவதில்லை. அதற்கு நேரமில்லை. என்னுடைய புதிய பள்ளியில் ஆங்கிலத்தின் தர்பார் அதிகமாக இருந்தது. அந்த மொழிக்குத் தான் முக்கியத்துவமும் இருந்தது. பெரும்பாலும் ஆங்கிலோ இந்தியச் சிறுவர் - சிறுமியர் தான் அந்தப் பள்ளியில் இழைந்தார்கள். என்னுடைய ஏழைத் தந்தை எதை மனதில் எண்ணிக்கொண்டு என்னை அந்தப் பள்ளியில் தள்ளினுரோ தெரியவில்லை! மொத்தத்தில் எனக்குக்கஷ்டமாகத் தானிருந்தது. கால் சட்டைபோட வேண்டும்; காலில் செருப்புப் போட வேண்டும்; கொஞ்சங்கூடத் தளராமல் நிமிர்ந்தே நடக்க வேண்டும்—தேகப் பயிற்சி தான் வெள்ளைக்கார நாட்டில் கண்டிப்பான பாடமாயிற்றே! கண்களை மூடிக்கொண்டு கசப்பான மருந்தைக்குடிப்பதைப் போல் நான் அந்தப் பள்ளியில் படித்தேன்.

நான் பள்ளி இறுதி வகுப்பிற்குள் நுழையும்போது, எனக்கு வயது பதினேழு. உத்தமர் காந்தியார் இந்திய உபகண்டத்தின் விடுதலைக்கு புரட்சிகரமான திட்டங்களை வெளியிட்டுக் கொண்டிருந்த காலம். கதர்ச் சட்டை போட்ட தொண்டர்களையெல்லாம் போலிசார் வெறுப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ராணுவ கெடுபிடி அதிகமாகவே தலைவிரித்தாடியது. உள்நாட்டுப் போலீசார் எங்கே தேசீயக் கட்சிக்காரர்கள்மீது இரக்கம் காட்டிவிடுவார்களோ என்று சந்தேகித்த வெள்ளை சர்க்கார், மேலும் மேலும் புதிய வெள்ளை அதிகாரிகளை இறக்கிக் கொண்டே இருந்தது. அப்படி வந்தவர்கள் அனைவரும் கும்மிடிப்பூண்டி ராணுவ முகாமில்தான் தங்கியிருந்தார்கள். அந்தச் சிறிய கிராமம் பெரும்பாலும் ஆங்கிலேயர்களின் குடியேற்ற நாட்டைப் போல் விளங்கியது.

அந்த ஆண்டில் ஒரு புதிய ஆங்கிலோ இந்திய மாணவி என் வகுப்பில் சேர்ந்தாள். அவள் பெயர் ரோசிலாந்து தினந்தோறும் வசீகரமான சட்டைகள் அணிந்து வண்ணக்கிளிபோல் வகுப்புக்கு வருவாள். நடை கம்பீரமாக இருக்கும். நம் நாட்டுப் பெண்கள் நிமிர்ந்து நடந்தால்குளிர்ச்சியாகஇருக்காது; ஆனுல் ஆங்கிலோ இந்தியப் பெண்கள் நிமிர்ந்து நடக்காவிட்டால் கேவலம் என்று நினைப்பவர்கள். அவர்கள் எல்லாத் துறையிலும் ஆடவர்களோடு போட்டியிட்டுப் பழக்கப்பட்டவர்கள். ஆடவர்களைப்போல் காலணி போட்டுக் கொள்வார்கள்; சிகரெட் பிடிப்பார்கள். ஓடி விளையாடுவார்கள். சத்தம் போட்டுச் சிரிப்பார்கள். யாருடனும் கூசாமல் பேசுவார்கள். இங்கே அப்படியா? இல்லை. பெண்கள் ஓடினுல் உடம்புக்குக் கெடுதல் என்கிறது தமிழ்ச் சட்டம்.

ரோசிலாந்து புதிதாக இந்தியாவுக்கு வந்தவள். பாசி படர்ந்த தண்ணீரைப் போல் அவளுடைய தமிழ், தூய்மைக் குறைவாக இருந்தது. ஆனுல் பெண்ணின் குரலுக்கு இயற்கையிலேயே அமையப் பெற்ற குழைவும், இனிமையும் அந்தக் குறையை மூடி மறைத்துக் கொண்டிருந்தன.

ரோசிலாந்து பள்ளிக்குப் புதியவளானுலும் விரைவில் எல்லா ஆசிரியர்களின் அன்புக்கும் ஆளாகிவிட்டாள். அதற்கு, படிப்பில் அவள் கெட்டிக்காரி என்பது ஒரு காரணம்; இன்னெரு முக்கிய காரணம்; அவள் பெரிய போலீஸ் அதிகாரியின் மகள் என்பது. ரோசிலாந்தின் தந்தை கும்மிடிப்பூண்டி ராணுவ முகாமிற்கு திடீரென்று கொண்டுவரப்பட்ட பெரிய ராணுவ அதிகாரி. பீரங்கிகளின் பொறுப்பிலிருந்து சின்னக் காரியங்கள் வரை அவருடைய கண்காணிப்பில் தான் அங்கே நடைபெறவேண்டும். அவ்வளவு அதிகாரம் அவருக்கு! மாதச் சம்பளம் ஆயிரத்திற்கு மேல்! அதுபோக எல்லா வசதிகளும் அர்சாங்கத்தாரால் அருக்குத்தரப் பட்டிருந்தன.

எங்கள் பள்ளிக்கு ஆண்டு விழா வந்தது. எல்லாத் துறையிலும் போட்டிகள் வைக்கப் பட்டிருந்தன. நான் எதிர்பாராத வகையில் ஆங்கிலக் கவிதை ஒன்றை அபிநயத்துடன் நடித்துத்துக் காட்டும் பந்தயத்தில் ரோசிலாந்துடன் போட்டியிட நேர்ந்துவிட்டது. அந்தப் போட்டிக்கு அதிகாரியாக ரோசிலாந்தின் தந்தையே நியமிக்கப் பட்டிருந்தார்.

ஆங்கிலேயர்கள் சபலத்திற்கு ஆட்படாதவர்கள்; அவர்களது நடவடிக்கையில் நீதியின் சாயல் இருக்கும். அபிநயப்போட்டியில் ரோசிலாந்தைக் காட்டிலும் நான்தான் தெளிவாகவும், உணர்ச்சியுடனும் ஆங்கிலக் கவிதையை நடித்துக் காட்டியதாகத் தீர்ப்புக் கூறினுர் ரோசிலாந்தின் தந்தை. எனக்கு மயிர் சிலிர்த்தது. என் தந்தை ஆனந்தக் கண்ணீர் வடித்தார். ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட சிறுமியை நான் தோற்கடித்துவிட்டேன் என்பதற்காகப் பள்ளிக்கு வெளியே இருந்த எத்தனையோ பெரியவர்கள் என்னைப் பாராட்டினுர்கள். ரோசிலாந்தின் தந்தை அவரது சட்டைப் பையிலிருந்த விலையுயர்ந்த பேனுவை எனக்குப் பரிசாகத் தந்தார். மாணவர்கள் கையொலி செய்தார்கள். இதைக் காட்டிலும் இன்னெரு இன்பகரமான நிகழ்ச்சி நடந்தது. ரோசிலாந்து என் அருகில் வந்து எனது கையைக் குலுக்கி, எப்படியும் உங்களைத் தோற்கடிக்கிறேன் என்று சிரித்துக் கொண்டே என்னிடம் சொன்னுள். ஒட்டகத்தின் கால்களைப் போன்ற அவளது பஞ்சுக்கரம் என் கைக்குள் பதிந்துவிட்டது. தமிழ் நாட்டில் இப்படி நடக்குமா? தந்தையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அடுத்தவனோடு பேச நமது சமுதாயம் இடங்கொடுக்குமா? ரோசிலாந்து பேசினுள்; சிரித்தாள்; கைகொடுத்தாள்; சவால் விட்டாள். ஆனுல் சற்று அவளுக்குப் அவளது தந்தைக்கும் ஒருவித பொருமை உணர்ச்சி தோன்ருமல் இருக்க நியாயமில்லை. நமது தமிழ் மொழியில் ஆங்கிலோ இந்தியப் பெண்ணெருத்தி போட்டியிட்டு வெற்றிபெற்ருல் நாம் என்ன செய்வோம்! சிலபேர் நாக்கைப் பிடுங் [...] கொண்டே செத்துவிடு[...]கள்.

என் வீட்டில்—

என் தந்தைக்கு பயம் ஒ[...] பக்கம், பரவசம் ஒரு பக்க[...] பெரிய இடத்துக்குறி தவ[...] என்று அடிக்கடி அவர் [...]லிக்கொண்டே இரு[...] எனது சித்தியும் [...] ஒத்துப்பாடுவார்கள். [...]டையில் பரவசத்தைக் க[...]லும் பயம் தான் அ[...] விழுங்கத் தொடங்கிவி[...] மகன் திறமைசாலியா[...]தால் பெற்ருேர்கள் [...] மடைவது உலக [...] ஆனுல் எனது பெற்[...] அதற்கு நேர் வி[...] எதிரிகளின் கண்கள் [...] எரித்துச்சாம்பலாக்கிவி[...] என்ற பயம் அவர்க[...]

ஒரு நாள்—திடீரென்[...] தந்தை எனக்கு ஒ[...] போட்டு விட்டார். [...] நீ படித்ததுபோதும்; [...] படிப்பு தேவையில்லை' [...] சொல்லிவிட்டார். எ[...] தூக்கிவாரிப் போட்டது.

"அப்பா!"

"ஆம், உனக்குப் [...] தேவையில்லை நீ பட[...] உத்தியோகத் திற்குப் [...] போகிருய்?"

"இந்த வருஷம் [...] படித்து விடுகிறேன். [...] வருஷம் மேற்படிப்பு [...]யில்லை."

என் தந்தைக்குக் க[...] விட்டது. எதை ம[...]துக் கொண்டு இப்ப[...]ருரோ தெரியவில்லை.

எனது பள்ளிப் [...] தொடர்ந்தது. [...] எனக்கு மதிப்பும் [...] அதிகரித்தன. ஆசிரிய[...] ஏழை என்பதையும் [...]னிடம் அன்பாக நட[...]டார்கள். இவ்வளவு [...]கப் பேசாத ரோசிலா[...] பிலேயே என்னுடன் [...] பித்துவிட்டாள். [...] தொடங்கிய பே[...] வெளியில் சந்திக்[...] மலர்ந்து, தனி[...]த்து ரகசியம் பே[...] வந்துவிட்[...]. அவளோ[...] ஆங்[...] பெண்ம[...] கிக் [...] ளிக்[...] பட்[...] யான[...] கரித்[...] சில[...] [...] தி[...] ஆ[...] கா[...] மீ[...] கங்[...]

இனமுழக்கம்

புறப்படு மகனே

சென்ற இதழ் சுருக்கம்

தமிழ்நாட்சியிலும்தமிழ்க்கோயிலுக்குள் புகமுடியவில்லை என்ற வேதனையைப்புலவர்பெருமகனார் அவையில் புலம்ப, அதே நேரத்தில் வைசாலி நாட்டுத் தூதுவன் கொண்டுவந்த வேண்டுகோளைப் பற்றி விவாதிப்பதற்கு முன்னால் மௌரியர் வம்சாவளியைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கருதிய மன்னன் ஊழி வெள்ளம் சரித்திரப் பேராசிரியனை அழைத்திருக்கிறான்.

ஆசிரியன் பொவழுதி,மௌரியர்வரலாற்றைச் சொல்கின்றான்.

சற்றேறுப்ப ஆயிரம்ஆண்டுகளுக்கு முன்னால் வட கோடியில் தோன்றியது மௌரிய அரசு. முரா என்பவனுக்குப் பிறந்தவர்கள் மௌரியர்கள் என்று அழைக்கப்பட்டனர். நவநந்தர்களால் அவமானப் படுத்தப்பட்ட சாணக்கியன் சபதத்தால் மௌரியர் அரியாசன மேறினார். இங்கே வாள் கொண்டு போர்க்களம் செல்லும் அரச பரம்பரையினரோ, போர் என்றாலே பூனை எனப் பதுங்கும் ஒரு கோழை சாணக்கியனுக்குப் பயந்தனர் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா. அந்த நேரம் இமயத்தின் அடி வாரத்திலே கிரேக்கத்தின் காளை ஒருவன் புயல் கிளப்பினான். அவனை வாளால் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் அவன் வாத்திய முழக்கங்களால் வரவேற்கப் பட்டான்.

மன்: வந்தவன் யார், வரவேற்றவன் யார்?

ஆசி: வந்தவன் அலெக்சாண்டர். வரவேற்றவன் அம்பி என்ற ஆரிய மன்னன்.

மன்: அவனிடம் படைகள் இல்லையா?

ஆசி: இருந்தது படைகள் படைகளாகஇல்லை நடைப் பிணமாயிருந்தனர்.

மன்: வெட்கம். மேலே சொல்லுங்கள்.

வந்த அலெக்சாண்டரை நந்தர் வசித்த இடத்தின் பக்கத்திலே ...லம் வரச் செய்தான் ...ணக்கியன். அதோடு ...ந்தவரலாறு தீயில்வெந்த ...டாயிற்று. பிறகு மௌரி...ர்கள் அரியாசன மேறி...ார். அவர்கள் வழிவந்த...ர்தான் முக்கியமாகக் ...றிப்பிடப்பட வேண்டிய...வர் பிம்பிசாரன். அவன் ...கன் அஜாதசத்ரு, ...சோகன்.

...ம்பிசாரன் காலத்தவன் ...ரின் தந்தை சுத்தோத... சுத்தோதனனும் பிம்பி...ும் பகை கொண்டிருந்... புத்தனெனும் பேரா... சாக்கிய சிம்மன் துற... பூண்ட பின் பிம்பிசாரன் ... நாட்டுப் புதல்வனென் ...யும்மறந்துபெருமகிழ்வு ...ான் அரசியல் துறை ... ஏற்பட்ட பகை புத்தர்-...சாரன் நட்பைக் கெடுக்க ...லை. தன் பகைவனின் ...வனிடம் தந்தை நட்பு ...ண்டிருக்கின்றார் என்ற ... காரணத்தால் அஜாத...தன் தந்தையான பிம்பி... சிறையில் தள்ளி விட் ... என்றாலும் புத்தரைக் ...துடிக்கிறான் என்றறிந் ...ந்த சிறைச் சாலைக் ...உள் ஒரு குன்றின் ... நிற்பதும், ... படியே ...புத்தரைக் ...ருந்தான் ...யறிந்த ... சாளரத் ...ன். தந் ...வதையும் ... இறுதி ...றந்தே ...ரா?

மன்: அதைவிட அப்பன்சத்ரு என்று அழைக்கலாம். உம் மேலே—

ஆசி: பத்து நாட்களுக்குப் பிறகு மறு நாள் காலை அஜாதசத்ருவின் குழந்தை அழுதான். குழந்தையின் அழுகையைத் தாங்க மாட்டாதஅஜாதசத்ரு,குழந்தையைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு சமாதானப் படுத்திக் கொண்டிருந்தான் இதைக் கண்ட பிம்பிசாரனின் மனைவி, மகனே அஜாதசத்ரு! நீ உன் மகனைத் தோளில் போட்டுத் தட்டிக் கொண்டிருக்கிறாய். உன் தந்தை உன்னைத் தங்கத் தொட்டிலிலே போட்டாட்டினார். அந்தத்தொட்டிலும் இதோ இருக்கிறது. இதில் படுத்து சின்னஞ் சிறு கைகால்களை யாட்டி எனக்கும் உன் தந்தைக்கும் மகிழ்ச்சியைத் தந்த நீ சிங்காதனத்திலே இருக்கிறாய். அந்தத் தொட்டிலையாட்டியகைகள் இன்று சிறைக் கம்பிகளைப் பிடித்து வேதனையைக்கண்ணீர் வெள்ளமாகப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. பகைவர்களால் வெற்றிக் கொள்ளப்பட்ட ஒரு வேந்தன், பகை நாட்டுக் காவலில் வைக்கப்படுவதுதான் நாம்இதுவரையில் கேள்விபட்ட உண்மை. ஆனால் பாலகனே தன்னைப்படைத்தவனைச் சிறையில் தள்ளுவது நீதி தானா மகனே! நீதித் தேவதையின் கண்களும் குருடாயினவா? அந்தோ! அரண்மனையில் நடக்கும் இந்த அநீதிக்கு அறவழி காட்டுவோர் யார்? வெளி நாட்டு மன்னர்களுக்கு இந்த விவகாரம் வேதனைத்தரக் கூடியதாக இருக்குமோ அல்லது இதுதான் தக்கதருணமென்று உள்ளே நுழைவதற்கு வழித்தேடித் தருமா என்பதையும் எண்ணிப்பார். கண்ணிறைந்த கணவனும் கருத்தறிந்த மகனும் உயிரோடிருக்கும்போதே கண்ணீர் சிந்துகிறேன். கண்ணீர் சிந்துபவர்களோடு கலந்துகொண்டு நாமும் கண்ணீர்சிந்துவதில்பயனில்லை. அவர்கள் சிந்துகிற கண்ணீரில் ஒருதுளியையாவது நம்மால் துடைக்கமுடியுமா என்பதைத்தான் இதுவரையிலும் வையம் கேட்டுக் கொண்டிருக்கிறது. விடை கிடைக்கவில்லை. அதேபோல் உன் தந்தை சிந்துகிற கண்ணீரில் ஒருதுளியை என்னால் துடைக்க முடியாவிட்டாலும், அந்தக் கண்ணீரோடு என் கண்ணீரைக் கலக்குகிறேன் மகனே. நீ ஆனந்த, கண்ணீர் விடு என்றழுதாள்.

அவன் நினைவு அலைகள் அவனைத் துரும்பெனச் சுழற்றின,கண்கள் மங்கின. நாமா இக்கொடுமையைசெய்தோம்? தந்தை கட்டிய சிறையில் தந்தையே வாடுகிறான். இல்லை,இ...லைபோட்டுவாட்டுகிறோம். ...டினான் சாவிகளோடு. திறக்க ஆள் இருக்க இவனே திறந்தான். உறங்குகிறான் தந்தையென உலுக்கினான், கெஞ்சினான். அவன் பேசவே இல்லை. பேசா உலகம் போய்ச்சேர்ந்தான். இனி அவன் பேச மாட்டான். உன்னோடு மாத்திரமல்ல, இனி யாரோடும் பேசவே மாட்டான். இயற்கைக் கொன்ற பின் ஈமக்கடன் செய்ய வேண்டிய அஜாதசத்ருவே, அவன்சாம்பலோடு உன் புகழும் சாம்பலாகட்டும். புகழ் படைத்த வேந்தனை புழுதிமேட்டுக்கனுப்பி விட்டாய். அழு, அழு. கண்களில் நீர்வற்றுகின்ற வரையில் அழு. நீஅழமாட்டாய்! உனக்கு அவ்வளவு ஈர நெஞ்சமில்லை. உன் கண்ணீராலும் அவனைக்கழுவ முடியாது. திரும்பிப்பார்! உன்தாய். அவளுக்கு அந்த உரிமையைக் கொடு! அவளாவது கண்ணீர் வெள்ளத்தில் கணவனைக் கழுவட்டும் என்று காலம் கலகலவெனச் சிரித்துக் கொண்டே சென்று விட்டது. அதோடு முடிந்தது அவன் கதை,

அஜாத சத்ருவைப் பற்றிச் சொல்ல ஒன்றுமில்லை. தேவையுமில்லை. அடுத்தது அசோகனுக்கு வருவோம்.

கலிங்கப்போர்

அசோகன்! சோகமில்லாதவன் என்று பொருள். அசோகன் - கலிங்கம், இந்த இரண்டும் வரலாற்றில் இணைந்தே இருக்கின்றன. இதுவொரு மன்னனுக்கு மன்னனுக்கும் நடந்த போர் தான்! என்றாலும் இடத்தின் பெயரையும் மன்னனின்பெயரையும் இணைத்து இருப்பானேன்? கலிங்கத்துக் காவலன் காரவேலன். அவன் காலத்தில் வாழ்ந்தவர்கள்- அவர்களுடைய பெயர்களைச் சொல்ல அஞ்சியதைப் போல் வரலாறும் சொல்ல அஞ்சியதோ என்னவோ? (அரச போகத்திலேயிருந்து அரச மரத்தடிக்கு வந்த புத்த பிரான் பொன்மொழிகளை ஆரியாசனம் ஏற்றியவன் இந்த அசோகன்தான்! கொல்லாமையைக் கடைப்பிடித்து, புலால் உணவை மறுத்து, வேட்டையாடுவதை நிறுத்து என்று சட்டம் செய்தவன் இவன்தான்! சுங்கமித்திரையைச்சிங்களத்திற்கனுப்பி புத்தரை அங்கு அறிமுகப் படுத்தியவனும் இவன்தான்! இவன் நடத்தியமுதற்போரும் முடிவான போரும் கலிங்கப் போர்தான்! எந்தக் கலிங்கப் போரில் கண் சிவக்கக் கையில் வாளெடுத்தானோ, அதே களத்தில் கண்கலங்க வாளை எறிந்தான். அந்த அளவுக்கு இவனுடைய திடச்சித்தத்தை ஆட்டிக் குலுக்கியவன் உபகுப்தன் என்ற பேராளன்! (புத்த பிட்சு.)

அசோகன் ஆண்டியாகிவிட்டானா?காரவேலன் செய்த குற்றமென்ன?

காரவேலன் ஒரே ஒரு குற்றத்தைச் செய்தான். கலிங்கத்தின் மண்ணில் காலடி வைக்க எந்த மன்னனுக்கும் துணிவில்லை என்றான். இதுதான் அவன் செய்த குற்றம். இது ஒன்றே அசோகனின் கோபத்தைத் தூண்ட ஏதுவாயிற்று! படையெடுத்தான்! யாருமே நெருங்க முடியாதென்றிருந்த காரவேலன் கோட்டைக் கதவுகளை, அசோகனின் படை வீரர்களும் குதிரைகளும் உதைத்தன; மிதித்தன.

'நமக்குமா எதிரிகள்?' என்று, அவனை நெடுநாட்களாக காப்பாற்றிக்கொண்டு வந்த நம்பிக்கை நகர்ந்து விட்டது. அசட்டுத் தைரியம் அகன்று விட்டது. இருவரும் போரில் சந்தித்தனர். அசோகன் கலிங்கத்தை வென்றான் என்று சொல்லுவதைவிட. பொதுமக்களின் உயிரைத் தின்றான் என்று சொல்லுவதே பொருந்தும். ஏதுமறியாத பொதுமக்கள் சிந்திய இரத்தம், அவன் சிந்தையைக் கவ்விப் பிடித்தது. இவன் முகத்திலேயே விழிக்கக் கூடாதென்று ஞாயிறு ஒடி மறைந்தான்; அவனே திரும்பி வந்ததைப்போல உபகுப்தன் பின்னால் நின்று கொண்டு 'சாம்ராட்!' என்றழைத்தான். குழம்பிய மனதால் தாக்கப்பட்ட அசோகன் திரும்பிப் பார்த்தான். 'அசோகச் சக்கரவர்த்தியே! முடிந்ததா வேலை? மன்னர்கள் என்றாலே போர்க்களம் அவர்களுக்குப் பின் தோன்றலா? என்றான் உபகுப்தன். அவன் குரலில் கேலியும் கிண்டலும் கலந்திருந்தது. கரமிழந்து நிற்கும் ஒரு போர் வீரனை, காருண்யம் நிறைந்த ஒரு எதிரி பார்ப்பதைப்போல் இருந்தது. அவனது பார்வை! அசோகன், நாட்டுத் தலைவன்! உபகுப்தன் மதத் தலைவன்! ஆகவே அசோகன் சீற்றங் கொள்ள முடியாது. ஆனால் போர் தொடுப்பது தவறு என்பதை சுட்டாமல் சுட்டிக் காட்டுகிறான் உபகுப்தன் என்பது மட்டிலும் புரிந்தது அவனுக்கு.

போர், மன்னர்களுக்குப் பாவத்தைத் தராது, வீர சொர்க்கத்தைத் தரும்! பல நாட்கள் நாட்டை நல்ல முறையிலே ஆண்டு, மக்களிடம் மெதுவாகப் புகழ் பெறுவதைவிட ஒரே போர்நடத்தி அதில் வெற்றி கண்டுவிட்டால் புகழ் விரைவில் வந்தடையும். சுருக்கமான வழியல்லவா? அப்படியானால் அசோகா! போர் நடத்தித்தான் மன்னர்கள் புகழ்பெற வேண்டும் என்பதுதான் உன் முடிவான எண்ணம். அல்லவா? என்கிறான் உபகுப்தன். 'வேறு வழியில்லையே!' என்கிறான், அசோகன்.

"சாம்ராட்! புத்தன் போர்க்களம் சென்றானா? உயிர்களைக் கொன்றானா? உதிரத்தைக் கண்டானா? அவன் புகழ், உன்னுடைய ஆட்சியின் எல்லையைப்போல் ஒரு எல்லைக்குள் அடங்கிக் கிடக்கவில்லை.

அவனுடைய கண்களிலே கனல் பறக்கவில்லை! கருணை பிறந்தது உலகம் துக்கமயம் என்று தெரிந்தபின், துக்கத்தைப் போக்க பல துக்கங்களைச் சந்தித்தான் அவன். அவன்போதித்த அறவழிகளை ஏற்றுக்கொள்ளாத அந்தனர்குலத்தில்தோன்றிய ஒரு அந்தணன் காசிக்குப் போவதற்கு வழி காட்டுவதற்குப் பதில், கயமை எண்ணத்தோடு காட்டு வழியைத் தேடித்தந்தான் புத்தன், அந்தப் பயங்கரமான காட்டுபாதையைக் கடந்தான் நன்மைகளுக்கெதிரில் தீமைகள் எவ்வளவுதான் தீப்பந்தம் ஏந்தி ஆடினாலும் முடிவில் அணைந்துவிடுகின்றன என்ற பேருண்மைக்கு புத்தன் பூதலத்தில் அழிக்க முடியாத அடையாளமாக நிற்கிறான். உலகத் துன்பங்களுக்கெல்லாம் ஆசைதான் காரணமென்றும், அவைகள் உள்ளத்தாலும்செயலாலும் அழிக்கப்பட வேண்டுமென்றும் சொன்ன அந்தப் பேராளன் நடத்திய ஒரே ஒரு போர் மனபபோர்!

ஞாலம் முழுவதும் அவனைப் பற்றிப் பேசுகிறார்கள். ஊழியால் இந்த உலகம் அழியும் வரையிலும் பேசுவார்கள். அவனுக்கும் கருணை இருந்தது; ஒரு நிலைமைக்கு மேலே போனவர்கள் - மன்னர்கள் ஆளுகிறார்கள், மக்கள் ஆளப்படுகிறார்கள் என்று நினைப்பதில்லை! **அன்பு, ஆயுதம்** இந்த இரண்டுமே போராடிக் கொண்டிருக்கின்றன. இதில் எதற்கு வெற்றி என்பதை புத்தனே சொல்லி விட்டுப் போனான். இதோ பார்!'' என்று, ஓலையைக் காட்டினான். அதில், **நீதி வெல்லும்; நிச்சயம் வெல்லும்!'** என்று எழுதப்பட்டிருந்தது. வாளை எறிந்தான், அசோகன்! நாடு திரும்பிய பின் புத்தர் பொன்மொழிகளையே சட்டமாக்கிவிட்டான்!

கலிங்கத்தை அசோகன் வென்றதின் விளைவாக, தமிழகத்தை வெல்ல நினைத்தான். ஆனால் மைசூர் எல்லையைத் தாண்டி அவனால் வரமுடியவில்லை. இவன் மாத்திரமல்ல! இவனுக்கு முற்பட்ட மௌரியர்களும், அவர்களுக்கு முற்பட்ட கலிங்கரும், அவர்களுக்கு முற்பட்ட நந்தரும், சிசுநாகரும் கூட தமிழகத்தின் மீது படையெடுக்க முயற்சியெடுத்து, முற்றும் தோல்வியுற்று மைசூர் எல்லையிலேயே நின்றனர்.

மன்: அவர்களைத் தடுத்து நிறுத்திய வேந்தன் யார்?

ஆசி: தமிழகப் பேரரசனான சோழன் இளஞ்சேட்சென்னி, செருப்பாழிஎன்ற பெரும் ஊரிலே வென்றான். இதுவே தமிழகத்தின் முதற்போரும் நிலப்போருமாகும். தமிழகத்தை வெல்ல முடியாத அசோகன், தமிழ் மன்னர்களிடத்திலே நட்பு பூண்டான். அந்த நாட்டின் அறிகுறிதான் புத்த மதக் கோட்பாடுகள் இங்கே பரவுவதற்கும் காரணமாயிற்று!

அமைச்: புத்தமதம் பரவியதற்கு இதுதான் காரணமென்றால் சமணமதம்பரவியதற்கு என்ன காரணம்?

தான் மௌரியரைப் பற்றிய வரலாறு! என்று சொல்லி

ஆசி: அந்தக் கலிங்கத்தின் தலைவன் காரவேலன் புத்த மதத்தைப் பரப்ப அசோகன் முயற்சியெடுத்துக் கொண்டது போலவே இவனும் சமண மதத்தைப் பரப்ப முழு முயற்சியெடுத்துக் கொண்டதால் இவனும், சமண சமய அசோகன்' என்கின்ற பட்டப் பெயர் பெற்றான்.'' இது முடித்தான் அவைக்களத்தில்! மன்னன்மந்திரியை அருகிலே அழைத்துக்காதோடு பேசுகிறான் மந்திரியும் எதுவோ ரகசியமாகச்சொல்கிறார். அப்படியானால் வைசாலி தூதுவனை ஒரு வாரம்தங்கவையுங்கள்!

நம்முடைய உணவு அவனுக்குப் பொருந்துகிறதா?

மந்: முதல் நாள் எல்லாவற்றையும் கொண்டு போய் வைத்தார்களாம். அவனுக்குச் சாப்பிடுகின்ற முறையேதெரியவில்லையாம் இலை போட்டுச் சாப்பிட்டு அவனுக்குப் பழக்கமே இல்லைபோல் இருக்கிறது. சாப்பிட்டும் பசியடங்கவில்லையென்று சைகை காட்டுகிறான். மறுநாள் கம்மையும், சோளத்தையும் கொடுத்து மாவாக்கித் தரச் சொன்னான். அதையும் செய்தோம். அவனே ரொட்டிகளைச் செய்து கொள்கிறான்.

அவை கலைகிறது. வந்த தூதுவனும் வேதியனும் அடிக்கடி சந்திக்கின்றனர்! என்றாலும் ஒருவருக்கொருவர் நினைப்பதைதாராளமாகப் பேசிக்கொள்வதில்லை. காரணம் மொழி புரியவில்லை. இவர்கள் சந்திப்பை, குதிரை லாயத்தில் வேலை செய்யும் ஒருவன் கவனித்துக் கொண்டே வருகிறான். வந்த தூதுவனுக்கு, நாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்பதில்தான் கண்ணும் கருத்துமாக இருந்தான். வேதியன் மூலமே இதற்கு வழிதேடிக் கொள்ள...மென்று கருதினான். வந்த தூதுவனை, நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்புவது நல்லதல்லவென்ற பொதுவான கருத்து நிலவி இருந்தது. யாருக்கும் தெரியாமல் இரவிலே போகலாமென்றால், மென்பது ஆசை' அதைவிடக் காடுகளைப் பார்க்க வேண்டும் ஆட்சியே இரவில்தான் நடைபெறுகின்றது. இதனால் நாட்டைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்ற ஆசை, தூதுவனுக்கு நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் வேதியன் அந்த எண்ணத்தை அதிகப் படுத்திக் கொண்டே வந்தான். வெளியூர்ச் சென்றிருந்த ஒற்றன், கோட்டைக்குள் நுழையும் போது, இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருப்பதைத் தற்செயலாகப் பார்த்துவிடுகிறான். அறிமுகமில்லாத ஒருவனோடு, தனக்கு அறிமுகமான வேதியன் பேசிக்கொண்டிருப்பது, அதுவும் வாயால் பேசாமல் கையால் பேசிக்கொண்டிருப்பது ஆச்சரியத்தைத் தந்தது. வந்தவர் ஊமையாக இருக்கக் கூடுமென்று யூகித்தான்.

ஒற்றனைப் பார்த்தவுடனே வேதியன் மறைய முயற்சிக்கிறான். ஒற்றனுக்குச் சந்தேகம் வலுக்கிறது. அது பகற்பொழுதானதால் மன்னனைச்சந்தித்துதான்சென்று வந்த வேலைகளின் முடிவை சொல்ல முடியவில்லை, இரவுக்காகக் காத்திருக்கிறான். வழக்கம் போல் இரவு அவை கூடுகிறது. ஒற்றன், ஓலைச் சுவடியை மன்னனிடம் தந்தான். மன்னன் அதைப் படித்துவிட்டு, அமைச்சனிடம் தந்தான்.

அமைச்: சரி......அவனைக் கைது செய்!

வெளிவருகிறது!

கன்னட மொழியில்

கன்னட நாடு

கழக வார ஏடு

கன்னட நாவலாசிரியரும், சொற்பொழிவாளரும், கருநாடக தி.மு.க. தோழருமான திரு. **எம். இராமன்** அவர்களை ஆசிரியராகக் கொண்டு **'கன்னட நாடு'** என்ற கன்னட வார ஏடு கழகக் கொள்கை விளக்க ஏடாக வெளிவருகிறது.

கண்ணீர்

கலையினைப் பயிலுங் காலை
கண் ஒரு கல்விச் சாலை
நிலையிலா உலக வாழ்வில்
விலையிலா உணர்வுக் கூடம்

★ ★ ★

முகிழ்க்கின்ற உள்ளத் துள்ளே
முளைத்திடில், முத்தாம் கண்ணீர்!
உழைக்கின்ற ஏழை நெஞ்சம்
உலர்ந்திடில், தீயாம், கண்ணீர்!
தழைக்கின்ற காதல் சற்றே
தளர்ந்திடில், ஓயாக் கண்ணீர்!
பிழைக்கின்ற பிச்சைக் கூட்டம்
நினைத்திடில், வற்றாக் கண்ணீர்!
இரும்பெனும் நெஞ்ச மாந்தர்,
இருக்கின்ற வரை யிருக்கும்
இளகி... இனிய நல்லோர்,
இருக்கின்ற வரை யிருக்கும்
உரைத்திடில் உயிர்கள் இங்...
ஊர்ந்திட ஆறும் கண்ணீர்...

க. கோவிந்தராம...

சென்னை-...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கக் கண்டத்து நாடுகளின் தீர்மானங்களையும் கூட இந்தியாவில் நிகழ்வது மிகவும் பாதிக்கும். இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னைகள் தீர்வது சுதந்திர உலகுக்கு மிகவும் முக்கியம் என்பதை இது காட்டும்... இன்று உலகில் நடைபெறும் பெரிய போராட்டத்தில் முக்கியமாக வற்புறுத்த வேண்டியது அந்தப் போராட்டத்தின் ராணுவத் தொடர்பற்ற அம்சமேயாகும்.

அரசியல் பிரவேசம்

ரிச்சர்ட் நிக்ஸன் தற்செயலாக அரசியலில் ஈடுபட்டார். 1946 ல் பத்திரிகையில் ஒரு விளம்பரம் காணப்பட்டது. பத்தாண்டுகளாக நிக்ஸனின் தேர்தல் வட்டத்திற்கு, ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதியாக உள்ளவருக்கு எதிராக, நிற்கக்கூடிய, இளைஞர் ஒருவர் வேண்டும் என்று அந்த விளம்பரத்தில் கண்டிருந்தது. அது குடியரசுக் கட்சியினரின் விளம்பரம். நிக்ஸனின் பெயரை ஒரு நண்பர் குறித்து அனுப்பினார். அப்பொழுது நிக்ஸனுக்கு வயது முப்பத்து மூன்று. அந்த வயதில் நிக்ஸன் பிரதிநிதிகள் சபைத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

நிக்ஸனுக்கு 14 ஆண்டு அரசி...ல் அனுபவம் உண்டு. அரும்...டுபட்டு உழைக்கும் சட்ட...ன்ற உறுப்பினர்: எடுத்த வேலையைத் தொடுத்து முடிப்பதில் தளராத உறுதி படைத்த...வர். தேர்தலில் மக்கள் ஆதர...வப் பெறும் சாதுரியம் வாய்ந்த...ர் என இவர் பெயர் பெற்றுள்...ர். சட்ட மன்றத்தில் இரு...ட்சியினரும் மதிக்கும் பெருமை...ாய்ந்தவர் இவர்.

...கலிபோர்னியாவில், யோர்பா...லிண்டா என்னும் இடத்தில் ...றந்தவர். மெய்வருந்தி உழைத்...், சமய நம்பிக்கை இவற்றின் ...ணமையை இவர் தம் பெற்றோ...ருந்து கற்றறிந்தார். பள்...க்கூடத்தில் சிறந்த மாணவ...க விளங்கினார். உபகாரச் சம்ப...ம் பெற்றுச் சட்டப்பள்ளி ஒன்...் பயின்றார். கலிபோர்னியா...் வழக்கறிஞராகி, சட்டக்...பெனி ஒன்றில் சேர்ந்து, ...ாண்டுக்குள் அதன் பங்காளி...

...க்ஸன் 1940-ல் பட்ரீஷியா ...ா என்னும் அழகிய பள்ளி ...ரியையை மணம் புரிந்தார். ...ரீஷியா (14), ஜூலி (12) ...இரு பெண் மக்கள் இருக்கி...கள்.

...வர் "குவேக்கர்" சமயத்...் சேர்ந்தவர்; புகை பிடிப்ப...ு அருந்துவதும் அரிது; ...வது இல்லை. ஆனால் ...படம் பார்ப்பது இவருக்கு ...ப்பமான ஒன்று.

...ங்கச்சி மடம்...

(...-ம் பக்கத் தொடர்ச்சி)

...ாட்டி என் வாயில் இருந்து, ...ன்விட்டு அப்பம் அவள் வாயில் ...ியது. ...ளிப்பிள்ளைகளுக்கு, ...ள். ...ளிச் சித்திரமாகி ...ாருந்தாத ஜோடி ...லாரும் எங்களை ...ய்ய ஆரம்பித் ... கோபப் ...ஒரு நாள் ஒரு ...த்துவிட்டேன். ...ன் தெரிந்தது. ...புண்டி சப் ...ா என்று. ...கிவிட்டது. ...பக்டருக்குக் ...த்த வேலை ...ட்ட அந்த ... தடவிக் ...டினான்.

புரட்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியுமென்று நம்பினோம்! நீ மன்னனைக் கண்டு மயங்கி விழுந்ததின்மூலம், பெண் குலத்துக்கே ஒரு இழுக்கைத் தேடித் தந்து விட்டாய்.

ஆண்களைக் காணாத நேரத்தில் அசகாய சூரத்தனமாக பேசுவார்கள்! அவர்களைக் கண்டவுடன் பெட்டிப்பாம்பென அடங்கி விடுவார்கள் என்றபேதமை எண்ணத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்த சண்டாளியே! நம்பிக்கையை நாசமாக்கிய துரோகியே! அரசன் அழகில் மயங்கிவிட்டாயா? உன்னைத் திருமணக் கோலத்திலா... உள்ளே அனுப்பினோம். இல்லையே உரிமையைக் கேட்க அனுப்பினோம்! உணர்ச்சி வசப்பட்டு விட்டாய்; குறிக்கோளை மறந்து விட்டாய்; அதனால்தான் உன் மனதில் எரிந்துக்கொண்டிருந்த தீயணைந்துவிட்டது. நானே சென்றிருப்பேன்; என்னை விட நீ அழகி, இளையவள் என்றல்லவா உன்னை அனுப்பினேன். ஏமாற்றம், முன்னிலும்ஏமாற்றம், மோசமான ஏமாற்றம், நாம் இந்த வார்சேல்ஸ் மாளிகை நோக்கி வரும்போது தெருக்களின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஆண்களை நோக்கி நீங்கள் எல்லாம் ஆண்கள்தானா? என்று கேட்டோம், உங்கள் முகத்திலிருப்பது மீசைதானா என்றும் கேட்டோம். பாவம் அந்த ஆண்கள்; எல்லாம் வெட்கத்தால்தலைகுனிந்தனர். இப்போதுஅந்தஆண்கள் அவலநிலையைக்கண்டால்எங்களுக்கிருப்பது மீசைதான். நாங்கள் ஆண்கள் தான், நீங்களெல்லாம் யாரென்று கேட்பார்கள். வீரமங்கை ஜோன் அப்-ஆர்க்கின் வழி வந்தவர்கள் தானா என்று கேட்பார்கள் பெண் புத்தி பின் புத்தி என்று ஏளனம் செய்து எள்ளிநகையாடுவார்கள். அந்தோபரிதாபத்துக்குறியவளே! நீ இனி யாருக்காக உயிர் வாழப் போகிறாய்; உயிர் வாழவேண்டும். ஒரு மன்னன் முடியை மாற்றார் பறிக்க அந்த முடியை ரணகளத்தில் போராடி, மீட்டு, மீண்டும் அதே மன்னன் தலையிலே சூட்டி மகிழ்ந்தாள் வீரமங்கை. ஜோன்-ஆப் ஆர்க். அவள் உன்னைவிட எழில் மிகுந்தவளாய் உடல் கட்டோடு இருந்தாள். அதோ பார் அவள் குதிரைமேல் வாளேந்தி வீற்றிருக்கும் வெங்கலச்சிலையை. நீயும் பிறந்தாயே பெண்ணாக; எங்கள் மானத்தையும் நாட்டின் மானத்தையும் வாங்க. இந்தா இறந்துபோ—என்று அவளை ஈட்டியால் குத்தி சாய்த்தாள் தொரயினி. கூடியிருந்த பெண்களின் கண்கள் உதிரத்தைச் சிந்தின. எனினும் தடுத்து நிறுத்தும் ஆற்றல் பெற்றார்களில்லை. ஈட்டியால் குத்தித் தாக்கப்பட்ட அந்தப் பெண் பிரேதத்தை மன்னன் கோட்டை வாயிலில் தூக்கி நிறுத்தி வைத்தான். மன்னன் தான் கொன்று விட்டானோ என்ற அச்சமும் ஆவேசமும் மக்களுக்கு தோன்றியது. ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டனர், உண்மை விளங்கிற்று. பாராளும் மன்னன் அழகைக்கண்டு படுதோல்வி அடைந்தவள் சுடுகாடு சேர்ந்தாள்.

—தொடரும்.

நான் பீதியுடன் ரோசிலாந்தைப் பார்த்...ன். அவள் 'கவலைப் படாதே' என்று கூறி என்னை ராணுவத் தளத்திற்குள் அழைத்துப் போனாள். அந்...ராணுவத்தளம் பாழடைந்தபண்...ட மன்னர் ஒருவரின் கோட்டைக்குள் இருந்தது ... கோட்டை வாசலில இர...டு பிரங்கிகள் வாய்பிளந்...நின்றன. நாங்கள் இருவ...ரு பிரங்கி வண்டிமீது சாய்ந்து கொண்டிருந்தோம். ரோசிலாந்து அந்தப் பிரங்கிக் குழாய்க்குள் கையை விட்டாள். அதற்குள் ஒரு காதல் கடிதம் இருந்தது.

(தொடரும்)

தயாராகிறது!

இந்தி எதிர்ப்பு மலராக

இனமுழக்கம்

ஆண்டு மலர்

ஆகஸ்ட் 26-ல் எங்கும் கிடைக்கும்.

அறிஞர் அண்ணா

சொல்லின்செல்வர் சம்பத், நாவலர் நெடுஞ்செழியன்
கவிஞர் கண்ணதாசன், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர்
க. அன்பழகன், நாஞ்சில் கி. மனோகரன், தத்துவ
மேதை டி. கே. சி., டாக்டர் மு. வ., டாக்டர்
அ. சிதம்பரநாதனார், பன்மொழிப்புலவர்
அப்பாதுரையார், திராவிட மொழி
நூலார் ஞா. தேவநேயப்பாவாணர்
முத்தமிழ்க்காவலர் கி, ஆ. பெ.
விசுவநாதம், "பாரதரத்ன"
இராசகோபாலாச்சாரியார்,
டாக்டர் இராசமாணிக்கனார் ஆசிரியர் சி. பி. சி.
மற்றும் பலர் இந்தியைப் பற்றி தம் எண்ணக் குவியல்களை வெளிப்படுத்துவர்

★

கவியரங்கம்! கவியரங்கம்!! கவியரங்கம்!!!

தலைவர் :

கவிஞர் கண்ணதாசன்

பங்கேற்போர் :
கவிஞர் **முடியரசன்**, கவிஞர் **வே. கபிலன்**, கவிஞர் **வாணிதாசன்**
புலவர் **பொன்னிவளவன்**, கவிஞர் அருப்புக்கோட்டை **இராமசாமி**

★

திரையுலகில் இந்தி பற்றி...

புரட்சி நடிகர், இலட்சிய நடிகர், நடிகர் திலகம், ஔவை டி. கே. எஸ், டணால் தங்கவேலு, எம். என். ராசம் ஆகியோர் தம் கருத்தை தெரிவிக்கிறார்கள்,

★

புதுமை! புதுமை!! புதுமை!!!
என்றும் காணாத புதுமை !!!!

அண்ணா பிறந்ததினப் போட்டி !

பரிசு ரூ. 100! கூப்பன் மலரில்!

பலவண்ண ஆர்ட் முகப்பு!

இத்தனையும் உண்டு! அத்தனையும் கற்கண்டு!

விலையோ 50 காசுகள்தான்!

விபரங்கட்கு :—
"இனமுழக்கம்" சென்னை-2

ஆசிரியர்,
"இனமுழக்கம்,"
சென்னை-2.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்!

தங்கள் 22-7-60 இனமுழக்கம் கண்டேன். புரட்சிக் கவிஞரின் புதுமைக் கவிதையையே! புத்துணர்ச்சிகொண்டு போர்க்களம் செல்ல, தியாக உணர்ச்சியூட்டும் தங்கள் இனமுழக்கம், எத்தர்களுக்கு இடிமுழக்கம்! எத்திப் பிழைப்போர்க்கு எதிர் முழக்கம்! இன்னும் சொல்லப்போனால், இனமுழக்கம் திராவிடரின் உரிமை முழக்கமாக, கிழமை தோறும் வெளிவரும் இனமுழக்கம் தலைப்பு, கட்டுரை, கவிதை, கதை உணர்ச்சி அற்ற மரக்கட்டைகளுக்கு உணர்வை உண்டாக்கும் இனமுழக்கம் வாழ்க.

எம். வி. இளஞ்சேரன்
சென்னை-1

தங்களின் 22-7-60 இனமுழக்க இதழின் முகப்பை அலங்கரித்திருந்த, கன்னித் தமிழகம் ஈன்றெடுத்த கவிஞர் கண்ணதாசன் அவர்களின் கவிதை, சர்க்கரைப் பந்தலில் பெய்த தேன் மழையாக அமைந்திருந்தது. இப்பெருமைக்குரிய கவிதையை திரட்டி தந்த திரு. கண்ணதாசன் அவர்களுக்கும் என்போன்ற வாசகர்கள் மகிழ்வு பெற-மன உறுதி தர-வெளியிட்ட தங்களுக்கும், எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தியாகராசன்
உதகை

இனமுழக்கத்தோடு மொழி வளர்ச்சி செய்து வரும் தங்கள் பத்திரிகையில் திராவிடமெங்கும் உள்ள திராவிடர்கள் மொழியான தமிழைக் காக்க இந்தி என்னும் மந்தியை எதிர்த்து போருக்கு எழும் போராட்டக் குழுத் தலைவரின் படமும் பிறகு தளபதி வேடத்தில் கலைஞரின் படமும் பிறகு புலவர் போல் வேடமிட்டு கவிஞரின் படமும், கவிதையும் வெளி வந்ததைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் இருந்தே திராவிடர்களால் பேசப்பட்டு வரும் தமிழ் மொழியைக் காக்கபோருக்குஎழுவாய்திராவிடா என்று போர்க்குரல் ஒலிக்கும் நமது கழகப் பொதுச்செயலாளரின் படம் எந்த வேடத்தில் அடுத்த வாரத்தில் வெளிவரும் ,என எதிர்பார்க்கும் திராவிடன்.

செங்கை இராமு
சென்னை-2

29-7-60 இனமுழக்கம் கண்டேன், இன்புற்றேன், நாவலர் அண்ணா அவர்களின் சேரனின் 'வில் அம்பு கொடியுடன் போர்க்களத்தில் குதித்திருப்பதைக் கண்டதும், எங்கள் தமிழ் ரத்தம் கொதித்தது. இன்னும் கொதித்துக் கொண்டே இருக்கிறது.

ஆயிரமாயிரம் தம்பிமார்கள் குருதிகளை களத்தில் கலக்க காத்திருக்கின்றார்கள், அந்த இந்தி எதிர்ப்பு நாள் எந்நாளோ!

வெண்ணிலா

இந்தியினைக் கட்டாயம் கற்க
வேண்டும்
இல்லையெனில் தொழிலு
யர்வே இல்லை " என்னும்
மந்தமதி கொண்டோர்க்குப்
பாடம் கூற
மகத்தான போராட்டம்
காண மக்கள்
சிந்தனையில் மொழிப்பற்றை
யூட்டிக் காட்டிச்
சீரியநற் பணியாற்றும்
அறிஞர் தம்மை
வந்தனைசெய் கின்றேன்
நான்; வாழ்த்து கின்றார்,
வரலாற்று வளங்கொண்ட
தமிழ நாட்டார்!

பா. கிருட்டிணமூர்த்தி,
பெரம்பூர், சென்னை-11

தங்களது இனமுழக்கத்தின் ஒவ்வொரு இதழின் அட்டைப்படமும் வீர உணர்ச்சியூட்டுகிறது. அதிலும் கடந்த வார இதழில் நமது பொதுச்செயலாளரும், இன்றைய பாண்டியனுமான நெடுஞ்செழியன் அவர்கள் கையில் விற்கொடி (மகரக் கொடியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்) தாங்கிப் போர்ப் பரணி எழுப்பும் காட்சியைக் கண்டு நாட்டைக் காத்திட நமக்கு இரத்தங் கொதிக்கிறது, போர்க் காண துடிக்கிறது தோள்! சங்கத் தமிழாம், நமது உயிராம், நம் மொழிக்கு பங்கமெனில் போர்ச் சங்கினை முழங்கி, பொங்கி எழுவோம், ஆறிலும் சாவு! நூறிலும் சாவு! இந்திப் போரிலே நம் உயிர், தமிழ் மொழிக்குத் தரும் காவு! நம்மை விட்டு ஓடுவோர் ஓடட்டும். மொழிக் காக்க வருவோர் வரட்டும். "நல்ல தமிழ் நாட்டெழுந்த இந்திப் போரில் தேட்டாளர் முகங்களிலே அறுததெறிந்த திருத் தாலிக் கயிற்றில் நான் எழில் கண்டேன்." என்று அன்று கூறிய கவிஞருக்கு மீண்டும் அவ்வெழிலைக் காட்டுவோம் வாரீர்! வாரீர்! என முழக்கமிட்டு தமிழினத்தைத் தட்டி எழுப்புகிறது, அட்டைப்படம்! நீடு வாழ்க நீவிர்! வளர்க இனமுழக்கம்!!

கூறைவேந்தன்
மாயூரம்

இனமுழக்கம் கண்டோம் மகிழ்ச்சி, இன்றைய நிலையிலே பத்திரிக்கை நடத்துவது இலேசான காரியம் அல்ல, அதிலும் நம் இயக்க ஏடுகள் என்றால் அரசினரின் பூணவமும், அதிகாரமும் வாய் பிளந்து நிற்கும் இவைகளை எல்லாம் தூர்த்து யாருக்கும் அஞ்சாது உண்மைக்குச் சிரம் தாழ்த்தி நம் நாடு நலம் பெற - வாழ்வு வளம் பெற-திராவிடர் தம் வாழ்வு மலர்ந்திட இனமுழக்கம் அஞ்சாது வீறுநடை போடட்டும்.

பீ. கே. அமீர்கர்சா
சேதுக்குவாய்த்தான்

எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியா அவர்களுக்கு வணக்கம் தங்களின் 8-7-60-ல் வந்த இனமுழக்கம் பத்திரிக்கையில் வந்த யாருக்கு யார் பணிவது? என்ற தலைப்பின் கீழ்கண்ட கட்டுரையை படித்தேன். அலெக்சாண்டரை வரவேற்றவன் அம்பி என்ற ஆரிய மன்னன். அந்தஙோழையின்வழி வந்தவர் தான் நேரு என்று எழுதியிருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

ப. சந்திரசேகரன்

22-7-60 இதழில் டி. கே. சி யின் 'மும்முனை' படித்தேன். கல்லக்குடியில், இவ்வார முகப்பை அழகு படுத்தும் நம் கவிஞருக்கு நேரிட்ட தொல்லைகளைப் படித்து மனம் உருகினேன். அது 54. அப்போது நாம் சிலர். இப்போது 60. நம் தலைவர்களுக்கு ஏதேனும் ஒரு துளி அபாயம் ஏற்படுமானால்? இந்த சர்க்காரின் எதிர்காலம் என்ன ஆகும் என்பதைச் சொல்ல முடியாது. என்பதை, காட்டிக் கொடுக்கும் இக் கங்காணி அமைச்சரவை உணர வேண்டும். "வாழ்வா? சாவா?" என்ற இரண்டிலொன்றுக்கு நாம் தயார் என்பதை சர்க்காருக்கு அறிவித்திருக்கிறோம். இந்த சவாலை சர்க்கார் ஏற்றுக்கொண்டு நம்மை களத்திலே சந்திக்கட்டும். "மத்திய சர்க்கார் ஊழியரின், அகில இந்திய வேலை நிறுத்தத்தையே முறியடித்து விட்டோமே! தி. மு. க வினரை ஒழிப்பது தான் முடியாதா?" எனப் பகல் கனவு காணுவோரின் அடிமைப் புத்திக்கு சாவுமணியடிப்போம். "எதற்கும் தயார்" என்பதை நம் எதிர்காலம் அவர்கட்கு காட்டும் வழி நடப்போம்.

சூளை குயிலன்
சென்னை-7

சீர் திருத்த செம்மலே! தங்களின் இனமுழக்கம் இதழில் தத்துவ மேதை டி. கே. சி. அவர்கள், கல்லக்குடி போராட்டத்தை ஒன்றுவிடாமல் அப்படியே எழுதியுள்ளார். அதை படிக்கும் போது உள்ளம் துடிக்கிறது. என் கண்கள் என்னை அறியாமலேயே நீர்த்துளிகளை கக்கின. காக்கி உடை தரித்த கனவான் என் கன்னித் தமிழகம் கண்டெடுத்த கவிஞரை காலால் உதைத்தது என்று படிக்கும் போது, 'ஏ பாழும் கண்ணியமே நீ ஏன் குறுக்கே நிற்கிறாய். பார் என் கவிஞரை. பஞ்சமாபாதகத்து அஞ்சாத இரக்கமற்ற அரக்கர்களை பார் என்று என் கரம் துடித்தது." 'வரட்டும் ஆகஸ்ட் 31" என்று என் உள்ளத்திற்கு நானே ஆறுதல் கூறி அமைதி படுத்துகிறேன். திராவிடம் வெல்லும். திராவிடர் வாழ்வார்கள். திராவிடநாடு திராவிடருக்கே! என்று, நித்தமும் ஜபம் படிப்பது போல் கூறிக் கொண்டே இருக்கிறேன்.

பி. சக்ரேசன்
தமிழ்நாடு 12.

தங்கள் "இனமுழக்கம்" இதழைப் படிக்கும் எண்ணற்றோரில் யானும் ஒருவன்! நம் நாடு வீணரின் பிடியினின்றும் விடுதலை யடைய வேண்டும் என்ற வேட்கை கொண்டவன்; இந்தி கூடாதென்றெண்ணும் கோடிக் கணக்கானவர்களில் ஒருவன். யான் எழுதிய இக் கவிதையைத் தங்கள் இதழின் ஒரு மூலையில் வெளியிட்டு, என் வேட்கையைத் தணிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய படைதான் சிறையைத் தகர்த்தது!

நீ என்னை அழைக்கவில்லை நேரு என் தம்பியை அழைத்தார்!

(4-ம் பக்கத்தொடர்சி)

மனதார மதிக்கிறேன் என்பது தான்!

'போராட்டத்தை நடத்தவேண்டும், கருப்புக் கொடி காட்டியே தீருவோம்,' என்று 4-ந் தேதியன்று நமது, தலைமை நிலையத்தின் முன்னால் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தம்பிமார்கள் கோரினார்கள். கரைபுரண்டோடும் உணர்ச்சியுடன் முழக்கமிடும் படை எங்களிடத்திலேயிருக்கிறது. போராட்டத்திற்கேற்ற வலுவுள்ள போர்ப்படை எங்கள் கைவசமிருக்கிறது. ஆனாலும் போராட்டத்தை நிறுத்தி வைக்கிறோம். இதிலே தான் பெருமை இருக்கிறது — மகிமை இருக்கிறது! ஆனால் ஏன் கருப்புக்கொடி காட்டவில்லை என்றால் ஆள் இல்லை என்பதால் அல்ல. நாம் கேட்ட வாக்குறுதியைப் பெற்று விட்டோம் என்பதால் தான்! என்றாலும் நம் கழகத் தோழர்களை நான் கேட்டுக் கொள்வேன், இது போன்ற உணர்ச்சியையும், ஆர்வத்தையும், நீங்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக்கொள்ள வேண்டும். காங்கிரசுக்காரர்களைப் பார்க்கிற நேரத்தில் கெம்பீரமாகத் தலை நிமிர்ந்து நடந்து செல்லுங்கள்! போராட்டம் வெற்றியா? என்று அவர்கள் கேட்டால், 'ஆம்' என்று சொல்லுங்கள் 'கருப்புக் கொடி இல்லையா?' என்று கேட்டால் 'கடிதம் இருக்கிறது' என்று சொல்லுங்கள். 'கருப்புக் கொடி காட்டமாட்டீர்களா?' என்று மேலும் கேட்டால் 'ஐயோ, பாவம், காட்டவில்லை' என்று சொல்லுங்கள் இதைத் தவிர இதற்கு வேறு அரசியல் விளக்கங்கள்தேவைபடவில்லையென்றே கருதுகிறேன்.

அரசியல் சட்டத்தை திருத்தியமைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள் என்பது தான். இம்முயற்சியில் சென்னை சர்க்காருக்கு தி. மு. கழகம் என்றென்றும் துணை நிற்கும். எனவே, எங்களிடம் ஏற்பட்டிருக்கின்ற இந்த எழுச்சி, கோடம்பாக்கத்தில் கண்ட காட்சி-போராட வேண்டுமென்கிற உணர்ச்சி - ஆகிய இவைகளையெல்லாம் டெல்லியிலுள்ளவர்களிடத்திலே எடுத்துக்காட்டி, தமிழோடுவாழ்வதென்று முடிவு செய்து விட்டவர்களின் துணையைக்கொண்டு, தங்களின் அடிமை மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட வகையில் அணி வகுப்பு தமிழகத்தில் வளர வேண்டும்.

'எனக்கு இப்பொழுது உங்களையெல்லாம் பார்க்கிற நேரத்தில், பிரெஞ்சுப் புரட்சியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் வெறித் தனத்தால், வீரர்கள் பலர் சிறைபிடிக்கப் பட்டனர். அவர்களை யெல்லாம் ஒரு பயங்கரமான, கொடுமை மிக்க ஒரு சிறையில் அடைத்துவைத்தனர்—அதுதான் 'பாஸ்டிலி' சிறை. அந்தச்சிறைக்குச் சென்றவர்களில் யாரும் உயிரோடு திரும்பியதில்லை.—ஏன்?- பிணம் கூட திரும்பியதில்லை. செத்து விடுபவர்களை அங்கேயே புதைத்து விடுவார்கள்.

அடிமை மனப்பான்மையை அமைச்சர் மாற்றிக் கொள்வாரா?

"தொழில் வளம் இல்லை என்றால் தமிழகம் சற்று வருந்தும், கையைப் பிசைந்து கொள்ளும். ஆனால் தமிழ் அழிக்கப்படும் என்று அறிவிக்கப்படுமானால், இங்கே இருக்கும் கோழையும் வீரனாவான்! குருடனும் கண் பெறுவான்! செவிடனுக்கு காது கேட்கும்! இந்த மண்ணே கொதித்துக் கிளம்பிப் போராடும்! "வாழ்ந்தால் தமிழோடு வாழ்வோம், இல்லையேல் எல்லோரும் செத்து மடிவோம்' என்று அவர்கள் என்றோ உறுதி கொண்டு விட்டார்கள்!

நிதியமைச்சர்— பத்திரிகையாளர் கூட்டத்திலே ந[illegible]த விடுத்த வேண்டுகோளில் மி[illegible]க்கியமாக அழைப்பு விடுத்துள்ளார். இதை நான் [illegible]ராட்டுகிறேன். இந்த பிரச்சி[illegible] வரை ஒரு கட்சி மட்டும் தான்போராடவேண்டுமென்ற நிலை இல்லை. இருக்கும் குறைகளை எங்களிடத்திலே [illegible]ல்லுங்கள். நாங்களும் சேர்ந்து போராடுகிறோம். என்று அவர் கூறியுள்ளார். இதற்கான நல்ல வாய்ப்பு இன்றைய தினம் இருக்கிறது.

"அமைச்சர்க்கு நான் சொல்லிக்கொள்வதெல்லாம், எங்களுடைய கண்ணியத்தை நாங்கள் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நீங்கள் சொன்னதை தயது செய்து

பிறகு தோண்டி எடுத்தால் எலும்புக் கூட்டைத் தான் பார்க்க முடியும். அப்படிப்பட்டச் சிறைசாலையைத் தகர்த்தெரிய வேண்டுமெனப் புரட்சி வீரர்கள், புரட்சியின் உச்சக் கட்டத்திலே எண்ணினர். அந்தச் சிறையை தகர்த்தெறிய ஒரு பெரும்படை திரண்டு வந்து கொண்டிருந்தது; எதிரில் ஒரு சிறு படை வந்து கொண்டிருந்தது. அந்தச் சிறிய படையினர் அவர்களைப் பார்த்து 'எங்கே செல்லுகிறீர்கள். என்று கேட்டார்கள், நாங்கள் 'பாஸ்டிலி' சிறையை உடைத்தெரியப் போகிறோம்' என்றனர், உடனே அந்தச் சிறிய படையினர்தா[illegible] பெரும்படையைப் பார்த்து[illegible] சொல்லினர்.

'என்ன? பாஸ்டிலி[illegible]
சிறையா? எங்கே இரு[illegible]
நீங்கள் உடைக்க? அ[illegible]
உடைத்து சுக்கு நூறாக்கி[illegible]
டுத்தானே நாங்[illegible] வந்து[illegible]
டிருக்கிறோம்!
தூள் தூளாக்[illegible]
என்கிறார்கள்

"அ[illegible]
ஆணவத்[illegible]
கிய நாங்[illegible]
விட்டு, [illegible]
உங்களை
திக்கிறோ[illegible]
பற்றிக்
வுக்கு மா[illegible]
பெற்றிரு[illegible]
கள் [illegible]
செல்[illegible]
அத்[illegible]
மாற[illegible]

★ கோகினூர், கடந்த 450ஆண்டுகளில் நூற்றுக்கு மேற்பட்ட மன்னர்களைச் சந்தித்துவிட்டது. அவர்களெல்லாம் மண்ணாகியும், மறைக்க முடியாத வைரம் மறையவில்லை.

வைரம்

★ ருஷ்ய இளவரசி 2-ம் காத்தரின்மீது அவனுக்கு பேரன்பு உண்டு. அவ்வன்புக்குச் சான்ருக இந்தக் கோகினூர் வைரத்தைத்தான் பரிசாக வழங்கினுன்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அக்பர்இறந்ததுஜகாங்கீர்தனது அன்பு மனைவி நூர்ஜகானுக்கு அதை அணிந்து அழகு பார்த்தான்! அவனுக்குப்பிறகு ஷாஷகான்—மும்தாஜ் தம்பதிகள் வசம் இருந்தது, கோகினூர்!

அதன் பிறகு அவுரங்கசீப்பிடம் அது சென்றது. ஏறக்குறைய 1526 முதல் 1736 முடிய சுமார் 210 ஆண்டுகள் டில்லி அரச வம்சத்திடம் கோகினூர் இருந்தது! எண்ணற்ற நவமணிகளும், ரத்னங்களும் அதனுடன் கூட இருந்தன!

ஆடு, மாடு மேய்த்துக்கொண்டிருந்த நாதர்ஷாவுக்கு, இந்த ரத்னங்களின்மேல் ஆசை பிறந்தது. வீரனுக மாறினுன் - பாரசீகத்தைக் கைப்பற்றினுன்—1737-ல் டில்லிமேல் படையெடுத்தான்—50 ஆயிரம் பேர்களை ஒரே நாளில் கொன்ருன்-டில்லியையே சூறையாடினுன் - டில்லி அழிந்தது - கஜானுவுக்குச் சென்ருன்! கோகினூர் முதலிய மணிகளை எடுத்துக்கொண்டு பர்சியா திரும்பினுன்! 75 ஆண்டுகள் வரை கோகினூர் பாரசீகத்தில் இருந்தது!

1813-ல் பஞ்சாபை ஆண்டு வந்த, ரஞ்சித் சிங், அந்நாட்டு மன்னனுடன் உறவு பூண்டு, தந்திரமாக கோகினூரை வாங்கிக்கொண்டான். பூரி ஜகநாதர் கோயிலுக்கு அதை கொடுக்கப் போவதாக ரஞ்சித் சிங் கூறிக்கொண்டிருந்தான். ஆனுல் கொடுப்பதற்குள் இறந்துவிட்டான்! சுமார் 36 ஆண்டுகள் வரை கோகினூர் பஞ்சாப்பில் ரஞ்சித் சிங் வம்சத்தாரிடமிருந்தது!

1848-49-ல் சிக்கியப் போரில், பஞ்சாப் ஆங்கிலேயரிடம் தோற்றது - அடிமையாகியது! அப்போது இந்திய வைஸ்ராயாக இருந்த டெல்ஹௌஸி, கோகினூரை வாங்கி, 1850-ல் விக்டோரியா மகாராணிக்கு அனுப்பினுர்! பூரி ஜகநாதர் ஏமாந்து விட்டார்!!

1850 முதல் கோகினூர் இங்கிலாந்து மன்னர்களின் மணிமுடியில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது! ஆரம்பத்தில் அதன் எடை 186 காரட். இப்போது 106 காரட்டாகக் குறைத்து விட்டார்கள்!

கோகினூர் கடந்த 450 ஆண்டுகளில் நூற்றுக்கு மேற்பட்ட மன்னர்களைச்சந்தித்து விட்டது-அவர்கள்எல்லாம் மறைந்து போனுர்கள்-மண்ணுகி விட்டார்கள்! ஆனுல் கோகினூர் மங்காமல் மறையாமல் முன்னிலும் பன் மடங்காக ஒளிவீசி கொண்டிருக்கிறது. எலிசபெத் ராணியின் முடியில் இப்போது அது ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது!

2. உர்லாவ் வைரம் :--

இந் நாட்டில் ஓர் பார்ப்பனக் கோவிலில்—ஒரு கடவுள் சிலையின் கண்ணில்—இருந்த வைரம் இது! இதை பிரெஞ்சு வீரன் ஒருவன் திருடிக் கொண்டு ஓடி விட்டான்! வழியில் அவனிடமிருந்து ஒரு கப்பல் தலைவன் திருடி, ருஷ்ய வீரன் உர்லாவி (Orlove)யிடம் 90 ஆயிரம் பவுனுக்கு விற்றுவிட்டான்!

ருஷ்யஇளவரசி 2-ம் காத்தரின் மீது அவனுக்குப் 'பேரன்பு' உண்டு! அந்த அன்புக்கு அடையாளமாக, இவ்வைரத்தை உர்லாவ் அவளுக்குப் பரிசளித்தான்; அவ் வைரத்துக்கும் அவன் பெயரே இடப்பட்டது!

சுமார் 195 காரட் எடையுள்ள அவ் வைரம் ருஷ்ய மன்னர்களின் மகுடத்தில் பதிக்கப்பட்டது—இன்றும் உள்ளது!

3. பிட் வைரம்.—பிரான்சில்!

சென்னை மாநில கவர்னராக இருந்த பிட், இந்த வைரத்தை 20.400 பவுன் கொடுத்து வாங்கினுர். பிரான்சு ரீஜண்ட் ஆர்லிபன்ஸ் பிரபுவிடம், 1,35000 பவுனுக்கு விற்ருர்! ஆரம்பத்தில் அதன் எடை 400 காரட்! இப்போது வெட்டப்பட்டு 137 காரட்டாக இருக்கிறது. இதுதான் புகழ் வீரன் நெப்போலியன் பட்டாக்கத்தியில் இடம் பெற்றது! கிருஷ்ணு மாவட்டத்தில்—பார்டியாலா என்ற இடத்தில் எடுக்கப்பட்டது!!

4. "பெரியமுகாலயம்":—

இதன் எடை 787 காரட், பின்பு 280 காரட்டாகத் துண்டிக்கப்பட்டது. 1,665ல் அவுரங்கசீப்பின் கஜானுவில் இதை டாவர்னியர் பார்த்தானும்! "எமிர்ஜம்லாவினுல் ஷாஜகானுக்கு கொடுக்கப்பட்ட வைரம் இது" என்று டாவர்னியர் சொல்கிருன்! இதை இப்போது காணேம்!

5 அக்பர்ஷா வைரம் :—

ஆரம்ப எடை 116 காரட்' 71 காரட் ஆக ஆக்கப்பட்டபின் 35 ஆயிரம் பவுனுக்கு பரோடா கெய்க்வாருக்கு விற்கப்பட்டது!

6 சான்சி வைரம் :—

சுமார் 54 காரட் எடையுள்ளது, ஸ்பெயின் தேசத்து மன்னனிடம் இருக்கிறது

7. நிஜாம் வைரம் :—

முன்பு 440 காரட்டாக இருந்தது; இப்போது 277 காரட்டாகி இருக்கிறது; மற்ருென்று 67 காரட் எடையுள்ளது. இதன் விலை 1.65,000 ரூபாய்! அனந்தப்பூர்மாவட்டத்தில் 1881 ல் வஜ்ஜிரகரூர் என்ற இடத்தில் எடுத்த வைரம் இது!

9. கிரேட் டேபின் வைரம் :—

ந[illegible] வர மண்டலத்துக்கு 1642ல் வ[illegible]த டாவர்னியர், இங்கே 242 காரட் எடையுடன் இவ் வைர[illegible]க் கண்ட[illegible]! இப்போது [illegible] 180 காரட் எடையு[illegible] மன்னர்களின் மணி[illegible]ாலித்துக்கொண்டிருக்[illegible]!

10. தாஜ் எமா :—

எடை 146 காரட்...இதுவும் பாரசீகத்தில், அதே முடியில் உள்ளது!

11. அழகான நீல வைரம் :---

67 காரட் எடையுள்ளது—டாவர்னியர் ஐரோப்பா கொண்டு சென்ருன்-திருடு போய்விட்டது-காணப்படவில்லை.

12. பிளாரெண்டைன் :—

133 காரட் எடையுள்ள இந்தக் கவர்ச்சிமிக்க மஞ்சள் வைரம் இன்று ஆஸ்திரியா தேசத்து மன்னனின் மகுடத்தில் ஒளி தருகிறது!

பிரிட்டன், பிரான்சு, பாரசீகம், ருஷ்யா, ஆஸ்திரியா, ஸ்பெயின் முதலிய நாடுகளில் ஜொலிக்கும் இந்த முக்கியமான 12 வைரங்களின் சரித்திரமே-உலக வைரமணிகளின் சரித்திரமாகும்!

தென்னுட்டு வைரத்தின் கதையே-உலக வைரத்தின் சரித்திரமாகும்! (ஆங்கிலக் கலைக் களஞ்சியம்) இதைப்பற்றி அழகுபட வர்ணித்திருக்கிறது!

வைரம் விலைமிக்க நவமணிகளுள் ஒன்று! மன்னர்களுக்கும், பிரபுக்களுக்கும் மட்டுமே கிடைக்கக்கூடியது; சாதாரண மனிதர்களுக்குத் தேவையற்றது-எனவே அது அவசியமில்லை என்ற வாதத்தை சிலர் எழுப்பக்கூடும்!

காரணம், நம்மில் பலர் நினைக்கிருர்கள். வைரமணி வெறும் அணிகலனுக மட்டும்தான் உபயோகப்படுகிறது என்று! ஆனுல் மனிதன் வைரத்தின் உதவியின்றி விமானம், கப்பல், பாலம், அணை அல்லது பெரிய தொழிற்சாலையோ செய்ய முடியாது—என்பது உண்மையாக இருக்கிறது!

போருக்கு இன்றியமையாத சில கருவிகளைப்போல், தொழில் துறைக்கு வைரம் மிகமிக முக்கியம்! வைரத்தின் தொழில்துறை உபயோகம் நாள்தோறும் வளர்ந்து செல்கிறது. உலக வைரத்தில் 75 சதவீதம் இன்று, தொழிற்சாலைகளுக்கே பயன்படுகிறது!

உருக்கு, டங்ஸ்டன், மாங்கனீஸ், வனடியம் — முதலிய கடினமான உலோகங்களை ஒரு நொடியில் உடைக்க வேண்டுமா? அதற்கு உதவி செய்வது வைரம்!

கண்ணுக்குப் போட்டுக் கொள்ளுகிருேமே அந்தக் கண்ணுடி, பல் கருவிகள்—இவை செய்ய வைரத்தின் உதவி தேவை!

காரை இயக்க, கப்பலை ஓட்ட, கடிகாரம் செய்ய, பாறைகளைப் பிளக்க, விமானத்தை ஓட்ட, மின்சார கம்பி இழுக்க, குண்டு வீச, 'ரோலர்'களை நகர்த்த—முதலிய எல்லா வேலைகளுக்குமே வைரமணிகள் பயன்படுகின்றன!

அது மட்டுமல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக வைரத்தை வைரம்தான் அறுக்க முடியும்! அழகிகளின் அணியாகி கண்டாரை வசீகரிக்கும் கவர்ச்சியைக் கொடுக்க முடியும்! இந்த ஒப்பற்ற குணங்களால், உலகில் அது மிகப் பெரிய மதிப்பைப் பெற்றுவிட்டது! ஆகவே வைரம் விளையும் நாடு வளத்தைப் பெற முடியும் — மக்கள் வாழ்வை அடையமுடியும்! உலகில்உன்னதமான மதிப்பைப் பெற முடியும்!

நமது வைர பூமி

திராவிடத்தின் வடகோடியில்-கோல்கொண்டா என்ற ஒரு சிறிய நாடு இருந்தது. (இப்போதும் அந்த பெயராலேயே அது சிறிய ஊராக இருக்கிறது, அந்நாட்டு எல்லைக்குள் இன்றைய கிருஷ்ணு, அனந்தப்பூர் முதலிய மாவட்டப் பகுதிகள் அடங்கியிருந்தன! இந்தப் பகுதிகளிலே தான் ஏராளமான வைரமணிகள் புதைந்து கிடந்தன—சுரங்கம் அமைத்து எடுக்கப்பட்டன.உலகமெல்லாம் அனுப்பப்பட்டன!

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடியில்—மிகச் சிறந்த ரத்தினங்கள் உயர்ந்த நவமணிகள் மிகுதியாகக் கிடைத்தன என்று மற்ருெரு வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது!

கிருஷ்ணு மாவட்டத்தில், கொல்லூரில் இருந்த கொல்லூர் வைரச் சுரங்கம் மிகப் பெரியது! 1645-ல் கொல்லூர் சுரங்கத்துக்கு வந்து பார்த்த டாவர்னியர் கூறுவதைக் கேளுங்கள்!—"கொல்லூர் பெரியதோர் வைரச் சுரங்கம்-இதற்கு முன் நூருண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. இங்கே 60 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிருர்கள்! இந்த வைரச்சுரங்கங்களால் கோல்கொண்டாக் கோட்டையே வைரமணிகளின் வணிக மண்டலமாக (Market) விளங்குகிறது!" என்று கூறுகிருன்!

கொல்லூர், பார்டியாலா, சேலம், வாணியம்பாடி, வஜ்ஜிரகரூர், முனிமடுகு, பங்கனப்பள்ளி -முதலிய இடங்களில் கிடைத்த வைரங்கள் தான் அந்த உலகப் புகழ்பெற்ற வைரங்களாகும்! இந்தப் பகுதிகள் தான், இந்தப் பூமிதான் நமது வைர பூமியாகும்!

கால மாறுதல்களாலும் - தென்னுட்டவர் கண்விழிப்பில்லாத காரணத்தாலும், இந்தச் சுரங்கங்கள் இன்று காணப்படவில்லை; ஆனுல் வைரம் மிகப் பெரிய அளவில் இருக்கவே செய்கிறது! "இந்திய பூதத்துவ ஆராய்ச்சிக் குறிப்புகள்" (Cycological survey of India) என்ற நூலில் இருந்து இந்த உண்மை நன்கு புலனுகிறது!

இந்திய இயற்கை வள துணை அமைச்சர் K. D. மாளவியா' டில்லி பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போது (5-5-53ல்) "இந்திய பூதத்துவ ஆராய்ச்சிக் குறிப்பிலிருந்து, சென்னை மாநிலத்தில் முக்யமாக கர்னூல், கடப்பை, பல்லாரி, அனந்தப்பூர்--மாவட்டங்களில் வைரம் இருப்பதாகத் தெரிகிறது. இது பற்றிய முழு விவரம் சேகரிக்கும் பொறுப்புமாகாண சர்க்காருடையது" என்று கூறியிருக்கிருர்!

தென்னுட்டிலே மீண்டும் ஓர் முறை, தென்னுடு முழுவதும் பூதத்துவ ஆராய்ச்சியைச் சீரிய முறையிலே நடத்த வேண்டும். வைரமணிப் பிரதேசங்களைக் கண்டறிய வேண்டும். வைரச்சுரங்கங்கள் பலவற்றை ஏற்படுத்தி வைரமணிகளை விளைவிக்க வேண்டும்-நமது வைரங்களை மீண்டும் தரணியெங்கும் ஒளிவீசச் செய்ய வேண்டும்!

தொண்டைமான்

சம்பத்துக்கு நேருவின் பதில்

No. 542-PMO/60
புது டில்லி,
ஆகஸ்ட் 3, 1960.

அன்புள்ள ஸ்ரீ சம்பத்,

தங்களது ஆகஸ்ட் 3-ம் தேதிக் கடிதத்தை இன்று காலை பெற்றுக் கொண்டேன்.

தாங்கள் எழுதியிருப்பதைக் கண்டதும் நான் பெரும் வியப்புக்குள்ளானேன் என்றே சொல்ல வேண்டும். மொழிப் பிரச்சினையைப் பற்றி நான் லோக் சபாவில் அளித்த வாக்குறுதிக்குப் புறம்பாகக் காரியங்களை எப்பொழுதும், எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் நிறைவேற்ற வாய்ப்பில்லை. உண்மையிலேயே. ஜனுதிபதியின் உத்திரவில் நான் அளித்த உறுதி மொழிக்கு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஓரிரண்டு நாட்களுக்கு முன் லோக் சபாவில் இதையேதான் உள்நாட்டுத் துறையமைச்சர் உறுதிப் படுத்தியிருக்கிருர். சென்னை அரசாங்க நிதி மந்திரியும் கூட இதுபற்றி விளக்கிக் கூறியிருக்கிருர் என எண்ணுகிறேன். எனவே இந்த விஷயத்தில் ஏன் இவ்வளவு தப்பபிப்ராயம் நிலவி வருகிறது என்பதை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை. **நாங்கள் அளித்த உறுதிமொழிக்கு முழுதும் கட்டுப்பட்டே இருக்கிருேம்.**

நமது ஜனுதிபதிக்கு அவமரியாதை யொன்றையே தரும் வகையில் தங்களது கட்சி வேண்டுமென்றே இந்தச் செய்கை புரியாமானுல், எனக்கு அது ஆழ்ந்த வருத்தம் தரக்கூடியதே தவிர வேறில்லை.

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) ஜவஹர்லால் நேரு

ஸ்ரீ ஈ. வி. கே. சம்பத், எம். பி.
128, சவுத் அவின்யூ,
புதுடில்லி.

(குறிப்பு : மூலத்தை வைத்து மொழிபெயர்க்கப்பட்டது)

நெல்லைத்தோழன்
(திங்களிருமுறை)
[illegible]ன அரசியல்கருத்துக்கள்,
[illegible]சுவையான செய்திகள்,
[illegible]சியாளரின் அவலப்போக்
[illegible]டித்துக்காட்டும்
[illegible] தொடர்கள் :
[illegible]ரை முதலிய
[illegible] இன்னபிற,
[illegible]க்ள் :
[illegible]சாமி
[illegible]சப்
[illegible]ழன்
[illegible]ட்டன்

யார் வெல்லுவார்? இதில் யார் வெல்லுவார்?

ஜனநாயகக் கட்சி அபேட்சகர் ஜான் கென்னடி

கும் அக்கரை செனட் சபைக்குவெளியிலும் புலனாகியுள்ளது இந்தியாவுக்கும் வளர்ச்சி காணும் ஏனைய நாடுகளுக்கும் அமெரிக்க உதவியை அதிகமாக்க வேண்டுமென்று அவர் நாடு நெடுக எண்ணிறந்த பொதுக்கூட்டங்களில் பேசியுள்ளார்.

சென்ற ஆண்டு இங்கு இந்திய அமெரிக்க நிபுணர்கள் கொண்ட ஒரு கூட்டத்தில் செனட்டர் கென்னடி பேசுகையில், "மனித மாண்புக்கும் தனி நபர் உரிமைக்கும் ஒத்த ஒரு வழியை கடைப்பிடிக்கிறது" என்று குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு அதிக உதவி அளிக்க வேண்டுமென்று, வலியுறுத்துகையில் கென்னடி பின்வருமாறு கூறினார்.

"ரஷிய யதேச்சாதிகாரிகள் தங்களது முன்னெந்திக் கொடுங்கோன்மை முறையைப் பாது

பட்டுள்ளார். ஜனாதிபதிப் பதவிக்கு நல்ல பயிற்சி பெற்றவராக விளங்குபவர் நிக்ஸன்.

இவர் இருமுறை துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர். 1952-ம் ஆண்டில் இவர் முதல் தடவை துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரைவிட இளம் வயதில் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர் இன்னும் ஒரே ஒருவர் தாம் உண்டு. அதிகாரப்பூர்வமான பல கவுன்சில்களில் நேரடியாகக் கலந்து கொண்டதால், அவர் உள்நாட்டு விவகாரங்களிலும் பரந்த அறிவு படைத்தவர்.

இந்தியா, ஆசியா, கீழ்க்கோடி, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா, சோவியத் யூனியன், மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகியவற்றில் நல்லெண்ணச் சுற்றுப் பிரயாணங்கள் செய்து, ஜனாதிபதி ஐஸன்ஹா

★ பாரபட்சமற்ற தேர்தல் முறையை அமெரிக்காவைப்பார்த்தாவது கற்றுக் கொள்ளுமா பாரதம்?

காக்க கட்டாயத்தின் மூலம் எவ்வளவு சக்தியையும், புத்தியையும். இலட்சியத்தையும், தியாகத்தையும் பயன்படுத்த முடியுமோ அதே அளவுக்கு நாமும் ஒளிவு மறைவற்ற சுதந்திர சமுதாயம் உயிர் வாழ்வதற்கும் வெற்றி பெறுவதற்கும் ஈடுபடுத்த முடியும் என்று ருசுப்பிப்பது நமது பணி. வளர்ச்சிக் குறைவான நாடுகளின் உற்பத்திப் பொருளாதார வளர்ச்சியில் நமக்குள்ள அக்கரை பிரசார நோக்கமுள்ளதல்ல, நெருக்கடிக் கால அக்கரையல்ல, நிலையான நீடித்த அக்கரையாகும் என்று உறுதியுடன் நாம் புலப்படுத்த முடியும்."

ரிச்சர்ட் நிக்ஸன்

ஜனாதிபதிப் பதவித் தேர்தலில் குடியரசுக் கட்சி அபேட்சகராகத் துணை ஜனாதிபதி ரிச்சர்ட் எம். நிக்ஸன் தேர்ந்தெடுக்கப்

வரின் "கண்ணாகவும் காதாகவும்" விளங்கியுள்ளவர் நிக்ஸன். உலகத்திலுள்ள சுதந்திர மக்களிடம் அமெரிக்கா கொண்டுள்ள உண்மையான அன்பைத் தெரிவிக்கும் பொருட்டு அவர் ஐம்பதிற்கு மேற்பட்ட நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறார்.

1953 குளிர் காலத்தில் ஜனாதிபதி ஐஸன்ஹாவரின் தூதராக நிக்ஸன் இந்தியாவுக்கு வந்தார். அதன்பின் இந்தியாவுக்குப்பொருளாதார உதவி வழங்க வேண்டுமென்று அவர் எடுத்துரைத்ததை இந்தியர் பலர் இன்னும் மறந்திருக்க முடியாது. 1959-ல் நிக்ஸன் பின் வருமாறு சொன்னார்: "இந்திய மக்கள் சுதந்திரத்தோடு பொருளாதார முன்னேற்றம் அடைய முயற்சி செய்கின்றனர் ...ஆசியாவிலும், தூரக்கிழக்கிலும், ஆப்பிரிக்காவிலும் உள்ள நாடுகளின் தீர்மானங்களையும்,

[9-ம் பக்கம் பார்க்க]

வாஷிங்டன் -- ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் அபேட்சகராக நிறுத்தப்பட்டுள்ள செனட்டர் ஜான் எப். கென்னடி இந்தியா முதலிய தென் ஆசிய நாடுகளின் பிரச்னைகளையும், ஆவல்களையும் நெடுநாளாக அறிந்தவர்; இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா அதிக உதவி அளிக்க வேண்டுமென்பவர்களுள் முன்னணியில் நிற்பவர்.

கட்சியின் நியமனத்தைப்பெறுவதற்காகப் பிரசாரம் செய்து வருகையில் செனட்டர் கென்னடி தமது வெளி விவகாரக் கொள்கை ஆலோசகர்களில் ஒருவராக காங்கிரஸ் உறுப்பினர் செஸ்டர் பௌல்ஸைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். செஸ்டர் பௌல்ஸ்

செனட் சபைத் தீர்மானம்

இந்தியாவின் தேவைகளை நேரில் சென்று கண்டறியவும், இந்தியாவின் வளர்ச்சிக்கு இன்னும் சிறந்த முறையில் திறம்பட உதவுவதற்குக் கூட்டான வழி முறைகளை வகுத்துரைக்கவும், சிறப்பாக பலநாட்டுப் பொருளாதாரத் தூதுக் குழு ஒன்றை அனுப்புவது நலம் என்று செனட் சபை ஓராண்டுக்கு முன் வெளியிட்ட தீர்மானம் செனட்டர் கென்னடி கொண்டுவந்தது தான்.

தீர்மானம் பற்றிப் பேசிய செனட்டர் கென்னடி, இந்தியாவுக்கு மேற்கத்திய உலகிலிருந்து உருப்படியான அளவு உதவி

என்றாலும் அமெரிக்க அரசாங்கம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அதிக உதவி அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவது தீர்மானத்தின் கருத்தைப் பெரிதும் பிரதிபலிப்பதாகும்.

பொதுக்கூட்டங்களில்

கென்னடிக்குத் தெற்கு ஆசியா பற்றியும்இந்தியா பற்றியும்இருக்

அமெரிக்கத் தேர்தல் சூடு பிடிக்கிறது! கென்னடி வென்றால் இரட்டைப் புதுமை!

முன்பு இந்தியாவில் அமெரிக்கத் தூதராக இருந்தவர். கென்னடிக்குத் தெற்கு ஆசிய விவகாரங்களில் உள்ள ஆர்வத்துக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

ஜனநாயகக் கட்சி இவ்வாரம் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வெளியிட்ட தேர்தல் கொள்கை அறிக்கையும் தெற்கு ஆசியாவைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கொள்கை அறிக்கையை செனட்டர் கென்னடி நிறைவேற்றி வைப்பதாக வாக்களித்துள்ளார்.

"எழுத்தறிவின்மை, வறுமை, பிணி போன்ற பிரச்னைகள் பழமையானவை. கடினமான சூழ்நிலையிலும் அவற்றைத் தீர்ப்பதில் சுதந்திரமக்களுக்குள்ளதிறனுக்கு ஒரு பெரிய சோதனைக் களம் இந்தியாவும், பாகிஸ்தானும் என்பதை நாங்கள் உணர்வோம். அந்நாடுகளின் முயற்சிகளுக்கு நடைமுறையில் முடிந்த விதத்தில் எல்லாம் நாங்கள் ஆதரவு நல்குவோம்" என்று தேர்தல் கொள்கை அறிக்கை கூறுகிறது.

கிடைக்குமென்ற உறுதி தேவை என்று வலியுறுத்தினார்.

குறுகிய கால உதவிக்கு மட்டும் உறுதியளிப்பது என்ற கொள்கை இந்திய வளர்ச்சிக்கான திட்டங்கள் ஊசலாடவே உதவும் என்றார் கென்னடி.

செனட்டர் கென்னடியின் தீர்மானத்தில் பிறகு இந்தியாவோடு பாகிஸ்தான், பர்மா, ஆப்கானிஸ்தான், நேப்பாளம், இலங்கை ஆகிய நாடுகளும் சேர்க்கப்பட்டன. தெற்கு ஆசிய நாடுகளின் அரசாங்கங்கள் "தொடர்ந்து ஆற்றலுடன் விளங்கி வெற்றிபெற வேண்டும்" என்பதிலும், அவை "தம் மக்களுடைய வாழ்க்கை நிலையை மேம்படுத்த முயலும் தம் முயற்சியில் தொடர்ந்து முன்னேற்றமும் வெற்றியும் காண வேண்டியது மிகவும் அவசியம்" என்பதிலும் சுதந்திர உலகம் அக்கரை கொண்டுள்ளது என்று அத்தீர்மானம் கூறிற்று.

தீர்மானம் செனட் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்படவில்லை



★ சி. பி. சிற்றரசு ★

இரா. இராமையா, விருத்தாசலம்,

கே: அறிஞர். அண்ணு முதன் மந்திரியானல் காமராசர் என்ன செய்வார்?

ப: ஏற்கெனவே பாதி துரவி, முழுத் துறவியாகலாம்,

கே: எல்லா மாநிலங்களும் இந்தி எருமையை ஒப்புக் கொள்ளுகிறதா? அல்லது இங்குள்ள தமிழ் (அரசு) கழகம் தமிழ்த் தாயை ஓட்டி விட்டு, தாசியைப் போன்ற இந்தியை வரவேற்கிறதா?

ப: தமிழரசு கழகம் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பதற்குப் பதில் 'இந்தி அரசுக் கழகம்' என்று பெயர்வைத்துக் கொள்ளலாம். பிற மாநிலங்களும் இந்தியை எதிர்க்கின்றன.

கே. உதித்து விட்டான் செங்கதிரோன் தென் திசையில் என்று (முரசொலியில்) வரும் முழக்கத்துக்கு விளக்கம் தருக.

ப: செங்கதிரோன் தென் திசையில் உதிக்க மாட்டான்! முரசொலி - செங்கதிரோனை; விழிப்பு என்று பொருள்பட எழுதியிருக்கலாம்.

மா. சுப்பு, திருப்பூர்

கே: ஆசிரியர் அவர்களே! வி. பி. இராமன், கழகத்திலிருந்து விலகியதற்குத் தாங்கள் தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. உண்மையா?

ப: கொடுக்கத் தகாத உயர்வை கொடுக்கக் கூடாத நேரத்தில் காப்பாற்ற முடியாத பேர்வழிகளுக்குப் போடும் பூசையின் விளைவுதான் அது. என்னைச் சொல்லி என்ன பயன்.

கே: இந்திப் போராட்டம் நடப்பதாக இருந்திருந்தால் பெண்களும் கலந்து கொள்ள கழகம் அனுமதி அளித்திருக்குமா?

ப: தோழியர் சத்தியவாணி முத்து அவர்களிடமே கோடம்பாக்கம் மாநாட்டில் ஒரு கருப்புக்கொடி கொடுக்கப்பட்டது உங்களுக்குத் தெரியாதா?

கே: தமிழரசு கழகத்தினர் அடிக்கடி தி. மு. கவைத் திட்டுவதேன்?

ப: வேறு வேலே, நாய் ஏன் அடிக்கடி குறைக்கிறது என்று கேட்கலாமா?

கே: திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக்கொடி காட்டுவதை கைவிட்டதும், காமராசர், தொல்லை விட்டது" என்ருராமே?

ப: உள்ளே தாழிட்டு விட்டால் உலகம் இருண்டாகும்.

... நமது மந்திரிகளை எவற் ...ப்பிடலாம்?

சி. சுப்பிரமணியம் கண்டியூர்

கே: திராவிடத்தின் வைரி யார்?

அக்ரகாரம் அளிக்கும்
மதுரம் பிக்சர்ஸ்
மீண்ட சொர்கம்

★ பெருமை அற்ற கதை
★ அருமையற்ற சொந்த வசனம்
★ திறமை பெற்ற சொந்தமற்ற பட இயக்கம்
★ வெறுப்பூட்டும் காட்சிகள்
★ சிரிப்பூட்டா நிகழ்ச்சிகள்

கதை — இயக்குதல்

இவையிரண்டும் எத்தனைப் படங்களை ஒட்டியது என்று என்னல் வரையறுத்துக் கூற இயலாது. அப்படியே நான் கூறிவிட்டாலும், அத்தனைப் படங்களையும் விட்டு விட்டு இத்தனைப் படங்களை மட்டும் குறிப்பிட்டுள்ளாயே என ஸ்ரீதர் கோபமடையக்கூடும்.

வசனம் :-

சங்கல்பவசத்தால் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொண்டு **நிர்தாக்ஷண்யமி**ன்றி இக்கலையைப் பயின்றுள்ளார், தடித்த எழுத்துக்கள் வசனத்தில் இடம் பெற்றுள்ளன.

பாராட்டுகிறேன்:- உண்மையிலேயே ஸ்ரீதரின் சொந்த வசனங்கள் எப்படியிருக்கும் என்று நினைத்துக்கொண்டு இருந்த எனக்கு இந்த**வஜனங்களே** என்னுடையவை என அப்பட்டமாகக் காட்டியதால் பாவம் 3-மாதத்திற்கு முன்பு வெளிவந்த எந்தப் புத்தகமும் வாசகசாலையில் **(இலவச)** தட்டுப்படவில்லை போலும்.

நடிப்பு :

குறிப்பிட முடியாவிட்டாலும் யாரிடமும் குறைகாண முடியாது. பண்பட்ட நடிப்பை வெளிக்காட்டிய பத்மினி பரத நாட்டியத்தைப் பரிகாசம் செய்திருக்க வேண்டாம்.

காசிக்குப் போயும் கருமம் தொலையவில்லை

எத்தனையோ படங்களைப்பார்த்து இயக்கியும் எஸ்டேட்டைச்சார்ந்த பகுதியில் கூலிகளுக்குச் சொந்தமான ஆடையணிந்திருந்த பத்மினி 'துள்ளி துள்ளி' என்று பாடி ஆடும்போது நைலான தாவணி அவரின் கையில் பரப்பது பரிதாபத்திற்குரியது.

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றிபெறுவது, போல், **கல்யாண பரிசு** என்ற எழுத்துப் போட்டியில் வெற்றி பெற்ற ஸ்ரீதர் இதிலும் மீண்ட சொர்கத்திற்கு பதில் மீண்ட சொர்கம் என ஏழெழுத்தைப் போட்டு தோல்வியைத் தழுவியது வருந்துதற்குறியது.

பத்மினியின் பண்பட்ட நடிப்பும், காட்சியமைப்பும், ஒளிப்பதிவின் ஒய்யாரமும் இருந்துமா! — இப்படி விமர்சிப்பது என்று கேட்டால் ஒன்று சொல்வேன். சிந்தனைக்கு இடம் கொடுத்தால் ஆராய்ச்சியின் அனுபவம் படத்தில் நல்ல காட்சியைக் காட்டிலும் கெட்ட காட்சிகளையே அதிகம் காட்டும்.

கெட்டவைக்குக் கிட்டுவது நரகமே, சொர்க்கமல்ல, என்று, இறையைக் கற்காலமனிதர்களும், சோம்பேரிகளும் கருமாந்திரக் காட்சிகளைப் படப்பிடிப்பில் ஈடு படுத்தி அதற்கு அர்த்தமற்ற விளக்கங்களைக் கொடுக்கும் அளவுகடந்த ஆராய்ச்சி பெற்ற அனுபவமற்ற கலைக் குழுவினரும் ஒப்புக் கொள்வார்கள்.

இவர்கள் முறைப்படியே போய்ப் பார்த்தாலும் ஸ்ரீதரின் **மீண்ட சொர்க்கம் - வரண்ட சொர்க்கம்** இதைக் காட்டிலும் நரகமே மேல்.

அன்புள்ள,

இளவல் முத்து

...4, இராசகோபால் நாய்க்கன் சந்து, சென்னை, 2.